Koviloor Digital Library

கம்பராமாயணம்

இராமாவதாரம்

மூலமும் உரையும்

ACC NO.: 14563



யுத்தகாண்டம்

பகுதி – 1

உரை நூல் ஆசிரியர்
பள்ளத்தூர் பழ. பழனியப்பன்

Koviloor Digital Library

Koviloor Digital Library

18/2
6

கம்ப இராமாயணம்

[இராமாவதாரம்]

யுத்த காண்டம்

முதற் பகுதி

மூலமும் உரையும்

KOVILOOR ANDAVAR
A. No. 14563
LIBRARY, KOVILOOR

உரை ஆசிரியர்

பள்ளத்தூர் **பழ. பழனியப்பன்**

(முன்னாள் முதுநிலை மேலாளர், பரோடா வங்கி)

Acc No: 14563
R65-9

சாந்த மங்கை பதிப்பகம்

23/10, பழைய பேங்க் ஆஃப் பரோடா தெரு,

அம்பத்தூர், சென்னை-600053

Cell: 9840868543

Koviloor Digital Library

முதற் பதிப்பு: மார்ச், 2010

உரிமை: ஆசிரியருக்கு ©

KAMBA RAMAYANAM - YUDHA KANDAM PART - I

PL.Palaniappan

First Edition: March, 2010

No. of Pages: XXVIII+904=932

Size: Demy

Paper used: N.S. 70 G.S.M. Maplitho

விலை ரூ. 410/-

வெளியீடு:
சாந்த மங்கை பதிப்பகம்
23/10, பழைய பேங்க் ஆஃப் பரோடா தெரு,
அம்பத்தூர்,சென்னை-600053
Cell: 9840868543

நூல்கள் கிடைக்குமிடம்:
THIRUMAGAL NILAYAM
New No: 11, Old No, 5,
Soundararajan Street,
T.Nagar, Chennai - 600 017.
Phone: 24342899, 24327696
Thirumagalnilayam@yahoo.com

Laser Typeset By: Sivaa Graphics, Chennai-94. Ph: 9884712091

Printed at: *Udayam Offsets: 2845 4808, 2845 1906.*

Koviloor Digital Library



காணிக்கை

என்னை ஈன்றெடுத்து,
எனக்கும் ஓர் வாழ்வளித்து
தன்னைப் பேணிடாமல்,
தளிர்களையே காத்து நின்ற
அன்னை **மீனாட்சித் தாய்க்கு**
ஆயிரம் வணக்கம் கூறி,
இன்னமும் அருள் கூர்ந்து என்னை
இயக்கிட இறைஞ்சுவனே!

Koviloor Digital Library

பொருளடக்கம்

	அணிந்துரை	V
	பதிப்புரை	XIII
	முன்னுரை	XV
1.	கடல் காண் படலம்	4
2.	இராவணன் மந்திரப் படலம்	14
3.	இரணியன் வதைப் படலம்	91
4.	வீடணன் அடைக்கலப் படலம்	221
5.	இலங்கை கேள்விப்படலம்	340
6.	வருணனை வழிவேண்டு படலம்	395
7.	சேது பந்தனப் படலம்	456
8.	ஒற்றுக் கேள்விப் படலம்	501
9.	இலங்கை காண் படலம்	566
10.	இராவணன் வானரத்தானை காண் படலம்	586
11.	மகுடபங்கப் படலம்	611
12.	அணிவகுப்புப் படலம்	651
13.	அங்கதன் தூதுப் படலம்	675
14.	முதற்போர் புரிபடலம்	715
	செய்யுள் முதற்குறிப்பு அகராதி	887

Koviloor Digital Library

அணிந்துரை

முனைவர் தெ. ஞானசுந்தரம்

பேராசிரியர், கம்பன் இருக்கை, தமிழியற்புலம்,
புதுவைப் பல்கலைக்கழகம், புதுவை-4.

திரு. பள்ளத்தூர் பழ.பழனியப்பன் கம்பராமாயணத்திற்கு உரையெழுதத் தொடங்கி இதுவரை முதல் ஐந்து காண்டங்களுக்கு உரையெழுதி வெளியிட்டுள்ளார். இப்பொழுது யுத்த காண்டத்திற்கு உரை காணத் தொடங்கி அதில் "கடல்காண் படலம்" முதல் "முதற்போர் புரிபடலம்" ஈறாகப் பதினான்கு படலங்களுக்கு உரை வரைந்து அதனை யுத்தகாண்ட முதற்பகுதியாக வெளியிட்டுள்ளார். இந்நூலும் முன்வந்த காண்டங்களுக்கு அவர் வரைந்துள்ள உரையின் போக்கிலேயே அமைந்துள்ளது. எளிமையும் பேச்சு நடையும் இதன் தனித்தன்மைகள்.

அன்பர். திருபழ.பழனியப்பன் அவ:ர்கள் முறையாகத் தமிழ் பயின்றவரல்லர். ஆனால் தமிழின்மீது அளப்பரிய ஆர்வமும் ஈடுபாடும் கொண்டவர். அவரது ஆர்வம், அதனால் அவர் படித்த நூல்கள், பெற்ற புலமை ஆகியவற்றை விளக்கிட்டுக் காட்டும் வகையில் இந்த உரை அமைந்துள்ளது. இவ்வுரையில் அவர் பல்வேறு தமிழ் நூல்களிலிருந்து காட்டியுள்ள மேற்கோள்கள் அவரது தமிழ்க்கல்வியின் பரப்பைக் காட்டுவனவாக அமைந்துள்ளன. தொல்காப்பியம், சங்கநூல்கள் தொடங்கி சமயநூல்கள், சாத்திரநூல்கள் ஆகியவற்றிலிருந்து மட்டும் அல்லாமல் இக்காலத்தில் தோன்றியுள்ள கவிஞர் வாலியின் அவதார புருஷன் வரை பற்பல நூல்களிலிருந்து மேற்கோள்களை அள்ளித் தந்துள்ளமை அவரது புலமை வீச்சுக்குக் கட்டியம் கூறுவதாக அமைந்துள்ளது.

இதற்குச் சான்றாக "அளவையான் அளப்பரிது"(6333) என்னும் தொடருக்கும் 'காலமும் கருவியும் இடனுமாய், கடைப்பால் அமை பயனுமாய், பயன் துய்ப்பானுமாய், சீலமும் அவைதரும் திருவுமாய்

Koviloor Digital Library

உளன்'(6345) என்னும் தொடருக்கும் எழுதியுள்ள உரையினைக் காட்டலாம்.

"பொருள்களை அளந்து அறிதற்குரிய எந்த அடிப்படைப் பிரமாணங்களாலும் அவனது சிறப்பை அளந்து அறியமுடியாது என்க. 'சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்து' என்பது திருக்குறள் பாயிரம். 'மொழியைக் கடக்கும் பெரும்புகழான்' என்பது இராமானுசர் நூற்றந்தாதி. "ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச் சோதிக்க வேண்டா சுடர்விட்டு உளன் எங்கள் சோதி" என்பது தேவாரம். 'அளவு அறுப்பதற்கு அரியவன்' என்பது திருவாசகம். 'எழுதரு மறைகள் தேறா இறைவன்' என்பது திருவிளையாடற்புராணம். 'மறையினால் அயனால், மாலால், மனத்தினால், வாக்கால் மற்றும் குறைவிலா அளவினாலும் கூற ஒணாது ஆகி நின்ற இறைவனார்' என்பது சிவஞானசித்தி.

"யாவருமாய் யாவையுமாய் எழில் வேதப்பொருள்களுமாய்" என்பதும் 'கருமமும் கரும பலனுமாகிய காரணன்' என்பதும் திருவாய்மொழி. "விதியாய், விளைவாய் விளைவின் பயனாகி" என்பது தேவாரம். "யக்ஞும்நானே; அக்னியும்நானே; வேட்டல்நானே" என்பது பகவத்கீதை. 'போகமாய் விரிந்தும் போகியாய்ப் பரந்தும்' என்பது வில்லிபாரதம். 'செய்வானும், செய்வினையும் சேர்பயனும், சேர்ப்பவனும் இறைவன்' என்பதும் சிவஞானபோதம்"

என்று இப்படி ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கும் மேற்கோள்கள் கற்பார்க்குப் பெருவிருந்தாய் அமைந்துள்ளன. உரையாசிரியரின் கடுமையான உழைப்பையும் காட்டுகின்றன.

மேற்கோள்கள் வைணவ நூல்களிலிருந்து மட்டுமின்றிச் சைவ இலக்கியங்களிலிருந்தும் சாத்திரங்களிலிருந்தும் நிரம்ப எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இது தகுமா என்னும் வினா எழலாம். கம்பர் சமயக் காழ்ப்பற்றவர், அங்கங்கே சிவனைப் போற்றிப் பாடுவதனைக் காணலாம். அவர் திருமாலைத் துதித்தவர்; சிவனை மதித்தவர்; ஆதலால் சைவத் திருமுறைகளிலிருந்து உரையாசிரியர் மேற்கோள்கள் தருவது கம்பரின் திருவுள்ளத்திற்கு மாறாகாது.

பிரகலாதன் எட்டெழுத்தின் பெருமையை இரணியனிடத்துத் தெரிவிக்கும்போது அதனைப் பிறவிக் கடலிலிருந்து மக்களைக் கரை சேர்க்கும் புணையாகவும் பெறுதற்கரிய நன்கலனாகவும் கூறுகிறான்(6316). இதனை விளக்குமிடத்து, "அஞ்செழுத்தின்

Koviloor Digital Library

புணைபிடித்துக் கிடக்கின்றேன்” என்ற மணிவாசகர் தேவாரம் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. “தனியனேன் பெரும்பிறவிப் பௌவத்து” என்பதும் “கற்றுணைப் பூட்டி ஒர் கடலில் பாய்ச்சினும், நற்றுணையாவது நமச்சிவாயவே” என்பதும் “நாவினுக்கு அருங்கலம் நமச்சிவாயவே” என்பதும் திருநாவுக்கரசர் தேவாரம்” என்று திருமுறைகளை மேற்கோள் காட்டுவதனைக் காணலாம்.

கம்பரின் புலமையை முழுவதும் அறிந்து சுவைப்பதற்கும் இராமகாதையை ஐயமின்றித் தெளிவதற்கும் கம்பரின் படைப்பாற்றலைத் தெரிந்து கொள்வஃதற்கும் மூலநூலாகிய வான்மீகி இராமாயணமும், ஒட்டக்கூத்தரின் உத்தர காண்டமும் துணைபுரிவன. உரையாசிரியர் அங்கங்கே வான்மீகத்தோடு கம்பரை ஒப்பிட்டு வேறுபாடுகளைச் சுட்டிச் செல்கிறார். சில நிகழ்ச்சிகளையும் கருத்துக்களையும் உத்தரகாண்டத்தைக் கொண்டு தெளிவாக விளக்குகிறார்.

இராவணன் தன் நகரம் அனுமனால் தீக்கிரையாகியதை எண்ணித் தனக்குத்தானே கழிவிரக்கம் கொள்கிறான். “தன் அரசாட்சி நன்று” என்று இகழ்ச்சியாகப் பேசுகிறான். இதனை விளக்குமிடத்து “இவ்வாறு இராவணன் தன்னைத்தானே நொந்து கொண்டதாக வான்மீகம் கூறவில்லை”(6164) என்று குறிக்கிறார். மந்திராலோசனைக் கூட்டத்தில் கும்பகருணன் பேசி முடித்த பிறகு வீடணனும் அதன் பிறகு இந்திரசித்தனும் பேசுவதாக வான்மீகம் காட்டுகிறது. இதனை மாற்றிக் கம்பர் கும்பகருணனை அடுத்து இந்திரசித்தனும், அவனை மறுத்து வீடணனும் பேசுவதாகக் காட்டியுள்ளார் (6211) என்று வேறுபாட்டினைக் காட்டுகிறார்.

தன்னை எதிர்ப்பவரின் வலிமையில் பாதி வாலியைச் சென்றுசேரும் என்னும் வரம் குறித்து வான்மீகத்திலோ உத்தர காண்டத்திலோ எந்தச் செய்தியும் இல்லை என்பதனைத் தெரிவித்து அதனைக் கம்பரின் கைவண்ணம் என்று அறுதியிடுகிறார்(6261).

கடற்கரையைப் படைகளோடு அடைந்த இராமன் கடலையும் அங்குள்ள பறவைகளையும் பிறவற்றையும் கண்டபோது பிரிவுத்துன்பத்தால் தவிக்கிறான். இப்படி வான்மீகத்தில் காட்டப்படவில்லை என்கிறார் (6475). இதனைப் போலவே வீடணன் சரணாகதியில் உள்ள வேறுபாட்டினையும் காட்டுகிறார்(6487). நிகும்பன் என்னும் அரக்கனைப் பற்றி எழுதுமிடத்து, அவனை இராவணனுக்கு மாமன் முறையினன் என்று ஒரு சாராரும்,

Koviloor Digital Library

கும்பகருணனின் மகன் என்று வான்மீகி முனிவரும் கூறுவதாகத் தெரிவிக்கிறார் (6632). இவனை அடுத்துக் கும்பகருணனின் மற்றொரு பிள்ளையான கும்பன் குறிக்கப்படுவதால் இவனைக் கும்பகருணன் பிள்ளையாகக் கொள்வது தகும்.

இராவணன் பெற்றிருந்த வரங்கள் சாபங்களைப் பற்றிய குறிப்புகளே கம்பராமாயணத்தில் காணப்படுகின்றன. விளக்கம் இல்லை. அவற்றை அறிந்துகொள்வதற்கு உத்தரகாண்டம் உற்ற துணையாக அமைந்திருக்கிறது. உத்தர காண்டத்தில் தந்துள்ள விளக்கங்களை எடுத்துத் தந்திருப்பதோடு சில இடங்களில் பாடல்களையே தந்துள்ளார். சான்றாக இராவணன் மனிதர்களை வெல்லும் வரத்தினைப் பிரமனிடம் பெறவில்லை என்பதனை விளக்குமிடத்து உத்தரகாண்டப் பாடலைத் தந்திருத்தலைக் காட்டலாம்(6231).

இவ்வுரையின் சிறப்புகளுள் ஒன்று சிங்கநோக்காக அமைந்திருப்பதாகும். ஒரு நிகழ்ச்சியையோ கருத்தையோ விளக்கும்போது அது முன்னே எவ்வாறு இடம் பெற்றுள்ளது அல்லது பின்னே எவ்வாறு கூறப்பட்டுள்ளது என்பதனைக் காட்டுவது, உரையாசிரியர் கம்பராமாயணத்தில் எவ்வளவு ஈடுபாடும் புலமையும் கொண்டுள்ளார் என்பதனையும் கம்பரின் புலமைச்சிறப்பு. நிகழ்ச்சிகளைப் புனைத்துரைக்கும் ஆற்றல் ஆகியவற்றினையும் புலப்படுத்துகிறது.

"ஈரமில்லா நிருதர்"(6149) என்பதன் விளக்கத்தில் முன்பு "இரக்கம் என்று ஒரு பொருள் இல்லா நெஞ்சினர்" என்று கூறியதை இங்கு நினைவுகூர்க" என்றும் "கொச்சைத் துன்மதி"(6265) என்னும் தொடரின் விளக்கத்தில் "கொச்சை மாந்தரை கோல்வளை மாதரும் கூசார்" என்று முன்பு ஆரண்யகாண்டத்தில் கூறியதையும் இங்கு ஒப்புநோக்குக" என்றும் எழுதிச் செல்கிறார்.

வீடணன் இராவணனிடம் இராமனது குல முன்னோர்களைப் பற்றிக் குறிக்குமிடத்துக் ககுத்தன், பிருது, சகரன், பகீரதன் ஆகிய நால்வரைக் குறிப்பிடுகிறான்(6236). இதன் விளக்கத்தில் "இங்கு நான்கு அரசர்கள் பற்றிக் கூறப்படுகிறது. இதில் கூறப்பட்டுள்ள எல்லோரும் பாலகாண்டத்தில் குலமுறை கிளத்துப் படலத்திலும், அகலிகைப் படலத்திலும் விசுவாமித்திரனாலும் பேசப்பட்டவர்களே" என்று விளக்கம் தந்துள்ளார்.

Koviloor Digital Library

இரணியன் பிரகலாதனிடம் "நரசிங்கத்தையும் உன்னையும் கொன்று அதன்பின் என் வாளினைத் தொழுவதன்றி, வணங்குவது மகளிர் ஊடல்கொண்ட காலத்தும் என்பால் உண்டோ?" என்று தருக்கிப் பேசுகிறான். இதனோடு இராவணன் பேச்சையும் ஒப்பிட்டுக் காணுமாறு வாசகர்களை வேண்டுகிறார். "முன்பு இராவணனும் இவ்வாறே கூறியதை இங்கே நினைவுகூர்க. "வலிய நெடும் புலவியினும் வணங்காத மகுடநிலை" என்பது ஆரண்யகாண்டம்" என்பது உரையாசிரியர் குறிப்பு(6417).

இராமபிரானைத் தஞ்சமடைய வீடணன் முடிவுசெய்கிறான். அப்பொழுது அவன் தனக்கு என்பு குளிர்வதாகவும் நெஞ்சு உருகுவதாகவும் தெரிவிக்கிறான்(6467). இதனோடு இராமனைக் கண்ட அனுமன் அடைந்த நிலையினை இணைத்து, "இதேபோல ஒரு நிகழ்ச்சி, முன்பு இராமனைக் கண்டதும் அனுமனுக்கு ஏற்பட்டதை நாம் அறிவோம். 'என்பெனக்கு உருகுகின்றது, இவர்கின்றது அளவில் காதல்; அன்பினுக்கு அவதியில்லை' என்பது கிட்கிந்தா காண்டம்' என்று எழுதியுள்ளார்.

இராமன் ஒற்றர்களிடம் இத்துணைக் காலம் இராவணன் உயிரோடிருப்பதற்குக் காரணம் இலங்கை எங்கே இருக்கிறது என்பது தனக்குத் தெரியாமையால்தான் என்பதனை அவ்விராவணனுக்குத் தெரிவிக்கும்படி ஒற்றர்களிடம் தெரிவிக்கிறான் (6862). இதன் விளக்கத்தில், "இலங்கை எங்கே இருக்கிறது என்பதனை அறியாததால்தான் இத்துணைக் காலம் தாழ்த்த நேர்ந்தது என்பதை முன்பு அனுமனும் சீதாதேவியிடம் கூறியிருப்பதை இங்கு நினைவுகூர்க. "ஈண்டு நீ இருந்ததை இடரின் வைகுறும் ஆண்டகை அறிந்திலன்" என்பது அனுமன் கூற்று. "கனை கடல் நடுவண் உண்டு இலங்கை என்று உணர்ந்திலர்" என்பது சீதாதேவியின் கூற்று" என்று குறிக்கிறார். இப்படிப் பற்பல இடங்களில் முன்பும் பின்பும் நோக்கி உரையிட்டுள்ள அருமைப்பாட்டினைக் கண்டு மகிழலாம்.

உரையாசிரியர் கிடைக்கின்ற பாட வேறுபாடுகளில் எது மிகப் பொருத்தமானது என்பதையும் ஆராய்ந்துள்ளார். அவர் சுவடி ஒன்றில் காணப்படும் பாடம் ஒன்றினைக் கொடுத்து அது சிறந்த பாடமாக இருத்தலைக் குறிப்புரையில் கொடுத்துள்ளார். அவர் சொல்லும் பாடம் சிறப்பாகவும் கம்பரின் புலமையைக் காட்டுவதாகவும் அமைந்திருக்கிறது. இராமன் அம்பு எய்தபோது கடல் உற்ற நிலையினைப் பேசும்பாடல்.

Koviloor Digital Library

செறிந்த தம் பெடைகளைத் தேடி தீக்கொள
மறிந்தன, கரிந்தன வானப் புள்எலாம் (6708)

என்பதாகும். இதில் 'வானப் புள்எலாம்' என்பதற்கு மாறாக 'வாளப்புள் எலாம்' என்னும் பாடம் காணப்படுகிறது என்பதனைக் காட்டி, அதுவே பொருந்திய பாடம் என்கிறார். சக்கரவாளப் பறவைகள் பகலிலும் ஆணும் பெண்ணும் இணைந்து வாழும் இயல்புடையன என்பது இலக்கியங்களில் குறிக்கப்பெறும் செய்தியாகும். ஆதலின் இக்கருத்து ஏற்கத்தக்கதாகும்.

பிறிதொரு பாட்டுக்கு நிகண்டின் துணைக்கொண்டு எழுதியுள்ள உரையும் போற்றத்தக்கதாக அமைந்திருக்கிறது. போர்க்களத்தின் அவலக்காட்சியினைக் காட்டும் பாடல்.

யானை பட்ட அழிபுனல் யாறுஎலாம்
பானல் பட்ட பலகணை மாரியின்
சோனை பட்டது; சொல்ல அரும் வானரச்
சேனை பட்டது; பட்டது செம் புண்ணீர் (7149)

என்பதாகும். இதில் இடம்பெற்றுள்ள "பானல்" என்னும் சொல்லுக்கு என்ன பொருள்? பொதுவாகப் பானல் என்பதற்கு குவளை என்று பொருள் கொள்வர். அப்பொருள் இங்குப் பொருந்தாது என்பதை உணர்ந்த உரையாசிரியர், நிகண்டில் தேடி ஒரு புதிய பொருளை அதுவும் பொருத்தமான பொருளைக் கண்டறிந்து வழங்கியுள்ளார். பானல் என்பதற்குக் கடல் என்பது பொருள் என்று குறித்து 'பானலே கடல், குதிரை, வெற்றிலை, பழனம், நெய்தல், கள் என்று அறுபெயர்' என்னும் நிகண்டு நூற்பாவினையும் கொடுத்துள்ளார்.

பல இடங்களில் நயவுரை கண்டுள்ளார். அவை கற்பார்க்குக் களிப்பு நல்குவன. இரணியன் பகற்பொழுதைப் 'பரவும் இந்திரன் பதியினைக் கழிப்பான்' என்கிறார் கம்பர். இதில் வரும் "பரவும்" என்னும் சொல்லுக்கு "இந்திரன் இரணியனால் வெற்றி கொள்ளப்பட்டவன். எனவே பரவும் என்ற சொல்லுக்கு இந்திரன் போற்றித் துதிக்கும் என்று பொருள் கொள்ளுவதும் பொருந்தும்" என்று குறித்துள்ளார்(6276).

'என்று ஒருவன் இல் உறை தவத்தியை' என்னும் கும்பகருணன் கூற்றாக வரும் பாட்டுக்கு (6204). "இராவணன் செய்த இழிசெயல்களைப் பட்டியல் இடுகிறான் கும்பகருணன். முதலில் அவள் இன்னொருவன் மனைவி; இரண்டாவது அவள் தவ

Koviloor Digital Library

ஒழுக்கத்தில் இருப்பவள்; மூன்றாவது நீ அவளிடம் சற்றும் கருணை காட்டவில்லை; நான்காவது அவளை வஞ்சனையால் அபகரித்துக்கொண்டு வந்தாய்; ஐந்தாவது நீ அரச நீதியைத் துறந்தாய்; ஆறாவது நீ கற்றுணர்ந்த வேதநெறிகளையும் கடைப்பிடிக்க வில்லை; ஏழாவது அவளைச் சிறையில் அடைத்து வைத்தாய்; இத்தனை இழிதொழில்களையும் செய்துவிட்டு நீ புகழுடன் உயிர்வாழ்தல் என்பது அறிவுடைமை ஆகாது. பேதைமை" என்கிறான் கும்பகருணன் என்க" என்று வரும் பகுதி ஆசிரியரின் பகுத்தாயும் நுண்ணறிவுக்குச் சான்றாகும்.

இவ்வாறே "வாயினும் பல்லினும் புனல் வறந்து உலறினார் நிருதர்; வைகும் பேயினும் பெரிய பேம் நரிகளும் புரிதரும்"(6249). என்னும் பாடற்பகுதியில் வரும் "உலறுதல்", "வைகும்", "புரிதரல்" ஆகிய சொற்களுக்குச் சிறந்த பொருள் கூறி அவற்றிக்குத் தக்க மேற்கோள் தரும் உரையாசிரியரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

வீடணன் இராவணனால் இகழப்பட்டு இலங்கையை விட்டு விரட்டப்பட்டான். அவனும் அந்நகரினின்றும் நீங்கினான். இதனைக் கம்பர் 'உத்தமன் அந்நகர் ஒழியப் போயினான்'(6459) என்கிறார். இதில் "ஒழிய" என்பது இலங்கையை விட்டு நீங்கிப்போனான் என்றும், இலங்கை அழிந்து போகும்படி அந்நகரை விட்டு நீங்கிப்போனான் என்றும் இருபொருள் தரும் வகையில் அமைந்துள்ளது என்று காட்டுவது மிகச் சிறப்பாக அமைந்துள்ளது.

சில சொற்களுக்கு அங்கங்கே தந்துள்ள விளக்கம் நயமாகவும் பயனுடையதாகவும் இருக்கிறது. கற்பு—கல்வி. இப்பொருளில் சங்க இலக்கியங்களில் வெகுவாகக் கையாளப்பட்டிருக்கிறது (6219). தாரி—வழி, இச்சொல் திசைச்சொல். இன்றும் தெலுங்கிலும் கன்னடத்திலும் தாரி என்ற சொல் வழி என்ற பொருளில் வழங்கப்படுகிறது(6389). பூட்சி—உடல், உயிரைப் பூணுவதால் பூட்சி என்பது உடலுக்குக் காரணப்பெயர்(6495). வைப்பு—எல்லாப் பொருள்களையும் வைப்பதற்குரிய இடம். இது காரணப்பெயர். தள்ளவாரி—போருக்கு அஞ்சிப் பதுங்குபவன். இன்றும் இச்சொல் இப்பொருளில் கன்னடத்தில் வழங்குகிறது(6884). அலங்கல்—மாலை அசைந்தாடுவதால் மாலைக்குக் காரணப்பெயர்(6328) என்பவை போல வரும் சொற்பொருள் காட்டும் பகுதி தமிழின் சிறப்பைக் காட்டுவதாகவும் அமைகிறது.

Koviloor Digital Library

தமிழ்ச்சொல்லுக்கு மட்டுமின்றி ஒரு சில இடங்களில் வடசொற்களுக்கும் விளக்கம் தந்துள்ளார். சான்றாக "கஞ்சம் என்ற வடசொல் நீரில் முளைப்பது என்ற பொருள் கொண்டது"(6433) என்று குறித்துள்ளதனைக் காணலாம்.

உரையாசிரியர் நல்ல சுவைஞராகவும் இருத்தல் வேண்டும். அத்தகுதி திருபழபழனியப்பன் அவர்களிடம் நிறையவே இருக்கிறது. "ஆசில் பரதாரம்" என்னும் பாட்டினை மிக்க புகழ்பெற்ற பாடல் என்றும்" சிட்டர் செயல் செய்திலை" என்னும் பாடலைக் கம்பனின் கவித்துவத்தைக் காட்டும் ஓர் அருமையான பாடல் என்றும், "ஊறுபடை ஊறுவதன் முன்னம்"" என்னும் பாடலைச் சந்தம் நிறைந்த ஒரு பாடல் என்றும் பகுதியின் உட்பயன்" என்னும் பாடலைப் பொருள் புரிந்துகொள்ள மிகவும் கடினமான பாடல் என்றும் மதிப்பீடு செய்திருப்பது காணலாம்.

இப்படிப் பல சிறப்புகளைக் கொண்ட உரையினைத் தந்துள்ள திருபழபழனியப்பன் தமிழன்பர்கள் அனைவரின் பாரட்டுக்கும் உரியவர். வங்கியில் பணியாற்றி ஓய்வுபெற்ற ஓர் அதிகாரி இப்படிக் கம்பராமாயணத்தில் தோய்ந்து உரைகண்டு வருவது தமிழுக்கு நல்ல காலம் பிறந்துள்ளது என்பதைக் காட்டுகிறது என்பதை அன்றி வேறு என் சொல்வது? வாழ்க திரு.பழ.பழனியப்பன். கம்பரின் வாழ்த்தாலும் இறையருளாலும் விரைவில் ஏனைய பகுதிகளுக்கும் உரை வரைந்து வெளிவரக் கம்பரையும் இறைவனையும் இறைஞ்சுகிறேன்.

அன்புடன்

தெ. ஞானசுந்தரம்

Koviloor Digital Library

பதிப்புரை

திரு. பழ. பழனியப்பன் அவர்களை நீண்ட பல ஆண்டுகளாக நாங்கள் அறிவோம். அவர் இங்நகரில் வங்கியில் பணியாற்றிய போதே தமிழ் ஆர்வலர் என்பதைப் புரிந்து கொண்டோம். இந்தப்பகுதியில் எங்கே இலக்கிய, ஆன்மிகச் சொற்பொழிவுகள் நிகழ்ந்தாலும் அங்கே சென்று குறிப்பு எடுத்து வந்து சேமித்து வைத்துக் கொள்வது அவர் பழக்கம். பின்னாளில் அவர் அலுவலகத் தொடர்பாக வெளிமாநிலங்களிலும் வெளியூர்களிலும் பணியாற்றியதால் அவருடன் எங்கள் தொடர்பு சற்று விலகியிருந்தது.

மீண்டும் இதே நகரின் வங்கிக் கிளைக்கு மேலாளராக மாற்றலாகி வந்ததிலிருந்து அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பும், உரையாடும் நேரமும் கிடைத்தது. அப்பொழுது அவர் கம்பராமாயணத்திற்கு ஒரு உரை எழுதவேண்டும் என்பது தன் வாழ்க்கையின் குறிக்கோள் என்பதை எங்களிடம் கூறினார். ஆனால் மறுபடியும் அவருக்கு வெளியூர்களுக்கு மாற்றல்கள் வந்தன.

இறுதியாக நாமக்கல்லில் இருந்து ஓய்வுபெற்று வந்த போது 1998-ம் ஆண்டு தன் இலக்கில் தான் உறுதியாக இருப்பதாகவும் உரை எழுதத்தொடங்கப்போவதாகவும் அறிவித்து அதற்கான முயற்சிகளில் ஈடுபடலானார். இச்சமயத்தில் அன்றாடம் தான் எழுதிய உரைகளையும் எங்களிடம் தந்துவந்தார். 2001-ம் ஆண்டு, தான் முதல் நான்கு காண்டங்களுக்கும் உரை எழுதி முடித்து விட்டதாகவும் அதை நாங்கள் பதிப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். 2001-ம் ஆண்டு முதல் 2006ம் ஆண்டுவரை தன் நண்பர் ஒருவரின் அலுவலில் அவர் வேண்டுகோளுக் கிணங்க ஆலோசராகப் பணியாற்றி வந்தார். மீண்டும் 2006ம் ஆண்டு முடிவில் மிகத் தீவிரமாக இதில் இறங்கி, எங்களுடன் கூடவே இருந்து, இப்பொழுது 2007ம் ஆண்டு அதனை சீரிய முறையில் வெளியிடுவதற்கு இறைவன் வாய்ப்பளித்திருக்கிறான்.

Koviloor Digital Library

திரு. பழனியப்பன் அவர்களின் அயராத உழைப்பாலும், விடாத முயற்சியாலும்தான் நாங்கள் இந்தப்பதிப்பை வெளிக்கொணர முடிந்தது என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

முதல் நான்கு காண்டங்களும் காரைக்குடி கம்பன் கழகத்தில் 69வது கம்பன் விழாவில் மாண்பமை நீதியரசர் திரு. இராமசுப்பிரமணியன் அவர்களின் திருக்கரங்களால் 30.03.07 அன்று காரைக்குடி கம்பன் மணிமண்டபத்தில் வெளியிடப்பெற்றது. காரைக்குடி கம்பன் கழகச் செயலர் **கம்பன் அடிசூடி திரு. பழ. பழனியப்பன்** அவர்கள் அன்புகூர்ந்து இவ்வுரை நூல் வெளிவர பெரிதும் உதவினார்கள். அவர்களுக்கும், நூலை வெளியிட்டு நூலின் சில சிறப்பான கருத்துக்களையும் எடுத்துக்கூறி பாராட்டிய நீதியரசர் திரு. இராமசுப்பிரமணியம் அவர்களுக்கும் நூலாசிரியர் சார்பிலும் எங்கள் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஐந்தாவது காண்டமான சுந்தர காண்டம் காரைக்குடி கம்பன் கழகத்தில் 70ஆவது கம்பன் விழாவில் திரு. தமிழருவி மணியன் அவர்களால் 19.3.2008 அன்று காரைக்குடி கம்பன் மணிமண்டபத்தில் வெளியிடப்பெற்றது.

இப்பொழுது ஆறாவது காண்டமாகிய யுத்த காண்டத்தின் முதற் பகுதி எங்களால் வெளியிடப்படுகிறது. எஞ்சியுள்ள யுத்தகாண்டத்தின் இரண்டாவது, மூன்றாவது, நான்காவது பகுதிகளும் எங்களால் வெளியிடப்படுகிறது. அதற்கு இறைவன் திருவருளும், குருவருளும் அவர்க்கும் எங்களுக்கும் துணை புரிய வேண்டிக்கொண்டு தமிழ்மக்களுக்கு இந்த எளிய, சிறந்த உரையை வெளியிடுகிறோம். முந்தைய பகுதிகளைப் போலவே இந்தப் பகுதிக்கும் பெரும் தமிழார்வலர்கள் ஆதரவு தந்தருளுமாறு வேண்டுகிறோம். மிக்க மகிழ்ச்சி மிக்க நன்றி.

– சாந்தமங்கை பதிப்பகத்தார்

Koviloor Digital Library

முன்னுரை

உலகம் யாவையும் தாமுள ஆக்கலும்
நிலைபெறுத்தலும், நீக்கலும், நீங்கலா,
அலகிலா விளையாட்டுடையார் அவர்
தலைவர்; அன்னவர்க்கே சரண் நாங்களே.

வான்மீகி இராமாயணம் :

உலகம் யாவையும் பரந்து புகழ்ந்து பேசப்பட்டு வரும் ஒரு நூல் இராமாயணம்; இதனை 'ஆதிகாவியம்' எனவும், இந்நூலை ஆக்கிய வான்மீகி முனிவர் 'ஆதிகவி' என்றும் அழைக்கப்படுகிறார். இவர் இந்த உலகத்திலேயே நல்லொழுக்கத்தில் சிறந்த, 'நடையின் நின்று உயர் நாயகன்' யாரேனும் உளரா என்ற ஆசையில், நாரத முனிவனிடத்தில் இநதக் கேள்வியைக் கேட்டதாகவும், அதற்கு அவர், 'அயோத்தியில், இட்சுவாகு வம்சத்தில் பிறந்த ஸ்ரீராமன் ஒருவனே அப்படிப்பட்ட உயர்ந்த குணங்கள் அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்றவனாகத் திகழ்கிறான்' என்று கூறியதாகவும் அறிகிறோம். வான்மீகி கூறுகின்ற கல்யாண விசேஷ குணங்களாவன : வீரம், அறஅறிவு, நன்றியுணர்ச்சி, உண்மை பேசுதல், விரதத்தில் உறுதி, நல்லொழுக்கம், எல்லா உயிர்களிடத்தும் அன்புள்ளம், பல்கலை அறிவு, அன்பொழுகும் இன்முகம், தைரியம், கோபத்தை தன்வசப் படுத்துதல், ஒளி உமிழும் உடல், அழுக்காறு அற்றல், போரில் உருத்தெழுந்தபோது, தேவர்களும் அஞ்சத்தக்க ஆற்றல் உடைமை என்பனவாம்.

இதனையே எண்ணிக் கொண்டிருந்த வான்மீகி இரு கிரௌஞ்சப் பட்சிகள் - அன்றில்கள் - காதல் வயத்தில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதைக் கண்ணுற்றுக் கொண்டிருந்தார். அப்பொழுது, ஒரு வேடன் தனது இரைக்காக - உணவுக்காக - ஒரு ஆண் பட்சியை சுட்டு வீழ்த்திவிட்டான். அந்தக் கொடுமையைத் தாங்க முடியாதவராக வான்மீகி முனிவர் அவனைச் சபித்துச் சில வார்த்தைகளைக் கோபத்துடன் கூறிவிடுகிறார். பின்னர் தனிமையில் அந்த நிகழ்ச்சியை எண்ணி வருந்திக் கொண்டிருந்த வான்மீகி, தான் கூறிய வார்த்தைகள் தற்செயலாகச், சந்தங்கள் அமைந்ததாக ஆகிவிட்டிருப்பதைக் கண்டு வியந்து போனார். அதே நேரத்தில் நான்முகன் அவர் முன் தோன்றி, 'இந்த சந்தத்தை வைத்தே

Koviloor Digital Library

எல்லாம்வல்ல ஸ்ரீஇராமபிரானின் கதையைக் காவியமாக எழுதுக'' என்று சொல்லி, ஆசிர்வதித்துச் சென்றார். இவ்வாறு உருவாக்கப்பட்டதுதான் வான்மீகியின் புகழ்பெற்ற இராமாயணம்'. இராமபிரானை ஒரு மானிடனாக - வீரபுருஷனாகக் கண்டு, அவனுடைய வாழ்க்கை நெறிமுறைகளைக் கூறுகின்ற ஒரு வரலாற்றுக் காவியமாகத் தான் இராமாயணத்தை அருளினார். இவர்தம் இராமாயணம் 'ஒரு அமிர்த சாகரம்' வான்மீகி கி.பி. 3-4ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்றும் இராமபிரானும் வால்மீகியும் சமகாலத்தவர் என்றும், இவர்கள் திரேதா யுகத்தில் வாழ்ந்தவர்கள் என்றும் அறிகிறோம்.

இராமாயண நூல்களும், முறைகளும் :

இதன்பின்னர் இந்த வரலாறு உலகில் - இந்தியாவில் - எல்லா இடங்களிலும் பக்தியினை வெளிப்படுத்துகின்ற நூல்களாகப் பெரும் அளவில் கையாளப்பட்டிருக்கின்றன. இராமகாதை, இராமசரிதை என்ற வரலாறுகள் மகாபாரதத்திலும், விஷ்ணு புராணம், பாகவத புராணம், ஸ்கந்த புராணம், பத்ம புராணம் போன்ற புராண நூல்களிலும் இடம் பெற்றிருக்கின்றன. இந்தப் புராணங்கள் கி.பி.4-5ம் நூற்றாண்டுகளில் தோன்றியனவாகும். இந்து மதத்தினரைவிடவும் பௌத்த, ஜைன, சமண மதங்களிலும் இராமாயணத்தை'ப்பற்றிய குறிப்புகள் - கதைகள் பேசப்பட்டு இருக்கின்றன. மேலைநாடுகளிலும்-கீழ்த்திசைநாடுகளிலும் இராமாயண வரலாற்றை ஒட்டிய கவிதைகள் கிடைக்கின்றன என்றும் அறிகிறோம்.

வடமொழியைத்தவிர இருபதுக்கும் மேற்பட்ட இந்திய மொழிகளில் தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளிலும் இந்தி, அஸ்ஸாம், வங்காளம் ஒரிஸ்ஸா, மராட்டி முதலிய மொழிகளிலும் இராமகாதை மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. பல மொழிகளிலும், பல நாடுகளிலும் இராமாயணம் தத்தம் மொழி வல்லுநர்களான பெருங்கவிஞர்களாலேயே மொழிபெயர்க்கப் பட்டிருக்கின்றது அல்லது இராமாயணத்தை மொழி பெயர்த்ததாலேயே அக்கவிஞர்கள் பெருங்கவிஞர்களாகப் போற்றப் பட்டிருக்கின்றனர்.

தெலுங்கில் பாஸ்கர ராமாயணம் 13-ம் நூற்றாண்டிலும், கன்னடத்தில் பம்ப ராமாயணம் 11-ம் நூற்றாண்டிலும், மலையாளத்தில் எழுத்தச்சனின் அத்யாத்ம ராமாயணம் 16-ம் நூற்றாண்டிலும் வெளியிடப்பட்டிருக் கின்றன. இந்தியில் துளசிதாஸ் ராமாயணமும், ஒரிஸ்ஸாவில் பலராம தாஸ் ராமாயணமும், மராத்தியில் ஏகநாத ராமாயணமும் ஏறக்குறைய 14-16ம் நூற்றாண்டுகளில் வெளிவந்திருக்கின்றன. வடமொழியில் அத்யாத்ம ராமாயணம், அற்புத ராமாயணம், அனந்த ராமாயணம் என்று பல பெயர்களில் ராமாயணம் ஆக்கப்பட்டிருக்கிறது.

Koviloor Digital Library

இவை நாட்டுப்புறக்கதைகள், கூத்து, கீர்த்தனை, தாலாட்டு, கும்மி, சிந்து, சதகம், நாடோடிப்பாடல்கள் பழமொழிகள், சொற்பொழிவு, விரிவுரை, பட்டிமன்றம், வழக்காடுமன்றம், கவியரங்கம், சொல்லரங்கம், ஏலப்பாட்டு, காவடிச்சிந்து, அம்மானை, கிளிப்பாட்டு, கதகளிப்பாட்டு, துள்ளல் பாட்டு, நாட்டிய நாடகம் ஆகிய வடிவங்களிலும் எடுத்தாளப்பட்டிருக்கின்றன.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே உள்ள சங்ககாலப் பாடல்களான அகநானூறு, புறநானூறு போன்ற இலக்கியங்களில் ராமாயண நிகழ்ச்சிகள் குறிக்கப்பட்டிருப்பதைக் காண்கின்றோம். இதற்குரிய ஆதாரங்கள் அந்தந்தப் பாடல்கள் வரும் இடங்களில் - உரையில் விரிவாகப் பேசப்பட்டிருப்பதால், இங்கு விரித்துக் கூறப்படவில்லை. இதனைத் தொடர்ந்து வந்த சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, மணிமேகலை போன்ற ஐம்பெருங்காவியங்களிலும், 6-7ம் நூற்றாண்டில் இயங்கி வந்த பக்தி இலக்கியங்களான நாயன்மார்களின் திருமுறைகளிலும், ஆழ்வார்களின் திவ்யபிரபந்தங்களிலும், ஏனைய இறைவழிபாட்.டு நூல்களிலும் இராமகாதை, பெருமளவில் பேசப்பட்டிருப்பதைக் காண்கிறோம். வைணவ சமயத்தைச் சார்ந்த சான்றோர்கள் ஸ்ரீராமபிரானைத் திருமாலின் அவதாரமாகவே கருதி மிகப் பலப்பட தமது நாலாயிரத்திவ்ய பிரபந்தங்களில் கையாண்டிருக்கின்றார்கள்.

கம்பனின் இராமாவதாரம் :

பின்னர் தோன்றிய கவிச்சக்ரவர்த்தி கம்பன் வான்மீகியின் ஆதிகாவியமாகிய இராமாயணத்தை தமிழில் வழி நூலாக ஆக்கித் தந்திருக்கிறான். கம்பன் தன்னுடைய வழி நூலுக்கு 'இராமாவதாரம்'என்றே பெயர் சூட்டியிருக்கிறான். கம்பனது கவித்திறனையும், ஆழ்ந்த ராமபக்தியையும் உணர்ந்து, தமிழ் மக்கள் அதனை 'கம்ப இராமாயணம்' என்றே போற்றி புகழ்ந்து பாராட்டி வந்திருக்கின்றனர். இன்றும் 'இராமாவதாரம்' என்ற பெயரைக்காட்டிலும் 'கம்ப இராமாயணம்' வழக்கில் இருந்து வருகிறது. இவ்வாறு நூலாசிரியன் சூட்டிய பெயரை விடவும் மக்களால் சூட்டப்படுகின்ற பெயர் நிலைத்து நிற்பது தமிழ் இலக்கிய உலகிற்கு ஒன்றும் புதிதல்ல. சேக்கிழார் தான் இயற்றிய நூலுக்குத் 'திருத்தொண்டர் புராணம்' என்றே பெயர் சூட்டியிருந்தார். ஆனால் தமிழ் மக்கள் அதனை இன்றும் 'பெரியபுராணம்' என்றே அழைத்து வருகின்றனர். இதேபோலத்தான் மாணிக்கவாசகரின் 'சிவபுராணம்' இன்று 'திருவாசகம்' என்று அழைக்கப்படுகிறது. திருமூலரின் 'தமிழ்மூவாயிரம்', 'திருமந்திரம்' என்று அழைக்கப்படுகிறது. நூலின் அருமை, பெருமை, நுவல்பொருள் கருதி மக்கள் இவ்வாறு அழைக்கத் தொடங்கினர்.

Koviloor Digital Library

கம்பனின் இராமாயணம் - ஒரு தழுவல் நூலா? மொழிப்பெயர்ப்பு நூலா? : இரண்டும் அன்று. அது ஒரு பெருங்காப்பியம்; மிகச்சிறந்த காவியம்; கவிதைக் கருவூலம்; கற்பனைச்சுரங்கம்; அறிவு ஊற்று; அதி அற்புதமான கருத்துக் களஞ்சியம். வான்மீகி அமைத்துக் கொடுத்த மாளிகையின் அடித்தளத்தை மாற்றாமல் அந்தக் காவியத்தின் சுவை குன்றாமல், நீக்க வேண்டியவற்றை நீக்கி, விடுத்து, சேர்க்கப்பட வேண்டியவற்றைச் சேர்த்து, விரித்துச் சொல்லப்பட வேண்டியவற்றை விரித்து, சுருக்கி, திருத்தி, புதுக்கி, மாற்றி, செப்பனிட்டு, தொகுத்து ஒரு பெரிய மாளிகையை ஒரு பெருங்காப்பியமாக நமக்குத் தந்திருக்கிறான். இந்த மாளிகையைக் கட்டும்பொழுது தமிழ் மண்ணின் பண்பாடு, நாகரிகம், மனிதநேய மாண்புகள், அறநெறிகள் முதலியன மிளிரும் கலைச்செல்வமாகக் கட்டியிருக்கிறான். தன்காலத்திற்கு முந்திய திருக்குறள், ஐம்பெருங்காப்பியங்கள், திருமுறை, திவ்ய பிரபந்தங்கள் முதலிய நீதிநூல்கள், இலக்கியங்கள் இவைகளில் காணப்பெறும் நயங்களையும், கவிச்சுவையையும், கம்பன் தன் காப்பியத்தில் எடுத்தாளத் தயங்கவில்லை.

சரி. கம்பனின் இராமாயணம் ஒரு இதிகாசமா? புராணமா? காப்பியமா? காவியமா? வழிநூலா? இவை எல்லாவற்றிற்கும் ஒரே விடை 'ஆம்' தான். கம்ப இராமாயணம் ஒரு இதிகாசம். ஏன்? இதிகாசம் என்றால் என்ன? பழைய ஒரு வரலாற்றை விரித்துக்கூறும் ஒரு நூல். உபதேசப் பரம்பரையில் வந்த ஒருவருடைய பழைய சரித்திரத்தைப் பிரதானமாக எடுத்து பல கிளைக் கதைகளோடு விரித்துக் கூறுவதால் இதனை இதிகாசம் என் கிறோம். சரி. புராணம் என்றால் என்ன? உலகத்தின் தோற்றம், ஒடுக்கம், முனிவர்கள், அரசர்கள், மரபு, அவர்கள் சரித்திரங்கள், மனுவந்திரம் ஆகிய ஐம்பொருள்களை விரவக்காணும் நூல் புராணம் எனப்படும். இந்த ஐந்து பொருட்களையும் பலபடப் பேசுவதால் கம்பனின் இராமாயணம் ஒரு புராணம் என்றும் அழைக்கப்படுகிறது. சரி. காப்பியம் என்றால் என்ன?

முன்னம் வணக்கம்: அறம் முதல் நான்கின் திறம் உரைத்தல்;
தன்னிகரில்லாத் தலைவனைக் கூறல்:
தசாங்கங்களைவன்னித்தல்: வாய்ந்த பருவம், இருசுடர்த்
தோற்றங்கள் தாம்இன்னன கூறல், பெருங்காப்பியத்திற்கு
இலக்கணமே;

பொன்முடிசூடல்; பொழில்விளையாடல், புனலாடுதல்,
நன்மணம் செய்தல், நறவு, ஊண், களிப்பு, கலவி, துனி
மன்னும் புதல்வர் பெறுதல்; நன்மந்திரம் தூதுசெல்லல்;
இன்இகல் வென்றி வாகை சந்தி கூறல், காப்பியமே:

- கலித்துறைப்பாட்டியல்

Koviloor Digital Library

இதில் அறம் முதல் நான்காவன : அறம், பொருள், இன்பம், வீடு என்ற பேறுகள்

தசாங்கங்கள் என்பவை : மலை, ஆறு, காடு, ஊர், தார், பரி, களிறு, கொடி, முரசு, ஆணை முதலியன.

இருசுடர் என்பன - சந்திர, சூரியர்

இதிகாசம், புராணம் என்ற இலக்கணங்களைவிட, காப்பியம் என்ற இலக்கணத்திற்கே கம்பனின் இராமாயணம் பெரிதும் பொருந்துவதை இதனால் உணரமுடியும். சரி. காவியம் என்றால் என்ன?

விருப்பம் தரும் சுவை; பாவ விகற்பம்
இருபாக்களால்உரைத்தஇனத்தால், உரையோடுஉடன்படமெல்லவந்து
சருக்கம், இலம்பகம், மாம்பரிச்சேதம்என்னும்பெயரேதெரிந்துவருவது
செப்பிய காவியம் தேமொழியே!

-கலித்துறைப்பாட்டியல்

மக்கள் விரும்பும்வகையில் சுவைமிகுந்த கதைப்பாங்கில் வேறுபட்ட பாத்திரப்படைப்புகளையும், பாடல்களையும், இலக்கிய நயத்தோடு, விரிவாக அலங்காரம் உடையதாய் பாக்களால் பாடப்பெறுவது காவியம் எனப்படும். எனவே, கம்பனின் இராமாயணத்தைக் காவியம் என்றும் அழைக்கின்றோம். சரி. கம்பனின் இராமாயணம் ஒரு வழி நூலா? ஆம். வழிநூல் என்பது என்ன?

முன்னோர் நூலின் முடிவு ஒருங்கு ஒத்துப்
பின்னோர் வேண்டும் விகற்பம் கூறி
அழியா மரபினது வழி நூலாகும்.

எனவே, மேலே கூறியவற்றுள் கம்பனின் இராமாயணம் ஒரு பெருங்காப்பியம், ஒரு நல்ல காவியம், ஒரு இதிகாசம், ஒரு புராணம், ஒரு வழி நூல் என்பது தெள்ளத் தெளியத் தெரிவதோடு, அது ஒரு தழுவல் நூல் அல்ல. அது ஒரு மொழிப்பெயர்ப்பு நூல் அல்ல என்பதும் உறுதியாகத் தெரியவருகிறது. அது ஒரு வரலாற்று இலக்கியம்.

கம்பன் தனது பெருநூலுக்கு வான்மீகியைக் கருவாகக் கொண்டு பாடினானே அன்றி வேறன்று. கம்பன் கூறும் கதையும், கதை நிகழ்ச்சியும், கதாபாத்திரங்களும், பிறவும் எல்லாம் அவனது உள்ளத்தின் அடித்தளத்தினின்றும் உதயமானவையே. கங்கையும், காவிரியும் தாகத்திற்குத் தண்ணீர் கொடுக்கும் குடிதண்ணீர்ச் சாதனங்கள் மட்டும் அல்ல. அவை ஜீவ நதிகள். வணங்க வேண்டிய தெய்வங்கள். அவ்வாறே கம்பனின் பாத்திரப்படைப்புகளும் வணங்க வேண்டியவர்களாக ஆகிறார்கள். தான் வாழ்ந்த காலத்திற்கேற்ப ஒரு புது சிருஷ்டியாகவே தனது பெருங்காப்பியத்தை கம்பன் ஆக்கித் தமிழ் உலகிற்குத் தந்துள்ளான். கம்ப இராமாயணம் வெறும் நீதி நூலன்று. ஏனெனில், அறம் சொல்லும்

Koviloor Digital Library

நூல்கள் தலைவன் தன் ஏலவாளர்க்குக் கூறும் சொற்கள் போன்றவை; புராணங்கள் நண்பர் ஒருவருக்கு ஒருவர் கூறிக்கொள்வது போன்றது. ஆனால், காவியங்கள், காதலர் இருவரின் கருத்தொருமித்த பேச்சுப் போன்றது; அன்பு தோய்ந்தது; அறவழி நிற்பது; இன்பம் துய்க்கத் துடிப்பது; துன்பம் துடைப்பது, வீடுபேறு அடையச் செய்வது.

கம்பராமாயண மூலமும் உரையும் :

கி.பி. 1840ல் திரு. வெங்கடாசல முதலியார் அவர்களாலும், 100 ஆண்டுகளுக்குப் பின்னர் 1924ல் மதுரை கோபால கிருஷ்ணக் கோன் கம்பெனியாராலும், மூலம் மட்டும் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது 1957-58ல் சென்னை மர்ரே அண்ட் கம்பெனி, ராஜம் அவர்களாலும், 1976ல் சென்னை கம்பன் கழகத்தாராலும் மூலம் மட்டும் வெளிவந்திருக்கின்றன. கற்றறிந்த சான்றோர்களுக்கு மட்டுமே மூலப் பாடல்கள் பயனளிக்கும். இந்த இரண்டு பதிப்புக்களிலும் இடைச் செருகல் என்று கருதப்பட்ட - வெள்ளியம்பலத்தம்பிரான் - வாணிதாதன் முதலானோர் இயற்றி அமைக்கப்பட்டன என்று கருதப்பட்ட, ஆயிரத் திற்கும் மேற்பட்ட பாடல்கள் மிகைப்பாடல்கள் என்று தலைப்பிட்டு அந்தந்தப் படலங்களின் இறுதியில் இணைக்கப்பட்டிருக்கின்றன. இந்த இரு பதிப்புகளையும் முறையே கம்பனடிப்பொடி திரு. சா. கணேசன் அவர்கள் தலைமையிலும், நீதியரசர் மு.மு. இஸ்மாயில் அவர்கள் தலைமையிலும் அமைந்த இரு பதிப்பாசிரியர்கள் குழுக்கள் செப்பனிட்டுத் திருத்தி வெளியிட்டிருக்கின்றன. விபரங்கள் அருகில் உள்ள அட்டவணையில் தரப்பட்டிருக்கின்றன.

பொதுவாகத் தமிழ் இலக்கியத்தில், தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள், திருக்குறள், திருமுருகாற்றுப்படை போன்ற பெரும் நூல்களுக்கு உரைகள் வரையப்பட்டுள்ளன. அதுபோன்றே தமிழில் மற்றொரு இலக்கியமான கம்பராமாயணத்திற்கும் பல உரைகள் இதுவரை வெளிவந்திருக்கின்றன. பாலகாண்டத்திற்கு மட்டும் 1861-ல் முதன் முதலாக ஜி.வெங்கடசாமி முதலியாரும், காஞ்சிபுரம் சபாபதி முதலி யாரும் எழுதியிருக்கின்றனர். அதன் பின்னர் நமக்குத் தெரிந்திருக்கும் கம்பராமாயண முழு உரை அதாவது 6 காண்டங்களுக்கு மான முழு உரை திரு. வை.மு. கோபால கிருஷ்ணமாச்சாரியார் அவர்களால் 1929-ம் ஆண்டு முதல் பதிப்பிக்கப்பட்டு 7-8 பதிப்புக்கள் 1967 வரை வெளிவந்திருக் கின்றன. ஆயினும் இவற்றில் எவையும் இன்று கல்லூரிகளிலோ, பள்ளி களிலோ, அரசு நூலகங்களிலோ கிடைக்கப் பெறுவதில்லை. இதனைத் தொடர்ந்து 1956-57ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகமும், சென்னை திருவான்மியூர் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் நூலகமும் தனித்தனியே உரை எழுதி வெளியிட்டிருக்கின்றனர். இவர்கள் ஆண்டுக்கு ஒரு காண்டம் என்ற கணக்குப்படி 1972 வரை முறையே 16 தொகுதிகளாகவும், 8 தொகுதிகளாகவும் வெளியிட்டு இருக்கின்றனர். இரண்டு பதிப்புக்

Koviloor Digital Library

களுக்கும் அரசு மானியமும், சில அறக்கட்டளைகளும் உதவி செய்து இருக்கின்றன. என்றாலும் இவற்றில் எதுவும் இரண்டாவது பதிப்பாக வெளிவர வில்லை. முதற்பதிப்பு இப்பொழுது கிடைப்பது மிக அரிதாக இருக்கின்றது.

இதனை நன்கு உணர்ந்த கோவை கம்பன் அறநிலை, சுமார் 30 ஆண்டுகளுக்குப்பின் 1992 முதல் 1998 வரை 6 ஆண்டுகளில், எட்டுத் தொகுதிகளாக பேராசிரியர் திரு. அ.ச. ஞானசம்பந்தம் அவர்களை முதன்மைப் பதிப்பாசிரியராகக் கொண்டும், 15 உரை ஆசிரியர்களைக் கொண்டும் ஒரு உரை வெளியிட்டிருக்கிறது. இது மிகக் குறைந்த அளவில் பிரதிகள் வெளியிட்டதனாலும், அன்பளிப்புப் பிரதிகளாக அதிகம் கொடுபட்டு விட்டதாலும் இந்தப் பிரதிகளும் இப்பொழுது எங்கும் கிடைப்பதில்லை. இவற்றைத்தவிரவர்த்தமானன்பதிப்பகமும், திருமகள் நிலையமும், ஏறத்தாழ ஒரே நேரத்தில் 1997-1999ல் உரைகள் வெளியிட்டிருக்கின்றனர். வர்த்தமானன்உரைதிரு. பூவண்ணன்அவர்களால்எழுதப் பட்டுள்ளது. இதில் வார்த்தைக்கு வார்த்தை பொருள் கொண்ட பொருளுரை கிடைக்கிறதே தவிர விளக்கவுரை கிடைப்பதில்லை. திருமகள்நிலையத்தார்திரு. நாராயணவேலுப்பிள்ளைமுதலிய3ஆசிரியர் களைக் கொண்டு வெளியிட்டுள்ள விளக்கவுரை பெரும்பாலோருக்குப் பயன்படும் முறையில் வெளியிடப்பட்டிருக்கிறது.

காப்பியப் பகுப்பு :

கம்பன் தனது காப்பியத்தைப் பழைய மரபுகளுக்கேற்ப எப்படிப் பகுத்துப் பாடினான் என்பது அறியக்கூட வில்லை. பின் நாளில் எழுந்த ஒரு தனிப்பாடலைக் கொண்டு அவனது பிரிப்பு முறைகளையும், பாடல்களின் எண்ணிக்கையையும், அதில் நடக்கின்ற போர்களையும், கிளைக்கதைகளின் எண்ணிக்கையையும், அவன் எந்த வகைப் பாவில் எத்துணை வகையில் பாடியிருக்கிறான் என்பதையும் அறிகிறோம்.

வான்மீகி சர்க்கம் என்று குறித்ததைக் கம்பன் படலம் என்று குறிக்கிறான். வான்மீகி 24000 ஸ்லோகங்களில் பாடியதைக் கம்பன் 12000 பாடல்களில் சுருக்கித் தந்திருக்கிறான். அந்த 12000 பாடல்களிலும் இடைச்செருகல் என்று 1500 பாடல்கள் சான்றோர்களால் மிகைப்பாடல்கள் எனத் தவிர்க்கப்பட்டுவிட்டது. எனவே கம்பன் சுமார் 10500 பாடல்களில் தனது காப்பியத்தை ஆக்கியிருக்கிறான். இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் எந்த ஒரு பதிப்பும், படலப் பாகுபாட்டிலும், பாடல்கள் எண்ணிக்கையிலும் ஒத்துப் போகவில்லை. உரையாசிரியர்கள் தத்தமக்கு விருப்பமானவற்றைச் சேர்த்திருக்கிறார்கள் அல்லது மிகைப்பாடல்களாக ஒதுக்கியிருக்கிறார்கள். பழைய ஏட்டுச் சுவடிகளில் இருந்து எடுக்கும் போது ஒரு காப்பியத்திற்கு ஏற்படும் இயல்பான நிலை இது. அருகில் கொடுக்கப்பட்டிருக்கிற அட்டவணை இதனைத் தெளிவாகக் காட்டும்.

Koviloor Digital Library

ஏறக்குறைய 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காப்பியத்தைப் பற்றி இன்று நாம் நாட்டின் மூலை, முடுக்கு, பட்டி, தொட்டிகள் எல்லாவற்றிலும் ஏதோ ஒரு வகையில் கேட்டுக் கொண்டுதானே இருக்கிறோம்? ஆயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட கம்பனது கவிதையைச் சாதாரணமான தமிழன் இன்று பெரும்பாலும் புரிந்து கொள்ள முடியும். ஆனால் 300 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஷேக்ஸ்பியரது கவிதைகளை இன்றைய நம்மால் புரிந்து கொள்ள இயலுமா? அதுதான் தமிழ் மொழியின் சிறப்பு, கம்பனின் தனிச்சிறப்பு. அவன் காப்பியத்தில் இந்த உலகியலிலுள்ள அனைத்துத் துறையிலும் தோய்ந்த அறிவும், நுண் மாண் நுழைபுலமும் பரவி நிற்கக் காண்கிறோம். அவன் தோயாத துறைகளே இல்லை. எனவேதான் அறிஞர் பெருமக்கள் அவனைத் 'தோயாத துறையிலாத் தோன்றல்' என்று சிறப்பித்தனர்.

காண்டங்கள்	Murray & Co., (1957/58)			கம்பன் கழகம், சென்னை (1976)		
	படலங்கள்	பாடல்கள்	மிகைப் பாடல்கள்	படலங்கள்	பாடல்கள்	மிகைப் பாடல்கள்
பாலகாண்டம்	24	1225	213	23	1301	187
அயோத்தியா காண்டம்	14	1185	76	13	1202	58
ஆரண்ய காண்டம்	16	1187	66	13	1181	66
கிஷ்கிந்தா காண்டம்	17	1025	52	16	1031	71
சுந்தர காண்டம்	14	1257	208	14	1318	147
யுத்த காண்டம் (4 தொகுதிகள்)	42	4063	851	39	4309	764
மொத்தம்	**127**	**9942**	**1468**	**118**	**10342**	**1293**

எனக்குள் எழுந்த ஆர்வம்:

இந்த நிலையில்தான் எனக்குள் ஒரு அடங்காத ஆசை - கம்பனை முழுதும் படிக்கவேண்டும் என்ற ஆசை - எழுந்தது. இது தெய்வ சங்கல்பம் என்றே எண்ணுகிறேன். நான் பணியாற்றும் வங்கியின் நாமக்கல் கிளைக்கு 1995ல் மாற்றப்பட்டேன். நாமக்கல் என்ற உடனேயே எல்லோருக்கும் 18 அடி ஆஞ்சநேயர் திருவுருவ ஆலயம் தான் நினைவுக்கு வரும். நாள்தோறும் ஆலயத்திற்குச் சென்றுவரும் போது என்னுள் இந்த மிகப்பெரிய ஆசை வித்தூன்றிச் செழித்து வளர்ந்தது. நண்பர் **வ.சுப.மா. தொல்காப்பியன்** அவர்கள் சென்னை கம்பன் கழகம் (1976) பதிப்பு - கம்பராமாயணம் மூலம் மட்டும் தந்து உதவி, ஊக்கம் அளித்தார்கள். நான் நாமக்கல்லில் இருந்த இரண்டு ஆண்டுகளில் ஒரு மூன்றுமுறை திருப்பித் திருப்பி மூலத்தை மட்டுமே, நேரம் கிடைக்கும்போதெல்லாம் படித்து வரலானேன். சில பாடல்கள் புதியதாகவே இருந்துவந்தன. அதற்கு ஒரு

Koviloor Digital Library

குரு - ஆசிரியன் தேவைப்பட்டான். அது அங்கே கிடைப்பது அரிதாக இருந்தது. எனவே இதற்குரிய உரைகளைத் தேடும் பணியில் ஈடுபட்டேன். கம்பன், கம்பராமாயணம் தொடர்புள்ள நூல்கள் எங்கெங்கே கிடைக்கின்றனவோ அவற்றையெல்லாம் வாங்க ஆரம்பித்தேன். முதலில் வை. மு. கோபால கிருஷ்ணமாச்சாரி அவர்கள் உரையைப் பார்க்கலானேன். அவர்களது தமிழ் மிக உயரிய, வடமொழி கலந்த தமிழாக இருந்தது. அது எனக்குச் சரியாக அமையவில்லை. அடுத்து என்ன செய்யலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கும்போது எனக்குக் கோவைக்கு மாற்றலாகியது. கோவை அரசு நூலகம் மிக அருமையாகப் பணியாற்றுகிறது. பணியாளர்கள் மிக அன்புடன் வருபவர்களுக்கு உதவி செய்கிறார்கள். அங்கே எனக்கு, சென்னை பழனியப்பா பிரதர்ஸ் வெளியிட்ட திரு. கோ. வில்வபதி அவர்களின் பாலகாண்ட உரை மட்டிலும் கிடைத்தது. இப்போதைக்கு இதுவே போதும் என்று அதைப் படித்துக் குறிப்பு எடுக்கலானேன். இரண்டு முறை படித்திருப்பேன் - ஆறு மாதங்கள் ஓடிவிட்டன. அதற்குள் எனக்கு மீண்டும் சென்னைக்கு மாற்றலாகிவிட்டது. சென்னையில் ஒரு நூல் நிலையத்திலும் கம்பனது நூலுக்கு உரையே கிடைக்கவில்லை. ஒரு இரண்டு மாதம் இந்தத் துறையில் கருத்தைச் செலுத்தாது இருக்க நேரிட்டது.

1998ம் ஆண்டு ஜூன் 24ம் நாள் சென்னையை அடுத்த திருமுல்லைவாயிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவைஷ்ணவியின் ஆலயத்தைக் கண்ணுற்றேன். நான் முன்பு ஒரு 30 ஆண்டுகளுக்கு முன் இங்கு பணியாற்றும்போது இந்த ஆலயத்தைப் பற்றி நன்கு தெரிந்து வைத்திருந்தேன். ஆதலின் இப்போது மீண்டும் சென்று அங்குள்ள நூல்நிலையத்தைப் பார்த்தேன். என்ன ஆச்சர்யம்! அங்கு இதுவரை வெளிவந்துள்ள கம்பராமாயண உரைகள் அனைத்தும் - வை.மு.கோ. உரை, அண்ணாமலைப் பல்கலைக்கழக உரை, டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் நூல்நிலைய உரை - எல்லாம் இருக்கக் கண்டேன். மட்டற்ற மகிழ்ச்சி கொண்டு எப்படிச் செய்வது என்று எண்ணிக் கொண்டிருந்தேன். வங்கித் தலைமை அலுவலகத்தை அணுகி எனக்கு 6 மாத விடுமுறை வேண்டும் என்று கேட்டேன். சிறிது தயக்கத்திற்கு பிறகு அவர்கள் ஒத்துக் கொண்டார்கள். பிறகு வைஷ்ணவி ஆலய நிர்வாகத்தாரை அணுகினேன். எனக்கு 6 மாதத்திற்கு நூல் நிலையப் புத்தகங்களை எடுத்துப் படிப்பதற்கு அனுமதிப்பதோடு அங்கேயே தங்கும் வசதியும் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். அங்கே அந்த வசதி இருப்பதால் உடனேயே எனக்கு அனுமதி அளித்தது மட்டுமின்றி உணவுக்கும் ஏற்பாடு செய்து தந்தார்கள். அவர்களுடைய அன்பும், கருணையும், தாராள

Koviloor Digital Library

மனப்பான்மையும் என்றும் என்னால் மறக்க ஒண்ணாதது. பிறகு விரைவாகப் படிக்க ஆரம்பித்தேன். குறிப்புக்கள் எடுக்க முனைந்தேன்.

கம்பனைப் படிக்க படிக்க - உரைகளுடன் பொருள் உணர்ந்து படிக்க - சான்றோர்களின் பலவகையான கருத்துக்களையும் படிக்கப்படிக்க எனக்குள் ஒரு தன்னம்பிக்கையும், மன தைரியமும் வளர்ந்து விட்டன. ஒவ்வொரு உரையையும் பலமுறை படித்தேன். தொட்டுவிடத் தொட்டுவிடத் தொடருகின்ற காதல் எனக்குக் கம்பனிடம் உண்டாகியது. தொட்டனைத்தூறும் மணற்கேணி போலப் படிக்கப் படிக்கப் பொருள்கள் நெரிய வரலாயின. புணரும் தோறும் போகம், பின்னும் புதிதாய் வளர்கின்றது என்று திருக்கோவையார் சொல்லியது போல, மனம் கம்பனில் முழுக்கத் தோய்ந்தது.

இது கம்பன் பாடல்களுக்கு விளக்கவுரை. முதலில் பாடல்கள் எல்லோருக்கும் புரியும் வண்ணம் சந்தி பிரித்துத் தரப்பட்டிருக்கிறது, பின்னர் பாடலில் பயின்று வந்திருக்கின்ற அருஞ்சொற்களுக்கு எல்லோருக்கும் புரிவதற்காக ஒன்றுக்கும் மேற்பட்ட பொருள்கள் தரப்பட்டிருக்கின்றன, பின்னர் பாடலுக்குரிய பொழிப்புரை தரப்பட்டிருக்கிறது, அதன் பின்னர் அப்பாடலில் உள்ள சொற்களின் சிறப்பு நயம் விளக்கப்பட்டிருக்கிறது, ஆங்காங்கே தொடர்புடைய மேற்கோள்களும் தரப் பெற்றிருக்கின்றன, என்னுடைய நோக்கமே. இது மிக எளிதாக எல்லோருக்கும் புரியவேண்டும் என்பதே, கம்பன் தமிழ்ப் புலவர்களுக்கு மட்டும் சொந்தமானவனல்லன், அவனை எல்லோரும் அறிந்து கொள்ளும் வண்ணம் எளிய தமிழில். வழக்கில் உள்ள தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்திப் புரியவைத்திருக்கிறேன், இன்றைய இளம் தலைமுறையினருக்கும். மாணவ. மாணவியர்க்கும் இது பெரிதும் உதவும் என நம்புகிறேன்,

உற்றுழி உதவியோர்:

இக்காப்பியத்தைக்கம்பன்எழுதுவதற்குக்காரணமாயிருந்தசடையப்ப வள்ளலைப் போல, இந்த உரையை நான் எழுதுவதற்கு முழுமுதற் காரணமாக இருந்து, உள்ளத்தாலும், பொருளாலும் பேருதவி புரிந்தவரும் ஒரு இராமர்தான். வெற்றி பொருந்திய இராமர் - ஜெயராமர் (Jai Expo) இவர் எடுத்த காரியங்கள் அனைத்தும் தடையின்றி நிறைவேறும். தொடுத்த செயல்கள் அனைத்தும் துலங்கும். இராமாயணம் படிப்போரையும், கேட்போரையும் அவர்களது இருபத்து ஒரு தலைமுறையினர் வாழ்த்துவர் என்று சான்றோர் கூறுவர். அத்தகைய பெரும் பயனை எனக்கு அளித்த அரிமா. திரு.B.ஜெயராமன் அவர்களுக்கும், அவர் தம் குடும்பத்தாருக்கும்

Koviloor Digital Library

நான் என்றும் கடமைப்பட்டவனாவேன். அவர்கள் அலுவலகத்தில் உள்ள நண்பர்களுக்கும் நன்றி. பாலகாண்டத்தின் முதல் சில படலங்களில் அச்சுப் படிகளைக் கூர்ந்து நோக்கித் திருத்தி உதவிய பேராசிரியர் **திரு.ந.சுப்புரெட்டியார்** அவர்களுக்கு எவ்வளவு முறை நன்றி சொல்வது என்று புலப்படாமல் தவிக்கிறேன்.

இத்தகைய ஒரு பெருங்காப்பியத்திற்குத், தனிஒருவனாகவே, ஏனைய உரை நூல்களில் ஆழங்கால்பட்டு, இவ்வுரையினை எல்லாம் வல்ல எம்பெருமான் ஸ்ரீ இராமபிரான் திருவருளால் எழுத முயன்றிருக்கிறேன். இதில் குற்றம், குறைகள் இருக்கக் கூடும். இது என் முதல் முயற்சி. குற்றங்களை அன்பு கூர்ந்து சுட்டிக்காட்டி ஊக்குவித்தால், மிக்க நன்றி உடையவனாய் இருப்பேன்.

முதல் நான்கு காண்டங்களும் காரைக்குடி கம்பன் கழகத்தில் 69வது கம்பன் விழாவில் **மாண்பமை நீதியரசர் திரு. இராமசுப்பிரமணியன்** அவர்களின் திருக்கரங்களால் 30.03.07 அன்று காரைக்குடி கம்பன் மணிமண்டபத்தில் வெளியிடப்பெற்றது. காரைக்குடி கம்பன் கழகச் செயலர் **கம்பன் அடிசூடி திரு. பழ. பழனியப்பன்** அவர்கள் அன்புகூர்ந்து இவ்வுரை நூல் வெளிவர பெரிதும் உதவினார்கள். அவர்களுக்கும், நூலை வெளியிட்டு நூலின் சில சிறப்பான கருத்துக்களையும் எடுத்துக்கூறி பாராட்டிய நீதியரசர் திரு. இராமசுப்பிரமணியம் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதல் நான்கு காண்டங்களுக்கும் அணிந்துரை, ஆய்வுரை, வாழ்த்துரை வழங்கிய **திருவாளர்கள் முனைவர் பேராசிரியர். தெ.ஞானசுந்தரம் அவர்களும், முனைவர் திரு.சிலம்பொலி சு. செல்லப்பன் அவர்களும், திரு.வ.சுப.மா.தொல்காப்பியன் அவர்களும், முனைவர் பேராசிரியர் ஆறு.அழகப்பன் அவர்களும்** மற்றும் தமிழ் ஆர்வலர்களும் தந்த ஊக்கத்தினால்தான் என்னால் யுத்த காண்டத்தின் நான்கு பகுதிகளையும் இவ்வளவு சீக்கிரத்தில் எழுதி வெளியிட முடிந்தது என்பதையும் மிகப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுந்தரகாண்டத்திற்கு அணிந்துரை வழங்கி என்னை ஊக்குவித்த **திரு.ஔவை நடராசன் அவர்களுக்கும், திருமதி. டாக்டர் சுதாசேஷய்யன் அவர்களுக்கும், திரு. மதிவண்ணன் அவர்களுக்கும், திரு.தெ.ஞானசுந்தரம் அவர்களுக்கும், செல்வி. இரா. ருக்மணி அவர்களுக்கும்** எனது நெஞ்சார்ந்த நன்றி உரித்தாகும். என்னுடைய முயற்சியில் பெரும்பங்கு எடுத்துக்கொண்டு இவ்வுரைநூலுக்கு ஆய்வுரைவழங்கிய முனைவர்திரு.

Koviloor Digital Library

சிலம்பொலி சு. செல்லப்பன் அவர்களுக்கு நான் என்றும் கடமைப்பட்டவனாவேன்.

ஐந்தாவது காண்டமான சுந்தர காண்டமும் காரைக்குடி கம்பன் கழகத்தில் 70வது கம்பன் விழாவில் **திரு. தமிழருவி மணியன்** அவர்களின் பொற்கரங்களால் 19.03.08 அன்று காரைக்குடி கம்பன் மணிமண்டபத்தில் வெளியிடப்பெற்றது. காரைக்குடி கம்பன் கழகச் செயலர் **கம்பன் அடிசூடி திரு. பழ.பழனியப்பன்** அவர்களுக்கும், நூலை வெளியிட்டு நூலின் சிறப்பான சில கருத்துக்களை மாணிக்கவாசகரின் திருவாசகத்தினை மேற்கோள் காட்டி ஒப்பிட்டுப் பாராட்டிய திரு. தமிழருவி மணியன் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆறாவது காண்டமான யுத்த காண்டத்தில் மட்டும் ஏறக்குறைய 4600 பாடல்கள் உள்ளன. இவை நான்கு பகுதிகளாக வெளிவர இருக்கின்றன. அதில் முதற் பகுதி இப்பொழுது **முனைவர் பேராசிரியர் திரு.தெ.ஞானசுந்தரம்** அவர்களின் அணிந்துரையுடன் வெளிவருகிறது. என்னுடைய இந்த முதல் முயற்சியில் பங்கெடுத்துக் கொண்டு எனக்கு எல்லா வகையானும் ஊக்கமும் ஆக்கமும் அளித்த அனைவரையும் இந்நேரத்தில் நன்றியுடன் நினைவுகூர்கிறேன்.

அன்பன்

பல்வத்தூர் பழ.பழநியப்பன்

23/10, பழைய பேங்க் ஆஃப் பரோடா தெரு,
அம்பத்தூர், சென்னை-600 053.
செல்: 9840868543

Koviloor Digital Library

காண்டம் / தொகுதி		பதிப்பாளர்கள்												
		வை.மு.கோ. 1943		அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1955-70		டாக்டர் உ.வே.சா. நூல் நிலையம் 1957-72		கோவை கம்பன் அறநிலை1992-98			திருமகள் நிலையம் 1998		பள்ளத்தூர் பழ. பழனியப்பன் பதிப்பு 2008	
		படலங்கள்	பாடல்கள்	படலங்கள்	பாடல்கள்	படலங்கள்	பாடல்கள்	படலங்கள்	பாடல்கள்	மிகை பாடல்கள்	படலங்கள்	பாடல்கள்	படலங்கள்	பாடல்கள்
பாலகாண்டம்	I	22	1397	10	720	22	1389	23	1312	187	10	719	22	1401
	II	-	-	12	677	-	-	-	-	-	12	678	-	-
அயோத்தியா காண்டம்	I	12	1224	5	616	6	645	13	1202	58	6	651	13	1213
	II	-	-	7	588	7	563	-	-	-	7	573	-	-
ஆரண்ய காண்டம்	I	11	1204	6	558	12	1195	13	1192	66	11	1204	13	1197
	II	-	-	5	645	-	-	-	-	-	-	-	-	-
கிஷ்கிந்தா காண்டம்	I	17	1050	9	563	16	1004	16	1032	70	17	1051	16	1034
	II	-	-	7	472	-	-	-	-	-	-	-	-	-
சுந்தர காண்டம்	I	15	1343	5	690	14	1295	14	1318	147	6	693	14	1296
	II	-	-	9	648	-	-	-	-	-	9	649	-	-
யுத்த காண்டம்	I	18	2252	9	800	14	1210	15	1573	262	18	2252	14	1213
	II	21	2104	6	774	6	1166	12	1554	109	12	1240		
	III	-	-	3	670	13	1203	12	1183	392	9	870		
	IV	-	-	7	636	6	743	-	-	-	-	-		
	V	-	-	8	713	-	-	-	-	-	-	-		
	VI	-	-	6	750	-	-	-	-	-	-	-		
மொத்தம்		116	10574	114	10520	116	10413	118	10366	1291	117	10580		
உத்தரகாண்டம்	I	-	-	11	694	-	-	-	-	-	-	-		
	II	-	-	6	801	-	-	-	-	-	-	-		
		-	-	17	1495	-	-	-	-	-	-	-		

Koviloor Digital Library

Koviloor Digital Library

6. யுத்த காண்டம்

கம்பராமாயணத்தின் ஆறாவது பெரும் பகுதி யுத்த காண்டம் ஆகும். கிட்கிந்தையிலிருந்து புறப்பட்டு, பன்னிரண்டு நாட்கள் பயணம் செய்து தென் கடற்கரையை அடைந்த இராமன், சுக்கிரீவன், அனுமன் மற்றும் வானரப் படையினர், சேதுபந்தனம் அமைத்து இலங்கை வந்து, அரக்கர்களை வென்று இராவணன் மகன்கள் அதிகாயன், இந்திரசித்து, இராவணன் தம்பி கும்பகர்ணன் ஆகியோரை அழித்து இறுதியில் இராவணனையும் கொன்று வீடணனுக்கு இலங்கை அரசாட்சியைத் தந்து மீண்டும் அயோத்தி திரும்பி முடிசூட்டிக்கொள்ளும்வரை நிகழும் நிகழ்வுகள் இக்காண்டத்தில் மிகமிக விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன.

போர் பற்றிய செய்திகளே மிகுந்துள்ளவாதலின் 'யுத்த காண்டம்' எனப் பெயரிடப்பட்டிருக்கிறது. இது மொத்தம் 39 படலங்களான சிறுபகுதி களைக் கொண்டது. இது ஏறக்குறைய 4300 பாடல்களைக் கொண்டது. இதை ஒரே தொகுதியில் கூறமுடியாது என்பதனால் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. காப்பியத்தில் மொத்தம் ஏறக்குறைய 10500 பாடல்கள் உள்ளன. அதில் பெரும்பகுதி இந்தக் காண்டத்தில்தான் இடம் பெற்றிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. முன்னர்கூறிய ஐந்து காண்டங்களின் மொத்தப் பாடல்களின் எண்ணிக்கை (6200) இந்த ஒரு காண்டத்தில் கூறப்பெற்ற பாடல்களின் எண்ணிக்கை மட்டும் 4300 ஆகும். இந்தக் காண்டத்தில் உள்ள 'இரணியன் வதைப்படலம்' என்ற ஒரு படலம் மட்டும், மற்ற எந்த இராமாயணத்திலும் காணமுடியாத பகுதியாகும். இதுபற்றிய முழு விவரங்களும் அந்தப் படலத்தின் முன்னுரையில் கூறப்பட்டுள்ளது காண்க. இக்காண்டத்தில் இராமன், இலக்குவன், அனுமன் ஆகியோரும் இராவணன், இந்திரசித்தன், கும்பகர்ணன், வீடணன் ஆகியோரும் முக்கியப் பாத்திரங்களாவர்.

கடவுள் வாழ்த்து

'ஒன்றே' என்னின் ஒன்றே ஆம்;
'பல' என்று உரைக்கின் பலவே ஆம்;
'அன்றே' என்னின் அன்றே ஆம்;
'ஆம்' என்று உரைக்கின் ஆமே ஆம்;

Koviloor Digital Library

'இன்றே' என்னின் இன்றே ஆம்;
'உளது' என்று உரைக்கின் உளதே ஆம்;
நன்றே நம்பி குடி வாழ்க்கை!
நமக்கு இங்கு என்னோ பிழைப்பு? அம்மா! (6142)

(நன்று-பெரிது/வியப்புக்குரியது; பிழைப்பு-உய்தல்; என்னோ-யாது; நம்பி-குணங்களிற் சிறந்தவன்/இறைவன்; இன்றே-இல்லை; குடி-இருப்பு; வாழ்க்கை-வரலாறு; அன்றே-அத்தன்மை)

''இறைவன் ஒருவனே என்றால், ஒன்றாகவே புலப்படுவான்; இல்லை இறைவன் பல உருவங்களை உடையவன் என்றால், ஆம்; பல உருவங்களில் தெரிவான்; இறைவன் இத்தன்மையில்லாதவன் என்று கூறினால், ஆம் அவன் குறிப்பிட்ட எந்தத்தன்மைக்கும் ஆட்படாதவனாகவே காட்சி அளிப்பான்; இல்லை அவன் இந்தக் குறிப்பிட்ட தன்மையுடையவன் என்று உறுதியாகச் சொன்னால் அதற்கு ஏற்றாற்போல் அதே தன்மையுடையவனாக அவன் நமக்குக்காட்சி தருவான். இறைவன் என்பவன் இல்லவே இல்லை என்று கூறுபவர்க்கு இறைவன் இல்லாதவனாகவே இருப்பான்; இறைவன் எங்கும்நீக்கமறப்பரந்து வியாபித்திருக்கிறான் என்று கருதினால்அவனை எல்லா இடங்களிலும், பொருள்களிலும் காணலாம். எனவே இறைவனுடைய இருப்பிடம், வாழ்வியல்முறை, தோற்றம், உருவம் இவையெல்லாமே மிகப்பெரியவாகும்.மிகவும் வியப்பிற்குரியவாகும். அதனை நம்போன்ற எளிமையானவர்களால், சிற்றறிவுடையவர்களால் எளிதில் கண்டு கொள்ளமுடியாது, நாம் எவ்வாறு உய்ந்து கடைத்தேறமுடியும்?'' என்று வியந்து கேட்கிறான் கவிஞன்.

ஒவ்வொரு காண்டத்தின் முன்பும் கடவுள் வணக்கப்பாடலைக் கம்பன் கைக்கொண்டு வரும்முறையை நாம் கண்டு வந்திருக்கிறோம் என்றாலும் இந்தக்காண்டத்தின்கடவுள்வாழ்த்துப்பாடலில் செறிந்துள்ளகருத்துக்கள் மிக ஆழமானவை; நுட்பமானவை; கம்பனுக்கு முன்பு பக்தி இலக்கியத்தில் தோய்ந்த ஆழ்வார்கள், நாயன்மார்களின் கருத்துக்களை அப்படியே படம் பிடித்துக் காட்டுவது இந்தப் பாடல்.

இறைவன் ஒருவனே என்பதை 'ஏகன்' என்கிறார் மாணிக்கவாசகர் தன் திருவாசகத்தில். அதே திருவாசகம் 'அநேகன்' என்கிறது. 'ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க' என்பது திருவாசகம். ஒன்றே என்னின் ஒன்றேயாம்; பலவென்று உரைக்கின் பலவேயாம்; ஏகன் எப்படி அநேகன் ஆவான்? ஒன்று எப்படிப் பலவாகும்? இறைவன் ஒருவனே என்பதில் எந்த மாறுபட்ட கருத்தும் இருக்கமுடியாது. இறைவன் பல தோற்றங்களில் உருவங்களில் இருப்பதாலும், பலபொருள்களிலும் வியாபித்திருப்பதனாலும் பலவாகிறான் என்பதாம். 'திட, விசும்பு, எரி, வளி, நீர், நிலம் இவை மிசைபடர் பொருள் முழுவதுமாய் அவையவைதொறும்

Koviloor Digital Library

உடல்மிசை உயிர்எனக் கலந்து எங்கும் பரந்துளான்''; என்பது திருவாய் மொழி. 'ஒருநாமம், ஓர்உருவம், ஒன்றுமில்லார்க்கு, ஆயிரம் திருநாமம் பாடி நாம் தேள்ளேணம் கொட்டோமோ' என்பது திருவாசகம்.

''உளன் எனின் உளன் அவன், உருவம் இவ்வுருவுகள்; உளன் அலன் எனின், இலன் அவன்; அருவம் இவ்வுருவுகள்'' என்பதும் 'ஒன்றெனப் பலவென அறிவரும் வடிவினுள் நின்ற, நன்று எழில் நாரணன்' என்பதும் 'ஆணல்லன், பெண்ணல்லன், அல்லா அலியும் அல்லன்; காணலும் ஆகான்; உளனல்லன், இல்லையல்லன், பேணும்கால் பேணும் உருவாகும்; அல்லனும் ஆம்; கோணை பெரிதுடைத்து எம்பெருமானைக் கூறுதலே' என்பதும் திருவாய்மொழி.

''வானன்று, காலன்று, தீயன்று, நீரன்று, மண்ணுமன்று, நானன்று, நீயன்று, அசரீரியன்று; சரீரியன்றே'' என்பது அருணகிரிநாதரின் திருப் புகழ். 'ஒன்றே பொருள் என்னின் வேறென்ப; வேறென்னின் அன்றென்ப ஆறு சமயத்தார்' என்பது திருவள்ளுவமாலை;

'நம்பிகுடிவாழ்க்கை' என்பது இறைவனது நிலை அறிதற்கு அரியது என்பதைக் குறித்த ஒரு குறிப்புச் சொற்றொடர் எனக் கொள்க. 'நன்று பெரிதாம்' என்பது தொல்காப்பியம், நம் கண்களுக்கு இறைவன் காட்சிப் பொருளாகத் தெரியான். ஆதலின் அவன் இல்லை என்று கூறுவார்க்கு அது இல்லாததாகவே தெரியும். ஆனால் அதன் நுணுக்கத்தை அறிவினாலும், ஞானத்தினாலும் ஆராய்ந்து பார்த்தால் இறைவன் என்ற ஒரு சக்தி - நமக்கும் மேம்பட்ட ஒரு சக்தி இருக்கிறது என்பது புலனாகும். இது்தான் 'இன்றே என்னின் இன்றேஆம்; உளது என்று உரைக்கின் உளதேயாம்' என்பதால் உணர்த்தினார் என்க. ''அவன் அருளே கண்ணாகக் காணின் அல்லால், இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன் இவன் இறைவன் என்று எழுதிக்காட்ட ஒண்ணாதே' என்பது தேவாரம். 'என்னை ஏதும் அறிந்திலன் எம்பிரான் தன்னை யானும் முன் ஏதும் அறிந்திலன்; என்னைத் தன்னடியான் என்று அறிந்தபின் தன்னை யானும் பிரான் என்று அறிந்தேனே' என்பது அப்பர் தேவாரம். அருவமாயும், உருவமாயும், அருவஉருவமாயும், எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவன் இறைவன். அவனுடைய அருட்கண் கொண்டு காணுதல் இயலுமே அன்றி, நம் ஊனக் கண்களாலும், சிற்றறிவினாலும் காண இயலாது என்பது, இப்பாடலின் திரண்ட கருத்தாகும். 'உருவென, அருவென, உளதென, இலதென, அருமறை இறுதியும் அறிவரு நிலை' என இறைவன் நிலையைப் பற்றிப் பேசுகிறது திருவரங்கக் கலம்பகம்.

இங்கே ஒரு செய்தி, நாம் பொதுவாகக் 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்' என்று சொல்லுகிறோமே, அவ்வாறு ஒரு மிகைப்பாடல் இந்த இடத்தில்தான் கிடைக்கிறது. இது எல்லாச் சுவடிகளிலும் அதிகப் பாடலாகத்தான் பேசப்பட்டிருக்கிறது. இது கம்பனால் பாடப்பட்டதல்ல, இடைச்செருகல் என்பதால் உரை தரப்பெறவில்லை, எனினும் இது

Koviloor Digital Library

தெரிந்து கொள்ள வேண்டியசெய்தி என்பதால் பாடல் மட்டும் தரப்பட்டிருக்கிறது.

'கம்பர் வீட்டுள் ஒரு சிறு புன் கட்டுத்தறியும் கவி செய்யும் என்று
இம்பர் நாட்டு மன்பதை கூறிடும் சொல், புலவீர்! கேட்டு உவந்தாம்
சம்பு நீட்டு கடைத்தலைக்குத் தகுவர் தலைக்குத் திருப்பாத
அம்பு நாட்டு மால் சரிதம் அன்னோர் பாடல் அது வியப்பே!'

1. கடல் காண் படலம் [11பாடல்கள்]

பன்னிரண்டு நாட்கள் பயணம் செய்து வந்த வானரவீரர்களும், இராமபிரான், இலக்குவன், சுக்கிரீவன், அனுமன் முதலியோரும் அந்தக் கடலைக் காண்பது பற்றிப் பேசுவதால் இப்படலம் கடல்காண் படலம் எனத் தலைப்பிடப்பட்டது. எழுபது வெள்ளம் சேனையும், இராம பிரானைச் சூழ்ந்திருக்க இராமபிரான் கடலைக்கண்டு நின்ற காட்சியைக் கூறும் படலம் என விரியும். இது 11 பாடல்களைக் கொண்டது.

இப்படலத்துள் எழுபது வெள்ளம் சேனை தன்னைச் சூழ்ந்திருக்க, இராமபிரான் தெற்குக் கடலைக்காணுதல்; இராமபிரானை அலைகளின் திவலைகளும், தென்றலும் தழுவுதல்; கடற்கரையில் காணப்பட்ட பவளமும், முத்தும், சீதாதேவியின் நினைவைத் தந்து துயருறச் செய்தல்; கடலின் தோற்றம்; மேலே ஆகவேண்டிய காரியங்கள் குறித்துச் சிந்தித்து ஆலோசித்தல்; முதலிய செய்திகள் கூறப்பட்டிருக்கின்றன. வான்மீகம் இதனை நான்கு சர்க்கங்களில் கூறியிருக்கிறது.

1. வானரப்படை தென்கரையை அடைந்து தங்குதல்.

ஊழி திரியும் காலத்தும் உலையா நிலைய உயர்கிரியும்,
வாழி வற்றா மறிகடலும், மண்ணும், வடபால் வான்தோய,
பாழித்தெற்கு உள்ளன கிரியும், நிலனும் தாழ, பரந்து எழுந்த
ஏழுபத்தின் பெரு வெள்ளம், மகரவெள்ளத்து இறுத்ததால். (6143)

(திரிதல்-முடிதல்/மாறுபடுதல்; உலையாத-நிலைகுலையாத/கெடாத; கிரி-மேருமலை; மறி-மடங்கி; பாழி-வலிய/பெரிய; ஏழுபத்து-எழுபது; மகரம்-மீன்; இறுத்தல்-தங்குதல்; வெள்ளம்-ஒருபேரெண்; வான்-விண்; தோய-படிய; தாழ்தல்-அழுந்துதல்)

பிரளய காலத்திலும், எந்த மாறுபாடும் இல்லாத நிலைகுலையாத நிலையை உடைய உயர்ந்த மேருமலையும், எப்போதும் வற்றாத, அலை மடங்கி எழும் கடலும், நிலமும், வடக்குத்திசையில் விண்ணின்மேல்

Koviloor Digital Library

படியவும், பெருமைபடைத்த பெருந்திசையாகிய தெற்குத்திசையில் உள்ள மலைகளும், பூமியும், அழுந்திப்போகும்படியும், எங்கும் வியாபித்துத் திரண்ட எழுபது வெள்ளம் என்று சொல்லக்கூடிய பெரிய வானரப்படை, மீன்கள் நிறைந்த தென்திசைக் கடலை அடைந்து அங்கே தங்கியது.

எழுபது வெள்ளம் சேனை மகர வெள்ளத்துத் தங்கியதால், ''ஊழி திரியும் காலத்தும் உலையா நிலை உயர்கிரியும், வற்றா மறிகடலும், மண்ணும், வடபால் வான்தோய்ந்தன''; இந்தப் பாரத்தைத் தாங்க மாட்டாமல் ''பாழித்தெற்கு உள்ளன கிரியும், நிலனும் தாழ்ந்துபோயின''. எனப்பாடலைச் சற்று மாற்றிப் பாடினால் பொருள் தெற்றென விளங்குவதைக் காணலாம்.

முன்பு சிவபெருமான் பார்வதி தேவியை மணம்புரிந்த காலத்து, முப்பத்துமுக்கோடித் தேவர்களும் கைலாய மலையில் கூடியதால் அது தாழ்ந்து தெற்குத் திசை உயர்ந்துபோனது என்றும், அதனைச் சமன்படுத்த, சிவபெருமான் அகத்திய முனிவரைத் தெற்குத் திசைக்கு அனுப்பினார் என்றும், அகத்தியர் பொதியமலையில் இருந்து இருபக்கத்தையும் சமன் செய்தார் என்றும் நாம் கண்டதை இங்கு நினைவுகூர்க. ஆனால் இங்கே வடக்கு உயர்ந்து, தெற்கு தாழ்ந்தது என்பதை நினைவிற்கொள்க. தெற்குத் திசையைப் பொதுவாகப் பெருந்திசை என்று கூறுவது வழக்கம். எனவே 'பாழித் தெற்கு' என்றார் என்க. தெற்கில் உள்ள மலைகள், பொதியமலை, மகேந்திர மலை, திரிகோண மலை என்பவையாம். வெள்ளம் என்பது ஒரு பேரெண்ணைக் குறிக்கும் என்று நாம் முன்பு கண்டதை நினைவிற் கொள்க. வானரப் படையாகிய எழுபது வெள்ளம் மகரமீன்கள் உள்ள வெள்ளத்தில் தங்கியது என்று கூறியது ஒரு நயம். குரங்குக்கு மர்க்கடம் என்று ஒரு பெயர் உண்டு. மர்க்கட வெள்ளம் மகர வெள்ளத்தில் தங்கியது என்று கூறுவது இன்னும் சுவை பயக்கும்.

2. பொங்கிப் பரந்த பெருஞ்சேனை, புறத்தும், அகத்தும் புடைசுற்ற
சங்கின் பொலிந்த தகையாளைப் பிரிந்தபின்பு, தமக்கு இனமாம்
கொங்கின் பொலிந்த தாமரையின் குழுவும் துயில்வுற்று இதழ்குவிக்கும்
கங்குல் பொழுதும் துயிலாத கண்ணன் கடலைக் கண்ணுற்றான். (6144)

(சங்கு-வளையலுமாம்; கொங்கு-தேன்/நறுமணம்; கங்குல்-இரவு; புடை-பக்கம்; சுற்ற-சூழ்ந்து நிற்க; பொங்குதல்-மிகுதல்; தகைமை-பெருந்தன்மை; கண்ணன்-கண்களையுடையவன்/இராமபிரான்)

மிக்குப் பரந்து, எல்லா இடங்களிலும் நின்றிருந்த வானரப்படை, உள்ளும் புறமும், பக்கத்தும் இராமபிரானைச் சூழ்ந்து நிற்க, தூய்மையான சங்கினைப் போன்று பெருந்தன்மையுடையவளும், சங்கினாலாகிய வளையல்களை அணிந்தவளுமாகிய சீதாதேவியைப் பிரிந்த பின்னர், தன்னுடைய இனம் என்று கருதப்படுகிற, தேன்மிகுந்ததும் நறுமணம்

Koviloor Digital Library

மிக்கதுமான தாமரை மலரின் தொகுதி, தம் இதழ்களைக் குவித்து உறங்குகின்ற இரவு நேரத்திலும்கூட, தான் உறங்காது விழித்த கண்களுடன் இருக்கும் இராமபிரான், அந்தத் தெற்குக் கடலை நன்றாகப் பார்த்தான்.

'பொங்கிப் பரந்த பெருஞ்சேனை' என்பது எழுபது வெள்ளம் வானரப்படையைக் குறிக்கும். 'புறத்தும் அகத்தும் புடைசுற்றி' என்பது, இராமபிரானைச் சூழ்ந்து கொண்டு அவை எல்லா இடங்களிலும் நின்றிருந்தமையைக் குறிக்கும். இவை இராமபிரானுக்குப் பாதுகாவலாக நின்றன என்பதைக்காட்டிலும், தாம் கடலைப் பார்க்க மிக்க ஆர்வத்துடன் சுற்றிநின்றன எனக் கொள்க. 'சங்கிற்பொலிந்த தகையாள்' என்பது சங்கு போன்ற வெண்மையான பரிசுத்தமான பெருந்தன்மையைக் குறிக்கும் என்பது உயர்ந்த பொருள். சிறந்த சங்கினாலான சிறந்த வலையல்களை அணிந்த சீதாதேவி என்பது ஒரு பொருள். 'சங்கு 'தங்கு முன்கை நங்கை' என்பது திருச்சந்த விருத்தம். இரவு நேரத்தில் தாமரைமலர் குவிதலை உறங்குவதாகக் கூறுவது கவிமரபு. இராமபிரானின் எல்லா அங்கங்களும் தாமரைமலரையே நினைவுபடுத்துவதனால் 'தமக்கு இனமாம்' என்றார் என்க. சீதாதேவியின் பிரிவுத்துயரால் அந்த இரவு நேரத்திலும், இராமபிரான் துயிலவில்லை என்றதும், அந்தத்துயிலாத கண்களோடு இந்தக் கடலைப்பார்த்தான் என்றதும் ஒரு நயம். பிரிவுத்துயரால் மெலிந்திருந்த சீதாதேவியின் உடல் வெளுத்துப்போனது. எனவே சங்கிற்கு உவமை கூறினான் என்பதும் பொருந்துவது காண்க. சங்கு என்பது குலத்தூய்மையைக் குறிக்கும் ஒரு ஒப்பற்ற சொல். 'வலம்புரியன்ன குலம்புரிபிறப்பும், வான் யாறன்ன தூய்மையும்' என்பது நன்னூல்.

3. தென்றலும் அலையும்

"சேயகாலம் பிரிந்து அகலத்திரிந்தான், மீண்டும் சேக்கையின்பால்,
மாயன் வந்தான்; இனிவளர்வான்" என்று கருதி, வரும் தென்றல்
தூயமலர்போல் நுரைத்தொகையும், முத்தும் சிந்தி, புடைசுருட்டிப்
பாயல் உதறிப் படுப்பதே ஒத்த திரையின் பரப்பு அம்மா! (6145)

(திரை-அலைகள்; சேய-நீண்ட; சேக்கை-இருப்பிடம்; கண்வளர்தல்-உறங்குதல்; புடை-பக்கம்; பாயல்-படுக்கை; மாயன்-திருமால்/இராமபிரான்; திரிதல்-தனிமையில்அலைதல்; படுப்பது-விரிப்பது)

அந்த அலைகள் நிறைந்த கடலின் பரப்பு, ''நீண்ட காலம் தன்னைப் பிரிந்து தனிமையில் அலைந்து திரிந்தவனான திருமாலின் அம்சமான இராமபிரான், மீண்டும் தன் இருப்பிடத்தின்மேல் துயில்கொள்ள ஆசைகொண்டு வந்திருக்கிறான். இனி இங்கேதான் அறிதுயில் கொள்ளுவான்'' என்று கருதியது. அங்கு வீசும் தென்றல்காற்று தூய்மையான சிறந்த மலர்களைப் போன்ற வெண்ணிறமான நுரைத்தொகுதியையும் முத்துக்

Koviloor Digital Library

களையும் வாரியிறைத்து, அவன் துயில்கொள்ளுகிற பாயை நன்றாக உட்புறமாகச் சுருட்டித் தூசி தட்டி உதறி விரிப்பதைப் போன்று இருந்தது.

''கருங்கடல் பள்ளியில் கலவி நீங்கிப்போய்'' நீண்டகாலமாகத் தனித்துத் திரிந்துவந்த இராமபிரான்/திருமால் இப்போது மீண்டும் அறிதுயில் கொள்ள விழைந்து வந்திருக்கிறான், இனி இங்கேதான் கண்வளர்வான் என்று கருதி அந்தக் கடற்பரப்பாகிய பாயை நன்றாக உதறி விரித்துவைப்பதைப் போன்று இருந்தது என்று கூறுவது ஒரு நயமான கற்பனை. 'கண் வளர்தல்' என்பது உறங்குதல் என்ற பொருள் தரும் ஒரு மங்கலச்சொல். இன்றும் சிறு குழந்தைகளைத் தூங்கவைக்கும் தாய், 'கண்வளராயோ' என்று பாடுவதைக் கேட்கலாம்.

4. தென்றல் சிறு திவலைகளைப் படியவிடுதல்.

வழிக்கும் கண்ணீர் அழுவத்து
வஞ்சி அழுங்க, வந்து அடர்ந்த
பழிக்கும் காமன் பூங்கணைக்கும்
பற்றா நின்றான் பொன்தோளை,
சுழிக்கும் கொல்லன் ஒல் உலையில்
துள்ளும் பொறியின் சுடும், அன்னோ!
கொழிக்கும் கடலின் நெடுந்திரை வாய்த்
தென்றல் தூற்றும் குறும் திவலை. (6146)

(அழுவம்-பள்ளம்/கடல்; அடர்ந்த-பொருந்திய; காமன்-மன்மதன்; பற்றா-பற்றி; பொன்-அழகிய; கொழித்தல்-ஆரவாரித்தல்; குறும்-நுண்ணிய; திவலை-துளி; சுழித்தல்-சுழன்று எறிதல்; துள்ளும்-எழும்/துள்ளிவிழும்; வழித்தல்-வடித்தல்; அழுங்குதல்-வருந்துதல்; பற்று-இலக்கு/குறி)

கண்ணீர் வழிய, கண்ணீர்க்கடலில் நின்று வருந்துகின்ற வஞ்சிக்கொடி போல்பவளான சீதாதேவியால், தனக்குப் பொருந்திய பெரும் பழிச்சொல்லுக்கும், மன்மதனது மலர் அம்புகளுக்கும் இலக்காகி நிற்கும் இராமபிரானின் அழகிய தோள்களை, ஆர்ப்பரிக்கின்ற கடலிலிருந்து எழும் நீண்ட அலைகளினின்று வீசுகின்ற தென்றல் காற்று தெறிக்கின்ற சிறுசிறு நீர்த்துளிகள், சுழன்று எறிகின்ற கொல்லனது உலையில் துள்ளிப் பறக்கின்ற நெருப்புப்பொறி போலச் சுட்டன.

பிரிவுத்துயரால் சீதாதேவி அசோகவனத்தில் கண்ணீர்க்கடலில் அழுந்தி வருந்தி இருக்கிறாள் என்பது நாம் கண்டதே. அந்தச் சீதாதேவியைக் காப்பாற்ற முடியாத நிலையில் இருக்கும் இராமபிரானுக்கு வந்து சேரும் பழிச்சொற்களுக்கும், இயற்கையாகவே மன்மதனின் மலர்க்கணைகளுக்கு இலக்காகி நொந்தும் போயிருக்கும் இராமபிரான்மீது, கடலி-

Koviloor Digital Library

னின்றும் எழுகின்ற நீர்த்திவலைகளைத் தென்றல்காற்று கொண்டுவந்து படியச்செய்கிறது. அது குளிர்ச்சியைத்தான் தரவேண்டும், எனினும் விரக தாபத்தால் துடிக்கும் இராமபிரானுக்கு, அவை கொல்லன் துருத்தியி லிருந்து சிதறி வெளிப்படும் நெருப்புப்பொறி போலத் துன்பம் செய்தன என்பதாம்.

'கொழிக்கும் கடல்' என்பது சங்கு, இரத்தினம் முதலிய செல்வங்களைக் கொழிக்கும் கடல் எனப்பொருள் கொள்வதும் பொருந்தும். தென்றல் வீசும் நீர்த்துளி, இராமபிரானுக்கு நெருப்புச் சுட்டது போன்றிருந்தது என்பதாம்.

5. நென்னல் கண்ட திருமேனி இன்று பிறிதாய், நிலைதளர்வான்
தன்னைக் கண்டும், இரங்காது தனியே கதறும் தடங்கடல்வாய்,
பின்னல் திரைமேல் தவழ்கின்ற பிள்ளைத் தென்றல், கள் உயிர்க்கும்
புன்னைக் குறும்பூ நறும் சுண்ணம் பூசாது ஒரு கால் போகாதே. (6147)

(நென்னல்-நேற்று/முன்நாள்; பிறிது-வேறுபட்டு; கதறுதல்-பேரொலி எழுப்புதல்/ஆரவாரித்தல்; தடம்-பெரிய; பின்னல்-பிணைந் திருத்தல்/இணைந்திருத்தல்; திரை-அலைகள்; பிள்ளை-இளமையான/ சிறிய; கள்-தேன்; உயிர்த்தல்-பெருக்குதல்; குறும்-சிறிய; சுண்ணம்-வாசனைப்பொடி/மகரந்தம்; பூசுதல்-அப்புதல்/தடவுதல்)

நேற்றுப் பார்த்த அழகிய இராமபிரானது உடம்பு இன்று வேறுபட்டுத் தளர்ந்துபோய் மெலிந்து சோர்வுற்றிருப்பதைக் கண்டும், அவன்பால் இரக்கம் கொள்ளாது, தனியாக நின்று ஆர்ப்பரிக்கும் பெரிய கடலினிடத்து இணையாய்த் துள்ளும் கடல் அலைகளின்மேல் படிந்து தவழ்கின்ற இளமையான மென் தென்றற்காற்று, தேனைப்பருகும் புன்னை மரத்தின் சிறிய பூவின் நறுமணத்தையும், அதில் படிந்திருக்கும் வாசனைப் பொடியாகிய மகரந்தத் துகள்களையும், இராமபிரான்மீது அப்பாமல் ஒருக்காலும் செல்லாது போலும்; நிச்சயமாகப் பூசித்தான் செல்லும்.

நென்னல் என்பது இறந்த காலத்தைக் குறிக்கும் ஒரு சொல். நெருநல் என்ற சொல்லின் திரிபு. அதுபோல இன்று என்பது வருங்காலத்தைக் குறிக்கும் ஒரு சொல். உலக வழக்கில் இன்று என்பது நிகழ்வதைக் குறிக்கும் என்றாலும் இலக்கணமரபில் நென்னல், இன்று என்பவை நேற்றையும், (முன்நாள்) நாளையையும் (வழிநாள்) குறிக்கும் எனக் கொள்க. 'தனியே கதறும் கடல்' என்ற சொல்லாட்சியை நோக்குக. கடல் எப்பொழுதும் தனித்து நின்றுதான் ஆர்ப்பரிக்கும், கவிஞன் இராம பிரானின் தனிமையைக் குறிப்பதற்காக அதைக் கடலின்மீது ஏற்றிக் கூறினான் என்க. 'பின்னல்திரை' என்பது அலைகள் எப்பொழுதும் ஒன்றோடொன்று இணைந்தே எழும், வீசும் என்பதைக் குறித்தது என்க. 'பிள்ளைத் தென்றல்' என்பது இளமையான மென்மையான தென்றல்

Koviloor Digital Library

என்று பொருள்தரும். 'பூசாதுபோகாது' என்ற இரு எதிர்மறைச்சொற்கள் பூசியேபோகும் என்ற ஒரு உடன்பாட்டுப் பொருளைத்தரும் என்க. கடல் ஆரவாரித்து அவன் துன்பத்தை மிகுதிப்படுத்தியது என்பதாம். 'பிள்ளை, குழவி, கன்றே, போத்து எனக் கொள்ளவும் அமையும் ஓரறிவு உயிர்க்கே' என்பது தொல்காப்பியம்.

6. பவளமும் முத்தும்.

சிலை மேற்கொண்ட திருநெடுந் தோட்கு
உவமை மலையும் சிறிது ஏய்ப்ப,
நிலை மேற்கொண்டு மெலிகின்ற
நெடியோன் தன்முன், படிஏழும்
தலை மேற்கொண்ட கற்பினாள் மணிவாய்
என்ன, தனித்தோன்றி
கொலை மேற்கொண்டு, ஆர்உயிர் குடிக்கும்
கூற்றம் கொல்லோ கொடிப்பவளம்? (6148)

(சிலை-வில்; திரு-அழகிய; படி-உலகம்/உலகத்தார்; மணி-அழகிய; ஆர்-அரிய/அருமையான; கூற்றம்-இயமன்; நெடியோன்-பெருமை பொருந்தியவன்/இராமபிரான்; ஏய்ப்ப-பொருந்த/ஒத்திருக்க)

கடற்கரையில் படர்ந்து பரவியிருக்கின்ற பவளக்கொடி, வில்லைத் தன்னிடம் கொண்டுள்ள இயற்கையிலேயே அழகிய நீண்டு பருத்த தோள்களையுடையவனும், இப்பொழுது மலைக்கு உவமை கூறும்படி மெலிந்திருக்கின்ற தோள்களை உடையவனுமாகிய இராமபிரான் முன், இந்த ஏழுஉலகத்தவரும் தலைமேல் வைத்துக்கொண்டாடும் சிறப்புமிக்க கற்பினையுடையவளான சீதாதேவியின் அழகிய வாயினைப்போன்று, சிறப்பாகத் தோன்றி, கொலைத்தொழிலை மேற்கொண்டு, இராமபிரானது அருமையான உயிரைக்கவரும் இயமன்தானோ!.

கடலில் பரவியிருக்கும் பவளம், சீதாதேவியின் வாய்போலச் சிவந்திருத்தலால் அது அந்த மெலிந்துபோயிருக்கும் இராமபிரானது உயிரைக்குடிக்கும் இயமன்போல் தோற்றமளிக்கிறது என்பதாம். முன்பு மேருமலையைவிட உயர்ந்தனவாய் இருந்த தோள்கள் இப்போது சாதாரண மலையைப்போல் உயர்ந்த தோள்கள் என்று சொல்லும்படி மெலிந்து போயின என்றது ஒரு நயம். 'உயிர் குடித்தல்' என்பது உயிர் பறித்தல் என்ற பொருளில் கையாளப்பட்டது. 'உண்டற்கு உரிய வல்லாப் பொருளை உண்டது போலக் கூறலும் மரபே' என்பது தொல்காப்பியம். 'மெலிகின்ற' என்று நிகழ்காலத்தில் கூறியிருப்பதை நோக்குக. சீதையைப் பிரிந்த பின்னர் கணம்தோறும் இராமபிரான் மெலிந்துவருகிறான் என்பதைச் சுட்டவே இவ்வாறு கூறினார் என்க.

Koviloor Digital Library

7. "தூரம் இல்லை மயில் இருந்த சூழல்" என்று மனம் செல்ல,
வீரவில்லின் நெடுமானம் வெல்ல, நாளும் மெலிவானுக்கு,
'ஈரம் இல்லா நிருதரோடு என்னஉறவு உண்டுஉனக்கு?' ஏழை"
மூரல் முறுவல் குறிகாட்டி, முத்தே! உயிரை முடிப்பாயோ? (6149)

(ஈரம்-அன்பு/இரக்கம்; செல்ல-விரைய; ஏழை-பேதை/சீதாதேவி; மூரல்-பற்கள்; முறுவல்-புன்சிரிப்பு; குறி-இயல்பு; நிருதர்-அரக்கர்; சூழல்-இடம்)

''கடலில் தோன்றும் ஒளிபொருந்திய முத்தே! மயில் போலும் சாயலை உடைய சீதாதேவி இருக்கும் இடம் வெகுதூரத்தில் இல்லை; அருகில்தான் இருக்கிறது என்று கருதி, என் உள்ளம் அவளை நாடி விரைந்து செல்ல முற்படுகிறது. எனினும் பகைவரை அழித்த பின்தான் அவளைக் காண வேண்டும் என்று வீரம் பொருந்திய பெரிய மானம் அதனை அடக்கி மேம்பட்டு நிற்கிறது. எனவே நாள்தோறும் மெலிந்து வரும் உடலை உடைய இராமபிரானை, பேதையாகிய சீதாதேவியின் பற்களுக்கே உரிய புன்முறுவலைக் காட்டி நீயும் இராமபிரானின் உயிரை முடித்து விடுவாயோ? உள்ளத்தில் கொஞ்சம்கூட அன்பு, இரக்கம் என்பதே இல்லாத இந்த அரக்கர்களுடன் உனக்கு என்ன உறவு இருக்கிறது?'' என்று கேட்கிறான் கவிஞன்.

கடற்கரையை அடைந்துவிட்டதனால், சீதாதேவி இருக்கும் இடம் அடுத்த கரைதானே என்பதனால், அவள் இருக்கும் இடம் வெகுதூரத்தில் இல்லை, அருகில்தான் இருக்கிறது என்று கருதுகிறான் என்பதாம். இங்கே மனத்திற்கும், மானத்திற்கும் இடையே போராட்டம். மனம் உடனே விரைந்துசென்று பார்க்க விழைகிறது, மானம் அதைத்தடுத்து முதலில் பகைவரை வென்று, கொன்று பின் அவளைக் காணவேண்டும் என்கிறது என்பதை மிக அழகாகக் கூறியிருக்கும் கவிநயம் காண்க. 'ஈரம் இல்லா நிருதர்' என்பது முன்பு 'இரக்கம் என்று ஒரு பொருள் இல்லா நெஞ்சினர்' என்று கூறியதை இங்கு நினைவுகூர்க. அரக்கர்களும் துன்பம் கொடுக் கிறார்கள், அதுபோல் முத்தும் துன்பம் கொடுத்து உயிரைக் கவர்கிறது என்பது பொருள். எனவே இந்த முத்துக்கு அரக்கர்களோடு ஏதேனும் உறவு இருக்குமோ? என்று ஐயுறுகிறான் கவிஞன் என்க.

8. கடலின் தோற்றம்

"இந்து அன்ன நுதல் பேதை இருந்தாள், நீங்கா இடர்; கொடியேன்
தந்தபாவை, தவப்பாவை, தனிமைதகவோ?" எனத்தளர்ந்து,
சிந்துகின்ற நறுந் தரளக் கண்ணீரதும்பி, திரைத்து எழுந்து
வந்து, வள்ளல் மலர்த்தாளின் வீழ்வது ஏய்க்கும், மறிகடலே. (6150)

Koviloor Digital Library

(மறிதல்-மடங்குதல்/மீளுதல்; இந்து-சந்திரன்/பிறை; பாவை-கண் மணி/ஓவியம்; தரளம்-முத்து; ததும்ப-பெருகி வழிய; திரைத்து-விரித்து; ஏய்க்கும்-ஒக்கும்; நுதல்-நெற்றி)

அலைகள் மோதி மடங்கி மீளும் கடல், ''பிறைச்சந்திரனைப் போன்ற நெற்றியை உடையவளான சீதாதேவி பிரிவென்னும் நீங்காத துயர்க் கடலில் ஆழ்ந்திருக்கிறாள். கொடிய இயல்புடைய நானோ, முன்பு பாற்கடலில் தோன்றியவளும், என் கண்மணி போன்றவளும், ஓவியம் போன்று அழகுடையவளும், பெருந்தவத்தால் தோன்றியவளுமான சீதாதேவி, இவ்வாறு இலங்கையில் தனிமைச் சிறையில் வாடியிருப்பது தகுதியுடையது ஆகுமோ?'' என்று மனம் நெகிழ்ந்து, சிறந்த முத்துக் களாகிய கண்ணீர்த் துளிகளை மிகுதியாகச் சிந்தி, தன் அலைகளாகிய கைகளை விரித்து எழுந்து, வள்ளற்குணமுடைய இராமபிரானின் அருகில் வந்து, அவனுடைய தாமரை மலர்போன்ற திருவடிகளில் வீழ்ந்து அவளை மீட்கும்படி முறையிடுவதைப் போன்று தோன்றியது.

''கொடியேன் தந்த பாவை'' என்பது முன்பு திருப்பாற்கடலில் திருமகள் தோன்றியதைக் குறிக்கும். அந்தத் திருமகள்தான் இப்போது சீதாதேவியாக அவதரித்திருக்கிறாள் என்பது உணர்ந்து கடல், தன்னைக் 'கொடியேன்' என்று கருதிக்கொள்கிறது. காரணம் தன்னிடம் தோன்றிய திருமகளான சீதாதேவி தனிமைச்சிறையில் வாடுவது கண்டும் தன்னால் ஒன்றும் செய்ய இயலவில்லையே என்ற கையறு நிலை கருதி என்க. 'பாவை' என்ற சொல் கண்ணின் கருமணியையும், ஓவியத்து எழுத ஒண்ணா உருவத்தையும் குறிக்கும் என்க. 'தவப்பாவை' என்பது 'தவம் செய்த தவமாம் தையல்' என்பதும் 'நற்பெருந்தவத்தவத்தளாய நங்கை' என்பதும் குறித்தது காண்க.

9. பள்ளி அரவின் பேருலகம் பசுங்கல்லாக, பனிக்கற்றைத்
துள்ளி நறும் மென்புனல் தெளிப்ப, தூநீர்க்குழவி முறை சுழற்றி,
வெள்ளி வண்ண நுரைக்கலவை, வெதும்பும் அண்ணல் திருமேனிக்கு
அள்ளி அப்ப, திரைக்கரத்தால் அரைப்பது ஏய்க்கும் அணிஆழி. (6151)

(அணி-அழகிய; ஆழி-கடல்; அப்புதல்-பூசுதல்; பள்ளி-படுக்கை; அரவு-பாம்பு; பசுமை-புதுமை; வெள்ளி-வெண்மை; திரை-அலைகள்; ஏய்க்கும்-ஒத்திருக்கும்; துள்ளி-துளி; கலவை-சந்தனம்)

அந்த அழகிய கடலானது, திருமால் பள்ளிகொண்டிருப்பதும், ஆதிசேஷன் என்னும் பாம்பு தன்முடியில் தாங்கிக்கொண்டிருப்பதுமாகிய இந்தப் பெரிய உலகமே பசுமையான கல்லாகவும், பனித்துளிகளின் கற்றையே மணம்மிக்க மெல்லிய நீராகவும், தூய்மையான நீரைச் சொரிந்து, குழவியை முறையாகச் சுழற்றி வெள்ளை நிற நுரையை சந்தனமாகவும் கொண்டு, சீதாதேவியின் பிரிவால் வாடிவருந்தியிருக்கும் மேலோனான இராமபிரானின் வெப்பம் நீங்குவதற்காக அழகிய மேனியின்மேல்

Koviloor Digital Library

அள்ளித்தன் அலைகளாகிய கைகளால் பூசுவதற்காக, அரைப்பது போன்று தோன்றும்.

இது ஒரு உருவகப்பாடல். கடல்-சந்தனம் அரைப்பான்; உலகம்-சந்தனம் அரைக்கும் கல் உரல்; அலைகள்-கைகள்; பனி-நீர்தெளித்தல்; கடல்நீர்-குழவி; நுரை-கலவைச்சந்தனம்; பள்ளிஅரவு-ஆதிசேஷன்.

10. கொங்கைக் குயிலைத் துயர்நீக்க, இமையோர்க்கு உற்ற குறை முற்ற,
வெங்கைச் சிலையின், தூணியினன், விடாத முனிவின் மேல் செல்லும்,
கங்கைத்திருநாடு உடையானைக் கண்டு, நெஞ்சம் களிகூர,
அங்கைத் திரள்கள் எடுத்து ஓடி, ஆர்த்தது ஒத்தது அணி ஆழி. (6152)

(அணி-அழகிய; ஆழி-கடல்; முற்ற-முடிய; முனிவு-சினம்; கூர-மிக; அம்-அழகிய; திரை-அலைகள்)

அந்த அழகிய கடல், அழகிய மார்பகங்களையுடையவளும் குயில் போன்ற சொற்பேசுபவளுமாகிய சீதாதேவியினது துயரத்தை நீக்கவும், அதனால் தேவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற குறைகளை ஒழிக்கவும், பகைவரால் அஞ்சத்தக்கதான கோதண்டம் என்னும் வில்லைக் கையில் ஏந்தியவனும், முதுகுப்புறத்தில் அம்பறாத்தூணியைத் தாங்கியவனும், நீங்காத சினத்தோடு பகைவர்மேல் போர்செய்ய முற்படுபவனும், அழகிய கங்கையாறு பாயும் நாடாகிய கோசல நாட்டிற்கு அரசனுமாகிய இராமபிரானைப் பார்த்து, மனத்துள் மிக்கமகிழ்ச்சி கொண்டு, தனது அலைகளாகிய அழகிய கைகளை எடுத்துத் தலையில் கூப்பி, பெருமுழக்கம் செய்துகொண்டு அவனை எதிர்கொண்டு வரவேற்பதைப் போன்று இருந்தது.

கொங்கைக் குயிலாகிய சீதாதேவியின் துயரத்தை நீக்கிவிட்டால், அது தானாகவே இமையோர்க்கு உற்ற குறை முற்றியதாகும் எனக் கொள்க. 'கங்கைத்திருநாடு உடையான்' என்பது முன்பும் 'கங்கைத்தீம்புனல் நாடன்' என்றும் கூறியதை ஒப்பு நோக்குக. 'எடுத்து' என்பது மேலே கைகளை உயர்த்திக் கூப்பி எனப் பொருள் தரும்.

11. இராமன் மேல் நிகழ்வன பற்றிச் சிந்தித்தல்.

இன்னதாய கருங்கடலை எய்தி, இதனுக்கு எழுமடங்கு
தன்னதாய நெடுமானம், துயரம், காதல் இவை தழைப்ப,
'என்னது ஆகும் மேல் விளைவு?' என்று இருந்தான் இராமன், இகல் இலங்கைப்
பின்னதாய காரியமும், நிகழ்ந்த பொருளும் பேசுவாம். (6153)

(தழைப்ப-வளர; இகல்-பகை; பொருள்-பயன்)

Koviloor Digital Library

''இத்தகையதானகரிய பெரிய தென்கடலின்கண் எய்திய இராமபிரான், இதனை விட ஏழுமடங்கு அதிகமாகத் தன்னை வருத்தும், தனக்கே உரிய மானம், துயரம், காதல் இவை மேன்மேலும் வளர, இதன்பின் என்ன நிகழும்? அதன் விளைவு எப்படி இருக்கும்? என்று சிந்தித்துக் கொண்டே, கடற்கரையில் தங்கியிருந்தான். இது இவ்வாறு இருக்க, இப்போது நாம், அனுமன் பகைவர் வாழுமிடமாகிய இலங்கை நகருக்கு எரியூட்டிச் சென்றபின் அங்கே என்ன நடந்தது? அதன் விளைவுகள் யாவை? என்பனவற்றைக் காணலாம்'' என்கிறான் கவிஞன்.

இது கவிக்கூற்று. 'பின்னதாய காரியம்' என்பது இராவணன் மந்திராலோசனை செய்தலும், இலங்கை நகரை மீண்டும் புதுப்பித்தலும் ஆகிய செயல்கள் ஆகும். 'மானம்' என்பது எஞ்ஞான்றும் தம் நிலையில் தாழாமையும், தெய்வத்தால் தாழ்வு வந்துழி உயிர் வாழாமையுமாம்.

கடல்காண் படலம் நிறைவுற்றது

Koviloor Digital Library

2. இராவணன் மந்திரப் படலம் [118 பாடல்கள்]

அனுமனால் இலங்கை எரியூட்டப்பெற்ற பிறகு, மேல் நிகழ்வன பற்றிச் சிந்திப்பதற்காக இராவணன் தன் அமைச்சர்களுடன் மந்திர ஆலோசனை செய்யும் பகுதி எனவிரியும். இது 118 பாடல்களைக் கொண்ட து. இது சில சுவடிகளில் 'மந்திரப்படலம்' எனவும், சில சுவடிகளில் 'இராவணன் மந்திரி விசாரப் படலம்' எனவும் தலைப்பிடப் பெற்றிருக்கிறது. சில சுவடிகளில் இப்படலம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு 'மந்திரப்படலம்' எனவும் 'விபூடணன் யுத்தப் படலம்' எனவும் தலைப்பிடப்பட்டிருக்கிறது. முன்பே அயோத்தியா காண்டத்தில் தசரதன் அமைச்சர்களுடன் ஆலோசனை மேற்கொண்ட பகுதியும் மந்திரப்படலம் எனவே வழங்கப் பெற்றிருப்பதால், இப்படலத்திற்கு இராவணன் மந்திரப் படலம் எனப் பெயரிடலாயிற்று.

இப்படலத்துள் அனுமனால் எரியூட்டப்பெற்ற இலங்கை மாநகரைப் புதிதாக நிர்மாணிக்கப் பிரமனோடு, தெய்வத்தச்சன் மயன் வந்து புதுப்பித்தல், புதிய நகரத்தின் பொலிவு கண்டு மகிழ்ந்து, இராவணன் பிரமனுக்கும் மயனுக்கும் பரிசில்கள் அளித்தல்; இராவணன் ஆலோசனை மண்டபத்திற்கு வந்து வீற்றிருத்தல், முனிவர்களை அகற்றி, அமைச்சர், நெருங்கிய சுற்றத்தார் முதலியவர்களை மட்டும் இருக்கச் செய்தல்; திசைக்காவலர்களைப் பாதுகாப்புக்கு நிறுத்துதல்; தனக்கு நேர்ந்த இழிவு குறித்து அமைச்சர்களிடம் இராவணன் கூறுதல்; சேனைக்காவலர், மகோதரன், வச்சிரதந்தன், துன்முகன், மாபெரும்பக்கன், பிசாசன், சூரியன் பகைஞன், வேள்வியின் பகைஞன், புகை நிறக்கண்ணன், மற்றுமுள்ள அரக்கர்கள் தத்தம் கருத்தைத் தெரிவித்தல்; கும்பகருணனின் நேர்மையான பேச்சு; அதற்கு இராவணன் உடன்பட்டுப் போருக்கு எழத்துடித்தல்; இதனைத்தடுத்து இந்திரசித்து தானே போருக்குச் செல்லுவேன் எனக் கூறுதல்; அவனைத்தடுத்து வீடணன் ஒரு பேருரை நிகழ்த்துதல்; அதனால் இராவணன் சினந்து வீடணனைக் கோபித்தல்; வீடணன் மீண்டும் தடுத்து இரணியனின் சரிதத்தைக் கூறத்தொடங்குதல் ஆகிய நிகழ்ச்சிகள் மிக விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன.

Koviloor Digital Library

1. தெய்வத்தச்சன் மயன் இலங்கையைப் புதுப்பித்தல்.

பூவரும் அயனொடும் புகுந்து, 'பொன்நகர்
மூவகை உலகினும் அழகு முற்றுற,
ஏவு' என இயற்றினன் கணத்தின் என்பரால்;
தேவரும் மருள்கொளத் தெய்வத் தச்சனே. (6154)

(வருதல்-தோன்றுதல்; பொன்-அழகு; முற்றுற-முழுவதும்; ஏவுதல்-கட்டளைஇடுதல்; மருள்தல்-மயங்குதல்; கணம்-நொடிப்பொழுது; இயற்றுதல்-செய்து அமைத்தல்)

தேவர்கள் தச்சனும், தெய்வத்தன்மை கொண்ட தச்சனுமாகிய மயன் என்பவன் திருமாலின் உந்தித் தாமரையிலிருந்து தோன்றியவனான பிரமதேவனுடன் அழகிய இலங்கை மாநகரில் நுழைந்தான். இராவணன் பிரமனை நோக்கி ''மேல், கீழ், நடு என்ற மூன்றுவகைப்பட்ட உலகங்களிலுமுள்ள சிறந்த அழகிய நகரங்களைக் காட்டிலும் முழுவதும் பொலிவு மிக்கதாக இலங்கையை மறுபடியும் புதுப்பிக்க'' என்று கட்டளை இடவும், அந்தக் கட்டளையை ஏற்றுத் தெய்வத்தச்சனான மயன், தேவரும் மருட்சி கொள்ளும் வண்ணம், ஒருநொடிப்பொழுதில் இலங்கை மாநகரை முன்னைய நிலையைக் காட்டிலும் மிகவும் பொலிவு பெற்று விளங்குமாறு அமைத்துக் கொடுத்தான் என்று சான்றோர் கூறுவர்.

இங்கே ஒன்று கருதப்பட வேண்டும், வான்மீகத்தில், இலங்கை மறுபடியும் மயனால் புதுப்பிக்கப்பட்டது என்று குறிப்பிடப்படவே இல்லை. தான் நினைத்த மாத்திரத்தில், நினைத்த வண்ணம் இயற்றி முடிக்கும் ஆற்றல் பெற்றவன் ஆதலால் மயன் 'தெய்வத் தச்சன்' எனப் பட்டான் என்க. இலங்கை 'பொன் நகர்' என்பது முன்பும் கூறப்பட்டதை நினைவு கூர்க. தேவர்கள் தலைநகராகிய அமராவதியில் இருக்கும் தேவசபை 'சுதர்மை' எனப்படும். அதனைக்காட்டிலும் இலங்கையை அழகு பெறச்செய்தான் என்பதை 'சுதன்மையினும் முதன்மைபெற' என்று கூறுகிறது வில்லிபாரதம்.

2. இராவணன் மகிழ்தல்

பொன்னினும் மணியினும் அமைந்த பொற்புடை
நன்னகர் நோக்கினான்; நாகம் நோக்கினான்;
'முன்னையின் அழகுடைத்து' என்று, மொய்கழல்
மன்னனும் உவந்து, தன் முனிவு மாறினான். (6155)

(மொய்-செறிந்த; மணி-இரத்தினம்; பொற்பு-அழகு; முனிவு-சினம்; நாகம்-விண்ணுலகு)

Koviloor Digital Library

செறிந்த வீரக்கழலணிந்த மன்னனான இராவணன், பொன்னாலும், நவரத்தினங்களாலும் புதிதாக நிர்மாணிக்கப்பெற்று, அழகுபெற்றுத் திகழும் நல்ல நகராகிய இலங்கையைப் பார்த்தான், தேவருலகத் தலைநகராகிய அமராவதியுடன் ஒப்பிட்டுப்பார்த்தான். ''இப்பொழுது இலங்கை, அனுமனால் எரியூட்டப்படுவதற்கு முன்பு இருந்த இலங்கையை விட அழகாக இருக்கிறது'' என்று மனம் உவந்து கூறி, தான் கொண்டிருந்த கோபத்தினின்றும் தணிந்து மாறினான்.

'நாகம்' என்ற சொல் பலபொருள்களைத்தரும். அதில் தேவருலகு என்பதும் ஒன்று. இலங்கை நகரம் எரியுண்டதும் ஒருவகையில் நல்லதற்கே என்று கருதி மகிழ்ந்தான் என்க.

3. முழுப்பெரும் தனிமுதல் உலகின் முந்தையோன்
எழில்குறி காட்டிநின்று, இயற்றி ஈந்தனன்;
பழிப்ப அரும் உலகங்கள் எவையும் பல்முறை
அழித்து அழித்து ஆக்குவாற்கு அரிது உண்டாகுமோ? (6156)

(முழு-நிறைவு; தனி-ஒப்பற்ற; முதல்-முதல்வன்/தலைவன்; குறை-வரையறை/வரம்பு; காட்டி-விளக்கி; முந்தையோன்-முற்பட்டவன்/பழமையானவன்/பிரமன்; இயற்றி-நிர்மாணித்து)

நிறைந்த, பெரிய, ஒப்பற்ற தலைவனும், உலகம் தோன்றுவதற்கு முன்பே தோன்றிய பழமையானவனுமான பிரமன், தானே நேரில் நின்று அழகுக்குரிய வரையறை வரம்புகளை விளக்கிக்கூற, தெய்வத்தச்சன் மயன் அவ்விலங்கை மாநகரை அழகுறச் சமைத்துத்தந்தான். குற்றமற்ற உலகங்கள் எல்லாவற்றையும், பலமுறை அழித்து அழித்துப் பின் மீண்டும் உருவாக்கும் அத்தகைய பிரமதேவனுக்கு, செய்யமுடியாதது என்று ஒரு செயல் உண்டோ? இல்லை என்கிறான் கவிஞன்.

பிரமனுக்கு எத்தனை அடைமொழிகள் பாருங்கள். முழுமுதல், பெரும் முதல், தனிமுதல் உலகின் முந்தையோன் என்பனவெல்லாம் படைப்புக் கடவுள்தான் மற்ற இருசெயல்களுக்கும் காரணகர்த்தா என்பதை விளக்கிச் சிறப்பிக்க என்க. பிரளய காலத்தில் அழிந்து போகின்ற உலகங்கள் எல்லாவற்றையும் மீண்டும் மீண்டும் படைத்துக்கொண்டே இருக்கும் தொழிலைச் செய்பவனாகிய பிரமதேவனுக்கு எரிந்துபோன ஒரு இலங்கை மாநகரைப் புதுப்பிப்பதற்கு அழகின் வரம்புகளை எடுத்துக் கூறுவது என்பது அரியசெயலாகிவிடுமோ? என்கிறான் கவிஞன் என்பதாம்.

4. திருநகர் முழுவதும் திருந்த நோக்கிய
பொருகழல் இராவணன், அயற்குப் பூசனை
வரன்முறை இயற்றி, 'நீவழிக் கொள்வாய்' என்றான்;
அரியன தச்சற்கும் உதவி, ஆணையால். (6157)

Koviloor Digital Library

(திரு-அழகிய; திருந்த-நன்கு; அயன்-பிரமன்; வழிக்கொள்ளுதல்-செல்லுதல்/விடைபெறுதல்; பொருதல்-போர்புரிதல்; வரன்முறை-வழிபாட்டு முறை)

மயனால் அழகாகத் திருத்தி அமைக்கப்பட்ட அழகிய இலங்கை மாநகரை முழுவதும், இப்பொழுது போர்புரிதற்குரிய வீரக்கழலணிந்த இராவணன், நன்றாகப் பார்த்தான். பின்னர் தன் கட்டளையினால், தெய்வத்தச்சனான மயனுக்கு, மிக அரிதான சில பரிசில்களையும் கொடுத்து, பிரமதேவனுக்குரிய வழிபாட்டு முறைகளையும் தவறாது முறைப்படி செய்து, அவனை நோக்கி, ''நீ சென்று வருவாயாக'' என்று விடை கொடுத்தனுப்பினான்.

5. இராவணன் ஆலோசனை மண்டபம் வருதல்

அவ்வழி, ஆயிரம் ஆயிாம் அவிர்
செவ்வழிச் செம்மணித் தூணம் சேர்ததிய
அவ் எழில் மண்டபத்து, அரிகள் ஏந்திய
வெவ்வழி ஆசனத்து, இனிது மேவினான். (6158)

(அவிர்-விளங்குகின்ற; சேர்த்திய-அமைத்த; அரி-சிங்கம்; அவ்வழி-அதன்பின்; ஏந்துதல்-தாங்குதல்; செம்மணி-சிவந்த இரத்தினம்)

அதன்பின்னர், பல்லாயிரக்கணக்கான செம்மையான சிவந்த ஒளிவீசும் நவரத்தினக் கற்கள் பதிக்கப்பெற்ற தூண்கள் நாட்டப்பெற்ற அந்த அழகு மிகுந்த ஆலோசனை மண்டபத்தில் இருந்த, சிங்கங்கள் சுமந்து நிற்கின்றதும், விரும்பத்தக்கதுமான அரியணையில் மகிழ்ச்சியுடன் வீற்றிருந்தான்.

ஆயிரம் ஆயிரம் தூண்கள், அவிர்தூண்கள், செவ்வழித் தூண்கள், செம்மணித் தூண்கள் என்று, தூண்களின் சிறப்பு மிகுத்துரைக்கப்பட்டது என்க. சிங்கங்கள் தாங்கிய ஆசனம் ஆதலின் அது வெம்மையை வெளிப்படுத்திற்று என்பதால் 'வெவ்வழி ஆசனம்' என்றார் என்க. எனினும் இப்போது இராவணன் மகிழ்ச்சியுடன் இனிது வீற்றிருந்தான் என்பதால் வெம் என்ற சொல்லுக்கு விரும்பத்தக்க என்ற பொருள் உரைக்கப்பட்டது. 'வெம் வேண்டலுமாம்' என்பது தொல்காப்பியம். 'செம்மணி' என்பது பதுமராகக் கற்களைக் குறிக்கும்.

6. மண்டபத்துள் வீற்றிருந்தோர்

வரம்புஅறு சுற்றமும், மந்திரத் தொழில்
நிரம்பிய முதியரும், சேனை நீள்கடல்
தரம்பெறு தலைவரும், தழுவத் தோன்றினான்;
அரம்பையர் கவரியொடு ஆடும் தாரினான். (6159)

Koviloor Digital Library

(அரம்பையர்-தேவமகளிர்; கவரி-சாமரம்; தார்-மாலை; தரம்-மேன்மை/பெருமை; தழுவ-சூழ்ந்திருக்க; மந்திரம்-ஆலோசனை; தோன்றுதல்-விளங்குதல்)

தேவமகளிர்கள் வெண்சாமரம்வீச, அதனால் அசைந்தாடும் மாலையணிந்த இராவணன் கணக்கற்ற சுற்றத்தார்களும், ஆலோசனையில் வல்லமை பெற்ற முதிர்ந்த அமைச்சர்களும், நீண்ட பெரிய கடல்போன்ற சேனைகளுக்குத் தலைவர்களாகிய மேன்மை தங்கிய சேனாபதிகளும் சூழ்ந்திருக்க, அம்மண்டபத்தில் பொலிவோடு வீற்றிருந்தான்.

மந்திராலோசனையில், சுற்றத்தார், அமைச்சர்கள், சேனாபதிகள் முதலியோர் இருந்தனர் என்பது பெறப்படுகிறது. 'மந்திரத்தொழில் நிரம்பிய முதியரும்' என்பது அரசியல் ஆலோசனையில் வயது, ஞானம், பண்பு ஆகியவற்றில் முதிர்ந்தவர்கள் என்ற விரிந்த பொருளைத்தரும்.

7. "முனைவரும், தேவரும், மற்றும் உற்றுளோர்
எனைவரும் தவிர்க!" என, ஏய ஆணையான்
புனைகுழல் மகளிரோடு, இளைஞர்ப் போக்கினான்;
நினைவுறு காரியம் நிகழ்த்தும் நெஞ்சினான். (6160)

(முனைவர்-முனிவர்கள்; எனைவரும்-அனைவரும்; தவிர்தல்-நீங்குதல்; ஆணை-கட்டளை; புனைதல்-அலங்கரித்தல்; குழல்-கூந்தல்)

தான் மந்திரிகளோடு இதுபற்றி ஆலோசனை செய்யவேண்டும் என்ற கருத்தை உடையவனான இராவணன், அதற்குச் சம்பந்தமில்லாத "முனிவர்களையும், தேவர்களையும் மற்றும் அங்கு எப்போதும் வந்து அமர்திருப்பவர்களையும் அரக்கரல்லாத தேவையற்ற மற்றவர்கள் அனைவரையும் ஆலோசனை மண்டபத்திலிருந்து நீக்குக" என்று கட்டளையிட்டபடி நன்கு அலங்கரிக்கப்பட்ட கூந்தலையுடைய மகளிரையும், இளைஞர், சிறுவர்களையும் அங்கிருந்து போகச்செய்தான்.

முனிவர்களும், தேவர்களும் எதிர்த்தரப்பினர் என்பதாலும் அவர்களுக்கும் அரசியல் ஆலோசனைக்கும் தொடர்பு இல்லை என்பதாலும், நீக்கினான். "மற்றும் உற்றுளோர், எனையவர்" என்பது தேவர்களல்லாத, தேவகணத்தைச் சார்ந்த கந்தர்வர், வித்யாதரர், கின்னரர், கிம்புருடர், சித்தர் முதலியவர்களை எனக் கொள்க. மகளிர் இரகசியத்தைக் காப்பாற்ற இயலாதவர்கள் என்பதாலும், இளைஞர்கள் வயதும் அறிவும் முதிர்ந்தவர்கள் அல்லர் என்பதாலும் அவர்களையும் போகச் செய்தான் என்க. யார்யார் மந்திராலோசனையில் இருக்கக் கூடாதவர்கள் என்பதை வில்லிபாரதம் கூறுகிறது கேளுங்கள். "துன்று பிணியோர், துறந்தோர், அடங்காதோர், கன்றுசின மனத்தோர், கல்லாதவர், இளையோர், ஒன்றும் முறைமை உணராதோர், மகளிர் என்னும் இவர் மந்தணத்தின் எய்தல் பெறாதாரே" (மந்தணம்-மந்திரலோசனை) இராவணன் மேற்கூறிய

Koviloor Digital Library

வர்களை அகற்றியதற்கு இவர்கள் எல்லாம் தன் கருத்துக்கு இணங்க மாட்டார்கள் என்று அவன் கருதியதாலும் இருக்கலாம்.

8. "பண்டிதர், பழையவர், கிழவர், பண்பினர்,
தண்டல்இல் மந்திரத்தலைவர் சார்க!" எனக்
கொண்டு, உடன் இருந்தனன்; கொற்ற ஆணையான்
வண்டொடு காலையும் வரவு மாற்றினான். (6161)

(கொற்றம்-வெற்றி; ஆணை-ஆக்ஞாச்சக்கரம்; கால்-காற்று; மாற்றுதல்-தடைவிதித்தல்; பழையவர்-நீண்டநாள் பழகியவர்; பண்டிதர்-அறிஞர்கள்; கிழவர்-சுற்றத்தார்/உரிமையுடையவர்கள்; தண்டல்இல்-தவறுதலில்லாத; சார்க-வருக)

தன்னுடைய வெற்றி அகலாத ஆக்ஞாசக்கரத்தின் சிறப்பால், ஓரறிவுயிரான வண்டினங்களையும், அருவமான காற்றையும்கூட, அம்மண்டபத்துக்குள் புகுந்துவிடாதபடி தடைவிதித்து, ''கற்றறிந்த அறிஞர்களும், தன்னோடு நீண்டநாள் பழகிய பெரியவர்களும், தனக்கு உரிமையுடைய நெருங்கிய சுற்றத்தினரும், நற்பண்புமிக்க சில நண்பர்களும் தன்னை விட்டு நீங்காது எப்போதும் உடனிருக்கும் தன் அமைச்சர் பெருமக்களும் வருக'' என்றுகூறி, அவர்களை மட்டும் அழைத்துக்கொண்டு அந்த மந்திராலோசனை மண்டபத்தில் வீற்றிருந்தான்.

'வண்டொடு காலையும் வரவு மாற்றினான்' என்றதால் இராவணனுக்கு இயற்கைப் பொருள்களும், சிற்றினங்களான வண்டுகளும்கூட அடங்கிப் போயிருந்தன என்பது அவனுடைய ஆட்சிச்சிறப்பைத் தெரிவிப்பதாகும்.

9. ஆன்றுஅமை கேள்வியர் எனினும், ஆண்தொழிற்கு
ஏன்றவர், நண்பினர் எனினும், யாரையும்,
வான்துணைச் சுற்றத்து மக்கள், தம்பியர்
போன்றவர் அல்லரைப் புறத்துப் போக்கினான். (6162)

(வான்-சிறப்பு; ஆன்ற-நிரம்பிய; ஏன்றவர்-உடையவர்; மக்கள்-மைந்தர்; புறத்து-வெளியே; ஆண்தொழில்-போர்த்தொழில்)

நிரம்பிய நூலறிவும் கேள்வியறிவும் மிக்கவராயினும் போர்த் தொழிலுக்கு ஏற்ற வல்லமை படைத்தவராயினும், அவர் நண்பராயினும் சிறந்த தனது துணையாய் இருக்கும் உறவினர்களிலும் தன் மைந்தர்கள், தம்பியர்கள் இவர்கள் போன்றவர்களைத் தவிர மற்ற எல்லோரையும் வெளியே அனுப்பச் செய்தான்.

Koviloor Digital Library

10. திசைதொறும் நிறுவினன், உலகு சேரினும்
பிசைதொழில் மறவரை; பிறிது என்பேசுவ;
விசையுறு பறவையும், விலங்கும், வேற்றவும்
அசைதொழில் அஞ்சின, சித்திரத்தினே? (6163)

(சேர்தல்-எதிர்த்துவருதல்; மறவர்-வீரர்; விசை-வேகம்; வேற்றவும்-மற்றவையும்; அசைதொழில்-இடம்விட்டுப் பெயர்ந்துபோதல்)

உலகத்திலுள்ள எல்லோரும் ஒன்றுகூடி எதிர்த்து வந்தாலும், அவர்களை வேறு எந்தத் துணையும் இன்றித் தன் கைகளாலேயே பிசைந்து அழிக்கும் வல்லமை படைத்த அரக்க வீரர்களை மண்டபத்தைச் சுற்றிலும் வெளிப்புறத்தில் எல்லாத்திசைகளிலும் காவல் நிற்கச் செய்தான். அதனால், வேகமாய்ப்பறக்கும் பறவைகளும், மிருகங்களும், இவையல்லாத புழு, பூச்சிகள், மானிடர் போன்றவர்களும்கூட, சித்திரமாக வரையப்பட்ட ஓவியம் போலத் தம் இடம்விட்டுப் பெயர்ந்து செல்ல அச்சப்பட்டு அங்கங்கே அசையாது நின்றன என்றால் அம்மண்டபத்திற்கு நிறுவியுள்ள காவல் கட்டுப்பாட்டைப் பற்றிப் பேசுவதற்கு வேறு என்ன இருக்கிறது? என்கிறான் கவிஞன்.

11. "தாழ்ச்சி இங்கு இதனின்மேல் தருவது என்இனி?
மாட்சி, ஓர் குரங்கினால் அழிந்த, மாநகர்;
ஆட்சியும், அமைவும், என்அரசும் நன்று!" எனா,
சூழ்ச்சியின் கிழவரை நோக்கிச் சொல்லுவான். (6164)

(மாட்சி-பெருமை; ஆட்சி-ஆளும்திறன்/தன்மை; அமைவு-சிறந்த ஆட்சிக்கான குணநிறைவு; அரசு-அரசபதவி; சூழ்ச்சியின் கிழவர்-மந்திரக் கிழவர்/அமைச்சர்கள்; தாழ்ச்சி-தாழ்வு/இழிவு)

இராவணன் ''என்னுடைய பெருமையெல்லாம் ஒரு அற்பக் குரங்கினால் அழிந்தது. இந்த இலங்கை மாநகரமே எரிந்துபோனது. இதனைவிட எனக்கு ஒரு இழிவு வருவது என்பது வேறு என்ன இருக்கிறது? என்னுடைய அரசாட்சியும், அதனைச் செலுத்தும் திறனும், என்னுடைய அரசின் செயல்பாடுகளும் மிக நன்றாய் இருக்கின்றன'' என்று தன்னைத்தானே நொந்துகொண்டு ஆலோசனை செய்வதற்கு உரிய அமைச்சர்களை நோக்கிக் கீழ்வருமாறு கூறலானான்.

'அமைவு' என்பது சேனையின் பலத்தையும் குறிக்கும். இவ்வாறு இராவணன் தன்னைத்தானே நொந்து கொண்டதாக வான்மீகம் கூறவில்லை; 'நன்று' என்பது இகழ்ச்சிக் குறிப்பு.

Koviloor Digital Library

12. "சுட்டது குரங்கு; எரி சூறையாடிடக்
கெட்டது கொடிநகர்; கிளையும் நண்பரும்
பட்டனர்; பரிபவம் பரந்தது எங்கணும்;
இட்டது இவ் வரியணை இருந்தது, என்உடல்" (6165)

(சூறையாடுதல்-கொள்ளைகொள்ளுதல்; கிளை-சுற்றத்தார்; படுதல்-இறத்தல்; பரிபவம்-அவமானம்; அரியணை-சிங்காதனம்; எரி-நெருப்பு)

''ஒரு அற்பமான குரங்கு, நெருப்பினால், இந்த இலங்கை மாநகரையே சுட்டெரித்துக் கொள்ளைகொண்டு விட்டது. காவல் மிகுந்த, வெற்றிக் கொடி திகழ்கின்ற இந்த நகரமே அழிந்துபோயிற்று. என்னுடைய உறவினர்களும், நண்பர்களும் இறந்துபோயினர், எனக்கு நேர்ந்த அவமானம் உலகெங்கும் பரவிவிட்டது. வைக்கப்பட்டிருக்கிற இந்த சிங்காதனம் மட்டும் பொலிவோடு விளங்குகிறது. அதில் என்உடல் மட்டும் இன்னும் இருக்கிறது''

இந்தச்சம்பவத்தைத் தடுக்க இயலாமல் எனது உடல் மட்டும் இன்னும் இருக்கிறது என்று புலம்புகிறான் இராவணன் என்பதாம். தான் உயிருடன் இருக்கும்போதே தனக்கு அவமானம் உண்டாகிவிட்டதே என்ற கவலையால் 'இட்டது இவ்வரியணை இருந்தது என் உடல்' என்கிறான் என்க.

13. "ஊறுகின்றன கிணறு உதிரம்; ஒண்நகர்
ஆறுகின்றில தழல்; அகிலும் நாவியும்
கூறுமங்கையர் நறுங்கூந்தலின் சுறு
நாறுகின்றது; நுகர்ந்திருந்தம் நாம் எலாம்" (6166)

(ஆறுதல்-தணிதல்/அவிதல்; நாவி-கஸ்தூரிக் குழம்பு/புனுகு; சுறு-கருகுதல்/தீ நாற்றம்; ஒண்-ஒளிமிகுந்த; நுகர்ந்து-அனுபவித்து)

''நம் நகரத்தின் கிணறுகளில் எல்லாம் தண்ணீர் ஊறுவதற்கு மாறாக இரத்தம் கசிந்து ஊறுகின்றது; ஒளிமிக்க நம் நகரத்தில் அனுமனால் இடப்பட்ட நெருப்பின் தழல் இன்னும் தணியவில்லை; பெண்கள் கூந்தலில் இயற்கை மணமும், அகில், கஸ்தூரிக் கலவையினால் ஊட்டப் பெற்ற கூந்தலின் நறுமணமும் வீசாது இப்பொழுது கருகிய நாற்றம் வெளிப்படுகின்றது. இவையெல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு, நாம் எல்லோரும் இவற்றை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்! என்ன வியப்பு இது?'' என்று தன்னுடைய கையறு தன்மையை அமைச்சர்களிடம் வெளிப்படுத்துகிறான் இராவணன்.

Koviloor Digital Library

14. ''மற்று இலது ஆயினும், 'மலைந்த வானரம்
இற்று, இலதாகியது' என்னும் வார்த்தையும்
பெற்றிலம்; பிறந்திலம் என்னும் பேர் அலால்
முற்றுவது என்? இனி, பழியின் மூழ்கினாம்'' (6167)

(மலைந்த-போர்செய்த; இற்றுஇலது-இறந்து ஒழிந்தது; முற்றுதல்-அடைதல்/செய்துமுடித்தல்)

''நம்மிடையே வந்து போர் செய்து, நம் நகரை அழித்த ஒரு குரங்கை ஏவிவிட்டவர்கள் இடம் சென்று அவருடன் போரிட்டு வெற்றி கொண்டோம் என்ற சிறந்த செயலைச் செய்யவில்லை என்றாலும், அந்தக் குரங்கு இறந்து ஒழிந்தது என்ற சொல்லைக்கூடக் கேட்கமுடியாத வர்களாகி விட்டோம். நாம் இவ்வுலகில் பிறநததன் பயன்தான் என்ன? பிறக்கவில்லை என்றே கூறலாம்; மிகுந்த பழிச்சொற்களுக்கு ஆளாகி விட்டோம். இனிமேல் நம்மால் செய்து முடித்தற்குரிய செயல் என்ன இருக்கிறது?'' என்று அமைச்சர்களை நோக்கி இராவணன் புலம்புகிறான்.

வேறு எதனைச் செய்யவில்லை என்றாலும், அந்தக் குரங்கை அழித்து ஒழித்துஇருக்க வேண்டும், அதனைக்கூட நம்மால் செய்யமுடிய வில்லையே? நாம் பிறந்து என்ன பயன்? என்கிறான் என்பதாம்.

15. சேனைத்தலைவர் உரை

என்று அவன் இயம்பலும், எழுந்து இறைஞ்சினான்,
கன்றிய, கருங்கழல் சேனைக் காவலன்;
'ஒன்று உளது உணர்த்துவது, ஒருங்குகேள்!' எனா
நின்றனன், நிகழ்த்தினன், புணர்ப்பின் நெஞ்சினான். (6168)

(ஒருங்கு-முழுதும்; நிகழ்த்துதல்-கூறுதல்; கன்றிய-வருந்திய/சினம் மிகுந்த; கரும்-பெரும்; புணர்ப்பு-சூழ்ச்சி; உணர்த்துவது-கூற வேண்டியது)

என்று இராவணன் கூறியதும் அவன் பேச்சால் வருத்த முற்றவனும், சினம் மிக்கவனும், பெருமை பொருந்திய வீரக்கழல்களையணிந்த வனும், சூழ்ச்சியில் திறன் வாய்ந்தவனுமான அவனுடைய படைத் தலைவன் எழுந்து இராவணனை வணங்கி, ''நான் தங்களுக்குக் கூற வேண்டிய பொருள் ஒன்று இருக்கிறது; அதனை முழுவதும் கேட்பாயாக!'' என்று நிதானமாகக் கூறத் தொடங்கினான்.

மந்திராலோசனை மேற்கொண்டு என்ன செய்யவேண்டும் என்பது பற்றியது. போர்பற்றியது, எனவே முதலில் சேனைத்தலைவன் எழுந்து பேசினான். இவன் பெயர் பிரகஸ்தன் என்று வான்மீகம் கூறுகிறது.

Koviloor Digital Library

அயோத்தியா காண்டத்தில், தசரதனும் மந்திராலோசனை செய்தான். அது முடிசூட்டுவது பற்றியது. எனவே அமைச்சன் எழுந்து முதலில் பேசினான். இங்கே படைத்தலைவன் எழுந்து முதலில் பேசுவதைக் கருத்தில் கொள்க.

16. "வஞ்சனை மனிதரை இயற்றி, வாள்நுதல்,
பஞ்சு அனமெல்லடி, மயிலைப் பற்றுதல்,
அஞ்சினர் தொழில்" என அறிவித்தேன்; அது
தஞ்சு என உணர்ந்திலை நீ; உணரும் தன்மையோய்!" (6169)

(வாள்-ஒளி; தொழில்-செயல்; தஞ்சு-தாழ்வானது; இயற்றி- செய்து)

''நன்மை, தீமை என்பனவற்றைப் பகுத்தறியும் இயல்புடையவனே! மானிடர்களாகிய இராம, இலக்குவரை வஞ்சனை செய்து, ஒளி பொருந்திய நெற்றியையும், செம்பஞ்சுக்குழம்பு ஊட்டப்பெற்ற மெல்லிய பாதங்களையும், மயில்போன்ற சாயலையும் உடைய சீதா தேவியைக் கவர்ந்து வருதல் என்பது வீரர்களின் செயலன்று; அது அச்சம் கொண்டவர்கள் செயல் என்று முன்பே நான் கூறினேன். அதனைக் கொள்ளத்தக்கது என்று நீ கருதவில்லை'' என்கிறான் பிரகஸ்தன்.

இவன் முன்பு இவ்வாறு கூறியதாகக் கம்பனில் இல்லை, 'உணரும் தன்மையோய்' என்பது இராவணன், 'ஐயன் வேதம் ஆயிரம் வல்லான் அறிவாளன்' என்பதை அடியொற்றியது என்க.

17. "கரன் முதல் வீரரைக் கொன்ற கள்வரை,
விரிகுழல் உங்கை மூக்கு அரிந்த வீரரை,
பரிபவம் செய்ஞ்ஞரை, படுக்கலாத நீ,
'அரசியல் அழிந்தது' என்று அயர்தி போலுமால்!" (6170)

(குழல்-கூந்தல்; உங்கை-உன்தங்கை/சூர்ப்பணகை; பரிபவம்-அவமானம்; செய்ஞ்ஞர்-செய்தவர்; படுக்கல்-கொன்றொழித்தல்; அயர்தல்-சோர்வுறுதல்; கள்வர்-வஞ்சகர்)

''கரன், தூடணன், திரிசிரன் முதலிய பதினாலாயிரம் வீரரையும் கொன்று குவித்த வஞ்சகர்களை, விரிந்த கூந்தலையுடைய உன்தங்கை சூர்ப்பணகையின் மூக்கை அறுத்து மானபங்கப் படுத்திய வீரர்களை, நமக்குப் பழியையும், அவமானத்தையும் ஏற்படுத்திய அந்த மானிடர்களை இதுவரை கொல்லாமல் உயிருடன் விட்டு வைத்துவிட்டு, இப்பொழுது நீ நமது அரசியல் வாழ்வே அஸ்தமித்துப் போய்விட்டது என்று சோர்வுற்றுப் புலம்புவது தகுமோ?'' என்கிறான் பிரகஸ்தன்.

Koviloor Digital Library

இங்கே 'கள்வர்' என்ற சொல்லாட்சியும், 'வீரர்' என்ற சொல்லாட்சியும் உற்று நோக்கத் தக்கன. இராம இலக்குவர் இப்போது மரிவுரி தரித்து, தவக்கோலம் பூண்டிருக்கின்றனர். அவர்கள் கரன் முதலியவர்களைக் கொன்றுகுவித்ததனால், அவர்கள் பூண்டிருக்கின்ற கோலத்திற்கும், அவர்கள் செய்த செய்கைக்கும் தொடர்பு இல்லாததனால் அவர்களைக் 'கள்வர்' என்றான் என்க. கணவனையிழந்து தனிமையில் இருக்கின்ற ஒரு பெண்ணின் மூக்கை அரிந்து மானபங்கப் படுத்துதல் என்பது ஒரு உண்மையான வீரர்க்கு உரிய செயலன்று. எனவே அவரை 'வீரர்' என்று வஞ்சகமாகப் புகழ்ந்தான் என்க. அவர்கள் இழைத்த குற்றங்கள் ஒன்றின் ஒன்று பெரிது என்பதைப் படிப்படியாய்க் காட்டும் கவிஞனின் திறம் நோக்குக.

18. "தண்டம் என்று ஒரு பொருட்கு உரிய தக்கரைக்
கண்டவர் பொறுப்பரோ, உலகம் காவலர்?
வண்டு அமர் அலங்கலாய்! வணங்கி வாழ்வரோ,
விண்டவர் உறுவலி அடக்கும் வெம்மையோர்?" (6171)

(அமர்தல்-தங்குதல்; விண்டவர்-பகைவர்; வெம்மை-ஆற்றல்; வணங்குதல்-அடங்குதல்; தண்டம்-தண்டனை; பொருள்-செயல்; தக்கர்-கள்வர்/திருடர்; அலங்கல்-மாலை)

''வண்டுகள் விரும்பிவந்து தங்கியிருக்கும் மலர்மாலை அணிந்தவனே! தண்டனைக்கு உரிய செயலைச்செய்த கள்வரைக் கண்டபின்பும், உலகைக் காக்கின்ற பொறுப் புள்ளவர்கள், அதனைப் பார்த்துக் கொண்டு வாளா இருப்பார்களோ? மாட்டார்கள்; பகைவர்களின் மிக்க வலிமையை அடக்குகின்ற ஆற்றல் படைத்தவர்கள், அவர்களுக்கு வணக்கம் செய்து அடங்கி வாழ்வார்களோ? வாழமாட்டார்கள்'' என்கிறான் பிரகஸ்தன்.

நாம் இவைகளைக் கண்டபின்பும் வாளா இருக்கக்கூடாது; நம் ஆற்றலைக் காட்டாது அடங்கியும் போகக்கூடாது என்கிறான் என்பது கருத்து.

19. "செற்றனர், எதிர்எழும் தேவர் தானவர்,
கொற்றமும், வீரமும், வலியும் கூட்டுஅற,
முற்றி, மூன்று உலகுக்கும், முதல்வன் ஆயது
வெற்றியோ? பொறை கொலோ? விளம்ப வேண்டுமால்" (6172)

(செற்ற-சினந்த; தானவர்-அசுரர்; கூட்டு-ஒருங்கே; அற-அழியச் செய்த; முதல்வன்-தலைவன்; முற்றி-முடித்து; விளம்புதல்-உரைத்தல்)

''மிக்க சினம் கொண்டு உன்னை எதிர்த்துவந்த தேவர்கள் அசுரர்கள், இவர்களின் வெற்றியையும், வீரத்தையும், ஆற்றலையும் ஒருசேர அழித்து முடித்து, இன்று நீ மேல், நடு, கீழ் என்ற மூன்று உலகங்களுக்கும் தனி

Koviloor Digital Library

ஒருவனாக ஒப்பற்ற தலைவனாக விளங்குகிறாயே, இது நீ அவர்கள் மேல் போர் செய்து அடைந்த வெற்றியினாலா? அல்லது நீ பொறுமையாய்க் காத்துக் கொண்டிருந்ததாலா! சற்று கூறுவாயாக!'' என்கிறான் பிரகஸ்தன்.

தானவர் என்பவர் தனுவழி வந்த அசுரர் என்க. நீ போரிட்டு வெற்றி காண்பதுதான் முறையே தவிர இன்னும் பொறுமை கொண்டிருத்தல் கூடாது என்கிறான் பிரகஸ்தன்.

20. "விலங்கினர் உயிர்கெட விலக்கி, மீள்கலாது,
இலங்கையின் இனிது இருந்து, இன்பம் துய்த்துமேல்
குலம்கெழு காவல! குரங்கின் தங்குமோ?
உலங்கும் நம்மேல்வரின், ஒழிக்கற்பாலதோ?" (6173)

(கெழுதல்-விளங்குதல்; காவலன்-அரசன்; விலங்கினர்-மாறுபட்டோர்/பகைவர்; துய்த்தல்-நுகர்தல்; உலங்கு-கொசு; விலங்குதல்-கொல்லுதல்; தங்குதல்-நின்றுவிடுதல்; ஒழித்தல்-தவிர்த்தல்)

''அரக்கர் குலத்தை விளங்கச் செய்யத் தோன்றிய அரசனே! நமது பகைவர்களின் உயிரை அழித்து, அவர்களைத் தவிர்த்து வெற்றியுடன் திரும்பி வருதலல்லாது, இங்கே இலங்கையிலேயே காத்துக்கொண்டு இன்பம் நுகர்ந்து கொண்டிருப்போமேயானால், இந்த இழிவு ஒரு குரங்கால் நிகழ்த்தப்பட்டது என்பதோடு நிற்குமோ? அல்லது அதனினும் அற்பமான கொசுவினால்கூட அழிவு நேருமோ? அவ்வாறு நேர்ந்தால் நம்மால் அதைத்தவிர்க்க முடியுமோ?'' என்று இராவணனை இடித்துரைக்கிறான் பிரகஸ்தன்.

'விலங்குதல்' என்பதற்கு குறுக்கிடுதல் என்பதுதான் சரியான பொருள். குறுக்கே வளர்வதனால்தான் நான்கு கால் பிராணிகளுக்கு விலங்கு என்பது பெயர். உலங்கு என்ற சொல் நமக்குப் புதிது. கொசு என்று பொருள். இவ்வாறு பொறுமையாய்க் காத்திருந்தால், இனி ஒரு கொசுகூட, வந்து நம் நகரை அழிக்கும் நிலை வரலாம் என்று ஏளனமாகச் சொல்லுகிறான் பிரகஸ்தன்.

21. "போயின குரங்கினைத் தொடர்ந்துபோய், இவண்
ஏயினர் உயிர்குடித்து, எவ்வம் தீர்கிலம்;
வாயினும் மனத்தினும் வெறுத்து வாழ்துமேல்
ஓயும் நம்வலி" என, உணரக் கூறினான். (6174)

(ஏயினர்-ஏவியவர்; எவ்வம்-இளிவரவு/தாழ்ச்சி/துயரம்/பழி; வாழ்துமேல்-வாழ்வோமானால்; ஓயும்-குன்றும்; இவண்-இங்கு; வாய்-சொல்; மனம்-நினைவு; உணர-மனத்தில்படும்படி)

Koviloor Digital Library

''நமது இலங்கை மாநகரைக் கொளுத்திவிட்டுச் சென்ற அந்தக் குரங்கைத் தொடர்ந்து பின்பற்றிச்சென்று, அதனை நம் நகருக்கு ஏவியவர் களின் உயிரைக் குடித்தால்தான் நம்துயரும், நமக்கு ஏற்பட்ட பழியும் நீங்கும். அவ்வாறல்லாது, அந்தச் செயலைப்பற்றித் திரும்பத்திரும்ப வாயால் பேசிக்கொண்டும், மனத்தால் நினைத்துக்கொண்டும் நம் வெறுப்பைக் காட்டி நாம் வாழ்ந்து கொண்டு இருப்போமானால், நமது ஆற்றல்தான் குறைந்துபோகும்'' என்று இராவணன் மனத்தில் நன்கு பதியும்படி கூறிமுடித்தான் பிரகஸ்தன்.

''உண்டற்குரிய அல்லாப்பொருளை உண்டதுபோலக் கூறலும் மரபே'' என்பது தொல்காப்பியம். எனவே குடிக்கமுடியாத உயிரைக் குடித்து என்றார் என்க.

22. மகோதரன் பேசுதல். [9 பாடல்கள்]

மற்று அவன் பின்னுற, மகோதரப் பெயர்க்
கல் தடந்தோளினான், எரியும் கண்ணினால்,
முற்றுற நோக்கினன், 'முடிவும் அன்னதால்;
'கொற்றவ! கேள்' என; இனைய கூறினான். (6175)

(கல்-மலை; தடம்-பெரிய; கொற்றம்-வெற்றி; நோக்குதல்-ஆராய்ந்து பார்த்தல்; முடிவு-துணிபொருள்)

அந்தப் படைத்தலைவன் பிரகஸ்தன் பேசி அமர்ந்தபிறகு அவனைப் பின்பற்றி மகோதரன் என்ற பெயருடையவனும், மலைபோன்ற பெரிய தோள்களையுடையவனும், சினத்தால் எரிகின்ற கண்களை உடையவனும், இராவணனை நோக்கி, ''வெற்றி மிக்க வேந்தனே!, நாள் முழுவதும் நன்கு ஆராய்ந்து பார்த்தேன், என்னுடைய துணிந்த முடிவும் படைத்தலைவன் கூறியதே ஆகும். மேலும் நான் கூறுவனவற்றைக் கேட்பாயாக!'' என்று கீழ்க்கண்டவாறு பேசத் தொடங்கினான்.

மகோதரன் என்பவன் இராவணனின் அமைச்சர்களுள் ஒருவன்.

23. "தேவரும் அடங்கினர்; இயக்கர் சிந்தினர்;
தா வரும் தானவர் தருக்குத் தாழ்ந்தனர்;
யாவரும், 'இறைவர்' என்று இறைஞ்சும் மேன்மையர்
மூவரும் ஒதுங்கினர், உனக்கு மொய்ம்பினோய்!" (6176)

(மொய்ம்பு-வலிமை; சிந்துதல்-அழிதல்; தாவரும்-கேடற்ற; தானவர்-அசுரர்; தருக்கு-வலிமை/ஆணவம்/செருக்கு; மேன்மை-பெருமை)

''போராற்றல் பெற்றவனே! உனக்குத் தேவர்களும் அடங்கிப் போயினர்; இயக்கர்கள்தங்கள் வலிமை அழிந்து போனார்கள்; கேடில்லாத அசுரர்களும் தங்கள் ஆணவம் தாழ்ந்து வலியற்று இருக்கின்றனர்;

Koviloor Digital Library

உலகத்தவர் எல்லோராலும் 'கடவுள்' என்று போற்றித் துதிக்கப்படும் பெருமைவாய்ந்த அரி, அரன், அயன் ஆகிய மும்மூர்த்திகளும் உன்னை எதிர்த்து நிற்க இயலாது, உனக்கு நேர் வராது ஒதுங்கிப் போய்விட்டனர்'' என்கிறான் மகோதரன்.

தேவர்கள், இயக்கர், அசுரர், மும்மூர்த்திகள் ஆகியோரை இராவணன் தனது திக்கு விஜயகாலத்தில் வென்று, வெற்றிவாகை சூடிய செய்தி உத்தரகாண்டம் இராவணன் திக்கு விஜயப்படலத்தில் விரிவாகப் பேசப்பட்டிருக்கிறது.

24. "ஏற்றம் என்பிறிது, இனி எவர்க்கும் இன்உயிர்
மாற்றுறும் முறைமைசால் வலியின் மாண்புஅமை
கூற்றுவன், 'தன்னுயிர் கொள்ளும் கூற்று' எனத்
தோற்று, நின் ஏவல்தன் தலையில் சூடுமால்" (6177)

(மாற்றுதல்-போக்குதல்; முறைமை-இயல்பு; கூற்றுவன்-இயமன்; ஏவல்-கட்டளை; சூடுதல்-தாங்குதல்; ஏற்றம்-பெருமை)

''எத்தகைய மேன்மைபெற்றவராயிருந்தாலும், அவர்களுடைய இனிய உயிரைக் காலம் அறிந்து போக்கும் இயல்புடைய, வலிமையும், மாட்சியும், பொருந்திய இயமனே, 'இவன் நம் உயிரையும் போக்கும் இயமன் ஆவான்' என்று கருதி, உன்னிடம் தோற்று நீ இடுகின்ற கட்டளைகளைத் தலைமேற் தாங்கி பணிபுரிபவன் ஆக இருக்கிறான். இதைவிட உனக்குப் பெருமை சேர்ப்பது வேறு என்ன இருக்கிறது?'' என்கிறான் மகோதரன்.

உயிரை உடலினின்றும் வேறுபடுத்தும் தொழிலைச் செய்வதனால் இயமனுக்குக் கூற்றுவன் என்பது காரணப்பெயர். இது 'உயிர் மாற்றுதல்' என்று குறிக்கப்பபெற்றிருக்கிறது. உயிரை உடலினின்றும் வேறுபடுத்து தல் என்பது பொருள். இங்கு இராவணனைக் கண்டு அவனிடம் தோல்வி யுற்று அவன் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடப்பவன் இயமன் என்பது கூறப்பட்டது. இராவணன் காலனுக்குக் காலன்- காலகாலன்- எனப்பட்டான் என்பதறிக.

25. 'வெள்ளிஅம் கிரியினை விடையின் பாகனோடு
அள்ளி, விண்தொட எடுத்து, ஆர்த்த ஆற்றலாய்!
சுள்ளியில் இருந்து உறை குரங்கின் தோள் வலிக்கு
எள்ளுதிபோலும், நின்புயத்தை; எம்மொடும்?" (6178)

(விடை-ரிஷபம்/எருது; பாகன்-ஊர்பவன்; வெள்ளியம்கிரி-கைலாய மலை; ஆர்த்தல்-முழங்குதல்; சுள்ளி-சிறிய மரக்கிளை/மெல்லிய கொம்பு; எள்ளுதல்-இகழ்தல்; அம்-அழகிய; வெள்ளி-வெண்மை)

Koviloor Digital Library

''பனி நிறைந்திருப்பதால் வெண்மைநிறமுடைய அழகிய கைலாய மலையில், தன் ரிஷப வாகனத்தோடு இருக்கின்ற சிவபெருமானை, மிக எளிதாகப் பற்றி, ஆகாயம் அளாவத்தூக்கி நிறுத்தி, வெற்றி முழக்கம் செய்த பேராற்றல் உடையவனே! ஒரு சிறு மரக்கிளையில் தங்கியிருந்து வாழ்க்கை நடத்தும் அற்பமான ஒரு குரங்கின் வலிமையொடு, உன் தோள்வலிமையையும், எங்கள் தோளாற்றலோடு சேர்த்து இகழ்கிறாய் போலும்'' என்று சற்றுக் கடுமையாகவே பேசுகிறான் மகோதரன்.

'அள்ளி' என்பது எந்தச் சிரமுமின்றி முயற்சியும் இன்றி மிக எளிதாகத் தூக்குவதைக் குறித்தது. 'ஆர்த்த' என்ற சொல்லுக்கு முழக்கம் செய்த என்று பொருள் கொண்டிருக்கிறோம். 'சாமகானம் பாடி இறைவனை மகிழ்வித்த' என்று பொருள் கூறுதலும் பொருந்தும். 'சுள்ளி' என்பது ஒரு மெல்லிய கொம்பையும் குறிக்கும். 'எள்ளுதல்' என்பதை இகழ்வாகக் கூறுவதைக் குறிக்கும். 'எள்ளல், இளமை, பேதைமை, மடன் என்று உள்ளப்பட்ட நகை நான்கு என்ப'' என்பது தொல்காப்பியம்.

26. ''மண்ணினும், வானினும், மற்றும் முற்றும் நின்
கண்ணினும் நீங்கினர் யாவர், கண்டவர்?
நண்ண அரும் வலத்தினர், யாவர், நாயக!
எண்ணிலர் இறந்தவர், எண்ணில் ஆவரோ?'' (6179)

(நாயகன்-தலைவன்; கண்-கண்ணோட்டம்; நண்ணரும்-கிட்டுதற்கு அரிய; எண்ணுதல்-மதித்தல்; வலம்-வலிமை)

''தலைவனே! மண்ணுலகம், விண்ணுலகம் மற்றுமுள்ள எல்லா உலகங்களிலும் உன் கண்ணோட்டத்திலிருந்து நீங்கியவர் யார் இருக்கிறார்கள்? உன்னை நெருங்குதற்குரிய வலிமை உடையவர் யார் இருக்கின்றனர்? உன்னுடன் போரிட்டு மடிந்தவர்களை எண்ணுதல் என்பது இயலும் காரியமோ? உன்னை மதிக்காமல் உன்னால் இறந்த வர்கள் கணக்கற்றவர் ஆவர். அதனை அளவிடுவது என்பது முடியுமோ?'' என்கிறான் மகோதரன்.

27. ''இடுக்கு இவண் இயம்புவது இல்லை; ஈண்டு எனை
விடுக்குவையாம் எனின், குரங்கை வேர்அறுத்து
ஒடுக்க அரும் மனிதரை உயிர்உண்டு, உன்பகை
முடிக்குவென் யான்'' என, முடியக் கூறினான். (6180)

(இடுக்கு-துன்பம்; ஈண்டு-இப்போது; இவண்-இங்கு; ஒடுக்குதல்-வெல்லுதல்)

''இப்போதும் நமக்கு ஒரு துன்பம் வந்துற்றது என்று ஏன் சொல்ல வேண்டும்? இப்பொழுதே என்னைப் போருக்கு அனுப்பிவைப்பா யானால், அந்தக் குரங்கை, அதன் இனத்தோடு வேரோடு ஒரு சேர அழித்து,

Koviloor Digital Library

வெல்லுவதற்கு அரியர் என்று கூறப்படுகின்ற அந்த மானிடராகிய இராம இலக்குவரின் உயிரைக் குடித்து, உன்னுடைய பகையை முடித்து வருவேன்'' என்று முடிவாகத் தன் முடிவைக் கூறினான் மகோதரன்.

'இடுக்கு' என்பது இடுக்கணைக் குறிக்கும். துன்பம் மிகுதியால் கண்கள் இடுகிச் சிறுத்துப் போவதால் அது இடுக்கு எனப்படுகிறது என்க. 'முடியக் கூறினான்' என்பது, அவன் இறுதியில் போரில் மடிந்துபோகப் போகிறான் என்பதைக் கூறும் ஒரு தொனி அவன் கூற்றில் தெரிவதை உணர்க. மங்கலச் சொல்லிலேயே அமங்கலப் பொருள் தொனிப்பது அங்கதம் என்று இலக்கணத்தில் பேசப்படுவது அறிக.

28. வச்சிர தந்தன் பேசுதல்

இச்சிரத்தவன் உரைத்து இறுக்கும் ஏல்வையின்,
வச்சிரத்து எயிற்றவன் வல்லை கூறினான்;
அச்சிரத்தைக்கு ஒருபொருள் இன்று;'' ஆயினும்,
பச்சிரத்தம் பொழி பருதிக் கண்ணினான். (6181)

(சிரம்-தலை; சிரத்தவன்-தலைமை வாய்ந்தவன்/தலைவன்; இறுத்தல் -முடித்தல்; ஏல்வை-சமயம்/நிலை; பச்சிரத்தம்-புதியரத்தம்; பருதி-சூரியன்; சிரத்தை-உறுதிஉரை; பொருள்-பயன்; வல்லை-விரைந்து)

இத்தகைய தலைவனான மகோதரன் பேசிமுடிக்கும் சமயத்தில், வஜ்ரம் போன்ற உறுதியான பற்களையுடையவனும், பசுமையான புதிய இரத்தத்தைப் பொழிகின்றவனும், சூரியன் போன்ற ஒளி மிகுந்த கண்களையுடையவனுமான வச்சிரதந்தன் என்பவன் எழுந்து ''அத்தகைய சிறப்பான உறுதிமொழிக்கு ஒருபொருளும் இப்போது இல்லை'' என்று விரைவாகக் கூறத் தொடங்கினான்.

'சிரம்' என்ற சொல் தலை என்று பொருள்படும் என்பது நாம் அறிந்ததே. 'சிரத்தவன்' என்றால் 'தலைவன்' என்று பொருள்படும்படி சொற்களை அமைத்த கவிஞனின் திறம் நோக்குக. இச்சொல் இதுவரை எந்தக் கவிஞனாலும் இந்தப் பொருளில் பயன்படுத்தப்படவில்லை என்பதையும் கருதவேண்டும். 'வஜ்ரம்' என்ற வடசொல் உறுதி எனப்பொருள்படும். 'தந்தம்' என்ற வடசொல் பற்கள் என்று பொருள்படும். எனவே வச்சிரதந்தன் என்பது உறுதியான பற்களையுடையவன் என்ற பொருளைத் தரும். எயிறு-பல்; அத்தகைய பெரும் முயற்சி-சிரத்தை- எடுத்துக்கொள்ள, இவர்கள் ஒரு பொருட்டன்று என்று கூறினான் என்க. அவர்களை எளிதில் வென்றுவிடலாம் என்பது கருத்து. 'வஜ்ரதந்தன், வஜ்ரதம்ஷ்ட்ரன்' என்று வான்மீகம் கூறியதைக் கம்பன் வச்சிர எயிற்றன், வச்சிரதந்தன் எனத் தமிழ்ப்படுத்தியிருப்பதை உணர்க. இதுபோன்று பல வடமொழிப் பெயர்கள் கம்பனால் தமிழாக்கப்பட்டிருப்பதை காப்பியத்தில் ஆங்காங்கே காணலாம்.

Koviloor Digital Library

29. "போய்இனி, மனிசரைக் குரங்கைப் பூமியில்
தேயுமின் கைகளால்; தின்மின்" என்று எமை
ஏயினை இருக்குவது அன்றி, என், இனி
ஆயும் இது? எம்வயின் அயிர்ப்பு உண்டாம்கொலொ?" (6182)

(இனி-இப்பொழுதே; ஆயும்-ஆராய்வதும்; அயிர்ப்பு-ஐயம்/ சந்தேகம்; ஏயினை-ஏவி; இருக்குவது-அமர்வது)

''இப்பொழுதே சென்று அந்த இருமானிடர்களையும், குரங்கையும், உங்கள் கை வன்மையால் நிலத்தில் அரையுமாறு தேய்த்து, அவர்களைக் கொன்று, அவர்கள் உடல்களைத் தின்றுவிடுங்கள்'' என்று எங்களுக்குக் கட்டளையிட்டுவிட்டு, நீ இங்கே கவலையின்றி அமர்ந்திருப்பது அல்லாது, இப்போது என்ன ஆராய்ச்சியும் ஆலோசனையும் வேண்டி உள்ளது? ஏன்? எங்கள்மீது உனக்கு ஏதும் சந்தேகம் இருக்கிறதா?'' என்று சற்றுக் கடுமையாகவே பேசுகிறான் வச்சிரதந்தன்.

மனிசரை என்பது அரக்கர்கள் மனிதர்களைப் பற்றி இகழ்ச்சி தெரியக் கூறும் சொல். அதை அப்படியே கம்பன் பலஇடங்களில் பயன்படுத்தி யிருப்பதையும் காணலாம். 'இருக்குவது' என்பதும் ஒரு புதிய சொல்லாட்சி. இருப்பது என்ற பொருளைத்தரும். 'கொல்' என்பது ஐயப்பொருளிலேயே வரும். 'கொல்லே ஐயம்' என்பது தொல்காப்பியம். அவர்களை அழிப்பதன்றி, இதில் ஆலோசிப்பதற்கே இடம் இல்லை என்பது வச்சிரதந்தன் கருத்து. இக்கருத்தை எல்லோரையும் உள்ளடக்கியே 'எம்வயின்' என்று அவன் கூறுவதையும கருதுக.

30. "எவ்வுலகத்தும் நின் ஏவல் கேட்கிலாத்
தெவ்வினை அறுத்து, உனக்கு அடிமை செய்த யான்,
தவ்வின பணி உளது ஆகத்தான் கொலோ,
இவ்வினை என்வயின் ஈகலாது?" என்றான். (6183)

(ஏவல்-கட்டளை; தெவ்-பகைவர்; அறுத்து-அழித்து; தவ்வின-தவறிய; வினை-பணி; வயின்-இடம்; ஈகலாது-தராதது)

''எந்த உலகத்தில் இருந்தாலும் உன்னுடைய கட்டளையைக் கேட்டு நடவாத பகைவர்களை வேருடன் அழித்து, உனக்கு அடிமைத் தொழில் செய்துவந்த நான், ஏதாவது தவறான காரியத்தைச் செய்துவிட்டேனா? அதனால்தான் எனக்கு இந்தப் பணியைத் தராது விட்டுவிட்டாயா?'' என்று கேட்கிறான் வச்சிரதந்தன்.

'தெவ்வுப் பகையாகும்' என்பது தொல்காப்பியம்; இப்பொழுதாவது எனக்கு இந்தப் பணியைத் தருவாயாக என்பது கருத்து.

Koviloor Digital Library

31. துன்முகன் பேசுதல். [6 பாடல்கள்]

'நில், நில்' என்று, அவன்தனை விலக்கி, 'நீ இவை
என்முனும் எளியர்போல் இருத்தியோ?' எனா,
மன்முகம் நோக்கினன், வணங்கி, வன்மையால்,
துன்முகன் என்பவன், இனைய சொல்லினான். (6184)

(வன்மை-சினம்; மன்-மன்னன்; இனைய-இத்தகைய; இறுத்தல்-சொல்லுதல்)

துன்முகன் என்னும் ஒரு அரக்கன் எழுந்து 'சற்று நிறுத்து' என்று அந்த வச்சிரதந்தனைப் பார்த்துக்கூறி, அவனைத்தடுத்து நிறுத்தி, பின் மன்னனான இராவணனின் முகத்தைப் பார்த்து வணங்கி, சற்று கோபத்துடன் உரத்தகுரலில், ''நீ என் முன்னாலேயே உன்னை எளியவன் போலக்காட்டிக் கொள்ளுகிறாயே?'' என்று கூறி பின்வருவனவற்றைக் கூறத்தொடங்கினான்.

'நில்நில்' என்ற அடுக்கு விரைவுப் பொருளது. பொதுவாகத் தன்னினும் தாழ்ந்தவர் இருக்கும் சபையில், தன்னைப் பற்றி உயர்வாகப் பேச வேண்டுமேயல்லாது, தன்னையே தாழ்த்திக் கொள்ளுதல் தகாது. எனவே துன்முகன் ''நீ இவை என்முனும் எளியர்போல இருத்தியே'' எனக் கூற வேண்டியதாயிற்று என்பதாம். தன்னைப்போன்ற வீரர்கள் இருக்கும் போது, இராவணன்கவலைப்படத்தேவையில்லை என்கிறான்துன்முகன்.

32. ''திக்கயம் வலிஇல; தேவர் மெல்லியர்;
முக்கணான் கயிலையும் முரண் இன்று ஆயது;
மக்களும், குரங்குமே வலியராம் எனின்,
அக்கட, இராவணற்கு அமைந்த ஆற்றலே!'' (6185)

(திக்கயம்-திசையானைகள்; முரண்-வலிமை; இன்று-இல்லாது; அக்கட-அதிசயம்; முக்கணான்-சிவபெருமான்)

''உன்னுடைய பெரும் போராற்றலால் திசைகளைக் காத்து நிற்கும் எட்டுத் திசையானைகளும் தங்கள் வலிமையை இழந்தன; தேவர்களெல்லோரும் தங்கள் ஆணவத்தை விட்டு உரமிழந்து மென்மையானவராயினர்; மூன்று கண்களையுடைய சிவபெருமான் உறையும் கயிலாய மலையும் வலிமையின்றிப் போனது; இத்தகைய செயலையெல்லாம் செய்த நீ, இப்போது இருமானிடரும், ஒருகுரங்குமே வலிமையுடையது என்று கூறுவாயேயானால், உன்னிடம் இருக்கும் ஆற்றல் வியக்கத் தக்கதாகும்'' என்று பரிகாசமாய்ப் பேசுகிறான் துன்முகன்.

திக்கயங்கள், தேவர்கள் கைலாயமலை ஆகியவற்றைத் தன் கட்டுப் பாட்டிற்குள் வைத்திருப்பவன் இராவணன். அப்படிப்பட்டவன்

Koviloor Digital Library

இப்போது மனிதரும் குரங்கும் வலிமையுடையன என்று கூறுவது வியப்பையே தருகிறது என்கிறான் என்பதாம். 'அக்கட' என்பது வியப்பைக் குறிக்கும் ஒரு திசைச்சொல்.

33. "பொலிவது, பொதுவுற எண்ணும் புன்தொழில்
மெலியவர் கடன்; நமக்கு இறுதி வேண்டுவோர்
வலியினர் எனில், அவர்க்கு ஒதுங்கி வாழ்துமோ?
ஒலிகழல் ஒருவ! நம் உயிர்க்கு அன்பினால்" (6186)

(ஒருவ-ஒப்பற்ற; புன்-இழிந்த; மெலியவர்-வலிமையற்றவர்; பொதுவுறுதல்-நடுவுநிலையில் ஆராய்தல்; இறுதி-அழிவு; ஒதுங்கி-அடங்கி/மறைந்து; பொலிவது-நிகழப்போவது; எண்ணும்-ஆலோசிக்கும்)

''ஒலிக்கின்ற வீரக்கழல் அணிந்த ஒப்பற்ற வேந்தனே! இனிமேல் நடக்கப்போகும் நிகழ்ச்சிகளையெல்லாம், நடுவு நிலைமையில் நின்று ஆராய்ந்து பார்த்துச் செயல்படுவது என்பது, இழிவான அற்பமான வலிமையற்ற வீரர்கள் செய்யும் செயலாகும். அவ்வாறு ஆராய்ச்சியின் முடிவில், நமக்கு அழிவை விரும்புவோர் நம்மினும் சற்று வலிமை உடையவர் என்றால், நாம் நம் உயிர்மேல் கொண்டிருக்கும் அன்பினால் அவர்களை நேருக்குநேர் சந்திக்காமல், மறைந்தோ, அடங்கியோ வாழ்க்கையை நடத்த முடியுமோ?'' என்று கேட்கிறான் துன்முகன்.

துன்முகன் கருத்துப்படி, இவ்வாறு ஆலோசனை செய்வதெல்லாம் தேவையற்றது; உடனே போர்செய்து பகைவரை அழிக்கவேண்டும் என்கிறான் என்பதாம்.

34. "கண்ணிய மந்திரக் கருமம் காவல!
மண்இயல் மனிசரும், குரங்கும், மற்றவும்,
உண்ணிய அமைந்தன; உணவுக்கு உட்குமேல்
திண்ணிய அரக்கரின் தீரர் யாவரே?" (6187)

(கண்ணிய-கருதிய; கருமம்-செயல்; உண்ணிய-உண்ணுதற்கு; உட்குதல்-அஞ்சுதல்; திண்ணிய-வலிய; தீரர்-வீரர்)

''எங்களைக் காத்தருளும் அரசே! நாம் இப்பொழுது எடுத்துக்கொண்டு ஆலோசனை செய்யும் செயல், இந்தப் பூமியில் நடந்து திரியும் மனிதர்களைப் பற்றியும், குரங்குகளைப் பற்றியும் மற்ற அவர்களோடு சேர்ந்த கரடி முதலிய இனத்தாரைப் பற்றியும்தான். இவைகளெல்லாம் நாம் பசிக்காக உண்ணும் பொருட்களாக அமைந்தவை. இந்த உணவுப் பொருள்களுக்கு அஞ்சி இருப்போமேயானால், நம்மைப் போன்ற வலிமையுடைய அரக்கர்களில் வீரர் என்று சொல்லத்தக்கவர் யார் இருக்கிறார்கள்?'' என்று இகழ்ச்சியாகக் கூறுகிறான் துன்முகன்.

Koviloor Digital Library

'மண்இயல் மனிசரும், குரங்கும் மற்றவும்' என்பது, இவைகள்எல்லாம் நிலத்தில் வாழும் உயிரினங்கள், நிலத்தில் மட்டுமே இவைகளால் வாழமுடியும். நம்மைப்போல் வானத்திலும் சென்று செயலாற்ற முடியாத அற்பப்பிராணிகள் இவை, என்ற பொருளையும் உட்கொண்டது என்பதை உணர்க. இதுபற்றி ஆலோசனை செய்யவே கூடாது என்று துன்முகன் மீண்டும் வற்புறுத்துகிறான் என்க.

35. "எரிஉற மடுப்பதும், எதிர்ந்துளோர் படப்
பொரு தொழில் யாவையும் புரிந்து, போவதும்
வருவதும், குரங்கு; நம்வாழ்க்கை ஊர்கடந்து
அரிதுகொல், இராக்கதர்க்கு ஆழி நீந்துதல்?" (6188)

(வாழ்க்கைஊர்-வாழுகின்ற ஊர்/இலங்கை; எரி-நெருப்பு; மடுப்பது-மூட்டுவது; பட-இறக்கும்படி; பொருதொழில்-போர்த்தொழில்; ஆழி-கடல்; கொல்-ஐயம்)

''ஒரு குரங்கு நாம் வாழும் ஊராகிய இலங்கைக்கு வருவதும், வந்து நெருப்புப் பற்றவைத்து ஊரை அழிப்பதும், அதனை எதிர்த்து வந்தவர்கள் அனைவரும் இறந்துபோகும்படி போர்த்தொழில் செய்துவிட்டு நம் ஊரைவிட்டுத் தப்பித்துப் போவதும் நடக்குமென்றால், அரக்கர்களாகிய நமக்கு, இந்தக் கடலைத்தாண்டிச் செல்லுதல் என்பது ஒரு அரிய-செய்ய இயலாத செயலாகிப்போய்விடுமோ?'' என்று கேட்கிறான் துன்முகன்.

நாமே இப்போது அவர்கள் இருக்கும் இடத்திற்கு வலியச்சென்று அவர் களுடன் போர்புரிந்து, அவர்களை அழிக்கவேண்டும் என்பது துன்முகன் கருத்து. 'அரிதுகொல் இராக்கதர்க்கு ஆழி நீந்துதல்' என்பது இகழ்ச்சிக் குறிப்பு.

36. "வந்து, நம் இருக்கையும், அரணும், வன்மையும்,
வெந்தொழில் தானையின் விரிவும், வீரமும்,
சிந்தையின் உணர்பவர் யாவரே சிலர்
உய்ந்து தம் உயிர்கொடு இவ்உலகத்துள் உளர்?" (6189)

(இருக்கை-இருப்பிடம்/மாளிகை; உய்ந்து-உயிர்பிழைத்து)

''நம் நகராகிய இலங்கைக்குள் வந்து, நமது இருப்பிடத்தையும், உனது மாளிகையையும் அதன் அமைப்பையும், பாதுகாப்பான நமது காவல் அரண்களையும், அவற்றின் உறுதிப்பாட்டையும், கொடுந்தொழில் புரிகின்ற நம் அரக்கர்சேனையின் பரப்பையும், அவர்களின் போராற்றலை யும், தமது மனத்தில் பதியவைத்துக் கொண்டு, இவ்வூரைவிட்டு, உயிருடன் தப்பிப் போனவர்கள் இந்த உலகத்தில், இந்தக் குரங்கைத் தவிர வேறுயாராவது இருக்கிறார்களா?'' என்று கேட்கிறான் துன்முகன்.

Koviloor Digital Library

இவ்வளவையும் அறிந்துகொண்டுபோன குரங்கை உயிருடன் தப்பித்துப் போகவிட்டது நாம் செய்த பெரும்பிழை. இப்பொழுதே கடல் கடந்து அங்கு சென்று அவர்களை அழித்தொழித்து விடவேண்டும் என்பது துன்முகன் கருத்து.

37. "ஒல்வது நினையினும், உறுதி ஓரினும்,
வெல்வது விரும்பினும், வினையம் வேண்டினும்,
செல்வது அங்கு; அவருழைச் சென்று, தீர்ந்துஅறக்
கொல்வது கருமம்?" என்று, உணரக் கூறினான். (6190)

(ஒல்வது-இயல்வது/பொருந்துவது; உறுதி-நன்மை; ஓர்தல்-நினைத்தல்; வினையம்-சூழ்ச்சி; உழை-இடம்; கருமம்-செயல்; உணர-விளங்கும்படி; ஓர்தல்-ஆராய்தல்)

துன்முகன், இராவணனை நோக்கி, ''நாம் நம்மால் இயல்வதையும், நமக்குப் பொருந்துவதையும் எண்ணிப்பார்த்தாலும், நமக்கு நன்மை தரக்கூடியது என்று நினைத்தாலும், நாம் அவர்களை வெற்றிபெற விரும்பினாலும், அவ்வெற்றிக்குரிய சூழ்ச்சித்திறனை எண்ணிப்பார்த்தாலும், நாம் அவர்கள் இருக்கும் இடம் சென்று அவர்களை முற்றமுழுக்க அழித்து ஒழிப்பதுதான், நாம் இப்போது செய்யத்தக்க செயல்'' என்று இராவணன் நன்கு உணரும்படி விளக்கமாக எடுத்துக் கூறினான்.

துன்முகன் மீண்டும் மீண்டும் நாமே, உடனே அங்கே செல்ல வேண்டும்; அவர்களைக் கொன்று மீளவேண்டும் என்று வற்புறுத்துகிறான் என்பதாம்.

38. மாபெரும் பக்கன் பேசுதல். [4 பாடல்கள்]

காவலன், கண்எதிர், அவனைக் கை கவித்து,
'யாவது உண்டு இனி நமக்கு?' என்னச் சொல்லினான்;
'கோவமும், வன்மையும் குரங்குக்கே' எனா,
மாபெரும் பக்கன் என்று ஒருவன் வன்மையான். (6191)

(கோவம்-கோபம்/சினம்; கவித்தல்-அமர்த்தல்)

மாபெரும்பக்கன் என்று மிக்க ஆற்றல்படைத்த ஒருவன் எழுந்து அரசனான இராவணன் கண்முன்னாலேயே பேசிக் கொண்டிருக்கிற துன்முகனைப் பார்த்து, ''நீ பேசியது போதும்'' என்ற குறிப்புத்தோன்ற அவன் கை அமர்த்தி, அவனை அடக்கிவிட்டு, இராவணனை நோக்கி, ''ஒரு அற்பமான குரங்கு செய்த செய்கைக்காக, இவ்வாறு பெரிய மந்திராலோசனை சபையைக் கூட்டி ஆராய்ந்து கொண்டிருப்பதில் நமக்கு என்ன பெருமை இருக்கிறது? சினமும், சீற்றமும், ஆற்றலும் குரங்குக்கு மட்டும்தான் இருக்கிறதா? நமக்குக் கிடையாதா?'' என்று கேட்டான்.

Koviloor Digital Library

'கைகவித்தல்' என்பது கையமர்த்தி மேலும் பேசாதவாறு அடக்குதல் என்ற பொருளைத்தரும். மாபெரும்பக்கன் என்பது 'மகாபார்சுவன்' என்ற வடசொல் பெயரின் தமிழாக்கம்.

39. "முந்தினர், முரண் இலர் சிலவர், மொய்அமர்
நந்தினர் தம்மொடு நனி நடந்ததோ?
வந்து ஒரு குரங்கு இடு தீயின் வன்மையால்,
வெந்ததோ இலங்கையொடு அரக்கர் வெம்மையும்?" (6192)

(முந்தினர்-முற்பட்டுச் சென்றவர்; முரண்-வலிமை; மொய்-நெருங்கிய/பகை; அமர்-போர்; நந்துதல்-கெடுதல்/அழிதல்; நனி-மிகவும்; நடந்ததோ-விலகிச் சென்றதோ/அழிந்து போயிற்றோ; வன்மை-வெம்மை; சிலவர்-சிலர்; வன்மை-கொடுமை)

''முன்பு குரங்குடன் ஏற்பட்ட நெருங்கிய போரில், சில வலிமையற்ற-வலிமையில் குறைந்த சில அரக்கர்கள் சென்று போரிட்டதனால் அவர்கள் அழிய நேர்ந்தது, அதனால் அவர்களுடன் அரக்கர்களது ஆற்றல் எல்லாம் அடியோடு அழிந்துபோய் விட்டது என்று கூறமுடியுமோ? அன்றியும் தனிப்பட்ட ஒரு குரங்கு வந்து வைத்த நெருப்பின் கொடுமையினால் இலங்கை மாநகர் அழிந்ததோடு கொடிய ஆற்றலும், மனவேகமும் அழிந்துபோய்விட்டது என்று கருத முடியுமோ!'' என்று கேட்கிறான் மாபெரும்பக்கன்.

இன்னும் அரக்கர்களும் இருக்கிறார்கள்; அவர்கள் சீற்றமும் இருக்கிறது என்கிறான் என்க.

40. "மானுடர் ஏவுவார்; குரங்கு வந்து, இவ்வூர்
தான் எரி மடுப்பது; நிருதர் தானையே,
ஆனவர் அது குறித்து அழுங்குவார் எனின்
மேல் நிகழ்தக்கன விளம்ப வேண்டுமோ?" (6193)

(நிருதர்-அரக்கர்; தானை-சேனை/படை; அழுங்குவது-வருந்துவது; விளம்புதல்-சொல்லுதல்; குறித்து-எண்ணி)

''அங்கிருந்து கொண்டு அற்பமான இரண்டு மானிடர்கள் ஒரு குரங்குக்குக் கட்டளை இடுவார்கள்; ஒரு குரங்கு அங்கிருந்து நம் ஊருக்கு வந்து நெருப்பை வைக்கும்; அதைப்பற்றி எண்ணி அரக்கர் படைவீரர்கள் வருந்தித் துன்புறுவார்கள் என்றால், இனிமேலும் என்னென்ன நடக்கும் என்பது பற்றி நான் கருத்துக் கூறவும் வேண்டுமோ?'' என்கிறான் மாபெரும்பக்கன்.

இருமனிதர்கள்ஏவ, அற்பமான ஒரு குரங்கு வந்து நம் ஊருக்கு நெருப்பு வைக்க அதைப் பார்த்து, நம் அரக்கவீரர்கள், வருத்தமடைந்து உட்கார்ந்து

Koviloor Digital Library

கொண்டே இருந்தால், இன்னும் அக்குரங்கும், மானிடரும் மேலும் என்னென்ன செய்வார்கள் என்று கூறவேண்டுமோ? என்கிறான் மாபெரும் பக்கன். அதற்குமுன், நாம் அங்கேயே சென்று அவர்களைக் கொன்று அழிக்க வேண்டும் என்பது கருத்து.

41. "நின்று நின்று, இவை சில விளம்ப நேர்கிலேன்;
நன்று இனி நரரொடு குரங்கை நாம் அறக்
கொன்று தின்றல்லது, ஓர் எண்ணம் கூடுமோ?"
என்றனன், இகல் குறித்து எரியும் கண்ணினான். (6194)

(இகல்-பகை; நேர்தல்-உடன்படுதல்; நரர்-மனிதர்/மானிடர்; நாம்-நாமம்/பெயர்; எண்ணம்-நினைவு; குறித்தல்-நினைத்தல்)

பகையை நினைக்கும்போதே கொழுந்து விட்டெரியும் கண்களைக் கொண்ட மாபெரும்பக்கன், ''இங்கேயே இருந்து கொண்டு இவ்வாறு ஒருவர்பின் ஒருவராக வந்து, பகைவர்களது பெருமையையும், நமது சிறுமையையும் குறிப்பிட்டுக் காட்டிப் பேசிக் கொண்டிருப்பதற்கு நான் உடன்படவில்லை; இனி நாம் செய்ய வேண்டியது அந்த மனிதர்களோடு, அந்தக் குரங்கையும் குரங்கு என்று பேர் சொல்லக்கூட ஒரு குரங்கு இல்லாதவண்ணம் அடியோடு அழித்து அவர்களைக் கொன்று தின்றால் அல்லது நம்முடைய எண்ணம் நிறைவேறியதாகக் கொள்ள முடியுமோ?'' என்று கூறினான்.

மற்றவர்களைக் காட்டிலும் இவன் மிக வேகமாக இருக்கிறான் என்பது பெறப்படுகிறது. 'இகல் குறித்து எரியும்கண்' என்பது வெகுளியின் மெய்ப்பாடு; ''கைபிசையா, வாய்மடியா, கண் சிவவா, வெய்துயிரா, மெய்குலையா, வெகுண்டெழுந்தான்'' என்பது தண்டியலங்காரம்.

42. பிசாசன் பேசுதல் – கவிக்கூற்று.

"திசாதிசை போதும் நாம்; அரசன் செய்வினை
உசாவினன், உட்கினன்; ஒழிதும் வாழ்வு'' என்றான்;
பிசாசன் என்று ஒருபெயர் பெற்ற பெய்கழல்
நிசாசரன், உருப் புணர் நெருப்பின் நீர்மையான். (6195)

(பெய்-அணிந்த; நிசாசரன்-அரக்கன்; நீர்மை-தன்மை; உட்குதல்-அஞ்சுதல்/வெட்கமடைதல்; வினை-செயல்; உசாவுதல்-வினவுதல்; திசா திசை-வேறுவேறு திசைகள்; போதும்-செல்லுவோம்; புணர்தல்-அடைதல்)

பிசாசன் என்ற பெயர் படைத்தவனும், வீரக்கழலணிந்தவனுமாகிய ஒரு ஒப்பற்றவன், அரக்கன் வடிவம் அடைந்து நெருப்பைப்போல் கொழுந்துவிட்டெரியும் சீற்றத்தன்மை உடையவனாய் எல்லோரையும்

Koviloor Digital Library

பார்த்து, ''நம் அரசன் பகைவர்களுக்கு அஞ்சி, இப்பொழுது மேலே என்ன செய்யலாம் என்று வினவிக் கொண்டிருக்கிறான். நாம் அனைவரும் வேறுவேறு திசைகளுக்குச் சென்று நம் உயிரை மாய்த்துக் கொள்வோம் வாருங்கள்'' என்று வெறுப்புடன் அழைக்கின்றான்.

பிசாசன் பேசியதாகக் கவிஞன் கூறும் இப்பாடல் கவிக்கூற்று எனக் கொள்க. திசாதிசை என்பது வடமொழிச் சந்தி; காலாகாலம் என்பதைப் போல எனக் கொள்க. திசைதொறும், ஒவ்வொரு திசைக்கும் என்று பொருள்படும். நிசாசரன் என்பது அரக்கன் என்று பொருள்படும் சொல். நிசா-நிசி-இரவு; சரன்-சஞ்சரிப்பவன், இரவில் சஞ்சரிப்பவன் என்று பொருள்கொண்டு அரக்கரைக் குறிக்கும் ஒரு சொல்.

43. சூரியன் பகைஞன் பேசியது.

''ஆரியன் தன்மை ஈது ஆயின், ஆய்வுறு
காரியம் ஈது எனின், கண்ட ஆற்றினால்,
சீரியர் மனிதரே; சிறியம் யாம்'' எனா,
சூரியன் பகைஞன் என்று ஒருவன் சொல்லினான். (6196)

(ஆரியன்-உயர்ந்தோன்; சீரியர்-சிறந்தோர்)

சூரியன் பகைஞன் என்ற ஒரு அரக்கவீரன் எல்லோரையும் பார்த்து, ''நமது உயர்ந்தோனாகிய அரசன் வருத்தம் கொள்ளும் நிலைமை இது என்றால், நாம் இப்போது ஆலோசித்துக் கொண்டிருப்பது ஒரு குரங்கை, மானிடரைப் பற்றியது என்றால், இந்த ஆலோசனையின் முடிவில், மனிதர்களே உயர்ந்தவர்கள், சிறந்தவர்களாவர், நாம் அவர்களினின்றும் தாழ்ந்தவர்கள் ஆவோம்'' என்றான்.

'சூரிய சத்துரு' என்ற வடசொல்லின் தமிழாக்கம் சூரியன் பகைஞன் என்க. இவனை பானுகோபன் என்றும் அழைப்பர், பானு-சூரியன்; கோபன்-பகைவன்; பானுகோபன்-சூரியன் பகைஞன். அரசன் மனம் வருந்தி இவ்வாறு ஆலோசனை செய்வதே நம்மைவிட மானிடர்கள் மேம்பட்டவர்கள் என்றும், நாம் அவர்களைவிடத் தாழ்ந்தவர்கள் என்றும் கூறுவதற்கு ஒப்பாகும் என்கிறான் என்க. ஒரு அற்பக் குரங்கு செய்த காரியத்திற்காக, இவ்வளவு பெரிய ஆலோசனை செய்தால் அது அந்த மானிடரையும், குரங்கையும் உயர்ந்தவர்களாகவும், நம்மைத் தாழ்ந்தவர்களாகவும் காட்டும் என்று மனம் நொந்து சூரியன் பகைஞன் கூறினான் என்று கவிஞன் கூறுகிறான்.

Koviloor Digital Library

44. வேள்வியின் பகைஞன் பேசியது

"ஆள்வினை நிலைமையும், அரக்கர் ஆற்றலும்,
தாழ்வினை இதனின்மேல் பகரத் தக்கதோ?
சூழ்வினை மனிதரால் தோன்றிற்றாம்" எனா
வேள்வியின் பகைஞன் உரைத்து வெள்கினான். (6197)

(தோன்றிற்று-நிகழ்ந்தது; வெள்குதல்-வெட்கமடைதல்/நாணுதல்; சூழ்வினை-மந்திராலோசனைக் கூட்டம்)

வேள்வியின் பகைஞன் என்ற ஒரு அரக்கன் எழுந்து, "நாம் இப்போது இங்குகூடி மந்திராலோசனை செய்வது அந்த மனிதர்களால் நிகழ்ந்தது. இது தேவையில்லாதது; நம் அரசாட்சியின் தன்மையையும், நம் அரக்கர்களின் ஆற்றலையும் இதைவிட இழிவாக வேறு எவ்வாறு சொல்ல முடியும்? என்று கேட்டு வெட்கமடைந்தான்.

இவ்வளவு பெரிய மந்திராலோசனை செய்ய வேண்டிய பொருளே அல்ல இது என்கிறான் இந்த அரக்கன். 'வேள்வியின் பகைஞன்' என்பது 'யக்ஞஹா' 'யக்ஞசத்ரு' என்ற வடசொல்லின் தமிழாக்கம். அரக்கர் களுக்கு நேர்ந்த தாழ்வுநிலை கருதி வெட்கமடைந்தான் என்பதாம். வெள்குதல் என்பது இளிவரல் என்னும் சுவை. இது நான்கு காரணங்களால் வெளிப்படும். "மூப்பே, பிணியே, வருத்தமென்மையோடு யாப்புறவந்த இளிவரல் நான்கே" என்பது தொல்காப்பியம். இப்பொழுது வேள்வியின் பகைஞனுக்கு வந்த நாணம் வருத்தத்தால் வந்தது என்க.

45. புகை நிறக்கண்ணன் கூறியது

'தொகை நிலைக் குரங்குடை மனிதர்ச் சொல்லி என்?
சிகைநிறச் சூலிதன் திறத்துச் செல்லினும்,
நகை உடைத்தாம்; அமர்செய்தல் நன்று' எனா,
புகை நிறக்கண்ணனும் புகன்று, பொங்கினான். (6198)

(சிகை-தீக்கொழுந்து; தொகை-கூட்டம்; பொங்குதல்-கொதித்தல்; சூலி-சூலப்படையுடைய சிவபெருமான்; திறம்-பக்கம்; நகை-ஏளனம்; அமர்-போர்)

புகைநிறக் கண்ணன் என்ற ஒரு அரக்கன் "எரிகின்ற நெருப்புக் கொழுந்துபோல் சிவந்த நிறமுடைய திரிசூலத்தை ஏந்திய சிவபெருமான் பக்கம் சென்று போரிட்டாலும், இப்போது அது பெரும் ஏளனத்திற்கு உள்ளாகும். அவ்வாறிருக்க, கூட்டம் கூட்டமாக நின்று திரியும் குரங்குகளைப் படையாகக் கொண்டுள்ள மனிதர்களைப் பற்றிச் சொல்ல என்ன இருக்கிறது? எனவே இப்பொழுது போர் செய்தலே நமக்கு நன்மை பயக்கும்". என்று கூறிச் சீற்றம் கொண்டான்.

Koviloor Digital Library

'புகைநிறக் கண்ணன்' என்பது 'தூமாட்சன்' என்னும் வடசொல்லின் தமிழாக்கம். தூமம்-புகை; அட்சன்-கண்களையுடையவன்; தூமராட்சன்-புகைநிறக்கண்ணன் என்க. 'சிகை நிறச்சூலி' என்பது 'எரிபோல் மேனிப்பிரான்' என்ற தேவாரத்தை நினைவு படுத்துவதை உணர்க. சிவபெருமான் செந்தீ வண்ணம் உடையவன் என்பதையும் நினைவு கூர்க.

46. மற்று அவன் பின்னுற, மற்றையோர்களும்,
'இற்றிதுவே நலம்; எண்ணம் மற்றுஇல்' என்று
உற்றன உற்றன உரைப்பது ஆயினார்
புற்று உறை அரவு எனப் புழுங்கு நெஞ்சினார். (6199)

(அரவு-பாம்பு; புழுங்குதல்-சினங்கொள்ளுதல்; இற்று-இத்தன்மையான)

புகைநிறக்கண்ணன் இவ்வாறு சொல்லிப் போனபிறகு அங்கிருந்த மற்ற அரக்க வீரர்களும், புற்றுக்குள் தங்கியிருக்கும் பாம்புபோல வெந்து மனம் புழுங்கி, ''தூமராட்சன் சொன்னதுவே நமக்கு நன்மைபயக்கும். இதைத்தவிர வேறு ஆலோசனை இல்லை'' என்று, தத்தமக்குத் தோன்றியவற்றைக் கூறலானார்கள்.

புகைநிறக்கண்ணன் ''நாமாகச் சென்று போர் செய்யக்கூடாது, அவர்களாகவே இப்பொழுது இங்கே வந்தால் போர் செய்தலே சரியாகும்'' என்றான். அதையே எல்லோரும் ஏற்றுக் கொண்டார்கள் என்பது கருத்து. 'புற்று உறை அரவு' என்பது பொதுவாக பாம்பு வெளியிற் சென்று காற்று வாங்குவதையே இயல்பாகக் கொண்டது புற்றுக்குள் இருப்பது அதற்கு வருத்தத்தை விளைவிக்கும் செயல். எனவே இப்போது அரக்கர்கள் அத்தகைய வருத்தத்தை அடைந்தார்கள் என்பதைக் குறிக்க 'புற்று உறை அரவு' என்றார் என்க. நல்ல பாம்பிற்கு 'வாதாசனி' என்ற ஒரு பெயரும் உண்டு. வாதம்-காற்று.

47. கும்பகருணன் பேசுதல் [10 பாடல்கள்]

வெம்பு இகல் அரக்கரை விலக்கி, 'வினை தேரா
நம்பியர் இருக்க!' என நாயகனை முன்னா,
'எம்பி எனகிற்கில், உரைசெய்வல் இதம்'என்னா,
கும்பகருணப் பெயரினான், இவை குறித்தான். (6200)

(வினை-செயல்; தேரல்-தெளிதல்/அறிதல்; நம்பியர்-இளையவர்கள்; வெம்புதல்-சினத்தல்; இகல்-வலிமை; நாயகன்-தலைவன்; முன்னா-முன்னி/அணுகி; எம்பி-என்தம்பி/உடன்பிறந்தவன்; இதம்-நன்மை பயப்பன; உரைசெய்தல்-சொல்லுதல்; குறித்தல்-கூறுதல்)

Koviloor Digital Library

கும்பகருணன் என்ற பெயர் கொண்ட இராவணனின் தம்பியாகிய அரக்கன், சினந்து வலிமையுடன் பேசிக்கொண்டிருக்கும் மற்ற அரக்கர்களைத் தடுத்து, பின்விளைவுகளைப் பற்றி அறியாது பேசுகின்ற இளைஞர்கள் பேசாமல் இருக்கட்டும் என்றுகூறி, தனது தலைவனான இராவணனை நெருங்கி, ''நீ என்னை உன்தம்பி என்று உறுதியாக அன்பு செய்வாயேயானால், உனக்கு நன்மை பயப்பனவாகிய சிலவற்றைக் கூறுவேன்'' என்று, கீழ்க்கண்டவாறு பேசத்தொடங்கினான்.

கும்பகருணன் இராவணனின் தம்பி, குடம் போன்று குவிந்து கவிந்த காதுகளை உடையவன், 'இதம் என்ற சொல், ஹிதம் என்ற வடசொல்லின் தமிழாக்கம்.

48. "நீ அயன்முதல் குலம் இதற்கு ஒருவன் நின்றாய்;
ஆயிரம் மறைப்பொருள் உணா்ந்து அறிவு அமைந்தாய்;
தீயினை நயப்புறுதல் செய்தனை தெரிந்தாய்;
ஏயின உறத் தகைய இத்துணையவேயோ?" (6201)

(அயன்-பிரமன்; நிற்றல்-நிலைத்து நிற்றல்; ஆயிரம்-பல/அளவற்ற; மறை-வேதம்; நயப்புதல்-விரும்பி மேற்கொள்ளுதல்; ஒருவன்-ஒப்பற்றவன்)

''நீ பிரமனை முதல்வனாகக் கொண்டு தோன்றிய புலத்தியன் மரபில் வந்து ஒப்பற்றவனாகத் தன்னிகரற்று நிலைத்து நிற்கிறாய். ஆயிரமாயிரம் வேதங்களை ஆழ்ந்து கற்று, அதன் பொருளை உணர்ந்து திருந்திய அறிவுபெற்றவனாய் இருக்கின்றாய் என்றாலும் நாம் செய்வது தவறு என்று தெரிந்து கொண்டே நெருப்பை விரும்புவதுபோல் கொடிய பாவச்செயலாகிய பிறன்மனை நயந்தாய்; இதனால் விளையக்கூடிய தீமைகள் இம்மட்டோ? இன்னும் எவ்வளவு உள்ளனவோ?'' என்று கும்பகருணன் இராவணனுக்கு அவன் தவற்றை எடுத்துக்கூற முற்படுகிறான்.

'அயன் முதல் குலம்' என்பது பிரமதேவனை முதல்வனாகக் கொண்டு தோன்றிய புலத்தியர் குலத்தைக் குறித்தது. அதில் இறந்தவர்கள் போக, எஞ்சியிருப்பது நீ ஒருவன் மட்டுமே என்றும், அதிலும் ஒப்பாரும், மிக்காரும் இல்லாது தன்னிகரற்ற தலைவனாய் விளங்குகிறாய் என்பதை 'ஒருவன்நின்றாய்' என்பதனால் குறித்தார் என்க. ஆயிரம் என்பது எண்ணுப் பொருளில் வந்ததல்ல, பல என்ற பொருளைத்தரும். வேதத்தைச் சாதாரணமாகப் படிக்காது, ஆழ்ந்து பொருளுடன் உணர்ந்து கற்று பேரறிவு படைத்தவன் என்கிறான் என்க. 'ஐயன் வேதம் ஆயிரம் வல்லன்' என்று முன்பு சுந்தரகாண்டத்தில் பார்த்ததையும் இங்கு நினைவு கூர்க. பிறன்மனை நயத்தல் தவறு என்று தெரிந்தும் அதனைச் செய்தாய் என்பதை 'தீயினை நயப்புறுதல் செய்தனை தெரிந்தாய்' என்றார் என்க. நமக்கு நேர்ந்த இழிவும், அழிவும் இத்துடன் நிற்காது இன்னும் எவ்வளவு

Koviloor Digital Library

விபரீதங்கள் நடக்க உள்ளனவோ என்றும் எச்சரிக்கிறான் கும்பகருணன் என்க.

''தீயினை நயப்புறுதல் செய்தனை தெரிந்தாய்' என்பது நெருப்பைத் தீண்டினால் அது எரித்துவிடுமே என்று எண்ணாது, விட்டில் பறவை போன்று அதன் செந்நிற ஒளியை விழையத்தக்க செயலாக மயங்கி உணர்ந் தாய்'' என்றும் பொருள் கூறுவதுண்டு. கும்பகருணன் இப்போதுதான் முதன்முதல் ஆலோசனையில் கலந்து கொள்ளுகிறான். அண்ணனுக்கு அறிவுரை கூறத்தொடங்குகிறான்.

49. "ஓவியம் அமைந்த நகர் தீஉண, உளைந்தாய்;
'கோஇயல் அழிந்தது' என; வேறுஒரு குலத்தோன்
தேவியை நயந்து, சிறை வைத்த செயல் நன்றோ?
பாவியர் உறும்பழி இதின்பழியும் உண்டோ?" (6202)

(ஓவியம்-சித்திரம்; உளைதல்-வருந்துதல்; கோ-அரசு; கோஇயல்-அரசியல்; குலம்-நற்குடி; தேவி-மனைவி; நயந்து-விரும்பி/இச்சித்து; உறும்-அடையும்; உண-எரித்திட)

''சித்திரங்களால் அமைக்கப்பட்ட ஓவியமான இலங்கை மாநகரம் தீ உண்டதே என்று மனம்மிக வருந்துகிறாய்; அரசியல் தர்மம் அழிந்து போய்விட்டது என இப்பொழுது வருந்துகிறாய்; நம் அரக்கர் இனமல்லாத மற்றொரு நற்குடியில் பிறந்த சூரிய குலத்தவனான இராமபிரானின் உரிமை மனைவியாகிய சீதாதேவியை விரும்பி, வஞ்சகத்தால் கவர்ந்து வந்து சிறை வைத்திருக்கிறாயே? இந்தச் செயல் நன்மை பயக்கக் கூடியதோ? பாவம் செய்தவர் என்று கூறப்படுபவர் அடைகின்ற பழியைக் காட்டிலும் இது பெரிய பழி அல்லவா? இதனினும் பெரியதவறு வேறு என்ன இருக்கிறது?'' என்று இடித்துரைக்கிறான் கும்பகருணன்.

'ஓவியம் அமைந்த நகர்' என்பது இலங்கை மாநகரம் எவ்வளவு அழகாக நிர்மாணிக்கப்பட்டது என்று அதன் சிறப்பியல்புகளை உள்ளடக்கிய சொற்றொடர் என்க. 'கோஇயல்' என்பது அரசநீதி; இராஜ தருமம். அது அழிந்து போயிற்று என்று அந்நாட்டின் அரசனே வருந்துவது ஒரு பழிமிக்க செயல். அதனைவிடவும் மிகுந்த பழி மிகுந்தது. மாற்றான் மனைவியை விரும்பி அவளை வஞ்சனையால் அபகரித்துக் கொண்டு வந்து நம்நாட்டில் சிறைவைத்திருப்பது, இவ்வளவு பழி மிகுந்த செயலைச் செய்துவிட்டு, பின்னர் நீ வருந்துவது எவ்வாறு பொருந்தும்?'' எனக் கேட்கிறான் கும்பகருணன். நன்றோ, உண்டோ என்ற இரு இடத்தும் ஓகாரம் எதிர்மறைப்பொருளது. நன்றன்று, இல்லை என்ற பொருளைத் தரும்.

மகளிர் கற்பைக்காப்பது அரசன் கடமை. ''மாதவர் நோன்பும், மடவார் கற்பும் காவலன் காவல் இன்றெனின் இன்றாம்'' என்பது மணிமேகலை.

Koviloor Digital Library

'எளிதென இல்லிறப்பான் எய்தும் எஞ்ஞான்றும் விளியாது நிற்கும் பழி' என்பதும் ''பகை, பாவம், அச்சம் பழி என நான்கும் இகவாவாம் இல்லிறப்பான்கண்'' என்பதும் குறள் 145, 146. ''பிறன்தாரம் நச்சுவார்ச் சேரும் பகை, பழி, பாவம்'' என்பது நாலடியார்; ''மற்றவர்கள் மனை வாழும் தாரம் கொண்டார் என்று இவர் தம்மைத் தருமந்தான் ஈரும் கண்டாய்'' என்பது ஆரணிய காண்டம். 'இருந்திறல் அரசர் முறைசெயின் அல்லது பெரும்பெயர்ப் பெண்டிர்க்குக் கற்புச்சிறவாது" என்பது சிலப்பதிகாரம்.

50. "நல்நகர் அழிந்தது' என நாணினை; நயத்தால்
உன்உயிர் எனத்தகைய தேவியர்கள் உன்மேல்
இன்நகை தரத்தர, ஒருத்தன் மனை உற்றாள்,
பொன்அடி தொழத்தொழ மறுத்தல் புகழ்போலாம்?" (6203)

(நல்-அழகிய; நயம்-விருப்பம்)

''அழகிய நமது இலங்கை மாநகரம் அழிந்துவிட்டதே என்று இப்போது வெட்கமடைந்து நிற்கிறாய்; உன்னை உயிர்போல நேசிக்கும் உன்னுடைய மனைவியர்கள், உனக்கு இன்பம்தரும் வண்ணம் புன்னகையை அள்ளிவீசிக் கொண்டிருக்கும்போது, அதை நீ மதிக்காது, மற்றொருவன் இல்லத்தில் வாழும், அவன் மனைவியின் அழகிய பாதங்களில் பலமுறை விழுந்துவிழுந்து வணங்கி எழவும், அவள் அதை மறுத்துப் பழித்துரைக்க வும், அதுதான் உனக்குப் புகழைத்தரும்போலும்'' என்று மேலும் இடித்துரைக்கிறான் கும்பகருணன்.

''மற்றவர் செயலுக்கு வெட்கப்படும் நீ, நீ செய்த உன் செயலுக்கு வெட்கப்படவில்லையே என்று வருந்துகிறான் கும்பகருணன். உன்னு டைய மனைவியர் அனைவரும் உன்மீது உயிரையே வைத்திருக்கிறார்கள், அவர்களைப் புறக்கணித்துவிட்டு நீ மாற்றான் மனைவியை விரும்பி அவள் அடிபணிந்து நின்றாய்; அவள் அதைப் பலமுறை மறுக்கிறாள். இதுதான் உனக்குப் புகழைத்தரும் செயலா?'' என்று கேட்கிறான் கும்பகருணன். தரத்தர, தொழத்தொழ என்ற அடுக்கு இகழ்ச்சிப் பொருளது; பலமுறை என்ற பொருளைத்தரும்.

51. "என்று ஒருவன் இல்உறை தவத்தியை, இரங்காய்,
வன்தொழிலினாய், மறைதுறந்து, சிறைவைத்தாய்,
அன்று ஒழிவதாயின, அரக்கர் புகழ்; ஐயா!
புன்தொழிலினால் இசைபொறுத்தல் புலமைத்தோ?" (6204)

(இல்-இல்லம்/வீடு/மனை; தவத்தி-தவஒழுக்கம் உடையவள்; வன்-கொடிய; தொழில்-செயல்; முறை-மரபு/அரசநீதி; புன்-அற்பமான;

Koviloor Digital Library

புலமை-அறிவுடைமை; இசை-புகழ்; என்று-எப்பொழுது; மறை-வேத நெறி; பொறுத்தல்-தாங்குதல்/சுமத்தல்)

''தலைவனே! என்றைக்கு, இன்னொருவனாகிய, ஒப்பற்ற இராம பிரானின் மனையில் அவனது வாழ்க்கைத் துணையாகத் தங்கி வாழும் தவ ஒழுக்கத்தை மேற்கொண்டிருக்கும் சீதாதேவியை, அவள்பால் சிறிதும் இரக்கம் கொள்ளாமல் நீ அறிந்த வேதநெறிகளையும் அரச நீதியையும் மறந்து விட்டு வஞ்சனையால், கொடிய செயலாகிய அவளை வலிய அபகரித்துக்கொண்டு வந்து இலங்கையில் வைத்தாயோ அன்றைக்கே நீ அரிதின் முயன்று. உன் அரக்கர் குலத்திற்குப் பெற்றுத்தந்த புகழ் எல்லாம் அழிந்து போயின. அற்பமான இகழ்ச்சிக்குரிய செயல்களைச் செய்த பின்னும், புகழைத் தாங்கிக் கொண்டு உயிர்வாழ்தல் அறிவுடைமை யாகுமோ?'' என்று சாடுகிறான் கும்பகருணன்.

'தவத்தி' என்பது அசோகவனத்தில் பெருந்தவம் செய்து கொண் டிருக்கும் சீதாதேவியைக் குறித்தது என்க. 'நற்பெருந்தவத்தளாய நங்கை' என்று அனுமனால் பேசப்பட்டதையும் இங்கு நினைவு கூர்க. இராவணன் செய்த இழி செயல்களைப் பட்டியல் இடுகிறான் கும்பகருணன். ''முதலில் அவள் மற்றொருவன் மனைவி; இரண்டாவது அவள் தவ ஒழுக்கத்தில் இருப்பவள்; மூன்றாவது நீ அவளிடம் சற்றும் கருணைகாட்டவில்லை; நான்காவது அவளை வஞ்சனையால் அபகரித்துக்கொண்டு வந்தாய்; ஐந்தாவது நீ அரசநீதியைத் துறந்தாய்; ஆறாவது நீ கற்றுணர்ந்த வேத நெறிகளையும் கடைப்பிடிக்கவில்லை; ஏழாவது அவளைச் சிறையில் அடைத்து வைத்தாய். இத்தனை இழிதொழில்களையும் செய்துவிட்டு, நீ புகழுடன் உயிர்வாழ்தல் என்பது அறிவுடைமை ஆகாது, பேதைமை'' என்கிறான் கும்பகருணன் என்க. அரக்கர் புகழ் எப்பொழுதோ அழிந்துபோய்விட்டதே, அதைப்பற்றி இப்பொழுது ஆலோசித்து என்ன பயன்? என்பது கருத்து.

மகளிர்கற்பைக் காப்பது அரசனின் கடைமை என்று முன் பாடலில் கண்டோம். அரசநீதியால் சீதாதேவியின் கற்பைக் காப்பாற்றாதது மட்டு மல்ல, அவளையே வஞ்சனையால் அபகரித்துக்கொண்டு வந்து சிறையில் வைத்திருப்பது மாபெரும் குற்றம் என்பது கும்பகருணனின் குற்றச்சாட்டு. 'புன்தொழில்' என்றது பிறன்மனை நயத்தலை என்க. 'புலமைத்தோ' என்பதில் உள்ள ஓகாரம் 'ஆகாது' என்ற எதிர்மறைப் பொருளைத்தரும்.

52. "ஆசுஇல் பரதாரம் அவை அம்சிறை அடைப்பேம்,
மாசுஇல் புகழ் காதல் உறுவேம்; வளமை கூரப்
பேசுவது மானம்; இடை பேணுவது காமம்;
கூசுவது மானுடரை; நன்று, நம கொற்றம்!" (6205)

Koviloor Digital Library

(ஆசுஇல்-குற்றமற்ற; பரதாரம்-பிறன்மனை; அம்-அழகிய; மாசுஇல்-குற்றமற்ற; காதல்-விருப்பம்; வளமை-சிறப்பு; கூர-மிகும்படி/மிகுதியாக; பேணுவது-விரும்புவது; கூசுவது-அஞ்சுவது; கொற்றம்-ஆற்றல்/வீரம்)

''குற்றமற்ற, ஒரு தவறும் செய்யாத அயலான் மனைவியை அழகிய சிறையில் அடைத்து வைப்போம்; ஆனால் குற்றமற்ற பழுதில்லாத புகழ் நம்மை வந்தடைய வேண்டும் என்று ஆசைப்படுவோம்; சிறப்பு மிக நாம் வீரமாகப் பேசுவது மானத்தைப் பற்றித்தான், ஆனால் நாம் இடையில் செய்கின்ற செயல்களெல்லாம் காமம் பற்றியதாகத்தான் இருக்கிறது. நாம் அஞ்சுவது அற்பமான மானிடரைக் கண்டு, நமது வெற்றிச் சிறப்பு மிக நன்றாக இருக்கிறது'' என்று இகழ்கிறான் கும்பகருணன்.

மிக்க புகழ்பெற்ற பாடல் இது. பரதாரம் என்றால் அயலான் மனைவி, சீதாதேவி சரி, 'அவை' என்று பன்மையில் கூறுகிறானே என்றால், அது இராவணனால் திக்கு விஜயத்தின்போது அபகரித்துக்கொண்டு வந்து அவனது அந்தப்புரத்தில் வைக்கப்பட்டிருக்கும், ஏனைய உரிமை மகளிரைக் குறிப்பது எனக் கொள்க. 'அம்சிறை' எனக் கூறியிருக்கிறானே? கொடிய சிறை என்பதை வஞ்சப் புகழ்ச்சியாகக் கூறியிருக்கிறான் எனக் கொள்க. அல்லது அவனுடைய உள்ளமாகிய அழகிய சிறையில் வைத்திருக்கிறான் எனக் கொள்க. 'நன்று' என்பது இகழ்ச்சி குறித்தது. பேசுவது ஒன்று, செய்வது ஒன்று என்பதாலும், அஞ்சத்தகாதவர்களிடம் அச்சம் கொள்வது என்பதாலும், 'நன்று நம கொற்றம்' என்று இகழ்ந்து பேசினான் என்பதாம்.

53. சிட்டர் செயல் செய்திலை, குலச்சிறுமை செய்தாய்;
மட்டு அவிழ் மலர்க் குழலினாளை இனி, மன்னா!
விட்டிடுதுமேல், எளியம் ஆதும்; அவர் வெல்லப்
பட்டிடுதுமேல், அதுவும் நன்று; பழிஅன்றால். (6206)

(சிட்டர்-மேன்மக்கள்/மேலோர்/பெரியோர்; குலம்-குடிப்பிறப்பு; சிறுமை-இழிவு/கேவலம்/இழுக்கு; மட்டு-தேன்; அவிழ்தல்-ஒழுகுதல்; குழல்-கூந்தல்; எளியம்-கேவலம்/எளியவர்/வலிமையற்றவர்கள்; பட்டிடுதல்-இறந்துபடுதல்)

''மன்னவனே! நீ மேன் மக்கள் செய்யும் நற்காரியத்தைச் செய்யவில்லை, நம் புலத்தியர் குலத்திற்கே இழுக்குத்தரும் செயலாகிய பிறன் மனை விழைதலைச் செய்திருக்கிறாய், தேன்சிந்துகின்ற மலர்களாலாகிய கூந்தலையுடைய சீதாதேவியை இவ்வளவு நிகழ்ந்ததற்குப் பின்னும், இராம இலக்குவர்பால் கொண்டுபோய் விட்டு விடுவோம்- என்றால் அது நமக்குக் கேவலம் ஆகும். நம்மை மிக அலட்சியமாகக் கருதிவிடுவார்கள், எனவே அவர்கள் நம்மீது படையெடுத்து வந்து போர்செய்து அதில்

Koviloor Digital Library

அவர்கள் வெல்ல, நாம் இறந்துபட்டாலும் அதுவும் நல்லதே! ஏனெனில் அதுவீரமரணம் ஆகும். நம்மேல் பழிவராது'' என்கிறான் கும்பகருணன்.

முதலில் அவன் பேசியதற்கும் இறுதியில் அவன் பேசுவதற்கும் உள்ள வேற்றுமை உணர்க. ''சிட்டர் செயல் செய்திலை, குலச்சிறுமை செய்தாய்; மட்டவிழ் மலர்க் குழலினாளை விட்டிடு'' என்று தான் கூறவிழைந் திருக்கிறான் கும்பகருணன். சீதையை விட்டுவிடு என்று இவன் சொல்லும் போது, இராவணனுடைய முகமாற்றத்தைக் கண்டு, தானும் சொல் மாற்றம் கொண்டு தடுமாற்றம் கொண்டிருக்கிறான் என்பது தெரிகிறது பாருங்கள். ''விட்டுவிடு, இனி விட்டிடுதியேல்'' என்று கூறுவதை நோக்குக. அதற்கு ஒரு உடன்பாட்டுப் பொருளைப்போல, அவ்வாறு நாம் இறந்துபட்டால், அதை வீரமரணம் என்று சொல்லிக்கொள்வோம் என்று சமாளிப்பதையும் நம்மாலேயே உணரமுடிகிறது என்றால், இதற்கு இவ்வளவு விளக்கம் கூறிய மயிலம் பேராசிரியர் மகாவித்துவான் வே.சிவசுப்பிரமணியன் அவர்களின் ஆழ்ந்த புலமையை என்னவென்று கூறுவது? கம்பனின் கவித்துவத்தைக் காட்டும் ஒரு அருமையான பாடல் இது.

54. "மரன் படர் வனத்து ஒருவனே சிலை வலத்தால்,
கரன்படை படுத்து, அவனை வென்று களை கட்டான்;
நிரம்பிடுவது அன்று, அதுவும்; நின்றது, இனி நம்பால்
உரம் படுவதே; இதனின் மேல் உறுதி உண்டோ?" (6207)

(மரன்-மரம்; படர்-மிகுந்துள்ள/அடர்ந்த; வனம்-காடு; சிலை-வில்; படுத்து-கொன்று; கட்டுதல்-களைதல்/அழித்தல்; நிரம்புதல்-முடிவடைதல்; நின்றது-எஞ்சியிருப்பது; உரம்-வலிமை; படுதல்-அழிதல்; உறுதி-நன்மை; களை-பகை)

''மரங்கள் அடர்ந்துள்ள ஜனஸ்தானக் காட்டில், இராமன் தனி ஒருவனாகவே, தன் கோதண்டம் என்னும் வில்லின் வலிமையினால் அங்கிருந்த நமது தலைவன் கரனின் சேனை முழுவதையும், பதினாலாயிரம் படைவீரர்களையும் கொனறு, கரனையும் வென்று பகையை அழித்தான், அத்தோடு அவன் செயல் நின்று விடப்போவதில்லை, இன்னும் எஞ்சியிருப்பது, இங்குள்ள நம்மிடம் உள்ள வலிமையும் அழிந்து போவதேயாகும். இதனைவிட நமக்கு நன்மை பயப்பது வேறு ஏதேனும் உண்டோ?'' என்று இகழ்கிறான் கும்பகருணன்.

'களைகட்டுதல்' என்பது ஒரு அரிய உவமை. களை என்பது பொதுவாக நெற்பயிருக்கு இடையே முளைக்கும் புல்லினைக் குறிக்கும். எந்த ஒரு காரியத்திற்கும் இடையூறாய் இருப்பதைக் களை எனக் கூறுவது கவிமரபு. நெற்பயிருக்கு எப்படிப் புல் களை போன்று தொல்லை தருகிறதோ, அதுபோலத் தவமியற்றும் முனிவர்களுக்கு அரக்கர்கள் தொல்லை

Koviloor Digital Library

கொடுத்து வந்தனர், அவர்களை இராமபிரான் ஒரே வில்லில் கடிகை மூன்றில் அழித்து ஒழித்தான் என்று முன்பு கண்டதை இங்கு நினைவு கூர்க. இங்கே நெல் - முனிவர்கள், புல் - அரக்கர்கள், 'கொலையிற் கொடியாரை வேந்து ஒறுத்தல் பைங்கூழ் களைகட்டதனோடு நேர்' என்பது குறள் 550.

55. "வென்றிடுவர், மானுடவரேனும், அவர் தம்மேல்
நின்று, இடைவிடாது நெறிசென்று, உறநெருக்கித்
தின்றிடுதல் செய்கிலம் எனின், செறுநரோடும்
ஒன்றிடுவர் தேவர்; உலகு ஏழும் உடன் ஒன்று ஆம்" (6208)

(மானுடவர்-மானிடர்/மனிதர்; உற-மிகவும்; நெருக்கி-துன்புறுத்தி/ வருத்தி; தின்றிடுதல்-வலியழித்தல்; செறுநர்-பகைவர்; ஒன்றுதல்-சேர்ந்து கொள்ளுதல்; ஒன்றாம்-ஒன்றாகும்/இணையும்; நின்று-நிலைத்து)

''இறுதியில் மனிதர்கள்தான் நம்மை வெற்றிகொள்வார்கள்; என்றாலும், நாம் அவர்கள்மீது படையெடுத்து, அவர்கள் இருக்குமிடத் திற்கோ, அல்லது அவர்கள் வரும் வழியிற் சென்று, நிலையாக நின்று, தொடர்பற்றுப் போகாமல் தொடர்ந்து அவர்களுக்கு மிக்க துன்பத்தைக் கொடுத்து, அவர்களை வென்று அழிக்கும் முயற்சியில் ஈடுபடாவிட்டால், நமது பகைவர்களான மானிடர்களோடு, நமக்கு முன்பே பகைவர்களான தேவர்களும் சேர்ந்து கொண்டுவிடுவர், அதுமட்டுமல்ல இந்த ஏழு உலகங்களில் உள்ளவர்கள் அனைவரும் ஒன்றாக இணைந்துகொண்டு விடுவர். எனவே அதற்கு இடம் கொடுக்காமல் இப்போதே அவர்கள்மீது படையெடுத்துச் செல்வது சாலச்சிறந்தது'' என்கிறான் கும்பகருணன்.

இறுதியில் வெல்லப்போவது இராமஇலக்குவர் என்ற மானிடர்கள் தான் என்ற தீர்க்கமான முடிவுக்குக் கும்பகருணன் வந்துவிடுவதை நோக்குக. என்றாலும் நாம் நம் முயற்சியைக் கைவிடுதல் கூடாது என்றுதான் இராவணனை எச்சரிக்கிறான், 'தின்றிடுதல்' என்பது வலியழித்தல் என்ற பொருளையே தரும். இவ்வாறு செய்யாவிட்டால் மேலும் பல துன்பங்கள் வந்து சேரும் என்பது குறிப்பெச்சம். நின்று, இடைவிடாத, நெறி சென்று, உற, நெருக்கி, தின்றிடுதல் என்ற சொற்களில் எல்லாம் அவனது விரைவும், ஆவேசமும் பொருந்தி யிருப்பதை உணர்க.

56. "ஊறுபடை ஊறுவதன் முன்னம், ஒரு நாளே,
ஏறுகடல் ஏறி, நரர், வானரரை எல்லாம்,
வேறு பெயராதவகை, வேரோடும் அடங்க
நூறுவதுவே கருமம்" என்பது நுவன்றான். (6209)

Koviloor Digital Library

(ஊறுதல்-பெருகுதல்; ஏறு-பெரிய; ஏறுதல்-கடத்தல்; நரர்-மனிதர்; பெயர்தல்-செல்லுதல்; வேர்-அடி; நூறுவது-அழிப்பது; கருமம்-செயல்; நுவலுதல்-கூறுதல்; அடங்க-முழுவதும்)

''மேன்மேலும் பெருகிவருகின்ற பகைவர்களது படை நம்மை நோக்கி வருவதற்குமுன்பே, நாமே ஒரேநாளில் அலைகள் மேன்மேல் எழுகின்ற பெரிய கடலைக் கடந்து சென்று மனிதர்கள், குரங்குப் படையினர் எல்லோரையும், அவர்கள் வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்து தப்பித்துச் சென்றுவிடாதபடி மடக்கி, அடிவேரோடும் அவர்கள் குலம் முழுவதையும் ஒருசேரக் கொன்று அழிப்பதுதான் நாம் இப்போது செய்யத்தக்க செயல்'' என்று கும்பகருணன் தன் கருத்தைக் கூறி முடித்தான்.

சந்தம் நிறைந்த ஒருபாடல் இது. படைசெல்லுவது போலவே சொற்கள் அமைவதைக் காண்க. ''கூர் முள்வேலை, முளையிலே களையின் அல்லால், நனிவர அயிர்த்தபோது, நவியமும் முடியும் அன்றே'' என்பது வில்லிபாரதம். பகையை முளையிலேயே கிள்ளி விடவேண்டும் என்பது கருத்து.

57. இராவணன் ''படையெழுக'' எனல்

''நன்று உரை செய்தாய்! குமர! நான் அது நினைந்தேன்,
ஒன்றும் இனி ஆய்தல் பழுது; ஒன்னலரை எல்லாம்
கொன்று பெயர்வோம்; நமர்கொடிப் படையை எல்லாம்,
'இன்று எழுக'' என்க' என, இராவணன் இசைத்தான். (6210)

(ஒன்றும்-சிறிதும்; பழுது-குற்றம்; ஒன்னலர்-பகைவர்; பெயர்தல்-மீண்டு வருதல்; நமர்-நம்முடைய/நம்மவர்; இசைத்தல்- கூறுதல்; குமர-தம்பி)

இராவணன் கும்பகருணனை நோக்கி, ''தம்பி! நல்லனவற்றையே கூறினாய்; நானும் இவ்வாறுதான் கருதியிருக்கிறேன். இனிமேல் இதை ஆராய்ந்து கொண்டிருப்பது சிறுதும் பயனற்றதாகும். குற்றமாகும், பகைவர்களை எல்லாம் முற்றமுழுக்கக் கொன்று திரும்பி வருவோம். நமது வீணைக்கொடி ஏந்திய படைகளையெல்லாம் போருக்கு இப்பொழுதே எழுக என்று கட்டளை இடுவாயாக!'' என்று இராவணன் கூறினான்.

இங்கே 'குமர' என்ற சொல்லாட்சியை நோக்குக. முந்தைய 10 பாடல்களிலும் கும்பகருணன் இராவணனை எள்ளியும், இகழ்ந்தும், பரிகாசமாகவும் பேசியிருக்கிறான். அவ்வாறு இருந்தும் இராவணன் கும்பகருணனை இப்போது அன்புடன் 'குமர' என்று அழைப்பதை நோக்குக. இராவணன் அரக்கன் என்றாலும் இரக்கம் என்றஒரு பொருள் இல்லாதவனாயிருந்தாலும், தன் தம்பி என்று வருகிறபொழுது, அந்தப்

Koviloor Digital Library

பாசத்தையும், பரிவையும் காட்டத் தவறவில்லை என்பதை உணர வேண்டும். 'பழுது பயமின்றே' என்பது தொல்காப்பியம் பயம்-பயன்.

58. இந்திரசித்து பேசுதல். [6 பாடல்கள்]

என்று அவன் இயம்பியிடும் எல்லையினில், 'வல்லே
சென்று படையோடு, சிறுமானுடர் சினப்போர்
வென்று பெயர்வாய், அரச! நீ கொல்?' எனவீரம்
நன்று பெரிது!' என்று மகன் நக்கு, இவை நவின்றான். (6211)

(எல்லை-அளவு; வல்லே-விரைந்து; சிறு-அற்ப; பெயர்தல்-மீளுதல்; பெரிது-சிறப்புடையது; நக்கு-சிரித்து; நவிலுதல்-கூறுதல்)

என்று இராவணன் கூறிக்கொண்டு இருக்கும் சமயம், அவனுடைய மகன் இந்திரசித்து எழுந்து, இராவணனை நோக்கி, ''அரசே! நாங்கள் எல்லாம் போருக்குச் செல்லத்தயாராய் இருக்கும்போது, நீயே விரைந்து படையுடன் சென்று, அந்தச் சிறிய அற்பமான மனிதர்களுடன் சினந்து போர் செய்து, வெற்றியுடன் திரும்பிவர வேண்டுமோ? அவ்வாறானால் எங்கள் வீரமும், போர்த்திறமும், ஆண்மையும் மிக நன்றாக இருக்கிறது'' என்று கோபத்துடன் சிரித்து, கீழ்க்கண்டவற்றைக் கூறத் தொடங்கினான்.

'சிறுமானுடர்' என்பது இகழ்ச்சிக்குறிப்பு. அவன் நகுதல் சினக்குறிப்பு. 'நன்று பெரிது ஆம்' என்பது தொல்காப்பியம். 'நன்று பெரிதாலம்ம' என்பது குறுந்தொகை - இங்கே வான்மீகம் வேறுபடுகிறது. கும்பகருணன் பேசி முடித்த பிறகு வீடணன் பேசுகிறான். அதன் பிறகே இந்திரசித்து பேசுவதாக வான்மீகம் கூறும், எனினும் கம்பன் முதலில் இந்திரசித்தைப் பேசவைக்கிறான். ஏன் இந்த மாற்றம் செய்கிறான் என்பதையும் அவனே கூறிவிடுகிறான். அது வீடணன் பேசும்போது கூறப்படுகிறது.

59. "ஈசன் அருள் செய்தனவும், ஏடு அவிழ் மலர்ப்பேர்
ஆசனம் உவந்தவன் அளித்தனவும், ஆய
பாசம் முதல் வெம்படை சுமந்து, பலர் நின்றார்;
ஏச உழல்வேன் ஒருவன் யானும் உளென் அன்றோ?" (6212)

(ஈசன்-சிவபெருமான்; ஏடு-இதழ்; அவிழ்-விரிந்த/மலர்ந்த; பேர்-சிறந்த; படை-படைக்கலன்கள்; ஏசுதல்-தூற்றுதல்/பழித்தல்)

''சிவபெருமான் அருள்கூர்ந்து அளித்தனவும், இதழ்கள் விரியப்பெற்ற தாமரைமலரைச் சிறந்த ஆசனமாக விரும்பி வீற்றிருப்பவனாகிய பிரமன் தந்தனவும் ஆகிய பாசம் முதலான கொடிய படைக்கலன்களை ஏந்திக் கொண்டு பல வீரர்கள் போர் செய்வதற்குத் தயார்நிலையில் நிற்கின்றனர். பிறர் பழி தூற்றும்படி உழன்று கொண்டு திரியும் நானும் ஒருவன்

Koviloor Digital Library

உயிருடன் இருக்கிறேன் அல்லவா! எங்களையெல்லாம் அனுப்பாது நீயே போருக்குச் செல்லுதல் தகாது'' என்கிறான் இந்திரசித்து.

சகல ஐஸ்வர்யங்களையும் உடையவன் என்பதால், சிவபெருமானுக்கு 'ஈசன்' என்பது காரணப்பெயர். 'மலர்' என்பது தாமரை மலரையே குறிக்கும். 'மலர் எனப்படுவது பொறிவாழ் பூவே'' என்பது தொல் காப்பியம். பொறி-இலக்குமி; 'பாசம்' என்பது கயிறு போன்ற ஒருவகைப் படைக்கலன், 'சுமந்து' என்பது இதுவரை பயன்படுத்தப் படாமல் வெறுமனே தாங்கிக்கொண்டு இருந்த என்ற பொருள் தரும். 'ஏச உழல்வேன்' என்பது, இலங்கைக்கு எரியூட்டிச் சென்ற அனுமனைத் தப்பவிட்டதால் ஏற்பட்ட பழியினால், தன்னை உலகத்தார் தூற்றுதல் என்ற விரிந்த பொருளைத்தரும்.

60. "முற்றும் முதலாய் உலகம் மூன்றும், எதிர்தோன்றிச்
செற்ற முதலோரோடு செறுத்தது ஓர்திறத்தும்
வெற்றி உனதாக விளையாது ஒழியின், என்னைப்
பெற்றும் இலை; யான் நெறி பிறந்தும் இலென்" என்றான். (6213)

(முற்றும்-நிரம்பிய; செற்ற-பகைகொண்ட; முதலோர்-தலைவர்; செறுத்தல்-தடுத்தல்; நெறி-முறை)

''மேல், நடு, கீழ் என்று கூறப்படும் இந்த மூவுலகங்கள் எல்லாமும், பகைவரான முதற் கடவுளான தேவர்களோடும், சிவபெருமானோடும், மற்ற வீரர்களுடன் நம்மை எதிர்த்துப் போரிடவந்த நிலையினும், வெற்றியை உன் பக்கத்துத் தாராது ஒழிவேனாயின், நீ என்னைப் பெற்ற தந்தையும் இல்லை, நான் உனக்கு முறையாகப் பிறந்த மகனும் இல்லை'' என்று சூளுரைக்கிறான் இந்திரசித்து.

இப்பொழுது போருக்குத்தன்னையே அனுப்பவேண்டும். இராவணன் நேரே செல்லக்கூடாது என்றும், இந்தப்போரில் தான் வெற்றிக் கனியைக் கொண்டுவராவிட்டால் இராவணன் தன் தந்தை இல்லையென்றும், தான் அவனுக்கு முறையாகப் பிறந்தவன் அல்லன் என்றும் சற்றுக் கடுமை யாகவே வஞ்சினம் கூறுகிறான் இந்திரசித்து. அவன் தன் போராற்றலின் மீது கொண்ட தன்னம்பிக்கையைப் புலப்படுத்துவது காண்க.

61. "குரங்குபட, மேதினி குறைத்தலை நடப் போர்
அரங்குபட, மானுடர் அலந்தலைபட, பேர்
இரங்கு படர் சீதைபட, இன்று இருவர் நின்றார்
சிரம் குவடுஎனக் கொணர்தல் காணுதி, சினத்தோய்!" (6214)

(பட-இறக்க/சாக; மேதினி-பூமி; போர்அரங்கு-போர்க்களம் பட-தோன்ற; அலந்தலை-கலக்கம்/மயக்கம்; பேர்-பெரிய; படர்-துன்பம்;

Koviloor Digital Library

பட-அடைய; குவடு-மலைச்சிகரம்; காணுதி-காண்பாயாக; குறைத்தலை -தலையற்ற உடல்/முண்டம்/கவந்தம்; சிரம்-தலை)

''பகைவர்பால் சினம் மிக்கவனே! நான் சென்று, அந்தக் குரக்கினம் முழுவதும் அழிந்துபடுமாறும், இந்தப்பூமியெங்கும் அவைகளின் தலையற்ற உடல்களெல்லாம் நிறைந்துகிடக்கும் போர்க்களமாகவும், ஆக்கிக்காட்டுகிறேன். அதனைக்கண்டு அந்த மானிடர்கள் எல்லோரும் கலக்கமுற்று மயங்கிடவும், சீதை மிகப்பெரிய துன்பம் அடையவும், அவளைக் காண்பவர் எல்லோரும் அவளிடம் மிகுந்த இரக்கம் கொள்ளும்படியும் செய்து காட்டுகிறேன். இன்னும் நம் எதிரில் நிற்கின்ற மனிதர்களாகிய இராம இலக்குவர் என்ற இருவர்களின் தலையினை மலைச்சிகரம் போலத்தங்களிடம் கொண்டு வந்து சேர்க்கின்றேன், அதனை நீ காண்பாயாக!'' என்று சூளுரைக்கிறான் இந்திரசித்து.

''குரங்குப்படையை இனத்தோடு அழிப்பேன்; மனிதர்களைக் கலக்கமுறச்செய்வேன்; சீதை மிக்க துயருமாறு செய்வேன்; இராம இலக்குவரின் தலைகளைக் கொய்து கொணர்வேன்; மொத்தத்தில் இந்தப் பூமியை தலையற்ற முண்டங்களாகவே கிடக்கும் ஒரு போர்க்களமாக்கி வருவேன்'' என்கிறான் இந்திரசித்து. 'பட' என்ற சொல் சாதல், பொருந்து தல், ஒத்தல், அடைதல் என்ற பல பொருள்களில் பயின்று வந்துள்ளமை காண்க. 'குறைத்தலை' என்பது தலையற்ற உடலைக் குறிக்கும். இதனை முண்டம் என்றும், கவந்தம் என்றும் யூபம் என்றும் கூறுவதுண்டு.

62. "சொல்லிடை கழிக்கிலை, சுருங்கிய குரங்கு என்
கல்லிடை கிழிக்கும் உருமின் கடுமை காணும்
வில்லிடை கிழித்த மிடல்வாளி வெருவி, தம்
பல்லிடை, கிழித்து இரிவகண்டு, பயன் உய்ப்பாய்." (6215)

(கல்-மலை; கிழித்தல்-பிளத்தல்; உருமு-இடி; இழித்த-பெயர்ந்த/ வெளிப்பட்ட/கிளம்பிச்சென்ற; மிடல்-வலிய; வாளி-அம்பு; வெருவி- அஞ்சி; கழித்தல்-தாழ்த்துதல்; இரிதல்-ஓடுதல்; உய்த்தல்-நுகர்தல்; இடை-காலம்)

''கண்கள் உட்சென்று, முகமும் உடலும் வற்றிச் சுருங்கிய குரங்குகள், மலையையும் பிளக்கும்படியான இடிபோன்ற கொடுமையுடையதான என்னுடைய வில்லினின்றும் வெளிப்பட்டுக் கிளம்பிச் செல்லும் வலிய அம்புகளுக்கு அஞ்சி, தங்களது பல்லை இளித்துக்கொண்டு, வாய் உதடுகளைக் கிழித்துக் கொண்டு விரைவாக நிலைகெட்டு மூலைக்கு ஒன்றாய் ஓடிப்போவதைக் கண்டு, போரின் வெற்றிகண்டு அதன் பயனை அனுபவிப்பாயாக! இப்போது அதிகமாக வீணே பேசிக்கொண்டு நேரத்தைப் போக்குவதில் பயன் இல்லை'' என்கிறான் இந்திரசித்து.

Koviloor Digital Library

கிழித்தல் என்ற சொல் பிளத்தல், பெயர்தல், இளித்தல் என்னும் பொருள்களில் பயின்று வந்துள்ளமை காண்க. 'உய்த்தல்' என்ற சொல் நுகர்தல் என்ற பொருளில் கையாளப்பட்டிருக்கிறது. முகம் சுருங்கிய குரங்குகளை 'வலீமுகம்' என்கிறது வான்மீகம். குரங்குகளுக்குக் கண்களும், முகமும் சுருங்கியிருப்பதை, 'முன்னிரண்டு காலெங்கே? உட்குழிந்த கண்ணெங்கே?' என்று கேட்கிறது ஒரு தனிப்பாடல்.

63. "யானை இலர்; தேர், புரவி யாதும் இலர்; ஏவும்
தானை இலர்; நின்ற தவம் ஒன்றும் இலர்; தாமோ,
கூனல் முதுகின் சிறு குரங்குகொடு வெல்வார்?
ஆனவரும் மானுடர்; நம் ஆண்மை இனிதன்றோ?" (6216)

(புரவி-குதிரை; யாதும்-ஒன்றும்/சிறிதும்; ஏவும்-செலுத்தும்; தானை-படைக்கலம்; கூனல்-வளைந்த; ஆண்மை-வீரம்; தானை-சேனை/காலாட்படை; நின்ற-நிறைந்த)

''நம்முடைய பகைவர்களிடம் யானைப்படை இல்லை, தேர்ப்படை, குதிரைப்படை, காலாட்படை என்ற எந்த ஒருபடையும் இல்லை. செலுத்துகின்ற படைக்கலன்களும் இல்லை; அவர்கள் நம்மைப்போல் நிலைத்து நிற்கின்ற தவம் செய்தவர்களும் இல்லை; தவப்பயனோ, வரபலமோ பெற்றவர்களும் இல்லை, வெறும் மனிதர்கள், அவர்களா இந்த வளைந்த முதுகை உடைய அற்பக் குரங்குகளின் துணைகொண்டு நம்மை வென்றுவிடுவார்கள்? அவர்களுக்கு அஞ்சி இருக்கின்ற அரக்கர் களாகிய நம்வீரம் மிக அழகாக இருக்கிறது!'' என்று எள்ளி நகை யாடுகிறான் இந்திரசித்து.

நால்வகைப் படையில் ஏதும் இல்லாதவர், படைக்கலன்கள், வரபலம் என்ற ஏதும் இல்லாதவர்கள், மானிடர்கள், அவர்கள் துணைக்கொண் டிருப்பதோ வளைந்த முதுகை உடைய அற்பக்குரங்குகள், இவர்களா நம்மை வென்றுவிடுவார்கள்? என்று வெகு அலட்சியமாகக் கேட்கிறான் இந்திரசித்து என்பதாம். 'இனிது அன்றோ' என்பது இகழ்ச்சிக் குறிப்பு. இகழத்தக்கது என்று பொருள் தரும். ஓகாரம் உடன்பாட்டுப் பொருளது.

64. "நீரும், நிலனும், நெடிய காலும், நிமிர் வானும்
பேர் உலகு யாவும், ஒருநாள் புடைபெயர்த்தே,
யாரும் ஒழியாமை, நரர், வானரரை எல்லாம்
வேரும் ஒழியாத வகை வென்று அலது, மீளேன்" (6217)

(நெடிய-பெரிய/நீண்ட; நிமிர்-பரவிய; புடைபெயர்த்தல்-நிலை மாறச்செய்தல்; ஒழியாமை-தப்பிப்போகாமை; ஒழியாத-மிஞ்சாதபடி; மீள்தல்-திரும்புதல்; வேர்-கரு; நரர்-மனிதர்கள்)

Koviloor Digital Library

''நீர், நிலம், நீண்ட காற்று, உயர்ந்து பரந்த வானம், ஆகிய இந்த பெரிய உலகில் உள்ள எல்லாவற்றையும் ஒரே நாளில் தலைகீழாக நிலைமாறச் செய்து, ஒருவரும் உயிர்பிழைத்துத் தப்பிப் போகாதவாறு, மனிதர்கள், குரங்குகள் இவ்வ எல்லாவற்றையும், கருவோடு அழித்து, எதுவும் மிஞ்சாதபடி செய்து, வெற்றிகொள்ளாமல் இங்கு திரும்பி வரமாட்டேன்'' என்று சூளுரைக்கிறான் இந்திரசித்து.

நீர், நிலம், கால், வான் முதலிய நான்கையும் கூறியதனால் நெருப்பையும் உபலட்சணத்தால் கொள்க. ஒரு சொல் தன் இனத்தையும் தழுவிக்கொள்ளும் தகுதி பெற்றது. உபலட்சணம் எனப்படும் ஒன்றைச் சொன்னால் அதனோடு தொடர்புடைய மற்றவற்றையும் இனத்தாற் கொள்ளவேண்டும். வெற்றிலை போட்டான் என்றால் வெற்றிலையுடன் கூடிய பாக்கு, சுண்ணாம்பு முதலியவற்றையும் சேர்த்துக்கொள்வது போல என்க.

65. என்று, அடி இறைஞ்சினன், எழுந்து ''விடை ஈமோ,
வன்திறலினாய்!'' எனலும், வாள் எயிறு வாயில்
தின்றனன் முனிந்து, நனி தீவினையை எல்லாம்,
வென்றவரின் நன்று உணரும் வீடணன் விளம்பும். (6218)

(ஈமோ-தருக; வாள்-ஒளிபொருந்திய/கூரிய; எயிறு-பற்கள்; தின்று-மென்று; விளம்புதல்-கூறுதல்; நனி-மிகவும்)

என்று கூறிய இந்திரசித்து, தன் தந்தை இராவணனின் பாதங்களில் பணிந்து எழுந்து, அவனை நோக்கி, ''வலிமை மிக்க ஆற்றலுடையவனே! எனக்கு விடைதருவாயாக!'' என்று கூறியதும், மிக்க தீவினைகளை யெல்லாம் தன் தவபலத்தால் வென்று நன்மைகளையே எப்போதும் சிந்திக்கும் இயல்புடைய ஞானியர்களினும் மேலானவனான மெய்யுணர் வுடையவனான வீடணன் என்னும் இராவணனுடைய மற்றொரு தம்பி, தன் ஒளிமிக்க, வெண்மையான கூரிய பற்களைக் கடித்து, கோபம் மேற்கொண்டு கீழ்வருமாறு பேசலானான்.

'வாள் எயிறு வாயில் தின்றல்' என்பது வெகுளியின் மெய்ப்பாடு. 'நனி தீவினையை எல்லாம் வென்றவரின் நன்று உணரும்'. என்று கவிஞன் வீடணனைச் சிறப்பித்துக் கூறுகிறான்.

66. வீடணன் இந்திரசித்தைக் கண்டித்துப் பேசுதல்.

''நூலினால் நுணங்கிய அறிவு நோக்கினை
போலுமால்! உறுபொருள் புகலும் பூட்சியோய்!
காலம் மேல் விளை பொருள், உணரும் கற்பு இலாப்
பால! நீ இனையன பகரற்பாலையோ?'' (6219)

Koviloor Digital Library

(கற்பு-கல்வி; பாலன்-இளையோன்/சிறுவன்; இனையன-இத் தன்மையனவான; நூல்-நூலறிவு; நுணங்கிய அறிவு-நுட்பமாக/ ஆராய்ந்து அறியும் அறிவு; நோக்குதல்-ஆராய்தல்; பூட்சி-உறுதி/ கொள்கை; உறுபொருள்-ஏற்ற கருத்துக்கள்)

வீடணன் இந்திரசித்தை நோக்கி, ''நூல்களாலும், நுட்பமாக ஆராய்ந்த அறிவும் கொண்டு, இப்போதைக்கு ஏற்ற கருத்துக்களைக் கூறும் கோட்பாடு உடையவனே! எதற்கும், அது நிகழ்கின்ற காலம், அதனால் ஏற்படப்போகும் பின்விளைவுகள் முதலியவற்றைச் சற்றும் உணராத தெளிந்த கல்வியறிவில்லாத சிறுவன் நீ. நீ இத்தகைய சொற்களைப் பேசுதல் பிழையாகும்'' என்கிறான்.

நூலறிவு, நுணுகி ஆராயும் அறிவு, கேள்வியறிவு, அனுபவ அறிவு இவற்றை வெவ்வேறாகப் பிரித்துக் காட்டும் திறன் நோக்குக. 'கற்பு' என்ற சொல் கல்வி என்ற பொருளில் சங்க இலக்கியங்களில் வெகுவாகக் கையாளப் பட்டிருக்கிறது. 'உலகம் தாங்கிய மேம்படு கற்பின்' என்பது பதிற்றுப்பத்து, 'எழுதாக் கற்பின்' என்பது குறுந்தொகை.

67. "கருத்து இலான், கண் இலான், ஒருத்தன் கைக்கொடு,
திருத்து வான், சித்திரம் அனைய செப்புவாய்;
விருத்த மேதகையவர், வினைஞர், மந்திரத்து
இருத்தியோ? இளமையால் முறைமை எண்ணலாய்!" (6220)

(முறைமை-அரசநீதி; கருத்து-விவேகம்; விருத்தம்-முதிர்ந்த வயது/ முதுமை; மேதகை-மேம்பாடு; வினையம்-தொழில்; மந்திரம்-ஆராயும் இடம்)

வீடணன் இந்திரசித்தை நோக்கி, ''இளமைப் பருவத்தில் இருப்ப வனான நீ, அரசநீதி பற்றி அறியாமல் இவ்வாறு பேசுகிறாய்; ஓவியத்தைப் பற்றியே ஒன்றும் தெரியாதவனும், விவேகம் இல்லாதவனும், கண்ணும் இல்லாத ஒருவன், ஒரு ஓவியத்தைக் கையில் எடுத்துக்கொண்டு, இதை நான் திருத்திச் செப்பனிட்டுத் தருகிறேன் என்பதைப் போலப் பேசுகிறாய். கல்வி, கேள்வி, ஒழுக்கம், வயது, அனுபவம், ஞானம் முதலியவற்றில் முதிர்ந்தவர்களும், மேம்பட்ட அனுபவம் பெற்ற தகுதியுடைவர்களும், செயல்திறன் வாய்ந்தவர்களும் இருந்து ஆலோசனை செய்யவேண்டிய இந்தச் சபையில் நீயும் இருப்பது தகுதியுடையதாகுமோ?'' என்று கேட்கிறான்.

சுவர் இருந்தால்தான் சித்திரம் எழுதமுடியும் என்பது ஒரு வழக்கு மொழி. இங்கே சுவர் என்பது கண்களைக் குறிக்கும். கண்ணைக் காட்டி லும், என்ன சித்திரம் எழுதப் போகிறோம் என்ற கருத்து இருக்க வேண்டும். எனவே கருத்தை முதலில் கூறிப் பின்னர் கண்ணைக் கூறினார் என்க. இவை இரண்டும் இல்லாதவன் தான் ஒரு சித்திரம் வரையப்போகிறேன்

Koviloor Digital Library

என்றாலோ, திருத்தப் போகிறேன் என்று சொன்னாலோ எப்படி இருக்குமோ அப்படி இருக்கிறது இளைஞனான இந்திரசித்தின் பேச்சு என்கிறான் வீடணன். மந்திராலோசனை சபையில் யார் யார் இருக்க வேண்டும்? பெருங்கதையும், வில்லிபாரதமும் மிக அழகாகக் கூறுகின்றன. இங்கே இந்திரசித்தன் மந்திராலோசனை சபையில் இருக்கத் தகுதியற்றவன் - பாலன் - என்கிறான் வீடணன் என்பதாம்.

68. "தூயவர் முறைமையே தொடங்கும் தொன்மையோர்,
ஆயவர் நிற்க; மற்று அவுணர் ஆதியாம்
தீயவர், அறத்தினால் தேவர் ஆயது
மாயமோ? வஞ்சமோ? வன்மையே கொலோ?" (6221)

(முறைமை-நற்செயல்; தொன்மையோர்-முன்னோர்; அவுணர்-அசுரர்; ஆதியாம்-முதலிய; மாயம்-பொய்; வன்மை-ஆற்றல்; தொடங்குதல்-செய்தல்)

"மனம், மொழி, மெய் ஆகியவற்றால் தூய்மையானவரும், நற்செயல் களையே செய்யும் முன்னோர்களாகிய பெரியோர்கள் எல்லாம் தேவர்கள் ஆனார்கள் என்பது ஒரு புறம் இருக்கட்டும். அதற்கு மாறான இயல்புடைய அசுரர்கள் முதலான தீயவர்கள்கூடத் தாம் செய்த அறத்தின் பயனால் தேவர்கள் ஆனார்களே? அது எதனால்? மாயமான பொய்த்திறத்தாலா? வஞ்சனையினாலா? அல்லது ஆற்றலினாலா? கூறுவாயாக!" என்று வீடணன் இந்திரசித்தனை நோக்கிக் கேட்கிறான்.

தூயவர் தேவராவது முறைமை; தீயவரும் தேவரானாரே அது அறத்தினாலன்றி வேறு எதனால்? என்கிறான் வீடணன். உள்ளம், உரை, செயல் முதலியவற்றால் தூயவர் என்க. எனவே எல்லோராலும் அறமே மேற்கொள்ளத்தக்கது என்கிறான் என்பதாம்.

69. அறம் துறந்து, அமரரை வென்ற ஆண்தொழில்,
திறம் தெரிந்திடின், அது தானும் செய்தவம்
நிறம் திறம்பாவகை இயற்றும் நீதியால்,
மறம் துறந்து, அவர்தரும் வரத்தின் வன்மையால். (6222)

(திறம்-தன்மை; நிறம்-பெருமை/இயல்பு/தன்மை; திறம்புதல்-கெடுதல்; மறம்-வன்கண்மை/கொடியசெயல்; வன்மை-வலிமை; ஆண் தொழில்-வீரச்செயல்; தெரிந்திடின்-ஆராய்ந்து பார்த்தால்; நீதி-தன்மை)

"நீ தருமத்தின் தன்மையை அறவே அழித்துவிட்டு, தேவர்களை வென்றுவிட்டதாகக் கூறிக்கொள்ளும் உன்னுடைய வீரதீரச்செயலின் தன்மையை ஆராய்ந்து பார்த்தால், அதுவும் நீ செய்த சிறந்த தவத்தின் தன்மைகெடாதவாறு செய்து முடித்தமையால் தேவர்கள் உன்னுடைய கொடிய செயலை மனத்திற் கொள்ளாது மனம் உவந்து உனக்கு அவர்கள்

Koviloor Digital Library

தந்த வரங்களின் வலிமையினால்தான் முடிந்தது என்பது புலனாகும்'' என்கிறான் வீடணன்.

இராவணன் தேவர்களை எல்லாம் வென்றுவிட்டான் என்று கூறு கிறோமே அதுகூட அவனின் வீரச்செயலால் நிகழ்ந்ததுஅன்று. தேவர்கள் வரம் கொடுக்கும் ஆற்றல் படைத்தவர்கள், எனவே அவர்கள் அவனுக்குத் தந்த வரத்தின் பலனால்தான் அவனால் தேவர்களை வெற்றிகொள்ள முடிந்ததே அன்றி அவனுடைய உண்மையான வீரத்தால் அன்று என்று இடித்துரைக்கிறான் வீடணன்.

70. "மூவரை வென்று, மூன்று உலகும் முற்றுறக்
காவலில் நின்று, தம்களிப்புக் கைம்மிக,
வீவது முடிவுஎன வீந்தது அல்லது
தேவரை வென்றவர் யாவர் தீமையோர்?" (6223)

(முற்றுற-முழுதும்; காவல்-ஆட்சி; களிப்பு-செருக்கு; கைம்மிகுதல்-எல்லைகடத்தல்/வரம்புமீறுதல்; வீவது-வீழ்வது/அழிவது; முடிவு-உறுதி)

''தீங்கு செய்வதையே தம் இயல்பாகக் கொண்ட தீயவர்கள், மும்மூர்த்திகளையும் போரிட்டு வென்று, மேல், கீழ், நடு என்னும் மூன்று உலகங்கள் எல்லாவற்றையும் முழுவதும் ஆட்சிபுரிகின்றோம் என்ற செருக்கு அளவுகடந்துபோக, அதனால், இவர்கள் இந்தச் செருக்காலேயே அழிந்துபோவது திண்ணம் என்று கருதி மும்மூர்த்திகளும் வாளா இருக்க, அத்தத் தீயவர்கள் அந்தச் செருக்காலேயே அழிந்து போனார்களேயன்றி, தேவர்களையோ மும்மூர்த்திகளையே வென்று உலகில் நிலைத்து நிற்பவர் யார் இருக்கிறார்கள்?'' என்று கேட்கிறான் வீடணன்.

தீயவர்கள் தம் செருக்கால் தாமே அழிந்தார்களேயன்றி, முத்தேவர் களையும் போரிட்டு வென்றதில்லை என்று கூறுகிறான் வீடணன் என்க. தீயவர்கள்தாம் எப்போதோ செய்த நல்வினையினால் மூன்று உலகங் களையும் ஆட்சிபுரியும் வாய்ப்பைப் பெற்றனர். ஆனால் நிலைத்து நில்லாத அதனாலேயே அவர்கள் செருக்கு மிகக்கொண்டு தாமே அழிந்து போயினர். ஆதலால் என்றும் நன்னெறியை மேற்கொள்ளவேண்டும்; செருக்கு ஆகாது என்கிறான் வீடணன்.

71. "வினைகளை வென்று, மேல்வீடு கண்டவர்,
எனைவர் என்று இயம்புகேன் எவ்வம் தீர்க்கையான்?
முனைவரும், அமரரும், முன்னும் பின்னரும்,
அனையவர் திறத்து உளர் யாவர், ஆற்றினார்?" (6224)

(முன்-முற்காலம்; பின்னர்-பிற்காலம்; முனைவர்-முனிவர்கள்; அமரர்-தேவர்கள்; எவ்வம்-குற்றமான செயல்கள்; தீர்க்கை-கைவிடுதல்;

Koviloor Digital Library

மேல்-உயர்ந்த; வீடு-வீடுபேறு/முக்தி/மோட்சம்/பரமபதம்; எனைவர்-எவ்வளவினர்; ஆற்றுதல்-செய்தல்)

''முற்காலத்திலும், பிற்காலத்திலும் இருந்த, இருக்கும் முனிவர்களும், தேவர்களும், நல்தீவினைகளை வென்று குற்றமான செயல்களைத் தவிர்த்து, உன்னதமான மோட்ச உலகாகிய வீடுபேற்றினை அடைந்தவர்களை எத்தனைபேர் என்று எடுத்துச் சொல்லுவேன்? அவர்கள் அனைவரும் முக்தியடைந்தவர்களே; ஆனால் அவுணர் என்று சொல்லப் படுகிற அசுரர்களில் யாராவது வீடுபேற்றினை அடைந்திருக்கிறார்களா? தீவினை, நல்வினையை வென்றிருக்கிறார்களா? குற்றமான செயல் களைத் தவிர்த்திருக்கிறார்களா?'' என்று கேட்கிறான் வீடணன்.

தீவினைகளும், மறுபிறப்பிற்குக் காரணமாவதால் 'வினைகளை வென்று' என்றார் என்க. வினைகள் ஆகாமியம், சஞ்சிதம், பிரார்த்தம் என்று மூன்று வகைப்படும். இவைகளே பிறப்பிற்கு மூலகாரணம் ஆகும்.

72. "பிள்ளைமை விளம்பினை; பேதை நீ" என,
ஒள்ளிய புதல்வனை உரப்பி, 'என் உரை
எள்ளலையாம் எனின், இயம்பல் ஆற்றுவென்;
தெள்ளிய பொருள்" என அரசற் செப்பினான். (6225)

(பிள்ளைமை-பிள்ளைத்தன்மை/விளைவு அறியாமை; பேதை-அறிவிலி; ஒள்ளிய-வலிமையுடைய; உரப்பு-அதட்டி; எள்ளல்-இகழ்தல்; தெள்ளிய-தெளிவான; பொருள்-கருத்து)

''நீ சிறுபிள்ளையாதலினால் அறிவிற்குப் பொருந்தாதவற்றை விளைவு அறியாமற் பேசிவிட்டாய்'' என்று வலிமைமிகுந்த, புகழ்மிக்கவனான இந்திரசித்தைப் பார்த்து வெகுண்டு அதட்டிக் கூறிவிட்டு, அரசன் இராவணனை நோக்கி, ''என் உரைகளை இகழாமல் ஏற்றுக்கொள்வா யானால் நாம் இப்பொழுது செய்ய வேண்டிய செயல்கள் என்ன என்று மிகத் தெளிவான கருத்துக்களைக் கூறத்தொடங்குவேன்'' என்று கூறினான் வீடணன்.

'பிள்ளைமை' என்பது சிறுபிள்ளைத்தனமாக, பின் விளைவை அறியாது பேசுவதையும், செய்வதையும் குறிக்கும். தான் கூறப்போவதைக் கேட்டு இராவணன் புறக்கணிக்கக் கூடும் என்று எதிர்ப்பார்ப்பதால், வீடணன், ''எள்ளலையாம் எனின்'' என்று முன்பே தற்காப்புச் செய்து கொள்கிறான் என்க. 'தெள்ளிய பொருள்' என்பது, தான் ஆலோசித்து வைத்திருக்கிற தெளிவான கருத்து என்று பொருள்படும்.

Koviloor Digital Library

73. வீடணன் அறிவுரை. [27 பாடல்கள்]

''எந்தை நீ; யாயும் நீ; எம்முன் நீ; தவ
வந்தனைத் தெய்வம் நீ; மற்றும் முற்றும் நீ;
'இந்திரப் பெரும்பதம் இழக்கின்றாய்' என
நொந்தனென்; ஆதலின் நுவல்வது ஆயினேன்.'' (6226)

(நொந்தனென்-மனம் வருந்தினேன்; நுவல்வது-சொல்லுவது; எந்தை-என்தந்தை; யாய்-ஆய்/தாய்; தவ-மிகவும்)

வீடண்ன் இராவணனை நோக்கி, ''எனக்குத் தந்தையும் நீதான்; என்னைப் பெற்ற தாயும் நீதான்; என் தமையனும் நீதான்; நான் தவத்தால் வணங்குவதற்குரிய தெய்வமும் நீதான்; மற்றும் எனக்கென்று உலகில் மேன்மையாகக் கருதப்படும் எல்லாமும் நீதான்; உனக்குக் கிடைக்க இருக்கிற தேவேந்திரனுக்குரிய பெரிய சுகபோகப் பதவியாகிய, எல்லா உலகங்களையும் ஆள்கின்ற அந்த அரசப் பதவியை இழந்துவிடப் போகிறாயே என்ற ஆதங்கத்தால் மனம் வருந்தினேன். எனவே இவ்வாறு கூறத்தொடங்கினேன்'' என்றான்.

'இழக்கின்றாய்' என்பது, உறுதிபற்றி வந்த காலவழுவமைதி என்க. இப்போது நீ செய்யப்போகின்ற செயலால், தேவேந்திர பதவிபோன்ற பெரிய சாம்ராஜ்யத்தை இழந்துவிடுவாயோ என்ற வருத்தத்தினால் இவ்வாறு கூறலானேன் என்கிறான் வீடணன் என்க. 'யாய்' என்ற சொல் 'ஆய்' என்றாகித் தாயைக் குறித்தது. சங்ககாலப் பாடல்களில் எல்லாம் 'தாய்' என்ற பொருள் 'யாய்' என்ற சொல்லிலேயே கூறப்பட்டு வந்திருக்கிறது. 'யாயும் ஞாயும் யாராகியரோ?' என்பதும் ''யாயாகியளே மாயோனே'' என்பதும் குறுந்தொகை. இப்பொழுது இராவணன் மூன்று உலகங்களையும் ஆட்சி செய்கின்றான். இது இந்திரப் பெரும்பதவிக்கு நிகர். இவன் இப்பொழுது மேற்கொண்டுள்ள செயலால் அந்த மூன்றுலக ஆட்சியையும் இழக்க நேரிடலாம். எனவே 'இந்திரப் பெரும்பதம் இழக்கின்றாய்' என்றான் என்க. இந்திரப்பெரும் பதத்தைச் 'சக்கரச் செல்வம்' என்கிறது நாலடியார். இந்திரனுக்குச் 'சக்ரீ' என்ற ஒரு பெயரும் உண்டு என்பதை அறிக.

74. ''கற்றுறு மாட்சி என்கண் இன்றாயினும்,
உற்று, உறுபொருள் தெரிந்து, உணர்தல் ஓயினும்,
சொற்றுறு சூழ்ச்சியின் துணிவு சோரினும்,
முற்றுறக் கேட்டபின், முனிதி; மொய்ம்பினோய்!'' (6227)

(மொய்ம்பு-வலிமை/ஆற்றல்; மாட்சி-சிறந்த அறிவு/மாண்பு/ பெருமை; தெரிந்து-ஆராய்ந்து; சொற்றுறு-சொல்லப்படும்; சூழ்ச்சி-ஆராய்ச்சி; துணிவு-முடிவு; சோர்தல்-தளர்தல்/தவறுபடுதல்; முற்றுற-

Koviloor Digital Library

முழுவதும்; முனிதல்-சினத்தல்/கோபித்தல்; இன்று-இல்லை; ஓய்தல்-குறைதல்)

''பேராற்றல் உடையவனே! பல நூல்களைக் கற்றதனால் உண்டாகும் பெருமை என்னிடம் இல்லையென்றாலும், அவற்றில் கூறப்பட்டுள்ள பொருள்களை நுணுகி ஆராய்ந்து அறியும் நுண்மாண் நுழைபுலம் என்னிடம் குறைவாக இருந்தாலும், சொல்லப்படுகின்ற ஆராய்ச்சியின் முடிவு, தளர்வுற்றோ, வேறுபட்டோ இருந்தாலும், நான் கூறுவதை முழுவதுமாகக் கேட்டதன்பின், அவை சினத்திற்கு உரியதென்றால், என்மேல் சினங்கொள்வாயாக!'' என்று கூறியே, தன் அறிவுரையைத் தொடங்குகிறான் வீடணன்.

தான் கூறப்போகும் அறிவுரையை இராவணன் எவ்வாறு எடுத்துக் கொள்வான் என்பதும், அதனால் அவன் ஆத்திரப்பட்டுத் தன்னைக் கடிந்து கூறுவான் என்பதும், வீடணனுக்கு முன்பே தெரிந்திருக்கிறது என்பதனால் தான் அவன் இவ்வளவு பீடிகை போட்டுத் தொடங்குகிறான் என்பதை நினைவிற் கொள்க. காரணம் பின்னால் நிகழப்போகின்ற நிகழ்ச்சிகளுக்கு இதுதான் மூலகாரணம் என்பதனால் என்க. இராவணனைக் கம்பன் 'அறிவின் மிக்கான்' என்றும், 'மேதாவிகட்கெல்லாம் மேலானவன்' என்றும் 'அறிஞன்' என்றும் பலவாறாகப் பின்வரும் பாடல்களில் புகழாரம் சூட்டப்போகிறான். அவன் ''கற்றுறு மாட்சி என்கண் இன்றாயினும், உற்றுறு பொருள் தெரிந்து உணர்தல் ஓயினும், சொற்றுறு சூழ்ச்சியின் துணிவு சோரினும்'' என்று தன் அறிவையும், அனுபவத்தையும், ஞானத்தையும் குறைத்தே மதிப்பிட்டுக்கொண்டு பேசுவதை மனத்தில் நிறுத்துக. அவன் பணிவும், அடக்கமும் உள்ளவன். நிறைகுடம் என்பதை விளக்கும் கூற்றுக்கள் இவை. தான் கூறிமுடிப்பதற்குமுன் இராவணன் தன் கருத்தைக் கூறிவிடக்கூடாது என்பதில் சற்று எச்சரிக்கையாகவே இருக்கிறான் வீடணன். எனவேதான் முழுவதும் கூறியபின், சினப்பதற்கு இடம் இருந்தால் சொள்ளத்தக்கதாயினும், தள்ளத்தக்கதாயினும் பின்னர் கோபிப்பாயாக என்கிறான் என்பதை உணர்க. 'ஓய்தல்' என்பது குறைதலைக் குறிக்கும். ''ஓய்தல், ஆய்தல், இழத்தல் சாஅய், ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்'' என்பது தொல்காப்பியம்.

75. ''கோநகர் முழுவதும், நினது கொற்றமும்,
சானகி எனும் பெயர் உலகின் தம்மனை
ஆனவள் கற்பினால், வெந்தது அல்லது, 'ஓர்
வானரம் சுட்டது' என்று உணர்தல், மாட்சியோ?'' (6228)

(கோ-அரசு; கொற்றம்-வெற்றி; தம்மனை-தாய்; மாட்சி-பெருமை/அறிவுடைமை)

Koviloor Digital Library

''நமது அரசிருக்கையான தலைநகரம் இலங்கை முழுவதும், உன்னுடைய வெற்றிச் சிறப்பும், சனகன் மகள் ஜானகி என்னும் பெயர்கொண்ட உலகின் தாயான அவளின் தெய்வக் கற்பு என்னும் நெருப்பால் சுட்டெரிக்கப்பட்டு அழிந்ததே அல்லாமல், ஒரு அற்பக்குரங்கு எரித்து அழித்துவிட்டது என்று எண்ணுவது அறிடைமையாகுமோ?'' என்று கேட்கிறான் வீடணன்.

'கோநகர்' என்பது அரசனது நகரம் என்றாகித் தலைநகரம் இலங்கையைக் குறித்தது. 'தம்மனை' என்பது தாய் என்ற பொருளைத்தரும். 'தம்மனை தன்முன் வீழ்ந்து மெய் வைத்தலும்' என்பது மணிமேகலை. 'தொடியோன் தம்மனை' என்பதும் 'நன்முலைத் தீம்பால் தம்மனை கொடுப்ப' என்பதும் பெருங்கதை. சானகி உலகத்தாய், லோகமாதா என்று கம்பனும், வான்மீகியும் காப்பியத்தில் பல இடங்களில் சொல்லிப் போவதையும் காணலாம். அனுமன் வாலில் இட்ட நெருப்பு, அவன் வாலையோ, அவனையோ சுட்டெரிக்கவில்லை, இலங்கை மாநகரத்தைச் சுட்டெரித்தது சரி. 'நினது கொற்றமும்' என்கிறானே? கொற்றம் என்பது வெற்றி என்ற அருவப்பொருள் அல்லவா? அருவப்பொருளைச் சுட்டெரிக்கும் ஆற்றல் ஒரு உருவப்பொருளான குரங்கிற்கு இல்லை. எனவே அருவப் பொருளான உன்வெற்றிச் சிறப்பை, மற்றொரு அருவப் பொருளான சீதாதேவியின் கற்புஎன்னும் நெருப்பே சுட்டெரித்தது என்று நிறுவுகிறான் வீடணன்.

76. "எண்பொருட்டு ஒன்றி நின்று, எவரும் எண்ணினால்,
விண்பொருட்டு ஒன்றிய உயர்வு மீட்சியும்
பெண்பொருட்டு அன்றியும், பிறிது உண்டாம் எனின்,
மண்பொருட்டு அன்றியும், வரவும் வல்லவோ?" (6229)

(எண்-மனம்; எண்ணுதல்-சிந்தித்தல்/ஆராய்தல்; ஒன்றிய-ஓங்கிய; பொருட்டு-காரணம்; மண்-நிலம்/பூமி; வரவும்-நிகழ்வதும்; ஒன்றிநின்று-ஒருமைப் பாட்டுடன் நின்று)

''மனத்தை ஒருமுகப்படுத்தி நின்று, எந்த ஒரு நிகழ்வையும் ஆராய்ந்து பார்த்தால் வானளாவ ஓங்கிய உயர்வும், பின் நிகழும் வீழ்ச்சியும் பொதுவாகப் பெண்களின் பொருட்டே நிகழ்கின்றன. அஃதல்லாமல் வேறு ஏதாவது ஒன்றினால் உண்டாகும் என்றால் அது நிலத்தின் பொருட்டாகத்தான் இருக்கும். இவையன்றி உயர்வும் தாழ்வும் வருவதற்கு வேறு ஏதேனும் காரணம் இருக்கமுடியுமோ?'' என்று கேட்கிறான் வீடணன்.

உலகத்தில் ஒருவனுக்கு ஏற்படும் உயர்வுக்கும் தாழ்வுக்கும் காரணம் ஒன்று பெண்ணாசை, மற்றொன்று மண்ணாசை. இவற்றைத்தவிர வேறு ஒரு காரணமும் இருக்கமுடியாது என்பது வீடணன் கருத்து. மண்ணாசையிலேயே பொன்னாசையும் சேர்ந்தது எனக் கொள்க. இது பெரும்பாலும்

Koviloor Digital Library

இராவணன் போன்ற மன்னர்களுக்குப் பொருந்திவருதல் காண்க. உனது முறையற்ற காமம் உனக்குக் கேடு விளைவிக்கும் என்று எச்சரிக்கிறான் வீடணன் என்க. இதை விளக்கும் அருமையான தனிப்பாடல் ஒன்று கிடைக்கிறது கேளுங்கள். ''வாசவனும் பிறர் நகைக்க உடல் எடுத்தான்; ஒருவன் அரா வடிவம் ஆனான்; தேசு புகழ்க் கலைமதியும் உடல் இழந்தான்; மலர்வேதன் சிரம் ஒன்று அற்றான்; ஈசன் நுதல்விழி திறந்தான்; இராவணன், சுந்தோப சுந்தர் இறந்தார்; மண்மேல், காசினிப் புன் பானிடரோ, மோக சாகரம் அதனைக் கடக்க வல்லார்?'' என்பது ஒரு அருமையானதனிப்பாடல். இராமபிரானே முன்பு கிட்கிந்தாகாண்டத்தில் 'மங்கையர்பொருட்டால் எய்தும் மாந்தர்க்கு மரணம் என்றல் சங்கையின்றி உணர்தி வாலிசெய்கையால்'' என்றதையும் இங்கே நினைவு கூர்க.

77. ''மீனுடை நெடுங்கடல் இலங்கை வேந்தன் முன்,
ஊனுடை நெடுந்தவம் தளர்ந்து சாய்வது, ஓர்
மானுட மடந்தையால் என்னும் வாய்மொழி,
தேனுடை அலங்கலாய்! இன்று தீர்ந்ததோ?'' (6230)

(அலங்கல்-மாலை; சாய்வது-கெடுவது/பெருமைகுன்றுவது; மடந்தை-மகள்/பெண்; வாய்மொழி-சாபம்; தீர்தல்-நீங்குதல்; மானுடம்-மனிதவர்க்கம்)

''தேன் மிக்குப் பொருந்திய வெற்றிமாலையையணிந்த வேந்தனே! மீன்கள் நிரம்பிய நீண்டு பரந்த பெருங்கடலால் சூழப்பட்ட இலங்கை மாநகரத்து அரசனாகிய இராவணன், தன்னுடைய அருந்தவத்தின் பயனால் உண்டாகிய பெருமையெல்லாம் வலிமைகுறைந்து, நிலை குலையப்போவது, ஒரு மானிடவர்க்கத்துப் பெண்ணால்தான் நிகழப் போகிறது'' என்று முன்பு சொன்ன சாபமொழிகள் எல்லாம் இன்று தப்பாது அதன் பயனைத் தந்து நீங்கிவிட்டதல்லவா? என்கிறான் வீடணன்.

'வாய்மொழி' என்பது தப்பாது பலனைத்தரும் சாபச்சொற்கள் என்று பொருள்படும். இந்தச் சாபம் வேதவதியால் இடப்பெற்றது என்று வான்மீகம் கூறும். இது அரம்பையின் சாபம் என்று உத்தரகாண்டம் திக்கு விஜயப்படலம் கூறுகிறது. 'கூசாது தீண்டினையால் ஏடா, உனக்கும், இலங்கைக்கும் உன் கிளைக்கும் கேடாகத் தோன்றுவேன் என்றாள் கிளர் சினத்தாள்' என்பது உத்தரகாண்டம். இது பிரம்மனின் சாபம் என்று நாம் முன்பே கண்டோம். இதுதவிர அவனுக்குக் குபேரனின் மகனாகிய நளகூபரனும், இட்சுவாகு குலத்தில் உதித்தவனான அநரண்யன் என்னும் வேந்தனும், இத்தகைய சாபத்தை இட்டுள்ளனர் என்பதும் தெரிய வருகிறது.

Koviloor Digital Library

78. "ஏறிய நெடுந்தவம் இழைத்த எல்லை நாள்,
ஆறிய பெருங்குணத்து அறிவன் ஆணையால்,
கூறிய மனிதர்பால் கொற்றம் கொள்ளலை;
வேறினி அவர்வயின் வெற்றி யாவதோ?" (6231)

(இழைத்த-மேற்கொண்ட/இயற்றிய; ஆறிய-அமைதியுற்ற; அறிவன் -கடவுள்/பிரமன்; எல்லை-காலம்; ஏறிய-மிகுந்த)

''நீ மிகுந்த பெரிய தவத்தை மேற்கொண்ட காலத்தில், ஆன்றவிந்து அடங்கியவனான, சிறந்த பண்புகளை உடையவனான, இறைவனான பிரமதேவனின் கட்டளையினால், நீ இப்போது இகழ்ந்து கூறுகின்ற மனிதர்களை வென்று விடவேண்டும் என்ற வரத்தைப் பெறவில்லை, எனவே இனிமேல் அவரிடம் தோல்விபெறுவது என்பதைத்தவிர, வெற்றி பெறுதல் என்பது முடியுமோ?'' என்று கேட்கிறான் வீடணன்.

இராவணன் அரும்பெரும் தவம் செய்தவன் என்பது நாம் அறிந்ததே. எனினும் அதனை உத்தரகாண்டம் இராவணன் பிறப்புப் படலம் மிக அருமையாகக் கூறுகிறது கேளுங்கள். 'ஓராயிரம் ஆண்டு உபவசித்துக் கழிந்தால், ஓரோர்தலையாகச் சீரார் சிரம் ஒன்பதும் தடிந்து, செந்தீயிடை, ஓமம் புரிந்து, பேரா உபவாசத்தினனாய்ப் பின்பும் ஓராயிரத்து ஆண்டில் தாரார் மற்றைத் தலை தடியலுற்றான் பற்றித் தசக்கிரீவன்' என்பது உத்தரகாண்டம். 'ஆறிய பெருங்குணத்து அறிவன்' என்பது பிரம தேவனைக் குறிக்கும். மனிதர்களால் தனக்குக் கேடு, அழிவு வரக்கூடாது என்று இராவணன் பிரமனிடம் வரம் வேண்டிப்பெறவில்லையே என்பது 'கூறிய மனிதர்பால் கொற்றம் கொள்ளலை' என்பதால் பெறப்பட்டது. இதனையும் உத்தரகாண்டம் மிகத் தெளிவாகச் சொல்லுகிறது கேளுங்கள். 'மன்னு மனிதர்தமைப் பொருளா மனத்தில் நினையா வாள் அரக்கன், உன்னு பொருள் ஒன்று ஒழியாமல் வேண்ட, விரிஞ்சன் உவந்து அளித்தான்' என்பதும் உத்தரகாண்டம்.

79. "ஏயது பிறிது உணர்ந்து, இயம்ப வேண்டுமோ?
நீ ஒரு தனி உலகு ஏழும் நீந்தினாய்;
ஆயிரம் தோளவற்கு ஆற்றல் தோற்றனை
மேயினையாம்; இனி, விளம்ப வேண்டுமோ?" (6232)

(ஏயது-நிகழ்ந்தது/நேர்ந்தது; பிறிது-வேறுகாரணம்; உணர்ந்து-ஆராய்ந்து; ஒரு-ஒப்பற்ற; நீந்துதல்-வென்றுகடத்தல்/வெற்றிபெறுதல்; ஆயிரம் தோளவன்-கார்த்த வீரியார்ச்சுனன்; மேவுதல்-திரும்பிவருதல்)

''நீ மனிதர்களிடம் தோற்றுப்போனாய் என்பதை வேறு காரணங்களால் ஆராய்ந்து கூற வேண்டுமோ? ஏழு உலகங்களையும் தன்னந்தனியனாய் வென்று கடக்கும் வல்லமை படைத்த ஒப்பற்றவனான நீ ஆயிரம் தடக்கை

Koviloor Digital Library

களையுடைய மானிடனான கார்த்தவீர்யார்ச்சுனனிடம் உன் வலிமை குறையத் தோற்று உன் இருப்பிடம் திரும்பினாய். எனவே நீ மனிதரிடம் தோற்றுப்போவாய் என்பதை இனிமேலும் எடுத்துக் கூறவேண்டுமோ!'' என்கிறான் வீடணன்.

இராவணன் கார்த்தவீர்யார்ச்சுனனிடம் தோற்றது :- இராவணன் ஒருமுறை நருமதை ஆற்றங்கரையில் சிவபூஜை செய்வதற்காகச் சென்றான். அப்பொழுது அங்கே ஆயிரம் கைகளைக் கொண்ட கார்த்த வீர்யார்ச்சுனன் என்னும் மானிட மன்னன் தன் தேவியருடன் நீர்விளை யாட்டில் ஈடுபட்டிருந்தான். எனவே அந்த ஆற்று நீரைத் தேக்கி வைத்திருந்தான். ஆற்றின் நீரோட்டம் தடைப்பட்டதால் தனது சிவ பூஜைக்கு அது இடையூறாக இருந்ததால், இராவணன் அவன்மீது சினந்து போர் செய்யத் தொடங்கினான். முடிவில் இராவணன் தோற்றுச் சிறைப் பிடிக்கப்பட்டான். பிரமன் குறுக்கிட்டு, இராவணனை விடுதலை செய்தான் என்பது உத்தரகாண்டம் பாடலைக் கேளுங்கள். 'அரக்கர்கோன் தளர, அறிந்த ஆயிரம் தோள் அர்ச்சுனன் ஆற்றலின் அவனைப் பொன் நெடுந்தோள்கள் அயர்வுறப் பிணித்துப் போகலுற்றானை' என்பதும் 'கொடுந்திறல் அரக்கர் குலைந்து கெட்டு ஓடிடத் துரந்து, திண்திறல் நிருபன் திருநகர்ப் புகுந்து தீயவன்தனைச் சிறை வைத்தான்' என்பதும், 'சீறிய சீற்றம் தவிர்ந்து, நீ அவனைச் சிறை விடுக' என முனி செப்ப, ஆறிய மனத்தனாய் அவன் விடுப்ப', என்பதும் உத்தரகாண்டத்துப் பாடல் பகுதிகள். நீ இந்த மானிடர்களிடமும் தோற்றுப்போவாய் என்பதற்கு, நீ கார்த்தவீர்யார்ச்சுனனிடம் தோல்வியுற்றதே சான்று என்கிறான் வீடணன் என்பதாம்.

80. "மேல் உயர் கயிலையை எடுத்த மேலை நாள்,
நாலுதோள் நந்திதான் நவின்ற சாபத்தால்,
கூலவான் குரங்கினால் குறுகும் கோள்; அது
வாலி பால் கண்டனம், வரம்பறில் ஆற்றலாய்!" (6233)

(வரம்பு-எல்லை; மேல்-மிக; மேலைநாள்-முற்காலத்தில்; நவின்ற-கூறிய; கூலம்-வால்; வான்-பெரிய; கோள்-கேடு/தீங்கு; குறுகுதல்-விளைதல்; வாலிபால்-வாலியினிடம்; கண்டனம்-தெரிந்து கொண்டோம்)

''எல்லையில்லாத வல்லமை படைத்த வேந்தனே! முற்காலத்தில் நீ வானளாவ ஓங்கி உயர்ந்த கயிலாய மலையைப் பேர்த்தெடுத்தபோது, நான்கு தோள்களையுடைய நந்திதேவன், உன்னைத்தடுத்து, உனக்கு வாலையுடைய பெரிய குரங்கினால் தீங்கு நேரும் என்று இட்ட சாபம் பலித்ததை, நீ வாலியினிடம் தோற்று வந்ததைக்கொண்டு நாங்கள் கண்டறிந்து கொண்டோம். என்கிறான் வீடணன்.

Koviloor Digital Library

இராவணன் வாலியிடம் தோற்றதற்கு அன்று நந்திதேவன் இட்ட சாபம்தான் காரணம் என்று நிறுவுகிறான் வீடணன் என்பதாம். இராவணன் கயிலாயமலையைப் பேர்த்தெடுக்க முயன்றபோது நந்திதேவன் அதனைத்தடுத்தான். நந்திதேவன் சிவகணத்துத் தலைவன். இராவணன் அவனை இகழ்ந்து, 'குரங்குமுகம் கொண்டவனே! விலகிப்போ' என்று விலக்கி மலையைப் பெயர்த்தெடுக்க முயன்றான். அதனால் சினம் கொண்ட நந்திதேவன், ''என்னைக் குரங்குமுகம் என்று இகழ்ந்தா யல்லவா? எனவே உனக்கு இறுதியில் அழிவு ஒரு குரங்கினால்தான் உண்டாகும்'' என்று சாபம் இட்டான். இது உத்தரகாண்டம் வரையெடுத்த படலத்தில் மிக அழகாகத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. பாடலைப் பாருங்கள். 'நந்திதேவன் முகம்தனை இகழ்ந்திட, அவன் குபிதனாய் இரங்கலை; குரங்குமுகம் என்று எனை இகழ்ந்தவன், இலங்கை நகரில் குரங்குகள்புகுந்துதனி கொன்றிடுக நின்குலனை' என்று உரைசெய்தான்.'' என்பது பாடல் பகுதி. (குபிதம்-கோபம்) லாங்கூலம் என்னும் வடசொல், கூலம் எனத் தமிழாகி, வால் என்ற பொருளைத் தந்து நின்றது.

81. "தீயிடைக் குளித்த அத்தெய்வக் கற்பினாள்,
வாயிடை மொழிந்த சொல் மறுக்க வல்லமோ?
'நோய் உனக்கு யான்" என நுவன்றுள்ள அவள்;
ஆயவள் சீதை, பண்டு அமுதின் தோன்றினாள். (6234)

(குளித்தல்-முழுகுதல்; மறுக்க-தடுக்க; நுவலுதல்-கூறுதல்; அமுது-பாற்கடல்; தோன்றுதல்-பிறத்தல்)

''முன்பு தீயில் மூழ்கித் தன் உயிர் துறந்த தெய்வத்தன்மை வாய்ந்த கற்புடையவளான வேதவதி, தன் வாயினால் கூறிய அந்தச் சூளுரையைச் செயலற்றுப்போகும்படி, செய்யும் ஆற்றல் நம்மிடம் உண்டோ? இல்லையல்லவா? அவள், ''நான்தான் உனக்கு உன் வாழ்வு முழுவதும் நோய் போன்றவள் ஆவேன்'' என்று கூறினாளே அவள்தான் முன்பு பாற்கடலைக் கடைந்தபோது அதில் தோன்றிய அமுதத்துடன் உடன் தோன்றிய திருமகள் ஆவாள். அவளின் அம்சம்தான் இப்போது இங்கே இருக்கிற சீதாதேவி'' என்கிறான் வீடணன்.

''வாயிடை மொழிந்த சொல்'' என்பதற்கு நாம் சூளுரை என்றே பொருள் கொண்டுள்ளோம். இதனைச் சாபம் என்றுகூற முடியாது. காரணம் சாபம் என்பது மந்திரச்சொல், முனிவர்களாலும், ரிஷிகளாலுமே பயன்படுத்தப்படுவது. அவர்கள் வெகுளிக் கூறினால் சாபம். விரும்பிக்கூறினால் வரம் என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். சிலம்பில் கண்ணகி உரைத்ததும் சூளுரையே என்பதையும் இங்கே நினைவு கூர்க. 'தெய்வக்கற்பினாள்' என்பதை முன்பும் கவிஞன் கைகேயிக்குப் பயன் படுத்தியதையும் நினைவு கூர்க. 'நோய்' என்பது தொடர்ந்த துன்பத்தைக்

Koviloor Digital Library

குறிக்கும் எனக் கொள்க. உடன்பிறந்தே கொல்லும் வியாதி என்று சூர்ப்பணகையைக் கூறியதையும் ஒப்பு நோக்குக.

வேதவதி சாபவரலாறு உத்தரகாண்டத்தில் 16 பாடல்களில் கூறப்பட்டிருக்கிறது. வேதவதியும் தவ வாழ்வை மேற்கொண்டு தனித்து வாழ்ந்து வந்தாள். குசத்துவ முனிவரின் மகள். முனிவர் வேதம் ஓதிக்கொண்டிருக்கும்போது பிறந்தவள். ஆதலின் 'வேதவதி' எனப் பெயரிட்டழைத்தார். பேரழகி, வழக்கம் போல் தேவர்களும், அசுரர்களும் அவளை மணம்முடிக்க விரும்பினர். அவள் தந்தை அவளைத் திருமாலுக்கே மணம்செய்விக்க விழைந்தான். இந்நிலையில் சம்பு என்னும் அரக்கன் முனிவரைக் கொன்றுவிட்டான். தந்தை சொல்மிக்க மந்திரமில்லை என்று கருதிய வேதவதி திருமாலையே மணக்க உறுதிகொண்டு, வனத்தில் யாகம் இயற்றித்தவம் செய்து கொண்டிருந்தாள். திக்குவிஜயம் வந்த இராவணன் அவள் பேரழகில் மயங்கி தன்னை மணந்துகொள்ளும்படி வேண்டினான். அவள் மறுத்தாள், இராவணன் அவளை வலிதில் தீண்டினான். சினம் கொண்ட வேதவதி 'உனக்கும், உன்கிளைக்கும், உன்இலங்கைக்கும் கேடு விளைவிப்பவளாகத் தோன்றுவேன்' என்றுகூறி யாகத் தீயில் பாய்ந்து உயிர் துறந்தாள் என்பது வரலாறு.

'செம்பொருள் கண்டார் வாய்ச்சொல்' என்பது குறள் - 91. 'விதப்புக் கிளவி வேண்டியது விளைக்கும்' என்பது தொல்காப்பியம். எனவே வேதவதியின் சொற்கள் சூளுரை; அது அவள் விரும்பியதை விளைவிக்கும் என்பது உறுதி என்க.

எனினும் உத்தரகாண்டத்துப் பாடல்களையும் பார்ப்போம். 'வாடா மலரோன் வரச்செருக்கால், மற்று எனை நீ கூடாதன சொல்லிக் கூசாது தீண்டினையால் ஏடா! உனக்கும், இலங்கைக்கும் உன் கிளைக்கும் கேடாகத் தோன்றுவேன் என்றாள் கிளர் சினத்தாள்'' இது அவள் சூளுரை. 'வன்னியிடை மூழ்கிய மாதவத்தாள், மாச்சனகன் தன்னுடைய வேள்வித் தரணியிடை வந்து உதிப்ப, அன்னவளை, முன்நாள் அமிழ்தில் பிறந்தாளை' என்பது அகத்தியர் கூற்று.

82. "சம்பரப் பெயருடைத் தானவர்க்கு இறைவனைத் தனுவலத்தால்,
அம்பரத்து உம்பர் புக்கு, அமரிடைத்தலை துமித்து, அமரர் உய்ய,
உம்பருக்கு இறைவனுக்கு அரசு அளித்து, உதவினான் ஒருவன் நேமி
இம்பரில் பணிசெய, தசரதப் பெயரினான், இசை வளர்த்தான்" (6235)

(நேமி-ஆணைச்சக்கரம்; இம்பர்-இவ்வுலகு; அம்பரம்-ஆகாயம்; தனு-வில்; துமித்து-அறுத்து/துணித்து/தடிந்து; உம்பர்-தேவர்கள்; உதவி -தந்து; இசை-புகழ்; ஒருவன்-தனியனாய்; தானவர்-அசுரர்; உம்பர்-மேல்; பணி-அரசகாரியங்கள்; வலம்-வலிமை/ஆற்றல்)

Koviloor Digital Library

''தசரதன் என்ற பெயருடைய ஒப்பற்றவனான ஒரு அரசனின் ஆணைச்சக்கரம் இவ்வுலகில் அரச காரியங்களைச் செய்து கொண்டிருக்க, தான் ஒருவன் மட்டும் விண் வழியே தேவருலகு சென்று தானவர்க்குத் தலைவனாகிய சம்பரன் என்னும் பெயருடைய ஒரு அசுரனுடன் போர் செய்து, தனது வில்லாற்றலால் போரில் அவன் தலையைத் துண்டித்து, தேவர்கள் கவலையின்றி வாழும் பொருட்டு, தேவர்களுக்குத் தலைவனான இந்திரனிடம், அவனுக்குரிய அரசினை அவனிடமே திருப்பியருளி உதவிசெய்து, தன் புகழ் ஓங்கப்பெற்றான்.'' என்கிறான் வீடணன்.

இதுவரை இராவணனை இகழ்ந்து எள்ளி நகையாடிய வீடணன், பின்பு அவனுக்கு இருந்த சாபங்களை நினைவூட்டினான். இப்பொழுது இராம பிரானுடைய பெருமைகளைச் சொல்ல விழைந்து அவன் தந்தை தசரதன் பற்றிப் பேசத் தொடங்குகிறான். இந்தச் செய்தி நாம் முன்பு பாலகாண்டம், கையடைப் படலத்தில் விசுவாமித்திரர் கூற்றாகக் கண்டதை இங்கே நினைவு கூர்க. 'தானவர்' என்பது தனுவழிவந்தவர் என்பதைக் குறிக்கும்.

83. "மிடல் படைத்து, ஒருவனாய், அமரர்கோன்
விடையதாய், வெரிநின் மேலாய்
உடல் படைத்து அவுணர் ஆயினர்
எலாம் மடிய, வாள் உருவினானும்,
அடல் படைத்து அவனியை 'பெருவளம் தருக'
என்று அருளினானும்
கடல் படைத்தவரொடும், கங்கை
தந்தவன் வழிக் கடவுள் மன்னன்" (6236)

(மிடல்-வலிமை; ஒருவன்-ஒப்பற்றவன்; அமரர்கோன்- இந்திரன்; விடை-எருது/ரிஷபம்/காளைவாகனம்; வெரின்-முகுது/இமில்/திமில்; அவுணர்-அசுரர்; அடல்-வலிமை/வெற்றி; அவனி-பூமி/நிலமகள்; படைத்தல்-உண்டாக்குதல்; கடவுள்-தெய்வத்தன்மை; உடல்-மாறு பாடுமாம்)

''தன் வலிமை கொண்டு, தான் ஒருவனே, தன்னந்தனியனாய், தேவர்களுக்கு அரசனான தேவேந்திரனை இடபவாகனமாகக் கொண்டு, அவன் முதுகில் ஏறி அமர்ந்து, தேவர்களுடன் மாறுபாடு கொண்ட அவுணர்கள் என்று கூறப்படுகின்ற அசுரர்கள் எல்லோரும் இறந்து போகும்படி தன் வாளை உருவிப் போர்புரிந்தவனான ககுத்தனும், தன் வலிமையினால் இவ்வுலகாகிய நிலமகளையே வென்று, 'என் நாட்டிற்குப் பெருமை தருக' என வேண்டி, அவ்வாறே பெற்று மக்களுக்குக் கருணை புரிந்தவனான பிருது என்னும் அரசனும், கடலை உண்டாக்கிய சகரனும், ஆகாய கங்கையைப் பூமிக்குக் கொண்டு வந்தவனான பகீரதனும் ஆகியவர்களின் வம்சத்தில் சூரியகுலத்தில்

Koviloor Digital Library

தோன்றியவன், கடவுள் தன்மை வாய்ந்த தசரதன்'' என்று வீடணன் தசரதனின் முன்னோர்கள் பற்றியும் பேசுகிறான்.

இங்கு நான்கு அரசர்கள் பற்றிக் கூறப்படுகிறது. இதில் கூறப்பட்டுள்ள எல்லோரும், பாலகாண்டத்தில் குலமுறை கிளத்துப் படலத்திலும், அகலிகைப் படலத்திலும் விசுவாமித்திரனாலும் பேசப்பட்டவர்களே. அவுணர் மடியவாள் உருவியவன் ககுத்தன்; அவனியை வளம் தரச் செய்தவன் பிருது; கடல் படைத்தவர் சகரர்; கங்கையைக் கொணர்ந்தவன் பகீரதன். ககுத்தன் புரஞ்செயன் எனவும் வழங்கப்பட்டான். இந்திரன் எருது வடிவானான். அவன் கழுத்துப் பகுதியில் ஏறி அமர்ந்தான் புரஞ்செயன். 'ககுத்' என்ற சொல்லுக்கு திமில் என்று பொருள். எனவே காளையின் கழுத்தில் ஏறி அமர்ந்தவன் ககுத்ஸன் எனப்பட்டான். அதன் தமிழாக்கம் ககுத்தன்/காகுத்தன் என்பது. வேனன் என்னும் அரசனின் வலக்கரத்தைக் கடைந்து தீ வரச்செய்து, அதனின்றும் திருமால் அம்சமாகப் பிருது என்பவன் தோன்றினான் என்பது ஒரு புராணக்குறிப்பு. இந்தப் பிருது உலகுக்கெல்லாம் வளம் தருக என்று வேண்டினான். இதனால் இந்த உலகுக்கு 'பிருத்வி' என்பது இவனால் வந்த காரணப்பெயர். சகரர்கள் தோண்டியதால் கடலுக்குச் 'சாகரம்' என்பது பெயர். பகீரதன் கங்கையைப் பூமிக்குக் கொணர்ந்ததால், கங்கைக்கு, 'பாகீரதி' என்பது இவனால் வந்த பெயர் என்பதாம்.

84. ''பொய் உரைத்து உலகினில் சினவினார்
குலம் அறப்பொருது, தன்வேல்
நெய் உரைத்து, உறையில் இட்டு, அறம் வளர்த்து,
ஒருவனாய் நெறியில் நின்றான்
மை உரைத்து உலவு கண் மனைவிபால்
வரம் அளித்து, அவை மறாதே
மெய் உரைத்து, உயிர்கொடுத்து, அமரரும்
பெறுகிலா வீடு பெற்றான்'' (6237)

(அற-அழியும்படி; பொருது-போர்செய்து; உரைத்து-கூறி/பூசி/தீட்டி; மறாதே-மறுக்காமல்; வீடு-மோட்சம்/பரமபதம்/முக்தி; சினவுதல்-கொதித்தெழுதல்)

''பொய் பேசுவதையே தன் தொழிலாகவும், சினமுற்றுக் கொதித்தெழுந்து மாறுபட்ட தீய காரியங்களையே செய்பவர்களுமான அரக்கர் குலத்தை அடியோடு ஒழித்துப் போர் செய்து, தனது வேற்படைக்கு எப்பொழுதும் நெய்பூசி, அதனை உறையிலேயே போட்டுவைத்து, அறத்தின் தன்மையையே விரும்பி ஓங்கச் செய்து, ஒப்பற்றவனாய் அரசநீதிநெறியில் நிலைத்து நின்றவனான தசரதச் சக்கரவர்த்தி, மை பூசப்பெற்று, காதளவோடிய கண்களையுடைய தன் மனைவியாகிய

Koviloor Digital Library

கைகேயிக்கு இரண்டு வரங்கள் தந்து, அவற்றை மறுத்து விடாமல், உண்மையே பேசி, அதற்காகத் தன் உயிரையும் விட்டு, தேவர்களும் அடையமுடியாத முத்தியாகிய வீடுபேற்றினைப் பெற்றான்.'' என்கிறான் வீடணன்.

பொதுவாக தசரதன் வேற்படை உறையினுள்ளே தங்கியிருக்கும்; காரணம் அவன் அறத்திற்கு மாறான நெறிகளைப் பின்பற்றாதவன். அது யுத்தமில்லாத பூமி எனினும் பகைவர்கள் பொய் உரைத்தாலும், தன்மேல் சினந்தெழுந்து வந்தாலும், அவர்கள்மேல் போர்தொடுத்து அவர்கள் குலத்தையே அழிக்கும் வல்லமையும் பெற்றவன், என்று அவனுடைய இரண்டு குணங்களையும் கூறிய பாங்கு நோக்குக. 'உரைத்து' என்ற சொல் கூறி, பூசி, தீட்டி என்ற பொருள்களில் பயின்று வந்தமை காண்க. தசரதனுடைய வாய்மைச் சிறப்பு பேசப்பட்டது. வேற்படைக்கு நெய்பூசுதல் அது துருப்பிடிக்காமல் இருப்பதற்காக என்க.

85. அனையவன் சிறுவர், எம்பெரும!
உன் பகைஞரானவரை அம்மா
இனையர் என்று உணர்தியேல், இருவரும்
ஒருவரும் எதிர் இலாதார்;
முனைவரும், அமரரும் முழுது உணர்ந்தவர்களும்,
முற்றும் மற்றும்,
நினைவு அரும் தகையர்; நம் வினையினால்
மனிதர் ஆய், எளிது நின்றார். (6238)

(இனையர்-இத்தன்மையர்; உணர்தல்-விரும்புதல்; எதிர்-ஒப்பு/நிகர்; நினைவுஅரும்-அறிதற்கரிய; தகை-குணம்/தன்மை; சிறுவர்-புதல்வர்; பெரும-தலைவன்)

''பெருமைக்குரிய எமது தலைவனே! அத்தகைய பெருமைமிகு தசரதச் சக்கரவர்த்தியின் புதல்வர்களான இராம, இலக்குவர் இப்பொழுது உனக்குப் பகைவர்களாக இருக்கிறார்கள். அவர்களின் இயல்பு, அவர்களின் தன்மை எத்தகையது என்று நீ அறிய விரும்பினாயானால், அவர்கள் இருவருக்கும் ஒருவரும் ஒப்பாகமாட்டார்கள். ஒப்பாரும், மிக்காரும் இல்லாதவர்கள். முனிவர்களும், தேவர்களும், இறப்பு நிகழ்வு எதிர்வு என்ற முக்காலங்களையும் உணர்ந்த ஞானிகளும், மற்றும் உலகிலுள்ள சரஅசரப்பொருள்களும், உயிரினங்களும் நினைத்தற்கும் அறிதற்கும் அரிய குணங்களைப் பெற்றிருப்பவர்கள். நாம் செய்த வினையினால் நமது வினைப்பயனால் இப்பொழுது மனிதவடிவம் கொண்டு, எளியனாம் தன்மை பெற்று, இங்கு வந்து நிற்கிறார்கள்'' என்கிறான் வீடணன்.

Koviloor Digital Library

முன்பாடல்களில் தந்தையின் குணம்கூறி, இப்பாடலில் அவர்களிரு வரின் தன்மையையும் கூறுகிறான். 'அம்மா' என்பது வியப்புக் குறித்த இடைச்சொல். முன்பாடல்களில், உயர்குடிப்பிறப்பு, பேராற்றல், நிறை யறிவு, அடைக்கலம் அடைந்தோரைக் காத்தல், அறத்தாறு ஒழுகுதல், வாய்மையில் வழுவாமை முதலிய நற்குணங்களைக் கூறி, இவை இவ்விருவருக்கும் செயற்கையால் அமைந்ததன்று. இயற்கையாகவே வழி வழியாகவே வந்தது என்பதை நிறுவுகிறான் வீடணன் என்க.

86. "கோசிகப் பேருடைக் குலமுனித் தலைவன்,
'அக்குளிர் மலர்ப்பேர்
ஆசனத்து அவனொடு எவ்வுலகமும் தருவென்
என்று அமையலுற்றான்;
ஈசனின் பெறு படைக்கலம் இமைப்பு
அளவில், எவ்வுலகில், யாவும்,
நாசம் உற்றிட நடப்பன, கொடுத்தன
பிடித்துடையர் நம்ப!" (6239)

(பேர்-பெருமைவாய்ந்த; தருதல்-படைத்தல்; ஈசன்-சிவபெருமான்; நடப்பன-செல்லுகின்ற; பிடித்துடையர்-கைக்கொண்டுள்ளனர்; கோசிகன்-விசுவாமித்திரன்; நம்பன்-விரும்பத்தக்கவன்; குளிர்மலர் பேராசனத்தவன்-பிரமன்)

''எல்லோராலும் விரும்பத்தக்கவனே! அந்தக்குளிர்ச்சி பொருந்திய தாமரைமலர்ஆசனத்தில் பெருமையோடு வீற்றிருக்கும் பிரமதேவனோடு, இந்த உலகங்கள் எல்லாவற்றையும் மீண்டும் புதிதாய்ப் படைப்பேன் என்றுகூறி அதனை அமைக்கத் தொடங்கியவனான, கோசிகன் என்னும் பெயருடைய சிறந்த முனிவர்களுக்கெல்லாம், தலைவனாகிய விசுவா மித்திரன், சிவபெருமானிடம் தான் அரிதின் பெற்ற படைக்கலன்கள் எல்லாவற்றையும் ஒரு நொடிப்பொழுதில் எந்த உலகத்திலும் இருக்கும் எல்லா உயிரினங்களையும் அஃறிணைப் பொருள்களையும் அழித்து ஒழிக்கும்படியாகச் செலுத்தப்படுவன எல்லாவற்றையும் இராம இலக்கு வர்களுக்குக் கொடுத்திருக்கிறார். இப்பொழுது அவைகளையெல்லாம் அவர்கள் கைக்கொண்டுள்ளார்கள்'' என்கிறான் வீடணன்.

'கோசிகன்' என்பது குசிக குலத்தில் பிறந்ததால் உண்டானபெயர். இது விசுவாமித்திரருக்கு அவர் மன்னராய் இருந்தபொழுது இருந்த பெயர் என்பதறிக. அவர் திரிசங்குவைச் சொர்க்கம் ஏற்றுவதற்காகப் பிரமனொடு புதிதாய் ஒரு உலகம் என்பலத்தால் படைப்பேன் என்று சூளுரைத்து ஓர் உலகைப் படைக்கத் தொடங்கினார் என்பதை நாம் முன்பே பால காண்டத்தில் கையடைப்படலத்தில் கண்டதை நினைவு கூர்க. இராம இலக்குவர்க்கு விசுவாமித்திரன் எல்லாப் படைக்கலன்களையும் அளித்

Koviloor Digital Library

தமையும் முன்பே பாலகாண்டத்தில் வேள்விப்படலத்தில் பேசப்பட்டதை நினைவு கூர்க.

87. "எறுழ்வலி, பொருஇல்தோள், அவுணரொடு, அமரர், பண்டு, இகல் செய்காலத்து,
உறுதிறல் கலுழன்மேல் ஒருவன் நின்று, அமர் செய்தானுடைய வில்லும்,
தெறு சினத்தவர்கள் முப்புரம் நெருப்பு உற உருத்து எய்த அம்பும்,
குறுமுனிப் பெயரினான், நிறை தவர்க்கு இறை, தரக்கொண்டு நின்றார்."
(6240)

(எறுழ்வலி-மிக்கவலிமை; பொருஇல்-ஒப்பற்ற; அவுணர்-அசுரர்; பண்டு-முன்பு; இகல்-போர்; உறுதிறல்-மிக்கவலிமை; கலுழன்-கருடன்; தெறுதல்-அழித்தல்; உருத்து-சினந்து; குறுமுனி-அகத்தியன்)

''மிக்கவலிமையுடையவரும், நிகரில்லாத தோள்வலிமை யுடையவருமான அசுரர்கள் முன்பு, தேவர்களோடு தான் ஒருவனாகவே தனித்து நின்று போர்செய்த காலத்தில், மிக்க வலிமையுடைய கருடன்மேல் ஆரோகணித்து நின்று போரிட்ட ஒப்பற்றவனாகிய திருமாலின் வில்லையும், பகைவரை அழிக்கக்கூடிய சினத்தவர்களான மூன்று பெரும் அசுரர்கள் தங்கியிருந்த முப்புரங்களையும் அழிக்கும்படி சிவபெருமான் சினந்து செலுத்திய அம்பினையும், குறுமுனி என்று அழைக்கப்படுகிறவனும், உயரிய தவம் செய்யும் முனிவர்களுக்கெல்லாம் தலைவன் என்றும் கூறப்படுபவனுமாகிய அகத்திய முனிவன், இராமஇலக்குவர்க்குக் கொடுக்க, இப்பொழுது அவற்றை அவர்கள் கைக்கொண்டுள்ளனர்'' என்கிறான் வீடணன்.

'எறுழ்வலி' என்பதும் 'உறுதிறல்' என்பதும் ஒரு பொருட்பன்மொழிகள். 'ஒருபொருட்பன்மொழி சிறப்பினில்வழா' என்பது நன்னூல். திருமாலுடைய வில்லையும், சிவபெருமானுடைய அம்பையும், மேலும் சில படைக்கலன்களையும் அகத்திய முனிவர் இராமஇலக்குவர்க்கு அளித்தார் என்பது ஆரண்யகாண்டம், அகத்தியப் படலத்தில் நாம் கண்'_தே. 'குறுமுனிப் பெயரினான் நிறைதவர்க்கு இறை' என்ற சொல்லாட்சி நோக்குக. 'உறு' என்பது 'மிகுதி செய்யும் பொருள என்ப' என்பது தொல்காப்பியம். சிவபெருமான் முப்புரம் எரித்ததும் நாம் முன்பு கண்டதே. சிவபெருமானின் இந்த வீரச்செயல் 'திருவதிகை' என்ற திருத்தலத்தில் நிகழ்ந்தது என்பது பெரியபுராணம்.

88. "நாவினால் உலகை நக்கிடுவ; திக்கு அளவிடற்கரிய; நாளும்,
மேவு தீவிடம் உயிர்ப்பன; வெயில்பொழி எயிற்றன; அவ்வீரர்
ஆவமாம் அரியபுற்று உறைவ; முற்று அறிவருக்கு அழிவு செய்யும்
பாவகாரியர் உயிர்ப்பதம் அலாது இரைபெறா பகழி நாகம்." (6241)

Koviloor Digital Library

(பகழி-அம்பு; ஆவம்-கூடு/தூணி; மேவு-பொருந்திய; தீ-கொடிய; விடம்-விஷம்/நஞ்சு; உயிர்த்தல்-வெளிவிடுதல்/கக்குதல்; வெயில்-ஒளி; பொழிதல்-வீசுதல்; எயிறு-பற்கள்; பாவகாரியர்-தீயோர்/பாவிகள்; பதம்-இரை/உணவு)

''அந்த இராமஇலக்குவர்களிடம் உள்ள அம்பாகிய பாம்பு, தனது நாவினால் உலகத்து உள்ள உயிரினங்களையெல்லாம் நக்கி அழிக்க வல்லன; அளவிடற்கரிய திசைகளெங்கும் செல்லும் வல்லமை பெற்றவை; தினந்தோறும் அதன் நச்சுப்பற்களில் ஊறி இருக்கும் கொடிய நஞ்சினை வெளிப்படுத்துபவை; ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் பற்களை உடையவை; அந்த வீரர்களின் அம்பறாத்தூணியையே நெருங்குதற்கரிய புற்றாகக் கொண்டு அதில் வாழ்பவை; முற்றும் உணர்ந்த ஞானியர்க்கும், முனிவர்களுக்கும் கேடு நினைக்கின்ற, தீங்கு இழைக்கின்ற பாவச் செயல்களைச் செய்யும் தீயவர்களின் உயிரையே தனக்கு உணவாகக் கொள்ளுமே அல்லாது வேறு உணவை உண்ணாதவை'' என வீடணன் இராமஇலக்குவர்களின் அம்பின் ஆற்றலை ஒரு நாகத்தின் தன்மைக்கு உருவகப் படுத்திக் கூறுகிறான்.

'நாவினால் உலகை நக்கிடுவ' என்பது உலக மக்களைத் தன் நாவினாலேயே தீண்டி அழிக்கும் என்று பொருள்படும். அதுபோல அம்புகளின் நுனியினாலேயே தாக்கி அழிக்கும் என்பது கூறப்பட்டது. அம்பினைப் பாம்பிற்கு உருவகப்படுத்தினமையால் இது முற்று உருவகம் எனப்படும். நாகத்தின் செயல்கள் நாவால் நக்குதல், விஷத்தைக் கக்குதல்; புற்றில் தங்குதல்; எனவே அம்பிற்கும் நாக்கும், பல்லும் கூறப்பட்டன. 'திக்கு அளவிடற்கரிய' என்பது அவை உலகெங்கும் தங்குதடையின்றிச் செல்லவல்லன என்பதைக் குறிக்கும். இரண்டிற்கும் ஒரேஒரு வேறுபாடு, நாகம் இன்னார் இனியர் என்று பாராது எல்லோரையும் தீண்டும். ஆனால் இவ்வம்புகள் தீயவரையே சென்று தாக்கும் என்பதாம்.

89. "பேருமோ ஒருவரால், அவர்களால் அல்லது? இப்பெரிய வேனும்
நாரும் மூரியும் அறா; நம்முடைச் சிலைகள் போல நலிவ ஆமோ?
தாருவோ, வேணுவோ, தாணுவாய் உலகினைத் தழுவி நிற்கும்
மேருவோ, மால்வரைக் குலம்எலாம் அல்லவோ, வில்லும் மன்னோ?"
(6242)

(தாரு-மரம்; வேணு-மூங்கில்; தாணு-தூண்; மால்வரை-பெரிய மலைகள்; குலம்-கூட்டம்; பேர்தல்-அசைதல்; நார்-நாண்/நாணி; மூரி-வலிமை; அறா-அழியாது; நலிதல்-வலிமைகுன்றுதல்; சிலை-வில்)

''அவர்கள் கைக்கொண்டிருக்கின்ற விற்கள், அவர்களைத்தவிர வேறு ஒருவரால் அசைக்கக்கூட முடியுமோ? முடியாது. அந்த விற்கள் அளவில் பெரியதாயிருந்தாலும், அதன் நாணியும், வலிமையும் எப்பொழுதும்

Koviloor Digital Library

நீங்காது, வலிமையும் குன்றாது. அவைகள் கற்பகமரமோ? மூங்கில் கிளைகளோ? பெரும் தூணைப்போல இவ்வுலகினையே தாங்கிநிற்கும் மேருமலையோ? இவையெல்லாம் அல்ல. அவைபெரிய மலைக் கூட்டங்களின் ஒரு தொகுதி அல்லவோ?'' என்று அவர்களின் வில்லின் தன்மையைச் சிறப்பித்துப் பேசுகிறான் வீடணன் என்க.

அவர்கள் கைக் கொண்டிருக்கின்ற விற்கள் வெறும், மரமோ, மூங்கிலோ, மேருமலையோ அல்ல, பெரிய மலைக்கூட்டங்களெல்லாம் ஒன்று சேர்ந்த ஒரு தொகுதியல்லவோ? என்று அவர்கள் வில்லின் ஆற்றலைச் சிறப்பித்துப் பேசும்போதே, அரக்கர்களின் விற்கள் அளவில் பெரியதாய் இருந்தாலும் அவை பகைவர்களின் விற்களை ஒடிக்கும் ஆற்றல் அற்றவை என்பதையும் கூறிக்காட்டுகிறான் வீடணன் என்க.

90. "உரம் ஒருங்கியது நீர்கடையும் வாலியது மார்பு; உலகைமூடும்
மரம் ஒருங்கிய; கராதியர், விராதனது மால்வரைகள் மானும்
சிரம் ஒருங்கின; இனிச்செரு ஒருங்கின; இனி தெவ்வர் என்பார்
பரம் ஒருங்குவது அலால், பிறிது ஒருங்காதது ஓர்பகையும் உண்டோ?"
(6243)

(நீர்-கடல்; உரம்-வலிமை; ஒருங்குதல்-ஒடுங்குதல்/அழிதல்; மூடுதல் -கவித்து நிற்றல்; மரம்-மராமரங்கள்; கராதியர்-கரஆதியர்/கரன் முதலி யோர்; மானும்-ஒத்த; சிரம்-தலைகள்; பரம்-தொகுதி/சுமை; செரு-போர்; தெவ்வர்-பகைவர்)

''அந்த இராமன் செலுத்திய அம்பால், பாற்கடலைத் தனி ஒருவனாகவே கடைந்த வாலியின் மார்பின் வலிமை ஒடுங்கிப்போனது. உலகத்தையே பரந்து மூடிக்கொண்டிருந்த ஏழு மராமரங்களும் அற்று ஒழிந்தன; கரன் முதலானோரும், விராதனும் ஆகிய இவர்களின் பெரிய மலையை ஒத்த தலைகளும், அழிந்துபோனது, இனி அசுரர்களுடன் செய்யும் போர்தான் ஒடுங்கும். பகைவர் என்று கூறப்படும் நமது சுமை குறைவதைத் தவிர, அவர்களுக்கு ஒடுங்காத வேறு பகைவர்களும் இருக்கிறார்களோ?'' என்கிறான் வீடணன்.

அந்த அம்பின் அடுத்த இலக்கு அரக்கர்கள்தான் என்கிறான் என்பதாம். வாலி பாற்கடலைக் கடைந்த செய்தி முன்பே கிஷ்கிந்தா காண்டத்தில் நாம் கண்டதே.

91. "சொல்வரம் பெரிய மாமுனிவர்
என்பவர்கள், தம் துணை இலாதார்,
எல்வரம் பெரியதோள் இருவரே
தமரொடும் உலகம்யாவும்

Koviloor Digital Library

வெல்வர்'' என்பது தெரிந்து, எண்ணினார்,
"நிருதர் வேர் முதலும் வீயக்
கொல்வர்'' என்று உணர்தலால், அவரைவந்து
அணைவதோர் இயைபுகொண்டார். (6244)

(சொல்-சிறப்பித்துச் சொல்லுதல்; மா-உயர்ந்த; அணைவது-கூடுவது; இயைபு-பொருந்திய செயல்; வேர்முதல்-அடிவேர்; வீதல்-அழிதல்; துணை-நிகர்; எல்-ஒளி; நிருதர்-அரக்கர்)

''தனக்கு நிகரில்லாதவரும், தனக்கெனத் தனித்துணை இல்லாதவருமாகிய சிறப்பாகச் சொல்லப்படுகின்ற வரபலம் பெற்ற பெரிய சிறந்த முனிவர்கள் என்பவர், ஒளி மிகுந்த அகன்ற பெரிய தோள்களும், வரபலமும் உடைய இராமன், இலக்குவன் என்ற இரு மானிடரே, தம் சுற்றத்தாரோடும், இவ்வுலகங்கள் எல்லாவற்றையும் வெற்றிகொள்ளும் வல்லமை பெற்றவர்கள் என்பதை நன்கு புரிந்துகொண்டார்கள். அவர்களே அரக்கர்களை அடிவேரோடும் அழித்துக் கொன்று குவிப்பர் என்பதையும் நன்கு உணர்ந்து கொண்டதால் இப்போது இவ்விருவரையும் துணையாகக் கருதி அவர்களைச் சென்று சரணடையும் ஒரு செயலை மேற்கொண்டு இருக்கிறார்கள்'' என்கிறான் வீடணன்.

நமது ஆதிக்கத்தில் உள்ள தண்டகாரண்யத்தில் உள்ள முனிவர்கள்கூட, இராம இலக்குவரின் வில்லாற்றலை நன்கு உணர்ந்து, அவர்கள்தான், 'நமக்குத் தொல்லைதரும் அரக்கர்களை அழித்து ஒழிப்பார்கள்' என்று நன்கு புரிந்துகொண்டு, இப்போது இராம இலக்குவரிடம் அடைக்கலம் கேட்டுப் போய்ச் சேர்ந்திருக்கிறார்கள் என்கிறான் வீடணன் என்பதாம்.

92. "துஞ்சுகின்றிலர்களால், இரவும் நன்பகலும், நிற்சொல்ல ஓல்கி,
நெஞ்சு நின்று அயரும் இந்நிருதர்; 'பேர்சனகியாம் நெடியதாய
நஞ்சு தின்றனர்கள்தாம் நண்ணுவார் நரகம்' என்று எண்ணி, நம்மை
அஞ்சுகின்றிலர்கள், நின்அருள் அலால், சரண் இலா அமரர் அம்மா!"
(6245)

(சரண்-புகலிடம்/தஞ்சம்; நண்ணுதல்-அடைதல்; நிற்-நின்/நின்னிடம்; ஓல்கி-பயந்து; அயர்தல்-சோர்தல்; துஞ்சுதல்-உறங்குதல்; பேர்-பெருமைவாய்ந்த)

''தலைவனே! உன்னுடைய அருட்பார்வை தவிர, வேறெந்தப் புகலிடமும் இல்லாத தேவர்கள் இப்பொழுது நமக்குப் பயப்படுவதேயில்லை. என்ன காரணம் தெரியுமா? பெருமை பொருந்திய சானகி என்னும் இந்தப் பெரும் நஞ்சினை உட்கொண்டவர்களாகிய இந்த அசுரர்கள் இறந்து நிச்சயம் நரகத்தைத்தான் அடைவார்கள்' என்ற நம்பிக்கையில்தான். அதேசமயம் நமது அரக்கர்கள் இந்தச் செய்தியை

Koviloor Digital Library

உன்னிடம் சொல்லுவதற்குப் பயந்துகொண்டு இரவும் பகலும் தூங்காமல் மனம் சோர்வடைந்திருக்கிறார்கள். இதுதான் இங்கே நிகழும் நடப்பு'' என்கிறான் வீடணன்.

'நஞ்சுதின்றவர்கள்' என்ற சொல்லாட்சியில் 'தின்றவர்கள்' என்ற சொல் சானகியை அபகரித்துக்கொண்டு வந்து இலங்கையில் சிறைவைத்தது என்ற செயலைக் குறிக்கும். 'சானகி' பெருநஞ்சு என்று காப்பியத்தில் பல இடங்களில், பலரின் கூற்றால், கம்பன் தெரியப்படுத்துவதைக் காண்க.

93. "புகல் மதித்து உணர்கிலாமையின், நமக்கு
எளிமைசால் பொறைமை கூர,
நகல் மதிக்கில மறுப்பொலிய, வாள்ஒளி
இழந்து, உதயம் நண்ணும்
பகல் மதிக்கு உவமையாம் விபுதராம்,
இரவுகால் பருவ நாளின்
அகல் மதிக்கு உவமையாயின, தபோதனர்
உளார் வதனம் அம்மா!" (6246)

(புகல்-சேருமிடம்; மதித்து-ஆராய்ந்து; கூர-மிக; மதித்தல்-கருதுதல்; மறு-களங்கம்; பொலிய-விளங்க; வாள்-மிக்க; உதயம்-சூரியன்; தபோதனர்-தவச்செல்வர்; வதனம்-முகம்; பருவநாள்-பௌர்ணமி/ பூரணநாள்; அகல்-விரிந்த; விபுதர்-முனிவர்கள்)

''இந்த தண்டகாரண்யத்தில் இருக்கின்ற முனிவர்கள், தாம் சென்று சேர்ந்திருக்கின்ற இடத்தின்தன்மையை ஆராய்ந்து பார்க்காமல் இதுகாறும் இருந்ததனால், நம்மிடம் எளியவராகப் பொறுமைமிகக் காட்டி மகிழ்ச்சி யற்றவர்களாய் களங்கம் மிக்கு விளங்கும், மிக்க ஒளியை இழந்துவாடும் சூரியன் உதித்தபின் தோன்றும் பகற்காலச் சந்திரன்போல் ஒளிமங்கி இருந்தனர். ஆனால் இப்போது, இராமபிரான் துணை கிடைத்ததனால் அவர்களின் முகங்கள் எல்லாம் இரவுக்காலத்தில் பௌர்ணமி நாளில் தோன்றும் அகன்ற பூரண சந்திரனுக்கு உவமையாயின.

நம்மிடம் இருந்தபோது ஒளியிழந்து காணப்பட்ட முனிவர்களின் முகங்கள் எல்லாம், இப்போது அவர்கள் இராமபிரானைச் சென்று சேர்ந்ததனால் ஒளிமிக்க பூரண சந்திரனைப் போன்று பொலிவுற்றுத் திகழ்கின்றன என்பதாம். பொருள் அறிந்து கொள்ளச்சற்று கடினமான பாடல்தான், எனினும் உரை எளிமையாகத்தரப் பட்டிருக்கிறது. 'விபுதர், தபோதனர்' என்ற இரண்டு சொல்லும் தவச்செல்வர்கள் என்ற உயர்ந்த பொருளைத்தரும். 'நகல்' என்பது சிரித்தல் என்ற பொருளைத்தரும். 'நகுதற்பொருட்டு அன்று நட்டல்' என்ற குறள் (784) நாம் அனைவரும் அறிந்ததே. 'பருவநாள் அகல் மதி' என்பது பூரணசந்திரனைக் குறிக்கும்.

Koviloor Digital Library

94. "சிந்து முந்து உலகினுக்கு இறுதிபுக்கு உருஒளித்து உலைதல் செய்வார்,
இந்துவின் திருமுகத்து இறைவி, நம் உறையுளாள் என்றலோடும்
அந்தகன் முதலினோர், அமரரும், முனிவரும், பிறரும் அஞ்சார்
வந்து, தம்உலகமும், வானமும் கண்டு, உவந்து அகல்வர் மன்னோ?"
(6247)

(சிந்து-கடல்; முந்துதல்-கிளர்ந்து எழுதல்; உழல்தல்-சுழலுதல்; இந்து-சந்திரன்; இறைவி-சீதாதேவி; உறையுள்-இருப்பிடம்; அந்தகன்-இயமன்)

''பொங்கியெழுகின்ற கடலை அரணாகக் கொண்டு சூழ்ந்துள்ள இந்த உலகத்தின் எல்லைக்கே சென்று நமக்குப் பயந்து தம் உருவத்தை மறைத்துக்கொண்டு வருந்தித்திரிந்து கொண்டிருக்கும் இயமன், தேவர்கள், முனிவர்கள் மற்றும் உள்ள கின்னரர், யட்சர் முதலான தேவகணத்தார் எல்லாம், 'சந்திரனைப்போன்ற அழகிய முகத்தை உடைய தெய்வத்தன்மை வாய்ந்த சீதாதேவி, நமது இருப்பிடமான இலங்கையில் தான் சிறையில் இருக்கிறாள் என்று கேள்விப்பட்டவுடனேயே, சிறிதும் தயங்காது, அஞ்சாது, இப்போதெல்லாம் அவர்கள் அடிக்கடிவந்து, தமது விண்ணுலகத்தையும், நம்நகரையும் கண்டு, மிக்க மகிழ்வு கொண்டு செல்கின்றார்கள்.'' என்கிறான் வீடணன்.

95. "சொலத்தகாத் துன் நிமித்தங்கள் எங்கணும் வரத்தொடர்வ; ஒன்னார்,
வெலத்தகா அமரரும், அவுணரும், செருவில் விட்டன விடாத
குலத்த கால்வய நெடுங்குதிரையும், அதிர்குரல் குன்றும், இன்று
வலத்த கால் முந்துறத் தந்து, நம் மனையிடைப் புகுவ மன்னோ!" (6248)

(ஒன்னார்-பகைவர்; செரு-போர்; குலத்த-சிறந்த; வயம்-வலிமை; அதிர்தல்-நடுங்குதல்; குரல்-முழக்கம்; குன்று-மலை/இங்கே யானை; வலத்தகால்-வலதுகால்; நிமித்தம்-அறிகுறி/சகுனம்; இன்று-இப்போது; குலம்-நற்குடிப்பிறப்பு)

''வெளியில் சொல்லமுடியாத மிகப்பல தீயசகுனங்கள் எங்கும் தொடர்ந்து நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன. நமது பகைவர்களான, வெற்றி பெறுவதற்கு வாய்ப்பே இல்லாத, மெலிந்தவர்களான தேவர்களும், அசுரர்களும், நம்மிடையே நடந்தபோரில் விட்டுச்சென்ற மங்காத நற்குடியிற் பிறந்த, சிறந்த கால்களையுடைய பெருமைபொருந்திய குதிரைகளும், நடுக்கம் தருகின்ற முழக்கமாகப் பிளிறுகின்ற மலை போன்ற யானைகளும், இப்போது நம் அரண்மனைகளுக்குள், தமது வலக்காலை முன்னே எடுத்துவைத்துப் புகுகின்றன'' என்று அங்கு நிகழ்கின்ற தீ நிமித்தங்களைக் கூறுகிறான் வீடணன்.

Koviloor Digital Library

பசு, குதிரை, யானை இவை வலக் கால் எடுத்துவைத்து வீட்டிற் குள்ளோ, ஓரிடத்தின் நுழைவாயிலிலோ புகுவது தீய நிமித்தமாக இன்றும் கருதப்படுகிறது. இவை இடக்காலை எடுத்து வைத்து வருதல் நன்மை பயக்கும். 'குலத்த கால் குதிரை' என்பது நற்குடியில் பிறந்த சிறந்த குதிரை எனப் பொருள்படும். மனிதர்களைப் போல் நற்குடிப்பிறப்பு என்பது குதிரைபோன்ற விலங்கினங்களுக்கும் உண்டு என்பது அறிக. இப்பொழுதும் குதிரைப் பந்தய மைதானங்களில் குதிரைகளின் குடிப்பிறப்பு பற்றி அலசுவதைக் காணலாம். 'நெடுங்குதிரை' என்பது 'நெடுமை பெருமை மேற்று' என்ற சூத்திரத்தை அடியொற்றியது.

96. "வாயினும் பல்லினும் புனல் வறந்து உலறினார், நிருதர்; வைகும்
பேயினும், பெரிய பேம் நரிகளும், புரிதரும்; பிறவும் எண்ணின்,
கோயிலும், நகரமும், மடநலார் குழலும், நம் குஞ்சியோடும்,
தீயின் வெந்திடுமலால், ஒரு நிமித்தம் பெறும் திறனும் உண்டோ?"
(6249)

(உலறுதல்-பொலிவழிதல்; கோயில்-அரண்மனை; பேம்-வெறி/ அச்சம்; புரிதருதல்-பல்கிப் பெருகுதல்; குழல்-கூந்தல்; குஞ்சி-ஆண்களின் தலைமயிர்; திறன்-வகை; வறந்து-வறண்டு; வறத்தல்-வற்றுதல்; பெரிது-மிகவும்)

''அரக்கர்கள் வாயிலும் பல்லிலும் உள்ள நீர் வற்றிப்போய் நாக்கும் வறண்டுபோய் பொலிவிழந்து காணப்படுகிறார்கள். வெறிகொண்ட இருளிலேயே தங்கியிருக்கும் பேய்களும், அவற்றைவிடப் பெரியன வான அச்சம் தரத்தக்க நரிகளும் பல்கிப் பெருகுவதோடு மட்டுமல்ல. அவை நகருக்குள் சஞ்சரிக்கின்றன; இவற்றைத்தவிர வேறு பார்ப்போம் என்றால், நமது அரண்மனையிலும், இலங்கை மாநகரிலும், இளமையான மகளிரின் கூந்தலும், நம் ஆண்மக்களின் தலைமுடியும் காரணமின்றியே தீயில் வெந்து கருகிப் போகின்றன; இதைவிட வேறுதீய அறிகுறிகள் நிகழும்வகை ஏதேனும் இருக்கிறதா?'' என்று கேட்கிறான் வீடணன்.

'உலறுதல்' என்ற சொல் 'பொலிவழிதல்' என்று பொருள்படும். 'கண்ணும் முகமும் உலறி' என்பது சீவகசிந்தாமணி; 'வைகும்' என்ற சொல் வற்றுதல் என்ற பொருளைத்தரும் என்றால் உடல் வற்றிப்போன பேய்கள் என்று பொருள்படும். 'காவிரி வைகிய காலத்திலும்' என்பது தஞ்சைவாணன் கோவை; 'புரிதரல்' என்பது மிகுதல் என்ற பொருளைத் தரும். 'வனப்புப் புரிந்த தகையினாள்' என்பது பரிபாடல். பேய்கள் பொதுவாகக் கொழுத்து இருக்கும் என நாம் எண்ணிக் கொண்டிருக் கிறோம். பேய்கள் வற்றிய உடம்பையே கொண்டன என்கிறது கலிங்கத்துப்பரணி. 'வெற்று எலும்பை நரம்பின் வலித்து மேல் வேய்ந்திலா இறப்பேய்ந்த உடம்பின்' என்பது பாடல்பகுதி.

Koviloor Digital Library

97. "சிந்த மாநகரைச் செரு முருக்கிய கரன், திரிசிரத்தோன்,
முந்தமான் ஆயினான், வாலியே முதலினோர் முடிவு கண்டால்
அந்த மான் இடவனொடு, ஆழி மாவலவனும், பிறரும், ஐயா!
இந்த மானிடவராம் இருவரோடு எண்ணலாம் ஒருவர் யாரே?" (6250)

(மா-சிறந்த/பெருமைவாய்ந்த; நாகர்-தேவர்கள்; செரு-போர்; சிந்த-சிதறும்படி; முருக்கிய-வலியழித்த/அழித்த; முந்த-முன்னே; முடிவு-அழிவு; இடவன்-இடக்கரத்தில் ஏந்தியவன்/சிவபெருமான்; ஆழி-சக்கரப்படை; வலவன்-வலக்கரத்தில் ஏந்தியவன்/திருமால்)

''தலைவனே! முன்பு பெருமைவாய்ந்த தேவர்களைப் போரில் வென்று அவர்கள் தலையறுத்து, சிதறியோடும்படி வலியழித்த நம் கரன், திரிசிரன், முன்பு மான்வடிவம் கொண்டு சென்ற உன் மாமன் மாரீசன், வாலி, விராதன், கவந்தன் முதலானவர்கள் எல்லாம், இராம இலக்குவர்களால் அழிந்து ஒழிந்தார்கள் என்ற அந்தப் பேரழிவை எண்ணிப்பார்த்தால், அந்த அழகிய மானை இடக்கரத்திலும், மான்போன்ற விழிகொண்ட உமையம்மையை இடப்பக்கத்திலும் கொண்டுள்ள இடபவாகனனான சிவபெருமானோடு, சுதர்சனம் என்னும் ஆணைச்சக்கரத்தை வலக்கரத்தில் ஏந்தி உள்ளவனான திருமாலும், மற்றும் பிரமன் ஆகியோரும், மானிட உருவம் தாங்கி வந்திருக்கிற இந்த இராம இலக்குவரோடு ஒன்றாய் நிகராகக் கருதத்தக்க தகுதியுடையவர்கள் யார் இருக்கிறார்கள்? ஒருவரும் இல்லை'' என்கிறான் வீடணன்.

98. "இன்னம் ஒன்று உரைசெய்தால்; இனிதுகேள்; எம்பிரான்! இருவராய
அன்னவர் தம்மொடும், வானரத்தலைவராய் அணுகி நின்றார்,
மன்னும் நம் பகைஞராம் வானுளோர்; அவரொடும் மாறுகோடல்
கன்மம் அன்று; நமக்கு உறுதி என்று உணர்தலும், கருமம் அன்றால்"
(6251)

(மன்னும்-நிலைத்த; வானுளோர்-தேவர்; கன்மம்-செய்தற்குரியது; உறுதி- நன்மை; உணர்தல்-துணிதல்; கருமம்-கடமை; பிரான்-தலைவன்; இனிது- நன்றாக; மாறுகோடல்-மாறுபடுதல்/பகைத்துக்கொள்ளுதல்)

''எமது தலைவனே! இன்னும் ஒன்று கூறுகிறேன். நன்கு கேட்பாயாக! இந்த இரண்டு பேராய் இருக்கிற இராம இலக்குவரோடு, குரங்குகளின் தலைவர்களாய் அவர்களுடன் இணைந்து இருப்பவர்கள் யார் என்று எண்ணுகிறாய்? அவர்கள் நம்முடன் நிலைத்த பகைமை பாராட்டி வரும் வானிலுள்ள தேவர்கள் ஆவார்கள். எனவே அவர்களை இப்பொழுது நாம் பகைத்துக் கொள்ளுதல் என்பது பெருமைதரத்தக்க செயல் அல்ல; இவ்வாறு பகைமை கொள்ளுதல் நமக்கு நன்மை பயக்கும் என்று துணிந்து கூறுதலும் சரியான எண்ணம் அல்ல'' என்று எச்சரிக்கிறான் வீடணன்.

Koviloor Digital Library

வானரக் குரங்குகள்தான் தேவர்களாய் வந்திருக்கிறார்கள் என்பதை இப்போது நினைவிற் கொண்டுவந்து, இந்தப் பாடலின் பொருளைப் பார்க்கவேண்டும் 'கன்மம்' என்றதிசைச்சொல் பெருமை என்ற பொருளில் இன்றும் பயின்றுவருதல் காணலாம்.

99. "இசையும், செல்வமும், உயர்குலத்து இயற்கையும் எஞ்ச,
வசையும் கீழ்மையும் மீக்கொள, கிளையொடும் மடியாது,
அசைவுஇல் கற்பின் அவ்வணங்கை விட்டு அருளுதி; இதன்மேல்
விசையம் இல்" எனச்சொல்லினன், அறிஞரின் மிக்கான். (6252)

(மிக்கான்-சிறந்தோன்; இசை-புகழ்; இயற்கை-இயல்பு/நல்லொழுக்கம்; எஞ்ச-குறைய/தாழ; வசை-பழி; கீழ்மை-கீழ்மக்கள் இயல்பு/இழிவு; கிளை-சுற்றத்தார்; மடிதல்-இறந்துபடுதல்; இசைவுஇல்-நிலை மாறாத/தளராத; அணங்கு-தெய்வத்தன்மை பொருந்திய பெண்/சீதாதேவி; விசையம்-விஜயம்/ஜெயம்/வெற்றி; மீக்கொளல்-மிகுதல்/மேலோங்குதல்)

அறிஞர்களுள் சிறந்த பேரறிஞனான வீடணன், இராவணனை நோக்கி, ''நமது புகழும், செல்வமும், நாம் பிறந்த உயர்ந்த குலத்தின் இயல்பான நல்லொழுக்கமும் குறைந்து தாழ்ந்து போகவும், அதனால் உண்டாகும் பழியும் கீழ்மக்களின் இயல்பான இழிவும்தான் மேலோங்கும்; உன் சுற்றத்தாரும் இறந்துபட நேரிடும். அவ்வாறு ஆகாதபடி, அந்த நிலை மாறாத, தளராத கற்புடைய, தெய்வத்தன்மை வாய்ந்தவளான சீதா தேவியை இராமன்பால் விட்டு அருள்வாயாக; இதனினும் உனக்குக் கிடைக்கக் கூடிய வெற்றி வேறு எதுவும் இல்லை'' என்று கூறிமுடித்தான் வீடணன்.

சீதாதேவியை இராமனிடம் சேர்ப்பிக்காவிட்டால், இராவணன் இதுகாறும் கட்டிக் காத்து வந்த புகழ், செல்வம், புலத்தியன் மரபுக்கேற்ற பெருமை எல்லாம் தாழ்ந்துபோகும். மாறாக நிந்தனை, இழிவு, சுற்றத்தார் அழிவு முதலியன நிகழும் என்று எச்சரிக்கிறான் வீடணன். 'அருளுதி' என்ற சொல்லாட்சியை எண்ணுக. இன்னும் வீடணன், இராவணன் மீது பாசமும், அக்கறையும் கொண்டிருக்கிறான் என்பது மறைபொருளாய்த் தெரிவதை உணர்க. இதுவரை வீடணன் இராவணனுக்கு அவன் புரிந்து கொள்ளுமாறு வினை வலியும், தம் வலியும், மாற்றார் வலியும், துணை வலியும் மிகைபடாமலும், குறைபடாமலும் உள்ளது உள்ளபடியே எடுத்துக் கூறிய நயம் நோக்குக. இங்கே வீடணன் கூறுகிற 'அசைவு இல் கற்பு அவ்வணங்கு' என்பதையே பின்னால், கும்பகருணன் தன் கூற்றாக, 'அலகுஇல் கற்புடைச் சானகி' என்றும் 'திட்டி விடம் அன்ன கற்பின் செல்வி' என்று கூறப்போவதையும் இங்கு நினைவிற் கொள்ளுதல் தகும்.

Koviloor Digital Library

100. இராவணன், வீடணனைக் கடிந்து கூறுதல் [10 பாடல்கள்]

கேட்ட ஆண்தகை, கரத்தொடு கரதலம் கிடைப்பப்
பூட்டி, வாய்தொறும் பிறைக்குலம் வெண்நிலாப் பொழிய,
வாள் தடம் தவழ் ஆரமும், வயங்குஒளி மார்பும்
தோள் தடங்களும் குலுங்க, நக்கு, இவை இவை சொன்னான். (6253)

(கரதலம்-கை; கிடைப்ப-பொருந்த; பூட்டுதல்-கோத்தல்/சேர்த்தல்; குலம்-கூட்டம்; தடம்-தழும்புகள்; வயங்கும்-ஒளிரும்; தடம்-பெரிய; நக்கு-சிரித்து; நகுதல்-சிரித்தல்; குலுங்குதல்-அசைதல்; ஆண்தகை-ஆண்மை மிக்கவன்)

இவ்வாறு வீடணன் நிகழ்த்திய உரையினைக் கேட்ட ஆண்மை மிக்கவனான இராவணன், தனது கைகளை ஒன்றோடொன்று பொருத்தி, விரல்களைக் கோர்த்து, தனது பத்துவாய்களிலும் பிறைச்சந்திரனின் கூட்டத்தைப் போன்று ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் வளைந்த கோரப்பற்கள் வெண்ணிலாப் போல ஒளியைச் சிந்த, சிறந்த விழுப்புண்களால் உண்டாகிய தழும்புகள் திகழ்கின்ற மார்பில் அணிந்திருக்கின்ற மாலைகள் ஒளியைப் பரப்பவும், பெரிய இருபது தோள்களும் குலுங்கும்படி இகழ்ச்சியாகவும், சினந்தும், சிரித்து, பின்வருமாறு கூறலானான்.

அடுத்துவரும் பத்துப்பாடல்களும் இராவணன் வீடணனைக் கடிந்து கூறியவையாகும். 'கிடைப்ப' என்ற சொல் பொருந்த என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. 'பூட்டி' என்ற சொல் கோர்த்து, இணைத்து, ஒன்றோடு ஒன்று சேர்த்து, என்ற பொருளில் கையாளப்பட்டிருக்கிறது. 'பிறைக்குலம்' என்பது அரக்கர்களின் பற்கள் இரண்டாகப் பிளவுபட்ட கோரப் பற்கள் - வக்ரதந்தம் - என்பதைக் குறிக்கும். பற்கள் ஒன்றுக்கு மேற்பட்டவை. இராவணனுக்குப் பத்து வாயிலும் உள்ள பற்களைக் குறிக்க. 'பிறைக்குலம் - பற்களின் கூட்டம் - என்று கூறியுள்ளதை நோக்குக. முதலில் கூறிய 'தடம்' அவன் போர்செய்யும் போது ஏற்பட்ட விழுப் புண்களால் உண்டாகிய தழும்புகளைக் குறிக்கும் என்க. கரத்தொடு கரதலம் கிடைப்பதும், தோள் தடங்கள் குலுங்குதலும் சினத்தின் மெய் வெளிப்பாடு.

101. "இச்சை அல்லன உறுதிகள் இசைக்குவென்" என்றாய்;
பிச்சர் சொல்லுவ சொல்லினை; என்பெரு விறலைக்
கொச்சை மானுடர் வெல்குவர் என்றனை; குறித்தது,
அச்சமோ? அவர்க்கு அன்பினோ? யாவதோ? ஐய!" (6254)

(இச்சை-விருப்பம்; உறுதி-நன்மைபயப்பன; பிச்சர்-பித்தர்; விறல்-வீரம்/ஆற்றல்; கொச்சை-இழிந்த; குறித்தது-கூறியது)

Koviloor Digital Library

''தம்பி! எனக்கு விருப்பமில்லாதனவற்றையும், ஆனால் நன்மை பயக்கக் கூடியவற்றையும் கூறுவேன்'' என்று பேசத்தொடங்கினாய், ஆனால் பித்தர்கள் பிதற்றுவதைப்போலப் பிதற்றியிருக்கிறாயே; என்னுடைய பேராற்றலை, அற்பமான, இகழ்தற்குரிய மானிடர்கள் வென்று விடுவார்கள் என்று கூறுகிறாயே? இவ்வாறு குறிப்பிட்டுக் கூறுவது, அவர்களிடம் நீ கொண்டிருக்கும் அச்சத்தாலா? அல்லது அவர்கள் மேல் நீ கொண்டிருக்கும் அன்பின் காரணத்தாலா? அல்லது வேறு எதனால் இவ்வாறு கூறுகிறாய்?'' என்கிறான் இராவணன்.

இங்கே இராவணன், வீடணனை 'ஐயா' என்றது இகழ்ச்சிக் குறிப்பினால் என்க. எனினும் நாம் 'தம்பி' என்றே பொருள் கொண்டிருக்கிறோம்; 'கொச்சை' என்ற சொல் அற்பமான இழிந்த என்ற பொருளில் கையாளப்பட்டிருப்பது காண்க.

102. "ஈங்கு மானுடப் பசுக்களுக்கு, இலை வரம் என்றாய்;
தீங்கு சொல்லினை; திசைகள் உலகொடும் செருக்கால்
தாங்கும் யானையைத் தள்ளி, அத்தழல் நிறத்தவனை
ஓங்கல் ஒன்றொடும் எடுக்கவும் வரம் கொண்டது உண்டோ?" (6255)

(தீங்கு-குறை; செருக்கு-ஆற்றல்/வலிமை; தள்ளி-விலகச்செய்து/வென்று; தழல்-நெருப்பு/தீ; ஓங்கல்-மலை/வெள்ளியங்கிரி)

''இங்கு இந்த மானிடர்களாகிய கோழைக்குணம் உடையவர்களை வெல்லுவதற்கு, நான்பிரமனிடம் வரம் பெற்றுவரவில்லை என்று என்மீது குறைகூறினாய்; எட்டுத் திசைகளையும் தன் ஆற்றலால் தாங்கி நிற்கும் அஷ்ட திக்கஜங்களையும் இவ்வுலகங்களோடு வென்று, அந்தத் தீவண்ணனான சிவபெருமானை, அவன் தங்கியிருக்கும் ஒப்பற்ற வெள்ளியங்கிரியொடு பெயர்த்தெடுப்பதற்கு நான் ஏதேனும் வரம் வாங்கி வந்தேனா? எத்தகைய வரமும் இல்லாது, என்னுடைய பேராற்றல் காரணமாகத்தானே என்னால் அதனைச் செய்ய முடிந்தது?'' என்று கேட்கிறான் இராவணன்.

'மானுடப்பசு' என்ற சொல்லாட்சியை நோக்குக. 'பசுக்களைப் போலச் சாதுவாகவும், கோழைகளாகவும், உள்ள மனிதர்கள்' என்பது பொருள். சமயம் கிடைக்கும்போதெல்லாம் இராவணன் மனிதர்களை அற்பமானவர்கள் என்று இழிவாகப் பேசுவதைக் காப்பியப் போக்கில் பார்க்கலாம். 'தழல் நிறத்தவன்' என்பதும் 'நெருப்பு நிறத்தவன்' என்பதும் சிவபெருமானைக் குறிக்கும். 'எரிபோல் மேனிப்பிரான்' என்பதும் 'முடித்தழல் மேனி தவளப்பொடியன்' என்பதும் தேவாரம். ஓங்கி உயர்ந்திருப்பதால் 'ஓங்கல்' என்பது மலைக்குக் காரணப்பெயர். 'செயற்கரிய செய்வர் பெரியர்' பெரிய காரியங்களைச் செய்வதற்கு ஆற்றலுடையவர்கள், வரம் பெற்றுவரவேண்டுவதில்லை'' என்று நிறுவுகிறான் இராவணன்.

Koviloor Digital Library

103. "மனக்கொடு அன்றியும், வறியன வழங்கினை; வானோர்
சினக்கொடும் படை செருக்களத்து என்னை என்செய்த?
எனக்கு நிற்க; மற்று, என்னொடு இங்கு ஒரு வயிற்று உதித்த
உனக்கு மானிடர் வலியராம் தகைமையும் உளதோ?" (6256)

(வறியன-பொருளற்றன; வழங்குதல்-சொல்லுதல்)

''மனத்தில் சிறிதும் ஆலோசிக்காமல் பயனற்ற சொற்களைச் சொல்லி விட்டாய்; தேவர்களுடன் நான் போர் செய்து வெற்றி கண்டபோது, அவர்களுடைய கொடிய ஆயுதங்களெல்லாம், போர்க்களத்தில் என்னை என்ன செய்துவிட்டன? ஒன்றும் செய்ய முடியவில்லை அல்லவா? எனக்கு நிகழ்ந்தது ஒருபக்கம் இருக்கட்டும், இவ்வரக்கர் குலத்தில் என்னோடு ஒரே தாயின் வயிற்றில் தோன்றிய உடன்பிறந்தவனான உனக்கு மட்டும் மானிடர்கள் மிக்க ஆற்றல் பெற்றவராய்த் தோன்றி விடுவார்களோ? அவர்களுக்கு அத்தகைய தகுதி உண்டோ?'' என்று கேட்கிறான் இராவணன்.

இங்கே இராவணன், தன்னைக் காட்டிலும் வலிமை குறைந்த வீடணனையே அந்த மானிடர்களால் வெல்லமுடியாதே? அவ்வாறிருக்கும்பொழுது, அவனினும் பலமடங்கு பேராற்றல் பெற்ற தன்னை எப்படி அம்மானிடர்கள் வெல்ல முடியும் என்று கருத்துப்பட பேசுகிறான் என்பதைக் கருதுக. இராவணனும், வீடணனும் விச்சிரவசு என்ற முனிவனுக்கும், கேகசி என்ற அரக்கிக்கும் மக்களாக உடன் பிறந்தவர்கள் என்பதை நினைவிற்கொள்க. இவர்களின் பிறப்பு, வளர்ப்பு பற்றி உத்தரகாண்டம் அரக்கர் பிறப்புப் படலம் மிக விரிவாகப் பேசுகிறது.

104. "சொல்லும் மாற்றங்கள் தெரிந்திலை; பன்முறை தோற்று,
வெல்லும்' ஆற்றலும் ஒருமுறை பெறஇலை; விண்ணைக்
கல்லும் ஆற்றல் என்கிளையையும் என்னையும் களத்தில்
கொல்லும் மாற்றலர் உளர் எனக் கோடலும் கொண்டாய்" (6257)

(மாற்றம்-சொற்கள்/பேச்சு/செய்தி; விண்-ஆகாயம்; கிளை-சுற்றத்தார்; மாற்றலர்-வீரர்/பகைவர்; கல்லுதல்-கிண்டுதல்/பெயர்த்தல்/தோண்டுதல்/கிளர்தல்; கோடல்-கொள்ளுதல்)

''நீ சொல்லத்தகுந்த சொற்களை தெரிந்தெடுத்துப் பேசவில்லை, என்னிடம் பலமுறை தோற்றுப் போனவர்கள் தேவர்கள், அவர்கள் ஒரு முறையேனும் வெற்றிபெறவில்லை. ஆனால் நானோ அவர்கள் வாழும் விண்ணுலகையே பெயர்த்தெடுக்கும் பேராற்றல் பெற்றவன். அத்தகையவனான என்னையும், என் உற்றார் உறவினரையும், போர்க்களத்தில் கொல்லும் ஆற்றல் பெற்ற பகைவர்களும் இருக்கிறார்கள் என்று நீ கூறுவது எவ்வாறு பொருந்தும்?'' என்று கேட்கிறான் இராவணன்.

Koviloor Digital Library

'என்கிளை' என்பதனை நோக்குக. நம்கிளை என்றுதானே கூறியிருக்க வேண்டும்? இப்பொழுதே இராவணன், வீடணன்பால் மாறுபட்ட கருத்துக் கொள்ளத் தொடங்குகிறான் என்பதை நினைவிற் கொள்க.

105. "தேவரின் பெற்றவரத்தினது என்பெரும் செருக்கேல்,
மூவரில் பெற்றம் உடையவன் தன்னொடும், முழுதும்
காவலின் பெற்ற திகிரியான் தன்னொடும், கடந்தது
ஏவரின் பெற்ற வரத்தினால்? இயம்புதி; இளையோய்!" (6258)

(செருக்கு-பேராற்றல்/வலிமை; பெற்றம்-இடபம்/ரிஷபம்/காளை/ எருது; திகிரி-சக்கரம்/சக்கரப்படை; கடந்தது-வென்று மேம்பட்டது; மூவர்-மும்மூர்த்தியர்/முதற்கடவுள்/பிரமன்/திருமால்/சிவன்; இளையோய்-இளையவன்/தம்பி)

"தம்பி! தேவர்களிடத்துப் பெற்ற வரங்களினால்தான் நான் இத்துணை பேராற்றல் பெற்றிருக்கிறேன் என்று நீ கூறுவாயேயானால், மும்மூர்த்தி களான முதற் கடவுளர்களான பிரமன், திருமால், சிவன் ஆகிய மூவருள் காளையைத் தன் வாகனமாக உடைய சிவபெருமானையும், இவ்வுலகம் முழுவதையும் காத்தல் தொழில் புரிகின்ற, சக்கரப்படையை ஏந்தியுள்ள திருமாலையும், போரில் எதிர்த்து, நான் வெற்றி கொண்டது, யார் தந்த வரத்தால்? கூறுவாயாக!" என்கிறான் இராவணன்.

தான் பெற்ற வெற்றிகளெல்லாம், வரபலத்தினால் அல்ல தன்னுடைய பேராற்றலால்தான் என்று நிறுவுகிறான் இராவணன். மும்மூர்த்திகளுள் திருமாலையும், சிவபெருமானையும் கூறி, பிரமனை விடுத்தது, அவன் பிரமன் வழி வந்தவனாதலால் என்க. குலமுறைப்படி, பிரமன் இராவணனது பாட்டன் ஆகிறான். மேலும் பிரமன் தான் இவனுக்குப் பலவரங்களை வாரி வழங்கியவன். எனவே அவனைக் கூறாது விடுத்தான் என்க. 'பெற்றம்' என்ற சொல் நமக்குப் புதிது. காளை என்பது பொருள். 'இளையோய்' என்ற சொல் தன்னைக் காட்டிலும் வயதில் இளையவன் என்பதையும், அறிவிலும் சற்று இளைத்தவன் என்பதையும் சுட்டும் தொனி தெரிவதை உணர்க. 'கடத்தல்' என்பது எதிர்நின்று போர்செய்து வெற்றி பெறுதல் என்கிறது புறநானூறு.

106. "'நந்தி சாபத்தின் நமை அடும் குரங்கு' எனின், நம்பால்
வந்த சாபங்கள் எனைப்பல; அவை செய்த வலிஎன்?
இந்திராதியர், சித்தர்கள், இயக்கர், நம் இறுதி
சிந்தியாதவர் யார்? அவை நம்மை என் செய்த?" (6259)

(நமை-நம்மை; அடும்-அழிக்கும்; எனை-எத்துணை; வலி-துன்பம்; இறுதி-அழிவு; நந்தி-சிவகணத்தாரின் தலைவன்)

Koviloor Digital Library

''தம்பி! நந்தி தந்த சாபத்தினால், நம்மைக் குரங்குகள் அழித்துவிடும் என்று நீ கூறுவாயானால், இதைப்போல் நம்மீது எத்தனைபேர் எவ்வளவு சாபங்கள் தந்திருக்கின்றனர்? அவை மிகப்பலவாயிற்றே? அவை யெல்லாம் நமக்கு என்ன தீங்கினை விளைவித்தன? இந்திரன் முதலானவர்கள், சித்தர்கள், இயக்கர்கள் ஆகிய இவர்களுள் நம்முடைய அழிவுபற்றி எண்ணாதவர்கள் யார் இருக்கிறார்கள்? அவர்கள் நம்மை என்ன செய்து விட்டார்கள்?'' என்று கேட்கிறான் இராவணன்.

இராவணன், இங்கே, தமக்குப்பல சாபங்கள் பலராலும் தரப்பட்டன என்பதை வாக்குமூலமாகக் கூறுவதை நன்கு மனத்தில் கொள்க. முன் பாடலில் தனது வெற்றிக்குக் காரணம் தேவர்கள் தந்த வரங்கள் அல்ல என்று கூறிய இராவணன், இப்போது அவர்கள் தந்த சாபங்களும் தன்னை ஒன்றும் செய்யவில்லை, செய்யமுடியாது என்கிறான் என்க. நந்தி சிவ கணங்களுக்கெல்லாம் தலைவன். சாபம் என்பது சான்றோர் வெகுளிக் கூறும் தீங்குவிளைவிக்கும் மொழி. சான்றோர் தன்மீது அருள் கூர்ந்து கூறும்மொழி வரம் என்பதறிக. வீடணன் முன்பு கேட்ட கேள்விகளுக் கெல்லாம், இராவணன் இப்போது ஒவ்வொன்றாக மாற்றம் கூறிக் கொண்டு வருகிறான். நந்தியின் சாபம் உத்தரகாண்டம் வரையெடுத்த படலத்தில் விரிவாகப் பேசப்பட்டிருக்கிறது. 'சாபமே சபித்தல் வில்லாம்' என்பது நிகண்டு.

107. "அரங்கில் ஆடுவாா்க்கு அன்பு பூண்டுடை வரம் அறியேன்;
இரங்கி, யான் நிற்ப, என்வலி அவன் வயின் எய்த,
வரம்கொள் வாலி பால், தோற்றனென்; மற்றும் வேறு உள்ள
குரங்கெலாம் எனை வெல்லும் என்று, எங்ஙனம் கோடி?" (6260)

(அரங்கு-மன்று/சபை; வயின்-இடம்; கோடி-கொள்ளுதல்; இரங்கி-மனம்சோர்ந்து/வருந்தி)

''பொற்சபையில் நடனம்புரியும் சிவபெருமானிடம் பேரன்பு பூண்டு, வாலி பெற்றிருக்கும் வரங்கள் பற்றி எனக்குத் தெரியவில்லை; எனவே அந்தப்போரில் நான் மனம் தளர்ந்து, வருந்தி நின்றபோது, என் வலிமை யில் பாதி அவனைப் போய்ச் சேர்ந்தது. இத்தகைய வரத்தை அவன் பெற்றிருந்ததனால்தான் நான் தோல்வியுற நேர்ந்தது. இதனைக்கொண்டு அவன் இனத்தைச்சேர்ந்த மற்றுமுள்ள வேறு குரங்குகள் எல்லாம் என்னை வென்றுவிடும் என்று நீ எவ்வாறு கூறுகிறாய்?'' என்று கேட்கிறான் இராவணன்.

அரங்கு என்பது பொற்சபை, கனகசபை, பொன்னம்பலம் மன்று என்று பொருள்படும். தன்னைப் பொருபவரின் வலியிற்பாதி வாலியைச் சேரும் என்பது அவன் வாங்கி வந்தவரம். இது இராவணனுக்குத் தெரியாததனால் தான், வாலியிடம் தான் தோற்க நேர்ந்தது என்கிறான் இராவணன்.

Koviloor Digital Library

வாலியிடம் தோற்றது, உத்தரகாண்டம், வாலி வாலால் கட்டுண்ட படலத்தில் விரிவாகப் பேசப்பட்டுள்ளது.

108. "நீலகண்டனும் நேமியும் நேர் நின்று நேரின்,
ஏலும் அன்னவருடை வலி அவன் வயின் எய்தும்;
சாலும் நல்வரம் நினைந்து, அவன் எதிர் செலல் தவிர்ந்து
வாலி தன்னை, அம்மனிதனும், மறைந்து நின்று எய்தான்." (6261)

(நீலகண்டன்-சிவபெருமான்; நேமி-சக்கரம்/சக்கராயுதம் ஏந்திய திருமால்; நேர்தல்-எதிர்த்தல்; வயின்-இடம்; சாலும்-மிக்க; ஏலும்-எதிர்க்கும்)

''திருப்பாற்கடலில் எழுந்த ஆலகால விஷத்தை உண்டு, கழுத்து நீலமாகப்போன நீலகண்டனாகிய சிவபெருமானும், சக்கராயுதத்தை ஏந்திய திருமாலும் நேருக்குநேர் நின்று எதிர்த்துப் போரிட்டாலும், எதிர்க்கும் அவர்களுடைய வலிமையில் பாதி, வாலியின்பாற் சென்று சேரும் என்னும் அவன் வாங்கி வந்த நல்ல வரத்தை நினைவிற் கெண்டுதான் நீ கூறிய அந்த மனிதனாகிய இராமனும், அவன் எதிரில் செல்லுவதைத் தவிர்த்து, வாலியை மறைந்து நின்று அம்பெய்து கொன்றான்'' என்கிறான் இராவணன்.

இராவணன் வாலியிடம் தான் தோற்றதற்கான காரணத்தை இவ்வாறு விளக்குகிறான் எனக் கொள்க. வாலி கேட்ட கேள்வி 'ஏன் மறைந்து நின்று அம்பு செலுத்தினாய்? என்பது அதற்கு அப்பொழுதே இலக்குவன் மாற்றம்கூறி விட்டான். இப்போது வீடணன் இராமபிரானைப் பற்றிப் பெருமையாகப் பேசியதற்கு இராவணன் மாற்றம் தருகிறான் என்க. வாலிக்கு அத்தகைய வரம் உண்டு என்பதை கிட்கிந்தா காண்டம், நட்புக்கோட் படலத்தில் 'கிட்டினார் பொரக் கிடைக்கின், அன்னவர்பட்ட நல்வலம் பாதி எய்துவான்' என்று கம்பன் கூறுவதை இங்கு நினைவுகூர்க.

இங்கே ஒரு முக்கியமான செய்தி, இவ்வாறு தன்னை எதிர்ப்பவரின் வலிமையில் பாதி வாலியைச் சென்றுசேரும் என்னும் வரம்பற்றி வான்மீகத்தில் எந்தக்குறிப்பும் இல்லை. உத்தரகாண்டத்திலும் வாலியைப் பற்றிய செய்திகளில் இந்த வரம் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. இது கம்பனின் கைவண்ணம். பின்னால் எத்தகைய கேள்விகள் எழலாம் என்பதை முன்கூட்டியே தெரிந்துகொண்டு இத்தகைய ஒரு வரம் இருப்பதாகக் கவிஞன் புனைந்திருப்பதை நினைக. இதுவான்மீகத்தில் கூறப்படாததால்தான் மூதறிஞர் இராஜாஜி அவர்களும் 'வாலி வதையில் இராமன்செயல் பாராட்டுதற்கு உரியதல்ல' என்று கூறியிருக்கிறார் என்றும் நினைக்கத் தோன்றுகிறது.

Koviloor Digital Library

109. "ஊனவில் இறுத்து, ஓட்டை மாமரத்துள் அம்பு ஓட்டி,
கூனி சூழ்ச்சியால் அரசிழந்து, உயர்வனம் குறுகி
யான் இழைத்திட இல் இழந்து, இன்உயிர் சுமக்கும்
மானுடன் வலி, நீ அலாது, யார் உளர் மதித்தார்?" (6262)

(ஊனம்-குறை/பழுது; இறுத்து-ஒடித்து; ஓட்டி-செலுத்தி; உயர்-நெடிய/நீண்ட; குறுகி-அடைந்து; இல்-மனையாள்/மனைவி; ஓட்டை-துளைபட்ட/முற்றி வயிரம் ஏறாத; மாமரம்-பெரிய மராமரம்; சூழ்ச்சி-வஞ்சனைச்செயல்)

''முன்னரேயே பழுதுபட்டிருந்த குறையையுடைய ஒரு வில்லை ஒடித்து, முன்பே உளுத்து, ஓட்டைகள் நிரம்பித் துளைபட்டிருந்த ஏழுபெரிய மராமரங்களிலும் அம்பைச் செலுத்தித் துளைத்து, கூனி என்னும் ஒரு பணிப்பெண்ணின் சூழ்ச்சியால் தன் அரச பதவியை இழந்து, உயர்ந்த மரங்கள் அடர்ந்த காட்டினை அடைந்து, என்னுடைய தந்திரத்தால் தன் மனைவியையும் பறிகொடுத்து, இத்தனையும் நடந்த பின்னரும் இன்னும் தனது இனிய உயிரைத் தாங்கிக் கொண்டிருக்கின்ற இந்த மனிதனாகிய இராமனது ஆற்றலை, உன்னைத்தவிர வேறு யார் மதித்துப் பெருமையாகப் பேசுவார்கள்? ஒருவரும் இலர்'' என்று இகழ்கிறான் இராவணன்.

மிதிலையில் சிவபெருமானின் சிவதனுசை முறித்ததுவும், கிட்கிந்தையில் சுக்கிரீவனின் சந்தேகத்தைப் போக்க ஏழு மராமரங்களையும் ஒரே வில்லினால் துளையிட்டதுவும், மிகப்பெரிய அரிய செயல் என்று எல்லோரும் பாராட்ட, இராவணன் மட்டும் அதே செயல்களை பெருமையற்ற, அற்பமான செயல்கள் என்று கூறுவதை நோக்குக. இதேபோல இராமன்மீது வெறுப்புக்கொண்ட பரசுராமன் கூற்றும் நோக்கத்தக்கது. கூனியும், தாடகை வதத்தைக் கேலி பேசியதையும் இங்கு நினைவு கூர்க. ஒருவர் எவ்வளவு நல்ல அரிய பெரிய காரியங்களைச் செய்திருந்தாலும், அது பெரும்பாலோரால் பாராட்டப் பெற்றிருந்தாலும், அவருக்குப் பிடிக்காத சிலர், வெறுப்பினால் அதே செயலை இழிவாகப் பழித்துரைப்பர் என்பது ஒரு உயர்ந்த உளவியல் கருத்து, இங்கு எடுத்துக் காட்டோடு கூறப்படுவதை எண்ணுக. சிற்றன்னையிடம் தந்தை தந்த வரத்திற்குப் பங்கம் வந்துவிடக்கூடாது என்ற வாய்மையும், மரபும் காக்கும் உயரிய நோக்கத்துடன் அரசச் செல்வத்தைத் தன் இளவலுக்கு மனம் உவந்து நல்கி வனம்புகுந்த இராமபிரானின் உயரிய செயல், இராவணனால் பழித்துரைக்கப்படுவதைக் காண்க. தான் ஏதோ பெரிய காரியத்தைச் சாதித்து விட்டதைப்போல, 'யான் இழைத்திட இல் இழந்து' என்று இறுமாப்புடன் கூறுவதையும் உணர்க.

இந்நிகழ்ச்சிகள் எல்லாம், பாலகாண்டம் கார்முகப்படலத்திலும், பரசுராமப்படலத்திலும், அயோத்தியா காண்டம் மந்தரை சூழ்ச்சிப்

Koviloor Digital Library

படலத்திலும், கிட்கிந்தா காண்டம் மராமரப்படலத்திலும் கூறப்பட்டிருப்பதையும் இங்கு ஒப்பு நோக்குக. இவ்வளவு நடந்த பின்னரும், உயிர் சுமந்துகொண்டிருக்கிறானே இவன் ஒரு மனிதனா? என்ற இகழ்ச்சிக் குறிப்புத் தோன்ற, 'இன்னுயிர் சுமக்கும் மானுடன்' என்றான் என்க. 'ஊனவில், ஓட்டை மராமரம்' என்பதில் தொனிக்கும் வெறுப்பையும், ஏளனத்தையும் கருதுக.

''முன்பு ஒருமுறை இந்த ஏழு ஆச்சா மரங்களையும் தனித்தனியாகவும், எல்லாவற்றையும் ஒரே சமயத்தில் சேர்த்தும், அந்த வாலி பலமுறை தொலைத்திருக்கிறான்'' என்று வான்மீகம் கூறுவதும் இங்கு கருதத்தக்கது. இராவணன் இராமபிரானை இகழ்ந்து பேசுவதால் இது 'இளிவரல்' என்னும் சுவைக்குச் சிறந்த எடுத்துக்காட்டான பாடல் எனக் கொள்க.

110. வீடணன் மேலும் கூறுதல்

என்று தன் உரை இழித்து, 'நீ உணர்விலி' என்னா,
'நன்று! போதும் நாம்; எழுக!' எனும் அரக்கனை நணுகா,
'ஒன்றுகேள், இனம் உறுதி' என்று அன்பினன், ஒழியான்,
துன்று தாரவன், பின்னரும், இனையன சொன்னான். (6263)

(இழித்து-இகழ்ந்து/பழித்து; உணர்விலி-அறிவிலி; போதும்-போவோம்/செல்வோம்; எழுக-புறப்படுக; நணுகா-நணுகி/அணுகி/நெருங்கி; துன்று-செறிந்த; தார்-மாலை; இனம்-இன்னம்/இன்னும்; உறுதி-நிச்சயம்/நன்மைபயப்பது; இனையன-இவற்றை)

என்று இராவணன் வீடணனுடைய அறிவுரைகளையெல்லாம் பழித்தும் ''நீ ஆராய்ந்து அறியும் அறிவில்லாதவன்'' என்று இழித்தும் கூறி அங்கு நின்றிருந்தவர்களை நோக்கி, 'நல்லது நாம் போருக்குப் புறப்படுவோம், என்னுடன் எழுந்து வருக' என்று ஆணையிட்டுக் கொண்டிருக்கும் அரக்கர் தலைவனான இராவணனை, வீடணன் நெருங்கி, 'நான் இன்னும் நன்மைபயக்கும் ஒன்றைக் கூறுகிறேன் கேட்பாயாக!' என்று தன் தமையன்மீது கொண்ட பாசம் நீங்காதவனான, செறிந்த மலர்மாலை அணிந்தவனான வீடண்ன், பின்னரும் கீழ்வருவனவற்றை கூறலானான்.

தன்னை இவ்வளவு கேவலப்படுத்தியும், வீடணன் தன் தமையன் இராவணன் மீது கொண்டிருந்த அன்பும், பாசமும் நீங்காதவன் என்பதைக் குறிப்பிட்டு 'அன்பினன் ஒழியான்' என்று கூறினார் என்க. தன் தமையன் தன்மீது வெறுப்பைக் காட்டினாலும், அதைத் தாங்கிக்கொண்டு, நீதி விடாது நின்றுரைத்தான் என்க. இதை அமைச்சர்களுக்கு உரிய குணமாக வள்ளுவனும் பேசுவதை நோக்குக. 'அறி கொன்று அறியான் எனினும் உறுதி உழையிருந்தான் கூறல் கடன்' என்பது குறள் - 638.

Koviloor Digital Library

111. "தன்னின் முன்னியபொருள் இலாஒரு தனித்தலைவன்,
அன்ன மானுடன் ஆகிவந்து, அவதரித்து அமைந்தான்;
சொன்ன நம்பொருட்டு, உம்பர்தம் சூழ்ச்சியின் துணிவால்;
இன்னம் ஏகுதி போலும்' 'என்று அடிதொழுது இரந்தான்" (6264)

(முன்னிய-மேலான/முற்பட்ட; தனி-ஒப்பற்ற; உம்பர்-தேவர்கள்; சூழ்ச்சி-ஆராய்ச்சி; துணிவு-முடிவு; சொன்ன-கூறப்பட்ட; அவதரித்து-தோன்றி; அமைதல்-நிரம்புதல்; இரத்தல்-வேண்டுதல்)

''தனக்கு மேம்பட்ட, மேலான, முற்பட்ட சிறந்த பொருள் வேறொன்றும் இல்லாத, ஒரு ஒப்பற்ற தலைவனான அந்தப் பரம் பொருளே, தேவர்களின் ஆலோசனையின்படியும், வேண்டுதலின் படியும், ஒரு முடிவுஎடுத்து, அந்த மனிதவடிவான இராமன் என்னும் அவதாரம் கொண்டு, பூமியில்வந்து தோன்றியிருக்கிறான். யாவராலும் பழிக்கப்படும் தீமையே செய்து வாழும் நம்மை அழிக்கும் பொருட்டு, அவன் அவதரித்துள்ளான் என்பதை அறிந்த பின்னும், இன்னும் நீ அவனுடன் எதிர்த்துப் போர் செய்யவே செல்லுகிறாய் போலும். இது தகாது''. என்று தமையனின் பாதங்களில் விழுந்து வணங்கி வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறான் வீடணன்.

'தன்னின் முன்னிய பொருள்இலா ஒரு தனித்தலைவன்' என்பது பரம்பொருள்தனக்கு முற்பட்ட பொருள் என்று ஒன்றும் இல்லை என்றும், தன்னைவிட மேம்பட்ட பொருள் என்று ஒன்றும் இல்லை என்றும், அதன் தொன்மையையும், வலிமையையும், மகத்துவத்தையும் குறிக்கும் என்க. 'அன்னமானுடன் ஆகிவந்து' என்பது, பரம்பொருள் மானிடச் சட்டை தரித்து அயோத்தி வேந்தனுக்கு இராமன் என்னும் பெயர்கொண்டு மனித உருவில் வந்து தோன்றியவன்' என்ற பொருள் தரும். இது அவனாக ஏற்படுத்திக்கொண்ட தோற்றமன்று என்பதை விளக்க, 'உம்பர் தம் துணிவால்' என்றார் என்க. அவதார நோக்கம் 'சொன்ன நம்பொருட்டு' என்பதுதண்டகாரண்யத்து முனிவர்களுக்கு நாம்தீமையே இழைக்கிறோம் என்று அவர்கள் சொல்லியதைக் கருத்தில் கொண்டு, நம்மை வேரோடு அழிக்கும்பொருட்டு, என்று விரிவானபொருளைத்தரும். 'இன்னும் ஏகுதி போலும்' என்பது, இவ்வளவும்தெரிந்த பின்னரும்நீஅவர்களைஎதிர்த்துப் போருக்குச் செல்லுவது என்பது தகாது, கூடாது இதனைத்தவிர்ப்பாயாக! என்று வீடணன் இராவணனை வேண்டிக்கொள்வதைக் குறிக்கும்.

112. இராவணன் மீண்டும் பதில் உரைத்தல்

அச்சொல் கேட்டு, 'அவன் ஆழியான் என்றனை; ஆயின்,
கொச்சைத் துன்மதி எத்தனை போரிடைக் குறைந்தான்?
இச்சைக்கு ஏற்றன, யான் செய்த இத்தனை காலம்,
முச்சு அற்றான்கொல், அம் மழுமுதலோன்?' என, முனிந்தான். (6265)

Koviloor Digital Library

(ஆழியான்-ஆணைச்சக்கரத்தை உடையவன்/திருமால்; கொச்சை-இழிந்த/கோழையான; துன்மதி-அற்பமான புத்தி; குறைதல்-தோற்றல்; இச்சை-விருப்பம்; முச்சு-மூச்சு/உயிர்ப்பு; முழுமுதலோன்-தனித் தலைவன்/பரம்பொருள்; முனிதல்-வெகுள்தல்)

இவ்வாறு வீடணன் கூறியவைகளைக் கேட்ட இராவணன், ''சக்கரப் படையை உடையவனும், திருப்பாற்கடலில் அறிதுயில் கொள்ளுபவனு மாகிய திருமாலின் அவதாரம்தான் அவன் என்று நீ கூறுகிறாய்; அப்படியானால் இழிந்த கோழையானவனும், கெட்ட புத்தி உடையவனு மான அவன், என்னிடம் எத்தனை போர்க்களத்தில் தோற்று ஓடியிருக் கிறான்? இதுவரை நான் செய்த போர்கள் எல்லாம் என்னால் விருப்பப் பட்டு செய்தவையாகும். அப்பொழுதெல்லாம் நீ பரம்பொருள் என்று கூறும் அவன் இத்தனை காலமும் மூச்சுப் பேச்சற்றுச் செயலற்றிருந் தானே? அது ஏன்?'' என்று சற்று சினந்து கேட்டான் இராவணன்.

வீடணன் 'தன்னின் முன்னிய பொருள் இலா ஒரு தனித்தலைவன்' என்று கூறியதையே இராவணன் திருப்பி, 'முழுமுதலோன்' என்று கூறியதை நோக்குக. 'கொச்சை மாந்தரைக் கோல்வளை மாதரும் கூசார்' என்று முன்பு ஆரண்யகாண்டத்தில் கூறியதையும் இங்கு ஒப்பு நோக்குக.

113. "இந்திரன் தனை இருஞ்சிறை இட்டநாள், இமையோர்
தந்திகோடு இறத் தகர்த்த நாள், தன்னை யான் முன்னம்
வந்த போர்தொறும் துரந்த நாள், வானவர் உலகைச்
சிந்த வென்ற நாள், சிறியன் கொல் நீ சொன்ன தேவன்?" (6266)

(இரும்-பெரிய; இட்ட-வைத்த; நாள்-காலம்; இமையோர்-தேவர்கள்; தந்தி-யானை; கோடு-கொம்பு/தந்தம்; தகர்த்த-முறித்த; துரந்த-துரத்திய; வானவர்-தேவர்கள்; சிந்த-சிதறி ஓடும்படி)

''நான் தேவர்களுக்குத் தலைவனான தேவேந்திரனைப் பெரிய சிறையில் அடைத்துவைத்த காலத்திலும், தேவர்களின் தலைவனான இந்திரனின் ஐராவதம் என்னும் யானையின் தந்தம் முறியும்படி செய்த காலத்திலும், என்னை அவன் எதிர்த்து வந்தபோது அவனைப் புறமுதுகு காட்டும்படி ஓடஓடத் துரத்தி வெற்றிபெற்ற காலத்திலும், தேவர்கள் உலகத்துக்கு நான் சென்று அவர்கள் நிலைகெட்டு சிதறி ஓடும்படி செய்த காலத்திலும், நீ சொன்ன அந்த முழுமுதற்கடவுள் அப்பொழுது வயதிலும் வலிமையிலும் அனுபவத்திலும் மிகச்சிறியவனாக இருந்தானோ? அவற்றையெல்லாம் தடுக்கும் ஆற்றல் இல்லாது வலிமையற்றவனாக இருந்தானோ?'' என்று இகழ்ந்து பேசுகிறான் இராவணன்.

தந்தத்தை உடையதால் 'தந்தி' என்பது யானைக்குக் காரணப்பெயர். அது இங்கே ஐராவதத்தைக் குறித்தது.

Koviloor Digital Library

114. "சிவனும், நான்முகத்து ஒருவனும், திருநெடுமாலாம்
அவனும், மற்றுஉள அமரரும், உடன் உறைந்து அடங்க,
புவனம் மூன்றும் நான் ஆண்டு உளது, ஆண்ட அப்பொருஇல்
உவன் இலாமையினோ? வலி ஒதுங்கியோ? உரையாய்!" (6267)

(ஒருவன்-ஒப்பற்றவன்; திரு-திருமகள்/அழகிய; உறைந்து-தங்கி; புவனம்-உலகம்; ஆண்ட-கைக்கொண்ட; பொரு-போர்செய்தற்குரிய; ஒதுங்கியது-ஒடுங்கியது)

"சிவபெருமானும், நான்கு முகங்களையுடைய பிரமன் என்று சொல்லப்படுகின்ற அந்த ஒப்பற்றவனும் அழகிய திருமகளைத் தன் மார்பில் கொண்டிருக்கும் திருமகள் நாயகனாகிய திருமாலும், மற்றுமுள்ள தேவர்கள் எல்லோரும் நான் ஆட்சிபுரிகின்ற இந்த மூன்று உலகங்களுக் குள்ளும் ஒடுங்கி இருந்து, எனக்குக் கீழ்பட்டு இருக்கிற செயல், ஒப்புயர் வற்ற சார்ங்கம் என்னும் வில்லை ஏந்திய அந்தத் திருமால் கையில் இல்லாததனாலா? அல்லது என் போராற்றலுக்கு அஞ்சி ஒடுங்கிப் போனதாலோ? கூறுவாயாக!" என்று இகழ்ந்து கேட்கிறான் இராவணன்.

சிவன், பிரமன், திருமால் ஆகிய மும்மூர்த்திகளையும் எனக்கு கீழ், என் ஆட்சியில் குற்றேவல் புரியவைத்து வெற்றி கண்டவனான நான், நீ கூறும் மானிடப் பிறவியனான ஒருவனுக்கு அஞ்சுவேனா! என்று கேட்கிறான் இராவணன் என்பதாம்.

115. "ஆயிரம் பெருந் தோள்களும், அத்துணைத் தலையும்,
மாஇரும்புவி உள்ளடி அடக்குறும் வடிவும்,
தீய 'சாலவும் சிறிது' என நினைந்து, நாம் தின்னும்
ஓயும் மானுட உருவு கொண்டனன் கொலாம்; உரவோன்?" (6268)

(சாலவும்-மிகவும்; புவி-உலகம்; உள்ளடி-உள்ளங்கால்; ஓய்தல்-வலிமை குறைதல்; தீய-குறைவுடையவை; உரம்-வலிமை)

"நீ பெரும் வலிமையுள்ளவன் என்று கூறுகின்றவனும், ஆயிரம் பெரிய தோள்களையும், அதே அளவுள்ள தலைகளையும் கொண்டு, இந்தப் பெரிய பூவுலகத்தையே தன் ஓரடிக்குள் அடக்கிவிடுகின்ற தோற்றம் கொண்டவனுமான திருமால், இவை குறையுடையவை, மிகவும் சிறியதானவை என்று உணர்ந்து, நாம் தின்பதற்கு வசதியாக, தனது வலிமையைக் குறைத்துக்கொண்டு, மனிதஉருவம் எடுத்துக்கொண்டு இப்பொழுது வந்திருக்கிறானோ?" என்று வீடணன் வெகுண்டும், இராமனை இகழ்ந்தும் கூறுகிறான்.

திருமால் ஆயிரம் பெருந்தோள்களும், தலைகளும், கைகளும், கண்களும் உடையவன் என்பதை 'காலாயிரம், முடியாயிரம், ஆயிரம் கைபரப்பி' என்ற திவ்வியப்பிரபந்தப் பாடலால் அறியலாம். 'சகஸ்ர பாத'

Koviloor Digital Library

என்பதும், 'சகஸ்ர சீர்ஷ புருஷ' என்பதும் புருஷ சூக்தம் 'மா இரும் புவி உள்ளடி அடக்குறும் வடிவம்' என்பது திருவிக்கிரம அவதாரத்தைக் குறிக்கும். 'ஓங்கி உலகளந்த உத்தமன்' என்பது திருப்பாவை; 'மாலும் குறளாய் வளர்ந்து, இரண்டு மாணடியால் ஞாலம் முழுதும் நயந்து அளந்தான்' என்பது திருவள்ளுவமாலை. 'மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான், தா அயது எல்லாம் ஒருங்கு' என்பது குறள் - 70. 'பத்துத்தலையும், இருபது தோள்களும் உடைய என்னிடமே ஆயிரம் தோள்களும், தலைகளும் உடைய திருமால் தோற்றோடினான் என்றால், இப்போது அற்பமான மானிட வடிவம்கொண்ட இராமன் என்னை எப்படி வெல்ல முடியும்?'' என்று இகழ்ந்து கூறுகிறான் இராவணன் என்பதாம்.

116. ''பித்தனாகிய ஈசனும், அரியும் என்பெயர் கேட்டு,
எய்த்த சிந்தையர்; ஏகுழி, ஏகுழி எல்லாம்,
கைத்த ஏற்றினும், கடவிய புள்ளினும், முதுகில்
தைத்த வாளிகள் நின்று உள; குன்றின் வீழ்தடித்தின்'' (6269)

(ஈசன்-சிவபெருமான்; அரி-திருமால்; எய்த்த-சோர்ந்த; ஏகுழி-சென்ற இடம்; கடவிய-செலுத்திய/ஊர்ந்த; ஏறு-காளை/ரிஷபம்; புள்-பறவை/கருடன்; வாளி-அம்புகள்; தடித்-மின்னல்/இடி; நின்றுள-நிலைத்திருக்கின்றன; கைத்தல்-செலுத்துதல்; தைத்த-ஊன்றிய)

''பித்தன் என்று சொல்லப்படுகின்ற சிவபெருமானும், திருமாலும், என்னுடைய பெயரைக் கேட்டாலேயே அச்சத்தால், சோர்ந்துபோய் மனத் தளர்ச்சி அடைவர். அவர்கள் செல்லுகின்ற இடங்கள் எல்லாவற்றிலும், அவர்களுக்கு வாகனமாய் அமைந்த அவர்கள் ஏறிச்செலுத்துகின்ற காளை, கருடன், ஆகியவற்றின் முதுகில், என்னுடைய அம்புகள் ஊன்றித்தைத்த வடுக்கள், மலையின்மீது விழுந்த இடிபோல, இன்றும் நிலைத்து நிற்கின்றன'' என்று எள்ளி நகையாடுகிறான் இராவணன்.

சிவபெருமானைப் பித்தன் என்பது திருமுறைகள். 'பித்தா! பிறைசூடி' என்பது சுந்தரர் தேவாரம்; மலையின்மீது இடிவிழுந்தால் எப்படி அழிக்கமுடியாத ஒரு தடத்தை உருவாக்குமோ அதுபோல காளையின் முதுகிலும், கருடனின் முதுகிலும், என்னுடைய அம்புகள் தைத்த வடுக்கள், இன்றும் நிலைத்திருக்கின்றன என்று தன் வீரச்செயலை சான்றுடன் குறிப்பிடுகிறான் இராவணன் என்க. 'வாளிகள்' என்பது அம்பினால் அமைந்த வடுக்களைக் குறிக்கும். 'தடித்' என்பது மின்னல் என்றாலும் இங்கே இடியைக் குறித்தது என்க.

117. ''வெஞ்சினம் தரு போரின் எம்முடன் எழ வேண்டா;
இஞ்சி மாநகர் இடம் உடைத்து; ஈண்டு இனிது இருத்தி;
அஞ்சல், அஞ்சல்!'' என்று, அருகு இருந்தவர் முகம் நோக்கி,
நஞ்சின் வெய்யவன் கை எறிந்து, உரும் என நக்கான். (6270)

Koviloor Digital Library

(வெய்யவன்-கொடியவன்; வெம்-கொடிய; இஞ்சி-மதில்/அரண்; இனிது-நன்கு; எறிதல்-தாக்குதல்/மோதுதல்; உரும்-இடி; நக்கான்-சிரித்தான்)

நஞ்சைக் காட்டிலும் கொடியவனான இராவணன், வீடணனை நோக்கி, ''கொடிய சினத்துடன் தொடங்கப்படுகின்ற இந்தப் போரில் பங்குகொள்ள எங்களுடன் நீ வரவேண்டாம், மதில்கள் சூழப்பட்ட இலங்கை மாநகரில் நிறைய விசாலமான இடப்பரப்பு இருக்கிறது. இங்கேயே நன்றாகத் தங்கியிரு. எதற்கும் பயப்படாதே'' என்று மீண்டும் மீண்டும், இகழ்வாகக் கூறி, அருகிலிருந்த அமைச்சர்கள் முதலானவர் களின் முகத்தைப் பார்த்து, தன் இருகைகளையும், ஒன்றோடொன்று கொட்டி, இடி இடித்ததுபோல பெரிதாகச் சிரித்தான்.

'இஞ்சி மாநகர் இடம் உடைத்து ஈண்டு இனிது இருத்தி அஞ்சல்' என்ற சொற்கள் இகழ்ச்சிக் குறிப்புக்கள். கை எறிதலும் உரும் என நகுதலும், வெகுளியின் மெய்ப்பாடு. இகழ்ச்சிக்கும் உரியதாம்.

118. வீடணன் மீண்டும் கூறுதல்

பின்னும் வீடணன், 'ஐய! நின்தரம் அலாப் பெரியோர்,
முன்னை நாள், இவன் முனிந்திடக் கிளையொடும் முடிந்தார்;
இன்னம் உண்டு யான் இயம்புவது; இரணியன் என்பான்,
தன்னை உள்ளவா கேட்டி' என்று, உரைசெயச் சமைந்தான். (6271)

(கிளை-சுற்றம்; முடிந்தார்-மாண்டனர்; உள்ளவா-உள்ளவாறு/உள்ள படி; கேட்டி-கேட்பாயாக; தரம்-அளவு; சமைந்தான்-தொடங்கினான்)

அதனைக் கேட்ட பின்னர், வீடணன் இராவணனை நோக்கி, ''ஐய! உன்னுடைய ஆற்றல், வலிமை, அறிவு முதலிய அளவுகளில் உன்னை விட மேம்பட்ட நம்குலத்துப் பெரியவர்கள் பலர், முற்காலத்தில், இந்தத் திருமால் சினந்து எழுந்ததால் தன் சுற்றத்தாருடன் தாமும் அழிந்து பட்டனர். எனவே உனக்கு நான் கூறவேண்டுவது இன்னும் இருக்கிறது. இரணியன் என்று சிறப்பித்துக் கூறப்படுபவனின் வரலாற்றை உள்ளது உள்ளபடி, குறைமிகை இன்றிக் கூறுகிறேன் சற்று கேட்பாயாக!'' என்று அவன் வரலாற்றைக் கூறத்தொடங்கினான். 'நின்தரம் அலாப் பெரியோர்' என்பதில் இராவணனை இகழ்வாகவும், புகழ்ச்சியாகவும் கூறும் தொனி தோன்றுவதை நோக்குக.

இராவணன் மந்திரப்படலம் நிறைவுற்றது

Koviloor Digital Library

3. இரணியன் வதைப் படலம் [176 பாடல்கள்]

ஹிரண்யம் என்ற வட சொல்லுக்குப் பொன் என்று பொருள். ஹிரண்யன் என்பதன் தமிழாக்கம் இரணியன். பொன் போன்ற நிறத்தினன் பொன்வண்ணன் என்பது அவனுக்குக் காரணப்பெயர். இவன் தம்பி இரண்யாட்சன், இவன்தான் முன்பு திருமாலால் வராக அவதாரம் எடுத்துக் கொல்லப் பட்டவன். இவர்களின் தந்தை காசியப முனிவர்; தாய் திதி, அசுர குலத்தவர், இரணியன் பிரமதேவனிடம் இருந்து பல வரங்களைப் பெற்றவன். அவனும் அசுரகுல வேந்தன். முனிவர்களுக்கும் மற்றையோர்க்கும், இராவணனைப் போலவே துன்பம் தந்து வந்தான். இவனைத் திருமாலே நரசிங்க அவதாரம் எடுத்துக் கொன்றான் என்பது ஒரு புராண வரலாறு. இவன் இவ்வாறு ஏன் வதைக்கப்பட்டான் என்று கூறுவதே இப்படலத்தின் கருப்பொருள். இது வான்மீகம் உட்பட்ட ஏனைய இராமாயணங்களில் இல்லாது, கம்பனால் மட்டும் பாடப்பெற்றது என்பது இதன் தனிச்சிறப்பு.

இராவணனைப் போல் இருந்த ஒரு அசுரன், எவ்வாறு திருமாலால் கொல்லப்பட்டான் என்பதை இராவணனுக்குத் தெளிவுபடுத்த, வீடணன் இதனைக் கூறுவதாகக் கம்பன் இந்த இடத்தைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறான். இப்படலத்தில் வேத, உபநிடதக் கருத்துக்கள் மிகுதியாகப் பேசப்படுவதைக் காணலாம். இது 176 பாடல்களைக் கொண்டது. சில சுவடிகளில் 'இரணியன் கதைப் படலம்' எனவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தச் செய்தி வான்மீகத்துள் இல்லாததால், கம்பன் இதனைத் திருவரங்கத்தில் மேட்டழகிய சிங்கர் சந்நிதியில் அரங்கேற்றம் செய்தபொழுது, புலவர்கள் சிலர் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர் என்றும், அங்கே எழுந்தருளியுள்ள சிங்கப்பிரான், தன் திருக்கரங்களை நீட்டித் திருமுடியை அசைத்துப் பெரும் சிரிப்புச் சிரித்து ஆரவாரித்து அங்கீகரித்து அருளினார் என்றும் செவி வழிச் செய்திகள் உண்டு.

இப்படலத்துள், இரணியனின் பெருமை; அவன் மகன் பிரகலாதனின் தன்மை; அவனைப் பள்ளிக்கு அனுப்புதல்; வேதம் ஓதுவித்தல்; ஆசிரியர் 'ஓம் இரணியாய நம' எனச் சொல்ல, பிரகலாதன் 'ஓம் நமோ நாராயணாய' என்றே கூறுதல்; ஆசிரியர் மீண்டும் மீண்டும் வேண்டவும், பிரகலாதனின் மாறாத உறுதிப்பாடு; வேறு வழியறியாது இச்செய்தியை ஆசிரியர்

Koviloor Digital Library

இரணியனிடம் தெரிவித்தல்; அவன் கூறியதைக் கூறவே ஆசிரியன் அஞ்சுதல்; இரணியன் பிரகலாதனை நேரே வரவழைத்து என்ன நிகழ்ந்தது என்று கேட்டல்; பிரகலாதன் எட்டெழுத்து மந்திரத்தையே திரும்பவும் அவனிடமும் கூறுதல்; எட்டெழுத்து மந்திரத்தின் சிறப்புகளையும் தந்தைக்கு விரிவாக எடுத்து விளக்குதல்; இரணியன், பிரகலாதன்மீது கடும் சினம் கொள்ளுதல்; இருவர்க்குள்ளும் நீண்டநேரம் உரையாடல் நிகழ்தல்; இறுதியில் இரணியன் பிரகலாதனைக் கொன்றுவிடுமாறு ஏவலாளர் களுக்குக் கட்டளையிடுதல்; வீரர்கள் பிரகலாதனைக் கொல்லப் பல்வேறு வழிகளில் முயற்சித்தல்; அனைத்திலும் அவன் தப்பித்து உயிர் பிழைத்திருத்தல்; மீண்டும் தந்தையும், மகனும் உரையாடுதல்; இரணியன் இறைவன் எங்கும் இருக்கிறான் என்றால் இந்தத் தூணில் இருக்கிறானா என்று கேட்டு அதனைத் தாக்குதல்; அதனின்றும் நரசிங்கம் வெளிப்பட்டுச் சிரித்தல்; பிரகலாதன் பெருமகிழ்ச்சி கொள்ளுதல்; இரணியன் அஞ்சினா னேனும், இறைவனைப் போருக்கு அழைத்தல்; இருவரும் போர் செய்ய, இறுதியில் நரசிங்கம் இரணியன் மார்பைப் பிளத்தல்; தேவர்கள் அஞ்சுதல்; பிரமன் நரசிங்கத்தின் சினத்தைத் தணிக்க முயலுதல்; இறைவன் சினம் தணிந்து தேவர்கட்கு அபயம் அளித்தல்; திருமகளும் உடன் தோன்றுதல்; இறைவன், பிரகலாதனுக்கு அருள்மொழி கூறுதல்; பிரகலாதனுக்கு வரம் அருளுதல்; பிரகலாதனுக்கே முடிசூட்டப் பணித்தல்; பிரகலாதன் முடிசூடி அரசேற்றல்; வீடணன் முடிவு கூறுதல்; ஆகிய நிகழ்ச்சிகள் மிகமிக விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன.

1. இரணியன் பெருமை

வேதம் கண்ணிய பொருள்எலாம் விரிஞ்சனே ஈந்தான்;
போதம் கண்ணிய வரம்எலாம் தரக்கொண்டு போந்தான்;
காதும் கண்ணுதல், மலர்அயன், கடைமுறை காணாப்
பூதம் கண்ணிய வலிஎலாம், ஒரு தனி பொறுத்தான். (6272)

(கண்ணிய-கருதிய; விரிஞ்சன்-பிரமன்/நான்முகன்; போதம்-ஞானம்; காதுதல்-அழித்தல்/ஒழித்தல்; கண்ணுதல்-நுதல்கண்/நெற்றிக்கண்ண னான சிவபெருமான்; கடைமுறை-முடிவு/எல்லை; பொறுத்தல்-தாங்குதல்; தர-உதவ)

வேதங்களில் கூறப்பட்டிருக்கின்ற மறைபொருள்களின் விளக்கங் களை எல்லாம் அந்தவேத முதற்காரணனாகிய பிரமதேவனே, தானே குருவாக இருந்து இரணியனுக்கு நேராகக் கற்பித்தான்; அவனுடைய ஞானத்தால் கருதப்பட்ட எல்லா வரங்களையும் பிரமனிடமிருந்து பெற்றுக்கொண்டு திரும்பி வந்தான். அழிக்கும் தொழிலையுடைய நெற்றிக்கண்ணை உடைய சிவபெருமான், தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமன் எல்லை காணமுடியாத ஐம்பெரும் பூதங்கள் கொண்டுள்ளனவு

Koviloor Digital Library

மானஎல்லா ஆற்றல்களையும் தான் ஒருவனே பெற்றவனாகத் திகழ்ந்தான் இரணியன்.

இரணியனுக்கு வேதங்களின் உட்பொருளைக் கற்றுக்கொடுத்தவனே, அந்த வேத நாயகனாகிய பிரமதேவனாவான், தான் பெற்ற ஞானத்திற்கு ஏற்ப, தனக்கு வேண்டிய வரங்களையெல்லாம், ஒன்றுவிடாமல் பிரம தேவனிடம் இருந்து பெற்றுக்கொண்டுதான் இரணியன் திரும்பி வந்தான். வேதங்களும், வரங்களும் மட்டுமல்ல, சிவன், திருமால், பஞ்சபூதங்கள் இவர்களிடம் உள்ள எல்லையில்லா எல்லா வல்லமையையும் இவன் தனி ஒருவனே பெற்றுக்கொண்டு, சர்வ வல்லமை படைத்தவனாகத் திகழ்ந் தான். இரணியன் மேற்கொண்ட தவங்களின் தன்மையும், அவன் பெற்ற வரங்களின் வலிமையும் பாகவதத்தில் விரிவாகப் பேசப்பட்டிருப்பது காண்க.

2. "எற்றை நாளினும் உளன் எனும் இறைவனும், அயனும்
கற்றை அம்சடைக் கடவுளும், காத்து அளித்து, அழிக்கும்
ஒற்றை அண்டத்தின் அளவினோ? அதன்புறத்து உலவா
மற்றை அண்டத்தும் தன்பெயரே சொல வாழ்ந்தான்" (6273)

(இறைவன்-திருமால்; அம்-அழகிய; கற்றை-தொகுதி; அளவினோ-அடங்கியவனோ; உலவா-எண்ணிலடங்காத; அயன்-பிரமன்)

எக்காலத்தும் ஊழிமுடிவுக்காலத்திலும்கூட, அழிவே இல்லாது நிலைத்து நிற்பவனாகிய கடவுள் என்று வேதங்களில் கூறப்படும் திருமாலும், படைப்புக்கடவுளான பிரமதேவனும் அழகிய சடாமுடியைக் கொண்ட அழித்தற் கடவுளான சிவபெருமானும் முறையே காத்து, படைத்து அழிக்கும் இந்த ஒரு அண்டகோளத்தில் மட்டும் அடங்குமோ? அல்ல. இவ்வண்டகோளத்தின் புறத்தே எண்ணிலடங்காது இருக்கும் ஏனைய அண்டகோளங்களில் உள்ளவர்களும், திருமாலின் பெயராகிய எட்டு எழுத்து மந்திரமாகிய 'ஓம் நமோ நாராயணாய' என்று கூறுவதைத் தவிர்த்து, தன் பெயரான 'ஓம் இரணியாய நம' என்றே போற்றிக் கூறும்படி இனிது வாழ்ந்து வந்தான் இரணியன்.

'எற்றை நாளினும் உளன்' என்பது, திருமாலின் நித்தியத்துவத்தை குறித்தது. 'விஷ்ணு' என்ற வடசொல்லுக்கு ஊழிக்காலத்தும் அழியாது நிலைத்திருப்பவன் என்பது பொருள். இவன் வாழும் ஒரு அண்டத்தில் மட்டுமல்ல, எல்லா அண்டங்களிலும் வாழ்பவர்களும் இவன் பெயரையே கூறித் துதிக்குமாறு இனிது வாழ்ந்திருந்தான் என்று இரணி யனின் ஏற்றம் பேசப்படுகிறது. முத்தேவர்களும் உலக இயக்கத்திற்கு இன்றியமையாதவர்கள் என்றாலும், காத்தல் தொழிலின் சிறப்புத் தோன்றத் திருமாலை முன்னே சொன்னார் எனக்கொள்க, ஊழிக்காலத்தில்,

Koviloor Digital Library

ஏனைய இருவரும் உருக்கரந்து, தன்னோடு ஒன்றாகிப் போவதால், தன்நிலை மாறாது உள்ள முதல்வன் என்று திருமாலைக் குறித்தார் என்க.

3. பாழி வன்தடந்திசை சுமந்து ஓங்கிய பணைக்கைப்
பூழை வன்கரி இரண்டு, இருகைக்கொடு பொருத்தும்;
ஆழம் காணுதற்கு அரியவாய், அகன்ற பேர் ஆழி
ஏழும், தன் இருதாள் அளவு எனக்கடந்து ஏறும். (6274)

(பாழி-அகன்ற; வன்-வலிய; தடம்-பெரிய; பணை-பருத்த; கரி-யானைகள்; பொருத்தி-பிணைத்து; ஆழி-கடல்கள்; தாள்-கால்கள்; அரிய-அருமையான; ஏறுதல்-தாண்டி மேற்செல்லுதல்; பூழை-துவாரம்)

இடம் அகன்ற விசாலமான, வலிய, பெரிய எட்டுத்திசைகளையும் தாங்கி நிற்கின்ற உயர்ந்த, பருத்த, துளையுள்ள துதிக்கைகளையுடைய எட்டு யானைகளுள் வலிய இரண்டு யானைகளைத் தன் கைகளில் எடுத்துக் கொண்டு அவற்றை ஒன்றோடொன்று மோதவிட்டு விளையாடுவான்; ஆழம் எவ்வளவு என்றே பார்க்க இயலாதனவாகிய, விசாலமான பெரிய ஏழு கடல்களையும், தன் இரு கணைக்கால் அளவுதான் அவற்றின் ஆழம் என்றுகூறும்படி, அனாயாசமாக அவற்றைத் தாண்டிச்சென்று கரையேறுவான்.

இரணியனின் கைகளின் வலிமையும், கால்களின் ஆற்றலும் பேசப் பட்டன என்க. இவன் இரண்டு யானைகளுடன் விளையாடுவான். இந்திர சித்து இளமையில் இரண்டு சிங்கங்களுடன் விளையாடினான் என்பது பின்னால் மண்டோதரியால் பேசப்படப் போகிறது. அவன் கைகளின் நீட்சியும், வன்மையும், கால்களின் நெடுமையும் கூறியதனால் அவனது உருவத் தோற்றத்தை நாம் ஒருவாறு உணர்ந்து கொள்ளலாம். இதே நிகழ்ச்சி கந்தபுராணத்தில் பேசப்படுகிறது கேளுங்கள். ''ஆசைஅம்கரிகள் தம்மை, அங்கை கொண்டு ஒன்றோடொன்று பூசல்செய்விக்கும்'' என்பதும் ''பெரும்புறக் கடலைக் குளப்படி நீரெனக்கருதும்'' என்பதும் பாடல் பகுதிகள்.

4. வண்டல் தெண்திரை ஆற்று நீர், சில என்று மருவான்;
கொண்டல் கொண்ட நீர், குளிர்ப்பு இல என்று அவை குடையான்;
பண்டைத் தெண்திரைப் பரவைநீர், உவர் என்று படியான்;
அண்டத்தைப் பொதுத்து, அப்புறத்து அப்பினால் ஆடும். (6275)

(தெண்-தெளிந்த; திரை-அலைகள்; மருவுதல்-அருகில்செல்லுதல்; கொண்டல்-மேகம்; குடைதல்-குளித்தல்; பரவை-கடல்; உவர்-உப்பு; படிதல்-நீராடுதல்; பொதுத்து-துளைத்து/துவாரம் செய்து; அப்பு-தண்ணீர்)

Koviloor Digital Library

கீழே வண்டல்மண் படிந்து, மேலே தெளிந்த அலைகளையுடைய ஆற்றுநீர், தன்தாள் அமிழ்ந்து குளிக்க இயலாத அளவுக்கு ஆழம் அற்றதாய் மிகச் சிறிதாகும் என்று, ஆற்று நீரில் நீராடுவதற்குச் செல்லமாட்டான். கடலிலிருந்து மேகம் முகந்து கொண்ட மழைநீர் தனக்குப் போதிய குளிர்ச்சியைத் தராது என்று மழைநீரிலும் நீராடமாட்டான்; தொன்மைவாய்ந்த, தெளிந்த அலைகளையுடைய கடல்நீர் உப்புச் சுவையுடையது என்று, அதிலும் நீராடமாட்டான், இவற்றையெல்லாம் தவிர்த்து, அண்ட கோளத்தையே துளைசெய்து அதற்கும் அப்பால் புற அண்டத்திலுள்ள பெரும்புறக் கடலின் தெளிந்த நீரில்தான் தினமும் நீராடுவான்.

ஆற்று நீர், மழை நீர், கடல்நீர் இவற்றிலெல்லாம் நீராடும் பழக்கம் அவனுக்கு இல்லை. தினமும் அண்டகோளத்திற்கு அப்பாலுள்ள பெரும்புறக் கடல்நீரில்தான் திருமஞ்சனம் செய்துகொள்வான் என்று அவனுடைய பெருமை பேசப்படுகிறது. 'பண்டைத் தெண்திரைப் பரவை' என்பது தொன்மையான கடலைக் குறிக்கும் என்க. சகரர்கள்தான் கடலைத் தோண்டினார்கள். எனவே அது சாகரம் எனப்படுகிறது என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். சகரர்களால் புதியதாகத் தோண்டப் படுவதற்கு முன்பே கடல் இருந்தாகப் புறநானூறு கூறுகிறது. 'தொன்று முதிர்பெளவம்' என்பது புறநானூறு. 6 வண்டல் என்பது ஆற்றுநீரில் கலந்து வரும் நுண்ணிய மண்துகள். ஆற்றுநீர் ஆழமற்றது. மழைநீர் குளிர்ச்சியற்றது, கடல்நீர் தூய்மையற்றது என்று அவற்றில் நீராடுதலைத் தவிர்த்தான் என்பதாம்.

5. மரபின், மாபெரும் புறக்கடல் மஞ்சனம் மருவி,
அரவின் நாட்டிடை, மகளிரொடு இன்னமுது அருந்தி,
பரவும் இந்திரன் பதியிடைப் பகற்பொழுது அகற்றி
இரவின் ஓலக்கம், நான்முகன் உலகத்துள் இருக்கும். (6276)

(மரபு-முறை/விதி; மஞ்சனம்-நீராடுதல்; அரவு-பாம்பு/நாகம்; பரவும்-போற்றப்படும்; பதி-உலகம்/ஊர்; ஓலக்கம்-கொலுவீற்றிருத்தல்; மா-பெருமை)

தினமும் வழக்கப்படி, பெருமைபொருந்திய பெரும்புறக் கடலின் தெளிந்த நீரில் நீராடி, பின்பு நாகலோகத்தில், நாககன்னியர்களுடன் இனிய அமிழ்தமான உணவை உண்ட பின்னர் எல்லோராலும் போற்றித் துதிக்கப் படுபவனாகிய இந்திரன் வாழ்கின்ற தேவலோகத்திலுள்ள அமராவதி நகரில் பகற்பொழுதை இனிது கழித்துப் பின்னர் இரவில், பிரமன் வாழ்கின்ற சத்தியலோகத்தில் கொலுவீற்றிருப்பான்.

அவன் தினமும் மூன்று உலகங்களுக்கும், - நாகலோகம், தேவ லோகம், சத்தியலோகம் ஆகிய மூன்று உலகங்களுக்கும் சென்றுவரும் வழக்கத்தைக் கொண்டிருந்தான் என்பது பேசப்படுகிறது. இந்திரன்

Koviloor Digital Library

இரணியனால் வெற்றி கொள்ளப்பட்டவன். எனவே 'பரவும்' என்ற சொல்லுக்கு இந்திரன் போற்றித்துதிக்கும் என்று பொருள் கொள்ளுவதும் பொருந்தும். காலை, நண்பகல், இரவு ஆகிய மூன்று வேளைகளிலும் மூன்று உலகங்களுக்கும் சென்று வருவான் என்று அவன் பெருமை பேசப்படுகிறது என்க.

6. சாரும் மானத்தில், சந்திரன் தனிப்பதம் சரிக்கும்;
தேரின் மேலின் நின்று இரவிதன் பெரும்பதம் செலுத்தும்;
பேர்வுஇல் எண்திசைக் காவலர் கருமமும் பிடிக்கும்;
மேருமால்வரை உச்சிமேல் அரசு வீற்றிருக்கும். (6277)

(சாரும்-இயங்கும்; மானம்-விமானம்; சரித்தல்-சஞ்சரித்தல்/ உலாவருதல்; இரவி-சூரியன்; பெரும்பதம்-பேரரசு; கருமம்-தொழில்; பிடித்தல்-நடத்துதல்; பேர்வுஇல்-நீங்குதல் இல்லாத)

விண்ணில் இயங்கும் விமானத்தில் இருந்து, சந்திரன் இயங்குகின்ற ஒப்பற்ற சந்திரமண்டலத்தில் அரசபதவியைச் செலுத்தி சஞ்சரிப்பான்; சூரியனுடைய ஒற்றைச் சக்கரத்தேரில் நின்றுகொண்டு, சூரியமண்ட லத்தின் அரசாட்சியைத் தானே செலுத்துவான்; நீங்குதலில்லாத, இடம்விட்டுப் பெயராத எட்டுத்திசைகளையும் காத்து வரும் அஷ்டதிக்கு பாலகர்களின் தொழிலாகிய இவ்வுலகைக் காக்கும் தொழிலையும் தானே கைக்கொண்டு செய்வான். பெரிய மேருமலையின் சிகரத்தில் பேரரசனாக கொலு வீற்றிருப்பான்.

மானம் என்பது விமானம் என்பதன் முதற்குறை. சந்திரமண்டலம், சூரிய மண்டலம், எட்டுத்திக்கு காவல் முதலிய எல்லாவற்றையும் தானே தனி ஒருவனாகவே காக்கும் ஆற்றல் உடையவன் என்பது பேசப்படுகிறது. எண்திசைக் காவலர் - இந்திரன், அக்னி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்பதாம் சந்திரனுக்கு விமானமும், சூரியனுக்குத் தேரும் ஊர்திகள்.

7. நிலனும் நீரும் வெங்கனலொடு, காலுமாய், நிமிர்ந்த
தலனுள் நீடிய அவற்றின் அத்தலைவரை மாற்றி,
உலவும் காற்றொடு கடவுள் பிறருமாய், உலகின்
வலியும் செய்கையும், வருணன் தன் கருமமும் மாற்றும். (6278)

(கனல்-நெருப்பு; கால்-காற்று; நிமிர்ந்த-பரந்துவியாபித்துள்ள; தலன்-தலம்/இடம்/அண்டம்; நீடிய-நிலைபெற்றுள்ள; உலவும்-வீசும்/ இயங்கும்; கருமம்-தொழில்; மாற்றுதல்-விலக்குதல்; தலைவர்-அதி தேவதைகள்)

''நிலம், நீர், கொடிய நெருப்பு, காற்று ஆகிய நால்வகைப்பூதங்களும் பரந்து பரவியிருக்கிற இந்த அண்டத்துள் நீண்டகாலமாய் நிலைபெற்று,

Koviloor Digital Library

அவற்றை இயக்கிவருகிற அவ்வவற்றின் அதிதேவதைகளை விலக்கி, இடமாற்றம் செய்து இடைவிடாது காற்றோடு, மற்ற கடவுளர்களின் வலிமையையும் தொழிலையும் வருணனின் தொழிலையும் தான் ஒருவனாகவே நின்று இயச்கும் ஆற்றல் பெற்றவன் இரணியன்'' என்கிறான் வீடணன்.

நிலம், நீர், நெருப்பு, காற்று முதலியவற்றைக் கூறியதால், இவை எல்லா வற்றையும் தன்னகத்தே அடக்கிக் கொண்டுள்ள ஆகாயத்தையும் சேர்த்து, ஐம்பூதங்களின் தலைவர்களையும் விலக்கி, தான் ஒருவனே அவர்கள் அனைவரின் செய்கையையும் செய்துமுடிக்கும் ஆற்றல் பெற்றவன் இரணியன் என்கிறான் வீடணன் என்பதாம்.

தானே இவ்வுலகினை இயக்கும் ஆற்றல் பெற்றிருப்பதோடு, அவர்கள் ஒவ்வொருவரையும், தனக்குத் தொடர்பில்லாத மற்றொரு தொழிலுக்குத் தலைவராக ஆக்கும் வல்லமையும் பெற்றிருந்தான் எனலும் பொருந்தும். 'அவற்றின் தலைவரை' என்பது அந்தந்த பூதங்களுக்கு உரிய அதிதேவதை களை என்க. இவ்வாறு மாற்றும் ஆற்றலைக் கந்தபுராணம் கூறுகிறது கேளுங்கள். 'பாதல நிலையத்துள்ள புயங்கரைப் படியிற்சேர்த்தி; பூதநேமியெல்லாம் புகுந்திடப் பிலத்தின் உய்க்கும்; ஆதவமுதல்வன் தன்னை, அவிர்மதிப் புறத்தில் உய்க்கும்; சீதள மதியை, வெய்யோன் செல் நெறிப்படுத்துச் செல்லும்' என்பது கந்தபுராணம். 'உலவும் காற்று' என்பது இடைவிடாது இயங்கும் காற்று என்று பொருள்படும். 'சதாகதி' என்பது வடசொல்.

8. "தாமரைத் தடங் கண்ணினான் பேர் அவை தவிர,
நாமம் தன்னதே உலகங்கள் யாவையும் நவில,
தூமவெங்கனல் அந்தணர் முதலினர் சொரிந்த
ஓமவேள்வியின், இமையவர் பேறுஎலாம் உண்ணும்" (6279)

(பேர்-பெயர்; தவிர-நீங்க/ஒழிய; நவில-கூற/துதிக்க; தூமம்-புகை; இமையவர்-தேவர்கள்; பேறு-பாக்கியம்/இங்கே அவியுணவு/அவிர்ப் பாகம்; உண்ணுதல்-நுகர்தல்)

''செந்தாமரை போலும் அகன்ற விசாலமான கண்களையுடைய திருமாலின் பெயரைச் சொல்லக் கூடாது என்று அதனைத் தவிர்த்து, தனது பெயரையே உலகத்தவர் எல்லோரும் சொல்லித் துதிக்க வேண்டும் என்று கட்டளையிட்டான். புகை நிரம்பி எழுகின்ற, விரும்பத்தக்க நெருப்பை வளர்க்கின்ற முனிவர்கள் முதலியோர் தாம் செய்யும் .வேள்வியில் இருக்கிற நெய் முதலிய ஓமப்பொருள்கள் இட்டுச் செய்து தேவர்களுக்கு உரியதான, அவியுணவாகிய அவிர்ப்பாகம் முதலியவற்றைத் தானே நுகர்ந்துகொள்ளும் இயல்பினன் இவ்விரணியன்'' என்கிறான் வீடணன்.

Koviloor Digital Library

'தாமரைத் தடங்கண்ணினான் பேர்' என்பது 'ஓம் நாராயணாய நம' என்னும் எட்டெழுத்து மந்திரம் என்க, 'நாமம் தன்னதே' என்பது 'ஓம் இரணியாய நம' என்பதைக் குறிக்கும்.

உலகில் தொன்றுதொட்டு வழங்கிவருவதாகிய 'ஓம் நாராயணாய நம' என்ற எட்டெழுத்து மந்திரத்தை விலக்கி தனது பெயராகிய 'ஓம் இரணியாய நம' என்றுதான் துதிக்க வேண்டும் என்ற ஒரு கட்டளையைப் பிறப்பித்து, உலக மக்கள் எல்லோரும் தன்னையே போற்றித் துதிக்க வேண்டும் என்ற ஆணவம் கொண்டவன் இரணியன் என்றும், அந்தணர்கள் இயற்றும் வேள்வியில் சொரியப்படும் அவிர்ப்பாகத்தைக் கூடத் தேவர்களுக்குத் தராது, தானே உண்ணும் இயல்புடையவன் இரணியன் என்றும், இராவணனுக்கு எடுத்துக்கூறுகிறான் வீடணன் என்க.

'ஓம் நமோ நாராயணாய நம' என்பதில் 'ஓம்' என்பதும் 'நமோ' என்பதும் 'நம' என்பதும் ஒவ்வொரு எழுத்துக்களாகக் கணக்கிடப்பட்டு மூன்று எழுத்துக்கள் என்றாகும். 'நாராயணாய' என்பது ஐந்தெழுத்து எனவே இது எட்டெழுத்து மந்திரம் எனப்படும். 'இமையவர் பேறு' என்பது யாகத்தில் இடப்படுகின்ற ஆகுதியினால் வெளிப்படும் அவிர்ப்பாகம் என்பது தேவர்களுக்கே உரியது என்பது தொன்று தொட்டு வரும் ஒரு மரபு. அதையும் மாற்றி அந்தப் பேற்றினைக்கூட அவர்களுக்குத் தாராது, தானே எடுத்து உண்ணும் பழக்கமுடையவன் இரணியன் என்கிறான் வீடணன்.

9. "காவல், காட்டுதல், துடைத்தல் என்று இத்தொழில் கடவ
மூவரும் அவை முடிக்கிலர்; பிடிக்கிலர், முறைமை;
ஏவர் மற்றவர்? யோகியர் உறுபதம் இழந்தார்;
தேவரும் அவன் தாள் அலால் அருச்சனை செய்யார்" (6280)

(காட்டுதல்-படைத்தல்; துடைத்தல்-அழித்தல்; பிடிக்கிலர்-கடைப் பிடிக்காதவர்; உறு-பெறுதற்குரிய; அருச்சித்தல்- பூசித்தல்/வழிபடுதல்)

''காத்தல், படைத்தல், அழித்தல் என்று சொல்லப்படுகின்ற இந்த மூன்று தொழில்களையும் திறம்படச் செய்து முடிக்க வேண்டிய கடமைக் குரியவர்களான, திருமால், பிரமன், சிவபெருமான் ஆகிய மூவரும் அவரவர் தொழில்களைச் செய்துமுடிக்க முடியாமல் தத்தம் கடமைகளி லிருந்து விடுபடலாயினர்; அதற்குரிய முறைமைகளைச் சரியாகக் கடைப்பிடிக்க முடியவில்லை; முத்தேவர்களின் நிலையே இவ்வாறானது என்றால், மற்றவர்ளைப் பற்றிச் சொல்ல என்ன இருக்கிறது? யோகம் செய்து, தத்தமக்குரிய பேறுகளைப் பெறவேண்டியவர்கள்கூட அவர்களுக்குரிய பதவிகளை இழந்தனர். மற்றுமுள்ள இந்திரன் முதலிய தேவர்கள் எல்லோரும் இரணியனின் பாதங்களைத் தவிர வேறு வழிபாட்டு முறையினைச் செய்ய மாட்டார்கள்'' என்கிறான் வீடணன்.

Koviloor Digital Library

பிரமன், திருமால், சிவபெருமான், யோகியர்கள், மற்றும் உள்ள எல்லாத் தேவர்களும் இரணியனையே, அவன் நாமம் போற்றியே வழிபட்டு வந்தனர் என்பதாம். 'கலைமகள் கொம்மை முலை, பொருதிணி தோள், கடவுள் தன் படைப்பினை மாற்றி, மலர்தலை உலகம் முழுவதும் வருத்துஅற எளிதினில் படைக்கும்; சிலை விழுங்கு உயர்தோள் மாயனை அகற்றிச் சிறப்புடன் உலகெலாம் அளிக்கும், மலைமகள் பாகன் சிறிது கை ஆற ஆருயிர்துடைப்பினும் துடைக்கும்' என்பது ஒரு தனிப்பாடல். மும்மூர்த்திகளின் தொழிலையும் தான் ஒருவனே கைக்கொண்டு, உலகிலுள்ள எல்லோரும் தன்னையே தெய்வமாகத் தொழவேண்டும் எனக் கட்டளையிட்டு, அவ்வாறே வாழ்ந்தும் காட்டியவன் இரணியன் என்று இரணியனின் ஏற்றத்தை வீடணன் இராவணனுக்குக் கூறுகிறான்.

10. "மருக்கொள் தாமரை நான்முகன், ஐம்முகன் முதலோர்
குருக்களோடு கற்று ஓதுவது அவன் பெரும் கொற்றம்;
சுருக்குஇல் நான்மறை" தொன்று தொட்டு உயிர்தொறும் தோன்றாது
இருக்கும் தெய்வமும் "இரணியனே நம!" என்னும். (6281)

(மரு-நறுமணம்; குருக்கள்-ஆசிரியர்கள்; ஓதுவது-துதிப்பது; கொற்றம் -வெற்றித்திறம்; நம-வணக்கம்)

''நறுமணம் கமழும் தாமரை மலரில் தோன்றிய பிரமன், ஐந்து முகங்கள் கொண்ட சிவபெருமான், ஆகியோர் தங்கள் ஆசிரியரான பிரஹஸ்பதி என்ற வியாழன் முதலியவர்களிடம் கற்று, தினம் தினம் உச்சரிப்பது அந்த இரணியனுடைய அளவிறந்த பெரியவெற்றிச் சிறப்புக்களையே; சுருக்கமாக இல்லாது- நன்கு விரித்துச் சொல்லப்பட்டிருக்கிற நான்கு வேதங்களும் மிகப் பழங்காலந் தொட்டே உயிர்களிடத்து எளிதில் பொருள் தோன்றாது மறைந்து இருக்கும் தெய்வீகத் தன்மைவாய்ந்த வேதங்களும் தெய்வங்களும் கூறித்துதிப்பதும், அந்த 'இரணியனே உனக்கு வணக்கம்' என்னும் சொற்களைத்தான்'' என்கிறான் வீடணன்.

பிரமன், சிவன் போன்ற தெய்வங்கள்கூட, அவர்களுடைய ஆசானான வரிடம் பயில்வதும் போற்றுவதும் இந்த இரணியனுடைய பெயரையும், அவனது வெற்றிச் சிறப்புக்களையுமே என்கிறான் வீடணன். 'தெய்வீகம்' என்பது இங்கே வேதங்களுக்கு அதிபதியாகிய வேதபுருஷனைக் குறிக்கும் எனக் கொள்க. இங்கே 'தாமரை' என்பது திருமாலின் உந்திக் கமலத்தைக் குறிக்கும், 'சுருக்கு இல் நான் மறை' என்ற சொற்றொடர் 'சுருங்காமறை நான்கினையும்' என்ற தேவாரத்தை நினைவுபடுத்துவதை உணர்க. 'நம' என்ற சொல் போற்றி 'வணக்கம்' என்ற பொருள்களைத் தரும். சிவபெருமானின் ஐந்துமுகங்களாவன - ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோகாசம் என்பனவாம்.

Koviloor Digital Library

11. "பண்டு, வானவர், தானவர் யாவரும் பற்றி,
தெண்திரைக்கடல் கடைதர, வலியது தேடிக்
கொண்ட மத்தினைக் கொற்றத் தன் குவவுத்தோட்கு அமைந்த
தண்டு எனக் கொளல்உற்று, அது நொய்து எனத் தவிர்ந்தான்." (6282)

(பண்டு-முற்காலத்தில்; தெண்-தெளிந்த; தண்டு-தண்டாயுதம்; மத்து-மந்தரமலை; நொய்து-அற்பமானது; குவவு-திரண்ட)

''முற்காலத்தில் தேவர்கள், அசுரர்கள், ஆகிய எல்லோரும் தெள்ளிய அலைகள் நிறைந்த பாற்கடலைக் கடையும் பொருட்டு, பற்றிக்கொள்வதற்காக, வலிமையான ஒரு பொருளைத்தேடி, மந்தரமலையைக் கொண்டு கடையலுற்றார்கள், அப்போது, வெற்றியையுடைய தனது திரண்ட தோள்களுக்குப் பொருந்தியது என்று தண்டாயுதத்தைக் கைக்கொண்டு, இரணியன் தனது வலிமைக்கு அது மிகவும் அற்பமானது என்று கூறி அதைத் தவிர்த்து விட்டான்'' என்கிறான் வீடணன்.

பாற்கடலைக் கடைய முற்படும்பொழுது, தேவர்களும், அசுரர்களும் மந்தரமலையையே மத்தாகக் கொண்டு கடைந்தனர் என்பதை நாம் காப்பியத்தில் பல இடங்களில் பயின்று வந்திருக்கிறோம். அந்த மந்தர மலையாகிய மத்தேதனது தோள்களுக்கு மிகவும் அற்பமானது என்று கருதி இரணியன் அதனைத் தவிர்த்து விட்டான் என்பதாம். மந்தரமலை தன் தோளாற்றலுக்கு மிகவும் இலேசாகத் தோன்றியது என்று இரணியன் அதனைத் தவிர்த்தான் என்கிறான். இந்த நிகழ்ச்சியோ, செய்தியோ, முன்பு கம்பனில் வேறெங்கும் காணப்படவில்லை என்பது உணர்க.

12. "மண்டலம் தரு கதிரவன் வந்து போய் மறையும்
எண்தலம் தொடற்கு அரியன தடவரை இரண்டும்,
கண்தலம் பசும் பொன்னவுன் முன்னவன் காதில்
குண்டலங்கள்; மற்றுஎன் இனிப்பெரு விறல் கூறல்?" (6283)

(மண்தலம்-நிலவுலகம்/பூமி; எண்தலம்-மனம்; தட-பெரிய; வரை-மலைகள்; முன்னவர்-தமையன்; விறல்-வெற்றி; தருதல்-பாதுகாத்தல்; மண்டலம்-வட்டவடிவம்)

வட்டவடிவமான இப்பூவுலகில் வாழும் உயிரினங்களுக்கெல்லாம் தனது ஒளியைத் தந்து வாழ்விக்கும் சூரியன் உதிக்கும் உதயகிரியும், மறையும் அஸ்தமன கிரியும், மனத்தினாலும் எண்ணிப்பார்ப்பதற்கும் அரியதானபெரிய மலைகள்இரண்டும், பசுமையான, பொன்நிறம்போன்ற கண்களை உடையவனான இரணியாட்சனின் மூத்தவனான இரணியனுடைய காதுகளில் அணிந்து கொள்ளப்படும் குண்டலங்களாகும் என்றால் அவனுடைய பேராற்றலைப் பற்றிக்கூற இனி வேறு என்ன இருக்கிறது?'' என்கிறான் வீடணன்.

Koviloor Digital Library

உதயகிரியும், அஸ்தமனகிரியும் இரணியனது இரண்டு காதணிகள் என்று அவனுடைய பேராற்றலைப் புகழ்கின்றான் வீடணன் என்க. 'தருதல்' என்பது பாதுகாத்தல் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. சூரியன் உதயகிரியில் தோன்றி, அஸ்தமன கிரியில் மறைவதாகக் கூறுவது கவிமரபு. 'கண்தலம் பசும்பொன்னவன்' என்பது இரணியாட்சன் என்பதன் விரிந்த தமிழாக்கம். இரண்யம்-பொன்; அட்சம்-கண்; பொன்போன்ற கண்களையுடைய பொற்கண்ணனாகிய இரண்யாட்சன் என்று இரணியன் தம்பியைக் குறிக்கும் என்க. பெரிய இரண்டு மலைகளையே தனது காதில் அணியும் குண்டலங்களாகக் கொண்டவன் என்றால் அவனது உருவத்தை யும், அதனால் கிடைக்கும் பெரும் ஆற்றலையும் கூறவும் வேண்டுமோ? என்பது வீடணன் கூற்று. 'எண்தலம்' என்பது எண்ணுவதற்குக் கருவியாகிய மனத்தைக் குறிக்கும். இரணியாக்கனும் இரணியனும் இரட்டைச் சகோதரர்கள் என்னும் ஒரு குறிப்பும் உண்டு.

13. "மயர்வு இல் மன்நெடும் சேவடி மண்ணிடை வைப்பின்,
அயரும், வாள் எயிற்று ஆயிரம் நனந்தலை அனந்தன்;
உயருமேல், அண்டமுகடு தன் முடிஉற உயரும்;
பெயருமேல், நெடும்பூதங்கள் ஐந்தொடும் பெயரும்" (6284)

(மன்-மன்னன்; மயர்தல்-சோர்ந்துபோதல்; வாள்-கூரிய/ஒளிமிகுந்த; அனந்தன்-ஆதிசேஷன்; அயர்தல்-தளர்வடைதல்; உயர்தல்-எழுந்து நிற்றல்; வைத்தல்-மதித்தல்; நனந்தலை-படங்கள்/பணாமுடி; முடி-தலை; முகடு-உச்சி)

"சோர்வு என்பதே அறியாத மன்னனான இரணியன், தன் சிவந்த பாதங்களைப் பூமியில் பதித்தால் ஒளிமிக்க கூரிய பற்களையுடையவனும், ஆயிரம் பணாமுடிகளை உடையவனும் பூமியைத் தாங்குகின்றவனு மாகிய ஆதிசேஷன் பாரம் தாங்காமல் தளர்வடைந்துபோவான். அவன் கால்களைப் பதித்து உயரச்செல்ல எண்ணினால், அண்டத்தின் உச்சியில் தன் தலைமுடி படும்படி உயர்ந்து நிற்பான். தான் இருக்கும் இடம்விட்டுச் சற்று அசைவான் என்றால் பெரிய பஞ்சபூதங்களுடனே இடம் பெயர்வான்" என்கிறான் வீடணன்.

"அடிபேரில், பாதாளம் பேரும்; அடிகள் முடிபேரின், மாமுகடு பேரும்; கடகம் மறிந்தாடு கைபேரின் வான்திசைகள் பேரும்" என்பது அற்புதத்திருவந்தாதி.

14. "பெண்ணில், பேரெழில் ஆணினில், அலியினில் பிறிதும்
உள்நிற்கும் உயிர் உள்ளதில், இல்லதில், உலவான்;
கண்ணில் காண்பன, கருதுவ, யாவினும் கழியான்;
மண்ணில் சாகிலன்; வானிலும் சாகிலன்;-வரத்தால்" (6285)

Koviloor Digital Library

(நிற்கும்-நிலைபெற்ற; உலத்தல்-இறத்தல்; கழிதல்-அழிதல்; எழில்-மாறாது வளரும் அழகு; மண்-நிலம்/பூமி)

''இரணியன், தான் பிரமனிடம் இருந்து பெற்ற வரத்தின் வலிமையினால், பேரழகு படைத்த பெண்களாலும், பெரும் வீரம் படைத்த ஆண்களாலும், இவ்விருபாலும் அல்லாத அலியினாலும், மற்ற நிலைபெற்ற உயிர் இனங்களாலும், உயிரற்ற அஃறிணை/ஜடப் பொருள்களாலும் சாக மாட்டான்; கண்ணால்காணப்படும் பொருள்களாலும், மனத்தால் நினைக்கப்படுகின்ற பொருள்களாலும், இவை யாதொன்றாலும் அவன் இறக்கமாட்டான்; அவன் நிலத்திலும் சாகமாட்டான், ஆகாயத்திலும் சாகமாட்டான்'' என்கிறான் வீடணன்.

இரணியன் பெற்று வந்த வரத்தின் வலிமை பேசப்படுகிறது. 'எழில்' என்பது பொதுவாக அழகு என்ற பொருளைத் தந்தாலும், மாறாது வளரும் அழகு, பெருமைவாய்ந்த அழகு என்பதே சரியான பொருளாகும். 'எழிலாவது வளர்ந்து அமைந்த பருவத்தும் இது வளர்ந்து மாறியதன்றி, இன்னும் வளரும் என்பது போன்று காட்டுதல்' என்பார் நச்சினார்க்கினியர். 'கண்ணில் காண்பன' என்பது படைக்கலன்களைக் குறிக்கும் எனக் கொள்க. 'கருதுவ' என்பது மனத்தால் கருதப்படும் மந்திரங்கள் எனக் கொள்க. இதனை பருப்பொருள் என்றும் நுண்பொருள் என்றும் ஆன்றோர் கூறுவர். மண் என்பது கீழ் நிலம், வான் என்பது மேல் நிலம் எனக் கொள்க.

15. ''தேவர் ஆயினர் ஏவரும் திரிதரும் இயக்கர்
யாவரேயும், மற்று எண்ணவும், நினைக்கவும் இயன்ற,
கோவை மால், அயன், மான்இடன், யாவரும் கொல்ல,
ஆவி தீர்கிலன்; ஆற்றலும் தீர்கிலன்; அனையான்'' (6286)

(அனையான்-அத்தன்மையயானவன்; ஏவரும்-யாவரும்; எண்ணுதல்-நினைத்தல்/தியானித்தல்; கோவை-தொடர்ச்சி/வரிசை; அயன்-பிரமன்; மான்இடன்-மானை இடப்பக்கத்துக் கொண்டுள்ள சிவபெருமான்; தீர்தல்-நீங்குதல்; ஆவி-உயிர்)

''அத்தன்மையனான இரணியன், தேவர்கள் என்று சொல்லப்படுகின்ற யாவராலும், விண்ணில் சஞ்சரிக்கின்ற இயக்கர்களாலும், மற்றும் மனத்தால் நினைக்கவும் துதிக்கவும் படுகின்ற தொடர்ச்சியுள்ள திருமால், பிரமன், மானை இடக்கரத்திலே கொண்டுள்ள சிவபெருமான் ஆகியோரால் கொல்லப்பட்டாலும் அவன் உயிர் நீங்காது; அவனுடைய வலிமை மிக்க ஆற்றலும் குறைவுபடாது; அத்தகைய வரபலம் பெற்றவன் இரணியன்'' என்கிறான் வீடணன்.

தேவர்கள், இயக்கர், திருமால், பிரமன், சிவபெருமான் ஆகிய மும்மூர்த்திகள் இவர்கள் யாராலும் அவனைக் கொல்லமுடியாது; கொல்ல முயன்றாலும் அவன் உயிர் நீங்காது என்கிறான் வீடணன் என்க. உயிர்

Koviloor Digital Library

பிரியாதது மட்டுமல்ல, அவன் வலிமை கூட சிறிதும் குறையாது என்கிறான் என்க. ''மான்இடன்'' என்ற சொல்லுக்கு மான் போலும் மருண்ட விழிகளையுடைய உமையம்மையை இடப்பக்கத்தில் கொண்டுள்ள சிவபெருமான் என்று பொருள்கொள்ளுதலும் பொருந்தும். மானிடன் என்ற சொல்லுக்கு அப்படியே மனிதன் என்று பொருள் கூறுவாரும் உளர்.

16. "நீரின் சாகிலன், நெருப்பினும் சாகிலன், நிமிர்ந்த
மாருதத்தினும், மண்ணின், மற்று எவற்றினும், மாளான்,
ஓரும் தேவரும், முனிவரும், பிறர்களும் உரைப்பச்
சாரும் சாபமும், அன்னவன்தனைச் சென்று சாரா" (6287)

(மாருதம்-காற்று; மாள்தல்-இறத்தல்; ஓரும்-ஆராய்ந்து உணரும்; சார்தல்-பற்றுதல்; சாரா-அணுகாது)

''அந்த இரணியன், நீரில் சாகமாட்டான்; நெருப்பினாலும் இறக்க மாட்டான்; ஓங்கி வீசுகின்ற காற்றினாலும், நிலத்திலும், நிலத்தில் உள்ள மற்ற எந்தப்பொருளாலும் அவன் உயிர்துறக்க மாட்டான்; முக்காலமும் நன்கு ஆராய்ந்து அறியும் இயல்புடைய தேவர்கள், தவ வலிமைமிக்க முனிவர்கள் மற்றும் இவர்களுடன் தொடர்புடைய வேறு யாராலும் சினந்து இடப்படுகின்ற, விரைவில் சென்று பற்றுகின்ற சாபங்களும் இவனைச் சென்று அணுகமாட்டாது'' என்கிறான் வீடணன்.

முன்பாடலில் ஐம்பூதங்களாகிய விண், மண் பற்றிக்கூறிய கவிஞன், இப்பாடலில் ஏனைய மூன்று பூதங்களான நீர், நெருப்பு, காற்று முதலியவற்றையும் கூறினார் என்க. 'சாபம்' என்பது அருளிக்கூறினும், வெகுண்டு கூறினும் அவ்வப்பயனையே தந்து நிற்கும் சொல் என்க. 'சாபமே சபித்தல் வில்லாம்' என்பது நிகண்டு. 'மற்று எவற்றினும்' என்பது நிலத்தின் மேலுள்ள மலை, காடு முதலியவற்றாலும் என்று பொருள்படும். இரணியனது உயிர் அழியாப்பண்பு விளக்கப்பட்டது என்க.

17. "உள்ளில் சாகிலன்; புறத்தினும் உலக்கிலன்; உலவாக்
கொள்ளைத் தெய்வவான் படைக்கலம் யாவையும் கொல்லா;
நள்ளின் சாகிலன்; பகலிடைச் சாகிலன்; நமனார்
கொள்ளச் சாகிலன்; ஆர்இனி அவன் உயிர்கொள்வார்?" (6288)

(உலத்தல்-இறத்தல்; கொள்ளை-மிகுதி; வான்-சிறந்த; நள்-நள்ளிரவு; நமனார்-இயமன்; உலவா-அழிவில்லாத)

''வீட்டிற்குள்ளேயும் சாகமாட்டான், வீட்டிற்கு வெளியே வெளியிடத்தில் எங்கேயும் இறக்கமாட்டான்; என்றும் அழிதல் இல்லாத, மிகுதியான, தெய்வத்தன்மை பொருந்திய சிறந்த படைக்கலன்களும் அவனைக் கொல்லும் ஆற்றல் அற்றவை; நள்ளிரவிலும் சாகமாட்டான்,

Koviloor Digital Library

நண்பகல் பொழுதிலும் இறக்கமாட்டான்; எல்லா உயிரையும் போக்கும் இயமனால்கூட அவன் உயிரைக் கவர்ந்து கொள்ள முடியாது என்றால் அவன் உயிரைப் பறிப்பவர்கள் வேறு யார் இருக்கிறார்கள்? ஒருவரும் இல்லை'' என்கிறான் வீடணன்.

'உள்' என்பது அவன்வாழும் மாளிகைக்குள் என்று பொருள்படும்.

18. "பூதம் ஐந்தொடும் பொருந்திய உணர்வினில் புணரா
வேதம் நான்கினும் விளம்பிய பொருள்களால் விளியான்;
தாதை தன்னைத் தான் தனிக் கொலை சூழினும், சாகான்;
ஈது அவன் நிலை; எவ்வுலகங்கட்கும் இறைவன்" (6289)

(விளிதல்-இறத்தல்; தாதை-தந்தை)

''பஞ்ச பூதங்களாலான எந்தப் பொருளினாலும், நான்கு வேதங்களில் கூறப்பட்டுள்ள எந்த மந்திரத்தினாலும் அவனைக் கொல்லமுடியாது. இதனாலெல்லாம் அவன் சாகமாட்டான். தன்னைப் பெற்று வளர்த்துப் பேணிக்காக்கும் தன் தந்தையே அவனைத் தனியாக அழைத்துச் சென்று வஞ்சனையால் கொல்லுதற்கு முயற்சி செய்தாலும் அது நடக்காது. அவன் இறக்க மாட்டான். இதுதான் அவன் பெற்று வந்த வரத்தின் வியக்கத்தக்க தனித்தன்மை. அவன் இறவா வரம் பெற்றவன், மரணிமிலாப் பெரு வாழ்வு கொண்டவன், எனவே அவன் இவ்வுலகங்கள் எல்லாவற்றுக்கும் இறைவன் என்று போற்றித் துதிக்கப்படுகிறான்'' என்கிறான் வீடணன்.

உலகில் உள்ள உயிரினங்களெல்லாம் பஞ்சபூதங்களால் இயற்றப் பட்டன என்பது நூற்கொள்கை. வேதங்களில் கூறியுள்ள ஆக்கவும், அழிக்கவும் வல்ல மந்திரங்கள் அவற்றின் பயன்களை அவ்வப்பொழுதே தரும் என்பதும் நூற்கொள்கை. இவற்றாலெல்லாம் இரணியன் இறக்க மாட்டான் என்பதால் இறைவன் எனக்கருதப் பட்டான் என்க.

மேற்சொன்ன பாடல்களில் இரணியனது பெருமையையும், அவனது வரபலத்தையும் வீடணன் இராவணனுக்கு விளக்கமாக எடுத்துக் கூறினான் என்க. இவையெல்லாவற்றையும் தொகுத்து பாகவதம் கூறுகிறது கேளுங்கள். ''பங்கயப் பொகுட்டின் மேலோன் படைத்தன தம்மின் மாளான்; அங்கண் வான் உலகின், மண்ணின், அகத்தினில், புறத்தினில், துஞ்சான்; கங்குலும் பகலும் மாயான்; கனல் உமிழ் படையில் பொன்றான்; வெங்கண் வாள் பெற்ற வரனை என் விளம்புகேனால்?'' என்பது பாகவதம். இதன்பின்னர்தான் அவன்தன் நாடடைந்து 'விதி முறை அரிஓம்' என்ன, விளம்பு தொல் வழக்கு மாற்றி, புதிது தன் பெயரே கூறப் பணித்தனன்' என்கிறது பாகவதம். 'வேதம் நான்கினும் விளம்பிய பொருள்கள்' என்பது ஒன்னாரை அழிக்கவும், உவந்தாரை ஆக்கவும் வல்ல ஆற்றல் மிக்க மந்திரங்கள் என்க.

Koviloor Digital Library

இந்தச் செய்தியை கவிஞர் வாலியின் அவதாரபுருஷன்; ''அவனுக்கு மரணம் அனலில் இல்லை; புனலில் இல்லை; அல்லில் இல்லை; பகலில் இல்லை; விண்ணில் இல்லை; மண்ணில் இல்லை; வீட்டில் இல்லை; வெளியில் இல்லை; காற்றில் இல்லை; காலனில் இல்லை; கலங்களில் இல்லை; கரங்களில் இல்லை; விலங்கில் இல்லை; மனிதரில் இல்லை; வினையில் இல்லை; விதியில் இல்லை'' என்று தொகுத்துக் கூறுகிறது.

19. இரணியன் மகன் பிரகலாதனின் பண்பு நலன்கள்

''ஆயவன் தனக்கு அருமகன், அறிஞரின் அறிஞன்,
தூயர் என்பவர் யாரினும், மறையினும் தூயான்,
நாயகன், தனி ஞானி; நல் அறத்துக்கு நாதன்;
தாயின் மன்னுயிர்க்கு அன்பினன்; உளன் ஒரு தக்கோன்'' (6290)

(அரு-அரிய/அருமையான; நாயகன்-தலைவன்/இறைவன்; தனி-ஒப்பற்ற; நாதன்-தலைவன்; மன்-நிலைபெற்ற; தக்கோன்-தகுதியுடையவன்; ஆயவன்-அப்படிப்பட்டவன்)

''அத்தகைய இயல்புடைய இரணியனுக்கு ஒரு அருமையான புதல்வன் இருந்தான். அவன் அறிவில் மேம்பட்ட அறிஞர்களுக்கெல்லாம் மேலான அறிஞன்; தூய்மையானவர்கள் என்று சொல்லப்படுபவர்களுக்கெல்லாம் மேன்மையானதூய்மையானவன்; வேதங்களைக்காட்டிலும் பரிசுத்தமானவன்; இறைவனுக்கு ஒப்பான அருங்குணங்கள் வாய்க்கப் பெற்றவன். ஒப்பற்ற தத்துவஞானி; நன்மை பயக்கின்ற அறக்கடவுள் போன்றவன்; உலகில் நிலைபெற்ற உயிரினங்களிடமெல்லாம் தாயைக் காட்டிலும் அன்பு செலுத்துபவன். இவ்வளவு தகுதியும் படைத்த ஒரு மேலோன் இரணியனுக்கு மகனாக இருந்தான்.''

இங்கே ஒன்று நோக்க வேண்டும் இரணியனின் புதல்வனின் பெயர் எங்குமேகூறப்படவில்லை. பிரகலாதன்என்ற பெயரைநாம் பாகவதத்தின் மூலமே அறிந்து கொள்கிறோம். இரணியன் 'தருபோர் தழைந்த வேற்புதல்வர் நால்வருள் பேர் தழைத்த மெய்ப் பிரகலாதனாம்' என்பது பாகவதம் பிரகலாதனைப் பரிபாடல் பிருங்கலாதன் என்று பேசுகிறது. 'தூயர்' என்பது மனம், மொழி மெய்களால் தூயவராகிய மேலோர் எனப் பொருள்படும்.

'அருமகன்' என்பதில் இத்தகைய தக்கோன், இந்த இரணியனுக்கு மகனாகப் பிறப்பதற்கும், இந்த இரணியன் இத்தகைய மகனுக்குத் தந்தையாக இருப்பதற்கும் தகுதிபடைத்தவன் அல்லன் என்ற தொனியும் தோன்றுவதை உணர்க. 'நத்தின்வயிற்றில் முத்து' என்ற முதுமொழியும் இங்கு ஒப்பு நோக்கத் தக்கது. ஒரே பாடலில் பிரகலாதனுடைய பேரறிவு மனம், மொழி, மெய் இவற்றின் தூய்மை, அறச்சிந்தனை, தாயினும் மேலான அன்பு, நடுவுநிலைமை ஆகிய நற்பண்புகளை எடுத்துக் கூறிய

Koviloor Digital Library

கவிஞனின் கவித்திறம் காண்க. 'யாவதும் கற்றோர் அறியா அறிவினன்' என்பது திருமுருகாற்றுப்படை, எனவே 'அறிஞனின் அறிஞன்' என்றார் என்க. திருமாலால் அருளப்பட்டு மெய்யுணர்வு கைவரப்பெற்றவன். ஆதலால் 'நாயகன் தனி ஞானி' என்றார் என்க.

20. பிரகலாதனை வேதம் கற்கக் கூறுதல்

''வாழியான் அவன் தனைக்கண்டு, மனம் மகிழ்ந்து, உருகி
'ஆழி ஐய! நீ அறிதியால் மறை' என அறைந்தான்,
ஊழியும் கடந்து உயர்கின்ற ஆயுளான், உலகம்
ஏழும் ஏழும் வந்து அடிதொழ, அரசு வீற்றிருந்தான்.'' (6291)

(ஊழி-யுகமுடிவு; ஆழி-ஆணைச்சக்கரம்; ஐய-மைந்தனே; அறிதி-அறிவாயாக; அறைதல்-பணித்தல்)

யுக முடிவுக்காலத்திற்கும் மேலே, நீடித்த - நிறைந்த ஆயுளைக் கொண்டுள்ளவனும், இந்த ஈரேழு பதினான்கு உலகங்களில் உள்ளவர்களும் திரண்டு வந்து தனது பாதங்களைத் தொழும்படி மிக்க சிறப்போடு அரசு வீற்றிருப்பவனுமாகிய இரணியன், நீண்ட ஆயுளைக் கொண்டவனான தன் மகன் பிரகலாதனைப் பார்த்து, மனம் மிக்க மகிழ்ந்து நெகிழ்ச்சியுற்று உருகும் அவனை நோக்கி, 'எனக்குப்பின் ஆணைச் சக்கரத்தைச் செலுத்தி அரசாட்சி செய்ய இருக்கும் என் அருமை மைந்தனே! பிரகலாத! அரசியல் நெறிக்கு உகந்த இன்றியமையாத வேதங்களையெல்லாம் நன்கு கற்றுக்கொள்வாயாக!'' என்று பணித்தான்.

உலகியலுக்கு ஏற்ப இரணியனும் தன் மகனிடம் மிகுந்த பாசமும், அன்பும் கொண்டிருந்தான் என்பது பெறப்படுகிறது. 'வாழியான்' என்பது நல் வாழ்வுக்குரிய நற்பேறு பெற்றவன் என்று பிரகலாதனைக் குறிக்கும் எனக் கொள்க.

21. ஆசிரியரிடம் வேதம் பயிலச்செல்லுதல்

என்று, ஓர் அந்தணன், எல்லைஇல் அறிஞனை ஏவி
'நன்று நீ இவற்கு உதவுதி மறை' என நவின்றான்;
சென்று, மற்று அவன் தன்னொடும், ஒரு சிறை சேர்ந்தான்;
அன்று நான்மறை முதலிய ஓதுவான் அமைந்தான். (6292)

(ஏவி-கட்டளையிட்டு; மறை-வேதம்; சிறை-இடம்/பக்கம்; அந்தணன்-மறையோன்; ஓர்-ஒப்பற்ற; ஓதுவான்-கற்பிக்கும்பொருட்டு)

என்று இரணியன் கூறி, நன்கு கற்றறிந்த, அளவற்ற அறிவு பொருந்திய ஒரு வேதம் வல்ல ஒப்பற்ற ஒரு பண்டிதரிடம் தன்மகன் பிரகலாதனை ஒப்புவித்து, அவ்வாசிரியனிடம், 'என் மகன் பிரகலாதனுக்கு, எல்லா

Koviloor Digital Library

வேதங்களையும் நன்கு கற்றுக்கொடுத்து உதவுவீர்களாக!' எனக் கட்டளை யிட்டபின், உடனே அவ்வாசிரியனும், பிரகலாதனை அழைத்துக் கொண்டு அரண்மனையின் ஒருபக்கம் உள்ள அறைக்குச் சென்று சேர்ந்தான். அன்றுமுதலே நான்கு வேதங்களையும் கற்பிக்கத் தொடங்கினான்.

'ஓர் அந்தணன், எல்லைஇல் அறிஞன்' என்பது ஆசிரியனுக்கே பொருந்தி வருதல் காண்க. எல்லைஇல் அறிஞன் சொற்றொடரைப் பிரகலாதனுக்குப் பொருத்திப் பொருள்கூறுவதும் உண்டு. இவ்வாசிரியன் அசுரகுருவாகிய சுக்கிராச்சாரியார் என்றும், அவர் மைந்தன் சண்ட மார்க்கன் என்றும் கூறுவர். சுக்கிராச்சாரியார் மைந்தர்களிடம் கூறியதாகப் பாகவதம் கூறுகிறது. எனினும் கம்பன் ஆசிரியன் பெயரையும் குறிப் பிடாததை நோக்குக.

22. ஆசிரியன் ஓதுவித்ததை ஓதாத பிரகலாதன்

ஓதப் புக்கு, அவன் 'உந்தை பேர் உரை' எனலோடும்
போதத் தன் செவித்தொளை இரு கைகளால் பொத்தி,
'மூ தக்கோய்! இது நல்தவம் அன்று' எனமொழியா,
வேதத்து உச்சியின் மெய்ப்பொருட் பெயரினை விரித்தான். (6293)

(புக்கு-அடைந்து/முற்பட்டு; பொத்தி-மூடிக்கொண்டு; மூ-மூத்த; தக்கோய்-தகுதிவாய்ந்தவனே; போத-நன்றாக/இறுக; தொளை-துவாரம்; தவம்-தூய்மையான செய்கை; விரித்தல்-நன்கு அழுத்தி எடுத்துச் செல்லுதல்; உந்தை-உன்தந்தை; மொழியா-மொழிந்து/கூறி)

அவ்வாறு ஓர் இடத்தை அடைந்து, ஆசிரியன் வேதத்தை ஓதுவிக்க முற்பட்டு, பிரகலாதனை நோக்கி, ''முதற்கண் உன் தந்தை பெயரான'' ''இரணியாய நம'' எனக்கூறு''. என்று சொன்னவுடன், கேட்கத் தகாததைக் கேட்டதுபோல் பிரகலாதன் உடனே தன் இருகைகளாலும், தன் இருசெவிகளின் துவாரங்களையும் நன்றாக அழுத்தி மூடிக்கொண்டு, ஆசிரியனை நோக்கி, 'மூத்த பேரறிஞனே, தகுதி வாய்ந்த பெரியோனே! இவ்வாறு தாங்கள் கூறுவது நல்லறத்தின்பாற்பட்டதகாது, நற்செய்கை யன்று' என்று கூறி, மறுத்து, வேதத்தின் முடிவு என்று கூறப்படுகின்ற உபநிடதங்களில் போற்றிக் கூறப்பட்டுள்ள மெய்ப்பொருளான முழுமுதற் கடவுளான எட்டெழுத்து மந்திரத்தை மிக விரிவாக எடுத்துக் கூறத் தொடங்கினான்.

''வேதாந்த விழுப்பொருளின் மேலிருந்த விளக்கை'' என்பது பெரியாழ்வார் திருமொழி. 'போத' என்ற சொல் நன்றாக, இறுக, அழுத்தி என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. 'வேதத்து உச்சி' என்பது வேதங்களின் அந்தமாகிய வேதாந்தம் என்று கூறப்படும் உபநிடதங் களைக் குறிக்கும் என்க.

Koviloor Digital Library

23. பிரகலாதன் 'ஓம் நமோ நாராயணாய' எனல்

"ஓம் நமோ நாராயணாய" என்று உரைத்து, உளம்உருகி,
தான் அமைந்து இரு தடக்கையும் தலைமிசைத் தாங்கி,
பூநிறக் கண்கள் புனல்உக, மயிர்ப்புறம் பொடிப்ப,
ஞானநாயகன் இருந்தனன்; அந்தணன் நடுங்கி. (6294)

(அமைந்து-அடங்கி; மிசை-மேல்; பூ-தாமரைமலர்; பொடித்தல்-சிலிர்த்தல்; அந்தணன்-வேதியன்/ஆசிரியன்; ஞானம்-சிறந்த அறிவு; உருகி-கரைந்து; நிறம்-அழகு) (குளகப்பாடல்)

அறிவிற் சிறந்த ஞானிகளின் தலைவனாகிய பிரகலாதன் எட்டெழுத்து மந்திரமாகிய 'ஓம் நமோ நாராயணாய' என்று உவப்புடன் உச்சரித்து உள்ளம் நெக்குருகிக் கரைந்துபோக, ஐம்புலன்களும் அடங்கிப் போன வனாக தன் இரண்டு பெரிய கைகளையும் தலையின்மீது கூப்பி வணங்கி, செந்தாமரை மலர் போலும் அழகிய கண்களினின்றும் கண்ணீர் பெருக, மெய்ம்மயிர் சிலிர்த்து அசைவற்று நின்றிருந்தான். அதனைக்கண்ட ஆசிரியன் உடல் நடுக்கமுற்று - பாடல் தொடர்கிறது.

பிரகலாதன் கருவிலேயே திருவுடையவன் ஆதலின் 'ஞான நாட கன்' என்றார் என்க. பக்தி மேலீட்டால் வெளிப்படும் மெய்ப்பாடுகள் மிக அழகாகக் கூறப்பட்டிருப்பதை உணர்க. இறைவனது திருநாமத்தை உச்சரிக்கும்போது, 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுதல் வேண்டும் என்பது பெறப்படுகிறது.

"மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து, உன் விரை ஆர்கழற்குக் கைதான் தலை வைத்து, கண்ணீர் ததும்பி, வெதும்பி உள்ளம் பொய்தான் தவிர்ந்து" என்பது திருவாசகம். ஆசிரியன் எவ்வாறு நடுங்கி நின்றான் என்பதைச்சில ஏடுகள் கூறுகின்றன. எனினும் அது மிகைப்பாடலாகவே கருதப் பட்டிருக்கிறது. பாடல் நகைச்சுவையுடன் இருப்பதால் பாடல் மட்டும் தரப்படுகிறது. பொருள் எளிதில் புரியும்.

'நடுங்கி அந்தணன், நாப்புலர்ந்து, அரும்புலன் ஐந்தே
ஒடுங்கி, உள்உயிர் சோர்ந்து, உடல்பதைத்து, உளம்வெருவி,
அடங்கும் இன்று நம் வாழ்வு' என அயர்ந்து ஒருபடியாய்ப்
பிடுங்கி மெல்லுரை புதல்வனுக்கு இனையன பேசும்"

என்பது பாடல். ஆசிரியன் இரணியனுக்கு எவ்வாறு பயப்பட்டான் என்பதை எடுத்துக் கூறும் பாடல் இது.

Koviloor Digital Library

24. ஆசிரியன் கடிந்துரைத்தல்

"கெடுத்து ஒழிந்தனை என்னையும் உன்னையும்; கெடுவாய்!
படுத்தது ஒழிந்தனை; பாவி! எத்தேவரும் பகர்தற்கு
அடுத்தது அன்றியே அயல் ஒன்று பகர, நின் அறிவில்
எடுத்தது என் இது? என்செய்த வண்ணம் நீ?" என்றான். (6295)

(கெடுவாய்-அழிந்துபோகுபவன்/கெட்ட புத்தி உடையவன்; படுத்தல்-இறந்து அழிதல்; அடுத்தது-பொருந்தாதது; வண்ணம்-தன்மை; பாவி-பிறருக்குக் கேடு விளைவிப்பவன்/பாவம் புரிந்தவன்; அயல்-மாறாக/வேறாக)

ஆசிரியன் பிரகலாதனைப் பார்த்து ''பாவம் புரிந்தவனே! கெட்ட புத்தி உடையவனே! அழிந்து போகிறவனே! நானும் நீயும் அழிந்து போகும் படியான காரியத்தைச் செய்துவிட்டாயே! எந்தத் தேவரும் கூறுவதற்குப் பொருந்தாததான உனது தந்தை பெயரைத் தவிர அதற்கு வேறுபட்ட, மாறான வேறொரு பெயரைக் கூறுதற்கு உன் அறிவில் எப்படித் தோன்றிற்று? நீ செய்த செய்கை எவ்வாறானது? எத்தகைய காரியத்தைச் செய்யத் துணிந்துவிட்டாய்?'' என்று கடிந்துரைத்தான்.

'பாவி என்பது பிறருக்குக் கேடு விளைவிப்பவன், பாவச்செயல்களைச் செய்பவன் என்று பொருள்படும். பிரகலாதன் கூறிய எட்டெழுத்து மந்திரத்தைத் தான்கூற அஞ்சி, 'அயல் ஒன்று' என்று ஆசிரியன் கூறுவதை நோக்குக. 'கெடுவாய்' என்பது வெறுப்பை வெளிக்காட்டும் ஒரு சொல். ஆசிரியனாக அவனுடைய வாழ்க்கையையே கெடுத்துவிட்டான் என்ற ஆதங்கத்தினால் 'பாவி' என்று மேலும் கூறுவதை எண்ணுக. பின்பு இராமபிரான் வீடணனை நோக்கி 'கெடுத்து ஒழித்தனை வீடணா!' எனக் கூறப்போவதையும் இங்கு நினைவிற் கொள்க.

25. பிரகலாதன் மறுமொழி

"என்னை உய்வித்தேன்; எந்தையை உய்வித்தேன்; இனைய
உன்னை உய்வித்து, இவ்வுலகையும் உய்விப்பான் அமைந்து
முன்னை வேதத்தின் முதற்பெயர் மொழிவது மொழிந்தேன்;
என்னை குற்றம் நான் இயம்பியது? இயம்புதி!" என்றான். (6296)

(முன்னை-தொன்மைவாய்ந்த; மொழிதல்-துதித்தல்)

பிரகலாதன் ஆசிரியனை நோக்கி ''ஐயனே! நான் இப்போது கூறிய இந்த எட்டெழுத்து மந்திரத்தால் என் வாழ்க்கையையும் என்னையும் ஈடேற்றிக் கொண்டேன். என் பெற்ற தந்தையையும் கடைத்தேறுமாறு செய்தேன். இவ்வாறு எனக்கு அறிவு புகட்டுகிற குருவாகிய தாங்களும் உய்தல் வேண்டும் என்ற பெரு நோக்காலும் நான் அவ்வாறு கூறினேன். மிகத்

Koviloor Digital Library

தொன்மையயானதும் எல்லாவற்றிற்கும் ஆதிமூலமானதுமான வேதத்திற் புகழ்ந்துகூறப் பட்டிருக்கும் முதற்பெயரான பிரணவம் கூறும் பெயரான நாராயணன் என்னும் திருப்பெயரைக் கூறினேன். இவ்வாறு நான் கூறியதில் என்ன குற்றம் இருக்கிறது? எனக்குக் கூறுவாயாக!'' என்று கேட்டான் பிரகலாதன்.

வேதமுதற் பெயர் பிரணவம். அது சுட்டும் முதற்பொருள் நாராயணன் என்பது இப்பெயரைப் போற்றித் துதிப்பதால் இம்மை, மறுமை, அம்மை ஆகிய மும்மை நலங்களையும் பெற்றுப் பிறவித்துயர் நீங்குவதால் உய்ந்தேன், உய்வித்தேன் என்றான் என்க. தன்னை உய்வித்துக் கொண்டது மட்டுமின்றி, நன்மகனைப் பெற்ற தன்தந்தையும், நன் மாணவனைப் பெற்ற தன் ஆசானும், நற்குடிமகனைப் பெற்ற இவ்வுலகமும் ஈடேற வேண்டும் என்ற நல்லெண்ணத்தால்தான் இவ்வாறு கூறியதாகப் பிரகலாதன் கூறுவதை நினைக. 'ஆதி அந்தம் அரி ஆரேனும் சொல்லப்புகின், உன்பேரே வரும், என்ன பேறு பெற்றேன்' என்பது ஒரு தனிப்பாடல். 'குலம்தரும், செல்வம் தந்திடும், அடியார் படுதுயராயின எல்லாம், நிலந்தாம் செய்யும், நீள் விசும்பு அருளும்; அருளொடு பெருநிலம் அளிக்கும்; வலம் தரும் மற்றும் தந்திடும்; பெற்ற தாயினும் ஆயின செய்யும்; நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்; நாராயணா என்னும் நாமம்'' என்பது பெரிய திருமொழி. 'நாராயணா என்னாநாவென்னநாவே?' என்பது சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர்குரவை.

26. ஆசிரியன் வேண்டுதல்

''முந்தை வானவர் யாவர்க்கும், முதல்வர்க்கும் முதலோன்,
உந்தை; மற்று அவன் திருப்பெயர் உரைசெயற்கு உரிய;
அந்தணாளனேன் எனினும் அறிதியோ? ஐய!
இந்த இப்பெயர் உரைத்து, எனைக்கெடுத்திடல்'' என்றான். (6297)

(உந்தை-உன்தந்தை; முந்தை-முற்பட்ட பழையவர்கள்; அந்தணாளன் -வேதியன்/வேதம் வல்லோன்; என்னினும்-என்னைக் காட்டிலும்; கெடுத்திடல்-கெடுத்துவிடாதே)

ஆசிரியன் பிரகலாதனை நோக்கி ''ஐயனே! மிகத்தொன்மையான, பழமை வாய்ந்த தேவர்கள் எல்லோருக்கும் மேம்பட்டவர்களான பிரமன், திருமால், சிவபெருமான் ஆகிய மும்மூர்த்திகளுக்கெல்லாம் முதல் வனானவன் உன் தந்தையாகிய இரணியன். அவனுடைய திருநாமம்தான் எல்லோராலும் துதிக்கப்படுவதற்கு உரியதாகும். உனக்கு வேதம் கற்பிக்க அமர்த்தப்பட்ட வேதம் வல்ல ஆசிரியன் நான்; நீ என்னைக் காட்டிலும் வேதங்களை நன்கு அறிவாயோ! நீ இப்பொழுது கூறிய இந்தப் பெயரை மீண்டும் உன் வாயினால் கூறி என் வாழ்க்கையைக் கெடுத்துவிடாதே!'' என்று வேண்டிக் கேட்டுக்கொண்டான் ஆசிரியன்.

Koviloor Digital Library

'இந்த இப்பெயர்' என்று ஆசிரியன் சுட்டிக்கூறுவதிலேயே 'நாராயணாய' என்னும் சொல்லையே அவன் சொல்லுவதற்கு அஞ்சுகின்ற தொனி வெளிப்படுவது காண்க. 'இந்த இப்பெயர்' என்ற சொற்றொடர் முன்பு 'இந்த இப்பிறவிக்கு' என்ற இராமபிரான் கூற்றை நினைவு படுத்துவதை எண்ணுக.

27. பிரகலாதன் மறுத்துக் கூறுதல். [7 பாடல்கள்]

வேத பாரகன் அவ்வுரை விளம்பலும், விமலன்,
"ஆதிநாயகன் பெயரன்றி யான் பிறிது அறியேன்;
ஓத வேண்டுவது இல்லை; என் உணர்வினுக்கு ஒன்றும்
போதியாததும் இல்லை" என்று இவை இவை புகன்றான். (6298)

(பாரகன்-கரைகண்டவன்/எல்லைகண்டவன்; விமலன்-தூயவன்/குற்றமில்லாதவன்; ஆதிநாயகன்-முழுமுதற்கடவுள்; உணர்வு-அறிவு; போதித்தல்-உணர்த்துதல்; பாரம்-கரை)

நான்மறையையும் நன்கு கற்றறிந்து, அவற்றில் கரை கண்டவனாகிய அவ்வாசிரியன் இவ்வாறு கூறியதும், குற்றமற்ற தூயவனான பிரகலாதன், ''எல்லா உலகங்களுக்கும் முதல் தலைவனான முழுமுதற்கடவுளாகிய அந்நாராயணனது திருநாமத்தையன்றி, வேறு எதுவும் நான் அறிய மாட்டேன்; கூறவும் தெரியாது; நான் இனிமேல் இதுபற்றிக் கற்றுக் கொள்ளவேண்டுவது என்று ஒன்றும் இல்லை; என்னுடைய அறிவினுக்கு இதனைத் தவிரப் பிறரால் வேறு ஒன்றும் உணர்த்தப்பட வேண்டுவ தில்லை'' என்று பின்வருமாறு சிலவற்றைக் கூறலானான்.

'பாரம்' என்ற சொல் 'கரை' என்று பொருள்படும். 'வேதபாரகன்' என்பது வேதத்தில் கரைகண்டவன் என்று அவ்வாசிரியனைச் சிறப்பித்தது என்க. 'ஆதிநாயகன்' என்பது எல்லார்க்கும், எல்லாவற்றுக்கும் முதலாகிய தலைவனான நாராயணனை என்க.

28. "தொல்லை நான்மறை வரன்முறைத் துணிபொருட்கெல்லாம்,
எல்லை கண்டவன் அகம்புகுந்து, இடம் கொண்டு என்உள்,
இல்லை, வேறு இனிப்பெரும்பதம்; யான் அறியாத,
வல்லையேல், இனிஓதுவி, நீதியின் வழாத" (6299)

(தொல்லை-பழமைவாய்ந்த; வரன்முறை-மரபு நெறி; பதம்-பெயர்; வழாத-மாறுபடாத; ஓதுவி-கற்பிப்பாயாக; உள்-அகம்/நெஞ்சம்; துணிபொருள்-தெளிந்த உறுதிபயக்கும் பொருள்; இடம்-இருப்பிடம்; வல்லை-வலிமை/வன்மை)

''மிகப் பழமைவாய்ந்த நான்கு வேதங்களும் மரபுநெறிப்படி தெளிந்து, அறுதியிட்டுக் கூறிய பொருள்களுக்கெல்லாம் எல்லை என்று கூறப்படுப

Koviloor Digital Library

வனாகிய அந்த நாராயணனே என்னுடைய உள்ளத்துள் புகுந்து, தானே விரும்பி அமர்ந்துகொண்டு என் உள்ளத்தையே தன் இருப்பிடமாகக் கொண்டு திகழ்கிறான். அத்தகையது என் உள்ளம். இந்தப் பெரும் பெயரைத்தவிர, இனிமேல் நான்கூறுவதற்கு வேறு எந்தச்சிறந்த பெயரும் இல்லை. ஒருவேளை நான் அறியாத ஏதேனும் இருந்தால், நீதிநெறிக்கும், அறத்திற்கும் மாறுபடாமல் அவற்றை நீ அறிந்து கற்பிக்கும் வல்லமை உன்னிடம் இருந்தால், எனக்கு அவற்றைக் கற்பிப்பாயாக!'' என்கிறான் பிரகலாதன்.

நாராயணன் என் உள்ளத்துள் குடிகொண்டிருக்கிறான், அவன் பெயரைத் தவிர வேறு எந்தச் சிறந்த பெயரையும் நான் அறிந்ததில்லை. உனக்கு வல்லமை இருந்தால், நான் அறியாதனவற்றை, நெறி பிறழாமல் எனக்கும் போதிப்பாயாக என்கிறான் பிரகலாதன். 'வல்லையேல் ஓதுவி' என்ற சொற்றொடரிலேயே ஆசிரியன் வல்லமையற்றவன் என்ற தொனி தெரிவதை உணர்க. ''வல்லையேல் வாங்குதி தனுவை'' என்பது பாலகாண்டத்துப் பரசுராமர் கூற்றும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

29\. "ஆரைச் சொல்லுவது, அந்தணர், அருமறை அறிந்தோர்,
ஓரச் சொல்லுவது எப்பொருள்? உபநிடதங்கள்,
தீரச் சொல்பொருள்; தேவரும், முனிவரும் செப்பும்
பேரைச் சொல்லுவது அல்லது பிறிதும் ஒன்று உளதோ?" (6300)

(ஓர-ஆராய்ந்து உணர; தீர-முடிந்த முடிபு)

''வேதங்களனைத்தையும் முறைப்படி அணவும் வேதம் வல்லார் எல்லோரும் எந்தப் பெயரை உச்சரிக்கின்றார்களோ, வேத சாத்திரங்கள் வல்ல ஞானிகள் உணரும்படி எந்தப் பெயரைச் சொல்லுகிறார்களோ, உபநிடதங்கள் எல்லாம் முடிந்த முடிபாக எந்தப் பொருளைச் சொல்லு கிறதோ, தேவர்களும், முனிவர்களும் இடைவிடாது எந்தப் பெயரை உச்சரிக்கின்றார்களோ, அந்தப் பெயரைச் சொல்லுவது அல்லாது வேறு எந்தப் பெயரையும் சொல்ல முடியுமோ? அவ்வாறு சொல்லுதற்குரிய வேறுபொருள்-பெயர் ஒன்று உண்டோ?'' என்று கேட்கிறான் பிரகலாதன்.

'உளதோ' என்ற சொல்லில் ஓகாரம் எதிர்மறைப்பொருளது. இல்லை என்பது பொருள். 'ஓரச்சொல்லுதல்' என்பது நன்கு ஆராய்ந்து அறிந்து கூறுதல் என்றும், 'தீரச்சொல்லுதல்' என்பது முடிந்த முடிபாகக் கூறுதல் என்றும் பொருள்படும். யாரை என்பது 'ஆரை' என்றும், பெயர் என்பது 'பேர்' என்றும் கூறுவது உலகவழக்கு எனக் கொள்க. 'ஓர்தல்' என்பது இடைவிடாது சிந்தித்தலைக் குறிக்கும் ''தீரச்சொல் பொருள்'' என்பது, ஐயத்திற்கு இடமின்றி முடிந்த முடிபாகத் தெளிந்து கூறுதலைக் குறிக்கும். 'உபநிடதம்' என்ற சொல்லுக்கே இறைவன் அருகில் கொண்டு சேர்ப்பது என்ற ஒரு பொருளும் உண்டு என்பர் சான்றோர்.

Koviloor Digital Library

30. "வேதத்தானும், நல் வேள்வியினானும், மெய்உணர்ந்த
போதத்தானும், அப்புறத்துள எப்பொருளானும்,
சாதிப்பார் பெறும் பெரும்பதம் தலைக்கொண்டு சமைந்தேன்,
ஓதிக்கேட்பது பரம்பொருள் இன்னம் ஒன்று உளதோ?" (6301)

(வேள்வி-யாகம்; போதம்-தத்துவஞானம்; சாதித்தல்-சித்திபெறுதல்/நிறைவேற்றுதல்; சமைதல்-பொருந்துதல்; வேதம்-கலைஞானம்; வேள்வி-அறச்செயல்கள்; இன்னம்-இன்னும்/மேலும்; தலைக்கொண்டு-சிரமேற்கொண்டு/உட்கொண்டு; பரம்பொருள்-மேலானபொருள்)

''நான்மறையாகிய வேதங்களினாலும், அவை கூறுகின்ற, நற்பயன் அளிக்கின்ற அறச்செயலாகிய யாகம் முதலியவற்றாலும், மெய்யுணர் வளிக்கும் தத்துவஞானத்தாலும், இவற்றைத் தவிர மற்றுமுள்ள புற உபாயங்களான, தவம், பூசனை முதலிய எல்லாப் பொருள்களாலும், ஒரு காரியத்தைச் சாதித்து நிறைவேற்றுபவர்கள் பெறுகின்ற சிறந்த பெரும் பதமாகிய நாராயணன் என்னும் திருநாமத்தையே சிரமேற்கொண்டு அமர்ந்திருக்கிறேன். இதைத்தவிர மற்றவர் கற்பித்து நான் கற்றுக்கொள்ள வேண்டிய மேலான பொருள் இதனின்றும் வேறு ஒன்று இருக்கிறதா?'' என்று கேட்கிறான் பிரகலாதன்.

வேதம், வேள்வி, தத்துவஞானம், தவம், தானம், பூசனை, கர்மம், பக்தி, யோகம் முதலிய உபாபங்களைத் தலைமேற் கொண்டு போற்றுபவர்கள் நிச்சயம் பெரும்பதவியாகிய வீடுபேறடைவர் என்பதும், அதனைத் தான் பெற்றிருப்பதாகவும் இதனைத் தவிர கற்றுக்கொள்ள வேறொன்றும் இல்லை என்றும் பிரகலாதன் கூறுகிறான் என்பதாம். 'போதம்' என்பது தன்னையும், தனக்கு ஆதாரத்தலைவனையும் கண்டு உணர்ந்த மெய்ஞ் ஞானஅறிவு என்ற விரிந்த பொருளைத் தரும். 'வேள்வி' என்பது ஒரு பலன் விரும்பிச் செய்யும் யாகம் எனப் பொருள்படும். 'புறத்துள எப்பொருளும்' என்பது சரியை, கிரியை, யோகம், ஞானம், பத்தி, பிரபத்தி முதலிய பல சாதனங்களைக் குறிக்கும்.

31. "காடுபற்றியும், கனவரை பற்றியும், கலைத்தோல்
மூடிமுற்றியும், முண்டித்தும், நீட்டியும், முறையால்
வீடுபெற்றவர், 'பெற்றதின் விழுமிது' என்று உரைக்கும்
மாடு பெற்றனென்; மற்று இனி என் பெற, வருந்தி?" (6302)

(காடு-வனம்; கனவரை-பெரியமலை; கலை-கலைமான்; மூடி-மறைத்து/போர்த்தி/உடுத்தி; முண்டித்தல்-மழித்தல்; நீட்டித்தல்-சடை வளர்த்தல்; வீடு-முக்தி/மோட்சம்; விழுமிது-மிகச் சிறந்தது; மாடு-பெரும்செல்வம்; முற்றுதல்-முழுவதுமாக உடுத்துதல்; பற்றி-ஏற்றுக் கொண்டு)

Koviloor Digital Library

''காட்டையும் பெரிய மலைகள் சூழ்ந்த அடிவாரங்களையுமே இடமாகக் கொண்டும், கலைமான், புலி போன்ற மிருகங்களின் தோலையே ஆடையாகக் கொண்டும், முடியை உடல் முழுவதும் சுற்றிச் சடையாகத் திரித்து வளர்த்துக் கொண்டும், தத்தமக்கு உரிய முறையால் அரியதவத்தை இயற்றி, அதன் பயனாக வீடுபேறு பெற்ற ஞானியர்கள் எல்லாம், எல்லாவற்றுள்ளும் மிகச்சிறந்தது என்று கூறுகின்ற இறைவனது திருநாமத்தை இடைவிடாது சிந்திக்கும் பெரும் செல்வத்தைப் பெற்றிருக் கிறேன். இதைக்காட்டிலும் நான் இனிமேல் என் உடலையும் உள்ளத்தை யும் வருத்திக்கொண்டு பெறவேண்டியது என்ன இருக்கிறது?'' என்று கேட்கிறான் பிரகலாதன்.

''தவம் செய்பவர்கள் தத்தமக்கு உரிய சிலவழிகளை மேற்கொள்வர். ஆனால் இவற்றிலெல்லாம் மிகச் சிறந்தது என்பது இறைவன் நாமத்தை இடைவிடாது சிந்தித்துக்கொண்டிருப்பதுதான் என்று வேதங்களும் கூறுகின்றன. இந்நிலையைப் 'பிரபத்தி மார்க்கம்' என்பர் சான்றோர். இத்தகைய பெரும் செல்வத்தை எளிதில் பெற்ற நான், இனிமேல் என் உடலையும் உள்ளத்தையும் ஏன் வருத்திக்கொள்ள வேண்டும்? அதனால் நான் என்ன பெறப்போகிறேன்?'' என்று கேட்கிறான் என்பதாம். 'மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம் பழித்தது ஒழித்துவிடின்' என்ற குறள் 280 இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. 'அருமறை ஓதி என்? பல்வேள்வி முற்றி என்? ஆதரவால் நருமதை கங்கை முதல் புனல் மூழ்கி என்? நாள்மலர் சேர் மரு மலி சோலைக் கருவைப்பிரான் திருமந்திரத்தை ஒருமுறை ஓதித் துறக்கம் பெறாத உணர்விலரே!' என்பது திருக்கோவையார். 'மாடு' என்ற சொல் பெரும் செல்வம் என்ற பொருளைத் தரும். 'கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு மாடல்ல மற்றையவை' என்பது குறள் 400. 'பிரபத்திமார்க்கம்' என்பது இறைவனையே இடைவிடாது சிந்தித்து அவனே சரணம் என்று கருதி, அவன் அருளுக்குப் பாத்திரமாகி மீளாக்கதி என்ற முக்தி நிலையை அடையும் நெறி என்க.

இராமாயணக் காப்பியம் முழுவதுமே சரணாகதித் தத்துவத்தின் பெருமையை எடுத்து விளக்குவதுதான் என்பது நாம் அறிந்ததே. பாலகாண்டத்தில் தேவர்களும், அயோத்தியா காண்டத்தில் பரதனும், ஆரண்யகாண்டத்தில் தண்டகவன முனிவர்களும், கிட்கிந்தா காண்டத்தில் சுக்கிரீவனும், சுந்தரகாண்டத்தில் சீதாதேவியும், யுத்த காண்டத்தில் வீடணனும் சரணாகதி அடைந்ததை இங்கே நினைவு கூர்க.

32. "செவிகளால் பல கேட்டிலர் ஆயினும், தேவர்க்கு
அவிகொள் நான்மறை அகப்பொருள் புறப்பொருள் அறிவார்;
கவிகள் ஆகுவார்; காண்குவார் மெய்ப்பொருள்; காலால்
புவிகொள் நாயகற்கு அடியவர்க்கு அடிமையின் புக்கார்" (6303)

Koviloor Digital Library

(கால்-திருவடி; புவி-நிலவுலகம்; நாயகர்-இறைவன்; அகப்பொருள்-உள்ளுறை; புறப்பொருள்-வெளிப்படை)

''தனது திருப்பாதங்களால் இவ்வுலகையே ஆட்கொண்டருளுகின்ற இறைவனாகிய திருமாலுக்கு அடியவர்களுக்கு ஏவல் கூவல் பணி செய்யும் தொழிலில் உள்ள இறையடியார்கள், தம் செவிகளால், பல நல்ல அறக்கருத்துக்களைக் கேட்டிருக்கவில்லை என்றாலும், கேள்விஞானம் பெற்றிருக்கவில்லை என்றாலும், யாகத்தில் தேவர்களுக்கு அளிக்கப்படும் அவியுணவு பற்றி வேதங்கள் கூறுகின்ற நுட்பமான உள்ளுறை பொருளையும், வெளிப்படையாகத் தோன்றுகின்ற பொருளையும் நன்கு அறிந்து கொண்டுள்ளார்கள். அவர்கள் தெய்வத்தன்மைபொருந்திய கவிதைகள் இயற்றும் ஆற்றல்பெற்ற கவிஞர்களும் ஆவார்கள். அதன் பயனாக, இறைவனின் மெய்ப்பொருளையும் தம் கண்களால் காணும் பேறு பெற்றவர்களாகவும் ஆவார்கள்'' என்று இறையடியாரின் அடியவர் பெருமை பற்றிப் பேசுகிறான் பிரகலாதன்.

வேதங்களின் உள்ளுறை பொருள் 'பூர்வார்த்தம்' என்றும் புறப்பொருள் 'உத்தரார்த்தம்' என்று வடநூல் கூறும். 'அவி' என்பது யாகத்தில் இடப்பட்டு, தேவர்களுக்கு அளிக்கப்படும் அவிர்ப்பாகத்தைக் குறிக்கும். 'ஹவிஸ்' என்ற வடசொல்லின் தமிழாக்கம் அவியுணவு எனக் கொள்க. 'அடியேன் உன் அடியார் நடுவில் இருக்கும் அருளைப் புரிவாய்' என்பது திருவாசகம். 'மெய்ப்பொருள்' என்பது தோற்றம், அழிவு இன்றி என்றும் நிலைத்துள்ளதாகிய பரம்பொருள் என்க. ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும்ஜோதி எனக் கொள்க.

33. "எனக்கும், நான் முகத்து ஒருவற்கும், யாரினும் உயர்ந்த
தனக்கும், தன்நிலை அறிவுஅரும் ஒரு தனித்தலைவன்
மனக்கு வந்தனன்; வந்தன யாவையும்; மறையோய்!
உனக்கும் இன்னதின் நல்லது ஒன்று இல்" என உரைத்தான். (6304)

(மனக்கு-மனத்திற்கு/நெஞ்சுக்குள்; இன்னதின்-இதைவிடவும்)

''வேதம் வல்லவனே! சிற்றறிவினனாகிய சிறியவன் எனக்கும், நான்கு வேதங்களையும் முழுதுமுணர்ந்த நான்கு முகங்களையுடைய ஒப்பற்ற பிரமதேவனுக்கும், எல்லோரினும் உயர்ந்தவனான முற்றறிவினனான தனக்கும் தனித்தன்மையைத் தானே அறிந்துகொள்ள முடியாத அரிய நிலையில் இருக்கும் ஒப்பற்ற தனி நாயகனான திருமால், மிகஎளிதாக என் உள்ளத்துள் புகுந்து கோயில் கொண்டுள்ளான். எனவே எல்லா நன்மை தரும் பொருள்களும் எல்லாவகை ஞானங்களும் நான் ஓதாமலேயே எனக்கு எளிதில் கூடிவந்தன. உனக்கும்கூட இதைத்தவிர நன்மை பயக்கக் கூடிய வேறு ஒரு பொருள் இல்லை'' என்று பிரகலாதன் தன் ஆசிரியனிடம் கூறி முடித்தான்.

Koviloor Digital Library

மேற்கூறிய பாடல்களில், பிரகலாதன், தன் ஆசிரியனுக்குத் திருமால் பெருமை பற்றியும், தான் கருவிலேயே திருவுடையவன் என்பது பற்றியும், அவ்வாசிரியனும் இதனையே பின்பற்ற வேண்டும் என்றும் எடுத்துக் கூறினான் என்க. 'தன்நிலை அறிவு அரும் ஒரு தனித்தலைவன்' என்பது 'தனக்கும் தன் தன்மை அறிவு அரியானை' என்ற நம்மாழ்வார் பாசுரத்தை நினைவுபடுத்துவது உணர்க. ''இன்னதன்மையன் என்று அறிய வொண்ணா எளியானை' என்பது தேவாரம். 'யாரினும் உயர்ந்த தனக்கும்' என்பது தனக்குவமையில்லாதான்' என்ற திருக்குறளை நினைவுபடுத்து வதை நோக்குக. 'தன் பெருமை தான் அறியாத்தன்மையன்' என்பதும் திருவாசகம்.

34. ஆசிரியன் இரணியனிடம் நிகழ்ந்தவை கூறுதல்

மாற்றம் யாதொன்றும் உரைத்திலன் மறையவன்; மறுகி,
''ஏற்றம் என்? எனக்கு இறதி வந்து எய்தியது'' என்னா,
ஊற்றம் இல்லவன் ஓடினன், கனகனை உற்றான்;
தோற்ற வந்தது ஓர்கனவு கண்டனன் எனச்சொன்னான். (6305)

(மாற்றம்-மறுமொழி; மறுகி-மனம் கலங்கி; ஏற்றம்-ஆக்கம்/ பெருமை; இறுதி-அழிவு; ஊற்றம்-மனத்திண்மை/மனஎழுச்சி; உற்றான்-அடைந்தான்; கனகன்-பொன்வண்ணன்/இரணியன்)

இவ்வாறு பிரகலாதன் கூற, அதனைக் கேட்ட ஆசிரியனாகிய வேதியன் எந்த பதிலும் கூறவில்லை, மாறாக மனம்மிக்கக் கலக்கமுற்று ''இனிமேல் எனக்கு என்ன பெருமை இருக்கிறது? எனக்கு அழிவு காலம்தான் வந்து சேர்ந்திருக்கிறது''எனக்கருதி, மனத்தில் சிறிதும் தைரியமில்லாமல், கோழைபோல ஓடிச்சென்று, இரணியனை அடைந்து, பின்னால் விளையப்போகும் ஒரு தீய கனவினைக் கண்டவன்போலக் கீழ்வருன வற்றைக் கூறலானான்.

'தோற்ற வந்ததோர் கனவு' என்பது, பின்னால் நிகழ இருக்கும் ஒரு தீங்கினை முன்னரே புலப்படுத்தும் வண்ணம் தோன்றிய ஒரு தீயகனவு என்று பொருள் விரிவு கொள்ளும்.

35. ''எந்தை! கேள்; எனக்கு இம்மைக்கும் மறுமைக்கும் இயம்பச்
சிந்தையால் இறை நினைத்தற்கும் அடாதன செப்பி,
'முந்தையே நினைந்து, என் பொருள்?' முற்றும் என்று உரைத்து, உன்
மைந்தன் ஓதிலன், வேதம்'' என்று உரைத்தனன், வணங்கி. (6306)

(எந்தை-என்தந்தை; இறை-சிறிதும்; அடாதன-ஒவ்வாதன/ பொருந்தாதன; செப்பி-எடுத்துரைத்து; முந்தை-முன்பு)

Koviloor Digital Library

அவ்வாறு ஓடிச்சென்ற வேதியன் இரணியனை வணங்கி, ''என் தந்தை போன்றதலைவனே! நான்கூறுவதைக் கேட்பாயாக! உன்மகன்பிரகலாதன் எனக்கு இப்பிறவியிலும், மறுபிறவியிலும் சொல்லுதற்கும், சிறிதும் சிந்தையால் நினைப்பதற்கும் ஒவ்வாதனவான சில பொருள்களை - தீய வார்த்தைகளைக்கூறி, ''நான் முன்பே, என் மனத்தால் உணர்ந்து வேதங்கள் கூறுகின்ற பொருள்களனைத்தும் உணர்ந்து கொண்டேன். இப்பொழுது நீ ஓதுவிப்பதனால் என்ன பயன் விளையும்? என்று கூறி, அவன் வேதத்தை என்னிடமிருந்து கற்றுக்கொள்ளவில்லை'' என்று கூறினான்.

வாயால் சொல்லுதற்கும், சிந்தையால் நினைப்பதற்கும் அரியதான என்பதை ''இயம்பச் சிந்தையால் இறை நினைத்தற்கும்'' என்றார் என்க. 'செப்பி' என்ற சொல் ''கூறி'' என்ற பொருளில் இன்றும் தெலுங்கில் வழங்கக் கேட்கலாம். இந்தச் சொல் சங்க இலக்கியங்களில் காணப்பட வில்லை என்றும், பரிபாடல் பெருங்கதை போன்ற நூல்களில் காணப் படுகின்றன என்றும் திரு. உ.வே.சா. அவர்களின் குறிப்புக்கூறுகிறது.

36. இரணியன் ஆசிரியன் உரையாடல்

அன்னகேட்டு, அவன் "அந்தண! அந்தணர்க்கு அடாத,
முன்னர் யாவரும் மொழிதரும் முறைமையின் படாத,
தன்னது உள்ளூறும் உணர்ச்சியால், புதுவது தந்தது
என்ன சொல்; அவன் இயம்பியது? இயம்புதி!" என்றான். (6307)

(அடாத-ஒவ்வாத/பொருந்தாத; தந்தது-சொல்லியது)

அவ்வாறு அவ்வாசிரியன் கூறக்கேட்ட இரணியன், அவனை நோக்கி, ''வேதியனே! நம்மைப் போன்ற அசுரர்களுக்குப் பொருந்தாதனவும், நாம் கேட்கத்தகாதனவும், முன்னையோர்கள் எல்லோரும் போற்றித்துதித்த வழியில் சொல்லாதனவும், தன்னுடைய உள்ளுணர்வினால் முகிழ்த்த - அவனாகவே புதியதாக தானே படைத்துக் கூறியதுமான சொல் என்ன சொல்? அவன் கூறிய அச்சொல்லை அவன் கூறியவாறே சொல்வீராக!'' என்றான் இரணியன்.

அவன் கூறிய புதிய சொல்லை, அவன் கூறியவாறே மறைக்காமல் கூறுவாயாக என்றான் என்பதாம்.

37. அரசன், அன்னவை உரைசெய, மறையவன் அஞ்சி,
சிரதலம் கரம் சேர்த்திடா, 'செவித்தொளை சேர்ந்த
உரகம் அன்ன சொல், யான் உனக்கு உரைசெயின், உரவோய்!
நரகம் எய்துவென்; நாவும்வெந்து உகும்", என நவின்றான். (6308)

(சிரதலம்-தலை; உரவோய்-திண்மையுடையோனே; உரகம்-பாம்பு; உகும்-அழியும்/சிதையும்)

Koviloor Digital Library

அரசனான இரணியன் அவ்வாறு கேட்டதும், ஆசிரியனாகிய வேதியன் நடுங்கி, தன் கைகளைத் தலைமேல் குவித்து வணங்கி, ''என் காதுகளில் வந்து சேர்ந்த, நான் கேட்ட - கொடிய பாம்பின் நஞ்சு போன்ற சொற்களை நான் உன்னிடம் கூறினால், வன்மை மிக்கவனே! அத்தீவினையால் நான் நரகம்தான் சென்றுசேர்வேன், அதனைக் கூறினால் என் நாக்கும் வெந்து சிதைந்து போகும்'' எனக்கூறினான்.

'உரகம்' என்பது தன்மார்பினாலேயே ஊர்ந்து செல்வதால் பாம்புக்குக் காரணப்பெயர். 'உரகம் அன்ன சொல்' என்பது கொடிய பாம்பு போன்ற நஞ்சுகலந்த சொல் என்று பொருள்படும். இவ்வாறு வேதியன் கூறியது அவன் வயிற்றுப் பிழைப்புக் கருதி என்க.

38. பிரகலாதனை அழைத்துவரப் பணித்தல்

''கொணர்க என் மைந்தனை, வல்விரைந்து'' என்றனன் கொடியோன்;
உணர்வுஇல் நெஞ்சினன் ஏவலர் கடிதினின் ஓடி,
கணனின் எய்தினர், 'பணி' என, தாதையைக் கண்டான்
துணை இலான்தனைத் துணைஎன உடையவன் தொழுதான். (6309)

(பணி-கட்டளை; துணை-ஒப்பு; கணன்-கணம்/க்ஷணம்/நொடிப் பொழுது)

அதுகேட்ட கொடியவனாகிய இரணியன் ''என் மைந்தன் பிரகலாதனை மிக விரைவாக என்முன் கொண்டுவந்து நிறுத்துங்கள்'' என்று கட்டளையிட, சற்றும் உள்ளத்தில் இரக்கம் என்ற ஒரு உணர்வே இல்லாத இரணியனது ஏவலாளர்கள் விரைவினில் ஓடிச்சென்று, நொடிப் பொழுதில் பிரகலாதனை அடைந்து, 'உன்தந்தை உன்னை உடனே அழைத்துவரப் பணித்தார்' இது அரச கட்டளை'' என்றனர். அதனைக் கேட்ட தனக்குவமையும் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத திருமாலையே தனக்கு உற்ற ஆருயிர்த் துணையாகக் கொண்டவனான பிரகலாதன், உடனே விரைந்து வந்து, தன் தந்தையைப் பார்த்துப் பணிவுடன் வணங்கினான்.

'வல் விரைந்து' என்பது ஒரு பொருட்பன்மொழி; இங்கே இரணியனைக் 'கொடியோன்' என்றும், ஏவலாளரை 'உணர்வுஇல் நெஞ்சினர்' என்றும், திருமாலைத் 'துணையிலான்' என்றும், பிரகலாதனை 'துணையென உடையவன்' என்றும் கவிஞன் கூறியிருப்பதை உணர்க. 'வல்விரைந்து, கடிதினில் கணனில், என்பன எல்லாம் விரைவினைக் குறிக்கும் சொற்கள் என்பதறிக. நிகழ்ச்சியின் விரைவு பாடலில் புலப்படுவது காண்க. 'உணர்வு இல் நெஞ்சினர் ஏவலாளர்' என்பது நல்ல ஞானமில்லாத அழுக்கேறிய மனத்தையுடைய இரணியனின் ஏவலாளர்கள் என்ற பொருளையும் தரும் என்பது உணர்க. 'தன் ஒப்பார் இலாதானை' என்பது அப்பர் தேவாரம்.

Koviloor Digital Library

39. இரணியன் பிரகலாதனிடம் கேட்டல்

''தொழுத மைந்தனை, சுடர்மணி மார்பிடைச் சுண்ணம்
எழுத, அன்பினின் இறுகுறத் தழுவி, மாடு இருத்தி,
முழுதும் நோக்கி, 'நீ வேதியன் கேட்கிலன் முனிய,
பழுது சொல்லியது என்? அது பகருதி!'' என்றான். (6310)

(சுடர்-ஒளி; மணி-அழகிய; சுண்ணம்-நறுமணப்பொடி; எழுத-படியும்படி/பூசும்படி; மாடு-அருகில்; இருத்தி-இருக்கச்செய்து; முனிய-வெறுக்கும்படி; பழுது-குற்றம்/தவறு; பகருதி-கூறுவாயாக)

''தன்னை வந்து தொழுது வணங்கிய தன்மகனான பிரகலாதனை, இரணியன், தன் ஒளிமிகுந்த அழகிய மார்பினில் இறுகத்தழுவி, அவன் பூசியிருக்கும் வாசனைப்பொடி பிரகலாதன் மேற்படும்படி அன்புடன் இறுக அணைத்து, தன்பக்கத்தில் அவனை இருக்கும்படிசெய்து, பேரழகனான அவனைப் பாதாதிகேசம் நன்கு உற்றுப் பார்த்துப்பின் 'புதல்வனே! நீ உன்னுடைய ஆசிரியன் கேட்பதற்கே அஞ்சிய, அவன் வெறுப்புக் கொள்ளும்படி கூறிய, குற்றமுள்ளதான சொல் என்ன என்பதை எனக்குக் கூறுவாயாக!'' என்று கேட்டான்.

இரணியன் இயல்பிலேயே பொன் நிறத்தவன் எனவே 'சுடர்மணி மார்பு' என்றார் என்க. அவனை அன்புடன் இறுகத் தழுவியதால் நறுமணப்பொடி அவன் மேனியில் பூசப்பட்டது என்பதை, 'சுண்ணம் எழுத அன்பினின் இறுகுறத்தழுவி' என்றார் என்க. பிரகலாதன் பேரழகன் என்பதால் அவனை 'முழுது நோக்கி' என்றார் என்க.

''பழுது பயமின்றே'' என்பது தொல்காப்பியம் இங்கே பயனில்லாத, குற்றம் உள்ள சொல்லாக என்ன சொல்லைக் கூறினாய் எனக் கேட்டான் எனக் கொள்க. 'சுண்ணம்' என்பது சூர்ணம் என்ற வடசொல்லின் திரிபு. 'மாடு இருத்தி' என்பது வேதியனை அப்புறப்படுத்தி, புதல்வனை மட்டும் தன் அருகில் அமரச்செய்து கேட்டான் என்ற பொருளையும் தருவதை உணர்க.

இதன்பின் ஒரு மிகைப்பாடல் கிடைக்கிறது. அதில் பிரகலாதனின் பணிவு தெரிவிக்கப் பட்டிருப்பதால், கற்போர் அதனையும் அறிந்து கொள்வதில் தவறில்லை என்பதால் பாடல் மட்டும் தரப்படுகிறது.

என்னும் வாசகம் கேட்டலும், எழுந்து நின்று இறைவன்
பொன்னின் வார்கழல் பணிந்து, வாய்புதைத்து, அரும்புதல்வன்
'மன்னர்மன்ன! யான் பழுதொன்றும் உரைத்திலேன்; மரபால்
உன்னும் உண்மையை உரைத்தனென்; கேள்; என உரைப்பான்.

Koviloor Digital Library

40. பிரகலாதன் மறுமொழி

"சுருதி ஆதியில் தொடங்குறும் எல்லையில் சொன்ன
ஒருவன், யாவர்க்கும் நாயகன், திருப்பெயர் உணரக்
கருதக் கேட்டிடக் கட்டுரைத்து, இடர்க்கடல் கடக்க
உரிய மற்று இதின் நல்லது ஒன்றுஇல்" என உரைத்தான். (6311)

(சுருதி-வேதம்; ஆதி-முதன்முதல்; எல்லை-இடம்; ஒருவன்- ஏகன்)

''எழுதாக்கிளவியாகிய வேதம், முதன் முதலில் தொடங்குவதாகிய 'பிரணவம்' என்பது சொன்ன, ஒப்பற்ற ஒருவனும், யாவர்க்கும், தேவர்கள் முதலான எல்லோர்க்கும் தலைவனானவனுமாகிய நாராயணன் திருநாமத் தையே நான் கூறினேன். அதனைக் கூறுவதற்கும், உணர்வதற்கும், கருதுவதற்கும், இடைவிடாது சிந்திப்பதற்கும், உலகியலில் தோன்று கின்ற துன்பக்கடலினின்றும் கரையேறவும், அதனைக் கடப்பதற்கும் உரியதுணை அதுவேயாகும். அதுவே நான் கூறியதும். அதனைக் காட்டிலும் நன்மைபயக்கக் கூடியது வேறொன்றும் இல்லை'' என்று அறுதியிட்டுக் கூறினான் பிரகலாதன்.

'உணர, கருத, கேட்டிட, இடர்க்கடல் கடக்க என்பவை, முறையே யாவர்க்கும் அறிதற்கும், தியானிப்பதற்கும், உபதேசமாகக் கேட்பதற்கும், உரியது இந்தத் திருநாமம்' என்று பொருள்படும். அறிவினால் ஆராய்ந்து உணரவும் உள்ளத்தால் நினைக்கவும் செவியினால் கேட்கவும், நாவினால் சொல்லவும், துன்பக்கடலைக் கடக்கவும் உரியதாகும் என்பதாம். 'சுருதி ஆதியில்' என்றதனால், வேதத்துடன் அவற்றுடன் தொடர்புடைய, உபநிடதங்கள், சாத்திரங்கள், ஆகமங்கள், புராணங்கள், முதலிய வற்றையும் கொள்ளுதல் தகும். 'உயர்வற, உயர்நலமுடையவன்' என்பது திருவாய்மொழி. உணர, கருத, கேட்டிட என்பதில் கேள்வி, விமரிசனம், பாவனை முதலியன அடங்குவது கருதுக. 'சுடர்ஆழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை, இடராழி நீங்கவே என்று' என்பது திவ்யப் பிரபந்தம்.

41. இரணியன் மீண்டும் வேண்டுதல்

தேவர் செய்கையன் அங்ஙனம் உரைசெய, தீயோன்
"தாஇல் வேதியன், தக்கதே உரைசெயத் தக்கான்;
ஆவது ஆகுக; அன்று எனின் அறிகுவம்" என்றே,
'யாவது அவ்வுரை? இயம்புதி! இயம்புதி!' என்றான். (6312)

(செய்கை-ஒழுகலாறு; தாஇல்-குற்றமற்ற)

பிரகலாதன் பிறந்ததுதான் அசுரகுலமே தவிர, அவனுடைய நடத்தை-ஒழுகலாறு தேவர்களைப் போல் மிக்க சிறந்ததாகும். அத்தகைய

Koviloor Digital Library

தேவர்களுக்கு இணையான பிரகலாதன் இவ்வாறு கூறியதும், கொடிய வனாகிய இரணியன், 'குற்றமில்லாத ஆசிரியன் தகுதியானவற்றையே ஓதுவித்திருப்பான்; இப்பொழுதும் சரியானவற்றையே கூறும் இயல்பும், தகுதியும் படைத்தவன் அவன். எனவே எது நடந்தாலும், அவ்வாறே நடக்கட்டும், நாம் எதிர்பார்ப்பதற்கு மாறாக ஏதேனும் உளதானால், அதுபற்றிப் பின்னர்ஆராய்வோம் என்றுதன் மனத்துள்கருதி, பிரகலாதனை நோக்கி, ''மைந்தனே! நீ கூறியதாக ஆசிரியன் கூறும் அந்தச்சொல், அந்தப் பெயர் யாது? விரைவில் கூறுக'' என்று வற்புறுத்தினான்.

அசுரர் குலத்தில் பிறந்தாலும், வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து காட்டுவதால் அவனைத் தேவர் செய்கையன் என்கிறான் கவிஞன். 'தாஇல் வேதியன், தக்கதே உரைசெயத் தக்கான்' என்பது, இரணியன், வேதியன் பால் கொண்ட நன்மதிப்பையும், நம்பிக்கையையும் காட்டுகிறது எனக் கொள்க. 'இயம்புதி, இயம்புதி' என்ற அடுக்கு, விரைவு பற்றியும், வெகுளி பற்றியும் வந்தது என்க. அரக்கர் குலத்தில் பிறந்திருந்தாலும் வீடணனை 'கரு நிறத்தோர்பால் வெளித்து வைகுதல் அரிதென, அவர்உருமேவி ஒளித்து வாழ்கின்ற தருமம் அன்னான்தனை உற்றான்' என்று கம்பர் கூறுவதும் நினைக. பெரிய புராணத்தில் கண்ணப்பன் வேடர் குலத்தில் பிறந்தவனாயினும், தேவர் குணம் கொண்டவன் என்பதை ''வேடர் குலப் பெருந்தவத்தால், வந்து, கொள்கையின்உம்பர்மேலான்' என்று சேக்கிழார் கூறுவதையும் இங்கு ஒப்பிட்டு நோக்குக. 'நீதியால் வந்ததொரு நெடுந்தரும நெறியல்லால், சாதியால் வந்த சிறு நெறியறியான்' என்பதும் வீடணன் பற்றிய கம்பன் வாக்கே.

42. பிரகலாதன் நாராயணன் நாமம் பற்றிப் புகழ்ந்துரைத்தல்

"காமம் யாவையும் தருவதும், அப்பதம் கடந்தால்,
சேமவீடு உறச்செய்வதும், செந்தழல் முகந்த
ஓம வேள்வியின் உறுபதம் உய்ப்பதும், ஒருவன்
நாமம்; அன்னதுகேள்; நமோ நாராயணாய!" (6313)

(காமம்-விருப்பம்; சேமம்-பாதுகாப்பு; தழல்-நெருப்பு; வேள்வி-யாகம்; உய்ப்பது-செலுத்துவது; சேமவீடு-பரமபதம்)

''நாம் விரும்பும் உறுதிப்பொருள்களாகிய நற்பேறுகள் அனைத்தையும் குறையின்றி நல்குவதும், அவ்வாறு நற்பேறு பெற்ற ஒரு பெரு நிலையைக் கடந்துவிட்டால், பாதுகாப்பான, அந்தம்இல் பேரின்பமாகிய அழி வில்லாத வீடு பேற்றை அடையச்செய்வதும், சிவந்தநெருப்பில் நெய் முதலியவற்றை முகந்து சொரியும் வேள்வியினால் பெறும் பெரும் பேறாகிய மீளாப் பரமபதத்திற்கு நம்மைச் செலுத்துவதும், ஒப்பற்ற ஒருவனாகிய திருமாலின் திருநாமமே; அதனைச் சொல்லுகிறேன்

Koviloor Digital Library

கேட்பாயாக! அதுதான் ''நமோ நாராயணாய'' என்னும் மந்திரம் ஆகும் என்கிறான் பிரகலாதன்.

'காமம் யாவையும்' என்பது நாம் விரும்பும் அறம், பொருள், இன்பம் என்னும் நமக்கு நன்மை பயக்கக்கூடிய உறுதிப்பொருள்களை என்க. இம்மூன்று நிலையினையும் கடந்தால் நமக்கு வீடுபேறு எய்தும். வேள்வியின் பயனால் விளையும் பரமபதமும் கிட்டும். இவற்றுக் கெல்லாம் மூலகாரணம் திருமால்தான். அவனுடைய திருநாமமே. 'நமோ நாராயணாய என்பது' என்கிறான் பிரகலாதன். 'நடந்த நம்பி நாமம் சொல்லின், நமோ நாராயணமே' என்பது பெரிய திருமொழி. எது அறம், பொருள், இன்பம், வீடு என்று ஒரு தனிப்பாடல் கூறுகிறது கேளுங்கள். 'ஈதல் அறம்; தீவினை விட்டு ஈட்டல் பொருள்; காதலர் இருவர் கருத்தொரு மித்து ஆதரவுபட்டதே இன்பம்; பரனை நினைந்து இம்மூன்றும் விட்டதே பேரின்பவீடு' என்பது ஒரு தனிப்பாடல். இறைவனது இவ்வெட் டெழுத்து மந்திரம், இம்மை, மறுமை, அம்மை ஆகிய மும்மை நலங்களையும் நல்கும் என்பது குறிப்பு.

43. ''மண்ணின் நின்று, மேல்மலர் அயன் உலகுஉற வாழும்
எண்இல் பூதங்கள், நிற்பன, திரிவன, இவற்றின்
உள் நிறைந்துள கரணத்தின் ஊங்கு உள உணர்வும்
எண்ணுகின்றது இவ் எட்டு எழுத்தே; பிறிது இல்லை.'' (6314)

(மண்-மண்ணுலகம்; நின்று-முதலாக; உற-பொருந்த; பூதங்கள்-உயிர்த்தொகைகள்/உயிரினங்கள்; திரிவன-நடப்பன; உள்-மனம்; கரணம்-கருவிகள்; உணர்வு-மெய்யுணர்வு; எண்இல்-அளவற்ற; எண்ணுதல்-போற்றுதல்)

''இவ்வுலகம் முதல், தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமதேவனின் சத்தியலோகம் வரை உள்ள உலகங்கள் எல்லாவற்றிலும் வாழும் அளவற்ற உயிரினங்கள் அசையும், அசையாப்பொருள்கள் இவை எல்லாவற்றின், மனத்தகத்துள்ளும் நீங்காது நிறைந்திருப்பதும் அவற்றை இயக்குவதும் மனம் முதலிய அந்தக் கரணங்களாகிய கருவிகளின் மூலம் உளவாகும் மெய்யுணர்வும், ஞானமும் எப்போதும் ஏற்றிப் போற்றித் துதிப்பதெல்லாம் இந்த எட்டெழுத்து மந்திரமாகிய 'நமோ நாராயணாய நம' என்ற ஒன்றேதான். இதைத்தவிர வேறு எந்தப் பெயரையும் அவை போற்றுவதில்லை'' என்கிறான் பிரகலாதன்.

'மண்' என்பது நிலவுலகு முதலாகிய கீழ் ஏழுலகங்களையும், 'மேல்மலர் அயன் உலகம்' என்பது மேல் ஏழு உலகங்களையும் குறிக்கும். எனவே ஈரேழு பதினான்கு உலகங்களில் வாழும் உயிரினங்களெல்லாம், இயங்குதிணை, நிலைத்திணைப் பொருள்கள் எல்லாம் மனத்துள் கொண்டிருப்பது நாராயணனின் திருநாமமே அன்றிப் பிறிது

Koviloor Digital Library

வேறொன்றில்லை என்கிறான் பிரகலாதன். 'நிற்பன, திரிவன' என்பது அசையாப் பொருளையும், அசையும் பொருளையும் குறிக்கும் என்க. கரணம் என்பது மனம், மொழி, மெய், புத்தி, சித்தி, அகங்காரம் முதலிய அந்தக்கரணங்களைக் குறிக்கும் என்க. எட்டெழுத்து என்பது அஷ்டாட்சரமாகிய 'ஓம் நமோ நாராயணாய நம' என்பதைக் குறிக்கும்.

44. "முக்கண் தேவனும், நான்முகத்து ஒருவனும் முதலா,
மக்கள்காறும், இம்மந்திரம் மறந்தவர், மறந்தார்;
புக்குக் காட்டுவது அரிது; இதுபொதுவுறக் கண்டார்;
ஒக்க நோக்கினர்; அல்லவர் இதன் நிலை உணரார்." (6315)

(ஒருவன்-ஒப்பற்றவன்; புக்கு-உட்புகுந்து; காட்டுவது-அறிவித்தல்; நிலை-சீர்மை/உண்மைப்பொருள்; ஒக்க-உடன் இயைந்து; பொதுவுற-நடுவுநிலையுடன்)

''மூன்று கண்களையுடைய சிவபெருமானும், நான்கு முகங்களை உடைய ஒப்பற்ற பிரமதேவனும் முதற்கொண்டு மண்ணுலகில் வாழும் சாதாரணப் பொதுமக்கள் வரையிலும் இந்த எட்டெழுத்து மந்திரமாகிய 'ஓம் நமோ நாராயணாய நம' என்ற மந்திரத்தை மறந்துபோவார்கள் என்றால், அவர்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்று கூறப்படுகின்ற நன்மைதரும் உறுதிப்பொருள்களை மறந்தவர்களாவார்கள். இதன் தத்துவத்தை உட்புகுந்து நுணுகி ஆராய்ந்து பிறர்க்குத் தெரிவிப்பது என்பது எளிதான செயலன்று. மிக அரியதாகும். எக்காலத்துக்கும் பொதுநெறி நின்று, நடுவு நிலைமையினின்று, நெறி பிறழாது காண்பவர்களாகிய ஞானியர்களும், ஓடும் செம்பொன்னும் ஒக்க நோக்கும் இயல்புடைய முற்றும் துறந்த, முக்காலமும் உணரும் வல்லமைபெற்ற, இன்பதுன்பங்களைச் சமமாக நோக்கும் பண்புடைய யோகியர், முனிவர்களும் அன்றி, ஏனைய மற்றோர்களால் இம்மந்திரத்தின் மகிமையை, சீர்மையை, உண்மைப்பொருளை, சிறப்பை உணர்ந்து தெளிவுபெறுவதென்பது இயலாதது ஆகும்''

மனித அறிவு கொண்டு ஆராய்ந்து சொல்லும் வெற்றறிவின் வலையில் இம்மந்திரப்பெருமை அடைபட்டுப்போகாது. ஞானியர், முனிவர், யோகியர் முதலியவர்கள் அனுபவித்து அறிவதுதான் இதன் பெருமை. 'அப்படியன், அந்நிறத்தன், அவ்வண்ணத்தன் அவன் அருளே கண்ணாகக் காணின் அல்லால், இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன் இவன் இறைவன் என்று எழுதிக்காட்ட ஒண்ணாதே' என்பது தேவாரம். 'மெய்த்திரு வந்துற்றாலும், வெந்துயர் வந்துற்றாலும் ஒத்திருக்கும் உள்ளத்தின் பண்பு' என்பது குசேலோபாக்கியானம், 'புக்குக்காட்டுதல்' என்பது அம்மந்திரத்தின் பெருமையை உள் புகுந்து தான் முதலில் அறிந்துகொண்டு, பின்னர் தான் அறிந்ததை ஏனையோரும் உணருமாறு தெரிவித்தல் என்ற விரிந்த பொருளைத் தரும். ஞானியர், மக்கள் என்பதை

Koviloor Digital Library

இங்கே நல்லாசிரியன்-மாணாக்கன் என்றும் தொடர்புபடுத்திக் காணலாம். பக்குவம் இல்லாதோரால் இம்மந்திரத்தின் மகிமையை உணரவும் முடியாது, பிறர்க்கு உணர்த்தவும் முடியாது என்பது கருத்து.

45. "தோற்றம் என்னும் அத்தொல்வினைத் தொடுகடல் சுழிநின்று,
ஏற்று நன்கலன், அருங்கலன் யாவர்க்கும், இனிய
மாற்ற மங்கலம், மா தவர் வேதத்தின் வரம்பின்
தேற்ற மெய்ப்பொருள், திருந்த, மற்று இதின் இல்லை, சிறந்த." (6316)

(தோற்றம்-பிறப்பு/பிறவி; தொல்வினை-பழையவினைகள்; கலன்-கலம்/மரக்கலம்; கலன்-அணிகலன்/ஆபரணங்கள்; மாற்றல்-விளைத்தல்; வரம்பு-முடிவு; தேற்ற-தெளிந்த; தொடு-தோண்டப்பட்ட; ஏற்றுதல்-கரைசேர்த்தல்; மாற்றம்-மொழி; தொடுதல்-அகழ்தல்).

''பிறப்பு என்னும் அந்தப் பழமையான, நல்வினை, தீவினைகளாகிய, தோண்டப்பட்ட ஆழ்ந்த கடலின் சுழியினின்றும் மக்களை முக்தி என்னும் கரைக்கு ஏற்றுவிப்பதும், அக்கடலைத் தாண்டுவதற்கு ஏற்றதாக அமைந்த நல்ல மரக்கலமாகவும், பெறுதற்கரிய அணிகலனாக அமைந்து விளங்குவதும், எல்லோர்க்கும் இன்பத்தையே தரும் இனிமையான மங்கல மொழியாக இருப்பதுவும், பெரும் தவசியர்கள் போற்றுகின்ற வேதத்தின் எல்லையாகிய உபநிடதங்கள் தெளியத் தெரிவிக்கின்ற மெய்ப்பொருளாக இருப்பதுவும், இந்த எட்டெழுத்து மந்திரமே. இதைத் தவிர வேறு சிறந்த மந்திரம் எதுவும் இல்லை'' என்கிறான் பிரகலாதன்.

''வினை என்பது நல்வினை, தீவினை என்ற இரண்டையும் குறிக்கும். 'இருள்சேர் இருவினையும் சேரா' என்பது குறள். நல்வினையும் மறுபிறவிக்குக்காரணம் ஆதலின் பொதுவாக வினை என்றார் என்க. வினை அநாதியானது என்பதால், 'தொல்வினை' என்றார் என்க. 'தோற்றம்' என்பது பிறவியைக் குறிக்கும். பிறவிப் பெருங்கடல் என்பது குறள். எனவே 'தோற்றம் என்னும் அத்தொல்வினைத் தொடுகடல்' என்றார் என்க. 'தொடுதல்' என்பது தோண்டுதலைக் குறிக்கும். 'தொட்டனைத்து ஊறும் மணற்கேணி' என்பது குறள். 'சுழி' என்பது கடலின் அல்லது நீர்ப்பரப்பில் தோன்றி உடனே மறைந்து போவது என்பதைக் குறிக்கும். வாழ்க்கை நிலையாமையைக் குறிக்க வந்த உருவகம் எனக் கொள்க.' நன்கலன்' என்பது பிறவிப் பெருங்கடலைத் தாண்டுவதற்குக் கிடைத்த நல்ல மரக்கலம் என்றும், 'அருங்கலன்' என்பது அதற்குரிய, கிடைத்தற்கரிய அணிகலன் என்றும் பொருள்தரும். 'வேதத்தின் வரம்பு' என்பது வேதங்களின் அந்தமாகிய'' வேதாந்தத்தைக் குறித்து உபநிடதம் என்று பொருள்படும். வேதத்தின் சாரம் உபநிடதம் எனக் கொள்க. பிறவி என்னும் பெருங்கடலில் தொல்வினை என்னும் சுழலில் சிக்கிச் சீரழியாமல் முக்தி என்னும் கரையை அடைவிப்பது இந்த எட்டெழுத்து மந்திரமேயாகும் என்பது கருத்து.

Koviloor Digital Library

நல்வினை, தீவினைகளை முறையே பொன்விலங்காகவும், இரும்பு விலங்காகவும் கூறுவதும் உண்டு. 'அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேன்' என்ற மாணிக்கவாசகரின் தேவாரம் இங்கு ஒப்பு நோக்கத் தக்கது. 'தனியனேன் பெரும் பிறவிப் பௌவத்து' என்பதும் 'கற்றுணைப் பூட்டி ஓர் கடலில் பாய்ச்சினும், நற்றுணையாவது நமசிவாயவே' என்பதும் 'நாவினுக்கு அருங்கலம் நமசிவாயவே' என்பதும் திருநாவுக் கரசர் தேவாரம்.

46. "உன் உயிர்க்கும், என் உயிர்க்கும், இவ்வுலகத்தினுள்ள
மன்னுயிர்க்கும், ஈதுஉறுதி என்று உணர்வுற மதித்துச்
சொன்னது இப்பெயர்" என்றனன், அறிஞரின் தூயோன்;
மின் உயிர்க்கும் வேல் இரணியன், தழல் எழ விழித்தான். (6317)

(மன்-நிலைபெற்ற; மதித்து-ஆராய்ந்து; மின்-ஒளி; தழல்-தீப்பொறி; உயிர்த்தல்-வெளிப்படுத்துதல்/ஒளிவீசுதல்; உயிர்-ஆன்மா; உறுதி-சிறந்தபயன்/நன்மை)

அறிஞர்களுக்கு எல்லாம் தூய்மையான பேரறிஞனான பிரகலாதன், இரணியனை நோக்கி, ''உன்உயிருக்கும், என்னுடைய ஆன்மாவிற்கும் மற்றும் இவ்வுலகத்தில் நிலைபெற்றுள்ள எல்லா உயிரினங்களுக்கும் மேலான உறுதியாயிருப்பதும், நன்மை தருவதும் இந்த எட்டெழுத்தாகிய 'ஓம் நமோ நாராயணாய நம' என்னும் திருநாமம்தான்'' என்று மிகவும் ஆராய்ந்து கூறுகிறேன் என்றான். அதனைக் கேட்ட அளவில் ஒளிவீசுகின்ற வேற்படையை உடைய இரணியன், கண்களில் தீப்பொறி பறக்கச்சினந்து, தன் மைந்தன் பிரகலாதனை நோக்கினான்.

''உணர்வுற மதித்துச் சொன்னது'' என்பது என் உள்ளத்தில் தோன்றிய நல்லுணர்வால் நன்கு ஆலோசித்துக் கூறியது என்று பொருள்படும்.

47. இரணியன் பிரகலாதனைச் சினந்து கூறுவது [10 பாடல்கள்]

"இற்றை நாள்வரை, யான்உள நாள்முதல், இப்பேர்
சொற்ற நாவையும், கருதிய மனத்தையும் சுடும் என்
ஒற்றை ஆணை; மற்று யார் உனக்கு இப்பெயர் உரைத்தார்?
கற்றது ஆரொடு? சொல்லுதி, விரைந்து" எனக் கனன்றான். (6318)

(சொற்ற-சொன்ன; கருதிய-நினைத்த; ஒற்றை-ஒப்பற்ற/ஒரு; கனல்தல்-சினத்தல்/வெகுள்தல்)

இரணியன் பிரகலாதனை நோக்கி, ''நான் இவ்வுலகில் பிறந்தநாள் முதல், இன்றுவரையிலும் நீ சொன்ன இந்த இப்பெயரைச் சொல்லுப வர்களின் நாக்கும், அதனை எண்ணியவர்களின் மனமும் என்னுடைய

Koviloor Digital Library

ஒப்பற்ற ஒரே ஒரு தனிக்கட்டளையினால் சுடப்பட்டுவிடும். இதனை அறிந்திருந்தும் உனக்கு இந்தப் பெயரைச் சொல்லிக்கொடுத்தது யார்? நீ யாரிடத்தில் இப்பெயரைக் கற்றுக் கொண்டாய்? விரைவாகச் சொல்லுவாயாக!'' என்று உள்ளக் குமுறலோடு கேட்கிறான் இரணியன்.

''நான் இறைவனிடம் தவம் இருந்து இவ்வரத்தைப் பெற்ற நாளிலிருந்து இன்றுவரையிலும் இப்போது நான் வாழ்ந்தநாள் தவிர எஞ்சிய என்வாழ்நாள் வரையிலும், நீ கூறிய இந்தச் சொல்லை ஒருவரும் கூறத் துணிய மாட்டார்கள். நினைத்துக்கூடப் பார்க்கமாட்டார்கள். அப்படியிருக்கும்போது உனக்கு இந்தப் பெயரைச் சொல்லிக் கொடுத்தது யார்? யாரிடமிருந்து இந்தப் பெயரைத் தெரிந்து கொண்டாய்? என்று சினந்து கேட்கிறான் இரணியன் என்க.

'ஒற்றை ஆணை' என்பது ஒரேஒரு ஆணை என்று அவனுடைய ஏக சக்ராதிபத்திய நிலையினை எடுத்துக் கூறும் என்க. தன்மைந்தன் இவ்வாறு கருதியிருக்க மாட்டான் என்று நினைத்த தந்தை இரணியன், இக்குற்றத்தை மற்றவர்கள்மேல் ஏற்றிக்கூறும் தொனி நோக்குக. 'யார் உனக்கு இப்பெயர் உரைத்தார்? கற்றது ஆரொடு?' என்று கேட்பதை உணர்க. அந்தப் பெயரைத் தான் உச்சரிக்கக்கூட விரும்பாதவனாக வெறுப்புடன் 'இப்பேர்' என்று கூறுவதையும் கருதுக. முன்பாடலில் 'தழல் எழ விழித்தான்' என்று புற மெய்ப்பாடு கூறப்பட்டதால், இங்கே 'கனன்றான்' என்ற சொல்லுக்கு உள்ளம் குமுறுகிறான் என்று அகமெய்ப்பாடாகக் கூறப்பட்டது காண்க.

48. ''முனைவர், வானவர் முதலினர், மூன்று உலகத்தும்
எனைவர் உள்ளவர் யாவரும், என் இருகழலே
நினைவது; ஓதுவது என்பெயர்; நினக்கு இது நேர
அனையர் அஞ்சுவர்; மைந்த! நீ யாரிடை அறிந்தாய்?'' (6319)

(முனைவர்-மும்மூர்த்திகள்/முதல்வர்/முன்னவர்; வானவர்-தேவர்கள்; எனைவர்-எத்துணைபேர்; ஓதுவது-துதிப்பது; அனையர்-அத் தகையவர்கள்; நேர்தல்-உடன்படுதல்/போதித்தல்)

''பழமையான முதல்வர்களான அரி, அயன், அரன் என்ற மும்மூர்த்திகளும், தேவர்கள் முதலியவர்களும், மற்றும் இந்த மூன்று உலகங்களில் எத்தனைபேர் இருக்கிறார்களோ அத்தனைபேரும் தினமும் மனத்தால் வணங்குவது என் இரு வீரக்கழலணிந்த பாதங்களையே ஆகும். அவர்கள் தினந்தோறும் துதிப்பதும் நாவினால் உச்சரிப்பதும் எனது பெயரேயாகும். அவ்வாறு இருக்கும்போது அவர்களில் ஒருவரேனும் என்பெயருக்கு மாறாக, மற்றொரு புதியபெயரைப் போதிக்க உடன்படவே அஞ்சுவார்கள். எனவே மகனே! பிரகலாத! இந்தப் பெயரைநீ வேறுயாரிடமிருந்து கற்றுக் கொண்டாய்?'' என்று கேட்கிறான் இரணியன்.

Koviloor Digital Library

'முனை' என்பதை முன்னை என்பதன் இடைக்குறையாகக் கொண்டு, முன்னையவர் என்ற பொருளில் எல்லோர்க்கும் முதல்வராகத் திகழும் மும்மூர்த்திகளையும் குறித்தது எனக் கொள்க. 'மூன்று உலகத்தும்' என்பது மேல், நடு, கீழ் என்னும் மூவுலகத்தையும் குறிக்கும். தான்தன்மைந்தன்மீது எல்லையற்ற சினம் கொண்டிருந்தாலும் அவன் 'மைந்த!' என்ற அழைப்பதில் அவன்பாச உணர்ச்சி வெளிப்படுவது காண்க.

49. "மறம்கொள் வெம்செரு மலைகுவான், பல்முறை வந்தான்,
கறங்கு வெம்சிறைக் கலுழன்தன் கடுமையின் கரந்தான்;
பிறங்கு தெண்திரைப் பெருங்கடல் புக்கு, இனம் பெயராது,
உறங்குவான் பெயர் உறுதி என்று ஆர் உனக்கு உரைத்தார்?" (6320)

(மறம்-வீரம்; வெம்-கொடிய; செரு-போர்; மலைதல்-போரிடும் பொருட்டு; கறங்கு-காற்றாடி/சுழன்று பறத்தல்; சிறை-சிறகுகள்; கடுமை-வேகம்; கரத்தல்-மறைதல்; பிறங்குதல்-பெருகிவருதல்; தெண்-தெள்ளிய; திரை-அலைகள்; இனம்-இன்னம்/இன்னும்/இந்நாள்வரை; உறுதி-பயன்/நன்மை; கலுழன்-கருடன்; பெயர்தல்-நீங்குதல்)

''நீ கூறுகின்ற நாராயணனாகிய திருமால் வீரம் பொருந்திய என்னை எதிர்த்து கொடிய போர் செய்தற்பொருட்டு, பலமுறை வந்தான், எனினும் என்னிடம் தோற்று என்முன் நிற்க இயலாது சுழலும் இயல்புடையதும், ஒலிக்கின்ற தன்மை யுடையதுமாகிய தன் வாகனமாகிய கருடனின் வேகம் நிறைந்த சிறகுகளின் உதவியால் தப்பிப் பறந்து சென்று தன்னை மறைத்துக் கொண்டான். மேன்மேலும் பெருகிவருகின்ற, தெள்ளிய அலைகளை யுடைய பெரிய பாற்கடலில் போய்ப் புகுந்துகொண்டு அதைவிட்டு நீங்கி இன்னும் வெளியில் வராது தூங்கிக்கொண்டு இருப்பவனுடைய திருநாமம்தான் உலக வாழ்க்கைக்கு நன்மைதருவதாகிய நிலையான வீடுபேற்றினை அளிக்கும் என்று உனக்கு எடுத்து உரைத்துப் போதித்தவர் யார்?'' என்று வெகுண்டு கேட்கிறான் இரணியன்.

என்னுடன் எதிர்த்துப் போர்புரிவதற்காகப் பலமுறை வந்த திருமால், தன்னுடைய வாகனமாகிய கருடனின் வேகத்தால், தன்னை மறைத்துக் கொண்டு ஓடிப்போனான். அப்படி ஓடியவன் பாற்கடலில்போய் நன்றாகத் தூங்குகிறான். இன்றுவரை வெளியே வரவேஇல்லை, அத்தகைய வீரமற்றவனான நாராயணனின் பெயர்தான் வீடுபேற்றை நல்கும் என்று உனக்குப் போதித்தது யார்? எனக் கேட்கிறான் இரணியன் என்க. 'கறங்கு' என்பது காற்றாடியைக் குறிக்கும். இங்கே காற்றாடி போல சுற்றிச்சுழன்று பறக்கும் இயல்புடைய கருடன் என்னும் பொருளைத் தந்து நின்றது. 'பிறங்குதல்' என்ற சொல் பொதுவாக 'விளங்குதல்' என்ற பொருளையே தரும் என்றாலும் இங்கே பெருகுதல் என்ற பொருளில் கையாளப்பட்டிருக்கிறது. 'பிறங்கி வந்த என் மேல் நிலைஇய நோய்' என்பது கலித்தொகை. இதற்குப் 'பெருகிவந்து, என்மேல் நிலைபெற்ற

Koviloor Digital Library

காமநோய்' என்று விளக்கம் தருகிறார் நச்சினார்க்கினியர் என்பது ஒப்பு நோக்கத்தக்கது.

50. "பரவை நுண்மணல் எண்ணினும், எண்ண அரும் பரப்பின்
குரவர் நம்குலத்து உள்ளவர் அவன் கொலக் குறைந்தார்;
அரவின் நாமத்தை எலி இருந்து ஓதினால், அதற்கு
விரவு நன்மைஎன்? துன்மதி! விளம்பு" என, வெகுண்டான். (6321)

(பரவை-கடல்; குரவர்-முன்னோர்கள்/பெரியோர்; அரவு-பாம்பு; விரவும்-வந்துசேரக்கூடிய; துன்மதி-கெட்டபுத்தி; பரப்பு-பெருந் தொகை)

"கடலின் கரையில் உள்ள நுண்ணிய மணலை எண்ணவே முடியாது, அவ்வாறு எண்ணி வரையறுத்தாலும்கூட, எண்ணுதற்கு இயலாத பெருந் தொகையினரான நம் அசுரகுலத்துத் தோன்றிய பெரியவர்களான நம் முன்னோர்கள், நீ கூறுகின்ற நாராயணனால் கொல்லப்பட்டு இறந்து பட்டனர். அதனால் நமது அசுரக்குலத்து எண்ணிக்கை மிகக் குறைந்து போனது. தனக்குப் பகையான பாம்பின் பெயரையே, எலிக்கூட்டம் அமர்ந்திருந்து இடைவிடாது உச்சரித்துக்கொண்டே இருக்கும் என்றாலும், அதனால் அதற்கு என்ன நன்மை கிடைத்துவிடும், கெட்டபுத்தி உடையவனே! சொல்வாயாக!" என்று மிகவும் சினந்து கேட்கிறான் இரணியன்.

அரவு என்று நாராயணனையும், எலி என்று பிரகலாதனையும் குறிப்பது போல் தொனிக்கிறது இப்பாடல் வரி. திருமாலின் வலிமையை உறுதிப் படுத்துவதுபோல் இரணியன் கூறுவதை நோக்குக. இப்பாடலுக்குப் பாடவேறுபாடு கிடைக்கவில்லை. எனினும் இத்தொடர் மேலும் ஆய்வுக்குரியது.

பரந்திருத்தலால் 'பரவை' என்பது கடலுக்குக் காரணப்பெயர்; 'பரவை நுண்மணல் எண்ணுதல்' என்பது தமிழ் இலக்கியத்தில் மிகுதியாகக் கையாளப்பட்டிருக்கிறது. 'தொல்லை நம் பிறவி எண்ணில், தொடுகடல் மணலும் ஆற்றா எல்லைய' என்பது சீவகசிந்தாமணி. 'குரவர்' என்பது முன்னோர்களைக் குறிக்கும். பொதுவாக ஐம்பெரும் குரவர் என்பர், 'அரசன், உவாத்தியான், தாய், தந்தை, தம்முன் நிகர்இல் குரவர் இவர்' என்பது ஆசாரக்கோவை-இதில் தந்தை என்பது தாதை என்றாகி, மூதாதையராகிய முன்னோர்களைக் குறிப்பதாகக் கொள்ளப்பட்டது என்க. எலிக்குப் பாம்பு பிறவிப் பகை என்பது, 'ஒலித்தக்கால் என்னாம், உவரி, எலிப்பகை, நாகம் உயிர்ப்பக் கெடும்' என்னும் குறள்763 கொண்டு அறியலாம். இங்கும் நாராயணன் பெயரைக் கூறாது 'அவன்' எனக் கூறியதை நோக்குக.

Koviloor Digital Library

51. "வயிற்றினுள் உலகு ஏழினோடு ஏழையும் வைக்கும்
அயிர்ப்பு இல் ஆற்றல் என் அனுசனை, ஏனம் ஒன்றாகி,
எயிற்றினால் எறிந்து, இன்னுயிர் உண்டவன் நாமம்
பயிற்றவோ நின்னைப் பயந்தது நான்?" எனப் பகர்ந்தான். (6322)

(ஏழினோடுஏழு-பதினான்கு; அயிர்ப்பு-ஐயம்/சந்தேகம்; அனுசன்-தம்பி/இரணியாட்ச்ன்; ஏனம்-பன்றி/வராகம்; எயிறு-பற்கள்/தந்தம்; பயிற்றுதல்-பழகுதல்/பலமுறை ஓதுதல்; பயந்தது-பெற்றது; எறிதல்-குத்தித்தாக்குதல்)

''மேல் ஏழு, கீழ் ஏழு ஆகிய பதினான்கு உலகங்களையும் ஒருசேரத் தன்வயிற்றினுள் அடக்கி வைக்கும் சந்தேகத்திற்கிடமில்லாத தெளிவான வல்லமை பொருந்திய என் தம்பியாகிய இரணியாட்சனை, ஒரு பன்றி வடிவு எடுத்துத் தனது வளைந்த, கூரிய தந்தத்தினாலான பற்களால் குத்தித்தாக்கி, அவனது இனிய உயிரைக் கவர்ந்தவனாகிய அந்த நாராயணனின் திருநாமத்தைப் பலமுறையும் சொல்லிப் பழகுவதற் காகவா நான் உன்னை என் மகனாகப் பெற்றெடுத்தேன்?'' என்று கேட்கிறான் இரணியன்.

பதினான்கு உலகங்களையும், தன் வயிற்றுக்குள் அடக்கும் ஆற்றல் திருமாலைத் தவிர, இரணியாட்சனுக்கும் இருந்தது என்பது பெறப் படுகிறது. தனது தம்பியை அந்தத் திருமாலுக்கு ஒப்பிடுகிறான் இரணியன். தன் தம்பியே திருமாலுக்கு ஒப்பு என்றால், தான் திருமாலைவிடப் பெரியவன் என்பதைக் கூறாமல் கூறுகிறான் என்று கொள்க. கம்பன் இரணியாட்சனை, இரணியன் தம்பி என்றே கூறிப்போகிறார், இரண் யாட்சன், இரணியன் தமையன்என்று கூறுவாரும் உளர். 'ஏனம்' என்பது பன்றியைக் குறித்து, திருமாலின் பத்து அவதாரங்களில் மூன்றாவது அவதாரமாகிய வராக அவதாரத்தைக் குறித்தது. இரண்யாட்சன் பூமியைப் பாயாகச் சுருட்டிக்கொண்டு பாதாளத்தில் சென்று மறைந்தான். திருமால் பூமியை அவனிடமிருந்து மீட்பதற்காக தான் பன்றி அவதாரம் எடுத்துக் கொண்டு தன் கொம்பாகிய பல்லால் அவனைக் குத்திக்கிழித்து பாயாகச் சுருட்டப்பட்ட பூமியை மீட்டுக்கொண்டு வந்தார் என்பது நாம் பால காண்டத்தில் கண்ட நிகழ்ச்சியே. அதனை இங்கே நினைவு கூர்க. 'ஏனம் ஒன்றெனஎழுந்துவந்துஎம்ஐயன்ஆவிஉண்டவனை, இன்றுநீமானமின்றி எதிர்ஓதவோ உனை வளர்த்தது என்றிவை கிளர்த்தி' என்பது 'இரணிய வதைப் பரணித்தாழிசை. மூவுலகும் உண்டு உமிழ்ந்த முதல்வ' என்பது திவ்யப்பிரபந்தம். திருமால் தன் குலத்திற்கே பகைவன் என்பதை இரணியன் இங்கே நிறுவுகிறான் என்க.

Koviloor Digital Library

52. "ஒருவன், யாவர்க்கும், எவற்றிற்கும், உலகிற்கும் முதல்வன்,
தருதல், காத்து,அவை தவிர்த்தல், என்று இவைசெயத்தக்கோன்,
கருமத்தால் அன்றிக் காரணத்தால் உள்ள காட்சி,
திருவிலீ! மற்று இது எம் மறைப்பொருள் எனத் தெரிந்தாய்?" (6323)

(தருதல்-படைத்தல்; தவிர்த்தல்-அழித்தல்; தக்கோன்-தகுதி வாய்ந்தவன்; திரு-நற்பேறு/நல்வாழ்வு; பொருள்-முடிந்தபொருள்; முதல்வன்-தலைவன்; கருமம்-காட்சி/தொழில்; காட்சி-பிரத்தியட்சம்; காரணம்-அனுமானம்)

'இவ்வுலகில் உள்ள எல்லா அஃறிணைப் பொருள்களுக்கும், உயர்திணைப்பொருள்களுக்கும் மக்கள், தேவர், இவைதவிர மற்ற எல்லா உயிரினங்களுக்கும், சர, அசரப்பொருள்களுக்கும், ஏன், இந்த உலகத்திற்கே மூலமுதல்வன்-காரணகர்த்தா நான் ஒருவன்தான், இங்கு உயிரினங்களையும் மற்ற எல்லாவற்றையும் படைத்துக் காத்து அழிக்கும் முத்தொழில்களையும் குறைவறச் செய்யும் வல்லமையும், தகுதியும் படைத்தவனும் நான் ஒருவனேதான். அவ்வாறு இருக்கும் போது, நற்பேறும், நல்வாழ்வும் அற்றவனே! என்னுடைய தொழிலை நேர்முகமாகக் கண்டறிவதைத் தவிர்த்து, அனுமானத்தால் நீ காணுகின்ற இந்தச் செயல், எந்த வேதத்தில் கூறப்பட்டிருக்கிற முடிவான பொருள் என்று கருதிக் கொண்டிருக்கிறாய்? என்று இரணியன் பிரகலாதனைச் சாடுகிறான்.

'ஒருவன்' ஒப்பற்றவன் என்றும், 'முதல்வன்' மூலகாரணன் என்றும், தன்னைத்தானே இரணியன் கூறிக்கொள்கிறான். உலகைப் படைக்கும் தொழிலைக் கொண்ட பிரமனும், காக்கும் தொழில் வல்லவனான திருமாலும், உலகத்தை அழிக்கும் ஆற்றல் படைத்தவனான சிவபெருமானும் தான் ஒருவனே என்று இரணியன் தன் அகங்காரத்தை வெளிப்படுத்துவது காண்க. இதைத்தான் நேரில் நீ கண்டு கொண்டிருக்கிறாயே? அதைத் தவிர்த்து, நீயாக அனுமானித்து வேறொரு முதல்வனின் பெயரைக் கூறுகிறாயே? இது எந்த வேதத்தின் உட்பொருள்? என்று - எதனை ஆதாரமாகக் கருதிக் கொண்டிருக்கிறாய்? என்று வன்மையாகச்சாடுகிறான் இரணியன் என்க. 'திருவிலீ' என்று தன் மைந்தனைத் தந்தை அழைக்கும் பாங்கு இங்கு நோக்கத்தகும். தனக்குப்பின் தன் அரசியல் செல்வத்தைக் கொள்ளத்தக்கவன் இவன்தான், எனினும் இவன் தனக்கும் தன் குலத்திற்கும் பகைவனான மாற்றான் நாராயணன் பெயரையே சொல்லி வருவதனால் தனது அரசச் செல்வத்தை இழக்கப் போகிறான் என்று அவன் கருதியே அவனைத் 'திருவிலீ' என்று அழைக்கிறான் எனக் கொள்க. கருதல் அளவையாகிய அனுமானத்தைவிட, காட்சி அளவையாகிய பிரத்தியட்சப் பிரமாணமே சிறந்தது எனக் கூறுகிறான் இரணியன். காட்சியளவை நேரில் கண்டு தெளிவது, அனுமானம் இருக்கும் ஒன்றைக் கொண்டு

Koviloor Digital Library

இல்லாத ஒன்றை அறிவினால் உணர்வது என்க. அனுமானம்-கருதல் அளவை.

53. "ஆதி அந்தங்கள் இதனின் மற்று இல்லை பேர் உலகில்;
வேதம் எங்கனம், அங்கனம் அவைசொன்ன விதியால்,
கோதுஇல் நல்வினை செய்தவர் உயர்குவர்; குறித்துத்
தீது செய்தவர் தாழ்குவர்; இது மெய்ம்மை, தெரியின்" (6324)

(பேர்-பெரிய; கோதுஇல்-குற்றமில்லாத; குறித்து-எண்ணி/மனத்தில் கருதி; தெரியின்-ஆராய்ந்து நோக்கும்போது; மெய்ம்மை-உண்மை; ஆதி-தொடக்கம்; அந்தம்-முடிவு; விதி-வழிமுறை)

''இந்தப் பெரிய, பரந்த உலகத்தில் பழமையான வேதங்கள் என்ன சொல்லுகின்றனவோ, அதன்படி நெறிமுறை வழுவாது நடப்பவர்களும், ஊழ்வினையால், குற்றமற்ற நல்லசெயல்களைச் செய்பவர்கள், தவம் முதலியன இயற்றுபவர்கள் அனைவரும் தம் வாழ்க்கையில் மேம்பட்டு அறிவு, ஆண்மை, பெருமை முதலியவற்றில் உயர்ந்து நிற்பர்; வேண்டு மென்றே, தன் உள்ளத்தில் தீமைகளையே நினைத்து, தீயசெயல்களைச் செய்பவர்கள், என்றும் தம் வாழ்க்கையில் தாழ்ந்தே செல்லுவர். ஆராய்ந்து பார்த்தால் இதுதான் உண்மையான மெய்ப்பொருளாகும். வேதத்தின் தொடக்கமும், முடிவும் இதனைத்தான் கூறுகிறது. இதனைத் தவிர வேறு எதுவும் கூற இல்லை'' என்று கூறுகிறான் இரணியன்.

தான் அறியாது செய்த பிழையோ, தவறோ, தீமையோ, மன்னிக்கப் படலாம். ஆனால் அறிந்தே தவறு செய்வது என்பது மன்னிக்கப்பட முடியாத பெருங்குற்றம், அதனால் தாழ்ச்சியே வந்தடையும் என்று கூறுகிறான் இரணியன் என்க. எனவேதான் 'குறித்து' என்ற சொல்லைக் கவிஞன் பயன்படுத்துகிறான் என்பதை உணர்க. 'நல்லறம் செய்வோர் நல்லுலகு அடைதலும், அல்லறம் செய்தோர் அருநரகு அடைதலும்' என்பது மணிமேகலை; நாம் நல்ல செயல்கள் புரியும்போது கூட அது சிலருக்குத் தீமைவிளைவிப்பதாய் அமைந்துவிடுதலும் உண்டு. எனவே தான் 'கோதுஇல் நல்வினை' என்றார் என்க. 'நன்றே செய்வாய், பிழை செய்வாய், நானோ இதற்கு நாயகமே' என்பது திருவாசகம்.

54. "செய்த மாதவம் உடைமையின், அரி, அயன், சிவன், என்று
எய்தினார் பதம் இழந்தனர்; யான் தவம் இயற்றி
பொய்இல் நாயகம் பூண்டபின்; இனி அது புரிதல்
நொய்யது ஆகும் என்று, ஆரும் என் காவலின் நுழைவார்." (6325)

(நொய்யது திண்மையற்றது/வலிமையற்றது; நாயகம்-தலைமை; பதம்-தலைமைப்பதவி; பொய்இல்-மாறுதல் இல்லாத/மெய்யான; காவல்-கட்டுப்பாடு; நொய்மை-எலிமை)

Koviloor Digital Library

''பிரமன், திருமால், சிவபெருமான் முதலியோர் இயல்பிலேயே தலைவர்கள் அல்லர், தாங்கள் செய்த அரும் பெரும் தவத்தினால்தான் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழிலையும் செய்யும் முத்தேவர்களாகும் தலைமையை ஏற்றனர்; ஆனால் நான் அவர்களைக் காட்டிலும் மேம்பட்ட பெருந்தவத்தை இயற்றி, என்றும் மாறுதல் இல்லாத, நிலைபெற்ற, மெய்யான தலைமைப்பதவியை அடைந்தேன். நான் இப்பதவியை அடைந்தபின்பு, இனிமேலும் தாம் தவம் இயற்றுதலும், முத்தொழிலைச் செய்வதும் திண்மையற்றது, பயனற்றது, சிதைந்து அழியக்கூடியது என்று கருதி அவர்கள் எல்லோரும் என் கட்டப்பாட்டுக்குள் வந்துவிட்டனர்'' என்கிறான் இரணியன்.

55. "வேள்வி ஆகிய புண்ணியம் தவத்தொடும் விலக்கி,
கேள்வி யாவையும் தவிர்த்தனென், 'இவை கிளர்பகையைத்
தாழ்வியாதனசெய்யும் என்று; அனையவர் தம்பால்
வாழ்வுயாது? அயல் எவ்வழிப் புறங்கொண்டு வாழ்வார்?" (6326)

(புண்ணியம்-நற்செயல்கள்; ஆதிய-முதலிய; கிளர்தல்-பொங்கி யெழுதல்; தாழ்வியாதன-அடங்கச் செய்யாதன/இழிவுபடாத/தாழ்ச்சி யற்ற; அயல்-வேறு)

''யாகம், தவம், நூற்கேள்வி முதலிய நற்பயன்களை நல்கும் புண்ணியச் செயல்கள் ஒன்றையும் அந்த முத்தேவர்களும் செய்யவிடாமல் பல வழிகளிலும் தவிர்த்துவிட்டேன். ஏனெனில் இவையெல்லாம் பொங்கி எழுகின்ற பகைமைத்தன்மையை அடங்கச் செய்யாதனவையாகும் பகைவர்களுக்குத் தாழ்விலாத மேன்மையை உண்டாக்கும். அடங்கச் செய்யாதது மட்டுமல்ல, அவை பகைமையை மேலும் தூண்டி வளர்க்கும். எனவே இப்பொழுது அவர்கள் தவம் செய்யாததாலும், யாகங்கள் முதலியன இயற்றாததாலும், நூற்கேள்வியில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளாததாலும் அவர்களுக்கு எனது ஆட்சியில் உயரிய வாழ்வு என்பது ஒன்றில்லை. எனவே அவர்கள் வேறு எந்த வழியில் என்னைத் தோற்பித்துத் தாம் மேம்பட்டு வாழ இயலும்?'' என்று கேட்கிறான் இரணியன்.

'கேள்வி' என்பது வேதசாத்திர ஆராய்ச்சி செய்தலைக் குறிக்கும் என்க. 'அரிய வேள்வியே முதலிய அறங்களை அழித்துப்புரியும் அந்தணர் பொன்றுறப் புரிமினோ' என்பது பாகவதம். 'வேதமும் வேள்வியும் விலக்கி, வேதியர்க்கு ஏதமும் இமையவர்க்கு இடரும் ஈட்டிய பாதகர்' எனப் பின்னால் வீடணன் அடைக்கலப் படலத்தில் கூறப்போவதும் இங்கு ஒப்பு நோக்கத்தகும்.

Koviloor Digital Library

56. "பேதைப் பிள்ளை நீ; பிழைத்தது பொறுத்தனென்; பெயர்த்தும்,
ஏதுஇல் வார்த்தைகள் இனையன விளம்பலை; முனிவன்
யாது சொல்லினன், அவை அவை இதம் என எண்ணி,
ஓதி; போதி," என்று உரைத்தனன், உலகெலாம் உயர்ந்தோன். (6327)

(பேதைமை-அறியாமை; பிழைத்தது-குற்றம்செய்தது; பெயர்த்தும்-மீண்டும்; விளம்புதல்-பேசுதல்; முனிவன்-ஆசார்யன்/ஆசிரியன்; இதம்-நன்மை பயப்பன; போதி-செல்வாயாக; ஏதுஇன்மை-பகைமை; ஏது-பயன்; ஏதுஇல்-வீணான; ஓதி-கற்பாயாக; பிள்ளை-சிறுவன்)

உலகங்களிலெல்லாம் உயர்ந்து விளங்குபவனான இரணியன், பிரகலாதனை நோக்கி, ''பின்விளைவுகள் எதுவும் அறியாத அறிவு நிரம்பாத சிறுவன் நீ, நீ செய்த தவற்றினை நான் இப்போது பொறுத்துக் கொண்டேன். மீண்டும் இதுபோன்று, பகைவரைப் புகழும் பயனற்ற வார்த்தைகளைச் சொல்லாதே, ஆசிரியன் உனக்கு என்ன சொல்லித் தருகின்றானோ அவையெல்லாம் நன்மைபயப்பனவே என்று கொண்டு, அவனிடம் கற்றுக் கொள்வாயாக! இப்பொழுது இங்கிருந்து புறப்பட்டுப் போவாயாக!'' என்று கூறுகிறான்.

57. பிரகலாதன் மீண்டும் பேசுதல். [22 பாடல்கள்]

"உரை உளது உணர்த்துவது; உணர்ந்து கோடியேல்;
விரை உள அலங்கலாய்! வேத வேள்வியின்
கரை உளது; யாவரும் கற்கும் கல்வியின்
பிரை உளது;" என்பது மைந்தன் பேசினான். (6328)

(விரை-நறுமணம்; அலங்கல்-மாலை; கோடி-எற்றுக்கொள்க; உரை-வார்த்தை; கரை-எல்லை; பிரை-உறைமோர்த் துளி)

''நறுமணமிக்க அசைந்தாடும் மாலையை அணிந்தவனே! நீ சற்று நிதானமாக உணர்ந்து ஏற்றுக்கொள்வாயானால், நான் கூற வேண்டியதும், உனக்கு உணர்த்த வேண்டியதுமான சில வார்த்தைக்ள் உள்ளன. அவை நான்மறைகளுக்கும், யாகங்களுக்கும் முடிவான பயனை அளிக்கவல்ல முடிவிடமாய் உள்ளது. எல்லோரும் கற்கின்ற கல்வியாகிய பாலில், ஒரு சிறு உறைமோர்த்துளிபோல அமைந்திருப்பது'' என்று இரணியனின் மைந்தன் பிரகலாதன் பேருண்மையைப் பேசத் தொடங்கினான்.

பின்வரும் 22 பாடல்களில் பிரகலாதன் தனது கருத்தை நிறுவுகிறான். அவன் கூறுவதாகிய எட்டெழுத்து மந்திரம், வேத ஞானத்திற்கும், வேள்விப்பயனுக்கும் முடிந்த முடிவான எல்லையாய் உள்ளது என்கிறான் பிரகலாதன். 'விறகில் தீயினன்; பாலிற் பசுநெய்போல் மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்' என்ற அப்பர் தேவாரமும் இங்கு நினைக்கத்தகும்.

Koviloor Digital Library

ஒரு சிறுபிரை மோர்த்துளி, முழுப் பாலையும் தயிராக்கும் தன்மை பெற்றது. பிரைமோர்த்துளி கொஞ்சமாயினும், அது பால் முழுவதையும் தயிராக மாற்றி அதனின்றும் கிடைக்கும் நெய்யாகிய பயனையும் தரும். அதுபோலத் தான் கூறும் வார்த்தைகள் அளவிற் சிறியதாயினும், எல்லோரும் கற்கும் பரந்த கல்வியின் தன்மையைத் தன் இயல்பினதாக மாற்றும் தன்மை படைத்தது இவ்வெட்டெழுத்து மந்திரம் என நிறுவத் தொடங்குகிறான் பிரகலாதன். 'பிரைசேர் பாலின்நெய்போல்' என்பது திருவாசகம்.அசைந்தாடும் தன்மையுடையதால் 'அலங்கல்' என்பது மாலைக்குக் காரணப்பெயர். வேள்வி என்பது ஒன்றை விரும்பிச் செய்வது என்ற ஆழ்ந்த பொருளைக் கொண்டது;

58. "வித்து இன்றி விளைவது ஒன்றில்லை; வேந்த! நின்
பித்து இன்றி உணர்தியேல், அளவைப் பெய்குவேன்;
உய்த்து, ஒன்றும் ஒழிவின்றி உணர்தற் பாற்று" எனா,
கைத்து ஒன்று நெல்லி அம் கனியின் காண்டியால். (6329)

(வித்து-விதை; விளைவது-முளைப்பது; பித்து-மயக்க உணர்வு; அளவு-பிரமாணம்; பெய்குதல்-விளக்குதல்; ஒன்றும்-சிறிதும்; உய்த்து-தியானித்து; கைத்து-கையகத்து; காண்டி-அறிந்து கொள்வாயாக)

"அரசனே! விதையில்லாமல் முளைத்து வளரும் தாவரவகை ஒன்று கூட இவ்வுலகில் இல்லை, நீ உன்னுடைய மயக்க உணர்வைத் தவிர்த்துவிட்டு, உண்மையான அறிவோடு சிந்தித்துப் பார்ப்பாயேயானால், நான் அம்மெய்ப் பொருளை அளவைப் பிரமாணமாய் உனக்கு உன்மனத்தில் பதியும்படி விளங்க எடுத்துச்சொல்வேன், சிறிதும் இடைவிடாது நன்றாகத் தியானித்து அவனை அறிவாயென்றால், உள்ளங்கை நெல்லிக்கனிபோலத் தெளிவாகக் காணஇயலும். அவ்வாறே காண்பாயாக!" என்கிறான் பிரகலாதன்.

'பித்து' என்பது மயக்க உணர்வு என்றாலும், பொருள் அல்லவற்றைப் பொருள்என்று உணரும்ஒருநிலை எனக்கொள்க. ஐயம், திரிபு, அறியாமை ஆகிய மாறுபட்ட உணர்ச்சிகளைத் தவிர்த்து மெய்யறிவோடு சிந்திக்க வேண்டும் என்பதுதான் 'பித்தின்றி உணர்தியேல்' என்ற சொற்றொடரால் பேசப்படுகிறது எனக் கொள்க. தனக்கு மூலமே இல்லாத ஒரு கடவுள் உண்டு என்னும் தத்துவம் 'வித்தின்றி விளைவது ஒன்றில்லை' என்று பேசப்படுவதை உணர்க. 'ஆதிபகவன் முதற்றே உலகு' என்னும் குறள்வரி இங்கு நினைவு கொள்ளல் தகும். கடவுளே உலகிற்கு முதற்காரணன். 'நான் உலகம் முழுவதன் தோற்றத்திற்கும், ஒடுக்கத்திற்கும் காரணம்' என்பது கீதாவாக்கியம். 'எல்லா உயிர்கட்கும் வித்து எதுவோ அதுதான் நான்; என்னையன்றி இயங்குதிணை, நிலைத்திணைப் பொருள்கள் வாழ்வது ஒன்றுமில்லை' என்பது பகவத்கீதை. இங்கே 'அளவை' என்பது கருதல் அளவையைக் குறிக்கும். காணப்படுகின்ற உலகத்தைக் கொண்டு,

Koviloor Digital Library

காணப்படாத முதல் கடவுளை அனுமானத்தால் அறிதல் என்க. ஒரு பொருளை நேரில் கண்டு உறுதியாக உணரும் முறைக்கு, 'உள்ளங்கை நெல்லிக்கனிபோல்' என்ற உவமை கூறுவது கவிமரபு.

59. "தன்னுளே உலகங்கள் எவையும் தந்து, அவை
தன்னுளே நின்று, தான் அவற்றுள் தங்குவான்,
பின்இலன், முன்இலன், ஒருவன்; பேர்கிலன்;
தொல்நிலை ஒருவரால் துணியற்பாலதோ?" (6330)

(ஒருவன்-ஒப்பற்றவன்; தந்து-தோற்றுவித்து; பேர்தல்-மாறுபடுதல்; தொல்நிலை-பழமையான நிலைமை; துணிதல்-அறுதியிட்டுக் கூறுதல்; அவை-உயிர்த்தொகுதி)

''ஒப்பற்றவனாகிய இறைவன், எந்த மூலாதாரமும் இல்லாது, தானே எல்லா உலகத்தையும் உயிரினங்களையும் தோற்றுவித்து அவை தன் உள்ளே அடங்கியிருக்க அவற்றின் உள்ளே நீக்கமற நின்று அவை உள்ளே எங்கும் அந்தர்யாமியாய்த் தங்கியிருப்பவன். உலகமெல்லாம் அழிந்து ஒடுங்கும் ஊழிக்காலத்தும் தனக்குப் பின்னாக எஞ்சி நிற்பது எதுவும் இல்லாதவன்; தனக்கு மூலகாரணம் என்று முன்னாலும் ஒன்றும் இல்லாதவன்; ஆதியும் இல்லாதவன்; அந்தமும் இல்லாதவன்; தன் நிலையினின்று ஒருபோதும் மாறுபடாதவன், அவனுடைய நிலையை அவன் இத்தன்மையன் என்று ஒருவரால் அறிந்து அறுதியிட்டுக் கூறும் தரத்ததோ? இல்லை'' என்கிறான் பிரகலாதன்.

உயிரினங்கள் அவனுள்ளே அடங்கியிருக்கவும், அவன் உயிரினங்களின் உள்ளே அந்தர்யாமியாய் நீக்கமறத் தங்கியிருக்கவும், உள்ள நிலையை உடல் - உயிர்க்கொள்கை-சரீர - சரீரி பாவம் என்பர் வடநூலார், 'தன்னுளே திரைத்தெழும் தரங்கவெண்தடங்கடல், தன்னுளே திரைத்து எழுந்து அடங்குகின்ற தன்மைபோல், நின்னுளே பிறந்து, இறந்து, நிற்பவும், திரிபவும், நின்னுளே அடங்குகின்ற நீர்மை, நின்கண் நின்றதே' என்ற திருமழிசை யாழ்வார் பாசுரம் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. தான் அவற்றுள் அந்தர்யாமியாய்த் தங்குவதை விறகில் தீயினன் என்ற தேவாரம் நன்கு புலப்படுத்தும், எள்ளில் எண்ணெய் இருப்பது போல என்பது இக்கால வழக்கு, 'தன்னுளே உலகங்கள் எவையும், தந்து என்பது' உலகம் யாவையும் தாம் உளவாக்கலும்' என்ற பாயிரப்பாடலை நினைவு படுத்துவதை உணர்க. 'எல்லா உயிர்களின் உள்ளத்து உறையும் ஆன்மா நானே; உயிர்களின் ஆதியும், நடுவும், இறுதியும் நானே' என்பது பகவத் கீதை. 'பின்னிலன் முன்னிலன்' என்பது 'முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருளே! பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே!'' என்ற திருவெம்பாவையை நினைவு படுத்துதல் காண்க. 'முன்னா முதுபொருட்கும் முன்னா முது பொருள்' என்பதும் திருவிளையாடற் புராணம்.

Koviloor Digital Library

60. "சாங்கியம், யோகம் என்ற இரண்டு தன்மைய;
வீங்கிய பொருள் எலாம் வேறு காண்பன;
ஆங்கு, அவை உணர்ந்தவர்க்கு அன்றி, அன்னவன்;
ஓங்கிய மேல்நிலை, உணரற்பாலதோ?" (6331)

(வீங்கிய-விரிந்து பரந்துள்ள/மிகுந்துள்ள; காண்பன-பகுத்து உணர்வன; தன்மை-வகை; அன்னவன்-முதல்வன்; மேல்நிலை-சிறப்பு இயல்பு; சாங்கியம்-ஆராய்ச்சியால் வரும் ஞானம்; யோகம்-ஞானத்தை அனுபவமாகச் செயற்படுத்தும் நிலை)

"மிகப்பரந்துள்ள இவ்வுலகத்தில் உள்ள பொருள்களையெல்லாம், வெவ்வேறாகப் பகுத்து வேறுபடுத்திக் காண்பது உண்டு. அவை சாங்கிய மார்க்கம் என்றும், யோகநெறி என்றும் இரண்டு பெரு நெறிகளாகக் கூறப்படும். இந்த இரண்டு நெறிகளையும் கடைப்பிடித்து ஒழுகுப வர்களுக்கு அன்றி ஏனையோர்க்கு, அந்த முதல்வானகிய நாராயணனின் ஒப்பற்ற மேலாம் நிலையை அறிந்து உணர்ந்து கொள்வது என்பது எளிதாகுமோ? ஆகாது" என்கிறான் பிரகலாதன்.

'சாங்கியம்' என்பது 25தத்துவங்கள் அடங்கியது, யோகம் என்பது 8 வகையான மார்க்கங்களைக் குறிப்பது. சாங்கியம் என்பது ஆராய்ச்சியால் வரும் ஞானம்; யோகம் என்பது அந்த ஞானத்தை அனுபவமாகச் செயல் படுத்தும் நிலை, இந்த இரண்டு நெறிகளையும் நன்கு உணர்ந்தவர்கள் இறைவனது உயர்ந்த நிலையை உணர்ந்து அறிவது எளிது. இவை தெரியா ஏனையோர்க்கு அவனது மேலான நிலையை அறிதல் என்பது மிகவும் அரிது, அவ்வளவு எளிமையானதன்று 'உணரற்பாலதோ' என்பதில் உள்ள ஓகாரம் எதிர்மறைப் பொருளது, அன்று என்ற பொருளைத் தரும்.

சாங்கியம் என்பது தன் மாத்திரைகளான சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்தும், நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் பூதங்கள்ஐந்தும் ஞானேந்திரியங்களாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்தும் கன்மேந்திரியங்களாகிய வாக்கு, பாணி, பாதம், பாயுரு, உபத்தம் என்னும் ஐந்தும் மகத் அகங்காரம், மனம், மூலப்பிரகிருதி, புருஷன் என்னும் ஐந்தும், ஆக சாங்கியம் 25 தன்மைகள் என்க. இதை மணிமேகலை மிக அழகாகத் தெரிவிக்கிறது கேளுங்கள், 'புலம் ஆர் பொருள்கள் இருபத்தைந்து உள; நிலம், நீர், தீ, வளி, ஆகாயம்மே; மெய், வாய், கண், மூக்கு, செவிதாமே; உறுசுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்மே; வாக்கு, பாணி, பாதம், பாயுரு, உபத்தம்; ஆக்கும், மனோ, புத்தி, ஆங்காரம், சித்தம் உயிர் எனும் ஆன்மா ஒன்றொடும் ஆம்' என்பது மணிமேகலை. இதனை முற்றிலுமாக உணர்ந்து சாங்கிய தரிசனம் செய்தவர் கபிலர் என்பர் சான்றோர்.

Koviloor Digital Library

யோகம் என்பது 8 வகைப்படும் அவை, இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்யாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன; இவற்றை முறை தவறாது மேற்கொண்டு, மனத்தைப் பொறிவழி போகாது தடுத்து இறைவன் ஒருவனிடத்தே நிறுத்துவது யோக நெறியாகும். எனவே தத்துவ நெறிகள் சாங்கியம் என்றும் அதனைக் கடைப்பிடிப்பதற்குரிய நெறிகள் யோகம் என்றும் வழங்கப்படுகின்றன என்பது பெறப்படுகிறது, யோகவழியில் இறைவனைக் கண்டவர் ஸ்ரீபதஞ்சலி என்பர் சான்றோர்.

61. "சித்து என அருமறைச் சிரத்தின் தேறிய
தத்துவம் அவன்; அது தம்மைத் தாம் உணர்
வித்தகர் அறிகுவர்; வேறு வேறு உணர்
பித்தரும் உளர் சிலர்; வீடு பெற்றிலார்" (6332)

(சிரம்-உச்சி/முடி; தேறி-தெளிந்து உரைக்கப்பெற்ற; வித்தகர்-ஞானிகள்; பித்தர்-மயக்க உணர்வினர்; வீடு-மோட்சம்/முக்தி; சித்து-முற்றறிவு உடைய முழுமுதற் கடவுள்/ஞானசொருபம்/ஞானவடிவன்/மெய்ப்பொருள்; மறைச்சிரம்-உபநிடதம்)

"கற்று உணர்தற்கரிய வேதங்களின் முடிவு எல்லையாகிய உபநிடதங்கள் தெளிந்து உரைக்கின்ற தத்துவமாகிய ஞானவடிவான மெய்ப்பொருள்தான் நாராயணன் என்பவன். அவனை, தம்மைத்தாமே நன்கு உணர்ந்த ஞானிகளும், யோகியர்களுமே நன்கு அறிவார்கள், இவரைத் தவிர்த்து பல்வேறுபட்ட உணர்வுகளைக் கொண்ட மனமயக்கம் உடையவர்களும் இவ்வுலகில் இருக்கிறார்கள், அவர்கள் முக்திநிலை பெற இயலாதவர்களாவார்கள்.

'சித்து' என்பது ஞானமே வடிவான மூலமுதற் பொருளாகிய கடவுளைக் குறிக்கும். 'அருமறைச்சிரம்' என்பது வேதத்தின் முடியாகிய உபநிடதங்களைக் குறிக்கும். 'தத்துவம்' என்பது மெய்ப்பொருளான நாராயணனைக் குறிக்கும். 'தம்மைத் தாம் உணர்வித்தகர்' என்பது அகங்காரம், மமகாரம் முதலியவற்றைத் தவிர்த்துத் தான் யார், தன் நிலை என்ன, தன் தலைவன் எப்படிப்பட்டவன், என்பதை நன்கு உணர்ந்து தெளிவு பெற்ற ஞானியர், யோகியர்களைக் குறிக்கும். தன்னைத் தான் அறியாது, பிறழ்ந்து பிதற்றித் திரியும் விபரீத நோக்குக் கொண்ட மற்றையோரைப் 'பித்தர்' என்கிறான் என்க. 'வீடுபேறு' என்பது எல்லோரும் அடையக்கூடிய சாதாரண சாதனம் அல்ல என்பதும் பெறப்படுகிறது, 'வேறு வேறு உணர் பித்தரும் உளர் சிலர்' என்பது பிரகலாதன், தன் தந்தை இரணியனையே இவ்வாறு குறிக்கிறானோ என்று கொள்ளவும் தோன்றுவதை உணர்க. 'அருமறைச் சிரத்தின் தேறிய தத்துவம்' என்பது 'மறையாகிய நால் வேதத்துள் நின்ற மலர்ச்சுடரே' என்ற திருவாய் மொழியை நினைவு படுத்துவதை உணர்க. 'உன்னை நீ உணர்வையாகில்

Koviloor Digital Library

உனக்கொரு கேடும் இல்லை' என்பதும் 'தன்னையும், தனக்கு ஆதாரத்தலைவனும் தான் கண்டானேல் பின்னே, அத்தலைவன் தானாய்ப் பிரம்மமாய்ப் பிறவி தீர்வன்' என்பதும் கைவல்யம். இங்கே 'வேறு வேறு உணர் பித்தர்' என்பவர்களைத் தாயுமானவர் பல சமயவாதிகள் எனக் குறிப்பிடுகிறார்.''

62. "அளவையான் அளப்ப அரிது; அறிவின் அப்புறத்து
உளவையாய் உபநிடதங்கள் ஓதுவ;
கிளவி ஆர் பொருள்களான் கிளக்குறாதவன்
களவை யார் அறிகுவார்? மெய்ம்மை கண்டிலார்" (6333)

(அளவை-பிரமாணம்; ஆய்-ஆய்தல்/ஆராய்தல்; ஓதுவ- எடுத்து உரைத்துப்போற்றுவன; கிளவி-சொல்; கிளக்குறாதது-விளக்க முடியாதது; களவு-மாயத்தன்மை/கபடநாடகம்)

''அந்தக் கடவுளின் சிறப்பையும், பெருமையையும், காண்டல் முதலிய அளவைகளால் அளந்து அறிய முடியாது; மக்களின் அறிவுக்கும் அப்பாற்பட்ட வேதங்களின் முடிவாகிய உபநிடதங்கள் மட்டும்தான் அவனுடைய பெருமையை நன்கு ஆராய்ந்து விளக்கிக் கூறுகின்றன. சொற்களாலும், பொருள்களாலும், இத்தன்மையன் என்று அறிதற்கு அகப்படாதவன் அவன். அவனுடைய இந்த மாயத் தன்மையை-கபடநாடகத்தை யார்தான் அறிந்து கொள்ளமுடியும்? அவனது உண்மை நிலையை இதுவரை ஒருவரும் உள்ளவாறு காணப்பெற்றிலர்'' என்கிறான் பிரகலாதன்.

அளவை என்பது மூன்று வகைப்படும். அவை காண்டல் அளவை, கருதல் அளவை, நூல் அளவை என்பன. இவ்வாறு பொருள்களை அளந்து அறிதற்குரிய எந்த அடிப்படைப் பிரமாணங்களாலும் அவனது சிறப்பை அளந்து அறிய முடியாது என்க. 'சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்து' என்பது திருக்குறள்பாயிரம்; 'மொழியைக்கடக்கும் பெரும் புகழான்' என்பது இராமானுசர் நூற்றந்தாதி; 'ஏதுக்களானும், எழுத்து மொழியாலும் மிக்குச்சோதிக்க வேண்டா சுடர்விட்டு உளன் எங்கள் சோதி' என்பது தேவாரம். 'அளவு அறுப்பதற்கு அரியவன்' என்பது திருவாசகம்; 'எழுத அருமறைகள் தேறா இறைவன்' என்பது திருவிளையாடற் புராணம். ''மறையினால், அயனால், மாலால், மனத்தினால், வாக்கால் மற்றும் குறைவிலா அளவினாலும் கூறஒணாது ஆகிநின்ற இறைவனார்'' என்பது சிவஞான சித்தி.

63. "மூவகை உலகுமாய், குணங்கள் மூன்றுமாய்,
யாவையும், எவருமாய், எண்இல் வேறுபட்டு
ஓவல்இல் ஒருநிலை ஒருவன் செய்வினை,
தேவரும், முனிவரும் உணரத் தேயுமோ?" (6334)

Koviloor Digital Library

(ஓவல்இல்-நீங்குதல் இல்லாத; தேய்தல்-குறைதல்)

''மேல், நடு, கீழ் என்கின்ற மூன்றுவகைப்பட்ட உலகங்களுமாய், சத்துவம், ராக்ஷஸம், தாமசம் என்னும் மூன்று குணங்களின் வடிவுமாய், உலகிலுள்ள உயிரினங்கள் எல்லாமுமாய், உயர்திணை, அஃறிணைப் பொருள்களுமாய், கணக்கற்ற விதத்தில் வேறுபட்டு நிற்பவனுமாய், எனினும், நீங்குதல் இல்லாத ஒரு ஒப்பற்ற நிலையை உடையவனான இறைவன், செய்கின்ற தொழில், தேவர்களும், முனிவர்களும் அறிவதால் குறைந்து போய்விடுமோ? குறையாது'' என்கிறான் பிரகலாதன்.

மூவகை உலகங்கள் என்பது மேல், நடு, கீழ் எனவும், விண், மண், பாதாளம் எனவும், சுவர்க்கம், பூமி, நரகம் (பாதாளம்) எனவும் பொருள் படும். 'யாவையும் எவருமாய்' என்பது, சித்து, அசித்து எனவும் நிலைத்திணை, இயங்குதிணை எனவும், உயர்திணை, அஃறிணை எனவும் பொருள்படும். இறைவன் பல்வேறுபட்ட சொருபத்திலும் இருப்பான். நீக்கமற எங்கும் நிறைந்தும் இருப்பான் என்பதும் பேசப்பட்டிருக்கிறது, 'உலகெலாம் எவருமாய், எல்லாமாய், அல்லதுமாய்' என்பது திருவிளை யாடற்புராணம். 'யார் என்னை எல்லாவற்றிலும், எல்லாவற்றையும் என்னிடம் காண்கிறானோ, அவன் காட்சியினின்றும், நான் மறைவ தில்லை' என்பது பாகவதம். இறைவனுடைய செயல், தேவர், முனிவர் முதலிய எத்தகைய அறிவாற்றல் படைத்தவர்களாலும் எளிதில் அறிந்து கொள்ளும் தன்மையதன்று என்பதாம்.

64. "கருமமும், கருமத்தின் பயனும், கண்ணிய
தரு முதல் தலைவனும், தானும் தான்; அவன்
அருமையும், பெருமையும் அறிவரேல், அவர்
இருமை என்று உரைசெயும் கடல் நின்று ஏறுவார்'' (6335)

(கருமம்-வினை/தொழில்; இருமை-நல்வினை, தீவினைகள்/ இம்மை, மறுமையுமாம்; கண்ணிய-விரும்பிய)

''யாகம், வேள்வி முதலிய செயல்களும், நல்வினை, தீவினை செய்பவரும், அவ்வாறு அவர்கள் செய்ததனால் விளைகின்ற பயனாகிய நன்மை, தீமைகள் பாவ, புண்ணியங்களும், இன்ப துன்பங்களும், தாம் விரும்பியவற்றையே தருகின்ற முழுமுதற்கடவுளும், அவனேயாவான். அவனுடைய அரிய தன்மையையும், பெருங்குணங்களையும் யார் நன்கு அறிந்திருக்கிறார்களோ அவர்கள்தான் அத்தகைய ஞானியர்கள்தான் இம்மை, மறுமை என்று நூல்களில் கூறப்பட்டிருக்கும் பெருங்கடலில் நின்றும் வீடுபேறாகிய கரையை எய்துவர்'' என்கிறான் பிரகலாதன்.

'கருமம்' என்பது ஒருவன் செய்கின்ற நல்வினை, தீவினைகள். 'கருமத்தின் பயன்' என்பது அச்செயல்களால் விளையும் பாவ, புண்ணி யங்கள்; அவற்றிற்கெல்லாம் கர்த்தாவாக நின்று செயற்படுத்துகிறவன்

Koviloor Digital Library

முழுமுதற்கடவுளே என்றும், அவன்தான், நாம் விரும்பியவற்றை விரும்பியபடியே தருகின்றவன் என்றும், இவ்வாறு எல்லாமும் தானேயாகி விளங்குகின்ற அவனுடைய அருமை, பெருமைகளை அறிந்தவர்கள்தான் - ஞானியர்கள்தான் இம்மை, மறுமைப் பேறுகளை அடையமுடியும் என்றும் விளக்குகிறான் பிரகலாதன். 'கருமமும், கருமப் பலனுமாகிய காரணன் தன்னை' என்பது நம்மாழ்வார் திருவாய்மொழி. 'செய்வினையும், செய்வானும், அதன் பயனும், சேர்ப்பானும், மெய் வகையால் நான்காகும் விதித்த பொருள்' என்பது பெரியபுராணம்.

65. ''மந்திரம், மாதவம் என்னும் மாலைய,
தந்துறு பயன் இவை, முறையின் சாற்றிய
நந்தல்இல் தெய்வமாய், நல்கும் நான்மறை
அந்தம்இல் வேள்விமாட்டு, அவிசுமாம் அவன்'' (6336)

(மா-சிறந்த; மாலை-இயல்பு; சாற்றிய-அருளிச்செய்த; நந்தல்இல்-அழிவில்லாத/கெடுதலில்லாத; நல்குதல்-வழங்குதல்; அந்தம்இல்-முடிவில்லாத/அழிவில்லாத; அவிசு-அவியுணவு/தேவருணவு; தந்துறு-உதவுகின்ற)

''அந்த முழுமுதற் கடவுள், அவனைத் தியானிக்கின்றவர்கள் உச்சரிக்கும் மந்திரங்களாகவும், ஆவான். அவர்கள் மேற்கொள்ளுகின்ற சிறந்த பெருமைமிக்க தவமாகவும், ஆவான். என்று சொல்லப்படுகின்ற இயல்பை உடையவன், அவர்களுக்கு அவன் தந்தருளுகின்ற பயன்கள் எல்லாம் முறையாகச் சொல்லப்பட்ட, கெடுதல் இல்லாத இறைவனாக நின்று வழங்குவான்; நான்கு வேதங்களையும் உச்சரித்து அவற்றில் சொல்லப்பட்டிருக்கிறபடி குறைவின்றி செய்கின்ற அழிவில்லாத யாகங்களில், தேவர்களைக் கருதி அவர்களுக்காகப் பெய்யப்படும் அவியுணவாகவும் அவனே விளங்குகிறான்'' என்கிறான் பிரகலாதன்.

மந்திரம், தவம் ஆகியவற்றுக்குரிய பயனைத் தருகின்ற தெய்வமாகவும், வேதங்களில் கூறப்பட்டிருக்கிறபடி இயற்றப்படுகின்ற வேள்விகளில், சொரியப்படும் அவியுணவாகவும் அவனே திகழ்கின்றான் என்கிறான் பிரகலாதன். 'ஹவிஸ்' என்ற வடசொல்லின் திரிபு. அவிசு. அவியுணவு, தேவருணவு என்பது பொருள். 'அவிசு' என்பது தேவர்களைக் குறித்து மந்திரங்கள் ஓதி வேள்வியில் இடப்பெறும் தேவருணவு என்க. 'நிறைமொழி மாந்தர்தம் ஆணையிற் கிளந்த மறைமொழிதானே மந்திரம் என்ப' என்பது தொல்காப்பியம். 'யார் என்னை எப்படி வழிபடுகிறார் களோ, அவர்களுக்கு நான் அப்படியே அருள் புரிகிறேன்' எந்தெந்த பக்தன் எந்தெந்த தேவ வடிவத்தைச் சிரத்தையோடு அர்ச்சிக்க விரும்புகிறானோ, அவனவனுடைய அந்த மனஊக்கத்தை அசையாததாக நான் செய்கிறேன்' என்பது பகவத்கீதை.

Koviloor Digital Library

66. "முற்பயப் பயன்தரும், முன்னில் நின்றவர்,
பிற்பயப் பயன்தரும், பின்புபோல் அவன்;
தற்பயன், தான்தெரி தருமம்இல்லை; அஃது
அற்புத மாயையால் அறிகிலார் பலர்" (6337)

(தருதல்-நுகர்வித்தல்; அற்புத-வியக்கத்தக்க; தருமம்-செயல்/கருமம்)

''ஒருவன் செய்கின்ற நல்லகாரியங்களுக்குரிய-அவன் நுகர்தற்கரிய வினைப்பயன்களை அச்செயல் முடிந்ததும் உடனே தருகின்றவன்-தானே முன்வந்து தருகின்றவன் இவ்விறைவன். பின்னே செய்யப்போகும் செயல்களுக்குரியதும்-அவர்கள் நுகர்தற்குரியதும், இன்னும் முதிர்ச்சி யடையாத நிலையில் இருந்தாலும், அதற்குரிய பயனை அதைத்தர வேண்டிய நேரத்தில் தானே தொடர்ந்து சென்று தந்தருள்வான். தன் பயனைத் தானே தன் விருப்பப்படி தெரிந்து தரவேண்டும் என்ற அவசியம் அவனுக்கு இல்லை. இந்த வியக்கத்தக்க தன்மையைத்தான், மற்றவர் களால் அறிந்து புரிந்து கொள்ளமுடியவில்லை-காரணம் இதுவும் அவன் செய்யும் மாயைகளுள் ஒன்று'' என்கிறான் பிரகலாதன்.

வினை-செயல் என்பது ஐயப்பொருள். அதுதானே பயன் தரவல்ல தல்ல. எனவே அந்தப் பயனைத் தருபவன் இறைவனே என்றும், முன்னர் செய்கின்ற வினைக்கு முன்னரும், பின்னர் செய்யப்பே.:கின்ற வினைக்குப் பின்னரும் ஆனர்ல் அவ்வச் செயல்களுக்குரிய பயன்களை அவ்வப் பொழுதே தானே முன்னின்று தந்தருளுபவன் இறைவனே. இத்தகைய வியத்தகு செயலை, மாயையால் பலர் அறியாது உழல்கின்றனர் என்று பிரகலாதன் தன் தந்தை இரணியன் முன்பு கூறியதை மறுத்துரைக்கிறான் என்க. வினைப்பயனை யாவரும் நுகர்ந்தே ஆகவேண்டும், அது எல்லாப் பிறவியிலும் தொடர்ந்து வரும். இதனை நன்கு விளக்கம் நாலடியார் பாடல் ஒன்று கேளுங்கள். 'பல் ஆவுள் உய்த்து விடினும், குழக்கன்று, வல்லதாம் தாய்நாடிக் கோடலைத் தொல்லைப் பழவினையும் அன்ன தகைத்தே; தற்செய்த கிழவனை நாடிக்கொளற்கு' என்பது நாலடியார் 110. சிறுகா பெருகாமுறை பிறழ்ந்து வாரா என்பதும் நாலடியார். 'முன்பயன்' என்பது முன்னே நுகர்தற்குரிய நிலையில் முதிர்ந்த வினைப்பயன்; 'பின்பயன்' என்பது, பின்னே நுகர்தற்குரிய வகையில் முதிரா நிலையி லுள்ள வினைப்பயன் எனக் கொள்க. பொருள் புரிந்து கொள்ள சற்றுக் கடினமான பாடல், எனினும் தெளிவான உரை தரப்பட்டிருக்கிறது.

67. "ஒருவினை, ஒருபயன் அன்றி உய்க்குமோ?
இருவினை என்பவை இயற்றி இட்டவை;
கருதின கருதின காட்டுகின்றது,
தருபரன் அருள்; இனிச்சான்று வேண்டுமோ?" (6338)

Koviloor Digital Library

(உய்த்தல்-தருதல்/செலுத்துதல்; கருதின-எண்ணிய; காட்டுவது-நுகர்விப்பது/அளிப்பது; பரன்-பரமன்/பரம்பொருள்/இறைவன்; தருதல்-படைத்தல்/தோற்றுவித்தல்; சான்று-பிரமாணம்)

''உலகத்திலுள்ள உயிரினங்கள் எல்லாம் செய்யும் காரியங்கள் பொதுவாக இரண்டு வகைப்படும். அவை, நல்வினை, தீவினை என்பன வாம். இதில் ஒரு வினை செய்வதனால் ஏற்படும் பயன் ஒரு காலத்தில் ஒன்றாகத்தான் இருக்கமுடியும். ஒரு செயலுக்குப் பலபயன்கள் விளைய முடியுமோ? முடியாது. எனினும் உயிரினங்களைப் படைக்கின்ற முழுமுதற்கடவுளாகிய இறைவன் மட்டும், தனது கருணையால் ஒரே செயலுக்கு, அவர்கள் விரும்பிய பயனை விரும்பிய வண்ணம் ஒருசேரக் கொடுத்து அருள் பாலிக்கிறான். இது கண்கூடு. இதனை நிரூபிக்க வேறு சாட்சிகளும் வேண்டுமோ?'' என்று கேட்கிறான் பிரகலாதன்.

நல்வினைப் பயன் புண்ணியம், தீவினைப்பயன் பாவம்; நல்வினை என்பது வேள்வி, தானம், தவம் முதலியன இயற்றுதல்; உயிரற்ற ஜடப் பொருள்களான நல்வினையோ, தீவினையோ அவையே அவ்வவற்றின் பயனைத்தரவல்லன அல்ல. அவற்றைத் தருபவன் எல்லாம் வல்ல இறைவனே. அவன் திருவருளே என்று நிறுவுகிறான் பிரகலாதன் என்க. ஒரு செயலைச் செய்தால், அதற்குரிய பயனை அந்தச் செயலே தரும் என்று நீ கூறுகிறாயே, அப்படியானால் அந்தச் செயலைச் செய்கின்ற எல்லோருக்கும் ஒரே விதமான பயன்தானே விளைய வேண்டும்? ஆனால் அந்தப் பயன் பலருக்கும் பல விதத்தில் விளைகிறதே? இதற்கு என்ன காரணம்? இறைவன் திருவருள்தான் என்று நிரூபிக்கிறான் பிரகலாதன் என்க. வினை, ஆகாமியம், சஞ்சிதம், பிராரப்தம் என்று மூன்று வகைப்படும் என்றும், அதற்குரிய விளக்கமும் நாம் முன்பு கண்டதே. இந்த நல்வினைக்குரிய நற்பயன்களாகிய புண்ணியத்தையும், தீவினைகளுக் குரிய தீயபயன்களாகிய பாவத்தையும், நாம் எப்படி அனுபவிக்கிறோம் என்பதுதான் வேடிக்கை. பாவம், புண்ணியம், இந்த இரண்டிலும் எது குறைவாகச் சேர்ந்திருக்கிறதோ அதைத்தான் முதலில் அனுபவிக்க வேண்டும் என்பது நியதி. எனவே அதை அதிகமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதை நாமே முடிவு செய்து கொள்ளவேண்டும். 'இருவினை இன்பத்துன்பத்து, இவ்வுயிர் பிறந்து இறந்து, வருவது போவதாகும் கண்ணிய வினைப் பலன்கள் தரும் அரன்' என்பதும் 'இதம் அகிதங் களெல்லாம் இறைவனே ஏற்றுக்கொண்டு, இங்கு இதம், சுகிதத்தால் இன்பதுன்பங்கள் ஈவன் அன்றே' என்பதும் சிவஞான சித்தி.

68. "ஓர் ஆவுதி, கடைமுறை வேள்வி ஓம்புவார்,
அரா அணை அமலனுக்கு அளிப்பரேல்; அது
சராசரம் அனைத்தினும் சாரும்; என்பது
பராவ அரு மறைப்பொருள்; பயனும் அன்னதால்" (6339)

Koviloor Digital Library

(வேள்வி-யாகம்; ஓம்புதல்-இயற்றுதல்; அரா-பாம்பு; அமலன்-தூயோன்/குற்றமற்றவன்; சராசரம்-சரம், அசரம்/நிலைத்திணை, இயங்குதிணைப் பொருள்கள்; பராவுதல்-துதித்தல்; ஆவுதி-ஆகுதி/அவியுணவு/தேவருணவு; கடைமுறை-இறுதியில்)

''வேதத்தில் கூறியுள்ளபடி, வேள்வி இயற்றுபவர்கள், வேள்வியின் முடிவில் ஒரு அவியுணவை, பாம்பணையில் பள்ளி கொண்டிருக்கும் குற்றமில்லாத தூயோனாகிய திருமாலுக்கு நல்குவர்; இது இவ்வுலகிலுள்ள நிலைத்திணை, இயங்குதிணைப் பொருள்கள் அனைத்தையும் சென்று சேரும் என்பது துதித்தற்கரிய பெருமைமிக்க வேதத்தின் உட்பொருளாகும். அவியுணவே அன்றி, அவ்வேள்வியின் பயன் அனைத்தும் கூட சர அசரப் பொருள்களையே சாரும்'' என்று வேள்வி, வேள்விப் பயன் முதலியவற்றை விளக்குகிறான் பிரகலாதன்.

பொதுவாக ஒரு வேள்வியில் மிகுதியிருக்கும் நெய் முதலிய ஓம திரவியப் பொருள்கள் எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து இறுதியாக 'ஸ்ரீ விஷ்ணுவே ஸ்வாஹா' என்று சொல்வதை நாம் இன்றும் காணலாம். இது இதனைத்தான் குறிக்கிறது எனக் கொள்க. 'வேதமும் வேள்வியும், விண்ணும், இருசுடரும் ஆதியும் ஆனான்' என்பது பெரிய திருமொழி. இறைவனே வேள்விகளுக்குத் தலைவன் என்பது பெறப்படுகிறது. 'எல்லா நதிகளும் கடலில் சென்று சங்கமம் ஆவதைப் போன்று, யார் எந்தத் தெய்வத்தை வணங்கினாலும் அந்த வணக்கம் என்னையே வந்து சேரும்' என்பது பகவத்கீதை.

69. "பகுதியின் உட்பயன் பயந்தது; அன்னதின்
விகுதியின் மிகுதிகள் எவையும், மேலவர்
வகுதியின் வசத்தன; வரவு போக்கது;
புகுதி இல்லாதவர் புலத்திற்று ஆகுமோ?" (6340)

(பயந்தது-தோற்றுவித்தது/உண்டாக்கியது; வகுதி-வகை/பகுப்பு; வசத்து-அடங்குவது; வரவு-தோற்றம்; போக்கு-ஒடுக்கம்; புகுதி-புலத்தி/ஞானம்; புலத்திற்று-புலப்படுதல்; பகுதி-மூலப்பிரகிருதி; மேலவர்-ஞானியர்; புலம்-அறிவு/புலமை)

பொருள் புரிந்து கொள்ள மிகவும் கடினமான பாடல். வேதாந்தம், சைவ சித்தாந்தக் கருத்துக்களைப் பேசுகிறது. பகுதி என்பது மூலப் பிரகிருதியைக் குறிக்கும். எல்லாவற்றிற்கும் மூலாதாரமான பரம்பொருளைக் குறிக்கிறது. அது அழிவில்லாதது; அளவற்றது; முக்குணம் உடையது; உலகுக்கு முதற்காரணமானது. தோற்றமும் ஒடுக்கமும் அற்றது. அவனது விளையாட்டுக் கருவியாய் விளங்குவது, அந்த மூலப் பிரகிருதிதான் இந்த உலகத்தைத் தோற்றுவித்தது இவ்வுலகிலுள்ள எல்லாவகைப் பொருளும், அம்மூலப் பகுதியினின்றும் தோன்றி வேறுபட்டு விரிந்தனவே. அவன்

Koviloor Digital Library

தோற்றுவித்த இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள தொகுதிகள் எல்லாம் மேலோர்களான ஞானிகள் கூறிய தத்துவங்களின் பகுப்பில் அடங்கியவையே. இவற்றை உணர்ந்துகொள்ள ஆழ்ந்த நுண்ணறிவு வேண்டும். அது இல்லாதவர்களின் உணர்வுக்கு அது புலப்படும் தன்மையதோ! அல்ல'' என்கிறான் பிரகலாதன்.

''மண் மாயையாக, திரிகை தன் சக்தியாக, ஆரியன் குலாலனாய் நின்று, ஆக்குவன் அகிலமெல்லாம்'' என்பது சிவஞானசித்தி, 'தோற்றமாம் சக்தி தன்னில் சொல்லிய விண்ணாம்; விண்ணில் காற்றதாம்; காற்றில் தீயாம்; கனலினில் நீர்; நீரில் மண்ணாம்; போற்றும் இவ்வைந்தும், நொய்ய பூதங்கள் என்றும் பேராம்; சாற்றும் மற்று இவற்றில்போக சாதன தனு உண்டாகும்' என்பது கைவல்யம். இதையே 'ஆகாசாத்வாயு; வாயுஅக்னி; அக்னிஆபஹா; ஆபோபிருத்வி' என்கிறது வேதம். 'நான் பிறப்பு இறப்பு அற்றவன், என் ஆன்ம மாயையால் அவதரிக்கின்றேன்' என்பது பகவத் கீதை. 'சிவம்சக்தி தன்னை ஈன்றும், சக்தி தான் சிவத்தை ஈன்றும், உவந்து இருவரும் புணர்ந்து, இங்கு உலகு உயிரெலாம் ஈன்றும்,' என்பது சிவஞான சித்தி.

70. ''எழுத்து இயல் நாளத்தின் எண்இலா வகை,
முழுத்தனி நான்முகன் முதல முற்று உயிர்
வழுத்து அரும் பொகுட்டது ஓர்புரையின் வைகுமால்,
விழுத்தனிப் பல் இதழ் விரைஇலா முகிழ்.'' (6341)

(வகை-பகுப்பு; தனி-சிறந்த; எழுத்து-ஓவியம்; நாளம்-தண்டு; விழு-மேலான; விரை-நறுமணம்; வழுத்துதல்-துதித்தல்; பொகுட்டு-கொட்டை; புரை-துவாரம்/துளை; வைகுதல்-தங்கியிருத்தல்; முழு-நிறைந்த; முகிழ்-அரும்பு/உந்தித்தாமரை/நாபிக்கமலம்)

''அளவற்ற பகுப்புகளையுடைய ஓவியத்தின் இயல்பு கொண்ட துளையுள்ள அழகிய தண்டின் தன்மையும், மேலான சிறந்த பல இதழ்களைக் கொண்ட நறுமணம் மிக்க திருமாலின் உந்தித்தாமரையிலிருந்து தோன்றிய நிறைவான, சிறந்த பிரமதேவன் முதலாகிய எல்லா உயிரினங்களும், துதித்தற்கு, அருமையான தாமரைமலரின் நடுவிலுள்ள கொட்டையாகிய ஒப்பற்ற துளையினுள் தான் தங்கியிருக்கும்'' என்கிறான் பிரகலாதன்.

'புவனமோ நான்முகன் படைப்பு; நான்முகனோ திருமால் உந்தி வந்தோன்' என்பார் ஔவையார்.

71. ''கண்ணினும் கரந்துளன்; கண்டு காட்டுவார்
உள் நிறைந்திடும் உணர்வாகி, உண்மையால்,
மண்ணினும், வானினும், மற்றை மூன்றினும்,
எண்ணினும் நெடியவன் ஒருவன்; எண்இலான்'' (6342)

Koviloor Digital Library

(கரத்தல்-மறைத்தல்; காட்டுதல்-அறிவுறுத்துதல்; உணர்வு-ஞானம்; எண்-மனம்; உண்மையால்-இருப்பதால்)

''அந்த ஒப்பற்ற இறைவன், உலகத்து உயிரினங்கள் எல்லாவற்றின் கண்களிலும்கூட மறைந்து வாழ்கிறான். உலகியல் நெறிமுறைகளைத் தான்தன்கண்கள்கொண்டு, கண்டு, தான்கண்டவற்றைஉலகத்துஉயிரினங் களுக்கு அறிவுறுத்திக் காட்டி அருள் பாலிப்பான். அவ்விறைவனைக் கண்டு உணர்ந்த ஞானியர்களின் உள் மனத்தில் நிறைந்து நின்று மெய்ஞ்ஞானமாக வீற்றிருப்பான். அதனால் அவன் இந்த மண்ணுலகைக் காட்டிலும் பரப்பில் பெரியவனாகவும், விண்ணுலகைக் காட்டிலும் உயர்ச்சியில் பெரியவனாகவும் விளங்குகிறான். இவைதவிர மற்ற மூன்று பூதங்களான நீர், காற்று, நெருப்பு ஆகியவற்றின் குணங்களாய் நிறைந்தும் உண்மை நிலையைக் காட்டிலும், இவற்றை நன்கு உணரவல்ல ஞானியர் களின் மனத்தைக் காட்டிலும், கருதுவதற்கே அரிய நெடியவனாகவும், ஒப்பற்றவனாகவும், தான் ஒருவனே பல வேறுபட்ட எண்ணற்ற சொருபத்திலும் விளங்குகிறான்'' என்கிறான் பிரகலாதன்.

'எண்ணினும் நெடியவன்' என்ற சொற்றொடர்க்கு தன்னைக் குறித்து எண்ணுவாருடைய எண்ணத்திற்கு எட்டாமல் கடந்துள்ளவனும் என்ற பொருளைச் சில உரையாசிரியர்கள் தந்திருக்கின்றனர். அவன் அடியவர்க்குஎளியன்-எளியனாம்தன்மைபடைத்தவன்என்பதையேநாம் இதுவரை அறிந்திருக்கிறோம். என்பதை இங்கு நினைவு கூர்தல் தகும். இறைவன் நமது கண்ணிற்குள் மறைந்திருக்கிறான் என்றால் நம்மால் காணமுடியாதபடி அந்தர்யாமியாய் இருக்கிறான் என்பது பொருள். 'உள்குவார் உள்ளிற்றெல்லாம் உடன் இருந்து அறிதி' என்பது அப்பர் தேவாரம். 'பூ நிலாய ஐந்துமாய், புனற் கண்நின்ற நான்குமாய், தீதிலாய மூன்றுமாய், தெளிந்த கால் இரண்டதாய், மீ நிலாயது ஒன்றுமாய், வேறு வேறு தன்மையாய், நீ நிலாய வண்ணம், நின்னை யாவர் காண வல்லரே?' என்பது திருச்சந்தவிருத்தம். இறைவன் எங்கும் நீக்கமற நிறைந்து இருக்கிறான் என்பது இப்பாடலின் திரண்ட கருத்து. 'அங்கிங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி, அருளோடு நிறைந்தது எது?'' என்பதும் 'உணர்வாகி, அறிவினுக்கு அறிவாகி சித்தம் அறியாதபடி, சித்தத்தின்நின்று இலகு திவ்ய தேஜோன் மயத்தை' என்பதும் தாயுமானவர் வாக்கு. 'கரந்த சில் இடம் தொறும், இடம் திகழ்பொருள் தொறும், கரந்து எங்கும் பரந்துளன்' என்பது திருவாய்மொழி. 'அறிவானும் தானே அறிவிப்பான்தானே, அறிவாய் அறிகின்றான் தானே' என்பது காரைக்கால் அம்மையார் அற்புதத் திருவந்தாதி. 'திட விசும்பு, எரி, வளி, நீர், நிலம், இவை மிசை படர்பொருள் முழுவதுமாய், அவையவைதொறும் உடல் மிசை உயிரெனக் கரந்து எங்கும் பரந்துளன், சுடர்மிகு சுருதியுள் இவை உண்ட கரனே' என்னும் திருவாய்மொழியின் திரண்ட கருத்தே இப்பாடல்

Koviloor Digital Library

எனத் துணியலாம். 'தான் ஒருவனுமே பலவாகி நின்றவா தோள்நோக்கம் ஆடாமோ?' என்பது திருவாசகம்.

72. "சிந்தையின், செய்கையின், சொல்லின் சேர்ந்துளன்,
இந்தியம் தொறும் உளன்; உற்றது எண்ணினால்,
முந்தை ஓர் எழுத்து என வந்து, மும்முறைச்
சந்தியும் பதமுமாய்த் தழைத்த தன்மையான்" (6343)

(சிந்தை-மனம்; இந்தியம்-ஐம்பொறிகள்; சந்தி-புணர்ச்சி; தழைத்த-செறிந்த; தன்மை-இயல்பு; வந்து-தோன்றி; உற்றது-உண்மைநிலை)

''அந்த முழுமுதற் கடவுளின் உண்மை நிலையை ஆராய்ந்து பார்த்தால், அவன் உலகத்து உயிரினங்கள் அனைத்தின் மனத்திலும், செய்கையிலும், சொல்லிலும் உறைகின்றான். மக்களின் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து இந்திரியங்களிலும் நீங்காது நிறைந்திருக்கின்றான். பழமையான வேதங்கள் தொடங்கும் ஓர் எழுத்தாகிய 'ஓம்' என்னும் பிரணவ மந்திரத்தில் தோன்றியவன். அ.உ.ம் என்னும் மூன்று எழுத்துக் களின் புணர்ச்சியிலும் நமோ, நாராயணாய என்ற பதத்திலும் செறிந்து விளங்குகின்ற இயல்பினை உடையவன்'' என்கிறான் பிரகலாதன்.

மனத்தால் நினைப்பது சிந்தையின் செயல், மொழியால் போற்றுவது சொல்லின் செயல், கைகளால் குவித்து வணங்குவது மெய்யின் செயல் என மனம், மொழி, மெய் என்ற மூன்று கரணங்கள் நிகழ்த்தும் செயல்கள் அனைத்திலும் அவனே நிறைந்துள்ளான் என்பதாம். இந்தியம் என்பது, இந்திரியம் என்ற வடசொல்லின் திரிபு. ஐம்பொறிகளைக் குறிக்கும். 'முந்தை ஓர் எழுத்து' என்பது வேதங்கள் துவங்கும் பிரணவ மந்திரமாகிய 'ஓம்' என்பதைக் குறிக்கும். மும்முறைச் சந்தி என்பது, ஓம்+நமோ+ நாராயணா+ஆய என்ற மூன்று புணர்ச்சியைக் குறித்தது எனக் கொள்க. பதம் என்பது எட்டெழுத்து மந்திரமாகிய 'ஓம் நமோ நாராயணாய நம' என்ற அஷ்டாக்ஷரத்தைக் குறிக்கும் என்க. ஓம் என்பதை ஒரு எழுத்தாகக் கொள்ளவேண்டும். 'எட்டு இழையும், மூன்று சரடுமாம் மங்கல சூத்திரம் போலே, எட்டெழுத்தும் மூன்று பதங்களுமாய் இருப்பது திருமந்திரம்' என்பர் சான்றோர். 'யான் ஒட்டி என்னுள் இருத்துவன் என்றிலன்; தான் ஒட்டி வந்து என் தனி நெஞ்சை வஞ்சித்து, ஊன் ஒட்டி நின்று என் உயிரில் கலந்து' என்பது திருவாய் மொழி.

73. "காமமும், வெகுளியும், முதல கண்ணிய
தீமையும், வன்மையும் தீர்க்கும் செய்கையான்;
நாமமும், அவன்பிற நலி கொடா நெடும்
சேமமும், பிறர்களால் செப்பற்பாலவோ?" (6344)

Koviloor Digital Library

(வெகுளி-சினம்; கண்ணிய-கருதப்பட்ட; தீமை-தீயகுணங்கள்; தீர்த்தல்-நீக்குதல்; நாமம்-திருப்பெயர்; நலி-நலிதல்; கொடா- செய்யாத வாறு; சேமம்-பாதுகாத்தல்/புரத்தல்; செப்பல்-சொல்லுதல்; வன்மை-கொடுமை; நெடும்-நிலைத்த; காமம்-ஆசை)

''தன்னைச் சரணடைந்த உயிரினங்களின் மனத்தில் எழும் ஆசை, கோபம், முதலியவை தீயகுணங்கள் எனக் கருதப்படுகின்றன. அத்தகைய தீயகுணங்களையும், அவற்றினால் விளையும் கொடுமையையும் அறவே போக்கும் தன்மையையுடையவன் இறைவன். அத்தகையவனது திருப்பெயரின் பெருமையையும், அவன் பிற உயிரினங்கள் நலிவுறாத வாறு அவற்றுக்கு நிலைத்த பாதுகாப்பைக் கருதி ஈடுபடும் காத்தல் தொழிலின் சிறப்பையும், அவனது திருவருள் பெறாத ஏனையோரால் சொல்லும் தரத்ததோ? இல்லை'' என்கிறான் பிரகலாதன்.

''காமம், வெகுளி, மயக்கம் இவை மூன்றன் நாமம் கெடக்கெடும் நோய்'' என்பது குறள்-360. இங்கே 'நோய்' என்பது பிறவிப் பிணியைக் குறிக்கும் என்க.

74. "காலமும், கருவியும், இடனுமாய், கடைப்
பால் அமை பயனுமாய், பயன் துய்ப்பானுமாய்,
சீலமும், அவைதரும் திருவுமாய், உளன்;
ஆலமும் வித்தும் ஒத்து அடங்கும் ஆண்மையான்." (6345)

(வித்து-விதை; ஆண்மை-பேராற்றல்; இடன்-இடம்; துய்த்தல்-நுகர்தல்/அனுபவித்தல்; சீலம்-நல்லொழுக்கம்; திரு-பெரும் செல்வம்; கருவி-சாதனம்; கடைபால்-இறுதி/முடிவு)

''பல விழுதுகளையுடைய பெரிய ஆலமரமும், அது தோன்றி வளர்வதற்கு மூலமான சிறிய நுண்ணிய உருவத்துள் விதையும் போன்று, இப்பேரண்டத்தையே தன் சூக்கும உருவத்துள் அடக்கிக் கொண்டிருக்கும் பேராற்றல் படைத்தவனாகிய இறைவன், ஒரு செய்கையைச் செய்வதற் குரிய காலம், சாதனம், களம், அச்செய்கையால் இறுதியில் விளையக் கூடிய நற்பயன், அந்தப் பயனை நுகரும் புருடன், நல்லொழுக்கம், அந்த நல்லொழுக்கத்தினால் கிடைக்கும் அரும்பெரும் செல்வம், இவை யனைத்துமாய் விளங்குகிறான்'' என்கிறான் பிரகலாதன்.

'ஆல் அமர் வித்தின் அருங்குறள் ஆனான்' என்று கம்பனே முன்னர் கூறி இருப்பதை இங்கே நினைவுகூர்க. 'பல விழுதுகள் வேரூன்றப்பெற்று விரிந்த ஆலமரமும், அம்மரத்தையே தன்னுள் அடக்கி நிற்கும் சிறிய விதைபோலவும்' என்பது இறுதி அடியின் விரிந்த பொருள். 'சீலம் தரும் திரு' என்பது இம்மை, மறுமைப் பேறுகள் எனக் கொள்க.

Koviloor Digital Library

''யாவருமாய், யாவையுமாய், எழில் வேதப்பொருள்களுமாய்'' என்பதும் 'கருமமும், கருமபலனுமாகிய காரணன்' என்பதும் திருவாய்மொழி. 'விதியாய், விளைவாய், விளைவின் பயனாகி' என்பது தேவாரம். 'யக்ஞம்நானே; அக்னியும் நானே; வேட்டல் நானே' என்பது பவகத்கீதை. 'போகமாய் விரிந்தும் போகியாய்ப் பரந்தும்' என்பது வில்லிபாரதம். 'செய்வானும், செய்வினையும், சேர்பயனும், சேர்ப்பவனும் இறைவன்' என்பது சிவஞானபோதம். தொழில் நிகழ்ச்சிக்கு முதற் காரணமாய் விளங்குபவை. 1. செய்பவன்; 2. கருவி; 3. நிலம்; 4. செயல்; 5. காலம்;6. செயப்படுபொருள்; 7. காரணம் 8. இன்னதற்காகச் செய்யப்படுகின்றது அதற்கு இதுபயன். என்னும் எட்டும் இன்றியமையாதன என்பர் இலக்கண நூலார்.

75. ''உள்ளுற உணர்வு இனிது உணர்ந்த ஓசை, ஓர்
தெள்விளி யாழிடைத் தெரியும் செய்கையின்
உள் உளன்; புறத்து உளன்; ஒன்றும் நண்ணலான்;
தள்ள அரும் மறைகளும் மருளும் தன்மையான்'' (6346)

(ஓர்-ஒப்பற்ற; தெள்-தெள்ளிய; விளி-இனிய:ஓசை; நண்ணுதல்-ஊடுருவிக் கலத்தல்; தள்ள-விலக்க; மருளுதல்-மயங்குதல்; தன்மை-இயல்பு; தெரிதல்-நன்கு தோன்றுதல்/வெளிப்படுதல்; உணர்வு-அறிவு; உள்-உள்ளம்; உற-பொருந்திய)

''இசையில் வல்லவர்கள் தன் உள்ளத்தில் ஆழமாகப் பொருந்திய இனிய ஓசையை தன்னிடத்துள்ளஒப்பற்ற யாழ் என்னும் தெளிந்த இசைக் கருவியின் வாயிலாகத் தெரிவிப்பார்கள். நல்ல யாழிலிருந்து இனிய ஓசையை வெளிப்படுத்துதல் இசைவல்லார் இயல்பு. அந்தச் செய்கையைப்போல யாவர்க்கும் இனியவனான இறைவன் உலகத்து உயிரினங்கள் அனைத்தின் உள்ளும் இருக்கிறான்; புறத்தும் இருக்கிறான், எனினும் அவைகளால் உண்டாகும் நன்மை, தீமை, இன்ப துன்பங்கள், குணம், குற்றம், இவை ஒன்றையும் தன்னகத்தே பொருந்தும்படியாக தன்னுள்ளே ஊடுருவிக் கலக்குமாறு இருக்கமாட்டான். இவையெல்லாம் படியாத தூயோனாகவே இருப்பான். அதனால்தான் யாவராலும் விலக்குதற்கரிய நான்மறைகளும்கூட அவனது உண்மை இயல்பு இன்னதுதான் என்று அறிய ஒண்ணாது மயங்கி நிற்கின்றன. அத்தகைய இயல்புடையவன் இறைவன்'' என்கிறான் பிரகலாதன்.

அவன் எங்கும் நீக்கமற நிறைந்திருந்தாலும், எதனிடமும் பற்றற்றவன் என்கிறான். 'உள்ளுமாய்ப் புறமும் ஆகி உருவமாய், அருவமாகி' என்பது தேவாரம். 'இவற்றின் தன்மை தனக்கு எய்தல் இன்றித்தானே நிலவு சீர் அமலனாகி நின்றனன் நீங்காது எங்கும்' என்பது அருள் நந்தி சிவாச்சாரியாரின் சிவஞான சித்தி.

Koviloor Digital Library

76. "ஓம் எனும் ஓர்எழுத்து அதனின் உள்உயிர்
ஆம் அவன்; அறிவினுக்கு அறிவும் ஆயினான்;
தாமமே மூ உலகமும் தழுவிச் சார்தலால்,
தூமமும் கனலும் போல், தொடர்ந்த தோற்றத்தான்." (6347)

(அறிவினுக்கு அறிவு-ஞானம்; தழுவி-விரவி; சார்தல்-பொருந்தி இருத்தல்; தாமம்-பரமபதம்; தூமம்-புகை; கனல்-நெருப்பு; தொடர்ந்த-பொருந்திய; தோற்றம்-இயல்பு; தாமம்-ஒளியுமாம்)

''வேத முதலெழுத்தாகவும், பிரணவ மந்திரமாகவும் திகழும் 'ஓம்' என்னும் எழுத்தின் உள் உறைகின்ற அ, உ, ம் என்ற மூன்றெழுத்தின் உயிராகப் பேசப்படுகின்ற அகரத்தைப் போன்று உயிரெனப் போற்றப் படுபவன் இறைவன். அதற்குமேலும் வெளிப்பட்டுத் தோன்றுகின்ற அறிவினுக்கு எல்லாம் மேலான ஞானமே வடிவாகத் திகழ்கின்றவன்; ஒளி நிறைந்த பரமபதம் என்று சொல்லப்படுவதிலும், மற்ற மூன்று உலகங்களிலும் வியாபித்து நிறைந்திருத்தலால், புகையும் அதற்குக் காரணமான நெருப்பும் போல் பிரியாது, இடைவிடாது, நீக்கமறப் பொருந்தியிருப்பான் இறைவன்'' என்கிறான் பிரகலாதன்.

'ஓம்' என்பது பிரணவ மந்திரம்; அது அ, உ, ம் என்பதன் கூட்டு என்றாலும், 'அ' என்பதே அதற்குள்ளும் உயிர்போன்று திகழ்வதும்; அதுபோல இறைவனும் அதன் உள் உறையும் உயிராகத் திகழ்கிறான் என்பதாம். 'அறிவினுக்கு அறிவு' என்பது, ஞானத்திலும் உயர்ந்த மெய்ஞ்ஞானத்தைக் குறிக்கும் என்க. மேல், நடு, கீழ் என்ற மூவுலகங்களன்றி, பரமபதமாகிய சத்திய லோகத்திலும் நீக்கமற நிறைந்தவன், கலந்து நிறைந்துள்ளவன் இறைவன். புகையும், புகைக்குக் காரணமான நெருப்பும் எப்படி ஒன்றையொன்று தொடர்ந்தே பரவுமோ அதுபோல, உலகெங்கணும் நீக்கமற நிறைந்தவன் இறைவன் என்பது புலப்படுத்தப்பட்டது. பிரணவ மந்திரம் என்று கூறப்படும் 'ஓம்' என்பதை ஓரெழுத்தாகவே கொள்ளல் வேண்டும். அது மொழிகளுக்கெல்லாம் வித்துப் போன்றது, அதனுள்ளும் 'அ' என்ற அகரம் அதன் உயிர் போன்றது 'அகர முதல எழுத்தெல்லாம்' என்பது குறள் (1), இது 'சப்த பிரம்மம்' என்றும் வழங்கப்பெறும். 'எல்லா வேதங்களின் ஓங்காரமாகவும், வானில் ஓசையாகவும் நான் இருக்கிறேன்' என்பது கீதா வாக்கியம். 'உம்பர் நாயகன் திருவாக்கில் பிரணவம் உதித்தது; அதனிடை வேதம் பிறந்தன' என்பது திருவிளையாடற் புராணம். உலக உயிர்களின் தலைவனும், உலகிற்கு முதல் காரணமாகத் திகழ்பவனும் இறைவன் ஒருவனே என்பது இப்பாடலின் திரண்ட கருத்து.

Koviloor Digital Library

77. "காலையின் நறுமலர் ஒன்றக் கட்டிய
மாலையின் மலர்புரை சமய வாதியர்,
சூலையின் திருக்கு அலால், சொல்லுவோர்க்கு எலாம்,
வேலையும், திரையும் போல், வேறுபாடு இலான்" (6348)

(ஒன்ற-பொருந்த; கட்டிய-தொடுத்த; புரை-போலும்; சூலை-மன எரிச்சல்; திருக்கு-மாறுபாடு; வேலை-கடல்; திரை-அலைகள்; காலை-காலம்/மலரும் நேரம்; சூலுதல்-குடைதல்)

''மலர்கின்ற நேரத்தில் அழகாக மலர்கின்ற நறுமணம் மிக்க மலர்களை ஒருசேரப் பொருந்தத் தொடுத்த மாலை, பலப்பல வண்ணங்களிலும், ஒளியிலும், மணத்திலும் மாறுபட்டிருந்தாலும், மாலை என்பது ஒன்றே போல, பலப்பல கொள்கைகளையுடைய சமயங்கள எச் சேர்ந்த வாதம் புரிவதையே தொழிலாகக் கொண்ட சில சமயவாதிகள், தமக்கு ஏற்பட்ட மனக்குடைச்சலால், மாறுபட்டுப் பேசுவரே அல்லாமல், இறைவன் தன்னைப் போற்றிப் பணியும், தன் திருநாமத்தையே அனுதினமும் சொல்லிப்பரவும் அடியவர்க்கு எல்லாம், கடலையும், கடலில் பிரியாது அதனுள் எழுந்து அடங்கும் அலைகளைப் போலவும், எந்தவேறுபாடும் இல்லாது, எல்லார்க்கும் ஒத்த தன்மையனாகவே விளங்குகிறான்'' என்கிறான் பிரகலாதன்.

சமயவாதிகள் தங்களுக்குள் கருத்து வேறுபாட்டால் ஒருவர்க் கொருவர் வேறுபட்டு நின்றாலும், இறைவன் அவன் நாமம் சொல்லிப் போற்று கின்ற எல்லா அடியவர்க்கும் ஒன்றேபோல் அருள் பாலிக்கிறான் என்பது கருத்து. இதற்கு அன்றலர்ந்த மலர்கள் பலப்பல நிறங்களிலும், சுவையிலும், ஒளியிலும், தன்மையிலும் மாறுபட்டிருந்தாலும் எல்லா வற்றையும் ஒன்று சேர்த்து நன்றாகக் கட்டும்போது அது மாலை என்ற ஒரே பெயரைப் பெறுகிறது என்பது உவமை. அவ்வாறு அச்சமயவாதிகள் தங்களுக்குள் வேறுபடுவதற்குக் காரணம், அவர்களுக்குள் ஏற்படுகின்ற மன எரிச்சல்-சூலைநோய் என்கிறான் பிரகலாதன். இது தன் தந்தையையே குறிப்பது போன்ற தொனி தெரிவதை உணர்க. 'சமயவாதிகள் எல்லாம் தம்தெய்வம், எம்தெய்வம் என்று எதிர்வழக்கிடவும் நின்றது எது?' எனக் கேட்கிறார் தாயுமானவர். மலர்கள் உள்ள மாலை போலவும், அலைகள் உள்ள கடல் போலவும், இறைவன் ஒரே தன்மைத்தானவன், வேறுபாடி லாதவன் என்பது கருத்து. 'சமயத்தார்' என்று கூறாது, 'சமயவாதிகள்' என்று கூறியதே அவர்கள் சமயத்தைவிட வாதத்திற்கு முன்னுரிமை அளிக்கும் இயல்புடையவர்கள் என்பது தோன்றக் கூறினான் என்க. 'தன்னுளே திரைத்தெழும் தரங்கவெண் தடங்கடல் தன்னுளே திரைத்தெழுந்து அடக்குகின்ற தன்மைபோல், நின்னுளே பிறந்து, இறந்து, நிற்பவும், திரிபவும், நின்னுளே அடங்குகின்ற நீர்மை நின்கண் நின்றதே' என்பது திருச்சந்த விருத்தம்.

Koviloor Digital Library

''நுரையும் திரையும், நொப்புறு கொட்பும், வரையில் சீகரவாரியும், குரை கடல் பெருத்தும் சிறுத்தும், பிறங்குவ தோன்றி, எண்ணிலவாகி, இருங்கடல் அடங்கும் தன்மைபோல, சராசரம் அனைத்தும், நின்னிடைத் தோன்றி நின்னிடை அடங்கும்' என்பது திருவெண்காட்டு அடிகளின் கோயில் நான் மணிமாலை. 'சூலை' என்பது உடம்பினுள் உள்ள குடலை முறுக்கி வருத்தும் ஒரு கொடிய நோய், சமண சமயத்தில் இருந்தபோது திருநாவுக்கரசருக்கு இறைவனால் தரப்பட்டது இச் சூலை நோயே என்பது அறிக.

78. "இன்னது ஓர் தன்மையன், இகழ்வுற்று எய்திய
நன்னெடும் செல்வமும், நாளும், நாம் அற
மன்னுயிர் இழத்தி!" என்று அஞ்சி வாழ்த்தினேன்,
சொன்னவன் நாமம், என்று உணரச் சொல்லினான். (6349)

(இன்னது-இத்தகைய; ஓர்-ஒப்பற்ற; நெடும்-பெரும்; நாள்-வாழ்நாள்/ஆயுள்; நாம்-நாமம்/பெயர்; மன்-நிலைபெற்ற; உணர-அறியும்படி/விளங்க; இகழ்வுற்று-இகழ்ந்து; அற-அழிந்து ஒழிய; சொன்னவன்-மேலேகூறிய நாராயணன்)

''இத்தகைய ஒப்பற்ற இயல்பு நிரம்பப்பெற்ற அவ்விறைவனை, அவனுடைய பெருமையை உணராது நீ மிகவும் இகழ்ந்து பேசினை; அதனால் நீ தவம் செய்து பெற்ற நன்மைதரும் நல்ல பெரும் செல்வமும், நீண்ட வாழ்நாளும், உன்னுடைய புகழ்வாய்ந்த நற்பெயரும் அழிந்து ஒழியும்படி நிலைபெற்ற உயிரையும் இழந்துவிடப் போகிறாயே என்ற அச்சத்தால், உனக்குக் கேடு வரக்கூடாது என்பதற்காக நான் இவ்வளவு நேரம் வேதங்கள் முன் நிறுத்திக் கூறுகின்ற அந்த இறைவனின் பெயரைச் சொல்லி அவனை வாழ்த்தினேன்'' என்று பிரகலாதன் இரணியனைப் பார்த்து, அவன் உணர்ந்து கொள்ளும் வண்ணம் விளக்கமாகக் கூறிமுடித்தான்.

'நாம்' நாமம் என்பதன் இடைக்குறை 'சொன்னவன்' என்பது, இதுவரை மேலே நான் கூறிவந்த நாராயணன்' என்று பொருள் தரும். மேலே கூறிய பாடல்கள் அனைத்தும் பிரகலாதன் பரம்பொருள் இலக்கணத்தையும், அந்தத் திருநாமத்தின் பெருமையையும், சிறப்பையும், பலவகை எடுத்துக் காட்டுகளுடன் இரணியன் நன்மைக்காகவே அவன் விளங்கிக் கொள்ளு மாறு எடுத்துக் கூறினான். எனினும் இரணியன் தன் ஆணவத்தாலும், செல்வச்செருக்காலும் அதனைப் புரிந்து கொள்ளவில்லை என்க. அவன் ''எய்திய பெரும் செல்வம்'' என்பது, இப்பொழுது அவன் மூவுலகையும் ஒருங்கே ஆட்சிபுரியும் அரசச் செல்வத்தையும் என்று பொருள் கூறுதலும் பொருந்தும்.

Koviloor Digital Library

79. இரணியன் வெகுளி மெய்ப்பாடு

எதிரில் நின்று இவையிவை உரைத்திடுதலும், எவ்வுலகமும் அஞ்ச,
முதிரும் வெங்கத மொழிகொடு மூண்டது, முதுகடற்கடு ஏய்ப்ப;
கதிரும், வானமும், சுழன்றன; நெடு நிலம் கம்பித்த; கனகன் கண்
உதிரம் கான்றன; தோன்றின புகைக்கொடி; உமிழ்ந்தது கொடுந்தீயே.
(6350)

(வெங்கதம்-கடுங்கோபம்; முது-தொன்மைவாய்ந்த; கடு-விஷம்/நஞ்சு/ஆலகால நஞ்சு; மூண்டது-பொங்கியெழுந்தது; ஏய்ப்ப-போல; கம்பித்தல்-நடுக்கமுறுதல்; கனகன்-இரணியன்; உதிரம்-இரத்தம்/குருதி; கொடி-படலம்; உமிழ்தல்-வெளிப்படுத்துதல்; காலுதல்-கக்குதல்/ஒழுகவிடுதல்)

இவ்வாறு பிரகலாதன் தன் தந்தையின் எதிரில் நின்று கூறியதைக் கேட்டதும் என்ன நேருமோ என்று எல்லா உலகங்களும், உலகத்தவரும் அஞ்சும்படி, முதிர்ந்த கொடிய கோபத்தின் சொற்களோடு, மிகப்பழமையான பாற்கடலில் தோன்றிய விஷத்தைப்போலப் பொங்கியெழுந்த கோபத்தின் சீற்றத்தால், சூரியன் போன்ற ஒளிப்பிழம்புகளும், விண்ணுலகும் சுழலலாயின; இப்பெரிய நிலப்பரப்பு நடுக்கமுற்றது; பொன்னிறம் படைத்த இரணியனின் கண்கள் இரத்தத்தைச் சொரிந்தன; அவன் கண்கள் கொடிய தீயை வெளிப்படுத்தின; அதனின்றும் புகைப் படலமும் வெளிப்பட்டது.

பிரகலாதன் கூறியதைக் கேட்டதும் இரணியனிடம் எழுந்த மெய் வெளிப்பாடுகளைத் தெரிவிக்கிறது இப்பாடல்; 'புகைக்கொடி' என்பது நெருப்புக்குக் கொடியாகப் புகையைக் கூறுவது கவிமரபு என்பதை ஒட்டி உரைக்கப்பட்டது என்றலும் பொருந்தும். அளவிறந்த கோபம் 'வெங்கதம்' எனப்பட்டது.

80. இரணியன், பிரகலாதனைக் கொல்லுமாறு பணித்தல்

"வேறும் என்னோடு தரும்பகை, பிறிது இனி
வேண்டலென்; வினையத்தால்,
ஊறி, என்னுளே உதித்தது; குறிப்பு இனி
உணர்குவது உளது அன்றால்;
ஈறுஇல் என்பெரும் பகைஞனுக்கு, அன்புசால்
அடியென்யான் என்கின்றான்;
கோறிர்"; என்றனன்; என்றலும், பற்றினர்
கூற்றினும் கொலைவல்லார். (6351)

Koviloor Digital Library

(தரும்-உண்டாக்கும்/விளைவிக்கும்; வினையம்-முன்னைவினை/சூழ்ச்சி/தீவினை; உதித்தது-தோன்றியது; சால்-மிக்க/நிறைந்த; கூற்று-இயமன்; ஈறுஇல்-தீராத/முடிவில்லாத; பிறிது-மற்றொன்று; குறிப்பு-நினைப்பு/மனக்குறிப்பு/எண்ணம்; கோறிர்-கொன்றுவிடுங்கள்)

இரணியன் ''இவனைவிட இன்னும் துன்பத்தைத் தருகின்ற வேறு பகைவன் எனக்கு இனிமேல் வேண்டப்படுவதில்லை; இவனே போது மானவன்; முன்னைத் தீவினையினால், என் உதிரத்திலேயே ஊறித் திளைத்து, இப்போது என்மகனாகத் தோன்றியிருக்கிறான். இவனுடைய உள்ளத்துள் உள்ள எண்ணத்தை அறிந்து கொள்ள வேண்டுவது என்பது அவசியமல்ல; என்னுடைய, தீராத, தொன்றுதொட்டு பகைவுனாகத் திகழ்கின்ற திருமாலுக்கு இவன் மிக்க அன்பு செலுத்துகின்ற அடியவன் என்று தன்னை வெளிப்படையாகவே கூறிக்கொள்கிறான். இனிமேலும் இவனைப் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது. இப்பொழுதே இவனைக் கொன்றுவிடுங்கள்'' என்று தன் ஏவலாளரைப் பார்த்துக் கட்டளையிட்டான். அவன் அவ்வாறு கூறிய உடனேயே, இயமனை விடக் கொல்லும் தொழிலில் ஆற்றல் பெற்றவரான அவனுடைய ஏவலாளர்கள் பிரகலாதனைப் பிடித்துத் துன்புறுத்தத் தொடங்கினார்கள்.

எனக்கு உண்டாகும் பகை புறத்திலிருந்து வரவேண்டுவதில்லை. மூங்கிலின் உள்ளிருந்தே தீப் பிறப்பதுபோல என்னுள்ளேயே உட்பகையாகவே என் இரத்தத்தில் ஊறித்திளைத்துப் பிள்ளையாக உருவெடுத்து வந்திருக்கிறது. 'ஈறுஇல்' என்பது, தீராத பெரும் பகை, முடிவில்லாத பெரும் பகை, தொன்றுதொட்ட பகை என்று பொருள்படும். 'உடன் பிறந்தே கொல்லும் வியாதி' என்பது மூதுரை; இதே உவமையை முன்பு ஆரண்ய காண்டத்தில் சூர்ப்பணகைக்குக் கூறியதை இங்கு ஒப்பு நோக்குக. 'வான்போல் பகைவரை அஞ்சற்க; அஞ்சுக கோள்போல் பகைவர் தொடர்பு' என்பதும் 'உடம் பாடிலாதவர் வாழ்க்கை குடங்கருள் பாம்போடு உடன் உறைந்தற்று' என்பதும் குறள் 882/890.

81. ஏவலாளர்கள் பிரகலாதனைத் துன்புறுத்துதல்

குன்றுபோல் மணிவாயிலின் பெரும்புறத்து, உய்த்தனர் மழுக்கூர்வாள்
ஒன்றுபோல்வன ஆயிரம், மீது எடுத்து ஓச்சினர்; 'உயிரோடும்
தின்று தீர்குதும்' என்குநர், உரும்எனத் தெழிக்குநர், சினவேழக்
கன்று புல்லிய கோள் அரிக்குழு எனக் கனல்கின்ற தறுகண்ணார்.
(6352)

(வேழம்-யானை; புல்லிய-சூழ்ந்துகொண்ட/பற்றிக்கொண்ட; கோள்-வலிய; அரிக்குழு-சிங்கக்கூட்டம்; தறு-கொடிய; தீர்குதல்-முடித்தல்; உரும்-இடி; தெழித்தல்-அதட்டுதல்/உரப்புதல்; மணி-

Koviloor Digital Library

இரத்தினம்/அழகிய/உயர்ந்த; மழு-கோடரி/எரிஈட்டி/பரசு; மீது-உயர; ஒச்சுதல்-வீசுதல்; கனல்-நெருப்பு; புறம்-வெளி)

மிக்க சினம் கொண்ட யானைக்குட்டி ஒன்றைப் பற்றிக்கொண்ட வலிமைமிக்க சிங்கக்கூட்டத்தைப் போல, நெருப்புப்பொறி பறக்கின்ற கொடிய கண்களையுடையவர்களாகிய அந்த வீரர்கள், பிரகலாதனைச் சூழ்ந்துகொண்டு, மலைபோன்று உயர்ந்த, அழகிய இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற அரண்மனையின் வாயிற்புறத்தே அமைந்துள்ள பெரிய முற்றத்திற்கு இழுத்துச் சென்று, ஒன்றுபோல்வனவாக உள்ள ஆயிரம் ஆயிரம் கோடாரிகளையும், கூரிய வாட்படைகளையும் உயரே எடுத்து அவன்மீது செலுத்தினார்கள். 'இவனை உயிரொடும் தின்று முடித்து விடுவோம்' என்று இடிபோன்ற குரலில் அதட்டி ஆரவாரித்தார்கள்.

'சினவேழக்கன்று புல்லிய கோள்அரிக்குழு' என்பது ஒரு அருமையான உவமை என்பதை நோக்குக.

82. பிரகலாதன் துன்பப்படாத நிலை

தாயின் மன்னுயிர்க்கு அன்பினன் தன்னை,
அத்தவம் என்னும் தகவில்லோர்,
'ஏ' என் மாத்திரத்து எய்தன,
எறிந்தன, எறிதொறும், எறிதொறும்
தூயவன்தனைத் துணை என உடைய
அவ்வொருவனைத் துன்னாதார்,
வாயின் வைதன ஒத்தன, அத்துணை
மழுவொடு கொலைவாளும். (6353)

(தகவு-தகுதி; மன்-நிலைபெற்ற; மாத்திரை-அளவு; ஒருவன்-ஒப்பற்றவன்; துன்னாதார்-பகைவர்கள்; வைதன-வசைச்சொற்கள்; தவம்-தூய்மையுமாம்; தூயவன்-திருமால்)

தவம் என்னும் தூயசெயலே இன்னதென்று அறியாத, தகுதியில்லாத வர்களான, கொடிய பாவிகளான அந்தக் கொலைஞர்கள், உயிர்களிடத்துத் தாயைக் காட்டிலும் அன்புடையவனான பிரகலாதன் மீது 'ஏ' என்று சொல்லும் நொடிப்பொழுதிற்குள் செலுத்திய அத்தனை மழுவாயுதங் களும், எறிந்த கொலைத்தொழில் புரிகின்ற வாட்படைகளும், ஆயுதங் களும் எந்த ஊறும்-தீமையும் செய்யாது அகன்று போயின. அவர்கள் எறியும் போதெல்லாம், பரிசுத்தனான இறைவனையே தனக்கு ஒப்பற்ற துணையாகக் கொண்டு போற்றும் பிரகலாதனை, பகைவர்கள் தங்கள் வாயால் ஏசிய வசைச்சொற்கள் எவ்வாறு ஊறுவிளைவிக்கவில்லையோ, அதுபோல அந்த ஆயுதங்களும் எந்த ஊறும்-தீமையும் செய்யாது அகன்று போயின.

Koviloor Digital Library

பொதுவாக இறைவனின் அன்பைத்தான் தாயின் அன்பைக் காட்டிலும் மேம்பட்டது என்று கூறுவர். ஆனால் கம்பன் இங்கே பிரகலாதனை 'தாயின் மன்னுயிர்க்கு அன்பினன்' என்று போற்றுவதை உன்னுக. முன்பு குகனையும் இலக்குவன் 'தாயினும் நல்லான்' என்றதையும் இங்கு நினைவு கூர்க. 'தாயினும் சாலப் பரிந்து' என்பது தேவாரம். 'தவம் என்னும் தகவில்லோர்' என்பது 'உற்ற நோய் நோன்றல், உயிர்க்கு உறுகண் செய்யாமை அற்றே தவத்திற்கு உரு' என்ற குறள் 261-ன் அடிப்படையில் பேசப்பட்டிருக்கிறது என்பதை நினைவிற்கொள்க. அருளிக் கூறினும், வெகுண்டு கூறினும், அவ்வப்பயன் விளைவிப்பன தவமுடையோர் சொற்கள். 'கோஇளங்குமரன் மார்பில், கொலை வலார்எறிந்த கொற்றப் பூவுடைக் குடுமி வெள்வேல், பூவெனப் பொலிந்த மன்னோ' என்பது பாகவதம்.

83. "எறிந்த, எய்தன, எற்றின, குத்தின, ஈர்த்தன, படையாவும்
முறிந்து, நுண்பொடி ஆயின, முடிந்தன; முனிவிலான் முழுமேனி
சொறிந்த தன்மையும் செய்தில ஆயின; தூயவன் துணிவு ஒன்றா
அறிந்த நாயகன் சேவடி மறந்திலன்; அயர்த்திலன் அவன் நாமம்" (6354)

(எய்தன-செலுத்திய; ஈர்த்தன-பிளந்தன; படை-ஆயுதங்கள்; முனிவு-சினம்; துணிவு-உறுதியான/தெளிவு; ஒன்றா-ஒன்றி/உணர்ந்து; நாயகன்-தலைவன்/இறைவன்; அயர்த்தல்-மறத்தல்; முறிதல்-இற்றுப்போதல்)

''அக்கொலைஞர்கள் வீசியெறிந்த வேற்படை, வில்லில் செலுத்திய அம்புகள், தாக்கி எறியப்பட்ட வாட்படை, அவன் உடலைக் குத்திக் கிழிக்குமாறு எய்யப்பட்ட ஈட்டிகள், பிளத்தல் தொழிலைச் செய்யக்கூடிய மழுப்படை ஆகிய எல்லாப்படைகளும், அவனருகே சென்று, அவன் உடலில்பட்டு, முறிந்து, நுணுகிப் பொடிப்பொடியாய்ச் சிதைந்துபோய் சிறிதும் பயனற்றுப் போய் கீழே விழுந்தன; அழிந்தும் போயின; அந்நிலையிலும் தனக்கு ஓர் சினம் என்னும் தன்மையே இல்லாதவனாகிய சினத்தை வென்றவனான பிரகலாதன் உடம்பு முழுவதும், தினவெடுக்கும் தன்மையும், நினைவு நீங்கும் தன்மையும் செய்யாதனவாயின. தூயவனாகிய பிரகலாதன், தன் துணிவிலேயே ஒன்றிநின்று, அந்த இறைவனாகிய திருமாலின் சிவந்த, செம்மையான இருதிருவடிகளையும் உறுதியாகவும், இடைவிடாதும் சிந்தித்துக் கொண்டிருந்தான். அவனுடைய திருநாமத்தை உச்சரிப்பதையும் சிறிதும் மறந்தானில்லை.

மழுப்படை, விற்படை, வேற்படை, வாட்படை ஆகிய எந்தப் படைகளும் அவனை ஒன்றும் செய்யாதது மட்டுமல்ல; அவை அவனைச் சென்றடையும் முன்பே தன் வலியழிந்து நுண்ணிய பொடிகளாக முறிந்து தரையில் விழுந்து அழிந்துபோயின. அவன் உடம்புக்குச் சிறிதும் ஊறுவிளைவிக்க வில்லை; காரணம் தூயவனாகிய பிரகலாதன், தன் தலைவன் என்று உறுதியாக எண்ணப்பட்ட, திருமாலின் திருநாமத்தையே

Koviloor Digital Library

இடைவிடாது உச்சரித்துக் கொண்டும், அவன் திருவடிகளையே எண்ணிக் கொண்டிருந்ததாலேயேயாகும்.

84. தீயிலிட ஆணையிடுதல்

"உள்ள வான்படை உலப்பில யாவையும்,
உக்கன உரவோய்! நின்
பிள்ளை மேனிக்கு ஓர் ஆனிவந்திலது; இனிச்செயல்
என் கொல் பிறிது?" என்ன,
"கள்ள உள்ளத்தன், கட்டினன் கருவிகள்;
கதுமெனக் கனல் பொத்தித்
தள்ளுமின்" என உரைத்தனன்; வயவரும்
அத்தொழில் தலை நின்றார். (6355)

(உரவு-வலிமை; வான்-மேலான/பெரிய/சிறந்த; உக்கன-சிதைந்து சிதறின; ஆனி-தீங்கு/துன்பம்; பிறிது-வேறு; கள்ளம்-மாயை; கட்டுதல்-தடைசெய்தல்/பிணித்தல்; பொத்தி-மூட்டி/வளர்த்து; வயவர்-வீரர்கள்; தலைநிற்றல்-முற்பட்டுச் செல்லுதல்; கதுமென-விரைவாக; உலப்பில-அளவற்ற)

அக்கொலைஞர்கள் இரணியனிடம் சென்று, "வலிமை மிக்கவனே! நம்மிடம் அளவற்றிருந்த, சிறந்த, உயர்ந்த, மேலான ஆயுதங்கள் அனைத்தும் அவன் உடம்பில் பட்ட அளவில் பயனற்றுப்போய்ச்சிதைந்து சிதறிப் பொடிப்பொடியாய்ப் போய்விட்டன. அப்படைகளால் உன் மகனுக்கு எந்த விதத்தீங்கும் ஏற்படவில்லை. எனவே இனி நாங்கள் செய்ய வேண்டுவது யாது?" எனக் கேட்டனர். அதற்கு இரணியன் 'அந்த மாயையிலும் மந்திரத்திலும் வல்லவனான வஞ்சகனான பிரகலாதன், இந்த ஆயுதங்கள் தன்னைத் தாக்காதவாறு அவற்றைத் தடுத்துப் பிணித்துவிட்டான் போலும்; இனி விரைவாக நெருப்பை வளர்த்து, அதில் அவனைத் தள்ளிவிடுங்கள்' என்று கட்டளையிட்டான். அந்த வீரர்களும் அவ்வாறே செய்ய முற்பட்டனர்.

'ஆனி' என்பது 'ஹானி' என்ற வடசொல்லின் திரிபு; இப்பொழுதும் இரணியன், பிரகலாதன் தன் கடவுள் சிந்தனையால்தான் இப்படைக் கலங்களிலிருந்து தப்பித்திருக்கிறான் என்பதை ஒப்புக் கொள்ளவில்லை. அவன் மந்திர, மாயை வித்தையில் வல்ல வஞ்சகன்; அதனால்தான் தப்பிக்க முடிந்தது என்று கூறுவதையும் நன்கு உணர்க. 'கருவி கட்டுதல்' என்பது 'படைக்கலத்தடை' என்றும் 'ஆயுதத்தம்பனம்' என்றும் வழங்கப் படும்.

Koviloor Digital Library

85. நெருப்புக் குளிர்தல்

குழியில் இந்தனம் அடுக்கினர் குன்று என; குடம்தொறும் கொணர்ந்து எண்ணெய்
இழுதுநெய் சொரிந்திட்டனர்; நெருப்பு எழுந்திட்டது விசும்பு எட்ட;
அழுது நின்றவர் அயர்வுற, ஐயனைப் பெய்தனர்; 'அரி' என்று
தொழுது நின்றனன், நாயகன்தாள் இணை; குளிர்ந்தது சுடு தீயே.
(6356)

(இந்தனம்-விறகு; சொரிதல்-ஊற்றுதல்; விசும்பு-வானம்; அயர்தல்-சோர்வுறுதல்; ஐயம்-வியப்பு; ஐயன்-வியக்கத்தக்க பேரறிவாளன/அழகன்; பெய்தல்-தள்ளுதல்; நாயகன்-இறைவன்; அரி-திருமால்; இழுது-வெண்ணெயுமாம்)

அந்த வீரர்கள் ஒரு குழியை ஆழமாகத் தோண்டி, அதில் விறகுக் கட்டைகளை மலைபோல உயரமாக அடுக்கினர். அதன்மேல் எண்ணெய், வெண்ணெய், நெய் முதலானவற்றைக் கொண்டுவந்து குடம் குடமாகக் கொட்டினர். ஆதலால் நெருப்பு சுடர் விட்டு ஆகாயமளாவக் கொழுந்து விட்டு எரிந்தது. இதனைப் பார்த்துக்கொண்டு அருகில் நின்றவர்களெல்லாம் சோர்வடையும்படி, அந்த வீரர்கள் அழகிய வியக்கத்தக்க பேரறிவாளனான அரசிளங்குமாரனை - பிரகலாதனை அந்த நெருப்புக் குழிக்குள் தள்ளினர். அந்தச் சமயத்திலும், பிரகலாதன் 'அரி' என்று திருமாலின் நாமத்தையே உச்சரித்து, அவ்விறைவனின் இரண்டு திருப் பாதங்களையுமே தொழுது நின்றான். இப்பொழுது எல்லாப் பொருள் களையும் சுட்டெரிக்கும் இயல்புடைய அந்த நெருப்பு, அவனுக்கு மிகவும் குளிர்ச்சி தருவதாக அமைந்து, அவனைச் சுடாமல் சுடர்விட்டு எரிந்தது.

'ஐ' வியப்பாகும்' என்பது தொல்காப்பியம். இங்கே திருநாவுக்கரசரைச் சுண்ணாம்பு நீற்றறையில் இட்டபோது, அவருக்கு அது எந்தத் தீங்கும் செய்யாமல் குளிர்வித்தது என்ற நிகழ்ச்சி 'மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும், வீங்கிளவேனிலும், மூசுவெண்டரைப் பொய்கையும் போன்றதே ஈசன் எந்தன் இணையடி நீழலே' என்ற தேவாரமும் இங்கு ஒப்பு நோக்கத் தகும். திருவிளையாடற்புராணத்தில் சிவபெருமான் விறகு விற்ற கதை நாம் எல்லோரும் அறிந்ததே. அந்தப் பாடலிலும் ஆசிரியர் விறகு என்ற சொல்லுக்கு 'இந்தனம்' என்ற சொல்லையே பயன்படுத்தியிருப்பதையும் நாம் அறியலாம். 'தறித்த இந்தனம் தினம்தொறும் தாங்கி' என்பது பாடல்பகுதி. கம்பனும் சடாயுவுக்கு இறுதிக்கடன்களைச் செய்யும் போதும், 'இந்தனம்' என்ற சொல்லையே பயன்படுத்தியிருக்கிறார் என்பதும் நோக்கத்தக்கது. இலங்கை எரியூட்டு படலத்தில் அரக்கர்கள் அனுமன் வாலில் இட்ட

Koviloor Digital Library

நெருப்பு சீதாதேவியின் அருளால் அவனுக்குக் குளிர்ச்சி தந்தது என்றதையும் இங்கே நினைவு கூர்க.

86. காலவெங்கனல் கதுவிய காலையில், கற்புடையவள் சொற்ற
சீலநல் உரை, சீதம் மிக்கு அடுத்தலின், கிழியொடு நெய்தீற்றி,
ஆலம் அன்ன நம் அரக்கர்கள் வயங்கு எரி மடுத்தலின் அனுமன்தன்
கூலமாம் என, என்புறக் குளிர்ந்தது அக்குருமணித் திருமேனி. (6357)

(குரு-நிறம்; மணி-இரத்தினம்; காலம்-ஊழிக்காலம்; கதுவுதல்-பற்றுதல்; ஆலம்-நஞ்சு; கிழி-துணி; தீற்றி-சொரிந்து; வயங்குதல்-சுடர் விட்டு எரிதல்; மடுத்தல்-பற்றவைத்தல்/மூட்டுதல்; சொற்ற-சொன்ன/கூறிய; சீலம்-ஒழுக்கம்; சீதம்-குளிர்ச்சி; அடுத்தல்-பொருந்துதல்; கூலம்-வால்; என்பு-எலும்பு; உற-வரையில்)

இது வீடணன் கூற்று. ஆலகால நஞ்சுபோன்ற கொடிய நம் அரக்கர்கள் இலங்கையை எரியூட்டிய அனுமனின் வாலில் நெருப்பைப்போல - வடவைத் தீயைப்போல, உன் கட்டளைப்படி துணிகளை எல்லாம் ஒன்றாகச் சேர்த்துக் கட்டி, அதில் நெய்யை ஊற்றி, நெருப்புப் பற்ற வைத்தார்கள் அல்லவா? அப்பொழுது கற்பின் கனலியாகிய சீதாதேவி தன் கற்பொழுக்கத்தின் திண்மையால் கூறிய, தூய்மையானதும் நன்மை பயப்பதுமான நல்ல சில சொற்களின் வலிமையினால், அனுமனுக்கு நாம் வைத்த நெருப்பு, அவனைச் சுடாமல் அவன் வாலுக்கு வெம்மை நீக்கி குளிர்ச்சியைத் தந்தது. அதுபோல இப்பொழுது பிரகலாதன் அவ்விறைவனின் திருநாமத்தையே உச்சரித்துக் கொண்டிருப்பதால் ஒளிநிறைந்த இந்த அழகிய மாணிக்கம் போன்ற நிறத்தையுடைய இந்தப் பிரகலாதனின் அழகிய மேனியும் அதன் உள்ளே உள்ள எலும்புவரை குளிர்ச்சி அடைந்திருக்கிறது.

'குருமணித் திருமேனி' என்பது ஒரு அழகான சொற்றொடர். இறைவனிடம் முழுநம்பிக்கை வைத்து அவனிடம் பற்றுக் கொண்டவர்களுக்கு எத்தகைய துன்பம் வரினும் அவர்கள் மேனி சுடச்சுடரும் பொன்போல மிக்க பொலிவோடு திகழும் என்ற உயரிய கருத்தைக் கூறுவது இச்சொற்றொடர். இந்த செய்தி இராவணன் நன்கு அறிந்தது. எனவே இக்காப்பியத்தில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியையே உவமையாகக் கூறினான் என்க. இரண்டும் காலத்தால் முன்பின்னாக இருந்தாலும் இத்தகைய உவமைகள் சரியானவையாகவே சான்றோர்களால் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கின்றன என்பதையும் நினைவிற் கொள்ள வேண்டும். 'வானம்துளங்கில்என்? மண்கம்பமாகில் என்? மால்வரையும் தானம் துளங்கித்தலை தடுமாறில் என்? தண் கடலும் மீனம்படில் என்? விரிசுடர் வீழில் என்? வேலை நஞ்சுண்டு, ஊனம் ஒன்றில்லா ஒருவனுக்கு ஆட்பட்ட உத்தமர்க்கே' என்பது தேவாரம். 'குன்றே அனையாய்! நீ எனை ஆட்கொண்ட போதே கொண்டிலையோ என்றன் ஆவியும், உடலும்,

Koviloor Digital Library

உடைமை எல்லாமும்? இன்று ஓர் இடையூறு எனக்கு உண்டோ? எண்தோள் முக்கண் எம்மானே! நன்றே செய்வாய்; பிழை செய்வாய்; நானே இதற்கு நாயகமே?' என்பது திருவாசகம். இயேசுநாதர் சிலுவையில் அறையப்பட்ட போதும் 'தன்னரிய திருமேனி' என்று பேசுகிறது இரட்சண்ய யாத்திரிகம்.

87. எட்டுப் பாம்புகளையும் கடிக்கவிடக் கட்டளையிடுதல்

"சுட்டது இல்லை நின்தோன்றலை,
சுடர்க்கனல், சுழிபடர் அழுவத்துள்
இட்ட போதிலும்; என் இனிச் செயத்தக்கது?"
என்றனர் இகல்வெய்யோர்;
"கட்டி, தீயையும் கடும் சிறைஇடுமின்;
அக்கள்வனைக் கவர்ந்து உண்ண
எட்டுப் பாம்பையும் விடுமின்கள்"
என்றனன், எரி எழு தறுகண்ணான். (6358)

(இகல்-பகைமை/மாறுபட்ட; வெய்யோர்-கொடியவர்கள்; அழுவம்-குழி/பரப்பு/பள்ளம்; தோன்றல்-மகன்; தறு-கொடிய/அஞ்சத்தக்க; கள்வன்-வஞ்சகன்; உண்ண-உயிரைப் பருகுமாறு)

மாறுபட்ட பகையையுடைய கொடியவர்களான அவ்வீரர்களாகிய கொலைஞர்கள், இரணியனிடம் சென்று, "சுடர்விட்டு நெருப்புச் சுழித்து எரிகின்ற பெரிய குழிக்குள் தள்ளிவிட்ட போதும், அந்த நெருப்பு, உன் மகன் பிரகலாதனைச் சுடவேயில்லை, எனவே நாங்கள் இனிமேல் செய்யத்தக்கது என்ன?" என்று கேட்டனர். அதனைக் கேட்ட நெருப்புப் பொறி பறக்கும் கொடிய அஞ்சத்தக்க கண்களையுடையவனான இரணியன், "நம் ஆணைக்குக் கட்டுப்படாத அந்த அக்னி தேவனை கால்கைகளை நன்றாகக் கட்டிக் கொடிய சிறையில் தள்ளுங்கள், பின்னர் வஞ்சகனான பிரகலாதனின் உயிரைக் கவர்ந்து உண்ணும்படி, எட்டுத்திக்கு அஷ்டகுல நாகங்களையும் அவன்மேல் ஏவுங்கள்" என்று கட்டளையிட்டான்.

'சுடர்கனல், சுழிபடர் அழுவம்' என்பது அந்தத் தீக்குழியின் வெம்மையைக் குறித்தது என்க. எட்டுப் பாம்புகளாவன. அனந்தன், கார்க்கோடகன், குளிகன், சங்கபாலன், தட்சன், பதுமன், மகாபதுமன், வாசுகி என்பனவாம். திருநாவுக்கரசருக்கும் இதுபோல் பெரும் நாகங்களை ஏவிக் கடித்து உயிருண்ணச் செய்யுமாறு கட்டளையிட்டான் பல்லவ மன்னன். 'பசுபதியார் தம்முடைய அடியார்க்கும் நஞ்சு அமுதம் ஆவதும்தான் அற்புதமோ', என்பார் சேக்கிழார்.

Koviloor Digital Library

88. அனந்தனே முதலாகிய நாகங்கள், 'அருள்என்கொல்?' என, அன்னான்,
நினைந்த மாத்திரத்து எய்தின, நொய்தினில்; நெருப்புஉகு பகுவாயால்,
வனைந்ததாம் அன்ன மேனியினான் தன்மேல், வாள் எயிறுஉற ஊன்றி,
சினம் தம்மீக் கொள, கடித்தன; துடித்திலன், திருப்பெயர் மறவாதான்.
(6359)

(அருள்-கட்டளை; வனைதல்-அழகுறப் புனையப்பெறுதல்; உகுதல்-உமிழ்தல்; பகு-பிளந்த; எயிறு-பற்கள்; உற-அழுந்தி; ஊன்றி-பதியும்படி; தலைக்கொள-மேற்பட; நொய்தினின்-விரைவாக; மீக்கொள-விஞ்சி)

இரணியன் அவ்வாறு நினைத்த உடனேயே, அந்த அனந்தன் முதலாகக் கூறப்படுகின்ற எட்டுத்திசை நாகங்களும் விரைந்து அவனிடம் வந்து சேர்ந்து, ''தாங்கள் இடும் கட்டளை என்னவோ?'' என்று கேட்க, அவன் கட்டளைப்படி தம் நெருப்பைக் கக்குகின்ற, பிளவு பட்டவாயினால், சித்திரப்பதுமைபோல அழகுறப் புனையப்பட்ட மேனியை உடைய பிரகலாதன் மீது, மிக்க சினம் மேலோங்க, தனது ஒளிபொருந்திய கூரிய விஷப் பற்கள் நன்கு அழுந்திப் பதியும்படி கடித்தன. எனினும், எப்பொழுதும் தன் தலைவனாகிய இறைவனின் திருநாமத்தையே மறவாது எண்ணிக்கொண்டிருக்கும் பிரகலாதன், ஒரு சிறிதும் துடித்துத் துன்புற்றானில்லை.

''வனைந்தனைய திருமேனி வள்ளல்'' என்று முன்பு இராமபிரானுக்குச் சொன்ன அதே உவமையைக் கம்பன் இங்கே பிரகலாதனுக்குப் பயன்படுத்துவதை உணர்க. பாம்பின் விஷப்பற்களின் தன்மையைக் கூட சீவகசிந்தாமணி கூறுகிறது. இப்பற்கள் காணி, காளாத்திரி, யமன், யமதூதி என்று பேசப்படுகின்றன. இதுபோன்ற பற்களால் கடித்த விஷத்திற்கு ஏழு வேகங்கள் உண்டென்றும், ஏழு வேகத்திற்குப் பின்னர் உயிர்பிரிவதைத் தவிர வேறுவழியில்லை என்றும் பெரியபுராணம், அப்பூதி அடிகள் நாயனார் புராணம் கூறுகிறது. பாம்புகளின் நாக்கு எப்படிப் பிளவுபட்டது என்பது நாம் முன்பு கண்டதேயாகும்.

89. பக்கம் நின்றவை பயத்தினில் புயல்கறைப் பசும்புனல் பகுவாயின்
கக்க, வெஞ்சிறைக் கலுழனும் நடுக்குற, கவ்விய காலத்துள்,
செக்கர் மேகத்துச் சிறுபிறை நுழைந்தென, செய்கைய, வலிசிந்தி
உக்க பற்குலம்; ஒழுகின, எயிற்று இரும் புரை தொறும் அமிழ்து ஊறி.
(6360)

(பக்கம்-அருகில்; புயல்-மேகம்; புனல்-குருதி/இரத்தம்; பகு-பிளந்த; கக்க-சொரிய/சிந்த; கலுழன்-கருடன்; கவ்விய-பற்றிய/தீண்டிய; செக்கர்-செந்நிறம்; சிந்தி-இழந்து; பற்குலம்-பற்கூட்டம்; உக்க-சிதறின/உதிர்ந்தன; இரும்-பெரிய; புரை-துளைகள்)

Koviloor Digital Library

அவ்வாறு பக்கத்தில் வந்து நின்ற பாம்புகளெல்லாம் இரணியன் தங்களை என்ன செய்வானோ என்ற அச்சத்தால், மேகத்தைப் போன்ற கரிய நச்சுக்கறைபடிந்த பிளந்த தம் வாயினின்றும், பசிய புதிய இரத்தத்தைச் சிந்தலாயின; விரைவாகப் பறக்கும் இயல்புடைய இறக்கைகளையுடைய, பாம்புகளுக்கு இயற்கையிலேயே பகையாகிய, கருடன்கூட சற்று நடுக்கமுற்றான். அவ்வாறு அந்தப் பாம்புகள் பிரகலாதனைப் பற்றிக் கடித்தபொழுது, சிவந்த மேகத்தினுள் ஒரு சிறிய பிறைச் சந்திரன் நுழைந்து வருவதுபோன்ற செய்கை போல, அப்பாம்புகள் தங்கள் வலிமையிழந்து, அவற்றின் பற்களின் தொகுதிகள் கீழே சிந்திச் சிதறி உதிர்ந்து விழுந்தன. அவற்றின் பற்களிலிருந்து விஷத்திற்கு மாறாக, பெரிய துளைகளிலிருந்து அமிழ்தம் ஊறி ஒழுகலாயிற்று.

'செக்கர் மேகத்து சிறு பிறை நுழைந்து என' என்பது ஒரு அற்புதமான உவமை. அந்தப் பாம்புகள் தம் வலிமையை இழந்ததோடு மட்டுமல்ல, தம் பற்களையும் இழந்தன என்று கூறியது ஒரு நயம். நஞ்சிற்கு மாறாக அமிழ்து அவற்றின் பற்களிலிருந்து ஒழுகியது என்றது பிரகலாதனது தெய்வீகத் தன்மையை விளக்க வந்த கூற்று எனக் கொள்க. மேகம் மழையைப் பொழிவது போன்று பாம்புகள் இரத்தத்தைப் பொழிந்தன என்பது ஒரு நயமான கற்பனை. 'அடுகொலைப் பாந்தள் எட்டும் அமுதுவாய் உகுத்த மாதோ!' என்பது பாகவதம். செக்கர்மேகம் பிரகலாதன் திருமேனி; சிறுபிறை பாம்புகளின் வளைந்த பற்கள்.

90. யானைக்கு இலக்காக்கச் சொல்லுதல்

"சூழப் பற்றின சுற்றும் எயிற்றின்,
போழக்கிற்றில" என்று புகன்றார்;
"வாழித்திக்கின் மயக்கின் மதம் தாழ்,
வேழத்துக்கு இடுமின்" என விட்டான். (6361)

(போழ்தல்-பிளத்தல்/கடித்து வடுப்படுத்துதல்; கிற்றில-ஆற்றல் இல்லாதன ஆயின; தாழ்தல்-தங்குதல்; வேழம்-ஆண்யானை)

''அவ்வாறு எட்டு நாகங்களும் பிரகலாதன் உடலைச் சுற்றிச் சூழ்ந்து பற்றிக் கடிக்க முற்பட்டாலும், அவற்றின் நச்சுப் பற்களால் அவன் உடலைப் பிளந்து, கடித்த வடுக்களை உண்டாக்க முடியவில்லை'' என்று அந்தக் கொலைஞர்கள் வந்து இரணியனிடம் தெரிவித்தார்கள். அதனைக் கேட்ட இரணியன் 'மதம் மிக்கதும் மயக்கம் பொருந்தியதுமான திசையானைக்கு இலக்காக அவனைக் கொண்டு போய்த் தள்ளுங்கள்' என்று கட்டளையிட்டு அவர்களை ஏவி அனுப்பினான்.

'கிற்றில' என்பது ஆற்றலையுணர்த்தும் இடைச்சொல். வாழி என்பதை இங்கே அசையாகக் கொள்ளவேண்டும். 'வேழம்' ஆண்யானை; 'பிடி'

Koviloor Digital Library

பெண்யானை; தவறு செய்தவர்களை யானையின் காலில் இட்டு மிதிக்கச் செய்வது சங்க இலக்கிய நூல்களில் பெரிதும் பேசப்படுகிறது.

91. பசையில் தங்கல் இல் சிந்தையர் பல்லோர்
திசையில் சென்றனர்; 'செப்பினன்' என்னும்
இசையில் தந்தனர்; இந்திரன் என்பான்
விசையின் திண் பணை வெஞ்சின வேழம். (6362)

பசை-அன்பு/இரக்கம்; தங்குதல்-பொருந்துதல்; செப்பினான்-கூறினான்; பணை-பெரிய; விசையின்-விரைந்து; இசை-சொல்; திண்-உறுதியான; வெம்-கொடிய; பணை-தந்தம்)

அவ்வாறு இரணியன் கட்டளையிட்டதும், இரக்கம் என்னும் ஒரு குணமே தன் மனத்தில் பொருந்தியிராத அந்த வன்னெஞ்சம் மிக்க கொலைஞர்களில் பலர், முன்திசையாகிய கிழக்குத் திசைநோக்கிச் சென்று, அதற்குறிய திக்கு பாலகனாகிய இந்திரனைப் பார்த்து, 'இரணியன் அரசன் அவ்வாறு கட்டளையிட்டுள்ளான்' என்று சொன்ன மாத்திரத்திலேயே, தேவர் தலைவனாகிய இந்திரன், உறுதி வாய்ந்ததும். பருத்த பெரிய நான்கு கொம்புகளைக் கொண்டதுமான கொடிய, சினமிக்க தன்னுடைய ஆண்யானையாகிய ஐராவதத்தை விரைவாக அவர்களிடம் தந்தான். அவர்கள் அதனைக் கொணர்ந்தனர்.

'பசையில் தங்கல் இல் பல்லோர்' என்பது 'இரக்கம் என்ற ஒரு பொருளிலாத நெஞ்சினர்' என்று அரக்கர்களைக் குறிக்கும். பிறிதின் நோய் தன் நோய் போல் போற்றுதல் இல்லாதவர் என்க.

92. கையில், கால்களில், மார்பு, கழுத்தில்
தெய்வப் பாசம் உறப்பிணி செய்தார்;
மையல் காய் கரி முன் உறவைத்தார்;
பொய் அற்றானும் இது ஒன்று புகன்றான். (6363)

(பிணித்தல்-கட்டுதல்; மையல்-மயக்கம்; காய்தல்-சினத்தல்; உற-பொருந்த; வைத்தல்-கிடத்துதல்)

அந்த வீரர்கள், பிரகலாதனுடைய கைகள், கால்கள், மார்பு, கழுத்து முதலிய உறுப்புக்களை தெய்வத்தன்மை வாய்ந்த மந்திரசக்தி படைத்த பாசற் கயிற்றினால் இறுகக் கட்டி மதம் மிக்க, சினம் கொண்ட அந்த ஐராவதம் என்னும் யானையின் முன்னர் நெருக்கமாகக் கிடத்தினர். அப்போது பொய்மையே பேசாதவனும், தூய்மையானவனுமான பிரகலாதன் அந்த யானையை நோக்கிக் கீழ் வருவனவற்றைக் கூறலானான்.

Koviloor Digital Library

93. "எந்தாய்! பண்டு ஓர் இடங்கர் விழுங்க,
முந்தாய் நின்ற முதற்பொருளே! என்று
உன் தாய் தந்தை இனத்தவன் ஓத
வந்தான் எந்தன் மனத்தினன்" என்றான். (6364)

(இனத்தவன்-உறவினன்; பண்டு-முற்காலத்தில்; இடங்கர்-முதலை; ஓத-அழைக்க; முந்தாய்-முதற்காரணமாய்)

பிரகலாதன் அந்த யானையை நோக்கி, ''ஐராவதமே! முன்பு ஒரு காலத்தில் உன்னுடைய தாய் தந்தைக்கு உறவினனான கஜேந்திரன் என்பவன், தன்னை ஒரு முதலைப் பற்றி விழுங்கத் தொடங்க, வேறு வழியே தெரியாது, 'என் தந்தையே! எல்லா மூலப்பொருள்களுக்கும் முதற்காரணமாய் அமைந்தவனே! என்னைக் காப்பாற்று' என்று கதறிக்கூவி அழைத்தபோது, சற்றும் தாமதிக்காது, உடனே ஓடிவந்து, முதலையைக் கொன்று கஜேந்திரனைக் காப்பாற்றினானே, அந்த மூல முதல்வன் என் மனத்துள் வீற்றிருக்கிறான்'' என்றான்.

கஜேந்திரன் மோட்ச வரலாறு பாலகாண்டம் முதல் எல்லாக் காண்டங்களிலும் இடம் பெற்றிருக்கிறது என்பது உணர்க.

94. என்னா முன்னம், இருங்களிறும் தன்
பொன்ஆர் ஓடை பொருந்த, நிலத்தின்
அன்னானைத் தொழுது, அஞ்சி அகன்றது;
ஒன்னார், அத்திறம் எய்தி உரைத்தார். (6365)

(இரும்-பெரிய; ஆர்-பொருந்திய; ஒன்னார்-ஒன்றார்/பகைவர்; ஓடை-முகபடாம்/நெற்றிப்பட்டம்)

என்று பிரகலாதன் சொல்லி முடிக்கும் முன்பே, அந்தப் பெரிய ஐராவதம் என்னும் யானையும், அச்சமுற்று, தன்னுடைய அழகிய, பொன்னாலான நெற்றிப்பட்டம் நிலத்தில் பொருந்துமாறு விழுந்து, அந்தத் தூயவனான பிரகலாதனை வணங்கி, அவனைத் துன்புறுத்த அஞ்சி அகன்று சென்றது. இந்தச் செய்தியினை பகைவர்களாகிய அந்த வீரர்கள் இரணியனிடம் சென்று எடுத்துக் கூறினர்.

இதே போன்று திருநாவுக்கரசரையும் யானையை விட்டு மிதிக்கச் சொல்லித் துன்புறுத்தினான் பல்லவ மன்னன். அப்பொழுது அவர் பாடியதுதான் 'அஞ்சுவது யாதொன்றும் இல்லை; அஞ்சவருவதும் இல்லை' என்று தொடங்கும் பதிகம். அங்கே அந்த யானை அவரை மும்முறை வலம் வந்து பணிந்து விலகிச் சென்றது என்பதை இங்கே ஒப்பு நோக்குக. 'தம் பெருமான் சரணாகக் கொண்ட கருத்திலிருந்து குலாவிய வன்புறு கொள்கைத் தொண்டரை முன் வலமாகச் சூழ்ந்து, எதிர் தாழ்ந்து,

Koviloor Digital Library

நிலத்தில் எண் திசையோர்களும் காண இறைஞ்சி எழுந்தது வேழம்' என்பது பெரியபுராணம்.

95. யானையைக் கொல்ல ஆணையிடுதல்

"வல் வீரைத் துயில்வானை மதித்து, என்
நல் வீரத்தை அழித்தது; நண்ணுற்று,
ஒல்வீர்! ஒற்றை உரக் கரி தன்னைக்
கொல்வீர்" என்றனன், நெஞ்சு கொதிப்பான். (6366)

(ஒல்வீர்-வினை இயற்றுவதில் வல்லவர்களே; வல்-வலிய; வீரை-கடல்; நல்-சிறந்த; ஒற்றை-தனித்த; நண்ணுற்று-தொடர்ந்து சென்று; ஒல்லுதல்-இயலுதல்; துயில்-அறிதுயில்/யோகநித்திரை)

அவர்கள்கூறியதைக் கேட்டு மனம் குமுறிப்போனவனான இரணியன், அவர்களை நோக்கி, "நான் கூறியதை அப்படியே செய்து முடிக்கும் வல்லமை பெற்ற வீரர்களே! இந்த யானை, இந்த வலிய பாற்கடலில் அறிதுயில் கொள்ளும்-தூங்கிக் கொண்டிருப்பவனானதிருமாலை மிகவும் போற்றி, என்னுடைய சிறந்த வீரத்தை அவமதித்து விட்டது. எனவே அதனைத் தொடர்ந்து சென்று, அந்தத் தனியான, எந்தத் துணையும் இல்லாத வலிமையுடைய யானையை இப்பொழுது கொல்லுங்கள்" என்று ஆணையிட்டான்.

'வீரை' என்ற சொல் நமக்குப் புதிது. கடல் என்பது பொருள்.

96. தன்னைக் கொல்லுநர் சாருதலோடும்
பொன்னைக் கொல்லும் ஒளிப்புகழ் பொய்யா
மன்னைக் கொல்லிய வந்தது, வாரா
மின்னைக் கொல்லும் வெயில் தின் எயிற்றால். (6367)

(சாருதல்-நெருங்குதல்; கொல்லுதல்-அழித்தல்; தின்-அழிக்கும்/மழுங்கச் செய்யும்; எயிறு-பற்கள்/இங்கே தந்தங்கள்; மன்-மன்னன்/இளவரசன்/பிரகலாதன்; வாரா-வந்து; கொல்லிய-கொல்லும்) (குளகப்பாடல்)

அந்த வீரர்கள் தன்னைக் கொல்லுவதற்காக நெருங்குகிறார்கள் என்று தெரிந்தவுடன், அந்த யானையானது, மின்னலையும், சூரியனையும் பொன்னையும் தன் ஒளியால் மழுங்கச் செய்யும் பேரொளிபடைத்த மேனியழகு கொண்டவனும், புகழ்படைத்தவனும், பொய்மையில்லாதவனுமான இளவரசன் பிரகலாதனைக் கொல்லுவதற்காக மீண்டும் வந்தது. வந்து - பாடல் தொடர்கிறது.

'கொல்லுதல்' என்ற சொல்லும் 'தின்' என்கின்ற சொல்லும், தனது பேரொளியால் கீழ்ப்படுத்தும். மங்கச் செய்யும் என்ற பொருளில்

Koviloor Digital Library

பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த யானையினுடைய தந்தம் மின்னலையும், பிரகலாதனுடைய மேனியொளி சூரியனையும் விட மிக்க பேரொளி உடையது என்பது பேசப்படுகிறது.

97. வீரன் திண் திறல் மார்பினில் வெண்கோடு
ஆரக் குத்தி அழுத்திய நாகம்,
வாரத் தண் குலை வாழைமடல் சூழ்
ஈரத் தண்டு என, இற்றன எல்லாம். (6368)

(கோடு-கொம்பு/தந்தங்கள்; ஆர-நன்கு; குத்தி-தாக்கி; வாரம்-விருப்பம்/அன்பு; தண்-குளிர்ந்த; மடல்-பட்டைகள்; இற்றன-ஒடிந்து சிதைந்தன; வீரன்-உள்ளத்திண்மை படைத்தவன்; வீரம்-ஆண்மை; திண்-உறுதி; திறல்-வலிமை; அழுத்திய-ஊன்றிய; நாகம்-யானை)

ஆண்மையும் உறுதியும் பேராற்றலும் படைத்த பிரகலாதனின் மார்பில், நன்றாகக் குத்தி ஊன்றிய அந்த யானையின் வெண்மையான தந்தங்கள் நான்கும், விருப்பம் மிக்க குளிர்ச்சி பொருந்திய குலைகளையுடைய வாழை மரத்தின் பட்டைகள் சூழ்ந்த ஈரம் பொருந்திய தண்டினைப் போல எளிதில் ஒடிந்து போயின.

பிரகலாதனைக் குத்திக் குதறிய அந்த யானைகளின் நான்கு தந்தங்களும் உடைபட்டுக் கீழே விழுந்ததற்கு, குலை தள்ளிய, குளிர்ச்சி மிக்க வாழை மரத்தின் பட்டைகள் சூழ்ந்த ஈரமான வாழைத் தண்டை உவமையாகக் கூறிய கவிஞனின் உவமைத் திறம் நோக்குக. அந்தத் தந்தங்கள் வாழைத் தண்டைப்போல அவ்வளவு எளிதாக முறிந்து உடைந்து தரையில் விழுந்தன என்பது கருத்து. யானையின் தந்தங்கள்தான் இற்று வீழ்ந்தனவே தவிர அவற்றால் பிரகலாதன் மேனிக்கு ஒரு ஊறும் விளையவில்லை என்பது குறிப்பு. வாழைத் தண்டினை யானைகள் விரும்பிச் சாப்பிடும் என்பதும், அவ்வாழைத் தண்டுகள்தான் அந்த யானைகளுக்குப் பிடிக்கின்ற மதத்தினை அடக்க வல்லது என்பதும் கூடுதல் செய்திகள். வீரம் என்பது உள்ளத்து வலிமையாகிய ஞானத்தையும், திண்திறல் என்பது உடலின் உறுதிமிக்க வலிமையாகிய ஆண்மையையும் குறித்ததாகக் கூறுவது பிரகலாதனுக்கு இன்னும் சிறப்புச் சேர்க்கும். அகத்திலும், புறத்திலும் பேராற்றல் படைத்தவன் பிரகலாதன் என்பது கருத்து.

98. "வெண்கோடு இற்றன", மேவலர் செய்யும்
கண்கோடல் பொறியின் கடிது ஏகி,
'எண் கோடற்கு அரிது' என்ன, வெகுண்டான்,
திண் கோடைக் கதிரின் தெறு கண்ணான். (6369)

(கோடு-தந்தங்கள்; மேவலர்-பகைவர்/விரும்பத்தகாதவர்; கடிது-விரைந்து; எண்-எண்ணம்; கோடற்கு-கொள்ளுதற்கு/கவர்ந்து கொள்ளு

Koviloor Digital Library

தற்கு; அரிது-இயலாது; திண்-முதிர்ந்த; தெறு-அஞ்சத்தக்க; கோடை-முதுவேனிற்காலம்; கோடல்-இமைத்தலுமாம்; பொறி-அளவு)

பிரகலாதனைத் துன்புறுத்த ஏவப்பட்ட பகைவர்களான கொலைஞர்கள், கண் இமைக்கும் அளவிற்குள் விரைவாக இரணியனைச் சென்றடைந்து, ''நாம் ஏவிய வெண்மையான தந்தங்களையுடைய ஐராவதம் என்னும் யானை, தந்தங்கள் முறிந்து சிதைந்தன. தன் தந்தங்களை இழந்தது. நீ எண்ணுவது போல, பிரகலாதனைக் கொல்லுவது என்பது அவ்வளவு எளிதான செயலன்று, மிக்க கடினமானதாகும்' என்று கூறவும், அதனைக் கேட்ட இரணியன், திண்ணிய முதுவேனிற் காலத்தில் சுட்டெரிக்கும் கதிரவனின் கிரணங்கள் போன்று கொதிக்கும் கண்களை யுடையவனாய் மிகுந்த சினம் கொண்டான்.

'கண்கோடல் பொறி' என்பது, மற்ற நான்கு பொறிகளும் நின்று பற்றும் பொறிகளாகவும், கண் மட்டுமே சென்று பற்றும் பொறியாகும் என்பதை விளக்குகிறது எனவும் கொள்க. 'கோடு' என்பது 'கோடு சங்கு, ஊதும் கொம்பு, மரக்கொம்பு, விலங்கின் கொம்பு' என்பது நிகண்டு.

99. வெள்ளத்தில் தள்ளக் கட்டளையிடுதல்

"தள்ளத் தக்கு இல் சயிலத்தோடு,
எள்ளக் கட்டி, எடுத்து விசித்து,
கள்ளத்து இங்கு இவனைக் கரை காணா
வெள்ளத்து உய்த்திடுமின்" என விட்டான். (6370)

(கள்ளம்-வஞ்சகம்; எள்ளி-இகழ்ந்து வெறுக்க; தள்ள-அசைக்க; சயிலம்-மலை; விசித்து-பிணித்து/கட்டி; வெள்ளம்-கடல்; விடுதல்-ஏவுதல்; உய்த்தல்-சேர்த்தல்/தள்ளிவிடுதல்)

இரணியன் ஏவலாளரை நோக்கி, ''வஞ்ச நெஞ்சம் கொண்ட இந்தப் பிரகலாதனை, இங்கு இருப்போர் எல்லோரும் இகழ்ந்து வெறுக்கும்படி, எவராலும் அசைக்க இயலாத ஒரு மலையில் நன்றாக இறுகக் கட்டி, விடுபட்டு வரமுடியாதவாறு மேலும் பலவகைக் கயிறுகளினால் பிணைத்துக் கட்டி, எல்லையே காணமுடியாத அளவுக்கு விரிந்து பரந்திருக்கும் கடலில் கொண்டு போய்த் தள்ளிவிட்டு வாருங்கள்'' என்று கட்டளையிட்டான்.

'சயிலம்' என்பது 'சைலம்' என்ற வடசொல்லின் திரிபு. மலை என்பது பொருள், 'கரைகாணா வெள்ளம்' என்பது கடலைக் குறித்தது.

Koviloor Digital Library

100. வீடணன் கூற்று

''ஒட்டிக் கொல்ல உணர்ந்து வெகுண்டான்;
விட்டிட்டான் அவன்'' என்று விரைந்தார்;
கட்டிக் கல்லொடு கால் விசையின் போய்
இட்டிட்டார் கடலின் நடு; எந்தாய்! (6371)

(கல்-மலை; விசையின்-விரைவாக; கால்-காற்று; ஒட்டுதல்-சபதம் செய்தல்/துணிதல்/சூளுரைத்தல்)

வீடணன் இராவணனை நோக்கி, ''என் தந்தை போன்றவனே! அந்த இரணியன், இவ்வளவு நடந்தும், தன் மகனை விட்டுவிடவில்லை; அவனை எப்படியும் கொன்றே தீர்வது என்று சபதம் செய்து கோபம் கொண்டிருக்கிறான் என்பதை இப்போது நன்கு உணர்ந்த அவன் எவலாளர்கள், காற்றைப் போல் விரைந்து சென்று, பிரகலாதனை, அசைக்கமுடியாத ஒரு மலையோடு, கயிற்றினால் பிணைத்துக்கட்டி, கடலின் நடுவில் தள்ளிவிட்டு வந்து விட்டனர்'' என்கிறான்.

'ஒட்டுதல்' என்ற சொல் நமக்குப் புதிது. சபதம் செய்தல், சூளுரைத்தல் என்பது பொருள். அவன் வெகுண்டதற்குக் காரணம், தாம் செய்யும் பல வித முயற்சிகளும் பயனற்றுப் போகிறதே என்ற ஆதங்கத்தால் என்க. 'கல்' என்பது மலையைக் குறித்தது. 'தென்குமரி வடபெருங்கல்' என்பது புறநானூறு.

101. நடு ஒக்கும் தனி நாயகன் நாமம்
விடுகிற்கின்றிலன் ஆகலின், வேலை
மடு ஒத்து, அங்கு அதின் வங்கமும் அன்றாய்,
குடுவைத் தன்மையது ஆயது குன்றம். (6372)

(நடு-நடுவு நிலைமை; ஒக்கும்-ஒத்த இயல்பு; தனி-ஒப்பற்ற; நாயகன்-தலைவன்/இறைவன்; நாமம்-திருப்பெயர்; விடுகிற்கின்றிலன்-விடாது தொடர்ந்து; வேலை-கடல்; வங்கம்-கப்பல்/மரக்கலம்; குன்றம்-மலை; குடுவை-குடுக்கை/சுரைக்குடுக்கை/மிதவை; மடு-சிறுபள்ளம்/சிறுநீர் நிலை/குட்டை)

இன்னார் இனியர் என்று பாராது எல்லோர்க்கும் ஒரே தன்மையாய் அருள்பாலிக்கும் நடுவுநிலை தவறாத ஒப்பற்ற தலைவனாகிய இறைவன் திருநாமத்தை இடைவிடாது சோர்விலாது தியானித்து வருகின்றான் பிரகலாதன். எனவே ஏவலர் தள்ளிவிட்ட பெருங்கடல், அவனுக்கு ஒரு சிறுகுட்டைபோல சிறுபள்ளம்போல ஆகியது. அவர்கள் கட்டிய பெரிய மலை, அக்கடலுள் மிதக்கும் ஒரு மரக்கலம் போலக்கூட அல்லாது, அதனின்றும் தாழ்ந்த ஒரு சுரைக்குடுக்கைபோல மிதப்பதாயிற்று.

Koviloor Digital Library

'நடு ஒக்கும் தனி நாயகன்' என்பது இறைவனின் பேரருளைக் குறிக்கும். இதே துன்பம் திருநாவுக்கரசருக்கும் வந்தது. பல்லவ மன்னன் கல்லைக்கட்டி, அவரைக் கடலில் தூக்கி எறியச் செய்தான். இதனைக் கூறும் இனிய இரு தேவாரப்பாடல்களைக் கேளுங்கள். ஒன்று திருநாவுக் கரசர் தன் கூற்றாகவே கூறியிருப்பது. 'கல்லினோடு எனைப்பூட்டி அமண்கையர், ஒல்லையூர் புகநூக்க, என் வாக்கினால், நெல்லு, நீள்வயல், நீளிக்குடி அரன் நல்ல நாமம் நவிற்றி உய்ந்தேன் அன்றே' என்பது தேவாரம். 'சொற்றுணை வேதியன், சோதிவானவன், பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கை தொழக் கற்றுணைப் பூட்டி ஓர் கடலில் பாய்ச்சினும், நற்றுணையாவது நமச்சிவாயவே' என்பதும் தேவாரம். இதையே சேக்கிழாரின் பெரியபுராணம் கூறுவதைக் கேளுங்கள். 'அரிய அஞ்செழுத்தையும் அரசு போற்றிட, கருநெடுங்கடலினுள் கல் மிதந்ததே; இருவினைப் பாசமும் அலக்கல் ஆர்த்தலின், வருபவக்கடல் வீழ் மாக்கள் ஏறிட, அருளும் மெய் அஞ்செழுத்து ஆசை இக்கடல் ஒருகல் மேல் ஏற்றிடல் உரைக்க வேண்டுமோ?' என்பது பெரிய புராணம். இறைவன் திருநாமத்தின் பெருமையை பிரகலாதன் சரித்திரத்தாலும், அப்பர் சுவாமிகள் வரலாற்றாலும் நன்கு உணரலாம்.

குடுவை என்பது சுரைக்குடுக்கை மிதவை என்க. இப்பொழுதும் ஆபத்துக்காலத்தில் இத்தகைய மிதவையைப் பயன்படுத்துவதைக் காணலாம். அது தானும் மிதக்கும்; தன்னைப் பற்றியவர்களையும் நீரில் அமிழ்ந்து போகாது காக்கும் தன்மையுடையது.

102. தலையில் கொண்ட தடக்கையினான், தன்
நிலையின் தீர்வுஇல் மனத்தின் நினைந்தான்;
சிலையில், திண்புனலில், சினை ஆலின்
இலையில் பிள்ளை எனப் பொலிகின்றான். (6373)

(சினை-கிளை; தண்-குளிர்ந்த; சிலை-மலை; தடம்-பெரிய; தீர்வுஇல்-தீராத/வழுவாத; நினைத்தல்-தியானித்தல்; திண்புனல்-வலிமைவாய்ந்த பாற்கடல்)

இப்பொழுது கடலில் எந்தவிதமான இடையூறுமின்றி மிதக்கின்ற பிரகலாதன் தோற்றம் எப்படி இருக்கிறது என்றால், பிரளயகால வெள்ளத்தில், ஈரேழு பதினான்கு உலகத்துள்ள உயிரினங்கள், சர, அசரப் பொருள்கள் அனைத்தையும் தன் வயிற்றிலே அடக்கிக் கொண்டு திருப்பாற்கடலில் ஒரு கிளைகள் நிறைந்த ஒரு ஆலமரத்தின் ஒரு சிறிய இலையின் மேல் அறிதுயில் கொண்டிருக்கும் ஒரு சிறு பிள்ளை வடிவினனான திருமாலை ஒத்துப் பொலிந்து விளங்குவதுபோல இருந்தது. இப்பொழுதும் பிரகலாதன் தன் தலையின்மேல் தனது பெரிய கைகளைக் குவித்துக் கொண்டு தனது நிலையான உறுதிப் பாட்டிலிருந்து

Koviloor Digital Library

சற்றும் சோர்வுறாத மனத்துடன் இறைவனின் திருநாமத்தையே தியானித்துக் கொண்டிருந்தான்.

தலையின் மீது கைகளைக் கூப்பி வணங்க வேண்டும் என்பது ஒரு வழிபாட்டு முறை. அது இங்கே பேசப்படுகிறது. 'நிலையில் தீர்வுஇல் மனம்' என்பது மன ஒருமைப்பாட்டைக் குறிக்கும். 'ஏகாக்கர சித்தம்' என்பது வடசொல். 'மன் வயிற்றின் அடக்கிய மாயனைத் தன் வயிற்றில் அடக்கும் தவத்தினாள்' என்று கோசலையைக் கம்பன் புகழ்ந்தது நாம் முன்பு கண்டதேயாகும். இவ்வாறு கடலில் பாய்ச்சிய கல் மிதவையாய் செயல்பட பிரகலாதனும், அப்பரும் கரையேறிய செய்தியை 'நிகழா நிகழ்ச்சிகள்' என்பர் சான்றோர். 'செயற்கரிய செய்வர், பெரியர்' என்பது குறள் 26. 'முன்னவனே முன் நின்றால் முடியாத பொருள் உண்டோ?' என்பது பெரிய புராணம். 'பாலன் தனதுருவாய், ஏழுலகு உண்டு, ஆலிலையின் மேல் அன்று கண்வளர்ந்தாய் மெய் என்பர்' என்பது திவ்யப்பிரபந்தம்.

103. மோதுற்று-ஆர்திரை வேலையில் மூழ்கான்;
மீதுற்று ஆர்சிலை மீது கிடந்தான்;
ஆதிப் பண்ணவன் ஆயிர நாமம்
ஓதுற்றான்; மறை ஒல்லை உணர்ந்தான். (6374)

(மறை-வேதங்கள்; திரை-அலைகள்; வேலை-கடல்; சிலை-மலை; கிடத்தல்-துயில் வண்ணம்; ஆதிப்பண்ணவன்-முழுமுதற்கடவுள்/ திருமால்; ஒல்லை-விரைவாக)

வேதங்களின் முடிந்த முடிபாகிய இறைவனை ஓதாமலேயே உணர்ந்தவனாகிய பிரகலாதன், மேன்மேலும் எழுந்து வருகிற அலைகள் மோதுகின்ற பெரிய கடலில் இட்டாலும், அதில் அமிழ்ந்து போகாமல் மிதந்துகொண்டே அதன்மீது பொருந்தியிருந்த அந்தப்பெரிய மலையின் மீது பொருந்தி அறிதுயில் கொண்டிருந்தான். அப்போதும் எல்லார்க்கும், யாவர்க்கும், தேவர்க்கும் முழுமுதற்பொருளான இறைவனின் ஆயிரம் திரு நாமத்தைச் சோர்வுபடாது, இடைவிடாது அன்புடன் ஓதிக்கொண்டே இருந்தான்.

பிரகலாதன், தன் அன்னை தன்னைக் கருவில் சுமந்திருக்கும்போதே நாரதரால் வேதங்கள் அனைத்தையும் செவியாற் கேட்டுணர்ந்தவன். எனவேதான் முதலில் ஆசிரியனிடம் சென்ற பொழுதே, வேதத்தை அவரிடம் ஓதாது, தானே வேதத்தை ஓதத் தொடங்கினான் என்பதாம். இங்கே திருவாசகம் ஒன்று நினைவு கொள்ளல் தகும். 'அன்றே என்றன் ஆவியும், உடலும், உடைமையும், எல்லாமும் குன்றே அனையாய்! என்னை ஆட்கொண்டபோதே கொண்டிலையோ! இன்று ஓர் இடையூறு எனக்கு உண்டோ? எண்தோள், முக்கண் எம்மானே! நன்றே செய்வாய்;

Koviloor Digital Library

பிழை செய்வாய்; நானோ இதற்கு நாயகமே?' என்பது மணிவாசகரின் திருவாசகம். தன்னை வணங்குவதைவிடத் தன் திருநாமத்தைப் போற்றுபவர்களுக்கு இறைவன் எளியனாம் தன்மையில் விரைவில் அருள் பாலிக்கிறான். இறைவனுக்கு சரணாகதி வத்சலன் என்ற ஒரு பெயரும் உண்டு. 'ஆலப்பாசிலை மீது கிடந்தோன், அன்பன், கல்லோடு மிதந்தான்' என்பது பாகவத புராணம்.

104. பிரகலாதன் இறைவனிடம் வேண்டுதல் [10 பாடல்கள்]

அடியார் அடியேன் எனும் ஆர்வம் அலால்,
ஒடியா வலி யான் உடையேன் உளெனோ?
கொடியாய்! குறியாய்! குணம் ஏதும் இலாய்!
நெடியாய்! அடியேன் நிலை நேர்குதியோ? (6375)

(ஆர்வம்-அன்பு; ஒடியா-தளராத; நேர்குதல்-எதிர்ப்படுதல்)

''தீயவர்கள் தீமைசெய்யும் போது அவர்களைத் தண்டிக்கும் இயல்புடைய கொடியவனே! உன்னுடைய தன்மை-வடிவம்- இன்னது தான் என்று குறிப்பாக உணர்ந்து கொள்ள இயலாதவனே! தீய பண்புகள் ஏதும் இல்லாதவனே! ஓங்கி உலகளந்த உத்தமனே! நான் உன்னுடைய அடியவர்க்கெல்லாம் அடியவனாவேன் என்னும் அன்பு மிகுதியல்லால், ஏனையோர் செய்யும் தீங்குகளைத் தாங்குகின்ற தளராத வலிமை கொண்டவனோ? எனது இந்நிலை கண்டு, என் எதிரே இப்போது எதிர்ப்பட்டு அருள் பாலிப்பாயோ?'' என்று பிரகலாதன் இறைவனைத் துதிக்கத் தொடங்குகிறான்.

இறைவனைக் 'குணபூரணன்' என்றும், 'குணமிலி' என்றும் 'நிர்க் குணன்' என்றும் கூறுவது உண்டு. எல்லா நற்குணங்களும் பொருந்திய பூரணன் என்றும் எந்தத் தீய குணங்களும் இல்லாத குணமிலி என்பதும் பொருள். 'யாரும் ஓர் நிலைமையன் என அறிவரிய எம்பெருமான்' என்பதும் 'பத்துடை அடியவர்க்கு எளியவன்; பிறர்க்கு அரிய வித்தகன்' என்பதும் திருவாய்மொழி.

105. "கள்ளம் திரிவார் அவர் கைதவம் நீ;
உள்ளம் தெரியாத உனக்கு உளவோ?
துள்ளும் பொறியின் நிலை சோதனைதான்,
வெள்ளம் தரும் இன்னமுதே! விதியோ?" (6376)

(கள்ளம்-வஞ்சனை; திரிவார்-செயல்புரிபவர்கள்/அலைகின்றவர்கள்; கைதவம்-வஞ்சனை/வஞ்சகம்; வெள்ளம்-பாற்கடல்; தரும்-விளையும்; பொறி-பஞ்ச இந்திரியங்கள்; விதி-முறை; துள்ளும்-தாவும்/அலையும்)

Koviloor Digital Library

பிரகலாதன் இறைவனைக் கருதி, ''பாற்கடலினின்று விளைந்த இனிய அமிழ்தம் போன்று இனிமையானவனே! உள்ளத்தில் வஞ்சக எண்ணம் கொண்டு அலைபவர்களுக்கு, அவர்கள் அறியாவண்ணம் வஞ்சகனாக நடிப்பவன் நீ; உயிரினங்களின் உள்ளக் கருத்துக்கள் உனக்குத் தெரியாமற் போகுமோ? ஒரு நிலையில் நிற்றலின்றி அலைந்து திரிகின்ற ஐந்து பொறிகளின் நிலையையும் எல்லோரிடத்தும் சோதிப்பது என்பது உனக்கு முறையாகுமோ?'' என்று கேட்கிறான்.

இதைப் பொதுக்கருத்தாகக் கூறுவதைக் காட்டிலும் சஞ்சலப்படும் என் உள்ளக் கிடக்கை உனக்குத் தெரியாதா? நானும் உன் சோதனைக்கு உள்ளாக வேண்டுமோ? இது முறையாகுமோ? என்று பிரகலாதன் கேட்பதாகக் கூறுவது இன்னும் சாலப் பொருந்தும் என்பதறிக. ''கள்ளனேன், கள்ளத்தொண்டாய்க் காலத்தைக் கழித்துப் போக்கித் தெள்ளிவன்ஆகி நின்றேன். தேடினேன், நாடிக்கண்டேன்; உள்குவார் உள் கிற்றெல்லாம் உடன் உறைந்து அறிதி என்று வெள்கினேன்'' என்பதும் ''நினைப்பார்கள் மனத்துக்கு ஓர் வித்தும் ஆனாய்'' என்பதும் தேவாரம். திருமாலுக்கு ஆராவமுதன் என்பதும் ஒரு திருநாமம் என்பதறிக. 'அறிவனே! அமுதே!' என்பது திருவாசகம். 'கள்ளம் திரிவார் அவர் கைவதம் நீ' என்பது பொய்யர்க்குப் பொய்யன் என்ற பொருளில் பயின்று வந்தது எனக் கொள்க. 'துள்ளும் பொறி' என்பது 'ஐவர் வேடர், புனத்திடைப் புகுந்து நின்று துள்ளுவர்' என்ற அப்பர் தேவாரத்தை நினைவு படுத்துதல் உணர்க.

106. ''வரு நான்முகனே முதல், வானவர் தாம்,
திரு நான்மறையின் நெறியே திரிவார்;
பெருநாள் தெரிகின்றிலர்; பேதைமையேன்,
ஒருநாள், உனை எங்ஙனம் உள்ளுவனே?'' (6377)

(வரு-தோன்றிய; நான்முகன்-பிரமன்; திரிவார்-ஒழுகுகின்றவர்கள்; பெருநாள்-நெடுங்காலம்; பேதைமையேன்-அறியாதவன்/அறிவிலி/சிறுவன்; உள்ளுதல்-தியானித்தல்/நினைத்தல்; ஒருநாள்-சிறுபொழுது; திரு-மங்களகரமான/சிறந்த)

''உனது உந்திக் கமலத்திலிருந்து தோன்றியவனான நான்கு முகங்களையுடைய பிரமதேவன் முதல், முப்பத்து முக்கோடி தேவர்கள் எல்லோரும், சிறந்த, மங்களகரமான நான்கு வேதங்கள் கூறியபடி ஒழுக்க நெறிப்படி வழுவாது ஒழுகுபவர்களாவார்கள். அவர்களே நீண்ட நெடுங்காலம் தேடியும் இன்னும் உன்னைக் கண்டுகொண்டார்கள் அல்லர்; உன் உண்மைச் சொரூபத்தைக் காணமுடியாதவராயினர், அவ்வாறிருக்கும் போது, அறியாமை உடைய அறிவிலியாகிய சிறுவன் நான், ஒருநாளாகிய இந்த சிறு பொழுதிற்குள் எவ்வாறு உன்னை நினைத்து தியானித்து உன்னை அறிந்து கொள்ள முடியும்?'' என்று கேட்கிறான் பிரகலாதன்.

Koviloor Digital Library

'தேவர்கோ அறியாத தேவ தேவன்' என்பதும், 'அளவு அறுப்பதற்கு அரியவன், இமையவர்க்கு அடியவர்க்கு எளியான்' என்பதும் 'மேலை வானவரும் அறியாதது ஓர் கோலமே' என்பதும் 'வான நாடரும் அறியொணாத நீ' என்பதும் திருவாசகம் திருச்சதகம். 'அடியவர்க்கு எளியவன்; பிறர்க்கு அரிய வித்தகன்' என்பதும் 'யாரும் ஓர் நிலைமையன் என அறிவரிய எம்பெருமான்' என்பதும் திருவாய்மொழி.

107. "செய்யாதனவோ இலை; தீவினை தான்
பொய்யாதன வந்து புணர்ந்திடுமால்;
மெய்யே; உயிர் தீர்வது ஓர் மேல்வினை நீ
ஐயா! ஒருநாளும் அயர்த்தனையோ?" (6378)

(பொய்யாதன-தப்பாதன; புணர்ந்திடுதல்-நெருங்கி வருதல்; தீர்வது-நீங்குவது; மேல்வினை-மேலான அருட்செயல்; நாள்-பொழுது; அயர்த்தல்-மறத்தல்; ஐயா-தலைவா; தீவினை-பாவச்செயல்கள்; ஓர்-ஒப்பற்ற)

''உனது அடியவனாகிய நான் செய்யாத தீய செயல்களே இல்லை; அவற்றின் பயனான பாவம் என்னை வந்து தப்பாது அணுகி நிற்கும். இதுவே உண்மையாகும்; அவ்வாறு இருக்க என் தலைவனே! அதனை விட்டு நீங்குவதற்கு உரிய ஓர் ஒப்பற்ற அருட்செயலைச் செய்ய நீ ஒரு பொழுதேனும் மறப்பதுண்டோ?'' என்று கேட்கிறான் பிரகலாதன்.

உலகில் உள்ள உயிரினங்களின் துன்பத்தை எல்லாம் துடைத்து அருளும் நீ, எனக்குத் திருவருள் புரிய மறந்தனையோ! எனக் கேட்கிறான் என்பதாம். ''தாம்தாம் முன் செய்த வினை தாமே அனுபவிப்பர்; பூந்தாமரையோன் பொறிவழியே-வேந்தே! ஒறுத்தாரை என் செயலாம் ஊரெல்லாம் ஒன்றா வெறுத்தாலும் போமோ விதி?' என்பது நல்வழி30. 'பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று, வல்ல தாம் தாய் நாடிக்கோடலைத் தொல்லைப் பழவினையும், அன்னதகைத்தே; தற்செய்த கிழவனை நாடிக்கொளற்கு' என்பது நாலடியார் 101. 'உறற்பால நீக்கல் உறுவர்க்கும் ஆகா; பெறற்பாலனையவும் அன்னவாம்; மாரி வறப்பின் தருவாரும் இல்லை; அதனைச் சிறப்பின் தணிப்பாரும் இல்லை' என்பது நாலடியார் 114; 'வேண்டினும், வேண்டாவிடினும், உறற்பால, தீண்டாவிடுதல் அரிது' என்பது நாலடியார் 119. 'ஊழிற்பெருவலி யாவுள? மற்றொன்று சூழினும் தான் முந்துறும்' என்பது குறள் 380. 'தொழுமின்! அவனைத் தொழுதால், வழிநின்ற வல்வினை, மாள்வித்து, அழிவின்றி ஆக்கம் தரும்' என்பதும் 'அடியாரை, வல்வினைத்துப்பாம் புலனைந்தும் துஞ்சக் கொடான் அவன்' என்பதும் திருவாய்மொழி.

Koviloor Digital Library

108. "ஆயப்பெறும் நல்நெறிதம் அறிவு என்று
ஏயப்பெறும் ஈசர்கள் எண் இலரால்;
நீ அப்புறம் நிற்க, நினைக்கிலர்; நின்
மாயப்பொறி புக்கு, மயங்குவரால்" (6379)

(ஆய-ஆராய்ந்துபார்க்க; நெறி-சாதனம்/வழி; ஏய-பொருந்தி; ஈசர்கள்-தலைவர்கள்; எண்ணிலர்-எண்ணற்றவர்; பொறி-இயந்திரம்/வலை; புக்கு-அகப்பட்டு; நினைத்தல்-தியானித்தல்; அப்புறம்-கடந்து நிற்றல்; மயங்குதல்-கலங்குதல்)

''ஆராய்ந்து அறியப்படும் மிக நல்லவழி தம்முடைய அறிவே என்று இறுமாப்புக் கொண்டு அதனையே மேற்கொண்டு பொருந்தி வாழ்பவர் களாகிய தலைவர்களாகிய தேவர்கள் கணக்கற்றவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அறிவிற்கு எட்டாதவாறு அப்பால் கடந்து இருப்பதால், அவர்களால் உன்னைப் பற்றி உன் உண்மைநிலையை நினைத்துப் பார்க்கக்கூட இயலாதவர்களாய்-நின்னைத் தியானிக்க முடியாதவர்களாய் இருக்கிறார்கள். எனவே நீ விரித்துள்ள மாயவலைக்குள் அகப்பட்டுக் கொண்டு கலங்கிப் போகிறார்கள்'' என்று பிரகலாதன் உலக யதார்த்த நிலையைக் கூறுகிறான்.

ஈசர்கள் என்பவர், அட்டமாசித்திகளாலும், யோக, ஞானநெறிகளாலும் ஈசனுக்குச் சமமானவர்கள் எனக் கொள்க.

109. "தாமே தனி நாயகராய், எவையும்
போமே பொருள்" என்ற புராதனர்தாம்,
'யாமேபரம்' என்றனர்; என்ற அவர்க்கு
ஆமே? பிறர், நின்அலது, ஆர் உளரோ?" (6380)

(தனி-நிகரற்ற/ஒப்பற்ற; நாயகர்-முதல்தலைவர்; புராதனர்-பழையோர்; பரம்-பரம்பொருள்; ஆமோ-ஆகுமோ/இயலுமோ; பொருள்-காரியம்; போம்-போகும்/நிறைவேறும்; தனிநாயகர்-பரம் பொருள்)

''பழைமையோர்சிலர், தாமே நிகரற்ற தனித்தலைவர் என்றும் எல்லாப் பொருளும் தங்களுக்குத் தெரியும் என்றும் எல்லாக் காரியங்களையும் தம்மால் செய்து முடிக்கமுடியும் என்றும் செருக்குக்கொண்டு தாங்களே யாவர்க்கும் எல்லாவற்றிற்கும் மேலான பரம்பொருள் என்றும் கூறித்திரிந்தனர். அவர்களுக்கு அவ்வாறு செய்து நிறைவேற்றுதல் இயலுமோ! முடியாதல்லவா? உன்னைத் தவிர உண்மையில் வேறு பரம்பொருள் என்று யார் இருக்கிறார்கள்?'' என்கிறான் பிரகலாதன்.

தன் தந்தையின் செய்கையை நேரே அவன்மீது குறிப்பிட்டு ஏற்றிக் கூறாது, 'பழைமையோர்' எனப் பொதுவாகக் கூறும் திறன் நோக்குக.

Koviloor Digital Library

'முற்றுணர்வும், முடிவில் ஆற்றலும் உடையம் யாமே' என்று தருக்கித் திரிந்தனர் பழையோர் என்க.

110. "ஆதிப் பரம் ஆம் எனில், அன்று எனலாம்;
ஓது அப்பெரு நூல்கள் உலப்பிலவால்;
பேதிப்பன; நீ அவை பேர்கிலையால்;
வேதப் பொருளே! விளையாடுதியோ?" (6381)

(ஆதி-முதன்மையான; உலப்பில-அளவற்றன; பேதித்தல்-முரண் படுதல்/மாறுபடுதல்; விளையாடுதல்-மாயம்செய்தல்; ஆதிப்பரம்-முதற் கடவுள்; பேர்தல்-மாறுதல்)

''ஒரு தெய்வத்தைக் குறிப்பிட்டுக் காட்டி, அதுதான் முதன்மையான முழுமுதற்கடவுள் என்று ஒருநூல் கூறினால் அதனை இல்லை என்று நிச்சயமாக மறுத்து மற்றொரு நூல் கூறலாம். காரணம் அவ்வாறு கூறுவதற்கு ஆதாரமாகப் பழைய பெருமையுடன் பெரிய சமயநூல்கள் மிகப்பலவாய் நம்மிடம் இருக்கின்றன. எனினும் அவை தங்களுக்குள் பெருமளவில் மாறுபட்டிருக்கின்றன. ஆனால் நீ மட்டும் அவற்றி லிருந்தும் மாறுதல் இல்லாதவனாக ஒரே தன்மையில் நிலை பெற்றிருக் கின்றாய். வேதங்கள் எல்லாம் சிறப்பித்துக் கூறும் சிறந்த மறைபொருளாய் இருப்பவனே! இவ்வாறு மாறுபட்ட சமயங்களைக் கற்பித்து மாயம் செய்வது உன்னுடைய கபட நாடகம்தானோ? அடியவரைச் சோதிக்கச்செய்யும் மாயச் செயல்களோ?'' என்கிறான் பிரகலாதன்.

'பிணக்கி, யாவரும் பிழையாமல், பேதித்தும், பேதியாதது ஓர் கணக்கில் கீர்த்தி வெள்ளக் கதிர்ஞான மூர்த்தியினாய்' என்பது திருவாய் மொழி. ''ஒன்றே பொருள் என்னின் வேறென்ப; வேறென்னின், அன்றென்ப ஆறு சமயத்தார்'' என்பது திருவள்ளுவமாலை; 'தெய்வம் பல; அவர் நூலும் பல' என்பது சடகோபர் அந்தாதி; 'மறைப்பொருளே! புகலரிய சது மறையாய்! மறைப்பொருளாய்! உபநிடத்தாய்!' என்பது அரிச்சந்திரபுராணம்; 'வணங்கும்துறைகள்பலப்பலஆக்கி, மதி விகற்பால் பிணங்கும் சமயம் பலப்பல ஆக்கி, அவைஅவைதோறும் அணங்கும் பலபல ஆக்கி, நின் மூர்த்தி பரப்பிவைத்தாய்'' என்பது திருவிருத்தம்.

111. "அம்போருகனார், அரனார், அறியார்;
எம்போலியர் எண்ணிடின், என், பலவா?
கொம்பொடு, அடை, பூ, கனி, காய் எனினும்,
வம்போ, 'மரம் ஒன்று' எனும் வாசகமே?" (6382)

(அம்போருகனார்-பிரமதேவன்; அரனார்-சிவபெருமான்; எம்போலியர்-எம்மைப்போன்றவர்; கொம்பு-கிளை; வம்பு-புதுமை;

Koviloor Digital Library

வாசகம்-சொல்; அம்போருகம்-தாமரை; பலவா-பலவாறு; அடை-இலை)

''தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமதேவனும், சிவபெருமானும் உன்னுள்ளே உறைந்திருப்பவர் என்பதனால் உன்னைப் பற்றி முழுவதுமாக அறியமாட்டார்கள், என்றால் உனது மகிமையை அறியாத என்னைப்போன்ற சில் வாழ்நாள் பல்பிணிச்சிற்றறிவினர், சிவன் என்றும், பிரமன் என்றும் பலவாறாக எண்ணினால் என்ன தவறு? கிளை, இலை, பூ, காய், பழம் என்று ஒரு மரத்தின் வெவ்வேறு பாகங்களைத் தனித்தனியாகக் கூறினாலும், அவையனைத்தையும் ஒன்றாகச் சேர்த்து நோக்கும்போது 'மரம்' என்பது ஒன்றுதான் என்று கூறும் உண்மை. புதுமையாகுமோ?'' என்கிறான் பிரகலாதன்.

'அம்போருகம்' என்பது நீரில் முளைப்பது என்பதால் தாமரைக்குக் காரணப்பெயர். தாமரை மலரிலேயே வீற்றிருப்பதனால் 'அம்போருகனார்' என்பது பிரமனுக்குரிய பெயர். 'எம்போலியர்' என்று தன்னைத் தாழ்த்திக்கூறிக் கொள்ளுகிறான் பிரகலாதன் எனக் கொள்க. 'பலவாறு' என்பது 'பலவா' எனநின்றது கடைக்குறை என்க. உலகமும், அதில்வாழும் உயிரினங்களும், தனித்தனியே பார்க்கும்பொழுது வெவ்வேறாகத் தோன்றினாலும், அனைத்தும் இறைவன் உறுப்புக்களே என்பது கருத்து. 'மேவும் உயிர் யாவும் உனை வாழும் இடமாக உறை மேதகைமை ஓத எளிது எனலாமோ?' என்பதும் கருதுக. 'பாதவங்களின்தளிரொடு, பூமுதல் பலவும் ஓதின வேறுவேறு உருவென ஒளிருமாபோல்' என்பது பாகவத புராணம்.

112. "நின்னின் பிறிதாய், நிலையின் திரியா,
தன்னின் பிறிதாயினதாம் எனினும்,
உன்னின் பிறிதாயினவோ, உலகம்?
பொன்னின் பிறிதாகில, பொற்கலனே" (6383)

(திரியா-திரிந்து/மாறுபட்டு; பிறிது-வேறு; கலன்-அணிகலன்கள்)

''பொன்னினின்றும் செய்யப்பட்ட ஆபரணங்கள், பலவகையான தோற்றங்களைத் தந்து, பலவகையான பெயர்களால் வழங்கப்பட்டாலும், அவை ஒவ்வொரு கூறிலும் பொன்னேதான் இருக்கிறது. பொன்னைத் தவிர வேறொன்றில்லை, அதுபோலவே, உன்னிலிருந்து தோன்றிய இந்த உலகம், உலகத்து உயிரினங்கள், பலவகையாகத் தமக்குள்ளே வேறுபட்டு அமைந்திருந்தாலும், அவை ஒவ்வொன்றுக்குள்ளும் நீ இருக்கவில்லை என்றாகிவிடுமோ? அவைகளின் உள்ளிருந்து இயக்குபவன் நீதானே?'' என்று இறைவனின் பரத்துவத்தைப் பேசுகிறான் பிரகலாதன்.

பொன்னால் செய்த ஆபரணங்களைக் கழுத்தணி, காதணி என்று வெவ்வேறு பெயர்களில் கூறுகிறோம் என்றாலும் அவை ஒவ்வொன்றுக்

Koviloor Digital Library

குள்ளும் பொன் பொதிந்து இருப்பதுபோல், உலகப்பொருள்களை-உயிரினங்களை நாம் வெவ்வேறு பெயர்களில் அழைத்தாலும் அவை தம் நிலை மாறியிருந்தாலும், அவை இறைவனைத் தவிர வேறில்லை. அவை ஒவ்வொன்றுக்குள்ளும் இறைவன் உறைந்திருக்கிறான் என்பதாம். 'பேதங்கள் அனைத்துமாய், பேதமிலாப் பெருமையனை' என்பது திருவாசகம். பொற்கலன் பொன்னின் பிறிது ஆகில; அதுபோல உலகம் உன்னிற்பிறிது ஆகில' என்பது கருத்து.

113. "தாய் தந்தை எனும் தகை வந்தனைதான்,
நீ தந்தனை; நீ உறு நெஞ்சினென் நான்;
நோய் தந்தவனே! நுவல் தீர்வும்" எனா,
வாய் தந்தன சொல்லி, வணங்கினனால். (6384)

(தகை-தகுதி; வந்தனை-வழிபாட்டுமுறை; உறு-பொருந்தியிருக்கும்; நோய்-பிறவிப்பிணி; நுவல்-சொல்லப்படுகின்ற; தீர்வு-மாற்று/பரிகாரம்/மருந்து)

"தாய் என்றும், தந்தை என்றும் அவர்க்குரிய தகுதியுடைய வழிபாட்டு முறைகளை நீதான் உலகிற்கு எல்லாம் வழங்கி அருளினாய். என் நெஞ்சம் முழுதும் நீக்கமற நிறைந்திருப்பவன் நீதான். எனவே பிறவிப்பிணி என்னும் நோயைத் தந்தவனே, நீயே சிறப்பாகச் சொல்லப்படுகின்ற அந்த நோய்க்குரிய மருந்தும் ஆவாய்" என்று, தான் உண்மை, மெய்ம்மை என்று கருதிய சொற்களைச் சொல்லி இறைவனைத் துதித்துப் போற்றினான் பிரகலாதன்.

பெற்ற தாயும், உற்ற தந்தையும் இரு முதுகுரவர் என்பது நூற்கொள்கை. அவர்களை உரிய முறையில் வழிபாடு செய்யவேண்டும் என்று கற்பித்தவனும் இறைவனே. இப்பொழுது தான் தன் தந்தையை உரிய முறையில் வழிபட முடியவில்லையே என்ற மனத்துயரத்தால், பிரகலாதன் இறைவனை நோக்கி, 'இத்தகைய நோயாகிய ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திய நீயே, அதற்குரிய பரிகாரமாகி என்னை இச்சங்கடத்தில் இருந்து நீக்கியருள்வாயாக!' என்று மெய்ச்சொற்களால் இறைவனை வணங்கினான் என்பதாம்.

"அன்னையும் அத்தனுமாவாய் அழல் வண்ணா நீயலையோ?" என்பதும்; "அம்மை நீ! அப்பன் நீ!" என்பதும் தேவாரம். 'நீ தந்ததை' என்பது, உயிரைப் பிறப்பிக்கும்போதே இறைவன், தனு, கரண, புவன போகங்களையும் தந்துவிடுகிறான் என்பது வழக்கு. 'இதம் அகிதங்கள் எல்லாம் இறைவனே ஏற்றுக்கொண்டு, இங்கு இதம் அகிதத்தால் இன்ப துன்பங்களை ஈவன் அன்றே' என்பது சிவஞான சித்தி. 'அறம்மலி இதம் செய்வோர்க்கு அனுக்கிரகத்தைச் செய்வான்; மறம்மலி அகிதம் செய்யின்,

Koviloor Digital Library

நிக்கிரகத்தை வைப்பான்' என்பது திருவாசகம். 'தன்நோய்க்குத் தானே மருந்து' என்பது குறள்-1102.

114. அத்தன்மை அறிந்த அருந்திறலோன்,
'உய்த்து உய்ம்மின் என்முன்' என, உய்த்தனரால்;
'பித்துண்டது பேர்வு உறுமா பெறுதும்;
கைத்தும் கடு நஞ்சின்' எனக் கனலா. (6385)

(பித்து-பைத்தியத்தன்மை; பேர்தல்-நீங்குதல்; கடு-கொடிய; கனலா-கனன்று/சினந்து; கைத்தல்-அப்புறப்படுத்துதல்/செலுத்துதல்/வெறுத்தல்/கொல்லுதல்; உய்த்தல்-கொணர்தல்) (குளகப்பாடல்)

வீரர்கள் மலையோடு சேர்த்துக் கடலில் தள்ளியபோதும் பிரகலாதன் மிதந்து கொண்டு உயிரோடு இருக்கிறான் என்ற செய்தியை ஏவலாளர்கள் வந்து சொல்ல, அதனையறிந்த பெரும் ஆண்மையும் வீரமும், வலிமையும் பொருந்திய இரணியன், 'அவனைப் பிடித்துக்கொண்டு வந்து என் முன் நிறுத்துங்கள்' என்று கட்டளையிட, ஏவலாளரும் அவ்வாறே பிரகலாதனை இரணியன் முன் கொண்டு வந்து நிறுத்தினார்கள் இவன் கொண்டிருக்கும் பைத்தியத்தன்மை அறவே நீங்குமாறு ஒருவழி செய்வோம்; இவனைக் கொடிய நஞ்சு வைத்துக் கொன்றுவிடுவோம்'' என்று சினந்துகூற - பாடல் தொடர்கிறது.

'பித்து உண்டது' என்பது தன்மைந்தன் பிரகலாதன் தன்னையன்றி, அந்த நாராயணனையே முழுமுதற்கடவுளாக எண்ணிப் போற்றித் துதிப்பதைக் குறித்தது. 'கைத்தும்' என்ற சொல் வெறுத்தல் என்ற பொருளைத்தந்தாலும் இங்கே கொல்லுதல் என்ற பொருளில் பயின்று வந்துள்ளது எனக் கொள்க. 'உத்த மனத்தை உடையான் அடியே நினைந்து உருகி, மத்த மனத்தொடும், மால் இவன் என்ன மன நினைவிற்கு ஒத்தன சொல்லிட ஊர்ஊர் திரிந்து, எவரும் தத்த மனத்தன்பேச எஞ்ஞான்று கொல் சாவதுவே' என்பது திருவாசகம். முற்றிய பக்தியை பித்து என்றான் என்க.

115. இட்டார் கடுவல்விடம்; எண்ணுடையான்
தொட்டான் நுகரா, ஒரு சோர்வு இலனால்;
கட்டு ஆர் கடு மத்திகை, கண் கொடியோன்;
விட்டான்; அவன்மேல் அவர் வீசினரால். (6386)

(கடு-கொடிய; வல்-வலிய; விடம்-நஞ்சு; எண்-மனம்/எண்ணுதல்/தியானம்; நுகரா-நுகர்ந்து/உண்டு/பருகி; சோர்வு-தளர்ச்சி; மத்திகை-குதிரைச் சம்மட்டிகள்; விடுதல்-அனுப்புதல்; இடுதல்-கொடுத்தல்; தொடுதல்-ஏற்றுக்கொள்ளுதல்; கட்டு-வரி/முடிச்சு)

இரணியன் கட்டளைப்படி பணியாளர்கள் பிரகலாதனுக்குக் கடுமையான கொடிய வலிய நஞ்சினைப் புகட்டினார்கள்; எப்பொழுதும்

Koviloor Digital Library

இறைவனையே தியானித்துக்கொண்டு இருக்கும் பிரகலாதன் அதனைத் தொட்டு வாங்கிச் சாப்பிட்டான்; என்றாலும் அதன் விளைவாகச் சிறிதும் மயக்கமோ, சோர்வுகூட அடையவில்லை. அதனைக்கண்ட சிறிதும் இரக்கம் இல்லாத இரணியன், வரிகளும், கொடிய கண்களும் முடிச்சு களும் பொருந்திய குதிரைகளை அடக்கப் பயன்படுத்தப்படும் சம்மட்டிகள் என்னும் ஆயுதத்தை ஏவலாளர்களுக்கு அனுப்பி அதனால் அடித்துக் கொல்லுமாறு கட்டளையிட்டான். அவற்றை அப்பணி யாளர்கள் பிரகலாதன் மீது ஓங்கி வீசி அடித்துத் தாக்கினார்கள்.

விடம் என்றாலே நஞ்சு, வல்விடம் என்றும், கடு வல்விடம் என்றும் அந்நஞ்சின் மிகுதியான நச்சுத்தன்மையைக் குறிக்க இத்தனை அடை மொழி கொடுத்தார் என்க. 'கண்ணுக்கு அணிகலன் கண்ணோட்டம்- இரக்கம்; அது இல்லாத கண்களை உடையவன் என்பதால் 'கண் கொடியோன்' என்றார் என்க.

116. வெய்யார், முடிவு இல்லவர், வீசியபோது,
'உய்யான்' எனும் வேலையினுள் உறைவோன்
கை ஆயிரம் அல்ல, கணக்கு இல' என்று
எய்யா உலகு யாவையும் எண்ணினனால். (6387)

(வெய்யார்-கொடியவர்கள்/தீயோர்; உய்தல்-பிழைத்தல்; வேலை-வேளை/சமயம்/நேரம்; எண்ணுதல்-தியானித்தல்; எய்யா-எய்து/அறிந்து; எய்த்தல்-அறிதல்; வீசுதல்-ஓங்கி அடித்தல்)

கணக்கிலடங்காத கொடியவர்களான அந்த ஏவலாளர்கள், பிரகலாதனைக் குதிரைச் சம்மட்டியால் ஓங்கி அடித்தபோது, அதனைக் கண்டவர்கள் எல்லாம், 'இனி இவன் தப்பிப் பிழைக்க மாட்டான்' என்றே இரங்கிக் கருதினர். எனினும் பிரகலாதன் சற்றும் தளர்ச்சியடையாது, துன்புறாது, தன் உள்ளத்தில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற இறைவனுக்கு ஆயிரம் கைகள் என்று கைகள் கணக்கில் அடங்குவன அல்ல. அவனுக்கு எண்ணற்ற கைகள்உண்டு, அவற்றால் என்னைக் காப்பான்' என்று நன்கு உணர்ந்து இந்த உலகம் யாவற்றையும் ஆக்கிய இறைவனின் வடிவத்தையே தியானித்துக் கொண்டிருந்தான்.

'காலாயிரம், முடியாயிரம், ஆயிரம் கைபரப்பி, மேலாயிரம் தலை நாகம் கவிப்ப, விண்பூத்த கஞ்சம்போல், ஆயிரம் கண்வளரும்பிரான்' என்பது திருவரங்கக்கலம்பகம். 'உள்உறைவோன்'-அந்தர்யாமி யானவன்; முடிஆயிரம் சகஸ்ர சீர்ஷபுருஷ'

Koviloor Digital Library

117. இரணியன்-பிரகலாதன் உரையாடல் [10 பாடல்கள்]

"ஊனோடு உயிர் வேறுபடா உபயம்,
தானே உடையன், தனி மாயையினால்;
யானே உயிர் உண்பல்" எனக் கனலா,
வான் ஏழும் நடுங்கிட, வந்தனனால். (6388)

(உபயம்-உபாயம்/தந்திரம்/மாயை; தனி-ஒப்பற்ற; உண்பல்-உண்பேன்/கொல்லுவேன்; கனலா-கனன்று/சினந்து; ஊன்-உடம்பு; வான்-மேகம்)

தான் இவ்வளவு கொடுமைகள் செய்தபின்னும் இறவாதிருக்கும் பிரகலாதன் தன்னிடத்து ஏதோ ஒரு ஒப்பற்ற தந்திரத்தை மாயையாகக் கொண்டுள்ளான். எனவேதான் அவன் உயிர் உடலைவிட்டு இதுவரை நீங்காது இருக்கிறது என்று கருதிய இரணியன், மிகவும் கோபம் கொண்டு 'இனி நானே இவனுடைய உயிரைக் கவர்ந்து, இவனைக் கொன்று தின்பேன்' என்று சிறந்த ஏழு மேகங்களும் அஞ்சி நடுங்கும்படி ஆர்ப்பரித்துக்கொண்டு, பிரகலாதன் அருகில் வந்தடைந்தான்.

பிரகலாதன் உயிர் இறவாமைக்குக் காரணம், அவன் திருமால்மேல் கொண்டுள்ள அசைக்கமுடியாத டக்தியும், நம்பிக்கையும்தான் என்பதை ஒப்புக்கொள்ள இரணியன் மறுப்பது தொனிக்கிறது. எனவே தன் மகனும் தன்னைப்போல் மாயவித்தையில் வல்லவன் ஆதலால்தான் அவனால் உயிர் பிழைத்திருக்க முடிந்திருக்கிறது என்று இரணியன் கருதினான் என்க. இவ்வளவுக்கும் உயிர்போகவில்லையென்றால், இது அனைத்தையும் அழிக்கும் வல்லமைபடைத்த நானேதான் கொன்று இவன் உயிரைக் கவரவேண்டியிருக்கும் என்று மிகச் சினமுற்றுக் கூறினான் என்பதாம். அவன் இடிபோன்ற குரலைக்கேட்டு ஏழு என்று சொல்லப்படுகின்ற சிறந்த மேகங்களும், மேல் ஏழு உலகங்களும் அஞ்சி நடுங்கின என்பதாம். ஏழு மேகங்களாவன, சம்வர்த்தம், ஆவர்த்தம், புஷ்கலாவர்த்தம், துரோணம், காளமுகி, நீலவர்ணம், சங்கிருதம் என்பனவாம்.

118. வந்தானை வணங்கி, "என்மன் உயிர்தான்
எந்தாய்! கொள எண்ணினையேல், இதுதான்
உம்தாரியது அன்று; உலகுயாவும் உடன்
தந்தார் கொள நின்றதுதான்" எனலும். (6389)

(மன்-நிலைபெற்ற; கொள-கொள்ள; தந்தார்-படைத்தவராகிய திருமால்; நின்றது-நிலைபெற்று நிற்பது; தாரி-வழி; தாரியது-வசப்பட்டது/வழிப்பட்டது; உடன்-ஒருங்கே) (குளகப்பாடல்)

அவ்வாறு சீற்றம் கொண்டு தன்னைக் கொல்ல வந்த தன் தந்தையான இரணியனைத் தொழுது, பிரகலாதன், "என் தந்தையே! இந்த என்னுடைய

Koviloor Digital Library

அழியாத நிலைபெற்ற உயிரைக் கவர்ந்து கொள்ளவேண்டும் என்று தாங்கள் நினைத்தால், அது உங்கள் வசப்பட்டதல்ல; இந்த உலகங்கள் எல்லாவற்றையும் ஒருங்கே படைத்த திருமாலின் வசப்பட்டது. அவன் ஒருவனால் மட்டுமே இவ்வுயிரை என் உடலில் இருந்து பிரிக்கமுடியும், ஏற்றுக்கொள்ள முடியும்'' என்று கூறவும் - பாடல் தொடர்கிறது.

'தாரி' என்பது திசைச்சொல். இன்றும் தெலுங்கிலும், கன்னடத்திலும் தாரி என்ற சொல் வழி என்ற பொருளில் வழங்கப்படுகிறது. என்னுடைய இந்த உயிர் உங்களாலோ நீங்கள் ஏவுகின்றவர்களாலோ கொள்ளப் படுதற்கு உரியது அன்று. அது எல்லாம் வல்ல திருமாலின் வசப்பட்ட தாகும். அவன் தானே விரும்பினால்தான் எடுத்துக்கொள்ளப்படும் என்று பிரகலாதன் மாற்றம் உரைக்கின்றான் என்க. 'என் உடலுக்குத்தான் நீ தந்தையாவாய்; என் உயிருக்கு என்னைப்படைத்த இறைவன்தான் தந்தையாவான்' என்று கூறினான் பிரகலாதன் என்க. 'ஈறினை இழைப்பல் என்றாய்; இழுதையின் இயல்பு அது ஈதாம்; நாறு பைங்கமலை கேள்வன் நன் மனு நவிலும் நீரார்க்கு ஊறு செய்குறல் கூற்றுக்கும் ஒல்லுமோ? ஒல்லாது எந்தாய்! தேறுதி; மறைகள் சான்று!' என்பது பாகவத புராணம்.

119. "ஏவரே உலகம் தந்தார்? என் பெயர்ஏத்தி வாழும்
மூவரே! அல்லர் ஆகின், முனிவரே! முழுதும் தோற்ற
தேவரே! பிறரே! யாரே! செப்புதி, தெரிய" என்றான்,
கோவம்மூண்டு எழுந்தும், கொல்லான், காட்டுமேல் காட்சி கொள்வான்.
(6390)

(கோவம்-கோபம்; காட்சி-நேரேகாணுதல்; தருதல்-படைத்தல்; ஏத்தி-துதித்து/போற்றி; தெரிய-விளங்குமாறு; மூண்டுஎழுதல்-மேன்மேல் வளர்தல்)

அவ்வாறு மாற்றம் உரைத்த பிரகலாதன் மேல் கோபம் பொங்கி எழுந்தாலும், இரணியன் அவனைக் கொல்லாது, அவன் அந்தத் திருமாலை நேருக்குநேர்-காட்சிப் பிரமாணமாகக் காட்டுவான் என்றால், அதைக் காணலாம் என்ற கருத்து உடையவனாய், பிரகலாதனை நோக்கி, 'நீ இந்த உலகத்தைப் படைத்தவர் என்று சொல்கிறாயே! அவர்யார்? என்னுடைய பெயரையே நாள்தோறும் துதித்துப் போற்றி வாழ்ந்து கொண்டிருக்கின்ற அரன், அயன், அரி என்ற மும்மூர்த்திகளா? அவர்கள் இல்லையென்றால் அவர்களுக்கு ஒப்பான வேறுயாரும் முனிவர்களா? அவர்களும் இல்லை என்றால் என்னிடம் தமது உடமை, உரிமை அனைத்தும் இழந்து தோற்று ஓடிப்போன தேவர்களா? அவர்களும் இல்லை என்றால் வேறுயார்? என்பதை நான் புரிந்து கொள்ளுமாறு விளக்கமாகக் கூறுவாயாக!'' என்றான் இரணியன்.

Koviloor Digital Library

'எவரே' என்பது ஏவரே என்று எதுகை நோக்கி நீண்டது. இவர்களையோ அல்லது இவர்களைத்தவிர வேறு ஒருவரையோ, பிரகலாதன் நேருக்குநேர் காட்டினால், அவர்களைத் தானும் தான் காணும் எண்ணத்தில்தான் இரணியன் இருக்கிறான் என்பது இறுதி அடியின் கருத்து. எனவேதான் பிரகலாதனைக் கொல்லாது கேள்விகள் கேட்கத் தொடங்குகிறான் என்பதாம்.

120. "உலகு தந்தானும், பல்வேறு உயிர்கள் தந்தானும், உள்உற்று,
உலைவுஇலா உயிர்கள் தோறும், அங்கங்கே உறைகின்றானும்,
மலரினில் வெறியும், எள்ளில் எண்ணெயும்; மற்றும் கேளாய்!
அலகுஇல் பல்பொருளும் பற்றி, முற்றிய அரிகாண்! அத்தா!" (6391)

(உலைவு-அழிவு; உறைதல்-எழுந்தருளியிருத்தல்/நிறைந்திருத்தல்; வெறி-நறுமணம்; பற்றி-தன்னகத்தே கொண்டு; முற்றிய-நிறைந்து நிற்கும்; அத்தன்-அப்பன்; தருதல்-படைத்தல்; தந்தான்-படைத்தவன்; அலகுஇல்-அளவிடமுடியாத; அரி-திருமால்)

பிரகலாதன் இரணியனை நோக்கி ''என் தந்தையே! இந்த உலகங்கள் எல்லாவற்றையும் படைத்தருளியவனும், அவற்றுள் ஒன்றோடொன்று பல்வேறுபட்ட உயிர்க்குயிராய் கலந்த உயிரினங்களைப் படைத்தவனும், அழிவில்லாத அந்த உயிர்களில் எல்லாம் அங்கங்கே உயிர்க்குயிராய்க் கலந்து நிறைந்திருப்பவனும், மலரில் நறுமணம் போலவும், எள்ளில் எண்ணெய் போலவும், எங்கும் அளவற்ற பலவகைப்பட்ட உயிரினங் களையும் தன் அகத்தே கொண்டு, அவற்றில் எல்லாம் நீக்கமற நிறைந் திருப்பவனும், எல்லாம் வல்ல எம்பெருமான் திருமாலேயாவான்'' என்று கூறி இன்னும் கேட்பாயாக'' என்கிறான்.

இவ்வுலகை இறைவன் படைத்தான் என்பது 'உலகம் யாவையும் தாம் உள ஆக்கலும்' என்ற பாடலால் நன்கு அறியப்படும். இவ்வுலகில் எண்பத்து நான்கு லட்சம் உயிர் இனங்கள் படைக்கப்பட்டிருப்பதாகக் கூறுவது ஒரு புராண மரபு. அத்தகைய பல்வேறுபட்ட உயிரினங்களைப் படைத்தவனும், அவை ஒவ்வொன்றுக்குள்ளும் உள்ளுறை பொருளாக-அந்தர்யாமியாக-நீக்கமற நிறைந்திருப்பவனும் அந்தத் திருமாலே ஆவான் என்று நிறுவுகிறான் பிரகலாதன் என்க. உயிர் அனாதியானது - அழிவற்றது-உடல்தான் அழியும் இயல்புடையது. எனவே .உலைவு இலா உயிர்- என்றார் என்க. இங்கே இறைவனின் பரத்துவ நிலை-நீக்கமற நிறைந்திருத்தலும், வியூகத்துவம் பல்பொருளும் பற்றி முற்றியிருத்தலும், அந்தர்யாமிநிலை-உயிர்கள்தோறும் உள்உற்று அங்கங்கே உறைதலும் பேசப்பட்டிருப்பதை உணர்க.

Koviloor Digital Library

121. "என்கணால் நோக்கிக் காண்டற்கு எங்கணும் உளன்காண், எந்தை;
உன்கண், நான் அன்பின் சொன்னால், உறுதி என்று ஒன்றும் கொள்ளாய்;
நின்கணால் நோக்கிக் காண்டற்கு, எளியனோ? நினக்குப் பின்னோன்.
பொன்கணான் ஆவிஉண்ட புண்டரீகக் கண் அம்மான்?" (6392)

(உன்கண்-உன்னிடத்தில்; பொன்கணான்-இரணியாட்சன்; பின்னோன்-தம்பி; ஆவி-உயிர்; புண்டரீகம்-செந்தாமரை; அம்மான்-இறைவன்; ஒன்றும்-சிறிதும்)

பிரகலாதன் இரணியனை நோக்கி ''தந்தையே! என்னுடைய தலைவனாகிய எல்லாம் வல்ல எம்பெருமான், எனது அன்பும், பக்தியும், நம்பிக்கையும் உள்ள கண்களால் காணும்பொழுது அவன் எங்கணும்-எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கிறான். ஆனால் இந்தப் பொருளை நான் உன்னிடம் கொண்டிருக்கும் அன்பின் காரணமாக எடுத்துக் கூறினால், நீ அதைச் சற்றும் ஏற்றுக்கொள்ள மறுக்கிறாய். உன்னுடைய தம்பியான பொன்போன்ற கண்களையுடைய இரண்யாட்சனின் உயிரைக் கவர்ந்துகொண்ட, செந்தாமரை மலர்போலும் கண்களையுடைய என்னுடைய தலைவனாகிய அந்தத்திருமால் அன்பில்லாத-அவன்மேல் பற்றில்லாத, நம்பிக்கையில்லாத உன்னுடைய கண்களால் காண்பதற்கு அவ்வளவு எளியவனாகி விடுவானோ? மாட்டான்'' என்று கூறுகிறான்

இங்கே பயன்படுத்தப்பட்டிருக்கும் 'நோக்கிக் காண்டல்' என்ற சொல்லுக்கு இருபொருள்கள் உண்டு. நோக்குதல் என்பது மனத்தால் குறித்து உணர்தல் என்பது பொருள். 'காண்டல்' என்பது சாதாரணக் கண்களால் காணுதல் என்பது பொருள் இதனை 'நோக்கல் நோக்கம்' என்றும் 'நோக்கிய நோக்கம்' என்றும் தமிழ் இலக்கணம் கூறும். 'எளியனோ' என்பதில் உள்ள ஓகாரம் எதிர்மறைப் பொருளாக எளியனல்லன் என்ற பொருளைத் தரும். 'பத்துடை அடியவர்க்கு எளியவன்; பிறர்களுக்கு அரிய வித்தகன்; என்பது திருவாய்மொழி. 'பக்திவலையில் படுவோர்' என்று உறுதியாகக் கூறுகிறது திருவாசகம். 'பொன்கணான்' என்பது இரணியாட்சன் என்பதன் தமிழாக்கம். இரண்யம்-பொன்; அக்ஷம்-கண். அவ்வன்மீது பற்றில்லாது பகைமை பாராட்டும் உன் கண்களுக்கு அவன் அவ்வளவு எளிதாகத் தெரிந்துவிடமாட்டான். ஆனால் அவனையே நம்பி அவன்மீது மாறாத காதல் கொண்டிருக்கும் அடியவனாகிய எனக்கு, அவன் பார்க்குமிடம் தோறும் நீக்கமற நிறைந்து இருப்பவனாகவே தோன்றுகிறான் என்கிறான் பிரகலாதன் என்க. 'காண்' என்பதை இங்கே அசையாகக் கொள்ள வேண்டும், எளியனாம் தன்மை 'சௌலப்யம்' என்பது வடமொழி.

Koviloor Digital Library

122. "மூன்று அவன் குணங்கள்; செய்கை மூன்று; அவன் உருவம் மூன்று;
மூன்றுகண், சுடர்கொள் சோதி மூன்று; அவன் உலகம் மூன்று;
தோன்றலும், இடையும், ஈறும், தொடங்கிய பொருள்கட்கு எல்லாம்
சான்று அவன்; இதுவே வேதமுடிவு; இதுசரதம்" என்றான். (6393)

(ஈறு-அழிவு; சான்று-சாட்சி; சரதம்-சத்தியம்/உண்மை; சோதி-ஒளி; முடிவு-தீர்மானமான கருத்து; செய்கை-தொழில்)

''சாத்வீகம், இராசதம், தாமசம் என்பன அவனுடைய மூன்று இயற்கைக் குணங்கள்; படைத்தல், காத்தல், அழித்தல் என்பன அவனுக் குரிய மூன்று தொழில்கள்; சூரியன், சந்திரன், நெருப்பு என்னும் மூன்று ஒளிமிகுந்தவை அவனுடைய மூன்று கண்கள்; சுவர்க்கம், மத்தியம், பாதாளம் என்பன அவனுடைய மூன்று உலகங்கள். அயன், அரி, அரன் என்பன அவனுடைய மூன்று வடிவங்கள். தோற்றம், நிலைத்தல், அழிதல் என்று அவனால் உண்டாக்கப்பட்ட உயிரினங்களுக்கெல்லாம், ஆதியும், இடையும், அந்தமும் இல்லாத அவனே சாட்சியாக இருப்பவன். இதுதான் வேதங்கள் கூறுகின்ற முடிந்த முடிபு. இதுதான் உண்மை, சத்தியம்'' என்று பிரகலாதன் இரணியனிடம் கூறுகிறான்.

இறைவனின் முக்குணம்," முத்தொழில், மூவுருவம், ஒளி மூன்று, மூன்று உலகம், முக்கண் முதலியவற்றை நன்கு எடுத்துக்கூறி, இது தான் கூறுவது மட்டுமல்ல, வேதங்களின் தீர்மானமான கருத்தே இதுதான் என்றும் உறுதிபடக் கூறுகிறான் பிரகலாதன். நான்முகன், திருமால், சிவன் என்பதற்கு பிரமன், விஷ்ணு, ருத்திரன் என்பது வடசொல். சத்வம், ராஜஸம், தாமசம் என்பதும் வடசொல். அயன், அரி, அரன் என்பதை அச்சுதன், அனந்தன், கோவிந்தன் என்பர் வடநூலார். எங்கும் பரந்து நிறைந்துள்ளதன்மை அவனை 'சர்வ வியாபி' என்கிறது வான்மீகம். மூன்று உலகங்களும் விண், மண், பாதாளம் மூன்றும் அவனால் படைக்கப்பட்டு, இயக்கப்பட்டு வருகிறது என்பது கருத்து.

123. என்றலும், அவுணர் வேந்தன், எயிற்று அரும்பு இலங்க நக்கான்;
"ஒன்றல்இல் பொருள்கள் எல்லாம், ஒருவன்புக்கு உறைவன் என்றாய்;
நன்று; அதுகண்டு, பின்னர் நல்லவாபுரிதும்; தூணில்
நின்றுளன் என்னின், கள்வன், நிரப்புதி நிலைமை"என்றான். (6334)

(அவுணர்- அசுரர்; எயிறு-பற்கள்; இலங்க-விளங்குமாறு; நகுதல்-சிரித்தல்; ஒன்றல்இல்-ஒவ்வாதன; கண்டு-பரிசோதித்து; நிரப்புதல்-நிறைவுசெய்தல்; புரிதல்-செய்தல்; கள்வன்-வஞ்சகன்; நல்லவா-நல்ல வாறு)

என்று பிரகலாதன் இறைவனின் இயல்புபற்றிக் கூறியதைக் கேட்ட அசுரர்களின் தலைவனாகிய இரணியன், தன்னுடைய அரும்பு போன்ற

Koviloor Digital Library

பற்கள் வெளியே தெரியும்படி சிரித்து, பிரகலாதனை நோக்கி, ''தமக்குள் ஒன்றோடொன்று ஒவ்வாது, வேறுபட்ட பல்வேறு உயிரினங்களின் உள்ளம் எல்லாவற்றுக்குள்ளும் ஒப்பில்லாத இறைவன் ஊடுருவிப்புகுந்து நீக்கமற நிறைந்திருக்கிறான் என்று கூறுகிறாய். நல்லது, அதனை ஆராய்ந்து பரிசீலனை செய்து, பின்னர் அதற்கேற்ற செய்கைகளைச் செய்கிறேன். இப்போது, அந்த வஞ்சகன் எங்கும் இருக்கிறான் என்றாயே, இந்தத் தூணிலும் நிறைந்திருக்கிறான் என்றால் அந்தத் தன்மையை நான் நன்கு புரிந்துகொள்ளும் வண்ணம் காட்சி அளவையால் நிறைவு செய்வாயாக!'' என்றான்.

உலகில் உள்ள உயிரினங்கள் எல்லாம் ஒரே உருவமுடையனவல்ல, குணம் உடையனவல்ல, ஒவ்வொன்றும் ஒவ்வொரு உருவமும், குணமும் அவ்வற்றிற்குரிய தொழில்களும் உடையன. அவை தமக்குள் வேறுபட்டன என்பது 'ஒன்றல்இல் பொருள்கள்' எனப்பட்டது என்க.

124. "சாணினும் உளன்; ஓர் தன்மை, அணுவினைச் சதகூறிட்ட
கோணினும் உளன்; மாமேருக் குன்றினும் உளன்; இந்நின்ற
தூணினும் உளன்; நீ சொன்ன சொல்லினும் உளன்; இத்தன்மை
காணுதி விரைவின்" என்றான்; 'நன்று' எனக் கனகன் சொன்னான்.

(6395)

(சதம்-நூறு; கோண்-நூற்றில் ஒரு பகுதி/பகுப்பு; கனகன்-இரணியன்; தன்மை-இயல்பு; ஓர்தன்மை-ஒன்றுபட்டதன்மை)

பிரகலாதன், தந்தை இரணியனை நோக்கி, ''நான் கூறுகின்ற இறைவன் சாண் என்று கூறப்படுகின்ற ஒரு அளவைப் பொருளிலும், நிறைந்திருக் கிறான். மேலும் பிரிக்கமுடியாத ஒரே தன்மையாக ஒன்றுபட்டிருக்கும் எளிய ஓர் அணுவிலும் இருக்கிறான். அதனைப் பிரிக்க முடிந்தால் நூறு பகுதிகளாகப் பகுத்தாலும் அந்த நுண்ணிய பகுதியாகிய கோணிலும் இவன் இருப்பான். இந்த நுண்ணிய கோணுக்கு மாறாக, மிகப்பெரிய மேருமலையிலும் நீண்டு பரவியிருக்கிறான். உன் அருகில் நிற்கின்ற இந்தத் தூணிலும்கூட இருக்கிறான். அவனை இவ்வளவு இழிவாகப் பேசினாயே, அந்த உன்னுடைய பேச்சிலும்கூட அவன் இருக்கிறான். அவன் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறான் என்ற இந்த உண்மைத் தன்மையை நீ விரைவிலேயே கண்டுகொள்வாய்'' என்றான். இரணியன் 'நல்லது' என்றுகூறி அதற்கு உடன்பட்டுக் கீழ்வருமாறு கூறத்தொடங் கினான்.

'சாண்' என்பது ஒரு நீட்டல் அளவைக் குறியீடு. அது ஆகுபெயராய் அவ்வளவு சிறிய இடத்தையோ, பொருளையோ குறித்தது என்க. இதுவரையிலும் 'அணு'தான் மிகச் சிறிய நுண்ணிய மேலும் பிரிக்கப்பட முடியாத, கண்களால் காணுதற்கு அரிய பொருள் என்று நினைத்து

Koviloor Digital Library

வந்தோம். ஆனால் கம்பன் அவ்வணுவையும் நூறு கூறுகளாகப் பிரிக்கமுடியும் என்றும், அதற்குக் 'கோண்' என்று பெயர் என்றும் நமக்குத் தெரிவிக்கிறான் என்பதை உணர்க. இருபதாம் நூற்றாண்டின் அறிவியல் உண்மையை ஒன்பதாம் நூற்றாண்டிலேயே பேசியிருப்பதைக் கருதுக. நுண்ணிய பொருள்கள் மட்டுமின்றி, மலைகள் போன்ற பெரிய பொருள்களிலும், நிலைத்திணைப் பொருளாகிய தூணிலும் இருப்பான் என்றும், ஒவ்வொருவர் சொற்களிலும் கலந்து நிறைந்திருக்கிறான் என்றும் உறுதிபடக் கூறுகிறான் பிரகலாதன்.

125. "உம்பர்க்கும் உனக்கும் ஒத்து, இவ்வுலகெங்கும் பரந்துளானை,
கம்பத்தின் வழியே காணக் காட்டுதி; காட்டிடாயேல்,
கும்பத் திண்கரியைக் கோள்மாக் கொன்றுஎன, நின்னைக் கொன்று, உன்,
செம்பு ஒத்த குருதி தேக்கி, உடலையும் தின்பென்" என்றான். (6396)

(உம்பர்-தேவர்கள்; ஒத்து-இசைந்து; கம்பம்-தூண்; கும்பம்-மத்தகம்/கொம்பு; திண்-வலிய; கரி-யானை; கோள்-வலிய; மா-சிங்கம்; குருதி-இரத்தம்; தேக்குதல்-குடித்தலுமாம்/நிரம்பப் பருகுதல்)

"தேவர்களுக்கும், அவர்கள் வழியிலேயே செல்லுகின்ற உனக்கும் இசைந்த கருத்து உடையவனாய், இந்த உலகங்கள் முழுவதும் வியாபித்திருக்கின்றான் என்று நீ கூறுகின்ற அந்தத் திருமாலை, இதோ என் அருகில் இருக்கும் இந்தத்தூணின் வழியாக நான் காணுமாறு காண்பிப்பாயாக! அவ்வாறு நீ காட்ட முடியாமல் போனால், மத்தகத்தையுடைய வலிய யானையை ஒரு வலிய சிங்கம் கொன்று தின்பதைப்போல, உன்னை எளிதில் கொன்று உன்னுடைய உருக்கிய செம்பினைப் போன்ற சிவந்த நிறமுடைய இரத்தத்தை மிகுதியாகக் குடித்து, உன்னுடைய, உடலையும் கிழித்துத் தின்றுவிடுவேன்" என்று எச்சரிக்கிறான் இரணியன்.

126. "என்உயிர் நின்னால் கோறற்கு எளியது ஒன்று அன்று; யான்முன்
சொன்னவன், தொட்டதொட்ட இடம்தொறும் தோன்றானாயின்,
என்னுயிர் யானே மாய்ப்பல்; பின்னும் வாழ்வு உகப்பல் என்னின்,
அன்னவர்க்கு அடியேன் அல்லேன்" என்றனன், அறிவின் மிக்கான்.
(6397)

(மிக்கான்-மேம்பட்டவன்/சிறந்தவன்; கோறற்கு-கொன்று அழிப்பதற்கு; மாய்ப்பல்-மாய்த்துக் கொள்வேன்; உகப்பல்-விரும்புதல்)

மெய்யறிவாகிய ஞானத்தில் யாவர்க்கும் மேம்பட்டுச் சிறந்து விளங்குபவனான பிரகலாதன், இரணியனை நோக்கி, "தந்தையே! என்னுடைய உயிர் உன்னால், உன்முயற்சிகளால் அத்தனை எளிதில் கொல்லத்தக்க ஒன்று அல்ல. நான் முன்னர்க்கூறிய எல்லாம் வல்ல எம்பெருமான், நீ தொட்டுக்காட்டுகின்ற இடங்களில் எல்லாம் நிச்சயம்

Koviloor Digital Library

தோன்றுவான். அவ்வாறு அவன் தன்னை வெளிப்படுத்திக் காட்டா விட்டால், என்னுடைய உயிரை நானே போக்கிக்கொள்வேன். அதன் பின்னரும் நான் இவ்வுலக வாழ்வில் விருப்பம்கொண்டு, வாழ்வேன் என்றால்அந்த இறைவனுக்கு உண்மையான தொண்டனாக ஆகமாட்டேன்'' என்று சூளுரைக்கிறான் பிரகலாதன்.

127. செங்கட்சீயம் சிரித்த தோற்றம்

நசை திறந்து இலங்கப்பொங்கி, ''நன்று! நன்று!'' என்ன நக்கு,
விசை திறந்து உருமு வீழ்ந்ததென்ன, ஓர்தூணின், வென்றி,
இசை திறந்து உயர்ந்த கையால் எற்றினான்; எற்றலோடும்,
திசை திறந்து, அண்டம்கீறச் சிரித்தது அச் செங்கண் சீயம். (6398)

(நசை-விருப்பம்; திறந்து-வெளிப்பட்டு; இலங்க-விளங்க; நக்கு-சிரித்து; நகுதல்-சிரித்தல்; விசை-வேகம்; திறந்து-பிளந்து; உருமு-இடி/பேரிடி; வென்றி-வெற்றி; இசை-புகழ்; எற்றுதல்-தாக்குதல்/மோதுதல்/அறைதல்; சீயம்-சிங்கம்; திறந்து-கிழிந்து; கீற-பிளக்க; கீறுதல்-பிளத்தல்; திசை-திக்குகள்)

பிரகலாதன் கூற்றுப்படி, இறைவனை நேருக்குநேர் காணலாம் என்பதாலும், தன் மகன்பிரகலாதனுக்குத் திருமால் உண்மையிலேயே தக்க சமயத்தில் தோன்றி உதவி செய்வாரா என்று அவனைச் சோதித்துப் பார்க்கவும், விருப்பம் கொண்ட இரணியன், அவ்விருப்பத்தால் எழுந்த மனக் கிளர்ச்சியோடு, பிரகலாதனைப் பார்த்து, ''நல்லது!நல்லது!'' என்று சொல்லி ஏளனமாகச் சிரித்து, மேகத்தைக் கிழித்துக் கொண்டு வேகமாக வெளிப்படும் ஒரு பேரிடிபோல, அருகில் இருந்த ஒரு தூணில் தனது வெற்றிப்புகழ் சிறந்து விளங்குகின்ற கைகளால் அவன் மோதியவுடன், திக்குகளெல்லாம் கிழிந்து போனது போலவும் இந்த அண்டகோளமே பிளவுப்பட்டுப் போனதுபோலவும், ஆர்ப்பரித்துக்கொண்டு, அத்தூணி லிருந்து சிவந்த கண்களையுடைய திருமாலாகிய நரசிங்கம் வெடிச் சிரிப்புச் சிரித்து வெளிப்பட்டது.

இங்கே ஒரு கருத்து. கம்பன் தன் இராமாவதாரத்தைத் திருவரங்கத்தில் மணவாளமாமுனிகள் முன்னிலையில், அழகிய மேட்டழகர் சன்னிதியில் அரங்கேற்றம் செய்தார் என்பது நாம் அறிந்ததே. இந்தப் பாடலைப்பாடி அதற்கு அவர் விளக்கம் அளித்துக் கொண்டிருந்தபோது, அவ்விடத்தில் எழுந்தருளியுள்ள அரங்கநாதர் தன் தலையை அசைத்தார் என்பதும் ஒரு செவிவழிச் செய்தி. சீயம் என்பது சிம்ஹம் என்ற வடசொல்லின் திரிபு எனக் கொள்க. சிங்கம் என்பது பொருள்.

Koviloor Digital Library

128. பிரகலாதன் மகிழ்தல்

''நாடி நான் தருவென்'' என்ற நல்லறிவாளன், நாளும்
தேடி, நான்முகனும் காணாச் சேயவன் சிரித்தலோடும்,
ஆடினான்; அழுதான்; பாடி அரற்றினான்; சிரத்தில் செங்கை
சூடினான்; தொழுதான்; ஓடி உலகெல்லாம் துகைத்தான், துள்ளி.
(6399)

(நாடி-தேடி; தருதல்-காட்டுதல்; அறிவு-மெய்யுணர்வு; சேய்மை-நெடுந்தொலைவு; சூடுதல்-கூப்புதல்; துகைத்தல்-கால்களால் உழப்புதல்)

நாள்தோறும் இடைவிடாமல் முயன்று தேடியும்கூட, நான்கு முகங்களையுடைய படைத்தற் கடவுளாகிய பிரமதேவன் முதலான தேவர்களாலும் எளிதாகக் காணமுடியாதவாறு மிக நெடுந்தொலைவில் இருப்பவனான திருமால், இரணியன் அறைந்த தூணிலிருந்து வெடிச் சிரிப்புடன் வெளிப்பட்டுத் தோன்றியவுடன் ''நான் எப்படியும் இறைவனை உனக்கு நேருக்குநேர் காட்டித் தருவேன்'' என்று என் தந்தையாகிய இரணியனிடம் உறுதியாகக் கூறியிருந்த உயர்ந்த மெய்யுணர்வு கொண்ட ஞானியாகிய பிரகலாதன், மகிழ்ச்சி தாங்க முடியாமல் கூத்தாடினான்; நெகிழ்ந்து நெக்குருகி, கசிந்து கண்ணீர்மல்க அழலானான்; இறைவன் புகழைப்பாடிக் கதறினான்; தனது சிவந்த கைகளைத் தலைக்குமேல் கூப்பித் தொழுதான். தரையில் விழுந்து வணங்கினான். துள்ளிக் குதித்து ஓடி உலகமெல்லாம் கால்களால் உழப்பலானான்.

கம்பன் பிரகலாதனை மிக உயர்ந்த சொற்களால் பாராட்டி வருவதைக் கருதுக. இங்கே ''நல்லறிவாளன்''-ஞானியர்க்கெல்லாம் மேம்பட்ட ஞானி என்பதையும் உணர்க. உவகையின் உயர்ந்த மெய்ப்பாடு பேசப்படுதல் காண்க. ''பத்துடை அடியவர்க்கு எளியவன்; பிறர்களுக்கு அரியவித்தகன்'' என்னும் திருவாய் மொழியை இங்கு நினைவுகூர்க. அறிவு ஒன்றால் மட்டுமே இறைவனைக் கண்டுவிட முடியாது. அதற்கு அவனுடைய அருட்பார்வையும் வேண்டும் என்பது பேசப்படுகிறது. ''அவன் அருளாலே அவன்தாள் வணங்கி'' என்பது திருவாசகம். புறத்தார்க்குச் சேயோன் என்பதும் கரம்குவிவார் உள்மகிழும் கோன்' என்பதும் திருவாசகம். 'சேயாய் நணியானே' என்பதும் திருவாசகம்.

129. இரணியன் இறைவனைப் போருக்கு அழைத்தல்

''ஆர்அடா சிரித்தாய்? சொன்ன அரிகொலோ? அஞ்சிப்புக்க
நீர், அடா, போதாது என்று, நெடுந்தறி நேடினாயோ?
போர் அடா? பொருதி ஆயின், புறப்படு!புறப்படு!'' என்றான்,
பேர் அடா நின்ற தாளோடு, உலகெலாம் பெயரப் பேர்வான். (6400)

Koviloor Digital Library

(ஆர்-யார்; அரி-திருமால்; புக்க-ஓடிஒளிந்த; தறி-தூண்/கம்பம்; நேடுதல்-தேடிக்கொள்ளுதல்; பொருதல்-போர்செய்தல்; பேர்-புகழ்; பெயர-நிலைகுலைய; பேர்தல்-இடம் பெயர்தல்; அடா-அடுத்து; தாள்-திருவடி; நீர்-பாற்கடல்; அடா-ஏடா)

புகழ்பொருந்திய தன் கால்களால், இவ்வுலகங்களெல்லாம் நிலை குலைந்து இடம் பெயர்ந்து செல்லும் வண்ணம் செய்யும் வலிமையுடைய இரணியன், தூணினின்றும் வெளிப்பட்டுச் சிரித்த ஒலிகேட்டு அச்சிங் கத்தை நோக்கி, 'யாரடா அது இப்போது சிரித்தவன்? இந்தச்சிறுவன் சொன்ன அரி என்பவன் நீதானா? முன்பு என்னுடன் போர்செய்ய இயலாது அச்சம்கொண்டு, திருப்பாற்கடலில் சென்று ஒளிந்துகொண்ட நீ, அந்தஇடம் பற்றாது என்று எண்ணி, இப்போது என் அரண்மனையில் உள்ள இந்தத் தூணையும் தேடிவந்து புகுந்து ஒளிந்து கொண்டாயோ? உன்னால் என்னோடு போர் செய்ய முடியுமானால் உடனே விரைவாகப் புறப்படு என்று இறைவனை ஏகவசனத்தில் அறைகூவி அழைத்தான் இரணியன்.

'அடா' என்பது 'ஏடா' என்ற சொல்லின் திரிபு. தன்னைவிடத் தாழ்ந்தவர் களைக் கூவி அழைக்கும் ஒருசொல். இன்னும் இச்சொல் வழக்கத்தில் இருப்பதைக் காணலாம். இவ்வளவு நிகழ்ந்தபின்னும் இரணியன் தன்னுடைய ஆணவத்தில் ஒரு சிறிதும் மாற்றம் வெளிப்படுத்தவில்லை என்பதை உணர்க. 'புறப்படு புறப்படு, என்ற அடுக்கு விரைவு பற்றி வந்தது என்க. வில்லிபாரதத்தில் இவ்வாறே சிசுபாலன் கண்ணனை இகழ்ந்து, ஏகவசனத்தில் பேசியதையும் இங்கு நினைவுகூர்க.

130. நரசிம்மம் வெளிப்பட்டுப் பேருருக் கொள்ளுதல்

பிளந்தது தூணும்; அங்கே பிறந்தது சீயம்; பின்னை
வளர்ந்தது திசைகள் எட்டும்; பகிரண்டம் முதல, மற்றும்
அளந்தது; அப்புறத்துச் செய்கை, யார் அறிந்து அறையகிற்பார்?
கிளர்ந்தது; ககனமுட்டை கிழிந்தது, கீழும் மேலும். (6401)

(பிறந்தது-தோன்றிவெளிப்பட்டது; பின்னை-பின்னர்; பகிரண்டம்-மற்ற அண்டங்கள்; ககனம்-உலக உருண்டை/அண்டகோளம்; அறைய கிற்பார்-சொல்ல வல்லவர்; கீழ்-பாதாளம்; மேல்-விண்ணுலகு/ ஆகாயம்; கிளர்தல்-வளர்தல்; சீயம்-சிங்கம்)

அவ்வாறு இரணியன் போருக்கு அழைத்ததும் இரு கூறாகப் பிளவு பட்ட அத்தூணிலிருந்து நரசிங்கம் வெளிப்பட்டுத் தோன்றியது. பின்னர் எட்டுத்திசைகளும் அளாவிவளர்ந்தது. ஏனைய பிற அண்டங்களையும் அளக்கும் அளவுக்கு ஓங்கி வளர்ந்தது, அதனால் அண்டகோளமாகிய இவ்வுலகஉருண்டையின்கீழ்ப்பகுதியாகிய பாதாளஉலகமும், மேற்பகுதி யாகிய ஆகாயமும் கிழிந்துபோனது. அதற்கு அப்பாலும் வளர்ந்த

Koviloor Digital Library

அவ்வுருவத்திற்கு என்ன நிகழ்ந்தது என்பதை அறிந்து கூறவல்லவர் யார் இருக்கிறார்கள்?

பகிரண்டம் என்பது பகிர்+அண்டம் என்று பிரியும். இவ்வண்ட கோளத்தை உலக உருண்டையை ககனமுட்டை என்று கூறுவது கவிமரபு.

131. மன்றல் அம்துளப மாலை மானுட மடங்கல் வானில்
சென்றது தெரிதல் தேற்றாம்; சேவடி படியில் தீண்ட
நின்றது ஓர் பொழுதின், அண்டநெடு முகட்டு இருந்த முன்னோன்
அன்று அவன் உந்தி வந்தானாம் எனத் தோன்றினானால். (6402)

(மன்றல்-நறுமணம்; அம்-அழகிய; துளபம்-துளசி/திருத்துழாய்; தேற்றாம்-அறிந்திலோம்/தெளியோம்; படி-பூமி; முன்னோன்-பழமையானவன்; உந்தி-வயிறு/நாபிக்கமலம்; முகடு-சிகரம்)

நறுமணம் மிக்க, அழகிய திருத்துழாய் மாலையணிந்த மானிடவடிவம் கொண்ட அச்சிங்கமாகிய நரசிம்மமூர்த்தி, ஆகாயத்தில் உயர்ந்து ஊடுருவிச் சென்ற நிலையை நம்மால் தெளிவாகத் தெரிந்துகூற முடியவில்லை; அவருடைய செம்மையான சிவந்த திருவடிகள் இந்நிலத்தில் படியும்படி நின்ற சமயத்தில், இவ்வண்ட கோளத்தின் பெரிய சிகரத்தில்-சத்தியலோகத்தில் இருக்கின்ற, எல்லோர்க்கும் முன்னோனாகிய படைப்புக் கடவுளாகிய பிரமதேவன் அப்பொழுதுதான் அவனுடைய நாபிக்கமலத்திலிருந்து தோன்றியவன் போலத் தோற்றமளித்தான்.

சிங்க முகமும், நகமும் மனித உடலும் கொண்டிருந்ததால் 'மானுட மடங்கல்' எனக் கூறப்பட்டது என்க. துளசி மட்டும்தான் முளைக்கும் போதே நறுமணத்துடன் முளைக்கும் சிறப்புடையது என்பதைக் குறிக்க, 'மன்றல் அம் துளபம்' என்றார் என்க. அவ்வாறு வளர்ந்த விசுவரூபம் வானத்திற்குச் சென்றதுவரை நமக்குத் தெரிகிறது. அதற்கு அப்புறம் நிகழ்ந்தது நம்மால் உய்த்துணர முடியவில்லை என்பதை 'தெரிதல் தேற்றாம்' என்றார் என்க. 'முன்னோன்' என்பது இவ்வுலகத்தைப் படைத்த, உலகப்படைப்பிற்கு முன்னரே தோன்றிய முன்னோனாகிய பிரமனைக் குறிக்கும் என்க. நரசிங்கத்தின் விசுவரூபம் பேசப்படுகிறது. 'மானிடமடங்கல்' என்பது மனித உருவுடன் கூடிய சிங்கம் என்க. 'தொடங்கற்கண் தோன்றிய முதியவன்' என்று பிரமனைக் கலித்தொகை கூறும்.

132. "எத்துணை போதும்கை" என்று இயம்பினால், எண்ணற்கு ஏற்ற
வித்தகர் உளரே? அந்தத் தானவர் விரிந்த சேனை,
பத்துநூறு அமைந்தகோடி வெள்ளத்தால் பகுதி செய்த
அத்தனை கடலும் மாளத் தனித்தனி அள்ளிக்கொண்ட (6403)

Koviloor Digital Library

(வித்தகர்-திறமை உடையவர்; பத்துநூறு-ஆயிரம்; வெள்ளம்-எண்ணுப்பெயர்; மாள-அழியும்படி)

அவ்வாறு தூணினின்றும் வெளிப்பட்ட நரசிங்க மூர்த்திக்கு எத்துணை கைகள் உள்ளன என்று கேட்டு அதைக் கணக்கிட்டுக் கணிக்கக்கூடிய அறிவிற் சிறந்த திறமையுள்ளவர்கள் எவரேனும் இவ்வுலகில் இருக்கின்றனரோ? அந்த இரணியனுடைய பரந்து விரிந்த அசுரர்கள் சேனையானது ஆயிரம்கோடிப் பேரை உடையது. அந்த அசுரச் சேனைக்கடலில் உள்ள ஒவ்வொரு பகுதியிலும் உள்ள அரக்கரின் கைகளையும் அந்தச் சேனையாகிய கடலே அழிந்துபோகும்படி, அந்த நரசிங்க மூர்த்தி தனித் தனியாக தன் கைகளால் பற்றிக்கொண்டான். எனவே இந்தத் தோற்றம் அவனுக்கு எத்தனை கைகள் உள்ளன என்று கணக்கிட்டுச் சொல்ல முடியாததாயிற்று.

சேனையைக் கடலாக உருவகம் செய்தார் எனக் கொள்க. இங்கே வெள்ளம் என்பது ஒரு எண்ணுப்பெயர், அளவற்றது என்ற பொருள் கொண்டது. பொருள்களை நுனித்து உணர்ந்து எண்ணியறிய வல்ல திறமையுடையோர் வித்தகர் எனப்படுவர். இங்கே இந்த எண்ணுப் பெயர்களை வைத்து ஒரு அருமையான பாடல் பரிபாடலில் கிடைக்கிறது கேளுங்கள்.

''இருகைமாஅல், முக்கை முனிவ, நாற்கை அண்ணல், ஐங்கை மைந்த, அறுகை நெடுவேள், எழுகைஆள, எண்கைஏந்தல்; ஒன்பதிற்றுத் தடக்கை மனபேராள, பதிற்றுக்கை மதவலி, நூற்றுக்கை ஆற்றல், ஆயிரம் விரித்த கைம்மாயமள்ள, நூறாயிரம்கை ஆறறிகடவுள், அனைத்துமல்ல பல அடுக்கல் ஆம்பல் இனைத்து என, எண்வரம்பு அறியா யாக்கையை'' என்பது பரிபாடல்.

133. ஆயிரம்கோடி வெள்ளத்து அயில்எயிற்று அவுணர்க்கு, அங்குஅங்கு,
ஏயின ஒருவர்க்கு ஓர்ஓர் திருமுகம், இரட்டிப் பொன்தோள்,
தீ எனக்கனலும் செங்கண், சிரம்தொறும், மூன்றும், தெய்வ
வாயினில் கடல்கள் ஏழும், மலைகளும், மற்றும், முற்றும். (6404)

(அயில்எயிறு-கூரியபற்கள்; பொன்-அழகு; கனல்தல்-அழல்தல்; முற்றுதல்-அடங்குதல்)

அவ்வாறு நரசிங்க மூர்த்திக்கு எதிரே தோன்றிய ஆயிரம்கோடி என்று கூறப்படும் அரக்கர்சேனையில் உள்ள ஒவ்வொரு வீரர்க்கும் வேல் போன்ற கூரிய கோரப் பற்களும், அவ்வவ்விடங்களில் தோன்றிய ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொரு முகமும், இரண்டு மடங்கு அழகிய தோள்களும் ஒவ்வொருவருடைய தலையிலும் நெருப்பைக் கக்குகின்ற சிவந்த மும்மூன்று கண்களாகவும் காணப்பட்டன. தெய்வத்தன்மை வாய்ந்த இறைவனது பெரிய வாயில், உலகைச் சூழ்ந்துள்ள ஏழு கடல்

Koviloor Digital Library

களும், மலைகளும், மற்றும் உள்ள சர அசரப்பொருள்களும் அடங்கி யிருந்தன.

நரசிங்கமூர்த்தியின் விசுவரூபம் பேசப்படுகிறது. இப்போது அவர் உடலில் எண்ணற்ற முகங்களும், கைகளும், கண்களும், காணப்பட்டன என்பதாம்.

134. முடங்கு வார்உளை அவ்வண்டம் முழுவதும் முடிவில் உண்ணும்
கடம்கொள் வெங்காலச் செந்தீ, அதனை வந்து அவிக்கும், கால
மடங்கலின் உயிர்ப்பும், மற்று அக்காற்றினை மாற்றும்; ஆனால்,
அடங்கலும் பகுவாய் யாக்கை, அப்புறத்து அகத்தது அம்மா! (6405)

(முடங்கு-வளைந்த; உளை-பிடரிமயிர்; உண்ணும்-அழிக்கும்; கடம்-கடன்/கடமை; காலம்-ஊழிக்காலம்/பிரளயம்; அவித்தல்-அணைத்தல்/கீழ்ப்படுத்துதல்; உயிர்ப்பு-மூச்சுக்காற்று; அடங்கல்-முழுவதும்; பகுவாய்-பிளந்தவாய்/திறந்தவாய்; அப்புறம்-மேற்புறம்; அகத்தது-உட்புறம்; காற்று-சண்டமாருதம்)

வளைந்த, நீண்ட, தூய்மையான பிடரிமயிர்க்கற்றையை உடைய அச்சிங்கம், இந்த அண்டங்கள் எல்லாவற்றையும் பிரளயகால இறுதியில் அழிக்கும் கடமையும், வல்லமையும் கொண்ட கொடிய ஊழிக்காலத் தீ அதனைவந்து கீழ்ப்படுத்திவிடும்-அடக்கிவிடும். அதுபோலவே, இயமனைப் போன்ற சிங்க உருவினனான நரசிங்கமூர்த்தியின் மூச்சுக்காற்று, அப்பொழுது எழுகின்ற ஊழிக்காலக் காற்றாகிய சண்டமாருதத்தை அடக்கிவிடும். ஆனால் நரசிங்கமூர்த்தியின் பிடரிமயிரும், மூச்சுக் காற்றும், பிளந்த வாயையுடைய அதன் உடம்பின் மேற்புறத்தும், உட்புறத்துமே அமைந்திருப்பனவாகும்.

சற்று பொருள் புரிந்து கொள்ள முடியாத பாடல். நரசிங்க மூர்த்தியின் பிடரிமயிர் ஊழிக்கால நெருப்பையும், அதனுடைய சுவாசக்காற்று ஊழிக்காற்றையும் அடக்கிவிடும் என்பது இப்பாடலின் திரண்ட கருத்து. 'அம்மா' என்பது இங்கே வியப்பைக் குறிக்கும் இடைச்சொல்லாக வந்தது எனக் கொள்க.

135. குயிற்றிய அண்டம் குஞ்சை இட்டிலா முட்டைக் கூட்டில்
பயிற்றிய பருவம் ஒத்த காலத்துள், அமுது பல்கும்
எயிற்று வன் பகுவாயுள் புக்குஇருக்குந, இருக்கை எய்தி;
வயிற்றின் வந்து, அந்நாள், இந்நாள்வாழும் மன்னுயிர்கள் மன்னோ!
(6406)

(அந்நாள்-ஊழிக்காலம்; மன்-நிலைபெற்ற; குயிற்றிய-படைக்கப் பட்ட/செய்த; பயிற்றிய-பாதுகாத்துக் கொண்ட; பல்குதல்-ஊறுதல்/பெருகுதல்; பகுவாய்-திறந்தவாய்; வன்-வலிய; இட்டிலா-பொறிக்காத)

Koviloor Digital Library

உலகமெல்லாம் அழிந்துபோகின்ற யுகாந்த முடிவுக்காலத்தில், இறைவனின் வயிற்றினுள் புகுந்து அடைக்கலம் அடையும் உயிர்களெல்லாம், இவ்வூழிக்காலம் முடிந்த பின்னர் வெளிப்பட்டு, இப்பொழுதும் நிலைபேறுடைய உயிர்களாய் வாழ்கின்றன. அவையெல்லாம், முன்பு இறைவனால் படைக்கப்பட்ட இவ்வண்டத்தில் குஞ்சு பொறிக்காத முட்டையைப் போன்று, அதை எவ்வளவு கவனமாகப் பாதுகாக்குமோ, அவ்வாறு அரவணைத்துப் பாதுகாத்து இருந்த அந்தப் பருவகாலத்தில், இந்த நரசிங்கமூர்த்தியினது அமிழ்து ஊறுகின்ற பற்களையுடைய வலிய திறந்த வாயினுள்ளே புகுந்துகொண்டு, அங்கே தத்தமக்கு உரிய இடத்தினைப் பெற்று இனிது வாழ்ந்து கொண்டிருக்கும்.

இங்கே கம்பன் நரசிங்கமூர்த்தியின் பற்கள் அமுதூறும் பற்கள் என்று கூறுவது, அவன் தோற்றத்தை வைத்துப் பார்க்கும் நமக்கு மிக வியப்பாகத் தோன்றும். எனினும் அவனிடம் பற்றுள்ள அடியார்களாகிய உயிரினங்களே அவன் வயிற்றுக்குள் அடங்கியிருப்பதால் அவ்வாறு கூறினான் என்க. வள்ளுவன், 'பாலொடுதேன் கலந்தற்றே பனிமொழி வால் எயிறு ஊறியநீர்' என்பதையும் இங்கு ஒப்புநோக்குக. குஞ்சுபொறிக்காத-குஞ்சுவெளிவராத-காலத்தில் தாய்ப்பறவை அம்முட்டையை எவ்வாறு கவனத்துடன் காப்பாற்றுமோ, அவ்வாறு நரசிங்கப்பெருமான் தன் வயிற்றுள் அடங்கியிருக்கும் உயிரினங்களையெல்லாம் மிகக் கவனத்துடன்பாதுகாத்தான்என்பது 'குஞ்சைஇட்டிலாமுட்டைக்கூட்டில் பயிற்றிய பருவம் ஒத்தகாலம்' என்று கூறப்பட்ட உவமை மிக அருமையானது எண்ணி இன்புறத்தக்கது.

136. நன்மையின் தொடர்ந்தார்க்கு உண்டோ கேடு? நான் முகத்தோன் ஆதி
தொன்மையின் தொடர்ந்த வாய்மை அறத்தொடும் துறந்திலோரை
அன்வயித்து, ஒரும்தீய அவுணர் அல்லாரை, அந்நாள்
தன் வயிற்றகத்து வைத்துத்தந்தது, அச்சீயம், தாயின். (6407)

(ஆதி-முதலாக; தொன்மை-தொன்றுதொட்டு; ஓர்தல்-ஆராய்தல்; கேடு-இழிவு/தீமை; சீயம்-சிங்கம்; அன்வயித்தல்-பின்தொடர்தல்; தருதல்-பாதுகாத்தல்; தாயின்-தாயைப்போல)

நல்ல அறநெறியிலேயே வாழ்க்கை நடத்துபவர்களுக்கு எப்பொழுதாவது தீங்கு நிகழ்ந்து இருக்கிறதா? இல்லையல்லவா? நான்கு முகங்களையுடைய பிரமதேவன் முதலாக, மிகப்பழங் காலத்திலிருந்தே, வாய்மையும், அறமும் போன்ற நல்லொழுக்க நெறிகளைத் தவறவிடாத நல்லோர்களைப் பின்தொடர்ந்து, ஆராய்ந்து உணரும் கொடுமையானவர்களான அசுரர்கள் அல்லாத நல்லோர்கள் அனைவரையும் அந்தக்காலம் முதல் அந்தச் சிங்கமானது, ஒருதாயைப் போன்ற அன்போடு, தன் வயிற்றினுள்ளே அடக்கி வைத்துக் காப்பாற்றியது.

Koviloor Digital Library

இங்கே 'உண்டோ?' என்பதில் உள்ள ஓகாரம் எதிர்மறைப் பொருளது. உண்டாகாது என்பது பொருள். கொடியோர்களை அழித்து, நல்லோர் களைக் காத்தது அச்சிங்கம் என்பது கருத்து.

137. அசுரர்கள் அழிதல் [8 பாடல்கள்]

பேருடை அவுணர் தம்மைப்பிறை எயிற்று அடக்கும்; பேரா
பாரிடைத் தேய்க்கும்; மீளப்பகிரண்டத்து அடிக்கும்; பற்றி,
மேருவில் புடைக்கும்; மாள விரல்களின் பிசையும்; வேலை
நீரிடைக்குமிழி ஊட்டும்; நெருப்பிடைச் சுரிக்க நீட்டும். (6408)

(பேர்-வெற்றிப்புகழ்/பெயர்; எயிறு-பற்கள்; பார்-பூமி; பற்றி-பிடித்து; புடைத்தல்-மோதித்தாக்குதல்; மாள-இறக்கும்படி; வேலை-கடல்; சுரிக்க-சுருண்டு தீயும்படி; பகிரண்டம்-புறஅண்டம்; பேரா-பெயர்த்து; ஊட்டுதல்-உண்டுபண்ணுதல்)

தூணினின்றும் வெளிப்பட்ட அந்நரசிங்க மூர்த்தி, அவுணர் என்று பெயர் கொண்டிருப்பவர்களையெல்லாம், வெற்றிப் புகழ் கொண் டிருக்கும் அவுணர் சிலரைப் பிடித்து, பிறைச்சந்திரன் போன்று வளைந் திருக்கும் தனது கோரப்பற்களில் அதுக்கிக் கொல்லும்; சிலரை இடம் விட்டுப் பெயர்த்து தன் கால்களினால் தரையில் போட்டுத் தேய்த்துக் கொல்லும்; மீண்டும் சிலரை அடித்துப் புற அண்டத்திலே தூக்கி எறிந்து கொல்லும்; மேலும் சிலரைத் தன்கைகளால் பிடித்து மேருமலையில் மோதித் தாக்கிக்கொல்லும்; வேறுசிலரைத் தனது கை விரல்களால் பிசைந்தே அவர்கள் அழியும்படி செய்யும்; சிலரைக் கடல்நீருக்குள் அமிழ்த்திக்கொன்று, அந்நீரினின்றும் நீர்க்குமிழச் செய்து கொல்லும்; மற்றும் சிலரை வடவைத்தீயில் நெருப்பினிடையில் தள்ளி அவர்கள் சுருண்டு தீய்ந்து போகும்படி கொல்லும்.

தன்னுடைய பற்களாலும், கைகளாலும், கால்களாலும், நிலத்திலும், பகிரண்டத்திலும், மலையிலும், நீரிலும், நெருப்பிலும் இட்டு அவுணர்களைக் கொன்றது கூறப்பட்டது. பஞ்சபூதங்களில் காற்றைத் தவிர ஏனைய நான்கு பூதங்களின் உதவியால் அவுணர்களை அழித்தமை கருதுக.

138. வகிர்ப்படுத்து உரக்கும்; பற்றி வாய்களைப் பிளக்கும்; வன்தோல்
துகிர்ப்படுத்து உரிக்கும்; செந்தீக் கண்களைச் சூலும்; சுற்றிப்
பகிர்ப்படக் குடரைக் கொய்யும்; பசையறப் பிசையும் பல்கால்;
உகிர்ப் புரைப் புக்கோர் தம்மை, உகிர்களால் உறக்கும் ஊன்றி. (6409)

(வகிர்தல்-இருகூறாகப் பிளத்தல்; உரத்தல்-கொல்லுதல்; பிளத்தல்-கிழித்தல்; வன்-வலிய; உரித்தல்-கிழித்தல்; சூலுதல்-தோண்டி யெடுத்தல்; கொய்தல்-பறித்தல்; பசை-இரத்தப்பசை; பிசைதல்-பிழிதல்;

Koviloor Digital Library

உகிர்ப்புரை-நகத்துளை/துவாரம்; உறத்தல்-கிள்ளுதல்; வகிர்-பிளவு/கூறு; பகிர்-வெளிப்புறம்; துகிர்-துகில்/ஆடை; ஊன்றி-அழுத்தி; துகிர்ப் படுத்தல்-கசக்குதல்)

அந்த நரசிங்கமூர்த்தி, சில அவுணர்களை இருகூறுகளாகப் பிளந்து கொல்லும்; சிலரின் வாய்களைப் பிளந்தே கொல்லும்; சிலரின் வலிய சதைத் தோல்களைத் துணிகளைக் கிழிப்பதுபோல் உரித்துக்கொல்லும்; சிவந்த தீ போன்ற கண்களையுடைய சில அரக்கர்களின் கண்களைத் தோண்டியெடுத்துக் கொல்லும்; சரிந்துவிழும்படி சில அரக்கர்களின் குடலைப்பறித்துக்கொல்லும்; சிலஅசுரர்களின்உடலில் இரத்தப்பசையே அற்றுப்போகும்படி பலமுறை பிசைந்தே கொல்லும்; தன் நகத்துவாரங் களில் வந்து அகப்பட்டுக்கொண்ட சில அரக்கர்களைத் தனது மற்ற நகங்களாலேயே அழுத்திக் கிழித்துக் கொல்லும்.

அசுரர்களின் உடல், வாய், தோல், கண்கள், குடல்கள், இரத்தம், முதலியவற்றை எவ்வாறு பற்றிக் கொன்றது என்பது கூறப்படுகிறது.

139. யானையும், தேரும், மாவும், யாவையும் உயிர் இராமை,
ஊனொடும் தின்னும்; பின்னை ஒலிதிரைப் பரவை ஏழும்
மீனொடும் குடிக்கும்; மேகத்து உருமொடும் விழுங்கும், விண்ணில்;
தான் ஒடுங்காது என்று அஞ்சி, தருமமும் சலித்தது அம்மா! (6410)

(மா-குதிரை; ஊன்-உடம்பு; திரை-அலைகள்; பரவை-கடல்; உரும்-இடி; ஒடுங்குதல்-தணிதல்; தருமம்-அறக்கடவுள்; சலித்தல்-அஞ்சி நடுங்குதல்; பின்னை-பின்னர்)

அந்நரசிங்க மூர்த்தி, அந்த அவுணர்களுடைய யானைப்படை, தேர்ப்படை, குதிரைப்படை முதலிய எல்லாவற்றையும், உயிர்போகும் வண்ணம், அவற்றின் உடலோடு தின்று தீர்க்கும்; பின்னர் ஓயாது ஒலிக்கும் அலைகளையுடைய ஏழு கடல்களையும், அவற்றில் வாழும் மீனினங் களோடும் சேர்த்துக் குடித்துவிடும்; வானத்தில் உள்ள மேகங்களை, அவற்றில்தோன்றும் இடியையும்கூடச் சேர்த்து விழுங்கிவிடும். இவைகளைக் கண்ட அறக்கடவுள், இந்நரசிங்கமூர்த்தியின் சினம் இப்போதைக்குச் சற்றும் அடங்காது என்று அச்சம் கொண்டு நடுங்கியது.

இங்கே 'அம்மா' என்பது வியப்புக் குறித்த இடைச்சொல் எனக் கொள்க. யானைப்படையும், குதிரைப்படையும் உயிர்போகும் வண்ணம் உடலோடு தின்று தீர்க்கும். இங்கே உயிரில்லாத தேர்ப்படையை உருக்குலையச் செய்யும் என்று பொருள் கொள்ள வேண்டும்.

Koviloor Digital Library

140. ஆழி மால்வரையொடு எற்றும் சிலவரை; அண்டகோளச்
சூழ் இரும்சுவரில் தேய்க்கும் சிலவரை; துளக்குஇல் குன்றம்
ஏழினொடு எற்றிக் கொல்லும் சிலவரை; எட்டுத்திக்கும்
தாழ் இருட் பிழம்பின் தேய்க்கும் சிலவரைத் தடக்கைதாக்கி. (6411)

(மால்-பெரிய; ஆழிவரை-சக்கரவாளமலை; எற்றுதல்-மோதித் தாக்குதல்; துளக்குதல்-அசைத்தல்; குன்றம்-குலமலைகள்; தடம்-பெரிய; தாழ்-நிறைந்த; பிழம்பு-தொகுதி)

அந்நரசிங்கமூர்த்தி, அவுணர்களிற் சிலரை பெரிய உலகினைச் சூழ்ந்துள்ள சக்கரவாள மலையில் எடுத்து மோதித்தாக்கிக் கொல்லும்; வேறு சிலரை இவ்வண்டகோளத்தைச் சுற்றியிருக்கும் சுவர்களில் சார்த்தி தேய்த்துக் கொல்லும்; மற்றும் சிலரை அசைக்கமுடியாத ஏழு மலைகளிலும் மோதித்தாக்கிக் கொல்லும்; இன்னும் சிலரை எட்டுத் திசைகளிலும் நிறைந்து பரவியிருக்கிற இருள் தொகுதியில், தள்ளி தன் பெரிய கைகளால் தாக்கிக் கொன்று தீர்க்கும்.

சக்கரவாளகிரி, அதன்சுவர், மலைகள், இருட்பிழம்பு இவற்றின் துணையோடு அவ்அசுரர்களைக் கொன்றநிலை கூறப்படுகிறது. ஏழு மலைகள்-கயிலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலம் இதோடு கந்தமாதனத்தையும் சேர்த்து அஷ்டகுல மலைகள் எனக்கூறுவது மரபு. சக்கரவாள கிரி என்பது, ஏழுதீவுகளையும் சூழ்ந்துள்ள ஏழுகடல்களுக்கும் அப்பால் கோட்டை போன்று அமைந்துள்ளதென்றும், இதனைச் சூழ்ந்து பெரும்புறக்கடல் அமைந்துள்ளது என்றும், அக்கடலுக்கு அப்பால் எட்டுத்திசைகளிலும் பேர்இருட்பிழம்பு சூழ்ந்து உள்ளது என்றும் கூறுதல் புராண வழக்கு. இதனை மணிமேகலை சக்கரவாளக் கோட்டம் உரைத்த காதையில் விரிவாகக் காணலாம். எனினும் இவையெல்லாம் புராணமரபில் வரும் கற்பனை இடங்கள் என்கிறது. பேராசிரியர் அ.ச.ஞா அவர்களை முதன்மைப் பதிப்பாசிரியராகக் கொண்டு, கோவை கம்பன் அறநிலை வெளியிட்ட கம்பராமாயண உரைநூல். இதுமேலும் அறிஞர்களின் ஆராய்ச்சிக்கு உரியது.

141. மலைகளின் புரண்டு வீழ, வள்உகிர் நுதியால், வாங்கி,
தலைகளைக் கிள்ளும்; அள்ளித் தழல் எழப்பிசையும்; தக்க
கொலைகளின் கொல்லும்; வாங்கி உயிர்களைக் குடிக்கும்; வான
நிலைகளில் பரக்க, வேலை நீர்களை நிரம்பத் தூர்க்கும். (6412)

(வாங்கி-பற்றிஇழுத்து; வள்-கூரிய; உகிர்-நகங்கள்; நுதி-முனை/நுனி; தழல்-தீப்பொறி; தக்க-உரிய; பரக்க-விரிந்துதோன்றுமாறு; வேலை-கடல்; கொலைகள்-கொலைத் தண்டனைகள்; தூர்த்தல்-மூடுதல்/அடைத்தல்/நிரப்புதல்)

Koviloor Digital Library

அவ்வாறு அந்நரசிங்க மூர்த்தியால் வீசியெறியப்பட்ட சில அசுரர்கள் மேலே மலைமீது முட்டிப் பின் தரையில் மலைபோலப் புரண்டு விழவும், அவற்றைத் தன்கூரிய நகங்களின் நுனியால் இழுத்துப்பறித்து அவற்றின் தலைகளைக் கொய்து எறியும்; சில அரக்கர்களது உடலை வாரியெடுத்து நெருப்புப் பறக்கும்படி தன்கைகளால் பிசைந்து அழிக்கும்; அவ்வரக்கர் களில் சிலருக்கு அவரவர்கள் செய்த கொடுமைக்கு ஏற்ப அவர்களுக்கு உரிய கொலைத்தண்டனையைத் தந்து கொல்லும்; சில அரக்கர்களது உடல்கள் சக்கையாய்க் கீழே துன்புற்றுக் கிடக்க, அவர்கள் உயிரை மட்டும் எடுத்துப் பருகும்; சில அரக்கர்களின் உடல்களை வானமண்டலம் போன்று அகன்று பரந்து இருக்கின்ற கடல் நீரில் போட்டுக் கடலையும் முழுவதும் மூடிவிடும்.

142. முப்புறத்து உலகத்துள்ளும் ஒழிவுஅற, முற்றும் பற்றி,
தப்புதல் இன்றிக் கொன்று, தையலார் கருவும் தள்ளி
இப்புறத்து அண்டத்து யாரும் அவுணர் இல்லாமை எற்றி,
அப்புறத்து அண்டம் தோறும் தடவின, சில கை அம்மா! (6413)

(ஒழிவுஅற-எஞ்சுதல்/மீதமில்லாமல்; பற்றி-பிடித்து; கரு-கர்ப்பம்; தள்ளி-சிதைத்து/அழித்து; எற்றி-தாக்கி; தடவுதல்-தேடுதல்)

மேல், நடு, கீழ் என்ற மூன்று உலகத்தில் இருக்கின்ற அசுரர்களில் ஒருவர்கூட மிஞ்சாதபடி, எல்லோரையும் பிடித்து, ஒருவர்கூட தப்பிக்க முடியாதபடி அவர்களைக் கொன்று, அவர்களின் அரக்கமாதர்களின் வயிற்றிலே சுமந்திருக்கின்ற கர்ப்பத்தையும் கலைத்து, இந்த உலக உருண் டையில் வேறு அவுணர் என்ற பேரே இல்லாது தாக்கி முடித்துவிட்டு, ஒருவேளை அப்புறத்து அண்டத்தில் யாரேனும் இருக்கலாமோ என்று கருதி, அந்நரசிங்க மூர்த்தியின் கைகள் அப்புறத்திருக்கும் அண்டத்திலும் தேடலாயின.

ஒருவரும் மிஞ்சக்கூடாது என்பதற்கு எவ்வளவு அழுத்தம் தருகிறார் பாருங்கள்; ஒழிவுஅற, முற்றும், தப்புதல் இன்றி தையலார் கருவும் தள்ளி, இப்புறத்து இறுதியில், அப்புறத்திலும் நீண்டு சென்று தடவின என்பதில் உள்ள நயம் உணர்க. 'அம்மா' என்பது இங்கே வியப்புக்குறித்த இடைச்சொல் எனக் கொள்க.

143. கனகனும் அவனில் வந்த, வானவர் களைகண் ஆன
அனகனும் ஒழிய, பல்வேறு அவுணர் ஆனவரை எல்லாம்,
நினைவதன் முன்னம் கொன்று நின்றது அந்நெடுங்கண் சீயம்;
வனைகழல் அவனும், மற்று அம்மடங்கலின் வரவு நோக்கி. (6414)

(கனகம்-பொன்; கனகன்-பொன்நிறத்தவன்/இரணியன்; களைகண்-பாதுகாவல்/பற்றுக்கோடு; ஒழிய-தவிர/நீங்கலாக; வனைதல்-புனைதல்/

Koviloor Digital Library

அலங்கரித்தல்; மடங்கல்-சிங்கம்; அனகன்-தூயோன்/குற்றமற்றவன்) (குளகப்பாடல்)

அந்த நீண்டபெரிய கண்களையுடைய நரசிங்கம், பொன்நிறத்தவனான இரணியனையும், அவன் வழிவந்தஅவனுடைய புதல்வனானவனும், தேவர்களுக்கெல்லாம் பாதுகாவலனானவனுமான குற்றமற்ற தூயோனுமான பிரகலாதனையும் தவிர்த்து மற்று பலவகைப்பட்ட அசுரர் என்று உள்ளவர்கள் எல்லோரையும், நினைப்பதற்கு முன்னே விரைந்து-ஒருநொடிப்பொழுதில் கொன்று குவித்துவிட்டுச் சும்மா நின்றது. அலங்கரிக்கப்பட்ட வீரக்கழலணிந்தவனான இரணியனும், இப்போது அந்த நரசிங்கம் தன்னை நோக்கி வருவதை எதிர்பார்த்து - பாடல் தொடர்கிறது.

'வானவர் களைகண்' என்று, தேவர்களுக்கெல்லாம் பற்றுக்கோடானவன், பாதுகாவலன் ஆனவன், ஆதாவாளன் என்று பிரகலாதனைச் சிறப்பித்ததை உணர்க. மேலும் அவனை 'அனகன்' குற்றமற்றவன்-தூயோன் என்று போற்றியதையும் கருதுக.

144. இரணியன் போருக்குத் தயாராய் நிற்றல்

வயிரவாள் உறையின் வாங்கி, வானகம் மறைக்கும் வட்டச்
செயிர்அறு கிடுகும் பற்றி, வானவர் உள்ளம்தீய,
அயிர் படர் வேலை ஏழும், மலைகளும் அஞ்ச, ஆர்த்து, அங்கு
உயிருடை மேரு என்ன, வாய்மடித்து, உருத்து நின்றான். (6415)

(வயிரம்-உறுதி/திண்மை; வாங்கி-எடுத்து; செயிர்-குற்றம்; கிடுகு-கேடகம்/கேடயம்; அயிர்-நுண்ணிய மணல்; வேலை-கடல்; உருத்து-சினந்து; படர்-பரந்த)

தன்னை நோக்கி வந்த நரசிங்கத்தைப் பார்த்து இரணியன், தன் உறுதியும், திண்மையும் வாய்ந்த வாட்படையை உறையினின்றும் எடுத்து, ஆகாயத்தையே மறைக்கின்ற அளவு பெரியதும், வட்டமானதுமான, குற்றமற்ற கேடயத்தையும் ஒரு கையில் பற்றிக்கொண்டு, தேவர்களெல்லாம் மனம் கரிந்து தீய்ந்துபோகவும், நுண்மணல் பரந்த ஏழு கடல்களும், எட்டுக்குல மலைகளும் அச்சம்கொண்டு நடுங்கவும், ஆரவாரம் செய்துகொண்டு, அங்கே உயிருடன் ஒரு மேருமலை எழுந்துவந்தது போலத் தன் வாயையும், உதட்டையும் மடித்து, மிக்கச்சினம் கொண்டு சீறி நின்றான்.

'வயிரவாள்' என்பது இந்திரனுடைய வச்சிராயுதத்தைப் போல் கூரியவாள் என்ற பொருள் தரும். 'உயிருடை மேரு' என்பது இல்பொருள் உவமை. 'செயிர்' என்பது குற்றம் என்று பொருள்படும். 'செயிர்தீர்ந்த பல்லின்வனப்பும்வனப்பல்ல; மாந்தர்க்குச்சொல்லின்வனப்பேவனப்பு' என்பது சிறுபஞ்சமூலம்.

Koviloor Digital Library

145. பிரகலாதன் அறிவுறுத்துதல்

நின்றவன் தன்னை நோக்கி, "நிலைகண்டு, நீயும்
ஒன்றும் உன் உள்ளத்து யாதும் உணர்ந்திலை போலும் அன்றே;
வன்தொழில் ஆழிவேந்தை வணங்குதி; வணங்கவே, உன்
புன்தொழில் பொறுக்கும்" என்றான்; உலகெலாம் புகழ நின்றான்.
(6416)

(ஒன்றும்-எதையும்; வன்-வலிய; ஆழி-சக்கரப்படை; புன்-புல்லிய/அற்பமான)

உலகத்து மக்கள் எல்லாம் போற்றித் துதிக்கும் புகழ்பெற்றவனான பிரகலாதன், நரசிங்கமூர்த்தியுடன்போர்செய்யத்தயாராய் நின்றதன்தந்தை இரணியனைப் பார்த்து, 'இந்நரசிங்கமூர்த்தியின் எங்கும் நிறைந்திருக்கின்ற நிலையை உன் கண்ணால் நேரில் கண்டும்கூட, நீ அதனைப் பற்றிச் சிறிதும் உணர்ந்து கொள்ளவில்லை போலும்; வலிய தொழிலையுடைய சக்கரப்படையைக் கையிலேந்திய தலைவனான திருமாலை இப்போதாவது வணங்கிக்கொள். அவ்வாறு நீ வணங்கிய உடனேயே, நீ இதுவரை செய்திருக்கும் அற்பமான செய்கைகளையெல்லாம் மன்னித்து, உனக்குப் பேரருள்புரிவான்' என்று அறிவுரை புகன்றான்.

'நிலை' என்பது இங்கே எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் நிலையையும், அரக்கர் பலரைக் கொன்று நின்ற நிலையையும் குறிக்கும் எனக் கொள்க. 'வன்தொழில்' என்பது இங்கே பகைவர்களை அழித்தலாகிய வலிய செய்கையைக் குறிக்கும். வில்லிபாரதத்திலும் இந்தக்காட்சி பேசப்படுகிறது கேளுங்கள். 'பின்னையும் அஞ்சி அயர்ந்திலன் நெஞ்சு; பெயர்ந்திலன் ஆசனமும்; சென்னியிலும் கரம் வைத்திலன்; வன் புகழ் சிறிதும் மொழிந்திலனே' என்பது கிருஷ்ணன் தூதுச் சருக்கம்.

146. இரணியன் நரசிங்கத்தை வணங்க மறுத்தல்

"கேள்இது; நீயும்காண, கிளர்ந்த கோள் அரியின் கேழ்இல்
தோளொடு தாளும் நீக்கி, நின்னையும் துணித்து, பின், என்,
வாளினைத் தொழுவதல்லால், வணங்குதல், மகளிர் ஊடல்
நாளினும் உளதோ?" என்னா, அண்டங்கள் நடுங்க நக்கான். (6417)

(கிளர்ந்த-பொங்கியெழுந்த; கேழ்-ஒப்பு; துணித்தல்-வெட்டுதல்; நகுதல்-சிரித்தல்; ஊடல்-புலவி/பிணக்கு; கோள்-கொல்லவல்ல/வலிய)

அவ்வாறு தனக்கு அறிவுரைகூறிய தன்மைந்தன் பிரகலாதனைநோக்கி, இரணியன், 'நான் கூறுவதையும் கேட்டுக்கொள்வாயாக! நீயும் மற்றவர்களுடன் இப்பொழுது உன் கண் எதிரே காண்பாயாக! சினத்தால் பொங்கியெழுந்த, கொலைத்தொழிலில் வல்ல இந்த நரசிங்கமூர்த்தியின்

Koviloor Digital Library

ஒப்பற்ற தோள்களையும், கால்களையும் துண்டித்துவிட்டு, உன்னையும் வெட்டி வீழ்த்திவிட்டு, பின்னர் இவ்வளவும் செய்து முடித்து வெற்றியைத் தந்த என்னுடைய வாட்படையை வணங்குவதல்லாமல், நான் பிறர் யாரையும் வணங்கமாட்டேன். எனது உரிமை மகளிரிடத்தும்கூட ஊடற்காலத்தில், ஊடலைத் தணிப்பதற்கு என்றுகூட நான் அவர்கள் காலில் விழுந்து வணங்கியதும் இல்லை' என்றுகூறி அண்டங்களெல்லாம் அதிர்ந்துபோகும்படி சிரித்தான்.

'நீயும்காண்' என்பது, தான் நரசிங்கமூர்த்தியின் தோளையும், தாளையும் வெட்டிவீழ்த்தப் போவதை நீயும் உன் கண்ணால் காணவேண்டும் என்ற கருத்தால் கூறியது என்க. அதனால்தான் 'நின்னையும் துணித்து' என்று பின்னர் கூறினார் என்க. இங்கே ஒன்று நோக்க வேண்டும். இரணியன் இங்கே நரசிங்க மூர்த்தியைக் கொன்றுவிடுவேன் என்று கூறவில்லை. தோளையும் தாளையும் நீக்குவேன் என்கிறான் என்பதை நன்கு உணர்க. பொதுவாக ஊடற்காலத்தில், ஊடலைத் தணிப்பதற்காகத் தலைவன் ஊடல்முதிர்ச்சியில் தலைவியின் செம்பஞ்சுக் குழம்பு ஊட்டப்பட்ட கால்களில் விழுந்து வணங்குவது அகத்துறையில் பெரிதும் பேசப்படுகிற கருத்து. அந்த நிலையிலும்கூடத் தான்தன் உரிமைமகளிரிடம் வணங்குவது இல்லை என்கிறான் இரணியன்.

முன்பு இராவணனும் இவ்வாறே கூறியதை இங்கே நினைவுகூர்க. 'வலியநெடும் புலவியினும் வணங்காத மகுடநிரை' என்பது ஆரண்ய காண்டம். 'எள்ளல், இளமை, பேதைமை, மடன், என்று உள்ளப்பட்ட நகை நான்கு என்ப' என்பது தொல்காப்பியம். இங்கே இது வீரத்தால் எடுத்த வெகுளியினால் ஆன சிரிப்பு எனக் கொள்க.

147. நரசிங்கம் இரணியன் மார்பைப் பிளத்தல் [8 பாடல்கள்]

நகைசெயா, வாயும் கையும், வாளொடு நடந்த தாளும்,
புகைசெயா, நெடுந்தீப் பொங்க உருத்து, எதிர்பொருந்தப் புக்கான்;
தொகை செய்தற்கரிய தோளால், தாள்களால், சுற்றிச் சூழ்ந்தான்;
மிகை செய்வார் வினைகட்கு எல்லாம் மேற்செய்யும் வினையம்
வல்லான். (6418)

(செயா-செய்து; உருத்து-வெகுண்டு; வினையம்-தந்திரம்/வஞ்சகம்/ சாமர்த்தியம்; சூழ்தல்-பிணித்தல்/பற்றுதல்/கட்டுதல்; மிகை-துன்பம்; தொகைசெய்தல்-எண்ணிக்கணக்கிடுதல்; வினை-செயல்)

அவ்வாறு இரணியன் சினத்தால் சிரித்துக்கொண்டு, தன்வாயி னின்றும், கைகளின்றும், கண்களினின்றும் நீண்ட தீப்பொறி பறந்து புகையைக் கக்கவும், தன் வாட்படையொடு விரைந்து நடந்துவந்த தாளும் கூடப் புகையைக் கக்கவும் மிகவும் சினந்து, அந்நரசிங்கமூர்த்தியுடன் போர்செய்வதற்காக அவன் அருகில் வந்தான். அப்போது, இவ்வாறு

Koviloor Digital Library

கொடிய வஞ்சனை செய்பவர்களாகிய அவுணர்களுக்கு எல்லாம் மேம் பட்டுத் தந்திரத்தால் தண்டனை அளிக்கும் சூழ்ச்சித் திறத்தில் வல்லவனான திருமால்-நரசிங்கமூர்த்தி, தன்னுடைய எண்ணுதற்கரிய மிகப் பலவாகிய கைகளாலும், கால்களாலும் அந்த இரணியனைச் சுற்றிப் பிணித்தான்.

'செயா' என்ற எதிர்மறைச் சொல் செய்து, தோற்றுவித்து என்று உடன் பாட்டுப்பொருளைத் தரும். அவனுடைய வாய், கை, தாள் முதலிய வற்றினின்றும் நெருப்புப் பொறி பறந்தது என்றால் அவன் சினத்தின் தன்மையை எளிதில் புரிந்துகொள்ளலாம் என்றாலும் திருமால், இவ்வாறு கொடுமை செய்பவர்களான தீயவர்களின் செயல்களுக்கெல்லாம் மேம்பட்ட சூழ்ச்சித்திறன் செய்வதில் வல்லவன், பொல்லாதவர் களுக்கும் பொல்லாதவன் என்பதுதான் 'மிகைசெய்வார் வினைகட் கெல்லாம் மேற்செய்யும் வினையம் வல்லான்' எனக்கூறப்பட்டது. 'மிகை' என்பது மிக்கவை என்று பொருள் தரும். அவை இரணியனால் செய்யப்பட்டதால் கொடிய செயல் எனும் பொருள்கொள்ளப்பட்டது. 'மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தான்தன் தகுதியால் வென்றுவிடல்' என்ற இடத்து (குறள் 158) 'மிக்கவை' என்ற சொல்லுக்கு 'மிகுதியான தீமைகளை' என்ற பரிமேலழகரின் குறிப்பும் இங்கு கருதத்தக்கது.

148. இருவரும் பொருந்தப் பற்றி, எவ்வுலகுக்கும் மேலாய்,
ஒருவரும் காணா வண்ணம், உயர்ந்ததற்கு உவமை கூறின்,
வெருவரும் தோற்றத்து, அஞ்சா, வெஞ்சின, அவுணன் மேரு
அருவரை ஒத்தான்; அண்ணல் அல்லவையெல்லாம் ஒத்தான். (6419)

(பொருந்த-இறுக; பற்றி-பிடித்து; வெருவருதல்-அஞ்சுதல்; வெஞ்சினம்-கொடியகோபம்; அரு-அரிய; அண்ணல்-இறைவன்; அல்லவை-அஃது அல்லாத)

இவ்வாறு இவர்கள் இருவரும் ஒருவரையொருவர் இறுகப்பிடித்துக் கொண்டு எல்லா உலகங்களுக்கும் மேலே நின்றுகொண்டு, உலகில் உள்ள ஒருவரும் காணமுடியாதபடி உயர்ந்து ஓங்கி நின்ற தோற்றத்திற்கு ஒரு உவமைகூற வேண்டுமென்றால், கண்டவர் எல்லாம் இயற்கையாகவே அஞ்சக்கூடிய தோற்றத்தை உடையவனும், எதற்கும் அஞ்சாத கொடிய சீற்றத்தை உடையவனுமான அவுணனாகிய இரணியன், பூமியின் நடுவில் நின்றிருக்கும் உயர்ந்த அரிய பொன்மயமான மேருமலையைப் போன்று தோற்றமளித்தான். அவனைப் பற்றியிருந்த இறைவனாகிய திருமாலோ, அம்மேருமலையைச் சுற்றிச்சூழ்ந்திருக்கும் அவையல்லாத ஏனைய மலைகளையும், கடல்களையும் அண்டங்களையும் போலத் தோன்றினான்.

மேருமலை பொன்னிறமானது. எனவே இரணியனுக்கு ஒப்புக்கூறப் பட்டது. அஃதல்லாத ஏனைய மலைகள் என்பது அதனைச் சுற்றியுள்ள

Koviloor Digital Library

குலபர்வதங்களும், சக்கரவாளகிரியுமாகிய எல்லாவற்றையும் குறித்து நின்றது. பிணிக்கப்பட்டவன் மேருமலை எனவும், பிணித்தவள் ஏனைய மலைகளும் கடல்களும் என்று உவமிக்கப்பட்ட நயத்தை உணர்க.

149. ஆர்ப்புஒலி முழக்கின், வெவ்வாய், வள்உகிர்ப் பாரம் ஆன்ற
ஏற்று அரும்கரத்தின், பல்வேறு எறிதிரைப் பரப்பின், உற்ற
பாற்கடல் பரந்து பொங்கி, பங்கயத்து ஒருவன் நாட்டின்,
மேற்சென்றது ஒத்தான் மாயன்; கனகனும் மேரு ஒத்தான். (6420)

(வெம்-வெம்மையான; வாய்-விளிம்பு/நுனி; வள்உகிர்-கூரிய நகங்கள்; பாரம்-சுமை; ஆன்ற-நிறைந்த; ஏற்றுஅரும்-பொறுத்தற்கு அரிய; எறிதல்-மோதுதல்; பங்கயம்-தாமரைமலர்; ஒருவன்-ஒப்பற்றவன்; மாயன்-இறைவன்/நரசிங்கமூர்த்தி; கனகன்-பொன்நிறத்தவன்/ இரணியன்; முழக்கு-ஒலி)

நரசிங்கமூர்த்தியாகிய திருமால், தான் எழுப்பி வருகின்ற போரொலி யின் முழக்கத்தாலும் தனது கொடிய நுனியையுடைய வலிமையான நகங்களின் சுமைகள் நிறைந்த எண்ணற்ற கைகளையுடையதாலும் பொறுத்தற்கரிய பலவகைப்பட்ட, மோதும் அலைகளையுடைய பாற்கடலின் வரப்பில் பொங்கிஎழுந்த தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமதேவனது இருப்பிடமாகிய சத்தியலோகத்திற்கு மேலும் உயர்ந்து சென்றதைப் போன்று தோன்றினான். பொன்னிறமான அவுணன் இரணியன் அப்பாற்கடலின் நடுவில் அகப்பட்டுக் கொண்ட மேரு மலையைப் போல் தோற்றமளித்தான்.

நரசிங்கப் பெருமானின் பெருமுழக்கத்திற்கு, கடலின் அலைகளின் ஆரவார ஓசையும், அவரின் அளவிடற்கரிய கைகளின் தொகுதிக்கு, கடலின் அலைகளும் உவமை. மயன்-திருமால்-வெண்ணிறத்தவன் என்பதும், அவுணன்-இரணியன் பொன்நிறத்தவன் என்பதும் பெறப் படுகிறது.

150. வாளொடு தோளும், கையும், மகுடமும், மலரோன் வைத்த
நீள் இரும் கனகமுட்டை நெடும்சுவர் தேய்ப்ப, நேமி
கோளொடும் திரிவது என்ன குலமணிக் கொடும்பூண் மின்ன,
தாள்இணை இரண்டும் பற்றிச் சுழற்றினன் தடக்கை ஒன்றால். (6421)

(மகுடம்-முடி/கிரீடம்; மலரோன்-பிரமன்; இரும்-பெரிய; கனகம்-ஆகாயம்; முட்டை-அண்டப்பரப்பு; நேமி-வட்டம்/ஒளிமண்டலம்; கோள்-கிரகங்கள்; திரிவது-சுழல்வது; குலம்-உயர்ச்சி/சிறப்பு; பூண்-அணிகலன்கள்; கொடும்-வளைந்த; கொடுமை-வளைவு; தடம்-பெரிய; வைத்த-படைக்கப்பட்ட)

Koviloor Digital Library

அந்நரசிங்கமூர்த்தி, இரணியன் கொண்டிருந்த வாட்படையையும், அவனது தோள்கள், கைகள் மணிமுடி முதலியவற்றையெல்லாம், தாமரை மலரில் வீற்றிருக்கும், பிரமதேவனால் படைக்கப்பட்ட நீண்டபெரிய ஆகாயத்திற்கும் அப்பால் உள்ள அண்டகோளகையின் நீண்ட சுவரின்மீது, உராயும்படியும், ஒளிமண்டலத்தில் சூரியனோடு, மற்ற கிரகங்கள் எல்லாமும் சுற்றிச்சுற்றி வருவதுபோல, உயர்ந்த, சிறந்த நவரத்தினங்கள் பதிக்கப்பெற்ற வளைவுடன் கூடிய ஆபரணங்கள் ஒளிவிட்டுப் பிரகாசிக்கவும், அவனது ஒன்றோடு ஒன்று இணைந்த இரண்டு கால்களையும், தன்னுடைய ஒரு பெரியகையினால் பிடித்துச் சுழற்றலாயினான்.

'கொடும்பூண்' என்ற சொற்றொடர் கருதத்தக்கது. பொதுவாக எந்த அணிகலனும் கொடுமை பெற்றிருப்பதில்லை. காரணம் அவை நிலைத்திணைப் பொருள். எனவே இங்கே கொடும்பூண் என்பது, அதை அணிந்திருக்கின்ற கொடுமையான இயல்பு படைத்த அசுரனான இரணியனைக் குறித்து நின்றது எனக் கொள்ளவேண்டும்.

151. சுழற்றிய காலத்து, இற்ற தூங்கு குண்டலங்கள் நீங்கி,
கிழக்கொடு மேற்கும் ஓடி விழுந்தன கிடந்த, இன்றும்
அழல்தரு கதிரோன் தோன்றும் உதயத்தோடு அத்தம் ஆன;
நிழல்தரும், காலைமாலை, நெடுமணிச் சுடரின் நீத்தம் (6422)

(தூங்குதல்-தொங்குதல்; அழல்-வெம்மை; சுடர்-கதிர்க்கற்றை; நீத்தம்-வெள்ளம்; நிழல்-ஒளி; இற்ற-விழுந்த; நீங்கி-கழன்று; கதிரோன்-சூரியன்; நெடு-சிறந்த)

அவ்வாறு அந்நரசிங்கப் பெருமான் இரணியன் காலைப்பிடித்துச் சுழற்றியபோது, அந்தவேகத்தில் அவன் காதுகளில் தொங்கிக் கொண்டிருந்த குண்டலங்கள் இற்றுப்போய்க்கழன்று தெற்குப்பக்கமும், மேற்குப்பக்கமும் ஒவ்வொன்றாக நெடுந்தூரம் ஓடிப்போய் விழுந்து கிடந்தன. அவைதான் இன்றும், வெம்மையைத் தரும் சூரியன் உதிக்கின்ற உதயகிரியென்றும், அவன் மறைகின்ற அஸ்தமன கிரியென்றும் வழங்கப்பட்டு வருகின்றன. அந்தக் குண்டலங்களில் பதிக்கப்பெற்றிருந்த மாணிக்க மணிகளின் சிறந்த ஒளிவெள்ளம்தான் இப்போது காலையிலும், மாலையிலும் கிழக்கிலும், மேற்கிலும் ஒளிவிட்டுச் செவ்வானமாய்ப் பிரகாசிக்கின்றன. காரணம் இரணியனின் காதணிகளின் பதிக்கப்பட்டிருந்த மாணிக்கக் கற்களின் ஒளிச்சுடரே என்கிறான் கவிஞன்.

இயற்கையாக நிகழ்கின்ற ஒரு நிகழ்ச்சியின் மேல் கவிஞன் தன்னுடைய கற்பனைத் திறனை ஏற்றிப்பாடியிருப்பதால் இது தற்குறிப்பு ஏற்ற அணி எனக் கொள்க. இரணியன் அணிந்திருந்த குண்டலங்களின் வடிவப்பெருமையும், ஒளிச்சிறப்பும் பேசப்பட்டன என்க.

Koviloor Digital Library

152. "போன்றன இனையதன்மை; பொருவியது இனையது" என்று
தான் தனி ஒருவன், தன்னை உரைசெயும் தரத்தினானோ?
வான் தருவள்ளல் வெள்ளை வள் உகிர் வயிர மார்பின்
ஊன்றலும், உதிரவெள்ளம் பரந்துளது, உலகம் எங்கும். (6423)

(ஒருவன்-ஒப்பற்றவன்/ஏகன்; தரம்-இயல்பு; பொருவுதல்-ஒப்பிட்டுரைத்தல்; வான்தருதல்-சுவர்க்கம் ஏற்றுதல்/பரமபதம் தருதல்; வள்உகிர்-கூரியநகங்கள்; உதிரம்-இரத்தம்; இனையது-இப்படிப்பட்டது)

''இவன் இப்படிப்பட்டவன்; இவனது இயல்புகள் இன்னாரின் இயல்புகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் தன்மையன்'' என்று கூறமுடியாத அளவு, தான் தனி ஒருவனாக, தனக்குவமை இல்லாத ஒப்பற்றவனாக விளங்குபவன் யாரோடும் ஒப்பிட்டுச் சொல்லும் தன்மையனோ அல்ல; தன்னைப் பற்றிய தன் மெய்யடியார்களுக்கு அவனே வந்து பரமபதம் அருளுகின்ற வள்ளன்மையுடையவனாகிய இறைவன், தன்னுடைய வெள்ளை நிறம் கொண்ட கூரிய நகங்களை, வயிரம் பாய்ந்த உறுதியான இரணியனது மார்பில் ஊன்றியவுடன், அவனது மார்பிலிருந்து பீறிட்டுக் கொண்டு வந்த இரத்தவெள்ளம், இவ்வுலகெங்கும் பரவியது.

''தாமோதரனை, தனிமுதல்வனை, ஞானம் உண்டவனை, ஆமோதரம் அறிய ஒருவர்க்கு?'' என்ற நம்மாழ்வார் திருவாய்மொழியும் 'சரணமாகும் தன் தாள் அடைந்தார்க்கெல்லாம், மரணமான வைகுந்தம் கொடுக்கும் பிரான்' என்ற திருவாய்மொழியும் இங்கு ஒப்பு நோக்கத்தகும்.

'வான்' என்பது 'இருவினை ஒப்பும் மலபரிபாகம் கண்ட ஞானிகள் இறுதியில் சென்றடையும். மீளாக்கதி என்ற வீடு' என்க. 'தான்தனி ஒருவன்' என்பது, ஒன்றிலும், தோய்வின்றி, எதிலும் பற்றற்று, தான் தனிப்பட்டு விளங்கும் ஏகனாகிய இறைவன் என்பது விரிந்த பொருள்.

153. இரணியன் கொல்லப்படுதல்.

ஆயவன் தன்னை, மாயன், அந்தியின், அவன்பொன்கோயில்
வாயிலின், மணிக் கவான் மேல், வயிரவாள், உகிரின் வாயின்,
மீ எழு குருதி பொங்க, வெயில் விரி வயிர மார்பு
தீ எழப் பிளந்து நீக்கி, தேவர்கள் இடுக்கண் தீர்த்தான். (6424)

(கோயில்-அரண்மனை; வாயில்-வாயிற்படி; மணி-அழகு; கவான்-தொடை/மடி; விரி-வீசுகின்ற; மீ-மேல்; இடுக்கண்-துன்பம்; வாய்-முனை/நுனி)

வியக்கத்தக்க பேராற்றல் உடைய மாயனான இறைவன், அப்படிப் பட்ட தன்மைவாய்ந்த இரணியனை, மாலையும் இரவும் சந்திக்கும் அந்திப்போதில், அவனுடைய அழகிய அரண்மனையின் வாயிற்படியில்

Koviloor Digital Library

தனது அழகிய மடியாகிய தொடையில் வைத்து வயிரம் போன்ற உறுதி யான வலிமைமிக்க நகத்தின் நுனியினால், இரணியனுடைய ஒளிவீசும் திண்ணிய மார்பினின்றும் நெருப்புப் பொறிபறக்கும்படி பிளந்து, அதனால் குருதி மேல்எழுந்து பீறிட்டுப் பாயவும், அவனது உடலை இருகூறாகப் பிளந்து, கொன்று அவன் இதுவரை தேவர்களுக்குச் செய்துவந்த துன்பங்களையெல்லாம் தீர்த்தருளினான்.

வியக்கத்தக்க பேராற்றல் உடையவன் ஆதலாலும், இரணியன் பெற்ற வரங்களுக்கு எல்லாம் எந்த ஊறும் ஏற்படாதவாறு சாமர்த்தியமாக அவனைக் கொன்றான் ஆதலாலும், இறைவன் இங்கே 'மாயன்' எனப்பட்டான் என்க. இரணியன் பிரமனிடம் பெற்றவரம் 1.இரவு, பகல் என்னும் இரு பொழுதிலும், 2.உள்ளும், புறமும் ஆகிய இரு இடங் களிலும், 3.பூமியிலும், ஆகாயத்திலும், 4.ஈரமுடைய உறுப்புகளாலும், ஈரமற்ற படைக்கலன்களாலும், 5.பறவை, விலங்கு, மனிதர், தேவர் அரக்கர்கள் தன்னை யாரும் கொல்லக்கூடாது என்பது. இதற்கு எந்த இடையூறும் இல்லாதவண்ணம், நரசிங்கப்பெருமான், மக்கள் வடிவும், விலங்குவடிவும் இல்லாத நரசிங்க வடிவம் மேற்கொண்டான். இரவும் பகலும் இல்லாத அந்திப் பொழுதில் அரண்மனையின் உள்ளும் புறமும் இல்லாத வாயிற்படியில், பூமியும் ஆகாயமும் அல்லாத தனது மடியின்மீது வைத்து, ஈரமுடையதும், ஈரம் அற்றதும் அல்லாத தன் நகத்தின் நுனியினால் அவனது மார்பினைப் பிளந்து கொன்றான் என்க. 'நள்ளிற் சாகிலன், நடுப்பகல் சாகிலன் (அந்திப்போது) உள்ளிற்சாகிலன், புறத்தினும் உலக்கிலன் (பொற்கோயில் வாயில்) மண்ணிற் சாகிலன் வானினும் சாகிலன் (மணிக் கவான்மேலே) கொள்ளைத் தெய்வவான் படைக்கலம் யாவையும் கொல்லா (உகிரின்வாய்)

154. தேவர்கள் இதனைக் கண்டு அஞ்சி ஒடுங்கி நிற்றல்

முக்கணான், எண்கணானும், முளரிஆயிரம் கணானும்,
திக்கண் ஆம் தேவரோடு முனிவரும்; பிறரும், தேடிப்
புக்கநாடு அறிகுறாமல் திரிகின்றார் புகுந்து மொய்த்தார்;
'எக்கணால் காணும் எந்தை உருவம்?' என்று இரங்கி நின்றார். (6425)

(முளரி-தாமரைமலர்; மொய்த்தல்-நெருங்கிச்சூழ்தல்/திரண்டு நிற்றல்)

மூன்று கண்களையுடைய சிவபெருமானும், எட்டுக்கண்களையுடைய பிரமதேவனும், தாமரை மலர்போன்ற ஆயிரம் கண்களையுடைய தேவேந்திரனும், எட்டுத்திக்குகளையும் காவல் செய்யும் திக்குபாலகர் களாகிய தேவர்களும், முனிவர்களும், திசைகள்தோறும் சென்று திரிகின்ற மற்றதேவர்களும் எல்லோரும், நரசிங்கப்பெருமான் நின்ற நிலைக்குப் பயந்து அஞ்சி, தாம் எந்த நாட்டிற்கு, எந்த இடத்திற்குப்போகிறோம், தாம்

Koviloor Digital Library

எந்த இடத்தில் இருக்கிறோம் என்பதே பிறர் அறியாவண்ணம் பதுங்கி வாழ்ந்து இருந்தவர்கள் எல்லாம், இப்பொழுது, நரசிங்கப்பெருமாள் இரணியனை அழித்து ஒழித்தான் என்பது தெரிந்தவுடன், இங்கு ஒருசேரத் திரண்டு நெருங்கிச் சூழ்ந்துகொண்டு, 'எல்லாம்வல்ல எம்பெருமானின் இந்தத் திருஉருவத்தை நரசிங்க வடிவத்தை எந்தக் கண்ணைக்கொண்டு காணமுடியும்?' என்று தமது செயலற்ற நிலையை எண்ணி வருந்தி நிற்பாராயினர்.

இந்திரன் ஆயிரம் கண் படைத்தவன் என்பது நாம் முன்பு பாலகாண்டத்தில் அகலிகைப் படலத்தில் அறிந்ததே. இரணியன் செய்த கொடுமைகளைத் தாங்கமுடியாது தேவர்கள் பற்பல இடங்களில் சென்று திரிந்து வாழ்ந்தனர் என்பது பெறப்படுகிறது.

155. நோக்கினார் நோக்கினார் முன், நோக்குறு முகமும் கையும்,
ஆக்கையும் தாளும் ஆகி, எங்கணும் தானே ஆகி,
வாக்கினால், மனத்தினால், மற்று அறிவினால், அளக்கவாரா,
மேக்குஉயர் சீயம் தன்னைக் கண்டனர், வெருவுகின்றார். (6426)

(ஆக்கை-யாக்கை/திருமேனி; அறிவு-மெஞ்ஞானம்/ஆன்மபோதம்; வாரா-இயலாத/அகப்படாத; மேக்கு-மேலே/மேம்பட்டு; சீயம்-சிங்கம்/நரசிங்கம்; வெருவுதல்-அஞ்சுதல்; நோக்குதல்-பார்த்து; மனம்-எண்ணம்)

அவ்வாறு ஒன்று திரண்டு நின்ற தேவர்கள் அவ்வுருவத்தைப் பார்த்துப் பார்த்து நின்றார்கள். அவ்வாறு பார்ப்பவர்கள் முன் தனித்தனியே காட்சி தந்தும், எண்ணற்ற முகங்களும், கைகளும், திருமேனியும், திருவடிகளும் கொண்டு, எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருப்பவனான நரசிங்கப் பெருமான். அவன் உருவை, தங்கள் சொற்களாலும், எண்ணங்களாலும், மற்ற நல் அறிவுத்திறத்தாலும் கூட அளந்தறிய இயலாதபடி, மேன்மேலே உயர்ந்து நிமிர்ந்து நிற்கின்ற பேருருக் கொண்ட அச்சிங்கத்தினைக் கண்டவர்கள் பெரிதும் அச்சம் கொண்டு செயலற்று நின்றனர்.

முன் பாடலில் காணமுடியவில்லையே என்று வருந்தினர். இப் பாடலில் அவன்தந்த தோற்றம் கண்டும், அது அச்சம் தருவதாயிருந்ததால், அஞ்சி நின்றனர் என்க. இறைவனுடைய நிலையை, 'வாக்கினால், மனத்தினால், அறிவினால் அளக்கவாரா மேக்குயர் சீயம்' என்றும், பின்னர் 'எங்கணும் தானேயாகி' என்றும் கூறினார் என்க. 'அறிவு' என்பது இங்கே மெய்ஞ்ஞானத்தை, மெய்யுணர்வை, ஆன்மபோதத்தைக் குறிக்கும் என்க. அவனது பெருமை வாக்கினால் சொல்லவும், மனத்தால் எண்ணவும், ஆன்மபோதத்தால் உய்த்துணரவும் இயலாது என்பது கருத்து.

Koviloor Digital Library

156. பிரமன் துதி [5 பாடல்கள்]

பல்லொடு பல்லுக்கு எல்லை ஆயிரக் காதப்பத்தி,
சொல்லிய வதனம் கோடிகோடி மேல்விளங்கித் தோன்ற,
எல்லைஇல் உருவிற்றுஆகி, இருந்ததை எதிரநோக்கி,
அல்லிஅம் கமலத்து அண்ணல், அவன்புகழ் விரிப்பதானான். (6427)

(பத்தி-தூரம்/இடைவெளி; வதனம்-முகம்; அல்லி-அகஇதழ்கள்; எதிர-நேராக)

அவ்வாறு தோற்றமளித்த நரசிங்கப்பெருமானது ஒரு பல்லுக்கும் மற்றொரு பல்லுக்கும் இருந்த இடைவெளி ஆயிரம் காத தூரமாகும். அவ்வாறு சொல்லப்பட்ட அவனது முகமோ, கோடியைக் கோடியால் பெருக்கிய அளவுக்குமேலே அளவுடையதாக ஒளிவிட்டுப் பிரகாசமாய்த் தோன்றியது. அந்த எல்லையற்ற உருவத்தை நேருக்குநேராக தரிசித்த, அக இதழ்களையுடைய அழகிய தாமரை மலரில் தோன்றியவனான பிரம தேவன், அப்பெரியோனாகிய நரசிங்கப்பெருமானது பெருமையையும், சிறப்பையும், புகழையும், விளக்கமாக விரிவாகப் பேசித் துதிக்கத் தொடங்கினான்.

'பல்லொடு பல்லுக்கு எல்லை ஆயிரம் காதம் தூரம்; வதனம் கோடி கோடிமேல் விளங்கித்' தோன்றியது என்றால் அந்த முழு உருவத்தின் எல்லையின் பரப்பை நாம் ஊகித்துத்தான் உணர்ந்து கொள்ளவேண்டும் என்க. 'எதிர்நோக்குதல்' என்பது நேருக்குநேர் பார்த்தல் என்ற பொருளில் 'திவ்யதரிசனம்' என்று கூறப்படுகிறது.

157. "தன்னைப் படைத்ததுவும், தானே எனும் தன்மை,
பின்னைப் படைத்ததுவே காட்டும்; பெரும்பெருமை
உன்னைப் படைத்தாய் நீ என்றால், உயிர்படைப்பான்
என்னைப் படைத்தாய் நீ எனும் இதுவும் ஏத்து ஆமோ?" (6428)

(படைப்பான்-படைத்தற்பொருட்டு/படைப்பதற்காக; ஏத்து-புகழுரை/துதி)

''எல்லாம் வல்ல பரம்பொருள் தொடக்கத்தில் தன்னைத்தானே உண்டாக்கிக் கொண்டது என்பது வேதம். இந்த உண்மையை இப்போது நீயே உன் இச்சையினாலேயே இத்தூணிடத்தில் இந்த நரசிங்கமூர்த்தி யாகப் படைத்துக்கொண்டதே சான்றாகும். இந்தப் பெரிய பிரபஞ்சத்தை யும் நீயேதான் படைத்தாய் என்றால், அதிலுள்ள உயிரினங்களை உண்டாக்குவதற்காக என்னை நீ படைத்தாய் என்று உன்னைத் துதிப்பதும் உள்ளவாறு உணர்ந்துபோற்றிய ஒருபுகழுரையாகுமோ?'' என்று கேட்கிறான் பிரமதேவன்.

Koviloor Digital Library

இவ்வுலகம் முழுவதும் பரம்பொருளிடத்திருந்தே தோன்றியது என்பதை ஒரு அருமையான பரிபாடல் பாடல் கூறுகிறது கேளுங்கள். ''தீ, வளி, விசும்பு, நிலம், நீர், ஐந்து, ஞாயிறும் திங்களும், ஐவரும், திதியின் சிறாரும், விதியின்மக்களும், மாசில் எண்மரும், பதினொரு கபிலரும், தாமா இருவரும், தருமனும், மடங்கலும், மூஏழ் உலகமும், உலகினுள் மன்பதும், மாயோய் நின்வயிற் பரந்தவை உரைத்தேம் மாயாவாய்மொழி உரைதல வலந்து'' என்பது பாடல்பகுதி.

158. "பல்லாயிர கோடி அண்டம், பனிக்கடலுள்,
நில்லாத மொக்குள் என, தோன்றுமால் நின்னுழையே;
எல்லா உருவமுமாய் நின்றக்கால், இவ்வுருவம்
வல்லே படைத்தால், வரம்பின்மை வாராதோ?" (6429)

(பனி-குளிர்ச்சி; நில்லாத-நிலையற்ற; மொக்குள்-நீர்க்குமிழி; நின்னுழை-நின்னிடம்; என்றக்கால்-என்றுகூறும் பொழுது; வல்லே-விரைந்து)

''பல ஆயிரக்கணக்கான அண்டங்கள் எல்லாமும் குளிர்ச்சி பொருந்திய கடலுள் தோன்றி உடனே அழியும், நிலைபெற்று நிற்காத நீர்க்குமிழி போன்று உயிரினங்கள் உன்னிடத்திருந்தே உற்பவிக்கப்படுகின்றன. அவ்வாறு இவ்வண்டங்களிலுள்ள எல்லா உருவமுமாய் நீ இருக்கும் போது, இப்போது ஒரு புதிய - நியதிக்கு மாறான - வேறுபட்ட எல்லா வற்றையும் அழிக்கவல்லதான இந்த உருவமாகிய நரசிங்க வடிவத்தை நீயே விரைந்து படைத்துக்கொண்டால், படைப்புத்தொழிலில் நீ வரம்புமீறி விட்டாய் என்ற ஒரு குற்றம் உன்னை வந்து அடையாதோ?'' என்று கேட்கிறான் பிரமன்.

இவ்வுலக வாழ்க்கை நீர்க்குமிழி போன்றது என்பது எல்லா இதிகாசங் களும், புராணங்களும், காப்பியங்களும், காவியங்களும் கூறுகிற ஒரு நியதி. 'பல்லாயிர அண்டங்கள்' என்பது 'நூற்று ஒரு கோடியின் மேற்பட்ட விரிவன' என்ற திருவாசகத்தாலும் உணரலாம். இறைவன் படைப்புக்கள் நியதிமாறாமல் இயங்குவன. 'வாராதோ' என்பதில் உள்ள ஓகாரம் உடன்பாட்டுப்பொருளில் வாராது என்ற பொருளைத்தரும். வாழ்க்கை நிலையாமைக்கு நீர்க்குமிழியை உவமை கூறுவது கவிமரபு. 'நீரில் குமிழி இளமை; நெடும் செல்வம், நீரிற்சுருட்டும் நெடுந்திரைகள்' என்பது நீதிநெறி விளக்கம்; வரம்பின்மை என்பது இறைவனின் எட்டுவகையான குணங்களுள் ஒன்று. 'எண்குணத்தான்' என்பார் வள்ளுவர். உயிரினங்கள் தோன்றுவதும், ஒடுங்குவதும் அவனிடமே என்பதை உணர்க. இதனைப் பட்டினத்தடிகளின் வாயிலாகக் கேளுங்கள். 'நுரையும் திரையும், நொட்புறுகொட்பும், வரைஇல் சீகரவாரியும், குரைகடல்பெருத்தும் சிறுத்தும், பிறங்குவ தோன்றி, எண்ணிலவாகி, இருங்கடல் அடங்கும் தன்மைபோல சராசரம்அனைத்தும் நின்னிடைத் தோன்றி நின்னிடை

Koviloor Digital Library

அடங்கும்; நீ ஒன்றினும் தோன்றாய்; ஒன்றினும் அடங்காய்' என்பது பட்டினத்தடிகளின் கோயில் நான்மணிமாலை.

159. "பேரை ஒருபொருட்கே பல்வகையால் பேர்த்து எண்ணும்
தாரை நிலையை; தமியை; பிறர்இல்லை;
யாரைப் படைக்கின்றது? யாரை அளிக்கின்றது?
ஆரைத் துடைக்கின்றது? ஐயா! அறியேமால்!" (6430)

(தாரை-ஒழுங்கு/தொடர்ச்சி; பேர்த்து-மாற்றி; தமியை-தனித் துள்ளாய்; அளித்தல்-காத்தல்; துடைத்தல்-அழித்தல்)

''ஐயனே! நீயாகிய ஒரு பரம்பொருளுக்கே அவ்வவற்றின் தொழில் கருதி அயன், அரி, அரன் என்று பலவிதமான பெயர்களைக் கூறிக் கொள்ளும் ஒரு ஒழுங்கான தொடர்ச்சி நிலை உள்ளவன் நீ. உனக்கு ஒப்பாரும் ஒருவரும் இல்லை. உன்னை மிக்காரும் ஒருவரும் இல்லை. நீ தனித்தன்மை பெற்ற ஒப்பற்றவன். முழுமுதற்பொருள். இந்நிலையில் இவ்வண்டம் முழுவதும் நீயாகவே இருக்க நீ யாரைப் படைக்கிறாய்? யாரைக் காப்பாற்றுகிறாய்? யாரை அழிக்க எண்ணுகிறாய்? உன்னுடைய இத்தன்மையை எங்களால் அறிந்துகொள்ள முடியவில்லையே?'' என்று ஏங்குகிறான் பிரமன்.

''ஆதிப்பிரமனும், அணிமணிவண்ணனும், ஆதிக்கமலத்து அலர்மிசை யானும், சோதிக்கில், மூன்றும் தொடர்ச்சியில் ஒன்று'' என்பது திருமந்திரம். 'ஆக்குமாறு அயனாம்; முதல் ஆக்கிய உலகம் காக்குமாறு செங்கண்இறை; கருணையங்கடலாம்; வீக்குமாறு அரனாம், அவை வீந்த நாள் மீளப்பூக்கும் மாமுதல்எவன்? அவன் பொன்னடிபோற்றி' என்ற வில்லிபாரதத்துக்கடவுள்வாழ்த்துப் பாடலும் இங்கு ஒப்பு நோக்கத்தகும். 'ஒரு நாமம், ஓர் உருவம், ஒன்றும் இல்லார்க்கு, ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டோமோ?' என்பது திருவாசகம்.

160. "நின்னுளே என்னை நிருமித்தாய்; நின்அருளால்,
என்னுளே, எப்பொருளும், யாவரையும் யான் ஈன்றேன்,
பின்இலேன், முன்இலேன், எந்தை பெருமானே!
பொன்னுளே தோன்றியது ஓர் பொற்கலனே போல்கின்றேன்" (6431)

(நிருமித்தல்-தோற்றுவித்தல்; ஈன்றேன்-படைத்தேன்; கலன்-அணி கலன்)

''என்தந்தையே! தலைவனே! உன்னிலிருந்து நீதான் என்னைத் தோற்று வித்தாய். உன்னுடைய பேரருளினால்தான் நான் என்னிடத்திலிருந்து இயங்குதிணைப் பொருள்களாகிய உயிரினங்களையும் நிலைத்திணைப் பொருள்களையும் படைத்தேன்; எனவே எனக்கு உன்னையன்றி வேறு தனியான ஆதி காரணமும் இல்லை; எனக்குப் பின்னால் ஆகக்கூடிய

Koviloor Digital Library

காரியமும் உன்னையன்றி வேறில்லை; உன்னிலிருந்து தோன்றிய நான் பொன்னிலிருந்து உண்டாக்கப்பட்ட ஒரு நல்லபொன் அணிகலன் போல நின்னிற் பிரியாமல்தான் இருக்கிறேன்'' என்று பிரமதேவன் துதித்து முடிக்கிறான்.

இறைவனுக்கும் உயிரினங்களுக்கும் உள்ள தொடர்பு பொன்னுக்கும், அதனால் செய்யப்பட்ட அணிகலனுக்கும் உள்ள தொடர்புதான் என்பது பேசப்படுகிறது. இதனை ''அபேத சம்பந்தம்'' என்பர் வடநூலார். பேதமற்ற-வேறுபாடற்றதொடர்பு என்பது தமிழாக்கம்.

161. நரசிங்கப் பெருமான் சீற்றம் தணிதல்

என்று ஆங்கு இயம்பி, இமையாத எண் கணனும்,
வன்தாள் மழுவோனும், யாரும், வணங்கினரால்,
நின்றார் இருமருங்கும்; நேயிப்பெருமானும்
ஒன்றாத சீற்றத்தை உள்ளே ஒடுக்கினான். (6432)

(இயம்பி-துதித்து; வன்-வலிய; மருங்கு-பக்கம்; நேமி-சக்கரப்படை; ஒன்றாத-அடக்குதற்கரிய; ஒன்றுதல்-ஒடுங்குதல்; தாள்-காம்பு)

என்று இவ்வாறு துதித்து, இமைத்தலில்லாத எட்டுக் கண்களையுடைய வனான பிரமதேவனும், வலிய காம்பினையுடைய மழுவாயுதத்தை உடைய சிவபெருமானும், மற்றுமுள்ள தேவர்கள், முனிவர்கள் எல்லோரும் அவ்விறைவனை வணங்கினவராய் அவரின் இருபக்கங் களிலும் குழுமி நின்றனர். சக்கரப்படையையுடைய திருமாலாகிய நரசிங்கமூர்த்தியும், அடக்குதற்கரிய பெரும் சீற்றத்தை, உயிர்கள்மீது கருணை கொண்டு தனது உள்ளேயே ஒடுக்கிக் கொண்டான்.

''ஒன்றாத சீற்றம்'' என்பது கருணையே வடிவான எல்லாம் வல்ல எம்பிரானின் இயற்கையான இயல்புக்குப் பொருந்தாத பெரும் சீற்றம் என விரிந்த பொருள் தரும். இறைவனின் எட்டுக்குணங்களுள் ஒன்று பேரருளுடைமை. அந்தக்குணத்திற்குப் பொருந்தாதது இந்தப் பெரும் சீற்றம் எனவே 'ஒன்றாத சீற்றம்' என்றார் என்க.

162. "எஞ்சும், உலகனைத்தும் இப்பொழுதே" என்று என்று,
நெஞ்சு நடுங்கும் நெடுந்தேவரை நோக்கி,
"அஞ்சன்மின்" என்னா, அருள் சுரந்த நோக்கினால்,
கஞ்சமலர் பழிக்கும் கை அபயம் காட்டினான். (6433)

(எஞ்சுதல்-குறைதல்/சிதைந்தழிதல்; சுரத்தல்-பொழிதல்; கஞ்சம்-செந்தாமரைமலர்; பழித்தல்-கீழ்ப்படுத்துதல்)

இந்த நரசிங்கமூர்த்தியின் சீற்றத்தினால் உலகமனைத்தும் இப் பொழுதே சிதைந்து அழியுமே என்று அச்சத்தால் நடுங்கிக்கொண்டிருந்த

Koviloor Digital Library

பிரமதேவன், சிவபெருமான் போன்ற பெரிய தேவர்களை நோக்கி, நரசிங்கமூர்த்தி 'அஞ்சாதீர்கள்' என்றுகூறி தனது கருணை நிறைந்த அருட்பார்வையினால் அவர்களை நோக்கி, செந்தாமரை மலரையும் கீழ்ப்படுத்தும் அழகிய தனது வலது திருக்கைகளினால் அவர்களுக்கு அபயமுத்திரை காட்டி அருளினான்.

'என்று என்று' என்ற அடுக்கு அவர்களின் அச்சத்தையும் எதிர்பார்ப்பையும் குறித்தது என்க. 'நெடுந்தேவர்' என்பது தேவர்களுக்கெல்லாம் தலைவர்களாகிய சிவபெருமானையும், பிரமதேவனையும் குறித்து நின்றது என்க. கை அபயம் என்பது அபயமுத்திரையைக் குறிக்கும். உள்ளங்கை வெளித்தோன்றும்படி, கையை மலர்த்தி ஐந்து விரல்களையும் உயர்த்தி வைக்கப்பட்டிருக்கும் நிலை. இது தன்னை அடைந்தோரின் அச்சத்தை அகற்றும் ஒரு குறியீடு. கஞ்சம் என்ற வடசொல் நீரில் முளைப்பது என்ற பொருள் கொண்டது.

163. திருமகள் தோன்றுதல்.

பூவில் திருவை, அழகின் புனைகலத்தை,
யாவர்க்கும் செல்வத்தை, வீடு என்னும் இன்பத்தை,
ஆவித்துணையை அமுதின் பிறந்தாளை,
தேவர்க்கும் தம்மோயை, ஏவினார், பாற்செல்ல. (6434)

(கலம்-ஆபரணம்; ஆவி-உயிர்; மோய்-தாய்; பூ-செந்தாமரைமலர்; ஏவுதல்-அனுப்புதல்)

அழகுக்கு அழகு செய்யும் அழகு என்னும் ஆபரணத்தைப் போன்றவளும், உலகில் உள்ள உயிரினங்கள் அனைத்திற்கும் பொருட் செல்வத்தைத் தந்தருள்பவளும், வீடுபேறு என்னும் இன்பமயமான பரமபதத்தை உரியவர்கள் அடைய உறுதுணையாய் இருப்பவளும், உலகத்தார்க்கு மட்டுமல்லாது இறைவனுக்கும் உயிர்போன்ற துணையாகியவளும், திருப்பாற்கடலில் அமிழ்தத்துடன் தோன்றியவளும், மனிதர்க்கு மட்டுமல்லாது, தேவர்களுக்கும் தாய்போன்றவளும் ஆகிய, செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் இலக்குமிதேவியாகிய திருமகளை, மற்ற தேவர்களெல்லாம் இந்நிலையில் நரசிங்கப்பெருமானை நெருங்குவதற்கு அஞ்சி, அத்திருமகளை வேண்டி அவனிடம் அனுப்பி வைத்தனர்.

''பூ என்பது பொறிவாழ் பூவே'' என்றபடி 'பூ' என்றால் அது திருமகள் உறையும் செந்தாமரை மலரையே குறிக்கும் என்க. நரசிங்கமூர்த்தியின் சீற்றம் உள்ளுக்குள் ஒடுங்கிப்போனாலும், வெளித்தோற்றம் அச்சம் தருவதாகவே இருந்ததால் தேவர்கள் அவனை நெருங்க அஞ்சி, அவனுடைய ஆவித்துணையாகிய திருமகளை முதலில் அவனிடம் அனுப்பினர் என்பதாம்.

Koviloor Digital Library

164. நரசிங்கமூர்த்தி திருமகளை நோக்குதல்

செந்தாமரைப் பொகுட்டில் செம்மாந்து வீற்றிருக்கும்
நந்தாவிளக்கை, நறுந்தாள் இளங்கொழுந்தை
முந்தாஉலகும் உயிரும் முறைமுறையே
தந்தாளை, நோக்கினான், தன்ஒப்பு ஒன்று இலாதான். (6435)

(பொகுட்டு-கொட்டை; செம்மாப்பு-பெருமகிழ்ச்சி; நந்தா-குறையாத /தூண்டவேண்டாத; தாள்-காம்பு; முந்தா-முந்தி/ஆதி/முற்பட; தருதல்-பெறுதல்/தோற்றுவித்தல்; முறைமுறை-வழிவழியாக; ஒப்பு-நிகர்)

தனக்குவமை இல்லாதவனாகிய, தனித்தலைவனாகிய திருமால், செந்தாமரை மலரில் பெருமகிழ்ச்சியுடனும், கம்பீரத்துடனும் எழுந்தருளியிருப்பவளும், தூண்டுதல் தேவையில்லாத, எப்பொழுதும் அணையாத விளக்காய் அமைந்திருப்பவளும், நறுமணம் மிக்க காம்பினை உடைய இளமையான மெல்லிய கொழுந்து-தளிர்போன்றவளும், முற்பட்ட உலகத்து உயிர்களனைத்தையும் வழிவழியாகத் தோற்றுவிப்பதில் உறுதுணையாய் இருப்பவளும், ஆகிய அந்தத் திருமகளை, நரசிங்கப் பெருமான் தனது கருணைபொழியும் கண்களால் கண்ணாரக் கண்டருளினான்.

திருமகளின் சிறப்புக்கூறப்பட்டது, 'பொகுட்டு' என்பது தாமரை மலரின் நடுவில் இருக்கும் கொட்டையைக் குறிக்கும். 'நந்தாவிளக்கு' என்பது தூண்டுதல் தேவையற்ற, எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கின்ற அணையாவிளக்கு என்று பொருள்படும். சுயம்பிரகாசஉருவம் கொண்டது என்க. 'தன் ஒப்பு ஒன்று இலாதான்' என்பது 'தன்ஒப்பார் இல்லப்பன்' என்ற திருவாய்மொழியை நினைவுபடுத்துதல் உணர்க. 'சிவம் சக்தி தன்னையீன்றும், சக்திதான் சிவத்தை ஈன்றும், உவந்து இருவரும் புணர்ந்து, இங்கு உலகு உயிரெல்லாம் ஈன்றும்' என்பது சிவஞானசித்தி. தாமரை மலரின் காம்புகூட நறுமணம் கமழும் என்பதை 'நறுந்தாழ் இளங்கொழுந்து' என்றார் என்க.

165. நரசிங்கப் பெருமான் பிரகலாதனை நோக்குதல்

தீது இலா ஆக உலகு ஈன்ற தெய்வத்தைக்
காதலால் நோக்கினான்; கண்ட முனிக்கணங்கள்
ஓதினார் சீர்த்தி; உயர்ந்த பரஞ்சுடரும்
நோதல் ஆங்கு இல்லாத, அன்பனையே நோக்கினான். (6436)

(காதல்-அன்பு/அருள்; கணம்-கூட்டம்; சீர்த்தி-புகழ்த்திறங்கள்/மிகுபுகழ்; பரஞ்சுடர்-பேரொளிப்பிழம்பு; நோதல்-வருந்துதல்; அன்பன்-பக்தன்)

Koviloor Digital Library

உலகத்து உயிரினங்களுக்கு எந்தத்தீங்கும் இல்லாதவண்ணம் இனிதான இவ்வுலகைப் படைப்பதற்கு உறுதுணையாக இருந்த தெய்வமாகிய திருமகளை, நரசிங்கப்பெருமான் பேரன்புடன் நோக்கினான். அது கண்ட முனிவர்கூட்டத்தினர், அவ்விறைவனது மிகுபுகழைப்பாடிப் பரவினர். எனினும் மிகச்சிறந்த சோதிவடிவான பேரொளிப்பிழம்பாகிய இறைவன், அங்கே தன் தந்தை இறந்தது கண்டும் சிறிதும் மனவருத்தமில்லாது தன்னையே தியானித்துக் கொண்டிருந்த மெய்யன்பனான பெரும்பக்தனாகிய அன்பன் சிறுவன் பிரகலாதனையே பார்த்து அருளினான்.

உலகம் இறைவனால் படைக்கப்பட்டதென்றாலும், அதில் எந்தத் தவறும் நடந்துவிடாமல் இறைவனுக்குத் துணைநிற்பவள் திருமகள் என்பதால் 'தீதிலாவாக உலகீன்ற தெய்வம்' என்று திருமகளைச் சிறப்பித்தார் என்க. அத்தனை தேவர்கள், முனிவர்கள், அனைவரும் அங்கே இரு பக்கமும் திரண்டு நின்றிருந்தும், இறைவன் பிரகலாதனையே முதலில் கண்டான் என்பது இறைவன் பேரன்பிற்குப் பிரகலாதன் உரியவனானான் என்பதைக் காட்டவே என்க. திருமகளை 'கருதரிய கடலாடை, உலகு பல அண்டம், கருப்பெறாது ஈன்ற கன்னி' என்பதும் சான்றோர்வாக்கு. இங்கே 'அன்பனையே' என்பதில் உள்ள ஏகாரம் பிரிநிலை. அவனுக்கத் தனிச் சிறப்புச்சேர்ப்பது. 'வானம் துளங்கில் என்? மண் கம்பமாகில் என்? மால்வரையும் தானம் துளங்கி தலைதடுமாறில் என்? தண்கடலும் மீனம் படில்என்? விரிசுடர் வீழில்என்! வேலை நஞ்சுண்டு ஊனமில்லா ஒருவனுக்கு ஆட்பட்ட உத்தமர்க்கே' என்பதும், 'அஞ்சுவது யாதொன்றுமில்லை, அஞ்சவருவதும் இல்லை' என்பதும் அப்பர் தேவாரம். 'இன்பம் விழையான், இடும்பை இயல்பென்பான், துன்பம் உறுதல் இலன்' என்பதும் 'இன்னாமை இன்பம் எனக்கொளின், ஆகும் தன் ஒன்னார் விழையும் சிறப்பு' என்பதும் குறள் 628/630. 'ஆங்கு' என்பது இங்கு தந்தையை இழந்த அந்நிலையிலும் என்ற விரிந்த பொருளைத்தரும்.

166. பிரகலாதனுக்கு நரசிங்கப்பெருமாள் அருள்மொழி கூறுதல் [4 பாடல்கள்]

"உந்தையை உன்முன்கொன்று, உடலைப் பிளந்து அளையச்
சிந்தை தளராது, அறம் பிழையாச் செய்கையாய்!
அந்தம் இலா அன்பு என்மேல் வைத்தாய்! அளியத்தாய்!
எந்தை! இனி இதற்குக் கைம்மாறு யாது?" என்றான் (6437)

(அளைதல்-துழாவுதல்/கலக்குதல்; அந்தம்-முடிவு; அளி-தலையளி; கைம்மாறு-மாற்றுதவி/பிரதியுதவி/எதிர்உதவி; அளியத்தாய்-அளிக்கத் தகுந்தவன்/இரங்கத்தகுந்தவன்)

Koviloor Digital Library

நரசிங்கமூர்த்தி பிரகலாதனை நோக்கி ''அப்பா! பிரகலாதா! நான் உன் தந்தையை உன் கண்எதிரே கொலைசெய்து, அவனது உடலை என் கூரியநகங்களால் துழாவினேன். அதனை நேரில் கண்டும், சற்றும் மனம் தளராது-வருந்தாது, தருமத்திற்கு உட்பட்டு, தருமநெறிதவறாத நற்செய்கை புரிந்து என்மேல் அளவில்லாப் பேரன்பு கொண்டு நின்றாய்! நீ என்னால் கருணை செய்யத்தக்கவன்! இந்தச் செய்கைக்கு, நான் என்ன கைம்மாறு செய்வேன்?'' என்று கலங்குகிறான் இறைவன்.

பொதுவாக பக்தர்கள்தான் இறைவனை ''எந்தையே! அம்மையே! அப்பா! அத்தா! என்றெல்லாம் போற்றித் துதிப்பார்கள். இங்கே இறைவனே பிரகலாதனை 'எந்தை' என்று அழைப்பதைப் பாருங்கள். இதுபோல சிவபெருமான் காரைக்கால் அம்மையாரை 'என்அம்மை' என்றதும், ஒப்புநோக்கத் தக்கது. 'அந்தமிலா அன்பு' என்பது, கண்ணப்பன் சிவபெருமான் மீது கொண்டது; காரைக்கால் அம்மையார் சிவபெருமான் மீது கொண்ட அன்பு முதலிவை ஒப்பு நோக்கத்தகும். இறைவன் பக்தனுக்கு என்ன கைம்மாறு செய்யமுடியும்? சீதாதேவி அனுமனை நோக்கி, ''செம்மையால் உயிர் தந்தாய்க்கு, செயல் என்னால் எளியது உண்டே?'' என்ற சுந்தரகாண்டப் பாடலையும் இங்கு ஒப்பு நோக்குக. பொதுவாக பக்தன்தான்-தான் பெற்ற ஓர் உதவிக்காகக் கடவுளுக்குக் கைம்மாறு செய்யஇயலாமல் தவிப்பான்; இங்கே இறைவன், பிரகலாதன் தன்மேல் கொண்ட பேரன்புக்கு என்ன கைம்மாறு செய்யமுடியும்? என்று தவிக்கிறான் என்பதை உணர்க.

இங்கே ஒன்று நோக்கவேண்டும். தன் தந்தையை நரசிங்கப்பெருமான் கொன்றபோது, தான் சிறிதும் மனம் கலங்காதது மட்டுமல்ல, தன் தந்தையைக் கொன்றவன்மீது சிறிதும் வெறுப்பினைக் காட்டாது பேரன்பு பூண்டு சமநிலையில் நின்ற 'ஸ்திதப்பிரக்ஞன்' பிரகலாதன் என்பதையும் உணரவேண்டும். இளம்பிராயத்திலேயே உற்றார், உறவினர், சுற்றம், தாய், தந்தை என்று பாராது, இறைவன் திருவடியையே தியானித்து நின்றதால் அவனுக்கு என்ன கைம்மாறு செய்வது என்று இறைவன் தடுமாறுவது இயற்கைதானே?

167. "அயிரா இமைப்பினை ஓர் ஆயிரம் கூறுஇட்ட
செயிரின் ஒரு பொழுதில், நுந்தையை யாம்சீறி,
உயிர் நேடுவேம் போல், உடல் அளைய, கண்டும்
செயிர் சேரா உள்ளத்தாய்க்கு, என்இனி, யாம் செய்கேம்?" (6438)

(செயிர்-குற்றம்; நேடுதல்-தேடுதல்; அளைய-துழாவி; செயிர்சேர்தல்-பகைமை கொள்ளுதல்; அயிரா-நுண்ணிதாக; அயிர்-நுண்மை/நுண் மணல்; கூறு-பகுதி; செயிர்-துன்பமுமாம்)

Koviloor Digital Library

குற்றம் செய்த உன் தந்தையை ''கண் இமைக்கின்ற ஒரு நொடிப் பொழுதை, ஆற்றின் நுண்மணல்போல் ஆயிரம் பகுதியாக்கி, அந்தச் சிறுபொழுதிற்குள், யான் மிகச் சினந்து, அவனது உடலை என் நகங்களால் கிழித்துக் குதறி அவன் உயிரைத் துழாவியபோது, அதனை நேராகக் கண்டும், என்மீது சிறிதும் பகைமைபாராட்டாத, தூய்மையான உள்ளத்தைக் கொண்ட பேரன்பினனாகிய உனக்கு, நான் இனிமேல் என்ன கைம்மாறு செய்வேன்?'' என்று மனம் கசிகிறான் இறைவனாகிய நரசிங்கப்பெருமான்.

''உயிர் நேடுவேம்போல்'' என்பது 'எள்ளிருக்கும் இடமின்றி உயிரிருக்கும் இடம் நாடி இழைத்தவாறோ?' என்று பின்னால் மண்டோதரி புலம்பப்போவதை நமக்கு நினைவூட்டுவதை உணர்க. அணுவைச் சத கூறிட்டால் அது 'கோண்' என்பதுபோல், கண் இமைப்பை ஆயிரம் கூறு இடவும் முடியும் என்று பேசும் கம்பனைப் பாருங்கள்.

168. "கொல்லேம் இனி உன் குலத்தோரை, குற்றங்கள்
எல்லை இலாதன செய்தாரே என்றாலும்;
நல்லேம், உனக்கு எம்மை; நாணாமல், நாம் செய்வது
ஒல்லை உளதேல், இயம்புதியால்" என்று உரைத்தான். (6439)

(எல்லை இலாதன-அளவற்ற; ஒல்லை-விரைவில்; எம்மை-எப் பிறப்பிலும்)

நரசிங்கப்பெருமான், பிரகலாதனை நோக்கி, ''உன்குலத்தில் தோன்றியவர் எவரானாலும், அவர்கள் எத்தகைய அளவிறந்த குற்றங் களைச் செய்திருந்தாலும், இனிமேல் நான் அவர்களைக் கொல்ல மாட்டேன்; நான் உனக்கு ஏழேழ்பிறவிக்கும் நல்லவனாகவே இருப்பேன். இன்னும் என்னால் உனக்கு ஏதாவது செய்யக்கூடியது இருந்தால், நாணம் கொள்ளாமல் விரைவாகக் கூறுவாயாக!'' என்றான்.

''கொல்லேம் இனி உன் குலத்தோரை, குற்றங்கள் எல்லை இலாதன செய்தாரே என்றாலும்'' என்று நரசிங்கப்பெருமான், பிரகலாதனுக்கு உறுதிசெய்து கொடுத்ததை ஏழேழ்பிறவியிலும் நிரூபித்துக் காட்டியிருக் கிறான். பிரகலாதனின் பேரன் மாவலிச்சக்கரவர்த்தி, வாமனாவதாரம் நாம் அறிந்ததே. அவனைக் கொல்லாது தனது திருவடியால் பாதாளத்தில் செலுத்தி அவனது கர்வத்தை அடக்கினான்; அவன் மகன் நமுசி என்பவனை, வானிற் சுழற்றியதோடு விட்டு விட்டான் கொல்லவில்லை; அவனுடைய மகன் பாணாசுரன், அவனையும் கொல்லாது கால்களை மாத்திரம் துணித்து விட்டு விட்டான். என்பதெல்லாம் புராணங்கள் கூறும் உண்மைகள். 'மஞ்ச! நீ விழைந்தாய் வேட்டவரம், நினக்கு அளிப்பல் 'என்றான்' என்பது பாகவத புராணம்.

Koviloor Digital Library

169. பிரகலாதன் கேட்ட வரம்

''முன்பு பெறப் பெற்ற பேறோ முடிவில்லை;
பின்புபெறும் பேறும் உண்டோ? பெறுகுவனேல்,
என்பு பெறாத இழி பிறவி எய்தினும், நின்
அன்பு பெறும் பேறு அடியேற்கு அருள்'' என்றான். (6440)

(என்பு-எலும்பு; இழி-அற்பமான)

பிரகலாதன் நரசிங்கப் பெருமானிடம், ''பெருமானே! உனக்கு அடியவனாகிய நான் உனது திருவருளால் முன்பு பெற்றுக்கொண்ட பேறுகளுக்கே ஒரு எல்லை இல்லை, அளவற்ற பேறுகளை எனக்கு அருளிஇருக்கிறாய், அதன் பின்னும், இன்னும் நான் உன்னிடம் இருந்து பெறவேண்டிய நன்மைகள் வேறு என்ன இருக்கின்றன? எனினும், இன்னும் முடிவாக நான் ஏதேனும் உன்னிடம் நானே வேண்டிப் பெறுவேன் என்றால் அது, 'நான் எத்தகைய இழிந்த பிறப்பை அடைந் தாலும், எலும்பே இல்லாத அற்பமான புழுவின் பிறப்பைப் பெற்றாலும், உன்னுடைய திருவடி அன்பை இடைவிடாமல் பெற்றிருக்கின்ற பெரும்பேற்றினை மட்டும் எனக்கு அருள்வாயாக!'' என்று வேண்டினான்.

''முன்பு பெறப்பெற்ற பேறு'' நாம் அறிந்ததே. அவன் தந்தை எத்தனை இடையூறுகள் தந்தாலும், உயிரைக் கொல்லுவதற்கு எத்தனை முயற்சிகள் செய்தாலும், அவை பலிக்காமல்போய் இவன் உயிர்வாழ்ந்திருப்பதே அவற்றிற்குச் சான்று பகரும். 'வழிபடும் அன்பேயன்றி, வரம்எவன் பெறுவது என்னா, தொழுதனன், வழுத்தலுற்றான்; தூய பேரறிஞன் அம்மா' என்பது பாகவதபுராணம். 'நம்பெருமான் எட்டெழுத்தின் பெருமை நவிலுமதோ சம்பரஸ்மாயம், புரோகிதர் சூழ்வினை, தாரணி, வான், வெம்படை, மாசுணம், மாமதவேழம், விடம், தழல், கால், அம்பரம், முதலானவை பாலனுக்கு அஞ்சினவே' என்பது திருவரங்க மாலை. 'நின்மாட்டு ஒன்றே அடியேன் வேண்டுவது; அது நீ மறுக்கேல், மூவுலகு அளந்த நின் சேவடி வாழ்த்தி, தொழுதகை தொண்டர் தம் தொண்டருள் சேர்க்காது, எழுவகைத் தோற்றத்து, இன்னாப் பிறப்பின், என்பு ஒழி யாக்கையிற் சேர்ப்பினும், அவர்பால் அன்பு ஒழியாமை, அருள், மதிமைக்கே!' என்பது திருவரங்கக்கலம்பகம். 'புழுவாய்ப் பிறக்கினும், புண்ணியா! உன்அடி என்மனத்தே வழுவாதிருக்க வரம் தரவேண்டும்' என்பது அப்பர் தேவாரம். 'தூண்டா விளக்கின் சுடரனையாய்! தொண்டனேற்கும் உண்டாம்கொல் வேண்டாது ஒன்றும் வேண்டாது மிக்க அன்பே மேவுதலே' என்பது திருவாசகம்.

Koviloor Digital Library

170. பிரகலாதன் சிரஞ்சீவித் தன்மை பெறுதல்

அன்னானை நோக்கி, அருள் சுரந்த நெஞ்சினனாய்,
'என் ஆனை வல்லன்' என மகிழ்ந்த பேர் ஈசன்,
''முன் ஆன பூதங்கள் யாவையும் முற்றிடினும்,
உன் நாள் உலவாய் நீ; என்போல் உளை'' என்றான். (6441)

(பேர்-பெருமை; ஈசன்-இங்கே நரசிங்கப்பெருமான்; அருள்-கருணை; முற்றுதல்-முடிதல்; நாள்-வாழ்நாள்/ஆயுள்; உலத்தல்-சிதைதல்/அழிதல்/கெடுதல்; உளை-உள்ளாய்; ஆனை-உண்மையான பக்தன்; வல்லன்-ஆத்மஞானி)

அவ்வாறு வரம்கேட்ட தன் அடியவனான பிரகலாதனை நோக்கி, நெஞ்சில் கருணைவெள்ளம் ஊற்றெடுக்கின்ற திருமாலாகிய நரசிங்கப் பெருமாள் ''என்னுடைய அடியவன் மிக நல்லமெய்யுணர்வைப் பெற்றவன், வல்லவன் என்று மனம் மகிழ்ந்து, என்னால் முதன்முதலில் படைக்கப்பட்ட மண், விண், நீர், காற்று, நெருப்பு ஆகிய பஞ்சபூதங்கள் எல்லாம் ஒன்று கலந்து யுகாந்தகாலம் வந்திடினும், உலகமெல்லாம் அழிந்திடினும், நீ உன் வாழ்நாள் குறையாமல் சிரஞ்சீவியாய் என்னைப் போலவே எக்காலத்தும் உளனாவாய்'' என்று வரம் தந்து அருளினான்.

'ஆனை' என்பது தன்பால் பேரன்பு கொண்டவரின் அருமை பாராட்டிக் கூறும் ஒருசொல் எனக் கொள்க. 'வல்லன்' என்பது தன்னை உணர்ந்த ஆத்மஞானி என்று பொருள்படும். 'சுரத்தல்' என்பது இடைவிடாது பொழியும் என்ற பொருள்தரும். எனவே 'அருள்சுரந்த நெஞ்சினன்' என்றார் என்க. பழைய நூல்கள் ஆத்மஞானிகள் என்று ஒன்பது பேரைக் குறிக்கின்றன. அதில் முதல் இடம் வகிப்பவன் பிரகலாதன் என்பதை அறிக. ''பிரகலாத, நாரத, பராசர, புண்டரீக, வியாசர், அம்பரீஷ, சுக, சௌநக, காசியபர்'' என்பவர் அவ்வொன்பது பேராவர். இதுபோல் சீதாதேவி அனுமனுக்கு சிரஞ்சீவித் தன்மை அளித்ததை நாம் சுந்தரகாண்டத்தில் கண்டதையும் இங்கே நினைவு கூர்க. சிரஞ்சீவிகள் ஏழுபேர் அவர்கள் அசுவத்தாமன், அனுமன், வியாசன், வீடணன், பரசுராமன், மாவலி, கிருபாசாரியன் என்றும் கூறுவதுண்டு.

171. ''மின்னைத் தொழு வளைத்தது என்ன, மிளிர் ஒளியாய்!
முன்னைத் தொழும்புக்கே ஆம் அன்றோ மூஉலகும்?
என்னைத் தொழுது ஏத்தி எய்தும் பயன் எய்தி,
உன்னைத் தொழுது ஏத்தி உய்க, உலகெல்லாம்'' (6442)

(மின்-மின்னல்; தொழு-தொழுமரம்; மிளிர்தல்-விளங்குதல்; தொழும்பு-அடித்தொண்டு; ஏத்தி-போற்றி/துதித்து/வணங்கி;

Koviloor Digital Library

வளைத்தல்-வளைத்துக் கட்டுதல்; உய்தல்-ஈடேறுதல்; தொழு-ரேவதி நட்சத்திரம்)

''ஒரு கணத்தில் தோன்றி மறையும் மின்னலை ஒரு தொழுமரத்தில் வளைத்துக் கட்டிவைத்தது போல ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் மேனியை உடையவனே! பிரகலாதா! நீ எனக்கு முன்பு செய்திருக்கின்ற அடிமைத் தொண்டிற்கே இம்மூவுலகங்களும் உனக்கு உரியதாகும் அல்லவா? இந்த உலகத்தில் உள்ளவர்கள் எல்லோரும் என்னைத் தொழுது போற்றினால் என்னென்ன பயன்கள், பேறுகள், நன்மைகள் அவர்களுக்கு கிட்டுமோ, அவையனைத்தும் உன்னைத் தொழுது வணங்குபவர்களுக்கும் கிட்டி, அவர்களும் வாழ்க்கையில் கடைத் தேறுவார்களாக!'' என்கிறான் நரசிங்கப்பெருமான்.

இங்கே 'தொழு' என்ற சொல்லுக்கு 'இரேவதி நட்சத்திரம்' என்று பொருள் கூறுகிறது. உ.வே.சா. பதிப்பு என்றால், முன்னமேயே ஒளிமிக்க மின்னலை, இரேவதி என்ற இன்னும் ஒரு ஒளிமிக்க நட்சத்திரம் சுற்றி வளைத்தது போல ஒளி மிக்கவனே! என்ற பொருள்தரும். தன்னையொத்த சிறப்பு பிரகலாதனுக்கும் உண்டு என்கிறான் இறைவன் என்க.

இங்கே 'தொழுதல்' என்பது சாஷ்டாங்க நமஸ்காரத்தையும், 'ஏத்துதல்' என்பது மனம், மொழி, மெய்களால் வழிபடுதலையும் குறிக்கும் எனக் கொள்க.

172. "ஏனவர்க்கு வேண்டின், எளிது ஒன்றோ? எற்கு அன்பர்
ஆன வர்க்கம் எல்லாம், நினக்கு அன்பர் ஆயினார்;
தானவர்க்கு வேந்தன் நீ என்னும் தரத்தாயோ?
வானவர்க்கும் நீயே இறை, தொல் மறை வல்லோய்!" (6443)

(தொல்-பழமையான; எற்கு-எனக்கு; வர்க்கம்-இனம்/குழு/கூட்டம்; தானவர்-அசுரர்; தரம்-நிலை/தகுதி; வானவர்-தேவர்கள்; ஏனவர்-பிறர்/மற்றோர்; இறை-தெய்வம்/தலைவன்; அன்பர்-அடியார்கள்; வேண்டின்-விரும்பினால்)

''பழமையான வேதங்களை ஓதாது உணர்ந்த திறமை பெற்றவனே! பிரகலாதா! என்னிடம் அன்பு கொண்ட என் அடியவர்கள் என்று கூறப்படும் இனத்தாரெல்லாம் இப்போதிலிருந்து உனக்கும் அடியவர்கள் ஆகிறார்கள்; நீ அசுரர்கட்கு மட்டும் அரசன் என்று சொல்லப்படும் தகுதி மட்டுமோ உனக்கு உண்டு? அல்ல; நீ தேவர்களுக்கெல்லாம் தேவனாய், தலைவனாவாய்; வேறு யாரேனும் இத்தகைய ஒரு சிறப்பையும், மேன்மையையும் பெற விரும்பினால் அது இத்துணை எளிதாகுமோ? ஆகாது'' என்கிறான் நரசிங்கப்பெருமான்.

Koviloor Digital Library

'தொல்மறை வல்லோய்' என்பது பின்பு 'நாம மறை ஓதாது ஓதி நனி உயர்ந்தான்' என்று கூறப்போவதை அடியொற்றியது என்க. 'பொருந்தும் ஓர் மனுவின் காலம் போற்றுசீர் வேந்தனாகி, இருந்தபின் எனது பாதம் எய்துக' எனச் சொன்னானால்' என்பது பாகவதபுராணம். 'ஒன்றோ' என்பதில் உள்ள ஓகாரமும், 'தரத்தாயோ' என்பதில் வரும் ஓகாரமும், எதிர்மறைப் பொருளன. அல்ல' என்ற பொருளைத் தரும்.

173. "நல்லறமும், மெய்ம்மையும், நான்மறையும், நல்லருளும்,
எல்லைஇலா ஞானமும், ஈறுஇலா எப்பொருளும்,
தொல்லை சால் எண்குணனும், நின்சொல் தொழில் செய்ய,
மல்லல் உரு ஒளியாய்! நாளும் வளர்க; நீ!" (6444)

(அறம்-தருமம்; மெய்ம்மை-வாய்மை/சத்தியம்; எல்லை-வரம்பு; ஞானம்-மெய்யுணர்வு; ஈறு-முடிவு; சால்-வாய்ந்த/நிறைந்த; சொல்-ஆணை/கட்டளை; ஒளி-தேஜஸ்; மல்லல்-வளம்)

''வளமும், அழகும் ஒருங்கே பெற்ற உடல்ஒளி படைத்தவனே! நன்மைதரும் உயர்ந்த தருமமும், சத்தியமும், நான்கு வேதங்களும், நற்கருணையாகிய திருவருளும், எல்லையற்ற மெய்யுணர்வாகிய தத்துவஞானமும், முடிவில்லாத எல்லாப் பொருள்களும் மிகப்பழமை வாய்ந்த இறைவனின் எட்டுக்குணங்களும், உன்சொற்படியே உன் ஏவலை ஏற்று நடக்கக்கூடியனவாகும். என்னைப்போல் நீயும் நாள்தோறும் வளர்ந்து, வாழ்வாங்கு வளம்பெற்று வாழ்வாயாக!'' என்று வாழ்த்தி முடிக்கிறான் நரசிங்கப்பெருமான்.

இறைவனின் எண்குணங்கள் என்பன; தன் வயத்தனாதல்; தூயஉடம்பினனாதல்; இயற்கை உணர்வினனாதல்; முற்றும் உணர்தல்; இயல்பாகவே பாசத்தின் நீங்குதல்; பேரருள்உடைமை; முடிவிலா ஆற்றலுடைமை; வரம்பிலா இன்பமுடைமை என்பனவாம்; வாத்சல்யம், சுவாமித்வம், சௌசீல்யம், சௌலப்யம், ஞானம், சக்தி, பிராப்தி, பூர்த்தி என்பது வடமொழி. இவ்வெட்டுக் குணங்களை தீவினையின்மை, மூப்பின்மை, மரணமின்மை, துயரமின்மை, பசியின்மை, தாகமின்மை, மெய்மையில் விருப்பம் உடைமை, எண்ணம் தவறாது பலிக்கும் தன்மை உடைமை என்றும் கூறுவதுண்டு. நரசிங்கப்பெருமான் தனக்கும் பிரகலாதனுக்கும் எந்தவிதமான வேற்றுமையுமில்லை என அருளிக் கூறினார் என்பதாம். 'சத்யம், ஞானம், அனந்தம், பிரம்மா' என்பது வேதம். இறைவன் அறவடிவானவன், சத்திய வடிவானவன், வேதவடிவானவன், அருள்வடிவானவன், ஞானவடிவானவன் என்பது கூறப்பட்டது.

Koviloor Digital Library

174. பிரகலாதனுக்கு முடிசூட்டப் பணித்தல்

"என்று வரம் அருளி, எவ்வுலகும் கைகூப்ப,
முன்றில் முரசம் முழங்க, முடிசூட்ட,
நின்ற அமரர் அனைவீரும் நேர்ந்து, இவனுக்கு
ஒன்று பெருமை உரிமை புரிக!" என்றான். (6445)

(முன்றில்-வாயில்; நேர்ந்து-மனம்இசைந்து; ஒன்று-பொருந்தி; புரிதல்-விருப்புடன் செய்தல்)

என்று பிரகலாதன் கேட்ட வரத்தினை உவப்புடன் நல்கி யருளி, அங்கு நின்றிருந்த தேவர்கள் எல்லோரையும் பார்த்து, ''எல்லா உலகத்தவரும் இவனைக் கைகூப்பி வணங்குமாறு, அரண்மனை வாசலில், மூன்று முரசுகளும் முழங்க, நான் இவனுக்கு முடிசூட்டும் வண்ணம், நீங்கள் அனைவரும் மனம் ஒப்பி, இவனுக்குப் பொருந்துவதான அரசப்பெருமையையும் அதற்குரிய உரிமையையும் வழங்குவதற்கு ஆவன செய்வீர்களாக'' என்று கூறினான் நரசிங்கப்பெருமான்.

முரசம் மூன்றுவகைப்படும். வெற்றிமுரசு, மங்கலமுரசு, போர்முரசு என்க. முன்றில் என்பது இல்முன் என்பதன் இலக்கணப்போலி.

175. பிரகலாதன் முடிசூடும் தோற்றம்

தே மன், உரிமைபுரிய, திசைமுகத்தோன்
ஓமம் இயற்ற; உடையான் முடிசூட்ட,
கோ மன்னவன் ஆகி, மூவுலகும் கைக்கொண்டான்.
நாமமறை ஓதாது ஓதி நனி உணர்ந்தான். (6446)

(தேமன்-தேவர்களுக்கு அரசன்/இந்திரன்; உரிமை-பணி; திசை முகத்தோன்-பிரமன்; ஓமம்-வேள்விச்சடங்குகள்; கோமன்னவன்-வேந்தர்வேந்தன்/சக்கரவர்த்தி; நாமம்-புகழ்; நனி-மிகவும்; உடையான்-இறைவன்/நரசிங்கப்பெருமான்)

நரசிங்கப்பெருமான் கூறியபடி, ''புகழ்மிகுந்த நான்கு வேதங்களை யும், ஒரு ஆசிரியரிடம் சென்று முறையாகக் கற்றுக்கொள்ளாது இறைவனிடமிருந்து அவன் திருவருளாலே தானே முழுவதும் கற்று மிகவும் நன்றாக அவற்றின் உட்பொருளை உணர்ந்தவனான பிரகலாதன், தேவர்களும், தேவர்களது அரசனாகிய தேவேந்திரன் முடிசூட்டுவதற் குரிய குற்றேவல் பணிகளை விருப்புடன் புரியவும், நான்கு திசைகளிலும் நான்கு முகங்களையுடைய பிரமதேவன் ஓமம் வளர்த்து வேள்விச் சடங்குகள் செய்யவும், எல்லா உலகங்களையும் தன்வசம் கொண்ட வனான திருமாலாகிய நரசிங்கப்பெருமான் தனது திருக்கரத்தால் மணிமுடி சூட்டவும், பிரகலாதன் அரசர்க்கரசனாக, சக்கரவர்த்தியாக ஆகி,

Koviloor Digital Library

இம்மூன்று உலகங்களையும் தன்வசம் கொண்டு அரசாட்சி செய்யத் தொடங்கினான்.

'ஓதல் இன்றியே உணர்வுகூரும் இக்காதலன் தன்னைக் கற்க வைத்தனன்' என்பது பாகவதபுராணம். 'வருதிறத்தின் மறை நான்கும் தந்தோம் என்று மந்திரங்கள் மொழிந்தவர்க்கு, மதுரவாக்கால், பொரு விறப்ப ஓதினார் புகலிவந்த புண்ணியனார் எண்ணிறந்த புனிதவேதம்', 'சுருதி ஆயிரம் ஆதி அங்கமான தொல்கலைகள் எடுத்தியம்பும் தோன்றலாரை' என்பது பெரியபுராணம்.

176. வீடணன் முடிவாகக் கூறியது

''ஈது ஆகும் முன் நிகழ்ந்தது; எம்பெருமான்! என் மாற்றம்
யாதானும் ஆக நினையாது, இகழ்தியேல்,
தீது ஆய் விளைதல் நனி திண்ணம்; 'எனச் செப்பினான்,
மேதாவிகட்கெல்லாம் மேலான மேன்மையான்'' (6447)

(மாற்றம்-மொழி/பேச்சு; யாதானும்-பழங்கதை; நனி-மிகவும்; திண்ணம்-நிச்சயம்; மேதாவி-அறிவினால் மேம்பட்டவர்கள்; மேன்மை-சிறப்பு; நினைதல்-சிந்தித்தல்; செப்புதல்-கூறுதல்/சொல்லுதல்)

பேரறிஞர்கட்கெல்லாம் மேம்பட்ட சிறந்தவனான வீடணன், தன் தமையன் இராவணனை நோக்கி, ''என் தலைவனே! இதுதான் நான் கூறப்புகுந்த இரணியனின் வரலாறு. இது இவ்வாறுதான் முன்பு நடந்தது. என்னுடைய சொல்லை, ஏதோ ஒரு பழங்கதை என்று நினைத்துச் சிந்தித்துப் பாராது இகழ்ந்து, காரிய மாற்றாது, ஒதுக்குவாயானால், அது உனக்குத் தீங்கு விளைவிப்பதாய் முடிவது மிகவும் நிச்சயம்'' என்று எச்சரித்து அறிவுறுத்தினான்.

'நான் கூறியது எல்லாம் உனது நன்மைக்காகவே; இதை ஒரு பொருட்டாகக் கருதாமல் இகழ்வாயானால் உனக்குத் தீங்கு நேர்வது உறுதி' என்று வீடணன் இராவணனை எச்சரித்தான் எனக் கொள்க.

இரணியன் வதைப்படலம் நிறைவுற்றது

Koviloor Digital Library

4. வீடணன் அடைக்கலப் படலம்

[151 பாடல்கள்]

இராவணனின் இளைய தம்பி வீடணன் இராவணனால் உதாசீனப்படுத்தப்பட்டதால், இராமபிரானை வந்து தஞ்சம் புகுந்த செய்தி பற்றிக்கூறும் பகுதி எனவிரியும். இது 151 பாடல்களைக் கொண்டது. சில சுவடிகளில் 'விபீஷணப்பெருமாள் அடைக்கலப் படலம்' எனவும் 'விபீஷணன் அடைக்கலப் படலம்' எனவும், இன்னும் சில சுவடிகளில் 'விபீடணப்படலம்' எனவும், 'விபீடணன் அடைக்கலப் படலம்' எனவும் குறிக்கப்பெற்றிருக்கிறது. 'விபீஷணன்' என்பது வடசொல். இந்தச் சொல்லிற்கு 'பயத்தைச் செய்கின்றவன்' என்று பொருள்.

இப்படலத்துள் இராவணன், வீடணனது அறிவுரையை ஏற்காமல் அவனை உதாசீனப்படுத்தி சீற்றம்கொண்டு அவனைத் தன் கண் முன்னேகூட நிற்றல்கூடாது என விரட்டுதல்; வீடணன் தன் அமைச்சர்கள் நால்வருடன் விண்ணில் எழுந்து பின்னும் தன் தமையன் இராவணனுக்குச் சில அறிவுரைகள் கூறுதல்; வீடணன் மேலே செய்வதறியாது இலங்கையை விட்டு ஒரு சோலையில் இரவுப் பொழுதில் தங்குதல்; வானிலிருந்தே அக்கரையில் உள்ள வானரச் சேனையைக் கண்டு வியப்புறுதல்; மேலே என்ன செய்வதென்று நான்கு அமைச்சர்களுடன் ஆலோசனை செய்தல்; அமைச்சர்கள் அறத்தின் மூர்த்தியாகிய இராமபிரானைக்கண்டு பேசுதலே உரியது என அறிவுரை கூறுதல்; அதனை வீடணன் ஏற்றுக்கொள்ளுதல்; மறுபக்கம் இராமபிரான் கடற்கரையின் இயற்கைக் காட்சிகளைக் கண்டு, சீதாதேவியின் பிரிவுத்துயரால் கவலைகொள்ளுதல்; சுக்கிரீவன், இலக்குவன் அனுமன் முதலியோர் இராமபிரானைத் தேற்றுதல்; இப்பொழுது வீடணன் மறுநாள் காலை, இராமபிரானைக் காணவர முயற்சித்தல்; அதனைக் கண்ட வானரவீரர்கள் அவர்களை எதிர்த்தல்; இதனைக் கண்ட அனுமன் மயிந்தனையும், துவிந்தனையும் அனுப்பி விபரம் அறிந்துவரக் கூறுதல்; அவர்கள் வினவ, அனிலன் தங்கள் நிலையைத் தெரிவித்தல்; அதனை மயிந்தன் இராமபிரானிடம் தெரிவித்தல்; இராமபிரான் தன்னைச் சூழ்ந்திருந்தவர்களோடு, வீடணனைத் தம்முடன் சேர்த்துக் கொள்ளலாமா? என ஆலோசித்தல்; சுக்கிரீவன், சாம்பவன், நீலன், ஏனையோர் தத்தம் கருத்துக்களைத் தெரிவித்தல்; பின்னர் இராமபிரான் அனுமன் கருத்தை

Koviloor Digital Library

வினவுதல்; அனுமன் வீடணனைச் சேர்த்துக் கொள்ளலாம் எனத் தக்க காரணங்களுடன்கூறுதல்; இராமபிரான் மகிழ்ந்து சரணாகதித் தத்துவத்தை விளக்குதல்; சுக்கிரீவனை அனுப்பி வீடணனை அழைத்துவரச் சொல்லுதல்; சுக்கிரீவனும் வீடணனும் ஒருவரையொருவர் தழுவிக் கொள்ளுதல்; இராமபிரான் வீடணனுக்கு அடைக்கலம் அருளியதைச் சுக்கிரீவன் கூறுதல்; வீடணனும், அவன் அமைச்சர்களும் உவந்து இராமபிரான் திருவடிகளில் விரைந்து வந்து வணங்குதல்; இராமபிரான் இலக்குவன்மூலம் முடிசூட்டி வீடணனுக்கு இலங்கை அரசுரிமையை வழங்குதல்; வீடணன் திருமுடி வேண்டாது, 'பரதனுக்கவித்த மௌலி என்னையும் கவித்தி' என்றுகூறி அவன் திருவடி நிலைகளைத் தானே எடுத்துத் தன் முடிமீது வைத்துக் கொள்ளுதல்; இராமபிரான் வீடணனைத் தன் தம்பியருள் ஒருவனாக ஏற்றுக்கொள்ளுதல்; இலக்குவனோடு வீடணன் முதலியோர் பாடிவீட்டை-வலம்வந்து இனிதிருத்தல்; ஆகிய நிகழ்ச்சிகள் விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன.

1. இராவணன் சீற்றமுற்று, வீடணனைத் துரத்துதல் [10 பாடல்கள்]

கேட்டனன் இருந்தும், அக்கேள்வி தேர்கலாக்
கோட்டிய சிந்தையான், உறுதி கொண்டிலன்;
மூட்டிய தீ என முடுகிப் பொங்கினான்;
ஊட்டு அரக்கு ஊட்டிய அனைய ஒண் கணான். (6448)

(கோட்டிய-ஒழுங்கற்ற/வளைந்த/நேர்மையற்ற; முடுகி-விரைந்து; பொங்குதல்-சீற்றம் கொள்ளுதல்; மூட்டிய-கொளுத்தப்பட்ட)

இவ்வளவு நேரம் வீடணன் கூறிக்கொண்டிருந்த அறிவுரைகளை இராவணன் செவிகள் கேட்டுக் கொண்டிருந்தாலும், அந்தச் சொற்களில் உள்ள பொருளைத் தேர்ந்து அறியமாட்டாதவனாய், அவன் மனம் சீதைபால் கொண்ட நேர்மையற்ற காமத்தையே எண்ணிக் கொண்டிருந்தது. எனவே இச்சொற்கள் தனக்கு எந்த நன்மையும் பயக்காது எனத் தெரிந்து உருகிக் கொண்டிருக்கும் அரக்கன் மேல்மேலும் அரக்கினைக் கொட்டினாற் போன்று சிவந்து ஒளிவீசும் கண்களை உடையவனாய், கொளுத்தப்பட்ட நெருப்பு என்று கூறும்படி விரைந்து சீற்றம் கொள்வானாயினான்.

அவன் செவிகள்தான் வீடணன் கூறியவற்றைக் கேட்டுக் கொண்டிருந் தனவே தவிர, அவன் மனம் சீதையையே எண்ணிக்கொண்டிருந்தது. எனவே அவன் இவ்வுரைகள் தனக்குப் பயன்பட மாட்டா என்று கருதி வீடணன் மேல் சீற்றம் கொண்டான் என்க. இங்கே மூட்டிய தீப்பற்றிப் பேசும் கவிஞன், முன்பு இலக்குவனிடத்து, 'மூட்டாததீ' யைப் பற்றிப் பேசியதையும் இங்கு நினைவுகூர்க. 'தையலார் மயலில் பட்டோர் தமக்கு

Koviloor Digital Library

ஒரு மதி உண்டாமோ?' என்பது திருவிளையாடற் புராணம். 'மையலால் அறிவு நீங்கி' என்பது அகலிகைப் படலம்.

2. "இரணியன் என்பவன் எம்மனோரினும்
முரணியன்; அவன்தனை முருக்கி முற்றினான்,
அரணியன்; என்று, அவற்கு அன்பு பூண்டனை;
மரணம் என்று ஒரு பொருள் மாற்றும் வன்மையோய்!" (6449)

(வன்மை-வலிமை; முரண்-மாறுபாடு/வலிமை; முருக்கி-கொன்று; முற்றுதல்-முடித்தல்; அரண்-பாதுகாப்பு; எம்மனோர்-எங்கள் மூதாதையர்)

அவ்வாறு சீற்றமுற்ற இராவணன் வீடணனைப் பார்த்து ''எவராலும் மாற்ற முடியாத மரணம் என்ற ஒரு பொருளையே இல்லாததாகச் செய்யும் தவ ஆற்றல் பெற்றவனே! இரணியன் என்பவன் எம்மைக் காட்டிலும், எம்முடைய முன்னோர்களைக் காட்டிலும் மிக்க வலிமை பெற்றவன்; அத்தகைய வலிமை படைத்தவனையே கொன்று தீர்த்தவனான திருமால் நமக்குப் பாதுகாப்பானவன் என்று கருதி, அவன்பால் அன்பு செலுத்துகிறாய் போலும்!'' என்கிறான் இராவணன்.

3. "ஆயவன் வளர்த்த தன் தாதை யாக்கையை
மாயவன் பிளந்திட, மகிழ்ந்த மைந்தனும்;
ஏயும் நம் பகைஞனுக்கு இனிய நண்புசெய்
நீயுமே நிகர்; பிறர் நிகர்க்க நேர்வரோ?" (6450)

(தாதை-தந்தை; யாக்கை-உடல்; மாயவன்-மாயையில் வல்லவன்; ஏயும்-பொருந்திய; நிகர்-ஒப்பு/சமம்; நேர்தல்-தகுதியுடையவராதல்/பொருந்துதல்; ஆயவன்-அத்தகையவன்)

தன்னைப் பெற்றெடுத்து வளர்த்த தன் தந்தையாகிய இரணியனின் உடலை, மாயச்செயல்களில் வல்லவனான திருமால் கிழித்துக் கொன்றதைப் பார்த்து, துன்புறாது, மகிழ்ச்சி அடைந்த அவனுடைய புதல்வனான பிரகலாதனும், நம்மிடம் பகைமை பாராட்டும் பகைவனாகிய இராமபிரானுக்கு இனிய உற்ற நண்பனாக விளங்கும் நீயும்தான் ஒருவர்க்கொருவர் சமமானவர்கள் ஆவீர்கள்; வேறு எவரும் உங்களைப்போல் ஒத்தவராகத் தகுதியுடையவர் ஆவார்களோ? மாட்டார்கள்'' என்கிறான் இராவணன்.

தன் தந்தையைக் கொல்லுவதைப் பார்த்துக் கொண்டு மகிழ்ந்திருந்த பிரகலாதனும், தன் அண்ணனுடன் போர்செய்யப் பொருந்தி வருகின்ற இராமபிரானைப் பார்த்துக் கொண்டு, அவனுடன் நட்புக் கொண்டு மகிழ்ந்திருக்கின்ற நீயும்தான் ஒருவர்க்கொருவர் ஒப்பாவீர்கள். வேறு யாரும் உங்களிருவருக்கும் ஒப்பாக மாட்டார்கள் என்றான் என்க.

Koviloor Digital Library

'நேர்வரோ' என்பதில் ஓகாரம், எதிர்மறைப் பொருளது. ஆகார் என்ற பொருளைத்தரும். பகைவர்களிடம் நட்புக்கொள்வதிலும், அன்பு காட்டு வதிலும் நீயும் பிரகலாதனும் ஒத்தவரே என்பது கருத்து.

4. "பாழிசால் இரணியன் புதல்வன் பண்புஎன,
சூழ்வினை முற்றி, யான் அவர்க்குத் தோற்றபின்,
ஏழை நீ, என்பெரும் செல்வம் எய்தி, பின்
வாழவோ கருத்து? அதுவர வற்று ஆகுமோ?" (6451)

(பாழிசால்-வலிமைமிக்க; பண்பு-தன்மை; சூழ்வினை-சூழ்ச்சி/ ஆலோசித்து; வரவற்று-நிறைவேறுவது/நிகழக்கூடியது; ஏழை-பேதை)

''வலிமை வாய்ந்த அந்த இரணியனின் மகனான பிரகலாதனின் தன்மை போல, நீயும் சில சூழ்ச்சிகளைச் செய்து முடித்து, நான் அந்த இராமஇலக்குவர்க்குத் தோற்றதன் பின்னர், பேதையும், ஏழையுமாகிய நீ, நான் அரிதின் முயன்று பெற்ற இம்மூவுலக அரசச்செல்வத்தையும் அடைந்து, பின்பு நன்கு வாழ்க்கை நடத்துவதுதான் உன் எண்ணமா? அது நிகழக்கூடிய காரியமா? அல்ல'' என்கிறான் இராவணன்.

''வலிமை மிக்க இரணியனை, நரசிங்கப் பெருமானால் கொல்வித்துப் பின் உலகம் முழுவதற்கும் தானே பேரரசனாக முடிசூட்டிக் கொண்ட அவன் மகன் பிரகலாதன்போல, நீயும், நான் இராம இலக்குவரிடம் தோல்வியடைந்தபின் என்னுடைய செல்வமனைத்தையும் அரசாட்சியை யும் பெற்று இனிது வாழலாம் என்று கனவு காண்கிறாயா? அது நடக்கக் கூடிய செயலா? ஒருக்காலும் நடக்காது''. என்று இராவணன் வீடணனை ஏசுகிறான் என்க.

இங்கே அவனை அறியாமலேயே 'யான் அவர்க்குத் தோற்ற பின்' என்று கூறுவதை எண்ணுக. 'ஏழை' என்று இராவணன் வீடணனைக் கூறுவதற்குக் காரணம், அவன் வாழ்க்கை இராவணனைச் சார்ந்தே இருப்பதால் என்க. 'அது வரவற்றாகுமோ!' என்பது எனக்குப்பின் என் மைந்தன் இந்திரசித்து தான் ஆட்சிப் பொறுப்பை ஏற்பானே அன்றி, என் தம்பியாகிய உனக்கு அது கிட்டுமோ? ஒருக்காலும் கிட்டாது என்பதாம். 'வரவற்றாகுமோ' வில் உள்ள ஓகாரம் எதிர்மறைப்பொருளது. ஆகாது எனப் பொருள்தரும். 'வற்று' என்பது வன்மை என்ற சொல்லின் அடியாகப் பிறந்த குறிப்பு முற்று. 'என் பெரும் செல்வம்' என்பது இராவணன் தவ பலத்தாலும், வரபலத்தாலும் இயற்கையிலேயே அவனிடம் பொருந்தி யிருந்த உடல் பலத்தாலும், அரிதின் முயன்று பெற்ற அளவற்ற செல்வம் என்று விரிந்த பொருள்தரும். இது நானே முயன்று பெற்ற செல்வம் சுயார்ஜிதம், பிதுரார்ஜிதம் அல்ல எனவே உனக்கு இதில் உரிமையில்லை என்று கூறுகின்ற தொனியும் ஒலிப்பது காண்க.

Koviloor Digital Library

5. "முன்புற அனையர்பால் அன்பு முற்றினை;
வன்பகை மனிதரின், வைத்த வன்பினை;
என்புற உருகுதி; அழுதி; ஏத்துதி;
உன்புகல் அவர்; பிறிது உரைக்க வேண்டுமோ?" (6452)

(முன்புஉற-காணும் முன்பே; என்பு-எலும்பு; புகல்-புகலிடம்/பாதுகாவல்)

இராவணன் வீடணனைப் பார்த்து ''அவர்களைக் காணும் முன்பே, இராமஇலக்குவரிடத்தில் நீ நட்புமிக்குள்ளாய்; நமது கொடிய பகைவர் களாகிய அந்த மனிதர்களிடத்தில் மிக்க அன்பு கொண்டு எலும்பெல்லாம் நெக்குருகும்படி உள்ளம் உருகுகின்றாய். அவர்களை நினைத்தாலே அன்பின் மேலீட்டால் ஆனந்தக் கண்ணீர் சொரிகின்றாய். அவர்களைப் புகழ்ந்து பாராட்டுகின்றாய்; எனவே உனக்கு அவர்களே புகலிடமாவர் என்பது தெரிகிறது. இதைவிட உன்னைப்பற்றி வேறு கூற என்ன இருக்கிறது?'' என்கிறான்.

அரக்கர்கட்கு மானிடர், பிறவிப் பகைஞர் என்பதை 'வன்பகை' என்ற சொல்லாற் சுட்டினார் என்க.

6. "நண்ணின மனிதர்பால் நண்பு பூண்டனை;
எண்ணினை செய்வினை; என்னை வெல்லுமாறு
உன்னினை; அரசின்மேல் ஆசை ஊன்றினை;
திண்ணிது உன்செயல்; பிறர் செறுநர் வேண்டுமோ?" (6453)

(உன்னுதல்-கருதுதல்/நினைத்தல்; திண்ணிது-வன்மையானது/உறுதியானது; நண்ணுதல்-அணுகுதல்; செறுநர்-பகைவர்; ஊன்றுதல்-பற்றுமிகுதல்/நிலைத்திருத்தல்/பதிதல்)

''நம்மிடம் போர் செய்யப் படையெடுத்து வந்துள்ள பகைவர்களாகிய மானிடர்களாகிய இராமஇலக்குவருடன் நட்புப் பூண்டுள்ளாய்; நீ செய்ய எண்ணியிருக்கும் செயல்களைத் திட்ட மிட்டுச் செய்கிறாய், என்னைப் போரில் வெல்லும் கருத்துக் கொண்டுள்ளாய். இவ்விலங்கை அரசின்மீது மிகவும் ஆழ்ந்த ஆசைகொண்டுள்ளாய்; உன்னுடைய இந்தச் செயல்கள் எல்லாம் வன்மைமிக்கதாகவும் தோன்றுகிறது. எனவே இதைவிட எனக்கு வெளியிடத்து இருந்து ஏதேனும் பகைவர்கள் தேவையோ? என்னுடன் இருக்கும் நீயே எனக்குப் பெரும் பகைவன் ஆவாய்'' என்று ஏசுகிறான் இராவணன்.

'அரசின்மேல் ஆசைஊன்றினை' என்பது இராவணன்கூற்று. இதையே பின்னர் 'காதல் அருத்தியும் அரசின் மேற்றே' என்று இராமபிரான் கூறப்போவதையும் இங்கே நினைவு கூறலாம். 'வாள்போல் பகைவரை

Koviloor Digital Library

அஞ்சற்க; அஞ்சுக கேள்போல் பகைவர் தொடர்பு' என்பது குறள்882. வாள்-இராமஇலக்குவர்; கேள்-வீடணன் எனக் கொள்க.

7. "அஞ்சினை ஆதலின் அமர்க்கும் ஆள்அலை;
தஞ்சு என மனிதர்பால் வைத்த சார்பினை;
வஞ்சனை மனத்தினை; பிறப்பு மாறினை;
நஞ்சினை உடன்கொடு வாழ்தல் நன்மையோ?" (6454)

(அமர்-போர்; ஆள்-வீரன்; தஞ்சு-புகலிடம்/அடைக்கலம்; சார்பு-பற்றுதல்)

இராவணன் வீடணனைப் பார்த்து, ''வீடணா! நீ நமது பகைவர்களாகிய அந்த மானிடரிடம் அச்சம் கொண்டுள்ளாய். ஆதலால் நீ என்னுடன் சேர்ந்து போர் செய்தற்குரிய வீரத்தைப் பெற்ற வீரனாகவும் இல்லாது போய்விட்டாய். தஞ்சம் என்று, நம்மைவிட இழிந்தவராகிய அந்த மனிதர் களின் பால் பற்றுக்கொண்டுள்ளாய்; என்னுடைய அரசப் பெருஞ் செல்வத்தை அடைய வேண்டும் என்று மனத்தில் வஞ்சக எண்ணம் கொண்டுள்ளாய். நம் அரக்கர்களுக்குரிய கொலை, களவு முதலிய பிறவிக்குணங்களிலிருந்து மாறி, அன்பு, தயவு, கருணை எனப் பேசத் தொடங்கி நம் பிறப்பின் பொருளையே மாற்றிவிட்டாய். எனவே நஞ்சு போன்ற நச்சுத்தன்மையுடைய உன்னை என் உடன் வைத்துக்கொண்டு வாழுதல் எனக்கு நன்மை பயப்பதாகுமோ? ஆகாது'' என்கிறான் இராவணன்.

வெளியிலிருந்து வரும் பகைவர்களைக் காட்டிலும் உட்பகை மிகவும் கொடியது. வள்ளுவரின் 'உட்பகை' என்ற அதிகாரத்தில் உள்ள அத்தனை பாடல்களும் இங்கு நினைவு கூரத்தகும். 'உடம் பாடிலாதவர் வாழ்க்கை குடங்கருள் பாம்போடு உடன் உறைந்தற்று' என்பது குறள் 890. குடங்கர்-குடம். குடிப்பிறப் பொழுக்கத்தை மாற்றிவிடுதல் என்பது பெரிய புராணத்தில் கண்ணப்ப நாயனார் சரித்திரத்திலும் பேசப்படுகிறது. 'நம்குலத் தலைமை விட்டான்; நலப்பட்டான் தேவர்க்கு' என்பது பெரியபுராணம்.

8. பழியினை உணா்ந்து யான் படுக்கிலேன் உனை;
ஒழி, சில புகலுதல்; ஒல்லை நீங்குதி;
விழி எதிர் நிற்றியேல், விளிதி; 'என்றனன்
அழிவினை எய்துவான், அறிவு நீங்கினான். (6455)

(படுத்தல்-கொல்லுதல்; புகலுதல்-சொல்லுதல்; ஒல்லை-விரைவாக; நீங்குதல்-அகலுதல்; விளிதல்-அழிதல்)

தனது அழிவினை விரைவிலேயே எய்த இருக்கிறவனும், அதனால் அறிவு மயக்கம் உண்டாகத் தன் விவேகத்தை இழந்தவனுமான

Koviloor Digital Library

இராவணன், தன் தம்பி வீடணனைப் பார்த்து 'தம்பியை அண்ணனே கொன்றுவிட்டான்' என்ற பழி வந்து என்னைச் சேரும் என்ற ஊரார் பழிக்கு அஞ்சியே உன்னைக் கொல்லாமல் விடுகிறேன். எனக்கு நீ அறிவுரைகள் கூறுவதை இத்துடன் நிறுத்திக்கொள். விரைவில் என்னை விட்டு நீங்கிப் போய்விடு. அதையும் மீறி என் கண்ணெதிரில் நிற்பாயானால் இறந்துபடுவாய்' என்று எச்சரிக்கிறான்.

இங்கே ஒன்று நோக்க வேண்டும். முதல் அடியில் 'உன்னைக் கொல்ல மாட்டேன்' என்கிறான். மூன்றாவது அடியில் 'என் எதிரில் நின்றால் இறந்து படுவாய்' என்கிறான். எனவே இராவணன் அறிவும் விவேகமும் இழந்து, ஒரு தடுமாற்றமான நிலையில் இருக்கிறான் என்பதைக் கவிஞன் 'அறிவு நீங்கினான்' என்கிறான். இந்தத் தடுமாற்றம் எதனால் வந்தது? அவனுக்குள்ளேயே ஒரு உள்ளுணர்வு, 'தான் விரைவில் இராமஇலக்குவர் களால் வென்று, கொல்லப்பட்டு விடுவோமோ! என்ற அச்சம் உந்தித் தள்ளியிருக்கிறது' ''விநாச காலே விபரீத புத்தி' என்பது வடமொழிப் பழமொழி. அதைத்தான் இங்கே கவிஞன் .அழிவினை எய்துவான் அறிவு நீங்கினான்' என்றான் என்க. இதற்குச் சரியான தமிழாக்கம் திருக்குறளில் கிடைக்கிறது. 'பேதைப் படுக்கும் இழவூழ்' (குறள் 372) என்பது குறள். பொதுவாக அரக்கர்கள் எத்தகைய பழிபாவங்களுக்கும் அஞ்சாதவர்கள். எனினும் இங்கே இராவணன் ஊரார் பழிக்கு அஞ்சியே தம்பியைக் கொல்லாது விடுகிறேன் என்று கூறுவது அந்தக் கல்லுக்குள்ளும் ஈரம் உண்டு என்பதைப் புலப்படுத்துவதை நுனித்து உணர்க. எனினும் வான்மீகம் இராவணன் வீடணனை நீங்கிப் போகவும் சொல்லவில்லை, மீறி நின்றால் இறந்துபடுவாய் என்று கூறவும் இல்லை என்று கூறுவது நினைவிற் கொள்ளத் தக்கது.

இதற்கு முன்னால் ஒரு பாடல் மிகைப்பாடலாகத் தரப்பட்டிருக்கிறது. எனினும் சில உரையாசிரியர்கள் இப்பாடலுக்கும் உரை கண்டிருக் கிறார்கள் என்றாலும் பாடல் முந்தைய நிகழ்ச்சி ஒன்றைச் சுட்டிக் காட்டுவதாலும், கதைப்போக்கிற்கு ஒத்துவருவதாலும், பாடல் மட்டும் தரப்படுகிறது.

''அன்று வானரம் வந்து, நம் சோலையை அழிப்ப,
''கொன்று தின்றிடுமின்'' என ''தூதரைக்கோறல்
வென்றி அன்று'' என, விலக்கினை; மேல் விளைவு எண்ணி;
துன்று தாரவர் துணை எனக் கோடலே துணிந்தாய்''

என்று இராவணன் வீடணனை இடித்துரைக்கும் பாடல் இது. பொருள் எளிதில் விளங்கும் பாடல். சென்னைக் கம்பன் கழகம் இதனை மிகைப்பாடலிலேயே சேர்த்திருக்கிறது. இதற்குரிய காரணம் சற்று எண்ணிப்பார்ப்பதற்கு உரியது.

Koviloor Digital Library

9. வீடணன் வானில் எழுந்து, பின்னும் நீதி கூறுதல் [3 பாடல்கள்]

என்றலும், இளவலும் எழுந்து, வானிடைச்
சென்றனன்; துணைவரும் தானும் சிந்தியா,
நின்றனன்; பின்னரும் நீதி சான்றன,
ஒன்று அல, பலப்பல, உறுதி ஓதினான். (6456)

(இளவல்-தம்பி; சிந்தியா-சிந்தித்து; சான்றன-அமைந்தன/ நிறைந்தன; ஓதுதல்-சொல்லுதல்; உறுதி-நன்மை)

என்று தன் அண்ணன் இவ்வாறு சீற்றமுற்றுக் கூறவும், இளைய தம்பியான வீடணன் வானத்தின் மேல் எழுந்து சென்றான். அங்கே தன் அமைச்சர்களாகிய நான்கு துணைவர்களுடன், இப்போது என்ன செய்வது என்பது பற்றி ஆலோசித்தான். அதன் பின்னரும், தமையன்மீது கொண்ட பேரன்பின் காரணமாகவும், அவனுக்கு அழிவு வந்துவிடக் கூடாதே என்ற நல்லெண்ணத்தினாலும், நீதிநிறைந்த, நன்மை பயக்கும் பல அறிவுரைகளைச் சொல்லலானான்.

'வானிடைச் சென்றனன்' என்பது அவன் கீழே தரையில் நின்றிருந்தால் தமையன் இராவணன் அழிந்துபடுவாய் என்று எச்சரிக்கிறான். எனவே அவன் வானில் எழுந்துசெல்ல வேண்டியதாயிற்று. சிறந்த வரம் பெற்றவர்கள் தாம் நினைத்த மாத்திரத்தில் எந்த உலகங்களுக்கு வேண்டு மானாலும் செல்லும் ஆற்றல் உடையவர்கள். எனவே இவன் தன் துணைவர்களுடன் வானின்மேற் சென்றான் என்க. வீடணன் இராவண னுக்குத் தம்பி மட்டுமல்ல, அவன் அமைச்சரவையில் ஓர் அமைச்சனாகத் திகழும் இயல்பும் உடையவன். எனவே நீதி விடாது நின்றுரைத்தான் என்க.

10. "வாழியாய்! கேட்டியால், வாழ்வு கைம்மிக,
ஊழி காண்குறும் நினது உயிரை ஓர்கிலாய்;
கீழ்மையோர் சொற்கொடு, கெடுதல் நேர்தியோ?
வாழ்மைதான், அறம் பிழைத்தவர்க்கு வாய்க்குமோ?" (6457)

(கேட்டி-கேட்பாயாக; கைம்மிக-மேற்பட்டு நிற்க; பெருக-மேம்பட; ஓர்தல்-எண்ணிப்பார்த்தல்/கருதுதல்; நேர்தல்-உடன்படுதல்/ முற்படுதல்; அறம்-தருமம்; பிழைத்தல்-தவறுதல்; வாழ்மை-வாழ்க்கை; ஊழி-நெடுங்காலம்)

வீடணன் இராவணனை நோக்கி, "வாழ்வதற்குரியவனே! வாழ்வாயாக! நான் கூறுவதைச் சற்றுக் கேட்பாயாக! நீ வரத்தால் பெற்று வந்த முக்கோடி வாழ்நாளும் மேம்பட்டு, ஊழிக்காலம் வரை இருந்து அனுபவிக்க வேண்டிய உனது உயிர் பற்றிச் சற்றும் கருதாது இருக்கிறாயே!

Koviloor Digital Library

உன்னைச் சுற்றியுள்ள கெடுமதி படைத்த கீழ்மக்களின் சொற்களைக் கொண்டு, உன் உயிர்க்கு நீயே கேடு செய்ய உடன்படுவாயோ? நல்ல சிறப்பான வாழ்க்கை என்பது, தருமத்தினின்றும் தவறி அதர்ம நெறியில் நடப்பவர்க்கு நன்கு அமையாதன்றோ?'' என்று மீண்டும் அறிவுரை கூறுகிறான் வீடணன்.

'வாழ்வு கைம்மிக' என்பது அவன் வாங்கி வந்த வரமாகிய முக்கோடி வாழ்நாளும் நிலைத்து நின்று அவன் ஊழிக்காலம் வரை வாழவேண்டும் என்பது வீடணன் விருப்பம் என்பதைக் குறிக்கும். 'கீழ்மையோர்' என்பது இராவணனைச் சுற்றியிருந்து தீய ஆலோசனைகள் கூறும் மகோதரன் போன்ற அமைச்சர்களை என்க. 'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்' என்னும் சிலப்பதிகார வரிகள் நினைவிற் கொள்ளத்தக்கன. 'ஊழி' என்பது நெடுங்காலம் என்ற பொருளில் பயின்று வந்திருக்கிறது. 'வாழ்மை' என்ற சொல் நமக்குப் புதிது வாழ்க்கை என்று பொருள்.

11. "புத்திரர், குருக்கள், நின் பொருஇல், கேண்மையர்
மித்திரர், அடைந்துளோர், மெலியோர், வன்மையோர்,
இத்தனை பேரையும், இராமன் வெஞ்சரம்
சித்திரவதை செயக் கண்டு தீர்தியோ?" (6458)

(பொருஇல்-ஒப்பற்ற; கேண்மையர்-உறவினர்கள்; மித்திரர்-நண்பர்கள்; அடைதல்-சார்ந்திருத்தல்; வன்மை-வலிமை; வெம்-கொடிய; சரம்-அம்பு; தீர்தல்-இறத்தல்; குருக்கள்-ஆசிரியர்/பெர்யோர்)

''உன்னுடைய புதல்வர்கள், உனக்கு ஆசிரியர்களான பெரியோர்கள் ஒப்பற்ற உன்னுடைய உறவினர்கள், உன் நண்பர்கள், உன்னைச் சார்ந்து புகலிடம் பெற்று உன்ஆதரவில் வாழ்பவர்கள், பலவீனமானவர்கள், வலிமைமிக்க வீரர்கள் என்று இத்தனை வகைப்பட்ட மக்களையும் இராமனுடைய கொடிய அம்பு சித்திரவதை செய்து முடிப்பதைப் பார்த்த பின்னர்தான், நீ உயிர் விடுவாயோ?'' என்கிறான் வீடணன்.

இங்கே ஒரு அருமையான கருத்து. 'புத்' என்ற சொல்லுக்கு நரகம் என்று பொருள். தன் தந்தையை நரகத்திற்குச் செல்லவிடாது நற்பணிபுரிந்து நற்பெயர் எடுத்துக் கொடுப்பவன் புத்திரன் எனப்படுவான். எனவேதான் முதற்பிள்ளையைப் புத்திரன் என்று இன்றும் வழங்குகிறோம். இங்கே கம்பனும் புத்திரரையே முதலாவதாகக் கூறி ஏனைய பெரியோர்களையும், நாட்டு மக்களையும் முறைப்படுத்திக் கூறிய விதம் உணர்க. 'சித்திரவதை' என்ற சொல் உடல் உறுப்புக்களை வேதனை மிக தனித்தனியாக அறுத்துக் கொல்வது என்ற விரிந்த பொருளைத்தரும். 'குருக்கள்' என்பது ஆசிரியர், குருமார்கள், புரோகிதர் ஆகியோரைக் குறிக்கும்.

Koviloor Digital Library

12. வீடணன் இலங்கையை விட்டு நீங்கிச் செல்லுதல்

''எத்துணை வகையினும் உறுதி எய்தின,
ஒத்தன, உணர்த்தினேன்; உணரகிற்றிலை;
அத்த! என் பிழை பொறுத்தருள்வாய்'' என,
உத்தமன் அந்நகர் ஒழியப் போயினான். (6459)

(அத்த-தந்தை/அப்பன்/தலைவன்; ஒழிய-தவிர்த்து/நீங்கி; ஒத்தன-இயைந்தன)

''எவ்வளவோ வகைகளில் உனக்கு நன்மைதரத்தக்கனவும், நீதிநூல்களில் கூறப்பட்டிருக்கும் நெறிமுறைகளுக்கு இயைந்தனவுமான அறிவுரைகளை உனக்கு எடுத்துக்கூறிப் பார்த்தேன். நீ அவற்றையெல்லாம் உணர்ந்து, நடைமுறைப்படுத்தும் ஆற்றல் அற்றவனாகிப் போனாய்! என் தந்தைபோன்றவனே! ஏதேனும் இதுகாறும் நான் தவறுகள் செய்திருந்தால் அவற்றையெல்லாம் மன்னித்து அருள்வாயாக!'' என்று எல்லா சிறந்த குணநலன்களும் பொருந்திய நீர்மையனான வீடணன் அந்நகரை விட்டு நீங்கிச்சென்றான்.

'உணரகிற்றிலை' என்பதில் 'கில்' என்பது ஆற்றலை உணர்த்தும் இடைச்சொல். 'அத்த' என்பது அப்பன், தந்தை என்ற பொருளிலேயே பயன்படுத்தப்படும். தமையனும் தந்தைக்கு ஒப்பானவனே. 'ஜேஷ்ட பிராதா பிதுர்சம' என்பது வேதம். வீடணன் எந்தத் தவறும் செய்யாதவன் என்பதை நான்காம் அடியிலேயே 'உத்தமன்' என்ற சொல்லால் விளக்கிவிடுவதைக் காண்க. இங்கே 'ஒழிய' என்ற சொல்லாட்சி கருத்தாழம் மிக்கது. வீடணன் இலங்கையை விட்டு நீங்கிப் போனான் என்பது ஒரு பொருள். இலங்கை அழிந்து போகும்படி அந்நகரைவிட்டு நீங்கிப்போனான் என்பது மற்றொரு மறைபொருள். கம்பனின் ஒவ்வொரு சொல்லும் கவிநயம் மிக்கது. இங்கே வீடணன் இராவணனுக்கு இன்னும் சில தத்துவங்களைக் கூறிய பின்தான் சென்றான் என அத்யாத்ம ராமாயணம் கூறுகிறது.

13. அவனுடன் இணைந்து வந்தவர்கள்

அனலனும், அனிலனும், அரன், சம்பாதியும்
வினையவர் நால்வரும், விரைவின் வந்தனர்,
கனைகழல் காலினர், கருமச் சூழ்ச்சியர்,
இனைவரும் வீடணனோடும் ஏயினார். (6460)

(கனை-ஒலிக்கின்ற; கருமம்-செயல்; சூழ்ச்சி-ஆராயும்தன்மை; இனைவரல்-வருந்துதல்; ஏயினர்-சேர்ந்து கொண்டனர்)

Koviloor Digital Library

ஒலிக்கின்ற வீரக்கழலணிந்த கால்களையுடையவர்களும், ஆராய்ந்து உணர்ந்து செயல்படும் ஆற்றல் படைத்தவர்களுமான அனலன், அனிலன், அரன், சம்பாதி என்ற நான்கு நல்வினையுடையவர்களும் விரைவாக இலங்கையை விட்டு வெளியே வந்து, தன் தமையன் தான் கூறிய அறிவுரைக் கருத்துக்களைக் கேட்கவில்லையே என்றும் அதனால் அவனைப் பிரிய நேர்கின்றதே என்றும் வருத்தத்தில் ஆழ்ந்திருந்த வீடணனுடன் தாமே உவந்து வந்து சேர்ந்து கொண்டார்கள்.

'கனை கழல் காலினர்' என்றதால் அவர்களது வீரமும், 'கருமச் சூழ்ச்சியர்' என்றதால் அவர்கள் நுண்ணிய அறிவும் குறிக்கப்பெற்றது காண்க. இவர்கள் நால்வரும் வீடணனின் அமைச்சர்களாவர். வான்மீகம் நான்கு அரக்கர்கள் வீடணன் உடன் சென்றனர் என்றே கூறுகிறது. அவர்களின் பெயர்களைக் குறிப்பிடவில்லை என்பது நோக்கத்தக்கது.

14. அரக்கனும், ஆங்கண் ஓர் அமைச்சர் நால்வரும்,
"குரக்கு இனத்தவரொடும் மனிதர், கொள்ளை நீர்க்
கரைக்கண் வந்து இறுத்தனர்" என்ற காலையில்,
"பொருக்கென எழுதும்" என்று, எண்ணிப் போயினார். (6461)

(மனிதர்-இராமஇலக்குவர்; கொள்ளைநீர்-கடல்; இறுத்தல்-தங்கி யிருத்தல்; பொருக்கென-விரைவாக; ஆங்கண்-அவ்விடத்தில் உள்ளோர்)

அரக்கர் இனத்தில் பிறந்தவனாகிய வீடணனும் அவ்விடத்திலிருந்த ஒப்பற்ற அமைச்சர்களான அனலன் முதலான நால்வரும், ''குரங்குக் கூட்டத்தோடு அவ்வினத்தைச் சேர்ந்தவர்களான சுக்கிரீவனும், மானிடர்களான இராமஇலக்குவரும், மிகுதியான நீர்ப்பரப்பைக் கொண்ட கடற்கரையில் வந்து தங்கியிருக்கிறார்கள்'' என்று அங்கு உள்ள சிலர் சொன்னதைக் கேட்டபொழுது 'உடனே விரைந்து அங்கே செல்வோம்' என்று நன்கு உணர்ந்து, அக்கரைக்குச் செல்லலானார்கள்.

வீடணனை உத்தமன் என்று முந்தையப் பாடலில் சொல்லிய அதே கவிஞன், இங்கே அதே வீடணனை 'அரக்கன்' என்று கூறியது, அவன் பிறப்பால் அரக்கன் என்பதைக் குறிப்பிடவும், இதன்பின்னர் அவனை அரக்கன் என்று குறிப்பிட வாய்ப்பில்லை என்ற ஆதங்கத்தாலும், எனக் கொள்க. 'பொருக்கென' என்பது விரைவு குறித்த இடைச்சொல் என்க.

15. வீடணன், வானரப் படையைக் காணுதல்

அளக்கரைக் கடந்து, மேல் அறிந்து, நம்பியும்,
விளக்கு ஒளி பரத்தலின், பாலின் வெண்கடல்,
வளத் தடந்தாமரை மலர்ந்ததாம், என,
களப் பெருந்தானையை கண்ணின் நோக்கினான். (6462)

Koviloor Digital Library

(நம்பி-ஆண்களில் சிறந்தவன்/வீடணன்; அளக்கர்-கடல்; தடம்-பெரிய/பெருமைவாய்ந்த; களம்-போர்க்களம்; தானை-சேனை/படை; மேல்-மேலான; வளம்-அழகுமாம்/செழிப்பான)

ஆண்களிற் சிறந்தவனாகிய வீடணன், தன் அமைச்சர்களுடன், கடலைக் கடந்து, அக்கரை சென்றடைந்து முன்பு நிகழ்ந்தனவற்றை தன் மேலான ஞானத்தால் நன்கு ஆராய்ந்து பார்த்து, இப்போது என்ன செய்யவேண்டும் என்பதையும் மனதிற்கொண்டு விளக்குகளின் ஒளி கடல் எங்கும் பிரகாசிப்பதால், பால் போன்ற வெண்ணிறமான கடலில் அழகிய செழிப்பான பெரிய செந்தாமரை மலர்கள் மலர்ந்திருப்பதைப் போன்று தோற்றம் தருகின்ற, போர்முனைக்குச் செல்லத் தயாராக இருக்கின்ற, பெரிய குரங்குப்படையைத் தன் கண்களால் கூர்ந்து வியந்து பார்த்தான்.

'மேல்' என்பது மேலான ஞானத்தைக் குறிக்கும். வீடணன் அரக்கர்கள் மத்தியில் ஒரு ஞானியாகத்தான்- தீர்க்கதரிசியாகத்தான் விளங்கினான் என்பதை நாம் முன்பும் கண்டோம். பாற்கடலில் தாமரை மலர்ந்திருப்பது போன்று வெண்ணிறமான குரங்குப்படை தங்கியுள்ள அந்தக் கடற்கரையில் விளக்குகளின் ஒளி நன்கு பரவிப் பரந்திருப்பதையும் குரங்குகள் அணிவகுத்து நிற்பதையும் தன் கண்களால் வியந்து நோக்கினான் என்பது கருத்து. கடல் என்றாலே வெண்மை நிறமான கடலையே குறிக்கும். இங்கே வெண்கடல் என்றும், பாலின் வெண்கடல் என்றும் அடை கொடுத்துக் கூறியது வெண்மை மிகுதியைக் குறிக்க என்க.

16. "ஊனுடை உடம்பின உயிர்கள் யாவையும்,
ஏனைய ஒருதலை நிறுத்தி எண்ணினால்
வானரம் பெரிது" என மறுஇல் சிந்தையன்
தூநிறச் சுடுபடைத் துணைவர்ச் சொல்லினான். (6463)

(ஊன்-மாமிசப்பற்று/தசை; மறுஇல்-குற்றமற்ற; சிந்தை-மனம்; துணைவர்-அமைச்சர்; சுடுதல்-கொல்லுதல்; தூ-ஊன்/மாமிசம்; நிறம்-ஒளி; ஏனைய-மற்றும் உள்ள)

''தசைப் பற்றுமிக்க உடம்பினை உடைய எண்பத்து நான்கு லட்சம் என்று கூறப்படுகின்ற உயிரினங்கள் எல்லாவற்றையும் ஒரு பக்கம் நிறுத்தி, மற்றைய இந்த வானரப்படையை இன்னொரு பக்கம் நிற்க வைத்து எண்ணிப்பார்த்தால், இந்த வானரப்படையே எண்ணிக்கையில் மேம்பட்டு நிற்கும்'' என்று, குற்றமற்ற தூய உள்ளத்தை உடையவனான வீடணன், மாமிசம் படிந்திருப்பதும், ஒளிவீசுவதுமான, கொல்லும் இயல்புடைய படைக் கலங்களையுடைய வீரர்களான தனது அமைச்சர்களிடம் வியந்து கூறலானான்.

Koviloor Digital Library

வானரப்படையின் பெருக்கம் பேசப்படுகிறது. 'மறுஇல் சிந்தையான்' என்பது, வீடணன் பிறப்பால் அரக்கனாயினும், மனத்தால் தூய்மையன் என்பதைக் குறித்தது என்க.

17. இனிச் செய்ய வேண்டுவது என்ன என அமைச்சர்களுடன் ஆலோசித்தல்

''அறம்தலை நின்றவர்க்கு அன்பு பூண்டனென்;
மறந்தும் நன்புகழ் அலால், வாழ்வு வேண்டலென்;
''பிறந்த என் உறுதி நீ பிடிக்கலாய்'' எனாத்
துறந்தனென்; இனிச்செயல் சொல்லுவீர்'' என்றான். (6464)

(பிடித்தல்-ஏற்றுக்கொள்ளுதல்; தலை-முதன்மை)

''தருமநெறிகளையே தன் வாழ்வின் முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்து வருகின்ற இராம இலக்குவர்பால் நான் அன்பு செலுத்தினேன். புகழ்தருகின்ற வாழ்வைத்தான் விரும்பினேனேயல்லாது, மறந்தும்கூட, பழி தருகின்ற வாழ்க்கையை சிறிதும் சிந்தித்தேனில்லை; என் உடன் பிறந்த தமையன் நான் கூறிய நன்மை தரும் அறிவுரைகளை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டான். எனவே நான் அவனை நீங்கி இலங்கையினின்றும் வெளியே வந்துவிட்டேன். இப்பொழுது மேலே நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைக் கூறுவீராக!'' என்று வீடணன் தன் அமைச்சர்கள் நால்வரையும் பார்த்துக் கேட்டான்.

அறம் தலை நிறுத்தலே இராமாவதாரத்தின் நோக்கம். எனவே அதுதான் இப்பிறப்பின் தலையாய கடமை என இராமஇலக்குவர் வாழ்ந்து வந்தனர் என்பதும், அவர்களிடத்து வீடணன் தீராக்காதல் கொண்டனன் என்பதும் முதலடியின் கருத்து. வீடணன் புகழ்மிக்க வாழ்வைத்தான் தான் விரும்பியதாகவும், பழிமிக்க வாழ்வை மறந்தும்கூட எண்ணியதில்லை என்றும் உறுதிபடக் கூறுவதையும் காணமுடிகிறது. உடன் பிறந்தவனின் நல்லுரையை ஏற்றுக் கொள்ளப் பிடிக்காமல் தன்னைத் தன் தமையன் துரத்தி விட்டான். எனவே மேலே என்ன செய்வது என ஆலோசனை கேட்கிறான் வீடணன்.

''புகழெனின் உயிரும் கொடுக்குவர், பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்'' என்பது புறநானூறு. 'உயிரை விற்று, உறுபுகழ் பெற உழல்பவர்' என்பது கலிங்கத்துப்பரணி. 'உயிர் கொடுத்துப் புகழ் கொண்டார்' என்று கலிப்பகையாரைப் பெரியபுராணம் கூறும். புகழுக்கு உயிர் கொடுத்தவனாகிய சடாயுவை நாம் இந்தக் காப்பியத்திலேயே கண்டோம்.

Koviloor Digital Library

18. அமைச்சர்கள் ''இராமபிரானைக் காணலே தரும்'' எனல்

''மாட்சியின் அமைந்தது வேறு மற்று இல்லை;
தாட்சிஇல் பொருள் தரும் தரும மூர்த்தியைக்
காட்சியே இனிக்கடன்'' என்று கல்விசால்
சூட்சியின் கிழவரும், துணிந்து சொல்லினார். (6465)

(தாட்சி-தாழ்ச்சி/தாழ்வு; மூர்த்தி-வடிவம்/உருவம்; காட்சி-காணுதல்; மாட்சி-சிறப்பு; சால்-சிறந்த; சூட்சி-சூழ்ச்சி/ஆலோசனை; கிழவர்-உரியோர்; துணிந்து-தெளிவாக)

''மனித வாழ்க்கையில் தாழ்வு என்ற ஒரு பொருளுக்கே இடம் இல்லாது மேலான ஞானத்தைத் தரும் அறநெறியில் ஒழுகுபவர்களாகிய, அறத்தின் வேறு வடிவம் என்று கருதத்தக்க இராமபிரானைச் சென்று காண்பதே இப்போது நாம் செய்யத்தக்க கடமை. இதைத்தவிர நமக்குப் பெருமையும் சிறப்பும் தரும் செயல் வேறு ஒன்றும் இல்லை'' என்று கல்வி, கேள்வி களில் சிறந்து விளங்குபவரும், ஆலோசனை தருவதற்கு உரியவர் களுமான அவ்வமைச்சர்கள் நால்வரும் நன்கு தெளிவாக உறுதிபடக் கூறினார்கள்.

தாட்சி, சூட்சி என்பன தாழ்ச்சி, சூழ்ச்சி என்ற பொருளைத் தருவன. எதுகை நோக்கி அவ்வாறு திரிந்தது எனக் கொள்க. 'தாட்சிஇல் பொருள்' என்பது தாழ்வே இல்லாத உயர்ந்த ஞானத்தைக் குறிக்கும். 'தரும மூர்த்தி' என்பது அறமே ஓர் வடிவெடுத்து வந்தது போன்ற இராமபிரானைக் குறிக்கும். அமைச்சர்கள் கல்வி கேள்விகளில் சிறந்தவர்கள் என்பதும் பெறப்படுகிறது. வீடணன் இவர்களின் ஆலோசனையைப் பெற்ற பின்பே இராமபிரானைக் காணச் செல்கிறான். பின்னர் சரணாகதி அடைகிறான் என்பஃத இங்கே நாம் நினைவில் கொள்ளவேண்டும். தான் கூறவந்த கருத்தைத் தீர்மானமாகவும், தெளிவாகவும், ஐயம் திரிபு அறக் கூறவல்லவர்களே நல்ல அமைச்சர்கள். 'ஒரு தலையாச் சொல்லலும் வல்லது அமைச்சு' என்பது குறள் 634.

19. வீடணன் உடன்படுதல் [5 பாடல்கள்]

''நல்லது சொல்லினீர்; நாமும், வேறு இனி
அல்லது செய்துமேல், அரக்கர் ஆதுமால்;
எல்லைஇல் பெருங்குணத்து இராமன், தாள்இணை
புல்லுதும்; புல்லி, இப்பிறவி போக்குதும்.'' (6466)

(ஆதும்-ஆவோம்; இணை-இரண்டு; புல்லுதல்-அணைதல்/பிடித்துக் கொள்ளுதல்/தழுவுதல்)

Koviloor Digital Library

வீடணன் அவ்வாறு கூறிய தன் அமைச்சர்களைப் பார்த்து ''நல்லனவற்றையே-நமக்கு நன்மைதருவனவற்றையே கூறினீர்கள்; நாம் இப்போது நீங்கள் கூறியதைத் தவிர, வேறு ஏதேனும் செய்யப் புகுந்தால், நாமும் அடாத செயல் செய்யும் அரக்கர்கள் செய்கின்ற அதே செயலைச் செய்தவர்களாவோம்; எனவே நீங்கள் கூறியபடி, அளவிறந்த நற்குணங்கள் நிரம்பப்பெற்ற இராமபிரானின் இரு திருவடிகளையும் சென்று பற்றிக் கொள்வோம். அவன் தாள் இணைகளைத் தழுவி, இந்த இழிவான பிறவியைப் போக்கிக் கொள்வோம்'' என்றான்.

வீடணனும் இதே கருத்தையுடையவன். ஆதலால் அவர்கள் கூறிய கருத்துக்கு உடனே உடன் பட்டுவிட்டான் என்க. 'இனி அல்லது செய்துமேல் அரக்கர் ஆதுமால்' என்பது, தாம் இதுவரை அரக்கர் கூட்டத்தில் இருந்தாலும், அரக்கர் குணம் கொள்ளாமல் சான்றோர் குணம் படைத்தவர்களாகவே வாழ்ந்திருந் திருக்கிறார்கள் என்பதைக் கவிஞன் கற்போரை உணரவைத்திருக்கும் பாங்கு நோக்குக. அவன் தாள் இணைகளைப் பற்றினால் இந்தப் பிறவிப் பிணியைப்போக்கிக் கொள்ளலாம் என்பது கருத்து.

'அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தாற் கல்லால் பிறவாழி நீந்தல் அரிது' என்பது குறள் 8. 'பிறவிப்பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார்' என்பது குறள் 10. 'மனத்தானாம் மாந்தர்க்கு உணர்ச்சி; இனத்தானாம் இன்னான் எனப்படும் சொல்' என்பதும் குறள் 452. திருநாவுக்கரசர் சமணசமயத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாறும்போது எத்தகைய உணர்ச்சிகள் கொண்டிருந்ததாகச் சேக்கிழார் பெரிய புராணத்தில் சொல்லுகிறாரோ, அதே உணர்ச்சிகளை இப்பொழுது இராவணன் கூட்டத்திலிருந்து பிரிந்து இராமபிரானைச் சென்று அடைக்கலம் அடையப்போகும் வீடணன் பெற்றான் என்று கொள்க. 'புன்நெறியாம் அமண் சமயத் தொடக்குண்டு போந்தவுடல் தன்னுடனே உயிர் வாழத்தரியேன்; நான் தரிப்பதனுக்கு, என்னுடைய நாயக! நின் இலைச்சினையிட்டு அருள்க' என்பதும் அதற்கு அடையாளமாக, 'மின்னாரும் மூவிலைச் சூலம் என்மேல் பொறி மேவு' என்பதும் திருநாவுக்கரசர் தேவாரம். 'தாளிணை புல்லதும்' என்பது அடைக்கலம் புகுதலையே குறிக்கும் எனக் கொள்க.

20. "முன்புறக் கண்டிலென்; கேள்வி முன்பு இலென்;
அன்புறக் காரணம் அறியகிற்றிலேன்;
என்பு உறக்குளிரும்; நெஞ்சு உருகுமேல், அவன்
புன்புறப் பிறவியின் பகைஞன் போலுமால்" (6467)

(என்பு-எலும்புகள்; நெஞ்சு-உள்ளம்; புன்-புல்லிய/அற்பமான; புன்புறம்-அற்பமான உடம்பு; உறுதல்-மிகுதல்; முன்புற-இதற்கு முன்பு)

Koviloor Digital Library

''நான் இதற்கு முன்பும், இன்னும்கூட அந்த இராமபிரானைப் பார்த்ததே இல்லை; அவரைப் பற்றி அதிகமாகக் கேள்விப்பட்டது கூட இல்லை; எனினும் அவரைப் பற்றி நினைக்கும் பொழுது அவர்பால் அன்பு ஊற்றெடுத்துப் பொங்குகிறதே? அதுஏன்? என்பதைக்கூட தக்க காரணங் களால் அறிந்துகொள்ள முடியவில்லை. அந்த ஆற்றல் கூட எனக்கு இல்லாது போயிற்று. அவரைப் பற்றி நினைத்தாலே என் உடலிலுள்ள எலும்புகள் அத்தனையும் மகிழ்ச்சியால் மிகவும் குளிர்ச்சி அடைந்து போகின்றன; உள்ளம் உருகத் தொடங்குகிறது என்றால் அவர் என்னுடைய இந்த இழிவான உடம்பைப் பெற்றுள்ள இந்தப் பிறவியின் நோய்க்குப் பகைவராக இருப்பார் போல் தோன்றுகிறது'' என்கிறான் வீடணன்.

இதேபோல ஒரு நிகழ்ச்சி, முன்பு இராமபிரானைக் கண்டதும் அனுமனுக்கு ஏற்பட்டதை நாம் அறிவோம். ''என்பெனக்கு உருகு கின்றது, இவர்கின்றது அளவில் காதல்; அன்பினுக்கு அவதியில்லை'' என்பது கிட்கிந்தா காண்டம். ஆனால் இங்கே வீடணனுக்கு அவனைப் பார்க்காமலேயே, அவனைப் பற்றிக் கேள்விப் படாமலேயே இத்தகைய உடல் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை உணரவேண்டும். இவ்வாறு நேருக்குநேர் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளாமலேயே நட்புக் கொண்டவர்கள் சங்க இலக்கியத்தில் கோப்பெருஞ்சோழனும் பிசிராந்தையாரும் ஆவர். பெரியபுராணத்தில் திருநாவுக்கரசர் அப்பூதி யடிகள் உறவும் இது போன்றதே. 'பிறவியின் பகைஞன்' என்பது 'வேள்வியின்பகைஞன், சூரியன்பகைஞன்' என்பதுபோல இவன்அறப்பப் பிறவியின் பகைஞன்-பிறவிப் பிணியறுப்பான்-எனக் கொள்க. தான் கண்டதுமில்லை, கேள்விப்பட்டதுமில்லை ஆனால் உடலில் இத்தகைய மாற்றங்கள் நிகழ்கின்றன என்பதால், வீடணன் அவன் பிறவிப் பிணி தீர்க்கும் பரம்பொருளாகத்தான் இருக்க வேண்டும் என்று உய்த்துணர்ந்து அதைத்தன் அமைச்சர்களிடம் தெரிவிக்கிறான் என்க.

21. ஆதிஅம் பரமனுக்கு அன்பும், நல்லறம்
நீதியின் வழாமையும், உயிர்க்கு நேயமும்,
வேதியர் அருளும் நான் விரும்பிப் பெற்றனென்;
போது உறு கிழவனைத் தவம் முன் பூண்டநாள். (6468)

(போது-மலர்/தாமரைமலர்; உறு-தங்கியிருக்கும்; கிழவன்-உரிமை உடையவன்; போதுறு கிழவன்-பிரமன்; பூண்ட-இயற்றிய/செய்த; ஆதி-முன்னவன்; அம்-அழகிய; பரமன்-பரம்பொருள்; அன்பு-பக்தி; நேயம்-நேசம்/அன்பு; வேதியர்-மறைவல்லார்; வழாமை-தவறாமை)

நான் முற்காலத்தில் ''திருமாலின் நாபிக்கமலமாகிய தாமரைமலரில் வீற்றிருக்கும் உரிமையுடையவனான பிரமதேவனை நோக்கித் தவம் இயற்றிய காலத்தில், எல்லாப் பொருள்களுக்கும் மூலகாரணமான, அழகிய பரம்பொருளிடத்து உயரிய அன்பும், நல்ல தருமநெறிகளிலிருந்து

Koviloor Digital Library

சற்றும் தவறாமையும், ஏனைய உயிரினங்களிடத்து அன்பும், வேதம் வல்ல சான்றோர்களின் அருளும், நான் வேண்டி விரும்பிப் பெற்றேன்'' என்கிறான் வீடணன்.

'உயிர்க்கு நேயம்' என்பது ஆன்ம நேயத்தையும், ஜீவகாருண்யத்தையும் குறிக்கும் என்க. ''பொய்யும், களவும், பாதகமும், பொல்லா ஒழுக்கும் அவை கடிந்து, மெய்யும் தயவும் தருமமுடன் விளங்கும் பொறையும் இவை பூண்டு, செய்யும் செயல்கள் அவையெல்லாம், சிட்டர்செய்யும் செயலாகி, அய்யன் புகழ் வீடணன் மறைகளறைந்த தவத்தின் வழி நின்றான்'' என்பது உத்தரகாண்டம், இராவணன் பிறப்புப் படலம். அவன் விரும்பிப்பெற்ற வரங்கள் 'நல்லாய்! அறத்தைக் கைவிட்டு நடுங்கும் இடும்பைவரினும், நான் பொல்லாதன செய்யாது ஒழிக, போரில் பிரமாதிகள் என்னை வெல்லாதொழிக; இவ்வரங்கள் வேண்டும் 'என்ன விரிஞ்சன்' அவையெல்லாம் பெறுதிநீ என்றும் இறவாது இருத்தி' என உரைத்தான் என்பதும் உத்தரகாண்டம். அவன் தவம் பூண்ட தன்மையை உத்தரகாண்டம் பேசுகிறது கேளுங்கள், 'திரிகாலமும் உணர் செய்தவத் தோர் திகைப்ப, வைகி அவ்வனத்துள், ஒரு கால்போல் ஒரு கால் மண் ஊன்றி, ஒரு கால் எடுத்து உயர, எரிகால் இரவி மண்டலம் மேல் நோக்கி, இருகைகளும் எடுத்து, வருகாலங்கள் வீடணனும் வருடம் ஐயாயிரம் கழித்தான்' என்பது பாடல்பகுதி.

22. "ஆயது பயப்பது ஓர் அமைதி ஆயது;
தூயது நினைந்தது; தொல்லை யாவர்க்கும்
நாயகன் மலர்க்கழல் நணுகி, நம்மனத்து
ஏயது முடித்தும்" என்று இனிது மேயினான். (6469)

(பயப்பது-அளிப்பது/தருவது; அமைதி-சமயம்/தகுதியான காலம்; தொல்லை-பழமையான; நணுகி-அடைந்து; ஏயது-பொருந்தியது; ஆயது-அந்தவரம்; மே!தல்-அமர்ந்திருத்தல்/வீற்றிருத்தல்)

''அவ்வாறு நான் பிரமதேவனிடம் பெற்ற வரங்களால் இப்போது நமக்கு நன்மை பயக்கத் தகுந்த காலம் வந்து சேர்ந்திருக்கிறது. நீங்கள் நினைத்துக் கூறியதும் தூய்மையானது, குற்றமற்றது; சரியானதே; பழமையான உயிரினங்கள் எல்லாவற்றுக்கும் ஆதிமூல காரணனான இந்த இராமபிரானின் செந்தாமரை மலர்போலும் திருவடிகளை அடைந்து, நம் உள்ளத்தில் பொருந்தியிருக்கும் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்வோம்'' என்று மனக்கவலை நீங்கப்பெற்று வீடணன்தன் அமைச்சர் களிடம் கூறி இனிதாக வீற்றிருந்தான்.

'தூயது நினைந்தது' என்பது முன்பு அமைச்சர்கள் கூறிய 'தரும மூர்த்தியைக் காட்சியே இனிக்கடன்' என்று கூறியதைக் குறித்தது.

Koviloor Digital Library

23. அவர்கள் ஒரு மரச்செறிவில் தங்கியிருத்தல்

'இருளிடை எய்துவது இயல்பு அன்றாம்' என,
பொருள் உற உணர்ந்த, அப்புலன் கொள் கேள்வியர்,
மருளுறு சோலையின் மறைந்து வைகினார்;
உருளுறு தேரவன் உதயம் எய்தினான். (6470)

(பொருள்-உலகஇயல்பு; புலன்-புலம்/அறிவு; வைகுதல்-தங்கியிருத்தல்; சோலை-மரச்செறிவு; மருள்-இருள்/மயக்கம்; உறுதல்-அடைதல்; உருள்-சக்கரம்)

''இந்த இருள் நிறைந்த நேரத்தில், புதியவர்களாகிய நாம், இராமபிரான் இருக்கும் இடத்திற்குச் செல்வது என்பது சரியன்று' என்று, உலக இயல்பினை நன்கு உணர்ந்து, தேர்ந்த அறிவு பெற்ற வீடணனும், அவனுடைய நான்கு அமைச்சர்களும் மயக்கம் தருகின்றதும், இருள் நிறைந்ததும் மற்ற எவரும் காணமுடியாததுமான ஒரு அடர்ந்த மரச் செறிவில் இரவு முழுவதும் தங்கியிருந்தனர். சிறிது நேரத்தில் ஒற்றைச் சக்கரத் தேரையுடைய சூரியன் உதயகிரியில் உதயமானான். பொழுது விடிந்தது.

பொதுவாகவே, புதியவர்களைப் பார்க்கச் செல்லும்போது இரவு நேரத்தில் சென்று முதல்முதலாகப் பார்க்கக்கூடாது என்பது ஒரு நியதி, மரபு. இதனையே இங்கே குறிப்பிட்டார் என்க. தாம் பகைவர் கூட்டத்தில் இருந்து வந்திருப்பதால், அந்த வானரக் கூட்டங்களுக்குத் தெரியாமல் மறைந்து தங்கியிருக்க வேண்டும் என்று கருதி, ஒரு இருண்ட மரச்செறிவில் தங்கியிருந்தனர் என்பதாம்.

24. இராமன் கடற்கரையில் நிற்றல்

அப்புறத்து, இராமன், அவ் அலங்கு வேலையைக்,
குப்புறக் கருதுவான், குவளை நோக்கி தன்
துப்பு உறச் சிவந்த வாய் நினைந்து, சோர்குவான்,
இப்புறத்து இருங்கரை மருங்கின் எய்தினான். (6471)

(புறம்-பக்கம்; அலங்குதல்-வீசுதல்; குப்புறுதல்-தாண்டிச்செல்லுதல்/கடந்து செல்லுதல்; கருதுதல்-சிந்தித்தல்; நோக்கி-கண்களை உடையவள்; துப்பு-பவழம்; சோர்குதல்-தளர்தல்; இரும்-பெரிய; மருங்கு-பக்கம்/ஓரம்/கரை)

அது அவ்வாறிருக்க, இந்தப்பக்கம், இராமன், இந்த அலைவீசுகின்ற கடலை எவ்வாறு சேனையுடன் தாண்டிக் கடந்து செல்லுவது என்று ஆழ்ந்து சிந்திக்கலானான். அப்போது அவனுக்குக் கருங்குவளை மலர் போலும் கண்களையுடைய சீதாதேவியின் பவழம் போன்ற சிவந்த

Koviloor Digital Library

அதரங்கள் நினைவுக்கு வந்து அவனைப் பாடாய்ப்படுத்தின. எனவே சற்றுத் தளர்ந்து போனான். எனவே அந்தக் கடலின் பெரிய கரையாகிய வடகரைப் பக்கம் தனியாக வந்து நின்றான்.

தான் சீதையின் பிரிவுத்துயரால் தளர்ந்து போவது தன் தம்பிக்கும், சுக்கிரீவனுக்கும், வானரப்படையினருக்கும் தெரிய வேண்டாமே என்று எண்ணித் தனிமையை நாடி, கடலின் ஒரு கரையின் ஓரமாக வந்து நின்றான் என்பது கருத்து. இராமன் இப்போது தங்கியுள்ள இடம் கடலும் கடல் சார்ந்த இடமுமாகிய நெய்தல் நிலம், எனவே கவிஞன் அந்நிலத்துக் கருப்பொருளாகிய குவளைமலரையும், பவழத்தையுமே உவமையாகக் கூறியதும், அந்நிலத்து உரிப்பொருளாகிய இரங்குதலை-மனந்தளர் வடைவதையே கூறியதையும் எண்ணுக.

25. கானலும், கழிகளும், மணலும், கண்டலும்,
பானலும், குவளையும், பரந்த புன்னையும்,
மேல்நிறை அன்னமும், பெடையும், வேட்கைகூர்
பூ நிறை சோலையும், புரிந்து நோக்கினான். (6472)

(கானல்-கடற்கரைச் சோலை; கழி-உப்பங்கழிகள்; கண்டல்-தாழை; பானல்-கருநெய்தல் மலர்; வேட்கை-ஆசை; கூரல்-மிகுதல்; புரிந்து-விரும்பி; குவளை-கருநீலமலர்; பெடை-பெண்அன்னம்)

கடற்கரையின் ஓரத்தில் நின்றிருந்த இராமன், அங்கே உள்ள கடற்கரைச் சோலைகளையும், அருகிலுள்ள உப்பங்கழிகளையும், கடலின் மணற் பரப்புகளையும், அங்கே அடர்ந்துள்ள தாழைப்புதர்களையும், அழகாக நீர்நிலைகளில் மலர்ந்திருக்கின்ற கருநெய்தல் மலர்களையும், கருநீல மலர்களையும், பரந்து விரிந்து பரவியுள்ள புன்னை மரங்களையும், அவற்றின் மேல் நிறைவாக அமர்ந்திருக்கின்ற ஆண்அன்னத்தையும் அதனைத் தழுவியிருக்கின்ற பெண்அன்னத்தையும், காண்பவர்கள் விருப்பத்துடன் காணும் மலர்கள் நிறைந்த சோலைகளையும், தானும் மிக விருப்பத்துடன் பார்த்துக்கொண்டு நின்றிருந்தான்.

கானல், கழிகள், மணல், கண்டல், பானல், குவளை, புன்னை, அன்னப் பறவை, சோலை இவையாவும் நெய்தல் நிலத்திற்குரிய கருப்பொருள்கள் என்பதை உணர்க. 'கழி' என்பது கடலையடுத்துப் பரவியுள்ள உவர் நீர்ப்பரப்பாகிய உப்பங்கழிகளைக் குறிக்கும். குவளை மலர் சீதாதேவியின் அழகிய கண்களையும், அன்னப்பேடை அவள் நடையழகையும் நினைவு படுத்தியதால் இராமன் அவற்றை புரிந்து-விரும்பி நோக்கினான் என்றார் என்க.

Koviloor Digital Library

26. தரளமும், பவளமும், தரங்கம் ஈட்டிய,
திரள் மணிக்குப்பையும், கனக தீரமும்,
மருளும் மென் பொதும்பரும், மணலின் குன்றமும்,
புரள் நெடுந்திரைகளும், புரிந்து நோக்கினான். (6473)

(தரளம்-முத்து; தரங்கம்-அலைகள்; ஈட்டிய-குவித்த; குப்பை-குவியல்; கனகம்-பொன்; தீரம்-கரைப்பரப்பு; மருள்தல்-அஞ்சுதல்/மயங்குதல்; பொதும்பர்-சோலை/மரச்செறிவு; குன்றம்-மேடு/திடல்; புரள்தல்-மடங்குதல்; புரிந்து-விரும்பி)

கடலலைகள் திரட்டிக்கொண்டு வந்து கொட்டிய முத்துக்களையும், பவழங்களையும், திரளாகக் குவிந்திருக்கின்ற இரத்தினக் குவியல் களையும், பொன்துகள் பரந்து படிந்திருக்கின்ற கடற்கரைப் பரப்பையும், கண்டவர் அஞ்சுவதும், மயக்கம் கொள்வதுமான, இருண்ட மெல்லிய மலர்கள் நிறைந்த சோலை போன்ற மரச்செறிவுகளையும், மணல் மேடுகளையும், மடிந்து புரண்டு எழுகின்ற நீண்ட அலைகளையும் இராமன் மிக விரும்பிப் பார்த்துக்கொண்டு நின்றான்.

அவன் அவ்வாறு நிற்பதற்குக் காரணம், தரளம், சீதாதேவியின் பற்களையும், பவளம் வாய்இதழ்களையும், கனகதீரம் அவள் மேனி யழகையும், மணலின் குன்றம் அரும்பு போன்ற அவள் கொங்கை களையும், திரள் மணிக்குப்பை மற்ற அணிகலன்களையும், இருண்ட பொதும்பர் கூந்தலையும், புரள் நெடுந்திரைகள் அவள் வயிற்றின் மடிப்புகளையும், அவனுக்கு நினைவூட்டியதால் அவ்வாறு விரும்பிப் பார்த்துக்கொண்டே நின்றான் என்பதாம்.

27. மின்நகு 'மணிவிரல் தேய, வீழ்கண்ணீர்
துன்ன அரும்பெரும் சுழி அழிப்ப, சோர்வினோடு,
இன்நகை நுளைச்சியர் இழைக்கும் ஆழிசால்
புன்னை அம் பொதும்பரும் புக்கு, நோக்கினான். (6474)

(நகை-சிரிப்பு; நுளைச்சியர்-வலைஞர் மகளிர்/பரதவ மகளிர்/செம்படவப் பெண்கள்; நகு-போல்; மணி-மாணிக்கம்; துன்னஅரும்-கூடுதற்கு அரிய; சுழி-கூடற்சுழி; சால்-மிகுதி; பொதும்பர்-சோலை; சோர்வு-மனத்தளர்ச்சி; இழைத்தல்-கீறுதல்/கோடிடுதல்)

தன் கணவருடன் கூடியிருந்த காலத்தில் இனிய மகிழ்ச்சியான சிரிப்பைக் கொண்டிருந்த செம்படவப் பெண்கள், இப்பொழுது அவர்களைப் பிரிந்திருப்பதால் தமது மின்னலை ஒத்த ஒளி வீசும் மாணிக்க மோதிரம் பதிக்கப்பட்ட அழகிய விரல்கள் தேய்ந்துபோகும் படியும், தாம் அவரை நினைந்து அழும்போது சிந்துகின்ற கண்ணீர், அழித்தற்கரிய அந்தப்பெரிய 'கூடற்சுழியை' அழித்து விடவும், அதனால் மனம் மிகவும்

Koviloor Digital Library

தளர்ச்சி அடைந்து, இந்தக்கூடற்சுழியை இழைத்துப் பார்க்கும் செம்படவப் பெண்கள் மிகுந்திருக்கின்ற, புன்னைமரம் அடர்ந்துள்ள சோலைகளுள்ளும் இராமன் சென்று பார்த்தான்.

அவ்வாறு அவன் ''அப்புன்னையம் பொதும்பரும் புக்கு நோக்கியதற்குக்'' காரணம், இந்தச் செம்படவப் பெண்களைப் போலத் தனது மனைவி சீதாதேவியும் 'கூடற்சுழி இழைத்து தன் வருகையை எதிர்நோக்கி மனம் தளர்ந்து போயிருப்பாளோ என்று கருதினமையால் என்க. அவர்கள் 'கூடற்சுழி' இழைத்து அவர்கள் விரல்கள் தேய்ந்து போனது என்று கூறுவது, கம்பனின் அதீதமான கற்பனைக்கு ஒரு சான்று.

இங்கே 'கூடற்சுழி' என்பது விளக்கப்பட வேண்டுவதாகும். தலைவனைப் பிரிந்த தலைவி, தன் தலைவன் விரைவில் திரும்பிவருவானா, மாட்டானா என மணல் தரையிலே, தம் கைகளால் சுழிபோல எழுதிப் பார்ப்பாள், அவ்வாறு எழுதும் பொழுது அந்தச் சுழிகளின் இரு முனைகளும் ஒன்று சேர்ந்து கூடிவிட்டால் தன் தலைவன் விரைவில் வந்துவிடுவான் என்றும், கூடாது பலமுறை பலநாட்களும் ஏமாற்றினால் அவன் வருகை தாமதப்படும் என்றும், சிலசமயங்களில் வாராதே போகக்கூடும் என்றும் அவர்கள் நம்பிக்கை கொண்டு இதனை எழுதிப் பார்ப்பார்கள். இது சங்க இலக்கியங்களில் பேசப்படும் ஒரு அகத்திணைக்கூறு. இது இங்கே பேசப்பட்டிருக்கிறது.

'தெள்ளியார் பலர் கைதொழும் தேவனார், வள்ளல்மால் இருஞ் சோலை மணாளனார், பள்ளிகொள்ளும் இடத்து, அடிகொட்டிடக் கொள்ளுமாகில், நீ கூடிடுகூடலே' என்பது நாச்சியார் திருமொழி. 'ஆழி இழைப்பப் பகல்போல் இரவெல்லாம், தோழி துணையாத் துயர்தீரும்' என்பது யாப்பருங்காலக் காரிகை விருத்தியுரை. 'கூடற்பெருமானை, கூடலார்கோமானை, கூடப்பெறுவேனேல் கூடு என்று, கூடல் இழைப்பாள் போல் காட்டி இழையாதிருக்கும் பிழைப்பில் பிழைபாக்கறிந்து' என்பது முத்தொள்ளாயிரம். 'சென்றார் வரையக் கருமம் செருவலோன், பொன்றாங்கு அணியகலம் புல்லப்பொருந்துமேல், குன்றாது கூடுக' எனக்கூறி, முத்தவார் மணல்மேல் அன்று, ஆங்கு, அணியிழையாள் ஆழி இழைத்தாளே' என்பது சீவகசிந்தாமணி. நுளைச்சியர், நெய்தல் நில வலைஞர் மகளிர் என்க. கூடுகின்ற பொழுது மகிழ்ச்சியும், பிரிந்திருக்கின்ற பொழுது துன்பமும் கொண்டு அழுவது பெண்டிர் இயல்பு. ஆதலின் 'இன்நகை நுளைச்சியர்' என்றார் என்க.

28. இராமபிரானின் பிரிவுத்துயர்-விரகதாபம் [5 பாடல்கள்]

கூதிர் நுண்குறும் பனித்திவலைக் கோவை கால்,
மோதி வெண்திரை வர, முடவெண் தாழை மேல்,
பாதிஅம் சிறையிடைப் பெடையைப் பாடு அணைத்து
ஓதிமம் துயில்வ கண்டு, உயிர்ப்பு வீங்கினான். (6475)

Koviloor Digital Library

(கூதிர்-குளிர்; நுண்-மிகச்சிறிய/நுண்மையான; திவலை-துளி; கோவை-வரிசை; காலுதல்-சொரிதல்/சிந்துதல்; முடம்-வளைவு; ஓதிமம்-ஆண்அன்னம்; பாதி-ஒருபுறம்; அம்-அழகிய; சிறை-இறகு/சிறகு; பெடை-பெண்அன்னம்; பாடு-பக்கம்; உயிர்ப்பு-மூச்சு; மோதுதல்-தாக்குதல்; தாழை-தாழைச்செடி)

வளைந்த தாழைச்செடியின் மேல், குளிர்காலத்து நுண்மையான சிறிய பனித்துளிகளின் வரிசை சிந்துகின்றன; அத்துடன்கூட வெள்ளிய அலைகள் கடலின் கரையைத் தாக்கி வருகின்றன. இதனால் அங்கே இருக்கின்ற ஆண் அன்னப்பறவை, பெண் அன்னத்தைத் தன்னுடைய இரண்டு சிறகுகளில் பாதியாகிய ஒரு சிறகினால், தன் பக்கத்தே இழுத்து அணைத்துக் கொண்டு படுத்துத் தூங்குகிறது. இதனைக் கண்ட இராமபிரான் பெருமூச்செறிந்தான்.

ஆண் அன்னம் பெடையன்னத்தை அணைத்துக் கொண்டு துயில்வது போல் தன்னால் சீதாதேவியுடன் ஒன்றி இருக்க இயலவில்லையே என்ற ஆற்றாமையால் பிரிவுத்துயரால் பெருமூச்செறிந்து வருந்தி நிற்கின்றான் இராமபிரான் என்பதாம். கூதிர்காலம் என்பது ஐப்பசி, கார்த்திகை மாதங்களாகும். இவ்வாறு இந்த நேரத்தில் இராமபிரான் பிரிவாற்றாமையால் துன்பம் கொள்ளுகிறான் என்பது வான்மீகியால் பேசப்படவில்லை. கம்பன் மாத்திரமே இந்த இடத்தில் இராமபிரானின் பிரிவுத்துயரினை வெளிக்காட்டுகிறான். குளிர்ச்சி மிகுதியைத் தணிவிக்க வெப்பமுள்ள அன்னங்கள் தன் சிறகால் அணைத்துத் தழுவின என்க.

29. அருந்துதற்கு இனிய மீன்கொணர, அன்பினால்
பெருந்தடங் கொம்பிடைப் பிரிந்த சேவலை,
வருந் திசைநோக்கி, ஓர் மழலை வெண்குருகு,
இருந்தது கண்டு நின்று, இரக்கம் எய்தினான். (6476)

(அருந்துதல்-உண்ணுதல்; கொம்பு-கிளை; சேவல்-ஆண்நாரை; மழலை-இளமை; குருகு-பெண்நாரை; இரங்குதல்-மனம் தளர்தலுமாம்; இனிய-சுவையான)

தன்னுடைய பெண் நாரை உண்பதற்காக, நல்ல சுவைமிக்க மீனைக் கொண்டு வருவதற்காக, அதன்மீது கொண்ட பேரன்பினால் தான் வசித்து வரும் பெரிய அகன்ற கிளைகளிடத்தே அதனைப் பத்திரமாகத் தங்க வைத்து விட்டு, இரைதேடி சேய்மையிலுள்ள ஒரு நீர்நிலைக்குப் பிரிந்து சென்ற ஒரு ஆண்நாரை, வருகின்ற திசையை நோக்கி, இந்த இளமையான, வெண்ணிறமுடைய இனிய குரலையுடைய பெண்நாரை எதிர்பார்த்துக் கொண்டு காத்து நின்றதைக் கண்டு இராமபிரான் வருத்தம் கொண்டான்.

அவன் வருந்துவதற்குக் காரணம், தன்னுடைய மனைவியாகிய சீதாதேவியும், மானைத் தேடிச்சென்ற, தான் வரும் திசையையே பார்த்துக்

Koviloor Digital Library

கொண்டு, காத்துக் கொண்டிருப்பாளோ என்று கருதியதால் என்க. இதனைச் சுந்தரகாண்டத்தில் கவிஞன் மிக அருமையாகக் கூறியிருப்பதையும் இங்கே நினைவுகூர்க. 'சுருதிநாயகன் வரும்வரும் என்பதோர் துணிவால், கருதி மாதிரம் அனைத்தையும் அளக்கின்ற கண்ணாள்' என்பது சுந்தரகாண்டம். 'வாராது ஒழியான் எனும் வண்மையினால் ஓராயிரகோடி இடர்க்கு உடையேன்' என்பதும் சுந்தரகாண்டம். முன்பாடலில் பிரியாது இணைந்திருந்த இரு அன்னப்பறவைகளைக் கண்டு பெருமூச்செறிந்த அதே இராமன், இப்போது இங்கே ஒன்றைவிட்டு ஒன்று சிறிது நேரத்திற்குப் பிரிந்து இருப்பதைப் பார்த்து வருந்தி நின்றான் என்று இராமபிரானின் மனநிலையைப் படம்பிடித்துக் காட்டும் கம்பனின் கைவண்ணம் கண்டு மகிழ்க.

30. ஒரு தனிப்பேடைமேல், உள்ளம் ஓடலால்,
பெருவலி வயக் குருகு இரண்டும் பேர்கில,
திருகு வெஞ்சினத்தன, தெறுகண் தீ உகப்
பொருவன கண்டு, தன் புருவம் கோட்டினான். (6477)

(பேடை-பெண்; உள்ளம்-மனம்; ஓடுதல்-விரும்பிச்செல்லுதல்; வய-வலிமையுடைய/வெற்றி; பேர்தல்-பின்வாங்குதல்/இடம்விட்டுப் பெயர்தல்; திருகு-மாறுபட்ட; தெறு-சுடுகின்ற; பொருதல்-போர்செய்தல்; கோட்டுதல்-வளைத்தல்; ஒரு-ஒப்பற்ற; உகுதல்-சிந்துதல்)

ஒரு அழகிய ஒப்பற்ற பெண் குருகு தனித்து நிற்கிறது; அதற்குச் சமமான, பெரும் வலிமையும், வெற்றியும் கொண்ட இரண்டு ஆண் குருகுகள் மனம் விரும்பித் தம் உள்ளத்தை அதன்பால் ஓடவிடுகின்றன. அவை தம் இடத்தை விட்டு நகரவில்லை, மாறுபட்ட பெரும் சீற்றம் கொண்டு, தம் கொடிய கண்களில் தீப்பொறி பறக்க, இரண்டும் ஒன்றுக் கொன்று சண்டை செய்து கொண்டிருக்கின்றன; இக்காட்சியைக் கண்ட இராமபிரான் சினத்தால் தன் புருவத்தை வளைத்தான்.

புருவம் வளைதல் என்பது சினத்தின் மெய் வெளிப்பாடு. இது முன்பும் பல இடங்களில் பயின்று வந்துள்ளதை நினைவு கூர்க. 'உள்ளம் ஓடலால்' என்ற சொல்லாட்சி கருதுக. தனியாக இருக்கின்ற, ஒப்பற்ற அழகு படைத்த ஒரு பெண்ணின் மேல் இரு ஆடவர்கள் காதல் கொண்டால், மனம் மெதுவாகவா செல்லும்? விரைந்து ஓடத்தானே செய்யும்? காதல் வேட்கையை இவ்வளவு எளிய தமிழில் கூறக் கம்பனைத் தவிர வேறு யாரால் முடியும்? இரண்டு ஆண்குருகுகளும் ஒன்றுக்கொன்று சளைத்தன வல்ல. இரண்டும் சம வலிமை உடையவை. இங்கே இராவணனையும், இராமனையும், சீதாதேவியையும், அந்தந்த இடத்தில் பொருத்திப் பாருங்கள். பாடலின் பொருள் மிக நன்கு விளங்கும்.

Koviloor Digital Library

31. உள் நிறை ஊடலில் தோற்ற ஓதிமம்
கண்ணுறு கலவியில் வெல்லக் கண்டவன்,
தண்நிறப் பவளவாய் இதழை, தற்பொதி
வெண்நிற முத்தினால், அதுக்கி, விம்மினான். (6478)

(ஓதிமம்-ஆண்அன்னம்; கலவி-இரண்டு உடம்பும் ஒன்றுபடுதல்/கூடல்; தண்-இனிய; பொதிதல்-மறைத்தல்; ஊடல்-புலவி/பிணக்கு/சிறிய கோபம்; கண்-உடம்பு; முத்து-பற்கள்; அதுக்குதல்-அழுத்துதல்/கடித்தல்; விம்முதல்-பொருமுதல்)

பெண் அன்னத்தின் உள்ளத்தினுள்ளே மறைந்து நிறைந்திருக்கும் சிறு கோபத்தினால் ஊடல் கொண்டு, அதில் பெண் அன்னத்திடம் தோற்றுப் பணிந்துபோன ஆண்அன்னம் கூடலில்-புணர்ச்சியில் வெற்றி பெற்றுப் பேரின்பம் அடைந்ததைக் கண்டவனான இராமபிரான் தன்னுடைய இனிய குளிர்ந்த பவளம் போன்ற நிறம்பொருந்திய வாய் இதழைத் தன்னை மறைத்திருக்கும் வெண்மையான முத்துப்போன்ற பற்களால் சற்றுக் கடித்து ஏக்கத்தால் பொருமலானான்.

அவன் அவ்வாறு பொருமுவதற்குக் காரணம் சீதாதேவியின் பிரிவாற்றாமையே என்க. வாயிதழைக் கடித்தல், கவலையின் மெய்ப்பாடு. 'ஊடலில் தோற்றவர் வென்றார்; அது மன்னும் கூடலில் காணப்படும்' என்பது குறள்-1327. பவழம் போன்ற வாயிதழை முத்துப்போன்ற பற்களால் அதுக்கினான் என்றது ஒரு நயம். 'மனைவி உயர்வும், கிழவோன் பணிவும், நினையுங்காலை புலவியுள் உரிய' என்பது தொல்காப்பியம். கலவியில் வெல்லுதல் என்பது புணர்ச்சியில் பேரின்பம் அடைதல் எனக் கொள்க. 'அன்னம் துணையோடு ஆடக்கண்டு, நென்னல் நோக்கி நின்றார் ஒருவர்' என்பது சிலப்பதிகாரம். நென்னல்-நேற்று.

32. சுக்கிரீவன் முதலியோர் இராமபிரான் வருத்தம் நீக்குதல்

இத்திறம் எய்திய காலை, எய்துறும்
வித்தகர் சொற்களால் மெலிவு நீங்கினான்;
ஒத்தனன் இராமனும், உணர்வு தோன்றிய
பித்தரின், ஒருவகை பெயர்ந்து போயினான். (6479)

(திறம்-நிலை; வித்தகர்-அறிஞர்கள்; மெலிவு-மனத்துயர்; உணர்வு-நல்லறிவு; பெயர்தல்-அகல்தல்/நீங்குதல்)

இத்தகைய நிலையை இராமபிரான் அடைந்தபோது, அங்கே, அனுமன், சாம்பவன், சுக்கிரீவன், அங்கதன் போன்ற மேம்பட்ட அறிவின் மிக்கவர்கள் வந்து சேர்ந்தனர். இராமனது நிலையைக் கண்ட அவர்கள் தேறுதல் மொழிகளைக் கூறினார்கள். அதனால் இராமபிரான் தன் மனத்துயர் நீங்கியவனைப் போலத் தோன்றினான்; உணர்வுவரப் பெற்ற

Koviloor Digital Library

பித்தரைப்போல இராமபிரானும் ஏதோ ஒரு வகையில் தேறுதல் அடைந்து, அவ்விடம் விட்டு அகன்று தன் இருப்பிடம் செல்லலாயினான்.

முழுவதும் துயர் நீங்கினானில்லை என்பதையும், முழுவதும் மெய்யுணர்வு பெற்றான் இல்லை என்பதையும், 'மெலிவு நீங்கினான் ஒத்தனன் இராமனும் உணர்வு தோன்றிய பித்தரின் ஒருவகை' என்று தெளிவாகக் கம்பன் கூறுவது கருதத்தக்கது. அவன் மீண்டும் எப்போது வேண்டுமானாலும் மனத்துயர் கொள்ளலாம், மெய்யுணர்வு அழியலாம் என்பது குறிப்பு.

33. வீடணன் அங்கு வந்து சேர்தல்

உறைவிடம் எய்தினான், ஒருங்கு கேள்வியின்
துறைஅறி துணைவரோடு இருந்த சூழலில்,
முறைபடு தானையின் மருங்கு முற்றினான்
அறைகழல் வீடணன், அயிர்ப்புஇல் சிந்தையான். (6480)

(உறைவிடம்-இருப்பிடம்; சூழல்-இடம்; மருங்கு-பக்கம்; அறைதல்-ஒலித்தல்; அயிர்ப்பு-ஐயம்/சந்தேகம்; முற்றுதல்-அடைதல்; ஒருங்கு-ஒருசேர)

அவ்வாறு தன் இருப்பிடமாகிய பாசறைக்குச் சென்றுசேர்ந்த இராம பிரான், அனுமன் முதலிய கேள்விகளில் வல்லவர்களாகிய தன் நண்பர் களோடு ஒருசேர அமர்ந்திருந்த இடத்தில், முறையாகச் செயல்படுகின்ற வானரச்சேனையின் பக்கத்தில், தருமநெறியினின்றும் சற்றும் மாறுபடாத, ஒலிக்கின்ற வீரக்கழலை அணிந்த தருமசீலனான, வீடணன் அரக்க இனத்தவனாகிய தான் வானர சேனைக்கு அருகில் செல்லு கிறோமே இதனால் ஏதேனும் இடர்ப்பாடு வருமோ என்ற சந்தேகம் இல்லாமலும், இராமபிரான் தன்னை ஏற்றுக்கொள்வாரா மாட்டாரா என்ற சந்தேகமில்லாமலும், அந்த இடத்தைச் சென்று அடைந்தான்.

அங்கே வானரவீரர்கள் தத்தம் தகுதிக்கு ஏற்ப இடம் அமைத்து அமர்ந்திருந்தனர். எனவே 'முறைபடுதானை' என்றார் என்க. மறைந்து வரவில்லை நேரே வந்தான் என்பதை 'அறைகழல் வீடணன்' என்பதால் குறித்தார் என்க.

34. வானரப்படை வீடணனை எதிர்த்தல்

முற்றிய குரிசிலை, 'முழங்கு தானையின்
உற்றனர், நிருதர்வந்து' என்ன, ஒன்றினார்,
'எற்றுதிர்; பற்றுதிர்; எறிதிர்; என்று, இடை
சுற்றினர்; உரும் எனத் தெழிக்கும் சொல்லினார். (6481)

Koviloor Digital Library

(முற்றிய-வந்தடைந்த; குரிசில்- ஆண்களிற் சிறந்தவன்/உபகாரி; முழங்குதல்-ஒலிக்கின்ற; நிருதர்-அரக்கர், உறுதல்-சேர்தல்; ஒன்றுதல்-ஒன்றுசேர்தல்; எற்றுதல்-தாக்குதல்/அடித்தல்; எறிதல்-ஆயுதங்களால் அடித்தல்; உரும்-பேரிடி; தெழித்தல்-அதட்டுதல்; இடை-இடம்; சுற்றுதல்-சூழ்ந்து கொள்ளுதல்)

அவ்வாறு வானரச்சேனையின் அருகில் வந்து சேர்ந்த ஆடவர்களில் சிறந்தவனான வீடணனைப் பார்த்த உடனேயே 'முரசு ஒலிக்கின்ற நம் படைகளுக்குள், அரக்கர்கள் வந்து புகுந்து விட்டார்கள்' என்று கூறிக் கொண்டே எல்லா வானரங்களும் ஒன்று சேர்ந்துகொண்டு 'இவர்களைப் பிடியுங்கள், தாக்குங்கள், ஆயுதங்களை அவர்கள்மேல் வீசி எறியுங்கள்' என்று பேரிடிபோல் முழக்கமிட்டுக் கொண்டு, அதட்டுகின்ற சொல்லை உடையவராய், அவ்வரக்கர்களை அவ்விடத்தில் சுற்றிச்சூழ்ந்து கொண்டனர்.

'குரிசில்' என்பது பொதுவாகப் பிறர்க்கு நன்மை செய்பவரைக் குறிக்கும் ஒரு சொல். இங்கே வீடணன் இராமபிரானை அடைக்கலம் அடைந்து, அவனுக்கு உதவிகள் செய்யப்போகிறான் என்பதைக் கவிஞன், கற்போர்க்கு முன்னோட்டமாகக் கோடிட்டுக் காட்டுகிறான் எனக் கொள்க.

35. "தந்தது தருமமே கொணர்ந்துதான்; இவன்
வெந்தொழில் தீவினை பயந்த மேன்மையான்;
வந்தனன் இலங்கையர் மன்னன் ஆகும்; நம்
சிந்தனை முடிந்தன", என்னும் சிந்தையார். (6482)

(சிந்தனை-கருத்துக்கள்/கவலைகள்; சிந்தை-கருத்து/எண்ணம்; பயந்த-பயன்அளிக்கப் பெற்ற; தருமம்-அறக்கடவுள்; கொணர்தல்-கொண்டுவருதல்)

''நாம் செய்த அறச்செயல்கள்தான்-அறக்கடவுள்தான் இவனை இங்கு கொண்டுவந்து விட்டிருக்கிறது. முன்பு சீதையைக் கவர்ந்து சென்ற கொடிய செயல் பயனளித்ததால், இப்போது அதைவிட மேம்பட்ட செயலான, இராமபிரானைக் கவர்ந்து செல்லத்தான் வந்திருக்கிறான் போலும், இவன்தான் இலங்கையின் அரசனான இராவணன் ஆவான், இவனைக் கொல்ல வேண்டும், நாம் கருதியிருந்த கவலை இப்போது முடிந்துவிட்டது'' என்று சிலர் எண்ணிக்கொண்டு நின்றிருந்தனர்.

வானரச்சேனை கடற்கரையில் வந்து தங்கியிருப்பது இராவணனைக் கொன்று சீதாதேவியை மீட்கவேண்டும் என்பதற்காகவே. இப்பொழுது வீடணன் அமைச்சர்களுடன் இவர்கள் இருப்பிடத்திற்கே வந்து சேர்ந்ததை, இராவணன்தான் இங்கு வந்துவிட்டான் என்று தவறாகக் கருதிக்கொண்டு, தாம் கருதிவந்த செயல் மிக எளிதாக நிறைவேறிவிடும் என்ற கருத்துக் கொண்டிருந்தனர் சில வானரர்கள் என்பதாம்.

Koviloor Digital Library

36. "இருபது கரம்; தலை ஈரைந்து என்னும் அத்
திருவிலிக்கு அன்னவை சிதைந்தவோ?" என்பார்;
"பொருதொழில் எம்மொடும் பொருதிபோர்" என்பார்;
ஒருவரின் ஒருவர் சென்று உறுக்கி ஊன்றுவார். (6483)

(திரு-நல்வினை/அருட்செல்வம்/நற்பேறு; இலி-இல்லாதவன்; பொருதல்-போர்செய்தல்; உறுக்குதல்-வெகுளுதல்; ஊன்றுதல்-எதிர்த்தல்; சிதைதல்-அழிதல்)

''இலங்கை மன்னனாகிய அந்த நற்பேரில்லாத தீவினையாளனாகிய இராவணனுக்குப் பத்துத்தலைகளும், இருபது கைகளும் உண்டென்று சொல்லுவார்களே! ஆனால் நம் எதிரில் வந்து நிற்கும் இந்த அரக்கனுக்கு ஒருதலையும் இரண்டு கைகளும்தானே இருக்கின்றன. ஒருவேளை அந்தத் தலைகளும் கைகளும் அழிந்துபோயிருக்குமோ? என்று கூறிக்கொண்டும், போர் செய்தலையே தொழிலாகக் கொண்ட எங்களுடன் வந்து போர் புரிவாயாக!'' என்று கூறிக்கொண்டும், அவர்களுக்குள்ளேயே ஒருவரையொருவர் முந்திக்கொண்டு சென்று அவ்வரக்கர்களைச் சினந்து எதிர்க்கலாயினர்.

'திருவிலி' என்ற சொல் நமக்குப் புதிது. திரு இல்லாதவன் திருவிலி. இராவணனிடம் பொருட்செல்வமும், அரசச்செல்வமும் அளவுக்கு அதிகமாகவே இருக்கிறது. ஆனால் தான் பெற்ற வரங்களை எல்லாம் தவறாகப் பயன்படுத்தத் தொடங்கியதால் இப்பொழுது அவனிடம் அருட்செல்வம் இல்லை என்பதைத்தான் இந்த 'திருவிலி' என்னும் சொல் குறிக்கிறது எனக் கொள்க. நல்வினைப் பயனில்லாத தீவினையாளன் என்க. அனுமன் இலங்கையில் கும்பகருணனைக்கண்டபோதும் இவ்வாறே நினைத்தான், என்பதையும் நினைவுகூர்க.

37. "பற்றினம் சிறையிடை வைத்து, பாருடைக்
கொற்றவர்க்கு உணர்த்துதும்" என்று கூறுவார்;
'எற்றுவது அன்றியே, இவனைக்கண்டு, இறை
நிற்றல்என் பிறிது," என, நெருக்கி நேர்குவார். (6484)

(பார்-உலகம்; எற்றுவது-தாக்குவது; பிறிது-வேறாக; இறை-சிறிது நேரம்; நேர்குதல்-எதிர்த்தல்; சிறை-பாதுகாவல்; உணர்த்துதல்-அறிவித்தல்/தெரிவித்தல்; கொற்றவர்-வேந்தர்)

''இவ்வரக்கர்களைப் பிடித்துச் சிறையில் பாதுகாவலாக வைத்ததன் பின்னர், இவ்வுலகங்கள் அனைத்திற்கும் தலைவனான இராமபிரானுக்கு இச்செய்தியைத் தெரிவிப்போம் என்பார்கள் சிலர்; ஒரு சிறிதும் தாமதிக்காது இவர்களை அடித்துக் கொல்லாது இவர்களைப் பார்த்துக்

Koviloor Digital Library

கொண்டே ஏன் நிற்கிறீர்கள்?'' என்று கேட்டுக்கொண்டே அவர்களை நெருங்கிச் சென்று எதிர்ப்பார்கள் சிலர்.

38. ''இமைப்பதன் முன் விசும்பு எழுந்து போயபின்,
அமைப்பது என் பிறிது? இவர் 'அரக்கர் அல்லரோ?
சமைப்பது கொலை அலால், தக்கது யாவதோ?
குமைப்பது நலன்'' என, முடுகிக் கூறுவார். (6485)

(விசும்பு-விண்/ஆகாயம்; அமைப்பது-செய்வது; பிறிது-வேறு; சமைப்பது-செய்யத்தகுந்தது; குமைப்பது-அழிப்பது; முடுகி-விரைந்து; நலன்-நல்லது)

வானரர்களில் சிலர், ''இவ்வரக்கர்கள் கண் திறந்து மூடும் நொடிப் பொழுதிற்குள், ஆகாயத்தில் எழுந்து சென்றபின் செய்யத்தக்கது வேறு என்ன இருக்கிறது? இவர்கள் மாயவித்தைகள் தெரிந்த அரக்கர்கள் அல்லவா? இப்போது நாம் செய்யத்தக்கது, இவர்களைக் கொல்லுவது அல்லாமல் வேறு என்ன இருக்கிறது? எனவே இவர்களை உடனே உருத்தெரியாமல் சிதைத்துக் கொல்லுவதே நமக்கு நன்மைதரும் செயலாகும்'' என்று விரைந்து கூறலானார்கள்.

அரக்கர்கள் மாயவித்தைகளில் வல்லவர்கள். எனவே அவர்கள் எந்த நேரத்திலும் ஆகாயத்திற் சென்று மறைந்து கொள்வார்கள், அரக்கர்கள் நமக்கு பிறவிப்பகைவர்கள். எனவே அவர்களை விரைந்து கொல்லு வதைத் தவிர நமக்கு வேறுவழி ஒன்றும் இல்லை. எனவே இவர்களை உடனே கொன்றுவிட வேண்டும் என்று சில வானரர்கள் கூறினார்கள் என்பதாம்.

39. அனுமன் காவலர் இருவரை அனுப்புதல்

இயைந்தன இயைந்தன இனைய கூறலும்,
மயிந்தனும் துமிந்தனும் என்னும் மாண்பினார்,
அயிந்திரம் நிறைந்தவன் ஆணை ஏவலால்,
நயம் தெரிகாவலர் இருவர் நண்ணினார். (6486)

(இயைந்தன-ஏற்றன; இனைய-இத்தகைய; நயம்-நீதிமுறைமை; காவலர்-தலைவர்கள்; நண்ணுதல்-வருதல்/அடைதல்; நயமொழி-இன்சொல்)

இவ்வாறு வானரப்படையில் முன்னணியில் இருந்த வானரர்கள் தத்தமக்கு ஏற்றவாறு தோன்றியவையெல்லாம் பலவற்றைக் கூறிக் கொண்டிருக்கும் பொழுது, மாண்பு மிக்கவர்கள், இனிய சொற்களைப் பேசத் தெரிந்தவர்கள், நீதிமுறைப்படி நடக்கத் தெரிந்தவர்கள் ஆகிய மயிந்தன், துவிந்தன் என்ற காவல் தலைவர்கள் இருவரும், அயிந்திர

Koviloor Digital Library

இலக்கணத்தை முற்றும் கற்றவனான நவவியாகரணபண்டிதனான அனுமன் ஏவிய கட்டளைப்படி, அங்கு வந்து சேர்ந்தனர்

'இயைந்தன, இயைந்தன' என்ற அடுக்குப் பன்மைப் பொருளது. மயிந்தனும், துவிந்தனும் அசுவினி தேவனின் புதல்வர்கள். இரட்டையர்கள். அயிந்திரம் என்பது ஓர் வடமொழி இலக்கணநூல். இந்திரனால் இயற்றப்பெற்றது. இவற்றை அனுமன் நன்கு முறைப்படி கற்று உணர்ந்த அறிவு நிரம்பியவன். 'கப்பத்து இந்திரன் காட்டிய நூலின், என்பதும் 'விண்ணவர் கோமான் விழுநூல்' என்பதும் சிலப்பதிகாரம். துவிந்தனும் மயிந்தனும் தெய்வத்தன்மை வாய்ந்தவர்கள். ஆதலால் மாண்பினோர் என்று உயர்திணைப் பன்மையில் கூறப்பட்டனர் என்பதறிக.

40. விலக்கினர் படைஞரை; வேதம், நீதிநூல்,
இலக்கணம் நோக்கிய இயல்பர் எய்தினர்;
'சலக்குறி இலர்' என அருகு சார்ந்தனர்;
புலக்குறி அற நெறி பொருந்த நோக்கினர். (6487)

(நோக்கிய-ஆராய்ந்து அறிந்த; சலக்குறி-வஞ்சகச் செய்கை; சார்தல்-செல்லுதல்/அடைதல்; புலம்-அறிவு/ஞானம்; குறி-அடையாளம்)

நான்மறைகளிலும், நீதிசாஸ்திரங்களிலும் கூறப்பட்டுள்ள மனித இலக்கணங்களை நன்கு ஆராய்ந்து அறியும் இயல்புடையவர்களான மயிந்தனும் துவிந்தனும் அம் முன்னணிப் படையை அடைந்து, அந்த வானர வீரர்களைச் சற்று விலக்கி, அவ்வரக்கர்களை நன்கு கூர்ந்து கவனித்து, அவர்கள் அருகில் சென்று, அவர்களிடம் வஞ்சகச் செயல்களுக்கான அடையாளம் சிறிதும் தோன்றவில்லை எனவும், அதற்கு மாறாக, தெளிந்த ஞானமே வல்லவர் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன என்றும் தெளிந்து, இன்னும் சற்று அருகில் சென்றார்கள்.

இங்கே வான்மீகம் சற்று வேறுபடுகின்றது. சுக்கிரீவன் இவர்களைத் தவறாகக் கருத, வானரப்படைகள் அவர்களை அடித்துக் கொல்ல முயன்றனர் என்றும், அதனை ஊகித்தறிந்த வீடணன் முதலியோர் விண்ணில் எழுந்து இராமபிரானிடம் நேரே சென்று தம்முடைய வரலாறுகளை முறையாகக் கூறியதாகவும், இதையறிந்த சுக்கிரீவன் இராமபிரானிடம் சென்று, அவர்களை நம்பக்கம் சேரவே விடக்கூடாது என்று கூறியதாகவும் கூறுகிறது. மயிந்தனும், துவிந்தனும், ஒருவருடைய உறுப்புக்களின் அமைப்புக்களில் இருந்தே, அவருடைய குணநலன்களை அறிந்து கொள்ளும் வல்லமை படைத்தவர்கள் என்பது பெறப்படுகிறது. இவற்றைக் கூறும் நூல் 'சாமுத்திரிகா லக்ஷணம்' என்று வழங்கப் பெறும்.

Koviloor Digital Library

41. மயிந்தன் – அனலன் உரையாடல்

"யார்? இவண் எய்திய கருமம் யாவது?
போர் அது புரிதிரோ? புறத்து ஓர் எண்ணமோ?
சார்வுஉற நின்ற நீர், சமைந்தவாறு எலாம்,
சோர்விலீர், மெய்ம்முறை சொல்லுவீர்" என்றான். (6488)

(கருமம்-காரியம்/செய்தி; புறத்து-புறம்பான/மாறான; சமைதல்-எண்ணுதல்/ஆராய்ந்து துணிதல்; சோர்வு-மறதி/மனத்தளர்ச்சி)

மயிந்தன், வீடணன் முதலான அவ்வரக்கரை நோக்கி, "நீங்கள் யார்? இங்கு வந்ததன் நோக்கம் என்ன? எங்களுடன் போர்புரிய வந்திருக்கிறீர்களா? அல்லது அதற்குமாறான எண்ணமாகிய சமாதானம் செய்து கொள்ள வந்திருக்கிறீர்களா? வானரப்படை இருக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்த நீங்கள், உங்கள் மனத்தில் எண்ணியிருக்கும் நோக்கங்களையெல்லாம் ஒன்றும் விட்டுவிடாது, மறந்துவிடாமல் ஒளிக்காது, இவ்வாறு அகப்பட்டுக் கொண்டு விட்டோமோ என்று அச்சமும் மனத்தளர்ச்சியும் கொள்ளாமல், உண்மையைச் சொல்லுங்கள்" என்றான்.

இந்த இருவரில் மயிந்தன் மூத்தவன் என்பது பெறப்படுகிறது.

42. அனலன் பேசுதல்

"பகலவன் வழி முதல், பாரின் நாயகன்,
புகல் அவன் கழல் அடைந்து, உய்யப் போந்தனன்;
தகவுஉறு சிந்தையன், தரும நீதியன்,
மகன் மகன் மைந்தன் நான்முகற்கு, வாய்மையான்" (6489)

(தகவு-நடுவுநிலைமை; வாய்மை-உண்மை; நான்முகன்-பிரம தேவன்; பகலவன்-சூரியன்; வழி-மரபு; முதல்-முதன்மையுடையவன்; பார்-பூமி/உலகம்; உய்ய-வாழ்வதற்காக; போந்தனன்-வந்துள்ளான்; வழிமுதல்-வழித்தோன்றல்)

மயிந்தன் எழுப்பிய வினாக்களுக்கு விடையாக அனலன் என்ற வீடணனின் மூத்த அமைச்சன், மயிந்தனை நோக்கி "நடுவு நிலைமையில் தவறாத மனத்தை உடையவனும், அறநெறியினின்றும், நீதிநெறியினின்றும் பிசகாதவனும், வாய்மையையே பேசும் இயல்பினன் ஆனவனும், பிரமதேவனின் பேரனுக்குப் புதல்வனானவனுமான இந்த வீடணன், சூரியகுலத் தோன்றலில் முதன்மையானவனும், இவ்வுலகங்களுக்கெல்லாம் தலைவனானவனும், சரணாகதி வத்சலனுமான, இராமபிரானைக் கண்டு, அவன் திருவடிகளைச் சேவித்து, தனது வாழ்வு ஈடேறும் பொருட்டு, இங்கு வந்து சேர்ந்திருக்கிறான்" என்று விடை கூறினான்.

Koviloor Digital Library

'தகவுறு சிந்தையான்' என்றதால் மனத்தாலும் 'தருமநீதியன்' என்றதால் மெய்யாலும், 'வாய்மையான்' என்றதால் மொழியாலும் தூய்மை யானவன் வீடணன் என்பதை விளக்கிக் கூறுகிறான் அனலன் என்க. தன் எண்ணம் இராமபிரானைச் சரணாகதி அடைய வேண்டும் என்பது. அதனால் இராமபிரானையும், அவன் குலத்தையும் பற்றி வாழ்த்திப் பேசினான் என்க. பிரமதேவன் மகன் புலத்தியன், அவன் மகன் விச்சிரவசு; அவன் மகன் வீடணன் என்பது முன்பும் கூறப்பட்டதே. இதேபோல் சூர்ப்பணகையும் தனது மூன்று தலைமுறைகளையும் கூறியே தன்னை இராமனிடம் அறிமுகப்படுத்திக் கொள்ளுகிறாள். 'பூவிலோன் புதல்வன் மைந்தன் புதல்வி' என்பாள் 'வையம் தந்த நான்முகன் மைந்தன் மகன் மைந்தன்' என்பது சுந்தரகாண்டம். மூன்று தலைமுறைகளையும் கூறியே ஒரு பாத்திரத்தை அறிமுகப் படுத்துவது கம்பனின் வழக்கம். 'கழல் அடைதல்' என்பது இராமபிரானின் திருவடிகளில் சரணடைதல் என்பதைக் குறிக்கும்.

43. "அறநிலை வழாமையும், ஆதி மூர்த்திபால்,
நிறைவரு நேயமும், நின்ற வாய்மையும்,
மறையவர்க்கு அன்பும் என்று இனைய, மாமலர்
இறையவன் தர, நெடுந்தவத்தின் எய்தினான்" (6490)

(வழாமை-தவறாமை/பிறழாமை; நேயம்-பக்தி/அன்பு; நின்ற-நிலை பேறுடைய/அழியாதது; மறையவர்-வேதம் வல்லார்; மாமலர்-தாமரை மலர்; இறையவன்-பிரமதேவன்; இனைய-இத்தகைய)

''தருமநெறியிலிருந்து பிறழாமை; உலகங்கள் எல்லாவற்றிற்கும் ஆதிமுதல்வனான திருமாலிடம் குறைவற்ற நிறைந்த பக்தி; அழியாது நிலைபேறு உடைய சத்தியம், வேதம் வல்ல சான்றோரிடத்து அன்பு பாராட்டுதல் என்ற இத்தகைய அரிய வரங்களை வீடணன் நெடுங்காலம் தவம் இருந்து அம்முயற்சினால் சிறந்த தாமரை மலரில் எழுந்தருளியுள்ள பிரமதேவனிடமிருந்து பெற்றிருக்கிறான்'' என்று அனலன் கூறினான்.

பிறப்பால் அரக்கன் என்றாலும், தவத்தால் இத்தகைய நற்குணங்கள் பெற்றவன் வீடணன் என்பது பெறப்படுகிறது.

44. "சுடுதியைத் துகிலிடைப் பொதிந்து, துன்மதி!
இடுதியே, சிறையிடை, இறைவன் தேவியை;
விடுதியேல் உய்குதி; விடாது வேட்டியேல்,
படுதி;" என்று உறுதிகள் பலவும் பன்னினான். (6491)

(தி-தீ/நெருப்பு; துகில்-துணி; பொதிந்து-மூடிவைத்து; துன்மதி-கெட்ட புத்தி உடையவன்/அறிவிலி; உய்குதல்-வாழ்தல்; வேட்டல்-

• Koviloor Digital Library

விரும்புதல்; படுதல்-வீழ்தல்/அழிதல்; பன்னுதல்-விரித்துச் சொல்லுதல்; உறுதி-நன்மை)

அனலன் அவ்வீரர்களைப் பார்த்து, ''இந்த வீடணன், அவன் தமையன் இராவணனிடம் ''சுடுகின்ற இயல்புடைய நெருப்பை, ஆடைக்குள் மூடிவைக்கும் அறிவிலியே! கெட்ட புத்தி உடையவனே! அந்தக் கற்பின் கனலாகிய, உலகுக்கெல்லாம் தலைவனாகிய இராமபிரானின் துணைவியாகிய சீதாதேவியை இலங்கையில் சிறையில் அடைத்து வைத்திருக்கிறாயே! அவளைச் சிறையினின்றும் விடுதலை செய்து விடுவாயாக! அவ்வாறு செய்வாயானால் நீ தப்பிப் பிழைத்து உயிர்வாழ்வாய்! இல்லையென்று பிடிவாதமாக அவ்ளை விரும்புவாயானால் நீ இறந்துபடுவாய்'' என்று அவனுக்கு நன்மை தரும் பல உறுதிமொழிகளை விரித்துரைத்தான்'' என்கிறான்.

'சுடுதீ' என்பது 'சுடுதி' என எதுகை நோக்கிக் குறைந்தது என்க. 'சுடுதீ' என்பது கற்பின்கனலியாகிய சீதாதேவியைக் குறித்தது. மடியில் தணலைக் கட்டிக்கொண்டவன் அழிந்து போவதுபோல, நீயும் இந்தச் சீதாதேவியைச் சிறையில் அடைத்து வைத்திருப்பதால் அழிந்து போகப் போகிறாய் என்றெல்லாம் வீடணன் இராவணனுக்கு அறிவுரை கூறிப்பார்த்தான் என்று அனலன் மயிந்தனிடம் பேசிக்கொண்டிருக்கிறான் என்பதை நினைவிற்கொள்க. நெருப்பைத் துணியில் கட்டி மடியில் வைத்திருப்பதும், சீதாதேவியைச் சிறையில் வைத்திருப்பதும் ஒன்றுதான் என்று கூறியிருக்கிறான் வீடணன்.

45. ''மறம்தரு சிந்தையன், மதியின் நீங்கினான்,
பிறந்தனை பின்பு, அதின் பிழைத்தி; போர்குதி;
இறந்தனை நிற்றியேல்'' என்ன, இன்னவன்
துறந்தனன் என விரித்து, அனலன் சொல்லினான். (6492)

(மறம்-பாவச்செயல்கள்; சிந்தை-மனம்; மதி-அறிவு; பேர்குதல்-அகலுதல்)

பாவச்செயல்கள் செய்வதையே மனத்தில் கொண்டவனும், நல்லறிவு நீங்கப்பெற்றவனுமான இராவணன், இவ்வாறு அறிவுரை கூறிய வீடணனைப் பார்த்து, ''நீ எனக்குப் பின் பிறந்த என் தம்பியாகி விட்ட காரணத்தால் இப்போது பிழைத்திருக்கிறாய்-இந்த இடத்தை விட்டுச் சென்றுவிடு. செல்லாது இன்னும் நிற்பாயானால், நீ அழிந்துபடுவாய்' என்று அவன் அச்சுறுத்தியதால்தான், இந்த வீடணன் அவனையும், இலங்கையையும் விட்டு நீங்கி வந்தான்'' என அனிலன் நன்கு விரித்துக் கூறிமுடித்தான்.

Koviloor Digital Library

46. மயிந்தன் இராமபிரானிடம் சென்று தெரிவித்தல்

மயிந்தனும் அவ்வுரை மனத்து வைத்து, ''நீ
இயைந்தது நாயகற்கு இயம்புவேன்'' எனா,
பெயர்ந்தனன்; தம்பியும், பெயர்வுஇல் சேனையும்,
அயர்ந்திலிர்! காமின்'', என்று அமைவது ஆக்கியே. (6493)

(உரை-சொற்கள்; இயைந்தது-வந்திருப்பது; தம்பி-துமிந்தன்; பெயர்வு-பின்வாங்குதல்; அயிர்த்தல்-தளர்தல்/சோர்வுறுதல்; காமின்-காவல்செய்து கொண்டிருங்கள்)

அதனைக் கேட்ட மயிந்தனும், அனலன் கூறிய சொற்களை மனத்தில் உள்வாங்கிக் கொண்டு ''நீ இப்பொழுது மனம் ஒத்துக்கூறியதான வீடணன் நிலை பற்றியும், உங்கள் கருத்துப் பற்றியும், நான் எங்கள் தலைவனான இராமபிரானிடத்துச் சென்று கூறுகிறேன்.'' என்று சொல்லி, தன் தம்பி துமிந்தனையும் மனவுறுதி நீங்காது நிற்கின்ற வானரச் சேனையையும் பார்த்து, ''சோர்வில்லாமல் மிகவும் விழிப்புடன் இருந்து இவர்களைப் பாதுகாத்து வாருங்கள்'' என்று எச்சரித்துவிட்டு, இராமபிரானிடம் சென்றான்.

வீடணன் இந்தச் செய்திகளைத் தானே கூறமுடியாது என்பதால் அனலன் கூறினான் என்க. 'இயைந்தது' என்பது அவர்கள் இராமபிரானைச் சரணடைய வந்ததைக் குறிக்கும். 'பெயர்வுஇல் சேனை' என்பது காவலில் தவறாத மனவுறுதி படைத்த வானரச்சேனையைக் குறிக்கும். மயிந்தன் கேட்ட வினாவிற்கு அனலன்தான் விடைகூறினான் என்றாலும், மயிந்தன் ''நீ இயைந்தது நாயகற்கு இயம்புவேன்'' என்று வீடணனைப் பார்த்தே கூறினான் எனக் கொள்ள வேண்டும்.

47. தருமமும், ஞானமும், தவமும் வேலியாய்,
மருவ அரும் பெருமையும், பொறையும் வாயிலாய்,
கருணை அம் கோயிலுள் இருந்த கண்ணனை,
அருள் நெறி எய்திச் சென்று, அடிவணங்கினான். (6494)

(வேலி-மதில்; மருவுதல்-நெருங்குதல்; கண்ணன்-இராமபிரான்; தருமம்-அறம்)

அறநெறி, தவஒழுக்கம், தத்துவஞானம் இவை மூன்றுமே கோயிலுக்கு புற, இடை, அக மதில்களாகவும் எளிதில் அடைதற்கரிய சீரும் சிறப்பும் பொறுமையுமே, இரண்டு வாயில்களாகவும், கருணை என்னும் நற்பண்பே அழகிய கோயில் உட்புறமாகவும், அங்கே எழுந்தருளியிருக்கின்ற கண்ணோட்டம் மிக்கவனான இராமபிரான் அருட்பார்வை சொல்லுகின்ற வழிசென்று, மயிந்தன் இராமபிரானது திருவடிகளை வணங்கித் தொழுதான்.

Koviloor Digital Library

அறநெறியில் நின்று, தவஒழுக்கம் பூண்டு, ஞானநிலையை எய்துவதே இறைவன் அருளைப் பெற்று உய்வதற்கு உரிய வழியாகும் என்பது கூறப்படுகிறது. மூன்று மதில்கள், இரண்டு வாயில்கள், ஒரு கருவறை இதுதான் ஒரு கோயிலுக்கு உரிய ஆகம சாஸ்திரம். இவற்றை இராமபிரான் இருக்குமிடமாக உருவகம் செய்கிறான் கவிஞன். இறைவன் மறந்தாலும், அவனிடம் இயற்கையாக அமைந்திருக்கும், கருணை என்னும் பண்பு, தன்னைவணங்கிய அடியவரைக்கைவிடாதுகாப்பாற்றும் என்பதுகருத்து. ''நீ மறந்தாய் எனினும், நின் அருள் மறவாது'' என்பது வள்ளலார் திருஅருட்பா. இறைவனுடைய கண்கள் 'கருணைநிறைந்து, அகம் புறமும் தளும்பி வழிந்து, உயிர்க்கெல்லாம் களைகண் ஆகி, தெருள் நிறைந்த இன்பநிலை வளர்க்கின்ற கண்கள்' என்பர் சான்றோர். எனவே இராமபிரானையும் கண்ணன் என்றார் என்க.

தருமம் என்பது அறம், அறம் எனப்பட்டது கொல்லாமை. ஞானம் என்பது தத்துவஞானம் - எல்லாஉயிரும் ஈசன் கோவில் என்னும் நிலை, தவம் என்பது, உற்றநோய் நோன்றல், உயிர்க்கு உறுகண் செய்யாமை. கருணை என்பது அருள். கண்ணுக்கு அணிகலம் கண்ணோட்டம். அருள் என்னும் அன்பு ஈன்குழவி என்பது குறள். இறைவனை விடவும் இறைவனது திருவடிகளே நன்னெறிக்கு உய்ப்பது. எனவே மயிந்தன் அவன் திருவடிகளை முதலில் வணங்கினான். ''நின்னிற் சிறந்த, நின்தாள் இணைஅவை'' என்பது பரிபாடல். ''அவன் அருளாலே அவன்தாள் வணங்கி'' என்பது திருவாசகம். இராமபிரான் அறத்தின் வடிவாகவும், தவத்தின் வடிவாகவும், ஞானத்தின் வடிவாகவும், பெருமையின் வடிவாகவும், பொறுமையின் வடிவாகவும், கருணையின் வடிவாகவும் விளங்கினான் என்பது கருத்து.

48. "உண்டு உரை உணர்த்துவது, ஊழியாய்!" எனப்
புண்டரீகத்தடம் புரையும் பூட்சியான்,
மண்டிலச் சடைமுடி துளக்கி, "வாய்மையாய்!
கண்டதும், கேட்டதும் கழறுவாய்" என்றான். (6495)

(உரை-வார்த்தை; தடம்-பொய்கை; மண்டலம்-வட்டம்; துளக்குதல்-அசைத்தல்; வாய்மை-உண்மை; புரையும்-ஒக்கும்; பூட்சி-உடல்/திருமேனி)

மயிந்தன் இராமபிரானைப் பார்த்து, ''பேர் ஊழிக்காலத்தும் அழியாது என்றும் நிலைபெற்று இருந்து அருள்பாலிப்பவனே! நான் உன்னிடம் கூறவேண்டிய செய்தி ஒன்று உள்ளது'' என்றான். தாமரைத்தடாகம் பூத்தது போன்ற திருமேனியை உடைய இராமபிரானும், தனது வட்டமான தலைமுடியை அசைத்து உடன்பட்டு ''எப்பொழுதும் உண்மையே பேசுபவனே! மயிந்த! நீ அங்கே நேரில் கண்டவற்றையும் அவர்கள்மூலம் கேள்விப்பட்டவற்றையும் கூறுவாயாக!'' என்றான்.

Koviloor Digital Library

இராமபிரான் கை, கண், கால், முகம், வாய், மேனி அனைத்தும் செந்தாமரை மலர் நிறம் உடையவன் ஆதலால் புண்டரீகத்தடம் புரையும் பூட்சியான்'' என்றார். பூட்சி-உடல்/திருமேனியைக் குறிக்கும். ''செந்தாமரைத் தடங்கண், செங்கனிவாய்; செங்கமலம்; செந்தாமரை அடிகள்; செம்பொன் திருஉடம்பே'' என்பது திருவாய்மொழி. ''கண், கை, கால் தூய செய்ய மலர்களா, சோதிச்செவ்வாய் முகிழதா, சாயல் சாமத்திரு மேனி தண்பாசடையா, தாமரை நீள் வாசத்தடம்போல் வருவானே'' என்பதும் திருவாய்மொழி. உயிரைப் பூணுவதால் பூட்சி என்பது உடலுக்குக் காரணப்பெயர். ''புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய்'' என்பது தேவாரம்.

49. மயிந்தன் இராமனிடம் நிகழ்ந்தது கூறுதல் [7 பாடல்கள்]

"விளைவினை அறிந்திலம்; வீடணப் பெயர்
நளிர் மலர்க் கையினன், நால்வரோடு உடன்,
களவு இயல் வஞ்சனை இலங்கை காவலற்கு
இளவல், நம் சேனையின் நடுவண் எய்தினான்." (6496)

(இயல்-தன்மை; காவலன்-அரசன்; இளவல்-தம்பி; நடுவண்-நடுவில் /இடையில்; விளைவு-நிகழ்வு; நளிர்-ஒளிர்கின்ற/குளிர்கின்ற)

''உடன்பிறந்த பிறவிக்குணமான களவுத் தன்மையிலும் பிறரை வஞ்சிக்கும் வஞ்சக எண்ணங்களிலும் கைதேர்ந்தவனான, இலங்கைக்கு வேந்தனாகிய இராவணனின் தம்பி, வீடணன் என்ற பெயர் கொண்ட, ஒளியும் குளிர்ச்சியும் பொருந்திய தாமரைமலர் போன்ற கைகளை உடைய ஒருவன், தன் துணைவர்கள் நான்குபேருடன், நமது வானரசேனையின் நடுவில் வந்துசேர்ந்திருக்கிறான். இதனால், பின்னால் என்ன விளைவுகள் நிகழும் என்பதை நாங்கள் அறியமாட்டோம்'' என்று, துவிந்தனையும் உளப்படுத்திக் கொண்டு, மயிந்தன் இராமபிரானிடம் கூறினான்.

சீதாதேவியை வஞ்சக எண்ணத்துடன், களவுமுறையில் அபகரித்துக் கொண்டு வந்தவன் என்பதால் இராவணனைக் ''களவு இயல் வஞ்சனை இலங்கை காவலர்'' என்றான். ஆனால் வீடணனைக் குறிக்கும்பொழுது ''வீடணப்பெயர் இளவல், நளிர்மலர்க் கையினன்' என்று அவனுடைய கைகளைத் தாமரை மலருக்கு ஒப்பிட்டுக் கூறுவதை எண்ணுக. இராவணனுக்குத் தம்பி என்பதால் தீயவை நிகழுமோ, நளிர் மலர்க் கையினான் என்பதால் நல்லது நடக்குமோ நாங்கள் ஒன்றும் அறிய மாட்டோம் என்று தனது ஐயத்தையும், அச்சத்தையும் தெரிவிக்கிறான் மயிந்தன் என்க.

Koviloor Digital Library

50. "கொல்லுமின், பற்றுமின்" என்னும் கொள்கையான்,
பல்பெரும் தானை சென்று அடர்க்கப் பார்த்து, யான்,
'நில்லுமின்' என்று "நீர் யாரவிர்? நும்நிலை
சொல்லுமின்" என்ன, ஓர் துணைவன் சொல்லினான். (6497)

(கொள்கை-சொற்கள்/கருத்து; அடர்க்க-நெருக்க/தாக்க)

"அந்த அரக்கர்களைக் கண்ட பலவாகப் பெருகியுள்ள நம் வானரச் சேனைகள் அவர்களை நெருங்கித் தாக்கும் கருத்தோடு, அவர்களைப் பிடியுங்கள், அவர்களைக் கொல்லுங்கள் என்று கொல்லமுயன்ற சமயத்தில், நான் அதைப்பார்த்து, அவர்களை விலக்கி, அந்த அரக்கர் களைப் பார்த்து, "நீங்கள் யார்? நீங்கள் இங்குவர என்ன காரணம்? உங்கள் நிலைமையைச் சொல்லுங்கள்!" என்று கேட்டேன். அதற்கு வீடணனின் துணைவர்கள் நால்வருள் ஒருவனான அனலன் என்பவன் கீழ்க்கண்ட வாறு கூறத்தொடங்கினான்" என்று மயிந்தன் இராமபிரானிடம் கூறிக்கொண்டிருந்தான்.

51. "முரண் புகு தீவினை முடித்த முன்னவன்
கரண் புகு சூழலே சூழ, காண்பது ஓர்
அரண் பிறிது இல் என, அருளின் வேலையைச்
சரண் புகுந்தனன்" என முன்னம் சாற்றினான். (6498)

(முன்னவன்-அண்ணன்/தமையன்; அரண்-பாதுகாவல்; சரண்-அடைக்கலம்; சாற்றுதல்-தொகுத்துக்கூறுதல்; கரண்-கரணம்; காண்பது-அடைவது; முரண்-மாறுபாடு; சூழ்தல்-எண்ணுதல்; கரணம்-அந்தக் கரணம்/மனம்; முன்னம்-கருத்து; தீவினை-தீயசெயல்)

தன் அண்ணனான இராவணன், அறத்திற்கு மாறுபட்ட தீய செயல்களையே செய்துகொண்டு, அந்தக்கரணமாகிய தன் மனம் போன போக்கிலேயே, சென்று சீதையைக் கவர்ந்து சிறையில் அடைத்தல் போன்ற தீய செய்கைகளையே செய்து கொண்டிருப்பதனால், இனிமேல் இவனுக்கு அறிவுரை கூறிப்பயனில்லை என்பதை நன்கு தெளிந்து கொண்ட வீடணன், இவனுடன் வாழ்தல் இனித்தமக்கு உகந்ததல்ல என்று தெளிந்து இனிமேல் தனக்கு அருட்கடலாகிய இராமபிரானின் திருவடிகள் தான் அடைதற்குரிய நல்ல பாதுகாப்பாக அமையும், அதனைத்தவிர வேறுவழியில்லை என்று நன்கு தீர்க்கமாக ஆராய்ந்து முடிவு செய்து, இராமபிரானைச் சரண் அடைய வந்துள்ளான்" என்று தன் கருத்தை எடுத்து மயிந்தன் இராமபிரானுக்குத் தெரிவித்தான்.

'அருளின் வேலை - கருணையம் கடல்; சூழலே சூழல்' என்பது மனம்போன போக்கிலேயே போதல் என்பதைக் குறித்தது. 'மூர்க்கனும் முதலையும் கொண்டதுவிடா' என்ற பழமொழியை இங்கு நினைவு கூர்க.

Koviloor Digital Library

52. "ஆயவன், தருமமும், ஆதிமூர்த்திபால்
மேயது ஓர் சிந்தையும், மெய்யும், வேதியர்
நாயகன் தர, நெடுந் தவத்தின், நண்ணினன்;
தூயவன்'' என்பது ஓர் பொருளும் சொல்லினான். (6499)

(ஆயவன்-அப்படிப்பட்டவன்; மேயது-பொருந்தியது; மெய்-உண்மை; வேதியர்நாயகன்-பிரமன்; நண்ணுதல்-அடைதல்/பெறுதல்; பொருள்-செய்தி; சிந்தை-நினைவு)

''அத்தகைய பரிசுத்தமான வீடணன், அறவழி நின்று ஒழுகுபவன், தொன்மையானதலைவனானதிருமாலிடம்சிறந்தபக்திகொண்டஒப்பற்ற மனத்தினன், உண்மையே பேசும் இயல்பினன். தான் செய்த பெருந் தவத்தின்காரணமாக வேதங்கள்வல்லவேதியர்க்கெல்லாம்தலைவனான பிரமன் வரங்களைத் தந்தருள, அடையப்பெற்றான். மனம், மொழி, மெய்களால் தூயவனாகத் தெரிகின்றான்'' என்ற ஒரு செய்தியையும் மயிந்தன் இராமபிரானிடம் எடுத்துக் கூறினான்.

''வேதியர்நாயகன்தர'' என்றதும் 'தூயவன்' என்றதும் 'ஆதிமூர்த்திபால் மேயதோர்சிந்தையும், மெய்யும்தவத்தின் நண்ணினான்' என்று கூறுவதில் மயிந்தனே, வீடணன் அடைக்கலம் தரத் தகுதிவாய்ந்தவன் என்று இராமபிரானுக்கு எடுத்துக்கூறுவது போன்ற தொனி தெரிவதைக் கண்டு உணர்க. வீடணன் அறநெறி நின்று ஒழுகுபவன் என்பதை ''விபீஷணன் சதர்மாத்மா'' என்று வான்மீகம் கூறும். 'மேயதோர் சிந்தை' என்பதை 'அநந்யபக்தி' என்று கூறுவர் வடநூலார். மனம், மொழி மெய்களால் திருமாலையே எண்ணிக்கொண்டு இருப்பவன் என்று பொருள்படும். முன்னர் அனலன் கூறியதையே இப்போது மயிந்தனும் கூறினான் என்க.

53. "கற்புடைத் தேவியை விடாது காத்தியேல்,
எற்புடைக் குன்றம்ஆம் இலங்கை; ஏழை! நின்,
பொற்புடை முடித்தலை புரளும்; என்று, ஒரு
நற்பொருள் உணர்த்தினன்'' என்றும் நாட்டினான். (6500)

(எற்பு-என்பு/எலும்பு; குன்றம்-மலை; ஏழை-அறிவற்றவன்; பொற்பு-அழகு; பொருள்-கருத்து; நாட்டுதல்-உறுதியாய்க் கூறுதல்)

''கற்பின் கனலியான அந்தச் சீதாதேவியை இராமபிரானிடம் கொண்டு போய் விடாமல் இன்னமும் அவளைச் சிறையிலேயே அடைத்து வைத்து அவளைக் காத்துக் கொண்டிருப்பாயானால், இந்த இலங்கை மாநகரத்தில் உள்ள அனைவரும் இராமபிரானின் அம்பு மழைக்கு ஆட்பட்டு இந்நகரம் முழுவதும் ஒரு எலும்புகள் நிறைந்த மலைகள் போல ஆகிவிடும். அறிவில்லாதவனே! உன்னுடைய அழகிய கிரீடமணிந்த தலைகள் பத்தும், அவன் அம்புமழையால் தரையில் விழுந்து புரளும்'' என்று

Koviloor Digital Library

வீடணன் இராவணனுக்குப் பலமுறை இந்தப் பயன்தரும் நற்செய்தியைக் கூறிக்கொண்டே இருந்தான். எனினும் இராவணன் திருந்தவில்லை' என்று வீடணனின் துணைவனான அனலன் என்னிடம் உறுதிபடக் கூறினான்'' என்று இப்போது மயிந்தன் இராமபிரானிடம் தெரிவித்தான்.

'பொறிப்பேபொலிவு' என்பது தொல்காப்பியம்.

54. ஏந்து எழில் இராவணன், ''இனைய சொன்ன நீ
சாம் தொழிற்கு உரியை, என்சார்பு நிற்றியேல்;
ஆம் தினைப் பொழுதினில் அகறியால்;'' எனப்
போந்தனன் ''என்றனன்; புகுந்து ஈது'' என்றான். (6501)

(இனைய-இத்தகைய; புகுந்தது-நிகழ்ந்தது; அகறி-அகல்தி/நீங்குக; ஏந்து-உயர்ந்த; சார்பு-அருகில்)

உயர்ந்த, சிறந்த அழகனான இராவணன், வீடணனை நோக்கி, ''எனக்கு உகந்தது அல்லாதனவான சில வார்த்தைகளைக் கூறிய நீ, என்னால் அழிக்கப்பட்டு இறப்பதற்கு உரியவனாவாய்; எனவே இனிமேல் என்அருகில் சற்றும் நிற்காதே; ஒருநொடிப் பொழுதில் இங்கிருந்து அகன்று சென்றுவிடு. என்று கடுமையாகப் பேசித்துரத்தி விட்டான். எனவேதான் வீடணன் இவ்விடம் வந்திருக்கிறான் என்று வீடணன் துணைவனான அனலன் கூறினான்; இதுதான் நான் கண்டதும், கேட்டதும்'' என்று மயிந்தன் இராமபிரானிடம் தெரிவிக்கிறான்.

'ஏந்து எழில் இராவணன்' என்பது 'எழுதலாகாச் சுந்தரன்' என்று முன்பு கூறியதை அடியொற்றியது என்க. 'தினைப்பொழுது' என்பது ஒருநொடிப் பொழுது, இமைக்கும் நேரம் என்று ஒரு சிறு பொழுதைக் குறிக்கும். 'சாம்தொழில்' சாகும் தொழில்-இடைக்குறை எனக் கொள்க. 'சாந்துணை யும் கல்லாதவாறு' என்பது குறள்397. 'ஏந்தெழில் மிக்கான்; இளையான், இசைவல்லான்' என்பது இராவணன் பற்றிய ஒரு தனிப்பாடல்.

55. இராமபிரான் நண்பர்களோடு ஆலோசித்தல்

அப்பொழுது இராமனும், அருகில் நண்பரை,
''இப்பொருள் கேட்ட நீர் இயம்புவீர், இவன்
கைப்புகற்பாலனோ? கழியற்பாலனோ?
ஒப்புற நோக்கி, நும்உணர்வினால்'' என்றான். (6502)

(பொருள்-செய்தி; கைப்புகல்-பக்கம்சேர்தல்; கழிதல்-நீக்குதல்; ஒப்புற-ஏற்ப/ஆராய்ந்து/பொருந்த; கை-பக்கம்; நண்பர்-துணைவர்கள்; உணர்வு-அறிவு)

அவ்வாறு மயிந்தன் கூறியவற்றைக் கேட்டபொழுது, இராமபிரான் தன் அருகில் இருந்த துணைவர்களை நோக்கி, ''இப்பொழுது மயிந்தன்

Koviloor Digital Library

கூறியவற்றையெல்லாம் கேட்ட நீங்கள், இந்த வீடணன் நம்பக்கம் சேர்வதற்குத் தகுதியுள்ளவனா அல்லது கழித்து நீக்குவதற்கு உரியவனா என்பதை உங்கள் அறிவிற்கு ஏற்ப நன்கு ஆராய்ந்து பார்த்துக் கூறுவீர்களாக'' என்றான்.

இங்கே 'நண்பரை' என்பது இராமபிரான் கூடவே எப்பொழுதும் இருக்கும் துணைவர்களான, சுக்கிரீவன், சாம்பவன், நீலன், அனுமன் முதலியவர்களை எனக்கொள்க. 'ஒப்புநோக்கி' என்பது மிகக் கருத்தாழம் உடைய சொல். இவன் நம்பக்கம் சேர்ந்திருப்பதனால் நன்மைகள் விளையுமா? தீமைகள் விளையுமா? அல்லது இவனைத் திரும்பப் போகச்சொல்லி விட்டால் அதனால் தீமைகள் ஏதேனும் விளையுமா? அல்லது நன்மைகள் வந்து சேருமா? என்பதை நன்கு ஆராய்ந்து பிறகு கூறுங்கள் என்றான் எனக் கொள்க. இராமபிரான் பிறரது கருத்தையும் கேட்டுச் செயல்புரிபவன் என்பது பெறப்படுகிறது. 'சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்து, ஒருபால் கோடாமை சான்றோர்க்கு அணி' என்பது குறள்-118. இடம் நோக்கிப் பிறர் உவப்பக்கூறுவதும் உலகியல்பே. எனவே நன்கு ஆழ்ந்து சிந்தித்துக் கூறுமாறு கேட்டுக் கொண்டான் என்க. 'குணம் நாடிக் குற்றமும் நாடி, அவற்றுள் மிகைநாடி மிக்கக் கொளல்' என்பது குறள் 504.

இங்கே வான்மீகம் வேறுபடுகிறது. இராமபிரான் இவ்வாறு துணைவர்களிடம் ஆலோசனை கேட்டுப் பெற்றதாகக் கூறவில்லை, சுக்கிரீவன்தான் முதலில் வீடணன் முதலியோரைப் பார்க்கிறான், அவனாகவே இராமபிரானிடம் நேரே வந்து தனது கருத்துக்களைத் தெரிவித்தான் என்று வான்மீகம் கூறும்.

56. சுக்கிரீவன் தன் கருத்தைத் தெரிவித்தல் [13 பாடல்கள்]

தடமலர்க் கண்ணனைத் தடக்கை கூப்பி நின்று,
''இடன்இது, காலம் ஈது'' என்ன எண்ணுவான்,
கடன்அறி காவலன் சுழறினான் அரோ;
சுடர்நெடு மணிமுடிச் சுக்கிரீவனே. (6503)

(கடன்-கடமை; அறிதல்-உணர்தல்; காவலன்-அரசன்; சுடர்-ஒளி; தடம்-அகன்ற/பெரிய; இடன்-இடம்; இது-இத்தன்மையது; எண்ணுதல்-சிந்தித்தல்; சுக்கிரீவன்-அழகிய கழுத்தை உடையவன்; கழறுதல்-சொல்லுதல்; தடம்-குளமுமாம்)

தன்னுடைய கடமையை நன்கு உணர்ந்தவனான, குரக்கினத்தரசன் சுக்கிரீவன், ஒளிமிக்கு விளங்குகின்ற நீண்ட இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற கிரீடத்தை அணிந்தவனான சுக்கிரீவன், அகன்ற தாமரைமலர் போலும் கண்களை யுடையவனான இராமபிரானைப் பார்த்து, தனது நீண்ட பெரிய கைகளைத் தலைமேல் கூப்பி வைத்து நின்று, வீடணன் இங்கு வந்து

Koviloor Digital Library

சேர்ந்திருக்கும் இடத்தையும், தருணத்தையும் நன்கு ஆலோசித்துப் பார்த்து, கீழ்க்கண்டவாறு கூறலானான்.

'இடன்இது காலம்ஈது என்ன எண்ணுவான்' என்பது வீடணனன் பற்றிப்பேச இதுதான் தக்கஇடம், தக்க சமயம் என்று கருதி, சுக்கிரீவன் பேசலானான் என்று பொருள்தரும். ''ஞாலம் கருதினும் கைகூடும், காலம் கருதி இடத்தாற் செயின்'' என்பது குறள் 484. பொதுவாக பூ என்றாலோ மலர் என்றாலோ தாமரை மலரையே குறிக்கும் என்க. ''பூவெனப் படுவது பொறிவாழ் பூவே'' என்பது நால்வர் நான்மணிமாலை. பொறி-இலக்குமி ''பூவினுக்கு அருங்கலம் பொங்கு தாமரை'' என்பது தேவாரம். ''பூவிற்குத் தாமரையே'' என்பது திருவள்ளுவமாலை. 'தட' என்பது பெரிய, அகன்ற, நீண்ட என்ற பொருளைத்தரும். 'தடவும்கயவும் நளியும் பெருமை' என்பது தொல்காப்பியம். 'நன்றாற்றலுள்ளும் தவறுண்டு, அவரவர் பண்பறிந்து ஆற்றாக்கடை' என்பது குறள் 469. எனவே நன்றாக ஆலோசித்தே கூறத்தொடங்கினான் என்பதாம்.

57. "நனிமுதல் வேதங்கள் நான்கும், நாமநூல்
மனுமுதல் யாவையும், வரம்பு கண்ட நீ,
இனையன கேட்கவோ, எம்மனோர்களை,
வினவிய காரணம்? விதிக்கும் மேல் உளாய்!" (6504)

(நனி-மிக்க; முதல்-முதன்மை; நாமம்-புகழ்; வரம்பு-எல்லை; இனையன-இத்தகைய; விதி-ஊழ்/பிரமன்)

''விதிக்கும் விதியாகவும், அதற்கும் மேம்பட்ட ஆற்றலுடையவனே! மிக்கப் பெருமையுடையதும், முதன்மை யானதுமான வேதங்களையும், புகழ்மிக்க மனுதர்மசாஸ்திரம் முதலானசாத்திரநூல்கள்எல்லாவற்றிற்கும் ஓர் எல்லை கண்டு அறிந்துள்ள நீ, எம்போன்ற சிற்றறிவுடையவர்களைக் கலந்து ஆலோசிக்க வேண்டியதும் உண்டோ? அவ்வாறு வினவுவது ஒரு முறைமை என்ற காரணத்தால்தானே எங்களிடம் எங்கள் கருத்துக்களை கேட்கிறாய்?'' என்று கேட்கிறான் சுக்கிரீவன்.

'வரம்பு காணுதல்' என்பது முற்றும் கற்று உணர்தல் என்றும் முற்றும் கற்றுத்துறை போகிய என்றும் பொருள்படும். 'எம்மனோர்களை என்பது எங்களைப் போன்று அறிவிலும், அனுபவத்திலும் குறைந்தவர்களை என்ற பொருளைத்தரும். 'நூல்' என்பது பண்டைக்காலத்தில் இலக்கண நூல்களையே குறித்து வந்தது. பின்னர்தான் இலக்கிய நூல்களையும் சாத்திர நூல்களையும் குறித்து வழங்கலாயிற்று. 'விதிக்கும் மேல் உளாய்' என்பது ஊழ் என்ற விதிக்கும் விதியாவான் என்றும், பிரமனுக்கும் மேம்பட்டவனே என்றும், பல பொருள்களைத்தரும், பகைவர்கள் நட்புறவு கொள்ள வரும் காலத்து, ஆராய்ந்து உணரவேண்டிய சில நுணுக்கங்கள்வேதங்களிலும், மனுதர்ம சாஸ்திர நூல்களிலும் கூறப்பட்டு இருக்கின்றன. எனவேதான் அவற்றை இங்கே குறிப்பிட்டார் என்க.

Koviloor Digital Library

58. "ஆயினும் விளம்புவென், அருளின் ஆழியாய்!
ஏயினது ஆதலின், 'அறிவிற்கு ஏற்றன
தூய அன்று என்னினும், துணிவு அன்று என்னினும்
மேயது கேட்டியால்; விளைவு நோக்குவாய்!" (6505)

(ஆழி-கடல்; ஏயினது-கட்டளையிட்டது; மேயது-பொருந்தியது; தூய-நல்லது/நன்மைதருவது)

''அருட்கடலாகத் திகழ்பவனே! எங்களைப் போன்றவர்களைக் கேட்டுத்தான் முடிவு எடுக்க வேண்டும் என்ற அவசியம் உனக்கு இல்லை, என்றாலும் நீ கட்டளையிட்டதனால், என் அறிவுக்குத் தெரிந்ததை, என் உள்ளத்தில் பொருந்தியதை, நான் கூறுவதைக் கேட்டருள்வாயாக! நான் கூறுவது நமக்கு நன்மை பயக்கும் என்று கருதி ஏற்றுக்கொண்டாலும் சரி, அல்லது அது துணிந்து செய்யத்தக்கது அன்று என்று ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் சரி, அதன்பின் விளைவுகளை நன்கு ஆராய்ந்து கொள்வாயாக!'' என்று சுக்கிரீவன் தானே முன்சென்று முதலில் இவ்வாறு கூறலானான்.

59. "வெம்முனை விளைதலின் அன்று; வேறுஒரு
சும்மையான் உயிர்கொளத் துணிதலால் அன்று;
தம்முனைத் துறந்தது, தரும நீதியோ?
செம்மை இல் அரக்கரில், யாவர் சீரியோர்?" (6506)

(தம்முன்-தமையன்; வெம்முனை-கொடியபோர்; சும்மை-பாரம்; செம்மை-நேர்மை; சீரியோர்-சிறப்புடையோர்; துறந்தது-விட்டு வந்தது)

சுக்கிரீவன் இராமபிரானைப் பார்த்து, ''இந்த வீடணன் இப்பொழுது தனது தமையனாகிய இராவணனை விட்டுப் பிரிந்து வந்தது, அவர்கள் இருவருக்குள்ளும் கடுமையானபோர் எதுவும் நிகழ்ந்ததால் அல்ல; அல்லது இராவணன் இவன்மீது பெரிய பாரமுள்ள அல்லது பழிக்கத்தக்க எந்தச் செயலாலோ இவன் உயிரைப் பறித்துக் கொள்ள எண்ணியதாலும் அன்று; இவ்வாறு பிரிவதற்குரிய பெரிய நிகழ்வுகள் ஒன்றும் நடவாதிருக்கும்போது, அவனை இந்த நேரத்தில் விட்டுப் பிரிந்து வந்தது, அறத்தின்பாற் பொருந்திய நீதியாகுமோ! நடுவு நிலைமைபோன்ற நேர்மையான குணங்கள் இல்லாத அரக்கர்களுக்கு மத்தியில் இவர்தான் மேன்மையுடையவர், சிறப்புடையவர் என்று குறிப்பிட்டுச்சொல்லும்படி யார் இருப்பார்கள்? ஒருவரும் இருக்க மாட்டார்கள். எல்லோரும் அரக்க குணம் படைத்தவர்களாகவே இருப்பார்கள்'' என்று தன் கருத்தைக் கூறுகிறான் சுக்கிரீவன்.

இங்கே ஒன்று கருத வேண்டும். சுக்கிரீவனும் தன் அண்ணன் வாலியை விட்டுவிட்டு வந்து, இராமபிரானிடம் தஞ்சம் புகுந்தவன்தான். அவன்

Koviloor Digital Library

வருவதற்குரிய காரணங்களாக அவன் எண்ணுவது வாலிக்கும் சுக்கிரீவனுக்கும் பெரும் போர் நிகழ வாய்ப்புக்கள் இருந்தன. சுக்கிரீவன் மனைவி உருமையை வாலி கவர்ந்து சென்றான். மேலும் இவனை ஓடஓட விரட்டித் தன் வலிமையைக் காட்டினான். எனவே, தான் இராமபிரானிடம் தஞ்சம் புகுந்தது சரியென்றும், இத்தகைய எந்த அச்சுறுத்தலும் அவமானமும் வீடணனுக்கு இல்லாதபோது, அவன் இங்கு வந்தது சரியன்று என்றும் சுக்கிரீவன் கூறுவதுபோல் தொனிப்பதை உணர்க. அரக்கர்களிடையே நல்லவர்கள் இருக்க முடியாது என்பது அவன் கருத்து.

60. "தகை உறு தம்முனை, தாயை, தந்தையை,
மிகைஉறு குரவரை, உலகின் வேந்தனை,
பகைஉற வருதலும், துறந்த பண்புஇது
நகை உறல் அன்றியும், நயக்கற் பாலதோ?" (6507)

(தகை-தகைமை/மேன்மை; உறுதல்-பொருந்தியிருத்தல்; மிகை-சிறப்பு/மேம்பட்டு; குரவர்-ஆசிரியர்/குரு; உறுதல்-நெருங்குதலுமாம்; நயத்தல்-விரும்புதல்)

"தகுதிவாய்ந்த மேன்மை பொருந்திய தனது, தாய், தந்தை, தமையன், மிகச்சிறப்பு மேம்பாடு மிக்க ஆசிரியன், உலகாளும் வேந்தன் ஆகிய இந்த ஐந்து பேரையும் அவர்களுக்குப் பகைவர்களால் நெருக்கடி நேரும்போது, அவர்களைத் தனித்துவிட்டுப் பிரிந்து வருவது, பகைத்துக்கொண்டு வருவது என்ற இந்த நேர்மையில்லாதசெயல், இழிவெனக் கருதி நகைப்ப தற்கு இடமளிக்குமே அன்றி, ஒருவராலும் விரும்பத்தக்க செயலாக ஆகாது" என்கிறான் சுக்கிரீவன்.

தாய், தந்தை, தமையன், ஆசிரியன், அரசன் இவர்கள் ஐவரும் 'ஐங்குரவர்' என்று இலக்கியங்கள் பேசும். 'அரசன், உவாத்தியான், தாய், தந்தை, தம்முன் நிகர் இல் குரவர் இவர்' என்பது ஆசாரக்கோவை. 'குரவர்' என்ற சொல்லுக்குச்சான்றோர் என்ற ஒரு பொருளும் உண்டு. சமயக்குரவர் நால்வர்என்பதை இங்கு நினைவுகூர்க. இத்தகைய பாவச்செயல்கள்செய்த வீடணனை நம்முடன் சேர்த்துக் கொள்ளக்கூடாது என்பது சுக்கிரீவன் கருத்து எனக் கொள்க.

61. "வேண்டுழி இனியன விளம்பி, வெம்முனை
பூண்டுழி, அஞ்சி வெஞ்செருவில் புக்கு உடன்
மாண்டு ஒழிவு இன்றி, நம் மருங்கு வந்தவன்,
ஆண்தொழில், உலகினுக்கு, ஆணி ஆம் அன்றே?" (6508)

(வேண்டுழி-வேண்டும் பொழுது; விளம்புதல்-சொல்லுதல்; வெம்முனை-கொடிய போர்; பூணுதல்-மேற்கொள்ளுதல்; செரு-போர்;

Koviloor Digital Library

மருங்கு-பக்கம்; மாண்டொழிவு-இறத்தல்; ஆண்தொழில்-ஆண்மை/வீரம்)

''தனக்குத் தன் அண்ணனால் ஒரு காரியமாக உதவி வேண்டியிருக்கும்பொழுது, அவனுடன் கூடவே இருந்து, அவனுக்கு மகிழ்ச்சி தரும் சொற்களைக் கூறியிருந்துவிட்டு, இப்பொழுது அவன் பகைவர் மேல் கொடிய போர்மேற்கொண்டு எழும்போது, அந்தக் கொடுமையான போர்க்களத்தில் சென்று கலந்து அண்ணன் இறந்துபோனால் அண்ணனுடன் தானும் சேர்ந்து உயிர் விடுதலை விட்டுவிட்டு, அதற்கு அச்சம் கொண்டு, நம் பக்கம் வந்து சேர்ந்திருக்கின்ற இவனுடைய ஆண்மைத் தொழிலாகிய வீரப்பண்பு, இவ்வுலகினுக்கே அசைக்க முடியாத ஆணி போன்றதல்லவா?'' என்று சுக்கிரீவன் வீடணனின் வீரத்தை எள்ளி நகையாடுகிறான்.

'ஆண்தொழில் உலகினுக்கு ஆணி ஆம் அன்றே' என்பது இகழ்ச்சிக் குறிப்பு எனக் கொள்க. ''வெம்செருவில் புக்கு, உடன் மாண்டு ஒழிவதன்றி'' என்பது செஞ்சோற்றுக் கடன் கழிப்பது என்ற பொருள்தரும் பாடல்வரிகள். துரியோதனன்-கர்ணன் நிலையை இங்கே நினைவுகூர்க. 'நினக்கே அன்றி, ஏருரும் கதிர் முடியாய்! உற்ற போரில், யார்க்கு என் உயிர் அளிப்பது இயம்புவாயே!' என்பது வில்லிபாரதம். இராவணன்-கும்பகர்ணன் நிலையும் நினைவு கூரத்தகும். 'நீர்க்கோல வாழ்வை நச்சி, நெடிதுநாள் வளர்த்துப் பின்னைப் போர்க்கோலம் செய்துவிட்டார்க்கு உயிர்கொடாது அங்கு போகேன்' என்பது கும்பகருணன் வதைப்படலம். 'உறின் உயிர் அஞ்சா மறவர், இறைவன் செறினும், சீர்குன்றல் இலர்' என்பதும், 'புரந்தார் கண் நீர்மல்கச் சாகின், பின் சாக்காடு இரந்து கோள் தக்கது உடைத்து' என்பதும் குறள் 778, 780. செல்வம் இருந்தால் நட்புக் கொண்டும், செல்வம் போய்விட்டால் விலகியும் போய்விடும் தகுதியற்றவர்களின் உறவினைப் பெற்றாலும், இழந்தாலும் ஒன்றேதான். 'உறின் நட்டு, அறின் ஒரூஉம் ஒப்பிலார் கேண்மை, பெறினும் இழப்பினும் என்? என்பது குறள் 812. 'பொருதொழிற்கு உரியராகி, ஒருத்தரின் முன்னம்சாதல், உண்டவர்க்கு உரியதம்மா' என்பது கும்பகர்ணன் வதைப்படலம்.

62. ''மிகைப்புலம் தருமமே வேட்டபோது, அவர்
தொகைக்குலம் துறந்து போய்ச் சார்தல் அன்றியே,
நகைப்புலம் பொதுவுற நடந்து, நாயக!
பகைப்புலம் சார்தலோ? பழியின் நீங்குமோ?'' (6509)

(மிகை-மேம்பட்ட; புலம்-அறிவு; வேட்டல்-விரும்புதல்; புலம்-இடம்; தொகை-தொகுதி; குலம்-கூட்டம்; சார்தல்-சேர்ந்து கொள்ளுதல்)

''தலைவனே! தனது மேம்பட்ட அறிவு, அறநெறியையே விழைந்து செயலாற்றும்போது, அவர்களது தொகுதியான கூட்டத்தினின்றும்

Koviloor Digital Library

விலகிப் பிரிந்துப்போய்த் தனியனாய்த் தவம் செய்தலையே மேற்கொள்ள வேண்டுமேயல்லாது, எல்லோரும் பார்த்து எள்ளி நகைக்கும்படி, அவ்விடத்தை விட்டு அகன்றுவந்து, அவர்களுக்குப் பகைவரானவர் இடம் வந்து சேர்ந்து கொள்வது சரியாகுமோ? அத்தகைய செயலைச் செய்பவர் மீளாப் பழியினின்றும் நீங்கப் பெறுவரோ?'' என்று கேட்கிறான் சுக்கிரீவன்.

வீடணன் தனியே சென்று தவம் இயற்றியிருக்க வேண்டும், அல்லது செத்து மடிந்திருக்க வேண்டும், பகைவர்களுடன் சேர்ந்துகொள்ளுதல் அவனுக்கு நீங்காப் பழியையே தரும் என்பது சுக்கிரீவன் கருத்து. தமையன் அறநெறியினின்றும் மாறினன் என்றால், தம்பி அவனை விட்டு விலகி, ஒன்று தவம் செய்யச் சென்றிருக்க வேண்டும் அல்லது இறந்துபோயிருக்க வேண்டும், எக்காலத்தும் பகைவரிடம் சேர்வது தகுதியாகாது என்கிறான் சுக்கிரீவன். விதுரன் துரியோதனனை வெறுத்தான், அப்போது அவனை விட்டு விலகித் தவம் செய்யத்தான் சென்றான் என்பது வில்லிபாரதம். எனவே வீடணன் வேறு ஏதோ வஞ்சக எண்ணத்துடன் வந்திருக்கிறான் என்கிறான் சுக்கிரீவன்.

63. ''வார்க்குறு வனைகழல் தம்முன் வாழ்ந்தநாள்
சீர்க்கு உறவாய், இடைச் செறுநர் சீறிய
போர்க்கு உறவு அன்றியே போந்தபோது, இவன்
ஆர்க்கு உறவு ஆகுவன், அருளின் ஆழியாய்!'' (6510)

(வார்க்கு-உருக்கி வார்த்து; வனை-செய்யப்பட்ட; தம்முன்-தமையன்; சீர்-செல்வச்சிறப்பு; இடை-நடுவே; செறுநர்-பகைவர்)

''கருணைக்கடலாய்த் திகழ்பவனே! உலோகத்தை உருக்கி வார்க்கப் பட்ட அழகிய வீரக்கழலை அணிந்த தனது தமையனான இராவணனுடன், அவனுடைய செல்வச் சிறப்பு மிகுந்திருந்த நாட்களில் எல்லாம், அவனுடன் கூட இருந்து அந்தச் சிறப்புக்களையெல்லாம் அனுபவித் தவன், இப்போது நடுவில் பகைவர்கள் சீறியெழுந்து போர் செய்ய முனைந்து வந்தபோது, தன் அண்ணனுடன் கூட இருந்து உறவினைப் பேணாமல், அவனுக்குப் பகைவர்களாகிய நம்முடன் வந்து சேர்ந்து கொள்ள எண்ணி இங்கு வந்திருக்கிறானே? இந்த நிலையில் இவன் யாருக்குத்தான் உறவினனாக ஆவான்?'' என்று கேட்கிறான் சுக்கிரீவன்.

தன் சொந்த அண்ணனையே அவன் இடர்உற்ற காலத்தில் கைவிட்டு வந்தவன் நமக்கு எப்படி உறவாவான்? என்பது சுக்கிரீவனின் கேள்வி.

64. ''ஒட்டிய கனக மான் உருவம் ஆகிய
சிட்டனும், மருமகன் இழைத்த தீவினை
கிட்டிய போதினில், தவமும் கேள்வியும்
விட்டது கண்டும், நாம் விடாது வேட்டுமோ?'' (6511)

Koviloor Digital Library

(ஒட்டிய-இடையில் கொண்ட; கனகம்-பொன்; சிட்டன்-பெரியோன்; இழைத்த-நுணுகி ஆராய்ந்த/சூழ்ந்த/செய்த; கிட்டுதல்-நேர்தல்; வேட்டல்-விரும்புதல்)

''பெரியோனாகிய மாரீசன், பொன்மான் வேடம் தரித்துக் கொண்டு இடையில் வந்தவன், அவன் தன் மருமகனாகிய இராவணன் மிகவும் நுணுகி ஆராய்ந்து செய்த தீயவினையாகிய, சீதையை வஞ்சனையால் கவர்ந்து வருதல் என்ற செயலைச் செய்ய வாய்ப்புக் கிடைத்தபோது, தனது தவ ஒழுக்கத்தையும், நூல்கேள்வியறிவினையும் விட்டுவிட்டு, இராவணனுக்கு உதவி செய்யப் பொன்மான் வேடம் கொண்டதை நாம் அறிந்திருந்தும், அவனைப் போன்ற இந்த வீடணனை மட் டும், விடாது விரும்பி ஏற்றுக்கொள்ளக் கடவோமோ?'' என்கிறான் சுக்கிரீவன்.

சிட்டன் என்ற சொல்லுக்குப் பெரியோன் என்று பொருள் என்றாலும், இங்கே அது இகழ்ச்சிக் குறிப்பில் பயன்படுத்தப் பட்டிருப்பதாகக் கொள்க. 'சிரேஷ்டன்' என்ற வடசொல் 'சிஷ்டன்' என்று திரிந்து 'சிட்டன்' என்று தமிழாக்கப் பட்டிருக்கிறது. சிரேஷ்டன் என்ற வடசொல்லுக்கு ஆசாரம் மிக்கவன் என்பது பொருள்.

மாரீசன் தாடகையின் மகன் என்பதை முன்னரே நாம் கண்டதை இங்கு நினைவுகூர்க. இராமபிரானால் இருமுறை துரத்தியடிக்கப் பெற்ற மாரீசன் இப்பொழுது தவஒழுக்கத்தில் ஈடுபட்டுத் தன் வாழ்நாளைக் கழித்து வருகிறான். அவனை அவன் மருமகனான இராவணன் சென்று பார்த்து, சீதாதேவியைத் தான் அபகரித்துவர, வஞ்சனை மானாக மாறுவேடம் போடவேண்டும் எனக் கேட்கிறான். முன்பு மறுக்கின்ற மாரீசன், இராவணனின் அச்சுறுத்தலால் தன் தவவாழ்வைத் தள்ளி வைத்து உடன் பட்டு மாயமானாக வேடம் தாங்கி சீதை இருக்கும் இடம் செல்கிறான். இந்த நிகழ்வுகளை முன்னரே நாம் கண்டிருக்கிறோம். அவற்றையே மிகச் சுருக்கமாக இங்கே 'ஒட்டிய கனக மான் உருவம் ஆகிய சிட்டன்' என்றும், ''மருமகன் இழைத்த தீவினை' என்றும் 'தவமும் கேள்வியும் விட்டது' என்றும் கூறப்பட்டுள்ளதைக் காண்க. மாரீசனைப் போன்றவன் தான் வீடணன் என்பதும், இவனை நம்புதல் கூடாது, இவனை நம்முடன் சேர்த்துக் கொள்ளக்கூடாது என்பதும் சுக்கிரீவன் வாதம். 'ஒட்டிய' என்ற சொல் தற்காலிகமாக மேற்கொண்ட என்ற பொருளைத்தரும். அரக்கர்கள் வஞ்சகம் மிகுந்த வேடங்கள் தரிக்கவல்லவர்கள், நம்பமுடியாதவர்கள் என்பது சுக்கிரீவன் கருத்தாதல் காண்க.

65. "கூற்றுவன் தன்னோடு எவ்வுலகும் கூடிவந்து,
ஏற்றன என்னினும், வெல்ல ஏற்றுளம்;
மாற்றவன் தம்பி, நம்மருங்கு வந்து, இவண்
தோற்றுமோ? அன்னவன் துணைவன் ஆகுமோ?" (6512)

Koviloor Digital Library

(கூற்றுவன்-இயமன்; ஏற்றன-எதிர்ந்து வந்த; மாற்றவன்-பகைவன்; மருங்கு-பக்கம்/இடம்)

''இயமனையே துணைவனாகக் கொண்டு இந்த உலகம் முழுவதும் சேர்ந்து வந்து நம்மை எதிர்த்துப் போரிட்டாலும், அதனை வெல்லும் ஆற்றல் நமக்குள்ளது. அதனை ஏற்றுக்கொண்டு வென்று காட்டுவோம். அந்நிலையில், நமது பகைவனான இராவணனின் தம்பி, வீடணன், நம்பக்கத்தில் வந்து சேர்வதற்கு என்ன அவசியம் வந்தது? அப்படியே அவன் இங்கு வந்தாலும், அவன் நமக்குப் பெரிய துணைவனாகி நமக்கு வெற்றி தேடித்தந்து காரியங்களைச் சாதித்து விடுவானோ?'' என்று கேட்கிறான் சுக்கிரீவன்.

''கூற்று உடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும் ஆற்றல் அதுவேபடை'' எனப் படையின் பெருமையைக் கூறுவது குறள் 765. 'ஏற்றுளம்' என்பது வஞ்சினம் கொண்டுள்ளோம் என்ற பொருளைத் தரும்.

66. ''அரக்கரை ஆசு அறக்கொன்று, நல்அறம்
புரக்க வந்தனம்'' எனும் பெருமை பூண்ட நாம்,
இரக்கம் இல் அவரையே துணைக்கொண்டு, ஏற்றுமேல்
'சுருக்கம் உண்டு அவர் வலிக்கு' என்று தோன்றுமால்'' (6513)

(ஆசுஅற-முழுவதும்; புரத்தல்-காத்தல்; பூண்ட-மேற்கொண்டுள்ள; சுருக்கம்-குறைபாடு/பின்னடைவு)

''அரக்கர் இனத்தையே ஒருவரும் எஞ்சிநில்லாது, அடியோடு அழிக்கவும், அதன்பொருட்டு, தூய தருமநெறியைக் காப்பாற்றும் பொருட்டும் அறம்தலை நிறுத்தவும், வந்திருக்கிறோம் என்ற பெருமை மேற்கொண்ட நாம், மீண்டும் அந்த இரக்கமில்லாத அரக்கர்களில் ஒருவனையே துணையாகக் கொண்டு போர் மேற்கொள்வோம் என்றால், இந்த இராம இலக்குவர் படைக்கு ஏதோ குறைபாடு இருக்கிறது என்று நம் மாற்றாரும் பேசுதற்கு இடமாகிவிடும். எனவே உலகத்தவர்க்கும் நம் ஆற்றல் மீது சந்தேகங்கள் வந்துவிடலாம்' என்று எச்சரிக்கிறான் சுக்கிரீவன்.

67. ''விண்டுழி, ஒருநிலை நிற்பர்; மெய்ம் முகம்
கண்டுழி, ஒருநிலை நிற்பர்; கைப்பொருள்
கொண்டுழி, ஒருநிலை நிற்பர்; கூழுடன்
உண்டுழி, ஒருநிலை நிற்பர், உற்றவர்'' (6514)

(உற்றவர்-அடைக்கலம்பெற வந்தவர்கள்/உறவினரும் ஆம்)

''இப்போது நம்மை வந்து சரணடைந்திருக்கின்ற இவர்கள், நம்மைக் காணாது பிரிந்து சேய்மையில் இருக்கும்போது ஒரு நிலையில் இயங்குவார்கள், நம்முடைய உண்மையான முகத்தைக் கண்டு விட்டாலோ,

Koviloor Digital Library

அதற்கு ஏற்றாற்போல் நடந்து கொள்வார்கள். நம்முடைய கைப்பொருளைப் பெற்றுக் கொண்டபொழுது, நம்மை ஏற்றிப் போற்றுவார்கள்; நம்மிடம் பொருள் இல்லாதபோது மிகவும் சிறியதான கூழ் என்ற உணவுப் பொருளை உண்ணும்போது அதற்கு முற்றிலும் மாறு பட்ட வேறு ஒரு நிலையில் இயங்குவர். அரக்கர்கள் மனம் ஒரு நிலையில் நில்லாது சமயத்திற்கு ஏற்றாற்போல் மாறிக்கொண்டே யிருக்கும். எனவே இவனை நம்முடன் சேர்த்துக் கொள்ளுதல் தகாது'' என்று சுக்கிரீவன் கூறுகிறான்.

இதற்கே மற்றொரு வகையாகப் பொருள்கூறுவதும் உண்டு. நம்மை விட்டுப் பிரிந்திருந்த போதும், நம்மை நேருக்குநேர் காணும் போதும், எந்தவித மாற்றமும் இன்றி ஒரே நிலையில் இருப்பார்கள் நம்மடைய உற்றார் உறவினர்கள். அதைப்போலவே நம்மிடம் செல்வம் இருக்கும் போது அதை அனுபவிக்கும் போதும், அச்செல்வம் வற்றிப்போய் கூழ்மட்டும் குடிக்கும் நிலை வுந்தாலும், நம்மை விட்டுப் பிரியாமல் நம்முடனே நிலைத்து நிற்பார்கள் உற்றார் உறவினர். எனவே நம் கூட்டத்தவரை விட்டு விட்டு, இவனை நம்பி நம் கூட்டத்துடன் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்றும் கூறுகிறான் சுக்கிரீவன் என்பதாம். ஒரே செய்யுளுக்கு இரண்டு வகையாகவும் பொருள்தரும் பாடல். 'பிறிது மொழிதல் அணியின்பாற்படும். 'கூழ்' என்பது உணவுப் பொதுவைக் குறித்தது எனக் கொள்க. 'உண்டாயின் பதம் கொடுத்து, இல்லாயின் உடன் உண்ணும் இல்லோர் ஒக்கல் தலைவன்' என்பது புறநானூறு. இது அவ்வையார் அதியமான் நெடுமான் அஞ்சியைப் புகழ்ந்து கூறிய பாடலாகும். 'காலையில் ஒன்றாவார்; கடும்பகலில் ஒன்றாவார்; மாலையில் ஒன்றாவார் மனிதரெல்லாம்' என்பது ஒரு தனிப்பாடல்.

68. ''வஞ்சனை இயற்றிட வந்தவாறு அலால்,
''தஞ்சு'' என, நம்வயின் சாா்ந்துளான் அலன்;
நஞ்சினின் கொடியனை, நயந்து கோடியோ?
அஞ்சன வண்ண!'' என்று அறியக் கூறினான். (6515)

(இயற்றிட-செய்வதற்கு; தஞ்சு-தஞ்சம்/அடைக்கலம்; அஞ்சனம்-மை; நயந்து-விரும்பி; கொள்+தி-கோடி-ஏற்றுக்கொள்ளுதல்; அறிய-புரிந்துகொள்ளுமாறு)

''இராவணன்பால் பேரன்பு கொண்டிருக்கும் இவன், நம்மிடம் ஏதோ வஞ்சனையான எண்ணத்துடன்தான் வந்திருக்கிறானே அல்லாமல், உண்மையிலேயே நம்மைத் தஞ்சம் என்று வந்து அடைந்துள்ளவனாகத் தெரியவில்லை. ஏதோ ஓர் சூழ்ச்சித் திட்டத்துடன் வந்திருப்பதாகவே தோன்றுகிறது. எனவே ''மைபோன்ற கரிய நிறமுடைய தலைவனே! இந்த நஞ்சினும் கொடியவனான வீடணனை, நீ விரும்பி ஏற்றுக்கொள்ளப்

Koviloor Digital Library

போகிறாயோ? அவ்வாறு ஏற்றுக்கொள்ளக் கூடாது'' என்று இராமபிரான் நன்கு புரிந்து கொள்ளும் வண்ணம் விளக்கிக் கூறினான் சுக்கிரீவன்.

'கோடியோ' என்பதில் உள்ள ஓகாரம் எதிர்மறைப் பொருளது. கூடாது என்று பொருள்தரும்.

இங்கே வான்மீகம் வேறுபடுகிறது. இராமபிரான் இவன் கருத்தைக் கேட்பதற்கு முன்பே, தானே தன்னிச்சையாக இக்கருத்தைக் கூறுகிறான் சுக்கிரீவன். வானரர்களுடன் கலந்து ஆலோசிக்க வேண்டும், பகைவர் படைக்குச் சில ஒற்றர்களை அனுப்பி விபரம் கேட்டுவர வேண்டும் என்றும், மாயையில் வல்லவர்களான இவர்களிடம் நம்பிக்கை கொள்ளக் கூடாது என்றும், ஒருவேளை இவனே நம்படைபலத்தைக் கண்டறிய வந்த ஒற்றனாக இருக்கக்கூடும் என்றும், சமயம்பார்த்துப் பலகோட்டான்களை அழித்துவிடும் காக்கையைப்போல இவனும் நற்சமயத்தை எதிர்பார்த்துக் காத்திருந்து நம்மையும் அழிக்க முயலுவான் என்றும், அதற்குமுன் நாம் இவனைக் கொன்றுவிட வேண்டும் என்றும் வீடணனை சேர்க்க வேண்டாததற்கு உரிய பல காரணங்களை அடுக்கடுக்காக சுக்கிரீவன் கூறுகிறான் என்றும் வான்மீகம் பேசுகிறது.

69. சாம்பவன் தன் கருத்தைக் கூறுதல். [7 பாடல்கள்]

''அன்னவன் பின்னுற, அலகு இல் கேள்வியின்,
தன் நிகர் பிறர் இலாத் தகைய சாம்பனை,
'என்னை உன் கருத்து?' என, இறை வினாயினான்;
தொன்முறை நெறி தெரிந்து, அவனும் சொல்லுவான்'' (6516)

(அலகுஇல்-அளவில்லாத; தகைமை-பெருமை/தன்மை; என்னை-என்ன; தெரிந்து-ஆராய்ந்து; இறை-தலைவன்; தொல்-பழமையான)

அவ்வாறு சுக்கிரீவன் கூறி முடித்ததன்பின், அளவில்லாத கேள்வி ஞானத்தில் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத பெருமையையுடைய சாம்பவனை நோக்கி, தலைவனான இராமபிரான் ''இதில் உன் கருத்து என்ன?'' என்று கேட்டான். பழமையான நெறிமுறைகளை நன்றாகத் தெரிந்தவனான சாம்பவன், ஆராய்ந்து தெளிந்து பின்வருமாறு கூறலானான்.

சாம்பவன் மிகவும் முதியவன், திருப்பாற்கடல் கடைந்து அமிழ்தத்தை எடுத்தபோதே அச்செய்தியை உலகெங்கும் பறையறிவித்தவன், எனவே பல்லோருடைய தொடர்பும் இருந்ததால் கேள்வியறிவு மிக்கவன், பேரறிவாளன், பிரம்மனின் புத்திரன், கரடிகளுக்குத் தலைவன், சிரஞ்சீவி களில் ஒருவன். அவன் பழமையான நீதிநெறிகள் அறிந்தவன், பேசும் வன்மையும் உடையவன்-இவன்தான் அனுமன் இலங்கை சென்றுவர ஊக்கம் அளித்தவன். அவனுள் மறைந்திருந்த திறமைகளை வெளிப்

Koviloor Digital Library

படுத்தித் தன்னைத்தான் உணரவைத்தவன், இவன் மருத்துமலை எங்கே இருக்கிறது என்பதை அறிந்தவன், அதை எடுத்துவர அனுமனை அனுப்பி, சிறந்த வானரவீரரையும், இலக்குவனையும் எழுப்பிக்க உதவியவன். இவன் இராமனின் அவதார ரகசியத்தை அறிந்தவன். எனவேதான் கவிஞன் ''தன் நிகர் பிறர் இலாத்தகைய சாம்பன்'' என்றார் என்க. ''முறை நெறி தெரிந்து'' என்பதில் முறை என்பது சொல்லைப் பற்றியது; நெறி என்பது சொல்லின் பொருளைப் பற்றியது என்பது அறிக.

70. "அறிஞரே ஆயினும், அரிய தெவ்வரைச்
செறிஞரே ஆவரேல், கெடுதல் திண்ணமாம்;
நெறிதனை நோக்கினும், நிருதர் நிற்பது ஓர்
குறி நனி உளது என உலகம் கொள்ளுமோ?" (6517)

(தெவ்வர்-பகைவர்; செறிஞர்-நண்பர்; கெடுதல்-அழிதல்; நிருதர்-அரக்கர்; குறி-கொள்கை; உலகம்-உலகத்தார்; செறிதல்-அணுகுதல்; திண்ணம்-உறுதி)

''பேரறிவாளன் தான் என்றாலும் நீக்குதற்குரிய, நம்புதற்கரிய பகைவர்களை நண்பர்களாக அணுகிச் சேர்த்துக் கொண்டால், சேர்த்துக் கொண்டவர் அழிதல் நிச்சயமாகும். அரக்கர்களுக்கே உள்ள நெறிமுறை களை ஆராய்ந்து பார்த்தாலும் அவர்கள் கொள்கைகள் மிகவும் நன்றென்று இந்த உலகம் ஏற்றுக்கொள்ளுமோ?'' என்று கேட்கிறான் சாம்பவன்.

வீடணனின் அறிவுடைமை கருதியோ, அல்லது அவன் இப்போது மேற்கொண்டுள்ள அறநெறி கருதியோ, அவனை நாம் நம்பக்கம் சேர்த்துக் கொள்ளக்கூடாது என்று கூறுகிறான் சாம்பவன் என்பதாம். இவனைச் சேர்த்துக் கொண்டால் நமக்குத் தீங்கு விளையும் என்பது மட்டுமல்ல, உலகமும் அதனை ஏற்றுக்கொள்ளாது என்கிறான் என்பது கருத்து.

''உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே'' என்பது நிகண்டு. இங்கே வள்ளுவனின் நட்பாராய்தல், நட்பு, தீநட்பு, கூடாநட்பு ஆகிய அதிகாரங்களில் உள்ள கருத்துக்கள் ஒப்பு நோக்கத்தக்கனவாகும். 'இனம் போன்று இனமல்லார் கேண்மை, மகளிர் மனம் போல வேறுபடும்' என்பதும் 'நட்டார்போல் நல்லவை சொல்லினும், ஒட்டார்சொல் ஒல்லை என்று உணரப்படும்' என்பதும், ''பகை நட்பாம் காலம் வருங்கால், முகம் நட்டு, அகநட்பு, ஓரீஇவிடல்' என்பதும் கூடாநட்புக் குறள்கள் 822, 826, 830. 'நாடாது நட்டலில் கேடில்லை; நட்டபின் வீடில்லை நட்பாள்பவர்க்கு' என்பதும் 'ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை, கடைமுறை தான் சாம்துயரம் தரும்' என்பதும், 'குணனும், குடிமையும், குற்றமும், குன்ற இனனும் அறிந்து யாக்க நட்பு' என்பதும் 'உள்ளற்க உள்ளம் சிறுகுவ; கொள்ளற்க அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு' என்பதும், 'கெடுங்காலை கைவிடுவார்கேண்மை, அடுங்காலை உள்ளினும் உள்ளம்சுடும்' என்பதும்

Koviloor Digital Library

நட்பாராய்தல் குறள்பாக்கள் 791, 792, 796, 799. 'அமரகத்து ஆற்றலுக்கும் கல்லா மா அன்னார்தமரின், தனிமைதலை' என்பது தீநட்பு குறள் 814.

71. "வெற்றியும் தருகுவர், வினையம் வேண்டுவர்,
முற்றுவர்; உறுகுறை முடிப்பர் முன்பினால்
உற்றுறு நெடும்பகை உடையர், அல்லதுஊஉம்,
சிற்றினத்தவரொடும் செறிதல் சீரிதோ?" (6518)

(வினையம்-உபாயம்; வேண்டுவர்-விரும்பியவர்; முற்றுதல்-முடித்தல்; முன்பு-வல்லமை; நெடும்-நெடிய/தொடர்ந்த; செறிதல்-சேர்தல்; சீர்-சிறப்பு; சிற்றினத்தவர்-அற்பர்; முடித்தல்-போக்குதல்)

''வீடணனைப் போன்ற இவர்களுடன் நாம் நட்புக்கொண்டால், நாம் இராவணனுடன் போர் தொடங்கும்போது, நமக்கு வெற்றியைத் தரும்படி பாடுபடுவார்கள்; அவர்களை வெல்லுதற்குரிய நல்ல உபாயங்களையும் யோசனைகளையும் தாமே விரும்பி அளிப்பர்; நமக்கு ஏதேனும் குறைபாடு இருக்கிறது என்று தெரிந்தால் அதைத் தம் வலிமை கொண்டு முற்றமுழுக்க முடித்துத்தருவார்கள், என்றாலும் இவர்கள் நம்முடன் நீண்ட நெடுங் காலமாசத் தொடர்ந்த பகை கொண்டிருப்பவர்கள். அதோடு மட்டுமல்ல இத்தகைய அற்பர்களாகிய சிற்றின அரக்கர்களோடு நாம் நட்பு வைத்துக்கொள்ளுதல் நம் தகுதிக்குச் சிறப்பாக அமையுமோ?'' என்று கேட்கிறான் சாம்பவன்.

'சிற்றினம் அஞ்சும் பெருமை' என்பது குறள் 451.

72. "வேதமும் வேள்வியும் மயக்கி, வேதியர்க்கு
ஏதமும், இமையவர்க்கு இடரும், ஈட்டிய
பாதகர் நம்வயின் படர்வராம் எனின்,
தீதுஇலராய், நமக்கு அன்பு செய்வரோ?" (6519)

(மயக்கி-கெடுத்து; ஏதம்-தீமை; இமையவர்-தேவர்கள்; இடர்-துன்பம்; ஈட்டிய-பழகிய; படர்தல்-சேர்தல்; பாதகம்-பெரும்பாவம்; பாதகர்-பாவிகள்)

''நான்கு வேதங்கள் கற்பதையும், கற்பிப்பதையும், வேதத்தில் கூறப்பட்ட வேள்விகளை நடத்த விடாமலும் கெடுத்து, வேதம் வல்ல வேதியர்க்குத் தீங்கும், தேவர்களுக்குத் துன்பமும், விடாது வலிதில் செய்து பழகிய பாவிகளாகிய இந்த அரக்கர்கள், நம் பக்கம் வந்து சேருவார்களென்றால், தமது பிறவிக்குணமாகிய தீங்கு செய்தலை விடுத்து, தீமையில்லாதவர்களாக, நம்மிடம் அன்பைப்பொழிந்து நல்லனவே செய்வார்களோ? அவ்வாறு நீ கருதுகிறாயா?'' என்று கேட்கிறான் சாம்பவன்.

Koviloor Digital Library

முன்பு தண்டகாரண்யத்தில் முனிவர்கள் வந்து தமக்குப் பெருந்தீங்கு இழைக்கின்றனர் அரக்கர்கள் என்றும், அவற்றை விலக்கி எங்களைக் காத்தருளவேண்டும் என்றும் தஞ்சம் புகுந்தமையை இங்கு நினைவுகூர்க. அப்படிப்பட்ட பாவிகளாகிய அரக்கர்களை நம்முடன் சேர்த்துக்கொண்டால் அவர்களால் நன்மையைக் காட்டிலும் தீமையே பெரிதும் விளையும் என்று எச்சரிக்கிறான் சாம்பவன் என்க.

'வேள்' என்ற சொல்லுக்கு விருப்பம் என்பது பொருள். இதனடியாகப் பிறந்த சொல் வேள்வி, ஒரு பலனைக் கருதிச் செய்யப்படும் யாகம், இது காமிய கருமம் எனப்படும். பலன் கருதாது, உலகநலன் கருதிச் செய்யப்படும் வேள்வி நிஷ்காம்ய கருமம் எனப்படும். இலங்கையில் ஒரு அரக்கனுக்கு 'யக்ஞ சத்துரு', வேள்வியின் பகைவன் என்ற பெயருண்டு என்பதும் அறிக. இராவணனையே 'தேவகண்டகன், ரிஷி கண்டகன்' என்று வான்மீகம் கூறுகிறது. 'கண்டகம்' என்ற தமிழ்ச் சொல்லுக்கு முள் என்பது பொருள். முள் போன்று குத்தித் துன்புறுத்துபவன் என்பது பொருள். 'பன்னாகம் தனக்கு அமிர்தம் கொடுத்தாலும், விடம்ஒழியப் பயன்கொடாதே' என்பது வில்லிபாரதம். 'உப்பொடு, நெய், பால், தயிர், காயம் பெய்து அடினும், கைப்பு அறா பேய்ச்சுரையின்காய்' என்பது நாலடியார். 'குலத்தளவேயாகும் குணம்' என்பது மூதுரை. 'தீவினையார் அஞ்சார், விழுமியார் அஞ்சுவர், தீவினையென்னும் செருக்கு' என்பது குறள் 201.

73. "கைப்புகுந்து, உறுசரண் அருளிக் காத்துமேல்,
பொய்க்கொடு வஞ்சனை புணர்த்த போதினும்,
மெய்க்கொள விளியினும், 'விடுதும்' என்னினும்,
திக்கு உறும், நெடும்பழி; அறமும் சீறுமால்," (6520)

(கை-பக்கம்; விளிதல்-வெகுள்தல்; திக்கு-திசைகள்; சீறும்-வெகுளும்)

''இந்த அரக்கர்கள் அவர்கள் விரும்புகிறபடியே நம்பக்கம் வந்து அடைக்கலம் என்று சரண்புகுவார்களேயானால், அவர்கள் பால் இரக்கம் கொண்டு நாம் அவர்களுக்கு இப்போது பாதுகாப்புக் கொடுக்கத் தொடங்கிவிட்டால், பின்னர் அவர்கள் தங்களுக்கே இயல்பான பொய்ம்மையைத் தழுவி, வஞ்சகச் செயல்களைப் புரிந்து நமக்குத் தீமை விளைவித்தபோதும், அவர்கள் உண்மையே கொண்டு நம்மேல் வெகுண்டு கோபித்தாலும், அவர்களைவிட்டு நாம் விலகிவிடுவோம், அல்லது அவர்களைத் துரத்திவிடுவோம் என்று நாம் அதனைச் செய்யப் புகுந்தாலும், இந்த உலகத்துத் திசைகளெல்லாம் நெடிய நீங்காத தீராப் பழியை நம்மீது சுமத்தும். அறக்கடவுளும் நம் செயலைக்கண்டு சீற்றம் கொள்ளுமேயன்றி நம்மீது கருணைகாட்டாது'' என்கிறான் சாம்பவன்.

Koviloor Digital Library

''நல்லார் என நாம் விரும்பிக்கொண்டாரை, அல்லார் எனினும் அடக்கிக் கொளல் வேண்டும்'' என்பது நாலடியார். நட்புச் செய்து கொள்வதற்கு முன் நன்கு ஆராய்ந்து நட்புக் கொள்ள வேண்டும். அவ்வாறு நட்புச் செய்துகொண்ட பின்னர், அவர்களின் குணங்களை ஆராய்ந்து கொண்டிருக்கக் கூடாது என்ற பொருள் பொதிந்த பாடல் ஒன்று நற்றிணையில் கிடைக்கிறது கேளுங்கள், 'நாடி நட்பின் அல்லது, நட்டு நாடார் தம் ஒட்டியோர் திறத்தே' என்பது பாடல்பகுதி.

74. "மேல் நனி விளைவது விளம்ப வேண்டுமோ?
கானகத்து, இறைவியோடு உறையும் காலையில்,
மான்என வந்தவன் வரவை மானும், இவ்
ஏனையன் வரவும்" என்று இனைய கூறினான். (6521)

(மேல்-எதிர்காலத்தில்; நனி-மிகுதி; இறைவி-தேவி/சீதாதேவி; மானும்-ஒக்கும்; இனைய-இத்தன்மையான; ஏனையன்-அயலான்)

''இவனை நம் பக்கம் சேர்த்துக் கொள்வதால், எதிர்காலத்தில், இனிமேல் எனனென்ன மிகவும் தீமையாக நிகழப்போகின்றன என்பதை நானே உனக்குச் சொல்வதும் அவசியமாகுமோ? பஞ்சவடியில் தங்கள் தலைவியாகிய சீதாதேவியோடு தங்கியிருந்த காலத்தில் பொன்மான் போல வேடம் தரித்துக் கொண்டு வந்தானே மாயமானான மாரீசன், அவன் வந்ததைப் போன்றது இந்த மற்றவனான அரக்கனது வருன்கயும்'' என்று இத்தகைய வார்த்தைகளைக் கூறி முடித்தான் சாம்பவன்.

மாரீசன் போல இவனும் பெரும் துன்பத்தை நமக்குத் தரலாம். எனவே இவனை நம்பி இவனை நம்முடன் சேர்க்கக்கூடாது என்கிறான் சாம்பவன் என்க. சாம்பவன் கருத்தும் சுக்கிரீவன் கருத்தைப் பின்பற்றியதாகவே இருப்பதை உணர்க.

75. சேனைத்தலைவன் நீலன் கூறியவை. [7 பாடல்கள்]

பால்வரு பனுவலின் துணிவு பற்றிய
சால்பெரும் கேள்வியன், தானை நாயகன்,
நீலனை, 'நின் கருத்து இயம்பு நீ' என,
மேலவன் விளம்பலும், விளம்பல் மேயினான். (6522)

(பால்-பகுப்புக்கள்; பனுவல்-நூல்; சால்-மிக/நிறைந்த; தானை-சேனை/படை; நாயகன்-தலைவன்; மேலவன்-மேன்மையுடையவன்/இராமபிரான்; துணிவு-துணிந்த பொருள்கள்; மேயினான்-தொடங்கினான்)

பல பகுப்புக்களாகப் பகுக்கப்பட்ட வேத, சாத்திர, நீதி நூல்களின் முடிவுகள் பற்றிய துணிந்த பொருள்களைக் கற்றறிந்தவர்களிடம்

Koviloor Digital Library

கேட்டறிந்த மிகுந்த பெரும் கேள்வியறிவுடையவனும், வானர சேனைத் தலைவனுமாகிய நீலனை நோக்கி, எல்லோர்க்கும் மேலவனானவனும், மேன்மை தங்கியவனுமான இராமபிரான் 'நீ உன் கருத்தைக் கூறுவாயாக!' என்று கேட்டதும், நீலன் கீழ்வருமாறு கூறத்தொடங்கினான்.

தானைத்தலைவன் நீலன் அரசியல் நூல்களைக் கற்றறிந்தவன் மட்டுமல்ல, வேத, சாத்திர நீதி நிறைந்த நூல்கள் பற்றிய கேள்விஞானமும் உடையவன் என்பதும் பெறப்படுகிறது. முன்னால் வானர அரசனாகிய சுக்கிரீவன் பேசினான், பின்னர் கரடிகளின் தலைவனான அறிஞன் சாம்பவன்பேசினான். இப்போது வானரப்படைத்தலைவன்பேசும் முறை நோக்குக. 'பால்' என்பது பகுப்பு, பிரிவு என்று பொருள்படும். திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்று பகுக்கப்பட்டிருப்பதை இங்கு நினைவிற்கொள்க.

76. "பகைவரைத் துணை எனப் பற்றற்பால ஆம்
வகைஉள; அன்னவை, வரம்பு இல் கேள்வியாய்!
தொகையுறக் கூறுவென்; 'குரங்கின்சொல்' என
நகையுறல் இன்றியே; நயந்து கேட்டி'பால்!" (6523)

(வரம்பு-எல்லை; பற்றுதல்-ஏற்றுக்கொள்ளுதல்; நயந்து-விரும்பி)

''எல்லையில்லாத நூற்கல்வியும், கேள்வியறிவும் உடையவனே! நீ அறியாதது ஒன்றுமல்ல. இருந்தாலும் நீ கேட்டதற்காகக் கூறுகிறேன், பகைவர்களைக்கூடத் தம் நண்பர்களாக ஆக்கி ஏற்றுக்கொள்ளுவதற்குப் பலவகையான முறைகள் உள்ளன. அவற்றைத் தொகுத்துச் சுருக்கமாகக் கூறுகிறேன். 'இது ஒரு குரங்கின் சொற்கள்தானே' என்று இகழ்ந்து எள்ளி நகையாடாமல் நான் கூறுவதை விரும்பிக் கேட்பாயாக'' என்று கூறி நீலன் அவ்வகைகளைத் தொகுத்துக் கூறத் தொடங்குகிறான்.

பலவகை என்பது சாம, பேத, தான, தண்ட உபாயங்களைக் குறிக்கும் எனக்கொள்க.

77. "தம் குலக் கிளைஞரைத் தருக்கும் போரிடைப்
பொங்கினர் கொன்றவர்க்கு எளியர் போந்தவர்,
மங்கையர் திறத்தினில் வயிர்த்த சிந்தையர்;
சிங்கல்இல் பெரும் பொருள் இழந்து சீறினோர்." (6524)

(தருக்கு-செருக்கு; கிளைஞர்-சுற்றத்தார்; போந்தவர்-அஞ்சி வந்தவர்கள்; திறம்-காரணம்; வயிர்த்த-பகைகொண்ட; சிந்தை-மனம்; சிங்கல்-குறைவு)

Koviloor Digital Library

78. பேர் அபிமானங்கள் உற்ற பெற்றியோர்,
போரிடைப் புறங்கொடுத்து அஞ்சிப்போந்தவர்,
நேர்வரு தாயத்து நிரப்பினோர், பிறர்
சீரிய கிளைஞரை மடியச் செற்றுளோர். (6525)

(அபிமானம்-பற்று; நிரப்பு-வறுமை; சீர்-சிறப்பு; கிளைஞர்-உறவினர்; செறுதல்-கொல்லுதல்)

79. அடுத்த நாட்டு அரசியல் உடைய ஆணையால்
படுத்தவர் நட்டவர், பகைஞரொடு ஒரு
மடக்கொடி பயந்தவர் மைந்தர் ஆயினும்,
உடன்கொளத் தகையர், நம்முழை வந்து ஒன்றினால். (6526)

(படுத்தவர்-சிறைப்பிடிக்கப்பட்டவர்கள்; நட்டவர்-நண்பர்கள்; மட-இளமையான; உழை-இடம்; ஒன்றுதல்-அடைக்கலம் புகுதல்; தகையர்-தக்கவராவர்)

1) மிக்க பகைமைகொண்டு செய்யும் போரில், சீற்றம்மிகக் கொண்டு, தம்முடைய சுற்றத்தவரையே கொன்று குவித்த பகைவர்க்கு அஞ்சித் தப்பிப் பிழைத்து வந்தவர்களும், 2) பெண்களின் பொருட்டுப் பிறரோடு பகைமை உணர்ச்சி கொண்டவர்களும், 3) குறைதல் இல்லாத பெரிய பொருட்செல்வத்தை பிறர்பால் இழந்து அதன் காரணமாக மிக்கச் சீற்றம்கொண்டவரும், 4) நாட்டுப்பற்றுப்போன்று தம் நாட்டின்பால் பெரும் பற்றுள்ளம் கொண்டவர்களும், 5) போரில் பகைவரை எதிர்த்துப் போர் செய்யமுடியாது புறமுதுகு காட்டி அஞ்சி ஓடிவந்தவர்களும், 6) நேர்வழியில் தோன்றிய தாயின் பக்கத்தின் தோன்றிய தாயாதிகளினால் வறுமையின் பிடியில் சிக்கிக் கொண்டவர்களும், 7) பிறரது சீரும் சிறப்பும் பொருந்திய உறவினரை இறந்துபோகுமளவு கொன்றவர்களும், 8) பக்கத்தில் உள்ள நாட்டின் சட்டத்தால், சிறைப்படுத்தப்பட்டவர்களின் நண்பர்களும் 9) பகைவர்களோடு உள்ள ஒரு இளம்பெண் பெற்றெடுத்த அவளுடைய புதல்வர்களும், இத்தகைய ஒன்பதுபேர்களை அவர்கள் நம்மை வந்து சரணடைந்தால் உடன்பட்டு ஏற்றுக்கொள்ளலாம்'' என்கிறான் நீலன்.

இவ்வாறு கூறப்பட்டவர்களெல்லாம் நமக்குப் பகைவராயினும் நம்மிடம் வந்து சரண்புகுந்தால் இந்த நிலையில் இவர்களை அடைக்கல மாக ஏற்றுக்கொள்ளலாம் என்கிறான் நீலன். காரணம் இவர்களெல்லாம் தமது குறைகளைத் தீர்த்துக்கொள்ளும் எண்ணத்துடன் வருகிறார்கள், எனவே தங்கள்நிலையில் மாறுபடாது நிலைத்து நம்மோடு நிற்பர்என்றும் விளக்குகிறான் நீலன். இவன் கூறும் காரணங்களில் சில, தற்செயலாக, முன்பு சுக்கிரீவன் வந்து இராமனைத் தஞ்சம் அடைந்த காரணங்களோடு ஒத்துப் போவதை உணர்க.

Koviloor Digital Library

'பேரபிமானம்' என்பது நாட்டுப்பற்று, மொழிப்பற்று, இனப்பற்று முதலியவைகளைக் குறிக்கும் என்க. நாட்டுப்பற்றுள்ளவன், தன் நாட்டைப் பிறநாட்டான் கைப்பற்றி விட்டான் என்றாலும், அதைப் பொறுத்துக்கொள்ளமாட்டாமல் சிலர் அவனிடம் சென்று கெஞ்சிக் கேட்டுத் தன் நாட்டைத் திரும்பிப்பெற முயற்சி செய்யக்கூடும். அத்தகையவர்கள் நம்மைச் சரண் என அடைந்தால், அவர்களுக்கு அடைக்கலம் தரலாம் என்பது நீலனின் கருத்து. சிலர் போரில் புறமுதுகு காட்டிவரலாம், வந்தபின், அந்தப்பகைவனை எப்படியும் வெல்லவேண்டும், அவனைக் கொல்லவேண்டும் என்ற உறுதியுடன் வந்து நம்மைச் சரணடைந்து, அவனைக் கொல்லுவதற்காக உதவி வேண்டிக் கேட்டானானால், அவனுக்கு உதவி செய்வதற்காக அவனை அடைக்கலமாக ஏற்றுக் கொள்ளலாம் என்கிறான் நீலன். தனது தாயாதிகளால் வஞ்சிக்கப்பட்டு, தனது பொருட்செல்வங்களை எல்லாம் இழந்து வறுமையில் உழல்பவன், தனது செல்வத்தை மீட்பதற்காக மட்டுமே நம்மை அணுகினால், அவனுக்கு அடைக்கலம் தரலாம், அதில் தவறில்லை என்கிறான் நீலன்.

சிறைப்பிடிக்கப்பட்ட நண்பர்களைச்சிறை மீட்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் வந்து நம்மைச் சரணடைந்தவர்களுக்கு நாம் அடைக்கலம் தரலாம் என்றும், நீலன் கூறுகிறான் என்க. மேற்சொன்ன இந்த ஒன்பது திறப்பட்டாரும் நம்மை வந்து அணுகிச் சரண்புகுந்தால் அவர்களுடன் உடன்பட்டு அவர்களுக்கு அடைக்கலம் தரலாம் என்று பொதுவாகக் கூறுகிறான் நீலன்.

80. "தாம்உற எளிவரும் தகைமையார் அலர்,
நாம்உற வல்லவர், நம்மை நண்ணினால்
தோம்உற நீங்குதல் துணிவர், ஆதலின்
யாம், இவன் வரவு இவற்று என் என்று உன்னுவாம்" (6527)

(நாம்-அச்சம்; நண்ணுதல்-அடைதல்; தோம்-துன்பம்/குற்றம்; இவற்று-இவற்றுள்/இந்த இரண்டனுள்; உன்னுதல்-எண்ணுதல்/நினைத்தல்/ஆலோசித்தல்; என்-எவ்வகையானது)

''தாமே மிக எளிதாக வந்து அடைக்கலம் புகுகின்ற தன்மை இல்லாதவர்களும், பிறர் அஞ்சத்தக்க வல்லமையுடையவர்களும், நம்மை வந்து சேர்ந்தால், அவர்கள் நமக்கு ஏதாவது ஒரு துன்பத்தைச் செய்து, துன்புறுத்திவிட்டுப் பின்னர் நம்மைவிட்டு நீங்கிவிடவே துணிந்து செயலாற்றுவர். எனவே மேலே கூறியவற்றுள், இவன் எத்தகைய தன்மையைக் கொண்டவன் என்பதை, நாம் நன்றாக ஆலோசிக்க வேண்டியதிருக்கிறது'' என்கிறான் நீலன்.

Koviloor Digital Library

81. "காலமே நோக்கினும், கற்ற நூல்களின்
மூலமே நோக்கினும், முனிந்து போந்தவன்
சீலமே நோக்கி, யாம் தெரிந்து தேறுதற்கு
ஏலுமே?" என்று எடுத்து இனைய கூறினான். (6528)

(முனிந்து-வெறுத்து/கோபித்து; சீலம்-நல்லொழுக்கம்; தேறுதல்-ஆராய்ந்து தெளிதல்; ஏலுமே-முடியுமோ; இனைய-இத்தன்மையான)

''இவன் இங்கு வந்து சேர்ந்திருக்கின்ற சமயத்தை எண்ணிப் பார்த்தாலும், நாம் கற்றிருக்கின்ற நீதி நூல்களின் அடிப்படையில் பார்த்தாலும், தன் அண்ணனை வெறுத்து ஒதுக்கிவிட்டு வந்தவனான இவனுடைய நல்லொழுக்கத்தை மட்டுமே வைத்துப் பார்த்து, நாம் இவனுடைய குணாதிசயங்களை ஆராய்ந்து தெளிந்து ஒரு தீர்மானமான முடிவு எடுப்பது என்பது முடியுமோ?'' என்று இத்தகைய வார்த்தைகளைச் சேனைத் தலைவன் நீலன், இராமபிரானுக்கு எடுத்துக் கூறுகிறான்.

அவன் வந்த சமயம், அரசியல் நூல்கள் தெரிவிக்கும் கருத்துக்கள், அவன் தன் அண்ணனைத் தக்க சமயத்தில் விட்டு நீங்கி வந்தது இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும் போது இவனை நம்முடன் சேர்த்துக்கொள்வது நல்லதல்ல என்று தனக்குப் படுவதாக நீலன் கூறுகிறான் என்பதாம். 'ஏலுமே' என்பதில் உள்ள ஏகாரம் எதிர்மறைப் பொருளது. முடியாது என்ற பொருளைத்தரும்.

82. மற்றவர்கள் கருத்துக் கூறுதல்

மற்றுள மந்திரக் கிழவர், வாய்மையால்,
குற்றம்இல் கேள்வியர், அன்பு கூர்ந்தவர்,
'பற்றுதல் பழுது' என, பழுது உறா ஒரு
பெற்றியின் உணர்வினார், முடியப் பேசினார். (6529)

(கூர்தல்-மிகுதல்; பழுது-குற்றம்; உறுதல்-பொருந்தியிருத்தல்; பெற்றி-தன்மை; மந்திரக்கிழவர்-மந்திரிகள்/அமைச்சர்கள்; பற்றுதல்-சேர்த்துக் கொள்ளுதல்/ஏற்றுக்கொள்ளுதல்; கிழவர்-உரிமையுடையவர்; மந்திரம்-ஆலோசனை; வாய்மை-உண்மை; முடிய-தீர்மானமாக)

''சிறிதும் குற்றமே இல்லாத கேள்வியறிவுடையவர்களும், இராமபிரானிடம் மிக்க அன்பு கொண்டவர்களும், உண்மையையே பேசுபவர்களும், கெடுதல் இல்லாத ஒரே தன்மையான உணர்வினைப் பெற்றவர்களும், ஆகிய அங்கிருந்த ஆலோசனைக்கு உரியவர்களான, மந்திரிமார்கள், வீடணனை ஏற்றுக்கொள்ளுவது குற்றமுடையதாகும்'' என்று ஒருமனதாகத் தீர்மானமாகக் கூறினார்கள்.

Koviloor Digital Library

இங்கே 'மற்றுள மந்திரக்கிழவர்' என்பது, நீலன், சாம்பவன், சுக்கிரீவன் ஆகியோரைத் தவிர அங்கிருந்த அங்கதன், சரபன், முதலியோர் என்று வான்மீகம் அவர்கள் பெயர்களைக் குறிக்கிறது. கம்பன் பொதுவாக ஆலோசனைக்கு உரிய அமைச்சர்கள் என்று கூறுகிறான். எனவே சுக்கிரீவன், சாம்பவன், நீலன் ஆகியோர் கருத்தையே அங்கிருந்த அமைச்சர்களும் ஏனையோரும் வற்புறுத்திப் பேசினர் என்பது பெறப் படுகிறது.

83. இராமபிரான் அனுமனைக் குறிப்பால் கேட்டல்

''உறுபொருள் யாவரும் ஒன்றக் கூறினார்
செறிபெரும் கேள்வியாய்! கருத்து என்? செப்பு!'' என
நெறிதரு மாருதி என்னும் நேர்இலா
அறிவனை நோக்கினான், அறிவின் மேல் உளான். (6530)

(மேலுள்ளான்-மேம்பட்டவன்; நெறி-அரசியல்முறை; நேர்-ஒப்பு; அறிவன்-அறிஞன்; செறி-நிறைந்த; பொருள்-செயல்; ஒன்ற-ஒரு தன்மை யாக/ஒரு முகமாக; செப்புதல்-சொல்லுதல்; தருதல்-காட்ட வல்ல; நோக்குதல்-நோக்கல் நோக்கம்) .

யாவர்க்கும் மேம்பட்ட ஞானியும், பரம்பொருளுமான இராமபிரான், ''நாம் செய்ய வேண்டியது இன்னதுதான் என்று, இங்கு இருக்கும் எல்லோரும் ஒருமனதாகக் கூறியிருக்கிறார்கள்; செறிந்த நிறைந்த கேள்வி யறிவுடையவனே! இந்த விஷயத்தில் உன் கருத்து என்ன என்பதைச் சொல்லுவாயாக! என்று, அரசியல் நெறி முழுவதும் கற்றுணர்ந்தவனும், மற்றவர்க்கு அரசியல் நீதிமுறைகளை எடுத்துக் காட்டுவதில் வல்லவனுமான ஒப்புயர்வற்ற மாருதி என்று கூறப்படுகின்ற யாவர்க்கும் ஒப்பில்லாத, தனிப்பெரும் ஞானம் படைத்த அனுமனைக் குறிப்பாக நோக்கிக் கண்களாலேயே கேட்டான்.

இராமபிரான் அனுமனை எத்தனை அடைமொழி கொடுத்து அழைக்கிறான் பாருங்கள், 'செறிபெரும் கேள்வியாய்'; நெறிதரு மாருதி; நேர்இலா மாருதி; அறிவன்' என்றெல்லாம் பாராட்டியதை உணர்க. எல்லோரும் ஒரேகருத்தைக் கூறுகிறார்கள். நீ என்ன நினைக்கிறாய்? என்று கேட்டாலே, இவன் வேறு ஏதோ ஓர் புதுக்கருத்தை எதிர்பார்க்கிறான் என்பதும் அவன் ஏதோ ஒரு கருத்தைக் கூறத்தூண்டுகிறான் என்பதும் மறைமுகமாகத் தொனிப்பதை உணர்க.. 'அறிவனை நோக்கினான் அறிவின் மேலுளான்' என்ற சொல்நயமும் பொருள் நயமும் இன்புறத் தக்கன. இங்கே 'நோக்கினான்' என்பது நோக்கல் நோக்கம் எனக் கொள்க. அதாவது தன் நோக்கம் பொதிந்த நோக்கு என்பது பொருள். 'அறிவன்' என்ற தமிழ்ச்சொல்லை வான்மீகி 'புத்திமதாம் வரிஷ்டம்' என்கிறார். இங்

Koviloor Digital Library

அடைமொழி அறிவில் மிக உயர்ந்தவன் என்ற பொருள்படும். குறிப்பில் குறிப்பறியும் அறிஞன் என்பதுதான் 'நோக்கினான்' எனப்பட்டது என்க.

84. அனுமன் தன் கருத்தைக் கூறுதல். [20 பாடல்கள்]

இணங்கினர் அறிவிலர் எனினும், எண்ணுங்கால்,
கணம் கொள்கை நும்மனோர் கடன்மை காண் என,
வணங்கிய சென்னியன், மறைத்த வாயினன்,
நுணங்கிய கேள்வியன், நுவல்வதாயினான். (6531)

(நுணங்கிய-நுட்பமான; இணங்கினர்-சேர்ந்தவர்கள்; எண்ணுதல்-ஆராய்தல்; கணம்-இனம்/கூட்டம்; நும்அனோர்-உங்களைப்போன்ற பெரியோர்; கடன்மை-கடமை/முறைமை; சென்னி-தலை; நுவல்தல்-கூறுவது/சொல்லுவது)

''நம்மை வந்து அடைக்கலமாகச் சேர்ந்தவர்கள் அறிவிற் சற்றுக் குறைந்தவர்களாய் இருந்தால்கூட அதனை ஆராய்ந்து பார்க்கும்போது, அவர்களின் இனத்தையும் ஆராய்ச்சிக்குரிய பொருளாக எடுத்துக்கொண்டு அவர்களைச் சிறப்பிக்கும் பொருட்டு நன்கு ஆராய்ந்து பார்த்து முடிவு எடுப்பது உங்களைப்போன்ற பெரியவர்களின் கடமையும் முறைமையும் ஆகும்'' என்று வணங்கிய தலையினனாகவும், வாயைக்கைகளால் பொத்திக்கொண்டும், நுட்பமான கேள்வியறிவுடையவனான அனுமன் தன் கருத்தைக் கூறத் தொடங்கினான்.

அனுமனது அவையடக்கம் 'வணங்கிய சென்னியன், மறைத்த வாயினன்' என்று பேசப்படுகிறது. இது பெரியோர்களிடம் பேசும்போது எப்படிப் பேசவேண்டும் என்பதை நமக்குத் தெரிவிக்கும் பாடம் எனக்கொள்ள வேண்டும். 'நுணங்கிய கேள்வியரல்லார் வணங்கிய வாயினர் ஆதல் அரிது' என்பது குறள்-419. சொல்லின் செல்வன் அனுமன் என்பதை நிரூபிக்கும் சொற்கள் இவை. 'தன்னைச் சேர்ந்தவர்கள் அறிவிற் சற்றுக் குறைந்தவரேனும், அவர்களுக்கும் ஒரு வாய்ப்பு அளித்து, தம்முடன் கூட்டுவைத்துக்கொண்டு, அவர்களைச் சிறப்பித்து உயர்வு படுத்துவது, மிகப் பெருந்தன்மையும், பரந்த மனப்பான்மையும் உடைய உங்களைப்போன்றவர்களுக்குரிய கடமையும் ஆகும். அதுதான் முறைமையும் ஆகும் என்று எவ்வளவு நயமாகக் கூறுகிறான் பாருங்கள்.

85. "எத்தனை உளர், தெரிந்து எண்ண ஏய்ந்தவர்,
அத்தனைவரும், ஒரு பொருளை 'அன்று' என,
உத்தமர், அது தெரிந்து உணர, ஓதினார்;
வித்தக! இனி, சில விளம்ப வேண்டுமோ?" (6532)

Koviloor Digital Library

(தெரிந்து-ஆராய்ந்து; ஏய்ந்தவர்-பொருத்தமானவர்கள்; ஓதுதல்-சொல்லுதல்; வித்தகன்-பேரறிவுடைய ஞானி; விளம்புதல்-சொல்லுதல்; உத்தமர்-நல்ல இயல்புடையவர்)

''பேரறிவாளனே! இங்கு எத்தனைபேர் நன்கு ஆராய்ந்து எண்ணித் தகுந்த முடிவு எடுக்கும் நல்ல இயல்பு பொருந்தியவர்கள் இருக்கிறார்களோ, அவர்கள் அத்தனைபேரும் கொள்ளத்தக்க ஒரு செயலைச் செய்யத்தக்கது அன்று என்று ஒருமனதாக நன்கு உணர்ந்து உன்னிடம் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள், இதன்பின்னும் எளியவனாகிய நானும் சிலவற்றைக் கூறவேண்டுமோ!'' என்று பணிவாகக் கேட்கிறான் அனுமன்.

இங்கே அனுமன் மற்றவர்களையெல்லாம் எவ்வளவு உயர்த்திப் பேசுகிறான் என்பதையும் தன்னை எவ்வளவு தாழ்த்திக் கொள்கிறான் என்பதையும் நன்கு உணரவேண்டும். சுக்கிரீவன், சாம்பவன், நீலன், அங்கதன், சரபன் முதலானோர் அனைவரும் சிந்தித்து முடிவு எடுக்கும் வல்லமையுடையவர்களே என்றும், நல்லியல்புகள் நிறையப்பெற்ற உத்தமர்கள் என்றும் கூறுவதைக் கருதுக. 'அனைவரும்' என்பது 'அத்தனைவரும்' என்று எதுகை நோக்கிக் கையாளப் பட்டிருக்கிறது எனக்கொள்க. 'வேண்டுமோ' என்பதில் உள்ள ஓகாரம் எதிர்மறைப் பொருளது. வேண்டாமே என்னும் பொருளைத்தரும்.

86. "தூயவர் துணி திறன் நன்று, தூயதே;
ஆயினும், ஒருபொருள் உரைப்பென், ஆழியாய்!
'தீயன்' என்று இவனை யான் அயிர்த்தல் செய்கிலேன்;
மேயின சிலபொருள் விளம்ப வேண்டுமால்." (6533)

(ஆழி-ஆணைச்சக்கரம்; பொருள்-கருத்து; அயிர்த்தல்-ஐயுறுதல்/சந்தேகித்தல்; மேயின-பொருத்தமான; பொருள்-செய்தி; விளம்புதல்-சொல்லுதல்)

''ஆணைச்சக்கரத்தை உடையவனே! அருட்கடலே!; இங்கு முன்னர் பேசியவர்கள் அனைவரும் மனம், மொழி, மெய்களால் தூயவர்கள். எனவே அவர்கள் துணிந்து கூறிய கருத்துக்களும் நல்லனவே-குற்றமற்றனவே, தூயனவே, என்றாலும் நான் ஒரு கருத்தைக்கூற விழைகிறேன். அது என்னவென்றால் நான் இந்த வீடணனைத் தீயவன் என்று சிறிதும் சந்தேகிக்கவில்லை; இதற்கு ஆதாரமாக நான் சில கருத்துக்களைத் தங்களுக்குத் தெரிவிக்க வேண்டியதிருக்கிறது'' என்கிறான் அனுமன்.

அவன் ஒரு மாறுபட்ட கருத்தைக் கூறப்போகிறான். இருந்தாலும் முன்னர் கூறியவர்களும், அவர்கள் கூறிய கருத்துக்களும் தூய்மையானவையே என்று அவர்கள் மனம் புண்படாமல் பேசும் திறன் நோக்குக.

Koviloor Digital Library

தான் கண்டவற்றையும், கேட்டவற்றையும் கூறவேண்டும் என விழைவதை இராமபிரானுக்கும் மற்றவர்களுக்கும் தெரியப்படுத்த விழைகிறான் என்பதை எவ்வளவு தெளிவாகவும், துணிவாகவும், பணிவாகவும் கூறுகிறான் பாருங்கள். 'சிலபொருள்' என்பதிலும் ஒரு நயம் உண்டு. 'பலசொல்லக் காமுறுவர் மன்ற மாசற்ற சிலசொல்லல் தேற்றாதவர்' என்பது குறள் 649. குற்றமற்ற சில சொற்களாலேயே தான் விரும்பிய கருத்தைக்கூற இயலாதவர்கள்தான் பலவாறாகப் பேச்சை வளர்த்து வீணாகப் பேசுவார்கள் என்பது இக்குறளின் கருத்து.

87. "வண்டு உளர் அலங்கலாய்! வஞ்சர் வாள்முகம்,
கண்டது ஓர் பொழுதினில், தெரியும்; கைதவம்
உண்டு எனின், அஃது அவர்க்கு ஒளிக்க ஒண்ணுமோ?
விண்டவர் நம் புகல் மருவி வீழ்வரோ?" (6534)

(உளர்-கிளர்/கிண்டுகின்ற; அலங்கல்-மலர்மாலை; வாள்-ஒளி; கைதவம்-வஞ்சகம்; ஒளிக்க-மறைக்க; ஒண்ணுதல்-இயலுதல்; விண்டவர்-பகைவர்/மாறுபட்டவர்; வீழ்தல்-சேர்தல்/விரும்புதல்; உளர்தல்-ஒலித்தலுமாம்)

''வண்டுகள் ஒலிக்கின்றதும், வண்டுகள் உறைந்து கொண்டிருக்கின்றதுமான மலர்மாலையை அணிந்தவனே! வஞ்சக எண்ணங்களுடைய ஒளிபொருந்திய முகம், எப்பொழுதும் நாம் பார்த்த உடனேயே தெரிந்து விடும். அதை நம்மால் உணர்ந்து கொள்ளமுடியும். வஞ்சகம் அவர் உள்ளத்தில் இருக்குமானால் அதை அவர்களால் வெளியில் ஒளிக்க முடியுமோ? முடியாது. மேலும் பகைவர்கள் நம்மிடம் அடைக்கலம் என்று விரும்பிக்கூறிக் கொண்டு வந்து நம்மிடம் அடைந்து தாழ்தலை எண்ணுவார்களோ? மாட்டார்கள்'' என்கிறான் அனுமன்.

''அகத்தின் அழகு முகத்தில் தெரியும்'' என்பது மூதுரை. ''அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்'' என்பது குறள் 746. முகம்தான் அகத்தின் கண்ணாடி, உள்ளத்தில் வஞ்சக எண்ணங்கள் இருப்பின் அவற்றை முகமே காட்டிக்கொடுத்து விடும். அதை அவர்களால் மறைக்க இயலாது. மேலும் பகைவர் என்று கூறப்படுபவர்கள், மாறுபட்ட கருத்துடைய இன்னொருவரிடம், தாமே விரும்பி வந்து அடைக்கலம் புகுவார்களோ? மாட்டார்கள் அல்லவா?' என்று கேட்கிறான் அனுமன். எனவே இவனைப் பார்த்தால் உள்ளத்தில் வஞ்சக எண்ணம் இல்லாதவன் போலத் தோன்றுகிறது. 'முகத்தின் முதுக் குறைந்ததுண்டோ உவப்பினும் காயினும் தான் முந்துறும்' என்பதும் குறள் 707. 'ஒண்ணுமோ? 'வீழ்வரோ' என்ற இடங்களில் ஓகாரம் எதிர்மறைப் பொருளைத்தரும். 'முகம் நோக்கி நிற்க அமையும் அகம் நோக்கி உற்றது உணர்வார்ப்பெறின் என்பதும் குறள் 708. பொதுவாகப் பகைவர்கள், மாறுபட்ட கருத்துடைய நம்மைவந்து சரணடைய மாட்டார்கள், இவன்

Koviloor Digital Library

வந்து நம்மைச் சரணடைந்திருப்பதால் இவன் வஞ்சகன் அல்லன் என்று காரணத்தால் காரியத்தைப் பெறவைத்தார் என்க.

88. "உள்ளத்தில் உள்ளதை, உரையின் முந்துற,
மெள்ளத் தம் முகங்களே விளம்பும்; ஆதலால்
கள்ளத்தின் விளைவு எலாம் கருத்துஇலா இருள்
பள்ளத்தில் அன்றியே, வெளியில் பல்குமோ?" (6535)

(உரை-சொல்; விளம்பும்-தெரிவித்துவிடும்; இருள்-அறியாமை; பல்குதல்-பெருகுதல்)

''ஒருவருடைய உள்ளத்தில் உள்ள எண்ணங்களை, அவர்கள் அதுபற்றி நம்மிடம் பேசத்தொடங்குவதற்கு முன்பே, அந்த முகக்குறிப்புகள் மெள்ள அவற்றை நமக்குக் காட்டிக்கொடுத்துவிடும். எனவே வஞ்சக எண்ணத்தைத் தம் உள்ளத்தில் கொண்டிருந்தால் அதன் விளைவு, இருண்ட பள்ளம்போல ஒளியற்று விளங்கும். மாறாக நல்ல எண்ணங்கள் நிறைந்திருந்தால் அவர் முகத்தில் ஒளி நிறைந்து பல்கிப் பெருகுமோ?'' என்று கேட்கிறான் அனுமன்.

உள்ளத்தில் நல்ல எண்ணங்கள் நிறைந்திருந்தால் முகத்தில் பிரகாசமான ஒளி தெரியும். அவனே உள்ளத்தில் தீய எண்ணங்கள் கொண்டிருந்தான் என்றால் அவன் முகமே அறியாமையாகிய இருள் நிறைந்த ஒரு பள்ளம் போலத் தோன்றும். அதற்கு மாறாக இருள் நிறைந்த பள்ளம் போன்ற முகத்திலிருந்து அறிவு ஒளி நிறைந்த பிரகாசம் எங்கும் பரவிப் பல்குதற்கு இடம் உண்டோ? என்று கேட்கிறான் என்பதாம். வெளிச்சம் இல்லாத இடத்தை இருள் என்கிறோம். இருள் இல்லாத இடத்தை வெளிச்சம் உள்ள இடம் என்கிறோம். அதுபோலத் தூய எண்ணம் இல்லாமுகம் கருத்தும், தூய எண்ணம் உள்ள முகம் பிரகாசமாகவும் காணப்படும் என்பது அருத்தாபத்தி எனக் கொள்க. 'முன்னம் முகம்போல முன் உரைப்பதுஇல்' என்பது சான்றோர் வாக்கு. வான்மீகமும் சற்றேறக் குறைய இவ்வாறே கூறுகிறது. 'முகக்குறிப்பை ஒருவன் மறைத்துக் கொள்ளக் கருதினாலும், அம்முகக்குறிப்பு, அவன் உள்ளத்தில் உள்ள கருத்தை விளக்கிவிடும் என்பது வான்மீகம். இப்போது வீடணன் முகம் ஒளி நிறைந்து காணப்படுகிறது. எனவே அதுவே அவன் உள்ளத்தில் வஞ்சக எண்ணங்கள் இல்லை என்பதை விளக்குகிறது என்று நிறுவுகிறான் அனுமன் என்பதாம்.

89. "வாலி விண்பெற, அரசு இளையவன் பெற,
கோலிய வரிசிலை வலியும் கொற்றமும்,
சீலமும் உணர்ந்து, நிற்சேர்ந்து, தெள்ளிதின்
மேல் அரசு எய்துவான் விரும்பி மேயினான்." (6536)

Koviloor Digital Library

(கோலிய-வளைந்த; வரி-கட்டமைந்த; சிலை-வில்; சீலம்-பண்பு; நிற்-நின்/நின்னை/உன்னை; மேல்-பின்னர்; எய்துவான்-அடையும் பொருட்டு; மேயினான்-வந்துளான்; சேர்ந்து-சரணடைந்து; தெள்ளிதின்-தெளிவாக)

''கிட்கிந்தையில் வாலி இறந்து வானுலகு எய்தியதையும், அவனுடைய அரசச்செல்வத்தை அவனுடைய தம்பியாகிய சுக்கிரீவன் பெற்றதையும் உன்னுடைய வளைந்த கட்டமைந்த வில்லின் வலிமையையும், அதன் வெற்றிச் சிறப்பையும், உன்னுடைய குணநலன்களையும், நன்றாகக் கேள்விப்பட்டு, அதனைத் தெளிவாக உணர்ந்த பின்னர்தான், உன்னைச் சரணடைந்து, மேல்அரசாகிய வீடுபேற்றைப் பெறலாம் என்ற கருத்தோடு, தானே விரும்பி உன்னைச்சேர்வதற்காக இந்த வீடணன் இங்கு வந்திருக்கிறான்'' என்கிறான் அனுமன்.

'விண்பெற' என்ற சொல் கருத்தாழம் மிக்கது. வாலி இறந்துபட என்னாதும், வாலி உன்னால் கொல்லப்பட என்னாதும், மங்கலமாக வாலி வீடுபேறு அடைய என்று கூறிய கவிஞனின் கவித்திறம் நோக்குக. வாலி விண்பெறவும் கிட்கிந்தை அரசை அவனுடைய தம்பியான சுக்கிரீவன் பெறவும் காரணமானது உன்னுடைய வலிமைவாய்ந்த, வெற்றியையே தருகின்ற வளைந்த வில் என்பதையும், உன்னுடைய நற்குணங்களால் அவ்வாறு செய்ய முடிந்தது என்பதையும் நன்றாகத் தெளிவாகக் கேட்டு அறிந்தபின்னர்தான், அத்தகைய வீடுபேறு தனக்கும் கிடைக்காதா என்ற ஆதங்கத்தில்தான் உன்னைச் சேர்வதற்காக வீடணன் இங்கு வந்திருக்கிறானேயன்றி அவனிடம் வேறு எந்தத் தீய எண்ணங்களும் இல்லை என்கிறான் அனுமன். ஆனால் கவிஞன் இங்கே 'மேல் அரசு' என்ற சொல்லைப் பயன்படுத்தியிருப்பதால், 'மேல்' என்ற சொல்லுக்கு அதன் பின்னர் என்ற ஒரு பொருளைக் கொண்டு, இராவணனைக் கொன்ற பின்னர், அவனுடைய இலங்கை அரசைத் தான் பெறுதற் பொருட்டே வீடணன் இராமபிரானைச் சரணடைந்திருக்கிறான் என்ற பொருளையும் தரும்படி அந்தச் சொல்லைக் கவிஞன் பயன்படுத்தியிருப்பதிலிருந்து அப்படியும் ஒருவேளை இருக்கலாமோ என்று கற்போர் மனத்தில் ஒரு உற்சாகத்தைத் தூண்டுவதை அறிக. 'மோட்சசாம்ராஜ்யம்' என்ற வடமொழியின்தமிழாக்கம் 'மேலரசு' எனக் கொண்டால் இந்தக் குழப்பம் கற்போருக்கு வராது. வீடணன் இங்கு வருவதற்குக் காரணமே உன்னுடைய வில்லின் ஆற்றலும், வெற்றியும், உன்னுடைய நற்குணங்களுமே ஆகுமேயன்றி வேறு எந்த உள்நோக்கமும் இல்லை என்று கூற முயல்கிறான் அனுமன் என்க.

90. "செறிகழல் அரக்கர்தம் அரசு, சீரியோர்
நெறி அலது; ஆதலின், நிலைக்கலாமையும்,
எறிகடல் உலகெலாம் இளவற்கு ஈந்ததுஓர்
பிறிவு அரும் கருணையும், மெய்யும் பேணினான்." (6537)

Koviloor Digital Library

(செறி-கட்டிய; சீரியோர்-சிறப்புமிக்கவர்; நெறி-வழி; எறி-வீசுகின்ற; இளவல்-தம்பி/பரதன்; ஓர்-ஒப்பற்ற; பிறிவு அரும்-நீங்குதல் இல்லாத; மெய்-வாய்மை/சத்தியம்; பேணுதல்-உணர்தல்/கருதுதல்/விரும்புதல்; நிலைக்கலாமை-நிலைபேறில்லாத இயல்பு)

''இழுத்துக் கட்டப்பட்ட வீரக்கழல் அணிந்த அரக்கர்களின் அரசாட்சி, நீதிநூல் நெறிமுறைகளைக் கற்ற சிறந்தவர்களால் வழிநடத்தப்படுவது அல்ல. எனவே அது நீண்டநாள் நிலைத்திருக்காது என்பதை நன்கு உணர்ந்தும், இந்த அலைவீசுகின்ற கடலால் சூழப்பெற்ற உலகனைத்தையும் தன் தம்பியாகிய பரதனுக்கு உவந்து அளித்த ஒப்பற்ற உன்னுடைய, என்றும் நீங்குதலல்லாத கருணை உள்ளத்தையும், தந்தையின் சத்தியத்தைக் காப்பாற்றிய தன்மையையும் நன்கு தெரிந்து உணர்ந்துதான், அவன் உன்னை வந்து சரண்புகுந்திருக்கிறான்'' என்கிறான் அனுமன்.

வீடணன் இராமபிரானிடம் வந்து சரணடைவதற்கு இரண்டு காரணங்கள் கூறுகிறான் அனுமன். ஒன்று அரக்கர்கள் நீதிநெறிப்படி அரசாட்சியை மேற்கொள்வதில்லை, காரணம் அங்கே நூற்கேள்வி ஞானம் பெற்றவர் ஒருவரும் இல்லை. எனவே தகுந்த வழிகாட்டிகள் இல்லாத அரசு தடுமாறும் நிலை ஏற்படுகிறது. அதன் நிலையாமையை எண்ணி அங்கிருந்து தப்பி வந்தது ஒரு காரணம். இரண்டாவது, இவ்வுலகனைத்தின் அரசாட்சியும் தனக்கே உரிமையாக, அதைத்தன் தந்தையின் சத்தியத்தையும், தாயின் விருப்பத்தையும் நிறைவேற்றுவதற்காக, மனம் உவந்து தன் தம்பி பரதனுக்கு அளித்துவிட்டுத் தான் வனம் ஏகிய கருணைத் திறத்தையும் வாய்மை நெறி நின்றமையையும் நன்கு கண்டு உணர்ந்த பிறகுதான் வீடணன் இராமபிரானைச் சரணடைய வந்திருக்கிறான் என்கிறான் அனுமன் என்பதாம். 'பிரிவு' என்பது எதுகை நோக்கி 'பிறிவு' என வரலாயிற்று. 'நட்பும், தயையும், கொடையும் பிறவிக்குணம்' என்பது சான்றோர்வாக்கு. தயை-கருணை; தான் அண்ணன் இராவணனை விட்டுப்பிரியாது, அங்கேயே இருந்திருந்தாலும்கூட அந்த அரசு நிலைபெற்றிருக்க இயலாது என்பது உட்பொருள். அவன் இராவணனைப் பிரிந்ததற்கு ஓர் தகுந்த காரணமும், அவன் இராமபிரானை அடைக்கலம் புகுவதற்குத் தகுந்த ஒரு காரணமும் கூறும் அனுமன் அறிவுக்கூர்மை நோக்குக.

91\. ''காலம் அன்று இவன் வருகாலம்'' என்பரேல்,
வாலி தன் உறுபகை வலி தொலைத்தலால்
ஏலும், இங்கு இவற்கு இனி இறுதி'' என்று, உனை
மூலம் என்று உணர்தலால், பிரிவு முற்றினான். (6538)

(உறுபகை-மிக்கபகை; இறுதி-அழிவுகாலம்; முற்றுதல்-நிறைவேற்றுதல்; ஏறுதல்-வெல்லுதல்/கடத்தல்)

Koviloor Digital Library

''வீடணன் தன் தமையன் இராவணனை விட்டுப் பிரிந்து, நம்மை வந்து அடைந்த காலம் சரியான காலம் அன்று என்று எனக்கு முன்பு பேசியவர்கள் கூறினார்கள். அது தவறானது, பொருந்தாதது. காரணம் வாலியிடம் கொண்ட மிக்கபகை காரணமாக மிக்க வலிமை கொண்டு இராமபிரான் அவனை வென்று அவனைக் கொன்றது என்பது ஓர் பெரிய அரிய சாதனை. எனவே அத்தகைய இராமபிரானால் இங்கேயுள்ள அரக்கர்களுக்கும் அழிவு நேரும் என்பது உறுதி என்பதாலும், உலகம் எல்லாவற்றுக்கும் மூல முதற்பொருள் நீயே என்பதையும் அவன் நன்கு அறிந்திருக்கிறான் என்பதாலும், அவன் தன் துணைவர்களைப் பிரிந்து இங்குவந்து சேர்ந்திருக்கிறான்'' என்கிறான் அனுமன்.

இந்தப் பாடலிலும் மேலும் இரண்டு காரணங்களைக் கூறுகிறான் அனுமன். ஒன்று யாராலும் வெல்லப்படமுடியாத அழியாத வரம் பெற்ற வாலியை நீ ஒருவனே நின்று கொன்றிருக்கிறாய், எனவே உன் பகைவர் களான இந்த அரக்கர்களாகிய இராவணன், கும்பகர்ணன் இந்திரசித்து முதலான அரக்கரினத்திற்கே விரைவில் அழிவுவரும் என்பது உறுதி. எனவே அங்கே இருப்பதில் நன்மையில்லை. இரண்டு இவ்வுலகிற்கே மூலமுதற் காரணன் நீதான் என்பதை இப்போதுதான் வீடணன் புரிந்து கொண்டிருக்கிறான். எனவே அந்த அரக்கர் கூட்டத்தை விட்டுப் பிரிந்து வந்து, தன் எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறான். எனவே இவன் வந்த காலம் சரியானதே என்று அனுமன் மிக விநயமாகக் கூறு கிறான். 'உறு' என்பது மிக்க என்ற பொருளில் கையாளப்பட்டிருக்கிறது. 'சால, உறு, தவ, நனி, கூர், கழி, மிகல்' என்பது நன்னூல்.

இந்தப் பாடலுக்கு நிறையப் பாட வேறுபாடுகள் காணப்படுகின்றன. மூன்றாவது அடி 'தால்' எனத்தொடங்குவதே தவறோ எனத் தோன்று கிறது. எனினும் சென்னைக் கம்பன் கழகப்பதிப்பு இவ்வாறுதான் கூறுகிறது. இது அறிஞர்களின் பார்வைக்கும் ஆராய்ச்சிக்கும் உட்பட்டது. இங்கே மர்ரே பதிப்பில் இருந்து மூலபாடம் எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கிறது.

92. "தீத்தொழில் அரக்கர்தம் மாயச் செய்வினை
வாய்த்துளர்; அன்னவை உணரும் மாண்பினால்,
காய்த்தவர், அவர்களே கையுற்றார் நமக்கு;
ஏத்த அரும் உறுதியும், எளிதின் எய்துமால்" (6539)

(வினை-தொழில்; மாண்பு-வகை; காய்த்தவர்-பழக்கம் முதிர்ந்த வர்கள்/கைதேர்ந்தவர்கள்; கை-பக்கம்; கையுறல்-சேருதல்/வசமாகுதல்; உறுதி-நன்மை; எய்தும்-கிடைக்கும்)

''தீய செயல்களைத் தமது தொழிலாகக் கொண்டுள்ள அரக்கர்கள் மாயச்செயல்களையும் செய்யும் ஆற்றல் பெற்றவர்கள்; அந்த மாயச்

Koviloor Digital Library

செயல்களின் உள்ளுறை பொருளை நன்கு அறிந்த, கைதேர்ந்தவர்களான, பழக்கம் முதிர்ந்தவர்களான வீடணன் போன்ற அரக்கர்களே நம்மிடம் தானாகவே வந்து சேர்ந்திருக்கின்றனர். இது நமக்குக் கிடைத்தற்கரிய ஒரு வாய்ப்பாகும். இதனால் நமக்கு மிகுந்த நன்மைகள் எந்தச் சிரமுமின்றி எளிதில் கிடைக்கும்'' என்று அனுமன் நேர் நின்ற நிலைப்பாட்டுடன் பேசுகிறான்.

நமக்குப் பகைவர்களான அரக்கர்களின் தீய செயல்களையும், மாயச் செயல்களையும் நம்மால் புரிந்து கொள்ளவோ, அறிந்து கொள்ளவோ முடியாது. அதை நன்றாகப் புரிந்துகொண்டு, மேற்கொண்டு செயலாற்றும் கைதேர்ந்தவர்கள், நாம் அழைக்காமலேயே அவர்களாகவே வந்து நம்மைச் சேர்ந்திருக்கிறார்கள் என்றால், அவர்களை நாம் ஏற்றுக்கொண்டு, அந்த மாயச் செயல்களை முறியடிக்கின்ற நன்மைதரும் செயல்களை இவர்களிடமிருந்து நாம் பெற்றுக் கொள்ளலாமல்லவா? எனவே வீடணனைச் சேர்த்துக் கொள்ளுவதே சரியானதாகும் என்கிறான் அனுமன். இவன் கூறியதுபோலவே வீடணன் பலவழிகளில் வானரச் சேனைக்கும், இலக்குவனுக்கும், இராமபிரானுக்கும் பல உதவிகளைச் செய்திருக்கிறான் என்பதையும், இராமபிரானே இறுதியில் 'இது வீடணன் தந்த வென்றி' எனக் கூறப்போவதையும் நாம் பார்க்கப் போகிறோம். இதே கருத்தை முன்பு சூர்ப்பணகையும் 'பாம்பின் கால் பாம்பறியும்' என்று கூறி விளக்கியதையும் இங்கு நினைவுகூர்க.

93. "தெளிவுறல் அரிது, இவர் மனத்தின் தீமை; யாம்
விளிவது செய்குவர்" என்ன வேண்டுதல்,
ஒளிஉற உயர்ந்தவர் ஒப்ப, எண்ணலார்,
எளியவர் திறத்து இவை எண்ணல் ஏயுமோ?" (6540)

(தெளிவுறல்-தெரிந்துகொள்ளுதல்; விளிவது-இறப்பது; வேண்டுதல்-கருதுதல்; ஒளி-மேன்மை/அறிவு/நம்பிக்கை; ஒப்ப-ஒத்தது; எண்ணுதல்-மதித்தல்; ஏயுதல்-பொருந்துதல்)

''இந்த அரக்கர்களின் மனத்தில் உள்ள தீய எண்ணங்களை நன்றாகப் புரிந்துகொள்ளுவது என்பது மிகவும் அரியதாகும். முதலில் அன்போடிருப்பதுபோல் இருந்து பின்னர் நம் உயிரையே கொல்லும் ஆற்றல் பெற்றவர்கள் என்று கருதுதலையும், பேசுதலையும் மேன்மையான அறிவு பெற்ற பெரியோர்களாகிய உங்களைப் போன்றவர்கள் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். நம்மை நாடி அடைக்கலம் என்று வந்த இந்த எளியவர்களைப் பற்றி இவ்வாறு கருதுதல் பொருத்தமாகுமோ?'' என்கிறான் அனுமன்.

முன்பு சாம்பவன் கூறியதற்கு இப்பொழுது அனுமன் விடை கூறுகிறான். 'பாதகர்நம்வயின் படர்வராம் எனின், தீதிலராய் நமக்கு அன்பு

Koviloor Digital Library

செய்வரோ?' என்பது சாம்பவன் கூற்று. 'ஒளி' என்ற சொல்லுக்கு அறிவு என்றும் ஒரு பொருள் உண்டு. 'ஒளியார் முன் ஒள்ளியராதல்' என்ற குறள்714ல் ஒளிஎன்ற சொல் அறிவு என்ற பொருளிலேயே கையாளப்பட்டிருப்பதை நினைக.

94. "கொல்லுமின் இவனை" என்று அரக்கன் கூறிய
எல்லையில், 'தூதரை எறிதல் என்பது
புல்லிது; பழியொடும் புணரும்; போர்த் தொழில்
வெல்லலம் பின்னர்' என்று இடை விலக்கினான். (6541)

(எறிதல்-கொல்லுதல்; புல்லிது-இழிந்தது; புணர்தல்-பொருந்துதல்; விலக்குதல்-தடுத்தல்; எல்லை-சமயம்)

''நான் இலங்கையில் அரக்கன் இராவணன் சபைக்குச் சென்று சீதையை இராமன்பால் சேர்த்து விடுங்கள் என்று கூறினேன். அப்போது அரக்கனாகிய இராவணன் 'இவனைப் பிடித்துக் கொல்லுங்கள்' என்று ஏவலாளர்க்குக் கட்டளையிட்ட சமயத்தில் 'நம் நாட்டிற்குத் தூதுவனாக வந்த இவனைக் கொல்லுதல் என்பது அற்பத்தனமானது. அது பழியொடும் பொருந்துவதாகும். பின்னர் நம்மால் போர் செய்யும்போது அதில் வெற்றி பெறும் வாய்ப்பையும் தடுத்தது போல் ஆகும்'' என்று கூறி, இந்த வீடணன்தான் என்னைக் கொல்லவந்த அரக்கரை இடையில் புகுந்து தடுத்து நிறுத்தினான்'' என்கிறான் அனுமன்.

தனக்கு இலங்கையில் பேருதவி செய்தவன் வீடணன் என்பதை நிறுவுகிறான். இராவணனின் ஏவலாளர்கள் அனுமனைக் கொல்லாது விட்ட நிகழ்ச்சிகள் சுந்தரகாண்டத்தில் மிகவிரிவாகப் பேசப்பட்டிருக் கின்றன. தூதரைக் கொல்லலாகாது என்பதற்கு வீடணன் மூன்று காரணங்களைக் கூறியிருப்பது உணர்க. அவை 'புல்லிது; பழியொடும் புணரும்; போர்த்தொழில் வெல்லலம் பின்னர்' என்பனவாம்.

95. "மாதரைக் கோறலும், மறத்து நீங்கிய
ஆதரைக் கோறலும், அழிவு செய்யினும்,
தூதரைக் கோறலும் தூய்து அன்றாம்" என,
ஏதுவில் சிறந்தன எடுத்துக் காட்டினான். (6542)

(கோறல்-கொல்லுதல்; மறம்-வீரம்; ஆதர்-அறிவில்லாதவர்/ எளியவர்; தூய்து-சிறந்தது; ஏது-காரணம்; அழிவு-கேடு/தீங்கு)

''அபலைகளான, வீரமற்ற பெண்களைக் கொல்லுதலும், வீரத்தினின்றும் மாறுபட்டுக் கோழையாகிய அறிவிலிகளைக் கொல்லு தலும், நமக்குத் தீமையே செய்து அழிவினை ஏற்படுத்தியிருந்தாலும், மற்றொருவரிடமிருந்து தூதாக வந்த தூதுவனைக் கொல்லுதலும், நல்ல சிறந்த செயல்களாகக் கருதப்படமாட்டாது என்று தூதரைக் கொல்லக்

Koviloor Digital Library

கூடாததற்கான பலகாரணங்களுள் சிறந்ததான இந்தக் காரணங்களை இராவணன் புரிந்துகொள்ளும்படி எடுத்துக்கூறியவன் இந்த வீடணன்தான்'' என்கிறான் அனுமன்.

'ஹேது' என்ற வடசொல்லின் திரிபு 'ஏது' என்பது. காரணம் என்பது பொருள் அனுமன் அசோகவனத்தை அழித்து அரக்கர்களைக் கொன்று அழிவுசெய்தான். எனவே 'அழிவு செய்யினும்' என்ற அடைமொழி கொடுத்துத் தூதரைக் கொல்லலும் தூய்தன்று என்றார் என்க. இராமபிரான் முதலியோர் தமக்குத் தீங்கிழைத்த சூர்ப்பணகை, அயோமுகி, முதலியோரைக் கொல்லாது அங்கபங்கப்படுத்தி மட்டும் அனுப்பியதை நினைவு கூர்க. 'ஆதர்' என்பது 'அறிவிலி' என்ற பொருளைத்தரும். 'முன்பொருள் செய்யாதார் ஆதரே' என்பது சிறுபஞ்ச மூலம்-20. முதுமைப்பருவம் வருவதற்கு முன்பே பொருளைத் தேடிவைத்துக் கொள்ளாதவர் அறிவற்றவரே ஆவர் என்பது பொருள்.

96. ''எல்லியில் யான் இவன் இரண மாளிகை
செல்லிய போதினும், திரிந்த போதினும்
நல்லன நிமித்தங்கள் நனி நிகழ்ந்தன;
அல்லதும் உண்டு, நான் அறிந்தது, ஆழியாய்!'' (6543)

(ஆழி-ஆணைச்சக்கரம்; எல்லி-இரவு; இரணம்-பொன்; நனி-மிக; நிமித்தம்-அறிகுறி/சகுனம்; செல்லிய-சென்ற)

''ஆழிச்சக்கரத்தைக் கையில் ஏந்தியவனே! நான் இலங்கையில் சீதாதேவியைத் தேடிச்சென்றபோது, இரவு நேரத்தில் இவனுடைய பொன்மயமான மாளிகைக்கு முதன்முதலில் சென்றபோதும், அதனைச் சுற்றி அலைந்தபோதும், நல்ல நிமித்தங்கள் மிகுதியாக நிகழ்ந்தன. அஃதன்றியும் இவன் பற்றியும், இலங்கை பற்றியும் நான் அறிந்த சிறப்புமிக்க செய்திகள் இன்னும் சிலவும் இருக்கின்றன'' என்கிறான் அனுமன்.

'எல்லி' என்ற சொல் இரவையும் குறிக்கும், பகலையும் குறிக்கும். 'எல்லியும் பகலும் தோன்றாது இமையவர் நகரம் ஏய்க்கும்' என்பது நைடதம். 'எல்லியிது காலையிது என்பது அறிகல்லாள்' என்பது சீவகசிந்தாமணி. 'இரவோடு எல்லியும் ஏத்துவார்' என்பது தேவாரம். இதுபோல 'தழைத்தல்' என்ற சொல் கெடுதல் என்ற மாறுபட்ட பொருளையும் தரும். 'நந்துதல்' என்ற சொல் குற்றம், உயர்வு என்ற இருபொருளையும் தரும். ஹிரண்யம் என்ற வட சொல்லுக்குப் பொன் என்பது பொருள். அது இங்கே இரணம் எனப்பெற்றது.

Koviloor Digital Library

97. "நிந்தனை நறவமும், நெறிஇல் ஊன்களும்,
தந்தன கண்டிலேன்; தரும தானமும்,
வந்தனை நீதியும், பிறவும், மாண்பு அமைந்து,
அந்தணர் மனை எனப் பொலிந்ததாம் அரோ" (6544)

(நிந்தனை-பழி/இகழ்ச்சி; நறவம்-கள்; ஊன்-மாமிசம்; தந்தன-இருப்பன; மாண்பு-சிறப்பு; அந்தணர்-அறவோர்)

''பெரியோர்களால் பழிக்கப்படுகின்ற, இகழ்ந்து பேசப்படுகின்ற கள்ளும், நன்னெறியல்லாத தீநெறியாகிய பிற உயிரைக் கொன்று தின்னும் மாமிச வகைகளும், இவன் இல்லத்தில் இருப்பதை நான் பார்க்கவில்லை. மாறாக இவன் இல்லத்தில் தருமநெறிப்படி தானங்கள் செய்தனர்; இறைவழிபாடு நன்கு நிகழ்ந்தது; நீதிநெறிகள் கடைப்பிடிக்கப்பட்டன. இதுபோன்ற இன்னும் நற்குணங்களாகிய வாய்மை, நடுவுநிலைமை போன்றவையும் திகழ்ந்து சிறப்பாக அமைந்திருந்தன. குறிப்பாகச் சொன்னால் அருள்தன்மை வாய்ந்த அறவோர்களின் இல்லம் போலச் சிறப்புப் பெற்றுத் திகழ்ந்தது'' என்கிறான் அனுமன்.

அரக்கர்கள் நகரத்தில் எங்கும் கள்ளும், ஊனுமே நிறைந்திருக்க, இவன் இல்லத்தில் மட்டும் இவைகளைக் காண்பது அரிதாக இருந்தது என்று நிறுவுகிறான் அனுமன் என்க. திருக்குறளில் கள்ளுண்ணாமை, கொல்லாமை, புலால் மறுத்தல் ஆகிய அதிகாரங்களில் உள்ள குறள்கள் அனைத்தும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கன. 'கலமயக்கம் கள்ளுண்டு வாழ்தல் நன்மையிலாளர்தொழில்' என்பது திரிகடுகம்-39. 'கள், களவு, சூது, கருத்தினால் பண்டெடுத்துக் காட்டும் பயின்று' என்பது சிறுபஞ்ச மூலம்-28. 'கள்ளும், பொய்யும், காமமும், கொலையும், உள்ளக்களவும் என்று உரவோர் துறந்தவை' என்பதும் 'கள்ளும், பொய்யும், களவும், கொலையும் தள்ளாது ஆகும் காமம் தம்பால் ஆங்கு அது கடிந்தோர்' என்பதும் மணிமேகலை.

'காதல், கவறாடல், கள்ளுண்டல், பொய்ம்பொழிதல், ஈதல்மறுத்தல் இவை கண்டாய்' என்பது நளவெண்பா. 'அறிவையழிக்கும்; செயலழிக்கும், அழியா மானம்தனை அழிக்கும், செறியும் அறிஞர் மதியாத செருக்கை விளைக்கும்; ஈன்றாளும் முறியும் வெறுப்பு மிக விளைக்கும்; முனிவு விளைக்கும்; பகை அஞ்சாக்குறிகள் விளைக்கும்; நகை விளைக்கும்; கொள்ளேல் கள்ளுண்டலை மைந்தா!' என்பது விநாயகபுராணம். 'ஒளியும், ஒளிசான்ற செய்கையும், சான்றோர் தெளிவுடையன் என்றுரைக்கும் தேசம், களியென்னும் கட்டுரையால் கோதப்படுமேல், இவையெல்லாம், விட்டொழிக்கும் வேறாய் விரைந்து' என்பது அறநெறிச்சாரம். 'அந்தணர்இல்' என்பது 'அந்தணர் என்போர் அறவோர், மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்' என்ற குறள்30ஐ அடியொற்றியது. வீடணனை வில்லிபாரதமும் புகழ்கிறது

Koviloor Digital Library

கேளுங்கள். 'அந்தணர் வடிவம் கொண்டு, இலங்கையில்வாழ் ஆதிவாள் அரக்கனைப்போல்' என்பது வில்லிபாரதம். தருமம் என்பது அறத்தை குறிக்கும்'' அறவினை யாதெனின் கொல்லாமை' என்பது குறள்-321. ''நல்லாறு எனப்படுவது யாதெனின் யாதொன்றும் கொல்லாமை சூழும் நெறி' என்பதும் குறள்323. வீடணன் நல்லவன்போல நடிப்பவன் அல்லன்; அவன் இயல்பிலேயே நற்குணங்கள் அமையப்பெற்றவன். எனவே அவனை ஏற்றுக்கொள்ளுதல் தகும் என நிறுவுகிறான் அனுமன் என்க.

98. "அன்னவன் தனிமகள்,' அலரின் மேல் அயன்
சொன்னது ஓர் சாபம் உண்டு; உன்னைத் துன்மதி
நன்னுதல்! தீண்டுமேல், நணுகும் கூற்று' என
என்னுடை இறைவிக்கும் இனிது கூறினாள்." (6545)

(இறைவி-தெய்வம்/தலைவி; தனி-ஒப்பற்ற; நன்னுதல்-நல்ல நெற்றி; துன்மதி-கெட்டபுத்தி; கூற்று-இயமன்; நணுகுதல்-அடைதல்; அலர்-மலர்/தாமரைமலர்; அயன்-பிரமன்; இனிது-இனிமையாக)

''அப்படிப்பட்டவனுடைய ஒப்பற்ற மகளான திரிசடை என்பவள், 'நல்லநெற்றியை உடையவளே! உன்னை அந்தக் கெட்ட புத்தி உடைய இராவணன் தீண்டுவான் என்றால்; அவனை உடனே இயமன் வந்து உயிரைக்கவர்ந்து செல்வான். இறந்துபடுவான், இப்படிப்பட்ட ஒரு சாபம் இராவணனுக்குத் தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமதேவனால் இடப் பட்டு இருக்கிறது. எனவே நீ சற்றும் துயரப்படாதே' என்று ஆறுதல் கூறி என்னுடைய தலைவியாகிய சீதாதேவியை இனிது தேற்றிக் கொண்டிருந் தாள்'' என்று வீடணன் மட்டுமல்ல, அவன் மகளும் நமக்கு உதவியா யிருந்திருக்கிறாள் என்று கூறுகிறான் அனுமன்.

''தானே விரும்பாத ஒரு பெண்ணை, இராவணன் தீண்டுவானானால் அவன்தலை வெடித்துச் சாவான்' என்று இராவணனுக்குப் பிரமன் தந்த சாபம் ஒன்று இருக்கிறது என்று வீடணனின் ஒப்பற்ற மகளாகிய திரிசடை, அவ்வப்போது, சீதாதேவிக்குக் கூறி, அவளைத் தேற்றி வந்திருக்கிறாள். எனவே வீடணன் மட்டும் நல்லவன் என்று எண்ணாதே, அவன்மகள்கூட நம் சீதாதேவிக்கு இலங்கையில் ஆறுதல் மொழிகூறி அவளைத் தேற்றி வந்திருக்கிறாள் என்று வீடணனை நம் பக்கம் சேர்த்துக் கொள்ளுவது தவறாகாது'' என்பதை நிறுவுகிறான் அனுமன்.

முன்பு சுந்தரகாண்டத்தில் 'என்பெரும் தெய்வம்' என்று கூறியவன் அனுமன். அதுபோல இங்கே 'என்னுடை இறைவி' என்கிறான் என்க. சாபம் என்பது வெகுளிக்கூறினும் அருளிக்கூறினும் அவ்வப்பயன்களை உடனே தரும் ஒரு சொல் என்பதறிக. 'சாபமே சபித்தல், வில்லாம்' என்பது நிகண்டு. எனக்கு மட்டும் வீடணன் உதவிசெய்யவில்லை, நம்முடைய தலைவியாகிய சீதாதேவிக்கும் வீடணன் மகள் திரிசடை உதவியாய்

Koviloor Digital Library

இருந்து ஆறுதல் சொல்லி வந்திருக்கிறாள். அதனால்தான் சீதாதேவி இதுகாறும் உயிருடன் இருந்திருக்கிறாள் என்று இராமபிரான் புரிந்து கொள்ளும் வண்ணம் எடுத்துரைக்கிறான் அனுமன் என்க. பிரமன் சாபம் முன்பும் விரிவாகக் கூறப்பட்டதை இங்கு நினைவுகூர்க.

99. "பெற்றுடைய பெருவரமும், பிறந்துடைய
வஞ்சனையும், பிறவும், உன்கை,
வில்தொடையின் விடுகணையால் வெந்து ஒழியும்"
எனக்கருதி, விரைவின் வந்தான்;
உற்றுடைய பெருவரமும், உகந்துடைய
தண்ணளியும், உணர்வும் நோக்கின்,
மற்றுடையர் தாம் உளரோ, வாள் அரக்கன்
அன்றியே தவத்தின் வாய்த்தார்? (6546)

(வஞ்சனை-மாயச்செயல்கள்; தொடை-தொடுப்பு; தண்ணளி-குளிர்ந்த அருட்குணம்; உணர்வு-அறிவு/ஞானம்; வாள்- இங்கே வாளையே குறிக்கும்; உகத்தல்-மகிழ்தல்; நோக்குதல்-ஆராய்ந்து பார்த்தல்)

''இராவணன் தன் தவத்தின் ஆற்றலால் பெற்றுள்ள மிகுதியான சிறந்த வரங்களும், அவன் பிறப்பால் எய்திய அவனுடைய பிறவிக்குணமாகிய வஞ்சனையும், மற்றும் உள்ள. தீயகுணங்களும், உன்னுடைய கையி லிருக்கும் கோதண்டம் என்னும் வில்லிலிருந்து வரிசையாகச் செலுத்தப் படும் அம்புகளால் விரைந்து வெந்து பட்டழியும் தன்மையன'' என்று கருதியதால்தான் வீடணன் மிகக்காலம் தாழ்த்தாமல் விரைவாக உன்னிடம் வந்து அடைக்கலமாகச் சேர்ந்திருக்கிறான். இந்த வாளேந்திய வீடணன் தன்தவத்தின் ஆற்றலால் பெற்றிருக்கின்ற மிகுதியான வரங்களையும், மிக மகிழ்ச்சியுடன் பெற்றிருக்கின்ற குளிர்ச்சிபொருந்திய கருணையையும், ஞானஉணர்வையும் ஆராய்ந்து பார்த்தால், இவனைக் காட்டிலும் வேறு வாளேந்திய அரக்கர், இறைவனை நோக்கிப் பெருந்தவம் செய்தவர்கள் வேறு யார் இருக்கிறார்கள்? ஒருவரும் இல்லை'' என்றும் நிறுவுகிறான் அனுமன்.

இராவணனும் பெரும்தவம் செய்து இறைவனிடமிருந்து வரங்கள் பல பெற்றவன்தான். எனினும் அவனுடன் உடன் பிறந்த பிறவிக்குணமாகிய வஞ்சனையும், மாயச்செயல்களும், அவனை மேலும் வாழவிடாதபடி உன்னுடைய விற்கணைகள் அழித்து ஒழிக்கும். ஆனால் வீடணன் தவம் செய்து பெற்றவரங்கள் அவனுக்குக் கருணையையும், ஞான உணர்வையும் தந்திருக்கின்றன. எனவே நற்பண்புகள் மிக்க வீடணனை நம்பக்கம் சேர்த்துக் கொள்ளலாம் என்று கூறுகிறான் அனுமன் என்க.

Koviloor Digital Library

இங்கே 'பிறவும்' என்றது அவன் பெற்றிருக்கும் மூவுலக அரசாட்சியையும், செல்வச்செழிப்பையும் படைபலத்தையும் குறிக்கும் என்க. மேலும் இவன் பெற்றிருக்கின்ற வரங்களும், அவன் மேற்கொண்டுள்ள கருணையும் தத்துவஞானமும், அரக்கரல்லாதார் யாரேனும் பெற்றிருக்கிறார்களா? என்றும் அனுமனே கேட்கிறான் என்றால், கற்போர் வீடணனின் நற்குணங்களை நன்கு புரிந்துகொள்ள முடியும் என்பது கவிஞனின் கருத்துப்போலும். இராவணன் பெற்றுள்ள வரங்கள் மூன்றரைக்கோடி வாழ்நாள், மூவுலக ஆட்சி, வீடணன் பெற்றுள்ள வரங்கள் கடவுள் பக்தியும் அறவோர்களிடம் அன்பு கொள்ளும் பண்பும் ஆகும்.

100. ''தேவர்க்கும், தானவர்க்கும் திசைமுகனே
முதலாய தேவ தேவர்
மூவர்க்கும், முடிப்ப அரிய காரியத்தை
முற்றுவிப்பான் மூண்டு நின்றாய்;
ஆவத்தின் வந்து, 'அபயம்' என்றானை
அயிர்த்து அகல விடுதியாயின்,
கூவத்தின் சிறு புனலைக் கடல் அயிர்த்தது
ஒவ்வாதோ? கொற்ற வேந்தே!'' (6547)

(கொற்றம்-வெற்றி; தானவர்-அசுரர்; திசைமுகன்-நான்முகன்/பிரமதேவன்; முற்றுவிப்பான்-நிறைவேற்றும் பொருட்டு; மூள்தல்-முனைதல்; ஆவத்து-ஆபத்து/தீங்கு; அயிர்த்தல்-ஐயுறுதல்/சந்தேகித்தல்; கூவம்-கிணறு; ஒவ்வாதோ-போன்றதாக ஆகாதோ)

''வெற்றியையே உடைய அரசனே! தேவர்களாலும், அசுரர்களாலும், நான்முகனான பிரமதேவன் முதலிய தேவர்களுக்குத் தலைவர்களான அரி, அயன், அரன் என்ற முத்தேவர்களாலும் முடிக்க முடியாத காரியமாகிய இராவணன்வதை என்ற பெரிய காரியத்தை நிறைவேற்றும் பொருட்டு, முனைப்புடன் செயலாற்றி வருகின்றாய். இச்சமயத்தில் எனக்கு என் அண்ணனால் ஆபத்து நேர்ந்திருக்கிறது, நான் உன்னைச் சரணாகதி அடைகிறேன்; என்னை அடைக்கலமாக ஏற்றுக்கொள் என்று இரந்து நிற்பவனை, அவன்மேல் சந்தேகம் கொண்டு அவனை ஏற்றுக்கொள்ளாமல் விலக்கி விடுவாய் என்றால், அது பெரும் நீர்ப்பரப்பான கடலில் உள்ள மிகுந்தநீர், சிறிய அளவில் நிறைந்துள்ளதாகிய கிணற்றுநீர், தன்னை அடித்துக்கொண்டு போய்விடுமோ என்று அஞ்சி, அதனை விட்டு விலகிப்போவதைப் போன்றதாகாதோ?'' என்று கேட்கிறான் அனுமன்.

''கடல்நீரைக் கிணறு கொள்ளாது'' என்பது ஒரு பழமொழி. 'ஆபத்து' என்ற வடசொல் 'ஆவத்து' என எதுகை நோக்கிக் கையாளப்பட்டுள்ளது. 'அபயம்' என்ற சொல்லுக்கு பயம் எய்தாதபடி காக்கவேண்டிய பொருள் என்பது பொருள். 'கூபம்' என்ற வடசொல்லின் திரிபே 'கூவம்' என்ற

Koviloor Digital Library

தமிழ்ச்சொல். அவர்கள் முடித்தற்கரிய காரியம் என்பது, அரக்கரைப் பூண்டோடு அழித்து, அறந்தலை நிறுத்தலை என்க. துஷ்ட நிக்ரகமும், சிஷ்ட பரிபாலனமும் என்க. கிணற்றுநீரால் கடல்நீருக்குக் கேடு விளைவிக்கமுடியாதது போல, வீடணனால், இராமபிரானுக்கோ, வானரச் சேனைக்கோ, எந்தக்கேடும் வாராது என்று குறிப்பால் உணர்த்து கிறான் அனுமன் என்க. கூவம் என்ற சொல்லுக்குக் கிணறு அல்லது சிறிய நீர்ப்பரப்பு என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இன்றையக் கூவத்தை நிறைவிற் கொள்ளற்க.

101. "பகைப்புலத்தோர் துணை அல்லர்' என்று இவனைப்
பற்றோமேல், அறிஞர் பார்க்கின்,
நகைப்புலத்ததாம் அன்றே; நல்தாயம்
உளது ஆய பற்றால் மிக்க,
தகைப்புலத்தோர், தந்தையர்கள், தம்பியர்கள்
தமையர், இவர்தாமே அன்றோ,
மிகைப்புலத்து விளைகின்றது ஒரு பொருளைக்
காதலிக்கின், விளிஞர் ஆவர்?" (6548)

(புலம்-இடம்; பற்றுதல்-ஏற்றுக்கொள்ளுதல்; தாயம்-பிறப்புரிமை/ சொத்துரிமை; நல்-சிறந்த; தகை-மேன்மை; புலம்-கருத்து/புலன்/ அறிவு; மிகை-மேல்; காதலித்தல்-விரும்புதல்; விளிஞர்-பகைவர்; மிகைப்புலம்-போர்க்களம்; விளைதல்-பயன்படுதல்; பற்று-ஆசை; அறிஞர்-அரசியல் வல்லவர்; தகைத்தல்-தடுத்தலுமாம்)

''இவர்கள் பகைவர் குழுவைச் சேர்ந்தவர்கள், நமக்குத் துணையாக இருக்கமாட்டார்கள். அவர்கள் எப்போதும் பகைவர்களே என்று எண்ணி, இந்த வீடணனை நாம் நம்பக்கம் சேர்த்துக் கொள்ளவில்லை என்றால், அரசியல் அறிவுமிக்கார், இதனைக்கண்டு எள்ளி நகையாடுவார்கள் அல்லவா? தாய்வழிச் சொந்தமான சிறந்த தாயாதிகள்தான், தாம் விரும்பும் ஒருபொருளை, ஆசையின் மிகுதியால் அது கிடைக்காமற்போனால், தந்தையென்றும், தம்பியென்றும், தமையன் என்றும் பாராது இவர்கள் தானே ஒருவர்க்கொருவர் சண்டையிட்டுக்கொண்டு, குடும்பத்தையே போர்க்களம் போலாக்கி, இறந்துபடுகிறார்கள்; அல்லது ஒருவரை யொருவர் பகைத்துக் கொள்ளுகிறார்கள்?'' என்கிறான் அனுமன்.

இரத்த சம்பந்தமான உறவுகளிலேயே, ஒரு பொருளைப் பற்றுவ தற்காக, ஒருவர்க்கொருவர் பகைகொள்ளும்போது, வேற்றுப் புலத்தி லிருந்து வந்தவன், நமக்குத் துணையாகமாட்டான் என்றுகூறி இவனை விலக்குவது அறிவிற்குப் பொருத்தமானதாகத் தனக்குத் தோன்றவில்லை என்கிறான் அனுமன் என்க. 'தாயம்' என்பது தாய்வழிச் சொந்தத்தையே உணர்த்தும். எனினும் இங்கே பங்காளிகள்-சொந்தத்தில் உரிமையுடை யவர்கள் என்ற பொருளையே கொள்ளலாம். விளிஞர்-பரமவிரோதிகள்.

Koviloor Digital Library

'தமது குலத்திலே பிறந்த தாயாதிகளும், அடுத்த நாட்டில் இருப்பவரும் ஒரு அரசர் சங்கடத்தில் இருக்கும்போது, அவனைச் சமயம் பார்த்துக் கொல்லுகின்ற சத்துருக்கள் ஆவார்கள்' என்று இராமபிரான் கூறுவதாக, வான்மீகம் பேசுகிறது.

102. "ஆதலால், இவன் வரவு நல்வரவே'
என உணர்ந்தேன் அடியேன்; உன்தன்
வேதநூல் எனத்தகைய திருவுளத்தின்
குறிப்பு அறியேன்' என்று விட்டான்,
காதல் நான்முகனாலும் கணிப்பு அரிய
கலையனைத்தும் கதிரோன் முன்சென்று,
ஓதினான், ஓதநீர் கடந்து, பகை கடந்து,
உலகை உய்யக் கொண்டான்." (6549)

(உணர்தல்-தெளிதல்; நான்முகன்-பிரமன்; கணிப்புஅரிய-எண்ண முடியாத; கதிரோன்-சூரியன்; ஓதம்-அலைகள்; நீர்-கடல்; கடத்தல்-அழித்தல்; உய்யக்கொள்ளுதல்-கடைத்தேறச் செய்தல்)

"கலைகளிடத்தும், கலைமகளிடத்தும் பெருங்காதல் கொண்டவனாகிய நான்முகனாகிய பிரமனாலும், இவ்வளவென்று கணக்கிட்டறிய முடியாத கலைகள் அனைத்தையும், சூரியன் முன்பாக நடந்தே சென்று கற்றுத் தெளிந்த நவவியாக்ரணபண்டிதனானவனும் அலைகள் நிறைந்த கடலைக் கடந்து சென்று, இலங்கையில் பகைவர்களை அழித்து, இந்த உலகத்தையே வாழவைத்தவனுமான அனுமன், இராமபிரானை நோக்கி, 'எனவே மேற்கூறிய காரணங்களால் தன் தமையனைவிட்டுப் பிரிந்துவந்த இந்த வீடணன் வரவு, நமக்கு நன்மை பயக்கக்கூடிய வரவு என்றுதான் நான் நன்கு தெளிவாக உணர்கிறேன். இருப்பினும், வேதங்களின் உறைவிடம் என்று போற்றப்படும் உனது திருவுள்ளக்கருத்து யாதாக இருக்கும் என்பதை என்னால் அறியமுடியவில்லை'' என்று கூறி முடித்தான் அனுமன்.

வேதமேயனைய இராமன், சுருதிநாயகன் இராமன். எனவே 'வேதநூல் எனத்தகைய' என்றார் என்க. 'விட்டான்' என்பது சொல்லி முடித்தான் என்ற பொருளைத்தரும். 'கதிரோன் முன்சென்று' என்பது, சூரியன் இயக்கமில்லாமல் ஓர் இடத்திலேயே நின்று இவனுக்குப் பாடம் சொல்லிக் கொண்டு நின்றிருந்தால் உலக இயக்கம் தடைப்பட்டுப்போகும். எனவே சூரியன் இடைவிடாது தனது தேரைச் செலுத்திக் கொண்டேயிருப்பான். அனுமன் அவன் முன்னே சென்று கெண்டே எல்லா வேதக்கலைகள் அனைத்தையும் கற்றுக்கொண்டான். எனவேதான் அவனை 'நவவியாக்ரணபண்டிதன்' என்கிறோம். கடல்கடந்து இலங்கை சென்று சீதாதேவியைக் கண்டுவந்து சீதாதேவி, இராமபிரான் முதலியோர்க்கு, உயிர் தந்ததால் இந்த உலகமே உய்யக்கொண்டான்' எனப்பட்டான்

Koviloor Digital Library

அனுமன் என்க. ஓடுகின்ற கதிரவனுக்கு முன்னால் முகம் காட்டிப் பின்புறமாக ஓடிக்கொண்டே கதிரவனிடம் எல்லாக் கலைகளையும் கற்றவன் அனுமன் என்க. இங்கே அனுமனின் பேரறிவும், பேராற்றலும், பணிவுடைமையும் பேசப்படுவது காண்க.

103. இராமபிரான் மகிழ்ந்து பேசத் தொடங்குதல் [15 பாடல்கள்]

''மாருதி அமுத வார்த்தை செவி மடுத்து, இனிது மாந்தி,
'பேரறிவாள! நன்று, நன்று' எனப் பிறரை நோக்கி,
'சீரிது; மேல்இம் மாற்றம் தெளிவுறத் தேர்மின்' என்னா,
ஆரியன் உரைப்பதானான்; அனைவரும் அதனைக் கேட்டார்.'' (6550)

(மாந்துதல்-பருகுதல்; செவிமடுத்து-கேட்டு; சீரிது-சிறப்புடையது; மாற்றம்-கருத்து; தேர்மின்-தெரிந்து கொள்ளுங்கள்; ஆரியன்-மேலோன்/இராமபிரான்)

அவ்வாறு பேசிமுடித்த அனுமனின்அமிழ்தம் போன்ற உரையை நன்கு கேட்டு, அதன் சிறப்பையே ஆழ்ந்து பருகிக்கொண்டிருந்த மேலோனான இராமபிரான், அனுமனை நோக்கி, ''பேரறிவாளனே! முற்றும் கற்று உணர்ந்தவனே! நீ கூறியது மிகவும் நன்றாய் இருக்கிறது. நமக்கு நன்மைபயக்கவல்லது எனப்பாராட்டிவிட்டு, அங்கு இருந்த மற்றவர்களை நோக்கி, 'இப்பொழுது அனுமன் கூறிய கருத்துக்கள் சிறப்பானவை, இவற்றின்மேல் விளைவுகளை நீங்கள் பின்னால் நன்றாகத் தெரிந்து கொள்வீர்கள்' நான் இப்போது கூறப்போவதையும் தீர்க்கமாக ஆலோசியுங்கள்'' என்று கீழ்க்கண்டவாறு பேசத் தொடங்கினான். அவனுரையை அனைவரும் உன்னிப்பாகக் கேட்டனர்.

மாருதி கூறிய வார்த்தைகள் அமிழ்தம் போன்றிருந்தன. எனவே இராமபிரான் அதனை நெடுநேரம் பருகிக் கொண்டிருந்தான் என்பது உருவகம். வேதநாயகனான இராமபிரானே, அனுமனைப் பார்த்து, 'பேரறிவாளன்' என்கிறான் என்றால், அனுமன் கல்விச் சிறப்பை நன்கு புரிந்து கொள்ளலாம். 'வார்த்தை இனிது மாந்தி' என்பது 'உண்டற்குரிய அல்லாப்பொருளை, உண்டதுபோலக் கூறலும் மரபே' என்ற தொல்காப்பியத்தின் அடிப்படையில் கூறியது என்க. இராமபிரான் தானே முடிவெடுக்கும் ஆற்றலும், உரிமையும் உடையவன் என்றாலும், தன்னுடன் இருப்பவர்களின் ஆலோசனைகளையும் கேட்டறிந்தே செயல்படுகிறான் என்பதறிக. 'தெரிந்த இனத்தொடு, தேர்ந்து, எண்ணிச் செய்வார்க்கு அரும்பொருள் யாதொன்றும் இல்' என்பது குறள்-462. அனுமன் கூறிய கருத்துக்களில் நிறைந்திருந்த பொருட் செறிவை எண்ணி எண்ணி மகிழ்ந்தான் என்பது 'அமுதவார்த்தை செவிமடுத்து, இனிது

Koviloor Digital Library

மாந்தி' எனப்பட்டது என்க. 'நன்று நன்று' என்ற அடுக்கு உவகை பற்றியது என்க.

104. "கருத்து உற நோக்கிப் போந்த காலமும் நன்று; காதல்
அருத்தியும் அரசின் மற்றே; அறிவினுக்கு அவதியில்லை;
பெருத்து உயர் தவத்தினானும், பிழைப்பிலன் என்னும் பெற்றி,
திருத்தியது ஆகும் அன்றே, நம்வயின் சேர்ந்த செய்கை?" (6551)

(கருத்து-மனம்; உற-மிக; நோக்கி-ஆராய்ந்து; போந்த-வந்த; நன்று-ஏற்றதே; அருத்தி-ஆசை/விருப்பம்; மேற்றே-மேலதே; அவதி-வரம்பு/எல்லை; பிழைப்பு-குறை/தவறு; பெற்றி-தன்மை; வயின்-இடம்; திருத்தியது-விளக்கியது)

''வீடணன் மனத்துள் மிக நன்றாக ஆராய்ந்து, நம்மை வந்து சேர்ந்திருக்கின்ற காலமும், சரியான தருணமே, அவனது பெருவிருப்பம் இலங்கை அரசின்மீது தான் என்பதும் தெரிகிறது. அவனுடைய அறிவுத்திறனுக்கு ஒரு எல்லை இருப்பதாகவும் தெரியவில்லை. தேர்ந்த அறிவாளனாகத் தோன்றுகிறான், பெரிய தவ நியமங்களை உடைய வீடணன் தவறு செய்தவன் என்னும் தன்மையும் தெரியவில்லை. காரணம் தக்க சமயத்தில் நம்மிடம் அவன் வந்து சேர்ந்த செய்கையே. இவையனைத்தையும் தெள்ளென விளக்குகிறதன்றோ?'' என்று கேட்கிறான் இராமபிரான்.

'காதல் அருத்தி' என்பது ஒரு பொருட்பன்மொழி. 'அருத்தியும் அரசின் மேற்றே' என்பதற்கு அவனுக்கு இலங்கை அரசின் மீதே விருப்பம் அதிகம் என்று கூறுவதைக் காட்டிலும், இந்த அரசின் மேலான வீடுபேறாகிய அரசின் மீதே என்று பொருள் கொண்டால் இன்னும் சிறக்கும். இங்கே 'அரசு' என்ற சொல்லுக்கு வெற்றரசு என்பதைக் காட்டிலும் வீட்டரசு என்று கூறுவதே பொருந்தும் எனக் கொள்க. அவன் அறிவினாலும், தவத்தினாலும் உயர்ந்தவன் என்பதால் நாம் அவனை அடைக்கலமாக ஏற்றுக் கொள்ளலாம் என்று கூறவருகிறான் என்பது தெரிகிறது.

105. "மற்று இனி உரைப்பது என்னோ? மாருதி வடித்துச் சொன்ன
பெற்றியே பெற்றி; அன்னது அன்று எனின், பிறிது ஒன்றானும்,
வெற்றியே பெறுக, தோற்க, வீக, வீயாது வாழ்க,
பற்றுதல் அன்றி உண்டோ, அடைக்கலம் பகர்கின்றானை?" (6552)

(வடித்து-தெளிவாக/சீர்தூக்கி; பெற்றி-தன்மை/காரியம்; பிறிது-வேறு/தகாதது; வீதல்-அழிதல்; பற்றுதல்-ஏற்றுக்கொள்ளுதல்; மற்று-வேறாக)

''இப்போது நான் வேறு என்னகூற வேண்டி இருக்கிறது? அனுமன் சீர்தூக்கி ஆராய்ந்து சொன்ன சொற்களே இப்போது நாம் செய்யத் தகுந்த காரியமாகும். அவன் கூற்றுக்கு நீங்கள் உடன்படவில்லையென்றாலோ

Koviloor Digital Library

அல்லது தவறு என்று நீங்கள் கருதினாலோ, அது அல்லாத வேறு வழியாலும், நாம் வெற்றி பெற்றாலும்சரி, தோல்வி அடைந்தாலும்சரி, நாம் இறந்துபட்டாலும் சரி, இறவாமல் நன்கு வாழ்ந்திருந்தாலும் சரி, நம்மை வந்து அடைக்கலம் என்று நம்மிடம் வந்து சேர்ந்தவனுக்கு அடைக்கலம் தருவதைத் தவிர வேறு செய்வதற்கு என்ன இருக்கிறது? அடைக்கலம் கொடுத்தே ஆகவேண்டும்'' என்று தீர்மானமாகக் கூறுகிறான் இராமபிரான்.

அனுமன் கருத்தும், தன் கருத்தும் ஒன்றே என்பதால் ''மற்று இனி உரைப்பதென்னோ?'' என்றார் என்க. நம்மால் அடைக்கலம் கொடுக்கப் பட்டவர்களாலேயே நமக்கு ஒரு தீங்கு வரும் என்றாலும், அடைக்கலம் கொடுத்தபிறகு பின்விளைகவுள் பற்றிக் கருதாது அதை ஏற்றுக்கொள்ளும் பக்குவம் நமக்கு வேண்டும் என்பதைத்தான் 'வெற்றியே பெறுக, தோற்க, வீக, வீயாது வாழ்க' என்ற சொற்றொடரால் குறித்தார் என்க. அடைக்கலம் என்று என்னைச் சரண் அடைந்தவனை நான் ஏற்றுக்கொள்வதை என்னுடைய கடமையாகவே கருதுகிறேன். அனுமன் கூறியதால்மட்டும் நான் இந்த முடிவை எடுக்கவில்லை, என்ற தொனியும் இறுதியடியில் வெளிப்படுவதை உணர்க. இதனால் மற்றவர்கள், தாங்கள் கூறிய கருத்துக்களை ஏற்றுக் கொள்ளவில்லையே என்று வருந்துவதற்கும் இடம் இல்லாமல் செய்துவிட்டான் இராமபிரான் என்பதையும் கண்டு மகிழ்க.

106. "இன்று வந்தான் என்றுஉண்டோ? எந்தையை யாயை முன்னைக்
கொன்று வந்தான் என்று உணடோ? அடைக்கலம் கூறுகின்றான்;
துன்றி வந்து அன்பு செய்யும் துணைவனும் அவனே; பின்னைப்
பின்றும் என்றாலும், நம்பால் புகழ்அன்றிப் பிறிது உண்டாமோ?" (6553)

(யாய்-ஆய்/தாய்; முன்-தமையன்; துணைவன்-நண்பன்; துன்றி-நெருங்கி; பிறிது-வேறு; பின்றுதல்-மாறுபடுதல்)

''இந்த வீடணன் நம்மிடம் வந்து அடைக்கலம், அபயம் என்று கேட்கிறான். இவன் நமக்கு முன்பே பழக்கமில்லாதவன். இன்று புதிதாக வந்து நம்மிடம் சேர்ந்து கொள்ள விழைகிறான் என்று விலக்கி விடுதல் முடியுமோ? பின்னர் அடைக்கலம் என்பதற்கே பொருள் இல்லாமல் போகுமே? என்தந்தையை, என்தாயை, தன்தமையனைக் கொன்றுவிட்டு வந்து என்னிடம் சரணம் என்று சரணாகதி அடைந்துவிட்டால் அவனை ஒதுக்கித் தள்ளுதல் முறையாகுமோ? நம்மோடு நெருங்கிப்பழகி, நம்மிடம் அன்பு காட்டும் நண்பனும் அவனாகத்தான் இருக்கமுடியும். சரண்புகுந்த பின்னர் நமக்குத் தீங்கு நினைக்கலாம், ஒருவேளை மனமாற்றம் ஏற்படலாம். நம் கருத்தினின்றும் மாறுபடலாம். அப்போதும் அடைக்கலம் தந்த நமக்குப் புகழ்தான் வருமே தவிர, அதற்கு மாறான பழி நம்மை வந்து அடையுமோ? பழியும் பாவமும் அவனைத் தானே

Koviloor Digital Library

சென்றுசேரும்' என்று வீடணனை ஏற்றுக் கொள்வதற்குரிய காரணங்களை ஒவ்வொன்றாகக் கூறிக்கொண்டு வருகிறான் இராமபிரான்.

தாய்தந்தையரைக் கொல்லுதல் என்பது மாபாதகச் செயல். அவ்வாறு செய்துவிட்டு வந்து நம்மிடம் தஞ்சம் என்று நம் திருவடிகளைப் பற்றுவான் என்றாலும்கூட நான் அவனுக்கு அடைக்கலம் கொடுக்க வேண்டும். அதுதான் முறை என்று வற்புறுத்துகிறான் இராமபிரான். அடைக்கலம் என்று வந்தவனைப் பழக்கமில்லாதவன் என்றோ, மாபாதகச் செயலைச் செய்துவிட்டு வந்துவிட்டான் என்றோ ஒதுக்கிவிட முடியாது'' என்கிறான் இராமபிரான்.

107. "பிறந்த நாள் தொடங்கி, யாரும் துலைபுக்க பெரியோன் பெற்றி,
மறந்த நாள் உண்டோ? என்னைச் சரண் என வாழ்கின்றானைத்
துறந்த நாட்கு இன்று வந்து துன்னினான் சூழ்ச்சியாலே
இறந்தநாள் அன்றோ; என்றும் இருந்த நாள் ஆவது!" என்றான். (6554)

(துலை-தராசு; சரண்-அடைக்கலம்/தஞ்சம்/புகல்; துறந்த-விலக்கிய; துன்னுதல்-வந்துசேர்தல்; சூழ்ச்சி-வஞ்சனை; பிறந்தநாள்-நினைவு தோன்றியநாள்)

''எனக்கு முன்னோனாகிய சிபிச்சக்கரவர்த்தி, ஒரு புறாவின் பொருட்டுத் தானே தராசுத்தட்டில் ஏறிநின்று தன் உயிரைக் கொடுத்த அந்த நிகழ்ச்சியை-அந்த உயர்ந்த தன்னலமற்ற தியாகத்தை நமக்கு நினைவு தெரிந்தநாளிலிருந்து, யாரேனும் ஒரு நாளாவது மறந்திருக்கிறோமா? இல்லையல்லவா? அதுபோல இப்போது இங்குவந்து என்னைச் சரண் அடைந்து வாழ்வு பெற இருக்கின்ற இந்த வீடணனை, இவன் நம்மைக் கொன்று விடுவானோ என்று அஞ்சி, அவனுக்கு அடைக்கலம் தாராது, அவனை விலக்கிவிடுவதைக் காட்டிலும், இன்று வந்து நம்மைச் சேர்ந்த இவன் ஏதோ ஒரு வஞ்சனைச் செயலால், என்னைக் கொல்ல நேரிட்டாலும், அதனால் நான் இறந்துபோக நேரிட்டாலும், அந்த இறந்தநாள் தானே நான் என்றும் நிலைத்த புகழ்பெற்று வாழும் நாளாகும்!'' என்று கேட்கிறான் இராமபிரான்.

அஃறிணை உயிரினமாகிய ஒரு புறாவுக்கே என் முன்னோன், சிபிச்சக்கரவர்த்தி, தன் உயிரையும் கொடுக்க முன்வந்தான். அவனைப் பற்றி நாம் தினந்தோறும் நினைத்துக் கொண்டிருக்கிறோம். இந்த வீடணன் இப்போது வந்து என்னைச்சரணடைந்திருக்கிறான். எனவே என் உயிரைக் கொடுத்தாவது நான் அவனைப் பாதுகாப்பேன். அப்பொழுது தான் நான் என்றும் நிலைபெற்று வாழ்ந்ததாக ஆகும் என்று கூறுகிறான் இராமபிரான். 'ஒப்புரவினால் வரும் கேடு எனின், அஃதொருவன் விற்றுக்கோள் தக்கது உடைத்து' என்ற குறள்-220 இங்கு நினைவுகூரத் தக்கது.

Koviloor Digital Library

சிபிச்சக்கரவர்த்தி சம்பந்தப்பட்ட இந்த நிகழ்ச்சி அனைவரும் அறிந்ததே என்பதால் இங்கு விளக்கம் தரப்படவில்லை. இந்த நிகழ்ச்சி பெரும்பாலும் எல்லா இலக்கியங்களிலும் எடுத்துக்காட்டாகக் காட்டப் பட்டிருக்கிறது. கம்பனாலேயே பாலகாண்டம், திருஅவதாரப்படலத் திலும், குலமுறை கிளத்துப்படலத்திலும் பின்னர் யுத்தகாண்டத்தில் கும்பகர்ணன் வதைப்படலத்திலும் பேசப்பட்டிருக்கிறது. இதுதவிர புறநானூறு, சிலப்பதிகாரம், கலிங்கத்துப்பரணி, இராசராசன் உலா, குலோத்துங்கன்உலா, விக்கிரமன்உலா, போன்ற இலக்கியங்களிலும் மேற்கோளாகக் காட்டப்பட்டிருக்கிறது.

சிபிச்சக்கரவர்த்தி சோழமன்னன் என்று புறநானூறு கூறுகிறது. ''கூர் உகிர்ப் பருந்தின் ஏறு குறித்து ஒரீஇத் தன்னகம் புக்க குறுநடைப் புறவின், தபுதி அஞ்சிச் சீரைபுக்க, வரையா ஈகை உரவோன் மருக'' என்பது புறநானூறு. கம்பன் சிபியை இராமன் குலத்தவனாகக் கூறுவது கருதத் தக்கது. சோழ மன்னர்கள் சூரியகுலத்தவர் என்று வழங்கப்பெறுவர். இராமபிரானும் சூரியகுலத்தில் உதித்தவன். எனவே அவ்வாறு கூறினார்போலும் என எண்ணத் தோன்றுகிறது. கங்கையைக் காவிரியுடன் ஒப்பிட்டது போல இதனையும் கொள்ளலாம்.

108. "இடைந்தவர்க்கு, 'அபயம் யாம்' என்று
இரந்தவர்க்கு, எறிநீர் வேலை
கடைந்தவர்க்கு ஆகி, ஆலம்
உண்டவற் கண்டிலீரோ?
உடைந்தவர்க்கு உதவான் ஆயின்,
உள்ளது ஒன்று ஈயான் ஆயின்,
அடைந்தவர்க்கு அருளான் ஆயின்,
அறம் என்ஆம்? ஆண்மை என்ஆம்?" (6555)

(இடைந்தவர்-விலகிவந்தவர்கள்; எறி-அலைவீசுகின்ற; ஆலம்-நஞ்சு; உடைந்தவர்-தோற்றவர்; இடைதல்-விலகுதல்/ஓடுதல்; அபயம்-அடைக்கலம்; இடைதல்-பின்னடைதல்/பின்வாங்குதல்; இரத்தல்-கெஞ்சுதல்)

''தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தபோது, தளர்வுற்றுப் பின்னடைந்து விலகி ஓடிவந்து ''நாங்கள் உங்களுக்கு அடைக்கலம், பாற்கடலைக் கடையத் தாங்கள் உதவிபுரிய வேண்டும் என்று சிவபெருமானிடம் கெஞ்சிக் கேட்டுக்கொண்டனர். தேவ அசுரர்களுக்கு, அலைகள் வீசுகின்ற நீர்ப்பரப்பை உடைய அந்தக் கடலை கடைவதற்கு உதவிசெய்பவன் ஆகி, அதனின்றும் வெளிப்பட்ட ஆலகால விஷத்தைத் தானே உண்டு தேவ அசுரர்களின் துன்பத்தைப் போக்கியருளிய சிவபெருமான் பற்றி நீங்கள் கேள்விப்பட்டதில்லையா? அதுபோல, தாம்

Koviloor Digital Library

தோல்வியால் துவண்டு நொந்துபோய் வந்து நம்மை அடைந்து உதவிவேண்டும் என்று கேட்பவர்களுக்கு ஒருவன் உதவிசெய்யவில்லை என்றால், தம்மிடம் இருக்கும் ஒரு பொருளை அவனுக்குத் தந்து உதவி செய்யாது மறுத்து விட்டான் என்றால், தம்மை வந்து சரண் அடைந்து, என்னைக் காப்பாற்றவேண்டும் என்று வேண்டுபவனுக்குத் தஞ்சம் அளிக்கவில்லை என்றால், அவனுடைய தர்மம் என்பது என்ன பயனைத்தரும்? அவனுடைய ஆண் தொழிலாகிய வீரம் என்னவாகும்?'' என்று கேட்கிறான் இராமபிரான்.

தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தபோது, அதனின்றும் முதலில் ஆலகால விஷமே தோன்றியது. அதனைப் பெற யாரும் விரும்பவில்லை. அதற்கு அஞ்சி எல்லோரும் பின்னடைந்து சிவபெருமானைத் தஞ்சம் அடைந்தார்கள். சிவன் தானே முன்வந்து அந்நஞ்சைத் தானே உண்டு 'நஞ்சுண்ட கண்டன்' ஆனான். இந்த வரலாற்றை நீங்கள் யாரும் கேள்விப்பட்டதில்லையா? என்று கேட்கிறான் இராமபிரான். அதுபோல வலிமை இல்லாததனால் தோல்வியைத் தழுவியவர்களுக்கு உதவவில்லை என்றாலும், நம்மைத் தஞ்சம் என்று வந்து அடைந்தவரை நாம் பாதுகாக்காது போனாலும் வறுமையின் பிடியில் அகப்பட்டு கெஞ்சிக் கேட்டவர்களுக்கு நம்மிடம் இருக்கும் ஒரு பொருளைக் கொடுக்கவில்லை என்றாலும், உலகில் அறம் என்பதும், ஆண்மை என்பதும் பொருளேயன்றி, பயனேயன்றிப் போகுமல்லவா?' என்று கேட்கிறான் இராமபிரான் என்க.

உடைந்தவர்க்கு உதவுதலும், அடைந்தவர்க்கு அருளுதலும் ஆண்மையின்பாற்படும். உள்ளதொன்று ஈதல் அறத்தின்பாற்படும் என்பது அறிக. எனவே இவ்விரண்டு செயல்களைச் செய்யவில்லை என்றால் இந்நற்குணங்களால் அவனுக்கு என்ன பயன் விளையும் என்பது கருத்து. சிவபெருமான் நஞ்சுண்டது இக்காப்பியத்தில் ஆரண்யகாண்டத்திலும், சுந்தரகாண்டத்திலும் பரவலாகப் பேசப்பட்டிருப்பது காண்க. 'வேலை நஞ்சுண்டு, ஊனமொன்றில்லா ஒருவனுக்கு ஆட்பட்ட உத்தமர்க்கே' என்பது தேவாரம். உடைந்தவர்க்கு உதவுதல் பற்றியும், உள்ளதொன்று ஈதல்பற்றியும் கலித்தொகை, நாலடியார், திருக்குறள், பழமொழி நானூறு, அறநெறிச் சாரம் ஆகிய நீதிநூல்கள் பலபடப் பேசுவதையும் இங்கு நினைவுகூர்க. 'செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல்' என்பது வெற்றி வேற்கை. 'செல்வத்துப் பயனே ஈதல்' என்பது புறநானூறு. முன்பாடலில் புறாவுக்கு அடைக்கலம் கொடுத்த சிபிச்சக்கர வர்த்தியை ஆண்மைச் செயலுக்கும், இந்தப்பாடலில் சிவபெருமானை அருள் செயலுக்கும் எடுத்துக்காட்டாகக் கூறினார் என்க. எனவே அறமும் ஆண்மையும் ஒருங்கே கைவரப்பெற்ற நாம், வீடணனுக்கு அடைக்கலம் தருவதே முறைமையாகும் என்று நிறுவுகிறான் என்பதாம்.

Koviloor Digital Library

109. "பேடையைப் பிடித்து, தன்னைப் பிடிக்க வந்து அடைந்த பேதை
வேடனுக்கு, உதவிசெய்து, விறகிடை வெந்தீ மூட்டி,
பாடுறு பசியை நோக்கி, தன்உடல் கொடுத்த பைம்புள்,
வீடுபெற்று உயர்ந்த வார்த்தை, வேதத்தின் விழுமிது அன்றோ?" (6556)

(பேடை-பெண்புறா; பேதை-அறிவற்றவன்; பாடு-பெரிது; நோக்கி-உணர்ந்து; பைம்புள்-சிறியபறவை/ஆண்புறா; வீடு-நற்கதி/மோட்சம்/வீடுபேறு; வார்த்தை-வரலாறு; விழுமிது-சிறப்பானது; பைம்-பசுமை/சிறுமை; புள்-பறவை)

''தனது இணையான பெண்புறாவைப் பிடித்து. அதன் பின்னர், தன்னையும் தன் இருப்பிடத்திற்கு பற்றவந்த ஒரு அறிவற்றவனாகிய வேடனுக்கு, அவன் குளிரில் வேதனைப்படுகிறான் என்பதை உய்த்துணர்ந்து அவன் குளிரைப்போக்குவதற்காக, அருகிலிருந்த விறகுகளை எடுத்து வந்து வெம்மை தரக்கூடிய நெருப்பைமூட்டி அவனது குளிரைப் போக்குவித்து, அந்த வெளிச்சத்தில், அவன் முகத்தில் வெளிப்பட்ட பெரிய பசியைத் தன் மனதால் உணர்ந்து, அவன் பசியைப் போக்குவதற்காக, தான்மூட்டிய அந்த நெருப்பில் தானே வீழ்ந்து மடிந்து, அந்த உடலை அவன்பசி போக உண்ணுமாறு அவனுக்கு அளித்த அந்தச் சிறு ஆண்பறவை, வீடுபேறு அடைந்தது என்ற சிறந்த வரலாறு, வேதத்தில் கூறியிருப்பதைக் காட்டிலும் சிறப்பானது அல்லவா?'' என்று கேட்கிறான் இராமபிரான்.

இந்த வரலாறு 'கபோதோ பாக்கியானம்' என்று வான்மீகம் கூறுகிறது. கபோதம்-புறா; உபாக்கியானம்-வரலாறு 'குசேலோ பாக்கியானம் குசேலனது வரலாறு என்று கூறுவதுபோல, இது இந்தப் புறாவின் வரலாற்றைக் கூறுவது என்பது பொருள். இந்த வரலாறு மகாபாரதத்திலும் பேசப்படுகிறது என்பது கருதுக. ஓரறிவு படைத்த அந்தப் புறாவே இத்தகைய பேருதவி புரிந்தது என்றால், பகுத்தறிவு படைத்த நான், என்னுடைய உயிரைக் கொடுத்தாவது, என்னை வந்தடைந்த வீடணனைக் காப்பாற்ற வேண்டாமா? என்று கேட்கிறான் இராமபிரான் என்பதாம். இங்கே ஒரு நல்லநயம், முன்பாடலில் ஒரு புறாவுக்காகத் தன் உடலையே அளித்தான் சிபிச்சக்கரவர்த்தி எனக் கண்டோம். இங்கே ஒரு மனிதனாகிய வேடனுக்காகத் தன் உடம்பையும் உயிரையும் கொடுத்தது அதே இனத்தைச் சேர்ந்த ஒரு புறா என்பதனை நோக்குக. பகுத்தறிவு மிக்க சிபியின் கொடையையும் அஃதல்லாத ஒரு புறாவின் கொடையையும் எண்ணிப்பார்க்கும்போது, புறாவின் கொடையே, வேதப்பொருளைக் காட்டிலும் விழுமிது ஆகும் என்று கூறும் கவிஞனின் மனத்தின் நெகிழ்ச்சி நம்மையும் நெகிழ வைப்பது உணர்க.

Koviloor Digital Library

110. "போதகம் ஒன்று, கன்றி இடங்கர் மாப்பொருத போரின்
'ஆதி அம்பரமே! யான் உன் அபயம்' என்று, அழைத்த அந்நாள்,
வேதமும் முடிவு காணா மெய்ப்பொருள் வெளிவந்து எய்தி,
மாதுயர் துடைத்த வார்த்தை, மறப்பரோ மறப்பிலாதார்?" (6557)

(போதகம்-இளம் யானைக்கன்று; இடங்கர்-முதலை; கன்றி-கோபித்து; மாதுயர்-பெருந்துன்பம்; துடைத்து-போக்கி; வார்த்தை-வரலாறு; மா-விலங்கு; எய்தி-எழுந்தருளி)

''தாமரைப் பொய்கையில் கஜேந்திரன் என்ற ஒரு இளம்யானைக் கன்றின் காலைப் பிடித்து இழுத்து அதனுடன் மிக்க கோபம் கொண்டு போர்செய்தது ஒரு பெரிய முதலை. அந்த யானை எவ்வளவோ முயன்று பார்த்தும் வெளிவர இயலாததால் தளர்ச்சியடைந்து, எல்லாம் வல்ல எம்பெருமானை நினைத்து ''ஆதிமூலமாய் உள்ள பரம்பொருளே! நான் உன் அடைக்கலம், என்னைக் காப்பாற்று!'' என்று உரக்கக் கூக்குரலிட்டு அழைத்தது. அதனைக் கேட்ட அப்பொழுதே, வேதங்களாலும் இதுதான் முடிவு என்று வரையறுத்துக் கூறமுடியாத இயல்பினனான மெய்ப்பொருள்-பரம்பொருளான திருமால் மிக விரைவாக அந்த யானை இருக்குமிடம் வந்து நேரே எழுந்தருளி, அந்த யானையை முதலையின் பிடியிலிருந்து விலக்கிக் காப்பாற்றி, அதனுடைய துயரத்தைப் போக்கி, அது தன்னையே நம்பி அழைத்ததால் அதற்கு வீடுபேறு அளித்த வரலாற்றை, மறப்பது என்ற இயல்பே இல்லாத அறிஞர்களும் அடியவர்களும் மறந்துவிடுவார்களோ? மாட்டார்கள் அல்லவா?'' என்கிறான் இராமபிரான்.

அந்தப் பரம்பொருளே ஒரு விலங்கான யானைக்கு அடைக்கலம் தந்து காத்து அருளினான் என்றால், நாம் இந்த வீடணனுக்கு அடைக்கலம் தாராமல் இருக்கலாமா? என்று கேட்கிறான் இராமபிரான் என்க. இந்த வரலாறு கம்பரால் எல்லாக் காண்டங்களிலும் பேசப்படுகிறது என்பதை நினைவிற் கொள்க.'மீனவர் பொய்கை நாண்மலர் கொய்வான் வேட்கை யினோடு சென்று இழிந்தகான்அமர்வேழம்கையெடுத்து அலற, கராஅதன் காலினைக் கதுவ, ஆனையின் துயரம்தீரப் புள் ஊர்ந்து சென்று நின்று ஆழி தொட்டானை' என்பது பெரிய திருமொழி. அடைக்கலப்பொருளின் சிறுமை, பெருமை பாராது, அவற்றைக் காப்பதே முறைமையாகும் என்கிறான் இராமபிரான்.

111. "மன்னுயிர் எல்லாம் தானே வருவித்து வளர்க்கும் மாயன்,
தன் அன உலகமெல்லாம் தருமமும் எவையும் தானே
என்னினும், அடைந்தோர் தம்மை ஏமுற இனிதின் ஓம்பி,
பின்னும் வீடு அளிக்கும் என்றால், பிறிது ஒரு சான்றும் உண்டோ?"
(6558)

Koviloor Digital Library

(மன்-நிலைபெற்ற; வருவித்து-படைத்து/உண்டாக்கி/தோற்று வித்து; வளர்த்தல்-காப்பாற்றுதல்; ஏம்-இன்பம்; ஓம்புதல்-பாதுகாத்தல்; வீடு-முக்தி/மோட்சம்; பிறிது-வேறு; அடைந்தோர்-சரணடைந்தோர்; மாயன்-திருமால்)

''உலகத்தில் நிலைபெற்று வாழும் உயிரினங்களை யெல்லாம் தானே தோற்றுவித்து, அவற்றை நன்கு காத்துவருபவனான திருமால், இவ்வுலக மெல்லாம் தன்னுடையதே என்றாலும், இங்கு நிகழும் தருமங்கள், அவற்றின் பயன்கள், மற்ற எல்லாமும் தானே என்றாலும், தன்னாலேதான் உலகம் இயக்கப்படுகிறது என்றாலும், தன்னை வந்து சரண் அடைந்த வர்களையெல்லாம் அவர்கள் இன்பமுடன் இருக்க அவர்களை நன்கு பாதுகாப்பதோடு அல்லாமல், அவர்களுக்கு மறுமையில் வீடுபேறும் அளிப்பான் என்றால், நம்மைச் சரண் அடைந்தவர்களை நாம் நம் உயிர்கொடுத்தாவது பாதுகாக்கவேண்டும் என்பதற்கு இதைவிட வேறுஒரு சான்றும் வேண்டுமோ?'' என்று கேட்கிறான் இராமபிரான்.

உலகமும், உலகத்திலுள்ள தருமங்களும், அவற்றின் பயன்களும் எல்லாம் தானேயாகி விளங்குபவன் இறைவன் என்பது கருத்து. 'சரண மாகும் தன்தாள் அடைந்தோர்க்கு எல்லாம் மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்' என்பது நம்மாழ்வார் பாசுரம். திருமாலே படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலையும் செய்பவன் என்பது வைணவக் கொள்கை. சிவபெருமானே இம் முத்தொழிலையும் செய்பவன் என்பது சைவசமயக் கொள்கை. 'சர்வம் விஷ்ணுமயம் ஜகத்' என்பதும் 'சர்வேஸ்வரன்' என்பதும் இங்கு நினைக்கத்தகும். 'சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடனாதல் சார்ந்தாரைக் காத்தும் சலம் இலனாய், சார்ந்து, அடியார் தாம் தானாகச் செய்து பிறர் தங்கள் வினைதான் கொடுத்தல் ஆய்ந்தார் முன்செய் வினையும் ஆங்கு' என்பது சிவஞான போதம்.

112. ''நஞ்சினை மிடற்று வைத்த, நகை மழுவாளன், நாளும்
தஞ்சு'' என, முன்னம், தானே தாதைபால் கொடுத்து, ''சாதல்
அஞ்சினேன், அபயம்'' என்ற அந்தணற்குஆகி, அந்நாள்
வெஞ்சினக் கூற்றை மாற்றும் மேன்மையின் மேன்மை உண்டோ?''
(6559)

(மிடறு-கண்டம்/கழுத்து; நகை-ஒளி; தஞ்சு-எளிமை/சிறிது/குறைவு; தாதை-தந்தை; மாற்றுதல்-போரிடுதல்; மழுவாளன்-மழுப் படையேந்திய சிவபெருமான்; நாள்-ஆயுள்காலம்/வாழ்நாள்; வைத்த-நிறுத்திய)

''தேவர்களும்அசுரர்களும் பாற்கடலைக்கடைந்தபோது, அதனின்றும் வெளிப்பட்ட நஞ்சினைக் கண்டு தேவர்களெல்லாம் அஞ்சி ஓடிப்போக, அதனைத் தன் கையில் எடுத்துத்தானே அருந்தி, அதனைத் தன்

Koviloor Digital Library

கண்டத்திலேயே நிறுத்திக்கொண்ட நஞ்சுண்டகண்டனும், ஒளி பொருந்திய மழுப்படையைக் கையிலேந்தியவனுமான சிவபெருமான், தன்னை வேண்டிவிரும்பித் தவம்செய்த மிருகண்டு முனிவர்க்கு, ஆயுள்காலம் குறைவாக உள்ள ஒரு மகவைக் கொடுத்து அதன்பின்னர், அம்மகவு குறிப்பிட்ட காலம் வந்தவுடன், 'இறைவா இந்தச் சிறுவயதில் சாவதற்கு அஞ்சுகிறேன், நான் உன் அடைக்கலம், என்னைக் காப்பற்று!'' என்று அவன் திருவடிகளில் வீழ்ந்தபோது, அந்தச் சான்றோனுக்காக உதவி செய்யும் பொருட்டு, அப்பொழுது அச்சிறுவனின் உயிரைப் பறிக்கவந்த கொடிய இயமனின் ஆற்றலைத் தோல்வியுறச்செய்து, அவனைத் தன் காலால் எட்டி உதைத்து அப்புறப்படுத்திய மேலான செய்கையைக் காட்டிலும் மேலான சான்று வேறு ஏதும் இருக்கிறதா?'' என்று கேட்கிறான் இராமபிரான்.

இங்கே பேசப்பட்டிருக்கின்ற மார்க்கண்டேயன் வரலாறு நாம் அனைவரும் அறிந்ததே. 'மாற்றும் மேன்மை' என்பதற்கு, முன்பு குறைத்துத் தந்த பதினாறு ஆண்டு என்ற வாழ்நாளை மாற்றி, இப்பொழுது என்றும் பதினாறாக இளமையுடனே இருப்பாயாக என்று அருளிய மேன்மை என்று பொருள் கூறுவது இன்னும் சிறக்கும். சிவபெருமான் நஞ்சுண்ட நிகழ்ச்சியும் இக்காப்பியத்தில் பல இடங்களில் குறிப்பிடப் படுவதைக் காணலாம். 'வேயுறு தோளிபங்கன், விடமுண்டகண்டன்' என்பது கோளறுபதிகம். 'அந்தணாளன் உன் அடைக்கலம் புகுத, அவனைக் காப்பது காரணமாக, வந்த காலன் தன் ஆர் உயிர் அதனை வவ்வினாய்க்கு, உன்தன் வண்மை கண்டு அடியேன்' என்பது தேவாரம். 'மார்கண்டற்காக, மறலிபட்ட பாட்டை உன்னிப்பார்க்கின், அன்பர்க்குப் பயம்உண்டோ பராபரமே' என்பது தாயுமானவரின் பராபரக்கண்ணி. 'தஞ்சக்கிளவி எண்மைப் பொருட்டே' என்பது தொல்காப்பியம். எனவே இங்கே 'தஞ்சு' என்ற சொல்லுக்கு எளிது, சிறிது, குறைவு என்று பொருள் கூறப்பட்டது.

'மிருகண்டு முனிவர் பிள்ளைப் பேற்றுக்காகச் சிவபெருமானை நோக்கித் தவம் செய்தார். அவர் தவத்திற்கு இரங்கி சிவபெருமான் 'நூறு வயது வரைவாழும் ஒழுக்கமற்ற ஒருமகவு. வேண்டுமா? நல்லொழுக் கத்தின் மறுவடிவாகப் பதினாறு வயதே வாழும் ஒரு மகவு வேண்டுமா? இரண்டில் ஏதாவதொன்றைக் கேள்' என, முனிவர் நல் ஒழுக்கம் உள்ள பதினாறு வயதுவரை வாழும் மகவே வேண்டுமெனக் கேட்டான். இறைவனும் மனம்மகிழ்ந்து வரம் தந்தான். மகவு பிறந்தது, மார்க்கண்டேயன் எனப் பெயரிட்டனர். பதினைந்து ஆண்டுகள் முடிந்தன. பதினாறாம் ஆண்டு தொடக்கத்திலிருந்தே பெற்றோர்க்குப் பயம் கவ்விக் கொண்டது. இதனையறிந்த மார்க்கண்டன் தானே இறைவனிடம் வேண்டி மரணமிலாப் பெருவாழ்வு பெறுவேன் என்று கூறி எல்லா சிவத்தலங்களுக்கும் சென்று உருகிவேண்டினான். திருக்கடையூர் வரும்பொழுது அவனுக்குப் பதினாறு வயது நிரம்பியது. இங்கே

Koviloor Digital Library

சிவபெருமானைத் தஞ்சம் அடைந்து சிவலிங்கத்தைத் தழுவிக்கொண்டு அழுது அரற்றினான். எம தூதர்கள் அவனை இழுக்க முடியாதுபோக, இயமனே நேரில் வந்து பாசக்கயிற்றை வீசினான். பாசக்கயிற்றுடன், மார்க்கண்டேயன் தழுவியிருந்த சிவலிங்கமும் சேர்த்துக் கட்டப்பட்டது. கொதித்தெழுந்த சிவபெருமான் இயமனைத் தன் காலால் எட்டி உதைத்து விரட்டி மார்க்கண்டேயனுக்குத் தான் முன்பு அளித்த வரத்தையே சற்று மாற்றி 'என்றும் பதினாறாய் வாழ்க என்று வாழ்த்தி வரம் அருளி மறைந்தான்' என்ற இந்த வரலாறு சுந்தரகாண்டத்தில் இன்னும் விரிவாகப் பேசப்பட்டிருக்கிறது. அனைவரும் படித்து இன்புறவேண்டிய பகுதி இது என்பதால் மீண்டும் விளக்கப்பட்டது.

113. "சரண் எனக்கு யார்கொல்? என்று. சானகி அழுது சாம்ப
'அரண் உனக்கு ஆவென், வஞ்சி! அஞ்சல்!" என்று அருளின் எய்தி,
முரணுடைக் கொடியோன் கொல்ல, மொய்அமர் முடித்து, தெய்வ
மரணம் என்தாதை பெற்றது, என்வயின் வழக்கு அன்று ஆமோ?" (6560)

(சாம்ப-சோர்ந்துபோக/பொலிவழிந்து ஒடுங்க; முரண்-வலிமை/மாறுபாடு; மொய்-நெருங்கிய; அமர்-போர்; தாதை-தந்தை/இங்கே சடாயு; வயின்-இடம்; வழக்கு-முறைமை; அரண்-பாதுகாவல்)

''இராவணன் வஞ்சனையால் சீதாதேவியை வான்வழியே அபகரித்துக் கொண்டு சென்ற பொழுது சீதாதேவி 'எனக்கு அடைக்கலம் தருபவர் ஒருவரும் இல்லையோ? என்னைக் காப்பாற்றுபவர் யாரும் உண்டோ? என்று புலம்பிப் பொலிவு ஒடுங்கிச் சோர்ந்துபோக, அப்போது எனக்குத் தந்தை போன்றவனான சடாயு அவள் அரற்றுதலைக்கேட்டு, தானே நேரில் வந்து, ''வஞ்சிக்கொடி போன்றவளே! பயப்படாதே! நான் உனக்குப் பாதுகாவலாக இருப்பேன்' என்று கருணைமிகக் கொண்டு கூறி, அங்கு வந்த அறத்தினின்றும் மாறுபட்டவனும், மிக்க வலிமையுடையவனும் கொடியவனுமான அரக்கன் இராவணன் அவனைத் தன் வாளாயுதத்தால் வெட்ட, இருப்பினும் தன்னால் முடிந்த மட்டும் அவனை எதிர்த்து நெருங்கிப் போர்செய்து முடித்து, தெய்வத்தன்மை பொருந்திய மரணம் உற்றது. எனக்கு மட்டும் முறைமையற்றதாகிவிடுமா!'' என்று கேட்கிறான் இராமபிரான்.

சனகன் மகள் சானகி என்பது தத்திதாந்தப் பெயர். சடாயுவைப் 'பெரிய உடையார்' என்று வைணவர் போற்றுவர். ஒரு பறவையினமாயிருந்தும், தன் உயிரையும் பொருட்படுத்தாது ஒரு பேரரக்கனுடன் போர் செய்து மடிந்தமையால் சடாயுவின் மரணம் வீரமரணம், தெய்வீகமரணம் எனக் கூறப்பட்டது என்க. இவனது வரலாறு நாம் ஆரண்யகாண்டத்தில் விரிவாகக் கண்டதே. இவன் கழுகினத் தலைவன்; அருணன் புதல்வன்; சம்பாதியின் தம்பி; தசரதனுக்கு இன்னுயிர்த் துணைவன்; இவன் வரலாறு புள்ளிருக்குவேளூர் தேவாரத்திலும் விரிவாகப் பேசப்பட்டிருக்கிறது.

Koviloor Digital Library

சீதை தானாகச் சென்று சடாயுவிடம் நான் உன் அடைக்கலம் என்று வேண்டிக் கொள்ளாதபோதும், தானே அருள்கொண்டு அவளைக் காக்கும் பொருட்டுத் தன் உயிரையும் இழந்த சடாயு என் தந்தைமுறை போன்றவன் அவ்வாறு செய்திருக்க, நான்மட்டும் முறைமை மாறிச் செய்யமுடியுமோ? அந்த முறைமை எனக்கும் பொருந்தும்தானே? எனவே என்னைச் சரணடைய வந்திருக்கும் வீடணனைக் காப்பதே எனக்கு முறைமையும் கடமையும்ஆகும்என்று உறுதிபடக்கூறுகிறான்இராமபிரான். இது எங்கள் குலப்பண்பு என்பது கருத்து. என் தந்தைக்குரிய பண்பு எனக்கும் வருதல் முறைமைதானே-இயல்புதானே என்கிறான் என்பதாம்.

114. "உய்ய "நிற்கு அபயம்!" என்றான் உயிரைத் தன் உயிரின் ஓம்பாக்
கய்யனும், ஒருவன் செய்த உதவியில் கருத்திலானும்,
மய்அற, நெறியின் நோக்கி, மாமறை நெறியில் நின்ற
மெய்யினைப் பொய் என்றானும், மீள்கிலா நரகில் வீழ்வார்." (6561)

(உய்ய-கடைத்தேற/பிழைக்க; ஓம்புதல்-பாதுகாத்தல்; கையன்-கய்யன்/கீழ்மகன்/வஞ்சகன்; மய்-மை/குற்றம்; நோக்கி-ஆராய்ந்து பார்த்து; மாமறை-சிறந்த பெரிய வேதம்; நின்ற-நிலைபெற்ற; மெய்-மெய்ப்பொருள்/பரம்பொருள்/கடவுள்/தத்துவப்பொருள்)

''நான் பிழைத்துக் கடைத்தேற, நின்னைச் சரண் புகுந்தேன்'' என்று நம்மைச் சரணடைந்த ஒருவனின் உயிரைத் தன்னுயிர் போலக்கருதி பாதுகாக்காத வஞ்சக எண்ணமுடைய கீழ்மகனும், ஒருவன் காலத்தால் செய்த உதவியைத் தன் மனத்திற்கொள்ளாது மறந்துபோகும் செய்ந்நன்றி கொன்றவனும், குற்றம் அற ஆராய்ந்து கூறப்பட்ட சிறந்த உயர்ந்த வேதங்களில் கூறிய நெறிப்படி நிலைத்து நிற்கின்ற மெய்ப்பொருளான கடவுள் இருப்பது பொய் என்று இகழ்ந்து வாதிடும் நாத்திகனும், என்றும் மீளமுடியாத நகரத்திற் சென்று வீழ்வர்'' என்கிறான் இராமபிரான்.

சரணாகதியை நிராகரித்தவனும், செய்ந்நன்றி கொன்றவனும், நாத்திகனும், நரகிற்புகுவர் என்பது கருத்து. மை அற' என்பது எதுகை நோக்கி 'மய் அற' எனப்பட்டது. 'அட்டு உயிர் உடலம் தின்றான், அமைச்சனாய் அரசு கொன்றான், குட்ட நோய் நரகம் தன்னில் குளிப்பவர் இவர்கள் கண்டாய்' என்பது சான்றோர் வாக்கு. 'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை செய்ந்நன்றி கொன்றமகற்கு' என்பது குறள்-*110*. 'உலகத்தார் உண்டென்பது இல் என்பான், வையத்து அலகையா வைக்கப்படும்' என்பதும் குறள்-*850*. 'மாமறைநெறி' என்பது இன்றைய சமரசசுத்த சன்மார்க்கத்தைக் குறிக்கும் எனக் கொள்ளுதல் சிறக்கும். 'ஆன்முலை அறுத்த அறன் இலோர்க்கும், மாண் இழை மகளிர் கருச் சிதைத்தோர்க்கும், பார்ப்பார்த் தப்பிய கொடுமையோர்க்கும், வழுவாய் மருங்கில் கழுவாயும் உள என, நிலம் புடைபெயர்வதாயினும் செய்தி கொன்றோர்க்கு உய்தீ இல் என அறம்பாடிற்றே ஆயிழை கணவ' என்பது

Koviloor Digital Library

புறநானூறு. செய்தி-செய்ந்நன்றி, 'மை' என்ற சொல்லுக்குக் கருமை, குற்றம் என்ற பொருள்கள் உண்டு. இவை ஐயம், திரிபு, அறியாமையால் விளையும் குற்றங்களைக் குறிக்கும்.

115. "சீதையைக் குறித்ததேயோ, 'தேவரைத் தீமை செய்த
பேதையைக் கொல்வேன்' என்று பேணிய விரதப் பெற்றி?
வேதியர் 'அபயம்' என்றார்க்கு, அன்று நான் விரித்துச் சொன்ன
காதையைக் குறித்து நின்ற அவ்வுரை கடக்கல் ஆமோ?" (6562)

(பேதை-அறிவிலி; பேணி-விரும்பி; பெற்றி-தன்மை; வேதியர்-முனிவர்கள்; காதை-செய்தி; உரை-சொல்; கடக்கல்-மீறுதல்; விரதம்-சூளுரை/சபதம்)

''தேவர்களுக்கெல்லாம் தன் வலிமையால் தீங்கு இழைத்துத் துன்புறுத்திக் கொண்டிருந்த அறிவிலியாகிய அரக்கன் இராவணனை நான் கொல்லுவேன் என்று நானே விரும்பி ஏற்றுக்கொண்ட சபதம், பின்னாளில் என்னுடைய மனைவி சீதையை அவன் கவர்ந்து செல்வான், அதற்காக அவனைக் கொல்லுவேன் என்பது குறித்தா சொல்லப்பட்டது? இல்லையல்லவா? தண்டகாரண்யத்து முனிவர்கள் வந்து என்னைத் தஞ்சம் அடைந்து தம்மைக் காப்பாற்ற வேண்டும் என்று வேண்டியவர்களுக்காக சீதை, கவரப்படுவதற்கு முன்பே நான் விவரித்துச் சொன்ன அந்தச் செய்தியையும், சபதத்தையும் நானே மீறிச் செயலாற்றலாமோ? ஆகாதல்லவா?'' என்று கேட்கிறான் இராமபிரான்.

இராமபிரான் இராவணனைக் கொல்லுவேன் என்று தண்டகாரண்ய முனிவர்களிடம் சபதம் செய்தது, இராவணன் சீதையைக் கவர்ந்து செல்வதற்கு முன்னால் நடந்த நிகழ்ச்சி. எனவே, தான் சபதம் செய்தது சீதையைக் குறித்து அன்று என்றும், அவ்வாறு நான்செய்த சபதத்தை நானே மீறலாமோ? என்றும் கேட்கிறான் இராமபிரான் என்பதாம். இராமபிரான் முனிவர்களிடம் சூளுரைத்தது சீதாதேவியோடு உடன் வாழ்ந்த காலத்தில் நிகழ்ந்தது, நாம் ஆரண்யகாண்டத்தில் கண்ட ஆறுபாடல்களையும் இங்கு நினைவு கூர்தல் தகும்.

116. "காரியம் ஆக! அன்றே ஆகுக! கருணையோர்க்குச்
சீரிய தன்மை நோக்கின், இதனின்மேல் சிறந்தது உண்டோ?
பூரியரேனும், தம்மைப் புகல் புகுந்தோர்க்குப் பொன்றா
ஆருயிர் கொடுத்துக் காத்தார், எண்இலா அரசர் அம்மா!" (6563)

(ஆதல்-நிறைவேறுதல்; சீரிய-சிறப்பான; எண்இலா-கணக்கற்ற/அளவற்ற; பூரியர்-கீழ்மக்கள்/அற்பமானவர்கள்; பொன்றா-அழிவில்லாத; காரியம்-கருதிய செயல்; ஆர்உயிர்-அருமையான உயிர்)

Koviloor Digital Library

''நாம் நம் மனத்தில் கருதிய செயல் நிறைவேறட்டும்; அல்லது நிறைவேறாமல் போகட்டும்; கருணை உள்ளம் கொண்டவர்களின் சிறப்பான தன்மையை ஆராய்ந்து பார்த்தால், தாம் சொன்ன சொல்லாகிய சரண் அடைந்தவரைக் காப்பேன் என்று சொல்லிய சொல்லைக் காப்பாற்றுவதைத் தவிர அதற்குமேல் சிறந்தது மேலானது வேறு எதுவும் இருக்கிறதா? தம்மைச் சரணடைந்தவர்கள் தம்மைக் காட்டிலும், கீழான மக்கள் என்றாலும், தகுதி பார்க்காது இவ்வுலகில் நம் குலத்தில் பிறந்த கணக்கற்ற அரசர்கள் தமது அழிவில்லாத, அருமையான உயிரைக் கொடுத்தாவது தம்மைச் சரணடைந்தவர்களைக் காப்பாற்றிய்ருக் கிறார்கள்'' என்கிறான் இராமபிரான்.

'அம்மா' என்பது இங்கே வியப்புக்குறித்த இடைச்சொல். நாம் மேற்கொண்ட காரியம் நிறைவேறினாலும், நிறைவேறாவிட்டாலும், தம்மை வந்து சரணடைந்தவர்களைக் காப்பாற்றி அவர்கள் எவ்வளவு கீழோராயிருந்தாலும், தகுதி, குணம், குற்றம் பாராது அவருக்காகத் தங்களது ஆருயிரையும் ஈந்தவர்கள் இவ்வுலகில் மிகப்பலபேர் உண்டு. என்று கூறுகிறான் இராமபிரான் என்பதாம். 'பூரியர்' என்பது கீழ்மக்கள் என்ற பொருளைத்தரும். 'வரைவிலா மாண்இழையார் மென்தோள் புரையிலாப் பூரியர்கள் ஆழும் அளறு' என்பது குறள்-919. 'பொருட் செல்வம் பூரியார் கண்ணும் உள' என்பதும் குறள்-241.

117. வீடணனை அழைத்துவரும்படி சுக்கிரீவனிடம் கூறுதல்

''ஆதலால், அபயம்! என்ற பொழுதத்தே, அபயதானம்
ஈதலே கடப்பாடு என்பது; இயம்பினீர் என்பால் வைத்த
காதலான்; இனிவேறு எண்ணக் கடவது என்? கதிரோன் மைந்த!
கோது இலாதவனை, நீயே என்வயின் கொணர்தி'' என்றான். (6564)

(பொழுதத்தே-அப்பொழுதே; கடப்பாடு-கடமை; காதல்-பேரன்பு; கதிரோன்-சூரியன்; கோது-குற்றம்; கொணர்தல்-அழைத்துவருதல்)

எனவே ''நம்மிடம் அபயம் என்று அந்த வீடணன் வந்த அப்பொழுதே அவனுக்கு அபயதானம் கொடுத்தலே நமது கடமை என்றாலும், என்பால் கொண்டுள்ள பேரன்பினால் நீங்கள் அவனை ஏற்கலாகாது என்று கூறினீர்கள் என்பதை நான் நன்கு உணர்வேன். இப்போது இதற்குமேல் மாறாக ஆலோசிக்க என்ன இருக்கிறது? ஆதலால் சூரியன் மைந்தனான சுக்கிரீவனே! நீயே சென்று, அந்தக் குற்றமில்லாத வீடணனை என்னிடம் அழைத்து வருவாயாக!'' என்கிறான் இராமபிரான்.

அவர்கள் வீடணனை ஏற்கக்கூடாது என்று மறுத்துக் கூறியதுகூடத் தன்பால் அவர்கள் கொண்ட பேரன்பினாலும், தம் தலைவனுக்கு வேறொருவனால் எந்தத் தீங்கும் ஏற்பட்டு விடக்கூடாதே என்ற நல்லெண்ணத்தினாலும்தான் என்று இராமபிரான் அவர்கள் மனம்

Koviloor Digital Library

புண்படாதவாறு நயமாகப் பேசி அவர்களை இணங்க வைத்த பாங்கை நோக்குக. அவர்கள் எண்ணிய, சொன்ன குற்றங்கள் ஒன்றும் வீடணனிடம் இல்லை என்பதைக் 'கோதிலான்' என்ற ஒரே சொல்லால் கூறி அவர்களை அமைதிப்படுத்திய திறன் நோக்குக. 'நீயே' என்பதில் ஏகாரம் பிரிநிலை. காரணம் வானரச் சேனைகளுக்கெல்லாம் மன்னன் சுக்கிரீவன்தான், எனவே அவன் சென்று அழைத்து வருதலே சாலப்பொருந்தும் எனவே 'நீயே' என்வயின் கொணர்தி! என்றான் என்க. வீடணனை ஏற்கக்கூடாது என்று காரணகாரியங்களுடன் முதன்முதலில் எதிர்த்த சுக்கிரீவனைக் கொண்டே வீடணனை அழைத்துவருமாறு கேட்டுக்கொண்ட இராம பிரானின் மதி நுட்பம் உணர்க.

118. சுக்கிரீவன் செல்லுதல்

ஐயுறவு எல்லாம் தீரும் அளவையாய் அமைந்தது, அன்றே;
தெய்வநாயகனது உள்ளம் தேறிய அடைவே தேறி,
கைபுகற்கு அமைவதானான் 'கடிதினின் கொணர்வல்' என்னா,
மெய்யினுக்கு உறையுள் ஆன ஒருவன்பால் விரைவில் சென்றான்.
(6565)

(தேறிய-தெளிந்த; அடைவு-முறை; ஐயுறவு-சந்தேகம்; அளவை-பிரமாணம்; கைபுகுதல்-அடைக்கலம் புகுதல்; அமைவது-உடன்பட்டது; கடிதினின்-விரைவில்; மெய்-உண்மை; உறையுள்-இருப்பிடம்/நிலைக் களன்; தெய்வநாயகன்-தேவாதி தேவன்/இராமபிரான்)

''தெய்வங்களுக்கெல்லாம் தலைவனான, தேவாதிதேவன் இராம பிரான், உள்ளம் மிகத் தெளிவடைந்து, தீர்மானித்த பிரமாணம்தான் சரியான முறையாகும் என்று சுக்கிரீவன் தானும் தெளிவடைந்து, முன்பு தான் கொண்டிருந்த சந்தேகங்கள் அனைத்தும் தீர்ந்துபோகும் வண்ணம் மனத்தைத் தெளிவாக்கிக் கொண்டு, இராமபிரான் கூறியதான, வீடணன் ஏற்றுக்கொள்ளத் தக்கவன் என்ற முடிவிற்கு உடன்பட்டு 'இப்பொழுதே விரைவில் சென்று வீடணனை இங்கு அழைத்து வருகிறேன்' என்று கூறி, உண்மைக்கும் சத்தியத்திற்கும் இருப்பிடமான, ஒப்பற்ற வீடணன் இருக்கும் இடம் நோக்கி வேகமாகச் சென்றான்.

'மெய்யினுக்கு உறையுள்' என்றது வீடணனை; இங்கே 'கடிதின்' என்றது அவனது மனோவேகத்தையும், 'விரைவின்' என்றது அவனது நடைவேகத்தையும் புலப்படுத்தியது எனக் கொள்க. தெய்வ நாயகனே உள்ளம் தெளிவுற்றுக் கூறிய பின்னர் தான் சந்தேகம் கொள்வதற்கு இடம் ஏதும் இல்லை என்று நன்கு தெளிந்தான் சுக்கிரீவன் என்பதாம்.

Koviloor Digital Library

119. வீடணன் சுக்கிரீவன் முன்பாகச் செல்லுதல்

வருகின்ற கவியின் வேந்தை, மயிந்தனுக்கு இளைய வள்ளல்
'தருக' என்றான்; அதனால் உன்னை எதிர்கொளற்கு அருக்கன் தந்த
இருகுன்றம் அனைய தோளான் எய்தினன்' என்னலோடும்;
திரிகின்ற உள்ளத்தானும், அகம் மலர்ந்து, அவன்முன் சென்றான்.
(6566)

(கவியின்வேந்து-சுக்கிரீவன்; தருக-அழைத்து வருக; அருக்கன்-சூரியன்; தந்த-பெற்றெடுத்த; அனைய-போன்ற; திரிகின்ற-ஊசலாடு கின்ற/அலைகின்ற; அகம்-மனம்; முன்-எதிரில்; குன்றம்-மலைகள்; எதிர்கொளல்-சந்திப்பது/முன்னே செல்லுதல்; மலர்ந்து-மகிழ்ந்து)

''தன்னை நோக்கி வருகின்ற வானரச்சேனையின் தலைவனான சுக்கிரீவனை மயிந்தனின் தம்பியான துமிந்தன் கண்ணுற்றான். பார்த்து வள்ளலாகிய இராமபிரான் உன்னை அழைத்துவரச் சொல்லியிருக்கிறான் போலும், அதனால் உன்னைச் சந்திப்பதற்காக, சூரியன் பெற்றெடுத்த புதல்வனானவனும், இரண்டு மலைகள் போன்று திரண்ட தோள்களை யுடையவனுமான சுக்கிரீவன் இங்கு வந்து கொண்டிருக்கிறான் என்று வீடணனிடம் சொன்னான். உடனே, தன்னை இராமபிரான் அடைக் கலமாக ஏற்றுக்கொள்ளுவாரோ, மாட்டாரோ என்று ஊசலாடுகின்ற உள்ளத்தை உடைய வீடணன், அவ்வையம் நீங்கி மனம் மகிழ்ந்து, சுக்கிரீவன் எதிரில் தானே சென்றான்.

'கவியின் வேந்து'-சுக்கிரீவன்; மயிந்தனுக்கு இளையவன்-துமிந்தன்; வள்ளல்-இராமபிரான்; அருக்கன் தந்த இருகுன்றம் அனைய தோளான்-சுக்கிரீவன்; திரிகின்ற உள்ளத்தான்-வீடணன்; 'தருகஎன்றான்' என்பது தருகென்றான் எனக்குறைந்தது. வானரச் சேனைக்கு வேந்தன் சுக்கிரீவன்; இராமபிரானின் துணையாய் நிற்கும் பெருமைபெற்றவன் சுக்கிரீவன்; இப்பொழுது இராமபிரான் ஆணையால் வருகின்றவன் சுக்கிரீவன்; எனவே இப்பொழுது தானே அவனைப் போய்ப் பார்த்தலே முறை என்று உணர்ந்த வீடணன், தானே சுக்கிரீவன் முன்சென்றான் என்று கவிஞன் கூறுவது. குகனும் பரதனும் எப்படி ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ள முந்திவந்தனரோ அதை இங்கு நினைவுபடுத்துவதை உணர்க. சுக்கிரீவன் வருக என்று கூறுவதற்கு முன்பே, இராவணன் கட்டளையால் வீடணனை அழைத்துச் செல்லத்தான் சுக்கிரீவன் வருகிறான் என்பதை உய்த்துணர்ந்த துமிந்தனின் உளப்பாங்கும் அறிந்து போற்றுதற்கு உரியது காண்க.

Koviloor Digital Library

120. வீடணனும் சுக்கிரீவனும் தழுவிக்கொள்ளுதல்

''தொல்அரும் காலம் எல்லாம் பழகினும், தூயர் அல்லார்,
புல்லலர்; உள்ளம் தூயார் பொருந்துவர் எதிர்ந்த ஞான்றே;
ஒல்லை வந்து உணர்வும் ஒன்ற, இருவரும் ஒருநாள் உற்ற
எல்லியும் பகலும்போல, தழுவினர், எழுவின் தோளார்'' (6567)

(தொல்லை-பழமையான; காலம்-ஆயுட்காலம்/வாழ்நாள்; புல்லுதல்-ஒன்றுபடுதல்; ஞான்றே-அன்றே/அப்பொழுதே; எழு-தூண்; ஒல்லை-விரைந்து; ஒன்ற-ஒன்றுபட; எல்லி-இரவு)

பழமையான நீண்டநெடுங்காலமாக நெருங்கிப் பழகி வந்தவர்கள் என்றாலும், மனத்தூய்மை இல்லாதவர்கள் ஒருவருடன் ஒருவர் மனம் ஒன்றுபடமாட்டார்கள். ஆனால் மனம் தூய்மையாக உடையவர்கள், சந்தித்த அப்பொழுதே ஒருவர் உள்ளத்தோடு ஒருவர் ஒன்றிப்போய் விடுவர். இப்பொழுது இருவர் உணர்வுகளும் ஒரேபடித்தாய் எண்ண, இரும்புத்தூண் போன்ற தோள்களையுடைய வீடணனும், சுக்கிரீவனும் ஒரே நாளில் ஒரே நேரத்தில் தோன்றும் இரவும் பகலும்போல, ஒருவரை ஒருவர் தழுவிக்கொண்டனர்.

''நூற்றாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை, நீர்கொள் பாசிபோல் வேர்கொள்ளாதே; ஒரு நாள் பழகினும் பெரியோர் கேண்மை இருநிலம் பிளக்க வேர் வீழ்க்கும்மே'' என்பது வெற்றிவேற்கை. எல்லி-இரவு-வீடணன் கருமை நிறத்தவன்; பகல்-வெண்மை-சுக்கிரீவன் வெள்ளை நிறத்தவன், இரவுபோய்த்தான் பகல்வரும்; பகல்போய்த்தான் இரவு வரும்; ஆனால் இங்கே கவிஞன் 'ஒருநாள் உற்ற எல்லியும் பகலும்போல' என்கிறான். இது நடக்காது, எனவே இதை இலக்கணத்தில் 'இல்பொருள் உவமை' என்பர்-இல்லாத ஒரு பொருளை அல்லது ஒரு நிலையை உவமையாகக் கூறுவது என்பது பொருள். 'புணர்ச்சி பழகுதல் வேண்டா; உணர்ச்சிதான் நட்பாம் கிழமைதரும்' என்னும் குறள்-785 இங்கு நினைகூரத்தகும். முன்பு உள்ளம் ஒன்றியவர்கள், பின்பு உடல் ஒன்றினர் என்று கூறிய கவிஞனின் திறன் நோக்குக.

121. சுக்கிரீவன்வீடணனிடம் இராமபிரான்அடைக்கலம் தந்த செய்தி கூறுதல்

''தழுவினர் நின்ற காலை, 'தாமரைக் கண்ணன் தங்கள்
முழுமுதல் குலத்திற்கு ஏற்ற முறைமையால் உவகை மூள
வழுவல்இல் அபயம் உன்பால் வழங்கினன்; அவன் பொற்பாதம்
தொழுதியால், விரைவின்'' என்று, கதிரவன் சிறுவன் சொன்னான்.
(6568)

Koviloor Digital Library

(சிறுவன்-மகன்; முழு-சிறந்த; உவகை-மகிழ்ச்சி; வழுவல்-குற்றம்/ தவறுதல்; மூள-பெருக)

அவ்வாறு வீடணனும் சுக்கிரீவனும் ஒருவரையொருவர் தழுவிக் கொண்டு நின்றிருந்தபோது, சூரியனின் புதல்வனாகிய சுக்கிரீவன் வீடணனை நோக்கி ''செந்தாமரை போலும் அழகிய கண்களையுடைய இராமபிரான், தங்கள் சிறந்த முதன்மையான சூரியகுல வழக்கப்படி, அதற்குத் தகுந்தாற்போன்ற முறைமையில், மனம்மிக மகிழ்ச்சியுற்று, குற்றமில்லாத அபயம் உனக்குத் தந்து அருளியிருக்கிறான். எனவே அவனுடைய பொன்போன்ற அழகிய திருவடிகளை விரைவில் சென்று வணங்குவாயாக'' என்று கூறினான்.

''தங்கள் முழுமுதற் குலத்திற்கேற்ற முறைமையால்'' என்பது, இவனுடைய குலமுன்னோர்கள்அனைவரையும்உடன்படுத்திசிறப்பாக, சிபிச்சக்கரவர்த்தி ஆகியோர் தம்மை அடைந்தவரை எப்படி எந்தக் குற்றமும் இல்லாது மகிழ்ச்சியுடன் அடைக்கலம் தந்து காத்தருளினார் களோ, அவ்வாறு இராமபிரானும், பகைவனின் தம்பி என்றும் பாராது, உனக்குக் கிடைத்தற்கரிய அபயதானம் வழங்கியுள்ளார் என்று சுக்கிரீவன் கூறினான் என்பதாம். இந்த அபயதானம் 'முறைமையால்' வழங்கினான்; 'உவகைமூள' வழங்கினான்; 'வழுவல் இல்லாது வழங்கினான்; என்று அந்த அபயதானத்திற்கு எத்தனை அடைமொழிகள் பாருங்கள். இவை அவ்வளவும்இராமபிரான்வீடணனுக்குஅபயம்அளிக்கவேண்டும்என்று எவ்வளவு மனவுறுதி கொண்டிருந்தான் என்பதைப் புலப்படுத்துவதை உணர்க. 'வழுவல்இல்' என்பது என்றும் மாறாதது என்ற பொருளையும், வாக்குத்தவறாதவன் என்ற பொருளையும் தரும். இந்த இடத்தில் பொதுவாக இராமபிரானைப் பற்றிச்சொல்லும் ஒரு சொற்றொடரான 'வில் ஒன்று, சொல் ஒன்று, இல்ஒன்று'' என்ற சொற்றொடரை நினைவு கூர்வோம்.

122. வீடணன் மகிழ்தல்

சிங்கஏறு அனையான் சொன்ன வாசகம், செவிபுகாமுன்,
கங்குலின் நிறத்தினான் தன் கண் மழைத்தாரை கான்ற;
அங்கமும் மனம்அது என்னக் குளிர்ந்தது; அவ்வகத்தை மிக்குப்
பொங்கிய உவகை என்னாப் பொடித்தன உரோமப்புள்ளி. (6569)

(சிங்க ஏறு-ஆண்சிங்கம்; கங்குல்-இருள்/இருட்டு; கான்ற-சொரிந்தன; அங்கம்-உடம்பு; அகம்-உள்ளம்; மிக்கு-கடந்து; புள்ளி-புளகம்; பொடிந்த-தோன்றின; உரோமப்புள்ளி-மயிர்க்கூச்சு; வாசகம்-சொற்கள்)

''ஆண்சிங்கம் போன்றவனான அந்தச் சுக்கிரீவன் இவ்வாறு கூறிய சொற்கள் தன் காதுகளில் வந்து சேர்வதற்கு முன்பே- கேட்டவுடனே- இருள் போன்ற கரிய நிறத்தவனான வீடணன் கண்கள், மழைபோல

Koviloor Digital Library

ஆனந்தக் கண்ணீரைச் சொரியலாயின. அவனது உடம்புகூட, அவனது மனத்தைப் போலவே மிக்கக் குளிர்ச்சியடைந்தது; அந்த மனத்தைவிட அதிகமாகப் பொங்கியெழுந்த மகிழ்ச்சி வெளித்தோன்றும்படி, அவனது உடலெங்கும் மயிர்க்கூச்செறிந்தன. மிகுந்த புளகாங்கிதம் அடைந்தான்.

ஆண் சிங்கம் வலிமைக்கும், முன்பின் பார்த்துச் செல்லும் பீடு நடைக்கும் உவமிக்கப்படுவது கவிமரபு. 'ஏறுபோல் பீடுநடை' என்பது குறள்-59. இப்போது சுக்கிரீவனைச் சிங்க ஏறு என்கிறான் கவிஞன். எதிர்பாராத ஒரு மகிழ்ச்சிச் செய்தியைக் கேட்கும்போது மனம் மகிழ்ச்சியால் துள்ளுவதும், அதனால் உடம்பில் மயிர்க்கூச்செறிவதும் இயல்பே. இது உவகையின் மெய் வெளிப்பாடு. மகிழ்ச்சியால் மனம் குளிர்ந்ததால் உடலும் குளிர்ந்தது என்ற நயம் காண்க. உள்ளம் செல்லும் வழியே உடலும் செல்லும் என்னும் அரிய கருத்து அடங்கியிருப்பதை உணர்க.

123. ''பஞ்செனச் சிவக்கும் மென்கால் தேவியைப் பிரித்த பாவி
வஞ்சனுக்கு இளைய என்னை, 'வருக' என்று அருள் செய்தானோ?
தஞ்சு எனக் கருதினானோ? தாழ்சடைக் கடவுள் உண்ட
நஞ்சு எனச்சிறந்தேன் அன்றோ, நாயகன் அருளின் நாயேன்?'' (6570)

(பஞ்சு-செம்பஞ்சுக்குழம்பு; கால்-திருவடி; தஞ்சு-அடைக்கலப் பொருள்; தாழ்-தொங்குகின்ற/நீண்ட; நாயகன்-தலைவன்; பாவி-கொடியவன்/பாதகன்)

'பஞ்சு' என்று தோழியர்கள் கூறுவதற்கு முன்பே, இயற்கையிலேயே சிவந்து தோன்றும், மென்மையான திருவடிகளையுடைய தன் மனைவி சீதாதேவியை இராமபிரானிடமிருந்து பிரித்துவிட்ட பாதகனானவனும், வஞ்சகம் மிக்க கொடியவனுமான இராவணனின் இளைய தம்பி நான் என்று தெரிந்தும், என்னையும் 'வருக' என்று கூறி, அருள் பாலித்தானோ? என்னையும் ஒரு அடைக்கலப்பொருளாக ஏற்றுக்கொள்ளத் திருவுள்ளம் பற்றினானோ? என்றால் அந்த உலகநாயகனின் அருளினால் நாயினும் கீழ்ப்பட்டவனான நானும், தொங்குகின்ற நீண்ட சடாமுடியை உடைய சிவபெருமான் அன்று உண்டருளிய ஆலகாலவிஷம் போலச் சிறப்புப் பெற்றவன் ஆனேன் அல்லவா?'' என்று வியந்தும், மகிழ்ந்தும் தன்நிலை மறந்தும் பேசுகிறான் வீடணன்.

சீதாதேவியின் மென்மையான பாதங்கள் இயற்கையாகவே செந்தாமரை மலர்போல் சிவந்தன. அதற்கு மேலும் சிறப்புச்சேர்க்க வேண்டி செம்பஞ்சுக் குழம்பு ஊட்டுவது இயல்பு. ஆனால் இங்கே அவர்கள் ஊட்டக்கூட வேண்டாம் 'பஞ்சு' என்று சொன்னாலே போதும் அதைப்பொறுத்துக் கொள்ள முடியாமல் அத்திருவடிகள் மேலும் சிவந்துவிடும் என்று உயர்வு நவிற்சியில் கூறினான் எனக் கொள்க.

Koviloor Digital Library

கணவன்மனைவியைப்பிரித்ததன்அண்ணனைப் 'பாவி' என்றும் 'வஞ்சன்' என்றும் வீடணன் கூறுவதை நோக்குக. அத்தகைய கொடியவனுடைய தம்பி என்று தெரிந்திருந்தும் தன்னை வருக என்று சுக்கிரீவன் மூலம் அழைத்து அருள் செய்ததும், தன்னையும் ஒரு அடைக்கலப்பொருளாக ஏற்றுக்கொண்டதும் வீடணனுக்குப் பெருவியப்பு; அதனால் பெரு மகிழ்ச்சி அத்தனையும் அவன் சொற்களில் தொனிப்பதை உணர்க. 'நாயகன்' என்று இராமபிரானை உயர்த்தியதோடு, தன்னை நாயினும் கடையேன் என்று கூறிக்கொண்டதையும் காண்க. சிவபெருமான் உண்டதால் நஞ்சு சிறப்புப் பெறலாயிற்று, அதுபோல இராமபிரானால் அடைக்கலம் தந்து அருளப்பெற்றதால் நானும் சிறந்தவன் ஆவேன் அல்லவா? என்று மகிழ்கிறான் வீடணன் என்க. அடைக்கலம் புகுப வர்கள், தமது குற்றம் குறைகளைக் கூறிச் சரண்புகுவதே முறை. 'குற்றம் செய்யினும், குணம் எனக்கருதும் கொள்கை கண்டு, நின்குரை கழல் அடைந்தேன்' என்பது தேவாரம்.

124. "மருள்உறு மனத்தினான், என்வாய்மொழி மறுத்தான்; வானத்து
உருள்உறு தேரினானும், இலங்கைமீது ஓடும் அன்றே?
தெருள்உறு சிந்தைவந்த தேற்றம் ஈதுஆகின், செய்யும்
அருள்இது ஆயின், கெட்டேன்! பிழைப்பரோ அரக்கர் ஆனோர்?" (6571)

(தெருள்-தெளிவு; உறு-பொருந்திய; தேற்றம்-உறுதியான எண்ணம்/ தெளிவான முடிவு; மருள்-மயக்கம்; வாய்மொழி-உண்மையான சொற்கள்; உருள்உறுதல்-உருண்டு செல்லுதல்)

''நன்கு தெளிந்த சிந்தனையின்றும் தோன்றிய உறுதியான எண்ண மாகிய, என்னை அடைக்கலமாக இராமபிரான் ஏற்றுக் கொள்ளுதல் என்பது இதுவானால், அவன் என்மீது காட்டும் அன்பும் பாசமும் கலந்த அருட்பார்வை இதுவேயென்றால், காமம் நிறைந்த ஆணவ மயக்கம் கொண்டமனத்தை உடையவனான என்தமையன் இராவணன், நான் இவ்வளவு நாளும் கூறிவந்த உண்மையான அறிவுரைகளை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டான். இப்போது என்ன ஆகும்? முன்பு அவனுக்கு அஞ்சி வானத்தில் ஒதுங்கிப் போய்க் கொண்டிருந்த ஒற்றைச் சக்கரத்தை உடைய தேரைச்செலுத்திக் கொண்டு செல்லுகின்ற சூரியன், இனிமேல் அவனுக்குச் சிறிதும் அஞ்சாது இலங்கையின் நேர் மேலேயே ஓட ஆரம்பித்துவிடுவான்; அரக்கர்கள் என்று கூறப்படும் இனமே இனிமேல் பிழைத்திருக்குமோ? பிழைத்திருக்க முடியாதல்லவா?'' என்று தன் தமையன் மீதும், தன் நாட்டின்மீதும் இரக்கப்பட்டுப் புலம்புகிறான் வீடணன்.

தான் தஞ்சம் அடைந்ததுபோல், தன் தமையன் இராவணனும், சீதாதேவியை இராமபிரான்பால் ஒப்படைத்துவிட்டு, அவனைத் தஞ்சம் புகுந்திருந்தால் அவனுக்கும் அருள் பாலித்திருப்பான் இந்த இராமபிரான்

Koviloor Digital Library

என்று உறுதியாக நம்புகிறான், வீடணன் என்பது பெறப்படுகிறது. 'மருள்உறு மனத்தினன்-இராவணன்; உருள்உறுதேரினான்-சூரியன்; தெருள் உறுசிந்தையன்-இராமபிரான்-கம்பனின் சொல்லாட்சியை நோக்குக. 'வாய்மொழி' என்பது இங்கே வாய்ச்சொல் என்ற பொருளைத் தாராது. உண்மையான சொற்கள் என்று அதற்குரிய உண்மையான பொருளைத்தரும். காரணம்ஆழ்வார்கள்பாடியவை அனைத்தும் திருவாய் மொழி என்பதறிக. கெட்டேன் என்பதை ஒரு இடைச்சொல்லாகவே கொள்ளுதல் பொருந்தும். அன்றெனில் அரக்கர்களது பேரழிவை எண்ணி வீடணன் புலப்படுத்தும் இரக்கக் குறிப்புச் சொல்லாகக் கொள்ளலாம். சூரியன் இலங்கை மீது செல்லாது, ஒதுங்கியே செல்லும் என்பதைத் தேவாரம் சொல்லுகிறது கேளுங்கள். 'பகலவன் மீது இலங்காமைக் காத்தபதியோன் தன்னை, இகல் அழித்தவன் ஏத்துகோயில் இராமேச்சுரம்' என்பது இராமேஸ்வரப்பதிகம் திருஞானசம்பந்தர் தேவாரம்.

125. "தீர்வு அரும் இன்னல் தம்மைச் செய்யினும், செய்ய சிந்தைப்
பேர் அருளாளர் தம்தம் செய்கையின் பிழைப்பது உண்டோ?
கார்வரை நிறுவி, தன்னைக் கனல் எழக் கலக்கக் கண்டும்,
ஆர்கலி, அமரர் உய்ய, அமுது பண்டு அளித்தது அன்றே?" (6572)

(தீர்வு-தீர்த்தல்; இன்னல்-துன்பம்; செய்ய-செம்மையான; சிந்தை-மனம்; பிழைப்பது-தவறுவது; கார்-கரிய; வரை-மலை/மந்தரமலை; ஆர்கலி-கடல்/பாற்கடல்; பண்டு-முன்பு; நிறுவி-நாட்டி/நட்டு; தம்மை-தமக்கு)

"கரிய பெரிய மலையாகிய மந்தரமலையை மத்தாக நட்டு, அமரர் களும், அசுரர்களும் பாற்கடல் கனல் கக்கும்வரை ஆழக் கலக்கிய போதும்கூட, அந்த ஒலி நிறைந்த கடல் தன்னைத் துன்புறுத்திய அதே தேவர்கள் மரணமில்லாப் பெருவாழ்வு வாழும் வண்ணம் தேவாமிர்தத்தை முற்காலத்தில் அளித்தது அல்லவா? அதுபோல, தமக்குத் தீர்ப்பதற்கரிதான பெரிய துன்பங்களைத் தந்தாலும், செம்மையான மனப்பக்குவம் உடைய மேன்மையான பெரும் பேரருளாளர்களாகிய சான்றோர்கள், தங்களது இயல்பான அருட் குணத்திலிருந்து தவறவே மாட்டார்கள்" என்கிறான் வீடணன்.

இங்கே 'தீர்வு அரும் இன்னல்' என்பது இராமபிரானிடமிருந்து, சீதா தேவியை வஞ்சகமாய்ப் பிரித்து வந்து சிறையில் அடைத்து, இராம பிரானுக்கு இராவணன் அளித்த பெருந்துயரம் எனக் கொள்க. 'செய்ய சிந்தைப் பேரருளாளர்' என்பது கருணையே வடிவான இராமபிரானைக் குறிக்கும். பாற்கடல் கடைந்த நிகழ்ச்சி, காப்பியப் போக்கில் நாம் பல இடங்களில் கண்டதே. 'ஆர்கலி' என்பது எப்பொழுதும் ஒலித்துக் கொண்டே இருப்பதால் கடலுக்குக் காரணப்பெயர். தமக்குத் தீங்கு செய்தாலும் தேவர்களுக்கு அமுதம் அளித்தது பாற்கடல். அதுபோல

Koviloor Digital Library

அரக்கர்கள் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும், இராவணன் இராம பிரானுக்கும் எவ்வளவு தீராத தீங்கு இழைத்தாலும், இராமபிரான் தன் அருள் தன்மையினின்றும் ஒருக்காலும் நீங்காத பேரருளாளன் என்று புகழ்கிறான் வீடணன் என்க. 'இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால் என்ன பயத்ததோ சால்பு' என்பது குறள்-987. பாற்கடலுக்கு இராமபிரான் உவமை, 'கனல் எழக் கலக்கக் கண்ட ஆர்கலிக்கு' 'அகழ் வாரைத் தாங்கும் நிலத்தை' உவமை கூறலாமல்லவா? பாற்கடல்- இராமபிரான்; தேவாசுரர்-இராவணன்; அமிழ்தம்-இராமபிரான் வீடணனுக்கு அளித்த அடைக்கலம்; இப்பாடல் எடுத்துக்காட்டு உவமையணியின் பாற்படும்.

126. "துறவியின் உறவு பூண்ட தூயவர் துணைவன் என்னை,
உறஉவந்து அருளி, மீளா அடைக்கலம் உதவினானே!
அறவினை இறையும் இல்லா, அறிவுஇலா, அரக்கன் என்னும்
பிறவியின் பெயர்ந்தேன்; பின்னும், நரகினின் பிழைப்பதானேன்" (6573)

(பூண்ட-மேற்கொண்டுள்ள; மீளா-கைவிடாத; வினை-செயல்; இறையும்-சிறிதும்; அறிவு-ஞானம்; பெயர்தல்-மாறுதல்/நீங்குதல்; பிழைப்பது-தப்பிப்பது; உற-மிகவும்)

''துறவறம் மேற்கொண்ட முனிவர்கள், ரிஷிகள் ஆகிய தூயவர்களின் தோன்றாத் துணையாக இருப்பவனாகிய இராமபிரானே, இராவணன் தம்பியாகிய என்னிடம் மிக மகிழ்ந்து அருள்பாலித்து, என்றும் கைவிடுதல் இல்லாத அடைக்கலம் தந்தருளினான். எனவே அறச்சிந்தனையே சிறிதும் இல்லாத, சிற்றறிவுகூட இல்லாத அரக்கர் என்னும் இழிந்த பிறவி யினின்றும் இப்பொழுது நீங்கப்பெற்றேன். அதோடு மட்டுமல்ல. அதனின்றும் மேலாக மறுமையிலும் நரகத்தில் சிக்காமல் அதனின்றும் தப்பித்துவிட்டேன்'' என்கிறான் வீடணன்.

துறவு என்பது நான், என்னும் அகப்பற்றுக்களையும் எனது என்னும் புறப்பற்றுக்களையும் விட்டு, பற்றற்றான் பற்றினையே பற்றி வாழ்கின்ற தூய உள்ளம் கொண்ட முனிவர்கள் வாழுகின்ற வாழ்க்கையைக் குறிக்கும். அத்தகைய முனிவர்களுக்குத் துணைவனான இராமபிரான், அந்த குணங்களில் எந்த ஒரு குணமும் இல்லாதவரும், மாறாக, அவற்றிற்கு நேர்மாறான குணங்கள் அமையப்பெற்றவரும், சிறிதும் அறிவு என்பதே இல்லாதவரும் ஆகிய அரக்கர்குலத்தில் பிறந்த என்னிடம் மிகுந்த அன்புகொண்டு, மீள்தல் இல்லாத அடைக்கலம் தந்தருளியதால் நான் இப்பிறப்பில் அரக்கரிலிருந்து அமரரானதோடு, மறுபிறப்பிலும் நரகத்தில் உழல்வதிலிருந்து தப்பித்து விட்டேன் என்று மகிழ்ச்சி பொங்கக் கூறுகிறான் வீடணன் என்பதாம். 'ஊர் அங்கண் நீர் உரவு நீர் சேர்ந்தக்கால், பேரும் பிறிதாகித் தீர்த்தமாம்' என்பது நாலடியார். 'தெருண்ட மேலவர்

Koviloor Digital Library

சிறியவர்ச்சேறினும், அவர்தம் மருண்ட தன்மையை மாற்றுவர் எனும் இது வழக்கே' என்பது பாலகாண்டம்.

127. வீடணனை விரைவில் இராமனிடம் செல்லுமாறு சுக்கிரீவன் கூறுதல்

திருத்திய உணர்வுமிக்க செங்கதிர்ச் செல்வன் செம்மல்,
'ஒருத்தரை நலனும் தீங்கும் தேரினும், உயிரின் ஓம்பும்
கருத்தினன் அன்றே, தன்னைக் கழல் அடைந்தோரை; காணும்
அருத்தியன், அமலன்; தாழாது ஏகுதி அறிஞ!'' என்றான். (6574)

(கதிர்-கிரணங்கள்; செல்வன்-மகன்; செம்மல்-சிறந்தோன்; அமலன்-தூயவன்; தேருதல்-ஆராய்தல்; கழல்-சரண்; அருத்தி-ஆசை/ஆர்வம்/விருப்பம்; தாழாது-காலம் தாழ்த்தாது; உணர்வு-நல்லறிவு)

''இராமபிரானின் சொற்களால் திருந்திய நல்லறிவு மிக்கப் பெற்றவனான, சிவந்த கிரணங்களையுடைய சூரியனின் புதல்வனாகிய சுக்கிரீவன், வீடணனை நோக்கி 'அறிவிற் சிறந்தவனே! சிறந்தோனான இராமபிரான் ஒருவரது நற்பண்புகளையும், தீயகுணங்களையும் ஆராய்ந்து பார்த்தே நட்புக் கொள்ளும் இயல்பினன்; ஆயினும், தன்னையே நம்பி வந்து தன்னைச் சரணடைந்தோரைத் தன் உயிரினும் மேலாகக் கருதிப் பாதுகாக்கும் உண்மை உடையவன். அந்தக் குற்றமற்றவனான இராம பிரான் இப்பொழுது உன்னைக் காணவேண்டும் என்ற விருப்பத்தால் உன்னை எதிர்நோக்கியிருக்கிறான். எனவே சிறிதும் காலம் தாழ்த்தாது செல்வாயாக!'' என்றான்.

வீடணனை நம்முடன் சேர்த்துக்கொண்டு, அவனுக்கு அடைக்கலம் தரக்கூடாது என்று முதன்முதல் மறுத்தவன் இந்த சுக்கிரீவன்தான். ஆனால் இராமபிரானின் ஆராய்ந்து தெளிந்த சொற்களால் இப்போது 'திருத்திய உணர்வு மிக்கவனானான்'' என்க. தன்கழல் அடைந்து சரணம் புகுந்தவரை, அவர்களின் நலன், தீங்கு கருதாது, குணம் குற்றம்பாராது, தன் உயிரினும் மேலாகக் கருதிக் காப்பாற்றும் பண்பினன் இராமபிரான் என்பதைத் தன் அனுபவத்தின் மூலம் சுக்கிரீவன் வீடணனுக்குத் தெளிவுறுத்துகிறான் என்க.

128. மொய்தவழ் கிரிகள், மற்றும் பலவுடன் முடுகிச்செல்ல
மைதவழ்கிரியும், மேருக் குன்றமும் வருவது என்ன,
செய்தவம் பயந்தவீரர், திரள்மரம் ஏழும் தீய
எய்தவன் இருந்த சூழல், இருவரும் எய்தச் சென்றார். (6575)

(மொய்-வலிமை; தவழ்-பொருந்திய; கிரி-மலை; மை-கரிய/கருமை; குன்றம்-மலை; பயந்த-கைகூடப்பெற்ற; திரள்-திரண்ட; மரம்-மரா மரங்கள்; சூழல்-இடம்; எய்த-நெருங்கி; முடுகி-விரைந்து)

Koviloor Digital Library

வலிமைமிக்க மலைகள், மற்றும் சிறுசிறு குன்றங்கள் இவற்றை யெல்லாம் தாண்டி, மிகவிரைவாக வருகின்ற, மை போலும் கரியநிற முடைய அஞ்சனமலையும், பொன்நிறமுடைய மேருமலையும் ஒன்று சேர்ந்து வருவதுபோல, தாம் முற்பிறப்பில் செய்த நல்வினையின் பயனாக, இப்போது இராமபிரானால் அடைக்கலம் பெற்றபயனை அடைந்தவர்களான வீரர்களாகிய வீடணனும், சுக்கிரீவனும், திரண்டிருந்த ஏழு மராமரங்களையும் ஒரே அம்பினால் எய்து வென்ற இராமபிரான் தங்கியிருந்த இடத்திற்கு விரைந்து நெருங்கிச் சென்றார்கள்.

மைதவழ்கிரி-கருமைநிறம் பொருந்திய வீடணன், மேருக்குன்றம்-பொன்நிறம் பொருந்திய சுக்கிரீவன்; இவர்கள் இருவரையும் வெவ்வேறு மலைகளுக்கு உவமித்ததால், முன்னர்கூறிய 'மொய் தவழ்க்கிரிகள்' என்பதை, வீடணனுடன் உடன் வந்த நான்கு அமைச்சர்களைக் குறித்த தாகவும் கொள்ளலாம் என்க. அவர்கள் செய்த தவத்தின் பயனால்தான் இராமபிரான் அடைக்கலம் தந்தான் என்க. திரள்மரம் ஏழும் தீய எய்தது பற்றி நாம் கிட்கிந்தா காண்டத்தில் பார்த்ததை இங்கே நினைவு கூர்க. 'முடுகிச்செல்ல' என்பது அவர்கள் இராமபிரானைக் காணச் செல்லும் ஆர்வத்தால் விரைவு குறித்தது எனக்கொள்க. இவர்கள் இருவரும் இராமபிரானால் அடைக்கலம் அடையப்பெற்றவர்கள் மட்டுமல்ல, இவர்கள் இருவரையும் இராமபிரான் தன் உடன்பிறந்தவர்களாகவே ஏற்றுக் கொண்டிருக்கிறான் என்பதும் காப்பியப்போக்கில் தெரியவரும்.

129. வீடணன் இராமபிரானைக் காணுதல்

மார்க்கடம் சூழ்ந்த வைப்பின், இளையவன் மருங்கு காப்ப,
நாற்கடல் உடுத்த பாரின் நாயகன் புதல்வன், நாமப்
பாற்கடல் சுற்ற, விற்கை வடவரை பாங்கு நிற்ப,
கார்க்கடல் கமலம் பூத்தது எனப் பொலிவானைக் கண்டான். (6576)

(மார்க்கடம்-வானரங்கள்/மர்க்கடம்; வைப்பு-இடம்; மருங்கு-பக்கம்; உடுத்த-சூழப்பட்ட; நாமம்-புகழ்; சுற்ற-சூழ்ந்து விளங்க; வடவரை-மேருமலை; பாங்கு-பக்கம்; கமலம்-தாமரை மலர்கள்; கார்-கரிய)

வானரச்சேனைகள் சூழ்ந்து நிற்கின்ற இடத்தில், இளையவனான இலக்குவன் பக்கத்திலிருந்து காவல் செய்ய, நான்கு கடல்கள் சூழ்ந்த இவ்வுலகத்தின் சக்கரவர்த்தியாகிய தசரதனின் புதல்வனாகிய இராமபிரான், புகழ்மிக்க பாற்கடல் சூழ்ந்திருக்கவும், வில்லையேந்திய கையை உடையதாக வடமேருமலை அருகில் நிற்கவும், கரியகடலில் தாமரை மலர் பூத்துக்குலுங்குவது போல் பொலிவோடு விளங்கும் இராமபிரானை, வீடணன் பார்த்தான்.

இடம் வானரப்படை சூழ்ந்திருந்தது; இளையவன் அருகே காவல் காத்து நிற்கிறான். பாற்கடல் சுற்றியிருக்க, தாமரை மலர் பூத்ததுபோல்

Koviloor Digital Library

இராமபிரான் அங்கே பொலிவோடு வீற்றிருக்கிறான் என்று இராமபிரான் வீற்றிருந்த காட்சி கூறப்பட்டது. வானரங்கள் வெண்மைநிறம் எனவே பாற்கடல்; இலக்குவன் பொன்நிறம் எனவே மேருமலை; இராமன் கரிய நிறம் எனவே கார்க்கடல்; 'கண்ணும் திருவாயும், கையும் செய்ய கரியவனை' என்பது சிலப்பதிகாரம். 'கரம், கண், கை, கால் செய்யானை' என்பது அஷ்டப்பிரபந்தம்.

130. அள்ளி மீது உலகை வீசும், அரிக்குலச் சேனை நாப்பண்,
தெள்ளுதண் திரையிற்று ஆகி, பிறிது ஒரு திறனும் சாரா
வெள்ளி வெண்கடலுள் மேல்நாள் விண்ணவர் தொழுது வேண்ட,
பள்ளி தீர்ந்து இருந்தான் என்னப் பொலிதரு பண்பினானை. (6577)

(அரிக்குலம்-வானரஇனம்; நாப்பண்-நடுவில்; தண்-குளிர்ந்த; திரை-அலைகள்; திறன்-தன்மை; மேல்நாள்-முற்காலத்தில்; தீர்ந்து-நீங்கி; உலகு-பூமி; பள்ளி-படுக்கை) (குளகப்பாடல்)

இவ்வுலகையே அனாயாசமாக தம் கைகளால் அள்ளி விண்ணின்மீது வீசுகின்ற ஆற்றல் பெற்ற குரங்கு இனப்படையின் நடுவில், தெளிந்த, குளிர்ச்சி பொருந்திய நீரையுடைய அலைகளால் சூழப்பெற்ற, வெண்ணிறத்தைத் தவிரவேறு எந்த நிறமும் தன்னைச் சாராத வெண்மை யாய் விளங்கும் பாற்கடலில், முற்காலத்தில் தேவர்கள் கைதொழுது வேண்டிக் கேட்க, அதற்கு இணங்கி, தனது நாகணைப் பள்ளியிலிருந்து அறிதுயில் நீங்கி வந்து வீற்றிருந்த திருமாலைப் போன்று பொலிவோடு வீற்றிருக்கும் தன்மையனான இராமபிரானை - பாடல் தொடர்கிறது.

வெள்ளிய பாற்கடலில் தனியே அறிதுயில் நீங்கி, வீற்றிருந்த திருமாலுக்கு இப்போது வெண்மையான நிறம்கொண்ட குரங்குச்சேனை என்ற பாற்கடல் நான்கு புறமும் சூழ்ந்திருக்க, தனியாக அமர்ந்திருந்த இராமபிரான் உவமை. முற்காலத்தில் தேவர்கள் தொழுது வேண்டியது அரக்கரை அழித்துத் தம்மைக் காக்குமாறு வேண்டியதைக் குறிக்கும். இது திருவவதாரப் படலத்தில் பேசப்பட்டிருப்பதை இங்கே நினைவுகூர்க. பாற்கடலில் பள்ளிகொண்டிருந்த நிலையை 'வியூபநிலை' என்றும், வானரசேனையின் நடுவில் வீற்றிருந்த நிலையை 'விபவநிலை' என்றும் கூறுவர் வடநூலார்.

131. கோணுதற்கு அமைந்த கோலப்புருவம் போல், திரையும்கூட,
பூணுதற்கு இனிய முத்தின் பொலி மணல் பரந்த வைப்பில்,
காணுதற்கு இனிய நீள வெண்மையில் கருமைகாட்டி,
வாணுதல் சீதை கண்ணின் மணி என வயங்குவானை; (6578)

(கோணுதல்-வளைதல்; கோலம்-அழகு; திரை-அலைகள்; கூட-பொருந்த; பொலிதல்-விளங்குதல்; வைப்பு-இடம்/கடற்கரை; வாள்-ஒளி; நுதல்-நெற்றி; வயங்குதல்-விளங்குதல்)

Koviloor Digital Library

சீதாதேவியின் வளைதல் தன்மை பொருந்திய அழகிய புருவங்களைப் போல, கடல் அலைகளும் பொருந்திவர, அணிவதற்குச் சுகம் தரும் முத்துக்களைப்போல விளங்குகின்ற கடல் மணல் பரப்பின் இடத்தில், காணுதற்கே இனிமை பயப்பனவான, நீண்ட வெண்மை நிறத்திற்குள், தன் கரிய நிறத்தைத் தோற்றுவித்துக் கொண்டு, ஒளிபொருந்திய நெற்றியை உடைய சீதாதேவியின் கண்ணின் கருமணிபோல் விளங்குகின்ற இராமபிரானை-பாடல் தொடர்கிறது.

சீதாதேவியின் கண்களுக்குள் உள்ள கருமணிபோல் இராமபிரான் விளங்குகிறான். இது எப்படி இருக்கிறது என்றால் நீண்ட எல்லையில்லாத முத்துக்கள் வெண்மணற்பரப்பு; அதில் சீதாதேவியின் வளைந்த அழகிய புருவம்போல், கடல் அலைகள், அந்தவெண்ணிறமான நீர்நிறைந்த கடலுக்குள் கருமைநிறம் வாய்ந்த இராமபிரான் வீற்றிருக்கிறான். அது அவன் சீதாதேவியின் வெள்ளிய கண்களுக்குள் இருக்கும் கருமணிபோல் தோன்றுகிறது என்கிறான் கவிஞன். சீதாதேவியின் புருவத்திற்குக் கடல் அலைகளும், கடல்பரப்பில் உள்ள முத்துப்போன்ற வெள்ளிய மணலுக்கு அவள் வெண்விழிகளும், சீதாதேவியின் கண்களுக்கு உவமை. கண்ணைக்காட்டிலும் கண்ணிற்குள் இருக்கும் கருமணி அருமையானது. 'கண்ணே! கண்ணிற்கருமணியே' என்பது தேவாரம். 'கருமணியில் பாவாய் நீபோதாய்' என்பது குறள்-1123. கருமணிப் பாவையன்னாள் என்பது சீவகசிந்தாமணி. கடல்அலைகள்-சீதாதேவியின் புருவங்கள்; வெண் மணற்பரப்பு-அவள் வெள்விழிகள்; கரியநிற இராமன்-கண்ணின் கருமணி; இராமபிரான் சீதைக்குக் கண்மணி போன்றவன் என்பதாம். 'கண்மணி அனையாற்குக் காட்டுக' என்பது சிலப்பதிகாரம்.

132. படர்மழை சுமந்த காலைப்பருவ வான், அமரர் கோமான்
அடர்சிலை துறந்தது என்ன, ஆரம்தீர் மார்பினானை;
கடர்கடை மத்தின் பாம்பு கழற்றியது என்னக் காசின்
சுடர்ஒளி வலயம் தீர்ந்த சுந்தரத் தோளினானை; (6579)

(பருவம்-கார்காலம்; படர்-பெரிய; மழை-மேகம்; அமரர்கோமான்-இந்திரன்; அடர்-அடர்ந்துள்ள/நெருங்கியுள்ள; சிலை-வில்/இந்திர தனுசு; துறத்தல்-தாங்காது நீத்தல்; ஆரம்-மணிமாலை; தீர்-நீங்கிய; கடர்-கடல்; பாம்பு-வாசுகி; காசு-மணி/இரத்தினம்; வலயம்-வாகுவலயம்; சுந்தரம்-அழகு; மத்து-மந்தரமலை) (குளகப்பாடல்)

கார்காலத்தில் ஆகாயத்தில் மேகம் மழைநீரைச் சுமந்து பரவி வருகிறபோது தேவர்களுக்குத் தலைவனான தேவேந்திரன், அடர்ந்து நெருங்கியுள்ள தனது இந்திரதனுசை நீங்கி நிற்பதுபோல, கழுத்தில் அணியும் மணிமாலையை அணியாது இருந்த மார்பினை உடையவனான இராமபிரானை; பாற்கடலைக் கடையும்போது மத்தாகப் பயன்படுத்தப் பட்ட மந்தரமலையையும், கடைகயிறாகப் பயன்படுத்தப்பட்ட வாசுகி

Koviloor Digital Library

என்னும் பாம்பையும் அதனின்று கழற்றி நீக்கிவிட்டது போல, இரத்தினங்கள் நிறைந்த ஒளிவீசும் வாகுவலயம் என்னும் தோள் அணியை நீக்கியும்கூட, அழகாகக் காட்சியளித்த தோள்களை உடையவனான இராமபிரானை - பாடல் தொடர்கிறது.

பொதுவாக மேகம் ஆகாயத்தில் ஓரிடத்தில் நில்லாது பரந்து படர்ந்து கொண்டேபோகும். சூல்கொண்ட மேகம் கரிய நிறமாயிருக்கும். அப்போது அங்கே வானவில் தோன்றுவது கண்களுக்குப் புலப்படாது. அதுபோலக் கரிய நிறத்தவனான இராமபிரான் தன்னுடைய மார்பில் எந்தவித ஒளிமிகுந்த ஆபரணங்களையும் அணிந்து கொள்ளாத நிலையில் அங்கு வீற்றிருந்தான். பாற்கடலைக் கடையும்போது மத்தாகிய மந்தரமலைக்குக் கடைகயிறாக அமைந்தது வாசுகி என்னும் பாம்பு. மந்தரமலை இராமபிரான் தோள்களுக்கு உவமை. கடைகயிறாகிய வாசுகிப்பாம்பு அவனுடைய வாகுவலயத்திற்கு உவமை. அந்தப் பாம்பு சுற்றியிருக்காத மந்தரமலையைப் போன்று, வாகுவலயம் அணியாத தோள்களைப் பெற்றிருந்தான் இராமபிரான் என்பதாம். அப்போதும் அவன் மார்பும், தோளும், ஒளிமிக்கு அழகாகத் தோன்றியது என்று கூறியது ஒரு நயம். கார்காலத்து மேகத்தில் தோன்றும் இந்திரவில்-வானவில்-ஏழு நிறங்களைக் கொண்டிருக்கும் என்பது நாம் அறிந்ததே. அதுவே 'அடர்சிலை' எனப்பட்டது. இந்திரவில் நீங்கிய மேகம்போல, மணியாரம் நீங்கினவனாகவும், பாம்பாகிய வாசுகி நீங்கிய மந்தரமலைபோல வாகுவலயம் நீங்கினவனாகவும் இராமன் காணப்பட்டான் என்பது இப்பாடலின் திரண்டகருத்து.

மாணிக்கங்கள் பதிக்கப்பெற்ற, மாலைகள் அணியாத அவனுடைய மார்பிற்குப் பலவண்ணங்கள் கொண்ட இந்திரவில் இல்லாத கரியமேகமும், தோள்வலயம் அணியப்பெறாத அவன் தோள்களுக்குக் கடைகயிறான வாசுகி கழற்றி விடப்பட்ட மந்தரமலையும் உவமைகள். இவன் மணியாரத்தை அணிந்திருந்த காட்சியும், வாகுவலயம் பூண்டிருந்த காட்சியும் பாலகாண்டம் கடிமணப்படலத்தில் விவரிக்கப் பட்டிருப்பதை இங்கு நினைவு கூர்க. அங்கு இவை அணிந்திருந்த காட்சியும் இங்கு இவற்றை அணிந்திராத காட்சியும் விவரிக்கப்பட்டன என்க.

133. கற்றை வெண்நிலவு நீக்கி, கருணையாம் அமிழ்தம் காலும்
முற்றுறு கலையிற்று ஆய, முழுமதி முகத்தினானை;
பெற்றவன் அளித்த மோலி இளையவன்பெற, தான்பெற்ற
சிற்றவை பணித்த மோலி, பொலிகின்ற சென்னியானை; (6580)

(கற்றை-திரட்சி/தொகுதி; காலுதல்-சொரிதல்; முற்றுறு-நிறைவு பெற்ற; மோலி-முடி/மகுடம்; சிற்றவை-சிறிய தாய்/கைகேயி; மோலி-

Koviloor Digital Library

சடைமுடி; சென்னி-தலை; பணித்தல்-கட்டளையிடுதல்) (குளகப் பாடல்)

திரண்ட வெள்ளிய நிலவொளியை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக கருணை என்கின்ற அமிழ்தத்தைச் சொரிகின்ற, பதினாறு கலைகளும் நிரம்பப்பெற்ற பூரணசந்திரன் போன்ற பொலிவுடன் விளங்கும் முகத்தினை உடைய இராமபிரானை, தன்னைப் பெற்றெடுத்த தந்தையாகிய தசரதன் தனக்கு அன்புடன் அளித்த அரசச்செல்வம் என்னும் மணிமகுடத்தைத் தன்தம்பி பரதன் பெற்றுக்கொள்ளுமாறு அவனுக்கு உவப்புடன் தந்து, தான் பெற்ற சிறிய தாயாகிய கைகேயி கட்டளை யிட்டருளியபடி சடைமுடியை அணிந்து பொலிவுடன் திகழும் தலையினை உடைய இராமபிரானை - பாடல் தொடர்கிறது.

இராமபிரான் முகம் முழுமதி போன்றது. ஆனால் சந்திரனுக்குரிய நிலவொளியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக கருணை என்னும் அமிழ்தத்தைப் பொழிகின்ற முழுமதி போன்ற முகம் கொண்டவன் என்பது கருத்து. சந்திரனுக்கே 'அமுதகிரணகலை' என்ற ஒரு பெயரும் உண்டு. பதினாறுகலைகளும் நிரம்பிய சந்திரன் என்பது 'முற்றுறு கலையிற்றாய முழுமதி' எனப்பட்டது. இராமபிரான் முழுமதி போன்று விளங்கி, கருணைபொழியும் முகமும், சடைமுடி தாங்கிய தலையும் கொண்டு பொலிந்து விளங்கினான் என்பதாம்.

134. "வீரனை நோக்கி, அங்கம் மென்மயிர் சிலிர்ப்ப, கண்ணீர்
வார, நெஞ்சு உருகி, 'செங்கண் அஞ்சனமலை! அன்று ஆகின்,
கார்முகில் கமலம் பூத்தது! அன்று, இவன் கண்ணன் கொல்லாம்;
ஆர் அருள் சுரக்கும் நீதி அறநிறம் கரிதோ?" என்றான். (6581)

(அங்கம்-உடம்பு; மயிர்சிலிர்த்தல்-மயிர்க்கூச்செறிதல்; வார-சொரிய/ பெருக; முகில்-மேகம்; கண்ணன்-திருமால்; ஆர்-நிறைந்த; ஆம்-ஆகும்; நீதி-தன்மை)

''வீடணன்வீரனாகிய இராமபிரானைப் பார்த்ததும், தன்உடலெல்லாம் மெல்லிய மயிர்க்கூச்செறிந்து மகிழ்ச்சியால் ஆனந்தக் கண்ணீர் பெருகி, உள்ளம் உருகி நைந்து, 'இவன் சிவந்த அழகிய கண்களையுடைய அஞ்சனமலையோ? அது இல்லை என்றால் செந்தாமரை மலர்கள் பூத்துப்பொலிகின்ற கரிய மேகமோ! இல்லைஇல்லை, இவன் கருணை நிறைந்த திருமாலே ஆவான்! நிறைந்த அருளை விடாது பொழிகின்ற தன்மைவாய்ந்த அறக்கடவுளின் நிறம் கருமையானதோ!'' என்று வியந்து நின்றான்.

இராமபிரானை முதன்முதலில் நேரில் கண்ட வீடணனின் மெய்ப்பாடுகள்பேசப்படுகின்றன. இதேபோல் இராமபிரானை அனுமன் கிட்கிந்தையில் முதன்முதல் நேரில் பார்த்தபோது, நிகழ்ந்த மெய்ப்

Koviloor Digital Library

பாடுகளையும், கங்கைக்கரையில் குகன் முதன்முதல் பார்த்தபோது நிகழ்ந்த உடல் மாற்றங்களையும் இங்கு நினைவுகூர்க. பொதுவாக புண்ணியம், அறம் இவற்றை வெண்மைநிறம் உடையதாகக் கூறுவது கவிமரபு. ஆனால் இங்கே அறக்கடவுள் கருமை நிறம் கொண்டு விளங்குகிறதோ என்று வியந்து போற்றினான் என்பதாம். கம்பன் இராமனைக்காப்பியத்தில்பலஇடங்களில்எந்தஅடைமொழியும்தாராது, 'வீரன்' என்று மட்டும் கூறிவந்திருப்பதையும் நினைவிற்கொள்க. 'கார்முகில் கமலம் பூத்தது' என்பது முன்பு பாலகாண்டத்துக் கூறப்பட்டதையும் இங்கே நினைவுகூர்க.

135. "மின்மினி ஒளியின் மாயும் பிறவியை வேரின் வாங்க,
செம்மணி மகுடம் நீக்கி, திருவடி புனைந்த செல்வன்
தம்முனார், கமலத்து அண்ணல் தாதையார் சரணம்தாழ,
எம்முனார் எனக்குச் செய்த உதவி" என்று ஏம்பலுற்றான். (6582)

(மாயும்-அழியும்; வேர்-அடி; வாங்குதல்-ஒழித்தல்; தம்முனார்-தமையன்; கமலம்-தாமரைமலர்; அண்ணல்-பெரியோன்/பிரமன்; தாதையார்-தந்தையார்; சரணம்-திருவடிகள்; தாழ-வணங்க; எம்முனார்-எனக்கு முன்னோன்/தமையன்/இராவணன்; ஏம்பல்-மகிழ்ச்சி; திருவடி-திருவடி நிலைகள்/பாதுகைகள்; புனைதல்-சூட்டிக்கொள்ளுதல்)

மின்மினிப் பூச்சியின் ஒளியைப் போலத் தோன்றி உடனே விரைவில் மறையும் தன்மையைப் போன்ற இந்தப் பிறவிநோயை அடியோடு நீக்கிக் கொள்ளும் பொருட்டு, தனக்கு வந்த சிவந்த செம்மையான மணிகள் பதிக்கப்பெற்ற அரசமகுடத்தைத் தவிர்த்துவிட்டு, தனது தமையனான இராமபிரானது திருவடி நிலைகளையே-பாதுகைகளையே திருமுடியாக அணிந்து கொண்ட சிறப்புடையவனான பரதன், தன்னுடைய தமையனானவனும், செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் பெரியோனாகிய பிரம்தேவனின் தந்தையாருமாகிய இராமபிரானின் திருவடிகளைத் தாழ்ந்து பணிந்து வணங்குமாறு, என்முன்னவனாகிய இராவணன் எனக்குச் செய்த பேருதவியாகும் இது'' என்று வீடணன் தன் அண்ணன் தன்னை இலங்கையை விட்டுத் துரத்தியதை எண்ணி மகிழ்ச்சி யடைந்தான்.

'மின்மினி' என்பதற்கு நாம் மின்மினிப் பூச்சியையே பொருளாகக் கொள்வோம். உ.வே.சா. பதிப்பு மட்டும் 'மின்மினி' என்பது மின்னலையே குறிக்கும் என்ற ஒரு குறிப்பைக் கூறுகிறது என்பதறிக. மின்மினிப் பூச்சியின் ஒளிக்கு மானிடரின் பிறவி நோய் உவமை. 'சிந்திப்பரியன, சிந்திப்பவர்க்குச் சிறந்து, செந்தேன் முந்திப் பொழிவன; முக்திஅளிப்பன; மொய்த்து இருண்டு; பந்தித்துநின்றபழவினைதீர்ப்பன; பாம்புசுற்றி, அந்திப்பிறையணிந்து, ஆடும்ஐயாறன்அடித்தலமே' என்பது அப்பர்தேவாரம். மின்மினி யாக்கை நிலையாமைக்கு உவமை.

Koviloor Digital Library

'பிறவிப்பெருங்கடல் நீந்துவர், நீந்தார் இறைவனடி சேராதார்' என்ற குறள்-10 இங்கு ஒப்பிட்டு உணரத்தக்கது. 'மைவாச-நறுங்குழல் மாமலையாள், மணவாளன் மலர்க்கழல் வந்தடையும் இவ்வாழ்வு பெறத்தரு சூலையினுக்கு எதிர்செய்குறை என்கொல் எனத் தொழுவார்' என்பது பெரியபுராணம்.

இங்கே ஒன்று நோக்கவேண்டும். இராவணன் பிரம குலத்தவன், இது நாம் முன்னரே அறிந்தது. இப்போது வீடணன் இராமபிரானை பிரமனின் தந்தை-கமலத்து அண்ணல் தாதையார்' என்கிறான். எனவே தனது குல முதல்வனுக்கும் முதல்வனையே சரணம் அடைகிறோம் என்பதில் வீடணனுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி என்று கொள்ளவேண்டும். 'தில்லைச் சிற்றம்பலம் மேய செல்வன் கழல் ஏத்தும் செல்வம் செல்வமே' என்பது சம்பந்தர் தேவாரம்.

136. "பெருந்தவம் இயற்றினோர்க்கும், பேர்வுஅரும் பிறவிநோய்க்கு
மருந்து என் நின்றான் தானே வடிக்கணை தொடுத்துக் கொல்வான்
இருந்தனன்; நின்றது என்னாம் இயம்புவது? எல்லை தீர்ந்த
அருந்தவம் உடையர் அம்மா அரக்கர்!" என்று அகத்துள் கொண்டான்.
(6583)

(பேர்வுஅரும்-போக்குதற்கரிய; வடிக்கணை கூரிய அம்புகள்; இருந்தனன்-தயாராக இருந்தவன்; தீர்ந்த-முற்றிய)

''சிறந்த மேன்மைக்குரிய தவத்தைச் செய்து முடித்தவர்களான மேலோர்களுக்கும்கூட, போக்கிக் கொள்ளமுடியாத அருமையான இந்தப் பிறவி என்னும் நோய்க்கு மருந்தாகத் திகழும் இந்த இராமபிரான் தானே, கூர்மையான அம்புகளைத் தொடுத்து அரக்கர்களைக் கொல்லுதற்குச் சித்தமாய் இருந்தான் என்றால், நாம் இதுபற்றிக் கூறுவதற்கு என்ன இருக்கிறது?. வரம்பிலாத முற்றிய அரியதவத்தைச் செய்தவர்கள்தான் அரக்கர்கள். காரணம் அவர்கள் பிறவி நோய்க்கு மருந்தாகிய இராம பிரானின்அம்பினால் தானேகொல்லப்படப் போகிறார்கள்! அது அவர்கள் செய்த பெரும்பேறு அல்லவா?'' என்று தன் மனத்துள் நினைத்துக் கொண்டான் வீடணன்.

தனக்கு அனுக்கத் தொண்டனாகவும், தம் அடி பணிந்தவர்களுக்கு மட்டுமே வீடுபேறு வழங்கும் இயல்புடைய திருமாலான இராமபிரான், இப்போது தம் பகைவர்களாகிய அரக்கர்களையும் தன் வில்லாற்றல் கொண்டே போர்செய்து, அவர்கள் எதிர்பார்க்காமலேயே அவர்களைத் துறக்கத்திற்கு அனுப்பப் போகிறான் என்றால் அரக்கர்கள் அனைவரும் செய்தற்கரிய தவம் செய்தவர்கள் என்றுதானே பொருள்? எனத் தன் மனத்துள் எண்ணிக்கொண்டான் வீடணன். பிறவிநோய் என்றதனால் அதைப் போக்குபவனான இராமபிரான் மருந்து எனப்பட்டான் என்க.

Koviloor Digital Library

'இம்மையே எழுமை நோய்க்கும் மருந்தினை' என்பது வாலியின் கூற்று. 'எல்லைதீர்ந்த தவம்' என்பது வரம்பிலாத அளவற்ற காலம் செய்யப்படும் தவம் எனப்படும். அருந்தவம் என்பது செய்யவே முடியாத-செய்தற்கரிய தவம் எனப்படும் என்பதறிக. 'அம்மா' என்பது இங்கே வியப்புக் குறித்த இடைச்சொல்லாகும்.

137. வீடணன், இராமபிரான் திருவடி வணங்குதல்

கரங்கள் மீச்சுமந்து செல்லும் கதிர்மணி முடியன், கல்லும்
மரங்களும் உருக நோக்கும் காதலன், கருணை வள்ளல்
இரங்கினன் நோக்கும் தோறும், இருநிலத்து இறைஞ்சுகின்றான்;
வரங்களின் வாரி அன்ன, தாள்இணை வந்து வீழ்ந்தான். (6584)

(மீ-மேலே; கதிர்-ஒளி; காதலன்-அன்புடையவன்; இரும்-பெரிய; வாரி-கடல்/வாயில்; தாள்-திருவடி; இணை-இரண்டு; இரங்குதல்-மனம் மகிழ்தல்)

தன்னிருகைகளையும் தலைமேலே சேர்த்துக் கூப்பிக் கொண்டே செல்லும், ஒளிவீசுகின்ற இரத்தினங்களாலான மகுடம் தரித்தவனும், வலிமையான கல்லும் அஃறிணையாகிய மரங்களும் தாவரங்களும்கூட அவனுடைய பக்தித்திறத்தைக் கண்டு உருகும்படி வருகின்ற பேரன்புடையவனுமாகிய வீடணன், கருணையே வடிவமான வள்ளன்மைமிக்கஇராமபிரான்அவன்மீது இரக்கம் கொண்டு மனம்கசிந்து பார்க்கும் போதெல்லாம், பெரிய பூமியில் விழுந்து வணங்கலானான். அடியவர்களுக்கு வேண்டிய வரங்களைக் கடல்போல் வாரி வழங்கும் வள்ளன்மை மிக்க இராமபிரானின் இரு திருவடிகளிலும் வந்து நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்கினான்.

''கல்லும் மரங்களும் உருக நோக்கும்'' என்பது உயிரற்றவைகளும் உருகுகின்றன என்பது அவனுடைய பக்தியின் மேம்பாட்டை விளக்குவதாகும். முன்பு சீதாதேவியைப் பற்றிக்கூறும் போது கவிஞன் இது போலவே ''குன்றம் கவரும்திண் கல்லும் புல்லும் கண்டுருகப் பெண்கனி நின்றாள்' என்றான். பரதனைப் பற்றிக்கூறும்போதும் தாவர, சங்கமம் என்னும் தன்மைய யாவையும் இரங்கிடக் கங்கை எய்தினான்'' என்றான் கவிஞன். இங்கே தாவரம் ஸ்தாவரம் என்று நிலைத்திணைப் பொருள்களையும், ஜங்கமம் என்று இயங்குதிணைப் பொருள்களையும் கூறினான் என்பதே பொருள். அதுபோலவே அனுமன் இராமபிரானை முதன்முதல் கண்டபோதும் 'என்பு எனக்கு உருகுகின்றது' என்று கூறியுள்ளதையும் இங்கு நினைவுகூர்க. 'இரங்கினன் நோக்கும் தோறும் இருநிலத்து இறைஞ்சுகின்றான்' என்பது வீடணன்பால் இரக்கம்கொண்டு இராமபிரான் அவனைப் பலமுறை நோக்கினான் என்பதும், அவன் கருணையை எண்ணி வீடணன்இராமபிரானைப் பலமுறை வணங்கினான்

Koviloor Digital Library

என்பதும் பெறப்படுகின்றது. 'தாளிணை வந்து வீழ்ந்தான்' என்பது சாஷ்டாங்கமாகத் தரையில் விழுந்து வணங்கினான் என்பதைக் குறிக்கும். இறைவனை வணங்கும்போது தலைக்குமேல் கைகூப்பித்தான் வணங்கவேண்டும் என்று வழிபாட்டு முறைகளை சாஸ்திரங்களும் பேசுகின்றன. அதைத்தான் இங்கே, 'கரங்கள் மீச்சுமந்து' என்றார் என்க. 'வேண்டத்தக்கது அறிவோய் நீ; வேண்ட முழுதும் தருவோய்நீ' என்ற திருவாசகமும் இங்கு நினைவு கூரத்தகும். 'நின்னிற் சிறந்த நின்னின் தாளிணை' என்பது பரிபாடல்; 'நின்னிற் சிறந்த நின்திருநாமம்' என்பதுபோல் நின்னிற் சிறந்த நின் தாளிணை என்று தாளிணைகளை வணங்குகிறான் என்க. 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி' என்பது தேவாரம். பருந்தால் துரத்தப்பட்ட புறா சிபிச்சக்கரவர்த்தியின் காலடியில் வந்து விழுந்ததுபோல், இராவணனால் துரத்தப்பட்ட வீடணன் இராமபிரான் திருவடிகளில் வந்து விழுந்தான் என்று கூறும் பொருள் இன்னும் சிறப்புடைத்தல்லவா?

138. இராமபிரான் வீடணனுக்கு இருக்கை தருதல்

"அழிந்தது பிறவி'' என்னும், அகத்து இயல் முகத்துக்காட்ட,
வழிந்த கண்ணீரின் மண்ணில் மார்புஉற வணங்கினானை,
பொழிந்தது ஓர் கருணை தன்னால், புல்லினன் என்று தோன்ற,
'எழுந்து, இனிது இருத்தி' என்னா, மலர்க்கையால் இருக்கை ஈந்தான்''
(6585)

(அகம்-மனம்; இயல்-தன்மை; காட்ட-தோற்றுவிக்க; உற-பொருந்த; புல்லுதல்-தழுவுதல்; தோன்ற-பார்த்து; இருக்கை-இருப்பிடம்/ஆசனம்)

இராமபிரானை முதன்முதல் நேருக்குநேர் கண்டு வணங்கியதுமே, அவனுடைய அருட்பார்வை இவன்மீது விழுந்த உடனேயே 'தனது அரக்கப் பிறவியாகிய பெருநோய் அழிந்தது' என்று மனம் மிக மகிழ்ந்தது. அந்த மகிழ்ச்சியின் தன்மை புறத்தே முகம்மூலம் வெளிப்பட்டுத் தோன்ற, பொங்கிவழிந்த கண்ணீருடன், தரையில் மார்புபடும்படி, நெடுஞ்சாண் கிடையாக மீண்டும் வணங்கிய வீடணனை, இடைவிடாது பொழியும்தன் கருணையுள்ளத்தால் அவனைத் தழுவுதல் போன்று வீடணனுக்குத் தோன்றும்படி அருட்பார்வை பார்த்து, 'வீடண! எழுந்திரு; இனிமையாக அமர்வாயாக!'' என்று கூறி, தனது சிவந்த செந்தாமரை மலர்போன்ற கைகளினால் அவனுக்கு ஆசனம் தந்தருளினான் இராமபிரான்.

'அழிந்தது பிறவி' என்று இறந்த காலத்தில் கூறியது, தெளிவு பற்றிவந்த காலவழுவமைதி. 'அகத்தியல் முகத்துக் காட்ட' என்பது 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்னும் பழமொழியையும், 'அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்' என்னும் குறள்-76யும் நினைவு படுத்துவதை அறிக. 'மண்ணின் மார்புற வணங்கி' என்பது

Koviloor Digital Library

சாஷ்டாங்க நமஸ்காரத்தைக் குறிக்கும். இராமபிரான் வீடணனை உடம்பால் தழுவவில்லை என்றாலும், அவனது அருட்பார்வையிலேயே அவனது உடலைத் தழுவியது போன்றதொரு உணர்வு பெற்றான் வீடணன் என்பதாம்.

இங்கே ஓர் அருமையான ஒப்புமை காணலாம். இறுதியில் மீட்சிப் படலத்தில் தசரதன் துறக்கத்திலிருந்து வந்து இராமபிரானுக்கு இரண்டு வரங்கள் தந்து சீதாதேவிக்கு ஆறுதல் கூறுகிறான், என்பது நாம் இனிமேல் பார்க்கப்போகும் நிகழ்ச்சி. என்றாலும் நாம் அனைவரும் கேட்டறிந்ததே. இங்கே கம்பன் இதே சொற்றொடரைப் பயன்படுத்துவது காண்பது ஒருநயம். பாடல்பகுதி பாருங்கள். 'குன்றுபோன்றுள தோளினான், சீதையைக் குறுகத் தனது துணைக்கழல் வணங்கலும், கருணையால் தழுவி' என்கிறான் கவிஞன். இதற்குக் கருணை மிகுந்த பார்வையால் தழுவி என்பது பொருள். பிறவியைப் பிறவிப் பிணி என்றும், பிறவிநோய் என்றும், பிறவித்துன்பம் என்றும் கூறுவது கவிஞர் வழக்கு. இவ்வாறு வீடணன் மகிழ்ந்து இராமபிரான் திருவடிகளில் விழுந்து வணங்கியதாக வான்மீகம் கூறவில்லை என்பது கருதத்தக்கது.

139. இலங்கை அரசை அளித்தல்

''ஆழியான் அவனை நோக்கி, அருள்சுரந்து, உவகைகூர,
'ஏழினோடு ஏழாய் நின்ற உலகும், என்பெயரும் எந்நாள்
வாழும் நாள், அன்றுகாறும் வாள் எயிற்று அரக்கர் வைகும்
தாழ்கடல் இலங்கைச் செல்வம், நின்னதே; தந்தேன்'' என்றான்.

(6586)

(ஆழி-ஆணைச்சக்கரம்; சுரத்தல்-மிகுதல்; உவகை-மகிழ்ச்சி; கூர்தல்-மிகுதல்; வாள்-ஒளி; எயிறு-கோரைப்பற்கள்; தாழ்-ஆழமான)

உலகெலாம் ஆளும் ஆணைச்சக்கரத்தைக் கையில் ஏந்தியவனான திருமாலின் அம்சமான இராமபிரான், கருணை மேன்மேலும் மிக வெளிப்பட்டுத் தோன்ற, மனம்மிக உவந்து வீடணனை நோக்கி, 'இந்த ஈரேழு என்று கூறப்படும் பதினான்கு உலகங்களிலும் என்னுடைய பெயர் எவ்வளவு நாள் நிலைத்து நிற்குமோ, அவ்வளவு ஊழிக்காலம்வரை, வளைந்த ஒளிபொருந்திய கோரைப்பற்களையுடைய அரக்கர்கள் வாழுகின்ற, ஆழமான கடல்களால் சூழப்பெற்ற இந்த இலங்கை அரசின் அரசச் செல்வத்தை உன்னுடையதாக உனக்கே உரிமையுடையதாகத் தந்தேன்'' என்று கூறினான்.

'ஆழியான்' என்பது திகிரிப்படையையுடையவன்; ஆணைச் சக்கரத்தைக் கொண்டு இவ்வுலகைக் காப்பவன் என்றும் இருபொருள் படும். ஆணைச்சக்கரத்தைக் கையில் ஏந்தியிருப்பதால், இவ்வுலகின் ஒரு

Koviloor Digital Library

பகுதியாகிய இலங்கையின் அரசச்செல்வத்தை தன்னிச்சையினால், வீடணனுக்குத் தரும் ஆற்றலும், ஆணையும், உரிமையும் அவனுக்கு உண்டு என்பதைப் புலப்படுத்தியவாறு. அவன் தன் பகைவனின் தம்பியா யிருந்தும், அவனுக்குத் தன்னிடம் அடைக்கலம் கொடுத்ததோடன்றி இலங்கை அரசினையும் கொடுத்தது அவன்மீது அவன் காட்டிய அருளின் காரணமாக என்பதைக் குறிக்க, 'அருள் சுரந்து' என்றார் என்க. சுரப்பது என்பது தாமே ஊற்றெடுத்துப் பெருகுவது என்ற விரிந்த பொருளைத் தரும். அருள் சுரந்தது மட்டுமல்ல, 'உவகை கூர்ந்து' என்பதும் காண்க. தன்னாணையால் கொடுப்பதால் தானும், இல்லாதவன் விரும்பியதனைப் பெறுவதால் வீடணனும் மகிழ்ச்சிமிக்கனர் என்பதைக் குறிக்க 'உவகை கூர்ந்து' என்றார் என்க. 'என்பெயரும் எந்நாள் வாழும் நாள்' என்பது அவன் ஊழியான்-ஊழிக்காலத்தும் அழியாதவன் என்பதால், ஊழிக்காலத்தும் அழியாது இருப்பான் வீடணன் என்று அவனுக்கு சிரஞ்சீவித் தன்மையையும் அருளியதையும் கருத்திற்கொண்டே இவ்வாறு கூறினான் என்க.

இங்கே ஒன்று நோக்கவேண்டும். இன்னும் இராமபிரான் இலங்கையை வெல்லவில்லை, இராவணனைக் கொல்லவில்லை, எப்படி இலங்கை அரசை இப்போதே வீடணனுக்குத் தரமுடியும்? இராவணனை வெல்வதும், கொல்வதும் உறுதியாக நடக்கப்போவது என்ற துணிந்த தெளிவால், இவ்வாறு கூறுகிறான் எனக் கொள்க. அத்தோடு மட்டுமல்ல, கம்பன் இனிமேல் காப்பியம் முழுவதும் வீடணனை இலங்கை அரசன் என்றே கூறிவருவதும் காணத்தகும். இவ்வாறு கூறுவது 'கொள்ளார் தேஅம் குறித்த கொற்றம்' என்னும் தொல் காப்பியம். புறத்திணையுள் அடங்கும். இராமபிரான் திருவருளையே எதிர்பார்த்து வந்த வீடணனுக்கு, இலங்கை அரசுரிமை கிடைத்தது 'வந்தேறியானது'-தானே வந்தது என்றும் கூறுவதுண்டு.

''கார் உள்ளளவும், கடல்நீர் உள்ளளவும் இந்தப் பார்உள்ளளவும், தந்தேன், தந்தேன், தந்தேன்'' என்று இராமநாடகக் கீர்த்தனைகூறும். முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் தான் மக்கட்கு இறையென்று வைக்கப்படவேண்டும் என்னும் குறள் கருத்தை ஒட்டி முறையற்ற இராவணனை நீக்கி, முறையாற் பொலிந்து விளங்கும் வீடணனை இலங்கைக்கு அரசனாக்கி உரிமை தந்தான் என்று கொள்க. 'மின்னிலங்கு பூண் வீடண நம்பிக்கு எள்ளிலங்கு நாமத்து அளவும் அரசு என்ற மின்னலங்காரன்' என்பதும் சான்றோர்வாக்கு. தொல்காப்பியத்தின் உரையாசிரியர் நச்சினார்க்கினியரும், பகைவர் நாட்டினைத் தான் கொள்வதற்கு முன்னேயும் கொண்டான்போல, வேண்டியோர்க்கே கொடுத்தலைக் குறித்த வெற்றியும்'' என்றும், இராமன் இலங்கை கொள்வதன்முன் வீடணற்குக் கொடுத்த துறையும் அது' என்றும் குறிப்பிடுவது இங்கே கருதத்தக்கது. இந்த இடத்தில் வான்மீகம்,

Koviloor Digital Library

வீடணனை 'ஸ்ரீமான்' எனக் கூறுகிறது. இங்கே ஸ்ரீ என்ற சொல்லுக்கு ராஜ்யஸ்ரீ என்று உரையாசிரியர்கள் கூறுவதும் காணத்தகும்.

140. தீர்த்தன் நல்அருளை நோக்கிச் செய்ததோ? சிறப்புப் பெற்றான்
கூர்த்தநல் அறத்தை நோக்கிக் குறித்ததோ? யாதுகொல்லோ?
வார்த்தை அஃது உரைத்தலோடும், 'தனித்தனி வாழ்ந்தேம்' என்ன,
ஆர்த்தன, உலகில் உள்ள சராசரம் அனைத்தும் அம்மா! (6587)

(தீர்த்தன்-தூயவன்; சரம்-இயங்குவன; அசரம்-நிற்பன; ஆர்த்தல்-ஆரவாரம் செய்தல்)

இவ்வாறு இராமபிரான் 'இலங்கை அரசு, நின்னதே தந்தேன்' என்று கூறியவுடன் இவ்வுலகிலுள்ள நிலைத்திணை, இயங்குதிணைப் பொருள்கள் அனைத்தும், தனித்தனியாக, 'நாங்கள் நல்வாழ்வு பெற்றோம்' என்று மகிழ்ச்சியால் ஆரவாரித்தன. இவ்வாறு இவ்வுயி ரினங்கள் ஆரவாரித்தது, தூயவனான இராமபிரானின் கருணைமிக்க உள்ளத்தை வியந்து நோக்கிச் செய்ததா? அல்லது அவனால் ஆட்கொள்ளப் பட்ட சிறப்புமிக்க, நல்ல தருமச்செயல்களும், சிந்தனையும் மிக்க வீடணனைக் குறித்து வியந்து போற்றியதா? அல்லது வேறு எதையும் குறித்துச் செய்ததா? என்பதைத்தான் அறிந்துகொள்ள முடியவில்லை என்கிறான் கவிஞன்.

இது கவிக்கூற்று. 'தீர்த்தன்' என்றது தூயவனான இராமபிரானைக் குறிக்கும். தான் தூயவனாக இருப்பதோடு மட்டுமின்றி, தன்னை வந்தடைந்தவர்களையும் தூயவராக்குதலால் 'தீர்த்தன்' எனப்பட்டான் என்க. 'சரம்' என்பன இயங்குவன, அசைவன, அசரம் என்பன நிலைத்தன, நிற்பன, அசையாதன. ஸ்தாவரம், ஜங்கமம் என்பன வடசொற்கள். 'தாவர சங்கமத்துள் எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்' என்பது சிவபுராணம்.

'அம்மா!' என்பது வியப்புக் குறித்த இடைச்சொல். 'சிறப்புப் பெற்றான்' என்பதில் சிறப்பு என்ற சொல்லுக்கு 'மோட்சம்' என்று ஒரு பொருள் உண்டு என்கிறது உ.வே.சா.பதிப்பு. வீடணன் இறுதியில் வீடுபேறு பெறும் பேறும் பெற்றான் என்றும் கொள்ளலாம் என்க. 'தீர்த்தன்' என்பதை 'புலவன், தீர்த்தன், புண்ணியன், புராணன்' என்கிறது மணிமேகலை. தனது பகைவனான இராவணன் தம்பிக்கே இலங்கையரசை உரிமையாக்கிச் சிறப்புப் பெற்றவனாக்கின இராமபிரான் நமக்கும் அத்தகைய பல இன்ப அதிர்ச்சிகளை என்றேனும் அளிப்பான் என்ற எதிர்ப்பார்ப்பினால் சரஅசரப் பொருள்கள் மகிழ்ச்சியால் ஆரவாரித்தன என்று பொருள்கொள்ளுதல் இன்னும் சிறப்புச் சேர்க்கும் அல்லவா? மேலும் இராவணன் ஆட்சியில் தாம் பட்ட துன்பங்கள் அனைத்தும் நீங்கி, நாம் இனி நம்போக்கில் வாழலாம் என்ற மகிழ்ச்சியாலும் ஆரவாரித்தன என்று பொருள்

Koviloor Digital Library

கொள்ளவும் இடம் இருப்பதை அறிக. இவற்றில் எதனைக்கொண்டு அவை ஆர்ப்பரித்தன என்பது புரியாதது போலத்தான் கவிஞன் 'யாது கொல்லோ?' என்று பொதுவாகக் கூறினான் என்க.

141. வீடணனுக்குத் திருமுடி சூட்டப்பணித்தல்

"உய்ஞ்சனென் அடியனேன்" என்று, ஊழ்முறை வணங்கி நின்ற
அஞ்சன மேனியானை, அழகனும் அருளின் நோக்கி,
'தஞ்ச நல்துணைவனான தவறிலாப் புகழான் தன்னை,
துஞ்சல்இல் நயனத்து ஐய! சூட்டுதி மகுடம்' என்றான். (6588)

(ஊழ்-முறை; அஞ்சனம்-மை; துஞ்சல்-தூங்குதல்; நயனம்-கண்கள்; தவறு-குற்றம்; மகுடம்-முடி; தஞ்சம்-அடைக்கலம்; உய்தல்-பிழைத்தல்)

''இராமபிரானின் அடியவனான நான் இப்பொழுதே நற்கதி பெற்றேன்'' என்று விதிமுறைப்படி அவனை வணங்கி நின்ற மைபோலும் கரிய நிறமுடைய உடலழகு பெற்ற வீடணனை, அழகிய இராமபிரான் அருட்பார்வையுடன் நோக்கினான். பின்னர் தூக்கம் என்பதே பதினான்கு ஆண்டுகளாக ஒரு சிறிதும் இல்லாத கண்களையுடைய இலக்குவனை நோக்கி, 'தம்பி! நம்மைத் தஞ்சம் என்று வந்தடைந்த நல்ல நண்பனாக நமக்கு விளங்குபவனும், குற்றமில்லாத புகழையுடையவனுமான வீடணனுக்கு, இலங்கை அரசுக்குரிய மணிமகுடத்தைச் சூட்டுவாயாக!'' என்று பணித்தான்.

'உய்ஞ்சனேன்' என்பது உய்ந்ததேன் என்பதன் போலி. இராம பிரானைக் கண்டதுமே அவனுக்கு அடியவனாகி விட்டதாகக் கருதின வீடணன், தன்னை அடியனேன் என்று அழைத்துக் கொண்டான் என்க. இறைவனை வணங்குதற்கு சில விதிமுறைகள் வழிபாட்டு சாத்திரங்களில் கூறப்பட்டுள்ளன. அதற்கேற்ப வணங்கினான் என்பது, 'ஊழ்முறை வணங்கி' எனப்பட்டது. ஊழ்முறை என்பது ஒருபொருட் பன்மொழியு மாம்.

வீடணனை மைபோலும் கரிய நிறத்த மேனியன் என்று அடைமொழி கொடுத்த கவிஞன் இராமபிரானை வெறும் 'அழகன்' என்றுமட்டும் கூறி நிறுத்திவிடுவதை உணர்க. இதே 'அழகன்' என்ற சொல்லை 'அல்லையாண்ட அமைந்தமேனியழகனும்' என முன்னர் குகன் கூற்றாகக் கூறியதையும் நினைவிற்கொண்டு வருக. முன்பு எப்படித் தன் கருத்துக்கு ஒவ்வாத மாற்றுக் கருத்துக்கூறிய சுக்கிரீவனை அழைத்து, வீடணனைநீயே சென்று அழைத்துவா' என்று கட்டளையிட்டானோ, அதேபோல் இதுவரையில் இந்த விஷயமாக எந்தக் கருத்தையும் கூறாத இலக்குவன் இதற்கு உடன்படவில்லை போலும், என்று தானே ஊகித்து, அவனையே அழைத்து, 'வீடணனுக்கு நீயே மணிமுடி சூட்டு' என்று கூறிய அரசியல் தந்திரம் நோக்குக.

Koviloor Digital Library

'நல்லார் எனத் தாம் நனி விரும்பிக் கொண்டாரை, அல்லார் எனினும் அடக்கிக் கொளல் வேண்டும்' என்பதும், 'தமர்' என்று தாம் கொள்ளப்பட்டவர் தம்மைத் தமரன்மை தாம் அறிந்தாராயின், அவரைத் தமரினும் நன்கு மதித்து, தமரன்மை தம்முள் அடக்கிக் கொளல்' என்பதும் நாலடியார். இலக்குவன் உறக்கம் மட்டுமா இழந்தான்? பின்னால் யுத்தகாண்டத்தில் கவிஞன் கூறப்போவதை இப்பொழுதே கேளுங்கள். 'மனையும், வாழ்வும், உறக்கமும் மாற்றினான்' என்பது நாகபாசப்படலம். 'துறக்கம், எய்தியவரும் துறவாத உறக்கம்' என்பதும் கம்பனின் கருத்தே. 'தவறிலாப் புகழான்' என்பதும் ஆழமான கருத்துடைய சொற்றொடர். பழிப்பதற்குரிய தீய குணங்கள் சிறிதும் இன்றிப் புகழ்தற்குரிய நற்குணங்களே முழுதும் பெற்றுப் பகைவராலும் புகழப்பட்டவன் என்ற விரிந்த பொருளைத்தரும். இலக்குவனைச் சமாதானப்படுத்துவதற்காகவே வீடணனுக்கு 'தஞ்சன், துணைவன், நல்துணைவன், புகழான்' தவறிலாப் புகழான் என்று இத்தனை அடைமொழிகள் கொடுத்துக் கூறியிருப்பதையும் நோக்குக.

142. திருமுடியன்றித் திருவடி சூட்ட வேண்டுதல்

விளைவினை அறியும் மேன்மை வீடணன், 'என்றும் வீயா
அளவுஅறு பெருமைச் செல்வம் அளித்தனை ஆயின், ஐய!
களவுஇயல் அரக்கன் பின்னே தோன்றிய கடமைதீர
இளையவற் கவித்த மோலி என்னையும் கவித்தி' என்றான். (6589)

(வென்றி-வெற்றி; வீயா-அழியாத; தோன்றிய-பிறந்த; கடன்மை-தொடர்பு; இளையவன்-பரதன்; கவித்த-சூட்டிய; மோலி-மகுடம்/பாதுகை/திருவடிநிலை; விளைவு-பயன்; களவு-வஞ்சனை)

ஒரு செயலைச் செய்தால் அதன்பயன் என்னவாய் அமையும் என்பதை முன்கூட்டியே நன்கு உணரும் மேன்மைக்குணம் படைத்த வெற்றி பொருந்திய வீடணன், இராமபிரானை நோக்கி, ''தலைவனே! என்றைக்கும் அழிதல் இல்லாததும், அளவற்றதும், பெருமைக்குரியது மான அடைக்கலம் என்னும் செல்வத்தை எனக்குக் கருணைகூர்ந்து அருளியிருக்கிறாய்; என்றாலும் ஐயனே! வஞ்சனையையே தன் வாழ்க்கையின் இயல்பாகக் கொண்ட அரக்கனான இராவணன் பின்னே அவன் தம்பியான நான் அரக்கர்குலத்தில் பிறந்த தொடர்பு நீங்கும் வண்ணம், உன்னுடைய தம்பியாகிய பரதனுக்குச் சூட்டினாயே பாதுகைகள் என்ற மகுடங்கள், அதே பாதுகைகளாகிய மகுடத்தையே எனக்கும் அணிவிக்க அருள்புரிவாயாக!'' என்று வேண்டுகிறான் வீடணன்.

இங்கே பொதுவாகப் 'பெருமைச்செல்வம்' என்பதற்கு எல்லோரும் இலங்கை அரசு, உரிமையாகிய அரசச்செல்வம் என்றே பொருள் கூறுவர்.

Koviloor Digital Library

கவிஞன் பெய்திருக்கும் சொற்களை ஆழமாக நோக்கினால் அது அரசச்செல்வத்தைக் குறிக்காது என்பது போதரும். வீயாச் செல்வம், அளவறு செல்வம், பெருமைச் செல்வம் என்று தனித்தனியாகப் பிரித்துப் பாருங்கள். இலங்கை அரசச்செல்வம் அழியாததா? அளவற்றதா? பெருமைக்குரியதா? அழிவதுதானே! அளவோடு உள்ளதுதானே! அரக்கர் பூமிதானே! பின் அழியாதது எது? அளவற்றது எது? பெருமைக்குரியது எது? அழியாததும், அளவற்றதும் பெருமைக்குரியதும் இராமபிரானின் திருவடிகளைச்சரணடைந்து அவன் திருவருளைப் பெறுதல் என்பது நன்கு விளங்கும். எனவே வீடணன் இராமபிரானைப் பார்க்க வந்தது அரசின் மேற்றன்று, அவனைப் பரிபூரணமாக அடைக்கலம் வேண்டுவதுதான் என்பது தெற்றென விளங்குவதை உணர்க.

இங்கு வான்மீகம் வேறுபடுகிறது. இராமபிரான் பணித்தவுடன், அந்த இடத்திலேயே இலக்குவன் வீடணனுக்கு முடிசூட்டியதாக வான்மீகம் கூறுகிறது. இந்தப்பட்டாபிஷேக நிகழ்ச்சியைக் கம்பன் காப்பியத்தின் இறுதிக்கு எடுத்துச் செல்லுகிறான் என்பதைக் கருத்திற்கொள்க. இறுதியில் வீடணனுக்கு முடிசூட்டுபவனும் இலக்குவன்தான். சீதா தேவிக்குத் தீ மூட்டுபவனும் இலக்குவன்தான். அவன் இராமபிரானின் தம்பி அல்லவே! ஏவல் செய்பவன்தானே? 'புன்நெறியாம் அமண் சமயத்தொடக்குண்டு போந்த உடல் தன்னுடனே உயிர்வாழத் தரியேன் நான்; தரிப்பதனால் என்னுடைய நாயக! நின் இலச்சினையிட்டு அருள்' என்று பன்னு செழுந்தமிழ்மாலை முன்னிற்று பாடுவார்' என்பது திருநாவுக்கரசர் சமணசமயத்திருந்து சைவசமயத்திற்கு மாறிவந்தபோது பெரியபுராணத்தில் தெய்வச் சேக்கிழார் கூறுவது இது. அங்கே இலச்சினை; இங்கே பாதுகை என்பதையறிக. இங்கே சமணசமயம், இங்கே அரக்கர்குலம். வீடணன் இலங்கை அரசை விரும்பியதாக, அவன் மொழியால் எங்கும் கூறவைக்கவில்லை கவிஞன். ஆனால் இராவணன் கூற்றாகவும், இராமபிரான் அனுமன் கூற்றாகவும் கூறவைத்த அவன் உள்ளக்கருத்தை கற்போர் கணிப்பிற்கே விட்டுவிட்டான் போலும்.

143. இராமபிரான் வீடணனைத் தம்பியாக ஏற்றுக் கொள்ளுதல்

"குகனொடும் ஐவரானேம் முன்பு; பின், குன்று சூழ்வான்
மகனொடும் அறுவர்ஆனேம்; எம்உழை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய! நின்னொடும் எழுவர் ஆனேம்;
புகல் அரும் கானம் தந்து, புதல்வரால் பொலிந்தான் நுந்தை" (6590)

(எம்முழை-எம்மிடத்து; அகன்-அகம்/மனம்; அமர்-அமர்ந்திருந்த/நிலைபெற்ற; காதல்-முதிர்ந்த பக்தி; குன்று-மேருமலை; சூழ்தல்-சுற்றி வருதல்; புகல்அரும்-புகுதற்கரிய; கானம்-காடு; நுந்தை-நுன்தந்தை/உன்தந்தை/தசரதன்; பொலிதல்-நிறைந்துவிளங்குதல்)

Koviloor Digital Library

இராமபிரான் வீடணனை நோக்கி 'மனத்துள் மிகுந்த நிலைபெற்ற முதிர்ந்த பக்திகொண்டு எங்களிடம் வந்துசேர்ந்த ஐயனே! வீடண! முன்பு கங்கைக்கரையில் எங்கள்பால் அன்பு செலுத்திய குகன் என்ற வேடுவனோடு, நாங்கள் முதலில் நான்குபேராய் இருந்த சகோதரர்கள் ஐந்துபேர்களானோம்; அதன்பின்னர், கிட்கிந்தையில், மேருமலையைச் சுற்றிச்சுற்றி வருகின்ற சூரியனின் மகனான சுக்கிரீவன் எங்கள்பால் அன்புசெலுத்தி உதவி செய்ததால் அவனுடன் ஆறுபேர்கள் ஆனோம்; இப்போது அரக்கன் இராவணன் தம்பியாகிய உன்னுடன் நாம் ஏழு சகோதரர்களாக ஆனோம்; உன்னுடைய தந்தை தசரதன் என்னை யாரும் புகுதற்கரிய காட்டிற்கு வனவாசத்திற்காக அனுப்பி, மேலும் மூன்று புதல்வர்களைப் பெற்றுப் பொலிவுற்று விளங்குகிறான் பார்' என்கிறான் இராமபிரான்.

அன்பின் முதிர்ச்சியே காதலாகும். இங்கே முதலில் வீடணன் இராம பிரான்மேல்அன்பு கொண்டுதான்வந்தான், அவனைநோக்கி நேருக்குநேர் காண்பதற்கு முன்பு அவனைக் கண்டதும், அவன் அருட்பார்வை கிட்டியதும் அவன்மேல் ஒரு காதலே பிறந்தது என்பது கருத்து. எனவேதான் 'அன்பின் வந்த அகன் அமர் காதல் ஐய' என்கிறான் கவிஞன். கவிஞனின் ஒவ்வொரு சொற்றொடரும் படிக்கப்படிக்க வெவ்வேறான பொருளைத் தருவதை உணர்க. 'மாந்தர்க்குக் கற்றனைத்து ஊறும் அறிவு. காரணம் இந்தக் காப்பியம் தொட்டனைத்தூறும் மணற்கேணி; இதே பொருளைத் தரும் மற்றொரு பாடல்பகுதி கேளுங்கள். அனுமன் முதன்முதல் இராமபிரானைப் பார்த்தபோது என்ன நிகழ்ந்தது?'' என்பெனக்கு உருகுகின்றது; இவர்கின்றது அளவில்காதல்; அன்பினுக்கு அவதியில்லை; ''அங்கேயும்அவதியில்லாதஅன்பு அளவில்லாதகாதலாக மாறியமை கண்டு ஒப்பு நோக்கி இன்புறுக. 'இளையவற் கவித்த மோலி என்னையும் கவித்தி' என்று வீடணன் விரும்பியதால்' நின்னொடும் எழுவரானோம்' என்று வீடணனையும் பரதன்போல் தன் மற்றொரு தம்பி எனக் கருதலானான் இராமபிரான் என்க. 'புகல் அரும் கானம்' என்பதற்குத் திருமங்கையாழ்வார் தரும் விளக்கம் பார்ப்போம் வாருங்கள் 'கல் நிறைந்து, தீந்து, கழைபுடைத்து, கால், கழன்று பின்னும் திரைவயிற்றுப் பேயே திரிந்து உலவாக்கொள்ளவிலும் வெங்கானம்' என்பது அவரது விளக்கம்.

இங்கு 'என்தந்தை' என்று கூறாது 'உன்தந்தை-நுந்தை' என்று கூறியது ஏனோ எனில், வீடணனைத் தன் தம்பியாக ஏற்றுக் கொண்டதை உறுதி செய்வதற்காக உன்தந்தை என்றே உரிமைத் தந்தையாக்கினான் என்க.

Koviloor Digital Library

144. வீடணன் பாதுகைகளைச் சூட்டிக்கொள்ளுதல்

"நடு இனிப்பகர்வது என்னே? நாயக! நாயினேனை,
'உடன் உதித்தவர்களோடும் ஒருவன்' என்று உரையா நின்றாய்,
அடிமையிற் சிறந்தேன்; என்னா, அயிர்ப்பொடும் அச்சம் நீங்கி,
தொடுகழல் செம்பொன் மோலி, சென்னியில் சூட்டிக் கொண்டான்"
(6591)

(நடு-இடையே; உரையா-உரைத்து/கூறி; அயிர்ப்பு-ஐயம்/சந்தேகம்; மோலி-முடி; சென்னி-தலை; தொடுகழல்-பாதுகை; உதித்தல்-பிறத்தல்/தோன்றுதல்; பொன்-இங்கே அழகு)

இவ்வாறு இராமபிரான் 'நின்னுடன் எழுவர் ஆனேம்' என்று கூறியதைக் கேட்டவுடன் வீடணன், 'தலைவனே! நாயினும் கீழ்ப்பட்டவனான, அரக்கர்குலத்தைச் சேர்ந்த என்னை, மனமிரங்கி, அருள்கூர்ந்து, உயர்ந்த உன் உடன்பிறந்த சகோதரர்களுள் இழிந்தவனான என்னையும் ஒருவன் என்று கூறியிருக்கிறாய். இவ்வாறு என்னிடம் அருள் பாலித்திருக்க இதற்கு நடுவில் நான் கூற என்ன இருக்கிறது? உனக்கு அடிமைத் தொழில் செய்வதில் சிறந்தவனாவேன்' என்று தான் முன்பு கொண்டிருந்த சில சந்தேகத்தையும், அச்சத்தையும் தவிர்த்து, இராம பிரானுடைய வீரக்கழலணிந்த திருவடிகளில் பொருந்தியிருந்த சிறந்த அழகிய பாதுகைகளை தானே எடுத்து மகுடமாகத் தன் தலையில் சூட்டிக்கொண்டான் வீடணன்.

'நாயினேன்' என்பது தன்னைத் தாழ்த்திக் கூறிக்கொண்டது என்று கருதினாலும், தனது நன்றியுணர்வைக் காண்பிப்பதற்காக அவ்வாறு கூறினான் என்பதே பொருந்தும். 'எறிந்த வேல் மெய்யதாவால் குழைக்கும் நாய்' என்பது சான்றோர் வாக்கு. முன்பு கொண்டிருந்த ஐயம், தன்னை இராமபிரான் அடைக்கலமாக ஏற்றுக்கொள்வானோ மாட்டானோ என்பது, இப்போது அடைக்கலமாக மட்டுமல்ல, தம்பியாகவே ஏற்றுக்கொண்டிருக்கிறான். எனவே அயிர்ப்பு நீங்கினான். முன்பு கொண்டிருந்த அச்சம் தனக்கு வானரச்சேனை ஏதேனும் தீங்கு இழைக்குமோ என்பது. இப்போது இராமபிரானின் உடன் பிறந்தவன் என்று ஆனதால் அந்த அச்சமும் நீங்கியது என்பதாம். கழல் என்னும் சொல், செருப்பு என்ற பொருளிலேயே கையாளப்பட்டிருப்பதைக் காணலாம். 'கழலில் செந்தாமரை அடிகள் புல்லி' என்பது சீவகசிந்தாமணி. இவ்வாறே பரதனும் 'அடித்தலம் இரண்டையும் அழுத கண்ணினன் முடித்தலம் இவை என்று முடியிற் சூடினான்' என்பதால் அறியலாம். 'தொடுகழல் செம்பொன் மோலி' என்பது இங்கே வீரக்கழலணிந்த சிறந்த அழகிய பாதுகைகளைக் குறித்து நின்றது என்க.

Koviloor Digital Library

145. யாவரும் மகிழ்ந்து வாழ்த்துதல்

திருவடி முடியின் சூடி, செங்கதிர் உச்சி சேர்ந்த
அருவரை என்ன, நின்ற அரக்கர்தம் அரசை நோக்கி,
இருவரும் உவகை கூர்ந்தார், யாவரும் இன்பம் உற்றார்;
பொரு அரும் அமரர் வாழ்த்தி, பூமழை பொழிவதானார். (6592)

(முடி-தலை; வரை-மலை; கூர்தல்-மிகுதல்; பொருஅரும்-ஒப்பற்ற; அமரர்-தேவர்கள்; பொழிதல்-சொரிதல்)

அவ்வாறு இராமபிரான் திருவடி நிலைகளைத் தன்தலையில் சூடிக்கொண்டு சிவந்த கிரணங்களை உடைய சூரியன் தனது சிகரத்தின் மேலே வந்து ஒளிவீசி நிற்கும்போது பொலிவுற்றுத் திகழ்கின்ற அருமையான பெரிய மலையைப்போல எல்லோர் நடுவிலும் நிற்கின்ற அரக்கர்களுக்கு அரசனான வீடணனைப் பார்த்து, இராமஇலக்குவர் ஆகிய இருவரும் மிக்க மகிழ்வு எய்தினர். உடன் நின்ற படைத்தலைவர்களும், சுக்கிரீவனும், ஏனைய வானரச்சேனைகளும் இன்பத்தால் மகிழ்ச்சி யடைந்தார்கள்; தமக்கு நிகரற்ற ஒப்பற்ற தேவர்கள் எல்லோரும் வீடணனை வாழ்த்தி மலர்மாரி பொழிந்தனர்.

வீடணனுக்கு 'செங்கதிர் உச்சி சேர்ந்த அருவரை ஒப்பு. திருமுடிக்குச் செங்கதிர்ச் சூரியன் ஒப்பு; தேவர்கள் மலர்மாரி பொழிந்தது தாங்கள் எண்ணி இருக்கின்ற இராவணவதத்துக்கு இராமபிரானுக்குத் துணையாக வீடணன் வந்து சேர்ந்தானே? என்ற மகிழ்ச்சியால் என்க. எங்கெங்கே தமக்கு அனுகூலமான காரியங்கள் நடக்கின்றனவோ அங்கெல்லாம் தேவர்கள்தோன்றி மலர்மாரி பொழிவார்கள்; எங்செல்லாம் போர்போன்ற அரிய நிகழ்ச்சிகள் நடக்கின்றனவோ அப்பொழுதெல்லாம் தேவர்கள் வானில் மறைந்து நின்று பார்ப்பார்கள், எங்கெல்லாம் பெருந்திருப்பங்கள் நிகழவேண்டுமோ அங்கெல்லாம் அசரீரியாகக் குரல் கொடுப்பார்கள். எங்கெல்லாம் கோபத்தால் நிலை மாறுகிறதோ அப்பொழுதெல்லாம் தேவர்கள் நடுங்கி வானிற் சென்று தம்மை மறைத்துக் கொள்வார்கள். இவையெல்லாம் இந்தக் காப்பியத்தில் நாம் காணும் தேவர்கள் நடவடிக்கைகள் என்பதைக் கருத்திற்கொள்க. இராவணன் வதத்திற்கென இராமபிரானுக்கோ மற்றவர்களுக்கோ தேவர்கள் உதவிசெய்ததாக வெளிப்படையாக எங்கும் பேசப்படவில்லை, விசுவாமித்திரர், அகத்தியர், சபரி, சுக்கிரீவன், அத்திரி முனிவர், அனசூயை போன்ற முனிவர்கள்தான் உதவி செய்திருக்கின்றனரே அன்றி தேவர்கள் உதவியதாகச் சான்றுகள் தெரியவில்லை. எனினும் இது அறிஞர்களின் மேலான கருத்துக்களுக்கு உட்பட்டது.

Koviloor Digital Library

146. ஆர்த்தன பரவை ஏழும்; அவனியும், அமரர் நாடும்
வார்த்தொழில் புணரும் தெய்வ மங்கல முரசும் சங்கும்;
தூர்த்தன கனகமாரி; சொரிந்தன நறுமென் சுண்ணம்;
போர்த்தது வானத்து அன்று, அங்கு எழுந்தது துழனிப் பொம்மல். (6593)

(பரவை-கடல்கள்; அவனி-பூமி/மண்ணுலகு; அமரர்நாடு-தேவருலகு/விண்ணுலகு; ஆர்த்தல்-ஆரவாரித்தல்; கனகம்-பொன்; மாரி-மழை; தூர்த்தல்-நிரம்புதல்; துழனி-ஆரவாரம்; பொம்மல்-மிகுதி; போர்த்தல்-கவிந்து கொள்ளுதல்; வார்-தோல்கயிறு; புணர்தல்-கட்டுதல்/கூடுதல்)

வீடணன், இராமபிரானது திருவடி நிலைகளைச் சூடிக்கொண்டதைக் கண்டதால், ஏழு கடல்களும், பூவுலகமும், விண்ணுலகமும் எல்லாமும் எல்லோரும் ஆரவாரித்தனர். வாரால் இழுத்துக் கட்டப்பட்ட தெய்வத் தன்மை வாய்ந்த தேவ துந்துபி என்ற முரசும், மங்கலமான சங்குகளும் முழங்கின; வானிலிருந்து தேவர்கள் பொன்மாரி பொழிந்து நிலவுலகை நிரப்பினர்; நறுமணமுள்ள மெல்லிய வாசனைப் பொடிகள் எல்லா இடங்களிலும் தூவப்பட்டன; அன்று அப்பொழுது அங்கு எழுந்த ஆரவாரத்தின் மிகுதி வானுலகு எங்கும் சென்று கவித்துக்கொண்டது. முரசில் கொற்றவை வீற்றிருப்பதாகக் கூறப்படுவது உண்டு. எனவே 'தெய்வ மங்கல முரசு' எனப்பட்டது. முரசு பொதுவாக மங்கல நிகழ்ச்சிகளுக்கே பயன்படுத்தப்படும். போர்முரசு என்பது வேறு.

147. "மொழிந்த சொல் அமிழ்தம் அன்னாள் திறத்தினின் முறைமை நீங்கி,
இழிந்த என்மரபும் இன்றே உயர்ந்தது" என்று, ஏம்பல் உற்றான்,
செழுந்தனி மலரோன், பின்னை 'இராவணன் தீமைச்செல்வம்
அழிந்தது" என்று அறனும், தன்வாய் ஆவலம் கொட்டிற்று அன்றே!
(6594)

(தனி-ஒப்பற்ற; மொழிதல்-பேசுதல்; திறம்-காரணம்; இன்றே-இப்பொழுதே; ஏம்பல்-மகிழ்ச்சி; பின்னை-பிறகு; அறன்-அறக்கடவுள்/தருமதேவதை; ஆவலம்கொட்டுதல்-ஆரவாரம் செய்தல்; செழுமை-தழைத்தல்; இழிதல்-தாழ்தல்; மரபு-புலத்தியன் வழி; மலரோன்-பிரமன்)

அமிழ்தம் போன்று இனிமையாகப் பேசும் இயல்புடைய சீதாதேவியின் பொருட்டு இராவணனால் நீதிநெறி தவறிய என்னுடைய புலத்தியன் குலத்தின் மரபு, இப்பொழுதுதான் தன் நிலையில் உயர்ந்திருக்கிறது என்று தழைத்த சிறந்த ஒப்பற்ற தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமதேவன், முன்னர்க் கொண்ட துன்பம் நீங்கி மகிழ்ச்சியுற்றான். இது ஒருபுறம் இருக்க, அறக்கடவுள், இராவணன் ஈட்டிய பெரும் செல்வம் எல்லாம் அறனல்லாத தீயவழிகளில் செல்லும் போக்கு இப்போதே ஒழிந்தது என்று தருமதேவதையும் தன் வாய்திறந்து ஆரவாரம் செய்தது.

Koviloor Digital Library

இராமபிரானை வீடணன் அடைக்கலம் புகுந்ததும், அவன் இவனைத் தம்பி என ஏற்றுக்கொண்டதும், சீதாதேவியை முறைமையில்லாத வழியில் அபகரித்துக் கொண்டு வந்ததால் அன்று தாழ்ந்துபோன தன் குலப்பெருமை இன்றுதான் மீட்கப்பட்டு மேன்மை பெற்றது என்று பிரமதேவன் மகிழ்ந்தான். அதுபோல இராவணன் ஈட்டிய தீமைதரும் செல்வம் அனைத்தும் அழிந்தது என்று அறக்கடவுள் மகிழ்ந்து ஆரவாரம் செய்தது என்பதாம். இராவணன் பிரமதேவனுக்குக் கொள்ளுப் பேரன் முறையினன்; எனவே முன்பு இடருற்றிருந்தவன் இன்று மகிழ்ந்தான் என்றார் என்க.

148. பாசறையை வலம் வருதல்

இன்னது ஓர் செவ்வித்து ஆக, இராமனும், 'இலங்கை வேந்தன்
தன்நெடும் செல்வம் தானே பெற்றமை பலரும் கேட்ப,
பல்நெடும் தானை சூழ, பகலவன் சேயும், நீயும்,
மன்நெடும் குமர! பாடிவீட்டினை வலம் செய்க!'' என்றான். (6595)

(நெடும்-பெரிய; தானை-சேனை/படை; பகலவன்-சூரியன்; பாடி வீடு-பாசறை; செவ்வித்து-நிகழும் போது; மன்-பெருமை/நிலைபெற்ற; செவ்வி-சமயம்/சந்தர்ப்பம்)

இவ்வாறு நிகழ்ச்சிகள் நிகழ்ந்து கொண்டிருக்கும்போது, இராமபிரான் இலக்குவனை அழைத்து ''நிலைபெற்ற பெருமையையுடைய அரசிளங் குமர! இலங்கை வேந்தனாகிய இராவணனின் பெரிய அளவற்ற அரசச் செல்வத்தை இப்போது, தானே, தனக்குமட்டும் உரியதாக வீடணன் பெற்றிருக்கும் இச்செய்தியை, எல்லோரும் கேட்டறியும் வண்ணமும், கண்டறியும் வண்ணமும், நீயும், சூரியன் புதல்வனான சுக்கிரீவனும், நம்முடைய பலவகைப்பட்ட சேனைகளும் சூழ்ந்துவர, நம் வானரச் சேனைகள் தங்கியிருக்கும் பாசறையை வலம் செய்விப்பாயாக!'' என்று பணித்தான்.

இப்பொழுது இலங்கைக்கு வீடணன் தவிர வேறுயாரும் அரசர்இல்லை என்ற கருத்துப்பட 'இலங்கைவேந்தன் தன் நெடும் செல்வம் தானே பெற்றமை' என்றார் என்க. அரசன் முடிசூடிக் கொண்டதும் நகர்வலம் வருதல் வழக்கம். நகர்வலம் என்பது பட்டினப் பிரவேசம் ஆகும். அப்பொழுது முடிசூட்டிக் கொண்டவனும், முன்னரேயே அரசனாகவோ, இளவரசனாகவோ இருப்பவரும், படைகள் சூழ நகரை வலம் வருதல் ஒரு அரசமரபு எனக் கொள்க. பாடிவீட்டை வலம்வருதல் என்பது புறத்திணைத் துறையாகிய 'களம்கொள்ளுதல்' என்று பேசப்படும். இது களத்தைத் தன்வசமாக்கிக் கொள்ளுதல் என்று பொருள்படும்.

Koviloor Digital Library

149. அந்தம்இல் குணத்தினானை அடியிணை முடியினோடும்,
சந்தன விமானம் ஏற்றி, வானரத்தலைவர் தாங்க,
'இந்திரற்கு உரிய செல்வம் எய்தினான் இவன்' என்று ஏத்தி
மந்தரத் தடந்தோள்வீரர், வலம் செய்தார், தானை வைப்பை. (6596)

(அந்தம்இல்-எல்லையில்லாத; அந்தம்-முடிவு; அடியிணை-இருதிருவடி நிலைகள்; ஏத்துதல்-கொண்டாடுதல்/புகழ்தல்/போற்றுதல்; தடம்-பெரிய; வைப்பு-பாசறை/இருப்பிடம்)

நிறைந்த எல்லையில்லாத நற்குணங்களைக்கொண்ட வீடணனை, இராமபிரானது இருதிருவடி நிலைகளையே மணிமகுடமாகக்கொண்டு அதனோடும் அவனைச் சந்தனத்தால் ஆன விமானத்தில் ஏற்றி, அந்த விமானத்தை வானரப்படைத் தலைவர்கள் தாங்கிக்கொண்டுவர, 'இந்த வீடணன் இந்திரனுக்கு நிகரான பெரும் அரசச்செல்வம் அடைந்திருக் கிறான்' என்று மந்தரமலை போன்ற பருத்த அழகிய தோள்களையுடைய இலக்குவனும் சுக்கிரீவனும் அவன் புகழ்பாடிப் போற்றிக்கொண்டே, வானரச்சேனைகள் தங்கியிருக்கும் பாசறையாகிய பாடிவீட்டை வலம் செய்து வந்தனர்.

வீடணன்மிக நல்ல குணங்கள்நிரம்பப் பெற்றவன்என்பதால்அவனை 'அந்தம்இல் குணத்தான்' என்றார் என்க. முன்பு இராமபிரானை 'அந்தம் இல் பெருங்குணத்தான்' என்றமையையும் இங்கு நினைவிற் கொள்க. இப்போது வீடணனுக்கு மணிமுடியாகத் திகழ்வது இராமபிரானுடைய திருவடி நிலைகளே என்பது 'அடியிணை முடியினோடும்' எனப்பட்டது. வானரச்சேனைத் தலைவர்கள் அதனைத் தாங்கி வந்தனர் என்பது வீடணனுக்குச் சிறப்புச் சேர்க்க என்க. இலங்கை அரசச்செல்வம் இந்திரன் அரசச்செல்வத்திற்கு இணையானது என்பது 'இந்திரற்கு உரிய செல்வம் எய்தினான் இவன்' என்பதால் குறிக்கப்பட்டது. சுக்கிரீவன், இலக்குவன் ஆகியோரின்தோள்வலியைச்சிறப்பிக்க 'மந்தரத்தடந்தோள்வீரர்' என்றார் என்க. 'தானை வைப்பு' என்பது சேனைகள் தங்கியிருக்கும் இருப்பிடமாகிய பாடிவீடு-பாசறை என்க.

150. தேடுவார் தேட நின்ற சேவடி, தானும் தேடி
நாடுவான், அன்றுகண்ட நான்முகன் கழீஇய நல்நீர்
ஆடுவார் பாவம் ஐந்தும் நீங்கி, மேல் அமரர் ஆவார்;
சூடுவார் எய்தும் தன்மை சொல்லுவார் யாவர்? சொல்வீர்! (6597)

(கழீஇய-கழுவிய; ஆடுதல்-நீராடுதல்/மூழ்குதல்; அமரர்-தேவர்; தேடுவார்-ஞானிகள்)

கடவுளின் உண்மைத்தன்மையையும் அருட் திறத்தையும் நேரில் காணவேண்டும் என்ற பேரவாக்கொண்டு அவனைத்தேடும் முயற்சியில்

Koviloor Digital Library

ஈடுபட்டுள்ள பரம ஞானிகளும், முனிவர்களும் அடியார்களும் இன்னும் தேடிக்கொண்டேயிருக்க, அவர்கள் கண்ணுக்குப் புலப்படாத அந்தச் சிவந்த திருவடிகளைத் தானும் காணவேண்டும் என்று ஆசைப்பட்டான், நான்கு முகங்களையுடைய பிரமதேவன். திருமால் திருவிக்கிரம அவதாரம் எடுத்தபோது அவருடைய திருவடிகளைக் காணும்பேறு பெற்றான் பிரமதேவன். அப்பொழுது அவன் திருமாலின் திருவடிகளைத் திருமஞ்சனம் செய்வித்தான். அந்த நல்ல நீர்தான் கங்கையாகப் பிரவாகம் எடுத்து வருகிறது. அந்தக் கங்கையில் மூழ்குபவர்களின் பஞ்சமாபாதகங் களையும் பாவங்களையும் அந்தக் கங்கையாறு நீக்கி அவர்களை விண்ணுலகாளும் தேவர்களாக ஆக்குகிறது. அப்படியென்றால் அந்தச் சேவடிகளைத் தன்தலையின் மீது சுமந்துகொண்டிருப்பவர்கள் அடையக் கூடிய புண்ணியத் தன்மைகளை எடுத்துச் சொல்லக் கூடியவர்கள் யாராவது இருக்கிறார்களா? சொல்லுங்கள்'' என்கிறான் கவிஞன்.

இது கவிக்கூற்று. சேவடியைக் கழுவிய தண்ணீருக்கே இத்தகைய ஆற்றல் இருக்குமென்றால், அதில் நீராடியவர்களே தேவர்களாக ஆகலாம் என்றால், அந்தத் தண்ணீரால் கழுவப்பட்ட சேவடியையே தன் திருமுடி யாகச் சுமந்து கொண்டிருக்கும் வீடணனை எந்த நிலையில் வைத்துப் போற்றலாம் சொல்லுங்கள் என்று கேட்கிறான் கவிஞன் என்பதாம். அவன் பெருமை ஒருவரால் சொல்லும் தரத்தன்று என்பதாம். பாவம் ஐந்து-பஞ்சமாபாதகங்கள், கொலை, களவு, சூது, கள், காமம் என்பர். இன்னும் சிலர் கொலை, களவு, பொய், கள், குருநிந்தனை என்பர். 'அன்று' என்றது திருமால் தன் ஈரடியால் உலகளந்த அன்று என்று பொருள்படும்.

151. சான்றோர்கள் வியந்து மகிழ்தல்

''இற்றை நாள் அளவும், யாரும், இருடிகள், இமையோர், ஞானம்
முற்றினார், அன்பு பூண்டார், வேள்விகள் முடித்து நின்றார்,
மற்றும் மாதவரும் எல்லாம், வாள் எயிற்று இலங்கை வேந்தன்
பெற்றது ஆர் பெற்றார்!'' என்று, வியந்தனர் பெரியோர் எல்லாம்.
(6598)

(வாள்-ஒளி/கூர்மை; இற்றைநாள் அளவும்-இன்றுவரையில்)

இவ்வுலகில் உள்ள பெரியோர்கள் எல்லாம், இன்றுவரையிலும், எந்த ரிஷிகளோ, தேவர்களோ, தத்துவஞானம் நிரம்பப்பெற்ற ஞானிகளோ, இறைவனிடம் பக்திபூண்ட அடியவர்களோ, நிறைந்த யாகங்களை முற்றுப்பெறச் செய்தவர்களோ, மற்றும் பெரிய தவத்தை மேற்கொண்ட தவசீலர்களோ, யாரும் பெறாத ஒரு பெரும் பேற்றை இந்த ஒளி பொருந்திய கூர்மையான பற்களையுடைய இலங்கைக்கு அரசனாகிய வீடணன் ஒருவன்தான் பெற்றிருக்கிறான்' என்று கூறி வியந்து, மகிழ்ந்து, பாராட் டினார்கள்.

Koviloor Digital Library

இந்த இலங்கை வேந்தன் பெற்ற பெரும்பேற்றை இங்கு கூறப்பட்டிருப்பவர்களில் யார் பெற்றிருக்கிறார்கள்? ஒருவரும் பெறவில்லை என்று வீடணனைப் பாராட்டினார்கள் என்பதாம். வீடணன் இறைவனை நேரில் கண்டான்; அவனிடம் அடைக்கலம் புகுந்தான்; இறைவனால் அருள் செய்யப்பெற்றான்; அவன் சேவடியைத் தன் திருமுடியாய்க் கொண்டான். இத்தகைய பெரும்பேறு வேறுயாருக்காவது கிடைத்திருக்கிறதா? என்று கேட்கிறான் கவிஞன் என்க. இம்மைப் பயனும் மறுமைப் பயனும் பெற்றான் என்க.

வீடணன் அடைக்கலப்படலம் நிறைவுற்றது

Koviloor Digital Library

5. இலங்கை கேள்விப்படலம் [73 பாடல்கள்]

இராமபிரான், இலங்கையின் சூழல், இராவணன் தவவலிமை, அவன் தம்பியர், மைந்தர் போர்வலிமை, படைவலிமை, அரக்கர்கள் இயல்பு முதலியன பற்றி வீடணனிடமிருந்து கேட்டு அறியும் படலம் எனவிரியும். இது சில சுவடிகளில் 'ஒன்னார் வலியறி படலம்' எனவும் 'இலங்கை அளவறி படலம்' எனவும் குறிக்கப்பெற்றிருக்கிறது. 'ஒன்னார்' என்பது பகைவரைக் குறிக்கும். 'அளவறிதல்' என்பது இலங்கையின் பரப்பளவு, மற்ற படையின் எண்ணிக்கை முதலியவற்றைக் குறிக்கும். இது 73பாடல்களைக் கொண்டது.

இப்படலத்துள், அந்திமாலைப் பொழுது வந்ததால் இராமபிரான் சீதாதேவியை நினைத்து வருந்துதல்; சுக்கிரீவன் முதலியோர் இப்போது வீடணனோடு, இதற்கு மேல் நாம் என்ன செய்யவேண்டும் என்பதை ஆலோசிக்கவேண்டும் என்று இராமபிரானுக்குக் கூறுதல்; வீடணனிடம் இலங்கையின் கட்டுக்காவல், மதில், அகழிகள், அரண் போன்றவற்றைப் பற்றி இராமபிரான் கேட்டறிதல்; வாயில் கோபுரங்கள் அமைப்பு, காவலர்கள் எண்ணிக்கை, ஆற்றல், படைகளின் அளவு முதலிய சுற்றுப்புறச்சூழல் பற்றியும் வினவி அறிதல்; இராவணனின் பக்கபலமாக உள்ள துணைவர்கள், படைத்தலைவர்கள் ஆகியோரது வலிமையும், ஆற்றலும் அவனுடைய தம்பியான கும்பகருணனின் இயல்பு, பேராற்றல் முதலியன பற்றியும் கேட்டறிதல்; அவன் புதல்வர்களான இந்திரசித்து, அதிகாயன், அக்ககுமாரன் முதலியோர் பேராற்றல் பற்றியும், இராவண னுடைய சொந்த தவவலிமை, போர்வலிமை முதலியன பற்றியும் கேட்டு அறிதல்; இவைதவிர வீடணனாகவே தன்னிச்சையாக, இலங்கையில் அனுமன் புரிந்த வீரச்செயல்கள், இலங்கைக்கு எரியூட்டியது, பொழில் இறுத்தது, கிங்கரர், சம்புமாலி, பஞ்சசேனாபதிகள், அக்ககுமாரன் முதலியவர்களை அழித்தது போன்ற செயல்களையும், இலங்கை புதிதாக நிர்மாணிக்கப்பட்டதையும், மேலும் தான் எவ்வாறு வீடணனால் துரத்தப்பட்டான் என்தையும், இராமபிரானிடம் வந்து அடைக்கலம் புகுதற்கான காரணத்தையும் கூறுதல்; இவற்றைக் கேட்ட இராமபிரான் அனுமனைப் புகழ்ந்து பாராட்டுதல் ஆகிய நிகழ்ச்சிகள் மிக விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன.

Koviloor Digital Library

1. இராமபிரான் வீடணனுக்கு இருப்பிடம் தருதல்

வந்து அடி வணங்கிய நிருதர் மன்னவற்கு
அந்தம் இலாதது ஓர் உறையுள் அவ்வழித்
தந்தனன் விடுத்தபின், இரவி, தன் கதிர்
சிந்தின வெய்ய, என்று எண்ணி, தீர்ந்தனன். (6599)

(நிருதர்-அரக்கர்; அந்தம்இல்-அளவிலாத; உறையுள்-இருப்பிடம்; விடுத்தல்-அனுப்புதல்; இரவி-சூரியன்; வெய்ய-வெப்பமுடையன; தீர்தல்-மறைதல்)

வீடணன் பாடிவீட்டை நகர்வலம் வந்து, பின்னர் இராமபிரான் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான். அவ்வாறு வணங்கிய அரக்கர்குல வேந்தனாகிய வீடணனுக்குத் தக்கதும் அளவிலாத பரப்பையுடையதும், வசதிகள் நிறைந்ததுமான ஒருபெரிய வீட்டை-இருப்பிடத்தை அந்தப் பாசறையில் அவனுக்கு ஒதுக்கிக் கொடுத்து அவனுக்கு விடைகொடுத்து அனுப்பினான். பின்னர் இராமபிரான், வீடணன் ஆகியோர்க்குத் தன் ஒளிபொருந்திய கிரணங்களால் வெப்பம் தந்து வருத்தக்கூடாது என்று கருதி, சூரியன் தன் கதிர்களைச் சுருக்கிக்கொண்டு மறைந்தான்.

2. செக்கர்வானம் தோன்றுதல்

சந்தி வந்தனைத் தொழில் முடித்து, நன்நெடும்
புந்தி நொந்து, இராமனும் உயிர்ப்ப, பூங்கணை
சிந்தி வந்து இறுத்தனன், மதனன்; தீ நிறத்து
அந்தி வந்து இறுத்தது; கறுத்தது அண்டமே. (6600)

(சந்தி-மாலைநேரம்; வந்தனை-தொழுகை; புந்தி-இங்கே மனம்; உயிர்த்தல்-பெருமூச்சு விடுதல்; மதனன்-மன்மதன்/காமன்; பூங்கணை-மலரம்புகள்; சிந்தி-எறிந்து; இறுத்தல்-தங்குதல்; கறுத்தல்-இருளுதல்; அண்டம்-வானம்/உலகம்; நெடுமை-பெருமை; நொந்து-வருந்தி)

சூரியன் மறைந்ததால் மாலை நேரத்தில் செய்யவேண்டிய இறைவழி பாட்டை முடித்துக்கொண்ட இராமபிரான், சீதாதேவியின் பிரிவால், தனது பெருமைபொருந்திய மனம் சற்று வருத்தமுற, பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கும்போதே, மன்மதன் தன் மலரம்புகளை அவன்மீது தொடுத்துக்கொண்டு வந்து, அங்கு தங்கினான். அப்போது மெல்ல நெருப்புப்போன்ற சிவந்த நிறமுடைய செக்கர்வானம் வந்து பரவியது. பின்னர்சற்று நேரத்தில் வானமும் இவ்வுலகும் இருண்டு போயிற்று, இரவு வந்தது.

'சந்தி வந்தனைத்தொழில்' என்பது மாலையில் இறை வழிபாட்டிற் குரிய சந்தியாவந்தனம் என்க. 'நெடும்புந்தி' என்பது இராமபிரானுடைய

Koviloor Digital Library

பெருமை பொருந்திய மனத்தைக் குறித்தது. மாலைநேரம் பிரிவுத்துயரை மிகுதிப்படுத்தும் என்பது நாம் அறிந்ததே. சந்தியாவந்தனம் என்பது மூன்று காலமும் செய்யவேண்டிய இறைவழிபாடு. மன்மதனுடைய பூங் கணைகள் ஐந்து, 'நினைக்கும் அரவிந்தம்; நீள்பசலை மாம்பூ; அனைத் துணர்வு போக்கும் அசோகு; புனத்துவளர் முல்லை கிடைகாட்டும்; மானே முழு நீலம் சொல்லும்; மதன் அம்பின் குணம்; என்பது இரத்தினச்சுருக்கம்.

3. நட்சத்திரங்கள் ஒளிவிடுதல்

மாத்தடந் திசைதொறும், மறைந்த வல் இருள்,
கோத்தது, கருங்கடல் கொள்ளை கொண்டென;
நீத்த நீர்ப்பொய்கையில், நிறைந்த நாள்மலர்,
பூத்தென, மீன்குலம் பொலிந்தது அண்டமே. (6601)

(மா-பெரிய; தடம்-பரந்த/அகன்ற/பெரிய; கோத்தது-கவிந்தது; பொய்கை-நீர்நிலை; நாள்-அன்றலர்ந்த/புதிய; பூத்தல்-மலர்தல்; அண்டம்-வானம்; மீன்கள்-நட்சத்திரங்கள்; பொலிதல்-விளங்குதல்; நீத்தநீர்-நீந்துதற்கு ஆழமுடைய நீர்; நீத்தம்-வெள்ளம்)

பெரிய அகன்ற திசைகளெல்லாம் போய் மறைந்து கொண்ட வலிய இருட்டானது, கரியகடல் இவ்வுலகத்தையே கொள்ளை கொண்டது போலக் கவிந்து கொண்டது. வெள்ளம் நிறைந்த நீர்நிலைகளில் நிறைந்து மலர்ந்திருந்த அன்றலர்ந்த புதிய மலர்கள் பூத்திருப்பனபோல, வானத்தின் நட்சத்திரங்கள் ஒளிவிட்டுப் பிரகாசித்து விளங்கின.

கரியகடல் கொள்ளை கொண்டதுபோல் திசைகளெங்கும் இருள் பரவியது. வெள்ளம் நிறைந்த நீர்நிலையில் பூத்துக்குலுங்கும் அன்றலர்ந்த புதியமலர்களைப் போல் வானத்தில் நட்சத்திரங்கள் பொலிந்து விளங்கின என்பதாம். வானத்திற்குப் பொய்கையும், நட்சத்திரங்களுக்கு மலர்களும் உவமை. வலிமையான இருள், 'வல்லிருள்' என்பது 'கொள்ளிக்கும் விள்ளாத கூர்இருள்' என்க.

4. இராமன் வருந்துதல்

சில்இயல் கோதையை நினைந்து தேம்பிய
வில்லியைத் திருமனம் வெதுப்பும் வெம்மையால்;
எல்லியைக் காண்டலும் மலர்ந்த ஈட்டினால்,
மல்லிகைக் கானமும், வானமும் ஒத்ததே. (6602)

(சில்-சில/குளிர்ச்சி; இயல்-வகை; கோதை-கூந்தல்/மாலை; தேம்புதல்-வருந்துதல்; வில்லி-வில்வீரன்; திரு-அழகிய; வெதுப்புதல்-வாட்டுதல்; எல்லி-இரவு; ஈடு-தன்மை; கானம்-காடு/வனம்; சில்லியல்-தகட்டணி)

Koviloor Digital Library

ஐந்துவகையாகப் பகுக்கப்பட்டதும், குளிர்ச்சி பொருந்தியதுமான கூந்தலையுடைய சீதாதேவியையே எண்ணி, வருந்திக் கொண்டிருக்கின்ற வில்வீரனான இராமனது அழகிய மனத்தை மேலும் வாட்டும் எண்ணத்தால், இரவைக்கண்டதும் மலர்கின்ற தன்மையை உடைய மல்லிகை மலர்கள் நிறைந்த மல்லிகைக்காடும், நட்சத்திரங்கள் நிறைந்த வானத்தைப் போன்று விளங்கியது.

பெண்களின் கூந்தலுக்கு 'ஐம்பால்' என்ற ஒரு பெயரும் உண்டு. அது மகளிரின் கூந்தல், முடி, கொண்டை, சுருள், குழல், பனிச்சை என்ற ஐந்து வகையாகப் பகுக்கப்பட்டு அலங்கரிக்கப்படுவதால் அப்பெயர் பெற்றது என்க. 'கோதை' என்ற சொல்லுக்கு மலர்மாலை என்பதே பொருள். மலர் மாலை அணிந்த கூந்தைலையுடைய சீதாதேவி என இருமடி ஆகுபெயராய் அந்தஒரே சொல் சீதாதேவியை உணர்த்திற்று என்க. இராமபிரானது மனம எப்போதும் எல்லோர்க்கும் நன்மையே நினைக்கும் மனம் என்பதால் 'திரு மனம்' எனப்பட்டது என்க. 'சில்லியல்' என்ற சொல்லுக்கு தலைமுடியில் அணியும் தகட்டணி என்ற ஒரு பொருளும் உண்டு. அந்தத்தகட்டணியை அணிந்த கூந்தலையுடைய சீதாதேவி என்ற பொருளும் இங்கு பொருந்தி வருதல் காண்க. தகட்டணி என்பது இன்று Hair Clip என்று கூறுவது போன்றது எனக்கொள்க. 'தேம்புதல்' என்ற சொல் வருந்துதல்/உருகுதல் என்ற பொருளையும் தரும். 'தீ முகத்து இட்ட மெழுகில் தேம்பியும்' என்பது பெருங்கதை. மல்லிகை மலர் இராமன் மனத்தை வெதுப்பியது என்பது, மன்மதனின் மலர்க்கணைகளில் ஒன்று மல்லிகை; அது முல்லையின் இனம். 'புனத்துவளர் முல்லை கிடைகாட்டும்' என்பது இரத்தினச்சுருக்கம். எனவே மல்லிகை மனத்தைவாட்டியது என்றார்என்க. இரவு வந்து நட்சத்திரங்கள் ஒளிவீசி இராமபிரான் மனத்தை வெதுப்புவது போல், காட்டில் மல்லிகை மலர் மலர்ந்து மணம்பரப்பி இராமபிரானின் மனத்தை வருத்தியது,-பிரிவாற்றாமையை மிகுவித்தது என்க. இரவில் ஒளிரும் நட்சத்திரங்களுக்கு, இரவில் மலரும் மல்லிகை உவமை.

5. சந்திர உதயம்

ஒன்றும் உட்கருப்பினோடு, ஒளியின் வாள் உரீஇ
"தன்தனி முகத்தினால், என்னைத் தாழ்த்து அற,
வென்றவள் துணைவனை இன்று வெல்குவேன்"
என்றது போல, வந்து எழுந்தது இந்துவே. (6603)

(தனி-ஒப்பற்ற; தாழ்த்து-தாழ்மைப்படுத்தி; ஒன்றும்-பொருந்திய; உரீஇ-உருவி; இந்து-சந்திரன்; எழுந்தது-தோன்றியது; கருப்பு-வெகுளி/பகைமை/களங்கம்; ஒளி-கிரணங்கள்; அற-மிகவும்; வெல்குதல்-வெற்றிகாணுதல்; வாள்-ஒளி/ஓர்ஆயுதம்)

Koviloor Digital Library

''தனது ஒப்பற்ற அழகிய முகத்தினால் என்னை மிகவும் தாழ்வுபெறச் செய்து வெற்றிகொண்டவளான, சீதாதேவியின் துணைவனான இராம பிரானை, இன்றைக்கு நான் வென்று காட்டுகிறேன்'' என்று பொருந்திய உள்பகைமையைக்கருத்தில் கொண்டு, தனது ஒளிமிகுந்த கதிர்கள் என்னும் வாளை உருவிக்கொண்டு வந்து உதித்தது அன்றையச் சந்திரன். சந்திரன் மிகுந்த ஒளியோடு தோன்றியது.

'உட்கறுப்பு' என்பது மனத்திற்கு உள்ளேயே பொதிந்து வைத்திருக்கும் வஞ்சினத்தைக் குறிக்கும். கூனி இராமன்பால் வைத்திருந்த கறுவம்போல் எனக் கொள்ளலாம். தனது இயல்பான ஒளிமட்டும் போதாது என்று கருதி, வாட்படையின் ஒளியையும் சேர்த்துக் கொண்டு மிக்க ஒளியுடன் தோன்றியதாம், அன்றையச்சந்திரன். என்ன காரணம்? தனது மதி யொளியை-முகப்பொலிவைத் தோற்கடித்து சீதாதேவியின் முகப் பொலிவு மிகுந்து விளங்கியது என்று கோபம். அந்தக் கோபத்தை சீதாதேவியிடம் காண்பிக்க இயலாததால், அவளுடைய கணவனான இராமபிரானிடம் காட்டுவோம் என்று கருதி அன்றையச் சந்திரன் உதயமானானாம். அருமையான கற்பனை, இயற்கையாகவே ஒளியோடு விளங்கும் சந்திரன்மேல் தன்னுடைய எண்ணத்தை-குறிப்பை கவிஞன் ஏற்றிப்பாடியிருப்பதால் இது தற்குறிப்பேற்ற அணியின்பாற்படும் என்க. 'உட்கறுப்பு' என்ற சொல்லுக்குச் சாதாரணமாய் பொருள்கூறுவதென்றால் சந்திரனின் உள்ளே கறுப்பாகத்தெரியும் களங்கம் அல்லது முயல்கறை என்று கூறலாம். 'கறுப்பும் சிகப்பும் வெகுளிப் பொருளன' என்பது தொல்காப்பியம்.

6. 'கண்ணினை அப்புறம் கரந்து போகினும்,
பெண்நிறம் உண்டு எனின், பிடிப்பல் ஈண்டு' எனா,
உள்நிறை நெடுங்கடல் உலகம் எங்கணும்
வெண்நிற நிலவு எனும் வலையை வீசினான். (6604)

(கரத்தல்-மறைத்தல்; பிடிப்பல்-பிடித்துவிடுவேன்/கைப்பற்றுதல்; நிறம்-உடல்; ஈண்டு-இப்பொழுதே)

அந்தச் சந்திரன், ''என்னுடைய கண்களுக்குப் புலப்படாதவாறு அண்டத்திற்கு அப்புறத்தில் எங்கேனும் மறைந்திருந்தாலும், அந்தச் சீதாதேவியின் உடல் இந்த உலகின் எந்த மூலையில் தெரிந்தாலும், நான் கைப்பற்றிவிடுவேன்'' என்று உறுதிகொண்டு, நீர்நிரம்பப்பெற்ற பெரிய கடல் சூழ்ந்த இவ்வுலகில் எல்லா இடத்திலும் தன்னுடைய வெள்ளிய நிலவு என்னும் ஒளிக்கதிராகிய வலையை வீசினான்.

முன்பாடலில் ''இராமபிரானுக்குத் துன்பம் தருவேன் என்று கருதிய அதே சந்திரன் இந்தப் பாடலில், அவனது விரகதாபத்தை உள்வாங்கிக் கொண்டு, அவனுக்கு உதவிசெய்வதுபோல், அவன்மீது இரக்கம்

Koviloor Digital Library

கொண்டு, என்னுடைய கண்களுக்குத் தெரியாமல் அவள் எங்கே மறைந்திருப்பினும், என்னுடைய ஒளி என்னும் வலியை வீசி அவளைக் கண்டுபிடித்து, இராமபிரானிடம் கொண்டு சேர்ப்பேன்'' என்று உறுதி கூறுகிறான். இதே கருத்தைத் தெரிவிக்கும் ஒரு கிராமியப்பாடல் தனிப்பாடல் திரட்டில் கிடைக்கிறது. சுவைத்துப் பாருங்கள். 'சேறாடிக், குங்குமக் கொங்கையைக் காட்டிச் சிரித்து, ஒருபெண் போறாள்; பிடிபிடி என்றே நிலவு புறப்பட்டதே' என்பது ஓர் அருமையான கிராமியப்பாடல். இங்கே ஒரு நல்ல ஒப்புமையைக் காணலாம். நீர்நிலைக்குள்தான் வலையை வீசவேண்டும், வீசிய வலையில் மீன்கள் அகப்பட்டுத்தான் ஆகவேண்டும். அதுபோல் இங்கே சந்திரன் தனது நிலவு என்னும் வலையை இந்த உலகமெங்கும் வீசியிருக்கிறான். சீதாதேவி என்ற மீன் அகப்பட்டுத்தான் ஆகவேண்டும், கண்ணில்பட்டுத்தான் ஆகவேண்டும், என்பதாம். அதனால்தான் அனுமன் கண்ணில்பட்டதும் 'கண்டேன் சீதையை' என்றான் போலும்/.

7. புடைக்கை வன்திரை எடுத்து ஆர்க்கும் போர்க்கடல்
'உடைக்கரும் தனிநிறம் ஒளித்துக் கொண்டவன்,
அடைக்க வந்தான் எனை, அரியின் தானையால்;
கிடைக்கவந்தான்' எனக் கிளர்ந்தது ஒத்ததே. (6605)

(புடைத்தல்-அடித்தல்/மோதுதல்/அறைதல்; திரை-அலைகள்; எடுத்து-மேலோங்கி; ஒளித்தல்-கவர்ந்துகொள்ளுதல்; அரி-குரங்கு; தானை-படை/சேனை; கிடைத்தல்-அகப்படுதல்; கிளர்த்தல்-சினந்து எழுதல்; அடைக்க-அணைகட்ட/தடுக்க; உடைத்தல்-மாற்றுதல்; புடை-பக்கமுமாம்; கை-இங்கே அலைகள்)

கடல் கிளர்ந்தெழுவது பற்றிக்கூறப்படுகிறது. தன்னிடத்துள்ள வலிய அலைகள் என்ற கைகளை மேலோங்கி உயர்த்தி ஆரவாரம் செய்கிறது தன்னுடைய அலைகளால் கரையை மோதும் இயல்புடையதான கடல், ''எனக்கே உரித்தான என்னுடைய ஒப்பற்ற நிறத்தைத் தனக்குரியதாகக் கவர்ந்து வைத்துக் கொண்டவனாகிய இராமபிரான், அதுபோதாதென்று, என்னுடைய வலிமையைக் குறைக்க, என்னைத் தடுத்து அணைகட்டுவ தற்காக, குரங்குச் சேனைகளையும் தன்னுடன் கூட்டி வந்திருக்கிறான். இப்போது என் அருகில் மிக நெருங்கி வந்துவிட்டான்'' என்று சினந்து ஆரவாரிப்பது போன்றிருந்தது.

கடலுக்குக் கைகளாக அலைகளைக் கூறுவது கவிமரபு. எனவே 'புடைக்கை வன்திரை' என்றார் என்க. கடல் தன் அலைகளால் கரையை மோதுவதால் அதைப் 'போர்க்கடல்' என்றார் என்க. கடலின் நிறம் கருப்பு, இராமபிரானின் நிறமும் கருப்பு. கடல் வண்ணன். எனவே இராமபிரான் தன்னிடமிருந்துதான், தனக்கே உரிய, மாற்றுதற்கு அரியதான அந்தக் கருப்பு நிறத்தைக் கவர்ந்து கொண்டான் என்று கடல் இறுமாப்பு

Koviloor Digital Library

எய்துவதாகக் கூறுவதை உணர்க. அப்படிப்பட்டவன் இப்போது என்னருகே வந்து அகப்பட்டுக் கொண்டான். எப்படி? என் போக்கைத் தடுக்க, குரங்குப்படையின் துணையோடு அணைகட்டப் போகிறானாம்' என்று மகிழ்ந்து கிளர்ச்சியடைகிறது கடல் என்பதாம்.

இயற்கையாகப் பொங்கியெழும் இயல்புடைய கடலலைகளை, இராமபிரான் அருகில் வந்ததால் சினந்து பொங்கியெழுந்தது என்று கவிஞன் தன்னுடைய குறிப்பை அலைகளின் மேல் ஏற்றியிருப்பதை உணர்க. இராமபிரான் க்ரிய நிறத்தவன் என்பதைப் பல இடங்களிலும் கூறிப்போவதைப் பார்க்கலாம். கடல்வண்ணன் என்பது அவனுக்கு ஒரு பெயர். 'மையோ! மரகதமோ! மறிகடலோ! மழைமுகிலோ!' எனக் கருப்பு நிறம் கொண்ட எல்லாவற்றையும் அவன் மேனியழகுக்குக் கவிஞன் உவமை கூறியதை நாம் முன்பு அயோத்தியா காண்டத்தில் கண்டதை, இங்கே நினைவுகூர்க. கடல் சினந்து பொங்கியெழுவதற்குக் கவிஞன் கூறும் இரண்டு காரணங்கள். ஒன்று அவன் தன் நிறத்தைக் கவர்ந்துகொண்டான், இரண்டு இப்பொழுது என்போக்கைத் தடுக்க அணைகட்ட முயல்கிறான் என்பதாம்.

8\. மேல்உகத் தொகுதியால், முதிர்ந்த மெய்எலாம்,
தோல் உகுத்தால் என, அரவத் தொல்கடல்,
வாலுகத்தால் இடைப்பரந்த வைப்பு எலாம்
பால் உகுத்தால் என, நிலவு பாய்ந்ததால். (6606)

(மேல்-வானம்; உகம்-யுகம்; தொகுதி-பன்மை; மெய்-உடம்பு; உகுத்தல்-சொரிதல்/சிந்துதல்; அரவம்-பாம்பு/ஒலி; தொல்-பழமை யான; வாலுகம்-வெண்மணற்குன்று; இடை-நடுவே/அருகில்; வைப்பு-இடம்/பூமி; பாய்தல்-பரவுதல்; முதிர்ந்த-முதிர்ச்சியுற்ற)

தன்னால் கழிக்கப்பெற்ற பல யுகங்களின் தொகுதியால், தன் உடல் முதிர்ச்சியுற்றுத் தளர்ந்துபோய், தனது கரிய நிறத்து வெளிப்புறத்துத் தோலை உதிர்த்து இப்பொழுது வெண்மை நிறமாகத் தோற்றம் தருவதைப் போல, மிகப்பழமையான, ஒளி நிறைந்த கடல், வெண்மையான மணற்குன்றுகள் நிறைந்திருக்கும் இடமெல்லாம், பாலைப்பொழிந்தது போன்று நிலவு தரையில் தன் ஒளிக்கதிர்களைப் பரப்பி நின்றது.

நிலவு தன் ஒளிக்கதிர்களைப் பரப்பியது. கடலில் நீரிலும், அதைத் சூழ்ந்து பரவியுள்ள மணற்குன்றுகளிலும் பரப்பியது. எப்படிப் பரப்பியது? பாலைக் கொட்டிவிட்டாற் போலப் பரப்பியது. கடல் கரிய நிறம். அந்தக் கருப்புத்தோல் தன் வயதின் முதிர்ச்சியின் காரணமாக உதிர்ந்து வெண்மை யாக விளங்கியது போல, வெண்மணற்குன்றுகளில் நிலவு தன் வெண் கதிர்களைப் பாய்ச்சியது என்பதாம். 'யுகம்' என்பது உகம் எனப்பட்டது. இருப்பினும் யுகம், யூகம், யூபம், யௌவனம் என்ற சொற்கள் இன்னும்

Koviloor Digital Library

தமிழில் வழங்கப்படுவதுண்டு. எல்லாப் பொருள்களையும் வைத்தற்குரிய இடம் என்பதால் 'வைப்பு' என்பது பூமிக்குக் காரணப்பெயர். 'வாலுகம் வெண்மணல்' என்பது நிகண்டு.

9. மன்றல்வாய் மல்லிகை எயிற்றின், வண்டுஇனம்
கன்றிய நிறத்தது, நறவின் கண்ணது,
குன்றின்வாய் முழையின் நின்று, உலாய கொட்பது,
தென்றல் என்று ஒரு புலி உயிர்த்துச் சென்றதால். (6607)

(மன்றல்-நறுமணம்; எயிறு-பற்கள்; இனம்-கூட்டம்; கன்றிய-கரிய; நறவு-தேன்; குன்று-மலை/பொதியமலை; முழை-குகை; கொட்பு-தன்மை/இயல்பு; உயிர்த்தல்-பெருமூச்சுவிடுதல்; நிறம்-உடல்; உலாய-சஞ்சரித்து வாழ்கின்ற)

நறுமணம் மிக்க மல்லிகை அரும்பு போன்ற பற்களையுடையதும், வண்டின்கூட்டம்போலக்கரியகோடுகளைஉடையஉடலைப்பெற்றதும், தேனைப் போன்ற சிவந்த கண்களையுடையதும், மலையிலிருக்கும் குகையிலிருந்து சஞ்சரிக்கின்ற தன்மையையுடையதுமாகிய தென்றல் என்ற பெயருடைய ஒரு புலி, சினம் தோன்றப் பெருமூச்சு விட்டுக் கொண்டு வந்தது.

தென்றலைப் புலியாக உருவகித்தார் என்க. தென்றலின் மணத்திற்கு மல்லிகையையும், சுவைக்குத் தேனையும் சுகத்திற்குக் காற்றையும் உவமித்தார் என்க. புலிக்கு நச்சுப்பல்லும், வரிக்கோடுகள் பெற்ற உடலும், கள்ளின் தன்மைபோன்று கலங்கடிக்கும் கண்களும், குகையிலிருந்து உலாவுகின்ற தன்மையும், பெருமூச்சுவிட்டுப் பயமுறுத்தும் தன்மையும் கூறப்பட்டன என்க. விரகநோயை மிகுவிப்பதில் தென்றலும் ஒன்று. 'அணங்காம் இவளுக்கு அவிர்மதியம் ஒன்றோ? வணங்காவரும் தென்றல் ஒன்று' என்பது திருச்செந்தில் கலம்பகம். 'ஆரமாம் மலையில் தோன்றி, அங்கங்கு ஓடிச்செய்திங்கால், ஈரம்மேவிய தென்றற்காற்றும், இந்துவும் சமனே கண்டீர்' என்பது அழகர் மலைக்கலம்பகம்; 'கூற்று ஒன்று அல; ஒருகோடி; கெட்டேன்; கொழுந்து ஒன்று; தென்றற்காற்று ஒன்று;' என்பது மதுரைக் கலம்பகம்.

10. கரத்தொடும் பாழி மாக்கடல் கடைந்துளான்
உரத்தொடும், கரனொடும், உருவ ஓங்கிய,
மரத்தொடும் தொளைத்தவன் மார்பில், மன்மதன்
சரத்தொடும் பாய்ந்தது, நிலவின் தாரை வாள். (6608)

(பாழி-வலிய; மா-பெரிய; உரம்-மார்பு; உருவ-அளாவ; சரம்-அம்பு; தாரை-கதிர்கள்/ஒழுக்கு)

Koviloor Digital Library

தனது வலிமைமிக்க கைகளினால் பெரிய பாற்கடலைக் கடைந்த வனாகிய வாலியின் மார்பினையும், அரக்கனாகிய கரனையும், வானளாவ உயர்ந்து ஓங்கிய ஏழு மராமரங்களையும் தன் அம்பினால் துளைத்த வனாகிய இராமபிரானின் மார்பில், இப்பொழுது, மன்மதனது மலர்க் கணைகளும், நிலவின் கதிரின் ஒழுக்குப்போன்ற வாளாயுதமும் சேர்ந்து புகுந்து வருத்தின.

பிரிவாற்றாமையால் நொந்துபோயிருக்கும் இராமபிரானை மன் மதனது மலரம்புகளும், நிலவும், கூரியவாள் போல் வருத்தின என்பதாம். 'தாரை' என்பது நிலவின் கதிர்களைக் குறிக்கும் என்க.

11. இராமபிரான் சீதாதேவியை நினைத்து வருந்துதல்

உடலினை நோக்கும்; இன்உயிரை நோக்குமால்;
இடரினை நோக்கும்; மற்றுயாதும் நோக்கலன்;
கடலினை நோக்கும்; அக்கள்வன் வைகுறும்
திடரினை நோக்கும்; தன்சிலையை நோக்குமால். (6609)

(இடர்-துன்பம்/துயரம்; நோக்குதல்-பார்த்தல்/சிந்தித்தல்/ நினைத்தல்/எண்ணுதல்/கருதுதல்; வைகுதல்-தங்கியிருத்தல்; திடர்-திட்டு/தீவு; சிலை-வில்)

இவ்வாறு தென்றலாலும், நிலவினாலும், பிரிவாற்றாமை மிக, இராமபிரான் மெலிந்து, நொந்துபோய் இருக்கிற தன் உடலினை ஒருதரம் பார்த்துக்கொள்வான். இதற்குக் காரணமாகியவளும், இந்நோய்க்கு மருந்துபோன்றவளுமானதன்உயிருக்கு ஒப்பானசீதாதேவியை மனத்தால் எண்ணிப்பார்ப்பான். இப்பொழுது அவள் எத்தகைய துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறாளோ என்று சிந்திப்பான். வேறு எதைப் பற்றியும் சிந்தனை செய்யாமல், தன் எதிரே பரந்து விரிந்து கிடக்கின்ற-தான் உடனே தன் துணைவியைப் பார்ப்பதற்குத் தடையாக இருக்கின்ற, கடலினைப்பார்ப்பான். பின்னர்இக்கடலைத்தாண்டி, தன்துணைவியைக் கவர்ந்து சென்ற கள்வனாகிய இராவணன் தங்கியிருக்கிற திட்டைப் பார்ப்பான். அதனைப் பார்த்ததும், இராவணனை உடனே கொன்று விடவேண்டும் என்று எண்ணித் தன்தோளில் இருக்கும் வில்லைச் சற்று ஏறெடுத்துப் பார்ப்பான்.

'இடரினைநோக்கும்' என்பது தனக்கு நேர்ந்துள்ளதுயரத்தை எண்ணிப் பார்ப்பான் என்றும் பொருள்தரும். இப்பாடல் இராமபிரானின் மனநிலை யில், மேற்கொண்டு என்னசெய்யமுடியும் என்பதை ஒன்றன்பின் ஒன்றாக, தொடர்பு மாறாமல் எண்ணுவதாகக் கவிஞன் கூறும் திறம் நோக்குக. தசரதனுக்கு உயிர் இராமன்; இராமனுக்கு உயிர் சீதாதேவி என்பதைக்

Koviloor Digital Library

கருதுக. திடர் என்பது கடலால் சூழப்பட்ட தீவுத்திட்டாகிய இலங்கை யைக் குறிக்கும்.

12. பணி பழுத்து அமைந்த பூண் அல்குல் பண்பினால்,
பிணி பழுத்து அமைந்ததோர் பித்தின் உள்ளத்தான்,
அணி பழுத்து அமைந்த முத்து அரும்பு செம்மணி
மணி பழுத்து அமைந்த வாய் மறக்க வல்லனோ? (6610)

(பணி-வேலைப்பாடு/தொழில்; பழுத்தல்-முதிர்ச்சியடைதல்; பூண்-அணிகலன்/ஆபரணம்; பண்பு-குணநலன்கள்; பிணி-காமநோய்; பித்து-பைத்தியம்; அணி-அழகு; செம்மணி-மாணிக்கமணி; வல்லன்-வன்மை யுடையவன்)

தொழிலில் தேர்ச்சிபெற்று, வேலைப்பாட்டில் முதிர்ச்சிபெற்று அழகுடன் அமைந்த அணிகலன்களை அணிந்த அல்குலை உடைய வளான சீதாதேவியின் குஃநலன்களையே எப்பொழுதும் எண்ணிக் கொண்டிருக்கும் இராமபிரான், அப்பிரிவு நோய் என்பது மிக முதிர்ந்து போய், பித்துப்பிடித்தவன் போன்ற உள்ளத்தைக் கொண்டவனானான். அழகு முதிர்ந்து அமைந்திருக்கும் முத்துப்போன்றதும், முல்லையரும்பு போன்றதுமான அவளின்பற்கள் அமைந்திருக்கின்ற சிவந்த பவழம் போன்று அழகாய்த் தோன்றும் அதரத்தினை மறக்கக்கூடிய வல்லமை பெற்றவனோ?'' என்கிறான் கவிஞன்.

இங்கே 'பழுத்து அமைந்த' என்ற சொற்றொடர் ஒவ்வொரு அடியிலும் வெவ்வேறு பொருள்தந்து நின்றமை நினைக. 'வல்லனோ' என்பதில் உள்ள ஓகாரம் எதிர்மறைப்பொருளது. வல்லனல்லன் என்ற பொருளைத் தரும். 'முத்து அரும்பு செம்மணி' என்பது ஓர் அருமையான சொற்றொடர். முத்து வெண்மைநிறம், மல்லிகை அரும்பும் வெண்மைநிறம். இவை யிரண்டும் அவள் பற்களுக்கு உவமையாகக் கூறப்பட்டது. அவளுடைய இதழ்கள்சிவந்த பவழம் போன்றவை. எனவே செம்மணி என்றார். சிவந்த இதழினுள்ளே வெள்ளிய பற்கள் அமைந்திருத்தலின் இவ்வாறு கூறினார் என்க.

13. மேல் செய்ய வேண்டுவது பற்றிக் கருதுதல்

ஆயது ஓர் அளவையின், அருக்கன் மைந்தன்' நீ
தேய்வது என்? காரியம் நிரப்பும் சிந்தையை;
மேயவன் தன்னொடும் எண்ணி, மேல்இனித்
தூயது நினைக்கிலை' என்னச் சொல்லினான். (6611)

(அருக்கன்-சூரியன்; காரியம்-தொழில்; நிரப்புதல்-முஐநுதல்; சிந்தை-கருத்து; தேய்வது-வருந்துவது; மேயவன்-சார்ந்தவன்; தூயது-குற்ற மற்றது.)

Koviloor Digital Library

அவ்வாறு இராமபிரான் சீதாதேவியின் நினைவால் பித்துப் பிடித்தவன் போல் இருந்த சமயத்தில், சூரியன் புதல்வனான சுக்கிரீவன், இராம பிரானை நோக்கி, ''நீ ஏன் இவ்வாறு வருந்திக்கொண்டிருக்கிறாய்? எடுத்த காரியத்தைத் திறம்படச்செய்து முடிக்கும் ஆற்றல்பெற்றவனாகிய நீ, இப்போது நம்மை நாடி அடைக்கலம் புகுந்திருக்கும் வீடணனோடு ஆலோசித்து, மேலும் இனிமேல் நடக்கவேண்டிய குற்றமற்ற, நமக்கு நன்மைதரும் சிறந்த செய்கைகளை நினைக்காமல் சோர்ந்துபோய் இருக்கிறாயே? இது தகாது'' என்று கூறினான்.

இராமபிரான் நினைத்ததை முடிப்பவன்; செயற்கரிய செய்பவன். எனவே ''காரியம் நிரப்பும் சிந்தையை'' என்றார் என்க. 'தூயது' என்பது, வீடணன் உதவியுடன் இராவணனைக் கொண்டு, சீதாதேவியை மீட்டுக் கொண்டு வரும் செயலைக் குறிக்கும். இவ்வாறு இராமபிரான் தான் எடுத்த மானிடவடிவத்திற்கு ஏற்பப் பலஇடங்களில் மனம் தளர்ந்து, செயலற்று இருப்பதும், அதனைக்கண்டு, இலக்குவன், சுக்கிரீவன் முதலியோர் அவனைத் தேற்றி மேற்செயல்படுமாறு கூறுவதும், காப்பியத்தில் பல இடங்களில் பேசப்படுவதைக் காணலாம். மிகுதிக் கண் மேற்சென்று இடிக்கின்ற நண்பர்களாகவே இவர்கள் இருந்து வந்தனர் என்பது நினைக்கற்பாலதாம்.

14. இராமபிரான் அழைக்க, வீடணன் வருதல்

அவ்வழி, உணர்வு வந்து, அயர்வு நீங்கினான்,
'செவ்வழி அறிஞனைக் கொணர்மின் சென்று' என,
'இவ்வழி வருதி' என்று இயம்ப, ஏய்தினான்,
வெவ்வழி விலங்கி, நல்நெறியை மேவினான். (6612)

(அயர்வு-வருத்தம்; செவ்வழி-நல்வழி/நடுவுநிலைமை; கொணர்தல்-அழைத்து வருதல்; இவ்வழி-இவ்விடம்; வெவ்வழி-தீய நெறி; விலங்கி-நீங்கி; மேவுதல்-அடைதல்)

அவ்வாறு சுக்கிரீவன் தேற்றியதும், இராமபிரான் தன்னுணர்வு நிலைக்குத் திரும்பி, மனம் வருந்துவதனின்றும் நீங்கினான். உடனே ''செம்மையான, நடுவுநிலைமை தவறாத நல்வழி போற்றும் அறிவின் மிக்கானாகிய வீடணனை அழைத்து வாருங்கள்'' என்று வானரவீரர்களை நோக்கிக்கூறவும், அவர்கள் வீடணன் இருக்குமிடம் சென்று ''இராம பிரான் இருக்குமிடம் வாருங்கள்'' என்று அழைக்க, தீநெறியினின்றும் நீங்கி, நன்னெறியைஅடைந்திருக்கும் வீடணனும் இராமபிரான்இருக்கும் இடம் வந்தடைந்தான்.

இராமபிரான் அனுமனைச் 'சொல்லின் செல்வன்' என்று அழைத்தது போல், இங்கே வீடணனை 'செவ்வழி அறிஞன்' என்றழைத்ததை

Koviloor Digital Library

எண்ணுக. வீடணன் அரக்கர்குலம் நீங்கி, இராமபிரானைச் சரணடைந்த தால் 'வெவ்வழி விலங்கி நன்னெறி மேயினான்' என்றார் என்க.

15. வீடணனிடம் இராமபிரான் இலங்கை பற்றி வினவுதல்

"ஆர்கலி இலங்கையின் அரணும், அவ்வழி
வார்கெழு கனைகழல் அரக்கர் வன்மையும்,
தார்கெழு தானையின் அளவும், தன்மையும்,
நீர்கெழு தன்மையாய்! நிகழ்த்துவாய்!" என்றான். (6613)

(ஆர்கலி-கடல்; அரண்-மதில் அமைப்பு/பாதுகாப்பு; வார்-நீண்ட; தார்-வெற்றிமாலை/கொடி; தன்மை-இயல்பு; நிகழ்த்துதல்-சொல்லுதல்; நீர்மை-குணம்; கெழு-நிரம்புதல்; வன்மை-ஆற்றல்/வலிமை)

இராமபிரான் வீடணனை நோக்கி, "நற்குணங்கள் நிரம்ப அமையப் பெற்ற தன்மையை உடையவனே! கடலால் சூழப்பெற்ற இலங்கை மாநகரின் பாதுகாப்புக்குரியதான மதில் அமைப்புக்கள் பற்றியும், அங்கே, நீண்ட ஒலியெழுப்பும் வீரக்கழல் அணிந்திருக்கும் இராவணன் முதலான ஏனைய அரக்கர்களின் வலிமை, ஆற்றல் பற்றியும், எப்பொழுதும் வெற்றிமாலையைச் சூடிவரும், கொடிப்படையாகிய முன்னணிப் படையின் அளவையும், அவை ஒவ்வொன்றின் ஆற்றலையும், எனக்குச் சற்றுத் தெரிவிப்பாயாக!" என்றான்.

வீடணனை இப்பொழுது 'நற்குணங்கள் வாய்க்கப் பெற்றவனே' என்று இராமபிரான் அழைப்பதை நோக்குக. 'தார்' என்பது கொடிப் படையைக் குறிக்கும். அணிவகுப்பில் முதலில் வருவது தூசிப்படை என்று கூறுவாரும் உளர். தூசிப்படை என்பது மொத்தச் சேனையில் ஒரு பகுதி. அதைமட்டும் தனித்துக் கேட்டிருப்பானா என்பது ஐயத்திற்குரியது. எனவே எப்பொழுதும் வெற்றியையே பெற்றுவரும் அந்தப்படையின் இரகசியத்தைக் கூறு என்று கேட்டதாகக் கொள்வதே பொருந்தும் என்க. 'வினைவலியும், தன்வலியும், மாற்றான்வலியும், துணைவலியும் தூக்கிச்செயல்' என்ற குறள்-471 இங்கு ஒப்புநோக்கத்தகும்.

16. வீடணன் கூறத்தொடங்குதல்

எழுதலும், 'இருத்தி' என்று இராமன் ஏயினான்,
முழுது உணர் புலவனை; முளரிக் கண்ணினான்
பழுது அற வினவிய பொருளைப் பண்பினால்,
தொழுது உயர் கையினான், தெரியச் சொல்லினான். (6614)

(முளரி-தாமரை; பொருள்-செய்தி; பண்பு-முறைமை; பழுது-குற்றம்; தெரிய-விளங்கும்படி)

Koviloor Digital Library

அவ்வாறு இராமபிரான் கேட்டபொழுது, அதற்கு விடைகூறு முகத்தான் வீடணன், தன் இருக்கையினின்றும் எழுந்தான். அப்பொழுது இராமபிரான் முற்றும் உணர்ந்த அறிஞனாகிய வீடணனை நோக்கி, 'அமர்ந்திருந்தே கூறுக' என்று கேட்டுக்கொண்டான். தாமரைமலர் போன்ற கண்களை உடையவனான இராமபிரான், குற்றமறக் கேட்ட கேள்விகளுக்கு உரிய பதிலை வீடணன், தனது கூப்பிய கைகளுடன் விளக்கத்துடன், முறைமை குன்றாமல், இராமபிரான் விளங்கிக் கொள்ளும்படி, தெளிவாகக் கூறத் தொடங்கினான்.

பெரியோர்களிடம் பேசமுற்படும்போது எழுந்து நின்றும் வணங்கியும் பேசவேண்டும் என்பது பெறப்படுகிறது. இராமபிரான் வீடணனை முன்பாடலில் 'செவ்வழி அறிஞன்' என்றும், இங்கே 'முழுதுணர் புலவன்' என்றும் பாராட்டுவதைக் கருதுக. 'முழுதுணர் புலவன்' என்பதற்குத் 'தீர்க்கதரிசி' என்ற ஒரு பொருளும் பொருந்தி வருதல் காண்க. 'முளரி' என்பது பொதுவாகத் தாமரைமலரைக் குறித்தாலும் முள்ளுடன் கூடிய தண்டினை உடைய தாமரைதான் முளரி எனக்கூறப்பட்டு வருதல் அறிக. இங்கு நடக்கும் உரையாடல் அரசியல் சம்பந்தப்பட்டதும் போர்முறை பற்றியதும் ஆகும். எனவே கேள்விகேட்டுத் தெரிந்து கொள்பவரும் குற்றமில்லாது கேட்கவேண்டும். அதற்கு விடைதருபவரும் கேட்டவர் விளங்கிக் கொள்ளும்படி, தெளிவாகக் கூறவேண்டும். எனவேதான் 'பழுதற வினவிய பொருள்' என்றும் 'பண்பினால் தெரியச் சொன்னான்' என்றும் கூறினார் என்க.

17. இலங்கையின் அரண் பற்றிக்கூறுதல்–இலங்கை வரலாறு

"நிலையுடை வடவரை குலைய நேர்ந்து, அதன்
தலை என விளங்கிய தமனியப் பெரு
மலையினை மும்மடி வாங்கி, ஓங்கு நீர்
அலைகடல் இட்டனன், அனுமன் தாதையே" (6615)

(தாதை-தந்தை; வடவரை-மேருமலை; குலைய-சிதற/திருக; நேர்ந்து-உடன்பட்டு/சூளுரைத்து; தலை-சிகரம்; தமனியம்-பொன் வாங்கி-பறித்து; ஓங்கு-மிக்க; இடுதல்-எறிதல்/வீசுதல்; முடி-சிகரம்)

''அனுமனின் தந்தையாகிய வாயுதேவன், அழியாது நிலைபெற்று விளங்கும் வடக்கேயுள்ள மேருமலையைச் சிதைக்க உடன்பட்டு, அம்மேருமலையின் சிகரமெனத் திகழ்ந்த பொன்மயமான பெரிய மலையின் மூன்று சிகரங்களை மட்டும் பறித்து, மிக்கநீர் நிறைந்ததும், அலைகள் நிறைந்ததுமான கடலில் வீசியெறிந்தான்'' என்று வீடணன், இலங்கையின் அரண் பற்றிக் கூறத்தொடங்குகிறான்.

Koviloor Digital Library

'நிலையுடைவரை' என்பது மலைகள் எல்லாம் அழியாத தன்மை பெற்றனஎன்பதைக் குறித்தது. எனவேதான்மலை 'அசலம்' எனப்பட்டது. வாயுதேவனுக்கும், ஆதிசேஷனுக்கும் முன்பு ஒரு பலப்பரீட்சை நிகழ்ந்தது. ஆதிசேஷன் ஆயிரம் பணாமுடி கொண்டவன், வாயுதேவன் காற்றிற்கு அதிபதி. மேருமலையை ஆதிசேஷன் தன் ஆயிரம் முடி கொண்டு கவித்துக் காக்க வேண்டும் என்றும், அதற்குமாறாக வலிமை பெற்ற வாயுதேவன் தன் காற்றின் ஆற்றலால் அதைச்சிதைத்துக் காட்ட வேண்டும் என்பதும் போட்டி. வாயுதேவன் எவ்வளவு முயன்றும் அவனால் மேருமலையின் ஆயிரம் முடிகளையும் அசைக்க முடிய வில்லை, எனினும் அதன் மூன்று சிகரங்களை மட்டும் பறித்துக் கடலில் வீசி எறிந்து விட்டான். அதுதான் திரிகூட மலை - திரிகோணமலை எனப்பெயர் பெற்றது. அங்குதான் இந்த இலங்கை மாநகரம் முப்புறமும் கடலால் சூழப்பட்ட தீவாக அமைந்திருக்கிறது என்பது ஒரு புராண வரலாறு. அதை இங்கே வீடணன் இராமபிரானுக்குத் தெரிவிக்கிறான்.

வாயுதேவன் எனநேராகக் கூறாது, 'அனுமன் தாதை' என்று கூறியதற்கு ஒரு காரணம் உண்டு. இலங்கையைத் தோற்றுவித்தவன் அனுமனின் தந்தையாகிய வாயுதேவன். பின்னால் அது அரக்கர்கள் வசம் வந்தாலும், அரக்க வேந்தன் இராவணன் அடாத செயல்கள் செய்ததனால், அனுமனே அதற்கு எரியூட்டி அழிக்க வேண்டிய நிலை உருவானது என்பதைக் குறிக்கவே இவ்வாறு வீடணன் கூறினான் என்பதாம். உடுக்கப்படுவது உடுக்கை எனப்படுவது போல், இலங்குவது இலங்கை எனப்பட்டது. பொன்மலைமேல் இலங்குவது, ஆதலின் இலங்கை என்பது காரணப் பெயர் என்க.

இங்கே உத்தரகாண்டம் இச்செய்தியை மிகத்தெளிவாக விளக்குகிறது கேளுங்கள். 'முன்நாள் காற்றும் வாசுகியும் தம்தம் வலியின் நிலைமொழிந்து, பொன்னார் வரையை வாசுகி தன் பணத்தால் பொத்திப் புறங்காப்பத் தன் ஆர் விசையின் பெருங்காற்று தாக்க, சற்றும் சலியாது, நல்நாகம்தான் கவித்திடலும், ஒளித்தான் பவனன் நாணோடும்' 'குலையா நிலத்தின் வடமேருகுலைய மோதி, அதில் திகழ் முத்தலையார் சிகரம் தனைமுறித்துத் தடங் கால் அதனைக் கொண்டுபோய் அலையார் கடலின் முன் இட்ட அந்த இடம்; மூலத் தெய்வக் கனகமலை முறிந்த முக்குடுமிக் கோல வரையாம். ஆங்கு அது பிறரால் குறுக அரிய கொள்கைத்தால் ஏல அமைந்தது' என்பது உத்தரகாண்டம்.

18. "ஏழு நூறுயோசனை அகலம்; இட்டகீழ்,
ஆழம் நூறுயோசனை; ஆழிமால் வரை,
வாழியாய்! உலகினை வளைந்த வண்ணமே
சூழும் மாமதில்; அது சுடர்க்கும் மேலதால்" (6616)

Koviloor Digital Library

(இட்ட-கட்டப்பட்ட; ஆழி-சக்கரம்; மால்வரை-இங்கே சக்கரவாள மலை; சூழ்தல்-வளைந்திருத்தல்; சுடர்-சூரிய,சந்திரர்; அகலம்-சுற்று/பரப்பு; மால்-பெரிய)

''அழிதல் இல்லாப் பெருவாழ்வு பெற்றவனே! இந்த இலங்கை மாநகர மதில்கள் ஏழுநூறு யோசனை சுற்றுப்பரப்பும், அதன்கீழ் இருநூறு யோசனை ஆழமும் கொண்டு கட்டப்பட்டுள்ளது. சக்கரவாளகிரி இந்த உலகை எவ்வாறு வளைத்துக் கொண்டுள்ளதோ அதுபோலவே அம் மதில்கள் இலங்கை மாநகரைச் சுற்றிவளைத்துக் கட்டப்பெற்றிருக்கிறது. அதன் உயரமோ சூரியசந்திரர்கள் சஞ்சரிக்கும் வானமண்டலத்திற்கும் மேலானதாகும்'' என்கிறான் வீடணன்.

ஒரு யோசனை என்பது நான்கு குரோசதூரம் அல்லது ஒன்பது மைல் என்பது ஒரு கணக்கு. அம்மதிலின்சுற்றுப்பரப்பு, ஆழம், உயரம் முதலியன கூறப்பட்டன. 'வாழியாய்' என்பது பொதுவாக ஒருவரை விளிக்கும் விளிச்சொல் என்றாலும், இங்கே நல்வாழ்வுடையவன் என்றும், அழியாது வாழ்ந்திருப்பவன், எல்லோரையும், அனைத்தையும் வாழவைப்பவன் என்ற பொருளில் வீடணன் கையாண்டிருப்பதை உணர்க.

19. ''மருங்குடை வினையமும், பொறியின் மாட்சியும்,
இருங் கடி அரணமும், பிறவும், எண்ணினால்,
சுருங்கிடும்; என்பல சொல்லி? சுற்றிய
கருங்கடல் அகழது; நீரும் காண்டிரால்'' (6617)

(மருங்கு-இடம்/பக்கம்; வினையம்-வஞ்சகம்/சூழ்ச்சி/தந்திரம்; பொறி-இயந்திரங்கள்; மாட்சி-மேம்பாடு; இரும்-மிக்க; கடி-காவல்; அரண்-கோட்டை; எண்ணுதல்-விரித்துச் சொல்லுதல்; காண்டிர்-பார்ப்பீராக)

''அந்த மதிலின் உள்ளிடத்தில் வஞ்சகமாக அமைக்கப்பட்டிருக்கும் வேலைப்பாடுகளும், அதிலுள்ளஇயந்திரங்களின்மேம்பாட்டுச்சிறப்பும், மிக்க காவலையுடைய அரண்களும், கோட்டை முதலிய மற்றவற்றின் சிறப்பும் பற்றிச் சொல்லவேண்டும் என்று கருதினால் நம் ஆயுட்காலமே சுருங்கிவிடும். அவற்றையெல்லாம் சொல்லி என்னபயன்? அவ் விலங்கை மாநகரைச் சுற்றி அமைந்திருக்கிறதே கருங்கடல், அதுதான் அந்த மதிலுக்கு அகழியாகக் கருதப்படுகிறது. அதனைத் தாங்களும் காண்பீராக'' என்கிறான் வீடணன்.

அரண், நீர்அரண், நிலஅரண், காட்டுஅரண், மதில்அரண் என நால்வகைப்படும். 'வினையம்' என்பது பகைவர்களை ஏமாற்றுவதற்காக வஞ்சமாகச் செய்யப்பட்டிருக்கும் வேலைப்பாடுகள் என்று கொள்க. இதுபோல மதில், அரண், அகழி பற்றிய குறிப்புக்கள் சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, மணிமேகலை, கந்தபுராணம், திருவிளையாடல்

Koviloor Digital Library

புராணம் ஆகிய எல்லா நூல்களிலும் பேசப்பெற்றிருக்கின்றன. முன்பு பாலகாண்டம் நகரப்படலத்திலும் இதுபற்றிப் பேசப்பட்டிருப்பதையும் இங்கு நினைவுகூர்க.

20. வாயிற்காப்போர் ஆற்றல்

வடதிசை வயங்கு ஒளி வாயில் வைகுவோர்,
இடைஇலர்; எண்இரு கோடி என்பரால்;
கடையுக முடிவினில் காலன் என்பது என்?
விடைவரு பாகனைப் பொருவும் மேன்மையோர். (6618)

(வயங்கு-விளங்குகின்ற; வைகுதல்-தங்கியிருத்தல்; இடைதல்-பின் வாங்குதல்; எண்இருகோடி-பதினாறுகோடி; விடை-காளை/எருது/ரிஷபம்; பொருவும்-ஒத்த; காலன்-இயமன்)

''அந்த மதிலின் வடக்குத்திசையில் உள்ள விளங்குகின்ற ஒளிவீசுகின்ற வாயிலில் தங்கிக் காவல்புரிந்து கொண்டிருப்பவர்கள் எதற்கும் பின்வாங்காதவர்கள், பதினாறுகோடிப்பேர் என்று சொல்லுவார்கள். யுகாந்த காலத்தில் உயிரினங்களை அழிப்பவன் இயமன் என்று கூறுவது பொருந்தாது. காளையை வாகனமாகக் கொண்டு ஊர்ந்துவரும், சம்ஹார மூர்த்தியாகிய உருத்திரனை ஒத்த வலிமையுடையவர்கள் அவர்கள்'' என்கிறான் வீடணன்.

வாயில் புறத்தில்கூட இரத்தினங்கள் பதிக்கப்பட்டிருப்பதால் 'வயங்கு ஒளி வாயில்' என்றார் என்க; காலன் என்பது, காலம் அறிந்து உயிர்களைக் கவர்வதால் அவனுக்குக் காரணப்பெயர். இவன் எமதர்மராசனின் தூதுவன் என்பர். இங்கே வீடணன் இவர்கள் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு காலன் என்று சொன்னான் என்பது பொருந்தாது. காலனையே எட்டி உதைத்த கால்களை உடைய-காலனுக்கே காலனாக அமைந்த காலகாலனான சிவபெருமானின் வலிமையைப் பெற்றவர்கள் என்று அவர்களது வலிமையைச் சிறப்பித்தான் என்க.

21. மேல்திசை வாயிலின் வைகும் வெய்யவர்க்கு
ஏற்றமும் உள; அவர்க்கு இரண்டு கோடி மேல்;
கூற்றையும் கண்-பொறி குறுகக் காண்பரேல்,
ஊற்றுறு குருதியோடு, உயிரும் உண்பரால். (6619)

(வெய்யவர்-கொடியவர்; ஏற்றம்-மேன்மை/பெருமை; பொறி-இந்திரியம்; கூற்று-இயமன்; ஊற்றுறுதல்-ஊறிப்பெருகுதல்; குருதி-இரத்தம்)

''மேற்குத் திசையில் உள்ள வாயிலில் தங்கிக் காவல் காத்துவரும் கொடியவர்களுக்குச் சில தனிப்பட்ட மேன்மைகளும் உள்ளன. இவர்கள்

Koviloor Digital Library

முன்பு சொல்லப்பட்ட வடக்குத் திசைக் காவலர்களைவிட எண்ணிக்கையில் இரண்டு கோடிப்பேர் அதிகமானவர். அதாவது பதினெட்டுக் கோடிப் பேராவர்; தமது கண்ணாகிய இந்திரியத்தைச் சற்று இடுக்கி, நெருக்கி, நுணுகி பிறர் உயிரைக்கவரும் இயமனைப் பார்த்தாலும்கூட, மேன் மேலும் ஊறிப்பெருகிவருகிற அவனுடைய இரத்தத்தைக் குடித்துவிட்டு உயிரையும் போக்கி விடுவர்'' என்கிறான் வீடணன்.

இவர்கள் கண்ணால் சிறிது நோக்கினாலும், இயமனுடைய இரத்தத்தையும் உயிரையும் பருகிவிடுவர். இதற்கு எதிர்மாறாகப் பரம்பொருள்தன் கண்களால் சிறிது நோக்கினாலும் உலகம் செழிக்கும் என்று கோதை நாச்சியார் பாடுவதைக் கேளுங்கள். 'செங்கண் சிறுச் சிறிதே எம்மேல் விழியாவோ?' என்பது நாச்சியார் திருமொழி. கூற்றுவன் என்பது உடலையும் உயிரையும் கூறுபடுத்துவதால் இவனுக்கு வந்த காரணப் பெயர். கூற்றுவனும், இயமனும் எமதர்மராசனின் தூதுவர்களே என்பதறிக. முன்பாடலில் வடக்குத் திக்குக் காவலர்களைக் காலனுக்கும் காலனான காலகாலன் என்றார். இந்தப்பாடலில் கூற்றுவனுக்கும் கூற்றாவார் என்று கூறுவதையும் கருதுக. கைகளில் ஆயுதங்கள் ஏதும் இன்றித் தங்கள் கண்பார்வையாலேயே கூற்றுவனின் உயிரைப்போக்கி இரத்தத்தைப் பருகுவர் என்பது, தன்கண் பார்வையாலேயே உயிரினங் களைக் கொன்றுவிடும் திட்டிவிடம் என்ற ஒருபாம்பை நினைவு படுத்துவதையும் உணர்க. கூற்றுவன் வேறு, காலன் வேறு, இயமன் வேறு, எமதர்மராசா வேறு. 'சாற்று நாள் அற்றது என்று, தருமராசற்காய் வந்த, கூற்றினைக் குமைப்பர் போலும் குறுக்கை வீரட்டனாரே' என்பது திருநாவுக்கரசர் தேவாரம்.

22. ''தென்திசை வாயிலின் வைகும் தீயவர்
என்றவர் எண்இருகோடி என்பரால்;
குன்று உறழ் நெடியவர் கொடுமை கூறி என்?
வன்திறல் யமனையும் அரசு மாற்றுவார்''. (6620)

(குன்று-மலை; மாற்றுதல்-அழித்தல்)

''தெற்குத் திசையில் உள்ள வாயிலில் இருந்துகொண்டு காவல் புரிந்து வருகின்ற தீய செய்கைகளையே இயல்பாகக் கொண்டவர் என்று சொல்லப்படுபவர்கள், பதினாறு கோடி என்னும் எண்ணிக்கை உள்ளவர் என்று கூறுவர்; அவர்கள் ஒவ்வொருவரும் மலையினை ஒத்து உயர்ந்தவர்கள்; அவர்களது கொடுமைத் தன்மை கூறும் தரத்தன்று. வலிமை வாய்ந்த ஆற்றல்மிக்க இயமனைக்கூட அவன் அரசாட்சியைக் கவிழ்த்து அவனையே அழிக்க வல்லவர்களாவார்கள்''.

Koviloor Digital Library

காவலர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மலையைப்போன்று உருவமுடையவர்கள்; வலிமையுடையவர்கள்; சலியாத்தன்மை உடையவர்கள் என்பதாம்.

23. கீழ்த்திசை வாயிலின் வைகும் கீழவர்
ஈட்டமும் எண்இருகோடி என்பரால்;
கோட்டு இருந்திசை நிலைக் கும்பக் குன்றையும்
தாள்துணை பிடித்து, அகன் தரையின் எற்றுவார். (6621)

(கீழவர்-கயவர்; ஈட்டம்-தொகை; இரும்-பெரிய; கோடு-கொம்பு; கும்பம்-மத்தகம்; குன்று-மலை/இங்கே யானை; தாள்-கால்கள்; துணை-இரண்டு; அகன்-அகன்ற/பரந்த; எற்றுதல்-மோதுதல்/அறைதல்; தரை-நிலம்)

''கிழக்குத்திசையில் உள்ள வாயிலில் நின்று காவல்காத்து வரும் கீழ்மைக்குணம் படைத்தவர்களின் தொகுதியும் அதே பதினாறு கோடிப் பேர் என்பார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் எட்டுத் திசைகளிலும் நிலைபெற்று நிற்கின்ற, கொம்புகளையும்,, தந்தங்களாகிய மத்தகத்தையும் உடையனவும், மலைபோல் வலிமையுள்ளவையுமான திசையானைகளின் இரண்டு கால்களையும் பிடித்துக்கொண்டு, அவற்றை இந்த அகன்ற நிலத்தில் போட்டு மோதி அழிப்பதில் வல்லவர்கள்.''

யானையைப் பற்றிக்கூறுமிடங்களிலெல்லாம் கம்பன், 'கும்பக்குன்று, நடைமலை, வருங்குன்றம், மதமலை' என்ற சொற்களைப் பயன்படுத்தியிருப்பதைக் காண்க. பொதுவாகத் திசைகளை வகைப்படுத்தும்போது கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு என்று கூறுவார்கள். இங்கே கம்பன், அம்முறையை மாற்றி வடக்கு, மேற்கு, தெற்கு, கிழக்கு என்று பாடியிருக்கும் ஒரு முறைமாற்றத்தையும் கண்டு உணர்க. இக்காவலர்கள் திசையானைகளைக் காட்டிலும் வலிமைமிக்கவர்கள் என்பது கருத்து.

24. "விண்ணிடை விழித்தனர் நிற்கும் வெய்யவர்
எண் இருகோடியின் இரட்டி என்பரால்;
மண்ணிடை வானவர் வருவர்' என்று, அவர்
கண்இலர், கரைஇலர், கரந்து போயினார்". (6622)

(வெய்யவர்-கொடியவர்; கரந்து-மறைந்து; கரை-அளவு/எல்லை; கண்-கண்ணோட்டம்/இரக்கம்; வானவர்-தேவர்கள்; இரட்டி-இருமடங்கு)

''நான்கு திக்குகளிலும் காவல்காத்து நிற்பவர்கள் தவிர, ஆகாயத்தினின்றும் பகைவர்கள் வந்து தாக்கக்கூடும் என்று கருதி ஆகாயத்தில் விழித்த கண் விழித்தபடியே, கொஞ்சம்கூட உறக்கம் கொள்ளாது, விழிப்புடன் நின்று காவல்காத்து வரும் கொடியவர்கள் முப்பத்திரண்டு

Koviloor Digital Library

கோடிப்பேர் என்பார்கள். இங்கு பூமியில், அரக்கர்களுக்குப் பகைவர் களான தேவர்கள் எந்த நேரத்திலும் வரக்கூடும் என்று கருதி, அவ்வரக்கர்கள் சற்றும் இரக்கம் இல்லாது, தங்கள் வடிவத்தை மறைத்துக் கொண்டு, காவல்காத்துக் கொண்டிருப்பவர்களின் அளவைக் கூறவே முடியாது-கணக்கற்றவர்களாவர்''

'கண்' கண்ணோட்டத்தை, இரக்கத் தன்மையைக் குறிக்கும்.

25. ''பிறங்கிய நெடுமதில் பின்னும் முன்னரும்,
உறங்கலர், உண்பதம் உலவை ஆதலால்,
கறங்கு எனத் திரிபவர் கணக்கு வேண்டுமேல்
அறைந்துளது ஐ-இருநூறு கோடியால்'' (6623)

(பிறங்கிய-விளங்குகின்ற; நெடு-நீண்ட; பின்-உட்புறம்; முன்-வெளிப்புறம்; பதம்-உணவு; உலவை-காற்று; கறங்கு-காற்றாடி; திரிபவர்-சுற்றுபவர்; கணக்கு-தொகை/அளவு; ஐஇருகோடி-ஆயிரம் கோடி; அறைதல்-சொல்லப்படுவது)

''விளங்குகின்ற அந்த உயர்ந்த நீண்ட கோட்டை மதிலின் உட்புறத் திலும், வெளிப்புறத்திலும், உறங்காது விழித்துக்கொண்டே காவல் செய்பவர்களுக்கு உணவு என்ன தெரியுமா? வெறும் காற்று, எனவே அவர்கள் காற்றாடிபோல சுற்றிச் சுழன்றுகொண்டே இருப்பார்கள். இவர்கள்எத்தனைபேர்என்றுகணக்கிட்டுச்சொல்லவேண்டுமானால் ஒரு ஆயிரம்கோடி இருக்கும் என்று கூறப்படுகிறது'' என்கிறான் வீடணன்.

26. ''இப்படி மதில் ஒருமூன்று; வேறு இனி
ஒப்ப அரும் பெருமையும் உரைக்க வேண்டுமோ?
மெய்ப்பெரும் திருநகர் காக்கும் வெய்யவர்
முப்பதுகோடியின் மும்மை முற்றினார்'' (6624)

(மதில்-அரண்; மெய்-உண்மையான; வெய்யவர்-கொடிய அரக்கர்கள்; மும்மை-மூன்றுமடங்கு; முற்றுதல்-பெருகுதல்/நிறைதல்)

''இவ்வாறு இவ்விலங்கை மாநகரில் உள்ள கட்டுக்காவல் நிறைந்த மதில்கள் மூன்றாகும். இன்னும் அதன் ஒப்பற்ற பாதுகாவலின் பெருமையைப் பற்றி விரிவாகச் சொல்ல வேண்டுமோ? உண்மையான அந்தப் பெரிய அழகிய நகரைக் காவல்புரிந்து வருகின்ற கொடியவர்கள் தொண்ணூறுகோடி என்ற அளவில் நிறைந்து பெருகியிருக்கின்றனர்'' என்கிறான் வீடணன்.

பொதுவாக மதில்கள், புறமதில், இடைமதில், அகமதில் என்று மூன்று மதில்கள் எல்லாத் தலைநகரங்களிலும் உண்டு. 'வெய்யவர்' என்ற சொல்லுக்கு விருப்பம் உள்ளவர்கள் என்ற பொருளும் கொள்ளலாம்.

Koviloor Digital Library

அவர்கள் தாமே விரும்பிவந்து அந்தக் காவல் தொழிலை ஏற்றுக் கொண்டுள்ளனர் என்பதும் பொருந்தும். 'வெம்மை வேண்டல்' என்பது தொல்காப்பியம்.

27. ''சிறப்பு அவன் செய்திடச் செல்வம் எய்தினார்;
அறப்பெரும் பகைஞர்கள் அளவுஇல் ஆற்றலர்,
உறப்பெரும் பகை வரின் உதவும் உண்மையர்;
இறப்பு இலர்; எண்-இரு நூறு கோடியே'' (6625)

(சிறப்பு-பெருமை; உற-மிக; இறப்பு-கடத்தல்)

இவ்வாறு நான் மேற்கூறியதோடு அல்லாமல், இராவணனால் சிறப்புச் செய்யப்பட்டு, அதனால் செல்வம் பெற்று வளமாக வாழ்பவர்களும், தருமத்திற்கே பெரிய பகைவர்களாகத் திகழ்பவர்களும், அளவற்ற வலிமையும், பேராற்றலும் மிக்கவர்களும், மிகப்பெரும் பகைவர்கள் எதிர்த்து வந்தால் அச்சமயத்தில் முன்னரே உள்ள படைவீரர்களுக்கு உண்மையாக உதவும் தன்மை படைத்தவர்களும், இராவணனுடைய கட்டளையை மீறாதவர்களுமாகிய சேமப்படையினர் பதினாறு நூறுகோடிப்பேர் இருக்கின்றனர்'' என்கிறான் வீடணன்.

பொதுவாக ஓர் அரசில் சேமப்படை என்ற ஒரு படை தனியாக இருக்கும். இவர்கள் அன்றாடம் வருகின்ற எதிரிகளுடன் போரிட வரமாட்டார்கள். பெரும்போர் நிகழ்கின்ற சமயங்களில், இருக்கின்ற வீரர்கள் போதவில்லை என்றால், இராவணன் கட்டளையிட்டால், உடனே ஓடிவந்து உண்மையாகப் போரிட்டுத் தலைவனுக்கு வெற்றியை வாங்கிக் கொடுப்பவர்கள். இவர்கள் எப்போதும் வெற்றியையே வாங்கித் தருவதால் இவர்களுக்கு இராவணன் அடிக்கடி மிகச் சிறப்புக்கள் செய்வது வழக்கம். அத்தகைய சிறப்புக்களால் மிக்க செல்வம் எய்தி வளமாக வாழ்பவர்கள் இவர்கள்; செல்வமேயன்றி இவர்களுக்கு உரிய பட்டயங்களையும் அவ்வப்பொழுது தந்து ஊக்குவிப்பதும் உண்டு. சன்மானங்களும், சன்னத்துக்களும் கொடுப்பதும் உண்டு. இது இன்றைய "Reserve Police Force"ஐக் குறிக்கும் என்க. இவ்வாறு அரசன் படைத் தலைவர்களுக்குச் சிறப்புச் செய்ததை 'மாராய வஞ்சி' என்கிறது போர் இலக்கணம். இத்தகையவர்களை 'அறத்தைத் தின்று, அருங்கருணையைப் பருகி, வேறமைந்த மறத்தைப் பூண்டு, வெம்பாவத்தை மணம்புணர் மணாளர்' என்று பின்னால் மூலபலப்படையின் ஆற்றலைக் கூறும்போது கவிஞன் கூறப்போவதும் இங்கு நினைவுகூர்தல் தகும்.

28. ''விடம் அல, விழி' எனும் வெகுளிக் கண்ணினர்,
'கடன் அல இமைத்தலும்' என்னும் காவலர்,
வடவரை புரைவன கோயில் வாயிலின்
இடம் வலம் வருபவர், எண் எண்கோடியால்'' (6626)

Koviloor Digital Library

(விடம்-நஞ்சு; விழி-கண்கள்; வெகுளி-சினம்/கோபம்; கடன்-முறை; வடவரை-மேருமலை; புரைவன-ஒப்பன; கோயில்-அரண்மனைகள்)

''இது நஞ்சல்ல, நம்விழிகள்தான் என்று மிக்க சினம் கொண்ட உக்கிர மான கண்களை உடையவர்களும், கண் இமைப்பது, நம் கடமைகளில் ஒன்றல்ல என்று கருதி கண்கொட்டாமல் காவல்காத்து வருபவர்களும், வடக்கில் உள்ள மேருமலை போன்ற அழகிய அரண்மனைவாயிலில் இடம் வலமாக உலவித் திரிந்து காவல் காப்பவர்கள், பதினாறு கோடிப்பேர் என்ற அளவினராவர்'' என்கிறான் வீடணன்.

அவர்கள் கோபம்கொண்டு விழிக்கும்போது அந்தக்கண்கள் நஞ்சைக் கக்குவது போலிருக்கும் என்பதால் 'விடமல, விழி' என்றார்; 'விடமல விழி' என்பது 'மலரல முகமே' என்பது போல என்க. 'கருங்கயல் அல்ல, கண்ணே, எனக்கரி போக்கினாரே' என்பது சீவகசிந்தாமணி; 'இடம் வலம் வருதல்' என்பது இன்று 'பாரா' போடுதல் என்று வழங்கப்பெறுவதை அறிக. இதை இன்றும் நம் கோட்டைவாயில்களிலும், தரைப்படை, விமானப்படை முதலியன அமைந்திருக்கும் வளாகங்களிலும் காணலாம். காவலர்களின் வெகுளித்தன்மை நிறைந்த கண்கள் விடம் என்றும், கண் இமைத்தாலும் ஏதேனும் தீங்கு நேருமோ என்று கருதிக் கண் இமைக்காமலும் கருமமே கண்ணாயினார் என்றார் என்க. பெருந் தோற்றத் தாலும், பொன்மயமாய் விளங்குவதாலும் அரண்மனைக் கோயில் வாயில்கள், 'வடவரை' எனப்பட்டன என்பதறிக.

29. ''அன்றியும், அவன் அகன் கோயில் ஆய்மணி
முன்றினில் வைகுவார் முறைமை கூறிடின்,
ஒன்றிய உலகையும் எடுக்கும் ஊற்றத்தார்;
குன்றினும் வலியவர்; கோடி கோடியால்'' (6627)

(அகன்-அகன்ற/பரந்த; கோயில்-அரண்மனை; ஆய்-ஆராய்ந்து எடுக்கப்பட்ட; மணி-மாணிக்கம்; முன்றில்-இல்முன்/முற்றம்; வைகுதல்-தங்குதல்; முறைமை-தன்மை; ஒன்றிய-ஒருசேர; ஊற்றம்-வலிமை; குன்று-மலை)

''இதுமட்டுமன்றி, அவனுடைய அகன்ற விசாலமான அரண்மனையில் ஆராய்ச்சி மணி கட்டப்பெற்றிருக்கும் முற்றத்தில் நின்று காவல்காத்து வருபவர்களின் தன்மையைக் கூற வேண்டுமானால், அவர்கள் ஒருங்கு சேர்ந்துள்ள இந்த உலகத்தைத் தமது கைகளால் பெயர்த்து எடுக்கும் வல்லமை பெற்றவர்கள்; மலைபோலும் திண்மை கொண்ட வர்கள், அப்படிப்பட்டவர் கோடிக்கணக்கில் உள்ளனர்'' என்கிறான் வீடணன்.

'ஆய்மணி முன்றில்' என்பதற்கு ஆராய்ந்து தெரிந்தெடுக்கப்பட்ட மாணிக்கக் கற்களால் அமைக்கப்பட்ட முற்றம் என்று கூறுவதும்

Koviloor Digital Library

பொருந்தும். அரண்மனை வாயிலிலுள்ள முற்றத்தில் ஆராய்ச்சி மணி கட்டப்பெற்றிருக்கும் என்பது 'வாயிற்கடைமணி நடு நா நடுங்க' எனும் சிலப்பதிகாரத்தின் வரிகளால் அறியலாம்.

30. படைகளின் அளவு

"தேர் பதினாயிரம் பதுமம்; செம்முகக்
கார்வரை அவற்றினுக்கு இரட்டி; கால்வயத்து
ஊர்பரி அவற்றினுக்கு இரட்டி; ஒட்டகம்
தார்வரும் புரவியின் இரட்டி சாலுமே" (6628)

(கார்-கரிய; வயம்-வலிமை; ஊர்-ஊர்தல்/மேலேறிச் செல்லுதல்; பரி-குதிரைகள்; இரட்டி-இருமடங்கு; தார்-கிண்கிணிமாலை; புரவி-குதிரை; சாலும்-நிரம்பி இருக்கும்/நிறைந்து விளங்கும்)

''இராவணனிடம் இருக்கும் தேர்ப்படைகள் பதினாயிரம் பதுமம் என்ற அளவைக் கொண்டன; சிவந்த புள்ளி நிரம்பப் பெற்ற முகத்தையுடைய, கரிய மலைபோன்ற யானைப்படையோ, அந்தத்தேர்ப்படையைப் போல இரண்டு மடங்கினவாகும்; அதாவது இருபதாயிரம் பதுமம்; தனது கால்களின் வலிமையால், மேலேறிச் செல்லும் தன்மையையுடைய குதிரைப்படையின் அளவோ, அந்த யானைப்படையின் தொகையைவிட இரண்டு மடங்காகும். அதாவது நாற்பதினாயிரம் பதுமம்; ஒட்டகப்படை, கிண்கிணிமாலையணிந்த அந்தக் குதிரைப்படையைப் போல இரட்டிப்பு மடங்கு கொண்டு நிறைந்து விளங்குவதாகும். அதாவது எண்பதினாயிரம் பதுமம்'' என்று இராவணனின் படைபலத்தை விவரிக்கிறான் வீடணன்.

பதுமம் என்பது ஒரு பெரிய எண்ணைக் குறித்தது. கோடிக்கும் மேலே என்பர். தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படையைச் சொல்லி காலாட்படையைச் சொல்லுவதே பொதுவான வழக்கம். ரத, கஜ, துரக, பதாதி என்பதுதான் வழக்கம். இலங்கை மூன்று பக்கமும் கடலால் சூழ்ந்துள்ளதால் அங்கே ஒட்டகப்படை மிகுந்திருந்ததாக வீடணன் கூறுகிறான். எனினும் யுத்தகாண்டத்தில் கூட இந்த ஒட்டகப்படை கொண்டு போர் புரிந்ததாகவோ, ஒட்டகப்படையால் சேனையினருக்குத் தண்ணீர் அளித்தல், சுமை தாங்குதல் போன்ற செயல்களைச் செய்ததாகவோ எந்த இடத்திலும், எந்தக் குறிப்பும் தெரிவிக்கப் படவில்லை என்பதும் இங்கு கருதத்தக்கது. எனினும் இச்செய்திக் குறிப்பு அறிஞர்களின் ஆராய்ச்சிக்கு உட்பட்டது. ஒட்டகம் வனாந்திரக் கப்பல் என்றும் வழங்கப்படும் என்பதறிக. செம்புள்ளியுடைய யானை உயர்ந்த சாதி யானையின் அடையாளம் என்று முன்பு கண்டதை இங்கு நினைவு கூர்க.

Koviloor Digital Library

31. "பேயனேன், என் பல பிதற்றி? பேர்த்து அவன்
மாஇரு ஞாலத்து வைத்த மாப்படை
தேயினும், நாள்எலாம் தேய்க்க வேண்டுவது,
ஆயிரவெள்ளம் என்று அறிந்தது, ஆழியாய்!" (6629)

(மா-பெரிய; இரும்-பெரிய; ஞாலம்-நிலம்/பூமி; தேய்தல்-அழிதல்; ஆழி-சக்கரம்)

''சக்கரப்படையைத் தாங்கியுள்ளவனே! பேய்போன்ற நான் அந்த இராவணனுடைய படைபலத்தைப் பற்றித் திரும்பத்திரும்பக் கூறிக் கொண்டிருப்பதால் என்னபயன்? அவன் இந்தப் பூமியினிடத்து நிறுத்தி வைத்துள்ள பெருஞ்சேனையினை நாம் ஒவ்வொன்றாக அழிக்க முற்பட்டாலும், அது இந்த உலகம் உள்ள காலம்வரையிலும் அழித்துக் கொண்டே இருக்கும் அளவினதாகும். அதற்கு அளவே இல்லை, என்றாலும்அந்தப்படைகளின்மொத்தத்தொகைஆயிரம்வெள்ளம்என்று கூறப்படுகிறது''

வீடணன் இலங்கையரசனின் தம்பி. அவனுக்கே தன் நாட்டில் எவ்வளவு படைத்தொகை இருக்கும் என்பதைச் சரியாக கணக்கிட்டுக்கூற முடியவில்லை என்கிறான் என்பதைக் கொண்டு இராவணனின் படை பலத்தை நாமே ஊகித்துக்கொள்ளலாம். இங்கே ஒன்று நினைவு கூரவேண்டும். இராவணனிடம் இருப்பது ஆயிரம் வெள்ளம்படை, சுக்கிரீவன் இராமபிரானோடு கூட்டிக்கொண்டு வந்திருக்கும் வானரப் படையின் அளவு எழுபது வெள்ளம்தான் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். வெள்ளம் என்பது ஒரு பேரெண். அது பதுமத்தைக் காட்டிலும் மேற்பட்டது என்பதும் அறிக. மாஇரு என்பது ஒரு பொருட்பன்மொழி எனக்கொள்க.

32. இராவணனின் துணைவர்களது ஆற்றல்

"இலங்கையின் அரண்இது; படையின் எண்இது;
வலங் கையில் வாள் சிவன் கொடுக்க வாங்கிய
அலங்கல் அம் தோளவன் துணைவர், அந்தம்இல்
வலங்களும், வரங்களும், தவத்தின் வாய்த்தவர்" (6630)

(எண்-அளவு; அலங்கல்-வெற்றிமாலை; அம்-அழகிய; அந்தம்-எல்லை; வலம்-வலிமை)

''இலங்கையின் மதில் அரண் இதுதான், அவன் படைகளின் அளவும் இதுதான். இதுதவிர வெற்றிமாலை சூடிய அழகிய தோள்களையுடைய இராவணன், சிவபெருமான் அருளிக் கொடுத்த சந்திரகாசம் என்னும் வாளை வாங்கித் தன் வலது கையில் வைத்திருக்கிறான். அவனுடைய

Koviloor Digital Library

துணைவர்கள் எல்லோரும் தாங்கள் செய்த தவத்தின் பயனால் எல்லையற்ற வலிமைகளும், வரங்களும், பெற்றவராவர்'' என்று மேலும் கூறலானான் வீடணன்.

இராவணன் தான் மட்டும் தவம்செய்து சிவபெருமானிடமிருந்து சந்திரகாசம் என்னும் வாளைப் பெறவில்லை. தனக்குத் துணையாய் இருப்பவர்களும் கடுந்தவம் மேற்கொண்டு இறைவனிடமிருந்து பல வரங்களையும், இயற்கையாகவே பல வலிமைகளையும் பெற்றவர்கள் என்று கூறுகிறான் வீடணன்.

33. அகம்பன்

''உகம் பல் காலமும் தவம்செய்து பெருவரம் உடையான்;
சுகம் பல் போர்அலால் வேறுஇலன்; பெரும்படைத் தொகையான்;
நகம், பல் என்று இவை இல்லது ஓர் நரசிங்கம் அனையான்;
அகம்பன் என்று உளன், அலைகடல் பருகவும் அமைவான்'' (6631)

(உகம்-யுகம்; சுகம்-இன்பம்; தொகை-தொகுதி)

''பல யுகங்களாகத் தவம்செய்து பெரிய வரங்கள் பலவற்றை இறைவனிடமிருந்தும், தேவர்களிடமிருந்தும் பெற்றவனும், போர் செய்வதைத் தவிரத் தனக்கு இன்பம் தருவது வேறொன்றுமில்லை என்ற தன்மையுடையவனும், தனக்குக்கீழே போர்செய்யத்தகுதி வாய்ந்த பெரிய படைத்தொகுதியையே கொண்டிருப்பவனும், நகம், பல் என்ற இரண்டு கூரிய உறுப்புக்கள் தவிர மற்ற எல்லாத் தன்மைகளிலும் நரசிங்கப் பெருமானை ஒத்தவன் ஆனவனும் ஆகிய அகம்பன் என்ற ஒரு துணைவன் இராவணனுக்கு இருக்கிறான். அவன் இந்த அலைகள் நிறைந்த கடலைக்கூடத் தான் ஒருவனே பருகிவிடும் வல்லமை மிகுந்தவன் ஆவான்'' என்கிறான் வீடணன்.

இராவணனுக்கு உற்ற துணைவர்களின் ஆற்றல், பெருமை பற்றிக் கூறத் தொடங்குகிறான் வீடணன். 'யுகம்' என்பது 'உகம்' எனப்பட்டது. 'சுகம் பல் போர் அலால் வேறு இலன்' என்பது 'போர் என்ன வீங்கும் பொருப்பன்ன பொலங்கொள் திண்தோள்' என்று முன்பு கூறியதை நினை வூட்டுவதை அறிக. 'கொலைக்களம் விழாக்களம் போல மெய்ம்மலி உவகையர்' என்பதும் சான்றோர் வாக்கு. போரில்லாத காலத்தும் வாரணங் களோடு போர்செய்து கொண்டிருப்பர் என்பதும் நாம் முன்பு கண்டதே. இந்த அகம்பன்தான் இறுதியில் அனுமனால் கொல்லப்படுகிறான் என்பதும் இங்கு நினைவுகூரத் தக்கது.

Koviloor Digital Library

34. நிரும்பன்

"பொருப்பை மீதிடும் புரவியும், பூட்கையும், தேரும்
உருப்ப விற்படை, ஒன்பது கோடியும் உடையான்,
செருப் பெய் வானிடைச் சினக் கடாய் வந்து செறுத்த
நெருப்பை வென்றவன், நிகும்பன் என்று உளன்,ஒரு நெடியோன்" (6632)

(பொருப்பு-மலை; மீதிடுதல்-மேலேதாண்டுதல்; புரவி-குதிரை; பூட்கை-யானை; உருத்தல்-சினத்தல்; செரு-போர்; கடாய்-ஆட்டுக்கடா; பெய்தல்-புரிதல்; செறுத்தல்-தடுத்தல்/எதிர்த்தல்; நெடியோன்-வீரன்/ பெருமையோன்; கடாவுதல்-செலுத்துதல்; நெருப்பு-அக்னிதேவன்)

"பெரிய மலையையே தாவிச்செல்லும் தன்மையுடைய குதிரைப் படையும், தொளையுள்ள கையையுடையதான யானைப்படையும், தேர்ப் படையும், சினம்மிக்க வில்லைக் கையிலேந்திய காலாட் படையினரும் ஆகியோர் ஒன்பது கோடி என்ற எண்ணிக்கையில் இவன்கீழ் பணிபுரிவர்; வானத்தில் எதிர்த்துப் போரிட்டுத் தன் வாகனமாகிய ஆட்டுக்கடாவைச் செலுத்தி வந்த அக்னிதேவனையும் வென்று, வெற்றிவாகை சூடியவன், நிகும்பன் என்று ஓர் பெருமைபெற்ற வீரன் ஒருவனும் இவனுக்குத் துணையாக உள்ளான்" என்கிறான் வீடணன்.

அக்னிதேவனுக்கு ஆட்டுக்கடாதான் வாகனம். எனவே அதனைச் செலுத்திக் கொண்டுவந்து வானத்தில் போரிட்டான் என்பதாம். இந்த நிகும்பன் இராவணனுக்கு மாமன் முறையினன் என்று ஒரு சாராரும், இவன் கும்பகருணனின் மகன் என்று வான்மீகமும் கூறுகிறது. 'பூட்கை' என்பது தொளையுள்ள கையை உடையது என்பதால் யானைக்குக் காரணப் பெயர். 'மணி வயிற்றில் வரைத்தோள் கும்பகர்ணனுக்குப் பிறந்தோர்கள் காலனை ஒக்கும் கும்பன் நிகும்பன் என்போர்' என்பது உத்தரகாண்டம்.

35. கும்பன்

"தும்பி ஈட்டமும், இரதமும், புரவியும், தொடர்ந்த
அம்பொன் மாப்படை ஐஇரு கோடி கொண்டு அமைந்தான்;
செம்பொன் நாட்டுஉள சித்தரைச் சிறையிடை வைத்தான்;
கும்பன் என்று உளன்; ஊழிவெங் கதிரினும் கொடியான்" (6633)

(தும்பி-யானை; ஈட்டம்-கூட்டம்; இரதம்-தேர்; புரவி-குதிரை; தொடர்ந்த-சேர்ந்த; அம்-அழகிய; மா-சிறந்த; ஐஇருகோடி-பத்துக் கோடி; செம்பொன் நாடு-தேவலோகம்; ஊழி-யுகமுடிவு; கதிர்-சூரியன்)

"யானைப்படையின்தொகுதியும், தேர்ப்படையும், குதிரைப்படையும் எல்லாமும் பொன்போன்ற அணியாகச் சேர்ந்த அழகிய அருமையான,

Koviloor Digital Library

சிறந்த பத்துக்கோடிப் படையைக் கொண்டிருப்பவனும், சிவந்த பொன் போன்ற தேவலோகத்தில் உள்ள சித்தர்கள் என்னும் தேவசாதியினரைச் சிறையில் அடைத்து வைத்தவனுமாகிய கும்பன் என்று ஒரு துணைவனும் இவனுக்கு இருக்கிறான். அந்தக் கும்பன் யுகாந்த முடிவுக்காலத்தில் தோன்றும் வெம்மையான கிரணங்கள்ளக் கொண்ட சூரியனைக் காட்டிலும் மிகவும் வெம்மையும் கொடுமையும் கொண்டவன்'' என்கிறான் வீடணன்.

36. மகோதரன்

''பேயை, யாளியை, யானையைக் கழுதையைப் பிணித்தது
ஆய, தேர்ப்படை ஐஇருகோடி கொண்டு அமைந்தான்,
தாயை ஆயினும் சலித்திடு வஞ்சனை தவிரா
மாயையான் உளன், மகோதரன் என்று ஒரு மறவோன்'' (6634)

(பிணித்த-பூட்டின; சலித்திடுதல்-கலங்கச்செய்தல்; தவிரா-நீங்காத; மறவோன்-வீரன்)

''பேய், யாளி, யானை, கோவேறு கழுதை ஆகியவை பூட்டப்பெற்ற பத்துக்கோடித் தேர்ப்படையை உடையவனும், பெற்றதாயே ஆனாலும், அவளையும் கலங்கச்செய்யும் வஞ்சனைச் செயல் செய்வதைத் தவிர்க்காதவனும், மாயையில் வல்லவனுமாகிய மகோதரன் என்ற ஒரு வீரனும் இவனுக்குத் துணையாக உள்ளான்'' என்கிறான் வீடணன்.

'யாளி' என்பது சிங்கம் போன்ற ஒரு உருவமுடைய மிருகம். இப்பொழுது எங்கும் காணப்படுவதில்லை. இதன் உருவச்சிலை மட்டும் சிற்பங்களாக இன்றும் பெரிய கோவில்களில் காணப்படுகின்றன. மகோதரன் பெற்றதாயையே ஏமாற்றி வஞ்சகம் செய்யும் எண்ணம் கொண்டவன், மாயவித்தைகள் புரிவதில் வல்லவன், இதனை அவன் யுத்த களத்தில் மாயப்போர் புரியும்போதும் பின்னால் காணப்போகிறோம். அத்துடன் இவன்தான் வஞ்சனையாக மாயாசனகனாக மருத்தனைக் கொண்டுவந்து இராவணனுக்கு உதவியவன். எனவே பின்னால் நடக்கப் போகும் மாயம் நிறைந்த செயலைச் செய்யப்போகிறவன் என்பதால் கவிஞன் இங்கேயே மகோதரனை 'மாயையான்' என்று நமக்கு அறிமுகப் படுத்தும் பாங்கு உணர்க. மகா-உதரன்-பெரிய வயிற்றை உடையவன் என்பது மகோதரன் என்ற சொல்லுக்கு நேர்பொருள். மகோதரன் வடமொழிச் சொல். அறத்திற்குப் புறம்பானது மறம், பாவம். எனவே இங்கே 'மறவோன்' என்ற சொல்லுக்குப் 'பாவி' என்று பொருள் கொள்ளுதலும் பொருந்தும். வீடணன்கூட அப்படியே நினைந்தும் சொல்லியிருக்கலாம்தானே?'' ''ஈன்றாள் பசிகாண்பாள் ஆயினும் செய்யற்க சான்றோர் பழிக்கும்வினை'' என்பது குறள்-656. அதற்கு மகோதரன்விதிவிலக்கு. 'கோபம்தோன்றிடின்தாயையும்உயிர்உண்ணும்

Koviloor Digital Library

கொடியோர்' என்று அரக்கரைப் பின்னர் கூறப்போவதையும் இங்கு நினைவு கூர்தல் தகும்.

37. வேள்வியின் பகைஞன்

''குன்றில் வாழ்பவர் கோடி நால்ஐந்தினுக்கு இறைவன்,
'இன்று உளார் பின் நாளை இலார்' என, எயிற்றால்
தின்றுளான், நெடும்பல் முறை தேவரைச் செருவின்
வென்றுளான், உளன், வேள்விப் பகைஞன், ஓர் வெய்யோன்'' (6635)

(குன்று-மலை; நால்ஐந்துகோடி-இருபதுகோடி; இறைவன்-தலைவன்; எயிறு-பற்கள்; செரு-போர்; வெய்யோன்-கொடியோன்; நெடுமை-பெருமை)

''மலைப்பக்கங்களில் வாழ்கின்ற இருபதுகோடி வீரர்களுக்குத் தலைவனும், இன்றைக்கு உயிரோடு இருப்பவர்கள், பின்னர் நாளைக்கு உயிரோடு இருப்பதில்லை என்ற கருத்துப்படி தன் பற்களால் வழியில் கண்ட உயிரினங்களையெல்லாம் தின்று தீர்த்து விடுகின்றவனும், பெருமை பொருந்திய தேவர்களை முன்பு பலமுறை போரில் வென்றுள்ள வனுமான, வேள்வியின் பகைஞன் என்ற பெயர்கொண்ட கொடியவன் ஒருவனும் இவனுக்குத் துணையாக இருக்கிறான்'' என்கிறான் வீடணன்.

'இன்றுளார் பின் நாளை மாள்வீர்' என்ற கருத்துப்பட, முன்பு இராவணன் கூறிய கூற்றையும் இங்கே நினைவுகூர்க. 'இன்றைக்கு இருப்பாரை நாளைக்கு இருப்பர் என்று எண்ணவோ திடமில்லையே' என்பது தாயுமானவர் வாக்கு; 'நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை' என்பது பழமொழி. 'இன்றுளேன், நாளையில்லேன் என் செய்வான் தோன்றினனே?' என்பது திருநாவுக்கரசர் தேவாரம். 'வேள்வியின் பகைஞன்' என்பது 'யக்ஞ சத்துரு' 'யக்யவிரோதீ' 'யக்ஞஹா' என்ற வடசொற்களின் தமிழாக்கம். பொதுவாக அரக்கர்கள் எல்லோருமே வேள்வியின்பகைவர்கள்தான்என்றாலும் இவனுக்குப் பெயரேஅவ்வாறு அமைந்தது என்க. 'குன்றில் வாழ்பவர்' இலங்கையை ஒட்டிய கந்தமாதனம் முதலிய குன்றுகளில் வாழும் அரக்கர்கள் எனக்கொள்க. இவனைச்சுற்றிஇருப்பவர்கள்வாழ்க்கைநிலையாமைபற்றியும், யாக்கை நிலையாமை பற்றியும் நன்கு அறிந்தவர்கள் என்பதும். எப்போதும் அந்த அச்சத்துடனேயே வாழ்ந்து வந்தனர் என்பதும் பெறப்படுகிறது.

Koviloor Digital Library

38. சூரியன் பகைஞன்

''மண்ணுளாரையும், வானில் உள்ளாரையும், வகுத்தால்,
உண்ணும் நாள் ஒரு நாளின்'' என்று, ஒளிர்படைத் தானை
எண்ணின் நால் இருகோடியன், எரி அஞ்ச விழிக்கும்
கண்ணினான், உளன், சூரியன் பகை என்று ஓர் கழலான்'' (6636)

(வகுத்தல்-வகைப்படுத்துதல்; படை-ஆயுதம்/படைக்கலன்கள்; தானை-சேனை/படை; நால்இருகோடி-எட்டுக்கோடி; எரி-நெருப்பு; ஒளிர்-விளங்குகின்ற; எண்ணுதல்-கணக்கிடுதல்)

''இந்நிலவுலகத்திலுள்ளவரையும், வானுலகத்தில் உள்ளவர்களையும் ஒன்றாகச் சேர்த்து வகைப்படுத்தினால் அவர்கள் எல்லோரையும் ஒரேநாளில் கொன்று அவர்களை உண்டு, தீர்த்துவிடும் இயல்பினை உடையவனும், ஒளிவீசுகின்ற படைக்கலன்களையுடைய பெரிய சேனையைக் கணக்கிட்டால் எட்டுக்கோடி வீரர்களைத் தன்னிடத்தே கொண்டவனும், நெருப்பே அச்சம்கொள்ளும்படி விழிக்கின்ற கண்களையுடையவனுமாகிய 'சூரியன்பகைஞன்' என்று பெயர்கொண்ட வீரக்கழல் அணிந்த வீரன் ஒருவனும் இவனுக்குத் துணையாக இருக்கிறான்'' என்கிறான் வீடணன்.

'சூரியன் பகைஞன்' என்பது 'சூர்யவிரோதி' சூர்யசத்ரு, சூர்யகேது, பானு கோபன்' என்ற வடசொற்களின் தமிழாக்கம் எனக்கொள்க.

39. மாபெரும் பக்கன்

''தேவரும், தக்க முனிவரும், திசைமுகன், முதலா,
மூவரும், பக்கம் நோக்கிய மொழிதர, முனிவான்,''
தாவரும் பக்கம் எண் இருகோடியின் தலைவன்,
மாபெரும் பக்கன் என்று உளன், குன்றினும் வலியான். (6637)

(தக்க-தகுதிமிக்க; திசைமுகன்-பிரமன்; மொழிதருதல்-பேசுதல்; முனிதல்-கோபித்தல்; தா-வலிமை; பக்கம்-சேனை; எண் இருகோடி-பதினாறுகோடி; குன்று-மலை; தாஅரும்-குற்றமற்ற)

''வானத்தில் உள்ள தேவர்களும், தவத்தால் தகுதிவாய்ந்த முனிவர்களும், நான்முகனாகிய பிரமன் முதலான மும்மூர்த்திகளும்கூட நேருக்குநேர் பேசிக்கொள்ள அச்சப்பட்டு அக்கம் பக்கம் பார்த்தே பேசுமளவிற்கு அவர்களிடம் மிகுந்த சினம் கொள்பவனும், குற்றமற்ற, வலிமைவாய்ந்த பதினாறுகோடி அடங்கிய சேனைக்குத் தலைவனும் ஆகிய மாபெரும்பக்கன் என்று பெயர்பூண்ட மலையினும் வலிமை வாய்ந்த ஒருவனும் இவனுக்குத் துணையாக இருக்கிறான்'' என்கிறான் வீடணன்.

Koviloor Digital Library

'மாபெரும் பக்கன்' என்பது 'மகாபார்சுவன்' என்ற வடசொல்லின் தமிழாக்கம்.

40. வச்சிரதந்தன்

''உச்சிரத்து எரிகதிர் என உருத்து எரிமுகத்தன்,
நச்சிரப்படை நால்இரு கோடிக்கு நாதன்,
முச்சிரத்து அயில் தலைவற்கும், வெலற்கு அரு மொய்ம்பன்,
வச்சிரத்து எயிற்றவன், உளன், கூற்றுவன் மாற்றான்'' (6638)

(உச்சிரம்-உச்சந்தலை; எரிதல்-வீசுதல்; கதிர்-சூரியன்/வெயில்; உருத்து-கோபித்து; நாதன்-தலைவன்; முச்சிரம்-மூன்றுதலை/திரிசூலம்; அயில்-சூலப்படை; தலைவன்-சிவபெருமான்; மொய்ம்பு-வலிமை; எயிறு-பற்கள்/தந்தம்; கூற்றுவன்-இயமன்; மாற்றான்-பகைவன்; நச்சிரம்-சிறந்த தலைமை)

''நண்பகலில் சூரியன் வெப்பம்பட்டு கொதிக்கும் உச்சந்தலை போல, கோபத்தால் எதிரே இருப்பவரை எரிக்கின்ற முகத்தையுடையவனும், சிறந்த தலைமையுடைய எட்டுக்கோடிப் போர் வீரர்களுக்குத் தலைவனும், முத்தலைச் சூலத்தை ஆயுதமாகக் கொண்டிருக்கும் இறைவனாகிய சிவபெருமானும் போரில் வெல்லுதற்கு அரிய வலிமை உடையவனும், இயமனுக்கே பகைவனானவனுமான, வச்சிரம் போன்ற உறுதியான பற்களை உடைய வச்சிரதந்தன் என்று ஒருவனும் இவனுக்குத் துணைவனாக இருக்கிறான்'' என்கிறான் வீடணன்.

'உச்சிரத்தில்' உள்ள 'உ' என்பது சுட்டுச்சொல். அதுபோல் 'நச்சிரத்தில் உள்ள 'ந' என்பது சிறந்த உயர்ந்த என்ற பொருள்தரும் ஒற்றைச்சொல். உச்சத்தலையில் உச்சிவெயில் பட்டாற்போலக் கொதிக்கின்ற முகத்தை யுடையவன் என்பது முதலடிக்குப் பொருள். 'முச்சிரம்' என்பது திரிசூலம், முத்தலைச் சூலம் என்க. 'வஜ்ரதம்ஷ்ட்ரன்' என்ற வடசொல்லின் தமிழாக்கம் 'வச்சிரத்து எயிற்றன்'

41. பிசாசன்

''அசஞ்சலப் படை ஐ-இருகோடியன், அமரின்
வசம் செயாதவன், தான் அன்றிப் பிறர் இலா வலியான்,
இசைந்த, வெஞ்சமத்து இயக்கரை வேரொடும் முன்நாள்
பிசைந்து மோந்தவன், பிசாசன் என்று உளன், ஒருபித்தன்'' (6639)

(சஞ்சலம்-நடுக்கம்/சலிப்பு; ஐஇருகோடி-பத்துக்கோடி; படை-சேனை; வசம்செய்தல்-வெல்லுதல்; வெஞ்சமம்-கொடியபோர்; வேரொடும்-அடியோடும்; இசைதல்-கிடைத்தல்/உடன்படுதல்)

Koviloor Digital Library

''பகைவர்களைக் கண்டு எதற்கும் நடுங்காத, சலிப்பில்லாத பத்தாயிரம் கோடி என்ற அளவுள்ள அரக்கர் சேனையை உடையவனும், போரில் வெல்லப்படாதவன் தான் மட்டுமேயன்றிப் பிறர் எவரும் இல்லாத வலிமையுடையவனும், உடன்பட்டு நடந்த கொடியபோரில், பண்டைக் காலத்தில் இயக்கர்களை அடியோடும் கொன்று, அவர்கள் உடல்களைத் தன்கைகளால் பிசைந்து மோந்து பார்த்தவனும், போரின்மேல் பைத்தியம் பிடித்தவனுமான, பிசாசன் என்று பெயருள்ள ஒருவனும் இவனுக்குத் துணையாக இருக்கிறான்'' என்கிறான் வீடணன்.

சஞ்சலம் என்பது நடுக்கம், சலிப்பு என்று பொருள்படும். அசஞ்சலம் என்பது நடுக்கமில்லாத, சலிப்பில்லாத என்ற பொருளைத்தரும். பகைவர்கள் இருவரும் உடன்பட்டுப் போர்செய்ததால், போரை 'சமம்' என்றான் என்க. இயக்கர் என்பவர் பதினெண் தேவ சாதியிலுள்ள ஒருபிரிவினர். உயிரற்ற உடலைப் பிசைந்து மோந்து பார்க்கிற இயல்புடைய ஒருவனைப் பித்தன் என்றும் பிசாசன் என்றும் பொருந்த அழைத்த திறன் நோக்குக. பித்தன் என்ற சொல் போரின்மீது பித்துக் கொண்டவன் என்ற பொருள் தந்தாலும், முன்னர்கூறிய பொருள் இன்னும் சிறப்பான பொருளைத் தருதல உணர்க. ஒத்த வலியையுடைய இருவர் போர்செய்தலாலும் போர் இசைந்த வெஞ்சமம் என்றும் 'சமம்' என்றும் கூறப்பட்டது என்க. பொதுவாகத் தீ நாற்றமுள்ள பொருளை மோந்து மகிழ்தல் கீழ்மக்களின் இயல்பு. அதுபோல இவனும் நர நாற்றத்தை மோந்து பார்த்தான் எனக் கொள்க.

42. துன்முகன்

''சில்லி மாப்பெரும் தேரோடும், கரி, பரி, சிறந்த,
வில்லின் மாப்படை, ஏழ்இரு கோடிக்கு வேந்தன்,
கல்லி மாப்படி கலக்குவான், கனல்எனக் காந்திச்
சொல்லும் மாற்றத்தன், துன்முகன் என்று அறம் துறந்தோன்'' (6640)

(சில்லி-சக்கரம்/தேர்உருளை; மா-மிகப்பெரிய; கரி-யானை; பரி-குதிரை; மா-பெரிய; ஏழ்இருகோடி-பதினான்கு கோடி; வேந்தன்-தலைவன்; கல்லுதல்-தோண்டுதல்; படி-பூமி; கனல்-நெருப்பு; மாற்றம்-சொல்; அறம்-தருமம்; காந்தி-வெகுண்டு; கலக்குதல்-நிலைதடுமாறச் செய்தல்; துறத்தல்-கைவிடுதல்)

''சக்கரங்களை உடைய பெரிய தேர்ப்படை, யானைப்படை, குதிரைப் படை, சிறந்த வில்லின் ஆற்றலுடைய பெரிய காலாட்படை ஆகியவை பதினாலாயிரம் கோடி என்ற ஒரு கணக்குக் கொண்ட படைக்குத் தலைவனானவனும், மலையோடு கூடிய இந்தப்பெரிய பூமியையே தோண்டி எடுத்து நிலைகுலையச் செய்பவனும், கோபத்தால் நெருப்புப் போலக் கனன்று பேசும் சொற்களை உடையவனும், தருமநெறியைக்

Koviloor Digital Library

கைவிட்டவனுமான 'துன்முகன்' என்று பெயர்கொண்ட படைத்தலைவன் ஒருவனும் இவனுக்குத் துணையாக இருக்கிறான்'' என்கிறான் வீடணன்.

43. விருபாட்சன்

''இலங்கை நாட்டன்ன, எறிகடல் தீவிடை உறையும்
அலங்கல் வேற்படை ஐஇருகோடிக்கும் அரசன்,
வலம்கொள் வாள்தொழில் விஞ்சையர் பெரும் புகழ் மறைத்தான்,
விலங்கு நாட்டத்தன் என்று உளன், வெயில் உக விழிப்பான்'' (6641)

(அன்ன-ஒத்த/அப்படிப்பட்ட; எறிதல்-வீசுதல்; உறைதல்-தங்குதல்; அலங்கல்-வெற்றிமாலை; ஐஇருகோடி-பத்துக்கோடி; விஞ்சையர்-வித்யாதரர்; உகுதல்-சிந்துதல்; வலம்-வெற்றி/வலக்கை; அரசன்-தலைவன்; விலங்கு-குறுக்கு; வெயில்-தீப்பொறியுமாம்)

''இலங்கை நாட்டைப்போலவே, அலைகள்வீசும் கடலாகிய வேறொரு தீவின் இடையில் வாழ்ந்துவரும், வெற்றிமாலையையே சூடிய வேற்படை ஏந்திய பத்துக்கோடி அரக்கவீரர்களுக்குத் தலைவனானவனும், வெற்றியையே அளிக்கும் வலிமைமிக்க வாட்படையை வலக்கையில் தாங்கிப்போர் புரியும் ஆற்றல் மிக்க வித்யாதரர்களை வென்று, அவர்களுடைய பெரிய புகழையே மறைக்கச்செய்தவனும், நேர்ப்பார்வை இன்றி குறுக்கு விழிகள் கொண்டவனும், வெயில் போலவும் தீப்பொறிபோலவும் வெகுண்டு கடுமையாக விழித்துப் பார்க்கும் பார்வையுடையவனுமாகிய விருபாட்சன் என்று பெயர் கொண்ட ஒருவனும் இவனுக்குத் துணையாக இருக்கின்றான்'' என்கிறான் வீடணன்.

பண்டைக்காலத்தில் படைக்கலன்களுக்கு மாலை அணிவித்து வழிபடும் ஒரு முறையும் உண்டு. எனவே 'அலங்கல் வேற்படை' என்றார் என்க. விஞ்சையர், வித்யாதரர் என்பவரும் பதினெண் தேவசாதியினருள் ஒரு பிரிவினர் என்க. விலங்கு என்ற சொல்லுக்குக் 'குறுக்கு' என்று பொருள். விரூபம் என்ற சொல்லுக்கும் 'விலங்கு' என்பது பொருள். 'அக்ஷம்' என்ற சொல்லுக்குக் 'கண்' என்பது பொருள். 'விருபாட்சன்' என்ற சொல்லின் தமிழாக்கம் 'விலங்கு நாட்டத்தன்' என்பதாம். நேர்ப்பார்வை பார்க்காது குறுக்குப் பார்வை பார்க்கும் கண்களையுடையவன் என்பது பொருள். கவிஞன் எவ்வளவு நுட்பமாக வடமொழிச்சொற்களைத் தமிழ்ப் படுத்தியிருக்கிறான் என்பது மிகவும் உணர்ந்து சுவைக்கத்தக்கது.

Koviloor Digital Library

44. தூம்ராட்சன் – தூம நாட்டத்தன்

''நாமம் நாட்டிய சவம் எனின், நாள் என்றும் ஒருவர்,
ஈம நாட்டிடை இடாமல், தன் எயிற்றிடை இடுவான்,
தாமம் நாட்டிய கொடிப்படைப் பதுமத்தின் தலைவன்,
தூம நாட்டத்தன் என்று உளன், தேவரைத் துரந்தான்'' (6642)

(நாம்-அச்சம்; நாட்டுதல்-உண்டாக்குதல்/அணிதல்; ஈமநாடு-இடு காடு; எயிறு-பற்கள்; தாமம்-மாலை; துரத்தல்-தோற்றோடுமாறு துரத்தல்; தூமம்-புகை; நாட்டம்-கண்கள்; தூமநாட்டத்தன்-புகைக்கண்ணன்; சவம்-பிணம்; பதுமம்-ஒரு பெரிய எண்ணிக்கையின் அளவு)

''அச்சம்கொண்டு, போரில் இறந்துபோன பிணம் என்று கூடப் பாராமல், ஒவ்வொருநாளும் யாரேனும், அந்தப்பிணத்தை எடுத்துக் கொண்டுபோய் இடுகாட்டில் இட்டு விடாமல், தானே தன் பற்கள் பொருந்திய வாயில் இட்டு உண்ணும் இயல்புடையவனும், மாலை யணியப் பெற்ற கொடிகளையுடைய பதுமம் என்ற பேரெண்ணை அளவாகக் கொண்ட சேனையின் தலைவனும், தேவர்களைப் போரில் புறமுதுகிட்டு ஓடஓடத் துரத்தியவனுமான புகைக்கண்ணன் என்ற ஒருவனும் இவனுடன் துணைவனாக இருக்கிறான்'' என்கிறான் வீடணன்.

'சாவு' என்ற சொல்லின் அடிச்சொல்லினின்றும் பிறந்தது சவம் எனப்பட்டது. 'ஈமநாடு' என்பது இடுகாட்டைக் குறிக்கும். பிணத்தைச் சுடும்காடு சுடுகாடு, சுடலை; பிணத்தை இடும்காடு, இடுகாடு என்பதறிக. 'எயிறு' என்பது ஆகுபெயராய் எயிற்றையுடைய வாய் என ஆகி வந்தது என்க. 'பதுமம்' என்பது ஒரு பேரெண் என்பது முன்பே கண்டோம். 'தூம நாட்டத்தான்' என்பது தூமராட்சன், தூமராக்ஷன், தூமிசாட்சன், தூமாட்சன், என்ற வடசொற்களின் திரிபு. இதையே 'புகைக்கண்ணன்' என்று தமிழ்ப் படுத்தியிருக்கிறான் கம்பன் என்க. 'விலங்கிற்கும், புள்ளிற்கும் காடே, புலன்கெட்ட புல்லறிவாளர் வயிறு' என்பது நாலடியார் 121. இயற்கையாக இறந்தவர்கள், பிணத்தைக் கழுகுகளும் காக்கைகளும் உண்ணும். ஆனால் இவன் வீரமரணம் அடைந்த போர் வீரர்களின் பிணத்தை மட்டுமே தின்பான் என்பது இவனுக்குள்ள சிறப்பு என்கிறது ஒரு பதிப்பு. கோபப்புகையைக் கக்கும் இயல்புடைய கண்களை யுடையவன் என்பதால், இவன் புகைக்கண்ணன், தூமநாட்டத்தன் எனப்பட்டான் என்க.

Koviloor Digital Library

45. போர்மத்தன்–வயமத்தன்

''போரின் மத்தனும், பொருவய மத்தனும், புலவர்
நீரின் மத்து எனும் பெருமையர்; நெடுங்கடற் படையார்;
ஆரும் அத்தனை வலி உடையார் இலை, அவரால்
பேரும், அத்தனை எத்தனை உலகமும், பெரியோய்!'' (6643)

(பொருதல்-போர்செய்தல்; புலவர்-தேவர்; நீர்-பாற்கடல்; மத்து-மந்தரமலை; வலி-வலிமை; பேர்தல்-நிலைகெட்டுப் பெயர்தல்/நிலைதடுமாறுதல்; வய-வலிய/வெற்றி)

''பெருமைமிக்க பெரியோனே! போர்செய்வதில் வல்லவனான மத்தன் என்பவனும், போரில் வலிய வெற்றியையே அடைபவனுமான வயமத்தன் என்பவனும், தேவர்கள் முன்பு பாற்கடலைக் கடைந்தபோது, மத்தாகப் பயன்படுத்திய மந்தரமலையைப் போன்ற வலிமையும், பெருமையும், ஆற்றலும் பெற்றவர்கள். நீண்ட பெரியகடல் போன்ற பரந்த படைவளம் பெற்றவர்கள். இவர்களைப் போல வலிமையுடையவர்கள் உலகில் வேறு எவரும் இல்லை. இவர்கள் இருவரும் எத்தனை உலகங்கள் உண்டோ, அத்தனை உலகங்களையும் நிலைகுலையச் செய்யும் ஆற்றல் படைத்தவர்கள்'' என்கிறான் வீடணன்.

மத்தனும், வயமத்தனும் இரட்டையர் என்றும் கூறுவர். பகைவர்களைப் போரில் கட்டித் தயிர்கடையும் மத்துப்போல் நின்று பகைவர் படையைக் கடைந்து கலக்கும் ஆற்றல்பெற்றவர்கள் என்பதனால் மத்தன் என்பது காரணப்பெயராகலாம். 'நீர்' இங்கு நீர்நிறைந்த கடலைக் குறித்து ஆகுபெயராகிப் பின் திருப்பாற்கடல் என்ற பொருளைத் தந்ததனால் இருமடி ஆகுபெயர் எனக்கொள்க. 'ஏணம்' என்ற வடசொல்லுக்குப் 'போர்' என்பது பொருள். இவனுடைய இயற்பெயர் 'ஏணமத்தன்' என்பதாகும். அது 'போர்மத்தன்' எனத்தமிழ்ப் படுத்தப்பட்டிருக்கிறது எனக்கொள்க. இங்கே இதுவரை கூறப்பட்டவர்கள் அனைவரும் படைத்தலைவர்கள் என்பதறிக. இவர்கள் எல்லோருமே பின்னால் நடக்க இருக்கும் போர்க்களத்தில் பங்குபெறப் போகிறவர்கள். அங்கேயும் இவர்கள் போர்செய்கின்ற திறத்தைக் கவிஞன் பலபடக் கூறுவதையும் நாம் பின்னால் காண இருக்கிறோம்.

46. பிரகஸ்தன்

''இன்ன தன்மையர் எத்தனை ஆயிரர் என்கேன்
அன்னவன் பெருந்துணைவராய், அமர்த் தொழிற்கு அமைந்தார்?
சொன்ன சொன்னவர் படைத்துணை இரட்டியின் தொகையான்,
பின்னை எண்ணுவான், பிரகத்தன் என்று ஒரு பித்தன்'' (6644)

Koviloor Digital Library

(அன்னவன்-இராவணன்; அமர்-போர்; பித்தன்-போர்ப்பித்துக் கொண்டவன்; இரட்டி-இரண்டுமடங்கு)

''இவ்வாறு அந்த இராவணனுக்கு அவனுடைய போர்த்தொழிலில் அரும்பெரும் துணையாய் அமைந்துள்ள இத்தகைய பெருமை உடையவர்களின் எண்ணிக்கையை எவ்வளவு என்று அளவிட்டுச் சொல்லுவேன்? சொல்ல இயலாது. நான் மேலே கூறிய படைகளைப் போல இரண்டு மடங்கு படைகளைக் கொண்டவன் பிரகத்தன் என்று ஒரு சேனைக் காவலன், சேனாதிபதி இருக்கிறான். அவன் போர்ப்பித்துக் கொண்டவன். அவனும் இராவணனுக்கு ஒரு துணைவனாய் இருக் கிறான். ஆனால் இவன் தன்னம்பிக்கை மிகுந்தவன் ஆதலால் எண்ணித் துணியமாட்டான், துணிந்தபின் எண்ணும் இயல்புடையவன் ஆவான்'' என்கிறான் வீடணன்.

இவனை இராட்சச சேனாபதி என்கிறது வான்மீகம். எண்ணித் துணியாது, துணிந்தபின் எண்ணுவதால் இவனைப் பின்னை எண்ணுவான் பித்தன் என்கிறான் கவிஞன்.

47. ''சேனை காவலன்; இந்திரன் சிந்துரச்சென்னி
யானைகால் குலைந்து ஆழி ஓர் ஏழும் விட்டு அகல,
ஏனை வானவர் இருக்கை விட்டு இரியல் உற்று அலைய,
சோனை மாரியின் சுடுகணை பலமுறை துரந்தான்'' (6645)

(காவலன்-தலைவன்; சென்னி-மத்தகம்; குலைந்து-தடுமாறி; ஆழி-கடல்; அகல்தல்-ஓடுதல்; ஏனை-மற்றும்; இருக்கை-இருப்பிடம்; இரியல் உறுதல்-ஓடி அலைதல்; சோனைமாரி-இடைவிடாதமழை; துரத்தல்-எய்தல்/தொடுத்தல்/செலுத்துதல்; சிந்துரம்-குங்குமம்)

''இந்தப் பிரகத்தன் இராவணனுடைய படைத்தலைவன், சேனைக் காவலன், இவன் செலுத்திய சுடுகணையில் தேவேந்திரனின் குங்குமம் அப்பப்பட்ட தலையை - மத்தகத்தை உடைய அவனுடைய ஐராவதம் என்னும் வெள்ளையானையை கால்தடுமாறி, நிலைகுலைந்து, ஏழு கடல் களையும் தாண்டி ஓடும்படி செய்தான். ஐராவதம் ஓடியதால் இந்திரனும் ஓடவேண்டியதாயிற்று. இந்திரன் ஓடியதால் மற்றுமுள்ள தேவர்கள் அனைவரும் தங்கள் இருப்பிடத்தைவிட்டு நிலைகுலைந்து தடுமாறி ஓடலானார்கள், அப்போது இடைவிடாது பெய்யும் மழையைப்போல, சுட்டெரிக்கின்ற அம்புகளைப் பலமுறை அவர்கள்மேல் செலுத்தியவன்'' இவன் என்கிறான் வீடணன்.

யானைகளின் மத்தகத்தில் சிந்துரம் பூசி அழகு பார்ப்பது வழக்கம். 'சிந்துரத்திலக நுதல் சிந்துரத்தின் மருப்பு ஒசித்த செங்கண்மாலே!' என்பது வில்லிபாரதம்.

Koviloor Digital Library

48. கும்பகருணன்

"தம்பி, முற்பகல் சந்திரர் நால்வரில் தயங்கும்
கும்பமாக் கிரிக்கோடு இருகைகளால் கழற்றி,
செம்பொன் மால்வரை மதம் பட்டதாம் எனத் திரிந்தான்,
கும்பகன்னன் என்று உளன், பண்டு, தேவரைக் குமைத்தான்" (6646)

(முற்பகல்-முதல்நாள்; தயங்குதல்-விளங்குதல்; கும்பம்-மத்தகம்; மால்-பெரிய; கரி-யானை; கோடு-கொம்பு; கழற்றி-பறித்து; பண்டு-முற் காலத்தில்; குமைத்தல்-அழித்தல்)

"இராவணனுக்குக் கும்பகருணன் என்று ஒரு தம்பியும் இருக்கிறான். அவன் அமாவாசைக்கு முதல்நாள் அன்று தோன்றும் பிறைச்சந்திரனைப் போன்று விளங்கும் நான்கு மத்தகக் கொம்புகளைக் கொண்ட ஐராவதம் என்னும் யானையின் நான்கு கொம்புகளையும் தனது வலிய இரண்டு கைகளினால் பறித்து, சிவந்த பொன்போன்ற, பெரிய மலைபோன்ற யானை, மதம் கொண்டதுபோல் எங்கும் ஓடித்திரிபவன். அவன் முற்காலத்தில் போரில் தேவர்கள் அனைவரையும் அடியோடு அழித்த வனாவான்"

ஐராவதத்திற்கு நான்கு கொம்புகள் உண்டு. அவை நான்கு பிறைச் சந்திரனைப் போன்று தோற்றமளிக்கும். அந்த நான்கு கொம்புகளையும், தன்இரண்டு கைகளால் பற்றியவன் என்றதனால், ஒரேகையில் யானையின் இரண்டு கொம்புகளையும் பற்றித் தூக்கிச் சுழற்றும் ஆற்றல் பெற்றவன் என்பது புலப்படுத்தப்படுகிறது. அவன் அவ்வாறு கைப்பற்றிச் கழற்றியதை 'சுழற்றி' என்று, மிகச்சுலபமாகக் கைப்பற்றினான் என்று கூறிய நயம் நோக்குக. வேறு ஆயுதங்கள் ஏதும் தன்னிடம் கொள்ளாது, ஐராவதத்தின் நான்கு கொம்புகளையே எளிதாகப் பறித்து, அதனாலேயே தேவர்களை அடித்துத் துரத்தியழித்தான் என்பதால் அவனது போராற்றலும், உடல் வலிமையும் தெற்றன விளக்கப்பட்டது காண்க.

49. இந்திரசித்து

"கோள் இரண்டையும் கொடுஞ்சிறை வைத்த அக்குமரன்
மூளும் வெஞ்சினத்து இந்திரசித்து எனமொழிவான்;
ஆளும் இந்திரற்கு அன்னவன் பிணித்ததன் பின்னை,
தாளினும் உள, தோளினும் உள, இனம் தழும்பு" (6647)

(கோள்-கிரகங்கள்; மூள்தல்-பெருகுதல்; பிணித்தல்-கட்டுதல்; தாள்-கால்கள்; இனம்-இன்னும்; தழும்பு-வடுக்கள்)

கோள்களிலேயே முதன்மையான சூரியன், சந்திரன் என்ற இரண்டு கிரகங்களையும் வென்று, சிறையில் அடைத்து வைத்தவனான

Koviloor Digital Library

இராவணனின் புதல்வன், மேன்மேலும் பெருகுகின்ற கொடிய சினத்தையுடைய இந்திரசித்து என்று கூறப்படுபவன் ஆவான். தேவலோகத்தையே ஆள்கின்ற தேவேந்திரனை, அந்த இந்திரசித்து வென்று அவனைக் கட்டி வைத்ததன் பின்னர், அவனுடைய கால்களிலும், தோள்களிலும், அவன் கட்டிய வன்மையான தழும்புகள் இன்னும் மாறாமல், மறையாமல் தெரிந்துகொண்டிருக்கின்றன.

இராவணன் மகன் இந்திரசித்தின் இயற்பெயர் மேகநாதன் என்பது. அவன் பிறந்தபொழுதே மேகம் குமுறுவதுபோல ஒலியெழுப்பிக் கொண்டே பிறந்ததனால் அவனுக்கு மேகநாதன் என்றே இராவணன் பெயர்சூட்டினான். அவன் பிற்காலத்தில் இந்திரனையும் வென்றதனால், பிரமனால் இந்திரசித்து என்று கௌரவிக்கப்பட்டான். எனினும் இன்றும் இந்திரசித்து என்ற பெயரே நிலைத்துவிட்டது என்பதையும், காப்பியத்தில் எல்லா இடங்களிலும் இந்திரசித்து என்றே குறிக்கப்படுகின்றான் என்பதையும் அறிக. 'இருகோளையும் சிறை வைத்தாற்கு இளையேன்' என்பது சூர்ப்பணகைகூற்று. 'வந்துபிறந்திடுமைந்தன், மழைஇடித்ததென வாய்விட்டு அழுதலால், அவ்வெந்திறல் மைந்தனை 'மேகநாதன்' எனப் பெயரிட்டான் இலங்கை மன்னன்' என்பது உத்தரகாண்டம். 'சந்திரன் இரவி என்பவர்கள் தாம், அவன் சிந்தனை வழிநிலை திரிவர்' என்பது இராவணனே தவவேடத்தில் கூறிய கூற்று. 'தானவரைக் கருவறுத்து, சதமகனைத் தளையிலிட்டு, வானவரைப் பணிகொண்ட மருகோனே' என்பதும் இந்திரசித்து பற்றிய சூர்ப்பணகை கூற்று.

50. அதிகாயன்

''தன்னையும் தெறும் தருமம் என்று, இறை மனம் தாழான்,
முன்னவன் தரப்பெற்றது ஓர் முழுவலிச் சிலையான்,
அன்னவன் தனக்கு இளையவன், அப்பெயர் ஒழித்தான்,
பின்ஓர் இந்திரன் இலாமையின்; பேர் அதிகாயன்'' (6648)

(தெறும்-அழிக்கும்; தருமம்-அறக்கடவுள்; இறை-சிறிதும்; தாழ்தல்-மனம்தளர்தல்/காலம் தாழ்த்துதல்; முன்னவன்-முதல்வன்/பிரமன்; முழு-நிறைந்த; இளையவன்-தம்பி; ஒழித்தல்-விடுதல்; பேர்-பெயர்)

''தருமத்திற்கு மாறுபட்ட மறக்காரியங்களை யார் செய்கிறார்களோ அவர்களை அறக்கடவுள் தண்டித்து அழிக்கும். ஆனால் தான் இலங்கேஸ்வரனின் மகன் என்பதாலும், இலங்கைக்குள் அறம்புகாது என்பதாலும் தருக்குக் கொண்டு 'தன்னை அறக்கடவுளால் ஒன்றும் செய்யமுடியாது என்று சிறிதும் மனம் தளராமல், பாவச்செயல்களையே விரைந்து செய்து முடிக்கும் இயல்புடையவனும், படைப்புக் கடவுளும், இராவணன்குல முதல்வனும் ஆகிய பிரமதேவன் தந்தருளிய ஓர் சிறந்த முழுமையான வலிய வில்லையுடையவனும், முன்னர்ச் சொன்ன இந்திரசித்துக்குத்

Koviloor Digital Library

தம்பியானவனும் இந்திரசித்து அழித்தொழித்த இந்திரன் என்பவன் ஒருவனாக இருக்கவே, வேறொரு இந்திரன் என்பவன் இல்லாததால், தானும் இந்திரசித்து என்று பெயர் வைத்துக் கொண்டதிலிருந்து நீங்கியவனான அவன் தம்பி அதிகாயன் என்ற பெயர் கொண்டவன் ஒருவனும் இருக்கிறான்'' என்கிறான் வீடணன்.

இந்திரனை அழித்தபின், வேறொரு இந்திரன் இருப்பானாயின் அவனையும் அழிக்கவல்ல ஆற்றல் பெற்றவன் அதிகாயன்; இந்திரசித்துக்கு நிகரான ஆற்றல் பெற்றவன் என்று குறித்தார் என்க. ''மறந்தும் பிறன்கேடு சூழற்க; சூழின் அறம் சூழும் சூழ்ந்தவன்கேடு' என்பது குறள்-204. அதிகாயன் இராவணனுக்குத் தானியமாலியிடம் பிறந்தவன். எனவே இந்திரசித்துக்கு தம்பி எனக் கருதப்படுபவன். அதிகாயன் என்ற சொல்லுக்குப் பருத்த உடம்பை உடையவன் என்பது பொருள். வேறு ஒரு இந்திரன் இல்லாததால்தான் இவனுக்கு அதிகாயன் என்ற பெயர் வைக்கப்பட்டது, இல்லையென்றால் இவனையும் இந்திரசித்து என்றே அழைத்திருக்கலாம். அத்தகைய ஆற்றல் பெற்றவன் என்பது கருத்து. இவன் ஆற்றலைப் பின்னால் அதிகாயன் வதைப் படலத்தில் காணப் போகிறோம்.

51. தேவராந்தகன், நராந்தகன், திரிசிரா

தேவராந்தகன், நராந்தகன், திரிசிரா, என்னும்
மூவர்ஆம், 'தகை முதல்வர்ஆம் தலைவரும், முனையின்
போவராம்; தகை அழிவராம்' எனத் தனிப்பொருவார்
ஆவராம், தகை இராவணற்கு அரும்பெறல் புதல்வர்' (6649)

(தலைவர்-மும்மூர்த்திகள்; முனை-போர்க்களம்; தகை-பெருமை/வன்மை; பொருதல்-போர் புரிதல்; அந்தகன்-இயமன்)

''தேவராந்தகன், நராந்தகன், திரிசிரா என்று அழைக்கப்படும் மூவரும் பெருமைசான்ற தகுதியுடைய இராவணனுக்குப் பெறற்கரிய புதல்வர் களாவார்கள். இவர்கள் மூவரும் உலகத்துக்கே தலைவர்கள் என்று பெருமையுடன் பேசப்படுகின்ற பிரமன், திருமால், சிவபெருமான் ஆகிய மும்மூர்த்திகளுடன் போர்முனையில், செல்வார்கள் என்றால் அவர்கள் மூவரையும் அழித்து இறுதியில் வெற்றிபெறும் ஆற்றலும், வன்மையும் இம்மூவருக்கும் தனித்தனியாக உண்டு. இறைவர்கள் மூவரும் தம் வன்மையழிந்து அழிவது உறுதி'' என்றும் கூறுகிறான் வீடணன்.

தேவர்அந்தகன்என்பதுதேவர்களுக்குஇயமன்போன்றவன்என்பதும், நராந்தகன் என்பது நரர்களுக்கு -மனிதர்களுக்கு இயமன் போன்றவன் என்பதும், திரிசிரா என்பது மூன்று தலைகளையுடையவன் என்பதும் அவர்களுக்குக் காரணப்பெயர்கள் என்பதறிக. இவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே மும்மூர்த்திகளையும் வென்று அழிக்கவல்லவர்கள் என்பது

Koviloor Digital Library

கருத்து. இங்கே குறிக்கப்படும் திரிசிரா என்பவன் கரனுடன் இணைந்து போரிட்டு ஜனஸ்தானத்தில் உயிரிழந்தவனினும் வேறானவன் என்பதை நினைவிற் கொள்க. 'அந்தகன்' என்பது உயிரினங்களை அவ்வவற்றின் வாழ்நாள் இறுதியை அறிந்து கவர்ந்துகொள்பவன் என்று பொருள்படும். இந்திரசித்து, அதிகாயன், அக்ககுமாரனோடு இவர்களும் இராவணனின் புதல்வர்களே என்பது தெரியவருகிறது. ஆனால் இவ்விடத்தைத் தவிர, காப்பியத்தில் வேறெங்கும் இவர்கள் பற்றிய எந்த நிகழ்ச்சியும் குறிக்கப்படவில்லை என்பது கருதத்தக்கது.

52. இராவணன்

"இனைய தன்மையர் வலிஇஃது; இராவணன் என்னும்
அனையவன் திறம், யான் அறி அளவு எலாம் அறைவென்;
தனையன், நான்முகன் தகைமகன் சிறுவற்கு; தவத்தால்
முனைவர்கோன் வரம், முக்கணான் வரத்தொடும் உயர்ந்தான்" (6650)

(இனைய-இப்படிப்பட்ட; எலாம்-முழுதும்; அறைதல்-கூறுதல்; தகை-நல்ல; சிறுவன்-மகன்; முனைவர்-முன்னவன்/முனிவர்/அந்தணர்; கோன்-தலைவன்/பிரமன்; முக்கணான்-சிவபெருமான்; தனையன்- மகன்)

"இப்படிப்பட்ட இராவணனது துணைவர்கள் தம்பியர், புதல்வர்கள் ஆகியோரின் வலிமை இவ்வாறாகும்; இராவணன் என்பவனுடைய வலிமையையும், திறத்தையும் நான் தெரிந்துள்ள அளவுக்கு முழுவதும் இப்போது கூறுகிறேன். பிரமதேவனது தகுதிவாய்ந்த மகனான புலத்தியனின் மகனான விச்சிரவசுவின் புதல்வன் இராவணன். அவன் செய்த அரும்பெரும் தவத்தின் பயனால், முனிவர்களுக்குத் தலைவனான, முன்னவனான பிரமதேவனும், மூன்று கண்களையுடைய சிவபெருமானும் தந்தருளிய வரங்களினால் உயர்ந்து, மேம்பட்டு விளங்குகிறான்" என்கிறான் வீடணன்.

பிரமன் இராவணனுக்குக் கொடுத்த வரம் முக்கோடி வாழ்நாள்; சிவபெருமான் அவனுக்குக் கொடுத்த வரம் யாராலும் வெல்லப்படாய் எனக் கொடுத்த சந்திரகாசம் என்னும் வாள் என்க. எப்பொழுதும் மூன்று தலைமுறையைக் கூறியே இராவணனை எல்லா இடத்திலும் கூறும் கவிஞனின் பாங்கு நோக்குக. பிரமன் அவன் கேட்ட வரங்களையெல்லாம் ஒன்றுவிடாமல் எல்லாவற்றையும் தந்தருளினான். 'பின்னும் சொல்லும் பிதாமகன்தான்' பெருகுதவத்து நீ இங்கு சொன்னசொன்னவரம்தருவேன், சொல், என்று உரைக்க, தொல்லுலகில் மன்னும் மனிதர் தமைப் பொருளாய் மனத்தில் நினையான் வாள் அரக்கன் உன்னுபொருள் ஒன்று ஒழியாமல் வேண்ட, விரிஞ்சன் உவந்து அளித்தான்" என்பது உத்தர காண்டம்.

Koviloor Digital Library

53. கைலாய மலையைப் பெயர்த்தெடுத்தல்

''எள்இல் ஐம்பெரும் பூதமும் யாவையும் உடைய
புள்ளிமான் உரி ஆடையன் உமையொடும் பொருந்தும்
வெள்ளிஅம் பெரும் கிரியினை வேரொடும் வாங்கி,
அள்ளி விண் தொட எடுத்தனன், உலகு எலாம் அனுங்க'' (6651)

(எள்ளுதல்-இகழ்தல்; உரி-தோல்; பொருந்துதல்-அமர்ந்திருத்தல்; அம்-அழகிய; வேர்-அடி; வாங்கி-பறித்து; அள்ளுதல்-கைக்கொள்ளுதல்; அனுங்க-வருந்த/வாட; மான்-புலி)

''யாரும் சிறியது என்ற இகழ்ந்து கூறுவதற்கு இயலாத ஐந்து பெரும் பூதங்களாகிய நீர், நிலம், காற்று, விண், நெருப்பு ஆகியவற்றையும், அவற்றில் மாறுபட்ட இயங்குதிணை நிலத்திணைப் பொருள்கள் எல்லா வற்றையும் தன்னுடையதாகக் கொண்டவனும், புள்ளிகள் அமைந்த வேங்கைப்புலியின் தோலை ஆடையாக அணிந்திருப்பவனும், உமை யம்மையொடு பொருந்தி வாழ்ந்திருக்கும் அழகிய பெரிய வெள்ளியங் கிரியாகிய கைலாயமலையை, அடியோடும் பிடுங்கிக்கொண்டு, இவ் வுலகில் உள்ளோரெல்லாம் வருந்தும்படி அதை ஆகாயம் தொடுமளவுக்கு உயர்த்திப் பிடித்தவன் இந்த இராவணன்'' என்கிறான் வீடணன்.

'புள்ளிமான்' என்பது இங்கே வேங்கைப் புலியைக் குறித்தது. தாருகவனத்து முனிவர்கள் இயற்றிய அபிச்சார ஓமத்தில் இருந்து ஏவப்பட்ட பலபொருள்களுள் புலியும் ஒன்று. அதனை அழித்து அதன் தோலைத் தனக்கு ஆடையாகச் சிவபெருமான் அணிந்து கொண்டான் என்பது ஒரு புராணக்குறிப்பு. அது இங்கே குறிக்கப்படுகிறது என்க. 'புலித்தோலை அரைக்கசைத்து' என்பது சுந்தரர் தேவாரம். 'கோயில் சுடுகாடு, கொல்புலித்தோல் நல் ஆடை' என்பது திருவாசகம்; எந்தவித மான கடுமையான முயற்சியும் இல்லாமல் எளிதில் எடுத்தான் என்பது 'அள்ளி' என்ற சொல்லால் குறிக்கப்பட்டது காண்க. ஐம்பெரும் பூதங் களையும் சிவபெருமானே உண்டுபண்ணினான் என்பது, 'நீரும், நிலனும், தீயும், வளியும், மாகவிசும்போடு ஐந்தும் உடன் இயற்றிய மழுவாள் நெடியோன் தலைவனாக' என்பது மதுரைக் காஞ்சி; 'நிலம், தீ, நீர், வளி, விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்' என்பது தொல்காப்பியம்.

இங்கே ஒன்று கருதவேண்டும். இராவணன்தான் தான் வெள்ளியங் கிரியை வேரோடும் அள்ளி எடுத்ததாகச் சொல்லிக் கொள்கிறான். அவன் எடுக்கமுடியாமல் அவன் கைவிரல் அழுந்தி அழுததால்தான் அவனுக்கு இராவணன் என்ற பெயரே வந்தது. அவன் அழுகைக்கு இரங்கியும், அவன் சாமகானத்திற்கு மயங்கியும்தான் சிவபெருமான் சந்திரகாசம் என்ற வாளையும், யாராலும் வெலப்படாய் என்ற வரத்தையும் அருளினான் என்பதும் நாம் கண்டதே. 'இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்,

Koviloor Digital Library

உமையமர்ந்துயர் மலையிருந்தனனாக, ஐயிருதலையின் அரக்கர்கோமான் தொழப் பொலி தடக்கையிற் கீழ்ப்புகுந்து, அம்மலை எடுக்கல் செல்லாது உழப்பவன் போல' என்பது கலித்தொகை. 'தடக்கை நால் ஐந்து கொண்டு தடவரை தன்னைப் பற்றி எடுத்து அவன் பேர்க்க ஓடிஇரிந்தன பூதமெல்லாம், முடித்தலை அனைத்தும் தோளும் முறிதர, இறையே யூன்றி அடர்த்து அருள் செய்தது என்னே ஆரூர் மூவட்டனாரே!' என்பது திருநாவுக்கரசர் வாக்கு. எனவே இப்பாடலில் 'விண்தொட எடுத்தனன்' என்று கூறியிருப்பது உயர்வு நவிற்சி எனக் கொள்ளுதலே பொருந்தும் எனலாம்.

54. திசையானைகளின் மருப்பு ஒடித்தல்

"ஆன்ற எண்திசை உலகுஎலாம் சுமக்கின்ற யானை
ஊன்றுகோடு இற, திரள்புயத்து அழுத்திய ஒண்மை
தோன்றும் என்னவே, துணுக்கமுற்று இரிவர், அத்தொகுதி
மூன்று கோடியின்மேல் ஒரு முப்பத்து மூவர்" (6652)

(ஆன்ற-வலிமை நிறைந்த/பரந்த/விசாலமான; கோடு-கொம்புகள்/தந்தங்கள்; இற-முறியும்படி; துணுக்கம்-நடுக்கம்/அச்சம்; இரிதல்-ஓடுதல்; ஆலுதல்-நிறைதல்; ஒண்மை-நிறைவு/வலிமை; தொகுதி-கூட்டம்)

''பரந்த விசாலமான எட்டுத்திக்குகளினின்றும், இவ்வுலகம் முழுவதையும்தம் வலிமையால் சுமந்து காத்துவருகின்ற திக்கு யாளைகள், தன் மார்பில் பதிந்த தங்கள் கொம்புகள் அப்படியே பாதியில் முறித்துபோக அவற்றைத்தன் திரண்ட தோளில் அழுந்தச் செய்த வலிமை தோன்றும் என்று அறிந்த அளவிலேயே முப்பத்து முக்கோடித் தேவர்களின் தொகுதிகளும் அவர்களுக்குத் தலைமையேற்றியிருக்கின்ற மேலும் மூப்பத்து மூன்று தேவர்களும் அச்சமடைந்து ஓடுபவர்கள் ஆவர்'' என்கிறான் வீடணன்.

இராவணன் திக்குவிஜய காலத்தில் அவனை எதிர்த்துப் போரிடுவதற்கு யாரும் இல்லாததால் திக்கு யானைகளுடன் போர்செய்து கொண்டிருப்பது அவன் இயல்பு. அவ்வாறு போர்செய்யும்போது, அந்த யானைகளின் தந்தங்கள் அவன் வலிய மார்பில் பட்டு வெளிச் செல்லமுடியாமல் பாதி யிலேயே முறிந்து போய்விட்டன. அந்தத் தந்தங்களையே இராவணன் தனது மார்புக் கவசமாகக் கொண்டிருந்தான் என்பது உத்தரகாண்டத்துச் செய்தி. முப்பத்துமுக்கோடித்தேவர்களின் தலைவர்கள் முப்பத்து மூவர் என்பது எட்டுவசுக்கள், பதினோரு உருத்திரர், பன்னிரு ஆதித்தர், மருத்துவர்களான அசுவினித்தேவர்கள் இருவர் என முப்பத்து மூவர் ஆவர் என்க.

Koviloor Digital Library

55. காலகேயரை வெல்லுதல்

"குலங்களோடும், தம் குலமணி முடியொடும் குறைய
அலங்கல் வாள்கொடு காலகேயரைக் கொன்ற அதன்பின்
'இலங்கைவேந்தன்' என்று உரைத்தலும், இடிஉண்ட அரவின்
கலங்குமால் இனம், தானவர் தேவியர் கருப்பம்." (6653)

(குலம்-சிறந்த/உயர்ந்த; மணி-இரத்தினம்; குறைய-வெட்டுப்படும்படி/அழிய; குலம்-வம்சம்/மக்கள்; அலங்கல்-வாகைமாலை; அரவு-பாம்பு/நாகம்; தேவியர்-மனைவியர்; இனம்-இன்னும்; கலங்குதல்-நலைதல்)

காலகேயர் என்ற அசுரர்களை அவர்களின் வம்சத்தோடும், அவர்கள் அணிந்திருந்த சிறந்த உயர்ந்த இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற மகுடங்களணிந்த தலைகளும் அழியும்படி, தனது வெற்றிவாகை சூடிய வாட்படைகொண்டு, இராவணன் கொன்று பல ஆண்டுகள் கடந்து போயும், இப்பொழுதும், 'இலங்கை அரசன் இராவணன் என்ற பெயரைக் கேட்டாலேயே, அந்தத் தானவர்களின் மனைவியரின் கருப்பம், இடியோசை கேட்டு நடுங்கும் நாகம்போல் நடுங்குவதால், கலைந்து குலைந்து போய்விடுகிறது'' என்கிறான் வீடணன்.

காலகேயர்கள் என்பவர்கள் காசியப முனிவர்க்குக் கலை என்பாளிடம் தோன்றிய தானவர்கள் என்க. காலகேயர் தானவர் என்பதால் அவர்கள் மனைவிமார்களின் கருப்பம் கலைகிறது என்பதாம். இவர்கள் இந்திரனைப் பலமுறை வெற்றி கண்டவர்கள்; இவர்களைப் பற்றிய விரிவான செய்திகள் வில்லிபாரதத்தில் கூறப்பட்டிருக்கின்றன. எப்பொழுதோ நிகழ்ந்த நிகழ்ச்சியை இப்பொழுது கேட்டாலும் அவர்கள் அஞ்சி நடுங்குகிறார்கள் என்பது, இராவணனின் போர்க்கொடுமையைத் தெளிவுபடுத்துகிறது என்க. 'குலங்கள்' என்பது அவர்களின் மக்களை-வம்சாவளியைக் குறிக்கும் என்க. பகைவரை அழிக்கும்போது, அவர்கள் வழித் தோன்றல்களையும் சேர்த்து வேரோடு அழித்தல் வீரர் இயல்பு. அச்சமிகுதியால் பெண்களின் கருப்பம் கலைதல் இயல்பு.

56. குபேரனை வென்றது

"குரண்டம் ஆடுநீர் அளகையின் ஒளித்து, உறை குபேரன்
திரண்ட மாடும், தன்திருவொடு நிதியமும், இழந்து
புரண்டு, மான்திரள் புலிகண்டது ஆம்என, போனான்,
இரண்டு மானமும், இலங்கை மாநகரமும் இழந்து" (6654)

(குரண்டம்-கொக்குகள்/நீர்க்காக்கைகள்; அளகை-அளகாபுரி; உறைதல்-வாழ்தல்; திரள்-கூட்டம்; மாடு-செல்வம்; திரு-வெற்றித்திரு;

Koviloor Digital Library

மானம்-பெருமை/விமானம்; ஆடுதல்-விளையாடுதல்/மூழ்குதல்; நிதியம்-நவநிதிகள்; புரண்டு-நிலைதடுமாறி)

''கொக்குகள் மூழ்கி விளையாடும் நீர்வளம் மிக்க அளகாபுரியில், இராவணனைக் காண்பதற்கு அஞ்சி, ஒளித்து வாழ்கின்ற குபேரன், இராவணன் திக்கு விஜயத்தின்போது அவனிடம் தோற்றுப்போய் தன்னுடைய திரண்ட செல்வமனைத்தையும், தனது வெற்றித்திருவோடு, சங்கநிதி, பதுமநிதி போன்ற நவநிதியங்களையும் இழந்தான்-அவன் இராவணனைக் கண்டதும் தனது தன்மானத்தையும், புஷ்பக விமானத் தையும், இலங்கை மாநகரத்தையும் இழந்து, புலியைக் கண்ட மான் கூட்டம் போல நிலைதடுமாறி ஓடிப்போனான்'' என்கிறான் வீடணன்.

கொக்குகள் நீர்நிலைகளில் மூழ்கி விளையாடுவது அப்பகுதியின் நீர்வளத்தைக் குறிப்பால் உணர்த்துவது என்க. முன்பு இலங்கையில் இருந்த குபேரனை சுமாலியின் ஆலோசனைப்படி அளாபுரிக்கு அடித்துத் துரத்தினான் இராவணன். இப்போது அளகாபுரியிலிருந்தும் துரத்தி விட்டான் என்பதாம். தனது செல்வம், வெற்றித்திரு, நவநிதியங்கள், தன்மானம், புஷ்பகவிமானம், இலங்கைமாநகரம் ஆகிய எல்லா வற்றையும் இழந்து இராவணனுக்கு அஞ்சி, நிலைதடுமாறி ஓடினான் குபேரன் என்க. குபேரன் எட்டுத்திசைகளுள் வடதிசைப்பாலகன் ஆவான். 'மாடு' என்ற சொல் செல்வத்தைக் குறிக்கும்.

57. இயமனை வெல்லுதல்

'புண்ணும் செய்தது முதுகு' என, புறங்கொடுத்து ஓடி,
'உண்ணும் செய்கை அத் தசமுகக் கூற்றம் தன்உயிர்மேல்
நண்ணும் செய்கையது' எனக்கொடு, நாள்தொறும், தன்நாள்
எண்ணும் செய்கையன், அந்தகன், தன் பதம் இழந்தான். (6655)

(தசமுகன்-பத்துமுகங்களை உடையவன்/இராவணன்; பதம்-பதவி; நண்ணும்-அடையும்; நாள்-வாழ்நாள்; அந்தகன்-இயமன்)

''தென்திசைக்காவலனான இயமன், இந்தப்பத்துத் தலைகளையுடைய இயமனாகிய இராவணன், தன் உயிரைக் கவரும்பொருட்டு எப்பொழுது வேண்டுமானாலும் தன்னை நெருங்கலாம் எனக்கருதி, தான் காவல்காத்து வரும் பதவியையும் பறிகொடுத்துவிட்டு, தான் புறமுதுகு காட்டி ஓடும்போது கூட, அந்த முதுகிற்குக்கூட ஏதேனும் ஊறு விளைவிப்பான் என்று கருதி, நாள்தோறும், தன் வாழ்நாளைக் குறித்து எண்ணிக்கொண்டே காலம் கழிப்பவனானான் இயமன்'' என்கிறான் வீடணன்.

உலகத்து உயிர்களுக்கு இறுதி செய்வதால் இயமன் அந்தகன் எனப்படுகிறான். அந்த இயமனே தன் உயிர்க்கு இறுதி செய்ய நினைக்கும் இராவணனைக் கண்டு அஞ்சி, புறமுதுகு காட்டிஓடி, தன் பதவியை

Koviloor Digital Library

இழந்து, தன் உயிரின் பாதுகாப்புக் கருதி, தன் வாழ்நாளை தினமும் எண்ணிக்கொண்டிருக்கிறான் என்பது இராவணனின் கொடுமையை விளக்கும் என்க. எனவே இராவணனைத் 'தசமுகக்கூற்றம்' என்றான் என்க. தசமுகனே கூற்றமாக ஆகியதால், இயமன் தன் தொழிலை நிறுத்திக் கொண்டு தன் பதவியை இழக்க நேரிட்டது என்க. புறங்காட்டி ஓடுதல் வீரர்களுக்கு மிக்க இழிவான செயல். 'புறப்புண் நாணி, வடக்கிருந் தோனே' என்பது புறநானூறு. மரணம் என்பது 'மூப்பென மொழிவது அந்தத்து அளவும், தாக்கு நிலையாமையில் தான் தளர்ந்திடுதல்' என்பது மணிமேகலை. இராவணனுக்கு அஞ்சித் தேவர்கள் எல்லோரும் வெவ்வேறு உருக்கொண்டு பறந்துபோனார்கள் என்பதை மிக அழகாக உத்தரகாண்டம் கூறுகிறது - கேளுங்கள். 'வாசவன் அஞ்சி, மயல் உருவம்தான் கொண்டான்; பாசக்கரத்தான் பறந்தான் ஓர் அன்னமாய்; காசுஇல் நமன் கலங்கிக் காக்கை வடிவுஆக, கூசிக் குபேரனும் கோம்பி வடிவு ஆனான்' என்பது உத்தரகாண்டம், திக்கு விஜயப்படலம். பாசக்கரத்தான்-வருணன், கோம்பி-பச்சோந்தி/ஓணான்; 'புரந்தரனார் ஓர் பூங்குயிலாகி மரந்தனில் ஏறினார் உந்தீபற; வானவர் கோன் என்றே உந்தீபற' என்பது திருவாசகம்.

58. வருணனை வெல்லுதல்

"இருள் நன்கு ஆசுஅற, எழு கதிரவன் நிற்க, என்றும்
அருணன் கண்களும் கண்டிலா இலங்கை, பண்டு அமரில்
பருணன் தன்பெரும் பாசமும் பறிப்புண்டு, பயத்தால்
வருணன் உய்ந்தனன், மகரநீர் வெள்ளத்து மறைந்து" (6656)

(ஆசுஅற-அடியோடு ஒழிய; எழு-உதயமாகின்ற; நிற்க-ஒருபுறம் இருக்கட்டும்; அமர்-போர்; பருணன்-வருணன்/திறமுடையவன்/கடற் கடவுள்; உய்த்தல்-தப்பித்துக்கொள்ளுதல்; அருணன்-சூரியனின் தேர்ப்பாகன்; மகரநீர்-கடல்; வெள்ளம்-நீர்)

"மிக்க இருளை முழுவதும் போக்கடித்து கீழ்த்திசையில் எழுகின்ற சூரியன் ஒருபக்கம் இருக்கட்டும், அவனுக்கு முன்னால் அவனுடைய தேர்ச்சாரதியானஅருணன்கூட, ஒருபோதும்அந்த இலங்கை மாநகரத்தைக் காணாத கண்களையுடையவனாவான்; எனினும் முன்பு திறமை மிகுந்தவனான வருணன் இராவணனுடன் எதிர்ந்த போரில் தன்னுடைய பெருமைக்குரிய ஆயுதமாகிய பாசக்கயிற்றையும் இராவணனிடம் பறிகொடுத்துவிட்டு, உயிர்பிழைத்தால் போதும் என்ற அச்சத்தால், மகரமீன்கள் நிறைந்த கடல் வெள்ளத்தில் தன்னை ஒளித்துக்கொண்டு உயிர்தப்பினான்" என்கிறான் வீடணன்.

'ஆசுஅற' என்பது ஒரேசொல்; பொதுவாகக் குற்றமற்ற என்ற பொருளைத்தரும். இங்கே அடியோடு ஒழிய, முற்ற முழுவதும் போன,

Koviloor Digital Library

என்ற பொருளில் கையாளப்பட்டிருக்கிறது. இலங்கை மாநகரில் கறங்குகால்புகா, கதிர்புகா என்பவற்றை நாம் முன்பே கண்டிருக்கிறோம். எனவே இலங்கை மாநகருக்குள் சூரியன் புகவில்லை என்பது ஒன்றும் ஆச்சரியம் இல்லை. ஆனால் சூரியனுக்கு முன்னே உதிக்கின்ற அவனுடைய தேர்ச்சாரதியான அருணன்கூட இலங்கை நகரைப் பார்த்ததில்லை என்பதுதான் வியப்பு. இராவணனுக்கு அஞ்சி, சூரியன் இலங்கை மீது வாராது ஒதுங்கியே போவான் என்பதும் நாம் கண்டதே. இங்கே மேற்குத் திசைக் காவலனான வருணனும் ஒருமுறை இராவணனுடன் போர் செய்து தனது ஆயுதமாகிய பாசக்கயிற்றை அவனிடம் பறிகொடுத்து விட்டு, கடலுக்குள் சென்று மறைந்துகொண்டு உயிர்பிழைத்தான் என்பது இராவணனின் போராற்றலையும் அவன் நவக்கிரகங்களையும் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தான் என்பதையும் உணர்த்துவது காண்க. 'பருணன்' என்ற வடசொல் 'பருணீதர்' என்ற சொல்லினடியாகப் பிறந்தது. 'பருணீதர்' என்ற சொல் முன்பும் கிட்கிந்தா காண்டத்தில் கையாளப் பட்டிருப்பதை நினைவுகூர்க. இச்சொல்லுக்கு கலைகளில் கரை கண்டவர் என்பது பொருள். இங்கே போர்த் திறமுடையவன் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இங்கே குறிப்பிடப்படுகின்ற அருணனின் புதல்வர்கள் தான் சம்பாதியும், சடாயுவும் என்பதையும் இங்கே நினைவிற் கொண்டுவாருங்கள்.

59. "என்று, உலப்புறச் சொல்லுகேன், இராவணன் என்னும்
குன்று உலப்பினும் உலப்பிலாத் தோளினான் கொற்றம்?
இன்று உலப்பினும், நாளையே உலப்பினும், சிலநாள்
சென்று உலப்பினும் நினக்கு அன்றி, பிறர்க்கு என்றும் தீரான்" (6657)

(குன்று-மலைகள்; உலப்புறுதல்-அழிதல்/இறத்தல்/முடிவுறுதல்; கொற்றம்-வெற்றி; தீருதல்-அழிதல்)

''இராவணன் என்னும் அவன், மலைகளே அழிந்தாலும், சிதைந்தாலும் அவற்றுடன் மோதும் வல்லமை வாய்ந்த தன் தோள்கள் சிதையப்பெறாத வலிமையுடைய அவனது வெற்றிச் சிறப்புக்களை நான் என்றைக்குத்தான் கூறிமுடிப்பேன்?. அவன் சிறப்பைக் கூறிமுடிக்க முடியாது, நீண்டுகொண்டே போகும், ஆனால் ஒன்று. அவன் இன்றைக்கே அழிந்தாலும், அல்லது நாளைக்கு அழிந்தாலும், அல்லது இன்னும் சிலநாட்கள் சென்று அழிந்தாலும் அந்த அழிவு உன்கைகளால் ஏற்பட்டதாக இருக்குமே அன்றிப் பிறர் எவராலும் அவனை அழிக்க முடியாது. அத்தகைய ஆற்றல்பெற்றவன் அவன்'' என்று கூறி முடிக்கிறான் வீடணன்.

அனுமனும் இவ்வாறே கருதியதை இங்கு நினைவுகூர்க. இலங்கையில் முதன்முதலில் இராவணனைக் கண்டதும், அனுமன், 'அல்லெல்லாம்

Koviloor Digital Library

திரண்டன்ன நிறத்தான் ஆற்றலை, வெல்லலாம் இராமனால், பிறரும் வெல்வரோ?' என்று கூறுவதையும் இங்கு ஒப்பு நோக்குக.

60. அனுமன் இலங்கையில் புரிந்த வீரச்செயல்களைக் கூறுதல் [8 பாடல்கள்]

''ஈடுபட்டவர் எண்ணிலர், தோரணத்து, எழுவால்;
பாடுபட்டவர் படுகடல் மணலினும் பலரால்;
சூடுபட்டது தொல்நகர், அடு புலி துரந்த
ஆடுபட்டது பட்டனர்; அனுமனால் அரக்கர்'' (6658)

(ஈடு-வலிமை; படுதல்-இழத்தல்/அழிதல்; எழு-இருப்புத்தடி; அடுதல்-கொல்லுதல்; தொல்-பழமையான; சூடுபடுதல்-எரிதல்; படுதல்-ஒலித்தல்; பாடு-துன்பம்; தோரணம்-கட்டுவாயில்)

''அனுமன் இலங்கையில் அசோகவனத்துத் தோரண வாயிலில் அமர்ந்துகொண்டு, அங்கிருந்த இரும்புத்தடியால் அடித்து அரக்கர்களின் வலிமையை அழித்தான். அந்த அரக்கர்கள் எண்ணிக்கையில் அடங்காதவர்கள், அவனால் துன்புறுத்தப்பட்டு அழிந்து போனவர்கள், ஒலிக்கின்ற கடல்மணல் பரப்பைக் காட்டிலும் அதிகமானவர் ஆவர். அனுமன் அரக்கரை அழித்தது மட்டுமல்ல, அந்தப் பழமையான இலங்கை மாநகரம் முழுவதும் அழிந்துபோகும்படி எரியூட்டி அழித்தான். எஞ்சியிருந்த அரக்கர்களோ, வலிமைபெற்ற, கொல்லும் இயல்புடைய புலிஒன்று ஆடுகளைத் துரத்திக்கொண்டு போனால், அந்த ஆடுகள் என்னபாடுபடுமோ, அத்தகைய பாடுபட்டு, ஓடி ஒளிந்துகொண்டனர்'' என்கிறான் வீடணன்.

61. கிங்கரர்களை அழித்தது

''எம் குலத்தவர், எண்பதினாயிரர், இறைவர்,
கிங்கரப் பெயர் கிரி அன்ன தோற்றத்தார், கிளர்ந்தார்,
வெங்கரத்தினும், காலினும் வாலினும் வீக்கி,
சங்கரற்கு அழி முப்புரத்தவர் எனச் சமைந்தார்'' (6659)

(கிளர்தல்-பொங்கி எழுதல்; வீக்கி-அழிக்கப்பெற்று/பிணிக்கப் பட்டு; சங்கரன்-சிவபெருமான்; சமைதல்-முடிவுறுதல்; இறைவர்-தலைவர்கள்; கிங்கரர்-பணியாளர்/ஏவலாளர்)

''எங்கள் அரக்கர் குலத்தில் தோன்றிய, எண்பதினாயிரம் என்ற எண்ணிக்கை கொண்ட, கிங்கரர் என்று அழைக்கப்பட்ட, தலைவர்கள், மலைபோலும் தோற்றம் உடையவர்கள், அனுமனுடன் போர் செய்வதற் காகப் பொங்கி எழுந்து வந்தனர். ஆனால் அனுமன் தனது கொடிய

Koviloor Digital Library

கைகளாலும், கால்களாலும், வாலினாலும் அவர்களைப் பிணித்துக்கட்டி, சிவபெருமான் முப்புரங்களைக் கொண்டிருந்த அசுரர்களை எளிதில் அழித்ததுபோல, மிக எளிதாகவும், மிக வேகத்துடனும் அழித்து முடித்தான்'' என்று அனுமனைப் புகழ்ந்தான் வீடணன்.

முன்பு கிங்கரர்வதைப் படலத்தில் போருக்குச் சென்ற கிங்கரர்களின் எண்ணிக்கை எண்பதினாயிரம் என்பது அங்கே கூறப்படவில்லை. கம்பன் இங்கே இப்பொழுது வீடணன் கூற்றாகக் கூறவைத்திருப்பதைக் கருதுக. சிவபெருமான் முப்புரத்தையும் தன் நகைச்சிரிப்பினாலேயே எரித்தது நாம் முன்பு கண்டதே. அவ்வளவு எளிதில் அனுமன் கிங்கரர்களை அழித்தான் என்பது கருத்து. அனுமன் சிவபெருமானின் அம்சம் என்பது இங்கு நினைவிற் கொள்ளத்தக்கது. சங்கரன் என்ற சொல் எல்லோருக்கும் இன்பத்தைத் தருபவன் என்று பொருள்படும்.

62. சம்புமாலியை அழித்தது

''வெம்பு மாக்கடல் சேனை கொண்டு, எதிர்பொர வெகுண்டான்,
அம்பும் ஆயிரத்து ஆயிரம் இவன் புயத்து அழுத்தி,
உம்பர் வானகத்து ஒருதனி நமனைச் சென்று உற்றான்,
சம்புமாலியும், வில்லினால் சுருக்குண்டு, தலைவ!'' (6660)

(வெம்புதல்-கோபித்தல்; பொர-போர்செய்ய; வானகம்-மேலிடம்; அழுத்தி-பதியச்செய்து; ஒருதனி-ஒப்பற்ற; உம்பர்வானகம்-வீர சுவர்க்கம்)

''தலைவனே! சம்புமாலி என்ற அரக்கர்தலைவனும், தன்னுடன் மிக்க சீற்றம்கொண்டதும், பெரிய கடல்போன்ற பரப்புடையதுமான சேனை களைக் கொண்டு, அனுமனை எதிர்த்துப்போரிட மிக்க சினம்கொண்டு வந்து, பல்லாயிரக்கணக்கான அம்புகளை அனுமனின் தோள்களில் பதியச்செய்தான், என்றாலும் அனுமன் மிகச்சாதுர்யமாக அவனுடைய தேருக்குத் தாவிச்சென்று அவனுடைய வில்லையே கொண்டு, அவன் கழுத்தில் சுருக்கிட்டு மடியச்செய்தான். எனவே சம்புமாலி ஒப்பற்ற எமனைச் சென்று சேர்ந்து பின்னர் வீரசுவர்க்கம் அடைந்தான்'' என்கிறான் வீடணன்.

அனுமன் சம்புமாலியை அவனுடைய வில்லினாலேயே சுருக்கிட்டுக் கொன்றான் என்பது முன்பு சம்புமாலி வதைப்படலத்தில் விரிவாகக் கூறியிருப்பதையும் இங்கு நினைவுகூர்க.

Koviloor Digital Library

63. பஞ்ச சேனாபதிகள் அழிந்தது

''சேனைக் காவலர் ஓர் ஐவர்உளர், பண்டு, தேவர்
வானைக் காவலும், மானமும் மாற்றிய மறவர்,
தானைக் கார்க் கருங் கடலொடும், தமரொடும், தாமும்,
யானைக்கால் பட்ட செல் என, ஒல்லையின் அவிந்தார்'' (6661)

(பண்டு-முற்காலத்து; வான்-விண்ணுலகு; மாற்றிய-போக்கிய; மறவர்-வீரர்கள்; சேனைக்காவலர்-சேனாபதிகள்/தானைத் தலைவர்கள்; கார்-கரிய; தமர்-சுற்றத்தார்; செல்-சிதல்/கறையான் புற்று; ஒல்லையின்-விரைவில்; அவிதல்-அழிதல்; மானம்-பெருமை)

''முற்காலத்தில் தேவர்களின் வானுலகத்தின் பாதுகாவலையும், அவர்களின் பெருமையையும் அவர்களுக்கு இல்லையாக்கி, அழித்த பெரும் வீரர்கள், தானைத்தலைவர்கள் ஐந்துபேர் இராவணனின் கரிய பெரிய கடல்போன்ற சேனையில் இருந்தார்கள். அவர்கள் அனுமனுடன் போரிடும்போது, அவர்கள் உடன் போன அத்தனை சேனையும், அவர்கள் சுற்றத்தினரும், அவர்களும், யானைக்காலில் மிதிபட்ட கரையான்புற்றுப் போலத் தரையோடு தரையாக விரைவில் அழிந்துபோயினர்'' என்று பஞ்சசேனாபதிகளை அனுமன் அழித்தொழித்தது பற்றிக் கூறினான் வீடணன்.

பஞ்சசேனாபதிகளின் பெயரைக் கம்பர் குறிப்பிடவில்லை என்றாலும் வான்மீகம் குறிக்கிறது. அவற்றைப் பஞ்சசேனாபதிகள் வதைப்படலத்தில் நாமும் கண்டு வந்து இருக்கிறோம். 'யானைக்கால் பட்டசெல்' என்பது ஒரு அருமையான உவமை என்பதை உணர்க. கறையான்புற்று சேனைக்கு உவமை. யானை அனுமனுக்கு ஒப்பு. 'வெண்கோட்தவத்து எழுகளிறு மிதித்த ஒரு பழம்போலக் குழையக் கொடியோர் நாவே' என்பது குறுந்தொகை. அங்கே பழத்தைமிதித்தது யானை; இங்கே கறையான் புற்றை மிதித்தது இந்த யானைச் சேனை என்க.

64. அக்ககுமாரன் அழிந்தது

''காய்த்த அக்கணத்து, அரக்கர்தம் உடல் உகு கறைத்தோல்,
நீத்த எக்கரின், நிறைந்துள கருங்கடல்; நெருப்பின்
வாய்த்த அக்கனை, வரிசிலை மலையொடும் வாங்கி,
தேய்த்த அக்குழம்பு உலர்ந்தில, இலங்கையின் தெருவில்'' (6662)

(காய்தல்-சினத்தல்; கணம்-சமயம்/தருணம்; உகுதல்-சிந்துதல்; நீத்தம்-வெள்ளம்; எக்கர்-மணல்மேடுகள்; நெருப்பு-கனல்/வடவைக் கனல்; அக்கன்-அக்ககுமாரன்/அட்சகுமாரன்; வரி-கட்டமைந்த; சிலை-வில்; வாங்கி-இழுத்து; கறை-குருதி/இரத்தம்; தோல்-சருமம்)

Koviloor Digital Library

''அக்ககுமாரன் சேனைகள் அனுமன்மேல் ஆயுதங்களை எறிந்து அவனுக்குச் சினம் ஊட்டிய அந்தச் சமயத்தில், அரக்கவீரர்கள் உடலி னின்றும் பெருகிய இரத்தமும், அவர்களின் தோல்சருமங்களும், இலங்கை நகர வீதிகளில் பெரும்வெள்ளமாகவும், பெரும் மணற்குன்றுகள் போலும் நிறைந்திருந்தன. கருங்கடலின் நடுவில் இருக்கும் வடவைக்கனல் போலப் பெருஞ்சினம் வாய்க்கப்பெற்று அந்த அக்ககுமாரனை, அவனுடைய இழுத்துக்கட்டப்பட்ட வில்லாகிய மலையை தன்பக்கம் இழுத்து, அனுமன் அவனைத் தன் காலால் தரையோடு தரையாக வைத்துத் தேய்த்தான். அப்படித் தேய்த்தபோது சிந்திய இரத்தச் சேற்றின்கறை இன்னும் இலங்கையின் தெருக்களில் உலரவில்லை, இன்றும் அந்த ஈரம் அப்படியே இருக்கிறது'' என்று கூறுகிறான் வீடணன்.

இவ்வாறு அனுமன் தேய்த்தது பற்றி இந்திரசித்து கூறியதை மீண்டும் ஒரு முறை கேளுங்கள். கம்பனின் அருமையான சொற்றொடர் 'எம்பியோ தேய்ந்தான்! எந்தை புகழ் அன்றோ தேய்ந்தது' என்பது இந்திரசித்தின் கூற்று. 'அக்கன்' என்பது 'அக்ஷன்' என்ற வடசொல்லின் தமிழாக்கம். அக்கன் இந்திரசித்தின் தம்பி, இராவணனுக்கு மண்டோதரியிடம் பிறந்தவன்.

65. இலங்கைக்கு எரியூட்டியது

"சொன்ன மாமதில் இலங்கையின் பரப்பினில் துகைத்துச்
சின்னம் ஆனவர் கணக்கு இலர்; யாவரே தெரிப்பார்?
இன்னம் ஆர்உளர் வீரர்? மற்று, இவன் சுட, எரிந்த
அன்ன மாநகர் அவிந்தது, அக்குருதியால் அன்று" (6663)

(சொன்னம்-சொர்ணம்/பொன்; சின்னம்-சிதைதல்/சின்னபின்ன மாதல்; கணக்கு-அளவு; துகைத்தல்-காலால் மிதித்து நசுக்குதல்; தெரிப்பது-கூறுவது; அன்ன-அத்தகைய; அவிதல்-அணைதல்)

''பொன்மயமான உயர்ந்த பெரிய மதிற்சுவர்களால் சூழப்பெற்ற இலங்கை மாநகரத்தின் பரப்பிற்குள், அனுமன் போர்செய்யும்போது அவன் காலால் மிதிபட்டு, நசுக்கப்பட்டுச் சிதைந்து உருக்குலைந்து சின்னாபின்னமாக்கப்பட்டவர்கள் எண்ணற்றவர்கள். அந்தக் கணக்கை ஒருவராலும் அளவிட்டுக் கூறமுடியாது, மேலும் இவன் அன்று இலங்கை மாநகருக்கு எரியூட்டியபோது எழுந்த தீச்சுடர், இவனால் அழிக்கப்பட்ட அரக்க வீரர்களது இரத்த நீரினால்தான் அணைந்தது. இவனுக்கு நிகரான வீரர்கள் வேறு யார் இருக்கிறார்கள்?'' என்று கேட்கிறான் வீடணன்.

வீரத்தில் தனக்கு யாரும் நிகரில்லாதவன் அனுமன், என்று வீடணன் அனுமனைப் பாராட்டுகிறான் என்பதாம்.

Koviloor Digital Library

66. இராவணன் வானில் நின்றது

"விலங்கல் வெந்தவா வேறுஇனி விளம்புவது எவனோ?
அலங்கல் மாலையும், சாந்தமும், அன்று தான் அணிந்த
கலங்கலோடும், அச்சாத்திய துகிலோடும், கதிர்வாள்
இலங்கை வேந்தனும், ஏழுநாள் விசும்பிடை இருந்தான்" (6664)

(கதிர்-ஒளி; அலங்கல்-அசைதல்; சாந்தம்-சந்தனம்; கலங்கள்-கலன்கள்/அணிகலன்கள்/ஆபரணங்கள்; துகில்-ஆடை; விசும்பு-ஆகாயம்; விலங்கல்-மலை/திரிகூடமலை; வெந்தவா-வெந்தவாறு/வெந்த தன்மை; விளம்புதல்-சொல்லுதல்; சாத்திய-உடுத்தியிருந்த)

"இவ்வாறு அனுமன் இலங்கை மாநகரத்திற்கு எரியூட்டியதால், ஒளிவீசுகின்ற சந்திரகாசம் என்னும் வாட்படையை உடைய இலங்கை வேந்தனாகிய இராவணனும், தான் அன்று அணிந்திருந்த அதே ஒரே அசைகின்ற மாலையோடும், மார்பில் பூசியிருந்த சந்தனத்தோடும், உடுத்தியிருந்த ஆடைகளோடும், பூண்டிருந்த ஆபரணங்களோடும், ஏழு நாட்கள் இலங்கை நகருக்குள் புகமுடியாமல், ஆகாயத்திலேயே நின்றிருந்தான் என்றால், அந்த இலங்கை நகரத்திற்கு ஆதாரமான திரிகூடமலை வெந்துபோனநிகழ்ச்சியைப் பற்றிக்கூறுவதற்கு இனி என்ன இருக்கிறது?" என்கிறான் வீடணன்.

'விலங்கல்' என்பது பூமிக்குக் குறுக்காக வளர்ந்து, அமைந்திருப்பதால் மலைக்குக் காரணப்பெயர். இந்தத் திரிகூடமலை இன்று திரிகோணமலை என்று வழங்கப்படுகிறது. இராவணன் கையில் சிவபெருமான் உவந்தளித்த சந்திரகாசம் என்னும் வாட்படை இருந்தபோதும், அவனால் இலங்கையை அழித்த அனுமனை ஒன்றும் செய்யமுடியவில்லை என்பது இங்கு வியப்பிற்கு உரிய கருத்து. ஏழு நாட்களும் நெருப்பு அவியாததால் இராவணன் நீராடாமல், மாற்றுஉடை, ஆபரணங்கள் அணியாமல் ஏழுநாட்கள் ஆகாயத்திலேயே இருந்திருக்கிறான் என்பதாம். இந்த நிகழ்ச்சியையோ, செய்தியையோ கம்பன், அது நிகழ்ந்த பகுதியாகிய 'இலங்கை எரியூட்டு படலத்தில்' தெரிவிக்காது, இங்கே வீடணன் கூற்றாகத் தெரிவிப்பதை உணர்க.

67. பிரமன் இலங்கையைப் புதிதாக நிர்மாணித்தல்

"நொதுமல் திண்திறல் அரக்கனது இலங்கையை நுவன்றேன்;
அதுமற்று அவ்வழி அரணமும் பெருமையும் அறைந்தேன்;
இதுமற்று அவ்வழி எய்தியது; இராவணன் ஏவ,
பதுமத்து அண்ணலே, பண்டுபோல், அந்நகர் படைத்தான்" (6665)

Koviloor Digital Library

(திண்-திண்மை/உறுதியான; நுவல்தல்-கூறுதல்; அறைதல்-சொல்லுதல்; அவ்வழி-அவ்விடம்; பதுமம்-தாமரைமலர்; பண்டு-முன்பு; படைத்தல்-புதியதாக உண்டாக்குதல்; மற்று-வேறாக; எய்தியது-நிகழ்ந்தது; நொதுமல்-வலிமை; அண்ணல்-தலைவன்)

''வலிமைமிக்க, உறுதிவாய்ந்த, ஆற்றல்படைத்த அரக்கனான இராவணனது இலங்கை மாநகர்பற்றியும், அதன் வரலாறு, தோற்றம், அமைப்பு பற்றியும், அங்கு அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்புக்குரிய அரண் மதில், அகழி, அவன் துணைவர்கள், தம்பியர், புதல்வர்கள் பற்றியும் மிக விளக்கமாக எடுத்துக் கூறினேன். அதுதவிர, அங்கு நிகழ்ந்த சில நிகழ்ச்சிகளையும், அனுமனது வீரச்செயல்களையும், இலங்கையின் அப்போதைய நிலையையும் எடுத்துச் சொன்னேன். பின்னர் இராவணன் கட்டளையிட, தாமரைமலரில் உறையும் இறைவனான பிரமதேவனே தேவதச்சனான மயனைக்கொண்டு, எரிந்துபோன அந்த இலங்கை மாநகரை, முன்புபோலவே எழிலுறப் புதிதாகப் படைத்தான்'' என்று கூறி முடித்தான் வீடணன்.

இலங்கை பற்றியும், இராவணன் பற்றியும் வீடணன் கூறியது, இராமபிரான் கேட்ட கேள்விகளுக்கு விடை கூறுமுகத்தான் அமைந்தது. அதைத்தவிர அவன் அனுமன் பற்றிக் கூறியது, அவனாகவே முன்வந்து கூறியது. காரணம் தொண்டன் செய்த நன்மைபயக்கும் நல்ல செயல்கள் தலைவனுக்குத் தெரிந்திருக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தால்தான் என்க. 'இது' என்பது வீடணன் தானே முன்வந்து கூறிய் அனுமன் பற்றிய செயல்களைக் குறிக்கும்.

68. வீடணன் தான் வந்ததற்குரிய காரணம் கூறுதல்

"காந்தும் வாளியின் கரன்முதல் வீரரும், கவியின்
வேந்தும், என்று இவர் விளிந்தவா கேட்டு அன்று; அவ்விலங்கை
தீந்தவா கண்டும், அரக்கரைச் செருவிடை முருக்கிப்
போந்தவா கண்டும், நான் இங்கு புகுந்தது புகழோய்!" (6666)

(காந்துதல்-ஒளிவீசுதல்/சினத்தலுமாம்; வாளி-அம்பு; கவி-குரங்கு; வேந்து-அரசன்/வாலி; விளிதல்-இறத்தல்; தீந்தவா-தீய்ந்துபோனதை; செரு-போர்; முருக்குதல்-அழித்தல்/கொல்லுதல்; போந்தது-திரும்பியது)

''புகழுக்கு உரியவனே! உன்னுடைய அழிக்கும் இயல்புடைய, ஒளிவீசுகின்ற அம்புகளினால் கரன் முதலிய அரக்கவீரர்களும், குரக்கினத்தரசனாகிய வாலியும் என்ற இவர்கள் அழிந்து ஒழிந்தமையும் கேள்விப்பட்டு நான் இங்கு வந்து உன்னைச் சரணடையவில்லை. அதற்கு மாறாக, அந்த இலங்கை நகரை இந்த அனுமன் ஒருவனாகவே எரியூட்டி அழித்ததை என் கண்களால் கண்டதாலும், அவன் அரக்கர்களைப் போரில்

Koviloor Digital Library

வென்று, அழித்து மீண்டும் இங்கு உயிருடன் திரும்பி வந்ததையும் கண்களால் கண்டதனாலும்தான் நான் இங்கு வந்து உன்னிடம் அடைக்கலம் புகுந்தேன்'' என்று உறுதியுடன் கூறுகிறான் வீடணன்.

கரன், வாலி முதலியோரை இராமன் அழித்தான் என்பதைக் கேள்விப் பட்டபோது, வீடணனுக்கு இராமபிரானிடம் அடைக்கலம் புகவேண்டும் என்ற எண்ணம் தோன்றவே இல்லை. இலங்கையில் அனுமன் செய்த வீரச்செயல்களைத் தன் கண்களால் கண்ட பின்னர்தான் வீடணனுக்கு இந்த எண்ணமே தோன்றியது என்று அவனே கூறுவதைக் கருதுக. கேட்டலிலும் காண்டலே சிறப்புடைத்து, உறுதியுடையது என்பது கூறப்படுகிறது. 'எல்லாப்புகழும் இறைவனுக்கே' என்பதுபோல் தொண்டன் அனுமனால் நிகழ்த்தப் பெற்ற செயல்களுக்கெல்லாம் காரணகர்த்தாவாகிய இராம பிரானுக்கே அந்தப் பெருமையும் சென்றடையும் என்பதால் இராம பிரானை, வீடணன் 'புகழோய்!' என்று அழைத்தான் என்று கூறுவது சிறப்பைத்தரும்.

69. இராமபிரான் அனுமனைப் புகழ்ந்து கூறுதல் [3 பாடல்கள்]

“கேள்கொள் மேலையான் கிளத்திய பொருள் எலாம் கேட்டான்,
வாள்கொள் நோக்கியை, பாக்கியம் பழுத்தன்ன மயிலை,
நாள்கள் சாலவும் நீங்கலின், நலம்கெட மெலிந்த,
தோள்கள் வீங்கி, தன் தூதனைப் பார்த்து, இவை சொன்னான்''
(6667)

(கேள்-உறவு/நண்பன்; கொள்-கொண்ட; மேலையான்-மேன்மை யுடையவன்; கிளத்துதல்-கூறுதல்; பொருள்-கருத்து; பாக்கியம்-புண்ணியம்; சால-மிக; நலம்-அழகு; வீங்குதல்-பூரித்தல்; நோக்கி-கண்களையுடையவள்/சீதாதேவி; பழுத்தல்-முதிர்தல்; நீங்குதல்-பிரிந் திருத்தல்)

''தன்னுடன் நட்புப் பூண்டவனும், மேன்மையான குணங்கள் பொருந்தியவனுமான வீடணன் இவ்வாறு கூறிய கருத்துக்கள் அனைத்தை யும் நன்கு கேட்டவனான இராமபிரான், வாட்படை போன்ற கண்களை யுடையவளும், தான் முற்பிறவியில் செய்த நல்வினையின் காரணமாகப் பெற்ற புண்ணியமே முதிர்ந்து வந்து பயன்தந்தது போன்றவளும், மயில்போலும் சாயலை யுடையவளுமான, தன் மனைவி சீதாதேவியை, மிகப் பல நாட்களாகப் பிரிந்திருந்தமையால் தன் மேனியழகு கெட்டு, குன்றிப்போயிருந்த தோள்கள், இப்போது பூரிக்கப்பெற்று, தனது தூதுவனாகிய அனுமனைப் பார்த்துக் கீழ்வருமாறு கூறத் தொடங்கினான்''

இதனைக் கேட்ட இராமபிரான், இனி சீதாதேவியை உடனே அடைந்துவிடலாம் என்ற நம்பிக்கையால் உளம் மகிழ்ந்தான். உளம் மகிழ்ந்ததால் உடல் பூரித்தது என்பது பெறப்படுகிறது. அனுமன் ஒற்றன்

Koviloor Digital Library

அல்லன், தூதனே என்பது இங்கு நிறுவப்படுவது காண்க. 'ஸ்ரீ ராம தூதம் சிரசா நமாமி' என்பது வான்மீகம்.

70. "கூட்டினார் படை பாகத்தின் மேற்படக் கொன்றாய்;
ஊட்டினாய் எரிஊர் முற்றும்; இனி அங்கு ஒன்று உண்டோ?
கேட்ட ஆற்றினால், கிளி மொழிச் சீதையைக் கிடைத்தும்,
மீட்டிலாதது, என்வில் தொழில் காட்டவோ? வீர!" (6668)

(ஆறு-வகை; கூட்டுதல்-திரட்டிவைத்திருத்தல்; பாகம்-செம்பாதி; மேற்பட்ட-மேலாக; முற்றும்-முழுவதும்; ஒன்று-ஒருசெயல்; கிடைத்தல்-அடைதல்)

இராமபிரான் அனுமனை நோக்கி, ''வீரனே! பல நாட்களாக அரிதின் முயன்று இராவணன் திரட்டிவைத்திருந்த சேனையின் செம்பாதிக்கும் மேலான அரக்க வீரர்களை ஒரே நாளில் கொன்று போட்டிருக்கிறாய்; இலங்கை மாநகருக்கு எரியூட்டி அழித்திருக்கின்றாய்; இவற்றைத்தவிர, அங்கு நான்போய் இனிமேல் செயலாற்றுவதற்கு என்ன இருக்கிறது? நான் இப்பொழுது வீடணன் மூலமாகக் கேட்டறிந்தவற்றால், கிளிபோலும் இனிமையாகப் பேசும் ஆற்றலுடையவளான சீதாதேவியை நீ நேரில் பார்த்த பிறகும், அவளை இங்கு மீட்டுக்கொண்டு வாராதது, என்னுடைய வில்லாற்றலை உலகத்தார்க்குத் தெரிவிக்கத்தான் போலும்!'' என்று கூறினான்.

இராவணன் சேனை சிலநாட்களில் திரட்டப்பட்டதன்று, பல ஆண்டு காலமாய்ப் பல திசைகளுக்கும் திக்கு விஜயம் செய்து, திரட்டப் பெற்றவை. எனவே 'கூட்டினார் படை' என்றார் என்க. 'பாகம்' என்பது செம்பாதியைக் குறிக்கும். அனுமன் இலங்கையில் அழித்தொழித்த சேனையின் அளவு பாதிக்குமேல் இருக்கும் எனக் கூறுகிறான் இராம பிரான். இவையெல்லாம் முடிந்த பிறகு, தான்சென்று அங்கு செய்ய என்ன இருக்கிறது? என்று அனுமனைப் பார்த்துக் கேட்கிறான் எனக்கொள்க. 'என் வில்தொழில் காட்டவோ?' என்பது கருத்தாழம் மிக்க சொற்றடர். முதன்முதலில் அனுமனும் தானே இராவணனைக் கொன்று, சீதாதேவி யைக் கொணரும் ஆற்றல் வாய்ந்திருந்தும் அவ்வாறு செய்யாததற்கு அங்கேயே ஒரு காரணம் கூறுகிறான். சீதாதேவியும் அசோகவனத்தி லிருந்து அனுமன் தன்னைத் தொட்டு மீட்டுக்கொண்டு செல்லக்கூடாது என்பதற்கு அவளும் அதே காரணத்தைக் கூறுகிறாள். இவர்கள் இருவரும் எண்ணியதைச் சற்றும் அறிந்திராத இராமபிரானும் அதே காரணத்தைக் கூறுகிறான் என்றால் மூவரும் ஒரேமாதிரியாகச் சிந்திக்கும் ஆற்றல் பெற்றவர்கள்(Same Wave Length) என்பது தெள்ளிதில் புலப்படுதல்காண்க. 'கற்றைப் பூங் குழலாளைச் சிறைவைத்த கண்டகனை, முற்றப்போர் முடித்தது ஒரு குரங்கு என்றால், முனைவீரன் கொற்றப்போர்ச் சிலைத் தொழிற்குக்குறை உண்டாம் எனக்குறைந்தான்'அனுமன்; 'சொல்லினால்

Koviloor Digital Library

சுடுவென், அது தூயவன் வில்லின் ஆற்றற்கு மாசென்று வீசினேன்' என்பது சீதாதேவியின் கூற்று. 'அன்றிப் பிறிது உள்ளது ஒன்று, ஆரியன் வென்றி வெஞ்சிலை மாசுணும்' என்றும் சீதாதேவி கூறுவதும் இங்கு கருதத்தக்கது. மூவரின் கருத்தொற்றுமை நோக்கி இன்புறற்பாலது. 'கிளிமொழிச் சீதையைக் கிடைத்தும், மீட்டிலாதது என் வில்தொழில் காட்டவோ வீர!' என்பது இராமபிரான் கூற்று.

இலங்கையில் அனுமன் ஆற்றிய வீரச்செயல்களை இராமபிரான் நேரில் காணவில்லை, வீடணன் சொல்லித்தான் கேட்டறிந்திருக்கிறான். பகைவன் ஒருவன் தன் தூதனின் ஆற்றலைப் புகழ்ந்திருக்கிறான். எனவே 'கேட்ட வாற்றினால்' என்றார் என்க.

71. "நின்செய் தோள்வலி நிரம்பிய இலங்கையை நேர்ந்தோம்;
பின்செய்தோம் சில; அவை இனிப் பீடு ஒன்று பெறுமோ?
பொன் செய் தோளினாய்! போர்ப்பெரும் படையொடும் புக்கோம்
என்செய்தோம் என்று பெரும்புகழ் எய்துவான் இருந்தோம்?" (6669)

(நேர்தல்-அடைதல்; பீடு-பெருமை; பொன்-அழகு/பொன்னொளி)

"பொன்னொளி வீசும் அழகிய தோள்களை உடையவனே! அனும! நீ இலங்கையில் சென்று, உன் தோளாற்றலால் செய்த சில செய்கைகளையே இன்னும் இலங்கைவாழ் அரக்கர்கள் பேசிக்கொண்டிருக்கின்றனராம். உன்புகழ் நிரம்பிய அந்த இலங்கைக்கு இப்போது, நாம் பெரிய போர்ப்படையாகிய வானர சேனைகளுடன் வந்து சேர்ந்திருக்கிறோம். இனியும் சில போர்த்தொழில்களைச் செய்வோம்; ஆனால் அவை இனிமேல் ஏதேனும் பெருமையாகப் பேசப்படுமா? படாது. இப்பொழுது என்ன செயலைச் செய்யப்போகிறோம்? அதனால் நமக்கு என்ன பெருமை வந்து சேரப்போகிறது?" என்று இராமபிரான் தன்னாலும் தன் படையினாலும் கிடைக்கப்பெறாத பெருமையையும் புகழையும் அனுமன் பெற்றிருக்கிறான் என்று அவனை மனமுவந்து பாராட்டுகிறான்.

நேர்ந்தோம், செய்தோம், புக்கோம், இருந்தோம் என்ற இறந்தகாலச் சொற்களெல்லாம் உறுதியும், தெளிவும் பற்றியும் வந்த காலவழுவமைதி எனக்கொள்க. நீ தனித்துச் செய்ததற்குப் பின் நாம் ஒன்றிணைந்து செய்ய வேண்டுவது ஒன்றுமில்லை, அவ்வாறு செய்தாலும் அது பெருமையாகப் பேசப்படப் போவதும் இல்லை என்கிறான் இராமபிரான். அனுமன் தனித்து நின்று செய்த வீரச்செயல்களைத் தான் எழுபது வெள்ளம் சேனையைக் கொண்டு செய்யமுடியுமா என்றதும், செய்தால் புகழ் கிடைக்குமா என்றதும் அனுமனைப் பாராட்டும் வகையில் புகழ்ந்து கூறியவை என்க.

Koviloor Digital Library

72. இராமபிரான் அனுமனுக்குப் பிரமபதம் தருதல்

''என்னது ஆக்கிய வலியொடு, அவ் இராவணன் வலியும்
உன்னது ஆக்கினை; பாக்கியம் உருக்கொண்டது ஒப்பாய்!
முன்னது ஆக்கிய மூவுலகு ஆக்கிய முதலோன்
பின்னது ஆக்கிய பதம் நினக்கு ஆக்கினென்; பெற்றாய்!'' (6670)

(பாக்கியம்-புண்ணியம்/நல்வினை/பேறு; முதலோன்-பிரமதேவன்; பதம்-பட்டம்/பிரமபட்டம்)

இராமபிரான் அனுமனை நோக்கி, ''நல்வினையால் விளைந்த புண்ணியம் அனைத்தையும் ஒருசேரப்பெற்று அவ்வடிவமாகவே திகழ் பவனே! எனக்கு அமைந்த போராற்றலையும், அதனோடு, அந்த இலங்கை மன்னனான இராவணனது பெரு வலிமையையும், நீ இலங்கை சென்று தனியாகவே ஆற்றிய செயல்களினால் உன்னுடைய ஆற்றலாக ஆக்கிக் கொண்டு விட்டாய்; திருமாலின் உந்தித்தாமரையிலிருந்து முன்னர் தோன்றி, பின் இம்மூவுலகத்தையும் படைத்தவன் பிரமதேவன், அவன் பதவிக்காலம் முடிந்தபின் அந்தப் பிரமபதத்திற்கு உரியவனாகிறாய் நீ. அத்தகைய பிரமபதத்தை உன்னுடைய இந்தப் பிறவிக்குப்பின் அடுத்த பிறவியில் பெற்று உயர்வாயாக!'' என்று பாராட்டுகிறான் இராமபிரான்.

முன்பு இராமபிரான் கரன், திரிசிரா போன்றவர்களைத் தான் ஒருவனாகவே தனித்துநின்று எதிர்த்துப் போரிட்டு வெற்றிகண்டு, அவர்களை அழித்தான். அதுபோலவே இப்பொழுது அனுமன் இலங்கை சென்று அவன் ஒருவனே தனித்துநின்று, கிங்கரர்கள், சம்புமாலி, பஞ்சசேனாபதி, அக்ககுமாரன் ஆகியவர்களை எல்லாம் அழித்ததோடு மட்டுமல்லாமல், இலங்கை நகரத்திற்கு எரியூட்டி அதனையும் முற்றமுழுக்கவும் அழித்து வந்திருக்கிறான். எனவே இராமபிரானுடைய வலிமையை அனுமன் பெற்றிருக்கிறான் என்பதைத்தான், 'என்னதாக்கிய வலிமை உன்னதாக்கினாய்' என்றார் என்க. அதுபோல, இலங்கையில் அனுமன் இவ்வளவு வீரச்செயல்கள் புரிந்து, அரக்கர்களின் செம்பாதிப் பேரை அழித்தும், இலங்கைக்கு எரியூட்டியும், இராவணன் கையில் சிவபெருமான் வழங்கிய சந்திரகாசம் என்ற எவராலும் வெல்லப்படாத வாட்படையிருந்தும் அவனால் அனுமனை ஒன்றும் செய்ய முடியாததால், 'அவ்விராவணன் வலியும் உன்னதாக்கினை' என்றார் என்க. எனவே அனுமன் படைத்தற் தொழிலுக்கு ஏற்ற தகுதி படைத்தவன் என்று நன்கு தெளிந்தேதான் இராமபிரான் அனுமனுக்குப் 'பிரமபதம்' அருளினான் என்க. 'பெற்றாய்' என்பது தெளிவு பற்றிவந்த காலவழுவமைதி எனக்கொள்க. அனுமன்தான் 'வருங்கால முதல்வன்' என்கிறான் கம்பன். சரிதானே?

Koviloor Digital Library

73. அனுமன் பணிவும் அடக்கமும்

''என்று கூறலும், எழுந்து, இருநிலன் உற இறைஞ்சி,
ஒன்றும் பேசலன், நாணினன், வணங்கிய உரவோன்;
நின்ற வானரத்தலைவரும், அரசும், அந்நெடியோன்
வெண்றி கேட்டலும், வீடுபெற்றார் என வியந்தார்'' (6671)

(இரும்-பெரிய; உற-பொருந்துமாறு; உரவோன்-வலிமைமிக்கவன்/ உறுதி மிக்கவன்; அரசு-அரசன்/சுக்கிரீவன்; வென்றி-வெற்றி; வீடு-முக்தி/ மோட்சம்; நெடியோன்-அனுமன்; நெடுமை-பெருமை)

என்று இராமபிரான் அனுமனைப் பாராட்டியதும், வலிமை மிக்க அனுமன் தனது இருக்கையில் இருந்து எழுந்து, தன்உடல் இப்பெரிய பூமியில் படும்படி பொருந்தி இராமபிரானை வணங்கி, வெட்கமடைந்து தலை சாய்ந்து ஒன்றும் பேசுவதற்கு இயலாதவனாக ஒதுங்கி நின்றிருந் தான். இதனைக்கண்ட, அங்கு நின்றிருந்த வானரப்படைத்தலைவர்களும், அவர்களுக்குத் தலைவனான சுக்கிரீவனும், அந்தப்பெருமை மிக்கவனான அனுமனது வெற்றிச்செய்தியைக் கேட்டதும், தாமே வீடுபேறு பெற்றதுபோன்று வியந்து மகிழ்ந்தார்கள்.

'நிலனுற இறைஞ்சுதல்' என்பது சாஷ்டாங்க நமஸ்காரத்தைக் குறிக்கும். நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்கினான் என்பது பொருள். இறைவனையும், சான்றோர்களையும் இவ்வாறே வணங்க வேண்டும் என்பது ஒரு வழிபாட்டு முறை என்பதறிக. அவன் நாணம் உற்றுத் தலை சாய்ந்து நின்றதற்கு ஒப்பாகக் கலித்தொகையில் ஒரு சொற்றொடர் கிடைக்கிறது கேளுங்கள். 'தம் புகழ்கேட்டார் போல், தலை சாய்த்து மரம்துஞ்ச' என்பது பாடல்வரி. இன்னும் ஒன்று. நெற்பயிர்கள் வளைந்து விளைந்தமை குறிக்கவந்த திருத்தக்க தேவர் 'தேர்ந்த நூற்கல்வி சேர்மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே' என்கிறார்: சீவகசிந்தாமணியில்; அதுவும் இங்கே அனுமனின் செய்கைக்கு ஒப்பு நோக்கத்தக்கது. 'உரவோன்' என்று கவிஞன் அனுமனைக் குறிப்பிட்டதை 'உரனென்னும் தோட்டியான் ஓர் ஐந்தும் காப்பான்' என்ற குறள்-24ன் கருத்தோடு ஒப்பிட்டு நோக்குதல் தகும்.

இலங்கை கேள்விப்படலம் நிறைவுற்றது

Koviloor Digital Library

6. வருணனை வழிவேண்டு படலம் [85 பாடல்கள்]

இராமபிரான் வீடணனின் ஆலோசனைப்படி, கடற்கரைக்கு வந்து ஏழுநாட்கள் தருப்பைப் புல்லில் அமர்ந்து தவம்செய்து, கடற்கடவுளான வருணனை, தான் வானரசேனையுடன் இலங்கைக்குச் செல்லவேண்டும் எனவும், அதற்கு இந்தக் கடல்வழியாகச் செல்ல ஒரு வழி அமைத்துத் தரவேண்டும் எனவும் வேண்டுகின்ற நிகழ்ச்சிகளைக் கூறுவதால் இது 'வருணனை வழிவேண்டு படலம்' எனப்பெயர் பெறுவதாயிற்று. இது 85 பாடல்களைக் கொண்டது. சிலசுவடிகளில் 'கடல்சீறிய படலம்' எனவும் 'கடலைச் சீறிய படலம்' எனவும் 'கடல் சீறியருள் படலம்' எனவும் 'கடல்சீறி அருளிய படலம்' எனவும் 'வருணன் அடைக்கலப் படலம்' எனவும் படலத்தின் தலைப்பு வெவ்வேறாகத் தரப்பட்டிருக்கின்றது. எனினும் எல்லாவற்றின் நோக்கமும், இராமபிரான் வருணனிடத்து வழிவிட வேண்டுதலேயாகும். கம்பன் வான்மீகத்திலிருந்து மாறுபடும் இடங்கள், அந்தந்த நிகழ்ச்சிகள் வரும்போது கூறப்பட்டிருக்கின்றன.

இப்படலத்துள், இராமபிரான் கடலைக்கடக்க என்னவழி என்று வீடணனிடம் ஆலோசனை கேட்டல்; வீடணன் யோசனை சொல்லுதல்; இராமபிரான் கடற்கரையை அடைந்து தருப்பைப் புல்லில் அமர்ந்து வருணமந்திரத்தை ஜெபித்தல்; ஏழுநாட்களாகியும் கடற்கடவுளான வருணன்வாராதிருத்தல்; இராமபிரான்மிக்கசினம்கொண்டு கடலின்மேல் அம்புஎய்தல்; அப்போது கடலுக்கு நேர்ந்த விளைவுகள்; இராமபிரான் பின்னும் பிரம்மாஸ்திரத்தை ஏவுதல்; அதனால் கடலில் நிகழ்ந்த மாறுபாடுகள்; இறுதியில் வருணன் தோன்றி இராமபிரானை வணங்கி அடைக்கலம் வேண்டுதல்; இராமபிரான், வருணன் காலந்தாழ்த்தியமைக் குரிய காரணத்தை வினவுதல்; வருணன் கூறிய காரணத்தால் சினம் தணிந்து, பிரம்மாஸ்திரத்திற்கு இலக்கு யாது என வினவுதல்; வருணன் இலக்கு பற்றிக்கூறுதல்; இராமபிரான் அவன் வேண்டுகோளுக்கு இணங்கி அவுணரை அழித்தல்; அம்பு மீண்டு அம்பறாத்தூணியை அடைதல்; இப்பொழுது வருணன் தன்மீது சேது கட்டிக்கொண்டு கடலைக் கடந்து போகச்சொல்லுதல்; இராமபிரான் சேது கட்டக் கட்டளையிடுதல்; ஆகிய நிகழ்ச்சிகள் மிக விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன.

Koviloor Digital Library

1. வீடணனைக் கடல் கடந்துபோக, வழி கூறுமாறு இராமபிரான் கேட்டல்

''தொடக்கும் என்னில், இவ்வுலகு ஒரு மூன்றையும், தோளால்
அடக்கும் வண்ணமும், அழித்தலும், ஒருபொருள் அன்றால்;
கிடக்கும் வண்ண வெங்கடலினைக் கிளர்பெரும் சேனை
கடக்கும் வண்ணமும் எண்ணுதி; எண்ணு நூல் கற்றாய்!'' (6672)

(எண்ணும்-மதிக்கத்தக்க; வண்ணம்-உபாயம்; எண்ணுதல்-சிந்தித்தல்; தொடக்குதல்-தொடங்குதல்; வண்ணம்-நிறம்)

இராமபிரான் வீடணனை நோக்கி, ''மதிக்கத்தக்க சிறப்பு வாய்ந்த அரசியல் நூல்களைக் கற்றுணர்ந்தவனே! நாம் அரக்கர்களுடன் போரைத் தொடங்கிவிட்டோம் என்றால், இலங்கையை மட்டுமல்ல, இம்மூவுலகத்தையும் நம் தோள்வலியால் அடக்கும் செய்கையும் அவ்வாறு அடங்கார்கள் என்றால், அவர்களை அழித்து ஒழிப்பதும் நமக்கு ஒருபெரிய காரியம் ஆகாது. என்றாலும், நாம் இலங்கைக்கு நேராகச் செல்லுவதற்கு முடியாது, நடுவில் கிடக்கும் இந்த நீலநிறம் வாய்ந்த கொடியகடல் தடையாக இருக்கின்றதே! நமது கிளர்ச்சிபொங்கும் பெரியவானரச் சேனை இதனைக்கடந்து போவதற்கு உரிய ஓர் உபாயத்தையும் சிந்தித்துக் கூறுவாயாக!'' என்கிறான்.

வீடணன் இதுகாறும் வாழ்ந்திருந்த இலங்கை முப்புறமும் கடலால் சூழப்பட்டது. எனவே கடல்பற்றியும், கடல்கடக்கும் உபாயம் பற்றியும் நிச்சயம் அவன் அறிந்திருக்க வேண்டும். எனவே வீடணனிடம் இராமபிரான் ஆலோசனை கேட்டான் என்க.

2. ''கரந்து நின்ற நின்தன்மையை, அது, செலக் கருதும்;
பரந்தது உன் திருக் குலமுதல் தலைவரால்; பரிவாய்
வரம்தரும் இந்தமாக்கடல்; படைசெல, வழிவேறு
இரந்து வேண்டுதி, எறிதிரைப் பரவையை'' என்றான். (6673)

(மா-பெரிய; திரு-சிறந்த; கரந்து-மறைந்து; கருதும்-அறியும்; பரிவு-அன்பு; எறிதல்-வீசுதல்; திரை-அலைகள்; பரவை-கடல்/இங்கே வருணன்; வேறு-தனித்து)

''இந்தப்பெரிய கடல் உன்னுடைய சிறந்த சூரியகுல மன்னர்களான சகரபுத்திரர்களால் தோண்டப்பட்டது. அது உன்னுடைய உண்மை நிலையை-நீ மறைந்து நிற்கின்றபோதும் உன்னுடைய உண்மைத் தன்மையை இறுதிவரை அறியும். எனவே அன்புடன் நீகேட்கும் வரத்தை உனக்குத் தரவேண்டும்; தரும். ஆதலால் நம்படை கடந்து செல்வதற்கு வழிவிடுமாறு, நீ தனித்து இருந்து, வீசுகின்ற அலைகளையுடைய இந்தக்

Koviloor Digital Library

கடலினிடம் வேண்டிக் கேட்டுக்கொள்வாயாக!'' என்று ஆலோசனை கூறுகிறான் வீடணன்.

இங்கே 'கடல்' என்பது கடலுக்கு அதிபதியான வருணனைக் குறிக்கும் எனக்கொள்க. நீ உன்னுடைய உண்மை உருவத்தை மறைத்துக்கொண்டு மானிட வடிவத்தில் வந்திருந்தாலும், வருணன் உன்னுடைய உண்மை நிலையை ஆதிமுதல் அந்தம் வரை அறிவான்; மேலும் இந்தக்கடல் உன்னுடைய முன்னோர்களால் உண்டாக்கப்பட்டது. எனவே நீ கேட்கின்ற வரத்தைத் தர அது கடமைப்பட்டிருக்கிறது. எனவே படை செல்லுவதற்குரிய வழியைத் தனித்து இருந்து வேண்டிக் கேட்டுக்கொள்க! என்கிறான் வீடணன் என்பதாம்.

3. இராமபிரான் கடற்கரையை அடைதல்

''நன்று, இலங்கையர் நாயகன் மொழி'' என நயந்தான்;
ஒன்று தன் பெரும் துணைவரும் புடைசெல, உரவோன்,
சென்று வேலையைச் சேர்தலும், விசும்பிடை, சிவந்த
குன்றின்மேல் நின்று குதித்தன, பகலவன் குதிரை. (6674)

(உரவோன்-வலிமை மிக்கவன்/அறிவுத்திண்மை மிக்கவன்; நாயகன்-தலைவன்; நயந்து-விரும்பி; புடை-பக்கம்; வேலை-கடல்; குன்று-உதய கிரி; பகலவன்-சூரியன்; குதித்தல்-பாய்தல்/தாவுதல்; ஒன்றுதல்-ஒத்த கருத்துடையராதல்; பெரும்-பெருமைமிக்க; விசும்பு-ஆகாயம்)

அறிவுத்திண்மையும், வலிமையும் மிக்கவனான இராமபிரான், 'இலங்கை மக்களது தலைவனாகிய வீடணன் கூறிய வார்த்தைகள் நல்லன, சரியானது' என்று விரும்பி, அதற்கு உடன்பட்டவனாய், தனக்கு நெருங்கியவர்களும், பெருமை மிக்கவர்களும், தன் கருத்தோடு ஒன்றுபட்டுச் செயலாற்றக் கூடியவர்களுமாகிய சுக்கிரீவன், வீடணன், அனுமன், இலக்குவன் ஆகிய துணைவர்கள் தன் இருபக்கமும் சூழ்ந்துவர, கடற்கரையைச் சென்று அடைந்தான். அப்பொழுது, சூரியன் உதயமாவதற்காக, அவனுடைய தேர்ச்சாரதியான அருணன், சிவந்த நிறம் பொருந்திய உதயகிரியில் ஒற்றைச் சக்கரத்தோடு, கூடிய தேரில் பூட்டப் பெற்ற ஏழுகுதிரைகளும் ஆகாயத்தில் பாய்ந்தன. சூரியன் உதயமானான்''.

'நயந்தான்' என்ற சொல், வீடணன் கூறிய சொற்களை இராமபிரான் மனமுவந்து ஏற்றுக்கொண்டான், அவன் கருத்துக்கு உடன்பட்டான் என்ற விரிந்த பொருளைத்தரும். இராமபிரான் கடற்கரையை அடைந்ததும், சூரியன் உதயமானான் என்பதாம். சூரியோதயத்திற்கு முன்னர் அருணோதயம் நிகழும் என்பது மனத்துள் கொள்க. சூரியன் உதயகிரியில் உதிக்கிறான் என்பதும், அத்தமனகிரியில் மறைகிறான் என்பதும் நூற் கொள்கை எனக்கொள்க.

Koviloor Digital Library

4. கொழுங்கதிர்ப் பகைக்கோள் இருள் நீங்கிய கொள்கை,
செழுஞ்சுடர்ப் பனிக்கலை எலாம் நிரம்பிய திங்கள்,
புழுங்கு வெஞ்சினத்து அஞ்சனப் பொறிவரி அரவம்
விழுங்கி நீங்கியது ஒத்தது, வேலை சூழ் ஞாலம். (6675)

(வேலை-கடல்; ஞாலம்-பூவுலகம்; கொழும்-செழுமையான; கொள்கை-தன்மை; செழும்-வளமான; சுடர்-ஒளி; பனி-குளிர்ச்சி பொருந்திய; திங்கள்-சந்திரன்; புழுங்குதல்-வெதும்புதல்; பொறி-புள்ளிகள்; அஞ்சனம்-மை/கரிய; அரவம்-பாம்பு/இராகு; கோள்-கொள்ளுதல்; கலை-ஒளிக்கற்றை)

கடலால் சூழப்பட்ட இந்த உலகம், இப்போது செழிப்பான கிரணங்களை உடைய சூரியனுக்குப் பகைவனான இருள் நீங்கப்பெற்ற தன்மையினால் வளமையான, ஒளிமிக்க, குளிர்ச்சி பொருந்திய பதினாறு கலைகளும் நிரம்பப்பெற்ற பூரணசந்திரனை, வெதும்புகின்ற கொடிய கோபத்தையும், மைபோன்று கருமையாகவும், படப்புள்ளிகள் அமையப் பெற்றதும், உடம்பில் வரிகள் கொண்டதுமான இராகு என்னும் பாம்பு, முதலில் விழுங்கிப் பின் அதை உமிழ்ந்தது போன்று விளங்கிற்று.

இருட்டினால் கவிக்கப்பெற்றிருந்த இந்த உலகத்துக்கு, இராகு என்னும் பாம்பு விழுங்கிய சந்திரன் உவமை. சூரியன் ஒளியால் இருள் நீங்கப்பெற்ற இந்த உலகத்துக்கு, அந்தப்பாம்பின் வாயினின்று உமிழ்ந்த சந்திரன் உவமை. பொதுவாகச் சூரியனை இராகுவும், சந்திரனைக் கேதுவும் விழுங்கும் என்று கூறப்படுவதுண்டு. இதனைத்தான் சூரிய கிரகணம் என்றும் சந்திர கிரகணம் என்றும் கூறுகிறோம் என்பதறிக. 'அஞ்சன அரவம்' என்றதால் கரியநிறமுடைய இராகு என்று பொருள் கொள்ளப்பட்டது.

5. வருண மந்திரம் கூறுதல்

"தருண மங்கையை மீட்பது ஓர் நெறிதருக!" என்னும்
பொருள் நயந்து, நல் நூல்நெறி அடுக்கிய புல்லில்,
கருணை அம்கடல் கிடந்தனன், கருங்கடல் நோக்கி;
வருணமந்திரம் எண்ணினன், விதிமுறை வணங்கி" (6676)

(தருணம்-இளமை; மங்கை-சீதாதேவி; நெறி-வழி; பொருள்-கருத்து; நயத்தல்-விரும்புதல்; அம்-அழகிய; புல்-தருப்பைப்புல்; தருணமங்கை-பருவப்பெண்; எண்ணுதல்-உருவேற்றுதல்/ஜெபித்தல்/தியானித்தல்; நல்நூல்-வேதம்)

"இளம் பருவப்பெண்ணாகிய சீதாதேவியை இலங்கையிலுள்ள இராவணனின் சிறையிலிருந்து மீட்பதற்கு ஏற்ற ஒரு வழியைக் கூறுவாயாக!" என்னும் கருத்தை விரும்பி, சிறந்த வேதங்கள், சாத்திரங்கள்

Koviloor Digital Library

கூறியவண்ணம் அடுக்கப்பட்டிருந்த தருப்பைப் புல்லாலான அணையில், அருட்கடலான-கருணையே வடிவான அழகிய இராமபிரான், அந்தக்கரிய நிறம் கொண்ட கடலையே பார்த்தவாறு, கடற்கடவுளாகிய வருணனை இடைவிடாது எண்ணிக்கொண்டு, விதிமுறைப்படி வழிபாடு செய்து கொண்டு, படுத்துக் கிடந்தனன்.

'தருண மங்கை' என்பது இளம் பருவத்தில் இருக்கும் ஒரு பெண்ணைக் குறிக்கும் என்பது நமக்குப் புதியசொல். 'மீட்பது ஓர் நெறி' என்பது வானரச்சேனைகள், கடலைத் தாண்டி இலங்கைக்குச் செல்வதற்கான வழி என்ற பொருளைத்தரும். தருப்பைப் புல்லைச் சாதாரணமாகக் கையாளக்கூடாது என்பதைப் புலப்படுத்தவே 'நல்நூல் நெறி அடுக்கிய புல்' என்றார் என்க. இன்றைக்கு இதைப் பயன்படுத்துவோர் இதை ஒரு நல்ல அறிவுரையாகக் கொள்ளவேண்டும். 'கருங்கடல் நோக்கிக், கருணையம் கடல் கிடந்தது' என்ற சொல்லாட்சி நோக்குக. சொல்லாட்சி யோடு பொருள் நயமும் கருதுக. கரையில் இருப்பவன் கருணையே வடிவானவன்; கடலின் உள்உள்ளவன் கருமையே வடிவானவன் என்பதையும் நுனித்து உணர்க. 'எண்ணுதல்' என்பது ஜெபித்தல், உருவேற்றுதல், உச்சாடனம் செய்தல், இடைவிடாது கூறு;தல், உபாசனை செய்தல் என்ற பொருளைத்தரும்.

இராமபிரான் திருமாலின் அவதாரம்தான் என்றாலும், கடலை வற்றச்செய்யக்கூடிய ஆற்றல் பெற்றிருந்தாலும், கடலுக்கு அதிபதியான வருணனை, எந்த விதிமுறைப்படி வணங்க வேண்டுமோ அவ்வாறே வணங்கினான் என்பதும், நன்கு கருதத்தக்கது. இராமபிரான் தருப்பைப் புல்லில் படுத்திருந்த இடம் இன்றும் சிவகங்கை மாவட்டத்தில் 'திருப்புல்லணை' என்ற பெயரில் இருப்பதைக் காணலாம். 'தர்ப்பசயனம்' என்பது வடசொல். இராமபிரான் தர்ப்பசயனத்தில் அமர்ந்திருக்கும் கோலம் வான்மீகத்தில் மிக அழகாகவும் விரிவாகவும் கூறப்பட்டிருக்கிறது என்பது அறிக.

6. வருணன் ஏழு நாளாகியும் வாராதது

பூழி சென்று, தன் திருஉருப் பொருந்தவும், பொறைதீர்
வாழி வெங்கதிர் மணிமுகம் வருடவும், வளர்ந்தான்;
ஊழி சென்றன ஒப்பன ஒருபகல்; அவைஓர்
ஏழு சென்றன; வந்திலன், எறி கடற்கு இறைவன். (6677)

(பூழி-புழுதி/மண்துகள்; உரு-திருமேனி; பொருந்த-படிய; புரை-குற்றம்; தீர்தல்-நீங்குதல்; கதிர்-சூரியன்; மணி-அழகிய; வருடுதல்-தழுவுதல்/தடவுதல்; ஒப்பு-போல; எறிதல்-வீசுதல்; வளர்தல்-கண் வளர்தல்/தூங்குதல்; பகல்-நாள்)

Koviloor Digital Library

அவ்வாறு கண்வளர்ந்திருந்த இராமபிரானின் திருமேனியில், கடலிலுள்ள மண்துகள்களாகிய புழுதிகள் எல்லாம் சென்று படிந்தன; குற்றமற்ற கொடிய கிரணங்களையுடைய சூரியனின் கதிர்கள் அவனுடைய அழகிய முகத்தைத் தடவிக்கொடுத்தன. ஒருநாள் செல்வது, ஒருயுகம் செல்வது போல ஏழுநாட்களும் கழிந்துபோயின. எனினும் அலைவீசுகின்ற கடலுக்கு அதிபதியான வருணன் வெளிப்பட்டு வரவே இல்லை.

'வாழி' என்பது இங்கே அசைச்சொல் எனக்கொள்க. 'வளர்தல்' என்பது கண்வளர்தலைக் குறிக்கும். என்றாலும் அது இன்று பயன்படுத்துவது போல உறக்கத்தைக் குறிக்காது. கண் மூடிப்படுத்திருந்தான் என்ற அளவே குறிக்கும். 'ஊழி சென்றன ஒப்பன ஒருபகல்' என்பது இராமபிரான் ஏற்கனவே சீதாதேவியின் பிரிவால் வருந்தியிருக்கிறான். இங்கு இப்போது வருணனும் வாராது காலந்தாழ்த்துகிறான். எனவே ஒருநாள் கழிவது ஒருயுகம் கழிவதுபோல் இருந்தது என்றார் என்க.

இங்கே வான்மீகம் வேறுபடுகிறது. கடற்கரையில் இராமபிரான் மூன்று நாட்களே தியானித்திருந்ததாகக் கூறுகிறது. கம்பன் ஏழுநாட்கள் என்று கூறுவது கருதத்தக்கது.

7. இராமபிரான் சினம் கொள்ளுதல்

"ஊற்றம் மீக்கொண்ட வேலையான், 'உண்டு' 'இலை' என்னும்
மாற்றம் ஈக்கவும் பெற்றிலம் யாம்" எனும் மனத்தால்,
ஏற்றம் மீக்கொண்ட புனலிடை, எரி முளைத்தென்னச்
சீற்றம் மீக்கொண்டு சிவந்தன, தாமரைச் செங்கண். (6678)

(ஊற்றம்-பெருமிதம்/செருக்கு; வேலையான்-கடற்கிறைவன்/வருணன்; மாற்றம்-மறுமொழி; ஈக்க-ஈய/சொல்ல; மனம்-எண்ணம்/கருத்து; ஏற்றம்-பெருக்கு; மீ-மேலே/மிகுதியாக; எரி-நெருப்பு; முளைத்தல்-தோன்றுதல்; சீற்றம்-கோபம்; புனல்-கடற்பரப்பு)

"செருக்கு மிகக்கொண்ட கடலுக்கு அதிபதியான வருணன், வானரச் சேனை செல்வதற்கு இடம் இருக்கிறது, அல்லது இல்லை என்று ஏதாவது ஒரு மறுமொழி தரவும் நாம் பெற்றிலோமே" என்று கருதி, வெள்ளப் பெருக்கு மிகுந்துள்ள கடல்பரப்பில் நெருப்பு எரிந்து தோன்றுவதைப் போல அருள்நிறைந்த இராமபிரான் அவன் உள்ளத்தில் மிக்க சீற்றம் கொண்டதனால், இயற்கையிலேயே சிவந்த கண்களையுடைய அவன் கண்கள் மேலும் சிவந்துபோயின.

'ஊற்றம்' என்ற சொல் இதே பொருளில் 'ஊத்தம்' என்று இன்றும் சில தமிழகப் பகுதியில் கூறக் கேட்கலாம். தான் இலங்கை செல்ல வழி கேட்டதற்கு, அவனால் உரியவழியை வகுத்துக் கூறமுடியவில்லை என்றாலும், அதை நிறைவேற்ற முடியவில்லை என்றாலும், வழி

Koviloor Digital Library

கிடைக்கும், அல்லது கிடைக்காது என்று ஒரே சொல்லில் மறுமொழி கூறியிருக்கலாம் அல்லவா? அதைக் கூடக்கூறாது இருக்கிறானே என்று, சினம் அடையும் இயல்பேயில்லாத இராமபிரான் சீற்றம்கொண்டான். கவிஞனும் அதுபோலவே , கடலிலே முளைக்கவே முடியாத நெருப்பை உவமை கூறிய நயம் நோக்குக. நீரில் நெருப்பு முளைக்குமா? அல்லவல்லவா? அதுபோலத்தான் இராமபிரானிடம் சினம் தோன்றவே முடியாது என்பதாம். 'ஈக்கவும்' என்ற சொல் ஈயவும், தரவும் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. 'புனலிடை எரி முளைத்து என்ன' என்ற உவமை எண்ணி இன்புறத்தக்கது. செந்தாமரைக் கண்கள் மேலும் சிவந்தன என்பது அவனது சீற்றத்தின் மிகுதியைக் குறிக்க என்க. இதற்கு மாறாக குலப்பகைவனான இராவணனே பின்னர் போரிடும் போதுகூட இராமபிரானின் கண்களில் சினத்தின் அறிகுறியே தெரிய வில்லை என்கிறான். இராவணன் ''கூனிகூன்போக, உண்டை தெறித்த போது ஒத்தது அன்றிச்சினவுண்மை தெரிந்தில்லை'' என்கிறான் கவிஞன். ''குன்றகல் நன்னாடன் வாய்மையில் பொய்தோன்றின், திங்களுள் தீத்தோன்றியற்று'' என்பது கலித்தொகை. அங்கே நீரில் நெருப்புத் தோன்றியது கூறப்பட்டது. இங்கே சந்திரனில் நெருப்புத் தோன்றுவது கூறப்படுகிறது. ''சீற்றம் விளையா நிலத்து உனக்கு எங்ஙன் விளைந்தது'' என்று இலக்குவனை இராமபிரான் கேட்டதும் இங்கு நினைவுகூரத்தகும். கரிய கடலில் சிவந்த நெருப்பைக் கற்பனை செய்துபாருங்கள்.

8. ''மாண்ட இல் இழந்து அயரும் நான், வழி தனை வணங்கி,
வேண்ட, 'இல்லை' என்று ஒளித்ததாம்' என, மனம் வெதும்பி,
நீண்ட வில்லுடை நெடுங்கனல் உயிர்ப்பொடும், நெடுநாண்
பூண்ட வில்எனக் குனிந்தன, கொழுங் கடைப் புருவம்.'' (6679)

(மாண்ட-மாட்சிமையுடைய/பெருமைமிக்க; இல்-மனைவி; அயர்தல்-வருந்துதல்; வெதும்பி-புழுங்கி; வில்-ஒளி; உயிர்ப்பு-பெரு மூச்சு; பூண்ட-பூட்டிய; கொழும்-செழுமையான; கடை-முனை/நுனி/ஓரம்; குனித்தல்-வளைத்தல்; ஒளித்தது-மறைத்துக்கொண்டது; நெடு-நீண்ட)

பெருமையும் மாட்சியும் உடைய எனது வாழ்க்கைத் துணைவியாகிய சீதாதேவியை, அயலான் ஒருவன் அபகரித்துச்செல்ல, அதனால் துன்புற்று வருந்திக்கொண்டு இருக்கும் நான், அதைத் தவிர்த்து, அவளை மீட்ப தற்காக இவ்வருணனை வழிவிட வேண்டி வணங்கிக் கேட்டுக் கொண்டபோதும், 'வழிஇல்லை' என்று என்னிடம் கூறுவதற்குத் தயங்கி அந்தக் குறிப்புத்தோன்ற தன்னை ஒளித்துக் கொண்டான் போலும்' என்று தன் மனத்துள் கருதி, அதனால் புழுங்கிப்போய், நீண்ட ஒளியையுடைய நெருப்புப் போன்ற பெருமூச்சு விட்டுக்கொண்டு, பெருமைபொருந்திய

Koviloor Digital Library

நாண் பூட்டிய வில்லைப்போல, இராமபிரானுடைய செழிப்புற்ற புருவ நுனிகள், வளைந்தன; சீற்றம் மிகுந்தது.

புருவம் வளைதல் கடுஞ்சீற்றத்திற்கான மெய்வெளிப்பாடு. அவனுடைய புருவம் வளைந்ததற்கு அவனுடைய வில்லின் வளைவையே உவமைகூறிய கவிஞனின் திறம் நோக்குக. 'மாண்ட' என்ற சொல் மாட்சிமைமிக்க என்ற பொருளைத்தரும். 'மாண்ட என் மனைவியொடு மக்களும் நிரம்பினர்' என்பது புறநானூறு. இங்கே இறந்துபோன என்ற பொருள் கொள்ளக்கூடாது, பெருமைமிக்க என்ற பொருளையே கொள்ள வேண்டும். தான் ஏழு நாட்கள் தவமிருந்தும், வருணன் வெளிப்படாததால் இராமபிரான் அவன் 'இல்லை' என்று தன்னிடம் சொல்லுவதற்குத் தயங்குகிறான். எனவே கடலுக்குள் தன்னை மறைத்துக் கொண்டிருக்கிறான் என்று கருத நேர்ந்தது என்க.

9. "ஒன்றும் வேண்டலர் ஆயினும், ஒருவர் பால் ஒருவர்
சென்று வேண்டுவரேல், அவர் சிறுமையின் தீரார்;
இன்று வேண்டியது எறிகடல் நெறிதனை மறுத்தான்;
நன்று, நன்று!" என நகையொடும் புகைஉக நக்கான். (6680)

(வேண்டுதல்-விரும்புதல்; சிறுமை-அற்பத்தன்மை; தீர்தல்-நீங்குதல்; எறிதல்-வீசுதல்; நெறி-வழி; நகை-ஒளியுமாம்; உக-சிந்த; நகுதல்-சிரித்தல்)

''எல்லாம் நிரம்பப் பெற்ற ஒருவர், பிறரிடமிருந்து எந்தப் பொருளையும் வேண்டிப்பெறாத இயல்புடையவர் என்றாலும், ஒருவரிடம் சென்று, இன்றியமையாத ஒரு பொருள் தனக்கு வேண்டும் என்று கேட்டு நிற்பாராயின் அவ்வாறு நிற்பவர் அற்பத்தன்மையினின்றும் நீங்கியவர் என்று கருதப்படமாட்டார். இன்று நாம் வருணனிடம் வேண்டிக்கேட்ட இலங்கைக்குச்செல்லும் வழியை அலைவீசுகின்ற கடலுக்கு அதிபதியான வருணன், நமக்குத் தாராது, காட்டுதற்கு மறுத்துவிட்டான். இது மிக நன்றாக இருக்கிறது'' என்று இராமபிரான் தன் ஒளிவீசும் பற்கள் வெளிப்பட்டுத்தெரிய, வாயினின்றும் புகை சிந்துமாறு வெகுளிச் சிரிப்புச் சிரித்தான்.

'நன்று நன்று' என்ற அடுக்கு வெகுளிப்பொருளது. 'ஏற்பது இகழ்ச்சி' என்ற மூதுரை நினைக.

10. "பாரம் நீங்கிய சிலையினன், இராவணன் பறிப்பத்
தாரம் நீங்கிய தன்மையன், ஆதலின், தகைசால்
வீரம் நீங்கிய மனிதன்' என்று இகழ்ச்சி மேல் விளைய,
ஈரம் நீங்கியது எறிகடல் ஆம்" என இசைத்தான். (6681)

Koviloor Digital Library

(பறித்தல்-கவர்தல்; தாரம்-மனைவி; நீங்கிய-இழந்த; தகை-பெருமை; சால்-மிக்க; விளைய-தோன்ற; எறிதல்-வீசுதல்; ஈரம்-இரக்கம்/அன்பு; இசைத்தல்-கூறுதல்; வீரம்-ஆண்மை)

''இராமபிரான் பெருமைமிக்க வில்லை நீங்கியவன்; அவனுடைய மனைவியை இராவணன் வஞ்சனையால் அபகரித்துச் சென்றும், அவனை ஒன்றும் செய்ய இயலாத நிலையிலுள்ளவன்; எனவே பெருமைமிக்க ஆண்மையில்லாத, வீரமில்லாத, சாதாரண மனிதன் என்று என்னை மிக இழிவாக இந்த இரக்கமில்லாத வீசுகின்ற அலைகளையுடைய கடல் நினைத்திருக்கக் கூடும் என்கிறான் இராமபிரான்.

கடற்கடவுள் தான் அழைத்ததும் வாராமல் காலம் தாழ்த்துவதற்கு இராமபிரானே இரண்டு காரணங்களைக் கூறிக்கொள்ளுகிறான். இவ்வாறு கடற்கடவுள் நினைத்திருக்கலாம் என்பது இராமபிரானின் கருத்து. ஒன்று, முன்பு தான் கரனுடன் போர் செய்தபோது தனது வில் இற்றுஒடிந்து விழுந்தது. அப்பொழுது, தான் கூப்பிடாமலேயே வந்து, கேட்காமலேயே வில்லைத்தந்து உதவிய அதே வருணன், இப்பொழுது தான் ஏழு நாட்கள் தவமிருந்து அவனை அழைத்தும், அவனைக் கேட்டும் அவன் வரவும், வழி தரவும் மறுக்கிறான் என்றால் அவன் என்னை இழிவாகக் கருதுகிறான் என்பது பொருள். அவன் அவ்வாறு இழிவாகக் கருதுவதற்குக் காரணம் நான் என் மனைவியைப் பிறர் அபகரிக்குமாறு அவள்மேல் கருத்தில் லாமல் இருந்திருக்கிறேன். அபகரித்தவனை ஒன்றும் செய்யமுடியாமல் வாளா நின்றிருக்கிறேன். எனவே நான் ஆண்மையும், வீரமும் அற்ற ஒரு சாதாரண மனிதன் என்று கடற்கடவுள் என்னை இகழ்வாகக் கருதி யிருக்கிறான் என்று கூறுகிறான் இராமபிரான்.

இங்கே ஒன்று கருதவேண்டும். இராமபிரான் திருமாலின் அவதாரம். அவன் மானிடனாக அயோத்தியில் தோன்றினான். மானிட இயல்புக் கேற்றவாறு நிகழ்வுகள் நிகழ்த்தினான். ஆனால் அவன் தன்னையே மனிதன் என்று, காப்பியத்தில் எங்குமே கூறிக்கொண்டதில்லை. இந்த ஒரு பாடலில் மட்டும்தான் 'வீரம் நீங்கிய மனிதன்' என்று கூறிக்கொள்கிறான். கவிஞன் இராமபிரானை, அவன் வாயாலேயே 'மனிதன்' என்று கூறவைத்தது, காப்பியத்தில் இந்த ஒரு இடம்தான் என்பதைக் கற்போர் மனத்தில் நிறுத்திக் கொள்க.

11. "புரந்து கோடலும், புகழொடு கோடலும், பொருது
துரந்து கோடலும், என்று இவை தொன்மையின் தொடர்ந்த;
இரந்து கோடலின், இயற்கையும் தருமமும் எஞ்சக்
கரந்து கோடலே நன்று; இனி நின்றது என், கழறி?" (6682)

Koviloor Digital Library

(புரத்தல்-பாதுகாத்தல்; கோடல்-கொள்ளுதல்/பெற்றுக்கொள்ளுதல்; பொருது-போர்செய்து; துரந்து-அழித்து; எஞ்ச-குறைவுறுமாறு; கழறுதல்-இடித்துக்கூறுதல்; கரந்து-கவர்ந்து)

''ஒரு பொருளை ஒருவரிடமிருந்து பெறவேண்டுமேயானால், ஒன்று அவர்களைப் பாதுகாத்து, அதற்குக் கைம்மாறாக அவர்களிடமிருந்து அப்பொருளைப் பெற்றுக்கொள்ளலாம். அல்லது ஒருவரை வென்று, அந்த வெற்றியினால் உண்டாகிய புகழால், அந்தப்பொருளை அவரிட மிருந்து பெற்றுக்கொள்ளலாம்; அல்லது ஒருவருடன் போரிட்டு, அவர்களை வென்று, அவர்களைத் துரத்திவிட்டு அந்தப்பொருளைக் கைப்பற்றிக் கொள்ளலாம். இந்த முறைகளெல்லாம் பண்டைக் காலத்தி லிருந்தே தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகின்றன. எனினும், நான் இவற்றிற்கு மாறாக, ஒரு பொருளை ஒருவரிடம் அன்புடன் வேண்டிக் கேட்டுப் பெறலாம் என்று கருதி, வருணனிடம் வழிவிடுமாறு கேட்டேன். அவன் தரமறுக்கிறான். அபபடி இரந்து பெறுவதைவிட, இயற்கைக்கும் தருமநெறிகளுக்கும் மாறாக, அவை தாழ்வுறும்படி, நமக்கு வேண்டிய அந்தப்பொருளை அவனைக் கேட்காமலேயே கவர்ந்து கொள்ளுதலே சரியானதாகும் போலும்! எனவே அவனை இப்பொழுது இடித்துரைப்ப தால் என்னபயன் விளைந்து விடப்போகிறது?'' என்று சினந்து கேட்கிறான் இராமபிரான்.

புரந்துகோடல் சாமஉபாயம், புகழொடு கோடல் பேத உபாயம்; இரந்து கோடல் தான உபாயம் என்க. துரந்து கோடல் தண்ட உபாயம்; ஆனால் இங்கே சாம, பேத, தான, தண்டம் எதுவுமே பலிக்கவில்லை. எனவே நாம் கவர்ந்து செல்லுதலே சரியானதென்று திருமாலின் அவதாரமான இராம பிரானே கருதத் துவங்குகிறான் என்பதை நினைக. இரந்துகோடலில் கரந்துகோடலே நன்று என்பதை ஒரு படிப்பினையாகக் கொள்ளலாம், என்பதாஇப்பாடலின்கருத்து? அல்ல; தம்மிடம் ஒன்றைப்பெறும்ஆற்றல் இருக்கும்போது தம்மினும் தாழ்ந்தவரிடம் போய் இரத்தல் தேவையற்றது என்பதே கருத்து. இராவணன் சீதாதேவியை புரந்தும் கோடவில்லை; புகழொடும் கோடவில்லை; பொருது துரந்தும் கோடவில்லை; இரந்தும் கோடவில்லை; இயற்கையும் தருமமும் எஞ்சக் கரந்தே கோடினான்' என்பதை இங்கே ஒப்பிட்டு நோக்குதல் இலக்கிய இன்பம் பயக்கும்.

12. "கானிடைப் புகுந்து, இருங்கனி காயொடு நுகர்ந்த
ஊனுடைப் பொறை உடம்பினன்" என்று கொண்டு, உணர்ந்த
மீனுடைக் கடல்பெருமையும், வில்லொடு நின்ற
மானுடச் சிறுதன்மையும், காண்பரால், வானோர். (6683)

(இரும்-பெரிய/பெருமை நிறைந்த; ஊன்-தசை; நுகர்தல்-உண்ணுதல்; பொறை-பாரமான/பருத்த; உணர்ந்த-கருதிய; வானோர்-தேவர்கள்; காண்பர்-கண்டுதெளிவர்)

Koviloor Digital Library

''நாட்டை விட்டுத்துரத்தப்பட்டுக்காட்டுக்குவந்து, பெரிய பழங்களையும், காய்களையும் உண்டு வாழ்கின்ற, தசையினால் இயன்ற, பாரமுடைய பருத்த உடம்பைக்கொண்டவன் தானே இந்த இராமன்'' என்று என்னைக் கேவலமாகக் கருதிக் கொண்டிருக்கின்றவனான, மீனையுடைய கடலுக்குத் தலைவனான வருணனின் பெருமையையும், வேறெந்தப் படைக்கலனுமில்லாமல் வில்லை மட்டுமே கையில் ஏந்திக்கொண்டு நிற்கின்ற இந்த மனிதனின் சிறுமையையும், இமையாநாட்டம் கொண்ட தேவர்களே காண்பார்களாக!'' என்று விரக்தியில், மனம் வெதும்பிக் கூறுகிறான் இராமபிரான்.

'பொறை' என்ற சொல்லுக்கே சுமை என்ற பொருளைத்தவிர உடம்பு என்ற ஒரு பொருளும் உண்டு; பொறை உடம்பு என்பது ஒரு பொருட் பன்மொழியாகவும், கொள்ளலாம். வருணன்தான் மீன்களையும், திமிங் கலங்களையும், மற்றும் கடல்சார் விலங்குகளின் உணவையும் உண்டு வாழ்பவன். அசைவ உணவுக்காரன், எனக்கு வலிமை அதிகம்; இராமன் வெறும் காயையும் கனியையும் உண்ட தசைகளால் இயன்ற பருத்த உடம்பையுடையவன். சைவ உணவுக்காரன். அவன் என்னைவிட வலிமையில் குறைந்தவன் என்று இகழ்வாகக் கருதியிருக்கக்கூடும் என்று இராமபிரான் கற்பனைசெய்து கொள்ளுகிறான்.

தேவர்களைக் காட்டிலும் மனிதர்கள் பெருமையிற் குறைந்தவர்கள் என்பது வருணன் கருத்து என்று இராமபிரான் கூறுகிறான் என்க.

13. ''ஏதம் அஞ்சி, நான் இரந்ததே, 'எளிது' என இகழ்ந்த
ஓதம் அஞ்சினோடு இரண்டும், வெந்து ஒரு பொடிஆக,
பூதம் அஞ்சும் வந்து அஞ்சலித்து, உயிர்கொண்டு பொரும,
பாதம் அஞ்சலர் செஞ்செவே படர்வர், என்படைஞர்'' (6684)

(ஏதம்-தீமை/குற்றம்; ஓதம்-கடல்; அஞ்சினோடு இரண்டு-ஏழு; பொடி-துகள்; அஞ்சலித்தல்-கைகூப்பி வணங்குதல்; பொருமுதல்-அழுதுதேம்புதல்; படைஞர்-சேனைவீரர்கள்/வானரர்கள்; செஞ்செவே-நேராக/செம்மையாக; படர்தல்-நடந்துசெல்லுதல்; இகழ்தல்-அவமதித்தல்)

''என்னுடைய வில்லைக்கொண்டு அம்பு எய்து இக்கடலை வற்றச் செய்தால், அதிலுள்ள கடல்வாழ் உயிரினங்களெல்லாம் அழிந்து போகுமே என்ற கருத்தை மனத்தில்கொண்டு, அந்தத் தீமையை, குற்றத் தைச் செய்யக்கூடாது என்று எண்ணித்தான் நான் கடலரசனை இரந்து வேண்டினேன்; ஆனால் அவன் இந்த இராமன் மிக எளிமையானவன், என்னை ஒன்றும் செய்யமுடியாது என்று கருதி, இங்கு வாராது, என்னை அவமதித்து அலட்சியம் செய்துவிட்டான்; எனவே இந்த ஏழுகடல்களும் வற்றி, வெந்து அழிந்து, தூளாகிப்போகுமாறு இப்போது செய்வேன்.

Koviloor Digital Library

கடலரசனுக்கு ஏற்பட்ட ஆபத்து, தங்களுக்கும் வந்துவிடுமோ என்று அச்சம்கொண்டு ஐந்துபூதங்களும் நிலம், நீர், காற்று, வான், நெருப்பு ஆகியவையெல்லாம் என்னை வந்தடைந்து கைகூப்பி வணங்கி, தங்கள் உயிருக்கு எந்த ஆபத்தும் வரக்கூடாது என்று கூறி அழுது தேம்ப; அப்பொழுது என்னுடைய படைவீரர்களாகிய வானரச் சேனையினர், தங்கள் பாதங்களுக்கு ஊறு நேருமே என்று அஞ்சாமல், வற்றிப்போன கடல்மண்ணில் தங்கள் கால்களால் நேராகநடந்து கடலைக்கடந்து இலங்கையை நோக்கிச் செல்லுவார்கள்'' என்று சூளுரைக்கிறான் இராமபிரான்.

14. ''மறுமை கண்ட மெய்ஞ்ஞானியர் ஞாலத்து வரினும்,
வெறுமை கண்டபின், யாவரும் யார்என விரும்பார்;
குறுமை கண்டவர் கொழுங் கனல் என்னினும் கூசார்;
சிறுமை கண்டவர் பெருமைகண்டு அல்லது தேறார்'' (6685)

(மறுமை-முக்தி/வீடுபேறு; ஞாலம்-நிலவுலகு; வெறுமை-சிறப்பியல்பு இல்லாமை; குறுமை-குறியவர்; கொழும்-செழிப்பான; தேறுதல்-தெளிதல்; கூசுவது-ஒடுங்குவது/நாணுவது)

''வீடுபேறு பெற்று முக்தியடைந்த உண்மையான பரம தத்துவ ஞானிகள் மீண்டும் இவ்வுலகுக்கு வரநேர்ந்தாலும், அவர்களிடம் தாம் விரும்பும் ஏதாவது சிறப்பியல்புகள் இருந்தால்தான் இவ்வுலகத்தவர் மதிப்பர். அவ்வாறில்லையெனில், 'இவர்யார்' என்றுகூட அறிந்து கொள்ள விரும்பமாட்டார்கள்; அதுபோல உருவத்தில் சிறியவர் களாகவும், ஞானத்திலும், ஒழுக்கத்திலும் செழித்த நெருப்புப் போன்ற வர்களாக இருந்தாலும் அவர்களிடம் அடங்கி ஒடுங்கிப் பணிவுடன் நடக்கமாட்டார்கள். இவ்வுலகத்தவர், சிறியவர்களாய் இருப்பவரிடத்தும் பெருமையை நேரில் கண்கூடாகக் கண்டால் அல்லது அவர்கள் திறமை பற்றித் தேர்ந்து தெளியமாட்டார்கள்'' என்று உலக இயல்பு பற்றிச் சினந்து கூறுகிறான் இராமபிரான்.

'உருவுகண்டு எள்ளாமைவேண்டும்' என்பது ஒருபழமொழி. 'சிறியவர் என்று இகழ்ந்து, நோவு செய்யன செய்யல்' என்பது சுக்கிரீவனுக்கு இராமபிரான் கூறிய அறிவுரை என்பதையும் இங்கு நினைவுகூர்க. 'எளியாரை எள்ளாதார் இல்' என்பதும் ஒருபழமொழியே; சிறுமைத் தோற்றத்தைத் தன் கண்களால் கண்டவர்கள், அவர்களது செய்கையால் பெருமைநிறைந்த செய்கையைக் கண்கூடாகக் கண்டால் அன்றி, அவர்களை உயர்ந்தோர் என்று ஏற்றுத் தெளியமாட்டார்கள் என்பதாம்.

Koviloor Digital Library

15. இலக்குவன் அம்பினைக் கொடுத்தல்

திருதி என்பது ஒன்று அழிதர, ஊழியில் சினவும்,
பருதி மண்டிலம் எனப்பொலி முகத்தினன், பலகால்,
'தருதி வில்' எனும் அளவையில், தம்பியும், வெம்பிக்
குருதி வெங்கனல் உமிழ்கின்ற கண்ணினன் கொடுத்தான். (6686)

(திருதி-மனஅடக்கம்/தைரியம்; அழித்ர-இல்லையாக/குறைந் திருக்க; பருதி-சூரியன்; பலகால்-பலமுறை; வெம்பி-வெதும்பி)

இராமபிரான் முதலில் வருணனை இரந்து வழி தருமாறு கேட்டான். ஏழுநாள் தவமிருந்தான்; வருணன் வரவில்லை. எனவே சீற்றம் கொண்டான், அதுவரை அவனிடமிருந்த மனவடக்கம் இப்போது இல்லையாகிப் போனது, ஊழிஇறுதிக் காலத்தில் சீற்றம் கொள்ளும் சூரிய மண்டலத்தைப் போலப் பொலிந்து விளங்குகின்ற முகத்தை உடைய வனாய், தம்பி இலக்குவனை நோக்கி, 'வில்லைக்கொடு, வில்லைக் கொடு' என்று பலமுறை கேட்டான். பலமுறை கேட்ட பின்னால் மறுக்கமுடியாமல், இலக்குவனும், மனம் வெதும்பி, வருணன்மேல் சீற்றம்கொண்டு கண்களில் இரத்தமும், கொடிய நெருப்பும் வெளிப்பட, வில்லையும் அம்பையும் இராமபிரானிடம் கொடுத்தான்.

'திருதி' என்பது வடசொல். மனஅடக்கம் என்பது பொருள். இராமபிரான் பலமுறை கேட்டபின்தான் இலக்குவனும் மனம் வெதும்பி, வில்லை இராமபிரானிடம் கொடுக்கிறான். காரணம் இராமபிரானின் இந்தச்செயலால் உலகத்திற்கு ஏற்படப்போகின்ற தீய விளைவுகளை நன்கு உணர்ந்தவன் இலக்குவன். எனவேதான் வில்லைத் தரத் தயங்கினான் என்க. இராமபிரான் பலமுறை வில்லைக் கேட்டான் என்பதால் இராமபிரான் வருணனுக்குப் பலமுறை வாய்ப்பு அளித்திருக் கிறான்என்பது புலப்படுகிறது. இராமபிரான்வேண்டுகோளுக்கு இணங்கி வருணன் வரவில்லையே என்ற கோபம் இலக்குவன் முகத்திலும் தெரிகிறது என்று கூறும் கவிஞனின் கவித்திறம் நோக்குக. வருணனின் ஆணவத்தைச் சிதைக்கவேண்டும் என்பதே இராமபிரானின் நோக்கம் என்பதை நினைவிற் கொள்க. அளவு கடந்த சீற்றம் எழுமாயின் , மன வடக்கம்காணாமல்போகும் என்பதை உணர்க. மனத்துயரால் இலக்குவன் கண்கள் குருதி உமிழ்ந்தன; சினக்குறிப்பால் கனல் உமிழ்ந்தன என்க.

16. வாங்கி வெஞ்சிலை, வாளிபெய் புட்டிலும், மலைபோல்
வீங்கு தோள்வலம் வீக்கினன்; கோதையை விரலால்
தாங்கி, நாணினைத் தாக்கினன்; தாக்கிய தமரம்,
ஓங்கு முக்கணான் தேவியைத் தீர்த்துளது ஊடல். (6687)

Koviloor Digital Library

(வாளி-அம்பு; புட்டில்-அம்பறாத்தூணி; வீங்கு-பருத்துள்ள; வீக்குதல்-கட்டிக்கொள்ளுதல்; கோதை-உறை; தமரம்-நாண்ஒலி; ஓங்கு-உயர்ந்த; முக்கணான்-சிவபெருமான்; ஊடல்-பிணக்கு)

அவ்வாறு இலக்குவன் கொடுத்த கொடிய வில்லைத் தன் கையில் வாங்கிக்கொண்டு, அம்பறாத்தூணியை, தன் மலைபோன்று பருத்த வலிமையானவலத்தோளில், கட்டிக்கொண்டான். கைக்குஅணியப்படும் உடும்பினாலான தோலாலாகிய உறையை விரலில் மாட்டிக்கொண்டான்; வில்லை நாண் ஏற்றித் தாக்கினான்; அவ்வாறு தாக்கிய நாணின் ஒலி உயர்ந்த கையிலை மலையில் மூன்று கண்களையுடைய சிவபெருமானுடன் பார்வதி கொண்டிருந்த ஊடலைத் தீர்த்தது.

'வாளி பெய் புட்டில்' என்பது அம்பறாத்தூணியைக் குறித்தது; அம்பாறத்தூணி வலதுதோளில்தான் மாட்டப்பட்டிருக்கும் என்பது புலனாகிறது. கோதை என்பது கோதா என்ற வடசொல்லின் திரிபு. கோதா என்ற சொல்லுக்கே உடும்பு என்பது பொருள். அது இங்கே உடும்பின் தோலினாலான கையுறைக்கு ஆகி வந்தது. இவன் நாணேற்றிய ஒலியினால், கயிலைமலையில் சிவபெருமானுடன் ஊடல் கொண்டிருந்த பார்வதிதேவி, அச்சத்தால் அவனைத் தழுவிக்கொண்டாள். எனவே அவர்களுக்குள் இருந்த ஊடல் தீர்ந்துபோனது என்பதாம். இவ்வாறே இராவணன் கையிலை மலையைப் பேர்த்தெடுக்க முயன்றபோது, உமையம்மை அச்சத்தால், சிவபெருமானைத் தழுவிக்கொண்டாள் என்கிறது உத்தரகாண்டம் வரையெடுத்த படலம். 'ஊடலை மறந்து, உமைமடந்தை அரனைத் தனம் உறத் தழுவினாள்' என்பது உத்தரகாண்டம். இதை 'வலிய அணைந்த சுகம்' என்கிறது அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்து. 'வெருவிய வெற்பரையன் பாவை, பெருமான் அணி ஆகம் ஆரத் தழுவினாள்தன்முன்தணியாத ஊடல்தணிந்து' என்பது தண்டியலங்காரம்.

17. இராமபிரான் அம்பினை எய்தல்

மாரியின் பெருந் துளியினும் வரம்புஇல, வடித்த
சீரிது என்றவை எவற்றினும் சீரிய, தெரிந்து,
பார்இயங்கு இரும்புனல் எலாம், முடிவினில் பருகும்
சூரியன் கதிர் அனையன, சுடுசரம் துரந்தான். (6688)

(மாரி-மழை; வரம்பு-அளவு; வடித்த-கூர்மை செய்யப்பட்ட; சீர்-சிறப்பு; பார்-நிலம்; இயங்குதல்-பரவியிருத்தல்; முடிவு-ஊழி இறுதி; அனையன-போன்றன; தெரிந்து-ஆராய்ந்து தேர்ந்து; துரத்தல்-செலுத்துதல்)

மழையின் மிக்க தாரையை விடவும் அளவற்ற, கூர்மையான, சிறப்பானவை என்று கூறப்படுகின்றவற்றுள் எல்லாம் சிறப்பானதும், இந்த

Koviloor Digital Library

உலகத்தில் பரவியுள்ள எல்லாக் கடல், ஆற்றுநீர் எல்லாவற்றையும், ஊழியிறுதிக்காலத்தில் பருகி வற்றச்செய்யும் பன்னிரண்டு சூரியர்களின் கிரணங்கள் போன்றவையுமான, கொதிக்கும் அம்புகளை, இராமபிரான் அந்தக் கடலின் மீது செலுத்தினான்.

செலுத்திய அம்பின் மிகுதி 'மாரியின் பெரும் தூளியினும் வரம்பில' எனப்பட்டது. அதன் கூர்மை கொல்லன் உலையில் வடிக்கப்பெற்ற வாளிக்கு உவமிக்கப்பட்டது. சிறந்தவை என்று கூறப்படுபவை அனைத்திலும் சிறந்தவை என்று அவ்வம்பின் பெருமை புலப்படுத்தப்பட்டது; ஏழு மராமரத்தையும் ஒரே அம்பு எவ்வாறு துளைத்துச் சென்றதுவோ, அதுபோல இவ்வுலகில் இருக்கும் ஏழு கடல்களையும் மற்றுமுள்ள ஆற்றுநீர், ஊற்றுநீர், குளம், வாய்க்கால் என்ற எல்லா இடத்திலும் பரவியிருக்கும் நீர் என்று சொல்லப்படுபவை எல்லாவற்றையும் வற்றச் செய்தது என்பது 'பார் இயங்கும் புனல் எலாம்' எனப்பட்டது. ஊழியிறுதிக்காலத்தில் எப்படிப் பனிரெண்டு சூரியர்களும் தோன்றித் தம் வெப்பக்கதிர்களால் இவ்வுலகையே அழிப்பரோ அதுபோல இவ்வம்பும் வெப்பம் உடையது என்பது 'முடிவினில் பருகும் சூரியன் கதிர் அனையன சுடுசரம்' எனப்பட்டது என்க. இவற்றுக்கெல்லாம் மேலே அவன் தொடுத்த அம்புகள் அவனால் ஆராய்ந்து தேர்ந்தெடுக்கப்பட்டன என்பதைக் குறிக்க 'தெரிந்த சுடுசரம்' என்றார் என்க.

பொதுவாக மழை என்போம், உரிய காலத்தில் பெய்யும் மழையை 'மாரி' என்பது கவிமரபு. இந்த அம்புக்கு எத்தனை அடைமொழிகள் பாருங்கள், வரம்பில, வடித்த, சீரிய, கதிர்அனைய, தெரிந்து எடுத்த சுடுசரம் என்பனவெல்லாம் அவனுடைய பெருஞ் சீற்றத்தைக் குறித்து நின்றன என்க.

18. பெரிய மால்வரை ஏழினும் பெருவலி பெற்ற,
வரிகொள் வெஞ்சிலை வளர் பிறையாம் என வாங்கி,
திரிவ, நிற்பன, யாவையும் முடிவினில் தீக்கும்
எரியின் மும்மடி கொடியன சுடுசரம் எய்தான். (6689)

(வரி-கட்டமைந்த; வாங்கி-இழுத்து; திரிவ-இயங்குவன; முடிவு-ஊழியிறுதிக்காலம்; எரி-நெருப்பு; மும்மடி-மூன்று மடங்கு; வலி-வன்மை)

பெரிய, வலிமைமிக்க மலைகள் என்று கூறப்படுகின்ற ஏழுமலைகளைக் காட்டிலும் மிக்க வலிமை பெற்றனவும், கட்டமைந்த கொடிய வில்லில், வளர்பிறையைப் போல அதன் நாணை இழுத்து வளைத்து, இவ்வுலகில் உள்ள நிலைத்திணை, இயங்குதிணைப் பொருள்கள், உயிரினங்கள்அனைத்தையும், ஊழிமுடிவுக்காலத்தில் எரித்து அழிக்கின்ற வடவாமுகாக்கினி என்ற நெருப்புக் கோளத்தைவிடவும், மூன்று மடங்கு

Koviloor Digital Library

கொடியனவான, கொதிக்கின்ற அம்புகளை இராமபிரான் கடலின்மீது செலுத்தினான்.

பொதுவாக அஷ்டகுல மலை என, உயர்ந்த மலையை எட்டாகக் கூறுவது வழக்கம். கம்பன் சில இடங்களில் ஏழு மலைகள் என்றே கூறுவதைக் காணலாம். இங்கு கூறப்படுகின்ற ஏழு மலைகளாவன, கயிலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி என்பனவாம். இதில் மேருமலை சேராததைக் காண்க. சில இடங்களில் இதற்குப் பதிலாக கந்தமாதனத்தைச் சேர்த்துக் கூறுவதும் உண்டு. முன்பும் கம்பன் விசுவாமித்திரர் கூற்றாக, பாலகாண்டம் கடிமணப்படலத்தில் ''நச்சுடை வடிக்கண் நங்கை இவளென்றால், இச்சிலை கிடக்க ஏழு மலையும் இறானோ!'' என்று கூறுவதையும் இங்கே நினைவுகூர்க. 'வளர் பிறையாம் என வாங்கி' என்பது, வில்லில் நாணினை இழுக்கும்போது தோள்வரையிலும் இழுக்கவேண்டும். அப்பொழுது அதன் தோற்றம் எட்டாம் நாள் சந்திரனைப்போன்ற தோற்றம் தரும் என்பதை இங்கே குறிக்கிறார் என்க. 'திரிவ, நிற்பன' என்பது சர, அசரப்பொருள்களைக் குறிக்கும். நெருப்பும்கூட யுக முடிவுக்காலத்தில் உலகை அழிக்கும் என்று கூறும் வழக்கு உண்டு. எனவே வடவாமுகாக்னி என்று பொருள் உரைக்கப்பட்டது. எட்டாம்நாள்சந்திரனைப் பூர்வபட்சச் சந்திரன் என்றும் அஷ்டமிச்சந்திரன் என்றும் கூறுவர் வடநூலார்.

19. கடல் உற்ற நிலை

மீனும் நாகமும் விண்தொடும் மலைகளும் விறகா,
ஏனை நிற்பன யாவையும், மேல் எரிஎய்த,
பேனநீர் நெடுநெய் என, பெய்கணை நெருப்பால்,
கூனை அங்கியின் குண்டம் ஒத்தது, கடற்குட்டம். (6690)

(எய்தல்-படுதல்; பேனம்-நுரை; பெய்-எய்த/செலுத்திய; குட்டம்-பள்ளம்; அங்கி-அக்னி/நெருப்பு; கூனை-பெரியமிடா/வளைந்த; குண்டம்-யாககுண்டம்; நெடுமை-நிறைந்த)

கடலில் இருக்கும் மீன்களும், பாம்புகளும், வானளாவ ஓங்கி நிற்கும் மலைகளும் விறகாகவும், மற்றும் கடலில் உள்ள மரம், செடி, கொடிகள் எல்லாம் அதன்மேல் வெந்து எரியோங்கவும், நுரையொடு கூடிய கடல்நீர், நிறைந்த நெய்யாகவும், இராமபிரான் தொடுத்த அம்பு நெருப்பாகவும் அமைய, அந்தக்கடல் என்னும் பள்ளம், யாகத்திற்குப் பயன்படுத்தும் வளைந்த அக்னிகுண்டம் போல் தோற்றம் பெற்று விளங்கியது.

கடற்குட்டம் அக்னிகுண்டம் போலத் தோற்றமளித்தது. அந்த அக்னிக் குண்டத்திற்கு விறகாக, மீன்களும், நாகங்களும், மலைகளும் விளங்கின; நுரையோடு கூடிய கடல்நீர், நிறைந்த நெய்யாக அமைந்தது; மரம் செடிகொடிகள் நெருப்பில் எரிகின்ற பொருள்களாக அமைந்தன

Koviloor Digital Library

என்பதாம். கடல்மீது உள்ள வெறுப்பாலும், சினத்தாலும் அதனைக் குட்டம்-பள்ளம் என்று கூறியது, சாதாரண மனிதன் கூற்றுப்போல் அமைத்த கவிஞனின் திறம் நோக்குக. பொதுவாக அக்னிகுண்டம் நாற் புறமும் வளைத்து அமைக்கப்பட்டிருக்கும். எனவே 'கூனை அங்கியின் குண்டம்' என்றார் என்க. 'பேனம்' என்ற வடசொல்லுக்கு நுரை என்பது பொருள். யாக குண்டத்தில் இருக்கும் விறகு, நெய், நெருப்பு முதலியன வற்றைக் கடலில் இருக்கும் மீன், நாகம், மலை, மரம், செடிகொடி போன்றவற்றுக்கே உவமை கூறியதை நோக்குக.

20. பாழி வல்நெடுங் கொடுஞ்சிலை வழங்கிய பகழி,
ஏழு வேலையும் எரியொடு புகை மடுத்து ஏகி,
ஊழி வெங்கனல் கொழுந்துகள் உருத்து எழுந்து ஓடி,
ஆழி மால் வரைக்கு அப்புறத்து இருளையும் அவித்த. (6691)

(பாழி-வலிமை; நெடும்-நீண்ட; கொடு-வளைந்த; சிலை-வில்; பகழி-அம்பு; மடுத்து-நிரப்பி; ஆழிமால்வரை-சக்கரவாளமலை; அவித்த-நீக்கின; உருத்தல்-உருவு கொள்ளுதல்; வழங்கிய-செலுத்தப்பட்ட/எய்த; எரி-நெருப்பு; கொழுந்துகள்-தீஜ்வாலை)

இராமபிரான் செலுத்திய மிக்க, வலிய, பெரிய, நீண்ட, கொடிய, வளைந்த வில்லிலிருந்து புறப்பட்ட அம்புகள், உலகைச் சுற்றியுள்ள ஏழு கடல்களையும் நெருப்போடு புகையையும் நிரப்பிக்கொண்டு புறப்பட்டுச் சென்று, ஊழிக்காலத்துக் கொடிய நெருப்பின் சுவாலைகள்போல் உருக்கொண்டு, சினந்து எழுந்து ஓடி, சக்கரவாளகிரிக்கும் அப்பால் நெருங்கி அடர்ந்துள்ள இருட்டையும் நீக்கின.

இராமபிரானது வில்லுக்கு எத்தனை அடைமொழிகள் பாருங்கள். பாழி, வல், நெடும், கொடுசிலை என்றார். 'ஆழிமால்வரை' என்பது சக்கரவாளகிரியைக் குறிக்கும். இது நேமிகிரி எனவும், திகிரிவரை எனவும் வழங்கப்பெறும். ஏழுகடல்களுக்கு அப்பால் சக்கரவாளகிரியும், அதற்கும் அப்பால் இருள் சூழ்ந்த இடமும் இருப்பதாகக் கூறுவது ஒரு புராணக்குறிப்பு.

21. மரும தாரையின் எரியுண்ட மகரங்கள் மயங்கிச்
செரும, வானிடைக் கற்பக மரங்களும் தீய,
நிருமியா விட்ட நெடுங்கணை பாய்தலின், நெருப்போடு
உருமு வீழ்ந்தெனச் சென்றன, கடல்துளி உம்பர். (6692)

(நிருமியா-நிருமி/நினைத்து/எண்ணி/சங்கற்பித்து; உருமு-இடி; மருமதாரை-உயிர்நிலை/ரகசிய உறுப்புக்கள்; மகரங்கள்-மகரமீன்கள்; செருமுதல்-நெருங்குதல்; வான்-விண்ணுலகு; துளி-நீர்த்துளிகள்; உம்பர்-ஆகாயம்/விண்)

Koviloor Digital Library

இராமபிரான் தன் மனத்தில் வருணனை நினைத்துச் சங்கற்பித்துக் கொண்டு செலுத்திய நீண்ட அம்புகள் கடலை ஊடுருவிப் பாய்ந்ததனால், நெருப்புடன் இடி விழுந்தாற்போலக் கடலில் உள்ள மகரமீன்களின் உயிர்நிலையில் நெருப்புப் பற்றி எரியவும், அதனால் அவை மயங்கிக் கடலின் மேற்பரப்புக்கு வந்து நெருங்கவும், விண்ணுலகத்திலுள்ள கற்பக மரங்களும், அந்நெருப்புப் பட்டுத் தீய்ந்துபோகவும், கடலினின்றும் எழுந்த வெப்பம் மிக்க கடல்நீர்த்துளிகள் விண்ணுலகை அடைந்தன.

'மருமதாரை' என்பது மர்மஸ்தானம், உயிர்நிலை, மறைவிடம், ரகசிய உறுப்புக்கள், உயிர் நிலைபெற்ற இடம்; என்ற பொருளைத்தரும். மருமதாரை என்ற சொல்லுக்கே மறைவிடம் என்ற ஒரு பொருளும் உண்டு. அந்நக்கடலின் அடிப்பகுதியில் மறைந்து வாழும் மகரமீன்கள் நெருப்பொடு இடி வீழ்ந்ததுபோல் அம்பு பாய்ந்ததால் எரியுண்டு மயங்கி கடலின் மேற்பரப்பிலே நெருங்கிப் பரந்தன என்றும் பொருள் கொள்ளலாம். இராமபாணம் கடலின் அடியிலும், விண்ணின் மேலும் சென்று தாக்கியது என்க. கடலில் மகரமீன்கள் மிகுந்து காணப்படுவதால் கடலுக்கு 'மகராலயம்' என்ற ஒரு காரணப்பெயரும் உண்டு. பொதுவாக இடியினால் தாக்கப்பட்டுத் தாவரங்களும் மரங்களும் எரிந்துபோவது உண்டு, இங்கே இராமபாணத்தால் எழுந்த நெருப்பினால் தாக்கப்பட்டு, விண்ணுலகத்திலுள்ள கற்பக மரங்களே எரிந்துபோனது என்கிறான் கவிஞன்.

22. கூடும் வெம்பொறிக் கொடுங்கனல் தொடர்ந்தெனக் கொளுந்த,
ஓடும் மேகங்கள் பொரிந்து இடை உதிர்ந்தன; உம்பர்
ஆடும் மங்கையர் கருங்குழல் விளர்த்தன; அளக்கர்க்
கோடு தீந்து எழ, கொழும்புகைப் பிழம்பு மீக்கொள்ள. (6693)

(கூடும்-கூடிய; கொளுந்த-கொளுத்த/எரிக்க; இடை-நடுவில்; கோடு-வரம்பு/கரை; நீத்து-நீங்கி; பிழம்பு-படலம்/திரட்சி; மீக்கொள்ள-மேல் நோக்கிச் செல்ல; உம்பர்-விண்ணுலகம்; குழல்-கூந்தல்; விளர்த்தல்-வெளுத்தல்; அளக்கர்-கடல்; தொடர்ந்தன-இடைவிடாது)

இராமபிரான் செலுத்திய அம்பினால் கடல்நீர் கொதித்து கடலின் கரையின் வரம்பும் தீப்பற்றிக் கொழுந்துவிட்டு எரியலாயிற்று. அதனின்றும் கிளம்பிய வெப்பம்மிக்க பொறிகள் கூடிய கொடுமையான நெருப்பு இடைவிடாது கொளுத்துவதால், வானிலே ஓடுகின்ற மேகங்கள் பொரிந்துபோய் நிலத்தில் பொடிப்பொடியாய் உதிர்ந்து விழுந்தன, அந்நெருப்பினால் எழுந்த செழுமையான அடர்ந்த புகைப்படலம் விண்ணின் மேற்செல்ல, அங்கே நடனமாடிக்கொண்டிருந்த அரம்பை யரின் கரிய கூந்தலும் வெளிர் நிறம் பெற்று வெளுத்துப்போயிற்று.

Koviloor Digital Library

இராமபிரான் தொடுத்த அம்பினால் எழுந்த நெருப்பால் மேகங்கள் சிதறிக்கீழே உதிர்ந்தன. அந்நெருப்பால் ஏற்பட்ட புகைத்திரட்சியால், வானமங்கையரின் கரிய கூந்தல் வெளுத்துப் போயின என்பதாம். இது உயர்வு நவிற்சி அணி.

23. நிமிர்ந்த செஞ்சரம் நிறம்தொறும் படுதலும், நெய்த்தோர்
உமிழ்ந்து உலந்தன மகரங்கள் உலப்புஇல; உருவத்
துமிந்த துண்டமும் பலபடத் துரந்தன, தொடர்ந்து
திமிங்கிலங்களும், திமிங்கிலகிலங்களும் சிதறி; (6694)

(செஞ்சரம்-சிவந்த அம்புகள்; நிறம்-மார்பு; உலப்புஇலா- அளவில்லாத; உமிழ்தல்-கக்குதல்; உலத்தல்-இறத்தல்/மடிதல்; உருவ-ஊடுருவ; பலபட-பலவாகும்படி; நிமிர்தல்-வளைவு இல்லாது இருத்தல்; நெய்த்தோர்-குருதி/இரத்தம்; நிமிர்ந்த-மேலோங்கி எழுந்த; துரந்தன-செலுத்தப்பட்ட; தொடர்ந்து-இடைவிடாது; துமிந்த-அறுபட்டன)

வளைதலில்லாத மேலோங்கி எழும் தன்மையுள்ள, நேரான, செம்மையான, சிவந்த இரத்தம் படிந்த வில்லானது இராமபிரானால் இடைவிடாது தொடர்ந்து ஏவப்பட்டதால், அவை கடலிலுள்ள மகரமீன்களின் மார்பிலும் உடலிலும் நேராகச் சென்று தைத்தன. எனவே அவை இரத்தத்தைக் கக்கிக்கொண்டு இறந்து மடிந்தன. அவற்றிற்கு ஓர் கணக்குக் கிடையாது, எண்ணற்ற மகரமீன்கள் அழிந்துபோயின. இராம பிரான் செலுத்திய பாணம் ஊடுருவிச்சென்றதனால் அங்கே வாழ்ந்திருந்த திமிங்கலங்களும், திமிங்கலங்களையே தின்று அழிக்கும் திமிங்கிலங் களும் பலப்பல துண்டுகளாக அறுபட்டுச் சிதறிப்போயின.

'செஞ்சரம்' என்பது பகைவரின் உதிரத்தில் தோய்ந்ததால் உண்டான இரத்தக்கறை படிந்த சிவந்த நிறம் கொண்ட அம்புகள் என்ற விரிந்த பொருளைத்தரும். தீயை உமிழ்வதால் சிவந்த அம்பு என்றும் கொள்ளலாம். நெய்த்தோர் என்பது நமக்குப் புதியசொல். இரத்தம், குருதி என்ற பொருளைத்தரும். கடலில் உள்ள மீன்களைத் தின்று வாழ்வது திமிங்கலம், அந்தத் திமிங்கலங்களையே தின்று வாழும் இயல்புடையன திமிங்கிலகிலங்கள் என்க.

24. நீறு மீச்செல, நெருப்பு ஏழ, பொருப்பு எலாம் எரிய
நூறும் ஆயிர கோடியும்; கடுங்கணை நுழைய,
ஆறு கீழ்ப்பட, அளறுபட்டு அழுந்திய அளக்கர்
சேறு தீய்ந்து எழ, காந்தின சேடன் தன் சிரங்கள். (6695)

(மீ-மேலே; பொருப்பு-மலைகள்; நுழைதல்-பாய்தல்; ஆறு-வழி; அளறு-சேறு; அளக்கர்-கடல்; சேடன்-ஆதிசேஷன்; காந்துதல்-வெதும்புதல்/ஒளிவீசுதல்; நீறு-சாம்பல்/வெந்துபோன துகள்)

Koviloor Digital Library

இராமபிரான் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான, கோடிக் கணக்கான, விரைவில் பாயும் அம்புகளைச் செலுத்துவதால் அது கடலில் புகுவதனால், அதனால் எழுந்த சாம்பலும், வெந்துபோன துகளும் ஆகாயத்தின்மேலே பறந்து செல்லவும், நெருப்பு ஓங்கி எழவும், மலைகள் எல்லாம் எரிந்துபோயின; கடலின் கீழும் அம்புகள் சென்றதனால் பாதாளத்திற்குச் செல்லும் வழியும் கீழ்ப்பட்டுத் தெரியலாயிற்று. கடலில் தண்ணீரும், மணலும், நெருப்புடன் கலந்து சேறாகிப்போயின. அதில் கடலில் அழுந்திக் கிடந்த சேற்றில் நெருப்புப்பட்டு அதுவும் தீய்ந்துபோக, பாதாளத்திற்கு அடியில் நின்றுகொண்டு இவ்வுலகத்தைத் தன் ஆயிரம் தலைகளால் தாங்கிக்கொண்டிருக்கின்ற ஆதிசேஷனின் தலைகள்கூட வெதும்பலாயின.

இராமபிரான் தொடுத்த கணையினால் பாதாளத்திற்குக் கீழே இருக்கும் ஆதிசேஷனின் தலைகளும் வெதும்பின; மேலே இருக்கின்ற மலைகளும் எரிந்துபோயின என்று, அவ்வம்புகளின் ஆற்றலைக் கூறியதாம்.

25. மொய்த்த மீன்குலம் முதல்அற முருங்கின, மொழியின்
பொய்த்த சான்றவன் குலம் என, பொருகணை எரிய;
உய்த்த கூம்புடை நெடுங்கலம் ஓடுவ கடுப்ப,
தைத்த அம்பொடும் திரிந்தன, தால மீன் சாலம். (6696)

(பொரு-போர்செய்கின்ற; மொழி-சொல்; மொய்த்த-நெருங்கிய/அடர்ந்த; குலம்-கூட்டம்; முதல்-அடி; உய்த்த-செலுத்தப்பட்ட; கலம்-மரக்கலம்; கடுப்ப-ஒப்ப; சான்றவன்-சான்றுகூறியவன்; சாலம்-வரிசை; தாலம்-பனை; முருங்குதல்-அழிதல்; கூம்பு-பாய்மரம்)

இராமபிரான் செலுத்திய, போர் செய்வதற்குரிய வலிய அம்புகள் பட்டுக் கடல் கொழுந்துவிட்டு எரிவதால், அங்கு நெருங்கி அடர்த்தி யாகவுள்ள சிறிய மீன்கூட்டங்கள், வழக்கில் பொய்சாட்சி சொல்லு கிறவன். குலத்தோடு அழிந்து போவதைப்போல, அடியோடு ஒழிந்து போயின; வரிசையாக நின்றுள்ள சற்று பெரிய பனைமீன்கள், தங்கள் முதுகில் தைத்த அம்புகளோடு, பாய்மரத்தை மேலே தாங்கிச் செல்கின்ற மரக்கலங்கள் போலக் கடலில் அங்குமிங்கும் ஓடித் திரிவதாயின. சிறுமீன்கள் அடியோடு அழிந்தன; பனைமீன்கள் குற்றுயிரோடு திரிந்தன என்பதாம்.

பொய்ச்சாட்சி சொல்லுபவனுக்கு விளையும் தீங்கு நரகத்திற்குச் செல்வதுதான் என்று முன்பு பரதன் கூற்றாகவும் நாம் கண்டதை இங்கு நினைவுகூர்க. பொய்சாட்சி சொன்னவன் நின்றால் நிழல்தரும் மரம்கூட வாடிப்போகும், எரிந்துபோகும் என்ற கருத்தைக் கொண்ட ஒரு பாடல் கலித்தொகையில் கிடைக்கிறது கேளுங்கள். 'கரிபொய்த்தான் கீழ் இருந்த மரம்போலக் கவின்வாடி, எரிபொத்தி, என்நெஞ்சம் சுடுமாயின் எவன்

Koviloor Digital Library

செய்கோ!' என்பது கலித்தொகை. கரி-சாட்சி. பனைமீன் என்பது கரியநிறமும் எட்டரை அங்குல நீளமும் உடையது என்பர்.

26. சிந்தி ஓடிய குருதி வெங்கனலொடு செறிய,
அந்தி வானகம் கடுத்தது, அவ் அளப்பஅரும் அளக்கர்,
பந்தி பந்திகளாய் நெடுங் கடுங்கணை படர,
வெந்து தீந்தன, கரிந்தன, பொரிந்தன, சிலமீன். (6697)

(குருதி-இரத்தம்; செறிதல்-நெருங்கியிருத்தல்; அளக்கர்-கடல்; வானகம்-வானம்; கடுத்தது-ஒத்தது; பந்தி-வரிசை; படர்தல்-செலுத்துதல்/செல்லுதல்/பாய்தல்)

இராமபிரான் வரிசைவரிசையாக நீண்டதூரம் செல்லத் தக்கதும், கொடியதுமான அம்புகளைச் செலுத்தியதால் அவை தைக்கப்பெற்று அந்த அளக்கற்கரிய பெருமையையுடைய கடலில் இருந்த சிலமீன்கள் பொரிந்துபோயின. அந்த மீன்களின் உடலிலிருந்து சிந்திப்பெருகி ஓடிய இரத்தம், வெம்மையான நெருப்புடன் நெருங்கித் தோன்றியதால் அந்த அளத்தற்கரிய கடலே, அந்தியில் தோன்றும் செவ்வானத்தைப்போல் தோற்றம் அளித்தது.

அந்தி வானகம் என்பது செக்கர்வானத்தைக் குறித்தது. பந்திபந்தி என்ற அடுக்கு பன்மை குறித்துவந்தது. மீன்கள் வெந்து படிந்திருந்ததையும் கவிஞன் தீந்தன, கரிந்தன, பொரிந்தன என்று வேறுபடுத்திச் சொல்லும் நயம் நோக்குக.

27. வைய நாயகன் வடிக்கணை குடித்திட, வற்றி,
ஐயநீர் உடைத்தாய், மருங்கு அருங்கனல் மண்ட,
கை கலந்து எரி கருங்கடல் கார்அகல் கடுப்ப,
வெய்ய நெய்யிடை வேவன ஒத்தன, சிலமீன். (6698)

(வையம்-உலகம்; வடி-கூரிய; ஐயம்-சிறிது; மண்டுதல்-நெருங்குதல்; மருங்கு-பக்கம்; கை-பக்கம்; அகல்-சட்டி/வாணலி; கடுப்ப-ஒத்துத் தோன்ற; வெய்ய-கொதிக்கின்ற; ஐயம்-சந்தேகம்/சங்கை; ஒத்தன-நிகர்த்தன)

உலகநாயகனாகிய இராமபிரான் செலுத்திய கூரிய அம்புகள், கடல்நீரைப் பருகிவிட்டதனால், அதுவற்றிப்போய்விட்டது. இப்போது அதில் நீர் இருக்கிறதா இல்லையா என்ற சந்தேகம் எழுந்தது. அதன் பக்கத்திலேயே அணைப்பதற்கரிய நெருப்பு மூண்டு எழுந்தது. எல்லாப் பக்கங்களிலும் ஒருசேர அவை பரவிச்சென்று எரிந்ததால், அந்தக்கரிய கடல், கரிய அகல்போல வாணலிச்சட்டியைப் போலவும், அதில் இருக்கின்ற சிறிது நீர் வெப்பம் பொருந்திய கொதிக்கின்ற நெய்யைப்

Koviloor Digital Library

போலவும் இருந்ததால், அந்தக் கடலில் இருக்கும் கொஞ்சமீன்களும் அந்த வாணலிச்சட்டியில் வெந்து கொண்டிருப்பதுபோல் தோன்றியது.

'ஐய' என்ற சொல் சந்தேகம் என்ற பொருளிலும், சிறிது என்ற பொருளிலும் பயன்படுத்தப்பட்டிருப்பதாகக் கொள்ளலாம். அந்தக் கரிய கடல், அகல்போன்ற வாணலிச்சட்டி; அதிலுள்ள சிறிதளவு நீர்தான் நெய்; அதில் வேகும் பண்டங்கள் மீன்கள், அம்பின் வெப்பத்தில் அந்தச் சட்டியில் அவை வெந்து கொண்டிருக்கின்றன. ஒரு அருமையான கற்பனை. 'கை கலந்து எரிகருங்கடல்' என்ற சொல்லாட்சியைச் சற்று உற்றுப்பாருங்கள். கடல்நீரில் நெருப்பு எரிகின்றது என்கிறான் கவிஞன். நீரில் நெருப்பு எரியுமா? எரியும்; எப்பொழுது தெரியுமா? பிரளயகாலத்தில் நீரை உண்பது நெருப்பு என்பது நூற்கொள்கை என்பதறிக.

28. குணிப்ப அரும்கொடும் பகழிகள், குருதிவாய் மடுப்ப,
கணிப்ப அரும் புனல் கடையுறக் குடித்தலின், காந்தும்,
மணிப்பரும் தடம் குப்பைகள் மறிகடல் வெந்து,
தணிப்ப அரும் தழல் சொரிந்தன போன்றன, தயங்கி. (6699)

(குணித்தல்-அளவிடுதல்/எண்ணுதல்; பகழி-அம்பு; மடுத்தல்-சேர்தல்/உட்புகுதல்; கணித்தல்-அளத்தல்; கடைஉற-முடிவு வரை/முழுவதும்; காந்துதல்-ஒளிவீசுதல்; குப்பைகள்-குவியல்கள்; தயங்குதல்-விளக்கம் பெறுதல்; மறிதல்-மடங்குதல்; தழல்-நெருப்பு; தணித்தல்-அவித்தல்/அணைத்தல்; வெந்து-கொதித்து)

இராமபிரானுடைய அளவிடற்கரிய கொடிய அம்புகள், இரத்தம் தோய்ந்த தமது முனைகளுடன் கடலைச்சென்று சேர்ந்ததால், எண்ணுதற் கரிய பெருகிய கடல்நீரை முற்ற முழுவதும் அவை பருகிவிட்டதனால், அந்த நீரின் கீழே ஒளிவீசுகின்ற இரத்தினங்கள் முதலிய கரியபெரிய குவியல்கள் எல்லாம், அலை மடங்கி வீசுகின்ற கடலே வெந்துபோய், அவிக்கமுடியாத நெருப்பை-தணலைச் சொரிந்தன போன்றிருந்தன.

'குணிப்ப', 'கணிப்ப' என்னும் இருசொற்களும் அளவிடுதல் என்ற ஒரே பொருளைத்தரும் எனக்கொள்க. கடல்நீர் முழுவதையும் இராம பாணங்கள் குடித்து முடித்துவிட்டதால், கடலின் அடியில்உள்ள இரத்தினங்களெல்லாம் சிவந்து ஒளிவீசித் திகழ்ந்தன. இது எப்படி இருக்கிறது என்றால், அந்தக்கடல் தானே கொதித்துப் போய் தன்மீது தணலைக்கொட்டிக்கொண்டதுபோல் விளங்கித்தோன்றிற்று என்கிறான் கவிஞன். 'கடைஉற' என்பது முற்றமுழுவதும் என்ற பொருளைத்தரும். கடல் அரிய இரத்தினங்கள், மாணிக்கக்கற்கள், சிப்பி, முத்து, பவளம் போன்ற அரிய நிதியங்கள் முதலியவற்றை தன்னிடத்தே கொண்டது என்பதால் கடலுக்கு 'இரத்தினாகரம்' என்ற ஒரு பெயரும் உண்டு என்பதறிக. நெருப்பு எரிந்தபின் தணல் எஞ்சி நிற்கும் அல்லவா? இங்கே

Koviloor Digital Library

கடல்நீரெல்லாம் இராமபாணம் குடித்துவிட்டது. அந்த அம்புகளாகிய நெருப்பினால், கடலில் எஞ்சி நிற்கக்கூடியவை அதன் அடியில் உள்ள சிவந்த இரத்தின, மாணிக்கக்கற்களே; அவை மேலெழுந்து ஒளிவீசித் திகழ்ந்தன. அது அந்தக் கடல் வெந்து தணல் பரப்பிக்கிடந்தாற் போன்று இருந்தது என்பதாம்.

29. எங்கும் வெள்ளிடை மடுத்தலின், இழுதுடை இனமீன்
சங்கமும் கறி, கிழங்கு என, இடைஇடை தழுவி
அங்கம் வெந்து, பேர் அளற்றிடை அடுக்கிய கிடந்த;
பொங்கு நல்நெடும் புனல் அறப் பொரித்தன போன்ற; (6700)

(வெள்ளிடை-வெற்றிடம்; இழுது-ரிஷபம்/கொழுப்பு/மாமிசம்; சங்கம்-சங்கு; தழுவி-பொருந்தி; அங்கம்-உடம்பு; அளறு-சேறு; பொங்குதல்-பொலிதல்; அற-வற்றும்படி; இனம்-கூட்டம்/திரள்)

இராமபாணத்தால் கடலிடம் எல்லாம் நீரேஇல்லாமல் வெற்றிடம் போல் ஆனதால், கொழுப்பை உடைய மீன் கூட்டங்களும், சங்குகளும், காய்கறி, கிழங்குகள்போல அங்கங்கே இடையில் பொருந்தியிருக்கும் காட்சி. அவை உடலெல்லாம் வெந்துபோய் பெரிய சேற்றினிடையில் ஒன்றன்மேல் ஒன்றாய் அடுக்கிவைத்திருப்பது போன்று கிடந்தன. பொலிந்து விளங்குகின்ற நல்ல பெருமையுள்ள கடல்நீரைச் சுத்தமாக வற்றும்படி செய்து அந்தக் காய், கிழங்குகளை வாணலியில் பொரித்து வைத்தது போலத் தோற்றமளித்தது.

'வெள்ளிடை' என்பது வெற்றிடத்தையும், 'இழுது' என்பது கொழுப்பையும், 'இனம்' என்பது கூட்டத்தையும் குறிக்கும். மீனுக்குக் காய்கறிகளும், சங்குகளுக்குக் கிழங்குகளும் உவமை என்க. மீன்களும் சங்குகளும் வெந்து கிடந்த காட்சி காய்கறிகளை வாணலியில் இட்டுப் பொரித்துவைத்த பொரியல்போன்ற தோற்றம் அளித்தது என்கிறான் கவிஞன். 'புனல்அற' என்பது நீர்ப்பசையின்றி, நீர்ப்பற்று சிறிதும் இல்லாது என்று பொருள்படும். காய் கிழங்குகளைப் பொரித்தால், அவை தம்மிடம் உள்ள நீர்ச்சத்தை நீக்கிவிடும் என்பது ஒரு விஞ்ஞானக் குறிப்பு.

30. அதிரும் வெங்கணை ஒன்றைஒன்று அடர்ந்து எரிஉய்ப்ப
வெதிரின் வல்நெடுங்கான் என, வெந்தன மீனம்;
பொதுவின் மன்னுயிர்க் குலங்களும் துணிந்தன பொழிந்த
உதிரமும் கடல்திரைகளும் பொருவன ஒருபால். (6701)

(அதிர்தல்-முழங்குதல்; அடர்ந்து-நெருங்கி/தாக்கி; எரி-நெருப்பு; உய்த்தல்-கக்குதல்/உமிழ்தல்; வெதிர்-மூங்கில்; நெடும்-நீண்ட; கான்-காடு; மீனம்-மீன்கள்; குலம்-தொகுதி/கூட்டம்; உதிரம்-இரத்தம்;

Koviloor Digital Library

ஒருபால்-ஒருபக்கம்; பொருதல்-மாறுபடுதல்/ மோதுதல்; மன்-நிலை பெற்ற; குலம்-வர்க்கம்)

மிக்க ஒலி எழுப்பிக்கொண்டு முழங்கிவருகின்ற இராமபிரானது கொடிய அம்புகள் ஒன்றையொன்று தாக்கி, நெருப்பை உமிழவும், அதனால் வலிய நீண்ட, மூங்கில் காடு என்று சொல்லும்படியாக, மீன் கூட்டங்களெல்லாம் வெந்து அழிந்தன ஒரு பக்கம். இன்னொரு பக்கம், கடலில் வாழ்தல் இயல்பல்லாத மற்ற நிலைபெற்ற உயிரினங்களெல்லாம் அவ்வம்பினால் அறுபட்டு, அவை பொழிந்த இரத்தமும், கடல் அலைகளும் ஒன்றையொன்று மோதிக்கொண்டு தம்மில் மாறுபட்டிருந்தன.

ஒரு சிறு நெருப்புத்துண்டே, மூங்கில் காட்டை விரைவாகவும், முழுவதுமாக அழித்துவிடும் என்பது நாம் அறிந்ததே. எனவே அந்த மூங்கில் காட்டில் தீப்பற்றி எரிவதுபோலக் கடலில் மீன்கள் முழுவதும் எரிந்து அழிந்தன என்பதாம். அதைப்போலவே கடலின் அலைகளும், ஏனைய உயிர்கள் பெருக்கிய இரத்தமும் ஒன்றையொன்று மாறுபட்டு மோதிக்கொண்டன என்பதாம்.

31. அண்ணல் வெங்கணை அறுத்திட, தெறித்து எழுந்து அளக்காப்
பண்ணை வெம்புனல் படப்பட, நெருப்பொடும் பற்றி,
மண்ணில் வேர் உறப்பற்றிய நெடுமரம், மற்றும்;
எண்ணெய் தோய்ந்தென எரிந்தன, கிரிக்குலம் எல்லாம். (6702)

(அண்ணல்-பெரியோன்/இராமபிரான்; அளக்கர்-கடல்; பண்ணை-நீர்நிலை; உற-நன்றாக ஊன்றிய; கிரிக்குலம்-மலைக்கூட்டங்கள்; நெடுமை-உயர்ச்சி; தெறித்து-சிதர்ந்து)

இராமபிரான் செலுத்திய கொடிய அம்பினால் அறுபட்டு, சிதர்ந்து வீசுகின்ற அலைகளையுடைய கடலாகிய சிறிய நீர்நிலையில் கொடிய நெருப்புப் படும்பொழுதெல்லாம், அங்கே மண்ணில் நன்றாக ஊன்றிய வேரைக்கொண்ட உயர்ந்த மரங்களிலும் நெருப்புப் பற்றி எரிந்தன. மேலும் அங்கிருந்த மலைக்கூட்டங்கள் எல்லாவற்றிற்கும், அந்த மேலெழுந்த கொதிப்பான நீரே எண்ணெய் வார்ப்பதுபோல அமைந்தது.

இராமபிரான் செலுத்திய அம்பின் தாக்கத்தால் கடலிலிருந்த வேர் ஊன்றிய வளர்ந்த, உயர்ந்த மரங்களும், மலைக்கூட்டங்களும் எரிந்து போயின. மேலெழுந்த அந்த வெப்பமுடைய கடல்நீரே அவற்றின்மேல் எண்ணெய் தோய்த்தாற் போன்று எளிதில் பற்றிக்கொள்ள உதவுவதாயிற்று என்பதாம். நெருப்பை நீர் அவிக்கத்தானே வேண்டும்? ஆனால் இங்கேஅந்தநீரேமரத்தின்மீதும்மலையின்மீதும்எண்ணெய் ஊற்றப்பட்டு எளிதில் தீப்பற்றிக் கொள்ளுமாறு செய்தது என்கிறான் கவிஞன் என்க.

Koviloor Digital Library

32. தெய்வநாயகன் தெரிகணை, 'திசைமுகத்து ஒருவன்
வைவு இது ஆம்' என, பிழைப்பு இல மனத்தினும் கடுக,
வெய்ய அந்நெருப்பு இடைஇடை பொறித்து எழ, வெறிநீர்ப்
பொய்கை தாமரை பூத்தெனப் பொலிந்தது புணரி. (6703)

(தெய்வநாயகன்-தேவர்தலைவன்/இராமபிரான்; தெரி-ஆராய்ந்து தொடுத்த; திசைமுகத்து ஒருவன்-பிரமதேவன்; வைவு-சாபம்; கடுக-விரைந்து செல்ல; பொறிதல்-சிதறுதல்; வெறி-நறுமணம்; புணரி-கடல்; பிழைத்தல்-தவறுதல்; பொய்கை-தடாகம்; பொலிதல்-விளங்குதல்)

தேவர்தலைவனான இராமபிரான் ஆராய்ந்து தெரிந்து எடுத்துச் செலுத்திய அம்புகள், நான்கு முகங்களைக் கொண்ட பிரமதேவன் கொடுத்த சாபம் இதுவாகும் என்னும்படி, இலக்குத் தப்பாது, மனத்தைக் காட்டிலும்வேகமாகச் சென்று, அந்தக் கொடிய வலிய நெருப்பு கடலின் நடுவே பொறிகளைச் சிதறிக்கொண்டு மேலெழுந்து சென்ற காட்சி, அந்தக்கடல், நறுமணம்மிக்க தாமரை மலர்களை நடுவே மலர்த்திக் கொண்டு விளங்கும் தாமரைத்தடாகம் போலப் பொலிவுற்றுத் திகழ்ந்தது.

தெய்வநாயகன் தேவதேவன் இராமபிரான்; திசைமுகத்து ஒருவன் பிரமன். பிரமசாபம் குறிதவறாது விரைவாகச் சென்று குறித்த இலக்கை அடையும். எனவே இராமபிரான் எய்த அம்பிற்கு பிரமதேவனின் சாபம் உவமை. இடையிடையே பற்றி எரியும் நெருப்புச் சிதறல்களுக்குத் தடாகத்தில் பூத்த தாமரை மலர்கள் உவமை. 'மனத்தினும் கடுக' என்பது மனோவேகத்தைக் காட்டிலும் விரைவாக எனப் பொருள்படும். 'சொல்லொக்கும் கடிய வேகச் சுடுசரம்' என்று தாடகை வதைப்படலத்தில் கூறிய 'சொல்' என்ற சொல்லுக்கு இதே சாபம் என்று பொருள்கொண்டதை இங்கே நினைவு கூர்க.

33. செப்பின், மேலவர் சீறினும் அது சிறப்பாதல்
தப்புமே? அது கண்டனம் உவரியில்; 'தணியா
உப்புவேலை' என்று, உலகு உறு பெரும்பழி நீங்கி,
அப்பு வேலையாய் நிறைந்தது; குறைந்ததோ, அளக்கர்!" (6704)

(செப்பின்-சொல்லப்போனால்; சீறுதல்-கோபித்தல்; தப்புமே-தவறுமோ; உவரி-உப்புக்கடல்; அளக்கர்-கடல்; உறு-பொருந்திய; அப்பு-அம்பு/நல்லநீர்; தணியா-குறையாத/நீங்காத)

உண்மையாகச் சொல்வதென்றால், மேன்மக்கள் வெகுண்டு சில கூறினர் என்றாலும் அது நன்மையைத்தான் தருமே தவிர அது தீமையைத் தாராது. அதனை நாம் இந்த உப்புக்கடல் விஷயத்தில் கண்கூடாகக் கண்டுள்ளோம். எப்படியென்றால் உலகத்தார் இந்தக் கடலை நோக்கி, 'இது குறையாத உப்பினையுடைய கடல்' என்று பெரும்பழி சுமத்தி

Koviloor Digital Library

வந்தார்கள். இப்போது அது நீங்கப்பெற்று கடலெல்லாம் அம்புகள் நிறைந்திருப்பதால் அப்புக்கடலாக மாறியிருக்கிறதல்லவா? இதனால் கடலுக்கு நன்மை விளைந்து சிறப்புத்தான் கூடியிருக்கிறதே தவிர, அதற்கு ஏதேனும் குறைவு ஏற்பட்டதோ?''

உவர் என்பது உப்புக்கடலைக் குறிக்கும். அப்பு என்ற சொல் அம்பு என்ற ஒரு பொருளையும், நல்லநீர் என்ற மற்றொரு பொருளையும் தரும். எனவே இங்கு கடலினுக்கு ஒரே சொல்லில் இரண்டு பெருமைகளைத்தந்த கவிஞனின் கவித்திறம் நோக்குக. உப்புக்கடல் நன்னீர்க்கடலாய் நிறைந்தது என்பது ஒரு பொருள். கடல் அம்பு நிறைந்த கடலாக மாறிற்று என்பது மற்றொரு பொருள். கடல்நீர் உப்புச் சுவையுடையதால் 'உவரி' என்பது கடலுக்குக் காரணப்பெயர். கடல் அளவில் பெரியதாயினும் பருகுதற்குரிய நீரல்லாது உப்புநீரைக் கொண்டிருப்பதால் உலகம் பழிக்கின்றது. 'உவர்க்கடலன்ன செல்வரும் உளரே, கிணற்று ஊற்றன்ன நீயும் ஆறு உளையே' என்பது நன்னூல்.

34. தாரை உண்ட பேர் அண்டங்கள் அடங்கலும் தானே
வாரி உண்டு அருள் செய்தவற்கு இது ஒரு வலியோ?
பாரை உண்பது படர்புனல்; அப்பெரும் பரவை
நீரை உண்பது நெருப்பு எனும் அப்பொருள் நிறுத்தான்! (6705)

(பார்-நிலம்; படர்-பரவியுள்ள; புனல்-கடல்நீர்; பரவை-கடல்; நிறுத்தல்-செயல்படுத்துதல்/நிலைபெறச்செய்தல்; தாரை-வரிசை/ஒழுங்கு; அடங்கலும்-முழுவதும்/எல்லாவற்றையும்/முற்றிலும்; வலி-வலிமை/பெரியசெயல்; பொருள்-கருத்து)

''இந்த நிலவுலகத்தை, பேரூழிக்காலத்தில் அழிப்பது பரந்து விரிந்துள்ள நீர்ப்பகுதியே. அந்தப் பெரிய கடலை அழிப்பது நெருப்பு எனும் மற்றொரு பூதமே'' என்று வேதசாத்திரங்களில் கூறியுள்ள உண்மையை இன்று இராமபிரான் நிலை நாட்டியிருக்கிறான். வரிசையாக ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கப் பட்டிருக்கும் பெரிய அண்டங்கள் முழுவதையும் அவை அழியாதபடி தான் ஒருவனாகவே அள்ளியெடுத்துத் தன்வாயில் அடக்கிக்கொண்டு அருள்செய்தவனான திருமாலின் அம்சமான இராமபிரானுக்கு, இந்தக் கடலைத்தூர்ப்பது என்பது ஒரு பெரிய செயலோ? ஒரு வலிமை மிக்க செயலோ? அல்ல'' என்கிறான் கவிஞன்.

''நிலத்தை நீர் உண்ணும்; நீரை நெருப்பு உண்ணும்; நெருப்பைக் காற்று உண்ணும்; காற்று விசும்பில் அடங்கும்'' என்பது சாத்திரங்கள் கூறும் உண்மை என்பதறிக. உலகத் தோற்றத்தில் ஐம்பெரும் பூதங்களும் ஒன்றில் நின்று மற்றொன்று தோன்றும். ஊழி முடிவுக்காலத்தின்போதும் தாம் தோன்றிய முறையிலேயே ஒடுங்கும் என்பதும் அறிக. 'உலகமும் மூன்றே; உடன் அவை ஒக்க விழுங்கி, ஆல்இலையைச் சேர்ந்தவன் எம்மான்'

Koviloor Digital Library

என்பதும், 'ஏழ்உலகும் கொள்ளும் வள்ளல் வல்வயிற்றுப் பெருமான்' என்பதும் திருவாய்மொழி.

35. மங்கலம் பொருந்திய தவத்து மாதவர்,
கங்குலும் பகலும் அக்கடலுள் வைகுவார்,
அங்கம் வெந்திலர், அவன் அடிகள் எண்ணலால்;
பொங்கு வெங்கனல் எனும் புனலில் போயினார். (6706)

(மங்கலம்-நன்மை; கங்குல்-இரவு; வைகுதல்-தங்கியிருத்தல்; அவன்-பரம்பொருள்/இராமபிரான்; பொங்கு-மிக்க; போயினர்-நடந்து சென்றனர்)

நன்மைகள் பொருந்திய, மங்களகரமான சிறந்த தவத்தைச் செய்பவராகிய உயர்ந்த முனிவர்கள் இரவும், பகலும், எல்லா நேரங்களிலும் அந்தக் கடலுக்குள்தான் தங்கியிருக்கிறார்கள். எனினும் கடலை வற்றச்செய்து, மீன்கள், மரம், மலைகளை அழித்த அந்த நெருப்பு, அவர்களை ஒன்றும் செய்யவில்லை. அவர்கள் உடல் வெந்து துன்புறவில்லை. அதற்குக் காரணம் அவர்கள் பரம்பொருளின் திருவடிகளையே அல்லும் பகலும் அனவரதமும் துதித்துக் கொண்டிருப்பதேயாம். அதனால் தான் அந்த மிக்கு எழுகின்ற கொடிய நெருப்பு என்னும் தண்ணீரிலும் அவர்களால் எந்தவித இடையூறுமின்றி இயல்பாகவே நடந்து செல்ல முடிந்தது; தவம் இயற்ற முடிந்தது.

பொதுவாகத் தவம் செய்பவர்கள் நிலத்திலும், நீரிலும், மலையிலும் நின்று தவம் செய்வதுண்டு. காரணம் அவை எண்ணிய எண்ணியாங்கு எய்தும் பயனைத் தருவதால் என்க. கனல் புனலாயிற்று என்ற நயம் நோக்குக. இங்கே அனுமனுக்கு நெருப்புக் குளிர்ந்த தன்மையை அடைந்ததுவும், பிரகலாதனுக்கு ஏற்பட்ட அனுபவமும், அப்பருக்கு நீற்றறையில் ஏற்பட்ட அனுபவமும் நினைவு கூரத் தக்கனவாம்.

36. தென்திசை, குடதிசை, முதல திக்கு எலாம்,
துன்றிய பெரும் புகைப்படலம் சுற்றலால்,
கன்றிய நிறத்தன கதிரவன் பரி
நின்றன; சென்றில; நெறியின் நீங்கின. (6707)

(குடதிசை-மேற்குத்திசை; திக்கு-திசைகள்; துன்றிய-நெருங்கிய/அடர்ந்த; சுற்றுதல்-சூழ்ந்துகொள்ளுதல்; பரி-குதிரைகள்; நெறி-வழி; நீங்கி-தவறி; படலம்-திரட்சி; கன்றிய-கரிய)

தெற்கு, மேற்கு ஆகிய எல்லாத்திசைகளிலும், அந்த நெருப்பினால் எழுந்த அடர்ந்த புகைப்படலம் சுற்றிச்சூழ்ந்து கொண்டதால், சூரியனுடைய தேரில் பூட்டப்பட்ட பச்சைக்குதிரைகள் ஏழும், தமது இயல்பான நிறத்தை நீங்கி, கரிய நிறமுடையவையாய் ஆயின, அதனால் மேலே

Koviloor Digital Library

செல்லவேண்டிய வழி தவறிப்போய், செல்ல முடியாது, ஓரிடத்திலேயே நின்றுவிட்டன.

புகைப்படலத்தின் மிகுதி பேசப்பட்டது.

37. பிறிந்தவர்க்கு உறுதுயர் என்னும் பெற்றியோர்
அறிந்திருந்து, அறிந்திலர் அனையராம் என,
செறிந்த தம் பெடைகளைத் தேடி, தீக்கொள,
மறிந்தன, கரிந்தன, வானப் புள் எலாம். (6708)

(உறுதல்-உண்டாதல்; பெற்றி-தன்மை/சிறப்பு இயல்பு; அறிந்திலர்-பேதையர்; செறிந்த-தங்கியிருந்த; பெடை-பெண்பறவைகள்; மறிதல்-நிலைமாறுதல்; புள்-பறவை; வானம்-ஆகாயம்)

ஒன்றை விட்டு ஒன்று பிரிந்திருப்பதால் உண்டாகும் துன்பத்தை நன்கு அறிந்திருந்தும், அறியாதனபோல இருக்கும் தன்மையையுடைய வானத்துப் பறவைகள் எல்லாம், தம்முடன் நெருங்கிய தம் பெண் பறவைகளைத் தேடிக் கடலுக்குள் புகுந்து சென்றதால் நெருப்புப்பற்றப் பெற்று உடம்பு கீழ் மேலாய் மறிந்து உடல்கருகி வெந்து மாண்டன.

தாம் செய்வது குற்றம் என்று நன்கு தெரிந்திருந்தும், அக்குற்றத்தைச் செய்ய முயலும் பேதையர் போல தாம் கடலுக்குள் புகுந்துசென்றால் கரிந்து இறந்து போவோம் என்று தெரிந்திருந்தும் ஆண் பறவைகள், தம் பெண்பறவைகளின் மீது கொண்ட அதீதக் காதலால் கடலுக்குள் புகுந்து தேடலாயின. எனவே நெருப்புப் பற்றி, கரிந்து இறந்து போயின என்பதாம்.

'பிரிந்தவர்' என்பது எதுகை நோக்கி, 'பிறிந்தவர்' என்று ஆனது. இங்கே நான்காம் அடியில் கண்டுள்ள 'வானப்புள் எலாம்' என்ற சொற்றொடரில் ஒரு பாடவேறுபாடு கிடைக்கிறது. ஒரே ஒரு சுவடியில் மட்டும் வானப்புள் என்று இல்லாது 'வாளப்புள் எலாம்' என்று கூறப்பட்டிருக்கிறது. இதற்கு சக்கரவாளப்பறவை என்றும் பொருள் உரைக்கப்பட்டிருக்கிறது. அதுவே பொருந்திவருதலும் உணர்க. பொதுவாகப் பிரிந்தவர்க்கு உவமை கூறும்பொழுது அன்றிற்பறவையையும், சக்கரவாளப் பறவையையுமே உவமை கூறுவது வழக்கம். வானத்துப் பறவைகள் எல்லாவற்றையும் பற்றிப் பேசப்படுவதில்லை. எனவே இங்கே அந்த ஒரு சுவடியின் பொருளே பொருந்திவருதல் காண்க. தனக்குத் தீங்கு நேரும் என்று தெரிந்திருந்தும் நெருப்புப் பற்றி எரியும் கடலுக்குள் தம் பெடையைத் தேடிச்சென்ற பறவைகளின் காதலுணர்ச்சியைக் கவிஞன் தனக்கே உரிய உவமையால் தந்த நயம் நோக்குக. இதில் இன்னும் ஒரு கருத்தும் அடங்கி யிருக்கிறது. சக்கரவாளப் பறவை நீர்வாழ் பறவையுமாம், இணைபிரியாத இயல்புடையன; இரவில் இரைதேடிப் பிரிந்து, பகலில் கூடும் இயல்பின என்பதும் இங்கு நினையத்தகும்.

Koviloor Digital Library

38. கமைஅறு கருங்கடல், கனலி கைபரந்து,
அமைவனம் ஒத்த போது, அறைய வேண்டுமோ?
சுமையுறு பெரும்புகைப் படலம் சுற்றலால்,
இமையவர் இமைத்தனர்; வியர்ப்பும் எய்தினார். (6709)

(கமை-பொறுமை/க்ஷமை; கை-பக்கம்; கனலி-கனல்/நெருப்பு; அமை-மூங்கில்; வனம்-காடு; இமையவர்-தேவர்கள்; வியர்ப்பு-வியர்த்தல்; சுமை-தொகுதி)

எப்பொழுதும் ஆரவாரித்து முழங்கிக் கொண்டேயிருக்கும் பொறுமை யற்ற, கரிய கடலானது, இராமபிரானால் செலுத்தப்பட்ட அம்புகளி னின்றும் எழுந்த நெருப்பு எல்லாப் பக்கங்களிலும், பரந்து மூங்கில் காடு, தீப்பற்றிக் கொண்டதுபோல எரிந்த காட்சியினால் நேர்ந்த கொடுமையைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ? பெரும் தொகுதியாகிய புகைப்படலம் எங்கும் சூழ்ந்து கொண்டதால் இமையாநாட்டம் உடைய தேவர்களும் அச்சத்தால் கண்களை இமைத்தனர். வியர்வை அரும்பாத உடம்பை உடைய அவர்களும் உடம்பில் வியர்வை வழியப் பெற்றார்கள்.

கடலெங்கும் நெருப்புப் பிடித்து எரிந்து கொண்டிருப்பது, மூங்கில்காடு தீப்பற்றி எரிவதை ஒத்திருந்தது என்பதாம். 'க்ஷமா' என்ற வடசொல் 'கமை' எனத் தமிழாக்கப்பட்டது என்க. இமைக்கும் இயல்புடைய இமைகள் கொண்டிருந்தும் தேவர்கள் இமைப்பதில்லை. இந்தச் சிறப்பால் அவர்கள் இமையவர் எனப்பட்டனர். இமைத்தலும், வியர்த்தலும் தேவர்களுக்கு இல்லை; ''திருநுதல் வேர்வு அரும்பும்; தேங்கோதைவாடும்; இதழ் உண்கணும் இமைக்கும் நகும்'' என்பது புறப்பொருள் வெண்பாமாலை. நீர் எரிதல் என்பது நிகழா நிகழ்ச்சி. எனினும் அது நிகழ்ந்துவிட்டது. எனவே இமையா நாட்டம் உடைய இமையவர்களும் அச்சத்தால் இமைத்தனர், வியர்வை அரும்பி மேனியும் வியர்த்தது. எனவே அதைக்கூறவும் வேண்டுமோ என்றார் என்க.

39. பூச்செலாதவள் நடை போல்கிலாமையால்,
ஏச்செலாம் எய்திய எகினம் யாவையும்
தீச்செலா நெறி பிறிது இன்மையால், திசை
மீச்செலா; புனலவன் புகழின் வீந்தவால். (6710)

(பூ-மலர்; ஏச்சு-பழி; எகினம்-அன்னப்பறவைகள்; நெறி-வழி; மீ-மேலே/விண்ணில்; புனலவன்-வருணன்; வீந்த-அழிவுற்றன; செலா-சென்று)

மென்மையான மலர்களின்மீது கூடத்தன் பாதத்தை வைத்து நடக்க இயலாதவளான, மலரினும் மெல்லிய பாதங்களைக் கொண்ட சீதா தேவியின் நடையைப்போலத் தமது நடை இல்லாததால், உலகத்தார்

Koviloor Digital Library

பழித்துச் சொல்லுகின்ற ஏச்சுக்கள் எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்ட வெண்ணிற அன்னப்பறவைகள் எல்லாம், நெருப்புப் பரவாத வழி வேறு எதுவும் இல்லாததால்-எல்லா இடங்களிலும், திக்குகளிலும் நெருப்புப் பரவியிருப்பதால், திக்குகளின்மீது செல்லாது, நீருக்கு அதிபதியான வருணனின் புகழ்போல அழிந்து போயின.

'பூச் செலாதவள் நடை' என்பது மிக உயர்ந்த பொருள் கொண்ட சொற்றொடர். மலரினும் மெல்லிய பாதங்களைக் கொண்ட என்ற பொருளைத்தரும். ''அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர் அடிக்கு நெருஞ்சிப்பழம்'' என்பது குறள்-*1120*. ''பஞ்சி மேல் மிதிக்கும்போதும், பனிக்கும் சீரடியினாளே'' என்பது சீவகசிந்தாமணி. 'எகினம்' என்பது அன்னத்தைக் குறிக்கும் சொல். நமக்கு இச்சொல் புதிது. புகழை வெண்ணிறம் உடையதாகக் கூறுவது மரபு. அது இங்கே வெண்ணிற முடைய அன்னப்பறவைகளுக்கு உவமையாயிற்று. உலகத்தார் ஏச்சையும் பேச்சையும் சகித்துக் கொள்ள முடியாத அன்னப்பறவைகள் தீயில் விழுந்து கருகி உயிரை மாய்த்துக்கொண்டன என்கிறான் கவிஞன்.

40. பம்புறு நெடுங்கடல் பறவை யாவையும்,
உம்பரின் செல்லலுற்று, உருகி வீழ்ந்தன;
அம்பரம் அம்பரத்து ஏகல் ஆற்றல,
இம்பரில் உதிர்ந்தன; எரியும் மெய்யன. (6711)

(பம்புதல்-ஒலித்தல்/ஆரவாரித்தல்; உம்பர்-விண்/மேலுலகம்; அம்பரம்-மேகங்கள்; அம்பரம்-ஆகாயம்; ஏகல்-செல்லுதல்; மெய்-உடம்பு; இம்பர்-இவ்வுலகம்/நிலம்/தரை; உதிர்தல்-சிதறுதல்; கடல் பறவை-நீர்வாழ் பறவைகள்)

ஒலித்தலையே தன் இயல்பாகக் கொண்ட நீண்ட கடலில் வாழும் நீர்ப் பறவையினங்கள் எல்லாம், நெருப்பிலிருந்து தப்புவதற்காக வானத்தில் செல்லத்தொடங்கி, அங்கேயும் நெருப்புப் பரவியிருத்தலால் அந்நெருப்பால் உருத்தெரியாமல் உருகித் தரையில் விழுந்தன. மேகங்கள் ஆகாயத்தின் மேல் செல்லும் ஆற்றலை இழந்து, அவை நெருப்புப் பற்றிஎரியும் உடம்பையும் கொண்டு தரையிலேயே உதிர்ந்து விழுந்தன.

மேகங்கள் கடல்நீரைப் பருகி வானத்திற்சென்று மழையாகப் பொழியும் இயல்புடையன. ஆதலால் அவை கடலில் படிந்திருந்தன. இப்போது இராமபிரான் செலுத்திய அம்பால் கடலில் படிந்திருந்த மேகங்கள்கூடத் தங்கள் இடமாகிய ஆகாயத்திற்குச் செல்ல இயலாது, இங்கேயே உதிர்ந்து சிதறிப்போயின என்பதும் ஓர் அருமையான கற்பனை.

Koviloor Digital Library

41. பட்டன படப்பட, படாத புட்குலம்,
சுட்டு வந்து எரிக்குலப் படலம் சுற்றலால்,
இட்டுழி அறிகில, இரியல் போவன,
முட்டை என்று எடுத்தன, வெளுத்த முத்து எலாம். (6712)

(கனல்-கொழுந்து; எரி-நெருப்பு; படலம்-திரள்; சுற்றல்-சூழ்ந்து கொள்ளுதல்; புட்குலம்-பறவையினங்கள்; படுதல்-இறத்தல்/குறைதல்; படாத-பட்டு/இறந்து; இரிதல்-ஓடுதல்; இட்டுழி-இட்டஇடம்; படுதல்-வலிகுறைதலுமாம்)

இவ்வாறு சுட்டுக்கொண்டே வந்த நெருப்பின் திரட்சியான தொகுதி, எங்கும் சூழ்ந்து கொண்டதால், வெகுவான பறவையினங்கள் இறந்து பட்டன. சில பறவைகள் இறவாது வேறு பாதுகாப்பான இடம்நோக்கி விரைந்து ஓட விரும்பி, தாம் முட்டை இட்ட இடம் சரியாகத் தெரியாத தனால், அங்கே கிடந்த வெண்மையான முத்துக்களை எல்லாம், தங்கள் முட்டைகள் என்று மயக்கத்தால் கருதி, அவற்றையும் எடுத்துச் செல்லலாயின.

நெருப்பினால் இறந்துபோன வலிமைகுறைந்த பறவையினம் தவிர்த்து, இறவாது உயிருடன் இருந்த சிலபறவைகள் தான் இறவாமால் இருப்பதுபோல, தான் இட்ட முட்டைகளையும், பாதுகாக்கவேண்டும் என்று, அந்தத்தருணத்திலும் கருதியது உணர்க. குழப்பத்தில் இருப்பதால், மயக்கமுற்று தான் இட்ட முட்டைக்கும், கடலில் வெளுத்த நிறத்துடன் கிடக்கும் முத்துக்களுக்கும் வேறுபாடு தெரியாது. அம் முத்துக்களை யெல்லாம் எடுத்துக்கொண்டு ஓடத்தொடங்கின என்பதாம்.

'வெளுத்ததெல்லாம் பால்' என்று கருதும் உலகியல் மொழியையும் இங்கு நினைக. பறவைகள் வெளுத்ததெல்லாம் தமது முட்டை எனக் கருதியதாகக் கொள்க. படப்பட என்ற அடுக்கு மிகுதி குறித்து வந்தது எனக்கொள்க. இவ்வாறு ஒன்றை மற்றொன்றாகக் கருதுவது தமிழில் மயக்கஅணி என்றும், வடமொழியில் திரிபு அதிசயம் என்றும்கூறப்படும்.

42. வள்ளலை, பாவிகாள், 'மனிசன்' என்று கொண்டு
எள்ளலுற்று அறைந்தனம்; எண்இலாம்' என
வெள்ளி வெண் பற்களைக் கிழித்து, விண் உறத்
துள்ளலுற்று இரிந்தன, குரங்கு சூழ்ந்தில. (6713)

(மனிசன்-மனிதன்; எள்ளலுற்று-இகழ்ந்து; எண்-ஆராய்தல்/தெளிதல்/அறிவு; கிழித்து-இளித்து; இரிதல்-ஓடுதல்; வள்ளல்-இராம பிரான்; குரங்கு-நீர்க்குரங்குகள்; சூழ்தல்-சுற்றிவருதல்)

தப்பிப்பிழைத்த சில நீர்க்குரங்குகளும், அங்கேயே சுற்றிக் கொண் டிராமல் வள்ளல் தன்மை உள்ள இராமபிரானின் உண்மையான உருவம்

Koviloor Digital Library

தெரியாமல், இவன் ஒரு சாதாரண மனிதன், இவனால் நம்மை என்ன செய்யமுடியும் என்று தம் மனத்தில் தெளிவில்லாமல் எண்ணிக் கொண்டு இருந்து விட்டோமே என்று தம்மைத் தாமே நொந்துகொண்டு, தம்முடைய வெள்ளிபோன்று வெண்மையான பற்கள் இளித்துக் கொண்டு, வானளாவத் துள்ளிக் கொண்டு, நிலைகெட்டு ஓடலாயின.

'வள்ளல்' என்றது உதாரகுணமுடைய இராமபிரானை; 'மனிசன்' என்பது சாதாரண மனிதன் என்ற இகழ்ச்சிக்குறிப்பு. 'எண்' என்பது ஆராய்ந்து தெளியமுடியாத அறிவைக் குறிக்கும். குரங்குகள் மாமிசம் உண்ணாத சாகபட்சியினத்தைச் சார்ந்தன. எனவே அவற்றின் பற்கள் வெண்மையான பற்கள் எனப்பட்டது. அவற்றின் இயல்பே இளித்துக்கொண்டிருப்பதுதான் என்பது புலப்பட, 'வெள்ளிய பற்களைக் கிழித்து' என்றார் என்க. இங்கே குறிக்கப்பட்ட குரங்குகள் நீர்வாழ் நீர்க்குரங்குகள் எனக்கொள்க. உ.வே.சா பதிப்பில் இங்கே மிகுதியான பாடவேறுபாடு காணப்படுகிறது. எனினும் இங்கே சென்னைக் கம்பன்கழகப் பதிப்பின் பாடத்திற்கே பொருளுரைக்கப்பட்டது.

43. தா நெடுந் தீமைகள் உடைய தன்மையார்,
மா நெடுங் கடலிடை மறைந்து வைகுவார்,
தூ நெடுங் குருதி வேல் அவுணர், துஞ்சினார்;
மீன் நெடுங்கிரி என, மிதந்து வீங்கினார். (6714)

(தூ-தசை/ஊன்; நெடுந்தீமை-பெரிய தீமைகள்; வைகுதல்-தங்கி யிருத்தல்; துஞ்சுதல்-இறத்தல்; மீ-மேலே; தா-வருத்தம்/துயரம்)

மற்றவர்களுக்குத் துன்பமே தரும், பெரும் தீயகுணத்தை உடைய இயல்புடையவர்களும், இந்தப் பெரிய கடலினிடத்து மறைந்து வாழ்பவர்களும், தசைகள் அரியப்பட்டதால் பெருகி நிற்கும் குருதியை யுடைய வேற்படையைக் கொண்டவர்களுமான சில அவுணர்கள், இராமபிரான் செலுத்திய அம்பினால் ஏற்பட்ட பெருநெருப்பில், மீன்கள் இறந்தது போன்று இறந்து, அவை குவிந்து கிடப்பதுபோலஇவர்களும் குவிந்து, உடல் பெருத்து கடலில் மிதப்பவர் ஆயினர். மடிந்து இறந்து போயினர்.

அவுணர்களின் குணஇயல்பு குறிக்கப்பெற்றது. அவர்கள் கடலில் மறைந்து வாழ்வதற்குக் காரணம் அவர்கள் மற்றவர்களுக்குச் செய்த துன்பத்தால், அவர்கள் தம்மீது பழிவாங்கக் கூடுமே என்ற அச்சத்தால் என்க. இவ்வவுணர்கள் காலகேயர், நிவாதகவசர் போன்றவர் எனவும் கூறுவர். ''நஞ்சுடைமை தானறிந்து, நாகம் கரந்துறையும்; அஞ்சாப்புறம் கிடக்கும் நீர்ப்பாம்பு; நெஞ்சிற் கரவுடையார், தம்மைக் கரப்பர்; கரவார் கரவிலா நெஞ்சத்தவர்'' என்பது வாக்குண்டாம். நீரில் கிடக்கும் பிணம் வீங்கிப்போதல் இயல்புதானே? அதுவே இங்கே கூறப்பட்டது.

Koviloor Digital Library

44. தசும்பு இடை விரிந்தன என்னும் தாரைய,
பசும்பொனின் மானங்கள் உருகிப் பாய்ந்தன;
அசும்பு அற வறந்தன, வான ஆறு எலாம்;
விசும்பிடை விளங்கிய மீனும் வெந்தவே. (6715)

(மானம்-விமானம்; தசும்பு-நீர்க்குடம்; இடை-நடுவில்; தாரை-ஒழுங்கு/சொட்டு; வானஆறு-ஆகாய கங்கை; அசும்பு-நீர்க்கசிவு/ஈரம்; வறள்தல்-வறண்டுபோவது; விசும்பு-விண்/ஆகாயம்; மீன்-நட்சத்திரங்கள்)

இராமபிரான் தொடுத்த அம்பினால் உண்டான நெருப்பால், பசிய பொன்னாலான விமானங்கள் எல்லாம், நீர்க்குடம் நடுவில் ஓட்டை விழுந்து உடைந்திருந்தால் எப்படி நீரைச்சொட்டுச் சொட்டாகச் சிந்திக் கொண்டிருக்குமோ, அவ்வாறு நெருப்பில் உருகித் தாரைதாரையாய் நிலத்தில் பாய்ந்தன. ஆகாயத்தில் ஓடும் ஆகாய கங்கை முதலான ஆறுகள் எல்லாம் ஒருசிறிதும் நீர்க்கசிவோ, ஈரப்பசையோ இல்லாது வறண்டு போயின. ஆகாயத்தில் விளக்கமுற்றுத் தோன்றும் நட்சத்திரங்கள் எல்லாம் வெந்துபோயின.

இராமபிரான் தொடுத்த அம்பினின்று எழுந்த நெருப்பின் வெப்பத்தால், கடலில் இருந்த உயிரினங்களும், உயிரல்லாத அசரப் பொருள்களும் மட்டும் அழியவில்லை. ஆகாயத்தில் ஊர்ந்து செல்லுகின்ற விமானங்கள், ஆகாயத்தில் ஓடுகின்ற கங்கையாறு போன்ற ஆறுகள், ஆகாயத்தில் விளங்கித் தோன்றுகிற நட்சத்திரங்கள் முதலானவையும் பாதிக்கப்பட்டன என்பதாம்.

45. செறிவுறு செம்மைய, தீயை ஓம்புவ,
நெறியுறு செலவின, தவத்தின் நீண்டன,
உறுசினம் உறப் பல உருவு கொண்டன,
குறுமுனி எனக்கடல் குடித்த கூர்ங் கணை. (6716)

(குறு-குறுகிய வடிவு; முனி-அகத்தியன்; செறிவு-நெருக்கம்/அடர்த்தி; ஓம்புதல்-வளர்த்தல்/பாதுகாத்தல்; செலவு-போக்கு; உறு-மிக்க; உருவு-வடிவம்)

இராமபிரான் செலுத்திய கூரிய அம்பு, நெருப்பைப்போல அடர்ந்த சிவப்புநிறம் கொண்டது. காரணம்அது பிற உயிரின் இரத்தத்தைக் குடித்தது. நெருப்பைத் தன் நுனியில் கொண்டு பாதுகாத்து வருவது; எந்த இலக்கை நோக்கி எய்யப்பட்டதோ அந்த இலக்கை நோக்கியே நேராகச் செல்லும் இயல்புடையது. இராமபிரான் கை பட்டதால் பெரும் தவமுடையவை. மிக்கசினம் கொண்டு எய்யப்பட்டதால் ஒன்று பலவாகவும்,

Koviloor Digital Library

பலஉருவங்கள் கொண்டதாகவும் பாய்வது, அகத்தியரைப் போலக்கடல் நீரை அறவே பருகித்தீர்த்தது.

இந்தப்பாடல் இராமன் செலுத்திய அம்பிற்கும், குறுகிய வடிவமுள்ள முனிவரான அகத்தியருக்கும் ஒப்புக்கூறி அமைந்த சிலேடை வகையில் அமைந்த பாடல். சொல்லைப் பிரிக்காமல், ஒரே சொல்லாகக் கொண்டு இரு பொருளைத் தருமானால் அது செம்மொழிச் சிலேடை என்றும், சொல்லைப்பிரித்த பின்பு இரு பொருளைத்தருமானால் அது பிரிமொழிச் சிலேடை என்றும் தமிழ் இலக்கணம் கூறும். இங்கே கூரிய கணைக்கு உரிய இயல்பினைப் பார்த்தோம். இப்போது இதுவே அகத்தியருக்கு எப்படிப்பொருந்தும் என்பதைக் காண்போம். அகத்தியர் செம்மையான புலனடக்கம் முதலிய குணங்கள் நிரம்பப்பெற்றவர்; யாகம் செய்ய ஓமத்தீ வளர்க்கும் தொழிலர், முனிவர்; செம்மையான நேர்வழியில் செல்லும் இயல்புடையவர்; நீண்ட தவத்தைச் செய்து பெருமைபெற்றவர்; கோபம் கொண்டால் பல உருவங்களை ஏற்க வல்லவர்; தேவர்கள் வேண்டுதலால் கடலை உள்ளங்கையால் அள்ளிக் குடித்துப்பின் வேண்டும்போது அக்கடலையே உமிழ்ந்தவர் என்று அகத்தியருக்கும் இதே சொற்களைக் கொண்டு பொருள்கொள்ளலாம்.

46. மோதல் அம் கனை கடல் முருக்கும் தீயினால்,
பூதலம் காவொடும் எரிந்த; பொன்மதில்
வேதலும், இலங்கையும் 'மீளப் போயின
தூதன் வந்தான்' எனத் துணுக்கம் கொண்டதால். (6717)

(அம்-அழகிய; முருக்குதல்-அழிதல்; கனை-முழக்கம்; பூதலம்-பூமி; கா-சோலை; வேதல்-வெந்துபோதல்/எரிதல்; தூதன்-அனுமன்; மீள-மீண்டும்; துணுக்கம்-திடுக்கிடுதல்/அச்சம்)

அலைகள் மோதுகின்றதும், அழகியதும், எப்போதும் முழக்கம் செய்துகொண்டிருப்பதுமான அந்தக் கடலும், இராமபிரான் செலுத்திய அம்புக்கூட்டம் எழுப்பிய, அழிக்கும் தன்மையுள்ள நெருப்பினால் கடலைச் சுற்றியுள்ள நிலப்பரப்பும், சோலைகளும் எரியத்தொடங்கின. இலங்கைக்கு அரணாக உள்ள பொன்னாலான மதிற்சுவரும் வேகத் தொடங்கின. எனவே இலங்கையில் வாழும் அரக்கர்களெல்லாம் ''முன்பு நம் நகரை எரியூட்டிச்சென்ற அந்த இராமபிரானின் தூதுவனாகிய அனுமன் தான் மீண்டும் திரும்பி வந்துவிட்டானோ'' என்று அச்சம் கொள்வா ராயினர்.

முன்பு இலங்கை நகருக்கு எரியூட்டிய அனுமன் போல, இப்பொழுது இராமபிரான் கடலுக்கு எரியூட்டினான் என்பது கருத்து.

Koviloor Digital Library

47. அருக்கனில் ஒளிவிடும் ஆடகக் கிரி,
உருக்கு என உருகின, உதிரம் தோய்ந்தன,
முருக்கு எனச் சிவந்தன; முரிய வெந்தன,
கரிக்குவை நிகர்த்தன, பவளக் காடு எலாம். (6718)

(அருக்கன்-சூரியன்; ஆடகம்-பொன்; கிரி-திரிகூடமலை; உதிரம்-இரத்தம்; முருக்கு-முருக்கம்பூ; குவை-குவியல்; நிகர்த்தன-ஒத்தன; உருக்கு-அரக்கு உருக்கு; முறிய-கெடும்படி/அழிய; முரிதல்-நிறம் மாறுபடுதல்)

சூரியனைப்போல ஒளிவீசுகின்ற பொன்மயமான திரிகூடமலை, பொன் உருகிவருதல் போலவும் அரக்கு உருகி வருதல்போலவும் இந்நெருப்பினால் உருகி வழிந்தோடியது. அதனுடன் இரத்தமும் சேர்ந்து கலந்ததனால் முள்முருக்கம்பூப் போலச்சிவந்து போயிற்று. அக்கடலி லிருந்த பவளக்காடுகள் எல்லாம் தம் நிறம் அழியும்படி வெந்துபோய், கரிக்குவியல்போலக் காட்சியளித்தன.

பொன்மயமான திரிகூடமலை உருகியது; அதனுடன் இரத்தம் கலந்தது. எனவே முள்முருக்கம் பூப்போல சிவந்து தோன்றியது. சிவப்பு நிறம் கொண்ட பவழக்காடுகள் எல்லாம் கரிக்குவியல் போலக் கருப்பாகத் தோன்றியது என்பதாம். முள்முருக்கம் பூ பலாசப்பூ என்றும், கலியாண முருங்கை எனவும் அழைக்கப்படும்; செந்நிறமானது. பொன்னிறமான மலை செந்நிறம் பெற்றது; செந்நிறமான பவளக்காடு கருநிறம் பெற்றது என்பது கருத்து.

48. பேருடைக் கிரியெனப் பெருத்த மீன்களும்;
ஓரிடத்து, உயிர்தரித்து, ஒதுங்ககிற்றில;
நீரிடைப் புகும்; அதின், நெருப்பு நன்று எனாப்
பாரிடைக் குதித்தன, பதைக்கும் மெய்யன. (6719)

(பேர்-பெருமை; கிரி-மலை; தரித்து-தாங்கி; மெய்-உடம்பு; பார்-தரை; பதைத்தல்-விதிர்விதிர்த்தல்; அதின்-அதனைவிட)

பெருமைபெற்ற மலை என்று கூறும்படி பெருத்த உடம்பை உடைய பெரிய மீன்களும், ஓரிடத்தில் இருந்துகொண்டு, இந்நெருப்புக்குத் தப்பி, உயிர்வாழலாம் என்று கருதி ஒதுங்கி நிற்க இயலாதனவாய், நீரிடைப் புகுந்தன. ஆனால் அங்கு கொதிக்கின்ற வெப்பத்தைப் பார்த்துவிட்டு, இந்த வெப்பத்தைக் காட்டிலும், நெருப்பே நன்றாயிருக்கும் என்று கருதி பதைபதைக்கும் உடம்புடன் வெளியே தரையில் குதிக்கலாயின.

நீருக்குள் போனாலும் வெப்பம்; நிலத்தில் இருந்தாலும் நெருப்பு. எனவே இவ்விரண்டிற்குள் எது நல்லது என்று ஆராய்ந்து பின்னர் தரையிலேயே குதித்தன. நீரிலே வாழும் இயல்புடைய மீன், நீரையே தன்

Koviloor Digital Library

வாழ்விடமாகக் கொண்ட மீன், தரையிலே வந்தால் நன்றாயிருக்கும் என்று கருதின என்றதால் நீரிடை உண்டான வெப்பத்தின் அளவைக் கற்போரையே உணரும்படி செய்கிறான் கவிஞன்.

49. சுருள் கடல் திரைகளைத் தொலைய உண்டு, அனல்
பருகிடப் புனல்இல பகழி, பாரிடம்
மருள் கொளப் படர்வன, நாகர் வைப்பையும்
இருள் கெடச் சென்றன, இரவி போல்வன. (6720)

(பகழி-அம்புகள்; சுருள்-சுருண்டு வீசுதல்; தொலைய-முழுவதும் வற்றும்படி; மருள்-மருட்சி/மயக்கம்; படர்தல்-பரவுதல்; வைப்பு-தங்குமிடம்; கெட-நீங்குமாறு; இரவி-சூரியன்; அனல்-நெருப்பு; நாகர் வைப்பு-பாதாளம்/நாகலோகம்; புனல்-நீர்; பார்-பூமி)

இராமபிரான் செலுத்திய அம்பு, சுருண்ட அலைகளையுடைய கடலிலிருந்த நீரையெல்லாம் முற்ற முழுக்கப் பருகி, அது வறண்டு போனதால் அங்கு அது பருகுவதற்கு நீர் இல்லாமல் போயிற்று. எனவே அந்த அம்புகள் பூமியிலுள்ளவர்கள் மருட்சி அடையும்படி அங்கும் பரவத்தொடங்கி, பின்னர் நாகர்கள் வாழ்கின்ற நாகலோகமாகிய பாதாளத்திற்கும், அங்கு இருக்கின்ற இருளை அகற்றும்வண்ணம், சூரியனைப்போல ஒளிவீசிச் சென்றது.

இராமபாணத்திற்குச் சூரியன் ஒப்பு. அலைகள் சுருண்டு சுருண்டு செல்லும் இயல்பினை உடையதால் 'சுருள்கடல்' என்றார் என்க. 'தொலைய' என்பது முற்றமுழுக்க வறண்டு போகும்படி என்ற விரிந்த பொருளைத் தரும். இராமன் பகழி, கடல், பூமி, பாதாளம் ஆகிய மூன்று இடங்களுக்கும் சென்றது என்பதாம். இராமபிரானது நோக்கம் கடலைத் துன்புறுத்துவது என்பதுதான் என்றாலும் அவன் தொடுத்த பாணங்கள் கடலோடு அமையாது, பூமி, பாதாளம் வரை சென்றன என்பதாம்.

50. கரும் புறக் கடல்களோடு உலகம் காய்ச்சிய
இரும்பு உறச் செல்வன, இழிவ, கீழ்உற,
அரும் புறத்து அண்டமும் உருவி, அப்புறம்,
பெரும்புறக் கடலையும் தொடர்ந்து பின் செல்வ. (6721)

(புறம்-வெளித்தோற்றம்; உற-பொருந்த; இழிதல்-இறங்குதல்; அண்டம்-உலகஉருண்டை; உருவுதல்-ஊடுருவுதல்/துளைத்தல்; காய்ச்சுதல்-எரித்தல்)

கரிய வெளித்தோற்றத்தைக் கொண்ட கருங்கடல்களோடு, இந்த உலகத்தையும் கொல்லன் உலைக்களத்தில் காய்ச்சப் படுகின்ற இரும்பினைப் போல வெப்பத்துடன் உறுதியாகச் செல்லுகின்றனவும், இன்னும் கீழே இறங்கிச்சென்று, ஊடுருவதற்கரிய சக்கரவாளகிரிக்கும் அப்பால்

Koviloor Digital Library

உள்ள புற அண்டத்தையும் துளைத்துக்கொண்டு சென்று, அதன்பிறகு, அதற்கும் அப்பாலுள்ள பெரும்புறக் கடலையும் தொடர்ந்து செல்வன வாயின இராமபிரான் தொடுத்த அம்புகள்.

புறக்கடல்கள் ஏழு, இவைகளுக்கு அப்பால் மேலும் ஏழுகடல்கள் உள்ளன என்று புராணங்கள் கூறுகின்றன.

51. திடல் திறந்து உகுமணித் திரள்கள், சேண்நிலம்
உடல் திறந்து உதிரம் வந்து உகுவ போன்றன;
கடல் திறந்து எங்கணும் வற்ற, அக்கடல்
குடல் திறந்தன எனக்கிடந்த, கோள் அரா. (6722)

(திடல்-திட்டுக்கள்; உகுதல்-சிந்துதல்; மணி-இரத்தினங்கள்; சேண்-பரந்த; கோள்அரா-வலிய பாம்புகள்/நீர்ப்பாம்புகள்; திறந்து-பிளக்கப் பெற்று)

கடல்நீர் வற்றிப்போனதால், அக்கடலிடையே தோன்றும் திட்டுக்கள் பிளக்கப்பட்டு அவற்றினின்றும் இரத்தினங்களைச் சிந்துவது, பரந்த நிலப்பரப்பு தன் உடல் பிளக்கப்பெற்று இரத்தம் சிந்தியதைப்போன்று தோற்றமளித்தது. அக்கடல் வற்றிப்போக, அதன் அடியில் இருந்த வலிய நீர்ப்பாம்புகள், அங்கே சுருண்டு இறந்து கிடப்பது, கடல் தன் உடலிலுள்ள குடல்கள் வெளிப்பட்டுக் கிடப்பதைப் போன்றிருந்தது.

கடலினின்றும் வெளிப்பட்டுத் தோன்றிய சிவந்த இரத்தினக் கற்கள், நிலம் தன் உடலிலிருந்து சிவந்த இரத்தத்தைச் சொரிந்து கொண்டிருப்பதைப் போன்று தோற்றமளித்தது. நீர்ப்பாம்புகள் கடற்பரப்பில் கிடப்பது, அக்கடல் குடல் பிதுங்கிக் கிடப்பதுபோல் தோற்றமளித்தது என்பதாம். இரத்தினங்களுக்கு இரத்தம் நிறத்தால் உவமை; பாம்புக்குடல் நிலமகளின் குடலுக்கு உருவ ஒற்றுமையால் உவமை என்க.

52. ஆழியின் புனல்அற, மணிகள் அட்டிய
பேழையின் பொலிந்தன, பரவை; பேர்வுஅறப்
பூழையின் பொருகணை உருவப் புக்கன,
மூழையின் பொலிந்தன, முரலும் வெள்வளை. (6723)

(ஆழி-கடல்; அட்டிய-சேர்த்து வைக்கப்பெற்ற; பேழை-பெட்டி; பரவை-கடல்; முரலுதல்-ஒலித்தல்; வெள்வளை-வெண்சங்குகள்; பேர்அற-பெயரமுடியாதவாறு; பூழை-துளை; பொருதல்-போர்செய்தல்; மூழை-அகப்பை; அட்டுதல்-சேர்த்து வைத்தல்; மணிகள்-நவரத்தினங்கள்)

இராமன் தொடுத்த அம்பினால் கடலில் உள்ள நீரெல்லாம் வற்றிப் போக, அதன் மேற்பரப்பில் உள்ள இரத்தினங்கள் ஒளி வீசுவதால்

Koviloor Digital Library

நவரத்தினங்கள் நிரப்பி வைக்கப்பட்ட ஒரு அழகான பெட்டிபோல விளங்கியது அந்தக்கடல். அங்கே காணப்பட்ட ஒலித்தலையுடைய வெண்சங்குகள், இடம்விட்டுப் பெயராதபடி, தமது சிறு துவாரத்தின் வழியே இராமபிரானின் அம்பு ஊடுருவிப் புகுந்ததால் அவை காம்போடு கூடிய அகப்பை போலத் தோற்றமுற்று விளங்கின.

இப்போது கடலின் தோற்றம் நவரத்தினம் வைக்கப்பெற்ற ஒரு நகைப் பெட்டி போலத் தோற்றம் அளித்தது. வெண்சங்குகளின் துவாரங்களில் வந்து பொருந்திய அம்புகளுடன் பார்க்கும்போது அது காம்போடு கூடிய ஒருஅகப்பையைப்போலத்தோன்றியது என்பதாம். காம்பு-அம்பு; 'மூழை' என்பது நமக்குப் புதுச்சொல். அகப்பை என்ற பொருளைத்தரும்.

53. நின்று நூறு ஆயிரம் பகழி நீட்டலால்,
குன்று நூறு ஆயிரம் கோடி ஆயின;
சென்று தேய்வு உறுவரோ, புலவர் சீறினால்?
ஒன்று நூறு ஆயின, உவரி முத்து எலாம். (6724)

(பகழி-அம்பு; நீட்டுதல்-செலுத்துதல்; உவரி-கடல்; புலவர்-அறிவில் சிறந்தோர்)

இராமபிரான் சீற்றம்கொண்டு நின்று, நூறாயிரம் அம்புகளைச் செலுத்தியதால், அங்கிருந்த குன்றுகள் சிதைந்து, நூறாயிரம் கோடித் துண்டுகளாகிப்போயின; கடலிலிருந்த முத்துக்கள் எல்லாம் சிதைந்து ஒன்று, நூறாகப் பல்கிப் பெருகின. எனவே அறிவுடைய சான்றோர்கள் ஒருவர் மேல் சீற்றம் கொண்டாலும், அவர்கள் அறிவும் ஆற்றலும் வளர்ச்சியுறுமேயன்றி தேய்ந்து போகாது என்கிறான் கவிஞன்.

'ஒன்று பலவாதல் வளர்ச்சிதானே?' என்று கேட்கும் கவிஞனின் சொல்லாட்சியை நோக்குக. சான்றோர் வெகுளியும் நன்மையே பயக்கும் என்பது கருத்து. இதே கருத்தை முன்பும் 'மேலவர் சீறினும், அது சிறப்பாதல் தப்புமோ?' என்று கூறியதையும் இங்கு ஒப்பு நோக்குக.

54. சூடு பெற்று ஐயனே தொலைக்கும் மன்னுயிர்
வீடு பெற்றன; இடை மிடைந்த வேணுவின்
காடு பற்றிய பெருங்கனலின் கைபரந்து
ஓடி உற்றது நெருப்பு, உவரி நீர் எலாம். (6725)

(மன்-நிலைபெற்ற; வீடு-முக்தி/மோட்சம்; மிடைந்த-நெருங்கி யுள்ள; வேணு-மூங்கில்; கைபரத்தல்-பக்கங்களில் பரவுதல்; உவரி-கடல்; உறுதல்-அடைதல்; ஐயன்-தலைவன்/இராமபிரான்; சூடு-சீற்றம்; தொலைத்தல்-அழித்தல்)

Koviloor Digital Library

தலைவனான இராமபிரான் சீற்றம் கொண்டு செலுத்திய அம்புகளினால் இறந்துபட்ட நிலைபெற்ற உயிரினங்கள் எல்லாம், வீடுபேறாகிய, என்றும் அழியாத மோட்சலோகத்தை அடைந்தன. இடையிடையே நெருங்கியிருக்கும் மூங்கில் காட்டில் பற்றிக்கொள்ளும் நெருப்பு, விரைவில் எல்லாப் பக்கங்களிலும் பரவுவது போல, கடல் நீரெல்லாம் நெருப்பு ஓடிச்சென்று அடைந்தது.

இராமபிரானால் செலுத்தப்பட்ட அம்புகளினின்று எழுந்த நெருப்பு, கடலைச் சென்றடைந்தது. அவனால் அழிக்கப்பட்ட உயிரினங்களெல்லாம் வீடுபேறுற்றனஎன்பது கருத்து. இராமபிரான்அம்பினால் உயிர் துறந்தபோது வாலி கூறிய வாலியின் துதி இங்கு நினைக்கத்தகும். பின்னரும் 'அரக்கரைப் பெருந்தேவர்கள் ஆக்கின அமலன்' என்று இராமபிரான் போற்றித் துதிக்கப்படப்போவதையும் இங்கு நினைவிற் கொள்ளல்தகும். இறுதியில் இராவணனைத்துளைத்த அம்பு, கவிஞனால், 'புனிதவாளி' என்று போற்றப்படுவதும் காண்க.

55. காலவான் கடுங்கணை சுற்றும் கவ்வலால்,
நீலவான் துகிலினை நீக்கி, பூநிறக்
கோலவான் களி நெடுங்கூறை சுற்றினாள்
போல, மா நிலமகள் பொலிந்து தோன்றினாள். (6726)

(காலன்-எமன்; வான்-சிறந்த; துகில்-ஆடை/பட்டாடை/புடவை; கோலம்-அழகு/நிறம்; கூறை-புத்தாடை; சுற்றுதல்-உடுத்துக் கொள்ளுதல்; கவ்வுதல்-பற்றிக்கொள்ளுதல்)

இயமன்போன்ற கொடிய, சிறந்த அம்புகள் கடலைச்சுற்றிலும் சென்று பற்றிக்கொண்டதால், இப்போது கடல் அம்புகளால் மூடப்பெற்றிருக்கிறது. எனவே சிறந்த பெரிய நிலமகளான, பூமித்தாய், தனக்கு இயற்கையாக அமைந்துள்ள நீலநிறம் பொருந்திய, சிறந்த புடவையைக் களைந்துவிட்டு, இப்போது பூவேலைப்பாடு நிறைந்த கரையை உடைய அழகிய, சிறந்த சிவந்த, நீண்ட புத்தாடையை உடுத்திக்கொண்டு நிற்பவள் போல முன்னையிலும் அழகு சற்று அதிகமாக, மணப்பெண்போலப் பொலிவுற்றுக் காணப்பட்டாள்.

பொதுவாக நீலநிறக் கடலைப் பெண்ணாகிய நிலமகளுக்கு ஆடையாகக் கூறுவது கவிமரபு. இப்போது இராமபிரான் தொடுத்த அம்புகளால் அக்கடல் சிவந்த நிறமாகவும், பூவேலைப்பாடு செய்யப்பட்டதும்போலத் தோற்றமளிக்கிறது. இது கவிஞன் கண்ணுக்கு, நிலமகள், நீலநிற ஆடையைக் களைந்துவிட்டு, வேலைப்பாடமைந்த சிவப்பு நிறப் புத்தாடையைக் கட்டிக்கொண்டு வந்ததுபோலத் தோற்றமளித்திருக்கிறது எனக்கொள்க. 'கூறை' என்பது புத்தாடையைக் குறிக்கும். அது பொதுவாகச் சிவந்த நிறத்தில் இருக்கும். அதனால்தான் இன்றும் மணப்

Koviloor Digital Library

பெண்ணுக்கு மணவிழாவில் கட்டப்பெறும் புடவை 'கூறைப்புடவை' என்று வழங்கப்படுகிறது என்பதும் அறிக. கம்பன் ஒரு காட்சியை எவ்வாறெல்லாம் கற்பனை செய்து பார்ப்பான் என்பதற்கு இந்தப்பாடல் ஒரு சான்று. நீலநிற வானத்தையும் நிலமகளுக்கு ஆடையாகக் கூறுதல் கவிமரபு. எனினும் சிற்சில சமயங்களில் நீலவானம் செக்கர்வானமாகிப் போவதுண்டல்லவா? அதனால் கம்பன் இங்கே கடலையே நிலமகளின் ஆடையாகக் குறிப்பிட்டான் என்க.

56. கற்றவர் கற்றவர் உணர்வு காண்கிலாக்
கொற்றவன் படைக்கலம் குடித்த வேலைவிட்டு,
உற்று உயிர் படைத்து எழுந்து ஓடல் உற்றதால்,
மற்றொரு கடல்புக, வடவைத்தீ அரோ! (6727)

(கொற்றவன்-வேந்தன்; படைக்கலம்-அம்புகள்; வேலை-கடல்; வடவை-வடமுகாக்னி; கற்றவர்கற்றவர்-ஞானிகள்; உயிர்-உயிர்ப்பு/வலிமை)

எல்லாநூல்களையும்கற்றவர்களுக்குள்ளும்பெரிதும்கற்றவர்களாகிய ஞானியர்களின் பேரறிவிற்கும் எட்டமுடியாத தன்மைகொண்ட இராம பிரான் தொடுத்த அம்புகள், கடல்நீரை முற்றவும் குடித்துவிட்டதால், கடலினுள்ளிருந்து கடல் கரை கடவாமல் பாதுகாக்கும் வடவைத்தீ, இப்பொழுது தனக்கு அங்கே வேலையில்லாததால், வேறொரு கடலுக்குச் செல்லலாம் என்று கருதி, வலிமை கொண்டு உயிர்பெற்று எழுந்து ஓடத்தொடங்கியது.

கற்றவர் கற்றவர் என்று இருமுறை கூறியது. கற்றவர்க்குள்ளும் பெரிதும் கற்றவராகிய ஞானியர்களைக் குறித்தது என்க. இராமபிரான் தொடுத்த அம்புகள் நெருப்புப் போன்றவை; கடலினுள் இருக்கும் வடவையும் நெருப்பே. இந்த நெருப்பு அந்த நெருப்பைச்சுட்டதால், அது தன்னிடத்திலிருந்து நீங்கி மற்றொரு இடத்திற்கு ஓடத்தொடங்கியது. இதற்கு மாறாக ஒரு தீ, மற்றொரு தீயைச் சுடாது காப்பாற்றிய செய்தியும் நாம் அறிந்ததே. கற்பின் கனலியாகிய சீதாதேவியை நெருப்புக்கடவுளான அக்னிதேவன் சுடமுடியாமல் பேதலித்து, அவளை இராமபிரானிடம் ஒப்படைத்ததைப் பின்னால் மீட்சிப்படலத்தில் காணப்போகிறோம். படைக்கலம் குடித்த வேலை என்றதும், அம்புகள் பருகிய கடல்நீர் என்றதும், ''உண்டற்கு அல்லாப் பொருளை, உண்டன போலக்கூறலும் மரபே'' என்கிற தொல்காப்பிய இலக்கணத்துள் அடங்கும் என்பது அறிக. இறைவன் ஞானிகளின் பேரறிவிற்கும் எட்டாதவன் என்பதை 'உணர்ந்த மாமுனிவர் உணர்வுக்கும் தெரிவரும் பொருளே' என்ற திருவாசகத்தின் மூலமும் அறியலாம். வடவைத்தீ என்பது பெண்குதிரையின் முகம் போன்ற வடிவுடையதாய்க் கடலினுள் தங்கியிருப்பதும், கடல் கரை

Koviloor Digital Library

கடவாமல் பாதுகாப்பதும், பிரளய காலத்தில் வெளிப்பட்டு உலகையே அழிக்கும் தன்மையும் உடைய நெருப்பினைக் குறித்தது என்க.

57. வாழியர் உலகினை வளைத்து, வான்உறச்
சூழ்இரும் பெருஞ்சுடர் பிழம்பு தோன்றலால்,
ஊழியின் உலகுஎலாம் உண்ண ஓங்கிய
ஆழியின் பொலிந்தது, அவ்ஆழி, அன்னநாள். (6728)

(சுடர்-அனல்/நெருப்பு; ஓங்குதல்-பொங்கி எழுதல்; ஆழி-கடல்)

இந்நிலவுலகத்தினைச் சுற்றி வளைத்துக்கொண்டும், விண்ணளாவ உயர்ந்தும் சூழ்ந்திருக்கின்ற பெரிய நெருப்புப் பிழம்பானது தோன்றிய தால், அந்தக்கடல் அப்பொழுது ஊழிக்காலத்தில் உலகங்களையெல்லாம் அழிக்க உயர்ந்தெழுகின்ற பிரளய வெள்ளத்தைப் போலத் தோற்ற மளித்தது.

'வாழியர்' என்பது இங்கே அசைச்சொல்லாகப் பயன்படுத்தப்பட்டிருக் கிறது. 'இரும்பெரும்' என்பது ஒரு பொருட்பன்மொழி. இதையே மீமிசைச்சொல் என்பதும் உண்டு.

58. ஏனையர் என்ன, வேறு உலகின் ஈண்டினார்;
ஆனவர் செய்தன அறைய வேண்டுமோ?
மேல் நிமிர்ந்து எழு கனல் வெதுப்ப, மீது போய்,
வானவர் மலர்அயன் உலகின் வைகினார். (6729)

(மீது-மேலே; அயன்-பிரமன்; வைகுதல்-தங்குதல்; வானவர்-தேவர்கள்; ஈண்டுதல்-வாழுதல்/நெருங்குதல்; அறைதல்-சொல்லுதல்; ஏனையர்-மற்றவர்)

இராமபிரான் தொடுத்த அம்பினால் மேல் உயர்ந்து எழுந்த நெருப்பு வெதுப்புவதால், அச்சமுற்று, விண்ணுலகில் வாழுகின்ற தேவர்கள்கூட அதைத் தாங்கமாட்டாது இன்னும் மேலேபோய் பிரமதேவன் வீற்றிருக்கும் சத்தியலோகத்தில் தங்கி வாழலானார்கள். தேவர்களுக்கே இந்த நிலை என்றால், அவர்களினும் வேறுபட்டவர்களும், அவர்கள் வாழ்கின்ற சுவர்க்க லோகத்திலும் வேறுபட்ட மண்ணுலகத்தில் வாழுபவர்களுமாகிய மனிதர்கள் செய்த செய்கைகளைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ?'' என்று கேட்கிறான் கவிஞன்.

பிரமன் வாழ்கின்ற சத்தியலோகம், தேவர்கள் வாழ்கின்ற சுவர்க்க லோகத்தினின்றும் மேலே ஏழாவது உலகம் என்று கூறுவர். கடலோடு சற்றும் தொடர்பில்லாதவர்கள் தேவர்கள். அவர்கள் விண்ணுலகிலேயே வசிப்பவர்கள், அவர்கள் நிலையே இவ்வாறென்றால், கடலோடு தொடர்புடைய மண்ணுலகில் வசிக்கும் மனிதர்களின் நிலையைக்

Koviloor Digital Library

கற்போரையே உய்த்துணர்ந்து கொள்ள வைத்த கவிஞனின் திறம் நோக்குக.

59. இராமபிரான் பிரம்மாஸ்திரத்தை ஏவுதல்

''இடுக்கு இனி எண்ணுவது என்னை? ஈண்டு இனி,
முடுக்குவென் வருணனை' என்ன, மூண்டு எதிர்
தடுக்கஅரும் வெகுளியான், சதுமுகன் படை
தொடுத்தனன்; அமரரும் துணுக்கம் எய்தினார். (6730)

(இடுக்கு-இடுக்கண்/துன்பம்; மூண்டு-பெருகி; தடுக்கஅரும்-தடுப்பதற்கரிய; வெகுளி-கோபம்; சதுமுகன்-நான்முகன்/பிரமன்; துணுக்கம்-நடுக்கம்; முடுக்குதல்-விரைவுபடுத்துதல்)

''இனிமேல், இதனால் விளையப்போகும் துயரங்களைக் கருதிக் கொண்டிருப்பதில் என்னபயன்? இப்பொழுதே வருணன் இங்கு விரைந்து வருமாறு செய்வேன்'' என்று தடுப்பதற்கரிய, மூண்டு எழுகின்ற மிக்கச் சீற்றம்கொண்டு, இராமபிரான் பிரம்மாஸ்திரத்தைத் தொடுக்கத் தொடங்கினான். அதுகண்டு, தேவர்களும், நடுக்கம் கொண்டனர்.

பிரம்மாஸ்திரத்தைப் பிரயோகப்படுத்துவதால் என்னென்ன விபரீத விளைவுகள் நிகழும் என்பதை நன்கு உணர்ந்த இராமபிரான் வேறுவழி தெரியாமல் அதைப் பயன்படுத்தத் தொடங்கினான் என்க. இவ்வளவு நாள் காத்திருந்தும் வருணன் வராததால் 'மூண்டெதிர் தடுக்க அரும் வெகுளி யான்' என்றார் என்க. இவனே பின்னர் யுத்தகளத்தில் பிரம்மாஸ்திரத்தைப் பயன்படுத்தாதே என்று இலக்குவனுக்கு அறிவுறுத்தப் போகிறான். அதனையும் இங்கு கருத்தில் கொள்ளுதல் தகும். இங்கேயும் பிரம்மாஸ் திரத்தைத் தொடுக்கவேண்டாம் என்று இலக்குவன் இராமபிரானை வேண்டிக்கொண்டதாகவும், அதையும்மீறி, இராமபிரான் பிரம்மாஸ் திரத்தைத் தொடுத்தான் என்றும் வான்மீகம் கூறும். இங்கே இராமபிரான் ஏழுநாட்கள் காத்திருந்தான் என்கிறான் கம்பன். வால்மீகியோ அவன் மூன்றுநாட்கள் காத்திருந்தான் என்கிறான் என்பதையும் அறிக.

60. அப்பொழுது நிகழ்ந்த மாறுபாடுகள்

மழைக்குலம் கதறின; வருணன் வாய் உலர்ந்து
அழைத்தனன்; உலகமும் அடைத்த ஆறு எலாம்
இழைத்தன நெடுந்திசை, யாதும்; யார் இனிப்
பிழைப்பிலர் என்பது ஓர் பெரும் பயத்தினால். (6731)

(மழைக்குலம்-மேகக்கூட்டங்கள்; அழைத்தல்-கதறுதல்; அடைத்தல்-தூர்த்தல்; இழைத்தல்-தேய்த்தல்/சுருங்குதல்/குறுகுதல்; உலர்ந்து-வறண்டு)

Koviloor Digital Library

இராமபிரான் பிரம்மாஸ்திரத்தைத் தொடுத்ததும் இப்பிரம்மாஸ்திரத்தினால் யார் இனிப் பிழைத்திருப்பர் ஒருவரும் பிழைத்திருக்கமாட்டார்கள். என்ற ஓர் பெரிய அச்சத்தினால் மேகக்கூட்டங்கள் எல்லாம் பேரொலி செய்து கதறின; வருணன் தன் வாயும் நாக்கும் வறண்டுபோய் கூவிக் கதறினான்; உலகில் உள்ள ஆறுகள் எல்லாம் தூர்ந்து போயின. நீண்ட திசைகள் எல்லாம் தேய்ந்து, சுருங்கி, நுணுகிப்போயின.

இதனால் வருணன் மட்டும் அச்சம் கொண்டான் என்பதில்லை. அவனோடு தொடர்புடைய, மேகக்கூட்டம், ஆறுகள், நீண்டதிசைகள் எல்லாமும் அச்சம்கொண்டன என்பதாம்.

61. பெரும்புறக்கடலும் கொதித்தல்

அண்ட மூலத்துக்கு அப்பால் ஆழியும் கொதித்தது; ஏழு
தெண்திரைக் கடலின் செய்கை செப்பி என்? தேவன் சென்னிப்
பண்டை நாள் இருந்த கங்கை நங்கையும் பதைத்தாள்; பார்ப்பான்
குண்டிகை இருந்த நீரும் குளுகுளு கொதித்தது அன்றே! (6732)

(மூலம்-அடிப்பகுதி; ஆழி-கடல்/பெரும்புறக்கடல்/ஆவரணக் கடல்; தேவன்-சிவபெருமான்; சென்னி-தலை; பார்ப்பான்-அந்தணன்/ பிரமன்; குண்டிகை-கமண்டலம்/கரகம்; குளுகுளு-ஒலி; தெண்-தெளிவான; பதைத்தல்-நடுங்குதல்/துடித்தல்)

''இவ்வண்ட கோளகைக்கு அடிப்புறத்திற்கும் அப்பால் உள்ள பெரும் புறக்கடலும் கொதித்துப்போனது. தேவதேவனான சிவபெருமான் நடுநடுங்கினான்; அந்தணனாகிய பிரமதேவனின் கமண்டலத்தில் இருந்த புனிதநீரும் குளுகுளு என்ற ஒலி எழுப்பிக்கொண்டு கொதித்தது என்றால் இந்நில உலகத்தில் உள்ள தெள்ளிய அலைகளையுடைய ஏழுகடல்களும் என்ன நிலையை அடைந்து இருக்கும் என்று சொல்லி என்ன பயன்?'' என்கிறான் கவிஞன்.

இராமபிரானுடைய நோக்கம் வருணனை விரைவில் வரவழைக்க வேண்டும் என்பதே தவிர, வருணனுக்குக்கேடு சூழ்வது என்பது அல்ல. எனவேதான் இறுதியில் பிரம்மாஸ்திரத்தைப் பயன்படுத்தினான். விளைவு பயங்கரமாயிற்று. நிலவுலகக் கடலுக்குத் தொடர்பில்லாத அண்ட கோளத்தின் அடிப்பகுதிக்கும் அப்பால் உள்ள பெரும்புறக்கடலும், சிவபெருமான் தலையில் இருந்து வரும் கங்கை நீரும், பிரமதேவனின் கரகத்தில் இருக்கும் புனிதநீரும் கொதித்தன என்பது உயர்வுநவிற்சி. 'நான்முகன்கழீஇய நன்னீர்' என்பது வீடணன்அடைக்கலப்படலம். இதில் இன்னொன்றும் கவனிக்கப்பட வேண்டும். இராமன் செலுத்தியது பிரம்மாஸ்திரம், அந்தப் பிரம்மாஸ்திரத்திற்கு அதிதேவதையான பிரமன் கூட இதற்கு விதிவிலக்கல்ல. அவன் கையிலிருந்த கரகநீரும் கொதித்தது என்கிறான் கவிஞன். குளுகுளு என்ற அடுக்கு ஒலிக்குறிப்பு. இப்பொழுது

Koviloor Digital Library

கையாளப்படும் பொருளில் வந்ததல்ல. முன்பு இராமபிரான் ஏழுமராமரங் களையும் ஒரே அம்பால் ஊடுருவித் தொளைத்தபோது எவ்வாறு அந்த அம்பு ஏழு என்று சொல்லப்படுகிற எல்லாவற்றையும் தொளைத்து மீண்டதோ, அதுபோல இப்பொழுதும் இந்த அம்பு தண்ணீர் என்று சொல்லப்படுகின்ற எல்லாவற்றையும் பதம்பார்த்தது என்று கொள்க.

'அண்டமூலத்துக்கு அப்பால் ஆழி' என்பது பெரும்புறக்கடல் என்றே இதுவரை எல்லோராலும் கூறப்பட்டு வந்தது. இந்தப் பாடலில் மட்டும் 'ஆவரணக்கடல்' என்று உ.வே.சா.பதிப்பு பொருள் கூறுகிறது. ஆவரணம் என்ற சொல் எந்தப்பொருளில் இங்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது? அது இங்கு எப்படிப்பொருந்தும் என்பது அறிஞர்களின் ஆராய்ச்சிக்கு உரியது. பெரும்புறக்கடல் என்பது இங்கு கூறப்படுகின்ற ஏழு கடல்களினின்றும் வேறுபட்டது என்பதை நினைவிற் கொள்க.

62. "இரக்கம் வந்து எதிர்ந்த காலத்து, உலகுஎலாம் ஈன்று, மீளக்
கரக்கும் நாயகனைத் தானும் உணர்ந்திலன்; சீற்றம் கண்டும்
வரக்கருதாது, தாழ்த்த வருணனின் மாறு கொண்டார்
அரக்கரே? அல்லர்" என்னா, அறிஞரும் அலக்கண் உற்றார். (6733)

(எதிர்தல்-தோன்றுதல்; ஈன்று-தோற்றுவித்து; மீள-மீண்டும்; கரக்கும்-மறைக்கும்/பாதுகாக்கும்/ஒடுக்கும்; நாயகன்-தலைவன்/இராமபிரான்; மாறு-பகைமை; அறிஞர்-தேவர்கள்; அலக்கண்-துன்பம்/வருத்தம்; இரக்கம்-கருணை)

உலக உயிர்களிடத்து திருமாலின் திருவுள்ளத்தில் மிக்க கருணை பொங்கிவரும் காலத்தில், இவ்வுலகையெல்லாம் தோற்றுவித்துப் பின்னர், மீண்டும் அவற்றைப் பாதுகாக்கும் தொழிலையுடைய திருமாலின் அம்சமான இராமபிரானின் ஆற்றலை, வருணன் இன்னும் உணர்ந்து கொள்ளவில்லை போலும், இராமபிரானது சீற்றத்தை நேரில்கண்டும், விரைவில் வரவேண்டும் என்று கருதாது, இன்னும் காலம் தாழ்த்தும் இந்த வருணனைவிட இராமபிரான் மேல் பகைமை கொண்டவர்கள் அரக்கர் களாகவா இருக்கமுடியும்? இல்லை; வருணன்தான் அரக்கர்களைக் காட்டிலும் இராமபிரானிடம் மிக்க பகைமை கொண்டவன் என்று தேவர்களும், ஞானிகளும் துன்பம் கொள்ளலாயினர்.

இராமபிரான் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழிலையும் ஏககாலத்தில் ஆற்றும் வல்லமைபடைத்தவன்-பரம்பொருள்-என்று கவிஞன் நிறுவுவதை உணர்க. இராமபிரான் மானிடவடிவம் ஏற்றிருப்ப தால் வருணனை வேண்டி ஏழுநாள் தவம் கிடக்க நேர்ந்தது. அன்றெனில் அவன் இறைத்தன்மை வெளிப்படுமேயானால் அவன் ஒருவனே முத்தொழில்களையும் இயற்றும் ஆற்றல் படைத்தவன் என்பதும் குறிப்பு. முதலில் 'தானும் உணர்ந்திலன்' என்பது குற்றம்; சீற்றம் கண்டும்

Koviloor Digital Library

வரக்கருதாது தாழ்த்தது' வருணன் செய்த பெருங்குற்றம் என்க. எனவே இராமபிரானிடம் பகைமை கொண்டவர்கள் அரக்கர்கள் அல்லர்; வருணனே இப்பொழுது அரக்கனாவான் என்கிறான் கவிஞன். 'வாள்போல் பகைவரை அஞ்சற்க; அஞ்சுக கேள்போல் பகைவர் தொடர்பு' என்பது குறள்-882.

63. "உற்று ஒரு தனியே, தானே, தன்கணே, உலகம் எல்லாம்
பெற்றவன் முனியப் புக்கான்; நடுஇனிப் பிழைப்பது எங்ஙன்?
குற்றம் ஒன்று இலாதோர் மேலும் கோள்வரக் குறுகும்' என்னா
மற்றைய பூதம் எல்லாம், வருணனை வைத மாதோ!" (6734)

(உற்று-பொருந்தியிருந்து/மனத்துள்கருதி; முனிதல்-கோபித்தல்; புகுதல்-தொடங்குதல்; நடு-இடையே; கோள்-தீங்கு/துன்பம்; குறுகும்-வரக்கூடும்; வைதல்-ஏசுதல்; தன்கண்-தன்னிடத்து/தன்னுள்ளே; பெற்றவன்-ஈன்றவன்/தோற்றுவித்தவன்)

''தான் தனி ஒருவனாகவே தனித்திருந்து, தன் மனத்துள் கருதி, தன்னிச்சையாக இவ்வுலகம் எல்லாவற்றையும் தன்னிடமிருந்து தோற்றுவித்தவன், இப்பொழுது கோபம் கொள்ளத் தொடங்கியிருக்கிறான். இதற்கு நடுவில் நாம் எல்லாம் எவ்வாறு பிழைத்திருக்க முடியும்? குற்றம் செய்தவன் தவிர குற்றம் ஒன்றும் செய்யாத நமக்கும் தீங்குவரக்கூடும்'' என்று கருதி, மற்றைய பூதங்களான நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய நான்கு பூதங்களும் வருணனை ஏசின.

64. வருணன் தோன்றுதல்

எழுசுடர்ப் படலையோடும், இரும் புகை நிரம்பி எங்கும்
வழி தெரிவு அறிவிலாத நோக்கினன், வருணன் என்பான்,
அழுது அழி கண்ணினன், அன்பால் உருகிய நெஞ்சன், அஞ்சித்
தொழுது எழு கையன், நொய்தின் தோன்றினன், வழுத்தும்
சொல்லான். (6735)

(சுடர்ப்படலை-அனல்கொழுந்து/தீத்தொகுதி; படலை-படலம்/திரள்; இரும்-மிக்க; நோக்கு-பார்வை; அழிதல்-கெடுதல்; வழுத்துதல்-துதித்தல்; நொய்தின்-விரைவில்)

மேன்மேலும் உயர்ந்து தொடர்ந்து எழுகின்ற அனல் கொழுந்தோடு, நிறைந்த புகைமண்டலமும் எங்கும் சூழ்ந்துகொள்ள, தான் செல்ல வேண்டிய வழி இதுதான் என்று கூட அறிந்துகொள்ளமுடியாத, புகை மூடிய பார்வையை உடையவனான வருணன் என்பவன், அழுது அழுது கண்கள் சிவந்ததால் பொலிவிழந்து, இராமபிரான்மீது கொண்ட அன்பால் உருகிய உள்ளத்தை உடையவனாகவும், அவனுக்கும் அவன் சீற்றத்

Koviloor Digital Library

நிற்கும் அஞ்சித் தொழுது உயர்ந்த கைகளையுடையவனாய்க் கைகளைக் கூப்பிக்கொண்டும், தன் வாயில் இராமபிரானைப் போற்றித் துதிக்கும் சொற்களை உடையவனாகவும் இராமபிரான் முன் விரைந்து வந்து தோன்றினான்.

இதேபோல முன்பும் திருவடிசூட்டுப் படலத்தில் பரதன் தோற்றத்தைக் கூறிய கவிஞன் ''தொழுது உயர் கையினன்; துவண்ட மேனியன் ; அழுது அழி கண்ணினன்;'' என்று கூறியதையும் நினைவிற்கொண்டுவருக. அவன் வந்த வேகம் என்னவோ விரைவுதான்; ஆனால் இராமபிரான் காத்திருந்த நேரமோ ஏழுநாட்கள் என்பதை அறிக. அன்பினால் நெஞ்சம் உருகும்போது, கண்களில் நீர் தானே வழியும் 'அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ்! ஆர்வலர் புன்கணீர் பூசல்தரும்' என்பது குறள்-71.

65. ''நீ எனை நினைந்த தன்மை, நெடுங்கடல் முடிவில் நின்றேன்,
ஆயினேன் அறிந்திலேன்'' என்று அண்ணலுக்கு அயிர்ப்பு நீங்க,
காய்எரிப் படலை சூழ்ந்த கருங்கடல் தரங்கத்தூடே,
தீயிடை நடப்பான்போல, செறிபுனற்கு இறைவன் சென்றான். (6736)

(செறி-நெருங்கிய; இறைவன்-கடவுள்; அண்ணல்-பெரியோன்/ இராமபிரான்; அயிர்ப்பு-ஐயம்; தன்மை-விதம்/செயல்; முடிவு-கோடி/ எல்லை; காய்-எரிக்கின்ற; படலை-திரள்; தரங்கம்-அலைகள்; நெடுமை-நீட்சி/பரப்பு; செல்லுதல்-வருதல்)

''நீண்டு பரந்த கடலின் ஒரு கோடியில் நின்றிருந்ததால், நீ என்னை அழைத்த செய்கையை அறியமுடியாமற் போயிற்று'' என்று கூறிக் கொண்டே பெரியோனாகிய இராமபிரான் கொண்டிருந்த சந்தேகத்தைத் தீர்க்கும் வண்ணம், நிறைந்த நீர்க்கு அதிபதியான வருணன், தீயின் நடுவில் நடந்து வருபவனைப்போல, கொழுந்து விட்டு எரியும் நெருப்புத் தொகுதி பரவியுள்ள கரிய கடலின் அலைகளின் நடுவில் நடந்து வந்து இராமபிரானை அடைந்தான்.

தான் இதுவரை வராததற்கும், இப்போது காலந்தாழ்த்து வந்தமைக்கும் உரிய காரணத்தைத் தெளிவாகக் கூறியிருக்கிறான் வருணன் என்க. பொதுவாக ஏதாவது ஒரு செயலுக்குச் சாட்சி வேண்டுமென்றால் நெருப்பைத்தான் குறிப்பிடுவது வழக்கம். இன்றும் சத்தியம் செய்பவர்கள் சூடத்தை அணைத்துச் சத்தியம் செய்வதைப் பார்க்கிறோம். சீதாதேவியும் 'உலகில் நடக்கின்ற எல்லாச் செயல்களுக்கும் சான்றாக நிற்பவன் நீயே' என்று அக்னி தேவனைப் பார்த்துக் கூறியதையும் முன்பு நாம் கண்டோம். அதுபோல இப்போது வருணன், தான் கூறுவது உண்மைதான் என்று இராமபிரானுக்கு மெய்ப்பிக்க, 'தீயிடை நடப்பான்போல' வந்தான் என்கிறான் கவிஞன். சில கருத்துக்களை இலை மறைகாய்போலக்

Koviloor Digital Library

கூறுவதில் கவிச்சக்கரவர்த்திக்கு நிகர் அவனேதான் என்று சொல்லத் தோன்றுகிறது அல்லவா?

66. வந்தனன் என்ப மன்னோ, மறிகடற்கு இறைவன்; வாயில்
சிந்திய மொழியன், தீந்த சென்னியன், திகைத்த நெஞ்சன்,
வெந்து அழிந்து உருகும் மெய்யன், விழுப் புகைப் படலம் விம்ம,
அந்தரின் அலமந்து, அஞ்சி, துயர் உழந்து, அலக்கண் உற்றான். (6737)

(மறிதல்-மடங்குதல்; சிந்துதல்-வெளிப்படுத்துதல்/பேசுதல்; சென்னி -தலை; மெய்-உடம்பு; விழுமிய-மிக்க; படலம்-திரள்; விம்முதல்-நிறைந் திருத்தல்; அந்தர்-அந்தகர்/குருடர்; அலமருதல்-தடுமாறுதல்; உழல்தல்-துன்புறுதல்; அலக்கண்-வருத்தம்/வேதனை; உறுதல்-வந்து அடைதல்)

மடங்கி வீழும் அலைகளையுடைய கடலுக்கு அரசனான வருணன், தான் என்ன பேசுகிறோம் என்பதே தெரியாத வண்ணம் தன் வாயால் ஏதோ பேசிக்கொண்டும், நெருப்பின் ஊடே வந்ததால் தீய்ந்து கருகிப்போன தலையை' உடையவனாகவும், என்ன செய்யப்போகிறோம் என்று அறியாது திகைப்புண்ட உள்ளத்துடனும், நெருப்பில் வெந்து, பொலி விழந்து, உருகிப்போன உடம்பினை உடையவனாகவும், மிக்க புகைமண்டலம் நிறைந்திருப்பதால் கண்பார்வை மங்க, குருடரைப்போல நிலைதடுமாறி, இராமபிரானிடத்து அச்சம் கொண்டு, துயரடைந்து வருத்தத்துடன் வந்து சேர்ந்தான்.

என்ப, மன், ஓ மூன்றும் அசைச்சொற்கள்; 'சிந்திய மொழியன்' என்பது ஓர் அருமையான சொற்றொடர். நிதானம் தவறிச்சொற்கள் தானே வெளிப் பட்டன என்க. பொதுவாகச் சிந்துதல் என்பது தவறான செய்கையால், மனத்தடுமாற்றத்தால் அவனை அறியாமலேயே ஏற்படும் விளைவைக் குறிக்கும் சொல். அச்சத்தால் வருணனுக்கு ஏற்படுகின்ற மனத்தடு மாற்றத்தை எத்தனை விதமாகச் சொல்லுகிறான் கவிஞன் பாருங்கள். அச்சமெய்ப்பாட்டிற்கு இப்பாடல் ஓர் சிறந்த எடுத்துக்காட்டு. வாயில் சிந்திய மொழியன், தீந்த சென்னியன், திகைத்த நெஞ்சன், வெந்து அழிந்து உருகும் மெய்யன், விழுப் புகைப் படலம் விம்ம,அந்தரின் அலமந்து, அஞ்சி, துயர் உழந்து, அலக்கண் உற்றான்.

67. வருணன் அடைக்கலம் வேண்டுதல்

''நவை அறும் உலகிற்கெல்லாம் நாயக! நீயே சீறின்,
கவயம் நின் சரணமல்லால், பிறிதொன்று கண்டதுண்டோ?
இவை உனக்கு அரியவோதான்; எனக்கு என வலி வேறுண்டோ?
அவயம், நின் அவயம்!' என்னா அடுத்தடுத்து அரற்றுகின்றான்.(6738)

Koviloor Digital Library

(நவை-குற்றம்; நாயகன்-தலைவன்; சீறின்-கோபித்தால்; கவயம்-கவசம்/பாதுகாப்பு; சரணம்-திருவடிகள்; பிறிது-வேறு; வலி-வலிமை; அவயம்-அபயம்/அடைக்கலம்; அடுத்தடுத்து-பன்முறை/இடைவிடாது; அரற்றுதல்-கூக்குரலிடுதல்)

''குற்றமற்ற இந்த உலகங்களுக்கெல்லாம் தலைவனே! கருணையே வடிவான நீயே என்மீது இவ்வாறு கோபம் கொள்ளுவாயானல், அதனின்றும் தப்பிப்பதற்கு எனக்கு, உன்னுடைய திருவடிகளைத் தவிர, வேறு ஏதேனும் பாதுகாவல் தரும் பொருள் ஒன்று உண்டோ? இவ்வாறு கடலில் அம்பு தொடுத்து நீரைவற்றச் செய்து, நெருப்பு எழச்செய்து உலகத்தை நடுங்கச்செய்யும் செயல்கள் எல்லாம் உன்னால் செயற்கரிய செயல்களோ? உனக்கு எளிதானவைதானே? ஆனால் எனக்கு நீ தந்தருளிய வலிமை அல்லால், எனக்கெனத் தனியான வலிமை என்று வேறு ஏதேனும் உண்டோ? எனவே நான் உன் அடைக்கலம், நான் உன் அடைக்கலம்'' என்று இடைவிடாது பலமுறை கூறிக் கூக்குரலிடுவது போலக் கதறலானான் வருணன்.

கவசம் என்னும் வடசொல் கவயம் என்றும், அபயம் என்ற வடசொல் அவயம் என்று திரிந்தது எனக்கொள்க, 'அடுத்து அடுத்து' என்னும் அடுக்குப் பலமுறை என்ற பொருளைத்தரும்.

68. வருணன் துதி [7 பாடல்கள்]

''ஆழி நீ; அனலும் நீயே; அல்லவை எல்லாம் நீயே;
ஊழி நீ; உலகும் நீயே; அவற்று உறை உயிரும் நீயே;
வாழியாய்! அடியேன் நின்னை மறப்பெனோ? வயங்கு செந்தீச்
சூழ் உற உலைந்து போனேன்; காத்தருள் சுருதி மூர்த்தி! (6739)

(சுருதி-வேதம்; மூர்த்தி-வடிவம்; ஆழி-கடல்; அனல்-நெருப்பு; உறைதல்-வாழ்தல்; வயங்கு-விளங்குகின்ற; உலைதல்-அழிதல்)

வருணன் இராமபிரானை நோக்கி ''வேதங்களின் மொத்த வடிவானவனே! வேதங்களால் புகழப்படும் பரம்பொருளே! இந்தக் கடலும் நீதான்; இதனை அழித்த நெருப்பும் நீதான்; இவையல்லாத மற்ற நிலம், காற்று, ஆகாயம் ஆகிய ஏனைய பூதங்களும் நீதான்; பிரளயகாலத்தைத் தோற்றுவிப்பவனும் நீயே. அவ்வாறு அழிக்கப்படுகின்ற இந்த உலகங்களெல்லாமும் நீதான்; அவற்றில் வாழ்கின்ற உயிர்களுக்கு உயிராய் இருப்பவனும் நீதான்; என்றும் குன்றாத அழியாத வாழ்வு பெற்றவனே! அடியவனாகிய நான் மறப்பதற்கு ஏது உண்டோ? மறக்கமுடியுமோ! ஒளியுடன் விளங்குகின்ற சிவந்த நெருப்பு, என்னைச்சுற்றிக் கொள்ள அழிந்துபோனேன்; அருள்கூர்ந்து என்னைக் காப்பாற்றுவாயாக!'' என்று வேண்டித் துகிக்கின்றான்.

Koviloor Digital Library

கடலுக்கும், நீருக்கும் அதிபதியாகக் கருதப்படுபவன் வருணன். அவனே இராமபிரானைப் பார்த்து 'ஆழி நீ' என்று போற்றித் துதிப்பது நினைக்கற்பாலது. 'திட விசும்பு, எரி, வளி, நீர், நிலம் இவை மிசைபடர்பொருள் முழுவதுமாய் அவையவை தொறும், உடல்மிசை உயிரெனக் கரந்து, எங்கும் பரந்துளன்' என்பது திருவாய்மொழி. இவற்றுடன் இந்திரன், கவந்தன், விராதன், கருடன், முதலியோர் துதிகளையும் ஒப்பிட்டு நோக்குக. 'ஏழுலகு மானான்தன்னை, ஏழ்கடலும், ஏழ்மலைகளும் ஆனான் தன்னை, காற்றானை, தீயானை, நீருமாகி நின்றானை' என்பது தேவாரம். இராமபிரானைச் 'சுருதி நாயகன், வேத நாயகன் என்றும், இன்னும் பலவாறெல்லாம் கவிஞன் காப்பியப் போக்கில் பல இடங்களில் கூறியிருப்பதையும் இங்கு நினைவுகூர்க.

69. "காட்டுவாய் உலகம்; காட்டிக்காத்து, அவை கடையில் செந்தீ
ஊட்டுவாய்; உண்பாய் நீயே; உனக்கும் ஒண்ணாதது உண்டோ?
தீட்டு வான் பகழி ஒன்றால், உலகங்கள் எவையும் தீய,
வீட்டுவாய்; நினையின், நாயேற்கு இத்தனை வேண்டுமோதான்?" (6740)

(காட்டுதல்-படைத்தல்; கடை-ஊழியிறுதி; ஒண்ணாதது-முடியாதது; நினையின்-நினைத்தால்; எவையும்-எல்லாவற்றையும்; வான்-சிறந்த; பகழி-அம்பு; வீட்டுதல்-அழித்தல்; தீட்டு-தீட்டிக் கூராக்கப்பட்ட)

''இந்த உலகங்களெல்லாவற்றையும் படைப்பவன் நீயே! படைத்த பின்பு அவற்றைக் கட்டிக்காப்பாற்றுபவனும் நீயே; ஊழியிறுதியில் அவ்வுலகங்களை, சிவந்த நெருப்பினால் அழித்துவிடுபவனும் நீயே; அவ்வாறு அழிந்த உயிர்களுக்கு எந்தச் சேதமும் ஏற்படாமல் வயிற்றுக்குள் அடக்கி உண்பவனும் நீயே; உனக்கு முடியாதது என்று ஒரு செயலும் இருக்கிறதோ? நன்கு தீட்டிக் கூராக்கப்பட்ட சிறந்த ஒரேஒரு அம்பினால் இந்த உலகங்கள் எல்லாவற்றையும் நெருப்புக்கு இரையாக்கி அழித்துவிடும் வல்லமை பெற்றவனும் நீயே! இந்த எளியோனாகிய நாய்போன்ற என்மீது இவ்வளவு சினம் கொண்டு இத்தனை அம்புகளைத் தொடுக்க வேண்டுமோ!'' என்று துதிக்கிறான் வருணன்.

இராமபிரான் மும்மூர்த்திக்கும் முதல்வன் என்பதை இப்பாடல் மிக அழகாகத் தெரிவிப்பதை உணர்க. ''காட்டுவாய்; காட்டிக்காத்து, செந்தீ ஊட்டுவாய்'' என்பதனால் பிரமாவாக இவ்வுலகைப் படைத்து, திருமாலாக இவ்வுலகத்தைக் காத்து, இறுதியில் சிவபெருமானாக இவ்வுலகை அழிக்கும் வல்லமைபெற்றவன் என்று இராமபிரானை மூலமுதற்காரணன் என்று நிறுவுகிறான் வருணன் என்க. 'உண்பாய் நீயே' என்பது ஊழியிறுதிக்காலத்தில் உலகம் அழிந்தாலும், அவ்வுலகத்து உயிரினங்களையெல்லாம் தன் வயிற்றுக்குள் ஒடுக்கி ஓர் ஆலிலைமேல் அமர்ந்திருப்பான் திருமால் என்பது ஒரு புராணக் குறிப்பு. அதனையொட்டிக் கூறப்பட்டது எனக்கொள்க. தன்னை எளியவன்,

Koviloor Digital Library

என்றும் இத்தனை சினத்திற்கு உரியவன் அல்லன் என்பதால் 'நாயேற்கு' என்றும் கூறிக்கொண்டான் வருணன் என்பதாம்.

70. "சண்ட வான் கிரண வாளால் தயங்கு இருட்காடு சாய்க்கும்
மண்டலத்து உறையும் சோதி வள்ளலே! மறையின் வாழ்வே!
பண்டை நான்முகனே ஆதி சராசரத்து, உள்ளப் பள்ளப்
புண்டரீகத்து வைகும் புராதனா! போற்றி! போற்றி!" (6741)

(சண்டம்-கொடுமை/மிகுந்த வெப்பம்/வலிமை; வான்-சிறந்த; தயங்குதல்-திகைத்தல்; சாய்தல்-அழித்தல்; உறையும்-தங்கியிருக்கும்; சோதி-ஒளிப்பிழம்பு; மறை-வேதம்; பண்டை-பழமையான; நான்முகன்-பிரமன்; ஆதி-முதலாக; சரம்-இயங்குவன; அசரம்-நிற்பன; புண்டரீகம்-தாமரைமலர்; வைகுதல்-தங்கியிருத்தல்; புராதனம்-பழையன; போற்றி-காப்பாயாக/வணக்கம்/வாழ்க)

"கடுமையான வெப்பம் மிகுந்த சிறந்த கிரணங்கள் என்னும் வாட்படையினால், திகைத்தற்குக் காரணமாக விளங்குகின்ற இருட்டு என்னும் காட்டினை வெட்டித்தள்ளும், சூரியமண்டலத்தில் வசிக்கும் ஒளிப்பிழம்பான வள்ளல்தன்மை உடையவனே! வேதங்களுக்கெல்லாம் வாழ்வுதருமாறு அதன்படி நின்று ஒழுகுபவனே! வேதங்கட்கு இருப்பிடமானவனே! மிகப் பழங்காலத்தவனான நான்கு முகங்களைக் கொண்ட பிரமதேவன் முதலாக, நிலைத்திணைப் பொருள்களும், இயங்குதிணைப் பொருள்களுமான உயிரினங்களின் உள்ளமாகிய தாமரைமலரில் உறைகின்ற பழமையானவனே! வணக்கம் வணக்கம்!" என்று துதிக்கிறான் வருணன்.

'சண்டம்' என்ற சொல் வலிமையை உணர்த்தும்; 'சண்டமாருதம்' என்பது வலிமையான மென்காற்றைக் குறிப்பதுபோல என்க. பரம் பொருள் பரிதிமண்டலத்தின் நடுவில் உறைபவன் என்பது ஒரு புராணக்குறிப்பு. எனவே 'மண்டலத்து உறையும் சோதி வள்ளலே' என்றார் என்க. மண்டலம் இங்கே சூரியமண்டலத்தைக் குறிக்கும் என்க. பள்ளத்துள் விளைவது தாமரை என்பதால் பள்ளப்புண்டரீகம் என்றார் என்க.

71. "கள்ளமாய் உலகம் கொள்ளும் கருணையாய்! மறையில் கூறும்
எள்ளல் ஆகாத மூலத்து யாதுக்கும் முதலாய் உள்ள,
வள்ளலே! காத்தி" என்ற, மாகரி வருத்தம் தீர,
புள்ளின்மேல் வந்து தோன்றும் புராதனா! போற்றி, போற்றி!" (6742)

(மறை-வேதம்; எள்ளல்-இகழ்ச்சி; யாதுக்கும்-எவ்வுயிர்க்கும்; முதல்-மூலம்; காத்தி-காப்பாற்றுவாயாக; கரி-யானை/கஜேந்திரன்; மா-

Koviloor Digital Library

பெருமை; புள்-பறவை/கருடன்; புராதனன்-பழமையானவன்; கள்ளம்-பிறர் அறியாதநிலை; கொள்ளுதல்-அடக்கிக்கொள்ளுதல்)

''உலகில் உள்ள ஒருவரும் அறிந்துகொள்ள முடியாதபடி கள்ளத் தனத்தால், இவ்வுலக உயிர்களனைத்தையும் உன் வயிற்றுக்குள் ஒடுக்கிக் காத்தருளும் கருணைமிக்கவனே! ஆதிமூலமே! என்னைக் காத்தருள் வாயாக!'' என்று சிறந்த பெருமைபெற்ற யானையாகிய கஜேந்திரன் உன்னைக் கூவி அழைத்தபோது, அவன் வருத்தம் நீங்கும்படி விரைந்து உன்வாகனமாகிய கருடப்பறவையின்மீது ஊர்ந்து வந்து காட்சியளித்து அவனை முதலையிடமிருந்து காப்பாற்றிய மிகப்பெரும் பழமையான வனே! வணக்கம், என்னையும் காத்தருள்வாயாக!'' என்கிறான் வருணன்.

திருமால் கஜேந்திரனைக் காத்தருளிய வரலாறு, காப்பியத்தில் கவிஞனால் பல இடங்களிலும் பேசப்படுவதை நினைக. பெரும்பாலும் ஒவ்வொரு காண்டத்திலும், ஒருமுறையாவது இந்த வரலாற்றைக் கம்பன் குறிப்பிடுகிறான் என்பது தனிச்சிறப்பு.

72. "அன்னை நீ, அத்தன் நீயே; அல்லவை எல்லாம் நீயே;
பின்னும் நீ; முன்னும் நீயே; பேறும் நீ; இழவும் நீயே;
என்னை 'நீ இகழ்ந்தது' என்றது எங்ஙனே? ஈசன் ஆய
உன்னை நீ உணராய்! நாயேன் எங்ஙனம் உணர்வேன் உன்னை?"
(6743)

(அத்தன்-தந்தை; பின்-காரியப்பொருள்; முன்-காரணன்; இழவு-இழப்பு; எங்ஙனே-எப்படி; ஈசன்-இறைவன்; அல்லவை-பிறஉறவுகள்; பின்முன்-அந்தம்/ஆதி; பேறு-நன்மை; இழவு-தீமை)

''எனக்குத் தாயும் நீயே!, தந்தையும் நீயே!; இவ்வுறவு அல்லாத ஏனைய மற்ற பொருள்களும், உறவுகளும் எல்லாமும் நீயே; அந்தமும் நீயே!, ஆதியும் நீயே; நான்பெற்ற நற்பேறுகளனைத்துக்கும் நீயே காரணம்; நான் பெற்ற இழப்புகளுக்கும், இகழ்வுகளுக்கும்கூட நீதானே காரணம்?. இவ்வாறு எல்லாவற்றுக்கும் உன்னையே சார்ந்திருக்கும் என்னை நோக்கி, 'நீ வாராது என்னை இகழ்ச்சி செய்தாய்' என்று என்னைப் பழிப்பது எவ்வாறு பொருந்தும்? எல்லாம் வல்ல இறைவனாகிய நீயே உன்னை முழுதும் உணர்ந்திருக்கிறாயோ? இல்லையல்லவா? அவ்வாறு இருக்கும் போது நாயினும் கடையனாகிய நான் எவ்வாறு உன்னை முழுவதும் உணர்ந்தவனாகக் கருதுகிறாய்?'' என்று போற்றுகிறான் வருணன்.

இங்கே 'பின்' என்பது பின் நிகழப்போகும் காரியத்தையும், 'முன்' என்பது அந்தக் காரியத்துக்கு முன் உள்ள காரணத்தையும் குறிப்பதாகக் கொள்ள வேண்டும். ''அத்தனாகி, அன்னையாகி, ஆளும் எம்பிரானு மாகி'' என்பது திருச்சந்தவிருத்தம். ''நல்குரவும் செலவும், நரகும் சுவர்க்கமுமாய், வெல்பகையும் நட்பும், விடமும், அமுதமுமாய்,

Koviloor Digital Library

பலவகையும் பரந்த பெருமான்'' என்பது திருவாய்மொழி. 'உன்னை நீதானும் உணராதாய்; உன் வடிவம் தன்னை நீ காட்டத் தளைந்திடுவன் நான்' என்பது வில்லிபாரதம். 'அவர் நமக்கு அன்னையும் அத்தனு மல்லவோ?' என்பது குறுந்தொகை. ''அன்னையும் அத்தனும் ஒப்பாய் அழல்வணா! நீயலையோ?'' என்பது தேவாரம். 'பெற்றதாய் நீயே; பிறப்பித்த தந்தை நீ' என்பது பெரிய திருவந்தாதி; 'முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருளே! பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே' என்பது திருவெம்பாவை. 'தனக்குத் தன் தன்மை அறிவறியானை' என்பது திருவாய்மொழி; தாயும் தந்தையுமாய் என்றும் நிலைத்து நிற்பவன் இறைவன் ஒருவனே என்பதை 'அன்னை எத்தனையெத்தனை அன்னையோ? அப்பன் எத்தனை எத்தனை அப்பனோ?' என்கிறார் பட்டினத்தடிகள்; உலகுக்கெல்லாம் ஒரே தாய், ஒரே தந்தை, பரம்பொருளே என்பது கருத்து; ''ஒன்றே குலம், ஒருவனே தேவன்'' என்பர் திருமூலர். 'அப்பன் நீ, அம்மை நீ; அய்யனும்நீ; அன்புடைய மாமனும் மாமியும் நீ; ஒப்புடை மாதரும், ஒண்பொருளும் நீ; ஒருகுலமும், சுற்றமும், ஓர் ஊரும் நீ' என்பது தேவாரம். 'தம்பெருமை தானறியாத் தன்மையன்காண் சாழலோ' என்பது திருவாசகம்.

73. வருணன் இராமபிரான் திருவடிகளில் வீழ்தல்

பாயிருள் சீய்க்கும் தெய்வப் பருதியைப் பழிக்கும் மாலை,

மா இருங் கரத்தால், மண்மேல் அடியுறையாக வைத்து,

'தீயன சிறியோர் செய்தால், பொறுப்பது பெரியோர் செய்கை;

ஆயிர நாமத்து ஐய! சரணம்' என்று, அடியில் வீழ்ந்தான். (6744)

(பாய்தல்-பரவுதல்; பருதி-பரிதி/சூரியன்; பழித்தல்-கீழ்ப்படுத்துதல்/இகழ்தல்; மா-பெரிய; மண்-தரை; அடியுறை-பாதகாணிக்கை; நாமம்-பெயர்; சரணம்-அடைக்கலம்; சீத்தல்-நீக்குதல்)

எங்கும் நீக்கமறப் பரவியிருக்கும் இருட்டினைப் போக்கவல்ல, தெய்வத்தன்மை பொருந்திய சூரியனின் ஒளியையே பழித்துக் கீழ்ப் படுத்தும் தன்மையுடைய, பேரொளி படைத்த ஒரு இரத்தின மாலையை தன் பெரியகைகளிலே ஏந்திக்கொண்டு வந்த வருணன், அதை இராமபிரானுக்குத் தனது பாதகாணிக்கையாகத் தரையின்மேல், வைத்து, 'சிறியவர்கள் அறியாமையினால் ஏதேனும் தவறுசெய்து விட்டாலும், அதனைப் பொறுத்துக்கொண்டு அவர்களை நல்வழி ஆற்றுப்படுத்துதல் உன்போன்ற பெருமக்களின் கடமையாகும்' ஆயிரம் திருப்பெயர்களை உடைய பரம்பொருளே! நின் திருவடிகளில் ''நான் அடைக்கலம்'' என்று கூறி அவன் திருவடிகளில் விழுந்து வணங்கினான் வருணன்.

'மா இரும்' என்பது மீமிசைச்சொல், அல்லது ஒரு பொருட்பன்மொழி எனக்கொள்க. 'இருள் சீக்கும் சுடரேபோல்' என்பது கலித்தொகை.

Koviloor Digital Library

'சீறுவாய் அல்லை ஐய! சிறியவர் தீமை செய்தால் ஆறுவாய் நீ அலால் மற்று ஆர் உளர்' என்று இலக்குவனை நோக்கிய தாரையின் கூற்றை இங்கே நினைவுகூர்க. 'சேராதன உளரோ பெரும் செல்வர்க்கு, வேதம் செப்பும் பேர் ஆயிரம், திண்பெரும்புயம் ஆயிரம்; பெய் துளவத்தார் ஆர்முடி ஆயிரம்; குருகூர்ச்சடகோபன் சொன்ன ஆராஅமுதக்கவி ஆயிரம் அவ் அரியினுக்கே' என்பது கம்பரின் சடகோபர் அந்தாதி. 'பொறுப்பரன்றே பெரியோர், சிறு நாய்கள் தம் பொய்யினையே' என்பது திருவாசகம். 'பிழையோர் நூறே செயினும், பொறுப்பரன்றே அருள் நோக்கினரே' என்பது திருவாவடுதுறைக்கோவை. 'ஒருநாமம், ஒருகுலம், ஒன்றும் இல்லார்க்கு, ஆயிரம் திருநாமம், பாடிநாம் தெள்ளேணம் கொட்டோமோ?' என்பது திருவாசகம். 'சிறியோர் செய்த சிறு பிழையெல்லாம், பெரியோராயின் பொறுப்பது கடனே' என்பது வெற்றிவேற்கை.

74. இராமபிரான் சினம் தணிதல்

பருப்பதம் வேவது என்னப் படர்ஒளி படரா நின்ற
உருப்பெறக் காட்டி நின்று, 'நான் உனக்கு அபயம்' என்ன,
அருப்புஅறப் பிறந்த கோபம் ஆறினான், ஆறா ஆற்றல்
நெருப்புஉறப் பொங்கும் வெம்பால் நீர் உற்றது அன்ன நீரான். (6745)

(பருப்பதம்-பர்வதம்/மலை; வேவது-பற்றிஎரிவது; படர்தல்-பரவுதல்; படரா-படர்கின்ற; உரு-வடிவம்; பெற-நன்றாக; அபயம்-அடைக்கலம்; உற-மிகுதியாக; வெம்-வெப்பமுடைய; உற்றது-அடைந்தது; நீர்மை-தன்மை; அருப்பு-தன்மை; ஆறுதல்-தணிதல்)

ஒரு பெரிய மலையே எரிந்து வெந்துபோகிறது என்று காண்பவர் கூறும் வண்ணம், பரந்த ஒளிமிகுந்தநெருப்புத் தன் மேனியில் பற்றிப் படர்ந்திருக்க, இராமபிரான் எதிரில், வருணன், தன் வடிவத்தை நன்றாகக் காட்டி நின்று, 'நான் உனக்கு அடைக்கலம்' என்று வேண்டவும், தணித்தற்கரிய நெருப்புப் பொருந்தியதால் பொங்குகின்ற சூடான பாலில் கொஞ்சம் நீரைத் தெளித்தால் எப்படித் தணிந்துபோகுமோ அந்தத் தன்மையில் முன்புதணியாத அளவுக்குத் திண்மையாகப் பொங்கியெழுந்த கோபம் இப்போது அரும்பு என்றுகூடக் கூறமுடியாத அளவிற்கு, தணிந்து போயினான்.

முன்பு ஆறாச்சினம் கொண்டான் இராமபிரான். பின்பு வருணன் தன் வெந்துபோன உருவம் காட்டி, கையுறை அளித்து, நான் உன் அடைக்கலம் என்று திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான். எனவே முன்பு ஆறாச்சினம் கொண்ட இராமபிரான், இப்போது சினம் தணிந்தான். இதற்குக் கவிஞன் ஓர் அருமையான உவமையைக் கூறுகிறான். நன்றாகக் கொதிக்கக் காய்ச்சப்பட்ட பாலில் சிறிது தண்ணீரை ஊற்றினால் எப்படி அந்தப் பொங்கிவந்தபால் ஆறி அடங்கித் தணிந்து போகிறதோ அப்படி.

Koviloor Digital Library

ஆறினான், தணிந்தான் என்கிறான் என்க. பர்வதம் என்ற வடசொல் 'பருப்பதம்' எனத் தமிழாக்கப்பட்டது என்க. அரும்புஅற என்பது அருப்பு அற எனலாகியது. ஒருமலர் முழுவதும் மலராது, அரும்பு அளவுகூட உருவாகாமல் இருப்பதுபோன்று ஆறாச்சினம் அரும்பாய் அடங்கியது என்றது ஒரு நயம். 'அருங்காலை நீர்கொண்ட வெப்பம்போல் தானே தணியுமே, சீர்கொண்ட சான்றோர் சினம்' என்பது நாலடியார். 'பாலின் நீர் தீ அணுகப் பால் வெகுண்டு தீப்புகுந்து' என்பது நீதிவெண்பா. 'குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி, கணமேயும் காத்தல் அரிது' என்பது குறள்-29. இங்கு, முன்பு இலக்குவன் சீற்றம், தாரையின் இசைச் சொற்களால், எவ்வாறு தணிந்தது என்பதை கவிஞன் கூறிய கூற்றோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

75. காலம் தாழ்ந்தற்குக் காரணம் கேட்டல்

''ஆறினாம்; அஞ்சல்; உன்பால் அளித்தனம் அபயம் அன்பால்;
ஈறு இலா வணக்கம் செய்து யாம் இரந்திட, எய்திடாதே,
சீறுமா கண்டு வந்த திறத்தினைத் தெரிவதாகக்
'கூறுதி, அறிய' என்றான், வருணனும், தொழுது கூறும். (6746)

(சீறுமா-சீறுமாறு; திறம்-காரணம்/தன்மை; தெரிவது-தெளிவது; ஆறுதல்-தணிதல்; எய்துதல்-வருதல்; இரத்தல்-கெஞ்சுதல்)

இராமபிரான் வருணனை நோக்கி ''நாம் சினம் தணிந்தோம்; பயப்படாதே; உனக்கு அன்பினால் அடைக்கலம் தந்தோம். முடிவில்லாது பலமுறை வணங்கியும், கெஞ்சியும் யாம் கேட்டபோது, வாராது, என்னுடைய சீற்றத்தைக் கண்டபின்பு வந்ததற்கான காரணத்தை, எல்லா வானரர்களும் உணர்ந்து கொள்ளும்படியும், நான் தெரிந்து கொள்ளும்படியும் விளக்கமாகக் கூறுவாயாக!'' என்றான். வருணனும், இராமபிரான் திருவடிகளை வணங்கிக் கீழ்க்கண்டவாறு கூறலானான்.

பணிந்து வணங்கியபோது வாராமல், சினந்து சீறியபோது வந்ததன் காரணத்தை நான் மட்டும் அறிந்து கொள்ளாமல் வியந்து நிற்கும் இவ்வானர வீரர்களும் புரிந்துகொள்ளும் வண்ணம் விளக்கமாகக் கூறுக என்றான் என்பதாம். தன்னைச் சரணடைந்தோர் பகைவர்களா யிருந்தாலும், அவர்களுக்கு அடைக்கலம் தந்து காப்பதையே தன் விரதமாகக் கொண்டான் இராமபிரான் என்பதைக் கவிஞன் காப்பியத்தில் எல்லா இடங்களிலும் வற்புறுத்திக் கூறுவதை எண்ணுக. அவ்வாறே, இங்கும் வருணன் திருவடி இறைஞ்சியதும் விரைந்து சினம் தணிந்து, அன்பால் அடைக்கலம் தந்தான் என்க.

Koviloor Digital Library

76. வருணன் காரணம் கூறுதல்.

''பார்த்தனில் பொறையின் மிக்க, பத்தினிக்கு உற்ற பண்பு,
வார்த்தையின் அறிந்தது அல்லால், தேவர்பால் வந்திலேன் நான்;
தீர்த்த! நின் ஆணை; ஏழாம் செறிதிரைக் கடலில் மீனின்
போர்த்தொழில் விலக்கப் போனேன், அறிந்திலேன் புகுந்தது ஒன்றும்''
(6747)

(பார்-நிலமகள்/பூமாதேவி; உற்ற-நேர்ந்த; பண்பு-நிலை/தன்மை; தீர்த்தன்-தூய்மை உடையவன்; செறி-நெருங்கிய; பத்தினி-துணைவி/சீதாதேவி; புகுந்தது-நிகழ்ந்தது)

''நிலமகளைக் காட்டிலும் மிக்க பொறுமை வாய்ந்த உன் வாழ்க்கைத் துணைவியாகிய சீதாதேவிக்கு நிகழ்ந்த தன்மைகளை, இப்போது உன் வாயால் கூறிய சொற்களைக் கொண்டுதான் அறிந்துகொண்டேன். இதற்கு இடையில் நான் எந்தத் தேவர்களையும் சந்திக்கமுடியவில்லை, எனவே இதனை அறியமுடியவில்லை. உன்மீது ஆணையாகக் கூறுகிறேன். இங்கிருந்து ஏழாவதாக இருக்கக்கூடிய நெருங்கிய அலைகள் நிறைந்த கடலில், சுறாமீன்களுக்குள் ஏற்பட்ட சண்டையினைத் தீர்த்து வைப்பதற் காகப் போயிருந்தேன். ஆதலால் இங்கு நிகழ்ந்தவை ஒன்றும் எனக்குத் தெரியவில்லை. நான் இயல்பாகவே இங்கே வந்தேன்'' என்கிறான் வருணன்.

'பார்தனில்' என்பது எதுகைநோக்கி 'பார்த்தனில்' என்று ஒற்றுமிகுந்து ஓசைநயம் தந்தது என்க. 'அகழ்வாரைத் தாங்கும் நிலம்' என்பது குறள். 'நிலத்தோரன்ன நலத்தரு பெரும்பொறை' என்பது பெருங்கதை. அவனுக்குச் சீதாதேவிக்கு நேர்ந்த துன்பமும் தெரியாது; இராமபிரான் அங்கே வந்து ஏழுநாட்கள் தங்கியிருந்ததும் தெரியாது; முன்னர் இரந்து வேண்டியதும் தெரியாது; இப்போது சீறிச்சினந்ததும் தெரியாது என்றும், தான் இப்போது இயல்பாகவே வந்தேன் என்றும் விளக்கம் அளிக்கிறான் வருணன் என்க.

77. இராமபிரான் அம்பிற்குரிய இலக்குக் கேட்டல்

என்றலும், இரங்கி, ஐயன், ''இத்திறம் நிற்க; இந்தப்
பொன்றல் இல் பகழிக்கு அப்பால் இலக்கம் என்? புகறி'' என்ன,
'நன்று' என, வருணன் தானும், 'உலகத்து நலிவு தீர,
குன்று என உயர்ந்த தோளாய்! கூறுவல்'' என்று கூறும். (6748)

(நிற்க-இருக்கட்டும்; பொன்றுதல்-அழிதல்; புகறி-புகல்தி/கூறுவாயாக; குன்று-மலை; அப்பால்-இனி; நலிவு-துன்பம்/வருத்தம்)

Koviloor Digital Library

என்று வருணன் கூறியதும், இராமபிரான் மனமிரங்கி ''சரி, இந்த நிகழ்ச்சி இத்துடன் இருக்கட்டும். நான் பூட்டிய அழிதல் இல்லாத இந்த அம்புக்கு இனி இலக்காகப்போகும் பொருள் என்ன? கூறுவாயாக!'' என்று கேட்க, வருணன் இராமபிரானை நோக்கி ''மலைகள் போல் உயர்ந்த தோள்களை உடையவனே! நல்லது, நானும் இந்த உலகமும் துன்பம் தீரும்வண்ணம், இந்த அம்பிற்கு இலக்கு பற்றிக்கூறுவேன்'' என்று கூறத்தொடங்கினான்.

இராமபிரான் வில்லில் பூட்டிய அம்புக்கு ஏதேனும் இலக்கு இருக்கவேண்டும். அது 'பொன்றல் இல்பகழி'. முன்பும் ஜெயந்தனாகிய காகாசுரன் நிகழ்ச்சியிலும், பரசுராமன் பற்றிய நிகழ்ச்சியிலும், இந்த இலக்குக் குறிப்புப் பற்றி வந்த செய்திகளை இங்கும் நினைவுகூர்க. இராமன் பூட்டியிருக்கும் அம்பு பிரம்மாஸ்திரம் என்பதை வருணன் அறிவான். பிரம்மாஸ்திரம் உலகத்தையே அழிக்கக்கூடியது. தன்னை மட்டும் அழிப்பதல்ல; எனவே 'உலகத்து நலிவு தீர' என்றார் என்க.

78. வருணன் இலக்குக் கூறுதல்.

"மன்னவ! மருகாந்தாரம் என்பது ஓர் தீவின் வாழ்வார்,
அன்னவர் சதகோடிக்கும் மேல் உளார்; அவுணர் ஆயோர்,
தின்னவே உலகம் எல்லாம் தீந்தன; எனக்கும் தீயார்;
மின்உமிழ் கணையை வெய்யோர்மேல் செல விடுதி" என்றான்.
(6749)

(ஆயோர்-ஆகியவர்கள்; சதம்-நூறு; தீந்தன-தீர்ந்தன/அழிந்தன; மின்-ஒளி; வெய்யோர்-கொடியவர்; விடுதி-ஏவுவாயாக; அவுணர்-அசுரர்)

''உலகங்கள் எல்லாவற்றுக்கும் மன்னனாய்த் திகழ்பவனே! இங்கே கடல் நடுவே மருகாந்தாரம் என்ற பெயருடைய தீவு ஒன்று இருக்கிறது. அதில் வாழ்கின்ற அசுரர்கள் நூறுகோடிக்கும் மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள்; அவர்கள் உணவாக உட்கொண்டதால் உலகத்து உயிர்கள் அனைத்தும் அழிந்துபோயின; அவர்கள் எனக்கும் துன்பம் இழைக்கின்றனர்; எனவே உன்னுடைய ஒளிவீசும் அம்பினை, அந்தக் கொடியவர்களை நோக்கிச் செல்லுமாறு செலுத்துவாயாக!'' என்றான் வருணன்.

'தீந்தன' என்பது துணிவு பற்றி வந்த காலவழுவமைதி எனக்கொள்க. இந்தத்தீவு 'தரும குல்யம்' என்றும் 'விரணகூபம்' என்றும் வான்மீகம் கூறும்.

Koviloor Digital Library

79. இராமபாணம் அவுணரை அழித்து மீளுதல்

நேடி, நூல் தெரிந்துளோர் தம் உணர்விற்கும், நிமிர நின்றான்,
''கோடி நூறு ஆய தீய அவுணரைக் குலங்களோடும்
ஓடி நூறு'' என்று விட்டான்; ஓர் இமை ஒடுங்கா முன்னம்,
பாடி நூறாக நூறி மீண்டது, அப்பகழித் தெய்வம். (6750)

(நூறுதல்-அழித்தல்; ஒடுங்குதல்-முடிதல்; பாடி-தீவு/ஊர்; நேடுதல்-தேடுதல்; தெரிதல்-ஆராய்தல்; நிமிர்தல்-எட்டாது உயர்ந்து நிற்றல்; உணர்வு-அறிவு; ஓடி-விரைந்துசென்று; நூறு-நீறு/பொடி; நூல்-ஞான நூல்; நூறுதல்-அழித்தல்)

நல்ல ஞான நூல்களைத் தேடிச்சென்று அறிந்து, ஆராய்ந்து தெளிந்தவர்களான ஞானிகளின் அறிவிற்கும் எட்டாத உயரத்தில் அப்பாற்பட்டு நின்றிருப்பவனாகிய இராமபிரான், தனது பாணத்தை நோக்கி, ''நீ விரைந்து சென்று, நூறுகோடி என்ற அளவில் இருக்கும், தீயவர்களான அவுணர்களை அவர்களின் குலத்தோடும் சேர்த்து அழித்து விட்டு வருவாயாக!'' என்று கட்டளையிட்டுச் செலுத்தினான். அந்தத் தெய்வத்தன்மை வாய்ந்த அம்பு, ஒரு இமைப்பொழுதில் அத்தீவாகிய மருகாந்தாரத்தைப் பொடிப்பொடியாய் ஆக்கிவிட்டுத் திரும்பி வந்தது.

'உணர்ந்து உணர்ந்து உணரினும், இறைநிலை உணர்வரிது' என்பது திருவாய்மொழி. பிரமனின் அஸ்திரம் என்பதால் 'பகழித் தெய்வம்' எனப்பட்டது என்க. 'பாடி' என்ற சொல் பொதுவாக ஊர் என்ற பொருளிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதறிக. அபரஞானம் என்ற நூல் அறிவிற்கும், பரஞானம் என்கின்ற மெய்யுணர்வுக்கும் எட்டாதவன் என்பதால் 'நேடிநூல் தெரிந்துளோர் தம் உணர்விற்கும் நிமிர நின்றான்' என்றார் என்க.

80. ஆய்வினை உடையர் ஆகி, அறம் பிழையாதார்க்கு எல்லாம்,
ஏய்வன நலனே அன்றி, இறுதி வந்து அடைவது உண்டோ?
மாய்வினை இயற்றி, முற்றும் வருணன் மேல் வந்த சீற்றம்,
தீவினை உடையார் மாட்டே, தீங்கினைச் செய்தது அன்றே! (6751)

(ஆய்வினை-ஆராயும் செயல்; பிழைத்தல்-வழுவுதல்; ஏய்வன-பொருந்துவன; நலன்-நன்மை; இறுதி-அழிவு/கேடு; மாய்வினை-அழிவுச்செயல்; முற்றும்-முடிக்கும்)

''ஆராய்ந்து செய்யப்படும் செயல்களை உடையவராகிய, தருமநெறியினின்றும் தவறாதவர்களாகிய நல்லவர்களுக்கெல்லாம் நன்மையே வந்து பொருந்தும். நன்மையை அன்றி எந்தத் தீங்கும், எந்த அழிவும் ஏற்படாது அல்லவா? அதுபோல இங்கே அழித்தற்குரிய செயலைச் செய்தவனான இராமபிரான் வருணன்மீது கொண்ட மிகுந்த கோபம்,

Koviloor Digital Library

அவ்வன் நன்னெறிகளே செய்தவனாதலால் அவனுக்குத் தீங்குவிளைவிக்காது, தீய செயல்களைச் செய்தவர்களாகிய அவுணர்களுக்கே இறுதியை விளைவித்தது அன்றோ?''

வருணனுக்குத் தீங்கு செய்யாதது மட்டுமல்ல; அவனைத் துன்புறுத்தித் தீமைசெய்த அவுணர்களை அழித்தும் அவ்வம்பு போனது என்பதை உணர்க. இராமபிரானின் அவதார நோக்கம் இங்கே பேசப்படுகிறது. துஷ்ட நிக்ரகம்-அவுணர் அழிந்தது; சிஷ்ட பரிபாலனம்-வருணன் காப்பாற்றப்பட்டது, 'ஆய்வினை' என்பது நன்மை தருவது இது, தீமை தருவது இது என்று பகுத்தறியும் ஆராய்ச்சி எனக்கொள்க. 'நோயெல்லாம் நோய் செய்தார் மேலவாம்; நோய்செய்யார் நோயின்மை வேண்டுபவர்' என்பது குறள்-320. இங்கே நோய்-துன்பம், தீங்கு என்று பொருள்படும்.

81. பாபமே இயற்றினாரை, பல்நெடும் காதம் ஓடி,
தூபமே பெருகும் வண்ணம், எரிஎழச் சுட்டது அன்றே;
தீபமே அனைய ஞானத் திருமறை முனிவர் செப்பும்
சாபமே ஒத்தது அம்பு; தருமமே வலியது அம்மா! (6752)

(தீபம்-விளக்கு; ஞானம்-மெய்ஞ்ஞானம்; திரு-சிறந்த/உயர்ந்த; செப்புதல்-சொல்லுதல்; சாபம்-சினச்சொல்; காதம்-காவதம்; தூபம்-புகை)

பாவச்செயல்களையே செய்துவந்த மருகாந்தாரம் என்னும் தீவில் வாழ்கின்ற அவுணரை இராமன் செலுத்திய அம்பு விரைவாக ஓடிச்சென்று அந்தத்தீவு முழுவதும் புகைஎழும் வண்ணம், நெருப்பு எழச்சுட்டெரித்தது அல்லவா? எனவே ஒளியைத் தரும் நல்ல விளக்குப்போல மெய்ஞ் ஞானத்தைக் கூறுகின்ற உயர்ந்த தெய்வத்தன்மை வாய்ந்த வேதங்களைக் கற்றறிந்த முனிவர்கள் சினந்து சொல்லுகின்ற சாபச்சொல்லைப்போல் அந்த அம்பு அவர்களை அழித்தது. எனவே எல்லாவற்றிலும் தருமமே மிக்க வன்மை உடையது என்பது அறியப்படுகிறது.

'பாவம்' என்பது எதுகை நோக்கி 'பாபம்' எனலானது. புறஇருளை அகற்றுகின்ற ஒளிமிக்க விளக்குப்போல, அகஇருளைப் போக்கவல்லது தீபமாகிய மெய்ஞ்ஞானம் என்க. 'அம்மா' என்பது வியப்புக் குறித்த இடைச்சொல். 'சொல்லொக்கும் கடிய வேகச்சுடுசரம்' என்றதும் இங்கு நினைக்கத்தகும். இராமபாணம் அண்மையிலிருந்த வருணனைச் சுடாது, சேய்மையிலிருந்த அவுணரைச் சுட்டதால், அதர்மத்தினும் தர்மமே வலியது என்று நிறுவுகிறான் கவிஞன்.

Koviloor Digital Library

82. இராமபிரான் வருணனிடம் வழிதருமாறு வேண்டுதல்

''மொழி உனக்கு அபயம் என்றாய்; ஆதலான், முனிவு தீர்ந்தேன்;
பழி எனக்கு ஆகும் என்று, பாதகர் பரவை என்னும்
குழியினைக் கருதி செய்த குமண்டையைக் குறித்து நீங்க
வழியினைத் தருதி என்றான்; வருணனை நோக்கி, வள்ளல்'' (6753)

(மொழி-சொல்; முனிவு-கோபம்; பாதகர்-பாவிகள்/அரக்கர்கள்; பரவை-கடல்; கருதி-மதித்து; குமண்டை-செருக்கு/மகிழ்ச்சிக் கூத்து; நீங்குதல்-திரும்புதல்)

வள்ளல்தன்மை மிக்க இராமபிரான், வருணனை நோக்கி, ''நான் உனக்கு அடைக்கலம்'' என்று உன்வாயால் ஒரு சொல் சொல்லிவிட்டாய் அல்லவா? அதனால் நான் என்னுடைய சீற்றம் தணியப்பெற்றேன். இராமன் தனது மனைவியைக் கூடக் காப்பாற்ற முடியாதவன் ஆகிவிட்டான் என்ற ஒரு பெரிய பழிச்சொல் வந்து என்னைச் சேரட்டும் என்று அந்தப் பாவிகளாகிய அரக்கர்கள் கருதுகிறார்கள். அதனால் இந்தச் சிறு குழியாகிய கடலைத் தமக்கு அமைந்த பெரிய அரணாகக் கருதிச் செருக்கு மிகுந்த மகிழ்ச்சிக் கூத்தாடுகிறார்கள். அவர்கள் செருக்கை அடக்கி இலங்கையினின்றும் திரும்பி வருவதற்கு, இந்தக் கடலில் ஒருவழியை நீ ஏற்படுத்தித் தரவேண்டும்'' என்று வேண்டுகிறான்.

'மொழி' என்பது சொல் என்ற பொருளைத்தரும். அரக்கர்களுக்கு ஆழி பெரிய அரணாகத் தோன்றினாலும், எனக்கு அது ஒரு சிறு குழிதான் என்று தனது ஆற்றலைப் புலப்படுத்துகிறான் இராமபிரான் என்க. இராமபிரான் முன்பு தண்டகாரண்யத்து முனிவர்க்கும், சுக்கிரீவனுக்கும், வீடணனுக்கும் அடைக்கலம் கொடுத்தான். இப்பொழுது வருணனுக்கும் அடைக்கலம் கொடுக்கிறான் என்பதையும் கருதுக. எனவேதான் வான்மீகி அவனை 'சரணாகத வத்சலன்' என்கிறார் என்க. தட்சன் யாகம் செய்ததும் அதுகேடுற்றதும் இந்தச் செருக்கால்தான் என்பதைத் தக்கயாகப்பரணி கூறுகிறது கேளுங்கள். அங்கேயும் இதே குமண்டை என்ற சொல் இதே பொருளில் பயன்படுத்தப்பட்டிருப்பதையும் காணலாம். 'தக்கனார் கொண்ட வேள்விக் குமண்டையது கெட' என்பது பாடல்பகுதி. இங்கே ஒன்று சிந்திக்கவேண்டும். இராமபிரான் 'நீங்க வழியினைத் தருதி' என்பதால் இலங்கையினின்றும் திரும்பி வருவதற்கு வழி தருக என்று கேட்டதனால், போவதற்கு வழி தருக என்பது தானே பெறப்பட்டது என்க. இங்கே 'வள்ளல்' என்று இராமபிரானைக் கவிஞன் குறிப்பாகச் சொன்னதும் கருதத்தக்கது. காரணம் இராமபிரான் வேண்டுவனவற்றை வேண்டுவோர்க்கு வேண்டியவண்ணம் தருபவன் வள்ளல். ஆனால் இங்கே அந்த வள்ளல், வருணனை நோக்கி, 'வழியினைத்தருதி' என்று வேண்டுகிறான் என்பதால் கவிஞன் அந்த 'வள்ளல்' என்ற சொல்லை இங்கே பயன்படுத்தியிருக்கிறான் என்பதும் கருதுக.

Koviloor Digital Library

83. வருணன் கூறுதல்

''ஆழமும் அகலம் தானும் அளப்பஅரிது எனக்கும், ஐய!
ஏழ்என அடுக்கி நின்ற உலகுக்கும் எல்லைஇல்லை;
வாழியாய்! வற்றி நீங்கில், வரம்பு அறு காலம் எல்லாம்,
தாழும், நின்சேனை உள்ளம் தளர்வுறும்; தவத்தின் மிக்காய்!'' (6754)

(மிகுதல்-சிறத்தல்; நீங்குதல்-செல்லுதல்; வரம்பு-எல்லை)

வருணன் இராமபிரானை நோக்கி ''தலைவனே! தலைசிறந்தவனே! நீடூழி வாழ்வாயாக'' என்று முகமன் கூறிப் பின்னர், 'இந்தக்கடலின் ஆழத்தையும், அகலத்தையும் அளந்து அறிவது என்பது கடற்கரசனாகிய என்னாலும் முடியாத செயலாகும். ஏழு என்று ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி நிற்கின்ற இந்த உலகத்திற்கும் இந்தக்கடல் இல்லையென்றால் ஒரு எல்லை இல்லாதுபோய்விடும். கடல் வற்றட்டும் பின்பு செல்லலாம் என்றால் அதற்கு எல்லையில்லாத காலம் எல்லாம் வீணே சென்றுவிடும். கால அளவைக் கணிக்க இயலாது. மிகநீண்டகாலம் ஆகும். அதனால் ஊக்கம் மிக்க உன்னுடைய வானரச்சேனை தளர்ச்சியுற நேரலாம். எனவே நீ நினைக்கின்றபடி விரைவில் இலங்கை சென்று அடைய முடியாமற் போகலாம்'' என்கிறான் வருணன்.

இத்தகைய இடர்ப்பாடுகள் இருப்பதால் இதைத்தவிர்த்து வேறு ஒரு வழி சொல்லப்போகிறான் போலும் என்று கற்போரை நினைக்க வைக்கிறான் கவிஞன். கடலில் வழி உண்டாக்க வேண்டும் என்றால் அந்தக் கடலில் ஒரு பகுதியையேனும் வற்றச் செய்யவேண்டுமல்லவா? அது செய்தால் என்னென்ன விளைவுகள் ஏற்படும் என்பதை விரிவாகக் கூறியிருக்கிறான் வருணன். இது ஏற்புடையதல்ல என்பது வருணன் கருத்து என்பது தெரிகிறது. 'ஏழென அடுக்கி நின்ற உலகு' என்பது 'சப்தத்தீவு' என்று புராணங்கள் கூறுகின்றன. அல்லது மேல் ஏழு உலகங்களையும் கொள்ளலாம் என்க.

84. வருணன் ''சேதுகட்டிச் செல்லுக'' எனக்கூறுதல்

''கல்லென வலித்து நிற்பின், கணக்கிலா் உயிர்கள் எல்லாம்,
ஒல்லையின் உலந்து வீயும்; இட்டது ஒன்று ஒழுகா வண்ணம்,
எல்லை இல் காலம் எல்லாம், ஏந்துவென் இனிதின்; எந்தாய்!
செல்லுதி, 'சேது' என்ற ஒன்று இயற்றி, என்சிரத்தின் மேலாய்! (6755)

(வலித்து-இறுகி; ஒல்லையின்-விரைவில்; வீயும்-அழியும்; ஒழுகுதல் -நகர்தல்/அழிந்துபோதல்; எல்லை-அளவு; ஏந்துதல்-தாங்கி நிற்றல்; சிரம்-தலை; இயற்றி-கட்டி; உலத்தல்-கெடுதல்; இட்டது-வைத்தது)

Koviloor Digital Library

வருணன் இராமபிரானைப் பார்த்து ''என்தந்தை போன்றவனே! இந்தக் கடலை வற்றச் செய்யாமல் கல்லைப்போலக் கடினமாக ஆக்கி நிறுத்திவிட்டால், இதில் வாழ்கின்ற எண்ணற்ற மீன் முதலிய உயிரினங்கள் எல்லாம் விரைவினில் கெட்டு உயிர் அழிந்துபோய்விடும். எனவே அவற்றிற்கு ஊறு நேரா வண்ணம், கடலில் போடுகின்ற எந்தப் பொருளும் நகர்ந்து போகா வண்ணம் அழிந்துவிடாதபடி, அளவற்ற காலம் வரையிலும் நானே அதனைத் தாங்கிக்கொண்டு நிற்கிறேன். நீங்கள் சேது என்ற ஒரு அணையை என் தலைமீது இயற்றி, அதன்மூலமாக எளிதாகக் கடந்து போய்விடுங்கள்'' என்கிறான் வருணன்.

சேது என்பது செய்கரை அல்லது அணைஎனக் கொள்க.

85. இராமபிரான் சேது கட்டப்பணித்தல்

''நன்று, இது புரிதும் அன்றே; நளிர்கடல் பெருமை, நம்மால்
இன்று இது தீரும் என்னில், எளிவரும் பூதம் எல்லாம்;
குன்று கொண்டு அடுக்கி, சேது குயிற்றுதிர்'' என்று கூறிச்
சென்றனன் இருக்கை நோக்கி, வருணனும் அருளின் சென்றான்.

(6756)

(புரிதும்-செய்வோம்; நளிர்-பெரிய; பெருமை-ஆழம்; எளிவருதல்-எளிமைப்படுதல்; சேது-அணை; குயிற்றுதல்-கட்டுதல்; இருக்கை-இருப்பிடம; நளிர்-குளிர்ந்த)

வருணன் கூறிய ஆலோசனையே சரி என்று பட்டதால் இராமபிரான் ''நல்லது; வருணன் கூறியபடியே செய்வோம்; இந்தக் குளிர்ந்த கடலை வற்றச்செய்தாலோ, கல்லைப்போல இறுகிப்போகும்படி செய்தாலோ, அது அங்கு வாழும் உயிரினங்களுக்கு ஊறுவிளைவித்ததாகும். எனவே அவ்வாறு செய்யாமல் அந்தக் கடலாகிய பூதத்தின் பெருமை குன்றாமல் பார்த்துக்கொண்டால், இந்த முயற்சிக்கு, மற்ற நான்கு பூதங்களும் எளிமைப்பட்டு வந்து நமக்கு உதவக்கூடும். எனவே மலைகளை ஒன்றன்மீது ஒன்றாகப் பக்கவாட்டில் பரப்பி அடுக்கி அணை ஒன்றைக் கட்டுங்கள்'' என்று வானரச்சேனைக்கு வேண்டுகோள் விடுத்துத் தன் இருப்பிடம் நோக்கிச் சென்றான் இராமபிரான். இராமபிரான் அருள் பெற்று வருணனும் விடைபெற்றுச் செல்லலானான்.

வருணனை வழிவேண்டு படலம் நிறைவுற்றது

Koviloor Digital Library

7. சேது பந்தனப் படலம் [72 பாடல்கள்]

சேது என்ற சொல்லுக்கு அணை என்பது பொருள்; பந்தனம் என்பது கட்டுவதைக் குறிக்கும். எனவே அணை கட்டுவதைக் குறிக்கும் படலம் என விரியும். இராமபிரான் தன் வானரச்சேனைகளோடு இலங்கைக்குச் செல்லுவதற்கு இந்தக்கடல் ஒரு தடையாக இருந்தது. கடற்கரசன் வருணனை வழி வேண்டினான், வருணன் தன்மீதே அணைக்கட்டிக் கொள்ளும் படியும், தான் அதைப் பாதுகாப்பதாகவும் கூறினான். எனவே அணைகட்டத்தொடங்கினர். இப்படலம் 72பாடல்களைக் கொண்டது. சிலசுவடிகளில் ''சேதுப்படலம்'' எனக் குறிக்கப் பெற்றிருக்கிறது. அணை நளனால் மூன்று நாட்களில் கட்டிமுடிக்கப்பட்டது என்பதும், நூறு யோசனை நீளமும், பத்துயோசனை அகலமும் கொண்ட அணை கட்டப்பட்டது என்பதும் முக்கியமான செய்திகள். எனினும் வான்மீகி ஐந்து நாட்களில் அணை கட்டி முடிக்கப்பபட்டதாகத் தெரிவிக்கிறார். மற்றும் அணைகட்டுவதற்கு வானரர்கள் பெயர்த்துக்கொண்டு வந்த மரங்களின் பெயர்களையெல்லாம்கூட விரிவாகச் சொல்லுகிறார் என்பது மற்றொரு செய்தி. வான்மீகி, அம்மரங்களை வானரர்கள் இயந்திரங்களின் மூலமும் கொண்டுவந்தனர் என்று கூறுவது மற்றொரு வியப்புக்குரிய செய்தி.

இப்படலத்துள், இராமபிரான், சுக்கிரீவன், அனுமன், வீடணன், இலக்குவன், சாம்பவன், அங்கதன் ஆகியோர் மற்றும் உள்ள வானரப் படைத் தலைவர்களுடன் கலந்து ஆலோசித்து தெய்வத்தச்சன் விசுவ கர்மாவின் மகன் நளன் தான் இவ்வணைகட்டி முடிப்பதற்கு ஏற்றவன் என்று தீர்மானித்து அவனை அழைத்தல்; நளன் சேதுகட்ட உடன்பட்டு அதற்குத் தேவையான உபகரணங்களைக் கொண்டுவரப் பணித்தல்; சாம்பன் கடலை அடைக்க வருமாறு வானரச்சேனையை அழைத்தல்; வானரச்சேனை மலைகளையும், மரங்களையும் கைளிலும், தலைகளிலும் சுமந்து கொண்டுவருதல்; நளன் மலைகளைத் தன் கைகளில் எளிதாக வாங்கி முறைப்படி அடுக்குதல்; சேதுகட்டும்போது நிகழ்ந்த நகைச்சுவை மிக்க நிகழ்ச்சிகள்; நளன் தான் கற்ற கல்வியைப் பயன்படுத்தியவிதம்; மலையைச் சுமந்துவரும் வானரங்களின் தோற்றம்; மலைகளும் மரங்களும் கடலில் மூழ்கும்போது நிகழ்ந்த நிகழ்ச்சிகள்; கட்டி முடிக்கப் பட்டபின் சேதுவின் தோற்றம்; சேது கட்டி முடிக்கப்பட்டதை சுக்கிரீவன்

Koviloor Digital Library

முதலியோர் இராமபிரானிடம் சென்று தெரிவித்தல்; ஆகிய நிகழ்ச்சிகள் மிக விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன.

1. நளனை சுக்கிரீவன் அழைத்துவரப் பணித்தல்

அளவு அரும் அறிஞரொடு அரக்கர் கோமகற்கு
இளவலும் இனிது உடன் இருக்க, எண்ணினான்,
விளைவன விதிமுறை முடிக்க வேண்டுவான்,
'நளன் வருக' என்றனன், கவிக்கு நாயகன். (6757)

(கவி-வானரர்கள்; நாயகன்-தலைவன்; விளைவன-நிகழ வேண்டுவன; வேண்டுதல்-விரும்புதல்; கோமான்-அரசன்; எண்ணுதல்-ஆலோசித்தல்; இளவல்-தம்பி)

வானரச்சேனைக்கும், குரக்கினத்திற்கும் தலைவனாகிய சுக்கிரீவன், அரக்கர்க்கரசனாகிய இராவணனின் தம்பி வீடணன் இனிது அருகிலிருக்க, அளவற்ற அறிஞர்களுடன் கலந்து ஆலோசித்து, பின்னால் நிகழ வேண்டியவற்றையெல்லாம் விதிமுறைப்படி செய்து முடிக்க விரும்பி, இவ்வணையைக் கட்டுவதற்குத் தகுதி படைத்தவன், தெய்வத்தச்சனான விசுவகர்மாவின் மகனான நளனேயாவான் என்று தீர்மானித்து, அவனைக் கொணர்க என்று பணித்தான்.

அளவரும் அறிஞர்களில், அனுமன், வீடணன், சுக்கிரீவன், அங்கதன், சாம்பன், முதலியோர் அடங்குவர். கடல்பற்றிய நல்ல அனுபவம் மிக்க வீடணன் அங்கு இருக்க வேண்டுவது அவசியமாயிற்று. எனவே அவனையும் உடன் இருத்திக் கொண்டனர் என்க. 'நளன்வருக' என்பது நளனை அழைத்து வருக என்ற கட்டளைச் சொல்லாகும் என்க. 'கவிக்கு நாயகன்' என்று முன்னர் அனுமனை அழைத்ததையும் இங்கு நினைவுகூர்க. இங்கே வான்மீகம் வேறுபடுகிறது. வருணனே நளனைக்கொண்டு சேது அமைக்கச் சொன்னதாக வான்மீகம் கூறுகிறது. இங்கே கம்பன், சுக்கிரீவன் மற்ற அறிஞர்களோடு கலந்து ஆலோசித்து, நளனின் தகுதிகளை ஆராய்ந்து பின்னர் தீர்மானித்தான் எனக் கூறப்படுகிறது.

2. சேதுகட்ட, நளன் உடன்படுதல்

வந்தனன் வானரத்தச்சன்; 'மன்ன! நின்
சிந்தனை என்?' என, ''செறிதிரைக் கடல்
பந்தனை செய்குதல் பணி நமக்கு'' என,
நிந்தனை இலாதவன் செய்ய நேர்ந்தனன். (6758)

(சிந்தனை-கருத்து; செறி-நெருங்கிய; பந்தனை செய்குதல்- அணை கட்டுதல்; நிந்தனை-பழிப்பு; நேர்தல்-உடன்படுதல்)

Koviloor Digital Library

வானரத்தச்சனாகிய நளன் வந்துசேர்ந்தான். வந்தவன் சுக்கிரீவனை நோக்கி, ''அரசே! என்னை அழைத்ததற்கு என்ன காரணம்?'' என்று கேட்க, அதற்குச் சுக்கிரீவன் ''அலைகள் நிறைந்த இந்தக் கடலில் ஒரு அணைகட்டுவதுதான் இப்போது நமக்குள்ள பணி'' என்றதும், தன் தொழிலில் எந்தப் பழிப்புக்கும் இடம் தராதவனான சிறந்த சிற்பியான நளன், சேதுபந்தனம் செய்ய உடன்பட்டான்.

வானரர்களுக்குள் கைதேர்ந்த சிற்பி நளன். இவன் தெய்வத்தச்சனான விசுவகர்மாவின் புதல்வன். இவனையே அணைகட்டுதற்குப் பயன்படுத்திக் கொள்ள வருணன் கூறியதாக, வான்மீகம் கூறுகிறது. வருணனுக்கு நளனிடம் இருக்கும் பொறியியல் தன்மை தெரிந்து இருக்கிறது என்பது பெறப்படுகிறது. மேலும் தன் பொறியியல் துறையில் எந்தப் பழிச் சொல்லுக்கும் இலக்காகாது செவ்வனே செய்து முடிப்பவன் நளன் என்பதும் தெரிய வருகிறது. இராமபிரான் கட்டளையால், அரசன் சுக்கிரீவன் வேண்டுகோளின்படி பொறியியல் வல்லுனனான நளன் அணைகட்ட ஒப்புக்கொண்டான் என்பதும் தெள்ளிதின் விளங்குகிறது. ஆனால் நளன் அத்தகைய ஆற்றல் பெற்றவன் என்று கடற்கரசனான வருணன் கூறுகிறான். வானரர்க்கரசனான சுக்கிரீவன் கூறுகிறான். தனக்கு அந்த ஆற்றல் இருப்பதாலும், குற்றம் ஒன்றுமின்றிச் செய்யமுடியும் என்ற துணிவு இருப்பதாலும் நளனும் அணைகட்ட ஒத்துக்கொண்டான் என்பது கம்பனின் கூற்று. நளனைப் பற்றி 'சேது கட்டியவன்' இவன்தான் என்று அபிதான சிந்தாமணி (பக் 945) கூறுகிறது. சுக்கிரீவன் உனக்கு இட்ட பணி இது என்று கூறாமல் 'பந்தனை செய்குதல் பணி நமக்கு' என்று தங்களையும் உடன்படுத்திக் கூறியமை உணரற்பாலது.

3. உரியன கொணர வேண்டுதல்

''காரியம் கடலினை அடைத்துக் கட்டலே;
சூரியன் காதல! சொல்லி என்பல?
மேருவும் அணுவும் ஓர்வேறு உறாவகை,
ஏர்வுற இயற்றுவென்; கொணர்தி'' என்றனன். (6759)

(ஏர்-அழகு; காதலன்-புதல்வன்)

நளன் சுக்கிரீவனை நோக்கி ''சூரியன் புதல்வனே! இந்தக்கடலை அடைத்து அணையைக் கட்டவேண்டும். அவ்வளவுதானே எனக்கு இட்டபணி. நான் அதை எளிதாகச் செய்து முடிப்பேன். என் திறமையைப் பற்றி நானே எவ்வாறு பலவாறு கூறஇயலும்? உலகிலேயே மிக உயர்ந்ததான மேருமலையும், உலகிலேயே மிகச் சிறிதாகக் கருதப்படும் அணுவும் ஒன்றுக்கொன்று, வேறுபாடு தோன்றாதபடி, ஏற்றத்தாழ் வின்றி, மிக அழகாகக் கட்டித்தருவேன். அதற்குரிய மலை, குன்று, மரம்

Koviloor Digital Library

போன்ற உபகரணங்களை விரைவில் கொண்டுவரும்படி செய்வாயாக!'' என்றான்.

''மேருவும், அனுவும் வேறு உறாவகை ஏர்வுற இயற்றுவென்'' என்பது அவ்விரண்டும் வேறு வேறாகத் தோன்றாதபடி ஏற்றத்தாழ்வில்லாமல், சமமாக இருக்கும்படி, என்தொழில் திறமையைப் பயன்படுத்தி அழகு பொருந்தக் கட்டுவேன் என்கிறான் நளன் என்பதாம். ஏற்றத்தாழ்வுகள் உள்ள பலபொருள்களைச் சமமாக அடுக்குதல் என்பது ஓர் அரியசெயல்; எனினும், தன்னுடைய சிற்பக்கலைப் பயிற்சியால் (பொறியியல் வல்லமையால்) எளிதாகச் செய்யமுடியும் என்று உறுதி கூறுகிறான் நளன் என்க.

4. சாம்பன் வானரச் சேனையை வரும்படி பறையறிவித்தல்

''இளவலும், இறைவனும், இலங்கை வேந்தனும்,
அளவுஅறு நம்குலத்து அரசும், அல்லவர்
வளைதரும் கருங்கடல் அடைக்க வம்'' எனத்
தளம் மலி சேனையைச் சாம்பன் சாற்றினான். (6760)

(இளவல்-தம்பி/இலக்குவன்; இறைவன்-இராமபிரான்; இலங்கை வேந்தன்-வீடணன்; அரசு-அரசன்/சுக்கிரீவன்; வளைதருதல்-வளைந்துள்ள/சூழ்ந்துள்ள; வம்-வாருங்கள்; தளம்-கூட்டம்/தொகுதி; மலி-நிறைந்த; சாற்றுதல்-பறைசாற்றுதல்; அல்லவர்-தவிரஏனேயோர்)

''இளவலான இலக்குவனும், இறைவனாகிய இராமபிரானும், இலங்கை அரசனாக முடிசூட்டப்பெற்றவனான வீடணனும், அளவற்ற நம் குரக்கினத்தின் அரசனான சுக்கிரீவனும் நீங்கலாக மற்ற அனைவரும், இலங்கையைச் சூழ்ந்துள்ள இந்தக் கரியகடலின்மீது அணைகட்டி அடைக்க வாருங்கள்'' என்று, கூட்டம் மிகுந்த வானரச் சேனையைப் பார்த்து சாம்பவன் பறையறைந்து அறிவித்து அழைத்தான்.

இங்கே சொல்லப்பட்ட நால்வரும் அரசபரம்பரையைச் சார்ந்தவர்கள் என்பதால் அவர்கள் அணைகட்டத் தேவையற்றவர்கள் என்று கருதி அவர்களை மட்டும் விலக்கி, மற்றவர்களை 'வருக' என்று சாம்பவன் பறையறிவித்தான் என்பதாம். 'வம்' என்பது வம்மின் என்பதன் கடைக்குறை. வாருங்கள் என்பது பொருள். சாம்பன் என்பது ஜாம்பவான் என்ற வடசொல் சாம்பவான், சாம்பவந்தன், சாம்பவன், என்றெல்லாம் பலவாறாகக் கூறப்பட்டு இங்கே சாம்பன் எனக் கூறப்பட்டிருக்கிறது. இவன்முதிர்ந்த வயதுடையவன். திருமால் திருவிக்கிரம அவதாரம் எடுத்த காலத்தே, அந்தச் செய்தியை உலகுக்குப் பறைசாற்றியவன். எனவே அவனே இப்பொழுதும் பறைசாற்றினான் என்க. வீடணன், இராமபிரான் ஆணைப்படி இலக்குவனால் முடிசூட்டப்பெற்றவன். எனவே இலங்கை வேந்தன் என்றார் என்க. எனினும், இராம இராவணன் போருக்குப்

Koviloor Digital Library

பின்னர்தான் வீடணனுக்கு முடிசூட்டப்பெற்றது என்று வான்மீகம் கூறும். சாம்பவன் சேனையைப் பறையறிவித்து அழைத்த செய்தி வான்மீகத்தில் கூறப்படவில்லை.

5. வானரங்கள் மலைகள் கொண்டுவருதல்

கருவரை காதங்கள் கணக்கு இலாதன,
இருகையில், தோள்களில், சென்னி ஏந்தின,
ஒரு கடல் அடைக்க, மற்று ஒழிந்த வேலைகள்
வருவன ஆம் என, வந்த வானரம். (6761)

(கரு-கரிய; வரை-மலை; சென்னி-தலை; வேலை-கடல்கள்; ஏந்துதல்-தாங்குதல்)

பல காதங்கள் பரவியுள்ள எண்ணற்ற கரிய மலைகளை, குரங்குகள் தங்கள் இரண்டு கைகளிலும், தோள்களிலும், தலையிலும் தாங்கிக் கொண்டு வந்தன. இந்த ஒரு கடலை அடைத்து அணைகட்டுவதற்காக, எஞ்சியுள்ள ஆறு கடல்களும் ஒன்று சேர்ந்து திரண்டு வந்தனபோல, வானரச்சேனை, கூட்டம் கூட்டமாக வந்தது.

வானரச்சேனையின் மிகுதி புலப்படுத்தப்பட்டது.

6. பேர்த்தன மலைசில; பேர்க்கப் பேர்க்க, நின்று
ஈர்த்தன சில; சிலசென்னி ஏந்தின;
தூர்த்தன சில; சில,தூர்க்கத் தூர்க்க நின்று
ஆர்த்தன; சில சில ஆடிப்பாடின. (6762)

(ஈர்த்தல்-இழுத்தல்; தூர்த்தல்-நிரப்புதல்; ஆர்த்தல்-ஆரவாரித்தல்; பேர்த்தல்-அகழ்தல்)

சில வானரங்கள் மலைகளை அகழ்ந்தெடுத்தன; அவை அகழ்ந்தெடுக்க எடுக்க, மற்றும் சில வானரங்கள் அவற்றைக் கைகளால் பற்றி இழுத்துக் கொண்டு வந்தன; வேறுசில வானரங்கள் அவற்றைத்தம் தலைகளில் சுமந்து சென்றன; சில அம்மலைகளை வாங்கிக் கடலில் இட்டு நிரப்பின; அவ்வாறு நிரப்ப, நிரப்ப, சில வானரங்கள் ஆரவாரித்துப் பெருமுழக்கம் செய்தன; சில வானரங்கள் மகிழ்ச்சியால் பாடின; சிலவானரங்கள் அதற்குத் தகுந்தாற்போல ஆடின.

சில வானரங்கள் அரிதின் முயன்று மலைகளைத் தூக்கும்; சில வானரங்கள் அவற்றைத் தம் கைகளால் உறுதியாக இழுத்துவரும்; வேறுசில வானரங்கள், தலையில் சுமந்துவரும்; சில வானரங்கள் கடலில் இட்டு நிரப்பும். வானரங்கள் தளர்ச்சியடையாமல் இருக்கச் சில வானரங்கள் முழக்கமிட்டும், சிலவானரங்கள் ஆடியும், பாடியும், அவற்றுக்குக் கிளர்ச்சியை உண்டு பண்ணி ஊக்குவித்தன என்பதாம்.

Koviloor Digital Library

7\. காலிடை ஒருமலை உருட்டி, கைகளின்
மேலிடை மலையினை வாங்கி, விண்தொடும்
சூலுடை மழைமுகில் சூழ்ந்து சுற்றிய,
வாலிடை, ஒருமலை ஈர்த்து வந்தவால். (6763)

(சூல்-கரு; முகில்-மேகம்; ஈர்த்து-இழுத்து; வாங்கி-தாங்கி)

சிலவானரங்கள், தங்கள் கால்களினால் ஒரு மலையை உருட்டிக் கொண்டும், இருகைகளின்இடையே ஒரு மலையைத்தாங்கிக்கொண்டும், வானளாவிய கருக்கொண்டு மழைபொழிவதற்கு ஏற்ற மேகங்கள் சூழ்ந்து சுற்றிக்கொண்டுள்ள கரியதொரு மலையை வாலால் பற்றி இழுத்துக் கொண்டும் வந்தன.

ஒரே வானரம், காலால் ஒரு மலையையும், கைகளுக்கிடையில் ஒரு மலையையும், வாலால் ஒரு மலையையும் ஆக மூன்று மலையைத் தாங்கிக்கொண்டு வந்தது என்பது வியக்கத்தக்க செய்தியாகும். இவ்வாறு ஒவ்வொரு வானரமும் ஒரே சமயத்தில் மூன்று மலைகளைக் கொண்டு வந்து கடலை நிரப்பி அணையைக் கட்ட உதவின என்பதாம். வானரங்கள் தங்கள் வலிமையையும், செய்வன திருந்தவும், விரைவாகவும் செய்வதை யும், இராமபிரான்மீது கொண்ட பக்தியையும், சுக்கிரீவன்மீது கொண்ட அரசவிசுவாசத்தையும் காண்பித்தன எனவும் கொள்க.

8\. நளன் மலைகளை வாங்கி அடுக்குதல்.

முடுக்கினன், 'தருக' என, மூன்று கோடியர்
எடுக்கினும், அம்மலை ஒரு கை ஏந்தியிட்டு,
அடுக்கினன்; தன் வலிகாட்டி, ஆழியை
நடுக்கினன், நளன் எனும் நவையின் நீங்கினான். (6764)

(நவை-குற்றம்; எடுத்தல்-தூக்கிவருதல்; முடுக்குதல்-விரைவு படுத்துதல்; ஆழி-கடல்; அடுக்குதல்-வரிசைப்படுத்துதல்)

அந்த நளன் என்ற வானரச்சிற்பி, தொழிலில் குற்றம் என்பது சிறிதும் இல்லாதவன். மூன்றுகோடி வானரங்கள் மலைகளைப் பெயர்த்து வந்து கொடுத்தாலும், அவற்றைத் தன் ஒருகையால் தாங்கி, வாங்கிக்கொண்டு, மேலும் இன்னும் விரைவாகக் கொண்டுவாருங்கள் என்று அந்த வானரர்களை விரட்டிக் கொண்டிருந்தான். இவ்வாறு தன் வலிமையாலும் விரைவாலும், அந்தக் கடலையே நடுங்கச்செய்து கொண்டிருந்தான்.

மூன்றுகோடி வானரர் மலையினை எடுத்து வந்து கொடுத்தனர். நளன் ஒருவனே அதை வாங்கி அடுக்கினான். அவ்வாறு அடுக்கும்போது, கடல் அலைகள்மேல் எழுந்து ஆர்ப்பரிப்பது, கடல் நடுங்குவதுபோல் தோன்றிற்று என்பதாம். நளனது ஒப்பற்ற ஆற்றலைக் கூறும் பாடல் இது.

Koviloor Digital Library

9. மஞ்சினில் திகழ்தரும் மலையை, மாக்குரங்கு
எஞ்சுறக் கடிது எடுத்து எறியவே, நளன்
விஞ்சையில் தாங்கினன்; சடையன் வெண்ணையில்
'தஞ்சம்' என்றோர்களைத் தாங்கும் தன்மைபோல். (6765)

(எஞ்சுதல்-குறைதல்; மஞ்சு-மேகம்; மா-பெரிய; கடிது-விரைவாக; தஞ்சம்-அடைக்கலம்; விஞ்சை-வித்தை/கலைவன்மை)

மேகங்கள் முட்டும் அளவு உயர்ந்து விளங்குகின்ற மலைகளை யெல்லாம் பெரிய குரங்குகள், உலகில் மலை என்ற ஒன்றே இல்லாத வண்ணம் குறைந்துபோகும்படி, விரைவாக எடுத்து எறியவே, நளன் என்னும் அந்த வானரச்சிற்பி, அவற்றையெல்லாம், தான் கற்றறிந்த அபூர்வமான சிற்ப நூல் அறிவினால் கையில் தாங்கிக்கொண்டான். இது எவ்வாறு இருக்கிறது என்றால், திருவெண்ணய் நல்லூரில் இருக்கும் சடையப்பவள்ளல், தன்னை நாடிவந்து, தன்னிடம் அடைக்கலம் என்று வந்து புகுந்தவர்களையெல்லாம் அவர்களுக்கு ஒரு குறையும் இன்றி, தானும் தளர்ச்சியுறாமல் தாங்கி ஆதரித்த தன்மை போன்றிருந்தது'' என்கிறான் கம்பன்.

இது கவிக்கூற்று. தன்னை ஆதரித்த சடையப்பவள்ளலை செய்ந்நன்றி யறிதற் பண்பால் போற்றும் பாடல்களில் இதுவும் ஒன்று. உவமை கூறும்போது, உவமேயம், உவமை இரண்டிலும் உவமையே உயர்ந்தது என்பது இலக்கணம். உவமை என்பது உயர்ந்ததன் மேற்று. அவ்வாறே சடையப்பவள்ளலை உயர்ந்த உவமையாகக் கூறியதை உணர்க. மேகங்களளவு உயர்ந்த மலைகளைப் பேர்த்தெடுப்பதால் வானரங்களை 'மாக்குரங்கு' என்றார். பெரிய, சிறந்த வலிமைமிக்க குரங்குகள் என்பது பொருள். சடையப்பவள்ளலைக் கம்பன் மேலும் சிறப்பித்த இடங்கள், 1.பாயிரச்செய்யுள் 6, 2. பாலகாண்டம், வேள்விப்படலம், பாடல் எண்.1, 3. பாலகாண்டம் மிதிலைக்காட்சிப் படலம் பாடல் எண்.73, 4. யுத்தகண்டம் நாகபாசப்படலம் பாடல் எண்.263,5. யுத்தகாண்டம் திருமுடிசூட்டு படலம் பாடல் எண். 38, இப்பாடல்களில் கம்பரின் செய்ந்நன்றி மறவா இயல்பு புலப்படுத்தப்பட்டது காண்க.

10. சேது கட்டும்போது நிகழ்ந்த நிகழ்ச்சிகள் [37 பாடல்கள்]

சயக்கவிப் பெரும்படைத் தலைவர் தாள்களால்,
முயல்கறை மதி தவழ் முன்றில் குன்றுகள்
அயக்கலின், முகில்குலம் அலறி ஓடின;
இயக்கரும் மகளிரும் இரியல் போயினார். (6766)

Koviloor Digital Library

(சயம்-ஜயம்/வெற்றி; கவி-வானரம்/குரங்கு; கறை-களங்கம்; அயக்குதல்-அசைத்தல்; முகில்-மேகம்; இரியல்-ஓடுதல்; முன்றில்-முகப்பு)

எப்பொழுதும் வெற்றியையே கொண்ட பெரிய வானர சேனையின் படைத்தலைவர்கள் தங்களது கால்களால், முயற்கறை என்னும் களங்கம் படிந்துள்ள சந்திரன் திகழ்கின்ற குன்றுகளின் முன்ஃபுறத்து மலையை வேரோடு பிடுங்குவதற்காக, அசைத்தலினால் அக்குன்றுகளில் சூழ்ந்திருந்த மேகக்கூட்டங்கள் இடிஇடித்துக்கொண்டு அலறிக்கொண்டு ஓடின. அங்கேயே வாழ்ந்திருந்த இயக்கர்களும், அவர் மனைவியரும், நிலைகெட்டு ஓடலாயினர்.

சந்திரனில் களங்கம் இருப்பது அனைவரும் அறிந்ததே. இதனை முயற்கறை என்றும் மான்என்றும் கூறுவது கவிமரபு. 'இளம்பிறை முயற்குழந்தை' என்பது குமரகுருபரர் வாக்கு. 'கலைவெண்மதியின் முயல் தடவி' என்பது மீனாட்சிபிள்ளைத் தமிழ்.

11. வேருடை நெடுங்கிரி தலைவர் வீசின,
ஓரிடத்து ஒன்றின் மேல் ஒன்று சென்று உக,
நீரிடை நிமிர் பொறி பிறக்க, 'நீண்ட ஈது
ஆருடை நெருப்பு?' என வருணன் அஞ்சினான். (6767)

(உகுதல்-விழுதல்/தாக்குதல்; நிமிர்தல்-மேலோங்குதல்; பொறி-நெருப்புப்பொறி; பிறத்தல்-தோன்றுதல்; நீண்ட-தொடர்ந்த)

வானரப்படைத் தலைவர்கள் பெரிய மலைகளை வேரோடு பிடுங்கி வீசியதால், அவை ஒரே இடத்தில் ஒன்றன்மேல் ஒன்று சென்று தாக்க, அதனால் கடல்நீரின் இடையில் தீப்பொறி மேலோங்கி உயர்ந்து தோன்றலாயிற்று. அதனைக் கண்ட வருணன், நீண்டு தொடர்ந்து காணப்படுகின்ற இந்த நெருப்புப் பொறி யார் செலுத்திய அம்பால் ஏற்பட்டது என்று சந்தேகப்பட்டு அஞ்சலானான்.

முன்பே இராமன் அம்பால் அவதிப்பட்ட வருணன், இது யாருடைய அம்பால் விளைந்ததாயிருக்கும் என அச்சம் கொள்வானாயினான்.

12. ஆனிறக் கண்ணன் என்று ஒருவன், அங்கையால்,
கான்இற, மலைகொணர்ந்து எறிய, கார்க்கடல்
தூநிற முத்தினம் துவலையொடும் போய்,
வான்நிறை மீனொடு, மாறு கொண்டவே. (6768)

(ஆநிறக்கண்ணன்-கவயாக்கன்/கவாட்சன்; கான்-காடு; கார்-கரிய; துவலை-நீர்த்துளிகள்; அம்-அழகிய; வான்மீன்-நட்சத்திரங்கள்; தூநிறம்-வெண்மையான நிறம்)

Koviloor Digital Library

கவயாட்சன் என்ற பெயர் கொண்ட ஒருவன், தன்னுடைய அழகிய கைகளால், காடே அழிந்துபோகும்படி, கொண்டுவந்து மலைகளைக் கரியகடலில் கொட்டினான். அதனால் கலக்கமுற்ற கடலிலிருந்த தூய்மை யான வெண்ணிறமான முத்தின் தொகுதிகள் அந்த நீர்த்துளிகளோடும் சென்று, வானத்தில் நிறைந்திருக்கின்ற நட்சத்திரங்களோடு ஒன்றுபட்டு, இவை முத்தினம், இவை நீர்த்துளிகள், இவை நட்சத்திரங்கள் என்று வேறுபடுத்தி அறிய முடியாதபடி, ஒன்றோடொன்று கலந்து காணப்பட்டது.

கவயாட்சன்/கவாட்சன் என்பது ஆநிறக்கண்ணன் எனத் தமிழாக்கப் பட்டது. கவம்-பசு-ஆ; அட்சம்-கண் பசுவின்நிறம் கொண்ட விழிகளைப் பெற்றவன்என்பது பொருள். இவனைஇடபக்கண்ணன் என்றும்கூறுவர். இடபம்-ரிஷபம்-பசு; மலையைப் பறித்து எடுப்பதால் மலையின் மீதுள்ள காடுகள் எல்லாம் அழிந்துபோயின என்பதாம். முத்துக்களும் விண்மீன் களும் ஒளியாலும் தோற்றத்தாலும் ஒத்துக் காணப்படுவதால் ''மாறு கொண்டவே'' என்றார் என்க.

13. சிந்துரத் தடவரை எறிய, சேணிடை
முந்துறத் தெறித்து எழு முத்தம் தொத்தலால்,
அந்தரத்து எழு முகில் ஆடையா, அகன்
பந்தர் ஒத்தது, நெடும் பருதி வானமே. (6769)

(சிந்துரம்-யானை; தட-பெரிய; வரை-மலை; முந்துற-முன்னதாக; அந்தரம்-வானம்/ஆகாயம்; முகில்-மேகம்; பந்தர்-பந்தல்; ஆடை-மேற்கட்டி/விதானம்; பரிதி-சூரியன்; சேண்-ஆகாயம்; தொத்துதல்-அடர்ந்துகொள்ளுதல்)

யானைகள் நிறைந்த பெரிய மலைகளை வானரங்கள் கடலில் எறிவதால், கடலிலுள்ள முத்துக்கள் எல்லாம் நீண்ட தொலைவிலுள்ள ஆகாயத்திற்கு முந்திக்கொண்டு சென்று அங்கே தொத்திக்கொண்டன. அதனால் ஆகாயத்தில் எழுந்து திகழ்கின்ற மேகங்கள் ஆகாயத்திற்கு ஆடையாகவும், அந்த நீண்ட சூரியன், ஆகாயத்தில் விரித்த அகன்ற முத்துப்பந்தல் போலும் காட்சி அளித்தன.

கம்பன் சில வருணனைகளில் சிலசொற்களையும், கருத்துக்களையும் கற்போரின் கற்பனைக்கே விட்டுவிடுவான். அத்தகைய பாடல்களுள் இதுவும் ஒன்று. வானம் பந்தலாகவும், மேகம் அதற்குக் கட்டப்படும் விதானமாகவும், மேகத்திலே தொத்திக்கொண்ட நட்சத்திரங்கள், விதானத்தில் தொங்கவிடப் பட்டிருக்கும் முத்துச்சரங்களாகவும் காணப் பட்டன என்பதாம். வானத்திற்குப் பந்தல் உவமை; மேகத்திற்கு விதானம் உவமை; மேகத்தில் தொங்கும் நட்சத்திரங்களுக்கு விதானச் சீலையில் தொங்கும் முத்துச்சரம் உவமை.

Koviloor Digital Library

14. வேணுவின் நெடுவரை வீச; மீமிசைச்
சேண்உறு திவலையால், நனைந்த செந்துகில்,
பூண்உறும் அல்குலில் பொருந்திப் போதலால்,
நாணினர் வான நாட்டு உறையும் நங்கைமார். (6770)

(வேணு-மூங்கில்; மீமிசை-மேல்இடம்; சேண்-நெடுந்தூரம்; உறுதல்-அடைதல்; திவலை-நீர்த்துளிகள்; துகில்-ஆடை/சேலை; பூண்-அணிகலன்/மேகலை; பொருந்துதல்-ஒட்டிக்கொள்ளுதல்; வானநாடு-விண்ணுலகு; உறைதல்-வசித்தல்; நங்கைமார்-தேவமகளிர்; நாணுதல்-வெட்கப்படுதல்; செந்துகில்-செம்பட்டாடை; அல்குல்-உள்ளுறுப்பு)

மூங்கில்கள் நிறைந்த நீண்ட, அகன்ற ஒரு பெரிய மலையை எடுத்து வானரர்கள் கடலில் எறிய, அந்த வேகத்தால் கடலிலிருந்த நீர்த்துளிகள் மேலிடத்துள்ள நீண்ட வானத்தில் போய்ச்சேர்ந்தன. ஆதலால் தாங்கள் அணிந்திருந்த மெல்லிய செம்பட்டாடை நனைந்துபோக, தாங்கள் இடையில் அணிந்திருக்கும் அணிகலன்களோடு கூடிய உள்ளுறுப்புக் களில் பட்டு அவை உடம்போடு ஒட்டிக்கொண்டதால், தம் உள்ளுறுப்பு வெளித்தெரிந்துவிட்டதே என்று அங்கே வசிக்கும் தேவமகளிர், வெட்கமடைந்தனர்.

'மீமிசை' என்பது ஒரு பொருட்பன்மொழி-மிக்கமேலே என்பது பொருள். வானமாதர் செம்பட்டாடையும், மேகலையும் எப்போதும் அணிந்திருப்பர் என்பது பெறப்படுகிறது. தேவமகளிர் செம்பட்டாடை யும், மேகலையும் அணியும் இயல்பினர் என்பதைத் திருமுருகாற்றுப் படை கூறுகிறது கேளுங்கள். 'கோபத்தன்ன தோயாப்பூந்துகில் பல்காசு நிரைத்த சில்காழ் அல்குல் சூர்அரமகளிர்' என்பது திருமுருகாற்றுப்படை. 'நானநீரில்கலந்து, நலம்கொள்பூம்பட்டு ஒளிப்ப, மேனி தோன்ற விளங்கி, வெளிப்பட்டதற்கு நாணி, மானமகளிர்போல, மணிமேகலைகள் பேசாத்தானம் தழுவிக்கிடப்பச் செல்வோன் தன்மை காண்மின்' என்பது சீவகசிந்தாமணி.

15. தேன் இவர் தடவரை, திரைக்கருங்கடல்
தான் நிமிர்தர, இடைகுவியத் தள்ளும் நீர்
மேல் நிமிர் திவலை மீச்சென்று மீடலால்
வானவர் நாட்டினும் மழை பொழிந்தவால். (6771)

(நிமிர்தருதல்-மேல்ஓங்குதல்; இவர்-பொருந்திய; தட-பெரிய; வரை-மலைகள்; மீடல்-மீளுதல்; தள்ளுதல்-வெளிப்படுத்துதல்)

தேன்பொருந்திய மரங்களடர்ந்த பெரிய மலையைக் குவியல்போல அலைகள் நிரம்பிய கரியகடலில் வானரச் சேனைகள் வீசுவதால், அந்த அலைகள் மேலோங்கி வீசவும், அதனால் வெளிப்படுத்தப்பட்ட கடல்நீர்

Koviloor Digital Library

விண்ணுலகத்திற்கும் மேலே சென்று, விண்ணுலகத்திலிருந்து கீழே திரும்பி வருவதால், அது தேவர் உலகத்திலும் மழை பெய்தது போன்றிருந்தது.

தேவர் உலகத்தில் மழைபெய்வதில்லை. இந்தத் திவலைகள் ஆகாயம் சென்று திரும்பிவருவது தேவலோகத்திலும் மழைபொழிந்தது போன்றிருந்தது என்று கவிஞன் தன் குறிப்பை ஏற்றிப்படுகிறான் என்க. இங்கே தேவருலகத்துச் சென்ற நீர்த்திவலைகள் அங்கே மழைபொழிவது போன்றிருந்தது என்கிறான் கவிஞன். வில்லிபாரதம், பாரதப் போரில் எழுந்த மண்புழுதி தேவலோகத்துக்குச் சென்று ஆகாய கங்கையில் வண்டல்படிந்தது என்கிறது. பாட்டைக் கேளுங்கள். 'சேனை, நடவ, எழு துகள், ககனம் சுலாவி, வியன்அதி வண்டலாக அமரர் உறைதரும் நகரம் பொன்வீதி புழுதிஎழ' என்பது வில்லிபாரதம். 'இவர்தல்' என்ற சொல்லுக்கு, பொருந்துதல் என்பது பொருள். சிவபெருமானை 'மாதுஇவர்பாகன்' என்கிறது திருவாசகம் என்பது அறிக.

16. மைஉறு மலைகளோடும், மறிகடல் வந்து வீழ்ந்த,
வெய்யவாய் மகரம் பற்ற, வெருவின, விளிப்ப, மேல்நாள்,
பொய்கையின் இடங்கர் கவ்வ, 'புராதனா! போற்றி' என்று
கைஎடுத்து அழைத்த யானை போன்றன, களி நல்யானை. (6772)

(மை-மேகங்கள்; மறிதல்-மடங்குதல்; மகரம்-மகரமீன்கள்/முதலை களுமாம்; வெய்ய-கொடிய; வெருவுதல்-அஞ்சுதல்; விளித்தல்-அழைத்தல்/கதறுதல்; களி-மதம்; மேல்நாள்-முன்பு/முற்காலத்தில்; இடங்கர்-முதலை; புராதனன்-ஆதிமூலம்; எடுத்து-தூக்கி; கை-துதிக்கை)

மைபோன்ற கரியநிற மேகங்கள் படர்ந்திருப்பதும், மதச்செருக்குமிக்க யானைகள் நிறைந்திருப்பதுமான பெரியமலைகளை வானரங்கள், அலைகள் மடங்கி வீசும் கடலில் வீசியெறிய, அவை வந்து வீழ்ந்தபோது கடலிலிருந்த பெரிய மகரமீன்கள் அவற்றைக் கவ்விக்கொண்டன. அப்போது யானைகள் மிகவும் அச்சமுற்று ஓலமிட்டுப் பிளிறின. இது எப்படி இருக்கிறது என்றால், முன்பு ஒருமுறை தாமரைப்பொய்கையில் ஒரு முதலை, கஜேந்திரன் என்ற யானையின் காலைப்பிடித்துக் கவ்வ, யானை அதனைத் தாங்கமாட்டாது, இறைவனை நோக்கி 'ஆதிமூலமே! என்னைக் காப்பாற்றுவாயாக!' என்று தன் துதிக்கையை எடுத்து அழைத்ததைப் போன்றிருந்தது என்கிறான் கவிஞன்.

'மை' என்ற சொல்லுக்குக் கருமை என்பது பொருள். அது இங்கு ஆகுபெயராய் கரியநிறமுடைய மேகத்திற்குஆகி வந்தது எனக்கொள்க. பொதுவாகக் கடலில் முதலைகள் வாழாதன. எனவே இங்கே மகரமீன்கள் எனக்குறித்தார் எனக்கொள்க. இந்தக் கஜேந்திர மோட்ச வரலாறு கம்பனுக்குமிகப்பிடித்த ஒருசெய்தி. எனவே இதனைஒவ்வொரு காண்டத்

Koviloor Digital Library

திலும் ஒரு முறையேனும், அல்லது ஒரே காண்டத்தில் பலமுறையேனும் கூறுவதைக் கற்போர் நன்கு உணரலாம். கடலுக்குப் பொய்கையும், யானைகளுக்குக் கஜேந்திரனும், மகரமீனுக்கு முதலையும் உவமைகள். பொய்கை என்பது மானிடரால் ஆக்கப்பெறாத, இயற்கையாக அமைந்த நீர்நிலையைக் குறிக்கும். முதலை, இடங்கர், கராம் முதலியவை ஒரே இனத்தைச் சார்ந்தவை என்று நச்சினார்க்கினியர் உரை கூறுகிறது.

17. அசும்பு பாய் தேனும், பூவும், ஆரமும், அகிலும் மற்றும்
விசும்புஎலாம் உலவும் தெய்வவேரியில் மிடைந்து விம்ம,
தசும்பெலாம் வாசம் ஊட்டிச் சார்த்திய தண்ணீர் என்ன,
பசும்புலால் நாறும் வேலை, பரிமளம் கமழ்ந்தது அன்றே! (6773)

(அசும்பு-ஊற்று/நீர்க்கசிவு; ஆரம்-சந்தனமரம்; விசும்பு-ஆகாயம்; உலவுதல்-பரவுதல்; வேரி-நறுமணம்; மிடைதல்-நெருங்குதல்; விம்முதல்-அதிகரித்தல்/மிகுதல்; பசுமை-புதுமை; புலால்-முடை நாற்றம்; தசும்பு-குடம்; சார்த்துதல்-நிறைத்து வைத்தல்; பரிமளம்-நறுமணம்; கமழ்தல்-வீசுதல்)

வானரங்கள் எடுத்து வீசுகின்ற மலைகளில் உள்ள மரங்களிலிருந்து ஊற்றுப்போல் பெருகுகின்ற தேனும், மலர்களும், சந்தனமும், அகில் போன்ற மற்ற வாசனைப் பொருள்கள் எல்லாம் ஆகாயமெங்கும் பரவி, ஒரு தெய்வீக, திவ்ய நறுமணத்தை மிகுதியாகப் பரப்பவும், புதிய புலால் முடைநாற்றம் உடைய கடல் அந்நாற்றம் நீங்கி குடத்திற்குள் வாசனைப் பொருள்களைப் போட்டு, அவற்றிற்கு வாசம் ஊட்டி நிரம்பச் செய்த தண்ணீர்போன்று, நல்ல நறுமணம் கமழப்பெற்றது.

'தெய்வவேரி' என்பது தெய்வங்களும் விரும்பும் நறுமணம் என்று பொருள்படும். ''குரும்பை மென் முலையார் ஆடக் கூந்தலின் நறவம் தோய்ந்த, இரும்புனல்ஆறுபாய, எறிதிரைசுருட்டும்தண்ணீர்க்கருங்கடல் புலவு நீங்கி, நறுமணம் கமழும் என்றால், முருந்து உறழ் மூரலார்தம் மிகுதியை மொழியல் ஆமோ?'' என்பது நைடதம். அந்த வாசனைப் பொருள்கள் எல்லாம் மலையோடு சேர்ந்து கடலில் விழுந்ததனால், எப்போதும் புலால் நாற்றம் நாறும்கடல், இப்போது நறுமணம் கமழலா யிற்று என்பதாம். தண்ணீர்க்குடத்துக்குள் வாசனைப் பொருள்களைஇட்டு வைக்கும் பழக்கம் முன்பு இருந்தது. 'கல்லாரே ஆயினும் கற்றோரைச் சேர்ந்து ஒழுகின், நல்லறிவு நாளும் தலைப்படுவர்; தொல் சிறப்பின், ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலால், புத்தோடு தண்ணீர்க்குத் தான் பயந்தாங்கு' என்பது நாலடியார். 'தெருண்ட மேலவர் சிறியவர்ச்சேரினும், அவர்தம் மருண்ட தன்மையை மாற்றுவர் எனும் இது வழக்கே' என்பது பாலகாண்டம்.

Koviloor Digital Library

18. தேம் முதல் கனியும், காயும், தேனினோடு ஊனும், தெய்வப்
பூ முதலாய எல்லாம், மீன்கொளப் பொலிந்த அன்றே;
மா முதல் தருவோடு ஓங்கும் வான்உயர் மானக்குன்றம்,
தாம் முதலோடும் கெட்டால், ஒழிவரோ வண்மை தக்கோர்? (6774)

(தரு-மரங்கள்; மானம்-பெருமை; குன்றம்-மலை; தேம்-இனிமை; ஊன்-இறைச்சி; தக்கோர்-பெரியோர்/சான்றோர்; முதல்-அடி; வண்மை-வள்ளல்தன்மை/கொடைக்குணம்; ஒழிதல்-நீங்குதல்; முதல்-இடம்; ஓங்கும்-தழைத்த)

வள்ளல்தன்மை மிக்க சான்றோர்கள் தாம்தம் செல்வ வளங்களெல்லாம் அடியோடு அழியப் பெற்று வறியவர் ஆனாலும், தனக்குள்ளே ஊறிப்போன கொடைக்குணம் நீங்கப்பெறுவார்களோ? மாட்டார்கள் அல்லவா? அதுபோல, மாமுதலிய மரங்களோடு தழைத்த வானளாவ உயர்ந்த பெருமை சான்ற மலைகளெல்லாம், வானரங்களால் கடலால் வீசியெறியப்பட்ட போதும், அவற்றிலிருந்து இனிமையான பழங்கள், காய்கள் முதலியனவற்றையும் தேன், இறைச்சி, மற்றும் தெய்வமணம் பொருந்திய பொலிவுபெற்ற மலர்கள் ஆகிய எல்லாவற்றையும், கடலில் வாழும் மீன்கள் உட்கொண்டு, நன்கு விளங்கின.

'கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே' என்பது நாலடியார். 'நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும், இல்லையென மாட்டார் இசைந்து' என்பது நல்வழி. நல்குரவு-வறுமை.

19. மண்ணுறச் சேற்றுள் புக்குச் சுரிகின்ற மாலைக்குன்றம்,
கள்நிறை போதும், காயும், கனிகளும், பிறவும் கவ்வி
வெண் நிற மீன்கள் எல்லாம், வறியவர் என்ன, மேன்மேல்
உள்நிறை செல்வம் நல்காது, ஒளிக்கின்ற உலோபர் ஒத்த (6775)

(கள்-தேன்; போது-பூ/மலர்; சுரிதல்-உள்ளே அழுந்திப்போதல்; மாலை-ஒழுங்கு/வரிசை; நல்குதல்-கொடுத்தல்; உலோபர்-கருமிகள்/கஞ்சர்)

வானரங்கள் கடலில் வீசுகின்ற சில குன்றுகளின் வரிசை நேராகக் கடலின் அடியில் உள்ள சேற்றுக்குள் சென்று தம்மை ஆழ்த்திப் புதைத்துக் கொள்கின்றன. இதனால் கடலில் வாழும் மீன்களுக்கு அந்த மலைகளில் இருந்த மரங்களில் இருந்த தேன் மிகுந்திருந்த மலர்களும், காய்களும், பழங்களும், இன்னும் மற்ற உண்பதற்குரிய பொருள்கள் ஒன்றும் கிடைக்காமற் போக, ஏமாந்து, வெண்நிற மீன்கள் எல்லாம் தாம் ஒன்றுமே இல்லாத வறிஞர்கள்போல மிதந்து சென்றன. இது எவ்வாறு இருக்கிறது என்றால், மேன்மேலும் உள்ளே பொதித்து, மறைத்து வைத்திருக்கின்ற

Koviloor Digital Library

செல்வத்தை, வறியவர்க்குத் தாராது ஒளித்து வைத்துக்கொண்டிருக்கும் கருமிகளை ஒத்திருந்தது என்கிறான் கவிஞன்.

முன்பாடலில் வள்ளல்தன்மை மிகுந்த மலைகளைக் கூறின கவிஞன், இப்பாடலில் கருமிகளைப்போல் தம்மைப் புதைத்துக்கொண்ட மலைகளையும் கூறிய பாங்கு நோக்குக.

20. கறங்கு எனத் திரியும் வேகக் கவிக்குலம் கதுவ வாங்கி,
பிறங்கு இருங்கடலில் பெய்த போழ்தத்தும், பெரிய பாந்தள்,
மறம் கிளர் மான யானை வயிற்றின ஆக, வாய் சோர்ந்து,
உறங்கின; கேடு உற்றாலும் உணர்வரோ உணர்விலாதார்?' (6776)

(கறங்கு-காற்றாடி; கதுவுதல்-பற்றுதல்; வாங்குதல்-பிடுங்கிக் கொள்ளுதல்; பிறங்கு-விளங்குகின்ற; இரும்-பெரிய; பெய்தல்-இடுதல்; பாந்தள்-மலைப்பாம்புகள்; மறம்-வீரம்; மானம்-பெருமை; சோர்ந்து-தளர்ந்து; உணர்வு-அறிவு; வேகம்-விரைவு.)

காற்றாடிபோலச் சுற்றி வேகமாகத்திரியும் குரங்குக் கூட்டங்கள், மலைகளைக் கைகளில் பிடுங்கிப்பற்றிக் கொண்டு, விளங்குகின்ற பெரிய கடலில் வீசியெறிந்தபோதும், அதில் வசித்துக்கொண்டிருக்கின்ற பெரிய மலைப்பாம்புகள், தாம் ஏற்கனவே வீரம் செறிந்த பெருமைமிக்க யானைகளை வயிற்றில் அடக்கிக் கொண்டிருக்கின்றன. எனவே வாய் பிளந்து இன்னும் தனக்கு என்ன நேர்ந்தது என்பதே தெரியாமல் உறங்கிக் கொண்டே இருக்கின்றன. அறிவில்லாதவர்கள், தனக்குக்கேடு நேரும் போதும் அதை உணர்வார்களோ? உணர்ந்து அதைப்போக்குவதற்கான முயற்சியில் ஈடுபடுவார்களோ? மாட்டார்கள்'' என்கிறான் கவிஞன்.

மலைப்பாம்புகள் யானையைப் பற்றித்தின்னும் இயல்புடையன என்பது, ''கரிய மாமுகில் படலங்கள் கிடந்தவை முழங்கிடக் களிறென்று பெரிய மாசுணம்வரை எனப்பெயர்தரு பிரிதி எம்பெருமானை'' என்ற பெரிய திருமொழியாலும் அறியலாம். ''கண்கூடாப் பட்டது கேடெனி னும், கீழ்மக்கட்கு உண்டோ உணர்ச்சி, மற்று இல்லாரும் மண்டு எரி தாள்வாய் மடுப்பினும் மாசுணம் கண்துயில்வ பேராபெருமூச்செறிந்து'' என்பது நீதிநெறி விளக்கம்34. ''களிறு அகப்படுத்த பெருஞ்சின மாசுணம்'' என்பது நற்றிணை. இங்கே மந்தரை கைகேயியைக் கை தீண்டி எழுப்பிய போது, தன்னைச்சுற்றி என்ன நடக்கிறது என்பதையறியாது உறங்கிக் கிடந்தகைகேயியின்நிலையைக்கம்பன்கூறுவது பொருத்தமாக இருக்கும் அல்லவா? பார்க்கலாம். 'அணங்கு, வாள்விட அரா அணுகும் எல்லையும், குணம்கெடாது, ஒளிர்விரி குளிர்வெண்திங்கள்போல், பிணங்கு வான்பேர் இடர் பிணிக்க நண்ணவும், உணங்குவாய் அல்லை; நீ உறங்குவாய்' என்கிறாள் மந்தரை. 'கேடு உற்றாலும் உணர்வரோ உணர்வு இலாதார்?'

Koviloor Digital Library

என்ற கம்பனின் இந்தக் கேள்விக்கு விடை அங்கே கம்பனே தந்திருப்பதை உய்த்துணர்க.

21. இழை எனத்தகைய மின்னின் எயிற்றின, முழக்கம் ஏய்ந்த,
புழையுடைத் தடக்கை ஒன்றோடு ஒன்று இடைபொருந்தச் சுற்றி,
கழையுடைக் குன்றின் முன்றில், உருமொடு கலந்த கால
மழை எனப்பொருத, வேலை மகரமும், மத்தமாவும். (6777)

(வேலை-கடல்; மத்தம்-மதம்; மா-யானைகள்; இழை-ஆபரணம்; மின்-மின்னல்; எயிறு-பற்கள்; புழை-துவாரம்/துளை; தட-பெரிய; கழை-மூங்கில்; குன்று-மலை; முன்றில்-முன்னிடம்/மேலிடம்; உரும்-இடி; கலந்த-பொருந்திய; காலம்-ஊழிக்காலம்; மழை-மேகம்; பொருதல்-போரிடுதல்)

கடலில் இருந்த மீன்களும், மலையிலிருந்து விழுந்த மதம் கொண்ட யானைகளும், ஆபரணங்கள் என்று சொல்லும் வண்ணம், மின்னலைப் போல் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் பற்களையும், துளையுள்ள பெரிய துதிக்கைகளையும் ஒன்றோடொன்று பொருந்தியிருக்குமாறு சுற்றிக் கொண்டு, மூங்கில்கள் நிறைந்த ஒரு மலையின் மேலிடத்தில், இடியுடன் கூடிய ஊழிக்கால மேகம்போல முழக்கம் செய்துகொண்டு, ஒன்றுடன் மற்றொன்று போர் செய்து கொண்டிருந்தன.

'எயிறு' என்பது பற்கள் என்ற பொருள்கொண்டு தந்தங்களைக் குறிக்கும் என்க. 'புழையுடைத் தடக்கை' என்பது மகரமீன்களுக்கும் தும்பிக்கை உண்டு என்பதாம். இது நமக்குப் புதியசெய்தி. இழைத்துச் செய்யப் படுவதால் இழை என்பது ஆபரணங்களுக்குக் காரணப்பெயர். ஆண் யானைகளும் பெண்யானைகளும் தத்தம் துதிக்கையை ஒன்றோடொன்று பொருந்தச் சுற்றிக்கொண்டு காட்சியளித்ததால் அவை காதல் வயப்பட்டிருக்கின்றன என்பது பொருள். வேலைமகரமும் மத்தமாவும் பொருதற்கு, காலமழையின் முழக்கம் உவமை.

22. பொன்றின, சிறிய ஆயபுண்ணியம், புரிந்தோர்போல,
குன்றுகள் குரக்கு வீரர் குவித்தன நெருப்புக் கோப்ப,
ஒன்றின்மேல் ஒன்று வீழ, உகைத்து எழுந்து, உம்பர் நாட்டுச்
சென்று, மேல் நிலைபெறாது, திரிந்தன, சிகரச் சில்லி. (6778)

(கோப்ப–பிறக்குமாறு/உண்டாகுமாறு; சில்லி-சிறுதுண்டுகள்; உகைத்து-வேகத்தோடு; உம்பர்நாடு-வானுலகு; பொன்றின-இறந்தன; திரிதல்-வீழ்தல்/மீள்தல்)

வானரவீரர்கள் கொண்டுவந்து குவித்த மலைகள் ஒன்றோடொன்று மேலே வீழ, அதனால் நெருப்பு உண்டாகும்படி, அவற்றின் சிகரத்தில் இருந்த சிறு துணுக்குகள் விரைந்து வேகமாக விண்ணுலகு சென்று, அங்கு

Koviloor Digital Library

நிலைத்து நிற்க இடமில்லாது, கீழே திரும்பிவந்து தரையில் விழுந்தன. இது எப்படி இருக்கிறது என்றால், இறந்துபோனவர்கள், சொர்க்க லோகத்துச் சென்றவர்கள் தாம் செய்த புண்ணியம் சிறிதளவாகவே இருந்த தால், அது தீரும்வரை சொர்க்கலோகத்திலிருந்து அனுபவித்து விட்டு, அது தீர்ந்தவுடன் பூமிக்குத் திரும்புவதுபோல இருந்தது என்கிறான் கவிஞன்.

நாம் வாழும்போது எவ்வளவு நல்வினைகள் செய்து புண்ணியத்தைச் சேர்க்கிறோமோ அந்த அளவு இறந்ததன்பின் சுவர்க்க லோகத்தில் அனு பவிக்கலாம். புண்ணியம் தீர்ந்தபிறகு மீண்டும் பூமிக்கு மற்றொரு பிறப்பு எடுத்து வருதல் என்பது நூல்நியதி. எனவே புண்ணியம் நிறையச்சேர்க்க வேண்டுமென்பது இப்பாடலால் பெறப்படும் நீதி என்க.

23. கூருடை எயிற்றுக் கோள் மாச் சுறவுஇனம் எறிந்து கொல்ல,
போருடை அரியும், வெய்ய புலிகளும், யாளிப் போத்தும்,
நீரிடைத் தோற்ற அன்றே? தம் நிலை நீங்கிச் சென்றால்,
ஆரிடைத் தோலார் மேலோர், அறிவிடை நோக்கின் அம்மா! (6779)

(கூர்-கூரிய; எயிறு-பற்கள்; கோள்-கொள்ளுதல்/வலிய; மா-விலங்கு; சுறவு-சுறாமீன்கள்; எறிந்து-வெட்டி; அரி-சிங்கம்; வெய்ய-கொடிய; போத்து-ஆண்; தோற்றன-இறந்தன; நோக்குதல்-ஆராய்தல்; தோலார்-தோல்வியடையமாட்டார்கள்; நிலை-இடம்)

கூரியபற்களையுடைய, பிறரைக்கொல்லும் வலிமைபெற்ற விலங் கினமாகிய சுறாமீன்களின் கூட்டம், வெட்டிக்கொல்ல, போர் செய்வதில் வல்லமை பெற்ற சிங்கங்களும், கொடிய புலிகளும், ஆண் யாளிகளும் நீரில் போரிடும்போது மீன்களுக்குத் தோற்று இறந்துபோயின அல்லவா! எனவே அறிவினால் ஆராய்ந்து பார்க்குமிடத்து, எவ்வளவு மேம்பட்டவர்களாயிருந்தாலும் வல்லமை உடையவர்களாயிருந்தாலும், தாம் இயற்கையாக நிலைத்து இருக்க வேண்டிய இடத்தில் இருந்து நீங்கிவிட்டனர் என்றால், அவர்களினும் வலிமை குறைந்தவர்களிடம் தோற்றுத்தான் போவர். யாரிடம் தோற்கமாட்டார்கள்? எல்லோரிடமும் தோற்றுப்போவார்கள்.

யாளி என்பது சிங்கம் போன்ற ஒரு மிருகம். இப்போது வழக்கில் இல்லாதது. 'அம்மா' என்பது வியப்புக்குறித்த இடைச்சொல் என்க. போத்து என்பது ஆண்வர்க்கத்தைக் குறிக்கும். 'பெற்றம், எருமை, புலி, மரை, புல்வாய் மற்று இவையெல்லாம் போத்து எனப்படுமே' என்பது தொல்காப்பியம். 'நெடும்புனலுள் வெல்லும் முதலை; அரும்புனலின் நீங்கின் அதனைப்பிற' என்பது குறள்-495. 'யானையைச் சலந்தனில் இழுத்த அக்கரா, பூனையைக் கரைதனில் பிடிக்கப்போமோ?' என்பது விவேக சிந்தாமணி.

Koviloor Digital Library

24. ஒள்ளிய, உணர்வுகூட, உதவலர் எனினும் ஒன்றோ?
வள்ளியர் ஆயோர் செல்வம் மன்னுயிர்க்கு உதவும் அன்றே?
துள்ளின, குதித்த, வானத்து உயர்வரைக் குவட்டில் தூங்கும்
கள்ளினை நிறைய மாந்தி, கவிஎனக் களித்த, மீன்கள். (6780)

(வரைக்குவடு-மலைச்சிகரம்; தூங்குதல்-தொங்குதல்; கள்-தேன்; மாந்தி-பருகி; கவி-வானரம்/குரங்கு; வள்ளியர்-வண்மைத் தன்மை உடையோர்; ஒள்ளிய-தெளிவான/விளக்கமுற்ற; உணர்வு-அறிவு; கூட-பொருந்த; மன்னுயிர்-பிற நிலைபெற்ற உயிர்கள்)

வானரங்கள் மலைகளைப் பிடுங்கி எறியும்போது, அந்த வானளாவ உயர்ந்த மலைகளின் சிகரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் தேன்கூடு களில் இருக்கும் தேனைப் பருகித் துள்ளிக்கொண்டிருக்கும் குரங்குகள் போல, மீன்கள் ஆடிப்பாடித் துள்ளிக்குதித்துக் கொண்டு இருந்தன. இது எப்படி இருக்கிறது என்றால், வண்மைக்குணம் உடையவர்களது செல்வம், தானே விளக்கமுற்று விரும்பிய அறிவுடன்கூட உதவவில்லை என்றாலும்கூட, அது பிற நிலைபெற்ற உயிர்களுக்குத் தானே சென்று உதவும் அல்லவா? அதுபோல் இருக்கிறது என்கிறான் கவிஞன்.

வள்ளல்குணம் உடைய வள்ளல்களது செல்வம், அவர்கள் பிறர்க்கு உதவவேண்டும் என்று கருதாது இருந்தனர் என்றாலும், அவர்களது செல்வம் தானே நிலைபெற்ற உயிர்களுக்குச் சென்று சேர்வதுபோல - ஊருணிநீர் நிறைந்தாற்போல - பயன்மரம் உள்ஊர்ப்பழுத்தாற்போல - மருந்தாகித் தப்பாதமரம் போலப் பிற உயிர்களுக்கு உதவும் பான்மையது. அதைப்போல, மலையின் உச்சியில் இருந்த தேன்கூடுகள், மீன்களுக்கு உதவ வேண்டும் என்று தானே தன் அறிவால் கருதாதுபோனாலும்கூட, அவை விழுந்த வேகத்தில் உடைந்துபோய் அந்தக் கடலில் வாழ்ந்த மீன்கள் குடித்துக் கும்மாளமிட உதவியது என்பதாம்.

25. மூசுஎரி பிறக்க, மீக்கொண்டு, இறக்கிய முடுக்கம் தன்னால்,
கோய்சொரி நறவம் என்னத் தண்புனல் உகுக்கும் குன்றின்
வேய்சொரி முத்துக்கு, அம்மா விருந்து செய்திருந்த ஈண்ட
வாய்சொரி இப்பியோடும் வலம்புரி உமிழ்ந்த முத்தம். (6781)

(மூசு-அடர்ந்த/செறிந்த; எரி-நெருப்பு; இறக்குதல்-போடுதல்; முடுக்கம்-வேகம்; நறவம்-கள்; கோய்-செப்பு/பாத்திரம்; சொரிதல்-முகத்தல்; வேய்-மூங்கில்கள்; ஈண்ட-பிளந்த; உமிழ்ந்த-வெளிப் படுத்திய; மீக்கொண்டு-மேலே தாங்கிக்கொண்டு வந்து; மூசுதல்-மொய்த்தல்)

வானரச்சேனைகள், தம் தலையின்மீது சுமந்துகொண்டு வந்து போட்ட வேகத்தால், அந்தக் குன்றுகளிலிருந்து அடர்த்தியான நெருப்புப்

Koviloor Digital Library

பொறிகள் பறந்தன; அவற்றிலிருந்த அருவிகள் குளிர்ச்சி பொருந்திய அருவிநீரைக் கொட்டுவது, கள்முகக்கும் பாத்திரத்திலிருந்து தேன் சொட்டுவது போன்றிருந்தது. அது எப்படி இருந்தது என்றால், வாய் பிளந்து உகுக்கும் இப்பி முத்துக்களும், வலம்புரிச்சங்குகள் வெளிப் படுத்திய முத்துக்களும், மூங்கில்மரங்கள் உண்டாக்கிய முத்துக்களும் அங்கு வாழ்கின்ற மீன்களுக்கு விருந்து படைத்தது போன்றிருந்தது என்கிறான் கவிஞன்.

சற்று பொருள் புரியாதபாடல். எனினும் பொருள் எளிதாகப் புரியும்படி உரைதரப்பெற்றுள்ளது. குன்றுகள் அருவி நீரைச் சொரிவதற்கு, கள்முகக்கும் செப்புப் பாத்திரத்திலிருந்து சொட்டும் கள் உவமை. இப்பிமுத்து, வலம்புரிச்சங்கு முத்து, மூங்கில் முத்து என மூங்கில் பிறக்கும் இடங்களையும் கூறினார் என்க. வலம்புரிச் சங்கு என்பது முகம் வலப் பக்கமாக வளைந்து இருக்கும் சங்கு என்பர். இது மிகவும் அருமை பொருந் தியது. விலை உயர்ந்தது. இதற்கு மாறாக இடப்பக்கம் வளைந்திருந்தால் அது இடம்புரிச்சங்கு என்று வழங்கப்படுகிறது. 'அம்மா' என்பது வியப்புக்குறித்த இடைச்சொல்.

26. விண்தலம் தொடுமால்வரை வேரொடும்
கொண்டு, அலம்கொள வீரர் குவித்தலால்,
திண்தலம், கடல்ஆனது; நீர்செல
மண்தலம் கடல்ஆகி மறைந்ததே. (6782)

(விண்தலம்-ஆகாயம்; திண்-வலிய; மண்தலம்-பூமி; அலம்-நிறைவு/ துன்பம்; தலம்-தரை)

வானளாவ உயர்ந்த மலைகளைவேரோடும்பிடுங்கி எடுத்துக்கொண்டு வந்து, மிகவும் துன்பப்பட்டு வானரவீரர்கள் கடலில்கொண்டு வந்து குவிப்பதனால் அந்த வலிமையான தரை, நீர்புகுந்ததனால் கடல் போல் ஆயிற்று. அதுபோல தரையாக இருந்த மண்தரை கடலிலுள்ள நீர் பாய்வ தனால் கடலாக மாறிற்று, நீர்அப்பால் வெளியேற்றப்பட்டதனால் கடலாக இருந்த இடம், மண்தரைபோல் இறுகி வலியதரை போல் ஆயிற்று.

வலியதரை கடலாகவும், கடல் வலிய தரையாகவும் மாறிப்போனது என்பது, பரிவர்த்தனை எனப்படும். ஒன்றைக்கொடுத்து ஒன்றை வாங்குவது போல் என்க. நீர் பாய்ந்தது என்பது பொது. மலைகளின் வேகத்தால் கடல்நீர் வெளியேற்றப்பட்டது. அதனால் கடல் இறுகித் தரையாக மாறியது. அதே வேகத்தால், கடல்நீர் வெளியே பாய்ந்ததால், தரையாக இருந்த இடம் கடலாக மாறிப்போயிற்று என்பது கருத்து. 'பொருள் பரிமாறுதல் பரிவர்த்தனையே' என்பது தண்டியலங்காரம். பூமியின் தன்மையைக் கடலும், கடலின் தன்மையை பூமியும் பெற்றது என்பதாம்.

Koviloor Digital Library

27. அய்யன் வேண்டின், அது இது ஆம் அன்றே?
வெய்ய சீயமும், யாளியும், வேங்கையும்
மொய்கொள் குன்றின் முதலின, மொய்த்தலால்,
நெய்தல் வேலி, குறிஞ்சி நிகர்த்ததால். (6783)

(வெய்ய-கொடிய; மொய்த்தல்-நெருங்குதல்/செறிதல்; நிகர்த்தது-ஒத்தது; ஐயன்-தலைவன்; வேண்டுதல்-விரும்புதல்; அது-ஒன்று; இது-மற்றொன்று; நெய்தல்-கடலும் கடல் சார்ந்த இடமும்; குறிஞ்சி-மலையும் மலைசார்ந்த இடமும்; சீயம்-சிங்கம்)

வானரச்சேனைகள் கடலில் கொண்டுவந்து சேர்த்த மலைகளில் இருந்த கொடிய சிங்கம், யாளி, வேங்கைப்புலியும், மற்றும் மலைகளிலுள்ள மலைபடு பொருள்கள் அனைத்தும் கடலில் நிரம்பிச் செறிந்திருந்ததால், இப்போது கடல் நிலமானது, மலை நிலம் போலத்தோற்றம் தந்தது. ''எல்லோர்க்கும் தலைவனாகிய இறைவன் விரும்பினால், ஒருபொருள் மற்றொரு பொருளாகவே ஆகிவிடும் அல்லவா?'' என்கிறான் கவிஞன்.

'நெய்தல்' என்பது கடலும் கடல் சார்ந்த நிலமும்; குறிஞ்சி என்பது மலையும் மலைசார்ந்த நிலமும்; இங்கே கடல், மலைபோலக் காட்சியளித்தது என்பதாம். 'முன்னவனே முன்நின்றால் முடியாத பொருள் உளதோ?' என்பது பெரியபுராணம். சிங்கம், யாளி, வேங்கை என்பன குறிஞ்சி நிலத்திற்குரிய கருப்பொருள்கள் என அறிக.

28. 'யான் உணாதன இங்கு இவை' என்னவே,
தீன் உணாதன; என்இது செய்யுமோ?
மான் உணாத திரைக்கடல் வாழ்தரு
மீன் உணாதன இல்லை விலங்கு அரோ! (6784)

(தீன்-தீனி/உணவு; மான்-மிருகம்)

வானரச்சேனைகளால் கடலில் எறியப்பட்ட மலைகளில் இருந்து வாழும் மான்களும், மற்றைய மிருகங்களும் சேர்ந்து கடலில் விழுந்தன. 'மான்கள்மட்டும், இந்தக் கடலில் வாழும் மீன்கள் நான் உண்ணத் தகாதனவையாகும்' என்று எண்ணி, அவற்றை உண்ணாமல் மீனைத்தவிர ஏதும் கிடைக்காததால் வாளா இருந்தன. இந்த மான்கள் எதனையும் உண்ணாமல் எப்படி உயிர்வாழப்போகின்றன? பாவம்; ஆனால் இதற்கு மாறாக, கடலில் வாழும் மீன்கள், மலையிலிருந்து கடலில் விழுந்த எல்லா மிருகங்களையும் உண்ணலாயின.

தின்னப்படுவது தீனி; இங்கே தீன் என நின்றது. 'இது என்ன செய்யுமோ!' என்பது இரக்கக்குறிப்பு; மான் என்ற சொல் பொதுவாக மிருகங்களையும் குறிக்கும். மான்கள் மீன்களை உண்ணாதிருக்க, மீன்களோ எல்லா விலங்குகளையும் உண்டன என்பதாம்.

Koviloor Digital Library

29. வவ்விலங்கு வளர்த்தவர் மாட்டு அருள்
செவ் விலங்கல் இல் சிந்தையின் தீர்வரோ!
'இவ்விலங்கல் விடேன் இனி' என்ப போல்,
எவ்விலங்கும் வந்து எய்தின வேலையே! (6785)

(விலங்கல்-நீங்குதல்; சிந்தை-மனம்; தீர்தல்-நீங்குதல்; வவ்வுதல்-பற்றுதல்/கவர்தல்; விலங்கல்-மலை; விலங்கு-மிருகங்கள்; வேலை-கடல்)

மலைகளில் உள்ள விலங்குகள் எல்லாம் ''நாங்கள் இப்பொழுதும் இந்த மலையை விட்டுவிட்டு விலகிச் செல்லமாட்டோம்'' என்று கருதினவாய், அம்மலையோடு சேர்ந்து, தாமும் கடலில் வந்து வீழ்ந்தன. செம்மையான இயல்புடைய மனம்கொண்டவர்கள், தம்மை வளர்த்தவரை, வேறு ஒருவர் வந்து பற்றிக்கொண்டு சென்றால் தம்மை வளர்த்தவரைவிட்டு நீங்கிச் செல்வார்களோ? மாட்டார்கள் அல்லவா!'' என்கிறான் கவிஞன்.

இந்தப் பாடலில் அருமையான ஒரு கருத்தைக் கவிஞன் முன் வைக்கிறான். முதலில் அந்த மலையிலிருந்த விலங்குகள் எல்லாம் இதுநாள்வரையிலும் அந்த மலையிலிருந்தே தங்கியிருந்து, உணவு உண்டு வாழ்ந்துவந்திருக்கின்றன. இப்போது அந்த மலையை வானரவீரர்கள் சுமந்துகொண்டு வந்து கடலில் வீசுகிறார்கள். இப்பொழுது இந்த விலங்குகள் என்ன செய்திருக்கவேண்டும்? தம் நல்வாழ்வு கருதி வேறொரு மலைக்குத் தாவிச்சென்றிருக்கவேண்டும். ஆனால் இவ்விலங்குகள் அவ்வாறு செய்யாமல் அந்த மலைகளுடனே தாமும் கடலில் விழுந்தன. செம்மையான குணம்வாய்ந்தவர்கள், தான் வளர்ந்த இடத்தில் உள்ள, தன்னை வளர்த்தவர்களை யாரேனும் பகைமையால் கவ்விக்கொண்டு செல்வர் என்றால் அவர்களுடனே சென்று, அவர்கள் படுகின்ற துன்பத்தைத் தானும் அவர்களோடு சேர்ந்து அனுபவிப்பதுதான் செவ்விய சிந்தையர் பண்பு.

அவ்வாறு இருக்கும்போது, வீடணன்மட்டும் தன்னை வளர்த்த இராவணனை விட்டுவிட்டு, வேறொரு மலை தேடி வந்து அடைக்கலம் புகுந்துவிட்டானே? இது செம்மைப் பண்பா? அல்லது அந்த மலையுடனேயே கடலில் வீழ்ந்த விலங்குகளைப்போல கும்பகருணன் வேறொரு மலைதேடாது அம்மலையினுடனேயே சேர்ந்திருந்து, இராவணன் அனுபவிக்கப்போகின்ற துயரங்களிலெல்லாம் பங்கெடுத்துக்கொள்ளப் போகின்றானே! அது செம்மைப்பண்பா? என்ற விவாதத்திற்குரிய பொருளைக் கம்பன் கற்போர்முன் வைத்திருக்கிறான். கற்போர் முடிவே கற்றோர் முடிவு. இந்த இடத்தில் வில்லிபாரதத்தில் கர்ணன் நிலையையும், கந்தபுராணத்தில் விகர்ணன் நிலையையும் ஒப்பிட்டு நோக்குவதும் தகும்.

Koviloor Digital Library

30. கனிதரும், நெடுங் காய்தரும், நாள்தொறும்
இனிது அருந்தவம் நொய்தின் இயற்றலால்,
பனிதரும் கிரி தம் மனம்பற்று அறு
முனிவரும் முனியார், முடிவு உன்னுவார். (6786)

(பனி-குளிர்ச்சி; நொய்தின்-எளிதாக; முடிவு-பின்விளைவுகள்; உன்னுதல்-நினைத்தல்; முனிதல்-சினம்கொள்ளுதல்)

நாள்தோறும் உண்பதற்கு இனிய கனிகளையும், முற்றிய காய்களை யும், குளிர்ச்சியையும் தந்து, செய்தற்கரிய நல்லதவத்தை எளிதாகச் செய்வதற்கு உரிய, நல்ல இடமாக இந்த மலைகள் இருந்தாலும், அவற்றை வானரங்கள் பிடுங்கிச்சென்று கடலில் எறிந்தாலும், அந்த அக, புறப் பற்றுக்களையும் விட்டுவிட்ட முனிவர்கள் அந்த வானரங்களைக் கோபிக்கமாட்டார்கள். காரணம் அவர்கள் இதன் பின்விளைவுகளை-அரக்கர்கள் அழியப்போவதைத் தம் மனத்தில் கருதி, அந்த வானரங்களைச் சிறிதும் சினந்து கோபிக்கமாட்டார்கள்.

31. புலையின் வாழ்க்கை அரக்கர், பொருப்பு உளார்,
தலையின்மேல் வைத்த கையினர், சாற்றுவார்,
'மலைஇலேம்; மற்று, மாறு இனிவாழ்வது ஓர்
நிலைஇலேம்'' என்று, இலங்கை நெருங்கினார். (6787)

(புலை-புலால்/மாமிசம்; பொருப்பு-மலை; சாற்றுதல்-கூறுதல்)

வானரங்கள் பெயர்த்தெடுக்கின்ற மலைகளில் வசித்துவருபவர்களும், இறைச்சியையே தமது உணவாகவும், பாவச்செயல்களையே தம் வாழ்வுத் தொழிலாகவும் கொண்டவர்களுமான அரக்கர்கள், வானரங்கள் இம்மலைகளைக் கடலில் எறிவதனால் துயரடைந்து, தம் தலைகளின் மேல் கைகளை வைத்துக்கொண்டு, ''இப்பொழுது எங்களுக்குத் தங்குவ தற்குரிய இந்த மலையும் இல்லை; இனிமேல் நாங்கள் தங்குவதற்கு ஓர் நிலையான வேறு இடமும் இல்லை'' என்று கூறினவர்களாய், இலங்கை மாநகரத்தை நெருங்கினார்கள்.

'புலை' என்பது ஊன், மாமிசம், இறைச்சி என்ற பொருளையும், அற்பமான பாவத்தொழில் என்ற பொருளையும் தரும். தாங்கமுடியாத துயரத்தால் வருத்தமடைபவர்களோ, ஒருபொருளை இழந்தவர்களோ, தலையின்மீது கை வைத்துக்கொண்டு புலம்புதல் மனித இயல்பு. இதற்கு அரக்கர்களும் விலக்கல்ல என்பதைச்சுட்டுகிறது இந்தப்பாடல். ''கைதான் தலைவைத்துக் கண்ணீர்ததும்பி, வெதும்பி, உள்ளம்'' என்பது திருவாசகம்.

Koviloor Digital Library

32. முழுக்க நீரில் புகா, முழுகிச்செலா,
குழுக்களோடு அணை கோள்அரி, யாளிகள்,
இழுக்குஇல் பேர்அணையின் இருபக்கமும்,
ஒழுக்கின் மாலை வகுத்தன ஒத்தவே. (6788)

(குழு-இனம்; அணைதல்-சேர்ந்திருத்தல்; கோள்-வலிய; அரி-சிங்கம்; இழுக்கு-குற்றம்; வகுத்தல்-அமைத்தல்; ஒழுக்கு-ஒழுங்கு; முழுக்குதல்-அமிழ்த்தல்)

அவ்வாறு கடலில் விழுந்த வலிய சிங்கங்களும், யாளிகளும், அந்தக் கடலின் நீரில் முழுக்கவும் அமிழ்ந்துவிடாமலும், பாதிமுழுகிப் பாதி முழுகாமலும், தங்களது கூட்டத்தோடு, அந்தக்குற்றமற்ற பெரிய அணையின் இருபக்கமும் தத்தளித்துக்கொண்டேயிருந்தன. இவை இவ்வாறு நின்ற தோற்றம் அந்த அணையின் இருபக்கத்திலும் வரிசையாக நெருங்கி அக்கடலுக்கு மாலை அணிவித்ததைப்போல் தெரிந்தது என்கிறான் கவிஞன்.

சிங்கங்களும், யாளிகளும் கடல் நீரினுள் முழுக்கவும், அமிழாதிருக்கக் காரணம் மகரமீன்கள் தம்மைத் தின்றுவிடும் என்ற அச்சம். மேலே அணையின் மேல் ஏறாமல் இருப்பதற்குக் காரணம், குரங்குகள் என்ன செய்யுமோ என்ற அச்சம். எனவே பாதி முழுகியும், பாதி முழுகாமலும் தத்தளித்துக்கொண்டிருந்தன என்பதாம்.

33. பளிக்கு மால்வரை முந்து படுத்தன
ஒளிக்கும் ஆழி கிடந்தன ஓர்கிலார்,
'வெளிக்கு மால்வரை வேண்டும்' எனக்கொணர்ந்து
அளிக்கும் வானரவீரர் அநேகரால். (6789)

(முந்து-முன்பே; படுத்தன-இட்டன/எறிந்தன; ஆழி-கடல்; வெளி-வெற்றிடம்/இடைவெளி; அநேகர்-பலர்; ஒளித்தல்-அணைகட்டுதல்; ஓர்தல்-உணர்தல்; கொணர்தல்-கொண்டுவருதல்)

வானரங்கள் முன்பே பெரிய பளிங்கினாலான மலையைக் கொண்டு வந்து போட்டிருந்தனர். அதன்பிரதிபலிப்பால் அங்கே ஒரு வெற்றிடம் இருப்பதாகக் கருதினர்; எனவே இந்த இடைவெளியை நிரப்புவதற்கு இன்னும் பெரிய மலைவேண்டும் என்று கருதி, பலகுரங்குகள் சென்று, மேலும்மேலும் மலையைக் கொண்டுவந்து கொடுத்துக்கொண்டே இருந்தன.

அந்த இடைவெளி பளிங்கினாலான பிரதிபலிப்பு. அதாவது பளிங் கிற்கும், தண்ணீருக்கும் வேற்றுமையை உணராது அவ்வாறு கருதினர் என்பதாம்.

Koviloor Digital Library

34. பாரினாள் முதுகும் நெடும் பாழ்பட,
மூரிவானரம் வாங்கிய மொய்ம்மலை
வேரின் ஆம்என, வெம் முழையின்னுழை
சோரும் நாகம், நிலன்உறத் தூங்குமால். (6790)

(பாரினாள்-நிலமடந்தை/பூமாதேவி; நெடும்-மிகவும்/நீண்ட; மூரி-வலிய; வாங்கிய-பெயர்த்தெடுத்த/பறித்துக்கொண்ட; மொய்- கூட்டம்; வெம்-கொடிய; முழை-மலைக்குகை; உழை-இடம்; சோர்தல்- வெளிப் படுதல்; உற-பொருந்த; தூங்குதல்-தொங்குதல்)

வலிய வானரச்சேனைகள் நிலத்தில் பொருந்தியிருக்கும் மலைக் கூட்டங்களையெல்லாம் பெயர்த்தெடுத்து விட்டதால், பூமாதேவி தன் நீண்ட முதுகுப்பக்கம் மிகவும் வெற்றிடமாய்ப் போய்விட்டதே என்று வருந்தவும், அந்த மலையின் கொடிய குகைகளிலிருந்து பாதி வெளிப் பட்டுத் தரைவரை தோன்றித் தொங்கிக்கொண்டிருக்கும் பாம்புகள், அந்த மலையின் வேர்களோ என்று காண்பவர் ஐயுறும்படி தோன்றும்.

நிலத்தில் இடம் வெற்றிடம் ஆகிவிட்டதனால் 'பாழ்பட' என்றார் என்க. அந்தப் பாம்புகள் தரைவரை தொங்குகின்ற தோற்றம், அந்த மலைகளின்வேர்போலத்தோற்றமளித்தனஎன்பதாம். மரம், செடி, கொடி, தாவரங்களுக்கு வேர் இருப்பதுபோல், மலைகளுக்கு வேர் கிடையாது. எனினும் கவிஞன் தனக்குத் தோன்றியதை அந்த மலைகளின் மேல் ஏற்றி அதன் வேராகக் குறித்ததனால் இது தற்குறிப்பேற்ற அணியாகும். பூமியைப் பெண்ணாகக் கூறுவது கவிமரபு. எனவே 'பாரினாள்' என்றார் என்க. பாம்புக்கு மலைகளின் வேர் உவமை.

35. அருணச் செம்மணிக் குன்று அயலே சில
இருள் நற்குன்றம் அடுக்கின, ஏய்ந்தன;
கருணைக் கொண்டல், 'வறியன் கழுத்து' என,
வருணற்கு ஈந்த வருண சரத்தையே. (6791)

(அயல்-பக்கம்; கொண்டல்-மேகம்; சரம்-மணிமாலை; அருணச் செம்மணி-சிவந்த மாணிக்கம்; ஏய்ந்தன-ஒத்தன; வருணம்-வண்ணம்/ நிறம்; அருணம்-செந்நிறம்)

சிவந்த நல்ல மாணிக்கக் குன்றுகளுக்குப் பக்கத்தில் சில இருள்போன்ற நீலநிறம் பொருந்திய சிறந்த குன்றுகளும் ஒன்றின்மேல் ஒன்றாய் அடுக்கப்பட்டு இருந்தன. அவை, மேகம் போன்று வரையாது வழங்கும் கருணையே வடிவான வள்ளலாகிய இராமபிரான் 'எனக்கு வருணன் அவனிடமிருந்த நல்ல மணிமாலையைக் காணிக்கையாகத் தந்துவிட்டு, இப்பொழுது வெறுங்கழுத்துடன் நிற்கிறானே' என்று அவன்மீது அன்பு

Koviloor Digital Library

மேலிட அவனுக்கு அருளிய பலவண்ணங்கள் பொருந்திய மணிமாலையைப் போன்றிருந்தன.

இருள் நற்குன்றங்களும், செம்மணிக்குன்றும், கொண்டல் ஈந்த வருணசரத்திற்கு ஒப்பு. நீரைக்கொள்வதால் கொண்டல் என்பது மேகத்திற்குக் காரணப்பெயர். வருணசரம் என்பது இங்கே பல நிறத்தையுடைய - வண்ணங்களையுடைய மணிமாலை என்ற பொருளைத்தரும்.

36. ஏய்ந்த தம் உடம்பு இட்ட உயிர்க்கு இடம்
ஆய்ந்து கொள்ளும் அறிஞரின், ஆழ்கடல்
பாய்ந்து பண்டு உறையும் மலைப் பாந்தள்கள்,
போந்த மாமலையின் முழை, புக்கவே. (6792)

(பாந்தள்-பாம்பு/மலைப்பாம்பு; ஏய்ந்த-பொருந்திய/அமைந்த; இட்ட-வைத்த; அறிஞர்-யோகியர்; முழை-குகை; போந்த-அடைந்த)

யோகம் கைவரப்பெற்ற யோகியர்கள், சித்தர்கள், தமக்கு வாய்த்த உடம்பு வேறொரு உடலுக்கு நன்மை செய்தற்பொருட்டே, என்று தெளிந்த அறிவு படைத்தவர்கள் அந்த சித்தியில் வல்ல அறிவுமுதிர்ந்த யோகியர் தம் உடம்பை விட்ட இடத்திற்கு மீண்டும்போய் அதைத்தேடி எடுத்துக்கொள்ளுவது போல, வானரவீரர்களால் ஆழ்ந்த கடலில் வீசியெறியப்பட்ட பெரிய மலைகளில் இருந்த மலைப்பாம்புகள், தாம் கடலில் வீழ்ந்தபோதும், முன்னேதாம் வசித்தனவாகிய அம்மலைகளையே மீண்டும் நாடிச்சென்று, அம்மலைகளில் உள்ள குகைகளிலேயே சென்று வாழத்தொடங்கின.

கூடுவிட்டுக் கூடுபாய்தல் என்ற இது 'பரகாயப் பிரவேசம்' என்று வடமொழியில் வழங்கப்பெறும் பர-பிற; காயம்-உடம்பு; பிரவேசம்-புகுதல்; என்று பிரிந்து பொருள்தரும். சித்தர்களின் செயலை மலைப் பாம்புகளின் செயலுக்கு உவமிப்பதால் இது உவமையணியின்பாற்படும். இவ்வாறு கூடுவிட்டுக் கூடுபாயும் சித்தியில் வல்லவர்களாக அருணகிரிநாதர், திருமூலர், முதலியவர்களைக் கூறுவதுண்டு. அருணகிரிநாதர் கிளியாக மாறினார். திருமூலர் ஓர் இடையனாக மாறினார்.

37. சேதுவின் பெருமைக்கு இணைசெப்ப, ஓர்
ஏது வேண்டும் என்று எண்ணுவது என்கொலோ?
தூதன் இட்ட மலையின் துவலையால்,
மீது வீட்டுஉலகு உற்றது-மீன்குலம்? (6793)

(இணை-ஒப்பு; ஏது-காரணம்; என்-எதற்காக; துவலை-நீர்த்திவலை; மீது-மேலே; வீட்டுஉலகு-மோட்சம்/முக்தி; தூதன்-அனுமன்; சேது-அணை)

Koviloor Digital Library

வானரச்சேனைகள் அமைத்த அணையின் பெருமைக்கு ஒப்புச் சொல்லுவதற்கு வேறுஒரு காரணம் வேண்டும் என்பது எதற்காக? இராமதூதனாகிய அனுமன் கடலில்வீசியெறிந்த மலையின் தாக்கத்தால் கடலைவிட்டு, விண்ணில் சென்று தெறித்த நீர்த்திவலைகளோடு, அந்தக் கடலில் வாழ்ந்த மீனினங்களும் கடலைவிட்டு விண்ணிற்சென்று, மேலானதாகிய மோட்ச உலகை அடைந்து முக்தி பெற்றன என்பதே தக்கசான்று அல்லவா?' என்கிறான் கவிஞன்.

இந்தப்பாடலில் இருந்து ஒவ்வொரு வானரவீரரும் செய்த செய்கை களை விவரமாகக் கூறத்தொடங்குகிறான் கவிஞன். கடலில் வாழ்ந்த மீன்கள்கூட வீடுபேறுற்றன என்ற ஒன்றே சேதுவின் பெருமையைப் பறைசாற்றப் போதுமான சான்றாக அமையும் என்கிறான் கவிஞன் என்பதாம்.

38. நீலன் இட்ட நெடுவரை நீள்நில
மூலம் முட்டலின், மொய்புனல் கைம்மிக,
கூலம் இட்டிய ஆர்கலி கோத்ததால்,
ஓலமிட்டு எழுந்து ஓடி, உலகுஎலாம். (6794)

(நெடு-நீண்ட/பெரிய; நீள்-நீண்ட; மூலம்-அடி/அடிப்பகுதி/அடிவாரம்; முட்டுதல்-தாக்குதல்; மொய்-மிகுந்த; கைம்மிகுதல்-எல்லை கடத்தல்; கூலம்-கரை; ஓலம்-ஒலி; இட்ட-எறிந்த; கோத்தல்-கவித்துக் கொள்ளுதல்/பாய்தல்)

நெருப்புக்கடவுளின் அம்சமான நீலன் என்ற வானரத் தலைவன் வீசியெறிந்த நீண்ட பெரியமலை, நீண்ட இந்நிலத்தின் அடிப்பாகம், அதாவது பாதாளம் வரை சென்று மோதித் தாக்கியதால், மிகுந்த கடல்நீர் எல்லைமீறிப்போக, அதன் கரை சிறியதாக, கரையே இல்லாததாக ஆயிற்று; அந்த ஒலிமிகுந்த கடல், பூமியைக் கவித்துக்கொண்டதால் உலக உயிரினங்கள் எல்லாம், அழுகையொலி எழுப்பிக்கொண்டே ஓடி ஒளிந்து கொண்டன. இவ்வாறு கடல் எல்லை மீறிப்போனதால், கடல்நீர் முழக்கமிட்டுக் கொண்டே நிலவுலகத்துள் எல்லாம் பாய்ந்தது.

மலை பாதாளத்தில் முட்டியதால், கடல்நீர் எல்லைகடந்து உலகத்துள் எல்லாம் பாய்ந்தது என்பது கருத்து. கடல் எப்போதும் ஒலித்துக்கொண்டே இருப்பதால் 'ஆர்கலி' என்பது, கடலுக்குக் காரணப்பெயர். கடலுக்குக் கரை இல்லை என்பது 'கற்றவர்.விழுங்கும் கற்பகக் கனியைக் கரையிலாக் கருணை மாக்கடலை' என்ற சேந்தனாரின் திருவிசைப்பா கொண்டு அறியலாம்.

Koviloor Digital Library

39. ஒருவன் ஆயிரம் யோசனை ஓங்கிய
அருவி மால்வரை விட்டு எறிந்து ஆர்த்தலால்,
மருவு வான்கொடி மாட இலங்கையில்
தெருஎலாம் புக்கு உலாய, தெண்ணீர் அரோ! (6795)

வானரவீரர்களுள் ஒருவன் ஆயிரம் யோசனை உயர்ந்தோங்கிய, அருவிகள் நிறையப்பெற்ற ஒரு பெரிய கரியமலையைக் கடலில் விட்டு வீசியெறிந்து ஆர்ப்பரித்தான். அதனால் வானளாவிய கொடிகள் நிறைந்து விளங்கும் மாடங்கள் அமைந்திருக்கின்ற இலங்கை மாநகருக்குள் உள்ள தெருக்களில் எல்லாம், அந்தக் கடலின் தெளிந்தநீர் புகுந்து சுற்றி வரலாயின.

இந்தப்பாடல் பெரும்பாலும் எல்லாச் சுவடிகளிலும், அச்சுப்பிரதி களிலும் மிகைப்பாடலாகவே கொள்ளப்பட்டிருக்கிறது. எனினும் சென்னைக் கம்பன்கழகப் பதிப்பில் இப்பாடல் இடம் பெற்றிருப்பதால் இதற்கு உரை கூறப்பட்டிருக்கிறது. இதுவரையிலும் இராவணனுக்கு அஞ்சி, கரை கடவாத கடல், இப்பொழுது அவ்வச்சம் நீங்கப்பெற்று இலங்கைத் தெருக்களில் எல்லாம் சுற்றி வந்தது என்று கூறியது ஒரு நயம். 'உலாவுதல்' என்ற சொல்லுக்கு இன்றையப் பொருள்கொண்டு பார்த்தால், கம்பனின் நகைச்சுவையுணர்வைப் புரிந்துகொள்ள முடியும்.

40. மயிந்தன் இட்ட நெடுவரை வான்உற,
உயர்ந்து முட்டிவிழ, எழுந்து, ஓதநீர்
தியந்தம் முட்ட, திசைநிலை யானையும்,
பெயர்ந்து விட்டவை, யாவும் பிளிறுவ. (6796)

(ஓதம்-கடல்; தியந்தம்-திக்குஎல்லை; முட்டுதல்-மோதுதல்; பிளிறுதல்-முழங்குதல்)

மயிந்தன் என்ற வானரவீரன் கடலில் வீசியெறிந்த பெரிய நீண்ட மலை, வானளாவ உயர்ந்து, அதனைத் தாக்கிப்பின் கடலில் விழ, அதனால் பொங்கியெழுந்த அந்தக் கடல்நீர், திக்குகளின் எல்லைகளைச் சென்று மோதியதால், திக்குகளைக் காத்து நிலைபெற்று இருந்துவரும் திக்கு யானைகளும், தங்கள் நிலைதடுமாறித் தத்தம் இடம்விட்டுப் பெயர்ந்து, அவை எல்லாமும் பிளிறி முழக்கமிடலாயின.

தியந்தம் என்பது திக்+அந்தம் என்பது திக்கந்தம் என்றாகிப் பின் தியந்தம் என எதுகை நோக்கித் திரிந்தது. அது திக்குகளின் எல்லை என்ற பொருளைத்தரும் வடசொல்.

Koviloor Digital Library

41. இலக்கு வன்சரம் ஆயினும், ஏன்று எதிர்
விலக்கினால், விலங்காத விலங்கலால்,
அலக்கண் எய்த, அமுதுஎழ, ஆழியைக்
கலக்கினான் மகன், மீளக் கலக்கினான். (6797)

(வன்-வலிய; சரம்-அம்பு; ஏன்று-ஏற்றுக்கொண்டு; விலங்குதல்-அசைதல்; விலங்கல்-மலை; அமுது-அமிழ்தம்; எழுதல்-தோன்றுதல்; ஆழி-கடல்; அலக்கண்-துன்பம்; இலக்கு-குறி)

இலக்குத்தவறாததும், இலக்குவன் கையில் உள்ளது போன்றதுமான அம்பு என்றாலும், அதை எதிர்த்து ஏற்றுக்கொண்டு போர்செய்து விலக்கினாலும், அசைந்து கொடுக்காத வலிமைபொருந்திய மலையைத் தம்கையில் கொண்டு, பாற்கடலில் அமிழ்து தோன்றும்படி கடலைக் கலக்கியவனான வாலியின் மகனான அங்கதன், அந்தக்கடல் மிகுந்த துன்பம் அடையும்படி, மீண்டும் கலக்கலானான்.

'இலக்குவன்' என்று ஒரே சொல்லாகக் கொண்டு, இலக்குவனது அம்பினுக்கும் பெருமை சேர்க்கலாம். இலக்கு+வன் என்று கொண்டு இலக்குத்தவறாத வலிய அம்பு என்றும் பொருள்கொள்ளலாம். வாலி, அமிழ்து எழ ஆழியைக் கலக்கியவன் என்பது காப்பியத்தில் தாரை கூற்றாகவும், அங்கதன் கூற்றாகவும், வாலியினுடைய கூற்றாகவுமே கூறப்பட்டிருப்பதையும் இங்கே நினைவுகூர்க. இலக்குவனது அம்பின் வலிமையை முன்பும் கண்டோம். பின்பும் இராவணன் கூற்றாலும் அறியப்போகிறோம். வாலியின் ஆற்றலுக்குச் சற்றும் குறைந்தவன் அல்லன் அங்கதன் என்பதும் இங்கு பெறப்படுகிறது.

42. மருத்தின் மைந்தன் மணிநெடுந்தோள் எனப்
பெருத்த குன்றம், கரடிப்பெரும் படை
விருத்தன் இட்ட விசையினின், வீசிய
திருத்தம், வானவர் சென்னியில் சென்றதால். (6798)

(விருத்தன்-முதியோன்; மருத்து-வாயு/காற்று; விசை-வேகம்; வீசிய-தெறித்த; திருத்தம்-தீர்த்தம்/புனிதநீர்; சென்னி-தலை)

காற்றுக்கரசனான வாயுதேவனின் புதல்வனான அனுமனின் அழகிய பெருமைவாய்ந்த தோள் என்று சொல்லும்படி பருத்த குன்றுகளை, பெரிய கரடிப்படைகளுள் வயது முதிர்ந்தவனான சாம்பவன் எடுத்துக்கடலில் வீசியெறிந்த வேகத்தில், அங்கே சிதறித்தெறித்த நீர்த்துளிகள், வானத்திலே இருக்கின்ற தேவர்களின் தலையிலும் சென்று சேர்ந்தது.

அனுமனின் பருத்த தோளைக் குன்றுக்கு உவமையாக்குகிறான் பாருங்கள் கம்பன். குன்றைத்தானே வீரனின் தோளுக்கு உவமை கூற வேண்டும்? இது எதிர்நிலைஅணி எனப்படும். சாம்பவன் வயது முதிர்ந்

Koviloor Digital Library

தவன். அவன் வயதினை அளவிட்டுக்கூற முடியாது. நீண்ட ஆயுளை உடையவன். எனவே விருத்தன் என்று மட்டும் சொல்லி நிறுத்தினார் என்க. இங்கே 'தீர்த்தம்' என்ற சொல் திருத்தம் என்று எதுகைநோக்கித் திரிந்தது. எனினும் இங்கே ஒரு நயம் பாருங்கள். வானவர் தலையில் கடலில் இருந்து எழுந்த நீர்த்துளிகள் சென்று சேர்ந்தன என்றுதானே கூறவேண்டும்? இதுவரையிலும் திவலை, துளி, நீர்த்துளி என்றுதானே கூறிவந்திருக் கிறான்? இங்கே மட்டும் ஏன் 'தீர்த்தம்' என்று கூறவேண்டும்? அது தேவர்களின் உலகு சென்றது என்பதனாலும், தீர்த்தத்தை - புனித நீரைத் தலையில் தெளித்துக்கொள்ள வேண்டும் என்பதாலும், சென்னியில் சேர்ந்த தீர்த்தம் என்று கூறிய நயம் நோக்குக. மற்ற இடங்களில் தெறித்தநீர், இங்கே தெறித்த தீர்த்தமாயிற்று என்க.

43. குமுதன் இட்ட குலவரை கூத்தரின்
திமிதம் இட்டுத் திரியும் திரைக்கடல்,
துமி தம் ஊர்புக, வானவர் துள்ளினார்,
அமுதம் இன்னம் எழும் எனும் ஆசையால். (6799)

(குலம்-சிறந்த; திரிதல்-சுழலுதல்; துமி-துளி; இன்னும்-இப்பொழுதும்; எழும்-தோன்றும்; துள்ளுதல்-மகிழ்ந்து கூத்தாடுதல்; திமி தம்-நாட்டியத்தில் எழும் ஒலிகள்)

குமுதன் என்ற வானரப்படைத் தலைவன் எடுத்து வீசியெறிந்த ஒரு சிறந்த மலையானது, திமி, தம் என்ற ஒலியோடு கூத்தாடும், சுழன்று வீசுகின்ற அலைகளையுடைய கடலில் சென்று அமிழ, அதனால் எழுந்த நீர்த்துளிகள், தங்களது வானுலகத்திலும் வந்து சேர்ந்ததால், தேவர்கள் இப்பொழுதும் முன்புபோல் பாற்கடலைக் கடைந்ததால் எழுந்த அமிழ்தம் நமக்குக் கிடைக்கும் என்னும் அடங்காத ஆர்வத்தால் துள்ளிக் குதித்துக் கூத்தாடத் தொடங்கினர்.

'திமி, தம்' என்பது தத்தீம் என்று இன்றும் நாட்டியத்திற்குப் பயன் படுத்தப்படும் நட்டுவாங்க ஒலிகளைக் குறிக்கும் எனக்கொள்க. குமுதன் பெயர்த்தெடுத்து எறிந்த மலை, முன்பு தேவர்கள் கடல்கடைய மத்தாகக் கொண்ட மந்தரமலை போன்று கடலைக் கலக்கியது என்பது கருத்து. ஆசையற்றவர்கள் ஞானிகள். மனிதனைக்காட்டிலும் ஆசை மிகுந்துள்ள வர்கள் தேவர்கள் என்பது பெறப்படுகிறது. ஒருமுறை பெற்ற மரண மில்லாப் பெருவாழ்வு பெறுதற்கமைந்த அமிழ்தம், மீண்டும் கிடைக்கும் என்ற ஆசையால் துள்ளிக்குதித்தனர் தேவர்கள் என்பதில் கம்பனின் நகைச்சுவையுணர்வு தெரிவதை உணர்க.

'துமி' என்ற சொல் துளி என்ற ஒரு பொருளைத் தரும். 'இது அந்தப் பொருளைத் தாராது. தவறான சொல்லாட்சி' என்று கம்பன் காப்பியம் எழுதிக்கொண்டிருக்கும்போதே ஒரு சர்ச்சை எழுந்ததாகக் கர்ண

Koviloor Digital Library

பரம்பரைச் செய்தி ஒன்று உண்டு. எனினும் கம்பன் தன் ஆற்றலாலும், பக்தியாலும், கலைமகளைக் கொண்டே இந்தச் சந்தேகத்தைத் தீர்த்து வைத்தான் என்பர். இது செவிவழிச்செய்தி. அனைவரும் அறிந்தசெய்தி; இந்தச்செய்தி, வினோதரச மஞ்சரியில் மிக விரிவாகக் கூறப் பட்டிருக்கிறது.

44. கனசினத்து உருமின், கடுங்கார் வரை,
பனசன் இட்டன யாவும் பரிக்கிலன்,
மன சினத்த அனந்தனும், வாழ்வு இகந்து
அனசனத் தொழில் மேற்கொள்வது ஆயினான். (6800)

(அனந்தன்-ஆதிசேஷன்; கன-மிக்க; உரும்-இடி; கார்-கரிய; வரை-மலைகள்; பரித்தல்-தாங்குதல்; இகந்து-நீங்கி; அனசனம்-உண்ணாமை; அசனம்-உணவு; அன்அசனம்-அனசனம்-உண்ணாதிருத்தல்)

பனசன் என்ற வானரத்தலைவன், பறித்தெறிந்த கடிய கரிய மலைகள் எல்லாம் மிக்ககோபம் கொண்ட பேரிடியைப்போல வந்து கடலில் விழுந்தன; இயற்கையிலேயே மிக்க கோபம் கொண்ட மனத்தினனான ஆதிசேஷன், இந்தப் பேரிடிபோல் தன்மீது வந்து தாக்கும் மலைகளைத் தாங்கமுடியாதவனாய், பூமியைத் தாங்கும் தொழிலைவிட்டு விட்டு உயிர்துறத்தலே தகும் என்று கருதி, உண்ணாவிரதம் மேற்கொள்ளத் தொடங்கினான்.

இயற்கையாகவே இடியோசை கேட்டால், பாம்பு அஞ்சி நடுங்கும். இப்போது இடியோசையுடன் மலையும் தன்மீது வந்து வீழ்வதால் உயிர் வாழ்தலையே துறக்க எண்ணினான் ஆதிசேஷன் என்பதாம். ஆதிசேஷன் கோபம் மிக்கவன் என்பதைக் கம்பன் அவன் அம்சமான இலக்குவன் சீற்றம் கொள்ளும்போதெல்லாம் கூறிவருவதை இங்கு நினைவுகூர்க. 'ஆங்காரவாரம் அதுகேட்டு, அழல் உமிழும் பூங்கார் அராவணையான்' என்னும் நான்முகன் திருவந்தாதியாலும் அறியலாம். அசனம் என்ற வடசொல் உணவு என்ற பொருளில் திருப்புகழில் கையாளப்பட்டுள்ளது. 'அசனம் இடுவார்கள் தங்கள் மனைகள் தலைவாசல் நின்று' என்பது திருப்புகழ். ஒருதுன்பம் வந்தபோது, அந்தத்துன்பத்தைத் தவிர்ப்பதற்கும், வந்தபின் அதை நீக்குவதற்கும், உண்ணாவிரதம் இருப்பது தொன்று தொட்டு வரும் ஒரு வழக்கமாகும். இப்பாடல் உயற்வு நவிற்சி அணியின்பாற்படும். பனசன் சினம் மிக்கவன் என்பதைப் பின்னால் கவிஞன் ''மூன்றுகண்ணிலன்ஆயினும், மூன்றுஎயில்எரித்தோன்போன்று நின்றவன்'' என்று கூறப்போவதையும் இங்கு நினைவுகூரலாம்.

Koviloor Digital Library

45. எண்இல் எண்குஇனம் இட்ட கிரிக்குலம்,
உண்ண உண்ணச் சென்று, ஒன்றினோடு ஒன்றுஉற,
சுண்ண நுண்பொடி ஆகித் தொலைந்தன,
புண்ணியம் பொருந்தாத முயற்சி போல். (6801)

(எண்இல்-எண்ணற்ற; எண்குஇனம்-கரடிக்கூட்டங்கள்; இடுதல்-போடுதல்/வீசியெறிதல்; உண்ணுதல்-அழுந்துதல்; உற-தாக்க/பொருந்த/உராய; புண்ணியம்-நல்வினைப்பயன்; நுண்பொடி-தூள்; தொலைதல்-அழிந்தொழிதல்; முயற்சி-காரியம்; சுண்ணம்-சூர்ணம்)

எண்ணிக்கையில் அடங்காத கரடிகளின் கூட்டம் பெயர்த்தெடுத்து வந்து கடலில் வீசியெறிந்த மலைகளின் தொகுதி கடலின்கீழே அழுந்திச் சென்று, ஒன்றோடொன்று மோதித் தாக்குவதால், சூர்ணப்பொடிபோல ஆகி உரு அழிந்து ஒழிந்தன. இது எதைப்போல இருக்கிறது என்றால், ஒருவன் மேற்கொள்ளும் காரியத்திற்கு முயற்சி செய்யும் போது, இன்றியமையாததாக வேண்டிய ஊழ்வினைப்பயன் அவனுக்குத் தக்க சமயத்தில் வந்து உதவாததுபோல்-அவன் முயற்சிக்குரிய பலன் கிடைக்காதது போலத் தோன்றிற்று என்கிறான் கவிஞன்.

உண்ண உண்ண என்ற அடுக்கு தெளிவுப்பொருளது. எந்த ஒரு முயற்சிக்கும் ஊழ்வினைப்பயன் உருத்து வந்து உதவவேண்டும். இல்லையெனில் அந்தக் காரியம் முற்றும் நிறைவேறியதாகாது. ஒன்றைக்கூறி இது மற்றொன்றுபோல் இருப்பது என்று கூறுவது உவமையணியாகும். மலைத்தொகுதிகள் பொடியாகிப் போனதற்கு புண்ணியம் பொருந்தாத முயற்சி பலனளிக்காதது உவமையாகக் கூறப்பட்டது. புண்ணியம் பொருந்தாத முயற்சி சிதறும் என்பது இந்தப்பாடலின் நீதி எனக்கொள்க.

46. ஆர ஆயிர யோசனை ஆழமும்
தீர நீண்டு பரந்த திமிங்கலம்
பார மால்வரை ஏறப் பதைத்து, உடல்
பேரவே, குன்றும் வேலையும் பேர்ந்தவால். (6802)

(ஆர-நிரம்புமாறு; தீர-முற்றும்; ஏற-படிய; பதைத்து-நடுங்கி)

ஆயிர யோசனை ஆழமுள்ள அந்தக்கடல் முழுவதும் நிரம்புமாறு, நீண்டு, பரந்து, அதில் வசித்து வந்த திமிங்கலம் ஒன்று, பாரம் நிறைந்த பெரிய மலை ஒன்று தன்மீது வந்து விழுந்ததும், அதைத் தாங்கிக்கொள்ளப் பொறுக்காமல், நடுக்கமுற்று, தான் சற்று தள்ளி அப்பாற் செல்லவே, விழுந்த மலையும், வெற்றிடமாகப் போய்விட்ட கடலின் இடமும், நிலைகுலைந்து போயின-இடம்விட்டுப் பெயர்ந்தன.

திமிங்கலம் இருந்த இடத்தில் மலை சேர்ந்தது. எனவே அங்கே கிடந்த திமிங்கலமும், அங்கே இருந்த கடல்நீரும் அப்பாற் சென்றுவிட்டன

Koviloor Digital Library

என்பது கருத்து. ஒரு யோசனை என்பது பத்துமைல் என்று கூறுவர். பத்துக்காதம் என்பது ஒரு யோசனை, என்றும் கூறுவதுண்டு.

47. நளன் சேதுவை அமைத்த தன்மை

குலை கொளக்குறி நோக்கிய கொள்கையான்,
சிலைகளை ஒக்க முறித்துச் செறித்து, நேர்
மலைகள் ஒக்க அடுக்கி, மணற்படத்
தலைகள் ஒக்கத் தடவும், தடக்கையால். (6803)

(கொள்கை-கோட்பாடு/தன்மை; நோக்குதல்-சிந்தித்தல்; குறி-இலக்கு/இலட்சியம்; சிலை-மலைக்கற்கள்; ஒக்க-சமமாக/ஒத்திருக்கும் படி: முறித்தல்-உடைத்தல்/பிளத்தல்; செறித்து-நெருக்கி/பொருந்தும் படி; தலைகள்-மேற்பாகம்; தட-பெரிய; தடவுதல்-நிரவுதல்/மட்டம் செய்தல்; குலை-அணை/பாலம்)

தான் கட்டுகின்ற அணை எந்தக்குற்றமும் இல்லாமல் நன்கு அமைய வேண்டும் என்று நன்கு சிந்தித்துச் செயல்படும் தன்மையுள்ளவனான நளன், நீண்ட மலைக்கற்களைத் தனக்கு வேண்டியவண்ணம் உடைத்தும், பிளந்தும், நெருக்கமாகவும் நன்கு பொருந்தும்படியும் அடுக்கினான்; வெளியிலிருந்து பார்ப்பதற்கு அது நேராகத் தோன்றும் வண்ணம் மேடு பள்ளங்கள் இல்லாதவாறு சமமாக அடுக்கினான். அவற்றின் தலைப்பகுதியில் மணலைக்கொண்டு பரப்பி, அவையும் ஏற்றத்தாழ்வு இன்றி சமமாக இருக்கும் வண்ணம் தனது பெரிய கைகளால் நிரவி உயர்வுதாழ்வில்லாது மட்டம் செய்வானாயினான்.

''குலை'' என்ற சொல் நமக்குப் புதிது. அணை அல்லது பாலத்தைக் குறிக்கும் சொல் என்பதறிக. நளன் அணையை எவ்வாறு அழகுபடக் கட்டினான் என்பதைத் தெளிவாகக் காட்டும் பாடல் இது.

48. தழுவி, ஆயிர கோடியர் தாங்கிய
குழுவின் வானரம் தந்த கிரிக்குலம்
எழுவின் நீள்கரத்து ஏற்றிட, இற்று இடை
வழுவி வீழ்வன கால்களின் வாங்குவான். (6804)

(குழு-கூட்டம்; எழு-கணையமரம்/இரும்புக் கம்பங்கள்/தூண்; ஏற்றல்-தாங்குதல்; இற்று-முறிந்து; வழுவி-நழுவி; வாங்குதல்-எடுத்தல்)

ஆயிரம், கோடிக்கணக்கான வானரவீரர்களின் கூட்டம், தம் கால்களிலும், கைகளிலும், வாயிலும் அணைத்துத் தாங்கிக் கொண்டு வந்து கொடுத்த மலைக்கூட்டங்கள் எல்லாவற்றையும் நளன் தனது தூண் போன்ற, இரும்புக்கம்பி போன்று உறுதியான, கணையமரம் போன்ற நீண்ட கைகளால் தாங்கிக்கொள்ளுவான். சில கற்கள் கைகளின்றும்

Koviloor Digital Library

நழுவிக்கீழே வீழ்ந்துவிடும். அவை அவ்வாறு வீழா வண்ணம், தன் வலிய கால்களால் அவற்றைத் தடுத்து, பின் கைகளால் பற்றிக்கொள்வான்.

ஆயிரம் கோடி என்பது மிகுதியைக் குறிக்கும். ''தழுவி, தாங்கி'', என்றதனால் வானரச்சேனைகள் மலைகளைப் பெயர்த்தெடுத்துக் கொண்டு வந்து நளனிடம் கொடுக்கும்வரை மிகவும் சிரமப்பட்டிருக் கின்றன என்பது தெரியவருகிறது. நளனின் பெரிய வலிய கைகளை ''எழுவின் நீள்கரம்'' எனச் சிறப்பித்தார் என்க. அதுபோலவே கால்களின் வாங்குவான், என்பது அவன் கால்களின் வலிமையைக் குறிக்கும் என்க. 'எழு' என்பது கணையமரத்தைக் குறிக்கும். இது மதிலின் குறுக்கே கதவிற்குப் பாதுகாவலாகப் போடப்படும் மரம் எனக்கொள்க.

49. வானரங்கள் மலைகளைச் சுமந்துவரும் காட்சி

மலை சுமந்து வரும் வானரம்,
நிலையில் நின்றன, செல்ல நிலம்பெறா,
அலைநெடுங்கடல் அன்றியும், ஆண்டுத் தம்
தலையின் மேலும் ஓர் சேது தருவ போன்ம். (6805)

(ஆண்டு-அவ்விடம்; சேது-அணை; தருதல்-அமைந்திருத்தல்; போன்ம்-போல)

அணைகட்டுவதற்காகத் தங்களின் தலைமீது மலைகளைச் சுமந்து வரும் வானரங்கள், மேலே செல்ல வழிகிடைக்கப் பெறாமல், ஒரே இடத்தில் வரிசையாக, அசையாமல் நிலைத்து நின்றன. இது எப்படி இருந்தது என்றால், அந்த அலைபொருந்திய நீண்ட கடலில் மட்டும் அணை கட்டப்பெறவில்லை, அங்கே அந்தந்த வானரங்களின் தலை களின் மீதும் நேராக ஒரு அணை அமைந்தது போல் இருந்தது என்கிறான் கவிஞன்.

கவிஞன் தன்னுடைய கருத்தைக் குரங்குகளின் மேல் ஏற்றிக்கூறியதால் இது தற்குறிப்பேற்ற அணியின்பாற்படும்.

50. பருத்த மால்வரை ஏந்திய பல்படை
நிரைத்தலின், சில செல்ல நிலம் பெறா,
கரத்தின் ஏந்திய கார்வரை, கண்அகன்
சிரத்தின் மேற்கொண்டு, நீந்தின சென்றவால். (6806)

(பருத்த-பெரிய; ஏந்திய-தாங்கிய; நிரை-வரிசை; நிரைத்தல்-வரிசையாக நிற்றல்; கார்-பெரிய; கண்அகன்-இடம் அகன்ற)

மிகப்பெரிய, அகன்ற, கரிய மலைகளைக் கைகளில் தாங்கிக் கொண்டு வந்த பலவகைப்பட்ட வானரச்சேனைகள் வரிசையாக நின்றிருந்தன.

Koviloor Digital Library

அவை அவ்வாறே நின்றுகொண்டிருந்ததனால் சில குரங்குகள் செல்லுவதற்கு இடமில்லாதுபோயிற்று. எனவே தங்கள் கைகளில் ஏந்தியிருந்த கரியமலையைத் தங்கள் இடம் அகன்ற தலையின்மீது வைத்துப் பிடித்துக்கொண்டு கடலில் இறங்கி நீந்தியே செல்வனவாயின.

51. ஆய்ந்து நீளம், அரிது சுமந்தன,
ஓய்ந்த கால, பசியின் உலர்ந்தன,
ஏந்து மால்வரை வைத்து, அவற்று ஈண்டுதேன்
மாந்தி மாந்தி, மறந்து துயின்றவால். (6807)

(அரிது-வருந்தி/முயன்று; நீளம்-நெடுந்தூரம்; உலர்தல்-வாடுதல்; ஈண்டுதல்-பெருகுதல்; மாந்துதல்-பருகுதல்)

மிகவும் முயன்று சிரமப்பட்டுத் தான் தூக்கிவந்த மலைகளைக் கொண்டிருந்த வானரங்கள், தாம் இன்னும் செல்லவேண்டிய தூரத்தை ஆராய்ந்து பார்த்ததும், கால்கள் சோர்வடைந்து தளர்ந்துபோயின. பசியினால் உடல் வாடிப்போயின; எனவே உணவருந்தும் பொருட்டு, தாம் தாங்கியிருந்த மலைகளைக் கீழே வைத்துவிட்டு, அந்த மலைகளின் மீதிருந்த மரங்களில் இருந்த தேனைக் குடித்துக்குடித்து, மெய்மறந்து மயங்கி, தாம் வந்தசெயலையும் மறந்து, உறக்கம் கொள்வனவாயின.

ஒரு சந்தனமரம் அதில் மிளகுக்கொடி படர்ந்திருக்கிறது. குரங்குக்குச் சந்தனமரத்தில் ஏறவேண்டும் என்பது விருப்பம். ஏறிற்று. ஆனால் பக்கத்தில் இருந்த பாறையில் இருந்த மரத்தில் தேன் மிகுந்து காணப் பட்டது. ஆசைவந்து, தான் வந்த சந்தனமரத்தில் ஏறுவதை விட்டு விட்டு, பாறையிலிருந்த மரத்திலிருந்த தேனைச் சுவைத்துக் குடித்து அதிலேயே மயங்கி உறங்கிப்போய்விட்டது. இது கபிலர் காட்டும் ஒரு அகநானூற்றுக் காட்சி. இந்தக் காட்சியை இங்கு நினைவுகூர்வது தகும்.

52. போதல் செய்குநரும், புகுவார்களும்,
மாதிரம் தொறும் வானர வீரர்கள்,
"சேது எத்துணைச் சென்றது?" என்பார் சிலர்;
"பாதி சென்றது" எனப்பகர்வார் சிலர். (6808)

(மாதிரம்-திசைகள்; சேது-அணை)

திசைகள் எல்லாவற்றிலும் பரவியிருக்கிற வானரவீரர்களுள், மலையைக் கொண்டுவந்து தந்துவிட்டுத் திரும்பவும் மலையைக் கொண்டுவரப் போகிறவர்களைநோக்கி, இப்பொழுது எதிரேமலையைக்கொண்டு வந்து கொண்டு கடலினிடத்து நுழைபவர்கள் 'அணை எவ்வளவு தூரம் கட்டப்பட்டிருக்கிறது?' எனக் கேட்பார்கள். அதற்குச் சில வானரர்கள் 'பாதி அளவு முடிந்திருக்கிறது' என்று பதில் கூறுவார்கள்.

Koviloor Digital Library

53. கடலில் நிகழ்ந்த மாற்றங்கள்

குறைவுஇல் குங்குமமும், குகைத் தேன்களும்,
நிறை மலர்க்குலமும், நிறைந்து எங்கணும்
துறைதொறும் கிரிதூக்கின தோய்தலால்,
நறை நெடுங்கடல் ஒத்தது, நாமநீர். (6809)

(குறைவுஇல்-நிறைந்த; குலம்-கூட்டம்; தோய்தல்-படிதல்; நாம்-நாமம்/அச்சம்; நறை-தேன்)

வானரங்கள் தூக்கிக்கொண்டு வந்த மலைகளில் பொருந்தியிருந்த நிறைந்த, குங்குமமரங்களும், குகைகளில் பொருந்தியிருந்த சுவையுள்ள தேன்களும், நிறைந்த மணம் பரப்பும் மலர்க்கூட்டங்களும், கடலெங்கும் நிறைந்து காணப்படுவதால் அச்சத்தை விளைவிக்கக் கூடிய உப்புத் தன்மை கொண்ட உவர்க் கடல் இப்போது தேன் நிறமாகி நீண்டதேன் கடலாக மாறிப்போனது.

''பேம், நாம், உரும் என வரூ உங்கிளவி ஆமுறை மூன்றும் அச்சப் பொருள'' என்பது தொல்காப்பியம். நாம் என்பது நாமம் எனத் திரிந்தது எனக்கொள்க.

54. நெடும்பல் மால்வரை தூர்த்து நெருக்கவும்,
துடும்பல் வேலை துளங்கியது இல்லையால்;
இடும்பை எத்தனையும் படுத்து எய்தினும்,
குடும்பம் தாங்கும் குடிப் பிறந்தாரினே. (6810)

(இடும்பை-துன்பங்கள்; தாங்குதல்-பாதுகாத்தல்; குடி-உயர்குலம்; துடும்பல்-கொந்தளித்தல்/ததும்புதல்/அசைதல்; வேலை-கடல்; துளங்குதல்-கலங்குதல்; படுத்தல்-தடுத்தல்)

துன்பங்கள் அடுக்கடுக்காய் எத்தனை வந்து துன்புறுத்தினாலும், அதைத் தாங்கிக்கொண்டு தம்மைச் சார்ந்த குடும்பத்தை சிறுதும் தளராது ஆதரித்துப் பாதுகாக்கும் நற்குடிப் பிறந்தவர்கள்போல, தன்மீது எத்தனை பெரிய நீண்ட, கரிய மலைகளைக் கொண்டுவந்து நிரப்பினாலும், ததும்பிக் கொந்தளித்துப் பேரொலி செய்யும் இயல்புடைய கடல், சிறிதும் கலங்காது நிலைத்து நின்றது.

துளும்பல் என்றால் தளும்புதல் என்பது நமக்குத் தெரியும். இங்கே அது எதுகைநோக்கித் துடும்பல் என்று வந்தது. சூளாமணி என்பதைச் சூடாமணி என்று கூறுவதைப்போல எனக்கொள்க. நற்குடிப்பிறந்தார்-உபமானம்; துளும்பல் வேலை-உபமேயம். இது உவமையணியின் பாற்பட்டதாகும். ''இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக் குற்றம் மறைப்பான் உடம்பு'' என்பது குறள்-1029. 'எவ்வழி உழந்தக்

Koviloor Digital Library

கடைத்தும், குடிப்பிறந்தார் செய்வர் செயற்பாலவை' என்பது நாலடியார். 'உடுக்கை உலறி, உடம் பழிந்தக் கண்ணும், குடிப்பிறப்பாளர், தம் கொள்கையில் குன்றார்' என்பதும் நாலடியார்.

55. கொழுந்துடைப் பவளக் கொடியின் குலம்,
அழுந்த உய்த்த அடுக்கல் தகர்ந்து, அயல்
விழுந்த பல்மணியின் ஒளி, மீமிசை
எழுந்த எங்கணும், இந்திர வில்லினே. (6811)

(குலம்-கூட்டம்; அடுக்கல்-மலைகள்; தகர்ந்து-சிதறி; அயல்-பக்கம்; மீமிசை-மேலிடம்; எழுந்த-தோன்றின; உய்த்த-வீசியெறியப்பட்ட)

கொழுந்து ஓடிப்படரும் தன்மையுள்ள பவளக்கொடியின் கூட்டம், கடலில் வீசியெறிந்த மலைகளினின்றும், கடலின் உள்ளே அழுந்திப் போவதால், அம்மலை உடைபட்டு, அதனின்றும் சிதறிய அந்தப் பவளத்தின் பலவிதமான ஒளிக்கற்றைகள், மிக்கமேலிடமான வானத்தில் தோன்றும் இந்திரவில்லினைப் போல எல்லா இடத்திலும் ஒளிவீசித் தோன்றின.

வானவில்லின் பல நிறங்களைப் போல, பல இரத்தினங்களின் ஒளிக்கற்றைகள் ஒளிவீசின என்பதாம்.

56. பழுமரம் பறிக்க, பறவைக்குலம்,
தழுவி நின்று ஒருவன் தனித்தாங்குவான்;
விழுதலும், புகல் வேற்றிடம் இன்மையால்,
அழுது அரற்றும் கிளையென, ஆனவால். (6812)

(பழுமரம்-ஆலமரம்; ஒருவன்-ஒப்பற்றவன்/குடும்பத் தலைவன்; விழுதல்-இறத்தல்; புகல்-அடைக்கலம்; கிளை-சுற்றத்தார்)

வானரச்சேனைகள் ஆலமரத்தையும் வேரோடு பெயர்த்தெடுத்தன. அதில் வாழ்ந்திருந்த பறவைக்கூட்டம் எல்லாம், தம்மைத் தழுவி ஆதரித்துப் பாதுகாத்து வந்த ஒப்பற்ற தமது குடும்பத்தலைவன் ஒருவன் இறந்துபோன உடனே தமக்கு வேறு புகலிடம் ஏதும் இல்லாததால் கண்ணீர்விட்டு அழுது புலம்புகின்ற நெருங்கிய சுற்றத்தாரைப் போல ஆயின.

பழுமரம் இங்கே ஆலமரத்தைக் குறிக்கும். பழுத்த மரம் என்று கொண்டு பறவைகள் தங்கள் உறைவிடமாகக் கொண்டு வாழ்ந்திருந்த வேர்ஊன்றிய மரம் என்ற விரிவான பொருளும் பொருந்தும். அழுது அரற்றுகின்ற சுற்றத்தார்க்குப் பறவைக்குலம் உவமை. பாடலில் உவமையணி பயின்று வந்துள்ளது.

Koviloor Digital Library

57. 'தரவலோம் மலர்' என்று உயிர்தாங்கிய
மரம் எலாம் கடல் வீழ்தலும், வண்டு எலாம்,
கரவு இலாளர் விழ, களைகண் இலா
இரவலாளரின், எங்கும் இரிந்தவால். (6813)

(வலோம்-வல்லோம்; கரவு-கரத்தல்/ஒளித்தல்/மறைத்தல்; விழ-இறக்க; களைகண்-பற்றுக்கோடு/ஆதரவு; இரவலாளர்-யாசிப்பவர்; இரிதல்-ஓடுதல்)

''எங்களிடம் உள்ள மலரில் உள்ள தேன் முழுவதையும் உங்களுக்குத் தருவோம்'' என்று, வண்டுகளைப் போற்றிப் பாதுகாத்து வந்த மரங்கள் எல்லாம், இப்போது மலையோடு அகழ்ந்தெடுக்கப்பட்டு, கடலில் வீழ்ந்து விட்டதால், அம்மரங்களில் வாழ்ந்திருந்த வண்டுகள் எல்லாம், தன்னிடம் உள்ளதை ஒளிக்காது, மறைக்காது உவந்தளிக்கும் வள்ளல் ஒருவன் இறந்துவிட்டால் யாசிப்பவர்கள் எல்லாம் எப்படி எந்தப் பற்றுக் கோடும் இல்லாது நிலைதடுமாறுவார்களோ, அதுபோல இவ்வண்டு களும் தனக்கு வரையாது வழங்கிவந்த மரங்கள் கடலில் விழுந்து அழிந்ததும், தங்களுக்கு ஒரு பற்றுக்கோடும் இனிக்கிடையாது என்று எண்ணி, நிலைதடுமாறி ஓடலாயின.

வண்டுகளுக்கு வேண்டுமளவு தேன் கொடுத்துக் காப்பாற்றிய மரங்களை 'உயிர்தாங்கிய மரம்' எனச் சிறப்பித்தார். தம்மிடம் உள்ள செல்வத்தை ஒளிக்காது மறைக்காது வாரி வழங்கும் வள்ளல்கள் 'கரவி லாளர்' எனப்பட்டனர். இவர்களை வள்ளுவன் ''கரப்பிலர்'' என்றும், ''கரத்தல் கனவிலும் தேற்றாதார்'' என்றும் உயர்த்திப் பேசுவதும் காண்க.

58. தொக்கு அடங்கல ஓடும் துவலைகள்
மிக்கு அடங்கலும் போவன, மீன்குலம்,
அக்கருங்கடல் தூர, அயற்கடல்
புக்கு அடங்கிப்போவன போன்றவே! (6814)

(தொக்கு-தொகுக்கப்பட்டு; துவலை-திவலை/நீர்த்துளி; அடங்கலும்-முழுவதும்; தூர-நிரம்ப)

மலைகள் வீசி எறியப்பட்டதால் கடல் தூர்ந்துபோனதால், அங்கு வாழ்வதற்கு இடமின்றி கடலுக்கு அடங்காமல் ஓடுகின்ற நீர்த்திவலை களின் தொகுதியாகவும் அந்தக் கடலிலுள்ள மீன்கூட்டங்கள் மொத்தமும், வேறுகடலில் சென்று, அங்கேயே புகுந்து அடங்கிப்போய் வாழ்வதற்குச் செல்லுவன போன்று தோன்றியது

மலைகள் வீசியெறியப்பட்டதால் கடல் தூர்ந்துபோனது. நீரில்லாக் கடலில் மீன்கூட்டங்கள் எவ்வாறு வாழும்? எனவே அவை வேறொரு கடலை நோக்கிச் செல்லலுற்றன. இந்த மீன்கூட்டங்கள் போவதைப்

Koviloor Digital Library

போலவே, கடலிலிருந்து வெளியேற்றப்பட்ட நீர்த்திவலைகளும், வேறொரு கடலுக்குச் செல்லுவதுபோலத் தோற்றமளித்தது என்பதாம். கவிஞன் தன் குறிப்பைக் கடல்திவலைகள் மீது ஏற்றிக் கூறுவதால் இது தற்குறிப்பேற்ற அணியின்பாற்படும்.

59. மூசுவண்டு இனம், மும்மத மாவின்பின்
ஆசை கொண்டன போல் தொடர்ந்து ஆடிய,
ஓசை ஒண்கடல் குன்றொடு அவைபுக,
வேசை மங்கையராம் என, மீண்டவே. (6815)

(மா-யானை; ஆடுதல்-சுற்றுதல்; மூசு-மொய்க்கின்ற/நெருங்கிய; ஒண்-ஒள்ளிய/அழகிய; புகுதல்-விழுதல்; வேசையர்-பரத்தையர்/விலைமகளிர்/பொருட்பெண்டிர்; மீண்டன-நீங்கின).

எப்பொழுதும் மலர்களையே மொய்த்துக் கொண்டிருக்கும் வண்டினங்கள், மூன்று மதங்களைப்பொழியும். யானைகளின் மீது தீராத ஆசைகொண்டிருப்பதுபோல் அதனையே தொடர்ந்து சுற்றிச் சுற்றிவந்து கொண்டிருந்தன. வானரச்சேனைகள் அந்த யானைகளையும் மலையோடு சேர்த்து ஒலிமிகுந்த அழகிய கடலில் வீசியெறிந்ததால், இனிமேல் அவற்றினிடம் ஆசை கொள்வதில் பயனில்லை என்று நீங்கிப் பிரிந்து சென்றுவிட்டன. இது எதைப்போல இருக்கிறது என்றால், பொருட் பெண்டிர் அன்பு காரணமாகவன்றி, பொருளின் பொருட்டே ஆடவருடன் சேர்ந்து களித்திருப்பது போலவும், அவனிடம் பொருள் வற்றித் தீர்ந்ததும், அவனை விட்டு விட்டுச் செல்லுவது போலவும் இருந்தது என்கிறான் கவிஞன்.

யானையின் மும்மதங்கள் கன்னமலம், கபோதமலம், பீஜமதம் என்பன. யானைகள் மதநீர் நறுமணம் உடையன. எனவே வண்டுகள் அதை மிக விரும்பி மொய்க்கும் இயல்பின. என்பது முன்னரும் நாம் கண்டதே. இப்பாடல் உவமையணியின்பாற்படும். ''நறுந்தாது உண்டு, நயன்இல் காலை, வறும் பூத்துறக்கும் வண்டு போல்குவம்'' என்று வேசையர் தங்கள் குணம் பற்றிக்கூறுகின்ற, மணிமேகலையில் வரும் இந்தப்பகுதியும் ஒப்புநோக்கத்தகும். யானையை ''ஒரு கோட்டன், இருசெவியன், மும்மதத்தன்'' என்கிறது சிவஞானபோதம். கோட்டம்-கோடு/தந்தம். ''புணர் மருப்புயானையின் புயல்கொள் மும்மதம், மணமகள் கதுப்பென நாறும்'' என்பது சீவகசிந்தாமணி. கதுப்பு-கன்னம்; நாறும்-மணம் கமழும்; வேசையர்களை. ''வண்டின் துறக்கும் கொண்டி மகளிர்'' என்கிறது மணிமேகலை.

Koviloor Digital Library

60. நிலம் அரங்கிய வேரொடு நேர் பறித்து,
அலமரும் துயர் எய்திய ஆயினும்,
வல மரங்களை விட்டில, மாசு இலாக்
குல மடந்தையர் என்ன, கொடிகளே. (6816)

(அரங்கிய-அழுந்திய/ஊன்றிய; அலமருதல்-சுழல்தல்/கலங்குதல்; மாசு-குற்றம்; வலம்-சுற்றுதல்)

வானரச்சேனைகள் நிலத்தோடு ஊன்றியிருந்த மரங்களை வேரோடு பறித்துக் கடலில் எறிந்தன. அப்போது அந்த மரத்தைச் சுற்றியிருந்த கொடிகளும் நிலைகலங்கித்தான் போயின. எனினும் தாம் சுற்றியிருந்த மரங்களை அந்த நேரத்திலும் விட்டு அகலாது, அவற்றுடனே தாமும் கடலில் போய் அழுந்தி விழுந்தன. இது எப்படி இருக்கிறது என்றால், குற்றமற்ற நற்குடியில் பிறந்த கற்புடைய நங்கையர் தம் கணவனை ஒருபோதும் கைவிடாதவர்களாக, வாழ்விலும் தாழ்விலும் அவர்களுடனேயே சேர்ந்து இன்பத்தையும் துன்பத்தையும் அனுபவிக்கும் நற்குல மகளிரைப் போன்றிருக்கிறது என்கிறான் கவிஞன்.

''அரங்குதல்'' என்பது நன்றாக அழுந்திய, ஊன்றிய என்று பொருள் படும். இப்பாடல் உவமையணியின்பாற்படும். குலமடந்தையர்க்குக் கொடிகள் ஒப்பு. முன்பாடலில் விலைமகளிரின் தன்மையைச் சொன்ன கவிஞன், இந்தப் பாடலில் குலமடந்தையர் தன்மைபற்றிக் கூறி, இருவருக்கும் உள்ள வேறுபாட்டினைத் தெளிவாக விளக்கியது உணர்க. ''அன்பறச்சூழாதே, ஆற்றிடை நும்மோடு, துன்பம் துணையாக நாடின், அதுவல்லது இன்பமும் உண்டோ எமக்கு?'' என்பது கலித்தொகை. ''நின்னினும் சுடுமோ பெருங்காடு?'' என்று சீதாதேவி கூறியதும் இங்கு ஒப்புநோக்கத்தகும். ''அலமரல், தெருமரல் ஆயிரண்டும் சுழற்சி'' என்பது தொல்காப்பியம். ''சிலமந்தி, அலமந்து, மரமேறி, முகில் பார்க்கும் திருவையாறே'' என்பது தேவாரம்.

61. துப்பு உறக்கடல் தூய துவலையால்,
அப்புறக் கடலும் சுவை அற்றன;
எப்புறத்து உரும் ஏறும் குளிர்ந்தன;
உப்பு உறைத்தன மேகம் உகுத்த நீர். (6817)

(துப்பு-வலிமை; தூய-தூவிய/சிதறிய; துவலை-திவலை/நீர்த்துளி; அப்புறக்கடல்-பெரும்புறக்கடல்; சுவை-நன்னீர்த்தன்மை; அறுதல்-கெடுதல்; உரும்ஏறு-பேரிடிகள்; உகுத்தல்-பொழிதல்; உறைத்தல்-உறுதல்/அடைதல்)

வானரச்சேனைகள் மலைகளைக் கடலில் இட்டு நிரப்புவதால், அந்த வலிமைமிகுந்தகடல்வெளிப்படுத்தியநீர்த்திவலைகளால்அண்டத்திற்கு

Koviloor Digital Library

அப்பாலுள்ள பெரும்புறக் கடலில் உள்ள நன்னீரும் சுவையற்று, நன்னீர்த் தன்மையை இழந்தன; எல்லாப்பக்கங்களிலும் இருந்து எழும் வெப்பம் மிக்க பேரிடிகள், தண்மைபெற்றுக் குளிர்ச்சியடைந்தன. மேகங்கள் பொழிந்த மழைநீர் கூட உப்புக்கரித்தன.

கடலில் இட்டபோது எழுந்த நீர்த்திவலைகளால் ஏற்பட்ட மூன்று மாற்றங்களைக் கூறுகிறார். ஒன்று பெரும்புறக்கடலின் நன்னீர் தன் இயற்கையான சுவையை இழந்தது. இரண்டு வெப்பம் மிகுந்த பேரிடிகள் குளுமைகொண்டன; மூன்று மழைநீர் உப்புக் கரித்தது என்பனவாம். இது உயர்வுநவிற்சியின்பாற்படும். பெரும்புறக்கடல் என்பது, உலகத்தை வளைத்துச் சூழ்ந்துள்ள நன்னீர்க் கடல் என்க.

62. முதிர் நெடுங்கிரி விழ, முழங்கு நீர்
எதிர் எழுந்து நிரந்தரம் எய்தலால்,
மதியவன் கதிரின் குளிர் வாய்ந்தன;
கதிரவன் கனல் வெங்கதிர்க் கற்றையே. (6818)

(முழங்குதல்-ஒலித்தல்; நிரந்தரம்-எப்பொழுதும்; கதிரவன்-சூரியன்; மதியவன்-சந்திரன்; கற்றை-தொகுதி; கதிர்-கிரணங்கள்; எதிர்-மேற் புறமாக)

வானரச்சேனைகள் நன்கு முதிர்ச்சிபெற்ற நீண்ட மலைகளைக் கடலில் வீசியெறிவதால், அவற்றினால் பேரொலியுடன் மேலே பொங்கிஎழும் நீர்த்திவலைகள், இடைவிடாது ஆகாயத்தின்மீது சென்றடைவதால், வானிலுள்ள சூரியனின் வெப்பம் மிகுந்த நெருப்புப் போன்ற கிரணங் களின் தொகுதி, சந்திரனுடைய கிரணங்களைப் போலக் குளிர்ந்த தன்மையயடைந்தன.

''முதிர் நெடுங்கிரி'' என்பது மலைகளுக்கு வளர்ச்சியும், தேய்வும் உண்டு என்று நிலவியல் நூல்வல்லார் கூறுவதை உறுதிப்படுத்துகிறது என்க. இது தொடர்பு உயர்வு நவிற்சியணியின்பாற்படும். சூரியனுடைய வெப்பக்கதிர்கள், சந்திரனுடைய குளிர்ந்த கதிர்கள் போலாயின என்பது உயர்வு நவிற்சியணி.

63. நன்கு ஒடித்து, நறுங்கிரி சிந்திய
பொன் கொடித்துவலை பொதிந்து ஓடுவ,
வன் கொடிப் பவளங்கள் வயங்கலால்,
மின் பொடித்தது போன்றன விண்எலாம். (6819)

(நறும்-நறுமணம்; ஒடித்து-பெயர்க்கப்பட்டு; சிந்துதல்-சிதறுதல்; பொதிந்து-மறைக்கப்பட்டு; ஓடுவ-மேலே செல்லுகின்ற; வயங்குதல்-விளங்குதல்; பொடித்தல்-தோற்றுவித்தல்; கொடி-ஒழுங்கு)

Koviloor Digital Library

வானரச்சேனைகள் நறுமணமுள்ள மலைகளை நன்றாகப் பெயர்த்துக் கொண்டு வந்து கடலில் போடும்போது, அதனின்றும் சிதறிய பொன் துகள்களின் ஒழுங்கு, நீர்த்திவலைகளை மறைத்துக் கொண்டு மேலே செல்வதால், அந்த வலிய பவளக்கொடிகள் விளங்கித்தோன்றுவதால், ஆகாயமெல்லாம், மின்னல் தோன்றுவதுபோன்று ஒளிமிகுந்து தோன்றியது.

'ஒடித்து' என்ற சாதாரணச்சொல், பெயர்த்தெடுத்து என்ற பெரும் பொருளைக் குறிக்கும். அவ்வளவு எளிதாக வானரங்கள் மலைகளைப் பெயர்த்தெடுத்தன என்பது பொருள். மலைகளில் நறுமணம் கமழும் ஏலம், கிராம்பு, போன்ற மலைபடுபொருள்கள் மிக்கு விளைவதால் அவற்றின் மணம் மலைகளின்மீதும் கமழும் என்பதால் 'நறுங்கிரி' என்றார் என்க. பவளக்கொடிகளுக்கு மின்னல் உவமை. தற்குறிப்பேற்ற அணி - உவமையணி என்றும் கூடக் கூறலாம்.

64. ஓடும் ஓட்டரின், ஒன்றின் முன் ஒன்றுபோய்,
காடும் நாடும், மரங்களும் கற்களும்
நாடும்; நாட்டும்; நளிர்கடல் நாட்டில், ஓர்,
பூடும் ஆட்டல் இலாய, இப்பூமியில். (6820)

(ஓடுதல்-விரைந்துசெல்லுதல்; ஓட்டர்-தூதர்/ஒட்டக்காரர்; காடு-முல்லைநிலம்; நாடு-மருதநிலம்; கற்கள்-மலைகள்; நாடுதல்-தேடுதல்; நாட்டுதல்-நிலைநிறுத்துதல்; நளிர்-குளிர்ந்தகடல்; நாடு-நெய்தல் நிலம்; பூடு-பூண்டு; ஆட்டல் இல் ஆய-காணப்படாதது ஆயிற்று/விளங்குதல்; இலாய-இல்ஆய/இல்லை ஆயின)

விரைந்து ஓடும் ஓட்டக்காரர்போல, வானரச்சேனைகள் ஒன்றை யொன்று முந்திக்கொண்டு போட்டி போட்டுக்கொண்டுபோய், முல்லை நிலமாகிய காட்டுப் பகுதியிலும், மருத நிலமாகிய நாட்டுப் பகுதியிலும் இருந்த மரங்களையும், மலைகளையும் தேடிக்கண்டு, பிடித்துப் பெயர்த்து எடுத்துக்கொண்டு வந்து குளிர்ச்சி மிகுந்த மருத நிலமாகிய கடலில் போட்டு நிலைநிறுத்திவிடும். எனவே இந்தப் பூமி எல்லாஇடத்திலும் ஒரு புல்பூண்டு கூட இல்லாதவண்ணம் ஆகிப்போனது.

'ஓட்டர்' என்ற சொல்லாட்சி நோக்குக. ஓடுபவர்களை ஓட்டர்கள் என்கிறார். 'இளங்கால்தூதன்' என்ற சொல்லுக்கு அடியார்க்கு நல்லார் தன் சிலப்பதிகார உரையில் ஓட்டன் என்ற பொருளைக் கூறுகிறார் என்பதும் கருதத்தக்கது. முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நிலங்கள் தங்களுக்குள் மயங்கி மாறுபட்டன என்பதாம். 'பூடு' என்பது பூண்டைக் குறிக்கும். 'இலாய' என்ற சொல் இல்+ஆய என்று பிரிந்து, இல்லை ஆயின என்ற பொருளைத்தரும்.

Koviloor Digital Library

65. வரைப் பரப்பும், வனப் பரப்பும், உவர்
தரைப் பரப்புவது என்ன, தனித்தனி
உரைப் பரப்பும் உறுகிரி ஒண்கவி;
கரைப் பரப்பும் கடற்பரப்பு ஆனதால். (6821)

(ஒண்-விளக்கமுற்ற/மிகுதியான; கவி-குரங்குகள்/வானரங்கள்; வரை-மலை; பரப்பு-இடம்; வனம்-காடு; உவர்த்தரை-உப்புநிறைந்த நிலம்/கடல்பகுதி/நெய்தல்நிலம்; உரை-புகழ்; உறு-மிக்க)

மலையிடங்களையும், காட்டு இடங்களையும், உவர்ப்பு நிறைந்த கடற் பகுதியாக ஆக்கிவிடுவதென்று, ஒவ்வொரு வானரமும் தனித் தனியாக புகழ்பரப்பிக் கொண்டு, மிக்க மலைகளை ஒளிமிகுந்த வானரங்கள் கடலில் கொண்டுவந்து எறிவதனால் கடல்நீர், கரைகளில் பாய, அந்தக் கடற்கரையான நிலப்பரப்புக்கூட, நீர்நிறைந்த கடல் பரப்பாக மாறியது.

இந்தப் பாடல் கூறியது கூறல் என்ற குற்றத்தாலும், கம்பனின் சந்தமோ, வேறு வகையான நற்பொருளோ அமையாததாலும் இதனை எல்லாச் சுவடிகளும் மிகைப்பாடல் என்றே குறித்திருக்கின்றன. எனினும் சென்னைக் கம்பன் கழகப் பதிப்பில் இப்பாடல் இடம் பெறுவதால், இதற்குச் சற்றேக்குறைய சரியான உரையே வழங்கப்பெற்றிருக்கிறது. இதை மிகைப்பாடல் எனக்கொள்வதே பொருந்தும். ஒவ்வொரு சுவடியிலும் பாடவேறுபாடுகளும் அதிகமாகக் காணப்படுகின்றன.

66. அணைகட்டி முடித்த வானரர் ஆர்ப்பரித்தல்

உற்றதால் அணை ஓங்கல் இலங்கையை
முற்ற மூன்று பகலிடை; முற்றவும்
பெற்ற ஆர்ப்பு விசும்பு பிளந்ததால்;
மற்று இவ்வானம் பிறிது ஒரு வான்கொலோ? (6822)

(ஓங்கல்-மலை/திரிகூடமலை; உற்றது-பொருந்தியது/-அடைந்து; பகல்-நாள்; விசும்பு-ஆகாயம்; வான்-வானம்; பெற்ற-விளைத்த/செய்த)

இந்த அணை திரிகூடமலையில் அமைந்துள்ள இலங்கையைச் சென்று பொருந்துவதற்கு மூன்று நாட்கள் ஆயிற்று. இவ்வாறு மூன்று நாட்களில் அணைகட்டி முடித்ததும், வானரச்சேனைகள் எழுப்பிய பேராரவாரம், விண்ணையே இரண்டுபடச் செய்தது என்றால் இப்பொழுது ஒன்றாய்த் தெரிகின்ற வானம், வேறொரு அண்டத்திலிருந்து புதிதாக வந்ததோ? என்று வியக்கிறான் கவிஞன்.

இது கவிக்கூற்று. இதனால் அணைகட்டி முடிக்க மூன்றுநாட்கள் ஆயிற்று என்பது தெரியவருகிறது. எனினும் வான்மீகி ஐந்து நாட்களில் அணைகட்டி முடிக்கப்பெற்றது என்கிறார். வானரச்சேனையின் மிகுதியை

Koviloor Digital Library

யும், அவற்றின் ஆற்றலையும் சிறப்பிக்க இவ்வாறு கூறியிருத்தல் கூடும். மேலும் வான்மீகி இவ்வணையின் நீளம் 100யோசனை என்றும் அகலம் 10யோசனை என்றும் வரையறுத்துக் கூறுகிறார். 'கொலொ?' என்பது ஐயப்பொருளில் வந்தது. ''கொல்லே ஐயம், அசைநிலைக் கூற்றே'' என்பது தொல்காப்பியம்.

67. அணையின் தோற்றம்.

நாடுகின்றது என் வேறு ஒன்று? நாயகன்,
தோடு சேர் குழலாள் துயர் நீக்குவான்,
'ஓடும் என் முதுகிட்டு' என, ஓங்கிய
சேடன் என்னப் பொலிந்தது, சேதுவே! (6823)

(நாயகன்-தலைவன்/இராமபிரான்; தோடு-பூவிதழ்; குழல்-கூந்தல்; நீக்குவான்-நீக்கும்பொருட்டு; ஓங்கிய-உயர்ந்த; சேடன்-ஆதிசேஷன்; சேது-அணை)

''உலக உயிரினங்களுக்கெல்லாம் தலைவனான இராமபிரானின், துணைவியாகிய பூவிதழ்கள் பொருந்திய கூந்தலையுடைய சீதாதேவியின் துன்பத்தைத் துடைப்பதற்காக, நீங்கள் ஏன் வேறுஒரு வழியினைப் பற்றிச் சிந்திக்கிறீர்கள்? அவனைவிட்டுச் சிறிதும் அகலாத ஏவலாளாக நான் இருக்கிறேன், என்முதுகில் கால் பதித்து எல்லோரும் இக்கடலைக் கடந்து இலங்கைக்கு விரைந்துசெல்லுங்கள்'' என்று திருமாலின் பள்ளியணை யாகிய ஆதிசேஷன், தன் முதுகை நிமிர்த்தி உயர்ந்து பரவியிருப்பதைப் போல் அந்த அணை இப்பொழுது தோற்றமுற்றுப் பொலிந்தது.

ஆதிசேஷன் திருமாலுக்கு எவ்வெவ்வகையில் உதவுகிறான் என்பதைக் கேளுங்கள். ''சென்றால் குடையாம்; இருந்தால் சிங்காதனமாம்; நின்றால் மரவடியாம்; நீள்கடலுள் என்றும் புணையாம்; மணிவிளக்காம்; பூம்பட்டாம்; புல்கும் அணையாம்; திருமாலுக்கு அரவு'' என்பது முதல் திருவந்தாதி.

68. மெய்யின் ஈட்டத்து இலங்கைஆம் மென்மகள்,
பொய்யன் ஈட்டிய தீமை பொறுக்கலாது,
ஐயன் ஈட்டிய சேனைகண்டு, அன்பினால்,
கையை நீட்டிய தன்மையும் காட்டுமால். (6824)

(மெய்-வாய்மை/உண்மை; ஈட்டம்-செல்வம்; மகள்-பெண்; ஈட்டிய-சம்பாதித்த/பெற்ற; ஐயன்-இராமபிரான்/தலைவன்; பொய்யன்-வஞ்சகன்)

உண்மை-மெய்ம்மை என்ற பெருஞ்செல்வத்தைத் தன்னகத்தே கொண்டுள்ள இலங்கை என்னும் மென்மைத் தன்மை வாய்ந்த பெண்,

Koviloor Digital Library

இலங்கைக்கு அரசனாகிய அரக்கனும், வஞ்சகனுமாகிய இராவணன் இராமபிரானுக்குச் செய்த தீங்கினைப் பொறுக்கமாட்டாது தலைவனான இராமபிரான் மிகுதியாகத் திரட்டிக்கொண்டு வந்த வானரச்சேனைகளைக் கண்டு, அவன்மீது அன்பும்பாசமும்கொண்டு, தன்இருகைகளையும்நீட்டி, என்னிடம் விரைவில் வா என்று அழைப்பதுபோலவும் இருந்தது அந்த அணையின் தோற்றம்.

முதல் அடியில் இலங்கை மாநகரத்தை, ''மெய்யின் ஈட்டம்'' என்றும், ''மென்மகள்'' என்றும் இலங்கையைப் பாராட்டிய கவிஞன், அடுத்த அடியிலேயே, அந்த இலங்கை மாநகரத்து அரசனாகிய இராவணனைப் 'பொய்யன்' என்றும், அவன்செயல் 'தீமை' என்றும் சாடியிருக்கும் நயம் உணர்க. நாடு, நகரம், ஆறு, முதலியவற்றைப் பெண்ணாக உருவகிப்பது கவிமரபு. எனவே ''இலங்கை மென்மகள்'' என்றார் என்க. ''ஈட்டம்'' என்பது செல்வத்தைக் குறிக்கும். ஈட்டப்படுவது ஈட்டம். பொருள், புகழ், கல்வி எல்லாவற்றையும் குறிக்கும். பொதுவாக ஒருவரை அன்புடன் அழைக்கும்போது இருகைகளையும் நீட்டி அழைப்பதுபோன்று இங்கும் இலங்கை என்னும் பெண் இராமபிரானைத் தன் கைகளை நீட்டி அழைத்தாள் எனக்கொள்க. இராவணன் பொய்யன் என்பதைத் தேவாரம் கூறுகிறது கேளுங்கள். ''மெய்சொல்லா இராவணனை மேலோடி, ஈடழித்துப் பொய்சொல்லாது உயிர்போனான் புள்ளிருக்கு வேளூரே'' என்பது தேவாரம். சடாயுவின் புகழ்பாடும் ஒரு அருமையான தேவாரப் பாடல் இது.

இங்கேஇலங்கைநகரம்எனும்பெண்தன்கையைநீட்டிஇராமபிரானை வாவென்று வரவேற்றது, முன்பு மிதிலையின் மதிலில் படர்ந்திருந்த கொடிகள் ஐயனை ஒல்லையில் வா என அழைத்தது. சிலப்பதிகாரத்தில் கோவலனையும் கண்ணகியையும் மதுரை நகரமாடங்கள் வரவேற்றன என்பதை ஒருசேர ஒப்பிட்டு நோக்குவது இலக்கிய இன்பம் பயக்கும்.

69. கானயாறு பரந்த கருங்கடல்
ஞான நாயகன் சேனை நடத்தலால்,
'ஏனை யாறு, இனி யான்அலது ஆர்?' எனா,
வானயாறு, இம்பர் வந்தது மானுமால். (6825)

(வானயாறு-வானஆறு/அகாயகங்கை; கானயாறு-காட்டாறுகள்; ஏனை-மற்றைய; இம்பர்-நிலவுலகம்/இவ்வுலகம்; மானும்-ஒக்கும்; ஆறு-நதி/வழி)

காட்டாறுகள் பலவும் வந்து கலக்கின்ற இந்தக் கடலை, ஞானமே வடிவான இராமபிரான் தன்னுடைய வானரச்சேனைகளுடன் கடக்க வேண்டியிருப்பதால், அவனுக்குத் தகுதியுள்ள என்னைத் தவிர, வேறு ஆறுகள் என்ன உதவி செய்துவிட முடியும்? என்று கருதி, வானத்தில் ஓடும்

Koviloor Digital Library

ஆகாய கங்கை, இப்பூவுலகில் வந்து இவ்வணையாகக் கிடந்தது போல இருக்கிறது என்கிறான் கவிஞன்.

இராமபிரானை 'ஞானநாயகன்' என முன்னும் கூறியிருக்கிறான் கம்பன். பின்னும் கூறுகிறான். காப்பியப்போக்கில் பல இடங்களிலும் இதே சொற்றொடரையும் இந்தப் பொருள் குறிக்கும் அநேகச் சொற்றொடர்களையும் கம்பன் பயன்படுத்தியிருப்பதைக் காணலாம். அணைக்கு ஆகாயகங்கை உவமை.

70. கல் கிடந்து ஒளிர் காசு இனம் காந்தலால்,
மற்கடங்கள் வகுத்த வயங்கு அணை,
எல் கடந்த இருளிடை, இந்திரன்
வில் கிடந்தது என்ன விளங்குமால். (6826)

(கல்-மலை; ஒளிர்-விளங்குகின்ற; காசு-இரத்தினங்கள்; காந்துதல்-ஒளிவீசுதல்; மற்கடங்கள்-வானரங்கள்; வகுத்த-கட்டப்பட்ட; வயங்குதல் -விளங்குதல்; எல்-சூரியன்; கடத்தல்-மறைதல்; இருள்- இரவுப்போது)

வானரங்களால் பெயர்த்தெடுக்கப்பட்டுக் கொண்டுவந்து வீசியெறிந்த மலைகளில் கிடந்து ஒளிவீசுகின்ற பலவகையான இரத்தினக் கற்களின் தொகுதிகள், மிக்க ஒளிவீசுவதால், அந்த வானரச்சேனைகள் அரிதின் முயன்று கட்டிய அந்த அணை, சூரியன் மறைந்த பிறகு இரவுக்காலத்தில் உண்டாகும் இந்திரனுடைய இந்திரவில் கடலின்மீது கிடந்தது போன்றும் விளங்கிற்று.

நவரத்தினங்களின் ஒளி, இந்திரவில்லின் ஒளிக்கு ஒப்பு; நவமணிகள் முத்து, நீலம், பவளம், வயிரம், மரகதம், மாணிக்கம், வைடூர்யம், கோமேதகம், புட்பராகம் என்பனவாம். வானரங்கள் கட்டிய அணையின் தோற்றத்தை, ஆதிசேஷனாகவும், இலங்கை மென்மகளாகவும், ஆகாய கங்கையாகவும், இந்திரவில்லாகவும் உவமித்தார் என்க.

71. அணை கட்டி முடித்ததை இராமபிரானுக்குத் தெரிவித்தல்

ஆனபோர் அணை அன்பின், அமைத்தனர்,
கான வாழ்க்கைக் கவிக்குல நாதனும்,
மான வேற் கை இலங்கையர் மன்னனும்,
ஏனையோரும் இராமனை எய்தினார். (6827)

(அமைத்தல்-கட்டிமுடித்தல்; கானம்-காடு; கவிக்குலம்-வானரக் கூட்டம்; நாதன்-தலைவன்; மானம்-பெருமை; வேலை-கடல்; ஏனையோர்-மற்றவர்கள்)

அத்தகைய பெரிய அணையை எல்லோருமாக ஒன்றுசேர்த்து, இராம பிரான் மீதுகொண்ட அன்பின் காரணமாகவும், பக்தியின் காரணமாகவும்

Koviloor Digital Library

கட்டிமுடித்த பின்னர், இந்தச் செய்தியை இராமபிரானிடம் தெரிவிப்பதற்காக, காட்டிலேயே வாழும் இயல்பு உடைய குரங்குகளின் தலைவனான சுக்கிரீவனும், பெருமை சான்ற வேற்படையைக் கையில் ஏந்தியுள்ள, இலங்கைக்கரசனாக முடிசூட்டப்பெற்ற வீடணனும், மற்றுமுள்ள அனுமன், அங்கதன், சாம்பவன், நீலன், நளன் முதலியோரும் இராமபிரான் இருக்கும் இடம் சென்று சேர்ந்தனர்.

''அன்பின் அமைத்தனர்'' என்பது எல்லோரும் இராமபிரானிடம் கொண்டிருந்த அன்பின் காரணமாகத்தான் இத்தகைய அரிய செயலை இவ்வளவு விரைவில் செய்து முடிக்கமுடிந்தது என்பதோடு அவர்கள் எந்தப் பயனையும் எதிர்பாராது உள்ளன்போடு ஈடுபட்டனர் என்பதையும் வலியுறுத்தும் சொற்றொடராகும். ''வேற்கை'' என்பதற்கு வேற்படையைக் கையில் தாங்கிய என்று பொருள் கொண்டுள்ளோம். வான்மீகம் வீடணன் கதை என்ற படைக்கலன்களைக் கையில் கொண்டுதான் இலங்கையினின்றும் வெளியேறினான் என்று கூறுகிறது. அதை அடியொற்றி 'கதையை' கம்பர் வேலாக்கினார் எனக்கொள்க.

72. எய்தி, 'யோசனை ஈண்டு ஒரு நூறு இவை
ஐ இரண்டின் அகலம் அமைந்திடச்
செய்ததால் அணை' என்பது செப்பினார்,
வையநாதன் சரணம் வணங்கியே. (6828)

(எய்தி-அடைந்து; வையம்-உலகம்; நாதன்-தலைவன்; சரணம்-திருவடிகள்; ஈண்டு-இங்கு; ஐ இரண்டு-பத்து; செப்புதல்-சொல்லுதல்)

அவர்கள் எல்லோரும் உலக உயிரினங்களுக்கெல்லாம் தலைவனாகிய இராமபிரான் இருக்கும் இடம் அடைந்து, அவன் திருவடிகளில் விழுந்து வணங்கி, கடலில் ''நூறு யோசனை நீளமும், பத்து யோசனை அகலமும் கொண்ட அணை கட்டிமுடிக்கப்பட்டு விட்டது'' என்ற செய்தியைக் கூறினார்கள்.

வான்மீகமும் அணையின் நீளம் அகலம் பற்றி இவ்வாறே கூறுகிறது.

சேது பந்தனப்படலம் நிறைவுற்றது

Koviloor Digital Library

8. ஒற்றுக் கேள்விப் படலம் [90 பாடல்கள்]

சுவேல மலையில் இராமபிரான் தங்கியிருந்த பாடிவீட்டினுள், இராவணனால் அனுப்பப்பட்ட ஒற்றர்கள் குரங்கு வடிவோடு புகுந்து இராமபிரானின் சேனையின் அளவையும் ஆற்றலையும் ஒற்றறிந்து, இராவணனிடம் திரும்பிச்சென்றனர், இராவணன் அவர்களிடமிருந்து செய்திகளைக் கேட்டுக்கொள்ளும் படலம் என இது விரியும். இது 90 பாடல்களைக் கொண்டது. சில சுவடிகளில் ''திருவணை செய்த படலம்'' எனவும், ''திருவணை செல் படலம்'' எனவும் இன்னும் சில சுவடிகளில் ''பாசறைப்படலம்'' எனவும், ''சுவேலைப் படலம்'' எனவும் குறிக்கப் பெற்றிருக்கின்றன. சில சுவடிகளில் இதனை மூன்றாகப் பிரித்து சுவேலைப்படலம், நளனுக்கு முடிசூட்டுபடலம், ஒற்றுக் கேள்விப் படலம் எனவும் பெயரிடப்பட்டிருக்கின்றன.

'ஒற்று' என்ற சொல் உளவு அறிபவர்களையும், அவர்கள் அறிந்து வந்து கூறும் செய்திகளையும் ஒருசேரக் குறிக்கும். இவர்கள் பகைநாட்டுக்கு மாறுவேடத்தில் சென்று, அங்கேயே தங்கியிருந்து, யாருக்கும் தெரியாத வண்ணம் நடை, உடை, பாவனைகள் கொண்டு, அங்கு கண்டவற்றையும், கேட்டவற்றையும் பாதுகாப்பாகத் தன் நாடடைந்து அரசனுக்குச் செய்தி தெரிவிப்பவர்கள் ஆவர். இவர்கள் அரசர்க்கும், நாட்டிற்கும் மிக இன்றியமையாதவர்கள். இவர்கள் கூற்றால் ஒரு நாடு பகைவரிடமிருந்து காப்பாற்றிக் கொள்ளவும் முடியும். அவர்கள்மேல் முதலில் படையெடுத்துச்செல்லவும் முடியும். வள்ளுவன் இவர்கள் பற்றி மிக விரிவாகப் பேசுகிறான்.

இப்படலத்துள், இராமபிரான், வானரச்சேனைகள் அமைத்த அணையைப் பார்க்கச் செல்லுதல்; வானரச்சேனைகளோடு அணை வழியாகக் கடலைக் கடந்து செல்லுதல்; இராமபிரான் கட்டளையால் நளன் சுவேல மலையில் பாடிவீடு அமைத்தல்; இராமபிரான் தனிப் பாடிவீட்டில் தங்குதல்; சூரியன் மறைதலும் சந்திரன் தோற்றமும்; இராவணனால் அனுப்பப்பட்ட ஒற்றர்கள் குரங்குவடிவத்தில் இருந்ததை வீடணன் கண்டுபிடித்தல்; ஒற்றர்களை இராமபிரான் முன் கொண்டுவந்து நிறுத்துதல்; ஒற்றர்கள் உண்மையை ஒத்துக் கொள்ளுதல்; இராமபிரான் சினங்கொள்ளாது அவர்களிடம் இராவணனிடம் தங்கள் படை வலிமையையும், இங்குள்ள நிலைமையையும் எடுத்துக்கூறுமாறு அறிவுறுத்தி அவர்களைச் செல்லவிடுதல்; ஒற்றர்கள் திரும்பிச் செல்லுதல்; மற்றும்

Koviloor Digital Library

இங்கே இலங்கையில் அதே சமயத்தில் இராவணன் இரவில் மந்திரா லோசனையில் அமர்ந்திருத்தல்; அவன் பாட்டன் மாலியவான் மீண்டும் சீதையை விட்டுவிடச் சொல்லி இராவணனுக்கு அறிவுறுத்துதல்; இராவணன் அவன்மேல் சினங்கொள்ளுதல்; சேனைத்தலைவன் பேசுதல்; இந்த நேரத்தில் ஒற்றர்கள் வந்திருப்பதைக் காவலாளர்கள் இராவணனிடம் தெரிவித்தல்; அவன் கட்டளைப்படி ஒற்றர்கள் சபையில் வந்து கூற, இராவணன் அதைக் கேட்டறிதல்; சேனைக்காவலனும், மாலியவானும் மீண்டும் பேச, இராவணன் அவர்களை இகழ்தல்; சூரியன் தோன்றுதல்; ஆகிய நிகழ்ச்சிகள் மிக விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன.

1. இராமபிரான் சேதுவைக் காணுதல்

ஆண்தகையும், அன்பினோடு, காதல் அமிழ்து ஊற
நீண்ட கையினால் அவரை நெஞ்சினோடு புல்லி
'ஈண்ட எழுக' என்றனன் இழைத்த படி எல்லாம்
காண்டல் அதன்மேல் நெடிய காதல் முதிர்கின்றான். (6829)

(ஆண்தகை-ஆண்தன்மையுடையவன்/வீரன்; புல்லுதல்-தழுவுதல்; இழைத்தல்-கட்டுதல்; காதல்-விருப்பம்; முதிர்தல்-மிகுதல்; ஈண்ட-விரைவாக; எழுதல்-புறப்படுதல்; காண்டல்-காணுதல்; காதல்-பேரன்பு)

ஆண்தன்மை மிக்க வீரனாகிய இராமபிரான், மிக்க அன்புகொண்டு, ஆசை அமிழ்தம்போல் ஊற்றெடுக்க, அந்த நற்செய்தி சொல்லிய சுக்கிரீவன் முதலானவர்களைத் தனது தாள்தோய் தடக்கைகளால், உளம்கொண்டு மார்போடு தழுவி, அணைகட்டிய சிறந்த தன்மையைப் பார்க்கலாம் என்ற பெரு விருப்பு உடையவனாய் ''விரைந்து வாருங்கள்'' என்று கூறி, அந்த அணையைப் பார்ப்பதில் மிக்க ஆர்வம் கொண்டவனாய் அவர்களுடன் செல்லலுற்றான்.

'ஆண்தகை' என்பது ஆடவர்களின் முக்கியப் பண்பான வீரத்தை மிகுதியாகக் கொண்டவரைக் குறிக்கும். இங்கே இராமபிரானைக் குறித்து நின்றது. இங்கே கவிஞன் 'அன்பு' 'காதல் அமிழ்து' 'நெடிய காதல்' என்று சுக்கிரீவன் முதலானவர்கள்மீது தான் கொண்ட பேரன்பினை எத்தனை அடைமொழி கொடுத்துக் கூறவைக்கிறான் பாருங்கள். 'நீண்டகை' என்பது தாள்வரை தோய்ந்த தடக்கை - முழந்தாள் அளவுநீண்ட கைகளைக் குறிக்கும். 'ஆஜானு பாகு' என்பது வடசொல். இது உத்தம ஆடவர்களுக் குரிய சாமுத்திரிகா லட்சணங்களில் ஒன்று என்று அறிக. 'நெஞ்சினோடு புல்லி' என்பது சற்று நன்கு சிந்திக்கத்தக்கது. இங்கே சுக்கிரீவன் தலைமை யிலான வானரச்சேனை அணையை மூன்று நாட்களில் கட்டிமுடித்தது. அது ஒரு அரும்பெரும் செயல்; செய்தற்கரியசெயல். எனவே அவர்களைப் பாராட்டும் முகத்தான் அவர்களை மார்புறத்தழுவினான் என்பது பொருள். இதற்குமாறாக, அனுமன் தனக்குச் செய்த உதவிகளுக்குப் பிரதிஉப காரமாக, இறுதியில் என்ன செய்வது என்று புரியாத திருமாலின் அம்சமான

Koviloor Digital Library

இராமபிரான், அனுமனை நோக்கி ''போர் உதவிய திண்தோளாய்! பொருந்துறப்புல்லுக'' என்று தன்னைத் தழுவிக்கொள்ளும்படி கேட்டுக் கொண்ட இராமபிரானின் பண்புநலனை இங்கு நினைவுகூர்தல் தகும். முதலில் கூறப்பட்ட காதல், அந்தச் செய்தியை வந்து கூறிய சுக்கிரீவன் முதலானோர் மீது ஏற்பட்ட பேரன்பு; கடைசி அடியில் கூறப்பட்ட காதல், அணையைப் பார்க்கவேண்டும் என்ற பெருவிருப்பம் என்பதாம்.

2. இராமபிரான் சீதாதேவியைக் கண்டுவிட்டதாகவே மகிழ்தல்

பண்டை உறையுட்கு எதிர் படைக்கடலின் வைகும்
கொண்டல் எனவந்து அவ்வணையைக் குறுகி நின்றான்;
அண்ட முதல்வன் ஒரு தன் ஆவி அனையாளைக்
கண்டனன் எனப் பெரிய காதல் முதிர்கின்றான். (6830)

(அண்டம்-உலகம்; முதல்வன்-தலைவன்; பண்டை-பழமையான; உறையுள்-வாழ்விடம்; வைகுதல்-தங்குதல்; கொண்டல்-மேகம்; ஒரு-ஒப்பற்ற; ஆவி-உயிர்; குறுகி-அணுகி; முதிர்தல்-அதிகரித்தல்/முற்றுதல்; அண்டர்-தேவர்கள்; பெரிய-மிகுந்த)

தேவர்களுக்கெல்லாம் தலைவனாகியவனும், இவ்வுலகங்களைப் படைத்தருளியவனுமான திருமாலின் அம்சமான இராமபிரான், தன்னுடைய பழமையான இருப்பிடமான பாற்கடல் எதிரே, வானரச் சேனையாகிய கடலின் நடுவில் தங்கியிருக்கும் மேகம்போல, வந்து அவ்வணையின் அருகே நெருங்கிச் சென்று, தனது ஒப்பற்ற உயிர்போன்ற சீதாதேவியை நேரில் கண்டதுபோலவே, மிகுந்த பேரன்பு முற்றப் பெற்றவனாய் நின்றான்.

திருமாலின் 'பண்டை உறைவிடம்' திருப்பாற்கடல். இப்பொழுது இராமபிரான் அதற்கு அருகில், அதற்கு மாறான வானரச்சேனை என்னும், கடலின் நடுவில் தங்கி இருப்பதாகக் கூறும் கவிஞனின் கவித்திறம் நோக்குக. 'அண்ட முதல்வன்' என்பது இருபொருளைத்தரும்; அண்டர் என்பது தேவரைக்குறிக்கும். 'அண்டரே தேவர் ஆயர்' என்பது நிகண்டு. எனவே தேவர்களுக்கெல்லாம் முதல்வனாகிய தேவதேவன் என்று ஒரு பொருள்தரும். மற்றொன்று அண்டம் என்றால் உலக உருண்டை. இந்த உலகத்து உயிரினங்களுக்கெல்லாம் முதல்வனாகிய திருமாலின் அம்சமான இராமபிரான் என்ற மற்றொரு பொருளைத்தரும். இராமபிரான் சீதாதேவியைத் தன் அருமையான உயிர் போன்றவளாகவே கருதிவந்தான் என்பதைக் குறிக்க, 'ஒருதன் ஆவி அனையாளை' என்றார். முன்பும் வாலி, இராமனை நோக்கி 'ஆவியைச் சனகன் பெற்ற அன்னத்தை' என்று கூறியதும் இங்கு நினைக. சீதாதேவியை விரைவில் காண்பதற்கான முதல் படி இந்த அணை. எனவே நம்பிக்கை மிகுதியாலும், துணிவினாலும், சீதாதேவியை நேரில்கண்டது போல் மிக்க காதல் முற்றியவனாக

Koviloor Digital Library

நின்றிருந்தான் என்கிறான் கவிஞன். பிரிவால் துயருறுதல் விரகதாபம். 'விப்ரலம்பம்' என்பது வடமொழி. பிரிந்தபின் கூடுதல்தான் மிகுந்த இன்பம் தரும். 'கூடி முயங்கப்பெறின்' என்பார் வள்ளுவர். இதை 'சம்போகம்' என்கிறது வடமொழி. பிரிவுக்குப் பின்னர் நிகழும் சேர்க்கை மிகச் சிறப்பாக அமையும் என்பது கருத்து.

3. நின்று நெடிது உன்னினன், 'நெடுங்கடல் நிரம்பக்
குன்றுகொடு அடைத்து, அணை குயிற்றியது ஓர் கொள்கை
அன்று உலகு தந்த முதல் அந்தணன் அமைத்தான்
என்ற பொழுதின்கணும் இது என்று இயலும்?'' என்றான். (6831)

(குயிற்றல்-கட்டுதல்/செய்தல்; ஓர்-ஒப்பற்ற; கொள்கை-செயல்; உன்னி-நினைத்து; அன்று-முன்பு; தருதல்-படைத்தல்; முதல் அந்தணன்-பிரமதேவன்; இயலுதல்-முற்றுப்பெறுதல்)

கடலின் அருகில் சென்று அணையைக்கண்ட இராமபிரான், நீண்ட நேரம் நின்று அதனையே உற்று நோக்கிச் சற்றுச் சிந்தித்தவனானான்; இந்த நீண்ட பெரிய கடலைக் குன்றுகளைக் கொண்டு முழுவதும் அடைத்து, ஒருபெரிய அணையைக் கட்டிமுடித்ததாகிய ஒப்பற்ற பெரிய செய்கை, முற்காலத்தில் இவ்வுலகத்தைப் படைத்த முதல்தேவனாகிய பிரம தேவனே அமைக்கத் தொடங்கினாலும், எப்பொழுது துவங்கி, எப்பொழுது முடிப்பான்?'' என்று கூற இயலாத இந்த செயற்கரிய செயலைக் கண்டு திகைத்து வியந்துபோய் நின்றான்.

பிரமதேவன் சிற்பக்லையிலும், கட்டடக்கலையிலும் கைதேர்ந்தவன் என்பது ஒரு புராணக்குறிப்பு. இலங்கை எரியுண்ட பின்னர், மயனைக் கொண்டு புதிய இலங்கையை நிர்மாணித்தபோது, மயன் பிரமனின் வழிகாட்டுதலின்பேரில்தான் புதிய இலங்கையை நிர்மாணித்தான் என்று, நாம் முன்பு கண்டதை இங்கே நினைவுகூர்க. அத்தகைய பிரமதேவனாலும் முன்னின்று கட்டி முடிக்கமுடியாத இந்த அணைலய மூன்றே நாட்களில் கட்டிமுடித்த நளனது திறமையை வியந்து பாராட்டினான் என்பதாம்.

4. ஊழி முதல் நாயகன் வியப்பினொடு உவந்தான்;
''ஆழம் உரைசெயும் அளவே! இனி அது ஒன்றோ?
ஆழியில் இலங்கை பெரிது அத்திசையது ஆமேல்,
ஏழு கடலும் கடிது அடைப்பர், இவர்'' என்றான். (6832)

(ஆழி-கடல்; கடிது-விரைந்து; இவர்-வானரர்)

ஊழிக்காலத்தும் அழியாது நிலைபெற்றிருப்பவனும், ஊழிக் காலத்தின் தோற்றத்திற்கும் முடிவுக்கும் மூலகாரணனும், தலைவனு மாகிய இராமபிரான், அவ்வணையைத் தன் கண்களால் கண்டு, வியப்பும், மகிழ்ச்சியும் ஒருங்கே அடைந்து, ''இந்தக்கடலின் ஆழம் சொல்லும் தரத்ததோ?- அதுமட்டுமோ? இந்தக்கடலால் சூழப்பட்ட இலங்கை

Koviloor Digital Library

மாநகரம் இன்னும் தூரத்தே. ஏழுகடல்களுக்கு அப்பால் இருந்தாலும்கூட, இந்த வலிய வானரர்கள், அந்த ஏழு கடலையும் ஒருங்கிணைத்து விரைவில் அடைக்கும் வல்லமை பெற்றவர்கள்'' என்று வானரர்களையும் குறிப்பாக நளனையும் பாராட்டினான்.

உலத்தோற்றத்திற்கும், அழிவிற்கும் மூலகாரணன் பரம்பொருளே என்றதனால் ''ஊழிமுதல் நாயகன்'' என்று இராமபிரானைக் குறித்தார் என்க.'ஏழுகடலும் அடைப்பர்' என்பது முன்பு விசுவாமித்திரர், மிதிலையில் திருமண மண்டபத்திற்கு வந்த சீதையைக் கண்டபோது, ''நச்சுடைவடிக்கண் நங்கை இவள் என்றால், இச்சிலை கிடக்க, மலையேழையும் இறானோ?'' என்று கூறியதும் இங்கு நினைவு கூரத்தகும். அதுபோலவே, இலங்கையில் அனுமனின் விசுவரூபத்தைக் கண்ட சீதாதேவி ''பாழிநெடுந்தோள்வீர! நின் பெருமைக்கேற்பப் பகை இலங்கை ஏழு கடற்கும் அப்புறத்து ஆகாதிருந்தது இழிவன்றோ?'' என்று அனுமன் ஆற்றலைப் பாராட்டியதும் இங்கு ஒப்புநோக்கத்தகும். இராமபிரான் 'வியப்பினோடு உவந்தான்' என்கிறான் கம்பன். ''புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கமொடு, மதிமைசாலா மருட்கை நான்கே'' என்பது தொல்காப்பியம். இங்கு இராமபிரான் புதுமையும், பெருமையும், ஆக்கமும் கருதி வியப்பும் வானரர் உருவச்சிறுமையும் பேராற்றலும் கண்டு, உவப்பும் கொண்டான் எனக்கொள்க. இங்கே இராமபிரான், நளனைப்பாராட்டி, தழுவிக்கொண்டு, முன்பு வருணன் தனக்கு அளித்த ஆரத்தையும் இன்னும் சில பொன்னபாரணங்களையும் அவனுக்குப் பரிசாகக் கொடுத்தான் என்ற கருத்தைத் தெரிவிக்கும் பாடல் சில ஏட்டுச்சுவடிகளில் காணப்படுகிறது.

5. வானரச்சேனை கடல் கடந்த தன்மை

நெற்றியின் அரக்கர்பதி செல்ல, நிறை நல்நூல்
கற்று உணரும் மாருதி, கடைக் குழைவர, தன்
வெற்றி புனை தம்பி, ஒரு பின்புசெல, வீரப்
பொன்திரள் புயக் கருநிறக் களிறு போனான். (6833)

(நெற்றி-முன்னணிப்படை; அரக்கர்பதி-வீடணன்; கடைக்குழை-பின்னணிப்படை; புனைதல்-அணிதல்; தம்பி-இலக்குவன்; பொன்-அழகு; களிறு-யானை; மாருதி-அனுமன்; புயம்-கைகள்)

சேனையில் முன்னணிப்படையாக, அரக்கர்தலைவனான வீடணன் செல்லவும், நிறைந்த சிறந்த சாத்திர, இலக்கண நூல்களைக் கற்றுத் தெளிந்து உணர்ந்த அனுமன், சேனையின் பின்னணிப்படையாகக் கடைசியில் வரவும், வெற்றியையே அணிகலனாகக் கொண்ட ஒப்பற்ற தன்தம்பி இலக்குவன், தன் பின்பு ஒரு பக்கமாக வரவும், வீரம்செறிந்த அழகிய, திரண்ட கைகளையுடைய, கரிய நிறத்து ஆண்யானை ஒன்று செல்வதுபோல, இராமபிரான் இவர்கள் இடையில் சென்றான்.

Koviloor Digital Library

இங்கே வான்மீகம் வேறுபடுகின்றது. சுக்கிரீவன் வேண்டுகோளின் படி இராமபிரான் அனுமன்தோள்மீதும் இலக்குவன் அங்கதன் தோள் மீதும் அமர்ந்து சென்றனர் என்கிறது வான்மீகம். ''நிறை நன்னூல் கற்று உணர் மாருதி'' என்பது, முன்பு ''இல்லாத உலகத்து எங்கும் இங்கு இவன் இசைகள் கூற கல்லாதகலையும், வேதக்கடலுமே என்னும் காட்சி சொல்லாலே தோன்றிற்று'' என்று இராமபிரான் கூறியதை அடி யொற்றியது என்க. 'கூழை' என்ற சொல் புறத்திணையில் பின்னணிப் படையைக் குறிக்கும். அது அங்கே 'குழை' எனக் குறுகி வந்தது எனக் கொள்க. இராமபிரானின் தோள்வன்மைக்கு வீரத்தோள், பொன்தோள், திரள்தோள் என்று மூன்று அடைமொழி தருகிறான் பாருங்கள். களிறு-ஆண்யானை, இராமபிரானுக்கு, நடையாலும், கம்பீரத் தோற்றத்தாலும் உவமை. முன்பும் இராமபிரானை ஆண்யானைக்குப் பல இடங்களில் ஒப்புக்கூறியிருப்பதையும் இங்கு நினைவுகூர்க.

6. இருங்கவி கொள்சேனை, மணி ஆரம் இடறி, தன்
மருங்கு வளர் தெண்திரை வயங்கு பொழில் மான,
ஒருங்கு நனிபோயின, உயர்ந்த கரையூடே,
கருங்கடல் புகப் பெருகு காவிரி கடுப்ப. (6834)

(மணி-இரத்தினம்; மருங்கு-பக்கம்; வயங்குதல்-விளங்குதல்; பொழில்-சோலை; மான-போல; கருமை-பெருமை; இரும்-பெரிய; கவி-வானரங்கள்; ஒருங்கு-திரண்டு/ஒன்றுபட்டு; நனி-மிகவும்; ஆரம்-முத்து/சந்தனம்; கடுப்ப-போல; தெண்-தெள்ளிய; திரை-அலைகள்; கரை-அணை)

நிறைந்த வானரங்களைக் கொண்ட சேனை, இரத்தினங்களையும், சந்தனக்கட்டைகளையும் இடறிக்கொண்டு சென்றன. இது எப்படி இருக்கிறது என்றால், தனது இரு பக்கங்களிலும் ஓங்கி வளர்ந்திருக்கின்ற தெள்ளிய அலைகளையுடைய சோலைகள் விளங்குவது போல இருக்கிறது. அந்த இரு கரைகளின் நடுவே பெரிய கடலைச்சென்று சேரும் பொருட்டு, பெருகி ஓடும் காவிரி ஆற்றைப்போல, வானரச்சேனைகள் உயர்ந்து நிற்கும் அணையின்மீது ஒருங்கே திரண்டு நெருங்கிச் சென்றன.

வானரப்படைக்குக் காவிரி ஆறு உவமை. நவமணிகளையும், சந்தனக் கட்டைகளையும் இடறிக்கொண்டு அணைமீது வானரப்படைகள் செல்லு கின்றன. இரத்தினங்களையும் முத்துக்களையும் உருட்டிக் கொண்டு, காவிரியாறு கடலில் சென்று கலக்கிறது. 'காவிரி' என்பது காவேரி என்ற வடசொல்லின் சிதைவு. கவேர கன்னி என்பது 'சோழர்குலக் கொடி' என்றும், 'பொன்னி' என்றும் வழங்கப்படும். மான, கடுப்ப என்பன உவமஉருபுகள்.

Koviloor Digital Library

7. ஓதிய குறிஞ்சி முதலாய நிலன் உள்ள
கோது இல அருந்துவன கொள்ளையின் முகந்துற்று,
யாதும் ஒழியா வகை சுமந்து, கடல் எய்தப்
போதலினும், அன்னபடை, பொன்னி எனல் ஆகும். (6835)

(ஓதிய-கூறப்பட்ட; கோது-குற்றம்; அருந்துவன-உணவுப் பொருள்கள்; கொள்ளை-மிகுதி; முகந்து-அள்ளிக்கொண்டு/கவர்ந்து கொண்டு; அன்ன-அத்தகைய; பொன்னி-காவிரி)

பழைய நூல்களில் கூறப்பட்டுள்ள குறிஞ்சி முதலான ஐந்து வகைப் பட்ட நிலங்களில் உள்ள, குற்றமற்ற, உண்ணுவதற்கேற்ற உணவுப் பொருள்களையெல்லாம், எதையும் மீதம் வைக்காது மிகுதியாகக் கவர்ந்து தாங்கிக்கொண்டு, கடலை அடையப்போகின்ற தன்மையாலும், அந்த வானரப்படை, காவிரி நதிக்கு ஒப்புக்கூறத் தகுந்ததாகிறது.

முன்பாடலில் காவிரியின் பெருமை பேசிய கவிஞன், நாட்டுப்பற்று மிகுதியால், இன்னும் ஒரு உவமையை இந்தப் பாடலில் கூறுகிறான் எனக்கொள்க. வானரச்சேனை, தங்களுக்குத் தேவையான, வேண்டிய உணவுப் பொருள்களையெல்லாம் தங்கள் மீது மிகுதியாகச் சுமந்து கொண்டு கடலைக் கடந்து அணைமீது செல்லுகின்றது. அதுபோல, காவிரியாறும், குறிஞ்சி முதலிய ஐந்துவகை நிலங்களிலும் பாய்ந்து, அங்கிருக்கும் உண்ணுதற்குரிய உணவுப்பொருள்களை எல்லாம் வாரி எடுத்துக்கொண்டு கடலுக்குள் புகுவதற்காகச் செல்லுகிறது என்று வானரப் படையை, காவிரியாற்றுக்கு மீண்டும் ஒருமுறை உவமிக்கிறான் கவிஞன் என்க. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பன ஐவகை நிலப் பாகுபாடுகள். குறிஞ்சி என்பது மலையும் மலைசார்ந்த இடமும் என்க.

8. ஆயது நெருங்க, அடிஇட்டு, அடிஇடாமல்,
தேயும் நெறிமாடு, திரைஊடு, விசைசெல்ல,
போய சில, பொங்கு தொறும் பொங்குதொறும் பூசல்
பாய்புரவி விண் படர்வபோல், இனிது பாய்வ. (6836)

(நெறி-வழி; விசை-விரைவு; பொங்குதல்-மிக்குஎழுதல்; பூசல்-போர்; புரவி-குதிரை; படர்தல்-செல்லுதல்; இனிது-நன்கு; மாடு-பக்கம்)

அவ்வாறு நெருக்கியடித்துக்கொண்டு அடிமேல் அடிவைத்துச் செல்லும் சில குரங்குகள், ஒரு காலை எடுத்தால் மறுகாலை வைக்க இட மில்லாமையால், அவ்வணையின் மீது அச்சேனை சென்றதால் வழியே தேய்ந்து போய்விட்டது. இப்பொழுது அலைகளின் ஊடே விரைந்து நன்கு பாய்ந்து சென்ற குதிரைகள், அலைகள் பொங்கி எழும்பொழுதெல்லாம் அவை விண்ணில் பறப்பனபோல, தோற்றமளித்தது.

ஒரு குரங்கு ஓரடியினை எடுத்து வைத்து, மறு அடியினை வைப்ப தற்குள், மற்றொரு குரங்கு அந்த இடத்தில் தன் அடியை வைத்துவிடும்.

Koviloor Digital Library

இந்தக் குரங்கு தனது மற்றொரு அடியை எடுத்து வைக்கமுடியாமல் திண்டாடி நிற்கும் என்று, குரங்குச்சேனையின் மிகுதியைக் குறித்தார் என்க. இவ்வாறு நெருங்கிச் செல்வதால், அவ்வகன்ற அணை ஒற்றைஅடிப் பாதைபோல் ஆகிப்போயிற்று. எனவே சில வானரங்கள் வேறுவழியாக, அதாவது அவ்வணையின் இரு ஓரங்களிலும், கரைகளிலும் விரைந்து பாய்ந்து செல்ல வேண்டியதாயிற்று. இது எவ்வாறு இருந்ததென்றால், போரில் செல்லுகின்ற குதிரைகள் விண்ணில் பாய்ந்து செல்வதைப் போலத் தோற்றமளித்தது என்கிறான் கவிஞன். பொதுவாகக் கடல் அலைகளைக் குதிரைகளுக்கு உவமைகூறுவது கவிமரபு. ''தரங்கம் நிரைத்தன, தரளம் நிரைத்தன, துரங்கம் எனப் பலகோடி தொகுத்தே'' என்பது தக்கயாகப்பரணி. தரங்கம்-அலை; தரளம்-முத்துக்கள்; துரங்கம்-குதிரை.

9. மெய்யிடை நெருங்க, வெளியற்று அயலில் வீழும்
பொய்யிடம் இலாத, புனலின் புகல் இலாத,
உய்விடம் அளிக்கும் அருளாளர் முறை உய்த்தார்,
கையின்இடை சென்று, கரை கண்ட கரைஇல்லை. (6837)

(மெய்-உடல்; வெளி-இடம்; அயல்-பக்கம்; பொய்யிடம்-வெற்றிடம்; புனல்-கடல்நீர்; புகல்-புகுதல்; அருளாளர்-கருணைமிக்கவர்; முறை-தன்மை; கரை-கணக்கு/எல்லை/முடிவு)

அவ்வானரச்சேனையில் செல்லும் குரங்குகள் ஒருவர் உடலோடு மற்றொருவரின் உடல் நெருங்கிச்செல்லுவதால், சற்றும் வெற்றிடம் இன்றிக் காணப்பட்டது. கூட்டத்தில் சிக்கித்திணறும் சில வானரங்கள் பக்கத்தில் விழக்கூட வெற்றிடமும் இல்லை; அவற்றால் நீரில் புகுந்து நீந்திச் செல்லவும் முடியவில்லை. அந்தச் சமயத்தில் கருணைமிகுந்த அருளாளர்கள் போன்ற சில வானரங்கள், அவ்வாறு செல்லத் தவிக்கும் குரங்குகளைத் தங்கள் கைகளில் ஏந்திக்கொண்டு கரைகடந்து சென்றன. இவ்வாறு அருளாளரின் கைகளின் மேல் சென்ற குரங்குகளின் எண்ணிக்கை கணக்கில் அடங்காது என்கிறான் கவிஞன்.

'வெளி' என்பதும், 'பொய்யிடம்' என்பதும் வெற்றிடத்தைக் குறித்தது என்க. அதுவே வானரச்சேனையின் நெருக்கத்தையும் குறித்தது. அருளாளர்களின் அருட்தன்மையைக் குரங்குகளின் செயல்களிலும் கண்ட கவிஞனின் உளப்பாங்கை உணர்க. இரு கரைகளில் முதல் கரை, அணையின் கரையையும், இரண்டாவது கரை எல்லையையும் குறித்து நின்றன. பிறவிக்கடலில் சிக்கித் தவிப்பவர்கள், அருளாளனான, இறைவனை நாடி அவன்மீது பற்றுக்கொண்டால், அவன் அவர்களைத் தம்கைகளில் ஏந்திப் பிறவிக்கடலைக் கடக்க உதவுவான் என்பது இப்பாடலின் மறைபொருள்.

Koviloor Digital Library

10. இழைத்தனைய வெங்கதிரின் வெஞ்சுடர், இராமன்
மழைத்த முகில் அன்ன மணிமேனி வருடாமல்,
தழைத்த நிழல் உற்ற குளிர் சந்தனம், உயர்ந்த
வழைத்தரு, எடுத்து அருகு வந்தனர், அநேகர். (6838)

(அனைய-போன்ற; கதிர்-சூரியன்; வெம்-கொடிய; சுடர்-ஒளி; மழைத்தல்-மழைபொழியும் குணம் கொள்ளுதல்/சூல்கொள்ளுதல்; முகில்-மேகம்; மணி-அழகிய; வருடுதல்-தடவுதல்/ஸ்பரிசித்தல்/தீண்டுதல்/படுதல்; வழைத்தரு-சுரபுன்னை மரங்கள்; அருகு-பக்கம்; இழைத்தல்-திரட்டிவைத்தல்; தழைத்தல்-செழித்துவளர்தல்; தரு-மரம்)

நவரத்தினங்களைக் கொண்டு இழைத்ததுபோன்ற கொடுமையான சூரியனின் கிரணங்கள், சூல் கொண்ட, மழைநீர் நிறைந்த மேகம்போல் இராமபிரானின் கருத்த, அழகிய திருமேனியைத் தீண்டாத வண்ணம், நன்கு செழித்து ஓங்கி வளர்ந்த, நிழல் தருகின்ற, குளிர்ச்சி பொருந்திய சந்தன மரங்களையும், உயர்ந்து வளர்ந்திருக்கின்ற சுரபுன்னை மரங்களையும் குடைபோலத் தம் கைகளில் பிடித்துக்கொண்டு, நிழல் செய்து, மிகப்பல குரங்குகள் இராமபிரான் அருகே சூழ்ந்து சென்றன.

'வெங்கதிர் வெஞ்சுடர்' என்று சூரிய கிரணங்களின் கடுமையைக் கூறினார் என்க. இராமபிரான் திருமேனியை, ''மழைத்தமுகில் அன்ன மணிமேனி'' என்ற சொற்றொடரால் சிறப்புச்செய்தார் என்க. சந்தன மரத்தை, தழைத்தது, நிழல் உற்றது, குளிர்ந்தது என்று அதன் தன்மைகளை உள்ளடக்கிக் கூறினார் என்க. வழைத்தரு என்ற சொல்லுக்குச் சுரபுன்னை மரம் என்றே எல்லாச் சுவடிகளும் கூற, ஒரே ஒரு அச்சுப்பிரதி மட்டும் குங்கும மரம் என்று சொல்வது கருதத்தக்கது. இராமபிரான் மேனிக்கு மழைமுகிலைக் கவிஞன் பல இடங்களிலும் உவமையாகக் கையாண்டிருப்பதையும் நினைவிற்கொள்க. சந்தனமரத்தைக் குடையாகப் பிடித்துக் கொண்டும், சுரபுன்னை மரத்தைச் சாமரமாக வீசிக்கொண்டும் வந்தன என்று கூறுகிறது ஒரு பழைய உரை.

11. ஓம நெறி வாணர் மறை வாய்மை ஒருதானே,
ஆம் அரசன் மைந்தர் திருமேனி அலசாமே,
பூ மரன் இறுத்து, அவை பொருத்துவ பொருத்தி,
சாமரையின் வீசினர், படைத்தலைவர் தாமே. (6839)

(ஓமம்-வேள்வி; அரசன்-தசரதன்; அலசுதல்-வருந்துதல்; இறுத்தல்-ஒடித்தல்; பொருத்துதல்-இணைத்தல்; மரன்-மரம்)

வேள்வி முறைகளைத் தவறாது ஒழுங்காகப் பயிலுகின்ற வேதியர்கள், ஓதுகின்ற நான்கு வேதங்களிலும் கூறப்படுகின்ற மெய்ப்பொருள் தானே ஒரு வடிவம் எடுத்து வந்தவன் போல்பவனான தசரதச்சக்கரவர்த்தியின் மைந்தரான இராம இலக்குவரின் அழகிய திருமேனி சற்றும் வருத்தமோ,

Koviloor Digital Library

சோர்வோ அடையாதவண்ணம், அருகிலிருந்த மரங்களில் பூத்துக் குலுங்கும் நறுமணம் மிக்க மலர்களைப் பறித்து, அதனுடன் எவ் வெவற்றைச் சேர்க்க வேண்டுமோ அவற்றை இணைத்துக் கட்டி, அதை ஒரு சாமரம் ஆக்கி, படைத்தலைவர்கள் தாமே அவர்களுக்கு வீசலுற்றனர்.

தசரதன் 'மறைவாய்மை ஒருதாமே ஆம் அரசர்' என்று சிறப்பிக்கப் படுவதைக் கருதுக. தசரதனின் வாய்மைத்திறம் முன்பும் பல இடங்களில் பேசப்பட்டிருப்பதையும் நினைக. முன்பாடலில் புன்னை மரங்கள் வெண்கொற்றக் குடைபோலக் கவித்ததையும், இந்தப்பாடலில் வெண் சாமரை இரட்டுவது போல் சாமரம் வீசியதையும் கவிஞன் கூறியிருப்பதை உணர்க. இவ்விரண்டு செயல்களும் இறைவன் ஊர்வலம் வரும்போதும், அரசன் நகர்வலம் வரும்போதும் இயற்றப்பட வேண்டிய இன்றி யமையாத இரு நெறிமுறைகள். அதனையும் பிற பணியாளர்கள் செய்யவிடாதபடி படைத்தலைவர்கள் தாமே செய்தனர் என்பதால் அதன் சிறப்புப் பெறப்படும். சாதாரணக் கவரிமான் கற்றை கொண்டோ, அல்லது செயற்கையான வெண்சாமரம் கொண்டோ வீசுவதைக் காட்டிலும், இயற்கையாக நறுமணம் மிக்க மலர்களைக் கொண்டு சாமரம் வீசுவது மேலும் சிறப்புத்தானே!

12. கடல்கடந்து கரையேறுதல்

அருங்கடகம் அம்கையில் அகற்றி, அயர்வோடும்
மருங்கு அட வளர்ந்த முலைமங்கை மணம் முன்னா,
ஒருங்கு அடல் உயர்ந்த படர் தானையோடும் ஓதத்து
இருங்கடல் கடந்து, கரை ஏறினன் இராமன். (6840)

(கடகம்-வளையல்; அம்-அழகிய; அயர்வு-தளர்ச்சி; மருங்கு-இடை; அட-வருத்தும்படி; முலை-தனங்கள்; உன்னா-உன்னி/நினைந்து; ஒருங்கு-ஒருசேர; அடல்-வலிமை/ஆற்றல்; படர்-பரவிய; ஓதம்-அலைகள்; இரும்-பெரிய)

பெண்களுக்குரிய மங்கலப் பொருள்களில் அருமையானதான கைவளைகளைத் தன் அழகிய கைகளில் இருந்து நீக்கிவிட்டு, பொங்கி யெழும் தன் தனங்களைத் தாங்கமுடியாத மெல்லிய இடையையுடைய சீதாதேவியின் பிரிவாற்றாமையை மனத்துள் உட்கொண்டு, பகைவர்களை ஒருசேரப் பொருது அழிக்கின்ற வல்லமை படைத்த சிறந்த பரந்த வானரச்சேனையோடு, நீரும், அலையும் நிறைந்த பெரிய கடலை அணையின் மூலமாகக் கடந்து அக்கரை சென்று சேர்ந்தான் இராமபிரான்.

பிறவிப்பெருங்கடலில் இருந்து, உயிரினங்களைக் கரையேற்றும் ஆற்றல் படைத்த பரம்பொருளான இராமபிரான், இப்போது ஒரு கடலைக் கடந்து கரையேறினான் என்று கூறும் கவிஞனின் கவித்திறம் நோக்குக.

Koviloor Digital Library

'ஓதம்' என்ற சொல்லுக்கு, நீர், அலை, கடல் என்ற எல்லாப்பொருளும் பொருந்திவருதல் காண்க.

13. இராமபிரான் சுவேல மலையில் தங்குதல்

பெருந்தவம் முயன்று, அமரர் பெற்றிடும் வரத்தால்,
மருந்தனைய தம்பியொடும், வன் துணைவரோடும்,
அருந்ததியும் வந்தனை செய் அம்சொல் இளவஞ்சி
இருந்த நகரின் புறன் ஓர் குன்றிடை இறுத்தான். (6841)

(அமரர்-தேவர்கள்; மருந்து-அமிழ்தம்; அனைய-போன்ற; வன்-வலிமை/ஆற்றல்; வந்தனை-வணக்கம்; அம்-அழகிய; வஞ்சி-கொடி; புறன்-புறம்/வெளியில்; குன்று-மலை; இறுத்தல்-தங்குதல்)

தேவர்கள், செய்தற்கரிய அருந்தவத்தைச் செய்ததன் பயனால் கிடைத்த வரத்தின் காரணமாகப் பெற்ற, அமிழ்தம் போன்ற ஆருயிர்த் தம்பி இலக்குவனோடும், வலிய ஆற்றல் பொருந்திய துணைவர்களான, சுக்கிரீவன், அனுமன், வீடணன், அங்கதன் முதலியவர்களோடும், கற்பிற் சிறந்த அருந்ததியே வணங்கத்தக்க, இனிய சொற்களையும், இளமையான வஞ்சிக்கொடி போன்ற மேனியை உடையவளுமாகிய சீதாதேவி இருக்கின்ற இலங்கை மாநகரத்தின் ஒரு புறத்தில் உள்ள, ஒரு குன்றில் வந்து தங்கினான் இராமபிரான்.

தன் தம்பி இலக்குவன், தான் சோர்வுற்ற சமயத்தில் ஆறுதல் தந்தும், இறக்க எண்ணியபோதெல்லாம் ஆருயிர் தந்தும் உடனிருந்து தேற்றியமையால், ''மருந்தனைய தம்பி'' எனப்பட்டான் என்க. இதுபோலவே முன்பும் மருந்தனைய தங்கை என்று சூர்ப்பணகையையும், 'மருந்தனைய தேவி' என்று சீதாதேவியையும் குறிப்பிட்டதையும் நினைவுகூர்க. இராமபிரான் தங்கியிருந்த மலை சுவேல பர்வதம் என்று வான்மீகம் கூறுகிறது. 'பவளமால்வரை' என்கிறான் கவிஞன், பிறிதோர் இடத்தில். 'அம்சொல் இளவஞ்சி' என்ற சொற்றொடர், சீதாதேவியின் அழகு, இனியசொல், இளமை, வஞ்சிக்கொடி போன்ற மேனி என்று எல்லா அழகுகளையும் உள்ளடக்கிய ஒரு அழகிய சொற்றொடர் என்பதை உணர்க. அருந்ததி வசிட்ட முனிவரின் மனைவி. கற்புக்கு எடுத்துக்காட்டாகக் கூறப்படுபவள்.

14. பாசறை அமைக்கும்படி பணித்தல்

நீலனை இனிது நோக்கி, நேமியோன், 'விரைய, நீ நம்
பால்வரு சேனைக்கெல்லாம் இழைத்தியால் பாடி' என்னா,
கால்வரை வணங்கிப் போனான், கல்லினால் கடலைக் கட்டி,
நூல்வரை வழிசெய்தானுக்கு, அந்நிலை நொய்தின் சொன்னான். (6842)

Koviloor Digital Library

(நேமி-சக்கரப்படை; விரைய-விரைவில்; இழைத்தல்-அமைத்தல்; கல்-மலை; கட்டுதல்-அடைத்தல்; நொய்தின்-விரைவாக; பால்-பகுப்பு; பாடி-பாசறை/சேனைகள் தங்குமிடம்; வரை-இடம்/முறை; நிலை-பணி/கட்டளை)

சக்கரப்படையைக் கையில் ஏந்திய திருமாலின் அம்சமான இராமபிரான், சேனைத்தலைவன் நீலனை நன்கு பார்த்து அவனை அழைத்து, ''நீ, நம்முடன் அணிவகுத்து வந்திருக்கின்ற வானரச் சேனைகள் எல்லாம் தங்குவதற்குரிய பாசறையை விரைவாக அமைத்துக் கொடுப்பாயாக!'' என்று கூறவும், நீலன் இராமபிரானது திருவடிகளை வணங்கி, உடனே மலைகளினால் கடலைத் தடுத்து, சிற்பநூல்களில் கூறியுள்ளபடி, அணையைக் கட்டி இலங்கைக்குச் செல்ல வழிவகுத்துத்தந்தவனான தெய்வத்தச்சன் நளனிடம் சென்று, இராமபிரானது கட்டளையைத் தெரிவித்தான்.

நீலன் படைத்தலைவன், நளன்-தச்சன்/சிற்பி.

15. நளன் பாசறை அமைத்தல்

பொன்னினும், மணியினானும், நான்முகன் புனைந்த பொற்பின்
நல்நலம் ஆகவாங்கி, நால்வகைச் சதுரம் நாட்டி,
இன்னர் என்னாத வண்ணம், இறைவர்க்கும் பிறர்க்கும் எல்லாம்,
நல்நகர் நொய்தின் செய்தான்; தாதையும் நாண் உட்கொண்டான்.
(6843)

(பொற்பு-அழகு; நலம்-அழகு; வாங்கி-பிரித்து; நாட்டி-நிறுவி; இறைவன்-அரசன்/சுக்கிரீவன்; நான்முகன்-பிரமதேவன்; நொய்தின்-விரைவில்/எளிதில்; தாதை-தந்தை/விசுவகருமா)

நளன் அந்த நிலத்தை அழகுபடப் பிரித்து, நான்குமுகம் கொண்ட சதுரமாக நிறுவி, இந்த இடத்தில் இவர்கள்தான் இருக்கலாம் என்று பாகுபடுத்தாது, எல்லோர்க்கும் பொருந்தும் வண்ணம், தன்தலைவனாகிய சுக்கிரீவன், வீடணன் போன்றவர்க்கும் மற்ற வானரச்சேனையினருக்கும் ஒளிபொருந்திய நல்ல பாசறைவீட்டை, பொன்னாலும், நவரத்தினங்களாலும் பிரமன் முன்பு அமைத்த அழகுக்கு ஒப்ப, எளிதிலும், விரைவாகவும் அமைத்து முடித்தான். அது கண்டு அவன் தந்தையாகிய விசுவகருமாவும், ''இதுபோல் நம்மால் அமைக்கமுடியுமோ?'' என்று ஐயுற்று வெட்கமடைந்தான்.

நளனின் தந்தை மயன் என்று வான்மீகம் கூறுகிறது.

16. வில்லினாற்கு இருக்கை செய்யும் விருப்பினால், பொருப்பின் வீங்கும்
கல்லினால் கல்லை ஒக்கக் கடாவினான்; கழைகள் ஆன
நெல்லினால் அலக்கும் காலும், நிரப்பினான்; தருப்பை என்னும்
புல்லினால் தொடுத்து, வாசப்பூவினால் வேய்ந்து போனான். (6844)

Koviloor Digital Library

(இருக்கை-தங்குமிடம்; விருப்பு-ஆசை; பொருப்பு-மலை; வீக்கம்-மேடு; கடாவுதல்-வீசியெறிதல்/சமன்படுத்துதல்; கழை-மூங்கில்; கால்-தறி/தூண்; அலக்கு-வரிச்சு; தொடுத்தல்-பிணைத்துக்கட்டுதல்)

வில்வீரனாகிய இராமபிரானுக்குத் தங்கும் இடம் அமைக்க வேண்டும் என்ற ஆசையினால், நளன் அம்மலையில் மேலே உள்ள பருத்த கற்களைக் கல்லாலேயே நொறுக்கித் தரையைச் சமன்படுத்தினான்; பின்னர் நெல்லின் இனத்தைச் சார்ந்த மூங்கில்களால், வரிச்சும், தூணும் அமைத்தான். அதன்பின்னர் தருப்பை என்னும் புல்லை ஒன்றோடொன்று சேர்த்துப் பிணைத்து, அதன்மேல் நறுமணமுள்ள மலர்களை அடுக்கி, கூரைவேய்ந்து சென்றான்.

கோதண்டம் என்னும் வில்லினால் வெற்றி விளைவிக்கும் வீரன் என்பதால் இராமபிரானை 'வில்லினான்' என்றார் என்க. நளன் இராம பிரானது கட்டளைக்கோ, சுக்கிரீவனின் உத்தரவுக்கோ இந்தப் பர்ண சாலையை அமைக்கவில்லை. தானே இராமபிரான்பால் கொண்ட ஆர்வத்தால் ஆசையுடன் இதனைச் செய்து முடித்தான் என்பது தோன்ற, 'விருப்பினால்' என்றார் என்க. மலைகளில் உள்ள பருத்த கற்களை எடுத்து, தரை சமமாக இருக்கும்படி அமைத்தான் என்க. மூங்கிலும் நெல்லின் இனமே. எப்படிப்பூனையைப் புலியின் இனம் என்கிறோமோ அதுபோல மூங்கிலும் நெல்லின் இனம் என்கிறது புறநானூறு. 'சிறியிலை வெதிரின் நெல்விளையும்மே' என்பது புறநானூறு. பூனையின் பேரினம் புலியானாற் போல், நெல்லின் பேரினம் மூங்கில் எனப்படும் என்க. மூங்கிலிலும் நெல்விளையும் என்பது நமக்குப் புதியசெய்தி. இதே போலத்தான் முன்பு இலக்குவன் புல்லினால் பர்ணசாலையை அமைத்தான் என்று கூறப் பட்டதையும் இங்கே நினைவுகூர்க. முன்பாடலில் அரசர்களான சுக்கிரீவனுக்கும், வீடணனுக்கும் பொன்னாலும், மணியாலும் இயன்ற பாடிவீடு அமைத்த அதே நளன்தான், தவக்கோலத்தில் இருந்த இராம பிரானுக்கு ஏற்பப் புல்லாலும், தழைகளாலும், மரச்சட்டங்களாலும் பர்ணசாலையை அமைத்தான் என்பதை நோக்குக. பர்ணசாலை மலை மீதே அமைக்கப்பட்டது என்பதை நினைவிற்கொள்க. நளன் மிக எளிதாகப் பாடிவீடு அமைத்தான் என்பதைக் கல்லையும், புல்லையும், நெல்லையும், மலர்களையுமே கொண்டு அமைத்தான் எனக்கூறிய நயம் நோக்குக. 'வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்' என்பது முதுமொழி.

17. எல்லோரும் தத்தம் இருக்கை எய்துதல்

வாயினும் மனத்தினாலும் வாழ்த்தி, மன்னுயிர்கட்கு எல்லாம்
தாயினும் அன்பினானைத் தாள் உற வணங்கி, தம்தம்
ஏயின இருக்கை நோக்கி, எண்திசை மருங்கும் யாரும்
போயினர்; பன்னசாலை இராமனும் இனிது புக்கான். (6845)

Koviloor Digital Library

(மன்-நிலைபெற்ற; ஏயின-அமைக்கப்பட்ட; மருங்கு-பக்கம்; பன்னசாலை-இலைக்குடில்; பர்ணம்-இலை)

உலகத்தில் நிலைபெற்ற உயிரினங்களிடத்தெல்லாம் தாயைக் காட்டிலும் சாலப்பரிந்து அன்பு செய்பவனான இராமபிரானை, எல்லோரும் தத்தம் வாயாலும், உள்ளத்தினாலும் போற்றித் துதித்து, அவன் திருவடிகளில் தம் சிரம்படும்படி விழுந்து வணங்கி, தத்தமக்கு என அமைக்கப்பட்ட தங்குமிடமாகிய பாடிவீடுகளை நோக்கி, எட்டுத்திசைப் பக்கங்களிலும் சென்றனர். இராமபிரானும், தனக்கென அமைக்கப்பட்ட இலைக்குடிலுக்கு இனிதே சென்று சேர்ந்தான்.

பொதுவாக, இறைவனை மனம், மொழி, மெய்யாகிய திரிகரணங்களால் வணங்கவேண்டும் என்பது ஒரு வழிபாட்டுமுறை. இங்கே எல்லோரும் வாயால் வாழ்த்தி, மனத்தால் துதித்து, சிரத்தால் வணங்கிச் சென்றனர் என்பதாம். பன்னசாலை என்பது பர்ணசாலை என்ற வடசொல்லின் சிதைவு. பர்ணம் என்ற வடசொல்லுக்கு இலை என்பது பொருள். எனவே பன்னசாலை என்பது இலைக்குடில் ஆயிற்று என்க.

18. சூரியன் மறைதல்

பப்புநீர் ஆயவீரர், பருவரை கடலில் பாய்ச்ச,
துப்புநீர் ஆயதூய சுடர்களும், கறுக்க வந்திட்டு,
உப்புநீர் அகத்துத் தோய்ந்த ஒளிநிறம் விளங்க, அப்பால்,
அப்புநீர் ஆடுவான்போல், அருக்கனும் அத்தம் சேர்ந்தான். (6846)

(நீர்-நீர்மை/தன்மை; பரப்பு-பரவிய; பருவரை-பெரியமலைகள்; பாய்ச்சுதல்-வீசுதல்; துப்பு-பவளம்; சுடர்-கிரணம்; அப்புநீர்-நன்னீர்; ஆடுதல்-முழுகுதல்; அருக்கன்-சூரியன்; அத்தம்-அஸ்தமனகிரி/மறைமலை; அகம்-மார்பு/உடல்)

விரிந்து பரந்த வானரச்சேனையின் வானரவீரர்கள், பெரியபெரிய மலைகளைக் கடலில் வீசியதால், உப்புநீர் மேல் எழும்பியதால் பவளம் போன்றசிவந்ததூய்மையானகிரணங்களையுடைய சூரியன்தான்கறுத்துப் போய்விட்டதாகவும், உப்புநீர் தோய்ந்த கடல் நீரினால் தன் ஒளியும் நிறமும் மங்கிப்போய்விட்டதாகவும் கருதி, மீண்டும் தன் நன்னிறத்தையும் ஒளியையும் பெறுவதற்காக அப்பாலுள்ள நல்லதூய நீர் நிறைந்த கடலில் மூழ்குவதற்காக மேற்கு மலையாகிய அத்தமனகிரியில் சென்று மறைந்தான்.

இயல்பாகவே அஸ்தமனகிரியில் மறையப்போகும் சூரியன் தனது கறுத்து மங்கிப்போன கிரணங்களையும், தன்னையும் ஒளிவிளக்கம் பெறுவதற்காக நன்னீரில் ஆடும் பொருட்டு மேற்குமலையில் மறைந்தான் என்று, கவிஞன் தனது குறிப்பைச் சூரியன்மேல் ஏற்றிக்கூறியிருப்பதால் இப்பாடல் தன்மைத் தற்குறிப்பேற்ற அணியின்பாற்படும். தாம் செய்த

Koviloor Digital Library

தீவினைகள் எல்லாம் நீங்குவதற்காகக் கங்கை போன்ற ஆறுகளிலும், கடலிலும் மக்கள் தீர்த்தம் ஆடுவது உண்டு. கடலில் நீராடும்போது அதன் உப்பின்தன்மை உடலெல்லாம் ஒட்டிக்கொண்டுவிடும். அதைப்போக்கு வதற்காக அருகில் உள்ள நல்ல கிணற்றுநீரிலோ, ஆற்றுநீரிலோ மீண்டும் நீராடித் தம் உடலைத் தூய்மைப்படுத்திக் கொள்வது மக்கள் இயல்பு. அதுபோல் சூரியனும் செய்து கொண்டான் என்று கூறுவது கம்பனின் கற்பனைத்திறன். ''தீது நீங்கக் கடலாடியும், மாசுபோகப் புனல்மூழ்கியும்' என்பது பட்டினப்பாலை. சூரியன் கீழைக்கடலில் தோன்றி மேலைக் கடலில் மறைவதாகவும், உதயகிரியில் தோன்றி, அத்தமன கிரியில் மறைவதாகவும் கூறுவது கவிமரபு.

19. சந்திரன் தோன்றுதல்

மால்உறு குடகவானின் வயங்கிய வந்து தோன்றும்
பால்உறு பசுவெண் திங்கள், பங்கய நயனத்து அண்ணல்,
மேல்உறு பகழி தூர்க்க வெகுண்டனன், விரைவின் வாங்கி,
கால்உற வளைத்த காமன் வில்எனக் காட்டிற்று அன்றே! (6847)

(மால்-பெருமை; குடகு-மேல்திசை; வயங்குதல்-விளங்குதல்; வெண்-வெள்ளிய; திங்கள்-சந்திரன்; பங்கயம்-தாமரைமலர்; நயனம்-கண்கள்; அண்ணல்-பெரியோன்/இராமபிரான்; பகழி-அம்பு; தூர்த்தல்-எய்தல்/சொரிதல்; கால்-நுனி; காமன்-மன்மதன்; பசுமை-இளமை; வாங்கி-கைக்கொண்டு; உற-பொருந்த)

பெருமைபொருந்திய மாலை மயக்கம் தருகின்ற, மேற்குத்திசையில் விளங்கும்படி வந்து உதிக்கின்ற, பால்போலும் கிரணங்களைச்செலுத்தும் இளமையான வெள்ளியநிறம் கொண்டதும், பிளவாகப் பிளந்தது போலும் தோற்றம் தருவதுமான பிறைச்சந்திரன், செந்தாமரை மலரினைப் போன்ற செய்ய கண்களை உடைய, பெருமை பொருந்தியவனான இராம பிரான் மீது, தனது மலரம்புகளை எய்வதற்காகச் சினம்கொண்டான். அது மன்மதன் வில்லின் இருநுனிகளும் பொருந்துமாறு தன் காலில் வைத்து வளைத்து, எய்கின்ற வில்லின் தோற்றம்போலக் காணப்பட்டது.

மாலையில் தோன்றிய அரைவட்டச்சந்திரனுக்கு மன்மதன் வளைத்துச் செலுத்தும் வில் தோற்றத்தால் உவமை என்க. 'மால்' என்ற சொல்லுக்குப் 'பெருமை' மயக்கம் என்ற இருபொருள்களும் உண்டு. எனவே இரு பொருளும் பொருந்தும்படி உரை காணப்பட்டது. பசுமை இளமையைக் குறிக்கும். 'பால்' என்ற சொல்லும், பால் என்ற சாதாரணப் பொருளையும், பகுப்பு, பிளவு என்ற பொருளையும் தரும் என்பதும் அறிக. கால் என்ற சொல் சாதாரணமான காலையும் நுனி/முனை என்ற பொருளையும் தரும். வளைத்த பின்பு அரை வட்டமாகத் தோன்றும் வில், மாலையில் மேற்குத் திசையில் தென்படும் பிறைச்சந்திரனுக்கு உவமை.

Koviloor Digital Library

20. சந்திரன் சுட்டது

நூற்றிதழ் கமலம் தந்த, நுண்ணரும் சுண்ணம் உண்ணத்
தீற்றி மென் பனிநீர் தோய்ந்த சீகரத்தென்றல் என்னும்
காற்றினும், மாலைஆன கனலினும், காமன் வாளிக்
கூற்றினும், வெம்மை காட்டிக் கொதித்தது, குளிர் வெண்திங்கள்.
(6848)

(வெண்-வெள்ளிய; கமலம்-தாமரைமலர்; சுண்ணம்-மகரந்தப்பொடி /பூந்தாதுக்கள்; தீற்றுதல்-பூசிக்கொள்ளுதல்; கனல்-நெருப்பு; வாளி-அம்புகள்; கூற்று-இயமன்; வெம்மை-கொடுமை; கொதித்தல்-வெதுப்புதல்; தந்த-தோற்றுவித்த; நுண்-நுட்பமான; தோய்தல்-படிதல்; சீகரம்-நீர்த்துளிகள்/திவலை; நூறு-பல)

பலநூற்றுக்கணக்கான இதழ்களையுடைய தாமரைமலர் தோற்றுவித்த நுட்பமான மகரந்தப் பூந்தாதுக்களைத் தன் மேனியெங்கும் பூசிக்கொண்டு, மெல்லிய குளிர்ச்சி பொருந்திய பனி நீர்த்திவலைகள் தோய்ந்த, தென்றல் என்னும் இதமான காற்று, அந்திமாலை என்று கூறப்படும் நெருப்பு; மன்மதனின் மலரம்புகள் என்று கூறப்படும் இயமன், அவற்றையெல்லாம் காட்டிலும், இந்தக் குளிர்ச்சி பொருந்திய வெள்ளிய சந்திரன், கொடிய வெம்மையை வெளிப்படுத்தி, இராமபிரானின் விரகதாபத்தை மிகுதிப் படுத்திக் கொதியாய்க் கொதித்தது.

நூறு என்பது எண்ணுப்பொருளில் வாராது, பல என்ற பொருளைத் தரும். தலைவியைப் பிரிந்த தலைவர்க்கும், தலைவனைப் பிரிந்த தலைவிக்கும், விரகதாபத்தால், தவிக்கின்ற இவர்கள் இருவருக்கும் தென்றல் காற்று, அந்திமாலைப்போது, மன்மதன் மலரம்புகள், குளிர்ச்சி பொருந்திய சந்திரன் இவைகள் எல்லாம் இயற்கையிலேயே குளிர்ச்சி யாகவும் மென்மையாகவும் இருந்தாலும், அவர்களுக்கு வெப்பத்தையும், கொடுமையையும் தரும். 'குளிர்திங்கள் கொதித்து' என்ற சொல்லாட்சி நினைத்து இன்புறற்பாலது. இவ்வாறு கூறுவது அகத்திணையில் இயல் பென்றாலும், கம்பனும் காப்பியப்போக்கில், பலஇடங்களில் இவ்வாறு கூறியிருப்பதையும் உணர்க. ஒன்று நூறாகத் தோற்றுவது 'ஒருநாள் ஏழுநாள் போற் செல்லும்' என்னும் குறளாலும் (1219) ஒரு நாள்போவது ஒரு யுகம் போலத் தோன்றுகிறது, என்று கூறும் உலகவழக்காலும், 'ஒருவர் கூறை எழுவர் உடுத்து' என்ற பரிமேலழகர் உரையாலும் உணரலாம்.

இதே பொருளைத்தரும் மதுரைக் காஞ்சிப் பாடல் ஒன்று கேளுங்கள். ''கூற்று ஒன்று அல, ஒரு கோடி கெட்டேன்; கொழுந்து ஒன்று; தென்றல் காற்று ஒன்று; இளம் பிறைக்கீற்று ஒன்று; கார்க்கடல் ஒன்று; கண்ணீர் ஊற்று ஒன்று'' என்பது மதுரைக்காஞ்சி.

Koviloor Digital Library

21. செயிர்ப்பினும் அழகுசெய்யும் திருமுகத்து அணங்கைத் தீர்ந்து
துயிற்சுவை மறந்தான் தோள்மேல், தூ நிலாத்தவழும் தோற்றம்,
மயிற்குலம் பிரிந்தது என்ன, மரகத மலைமேல், வன்னி
உயிர்ப்புடை வெள்ளைப் பிள்ளை வாள்அரா ஊர்வபோன்ற. (6849)

(செயிர்த்தல்-சினத்தல்; அணங்கு-தெய்வப்பெண்/சீதாதேவி; தீர்தல்-பிரிதல்; துயில்-உறக்கம்; சுவை-இன்பம்; தூ-நல்ல; வன்னி-அக்னி/நெருப்பு; உயிர்ப்பு-மூச்சுக்காற்று; பிள்ளைஅரா-இளம்பாம்புகள்; வாள்-கொடிய; தவழுதல்-படிதல்; குலம்-நற்பிறப்பு; குலம்-கூட்டமுமாம்)

மிக்க சினம் கொண்டாலும் கூட அழகு நிரம்பி வழியும் அழகிய திருமுகத்தைக் கொண்ட, தெய்வப்பெண்ணான சீதாதேவியைப் பிரிந்து, தூக்கம் என்ற ஒரு நிலையின் இன்பத்தையே கண்டறியாத - மறந்து போனவனான இராமபிரான் தோளின்மீது, தூய, அழகிய நிலவு படிந்து ஊருகின்ற தன்மையின் தோற்றம் எப்படியிருந்ததென்றால்; சிறந்த மயில் கூட்டம் தன்னை விட்டுப் பிரிந்து போய்விட்ட பிறகு வெறுமையாய்க் காட்சியளித்த ஒரு மரகத மலையின்மீது, நெருப்புப்போன்று பெரு மூச்சுவிட்டுக் கொண்டு ஒரு வெண்மையான கொடிய பாம்புக்குட்டி ஊர்ந்து செல்வதைப் போன்றிருந்தது.

''செயிர்ப்பினும் அழகு செய்யும் திருமுகத்து அணங்கு'' என்பது மிக அருமையான சொற்றொடர். இன்றும் இளைஞர்கள் அதே பொருள்படத் தன் காதலியரிடம் கூறி வருவது கண்கூடு. இங்கே துயிலுவதை ஒரு சுவை என்கிறான் கம்பன். நாம் அறிந்ததெல்லாம் அறுசுவைதான். அந்த அறுசுவையில் இந்த துயிற்சுவை அடங்காது. எனினும் கம்பன் துயிலுவதை ஒரு சுவை என்று கூறுவதை நன்கு உணர்க. 'On Lying In Bed' என்று சார்லஸ் டிக்கன்ஸின் ஒரு அருமையான கட்டுரை உண்டு. அதில் இந்தச்சுவை பற்றி மிகவிரிவாகப் பேசப்பட்டிருப்பதும் கற்று உணர்க. 'பிள்ளை அரா' என்பதும் ஒரு அரிய சொல்லாட்சி. பாம்புக்குட்டி என்பது பொருள். மனித இளமைக்குப் பிள்ளைபோல, விலங்குகளின் இளமையையும் கவிஞன் குறிக்கும் பாங்கு நோக்குக. இங்கே 'மரகதமலை' இராம பிரானுக்கு ஒப்பு. 'தயரதன்பெற்ற மரகத மணித்தடம்' என்பது நம்மாழ்வார் திருவாய்மொழி. பாம்புக்கு மயில் பிறவிப்பகை. எனவே இங்கே மயில் மரகதமலையை விட்டு நீங்கியபின், வாள்அரா அச்சமின்றி ஊர்ந்து திரிந்தது என்று கவிஞன் கூறும் நயம்நோக்குக. ''மஞ்ஞை குஞ்சரம் கோள் இழைக்கும் பாம்பைப் பிடித்துப் படம் கிழித்தாங்கு'' என்பது திருக்கோவையார்.

22. மன் நெடும் நகரம்மாடே வரவர, வயிரச்செங்கைப்
பொன் நெடும் திரள்தோள் ஐயன், மெய்உறப் புழுங்கி நைந்தான்;
"பல்நெடும் காதத்தேயும் சுடவல்ல, பவளச் செவ்வாய்,
அந்நெடும் கருங்கண், தீயை அணுகினால் தணிவது உண்டோ?" (6850)

Koviloor Digital Library

(மன்-நிலைபெற்ற; மாடு-பக்கம்/அண்மை; வயிரம்-வன்மை; பொன்-அழகிய; ஐயன்-தலைவன்; மெய்-உடல்; புழுங்கி-வெதும்பி/வியர்த்து; நைதல்-வருந்துதல்; தணிவது-சுடாது ஆறியிருப்பது; நகரம்-இலங்கை; சுட-எரிக்கும்; கருமை-கொடுமை)

நிலைத்த புகழ்பெற்ற பெருமைசான்ற, மிகப்பெரிய இலங்கை மாநகரத்திற்கு மிக அருகில் வரவர, உறுதியான வயிரம் போன்ற சிவந்த கைகளையும், அழகிய நீண்ட திரண்ட தோள்களையும் உடைய தலைவனான ஸ்ரீராமபிரான், சீதாதேவியின் பிரிவால் தன் உடலெல்லாம் வியர்த்து, வெதும்பி, மிகவருந்தினான். ''மிக நீண்ட தூரத்தில் இருந்தால் கூட சுட டெரிக்கும் வல்லமைஉடைய பவழம்போல் சிவந்த வாயும், நீண்ட கரிய கண்களும் உடைய கற்பின் கனலாகிய சீதாதேவி இருக்குமிடத்தை மிக நெருங்கிவந்தால், அந்தத்தீ சுடாமல், பின் தணிந்தாபோகும்? சுடத்தானே செய்யும்'' என்கிறான் கவிஞன்.

கடலைத்தாண்டி இக்கரைக்கு வந்துவிட்டதால் ''மன்நெடும் நகரம் மாடே வரவர'' என்றான் என்க. முதன்முதலில் பஞ்சவடியில் சீதாதேவியைப் பிரிந்தபோதே அவ்வளவு தூரத்தில் இருந்தபோதே அந்த நெருப்புச் சுட்டது. இன்னும் அருகே நெருங்கி இலங்கையின் எல்லையைத் தொட்டுவிட்ட பிறகும் அந்தத்தீ சுடாமல் தணிந்தாபோகும்? என்று கேட்கிறான் கவிஞன். ''நீங்கின் தெறூஉம், குறுகுங்கால் தண் என்னும் தீ'' என்பது குறள்-1104. ஆனால் அதற்கு மாறாக இந்தக் கற்புக்கனல் குறுகுங்கால் தண் என்னாது மிகவும் சுடுகின்றது என்று கூறும் கவிஞனின் கவிநயம் நோக்குக. ''தொடிற் சுடின் அல்லது காமநோய் போல, விடிற்சுடின் ஆற்றுமோ தீ?'' என்கிறான் வள்ளுவன் குறள்-1159. எனவே இந்த நெருப்பு, கூடல் கொண்டாலன்றித் தணியாது என்பது குறிப்பு. சீதாதேவியை நெருப்பாக உருவகம் செய்தார் என்க. ''நீருள் குளிப்பினும் காமம் சுடும்; குன்றேறி ஒளிப்பினும் காமம் சுடுமே'' என்பது நாலடியார்.

23. வீடணன் ஒற்றர்களைக் கண்டறிதல்

இற்றிது காலம் ஆக, இலங்கையர் வேந்தன் ஏவ,
ஒற்றர் வந்து அளவு நோக்கி, குரங்கென உழல்கின்றாரைப்
பற்றினன் என்ப மன்னோ; பண்டு, தான் பலநாள் செய்த
நற்றவப் பயன் தந்து உய்ப்ப, முந்துறப் போந்த நம்பி. (6851)

(உழல்தல்-திரிதல்; பண்டு-முன்பு; நாள்-காலம்; முந்துதல்-விரைந்து வருதல்; நம்பி-ஆடவரிற்சிறந்தோன்; பற்றுதல்-பிணித்தல்/பிடித்துக் கொள்ளுதல்; இற்று-இத்தன்மையான; உய்த்தல்-செலுத்துதல்; ஒற்றர்-வேவுகாரர்கள்)

இவ்வாறு சூரியன் மறைந்து சந்திரன் எழுகின்ற அந்திப்போதில், இலங்கையர்க்கு அரசனான இராவணன் கட்டளைப்படி, வேவுபார்க்கும்

Koviloor Digital Library

ஒற்றர்கள், குரங்கு உருக்கொண்டு குரங்குக் கூட்டத்தோடு கூட்டமாகக் கலந்து, வானரச்சேனையின் ஆற்றல், தகுதி, எண்ணிக்கை முதலிய வற்றின் அளவுகளை பாசறைக்குள் திரிந்துகொண்டே அளந்து பார்த்துக் கொண்டிருக்கும் சமயம், முன்பு தான் பலகாலம் செய்த நல்ல நவத்தின் பயனால் செலுத்தப்பட்டு விரைந்துவந்து இராமபிரானை அடைக்கலம் அடைந்த ஆடவரிற் சிறந்தோனாகிய வீடணன், அவர்களைக் கண்டறிந்து, பிடித்துவிட்டான்.

அரக்கர்கள் தாம் விரும்பும்நேரம், விரும்பும் வடிவம் பெற்றுக் கெள்ளும் வரம்பெற்றவர்கள். எனவே அவர்களுக்கு 'காம ரூபர்' என்றும் ஒரு பெயருண்டு. காமம்-விருப்பம்; ரூபம்-வடிவம்; இங்கே வான்மீகம் வேறுபடுகிறது. சேது கட்டுவதற்கு முன்பே, சார்த்தூலன் என்னும் ஒற்றன், இராவணனிடம் வந்து, அணைகட்டிக் கடல்கடந்து இலங்கைக்கு வானரச்சேனையுடன் இராமஇலக்குவர் வரப்போகின்றனர் என்று கூறி எச்சரித்ததாகவும், அதற்குப் பின்புதான் இராவணன் சுகன் என்பவனையும் சாரணன் என்பவனையும், ஒற்றர்களாகச் சுவேல மன.லக்கு அனுப்பினான் எனவும் கூறுகிறது. இந்தச் சுகன் பறவை உருக்கொண்டு வந்து சுக்கிரீவனைச் சந்தித்தான் என்றும் அதுகண்ட வானரவீரர்கள் அவனைத் துன்புறுத்தினர் என்றும், வீடணன் அவர்களைக் கொல்லும்படி கட்டளை யிட்டதாகவும் மேலும் வான்மீகம் கூறுகிறது. அவர்கள் இராமபிரானைச் சரணடைந்தனர் என்றும், இராமபிரான் அவனை விட்டுவிடும்படி கூறியதால் விட்டுவிட்டனர் என்றும் கூறுகிறது வான்மீகம்.

24. பேர்வுறு கவியின் சேனைப் பெருங்கடல் வெள்ளம் தன்னுள்,
ஓர்வுறும் மனத்தனாகி, ஒற்றரை உணர்ந்து கொண்டான்;
சேர்வுறு பாலின்வேலைச் சிறுதுளி தெறித்தவேனும்,
நீரினை வேறு செய்யும் அன்னத்தின் நீரன் ஆனான். (6852)

(பேர்தல்-இடம்பெயர்ந்து செல்லுதல்; கவி-குரங்கு/வானரம்; ஓர்தல்-ஆராய்தல்; நீரன்-இயல்புடையவன்; பாலின் வேலை; பாலின்மிகுதி; நீர்மை-தன்மை)

இடம் விட்டுப்பெயரும் இயல்புடைய குரங்குச்சேனையின் மிகுதியான கடல் வெள்ளத்துள், யாரேனும் பகைவர்கள் வந்து புகுந்து விடுவார்களோ என்று கண்ணும் கருத்துமாகப் பார்த்துவந்த வீடணன், அக்கூட்டத்துள், குரங்கு உருவத்தில் இரண்டு ஒற்றர்கள் திரிவதை நன்கு புரிந்துகொண்டான். பாற்கடலில் தண்ணீரே வந்து சேர்ந்தாலும், அதைப் பாலாகவே ஏற்றுக்கொள்ளுத் தன்மைவாய்ந்த அந்தக் கடலிலிருந்து சிறுதுளி தண்ணீர் தெறித்தாலும், பாலிலிருந்து தண்ணீரைப் பிரித் தெடுக்கும் இயல்புகொண்ட அன்னத்தைப்போல வீடணன் இருந்தான்.

வீடணனுக்கு அன்னம் உவமை. அன்னம் பாலில் கலந்துள்ள நீரை மட்டும் தனியே பிரித்தெடுக்கும் ஆற்றல் பெற்றது என்று கூறுவது

Koviloor Digital Library

கவிமரபு. அதுபோல் வானரச் சேனைக்குள் புகுந்த அரக்க ஒற்றர்களை வேறுபடுத்திக் கண்டறிந்தான் வீடணன் என்பது குறிப்பு.

25. பெருமையும் சிறுமைதானும் முற்றுறு பெற்றி ஆற்ற
அருமையின் அகன்று, நீண்ட விஞ்சையுள் அடங்கி, தாமும்
உருவமும் தெரியாவண்ணம், ஒளித்தனர், உறையும் மாயத்து
இருவரை ஒருங்கு காணும் யோகியும் என்னல் ஆனான். (6853)

(முற்றுறு-முழுவதும்; பெற்றி-தன்மை; விஞ்சை-வித்தை/அறிவு; ஒளித்தல்-மறைத்தல்; மாயம்-தந்திரம்; ஒருங்கு-ஒருசேர)

உண்மை உருவம் தெரியாவண்ணம், குரக்குருவாய் ஒளித்து நின்ற சுக, சாரணன் என்ற இரு ஒற்றர்களையும் வீடணன் கண்டுபிடித்து விட்டான் என்பதை ஒரு பெரிய தத்துவத்தின்மூலம் விளக்குகிறான் கவிஞன். பெரியதிற் பெரியதும், சிறியதிற் சிறியதுமான பொருள்களை, முழுவதும் அறியும், இயல்பும் ஆற்றலும் எல்லோருக்கும் எளிதில் கைவந்துவிடாது. நம் ஊனக்கண்களுக்கு அவ்வளவு எளிதில் தெரிந்துவிடாது. அது அரிதின் முயன்று, தவம் செய்து, நீண்டவேதங்களின் பொருள்களை உணர்ந்து, தாமும் பிறர்கண்ணுக்குத் தெரியாமல் தம் உருவமும் மற்றோர்க்குத் தெரியாமல், தம்மைத் தமக்குள்ளே ஒளித்துக்கொண்டு விளங்கும் சித்தர் களுக்கு மட்டுமே புலனாவதாகும். இந்த விசித்திரத் தன்மைக்குச் சித்தி யோகம், என்று பெயர். இந்தச் சித்தி பெற்றவர் யோகியர் எனப் படுகின்றனர். இந்த யோகியர்களால், சீவாத்மாவையும், பரமாத்மாவை யும் ஒருசேரக் காணமுடியும். உயிர்ஜீவாத்மா; இறைவன் பரமாத்மா; சிறிதிற் சிறியது ஜீவன்; பெரிதிற்பெரியது இறைவன். அதுபோல இப்பொழுது வீடணனும் ஒளிந்து மறைந்து தங்கியிருந்த இரு ஒற்றர் களையும் ஒருசேரக் கண்டான் என்பது இப்பாடலின் திரண்டகருத்து.

சித்தி எட்டு வகைப்படும். இதை அஷ்டாங்க சித்தி என்பர். சித்தர்களில் பெரிதும் போற்றப்படுபவர் திருமூலர் என்பதை அறிக. அட்டமாசித்திகள் என்பன அணிமா-அணுவளவாதல்; மகிமா-மிகப்பேருருக்கொள்ளுதல்; கரிமா-கண்டிப்புள்ளவற்றை ஊடுருவிச்செல்லுதல்; இலகிமா-உடல் இலகுவாதல்; பிராத்தி-வேண்டுவனவற்றை அடைதல்; பிரகாமியம்-நிறைவுடையதாதல்; ஈசத்துவம்-ஆட்சி உளவாதல்; வசித்துவம்-எல்லாம் தன்வசமாக்குதல்; மாயம் என்பது ஆச்சரியத்தை விளைவிக்கக் கூடிய செயல் என்க.

26. ஒற்றர்களை இராமபிரான் காணுதல்

கூட்டிய விரல் திண் கையால் குரங்குகள் இரங்கக் குத்தி
மீட்டு ஒரு வினை செயாமல், மாணையின் கொடியால் வீக்கிப்
பூட்டிய கையர், வாயால் குருதியே பொழிகின்றாரைக்
காட்டினன் 'கள்வர்' என்னா; கருணை அம் கடலும் கண்டான்.(6854)

Koviloor Digital Library

(கூட்டுதல்-சேர்த்து மடக்குதல்; மீட்டும்-மேலும்; வினை-தீங்கு; வீக்கி-கட்டி; பூட்டுதல்-இணைத்துப்பிணைத்தல்; குருதி-இரத்தம்; கள்வர்-வஞ்சகர்)

விரல்களைஒன்றுசேர்த்து மடக்கி, முட்டியாக்கி வலிய, தம் கைகளால், அந்த மாறுவேடத்தில் இருந்த இரு குரங்குகளையும், ஏனைய வானரச் சேனைகள், தம்மைச் சேர்ந்தவர்களைத்தான் குத்துகிறார்களோ, என்று இரக்கம்கொள்ளும்படி, வேறுஒரு தீங்கும் அந்தக் குரங்குகளுக்குச் செய்யாமல், மாணைக் கொடியென்றும், ஓணான் கொடியென்றும் வழங்கப்படுகின்ற ஒரு கொடியினால் அந்த இருவர் உடலையும் நன்றாக இறுகக்கட்டி, அவர்கள் வேறு ஒன்றும் செய்யமுடியாத வண்ணம், இருவரின் கைகளையும் நன்றாகக் கட்டி, அவர்கள் வாயிலிருந்து இரத்தம் ஒழுகுகின்ற தோற்றத்தில் அவர்களைக் கொண்டுவந்து வீடணன் இராம பிரான் முன் நிறுத்தி, ''இவர்கள் மாறுவேடம் தரித்து வந்த ஒற்றர்கள்-வஞ்சகர்கள்'' என்று கூறினான். அந்த இரு ஒற்றர்களையும் கருணையே வடிவானவனான அழகிய இராமபிரான் உற்று நோக்கினான்.

'மாணைக்கொடி' என்பது ஓணான் கொடி என்று கூறப்படுகிறது. உ.வே.சா.பதிப்பு மட்டும் இதனைக் 'கஜபுஷ்பி' என்றும் கூறுவர், என்று கூறுகிறது. 'கஜபுஷ்பி' என்று பொருள் கொள்வேமேயானால், இந்தக் கொடியைத்தான், மாலையாக அணிந்து கொண்டு வாலியுடன் இரண்டாம்முறை போகும்படி இராமபிரான் சுக்கிரீவனுக்குக் கூறினான் என்று வான்மீகம் கூறுவதை நினைவு கொள்ளலும் தகும். தூதரைப் பற்றியும், ஒற்றர்களைப் பற்றியும் திருக்குறள் மிகத் தெளிவாகத் 'தூது' என்ற அதிகாரத்திலும் 'ஒற்றாடல்' என்னும் அதிகாரத்திலும் கூறப்பட்டிருப்பவையும் ஒப்பு நோக்கத்தகும். இந்த 20ம் நூற்றாண்டில் 'Ambassdor' என்பவர்கள்தான் 9ம் நூற்றாண்டில் தூதர் என்றும், இன்றைய 'Informers' தான் முன்பு ஒற்றர்கள் என்றும் வழங்கப்பட்டார்கள் என்றும் தெரிய வருவதை உணர்க. அப்பொழுதிருந்த தமிழர் அரசியல்முறைதான் இப்போதும் பின்பற்றப்பட்டு வருகிறது எனலாம்.

27. இராமபிரான் அவர்களை வருவிக்க வேண்டுதல்

பாம்பு இழைப்பள்ளி வள்ளல், பகைஞர் என்று உணரான், 'பல்லோர்
நோம் பிழை செய்த கொல்லோ குரங்கு?'' என, இரங்கி நோக்கி,
'தாம் பிழை செய்தாரேனும், 'தஞ்சம்' என்று அடைந்தோர் தம்மை
நாம் பிழை செய்யலாமோ? நலியலீர்; விடுதிர்!'' என்றான். (6855)

(இழைத்தல்-உண்டாக்குதல்; பள்ளி-அணை/பாயல்/படுக்கை; நோம்-நோகும்/வருந்தும்; பிழை-தவறுகள்; நலிதல்-வருத்துதல்)

ஆதிசேஷன் என்ற பாம்பினையே தனது படுக்கையாகக் கொண்ட வள்ளன்மை மிக்க இராமபிரான், அவ்விருவரையும் பகைவர்கள் என்று

Koviloor Digital Library

உணராதவனாய், தம் வானரச்சேனையில் உள்ளவர்கள் தாம் என்று கருதி, ''பிறர்நோகும் படி ஏதேனும் தீங்கு செய்து விட்டனவோ?'' என்று இரக்க முற்று, மற்றவர்களைப் பார்த்து, ''தாங்கள் தவறுசெய்து விட்டபோதும், நம்மை வந்து அடைக்கலம் புகுந்தவர்களிடம், நாமும் அதே தவறைச் செய்யலாமோ? கூடாது. எனவே அவர்களைத் துன்புறுத்தாது, அவர்கள் கட்டை அவிழ்த்து விட்டுவிடுங்கள்'' என்றான் இராமபிரான்.

'நோம்' என்பது, நோகும் என்பதன் இடைக்குறை. துன்புறுத்துதல் என்பது பொருள். 'தாம் பிழை செய்தாரேனும், தஞ்சம் என்று அடைந்தோர் தம்மை, நாம் பிழை செய்யலாமோ?' என்பது இராமபிரான் 'சரணாகதி வத்சலன்' என்பதை நிறுவுகிறது. ஏனவேதான் முதல் அடியிலேயே கவிஞன், இராமபிரானை 'வள்ளல்' என்று கூறிவிட்டான் என்பதையும் உனர்க. இதுதான் காப்பியத்தின் பாவிகம் என்பதும் நாம் அறிந்ததே. 'இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால், என்ன பயத்ததோ சால்பு?' என்பது குறள்-987.

28. வீடணன் இவர்கள் இராவணனால் ஏவப்பட்டவர்கள் என்று விளக்குதல்

அகன் உறப் பொலிந்த வள்ளல் கருணையால் அழுத கண்ணன்,
'நகம் நிறை கானின் வைகும் நம் இனத்தவரும் அல்லர்;
தகை நிறைவு இல்லா உள்ளத்து இராவணன் தந்த ஒற்றர்;
சுகன் இவன்; அவனும் சாரன்' என்பது தெரியச் சொன்னான். (6856)

(அகன்-அகம்/உள்ளம்; நகம்-மலைகள்; வைகுதல்-வாழுதல்; தகை-நற்குணம்; தந்த-அனுப்பிய/ஏவிய; தெரிய-விளங்க)

தன் மனம்பூராவும் கருணையே நிரம்பக்கொண்டவனான இராமபிரான் அவ்வாறு கூறியவுடன், அந்த அருளின் தன்மை கொண்ட இராமபிரானின் பெருங்குணத்தைக் கண்டு கண்களில் நீர்பொழிய நின்ற வீடணன், இராம பிரானை நோக்கி, ''இவர்கள் மலைகள் நிறைந்த காடுகளில் வசிக்கும் நம் நட்பினரான குரக்கு இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர் இவர்கள் நற்குணங்களே சற்றும்அமையப்பெறாத உள்ளத்தை உடைய அரக்கனான இராவணனால் ஏவப்பட்ட ஒற்றர்கள் ஆவார்கள். இவர்கள் ஒற்றறிய வந்தவர்கள். இவன்பெயர் சுகன்; அவன் பெயர் சாரன் (சாரணன்)'' என்று, இராமபிரான் புரிந்துகொள்ளும் வண்ணம் விளக்கமாகக் கூறினான்.

வீடணன் இதுபோன்ற அருட்செயல்களை - கருணைச் செயல்களை இதற்குமுன் கண்டறியாதவன். எனவே இப்போது வள்ளல் கருணை கண்டு, 'அழுத கண்ணன்' ஆனான் என்க. இங்கே வீடணனைக் குரக்கினத்தவரை 'நம் இனத்தவர்' என்று கூற வைத்திருக்கும் கவிஞனின் நோக்கம் உணர்க. எண்ணற்ற அரக்கர்கள் இராவணனிடம் இருந்த போதும், ஒவ்வொருவரின் பெயரையும் நினைவில் வைத்திருந்து கூறும்

Koviloor Digital Library

அவனது நினைவாற்றலும், மேலாண்மைத்திறமும் நோக்குக. இந்த இரு ஒற்றர்களின் முன்னைய வரலாற்றைக்கூட வான்மீகம் மிக விரிவாகப் பேசுகிறது.

29. கல்விக்கண் மிக்கோன் சொல்ல, கருமன நிருதக் கள்வர்,
"வில்விற்கைவீர! மற்று இவ்வானரர் வலியை நோக்கி,
வெல்விக்கை அரிது என்று எண்ணி, வினையத்தால் எம்மையெல்லாம்,
கொல்விக்க வந்தான்; மெய்ம்மை; குரங்கு நாம்; கொள்க!" என்றார்.
(6857)

(மிக்கோன்-சிறந்தோன்; நிருதர்-அரக்கர்; நோக்கி-கண்டு/நினைந்து; வெல்விக்கை-வெல்லும்வகை; அரிது-இயலாது; வினையம்-சூழ்ச்சி)

கல்வியில் மேம்பட்டுச் சிறந்து விளங்குபவனாகிய வீடணன் இவ்வாறு சொல்லுவதைக் கேட்ட, இருண்ட மனம் உடைய அரக்கர்களாகிய வஞ்சக ஒற்றர்கள் இருவரும், இராமபிரானை நோக்கி, "வலிய வில்லினைக் கையில் ஏந்தியிருக்கும் வீரனே! இராமபிரானே! உங்கள் வானரச்சேனையின் வலிமையையும், ஆற்றலையும் இப்போது நன்கு உணர்ந்து கொண்ட இந்த வீடணன், தன் தமையனாகிய இராவணனை இவர்களுடன் போரிடச் செய்து வெற்றிவாங்கித் தருவது என்பது இயலாத காரியம் என்பதை நன்கு உணர்ந்துகொண்டு, உன்னிடம் அடைக்கலம் அடைந்ததுபோல் சூழ்ச்சிசெய்து, எங்களிருவரையும் கொல்லவேண்டும் என்று கூறுகிறான். அவனை நம்பாதீர்கள், நாங்கள் அரக்கர்கள் அல்ல; நாங்கள் இருவரும் உண்மையிலேயே குரங்குகளே! இது சத்தியம் இதை நீ மனத்திற்கொள்வாயாக!" என்று கூறுகின்றனர்.

'கல்விக்கண் மிக்கோன்' என்று வீடணனை முன்னும் பல இடங்களில் கவிஞன் கூறியிருப்பதை நினைவிற் கொள்க. 'கண்ணுடையர் என்போர் கற்றோர்' என்பது குறள். அரக்கர்கள் எப்படி ஒரு நொடிப்பொழுதில் மாறி விடுவர் என்பதைக் குறிக்க, 'கருமன நிருதக்கள்வர்' என்றார் என்க. இதே போல முன்பு சூர்ப்பணகையும், சீதாதேவியைப் பார்த்தவுடன் 'இவள் மாயம் வல்லள் வஞ்சனை அரக்கி' என்று கூறியதையும் நினைவுகூர்க.

30. "கள்ளரே! காண்டி!" என்னா, மந்திரம் கருத்துள் கொண்டான்;
தெள்ளிய தெரிக்கும் தெவ்வர், தீர்வினை சேர்தலோடும்
துள்ளியின் இரதம் தோய்ந்து, தொல்நிறம் கரந்து, வேறுஆய்
வெள்ளிபோன்று இருந்த செம்பும் ஆம் என வேறுபட்டார். (6858)

(கள்ளர்-மாயவேடத்தர்; காண்டி-காண்பாயாக; தெள்ளிய-தெளிந்த; தெரிக்கும்-தெரிவிக்கும்; தெவ்வர்-பகைவர்; துள்ளி-துளி; இரதம்-இரசம் /பாதரசம்; தோய்தல்-படிதல்; கரந்து-மறைந்து; கருத்துள்கொள்ளுதல்-உருவேற்றுதல்)

Koviloor Digital Library

அதனைக் கேட்ட வீடணன், அதனை மறுத்து, இராமபிரானை நோக்கி, ''இவர்கள் வஞ்சகம் மிக்க அரக்கரே; அதனை இப்பொழுது காண்பாயாக!'' என்று கூறி, அதர்வண வேதத்தில் கூறப்பட்டுள்ள அபிச்சார மந்திரத்தைத் தனக்குள் உருவேற்றிக் கொண்டான். தெளிந்த கருத்துக்களை உண்மை போலத் தெரிவிக்கும் பகைவர்களாகிய ஒற்றர்கள், தாம் ஏற்ற மாறுவேடம் வெளிப்பட்டுப் போகப்போகிறது என்று எண்ணினர்; ஒரு துளி பாதரசம் படிந்தால் செம்புகூடத் தனக்குரிய சிவந்த நிறத்தை மறைத்து, வேறுபட்ட வெள்ளைநிறமாய் வெள்ளி போலக்காட்சி தரும். இப்பொழுதும் அந்த மந்திரம்கூறப்பட்டவுடன்வெள்ளிபோன்று இருந்த உலோகம்தன்பழைய வடிவாகிய செம்பின் நிறத்தைப் பெறுவதுபோல, குரங்கின் வடிவம் கொண்டு தன்னை மறைத்திருந்த அந்த ஒற்றர்கள் குரங்கு உருமாறித் தம் உண்மை வடிவமான அரக்கர் உருப்பெற்று நின்றனர்.

மந்திரம் இரண்டு வகைப்படும். ஒன்று வெளிப்பட உரக்க உச்சரிப்பது. இது தூல மந்திரம் எனப்படும். மற்றொன்று சூட்சும மந்திரம். மனத்திற்குள்ளேயே உச்சரித்துக் கொள்ளப்படுவது. வீடணன் இங்கே சூட்சும மந்திரத்தைப் பயன்படுத்தினான் என்பதையே 'மந்திரம் கருத்துள் கொண்டான்' என்றார் என்க. அதர்வண வேதத்தில் கூறப்பட்டுள்ளவற்றில் பெரும்பாலானவை அபிச்சார மந்திரங்கள். அவை பெரும்பாலும் அழிவைத்தான் செய்யும். எனவேதான் இந்த அதர்வண வேதம் பொதுவாக எல்லா இடங்களிலும் ஓதப்படுவதில்லை என்பது கூடுதல் செய்தி. ''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி தானே மந்திரம் என்ப'' என்பது தொல்காப்பியம். மிகத்தாழ்ந்த இயல்புடைய ஒரு உலோகத்தை, உயர்ந்த வேறு ஒரு உலோகமாக மாற்றும் வித்தைக்கு 'இரசவாதம்' என்று பெயர். ''வெந்தழலில் இரதம் வைத்து, ஐந்து உலோகத்தையும் வேதித்து விற்று உண்ணலாம்'' என்பது தாயுமானாரின் தேசோமய வாக்கு. சிலப்பதிகாரத்திலும் கோவலன், தன்னை மயக்க முற்பட்ட இயக்கியைச் சுந்தரிமந்திரம் கூறி மாற்றிய செய்தியும் இங்கு ஒப்புநோக்கத்தகும். 'தீர்வினை' என்பது, ஒற்றர்கள் தம் மந்திர சக்தியால் மாற்றிக்கொண்ட குரங்கு உருவத்தை, இப்போது வீடணன் அதை மாற்றுவதற்குக் கூறுகின்ற மந்திரச் சொல்லாகிய செயல் எனக்கொள்க. ஒற்றர்கள் மயையால் ஒரு செயலைச் செய்தனர். அதை வீடணன், மற்றொரு மந்திரத்தால் மாற்றுச்செயல் செய்து இராமபிரானுக்கு உண்மை நிலையைப் புரியவை

Koviloor Digital Library

(புன்கண்-துன்பம்; புரவலன்-பாதுகாவலன்; மின்-ஒளி; எயிறு-பற்கள்; வெருவுதல்-அஞ்சுதல்; வெற்பு-மலை; மணி-முத்து; முறுவல்-பற்கள்)

துன்புற்று வருந்துபவர்களது துன்பத்தைத் துடைத்துப் பாதுகாக்கும் இயல்புடைய இராமபிரான், மின்னலைப்போன்ற ஒளிவீசுகின்ற கோரப் பற்களையுடையவரும், தம் உண்மை உருவம் வெளிப்பட்டுவிட்டதே என்று அஞ்சி அசையாது நிற்பவரும், மலைபோலப் பருமையும், திண்மையும் அசையாமையும் கொண்ட அந்தக் கொடிய அரக்க ஒற்றர்கள் இருவரையும் நோக்கி, முத்துப்போன்ற வெண்மையானபற்கள்தோன்றும் படி முறுவல் செய்து ''அஞ்சாதீர்கள்! நீங்கள் இங்கு வந்ததன் நோக்கம் என்ன? அதனை எல்லோரும் அறியும்படி கூறுங்கள்'' என்று கேட்டான்.

32. ஒற்றர்கள் உண்மையை ஒப்புக்கொள்ளுதல்

''தாய் தெரிந்து உலகு காத்த தவத்தியை, தன்னைக் கொல்லும்
நோய் தெரிந்து உணரான், தேடிக்கொண்டனன் நுவல, யாங்கள்
வாய் தெரிந்து, உணராவண்ணம் கழறுவார், வணங்கி, மாய
வேய் தெரிந்து உரைக்கவந்தோம், வினையினால், வீர!''என்றார்.
(6860)

(தெரிந்து-ஆராய்ந்து; நுவல-கூற; மாயம்-வஞ்சனை; வேய்-ஒற்று; உரைக்க-தெரிவிக்க; வினை-தீவினை)

ஒற்று அறியும் முறையினை நன்கு அறிந்தவர்களான அவ்விரு ஒற்றர்களும் இராமபிரானை வணங்கி ''வீரனே! உலகத்து உயிரினங்களுக் கெல்லாம் தாயாகத் திகழ்ந்து அவர்களைக் காக்கின்ற, தவஒழுக்கத்தை மேற்கொண்டிருக்கின்ற சீதாதேவியை, தன்னைச் கொல்லும் நோய், அவள்தான் என்பதை ஆராய்ந்து அறியாமல், தானே, தனக்குத் தீங்கு தேடிக் கெண்டவனான எங்கள் அரசன் இராவணன், ''யாரும் அறியாதவண்ணம் ஒற்றறிந்து வாருங்கள்'' என்று எங்களை அழைத்துப் பணித்ததனால், நாங்கள் செய்த தீவினையின் பயனால், வஞ்சகமாக ஒற்றறிந்துபோய் அங்கு தெரிவிப்பதற்காகவே இங்கே வந்தோம்'' என்று உண்மையை ஒத்துக்கொண்டார்கள்.

சீதாதேவி இராவணனை அழிக்கவந்த நோய் என்று இங்கே கூறி யிருப்பதைப் பின்னாலும், ''திட்டிவிடமன்ன கற்பின் செல்வி'' என்றும் ''சீதையென்ற அமிழ்தால் செய்த நஞ்சு'' என்றும் பின்னால் கூறப் போவதையும் ஒப்புநோக்கலாம். 'ஒற்றாடல்' என்பது திருக்குறளின் ஒரு அதிகாரம். ஒற்றாடும் முறைபற்றியும், ஒற்றர்களின் தகுதி பற்றியும் அதன்கண் விளக்கப்படடிருப்பதை ஒப்பிட்டு அறிக.

Koviloor Digital Library

33. இராமபிரான், இராவணனிடம் கூறவேண்டியவற்றை ஒற்றர்களிடம் கூறுதல் [6 பாடல்கள்]

''எல்லைஇல் இலங்கைச் செல்வம் இளையவற்கு ஈந்த தன்மை
சொல்லுதிர்; மகரவேலை கவிக்குல வீரர் தூர்த்துக்
கல்லினின் கடந்தவாறும் கழறுதிர்; காலம் தாழ்த்த
வில்லினர் வந்தார் என்றும் விளம்புதிர்; வினையம் மிக்கீர்!'' (6861)

(வினையம்-செய்தொழில் திறமை; எல்லைஇல்-அளவற்ற; இளவல்-தம்பி; கல்-மலைகள்; கழறுதல்-சொல்லுதல்; தாழ்த்தல்-காலதாமதம் செய்தல்)

இராமபிரான் அவ்வொற்றர்களை நோக்கி, ''செய்யும் தொழிலில் திறமை மிக்கவர்களே! அளவற்ற இலங்கையின் அரசச்செல்வத்தை இளையவனான வீடணனுக்கு நான் தந்துவிட்டதை இராவணனிடம் தெரிவியுங்கள். மகரமீன்கள் நிறைந்த கடலை, மலைகளைக் கொண்டு தூர்த்து வழி வகுத்துக் கொண்டு வானரச்சேனை வீரர்கள் அதனைத் தாண்டி வந்த விதத்தையும் கூறுங்கள். இவ்வளவு காலம் காலம்தாழ்த்தியிருந்த வில்வீரர்களான இராமஇலக்குவரும் வந்து சேர்ந்துவிட்டனர் என்றும் இராவணனிடம் அறிவியுங்கள்'' என்கிறான் இராமபிரான்.

இங்கே ஒன்று நோக்கவேண்டும். பொதுவாக 'இளையவற்கு' என்று கூறுகிறான் பாருங்கள். இப்போது வீடணன் யாருக்கு இளையவன்? இராவணனுக்கு மட்டும் அவன் தம்பியல்லன், இராமபிரானுக்கும் இப்போது தம்பி என்பது குறிப்பு. மகரமீன்கள் நிறைந்த கடல் என்பதால் 'மகராலயம்' என்பது கடலுக்குக் காரணப்பெயர். 'வில்லினர்' என்று பன்மையில் கூறியிருப்பதால், இராமஇலக்குவர் என்ற பொருளுரைக்கப் பட்டது.

34. ''கொத்துறு தலையான் வைகும் குறும்புடை இலங்கைக் குன்றம்,
தத்துறு தடநீர் வேலைதனின் ஒரு சிறையிற்று ஆதல்,
ஒத்து உற உணர்ந்திலாமை, உயிரொடும் உறவினோடும்,
இத்துணை இருந்தது என்னும் தன்மையும் இயம்புவீரால்'' (6862)

(வைகும்-வசிக்கும்; குறும்பு-அரண்; குன்றம்-மலை; தத்துதல்-தாவுதல்; தட-மிக்க; வேலை-கடல்; சிறை-பக்கம்; இயம்புதல்-கூறுதல்; ஒத்துறு-பொருந்த)

''கொத்தாகப் பத்துத்தலைகளையுடைய இராவணன் வசிக்கின்ற, அரண் மிகுந்த இலங்கை என்னும் திரிகோணமலை, தாவிவரும் மிக்க நீரையுடைய கடலின் ஒருபக்கத்தே ஒளிந்து கொண்டு, தனித்திருக்கிறது என்பதை நாங்கள் பொருந்த அறியாததுதான் இத்தனை நாளும், இராவணன் தன் உயிரோடும், உறிவினரோடும் வாழ்ந்து வந்ததற்குக்

Koviloor Digital Library

காரணம் ஆகும் என்று இந்தச் செய்தியையும் அவனுக்கு எடுத்துக் கூறுங்கள்'' என்கிறான் இராமபிரான்.

''கொத்துறு தலையான்'' என்பது ஒரு நகைச்சுவைச் சொற்றொடர். இலங்கை திரிகோணமலை என்பதால் 'இலங்கைக் குன்றம்' எனப்பட்டது என்க. இலங்கை எங்கே இருக்கிறது என்பதை அறியாததால்தான் இத்துணை காலம் தாழ்த்த நேர்ந்தது என்பதை முன்பு அனுமனும், சீதாதேவியும்கூடக் கூறியிருப்பதை இங்கு நினைவுகூர்க. ''ஈண்டு நீ இருந்ததை இடரின் வைகுறும் ஆண்டகை அறிந்திலன்'' என்பது அனுமன் கூற்று. ''கனைகடல் நடுவண் உண்டு இலங்கை என்று உணர்ந்திலர்'' என்பது சீதாதேவியின் கூற்று.

35. "சண்டம்கொள் வேகமாகத் தனிவிடை உவணம் தாங்கும்,
துண்டம்கொள் பிறையான், மௌலித் துளவினானோடும், தொல்லை
அண்டங்கள் எவையும் தாங்கிக் காப்பினும், அறம் இலாதாற்குக்
கண்டங்கள் பலவும் காண்பென்" என்பதும் கழறுவீரால்! (6863)

(சண்டம்-வேகம்/உக்கிரம்; தனி-ஒப்பற்ற; விடை-ரிஷபம்/எருது; உவணம்-கருடன்; துண்டம்-பிறைச்சந்திரன்; மௌலி-மகுடம்; துளவு-துளசி; தொல்லை-பழமையான; அண்டம்-உலகங்கள்; கண்டம்-துண்டம் /சிறியதுகள்கள்; கழறுதல்-சொல்லுதல்; மாகம்-ஆகாயம்/வானம்)

''வானத்தில் மிக வேகமாகச் செல்லக்கூடிய ஒப்பற்ற இடபம் தாங்கி ஊர்ந்து வருபவவனும், பிறைச்சந்திரனைத் தன் தலையில் தாங்கியுள்ளவனுமான சிவபெருமானும், கருடனைத்தன் வாகனமாகக் கொண்டு ஊர்ந்து வருபவனும், தனது சடாமுடியில் துளவமாலையை அணிந்து அருள்பாலிப்பவனுமான திருமாலும், மற்றும் பழமையான உலகங்கள் எல்லாவற்றிலும் இருக்கும் முதலான தேவர்களும், மற்ற உயிரினங்களும் கூடத் துணையாக வந்து அவனைத் தாங்கிக் காப்பாற்றும் எண்ணம் கொண்டு எதிர்த்து வந்தாலும், அறநெறியினின்றும் பிறழ்ந்து, பிறன் மனையை அபகரித்து வந்த அந்த அரக்கன் இராவணனைக் கண்டதுண்டமாக்கிக் காட்டுவேன் என்பதையும் அவனிடம் சென்று எடுத்துக் கூறுங்கள்'' என்கிறான் இராமபிரான்.

'சண்டம்' என்பது வேகத்தைக் குறிக்கும். புயல்காற்றைச் சண்டமாருதம் என்று கூறுவதை அறிக. இங்கே சிவபெருமானையும், திருமாலையும், ஏனையதேவர்களையும் கூறிய கவிஞன் பிரமதேவனைக் கூறாது விடுத்தலை உணர்க. காரணம், பிரமதேவன் இராவணன் குலமுதல்வன். அவன் வந்து காப்பாற்றுவான் என்பது சொல்லாமலேயே விளங்கும் என்பதால் குறிப்பாகக் கூறாது விடுத்தான் என்க. இங்கே இராமபிரான் தான் மானிட உருத்தாங்கி வந்து இருக்கிறான் என்பதையும் மறந்து உணர்ச்சிவயப்பட்டு, இறைத்தன்மையோடு மேலே பேசும் தன்மையையும் உணர்க.

Koviloor Digital Library

36. "தீட்டுறு மழுவாள் வீரன் தாதையைச் செற்றோன் சுற்றம்
மாட்டிய வண்ணம் என்ன, வருக்கமும் மற்றும் முற்றும்
வீட்டி, என் தாதைக்காக மெய்ப்பலி விசும்புளோரை
ஊட்டுவென் உயிர்கொண்டு" என்னும் வார்த்தையும் உணர்த்துவீரால்".
(6864)

(தீட்டிய-கூர்மையாக்கப்பட்ட; மழுவாள் வீரன்-பரசுராமன்; தாதை-தந்தை/ஜமதக்னி; செற்றோன்-கொன்றவன்/கார்த்த வீர்யார்ச்சுனன்; மாட்டுதல்-அழித்தல்; என்தந்தை-சடாயு; வருக்கம்-இனம்/சுற்றம்; முற்றும்-முழுதும்; வீட்டுதல்-கொல்லுதல்; மெய்ப்பலி-உடற்பலி; விசும்புளோர்-தேவர்கள்; வார்த்தை-செய்தி)

''நன்கு கூர்மையாக்கப்பட்ட ஒளிமிக்க மழுப்படையை ஏந்திய வீரனான பரசுராமன், தன் தந்தையைக் கொன்றவனான கார்த்தவீர் யார்ச்சுனனை அவனுடைய சுற்றத்தோடு கொன்று போட்டதுபோல, இராவணனையும் அவனுடைய சுற்றம் எல்லாவற்றையும் அழித்து, என் தந்தை சடாயுவுக்கு உயிர்ப்பலியாக, அவனை விண்ணிலுள்ள தேவர்களுக்கு உயிரோடு அவியுணவாக ஊட்டிவிடுவேன் என்றும் இராவணனிடம் இந்தச் செய்தியையும் கூறுவீர்களாக!'' என்கிறான் இராமபிரான்.

பரசுராமன் எப்பொழுதும் மழுப்படையைத் தாங்கியவன். இவன் தந்தை ஜமதக்னி. 'யமதங்கி' என்று சில சுவடிகள் தமிழ்ப்படுத்தி யிருக்கின்றன. கார்த்த வீர்யார்ச்சுனன், தத்தாத்ரேயர் என்ற முனிவரின் அருளால் பல வரங்களைப் பெற்றவன். மாகிஷ்மதி என்னும் நகரில் தங்கிப் பல வேள்விகளை இயற்றிவந்தவன். அப்போது இராவணனையும் வென்று, 'இராவணஜித்' என்ற சிறப்புப் பெயரையும் பெற்றான். இவன் ஒருநாள் வேட்டையாடிக் கொண்டு வந்தபோது, களைப்புற்று, யமதங்கி முனிவனின் ஆசிரமத்தில் சற்று தங்கி இளைப்பாறினான். முனிவர் அவன் களைப்பு நீங்க உணவு தந்து உபசரித்தார். அவரிடம் காமதேனு என்னும் ஒரு பசு இருந்தது. அவருடைய இசைவு இல்லாமல், அதனைக் கவர்ந்து சென்றான் கார்த்தவீர்யார்ச்சுனன். அதனையறிந்த பரசுராமன், கார்த்த வீர்யார்ச்சுனனோடு போரிட்டு அவனுடைய ஆயிரம் தடந்தோள்களையும் வெட்டி, அவனை வென்று அழித்தான். இதனைக் கேள்விப்பட்ட கார்த்தவீர்யார்ச்சுனன் மைந்தர்கள் பரசுராமன் இல்லாத சமயம் பார்த்து ஆசிரமம் வந்து ஜமதக்னி முனிவர் தவநிலையில் இருந்தபோது கொன்று போட்டனர். எனவே சினமுற்ற பரசுராமன், தனது தந்தையைக் கொன்ற கார்த்தவீர்யார்ச்சுனன் புதல்வர்களையும், மற்றவர்களையும் கொன்று களைந்தான் என்பதும், அத்துடன் இல்லாமல் க்ஷத்திரிய வம்சத்தைச் சேர்ந்த இருபத்தொரு தலைமுறையினரைக் கொன்று குவித்தான் என்பதும், அந்த இரத்தக் குளத்தில்தான் தன் தந்தைக்கு இறுதி நீர்க்கடன் களைச் செய்தான் என்பதும் ஒரு புராணக்குறிப்பு.

Koviloor Digital Library

37. "தாழ்விலாத் தவத்து ஓர்தையல் தனித்து ஒரு சிறையிற்று ஆக,
சூழ்விலா வஞ்சம் சூழ்ந்த தன்னைத் தன் சுற்றத்தோடும்
வாழ்வெலாம் தம்பி கொள்ள, வயங்குளி நரகம் என்னும்
வீழ்விலாச் சிறையில் வைப்பென்" என்பதும் விளம்புவீரால். (6865)

(தாழ்வு-குறைவு; தனி-தனித்த; சூழ்வு-நினைப்பு; வாழ்வு-செல்வம்/அரசச்செல்வம்; வயங்குதல்-விளங்குதல்; எரி-நெருப்பு/அக்னி; வீழ்வு-அழிவு; தவம்-கற்பு)

''குறைவில்லாத தவத்தைச் செய்துகொண்டிருக்கும் ஒப்பற்ற என் மனைவியாகிய சீதாதேவியை துணையின்றித் தனியாக ஒரு தனிமைச் சிறையில் அடைத்து வைத்திருக்கின்ற வஞ்சக நினைப்பும் வஞ்சனையும் கொண்ட அந்த அரக்கன் இராவணனை, அவனையும், அவனது உற்றார், உறவினர், சுற்றத்தார் அனைவரும் விளங்குகின்ற, மீளவே முடியாத நெருப்புப்போன்ற நரகலோகத்திலுள்ள சிறையில் அடைத்து வைப்பேன் என்பதோடு, அவன் இப்போது அனுபவித்துவரும் அரசச்செல்வ வளமெல்லாம் அவனுடைய தம்பியாகிய வீடணனுக்கு அளித்துள்ளேன் என்பதையும், அவனிடம் கூறுவீராக!'' என்கிறான் இராமபிரான்.

''எரிநரகம்'' என்பதை ''எரிவாய் நிரயம்'' என்கிறது நாலடியார். ''தனியொரு சிறையில் தங்கும்'' என்பதை ''தனிச்சிறையில் விளைப்புற்ற கிளிமொழியாள்'' என்கிறது திருவாய்மொழி.

38. ஒற்றர்கள் திரும்பிச்செல்லுதல்

"நோக்கினீர்; தானை எங்கும் நுழைந்தனீர்; இனிவேறு ஒன்றும்
ஆக்குவது இல்லை ஆயின், அஞ்சல்" என்று அஃது உண்டு அன்றோ!
'வாக்கினின், மனத்தின், கையின், மற்று இனி நலியா வண்ணம்,
போக்குமின் விரைவின்" என்றான்; 'உய்ந்தனம்' என்று போனார். (6866)

(தானை-படை/சேனை; ஆக்குவது-செய்வது; கை-மெய்; உய்தல்-பிழைத்தல்)

இராமபிரான் ஒற்றர்களை நோக்கி, ''நீங்கள் எங்கள் படைக்குள் எல்லாம் புகுந்து, அதன் ஆற்றல், அளவு இவையெல்லாவற்றையும் இப்பொழுது அறிந்துகொண்டு விட்டீர்கள். இனிமேல் நீங்கள் தெரிந்து கொள்வதற்கு வேறு எதுவும் இல்லை என்றால், நான் உங்களுக்கு ''அஞ்சாதீர்கள்'' என்று கூறிய அபயம் இன்னும் இருக்கிறது அல்லவா?'' என்று கூறிவிட்டு வீடணன், சுக்கிரீவன் முதலியவர்களை நோக்கி, ''இவர்கள் இனிமேல் நம் வீரர்களால் அவர்களுக்கு சொல்லாலும், எண்ணத்தாலும், உடம்பாலும், எந்தத்தீங்கும் நேராவண்ணம், அவர்களை இலங்கைக்கு விரைவாக அனுப்பி வைத்துவிடுங்கள்'' என்று கூறினான்.

Koviloor Digital Library

அதனைக்கேட்ட அவ்விரு ஒற்றர்களும், 'தப்பினோம், பிழைத்தோம்' என்று ஓடியே போனார்கள்.

இராமபிரானின் பகைவனுக்கும் அருளும் நன்னெஞ்சு புலப்படுத்தப் பட்டது காண்க. மனம், வாக்கு, காயம் என்று கூறுவதே முறை. எனவே இங்கே ''கையின்'' என்றதற்கு மெய்யின் என்று பொருள் கூறப்பட்டது. இராமபிரானிடம் இருக்கும் இதே கருணைத்திறம் சீதாதேவிக்கும் உண்டு. பின்னால் மீட்சிப்படலத்தில் அனுமன் சீதாதேவியை அச்சுறுத்தித் துன்புறுத்திய அரக்கியர் கூட்டத்தை அழிக்க வேண்டும் என்று விரும்புகிற போது சீதாதேவி, ''என்னதீமை இவர் இழைத்தார், அவன் சொல்லினது அல்லது'' என்று கூறி அதைத்தடுத்தாள் என்பதும் பின்னால் நாம் பார்க்கப்போகும் ஒரு காட்சி. அதையும் இங்கு ஒப்பு நோக்குதல் தகும்.

39. இராவணன் இரவுநேரத்தில் மந்திராலோசனை சபையைக் கூட்டுதல்

அரவமாக் கடல் அஞ்சிய அச்சமும்,
உரவு நல் அணை ஓட்டிய ஊற்றமும்,
வரவும் நோக்கி, இலங்கையர் மன்னவன்,
இரவின் எண்ணிட, வேறு இருந்தான் அரோ. (6867)

(அரவம்-ஒலி; மா-பெரிய; உரவு-வலிமை; அணை-சேது; ஊற்றம்-ஆற்றல்; நோக்கி-அறிந்து; எண்ணுதல்-ஆராய்தல்/ஆலோசித்தல்; வேறு இருத்தல்-தனியாக இருத்தல்)

இது ஒருபுறம் இருக்க, இங்கே இலங்கையில் ஆரவாரம் செய்கின்ற கடலும், கடலுக்கு அரசனாகிய வருணனும், இராமபிரான் சீற்றத்திற்கு அஞ்சிய அச்சத்தையும், வலிமையுடன் வானரச்சேனை மலைகளால் கடலைத் தூர்த்து நீண்ட சேதுவை நிலை நிறுத்திய ஆற்றலையும், அவ்வணையைக் காலாலேயே கடந்து இக்கரை வந்து இலங்கை வந்து சேர்ந்ததையும் எண்ணிய இலங்கையர்கோன் இராவணன், இரவு நேரத்தில் சற்றுநேரம் தனியே இருந்து, ஆழ்ந்து சிந்திக்கலானான்.

பேரரசர்கள், மந்திராலோசனைக் கூட்டத்தைக் கூட்டுவதற்கு முன், தான் மட்டும் தனியே இருந்து தான் செய்யப்போகின்ற காரியத்தின் வலியும், தன்வலியும், மாற்றான்வலியும், துணைவலியும் பற்றி ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்து, பின்னர்தான் அரசவையைக் கூட்டுவர் என்பது பெறப்படுகிறது. முன்பு தசரதனும், மந்திராலோசனைக் கூட்டத்தைக் கூட்டுவதற்கு முன், தனியே இருந்து சிந்தித்தான் என்பதைக் கவிஞன் ''சக்கரத்தவன் எனத்தமியன் ஆயினான்'' என்று கூறியதையும் இங்கு நினைவுகூர்க. ''வினைவலியும், தன் வலியும், மற்றான்வலியும், துணை வலியும் தூக்கிச்செயல்'' என்பது குறள் -471. இந்தத் துணைவலியைத் தூக்கிச்செய்யாததால்தான் வாலி வதைபட நேர்ந்தது என்பதை இங்கே

Koviloor Digital Library

நினைவுகூர்க. இதுவரையிலும் தன் வலிமை மட்டுமே பெரிதென்று கருதிக்கொண்டிருந்த இராவணன், இப்பொழுதுதான் முதன்முறையாக மானிடனாகிய மாற்றான் வலிமையும், அவனுக்குத் துணையாக வந்திருக்கின்ற குரங்குச்சேனையாகிய துணைவலியையும் பற்றிச்சிந்திக்க ஆரம்பித்திருக்கிறான் என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும். இது அவனுள்நிகழ்ந்த ஒரு பெரிய மனமாற்றம் என்பதறிக. இராவணன்இரவில் சிந்தித்திருந்தான் என்பது அரக்கர்களை 'நிசாசரர்' என்று கூறு'வது எவ்வாறு பொருந்துகிறது என்பதை மெய்ப்பிக்கிறது எனக்கொள்க. 'Secrecy' என்ற ஆங்கிலச் சொல்லுக்குத் ''தன்மறை'' என்ற ஒரு அருமையான சொல்லை உ.வே.சா. பதிப்புக் குறிப்பிட்டிருப்பது ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது.

40. வார்குலாம் முலை மாதரும், மைந்தரும்,
ஆரும் நீங்க, அறிஞரொடு ஏகினான்,
'சேர்க' என்னின் அல்லால், இளந்தென்றலும்
சார்கிலா நெடு மந்திர சாலையே. (6868)

(வார்-கச்சு; முலை-தனங்கள்; மைந்தர்-ஆடவர்; சேர்க-வருக; மந்திர சாலை-ஆலோசனைக்கூடம்; குலாம்-குலாவும்/விளங்கும்/ஒளிரும்; சார்தல்-உட்புகுதல்; அறிஞர்-மந்திரச்சுற்றம்)

'வருக' என்று கட்டளையிட்டால் அல்லது தானே தென்றற்காற்றுக்கூட உட்புகமுடியாத நீண்ட மந்திராலோசனை மண்டபத்தில் கச்சணிந்த, ஒளிரும் தனங்களையுடைய மகளிரும், ஆடவர்களும், மற்றுமுள்ள எல்லோரும் விலகிச்செல்ல, மந்திராலோசனைக்கு உரியவர்களான, அமைச்சர்கள், ஐம்பெரும் குழுவினர், எண்பேராயத்தினரை மட்டும் இருக்கும்படி செய்து, இராவணன் மந்திராலோசனை மண்டபத்தை அடைந்தான்.

முன்பு தனக்குக் கட்டுப்பட்டிருந்த ஐம்பெரும்பூதங்களுள் ஒன்றாகிய வருணன், இராமபிரானுக்கும் கட்டுப்பட்டுக் கடலில் வழிவகுத்துக் கொடுத்தமையை உணர்ந்த இராவணன், இப்பொழுது இன்னொரு பூதமாகிய வாயுதேவனும் அவனுக்குக் கட்டுப்படாமல் போய் விடுவானோ என்று அஞ்சிக் காற்றினை உள்ளேவரவிடாமல் வெளியே நிறுத்தியிருந்தான் என்பது ஆழ்ந்து சிந்தித்துச் சுவைக்கத்தக்கது.

யார்யார் மந்திராலோசனை மண்டபத்திற்குள் இருக்கத் தகுதி யில்லாதவர்கள் என்பதை வில்லிபாரதம் கூறுகிறது கேளுங்கள். ''இளையார், ஒன்றும் முறைமை உணராதவர் மகளிர்'' என்னும் இவர் மந்திரத்தின் எய்தப்பெறாதவரே'' என்பது பாடல்பகுதி.

Koviloor Digital Library

41. உணர்வுஇல் நெஞ்சினர், ஊமர், உரைப்பொருள்
புணரும் கேள்வியர் அல்லர், பொறி இலர்,
கொணரும் கூனர், குறளர் கொழுஞ்சுடர்
துணரும் நல்விளக்கு ஏந்தினர், சுற்றினார். (6869)

(உணர்வு-அறிவு; உரை-சொல்; பொறி-இந்திரியம்; கொழும்-மிக்க; துணர்-கொத்து; சுற்றுதல்-சூழ்தல்; ஊமர்-ஊமையர்; கேள்வியர் அல்லர்-செவிடர்; கொணரும்-கொண்டுவரும்; குறளர்-குள்ளர்கள்)

அறிவில்லாத மனத்தையுடைவர்கள், ஊமையர்கள், சொல்லுகின்ற பொருளைப் புரிந்துகொள்ள முடியாத கேள்விச் செல்வமற்ற செவிடர்கள், ஏனைய இந்திரியங்களில் குறைபாடுள்ளவர்கள், கேட்டவற்றைக் கொண்டுவந்து தரும் கூன் விழுந்தவர்கள், குள்ளமானவர்கள், ஆகிய இவர்கள் கொழுந்து விட்டு எரியும் சுடர்மிகுந்து ஒளிபரப்பும் சிறந்த விளக்குகளைஏந்திக்கொண்டு மந்திரஆலோசனைமண்டபத்தைச்சூழ்ந்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர்.

ஊமையர், செவிடர், மற்றபுலன்களில் குறையுள்ளோர் ஆகியோர் களால் தீங்கு ஏதும் நிகழாது என்பதால் அவர்களை சபையினைச் சுற்றி நிற்கவைத்திருந்தது பெறப்படுகிறது. இவர்கள் குற்றேவல் செய்பவர்கள் என்க.

42. "நணியர், வந்து மனிதர்; நமக்கு இனித்
துணியும் காரியம் யாது?" எனச் சொல்லினான்,
பணியும் தானவர் ஆதியர் பல்முடி
மணியினால் விளங்கும் மணித் தாளினான். (6870)

(பணிதல்-வணங்குதல்; தானவர்-அசுரர்; ஆதியர்-முதலியவர்கள்; மணி-இரத்தினம்; மணி-அழகிய; தாள்-அடி; நணியர்-நெருங்கினர்; துணிதல்-ஆராய்தல்; நணிமை-அண்மை)

அசுரர்கள் எல்லாம் வந்து வணங்கிப்பணிவதால் அவர்களின் பலவகைப்பட்ட முடிகளிலிருந்து உராயும் இரத்தினங்களாலும், நவமணி களாலும் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் அழகிய பாதங்களை உடைய இராவணன், மந்திராலோசனையில் கூடியிருந்தவர்களை நோக்கி, "நமது பகைவர்களாகிய மனிதர்கள் கடலைக்கடந்து மிக அண்மையில் வந்துவிட்டனர். இப்போது நாம் துணிந்து ஆற்றவேண்டிய செயல் யாது?" என்று கேட்டான்.

அசுரர்கள் எல்லாம் வந்து பணிகின்ற அரக்கர்க்கரசனான இராவணன், அவனால் கேவலமாகக் கருதப்பட்ட மனிதர்கள் அருகாமையில் வந்து விட்டார்கள் என்பதறிந்து அஞ்சுகின்ற பாங்கு நோக்குக. அதனால்தான் இரவோடிரவாக மந்திராலோசனைக் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறான் என்பதையும் உணர்க. இராவணனின் மனத்தில் இராமபிரான் பற்றிய

Koviloor Digital Library

அச்சம் தோன்றத் தொடங்கியிருப்பதை, வாழைப்பழத்தில் ஊசியை நுழைப்பதுபோல, எவ்வளவு அருமையாகக் கூறுகிறான் கவிஞன் பாருங்கள்.

43. மாலியவான் பேசத்தொடங்குதல். [5 பாடல்கள்]

''கால வெங்கனல் போலும், கணைகளால்
வேலை வெந்து, நடுங்கி, வெயில் புரை
மாலை கொண்டு வணங்கினவாறு எலாம்
சூலம் என்ன, என் நெஞ்சைத் தொளைக்குமால்'' (6871)

(காலம்-ஊழிக்காலம்; வேலை-கடல்; வெயில்-சூரியன்; புரை-போன்ற; மாலை-மாணிக்கமாலை)

அப்போது இராவணனின் தாய்வழிப் பாட்டனான மாலியவான், இராவணனை நோக்கி, ''ஊழிக்காலத்துக் கடலில் எழும் கொடிய நெருப்புப் போன்ற இராமபிரானது அம்புகள், கடலையும் கடலரசனாகிய வருணனையும் வெந்துபோகும்படி செய்து, அதனால் வருணன், சூரியன்போல் ஒளிவீசும் ஒரு மாணிக்கமாலையைக் கையுறையாக அளித்து, இராமபிரானை வணங்கித் துதித்த செயல்களை எல்லாம் எண்ணும்போது, அவை என் நெஞ்சை, முத்தலைச் சூலம்போலத் தொளைத்து எடுக்கிறது'' என்று தன் நெஞ்சக்குமுறலைக் கொட்டத் தொடங்குகிறான்.

மாலியவான் இராவணனின் தாயாகிய கேகசியைப் பெற்ற சுமாலியின் உடன்பிறந்தோன் ஆவான். இவன் அவ்வப்போது இராவணனுக்கு, இராமன் பற்றிய அவதார நோக்கத்தையும் இராவணன் நல்வழிச் செல்ல வேண்டும் என்ற அறக் கருத்துக்களையும் எடுத்துக்கூறி வரும் நல்ல பெரியோன். எனினும் ஒருமுறைகூட இராவணன் இவன் அறிவுரைகளைச் செவியில் ஏற்றதில்லை. மாறாக இவனைச் சினந்தும் சீறியும் பேசியிருப்பதையும் காப்பியத்தில் ஆங்காங்கே காணலாம். இங்கே 'வெயில் புரைமாலை' என்றதுதான், சிறிதுகூடப் பொருள்மாறாமல் முன்பு 'தெய்வப் பரிதியைப் பழிக்கும் மாலை' என்று கூறப்பட்டதைக் கருதினால், கவிஞன் இவ்வளவு பெரிய காப்பியம் எழுதும் போது எவ்வாறு தொடர்பு அறாத்தன்மை பற்றிய நினைவாற்றல் கொண்டிருந்தான் என்பது நன்கு தெரியவரும்.

44. "கிழிபடக் கடல் கீண்டதும், மாண்டது
மொழி படைத்த வலி" என, மூண்டது ஓர்
பழி படைத்த பெரும் பயத்து, அன்னவன்,
வழி கொடுத்தது, என் உள்ளம் வருத்துமால்" (6872)

Koviloor Digital Library

(கீண்டது-கிழிக்கப்பட்டது; கிழி-துணி/ஆடை; மொழி-பாராட்டு; வலி-ஆற்றல்; மாண்டது-அழிந்தது; மூளுதல்-வளருதல்; ஓர்-ஒப்பற்ற; பழி-இகழ்வு; பயம்-அச்சம்; அன்னவன்-வருணன்; கீண்டுதல்-கிழித்தல்; வருத்தும்-புண்படுத்தும்)

மாலியவான் இராவணனை நோக்கி, 'இந்தப் பெருங்கடல் இவ்வாறு துணி கிழிவதுபோல இரண்டுபட்டுப் பிளந்து போனதும், அதற்குரிய வருணன் அவனுக்குரிய பெருமைகளையெல்லாம் அழித்துக் கொண்டதும், அக்கடலில் வாழ்ந்திருந்த உயிரினங்களெல்லாம் அழிந்து பட்டதும், வருணன் தனக்கு மேலும் ஓர் பழி வந்துசேருமோ என்று இராம பிரானுக்கு அஞ்சி அணைகட்ட வழிவகுத்துக் கொடுத்ததும், இவை யெல்லாம் ஒருசேரச் சேர்ந்து என் உள்ளத்தைப் பெரிதும் புண்படுத்து கிறது'' என்கிறான் மாலியவான்.

'கிழி' என்ற சொல்லுக்கு ஆடை, துணி என்பது பொருள் என்பது நமக்குச் சொல்புதிது. பொருள் புதிது. முன்பு திருமாலும் தேவர்களும் ஒப்புக்கொண்டபடி யார்யார் என்ன என்ன உருவத்தில் பூலோகத்தில் தோன்ற வேண்டும் என்று கூறியபடி நடவாததால்தான் வாலி, இராகவன் வாளிக்கு இலக்காக நேர்ந்தது என்பதை அறிந்தவன் வருணன். காரணம் அவனும் முன்பு திருமாலிடம் முறையிட்ட தேவர்களுள் ஒருவன். எனவே அவன் இப்போது இராமபிரான் வேண்டுகோளுக்குத் தாமதமாக இணங்கினாலும், ஒப்பந்தப்படி செயல்பட்டான். இதனை மிக நாசூக்காக, அனுபவம் வாய்ந்த மாலியவான் இராவணனுக்குத் தெரிவிப்பதைக் கூர்ந்து நோக்குக. இச்செய்தி இராவணனுக்கு ஓர் எச்சரிக்கையாய் அமைதலையும் உணர்க.

45. "படைத்த மால்வரை யாவும் பறித்து, வேர்
துடைத்த வானரவீரர், தம் தோள்களைப்
புடைத்தவாறும், புணரியைப் போக்கு அற,
அடைத்தவாறும், என் உள்ளத்து அடைத்தவால்" (6873)

(படைத்த-தோற்றுவித்த; மால்வரை-பெரியமலைகள்; பறித்து-பிடுங்கி/அகழ்ந்து; துடைத்தல்-அறுத்தல்; புடைத்தல்-தட்டுதல்; புணரி-கடல்; போக்கு-செலவு; அடைத்தல்-தடுத்தல்/இடம் கொள்ளுதல்; புணர்தல்-கூடுதல்)

''இறைவனால் படைக்கப்பட்ட பெரிய மலைக்குலங்கள் எல்லா வற்றையும் வேரோடும் அகழ்ந்து கடலில் இட்டு, உலகில் மலை என்ற ஓர் இனமே இல்லாதவாறு செய்துவிட்ட வானரச்சேனை வெற்றிக்களிப்பில் தம் தோள்களைமகிழ்ச்சியால் ஆரவாரம் செய்து கொண்டு, தம்மைத்தாமே பாராட்டிக்கொண்ட விதமும், கடலைச் சிறிதுகூட அசைவில்லாமல், நாவாய்கள் போய்வர முடியாமல் போக்குவரத்தே இல்லாமல் செய்து அதனை அணைகட்டி, அடைத்த தன்மையும், என் உள்ளத்தில் நிறைந்து

Koviloor Digital Library

துன்புறுத்திக் கொண்டே இருக்கின்றன. அவற்றைத் தவிர வேறு நினைப்பே எனக்கு இல்லாது செய்துவிட்டன'' என்கிறான் மாலியவான்.

''புணர்தல்'' என்ற சொல்லுக்குக் கூடுதல் என்று பொருள். எல்லா ஆறுகளும் வந்து கூடுவதால் கடலுக்குப் ''புணரி'' என்பது காரணப்பெயர்.

46. "காந்து வெஞ்சின வீரர், கணக்கு இலார்,
தாம்தம் ஆற்றலுக்கு ஏற்ற தரத்தர,
வேந்த! வெற்பை ஒருவன் விரல்களால்
ஏந்தி இட்டது என் உள்ளத்தின் இட்டதால்" (6874)

(காந்துதல்-கொதித்தல்; கணக்கு-அளவு; ஒருவன்-சிற்பி/நளன்; இட்டது-அடைத்தது)

மாலியவான் இராவணனை நோக்கி, ''அரசே! கொதிக்கின்ற கொடிய சினம்கொண்ட எண்ணற்ற வானரவீரர்கள், தம்தம் ஆற்றலுக்கு ஏற்ப மலைகளைஇடைவிடாது கொண்டு வந்து கொடுத்துக்கொண்டே இருக்க, அதனைத் தனி ஒருவனான, ஒப்பற்றவனான வானரச்சிற்பி, தன் விரல்களாலேயே தாங்கிக்கொண்டு, கடலில் போட்டு நிரப்பிய செய்கை என்னுடைய உள்ளத்தில் போட்டது போன்று துன்புறுத்துகிறது'' என்கிறான் மாலியவான்.

வானரச்சேனைகள் தத்தமது உருவத்திற்கு ஏற்ற மலைகளைக் கொண்டுவந்து கொடுத்தது என்று கூறாது, கவிஞன் தத்தம் வலிமைக்கு ஏற்ற மலைகளைக் கொண்டுவந்து, இடைவிடாது கொடுத்துக்கொண்டே இருந்தன என்று கூறிய நயம் நோக்குக. 'தரத்தர' என்ற அடுக்கு விரைவு கருதியும், இடைவிடாத தன்மை கருதியும் வந்தது எனக்கொள்க. அத்தனை வானரச்சேனைகளிடமிருந்தும் ஒரேஒரு சிற்பி அவற்றைத் தம் விரல்களாலேயே வாங்கிக் கடலில் போட்டு நிரப்பினான் என்பது நளனின் ஆற்றலைப் புலப்படுத்த என்க.

47. "சுட்டவா கண்டும், தொல்நகர் வேலையைத்
தட்டவா கண்டும், தா அற்ற தெவ்வரை
கட்டவா கண்டும், கண் எதிரே வந்து,
விட்டவா கண்டும், மேல் எண்ண வேண்டுமோ?" (6875)

(தெவ்வர்-பகைவர்; தொல்-பழமையான; சுட்டது-எரித்தது; வேலை-கடல்; தட்டுதல்-அடைத்தல்/தடுத்தல்; தா-அழிவு; கட்டுதல்-களைதல்/அழித்தல்; எண்ணுதல்-ஆராய்தல்)

''அனுமன் வந்து, நமது பழமையான நகரமான இலங்கையை எரியூட்டியதை நாம் கண்ணாரக் கண்டபின்பும், அவர்கள் கடக்க இயலாத கடலில் அணையைக் கட்டி முடித்ததைக் கண்ட பின்பும், அழிவற்ற அவர்களது பகைவர்களாகிய கர, தூடணர், திரிசிரன், மாரீசன், கவந்தன்,

Koviloor Digital Library

விராதன், முதலியவர்களை அழித்ததைக் கண்ட பின்னரும், இப்பொழுது நம் கண் எதிரிலேயே வந்து நிற்பதைக் கண்டபிறகும், இன்னும் ஆலோசித்துக் கொண்டிருப்பது தேவைதானா?'' என்று கேட்கிறான் மாலியவான்.

சுட்டவா, தட்டவா, கட்டவா, விட்டவா என்பன ஈறு குறைந்து நின்றன எனக்கொள்க. 'வேண்டுமோ' என்பதில் ஓகாரம் எதிர்மறைப் பொருளது. வேண்டியதில்லை என்ற பொருளைத்தரும்.

48. இராவணன், மாலியவானைச் சினந்து கூறுதல்

என்று தாயைப் பயந்தோன் இயம்பலும்,
தின்று வாயை, விழிவழித் தீ உக,
'நன்று, நன்று; நம்மந்திரம் நன்று!' எனா,
'என்றும் வாழ்தி இளவலோடு; ஏகு'' என்றான். (6876)

(பயத்தல்-பெற்றெடுத்தல்; வாய்-பல்/உதடு; தின்னுதல்-கடித்தல்; தீ-நெருப்புப்பொறி; உக-சிந்த; இளவல்-சிறியவன்; ஏகு-போவாயாக; வாழ்தி-வாழ்வாயாக; மந்திரம்-ஆலோசனை)

இவ்வாறு இராவணனின் தாயாகிய கேகசியைப் பெற்றெடுத்த தந்தை மாலியின் உடன்பிறந்தவனான பாட்டன். மாலியவான் கூறியதும், இராவணன் சினத்தால் தன் பல்லையும், உதட்டையும் இறுகக்கடித்து, கண்களின் வழியாக தீப்பொறி பறக்கும்படி அவையோரை நோக்கி, ''நன்று, மிக நன்றாயிருக்கிறது நாம் ஆலோசனை நடத்தும் விதம்'' என்று இகழ்ச்சியாகக் கூறி, மாலியவானைப் பார்த்து, ''நீயும் என் தம்பி வீடணனோடு போய் இனிமையாக வாழ்வாயாக! இப்போது இங்கிருந்து செல்வாயாக'' என்று வெகுண்டு கூறினான்.

தாயைப்பெற்றவன் பாட்டன் எனப்படுவான். பகைவர்களை எப்படி அழிப்பது என்பதற்காகத்தான் மந்திராலோசனைக் கூட்டம் கூட்டப் பட்டது. அங்கே வந்த மாலியவான் பகைவரின் பெருமையைப் பேசியதால் இராவணன் சினம் கொள்ளவேண்டியதாயிற்று. எனவே அவையோரை இகழ்ந்தும், மாலியவானைச் சினந்தும் பேசினான் என்க. வாய்தின்னுதலும், விழிவழித் தீ உகுத்தலும் சினத்தின் மெய்ப்பாடு. 'நன்று, நன்று, நன்று' என்ற அடுக்கு, குறிப்பு மொழி எனக்கொள்க.

49. சேனைத்தலைவன் பேசுதல்

''ஈனமே கொல் இதம்?'' என எண்ணுறா,
மோனம் ஆகி இருந்தனன் முற்றினான்;
ஆனகாலை, அடியின் இறைஞ்சிய
சேனைநாதன் இனையன செப்பினான். (6877)

Koviloor Digital Library

(ஈனம்-அழிவு; இதம்-நன்மைபயப்பது; மோனம்-மௌனம்/பேசாதிருத்தல்; முற்றினன்-அனுபவம் நிறைந்தவன்; இறைஞ்சுதல்-வணங்குதல்; சேனைநாதன்--படைத்தலைவன்/பிரகஸ்தன்; இனையன-இவற்றை; முற்றுதல்-முதிர்தல்/நிரம்புதல்; எண்ணா-எண்ணி)

அறிவிலும், வயதிலும், அனுபவத்திலும் முதிர்ந்து நிரம்பியவனான மாலியவான், இராவணன் இவ்வாறு வெகுண்டு கூறியதைக் கேட்டதும், ''பிறர்க்கு நன்மை பயப்பனவற்றை எடுத்துக் கூறுதல் என்பதுகூட இழிவுபோலும்'' என்று மனத்துள் கருதிக்கொண்டு, ஏதும் பேசாமல் மௌனமாய் ஒடுங்கியிருந்தான். அப்பொழுது, சேனைத்தலைவனான பிரகத்தன் எழுந்து இராவணனது பாதங்களை வணங்கி, கீழ்வருமாறு கூறலானான்.

இறைவன் திருவடிகளில் விழுந்து வணங்குவது பக்தியின் காரணமாக; அரசர்கள் பாதங்களில் விழுந்து வணங்குவது கடமையின் காரணமாக; நம்மை விடப்பெரியவர்கள் பாதங்களில் விழுந்து வணங்குவது அவர் களின் ஆசீர்வாதம் பெறுவதற்காக. ஆனால் தலைவர்களின் கால்களில் விழுந்து வணங்குவது எக்காரணம் கொண்டு என்பதுதான் தெரியவில்லை. இங்கே மற்றொரு நல்ல கருத்தும் கூறப்பட்டிருப்பது காண்க. ''ஈனமே கொல் இதம்?'' என்பதனால், இதமெல்லாம் இராவணனுக்கு ஈனம் என்றால் ஈனம் எல்லாம் இராவணனுக்கு இதமாகும் என்ற மறை பொருளைத் தருவதையும் உணர்க. இது பின்னால் வருபவர்கள் கூறும் அறிவுரையின்போது உணரப்படும். ''ஓர்த்த கருத்தும், உணர்வும் உணராத மூர்க்கர்க்கு யாதும் மொழியற்க; மூர்க்கன்தான் கொண்டதே கொண்டு விடான்'' என்பது பழமொழி. ''ஞானமும் கல்வியும், நவின்ற நூல்களும் ஈனருக்கு உரைத்தால் இடரதாகுமே'' என்பது விவேகசிந்தாமணி. சேனை நாதனின் பெயரைக் கம்பன் இங்கே கூறவில்லை. வான்மீகத்தினின்றும் கொள்ளப்பட்டது.

50. ''கண்மை இந்நகர் வேலை கடந்த அத்
திண்மை ஒன்றும் அலால், திசை காவலர்
எண்மரும் இவற்கு ஏவல் செய்கின்ற அவ்
உண்மை ஒன்றும் உணர்ந்திலை போல்?'' என்றான். (6878)

(வேலை-கடல்; திண்மை-வலிமை; இவற்கு-இவனுக்கு/இராவணனுக்கு; ஒன்றும்-சிறிதும்; கண்மை-கண்ணுக்கு நேராக; கண்அன்மை-கண்மை/கண்ணருகில்; ஏவல்-பணி; கண்மை-காட்சி/கண்ணின்தன்மை/கண்ணோட்டம்)

சேனைத்தலைவன் பிரகத்தன், மாலியவானை நோக்கி, ''உன் கண்ணுக்கு நேராக, இந்த இலங்கை மாநகரைச் சூழ்ந்துள்ள கடலில் அணைகட்டி இலங்கைக்கு அவர்கள் வந்த வலிய காட்சி மட்டும்தான் தெரிகிறதோ? இந்த உலகைக் காக்கின்ற எட்டுத்திசைகளிலுள்ள அஷ்ட

Koviloor Digital Library

திக்கு பாலகர்களும் நம்வேந்தன் இராவணனின் கட்டளைக்குக் கட்டுப்பட்டு அவனுக்குக் குற்றேவல் செய்கின்ற உண்மைமட்டும் உன் கண்களுக்குத் தெரியவில்லையா? அதை நீ உணர்ந்திருக்க வில்லையா?'' என்று கேலி பேசுகிறான்.

'கண்மை' என்பது கண்ணின் தன்மை என்று காட்சி என்ற பொருளைத் தரும்.

51. "கூசி வானரர் குன்றுகொடு இக்கடல்
வீசினார்" எனும் வீரம் விளம்புவாய்,
ஊசிவேரோடும் ஓங்கலை, ஓங்கிய
ஈசனோடும், எடுத்ததும் இல்லையோ?" (6879)

(கூசுதல்-அஞ்சுதல்; கொடுமை-வளைவு; ஓங்கல்-மலை/கயிலாய மலை; ஈசன்-சிவபெருமான்; ஊசிவேர்-மூலவேர்/ஆணிவேர்/சல்லி வேர்)

''நீ வானரச்சேனைக்கு அஞ்சி, அவர்கள் சிறிய மலைக் குன்றுகளை வீசி எறிந்து இப்பெரும்கடலைத்தூர்த்து, அணைகட்டி, இலங்கைக்குள் புகுந்து விட்டனர் என்று அவர்கள் வீரத்தை மட்டும்பெருமையாகப் பேசுகிறாயே? நம் வேந்தன் இராவணன் கயிலாயமலையை அதன் ஆணி வேரோடும், அதன் உச்சியில் வீற்றிருந்த சிவபெருமானோடும் பெயர்த் தெடுத்தது உனக்கு தெரியாதா? மறந்துவிட்டாயா? அல்லது மறைத்து விட்டாயா?'' என்று கேட்கிறான் பிரகஸ்தன்.

''வானரர் எடுத்து வீசியது சிறுசிறு குன்றுகள்தான். ஆனால் நம்வேந்தன் பெயர்த்தெடுத்ததோ மலைகளுக்கெல்லாம் பெரிய மலையான கயிலாய மலை; அத்தோடுமட்டுமல்ல, உலகையே அழிக்கும் இயல்புடைய வனான சிவபெருமான் வீற்றிருந்த மலையையே ஆணிவேரோடு பிடுங்கி எறிந்தான் என்றால் யாருடைய வீரம் பெரிது?'' என்று மறைமுகமாகக் கேட்கிறான் என்பது பொருள்.

52. "அதுகொடு என்சில? ஆர் அமர் மேல் இனி,
மதி கெடுந்தகையோர், வந்து நாம் உறை
பதி புகுந்தனர்; தம்மைப் படுப்பது ஓர்
விதிகொடு உந்த விளைந்ததுதான்" என்றான். (6880)

(மதி-அறிவு; ஆர்-பெரிய; அமர்-போர்; உறைதல்-வசித்தல்; பதி-இடம்; உந்த-செலுத்த; விளைந்தது-நிகழ்ந்தது; படுப்பது-அழிப்பது; விதி-ஊழ்வினை)

''புத்திகெட்டுப் போனதன்மையையுடைய சிலர், நாம் வசிக்கும் இலங்கை மாநகரத்திற்குள் பெரும்போர் புரியும் பொருட்டுப் புகுந் துள்ளனர். அதனால் நமக்கு என்னகேடு விளையப்போகிறது? அவர்கள்

Koviloor Digital Library

தம்முடைய ஊழ்வினை பிடித்துத்தள்ளத் தம்மைத்தாமே அழித்துக் கொள்ளும் பொருட்டு வந்திருப்பதன் விளைவுதான் இது'' என்று கூறிமுடித்தான் பிரகத்தன்.

53. ஒற்றர்கள் வந்து செய்தி கூறுதல்

முற்றும் மூடிய கஞ்சுகன், மூட்டிய
வெற்று அனல்பொறிக் கண்ணினன், வேத்திரம்
பற்றும் அங்கையினன், படிகாரன், 'இன்று
ஒற்றர் வந்தனர்' என்ன உணர்த்தினான். (6881)

(கஞ்சுகம்-மெய்ப்பை/சட்டை; வெற்று-காரணமில்லாமலேயே; மூட்டிய-மிகுவித்த; வேத்திரம்-பிரம்பு; அம்-அழகிய; படிகாரன்-வாயிற்காவலன்; உணர்த்துதல்-அறிவித்தல்; இன்று-இப்பொழுது)

பிரகஸ்தன் பேசிக்கொண்டிருக்கும்போதே உடல் முழுவதும் மூடிய சட்டையை அணிந்தவனும், காரணமில்லாமலேயே வளர்கின்ற தீப் பொறி பறக்கும் கண்களையுடையவனும், பிரப்பங்கோலைத்தன் அழகிய கையில் கொண்டுள்ளவனுமான, அரண்மனை வாயிற்காப்போன், இராவணன் மந்திராலோசனை சபையின் உட்புகுந்து, ''இப்போது நம் வேவுகாரர்கள் வந்திருக்கின்றனர்'' என்று இராவணனுக்குத் தெரிவித்தான்.

ஒரு வாயிற்காப்போனின் தோற்றமும், பணியும் விவரிக்கப்பட்டது.

54. வாயில்காவலன் கூற, வயங்கு எரி
மேய வெங்கண் விறல்கொள் இராக்கதர்
நாயகன், 'புகுத்து இங்கு' என 'நன்று, எனப்
போய், அவன் புகுத்த, புகுந்தார் அரோ! (6882)

(வயங்கு-விளங்குகின்ற; எரி-நெருப்பு; மேய-பொருந்திய; விறல்-வெற்றி; நாயகன்-வேந்தன்; புகுத்து-புகவிடு/வரச்சொல்; நன்று-நல்லது)

வாயிற்காப்போன் வந்து, ஒற்றர்கள் வந்திருப்பதை அறிவித்ததும், எப்போதும் நெருப்புப்பொறி பறக்கின்ற கொடிய கண்களையும், வெற்றியையே கொண்டிருப்பவனுமான அரக்கர்க்கு அரசனாகிய இராவணன் ''அவர்களை இங்கு வரவிடுக'' என்று அனுமதி தந்ததும், வாயிற்காப்போன், ''நல்லது'' என்று கூறிச்சென்று, அவ்வொற்றர்களை உள்ளே போகும்படி சொல்ல, அவ்வொற்றர்களும் மந்திராலோசனை மண்டபத்திற்குள் வந்தனர்.

இராவணனின் கண்களை எப்படிப் பேசுகிறான் பாருங்கள். ''வயங்குஎரி, மேய வெங்கண்'' என்பது அவன்கண்களின்கொடுமையைக்

Koviloor Digital Library

குறிப்பது எனக்கொள்க. ''பகைமையும், கேண்மையும் கண் உரைக்கும்'' என்பது குறள்-709.

55. ஒற்றர்கள் வந்து கூறுதல்

மனைக்கண் வந்து, அவன் பாதம் வணங்கினார்;
பனைக்கை வன் குரங்கின் படர் சேனையை
நினைக்கும் தோறும் திடுக்கிடும் நெஞ்சினார்,
கனைக்கும் தோறும் உதிரங்கள் கக்குவார். (6883)

(வன்-வலிய; திடுக்கிடுதல்-அஞ்சுதல்/நடுங்குதல்; மனை-மண்டபம்; படர்-படர்ந்த; கனைத்தல்-ஒலி எழுப்புதல்/பேசுதல்/செருமுதலுமாம்)

பனைமரத்தின் துண்டுகள் போன்ற வலிமையான கைகளையுடைய, படர்ந்து விரிந்து இருந்த வானரச்சேனையை நினைக்கும்போதெல்லாம், நடுங்கும் உள்ளத்தவராகவும், வார்த்தைகளைப் பேசுவதற்கு முற்படும் போதும், செருமும்போதும் கூட வாயிலிருந்து இரத்தத்தைக் கக்குகின்ற நிலையில் அச்சத்துடன் நுழைந்த அவ்வொற்றர்கள், இராவணன் வீற்றிருந்த இடமாகிய மந்திராலோசனை மண்டபத்தில் வந்து அவன் பாதங்களை வணங்கினார்கள்.

வானரங்கள் நன்கு அடித்ததனால் வாயெல்லாம் புண்ணாகி இரத்தம் கசிந்திருந்தது என்றும், ஏதாவது பேசமுற்பட்டால் அந்த இரத்தம் அப்படியே வெளிவந்துவிடும் போலவும் இருந்தார்கள். அவ்வொற்றர்கள் என்று எதார்த்த நிலையைப் படம் பிடித்துக் காட்டும் கவிஞனின் கவித்திறம் நோக்குக.

56. "வெள்ள வாரி விரிவொடு அவ்வீடணத்
தள்ள வாரி நிலைமையும், தாபதர்
உள்ளவாறும் உரைமின்" என்றான், உயிர்
கொள்ள வாய் வெருவும் கொடுங்கூற்று அனான். (6884)

(வெருவுதல்-பிதற்றுதல்; வெள்ளவாரி-கடல்; தாபதர்-தவத்தினர்; தள்ளவாரி-சோம்பேறி; விரிவு-பரப்பு; கூற்று-இயமன்; நிலைமை-தன்மை)

இராவணன் அவ்வொற்றர்களை நோக்கி, ''கடல்போன்ற பரப்புடைய அவ்வானரச் சேனையின் வெள்ளத்தின் அளவினையும், அந்த வீடணன் என்ற சோம்பேறியின் தற்போதைய நிலைமையையும், தவசிகள் வேடம் புனைந்திருக்கின்ற இராமஇலக்குவர் முதலானவர் இப்போது உள்ள நிலையையும் எடுத்துக் கூறுங்கள்'' என்று, உயிர்களைக் கவர்ந்து செல்லுவதற்காக விரைவில் வந்து வாய் கடித்துப் பிதற்றி ஏங்கிநிற்கும் கொடுமையான இயமனைப் போன்றவனான இராவணன் அவ்வொற்றர்களிடம் கூறினான்.

Koviloor Digital Library

'தள்ளவாரி' என்ற சொல் போருக்கு அஞ்சிப் பதுங்குபவனைக் குறிப்பதாக இன்றும் கன்னடத்தில் வழங்குவது காணலாம். சொல் வழக்கில் அது தொல்லபாரு என்றும் தெல்லவாரி என்றும் ஆகிவிட்டது என்கின்றனர் கன்னடர்கள். ''தூங்கல், அசைதல், அலசுதல், சோம்பே, சடமடி, தள்ளவாரமும் தருமே'' என்பது பிங்கல நிகண்டு.

57. என்னச் சாரர் இசைத்தனர்; "வேலையைக்
கன்னல் ஒன்றில் கடந்து, கவிக்குலம்
துன்னு பாசறைச் சூழல்கள் தோறுமே
அன்னர் ஆகி, அரிதின் அடைந்தனம்" (6885)

(கன்னல்-வட்டில்/ஒருநாழிகைப்பொழுது; துன்று-நெருங்கியுள்ள; சூழல்கள்-சுற்றுப்புறங்கள்; இசைத்தல்-கூறுதல்)

என்று இராவணன் கேட்க, சுக சாரணராகிய ஒற்றர்கள், ''அந்தக் கடலை ஒரு நாழிகைப்பொழுதில் சென்று அடைந்து, வானரச்சேனை தங்கியுள்ள பாசறையின் சுற்றுப்புறத்தில், அவர்களைப் போலவே, குரங்கு வடிவம் ஏற்றுக்கொண்டு, மிக முயன்று சென்று சேர்ந்தோம்'' என்று கூறினர்.

இந்தப்பாடல் பெரும்பாலான சுவடிகளிலும், அச்சுப்பிரதிகளிலும் மிகைப்பாடலாகவே தரப்பட்டிருக்கிறது. எனினும் சென்னைக் கம்பன் கழகச் செம்பதிப்பு இதனையும் பாடல் வரிசையில் சேர்த்திருப்பதால் இதற்கு உரை வரையப்பெற்றுள்ளது.

58. ஒற்றர்கள் தாம் கண்டவற்றைக் கூறுதல் [8 பாடல்கள்]

"அடியம் அந்நெடுஞ் சேனையை ஆசையால்
முடிய நோக்கலுற்றேம்; முது வேலையின்
படியை நோக்கி, எப்பாலும் படர்குறும்
கடியவேகக் கலுழனின் கண்டிலம்'' (6886)

(முது-பழைய; வேலை-கடல்; படி-நிலம்; படர்குதல்-பறந்து செல்லுதல்; கடிய-மிக்க; கலுழன்-கருடன்; அடியம்-தொண்டர்கள்; முடிய-முழுவதும்)

''உன்னுடைய தொண்டர்களாகிய நாங்கள், அந்த நீண்ட பெரிய வானரச்சேனையை விருப்பமுடன் நன்றாக முழுவதும் பார்த்துவிடலாம் என்று எண்ணிப் பார்க்கத் தொடங்கினோம். ஆனால் பழமையான கடலின்மீது பறந்து கொண்டே நிலத்தில் கிடக்கும் இரையைப் பார்த்துக் கொண்டே பறக்கும் கருடனைப்போல் எல்லாப்பக்கங்களிலும் பறந்து மிக்க விரைவோடு பார்க்க முடியாமல், ஒரு அளவுதான் பார்க்க முடிந்தது. முற்ற முழுக்கக் காணமுடியவில்லை'' என்றார்கள் அந்த ஒற்றர்கள்.

Koviloor Digital Library

பருந்து வானத்தில் பறந்தாலும், அதன் கண்கள்மட்டும் நிலத்தில் கிடக்கும் இரையைப் பார்த்துக் கொண்டேதான் பறக்கும். அவ்வாறு பறந்தாலும் அதற்கு அந்த இரையின் முழு உருவமும் தெரியாது. அது போலவே நாங்களும் அந்தப் பெரிய வானரச்சேனையை முற்ற முழுக்கப் பார்த்துவிட வேண்டும் என்று விரும்பினோம். ஆனால் அது முடியாது போயிற்று என்கிறார்கள் என்பதாம். ''கழுகுக்கண்'' என்ற சொற்றொடரையும் இங்கு நினைவுகூர்க.

59. "நுவல, யாம்வரவேண்டிய நோக்கதோ?
கவலை-வேலை எனும், கரை காண்கிலாது
அவலம் எய்தி அடைத்துழி, ஆர்த்து எழும்
துவலையே வந்து சொல்லியது இல்லையோ?" (6887)

(நுவல-சொல்லுவதற்கு; நோக்கு-கருத்து; வேலை-கடல்; கரை-முடிவு/எல்லை; அவலம்-துன்பம்; ஆர்த்தல்-ஒலித்தல்; துவலை-நீர்த் துளிகள்)

வானரச்சேனையின் அளவையும், ஆற்றலையும் சொல்லுவதற்கு நாங்கள் வரவேண்டும் என்ற கருத்து அவசியமோ? கவலை என்னும் கடலின் எல்லை காணமுடியாதவாறு மிக்கத் துன்புற்று இறுதியில் வழி கண்டு பிடித்து, மலைகளைக் கொண்டு அவ்வானரர்கள்கடலை அடைத்து அணையைக் கட்டியபோது, அம்மலைகள் வீழ்ந்ததால் கடலினின்றும் பொங்கியெழுந்த நீர்த்துளிகளே இலங்கைவரையிலும் வந்து அதனைத் தங்களுக்குத் தெரிவிக்கவில்லையோ?'' என்று ஒற்றர்கள் வானரப் படையின் பெருக்கத்தையும், வலிமையையும் கூறினார்கள்.

அவலம்-துன்பம், ''அவலம், கவலை, கையாறு-அழுங்கல்'' என்பது மணிமேகலை.

60. "எல்லை நோக்கவும் எய்திலதாம்" எனும்
சொல்லை நோக்கிய மானுடன், தோள் எனும்
கல்லை நோக்கி, கணைகளை நோக்கி, தன்
வில்லை நோக்கவும், வெந்தது வேலையே. (6888)

(சொல்-வசைச்சொல்/பழிச்சொல்; கல்-மலைகள்; கணைகள்-அம்புகள்; வேலை-கடல்; எல்லை-இடம்; மானிடன்-இராமபிரான்; வெந்தது-வற்றியது/எரிந்தது)

''வருணனின் இடமாகிய கடற்கரையில் வந்து மானிடனாகிய இராம பிரான், ஏழு நாட்கள் தவம் இருந்தும், வருணன் வந்து உதவவில்லையே'' என்ற உலகத்தாரின் பழிச்சொல்லை மனத்தில் கருதிய இராமபிரான், தன்னுடைய தோள்கள் என்னும் இருமலைகளையும் நோக்கினான்; தன் அம்பறாத்தூணியிலிருந்த அம்புகளை உற்று நோக்கினான்; பின்னர் தன் தோளில் தொங்கிய கோதண்டம் என்னும் வில்லைப் பொருளோடு

Koviloor Digital Library

உற்றுப்பார்த்தான். அவன் அவ்வாறு பார்த்த அளவிலேயே அந்தக்கடல் நீரெல்லாம் வற்றி, கடலே எரிந்துபோயிற்று'' என்றார்கள் ஒற்றர்கள்.

பொதுவாக மலையைத்தான் வீரர்களின் தோள்களுக்கு உவமை கூறுவது மரபு. இங்கே கம்பன் இராமபிரானின் தோள்களையே மலையாக உருவகித்த நயம் நோக்குக.

61. தார் உலாம் மணி மார்ப! நின் தம்பியே,
தேர் உலாவு கதிரும், திருந்து தன்
பேர் உலாவும் அளவினும், பெற்றனன்,
நீர் உலாவும் இலங்கை நெடுந்திரு. (6889)

(தார்-வெற்றிமாலை; உலாவுதல்-விளங்குதல்/அசைதல்/சஞ்சரித்தல்; மணி-அழகிய; கதிர்-சூரியன்; நீர்-கடல்; உலாவுதல்-சூழ்ந்து இருத்தல்; நெடு-மிக்க; திரு-செல்வம்; திருந்து-செம்மையான)

''வெற்றிமாலை விளங்கும் அழகிய மார்பினையுடையவனே! நின் தம்பியாகிய வீடணன், இவ்வுலகில் ஒற்றைச்சக்கரத் தேரில் சஞ்சரிக்கும் சூரியன் உள்ளவரையிலும், செம்மையான, குணங்கள் பொருந்திய இராமபிரான் பெயரான இராமநாமம் வழங்கும் வரையிலும், இந்தக் கடலால் சூழப்பெற்ற இலங்கை அரசின் பெரும் அரசச்செல்வத்தை இராமபிரானால் தரப்பெற்று வாழ்ந்து வருகிறான்'' என்றனர் ஒற்றர்கள்.

முதலில் இராமபிரான் ஒற்றர்களிடம் இராவணனிடம், தான் இலங்கை அரசச்செல்வத்தை வீடணனுக்கு அளித்ததை மறக்காமல் கூறுங்கள் என்றான்; பின்னர் இராவணன் வீடணனின்நிலை அங்கு எவ்வாறு உள்ளது என்று கேட்டான், இந்த இரண்டு செய்திகளுக்கும் இந்த ஒரு பாடலில் விளக்கம் தந்திருக்கிறான் கவிஞன் என்பதை உணர்க. ''சூரியசந்திரர்'' இருக்கும் வரையிலும் என்று கூறுவது ஒரு வழக்கு. அது கற்பகாலம் வரையிலும் என்ற பொருளைத்தரும். ''ஏழினோடு ஏழாய் நின்ற உலகும், என் பெயரும் எந்நாள் வாழும் நாள் அன்றுகாறும் வாள் எயிற்று அரக்கர் வைகும் தாழ்கடல் இலங்கைச் செல்வம் நின்னதே தந்தேன் என்றான்'' என்பது இராமபிரான் வாக்கு. ''கார் உள்ள அளவும், கடல்நீர் உள்ள அளவும், இந்தப் பார் உள்ள அளவும், என்றன்பேர் உள்ள அளவும், இந்தா வீபிஷணா இலங்காபுரி ராஜ்யம்'' என்பது இராமநாடகம்.

62. '' சேது பந்தனம் செய்தனன் என்றது இப்
போது வந்த புது வலியோ? ஒரு
தூது வந்தவன் தோள்வலி சொல்லிய
ஏது அந்தம் இலாது இருக்கவே? (6890)

(ஏது-காரணம்; அந்தம் இலாத-அளவிலாத; சொல்லிய-தெரிவித்த; சேது-அணை; பந்தனம்-கட்டுதல்/தடுத்தல்)

Koviloor Digital Library

முன்பு தூதுவனாக இங்கு வந்த அனுமன் தன் தோள் வலியையும் காட்டினான்; அவன் தலைவனான இராமபிரானின் தோள் வலியையும் பல எல்லையில்லாத காரணங்கள் மூலமும் விளக்கித் தெரிவித்தான். அப்படி இருக்க, இப்போது அவர்கள் கடலை அடைத்து, அணையைக் கட்டி இலங்கைக்கு வந்துவிட்டார்கள் என்பது அவர்களுக்கு இப்போது புதிதாக வந்த ஆற்றலா? இல்லை, அவ்வாறு கருதுதல் தகுமோ? அது அவர்களிடம் முன்பே இருந்ததுதான்'' என்கிறார்கள் ஒற்றர்கள்.

அனுமன் தோள்வலி காட்டியது, பொழில் இறுத்ததாலும், கிங்கரர்கள், சம்புமாலி, ஐம்படைத்தலைவர்கள், அக்ககுமாரன் இவர்களை அழித்ததாலும், இலங்கைக்கு எரியூட்டியதாலும் அறியப்படும்.

63. ''மருந்து தேவர் அருந்திய மாலைவாய்,
இருந்த தானவர் தம்மை, இரவிமுன்
பெருந் திண் மாயற்கு உணர்த்திய பெற்றியின்,
தெரிந்து காட்டினன், நும்பி சினத்தினான். (6891)

(மருந்து-அமிழ்தம்; தானவர்-அசுரர்கள்; இரவி-சூரியன்; திண்-திண்மை/ஆற்றல்; மாயன்-திருமால்; உணர்த்துதல்-அறிவித்தல்; பெற்றி-தன்மை; நும்பி-உன்தம்பி/வீடணன்; மாலை-சமயம்; முன்-முன்பு/பண்டு)

முன்பு, தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தபோது, அதனின்றும் தோன்றிய தேவாமிர்தத்தை, திருமால் மோகினி அவதாரம் கொண்டு, தேவர்களுக்கு மட்டும் பகிர்ந்தளித்தான். அப்போது, அசுரர்களில் ஒருவனான சிம்மிகையின் புதல்வனான சைம்மிகேயன் என்பவன் மட்டும் தேவர் வடிவம் கொண்டு அவ்வமுதத்தைத் திருமாலிடம் இருந்து பெற்றுக்கொண்டு விட்டான். இதனைக் கண்ணுற்ற சூரிய சந்திரர் பெரும் ஆற்றல் படைத்த திருமாலுக்கு இதனைத் தெரிவித்து விட்டதுபோல், உன்தம்பியாகிய வீடணன் கோபம்கொண்டு எங்களை இராமபிரானிடம் காட்டிக் கொடுத்துவிட்டான்'' என்றனர் ஒற்றர்கள்.

தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்ததும், அதனின்றும் அமிழ்தம் தோன்றியதும், அதனைத் திருமால் மோகினி வடிவம் கொண்டு தேவர்களுக்கு மட்டும் பகிர்ந்தளித்து அசுரர்களை ஏமாற்றியதும் நாம் அறிந்ததே. இங்கே இன்னொரு புதிய செய்தி கிடைக்கிறது. அவர்களுள் சிம்மிகை என்பவனின் புதல்வனான சைம்மிகேயன் என்னும் அசுரன், தேவர்வடிவம் கொண்டு அவ்வமுதத்தினைத் திருமாலிடம் வாங்கி உண்டு விட்டான் என்றும், இதனையறிந்த சூரியசந்திரர் அவர்களைத் திருமாலிடம் காட்டிக்கொடுத்துவிட்டனர் என்றும், அதனால் கோபம் கொண்ட திருமால் தன்கையில் கொண்டிருந்த அகப்பையால் அவனைத் தாக்கினான் என்றும், அதனால் அவன் உடல் இரண்டாகப் பிளந்து தலைவேறு உடல் வேறாக இருதுண்டுகளாகிப் போனான் என்றும்,

Koviloor Digital Library

அவ்விரு துண்டுகளுமே இப்பொழுது இராகு, கேது, என்று வழங்கப் பெறுகின்றது என்றும், அவை ஒவ்வொன்றும் காழ்ப்புணர்ச்சியால் அந்தச் சூரியனையும், சந்திரனையும் சென்று பற்றும் நிகழ்வுதான் சூரிய, சந்திர கிரகணம் என்றும், இன்றும் வழங்கப் பெறுகிறது என்பது ஒரு புராணக்குறிப்பு. அந்த அசுரன் ஒருவன் மட்டும் அமிழ்தத்தை உண்டு விட்டதால் அவனும் தேவர்களைப் போல மரணமிலாப் பெருவாழ்வு பெற்றிருக்கிறான் என்பதும் கூடுதல் செய்திகள். அதுபோல, உன் தம்பியாகிய வீடணன் எங்களை இராமபிரானிடம் காட்டிக் கொடுத்து விட்டான் என்று ஒற்றர்கள் இராவணனிடம் தெரிவித்தனர்.

64. "பற்றி, வானரவீரர் பனைக்கையால்,
எற்றி, எங்களை, ஏண் நெடுந்தோள் இறச்
சுற்றி, ஈர்த்து அலைத்து, சுடர்போல் ஒளிர்
வெற்றி வீரற்குக் காட்டி, விளம்பினான். (6892)

(பற்றி-பிடித்து; பனை-நீண்ட; எற்றி-தாக்கி; சுற்றி-வளைத்து; ஈர்த்து-இழுத்து; அலைத்து-வருத்தி; சுடர்-சூரியன்; ஒளிர்-விளங்குகின்ற; விளம்புதல்-விளக்குதல்; தோள்-கைகள்; ஏண்-பெருமை; இற-முறியுமாறு)

''எங்களை அந்த வானரவீரர்கள் தம் பனைமரம் போன்ற நீண்ட பருத்த வலிமை மிகுந்த கைகளால் பிடித்து, பெருமைபெற்ற நீண்ட கைகள் முறிந்துபோகும்படிச் சுற்றி, இழுத்து, வருத்தி, சூரியன்போல ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் தன்மை வாய்ந்த வெற்றி பொருந்திய வீரனான இராமபிரானிடம் எங்களைக் காட்டினர். அப்பொழுது வீடணன் எங்களது உண்மை நிலையை எடுத்துக் காட்டி விளக்கிக் கூறி விட்டான்'' என்றனர் அவ்வொற்றர்கள்.

'பனைக்கை' என்பது குரங்குகளின் பருமையும், நீட்சியும் வலிமையும் வாய்ந்த கைகளைக் குறித்தது.

65. "சரங்கள் இங்கு இவற்றால் பண்டு தானுடை,
வரங்கள் சிந்துவென்" என்றனன்; மற்று எமைக்
குரங்கு அலாமை தெரிந்தும், அக்கொற்றவன்
இரங்க, உய்ந்தனம், ஈது எங்கள் ஒற்று" என்றார். (6893)

(கொற்றவன்-வெற்றியாளன்/வெற்றிவீரன்; சரங்கள்-அம்புகள்; பண்டு-முன்பே; சிந்துதல்-அழித்தல்; இரங்குதல்-அருளுதல்; உய்த்தல்-உயிர்பெறுதல்)

''அந்த வெற்றிவீரனான இராமபிரான், ''என்னிடம் உள்ள இந்த அம்புகளைக் கொண்டே, உங்கள் தலைவனான இராவணன் பெற்றிருக்கின்ற வரங்கள் அனைத்தையும் அழித்து ஒழித்துவிட முடியும்'' என்றான். மேலும், நாங்கள் உண்மையில் குரங்குகள் அல்ல, ஒற்றறிய வந்த

Koviloor Digital Library

பகைவர்கள் என்று தெரிந்தும், எங்கள்பால் இரக்கம் கொண்டதனால், நாங்கள் உயிர்தப்பிப் பிழைத்து வந்தோம் இதுதான் நாங்கள் அங்கு சென்று ஒற்று அறிந்த வந்த தன்மை'' என்றனர் சூக சாரணர்கள்.

இராமபிரான் இராவணனுக்குப் பகைவன் என்று தெரிந்தும், அவர்கள்பால் இராமபிரான் காட்டிய கருணைத் திறத்தை வியந்து பாராட்டிய ஒற்றர்களின் தன்மை பாராட்டுக்குரியது. எனினும் இதனைக் கேட்ட இராவணன் அவர்களை ஒன்றும் செய்யாது சினம் தணிந்திருந்தது வியப்பிற்குரியது.

66. மற்றும் யாவையும் வாய்மைய, வானவன்
சொற்ற யாவையும் சோர்வின்றிச் சொல்லினார்;
'குற்றம் யாவையும் கோளொடு நீங்குக!
இற்றை நாள் முதல் ஆயு உண்டாக! என்றார். (6894)

(வானவன்-தேவன்/இராமபிரான்; சொற்ற-சொல்லிய; சோர்வு-பிழை/தளர்வு/மறதி; கோள்-தீமை; ஆயு-ஆயுள்/வாழ்நாள்; வாய்மை-உண்மை; குற்றம்-துன்பம்)

மேலும் தேவனான இராமபிரான் இராவணனிடம் கூறுமாறு சொல்லி யனுப்பிய உண்மைமிகுந்த எல்லாச் செய்திகளையும், அங்கு தாங்கள் கண்ட எல்லாவற்றையும் ஒற்றர்கள் தளர்ச்சியடையாமலும், பிழை யின்றியும், மறந்துவிடாமலும் எல்லாவற்றையும் ஒருங்கே கூறிமுடித்து, இராவணனை நோக்கி, ''துன்பங்கள் எல்லாவற்றையும், அவற்றின் தீமைகளோடு நீக்கி, இன்றுமுதல் மீண்டும் முக்கோடி வாழ்நாள் பெற்றுச் சிறப்புடன் வாழ்வீராக!'' என்று வாழ்த்திச் சென்றனர்.

பொதுவாக அரசனிடம் பேசத் தொடங்கும் முன்பும், பேசிமுடித்த பின்பும் அவனை வாழ்த்துவது என்பது ஒரு முறை. எனவே ஒற்றர்கள் வாழ்த்திச் சென்றனர் என்க.

67. சேனைக் காவலன் பேசுதல் [4 பாடல்கள்]

"வைதெனக் கொல்லும் விற்கை மானிடர், மகரநீரை
நொய்தினின் அடைத்து, மானத் தானையான் நுவன்ற நம்ஊர்
எய்தினர்'' என்ற போதின், வேறு இனி எண்ண வேண்டும்
செய்திறன் உண்டோ?" என்னச் சேனைக் காப்பாளன் செப்பும். (6895)

(வைதல்-சபித்தல்; மகரம்-சுறாமீன்கள்; நொய்தினின்-விரைவில்/எளிதில்; மானம்-பெருமை; தானை-சேனை/படை; நுவன்ற-பாராட்டிச் சொல்லப்படுகின்ற; செப்புதல்-கூறுதல்)

''மந்திரச்சொல் வல்லாராகிய முனிவர்களும், ரிஷிகளும் சான்றோர் களும், வெகுண்டு கூறினும், அருளிக்கூறினும், அவ்வப்பயன்களை

Koviloor Digital Library

உடனே அளித்திடும் சாபச் சொற்களைப்போல உடனே பகைவரைத் தவறாது கொல்லும் ஆற்றல் பெற்ற வில்லினைக் கையில் ஏந்தி நிற்கும் மானிடர்களாகிய இராமஇலக்குவர், சுறாமீன்கள்நிறைந்த பெரிய கடலின் நீரை எளிதாகவும், விரைவாகவும் அணையைக் கட்டி அடைத்து, அதன் வழியாகப் பெருமைபெற்ற அவர்களது வானரச்சேனையுடன், மிகவும் புகழ்ந்து பாராட்டுகின்ற காவல்மிக்க நம் இலங்கை மாநகரத்துள் நுழைந்துவிட்டனர் என்ற செய்தியைக் கேட்டபின்னும், இன்னும் ஆலோசிக்கவும், செய்யத்தக்கவும் என்ன இருக்கிறது? போர் செய்யப் புறப்படவேண்டியதுதானே?'' என்று இராவணன் அவையோரை நோக்கிக் கேட்க, அதற்கு சேனைக்காவலன் மறுமொழியாகக் கீழ்க்கண்டவற்றைக் கூறத்தொடங்கினான்.

முன்பு மந்திராலோசனைக் கூட்டத்தில் சேனைத்தலைவன் பிரகஸ்தன் பேசிக்கொண்டிருக்கும்போது, ஒற்றர்கள் வந்து தம் கருத்தைக் கூறிச்சென்றதால் தடைப்பட்டுப்போன மந்திராலோசனைக் கூட்டம் இப்போது, விட்ட இடத்திலிருந்து தொடர்கிறது என்பதை மனத்தில் நிறுத்திக்கொள்க. கம்பன் காவியத்தை நாடக பாணியில் செலுத்திக் கொண்டு செல்வதை உணர்க. இராவணன் வாயிலிருந்தே ''வைதெனக் கொல்லும் விற்கை மானிடர்'' என்று அவனை அறியாமலேயே சொற்களைப் புகுத்தியிருக்கும் கம்பனின் கவித்திறம் நோக்குக. ''மானம்'' என்பது வீரத்தினின்றும் வழுவாத பெருமையைக் குறிக்கும்.

68. "விட்டனை மாதை என்ற போதினும், "வெருவி வேந்தன்
பட்டது" என்று இகழ்வர் விண்ணோர்; பற்றி, இப்பகையைத் தீர
ஒட்டலாம் போரில், ஒன்னார் ஒட்டினும், உம்பி ஒட்டான்;
கிட்டியபோது, செய்வது என் இனிக் கிளத்தல் வேண்டும்? (6896)

(மாது-சீதாதேவி; விண்ணோர்-தேவர்கள்; தீர-நீக்க/விட; ஒட்டல்-தாக்குதல்/நட்புசெய்தலுமாம்; ஒன்னார்-பகைவர்கள்; ஒட்டுதல்-உடன்படுதலுமாம்; கிட்டிய-நெருங்கிய; கிளத்தல்-ஆராய்ந்து சொல்லுதல்; உம்பி-உன்தம்பி/வீடணன்; வெருவி-அஞ்சி; பட்டது-தோற்றது; பற்றி-விடாது)

''நீஇப்போது இந்தச்சீதாதேவியை விடுதலை செய்தாலும், அரசனாகிய இராவணன் பகைவர்களுக்கு அஞ்சித் தோற்று சீதாதேவியை விடுவித்து விட்டான்'' என்று உன்னுடைய பகைவர்களான தேவர்கள் இகழ்ந்து பேசுவார்கள். அவ்வாறு விடாமல், இந்தப் பகையை நீக்குவோம் என்று கருதி அவருடன் போர் செய்தாலோ, அன்றிச் சமாதானம் செய்து கொள்ள முயற்சிப்போம் என்றாலோ, பகைவர்களாகிய இராமஇலக்குவர் உடன் பட்டாலும், உன்னுடைய தம்பியாகிய வீடணன் உடன்படமாட்டான். இப்போது பகைவர்கள் நம்மை நெருங்கிவந்து விட்டார்கள். எனவே இப்போது உடனடியாக நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை

Koviloor Digital Library

அரசனாகிய தாங்கள்தான் நன்கு ஆலோசனை செய்து கூறவேண்டும்'' என்கிறான் பிரகஸ்தன்.

'ஒட்டுதல்' என்ற சொல் நட்புச்செய்து கொள்ளுதல், தாக்குதல், உடன்படுதல் என்ற பொருள்களில் பயின்று வந்துள்ளமை காண்க.

69. ''ஆண்டு சென்று, அரிகளோடும் மனிதரை அமரில் கொன்று,
மீண்டு, நம் இருக்கை சேர்தும் என்பது மேற்கொண்டோமேல்,
ஈண்டு வந்து இறுத்தார் எனும் ஈது அலாது, உறுதி உண்டோ?
வேண்டியது எய்தப் பெற்றால், வெற்றியின் விழுமிது அன்றோ?'' (6897)

(ஆண்டு-அங்கேயே; அரிகள்-வானரச்சேனைகள்; அமர்-போர்; இருக்கை-இருப்பிடம்; இறுத்தல்-தங்குதல்; வேண்டியது-விரும்பப் பட்டது; விழுமிது-பயனுள்ளது/சிறந்தது)

''நம்பகைவர்கள் தங்கியிருக்கும் அந்த இடத்திற்கே சென்று வானரச் சேனைகளோடும், மனிதர்களாகிய இராம இலக்குவரோடும் போர்செய்து, அதில் அவர்களைக் கொன்று, போக்கித், திரும்பி நம் இருப்பிடம் சேர்வோம் என்ற செய்கையை மேற்கொண்டால், நம் பகைவர்கள் நம்மிடத்திற்கே வந்து தங்கியிருக்கிறார்கள் என்ற இச்செய்தி நமக்கு நன்மைபயப்பதுதானே? நாம் விரும்பிய ஒரு பொருள், நம் முயற்சி இன்றித் தானே நம்மை வந்தடைந்தால், அந்த வெற்றி பின்னர் பெறப்போகும் வெற்றியைவிடச் சிறந்ததல்லவா?'' என்கிறான் பிரகஸ்தன்.

போர்செய்வதென்றால் பகைவர்கள் இருக்குமிடத்திற்கு நாம் செல்ல வேண்டும். இப்போது அந்தச் சிரமத்தையும் நமக்குத் தாராது, அவர்களே நம்மிடத்திற்கு அருகில் வந்து விட்டார்கள். இதுவே நமக்கு ஒருவகையில் நன்மை செய்தது போன்றதுதானே? என்கிறான் பிரகஸ்தன். நாம் விரும்பிய பொருளை அரிதின் முயன்று பெறுவதைக் காட்டிலும், அதுவே எளிதாக நமக்குக் கிடைத்துவிட்டால், அது வெற்றியைவிடச் சிறந்ததுதானே என்கிறான் என்பதாம். இது ஒரு வகையில் மாறுபட்ட கருத்து என்பதைக் கற்போர் உணரலாம். எனினும் பின்னால் என்ன நிகழப்போகிறது என்பதையும் காணலாம். ''நெடும் புனலுள் வெல்லும் முதலை, அரும்புனலுள் நீங்கின் அதனைப்பிற'' என்பது குறள்-495. காலமறிதல், இடன் அறிதல் என்ற இரு அதிகாரங்களிலுமுள்ள குறட்பாக்களின் கருத்துக்கள் இங்கு ஒப்புநோக்கத்தகும்.

70. ''ஆயிரம் வெள்ளமான அரக்கர் தம் தானை, ஐய!
தேயினும், ஊழி நூறு வேண்டுமால்; சிறுமை என்னோ?
நாய் இனம் சீயம் கண்டதாம் என, நடப்பது அல்லால்,
நீ உருத்து எழுந்தபோது, குரங்கு எதிர் நிற்பது உண்டோ?'' (6898)

(ஐய-தலைவனே; தானை-சேனை/படை; தேய்தல்-சிதைந்து அழிதல்; ஊழி-யுகம்; உருத்து-வெகுண்டு/சினந்து; எழுதல்-போர் மேற்

Koviloor Digital Library

செல்லுதல்; இனம்-கூட்டம்; நடப்பது-ஓடுவது/பின்வாங்குவது; வெள்ளம்-ஒருபேர்எண்; சிறுமை-அழிவு/கேடு/இழிவு; சீயம்-சிங்கம்)

''தலைவனே! ஆயிரம் வெள்ளம் என்று கணக்கிட்டுச் சொல்லக்கூடிய அரக்கர்கள் படை நம்மிடம் இருக்கிறது. இதனைப் பகைவர்கள் போரில் அழிப்பதற்கு முயன்றாலும்கூட அதற்கு நூற்றுக்கணக்கான யுகங்கள் வேண்டும். இதனால் நமக்கு எந்தக்கேடும் ஏற்படாது. அதைவிடப் போரில் வல்லவனாகிய நீ வெகுண்டு போர் மேற்செல்லுவதற்கு எழுகின்றபோதே, சிங்கத்தைக் கண்ட அளவிலேயே நாய்க்குட்டிக் கூட்டங்கள் போல அந்தக் குரங்குக்கூட்டம் பின்வாங்கி திசைகெட்டுச் சிதறி ஓடிவிடாதா? சிங்கமாகிய உன் எதிரில் அந்தக் குரங்குக் கூட்டம் நிற்கக்கூட முடியுமா?'' என்கிறான் சேனைத்தலைவன் பிரகஸ்தன்.

'ஆயிரம் வெள்ளம்' என்பது படையின் அளவைக்குறிக்கும். ஒரு பேரெண். இதனையே முன்பு வீடணனும் இராமபிரானிடம் தெரிவித் திருக்கிறான் என்பதையும் இங்கு நினைவுகூர்க. குரங்குச்சேனை எழுபது வெள்ளம், என்பதும் நாம் முன்பு கண்டதே. 'உண்டோ?' என்பதிலுள்ள ஓகாரம் எதிமறைப்பொருளது. இல்லை என்பது கருத்து. சிங்கம் போர்க் களத்தில் சென்று போரிட வேண்டுமென்பதில்லை, சிங்கம் போருக்கு எழுகிறது என்று தெரிந்தபோதே நாயினம் சிதறி ஓடிவிடும்'' என்று இராவணனின் போராற்றலைப் புகழ்கிறான் பிரகஸ்தன் என்க.

71. ''வந்தவர் தானையோடு மறிந்து, மாக்கடலில் வீழ்ந்து,
சிந்தினர் இரிந்துபோக, சேனையும் யானும் சென்று
வெந்தொழில் புரியுமாறு காணுதி, வீடைஈக!'' என்னா,
இந்திரன் முதுகு கண்ட இராவணற்கு ஏயச் சொன்னான். (6899)

(தானை-சேனை/படை; மறிந்து-திரும்பி/தோற்று; சிந்துதல்-சிதறிப் போதல்; இரிதல்-நிலைகெட்டு ஓடுதல்; வெம்-கொடிய; ஆறு-திறம்; முதுகுகாணுதல்-புறமுதுகு காட்டி ஓடச்செய்தல்; ஏய்ந்த-பொருந்திய/ ஏற்குமாறு; மா-பெரிய/சிறந்த; காணுதி-காண்பாயாக; ஈக-தந்தருள்க)

''நம்முடன்போர்செய்தற்கு வந்துள்ளவர்களாகிய வானரச்சேனையும், இராம இலக்குவனும் அவர்தம் சேனையோடு புறமுதுகுகாட்டித் திரும்பி போய், பெரிய கடலில் வீழ்ந்து, சிதறிப்போய், நிலைகெட்டு ஓடிப் போகும்படி, நானும் என் சேனையும் சென்று கொடியபோர்த் தொழில் திறமையைக்காட்டும் ஆற்றலைக் காண்பாயாக! இப்பொழுது போர்மேல் செல்ல எனக்கு விடை தந்தருள்வாயாக!'' என்று தேவர் தலைவனான இநதிரனைப் புறமுதுகு காட்டி ஓடும்படிச் செய்த இராவணனுக்கு, அவ னுக்குப் பிடித்தவண்ணம், படைத்தலைவன் பிரகஸ்தன் கூறிமுடித்தான்.

இந்திரனைத் தோற்றோடும்படி இராவணன் போர்புரிந்து வெற்றி கண்டான் என்பது முன்னர் ஆரண்யகாண்டத்தில் ''மீளா நிறத்து ஆயிரங் கண்ணவன் விண்ணின் ஓட வாளால் ஒறுத்தான்'' என்று கூறியிருப்பதை

Koviloor Digital Library

இங்கே நினைவுகூர்க. 'இராவணற்கு ஏயச் சொன்னான்' என்பது ஒரு அருமையான சொற்றொடர். இராவணன் கூட இருந்தவர்களெல்லாம், இராவணனுக்கு எப்படிச் சொன்னால் பிடிக்கும், இன்புறுவான் என்று கருதி, அவனுக்கு ஏற்றவற்றையே சொன்னர்களேயன்றி, அவனுக்கோ, மக்களுக்கோ, நாட்டிற்கோ, நன்மைபயக்கும் சொற்களைக் கூறினார்கள் இல்லை என்ற பெரும் பொருள் பொதிந்த சொற்றொடர் இது. முன்னர் சீதாதேவியும், ''மந்திரம் வல்லரவும் கேட்கும்'' என்று அவனது அமைச்சர்களைச் சாடி அவனை, 'இடிப்பாரை இல்லா ஏமறா மன்னன்' என்று இழிவாய்க்கூறியதையும் இங்கு நினைவுகூர்க.

''ஈக'' என்ற சொல் தாழ்ந்த நிலையில் உள்ளவர்கள் உயர்ந்த நிலையில் உள்ளவர்களிடம் கேட்கும் சொல் என்பது அறிக. ''ஈ என் கிளவி, இழிந்தோன் கூற்று'' என்பது சான்றோர் வாக்கு. போரில் தோற்று ஓடுபவனைப் பற்றிக்கூறும் போது ''புறமுதுகு காட்டினன்'' என்றும், போரில் வென்றவனைப் பற்றிக்கூறும்போது ''புறமுதுகு கண்டான்'' என்றும் கூறுவதும் மரபு.

72. மாலியவான் பேசுதல் [10 பாடல்கள்]

மதிநெறி அறிவு சான்ற மாலியவான், "நல்வாய்மை
பொதுநெறி நிலையது ஆகப் புணர்த்துதல், புலமைத்து" என்னா,
"விதிநெறி நிலையதாக, விளம்புகின்றோரும், மீண்டு
செதுநெறி நிலையினாரே" என்பது, தெரியச் சொல்லும். (6900)

(அறிவு-பகுத்தறிவு/நூலறிவு; மதி-இயற்கையறிவு/உணர்வு; சான்ற-நிரம்பிய; நல்-நன்மை; புணர்த்துதல்-எடுத்துரைத்தல்; புலமை-அறிவுடைமை; விதி-ஊழ்; மீண்டு-மீளவும்; செதுநெறி-அழியும் வழி; நிலையினர்-நிற்பவர்; தெரிய-விளங்குமாறு; செதுத்தல்-சிதைவுற்று அழிதல்; நெறி-மார்க்கம்/வழி)

பகுத்தறிவும், சிறந்த நூலறிவும், நுண்மாண் நுழைபுலமும், பழுத்த அனுபவமும் நிரம்பப் பெற்றவனும், இராவணனைத் தவிர, மற்ற எல்லோராலும் மதிக்கப்படுபவனுமாகிய மாலியவான் என்னும் இராவணனின் தாய்வழிப் பாட்டன், தன் மனத்துள் நல்ல நன்மை தருவதான, மெய்ம்மையான, எல்லோர்க்கும் பொதுவாக விளங்குகின்ற வழியில் நிற்பதென்பதை, நமக்குச் சாதகமாக்கிக் கொள்வதுதான் அறிவுடைமையாகும் என்று இராவணனுக்குப் புரியுமாறு எடுத்துச் சொல்லவேண்டும் என்று கருதி, ''பகைவர்கள் நம்மேல் படையெடுத்து வருவது விதியால் விளைந்தது என்று எடுத்துக் கூறுகின்ற சேனைத் தலைவன்பிரகஸ்தன்போன்றோரும்திரும்பவும், நம்மை நாமே அழித்துக் கொள்ளும் வழியினைத் தான் கூறுகின்றனர்'' என்பதை நன்கு விளக்கிக் கூறத்தொடங்கினான்.

Koviloor Digital Library

மாலியவான் ஒருவன்தான் இலங்கையில் இராவணனைச்சுற்றியிருப்பவர்களில் அறிவுமிக்கவன். அறம் உரைக்கும் திறன்வாய்ந்தவன் என்பதைக் கவிஞன் ''மதி, நெறி, அறிவு, சான்ற மாலியவான்'' என்றுகூறிச் சிறப்பிப்பதைக் கருதுக. 'செதுத்தல்' என்ற சொல் நமக்கு புதிது. ஆனால் 'செத்தை' என்ற சொல் நமக்கு பழக்கமானது. அழியும் தன்மையுடைய குப்பையைச் செத்தை என்று கூறுகிறோமே, அது இந்தச் செதுத்தல் என்ற சொல்லின் அடியாகப் பிறந்த ஒரு அருமையான தமிழ்ச்சொல் என்பதை அறிக. ''மதிநுட்பம், நூலோடு உடையவர்க்கு அதிநுட்பம் யாவுள முன் நிற்பவை'' என்பது குறள்-636.

73. "பூசற்கு முயன்று, நம்பால் பொருதிரைப் புணரிவேலித்
தேசத்துக்கு இறைவன் ஆன தெசரதன் சிறுவனாக,
மாசற்ற சோதி வெள்ளத்து உச்சியின் வரம்பில் தோன்றும்
ஈசற்கும் ஈசன் வந்தான்" என்பதோர் வார்த்தை இட்டார். (6901)

(மாசு-குற்றம்/களங்கம்; சோதி-பேரொளி; விசும்பு-ஆகாயம்; வரம்பு-மேல்எல்லை; தோன்றும்-விளங்குகின்ற; ஈசன்-தேவன்; பூசல்-போர்; முயன்று-மேற்கொண்டு; புணரி-கடல்; தேசம்-நிலம்; இறைவன்-தலைவன்; தெசரதன்-தசரதச்சக்கரவர்த்தி; சிறுவன் மைந்தன்/புதல்வன்; வார்த்தை-செய்தி; இடுதல்-ஏற்றிச்சொல்லுதல்; உச்சி-வானமுகடு; வெள்ளம்-மிகுதி)

''தரைமீது மோதித் தாக்குகின்ற அலைகளையுடைய கடலையே தன் அரசுக்கு உட்பட்ட எல்லையாகக் கொண்ட கோசல நாட்டுக்குத் தலைவனான தசரதச் சக்கரவர்த்தியின் புதல்வனான இராமபிரானே, ''களங்கமற்ற பேரொளி வெள்ளத்தில் வானமுகட்டின் மேல் எல்லையாகிய பரம ஆகாசத்தில் விளங்கித் தோன்றுகின்ற, தேவர்க்கெல்லாம் தேவனாகிய தேவாதிதேவன், திருமால்தான், பரம்பொருள்தான், முழுமுதற் கடவுள்தான், இராமபிரானாக அவதாரம் எடுத்து, அரக்கராகிய நம்முடன்போர் செய்யும்பொருட்டு போர்மேற்கொண்டு, நம்மிடத்திற்கு வந்திருக்கிறான்'' என்று இங்குள்ள பலரும் பேசிக்கொள்கிறார்கள்'' என்று மாலியவான் பேசத்தொடங்குகிறான்.

தசரதன் என்பது 'தெசரதன்' என்று மோனை நோக்கித் திரிந்து வந்தது என்க. 'இடுதல்' என்பது மற்றோரால் ஏற்றிப்பேசப்படுகிறது என்ற விரிந்த பொருளைத்தரும். உலகத்தார் பேசிக்கொள்கிறார்கள் என்று கூறுவதனால், தான் கூறவில்லை என்பதைத் தெளிவாக்குகிறான் மாலியவான் என்பதையும் உணர்க. அதைப்பற்றிச் சிந்தித்து முடிவெடுக்க வேண்டியது உன்னுடைய கடமை என்று எச்சரிக்கும் தொனி தோன்றுவதையும் உணர்க. தேசம் என்பது பூமி என்ற பொருளில் இங்கு கோசலநாட்டைக் குறித்தது என்க. ''மாசற்ற சோதி வெள்ளத்து உச்சியின் வரம்பு'' என்பது சோதிமயமான பரம ஆகாசம் என்க. 'புணரி' என்பது கலத்தல் என்ற

Koviloor Digital Library

பொருளில் வந்தது. பல நதிகளும் வந்து கலத்தலால் புணரி என்பது கடலுக்குக் காரணப்பெயர்.

74. "அன்னவற்கு இளவல் தன்னை, 'அருமறை, பரம்' என்று ஓதும்
நல்நிலை நின்று தீர்ந்து, நவையிலா உயிர்கள் தோறும்,
தொல்நிலை பிரிந்தான் என்னப் பலவகை நின்ற தூயோன்,
இன் அணை" என்ன, யாரும், இயம்புவர்; ஏது யாதோ?" (6902)

(இளவல்-தம்பி/இலக்குவன்; ஓதுதல்-சிறப்பித்துப் போற்றுதல்; தீர்ந்து-நீங்கி; நவை-குற்றம்; தொல்-பழமையான; பிரிதல்-தவிர்த்தல்; இன்-இனிய; அணை-படுக்கை/ஆதிசேஷன்; ஏது-காரணம்; யாரும்-எல்லோரும்)

அப்படிச்சொல்லப்படுகின்ற அந்தஇராமபிரானுக்குத் தம்பியாகிய இலக்குவன் யாராலும் அறிதற்கரிய வேதம் என்றும், பரத்துவம் என்றும் எல்லோராலும் சிறப்பித்துச் சொல்லப்படுகின்றான். அவன்தன் நல்ல நிலையாகிய பரத்துவ நிலையினின்றும் நீங்கி, குற்றமற்ற உயிரினங்கள் எல்லாவற்றுள்ளும் நீக்கமற நிறைந்து நிற்றலால், அவனுடைய பழமையான இறைத்தோற்றத்திலிருந்து தவிர்ந்து விட்டான் என்றும், பலவகையான உயிரினங்களின் உள்ளத்தில் நிலைத்து நிற்கும் பரிசுத்த மானவன் என்றும், இராமபிரானுக்கு இனிமையான மென்மையான படுக்கையாக இருப்பவன் என்றும் அறிந்தவர்கள் எல்லோரும் கூறுகின்றனர்; அவ்வாறு அவர்கள் கூறுவதற்கு என்ன காரணம்?'' என்று கேட்கிறான் மாலியவான்.

இறைவனை ஐந்து நிலைகளாகப் பார்ப்பது வைணவ சித்தாந்தம். அவை பரம், வியூகம், விபவம்(அவதாரம்), அந்தர்யாமித்வம், அர்ச்சை என்பன. 'அருமறை' என்பது எளிதில் அறிந்து தெளிதற்கு அரிய வேதம் என்பது பொருள். 'பலவகை நின்ற தூயோன்' என்பது ''போகமாகவும், போகியாகவும், ஏகமாய் நின்ற தத்துவ மறைக்கும், எட்டுதற்கு அரியனாய் நிற்கும் நிலை எனினுமாம்'' என்ற வில்லிபாரதத்தை நினைவூட்டும். 'தூயோன்' என்பது ''வினையின் நீங்கி விளங்கிய அறிவன்'' என்று தொல்காப்பியம் கூறும் கூற்றின் அடியொற்றியது என்க. 'ஹேது' என்ற வடசொல் 'ஏது' என்று திரிந்தது என்க. 'அருமறை பரம் என்று ஓதும் நல்நிலை' என்பது பரத்துவநிலை; 'உயிர்கள் தோறும் நின்ற' என்பது அந்தர்யாமித்வநிலை; 'பலவகை நின்ற' என்பது விபவநிலை; மாலியவான் இதனைத் தன் கருத்தாகக் கூறாது, 'என்ன யாரும் இயம்புவர்' என்று கூறுவதிலிருந்தே, இராவணன் தன் கருத்தை ஏற்றுக்கொள்ள மாட்டான், மற்றவர் கருத்தைத்தான் ஏற்றுக்கொள்வான் என்றும் நன்கு தெரிந்தே கூறும் அவன் சொல் வன்மையை உணர்க.

Koviloor Digital Library

75. "அவ்வவர்க்கு அமைந்த வில்லும், குலவரை அவற்றின் ஆன்ற,
வெவ்வலி வேறுவாங்கி, விரிஞ்சனே விதித்த மேல்நாள்;
செவ்வழி நாணும் சேடன்; தெரிகணை ஆகச்செய்த
கவ்வு அயில், காலநேமிக் கணக்கையும் கடந்தது" என்பார். (6903)

(வரை-மலை; ஆன்ற-அமைந்த; வாங்கி-பிரித்தெடுத்து; மேல்நாள்-முற்காலத்தில்; விரிஞ்சன்-நான்முகன்/பிரமன்; விதித்தல்-செய்து அமைத்தல்/படைத்தல்; செவ்வழி-நேர்மையான நெறி; சேடன்- ஆதி சேஷன்; தெரி-ஆராய்ந்து; கவ்வுதல்-கவர்தல்; அயில்-கூரியமுனை; நேமி-சக்கரம்; கணக்கு-அளவு; கடத்தல்-விஞ்சுதல்/மேற்படுதல்; குலம்-சிறந்த)

''அந்த இராமஇலக்குவர்களுக்கு வந்தமைந்த விற்படைகள், சிறந்த அஷ்டகுல மலைகளின் சிறந்த வலிமையை வேறாகப் பிரித்தெடுத்து, முற்காலத்தில் பிரமதேவனே செய்து அமைத்ததாகும். அந்த நேர்மையான வில்லுக்கு நாண் கயிறாக விளங்குபவன் ஆதிசேஷன் ஆவான். ஆராய்ந் தெடுக்கப்பட்ட அம்புகளின் கூரியமுனைகள், காலச்சக்கரமாகிய சுதர்சனம் என்னும் திருமாலின் கைப்படையின் அளவைக் காட்டிலும் வேகமாகவும், விரைவாகவும், இலக்குத் தப்பாததாகவும் பகைவரைக் கவரும் வலிமை பெற்றதாகவும் ஆகும்'' என்று சான்றோர் கூறுவர்.

இராம இலக்குவர் போர்செய்தற்காகக் கையில் கொண்டுள்ள விற்படையின் ஆற்றல் பேசப்பட்டது. 'குலம்' என்ற சொல் சிறப்பு என்ற பொருளைத்தரும். துளக்கலாகாநிலையும் தோற்றமும், மலைகளுக்கு உள்ள இயற்கைப் பண்புகள் என்க. திருமாலின் ஆணைச்சக்கரம் எவ்வாறு எங்கும் ஊடுருவிச் செல்லுமோ அதைக்காட்டிலும், வேகமாகவும், விரைவாகவும் தடையின்றியும் இவ்விற்படைகள் செல்லும் என்பது கருத்து. இப்பொழுது இராமபிரான் கைகளில் கொண்டுள்ள விற்படை முன்பு அகத்தியர் அவருக்கு அளித்தது என்பதும் அவை பிரமனாற் செய்யப்பட்டது என்பதும் நாம் முன்பு ஆரண்யகாண்டத்தில் கண்டதே.

76. "வாலி மாமகன் வந்தானை, 'வானவர்க்கு இறைவன்' என்றார்;
நீலனை, 'உலகம் உண்ணும் நெருப்பினுக்கு அரசன்' என்றார்;
காலனை ஒக்கும் தூதன் 'காற்று எனும் கடவுள்' என்றார்;
மேலும் ஒன்று உரைத்தார், 'அன்னான் விரிஞ்சன் ஆம் இனிமேல்
என்றார். (6904)

(காலன்-இயமன்/கூற்றுவன்; இனிமேல்-இப்பிறவியின் பின்னே; விரிஞ்சன்-பிரமன்; மா-பெருமை; வந்த-பிறந்த)

''பெருமைவாய்ந்த வாலிக்குப் பிறந்தவனாகிய அங்கதனை, தேவர்களுக்குத் தலைவனாகிய இந்திரன் என்றார்கள். படைத்தலைவன் நீலனை, ஊழி இறுதிக்காலத்தில் இவ்வுலகையே அழிக்கும் நெருப்புக்

Koviloor Digital Library

கரசனாகிய வடஅனல் (வடவாமுகாக்னி) என்றார்கள்; பிறரைக் கொல்லு கின்றதன்மையால் இயமனைஒத்திருக்கும் இராமதூதனாகிய அனுமனை, காற்றுக்கு அரசனாகிய வாயுதேவன் என்றார்கள்; மேலும் ஒன்று கூறினார்கள். அந்த அனுமன் இனிவரும் பிறப்பில் பிரமதேவனாகவே ஆவான்'' என்றும் கூறினார்கள்.

அங்கதன் இந்திரனின் கூறு என்றும், நீலன் அக்னியின் கூறு என்றும், அனுமன் வாயு, மற்றும் சிவபெருமானின் கூறு என்றும், நாம் முன்பு பாலகாண்டத்தில் கற்றதை இங்கு நினைவுகூர்க. இராமபிரான் அனுமனுக்குப் பின்பிறவியில் பிரமபட்டம் அளித்தருளினார் என்பதும் நாம் முன்பு கண்டதேயாகும். ''இலங்கை நகரில் எரி ஊட்டி, மன்னன் இராமன் மனம் உவப்ப, வயவாள் அரக்கர் குலம் அறுத்துப் பின்னை அவன்தன் பேரருளால் பிரமபதமும் பெறுக'' என்றான் என்பது உத்தரகாண்டம் அனுமப்படலம். இந்தப் பிரமபட்டம் இராமபிரானால் அனுமனுக்கு எப்போது தரப்பட்டது? இலங்கையில் அனுமன் ஆற்றிய வீரதீரச் செயல்களை வீடணன் வாயிலாகக் கேட்ட இராமபிரான், அனுமனைப் புகழ்ந்துரைத்தபின், அவனுக்கு பிரமபதவியை உரிமை யாக்கினான் என்பது இலங்கை வேள்விப்படலம். ''முன்னதாக்கிய மூவுலகாக்கிய முதலோன் பின்னதாக்கிய பதம் நினக்கு அளித்தனென்; பெற்றாய்'' என்பது இலங்கை கேள்விப்படலம்.

77. "அப்பதம் அவனுக்கு ஈந்தான், அரக்கர் வேர் அறுப்பதாக,
இப்பதி எய்தினான், அவ்விராமன்" என்று எவரும் சொன்னார்;
ஒப்பினால் உரைக்கின்றாரோ? உண்மையை உணர்த்தினாரோ?
செப்பிஎன்?" குரங்காய் வந்தார் தனித்தனித் தேவர்" என்றார். (6905)

(இப்பதி-இந்தநகரம்; எவரும்-பலரும்; ஒப்பு-ஒத்த தன்மைகள்/ உபசாரம்; செப்புதல்-கூறுதல்; அப்பதம்-பிரமபதம்)

''அவ்வாறு அந்தப் பிரமபதத்தை அனுமனுக்கு அளித்தருளியவனான இராமபிரான் அரக்கர்களை வேரோடு அழித்தொழிப்பதற்கென்றே இப்போது இவ்விலங்கை மாநகர் வந்து அடைந்துள்ளான் என்று எல்லோரும் கூறுகிறார்கள். இவ்வாறு வானரர்களாய் உருமாறி வந்திருப்ப வர்கள் எல்லாம் ஒவ்வொருவரும் தனித்தனித் தேவர்களே யாவார்கள்'' என்றும் கூறுகிறார்கள். இது தேவர்களையும் அரக்கர்களையும் ஒப்புமைப் படுத்தி உபசார வார்த்தைகளாகக் கூறுகின்றார்களோ? அல்லது உண்மைநிலையை ஆராய்ந்து கூறுகிறார்களோ? தெரியவில்லை. ஆனால் இப்போது அதைப்பற்றிக் கூறி என்னபயன்? என்கின்றனர் ஒற்றர்கள்'' என்கிறான் மாலியவான்.

இங்கு ஒரு நல்ல விளக்கம் கிடைக்கிறது. 'ஒப்பினால் உரைத்தல்' என்பது இருதிறப் பொருள்களுக்கும் உள்ள வண்ணம், வடிவு, தொழில், பயன் ஆகிய ஒப்புமைத் தன்மைகளை எண்ணி, ஒன்றை மற்றொன்றின்

Koviloor Digital Library

தன்மையுடையதாகக் கூறுவது உபசரித்துக் கூறுதல் ஆகும். 'உண்மையே உரைத்தல்' என்பது, ஒரு பொருளின் புறத்தோற்றம் முதலியவற்றைக் கண்டு அவ்வளவில், அதன் இயல்பு இதுவெனக் கொண்டு அமைந்து விடாமல், அதன் அகத்தே உள்ள மெய்யாய பொருள் இன்னது எனக்கண்டு உணர்ந்து கூறுதல் ஆகும்.

78. "ஆயது தெரிந்தோ? தங்கள் அச்சமோ? அறிவோ? யார்க்கும்
சேயவள்; எளியள் என்னா, சிந்தையின் இகழல் அம்மா!
தூயவள் அமிர்திேனாடும் தோன்றினாள்" என்றும், "தோன்றாத்
தாயவள், உலகுக்கெல்லாம்" என்பதும், சாற்றுகின்றார்" (6906)

(ஆயது-ஆராய்ந்து அறிந்தது; சிந்தை-மனம்; சாற்றுதல்-கூறுதல்; சேய்மை-தூரம்)

''குரங்காய் வந்தார் தனித்தனித் தேவராவார்'' என்று அவர்கள் கூறுவது, ஆராய்ந்து தெளிந்ததாலோ? அல்லது இராமஇலக்குவரிடத்துக் கொண்டுள்ள அச்சத்தாலோ? அல்லது, தங்கள் அறிவிற்குப் புலப் பட்டதைக் கூறுகிறார்களோ? தெரியவில்லை. எது எப்படியாயினும், அவர்கள் உடன் வந்துள்ள இராமபிரான் மனைவியாகிய சீதாதேவி, யாராலும் அணுகுதற்கரிய பரமபதத்தில் இருப்பவள்; அவள் மிகவும் எளிமையானவள் என்று மனத்தால் கருதி இகழ்ச்சி செய்தல்கூடாது; தகாது. அவள் மிகவும் பரிசுத்தமானவள், உலகத்தார் உயிரினங்களுக் கெல்லாம் கட்புலனுக்கு எட்டாத பெருந்துணையாவாள் என்றும் எல்லோரும் கூறுகின்றனர்'' என்கிறான் மாலியவான்.

சேயவள் என்ற சொல், சேய்மை என்ற சொல்லின் அடியாகப் பிறந்தது. சேய்மை என்பது தூரத்தைக் குறித்து, யாவர்க்கும் எட்டாத, கட்புலனுக்கு உட்படாத அணுகுவதற்கு அரியவள் என்ற பொருளைத்தந்து நின்றது. இவள் இத்தன்மைத்தானவள் என்று எளிதில் அறிந்துகொள்ள முடியா தவள் என்பதும் பொருளாகும். எவ்வாறு துளசி முளைக்கும்போதே நறுமணத்துடன் முளைக்கிறதோ, அதுபோல சீதாதேவியும் பாற்கடலி னின்றும் தோன்றிய அமிழ்தத்துடன் உடன் தோன்றியவள் என்பதாம். இது அவள் ''அயோநிஜை'' என்பதையும் தெய்வப்பிறவி என்பதையும் புலப்படுத்துகிறது என்பது அறிக. 'தோன்றாத்துணை' என்று இறைவனைச் சான்றோர் கூறுவர். அதுபோலச் சீதாதேவியைத் 'தோன்றாத்தாயாக' உயிரினங்கள் போற்றித் துதிக்கின்றன என்று மாலியவான் இராவணனுக்கு அறிவுறுத்துகிறான்.

''அம்ம கேட்பிக்கும்'' என்பது தொல்காப்பியம். இங்கே அம்மா! வியப்பினைக் குறித்த இடைச்சொல்லாகவும் கொள்ளலாம். கருவாய்ப் பட்டுத் தோன்றாதவள் - தாய்வயிற்றினின்றும் தோன்றாதவள் அயோ நிஜை என்க.

Koviloor Digital Library

79. "கானிடை வந்ததேயும் வானவர் கடாவவே ஆம்;
மீனுடை அகழிவேலை விலங்கல்மேல் இலங்கை வேந்தன்
தூனுடை வரத்தை எண்ணி, தருமத்தின் தலைவர்தாமே
மானுட வடிவம்கொண்டார்" என்பது ஓர் வார்த்தை இட்டார்" (6907)

(கான்-காடு; கடாவுதல்-தூண்டிச்செலுத்துதல்; வேலை-கடல்; விலங்கல்-மலை; தலைவர்-இறைவன்; மானுடம்-மனிதவடிவம்; வார்த்தை-செய்தி; இடுதல்-கொண்டுவருதல்)

"இந்த இராமஇலக்குவர் வானரச்சேனையுடன் கானகத்திற்கு வந்தது கூட, தேவர்கள் வேண்டிக்கொண்டு அவர்கள் உந்துதலினா லேயாம். மீன்கள் நிறைந்த கடலையே தனது அகழியாகக் கொண்டதும், திரிகோண மலையின்மேல் அமைந்திருப்பதுமான இந்த இலங்கை மாநகரத்தின் அரசனான நீ பெற்றுள்ள வலிய வரங்களையெல்லாம் கருத்தில்கொண்டு, அந்த அறக்கடவுளே இந்த இராமன் என்னும் மனிதவடிவம் ஏற்றுக்கொண்டு வந்துள்ளார்" என்ற ஒரு செய்தியையும் ஒற்றர்கள் அறிந்து கொண்டுவந்து கூறியிருக்கிறார்கள்" என்கிறான் மாலியவான்.

இராமஇலக்குவர் கானகம் அடைதற்கு நேர்காரணம் கைகேயியின் வரங்கள்தான் என்றாலும், தேவரகசியம் என்ன என்பதை முன்பு கூறியதான "அரக்கர் பாவமும், அல்லவர் இயற்றிய அறமும், துரக்க நல்லருள் துறந்தனள் தூமொழி மடமான்" என்ற பாடலையும் இங்கு நினைவுகூர்க. நீ பெற்றுள்ள வரங்களால், நீ எவராலும் வெல்லப்பட மாட்டாய் என்பதால், இறைவனே மானிட வடிவம் கொண்டு வந்திருக்கிறான் என்பதை உணர்ந்து கொள்வாயாக!" என்று மாலியவான் இராவணனுக்கு அறிவுறுத்துகிறான் என்பதாம்.

80. "ஆயிரம் உற்பாதங்கள் ஈங்கு வந்து அடுத்த" என்றார்;
"தாயினும் உயிர்க்கு நல்லாள் இருந்துழி அறிய, தக்கோன்
ஏயின தூதன் எற்ற, பற்றுவிட்டு, இலங்கைத் தெய்வம்
போயினது" என்றும் சொன்னார், "புகுந்தது போரும்" என்றார். (6908)

(உற்பாதங்கள்-தீயநிமித்தங்கள்/கெட்ட சகுனங்கள்; அடுத்தல்-தோன்றுதல்; இருந்துழி-இருக்கும் இடம்; தக்கோன்-பெருந்தகை/மேலோன்; ஏயின-அனுப்பப்பெற்ற; எற்ற-தாக்கி எறிய; பற்று-தொடர்பு; ஆயிரம்-பல; உழி-இடம்)

"இந்த இலங்கை மாநகரத்தில் பல்லாயிரக்கணக்கான தீய நிமித்தங்கள் வந்து அடுத்தடுத்துத் தோன்றியுள்ளன என்று கூறுகின்றார்கள்; "உலகத்து உயிரினங்களுக்கெல்லாம், பெற்றதாயைக் காட்டிலும் அன்பு அருளுபவளான சீதாதேவி ஒளித்து வைக்கப்பட்டிருக்கும் இடத்தைத் தெரிந்து வருவதற்காக, மேலோனான இராமபிரானால் அனுப்பப்பட்ட தூதனாகிய அனுமன் மோதித் தாக்கியதால், இலங்கை மாநகரத்துக் காவல்

Koviloor Digital Library

தெய்வமாகிய இலங்கைமாதேவி இந்நகரத்துடன் உடனாய காவல் தொழில் தொடர்பு அற்றுப்போய், ஓடிப்போய் விட்டாள்'' என்றும், அதனால் இந்நகருக்குள் அனுமன் வடிவில் போர் நுழைந்து விட்டது'' என்றும் பேசிக்கொள்கிறார்கள்'' என்கிறான் மாலியவான்.

''ஆயிரம்'' என்பது பல என்னும் எண்ணுப்பொருளில் வந்தது. 'ஒரு நாள் ஏழுநாள் போலச் செல்லும்' என்பது குறள்-1269. 'உற்பாதம்' என்பது 'துர்க்குறி' எனப்படும். கெட்ட அறிகுறி என்பது பொருள். பின்வரக்கூடிய ஒரு தீய விளைவை முன்னரேயே ஏதோ ஓர் குறிப்பால் உணர்த்தும் அடையாளம் என்பது விரிந்த பொருள். அவ்வாறு உற்பாதங்கள் நிகழ இருக்கும்போது, எட்டுத்திக்கிலும் தூம கேதுக்கள் தோன்றும் என்பது தக்கயாகப்பரணி. 'சொலத்தகாத் துன்னிமித்தங்கள் எங்கணும் வரத் தொடர்வ' என்று முன்பும் கூறியது நினைவிற்கொள்க. ''இலங்கைத் தெய்வம்'' என்பது, இலங்கையைக் காவல் செய்துவந்த காவல் தெய்வமாகிய இலங்கைமாதேவி, இலங்கிணியைக் குறிக்கும்.

81. "அம்பினுக்கு இலக்கம் ஆவார் அரசொடும் அரக்கர் என்ன
நம் பரத்து அடங்கும் மெய்யன், நாவினில் பொய் இலாதான்,
உம்பர் மந்திரிக்கும் மேலா, ஒரு முழம் உயர்ந்த ஞானத்
தம்பியே சாற்றிப் போனான்" என்பதும் சமையச்சொன்னார்" (6909)

(பரம்-சார்பு; அடங்குதல்-தோன்றுதல்; உம்பர்-தேவர்; மந்திரி-அமைச்சர்/பிரகஸ்பதி; ஞானம்-பேரறிவு; தம்பி-வீடணன்; அரசு-அரசன்/மன்னன்/இராவணன்; இலக்கம்-இலக்கு/குறி; சமைய-பொருந்த; மெய்யன்-சத்தியவான்; சாற்றுதல்-கூறுதல்)

''நம் அசுரகுலத்தில் தோன்றிய, நம்மைச் சார்ந்தவனும், பொய்யே இல்லாத இயல்புடையவனும், வாயினாலும்கூடப் பொய் பேசியறியாத வனும், தேவர்களின் குருவாகிய பிரகஸ்பதிக்கும் குறைந்தது ஒருமுழம் அறிவாவது மேம்பட்டவனுமான, உனது தம்பியாகிய வீடணனே ''இலங்கை வேந்தன் இராவணனும், அவனது அரக்கர் கூட்டமும் இராம பிரானது கணைகளுக்கு இலக்காகி அழிந்து போவர்'' என்று சொல்லி வெளியேறியிருக்கிறான் என்று எல்லோரும் ஒருசேரக் கூறுகின்றனர்'' என்றும் மாலியவான் அறிவுறுத்துகிறான்.

'மெய்யன்' என்றாலே உண்மைபேசுபவன் என்பது பொருள். அதற்கு மேலும் 'நாவினால் பொய் இலாதான்' என்றது, வீடணன் மனம், மொழி, மெய்யினால் முக்கரணங்களாலும் தூயவன் என்பதைக் கூறிச்சிறப்பிக்க என்று கொள்க. தேவர்களுக்கெல்லாம் குருவாகப் பிரகஸ்பதியைக் கூறி, அவன்தான் அறிவுத்தந்தை என்றும் ஞானஅதிபதி என்றும் கூறுவர். இங்கே கம்பன் வீடணனை, அந்த ஞானாதிபதிக்கும்'' ஒருமுழம் உயர்ந்த ஞானத்தம்பி' என்று வீடணனைப் புகழின் உச்சிக்கே சென்று ஏத்தும் பண்பு நலன் காண்க. வீடணன் உடம்பால்தான் அசுரனேயன்றி, பொய்இலாத

Koviloor Digital Library

மெய்யன் என்று குணநலன்களால் அரக்கரினும் மாறுபட்டவன் என்பதைக் கவிஞன் இடம் கிடைக்கும் போதெல்லாம் புகழ்ந்து போற்று வதை உணர்க. பிரகஸ்பதி என்னும் வியாழ பகவான்தான் கல்விக்கும் ஞானத்திற்கும் அதிபதி என்பது சோதிட நூல்வல்லார் துணிவு. அவனைக் காட்டிலும் ஒருமுழம் உயர்ந்த **ஞானத் தம்பி** என்று வீடணன் போற்றப் படுகிறான் என்க. ஒருமுழம் என்பது **நீட்டலளவை**யைக் குறிக்கும், ஒரு குறியீடாக உயர்ச்சியினைக் குறித்ததாகக் கொள்ளவேண்டும். ஒருமுழம் என்று பேச்சுவழக்கில் இருக்கும் ஒரு சொல்லைக் கவிஞன் பயன்படுத்தி யிருக்கும் பாங்கும் உணர்ந்து இன்புறத்தக்கது. உள்ளத்தூய்மை, சொல்லின் தூய்மை, உடலின் தூய்மை மூன்றையும் ஒருசேரக்கூறினார் என்க. கவிஞன் வீடணனை ஞானத்தம்பி என்று இங்கு குறிப்பிட்டதுபோலக், காப்பி யத்தில் முன்னும், பின்னும் உயர்த்தியே பேசிவருவது உணரற்பாலது.

82. "ஈதெல்லாம் உணர்ந்தேன் யானும், என்குலம் இறுதி உற்றது
ஆதியின் இவனால் என்றும், உன்தன்மேல் அன்பினாலும்
வேதனை நெஞ்சின் எய்த, வெம்பி, யான் விளைவ சொன்னேன்;
சீதையை விடுதிஆயின், தீரும் இத்தீமை" என்றான். (6910)

(ஆதியில்-முற்காலத்தில்; இவன்-திருமால்; எய்த-தோன்ற/ஏற்பட; வெம்பி-வெதும்பி/மனம்கொதித்து; விளைவ-விளைவது/இனி நிகழப் போவது)

"மேற்கூறியவையெல்லாம் நானே நேரில் அனுபவித்து உணர்ந்த வைகள் என்பதாலும், நம்முடைய அரக்கர்குலம் முன்பு ஒருமுறை இதே திருமாலால் அழித்து ஒழிக்கப்பட்டது என்பதாலும், உன்மேல் நான் கொண்டுள்ள அளவற்ற அன்பின் காரணமாகவும், என்னுடைய உள்ளத்தில் துன்பம் மிக்கூர, மனம் கொதித்து, பின்னால் என்ன நிகழும் என்பதை முன்கூட்டியே அறிந்து உனக்கு எடுத்துரைத்தேன். நீ சீதா தேவியை அசோகவனத்திலிருந்து விட்டுவிடுவாயானால், உனக்கு நேர இருக்கின்ற துன்பங்கள் எல்லாம் நீங்கிவிடும்" என்று கூறிமுடித்தான் மாலியவான்.

"என்குலம் இறுதியுற்றது ஆதியின் இவனால்" என்பதன்பின் மாலியவானின் வாழ்க்கை வரலாறே அடங்கியிருக்கிறது. மாலியவான் இராவணனின் பாட்டன். முதியவன். எனவே அவன் மனம் வெதும்பி, தனக்கு நேர்ந்த தீயவிளைவுகள் இராவணனுக்கும் நிகழ்ந்துவிடக் கூடாது என்ற நல்லெண்ணத்தால் இவ்வறிவுரையைக் கூறுகின்றான். அதற்கு அவன் மூன்று காரணங்கள் கூறுகின்றான். ஒன்று மேற்கூறியவற்றை யெல்லாம் தான் நேரே இருந்து கண்கூடாகக் கண்டவன், இரண்டு அவன் இராவணன்பால் கொண்டிருக்கும் பாசம், மூன்று இதே திருமால்தான் முன்பு ஒருமுறை அரக்கர்குலத்தையே பூண்டோடு அழித்தவன். என்பதால் தான் கூறும் அறிவுரையை இராவணன் ஏற்றுக்கொண்டு

Koviloor Digital Library

சீதாதேவியை விடுவித்தால், இத்தகைய துன்பங்களிலிருந்து நீங்கி விடலாம் என்று அறிவுறுத்துகிறான் மாலியவான் என்பதாம்.

ஹேதி என்பவன் ஓர் அரக்கன். அவன் மகன் வித்யுகேசன். அவன் மனைவி சாலசடங்கடை. அவன் மகன் சுகேசன், அவன் மனைவி தேவவதி, அவர்களுக்கு மாலியவான், சுமாலி, மாலி என்பவர் புதல்வர்கள். இம்மூவரும் மிகுந்த தவம்செய்து பிரமனிடமிருந்து அநேக வரங்களைப் பெற்று, செருக்கால், தேவர்க்குத் துன்பம் இழைத்தனர். தேவர்கள் திருமாலிடம் முறையிட்டனர், திருமால் மாலியைக் கொன்றார். சுமாலியும், மாலியவானும் பாதாளத்திற்புகுந்து தப்பித்தனர். அப்பொழுது இலங்கை குபேரன் வசம் இருந்தது. இராவணன் குபேரனை வெற்றிபெற்று இலங்கையரசைக் கைப்பற்றியதும், மாலியவானும், சுமாலியும் இராவணனைத் தஞ்சமடைந்து, அப்பொழுது முதல் இலங்கையிலேயே வாழ்ந்து வந்தனர். எனவே தன் தம்பி மாலி இறப்பதற்கும், அரக்கர்குலம் அழிவதற்கும் இந்தத்திருமாலே காரணம் என்பதை நன்கு உணர்ந்தவன் மாலியவான் என்பதாம்.

இங்கே ஒன்று கருதவேண்டும். இப்பொழுது மாலியவான் கூறுவது போல, சீதாதேவியை இராமபிரானிடம் கொண்டுபோய் விட்டுவிடும்படி, மாரீசன், அங்கதன், கும்பகருணன், இந்திரசித்து, வீடணன் இறுதியில் மண்டோதரி, ஆகிய அனைவரும் கூறியும் இராவணன் இவர்கள் ஒருவர்கூற்றையும் செவிமடுக்கவில்லையென்பதையும் உணர வேண்டும்.

83. இராவணன் மாலியவான் கூற்றை இகழ்தல்

''மற்று எலாம் நிற்க; அந்த மனிதர், வானரங்கள், வானில்
இற்றைநாள் அளவும் நின்ற இமையவர் என்னும் தன்மை,
சொற்றவாறு அன்றியேயும், 'தோற்றி நீ' என்றும் சொன்னாய்,
கற்றவா நன்று! போ!'' என்று இனையன கழறலுற்றான். (6911)

(நிற்க-ஒருபுறம் இருக்கட்டும்; இற்றைநாள்-இந்நாள்/இதுவரை; இமையவர்-தேவர்கள்; தோற்றி-தோல்வியுற்றாய்; நன்று-அழகு; கழறல் -கூறுதல்; இனையன-இத்தகைய)

இராவணன் மாலியவானை நோக்கி, ''நீ இதுவரையிலும் சொன்ன தெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும்; இப்போது வந்திருக்கின்ற மனிதர் களாகிய இராமஇலக்குவர், வானரச்சேனை, விண்ணுலகத்தில் இதுநாள் வரையிலும் என்னை எதிர்த்து ஏதும் செய்யமுடியாமல், என் ஏவலுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் அந்தத் தேவர்கள் ஆகியோரின் இயல்புகளை விவரித்துக் கூறியதோடு மட்டுமின்றி, ''நீ அவர்களிடம் தோற்றுப் போவாய்'' என்று என்னைப் பார்த்துக் கூறினாய்; நீ அரசியல்நீதி சாத்திர நூல்களைக் கற்றறிந்தமுறை மிக நன்றாக இருக்கிறது; இப்போது நீ

Koviloor Digital Library

இங்கிருந்து செல்வாயாக!'' என்றுகூறி மேலும் கீழ்வருமாறு பேசத் தொடங்கினான்.

'நிற்க' என்ற சொல் இப்பொழுது 'அது இருக்கட்டும்' என்று கூறுகிறோம் அல்லவா? அந்தப் பொருள்பட நின்றது என்க. கற்றவாறு என்பது 'கற்றவா' என்று ஈறு குறைந்து நின்றது 'நன்று' என்பது இகழ்ச்சிக் குறிப்பு.

84. தனது போர்த்திறமை பற்றி இராவணன் தானே கூறிக்கொள்ளுதல் [5பாடல்கள்]

''பேதை மானிடவரோடு, குரங்குஅல, பிறவே ஆக,
பூதல வரைப்பின் நாகர்புரத்தின் அப்புறத்தது ஆக,
காதவெஞ்செரு வேட்டு, என்னைக் காந்தினர் கலந்தபோதும்,
சீதைதன் திறத்தின் ஆயின், அமர்த்தொழில் திறம்புவேனோ? (6912)

(மானிடவர்-மானிடர்/மனிதர்; பிற-மற்றகொடிய விலங்குகள்; பூதலம்-நிலஉலகம்; புரம்-உலகம்; காதுதல்-தாக்குதல்; செரு-போர்; வேட்டு-விரும்பி; வேட்கை-விருப்பம்; காந்துதல்-சினத்தல்; கலத்தல்-நெருங்குதல்; திறம்-பொருட்டு; அமர்-போர்; திறம்புதல்-பின்னடைதல்; பேதை-அறிவற்றவர்)

''அறிவில்லாத மனிதர்களாகிய இராமஇலக்குவரோடு, அந்தக் குரங்குச்சேனைகள் மட்டும், என்ன வேறு எந்த விலங்குச் சேனை யானாலும் சரி; இந்நிலவுலகத்தில் மட்டுமல்ல, நாகர்கள் வாழ்கின்ற பாதாள உலகம், அப்புறத்ததாகிய விண்ணுலகம் இவற்றில் எதனின்றும், என்னை எதிர்த்து மிக்க மனம் கொதித்துப் போர்செய்யும் விருப்பத்துடன் என்னை நெருங்கி எவர் வந்தாராயினும், அவர்கள் கொடிய போர்புரிய விரும்புவது சீதாதேவியின் பொருட்டு என்றால், நான் போர்த்தொழிலி லிருந்து பின்வாங்குவேனோ? மாட்டேன்'' என்கிறான் இராவணன்.

''மனிதர்கள், குரங்குகள், மற்றவிலங்குகள் எவையாயினும், நிலவுலகம், பாதாளம், விண்ணுலகம் எவற்றிலாயினும், என்னை எதிர்த்து வேறு காரணங்களுக்காகப் போர்புரிய விரும்பி வந்தார்களானால் ஒருவேளை நான் போர்த்திறத்தினின்றும் மாறுபடுவேன். ஆனால் அவர்கள் போர்புரிவது சீதாதேவியை என்னிடமிருந்து பிரிக்கும் பொருட்டு என்றால், நான் ஒருபோதும் பின்வாங்கமாட்டேன். எதிர்த்து நின்று வெற்றிபெறுவேன்'' என்கிறான் இராவணன் என்பதாம்.

''பேதை மானிடவர்'' என்பது இராவணன் மனிதர்களை எவ்வாறு கருதுகிறான் என்பதையும், தன்போர்த்திறமை பற்றி நன்கு அறியாதவர்கள் மனிதர்கள் என்பதையும் குறிக்கிறது. என் போர்த்தொழில் அறத்தை விட்டாலும் விடுவேனேயன்றிச் சீதையை மட்டும் விடமாட்டேன் என்று

Koviloor Digital Library

உறுதியாகக் கூறுகிறான் இராவணன் என்பதாம். பின்னர் இந்திர சித்தனிடமும் இதேபோல் ''சீதையை விடுவதுண்டோ, இருபது திண்தோள் உண்டால்'' என்று கூறுவதையும் காணப்போகிறோம்.

85. "ஒன்றுஅல, பகழி, என்கைக்கு உரியன; உலகம் எல்லாம்
வென்றன; ஒருவன் செய்த வினையினும் வலிய; 'வெம்போர்
முன்தருக' என்ற தேவர் முதுகுபுக்கு, அமரில் முன்னம்
சென்றன; இன்று வந்த குரங்கின்மேல் செல்கலாவோ?" (6913)

(வலிய-வன்மைவாய்ந்தன; பகழி-அம்பு; புக்கு-ஊடுருவி)

''என்கைகளில் பகைவர்களை எதிர்த்துத் தாக்குவதற்காக நான் கொண்டுள்ள அம்புகள் கொஞ்சமல்ல. கணக்கற்ற அம்புகள் உண்டு. அவை இவ்வுலகமெல்லாவற்றையும் வென்று திரும்பியவை; ஒருவன் செய்கின்ற வினைப்பயனைக் காட்டிலும் தொடர்ந்து சென்று தாக்கும் ஆற்றல்கொண்டவை. ''கொடிய போரினைச் செய்யலாம் வருக'' என்று தேவர்கள் முற்பட்டு வந்தபோது, அவர்கள் முதுகைப் பிளந்து சென்று, போர்க்களத்தின் முன்னே செல்லும் திறம் வாய்ந்தவை. அத்தகைய அம்புகள், இன்று புதிதாக வந்திருக்கும் இந்தக் குரங்குகளின்மேல் செல்லும் ஆற்றல் அற்றன ஆகிவிடுமோ? ஆகாது'' என்கிறான் இராவணன்.

தன்னிடம் இருக்கும் அம்புகளின் திறத்தை விவரிக்கிறான் இராவணன். ''தேவர்களின் முதுகிலேயே பாய்ந்த அம்புகள், இந்தக் குரங்குகளின்மேல் செல்லாதோ?'' என்று கேட்கிறான். 'செல்கலாவோ' என்பதில் ஓகாரம் உடன்பாட்டுப்பொருளது. செல்லும் என்ற பொருளைத்தரும். ஒருவன் செய்த வினையின்பயன், புண்ணியமோ, பாவமோ, அவன் எடுக்கின்ற பிறப்புக்கள் எல்லாவற்றிலும் நிழல்போல் தொடர்ந்து வரும் என்பது வழக்கு. அது இக்காப்பியத்தில் மிகப்பல இடங்களில் பேசப்பட்டிருப்பதைக் கற்போர் நன்கு உணர்வர்.

86. "சூலம் ஏய்தடக்கை அண்ணல்தானும், ஓர்குரங்காய்த் தோன்றி,
ஏலுமேல் இடைவதல்லால், என் செயவல்லன் என்னை?
வேலைநீர் கடைந்த மேல்நாள், உலகெலாம் வெருவ வந்த
ஆலமோ விழுங்க, என்கை அயில்முகப் பகழி? அம்மா!" (6914)

(ஏய்-பொருந்திய; தடம்-பெரிய/பெருமைவாய்ந்த; அண்ணல்-தலைவன்/இறைவன்/சிவபெருமான்; ஏறுதல்-எதிர்த்து நிற்றல்; இடைவது-தோற்றுஓடுவது; அயில்முகம்-கூரியமுனை; பகழி-அம்பு; வேலை-கடல்/பாற்கடல்; மேல்நாள்-முற்காலம்; வெருவ-அஞ்ச; ஆலம்-ஆலகால நஞ்சு)

''முத்தலைச் சூலத்தைத் தனது அகன்ற பெருமைபொருந்திய கைகளில் தாங்கியுள்ள இறைவனான சிவபெருமானே வஞ்சகமாகத் தன் வடிவை

Koviloor Digital Library

மாற்றிக்கொண்டு ஒரு குரங்கின் வடிவில் வந்து என்னை எதிர்த்துப் போரிட்டு நின்றால்கூட, அவன்தான் புறமுதுகிட்டுத் தோற்றோடுவானே யன்றி, அவனால் என்னை என்ன செய்துவிடமுடியும்? என்னுடைய கைகளில் இருக்கும் கூரியமுனையையுடைய அம்புகளை எளிதில் விழுங்கி விடுவதற்கு, முற்காலத்தில் பாற்கடலைக் கடைந்தபொழுது இந்த உலகத்து உயிரினங்களெல்லாம் அஞ்சிநடுங்கும்படி அதனின்றும் தோன்றிய ஆலகாலவிஷம் போன்றதா என் அம்பு? அல்ல; அந்த ஆலகால விஷத்தைப்போல் அவ்வளவு எளிதானதல்ல என்னுடைய அம்புகள்'' என்கிறான் இராவணன்.

அனுமன் சிவபெருமானின் ஒருகூறு என்பதை இங்கு நினைவிற் கொண்டு, ''சூலம்ஏய் தடக்கை அண்ணல் தானும் ஓர் குரங்காய்த் தோன்றின்'' என்ற வரிகளைப் படித்தால் இராவணன் இலங்கை அனுமனால் எரியூட்டப்பெற்றதையும், பொழில் இறுத்ததையும், கிங்கரர்கள், சம்புமாலி, பஞ்சசேனாபதிகள், அக்ககுமாரன் ஆகியோர் அழிக்கப்பட்டதையும் இன்னும் நினைவிற் கொண்டுள்ளான் என்பது புலப்படும். பாற்கடலைக் கடைந்த செய்தி முன்பும் பல இடங்களில் நாம் பயின்றதே. ஆலகால நஞ்சினைக் காட்டிலும் தன்னுடைய விற்படை கொடியது என்றும் பேசுவதால், அழித்தல் தொழிலையுடைய சிவபெருமானையே துச்சமாகக் கருதிப்பேசும் இராவணன் தன்னையும், தன் படைக்கலத்தின் ஆற்றலையும் பற்றிப் பெரும் நம்பிக்கை கொண்டுள்ளான் என்றும் தெரியவரும். இராவணனுக்கு ''முக்கோடி வாழ்நாளும் எக்கோடி யாராலும் வெலப்படாய்'' என்ற வரமும் இதே சிவபெருமானால்தான் அருளப்பெற்றன என்பதையும் நாம் இங்கு நினைவிற் கொள்ளுதல் தகும்.

87. "அறிகிலை போலும் ஐய! அமர் எனக்கு அஞ்சிப் போன,
எறிசுடர் நேமியான் வந்து, எதிர்ப்பினும், என்கைவாளி
பொறிபட, சுடர்கள் தீயப்போவன; போக்கிலாத,
மறிகடல் கடைய, வந்த மணிகொலாம் மார்பில் பூண?" (6915)

(அமர்-போர்; எறிசுடர்-ஒளிவீசும்; நேமி-சக்கரப்படை; நேமியான்-திருமால்; வாளி-அம்பு; பட-தோன்ற; சுடர்கள்-ஒளிப்பிழம்புகள்/ ஞாயிறும் திங்களும்; மறிதல்-மடங்குதல்; மணி-கௌத்துவமணி; அறிதல்-உணர்தல்; போக்குதல்-அழித்தல்; பூணுதல்-அணிதல்)

இராவணன் மாலியவானைப் பார்த்து, ''தலைவனே! முன்பு பலமுறை என்னுடன் போர்செய்ய வந்து எதிர்க்கமுடியாமல் அச்சமுற்றுத் தோற்று ஓடிப்போன அந்த ஒளிவீசும் சக்கரப்படையை ஏந்தியவனான திருமால் கூட, இப்போது மீண்டும் ஆற்றல்பெற்று என் எதிரில் வந்து நின்று போர்செய்ய நிற்பானானால், என் கைகளிலுள்ள விற்படை, தீப்பொறி பறக்க, சூரியன், சந்திரன், அக்னி என்ற மூன்று ஒளிப்பிழம்புகளையும்,

Koviloor Digital Library

தீய்த்து நீறாக்க வல்லனவாகும். மடங்குகின்ற இயல்புடைய அலைகளை யுடைய கடலைக் கடைந்தபோது அதனின்றும் தோன்றிய எளிமையான கௌத்துவமணி என்று நினைத்துக் கொண்டாயா? வேறு போக்கிடம் இல்லாது, அதை அவன் மார்பில் மிக எளிதாக அணிந்துகொண்டான். ஆனால் என் அம்புகள் அத்துணை எளியன அல்ல. அவை அவன் மார்பைத் துளைத்துச் செல்லும் ஆற்றல் பெற்றவை. இதனை நீ இன்னும் நன்கு உணர்ந்துகொள்ளவில்லை போலும்'' என்கிறான் இராவணன்.

முன்பாடலில் சிவபெருமானும் தன் அம்புக்கு ஆற்றமாட்டான் என்று கூறிய இராவணன் இப்பாடலில் திருமாலும் அவ்வாறே ஆற்றமாட்டான் என்கிறான் என்க. திருமால் தனக்குத் தோற்று ஓடிக் கடலில் ஒளிந்து கொண்டான் என்று முன்பும் இராவணன் கூறியிருப்பதையும் இங்கு நினைவுகூர்க. பாற்கடலைக் கடைந்தபோது அதனின்றும் தோன்றிய கௌத்துவமணியைத் திருமால் தன்மார்பில் அணிந்துகொண்டான் என்பது ஒருபுராணக் குறிப்பு. அத்தகைய எளிமையானதன்று, அதனினும் கொடியது தன் விற்படை என்று கூறுகிறான் இராவணன் என்க.

88. ''கொற்றவன், இமையோர் கோமான், குரக்கினது உருவம் கொண்டால்,
அற்றை நாள், அவன்தான் விட்ட அயிற்படை அறுத்து மாற்ற,
இற்ற வான் சிறைய ஆகி விழுந்து, மேல் எழுந்து வீங்காப்
பொற்றை மால்வரைகளோ, என்புயநெடும் பொருப்பும்? அம்மா!'' (6916)

(கொற்றம்-வெற்றி; இமையோர்கோமான்-இந்திரன்; பொருப்பு-மலைகள்; அற்றை-அன்று; விட்ட-செலுத்திய; வான்-பெரிய/சிறந்த; வீங்குதல்-பறத்தல்; பொற்றை-சிறுகுன்றுகள்; புயம்-தோள்; அயில்-கூரிய; இற்ற-ஒடிந்துபோன; சிறை-சிறகுகள்; மாற்றுதல்-வேறாக்குதல்; மால்-பெருமை)

''வெற்றியையே இயல்பாகக் கொண்ட வானவர் தலைவனான இந்திரன், தன் உருவத்தை மறைத்துக் குரங்கின் உருவெடுத்துக் கொண்டு வந்து என்னை எதிர்த்துப் போரிட்டாலும், அன்று ஒருநாள் அவன் செலுத்திய கூரிய வச்சிராயுதத்தால் அறுக்கப்பட்டு, பறப்பதற்கு இயலாது ஒடிந்து விழுந்த சிறகுகளாகக் கீழே விழுவதற்கு என்னுடைய தோள் களாகிய பெரிய மலைகள் என்ன, அவன் அரிந்த பின்பும், மேலெழுந்து ஓங்க வல்லமையற்ற சிறுகுன்றுகள் என்று எண்ணிவிட்டாயா?'' என்று கேட்கிறான் இராவணன்.

முற்பாடலில் சிவபெருமானையும், பின்னர் திருமாலையும் இப்போது இந்திரனையும் ஒப்பிட்டுத் தன்வலிமையைத் தானே பறைசாற்றிக் கொள்ளுகிறான் இராவணன் என்க. முன்பு மலைகளுக்கெல்லாம் சிறகுகள் இருந்தன என்பதும், அவற்றைக் கொண்டு அவை பறந்து திரிந்து உயிரினங்களுக்கெல்லாம் துன்பம் இழைத்தன என்பதும், இந்திரன் தன் வச்சிரப்படை கொண்டு அவற்றின் சிறகுகளை அறுத்தெறிந்த பின்தான்

Koviloor Digital Library

அவை அசையாமல் ஓரிடத்தில் நிலைத்து நிற்கின்றன என்பதும் ஒரு புராணச் செய்தி. இந்திரன் வச்சிராயுதத்திற்குத் தப்பி, வாயுதேவனின் கருணையினால் கடலுக்குள் ஒளிந்திருந்த மலை மைந்நாகமலை மட்டும்தான் என்பதையும் இங்கே நினைவுகூர்க. ஒரு வீரன் தன்னுடைய புயங்களை பெரியமலைகளுக்கு ஒப்புக்கூறுவது உண்டு. இங்கே ''புயநெடும் பொருப்பு'' என்பது தோள்களாகிய நீண்டமலை என்பது உருவகம் எனக்கொள்க. ஒரு குரங்கு வந்து என்னை எதிர்த்துப் போரிட்டால், நான் கீழே விழுந்து விடுவதற்கு நான் என்ன அவ்வளவு எளிமையானவனா? என்தோள்கள் என்ன வெறும் சிறுகுன்றுகளா? அவை நெடும் பொருப்பு என்று கூறுகிறான் எனக்கொள்க. மலைகளை வெட்டிவீழ்த்திய இந்திரனாலும் என்னுடைய தோள்களை வெட்டி வீழ்த்த முடியாது என்று கூறுகிறான் என்பது கருத்து.

89. இருள் நீங்குதல்

உள்ளமே தூது செல்ல, உயிர்அனார் உறையுள் நாடும்
கள்ளம் ஆர் மகளிர்சோர, நேமிப்புள் கவற்சி நீங்க,
கொள்ளை பூண்டு அமரர் வைகும் குன்றையும் கோட்டில் கொண்ட,
வெள்ளநீர் வடிந்தது என்ன, வீங்கு இருள்விடிந்தது அன்றே! (6917)

(உள்ளம்-நெஞ்சம்; அனார்-போன்றவர்; உறையுள்-தங்குமிடம்; கள்ளம்-களவொழுக்கம்; சோர்தல்-தளர்தல்; நேமிப்புள்-சக்கரவாகப் பறவைகள்; கவற்சி-கவலை; கொள்ளை-கூட்டம்; குன்று-மலை/மேரு மலை; கோடு-பற்கள்/தந்தம்; வீங்குதல்-செறிந்திருத்தல்; அமரர்-தேவர்கள்)

நெஞ்சமே தூதாகச் செல்லுமாறு, தம் உயிர்போன்ற காதலர் வசிக்கும் இருப்பிடத்தை நோக்கி விரும்பிச்செல்லும் வஞ்சனைமிக்க மகளிர் மனம் தளர்வுற்று வருந்தவும், சக்கரவாகப் பறவைகள் தமது கவலைகள் நீங்கிப்போகவும், தேவர்கள் கூட்டமாகக் கூடிநிற்கும் மேருமலையின் உச்சியையும் மூடிக்கொண்டிருந்த இருட்பிழம்பு, மிகுதியான நீர் மெல்ல மெல்ல வடிந்து போவதைப்போல, மிக்கு நிறைந்திருந்த இருட்டும் மெல்லமெல்ல நீங்கிப் பொழுது புலர்ந்தது.

இது கவிக்கூற்று. தலைவன் தலைவியரிடையே தூது செல்லும் மற்ற பொருள்களுடன் நெஞ்சமும் தூதாகக் கூறப்படுவதுண்டு. 'நெஞ்சு விடு தூது' என்ற சொல்லாட்சியை நினைவுகூர்க. இருள்நீங்கிப் பொழுது புலரத் தொடங்குவதால், கள்ளமார் மகளிர் சோர்ந்துபோகிறார்களாம். இரவில் பிரிந்து, பகலில்கூடும்இயல்புடைய சக்கரவாகப்பறவைகள்கவலைநீங்கி மகிழ்கின்றனவாம். கவிஞனின் கற்பனைத் திறம் காண்க. இயற்கையில் இருள் நீங்குவதை தன் கருத்தை ஏற்றிக்கூறியதால் இது தற்குறிப்பேற்ற அணியின்பாற்படும் என்க. 'கள்ளம் ஆர்மகளிர்' என்பது வழியல்லா

Koviloor Digital Library

வழிசெல்லும் நெறிபிறழும் பெண்டிர் எனக்கொள்ளவும் இடம் உண்டு. களவொழுக்கம் உடைய கற்புடை மகளிர் என்று பொருள் கொள்ளலும் தகும். இருவருக்குமே இரவு நீங்குவதும் பொழுது புலர்வதும் வருத்தத்தைத் தரத்தானே செய்யும்? 'வெள்ளநீர்' என்பது ஊழிக்காலத்துப் பெருவெள்ளநீர்' என்றும் பொருள்படும். அது மெல்லமெல்ல வடிந்து போவது போல, இருட்டும் மெல்லமெல்ல நீங்கிப் பொழுது புலர்ந்தது என்க.

೨೦. சூரியன் தோன்றுதல்

இன்னதோர் தன்மைத்தாம் என்று எட்டியும் பார்க்க அஞ்சி,
பொன்மதிற் புறத்து நாளும் போகின்றான், "போர் மேற்கொண்டு,
மன்னவர்க்கு அரசன் வந்தான்; வலியமால்" என்று, தானும்
தொல்நகர் காண்பான் போலக் கதிரவன் தோற்றம் செய்தான். (6918)

(இன்னது-இத்தகையது; எட்டி-நீட்டி; புறத்து-வெளியே; மன்னவர்க்கு அரசன்-வேந்தர்வேந்தன்/இராமபிரான்; வலியம்-வன்மையுடையம்; தொல்-பழமையான)

இலங்கைமாநகரம் இப்படித்தான் இருக்கும் என்று எட்டிக்கூ'டப் பார்க்காது, உள்ளே நுழைவதற்கு அஞ்சி, பொன்மயமான மதிற்சுவர்களைச் சுற்றிக்கொண்டே எப்பொழுதும் செல்லுகின்ற சூரியன், இன்று அரசர்க்கரசனாகிய இராமபிரான் போர்மேற்கொண்டு இலங்கைக்கு வந்திருக்கிறான் என்று தெரிந்ததும், நாமும் வலிமையுடையவரானோம் என்று எண்ணி மகிழ்ந்து, அந்தப் பழமையான இலங்கைமாநகரைக் காண்பதற்காக அதன் உள்ளே நுழைவதுபோல, மெல்ல எட்டிப்பார்த்து உதயகிரியில் உதிக்கலானான்.

இயற்கையிலேயே நிகழும் சூரியோதயத்தின்மீது, தனது கருத்தைக் கவிஞன் ஏற்றிப் பாடியிருப்பதால் இது ஏதுத்தற்குறிப்பேற்ற அணியின் பாற்படும் என்க. சூரியன் இராவணனுக்கு அஞ்சி, இலங்கை மாநகரின்மீது செல்லாது, மதிலைச்சுற்றியே செல்லுவான் என்பதும் முன்பும் பல இடங்களில் பேசப்பட்டிருப்பதை நினைவுகூர்க. இராமபிரான் போர் மேற்கொண்டு, வந்திருப்பதால் நாமும் வலிமை பெற்றவர்களாகி விட்டோம் என்று சூரியன் கருதுவதாகக் கூறும் கவிஞனின் கவித்திறம் நோக்குக. இலங்கையின் உச்சிமீது சூரியன் இயங்காது என்பது புவிஇயல் அமைப்பால் ஆனது. "இருசுடர் இயங்காப் பெரு மூதிலங்கை" என்பது புறத்திரட்டு. "பகலவன்மீது இயங்காமை காத்த பதிவீரன்" என்பது தேவாரம்.

ஒற்றுக் கேள்விப்படலம் நிறைவுற்றது

Koviloor Digital Library

9. இலங்கை காண் படலம் [24 பாடல்கள்]

இராமபிரான் தான் தங்கியிருக்கும் சுவேலமலை உச்சிமீது வானரச் சேனைத் தலைவர்களுடன் ஏறி இலங்கையைக் காணும் நிகழ்ச்சியைப் பற்றிக்கூறும் படலம் என விரியும். இது 24பாடல்களைக் கொண்டது. சிலஏடுகளில்இது 'இராமன்இலங்கைகாண்படலம்' என்றும் 'மகுடபங்கப் படலம்' எனவும் குறிக்கப்பெற்றிருக்கிறது.

இப்படலத்துள் இராமன், தன் துணைவர்களுடன் சுவேலமலைமேல் ஏறுதல்; இலங்கை மாநகரைக் கண்டு வியத்தல்; அதன் சிறப்பையும் பெருமையையும் இலக்குவனுக்குக் கூறுதல்; ஆகிய நிகழ்ச்சிகளும் விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன. இராவணன் வானரச்சேனையின் மிகுதியைக்காண இலங்கையிலுள்ள கோபுரத்தின்மேல் ஏறுகின்ற நிகழ்ச்சிகூட இந்தப்படலத்திலேயே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இராம பிரான்இலங்கை மாநகரின்சிறப்பை வியந்து இலக்குவனுக்குக் கூறியதாக வான்மீகத்தில் பேசப்படவில்லை என்பது கருதத்தக்கது.

1. இராமபிரான் துணைவர்களுடன் மலைமேல் ஏறுதல்

அருந்ததி அனைய நங்கை அவ்வழி இருந்தாள் என்று
பொருந்திய காதல்தூண்ட, பொன்நகர் காண்பான்போல,
பெருந்துணை வீரர் சுற்ற, தம்பியும் பின்பு செல்ல,
இருந்த மால் மலையின் உச்சி, ஏறினன் இராமன் இப்பால். (6919)

(அனைய-ஒத்த; தூண்டுதல்-செலுத்துதல்; சுற்றுதல்-சூழ்ந்து வருதல்; இப்பால்-இப்புறம்; பொன்-அழகிய; காண்பான்-காணும்பொருட்டு) (குளகப்பாடல்)

கற்பிற் சிறந்த அருந்ததி போன்ற கற்பொழுக்கம் உடைய சீதாதேவி இந்த இலங்கைமாநகரத்தில்தான் இருக்கிறாள் என்று மனத்தில் பொருந்திய காதல் உள் நின்று உந்தித் தள்ள, அழகிய பொன்மயமான இலங்கை நகரத்தைக் காணவேண்டும் என்று எண்ணுபவன்போல, தனக்குப் பெரிதும் துணைபுரிந்தவர்களான வீடணன், சுக்கிரீவன் முதலிய வர்கள் தன்னை இருபக்கமும் சூழ்ந்துவர, தம்பியாகிய இலக்குவன் பின்னே தொடர்ந்துவரவும் இலங்கையின் இப்புறத்தே தான் தங்கியிருந்த

Koviloor Digital Library

பெரிய சுவேலமலையின் உச்சிமீது, இராமபிரான் ஏறலுற்றான். இது இவ்வாறு இருக்க இங்கே - பாடல் தொடர்கிறது.

சிறந்த கற்பிற்கு எடுத்துக்காட்டாக வசிட்டரின் மனைவியாகிற அருந்ததியைக் கூறுவது வழக்கு என்று முன்பே நாம் அறிந்திருக்கிறோம். 'அவ்வழி' என்பது இலங்கைமாநகரைக் குறிக்கும். தலைவியைப் பார்க்க வேண்டும் என்று விழைபவர்கள், அவளை உடனே பார்க்கமுடியவில்லை என்றாலும், அவள் இருக்கும் இடத்தையாவது பார்க்கவேண்டும் என்று விரும்புவது மனித இயற்கை. இங்கே இராமன் தான் ஒரு மானிடன் என்பதைக் கற்போர் உணரும்படி செய்கிறான் என்க. சுக்கிரீவனும் வீடணனும் இராமபிரானுக்குப் பேருதவி புரிந்தவர்கள் என்பதால் 'பெருந்துணைவீரர்' என்றார் என்க. 'இப்பால்' என்பது இதன் பின்னர் என்ற பொருளையும் தரும். உண்மையில் இராமபிரான் சுவேலமலையில் ஏறுவது, இலங்கைமாநகரின் அமைப்பினையும், அரண், அகழி, மதில் முதலியவற்றையும் காண்பதற்காகத்தான். ஆனால் கவிஞன் என்ன கூறுகிறான் பாருங்கள். தன்துணைவி சீதாதேவியைப் பார்க்க விழைபவன் போல மலையின்மீது ஏறினான் என்கிறான். கவிஞன் தன்னுடைய எண்ணத்தை அந்நிகழ்ச்சியின் மீது ஏற்றிக்கூறுவதனால் இது ஏதுத்தற் குறிப்பேற்ற அணியின் பாற்படும் என்பதறிக.

2. செருமலி வீரர் எல்லாம் சேர்ந்தனர் மருங்கு செல்ல,
இருதிறல் வேந்தர் தாங்கும் இணை நெடுங் கமலக் கையான்,
பொரு வலி வய வெஞ்சீயம் யாவையும், புலியும் சுற்ற
அருவரை இவர்வது ஆங்கு ஓர் அரிஅரசு அனையன் ஆனான். (6920)

(செரு-போர்த்திறம்/போர்; மலி-மிகுந்த; மருங்கு-பக்கம்; திறல்-ஆற்றல்; இரு-மிக்க; தாங்குதல்-பற்றிக்கொள்ளுதல்/கைலாகு கொடுத்தல்; இணை-இரண்டு; வயம்-வெற்றி; சீயம்-சிங்கம்; இவர்வது-ஏறிச்செல்லுதல்; ஓர்-ஒப்பற்ற; அரிஅரசு-இராஜசிங்கம்; அனைய-ஒத்த/நிகர்த்த)

போர்த்திறன் மிக்க வானரவீரர்கள் எல்லாம் நெருங்கியபடி, இராமபிரானின் இரு பக்கங்களிலும் வர, இரண்டு வலிமைமிக்க அரசர்களாகிய சுக்கிரீவனும், வீடணனும், பெரிய நீண்ட இரு கைகளை உடைய செந்தாமரை மலர்போன்ற இராமபிரானுக்குக் கைலாகு கொடுத்துத் தாங்கி வர, போர்புரிதற்குரிய வலிமையும் வெற்றியும் பொருந்திய, கொடிய சிங்கங்களும், புலிக்கூட்டமும் சூழ்ந்துவருவதுபோலவும், ஏறுதற்கரிய அந்தப் பெரிய சுவேலமலையின் மீது ஏறிச் செல்லுகின்ற ஒப்பற்ற அரசசிங்கம் போன்று இராமபிரான் தோற்றமளித்தான்.

இலக்குவனும், சுக்கிரீவனும் வீடணனும் 'பொருவலி வெஞ்சீயம்; வானரப்படைகள்-புலிக்கூட்டம்; அரசசிங்கம்-இராமபிரான் என உவ

Koviloor Digital Library

மித்தார் என்க. இப்பாடல் உவமையணியின் பாற்படும். ''வன்துணைக் கோளரி இரண்டு மாறுஇலாக் குன்றிடை உழுவை அம்குழுக்கொண்டு ஈண்டியே வரம்பிலா மதகரி உறையும் அவ்வனம் நிரம்புற வளைத்தன'' என்ற திரிசடை கண்ட கனவும் இங்கு ஒப்புநோக்கத்தகும்.

3. கதம் மிகுந்து இரைத்துப் பொங்கும் கனைகடல் உலகம் எல்லாம்,
புதைவு செய் இருளின் பொங்கும் அரக்கர்தம் புரமும் பொற்பும்,
சிதைவு செய்குறியைக் காட்டி, வடதிசைச் சிகரக் குன்றின்,
உதயம் அது ஒழியத்தோன்றும் ஒரு கருஞாயிறு ஒத்தான். (6921)

(கதம்-கோபம்/வெகுளி; இரைத்தல்-ஆரவாரித்தல்; கனை-ஒலிக்கும்; பொங்குதல்-கொந்தளித்தல்/மிகுதியாகத் தோன்றுதல்; புரம்-நகரம்; பொற்பு-பொலிவு; குறி-தீக்குறி; சிகரம்-உச்சி; ஞாயிறு-சூரியன்; சிதைவு-அழிவு; புதைவுசெய்தல்-மூடுதல்; தோன்றுதல்-உதித்தல்)

சினம் மிகுந்து, ஆரவாரம் செய்துகொண்டு மிக்கு ஒலித்துகொண்டு கொந்தளித்து எழும் அலைகளையுடைய கடல்சூழ்ந்த உலகம் எல்லாம் அழுந்தி மூடிப்போகும் அளவுக்கு ஊழிக்காலத்துப் பேரிருள் மூடிக் கொள்வதைப்போல், மிக்க சினத்தையுடைய அரக்கர்கள் வாழும் நகரமாகிய இலங்கையும் அதன் அழகும் பொலிவும் சிதைந்துபோகும் என்று ஒரு உற்பாத அறிகுறியைக் காட்டுமாப்போல, சூரியன் தான் எப்பொழுதும் தோன்றும் உதயகிரியில் தோன்றுவதைத் தவிர்த்து, வடதிசையில் உள்ள ஒரு மலையின் உச்சியில் தோன்றுவது போலவும், செம்மைநிறச் சூரியன், ஒரு கருப்புநிறச் சூரியன் போலவும், இராமபிரான் சுவேலமலையின் மேல் ஏறினான்.

இங்கே சூரியன் இராமபிரானுக்கு ஒப்பு. உதயகிரியில் தோன்றுவதற்கு மாறாகச் சூரியன் போன்று ஒளிமிக்க இராமபிரான் சுவேலமலையில் தோன்றினான். செம்மைநிறச் சூரியனுக்கு மாறாக, கருப்புநிற இராம பிரான் தோன்றினான். சூரியன் தோன்றும் ஒரு நிகழ்ச்சியை, தனது இயற்கைத் தன்மைக்கு மாறுபட்டு வடதிசையிலும் கருமையாகவும் தோன்றினான் என்று கூறுவது தன்மைத் தற்குறிப்பேற்ற அணியின்பாற் படும். இவ்வாறு அவன் எழுந்துநின்ற தோற்றம் கடலால் சூழப்பெற்ற இலங்கை நகரத்திற்கும், அங்கு வாழும் அரக்கர் குலத்திற்கும் ஏதோ ஓர் உற்பாதம் நிகழ்ந்து, அந்நகரம் சிதைவுண்டு போகப்போகிறது என்பதைக் காட்டுகிறது என்கிறான் கவிஞன். கருஞாயிறு இராமபிரானுக்கு உவமை. பேரிருளுக்கு அரக்கர்களும், அவர்கள் நகரமும் ஒப்பு. இயற்கையில் சூரியன் உதிக்கும் கீழ்த்திசையைத் தவிர்த்து வடதிசையில் உதிப்பதும், சிவந்தநிறமுள்ள ஞாயிறு கருஞாயிறு ஆவதும் உற்பாதங்கள் என்க.

இதுபோன்ற நிகழா நிகழ்ச்சிகளை, ''பா அல் புளிப்பினும், பகல் இருளினும், நாஅல் வேதநெறி திரியினும்'' என்கிறது புறநானூறு.

Koviloor Digital Library

''வசைஇல் புகழ்வயங்கு வெண்மீன் திசைதிரிந்து தெற்கு ஏகினும்'' என்கிறது பட்டினப்பாலை; கம்பன் பின்னால் இராமபிரானைக் ''கட்டார் சிலைக் கருஞாயிறு போல்வான்'' என்றுகூறப் போவதையும் இங்கு எண்ணிப்பார்த்தல் தகும். சூரியனின் நிறம் சிவப்பு; அது உதிக்கவேண்டிய இடம் கிழக்கில் உள்ள உதயகிரி. இப்போது கருமையான நிறம்கொண்ட இராமபிரான், வடக்கில் உள்ள சுவேலமலையில் எழுந்து நிற்கின்ற தோற்றத்தை அதனுடன் ஒப்பிடுகிறான் கவிஞன். ''செந்தண் கமலக்கண், கை, கால், சிவந்தவாய், ஓர் கருஞாயிறு, அந்தமில்லாக் கதிர் பரப்பி, அலர்ந்தது ஒக்கும் அம்மானே'' என்பது திருவாய்மொழி.

4. துமிலத் திண் செருவின் வாளிப்பெருமழை சொரியத் தோன்றும்
விமலத் திண் சிலையன், ஆண்டுஓர் வெற்பினை மேய வீரன்,
அமலத் திண் கரமும், காலும், வதனமும், கண்ணும் ஆன,
கமலத் திண் காடு பூத்த காளமாமேகம் ஒத்தான். (6922)

(துமிலம்-ஆரவாரம்; திண்மை-வலிமை; செரு-போர்; வாளி-அம்பு; விமலன்-குற்றமற்றவன்; சிலை-வில்; ஆண்டு-அங்கு; வெற்பு-மலை; மேவுதல்-பொருந்துதல்; அமலம்-தூய்மை; வதனம்-முகம்; கமலம்-செந்தாமரை மலர்; காடு-திரட்சி; காளம்-கருமை; மா-பெரிய/சிறந்த; சொரிதல்-பொழிதல்)

பேராரவாரத்தோடு செய்யும் போரில் அம்புகளாகிய பெரிய மழை பொழிவதைப் போல் தோற்றமளிக்கும், குற்றமற்ற வில்லினைக் கையிலேந்தி அவ்விடத்தில் சுவேலமலையின்மீது ஏறி நின்றவனாகிய வீரனான இராமபிரானின் தூய்மையான வலிமைமிகுந்த திருவடிகளும், முகமும், கண்களும் செந்தாமரை மலரின் தொகுதி திரண்டு நின்று மலர்ந்தது போன்றும் அவன்மேனி கரிய சிறந்த மேகம் போலவும் தோற்றமளித்தன.

சுவேலமலையில் நின்றிருந்த கரியவீரனான இராமபிரான், செந்தாமரை மலர்க்காட்டில் நிற்பதுபோலத் தோற்றமளித்தான் என்பதாம். கரியமேனியில் செந்நிற உறுப்புக்கள் இருப்பது, கரியமேகத்தில் செந்தாமரை மலர்க்காடு பூத்துத் திகழ்வதுபோலத் தோன்றிற்று என்பதாம். துமிலம் என்பது பேரொலியைக் குறிக்கும். ''துமிலம் எழப் பறை கொட்டி'' என்பது பெரியாழ்வார் திருவாய்மொழி; தாமரைக் காடு பூத்த காளமாமேகம் என்பது இல்பொருள் உவமையணியின் பாற்படும். விமலன், அமலன், நிமலன் என்பன மாசற்ற தூய்மையானவன் எனப் பொருள்படும். வில்லைப் பெற்றிருத்தல்; (வானவில்) மழை பொழிதல்; (அம்பு) மலையில் பொருந்தியிருத்தல் (ஆகாயம்) ஆகிய மூன்று தன்மைகளும் வீரனுக்கும் காளமா மேகத்திற்கும் அமைந்த பொதுத்தன்மை என்க.

Koviloor Digital Library

5. மல்குவடு அனைய திண்தோள் மானவன், வானத்து ஓங்கும்
கல்குவடு அடுக்கி வாரிக் கடலினைக் கடந்த காட்சி,
நல்குவடு அனைய, வீரர் ஈட்டத்தின் நடுவண் நின்றான்,
பொன் குவட்டு இடையே தோன்றும் மரகதக் குன்றம் போன்றான்.
(6923)

(மல்-மற்போர்; குவடு-மலைச்சிகரம்; திண்-வலிய; மானவன்-மேலோன்; கல்-மலை; வாரி-நீர்ப்பெருக்கு/கடல்; காட்சி-தோற்றப் பொலிவு; குவடு-மலையுமாம்; அனைய-ஒத்த/போன்ற; குன்றம்-மலை; ஈட்டம்-கூட்டம்; இடை-நடுவில்)

ஆகாயமளவு உயர்ந்த மலைச்சிகரங்களை வரிசையாக அடுக்கி, நீர்ப்பெருக்குடைய கடலினைத் தாண்டிவந்த தோற்றப்பொலிவு மிக்க நல்ல மலைபோன்ற வானரவீரர்களின் கூட்டத்தின் நடுவில் நின்று கொண்டிருப்பவனும், மற்போரில் சிறந்த திரண்டமலைகளைப் போலும் தோள்களையுடையவனும், மனுகுலத்தில் தோன்றிய மேலோனான வனுமான இராமபிரான், பொன் மலைகளுக்கு நடுவில் தோன்றும் மரகத மலையைப் போன்று தோற்றமளித்தான்.

பொன்மலை வானரவீரர்களுக்கு நிறத்தால் ஒப்பு. மரகதமலை இராம பிரானுக்கு நிறத்தால் ஒப்பு. ''வள்ளலே! மதுசூதனா! மரகதமலையே!'' என்பது நம்மாழ்வார் திருமொழி. ''மல் அலைத்தெழுந்து வீங்கி, மலைதிரண்ட அனையதோளான்'' என்பது சீவகசிந்தாமணி.

6. இலங்கையின் சிறப்பை இராமன் இலக்குவனுக்கு எடுத்துரைத்தல் [17 பாடல்கள்]

அணைநெடும் கடலில் தோன்ற, ஆறிய சீற்றத்து ஐயன்,
பிணைநெடும் கண்ணி என்னும் இன்உயிர் பிரிந்த பின்னை,
துணை பிரிந்து அயரும் அன்றில் சேவலின் துளங்குகின்றான்;
இணைநெடும் கமலக் கண்ணால், இலங்கையை எய்தக் கண்டான்.
(6924)

(ஆறுதல்-தணிதல்; ஐயன்-தலைவன்; பிணை-பெண்மான்; கண்ணி-கண்களையுடையவள்/சீதாதேவி; அயர்தல்-வருந்துதல்; சேவல்-அன்றிற்பறவையுமாம்; துளங்குதல்-மனம்கலங்குதல்; இணை-இரண்டு; கமலம்-செந்தாமரை மலர்; எய்த-கூர்ந்து; காணுதல்-நோக்குதல்)

பெண்மானைப் போன்ற மருண்ட நீண்ட கண்களையுடைய சீதாதேவி என்னும் தன் இனிய உயிர்போன்றவளைப் பிரிந்த பின்னர், தனது இணையான பெண் அன்றிற்பறவையைப் பிரிந்து மனம் கலங்கும் ஆண்அன்றில் பறவைபோல வருந்துகின்ற இராமபிரான், நீண்ட கடலில்

Koviloor Digital Library

வானரச்சேனையின் அயராத உழைப்பினால் கட்டப்பெற்று இப்பொழுது நல்லதோற்றம் தருகிற அணையைக் கண்டு, தனக்குள் வருணன்மீது எழுந்த சீற்றம் சிறிது தணியப்பெற்று, தனது செந்தாமரை மலர்போலும் நீண்ட இரு கண்களாலும் இலங்கை மாநகரத்தை நன்கு உற்று நோக்கினான்.

அன்றில் என்னும் பறவை வடமொழியில் கிரௌஞ்சம் என வழங்கப் படுகிறது. சீதாதேவியைக் காண விரைந்துவந்த இராமபிரானுக்குக் கடல் ஒரு தடையாக இருந்ததால் கடலின்மேலும், தான் ஏழுநாள் தவமிருந்தும் வராததால், வருணன் மேல் எழுந்த சீற்றமும், இப்போது வானரச் சேனைகளின் உதவியால் நீண்ட அணை கட்டப்பட்டு எழுந்து நின்றதைக் கண்டவுடன் அச்சீற்றம் தணியப்பெற்றான் என்பதை ''அணை நெடுங் கடலில் தோன்ற, ஆறிய சீற்றத்து ஐயன்'' என்றார் என்க. தசரதனுக்கு எவ்வாறு இராமபிரான் இன்னுயிரோ, அதுபோல இராமபிரானுக்குச் சீதாதேவி இன்னுயிர் என்பது காப்பியத்தில் பல இடங்களில் கவிஞன் குறிப்பிட்டிருப்பதை நினைவுகூர்க. அன்றில் என்பது ஒருவகைப் பறவை. இவை எப்பொழுதும் ஒன்றைவிட்டு மற்றொன்று இணைபிரியாது வாழ்வன. அவ்வாறு பிரிய நேர்ந்தால் அல்லலுற்று வருந்தும் எனவும், இவை இரவில் இரைதேடிப் பகலில் கூடும் இயல்பின எனவும் கூறுவர். ''மனைசேர் பெண்ணை மடிவாய் அன்றில், துணை ஒன்று பிரியினும் துஞ்சா'' என்பது அகநானூறு. இங்கே சேவல் என்ற சொல் பறவை இனத்துள் ஆண்பறவையைக் குறித்து வழங்கும் மரபுச்சொல்லாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதை உணர்க. சேவல் என்ற சொல்லுக்கு இப்பொழுது வழங்கும் பொருள் பொருந்தாது என்பது அறிக.

7. ''நம்திரு நகரே ஆதிவேறுஉள நகர்கட்கு எல்லாம்,
வந்தபேர் உவமைகூறி வழுத்துவான் அமைந்த காலை
இந்திரன் இருக்கை என்பர்; இலங்கையை எடுத்துக் காட்டார்;
அந்தரம் உணர்தல் தேற்றார்; அருங்கவிப் புலவர் அம்மா! (6925)

(அரு-அரிய; நம்திருநகர்-அயோத்தி; ஆதி-முதலாக; வந்த-பொருந்திய; வழுத்துதல்-புகழ்தல்; காலை-பொழுது/சமயம்; இருக்கை-உறைவிடம்; அந்தரம்-வேறுபட்டு; தேறுதல்-தெளிதல்; திரு-அழகிய)

இராமபிரான் இலக்குவனை நோக்கி, ''தம்பி! அரியபொருளமைந்த செய்யுட்களை இயற்றுபவர்களான பேரறிஞர்கள் எல்லாம், உவமை கூறிப் புகழத்தொடங்கும்போது பல்வேறு சிறப்புமிக்க நமது அழகிய நகரமாகிய அயோத்தி போன்ற பல நகரங்களை தேவர்தலைவனாகிய இந்திரன் வாழும் இடமாகிய அமாரவதி நகரையே பொருத்தமான உவமையாக எடுத்துக்கூறுவார்கள். அவ்வமராவதியினும் பலமடங்கு பெருமைமிக்க இந்த இலங்கை மாநகரை எடுத்துக்காட்ட மாட்டார்கள். காரணம் அவர்கள் அந்த அமராவதிக்கும், இந்த இலங்கைமாநகரத்திற்கும்

Koviloor Digital Library

உள்ள வேறுபாட்டினை நன்கு தெளிந்து அறியாதவர்கள் போலும்!'' என்கிறான்.

இலங்கை மாநகரை முதலில் கவிஞனே கவிக்கூற்றாகப் பலபடியாக வருணித்திருக்கிறான்; பின்னர் அனுமன் கூற்றாக ஊர்தேடு படலத்தில் பலவாறாகப் புகழ்ந்திருக்கிறான். இப்பொழுது காப்பிய நாயகனாகிய இராமபிரான் வாயிலாகவே காப்பியத்தின் எதிர்நிலைத் தலைவனின் தலைநகரைப் புகழ்ந்துகூறுமாறும் செய்திருக்கிறான் என்பதை எண்ணும் போது உண்மையிலேயே இலங்கை மாநகரத்தின் சிறப்பினைக் கற்போர் உணருமாறு செய்வதில் கவிஞன் பெருவெற்றி அடைந்திருக்கிறான் என்றே கூறவேண்டும். ''பேர்உவமை'' என்பது, தான் கூறவந்த பொருளுக்கு உவமை கூறுபவர்கள் அந்தப் பொருளைக் காட்டிலும் உயர்ந்த சிறப்புடைய பொருளையே உவமையாகக்கூறவேண்டும் என்பது இலக்கண மரபு. ''உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை'' என்பது தொல் காப்பியம். இங்கே 'அம்மா!' என்பது வியப்புக்குறித்த இடைச்சொல் எனக்கொள்க.

8. ''பழுது அற விளங்கும் செம்பொன் தலத்திடைப் பரிதிநாண,
முழுது எரி மணியின் செய்து முடிந்தன, முனைவராலும்
எழுத அருந்தகைய ஆய, மாளிகை இசையச் செய்த
தொழில் தெரிகிலவால், தங்கண் சுடர் நெடுங்கற்றை சுற்ற. (6926)

(பழுது-குற்றம்; பரிதி-சூரியன்; எரிதல்-ஒளிவீசுதல்; மணி-இரத்தினம்; முனைவர்-முதிர்ந்த அறிவுடையவர்; சுடர்-ஒளி; கற்றை-கதிர்த் தொகுதிகள்; சுற்ற-சூழ; தலம்-தரை; தகை-அழகு; எழுதல்-படைத்தல்; தொழில்-நுட்பவேலைப்பாடு)

இந்நகரில் விளங்கும் குற்றமில்லாது செம்மையாக விளங்கும் செம்பொன்னாலான தரையிடத்தைக் கண்டால், ஒளிமிக்க சூரியன்கூடத் தன் ஒளி குன்றி வெட்கமடைவான். அத்தரை முழுவதும், நன்கு ஆராய்ந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒளிவீசும், இரத்தினக்கற்களைக் கொண்டு செய்து முடிக்கப்பட்டனவாகும். சிற்பக்கலையில் வல்லுநரான தொழில்நுட்பக் கலைஞர்களாலுமேஅமைப்பதற்குஅரியதானஅழகுமிக்க மாளிகைகளில் தோன்றுகின்ற ஒளிப்பிழம்பின் தொகுதி விழிகளை கூசச்செய்வதால், அம்மாளிகைகளில் செய்திருக்கின்ற நுட்பவேலைப்பாடு கண்களுக்குப் புலப்படாது போகிறது என்கிறான் இராமபிரான்.

இதே 'தெரிகில' என்ற சொல்லை, சுந்தரகாண்டத்தின் முதல் பாடலிலேயே ''என்கொண்டு இழைத்த எனத் தெரிகிலாத'' என்றுகவிஞன் முன்னர் கூறியதையும் இங்கு நினைவு கொள்ளல் தகும். ''முனைவர் என்ற சொல் தத்தம் தொழில் திறத்தில் தேர்ந்து, முதிர்ந்த அறிவுடையவர்களைக் குறிக்கும். இங்கே சிற்பநூல் வல்லானான மயனையோ, விசுவகர்மா

Koviloor Digital Library

வையோ குறித்ததாகக் கொள்ளலாம். எனினும் உ.வே.சா நூல்நிலையப் பதிப்பு, முனைவர் என்ற சொல்லுக்கு 'பிரமன்' என்ற பொருள்தந்து பிரமனாலும் படைத்தற்கரிய என்ற விளக்கத்தைத் தந்திருப்பது சிந்திக்கத்தக்கது. அம்மாளிகைகளின் ஒளி மிகுதியை உயர்வு நவிற்சியால் மிகுத்துரைத்திருப்பதால் இது குணஅதிசயம் என்னும் அணியின்பாற்படும் எனக்கொள்க.

9. "விரிகின்ற கதிரஆகி, மிளிர்கின்ற மணிகள் வீச
சொரிகின்ற சுடரின் சும்மை, விசும்புறத் தொடரும் தோற்றம்,
அரிவென்ற வெற்றி ஆற்றல் மாருதி அமைத்த தீயால்
எரிகின்றதாயே காண், இக்கொடி நகர் இருந்தது இன்னும்" (6927)

(கதிர்-கிரணங்கள்; மிளிர்தல்-ஒளிவீசுதல்; சுடர்-ஒளி; சும்மை-தொகுதி; விசும்பு-ஆகாயம்; அரி-பகைவர்; மாருதி-அனுமன்; அமைத்த-பொருந்திய; காண்-காண்பாயாக; சொரிதல்-பொழிதல்; தோற்றம்-காட்சி; வென்றி-வெற்றி)

"இலங்கை மாநகரின் நாற்புறமும் பரந்து விரிகின்ற ஒளிக்கிரணங்கள் மிகுந்த ஒளியைப் பரப்பவும், விளங்குகின்ற மாளிகைகளில் அமைத்துள்ள நவ இரத்தினங்களும் சேர்ந்து ஒளியைப் பொழியவும், அந்த ஒளிக் கற்றைகளின் தொகுதி ஆகாயமளாவத் தொடர்ந்து செல்லும் காட்சி யானது, முன்பு, பகைவர்களை வென்று வெற்றியும் வல்லமையுமுடைய அனுமன் தன் வால் கொண்டு, இந்தக் கொடிகள் கட்டப்பெற்ற இலங்கை மாநகருக்கு ஊட்டிய நெருப்பு இன்னும் எரிந்து கொண்டிருப்பதைப் போன்றே தோன்றுவதைக் காண்பாயாக!" என்று இராமபிரான் இலக்குவனுக்குக் கூறுகிறான்.

'அரி' என்ற சொல், பகைவர்களையும் குறிக்கும் என்க.

10. "மாசுஅடை பரந்த மான மரகதத் தலத்து வைத்த
காசுஅடை சமைந்த மாடம், கதிர்நிறக் கற்றை சுற்ற,
ஆசுஅறக் குயின்ற வெள்ளி அகல்மனை அன்னம் ஆக,
பாசடைப் பொய்கை பூத்த பங்கயம் நிகர்ப்ப; பாராய்!" (6928)

(மான-பெருமைவாய்ந்த; தலம்-நிலம்; வைத்தல்-நிறுவுதல்; காசு-செம்பொன்; சமைந்த-பதிக்கப்பெற்ற; மாடம்-மாளிகைகள்; கதிர்க்கற்றை-ஒளித்தொகுதி; சுற்ற-சூழ; ஆசு-குற்றம்; குயின்ற-அமைக்கப்பட்ட; பாசடை-பசியஇலைகள்; பங்கயம்-தாமரைமலர்; நிகர்ப்ப-ஒத்து; மாசு-இருள்)

"இருளும் அழுக்கும் அடைத்திராத தூய, விரிந்த, மரகதத்தாலான தரையில், இரத்தினங்கள் பதிக்கப்பெற்று அமைந்த மாடமாளிகைகளில், ஒளிக்கிரணங்களின் தொகுதி சூழ்ந்து நிரம்ப, குற்றமில்லாத

Koviloor Digital Library

வெள்ளியினால் பதிக்கப்பெற்ற இடமகன்ற மனைஇடங்கள் வெண்மையான அன்னம் போலத் தோன்றவும், பசிய இலைகள் நெருங்கியுள்ள பொய்கையில் மலர்ந்திருக்கின்ற தாமரை போலவும் தோற்றம் தருவதைக் காண்பாயாக!'' என்கிறான் இராமபிரான்.

மரகத மணித்தலம்-தாமரைப்பொய்கை; பொன்மாளிகைகள்-செந்தாமரை மலர்கள்; வெள்ளிமாடங்கள்-அன்னப்பறவைகள்; அருமையான உருவகப்பாடல். 'அடை' என்னும் ஒரே சொல் ஒவ்வொரு அடியிலும் வெவ்வேறு பொருள்களைத் தந்துநிற்பதால் இது திரிபு அணியின்பாற்படும். 'மனை' என்பது பொன்மாளிகைகளின் இடையே அமைந்திருக்கும் பகுதிகள் எனக்கொள்க. மரகதமணியும் பொய்கையும் பசுமைநிறம்; மாளிகைகளும், தாமரைமலர்களும் சிவந்தநிறம்; வெள்ளி மாடங்களும் அன்னப்பறவைகளும் வெண்மை நிறம் கம்பனின் கற்பனா சக்தியை எண்ணி வியக்காமல் இருக்கமுடியுமா?

11. "தீச்சிகை சிவணும் சோதிச் செம்மணிச்செய்த தூணின்
தூச்சுடர் மாடம் ஈண்டித் துறுதலால், கருமை தோன்றா
மீச்செலும் மேகம் எல்லாம், விரிசுடர் இலங்கை வேவ,
காய்ச்சிய இரும்பு மானச் சேந்துஒளி கஞல்வ காணாய்!'' (6929)

(தீச்சிகை-அனல்கொழுந்து; சிவணுதல்-ஒத்தல்; சோதி-ஒளி; தூ-தூய; சுடர்-ஒளி; ஈண்டி-நெருங்கி; துறுதல்-நிறைந்திருத்தல்; தோன்றா-தோன்றி; மீ-மேலே; வேவ-வேகும்போது; மான-ஒத்து; சேந்து-சிவந்து; கஞலுதல்-விளங்குதல்)

நெருப்புக்கொழுந்து போன்று ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் சிவந்த இரத்தினங்கள்பதிக்கப்பெற்று அமைத்ததூண்கள், தூய்மையான ஒளிவீசும் மாடமாளிகைகளில் நெருங்கி நிறைந்திருக்கின்றன, இலங்கைநகரின் ஆகாயத்தின் மேலே செல்லும் மேகங்கள் எல்லாம், கருமைநிறம் வெளிப் படாமல், பரந்த ஒளிவீசுகின்ற இலங்கை மாநகரம், முன்பு அனுமனால் எரியூட்டப்பட்டபோது வெந்துபோன சமயத்தில் அப்பெருந்தீயினால் பழுக்கக் காய்ச்சப்பட்ட இரும்பைப்போலச் சிவந்து ஒளிவிளங்கி நிற்பதையும் காண்பாயாக!'' என்கிறான் இராமபிரான்.

12. "வில்படி திரள்தோள்வீர! நோக்குதி; வெங்கண் யானை
அல்படி நிறத்தவேனும், ஆடகத்தலத்தை ஆழ,
கல்படி வயிரத் திண் கால் நகங்களின் கல்லி, கையால்,
பொற்பொடி என்ன வீசி, பொன்மலை என்னப்போவ!'' (6930)

(படிதல்-தங்குதல்; வெம்மை-சினம்; அல்-இருள்; படிதல்-செறிதல்; ஆடகம்-பொன்; தலம்-தரை; திண்-வலிமை; கல்லி-பறித்து/தோண்டி; பொடி-துகள்/புழுதி; கல்-வலிமை)

Koviloor Digital Library

''எப்போதும் வில்லைத் திரண்டதோளில் தாங்கிக் கொண்டிருக்கும் வீரனே! இலக்குவ! மிக்க சினம்கொண்ட கண்களையுடைய யானைகள், இருள்போன்ற கரிய நிறத்தை உடையன என்றாலும், இவ்விலங்கை மாநகரத்தின் தரையை, தன்னுடைய கல்போன்ற வலிமையானதும், வயிரம் போன்ற உறுதியானதுமான கால்களாலும் நகங்களாலும் அந்தப் பொன் வேயப்பட்ட தரையினை தனது துதிக்கையாலும் ஆழமாகத் தோண்டியெடுத்து, அதிலிருந்து வெளிப்பட்ட பொன்னாலான துகள் களைத் தன் உடம்பெங்கும் பூசிக்கொண்டு, ஒரு பொன்மலையே நகர்ந்து போவதுபோல அசைந்து செல்வதை நன்கு பார்ப்பாயாக!'' என்கிறான் இராமபிரான்.

பொதுவாக உலகில் உள்ள யானைகள் தரையில் இருக்கும் மண்ணை வாரித்தான் தன் தலையில் தூவிக்கொள்ளும். 'யானை தன் தலையிலேயே மண்ணை வாரிப்போட்டுக் கொண்டாற்போன்று' என்ற ஒரு வழக்குச் சொல்லினையும் நாம் அறிவோம். ஆனால் இலங்கையில் உள்ள யானைகள் மட்டும் தரையை அகழ்ந்தால் பொன்துகள்தான் வெளிப் பட்டுத் தோன்றும். அதையே தன் தலைகளில் வாரிப்போட்டுக்கொண்டு உடலெல்லாம் பூசிக்கொண்டும் செல்லும் என்று இலங்கை மாநகரத்தின் செல்வச்செழிப்பு பேசப்பட்டது காண்க. யானைகள் மண்ணை வாரித்தன் தலையில் போட்டுக்கொள்ளும் இயல்புடையன என்பது முன்பும், பாலகாண்டத்தில் ''உண்ணிறநறும்பொடியைவீசி, ஒருபாகம்வெண்ணிற நறும்பொடி புனைந்த மதவேழம்'' எனப்பேசப்பட்டிருப்பதையும் இங்கு நினைவுகூர்க.

13. "பூசல்விற்குமர! நோக்காய்; புகர்அறவிளங்கும் பொற்பின்
காசுடைக் கதிரின் கற்றைக் கால்களால் கதுவுகின்ற
வீசுபொன் கொடிகள் எல்லாம், விசும்பினின் விரிந்த மேக
மாசுஅறத் துடைத்து, அவ்வானம் விளக்குவ போல்வ மாதோ!" (6931)

(பூசல்-போர்; குமரன்-இளையவன்; புகர்-குற்றம்; பொற்பு-அழகு; காசு-மணிகள்; கதிர்க்கற்றை-ஒளித்தொகுதி; கால்-காம்பு; கதுவுதல்-பற்றுதல்; விசும்பு-ஆகாயம்; விளக்குதல்-தூய்மைசெய்தல்; கால்-காற்று; மாசு-அழுக்கு)

''போர்செய்வதற்குரிய விற்படையைத் தாங்கி நிற்கின்ற இளையவனே! இலக்குவ! குற்றம் இல்லாது விளங்கும் அழகிய, மணிகள் பதிக்கப்பெற்ற ஒளித்தொகுதி மிக்க கம்பங்களாகிய காம்புகளைப் பற்றி யிருக்கின்ற, காற்றினால் வீசி அலைக்கப்படுகின்ற, பொன் பட்டினாலாய, அழகிய துகிற்கொடிகள் எல்லாம், ஆகாயத்தில் விரிந்து பரந்திருக்கின்ற மேகத்தில் தென்படுகின்ற அழுக்குகளையெல்லாம் போக்கி, அந்த வானம் தூய்மைபெற்றுத் திகழ்வதுபோலச் செய்வதையும் காண்பாயாக!'' என்கிறான் இராமபிரான்.

Koviloor Digital Library

இரத்தினக்கம்பங்களில் கட்டப்பட்டிருக்கும் கொடிச்சிலைகள் உயரப் பறப்பதை, அவை வானத்திலுள்ள மேகங்களைத் துலக்கித் தூய்மைப் படுத்துகின்றன என்று தனது எண்ணத்தை அவற்றின்மேல் ஏற்றிக் கூறுவதனால் இப்பாடல் தற்குறிப்பேற்ற அணியின்பாற்பட்டதாகும் என்க.

14. "நூல்படத் தொடர்ந்த பைம்பொன் சித்திரம் நுனித்த பத்திக்
கோல்படு மனைகள் ஆய குல மணி எவையும் கூட்டி,
சால்பு அடுத்து, அரக்கன் மாடத் தனிமணி நடுவண் சார்த்தி,
மால்கடற்கு இறைவன் பூண்ட மாலைபோன்று உளது-இம்மூதூர்!" (6932)

(மூதூர்-தொன்மைவாய்ந்த பழைய ஊர்; நுனித்த-நட்பமாக; பத்தி-வரிசை; கோல்-தூரியக்கோல்/ஓவியக்கருவி; படுதல்-வாய்த்தல்/ பொருந்துதல்; மனைகள்-மாளிகைகள்; குல-சிறந்த/பெருமைவாய்ந்த; மணி-இரத்தினங்கள்; நடுவண்-நடுஇடம்; மால்-பெரிய; இறைவன்-அரசன்/தலைவன்; கோல்-கோலம்/அழகுமாம்; சால்பு-மேன்மை; அடுத்தல்-பொருந்துதல்)

''இந்தப் பழமையான பெருநகரமான இலங்கை, கடலினைச் சுற்றி அமைந்துள்ளது. இதைப்பார்க்கும் போது பெரிய கடலுக்கு அரசனான வருணன் தன் கழுத்தில் அணிந்துகொண்ட அழகிய மேன்மை பொருந்திய இரத்தினமாலை போல் தோற்றமளிக்கிறது. இவ்விலங்கைமாநகரம் சிற்பநூல் வல்லானான மயனால் நூல் பிடித்தது போல், எந்தக் கோணலும் குறையுமின்றி நேராக அமைக்கப்பட்டிருக்கிறது. பசுமையான பொன் போன்ற அழகிய ஓவியங்கள் மிக நுட்பமாகவும், வரிசையாகவும், அழகுபடவும் அமைந்திருக்கின்றன. இந்நகரைச் சுற்றிலும் மண்டோதரி, இந்திரசித்து, போன்றவர்களின் மாளிகைகள் நல்ல சிறந்த மாணிக்கக் கற்கள் எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து ஒரு கோவையாகக் கட்டியது போல் சுற்றிலும் அமைந்துள்ளன. மேன்மைபொருந்திய அரக்கர்க் கரசனாகிய இராவணனது அரண்மனை மட்டும் நடு இடத்தில், ஒப்பற்ற நாயகமணியை நடுவே இணைத்துக் கட்டிய மாலை போலும் அமைந்திருக்கின்றது'' என்கிறான் இராமபிரான்.

நகரத்தின் தெருக்களும், மாடமாளிகைகளும் எப்படி எப்படி அமைய வேண்டும் என்பதை நன்கு உணர்ந்தவன் கம்பன் என்பது தெளிவாகிறது. ''நூல் அறிபுலவர் நுண்ணிதிற் கயிறு இட்டு தேயெங்கொண்டு தெய்வம் நோக்கிப் பெரும்பெயர் மன்னர்க்கு ஒப்ப மனை வகுத்து'' என்பது நெடுநல்வாடை. வருணன் அணிந்துகொண்ட மாலை இலங்கை நகரத்துக்கு உவமை. இப்பாடலை இல்பொருள் உவமை என்றும், தற்குறிப்பேற்றம் என்றும்கூடக் கூறலாம்.

Koviloor Digital Library

15. "நல்நெறி அறிஞ! நோக்காய்; நளிநெடுந் தெருவின் நாப்பண்
பல்மணி மாடப்பத்தி நிழல்படப் படர்வ, பண்பால்,
தம்நிறம் தெரிகிலாத, ஒருநிறம் சார்கிலாத,
இன்னது ஓர் குலத்த என்று புலப்படா, புரவிஎல்லாம்" (6933)

(நளி-பெருமை; நாப்பண்-நடுவில்; மாடம்-மாளிகைகள்; பத்தி-வரிசை; நிழல்-ஒளி; புரவி-குதிரைகள்; பண்பு-இயல்பு; குலம்-சாதி; புலப் படுதல்-தெரிந்து தெளிதல்; படர்தல்-செல்லுதல்; நல்நெறி-சன்மார்க்கம்)

''நல்ல புலனடக்கம் என்னும் ஒழுக்க நெறியினை நன்குணர்ந்த பேரறிவாளனே! இலக்குவ! பெருமைபொருந்திய இந்த இலங்கை மாநகரத்தின் நீண்ட தெருக்களின் நடுவில், நிறைந்துள்ள பலவகைப்பட்ட நவஇரத்தினங்களும், மாணிக்கக் கற்களும் பதிக்கப்பட்ட தெருவின் இருபுறத்தும் அமைந்துள்ள மாடமாளிகைகளின் வரிசையிலிருந்து கிளம்பும் பேரொளியானது, அத்தெருவில் செல்லுகின்ற குதிரைகளின் மேல் படுவதால், அவற்றின் இயற்கையான நிறம் இன்னதுதான் என்று உணர்ந்து கொள்ள முடியாதபடியும், ஒருகுறித்த நிறத்தில் பொருந்தி யுள்ளன என்று சொல்ல முடியாதபடியும், ஒருகுறிப்பிட்ட இனத்தைச் சார்ந்தது என்று தெளிந்து உணரமுடியாதபடியும், செல்லுகின்ற தன்மையை நன்கு பார்ப்பாயாக!'' என்கிறான் இராமபிரான்.

'நன்னெறி' என்பது சன்மார்க்கம் என்று பொருள்படும். இலக்குவனைப் பற்றிக்கூறும்பொழுது, நன்னெறி என்பது புலனடக்கத்தைக் குறிக்கும் என்பது சாலப்பொருந்தும். ''தடவும், கயவும், நளியும் பெருமை'' என்பது தொல்காப்பியம். எனவே பெருமை பொருந்திய நீண்ட தெரு எனப்பட்டது. மாளிகைகளின் ஒளியின் நடுவில், தெருவில் செல்லும் குதிரைகளின் நிறம் வெவ்வேறாக மாறுபட்டுக் கொண்டேயிருந்தன என்பது கருத்து. இதேபோல சுந்தரகாண்டத்தில் அனுமன் நிறமும் இன்னதெனத் தெரியமுடியாதபடி அமைந்தது என்று கம்பர் முன்னர்க் கூறிய ''காலின் தோன்றல் கரியனாய், வெளியனாகி, செய்யனாய்க் காட்டும், காண்டற்கு அரியனாய் எளியனாம் தன் அகத்து உறை அழகனேபோல்'' என்றதையும் நினைவுகூர்க.

16. "வீர! நீ பாராய்; மெல்லென் பணிங்கினால் விளங்குகின்ற
மாரனும் மருளச்செய்த மாளிகை, மற்றோர் சோதி,
சேர்தலும் தெரிவ; அன்றேல் தெரிகில; தெரிந்த காட்சி,
நீரினால் இயன்ற என்ன, நிழல்எழுகின்ற நீர்மை" (6934)

(மாரன்-மன்மதன்; சோதி-ஒளி; காட்சி-தோற்றம்; இயன்றன-அமைந்தன; நிழல்-சாயை; நீர்மை-தன்மை; எழுதல்-புலப்படுதல்; விளங்குதல்-ஒளிர்தல்; மருள-மருட்சியடைய/மனம்மயங்க; நிழல்-ஒளி; தெரிந்த-விளங்குகின்ற)

Koviloor Digital Library

''வீரம் மிக்கவனே! இலக்குவ! மெத்தென்ற மெல்லிய பளிங்குக்கற்கள் ஒளிர்கின்றதும், மன்மதனும் மயக்கம் கொள்ளும்படி அமைக்கப்பட்டன வுமான மாளிகைகள் இலங்கையில் உள்ளன. இப்பளிங்குக் கற்களினால் அமைக்கப்பட்ட மாளிகைகளின்மீது வேறுஒரு பொருளின் ஒளிபட்டால் தான் இவை ஒளிவிட்டுத் தன் தோற்றத்தை வெளிப்படுத்தும். இல்லா விட்டால் தன் தோற்றத்தை வெளிப்படுத்தாது. பளிங்குக் கற்களுக்கென்று தனியான ஒரு நிறம்கிடையாது. அவ்வாறு விளங்குகின்ற தோற்றம் நீரினால் அமைக்கப்பட்டதோ? என்றுகூடக் காண்பவர்களை எண்ண வைக்கும். அத்தகைய ஒளிவிளங்குகின்ற தன்மையையும் பார்ப்பாயாக!'' என்கிறான் இராமபிரான்.

பளிங்குக் கற்கள் தொட்டால் உடைந்துவிடும் தன்மையன. எனவே 'மெல்லென் பளிங்கு' என்றார் என்க. மற்றவர்களைத் தன் மலரம்புகளால் மயங்கச்செய்யும் இயல்புடையவன் மன்மதன். அவனே இந்தப் பளிங்குக் கற்களால் ஆன மாளிகைகளைக்கண்டு வியக்கும்படி இருந்ததால் 'மாரனும் மருளச்செய்த மாளிகை' என்றார் என்க. இலங்கை மாளிகைகளின் ஒளிச்சிறப்பு பேசப்படுகிறது. ஒருபொருளின் ஒளி தன்மீதுபட்டால் அதைத் திருப்பிக்காட்டும் இயல்பு பளிங்குக் கற்களுக்கு உண்டு. தண்ணீருக்கும் உண்டு, கண்ணாடிகளுக்கும் உண்டு. அந்த ஒளியோ, உருவமோ தோன்றாவிட்டால் அதைக் கானல்நீர் என்று கூறுவது பொருத்தம்தானே? அதைத்தான் இங்கே 'நீரினால் இயன்ற நீர்மை' என்கிறார் எனக்கொள்க. 'அடுத்தது காட்டும் பளிங்கு' என்ற குறள்-706 இங்கு ஒப்புநோக்கத்தக்கது. தண்ணீரும் பளிங்கும் தனக்கெனத் தனிநிறம் கொண்டன அல்ல. வேற்றுநிறம் கொள்வன என்பதை உணர்க. நிலத்தின் இயல்புக்குத் தகுந்தபடி நீர்திரியும், 'நிலத்தியல்பால் நீர்திரிந்தற்றாகும்' என்பது குறள்-452.

17. "கோல்நிறக் குனிவில் செங்கைக் குமரனே! குளிர்வெண் திங்கள்
கால்நிறக் கதிரின் கற்றை தெற்றிய ஆய காட்சி,
வால்நிறத் தரளப் பந்தர், மரகதம் நடுவண்வைத்த,
பால்நிறப் பரவை வைகும் பரமனை நிகர்ப்ப, பாராய்!" (6935)

(கோல்-நிறம்/அம்பு; ஒளி-அழகு; குனி-வளைத்த; காலுதல்-ஒளி வீசுதல்; சொரிதல்-உமிழ்தல்; கதிரின்கற்றை-ஒளித்தொகுதி; தெற்றுதல்-பின்னப்படுதல்; அனைய-ஒத்த; காட்சி-தோற்றம்; வால்-வெண்மை; தரளம்-முத்து; நடுவண்-நடுவில்; பால்நிறம்-வெண்மையான; பரவை-கடல்; பரமன்-பரம்பொருள்/திருமால்; நிகர்ப்ப-ஒத்து; செங்கை-சிவந்தகை/செம்மையான கை; வைகும்-தங்கும்/பள்ளிகொள்ளும்)

''அழகு நிரம்பிய அம்பையும், நாணேற்றி வளைக்கப்பட்ட வில்லையும், சிவந்த, நடுவுநிலை தவறாத செம்மையான திருக்கைகளில் உடைய இளையவனே! இலக்குவ! குளிர்ச்சி பொருந்திய, வெண்ணிற

Koviloor Digital Library

மான சந்திரன் உமிழ்கின்ற ஒளிக்கிரணங்களின் தொகுதி, இடையிட்டுப் பின்னப்பட்டு தோன்றுகின்ற தோற்றம், வெண்மைநிறம் பொருந்திய முத்துப் பந்தரில், பச்சைநிற மரகதக்கல்லினை நடுவில் பொருத்தியது போலவும், பாலின் நிறமாகிய வெள்ளைநிறம் கொண்ட பாற்கடலில் அறிதுயில் கொள்ளும் பச்சைநிறம் கொண்ட பரந்தாமனாகிய திருமாலை ஒத்தும் தோன்றுவதைக் காண்பாயாக!'' என்கிறான் இராமபிரான்.

'கோல்' என்ற சொல் கோலம் என்றாகி அழகு என்ற பொருளைத் தந்து நின்றது. 'செங்கை' என்பது வில்லினைப் பிடித்துச் செந்தழும்பேறிய கை எனவும் பொருள் தரும். வெண்ணிற முத்துப்பந்தல் பாற்கடலையும், நடுவில் பதிக்கப்பெற்ற பச்சைநிற மரகதக்கல், பச்சைமாமலைபோல் மேனியனான திருமாலையும் குறிக்கும் உவமைகள் என்க. இப்பாடல் உவமையணியின்பாற்படும். பரந்திருப்பதால் 'பரவை' என்பது கடலுக்குக்காரணப்பெயர். 'பந்தர்' என்பது பந்தல் என்பதன் ஈற்றுப்போலி. இராமபிரான், இலக்குவன் உடன்வரவும், வானரச் சேனைகள் சூழ்ந்து வரவும் இலங்கைக்கு வந்திருப்பது, அரக்கர் குலத்தை அழித்து சீதா தேவியை மீட்டுப் போவதற்காகத்தான் என்பதை ஒவ்வொரு பாடலிலும் கவிஞன் மறவாது, கற்போர்க்கு நினைவூட்டத்தான், இலக்குவனை இதுவரை பாடியபாடல்கள் அனைத்திலும் இனிவரப் போகும் பாடல்களிலும், அவனது வீரத்தன்மை குறித்தே பாராட்டி வந்திருக்கிறான் என்பதைக் காணுங்கள். இறுதியில் இதனைத் தொகுத்தும் பார்க்கலாம்.

18. "கோள் அவாவு அரியேறு அன்ன குரிசிலே! கொள்ள நோக்காய்;
நாள் அவாம் மின்தோய் மாடத்து உம்பர், ஓர்நாகர் பாவை,
காள வார் உறையின் வாங்கும் கண்ணடி, விசும்பில் கவ்வி,
வாள் அரா விழுங்கிக்காலும் மதியினை நிகர்த்த வண்ணம்" (6936)

(கோள்-கொள்ளுகின்ற; அவாவுதல்-விரும்புதல்; அரியேறு-ஆண் சிங்கம்; குரிசில்-ஆடவரிற்சிறந்தோன்; நாள்-விண்மீன்கள்/நட்சத் திரங்கள்; தோய்தல்-படிதல்; உம்பர்-மேல்நிலை; காளம்-கருமைநிறம்; வார்-நீண்ட; வாங்குதல்-வெளியே எடுத்தல்; கண்ணடி-கண்ணாடி; வாள்-கொடிய; விசும்பு-ஆகாயம்; காலுதல்-உமிழ்தல்/வெளிப் படுத்துதல்; மதி-சந்திரன்; கொள்ள-மனம்விரும்பி; கவ்வுதல்-பற்றுதல்; விழுங்குதல்-உட்கொள்ளுதல்; அரா-பாம்பு)

''பகைவர்களின் உயிரைக் கொல்லுகின்ற விருப்பமுடைய ஆண்சிங்கம் போன்ற ஆண்களிற் சிறந்தவனே! இலக்குவ! விண்மீன்கள் விரும்பிப்படிந்திருக்கின்ற இலங்கை மாநகரத்தின் மாளிகைகளின் மேல்நிலை மாடத்தில், ஒரு நாகலோகத்துத் தெய்வப்பெண், கருமையான நீண்ட உறையிலிருந்து வெளியே எடுக்கும் ஒரு வட்டவடிவமான கண்ணாடி, ஆகாயத்தில் ராகுகேது என்ற கொடிய பாம்புகள் சந்திரனைக் கவ்விவிழுங்கிப் பின்னர் உமிழ்ந்து வெளிப்படுத்துவது போலக்

Koviloor Digital Library

காட்சியளிக்கும் தன்மையை நன்கு மனத்தில் பதியும்படி கூர்ந்து நோக்குவாயாக!'' என்கிறான் இராமபிரான்.

'கொள்ள நோக்குதல்' என்பது நன்கு மனத்தில் பதியும்படி கூர்ந்து நோக்குதலைக் குறிக்கும். 'நாள் அவாம் மின்தோய் மாடத்து உம்பர்' என்பது இலங்கையில் உள்ள மாடமாளிகைகளின் உயர்ச்சியைக் குறிக்கும். 'காளம்' என்பது கருமைநிறத்தைக் குறிக்கும். எனவேதான் மேகம், 'காளமேகம்' என வழங்கப்படுகிறது என்பது அறிக. 'கண்ணடி' என்பது கண்ணாடியைக் குறிக்கும். கொடிய பாம்புகளாகிய இராகுவும், கேதுவும், சந்திரனையும், சூரியனையும் கவ்விப் பின் உமிழும் என்பது ஒரு நூற்கொள்கை. அதைத்தான் சூரியகிரகணம் என்றும் சந்திரகிரகணம் என்றும் வழங்குகிறோம். கரியநிறமுள்ள உறையிலிருந்து எடுக்கப்பட்ட வட்டமான கண்ணாடி, இராகுவின் வாயிலிருந்து வெளிப்படும் சந்திரனுக்கு உவமை. பகைவர்களைத் தப்பாமல் கொல்லும் தன்மையால், அரியேற்றினுக்கு இலக்குவனை உவமைப்படுத்தினார் என்க. தான் நிற்கின்ற சுவேலமலையிலிருந்து எதிரே நீண்டதூரத்தில் உள்ள இலங்கை மாநகரத்தின் மாடமாளிகையில் இருந்து ஒரு தெய்வப்பெண் கருமையான உறையிலிருந்து ஒரு கண்ணாடியை வெளியில் எடுக்கும் காட்சியைக் கண்ட இராமபிரான் இலக்குவனிடம் கூறுவதாக அமைந்த பாடல் இது.

'அரியேறு' என்பது 'பன்றி, புல்வாய், உழையே, கவரி என்று இவை நான்கும் ஏறெனற்கு உரிய' என்ற தொல்காப்பியச் சூத்திரத்தை அடியொற்றியது என்க. 'உறை' என்பது, தூசிபடியாதபடி, ஒளியுடைய பொருள்களைப் பொதிந்து வைத்தற்பொருட்டுத் துணி, தோல் முதலியவற்றால் தைக்கப்பட்ட பை என்க. இன்னும் செட்டிநாட்டுப் பகுதிகளில் பளிங்குக் கற்களான தூண்கள், துணிகளாலான உறையினால் மூடப் பெற்றிருப்பதைக் காணலாம். அதற்கு 'உறை' என்பதே பெயர்.

19. "கொற்றவான் சிலைக்கை வீர! கொடிமிடை மாடக் குன்றை
உற்றவான் கழுத்தவான ஒட்டகம், அவற்றது உம்பர்ச்
செற்றிய மணிகள் ஈன்ற சுடரினைச் செக்காரத்தின்
கற்றை அம் தளிர்கள் என்னக் கவ்விய நிமிர்வ காணாய்!" (6937)

(கொற்றம்-வெற்றி; வான்-பெரிய/சிறந்த; சிலை-வில்; மிடைதல்-நெருங்குதல்; உறுதல்-எட்டுதுல்/பொருந்துதல்; வான்-நீண்ட; கழுத்தவான-கழுத்தினை உடைய; உம்பர்-மேல்; செற்றிய-பதிக்கப் பெற்ற; ஈன்ற-வெளிப்படுத்திய; செக்காரம்-தேமாமரம்; அம்-அழகிய; கவ்விய-கவ்வும்பொருட்டு)

''வெற்றிபொருந்திய சிறந்த விற்படையைக் கையில் ஏந்திய வீரனே! இலக்குவ! கொடிகள் நெருங்கிக் காணப்படும் இலங்கை மாநகரில் மலைபோல் விளங்கும் மாடமாளிகைகளை எட்டிப்பிடிக்கின்ற அளவு

Koviloor Digital Library

உயர்ந்த, நீண்ட கழுத்தினைக் கொண்ட ஒட்டகங்கள், அந்த மாடங்களின் மேல் நவரத்தினங்கள் பதிக்கப் பெற்றிருப்பதால், அவற்றினின்றும், வெளிப்படுகின்ற சிவந்த ஒளிக்கற்றைகளைத் தேமாமரத்தின் அழகிய கொழுந்து போன்ற தளிர்கள் என்று கருதிக்கொண்டு, அவற்றைக் கவ்விப் பற்றுவதற்குத் தம் தலையை நிமிர்த்தி நிற்பதையும் காண்பாயாக!'' என்கிறான் இராமபிரான்.

'குன்றுபோல் மாடம்' என்று மாளிகைகள் சிறப்பிக்கப் பெற்றன என்க. 'செக்காமரம்' என்பது சஹகாரம் என்ற வடசொல்லின் சிதைவு எனக் கொள்க. மாடங்களில் பதிக்கப்பெற்றிருக்கின்ற சிவந்த இரத்தினங்கள் வெளியிடுகின்ற ஒளிக்கற்றையினை, ஒட்டகங்கள் தேமாமரத்தின் தளிர்கள் என்று எண்ணி மயங்குகின்றன. ஆதலால் இப்பாடல் மயக்க அணியின் பாற்படும் எனக்கொள்க. ஒட்டகம் பாலைவனக் கப்பல் என்று அழைக்கப்படுவதும், அது மணற்பாங்கான இடத்திலும் விரைவாக நடக்கக்கூடிய பிராணி என்பதும் நாம் அறிந்ததே.

20. "வாகை வெஞ்சிலைக் கைவீர! மலர்க்குழல் புலர்த்த, மாலைத்
தோகையர் இட்ட தூமத்து அகிற்புகை முழுதும் சுற்ற,
வேகவெம் களிற்றின் வன்தோல் மெய்யுறப் போர்த்த தையல்
பாகனின் பொலிந்து தோன்றும் பவள மாளிகையைப் பாராய்!" (6938)

(வாகை-வெற்றிமாலை; வெம்-கொடிய; சிலை-வில்; தோகை-மயில்; குழல்-கூந்தல்; தூமம்-புகை; சுற்ற-சூழ்ந்துகொள்ள; வேகம்-வெகுளி; தையல்-மாது/உமையம்மை; இட்ட-மூடிய)

''வெற்றிமாலையையும், கொடிய வில்லையும் கைக்கொண்ட வீரனே! இலக்குவ! மயில்போலும் சாயலையுடைய மகளிர், மாலைநேரத்தில் மலர்கள் சூட்டப்பெற்ற தம் கூந்தலின் ஈரம் உலர்த்துவதற்காக அவர்கள் ஊட்டிய நறுமணம் மிக்க அகிற்புகையானது எல்லா இடங்களிலும் சூழ்ந்துகொண்டிருக்கும், விரைந்து நடக்கும் இயல்புடைய கொடிய யானையின் வலிய தோலையே தனது மேனியில் போர்வையாகப் போர்த்திக் கொண்டுள்ளவனும், பெண்ணாகிய உமையம்மையைத் தன் இடப்பாகத்தில் கொண்டவனுமாகிய சிவபெருமானைப் போல், பொலிவு பெற்றுத் தோற்றம்தரும் செம்பவளத்தாலான மாளிகைகளையும் நன்கு காண்பாயாக!'' என்கிறான் இராமபிரான்.

''களிற்றின் வன்தோல் மெய்யுறப் போர்த்தவன்'', ''தையல் பாகன்' என்று சிவபெருமானின் இரு வடிவங்களைப் பேசுகிறான் கவிஞன். தாருகாவனத்து முனிவர்கள் அபிச்சார வேள்வியினின்றும் செலுத்திய யானையைக் கொன்று, அதன் தோலைத் தன் செம்மேனியில் போர்த்திக் கொண்டவன் சிவபெருமான் என்பது ஒன்று. உமையம்மையைத் தன் இடப்பாகத்தில் கொண்ட உமையொரு பாகன் என்பது மற்றொன்று. பவள

Koviloor Digital Library

மாளிகை செந்நிறத்தைப் பரப்புவதால் அது செம்மேனிஎம்மான் சிவபெருமான் என்றும், அகிற்புகை சூழ்ந்த கரியநிறத்தை, சிவபெருமான் மேனியில் போர்த்தப் பெற்றிருக்கும் கரிய யானைத் தோலுக்கும் உவமையாகக் கூறினார் என்றும் கொள்க. பவளமாளிகை செந்நிறப் பெருமானுக்கும், கருநிறப்புகை அவன் போர்த்தியிருக்கும் யானை உரிக்கும் உவமை. ''தத்துவ மறைக்கும் எட்டுதற்கரிய, தன் வடிவில், பாகமாய் விளங்கும் பைந்தொடி'' என்பது வில்லிபாரதம். யானை உரிபோர்த்திக் கொண்ட நிகழ்ச்சி திருவழுவூர் என்ற சோழநாட்டில் உள்ள தலத்தில் நிகழ்ந்ததாகப் புராணங்கள்கூறுகின்றன. 'கைம்மா உரி அம்மான்' என்பதும், 'செம்மேனிப்பிரான்' என்பதும் தேவாரம்.

21. "காவலன் பயந்த வீரக்கார் முகக்களிறே! கற்ற
தேவர்தம் தச்சன் நீலக் காசினால் திருந்தச் செய்தது,
ஈவது தெரியா உள்ளத்து இராக்கதர் ஈட்டிவைத்த
பாவபண்டாரம் அன்ன, செய்குன்றம் பலவும் பாராய்!" (6939)

(காவலன்-வேந்தன்/தசரதன்; பயந்த-ஈன்றெடுத்த; கார்முகில்-வில்; களிறு-ஆண்யானை; காசு-மணி/மாணிக்கம்; ஈட்டுதல்-சேமித்தல்; பண்டாரம்-பொருட்குவியல்; நிதிக்கூடம்/நிதியறை/சேமிப்புக்கிடங்கு)

''அயோத்தி வேந்தனாகிய தசரதச் சக்கரவர்த்தி ஈன்றெடுத்த, வீரம் மிகுந்த, விற்படையைக் கையில் ஏந்திய ஆண்யானை போன்றவனே!, இலக்குவ! சிற்ப சாத்திர நூல்கள் முழுவதையும் நன்கு கற்றுத்தேர்ந்த தெய்வத்தச்சனான விசுவகருமா, நீல ரத்தினக்கற்களால் செப்பமுறச் செம்மையாகச் செய்து அமைக்கப்பட்ட செய்குன்றுகள், வறியவர்க்கு மனம் உவந்து கொடுக்கும் ஈகைத்தன்மை என்றால் என்ன என்பதே தெரியாத மனப்பான்மை படைத்தவர்களான இராக்கதர்கள் நெடுங் காலமாகச் சேமித்துத் திரட்டி வைத்த பாவங்களின் பெரும் பொருட் குவியல் போன்று அமைந்திருக்கின்ற தன்மையையும் பார்ப்பாயாக!'' என்கிறான் இராமபிரான்.

''ஈவது தெரியா உள்ளத்து அரக்கர்'' என்பது ''இரக்கம் என்று ஒரு பொருள் இலாத நெஞ்சினர்'' என்று முன்பு கூறியதை அடியொற்றியது என்க. ஈவது என்பது இரக்கத்தினால் உண்டாகும் ஒரு அரிய பண்பு. இரக்கமே இல்லாதவர்கள் ஈயமாட்டார்கள் என்பது கருத்து. 'ஈதல் அறம்' என்பது ஒரு தனிப்பாடல். ஈதல் அல்லாதது மறம், பாவம் என்பது பெறப்படுகிறது. எனவே 'பாவபண்டாரம்' என்றார் என்க. பண்டாரம் என்ற சொல்லுக்குப் பொக்கிஷம் என்பது பொருள். 'நீலக்காசு' என்பது ஒரு அருமையான சொற்றொடர். பொதுவாகப் புகழை வெண்மை நிறம் என்றும், பழியைக் கருமைநிறம் என்றும் கூறுவது கவிமரபு. அதுபோல 'பாவத்தை' நீலநிறம் எனக்கூறினான் என்க. 'அருநீலபாவம் அகல' என்பது பெரியதிருமொழி. செய்குன்றம் என்பது இயற்கையாக அமையாது,

Koviloor Digital Library

மனிதனால் செய்து அமைக்கப்பட்ட குன்றுகள், கட்டுமலை, மணல் திட்டுகள் என்று பொருள்படும், செய்குன்றங்கள் பாவவண்டாரத்திற்கு ஒப்பு. 'காவலன் பயந்த வீரக்கார்முகக் களிறு' என்பது இல்பொருள் உவமை என்க.

22. பிணை மதர்த்த அனைய நோக்கம் பாழ்பட, பிடியுண்டு, அன்பின்
துணைவரைப் பிரிந்து போந்து, மருங்கு எனத் துவலும் உள்ளப்
பணம் அயிர்ப்பு எய்தும் அல்குல் பாவையர், பருவம் நோக்கும்,
கணமயில் குழுவின், நம்மைக் காண்கின்றார் தம்மைக் காணாய்!" (6940)

(பிணை-பெண்மான்; மதர்ப்பு-மருட்சி/களிப்பு; போந்து-வந்து; மருங்கு-இடை; துவளுதல்-தளர்தல்; பணம்-பாம்பின்படம்; அயிர்ப்பு-சந்தேகம்/ஐயம்; நோக்குதல்-எதிர்பார்த்தல்; கணம்-திரட்சி; குழு-கூட்டம்; பாவையர்-தேவமகளிர்; அல்குல்-நிதம்பம்)

''பெண்மானின் மருட்சிமிக்க பார்வை பாழ்பட்டுப் போகும்படி, அரக்கர்களால் சிறைப்பிடிக்கப்பட்டு, அன்பிற் சிறந்த தம் கணவன்மார் களைப் பிரிந்து, தம் இடை துவன்றிருப்பதைப்போல மனமும் தளர்ந்து போய், பாம்பின் படமோ என்று ஐயுறும்படியான அகன்ற நிதம்பத்தை யுடைய தேவமகளிர், கார்காலத்து மேகத்தை விருப்பத்தோடு எதிர் நோக்கிக் காத்திருக்கும் திரட்சி மிகுந்த மயிற்கூட்டத்தைப்போல, நம் வரவைக் கண்டு மகிழ்ந்திருக்கின்ற, தேவமகளிர்களையும் காண்பாயாக!'' என்கிறான் இராமபிரான்.

இராமஇலக்குவரின் வரவு, சிறைப்பட்டுக் கிடக்கின்ற தேவர்களின் மனைவியர்க்கும், தேவமகளிர்க்கும் களிப்பைத்தரும். அதற்காக அவர்கள் இவர்களை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். அதற்குக், கார்காலத்தை எதிர்நோக்கிக் காத்திருக்கும் மயிற்கூட்டங்கள் ஒப்பு. கார்காலத்தை எதிர் நோக்கி மயிற்கூட்டங்கள் மட்டுமல்ல, மகளிர் கூட்டமும்- தலைவனைப் பிரிந்த தலைவியர் கூட்டமும் தலைவர்களை எதிர்நோக்கிக் காத்திருந்து வருந்தித்தளர்வுறும். 'கார்கெழு பருவம் வாய்ப்பக்காமுறு மகளிர் உள்ளம் சீர்கெழு கணவன் தன்பால் விரைவுறச் செல்லுமா போல்' என்பது பெரிய புராணம். மயிற்கூட்டமும், மகளிர்கூட்டமும் மட்டுமல்ல, தவம்செய்யும் தவசியர் கூட்டமும் கார்காலம் வந்தால் சோர்ந்து தளர்வுறுவர், என்று முன்பு கிட்கிந்தா காண்டத்தில் கூறியதை இங்கு நினைவுகூர்க. 'அளவில் கார் எனும் அப்பெரும்பருவம் வந்தணைந்தால்,தளர்வர் என்பது தவம் புரிவோர்க்கும் தகுமால்' என்பது கம்பனின் கூற்று.

23. "நாள் மலர்த்தெரியல் மார்ப! நம்பலம் காண்பான், மாடத்து
யாழ் மொழித் தெரிவை மாரும் மைந்தரும் ஏறுகின்றார்,
'வாழ்வு இனிச் சமைந்ததன்றே' என்று மாநகரை எல்லாம்,
பாழ்படுத்து இரியல் போவார் ஒக்கின்ற பரிசு பாராய்!" (6941)

Koviloor Digital Library

(நாள்-அன்று அலர்ந்த/புதிய; தெரியல்-மாலை; காண்பான்-காணும் பொருட்டு; தெரிவைமார்-தேவமகளிர்; சமைந்தது-அமைந்தது; இரியல் போதல்-நீங்குதல்/நிலைகெட்டு ஓடுதல்; பரிசு-தன்மை)

''அன்றலர்ந்த, புதிய, நன்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மலர்களைக் கொண்டு கட்டப்பெற்ற மாலைகளை அணிந்த மார்பையுடையவனே! இலக்குவ! நம்முடைய படைபலத்தைக்காணும்பொருட்டு, யாழ்போன்ற இனியமொழிகளைப் பேசும் இயல்புடைய தேவமகளிரும், தேவமைந்தர்களும் நம்மைக் கண்டவுடன் ''இனி அரக்கர் வாழ்நாள் முடிந்துவிட்டது, நமக்கு இனி நல்வாழ்வு அமையப்போகிறது'' என்று மகிழ்ந்து, மாடத்தில் ஏறிச்செல்லுகின்றார்கள். அவர்கள் இதுகாறும் பேணிப்பாதுகாத்து வந்த இலங்கை நகரத்தை வெறுமையாக்கிவிட்டு, தாம் செய்து கொண்டிருந்த தூய்மைப் பணிகளையெல்லாம் செய்யாது, நீக்கி, இலங்கை நகரம் பாழ்படும்படி, ஓடிப்போகின்றவர்களின் தன்மையையும் காண்பாயாக!'' என்கிறான் இராமபிரான்.

'தெரியல்' என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட மலர்களைக் கொண்டு தொடுத்த மாலை என்ற விரிந்த பொருளைத்தரும். இங்கே இந்தப் பகுதியில்தான் இராமபிரான் இலக்குவனை-அவனது வீரத்தன்மையைப் பலபடப் பாராட்டிப் பேசியிருக்கிறான் என்பதை நோக்கவேண்டும். மேலே கண்ட செய்யுள்களில் ''வில்படி திரள்தோள்வீர! பூசல் வில்குமர! நல்நெறி அறிஞ! வீர! கோல் நிறக் குனிவில் செங்கைக்குமரனே! கோள் அவாவுஅரிஏறு அன்ன குரிசிலே! கொற்றவாள் சிலைக்கை வீர! வாகை வெஞ்சிலைக் கைவீர! காவலன் பயந்த வீரக்கார்முகக் களிறே! நாள்மலர்த் தெரியல் மார்ப!'' என்று பலபடப் பராட்டியிருக்கிறான் என்பதும் உணர்க.

24. இராவணன் வானரச்சேனையைக் காணக் கோபுரத்தில் சென்று சேர்தல்

இன்னவாறு இலங்கை தன்னை இளையவற்கு இராமன் காட்டி,
சொன்னவா சொல்லா வண்ணம், அதிசயம் தோன்றும் காலை,
அன்னமா நகரின் வேந்தன், அரிக்குலப் பெருமை காண்பான்,
சென்னி வான் தடவும் செம்பொற் கோபுரத்து உம்பர்ச் சேர்ந்தான்.
(6942)

(அதிசயம்-வியப்பு; அரிக்குலம்-வானரச்சேனை; காண்பான்-காணும் பொருட்டு; சென்னி-தலை/சிகரம்/உச்சி; உம்பர்-மேல்நிலை; பெருமை-மிகுதி)

இவ்வாறு இராமபிரான் தன்தம்பி இலக்குவனுக்கு இலங்கை மாநகரத்தின் அமைப்பு, மற்றும் சிறப்பினை எல்லாம் சுட்டிக்காண்பித்துக் கொண்டு முன்பு சொன்னதையே மீண்டும் சொல்லாதவாறு, புதுப்புது

Koviloor Digital Library

வியத்தகு நிகழ்ச்சிகளைக் கண்டு வியந்து நின்ற போது இலங்கை மாநகரத்தின்அரசனாகிய இராவணன், குரங்குச்சேனையின்மிகுதியையும், ஆற்றலையும், காணும்பொருட்டு, வானத்தைத்தொடும் அளவு உயர்ந்திருக்கின்ற சிகரத்தின் உச்சியில் அமைந்துள்ள, செம்பொன்னாற் செய்யப்பட்ட கோபுரத்தின் மேல்நிலையை அடைந்தான்.

இலங்கையின் பெருமையினை இராமன் இலக்குவனுக்குக் கூறுவதாக வான்மீகத்தில் பேசப்படவில்லை.

இலங்கை காண்படலம் நிறைவுற்றது

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 14563

Koviloor Digital Library

10. இராவணன் வானரத்தானை காண் படலம் [35 பாடல்கள்]

இராவணன் இலங்கைக் கோட்டையின் கோபுரத்தின் உச்சியில் நின்று, எதிர்த்திசையில் சுவேலமலையில் இராமபிரானுடன் நிற்கும் வானரச் சேனையைக் கண்ணுறுதல் பற்றிக்கூறும் பகுதி எனப்பொருள்படும். இது 25 பாடல்களைக் கொண்டது. சில ஏட்டுச்சுவடிகளில், ''இராவணன் தானைகாண் படலம்'' எனவும், ''கோபுரப்படலம்'' எனவும் குறிக்கப் பட்டுள்ளது. சில ஏட்டுச்சுவடிகளிலும் அச்சுப்பிரதிகளிலும் ''தானைகாண் படலம்'' எனவும் ''சேனைகாண் படலம்'' எனவும் தலைப்பிடப் பட்டிருக்கிறது. வான்மீகி இதனை 5 சர்க்கங்களில் கூறியுள்ளார்.

இப்படலத்துள் கோபுரத்தின்மீது இராவணன் ஏறிவந்த பெருமிதமும், அவன் நிற்கும் நிலை; இராவணன் இராமனை மட்டும் தனியே கண்ணுறுதல்; மற்றையோரைத் தெரிவிக்க வேண்ட, அருகிலிருந்த சாரன் படைத்தலைவர்கள் எல்லோர் பற்றியும் மிகவிரிவாகக் கூறுதல்; அதனைக் கேட்ட இராவணன் அவனை இகழ்ந்தும், மனம் வெகுண்டும் சிரித்தல்; ஆகிய நிகழ்ச்சிகள் விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன.

1. இராவணன் கோபுரத்தின்மேல் குன்றென நிற்றல்

கவடு உகப் பொருத காய்களிறு அன்னான்,
அவள் துயக்கின் மலரம்பு உறவெம்பும்
சுவடுடைப் பொருஇல் தோள்கொடு, அனேகம்
குவடுடைத் தனிஓர் குன்றென, நின்றான். (6943)

(கவடு-கட்டுத்தறி; உகுதல்-முறிதல்; பொருதல்-மோதித்தாக்குதல்; காய்தல்-சினத்தல்; களிறு-ஆண்யானை; துயக்கு-ஆசை/காதல்/மையல்; உற-தைக்க; வெம்புதல்-வருந்துதல்; சுவடு-அடையாளம்/தழும்பு/குறி; பொருவுஇல்-ஒப்பற்ற; அனேகம்-பல; குவடு-சிகரங்கள்; ஓர்-ஒப்பற்ற; குன்று-மலை)

தான் கட்டப்பெற்றிருக்கின்ற கட்டுத்தறி முறிந்துபோகும்படி மோதித் தாக்கும் இயல்புடைய சினங்கொண்ட கபட ஆண்யானை போன்றவனான இராவணன், சீதாதேவியின் மீது கொண்ட ஆசையால், மன்மதனது

Koviloor Digital Library

மலரம்புகள் வந்து தைக்க, அதனால் மிகத்தளர்ந்து வருந்துவான். படைக் கலன்களாலும், இம்மலரம்புகளாலும் தழும்புகள் படும்படியான ஒப்பற்ற இருபது தோள்களோடு, பல சிகரங்களைக் கொண்ட ஒப்பற்ற ஒருமலைபோலக் கோட்டையின் கோபுரத்தின் உச்சியின் மீது நின்றான்.

'கவடு' என்ற சொல் யானைகட்டப் பட்டிருக்கும் கட்டுத்தறியைக் குறிக்கும். தான் கட்டப்பட்டிருக்கும் கட்டுத் தறியைத் தாக்கி அதனின்றும் வெளியேறுவதற்கு முயற்சிப்பது யானையின் இயல்பான குணம். அப்போது அது எப்படிச் சினந்து தோன்றுமோ அவ்வாறு இப்போது இராவணன்சினந்து தோன்றினான் என்கிறான் கவிஞன். 'கவடுறப் பொருத காய்களிறு' இராவணனுக்கு ஒப்பு. யானையின் இவ்வியல்பை ''கந்து அடு களிறு'' என்று பேசுகிறது சீவகசிந்தாமணி. கந்து - கட்டுத்தறி. முன்பு திக்குவிஜயகாலத்தில் போர்செய்து யானைகளின் தந்தங்களை மார்பில் தாங்கிக் கொண்டிருக்கும் இராவணன், இப்பொழுது சீதாதேவியின்மீது கொண்ட காதலால், மன்மதனது மலரம்புகளைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தளர்ந்து வருந்தியிருக்கிறான், என்று கூறும் கவிஞனின் நகைச்சுவை சுவைக்கத்தக்கதாய் அமைந்திருப்பதை உணர்க. 'அநேகம் குவடு' என்பது பல சிகரங்கள் என்ற பொருளில் இராவணனின் இருபது தோள்களையும் குறித்தது. பலசிகரங்களோடு கூடிய ஒரு மலை, ஒரு கோபுரத்தின் மேல் நிற்பதுபோல இராவணன் நின்றான் என்பது அவனது உருவத்தோற்றத்தைப் பற்றிக் கூறியது எனக்கொள்க. 'மலரம்பு' என்பது மன்மதனுடைய ஐந்து மலரம்புகளான தாமரை, மா, அசோகு, முல்லை, நீலம் என்பன என்க. இங்கே வான்மீகம், இராவணன் பல பனைமரங்களின் உயரத்தைவிட உயரமான மாளிகையில் ஏறிநின்று வானரச்சேனையைக் கண்டான் எனக்கூறுகிறது. கம்பன் கோட்டையின் கோபுரத்தின்மீது ஏறிநின்று பார்த்தான் எனக்கூறுகிறான்.

2. பொலிந்ததாம் இனிது போர் எனலோடும்,
நலிந்த நங்கை எழிலால் வலிநாளும்
மெலிந்த தோள்கள் வடமேருவின் மேலும்
வலிந்து செல்ல, மிசை செல்லும் மனத்தான். (6944)

(பொலிதல்-தோன்றுதல்/தொடங்குதல்; இனிது-பெரிது; எழில்-அழகு; மிசை-மேல்/மீது; நலிந்த-மெலிந்த; மெலிந்த-தளரப்பெற்ற; வலிந்த-வன்மைகொண்டு/வலிமையுற்று)

இராமபிரான் பிரிவினால் அங்கமெல்லாம் மெலிந்திருப்பவளான பெண்களிற் சிறந்தவளான சீதாதேவியின் அழகின் காரணமாகத் தன் தோள்களின் வலிமை நாளுக்குநாள் குறையப்பெற்று வரும் இராவணன், அங்கே பெரும் போர் துவங்கிவிட்டது என்று கேட்டவுடனேயே, இப்பொழுது வடமேருமலையின் மேலும் வலியப்போருக்குச் செல்லும்

Koviloor Digital Library

அளவுக்கு உயர்ந்து வலிமையுற்று, போர் மேற்கொள்ளும் உள்ளத்தோடு நின்றான்.

'பொலிந்தது' என்பது இங்கே தோன்றியது என்று பொருள் தந்தாலும் தொடங்கியது என்றே கொள்ளவேண்டும். இனிது பெரிதாம், 'இனியபோர்' என்பது 'பெரும்போர்' எனப்பொருள் படும். இராம பிரானைப் பிரிந்திருப்பதால் சீதாதேவியின் அங்கமெல்லாம் அவள் இடைபோல் மெலிந்தது என்று முன்பு கூறியதையும் இங்கு நினைவுகூர்க. இராமன் பிரிவால் சீதாதேவி மெலிந்தாள் என்பது சரி. இராவணன் தோள்கள் ஏன் 'நாளும் வலி மெலிய வேண்டும்? அவன் சீதாதேவியின் மீது கொண்ட மையலால் மெலிந்தது. ஆனால் அவன் பொருவுஇல் வீரனாயிற்றே? எனவே இப்போது போர் துவங்கிவிட்டது என்று தெரிந்த உடனேயே அவனது தோள்கள் மிக்கவலிமை பெற்று வடமேருவையே வலியப் போய் எதிர்த்து நிற்கும் அளவு வலிமை பெற்றுவிட்டது என்று கூறுகிறான் கவிஞன். 'நலிந்த நங்கையே எழில்' மிக்குடையாள் என்றால், அவள் நலியாதிருந்த போது எவ்வளவு எழிலோடு இருந்தாள் என்பதை நாம் பாலகாண்டத்தில் கண்டதை இங்கு நினைவுகூர்க. கோலங்காண் படலமும், கடிமணப் படலமும் சீதாதேவியின் அழகை உரைத்தமை உணர்க. 'பொலிந்தது' என்பதைப் போரொடு கூட்டாமல், இராவணன் மெலிந்த தோளோடு கூட்டினால் பொருள் இன்னும் சிறக்கும். இராம பிரான் பிரிவால் சீதாதேவியின் உடல் மெலிந்தது, அவள்மீது கொண்ட ஆசையால் இவன் தோள்வலி மெலிந்தது என்ற கவிஞனின் கவிநயம் உணர்க. காதலால் மெலிந்த தோள்கள் போரினால் வலிவு பெற்றன என்றது ஒரு நயம். 'போரென்ன வீங்கும் பொருப்பன்ன பொலன் திண்தோள்' என்பது பாலகாண்டம். 'போர்எனில் புகலும், புனைகழல் மறவர்' என்பது புறநானூறு. சீதாதேவியின்மீது கொண்ட காதலால் மெலிந்த அவன் தோள்கள், போர் என்று கூறியவுடனே, அப்போரில் இராமபிரானை வென்று, அவளை நிச்சயமாக அடைந்துவிடலாம் என்று எண்ணியதால் அவன் தோள்கள் பூரித்துப் பருத்தன என்று பொருள்கூறுதல் இன்னும் இலக்கிய இன்பம் சேர்க்கும்.

3. செம்பொன் மௌலி சிகரங்கள் தயங்க,
அம்பொன் மேருவரை கோபுரம் ஆக,
வெம்பு காலினை விழுங்கிட, மேல்நாள்
உம்பர் மீதில் நிமிர் வாசுகி ஒத்தான். (6945)

(செம்பொன்-கலசங்கள்; மௌலி-உச்சி; அம்-அழகிய; வெம்பு - சினம் கொண்டு; கால்-காற்று/வாயுதேவன்; விழுங்குதல்-வெல்லுதல்; மேல் நாள்-முற்காலத்தில்; உம்பர்-உச்சி; நிமிர்தல்-உயர்ந்து எழுதல்; வாசுகி-ஆதிசேஷன்; தயங்குதல்-விளங்குதல்; வெம்புதல்-மனம் புழுங்குதல்)

Koviloor Digital Library

சிவந்த, சிறந்த பொன்னாலாகிய கலசங்கள் அவன் நின்ற கோபுரத்தின் உச்சியில் சிகரங்கள்போலப் பொலிந்து தோன்ற, அழகிய பொன்னான மேருமலையே அவன் ஏறிநிற்கும் கோபுரமாக விளங்க, சினமும் பொறாமையும் கொண்டு, மனம் புழுங்கிய காற்றின் வேந்தனாகிய வாயுதேவனை வெல்லும் பொருட்டு முற்காலத்தில் அம்மலையின்மீது ஓங்கி உயர்ந்தெழுந்து கவித்துக்கொண்டு நின்ற ஆதிசேஷன் என்னும் பாம்பினைப் போல், இராவணன் இப்போது தோற்றமளித்தான்.

ஆதிசேஷன் என்ற பாம்புக்கு இராவணன் வலிமையால் ஒப்பு. முன்பு ஆரண்யகாண்டத்திலும், பின்னர் சுந்தரகாண்டத்திலும், இந்த வரலாறு தெளிவாக விளக்கப்பட்டது. வாயுதேவனுக்கும், ஆதிசேஷனுக்கும், யார் மிகவும் வல்லவர் என்ற போட்டி எழுந்தது. மேருமலையை ஆதிசேஷன் காப்பாற்ற வேண்டும் என்பதும், வாயுதேவன் தன் வலிமையால் அதைப் பிளக்க வேண்டும் என்பதும்தான் போட்டி. வாயுதேவன் எவ்வளவோ முயன்றும், மூன்றேமூன்று சிகரங்களைத் தான் தகர்க்க முடிந்தது, அம்மூன்று சிகரங்களும் மேருமலையிலிருந்து தகர்க்கப்பட்டுத் தனியே விழுந்தன. அதுதான் திரிகோணமலை என்ற இலங்கை என்பது நாம் முன்பு கண்டதே. அந்த மலையை முழுதும் தகர்க்க விடாமல் கவித்துக்கொண்டு நின்ற அந்த ஆதிசேஷனுக்கு இராவணனை ஒப்பாகக்கூறுகிறான் கவிஞன். வாசுகியை-பாம்பு என்னும் இன ஒற்றுமைபற்றி, ஆதிசேஷனாகக் கொள்ளப்பட்டது. இராவணன் ஏறிநின்ற கோபுரம் மேருமலைக்கும், பொற்கலசங்கள் மலைச்சிகரங்களுக்கும் ஒப்பு.

4. இராவணன் மாட்சிமை [17 பாடல்கள்]

தொக்க பூதம் அவை ஐந்தொடு துன்னிட்டு,
ஒக்கநின்ற திசை ஒன்பதொடு ஒன்றும்,
பக்கமும், நிழல்பரப்பி, வியப்பால்,
மிக்கு நின்ற குடைமீது விளங்க. (6946)

(தொக்க-ஒன்றுகூடியுள்ள; துன்னிட்டு-நெருங்கி/பின்னிப் பிணைந்து; ஒக்கநிற்றல்-ஒன்றுபட்டு நிற்றல்; மிக்கு-மேம்பட்டு) (குளகப் பாடல்)

ஒன்றுகூடி இணைந்துள்ள நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் என்னும் ஐந்து பூதங்களோடு நெருங்கி, ஒன்றுபட்டு நிற்கின்ற பத்துத் திசைகளிலும், மற்றும் பிற பக்கங்களிலும் இராவணனுடைய ஒற்றை வெண்கொற்றக்குடை நிழல்பரப்பவும், கண்டவர் வியக்கும் வண்ணம் மேம்பட்டு நிற்கும் அக்குடை, அவன் முடிகள்மீது பொலிவுற்று விளங்கவும் - பாடல் தொடர்கிறது.

Koviloor Digital Library

தொடங்கும் காலத்தில் வானிலிருந்து காற்றும், காற்றிலிருந்து தீயும், தீயிலிருந்து நீரும், நீரிலிருந்து மண்ணும் தோன்றும். ஆயின் ஒடுங்கும் காலத்து முதலில் மண்நீரிலும், நீர்தீயிலும், தீ காற்றிலும், காற்று வானிலும் ஒடுங்கும் என்பது ஒரு நூற்கொள்கை. எனவே 'தொக்க பூதம் ஐந்தும்' என்றார் என்க. திசைகள் பத்து என்பதை நாம் முன்னரே அறிவோம். நேர்திசை நான்கும், கோணத்திசை நான்கும், மண்ணும் விண்ணும் சேர்ந்து ஆக திசைகள் பத்து என்பதை நினைக. பத்துத்திசைகளிலும் தேர் செலுத்தி வெற்றி கண்டவன் என்பதனால்தான் தசரதன் என்பது அவனுக்குக் காரணப்பெயராயிற்று என்பதையும் நாம் முன்பே கண்டோம். இராவணன் கோபுரத்தின் உச்சியில் நின்றபோது அவன் வெண்கொற்றக்குடை உலகம் எங்கும் வியாபித்து நிழல்பரப்பிற்று என்பது, அவனுடைய ஏக சக்கராதி பத்தியத்தைக் குறிப்பால் உணர்த்திற்று எனக்கொள்க. இராவணனின் வெண்கொற்றக் குடையின் சிறப்பும் அவன் ஆட்சிச் சிறப்பும் பேசப்பட்டது. 'குடை' என்பது இங்கு அவன் ஆட்சியைக் குறித்தது எனக்கொள்க. 'உலகு ஏழெனத், திசை பத்தெனத், தான் ஒருவனுமே' என்பது திருவாசகம்.

5. கைத்தரும் கவரி வீசிய காலால்,
நெய்த்து இருண்டு உயரும் நீள்வரை மீதில்
தத்தி வீழ் அருவியின் திரள் சால,
உத்தரீகம், நெடுமார்பின் உலாவ; (6947)

(தருதல்-கொள்ளுதல்; கவரி-சாமரம்/வெண்சாமரை; கால்-காற்று; நெய்த்து-பளபளப்புடையதாதல்/ஒளிவீசுதல்; இருள்தல்-கருமை யடைதல்; வரை-மலை; திரள்-கூட்டம்; சாலும்-நிறைந்து; உத்தரீகம்-மேலாடை; நெடு-அகன்ற; உலாவுதல்-அசைதல்; தத்தி-பாய்ந்து)

கைகளால் வீசப்பெறும் வெண்சாமரத்தினின்றும் பரவும் காற்றின் வேகத்தால், பளபளப்பாகவும், இருண்டும், உயர்ந்தும், நீண்டும் இருக்கின்ற பெரிய மலையின்மீதிருந்து துள்ளிப்பாய்ந்து வரும் அருவியின் கூட்டம்போல, நிறைந்து நின்ற இராவணனின் மேலாடை, அவனது அகன்ற மார்பில் அசைந்தாட - பாடல் தொடர்கிறது.

முன்பாடலில் அவன் வெண்கொற்றக்குடையின் சிறப்புப் பேசப்பட்டதுபோல இந்தப் பாடலில் அவனது வெண்சாமரச் சிறப்பு பேசப்படுகிறது. முதலடியில் 'கைத்தரும் கவரி வீசிய காலால்' என்ற முரண்தொடை காண்க. கவரி-வெண்சாமரை; கால்-காற்று; கவரிமான் என்ற ஒரு அரியவகை மானின் முடிகொண்டு ஆக்கப்படுவதால் சாமரம் கவரி எனப்பட்டது என்பதறிக. நெய்த்தல் என்பது பளபளப்பாக ஒளிவீசுதலைக் குறிக்கும். இரண்டாவது அடியிலும், நெய்த்து, இருண்டு என்ற முரண்தொடை அமைந்திருப்பதை உணர்க. மலைகள் ஒளி வீசித் திகழ்வதால் நெய்த்து என்றும், காட்டுமரங்கள் அடர்ந்திருப்பதால்

Koviloor Digital Library

இருண்டு என்றும் கூறினார் என்க. மலைகளினின்றும் பாய்ந்துவரும் அருவிக்கு இராவணன் தன் மேனியில் அணிந்திருக்கும் மேலாடை உவமை. அந்தரீயம் என்ற வடசொல் உள்ளாடையையும் உத்தரீயம் என்ற சொல் மேலாடையையும் குறிக்கும். உத்தரீயம் என்பது இப்போது அங்கவஸ்திரம் என்றும், துப்பட்டா என்றும் வழங்கப்படுவதுபோல எனக்கொள்க. இராவணனின் அகன்ற மார்புக்கு நீள்வரையும், அவன் வெண்மையான உத்தரீயத்துக்கு வெள்ளருவியும் உவமைகள். 'வேறுபல் துகிலின்நுடங்கிட, இழுமெனஇழிதரும்அருவி' என்பது திருமுருகாற்றுப் படை. 'அவிர்துகில் புரையும்அவ்வெள் அருவி' என்பது குறிஞ்சிப்பாட்டு. 'ஓயா அருவித்திரள் உத்தரீயத்தை ஒப்ப' என்பது கம்பனே முன்பு கையாண்ட உவமை.

6. வானகத்தினில் உருப்பசி, வாசத்
தேன் அகத் திரு திலோத்தமை, செவ்வாய்
மேனகைக் குல அரம்பையர், யாரும்
சானகிக்கு அழகு தந்து, அயல் சார, (6948)

(உருப்பசி-ஊர்வசி; திரு-திருமகள்/இலக்குமி; அயல்-புறம்/பக்கம்; சார்தல்-ஒதுங்கி நிற்றல்; குலம்-சிறந்த/உயர்வு)

விண்ணுலகில் வாழும் தேவமகளிராகிய ஊர்வசி, நறுமணத்துடன் தேன் போன்ற இனிய செந்தாமரைமலரில் வீற்றிருக்கும் இலக்குமியை ஒத்த திலோத்தமை, சிவந்த வாயினையுடைய மேனகை, ஆகிய சிறந்த உயர்ந்த தேவமகளிர் அனைவரும் சீதாதவியின் அழகிற்கு ஈடுகொடுக்க முடியாமல் அவளுக்கு மேலும் அழகு தருவதற்காக இராவணனின் அருகில் சென்று ஒதுங்கி நிற்கவும் - பாடல் தொடர்கிறது.

'உருப்பசி' என்பது பிரமனின் ஊரு அல்லது தொடையினின்றும் தோன்றியவள் என்பதைக் குறிக்கும். ஊரு-தொடை; திலோத்தமை என்பது ஒவ்வொரு பேரழகியின் உடலிலிருந்தும் எள்ளளவு எடுத்துக் கூட்டிச் செய்த உருப்பெற்றவள் என்பதைக் குறிக்கும். திலம்-எள்; அரம்பையர் குழாம் புடை சுற்ற இராவணன் நின்றான் என்பது பெறப்படுகிறது.

7. வீழியின் கனி இதழ், பணைமென் தோள்,
ஆழிவந்த அரமங்கையர், ஐஞ்ஞூற்று
ஏழ் இரண்டினின் இரண்டு பயின்றோர்,
சூழ் இரண்டு புடையும் முறை சுற்ற. (6949)

(வீழி-வீழிப்பழம்; பணை-மூங்கில்; ஆழி-கடல்/திருப்பாற்கடல்; வந்த-தோன்றிய; அரமங்கையர்-தேவமகளிர்/தெய்வப்பெண்கள்;

Koviloor Digital Library

ஐஞ்னூற்று ஏழ்இரண்டின் இரண்டு-பதினான்காயிரம்; புடை-பக்கம்; சுற்ற-சூழ; பயிலுதல்-பயிற்சிபெறுதல்)

திருப்பாற்கடலைக் கடையும்போது, அதனின்றும் வீழிப்பழம் போல சிவந்த இனிமையான வாய் இதழ்களும், மூங்கிலைப் போன்ற மென்மையான தோள்களும் கொண்டு, தோன்றிய தேவமங்கையர், பதினாலாயிரம் பேர், ஆடல், பாடல் கலைகளில் நன்கு தேர்ச்சி பெற்றோர், இராவணனைச் சூழ்ந்து இரண்டு பக்கங்களிலும் முறைப்படி நிற்கவும் - பாடல் தொடர்கிறது.

இராவணனைச் சூழ்ந்து தேவமகளிர் சுற்றி நின்றனர் என்பதாம். ''ஏழ் இரண்டினின்'' என்ற சொற்றொடர் முன்பும் பாலகாண்டத்தில் பயன்படுத்தப்பட்டிருப்பதை நினைவுகூர்க. வீழிப்பழம் என்பது சிவப்பு நிறமுடைய இனிப்பான ஒரு பழவகை என்க.

8. முழைபடிந்த பிறை முள் எயிறு, ஒள்வாள்
இழைபடிந்த இளவெண் நிலவு ஈன,
குழைபடிந்தது ஒரு குன்றில், முழங்கா
மழைபடிந்தனைய தொங்கல் வயங்க; (6950)

(முழை-குகை; முள்-கூரிய; எயிறு-பற்கள்; ஒள்-ஒள்ளிய/ சிறந்த; வாள்-ஒளி; இழை-அணிகலன்கள்/ஆபரணங்கள்; படிதல்-தோன்றுதல்; ஈன-வீச; குழை-குண்டலம்/காதணி; குன்று-தோள்; முழங்கா-முழங்கி; மழை-மேகம்; தொங்கல்-மாலை)

குகையில் அமைந்திருக்கின்ற பிறைச்சந்திரன் போன்று வாயில் அமைந்திருக்கும் கூரிய கோரப்பற்களின் ஒளி ஆபரணங்களில் படிந்து, இளமையான வெண்மையான ஒளியை வீசவும், காதுகளில் அணிந்துள்ள குண்டலங்கள் அவன் குன்றாகிய தோள்களில், முழங்குதலில்லாத மேகம் படிந்திருப்பது போன்று, கருங்குவளை மலரால் ஆன மாலை பொலிந்து விளங்கவும் - பாடல் தொடர்கிறது.

அவனுடைய கோரப்பற்கள் பிறைச்சந்திரனுக்கு உவமை. அவனது குண்டலங்கள் பொருந்திய தோள்கள் மலைகளுக்கு உவமை; அவனுடைய கருநீல மாலை மேகங்களுக்கு உவமை; குண்டலம் அணிந்த மலை என்பது இல்பொருள் உவமை எனக்கொள்க. மலைமீது மேகம் படிந்திருப்பதுபோல, அவன் தோள்களில் நீலமணி மாலை பொலிந்து விளங்கியது என்பதாம். தொங்குவது என்பதால் தொங்கல் என்பது மாலைக்குக் காரணப்பெயர்.

Koviloor Digital Library

9. ஓத நூல்கள் செவியின் வழி, உள்ளம்
சீதை சீதை என ஆருயிர் தேய,
நாதவீணை இசை நாரதனார் தம்,
வேதகீத அமுது அள்ளி விழுங்க. (6951)

(வழி-இடம்; நாதம்-ஒலி; ஆர்-அரிய; தேய-மெலிய; அள்ளி-முகந்து; விழுங்குதல்-பருகுதல்)

அறிஞர்கள் வேதநூல்களில் கூறப்படடுள்ள கருத்துக்களை இராவணன் செவியில் விழும்படி ஓதிக்கொண்டிருந்தனர்; இனிய ஒலியோடுகூடிய வீணையோடு தேவாமிர்தம் போன்ற வேதப் பாடல்களை அப்படியே முகந்து பருகும்படி நாரதர் தன் வீணையில் இசைத்துக்கொண்டிருந்தார். எனினும் இராவணனின் உள்ளமோ சீதை சீதை என்று புலம்பிக்கொண்டே இருந்தது. தனது அரிய உயிர் தேய்ந்து மெலிந்து போகும்படி இராவணன் நின்றுகொண்டேயிருந்தான்.

இராவணன் ''வேதம் ஆயிரம் வல்லான்'' எனவே வேதம் ஓதப்பட்டது. அவன் 'சாமகானப்பிரியன்' எனவே நாரதர்சாமகீதம் இசைத்தார். இவற்றை யெல்லாம் ஏற்காத அவன் உள்ளம் சீதையை நினைந்தே மெலிந்து தேய்ந்து கொண்டிருந்தது என்பதாம். போரென்றவுடன் பொங்கியெழுந்தன தோள்களாகிய உடலுறுப்பு. ஆனால் உள்ளமோ காமத்தால் மெலிந்து தேய்ந்தது என்ற முரண்பாடு காண்க. 'சீதை சீதை' என்ற அடுக்கு இராவணன் உள்ளத்தவிப்பை உணர்த்த வந்த அடுக்கு எனக்கொள்க. இராவண னுடைய செவிகளில் ஏதும் ஏறவில்லை என்பது கருத்து. 'பசிவந்திடப் பத்தும் பறந்துபோம்' என்ற பழமொழி காமத்திற்கும் பொருந்தும் என்பதை உணர்க.

10. வெங்கரத்தர், அயில்வாளினர், வில்லோர்,
சங்கரற்கும் வலி சாய்வுஇல் வலத்தோர்,
அங்கு அரக்கர் சதகோடி அமைந்தோர்,
பொங்கு அரத்த விழியோர் புடைசூழ. (6952)

(வெம்-கொடிய; அயில்-கூரிய; சங்கரன்-சிவபெருமான்; சாய்வுஇல்-தோல்வியில்லாத; சாய்வு-இறக்கம்; சதம்-நூறு; அரத்தம்-இரத்தம்; புடை-பக்கம் (குளகப்பாடல்)

கொடிய கைகளையுடையவரும், கூரிய வாட்படையை ஏந்தியவரும், விற்படை கொண்டோரும், அழித்தல் கடவுளாகிய சிவபெருமானுக்கு எந்தவிதத்திலும் குறைவில்லாத மிக்க பலம் வாய்ந்தவரும், சினத்தால் குருதி பொங்குகின்ற கண்களையுடையவருமாய், நூறுகோடி என்னும் எண்ணிக்கையில் அரக்கர்கள் இராவணனைச் சுற்றி இருமருங்கும் சூழ்ந்திருக்கவும் - பாடல் தொடர்கிறது.

Koviloor Digital Library

அங்கு அரக்கர் என்ற சொல்லை அங்கரக்கர் என்ற ஒரே சொல்லாகக் கொண்டு இராவணனின் 'உடல் காவலாளர்' என்று கூறுவதும் உண்டு. அங்கரக்கர் என்பது அங்கரட்சகர் என்ற வடசொல்லின் திரிபாகக் கொள்வர்.

11. கல்லில் அம்கை உலகம் கவர்கிற்போர்,
நல் இலங்கை முதலோர், நவை இல்லோர்,
சொல்லில் அங்கு ஓர் சதகோடி தொடர்ந்தோர்,
வில் இலங்கு படையோர், புடை விம்ம; (6953)

(கல்லுதல்-தோண்டுதல்/அகழ்தல்; அம்-அழகிய; கவர்தல்-பெயர்த்தெடுத்தல்; நவை-குற்றம்; சொல்லில்-சொல்லப்போனால்; சதம்-நூறு; இலங்குதல்-விளங்குதல்; புடை-பக்கம்; விம்முதல்-பெருகுதல்) (குளகப் பாடல்)

இந்த உலகத்தையே தம் கைகளினால் அகழ்ந்து எடுத்துக் கவரவல்ல வலிமைபெற்றவர்களும், இந்த அருமையான 'இலங்கை மாநகரம் தோன்றிய நாள்முதல், தொன்றுதொட்டு இருந்துவரும், பழமையான மூத்த குடிமக்களும், தம் அரசர்க்கு எந்த விதத்திலும் தீங்கு நினையாதவரும், தீமை செய்யாதவரும், சொல்லப்போனால் அங்கு ஒரு நூறுகோடி என்னும் எண்ணிக்கையில் அமைந்துள்ள, ஒளிவீசுகின்ற விற்படையை ஏந்தியோரும், இராவணனின் இருபக்கங்களிலும் மிகுதியாக நிறைந்து நிற்கவும் - பாடல் தொடர்கிறது.

'கில்' என்பது ஆற்றலை உணர்த்தும் இடைச்சொல். 'முதலோர்' என்பது மாலியவான் போன்ற பழமையான முதியவர்களைக் குறித்தது.

12. பார் இயங்குநர், விசும்பு படர்ந்தோர்,
வார் இயங்கு மழையின் குரல் மானும்
பேரி, அங்கண் முருடு, ஆகுளி, பெட்கும்
தூரியம், கடலின் நின்று துவைப்ப; (6954)

(பார்-பூமி; இயங்குநர்-சஞ்சரிப்பவர்; விசும்பு-வானுலகம்; வார்-நீர்/புனல்; மழை-மேகம்; மானும்-ஒக்கும்; பேரி-முரசு; அம்-அழகிய; ஆகுளி-சிறுபறை; பெட்குதல்-விரும்புதல்; தூரியம்-வாத்தியங்கள்; துவைத்தல்-ஒலித்தல்/முழங்குதல்; நின்று-நிலைபெற்று) (குளகப்பாடல்)

நிலவுலகில் சஞ்சரிப்பவர்களும், வானுலகில் பரவியிருப்போரும், நீரில் கலந்து உறவாடும் மேகத்தின் இடியோசைபோல முழங்கும் முரசு, அழகிய கண்களையுடைய முருடு, ஆகுளி என்னும் சிறுபறை, போர்க்கால இசைக்கருவிகள் போன்ற எல்லோராலும் விரும்பப்படும் வாத்தியங்கள், முதலியன கடலோசைபோல நிலைபெற்று முழங்கவும்- பாடல் தொடர்கிறது.

Koviloor Digital Library

13. நஞ்சும் அஞ்சும் விழி நாகியர் நாண,
வஞ்சி அஞ்சும் இடை மங்கையர், வானத்து
அம்சொல் இன்சுவை அரம்பையர், ஆடி,
பஞ்சமம் சிவணும் இன்னிசை பாட; (6955)

(நஞ்சு-விஷம்; நாகியர்-நாகலோகத்துப் பெண்கள்; அஞ்சுதல்-பயப்படுதல்/நாணமுறுதல்; அம்-அழகிய; அரம்பையர்-தேவமகளிர்; சிவணுதல்-அமைதல்/பொருந்துதல்; பஞ்சமம்-ஒருவகைப்பண்) (குளகப்பாடல்)

கொடிய விஷம்கூட அஞ்சி ஒதுங்குகின்ற கொடிய கண்களையுடைய நாகலோகத்துப் பெண்களும், வஞ்சிக்கொடிகூட நாணும்படி மெலிந்த இடையை உடைய இவ்வுலக மங்கையர்களும், வானுலகத்தில் வசிக்கும் அழகிய சொல்லில் இனிய சுவையுடையவர்களுமான தேவமகளிரோடும், சேர்ந்து பஞ்சமம் என்னும் ஒருவகைப்பண் பொருந்துமாறு இனிய இசையைப் பாடிக்கொண்டிருக்கவும் - பாடல் தொடர்கிறது.

நாகலோகத்துப் பெண்கள், நிலவுலகத்துப் பெண்கள், தேவலோகத்துப் பெண்கள் எல்லோரும் ஒன்றுகூடி ஆடிப்பாடிக்கொண்டு, இராவண னுடைய இருமருங்கிலும் நிற்கிறார்கள் என்பதாம். பஞ்சமம் என்பது ஏழுவகைப்பண்களில் ஒன்று. மற்றவை, ஷட்ஜமம், ரிஷபம், காந்தாரம் மத்திமம், பஞ்சமம், தாவதம், நிஷாதம், என்பனவாம். , கண்டபோதே எதிர்ப்பட்டோர் உயிரைக் கொல்லும் கொடுமையுடையதால் 'நஞ்சும் அஞ்சும் விழி' என்றார் என்க. விழிகளுக்கு நஞ்சு உவமை. பெண்களின் இடைக்கு வஞ்சிக்கொடியை உவமை கூறுவது கவிமரபு.

14. நஞ்சு கக்கி எரி கண்ணினா்; நாமக்
கஞ்சுகத்தா், கதை பற்றிய கையா்;
மஞ்சுஉகக் குமுறு சொல்லினா்; வல்வாய்க்
கிஞ்சுகத்த கிரி ஒத்தனா், சுற்ற. (6956)

(கக்குதல்-வெளிப்படுத்துதல்/உமிழ்தல்; கதை-தண்டு; மஞ்சு-மேகம்; உகுதல்-உருகுதல்; கிரி-மலை; நாமம்-அச்சம்; கஞ்சுகம்-சட்டை; கிஞ்சுகம்-முள்முருக்கு; வல்-கொடிய/வலிய) (குளகப்பாடல்)

விஷத்தை வெளிப்படுத்தி தீப்பொறி பறக்கின்ற கண்களையுடையவரும், தண்டாயுதத்தைக் கையில் ஏந்தி நிற்பவரும், மேகம்கூட இடிந்து விழுவதுபோல இடியோசை எழுப்பும் குரலையுடைய சொற்களையுடையவரும், வலிய முருக்கமலர் போன்ற வலிய சிவந்த வாயினை உடையவரும், மலை போன்ற தோற்றத்தையுடையவரும், காண்பவர் அஞ்சத்தக்க சட்டை அணிந்தவருமான மெய்க்காப்பாளர்கள், இராவணனைச் சுற்றிச் சூழ்ந்துகொண்டு இருக்கவும் - பாடல் தொடர்கிறது.

Koviloor Digital Library

முன்பாடலில் கூறிய 'நஞ்சும் அஞ்சும் விழி' வேறு; இங்கே கூறப்பட்டிருக்கும் 'நஞ்சு கக்கி எரி கண்ணினர்' வேறு. வேறுபாடு தெள்ளெனத் தெரிதல் காண்க. முன்பாடலில் கூறிய 'செவ்வாய்' வேறு; இப்பாடலில் கூறப்பட்ட 'வல்வாய்' வேறு என்பதையும் உணர்க. இராவணனின் மெய்க் காப்பாளர்களின் தோற்றம் கூறப்பட்டது. 'கஞ்சுகி மெய்க்காப்பாளன்' என்பது சூடாமணி நிகண்டு. அரக்கர்கள் மேனி கருப்பு என்றாலும், வாய் மட்டும் சிவப்பு என்ற நயம் உணர்க.

15. கூய் உரைப்ப குலமால் வரையேனும்,
சாய் உரைப்ப அரியவாய தடந்தோள்
வாய் உரைத்த கலவைக் களிவாசம்
வேய் உரைப்பது என, வந்து விளம்ப. (6957)

(கூய்உரைத்தல்-தெளிவாகச் சொல்லுதல்; வரை-மலை; சாய்-ஒப்புமை/சாயல்; தடம்-பெரிய; களி-சாந்து; வாசம்-மணம்; வேய்-ஒற்று; விளம்புதல்-கூறுதல்; குலம்-கூட்டம்/சிறந்த; கூய்-கூவி; உரைத்த-பூசப் பெற்றுள்ள) (குளகப்பாடல்)

எல்லோருக்கும் தெரியும்வண்ணம் தெளிவாக உள்ள எட்டுத்திக்கு பெரிய மலைகள்கூட உவமையாகக்கூறுவதற்கு அரியதானபெரிய அகன்ற தோள்களிடத்துப் பூசப்பெற்றுள்ள கலவைச் சாந்துப்பூச்சின் நறுமணமே, இராவணன் வருகிறான் என்பதை, ஒற்றர்கள் முன்வந்து கூறுவதைப் போல, காற்றில் கலந்து வந்து கூறவும் - பாடல் தொடர்கிறது.

'கூய்' என்பது கூவி என்று, தெளிவாக யாவரும் உணரும் வண்ணம் அறிவித்தல் என்ற பொருளில் கையாளப்பட்டிருக்கிறது. 'யானைவரும் பின்னே; மணியோசை வரும் முன்னே'; என்பதுபோல, இராவணன் வருவான் பின்னே, சந்தன நறுமணம் வரும் முன்னே என்றார் எனக்கொள்க. 'வேய்' என்ற சொல் ஒற்றனைக் குறிக்கும்.

16. வேத்திரத்தர், எரிவீசி விழிக்கும்
நேத்திரத்தர், இறை நின்றுழி நில்லாக்
காத்திரத்தர், மனை காவல் விரும்பும்
சூத்திரத்தர், பதினாயிரர் சுற்ற; (6958)

(வேத்திரம்-பிரம்பு; எரி-நெருப்பு; நேத்திரம்-கண்கள்; இறை-சிறிது; உழி-இடம்; காத்திரம்-உடம்பு/கால்கள்; மனை-அரண்மனை; சூத்திரம்-சூட்சுமத்தன்மை/உபாயம்/நுட்பம்) (குளகப்பாடல்)

கைகளில் பிரம்பினை உடையவரும், தீப்பொறி பறப்பதுபோல் கொதிக்கும் பார்வைகொண்ட கண்களையுடையவரும், சற்றும் நின்ற இடத்திலேயே நில்லாது, இடைவிடாது உலாவிக்கொண்டே இருக்கும் உடம்பு, கால்களை உடையவரும், அரண்மனையைக் காவல்புரிய

Koviloor Digital Library

விரும்பி, அதன் நுட்பங்களை நன்கு அறிந்தவருமான, பதினாயிரக் கணக்கான சேவகர்கள் இராவணனைச் சுற்றிக்கொண்டே இருக்கவும் - பாடல்தொடர்கிறது.

'காத்திரம்' என்ற சொல் முன்னங்கால்களைக் குறித்து, இங்கே உடம்பையும் குறித்தது என்க. 'சூத்திரம்' என்பது திட்பநுட்பம் அமைந்த நூற்பா எனச் சிறந்த பொருள்படும்.

17. இராவணன் இராமபிரானைப் பார்த்தல்

தோரணத்த மணிவாயில் மிசை, சூல்
நீர் அணைத்த முகில் ஆம் என நின்றான்,
ஆரணத்தை, அரியை, மறை தேடும்
காரணத்தை, நிமிர் கண்கொடு கண்டான். (6959)

(மணி-அழகிய; மிசை-மீது; முகில்-மேகம்; ஆரணம்-வேதப்பொருள்; மறை-வேதங்கள்; காரணம்-மூலப்பொருள்; தேடுதல்-நாடுதல்; கொடு-கொண்டு; சூல்-கரு)

தோரணங்கள் கட்டப்பட்டு, நவரத்தினங்கள் பதிக்கப்பெற்ற அழகிய கோபுரத்தின் உச்சியின்மீது, நீரையே கருவாகக் கொண்டு சூல் நிறைந்த கரியமேகம் போன்று நிற்பவனான இராவணன், வேதத்தின் உட்பொருளானவனும், திருமால் அவதாரம் கொண்டு அரி என்று அழைக்கப்படுபவனும், வேதங்கள் எல்லாம் இன்னும் தேடிக் கொண்டிருக்கும் மூலாதாரப் பொருளானவனுமாகிய இராம பிரானை, தனது ஆணவத்தால் நிமிர்ந்தோங்கிய கண்களால் பார்த்தான்.

இராவணனின் கரிய தோற்றம், 'சூல் நீர் அணைத்த முகில்' எனப்பட்டது. 'சூல் நீரணைத்த முகில்' இராவணனுக்கு உவமை. 'நிமிர் கண்' என்பது ஆணவத்தால் நிமிர்ந்து நோக்கிய தன்மையை உணர்த்தியது. 'கண்டான்' என்று கூறுவதே போதுமானதாயிருக்க, கண்கொடு கண்டான் என்பது, இராவணன், இராமனைக் காண்பதற்கு அந்த இருபது கண்கள் பேறுபெற்றன என்பதைக் குறிக்க என்க. இராவணன் இப்போதுதான் முதன் முதலாக இராமபிரானைக் காண்கிறான் என்பதும் நினைவிற் கொள்ளத்தக்கது.

18. இராவணன் வெகுளி மெய்ப்பாடு

மடித்த வாயினன்; வழங்கு எரி வந்து
பொடித்து இழிந்த விழியன்; அது போழ்தின்,
இடித்த வன்திசை; எரிந்தது நெஞ்சம்;
துடித்த, கண்ணினோடு இடத் திரள் தோள்கள். (6960)

Koviloor Digital Library

(வழங்கு-விளங்குகின்ற; எரி-கோபத்தீ; வந்து-தோன்றி; இழிதல்-வெளிப்படுதல்; வன்-வலிய; இடி-பேரொலி)

இராவணன் இராமபிரானைக் கண்டதும், உதட்டினைக் கவ்வி வாயை மடித்துக் கொண்டவனானான். சினத்தால் ஒளிர்கின்ற நெருப்புப்பொறி தோன்றிப் பொடிப்பொடியாய் வெளிப்பட்டுக் காட்டும் விழிகளை உடையவனானான். அந்தச் சமயத்தில் இவனுடைய பெருங்கோபம் கண்டு, வலிய திசைகள் எல்லாம் இடிமுழக்கம் செய்தன. அவனுடைய நெஞ்சம் பற்றி எரிந்தது. அவனுடைய இடதுபக்கக் கண்களோடு திரட்சி மிகுந்த தோள்களும் துடித்தன.

இராவணனின் உடலில் தோன்றிய வெகுளியின் மெய்ப்பாடுகள் கூறப்பட்டன. ஆடவர்க்கு இடதுகண், தோள், புருவம், நெற்றி இவை துடித்தல் தீய அறிகுறியாம்.

19. ஆக, இராகவனை அவ்வழி கண்டான்;
மாக ராக நிறை வாள் ஒளியோனை
ஏக ராசியினின் எய்த எதிர்க்கும்
வேக ராகு என, வெம்பி வெகுண்டான். (6961)

(அவ்வழி-அப்போது; மாகம்-ஆகாயம்; ஒளியோன்-சூரியன்; வெம்பி-புழுங்கி; வெகுள்தல்-சினத்தல்; ஏகராசி-அமாவாசை; ராகம்-செந்நிறம்)

இவ்வாறாக தீ நிமித்தம் ஏற்பட்டபொழுது, இராவணன் இராமபிரானைக் கண்டான். கண்டதும் ஆகாயத்தில் மிகுந்த சிவந்த ஒளிவீசும் சூரியனை, ஒரு அமாவாசை நாளில், நேருக்குநேர் நெருங்கிச் செல்லும் வேகம் மிக்க ராகு என்னும் ஒரு கிரகத்தைப் போல, மனம் புழுங்கி சினம் கொண்டு சீறினான்.

'ராகம்' என்பது சிவந்த நிறத்தைக் குறிக்கும். 'வாள் ஒளியோன்' என்பது ஒளிமிக்க சூரியனைக் குறிக்கும். 'ஏகராசி' என்பது சூரியனும் சந்திரனும் ஒரேராசியில் சஞ்சரிக்கும் நாளைக் குறிக்கும். அதுதான் அமாவாசை எனப்படுகிறது. இராவணனை இராகு என்ற கிரகத்திற்கும், இராமபிரானை சூரியனுக்கும் உவமிக்கிறான் கவிஞன் என்பதை அறிக. இராகு என்னும் கிரகம் ஒவ்வொரு முறையும் சூரியனை மறைக்கமுயலும், ஆனால் முழுக்க மறைக்க முடியாது தோற்றுத் திரும்பும். அதுபோலவே இராவணனும் இராமபிரானை எதிர்க்கத் துணிவான். ஆனால் தோற்றுத் திரும்புவான் என்பது உட்பொருள். 'இந்துவோடு இரவி கூட்டம் அமாவாசை என்ப' என்பது சூடாமணி. 'ஒருபுடை பாம்பு கொளினும் ஒருபுடை அங்கண் மாஞாலம் விளக்குறூஉம் திங்கள்' என்பது நாலடியார் *148.*

Koviloor Digital Library

20. இராமபிரானை தானே கண்டுகொண்ட இராவணன், ஏனையோர் பற்றிச் சாரனிடம் வினவுதல்.

"ஏனையோன் இவன் இராமன் எனத் தன்
மேனியே உரை செய்கின்றது; வேறுஇச்
சேனை வீரர் படையைத் தெரி" என்று
தான் வினாவ, எதிர், சாரன் விளம்பும். (6962)

(ஏனையோன்-வேறுபட்டுக் காணப்படுபவன்)

"மற்றவர்களைவிடத் தோற்றத்தில் வேறுபட்டு நிற்பவன்தான் இராமன் என்பதை அவனுடைய மேனி வண்ணமே கண்டு தெரிய வைக்கின்றது. எனவே அவனைப் பற்றிக் கூறுவதை விட்டுவிட்டு அந்தச் சேனையில் உள்ள படைவீரர்களைப் பற்றியும் படையின் வலிமை பற்றியும் தெரிவிப்பாயாக!" என்று இராவணன் அருகிலிருந்த ஒற்றனான சாரனை வினவ, சாரன் அதற்கு மறுமொழியாகப் பின்வருவனவற்றைக் கூறலானான்.

சாரன் என்பவனே சாரணன் என்றும் வழங்கப்படுகிறான். இராமபிரான் தெய்வீக ஒளி பெற்றவன் என்பது முன்னரும் கூறப்பட்டது. எனவே இராமபிரான் யார் என்பதை அறிந்துகொள்ள இராவணனுக்குத் தேவை இருக்கவில்லை. அவனைத் தானே தெரிந்துகொண்டான் என்பதாம். 'கண்டவர் தம்மனம் வழங்கும் கண்ணபுரத்து அம்மானை' என்பது பெரிய திருமொழி. திருமங்கையாழ்வார் திருப்பாசுரம். இங்கே இராமன் என்ற பெயர்க்குரிய பொருளான தன்னைக் காண்பவர்களைத் தன்பால் ஈடுபடச் செய்பவன், ரமிக்கச் செய்பவன் என்பதையும் நினைவிற்கொள்ளல் தகும். முதன்முதலில் அனுமன் இராமபிரானைக் கண்டபோதும், வீடணன் இராமபிரானைக் கண்டபோதும் கவிஞன் கூறிய கூற்றையும், இப்போது இராவணன் காணுகின்ற போது அவனுக்குள் ஏற்பட்ட மெய்ப்பாடு களைக் கவிஞன் கூறுவதையும் ஒப்பிட்டு நோக்குக.

21. சாரன் மறுமொழி – இலக்குவன் பற்றிக் கூறுதல் [14 பாடல்கள்]

"இங்கு இவன், "படை இலங்கையர் மன்னன்
தங்கை" என்றலும், முதிர்ந்த சலத்தால்
அங்கை வாள்கொடு அவள் ஆகம் விளங்கும்
கொங்கை, நாசி, செவி, கொய்து குறைத்தான்" (6963)

(முதிர்ந்த-முற்றிய/பொங்கிய; சலம்-கோபம்/தணியாச்சினம்; அம்-அழகிய; ஆகம்-மார்பு; கொங்கை-தனங்கள்; கொய்தல்-அறுத்தல்; குறைத்தல்-இழக்கச்செய்தல்)

Koviloor Digital Library

சாரன் இலக்குவனைச் சுட்டிக்காட்டி, ''இதோ இங்கே நிற்கும் இவன் தான், படைவலிமை மிக்க இலங்கையின் வேந்தனான இராவணனின் தங்கையான சூர்ப்பணகை என்று சொல்லக் கேட்டவுடனே, பொங்கி யெழுந்த தணியாக் கோபத்தால், தன் அழகிய கைகளில் ஏந்தியிருந்த வாட்படையைக் கொண்டு, அவள் மார்பில் ஒளிர்ந்து விளங்கிய தனங்களையும், மூக்கு, செவிகளையும் அறுத்துக் கீழே வீழ்த்தி, உடல் உறுப்புக்கள் இழந்தவளாகச் செய்த இலக்குவன் ஆவான்'' என்கிறான்.

'முதிர்ந்த சலம்' என்பது தணியாச்சினம், ஆறாக் கோபத்தைக் குறித்தது. வான்மீகம் இலக்குவன் சூர்ப்பணகையின் மூக்கையும் காதுகளையும் மட்டுமே வெட்டி வீழ்த்தியதாகக் கூறுகிறது. அத்யாத்ம ராமாயணமும், கூர்மபுராணமும்கூட அவ்வாறே கூறுகின்றன. எனினும் உதடுகளையும் அரிந்ததாக மகாபாரதம் கூறுகிறது. இவ்வாறே கம்பனின் ஆராண்ய காண்டப் பாடலும் தெரிவிப்பதையும் நினைவிற் கொள்ளலாம்.

22. "அறக்கண் அல்லது ஒரு கண் இலன் ஆகி,
நிறக் கருங் கடலுள் நேமியின் நின்று,
துறக்கம் எய்தியவரும் துறவாத
உறக்கம் என்பதனை ஓட முனிந்தான்" (6964)

(அறம்-தருமம்; நேமி-சக்கரம்/சக்கரவாளகிரி; துறக்கம்-சுவர்க்கம்; துறத்தல்-விட்டுவிடுதல்; முனிதல்-கோபித்தல்)

''தருமமே தன் ஒரு கண்ணாகவும், அதனைத்தவிர வேறுஒரு அறநெறி யல்லாத நெறியைப் பின்பற்றாதவனாகிய இந்த இலக்குவன், கரியநிறம் வாய்ந்த கடலைச் சுற்றிப் பூமிக்குப் பாதுகாப்பாக விளங்கும் சக்கரவாள கிரியைப்போல, இராமபிரானுடன் உடனேயே இடைவிடாது நின்று, சுவர்க்கம் அடைந்தவர்கள்கூட விட்டுவிடமுடியாத உறக்கம் என்ப தனைத்தன்னிடமிருந்து வெகுண்டு ஓடும்படி விரட்டி, அதனைச்சீறியவன் ஆவான்'' என்று இலக்குவன் பற்றிக் கூறுகிறான் சாரன்.

தருமநெறி தவிர வேறுஒரு நெறியறியாதான் என்பதனை ''அறக்கண் அல்லது ஒரு கண்இலன் ஆகி'' என்றார் என்க. 'நேமி' என்ற சொல் பூமி என்ற பொருளையும் தரும். தூக்கம் யாராலும் துறக்க முடியாதது, எவராலும் தூங்காமல் இருக்கவே முடியாது என்பதனை ''துறக்கம் எய்தியவரும் துறவாத உறக்கம்'' என்று உறக்கத்தின் இன்றியாமையைப் புலப்படுத்தி, அதனைத் தவிர்த்து வாழ்ந்திருந்த இலக்குவனின் மனத் திண்மையை சாரன் மூலமாகக் கவிஞன் கூறுவது நோக்கத்தக்கது. இலக்குவன் 'உறங்கா வில்லி' என்றும் கூறுவதுண்டு. சக்கரவாளகிரிக்கு இலக்குவன் ஒப்பு. துறக்கம் என்பது ''புண்ணியமில்லார் புகுதற்கரியது'' என்பது சூளாமணி. இலக்குவன் கண் துயிலாமை பற்றிக் காப்பியத்தில் பல இடங்களிலும் பேசப்பட்டிருப்பதை நினைவுகூர்க. ''மனையின்

Koviloor Digital Library

வாழ்வும், உறக்கமும் மாற்றினான்'' என்று பின்னரும் கூறப்போகிறான் கவிஞன்.

23. சாரன் மறுமொழி – சுக்கிரீவன் பற்றிக் கூறுதல்

''கை அவன் தொட அமைந்த கரத்தான்,
ஐய! வாலியொடு இவ்வண்டம் நடுங்கச்
செய்த வன்செருவினின் திகழ்கின்றான்,
வெய்யவன் புதல்வன், யாரினும் வெய்யான். (6965)

(தொட-பிடித்துக்கொள்ள; அண்டம்-உலகம்; வன்செரு-கொடிய போர்; வெய்யவன்-சூரியன்; வெம்மை-கொடுமைத்தன்மை)

''தலைவனே! இந்தச் சுக்கிரீவன், இராமபிரான் தன் கைகளோடு நட்புக் கொண்ட கரங்களை உடையவனாவான். வாலியோடு இவ்வுலகம் எல்லா வற்றையும் நடுங்கச்செய்தவன்; தான் செய்யும் கொடியபோரினில் விளக்கமுற்றுத் திகழ்பவன், அவன்தான் அதோ நிற்கின்ற சுக்கிரீவன்; அவன் சூரியனின் புதல்வன், எல்லோரைக் காட்டிலும் கொடியவன்'' என்று சுக்கிரீவனைக் காட்டி இராவணனுக்குச் சாரன் கூறினான்.

இராமபிரானும் சுக்கிரீவனும் கிட்கிந்தையில் அக்னி சாட்சியாக நட்புறவு கொண்டனர் என்றும், எனவே இலக்குவன் சுக்கிரீவனுடன் உடன்பிறப்பு என்ற முறைகொண்டு கை கோத்துக் கொண்டு காரியம் ஆற்றியவன் என்றும் தெரிவிக்கக் கவிஞன் 'கைஅவன் தொட அமைந்த கரத்தான்' என்றார் என்க. 'திகழ்ந்தான்' என்பது திகழ்கின்றான் எனப் பட்டது. காலவழுவமைதியாகக் கொள்ள வேண்டும். வெய்யான் என்ற சொல் 'வெம்மை' என்ற உரிச்சொல்லின் அடியாகப் பிறந்து கொடியவன் என்ற பொருளைத் தந்து நின்றது. 'கைஅவன் தொட அமைந்த கரத்தான்' என்பதற்குச் சுக்கிரீவன் இராமபிரானுடன் நட்புறவு கொள்ளப் பேறு பெற்றவன் என்ற பொருளைத் தருவதையும் உணர்க.

24. சாரன் மறுமொழி – அங்கதன் பற்றிக்கூறுதல்

''தந்தை மற்றையவன் சார்வுஇல் வலத்தோர்
அந்தரத்தர் அமுது ஆர்கலி காண,
மந்தரத்தினொடும் வாசுகியோடும்,
சுந்தரப் பெரிய தோள்கள் திரித்தான்'' (6966)

(மற்றையவன்-எதிரி; அந்தரம்-தேவலோகம்; ஆர்கலி-கடல்; சுந்தரம்-அழகு; திரித்தல்-கடைதல்; இல்-இடமாக்கிக் கொள்ளுதல்; சார்வு-கூட்டு)

''அவனுக்குப் பக்கத்தில் நிற்பவன் அங்கதன் ஆவான். அவனுடைய தந்தையான வாலி எவருடைய கூட்டையும் வேண்டாது தனி

Koviloor Digital Library

ஒருவனாகவே போர்செய்து வெற்றிபெறும் வலிமை கொண்டவன். தேவலோகத்திலுள்ள தேவர்கள் அமிழ்தம் வேண்டிப் பாற்கடலைக் கடைய முயன்று தளர்ந்துபோனபோது, இந்த வாலிதான் மந்தரமலையை மத்தாக நட்டு, வாசுகி என்னும் பாம்பைக் கடைகயிறாகக் கொண்டு தனது அழகிய அகன்ற தோள்களினால் பாற்கடலைக் கடைந்தவன் ஆவான்'' என்று அங்கதனைப் பற்றிக் கூறுகிறான் சாரன்.

தந்தையைப் பற்றிக் கூறித் தனையனை அறிமுகப்படுத்துதல் முன்பும் கவிஞனால் காப்பியத்தில் கையாண்டமுறையே என்பதையும் கருதுக.

25. சாரன் மறுமொழி – அனுமன் பற்றிக் கூறுதல்

''நடந்து நின்றவன், நகும் கதிர் முன்பு,
தொடர்ந்தவன்; உலகு, சுற்றும் எயிற்றின்
இடந்து எழுந்தவனை ஒத்தவன்; வேலை
கடந்தவன் சரிதை கண்டனை அன்றே!'' (6967)

(கதிர்-சூரியன்; சுற்றுதல்-நெருங்குதல்/சுழற்றுதல்; எயிறு-பற்கள்; இடந்து-பெயர்த்தெடுத்து; வேலை-கடல்; சரிதை-செயல்/வரலாறு; நகுதல்-விளங்குதல்/ஒளிர்தல்; நடந்துநிற்றல்-உலாவுதல்)

''அதோ அங்கே நடந்து கொண்டிருக்கிறானே; அவன்தான் ஒளிர்கின்ற சூரியனின் முன்பு தொடர்ந்து சென்று பலகலைகளையும் கற்ற அனுமன் ஆவான்; பூமியைத் தன் வளைந்த கோரப்பற்களால் கவ்விக்கொண்டு கடலினின்றும் பெயர்த்தெடுத்துக் கொண்டுவந்தவனான வராக அவதாரம் கொண்ட திருமாலை நிகர்த்தவன்; அவன்தான் கடலைத்தாண்டி இலங்கைக்கு வந்தவன். அவனுடைய செயல் நீ அறிந்தது தானே?'' என்கிறான் சாரன்.

அனுமன் இளமைப் பருவத்தில் சூரியனைச் சிவந்த பழம் எனக்கருதி அதனைப் பிடிப்பதற்காகப் பாய்ந்து சென்றவன் என்ற பொருளையும், ''நகும் கதிர் முன்பு தொடர்ந்தவன்'' என்ற சொற்றொடர் உணர்த்துவதும் அறிக. ''உலகு சுற்றும் எயிற்றின் இடந்து எழுந்தவன்'' என்பது திருமாலின் வராக அவதாரத்தைக் குறித்தது. அனுமனுக்குத் திருமால் உவமை. அனுமன் வரலாற்றில் ஓரிரு நிகழ்ச்சிகளைச் சொல்லி மற்றவையெல்லாம் நீ அறிந்ததுதானே என்ற ஒற்றனின் சொற்றிறம் நோக்குக. 'நடந்து நிற்றல்' என்பது இங்கும் அங்கும் சுறுசுறுப்பாகச் செயலில் ஈடுபட்டு இருப்பதைக் குறிக்கும். 'காதல் நான்முகனாலும் கணிப்பரிய கலையனைத்தும் கதிரோன் முன்சென்று ஓதினான்' என்று முன்பு கூறப்பட்டது நினைக.

Koviloor Digital Library

26. சாரன் மறுமொழி – நீலன் பற்றிக் கூறுதல்

''நீலன் நின்றவன்; நெருப்பின் மகன்; திண்
சூலமும் கயிறும் இன்மை துணிந்தும்,
ஆலம் உண்டவன் அடுந்திறல் மிக்கான்;
'காலன்' என்பர், இவனைக் கருதாதார்'' (6968)

(கருதாதார்-பகைவர்கள்; இன்மை-இல்லாமை; துணிதல்-தெளிவாக அறிதல்; அடுதல்-அழித்தல்; திறல்-வலிமை; மிகுதல்-மேம்படுதல்; ஆலம்-நஞ்சு; காலன்-இயமன்; திண்-உறுதியான)

''இதோ நிற்கிறானே இவன் பெயர் நீலன் என்பதாகும். இவன் அக்னி தேவனின் மகன், உறுதியான முத்தலைச்சூலம் என்ற படைக்கலனும், பாசம் என்னும் கயிறும் இவனிடம் இல்லை என்பதை நன்கு உணர்ந்திருந்தும், இவனுடைய பகைவர்கள் இவனை ஆலகால விஷத்தை உண்டவனாகிய சிவபெருமான் என்றும், இறுதிக்காலத்தில் உயிர்களைக் கொல்லும் பேராற்றலில் மேம்பட்டவன் என்றும், இயமன் என்றும் கருதி அஞ்சுவார்கள்'' என்கிறான் சாரன்.

''திண்சூலம், ஆலம் உண்டவனின் படைக்கலம்; கயிறு காலனின் படைக்கலன்'' இதை நிரல் நிறையாகக் கொள்ளவேண்டும். நீலன் அழித்தல் கடவுளாகிய சிவபெருமானைக் காட்டிலும், அழிக்கும் தொழிலையுடைய இயமனைக் காட்டிலும் ஆற்றலில் மேம்பட்டவன் என்று சாரன் நீலனை இராவணனுக்கு அறிமுகப்படுத்துகிறான் என்பதாம். உயிர்களைக் காலம் அறிந்து கவர்பவன் என்பதால் காலன் என்பது இயமனுக்குக் காரணப்பெயர். சிவபெருமான் சூலப்படையுடையவன் என்பது ''சூலப்படையானைச் சொன்ன தமிழ்மாலை'' என்ற தேவாரப் பதிகத்தால் அறியலாம்.

27. சாரன் மறுமொழி – நளன் பற்றிக் கூறுதல்

''வேறாக நின்றான், நளன் என்னும் விலங்கல் அன்னான்;
ஏறா வருணன் வழி தந்திலன் என்று, இராமன்
சீறாத உள்ளத்து எழு சீற்றம் உகுத்த செந்தீ
ஆறாத முன்னம், அகன் வேலையை ஆறு செய்தான்'' (6969)

(வேறாக-தனியாக; விலங்கல்-மலை; ஏறா-ஏறி/வெளிவந்து; சீறுதல்-கோபம்கொள்ளுதல்; ஆறுதல்-அடங்குதல்; அகன்-அகன்ற; வேலை-கடல்; ஆறு-வழி; செய்தல்-உண்டாக்குதல்; உகுத்த-வெளியிட்ட)

''இதோ இங்கே தனியாக நின்று கொண்டிருக்கிறானே இவன்தான் நளன் என்பவன். தோற்றத்தில் மலை போன்றவன், சினம் என்பதே தோன்றாத உள்ளத்தை உடைய இராமபிரான் வருணனை வழிவேண்டிய

Koviloor Digital Library

போது, தன் அகந்தையால் வருணன் தான் வாழும் கடலைவிட்டு வெளிவராது வழிதரத் தாழ்த்தியபோது, இராமபிரான் கொண்ட சீற்றம் என்ற சிவந்த நெருப்பு அணைந்து போவதற்கு முன்பே, அகன்று பரந்த கடலுக்கு அணைகட்டி வழிசெய்து கொடுத்தவன்'' என்று சாரன் இராவணனுக்கு நளனைக் காட்டினான்.

நளனுடைய உள்ளப்பண்பும், உடல் தோற்றமும் ''வேறாக நின்றான்'' என்றும் ''விலங்கல் அன்னான்'' என்றும் சிறப்பிக்கப்பட்டது. வருணன் கர்வம் மிக்கவன் என்பதை, ''ஏறாவருணன்'' என்றார். இராமபிரான் ஏழுநாள் தவமிருந்தும் அதைக் கண்டுகொள்ளாது, அவனுடைய வேண்டு கோளைச் செவியில் ஏற்காத அகந்தை மிக்கவன் என்று வருணனைச் சாடுகிறான் கவிஞன். எப்படி அரக்கர்கள் எல்லாம் ''இரக்கம் என்ற ஒரு பொருளே இல்லாத இயல்பினர்'' என்றாரோ, அதைப்போல இராமபிரானை ''சீறாத உள்ளத்து எழும் சீற்றம் உகுத்தவன்'' என்று இராமபிரானின் சாந்த குணத்தையும், சீறினால் அது உடனே தணியும் என்பதையும் விளக்கினார் என்க. 'குணம் என்னும் குன்றேறி நின்றார் வெகுளி கணமேயும் காத்தல் அரிது' என்ற குறள்-29, இங்கு ஒப்புநோக்கத் தகும். 'அகன் வேலையை ஆறுசெய்தான்' என்பது நளனின் தொழி லாற்றலைக் குறித்தது. ஆறு என்ற சொல் நதி என்ற பொருளிலும் வழி என்ற பொருளிலும் கையாளப்பட்ட சிலேடைச் சொல் என்பது உணர்க. இராமனின் சீற்றம் ஆறும்படி செய்தான் என்பது சிறப்புப்பொருள். செயற்கரிய செயலைச் செய்தவன் நளன் என்பது குறிப்பு. ''சீறாத உள்ளத்து எழும் சீற்றம்'' என்ற சொற்றொடர், முன்பு அயோத்தியா காண்டத்தில், நகர்நீங்கு படலத்தில் இலக்குவன் பற்றிக் கவிஞன் குறிப்பிட்ட ''மூட்டாத காலக் கடைத்தீ'' என்ற கூற்றினை நினைவு படுத்துவதை உணர்க. நளன் 'தெய்வத்தச்சன் மெய்த்திரு நெடுங்காதலன்' என்பது கிட்கிந்தா காண்டம். இவன் எந்தப் பொருளைத் தண்ணீரில் போட்டாலும் அது மிதக்கும்படி வரம்பெற்றவன் என்பது இங்கு அறியப்பட வேண்டிய செவிவழிச் செய்தி.

28. சாரன் மறுமொழி – சாம்பவன் பற்றிக் கூறுதல்

''முக்காலமும் மொய்ம்மதியால் முறையின் உணர்வான்,
புக்கு ஆலம்எழப் புணரிப் புலவோர் கலக்கும்
அக்காலம் உள்ளான், கரடிக்கு அரசுஆகி நின்றான்,
இக்காலம் நின்றும் உலகு ஏழும் எடுக்கவல்லான்'' (6970)

(மொய்-நிறைந்த/பூரணமான; மதி-அறிவு; ஆலம்-நஞ்சு; புணரி-கடல்; புலவோர்-தேவர்கள்; கலக்குதல்-கடைதல்; முறை-நெறி; நின்றும்-வாழ்ந்திருந்தும்)

Koviloor Digital Library

''அதோ அங்கே நிற்பவன் இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்ற மூன்றுகால நிகழ்ச்சிகளையும் தனது நிறைந்த அறிவால் முறையாக உணர்ந்து கொள்ளும் திரிகாலஞானி. தேவர்கள் நஞ்சு எழும்படி பாற்கடலின் உட்புகுந்து அதைக் கடைந்த காலத்திருந்தே உயிர்வாழ்ந்து கொண்டிருக்கும் மிக முதியவன். கரடிக்கூட்டத்திற்குத் தலைவனாவான்; இவ்வளவு நீண்ட காலம் வாழ்ந்திருந்தும், இப்போதும், ஏழு உலகங்களையும் தனி ஒருவனாகவே பெயர்த்தெடுக்கும் உடலாற்றல் பெற்றவன் ஆவான்'' என்று சாம்பவனை அறிமுகம் செய்து வைக்கிறான் சாரன்.

'மொய்ம்மதி' என்பது நிறைந்த அறிவு என்று ஞானத்தைக் குறிக்கும். சாம்பவன் திரிகாலஞானி; முதியவன்; கரடிகளுக்குத் தலைவன்; இப்போதும் உலகு ஏழையும் எடுக்கும் ஆற்றல் மிக்கவன் என்று அவன் அறிவு, உடல், உள்ளம் முதலிவற்றின் ஆற்றல் பற்றியும், தலைமைப் பண்பு பற்றியும் எடுத்துரைத்தான் என்பதாம். பலயுகங்களாக வாழ்ந்து கொண்டிருப்பவன் என்று அவன் வயது முதிர்ச்சி பற்றிப் பேசப்பட்டது. காப்பியத்தில் வயது முதிர்ந்தவர்களாகக் கூறப்படுபவர்கள் மாலியவான், சடாயு, சாம்பவன், சபரி முதலியோர் என்க. முக்காலமும் உணர்ந்து கூறும் பண்பை 'அறிவன் வாகை' என்பர் சான்றோர். இவனே பாற்கடலைக் கடைந்த நிகழ்ச்சியை உலகுக்குப் பறையறிவித்துத் தெரிவித்தவன் என்றும், அவ்வாறு அறிவித்துத் திரும்பி வரும்போது மலையில் அவன் கால் பட்டதால் சற்று கால் ஊனமானவன் என்றும் பிறிதோரிடத்தில் கம்பன் கூறியதும் இங்கு நினைவு கொள்ளல் தகும்.

29. சாரன் மறுமொழி – மற்றவர்கள் பற்றிக் கூறுதல்

"சேனாபதி தன் அயலே, இருள் செய்த குன்றின்
ஆனா மருங்கே, இரண்டு ஆடகக் குன்றின் நின்றார்,
ஏனோரில் இராமன் இலக்குவன் என்னும் ஈட்டார்,
வானோர்தம் மருத்துவர் மைந்தர்; வலிக்கண் மிக்கார்" (6971)

(இருள்-கருநிறம்; ஆடகம்-பொன்; மருங்கு-பக்கம்; ஏனோர்-மற்றவர்கள்; ஈடு-வலிமை; மருத்துவர்-வைத்தியர்/அசுவினித்தேவர்; மிகுதல்-மேம்படுதல்; ஆனா-நீங்காத)

''கரிய நிறம் கொண்ட குன்றுபோல் நிற்கும் சேனாதிபதியாகிய நீலனின் அருகில் நீங்காது நிற்கும் இரண்டு பொற்குன்றுகள் போல் நிற்பவர்கள், சேனையின் மற்றவர்களானவர்களில், இராமபிரான், இலக்குவன் போன்ற வலிமை உடையவர்கள்; இவர்கள் தேவர்களுக்கு மருத்துவர்களான அசுவினித்தேவர்களின் புதல்வர்களாவார்கள். வலிமையில் மேம்பட்டவர்கள்'' என்று அவ்விருவரையும் அறிவிக்கிறான் சாரன்.

நீலன் கரியநிறத்தவன்; அருகில் நிற்கும் இருவரும் பொன்நிறத்தவர், இந்தத் தோற்றம் நீலமலையின் அருகில் இருபொற்குன்றம் நிற்பதுபோல

Koviloor Digital Library

இருக்கிறது என்கிறான் கவிஞன் 'ஆடகம்' என்பது நால்வகைப் பொன்களுள் ஒன்று. இவ்வானரவீரர்கள் மயிந்தன், துமிந்தன் என்பது முன்னரே கூறப்பட்டது.

30 "உவன்காண் குமுதன்; குமுதாக்கனும் ஊங்கு அவன்காண்;
இவன்காண் கவயன்; கவயாக்கனும் ஈங்கு இவன்காண்;
சிவன்காண் அயன்காண் எனும் தூதனைப் பெற்ற செல்வன்
அவன்காண், நெடுங் கேசரி என்பவன், ஆற்றல் மிக்கான்" (6972)

(உவன்-நடுவிடம்; நெடுமை-பெருமை; குமுதம்-அல்லிமலர்; கவயம்-பசு; அக்கன்-கண்களைக் கொண்டவன்; ஊங்கு-அருகில்; அயன்-பிரமன்)

''அதோ அங்கே நடுவிடத்தில் நிற்பவன் குமுதன் என்பவன்; அவன் அருகில் நிற்பவன் குமுதாக்கன்; இதோ இங்கே நிற்கிறானே இவன்தான் கவயன்; அவன் அருகில் நிற்பவன் கவயாக்கன் ஆவான். பார்ப்பவர்கள் எல்லோரும் இவன் சிவன்தானோ! பிரமன்தானே! என்று வியப்புறு கிறார்களே, அத்தகைய தூதனாகிய அனுமனைப் பெற்றவன்தான் இங்கே நிற்கின்ற பெருமைமிகுந்த கேசரி என்பவன். அவன் மிகுந்த ஆற்றல் பெற்றவன். இவர்களையெல்லாம் காண்பாயாக!'' என்கிறான் சாரன்.

குமுதம் என்ற சொல்லுக்கு அல்லிமலர் என்பது பொருள். அல்லிமலர் போன்ற ஒளிபடைத்தவன் குமுதன். குமுதாக்கன் என்பது அல்லிமலர் போன்ற ஒளிபடைத்த கண்களைப் பெற்றவன் என்பது பொருள். அக்ஷம் என்ற வடசொல் அக்கம் என்றாகி அக்கன் என்றானது. அக்ஷம்-கண். அதுபோலவே கவம் என்ற சொல் பசுவினைக் குறிக்கும். கவயன் என்பது பசுவினைப் போன்ற குணம் படைத்தவன் என்ற பொருள்தரும். கவயாக்கன் என்பது பசுவின் கண்களைப் போலக் கண்களைப் பெற்றவன் என்பதாகும். அனுமன் அஞ்சனாதேவியிடம் கேசரிக்குப் பிறந்தவன். இவன் சிவபெருமானின் கூறு என்பது முன்பே கூறப்பட்டது. அனுமன் அறிவாற்றலால் பிரமன் என்றும் பேசப்படுகிறான் என்க. இவன் இராமதூதன் எனப்பல இடங்களிலும் முன்பு பேசப்பட்டிருப்பதை நினைவுகூர்க. அனுமனின் தந்தை கேசரி.

31. முரபன், நகுதோளவன், மூரி மடங்கல் என்னக்
கர பல்நகம் அன்னவை மின் உகக் காந்துகின்றான்;
வர பல்நகம் தன்னையும் வேரோடு வேண்டின் வாங்கும்
சரபன் அவன்; இவன் சத வலிஆய தக்கோன். (6973)

(மூரி-வலிய; மடங்கல்-சிங்கம்/நரசிங்கம்; மின்உக-ஒளிவீச; காந்துதல்-கோபித்தல்; நகு-விளங்குகின்ற; வர-மேலான/சிறந்த; நகம்-

Koviloor Digital Library

மலைகள்; வாங்குதல்-பெயர்த்தெடுத்தல்; தக்கோன்-தகுதிவாய்ந்தவன்/ பெரியோன்; வேண்டின்-விரும்பினால்)

''வலிய நரசிங்கம்போலக் கைகளும், பற்களும், நகங்களும் கொண்டு, மின்னலைப்போல ஒளிவீசிச் சினத்துடன் நிற்கிறானே அவன்தான் விளங்குகின்ற பெரிய தோள்களையுடைய முரபன் என்பவன். சிறந்த பல மலைகளையும் விரும்பினால் வேரோடு பெயர்த்தெடுக்கும் ஆற்றல் உடையவன், இங்கே நிற்கும் சரபன் என்பவன். இதோ இங்கே பக்கத்தில் நிற்கிறானே இவன்தான் சதவலி என்ற பெயருடைய பேராற்றலும் தகுதியும் வாய்ந்தவன்'' என்று படைத்தலைவர்களை அறிமுகம் செய்கிறான் சாரன்.

நரசிங்கத்தின் உருவம் முரபன் தோற்றத்திற்கு ஒப்பு; பிடரிமயிர் மடங்கப் பெற்றிருப்பதால் 'மடங்கல்' என்பது சிங்கத்திற்குக் காரணப் பெயர். இப்பாடலில் திரிபு என்னும் சொல்லணி பயின்று வந்திருத்தல் காண்க. முரபன் முரன் என்றும் வழங்கப்பெறுவான் - இவன் நரகாசுரனின் சேனாபதி. திருமால் ஒருமுறை இவனை வென்றதன் பொருட்டு, திருமாலுக்கு முராரி என்ற ஒரு பெயரும் உண்டு. இவன் கோட்டையைக் காத்திருந்தபோதுதான் கிருஷ்ணாவதாரத்தில் கண்ணபிரான் இவனைக் கொன்றான் என்று மகாபாரதம் கூறுகிறது.

32. மூன்றுகண் இலன் ஆயினும், மூன்று எயில் எரித்தோன்
போன்று நின்றவன் பனசன்; இப்போர்க்கு எலாம்தானே
ஏன்று நின்றவன் இடபன்; மற்று இவன்தனக்கு எதிரே
தோன்றுகின்றவன் சுடேணன்; மூதறிவோடு தொடர்ந்தோன். (6974)

(எயில்-மதில்/புரம்; ஏன்று-ஏற்றுக்கொண்டு; மூதறிவு-பேரறிவு முதுமை+அறிவு-மூதறிவு)

''மூன்று கண்கள் பெறாவிட்டாலும்கூட, முப்புரம் எரித்த சிவ பெருமான் போன்ற வல்லமைபெற்றவன் இங்கே நிற்கின்ற பனசன் என்பவன்; இந்தப்போர் அனைத்திற்கும் தானே முன்நின்று ஏற்றுக் கொண்டு படைநடத்தி வருபவன் இந்த இடபன் என்பவன். அவனுக்கு எதிரே நிற்பவன் பேரறிவுபடைத்த சுடேணன் என்பவன் ஆவான்.

முக்கண்இல்லாமலும் முப்புரம் எரிக்கும் ஆற்றல் படைத்தவன் பனசன் என்று அவனது போராற்றல் சிறப்பிக்கப்பட்டது. போரென்று சொல்லும் போது, தானேவிரும்பி வந்து முன்னணிப்படையை நடத்திச் செல்லும் பண்புபெற்றவன் இடபன் என்று அவனது அரசவிசுவாசம் பேசப்பட்டது. போராற்றலோடு பேரறிவும் கொண்டவன் என்று சுடேணன் பாராட்டப் படுகிறான். ஒன்று நோக்கவேண்டும், எதிரிப்படையின் பெருக்கத்தையும் படைத்தலைவர்களையும் புகழ்ந்து பாராட்டியே பேசிவருகிறான் சாரன்.

Koviloor Digital Library

33. ''வெதிர்கொள் குன்றெலாம் வேரோடும் வாங்கி, மேதினியை
முதுகு நொய்து எனச் செய்தவன், கனலையும் முனிவோன்,
கதிரவன் மகற்கு இடமருங்கே நின்ற காளை,
ததிமுகன்; அவன், சங்கன் என்று உரைக்கின்ற சிங்கம்; (6975)

(கதிரவன்-சூரியன்; மருங்கு-பக்கம்; வெதிர்-மூங்கில்; வாங்கி-பெயர்த்து; மேதினி-பூமி; முதுகு-நடுவிடம்; நொய்து-பாரமற்றது/இலேசானது;

''சூரியனுடைய புதல்வனான சுக்கிரீவனுக்கு இடப்பக்கத்தில் காளை போன்று நிற்பவன்தான் ததிமுகன் என்னும் பெயருடையவன். இவன் மூங்கில்களைத் தன்னகத்தே கொண்ட மலைகளையெல்லாம் வேரோடும் பெயர்த்தெடுத்து, இந்தப் பூமியின் நடுவிடமாகிய முதுகின் பாரத்தைக் குறைத்து இலேசாக்கியவன். இவன் நெருப்பைக்கூடச் சினத்தால் சீறும் தன்மையுடையவன். அதோ அங்கே நிற்பவன்தான் சங்கன் என்று கூறப்படும் சிங்கம் போல்பவன் ஆவான்'' என்கிறான் சாரன்.

ததிமுகன் கிட்கிந்தையில் சுக்கிரீவனுக்குச் சொந்தமான மதுவனம் என்னும் சோலையைக் காவல்புரிந்து வந்தவன். அனுமன் முதலியோர் சீதாதேவியை இலங்கையில் கண்டபின்னர் அம்மகிழ்வுச் செய்தியை இராமபிரானிடமும், சுக்கிரீவனிடமும் தெரிவிப்பதற்காக வரும் பொழுது, இம் மதுவனத்தை அடைந்து அங்குள்ள மரங்களை அழித்து மது அருந்தி மகிழ்ந்திருந்தனர். 'மதுவனம்' அழிக்கப்பட்டதால், காவல் செய்பவனான ததிமுகன் இராமனுடன் இருந்த சுக்கிரீவனிடம் சொல்வதற்காக விரைந்துவந்தான். இந்நிகழ்ச்சியின் உட்பொருளை உணர்ந்துகொண்ட சுக்கிரீவன், அங்கதனிடம் சென்று மன்னிப்பு வேண்டுமாறு ததிமுகனுக்குக் கட்டளையிட்டு அனுப்பிவிட்டான். இந்தச் செய்திகள் எல்லாம், எல்லா அச்சுப்பிரதிகளிலும் காணப்படுகிறது. விரைவு கருதி இப்பகுதிப் பாடல்கள் சென்னைக் கம்பன் கழகத்தாரால் மூலபாடத்தில் சேர்க்கப்படவில்லை, எனினும் பாடல்கள் பொருள் நிறைந்தனவாகவும், சந்தம் மிகுந்தவையாகவும் அமைந்திருக்கின்றன என்பது இங்கே குறிப்பிடப்பட வேண்டும்.

இங்கு குறிப்பிட்டிருப்பவர்களைத் தவிர வான்மீகம் இன்னும் சுவேதன், ரம்பன், வினதன், கிரோதனன், பிரமாதி, தாரன், தும்மிரன், தம்பன், சன்னாதன், இரதனன், மயிந்தன், துவிதன் ஆகிய பெயர்களையும் குறிப்பிடுகிறது என்பது அறிக. மூங்கில் குறிஞ்சி நிலத்திற்குரிய கருப்பொருள். வெதிர் என்ற சொல் மூங்கில் என்ற பொருளில் இன்றும் தெலுங்கில் பேசப்பட்டு வருவதை அறிக.

Koviloor Digital Library

34. "அண்ணல்! கேள்; இதற்கு அவதியும் அளவும் ஒன்று உளதோ?
விண்ணின் மீனினைக் குணிப்பினும், வேலையுள் மீனை
எண்ணி நோக்கினும், இக்கடல் மணலினை எல்லாம்
கண்ணி நோக்கினும், கணக்கு இலது என்றனன், காட்டி" (6976)

(அண்ணல்-பெருமைமிகுந்தவன்; அவதி-எல்லை; அளவு-எண்ணிக்கை; குணித்தல்-வரையறுத்தல்/கணக்கிடுதல்; வேலை-கடல்; நோக்குதல்-பார்த்தல்; கண்ணி-கருதி; மீன்-நட்சத்திரம்)

''பெருமை வாய்ந்தவனே! நான் கூறுவதைக் கேட்பாயாக!'' என்று சாரன் இராவணனுக்கு அந்த வானரச்சேனையை மீண்டும் சுட்டிக்காட்டி ''இந்த வானரவீரர்களுக்கு ஒரு எல்லையும், எண்ணிக்கையும் என்று ஒன்று உள்ளதோ? இல்லை; வானத்திலுள்ள நட்சத்திரங்களைக் கணக்கிட்டாலும், கடலில் உள்ள மீன்களின் அளவை எண்ணிப் பார்த்தாலும், இந்த கடற்கரையில் குவிந்துள்ளமணலின் அளவை எண்ணிப் பார்க்கவேண்டும் என்றும் கருதினாலும்கூட, ஒருவேளை அவற்றைச்செய்துகூட முடித்து விடலாம். ஆனால் இந்த வானரச்சேனை எண்ணி மாளாது'' என்று கூறிமுடித்தான் சாரன்.

சேனையின் அளவை எண்ணி முடிக்க இயலாது என்பதற்கு, விண்ணிலுள்ள நட்சத்திரங்களையும், கடலிலுள்ள மீன்களையும், கடற்கரையில் உள்ள மணலினையும் உவமையாகக் கூறினார் என்க. மின்னுதல் காரணமாக நட்சத்திரங்களுக்கு விண்மீன் என்பது காரணப்பெயர் 'தொல்லை நம்பிறவி எண்ணில், தொடுகடல் மணலும் ஆற்றா எல்லைய' என்பது சீவகசிந்தாமணி.

35. **இராவணன் அப்படையினை இகழ்ந்து கூறுதல்**

சினம்கொள் திண்திறல் அரக்கனும், சிறுநகை செய்தான்;
"புனம்கொள் புன்தலைக் குரங்கினைப் புகழுதி போலாம்;
வனங்களும் படர்வரை தோறும் திருதரு மானின்
இனங்களும் பல என்செயும், அரியினை?" என்றான். (6977)

(திண்-மிக்க; சிறுநகை-புன்முறுவல்; புனம்-கொல்லை; புன்-இழிந்த/அற்பமான; வரை-மலை; இனம்-கூட்டம்; அரி-சிங்கம்)

சாரன் என்பவன் இராமனது படைப்பெருக்கத்தைப் புகழ்ந்து கூறியதை இதுவரை கேட்டுக்கொண்டிருந்த கோபம்கொண்ட, உறுதிமிக்க வலிமை படைத்த பத்துத்தலைகளையுடைய அரக்கனாகிய இராவணன், ஒரு புன்முறுவல் செய்து அவனை நோக்கி, ''கொல்லைப்பக்கத்துத் தோட்டத்தில் அலைந்து, திரிந்து, அதனையே வாழ்விடமாகக் கொண்டு வாழும், இழிந்த அற்பமான சிறிய ஒரு தலையைக் கொண்டிருக்கும் குரங்குக்கூட்டத்தைப் புகழ்ந்து பேசுகின்றாய் போலும்'' என்றுகூறி,

Koviloor Digital Library

மேலும் ''காடுகளிலும், கொடிகள் படர்ந்திருக்கும் மலைகளிலும் அலைந்து திரிகின்ற மானின் கூட்டங்கள் எல்லாம் சேர்ந்தாலும், ஒரு பெரிய சிங்கத்தை என்ன செய்து விடமுடியும்?'' என்று ஏளனமாகக் கூறினான்.

'சினம்' உளப்பாங்கு; திண்திறல் உடற்பாங்கு; சிறுநகை இங்கு எள்ளல் குறிப்பு; தனக்குப் பெரிய பத்துத்தலைகள் இருப்பதால் குரங்கைப் 'புன்தலைக்குரங்கு' என்றான் என்க. 'மல்லல் ஆளியைப் பலவளைந்து கொள்ளினும், கொல்லாயிருக்குமோ குஞ்சரங்களால்' என்பது வில்லிபாரதம். 'மான்நிற்குமோ அரிவாளரிவேங்கை முன்?' என்பது ஒரு தனிப்பாடல். 'மன்னு செங்கதிரோன், தன்னை மயங்கு இருள் குழாம் என் செய்யும்?' என்பது குசேலோபாக்கியானம். 'மறப்புலி உடலின் மான்கணம் உளவோ?' என்பது புறநானூறு. 'எலிப்பகை நாகம் உயிர்ப்பக் கெடுவது' என்பது குறள்-763.

இராவணன் வானரத் தானைகாண் படலம் நிறைவுற்றது

Koviloor Digital Library

11. மகுடபங்கப் படலம் [51 பாடல்கள்]

மகுடம்-முடி; பங்கம்-இழிவு அல்லது அவமானம். சுவேல மலையின் மீது இராமபிரானுடன் நின்றிருந்த சுக்கிரீவன், எதிர்த்திசையில் கோபுரத்தின் உச்சியில் நின்றிருந்த இராவணன் இவன்தான் என்று வீடணன் கூறியவுடன் விரைந்து பாய்ந்து, இராவணனுடன் மற்போர் புரிந்து அவனுடைய பத்துத்தலைகளிலும் இருந்த மாணிக்கக்கற்கள் பதிக்கப்பெற்ற முடிகளைப் பறித்து அவமானப்படுத்திய நிகழ்ச்சிகளைக் கூறும் படலம் என விரியும். இது 51பாடல்களைக் கொண்டது. சில சுவடிகளில் மட்டும் 'சிகாமணிப்படலம்' எனக் குறிக்கப்பெற்றிருக்கிறது.

இப்படலத்துள், இராமபிரான்சுவேலமலையில் ஏறிநின்று வீடணனை அழைத்து, அரக்கர்களைத் தெரியப்படுத்த வேண்டுதல்; வீடணன் முதலில் இராவணனைக் காட்டுதல்; சுக்கிரீவன் உடனே விரைந்து இராவணன் மேல் பாய்தல்; இருவரும் மற்போர்புரிதல்; சுக்கிரீவனைத் தன் அருகில் காணாது இராமபிரான் வருந்துதல்; சுக்கிரீவன் இராவணனின் மகுடத்தி லிருந்து பறித்துவந்த மாணிக்க மணிகளை இராமபிரான் திருவடிகளில் வைத்து வணங்குதல்; இராமபிரான் சற்றுத்தெளிந்து, அவனிடம் தன் அன்பை வெளியிடல்; சுக்கிரீவன் தான் அவ்வாறு செய்ததற்கான காரணத்தைக் கூறுதல்; வீடணன், சுக்கிரீவனது வீரத்தைப் பாராட்டுதல், பின்னர் இராமபிரானும் அதை ஒரு வெற்றியாகக் கருதி சுக்கிரீவனைப் பாராட்டுதல்; சூரியன்மறைதல்; இராமபிரானும், இராவணனும் தத்தம் இருக்கைகளுக்குச் செல்லுதல்; ஆகிய நிகழ்ச்சிகள் மிக விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன.

1. இராமபிரான் எதிர்த்திசையில் இருப்பவர் யார்யார் என வீடணனிடம் வினவுதல்.

"என்னும் வேலையின், இராவணற்கு இளவலை, இராமன்
'கன்னி மாமதில் நகர் நின்று நம் வலி காண்பான்
முன்னி, வானினும் மூடி நின்றார்களை, முறையால்,
இன்ன நாமத்தர், இனையர், என்று இயம்புதி!" என்றான். (6978)

Koviloor Digital Library

(இளவல்-தம்பி; கன்னி-அழியாததன்மை; காண்பான்-காணும் பொருட்டு; வான்-ஆகாயம்; நாமம்-பெயர்; இனையர்-இன்னதன்மையர்; வேலை-சமயம்; முன்னி-நினைத்து)

என்று சாரனிடம் இராவணன் கூறிக்கொண்டிருக்கும் அதே சமயத்தில் இங்கு, இராமபிரான் இராவணனின் தம்பியாகிய வீடணனை நோக்கி ''அழியாத் தன்மையுடைய, பெரிய மதிலால் சூழப்பெற்ற இவ்விலங்கை மாநகரத்திலிருந்து நம் வானரச்சேனையின் வலிமையைக் காணக்கருதி, ஆகாயத்தையே மூடிமறைத்துக் கொண்டிருப்பவர்களை, முறையே அவர்கள் இன்னின்னார் என்று அவர்கள் பெயரையும், அவர்களின் இயல்பு, பண்பு முதலிய வற்றையும் எனக்குக் கூறுவாயாக!'' என்றான்.

'கன்னி' என்னும் சொல்லுக்கு 'அழியாத' என்பது நேர்பொருள். முன்னம் ஒருவர் தொடாத எதுவும் கன்னி என்று வழங்கப்பெறும் என்க. இலங்கை மாநகரை இதுவரை யாரும் தொட்டதில்லை - படை யெடுத்ததில்லை என்பது விரிந்த பொருள். 'முன்னம் ஒருத்தர் தொடா முலை இது' என்ற அயோமுகியின் கூற்று இங்கு நினைவுகூரத் தகும். 'வானிலூம் மூடி நின்றார்கள்' என்பது அவர்கள் கோபுரத்தின் உச்சியில் நின்ற நிலையைக் குறிக்கும்.

2. இராவணனைக் காட்டிக் கூறுதல்

''நாறு தன் குலக்கிளை எலாம் நரகத்து நடுவான்
சேறு செய்து வைத்தான், உம்பர் திலோத்தமை முதலாக்
கூறும் மங்கையர் குழாத்திடைக் கோபுரக் குன்றத்து
ஏறி நின்றவன், புன்தொழில் இராவணன்'' எனறான். (6979)

(உம்பர்-தேவலோகம்; குழாம்-கூட்டம்; கிளை-உறவினர்; நாறு-நாற்று; நடுவான்-நடுதற்பொருட்டு; புன்-இழிவான/அற்பமான)

இலங்கையின் அந்தக் கோபுரத்தின் உச்சியில் ஏறி, திலோத்தமை என்று சிறப்பித்துச்சொல்லப்படும் தேவமகளிரின் கூட்டத்தின் நடுவில் நிற்பவன் தான், தன்னுடைய சுற்றத்தார், உறவினர் அனைவரையும் நரகம் என்னும் நாற்றங்காலில் நடுதற்பொருட்டு, வயலைச் சேறாக்கிவைத்த இழி தொழிலையுடைய இராவணன் என்பவன்'' என்று கூறினான் வீடணன்.

'நாறு' என்பது நாற்றங்காலைக் குறிக்கும். 'குலக்கிளை எலாம்' என்றது. தன் மகன், அரக்கவீரர்கள் முதலிய உறவினர்களைக் குறிக்கும். 'நரகம்' என்பது இழிந்தோர்-பாவம்செய்தோர் அடையும் இறுதிநிலையைக் குறிக்கும். 'திலோத்தமை முதலா' என்றதனால் மற்ற தேவமகளிரையும் கொள்ளுதல் பொருந்தும். பொதுவாக மாற்றார் சேனையின் வலிமையைக் காண்பதற்குப் படைவீரர்கள்கூட்டம்சூழ நின்று காண்பது வழக்கு. இங்கே இன்பம்தரும் தேவமகளிர்கூடி நின்று பார்த்தான் என்றதனால் அவன்

Koviloor Digital Library

ஒழுக்கம்பற்றி 'புன்தொழில் இராவணன்' எனப்பட்டான் என்க. நாற்றைப் பிடுங்கி வயலில் நடுவது வழக்கு. எனவே இலங்கையை நாற்றங் காலாகவும், நரகத்தை வயலாகவும் உருவகித்தார் என்க. சுற்றத்தாரை நாற்று எனவும், நரகத்தைச் சேறு எனவும் கூறினார் எனவும் கொள்ளலாம். தானும் தன் கிளையும் தீய செயல் புரிவதையே தொழிலாகக் கொண்டிருந் தவன் ஆதலின் எல்லோரும் பாவத்திற்குரிய நரகம் அடைவதற்கு இவன் காரணமாய் இருந்தான் என்பதால் 'புன்தொழில் இராவணன்' எனப்பட்டான். 'அறன்கடை நின்றாருள் எல்லாம், பிறன்கடை நின்றாரில் பேதையார் இல்' என்பது குறள்-142.

3. உடனே சுக்கிரீவன் இராவணன் மேல் பாய்தல்

கருதி மற்றொன்று கழறுதல் முன்னம், விழிக் கனல்கள்
பொருது புக்கன முந்துற, சூரியன் புதல்வன்
சுருதி அன்னவன், 'சிவந்தநல்கனி' என்று சொல்ல,
பருதி மேல் பண்டு பாய்ந்தவனாம் எனப் பாய்ந்தான். (6980)

(கருதி-நினைத்து; கழறுதல்-சொல்லுதல்; கனல்-நெருப்புப்பொறி; பொருது-நெருங்கி/போட்டியிட்டு; முந்துற-முற்பட்டுச்செல்ல; சுருதி-வேதம்; பருதி-பரிதி/சூரியன்; பண்டு-முன்பு)

அவ்வாறு வீடணன் மற்றொன்றை நினைத்துக் கூறுவதற்கு முன்பே, சூரியன் புதல்வனான சுக்கிரீவன், தன் கண்களிலிருந்து நெருப்புப் பொறிகள் ஒன்றோடொன்று போட்டிக்கொண்டு முற்பட்டுச் செல்ல, முன்பு ''உனக்கு உண்ணும் உணவு சிவந்த நல்ல பழங்கள்தான்'' என்று தன் தாயான அஞ்சனாதேவி சொல்ல; அப்பொழுது சூரியனைச் சிவந்தபழம் என்று கருதி அதன் மேல் பாய்ந்தவனும், வேதத்தை ஒத்தவனுமான அனுமன்போல, இராவணன்மீது விரைந்து பாய்ந்தான்.

வீடணன் கருதுதலும், சுக்கிரீவன் விரைந்து பாய்தலும் ஏககாலத்தில் நிகழ்ந்தன என்க. 'எடுத்தது கண்டார் இற்றது கேட்டார்' என்பதைப்போல என்க. அனுமன் 'சுருதி அன்னவன்' என்பதைக் கவிஞன் காப்பியத்தில் பல இடங்களிலும் கூறிவந்துள்ளமையை நினைவுகூர்க. அனுமன் சூரியனைச் சிவந்தபழமெனக் கருதி அவன்மீது பாய்ந்ததை உத்தரகாண்டம் அனுமப் படலம் அழகாகக் கூறுகிறது கேளுங்கள். ''இனியதாம் இரை யாது எனக்குஎன்ன, பனி உலாவிய சோலையில், பருவத்தில் சிவந்த கனி எலாம் உனக்கு ஆவது என்று, அன்னைதான் கழற, பசியினால் பதைபதைத்து இரங்கி, அழுது அரற்றியபாலன், அவ்வன்னை முன்சொன்ன பழம் நமக்கு இதுவாம் என்னப் பரிதி மேல் பாய்ந்தான்'' என்பது உத்தரகாண்டம் அனுமப்படலம். சுக்கிரீவன் உடலை மனம் முந்தியது; மனத்தைச் சினம் முந்தியது; சினத்தைத் தீப்பொறி முந்தின என்று கூறும் கவிஞனின் கவித்திறம் நோக்குக. 'சுருதி' என்பது வாய்மொழியால் கூறப்படுவதும்

Koviloor Digital Library

செவிவழியாய்க் கேட்கப்படுவதும் என்ற விரிந்த பொருளைத்தரும். 'சுருதி எழுதாக் கிளவி' என்றும் வழங்கப்படுதலை அறிக. இராவணன் மேல் பாய்ந்த சுக்கிரீவனுக்குச் சூரியன்மேல் பாய்ந்த அனுமன் ஒப்பு. எல்லாக்கலைகளையும் தன்னுள் கொண்ட வேதத்தைப்போல, எல்லாக் கலைகளையும் கற்றுத் தன்னுள் கொண்டவன் என்பதால் அனுமன் வேதத்துக்கு ஒப்பு என்று சிறப்பித்துச் சொல்லப்பட்டான் என்க.

4. சுதையத்து ஓங்கிய சுவேலத்தின் உச்சியைத் துறந்து,
சிதையத் திண்திறல் இராவணக் குன்றிடைச் சென்றான்,
ததையச் செங்கரம் பரப்பிய தன் பெருந்தாதை
உதையக் குன்றின் நின்று உகு குன்றில் பாய்ந்தவன் ஒத்தான். (6981)

(சுதையம்-வெண்ணிறம்; ஓங்கிய-உயர்ந்த; துறந்து-விட்டு; திண்-மிக்க; சிதைதல்-அழித்தல்; ததைதல்-செறிந்திருத்தல்/அடர்ந்திருத்தல்; கரம்-கிரணங்கள்; தாதை-தந்தை/சூரியன்; உகுதல்-மறைதல்; சுதையம்-நட்சத்திரமுமாம்)

வெண்ணிறம் பொருந்திய, நட்சத்திர மண்டலம்வரை ஓங்கி உயர்ந்துள்ள சுவேலமலையின் உச்சியைவிட்டு, அந்த இராவணனாகிய மலையின் மிக்க வலிமையெல்லாம் அழிந்துபோகும்படி, பாய்ந்த சுக்கிரீவன், தன்பெருமைமிக்க தந்தையான சூரியன், தனது அடர்த்தியான, செறிந்த சிவந்த கிரணங்களைப் பரப்பிக்கொண்டு, உதயகிரியிலிருந்து அத்தமனகிரிக்குப் பாய்வதைப் போன்று தோன்றினான்.

'சுதையம்' என்ற சொல் வெண்ணிறம் என்றும், நட்சத்திரம் என்றும் பொருள்படும். சில பழைய உரைகளில் சுதையம் தேவலோகம் என்றும் 'பவழமால்வரை' என்றும்கூடக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. சுவேல மலையின் உயர்ச்சி சிறப்பிக்கப்பட்டது. மலையைப்போல மிக்கவலிமை படைத்த இராவணன் என்று மலையை இராவணனுக்கு உவமை கூறாமல் 'இராவணக்குன்று' என்று இராவணனை மலையாகவே உருவகப் படுத்திய கவிஞனின் கவித்திறம் நோக்குக. உருவகத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டு இந்த 'இராவணக்குன்று' என்ற சொற்றொடர், 'உதயக்குன்று' என்பது 'உதையக்குன்று' என்று எதுகைநோக்கித் திரிந்தது எனக்கொள்க. சுவேலமலையினின்று பாயும் சுக்கிரீவனுக்கு, உதயகிரியி லிருந்து பாயும் அவன் தந்தை சூரியன் உவமை.

5. பள்ளம் போய்ப்புகும் புனல்எனப் படியிடைப் படிந்து,
தள்ளும் பொற்கிரி சலிப்புறக் கோபுரம் சார்ந்தான்;
வெள்ளம் போல் கண்ணி அழுதலும், இராவணன்மேல் தன்
உள்ளம் போல் செலும் கழுகினுக்கு அரசனும் ஒத்தான். (6982)

Koviloor Digital Library

(புகுதல்-பாய்தல்; புனல்-நீர்; படி-பூமி; கண்ணி-கண்களையுடைய சீதாதேவி; உள்ளம்-மனம்; கழுகினுக்கு அரசன்-சடாயு; பொற்கிரி-திரிகூட மலை)

பள்ளத்தை நோக்கி விரைவாகச் சென்று பாயும் இயல்புடைய தண்ணீர் என்னுமாறு, இப்பூமியில் தள்ளப்பட்டுப் படிந்து நிற்கின்ற பொன் மயமான திரிகூடமலையே சலித்துக் கொள்ளுமாறு சுக்கிரீவன், இராவணன் நின்ற கோபுரத்தின் உச்சியை அடைந்தான்; வெள்ளப் பெருக்குப்போலக் கண்ணீர்சிந்தும் சீதாதேவியைக் கண்டதும் தன் உள்ளத்தின் வேகம்போல (மனோவேகம்) இராவணனை எதிர்த்து, அவன் மேல் விரைந்து பாய்ந்த கழுகுகளுக்கு அரசனாகிய சடாயுவைப்போல் இப்பொழுது சுக்கிரீவன் தோற்றம் அளித்தான்.

நீரின் தன்மை பள்ளத்தை நோக்கிப் பாய்வது. அதுபோல பொன் மயமான மேருமலையின் மூன்று சிகரங்கள் உச்சியிலிருந்து, பள்ளமான இலங்கையில் சாய்த்துத் தள்ளப்பட்டுக் கிடந்தமையால் அந்தத் திரிகூட மலையும் பொற்கிரி எனப்பட்டது. திரிகூடமலை எவ்வாறு விழுந்தது என்பது முன்பே நாம் கண்டது என்பதை நினைவிற்கொள்க. சுக்கிரீவன் இராவணன்மேல் பாய்ந்த வேகத்திற்குப் பள்ளத்தை நோக்கிப் பாயும் வெள்ளம் உவமை. அதேபோல் இராவணன்மேல் முன்பு பாய்ந்த சடாயுவுக்கு, அதே இராவணன் மேல் இப்பொழுது பாய்கிற சுக்கிரீவன் உவமை.

6. அரம்பையர் அஞ்சி ஓடுதல்

கரிய கொண்டலை, கருணை அம் கடலினை, காணப்
பெரிய கண்கள் பெற்று உவக்கின்ற அரம்பையர், பிறரும்,
உரிய குன்றிடை உரும் இடி வீழ்தலும், உலைவுற்று
இரியல் போயின மயிற்பெரும் குலம் என இரிந்தார். (6983)

(கொண்டல்-மேகம்; அரம்பையர்-தேவமகளிர்; உரிய-தமக்குரிய; உரும்-இடி; இரியல்போதல்-நிலைகெட்டு ஓடுதல்; குலம்-கூட்டம்; உலைவுறுதல்-மனம் நோதல்)

கருநிறம்கொண்ட மேகம்போன்றவனும், அழகிய கருணைக்கடல் போன்றவனுமான இராமபிரானைக் கண்ணாரக் கண்டு மகிழ வேண்டுமென்பதற்காகவே அகன்ற, இமைக்காத பெரிய கண்களைப் பேறாகப் பெற்று மகிழ்ந்து நிற்கின்ற தேவமகளிரும், மற்ற அரக்கப் பெண்களும், தமக்கு உரிமையுடைய மலையில் அச்சம்தரக்கூடிய பெரிய இடி ஒன்று வீழ்ந்தபோது மனம் கலங்கி, தத்தம் இடம்விட்டு நீங்கி திசைக்கொன்றாகச் சிதறி ஓடும் பெரிய மயிற்கூட்டங்களைப்போல, நிலைகெட்டுச் சிதறி ஓடினர்.

Koviloor Digital Library

'கரிய கொண்டல்' என்பதும் 'கருணை அம் கடல்' என்பதும் இராம பிரானின் உடல், உள்ளப் பண்பினைக் குறிக்கவந்த அடைமொழிகள் எனக்கொள்க. தேவர்க்கு அமைந்ததுபோலவே தேவமகளிர்க்கும் இமையா நாட்டம் உண்டு என்பதால் பெரிய கண்கள் என்றார் என்க. மயிலுக்கு இடியோசை பகை என்பது நாம் அறிந்ததே. உரும்இடி என்பதை ஒரு பொருட்பன்மொழியாகவும் கொள்ளலாம். இராமன் உடல் மேகவண்ணம்; உள்ளம் கருணைக்கடல்; அவன் அழகு கடல்வெள்ளம்; எனக்கூறும் கவிஞனின் கற்பனைத்திறனை நோக்குக. தேவமகளிர்க்கு மயில்கள் உவமை; முன்பு 'நம்பியைக் காண நங்கைக்கு ஆயிரம் நயனம் வேண்டும்' என்று கூறியதை இங்கு நினைவுகூர்க. அகன்ற கண்கள் உத்தமப் பெண்களுக்குரிய இலக்கணம். 'உரும்' என்ற சொல்லுக்கே அச்சம் என்ற பொருளும் உண்டு. 'உரும் உட்காகும்' என்பது தொல் காப்பியம்.

7. இருவரும் மற்போர் புரிதல் [19 பாடல்கள்]

காலஇருள் சிந்து கதிரோன்மதலை கண்ணுற்று
ஏல எதிர் சென்று, அடல் இராவணனை எய்தி,
நீலமலைமுன் கயிலை நின்றது என, நின்றான்;
ஆலவிடம் அன்றுவர, நின்ற சிவன் அன்னான். (6984)

(காலம்-நீண்டகாலம்; சிந்துதல்-ஓட்டுதல்; கதிரோன்-சூரியன்; மதலை-சிறுவன்/புதல்வன்/சுக்கிரீவன்; ஏல-பொருந்த; அடல்-வன்மை/வெற்றி/ஆற்றல்; அன்று-முன்பு; கண்ணுற்று-கண்டு)

நெடுங்காலமாக நிலைத்து நின்ற இருட்டை விரட்டி ஓட்டும் கிரணங்களையுடைய சூரியனுடைய புதல்வனான சுக்கிரீவன், ஆற்றல் மிக்க இராவணனை நேருக்குநேர் பார்த்து, அவன் எதிரே பொருந்தச் சென்று நின்று, முன்பு பாற்கடலைக் கடைந்த காலத்தில் அதனின்றும் பொங்கி வெளிப்பட்டு எழுந்த ஆலகால விஷம் கண்டு அஞ்சாது அதனைப் பருகுவதற்காக நிலைத்துநின்ற சிவபெருமானைப் போலவும், ஒரு நீலவண்ண மலையின் முன்னால் வெண்மைநிறமான கையிலை மலை நின்றது போலவும் நின்றான்.

'காலஇருள்' என்பது இராப் போதின் இருட்டு என்று கூறுவதைவிட, நீண்டகாலமாக நிலைத்துநின்ற புற இருட்டு என்று கூறுவது, கதிரோனுக்கு இன்னும் சிறப்புச்சேர்க்கும் எனக்கொள்க. நீலமலைக்கு இராவணனும், கயிலைமலைக்கு சுக்கிரீவனும் நிறத்தால் மட்டும் ஒப்பு. தோற்றத்தால் அல்ல என்பதை உணரவேண்டும். 'ஆலம்' என்ற சொல்லுக்கே 'விடம்' என்று பொருள்தருகிறது. திவாகர நிகண்டு. 'ஆலவிடம்' என்பது கடுமையான ஆலகாலவிஷம் என்ற பொருளைத்தரும். இங்கே சுக்கிரீவன்

Koviloor Digital Library

வெண்மைநிறத்தாலும், அஞ்சாத பண்பாலும் சிவபெருமானுக்கு உவமை. கரிய ஆலகாலவிஷம் இராவணனுக்கு உவமை.

8. "இத்திசையில் வந்த பொருள் என்?' என, இயம்பான்,
தத்தி எதிர்சென்று, திசைவென்று உயர்தடந்தோள்
பத்தினொடு பத்துடையவன் உடல் பதைப்ப,
குத்தினன் உரத்தில், நிமிர் கைத்துணை குளிப்ப. (6985)

(பொருள்-காரியம்; தத்தி-தாவி; பதைப்ப-நடுங்க; நிமிர்-ஓங்கிய; உரம்-மார்பு; துணை-இரண்டு; குளிப்ப-அழுந்தும்படி; திசை-இடம்/பக்கம்)

''இந்தப்பக்கம் என்ன காரியமாய் வந்தாய்?'' என்று இராவணன் சுக்கிரீவனை நோக்கிக் கேட்கவும், அதற்கு வாயால் ஏதும் மறுமொழி கூறாதவனாய், அவன் எதிரில் தாவிக்குதித்துச் சென்று, எல்லாத் திசை களிலும் உள்ளவர்களையெல்லாம் வெற்றி கொண்டு பெருமிதத்தால் பருத்த பெரிய இருபது தோள்களையுடையவனான இராவணனே என்னசெய்வதென்று அறியாது நடுங்கி நிற்கவும், சுக்கிரீவன் ஓங்கிய தன் இரண்டு கைகளும் நன்கு பதியும்படி, இராவணன் மார்பில் குத்தினான்.

9. திருகிய சினத்தொடு செறுத்து எரி விழித்தான்,
ஒருபது திசைக்கணும் ஒலித்த ஒலி ஒப்ப,
தருவனம் எனப் புடை தழைத்து உயர் தடக்கை
இருபதும் எடுத்து, உரும் இடித்தென அடித்தான். (6986)

(திருகிய-முதிர்ந்த; செறுத்தல்-பகைத்தல்/சினத்தல்; எரி-தீப்பொறி; தரு-மரம்; புடை-பக்கம்; தழைத்து-செறிந்து/நெருங்கி/செழித்து; ஒலித்த -முழங்கிய; திசைக்கணும்-திசைகளிலும்; உரும்-பேரிடி; வனம்-காடு; அடித்தல்-தாக்குதல்)

இப்போது இராவணன் முதிர்ந்த கோபத்தோடு, பகைமைகொண்டு, தீப்பொறி பறக்கக் கண்களை விழித்துப் பார்த்தான். மரங்கள் அடர்ந்த காடு போலப்பக்கங்களில் செழிப்பாகத் திரண்டிருக்கும் நீண்ட பெரிய இருபது கைகளையும் ஓங்கி எடுத்து, பத்துத் திசைகளிலும் அவ்வொலியின் எதிரொலி கேட்கும்படி, பேரிடி இடித்தாற்போன்று சுக்கிரீவனைத் தாக்கினான்.

'திருகிய சினம்' என்பது மிகுந்த சீற்றத்தைக் குறிக்கும். இராவணனது இருபது அடர்ந்த நீண்ட பெரிய கைகளுக்கு தருவனம் உவமை. மரம் செழித்துத் தோன்றும் வனம் போலக் கரங்கள் நிறைந்து இருக்கும் உடல் என்க. இராவணன் சுக்கிரீவனைத் தாக்கியதற்கு, இடியின் பத்துத் திசை களிலும் ஒருசேரச் சென்று சேரும் பேரொலியை ஒப்பிடப்பட்டிருப்பதை உணர்க.

Koviloor Digital Library

10. அடித்த விரல் பட்ட உடலத்துழி இரத்தம்
பொடித்து எழ, உறுக்கி, எதிர்புக்கு, உடல்பொருந்தி,
கடுத்த விசையின் கடிது எழுந்து, கதிர்வேலான்
முடித்தலைகள் பத்தினும் முகத்தினும் உதைத்தான். (6987)

(உழி-இடம்; பொடித்து-சிதறி; உறுக்கி-அதட்டி; புக்கு-சென்று; விசை-வேகம்; கடிது-விரைந்து; கதிர்-ஒளி; வேல்-வேற்படை; கடுத்த-மிக்க; முடி-கிரீடம்/மகுடம்)

அவ்வாறு இராவணன் கைகளிலுள்ள விரல்களால் தாக்கப்பட்ட சுக்கிரீவனின் உடலிடத்திலிருந்து இரத்தம் பொடிப்பொடியாய்ப் பொங்கிஎழ, சுக்கிரீவன் இராவணனை அதட்டி, அவனுக்கு நேருக்குநேர் சென்று அவனுடன் தன்னுடலைப் பிணைத்து, மிக்க வேகத்துடன் விரைந்து எழுந்து, ஒளிமிக்க வேற்படையை ஏந்தியுள்ளவனான இராவணனின் மகுடம் அணிந்த பத்துத்தலைகளையும், பத்து முகங்களை யும் தன்கால்களால் உதைத்துத் தாக்கினான்.

இங்கே 'உறுக்கி' என்பது அதட்டுதல் என்ற பொருளில் வந்தது. குரக்கினத்தலைவன் சுக்கிரீவன் அதட்டும் ஒரு நிலையைக் கற்பனை செய்துபாருங்கள். இப்பாடலில் மற்போர் (மல்யுத்தம்) முறை கூறப்பட்டுள்ளது.

11. உதைத்தவன் அடித்துணை பிடித்து, ஒரு கணத்தில்,
பதைத்து உலைவுறப் பலதிறத்து இகல் பரப்பி,
மதக்கரியை உற்று, அரிநெரித்தென மயங்கி,
சுதைத் தலனிடை, கடிது அடிக்கொடு துகைத்தான். (6988)

(அடித்துணை-இரண்டுகால்கள்; கணம்-நொடிப்பொழுது; உலை வுறுதல்-வருந்துதல்/நடுங்குதல்; இகல்-போர்வன்மை; பரப்பி-வெளிப் படுத்தி; கரி-யானை; அரி-சிங்கம்; உற்று-பற்றி; மயங்குதல்-கலக்க முறுதல்; சுதை-சுண்ணாம்பு; தலன்-தலம்/இடம்/தரை; அடி-கால்கள்; கடிது-விரைந்து; துகைத்தல்-மிதித்தல்/தேய்த்தல்; பதைத்தல்-துடி துடித்தல்; துணை-இரண்டு)

அவ்வாறு தன்னை உதைத்துத் தாக்கியவனான சுக்கிரீவனது இரண்டு கால்களையும் ஒரு நொடிப்பொழுதில் ஒருகையால் ஒருங்கே பற்றி சுக்கிரீவன் துடிதுடித்து வருந்துமாறு, இராவணன் தனது பலவகைப்பட்ட மற்போர்த் திறத்தினை வெளிப்படுத்தி ஒரு மதச்செருக்குக் கொண்ட யானையை சிங்கம் ஒன்று நெருங்கி, மடக்கியதுபோல, கலக்கமுற்று மூர்ச்சைடையச் செய்து, சுண்ணாம்பு தீற்றப்பட்ட அந்தக் கோபுரத்தின் உச்சியின் இடத்தில், விரைந்து தனது இருபது கால்களாலும் அவனைத் தரையில் போட்டு மிதித்துத் தேய்த்தான்.

Koviloor Digital Library

மதக்கரி-சுக்கிரீவனுக்கு உவமை; அரி-இராவணனுக்கு உவமை. எனவே இப்பாடல் உவமையணியின்பாற்படும். 'சுதைத்தலம்' என்பதால் கோபுரத்தின் உச்சி சுண்ணாம்பு தீற்றப்பட்ட தரை என்பது பெறப்படுகிறது. இராவணனின் மற்போர்த்திறன் பேசப்படுகிறது.

12. துகைத்தவன் உடற்பொறை சுறுக்கொள இறுக்கி,
தகைப்பெரு வலத்தொடு தலத்திடை அமுக்கி,
வகைப்பிறை நிறத்து எயிறுடைப் பொறி வழக்கிக்
குகைப்பொழி புதுக்குருதி கைக்கொடு குடித்தான். (6989)

(துகைத்தல்-மிதித்துத் தேய்த்தல்; பொறை-சுமை/பாரம்; சுறுக் கொள்ளுதல்-கரிதல்/புகைநாற்றம் வீசுதல்/தீய்தல்; இறுக்கி-பிணித்து; தகைத்தல்-தடுத்தல்; வலம்-வலிமை/வன்மை; தலம்- தரை; அமுக்குதல்-அழுத்துதல்; வகை-பிளவு/பகுப்பு; எயிறு-பற்கள்; பொறி-இந்திரியம்; பொழிதல்-வெளிப்படுதல்; குருதி-இரத்தம்; குடித்தல்-பருகுதல்; பிறைஎயிறு-வக்ரதந்தம்; வழக்கு-வழி)

தன்னை நிலத்தில் இட்டுக் காலால் மிதித்துத் தேய்த்தவனான இராவணனின் உடற்சுமையை இறுக்கிப் பிடித்துப் பிணித்து, நெருப் பினால் வெந்து கரிந்து புகை நாற்றம் வீசும்படி, தடுத்தற்கரிய வலிமை யோடு அவனைத்தரையில் அழுத்தி, இரண்டாகப் பிளவுபட்ட பிறைச் சந்திரனைப் போன்ற நிறம்கொண்ட பற்களைக்கொண்ட வாயாகிய இந்திரியத்தின் வழியாக, குகையிலிருந்து பொங்கி வழிகின்ற புதுவெள்ளத்தைப் போல இராவணனது வாயின்வழிப் பொங்கி வருகின்ற புதிய இரத்தத்தை, சுக்கிரீவன் தன் கைகளைக் கொண்டு பருகினான்.

இராவணன் தீமையே செய்யும் தன்மையன். எனவே அவன் உடல் இவ்வுலகுக்குச் சுமை என்பதை விளக்க 'துகைத்தவன் உடற்பொறை' என்றார் என்க. சுறுக்கொள்ளுதல் என்பது தசை, முடி, காகிதம் போன்றவை நெருப்பில் பட்டபோது எழுகின்ற கருகிய, தீய்ந்த நாற்றம் எனக்கொள்க. பிளவுபட்ட கோரப்பற்களையுடைய இந்திரியமாகிய வாயின் வழியே இரத்தம் பொங்கியது என்பதை 'வகைப்பிறை நிறத்து எயிறுடைப் பொறி வழக்கு' என்றார் என்க. குகையினின்றும் வெள்ளம் பொங்கி வருவதற்கு, இராவணன் வாயிலிருந்து பீறிட்டு வரும் இரத்தம் உவமை. வாய்-குகை; இரத்தம்-வெள்ளம்.

இங்கே ஒன்று கருதவேண்டும். உ.வே.சா நூல்நிலையப் பதிப்பு இப்பாடல் சொற்களுக்கு முற்றிலும் வேறான பொருள்தருகிறது. 'சுக்கிரீவன் வானரன், ஆதலால் மக்கள் உதிரம் பருகுதற்கில்லை. எனினும், வீரா வேசத்துடன் மெய்ம்மறந்து ஆற்றியபோர் ஆதலின் அவ்வாறு நிகழ்ந்தது எனக்கொள்ளலாம்'' என்று ஒரு குறிப்பும் காணப்படுகிறது. அதுபோலவே அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பும் ''இச்

Koviloor Digital Library

செய்யுளின் பாடமும், பொருளும் மேலும் ஆராயத்தக்கன'' என்ற குறிப்பைத் தருகிறது. சந்தம்கூட மூன்றாவது அடியில் தப்பி வருவதைக் கற்போர் உணரலாம்.

13. கைக்கொடு குடித்தவன் உடல் கனக வெற்பை
பைக்கொடு விடத்து அரவு எனப் பல கை பற்றி,
மைக்கொடு நிறத்தவன் மறத்தொடு, புறத்தில்
திக்கொடு, பொருப்பு உற நெருப்பொடு திரித்தான். (6990)

(மை-கருமை; கடு-நஞ்சு; கனகவெற்பு-பொன்மலை; பை-படம்; கொடு-கொடிய; விடம்-நஞ்சு; அரவு-பாம்பு; மறம்-வீரம்/வன்மை; திக்கு-திசைகள்; பொருப்பு-மலைகள்; உற-மோதும்படி; திரித்தல்-சுழற்றுதல்)

கருமைநிறம் பொருந்திய மை போல நிறம் கொண்டவனாகிய அரக்கன் இராவணன், தனது இரத்தத்தைக் கையால் பருகினவனான சுக்கிரீவனின் உடலாகிய பொன்மலையை, பையில் கடுமையான விஷத்தைக் கொண்டுள்ள பாம்பினைப் போன்ற தன் இருபது கைகளாலும் பற்றி, வீரத்துடன் புறத்தே உள்ள எட்டுத்திக்குகளிலும் உள்ள மலைகளிலும் மோதித்தாக்கும்படி அவன் உடலைத் தீப்பொறி பறக்கச் சுழற்றினான்.

முந்தையப் பாடலில் இராவணனது உடலை 'உடற்பொறை' என்று கூறிய கவிஞன், இந்தப் பாடலில் சுக்கிரீவனின் உடலை 'கனகவெற்பு' என்று கூறிய நயம் நோக்குக. ஆதிசேஷன் தன் ஆயிரம் பணாமுடிகளால் இவ்வுலகத்தைத் தாங்கி நிற்கிறான் என்பதும், அவனுக்கும் வாயு தேவனுக்கும் ஏற்பட்ட போட்டியில் ஆதிசேஷன் தன் கைகளால் மேரு மலையைத் தாங்கி நின்று பாதுகாத்தான் என்பதும் நாம் முன்பு கண்டதே. அதை இங்கே நினைவுகூர்க. சுக்கிரீவனுக்கு மேருமலையும், இராவண னுக்கு விஷமுடைய பாம்பும் உவமை. இப்பாடல் உவமையணியின் பாற்படும்.

14. திரித்தவன் உரத்தின் உகிர் செற்றும் வகைகுத்தி,
பெருத்து உயர் தடக்கை கொடு அடுத்து இடைபிடித்து,
கருத்து அழிவுற, திரிதிறத்து எயில், கணத்து அன்று
எரித்தவனை ஒத்தவன், எடுத்து அகழி இட்டான். (6991)

(அன்று-முன்பு; திரிதிறம்-திரியும்தன்மை; எயில்-புரம்/மதில்கள்; கணம்-நொடிப்பொழுது; திரித்தவன்-சுழற்றியவன்; உரம்-மார்பு; உகிர்-நகம்; செற்றுதல்-ஊன்றிப்பதிதல்; கருத்து-எண்ணம்; இடுதல்-வீழ்த்துதல்/வீசுதல்; அடுத்து-நெருங்கி)

முற்காலத்தில் ஆகாயத்தில் அலைந்து திரிகின்ற தன்மையையுடையதா யிருந்த முப்புரங்களையும் ஒரு நொடிப்பொழுதில் எரித்து அழித்த வனாகிய சிவபெருமானைப் போன்றவனான சுக்கிரீவன், தன் கால்களைப்

Koviloor Digital Library

பிடித்துச் சுழற்றியவனான இராவணனின் மார்பில், தன் கை நகங்கள் அழுந்திப்பதியும் வண்ணம் குத்தி, தனது பருத்த, நீண்ட விசாலமான கைகளால் இராவணனை நெருக்கி, அவன் இடையைப் பற்றி அவன் கதிகலங்கி மூர்ச்சையுற, அவனை அப்படியே தூக்கி அகழியில் வீசியெறிந்தான்.

சுக்கிரீவன் சிவபெருமானுக்கு ஒப்பு. 'எயில்' என்பது இங்கே முப்புரங்களைக் குறித்து நின்றது. சிவபெருமான் திரிபுரம் எரித்த நிகழ்ச்சி காப்பியத்தில் பல இடங்களில் பேசப்பட்டிருக்கிறது என்பதை அறிக.

15. இட்டவனை இட்ட அகழில் கடிதின் இட்டான்,
தட்ட உயரத்தினில் உறும் தசமுகத்தான்,
ஒட்ட உடனே அவனும் வந்து, அவனை உற்றான்;
விட்டிலர் புரண்டு இருவர், ஓர் அகழின் வீழ்ந்தார். (6992)

(தட்ட-தடுத்து நிறுத்த; உயரம்-வான்; இட்டவன்-தள்ளியவன்; உறுதல்-நெருங்குதல்; ஒட்டுதல்-இணைந்து போர்செய்தல்)

பகைவனால் தனக்கு ஏதும் நிகழ்ந்துவிடா வண்ணம் தடுத்து நிறுத்தும்பொருட்டு, வானத்தின் உயரத்திற்கு நிமிர்ந்தவனான பத்துத் தலைகளை உடையவனான இராவணன், தன்னை அகழியில் தள்ளிவிட்டவனான சுக்கிரீவனை அவன் தள்ளிய அதே அகழியில் விரைவாக எழுந்து தள்ளிவிட்டான்; உடனே மீண்டும் சுக்கிரீவன் எழுந்துவந்து, இராவணனை நெருங்கினான்; இருவரும் ஒருவரையொருவர் விடாது, தரையில் புரண்டுபொருது, பின்னர் இருவருமே ஓர் அகழியில் போய் விழுந்தனர்.

16. விழுந்தனர், சுழன்றனர்; வெகுண்டனர், திரிந்தார்;
அழுந்தினர், அழுந்திலர்; அகன்றிலர், அகன்றார்;
எழுந்தனர், எழுந்திலர்; எதிர்ந்தனர், முதிர்ந்தார்;
ஒழிந்தனர், ஒழிந்திலர்; உணர்ந்திலர்கள் ஒன்றும். (6993)

(வெகுள்தல்-சினத்தல்; திரிதல்-நீந்துதல்; அகலுதல்-விலகிச் செல்லுதல்; ஒழிதல்-இறத்தல்/நீங்குதல்; முதிர்தல்-மும்மரமாக ஈடுபடுதல்)

அவ்வாறு அகழியில் விழுந்த இருவரும் சினந்து சுற்றிச்சுற்றி வந்து, இடசாரி வலசாரியாகத் திரிந்தார்கள்; பின்னர் ஒருவர் உடலில் ஒருவர் அழுந்தியும் வெளிப்பட்டும், பின்னர் சற்று நீரில் மூழ்கினார்கள். ஆனால் நீருக்குள் முழுகாமலும், சிறிது நேரம் நீரினின்றும் வெளிப்பட்டும். நீரைவிட்டு நீங்காமலும் நீருக்குள்ளேயே ஒருவரையொருவர் நெருங்கியும் இருந்தனர். சிறிதுநேரம் நீரினின்றும் எழுந்து, பின்னர் மீண்டும் எழாமல் உள் சென்றும் ஒருவரையொருவர் எதிர்த்தனர். சிறிதுநேரம் இருவரும் வெளிப்படாது காணாதவர் போலக் காணப்பட்டனர் என்றாலும், தளர்ந்து

Koviloor Digital Library

போய்விடவில்லை. எனவே தாங்கள் என்ன செய்கிறோம் என்பதையே ஏதும் அறியாதவர்களாய், புறத்து நிகழ்வது ஒன்றும் அறியாமல், ஒருவரை யொருவர் தாக்கிப் போர் செய்வதிலேயே மும்மரமாக இருந்தனர்.

மற்போரில் ஒவ்வொரு நிகழ்ச்சியும் நம் கண்களுக்குத் தெரியாது. பல நிகழ்ச்சிகள் ஒரே சமயத்தில் நிகழ்வது போலத் தோன்றும். அவற்றை மிகச் சிறந்த நுட்பமான முறையில் படம்பிடித்துக் காட்டுகிறான் கவிஞன். இதற்கு ஒப்பாக பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணப் பாடல்களைக் கூறலாம். இறைவன் மாணிக்கம் விற்ற படலத்திலும், நரியைப் பரியாக்கிய படலத்திலும், விறகுவிற்ற படலத்திலும் நவமணி களின் குணாதிசயங்களையும், இசைப்பாடல்களின் நுட்பங்களையும், குதிரைகளின் நல் இலக்கணங்களையும் ஆசிரியர் மிக நுட்பமாக எடுத்துச் சொல்லுவதுபோல், இங்கேயும் கம்பன் நீர்த்துறை அகழிக்குள் போர் புரியும் தன்மையை விளக்குவது, கண்டு இன்புறத்தக்கது.

அவர்கள் இருவரும் அகழிக்குள்ளேயே கிடந்து நீர்ப்பாசிபோன்று ஒருவரையொருவர் விட்டுவிடாமல் அடர்ந்து அங்கேயே சிலநேரம் போர்செய்தனர் அல்லவா? இதனைத் தமிழ் இலக்கணத்தில் உழிஞைத் திணையுள் 'நீர்ச்செரு வீழ்ந்த பாசி' என்னும் துறையில் பேசுவர்.

17. அந்தர அருக்கன் மகன், ஆழி அகழ் ஆக,
சுந்தரமுடைக் கரம் வலிப்பது ஓர் சுழிப்பட்டு,
எந்திரம்எனத் திரி இரக்கம்இல் அரக்கன்
மந்தரம் என, கடையும் வாலியையும் ஒத்தான். (6994)

(அந்தரம்-ஆகாயம்; அருக்கன்-சூரியன்; ஆழி-கடல்; சுந்தரம்-அழகு; வலித்தல்-இழுத்தல்; திரிதல்-சுழல்தல்; பட்டு-அகப்பட்டு/சிக்கி)

ஆகாயத்தில் சஞ்சரிக்கின்ற சூரியனுடைய புதல்வனான சுக்கிரீவன், அந்த அகழியையே பாற்கடலாகக் கொண்டு, தனது அழகு மிகுந்த கைகளால் இழுத்துக் கடையும்போது, ஓர் கடற்சுழியினில் அகப்பட்டுக் கொண்டு இயந்திரம் போலச் சுழல்கின்ற இரக்கம் என்ற ஒரு பொருள் இல்லாத அரக்கனாகிய இராவணன்; மந்தரமலைபோல் அமையுமாறு முன்பு பாற்கடலைக் கடைந்த வாலியைப் போன்று தோன்றினான்.

அகழி-பாற்கடல்; இராவணன்-மந்தரமலை; வாலி-சுக்கிரீவன்; முன்பு பாற்கடலைக் கடைந்த வாலியைப்போல, இப்பொழுது சுக்கிரீவன் இராவணனை இவ்வகழியில் போட்டுக் கடைந்தான் என்பது கருத்து. உருவகத்தை உறுப்பாகக் கொண்ட உவமையணி. சுக்கிரீவனுக்கு வாலி உவமை.

Koviloor Digital Library

18. ஊறுபடு செம்புனல், உடைத்த கரை உற்ற
ஆறு படர்கின்றன எனப் படர, அன்னார்
பாறு பொருகின்றன பருந்து, இவை எனப்போய்,
ஏறினர் விசும்பிடை; இரிந்த உலகு எலாம். (6995)

(செம்புனல்-இரத்தம்; படர்தல்-பெருகுதல்; பாறு-பருந்து/கழுகு; விசும்பு-வானம்; இரிதல்-ஓடிஒளிதல்; ஊறுதல்-சுரத்தல்; அன்னார்-அவர்கள்; ஊறு-காயம்)

அவ்வாறு காயம்பட்ட இடத்திலிருந்து கசிந்துவரும் சிவந்த இரத்தம், கரை உடைந்து நதியிலிருந்து வெள்ளம் பெருக்கெடுத்துப் புரண்டு வருவதுபோல, அகழியில் இரத்தவெள்ளம் நிறைந்து பரவ, அவர்கள் இருவரும், கழுகும் பருந்தும் ஒன்றையொன்று எதிர்த்துப் போரிடுகின்றன என்று கருதுமாறு ஆகாயத்தின் மேற்சென்று பொரத்தொடங்கினர். இதுகண்ட உலகத்தவர் அஞ்சி நிலைகெட்டு ஓடலாயினர்.

19. தூர நெடுவானின் மலையும் சுடரவன் சேய்,
காரினொடு மேருநிகர் காய் சின அரக்கன்
தாருடைய தோள்கள் பலவும் தழுவ நின்றான்;
ஊரினொடு கோள் கதுவு தாதையையும் ஒத்தான். (6996)

(மலைதல்-போர்செய்தல்; சுடரவன்-சூரியன்; சேய்-புதல்வன்; கார்-மேகம்; காய்தல்-கனலுதல்; தார்-மாலை; ஊர்-பரிவேடம்; கோள்-கிரகம்; கதுவுதல்-சூழ்தல்/பற்றுதல்; தாதை-தந்தை/சூரியன்)

மிக நீண்ட தூரத்தில் உள்ள ஆகாயத்தில் போர்புரிகின்ற கதிரவனின் புதல்வனாகிய சுக்கிரீவன், மேகத்தோடு கூடிய மேருமலையினைப் போன்று, கனன்று சினந்து எழும் அரக்கனாகிய இராவணனுடைய மாலைகள் அணியப்பெற்ற பலதோள்களும் தழுவும்படி அசைவின்றி நின்றான். அக்காட்சி கரியநிற ஊர்கோளால் கவ்வப்பட்ட, அவனுடைய தந்தையாகிய சூரியனைப் போன்று தோற்றமளித்தது.

இங்கே இராவணனுக்கு மேகம் நிறத்தாலும் மேருமலை தோற்றத்தாலும் உவமை. 'ஊரினொடு கோள்' என்பது ஊர்கோளைக் குறித்து பரிவேடம் என்னும் பொருள்தரும். சூரியனைப் பற்றும் இராகுபோல் என்பது பொருள். சூரியனை ஊர்கோள் சூழ்வதுபோல இராவணனுடைய பலதோள்கள் சுக்கிரீவனைச் சுற்றிப்பிடித்தன என்க. முற்காலத்தில் சேய் என்ற சொல் செம்மைநிறம் உடையவன் என்று சிவபெருமானின் மகனாகிய முருகப்பெருமானை மட்டும் குறித்தது. பின்னர் காலப் போக்கில் இச்சொல் பொதுவாக மகன் என்னும் பொருளில் கையாளப் படலாயிற்று என்பதறிக. இராவணனால் பற்றப்பட்ட சுக்கிரீவனுக்கு, கருநிற மேகத்தால் சூழப்பட்ட மேருமலை உவமை எனக்கொள்க.

Koviloor Digital Library

20. பொங்கு அமர் விசும்பிடை உடன்று பொரு போழ்தில்
செங்கதிரவன் சிறுவனை, திரள் புயத்தால்,
மங்கல வயங்கு ஒளி மறைத்த வல் அரக்கன்,
வெங்கதிர் கரந்தது ஒரு மேகம் எனல் ஆனான். (6997)

(விசும்பு-ஆகாயம்; பொங்குதல்-மனம்கொதித்தல்; அமர்-போர்; உடன்று-மாறுகொண்டு; சிறுவன்-மகன்; மங்கலம்-நலம்; வயங்குதல்-விளங்குதல்; திரள்-திரண்ட; வல்-வலிய; வெம்-வெய்ய; கரந்தது-மறைத்து நிற்பது)

ஆகாயத்தில் மிகச் சினந்து மாறுபட்டு அவ்விருவரும் போர்செய்கின்ற பொழுது, சிவந்த கிரணங்களையுடைய சூரியனின் மகனாகிய சுக்கிரீவனை, நலம்பெற்று நின்ற வலிய கொடுமையான அரக்கன் இராவணன், தனது திரண்ட இருபது தோள்களால் விளங்குகின்ற மேனியொளியையும் வெப்பமான கதிர்களை உடைய சூரியனையும் மறைத்து நிற்கும் ஒரு கரியமேகம் போன்று தோற்றமளித்தான்.

சுக்கிரீவனுக்குச் சூரியனும், இராவணனுக்குக் கரிய மேகமும் உருவத்தாலும், தொழிலாலும் உவமை எனக்கொள்க. 'மங்கல வயங்கு ஒளி' என்பது, காண்போர் மனத்திற்கும், கண்களுக்கும் விருந்தாய் நலத்துடன் விளங்கும் மேனியின் ஒளி என்ற விரிந்த பொருளைத்தரும்.

21. நூபுர மடந்தையர் கிடந்து அலற, நோனார்
மா புரம் அடங்கலும் இரிந்து அயர, வன்தாள்
மீ புர மடங்கல் என, வெங்கதிரவன் சேய்,
கோபுரம் அடங்க இடிய, தனி குதித்தான். (6998)

(நூபுரம்-சதங்கை/சிலம்பு; மடந்தையர்-மகளிர்; கிடந்து-வீழ்ந்து; நோனார்-பகைவர்; மா-பெரிய; புரம்-உடம்பு; இரிதல்-நிலைகெட்டு ஓடுதல்; அயர்தல்-வருந்துதல்; தாள்-பாதங்கள்; மீ-மேல்பகுதி; மடங்கல்-சிங்கம்; அடங்க-முழுவதும்)

பாதங்களில் சிலம்பு அணியப்பெற்ற அரக்க மகளிரெல்லாம் தரையில் வீழ்ந்து அலறவும், பகைவர்களின் சிறந்த பெரிய இலங்கை நகரத்தில் உள்ளவர்கள் அனைவரும் அச்சத்தால் நிலைகெட்டு ஓடித் தளர்ந்து வருந்தவும், வலிய கால்களையும், உடம்பின் மேற்புரம் சிங்கத்தின் போன்ற உருவும் கொண்ட நரசிங்கமூர்த்தியாகிய திருமாலைப்போல, வெப்பம் மிக்க கிரண்ங்களையுடைய சூரியனுடைய மகனான சுக்கிரீவன், இராவணனை ஆகாயத்திலேயே விட்டுவிட்டுத் தான்மட்டும் தனியாக, அந்தக் கோபுரம் முழுவதும் இடிந்துவிழும்படி ஆகாயத்திலிருந்து தரையில் குதித்தான்.

Koviloor Digital Library

'நூபுரம்' என்ற சொல் சங்கஇலக்கியங்களில் இடம்பெற வில்லை. எனினும் சிலப்பதிகாரத்தில் 'பரியகம், நூபுரம், பாடகம், சதங்கை' எனக் குறிப்பிட்டிருப்பது காணலாம். 'மடந்தையர்' என்பது இங்கு பருவத்தைக் குறிக்காது, பொதுவாக மகளிர் என்ற பொருளில் கையாளப் பட்டிருக்கிறது. 'நோனார்' என்ற சொல்லுக்குப் பகைவர் என்று பொருள் கொண்டாலும், 'பிறர் ஆக்கம் பெறாதவர் என்பதே நேர்பொருள். நோன்றல் என்ற சொல்லுக்குப் பொறுத்தல் என்பது பொருள். இங்கு சுக்கிரீவனுக்கு நரசிங்கமூர்த்தியாகிய திருமால் உவமை.

22. ஒன்றுற விழுந்த உருமைத் தொடர ஓடா,
மின் தெரி எயிற்றின் ஒரு மேகம் விழும் என்ன,
'தின்றிடுவென்' என்று எழுசினத் திறல் அரக்கன்
பின்தொடர வந்து, இருகரத் துணை பிடித்தான். (6999)

(தெரி-நிகர்த்த; எயிறு-பல்; ஒன்றுற-பொருந்தும்படி; உரும்-இடி; ஓடா-ஓடி; துணை-இரண்டு)

''என் ஆற்றல் தெரியாது என்னை எதிர்த்துப் போரிடுகின்ற இவனை இப்பொழுதே கடித்துத் தின்றுவிடுவேன்'' என்று சொல்லி, பொங்கி எழுகின்ற கோபத்தையும், வலிமையையும் உடைய அரக்கனான இராவணன், மின்னலைப்போல் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் பற்களை உடைய ஒரு மேகம், தரையில் பொருந்துமாறு விழுந்ததைப்போல, வானின்று குதித்த சுக்கரீவனை, அந்த இடியைப்பின் தொடர்ந்து ஓடி வருகின்ற மின்னலைப்போல, இராவணன் அவன் அறியாமல் பின்தொடர்ந்து வந்து, தன் இருபெரும் கைகளால், அவனது இரண்டு கைகளையும் அழுத்திப் பிடித்தான்.

'ஓடா' என்பது ஓடி என்ற பொருளைத்தரும். 'மின் தெரி எயிற்றின் ஒரு மேகம்' என்பது இல்பொருள் உவமை. மின்னலைத் தொடர்ந்துதான் இடி விழும். அதுதான்இயற்கை. இங்கே இடிவிழுந்ததன்பின் மின்னல் வீசிற்று என்று கூறுவதாலும் இது இல்பொருள் உவமை எனக்கொள்ளலாம். இராவணனுக்கு மேகமும், சுக்கிரீவனுக்கு இடியும் உவமை.

23. வந்தவனை நின்றவன் வலிந்து, எதிர் மலைந்தான்,
அந்தகனும் அஞ்சிட, நிலத்திடை அரைத்தான்;
எந்திரம் எனக் கடிது எடுத்து, அவன் எறிந்தான்;
கந்துகம் எனக் கடிது எழுந்து, எதிர்கலந்தான். (7000)

(வந்தவன்-இராவணன்; நின்றவன்-சுக்கிரீவன்; மலைதல்-போரிடுதல்; அந்தகன்-கூற்றுவன்/இயமன்; அரைத்தல்-தேய்த்தல்; கடிது-விரைந்து; கந்துகம்-பந்து; கலத்தல்-நெருங்குதல்; எந்திரம்-இயந்திரப் பாவை/மரப்பாவை)

Koviloor Digital Library

அவ்வாறு பின்தொடர்ந்து வந்த இராவணனுடன் அங்கே தரையில் நின்றுகொண்டிருந்த சுக்கிரீவன், மிகவும் வலிமையுடன் போர்புரிந்தான். உயிரைக் கொல்லும் இயமன்கூட அஞ்சி நடுங்கும் வண்ணம், அவனைத் தூக்கித் தரையில் போட்டுத் தேய்த்தான். இராவணனும் சுழலும் எந்தரப் பாவை போல விரைந்து எழுந்து வந்து சுக்கரீவனைத் தூக்கி வீசினான். வீசப்பட்ட பந்து திரும்பி வருவதுபோல சுக்கிரீவனும் மீண்டும் விரைந்து வந்து இராவணனிடம் எதிர்நின்று போர்செய்யத் தலைப்பட்டான்.

'அந்தகன்' என்பது உயிர்களை இறுதியில் கவர்பவன் என்பதால் இயமனுக்குக் காரணப்பெயர்.

24. படிந்தனர், பரந்தனர், பரந்தது ஓர்நெருப்பின்
கொடுஞ்சினம் முதிர்ந்தனர், உரத்தின் மிசை குத்த,
நெடுஞ்சுவர் பிளந்தன; நெரிந்த நிமிர் குன்றம்;
இடிந்தன, தகர்ந்தன, இலங்கை மதில் எங்கும். (7001)

(பரத்தல்-பரவுதல்; உரம்-மார்பு; மிசை-மேல்; நிமிர்-உயர்ந்த; நெரிந்த-நெரிவுறுதல்/சரிதல்/சினத்தல்; தகர்தல்-அழிதல்; முதிர்தல்-முற்றப் பெறுதல்)

இராவணனும் சுக்கிரீவனும் நிலத்தில் படிந்து போரிட்டனர்; எல்லா இடத்திலும், பலதிசைகளிலும் பரவிச்சென்று போரிட்டனர்; நெருப்புப் பரவுவதுபோல மிக்கச் சினம்கொண்டு முற்றிய நிலையில், ஒருவர் மார்பில் ஒருவர் குத்தினர்; அவர்கள் போரிட்டதில் தரை அதிர்ந்தது. அதன் காரணமாகக் கோபுரத்தைச் சுற்றியிருந்த நீண்ட சுவர்கள் இரண்டாகப் பிளந்துபோயின; அங்கே இருந்த உயர்ந்த மலைகள் சரிந்து சிதைந்தன; இலங்கை மாநகரத்தின் மதில் அரண்களெல்லாம் இடிபட்டுத் தகர்ந்து விழுந்தன.

நிலத்தில் ஏற்படுகின்ற அதிர்வினால் நெடுஞ்சுவர் பிளக்கும், நிமிர்குன்றம்நெரியும்; மதில் எல்லாம் இடியும்; தகரும் என்பது ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கூறப்பட்டிருப்பதை எண்ணுக. 'நெடுஞ்சுவர்' என்பது அண்டப்புறத்தே அமைந்த நீண்ட சுவரினையும், நிமிர்குன்றம் என்பது அம்மதிற் சுவற்றின் உள்ளே அமைந்த மலைத் தொடரினையும் குறிக்கும் என்றும் கூறுவதுண்டு.

25. செறிந்து உழல் கறங்கு அனையர் மேனி நிலை தேரார்;
பிறிந்தனர், பொருந்தினர் எனத் தெரிதல் பேணார்;
எறிந்தனர்கள், எய்தினர்கள், இன்னர் என, முன் நின்று
அறிந்திலர், அரக்கரும்; அமர்த்தொழில் அயர்ந்தார். (7002)

(செறிதல்-நெருங்குதல்; கறங்கு-காற்றாடி/பட்டம்; தேர்தல்-தெரிந்து தெளிதல்; அயர்தல்-மனம்சோர்தல்/வருந்துதல்; உழல்தல்-சுழல்தல்)

Koviloor Digital Library

மிகவும் நெருங்கிச் சுழல்கின்ற காற்றாடியைப் போல் சுற்றிச் சுழன்று போர் புரிபவர்களான இராவணனும், சுக்கிரீவனும் அவர்கள் தங்களது உடல்நிலை எப்படி இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள முடியாத வராகவும், எப்பொழுது ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்து சென்றார், எப்பொழுது இருவரும் ஒன்று சேர்ந்து பொருதினர் என்பதையும் தெரிந்து கொள்ளமுடியாதவர்களாகவும், யார்யாரைத்தூக்கி எறிந்தது; யார்மீண்டும் வந்து போர்செய்தனர் என்பதையும் அறியாதவர்கள் போர்செய்து கொண்டிருந்தனர். இதனைக் கண்முன் நின்று காண்பவர்களாகிய அரக்கர்களால் தெளிவாகப் புரிந்துக்கொள்ள முடியாததால் அரக்கர்கள் அவ்விருவரின் போர்த்தொழிலில் சற்று மனம் தளர்ந்தனர்.

மற்போரில் விரைவாகச் செயல்படவேண்டியது மிகவும் இன்றியமை யாததாகும். எனவேதான் அதை நேர்முகமாகக் கண்ணால் கண்டு கொண்டிருந்த அரக்கர்களால் யார், யாரைத் தூக்கி வீசிஎறிந்தனர் என்பதையோ, யார் எப்பொழுது யாரைத் தாக்கினர் என்பதையோ அறிந்துகொள்ள முடியாது திகைத்து நின்றனர் என்றான் என்க. இங்கே வாலிக்கும், சுக்கிரீவனுக்கும் நிகழ்ந்த போரில், அவதாரபுருஷனாகிய இராமபிரானாலேயே யார் வாலி, யார் சுக்கிரீவன் என்று அறிந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டதையும் நினைவுகூர்க. 'பிரிந்தனர்' என்பது எதுகைநோக்கிப் 'பிறிந்தனர்' என நின்றது.

26. சுக்கிரீவனைக் காணாது இராமபிரான் மயங்குதல்

இன்னதோர் தன்மையெய்தும் அளவையின், எழிலிவண்ணன்,
மன்னுயிர் அனைய காதல் துணைவனை வரவு காணான்,
'உன்னிய கருமம் எல்லாம் உன்னொடு முடிந்த, என்னா,
தன்னுணர்வு அழிந்து, சிந்தை அலமந்து, தளர்ந்து, சாய்ந்தான். (7003)

(இன்னது-இத்தகையது; அளவை-சமயம்; எழிலி-மேகம்; மன்-நிலை பெற்ற; அனைய-ஒத்த; காதல்-பேரன்பு; வரவு-வருகை/வருதல்; உன்னிய-கருதிய; கருமம்-செயல்கள்; உணர்வு-அறிவு; அழிதல்-கலங்குதல்; அலமருதல்-சுழல்தல்; தளர்தல்-மெலிதல்/சோர்தல்)

இவ்வாறு இராவணனும் சுக்கிரீவனும் எதிர்த்திசையில் மற்போர் புரிந்துகொண்டிருக்கும் சமயத்தில், மேகம்போன்ற கரிய நிறத்தவனான இராமபிரான், தன்னுடைய நிலைபெற்ற உயிரைப் போன்றவனும், பேரன்பு மிக்கவனுமான துணைவனாகிய சுக்கிரீவன் இன்னும் இராவணனிடமிருந்து மீண்டு வாராதது கண்டு, ''நான் செய்து முடிக்கவேண்டும் என்று எண்ணிக் கருதிய செயல்கள் எல்லாம் உன்னால் முடிந்துபோகும் போலும்!'' என்றுகூறி தன்னுடைய அறிவு ஒடுங்கி, மனக்கலக்கம் கொண்டு, சோர்ந்துபோய்த் தரையில் சாய்ந்தான்.

Koviloor Digital Library

''மன்னுயிர் அனைய காதல் துணைவன்'' என்பது இராமபிரான் சுக்கிரீவனிடம் எவ்வளவு பேரன்பு கொண்டிருந்தான் என்பதை விளக்கும் ஒரு சொற்றொடர் என்பது கருதுக. ''உன்னிய கருமம் எல்லாம்'' என்பது, அறந்தலை நிறுத்தல்; தீயோரை அழித்தல்; தக்கோரின் இடர்துடைத்தல்; தன்னைச் சரணடைந்தாரைக் காத்தல்; சீதாதேவியைச் சுக்கிரீவன் துணைகொண்டு தேடிச்சிறை மீட்டல் என்பனவாம்.

27. "ஒன்றிய உணர்வேஆய ஓர் உயிர்த்துணைவ! உன்னை
இன்றி யான் உளனாய் நின்று, ஒன்று இயற்றுவது இயைவது அன்றால்;
அன்றியும், துயரத்து இட்டாய், அமரரை; அரக்கர்க்கெல்லாம்
வென்றியும் கொடுத்தாய்; என்னைக் கெடுத்தது உன் வெகுளி"
என்றான். (7004)

(ஒன்றிய-ஒத்த; ஓர்-ஒப்பற்ற; உளன்-உயிருடையவன்; நின்று-நிலை பெற்று; ஒன்று-ஒருகாரியம்; இயைவது-இயலாதது; அமரர்-தேவர்கள்; வென்றி-வெற்றி; வெகுளி-கோபம்)

இராமபிரான் சுக்கிரீவனை எண்ணி, ''என் உணர்வும் உன்உணர்வும் ஒன்றுபட்டுப்போன ஒப்பற்ற உயிர்போலும் நண்பனே! நீ இல்லாமல் நான் மட்டும் தனியாய் உயிரோடு நிலைத்து நின்று ஒருகாரியம் செய்வது என்பது நடவாததாகும். அதோடு மட்டுமல்லாமல், உன்னுடைய முன்கோபம் தேவர்களையெல்லாம் துன்பத்திற்கு உள்ளாக்கியது. மற்றும் பகைவர் களாகிய அரக்கர்களுக்கெல்லாம் வெற்றியையும் தந்துவிட்டது; மேலும் உன்மேல் உயிரையே வைத்திருந்த என்னையும் கெடுத்துவிட்டது'' என்று புலம்புகிறான்.

''புணர்ச்சி பழகுதல் வேண்டா; உணர்ச்சிதான் நட்பாம் கிழமை தரும்'' என்ற குறள்-785 இங்கு நினைக்கத்தக்கது. 'என்னைக் கெடுத்தது' என்பது என்னைச் செயலற்றவனாக்கி விட்டது என்று பொருள்படும். 'ஒன்றிய உணர்வு' என்பதற்கு ஒரு அருமையான விளக்கம். 'செல்வக்காலத்தும் அல்லற்காலத்தும் மலர்தலும் கூம்புதலும் இன்றி ஒரு பெற்றியதாக நிகழும் உணர்வு'' என்க.

28. "தெய்வ வெம்படையும், தீரா மாயமும், வல்ல தீயோன்,
கையிடைப் புக்காய்; நீ வேறு எவ்வணம் கடத்தி; காவல்?
வையம் ஓர் ஏழும் பெற்றால், வாழ்வெனே? வாராய் ஆகில்,
உய்வெனே?; தமியனேனுக்கு உயிர்தந்த உதவியோனே!" (7005)

(தமியன்-தனிமையுற்றவன்; தீரா-தவிர்க்கமுடியாத; மாயம்-வஞ்சகச் செயல்கள்; எவ்வணம்-எவ்வண்ணம்/எவ்வாறு; உய்தல்-பிழைத் திருத்தல்; படை-படைக்கலன்கள்/அஸ்திரங்கள்)

Koviloor Digital Library

''என் உயிர்போன்றவளாகிய சீதாதேவியைப் பிரிந்த பின்னர் சிந்தை திகைத்துச் செயலற்றுத் தனிமையுற்றிருந்தவனாகிய எனக்கு, அனுமனை அனுப்பி ''அவள் வலியள், கற்பினள்'' என்று அறியச்செய்து எனக்கு மீண்டும் உயிரைத்தந்து உதவியவனே! சுக்கிரீவ! தெய்வத்தன்மை வாய்ந்த கொடிய படைக்கலன்களையும், அஸ்திரங்களையும், கொண்டு தவிர்க்க முடியாத வஞ்சகச் செயல்களைப் புரிபவனான, ஆற்றல்மிக்க கொடியவனாகிய அரக்கன் இராவணனின் கைகளில் வலியப்போய் சிக்கிக் கொண்டு விட்டாயே? அவனுடைய கட்டுக்காவலில் இருந்து எப்படித் தப்பிப் பிழைத்து உயிருடன் வரப்போகிறாய்? நீ அவ்வாறு வாரா விட்டால், இந்த ஏழு உலகங்களின் அரசாட்சியையும் பெற்றால்கூட நான் நல்வாழ்க்கை வாழ்வேனோ? உயிர் பிழைத்திருப்பேனோ? மாட்டேன்'' என்று புலம்புகிறான் இராமபிரான்.

''சீதாதேவி வேண்டுமா? ஏழு உலகங்களின் அரசாட்சி வேண்டுமா என்றால் இராமபிரான் சீதாதேவிதான் வேண்டும் என்று கூறினான்'' என்று வான்மீகம் கூறுகிறது. 'உய்வெனே, வாழ்வனே' என்பனவற்றில் ஏகாரம் எதிர்மறைப்பொருளது. மாட்டேன் என்ற பொருளைத்தரும்.

29. ''ஒன்றாக நினைய, ஒன்றாய் விளைந்தது, என் கருமம்; அந்தோ!
என்றானும் யானோ வாழேன்; 'நீ இலை' எனவும் கேளேன்;
இன்று ஆய பழியும் நிற்க, நெடுஞ் செருக்களத்தில் என்னைக்
கொன்றாய் நீ அன்றோ? நின்னைக் கொல்லுமேல், குணங்கள் தீயோன்''
(7006)

(அந்தோ-ஐயோ; தீயோன்-கொடியோன்; ஆய-அளவும்; நிற்க-நிலைத்திருக்க; செரு-போர்; கருமம்-செயல்; என்றானும்-ஒருநாளும்)

''தீய குணங்கள் கொண்டவனாகிய கொடிய அரக்கன் இராவணன் உன்னைக் கொன்றுவிட்டால், நான் நினைத்து வந்த செயல் ஒன்றாக இருக்க, அது நிகழாது அதற்கு மாறுபட்ட வேறொரு செயல் நிகழ்ந்தது போலாகிவிடுமோ!ஐயோ! எந்தவிதத்திலும் நான் இனிமேல் உயிர்வாழ்ந்திருக்க மாட்டேன்; நீ இல்லை, இறந்துபோனாய் என்று பிறர் சொல்வதைக்கூட என்னால் கேட்கமுடியாது. அதற்குமுன் இறந்து படுவேன். இன்று உனக்கு உண்டான பழிச்சொற்களும், இதுவரை எனக்க உண்டான பழிச்சொற்களும் இவ்வுலகில் நிலைத்து நிற்க, பெரிய நீண்ட போர்க்களத்தில் என்னைக் கொன்றவனும் நீயே ஆவாய்!'' என்று புலம்புகிறான் இராமபிரான்.

''இன்று ஆய பழி'' என்பது இப்பொழுது உன்னைப் பகைவனிட மிருந்து மீட்கமுடியாத பழி என்றும், இதுவரையிலும் எனக்கு ஏற்பட்ட பழிச்சொற்கள் என்றும் விரிந்த பொருளைத்தரும். அவன் கருதிவந்த காரியம் சீதாதேவியைச் சிறை மீட்பது என்பது. ஆனால் இப்போது

Koviloor Digital Library

நிகழும்செயலோ உற்ற நண்பனை இழக்கும் செயலாக முடிந்துபோனதே எனப் புலம்புகிறான் என்க. ''ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்றாகும்'' என்பது மூதுரை. 'நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும்' என்பது ஒரு வழக்குச்சொல். நாம் நினைத்தது நடவாதபோது இதுபோலப் புலம்புவது மனித இயற்கை. அதற்கு அவதாரபுருஷரும் விலக்கல்ல என்பதை இங்கு உணர்க. சுக்கிரீவன் இறந்தால் இராமபிரான் உயிர்வாழமாட்டான் எனவே ''என்னைக் கொன்றாயும் நீயே'' என்றார் என்க. எண்ணித்துணிந்த செயல் கருமம் எனப்பட்டது ''நினைந்தது ஒன்று, நிகழ்ந்தது ஒன்று'' என்பதும் ஒரு வழக்குச்சொல்லே. 'அந்தோ' என்பது இரக்கம் குறித்த இடைச்சொல்.

30. "இறந்தனை என்ற போதும் இருந்து, யான் அரக்கர் என்பார்
திறம்தனை உலகின் நீக்கி, பின் உயிர் தீர்வெனேனும்
"புறந்தரு பண்பின் ஆய உயிரொடும் பொருந்தினானை
மறந்தனன்; வலியன்" என்பார்; ஆதலால் அதுவும் மாட்டேன்" (7007)

(இருந்து-உயிருடன் வாழ்ந்து; திறம்-இனம்; தீர்தல்-துறத்தல்; புறந்தருதல்-பாதுகாத்தல்; வலியன்-கல்மனத்தான்)

''நீ இறந்துபோய் விட்டாய் என்று தெரிந்தாலும் நான் உடனே இறவாமல் இருந்து, இந்த அரக்கர் குலத்தையெல்லாம் அடியோடு வேரறுத்து, அவர்களை இவ்வுலகினின்றும் அகற்றிவிட்ட பின்னர்தான் நான் என் உயிரை மாய்த்துக்கொள்வேன். அவ்வாறு நான் செய்வேனே யானால் உலகத்தார் ''தன்னைச் சரணடைந்தவர்கள் அல்லற்படுகின்ற காலத்தில் அவர்களைப் பாதுகாப்பதைவிட்டு விட்டு இவன்மட்டும் உயிருடன் இருந்து, சரணடைந்தவர்களை மறந்துவிட்டான். இவன் பெரிய கல்நெஞ்சன்'' என்று என்னைப் பழித்துரைப்பார்கள். எனவே அதனையும் செய்யமாட்டேன்'' என்கிறான் இராமபிரான்.

இங்கே 'புறந்தருதல்' என்ற சொல் பாதுகாத்தல் என்ற பொருளைத் தரும். இந்தச் செல்லை மிக நுட்பமாகக் கையாளவேண்டும். புறம்தருதல் என்று எழுதினால் போரில் புறமுதுகிட்டு ஓடுதல் என்ற பொருளைத் தந்துவிடும் என்பதறிக. இந்தச் சொல்லை ஒரே சொல்லாகக் கூட்டித்தான் எழுதவேண்டும். புறம்தருதல் என்று இருசொற்களாக எழுதக்கூடாது என்பதையும் அறிக.

31. "அழிவது செய்தாய் ஐய! அன்பினால்; அளியத்தேனுக்கு
ஒழிவு அரும் உதவி செய்த உன்னை யான் ஒழிய வாழேன்;
எழுபது வெள்ளம் தன்னின் ஈண்டு ஓர்பேர் எஞ்சாது ஏகி,
செழுநகர் அடையின் அன்றோ, இத்துயர் தீர்வது உண்டோ?" (7008)

Koviloor Digital Library

(அளியத்தேன்-பாதுகாக்கத் தக்கவன்/இரங்கத் தக்கவன்; ஒழிவு அரும்-அழியாத; ஒழிய-இல்லாது; எஞ்சாது-குறையாது; செழுமை-வளமை; தீர்வது-நீங்குவது; ஏகி-மீண்டுசென்று)

இராமபிரான் சுக்கிரீவனை எண்ணி, ''ஐயனே! இரங்கத்தக்க என்னிடம் கொண்ட பேரன்பினால், நீ அழிதற்குரிய காரியத்தைச் செய்துவிட்டாய்; நெஞ்சினின்றும் அழிக்கமுடியாத நீங்காத நிலைபெறுவதற்குரிய, பேருதவியைச் செய்த உன்னை இன்றி- உன்னைப் பிரிந்து நான் உயிர்வாழமாட்டேன். முடியாது; இங்கு இருக்கின்ற எழுபது வெள்ளம் சேனையும் போரில் வெற்றிகண்டு, ஒருவர்கூட குறையாதவாறு, நமது வளமைமிக்க அயோத்தி மாநகருக்குத் திரும்பிச்சென்ற போதும்கூட. நீ ஒருவன் இல்லாத இந்தத் துயரம் நீங்கும் தன்மையதோ? அல்ல'' என்று புலம்புகிறான் இராமபிரான்.

முன்பு சற்றுநேரம் நீர் எடுக்கச்சென்ற இலக்குவன் வரக் காலம் தாழ்த்தியபோதும், இவ்வாறுதான் புலம்பினான். பின்னர் பிரம்மாஸ்திரப் படலத்தில் இலக்குவன் மயக்க முற்றிருக்கும்போதும் இவ்வாறுதான் புலம்பப்போகிறான் என்பதையும் இங்கே நினைவிற் கொள்ளுதல் தகும். 'உண்டோ' என்பதில் ஓகாரம் எதிர்மறைப்பொருளது. இல்லை என்ற பொருளைத்தரும்.

32. சுக்கிரீவன், இராவணனது மணிமுடிகளுடன் இராமபிரானை அடைதல்

என்று அவன் இரங்கும் காலத்து, இருவரும் ஒருவர் தம்மின்
வென்றிலர், தோற்றிலாராய், வெஞ்சமம் விளைக்கும் வேலை,
வன்திறல் அரக்கன் மௌலி மணிகளை வலியால் வாங்கி,
'பொன்றினென் ஆகின், நன்று' என்று அவன் வெள்க, இவனும்
போந்தான். (7009)

(இரங்குதல்-வருந்துதல்; வெஞ்சமம்-கடும்போர்; மௌலி-முடி/மகுடம்; வாங்கி-பறித்துக்கொண்டு; பொன்றுதல்-இறத்தல்; வெள்க-வெட்கமடைய; போந்தான்-வந்துசேர்ந்தான்; மணி-இரத்தினம்)

என்று சுக்கிரீவனை நினைத்து இராமபிரான் இங்கே வருந்திப் புலம்பிக்கொண்டிருந்தபோது, அங்கே சுக்கிரீவனும், இராவணனும் ஒருவரையொருவர் வீழ்த்தி வெற்றிபெறாமலும், ஒருவரிடம் ஒருவர் தோற்றுப்போகாமலும், இருவரும் வெற்றியும் தோல்வியும் இன்றிக் கடுமையான போர்செய்து கொண்டிருந்தனர். அப்பொழுது, வலிமையும் ஆற்றலும் மிக்க அரக்கனாகிய இராவணனின் மகுடத்திலிருந்த இரத்தினக் கற்களை-மாணிக்க மணிகளை சுக்கிரீவன் தன் வலிமையால் பறித் தெடுத்துக் கொண்டு, இராவணன் அவமானப்பட்டு, ''நாம் உயிர்

Koviloor Digital Library

பிழைக்காது இறந்து போயிருந்தால் நன்றாயிருந்திருக்கும்'' என்று தன் மனத்துள் எண்ணி வெட்கம் அடைந்து, நாணிக்குறுகி நிற்க, சுக்கிரீவன் தான் பறித்தெடுத்த மணிகளோடு இராமபிரான் இருக்குமிடம் வந்து சேர்ந்தான்.

இராவணனும் சுக்கிரீவனும் போராற்றலில் சமமானவர்கள் என்பது பெறப்படுகிறது. இவ்வாறே முன்பு அனுமனும் இவனை என்னால் வெல்லமுடியாது, அவனாலும் என்னை வெல்லமுடியாது, என்று இருவரும் ஒத்த போராற்றல் உள்ளவர்கள் என்று கூறியதையும் இங்கு நினைவுகூர்க. சுக்கிரீவன், இராவணனின் மகுடத்திலிருந்த இரத்தினக் கற்களைப் பறித்தெடுத்துக் கொண்டதனால், இராவணன் அவமானப்பட நேர்ந்தது. அதனால் நாணிக்குறுகி, ''இதைவிட நான் இறந்து போயிருந்தாலே நன்றாயிருந்திருக்கும்'' எனக் கருதினான் என்க. இராவணனுடன் தான் போர் செய்ததை இராமபிரானிடம் மெய்ப்பிக்கும் எண்ணத்துடன், அம்மணிகளுடன் சுக்கிரீவன் இராமபிரானை வந்தடைந்தான் என்பதாம். 'மானம் இழந்த பின் வாழாமை முன் இனிதே' என்பது இனியவை நாற்பது. 'உயிர்நீப்பர் மானம் வரின்' என்பது குறள்-968. 'இளிவரின் வாழாத மானம் உடையார்' என்பது குறள்-970. இந்த நிகழ்ச்சி பின்னால் பல இடங்களிலும் பேசப்படுகிறது என்பதையும் இங்கே தெரிந்துகொள்ளுதல் நன்று. போர் முடிவில்லாது போய்க் கொண் டிருந்ததால், தான் இராவணனுடன் போர் புரிந்ததற்கு அடையாளமாக மகுடத்திலிருந்த மாணிக்கக் கற்களைப் பறித்துக்கொண்டு வந்தான் என்பதாம்.

இராவணனது பத்து மகுடங்களையும் கீழே தள்ளிவிட்டான் சுக்கிரீவன் என்றுதான் வான்மீகம் பேசுகிறது. மாணிக்கக் கற்களைப் பறித்து வந்து இராமபிரானிடம் வைத்தான் என்று வான்மீகம் கூறவில்லை.

33. கொழுமணி முடிகள் தோறும் கொண்ட நல்மணியின் கூட்டம்,
அழுது அயர்வுறுகின்றான் தன் அடித்தலம் அதனில் சூட்டி,
தொழுது, அயல் நாணி நின்றான்; தூயவர் இருவரோடும்
எழுபது வெள்ளம் யாக்கைக்கு ஓர் உயிர் எய்திற்று அன்றே? (7010)

(கொழு-செழித்த; கூட்டம்-திரள்; அயர்வுறுதல்-வருந்துதல்; அடித் தலம்-திருவடிகள்; சூட்டி-வைத்து; யாக்கை-உடம்பு; கொழுமை-செழுமை)

நன்கு உயர்ந்த செழிப்பு மிக்க இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற மகுடங்கள் எல்லாவற்றிலிருந்தும் பறித்துக் கொண்டுவரப்பட்ட மாணிக்கங்களின் தொகுதியை, தன்னைக் காணாது அழுது புலம்பி வருந்திக் கொண்டிருக்கும் இராமபிரான் திருவடிகளில் அவற்றையே முடியாக அணிவித்து அவனை வணங்கி, மிகவும் வெட்கப்பட்டுக்

Koviloor Digital Library

கொண்டு பக்கத்தில் வந்து நின்றான் சுக்கிரீவன். சுக்கிரீவனைத் தம் கண்களால் கண்டபின்னர்தான் தூயவர்களான இராமஇலக்குவர்க்கும் உடனிருந்த எழுபது வெள்ளம் வானரச்சேனையினருக்கும் போன உயிர் திரும்பி வந்தது போன்று இருந்தது.

'கொழுமணி' என்பது, முடிகளில் பதிக்கப்பெற்றிருந்த இரத்தினங்களின் சிறப்பைக் குறித்தது என்க. வீரம் பொருந்திய செயலைத்தானே செய்து வந்துருக்கிறான். ஏன் நாணி நிற்க வேண்டும்? கம்பீரமாக நிற்க வேண்டியதுதானே? அவனுக்குள் இருந்த ஆதங்கம் இதில் உள்ள மறை பொருள். பகைவனாகிய இராவணனுடன் போரிட்டு அவனைக்கொன்று, அவன் தலையைக் கொண்டுவந்து இராமபிரானிடம் சமர்ப்பிக்க முடியாமல் போயிற்றே என்பதனால் அவன் நாணி நின்றான் என்பது பொருள். இதற்குப் பெரியவாச்சான்பிள்ளை தரும் விளக்கம் இதைத் தெளிவுபடுத்துகிறது. ''பையல் தலையை இடப்பெறாத நாம், என் சொல்லி முன்னே நிற்பது என்று, பெருமான் அருகே வந்துநின்றான்'' என்கிறார் பெரியவாச்சான் பிள்ளை என்பதும் கருதத்தக்கது. இங்கே எழுபது வெள்ளம் சேனையையும் ஒரு யாக்கையாக உருவகித்தார் எனக்கொள்க. 'யாக்கை' என்ற சொல் உடம்பு என்ற பொருளைத்தரும். 'யாக்கை' என்பது ஏழுவகைத்தாதுக்களாலும், நரம்பு முதலானவற்றையும் கொண்டு கட்டப்பட்டிருப்பதால் உடம்புக்குக் காரணப்பெயர். மக்கள் உடம்பு; மன்னன் உயிர் என்ற சங்ககாலப் பாடலாகிய ''மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்'' என்பதை இங்கே நினைவுகூர்க. போரில் தோற்ற மன்னரின் மகுடத்தை அழித்து வெற்றிகொண்ட வீரர்கள் இவ்வாறு செய்வதை ''காற்கழல் செய்தல்'' என்கிறது பண்டைப் போர்முறை. ''அட்டவர் முடிபுனைந்த பசும் பொன்னின் அடிபொலிய'' என்பது புறநானூறு.

34. இராமபிரான் சுக்கிரீவனைத் தழுவிக்கொள்ளுதல்

என்புஉறக் கிழிந்த புண்ணின் இழிபெரும் குருதியோடும்
புன்புலத்து அரக்கன் தன்னைத் தீண்டிய புன்மைபோக,
அன்பனை அமரப்புல்லி, மஞ்சனம் ஆட்டிவிட்டான்;
தன் பெரு நயனம் என்னும் தாமரை சொரியும் நீரால். (7011)

(அமர-இறுக/விரும்பி; புல்லி-தழுவி; என்பு-எலும்பு; இழிதல்-வழிதல்; குருதி-இரத்தம்; புன்-இழிந்த/அற்பமான; புலம்-புலன்/அறிவு; நயனம்-கண்கள்; மஞ்சனம்-நீராட்டுதல்; புண்-காயங்கள்)

தனக்கு மிகவும் அன்பிற்குரியவனான சுக்கிரீவனை இராமபிரான், நன்கு இறுகத்தழுவி, அற்பமான அரக்கர் குலத்தில் வந்தவனும், இழிவான அறிவும் கொண்ட அரக்கனான இராவணனுடன் போர்செய்யும் போது சுக்கிரீவன் எலும்புவரை ஆழ்ந்து கிழிக்கப்பட்டிருந்த புண்களி

Koviloor Digital Library

லிருந்து பெருகிவரும் இரத்தத்தோடும், தீண்டப்பட்டதனால் உண்டான அசுத்தம் நீங்குமாறு, தன்னுடைய அகன்ற கண்களாகிய செந்தாமரை மலரில் இருந்து பெருகும் கண்ணீர் என்ற நீரால் அவனுக்கு நீராட்டுதல் செய்தான்.

''என்பு உறக்கிழிந்த புண்'' என்பது மற்போரில் அவன் பட்ட ஆழமான, இரத்தம் பெருகும் காயங்களைக் குறிக்கும். இதுபோலவே முன்பு கரனை வெற்றிகண்டு வந்த இராமபிரானுக்கு ஏற்பட்ட புண்களை, சீதாதேவியும், இலக்குவனும் மஞ்சன நீராட்டியசெய்தி கூறப்பட்டதையும் இங்கு நினைவு கூர்க. தீண்டத்தகாத ஒன்றைத் தீண்டி வந்தால் அதற்கு பாவக்கழிவாக நீராடுவதும், மஞ்சன நீராட்டுதலும், பண்டைய வழக்கு. ''தீது நீங்கக் கடலாடியும் மாசுபோகப் புனல் படிந்தும்'' என்பது பட்டினப்பாலை. இது இன்னும் சில பிரிவினரால் கைக்கொள்ளப்பட்டு வருவதையும் காணலாம். அனுமன் இலங்கைக்குக் கொண்டுவந்த கணையாழி, தீண்டத்தகாதவன் ஊருக்கு வந்தது என்பதால் சீதாதேவி தன் கண்ணீரினால் அதற்கு மஞ்சனநீராட்டிய நிகழ்ச்சியையும் இங்கு நினைவுகூர்க. 'அமரப்புல்லுதல்' என்பது ஆரஅமர நிதானமாகத் தழுவினான் என்பதோடு, தானே மிகவும் விரும்பி அணைத்துக் கொண்டான் என்ற பொருளையும்தரும். அமர்தல்-விரும்புதல்; ''மஞ்சனம்'' ஆட்டுதல் என்பது பொதுவாகத் தெய்வத்திரு உருவங்களுக்கு அபிஷேகம் செய்தலைத் திருமஞ்சனம் என்று இன்றும் கூறும் வழக்கம் உண்டு என்பதையும் அறிக. இராமபிரானின் திருக்கண்களைக் கவிஞன் எல்லா இடத்திலும் செந்தாமரை மலருக்கே ஒப்பிட்டுச் சொல்வதைக் காப்பியம் முழுவதும் கற்போர் காணலாம்.

35. "ஈர்கின்றது அன்றே, என்றன் உள்ளத்தை; இங்கும் அங்கும்
போர்கின்றது ஆவி; யாக்கை பெயர்கின்றது இல்லை; பின்னை
தேர்கின்ற சிந்தை அன்றோ திகைத்தனை?" என்று, தெண் நீர்
சோர்கின்ற அருவிக் கண்ணான் துணைவனை நோக்கிச் சொல்லும்.
(7012)

(ஈர்தல்-பிளத்தல்; பேர்தல்-இடம்பெயர்தல்; யாக்கை-உடம்பு; தேர்தல்-ஆராய்ந்து அறிதல்; தெள்-தெளிந்த; துணைவன்-நண்பன்; ஆவி-உயிர்; சிந்தை-மனம்; திகைத்தல்-மயங்குதல்; பின்னை-மேலும்)

சுக்கிரீவனைப் பிரிந்ததனால் உண்டான துயரத்தால் சோர்ந்துபோன இராமபிரானின் கண்களிலிருந்து தெளிந்த கண்ணீர் அருவிபோல் கொட்ட, தன் துணைவனாகிய சுக்கிரீவனைப் பார்த்து, ''நீ என்பொருட்டுப் பிரிந்து சென்றதனால் என் உள்ளம், கூரிய வாட்படையைக் கொண்டு பிளக்கப் பட்டது போலாயிற்று; உயிர் ஓரிடத்தில் நில்லாது இங்கும் அங்கும் சென்று, உனக்கு என்ன ஆகுமோ என்று கவலை கொண்டு தடுமாறுகிறது. எனவே எனது உடம்பு செயலற்றுக் கட்டைபோல் ஆயிற்று என்றாலும் நீ

Koviloor Digital Library

நலந்தீங்குகளை நன்கு ஆராய்ந்து செயல்படுபவனாயிற்றே? இந்தக் காரியத்தில் ஏன் திகைப்படைந்தாய்? திடீரென்று ஏன் இவ்வாறு செயல்பட்டாய்?'' என்றுகூறி, மேலும் கீழ்க்கண்டவாறு கூறலானான் இராமபிரான்.

உயிர் இங்கும் அங்கும் போய் ஊசலாடுகிறது. ஆனால் உடல்மட்டும் செயல்பாடற்று இயக்கமின்றி இருக்கிறது என்கிறான் இராமபிரான். ''என்னுடைய வலிமையைச் சோதிப்பதற்காக ஏழுமராமரங்களையும் ஓரம்பால் துளைக்கச் சொல்லி, அதன்பின்தானே என் ஆற்றல் பற்றி அறிந்துகொண்டு என்னுடன் நட்புச்செய்து கொண்டாய்? அத்தகைய தேர்ந்த அறிவு பெற்ற நீ, சற்றும் ஆலோசியாது, திடீரென்று ஏன் இத்தகைய தீங்கு விளைவிக்கும் செயலைச் செய்து என்னைத் திகைப்புக்கு உள்ளாக்கினாய்? என்று கேட்கிறான் இராமபிரான் என்க. ''தேர்கின்ற சிந்தை'' என்பது, சுக்கிரீவன் காலம் இடம் அறிந்து கடமை ஆற்றுபவன் என்று அவன் இயல்பைச் சிறப்பித்தது என்க. ''ஆவியோ நிலையிற் கலங்கியது; யாக்கை அகத்ததோ புறத்ததோ அறியேன்'' என்பது வில்லிபாரதம். 'ஆவிபெயர்கின்றது, யாக்கை பெயர்கின்றதில்லை' என்ற முரண்தொகை காண்க.

36. "கல்லினும் வலிய தோளாய்! நின்னை அக்கருணை இல்லோன்
கொல்லுதல் செய்தான் ஆகின், கொடுமையால் கொற்றம் பேணி
பல்பெரும் பகழி மாரி வேரோடும் பறிய நூறி,
வெல்லினும், தோற்றேன் யானே அல்லனோ, விளிந்திலாதேன்?" (7013)

(கல்-மலை; கருணை-இரக்கம்; விளிதல்-இறத்தல்; பேணி-பாராட்டி/ மனத்துட்கொண்டு; பகழி-அம்பு; மாரி-மழை; நூறுதல்-அழித்தல்)

''மலையைக் காட்டிலும் திண்ணிய, வலிமையான தோள்களை உடையவனே! சுக்கிரீவ! என் உயிர்த்துணைவனாகிய உன்னை, அந்த இரக்கம் என்ற ஒரு பொருள் இல்லாத அரக்கனாகிய இராவணன், நீ அவனுடன்செய்த மற்போரில் உன்னைக்கொன்றிருப்பானேயானால் நான் உயிருடன் இருந்திருக்க மாட்டேன். அவன் செய்த கடுமையான குற்றத்தை மனத்திற்கொண்டு அவனுக்கு தண்டனையாகப் பலவாகிய அம்பு மழையை அவன்மீது செலுத்தி, அவனைப் பூண்டோடும் அழித்து வென்றிருப்பேன். அவ்வாறு நான் வெற்றி பெற்றிருந்தாலும், எனக்கு உதவி செய்வதற்காக வந்த உன்னைப் பாதுகாக்காது விட்டுவிட்டேன் என்ற குற்றம் என்னை வந்து சேரும் அல்லவா? அதனால் நான் தோற்ற வனாகவே-என்கடமையில் இருந்து தவறியவனாகவே கருதப்படுவேன் அல்லவா?'' என்கிறான் இராமபிரான்.

தனது துணைவனைப் பாதுகாக்க முடியாமற் பெறுகின்ற வெற்றி, ஒரு வெற்றியாகக் கருதப்படமாட்டாது என்பது கருத்து. இராவணனை

Koviloor Digital Library

வேரோடு அழித்துத் தான் வெற்றி பெற்றாலும்கூட, அச்செயல் சுக்கிரீவன் இழப்பை ஈடுசெய்யாது என்று சுக்கிரீவன் பெருமை பேசப்படுவது காண்க.

37. "பெருமையும் வண்மைதானும், பேர்எழில் ஆண்மைதானும்,
ஒருமையின் உணர நோக்கின், பொறையினது ஊற்றம் அன்றே!
அருமையும் அடர்ந்து நின்ற பழியையும், அயர்ந்தாய் போல,
இருமையும் கெடுக்கலுற்றாய்; என் நினைந்து, என் செய்தாய் நீ?" (7014)

(ஒருமை-மனஒருமைப்பாடு; உணர்தல்-சிந்தித்தல்; எழில்-இங்கே எழுச்சி; ஊற்றம்-ஊறிச்சுரப்பன; அடர்ந்து-நெருங்கி; அயர்த்தல்-மறத்தல்; இருமை-இம்மை/மறுமை; வண்மை-வள்ளன்மைப்பண்பு; ஆண்மை-வீரம்)

''ஆரஅமர நிதானித்து, மனத்தை ஒருமுகப்படுத்தி எண்ணிப்பார்த்தால், நாம் இதுவரை பெற்றிருக்கின்ற பெருமையும், வள்ளல்பண்பும், பெருமைமிக்க எழுச்சிக்கான ஆண்மைக்கே உரித்தான வீரமும், இவையெல்லாமும், பொறுமை என்ற ஒரு மலையிலிருந்து பீறிட்டு எழும் மலை ஊற்றுக்கள்தானே? இதை ஏன் மறந்தாய்? நீ எழுபது வெள்ளம் என்ற சேனைக்குத் தலைவன் என்ற அரிய நினைப்பையும், நீ இராவணன் மேல் ஆராயாது திடீரென்று பாய்ந்ததனால் உன்மேல் நெருங்கி வரப்போகின்ற பழிச்சொற்களையும் எண்ணிப்பார்க்கத் தவறிவிட்டாயே? இதனால் இம்மையில் உண்டாகும் புகழையும், மறுமையில் எய்தப்போகும் பேரின்ப வீட்டையும் நற்கதியையும் கெடுத்துக்கொள்ளப் பார்த்தாயே? என்னநினைத்தாய் நீ; என்னகாரியம் செய்துவிட்டாய்! எதையோநினைத்து அதற்கு மாறுபட்ட வேறு ஏதோ ஒன்றைச் செய்துவிட்டாயே?'' என்று அங்கலாய்க்கிறான் இராமபிரான்.

பெருமை, வண்மை, வீரம் ஆகிய நற்பண்புகள் எல்லாமே, பொறுமை என்ற நிலைக்களனிலிருந்து உயரிய ஒரு பண்பிலிருந்து சுரப்பதுதான் என்கிறான் என்க. இராவணன்மேல் சுக்கிரீவன் திடீரெனப் பாய்ந்தது சுக்கிரீவனுக்கு இம்மை, மறுமை ஆகிய இரண்டிலும் பழி விளைவிக்கத் தக்க செயல் என்பது இராமபிரான் கருத்து என்க. ''என் நினைந்து என் செய்தாய்'' என்பது முன்பு வாலி இராமபிரானைப் பார்த்துக் கூறியதையும் இங்கு நினைவுகூர்க. 'பெருமை' என்பது செயற்கரிய செயலைச் செய்தலாகிய பெருந்தன்மையைக் குறிக்கும். 'ஊறிச்சுரப்பன ஊற்றம்' என்க.

38. "இந்நிலை விரைவின் எய்தாது, இத்துணை தாழ்த்தி ஆயின்,
நல்நுதல் சீதையால் என்? ஞாலத்தால் பயன்என்? நம்பீ!
உன்னை யான் தொடர்வல்; என்னைத் தொடரும் இவ்வுலகம்; என்றால்,
பின்னை என், இதனைக்கொண்டு? விளையாடி, பிழைப்ப செய்தாய்!"
(7015)

Koviloor Digital Library

(நம்பி-விரும்பத்தக்கவன்/தோழன்/ஆடவருள் சிறந்தவன்; தாழ்த்துதல்-தாமதித்தல்; நுதல்-நெற்றி; ஞாலம்-உலகம்; தொடர்தல்-பின்பற்றுதல்; பிழைப்ப-தவறான)

''ஆடவருள் சிறந்த, எல்லோராலும் விரும்பத்தக்க தோழனே! நான் உன்னைப் பிரிந்ததனால் ஏற்பட்ட துயரத்தில், நீ இவ்வளவு விரைவில் வாராது, இன்னும் சற்றுநேரம் தாமதித்து இருப்பாயானால், உனக்கு ஏதோ தீங்கு நேர்ந்துவிட்டது என்று உன்னைத் தொடர்ந்து நானும் உயிர் துறந்திருப்பேன்; என்னைத் தொடர்ந்து இலக்குவன் முதலானவர்களும், இவ்வுலகத்தினரும் உயிர்துறந்திருப்பர். இவ்வளவு நடந்த பின்னும் நாம், இவ்வளவு தூரம் படையெடுத்துவந்து நல்ல நெற்றியை உடைய சீதையை மீட்டுவிட்டால்கூட என்னபயன் விளைந்துவிடப்போகிறது? அதன்பிறகு இவ்வுலகத்திற்குத்தான் என்னபயன் விளையும்? சற்று நிதானித்து ஆலோசிக்காமல் பொறுமையின்றி விளையாட்டுத்தனமாக, தவறான காரியத்தைச் செய்துவிட்டு வந்து நிற்கிறாயே?'' என்று அன்பின் மேலீட்டால், இராமபிரான் சுக்கிரீவனைக் கடிந்துரைக்கிறான்.

இன்னும் சிறிது நேரம் கழித்து சுக்கிரீவன் வந்திருந்தால் என்னென்ன நடக்கும் என்பதை இராமபிரான் கூறுகிறான். தன் மனைவி சீதாதேவியை மீட்பதைவிடவும், தண்டகாரண்ய முனிவர்களுக்குக் கொடுத்த வாக்குறுதியைவிடவும், தன் நண்பனான சுக்கிரீவன்மீது இராமபிரான் கொண்டிருந்த ஆழ்ந்த நட்பு இங்கே வெளிப்படுவதை உணர்க. இங்கே திருவாய்மொழி ஈட்டில் நம்பிள்ளை கூறியிருக்கும் ஒரு அருமையான விளக்கம் கேளுங்கள். ''அன்று ஈன்ற கன்றுக்காக, முன்பு ஈன்ற கன்றுகளை முட்டிமோதும் தாய்ப்பசுவைப் போல, சுக்கிரீவனுக்காக சீதாப்பிராட்டியைப் புறக்கணித்தான்'' என்று வியக்கிறார் நம்பிள்ளை.

இங்கே இன்னும் ஒரு செய்தியும் அறிந்து கொள்ளத்தக்கது. முன்பு தண்டகாரண்யத்து முனிவர்கள் வந்து, அரக்கர்களால் உண்டாக்கப்படும் தொல்லைகளைப் பற்றி இராமபிரானிடம் முறையிட்டார்கள். அப்போது இராமபிரான் 'அஞ்சாதீர்கள் அவ்வரக்கர்களைக் கொன்று அறம்தலை நிறுத்துவேன்' என்று வாக்குறுதி கொடுத்தான் என்பது நாம் அறிந்ததே. இந்த இடத்தில் வான்மீகம் ஒரு செய்தியைக் கூறியிருக்கிறது. அந்தச் செய்தியைக்கம்பன் இதுவே தக்க இடம் என்று கருதி இங்கே பயன்படுத்தியிருக்கிறான். இராமபிரான் முனிவர்களுக்கு உறுதி கொடுத்தபோது, சீதாதேவி ''இவ்வரக்கர்கள் நமக்கு எந்தத் துன்பமும் இழைக்கவில்லையே. நமக்குத் துன்பம் தராதவர்களை நாம் அழிப்பது என்பது தருமத்தின் பாற்படுமோ?'' என்று கேட்டதாகவும், அதற்கு இராமபிரான் ''நான் உன்னை இழந்தாலும் இழப்பேன், ஆனால் என்னைத் தஞ்சம் அடைந்தவர்களை என்றும் நான் இழக்கமாட்டேன்'' என்று கூறியதாகவும் வான்மீகம் முன்பே கூறியிருக்கிறது, என்பதும் நாம் அறியத்தக்கச் செய்தி.

Koviloor Digital Library

39. சுக்கிரீவன் வருந்திக் கூறுதல்

''காட்டிலே கழுகின் வேந்தன் செய்தன காட்டமாட்டேன்;
நாட்டிலே குகனார் செய்த நன்மையை நயக்கமாட்டேன்;
கேட்டிலேன் இன்று கண்டும், கிளிமொழி மாதராளை
மீட்டிலேன்; தலைகள் பத்தும் கொணர்ந்திலேன்; வெறுங்கை
வந்தேன்'' (7016)

(நன்மை-நற்செயல்; நயத்தல்-விரும்பிச்செய்தல்; கேடு-துன்பம்)

சுக்கிரீவன் இராமபிரானை நோக்கி, ''இராவணன் காட்டுப் பகுதியில் சீதாதேவியைக் கவர்ந்துகொண்டு செல்லும்போது அதைக்கண்ட கழுகரசனாகிய சடாயு, இராவணனை எதிர்த்துப் போர்செய்து, புகழுக்கு உயிர்கொடுத்தது போன்ற வீரச்செயலை உனக்காகச் செய்து காட்ட முடியாதவனாக இருக்கிறேன். நாட்டிலே சிருங்கிபேரத்து நாவாய் ஓட்டுபவனான குகன் தங்களுக்குச் செய்தன போன்ற நன்மைதரும் காரியங்களையும் உவந்து செய்யமுடியாமல் இருக்கிறேன். இராவணன் கவர்ந்து சென்ற கிளிபோன்று இனிமையாகப் பேசும் சீதைக்கு உற்ற தீங்கினையறிந்தும், அவளை மீட்டுக்கொண்டு வந்து உங்களிடம் சேர்ப்பிக்க முடியாதவன் ஆனேன். இவை எல்லாவற்றையும்விட, இராவணனை நேரில் கண்டு அவனுடன் போர்புரிந்தபோதுகூட அவனுடைய பத்துத்தலைகளையும் ஒருசேரக் கொய்து கொணர்ந்து உங்களிடம் சேர்ப்பிக்க முடியாது, வெறுங்கையுடன் வந்து நிற்கிறேனே!'' என்று தன்னைத்தானே நொந்துகொண்டு பேசுகிறான் சுக்கிரீவன்.

வைணவ மரபில் சடாயுவை 'பெருவுடையார்' என்றும் குகனை 'குகப்பெருமாள்' என்றும் போற்றுவதற்கு அவர்கள் இருவரும் இராமபிரானுக்குச் செய்த கைங்கர்யங்களே காரணம் ஆகும். அதுபோலத் தன்னால் உதவமுடியவில்லையே என்பது சுக்கிரீவனின் ஆதங்கம். உதவிசெய்வதில்-இறைவனுக்குக் கைங்கரியம் செய்வதில் சுமுகமான போட்டி.

இங்கே ஒரு பாடவேறுபாட்டைச் செய்தால் பொருள் சிறக்கும். மூன்றாவது அடியில் ''கேட்டிலேன் இன்று கண்டும்'' என்பதை ''நின்று கண்டும்'' என்று பிரித்துப்பொருள் கூறினால் ஒரு அருமையான நிகழ்ச்சியை அது நம்கண்முன் கொண்டு வரும். கிட்கிந்தையின் மலைமீது சுக்கிரீவன் முதலானவர்கள் அமர்ந்திருந்தபோதுதானே, சீதாதேவி தன் ஆபரணங்களைக் கழற்றி ஒரு துணி முடிப்பில் பொதிந்து அதைக் கீழே வீசி எறிந்தாள்? அதைக் கண்ணாரக் கண்டவன்தானே இந்தச் சுக்கிரீவன்? அந்த முடிப்பை மலையில் நின்று அவை கீழே விழுந்துவிடாமல் கைகளில் தாங்கிக்கொண்டவன்தானே இந்தச் சுக்கிரீவன்? அவ்வாறு யாரோ ஒரு அரக்கன் யாரோ ஒரு பெண்மணியை வானில் கடத்திச் செல்லுகிறான்

Koviloor Digital Library

அவள் உயிருக்குப் போராடுகிறாள்; அவள் நம் உதவி வேண்டித்தான் இந்தத் துணிமுடிப்பைக் கீழே போட்டிருக்கிறாள் என்பதையெல்லாம் அறிந்தவன்தானே இந்தச் சுக்கிரீவன்! அப்பொழுதும் இவற்றை யெல்லாம் கண்டபோதும் நான் ஏதும் உதவிசெய்யாமல் வாளா நின்றுகொண்டு இருந்துவிட்டேனே என்று இப்பொழுது வருந்துகிறான் என்று கூறினால் விளக்கம் இன்னும் சிறக்குமல்லவா?

குகன் தனக்கு முன்பே இராமபிரானின் தமையனாகக் கொள்ளப் பட்டவன். எனவே ஆர்விகுதி சேர்த்து, மரியாதைப் பண்மையாக 'குகனார்' என்றான் என்க. பத்துத்தலைகளையும் கொண்டுவர முடியாத நிலையில், அவனுடைய முடி மணிகளை மட்டும் பறித்துக் கொண்டு வந்தது ஒரு பெரிய வீரதீரச் செயல் அல்ல என்று கருதுகிறான் சுக்கிரீவன். ஆனால் பின்னால் இந்தச் செயலை வீடணன் மிகுதியாகப் பாராட்டப்போகிறான். காரணம் இராவணன் அருகில் அணுகுவது என்பதே மிகவும் கடினம், அவனை நெருங்கி, அவனுடன் போரிட்டு, மகுடங்களைக் கீழேதள்ளி, மணிகளைப் பறித்துவந்தான் என்றால் அது உண்மையிலேயே பெரிய சாதனை என்று வீடணன் - இராவணன் தம்பியே - சுக்ரீவனைப் பாராட்டப்போவதையும் நாம் பார்க்கப் போகிறோம். தன்னடக்கத்தால் சுக்கிரீவன் இவ்வாறு கூறிக்கொண்டான் எனக்கொள்ளல் தகும்.

40. "வன்பகை நிற்க, எங்கள் வானரத் தொழிலுக்கு ஏற்ற,
புன்பகை காட்டும் யானோ புகழ்ப்பகைக்கு ஒருவன் போலாம்?
என்பகை தீர்த்து, என்ஆவி அரசொடும் எனக்குத் தந்த
உன்பகை உனக்குத் தந்தேன்; உயிர் சுமந்து உழலா நின்றேன். (7017)

(வன்-வலிய; நிற்க-ஒருபுறம் இருக்க; புன்-புல்லிய/அற்பமான; தீர்த்து-கொன்று; ஆவி-உயிர்; உழலா-உழன்று/திரிந்து)

''என்னுடைய உடன்பிறந்த பகைவனான வாலியை ஒரே அம்பினால் உயிர்போகச் செய்து, என்னுடைய அரசச்செல்வத்தையும், என் உயிரையும், வாலியிடமிருந்து எனக்கு மீட்டுத் தந்தவன் நீ. அதற்குக் கைம்மாறாக, உன்னுடைய பகைவனான இராவணனை அழித்து ஒழித்து, உன்னுடைய மனைவியாகிய சீதாதேவியை உன்னிடம் மீட்டுத்தர வேண்டிய பொறுப்பு என்னுடையதாக இருக்க, அதனைச் செய்ய இயலாமல் உன்னுடைய பகைவனான இராவணனை நானே அழிக்காமல் நீயே எதிர்த்துப் போரிட்டுக் கொன்றுவிடுமாறு உன்னிடமே தந்து இப்பூமிக்கு உடலை ஒரு பாரமாகக் கருதிச் சுமந்துகொண்டு அலைந்து திரிகின்றேன். செய்யவேண்டிய நல்லகாரியத்தை, அதற்குரிய காலத்தில், செய்ய வேண்டியவர்களுக்காகச் செய்யாமல், வீணாக உயிரைச் சுமந்துகொண்டு வாழ்கிறேன். உன்னுடைய பெரியவலிமையான பகைவன் இராவணனை அழிக்காதது ஒரு பக்கம் இருக்க, எங்களுடைய குரக்கினத்திற்கே இயல்பாக உள்ள சிறு சிறு அற்பமான காரியங்களை-

Koviloor Digital Library

உனக்குப் புகழ்தராத-கேடு விளைவிக்கின்ற செயல்களைச் செய்து, உன்னுடைய அழியாப் புகழுக்குக் களங்கம் உண்டாக்கி விடுவேன் போலும் என்றே அஞ்சுகிறேன்'' என்று தன் கையறுநிலை பற்றிக் கலங்கிக் கூறுகிறான் சுக்கிரீவன்.

'வன்பகை' என்பது யாராலும் அழிக்கமுடியாத இராவணன் என்ற பெரும் பகை என்க. முன்பு அனுமன் அழிக்க எண்ணினான். தன் பணியல்ல; வேண்டாம் என்று விட்டுவிட்டான், பின்பு சீதாதேவி அழிக்க எண்ணினாள், வில்லின் ஆற்றல் மாசுறும் என்று வீசினாள். இப்போது சுக்கிரீவன் அழிக்க எண்ணினான், இயலாமற்போயிற்று என்பதையும் தொடர்ச்சியாக நினைவிற் கொள்க. ''வானரத்தொழில்'' என்பது ஒரே நிலையில் உறுதியாக நில்லாது, ஊசல்போலப் போவதும் வருவதும் போலவும், மரத்திற்குமரம் தாவும் இயல்புபோலவும், நிலையற்ற தன்மை எனக்கொள்க. ஆலோசிக்காமல் இம்மலையிலிருந்து அம்மலைக்குப் பாய்ந்து சென்று, தன் குரங்குப் புத்தியைக் காட்டிவிட்டதால் இராமபிரான் புகழுக்கு ஊறுவிளைவித்து விட்டோமோ என்று வருந்துகிறான் சுக்கிரீவன் என்பதாம்.

41. "செம்புக்கும் சிவந்த செங்கண்திசை நிலைக்களிற்றின் சீற்றக்
கொம்புக்கும் குறைந்த அன்றே, என்னுடைக் குரக்குப் புன்தோள்?
"அம்புக்கு முன்னம் சென்று, உன் அரும் பகை முடிப்பல்" என்று,
வெம்புற்ற மனமும், யானும், தீதின்றி மீள வந்தேன்" (7018)

(வெம்புதல்-கொதித்தெழுதல்/புழுங்குதல்; தீது-இடையூறு; மீள-திரும்ப; புன்-அற்பமான; கொம்பு-தந்தங்கள்; குறைதல்-சிறுமையடைதல்/தாழ்வுறுதல்; செம்பு-தாமிரம்; தோள்-கைகள்)

தாமிரம் என்ற சிவந்த உலோகத்தைக் காட்டிலும் சினத்தால் சிவந்த கண்களையுடைய எட்டுத்திசைகளிலும் நிலைத்து நின்று காவல்புரிகின்ற, சீற்றத்தால் விளங்குகின்ற திசையானைகளின் கொம்புகளாகிய தந்தங்களுக்கு முன் குரங்காகிய என்னுடைய அற்பமான தோள்கள் வலிமையில் சிதைந்து குறைந்துபோய் விட்டனவே? எனினும் உன்னுடைய அம்பாகிய இராமபாணத்திற்கு முன்னால்சென்று, அழித்தற்கரிய உன்னுடைய அரிய பகைவனான இராவணனை அழித்தொழிப்பேன் என்று உள்மனத்துள் எண்ணி எனக்கு எந்தவித இடையூறு இன்றியும், அவனுக்கு எந்தவிதத் தீங்கும் இன்றியும் பத்திரமாக மீண்டும் உன்னிடம் வந்து சேர்ந்து விட்டேன்'' என்று தன் இயலாமை பற்றி அங்கலாய்க்கிறான் சுக்கிரீவன்.

முன்பு திக்கு விஜயகாலத்தில் திசையானைகளுடன் போரிட்டு அவற்றினுடைய தந்தங்கள் பொருந்தியிருக்கின்ற- மார்பையுடையவன் இராவணன். இப்போது அந்த யானைகளின் சீற்றத்திற்கு முன் என்னுடைய சீற்றம் தாழ்ந்து குறைந்துபோய் விட்டதே! என்னால் ஒன்றும் செய்ய

Koviloor Digital Library

முடியாமல் திரும்பி வந்துவிட்டேனே! என்று வருந்திக் கூறுகிறான் சுக்கிரீவன் என்பதாம். 'செங்கண்' என்றாலே சிவந்த கண்கள் என்று பொருள்; சிவந்த செங்கண் என்றால் மேலும் சிவந்த கண்கள் என்று பொருள். 'செம்புக்கும் சிவந்த செங்கண்' என்பது யானையின் மதச் செருக்கால் சிவந்த கண்களின் நிலையை உணர்த்தக் கூறப்பட்டது எனக் கொள்க. 'தோள்' என்ற சொல்லுக்கு இங்கே கைகள் என்பது பொருள்.

42. "நூல்வலி காட்டும் சிந்தை நும்பெரும் நூதன் வெம்போர்
வேல்வலி காட்டுவார்க்கும், வில்வலி காட்டுவார்க்கும்,
வால்வலி காட்டிப் போந்த வளநகர் புக்கு, மற்றுஎன்
கால்வலி காட்டிப் போந்தேன்; கைவலிக்கு அவதி உண்டோ?" (7019)

(வலி-வல்லமை; சிந்தை-தெளிந்தமனம்; பெரும்-பெருமைவாய்ந்த; காட்டுதல்-புலப்படுத்துதல்; போந்த-மீண்டுவந்த; அவதி-எல்லை)

''நல்ல சிறந்த நூல்களைக் கசடறக்கற்று உணர்ந்த நவவியாக்ரணப் பண்டிதனும் தெளிந்த மனத்தில் தோன்றும் சொல்வன்மை மிக்க உன்னுடைய பெருமைக்குரிய தூதுவனுமாகிய அனுமன், இலங்கை நகருக்குள் புகுந்து, கொடியபோர் நிகழ்த்தி, அங்கே வாள்வலியும், வில்வலியும் புலப்படுமாறு எடுத்துக்காட்டிப் போர்புரிந்து அரக்கர்களை யெல்லாம் கொன்று குவித்து, இலங்கை நகரத்திற்கே' எரியூட்டி, தன்னுடைய வாலின் வலிமையை அரக்கர்கள் நன்கு உணருமாறு காட்டி மீண்டுவந்தான். அதே வளமையான நகரமான இலங்கைப் புறநகருக்குள் நானும் புகுந்து, இராவணனுடன் போரிட்டு அவர்களிடம் அகப்பட்டுக் கொள்ளாமல், என்னுடைய காலின் வலிமையைக் காட்டி, ஒரே பாய்ச்சலில் பாய்ந்து, இங்கு வந்துவிட்டேன். என்னுடைய காலின் வலிமையே இத்தகையதென்றால், என் கைகளின் வலிமைக்கு ஒரு அளவு கூறமுடியுமோ?'' என்று கூறுகிறான் சுக்கிரீவன்.

அனுமன் இராமதூதன் என்பதையும், சிறந்த நூற்கல்வி பெற்றவன் என்பதையும் சுக்கிரீவன் நிறுவுகிறான். அனுமன் இலங்கையில் போர்செய்து, இலங்கைக்கு எரியூட்டி, அரக்கர்களைக் கொன்று மீண்டு வந்ததுபோல் தன்னால் செய்ய முடியவில்லை என்ற போதிலும், என்னுடைய காலின் வலிமையை அவர்கள் நன்கு உணரும்படி, அவர்கள் நகருக்குள் புகுந்து, எந்தத்தீங்கும் இன்றி அவர்களிடம் சிக்கிக் கொள்ளாமல் தப்பித்து வந்து விட்டேன் என்கிறான் சுக்கிரீவன் என்க. குரங்குகளுக்குத்தங்கள் வாலும், காலும், கைகளுமே முப்படைகள் ஆகும் என்க. இங்கே ''நும்பெருந்தூதன்'' என்று சுக்கிரீவன் அனுமனைக் குறிப்பிடுவதை உணர்க. ''நூலாருள் நூல்வல்லன் ஆகுதல், வேலாருள் வென்றி வினையுரைப்பான் பண்பு'' எனத்தூதுவன் இலக்கணத்தைக் கூறுகின்ற குறள்-683 இங்கு நினைவில் கொள்ளத்தகும். இராமதூதனாகிய

Koviloor Digital Library

அனுமனை உயர்த்தியும் தன்னைத் தாழ்த்தியும் கூறிக்கொள்ளுகிறான் சுக்கிரீவன் என்பதறிக.

43. சுக்கிரீவன் செய்கையை வீடணன் பாராட்டுதல்

இன்னன பலவும் பன்னி, இறைஞ்சிய முடியன் நாணி,
மன்னவர் மன்னன் முன்னர், வானர மன்னன் நிற்ப
அன்னவன் தன்னை நோக்கி, அழகனை நோக்கி, ஆழி
மின்னென விளங்கும் பைம்பூண் வீடணன், விளம்பலுற்றான். (7020)

(இன்னன-இத்தன்மையனவான; பன்னி-திரும்பக்கூறி; இறைஞ்சிய-வணங்கிய; முடி-தலை; ஆழி-கடல்; மின்-மின்னற்கொடி; பைம்-பசிய; பூண்-ஆபரணங்கள்; அன்னவன்-சுக்கிரீவன்; அழகன்-இராமபிரான்; விளம்புதல்-கூறுதல்)

இவ்வாறு பலவற்றையும் குரக்கினத்தரசனாகிய சுக்கிரீவன் சொல்லிக் கொண்டு, தன்தலையால் வேந்தர்வேந்தனாகிய இராமபிரானை வணங்கி, வெட்கத்துடன் அவன்முன் நின்றிருக்கவும், கடலில் தோன்றும் மின்னற்கொடி போன்று ஒளிவிட்டு விளங்கும் பசியபொன்னாலான ஆபரணங்களையணிந்த வீடணன், அங்கே நின்றிருந்த சுக்கிரீவனை நோக்கி, அங்கிருந்த அழகு நிரம்பப்பெற்ற இராமபிரானும் அறிந்து கொள்ளும் வண்ணம், அவனையும் பார்த்துப் பின்வருமாறு பேசலுற்றான்.

'இறைஞ்சிய முடி' என்பது வணங்கியதலை என்பதோடு, நாணத்தால் குனிந்ததலை என்ற பொருளையும் தரும். இராமபிரானை 'மன்னவர் மன்னன்' என்றும், சுக்கிரீவனை மன்னன் என்றும் வேறுபடுத்திக்கூறிய கவிஞனின் கவித்திறம் நோக்குக. இராமபிரானை முன்பு அனுமன் கூற்றாகக் கூறியதுபோல இங்கேயும் 'அழகன்' என்றுமட்டும் கூறி நிறுத்தியிருப்பதையும் உணர்க.

கடலில் மின்னற்கொடி தோன்றாது; தோன்றினால் எப்படியிருக்குமோ அப்படி ஒளிபடைத்து விளங்கும் ஆபரணங்கள் என்றதனால் இப்பாடல் இல்பொருள் உவமை அணியின் பாற்பட்டதாகும். வீடணன் அடைக்கலம் கருதி இராமபிரானிடம் வந்தபோது எந்த அணிகலன்கள் அணிந்துவந்தான் என்பது கூறப்படவில்லை. ஆனால் முன்பாடலில் வீரக்கழல் அணிந்து வந்தவன் என்று கூறப்பட்டிருக்கிறது. எனவே இங்கே 'பைம்பூண்' என்பதற்கு வீரர்க்கு இன்றியமையாத வீரக்கழல் என்று மட்டுமே பொருள் கொள்ளவேண்டும். வீடணனது கரிய மேனிக்குக் கடலும், வீரக்கழலுக்கு மின்னற்கொடியும் உவமைகள்.

Koviloor Digital Library

44. "வாங்கிய மணிகள், அன்னான் தலைமிசை மௌலிமேலே
ஓங்கிய அல்லவோ? மற்று, இனி அப்பால் உயர்ந்தது உண்டோ?
தீங்கினன் சிரத்தின் மேலும், உயிரினும், சீரிது அம்மா!
வீங்கிய புகழையெல்லாம் வேரொடும் வாங்கி விட்டாய்!" (7021)

(வாங்கிய-பறித்துக்கொண்டு வந்த; மௌலி-மகுடம்; ஓங்கிய-உயர்ச்சிபெற்ற; மற்று-இனி; சீரிது-மிகவும் சிறப்புடையது; வீங்கிய-பெருகிய; வாங்குதல்-களைதல்; மிசை-மேலே)

வீடணன் சுக்கிரீவனைப் பார்த்து, ''நீ பறித்துக்கொண்டு வந்த இரத்தினங்கள் எல்லாம் அந்த இராவணனுடைய தலையின்மேல் அணிந் திருக்கும், மகுடத்தின்மேல் அலங்கரிக்கப்பெற்று உயர்ந்த ஒளிவீசும் மாணிக்கக் கற்கள் அல்லவா? எனவே, இனி இதைவிட உயர்ந்தது என்பது ஒன்று உண்டா? கிடையாது. தீமையே வடிவானவனான இராவணனின் தலையைக் காட்டிலும், அவனது உயிரைக்காட்டிலும், நீ பறித்துவந்த மாணிக்கங்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை. இவற்றை நீ பறித்து வந்ததனால் அவனுக்கு உலகெங்கும் பரவியுள்ள அவன் புகழ் அனைத்தையும் நீ வேரோடும் களைந்து எறிந்துவிட்டாய்'' என்று வியந்து பாராட்டுகிறான்.

''தலைமிசை, மௌலி மேலே, ஓங்கிய'' என்ற அடைமொழிகள் எல்லாம் அந்த இரத்தினக் கற்களின் சிறப்பைப் புலப்படுத்துவதற்காக என்க. இந்த உன் செய்கையால் அவன் புகழ் அடியோடு அழிந்துபோனது என்கிறான் வீடணன். இராவணன் உடம்பில் சிறந்தது பத்துத்தலைகள், தலையில் சிறந்து ஒளிவீசுவது மகுடம்; மகுடத்தில் மேல் ஒளிவீசுவது மணிகள். அதனையே நீ பறித்து வந்ததனால் அவன் புகழ் அடியோடு மங்கிப்போகும் என்கிறான் வீடணன் என்க. இது அவனுடைய உயிரையே பறிப்பதற்கு மேலானதாகும் என்று பாராட்டுகிறான் வீடணன். 'அம்மா!' என்பது வியப்புக் குறித்த இடைச்சொல்.

45. "பாரகம் சுமந்த பாம்பின் பணாமணி பறிக்க வேண்டின்,
வார்கழல் காலினாலே கல்ல வல்லவனை முன்னா,
தார்கெழு மௌலி பத்தின் தனிமணி வலிதின் தந்த
வீரதை, விடைவலோற்கும் முடியுமோ? வேறும் உண்டோ?" (7022)

(பாரகம்-பூமிப்பரப்பு; பணம்-பாம்பின் படம்; மணி-மாணிக்கம்; பறித்தல்-வலிதில் கொள்ளுதல்; வேண்டுதல்-விரும்புதல்; வார்-நீண்ட; கல்லுதல்-அகழ்ந்து எடுத்தல்; முன்னா-முன்னி/முற்பட்டு; தார்-மாலைகள்; கெழுதல்-அணிதல்/பொருந்துதல்; மௌலி-மகுடம்/கிரீடம்; தனிமணி-நாயகமணி/ஒப்பற்ற மணிகள்; வீரதை-வீரச்செயல்; விடை-காளை/ரிஷபம்; விடைவலோன்-சிவபெருமான்; கழல்-வீரகண்டை)

Koviloor Digital Library

''இந்தப் பரந்த பூமிப்பரப்பைத் தாங்கிக் கொண்டிருக்கும் ஆதி சேடனாகிய பாம்பின் படத்தில் உள்ள நாகரத்தினத்தை வலிதில் பறித்துவர விரும்பினால், தனது நீண்ட வீரகண்டை அணிந்த கால்களினாலேயே அதனை அகழ்ந்து எடுத்துக்கொண்டு வரும் வலிமைபடைத்த இராவணனை முற்பட்டுச் சென்று, அவன் அணிந்திருக்கின்ற மாலைகள் பொருந்திய மகுடமணிந்த பத்துத்தலைகளினின்றும், அவற்றில் விளங்கும் ஒப்பற்ற நாயக மணிகளை, வலிதில் பற்றிக் கொண்டுவந்த உன்னுடைய இந்த வீரச்செயல், ரிஷபத்தை வாகனமாகக் கொண்டு ஊர்ந்துசெல்லும் சிவபெருமானாலும் கூட செய்து முடிக்கக்கூடிய செயலாகுமோ? இதனின்றும் வேறு சிறப்பான செயல்கள் ஏதும் உண்டோ?'' என்று வீடணன் சுக்கிரீவனின் வீரத்தைப் பாராட்டுகிறான்.

'பாரகம் சுமந்த பாம்பு' என்பது இவ்வுலகத்தைத் தன் ஆயிரம் பணாமுடிகளால் தாங்கிக் கொண்டிருக்கும் ஆதிசேஷனைக் குறிக்கும். 'பணாமணி' என்பது அந்தப் பாம்பின் நடு நாயகமாக உச்சியில் விளங்கும். அதன் ஜீவனான ஜீவரத்தினத்தை-நாகரத்தினத்தை குறிக்கும். ''சகஸ்ரபணாமணி'' என்பது வேதம். இதன் பேரொளிதான் பாம்பு இரவில் இரைதேடப் போகும்போது ஒளிதந்து, அது திரும்பிவரும் வரை பாது காக்கும் என்பர். இந்நாகரத்தினம் தொலைந்துவிட்டால், கண்ணொளி இழந்து பாம்பு தன் உயிரைவிட்டுவிடும் என்றும் கூறுவதுண்டு. அத்தகைய சிறப்பு மிக்க நாகரத்தினத்தைப் பறித்துக் கொண்டுவர வேண்டு மென்றாலும், இராவணன் தன் கைகளைத் தவிர்த்து, தன் கால்களின் வலிமையினாலேயே பிடுங்கிக்கொண்டு வந்துவிடும் ஒப்பற்ற ஆற்றல்பெற்றவன். அத்தகைய இராவணனை நெருங்கி, போரிட்டு, அவனை வெட்கப்படவைத்து, அவன் மணிமகுடங்களைத் தரையில் விழச்செய்து, அவற்றினின்றும் ஒப்பற்ற நாயக மணிகளைப் பறித்து வந்திருப்பது என்பது சாதாரணமான செயலல்ல; உலகை அழிக்கின்ற சிவபெருமானாலும் செய்துமுடிக்க முடியாத செயல். இதனின்றும் சிறப்பு மிக்க வீரச்செயல் வேறுஏதும் இருக்க முடியாது என்று சுக்கிரீவன் வீரப்பாட்டைப் புகழ்ந்து பாராட்டுகிறான் வீடணன் என்பதாம்.

46. ''கருமணி கண்டத்தான் தன் சென்னியில் கறைவெண் திங்கள்,
பருமணி வண்ணன் மார்பின் செம்மணி, பறித்திட்டாலும்,
தருமணி இமைக்கும் தோளாய்! தசமுகன் முடியில் தைத்த
திருமணி பறித்துத் தந்த வென்றியே சீரிது அன்றோ?'' (7023)

(இமைக்கும்-ஒளிரும்; கருமை-நீலம்; கண்டம்-மிடறு/கழுத்து; சென்னி-தலை/முடி; கறை-களங்கம்; வெண்-வெள்ளிய; திங்கள்-பிறைச் சந்திரன்; பரு-பருத்த/முதிர்ந்த; வண்ணம்-நிறம்; செம்மணி-கௌத்துவ மணி; தசமுகன்-பத்துத்தலையினன்/இராவணன்; முடி-கிரீடம்; தைத்த-பதிக்கப்பெற்ற; திரு-அழகிய/சிறந்த; மணி-நாயகமணிகள்; தந்த-

Koviloor Digital Library

கொண்டுவந்த; வென்றி-வெற்றி; சீரிது-சிறப்புடையது; தருதல்-புனைதல்; பறித்தல்-கைப்பற்றுதல்)

''நன்கு அழகுறப் புனைந்துள்ள, ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் மணிமாலையணிந்த தோள்களை உடையவனே! சுக்கிரீவ! நீலமணி நிறம் போன்ற மிடற்றினையுடைய நஞ்சுண்ட கண்டனாகிய சிவபெருமானின் முடியில் சூடியிருக்கும் களங்கம் நிறைந்த வெள்ளிய சந்திரனைக் கைப்பற்றிக்கொண்டு வருவதைக்காட்டிலும், மிகுந்த ஒளிவீசும் கவுத்துவ மணியைத்தன் மார்பிலே பூண்டிருக்கும் நீலவண்ணனாகிய திருமாலினிட மிருந்து அந்தச் செம்மையான சிவந்த கவுத்துவமணியைப் பறித்துக் கொண்டு வருவதைக் காட்டிலும், இந்தப் பத்துத் தலைகளையுடைய அரக்கனான இராவணனின் மகுடங்களில் பதிக்கப்பட்டிருந்த அழகிய சிறந்த நாயகமணிக்கற்களைப் பறித்துக்கொண்டு வந்தாய்! பார்! அந்த வீரச்செயல்தான் யாவராலும் வியந்து பாராட்டத்தக்க, வெற்றிமிகுந்த சிறப்புடையது'' என்கிறான் வீடணன்.

சிவபெருமான் முடியில் இருக்கும் சந்திரனும், திருமாலின் மார்பில் இருக்கும் கவுத்துவமணியும் அவர்கள் சூடிக்கொண்டிருப்பதுதான்; யார்வேண்டுமானாலும் எளிதாக எடுத்துக் கொண்டு வந்துவிடலாம். ஆனால் இராவணனுடைய மகுடத்தில் இருக்கும் மாணிக்கக்கற்கள், மகுடத்தில் நன்கு பதிக்கப்பட்டவை. அவற்றைப் பறித்து வருவது என்பது மிக்க சிறப்பான வெற்றிச்செயலாகும் என்று மனம் உவந்து பாராட்டு கிறான் வீடணன் என்க. 'கருமணி கண்டத்தான்' சிவபெருமான்; 'பருமணி வண்ணன் திருமால்', 'தருமணி இமைக்கும் தோளான்' சுக்கிரீவன்; 'தசமுகன்'-இராவணன்; 'அன்றோ' என்பதில் ஓகாரம் வினாப்பொருளது.

47. ''தொடிமணி இமைக்கும் தோளாய்! சொல் இனி வேறும் உண்டோ?
வடிமணி வயிர ஒள்வாள் சிவன்வயின் வாங்கிக் கொண்டான்,
முடிமணி பறித்திட்டாயோ? இவன் இனி முடிக்கும் வென்றிக்கு
அடிமணி இட்டாய் அன்றே! அரிக்குலத்து அரச!'' என்றான். (7024)

(தொடி-வளையல்/வீரவளையல்; இமைத்தல்-ஒளிர்தல்; அரிக்குலம்-வானரஇனம்; வடி-ஆராய்ந்து எடுக்கப்பட்ட; ஒள்-ஒளிபொருந்திய; இவன்-இராமபிரான்; முடித்தல்-நிலைநாட்டுதல்; அடி-கால்கோள்; சொல்-புகழ்; வாங்குதல்-பெறுதல்)

''குரக்கினத்தின் தலைவனே! தோள்வளையில் பதித்திருக்கும் இரத்தினங்கள் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் தோள்களை உடையவனே! சுக்கிரீவ! ஆராய்ந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த மாணிக்கங்கள் பதிக்கப் பெற்ற, ஒளியிற் சிறந்த, வயிரவாளாகிய 'சந்திரகாசம்' என்னும் வாட் படையைச் சிவபெருமானிடமிருந்து, தனது அரிய தவத்தின் பயனாகப் பெற்ற இந்த இராவணனின், மகுடங்களில் பதிக்கப் பெற்றிருக்கின்ற

Koviloor Digital Library

மாணிக்கக் கற்களை மட்டுமா நீ பறித்திருக்கிறாய்? இராமபிரான் இனிமேல் செய்து முடிக்க இருக்கின்ற, இராவண வதத்தின் வெற்றி என்னும் மாளிகைக்குக் கால்கோள் செய்வதைப் போன்று அஸ்திவாரத்தில் செலுத்துவதற்கான நவரனத்தினங்களையல்லவா பறித்து வந்திருக் கிறாய்? இதைவிடப் புகழ்மிகுந்த ஒரு வீரச்செயல் இனி என்ன இருக்கிறது?'' எனப் பாராட்டி முடிக்கிறான் வீடணன்.

'தொடி' என்பது பொதுவாக வளையலைக் குறித்தாலும் இங்கே தோளணியைக் குறித்தது எனக்கொள்க. 'சொல்' என்ற சொல்லுக்கே, புகழ் என்ற ஒரு பொருளும் உண்டு என்பதறிக. இராவணன் இயற்றிய அரிய தவத்தினைக் கண்டு சிவபெருமான் அவனுக்குச் சந்திரகாசம் என்னும் வாளைத் தந்தருளினான் என்பதை இகழ்ச்சியாக, ''வடிமணி வயிர ஒள்வாள்' சிவன்வயின் வாங்கிக்கொண்டான்' என்றான் என்க. தந்தருளு வதற்கும், வாங்கிக் கொள்வதற்கும் உள்ள வேறுபாடு கருதுக. 'அடிமணி' என்பது, இப்போதும் ஒரு வீட்டைக் கட்டும்போதோ கோவிலுக்கு குடமுழுக்குச் செய்யும் போதோ, கடைகாலுக்குள் அடித்தளத்தில் இடும் நவதானியங்கள், நவரத்தினங்களைப் போட்டுப் பிறகு மேம்பகுதிகளைக் கட்ட ஆரம்பிப்பதுபோல, இராவணவதம் என்ற வெற்றி மாளிகைக்கு, சுக்கிரீவனின் இந்த வீரச்செயலை ஒப்பிட்டுப் புகழ்ந்து பாராட்டுகிறான் என்பதாம். செய்த செயல் ஒன்றின் உண்மையான காரணத்தை மறுத்து, அதற்கே வேறுஒரு பொருளைக் கூறுவது அனுவதிஅணி எனப்படும்.

48. இராமபிரானும் சுக்கிரீவனைப் பாராட்டுதல்

''வென்றி அன்று என்றும், வென்றி வீரர்க்கு விளம்பத்தக்க
நன்றி அன்று என்றும், அன்று; நானிலம் எயிற்றில் கொண்ட
பன்றி அன்று ஆகின், ஈது ஆர் இயற்றுவார் பரிவின்?'' என்னா,
'இன்று இது வெற்றி' என்று என்று, இராமனும் இரங்கிச் சொன்னான்.
(7025)

(விளம்புதல்-புகழுதல்; நானிலம்-பூமி; எயிறு-பற்கள்/தந்தங்கள்; பன்றி-வராகமூர்த்தி/திருமால்; பரிவு-அன்பு; என்றுஎன்று-பலமுறை)

இவ்வாறு வீடணன் சுக்கிரீவனின் செய்கையைப் பெரிய வெற்றி என்று புகழ்ந்து பாராட்டியதைக் கேட்டு மகிழ்ந்த பின்னர், இராமபிரான் சுக்கிரீவனை நோக்கி, ''இதுஒரு பெரியவெற்றி அல்ல; வெற்றியை விளை விக்கும் சுத்த வீரர்க்கு இது புகழத்தக்கதும், புகழ்ந்து சொல்லிக்கொள்ளத் தக்கதும், நன்றி தெரிவிப்பதும் ஆகிய செயலும் அல்ல என்று நான் கருத வில்லை; எனினும் முன்பு இந்தப் பூமியைத் தன்னுடைய தந்தங்களாகிய பற்களின் நுனியில் ஏந்திக்கொண்டு வந்து நிலைநிறுத்திய வராக மூர்த்தியாகிய திருமாலைத் தவிர, இத்தகைய வீரம் மிகுந்த வெற்றிச் செயலை வேறுயாரால் இவ்வளவு விரைவாகவும், அன்புடனும் செய்து

Koviloor Digital Library

முடிக்கமுடியும்?'' என்றுகூறி மேலும், இன்று பெற்ற இந்த வெற்றிதான் உண்மையானசிறப்பானவெற்றி'' என்று பலமுறைகூறிப் பாராட்டினான்.

முதலில் தன்னிடம் கூறாமல் தன் இசைவு பெறாமல் யாருக்கும் தெரியாமல், அவனாகவே இராவணன் மீது சுக்கிரீவன் பாய்ந்த செயலில் இராமபிரானுக்கு உடன்பாடில்லை. எனவே முதலில் அச்செயலைக் கண்டிக்க எண்ணிய இராமபிரான் முதலில் ''வென்றி அன்று; வென்றி வீரர்க்கு விளங்கத்தக்க நன்றி அன்று'' என்றும் கடிந்துரைத்தான். பின்னர் வீடணன் புகழ்ந்து பாராட்டியதை நன்கு உள்வாங்கிக் கொண்ட இராம பிரான், சுக்கிரீவன்செயலைத்திருமாலின்வராகஅவதாரத்திற்குஒப்பிட்டு, வியந்து பாராட்டுகிறான். காரணம், சுக்கிரீவன் எதிரிகளிடமிருந்து எந்தத்தீங்கும் நேராமல் தன்னிடம் வந்து சேர்ந்து விட்டான் என்ற மகிழ்ச்சியால் துயரம் தணிந்து, தானும் சேர்ந்து பாராட்டத் தொடங்கினான் என்பதாம். அப்படிப் பாராட்டியவன் சாதாரணமாகப் பாராட்டவில்லை. பலமுறை பாராட்டினான் என்பதைக் குறிக்க, கவிஞன் ''என்றுஎன்று'' இரு அடுக்குகளைப் போடுகிறான். மேலும் இன்று பெற்றதுதான் வெற்றி என்று மனம் திறந்தும் பாராட்டுகிறான் என்க. முதலில் கடிந்து கூறியதற்குச் சமாதானமாக இவ்வாறு பலமுறை பாராட்டினான் எனக்கொள்க. பொதுவாகப் பெருவீரர்களுக்கு எந்த வெற்றியும், ஒரு பெரிய வெற்றியாக எண்ணத்தோன்றாது. முழுத்திருப்தி அடையமாட்டார்கள், இது வீரர்களுக்குரிய சிறந்த தனிக்குணமாகும். அவ்வாறே இங்கு இராமபிரான் செயல்பட்டான் எனக்கொள்க. வராக அவதார வரலாறு நாம் அறிந்ததே; விரிக்க வேண்டுவதில்லை; இந்நிகழ்ச்சியைப் பின்னர் அங்கதன்-இராவணனிடம், ''முடிமணி பறித்த எந்தை யாரினும் வலியன்'' என்று கூறப்போவதையும் இங்கு எண்ணிப் பார்த்தல் தகும்.

49. சூரியன் மறைதல்

தன்தனிப் புதல்வன் வென்றித் தசமுகன் முடியில் தைத்த
மின் தளிர்த்தனைய பல் மா மணியினை வெளியிற் கண்டான்;
'ஒன்று ஒழித்து ஒன்று ஆம்' என்று, அவ்வரக்கனுக்கு ஒளிப்பான் போல,
வன்தனிக் குன்றுக்கு அப்பால், இரவியும் மறையப் போனான். (7026)

(தனி-ஒப்பற்ற; மின்-மின்னற்கொடி; ஒழித்து-போய்; ஒளித்தல்-மறைதல்; குன்று-அஸ்தமனமலை; இரவி-சூரியன்)

சூரியன் தன்னுடைய ஒப்பற்ற மைந்தனாகிய சுக்கிரீவன், எப்பொழுதும் வெற்றியையுடைய பத்துத்தலையனான அரக்கனாகிய இராவணன் மகுடத்தில் பதிக்கப்பெற்றிருந்த மின்னல்போல் தழைத்து ஒளிவீசும் பலவகைப்பட்ட இரத்தினக்கற்களைப் பற்றி வந்ததனால், அவை இருக்கவேண்டிய இடத்தில் இல்லாது, வெளியில் இருப்பதைப் பார்த்தான். எனவே அவமானப்பட்ட இராவணன், இப்போது என்னைக்

Koviloor Digital Library

கண்டால் இதனால் சுக்கிரீவன்மேல் கொண்ட கோபத்தை, அவன் தந்தையாகிய நம்மீது காட்டக்கூடும். அதனால் ஒன்றுகிடக்க ஒன்று நிகழ்ந்து விடும் என்று அஞ்சி, அவ்வரக்கர்களிடமிருந்து, தன்னை மறைத்துக் கொள்ள விரும்பியவன் போல, தான் எப்பொழுதும் மறைந்து கொள்ளும் வலிய ஒப்பற்ற அஸ்தமன மலைக்கு அப்பால் சென்று மறைந்தான்.

இயற்கையாக நிகழும் சூரிய அஸ்தமனத்தை, சூரியன் இராவணனுக்கு அஞ்சித் தன்னை மறைத்துக்கொண்டான் என்று கவிஞன் தன் கருத்தை அவ்வியற்கை நிகழ்ச்சியின்மேல் ஏற்றிக் கூறியிருப்பதால், இப்பாடல் தன்மைத்தற்குறிப்பேற்ற அணியின்பாற்படும். 'ஒன்று ஒழித்து ஒன்று ஆம்' என்பது இன்றும் வழங்கும் ஒரு பழமொழி. இதுவே 'பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்கு ஆனது' என்ற பொருளையும் தரும் பழமொழியை ஒத்தது என்க. மகன்மேல் கொண்ட கோபம் தன்மீதும் பாயும் என்று அஞ்சி சூரியன் மறைந்து கொண்டான். சூரியன் உதயகிரியில் தோன்றி அஸ்தமன கிரியில் மறைவான் என்பதும், மேருமலையைச் சுற்றிச்சுற்றி வருவான் என்பதும் ஒரு நூற்கொள்கை.

50. இராமபிரான் தன் இருப்பிடம் செல்லுதல்

கங்குல் வந்து இறுத்த காலை, கை விளக்கு எடுப்ப, காவல்
வெங்கழல் அரக்கன் மௌலி மிசைமணி விளக்கம் செய்ய,
செங்கதிர் மைந்தன் செய்த வென்றியை நிறையத் தேக்கிப்
பொங்கிய தோளினானும், இழிந்து போய் இருக்கை புக்கான். (7027)

(செங்கதிர்-சிவந்த கிரணங்கள்; தேக்கி-நினைந்து; பொங்கிய-கிளர்ந்த; கங்குல்-இரவுப்போது; மௌலி-முடி/மகுடம்; விளக்கம்-பேரொளி; இழிந்து-இறங்கி; இருக்கை-பாசறை; இறுத்தல்-தங்குதல்; பொங்கிய-பூரித்த)

இரவுநேரம் வந்து தங்கியதால், தன்னுடைய வீரர்கள் கைகளில் விளக்கை ஏந்திக்கொண்டு வருவதுபோல வெம்மையான கொடிய வீரகண்டையணிந்த அரக்கனாகிய இராவணனின் முடிகள்மீது இருந்த இரத்தினங்கள் இருளகற்றி மின்னலைப்போல ஒளிவீசிப் பேரொளி பரப்ப, சிவந்த கிரணங்களையுடைய சூரியனின் மைந்தனான சுக்கிரீவன் பெற்ற பெரு வெற்றியினை மனத்தில் பூராவும் நினைத்துக்கொண்டு, அதனால், பூரித்து எழுந்த தோள்களையுடையவனான இராமபிரானும், சுவேலமலையில் இருந்து இறங்கி தனது இருப்பிடமாகிய பாசறைக்குச் சென்று சேர்ந்தான்.

''கை விளக்கு எடுப்பது'' என்பது, ஒரு அரசன் செல்லும்போது அவன் கூடவே சிலர் இருட்டில் வழிகாட்டிக் கொண்டு, தம்கைகளில் விளக்குகளை ஏந்திச்செல்வர். அந்தமுறை இங்கே குறிக்கப்பட்டது என்க. ஆனால்

Koviloor Digital Library

இங்கே அந்தக் கைவிளக்குகளுக்கு மாறாக, இராவணன் முடியிலிருந்த, சுக்கிரீவனால் பறித்து வரப்பட்ட இரத்தினக் குவியல்கள் அவ்விளக்கு களைக்காட்டிலும் பேரொளி வீசி வழிகாட்டின என்பது கருத்து. சுக்கிரீவன் செய்த இந்த வெற்றிச் செயலால் இராமபிரான் பெரிதும் மகிழ்ந்தான் என்பதை ''பொங்கிய தோள்'' என்று அவனுடைய பூரித்துப் பருத்த தோள்களின் மூலம் வெளிப்படுத்துகிறான் கவிஞன். போருக்கு வீங்கும் தோள்கள், வெற்றிக்கும் வீங்கும் என்பது பெறப்படுகிறது. ''இருளகற்றும் ஒளி'' என்பது ''மந்திகள் முழையில் வைத்த மணிவிளக்கு ஒளிகளாலும்'' என்ற சீவகசிந்தாமணி செய்யுளாலும் பெறப்படும். 'தேக்குதல்' என்பது முழுவதும் நிரம்புமாறு நிறைத்தல் என்ற விரிந்த பொருளைத்தரும்.

51. இராவணன் தன் இருக்கை செல்லுதல்

என்றானும் இனைய தன்மை எய்தாத இலங்கை வேந்தன்,
நின்றார்கள் தேவர் கண்டார் என்பது ஓர் நாணம் நீள,
அன்று ஆய மகளிர் நோக்கம் ஆடவர் நோக்கம் ஆக,
பொன்றாது பொன்றினான், தன் புகழ் என இழிந்து போனான். (7028)

(என்றானும்-ஏதாவது ஒருநாள்கூட/என்றாயினும்; இனைய-இப்படிப்பட்ட; பொன்றுதல்-இறத்தல்; இழிந்து-இறங்கி; ஆயமகளிர்-அந்தப்புர மகளிர்; ஆயம்-அந்தப்புரம்; பொன்றாது பொன்றுதல்-இறவாது இறத்தல்; நீள-மிக; நோக்கம்-பார்வை)

தான் பிறந்ததுமுதல் இன்றுவரை, ஒருநாளேனும் இதுபோன்ற அவமானத்திற்கு உள்ளாகாத இலங்கை வேந்தனாகிய இராவணன், தானும் சுக்கிரீவனும் மற்போர் செய்ததையும், தன் மகுடமணிகள் பறிக்கப்பட்டதையும் வானிலிருந்து தன் பகைவர்களும், தனக்குக் கீழ்ப்பட்டவர்களுமான தேவர்களும் பார்த்துக் கொண்டே மனத்துக்குள் மகிழ்ந்துகொண்டு இருந்திருப்பார்களே என்று கருதியதால் எழுந்த வெட்கம்மிக, அன்று அவனைச் சூழ்ந்து வந்த அந்தப்புரத்துப் பெண்களின் பார்வை கூடக் காதல் பார்வையைத் தவிர்த்து, ஆடவர் பார்வைபோலத் தோன்ற, அதனால் நேர்ந்த அவமானத்தால் சாகாமலேயே செத்துக் கொண்டிருப்பவனைப் போன்று, தன்புகழெல்லாம் இறங்கிப்போனதைப் போன்று, தான் நின்றிருந்த கோபுரத்தின் உச்சியிலிருந்து கீழே இறங்கி வந்து, தன் இருப்பிடத்திற்குச் சென்றான்.

இப்போது தன் இழிநிலை கண்டு தேவர்கள் சிரிப்பார்களே என்று வெட்கமடைந்து சாகாமல் சாகின்ற இலங்கை வேந்தன், முதல்நாள் போரில் தேவர்கள் பற்றிக் கருதாமல், சனகன் மகள் சனகி நகுவாளே என்று வருந்தித் தலைகுனிந்து சென்றான் என்று கவிஞன் கூறப்போவதையும் இங்கு நினைவில் நிறுத்திக் கொள்ளவேண்டும். மகளிர் நோக்கம் காதல் நிறைந்தது, ஆடவர் நோக்கம் வீரம் நிறைந்தது, என்ற வேறுபாட்

Koviloor Digital Library

டினையும் உணர்க. இராவணன் கோபுரத்திலிருந்து கீழே இறங்கி வந்த செயலுக்கு, வேறு உவமை கூறாது அவனுடைய புகழ் இறங்கியதையே உவமையாகக் கூறிய கவிஞனின் கவித்திறம் நோக்குக.

மகுடபங்கப் படலம் நிறைவுற்றது

Koviloor Digital Library

12. அணிவகுப்புப் படலம் [28 பாடல்கள்]

இராமபிரான் தனது வானரச்சேனைகளை இலங்கையின் நாற்புற வாயில்களிலும் அணிவகுத்து நிறுத்தியதையும், அதை ஒற்றன் சார்த்தூலன் மூலம் அறிந்த இராவணன் மந்திராலோசனையைக் கூட்டி, ஆலோசித்து, தானும் அதுபோலத் தன்னுடைய அரக்கர்சேனையை நாற்புறமும், நிறுத்தி அணிவகுத்து, நகர்க்காவல் புரிந்ததையும், விவரித்துக் கூறும் படலம் என்று பொருள்விரியும். இது28 பாடல்களைக் கொண்டது, சிலசுவடிகளில் 'அணிவகுப்பு நகர்க்காவல் படலம்' எனவும் 'நகர்க்காவல் அணிவகுப்புப் படலம்' எனவும் குறிக்கப் பெற்றிருக்கிறது.

இப்படலத்துள், மகுடமணிகள் இழந்த இராவணன் அவமானத்தால் குறுகி மலர்ப்படுக்கையை அடைதல்; ஒற்றன் சார்த்தூலன் வந்து இராமனின் வானரச்சேனை இலங்கையின் நாற்புறமும் சூழ்ந்துள்ளதைத் தெரிவித்தல்; அவனுக்கு உதவியாகச் சுக்கிரீவனும், வீடணனும் இருப்பதையும், அவர்கள் உணவுக்காகக் காய்கனிகள் கொணரத் திட்ட மிட்டிருப்பதையும் தெரிவித்தல்; இராவணன் சினந்து அமைச்சரவையைக் கூட்டி ஆலோசித்தல்; நிகும்பன் வானரச்சேனையை இகழ்ந்தும், தம் படையின் வலிமையைப் புகழ்ந்தும் பேசுதல்; மாமனான மாலி அப்போதும் சீதாதேவியை விட்டுவிடச் சொல்லி இராவணனை வற்புறுத்துதல்; இராவணன் அவனைச் சினந்து கடிந்துரைக்கவே அவன் மௌனம் காத்தல்; இராவணன் சேனையை அணிவகுக்குமாறு கட்டளை யிடுதல்; இரவுநீங்கிப் பொழுது விடியும்போது, வானரச்சேனை இலங்கை யைச் சுற்றி வளைத்திருத்தலைக் கண்ணுறுதல் ஆகிய நிகழ்ச்சிகள் மிக விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன.

1. இராவணன் வருத்தத்துடன் உறங்கச் செல்லுதல்

மானத்தான் ஊன்றப்பட்ட மருமத்தான், வதனம் எல்லாம்,
கூனல் தாமரையின் தோன்ற, வான்தொடும் கோயில் புக்கான்,
பானத்தான் அல்லன், தெய்வப்பாடலான் அல்லன்; ஆடல்
தானத்தான் அல்லன்; மெல்லென் சயனத்தான்; உரையும் தாரான்.

(7029)

Koviloor Digital Library

(ஊன்ற-அழுத்தமாக; மருமம்-நெஞ்சு/மார்பு; வதனம்-முகங்கள்; கூனுதல்-வளைதல்; கோயில்-அரண்மனை; பானம்-கள்/தேறல்; தானம்-இடம்/அரங்குகள்; மெல்லென-மெத்தென்ற; சயனம்-படுக்கை; மானம்-அவமானம்/இழுக்கு)

ஒரு குரங்கு தன் முடிமணிகளைப் பறித்துச்சென்று விட்டதே என்ற அவமானம் என்ற வேலால் பெரிதும் அழுத்தமாகத் தைக்கப்பட்ட மார்பினை உடையவனான இராவணன், தன்னுடைய பத்துமுகங்களும், வாடி வதங்கி, வளைந்துபோன தாமரைமலர் போலக்கூனிக் கூம்பிப் போய், வானளாவ உயர்ந்துள்ள தனது அரண்மனையுள் புகுந்து கொண்டான். அவ்வாறு சென்றவன் மகிழ்ச்சிதரும் பானமாகிய தேறல் மாந்த வில்லை; இன்பம் தரும் தெய்வத்தன்மை வாய்ந்த தனக்குப் பிடித்த சாமகீதம் போன்ற இசைகளைச் கேட்கவில்லை; மனத்திற்குக் கிளர்ச்சி யூட்டும் நடனமகளிர் நாட்டியமாடும் நடனஅரங்கிற்குச் செல்லவில்லை; யாருடனும் பேசக்கூடவில்லை; குனிந்த பத்துத்தலைகளுடன், மெத்தென்ற தன் படுக்கையில் போய்க் கிடந்தவனானான்.

'மானம்' என்பது இழுக்கு, பெருமைக் குறைவைக் குறிக்கும். 'மருமம்' என்பது பொதுவாக மார்பைக்குறிக்கும் என்றாலும் இங்கே நெஞ்சைக் குறித்தது. அது ஊன்றத் தைக்கப்பட்டது என்றதனால் மானம் வேலாகவும், மார்பு நெஞ்சாகவும் கொள்ளப்பட்டது. அவனது பத்துமுகங்களும் வாடிய தாமரை போல் கூம்பிப்போய் இருந்தன. அவனுடைய மாளிகைகள் வானளாவ உயர்ந்திருந்தன. ஆனால் அவனது முகங்களோ வாடிப்போய்த் தலைகவிழ்ந்து தாழ்ந்திருந்தன என்ற நயம் காண்க. பின்பு முதல்நாள் போரிலும், எல்லாவற்றையும் களத்தில் போட்டு 'இலங்கைபுக்கான்' என்பான் கம்பன். இப்பொழுதும் மானம் போனதால் 'கோயில் புக்கான்' என்கிறான். எப்பொழுதெல்லாம் எதையாவது இழக்கிறானோ அப்பொழுதெல்லாம் 'போய்ப்புகுந்து கொள்ளுகிறான்' என்ற பொருளில் இந்தப் 'புக்கான்' என்ற சொல்லைப் பயன்படுத்தியிருப்பதைக் கூர்ந்து நோக்கவேண்டும். மானம், மருமம், வதனம், பானம், தானம், சயனம் என்பனவெல்லாம் வடசொற்கள் என்பதறிக. அவலச் சுவைக்கு இந்தப்பாடல் ஒரு நல்ல எடுத்துக்காட்டு. குனிந்த தலைக்கு வளைந்து கூம்பிய தாமரைமலர் உவமை. 'பசிவந்திடப் பத்தும் பறந்து போம்' என்னும்சான்றோர்வாக்கு, இழுக்காலாகியதுன்பத்திற்கும் உண்டு என்பது பெறப்படுகிறது.

2\. வை எயிற்றாலும், நேராமணி இழந்து இரங்கலாலும்,
பை உயிர்த்து அயரும் பேழ்வாய்ப் பல்தலைப் பரப்பினாலும்
மெய்யனை, திரையின் வேலை மென்மலர்ப் பள்ளி ஆன
ஐயனை, புரிந்து வைகும் அனந்தனே, அரக்கர் வேந்தன். (7030)

Koviloor Digital Library

(வை-கூரிய; எயிறு-பற்கள்; நேரா-நிகராகாத/ஒப்பற்ற; பை-பைய/மெல்ல; உயிர்ப்பு-பெருமூச்சு; அயர்தல்-வருந்துதல்; பேழ்-பிளந்த/திறந்த; திரை-அலைகள்; வேலை-கடல்/பாற்கடல்; பள்ளி-படுக்கை; ஐயன்-தலைவன்; அனந்தன்-ஆதிசேடன்; வைகுதல்-உறைதல்)

அரக்கர்க்கரசனாகிய இராவணன், கூரிய கோரப்பற்களை யுடைமையாலும், எதற்கும் நிகராகாத கிடைத்தற்கரிய முடிகளிலிருந்த மணிகளை இழந்துவிட்டு வருந்துவதாலும், மெதுவாகப் பெருமூச்சு விட்டுக்கொண்டு வருந்திக் கிடப்பதாலும், பிளந்த வாயையுடைய பலவாகிய பத்துத்தலைகளை உடைமையாலும், மெய்யப் பொருளான வனும், எல்லா உயிரினங்களுக்கும் தலைவனானவனும் அறிதுயில் கொண்டிருப்பவனுமான திருமாலைப் பிரிந்து, அலைகள் நிறைந்த பாற்கடலில் உள்ள மெல்லிய மலர்ப்படுக்கையில் தனித்து உறைபவனான ஆதிசேஷனை ஒத்துத் தோன்றினான்.

அரக்கர்க்கரசனாகிய இராவணனுக்கு அரவுக்கரசனாகிய ஆதிசேஷன் உவமை. ஆதிசேஷனுக்குக் கூரிய விஷம் நிறைந்த பற்கள்; இராவணனுக்கு வளைந்த கோரப்பற்கள்; ஆதிசேஷனுக்கு நாயகமணி திருமால்; இராவணனுக்கு நாயகமணி முடிமணி; இப்பொழுது திருமாலாகிய இராமபிரான் அயோத்தியில் வாழ்வதால் அவனை இழந்து வருந்தியிருக்கிறான் ஆதிசேஷன்; இராவணன் தன் முடிமணிகளை இழந்து வருந்தி'பிருக்கிறான், ஆதிசேஷன் விஷப்பையால் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கிறான். இராவணன் மனத்துயரால் மெல்லப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கிறான்; ஆதிசேஷன் பிளந்த திறந்த வாயுடைய ஆயிரம் தலையை உடையவன். இராவணன் பரந்து விரிந்த பத்துத் தலைகளை உடையவன். எனவே இராவணனுக்கு ஆதிசேஷன் உவமை என்க. இப்பாடல் உவமையணியின் பாற்படும்.

பாம்பினுடைய விஷம்பொருந்திய பற்களை, காளி, காளாத்திரி, யமன், யமதூதி, என்றும் கூறுவதுண்டு. இதில் காளி, காளாத்திரி, யமன் என்ற பற்களால் பயமில்லை எனவும், யமதூதி கடித்தால் பயப்படவேண்டும் என்றும் சீவகசிந்தாமணி பேசுகிறது. இன்னும் ஒரு செய்தி. அவ்வாறு அப்பாம்பு கடித்த இடத்தை விரலால் தேய்க்கும்போது, அது கொப்புளமாகி விட்டால் கடித்தது துன்பம் தரும் பெரிய பாம்பாகும் என்றும், அன்றிக் கடிவாயில் தேன்போல் தெளிந்த நீர்வருமாயின் கடித்தது சீதமண்டலியாகும் என்றும், சீவகசிந்தாமணி பேசுகிறது. பாம்பு ஒருவரைக் கடிப்பதற்கு எட்டுக்காரணங்கள் உண்டென்றும், அப்படிக் கடிக்கும்போது மேல் வாய்ப்பல், கீழ்வாய்ப்பல் ஆகியவற்றின் வழியே கடிவாயில் விஷத்தைக் கக்குமானால் உயிர் உடனே பிரியும் என்றும், மற்றபற்களால் கடித்தால், உடலுக்கு மட்டுமே துன்பம் விளையும் என்றும், சில பாம்புகளுக்கு நந்தியாவட்டை மலர்போல மணமும், தாழை மலர்போல சில பாம்புகளும் உண்டு என்றும் மிக விரிவாகப் பேசுகிறது

Koviloor Digital Library

சீவகசிந்தாமணி. இவை நாம் தெரிந்துகொள்ள வேண்டிய செய்தி என்பதனால் இங்கே விளக்கம் தரப்பட்டது.

3. தாயினும், பழகினார்க்கும் தன்நிலை தெரிக்கல் ஆகா,
மாயவல் உருவத்தான் முன் வருதலும், வாயில் காப்பான்,
''சேயவர் சேனை நண்ணி, செய்திறம் தெரித்தி நீ'' என்று,
ஏயவன் எய்தினான்,' என்று அரசனை இறைஞ்சிச் சொன்னான். (7031)

(தெரிக்கல்-தெரிவித்தல்; ஆகா-முடியாத/இயலாத; மாயம்-வஞ்சனை; வல்-வலிமை; நண்ணி-அடைந்து; திறம்-செயல்கள்; தெரித்தி-தெரிவிப்பாயாக; ஏயவன்-ஏவப்பட்டவன்; சேயவர்-தூரத்தில் உள்ளவர்கள்/பகைவர்; இறைஞ்சி-வணங்கி/பணிந்து)

தாயைக் காட்டிலும் பேரன்புகொண்டு, நன்கு கலந்து நெருங்கிய நண்பர், உறவினர்களுக்குக் கூடத் தனது உண்மையான தன்மை இன்னது தான் என்று தெரிந்து கொள்ளமுடியாத அளவுக்குத் தன்னுடைய நடவடிக்கைகளை இரகசியமாய் வைத்துக்கொண்டிருப்பவனும், வஞ்சனைச் செயல்களில் வல்லவனும், மிக்க வலிமைவாய்ந்த உருவத்துடன் கூடியவனுமான ஒற்றன், அரண்மனை வாயிலில் வந்து நிற்பதைக் கண்ட வாயிற்காப்போன், அரண்மனைக்குள்ளே சென்று, அரசனான இராவணனைப்பணிந்து, வணங்கி, உன்னால் ''பகைவர்களின்சேனையை நெருங்கி, அவர்கள் செய்கின்ற செயல்களைக் கண்டுவந்து என்னிடம் கூறுவாயாக' என்று ஏவப்பட்டவனான ஒற்றன் சார்த்தூலன் வந்திருக்கிறான்'' என்று கூறினான்.

'தாயினும், பழகினார்க்கும்' என்ற இரு இடங்களிலும் உம்மை உயர்வு சிறப்பு. பொதுவாகத் தாய்க்குத் தெரியாமல் எதையும் யாரும் செய்துவிட முடியாது, அப்படிச் செய்துவிட்டாலும் அதை நுணுகி ஆராய்ந்து கண்டுபிடிப்பவள்தான்தாய், என்பதைக் குறிக்கும் சொற்றொடர். ''தாய்க்கு ஒளித்த சூல் இல்லை' என்பது ஒரு வழக்குச்சொல், ஒற்றர்களுக்கு முதல் இலக்கணமே இரகசியத்தைக் காப்பாற்றுதல்தான் என்பது பேசப் படுகிறது. 'சார்த்தூலன்' என்று ஒற்றன் பெயர் பின்னால்வரும் செய்யுளில் கூறப்பட்டிருக்கிறது. 'சேயவர்' என்பது பொதுவாகத் தூரத்தில் இருப்பவர் என்று பொருள் தருமாயினும் இங்கே பகைவர் என்றே கொள்ளப்பட்டது.

4. இராவணன் வினவுதல்

'அழை' என, எய்தி, பாதம் வணங்கிய அறிஞன் தன்னை,
'பிழை அற அறிந்த எல்லாம் உரைத்தி' என்று அரக்கன் பேச
முழை உறு சீயம் அன்னான், முகத்தினால் அகத்தை நோக்கி,
குழையுறு மெய்யன், பைய, வரன்முறை கூறலுற்றான். (7032)

Koviloor Digital Library

(பிழை-குற்றம்/தவறுதல்; முழை-குகை; சீயம்-சிங்கம்; முகத்தினால்-முகக்குறிப்பினால்; அகம்-உள்ளக்குறிப்பு; குழைதல்-ஒடுங்குதல்; மெய்-உடம்பு; வரன்-முறை; பைய-மெல்ல/மெதுவாக; அறிஞன்-நுட்பமான அறிவுடையவன்)

ஒற்றன்வந்திருப்பதைத்தன்னிடம்கூறியவாயிற்காப்போனைநோக்கி, இராவணன் 'அவனை உள்ளே அழை' என்று கூறியதும் அந்த ஒற்றன் உள்ளே நுழைந்து இராவணனின் பாதங்களை வணங்கினான். நுட்பமான அறிவு படைத்தவனான அந்த ஒற்றனை நோக்கி, இராவணன், ''நீ அங்கே சென்று கண்டறிந்த செய்திகளையெல்லாம் தவறாது, குற்றம் இல்லாது எனக்குக் கூறுவாயாக'' என்று வினவ, மலைக்குகையில் இருக்கும் சிங்கம் போல்பவனான இராவணன் முகத்தில் வருத்தம் உற்றிருப்பதைத் தன் உள்ளத்தால் உய்த்துணர்ந்து உற்றுநோக்கி, மிகப் பணிந்த நெஞ்சின னாகவும், மிக ஒடுங்கிய உடம்பினைக் கொண்டும், அவ்வொற்றன் மெதுவாகத் தான் அறிந்தவற்றை வரிசையாகக் கூறத்தொடங்கினான்.

'அறிஞன்' என்றது ஒற்றனாகிய சார்த்தூலனை; முழையுறுசீயம்-இராவணன் தோற்றத்தால் உவமை; 'முகத்தினால் அகத்தை நோக்குதல்' என்பது 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பதையும் 'அடுத்து காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்' என்னும் குறளையும் நினைவுபடுத்துதலை உணர்க. இராவணன் உள்ள நிலை யறிந்த அறிஞனான சார்த்தூலன் 'முழையுறு நெஞ்சனானான், குழையுறு மெய்யனானான்; பையக்கூறினான்; வரன்முறை கூறினான் என்று, இராவணனைக் கண்டு அவனுடைய ஒற்றர்கள்கூட அஞ்சினர் என்பதைப் படம்பிடித்துக் காட்டுகிறான் கவிஞன் என்பதறிக. முழையுறு சிங்கம் என்பது ''மாரிமலை முழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும் சீரியசிங்கம்'' என்ற ஆண்டாள் திருப்பாவையை நினைவு படுத்துவதை உணர்க. 'உள்ளத்தின் உள்ளதை, உரையின் முந்துற, மெள்ளத்தன் முகங்களே விளம்பும்' என்பது நாம் இக்காப்பியத்திலேயே கண்டது. 'முகத்தின் முதுக் குறைந்ததுண்டோ உவப்பினும் காயினும் தான் முந்துறும்'' என்பது குறள்-707.

5. சார்த்தூலன் கூறுதல்

''வீரிய! விதியின் எய்தி, பதினெழு வெள்ளத்தொடும்
மாருதி, மேலைவாயில் உழிஞைமேல் வருவதானான்;
ஆரியன், அமைந்தவெள்ளம் அத்தனையோடும், வெற்றிச்
சூரியன் மகனைத் தன்னைப் பிரியலன் நிற்கச் சொன்னான். (7033)

(வீரியம்-தறுகண்மை/வீரம்; மாருதி-வாயுபுத்திரன்/அனுமன்; மேலை-மேற்குப்புறம்; உழிஞை-மதில்; ஆரியன்-மேலோன்; நெற்றி-உச்சி; விதி-முறை; அமைந்த-பொருந்திய)

Koviloor Digital Library

ஒற்றன் சார்த்தூலன் இராவணனை நோக்கி ''வீரம் பொருந்திய தறுகண்மை மிக்கவனே! வாயுதேவனின் மகனான அனுமன் பதினேழு வெள்ளம் என்று கூறப்படுகின்ற எண்ணிக்கையுடன் உள்ள வானரச் சேனையோடு, அணிவகுக்கும் போர் முறைப்படி, இலங்கையின் மேற்குப்புற வாயிலில், மதிலைச் சூழ்ந்து முற்றுகையிடுவதை மேற் கொண்டுள்ளான். எல்லோர்க்கும் மேலோனான இராமபிரான், வானத்தின் உச்சியில் சஞ்சரிக்கும் வெற்றிபொருந்திய சூரியன் மகனான சுக்கிரீவனை, அதே பதினேழு வெள்ளம் வானரச்சேனையுடன் தன்னை விட்டுச் சிறிதும் அகலாதிருக்கும்படியும், அச்சேனைகளைச் சுக்கிரீவனைச் சுற்றி நிற்கும்படியும் கட்டளையிட்டிருக்கிறான்'' என்கிறான்.

வானரச்சேனை எப்படி அணிவகுத்து நிற்கிறது என்பதைத் தான் கண்ட வண்ணம் கூறத்தொடங்குகிறான் ஒற்றனாகிய சார்த்தூலன். வாலியின் சேனை எழுபது வெள்ளம் உடையது என்பது நாம் முன்பு அறிந்ததே. அதில் பதினேழு வெள்ளம் சேனையுடன் அனுமன் கோட்டையின் மேற்குப் புறவாயிலில் முற்றுகையிட்டிருக்கிறான். அதே அளவுள்ள சேனையுடன் சுக்கிரீவன், இராமபிரான் அருகிலேயே அவனை விட்டுப் பிரியாது இருக்கும்படி கட்டளையிடப்பட்டிருக்கிறான். அணிவகுப்பின், காட்சியைப் படம் பிடித்துக் காட்டுகிறான் கம்பன். 'உழிஞைமேல் வருதல்' என்பது நகரின் மதிலை முற்றுகையிடுதல் என்ற பொருள்தரும். இது ஒரு போர்முறை. தொல்காப்பியம் புறத்திணையில் கூறப்பட்டுள்ளது. வெட்சி நிரை கவர்தல்; மீட்டல் கரந்தையாம்; வட்கார்மேல் செல்லுவது வஞ்சியாம்; உட்காது எதிர்ஊன்றல் காஞ்சி; எயில்வளைத்தல் நொச்சி; அது வளைத்தலாகும் உழிஞை'' என்பது பழம்பாடல். போரில் நிகழும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் தனித்தனி மாலை சூடுவது என்பது தமிழ்வழக்கம். இங்கே வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, ஆகிய மலர்கள் பற்றிப் பேசப்பட்டது. உழிஞை என்பது பகைவரது கோட்டை மதிலைச் சுற்றிவளைத்து முற்றுகையிடுதலாகிய ஒரு போர் நிகழ்ச்சி எனக்கொள்க. இவர்கள் சூடும் மலர் உழிஞை என்பதறிக.

சுக்கிரீவனை ஏன் தன் அருகிலேயே நிற்குமாறு கட்டளையிட்டான் இராமபிரான்? தன்னைப் பாதுகாத்துக்கொள்ளவா? அன்று; இப்பொழுது தான் சுக்கிரீவன் இராவணனின் மகுடங்களிலிருந்து மணிகளைப் பறித்து வந்திருக்கிறான். எனவே பகைவர்களின் முதல் தாக்குதல் சுக்கிரீவனைக் குறிவைத்தே இருக்கும். சுக்கிரீவன் இராமபிரானால் அடைக்கலம் தரப் பட்டுத் தம்பி என்ற உறவினன் ஆனான். எனவே அவனுக்கு எந்தத்தீங்கும் ஏற்பட்டுவிடக் கூடாது என்ற பேருள்ளத்தாலும், பேரருளாலும் இவ்வாறு கட்டளையிட்டான் எனக்கொள்க.

Koviloor Digital Library

6. "அன்றியும், பதினேழ் வெள்ளத்து அரியொடும், அரசன் மைந்தன்,
தென்திசை வாயில் செய்யும் செரு எலாம் செய்வதானான்;
ஒன்றுபத்து ஆறு வெள்ளத்து அரியொடும், துணைவரோடும்,
நின்றனன் நீலன் என்பான், குணதிசை வாயில் நெற்றி" (7034)

(அரசன்மைந்தன்-அரசகுமாரன்/அங்கதன்; அரி-குரங்கு; செரு-போர்; குணதிசை-கிழக்குத்திசை; நெற்றி-முன்னணி; ஒன்றுபத்துஏழு-பதினேழு; அன்றியும்-இத்தோடு அல்லாமல்/மேலும்; துணைவர்-நண்பர்கள்)

இதுமட்டுமல்லாமல், மேலும் பதினேழு வெள்ளம் குரக்குச் சேனையுடன் கிட்கிந்தைக்கு அரசனான வாலியின் மைந்தனாகிய இளவரசன் அங்கதன் கோட்டையின் தென்திசை வாயிலில் போர் செய்வதற்குரிய ஆயத்தங்களைச் செய்து கொண்டிருக்கிறான்; மேலும் பதினேழு வெள்ளம் குரங்குச்சேனையுடனும், தன் நண்பர்களுடனும், நீலன் என்று சிறப்பித்துச் சொல்லப்படும் படைத்தலைவன்; கிழக்குத்திசை வாயிலில் முன்னனிப்படையாக நின்று கொண்டிருக்கிறான்'' என்கிறான் சார்த்தூலன்.

முதலில் அனுமன் மேற்குத்திசை வாயிலிலும், பின்னர் சுக்கிரீவன் வடக்குத்திசை வாயிலிலும், இப்பொழுது அங்கதன் தெற்குத்திசை வாயிலிலும், நீலன் கிழக்குத்திசை வாயிலிலும், ஒவ்வொருவரும் பதினேழு வெள்ளம் வானரச்சேனையுடன் போர்செய்வதற்குத் தயாராய் நின்று கொண்டிருக்கிறார்கள் என்கிறான் ஒற்றன். இப்போது $17 \times 4 = 68$ வெள்ளம் சேனைபற்றிக் கூறப்பட்டிருக்கிறது. இன்னும் இரண்டு வெள்ளம் சேனைபற்றி அடுத்த பாடலில் கூறுகிறான் கவிஞன். சுக்கிரீவன் நின்றது வடக்குத் திசைவாயில் என்பது அருத்தாபத்தியால் பெறப்பட்டது. கவிஞன்இதைக் குறிப்பிட்டுச்சொல்லவில்லை என்பதை உணர்க. எனவே இப்பொழுது நான்கு கோட்டை வாயிலிலும் படைத்தலைவர்கள் தலைமையில் அறுபத்தெட்டு வெள்ளம் வானர வீரர்கள் நிற்கிறார்கள் என்பதாம்.

7. "இம்பரின் இயைந்த காயும் கனியும் கொண்டு, இரண்டு வெள்ளம்
வெம்பு வெஞ்சேனைக்கெல்லாம் உணவு தந்து உழலவிட்டான்;
உம்பியை, வாயில்தோறும் நிலை தெரிந்து உணரச் சொன்னான்,
தம்பியும், தானும் நிற்பதாயினான்; சமைவு ஈது" என்றான். (7035)

(இம்பர்-இவ்வுலகு; இயைந்த-உண்ணத்தக்க/பொருந்திய; உழல்தல்-திரிதல்/சுற்றுதல்; உம்பி-உன்தம்பி/வீடணன்; தெரிந்து- ஆராய்ந்து; தம்பி-இலக்குவன்; சமைவு-ஏற்பாடு/திட்டம்; தந்து- கொண்டுவந்து; வெம்புதல்-சினத்தல்; வெஞ்சேனை-கொடியபடை)

Koviloor Digital Library

''இந்நிலவுலகில் கிடைக்கின்ற உண்ணுவதற்குத் தகுதியான காய்கள், பழங்களையெல்லாம் கொண்டுவந்து, சினத்தோடு போர்செய்யும் படைவீரர்களுக்கு அளித்துத் திரியுமாறு இரண்டு வெள்ளம் குரக்குப் படையினர் நியமிக்கப்பட்டுள்ளனர். உன்னுடைய தம்பியாகிய வீடணன், நான்கு கோபுர வாயில்களிலும் என்னென்ன நடக்கின்றன என்று நேரில் பார்த்து, ஆராய்ந்து தெளிந்து, தன்னிடம் தெரிவிக்குமாறு பணிக்கப் பட்டிருக்கின்றான். இராமபிரான் தானும், தன் தம்பி இலக்குவனுமாகிய இருவரும் வடக்குத் திசை வாயிலில் நின்றுகொண்டிருக்கிறார்கள். இதுதான் அவர்கள் கருதித் திட்டமிடப்பட்ட ஏற்பாடு'' என்று கூறிமுடிக்கிறான் ஒற்றன் சார்த்தூலன்.

ஆக மொத்தம் எழுபது வெள்ளம் சேனையும் போரிலும் வீரர்க்கு உதவிசெய்வதிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளது காண்க. குரங்குகளுக்குக் காய்களும் கனிகளுமே உணவுப் பொருட்கள். எனவே அவற்றைத் தேடிக் கொணர்வதற்கும், உட்சென்று அவர்களுக்குக் கொடுப்பதற்கும் இரண்டு வெள்ளம் சேனை பயன்படுத்தப்பட்டது என்பதாம்.

8. இராவணன் சீற்றம் கொள்ளுதல்.

சார்த்தூலன் இதனைச்சொல்ல, தழல்சொரி தறுகணானும்,
பார்த்து, ஊழி வடவைபொங்க, 'படுவது படுமா பார்த்தி;
போர்த்தூளி துடைப்பென் நாளை, அவர் உடற்பொறையின் நின்றும்
தேர்த்து ஊறு குருதி தன்னால்' என்றனன், எயிறு தின்னா; (7036)

(தழல்-நெருப்பு; சொரிதல்-உமிழ்தல்; எயிறு-பற்கள்; தின்னா-தின்று/ கடித்து; தூளி-புழுதி/துகள்; பொறை-சுமை/பாரம்/குவியல்; தேர்த்து-தேர்ச்சுவட்டினால்; துடைத்தல்-போக்குதல்; வடவை-வடவாமுகாக்னி-வடஅனல்; பொங்குதல்-கிளர்ந்து எழுதல்; படுவது-அழிவது; படுமா-படுமாறு/அழியும்தன்மை; பார்த்தி-காண்பாயாக; குருதி-இரத்தம்; தறுகண்-கொடுமையான கண்கள்)

இவ்வாறு ஒற்றனான சார்த்தூலன் சொன்னதைக் கேட்டவுடன், அனல் பொழிகின்ற கொடுமையான கண்களையுடையவனான இராவணன், அவனை உக்கிரமாகப் பார்த்து, தன் பற்களை நறநறவென்று கடித்துக் கொண்டு, ''அந்தப் பகைவர்களின் உடல்பாரத்தை அவர்கள் உடலினின்றும், நமது தேர்ச்சக்கரத்தின் சுவட்டினால், குருதி பொங்கும் படி செய்து, அதனால் எழுகின்ற, போர்த்துகள்களை, நாளைக்கே போக்குவேன்; ஊழிக்காலத்தில் பொங்கியெழும் வடவைத்தீயில் உலகம் அழிவதுபோல, இவர்கள் படும் பாட்டை-அழிவினை நாளை நீயே நேரில் பார்ப்பாயாக!'' என்று சீறிக் கூறினான் இராவணன்.

'படுமா' என்பது 'படுமாறு' என்பதன் ஈறுகுறைந்தது எனக்கொள்க. 'நாளை போரில் நம் தேரினை அப்படைமீது செலுத்தி, இரத்தம்

Koviloor Digital Library

பொங்கிவர, அவர்கள் உடல் குவியலால் எழுகின்ற புழுதியைப் போக்குவேன் பார்'' என்று சூளுரைக்கிறான் எனக்கொள்க. அவர்கள் சொரிகின்ற குருதி வெள்ளம், நம் தேர்ப்படையின் சுவடுகள் வழியாகப் பாய்ந்தோடுவதை நீ நேரே காண்பாயாக என்றும் பொருள் கொள்ள இடமுண்டு.

9. மா அணை நீலக்குன்றத்து இளவெயில் வளர்ந்தது என்ன,
தூ அணை குருதிச் செக்கர்ச் சுவடு உறப்பொலிந்த தோளான்
ஏ அணை வரிவில் காமன் கணைபட எரியாநின்ற
பூ அணை மாறி, வேறுஓர் புனை மணி இருக்கை புக்கான். (7037)

(மா-பெருமை; அணை-பொருந்திய; தூ-தசை; ஏ-அம்பு; வரி-இழுத்துக் கட்டப்பட்ட; காமன்-மன்மதன்; எரியா-எரிந்து/கொதிப் படைந்து; அணை-படுக்கை; புனை-அலங்கரிக்கப்பெற்ற; புக்கான்-அடைந்தான்; கணை-அம்பு; வளர்தல்-எழுதல்/பரவுதல்)

பெருமைபொருந்திய, மரங்களடர்ந்த நீல மலையில் இளமையான சூரியனின்கதிர்கள்படிந்து பரவியதுபோல தசையினால் ஆன தோள்களில் சிவந்த இரத்தத்தின் சுவடுகள் விளங்கப் பொலிவுற்றுத் தோன்றுகின்ற அழகிய தோள்களையுடையவனான இராவணன், அம்புகள் பொருந்திய, இழுத்துக்கட்டப்பட்ட மன்மதனது மலரம்புகள் தன்னை வந்து தாக்க, உடல் வெப்பமுற்றதனால், அம்மலர்ப்படுக்கையினின்றும் மாறி, வேறுஓர், நன்கு இரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்ட இடத்தை அடைந்தான்.

சுக்கிரீவன் தாக்கியதால், குருதி படிந்த தோள்கள் என்பது 'தூ அணை குருதிச் செக்கர்ச்சுவடு உறப்பொலிந்த தோள்' எனப்பட்டது. 'வேறு ஓர் புனை மணி இருக்கை' என்பது மந்திராலோசனை மண்டபத்தைக் குறித்தது. மன்மதன் அம்புகள் தன்னைத் தாக்கியதால் தன் உடல் வெப்ப முற்றதனால், அம்மலர்ப் படுக்கையும் வெப்பமுற்றதாயிற்று. எனவே அதனின்றும் மாறவேண்டியதாயிற்று என்பதாம். நீலமலை இராவண னுடைய தோள்களுக்கும், குருதிச்செக்கர், இளவெயிலின் சிவப்புக்கும் உவமை. 'மணி இருக்கை' என்ற சொல் சிங்காதனத்தையும் குறிக்கும் என்க.

10. அமைச்சர்களுடன் ஆலோசித்தல்

செய்வன முறையின் எண்ணி, திறத்திறம் உணர்வின் தேர,
மை அறு மரபின் வந்த அமைச்சரை, 'வருக' என்றான்;
பொய் எனப் பளிங்கின் ஆய இருக்கையின் புறத்தைச் சுற்றி,
ஐஇரண்டு ஆயகோடிப் பேய்க்கணம் காப்பது ஆக்கி. (7038)

Koviloor Digital Library

(பொய்-வெறும்வெளி/வெற்றிடம்; இருக்கை-இடம்; சுற்றி- சூழ்ந்து; எண்ணி-ஆராய்ந்து; மைஅறு-குற்றமற்ற)

தான் இப்போது சென்ற இடம் உண்மையில் கட்டிடம் இருக்கும் இடமா அல்லது வெற்றிடமா என்று காண்பவர்கள் புரிந்துகொள்ள முடியாத பளிங்கினால் கட்டப்பட்ட இருப்பிடத்தை அடைந்து, அந்தப் பளிங்கு இடத்தின் புறத்தைச் சுற்றிப் பத்துக்கோடிப் பேய்க் கூட்டத் தினரைக் காவலாக அமைத்துவிட்டு, மேலே சிந்தித்துச் செயலாற்ற வேண்டியவற்றை முறைப்படி உணர்ந்து, ஒவ்வொன்றையும் நுணுக்க மாக ஆராய்ந்து முடிவு எடுக்கும் குற்றமற்ற இயல்பினை உடைய மரபில் வந்த அமைச்சர்களை அழைத்துவரும்படி ஏவலாளர்களுக்கு ஆணை யிட்டான் இராவணன்.

'செய்வன முறையின் எண்ணிச் செய்பவர் அமைச்சர்கள், திறம்திறம் உணர்வின் தேர்பவர்கள் அமைச்சர்கள்; மைஅறு மரபின் வந்தவர்கள் அமைச்சர்கள்; இவைகள் எல்லாம் அமைச்சர்களுக்குரிய இன்றியமையாத தகுதிகள், வள்ளுவனின் அமைச்சு என்ற அதிகாரத்தின் சுருக்கமே இப்பாடல் என்பதறிக. பளிங்குமாளிகை, தான் இருப்பதை வெளிக்காட்டிக் கொள்ளாது, வெற்றிடம் போன்றே தோன்றும். இங்கே மகாபாரதத்தில்அமைந்தஅரக்கு மாளிகையையும்ஒப்பிட்டு நினைக. தான் செய்யும் ஆலோசனை யாருக்கும் தெரியக்கூடாது என்பதால், 'ஐஇருகோடிப் பேய்க்கணம் இருக்கையின் புறத்தைச் சுற்றி காவல் என்க. பளிங்கின் ஒளி ஊடுருவும் தூயதன்மையால், அது ட தித்துக் கட்டப்பட்ட இடம் வெற்றிடம் போலத் தோன்றும். எனவே 'பொய் எனப் பளிங்கின் ஆய இருக்கை' என்றார் என்க. 'திறம்திறம்' என்பது பகுதிபகுதியாக, வரிசைப்படி என்ற பொருளைத்தரும். ஒன்றையும் விட்டுவிடாது. ஒவ்வொன்றையும் தனித்தனியாக ஆராயும் இயல்புடையவர்கள் என்பது பொருள்.

11. இராவணன் அமைச்சர்களின் கருத்தைக் கேட்டல்.

அளந்து அறிவு அரியர் ஆய அமைச்சரை அடங்க நோக்கி,
"வளைந்தது குரங்கின் சேனை, வாயில்கள் தோறும் வந்து,
விளைந்தது பெரும்போர் என்று விட்டது; விடாது நம்மை;
உளைத்தனம்; என்ன எண்ணி, என் செயற்கு உரிய?" என்றான்.
(7039)

(அளந்து-மதிப்பிட்டு; அடங்க-அனைவரையும்/முழுவதும்; வளைத்தல்-சூழ்ந்துகொள்ளுதல்; உளைதல்-வருந்துதல்/மனம்நோதல்)

இவ்வளவு என்று அளந்து அறிய இயலாத அறிவும் மதிநுட்பமு முடைய அமைச்சர்கள் அனைவரையும் ஒருசேர நோக்கி, இராவணன் 'நம்

Koviloor Digital Library

நகரின் நான்கு கோட்டை வாயிலிலும் குரக்குச்சேனை வந்து சுற்றிச் சூழ்ந்து கொண்டு விட்டது. பெரும்போர் உருவாகும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இவை நம்மைத் தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கின்றன. நம்மை விடாது போலிருக்கிறது, எனவே நான் மனம்மிக நொந்து போயிருக்கிறேன். இந்த நிலையில் நாம் என்ன தீர்மானித்து, என்ன செய்ய வேண்டும்? என்பதை எனக்குக் கூறுங்கள்'' என்றான் இராவணன்.

இந்த நிலையில் இப்போது நாம் செய்யக்கூடியது என்ன என்று அறிவார்ந்த அமைச்சர்களை நோக்கி இராவணன் கேட்டான் என்பதாம். 'உளைந்தனம்' என்று இராவணன் வெளிப்படையாகவே அமைச்சர்களிடம் கூறியிருப்பதனால், அவனுடைய உண்மையான மனநிலையைக் கற்போர் புரிந்துகொள்ளும் வண்ணம் கவிஞன் சொற்களைப் பெய்திருக்கும் திறம் நோக்குக. மேலும் 'விடாது நம்மை' என்ற சொற்றொடரும் இராவணனின் மனக்கலக்கத்தை வெளிப்படுத்துவதை உணர்க.

12. நிகும்பன் கூறுதல்

''எழுபது வெள்ளத்து உற்ற குரக்கினம் எயிலை முற்றும்
தழுவின என்று செய்யத்தக்கது சமைதி போலாம்;
அழுவநீர் வேலை அன்னது ஆயிரவெள்ளம் அன்றே?
உழிஞையைத் துடைக்க, நொச்சி உச்சியில் கொண்டது உன் ஊர்''
(7040)

(உற்ற-பொருந்திய; எயில்-மதில்; தழுவுதல்-வளைத்துக் கொள்ளுதல்; சமைவு-ஏற்பாடு; உழிஞை-மதிலை வளைத்து முற்றுகையிடுதல்; துடைக்க-போக்க; அழுவம்-நீர்ப்பரப்பு/கடல்)

''எழுபது வெள்ளம் என்று கணக்கிடப்பட்டதாகிய குரக்குச்சேனை வந்து, நம்நகரின் மதிலைச் சுற்றிலும் முழுவதும் வளைத்துக் கொண்டு விட்டது என்று மிகவும் மனம் நொந்துபோய் இருக்கிறாய் போலும்! அதற்காக இனிச்செய்யத்தக்கதை ஆராய எண்ணியுள்ளாய்போலும்! அவ்வாறு எழுபது வெள்ளம் சேனை மதிலை வளைத்துச் சூழ்ந்துள்ள வானரச்சேனைகளை அடியோடு போக்குவதற்கு நம் ஊரிலுள்ள ஆயிரம் வெள்ளம் சேனையும் மதிலை எதிர் ஊன்றிக் காப்பதற்காகத் தம் தலையில் நொச்சிப்பூவைச் சூடிக்கொண்டு தயார்நிலையில் நிற்பதை நீ அறியவில்லை போலும்'' என்று கூறுகிறான் நிகும்பன்.

எழுபது வெள்ளம் சேனை நம்மைச் சுற்றி வளைத்தது என்று கவலைப்படுகிறாயே, அதற்காக அமைச்சரவையைக் கூட்டி ஆலோசனை செய்கிறாயே இவையெல்லாம் தேவையற்றது. அந்த எழுபது வெள்ளத்தை முறியடிக்க நம்மிடம் ஆயிரம் வெள்ளம் சேனைக்கடல் இருக்கிறது. பகைவர்கள் சூடியுள்ள உழிஞைப் பூவைப் போக்கி நாம் நொச்சிப்பூவை

Koviloor Digital Library

உச்சியில் சூடியுள்ளோம் என்று எடுத்துரைக்கிறான் நிகும்பன் என்பதாம். 'உழிஞை' என்பது பகையரண் வளைப்போர் சூடும் மாலை; 'நொச்சி' என்பது மாற்றார்க்கு எதிர் ஊன்றித் தம் மதில் காப்போர் சூடும்மாலை என்பது புறத்திணை. ஒரு வெள்ளம் என்பது ஐம்பத்து ஏழு ஸ்தானங்களைக் கொண்ட ஒரு பேரெண் என்க. எயில் காத்தல் நொச்சி; அது வளைத்தல் ஆகும். ஆயிரம் வெள்ளம் கொண்ட நம் அரக்கர் சேனையின் முன், எழுபது வெள்ளம் கொண்ட அந்தக் குரங்குச்சேனை என்ன செய்துவிட முடியும்? என்று கேட்கிறான் நிகும்பன் என்பதாம்.

13. "எழு, மழு, தண்டு, வேல், வாள், இலைநெடும் சூலம் என்று இம்
முழு முதற் படைகள் ஏந்தி, இராக்கதர் முனைந்தபோது,
தொழுது தம் படைகள் முன்னிட்டு, ஓடுவார் சுரர்கள் என்றால்,
விழுமிது, குரங்கு வந்து, வெறுங்கையால் கொள்ளும் வெற்றி" (7041)

(நெடும்-நீண்ட; முழுமுதல்-முதன்மையான; படைகள்-படைக் கலன்கள்; சுரர்கள்-தேவர்கள்; இட்டு-எறிந்துவிட்டு; வென்றி-வெற்றி; விழுமிது-சிறந்தது; முனைதல்-முந்திச்செல்லுதல்; எழு-கணையமரம்/ இரும்புத்தூண்; மழு-எரியீட்டி; தண்டு-கதை)

"கணையமரம், இரும்புத்தூண், கோடாலி, எரியீட்டி, கதை, வேற்படை, விற்படை, இலைவடிவான நீண்ட முத்தலைச் சூலாயுதம் என்ற இத்தகைய முதன்மைவாய்ந்த படைக்கலன்களையெல்லாம் தம் கைகளில் ஏந்திக்கொண்டு, இராக்கதர்கள் போர்செய்ய முற்பட்டுச் சென்றதனால், அந்தத் தெய்வத்தன்மை மிக்க தேவர்களே, தமது படைக் கலன்கள் எல்லாவற்றையும் அரக்கர்கள் முன்னால் போர்க்களத்தில் போட்டுவிட்டு, கை கூப்பித் தொழுது, புறமுதுகு காட்டி ஓடுவார்கள் என்று சொன்னால், இந்த அற்பமான குரங்குகள் தம் கைகளில் எந்தவிதமான ஆயுதங்களும் இல்லாமல் வெறுங்கையோடு வந்து, நம்மோடு போரிட்டு, நம்மை வெற்றியும் கொள்ளுவார்கள் என்றால் இதுமிக நன்றாக இருக்கிறது'' என்கிறான் நிகும்பன்.

'சுரர்கள்' என்பது 'சுரை' என்ற அமுதத்தைப் பருகி அமரராகி நின்றவர்கள் என்று ஒரு சுவடி பொருள் கூறுகிறது. இதுவரையிலும் நாம் கேள்விப்படாத ஒரு விளக்கம். இதுவரையிலும் அசுரர்களுக்கு எதிரானவர்களைச் 'சுரர்' என்று கூறியதாகவே கருதி வந்திருப்பதும் நோக்கத்தக்கது. 'விழுமிது' என்பது இகழ்ச்சிக் குறிப்பு. 'வெறுங்கையால்' என்பது குரங்குகளின் கைகள் காய்கனி பறித்துத் தின்பதற்குத்தான் உதவுமே தவிர, படைக்கலன்களைக் கைக்கொள்ளத் தெரியாத கைகள் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டிருப்பதையும் உணர்க.

Koviloor Digital Library

14. மாலி கூறுதல்

"ஈது இவண் நிகழ்ச்சி 'என்னா, எரி விழித்து, இடியின் நக்கு,
பூதலத்து அடித்த கையன், நிகும்பன் என்று ஒருவன் பொங்க,
'வேதனைக் காமம் அந்தோ! வேரொடும் கெடுத்தது' என்னா,
மாதுலத் தலைவன் பின்னும், அன்பின் ஓர் மாற்றம் சொன்னான்.
(7042)

(ஈது-இத்தன்மையானது; இவண்-இங்கு/இலங்கையில்; எரி-தீப் பொறி; விழித்து-நோக்கி; நக்கு-சிரித்து; நகுதல்-சிரித்தல்; பூதலம்-தரை; பொங்க-மிகுந்து; வேதனை-துன்பம்; மாற்றம்-வார்த்தை; மாதுலன்-மாமன்; அந்தோ-ஐயோ)

"இதுதான் இங்கு இப்பொழுது இலங்கையில் நடந்து கொண்டிருக் கிறது" என்று நிகும்பன் என்ற ஒரு அரக்கன், கண்களில் தீப்பொறி பறக்க, பேரிடியைப் போலப் பேரொலியுடன் சிரித்து, தன் கைகளைத் தலையில் ஓங்கி அறைந்தவனாகி, சினம் கிளர்ந்தெழுந்து நிற்கவும், அங்கிருந்த, இராவணனுடைய மாமன்களில் மூத்தவனான மாலி என்பவன், "மனத்திற்கு வேதனை தரும் காமம் என்ற ஒரு உணர்வு அல்லவா இந்த அரக்கர் குலத்தை அடியோடு அழித்துக் கொண்டிருக்கிறது!" என்று கூறி, அவன் இராவணன்மீது கொண்ட அன்பின் காரணமாக மேலும் சில வார்த்தைகள் கூறத் தொடங்கினான்.

சினத்தின் மெய்ப்பாடு, எரிவிழித்தல், இடியின் நகுதல், பூதலத்து அடித்தல், பொங்குதல் என்பனவறிக. இராவணனுக்கு தாய்வழி மாமன்மார் மூன்றுபேர் என்பது நாம் முன்பு அறிந்ததே. அவர்கள் மாலியவான், மாலி, சுமாலி என்பவர்கள் என்பதையும் இங்கே நினைவுகூர்க. அவர்களுள்தலைவனாகிய மாலி இப்பொழுது பேசுகிறான் என்பதாம். 'பின்னும்' என்றதனால், இவன் இதற்கு முன்னும் சில அறிவுரைகள் கூறியிருக்கிறான் என்பது பெறப்படுகிறது. நிகும்பன் கும்பகருணனின் புதல்வன் என்றும், மாலியவான் மகன் என்றும் இரு கருத்துக்கள் உண்டு. கம்பன் இது பற்றி ஏதும் கூறவில்லை என்பதும் கருதத்தக்கது.

15. "புக்கு எரி மடுத்து, இவ்வூரைப் பொடி செய்து போயினற்குச்
சக்கரம் உண்டோ கையில்? தசமுகன் தலைகள் ஆன
இக்கிரி பத்தின் மௌலி இனமணி இடந்து கொண்ட
சுக்கிரீவற்கும் உண்டோ, சூலமும், வேலும், வாளும்?" (7043)

(புக்கு-புகுந்து; ஊர்-நகரம்/இலங்கை; மடுத்து-கொளுத்தி; பொடி-துகள்; சக்கரம்-சக்கரப்படை; கிரி-மலைகள்; மௌலி-முடி; மணி-மாணிக்கம்; இடந்து-பறித்து; இனம்-தொகுதி)

Koviloor Digital Library

நிகும்பன் ''வெறுங்கையுடன் இருக்கும் குரங்குகள்'' என்று இழித்துக் கூறியதைக் கேட்ட மாலியவான், ''இந்த இலங்கை நகருக்குள் புகுந்து, நகரத்திற்கு எரியூட்டி, சுட்டெரித்து, நகரையே சாம்பல் தூளாக்கிப் போனானே அனுமன், அவன் கைகளில் சக்கரப்படை போன்ற படைக் கலன்கள் ஏதாவது இருந்ததா? பெரிய மலைகளாகிய பத்துத்தலைகளைக் கொண்ட இராவணனது முடிகளில் பதிக்கப்பட்டு இருந்த மரகத மணித்தொகுதிகளை வலிதில் பறித்துச் சென்றானே சுக்கிரீவன், அவன் கைகளில் சூலாயுதமும், வாட்படையும், வேற்படையும் இருந்தனவா?'' என்று கேட்கிறான் மாலி.

'கிரிபத்து' என்பது உருவகம். போரில் வெற்றிகொள்ள இத்தகைய படைக்கலன்கள் ஏதும் தேவையில்லை என்பது மாலியவான் கருத்து. குரங்குகளுக்கு அவற்றின் கைகள், வால், நகங்கள் இவைகளே படைக் கலன்களாகப் பயன்படும் என்க. அவற்றின் கைகளில் படைக்கலன்கள் ஏதும் இல்லை என்பதாலேயே பகைவர்களின் வலிமையைத் தாழ்வாகக் கருதிவிடக் கூடாது என்று அறிவுரை கூறுகிறான் மாலி என்க.

16. "தொடைக் கலத்து இராமன் வாளி தோன்றுதல் முன்னம், தோன்றா
இடைக்கு அலமருதல் செய்யும் முலையினாள் தன்னை ஈந்து,
படைக்கலம் உடைய நாம், அப்படை இலாப் படையை, ஈண்ட,
அடைக்கலம் புகுவது அல்லால், இனிப் புகும் அரணும் உண்டோ?"
(7044)

(தொடை-வில்லின் நாண்; அலமருதல்-வருந்துதல்; ஈந்த-தந்து; படை-ஆயுதங்கள்; படை-சேனை; ஈண்ட-விரைவில்; புகுவது அடைவது; வாளி-அம்பு; தோன்றுதல்-எய்தல்/வெளிப்படுதல்; தோன்றா -கண்களுக்குத் தெரியாத; அடைக்கலம்-தஞ்சம்/புகல்; அரண்-பாதுகாப்பு)

''இராமபிரானுடைய அம்பு, அவன் வில்லில் தொடுத்து நாண்ஏற்றி நம்மை நோக்கி வெளிப்பட்டு வருவதற்கு முன்பாகவே, - எய்யப் படுவதற்கு முன்பாகவே கண்களுக்குப் புலப்படாத நுட்பமான இடையினுக்கு வருத்தம் தரும் மார்பகங்களையுடைய சீதாதேவியை, இராமபிரானிடம் திரும்பக் கொண்டுபோய் ஒப்படைத்துவிட்டு, மிகுந்த ஆயுதங்கள் கொண்ட நாம், அவ்வகையான எந்தப் படைக்கலங்களும் இல்லாத அந்த வானரப்படைக்குத் தலைவனாகிய இராமபிரானிடம் விரைந்து சென்று தஞ்சம் புகுவதைக் காட்டிலும், இப்பொழுது நமக்கு வேறு புகலிடமாகிய பாதுகாப்பு ஏதேனும் இருக்கிறதா? இல்லை'' என்கிறான் மாலியவான்.

''படையிலாப்படை'' என்ற முரண்தொடைச் சொல்லாட்சி எண்ணி இன்புறத்தக்கது. ''தோன்றாத்துணை'' என்று இறைவனைச் சான்றோர்கள்

Koviloor Digital Library

கூறுவர். கம்பன் சீதாதேவியின் இடையை 'தோன்றா இடை' என்று கூறிய நயம்நோக்குக. தோன்றாத்துணை என்பது கண்ணுக்குப் புலப்படாது துணையாய் நிற்கும் இறைவன் என்பதைப்போல், கண்ணுக்குப் புலப்படாத நுட்பமான இடை என்கிறான் என்க. இதுபோல முன்பும் பல இடங்களில் கூறி வந்துள்ளமையையும் நினைவுகூர்க. 'வேல் அன்று வென்றி தருவது' என்னும் குறள் 546ம் ஒப்பு நோக்கத்தகும். 'தொடை' என்பது தொடுக்கப்படுவது என்று, அம்புக்குக் காரணப்பெயர். 'நுதல், அடி, நுசுப்பு என மூவழிச் சிறுகி' என்பது கலித்தொகை. உத்தம மகளிர்க்குச் சிறிய நெற்றி, சிறிய பாதங்கள், சிறிய இடை, இலக்கணம் என்கிறது கலித்தொகை. 'கண்கொளா நுடங்கு இடை' என்பது சீவக சிந்தாமணி. 'உண்டோ' என்பதில் உள்ள ஓகாரம் எதிர்மறைப்பொருளது. இல்லை என்ற பொருளைத்தரும்.

17. மாலி மௌனமாய் இருத்தல்

என்புழி, மாலிதன்னை, எரிஎழ நோக்கி, 'என்பால்
வன்பழி தருதி போலாம்; வரன்முறை அறியா வார்த்தை,
அன்பு அழி சிந்தை தன்னால், அடாதன அறையல்' என்றான்;
பின்பழி எய்த நின்றான்; அவன் பின்னைப் பேச்சு விட்டான். (7045)

(அறையல்-சொல்லாதே; வன்பழி-வசை/கொடிய பழிச்சொல்; தருதல்-விளைவித்தல்; சிந்தை-நினைவு; வரன்-முறை/மரபு; அடாதன-அடுக்காத/தகாத; அன்புஅழி-அன்பற்ற)

என்று மாலியவான் சொல்லிக்கொண்டிருக்கும் போது, பின்னால் பெரிய பழியை அடையப்போகின்ற தீயொழுக்கம் மிக்கவனான இராவணன், மாலியைத் தன் கண்களில் நெருப்புப் பொறி பறக்கும்படி, உருத்து நோக்கி, ''நீ என்னிடம் அன்பில்லாத மனம் கொண்டுள்ளாய்; எனக்குக் கொடிய பழியை விளைவிப்பதுதான் உன் எண்ணம் போலும்; அதனால் எனக்குத் தகுதியற்றனவும், மரபுமுறை தெரியாததுமான வார்த்தைகளைக் கூறாமலிருப்பாயாக!'' என்று கடிந்துரைத்தான்; எனவே மாலி தன் பேச்சை அத்துடன் நிறுத்திக் கொண்டு மேலே எதுவும் பேசாமல் இருந்து விட்டான்.

'வன்பழி' என்பது தீர்க்கமுடியாத பெரும்பழியைக் குறிக்கும். 'பின்பழி எய்த நின்றான்' என்பது இப்போது மாலி கூறிய சொற்களை ஏற்காததால் விளையப்போகும் பெரும் இழிவு என்பதைக் குறிக்கும். இவ்வாறு நல்ல அறிவுரைகளைக் கேட்டு அதன்படி நடக்காத தன்மையை 'செவி கைப்பச் சொற்பொறுக்கும் பண்பு' என்று பேசுகிறது குறள்-389. எனவேதான் அவை இராவணனுக்கு வரன்முறை அறியா வார்த்தைகளாகவும் அடாதன வாகவும் தோன்றுகின்றன என்பதாம்.

Koviloor Digital Library

18. இராவணன், சேனையை நாற்புறமும் அணிவகுத்து நிற்கக் கட்டளையிடுதல். [5 பாடல்கள்]

காட்டிய காலகேயர் கொழு நிணக் கற்றை காலத்
தீட்டிய படைக்கை வீரச்சேனையின் தலைவ! தெள்ளி
ஈட்டிய அரக்கர் தானை இருநூறு வெள்ளம் கொண்டு,
கீட்டிசை வாயில் நிற்றி, நின்பெரும் கிளையினோடும்; (7046)

(காட்டிய-புலப்படுத்திய; கற்றை-தொகுதி; காலுதல்-வெளிப்படுதல்; கிளை-சுற்றத்தினர்; தெள்ளிஈட்டுதல்-ஆராய்ந்து தெரிந்தெடுக்கப்படுதல்; கீழ்த்திசை-கீட்டிசை/கிழக்குத்திசை; நிற்றி-நிற்பாயாக; தீட்டிய-கூர்மை யாக்கப்பட்ட)

''முன்பு காலகேயர்களோடு முற்பட்ட போரில் தங்கள் திறமையைப் புலப்படுத்திக் காட்டி, அவர்களின் கொழுவிய நிணத்தொகுதி உடலினின்றும் வெளிப்பட்டு வருமாறு, கூர்மையாகத் தீட்டப்பெற்ற படைக்கலன்களைக் கைக்கொண்டுள்ள அரக்க வீரர்களையுடைய சேனையின் வீரம் பொருந்திய தலைவனே! பிரகத்த! நீ உன்னுடைய பெரிய சுற்றத்தினரோடும், நன்கு ஆராய்ந்து தெளிந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அரக்கவீரர்கள் இருநூறு வெள்ளம் பேரையும் உன் பொறுப்பில் எடுத்துக்கொண்டு, இலங்கையின் கீழ்த்திசை வாயிலில் போய் நிற்பாயாக!'' என்று கட்டளையிட்டான் இராவணன்.

காலகேயர் என்பவர் இராவணனின் பகைவர்கள். அவர்களை இவன் படைத்தலைவனான பிரகத்தன் தான் தன் படையொடும் சென்று போரிட்டு வெற்றிகண்டு, அவர்கள் உடலைச் சின்னாபின்னமாக்கியவன். எனவே ''காட்டிய காலகேயர் கொழுநிணக்கற்றை காலத்தீட்டிய படைக்கை வீரச்சேனையின் தலைவ!'' என்றான் என்க. படைத்தலைவன் பிரகஸ்தன் என்பது வான்மீகம் கூறுவது. பகைவர் படையினின்றும் நீலன் என்பவன் கீழ்த்திசையில் பதினேழு வெள்ளம், வானரவீரர்களுடன் நிற்கிறான் என்பதும் அதே கீழ்த்திசைக்குப் பிரகஸ்தன் தன்னுடைய சுற்றத்தாரோடும், இருநூறு வெள்ளம் சேனையோடும் சென்றான் என்பதும் நோக்குக. காலகேயர் என்பவர் கடலுக்குள் ஒளிந்திருந்த அரக்கர்கள் என்றும், நாக லோகத்தில் வசிப்பவர்கள் என்றும் கூறுவர். பிரகஸ்தன் சேனைத் தலைவன். இவன் இராவணனின் மற்றொரு மாமனான சுமாலியின் மகன் என்று கூறுவர். ''கூற்று உடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும் ஆற்றலதுவே படை'' என்ற குறள்-765 ஒப்பிட்டு நோக்குதற்குரியது.

19. ''காலன் தன் களிப்புத் தீர்த்த மகோதர! காலையே போய்
மால் ஒன்றும் மனத்து வீரன் மாபெரும் பக்கனோடும்
கூலம் கொள் குரங்கையெல்லாம் கொல்லுதி; வெள்ளம் ஆன
நால் ஐம்பதோடும் சென்று, நமன் திசை வாயில் நண்ணி'' (7047)

Koviloor Digital Library

(களிப்பு-செருக்கு; காலன்-கூற்றுவன்/இயமன்; தீர்த்த-அழித்த; மால்-மயக்கம்/பித்து; ஒன்றுதல்-பொருந்துதல்; மாபெரும் பக்கன்-மகாபாரிசுவன்; நால்ஐம்பது-இருநூறு; நமன்திசை-தெற்குத்திசை; கூலம்-வால்; நண்ணி-அடைந்து)

''உயிர்களையெல்லாம் கொன்று தீர்த்துச் செருக்குக் கொண்டிருக்கும் இயமனையே வெற்றிகொண்டு, அவன் செருக்கை அழித்த மகோதரனே! நீ இப்பொழுதே சென்று, போர்ப் பித்துக் கொண்ட மனத்தைப் பொருந்தியவனும், பகைவரை மயக்கமடையச்செய்தே கொன்றுதீர்க்கும் ஆற்றல் பெற்றவனுமான வீரன் மாபெரும்பக்கனையும் உன்னுடன் அழைத்துக்கொண்டு, நம்முடைய இருநூறு வெள்ளம் வானரச் சேனையையும், உடன்கொண்டு, இயமனது திசையாகிய தெற்குத்திசை வாயிலில் போய் நின்று, வால்களையுடைய குரங்குச்சேனை முழுவதையும் அழித்து வருவாயாக!'' என்று கட்டளையிட்டான் இராவணன்.

''காலன் தன் களிப்புத் தீர்த்த'' என்றதனால் முன்பு இயமனையே வென்று அவனுடைய செருக்கை அடக்கியவன் இந்த மகோதரன் என்பது பெறப்படுகிறது. 'மகாபாரிசுவன்' என்ற வடசொல்லின் தமிழாக்கம் மாபெரும்பக்கன் என்பது அறிக. வானரச்சேனையில் தெற்குத் திசையில் தலைமை தாங்கி நிற்பவன் அங்கதன் என்பதை நினைவிற்கொண்டு வருக. அவர்கள் எழுபது வெள்ளம் சேனையுடனும், அரக்கர்கள் இருநூறு வெள்ளம் சேனையுடனும் நின்றிருக்கிறார்கள் என்பதையும் கருதுக. இராவணனின் அமைச்சன் மகோதரனினும், இந்தப் படைத்தலைவன் மகோதரன் வேறுபட்டவன் என்பதை நினைவிற்கொள்ள வேண்டும்.

20. "ஏற்றம் என், சொல்லின் என்பால்? இந்திரன் பகைஞ! அந்நாள்
காற்றினுக்கு அரசன் மைந்தன் கடுமை நீ கண்டது அன்றோ?
நூற்று-இரண்டு ஆயவெள்ளம் நுன்பெரும் படைஞர் சுற்ற,
மேல்திசை வாயில் சேர்தி, விடிவதன் முன்னம், வீர!" (7048)

(ஏற்றம்-பெருமை; காற்றினுக்குஅரசன்-வாயுதேவன்; கடுமை-வேகம்; நூற்று-இரண்டு-இருநூறு; நுன்-உன்னுடைய; இந்திரன் பகைஞன்-இந்திரசித்து)

இராவணன் தன் மைந்தன் இந்திரசித்தனை நோக்கி, ''இந்திரனை வென்று அவனுக்குப் பகைவனாகியவனே! உன்னுடைய பெருமையை எவ்வாறு சொல்வேன்? முன்பு காற்றின் வேந்தனாகிய வாயுதேவனின் புதல்வன் அனுமன் இலங்கைக்கு வந்து போர்செய்த வேகத்தையும், அரக்கர்களில் பெரும் பகுதியினரை அழித்ததையும், இலங்கைக்கு எரியூட்டியதையும் நீ உன் கண்ணாரக் கண்டாயல்லவா? இப்போது அதை நினைவிற் கொண்டு உன்னுடைய படையினரோடும், நமது படையில் இருநூறு வெள்ளம் கொண்ட வீரர்களையும் அழைத்துக்கொண்டு

Koviloor Digital Library

விடிவதற்கு முன்னதாக, மேற்குத்திசை வாயிலில் சென்று நிற்பாயாக!'' என்று கட்டளையிட்டான்.

''ஏற்றம் என் சொல்லின் என்பால்?'' என்பதற்கு உன்னுடைய பெருமையை என்னிடம் சொல்லி என்னபயன்? என்று பொருள்கூறுவதும் உண்டு. அது இந்திரசித்தனுக்கு பெருமை சேர்க்காது என்பதால் வேறாகப் பொருள் கூறப்பட்டது. மேற்குத்திசை வாயிலில் அனுமன் பதினேழு வெள்ளம் சேனையுடன் நிறுத்தப்பட்டிருக்கிறான் என்பதை இங்கே நினைவிற்கொள்க. முன்பு அனுமனை பிரம்மாஸ்திரத்தால் கட்டியவன் இந்திரசித்து என்பதனால், இராவணன் அனுமனை எதிர்க்க இந்திரசித்தை அனுப்பினான் என்று கொள்ளவும் இடமுண்டு என்பதறிக.

21. ''இந்நெடுங் காலம் எல்லாம், இமையவர்க்கு இறுதி கண்டாய்;
புன்நெடுங் குரங்கின் சேறல் புல்லிது; புகழும் அன்றால்;
அந்நெடு மூலத்தானை, அதனொடும், அமைச்சரோடும்,
தொல்நெடு நகரி காக்க, விருபாக்க!'' எனனச் சொன்னான். (7049)

(இமையவர்-தேவர்கள்; இறுதி-அழிவு; புன்-அற்பமான; சேறல்-போருக்குச் செல்லுதல்; புல்லிது-சிறுமையானது/இழிவானது; மூலத்தானை-மூலபலச்சேனை; தொல்-பழமையான; நகரி-நகரை; நெடுமை-பெருமை)

இராவணன் தனது படைத்தலைவர்களுள் ஒருவனான விருபாட்சனை நோக்கி, ''விரூபாட்சனே! இதுநாள் வரையிலும் நீண்டநெடுங்காலமாக என்னுடன் இருந்து தேவர்களுக்கு அழிவை ஒத்த துன்பத்தைக் கொடுத்த அத்தகைய பெரிய வீரனாகிய நீ வந்தாய்; இப்பொழுது இந்த அற்பமான, பெருந்தொகையைக் கொண்ட குரங்குகளை எதிர்த்துப் போர்புரியச் செல்லுவது என்பது மிகவும் இழுக்கானது. அது உனக்குப் புகழையும் தாராது. எனவே நம்முடைய மிகப்பெரிய மூலபலப் படையோடு, அமைச்சர்களையும் உடன் வைத்துக்கொண்டு, நமது பழமையான பெருமைவாய்ந்த இவ்விலங்கை நகரத்தைப் பகைவர்கள் உட்புகாதவாறு காவல்காத்து வருவாயாக!'' என்று கட்டளையிட்டான்.

'இந்நெடுங்காலம்' என்பது, இராவணன் இலங்கையைக் கைப்பற்றிய சமயத்திலிருந்து இந்நாள் வரையிலும் என்ற விரிந்த பொருளைத்தரும். குரங்குகள் அற்பமானவைதான் என்றாலும் அவை எண்ணிக்கையில் அளவற்றனவாக இருக்கின்றன என்பதை மிக நயமாக 'புன்நெடுங்குரங்கு' என்றார் என்க. இராவணன் கூறுவதை வைத்துப் பார்க்கும் போது, விரூபாட்சன் வயது முதிர்ந்தவனோ என்று எண்ணத்தோன்றுவதை உணர்க. 'விரூபாட்சன்' என்ற வடசொல்லைக் கம்பன் விருபாக்கன் என்றே தமிழ்ச்சொல் ஆக்கியிருக்கிறான் என்க. இராவணன் விருபாக்கனை நகர்க்காவலுக்கு நியமித்தான் என்பது பெறப்படுகிறது.

Koviloor Digital Library

22. ''கடகரி, புரவி, ஆள், தேர், கமலத்தோன் உலகுக்கு இப்பால்,
புடை உள பொருது கொண்டு, போர் பெறாப் பொங்குகின்ற
இடைஇடை மிடைந்த சேனை இருநூறு வெள்ளம் கொண்டு,
வடதிசை வாயில் காப்பேன் யான்'' என வகுத்து விட்டான். (7050)

(கமலம்-தாமரைமலர்; புடை-இடம்; பொருது-போர்செய்து; பொங்குதல்-கிளர்ச்சியுறுதல்; கடம்-மதம்; இடை-இடம்; மிடைதல்-நெருங்கியிருத்தல்; புரவி-குதிரை; ஆள்-காலாட்படை; வகுத்தல்-பிரித்தல்)

''தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமதேவன் வசிக்கின்ற பிரம லோகத்திற்கு இந்தப் பக்கம் இருக்கும் இடங்களில் எல்லாம் தேவர்களுடன் போர்செய்து, அவர்களை வெற்றி கொண்டு, மேலும் போர்புரிவதற்கு எவரும் இல்லாத நிலையில், போர்செய்தற்காகப் பொங்கி எழும் மதப்பெருக்கை உடைய யானைப்படை, குதிரைப்படை, காலாள்படை, தேர்ப்படை, முதலியவற்றோடு ஆங்காங்கே நெருங்கி யிருக்கும் நம்படைவீரர்கள் இருநூறு வெள்ளத்தையும் உடன்கொண்டு, நானே வடதிசை வாயிலிலிருந்து காவல்காத்து வருவேன்'' என்று சொல்லி, இராவணன்தனது ஆயிரம் வெள்ளம் படைவீரர்களையும் பிரித்து அனுப்பினான்.

'கரி, புரவி, ஆள் தேர்' என்பது, ரத, கஜ, துரக, பதாதி என்பதன் தமிழாக்கம். 'கமலத்தோன் உலகு' சத்தியலோகம்-பிரமலோகம்; இடை இடை என்ற அடுக்கு ஆங்காங்கே என்ற பொருளைத்தரும். வடதிலச வாயிலில்தான் இராமபிரானும் இலக்குவனும் பதினேழு வெள்ளம் சேனையுடன் நின்றிருக்கிறார்கள். எனவே இராவணனும், அங்கே போய்ப் பாதுகாத்துப் போர்செய்வதுதான் முறை என்பதால், தானே கோட்டையின் வடதிசைக்குச் செல்வதாகக் கூறினான் என்க.

இங்கே ஒன்று நோக்கவேண்டும். ஒரு குழுவிற்குத் தலைமை தாங்குபவன், எதிர்த்த குழுவின் தலைவனோடுதான் பொருத வேண்டுமே யன்றி, தன்னினும் தாழ்ந்த தகுதிபடைத்தவரோடு பொருதல் தகாது என்ற ஒரு போர்த் தத்துவத்தையும் கவிஞன் இங்கு சுட்டிக் காட்டியிருக்கிறான் என்க. இவ்வாறு இராவணன் தன் சேனையை அணிவகுப்பது இரவில் நடக்கிறது என்பதையும் நினைவிற் கொள்க.

23. இரவு நீங்குதல்

கலங்கிய கங்குல் ஆகி நீங்கிய கற்பம், காணும்
நலம் கிளர் தேவர்க்கேயோ, நான்மறை முனிவர்க்கேயோ,
பொலம்கெழு சீதைக்கேயோ, பொருவலி இராமற்கேயோ,
இலங்கையர் வேந்தற்கேயோ, எல்லார்க்கும் செய்தது இன்பம். (7051)

Koviloor Digital Library

(கங்குல்-இரவுப்பொழுது; கற்பம்-ஊழிக்காலம்; கிளர்தல்-மேம்பட்டு விளங்குதல்; பொலம்-பொன்; கெழு-செழித்து விளங்கும்; பொருதல்-போர்செய்தல்; நலம்-நன்மை)

இங்கே இந்தப் போரில் ஈடுபட்டுள்ள எல்லோருக்கும் கலக்கத்தைத் தருவதற்குக் காரணமான இந்த இரவுப் பொழுதானது, ஏதோ ஓர் ஊழிக் காலமே முடிவுற்றதுபோல எல்லோருக்கும் இன்பம் தந்தது. இராமபிரான் கடல்தாண்டி வந்து தீயோனான இராவணனுடன் போர்செய்யத் தொடங்கப் போவதால் நல்லோராகிய தங்களுக்கு நன்மை பயக்கக்கூடிய விடியல் புலரப்போகிறது என்று தேவர்களும், நான்கு வேதங்களில் வல்லவராகிய முனிவர்கள், இராமபிரான் தலையிட்டதால் நமக்குத் துன்பம் தந்து வந்த இராவணன் முதலிய அரக்கர்களால் தமக்கு இனித் துன்பம் நேராது என்று அம்முனிவர்களும், இராமபிரான் இராவணனுடன் போர்செய்து விரைவில் தன்னைச் சிறைமீட்டுச் செல்வான் என்று பொலிவுமிக்க சீதாதேவியும், இராவணனுடன் நாளையே, பொழுது புலர்ந்தவுடன் போர்செய்து விரைவில் தன் உயிரினும் இனிய சீதா தேவியைக் கண்டுவிடலாம் என்று இராமபிரானும், விடிந்த உடன் இராமபிரானை வீழ்த்தி சீதாதேவியை அடைந்துவிடலாம் என்று இலங்கைவேந்தனான இராவணனும், ஆக எல்லோரும் இந்த இரவு நீங்குவதால் ஒருசேர இன்பம் பெற்றனர். எனவே இந்த இரவுப்பொழுது நீங்கி எல்லோர்க்கும் இன்பம் தந்தது என்று தொகுத்துக் கூறுகிறான் கவிஞன்.

இது கவிக்கூற்று. ஒவ்வொருவரையாகச் சொல்லி, இது அவர்க்கு மட்டுமன்று, எல்லோருக்கும் இன்பம்தரும் விடியல் என்று கூறிய பாங்கு நோக்குக. முதலில் கலக்கம் தந்த கங்குல் இப்போது இன்பம் தந்தது என்ற முரண்தொடை. 'கலங்கிய கங்குல் எல்லோர்க்கும் இன்பம் செய்தது' என்று கூறியது ஒரு நயம். 'பொலம்கெழு சீதை' என்பது பொன்னின் ஒளியைவிட மேம்பட்டு விளங்கும் மேனியழகுடைய சீதாதேவி என்ற விரிந்த பொருளைத்தரும் என்றாலும் இங்கே பொலிவு மிக்க சீதாதேவி என்றே பொருள் கொள்ளப்பட்டது. இப்பொழுது நீங்கியது ஒரு இரவுப் பொழுது மட்டுமல்ல; ஒரு ஊழிக்காலமே நீங்கியது போல அனைவரையும் நினைக்கச்செய்தது என்பதை 'கங்குல் ஆகி நீங்கிய கற்பம்' என்றார் என்க.

24. சூரியன் உதித்தல்

அளித்தகவு இல்லா ஆற்றல் அமைந்தவன் கொடுமை அஞ்சி,
வெளிப்படல் அரிது என்று உன்னி, வேதனை உழக்கும் வேலை,
களித்தவற் களிப்பு நீக்கி, காப்பவர் தம்மைக் கண்ணுற்று,
ஒளித்தவர் வெளிப்பட்டென்ன, கதிரவன் உதயம் செய்தான். (7052)

Koviloor Digital Library

(அளி-கருணை/இரக்கம்; தகவு-நற்குணம்; அரிது-இயலாது; உன்னி-நினைத்து; வேதனை-துன்பம்/அல்லல்; உழத்தல்-வருந்துதல்; வேலை-வேளை/சமயம்/நிலை; களித்தல்-செருக்குக்கொள்ளுதல்; களிப்பு-செருக்கு; கதிரவன்-சூரியன்)

கருணை என்னும் நற்பண்பில்லாத, ஆனால் வெறும் போராற்றல் பெற்ற, கொடியவனான ஒரு அரசனின் கொடுங்கோன்மைக்கு அச்சம் கொண்டு, தாம் தம்மிடத்தை விட்டு வெளிப்பட்டு வருவது இயலாது, நல்லதன்று, அரிதாகும் என்று எண்ணி, வேதனையால் உள்ளம் வருத்த முற்றிருக்கும் சமயத்தில், அந்தக் கொடியவனான செருக்குக் கொண்ட அரசனின் செருக்கை அழித்துத் தம்மைக் காப்பாற்றும் இயல்புடைய மற்றொரு பெருவேந்தனைக் கண்டு, இதுகாறும் ஒளிந்து மறைந்து வாழ்ந்திருந்த குறுநில மன்னர்கள்-சிற்றரசர்கள், இப்பொழுது அச்சம் நீங்கி தைரியமாக வெளியில் வருவதைப் போன்று, இதுகாறும் இராவணனுக்குஅஞ்சி இலங்கையின்மீதே செல்லாத சூரியன், இப்போது, அச்சம் நீங்கி உதயகிரியில் தோன்றினான்.

'அளித்தகவு இல்லா' என்பதை, முன்பு 'இரக்கம் என்று ஒரு பொருளே இல்லா நெஞ்சினர் அரக்கர்' என்று கூறியதுடன் ஒப்பு நோக்குக. 'ஆற்றல் அமைந்தவன்' என்பது, போராற்றல் மிக்க கொடியவன்' எனப்பொருள் தரும். கொடிய வேந்தனுக்கு அஞ்சி ஒளிந்திருந்த குறுநிலமன்னர்களுக்கு, கொடியவனான இராவணனுக்கு அஞ்சி வெளிவராது ஒளிந்திருந்த சூரியன் உவமை. இயற்கையாகத் தோன்றும் சூரிய உதயத்தின் மீது தனது குறிப்பை ஏற்றிக் கவிஞன் கூறியிருப்பதால், இப்பாடல் தற்குறிப்பேற்ற அணியின்பாற்படும். 'களித்தவன் களிப்பு நீக்கிக் காப்பவர்' என்பதில், களித்தவன்என்பது இராவணனாகியதுஷ்டனையும், களிப்புநீக்கி, என்பது துஷ்டநிக்ரகத்தையும், காப்பவர் என்பது இராமபிரானாகிய பரம் பொருளின் சிஷ்டபரிபாலனத்தையும் குறிக்கும் எனக்கொள்க. இலங்கை நகரத்தின்மீது சூரியன் செல்லமாட்டான், ஒதுங்கியே செல்வான் என்பது 'கதிர்புகா' என்று முன்பும் கூறப்பட்டதை நினைவுகூர்க. 'பகலவன் மீது இயங்காமைக் காத்த பதியோன்' என்று இராவணன் பற்றிப் பேசுகிறது தேவாரம். 'எளியாரை வலியார் அடித்தால், வலியாரை தெய்வம் அடிக்கும்' என்ற வழக்குச்சொல் இங்கு பொருந்துவதை உணர்க. முன்பு இராவணனுக்கு அஞ்சி 'சூரியன் மறைந்தான்' என்று கூறிய கவிஞன், மறவாது, இப்போது இராவணனிடமிருந்து அச்சம் நீங்கி உதயமானான் என்று கூறிய நயம் உணர்ந்து இன்புறற்பாலது.

Koviloor Digital Library

25. வானரச்சேனை இலங்கையைச் சுற்றிவளைத்தல்

உளைப்புறும் ஓத வேலை ஓங்குஅலை ஒடுங்கத் தூர்ப்ப;
அளப்பஅரும் தூளிச்சுண்ணம், ஆசைகள் அலைக்க, பூசல்
இளைப்பஅரும் தலைவர், முன்னம் ஏவலின், எயிலை முற்றும்
வளைத்தனர்; விடிய, தத்தம் வாயில்கள் தோறும் வந்து. (7053)

(இளைப்பஅரும்-சலித்தல் இல்லாத; இளைப்பு-சலிப்பு; தூளி-புழுதித்துகள்; ஓதம்-நீர்ப்பெருக்கு; வேலை-கடல்; உளைப்புறுதல்-ஒலித்தல்; ஓங்கு-உயர்ந்தெழுந்த; ஆசைகள்-திசைகள்; அலைத்தல்-மோதுதல்/பரவுதல்; பூசல்-ஆரவாரம்/போர்த்தொழில்; எயில்-மதில்; முற்றும்-முழுவதும்; தூர்ப்ப-நிரப்ப/அடக்க; சுண்ணம்-புழுதித்தூசுகள்)

அன்று பொழுது புலர்வதற்குள், போர்புரிவதில் சற்றும் சலிப்பில்லாத வானரச்சேனைகள் எழுந்து புறப்பட்டுப்போகும் போது எழுந்த முழக்கத்தால் எப்பொழுதும் ஒலித்துக்கொண்டே இருக்கும் நீர்ப்பெருக் கினையுடைய கடலலைகளின் ஆரவாரம் ஒடுங்கிப் போகும்படியும், அவை செல்லும் வேகத்தால் எழுந்த புழுதித்துகள்கள் அக்கடலினையே தூர்த்து மேடாக்கும்படியும் வந்து, முன்னர் இராமபிரானால் கட்டளை யிட்டு அணிவகுக்கப்பட்டபடி, தத்தமக்குரிய வாயில்களில், அவ்விலங்கை மாநகரத்தின் மதிலை முற்றுகையிட்டுச் சுற்றி வளைத்துக் கொண்டனர்.

வானரச்சேனையின் பெருமுழக்கத்தால், ''உளைப்புறும் ஓதவேலை ஓங்குஅலை ஒடுங்கியது''; அதனால் எழுந்த புழுதித்துகள்களால் ''அளப்ப அரும் தூளிச்சுண்ணம்'' எல்லாத்திசைகளிலும் பரவிப்படிந்து கடலைத் தூர்த்து மேடாக்கியது. இப்பாடல் கொண்டு கூட்டிப்பொருள் உரைக்கும்படி அமைந்துள்ளது. நேர்பொருள் காண இயலாது. ஸ்ரீ.உ.வே.சா அவர்கள் தம்குறிப்பில் இப்பாடல் ஐயத்திற்குரியது என்று குறிப்பிட்டிருக்கிறார் என்பது கருதத்தக்கது.

26. இராமபிரான் புறப்பட்டுச் செல்லுதல்

தந்திரம் இலங்கை மூதூர் மதிலினைத் தழுவித்தாவி,
அந்தரக் குலமீன் சிந்த, அண்டமும், கிழிய ஆர்ப்ப,
செந்தனிச் சுடரோன் சேயும், தம்பியும் முன்பு செல்ல,
இந்திரன் தொழுது வாழ்த்த, இராமனும் எழுந்து சென்றான். (7054)

(மூதூர்-பழமையான நகரம்; தழுவி-சூழ்ந்து; அந்தரம்-வானம்; குலம்-கூட்டம்; மீன்-விண்மீன்கள்/நட்சத்திரங்கள்; சிந்த-சிதறிவிழ; ஆர்ப்ப-ஆரவாரித்து; தனி-ஒப்பற்ற; செம்-சிவந்த; சுடரோன்-சூரியன்; சேய்-மைந்தன்/சுக்கிரீவன்; தந்திரம்-சேனை/படை)

Koviloor Digital Library

அவ்வாறு இலங்கையின் மதிலைச் சுற்றிவளைத்துக் கொண்ட வானரச்சேனை, அந்தப் பழமையான இலங்கை நகரத்தின் மதிலை அடைந்து ஆரவாரித்துக் கொண்டு, அதன் மேல் தாவித்தாவிப் போயின. அப்பொழுது வானத்திலுள்ள சிறந்த நட்சத்திரக் கூட்டங்கள் நிலத்தில் விழுமாறும், இவ்வண்டகோளமே அவ்வதிர்ச்சியில் கிழிந்துபோகு மாறும் ஆரவாரித்தக் கொண்டு சென்றன. ஒப்பற்ற சிவந்த கிரணங்களை யுடைய சூரியனின் புதல்வனாகிய சுக்கிரீவனும், தம்பி இலக்குவனும் முன்னே செல்ல அவர்கள் பின்பு, தேவர்களுக்கு அரசனாகிய இந்திரன் அவனை வணங்கி வாழ்த்துரைக்கவும், இராமபிரான் பாசறையிலிருந்து எழுந்து புறப்பட்டுச் சென்றான்.

சூரியன்தான் சந்திரனுக்கு ஒளிதந்து உதவுபவன். எனவே அவனைச் 'செந்தனிச்சுடரோன்' என்று சிறப்பித்தார்என்க. இந்திரன்தங்களதுகாரியம் நிறைவேறுவதற்காக இராமபிரான் புறப்பட்டுச் செல்லுகிறான் என்பதால் அவனைத் தொழுது வாழ்த்தினான் என்க.

27. நூற்கடல் புலவராலும் நுனிப்ப அரும் வலத்தது ஆய,
வேற்கடல், தானை ஆன விரிகடல் விழுங்கிற்றேனும்,
காக்கடல் புறத்ததாக, கவிக்கடல் வளைந்த காட்சி,
பாற்கடல் அழுவத்து உள்ளது ஒத்தது, அப் பதகன் மூதூர். (7055)

(பதகன்-பாதகன்/கொடியவன்; மூதூர்-பழமையானநகரம்; நுனித்தல்-அளவிட்டு அறிதல்; புலவர்-பேரறிஞர்கள்; வலத்தது-வன்மை படைத்தது; வேற்கடல்-வேற்படைத்தொகுதி; கவிக்கடல்-குரங்குச் சேனை; வளைந்த-சுற்றிவளைக்கப்பட்டுள்ள; காட்சி-தோற்றம்; அழுவம்-பள்ளம்/பரப்பு; புறம்-பக்கம்)

பாவச்செயல்களையே தொழிலாகக் கொண்டவனான பாவியாகிய இராவணனுக்குரிய பழமையான நகரமாகிய இலங்கையை, வேற் படையை ஏந்திய அரக்கர்சேனை பரந்துவிரிந்த கடல்போலும் சூழ்ந் திருக்கிறது. அதன் எண்ணிக்கை கணிதநூல் வல்ல பேரறிஞர்களால்கூட, நுட்பமாக அளவிட்டு ஆரய்ந்துகூற ஒண்ணாதது. எனினும் அந்த அரக்கர் சேனையாகிய கரியகடலை வெளிப்புறத்தே கொண்டதாகவும், இலங்கை மதிலைச் சூழ்ந்திருக்கின்ற வெண்மைநிறம் வாய்ந்த வானரப்படை தோன்றுகின்ற காட்சி, அந்த இலங்கைமாநகரம் பாற்கடல் பரப்பின் உள்ளே இருப்பதைப் போன்றிருந்தது.

'நூற்கடல் புலவர்' என்பது, கடலளவு கணிதநூலைக் கற்ற பேரறிஞர்கள் என்ற பொருளைத்தரும். 'நுனிப்ப அரும் வலத்தது' என்பது அத்தகைய அறிஞர்களாலும் நுட்பமாகக் கணக்கிட்டு அறிய இயலாத தொகையைக் கொண்டது என்பதைக் குறிக்கும். கரிய கடல் வெளியேயும், வெள்ளைக்கடல் உள்ளேயும் இருந்தால் எப்படி இருக்குமோ அப்படி

Koviloor Digital Library

இருந்தது இந்தக் காட்சி என்கிறான் கவிஞன். கரிய அரக்கர்கள் கார்க்கடல்; வெள்ளிய குரங்குகள் பாற்கடல்.

28. அலகிலா அரக்கன் சேனை அகப்பட, அரியின் தானை,
வலைகொலாம் என்ன, சுற்றி வளைத்ததற்கு உவமை கூறின்,
கலைகுலாம் பரவை ஏழும், கால்கிளர்ந்து எழுந்த காலத்து
உலகுஎலாம் ஒருங்குகூடி, ஒதுங்கினவேயும் ஒக்கும். (7056)

(அலகு-அளவு; அரி-குரங்கு/வானரம்; கலை-சுறாமீன்கள்/ஆடையுமாம்; குலாம்-திரியும்; பரவை-கடல்கள்; கால்-காற்று/சண்டமாருதம்; கிளர்ந்து-பொங்கி; காலம்-ஊழிக்காலம்; ஒருங்கு-ஒன்றாக; ஒதுங்குதல்-ஒடுங்குதல்; அகப்படுதல்-அடங்குதல்/சிக்கிக்கொள்ளுதல்; சுற்றி-சூழ்ந்துகொண்டு)

அரக்கர்படையையும், இலங்கையின் மதிலையும் சுற்றிச் சூழ்ந்திருக்கின்ற குரங்குப்படையைப் பார்த்தால், அளவற்ற இராக்கதர்களின் படை ஏதோ குரங்குப்படை விரித்த வலைக்குள் சிக்கிக் கொண்டது போலத் தோன்றுகிறது. இதற்கு ஒரு உவமைகூற வேண்டுமென்றால், சுறாமீன்கள் நிரம்பப்பெற்ற, கடலையே ஆடையாகப் போர்த்தியுள்ள இவ்வுலகமெல்லாம், ஊழிக்கால இறுதியில் ஓங்கி எழுகின்ற காற்றின் வேகம் தாங்காது, எல்லாம் ஒன்றுக்குள் ஒன்று அடங்கிப் போவதைப் போன்று இருக்கிறது என்று கூறலாம் என்கிறான் கவிஞன்.

இதுக் கவிக்கூற்று, வெளிப்புறத்தே குரங்குக்கூட்டம் மதிலைச் சுற்றி வளைத்திருக்கிறது; குரங்குகள் வெண்மைநிற முள்ளதனால் அது ஒரு வலையைப் போலத்தோன்றுகிறது. மதிலுக்குள்ளே, நகரத்துக்குள் கரிய அரக்கர்சேனை நிற்கிறது, இதனைப் பார்த்தால் அந்த வெண்மையான வலைக்குள் கருமையான அரக்கர்கள் சிக்கிக் கொண்டதுபோல் தோன்றுகிறது என்று கூறும் கவிஞன், இதற்கு மற்றொரு உவமையும் கூறுகிறான். ஊழிஇறுதிக் காலத்தில் தோன்றும் சண்டமாருதத்தின் வேகத்தால் உலகில் உள்ள ஏழு கடல்களும் ஒருசேரப் பொங்கிஎழ, உலகமும், எல்லாமும் ஒன்றுக்குள் ஒன்று ஒடுங்கிப்போய் நிற்பதைப் போலவும் தோன்றுகிறது என்கிறான் கவிஞன். எழுபது வெள்ளம் வானரச்சேனைகளும் ஏழு கடல்களுக்கு ஒப்பு; இலங்கை நகரம் உலகம் ஒடுங்கிப் போனதற்கு ஒப்பு.

அணிவகுப்புப் படலம் நிறைவுற்றது

Koviloor Digital Library

13. அங்கதன் தூதுப் படலம் [43 பாடல்கள்]

இலங்கையின் நான்கு வாயில்களிலும் போர்செய்ய ஆயத்த நிலையிலிருந்தது இராமபிரானின் வானரச்சேனை. எனினும் இன்னும் ஒருமுறை இராவணனுக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்துப் பார்க்கலாம் என்று கருதிய இராமபிரான், வீடணன், சுக்கிரீவன் முதலியவர்கள் உடன்பட்டும், இலக்குவன் மட்டும் இசைவுதராது வெகுண்டு கூறியபோதும் அவனை இசைவித்து, அங்கதனை இராவணன்பால் தூதாக அனுப்பிய நிகழ்ச்சி பற்றிப் பேசும் படலம் என விரியும். இது 43 பாடல்களைக் கொண்டது. ஒரே ஒரு சுவடியில் மட்டும் 'அங்கதப் பெருமான் தூதுப்படலம்' எனக் காணப்படுகிறது.

இப்படலத்துள், இராமபிரான், இராவணனிடம் தூது அனுப்புதல் பற்றி வீடணனிடம் பேசுதல்; வீடணனும் சுக்கிரீவனும் அதற்கு உடன்பட, இலக்குவன் மட்டும் அதற்கு மறுப்புத் தெரிவித்தல்; இராமபிரான் தூது விடுதல் என்பது அரசியல் அறநெறிமுறை என விளக்கிக்கூறி, இலக்குவனை இசையச்செய்தல்; அங்கதனைத் தெரிந்தெடுத்து அவனைத் தூதுவனாக இலங்கைக்கு அனுப்புதல்; அங்கதன் மிகமகிழ்ந்து இராவணன் இடத்திற்கு விரைந்து செல்லுதல்; இராவணன் ஆற்றலைக் கண்டு அங்கதன் வியந்து நிற்றல்; இராவணன் அங்கதனிடம் அவனைப் பற்றி வினவுதல்; அங்கதன் மறுமொழி; அங்கதன் இராமபிரான் கூறியனுப்பியதைக் கூறுதல்; இராவணன் வெகுண்டு, அவனைத் தாக்கும்படி அரக்கர்களைப் பணித்தல்; அரக்கர்கள் நால்வர் அங்கதனைத் தாக்க முன்வருதல்; அங்கதன் வானில் ஏறி அந்நால்வரையும் அழித்து, இலங்கை நகர மக்களுக்கும் எச்சரிக்கை செய்தல்; அங்கதன் மீண்டு வந்து இராமபிரானிடம் இராவணன் உடன்படாமையைக் கூறுதல் ஆகிய நிகழ்ச்சிகள் மிக விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன.

1. இராமபிரான் தூது அனுப்புதல் பற்றி வீடணனிடம் பேசுதல்

வள்ளலும் விரைவின் எய்தி, வடதிசை வாயில் முற்றி,
வெள்ளம் ஓர் ஏழு பத்துக் கணித்த வெஞ்சேனையோடும்,
கள்ளனை வரவு நோக்கி நின்றனன்; காண்கிலாதான்,
'ஒள்ளியது உணர்ந்தேன்' என்ன, வீடணற்கு உரைப்பதானான். (7057)

Koviloor Digital Library

(கணித்த-கணக்கிடப்பட்ட; கள்ளன்-திருடன்/வஞ்சகன்; ஒண்மை-அறிவுடைமை; முற்றி-முற்றுகையிட்டு; ஒள்ளியது-செய்யத்தக்கது/புகழுக்குரியது)

வள்ளன்மை மிக்க இராமபிரானும் இலங்கையின் வடதிசை வாயிலில் தனது பதினேழு வெள்ளம் என்று கணக்கிட்டுக் கூறப்பட்ட கொடிய சேனையோடும் விரைவாகப் போய் இலங்கை மாநகரைச் சூழ்ந்து முற்றுகையிட்டு, சீதாதேவியை வஞ்சனையாக அபகரித்துச் சென்றவனான இராவணன் அங்கு வருவான் என எதிர்பார்த்துக் காத்திருந்தான். அவன் வாராது போகவே, தன் அருகில் இருந்த வீடணனை நோக்கி, ''அறிவிற்குப் பொருத்தமான, இப்பொழுது செய்யத்தக்க, புகழைத் தருவதான ஒரு எண்ணத்தை நான் ஆராய்ந்து வைத்திருக்கிறேன்'' என்று கூறத் தொடங்கினான்.

'வள்ளல்' என்பது பகைவனுக்கும் அருளும் நன்னெஞ்சைக் குறித்தது என்க. 'எழுபது வெள்ளம்' என்பது வானரப்படையின் முழு எண்ணிக்கையையும் குறிக்கும். எனினும் இராமபிரானுடன் வடதிசைவாயிலில் நிற்பது பதினேழு வெள்ளம்தான் என்பதை நினைவிற் கொள்க. 'கள்ளன்' என்பது வஞ்சகமாகச் சீதாதேவியை அபகரித்துக் கொண்டு வந்ததனால் அவனைத் திருடன் என்றே குறிக்கிறான் கவிஞன். இது சம்பந்தமாகப் பேசும் போதெல்லாம் கவிஞன் இராவணனை வஞ்சகன், கொடியன், கள்ளன், திருடன் என்றே கூறிவருவதைக் காப்பியப்போக்கில் காணலாம். 'ஒள்ளியது' என்ற சொல் 'ஒண்மை' என்ற அடிச்சொல்லின் அடியாகப் பிறந்தது. 'புகழ்மிக்கது' என்ற பொருளைத்தரும். இங்கே இப்பொழுது செய்யத்தக்க புகழைத்தருவதான செயலைக் குறித்து நின்றது என்க. கம்பன் இராவணனைக் 'கள்ளவாள் அரக்கன்', என்றும் 'கள்வன் ஊர் என்றும்; வஞ்சித்த நாய்; என்றும் கூறுவதையும் காணலாம். இராமபிரான் வடக்கு வாயிலில் இராவணனுக்காகக் காத்திருந்தது, ஒருவேளை அவன் சமாதானத்திற்கு வந்தால் போர்செய்வதை நிறுத்திவிடலாம் என்பதாலும், அவனுக்கு மேலும் ஒரு வாய்ப்புத் தரலாம் என்ற நல்லெண்ணத்தினாலும்தான் எனக் கொள்க.

2. ''தூதுவன் ஒருவன் தன்னை, இவ்வழி விரைவில் தூண்டி,
'மாதினை விடுதியோ?' என்று உணர்த்தவே, மறுக்கும் ஆகின்,
காதுதல் கடன் என்று, உள்ளம் கருதியது; அறனும் அஃதே;
நீதியும் அஃதே;'' என்றான் கருணையின் நிலையம் அன்னான். (7058)

(இவ்வழி-இங்கிருந்து; மாது-பெண்/சீதாதேவி; காதுதல்-கொன்று ஒழித்தல்; கடன்-கடமை; நிலையம்-நிலைக்களன்/இருப்பிடம்; கருணை-அருள்; உணர்த்துதல்-அறிவுறுத்துதல்; தூண்டி-அனுப்பி)

Koviloor Digital Library

அருளுக்கு இருப்பிடமான இராமபிரான் ''இப்பொழுது இங்கிருந்து ஒரு தூதுவனை இராவணனிடம் விரைவாக அனுப்பி, ''இப்பொழுதாவது பெண்ணாகிய சீதாதேவியை விடுதலை செய்யப் போகிறாயா? இல்லையா? என்று கேட்டு, அவளை விட்டு விட்டாயானால் உயிர் பிழைக்கலாம்'' என்று அறிவுறுத்துவோம். அதற்கும் அவன் மறுப்பான் ஆனால், பின்னர் அவனுடன் போர்செய்து அவனைக் கொல்லுதலே நமது கடமையாகும் என்று என் உள்ளம் எண்ணுகிறது. அதுதான் போர் அறமும்-யுத்ததருமமும், போர்க்குரிய நீதி முறையும் ஆகும்'' என்றான்.

'கருணையின் நிலையம் அன்னான்' என்ற சொற்றொடர் மிகப்பல செய்திகளைத் தெரிவிக்கிறது. 'பகைவனுக்கும் அருளும் நன்னெஞ்சு' என்பதும் ஒன்று. 'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்' என்பது மற்றொன்று; 'உடைந்தவர்க்கு உதவான் ஆகில் அறம் என்னாம் ஆண்மை என்னாம்' என்பது வேறு ஒன்று. இத்தனை குணங்களையும் அடக்கியதுதான் கருணை என்பதறிக. 'நிலையம்' என்பது நிலைத்திருக்கும் இடம் எனப்பொருள்படும். 'அரசியல் முறை' என்பது சாம, பேத, தான, தண்டம் என்ற முறைகளைப் பின்பற்றுதலேயாகும் என்க. தவறு செய்வது மனித இயல்பு; தான் செய்தது தவறு என்று அவன் உணர்வதற்கு ஒரு வாய்ப்பளிப்பது அறம், நீதி என்கிறான் இராமபிரான் என்க. 'திறனல்ல, தற்பிறர்செய்யினும் நோநொந்து அறனல்ல செய்யாமை நன்று' என்பது குறள்-157. 'சிறியோர் செய்த சிறு பிழையெல்லாம் பெரியோர் ஆயினும் பொறுத்தல் கடனே' என்பதும் இங்கு நோக்கத்தகும். சாம, பேத, தான, தண்டம் என்ற வடசொற்களுக்கு அருமையான தமிழாக்கம் தருகிறான் கம்பன். கொடுத்தல், இன்சொற் சொல்லுதல், வேறுபடுத்தல், ஒறுத்தல் என்பனவே அவை. இவற்றையே மன்னர்க்குரிய வையான, கடன், அறம், நீதி எனக் குறிக்கப் பெற்றது என்க. காதுதல் கடன்; உணர்த்துதல் அறம்; தூதனுப்புதல் நீதி எனப்படும். இம்மூன்றுக்கும் நிலைக்களன் கருணை. எனவே இம்மூன்றையும் செய்ய முயன்ற இராமபிரான் 'கருணையின் நிலையம் அன்னான்' எனப்பட்டான் என்க.

3. வீடணன், சுக்கிரீவன், இலக்குவன் ஆகியோர் கருத்து

அரக்கர்கோன் அதனைக் கேட்டான்; 'அழகிற்றே ஆகும்' என்றான்;
குரக்கினத்து இறைவன் நின்றான்; 'கொற்றவர்க்கு உற்றது' என்றான்;
'இரக்கம் அது இழுக்கம்' என்றான், இளையவன், 'இனி நாம் அம்பு
துரக்குவது அல்லால், வேறு ஓர் சொல் உண்டோ?'' என்னச்
சொன்னான். (7059)

(கோன்-அரசன்/வேந்தன்; அழகு-நற்செயல்; இறைவன்-மன்னன்; கொற்றம்-வெற்றித்திறம்; உற்றது-ஏற்புடையது; இரக்கம்-கருணை; இழுக்கம்-இழிவு; துரக்குவது-செலுத்துவது; சொல்-மாற்றம்)

Koviloor Digital Library

இப்பொழுது இராமபிரானால் இலங்கைக்கு அரசனாக்கப்பட்ட வீடணன், இவ்வாறு இராமபிரான் கூறியதைக் கேட்டு, 'இது அழகிய நற்செயலே' என்று இசைவு தந்தான். குரக்கினத்து அரசனாகிய சுக்கிரீ வனும், 'வெற்றி பொருந்திய அரசர்களுக்கு உரிய ஏற்புடையதான செயலே இது' என்று உடன்பட்டான். ஆனால் இராமபிரானின் தம்பியாகிய இலக்குவன் மட்டும், இவ்வாறு மீண்டும் தூது அனுப்பி அவனிடம் இரக்கம் காட்டுவது நமக்கு இழுக்கினைத் தரும் என்றும், இனிமேல் நாம் நம் அம்புகளைச் செலுத்தி அவனுடன் போரிடுவதைத் தவிர வேறு ஒரு தூது அனுப்புவது என்ற சொல்லுக்கே இடமில்லை'' என்றும் சற்று வெகுண்டு கூறினான்.

வீடணன் முன்பே இராமபிரானால் இலங்கைக்கு அரசனாக அறிவிக்கப்பட்டு விட்டான். எனவே கவிஞன், அவனை 'அரக்கர்கோன்' என்றே குறிப்பிடுகிறான். இன்னும் பின்னால் வரும் நிகழ்ச்சிகளிலும் கவிஞன் இவனை இலங்கை அரசன் என்றே தவறாது குறிப்பிட்டு வருவதையும் உணரலாம். சுக்கிரீவன் முன்பே கிட்கிந்தைக்கு அரசன் ஆக்கப்பட்டவன், குரக்கினத்திற்கும் தலைவன் என்று கருதப்படுபவன். எனவே அவனையும் கவிஞன், 'குரக்கினத்து இறைவன்' என்றான். அவன் அரசன் ஆதலால் அரசநீதி தெரிந்தவன். எனவே ''கொற்றவற்கு உற்றது'' என்றான். ஆனால் இலக்குவன் மட்டும் தான் ஆதிசேஷனின் அவதாரம் என்பதை அங்கங்கே காட்டி வருவதையும் காப்பியப்போக்கில் காணலாம். முன்பு கைகேயி மீது சீறினான், பின்னர் பரதன் மீது ஐயுற்றுச் சினந்தான். இப்பொழுது இங்கும் கொதிக்கிறான் என்பதையும் காண்க.

இங்கே ஒன்று நோக்க வேண்டும். வீடணனின் நோக்கம் 'அரசு மேற்றன்று' என்பதை இங்கே நிறுவுகிறான் வீடணன். இராமன் தூது அனுப்பலாம் என்றவுடன் 'வேண்டாம் அவனுடன் போர்புரிந்து அவனை அழிக்க வேண்டும்' என்று கூறியிருந்தால் அவன் நோக்கம் 'அரசின் மேற்றே' என்று துணியலாம். ஆனால் வீடணன் இங்கே தன் அண்ணனைப் போரில் மாளாது காப்பாற்ற வேண்டும், அவன் இராமன் அருளால் நன்கு வாழவேண்டும் என்ற எண்ணத்தால்தான் தூது அனுப்புவதற்கு உடன் படுகிறான் என்றே எண்ணத் தோன்றுகிறது. 'அம்பால் துரக்குவது அல்லால் வேறு ஓர் சொல் உண்டோ?'' என்பதில் இனிமேல் நாம் ஆயுதத்தால்தான் பேசவேண்டும் வாய்ச்சொல்லால் பேசக்கூடாது என்று கூறுகின்ற தொனி தோன்றுவதை உணர்க. இலக்குவன் அவ்வாறு மறுப்ப தற்கும் தகுந்த காரணங்கள் உண்டு அல்லவா? அவை வரும்பாடல்களில் கூறப்படுகின்றன. எனினும் இலக்குவன் இவ்வாறு தடுத்துக் கூறியதாக வான்மீகத்தில் இல்லை.

Koviloor Digital Library

4. இலக்குவன் தன் கூற்றை உறுதிப்படுத்துதல் [5 பாடல்கள்]

"தேசியைச் சிறையில் வைத்தான்; தேவரை இடுக்கண் செய்தான்;
பூசுரர்க்கு அலக்கண் ஈந்தான்; மன்னுயிர் புடைத்துத் தின்றான்;
ஆசையின் அளவும், எல்லா உலகமும் தானே ஆள்வான்,
வாசவன் திருவும் கொண்டான்; வழி அலா வழிமேல் செல்வான்"
(7060)

(தேசு-ஒளிவடிவு; பூசுரர்-அந்தணர்; அலக்கண்-மனக்கலக்கம்; மன்-நிலைபெற்ற; புடைத்தல்-அடித்து ஒழித்தல்; ஆசை-திசைகள்; ஆள்வான்-ஆளும்பொருட்டு; வாசவன்-இந்திரன்; திரு-செல்வம்; அலா-இல்லாத; இடுக்கண்-துன்பம்)

''நீ தூது அனுப்பிச் சமாதானம் செய்து கொள்ளலாம் என்று கூறுகிறாயே, அந்த அரக்கன் இராவணன், 'ஒளிவடிவாகிய தூய மேனியை உடைய நமது சீதாதேவியை வஞ்சனையால் கவர்ந்து சென்று இங்கே இலங்கையில் சிறையில் அடைத்து வைத்திருக்கிறான்; வானுலகத்துத் தேவர்களுக்கெல்லாம் தொல்லை கொடுத்து வருகிறான்; பூவுலகில் வாழும் தேவர்களாகிய செந்தண்மை பூண்டு ஒழுகும் சான்றோர்களுக்கு மனக்கலக்கம் தந்து வருகிறான்; நிலைபெற்ற உயிரினங்களையெல்லாம் அடித்துக் கொன்று அவர்கள் உடல்களையெல்லாம் தின்றுவிடுகிறான்; எட்டுத்திசைகளின்எல்லைஅளவும்உள்ளஉலகின்எல்லாஇடங்களையும் பிறர் எவரும் ஆளாதபடி, தானே தான் மட்டுமே ஆளவேண்டும் என்று பேராசை கொண்டிருக்கிறான். தேவேந்திரனின் பெறற்கரிய எல்லாச் செல்வங்களையும் பறித்துக்கொண்டு விட்டான். இவையெல்லாவற்றை யும் விட இவன் நெறியல்லாத நெறியில்-தவறான வழியில் சென்று கொண்டிருக்கிறான்'' என்றும் சற்றுக் கடிந்துரைக்கிறான் இலக்குவன்.

'தேசு' என்ற சொல் 'தேஜஸ்' என்ற வடசொல்லின் திரிபு; இச்சொல்லுக்கு ஒளி என்பது பொருள். பூ என்பது பூமியையும், சுரர் என்பது தேவர்களையும் குறிக்கும். எனவே 'பூசுரர்' என்ற சொல், நிலவுலகில் வாழும் தெய்வத்தன்மை படைத்த சான்றோர்களையே குறிக்கும். 'வாசவன் திரு' என்பது கற்பகம் முதலாய தருக்கள், சங்கநிதிபோன்ற நவநிதியங்கள், ஐராவதம் போன்ற யானை முதலிய எல்லாச் செல்வங்களையும் என்று விரிந்த பொருள் தரும். அரக்கர்கள் மனிதர்களின் உயிரைப் பிரித்து உடலைத் தின்னும் இயல்புடையவர் என்பது காப்பி யத்தில் பல இடங்களிலும் பேசப்பட்டிருக்கிறது. 'வாசவன்' என்பது அஷ்டவசுக்களுக்கும் தலைவன் என்ற பொருளில் எடுத்தாளப் பட்டிருக்கிறது.

Koviloor Digital Library

5. "வாழியாய்! நின்னை அன்று வரம்புஅறு துயரின் வைக,
சூழ்வுஇலா மாயம் செய்து, உன் துணைவியைப் பிரிவு சூழ்ந்தான்;
ஏழைபால் இரக்கம் நோக்கி, ஒரு தனி இகல்மேல் சென்ற,
ஊழி காண்கிற்கும் வாழ்நாள், உந்தையை உயிர் பண்டு உண்டான்"
(7061)

(வரம்பு-எல்லை; வைகுதல்-அழுத்துதல்; சூழ்வு-எண்ணுதல்; மாயம்-வஞ்சகம்; இகல்-போர்; உந்தை-உன்தந்தை/சடாயு; பண்டு-முன்பு; உண்ணுதல்-கவர்ந்து கொள்ளுதல்; ஊழி-பிரளயகாலம்; வாழ்நாள்-ஆயுள்; ஏழை-பேதை)

"நீண்ட ஆயுள் பெற்று, வாழ்வாங்கு வாழ்பவனே! உன்னை, முன்பு எல்லையில்லாத துயரில் அழுந்தும்படி, எவராலும் நினைத்துப்பார்க்க முடியாத ஒரு வஞ்சகச் செயலைச் செய்து, உன் அன்பிற்குரியவளான சீதாதேவியை உன்னிடமிருந்து பிரித்து விட்டான்; இரக்கத்திற்கு உரிய அவள் உதவி வேண்டிக் கதறியழுத போது, அவள்பால் மிக்க கருணை கொண்டு, அவளை அரக்கனிடமிருந்து காப்பாற்றுவதற்குத் தான் ஒருவனாக, தன்னந்தனியனாகப் பறந்துவந்து இராவணனுடன் போர் செய்த, பிரளய காலத்திலும்கூட, அழியாத ஆயுளைக் கொண்ட, உன் தந்தையாகிய சடாயுவின் உயிரைக் கவர்ந்துகொண்டான்" என்று இலக்குவன் இராமபிரானிடம் இராவணன் முன்பு செய்த வஞ்சகச் செயல்களை நினைவுறுத்துகிறான்.

'வாழியாய்!' என்பது, அழியாத வாழ்வு உடையவனே என்று பொருள்கொண்டு, இராமபிரானை இலக்குவன் அழைத்ததைக் குறிக்கும். 'அன்று' என்பதும் 'பண்டு' என்பதும், முன்பு மாயமானாக மாரீசனை வரச்செய்து, தவசி இராவணன் சீதாதேவியைக் கவர்ந்து சென்ற நாளைக் குறிக்கும். "ஊழி காண்கிற்கும் வாழ்நாள்" என்பது சடாயு யுகங்கள் பல வற்றையும் காணவல்ல நிறைந்த ஆயுளை உடையவன்; ஊழிக்காலத்தும் அழியாத ஆயுள் பெற்றவன் என்பதைக் குறிக்கும். முன்பும் "எண்ணரும் பருவங்கள் இறந்தான்" எனறு கூறியதையும் நினைவுகூர்க. சடாயு என்ற சொல்லே சடை+ஆயுள் என்று பிரிபடும். அதற்குப் பல மயிர்த் தொகுதிகளைச் சேர்த்துத் திரித்து நீட்டினாற்போன்ற நெடிய வாழ்நாளை யுடையவன் என்று பொருள். எப்படி ஒரு மயிர்க்கற்றையைக் கூடப் பிரித்து எண்ண முடியாதோ, அதுபோல மயிர்க்கற்றைகளைக் கொண்ட முடிகளை இணைத்துத் திரித்த பின்பு அதை எண்ணுவது என்பது எப்படி இயலாத செயலோ, அப்படி அவன் வாழ்நாளையும் கணக்கிட்டுக் கூறமுடியாது என்பது கருத்து. 'உந்தை' என்பது, இராமபிரான் சடாயுவைத் தன்தந்தை போலவும், தந்தைக்கு மேலாகவும் மதித்தான் என்பதனாலும், சடாயு இறந்த பொழுது நீர்க்கடன், நெருப்புக்கடன் முதலிய ஈமச்சடங்கினையும் அவனே செய்து முடித்தான் என்பதனாலும் அவ்வாறு கூறப்பட்டதெனக்

Koviloor Digital Library

கொள்க. தவிரவும், இவர்களின் தந்தை தசரதனும் சடாயுவும், உடலும் உயிரும் போற் பழகியவர்கள் என்பதைச் சடாயுவே தன் கூற்றாகக் கூறியதாலும் இவ்வாறு கொள்ளலாம் எனவும் கருதுக.

6. ''அன்னவன் தனக்கு, மாதைவிடில், உயிர் அருளுவாயேல்,
'என்னுடை நாமம் நிற்கும் அளவெலாம் இலங்கை மூதூர்
மன்னவன் நீயே' என்று, வந்து அடைந்தவற்கு வாயால்
சொன்ன சொல் என் ஆம்? முன்னம் சூளுறவு என்ஆம்? தோன்றால்!''
(7062)

(தோன்றல்-புகழ்மிக்கவன்/பெருமைமிக்கவன்; மாது-பெண்/சீதாதேவி; அருளுதல்-நல்குதல்; நாமம்-பெயர்; நிற்கும்-நிலைபெறும்; மூதூர்-பழமையான நகரம்/இலங்கை; சொல்-உறுதிமொழி/வாக்குறுதி; சூளுறவு-வஞ்சினம்/சபதம்; வாய்-சத்தியவாக்கு)

''பெருமையும் புகழும் மிக்க ஆடவர்களுள் எல்லாம் தலை சிறந்தவனே! அவ்வாறு பற்பல பெரும் தீமைகள் புரிந்தவன் அந்த இராவணன். ''இப்போதாவது, சீதாதேவியை விட்டுவிட்டால், அந்தக் கொடியோனாகிய இராவணனுக்கு அருள் கூர்ந்து உயிர் நல்குவேன். உயிர்பிழைத்துப் போகட்டும் என்று அங்கதன் மூலம் தூது அனுப்பலாம் என்று முடிவு செய்கிறாயே, அப்படி என்றால் உன்னை வந்து சரண் புகுந்தானே வீடணன், அப்போது அவனுக்கு ''என்னுடைய பெயர் இந்த உலகில் நிலைத்து நிற்கும் காலம்வரைக்கும், நீ தான் இந்த இலங்கை என்னும் பழமையான நகரத்திற்கு அரசன் ஆவாய்'' என்று வாயால் உறுதிமொழி கூறினாயே? அது என்னவாகும்? முன்பு தண்டகாரண்யத்து முனிவர்கள் உன்னை வந்து சரண் அடைந்தபோது, அவர்களுக்குக் கொடுத்த சபதம், அவர்கள் முன் ஏற்றுக்கொண்ட வஞ்சினம் என்ன ஆகும்?'' என்று கேட்கிறான் இலக்குவன்.

இராமபிரான் தன் உடன் பிறந்தவர்களாக ஏற்றுக்கொண்டவர் மூவர். அவர்களின் குகனும், சுக்கிரீவனும், இராமபிரானால் சென்று பற்றப் பெற்றவர்கள். அவர்கள் உதவியை நாடி இராமபிரான் சென்றான். ஆனால் மற்றொரு உடன்பிறந்தவனாகக் கருதப்படுகிற வீடணன், தானே இராம பிரானிடம் வந்து சரண் அடைந்தவன். எனினும் இவனும் அவர்களைப் போல் இராமபிரான் வெற்றிக்கு உடன் இருந்து உதவப்போகிறவன் என்பதையும் இங்கு நினைவு கூர்தல் தகும்.

'தோன்றல்' என்பது பொதுவாக ஆண்களிற் சிறந்த குணம் உடையவர்களைக் குறிக்கும் என்க. 'நம்பி' என்பதைப் போல எனக்கொள்க. இங்கே 'வாயால் சொன்ன சொல்' என்ற சொல்லாட்சி நோக்கத்தக்கது. 'சொல்' என்றாலே வாயால் சொன்னது என்றுதானே பொருள்? எனினும் ''வாயால் சொன்ன சொல்'' என்றது. ஏன் எனில் இராமபிரான் வாக்குத் தவறாதவன்.

Koviloor Digital Library

அவன் ''வாய்மையும் மரபும் காத்த வள்ளல் குலத்தவன்'' என்பதால் என்க. ''தீய வழுக்கியும் வாயாற் சொல்லாத பண்பு மிக்கவன்'' இராமபிரான் என்பதைக் குறிக்கவே என்க. 'அன்னவன்' என்பது முன்பாடல்களில் கூறி இருக்கும் அத்தனை குற்றங்களையும் புரிந்த கொடியோனாகிய அரக்கன் இராவணன் என்ற விரிந்த பொருளைத்தரும். வீடணனுக்கு அளித்த வாய்ச்சொல், ''ஏழினோடு ஏழாய் நின்ற உலகும், என் பெயரும் எந்நாள் வாழுநாள், அன்று காறும் வாள் எயிற்று அரக்கர் வைகும் தாழ்கடல் இலங்கைச் செல்வம் நின்னதே, தந்தேன்'' என்றதும், 'முன்னம் சூளுறவு' என்றது. ''ஆர் அறத்தினோடு அன்றி நின்றார் அவர் வேர் அறுப்பென், வெருவன் மின் நீர்'' என்றதும் என்க.

7. "அறம்தரு தவத்தை ஆயும் அறிவினால், அவற்றை முற்றும்
மறந்தனை எனினும், மற்று இவ்விலங்கையின் வளமை நோக்கி,
'இறந்து இது போதல் தீது' என்று இரங்கினை எனினும், எண்ணின்,
'சிறந்தது போரே' என்றான்; சேவகன் முறுவல் செய்தான். (7063)

(தருதல்-விளைத்தல்; ஆயும்-ஆராயும்; இறந்துபோதல்-சிதைந்து போதல்; இரங்குதல்-வருந்துதல்; எண்ணின்-ஆராய்ந்து பார்த்தால்; சேவகன்-வீரன்; முறுவல்-புன்சிரிப்பு; வளமை-செழிப்பு; அறிவு-புத்தி)

அறத்தினால் விளையும் பொறுமை என்னும் குணத்தில் நின்று ஆராய்ந்து முடிவு எடுக்கும் உன்னுடைய அறிவினாலும், உன்னிடம் இயற்கையிலேயே அமைந்திருக்கும் அருள் தன்மையாலும், இராவணன் முன்பு செய்த கொடுமையான செயல்களையும், நீ வீடணனுக்கும், தண்டகாரண்ய முனிவர்களுக்கும் அளித்திருக்கிற உறுதிமொழியையும் முற்றும் மறந்து போய்விட்டாய் என்றாலும், அல்லது இங்கு வந்து, இந்த இலங்கை மாநகரின் செல்வச்செழிப்பையும், தோற்றப் பொலிவையும் கண்டு, இந்த அழகான, வியக்கத்தக்க, இலங்கை மாநகரம் நம்மால் அழிக்கப்படுவது நன்றன்று என்று இரக்கம் கொண்டு உன் எண்ணத்தை மாற்றிக்கொண்டாய் என்றாலும், ஆராய்ந்து பார்த்தால் நாம் இப்போது போரைத்தான் மேற்கொள்ள வேண்டும், அதுதவிர வேறு சிறந்த வழி இல்லை'' என்று தம்பி இலக்குவன் உறுதிபடக் கூறினான். அதனைக் கேட்ட பெருவீரனான இராமபிரான், தனக்குள் ஒரு புன்சிரிப்பை மேற்கொண்டான்.

'அவற்றை' என்ற சொல் இராவணனால் இழைக்கப்பட்ட தீமைகளையும், இராமபிரான் வீடணனுக்கும், முனிவர்க்கும் செய்து கொடுத்த உறுதிமொழிகளையும் என்ற விரிந்த பொருளைத்தரும். இலங்கை வந்து சேர்வதற்கு முன்னால் இருந்த இராமபிரான் மனநிலைவேறு, இலங்கையின் செல்வச்செழிப்பைக் கண்டபின்னால் இராமபிரான் மனநிலை வேறு என்பதை ''மற்று இவ்விலங்கையின் வளமை நோக்கி'' என்றார் என்க. இது எப்படியிருந்தாலும் இலங்கை மன்னன் இராவணனுடன் போர்

Koviloor Digital Library

செய்வதைத் தடுக்க முடியாது, தடுக்கக்கூடாது என்ற தன் முடிவில் உறுதியாக இருக்கிறான் இலக்குவன் என்பதாம். கம்பன் இராமபிரானைப் பல இடங்களில் வீரன், சேவகன், அழகன் என்று எந்த அடைமொழியும் தாராமல் அழைப்பதையும் காப்பியப் போக்கில் காணலாம். அதுபோல இங்கே 'சேவகன்' என்று மட்டும் கூறியிருக்கிறான் எனக்கொள்க. இங்கே 'முறுவல்' இளமை பற்றி வந்தது எனக்கொள்க. இந்த முறுவல் இலக்குவன் தன்னிடம் எவ்வளவு பேரன்பு கொண்டிருக்கிறான் என்பதையும், தன்னுடைய இறுதி முடிவும் போர்செய்தலே; இருந்தாலும் உலகுக்காக இவ்வாறு மேற்கொள்ள நேர்ந்தது என்பதையும் குறிப்பால் உணர்த்தும் முறுவல் எனக்கொள்க. சமாதானத்திற்குத் தூது அனுப்புவதில் தனக்கு உடன்பாடில்லை என்பதும் போர் புரிந்து சீதாதேவியை மீட்பதே உகந்தது என்பதும் இலக்குவன் கருத்து. ''எள்ளல், இளமை, பேதைமை, மடன் என்று உள்ளப்பட்ட நகை நான்கு'' என்பது தொல்காப்பியம்.

8. இராமபிரான் அரசியல் நீதி நூல்முறை பற்றிக் கூறுதல்

''அயர்த்திலென்; முடிவும் அஃதே; ஆயினும்; அறிஞர் ஆய்ந்த
நயத்துறை நூலின் நீதி நாம் துறந்து அமைதல் நன்றோ?
புயத்துறை வலியரேனும், பொறையொடும் பொருந்தி வாழ்தல்,
சயத்துறை; அறனும் அஃதே'' என்று இவை சமையச் சொன்னான்.
(7064)

(அயர்த்தல்-மறத்தல்; துறத்தல்-விட்டுவிலகுவது; நன்றோ-முறையோ; பொருந்தி-மேற்கொண்ட; சயம்-ஜெயம்/வெற்றி; சமைய-பதியுமாறு; அறன்-அறம்/அரசநீதி)

இராமபிரான் இலக்குவனை நோக்கி, ''தம்பி, நீ கூறிய, இராவணன் நமக்கு இழைத்த தீமையையும், நாம் முனிவர்க்குச் செய்து தந்த வாக்குறுதியையும் நான் மறந்துவிடவில்லை; இறுதியாக நடக்கப்போவதும், நீ கூறிய போர்தான். இருந்தாலும், அறிவிற் சிறந்த தேவ குருவான பிரகஸ்பதி என்ற வியாழ பகவானும், அசுர குருவான வெள்ளி என்ற சுக்கிராச்சாரியார் போன்றவர்களும் ஆராய்ந்து கூறிய நன்மைபயக்கும் அரச நீதிநூல்களில் கூறியுள்ள கருத்துக்களைப் போற்றிக் காக்கவேண்டிய அரசர்களாகிய நாமே அவற்றை மீறிச் செயல்புரிதல் என்பது தகுதியாகுமா? எனவே, தோள்வலியிற் சிறந்தவரென்றாலும், பொறுமை காத்துக் காரியத்தில் வெற்றி பெறுவதே நல்ல முறையாகும். அதுதான் தருமத்தின் பாற்பட்டது மாகும்'' என்று இலக்குவன் மனத்தில் நன்கு பதியுமாறு எடுத்துக்கூறினான் இராமபிரான்.

'முடிவு' என்பது, அரச உபாயங்களின் சாம, பேத, தான, தண்டம் என்று கூறியவற்றுள் இறுதியான தண்டத்தைக் குறித்தது என்க. தண்டம் இங்கே போரைக் குறித்தது. 'நயம்' என்பது நீதியைக் குறித்தது. 'நன்றோ' என்பதில்

Koviloor Digital Library

ஓகாரம் எதிர்மறைப்பொருளது. 'நன்றன்று' என்ற பொருளைத்தரும். 'பொறை' என்பது, காரணம் பற்றியாவது, அறியாமையினாலாவது ஒருவன்தனக்கு மிகை செய்த வழி, தானும்அதனை அவன்கண் செய்யாது, அவன் செய்த தீமையினைப் பொறுத்துத் தாங்கவல்ல வன்மையைக் குறிக்கும்' என்ற விரிந்த பொருளைத்தரும்.

9. இராமபிரான் அங்கதனைத் தூது அனுப்பலாம் எனக் கூறுதல்

''மாருதி இன்னம் செல்லின், மற்று இவன் அன்றி வந்து,
சாருநர் வலியோர் இல்லை என்பது சாரும் அன்றே;
ஆர் இனி ஏகத்தக்கார்? அங்கதன் அமையும்; ஒன்னார்
வீரமே விளைப்பரேனும், தீதின்றி மீள வல்லான்'' (7065)

(மாருதி-அனுமன்; இன்னம்-இன்னும்/மீண்டும்; சாருதல்-வந்து மீளுதல்; சார்தல்-கருதப்படுதல்; தக்கார்-தகுதியுடையவர்; அமைதல்-பொருந்துதல்; விளைப்பது-செய்வது; தீது-கேடு/இடையூறு; மீளுதல்-திரும்பிவருதல்; ஒன்னார்-பகைவர்)

''இன்னும் ஒருமுறை மீண்டும் அனுமனையே இலங்கைக்கு இராவணனிடத்தில் தூதுவனாக அனுப்பினால், நம்படையில் அனுமனைத்தவிர வேறுயாரும் இலங்கை சென்று மீண்டுவரும் வல்லமை படைத்தவர்கள் இல்லைபோலும் என்று பகைவர்கள் இழிவாக எண்ணக்கூடும். எனவே இப்பொழுது இரண்டாவது முறையாக யாரை அனுப்பலாம் என்று சிந்தித்து, இராமபிரான், வாலியின் புதல்வனே இதற்குப் பொருத்தமானவன் என்று முடிவு செய்து, பகைவர்கள் ஏதேனும் போர்செய்து தம் வீரச்செயல்களைக் காட்டினாலும், அதை முறியடித்து எந்தவிதமான தீங்கும் இடையூறுமின்றி வெற்றியுடன் திரும்பிவரும் ஆற்றல் பெற்றவன் அங்கதனே ஆவான்'' என்று அங்கே குழுமியிருந்த சுக்கிரீவன் முதலியோரிடம் தனது கருத்தைக் கூறினான்.

'மாருதி' என்பது மருத்தின் மைந்தனான அனுமனைக் குறிக்கும்.

10. அங்கதன் மகிழ்தல்

'நன்று' என அவனைக் கூவி, 'நம்பி! நீ நண்ணலார் பால்
சென்று, இரண்டு உரையின் ஒன்றினைச் செப்பினை திரிதி'' என்றான்;
அன்று அவன் அருளப் பெற்ற ஆண்தகை, அலங்கல் பொன்தோள்
குன்றினும் உயர்ந்தது என்றால், மனநிலை கூறல் ஆமோ? (7066)

(நன்று-நல்லது; நம்பி-ஆடவரில் சிறந்தோன்; நண்ணலார்-பகைவர்கள்; ஆண்தகை-வீரம் பொருந்தியவன்; அலங்கல்-வெற்றி

Koviloor Digital Library

மாலை; பொன்-அழகிய; கூவுதல்-அழைத்தல்; திரிதல்-மீண்டுவருதல்; அன்று-அப்போது; குன்று-மலை)

''அது தான் சரி'' என்று வீடணன், சுக்கிரீவன் முதலியோர் இராமபிரான் கருத்துக்கு உடன்பட, இராமபிரான் அங்கதனை அழைத்து 'ஆடவரிற் சிறந்தவனே! நீ பகைவரிடம் சென்று நான் கூறும் இரண்டு செய்திகளையும் கூறி, அவற்றில் அவன் விரும்பிய ஒரு செய்திக்கு இசைவு பெற்றுத் திரும்புவாயாக!' என்று பணித்தான்; அப்பொழுது அவ்விராமபிரானால் அன்புள்ளம் கொண்டு ஏவப்பட்ட வீரருள் சிறந்தோனாகிய அங்கதனின், மலர்மாலை அசைந்தாடும் அழகிய தோள்கள், மலையைக் காட்டிலும் உயர்ந்து பருத்துப் பூரித்தன என்று சொன்னால் அம்மகிழ்ச்சியால் ஏற்பட்ட அவன் மனநிலையை நம்மால் கூறமுடியுமோ?'' என்கிறான் கவிஞன்.

'நல்லது' என்று கூறியது வீடணன் முதலியோர் என்க. 'நம்பி' என்ற சொல்லுக்குக் குணபூரணன், புருஷோத்தமன் என்ற பொருள்களும் உண்டு. பொதுவாக ஆடவரிற் சிறந்தோரை 'நம்பி' என்றும், மகளிரிற் சிறந்தோரை 'நங்கை' என்றும் கூறுவது கவிமரபு. இராமபிரானாலேயே 'நம்பி' என அழைக்கப்பட்டதாலும், மாவீரன் அனுமனுக்குப் பின்னர் தனக்குத் தூதனாகும் தகுதி இருக்கிறது என்று இராமபிரான் கருதி அவனைப் பணித்ததாலும், பெருமகிழ்ச்சியால் அவன் உள்ளம் பூரித்ததால் தோள்களும் பருத்துப் பூரித்தன என்க.

11. தூதுரைக்க வேண்டிய இரு செய்திகள்.

"என் அவற்கு உரைப்பது?" என்ன, "ஏந்திழையாளை விட்டுத்
தன் உயிர் பெறுதல் நன்றோ? அன்று எனின், தலைகள் பத்தும்,
சின்ன பின்னங்கள் செய்ய, செருக்களம் சேர்தல் நன்றோ?
சொன்னவை இரண்டின், ஒன்றே துணிக எனச் சொல்லிடு" என்றான்.
(7067)

(ஏந்து-பொருந்துகின்ற; இழை-அணிகலன்கள்; ஏந்திழையாள்-சீதா தேவி; சின்னபின்னம்-துண்டு துண்டுகளாகச் செய்தல்; செருக்களம்-போர்க்களம்; சேர்தல்-எதிர்ப்படுதல்)

அங்கதன், இராமபிரானை நோக்கி, ''நான் இராவணனிடம் சென்று கூறவேண்டுவது யாது? எனக் கேட்டான். அதற்கு இராமபிரான், ''உயர்ந்த அணிகலன்களையணிந்தவளான சீதாதேவியைச் சிறையினின்றும் விடுவித்து நம்மிடம் ஒப்படைத்து, அவனுடைய உயிரை இழக்காமல் தக்கவைத்துக் கொள்வது நல்லதா? அல்லது அதற்கு மாறாக, அவனுடைய பத்துத் தலைகளும் என்னுடைய அம்பினால் துண்டம் துண்டமாக அறுக்கப் பெற்றுப் போர்க்களத்தில் கிடப்பது நல்லதா? என்ற இந்த இரண்டனுக்குள் அவன் மேற்கொள்ள விரும்புகின்ற ஏதாவது ஒன்றைத்

Koviloor Digital Library

துணிந்து தேர்ந்து கூறுமாறு அவனிடம் சொல்'' என்று இராமபிரான் அங்கதனுக்குக் கூறினான்.

''சீரிய வல்ல சொல்லித் தலை பத்தும் சிந்துவாயோ?'' என்பதும், ''பத்துத்தலையும் தோளும் பலவுள பகழி தூவி வித்தக வில்லினான்'' என்பதும் சுந்தரகாண்டத்தில் சீதாதேவி கூற்று. இராமபிரானது எண்ண மும், சீதாதேவியின் எண்ணமும் ஒன்றேபோல் இருப்பதை உணர்க.

12. "அறத்துறை அன்று, வீரர்க்கு அழகும் அன்று, ஆண்மை அன்று,
மறத்துறை அன்று, சேமம் மறைந்து உறைந்து ஒதுங்கி வாழ்தல்;
நிறத்து உற வாளி கோத்து, நேர் வந்து நிற்கும் ஆகின்,
புறத்து உற எதிரே வந்து, போர்தரப் புகல்தி" என்றான். (7068)

(சேமம்-பாதுகாப்பு; உறைந்து-ஒடுங்கி; மறத்துறை-போர்த்துறை; நிறம்-மார்பு; வாளி-வில்; கோத்து-தொடுத்து; நேர்-எதிரே; போர்தருதல்-போர்செய்தல்; புகல்தி-எடுத்துரைப்பாயாக; உற-பொருந்த; அறம்-அரச நீதி; புறத்து-நகர்க்கு வெளியே)

இராமபிரான் அங்கதனிடம் மேலும், ''இவ்வாறு பாதுகாப்புக் கருதி, ஊருக்குள்ளேயே மறைந்து, ஒளிந்து, பதுங்கி, ஒதுங்கி வாழ்தல் என்பது அரசநீதியும் அல்ல, சுத்த வீரர்க்கு அழகுமல்ல; ஆண்மைக்குரியதுமல்ல, போர்முறைக்கும் தக்கது அல்ல; அவ்வாறு சீதாதேவியை விட்டு விட வில்லையென்றால், நகருக்கு வெளிப்புறத்தே வந்து, என்னுடன் நேருக்குநேர்நின்று, வில்லில் தொடுக்கப்பட்டஅம்பினுக்கு எதிராகத் தன் மார்பு பொருந்தும்படி நின்று, என்னை எதிர்த்துப் போரிடுமாறு கூறுவாயாக!'' என்கிறான் இராமபிரான்.

''அறவையாயின் இனிதெனத்திறத்தல், மறவையாயின், போரொடு திறத்தல், அறவையும், மறவையும் அல்லையாகத் திறவாது அடைத்த திண்நிலைக் கதவின், நீள் மதில் ஒரு சிறையொடுங்குதல், நாணுத் தகவுடைத்து இது காணுங்காலே'' என்பது புறநானூறு. இவ்வாறு இராவணன் இலங்கை நகருக்குள்ளேயே மறைந்து உறைந்து ஒதுங்கி ஒடுங்கிப் பதுங்கி வாழ்தல் என்பது, அறமுமன்று, மறமுமன்று, ஆண்மையுமன்று, வீரர்க்கு அழகுமன்று என்று அவனுடைய வீரத்தை இழித்தும், அவன் மனத்தில் வேகம் உண்டாகும்படிச் சொல்லச் சொல்லியும் கூறி அனுப்பும் திறம் உன்னுக. பகைவர்கள் தன் ஊரின் புறத்தே வந்து நின்றபோதும் போருக்குப் புறப்படாமல், படைகளுடன் வெளிவராமல் ஊருக்குள் பதுங்கியிருத்தல் எந்த வகையிலும் சரியானதன்று என்று கூறச் சொல்லுகிறான் என்பது கருத்து.

Koviloor Digital Library

13. அங்கதன் மகிழ்வோடு விரைந்து செல்லுதல்

பார்மிசை வணங்கிச் சீயம் விண்மிசைப் படர்வதே போல்,
வீரன் வெஞ்சிலையில் கோத்த அம்பென விசையின் போனான்;
'மாருதி அல்லன் ஆகின், நீ'' எனும் மாற்றம் பெற்றேன்;
யார்இனி என்னோடு ஒப்பார்?'' என்பதோர் இன்பம் உற்றான். (7069)

(மாற்றம்-புகழ்ச்சிச்சொல்/உயர்ந்த சொல்; சீயம்-சிங்கம்; கோத்த-தொடுத்த; விசை-விரைவு; வீரன்-இராமபிரான்)

''தூது செல்வதற்கு அனுமனை அனுப்பாவிட்டால் அந்த இடத்தை நிரப்புவதற்கு, அனுமனுக்கு நிகரான ஆற்றலும், வல்லமையும், திறனும், அறிவும் நிரம்பப்பெற்றவனாக நீ இருக்கிறாய்'' என்று இராமபிரானால் புகழ்ந்து கூறப்பட்ட பேறு பெற்றவனாகிய அங்கதன், 'என்னை ஒப்பார் இங்கு யார்உளர்? என்று மகிழ்ந்து, தரையில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து இராமபிரானை வணங்கி, வானவீதியில் செல்லும் வலிமை வாய்ந்த ஒரு சிங்கத்தைப் போலப் பாய்ந்து, வீரனாகிய இராமபிரானது கோதண்டம் என்னும் வில்லில் பொருத்தப்பட்ட, இலக்குத் தவறாத அம்புபோலவும் விரைவாகப் பாய்ந்து, இராவணன் இருப்பிடம் நோக்கிச் சென்றான்.

'சீயம் விண்மிசைப் படர்வது' என்பது நிகழா நிகழ்ச்சி. எனவே இப்பாடல் இல்பொருள் உவமையணியின் பாற்படும். அங்கதன் விரைவுக்கு வெஞ்சிலையில் கோத்த அம்பு உவமை. இராமனின் கோதண்டம் எவ்வாறு இலக்கினைத் தாக்கி, மீண்டும் அவன் அம்பறாத் தூணியை அடையுமோ, அதுபோல, அங்கதனும் தன் தூதுக் காரியத்தை முடித்துத் திரும்பிவந்து இராமபிரானைச் சேருவான் என்பது விரிந்த பொருள். 'மாருதி அல்லனாகில் நீ' என்பது 'அனுமன் இன்றேல் அங்கதன்' என்னும் ஒரு வழக்குச் சொல் உண்டென்பதையறிக. இன்று அது மருவி 'அவன் தம்பி அங்கதன்' என்றும் வழங்கப்பெறுதல் காண்க. அங்கதனுக்கு அண்ணன் இருந்ததாக எங்கும் கூறப்படவில்லை. எனவே அனுமனை அண்ணனாகவும், அங்கதனைத் தம்பியாகவும் கருதித் தூது அனுப்பிய தாகக் கொள்ள இடமுண்டு.

இங்கே 'ஆற்றலில் உயர்ந்தவர்கள் அண்ணன் என்று பண்டைய பாரதத்தில் அழைக்கப்பட்டிருக்கிறார்கள்' என்று தக்க சான்றுகளுடன் நிறுவுகிறார் டாக்டர் சுதாசேஷய்யன் அவர்கள் (படிவங்கள் எப்படியோ, பக்கம் 18 (எனவே அனுமனுக்குப் பொருத்தமான தம்பியாகவே அங்கதன் கருதப்படுகிறான்) இங்கே ஒரு அரிய குறிப்பையும் தருகிறார் ஆசிரியர். அது இலக்குவனுக்கு ஒரு மகன் உண்டென்றும், அவன் பெயர் அங்கதன் என்றும் வான்மீகியும், காளிதாசரும் கூறுகிறார்கள் என்ற ஒரு புதிய செய்தியையும் ஆசிரியர் தருகிறார்.

Koviloor Digital Library

14. அயில் கடந்து எரிய நோக்கும் அரக்கரைக் கடக்க, ஆழித்
துயில் கடந்து அயோத்தி வந்தான் சொல் கடவாத தூதன்,
வெயில் கடந்திடாத காவல், மேருவின் மேலும் நீண்ட,
எயில் கடந்து, இலங்கை எய்தி, அரக்கனது இருக்கை புக்கான். (7070)

(அயில்-வேற்படை; கடந்து-வென்று; கடத்தல்-வென்று அழித்தல்; ஆழி-கடல்; கடந்து-நீங்கி; கடவாது-பிறழாது/மீறாது; வெயில்-சூரியன்; எயில்-மதில்; இருக்கை-இருப்பிடம்; கடந்து-தாண்டி)

வேற்படையைக் காட்டிலும் கூரிய, பொறி பறக்கின்ற கொடிய பார்வையையுடைய அரக்கர் குலத்தை வேரோடு அழித்து ஒழிப்பதற் காகவே, தான் எப்பொழுதும் அறிதுயில் கொள்கின்றதான பாற்கடலை விட்டு நீங்கி, அயோத்தியில் தசரதனுக்குப் புதல்வனாகத் திரு அவதாரம் செய்து இருக்கின்ற திருமாலின் அம்சமாகிய இராமபிரானின் சொற்களை எந்நிலையிலும் பிறழாது கடைப்பிடிப்பவனாகிய தூதுவன் அங்கதன், சூரியனும் நுழைந்து செல்ல முடியாத கட்டுக் காவல் பொருந்தியதும், மேருமலையைக் காட்டிலும் நீண்டு உயர்ந்ததுமான இலங்கை மாநகரத்தின் கோட்டை மதில்களைத் தாண்டி, நகருக்குள் புகுந்து, அரக்கன் இராவணனது இருப்பிடத்தையும் சென்று சேர்ந்தான்.

அரக்கர்களின் பார்வை இயற்கையிலேயே சிவந்து நெருப்புப் பொறி பறப்பதுபோல் இருக்கும். இங்கே அது மேலும் கூரிய வாட்படையையும் வெல்லும் பார்வை எனப் பேசப்பட்டிருக்கிறது. இராமாவதாரத்தின் நோக்கம் 'அரக்கரைக் கடத்தல்' என்பது விளக்கப்படுகிறது. தூதுவன் இலக்கணம் 'சொற்கடவாமை' என்பதறிக. ''கறங்குகால் புகா; கதிர்புகா'' என்பது 'வெயில் கடந்திலாத காவல்' எனப்பட்டது. அனுமன் இலங்கை மதிலையடைந்து இலங்கைக்குள் செல்வதற்கு எவ்வளவு முயற்சி செய்து, துன்பப்பட்டு, உருமாறி இலங்கிணியிடம் குத்து வாங்கி எப்படி நுழைந்தான் என்பதை முன்னரே கூறிவிட்டதனால்தானோ என்னவோ, கூறியது கூறல் குற்றத்திற்கு ஆளாகாமல் கம்பன் இங்கே அங்கதன் இலங்கை அரக்கனின் இருப்பிடத்தை அடைந்ததை ஒரே அடியில் கூறி முடித்துவிட்டான் என்பதைக் கருதுக. 'கடத்தல்' என்னும் ஒரு சொல், பலபொருள்களில் கையாளப்பட்டிருக்கும் திறன் நோக்குக.

தூதர்களைப் பொதுவாக இருவகையாகப் பிரிப்பதுண்டு. அவை கூறியது கூறுவார், தான் வகுத்துக் கூறுவார் என்பன. இங்கே அங்கதன், கூறியது கூறுவர் எனும் பகுப்பினைச் சார்ந்தவன். இதற்கு மற்றொரு எடுத்துக்காட்டுச் சுந்தரருக்காகச் சிவபெருமான் பரவை நாச்சியாரிடம் சென்ற தூது, அனுமன் தான் இலங்கைக்குச் சென்றது; சீதாதேவியைக் கண்டு வரவேயன்றி இராவணனைக் கண்டுவர அன்று. எனினும் அங்கே இராவணனைக் காணும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டு அவனைக் கண்டு இராமபிரானின்இதே செய்தியை அங்குகூறிவந்ததால்அவன் 'தான்

Koviloor Digital Library

வகுத்துக் கூறுவார்' என்னும் பகுப்பினைச் சார்ந்தவனாகிறான். இதற்கு மற்றொரு எடுத்துக்காட்டு மகாபாரதத்தில் கண்ணன் தூது, 'சொற்கடவாத தூதன்' என்பது வள்ளுவனின் 'தூது' என்ற அதிகாரத்தில் கூறப்பட்டிருக் கின்ற பல குறள்களின் சுருக்கம் எனக்கொள்க. 'தூய்மை, துணைமை, துணிவுடைமை இம்மூன்றின் வாய்மைவழி உரைப்பான் பண்பு' என்பதும், 'இறுதி பயப்பினும் எஞ்சாது, இறைவற்கு உறுதி பயப்பதாம் தூது' என்பதும் குறட்பாக்கள் 688, 690.

15. அங்கதன் இராவணனைக் கண்டு வியந்து நிற்றல்

அழுகின்ற கண்ணர் ஆகி, 'அனுமன்கொல்' என்ன அஞ்சித்
தொழுகின்ற சுற்றம் சுற்ற, சொல்லிய துறைகள் தோறும்,
மொழிகின்ற வீரர்வார்த்தை, முகம்தொறும் செவியின் மூழ்க,
எழுகின்ற சேனை நோக்கி, இயைந்து இருந்தானைக் கண்டான்.
(7071)

(சுற்ற-சூழ்ந்துநிற்க; சொல்லிய-நூல்களில் கூறப்பட்டுள்ள; மூழ்க-பதிய; இயைந்து-பொருந்தி/அமைந்திருந்த)

அங்கதனை அங்கு கண்ட அரக்கர்கள் முன்பு இலங்கைக்கு எரியூட்டிய, பொழிலை அழித்து அரக்கர்களில் செம்பாதிப்பேரை அழித்துச் சென்ற அனுமன்தான் மீண்டும் இங்குவந்து விட்டானோ, என்று நடுங்கி, அச்சமுற்று இராவணனை நோக்கித் தங்களைக் காப்பாற்றும்படி, அழுத கண்ணினை உடையவராகவும், தொழுத கையினையுடையவராகவும் ஒருபுறம் சூழ்ந்திருந்தார்கள். இன்னொருபுறம் அரசியல் நூல்களில் கூறப்பட்டுள்ள போர்த்துறையைப் பற்றிக் கலை நூல் வல்லார் எடுத்து இயம்பிக்கொண்டிருக்க, இராவணனது பத்து முகங்களிலிருக்கும் இருபது காதுகளும் அவற்றை நன்கு கேட்டு மனத்தில் நன்கு பதியவைத்துக் கொள்கிறது. இன்னொரு பக்கம், போருக்குப் புறப்பட்டுச் செல்லுகின்ற சேனைகளின் முழக்கத்தையும் அணிவகுப்பையும் பார்த்துக்கொண்டு நன்கு வீற்றிருந்த இராவணனை அங்கதன் கண்டான்.

இராவணனுக்குப் பத்துத்தலைகள்; இருபது செவிகள்; இருபது கண்கள். எனவே அவன் தன்னைச் சுற்றிலும் நடப்பனவற்றையெல்லாம் நன்கு கூர்ந்து பார்த்துத் தெரிந்து கொண்டான், கேட்டுக்கொண்டான், உணர்ந்துகொண்டான். என்பதாம். மன்னவர்களைப் பற்றிக்கூறும்போது, 'கண்ணிற் சொல்லி, செவியில் பார்க்கும் வல்லுநர்' என்பார் குமரகுருபரர். அச்சான்றோர் வாக்கு இங்கு ஒப்பிடத்தகும். சுற்றத்தார் அஞ்சித்தொழுது நிற்கிறார்கள். அரசியல் நூல்வல்லார் சில இன்றியமையாக் கருத்துக் களைக் கூறிக்கொண்டிருக்கின்றர். சேனைவீரர்கள் போருக்குப் புறப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இவை எல்லாவற்றையும் ஒரே

Koviloor Digital Library

நேரத்தில் கண்டும், கேட்டும், சிந்தித்தும் அமர்ந்திருக்கிறான் இராவணன் என்பதாம்.

16. "கல் உண்டு; மரம் உண்டு; ஏழைக்கடல் ஒன்றும் கடந்தேம் என்னும்
சொல் உண்டே; இவனை வெல்லத் தோற்றும் ஓர் கூற்றம் உண்டே?
எல் உண்ட படை கைக்கொண்டால் எதிர் உண்டே? இராமன் கையில்
வில் உண்டேல், உண்டு" என்று, எண்ணி ஆற்றலை வியந்து நின்றான்.
(7072)

(கல்-மலை; ஏழை-வலிமை/சிறுமை; சொல்-புகழ்; தோற்றுதல்-வெளிப்படத் தோற்றி நிற்றல்; கூற்றம்-இயமன்; எல்-ஒளி; உண்ட-மிக்க)

அங்கதன், ''நாம் இந்தச் சிறிய கடலைக் கடப்பதற்குக் கல்லையும், மரங்களையும் கொண்டு அணைகட்டிக் கடந்து வந்து விட்டோம் என்று ஒரு புகழ் நம்மை வந்து எய்தியது என்றாலும், இந்த இராவணனைத் தோற்றுப் போகும்படி செய்யக் கூடிய ஒரு இயமன் எங்காவது வெளிப் பட்டுத் தோன்றுவது கூடுமா? இவன் கையில் உள்ள ஒளிமிக்க படைக் கலன்களைக் கொண்டு போர் செய்ய முற்பட்டான் என்றால், இவனை எதிர்த்துப் போர்செய்பவர் யாராவது இவ்வுலகில் இருக்கமுடியுமா? ஆனால் நம் இராமபிரான் கைகளில் கொண்டிருக்கும் கோதண்டம் என்னும் வில்லினால் மட்டும்தான் இவனை எதிர்த்துப் போர் செய்ய முடியும்'' என்று தனக்குள் எண்ணிக் கொண்டு, இராவணனது பேராற்றலையும், தோற்றத்தையும் கண்டு வியந்து போய் நின்றான்.

இராவணனது படையையும், அவன் தோற்றத்தையும், பேராற்றலை யும் இலங்கை மாநகரின் அரண்களையும் கண்ட அங்கதனுக்கு, அவர்கள் கடந்துவந்த கடல் மிகச் சிறிதாகத் தோன்றியது. எனவே 'ஏழைக்கடல்' என்கிறான் என்க. இராவணனை வெல்ல இதுவரை யாரும் பிறக்க வில்லை, இனிமேலும் யாரும் பிறந்து வரமுடியாது என்று அவன் கருதியதால், 'இவனை வெல்லத் தோற்றத்து ஓர் கூற்றம் உண்டே?' என்றான் என்க. இங்கே பயன்படுத்தியிருக்கும் 'உண்டே' என்ற சொற்களில் உள்ள ஏகாரம் எதிர்மறைப்பொருளது. இல்லை என்ற பொருளைத்தரும். இராமபிரான் ஒருவனால்தான் இவனை வெல்ல முடியும் என்ற முடிவுக்கு வருகிறான் அங்கதன். எனவே 'இராமன் கையில் உண்டேல், உண்டு' என்கிறான் என்க. இதேபோல் முதன்முதலில் அனுமன் இராவணனைக் கண்டபோதும் கருதினான். 'அல்எலாம் திரண்டன்ன நிறத்தான் ஆற்றலை, வெல்லலாம் இராமனால், பிறரும் வெல்வரோ?' என்றதையும், பின்னர் வீடணன் இராமபிரானை அடைக்கலம் அடைந்த போதும், 'இன்று உலப்பினும், நாளையே உலப்பினும் சிலநாள் சென்று உலப்பினும், நினக்கு அன்றிப் பிறர்க்குத் தீரான்' என்றதையும் இங்கு நினைவுகூர்க.

Koviloor Digital Library

17. "இன்று இவன் தன்மை எய்த நோக்கினேற்கு எதிர்ந்த போரில்
வென்ற என் தாதை மார்பின் வில்லின்மேல் கணை ஒன்று ஏவிக்
கொன்றவன் தானே வந்தான்' என்று உடன் குறிப்பின் அல்லால்,
ஒன்று இவன் தன்னைச் செய்ய வல்லரோ, உயிர்க்கு நல்லார்?" (7073)

(எய்த-கூர்ந்து; தாதை-தந்தை/வாலி; நல்லார்-நன்மையை நாடுபவர்; ஏவி-செலுத்தி)

''இப்பொழுது இந்த இராவணனின் போராற்றலைக் கூர்ந்து கவனிக்கின்ற எனக்கு, முன்பு திக் விஜயகாலத்தில் என் தந்தையாகிய வாலியுடன் போர்செய்ய முற்பட்ட இராவணனைத் தன் வாலில் கட்டித் திக்கெட்டும் சென்று, என்தாய் தாரையின் வேண்டுகோளின்படி விடுவித்த தால் உயிர்பிழைதது நிற்கிற இந்த இராவணனைக் கொல்லுவதற்கு இப்போது வந்துள்ள இராமபிரான், என் தந்தையின் மார்பில் ஒரே ஒரு ஒப்பற்ற கோதண்டம் என்னும் வில்லைச் செலுத்தி உயிரழியச் செய்தவன் தானே என்று மனத்திற்கு அமைதி கொள்ளலாமே அன்றி, தம் உயிரிடத்து நன்மையைக் கருதும் யாரும் இவனுடன் போர்செய்ய முற்படவும் முடியாது; ஒரு தீங்குகூடச் செய்ய முடியாது'' என்று கருதுகிறான் அங்கதன்.

''இப்படி இங்கே என் எதிரே நிற்கின்ற இந்த இராவணன் என் தந்தை வாலியால் தோற்கடிக்கப்பட்டவன். அத்தகைய பேராற்றல் பெற்ற என் தந்தை வாலியைத் தன் ஒரே அம்பினால் கொன்றழித்தவன் இந்த இராமபிரான். எனவே இந்த இராமபிரானால்தான் இந்த இராவணனை அழித்தொழிக்க முடியுமேயன்றி வேறு எவராலும் இவனுக்கு ஒரு சிறு தீங்குகூடச் செய்யமுடியாது'' என்று கருதுகிறான் அங்கதன் என்பதாம். இராவணன் வாலியின் வாலால் கட்டுண்டு பட்ட துன்பங்கள் எல்லாம் உத்தரகாண்டம் இராவணன் வாலி வாலால் கட்டுண்ட படலத்தில் மிக அருமையாகவும், மிக விரிவாகவும் பேசப்பட்டிருக்கிறது. வாலியின் மனைவி தாரையின் வேண்டுகோளுக்கு இணங்கித்தான் இராவணன் விடுவிக்கப்பட்டான் என்பதும் நாம் அறிந்துகொள்ள வேண்டிய ஒரு செய்தி. முன்பாடலில் கூறிய கருத்தான 'இராமன் கையில் வில் உண்டேல் உண்டு' என்னும்கருத்தையே இங்கே மீண்டும் வகுத்துக்கூறுகிறான் என்க.

18. அங்கதன் சுக்கிரீவனையும் புகழ்தல்

"அணி பறித்து அழகு செய்யும் அணங்கின்மேல் வைத்த ஆசைப்
பிணி பறித்து, இவனை யாவர் முடிப்பவர், படிக்கண்? பேழ்வாய்ப்
பணி பறித்து எழுந்த மானக் கலுழனின், இவனைப் பற்றி,
மணி பறித்து எழுந்த எந்தை யாரினும் வலியன்'' என்றான். (7074)

Koviloor Digital Library

(அணி-ஆபரணங்கள்; பறித்து-களைந்து; அணங்கு-தெய்வத்தன்மை உள்ளபெண்/சீதாதேவி; பிணி-நோய்; பறித்த-அகற்றிய; முடிப்பது-தொலைப்பது; படி-உலகு; பேழ்-பிளந்த; பணி-பாம்பு; பறித்து-கவர்ந்து; மானம்-ஆகாயம்/பெருமை; கலுழன்-கருடன்; மணி-இரத்தினம்; எந்தை-என் சிறியதந்தை/சுக்கிரீவன்; வாய்-நாக்கு)

''தான் அணிந்திருந்த ஆபரணங்களை எல்லாம் களைந்து எறிந்த பின்னும் அவையின்றியே மிக்க அழகுடன் விளங்கும் தெய்வத்தன்மை வாய்ந்த பெண்ணாகிய சீதாதேவியின் மீது, இந்த அரக்கனான இராவணன் கொண்டுள்ள ஒருதலைக் காமம் என்னும் நோயை அகற்றி, இவனை அழித்து, இப்பூமியிலிருந்து ஒழிப்பவர் இராமபிரானைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள்? பிளந்த நாக்கினை உடைய பாம்பினைப் பற்றிக் கொண்டு, அதன் மாணிக்க மணியைக் கவர்ந்துகொண்டு, வானத்தின் உயரே எழுந்த பெருமை மிகுந்த கருடனைப்போல, இவனுடைய பத்துத் தலைகளையும் பற்றி, அம்மகுடங்களில் பதித்திருந்த மாணிக்க மணிகளை எளிதில் பறித்து மீண்டுவந்த என் சிறியதந்தையாகிய சுக்கிரீவன், உண்மையிலேயே மற்ற எல்லா வீரர்களையும்விட மிக்க வலிமையுடையவன் தான்'' என்று அங்கதன் தன் சிறிய தந்தையின் வலிமையை நினைத்து மகிழ்ந்தான்.

ஆபரணங்கள் அணியாதபோதும், அழகுமிளிர்ந்து ஒளிர்பவள் சீதாதேவி என்பது காப்பியத்தில் நாம் பல இடங்களில் கண்டதே. இதேபோலக் கண்ணகியும் அணிகளை அகற்றிய பின்னும் அழகொளிர விளங்கினாள் என்று இளங்கோவடிகள் கூறுவதைக் கேளுங்கள். 'கூடல் மகளிர் கோலம் கொள்ளும் ஆடகப் பைம்பூண் அருவிலை அழிப்பச் செய்யாக் கோலமொடு வந்தீர்' என்பது சிலப்பதிகாரம். 'அணியிலாக் கவிதை, பணியிலா வனிதை பயனின்று' என்பது சான்றோர்வாக்கு. 'அணிபறித்து அழகு செய்யும்' என்ற சொற்றொடர்பொருள்ஆழம் மிக்கது. அணிகளைப் பறித்தபின்னர் அமங்கலமாகத் தானே தோன்ற வேண்டும்? இங்கே கம்பனுக்கு அமங்கல வார்த்தையைப் பயன்படுத்தக் கூட மனம் கொள்ளவில்லை. எனவே மிகச் சாமர்த்தியமாக ''அணிபறித்து அழகு செய்யும்'' என்ற கவிஞனின் சொல்லாட்சி பாராட்டுதற்குரியது. அங்கதன் சுக்கிரீவனைத் தன் தந்தையாகவே மதித்துப்போற்றி வந்தான் என்பதும் 'எந்தை' என்பதனால் புலப்படுத்தப்படுகிறது.

19. நெடுந்தகை விடுத்த தூதன், இணையன நிரம்ப எண்ணி,
கடுங்கனல் விடமும் கூற்றும் கலந்து கால் கரமும் காட்டி,
விடும் சுடர் மகுடம் மின்ன, விரிகடல் இருந்தது அன்ன,
கொடுந்தொழில் மடங்கல் அன்னான், எதிர்சென்று குறுகி நின்றான்.
(7075)

Koviloor Digital Library

(நெடுமை-பெருமை; இனையன-இத்தகைய; மடங்கல்-சிங்கம்; குறுகி-அணுகி; காட்டி-தோற்றுவித்து; சுடர்-ஒளி)

பெருமை நிறைந்த நற்பண்புகள் நிறைந்த இராமபிரான் அனுப்பிய தூதுவனாகிய அங்கதன், இத்தகைய எண்ணங்களைத் தன் மனத்தில் முழுவதும் கொண்டு, ஒரு விரிந்து பரந்த கடல், கொடிய நெருப்பையும், ஆலகால நஞ்சையும், இயமனுக்குரிய கொல்லும் தன்மையையும், இவையெல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து அவையே அவற்றிற்குக் கால்களாகவும், கைகளாகவும் செயல்பட்டால் எப்படி இருக்குமோ அவ்வாறு ஒரு தோற்றத்தைக் காட்டி, ஒளிமிகுந்து வீசும் மகுடங்கள் ஒளியினைப் பரப்பிக்கொண்டு, கொல்லும் கொடிய தொழிலையுடைய ஒரு ஆண்சிங்கம் போன்று கம்பீரமாக நின்றிருந்த இராவணனின் எதிரே சென்று, அவனை நெருங்கி நின்றான்.

'நெடுந்தகை' என்பது நற்பண்புகள் மிகுந்த சான்றோனாகிய இராமபிரானைக் குறித்தது. இராவணனின் தோற்றம் வருணிக்கப் படுகிறது. ஓர் விரிந்து பரந்த கடலுக்குக் கொடிய நெருப்புக் காலாகவும், ஆலகால விஷம் கைகளாகவும் இயமன் போன்று கொல்லும் தன்மை படைத்ததாகவும் இருந்தால் எப்படி இருக்குமோ, அப்படித் தன் இருபது தலைகளிலும் மகுடங்கள் ஒளிவிட்டு மின்னலைப்போலப் பிரகாசிக்க, நீண்ட நெடிய உருவம் கொண்டிருக்கும் ஆண்சிங்கம் போலக் கம்பீரமாக நின்றிருந்த இராவணன் அருகில் அங்கதன் சென்று நெருங்கி நின்றான் என்பதாம். இவ்வாறு ஒரு கடல் இருப்பது கிடையாது. எனவே இப்பாடல் இல்பொருள் உவமை அணியின்பாற்படும். கையும் காலும் இருக்க முடியாத ஒரு பொருளுக்குக் கையும் காலும் முளைத்ததுபோல என்று இன்றும் வழங்குகிறோம் அல்லவா? குள்ளமாக இருக்கின்ற ஒருவரைப் பார்த்து, ''கத்தரிக்காய்க்குக் கையும் காலும் முளைத்தது போல'' என்று கூறுகிறோம் அல்லவா? அது போலக் கம்பன் இங்கே விரிந்து பரந்த கடலுக்குக் கையும் காலும் முளைத்தது போலப் பேருருவம் கொண்டு நிற்கிறான் இராவணன் என்று கூறுவதாகக் கொள்க. மடங்கிய பிடரி மயிரினை உடையதால் மடங்கல் என்பது ஆண்சிங்கத்திற்குக் காரணப் பெயர்.

20. இராவணன் - அங்கதன் உரையாடல் [19 பாடல்கள்]

நின்றவன் தன்னை, அன்னான் நெருப்பு எழ நிமிரப் பார்த்து, 'இங்கு
இன்று, இவண் வந்த நீ யார்? எய்திய கருமம் என்னை?
கொன்று இவர் தின்னா முன்னம், கூறுதி, தெரிய' என்றான்;
வன்திறல் வாலிசேயும், வாய்எயிறு இலங்க நக்கான். (7076)

(இவண்-இங்கு; தெளிய-விளங்கும்படி; வாள்-ஒளி; இலங்க-ஒளிரும்படி; நக்கான்-சிரித்தான்; கருமம்-காரியம்)

Koviloor Digital Library

அவ்வாறு தன் முன்னே திடீரென்று மிக அருகில் வந்து நின்றவனான அங்கதனை நோக்கி, தன் கண்களில் நெருப்புப் பொறி பறக்குமாறு நிமிர்ந்து இராவணன், ''இப்போது இந்த இடத்திற்கு வந்து நிற்கும் நீ யார்? இங்கு என்ன காரியமாக வந்தாய்? இங்கு நிற்கின்ற என் ஏவலாளர்கள் உன்னைத் தாக்கிக் கொன்று தின்னும் முன்பாக நான் விளங்கிக் கொள்ளுமாறு விரைவில் தெரிவிப்பாயாக!'' என்றான். அதனைக் கேட்ட வன்மையான ஆற்றல் கொண்ட வாலியின் மகனான அங்கதன் தன் ஒளிமிகுந்த பற்கள் வெளியே தெரியும்படி பெருகச் சிரித்தான்.

இத்தனை கட்டுக்காவலையும் மீறி, தன் எதிரே வந்து நிற்கும் ஒரு குரங்கினைக் கண்டதும் இராவணனுக்கும் அனுமன் நினைவு வந்திருக்க வேண்டும். எனவே ''நெருப்பு எழ நிமிரப் பார்த்து'' என்றான் என்க. இங்கு இன்னொன்றும் கருதவேண்டும். அனுமன் இலங்கைக்கு வந்தபோது இலங்கிணி என்ற காவல் தெய்வம் நின்று தடுத்துப் பார்த்துத் தோல்வியுற்று அனுமனை இலங்கைக்குள் புகுந்து செல்ல அனுமதித்தாள். இப்பொழுது இலங்கிணி இல்லை. எனவே அங்கதனால் எளிதில் எந்தவித எதிர்ப்பும் இல்லாமல் நேராக இராவணன் முன் சென்று நிற்க முடிந்தது என்பதையும் உணரவேண்டும். எனவேதான் ஒரு குரங்கைத் தன்முன் திடீரென்று பார்த்த இராவணன் அச்சமுற்றுத் தன்கண்களில் நெருப்பு எழ நிமிர்ந்து நோக்க வேண்டியதாயிற்று என்பதாம். அனுமனைக் கேட்டது போலவே, இவனையும்நீ யார்? நீ இங்கு வந்ததன் நோக்கம் என்ன? என்று கேட்கிறான் இராவணன். அங்கதனும் வாலியின் ஆற்றலுக்குச் சற்றும் குறையாதவன் என்பதனால் கவிஞன் 'வன்திறல் வாலிசேய்' எனக் கூறுகிறான்.

இங்கே 'சேய்' என்ற சொல்லுக்கு ஒரு அருமையான விளக்கம் கிடைக்கிறது. 'சேய்' என்ற சொல் செம்மையான என்ற சொல்லின் அடியாகப் பிறந்தது என்றும் இது சிவபெருமானின் இளையமகனான முருகனையே குறித்தது என்றும் பின்னர் காலப்போக்கில் பொதுவாக எந்த ஓர் மகனையும் குறித்து நின்றது என்றும் கூறுகிறது ஒரு நூல். முன்பு அனுமன் சிரித்தது போலவே, இப்பொழுது இங்கேயும் அங்கதன் தன் ஒளிவீசும் பற்கள் வெளிப்பட்டுத் தெரியும்படி பெருகச் சிரிக்கிறான். அங்கே 'நாயகன் தூதன் நக்கான்' என்ற கவிஞன் இங்கே 'வாள் எயிறு இலங்க நக்கான்' என்கிறான். தான் தூதனாக வந்திருப்பதனாலும், தூதனைக் கோறல் கூடாது என்பது தெரிந்திருப்பதாலும் அங்கதன் நகைத் தான். இது எதிரியைக் கண்டபோது எழும் எள்ளல் சிரிப்பு எனக்கொள்க. எதிரே நிற்கின்ற பகைவனின் ஆற்றலைக் குறைத்து மதிப்பிடுகின்ற ஒரு அரசனின் பேதைமையை எண்ணி நகைத்தான் என்க.

Koviloor Digital Library

21. தன்னை இராமதூதன் என்று அறிமுகப்படுத்திக் கொள்ளுதல்

"பூதநாயகன், நீர்சூழ்ந்த புவிக்கு நாயகன், அப்பூமேல்
சீதைநாயகன், வேறு உள்ள தெய்வநாயகன், நீ செப்பும்
வேதநாயகன், மேல் நின்ற விதிக்கு நாயகன், தான்விட்ட
தூதன்யான்; பணித்த மாற்றம் சொல்லிய வந்தேன்" என்றான். (7077)

(பூதம்-ஐம்பெரும் பூதங்கள்; நாயகன்-தலைவன்; நீர்-கடல்; புவி-நிலமகள்; பூ-தாமரை மலர்; நாயகன்-கணவன்; செப்புதல்-ஓதுதல்; நாயகன்-தனிமுதல்வன்; பணித்த-கட்டளையிட்ட; மாற்றம்-வார்த்தை/வாசகம்/செய்தி)

அங்கதன் இராவணனை நோக்கி, ''நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம்'' என்ற பஞ்சபூதங்களுக்கும் தலைவனானவனும், கடலால் சூழப்பெற்ற இவ்வுலகத்திற்கு எல்லாம் தலைவனானவனும், இந்தப் பூமியின்மேல் தோன்றிய இலக்குமியின் அம்சமான சீதாதேவியின் வாழ்க்கைத் துணைவனானவனும், மற்றும் உள்ள எல்லாத் தெய்வங் கட்கும் மூல முதல்வனானவனும், நீ தினமும் ஓதுகின்ற வேதங்களுக் கெல்லாம் உட்பொருளாக நிறைந்து விளங்குகின்ற தலைவனானவனும், எல்லா உயிரினங்களுக்கும் மேல் நின்று அவ்வவற்றின் விதியை நிர்ணயிக்கின்ற பரம்பொருளானவனுமான, திருமாலின் அம்சமான இராமபிரான்தூதன் நான். என்தலைவன் உன்னிடம் கூறுமாறு, என்னிடம் சொல்லியனுப்பிய இரு செய்திகளைக் கூறுவதற்காக வந்துள்ளேன்'' என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, தான் வந்த காரியத்தையும் சொல்லி முடிக்கிறான் அங்கதன்.

ஐம்பெரும் பூதங்களை உண்டாக்கியவனும், அவற்றுடன் கரந்து உறைந்து நிற்பவனும் பரம்பொருளே என்பதனால் 'பூதநாயகன்' என்றான். இவ்வுலகைப் படைத்துக் காத்து அழிக்கும் முத்தொழிலையும் செய்வ தனால், 'புவிக்கு நாயகன்' என்றான். அந்தப் பூமியில் பிறந்ததனாலும், தாமரைமலரில் வீற்றிருப்பதனாலும், இலக்குமியைச் சீதை என்றும், அவள் தலைவனாகிய இராமபிரானை ''பூ மேல் சீதை நாயகன்'' என்றும் கூறினான். வேறுபல வகைப்பட்ட தெய்வங்கள் இருந்தாலும், அவர்களுக் கெல்லாம் தலைவனாகத் தனித்து நின்று செயல்படும் மூலமுதல் காரணன் என்பதால் 'வேறு உள்ள தெய்வநாயகன்' என்றான். இராவணன் ஆயிரம் வேதம் வல்லவன். எனவே தினந்தோறும் ஓதுகின்ற அந்த வேதத்தின் முதற்பொருள் என்பதனால் 'நீ செப்பும் வேதநாயகன்' என்றான். எல்லா வற்றிற்கும் மேலாக, உயிரினங்கள் எல்லாவற்றிற்கும் அவ்வவற்றின் விதியினை நிர்ணயிக்கும் பிரமதேவனைத் தன்னிடமிருந்து தோற்று வித்தவன் என்பதனால், 'மேல்நின்ற விதிக்கு நாயகன்' என்றான். இவ்வளவையும் கூறிவிட்டு, மிகவும் பணிவாக, அப்படிப்பட்ட இராமன்

Koviloor Digital Library

அனுப்பிய தூதன் நான் என்றும், அவனால் கட்டளையிடப்பட்டு, சொல்ல வேண்டிய இரண்டு செய்திகளை மட்டும் உன்னிடம் தெரிவிப்பதற்காக வந்திருக்கிறேன்'' என்றும் கூறும் நயம் எண்ணி இன்புறத்தக்கது.

இது ஓர் அருமையான பாடல். இறைவனின் பரத்துவத்தைப் பிழிந்து தரும் சாறு எனக் கூறும் தகுதிவாய்ந்த பாடல். கம்பனின் முத்திரை பதித்த பாடல் என்க. இராவணன் கேட்ட கேள்விகளுக்கான முழு விடையையும், அவன் கேட்காத, கேட்கவிரும்பாத, இராமபிரானின் முழுப் புகழையும் தொகுத்துக் கூறிய கவிஞனின் திறம்நோக்குக.

22. இராவணன் இராமபிரானை இகழ்ந்து பேசுதல்

''அரன்கொலாம்? அரிகொலாம்? மற்று அயன் கொலாம்? என்பார் அன்றி,
குரங்கெலாம் கூட்டி, வேலைக் குட்டத்தைச் சேது கட்டி,
'இரங்குவான் ஆகில் இன்னம் அறிதி' என்று, உன்னை ஏவும்
நரன்கொலாம், உலகநாதன்' எனக் கொண்டு, அரக்கன் நக்கான்.
(7078)

(அரன்-சிவன்; அரி-திருமால்; அயன்-பிரமன்; குட்டம்-குளம்; சேது-அணை; இரங்குதல்-வருந்துதல்; ஏவுதல்-அனுப்புதல்; நரன்-மனிதன்; நாதன்-இறைவன்; நகுதல்-சிரித்தல்)

இராவணன் அங்கதனை நோக்கி, ''நீ வேதநாயகன் விதிக்கு நாயகன், உலகநாயகன் என்றெல்லாம் புகழ்ந்து பேசுகிறாயே, அந்த இராமன், சிவபெருமான், திருமால், பிரமதேவன் என்ற முத்தேவர்களைத் தனக்குத் துணையாக அழைத்துவராமல், அற்பமான ஒரு குரங்குக் கூட்டத்தைத் தன்னுடன் கூட்டிவந்து, இந்தச் சிறிய குளம் போன்ற கடலில் ஒரு அணையைக்கட்டி, இங்கு வந்தபிறகும் என்னை எதிர்த்து நேராகப் போரிட வாராது, உன்னைத் தூதுவனாக அனுப்பி, இந்த நிலையிலும் அவன் இரக்கம் கொண்டு சீதையை விட்டுவிடுவானா?'' என்று அறிந்து வருவாயாக! என்று உன்னை அனுப்பி இருக்கிறானே? இந்த மனிதனையா நீ உலகத்தைக் காக்கும் இறைவன் என்று கூறுகிறாய்?'' என்று இராமபிரானை இகழ்ந்து பேசி எள்ளல் தோன்றச் சிரித்தான்.

போருக்கு வருபவன் என்பவன், தன்னுடன் தன்னைவிட வலிமை மிகுந்தவர்களை உடன் அழைத்து வரவேண்டும். அப்படிப்பட்ட வலிமை மிக்க மும்மூர்த்திகளை விட்டுவிட்டு, வலிமையற்ற, காய்கனிகளைத் தின்று, மரத்திற்கு மரம் தாவும் இயல்புடைய குரங்குகளை உடன்

Koviloor Digital Library

அழைத்துக்கொண்டு வந்திருக்கிறான். அத்தோடு மட்டுமல்ல, இந்தச் சிறுகுட்டை போன்ற கடலை அடைத்து அணைகட்டியதைத் தான் ஏதோ பெரிய சாதனையைச் செய்துவிட்டது போல இறுமாப்புக் கொண்டு அங்கேயே இருந்துகொண்டு உன்னைத் தூதாக அனுப்பியிருக்கிறானே! அப்படிப்பட்ட வலிமையற்றவனையா இந்த உலகத்தையே படைத்து, காத்து, அழித்துவரும் பரம்பொருள் என்று கூறுகிறாய்?'' என்று இராமபிரானையும் அங்கதனையும் இகழ்ந்து பேசிச்சிரித்தான் இராவணன் என்பதாம். பெரிய கடலை 'வேலைக்குட்டம்' என்பதும், இராமபிரானை 'நரன்' என்பதும் இகழ்ச்சிக் குறிப்பின் உச்சம். 'கொல்' 'ஆம்' என்பன அசைச்சொற்கள். இங்கே 'நகுதல்' பிறர் பேதைமையைக் கண்டு எள்ளிய குறிப்பு; அவன் இறைவன் என்றால் இருந்த இடத்திலிருந்தே சீதையைத் தன்னிடத்திற்கு வரவழைத்திருக்க வேண்டாமா? என்று குறிக்கிறான் என்க. 'நரன்' என்னும் வட சொல்லுக்கு நசித்து அழியும் இயல்பினன் என்பது பொருள்.

23. "கங்கையும், பிறையும் சூடும் கண்ணுதல், கரத்து நேமி
சங்கமும் தரித்தமால், மற்று இந்நகர் தன்னைச் சாரார்;
அங்கு அவர் தன்மை நிற்க, மனிசனுக்காக, அஞ்சாது,
இங்கு வந்து இதனைச் சொன்ன, தூதன் நீ யாவன்?'' என்றான். (7079)

(சூடுதல்-அணிதல்; கண்ணுதல்-நெற்றிக்கண்ணன்/சிவபெருமான்; நேமி-சக்கரப்படை; தரித்த-கொண்ட; மால்-திருமால்; சார்தல்-அடைதல்; மனிசன்-மனிதன்)

''கங்கையையும், பிறைச்சந்திரனையும் தன்சடைமுடியில் தாங்கியுள்ள நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானும், சக்கரப்படையையும், சங்கினையும் தன் இரு கரங்களிலும் தாங்கியுள்ள திருமாலும், எனக்கு அஞ்சி, இந்நகருக்குள்ளேயே வரமாட்டார்கள்; கடவுளர்களாகிய அவர்கள் நிலைமையே அவ்வாறிருக்க, கேவலம் ஒரு மனிதனுக்காக, என்னிடம் சற்றும் அச்சம் கொள்ளாது, நான் திருவோலக்கம் வீற்றிருக்கின்ற அத்தாணி மண்டபத்திற்குள்ளேயே வந்து, இவ்வாறு பேசிக்கொண்டிருக்கும் தூதுவனாகிய நீ யார்?'' என்று கேட்கிறான் இராவணன்.

சிவபெருமானையும், திருமாலையும் குறிப்பிட்ட இராவணன், பிரமனைக் குறிப்பிடாததற்குக் காரணம் பிரமன் இராவணனுடைய குல முதல்வன் என்பதால் என்க. கங்கையைத் தன் தலையில் சூடியிருப்பது அதன் அகந்தையை அழிப்பதற்காகவும், பிறைச்சந்திரனைச் சூடி யிருப்பது கருணையைக் காட்டுவதற்காகவும் என்க.

Koviloor Digital Library

24. அங்கதன் வாலியின் மைந்தன் எனக்கூறுதல்.

இந்திரன் செம்மல், பண்டு ஓர் இராவணன் என்பான் தன்னை
சுந்தரத் தோள்களோடும் வாலிடைத் தூங்கச் சுற்றி,
சிந்துரக் கிரிகள் தாவித் திரிந்தனன், தேவர் உண்ண
மந்தரப் பொருப்பால் வேலை கலக்கினான் மைந்தன்'' என்றான்.
(7080)

(செம்மல்-புதல்வன்; பண்டு-முன்பு; சுந்தரம்-அழகு; தூங்க-தொங்குமாறு; சுற்றி-பிணித்து; கிரி-மலை; பொருப்பு-மலை; வேலை-கடல்; கலக்குதல்-கடைதல்; சிந்துரம்-யானைகள்)

''முற்காலத்தில் இராவணன் என்ற ஓர் அரக்கனை அவனுடைய அழகிய தோள்களோடும், தனது வாலினாலேயே இறுகப் பிணித்துக் கட்டிக் கொண்டு, யானைகள் மிகுந்திருக்கின்ற அஷ்டகுல மலைகளிலெல்லாம் தாவிச்சென்று வந்தவனும், தேவர்கள் உண்பதற்காக மந்தரமலையை மத்தாக நட்டுப் பாற்கடலைக் கடைந்து அமிழ்தம் பெற்றுத்தந்தவனுமான தேவர்களுக்குத் தலைவனாகிய தேவேந்திரனின் புதல்வனான வாலியின் புதல்வன் ஆவேன் நான்'' என்று அங்கதன் தன்னைப் பற்றி இராவணனிடம் கூறினான்.

செம்மல் என்பது பொதுவாக ஆடவரில் மிகச்சிறந்தவர்களைக் குறிக்கும் என்றாலும் இங்கே புதல்வன் என்ற பொருளிலேயே கையாளப் பட்டிருக்கிறது எனக்கொள்க. இங்கே அவன் எதிரே நின்று கொண்டே இராவணனை ஏதோ ஓர் மூன்றாவது மனிதனைப்போல் அங்கதன் படர்க்கையில் அலட்சியமாக அஞ்சாமல் கூறியிருப்பது சுவைக்கத்தக்கது. ஏளனக் குறிப்பும்கூட. என்றாலும் அவனுடைய தோள்கள் மிக அழகானவை என்பதை 'சுந்தரத்தோள்கள்' என்று குறிப்பிட்டதையும் கருதுக. வாலி இராவணனை வாலால் கட்டி எட்டுத்திசைகளுக்கும் சென்று சிவபூஜை செய்து முடித்ததன் பின்னர், வாலியின் மனைவி தாரையின் வேண்டுகோளின்படி, கட்டை அவிழ்த்து விட்ட செய்தி உத்தரகாண்டம் இராவணன் வாலி வாலால் கட்டுண்ட படலத்தின் மூலமும், வாலி பாற்கடலைக் கடைந்ததும், அமிழ்தம் பெற்றுத் தேவர்க்குத் தந்ததும் வாலி வதைப்படலம் மூலமும் அறியலாம். 'இந்திரன் செம்மல்' என்றதனால் வாலியின் குலப்பெருமையும், இராவணன் தோள்களைப் பிணித்து, மலைகள் தோறும் தாவித் திரிந்தனன் என்பதனால் உடற்பெருமையும், தேவர் அமுதுண்ண பாற்கடலைக் கடைந்து உதவினான் என்பதனால் உளப்பெருமையும், ஒருங்கே உணர்த்திய அங்கதன் சொற்கள் நினைத்து இன்புறத்தக்கவை. 'சிந்துரம்' என்ற சொல் யானை என்ற பொருளையும் தரும். 'சிந்துரத்தின் மருப்பொசித்த செங்கண் மாலே' என்பது வில்லிபாரதம். வாலி பாற்கடலைக் கலக்கிய நிகழ்ச்சி 'வடவரையை மத்தாக்கி, வாசுகியை நாணாக்கி' என்று சிலப்பதிகாரத்திலும் பேசப்

Koviloor Digital Library

படுதல் காணலாம். 'நீ யாவன்?' என்ற இராவணன் கேள்விக்குத் தான் இன்னான் என்று அவன் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட முறை ஒரு நயம்.

25. இராவணன் அங்கதனிடம் கூறுதல்.

"உந்தை என் துணைவன் அன்றே? ஓங்கு அறச்சான்றும் உண்டால்;
நிந்தனை இதன்மேல் உண்டோ, நீ அவன் தூதன் ஆதல்?
தந்தனென் நினக்கு யானே வானரத் தலைமை; தாழா
வந்தனை; நன்று செய்தாய், என்னுடை மைந்த!" என்றான். (7081)

(ஓங்கு-உயர்ந்த; அறம்-அறக்கடவுள்; நிந்தனை-பழி; தாழா-காலம் தாழ்த்தாது; சான்று-சாட்சி; உந்தை-உன்தந்தை)

இராவணன் அங்கதனை நோக்கி, ''அங்கதா! என் புதல்வனே! உன்னுடைய தந்தை வாலி, எனக்கு உற்ற துணைவன் அல்லவா? அதற்கு உயர்ந்த அறக்கடவுளே சாட்சியாக அமைந்தான். உன் தந்தையைக் கொன்ற சாதாரண ஒரு மனிதனுக்குப் போர்வீரன் வாலியின் புதல்வனாகிய நீ ஒரு தூதுவனாக இருக்கலாமா? இதனைவிடப் பழிப்புக்கு இடமாவது வேறு ஏதேனும் உண்டா? நல்ல வேளையில் என்னிடம் காலம் தாழ்த்தாது வந்து சேர்ந்தாய்! நான் இப்போதே உனக்குக் கிட்கிந்தை வானரத் தலைமையைத் தந்து விட்டேன். பெற்றுக்கொள்வாயாக!'' என்கிறான் இராவணன்.

''ஓங்கு நற் சான்று'' என்பது, இராவணனும் வாலியும் நட்புக் கொண்டனர் என்பதை உத்தரகாண்டம், வாலி வரலாற்றுப் படலம் விரிவாகப் பேசுகிறது. உத்தரகாண்டம் வாலி வரலாற்றுப் படலம் இவர்கள் நட்புப் பூண்டவர்கள் என்பதோடு மட்டும் நிறுத்திக்காள்ளாது உடன் பிறந்தவர்களாகவும் குறிப்பிடுகிறது. பாடலைக்கேளுங்கள். ''என்று இலங்கேசன் இயம்பிட வாலி, எழுந்த பேர் உவகையால் இறுகத் தன்திரள்தோளால்தழுவி, ஆ! இன்று நாள்தொடங்கி, என்பிராதாநீ, என்று இலங்கேசனை விடுத்தான்'' என்று பேசுகிறது. பிராதா என்ற வடசொல்லுக்கு உடன் பிறந்தவன் என்பது பொருள். எனவே அவன் அங்கதனை 'என்னுடை மைந்த' என்று அழைத்தான் என்க. 'தந்தனென்' என்பது துணிவால் அமைந்த கால வழுவமைதி எனக்கொள்க. 'என்னுடைய மைந்த' என்பது, வாலியுடன்தான் கொண்டிருந்த நெகிழ்ச்சி மிக்க நட்பினைக் குறித்தது. நண்பனின் மைந்தனைத் தன் மைந்தன் என்று அன்பின் மேலீட்டால் கூறினான் எனக்கொள்க. இங்கே இராவணனின் மதிநுட்பமும் அரசியல் தந்திரமும் வெளிப்படுவதை உணர்க. 'பிரித்தலும், பேணிக்கொளலும், பிரிந்தார்ப் பொருத்தலும் வல்லது அமைச்சு' என்ற குறள்-633, அரசனுக்கும் பொருந்துவதை உணர்க. சாம, பேத, தான, தண்டம் ஆகிய உபாயங்களில், இப்பொழுது இராவணன், கொடுத்தல்

Koviloor Digital Library

இன்சொற் சொல்லுதல், வேறுபடுத்தல் ஆகிய முதல் மூன்று வழிகளையும் ஒரே சமயத்தில் கையாண்டிருக்கிறான் என்பதை உணர்க. உலகில் நிகழும் நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் அறக்கடவுளே சாட்சியாக விளங்குகிறான் என்பது நூற்கொள்கை என்பதறிக. எனினும் அங்கதனை இவ்வாறு நல்ல வார்த்தைகள் கூறி இராவணன் தன் வசப்படுத்த முயன்றதாக வான்மீகம் பேசவில்லை.

26. "தாதையைக் கொன்றான் பின்னே, தலைசுமந்து, இருகை நாற்றி,
பேதையன் என்ன வாழ்ந்தாய் என்பது ஓர் பிழையும் தீர்ந்தாய்;
சீதையைப் பெற்றேன்; உன்னைச் சிறுவனுமாகப் பெற்றேன்;
ஏது எனக்கு அரியது? என்றான்-இறுதியின் எல்லை கண்டான். (7082)

(தாதை-தந்தை; நாற்றுதல்-தொங்கவிடுதல்; பேதை-அறிவற்றவன்; சிறுவன்-புதல்வன்; இறுதி-மரணம்/அழிவு; பிழை-பழி)

மரணத்தின் எல்லையில் நின்று கொண்டிருப்பவனாகிய இராவணன், அங்கதனை நோக்கி, "உன்னுடைய தந்தை வாலியைக் கொன்றவனான இந்த மானிடன் இராமபிரான் பின்னாலேயே சென்று கொண்டு, உன்னுடைய தலைகவிழ்ந்து, உன் உடலை வீணாகச் சுமந்து கொண்டு, இரண்டு கைகளையும் தலைமேல் தூக்கிக் குவித்துக்கொண்டு, அவனை வணங்கிக் கொண்டே இருப்பதால், உலகத்தார் உன்னை மானமற்றவன், அறிவிலி என்று பழித்தும் இழித்தும் பேசும் படியாக வாழ்ந்து கொண்டிருக்கிறாய். இப்பொழுது என்னை வந்தடைந்ததனால் அந்தப் பழிச் சொற்களினின்றும் நீங்கியவன் ஆகிறாய். நீ என்னை வந்தடைந்த தனால் நான் சீதையைப் பெற்றவனாகவும் ஆகிறேன். உன்னை என்னுடைய புதல்வனாகப் பெற்றவனாகவும் ஆகிறேன். எனவே இனிமேல் செய்வதற்கு அரிய செயல் வேறு என்ன இருக்கிறது?" என்கிறான் இராவணன்.

"தலைசுமந்து இருகை நாற்றி" என்பது அங்கதன் இராமபிரான் பின்னே தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு, இருகைகளையும் உயரே தூக்கிக் குவித்து அவனை வணங்கிக் கொண்டும் இருக்கிறான் என்று இராவணன் தவறாகக் கருதுகிறான் என்பதாம். இராமபிரான் அங்கதனை நன்முறையில் பாராட்டி வளர்க்கிறான் என்பதைக் கற்போர் நன்கு உணரலாம். எனினும் இராவணன் தன் தந்திரச் சொற்களால் அங்கதனை இராமபிரானிடமிருந்து பிரிக்க வேண்டும் என்ற எண்ணத்தால் இவ்வாறு கூறுகிறான் எனக்கொள்க. 'இறுதியின் எல்லை கண்டான்' என்பதும் ஓர் அருமையான சொற்றொடர். இராவணனுக்கு அழிவுகாலம் இராமபிரான் உருவில் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பது பொருள். 'தீர்ந்தாய்' என்பதும் 'பெற்றேன்' என்பதும் துணிவு பற்றி வந்த காலவழுவமைதி எனக்கொள்க. 'ஒட்டார் பின் சென்று ஒருவன் வாழ்தலின், அந்நிலையே கெட்டான் எனப்படுதல் நன்று' என்பதும் 'மருந்தோ, மற்று ஊன் ஓம்பும் வாழ்க்கை, பெருந்தகைமை பீடழிய வந்த இடத்து' என்ற குறள்-967, 968

Koviloor Digital Library

இங்கு ஒப்பு நோக்கத்தகும். 'பேதையன், அறிவிலி' என்பது, கேடு தருவன வற்றை மேற்கொள்ளுவதும், ஆக்கம் தருவனவற்றை விட்டொழித்தலும் ஆகிய இக்குற்றங்களைக் கொண்டவன் பேதையன், அறிவிலி எனப் படுகிறான் எனவும் கொள்க.

27. "அந்நரர் இன்று, நாளை, அழிவதற்கு ஐயம் இல்லை;
உன் அரசு உனக்குத் தந்தேன்; ஆளுதி, ஊழிகாலம்;
பொன் அரி சுமந்த பீடத்து, இமையவர் போற்றி செய்ய,
மன்னவன் ஆக, யானே சூட்டுவென், மகுடம்" என்றான். (7083)

(நரர்-மானிடர்கள்; ஐயம்-சந்தேகம்; அரி-சிங்கம்; பீடம்-அரசுக் கட்டில்; இமையவர்-தேவர்கள்; மகுடம்-முடி)

இராவணன் அங்கதனை நோக்கி, "அந்த மானிடர்கள் என்று சொல்லப் படுபவர்களாகிய இராமஇலக்குவர், இன்றோ அல்லது நாளையோ அழிந்து ஒழிவர். இதில் ஏதும் சந்தேகம் இல்லை; உனக்கு முறைப்படி சேரவேண்டிய கிட்கிந்தை அரசாட்சியை உனக்குத் தருகிறேன். ஊழி முடிவுக்காலம் வரையிலும் நீயே ஆள்வாயாக! அழகிய பொன்னா லமைந்த சிங்கம் சுமக்கின்ற அரசுக்கட்டிலில் அமர்ந்து, இமையா நாட்டமுடைய தேவர்களெல்லாம் உன்னைப் போற்றித்துதிக்க, அரசனாக ஆள்வாயாக! நானே உனக்கு முடி சூட்டி வைக்கிறேன்" என்கிறான் இராவணன்.

மனிதர்களை இராவணன் ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை என்பதை 'அந் நரர்' என்ற சொல்லால் கவிஞன் குறிப்பதைக் கருதுக. தன் மேலும் தன் போராற்றல்மீதும் கொண்ட அசைக்க முடியாத தன்னம்பிக்கையால் 'அந்நரர் இன்று நாளை அழிவதற்கு ஐயம் இல்லை' என்று உறுதியாகக் கூறுகிறான் என்க. 'உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை" என்று பாரதி கூறியது போல, நடக்கப் போகின்ற ஒன்று பற்றிய துணிவும், தெளிவும் வெளிப்படுதல் காண்க. 'உன்அரசு' என்பது அங்கதன் தன் தந்தையாகிய வாலி இறந்தபின், பிறப்புரிமையால் அவ்வரசுக்கு உரியவன் ஒரே மூத்த மைந்தனான அங்கதனைத்தானே அடைய வேண்டும்? வாலியின் தம்பி சுக்கிரீவனுக்குத் தவறாகச் சென்றடைந்த அரசு, என்பதனால் 'உன்அரசு' என்றார் என்க. 'பொன் அரி சுமந்த பீடம்' என்பது பொற்சிங்காதனம் எனப் பொருள்படும். 'இமையவர் போற்றி செய்ய' என்பது, என்னைப் போற்றித் துதிக்கும் தேவர்களை, குரக்கினத் தரசனாகிய உன்னையும் போற்றித்துதிக்கும்படி செய்கிறேன் என்பதைக் குறிக்கும். 'தந்தேன்' என்பது துணிவு பற்றி வந்த காலவழுவமைதி. 'ஊழிக்காலம்' என்பது ஊழி இறுதிக்காலம் என்றும் பொருள் தந்து நீண்ட வெகுகாலத்தைக் குறிக்கும் என்க. 'இன்று, நாளை' என்பது விரைவும் துணிவும் குறித்து நின்றது.

Koviloor Digital Library

28. அங்கதன் மறுமொழி கூறுதல்

அங்கதன் அதனைக் கேளா, அங்கையோடு அங்கை தாக்கி,
துங்க வன்தோளும் மார்பும், இலங்கையும் துளங்க, நக்கான்;
'இங்கு நின்றார்கட்கெல்லாம் இறுதியே' என்பது உன்னி,
உங்கள்பால் நின்றும் எம்பால் போந்தனன் உம்பி'' என்றான். (7084)

(அங்கை-உள்ளங்கை/அழகியகை; தாக்கி-புடைத்து; துங்கம்-உயர்ச்சி; வன்-வலிமை; துளங்குதல்-குலுங்குதல்/நடுக்கமுறுதல்; நிற்றல் -நிலைத்து நிற்றல்; இறுதி-மரணம்; உன்னி-உணர்ந்து; உம்பி-உன்தம்பி/ வீடணன்; கேளா-கேட்டு)

இவ்வாறு இராவணன் கூறியதைக் கேட்ட அங்கதன், ஏளனமாகத் தன் அழகிய கைகளை ஒன்றோடு ஒன்று சேர்த்து அடித்து, ஆர்ப்பரித்து உயர்ந்த தன் தோள்களும், மார்பும், இவ்விலங்கை மாநகரமும் குலுங்கும்படி வெடிபடச் சிரித்தான்; ''இவ்விலங்கை மாநகரில் நிலையாக இருந்து வசித்துக் கொண்டிருக்கும் அரக்கர்களுக்கெல்லாம் அழிவு காலம் நெருங்கிவிட்டது உறுதி என்பதை முன்னரே உய்த்து உணர்ந்துதான் உன் தம்பியாகிய வீடணன், இவ்விலங்கை மாநகரினின்றும் நீங்கி, எங்கள் பக்கம் வந்து சேர்ந்துள்ளான்'' என்று கூறுகிறான்.

இவன் தன் கைகள் ஒன்றோடொன்று தாக்கிக் கொண்டதால் அவனுடைய உயர்ந்த தோள்களும் மார்பும் அசைந்தது சரி; 'இலங்கையும் துளங்க' என்கிறானே? இவன் தாள்களும் மார்பும் குலுங்கச் சிரித்ததனால் இலங்கை மாநகரமே நடுங்கியது என்பது பொருள்.

29. ''வாய்தரத் தக்க சொல்லி, என்னை உன்வசம் செய்வாயேல்,.
ஆய்தரத் தக்கதன்றோ, தூது வந்து அரசது ஆள்கை?
நீ தரக் கொள்வென் யானே? இதற்கு இனி நிகர் வேறு எண்ணின்,
நாய் தரக் கொள்ளும் சீயம், நல் அரசு!'' என்று நக்கான். (7085)

(தருதல்-எளிதில் பயிலுதல்; ஆள்கை-ஆளுதல்; ஆய்தரல்–ஆராய்தல்; நிகர்-உவமை)

அங்கதன் இராவணனை நோக்கி, ''நீ வாய்க்கு வந்தவாறெல்லாம் பேசி என்னை வஞ்சனையால் உன் வயப்படுத்தலாம் என்று கருதுவாயானால், அது நடவாது. ஓர் அரசனின் தூதுவனாக இன்னொரு அரசனிடம் வந்தவன், அவ்வேற்றரசனது வார்த்தைகளுக்கு மயங்கி, அவன் தரும் அரசபதவியை ஏற்றுக்கொண்டு, அரசாள்வது என்பது கற்றறிந்த அறிஞர்களால் வன்மையாகக் கண்டிக்கப்பட்டிருக்கிறது அல்லவா? நீ தருகின்ற அத்தகைய அரசுப் பொறுப்பை நான் பெற்றுக் கொள்வதற்கு ஒப்புக் கூறவேண்டும் என்ற சிந்தித்தால், அற்பமான இழிந்த ஒரு நாயானது, காட்டரசனாகிய ஆற்றல்மிக்க சிங்கத்திற்கு ஒரு நல்ல

Koviloor Digital Library

அரசாட்சியைத் தந்தால் அதை ஏற்றுக்கொள்ளும் சிங்கத்திற்கு ஒப்பாகும்'' என்று கூறி, இகழ்ந்து சிரிக்கலானான் அங்கதன்.

'வாய்தரத்தக்க சொல்லி' என்பது, முன்பும் இராமபிரானுக்கு அரசுரிமை இல்லை என்பதை அறிந்த இலக்குவனைச் சமாதானம் செய்ய முயன்றபோது, ''வாய் தந்தன கூறுதியோ, மறை தந்த நாவால்'' *(1830)* என்று இராமபிரான் கூறுவதும், 'சிங்கக் குருளைக்கு இடு தீஞ்சுவை ஊனை, நாயின் வெங்கண் சிறு குட்டனை ஊட்ட விரும்பினாள்'' *(1812)* என்று இலக்குவன் கூறுவதும் நினைவு கூர்தல் தகும். 'வாய்தரத்தக்க சொல்' என்பது வஞ்சனையுடையோர் வாயில் எளிதில் பயிலத்தக்க வெற்றுரை என்ற விரிந்த பொருளைத்தரும். ''நாய்தரச் சிங்கம் நல்லரசு கொள்ளுதல்'' என்பது எவ்வாறு நிகழாதோ, அதுபோல, நீ தர, நான் அரசு கொள்வது என்பதும் நிகழாது; என்பது கருத்து.

30. இராவணன் வந்த காரணம் வினவுதல்.

'அடுவெனே' என்னப் பொங்கி ஓங்கிய அரக்கன், 'அந்தோ!
தொடுவெனே குரங்கைச் சீறிச் சுடர்ப்படை?'' என்று, தோன்றா
நடுவனே செய்யத்தக்க நாள் உலந்தார்க்குத் தூத!
படுவதே துணிந்தாய் ஆகில், வந்தது பகர்தி'' என்றான். (7086)

(அடுதல்-கொன்று ஒழித்தல்; ஓங்கிய-பொங்கிஎழுந்த; அந்தோ-ஐயோ; சுடர்-ஒளி; தொடுதல்-தீண்டுதல்; நடுவன்-நடுவு நிலை தவறாத கூற்றுவன்; நாள்-வாழ்நாள்/ஆயுள்; உலத்தல்-முடிவுறுதல்/இறத்தல்; படுதல்-இறந்து ஒழிதல்; துணிதல்-முடிவுசெய்தல்)

அதனைக் கேட்ட இராவணன் ''என்னை மதிக்காத இவனைக் கொன்றே தீரவேண்டும் என்று கருதி, வெகுண்டு சினம் பொங்கிஎழ, பின்னர் ''ஐயோ! இந்த அற்பமான குரங்கைச் சீறிக் கொல்லுவதற்கு, என்னுடைய சிறந்த ஒளிமிகுந்த வாட்படையை என் கைகளால் தொட்டு இவனைக் கொல்லுதல் வேண்டுமோ? அது எனக்கு இழுக்காகும் அல்லவா? என்று ஒரு கணம் யோசித்து, அதனைத் தவிர்த்து, இவனையும் இவனுடன் வந்திருக்கும் இராமஇலக்குவரையும், நடுவுநிலைமை தவறாதவனும், கட்புலனுக்குத் தோன்றாதவனுமான கூற்றுவனே கொன்று கொள்ளட்டும் என்று எண்ணி, அங்கதனை நோக்கி, ''விரைவில் அழியப்போகின்ற இராமஇலக்குவர்க்குத் தூதனாக வந்திருப்பவனே! நீ இறந்து ஒழிவதே சரி என்று முடிவுசெய்து விட்டாய் என்றால் நீ வந்த காரியத்தைப் பற்றிக் கூறுவாயாக!'' என்கிறான் இராவணன்.

'அடுவெனே' என்பதில் ஏகாரம் நிச்சயம் கொன்றே தீருவேன் என்று தேற்றப் பொருளில் வந்தது. 'அந்தோ' என்பது இரக்கக்குறிப்பு; 'நடுவன்' என்பது இன்னார் இனியர் என்று பாராது, வாழ்நாள் முடியும் வரை காத்திருந்து, உடலையும் உயிரையும் கூறுகூறாகப் பிரிப்பவன் என்று

Koviloor Digital Library

இயமனுக்குக் காரணப்பெயர். அங்கதன் தூதாக வந்திருக்கிறான் என்பது இராவணனுக்குத் தெரியும். தூதரைக் கொல்லக்கூடாது என்பதையும் வீடணன்மூலம் அறிந்தவன் இராவணன். எனவேதான் தன் கையினால் வாட்படையைத் தொட்டு இவனைக் கொல்ல வேண்டாம். கட்புலனுக்குத் தெரியாத, நடுவுநிலைமை தவறாத இயமனே இவன் உயிரைக் கவர்ந்து செல்லட்டும் என்று அவனைக் கொல்லாது விட்டான் என்பதாம்.

பொதுவாக இறைவனைத் 'தோன்றாத் துணைவன்' என்று திருமுறைகள் கூறும். இங்கே கம்பன் இயமனைத் 'தோன்றா நடுவன்' என்று கூறியிருப்பது உணர்ந்து சுவைக்கத்தக்கது. இயமனுக்கு 'எமதர்ம ராஜன்' என்றும் ஒரு காரணப்பெயர் உண்டு. காரணம் அவன் ஒரு காரணமும் இன்றி உயிரைக் கவரமாட்டான்; காலமுடிவு வந்தாலன்றி அதற்கு முன்னதாக உயிரைப் பறிக்கமாட்டான்; எனவே இவன் அறத்திற்குக் கட்டுப்பட்டவன் என்று எமதர்மராஜன் என்பர். 'காலனும் காலம் பார்க்கும்' என்பது புறநானூறு; எல்லோரையும் சமமாகப் பாவிப்பான் என்பதால் இவனுக்குச் 'சமன்' என்பதும் காரணப்பெயர் என்பதறிக. 'தொடுவனே' என்ற இடத்து ஏகாரம் எதிர்மறைப்பொருளது. தொடமாட்டேன் என்ற பொருளைத்தரும்.

31. அங்கதன் தூது உரைத்தல் [7 பாடல்கள்]

"கூவி, இன்று என்னை, நீ போய் 'தன்குலம் முழுதும் கொல்லும்
பாவியை, அமருக்கு அஞ்சி, அரண்புக்குப் பதுங்கினானை,
தேவியை விடுக! அன்றேல், செருக்களத்து எதிர்ந்து, தன்கண்
ஆவியை விடுக!" என்றான், அருள் இனம் விடுகிலாதான்" (7087)

(இனம்-இன்னும்; விடுகிலாதான்-நீங்காதவன்; கூவி-அழைத்து; பாவி-கொடியோன்; செருக்களம்-போர்க்களம்; தன்கண்-தனது; ஆவி-உயிர்; அரண்-கோட்டை)

அங்கதன் இராவணனை நோக்கி, "நீ இராமபிரானுக்கு எல்லா வகையிலும் பெருந்துன்பம் தந்திருந்தாலும், உன்மீது அவன் இன்னும் கருணை நீங்காத அருளாளனாகவே இருக்கிறான். அவன் இன்று என்னை அழைத்து, 'நீ போய், தன் அரக்கர் குலம் முழுவதையும் வேரோடு அழிக்க எண்ணியிருக்கும் கொடியோனும், என்னுடன் போர் செய்வதற்குப் பயந்து கொண்டு பாதுகாப்பான தன்னுடைய அரண்மனைக் கோட்டைக்குள் போய்ப் புகுந்து ஒளிந்து கொண்டிருப்பவனுமாகிய இராவணனைப் பார்த்து, 'நீ சிறையிலடைத்து வைத்திருக்கும் சீதாதேவியை உடனே விட்டுவிடுக. அதற்கு விருப்பமில்லையென்றால், இராமபிரானுடன் போர்க்களத்தில் எதிர்நின்று போரிட்டு உனது உயிரை விட்டு விடுக' என்று கூறுவாயாக! என்று கூறினான்'' என்று அங்கதன் இராவணனிடம் கூறினான்.

Koviloor Digital Library

'தன் குலம் முழுதும் கொல்லும் பாவி' என்று இங்கு இராமபிரான் இராவணனைக் குறிக்கிறான். முதன்முதலில் ஆரண்யகாண்டத்தில் சூர்ப்பணகையை அறிமுகப்படுத்தும்போது கவிஞன் ''நீலமாமணி முடி நிருதர் வேந்தனை, மூலநாசம் பெற முடிக்கும் மொய்ம்பினாள்'' என்று கூறியதையும் இங்கு நினைவுகூர்க. இராமபிரான் அங்கதனிடம் கூறிய தூதுமொழிகளை இங்கே அங்கதன் இராவணனிடம் தொகுத்துக் கூறுகிறான் எனக்கொள்க.

32. ''பருந்து உணப் பாட்டி யாக்கை படுத்த நாள், படைஞரோடும்
மருந்தினும் இனிய மாமன் மடிந்த நாள், வனத்துள் வைகி
இருந்துழி, வந்த நங்கை இருஞ்செவி முலையும் மூக்கும்
அரிந்துழி வந்திலாதான், இனிச் செய்யும் ஆண்மை உண்டோ?'' (7088)

(பாட்டி-தாடகை; யாக்கை-உடம்பு; படுத்தல்-கொன்று வீழ்த்துதல்; மாமன்-சுபாகு; படைஞர்-படைவீரர்கள்; மடிந்த-இறந்த; வனம்-காடு/ பஞ்சவடி; வைகுதல்-தங்கியிருத்தல்; நங்கை-தங்கை/சூர்ப்பணகை; மருந்து-அமிழ்தம்; இரும்-பெரிய)

''நான் முதன்முதலில் இராவணனின் தாய்வழிப் பாட்டியாகிய தாடகையைக் கொன்று அவள் உடலைப் பருந்துகள் தின்ற அந்த நாளிலும், பின்பு விசுவாமித்திரர் இயற்றிய யாகத்தைக் கெடுக்க வந்த இராவணனது அமிழ்தம் போன்ற அன்பு பாராட்டக்கூடியவனான அவனது தாய் மாமனாகிய சுபாகுவும், அவனது படைவீரர்களும், என்னால் கொன்று குவிக்கப்பட்ட அந்தநாளிலும், அதன் பின்பு நாங்கள் காட்டில் பஞ்ச வடியில் தங்கி இருந்த காலத்தில், எங்கள் மேல் காமுற்று வந்த அவனுடைய தங்கையாகிய சூர்ப்பணகையின் பெரிய காதுகளையும், விரும்பத்தக்க மார்பகங்களையும், மூக்கையும் என் தம்பியாகிய இலக்குவன் வெட்டி வீழ்த்திய அந்த நாளிலும், எமக்கு அஞ்சி எம்மை எதிர்த்துப் போர் செய்ய வாராத இராவணன், இவ்வளவு நாட்களுக்குப் பின்னர் இப்போது என்ன வீரச்செயலைச் செய்து தனது ஆண்மைத் திறத்தைக் காட்டப் போகிறான்?'' என்று இராவணனை இகழ்ந்து கூறினான்.

இது இராமபிரான் கூற்று. இதை அப்படியே இராவணனிடம் கூறுகிறான் தூதுவனாகிய அங்கதன் என்பதை முதலில் புரிந்து கொள்ளவேண்டும். பாட்டி இறந்தபோதும், மாமன் மடிந்தபோதும், தங்கை உறுப்பிழந்தபோதும், போருக்கு வாராதவன் இப்போது வந்து விடப் போகிறானா? என்று இராவணனின் போர்த்திறமையை இகழ்ந்து கூறியனுப்பியிருக்கிறான் இராமபிரான் என்பதை உணர்க. தாய்மாமனுக்கு எப்போதுமே ஒரு தனி உரிமையும், மதிப்பும், உற்றார் உறவினரிடத்து இருப்பதை இன்றும் காணலாம். எனவே தான் கவிஞன் ''மருந்தினும் இனிய மாமன்'' என்கிறான் என்க. துயர்க்காலத்தில் மருந்து போன்று வந்து

Koviloor Digital Library

தாயுடன் பிறந்த மாமன் உதவுவது இந்நாட்டுப் பண்பு என்பதையும் உணர்க. 'அன்புடைய மாமனும் மாமியும்' என்பது திருஞானசம்பந்தர் தேவாரம். 'கண்போன்ற மாமன்' என்பது சீவகசிந்தாமணி.

33. "கிளையொடும், படைஞரோடும், கேடு இலா உயிர்கட்கு எல்லாம்,
களைஎன, தம்பிமாரை வேரோடும் களையக் கண்டும்,
இளையவன் பிரிய மாயம் இயற்றி, ஆயிழையை வௌவும்
வளை எயிற்று அரக்கன், வெம்போர்க்கு, இனி எதிர்வருவது உண்டோ?"
(7089)

(கேடு-அழிவு; கிளை-சுற்றத்தார்; படைஞர்-படைவீரர்கள்; கண்டும்-அறிந்திருந்தும்; இளையவன்-தம்பி/இலக்குவன்; மாயம்-வஞ்சனை; ஆய்-ஆராய்ந்து தெரிந்தெடுக்கப்பட்ட; இழை-அணிகலன்கள்; வௌவி-வவ்வி/கவர்ந்து; வளை-வளைந்த; எயிறு-பற்கள்; வெம்-கொடிய; களை-புல்பூண்டுகள்)

"அழிவற்றதும் நிலைபெற்றதுமான உயிரினங்களை எல்லாம் அழிப்பதற்கு, இவர்கள் களையைப் போன்றவர் ஆவர். இடையூறு செய்பவர் என்று கருதி, இராவணனுடைய தம்பிகளாகிய கரன், தூடணன், திரிசிரசு முதலியோரை அவர்களது சுற்றத்தாரோடும், படைவீரர் களோடும், ஒருவரும் எஞ்சாது நான் கொன்று அடியோடு அழித்தபோது, அச்செய்தியை அறிந்திருந்தும், என்னுடன் நேர் எதிரில் வந்து கொடிய போர் புரிவதற்கு இதுநாள்வரை வாராத வளைந்த பற்களையுடைய அரக்கன் இராவணன், என்னுடைய தம்பி இலக்குவனையும், என்னையும் சீதாதேவியை விட்டுப் பிரியும்படி செய்து நானும் இலக்குவனும் இல்லாத சமயத்தில் வஞ்சகமாக மாயமானை அனுப்பி, என்னுடைய இன்னுயிரான வளும் ஆராய்ந்து தெரிந்தெடுக்கப்பட்ட அணிகலன்களை அணிந்தவளு மான சீதாதேவியைக் கவர்ந்து கொண்டு சென்றவனுமான அரக்கன் இராவணன், இனிமேல் என்னை எதிர்த்துக் கொடிய போர் செய்ய வருவதற்கு வாய்ப்பு உண்டோ?" என்று இராவணனைக் கேட்கச் சொல்லுகிறான் இராமபிரான்.

இதுவும் இராமபிரான் கூற்றே. இதை அப்படியே தூதுவனாகிய அங்கதன் இராவணனிடம் கேட்கிறான் எனக்கொள்க. 'கேடிலா உயிர்' என்பது அழிதல் இல்லாத உயிர் எனப்படும். நாம் இறந்து போனார் என்கிறோமே, அதில் ஒருவனுடைய உடல்தான் செயலற்று அழிந்து இறந்து போகிறது. உடல் நிலையற்றது, அழியும் தன்மை உடையது. உயிர் நிலைபெற்றது, அழியாத் தன்மை உடையது. எனவே தான் அதனை 'மன்னுயிர்' என்பர் கவிஞர். களை என்பது நெற்பயிருக்கு இடையே அது வளர்வதற்கு இடையூறாக முளைத்திருக்கும் புல்பூண்டுகளைக் குறிக்கும். அவை களையப்பட வேண்டியவை. ஆதலால் களை எனப்பட்டது என்க.

Koviloor Digital Library

கரன், தூடணன், திரிசிரசு ஆகிய மூவரும் இராவணனுக்குத் தம்பி முறையினர்.

34. "ஏந்திழை தன்னைக் கண்ணுற்று, எதிர்ந்தவர் தம்மை எற்றி,
சாந்து எனப் புதல்வன் தன்னைத் தரையிடைத் தேய்த்து, தன் ஊர்
காந்து எரி மடுத்து, தானும் காணவே, கடலைத் தாவிப்
போந்தபின், வந்திலாதான் இனிப் பொரும் போரும் உண்டோ?" (7090)

(ஏந்திழை-உயர்ந்த அணிகலன்கள் அணிந்த சீதாதேவி; எற்றி-தாக்கி; புதல்வன்-அக்ககுமாரன்; தேய்த்து-அரைத்து; காந்து-கொழுந்து விட்டு எரியும்; மடுத்தல்-இரையாக்குதல்; கண்ணுற்று-கண்டு/பார்த்து)

''என்னால் இலங்கைக்கு அனுப்பப்பட்ட அனுமன், சீதாதேவியை நேரில் பார்த்து, அப்போது அவனை எதிர்த்த அரக்கவீரர்கள் அனைவரையும் எதிர்த்துத் தாக்கிக் கொன்று அழித்து, இராவணனுடைய புதல்வனான அக்ககுமாரனையும் பூமியில் சந்தனம் போலக் குழையும்படி தேய்த்து அரைத்து, பின்னர் இராவணனுடைய ஊரான இலங்கை மாநகரையும் தீக்கு இரையாக்கி, இவ்வளவு செய்த பின்னரும், அவன் கண் முன்னாலேயே கடலைத்தாண்டி வந்த பின்னும் அவனைத் தொடர்ந்து போருக்கு வாராத இராவணன், இனிமேல் போர்செய்ய முற்பட்டு வருவதற்கு ஏதேனும் வாய்ப்பு உண்டோ?'' என்கிறான் இராமபிரான்.

இதுவும் இராமபிரான் கூற்றே. இதை அப்படியே அங்கதன் இராவணனிடம் எடுத்துரைக்கிறான் என்பதாம். அனுமன் இலங்கையில் செய்த செயல்களையெல்லாம் அவன் பெயரைக் குறிப்பிடாது, இராமபிரானைக் கூறவைத்த கவிஞனின் திறம் நோக்குக. காலும் கதிரும் புகமுடியாத இலங்கைக்குள் புகுந்தது; அங்கே அரும்பாடுபட்டுச் சீதாதேவியைக் கண்டது; பொழிலை அழித்தது; அப்போது தன்னை எதிர்த்துவந்த கிங்கரர்கள், சம்புமாலி, பஞ்சசேனாபதிகள் ஆகியோரை அழித்தது, அக்ககுமாரனைத் தரையில் இட்டுச் சாந்து போல் தேய்த்து அரைத்தது; இலங்கை மாநகருக்கு எரியூட்டியது இவ்வளவு வீரச்செயல்கள் செய்த பின்னும் தான் தன் கண்களால் பார்த்திருக்கும் போதே கடலைத்தாண்டி மீண்டு வந்து சேர்ந்தது, இவ்வளவு அழிவு செய்தபோதும், அவனைத் தொடர்ந்து வந்து எங்களுடன் போர்செய்ய முற்படாத இலங்கேஸ்வரன் இனிமேல், இவ்வளவு நாள் கழித்துப் போர் புரிவதற்காக வருவான் என்பதற்கு இடம் உண்டோ?'' என்று கேட்கச் சொல்லுகிறான் இராமபிரான் என்பதாம். இவ்வளவு அழிவுகளையும் நேரிற்கண்ட நிலையிலும் எங்களை எதிர்த்துப் போர்செய்ய வாராதவன், இனியும் எதிர்த்துப் போர்செய்ய வருவான் என எதிர்பார்த்தற்கு இடமில்லை என்பதாம்.

Koviloor Digital Library

35. "உடைக்குலத்து ஒற்றர் தம்பால் உயிர் கொடுத்து உள்ளக் கள்ளம்
துடைத்துழி, வருணன் வந்து தொழுதுழி, தொழாத கொற்றக்
குடைத்தொழில் உம்பி கொள்ளக் கொடுத்துழி, வேலைகோலி
அடைத்துழி, வந்திலாதான், இனிவர ஐயம் உண்டோ?" (7091)

(கொற்றம்-வெற்றி; குடைத்தொழில்-காத்தல்தொழில்; உழி-பொழுது/சமயம்; கள்ளம்-வஞ்சனை; துடைத்தல்-போக்குதல்)

''தன்னைப் பிறர் தொழத்தக்க நிலையேயன்றி, தான் பிறரைத் தொழ வேண்டாத வெற்றியைக் கொண்டுள்ள வெண் கொற்றக்குடையின் கீழ் நிழல் பரப்பும் தொழிலாகிய இலங்கை உரிமையை உன்னுடைய தம்பியாகிய வீடணனுக்கு அருளோடு கொடுத்த போதும், கடலின் கரையில் வந்து இராமபிரான் ஏழுநாள் தவமிருந்தும் வாராது போன வருணன், இராமபிரான் அம்பெய்து கடலை வற்றச் செய்தபோது, ஓடிவந்து சரணடைந்து அவனைத் தொழுதபோதும், அவனுடைய இசைவு பெற்றுப் பின்னர் கடலை அடைத்து அணைகட்டி இலங்கையின் இக்கரையை அடைந்தபோதும், அங்கே வந்த அரக்கர் குலத்து ஒற்றர் களாகிய சுக, சாரணர்கள் மீது கருணைகாட்டி, அவர்களைக் கொல்லாது, அவர்களுக்கு உயிர்ப்பிச்சையளித்து அவர்களின் வஞ்சகமான எண்ணத்தைப் போக்கியபோதும், எங்களை எதிர்த்துவாராத இராவணன், இனிமேல் வருவான் என்பதற்குச் சந்தேகம் உண்டோ? வரமாட்டான்'' என்று கூறியனுப்புகிறான் இராமபிரான்.

செய்யுள் ஆதலால் நிகழ்ச்சிகள் முன்பின்னாகத் தரப்பட்டிருக்கின்றன. இங்கே உள்ள ஒவ்வொரு அடியிலும், ஒவ்வொரு படலங்களைச் சுருக்கமாகப் பாடியிருக்கிறான் கவிஞன். எனவே இப்படலப் பொருள்களின் சுருக்கம் இந்தப் பாடல் என்றே கூறலாம். ''தொழாத கொற்றக் குடைத்தொழில் உம்பி கொள்ளக் கொடுத்தது'' - வீடணன் அடைக்கலப் படலம்; 'வருணன் வந்து தொழுதது'' - வருணனை வழி வேண்டு படலம்; ''வேலைகோலி அடைத்தது'' - சேது பந்தனப்படலம்; 'உடைக்குலத்து ஒற்றர் தம்பால் உயிர் கொடுத்து உள்ளக் கள்ளம் துடைத்தது - ஒற்றுக் கேள்விப்படலம்; 'உண்டோ' என்பதில் ஓகாரம் எதிர்மறைப்பொருளது. வரமாட்டான் என்ற பொருளைத்தரும். இதுவும் இராமபிரான் கூற்று. இதனை அப்படியே அங்கதன் இராவணனிடம் தெரிவித்தான் என்பதாம்.

36. மறிப்புண்ட தேவர்காண, மணிவரைத் தோளின் வைகும்
நெறிப் புண்டரீகம் அன்ன முகத்தியர் முன்னே, நென்னல்,
பொறிப் புண்டரீகம் போலும் ஒருவனால், புணைந்த மௌலி
பறிப்புண்டும், வந்திலாதான், இனிப்பொரும் பான்மை உண்டோ?"
(7092)

Koviloor Digital Library

(மறிப்புறுதல்-ஆற்றல் அடங்குதல்; மணி-நீலமணி; வரை-மலை; வைகும்-பொருந்தும்; புண்டரீகம்-தாமரைமலர்; முகத்தியர்-முகங்களை யுடைய மகளிர்; பொறி-புள்ளிகள்; புண்டரீகம்-புலி; ஒருவன்-ஒப்பற்ற வீரன்/சுக்கிரீவன்; நென்னல்-நெருநல்/நேற்று; புனைந்த-அணிந்திருந்த; மௌலி-முடிமணி; பான்மை-தன்மை; நெறிப்புண்ணுதல்-கட்டுவிட்டு மலர்தல்; மறித்தல்-மடங்குதல்; மறிப்புண்டல்-சிறைப்படுத்தப்படுதல்)

''தன்னால் அடக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுத் தனக்குக் குற்றேவல் செய்யும் தேவர்கள் அனைவரும் கண்டு கொண்டிருக்கவும், அழகிய நீலமணி போலும் நிறமுடைய மலையினைப் போன்ற தன் தோள்களில் தழுவியிருக்கும் நெறித்தலைக் கொண்டு விளங்கும் அழகிய தாமரைமலர் போன்ற முகங்களையுடைய தேவமகளிர் கண்டுகொண்டு இருக்கவும் நேற்றையதினம், வரிகளையுடைய புலியைப் போலும் ஆற்றல்கொண்ட ஒப்பற்றவனாகிய சுக்கிரீவனால், இராவணன் தன் மகுடங்களில் அணிந்திருந்த மணிகள் அனைத்தும் பறிக்கப்பட்ட வேளையிலும், அவனை எதிர்த்துப் போர்செய்யப் புறப்பட்டு வாராத இராவணன், இனிமேலும் போர்புரியும் தன்மை உடையவனாக இருப் பானோ? இருக்கமாட்டான்'' என்று கூறியனுப்புகிறான் இராமபிரான்.

இதுவும் இராமபிரான் கூற்றே. அதை அப்படியே அங்கதன் இராவணனிடம் கூறுகிறான் என்க. 'மறிப்புறுதல்' என்பது சிறையில் மடக்கி, அடக்கி வைக்கப்பட்டிருப்பதைக் குறிக்கும். மறிகடல் என்பது மடங்கும் இயல்புடைய அலைகளை உடைய கடல் என்பது போல எனக்கொள்க. தன்னால் அடக்கி வைக்கப்பட்டிருக்கும் தேவர்கள் முன்னிலையிலும், தேவமகளிர் முன்னிலையிலும் இவ்வாறு அவமானப் பட நேர்ந்ததால், அவன் மனம் கொதித்து உடனே போர் செய்யப் புறப்பட்டு வந்திருக்க வேண்டும், ஆனால் அவ்வாறு வரவில்லை. எனவே அவன் பகைவர்களை எதிர்த்துப் போர்செய்யும் தன்மையையே, ஆற்றலையே இழந்து விட்டானோ? என்று இகழ்கிறான் இராமபிரான் என்பதாம். இது 'வயப்புலியை வால் உருவி விடுவது' போன்ற செயல் எனக்கொள்க. இப்பொழுது இதுவே 'கொம்பு சீவி விடுதல்' என்று வழங்கப்படுகிறது என்பதையும் நினைவுகூர்தல் தகும். 'புண்டரீகம்' என்னும் சொல் தாமரைமலர், புலி என்ற இருபொருளிலும் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. சிவபெருமான் புலித்தோலை அரைக்கசைத்தவன் என்பதை 'புண்டரீகத்து உரியான்' என்கிறது இரகுவம்சம். 'மணி' இராவணனுடைய தோள்களின் நிறத்திற்கும், மலை அவன் வடிவின் உயர்ந்த தோற்றத்திற்கும் உவமைகள்.

Koviloor Digital Library

37. அங்கதன் தன் கூற்றாகக் கூறுவது

"என்று இவை இயம்பி வா" என்று ஏவினன் என்னை; எண்ணி
ஒன்று உனக்கு உறுவது உன்னித் துணிந்து உரை; உறுதி பார்க்கின்,
துன்று இருங்குழலை விட்டு, தொழுதுவாழ்; சுற்றத்தோடும்
பொன்றுதி ஆயின், என்பின், வாயிலில் புறப்படு" என்றான். (7093)

(ஏவுதல்-அனுப்புதல்; உறுவது-செய்யத்தக்கது; உறுதி-நன்மை; துன்று-நெருங்கி/அடர்ந்து; இரும்-பெரிய/கரிய; குழல்-கூந்தல்; பொன்றுதல்-அழிந்து ஒழிதல்; எண்ணி-ஆராய்ந்து/சிந்தித்து)

அங்கதன் இராவணனை நோக்கி, ''என்று மேற்கூறியவையெல்லாம் உன்னிடம் கூறி, உன்னுடைய கருத்தையும் அறிந்து வருவாயாக'' என்று கூறி. என்னை என் தலைவன் இராமபிரான் இங்கு அனுப்பினான். இவ்விரண்டில் ஒன்றை நன்றாகச் சிந்தித்து, உனக்கு நன்மை பயப்பது எது என்பதை நன்கு ஆராய்ந்து, பின்பு துணிந்து உன்னுடைய முடிவைச் சொல்லுவாயாக! நீ செயத்தக்க செயல் என்று எண்ணிப் பார்ப்போமே யானால், அடர்ந்த கரிய நீண்ட கூந்தலையுடைய சீதாதேவியை இராம பிரான்பால் ஒப்படைத்துவிட்டு, அவனை வணங்கி, நீடூழி வாழ்வாயாக! இல்லை, உன்னுடைய சுற்றத்தாரோடும் இறந்துதான் மடிவேன் என்று கருதினாயானால் என்னைத் தொடர்ந்து என்பின் வந்து, உன் அரண்மனை வாயிலிலிருந்து போருக்குப் புறப்பட்டு வருவாயாக!'' என்று கூறுகிறான் அங்கதன்.

இது இராமபிரான் கூற்றல்ல. இதுவரை கூறியது அனைத்தையும் அங்கதன் தொகுத்துக் கூறினான். இப்பொழுது கூறுவது சொந்தக்கருத்து. இது தூதுவர் இலக்கணத்தில் வகுத்துக் கூறுதல் எனப்படும். சீதாதேவியை விட்டுவிட்டு இராமபிரானை வணங்கி வாழ்வாயாக என்று முன்பு அவன் தம்பியர் கும்பகர்ணன், வீடணன் முதலியோரும், மாமன்கள் மாலியவான், மாரீசன்ஆகியோரும், புதல்வன்இந்திரசித்தும், அனுமன், சீதாதேவி ஆகிய எல்லோரும் கூறியிருக்கிறார்கள் என்பதையும் இங்கு நினைவிற் கொள்ளவேண்டும். காப்பியத்தில் வரும் முக்கியப் பாத்திரங்கள் அனைவரும் இவ்வாறு கூறியிருந்தும், இராவணன் அதற்கு உடன்படாது இருத்தலைக் கருத்தில் கொள்ளவேண்டும். எனவே அங்கதன் சிறந்த தூதுவர்க்குரிய இலக்கண முறைப்படி தொகுத்தும், வகுத்தும் கூறினான் என்க.

38. "நீரிலே பட்ட, சூழ்ந்த நெருப்பிலே பட்ட, நீண்ட,
பாரிலே பட்ட, வானப்பரப்பிலே பட்ட, எல்லாம்,
போரிலே பட்டு வீழப் பொருத நீ, 'ஒளித்துப் புக்கு, உன்
ஊரிலே பட்டாய்' என்றால், பழி' என உளையச் சொன்னான். (7094)

Koviloor Digital Library

(பட்ட-தோன்றிய; பட்டு-அகப்பட்டு; வீழ-இறக்க; பொருத-போர் செய்த; உளைய-வருந்தும்படி; படுதல்-இறத்தல்; சூழ்ந்த-வளைந்து கொண்ட)

நீர், வளைந்து சுற்றிக்கொள்ளும் நெருப்பு, நீண்ட நிலம், பரந்த வானம், ஆகிய எல்லா இடங்களிலும் தோன்றிய உயிரினங்களெல்லாம், உன் வீரச்செயலினால் முன்பு திக்கு விஜயகாலத்தில் உன்னுடன் செய்த போரிலே போரிட்டு மடிந்தன. அத்தகைய எட்டுத்திசைக் காவலர் களுடனும் போர்செய்து வெற்றிபெற்ற நீ, இப்பொழுது உன் நகருக்கு வெளியே மாற்றார் படை வந்து குவிந்திருக்கும்போது, அவற்றை எதிர்த்துப் போரிடப் புறப்படாமல், இங்கே உன்னுடைய நகரத்திற் குள்ளேயே ஒளிந்து வாழ்ந்து இருக்கும்போது, போரிலே பகைவர்கள் உன்னை உன் நகரத்துக்குள்ளேயே கொன்று போட்டார்கள். அதனால் நீ இறந்தாய் என்றால் அது உனக்குப் பெரும்பழியாகத் தானே அமையும்?'' என்று அங்கதன் இராவணன் மனம் வருந்தும்படியும், புண்படும்படியும் கடிந்து அறிவுரை கூறினான்.

'படுதல்' என்ற ஒரே சொல் ஒவ்வொரு அடியிலும் வெவ்வேறு பொருளைத் தருதலைக் கூர்ந்து நோக்குக.

39. இராவணன் அங்கதனைத் தாக்கும்படி கட்டளையிடுதல்

சொற்ற வார்த்தையைக் கேட்டலும், தொல் உயிர்,
முற்றும் உண்பது போலும் முனிவினான்,
'பற்றுமின், கடிதின்; நெடும் பார்மிசை
எற்றுமின்' என நால்வரை ஏவினான். (7095)

(சொற்ற-சொன்ன; தொல்-தொன்றுதொட்டு/பழமையான; முற்றும்-முழுவதும்; உண்பது-விழுங்குவது; முனிவு-பெருங்கோபம்; கடிதின்-விரைவில்; பார்-பூமி; மிசை-மீது; எற்றுதல்-தாக்குதல்/மோதுதல்; ஏவுதல்-கட்டளையிடுதல்/அனுப்புதல்; பற்றுதல்-பிடித்தல்)

இவ்வாறு அங்கதன் கூறியவற்றைக் கேட்டவுடன், தொன்றுதொட்டு இவ்வுலகில் வாழ்ந்து வரும் உயிரினங்கள் எல்லாம் முழுவதும் ஒருசேர விழுங்கிவிடுபவன் போலச் சீற்றம் கொண்டு, 'இந்தத் தூதுவனை விரைவில் பிடியுங்கள் நீண்ட பூமியின்மீது மோதித் தாக்குங்கள்' என்று தன் ஏவலாளர் நால்வரிடம் கட்டளையிட்டு அனுப்பினான்.

இவ்வாறே அனுமன் தூதுவந்தபோதும் 'பற்றுதிர், எற்றுதிர்' என்று இதே இராவணன் கூறியதையும் இங்கு நினைவு கூர்க.

Koviloor Digital Library

40. அங்கதன் அந்நால்வரையும் அழித்தல்

ஏவினார் பிடித்தாரை எடுத்து எழத்
தாவினான், அவர்தம் தலைபோய் அறக்
கூவினான், அவன் கோபுர வாயிலில்
தூவினான், துகைத்தான், இவை சொல்லினான். (7096)

(எடுத்து-தூக்கிக்கொண்டு; தூவுதல்-சிதறச்செய்தல்; துகைத்தல்-மிதித்தல்; கூவுதல்-அழைத்தல்; தாவுதல்-வானில் பாய்தல்)

அவ்வாறு இராவணனால் ஏவப்பட்டுத் தன்னைப் பிடிக்கவந்த அந்த நால்வரையும், அங்கதன் தானே அவர்களைத் தூக்கிக்கொண்டு, அவர்கள் அந்தரத்தில் தொங்குமாறு, வானில் உயரப் பாய்ந்தான். அவர்கள் தலை அறுபட்டு, அவர்கள் உடல் அரண்மனைக் கோபுர வாசலில் சிதைந்து விழுமாறு காலால் உதைத்துத் தள்ளினான். பின்னர் அந்நகர மக்கள் அறிந்து கொள்ளுமாறு கீழ்வருவனவற்றை முழக்கம் செய்வது போல் உயர்ந்த குரலில் கூறலானான்.

41. இலங்கை மக்களை எச்சரித்தல்

'ஏமம் சார, எளியவர் யாவரும்,
தூமம் கால்வன, வீரன் சுடுசரம்,
வேம்மின் போல்வன, வீழ்வதன் முன்னமே,
போமின், போமின், புறத்து'' என்று போயினான். (7097)

(வீரன்-இராமபிரான்; தூமம்-புகை; காலுதல்-கக்குதல்/உமிழ்தல்/வெளிப்படுத்துதல்; வேம்-வேகும்/எரிகின்ற; மின்-மின்னல்; ஏமம்-பாதுகாப்பு; சார்தல்-நாடிச்செல்லுதல்; போமின்-செல்லுங்கள்; எளியவர்-வலிமை குன்றியோர்; புறத்து-அப்பால்)

அங்கதன் அப்பொழுது இலங்கை மக்களைக் கருணையோடு கருதி, ''வீரனாகிய இராமபிரானது, கொதிக்கும் இயல்புடைய அம்புகள், புகையைக் கக்குவன, வெந்துபோகும்படி கொதிப்புடைய மின்னலைப் போல்வன; அவை வந்து இங்கே விழுவதற்கு முன்பே, நகரிலுள்ள வலிமையற்றோர் எல்லோரும் நகர்ப்புறத்தே ஏதேனும் பாதுகாப்பான இடத்தை நாடி விரைந்து சென்று உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்' என்று கூறிக்கொண்டே, இராமபிரான் இருக்கும் இடம் நோக்கிச் சென்றான்.

'போமின், போமின்' என்ற அடுக்கு விரைவு பற்றி வந்தது. யார்யார் எளியவர் என்று ஒரு புறநானூற்றுப்பாடல் தெரிவிக்கிறது கேளுங்கள், 'ஆவும், ஆன்இயல் பார்ப்பன மாக்களும், பெண்டிரும், பிணியுடையீரும், பேணித் தென்புல வாழ்நர்க் கருங்கலினுக்கும் பொன்போற் புதல்வர்ப்

Koviloor Digital Library

பெறா அதீரும், எம் அம்பு கடிவிடுதும் நும் அரண் சேர்மின் என, அறத்தாறு நுவலும்' என்பது புறநானூறு.

42. அங்கதன் இராமபிரானிடம் வந்து சேர்தல்

அந்தரத்திடை ஆர்த்து எழுந்தான், அவன்
சிந்து ரத்தம் துதைந்து எழும் செச்சையான்,
இந்து, விண்நின்று இழிந்துளதாம் என,
வந்து, வீரன் அடியில் வணங்கினான். (7098)

(அந்தரம்-ஆகாயம்/வானம்; ஆர்த்து-ஆரவாரித்து; ரத்தம்-குருதிநீர்/செந்நீர்; துதைந்து-அடர்த்தியாக/செறிந்து; செச்சை-செஞ் சந்தனக் குழம்பு; இந்து-சந்திரன்; இழிந்தது-இறங்கியது)

அவ்வாறு ஆகாயத்தின் மேல் முழக்கமிட்டுக் கொண்டு சென்றவனாகிய அங்கதன், அந்த அரக்கர்களின் இரத்தம் சிந்தியதால் உண்டான அடர்ந்த கறை, அவன்மேல் செஞ்சந்தனக் குழம்பைப் பூசியதுபோல் தோன்றியது. சிவப்புச்சட்டை அணிந்தவன் போலத் தோன்றினான். இப்போது அவனைப் பார்த்தால், ஆகாயத்தினின்றும் சந்திரன் பூமிக்கு இறங்கி வந்திருப்பது போலத் தோற்றமளித்தான். அவன் விரைந்து வந்து, வீரனாகிய இராமபிரானின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான்.

'செச்சை' என்ற சொல் சட்டை என்ற பொருளையும் தரும். எனவே செஞ்சந்தனக் குழம்பு பூசியவன் போலும், சிகப்பு நிறச்சட்டையை அணிந்தவன்போலும் தோற்றமளித்தான் எனவும் கொள்ளலாம். எனினும் அங்கதன் வெண்மை நிறத்தவன். எனவே வெண்மைநிறமான சந்திரனுக்கு உவமிக்கப்பட்டான் என்க.

43. அங்கதன் இராவணன் உளக் கருத்தைத் தெரிவித்தல்

உற்றபோது, 'அவன் உள்ளக் கருத்து எலாம்'
கொற்ற வீரன் 'உணர்த்து' என்று கூறலும்
'முற்ற ஓதிஎன்? மூர்க்கன், முடித்தலை
அற்றபோது அன்றி, ஆசை அறான்' என்றான். (7099)

(உறுதல்-வந்துசேர்தல்; கொற்றம்-வெற்றித்திறம்; கருத்து-எண்ணம்; உணர்த்துதல்-தெரிவித்தல்; முற்ற-முழுவதும்; ஓதுதல்-கூறுதல்; அறல்-நீங்குதல்/விட்டொழித்தல்/அறுத்தல்; மூர்க்கன்-பிடிவாதக்காரன் /கொடியவன்)

அவ்வாறு அங்கதன் வந்தடைந்தபோது, வெற்றித்திறம் பொருந்திய வீரனான இராமபிரான் அங்கதனை நோக்கி, "அந்த இராவணனுடைய

Koviloor Digital Library

உள்ளத்தில் இருக்கும் எண்ணங்களை எனக்குத் தெரிவிப்பாயாக!'' என்றதும், அங்கதன் ''அவன் கூறியவை அனைத்தையும் இங்கு விரித்து உன்னிடம் கூறுவதால் என்ன பயன் விளையப்போகிறது? அந்தக் கொடியவனாகிய பிடிவாதக்காரன், அவனுடைய மகுடமணிந்த பத்துத்தலைகளும் போர்க்களத்தில் அறுந்து இம்மண்ணில் விழுந்தால் அன்றி, அவனுடைய பொருந்தாக் காமத்தினின்றும் நீங்கான்'' என்று கூறினான்.

''மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா'' என்ற பழமொழியை இங்கு நினைவுகூர்க. அங்கதன் கூறுகின்ற 'மூர்க்கன், முடித்தலை அற்ற போதன்றி ஆசை அறான்' என்ற சொற்றொடர் மிகச்சுருக்கமாக, மிகப்பெரிய கருத்தை விளங்க வைத்திருப்பதை உணர்க. அனுமன் எவ்வாறு 'கண்டேன் சீதையை' என்று கூறினானோ, அதைப்போலவே அங்கதனும் தனக்கு இட்ட பணியைச் செவ்வனே முடித்து, இரத்தினச் சுருக்கமாய்க் கூறி, இராமபிரானுக்கு விளங்க வைத்திருக்கிறான் என்பதை எண்ணுக. நல்ல அறிவுரைகளைக் கேளாதவன் என்பதனாலும் அவனை மூர்க்கன் என்றார் எனலும் பொருந்தும்.

அங்கதன் தூதுப் படலம் நிறைவுற்றது

Koviloor Digital Library

14. முதற்போர் புரிபடலம் [255 பாடல்கள்]

இராமபிரானும் இராவணனும் தத்தம் சேனைகளைக் கொண்டு போர் தொடங்கிய முதல்நாள் நிகழ்ச்சியினைக் கூறும் படலம் என விரியும். இது 255 பாடல்களைக் கொண்ட பெரிய படலம். சில சுவடிகளில் 'முதற்போர்ப் படலம்' எனவும் 'இராவணன் முதல் நாளில் மகுடபங்கப் படலம்' எனவும் 'இராவணன் முதல் நாளையில் தோற்ற படலம்' எனவும் 'முதனாளை யுத்தம்' எனவும் 'இராவணன் முதற்போரில் மருட்சி' எனவும் பலவாறாகத் தலைப்பிடப் பெற்றிருக்கின்றன. இங்கே 'முதல்' என்பது போரின் தொடக்கத்தையும், தொடக்க நாளில் நிகழ்ந்த நிகழ்வுகளையும் குறித்து நின்றது எனக்கொள்க. இராமபிரானும், இராவணனும் ஒருவரை யொருவர் எதிர்த்து முதன்முதலாகப் புரிந்த போரின் நிகழ்வுகள் பற்றிக் கூறும் படலம் எனக் கொள்வதும் பொருந்தும். இப்படலத்தில் கம்பன் வான்மீகத்தினின்றும் பல இடங்களில் வேறுபடுகின்றான். அந்த வேறுபாடுகள், அந்தந்த நிகழ்ச்சிகள் நடைபெறும் பாடல்களில் குறிக்கப்பட்டிருக்கின்றன.

இப்படலத்துள், வானரச்சேனைக்கு, இராமபிரான் அகழியைத் தூர்த்துப் போருக்குப் புறப்படுமாறு கட்டளை இடுதல்; வானரசேனை அவ்வாறே புறப்பட்டு மதிலினின்றும் இறங்குதல்; ஒற்றர்மூலம் இதனைக் கேள்வியுற்ற இராவணனும், தம் அரக்கர்படைக்குக் கட்டளையிடுதல்; அரக்கர்சேனையும் வானரச்சேனையும் ஆர்ப்பரித்துப் போர்க்களம் புகுந்து ஒருவரோடொருவர் மோதித் தாக்கிக் கொள்ளுதல்; போர்க்களக் காட்சி; வானரச்சேனை நிலைகுலைதல்; சுக்கிரீவன் மிக்க கோபம் கொண்டு, தானே போர்புரிதல்; அரக்கர்படை நிலைகுலைதல்; வடக்கு வாயிலில் அரக்கர் படைத்தலைவன் வச்சிரமுட்டி வந்து சுக்கிரீவனோடும், வானரச்சேனையுடனும் போர்செய்தல்; வச்சிரமுட்டியைச் சுக்கிரீவன் அழித்தல்; கிழக்கு வாசலில் அரக்கர்படைத்தலைவன் கும்பானுவும், வானரப்படைத்தலைவன் நீலனும், கரடித்தலைவன் இடும்பனும் சேர்ந்து போர்செய்ய, கும்பானு, மூளைசிதறி உயிரழிதல்; அரக்கர் படைத் தலைவன் பிரகஸ்தன் அங்கு வந்து நீலனுடன் போர்புரிதல்; வானரச் சேனை நடுங்கி ஓடுதல்; நீலன் பிரகஸ்தனைத் தன் வாலினால் சுற்றி வீழ்த்திக் கொல்லுதல்; தெற்கு வாசலில், அங்கதனுடன் சுபாரீசன் என்ற அரக்கர் படைத்தலைவன் மோதுதல்; அரக்கர்படை நிலைகுலைந்து ஓடுதல்; சுபாரீசன் அங்கதனால் இறந்து படுதல்; மேற்கு வாசலில்

Koviloor Digital Library

அனுமனும் அரக்கர் படைத்தலைவன் துன்முகனும் போரிடுதல்; அனுமனால் துன்முகன் அழிக்கப்படுதல்; இலங்கையின் நான்கு திசைகளிலும் நிகழ்ந்த போர்பற்றியும், அரக்கர்படை அழிவு பற்றியும் ஒற்றர்கள் இராவணனுக்குத் தெரிவித்தல்;

இராவணன் பெரும் சினம்கொண்டு தானே போருக்குச் செல்லத் துணிந்து எழுதல்; இராவணன் போருக்குப் புறப்படுவதை ஒற்றர்கள் இராமபிரானுக்கு அறிவித்தல்; இராமன் மகிழ்ந்து போர்க்கோலம் பூண்டு புறப்படுதல்; இராவணனின் வில்நாண் ஒலிகேட்டு, வானரப்படை நிலைகுலைதல்; சுக்கிரீவன் முதலில் இராவணனை எதிர்த்துப் போர் புரிதல்; சுக்கிரீவன் தளர்ந்த நிலையில், அனுமன் புகுந்து இராவணனுடன் போர்செய்தல்; அனுமன் சோர்ந்த நிலையில், இலக்குவன் நுழைந்து இராவணனுடன் போர்செய்தல்; இலக்குவனுக்கும், இராவணனுக்கும் கடும்போர் நிகழ்தல்; இராவணன், இலக்குவனின் போராற்றலைப் புகழ்ந்துரைத்தல்; அயர்வு நீங்கிய அனுமன் மீண்டும் வந்து வீரவுரை நிகழ்த்தி இராவணனைக் குத்துதல்; இராவணன் அனுமன் உரையாடல்; இராவணன் அனுமனைப் புகழ்தல்; அனுமன் இராவணன் போராற்றல் கண்டு வியத்தல்; அனுமன் இராவணன் குத்தியதால் சற்று சலித்தல்; வானரச்சேனை இராவணன்மீது மலைகளைப் பெயர்த்தெடுத்து எறிந்து போர்செய்தல்; இராவணனின் அம்புமழை தாங்காது வானரச்சேனை நிலைகுலைந்து ஓடுதல்; இந்நிலைகண்டு இலக்குவன் மிக்கசினம் கொண்டு போரிடுதல்; இப்பொழுது இலக்குவன் மேல் இராவணன் தன் வேற்படையைச் செலுத்துதல்; இலக்குவன் அயர்ந்து கீழே விழவும், அவனைத் தன் இருபது கைகளாலும் தூக்க இராவணன் முயற்சித்தல்; எடுக்க இயலாதவனாய் மலைத்து நின்றபோது, அனுமன் நுழைந்து மிக எளிதாக இலக்குவனைத் தன் கைகளால் எடுத்துத் தூக்கிச் செல்லுதல்; பின்பு அனுமன் தோளில் ஏறிக்கொண்டு இராமபிரான் போர்க்களம் புகுதல்; இராமபிரானும் இராவணனும் தனித்து முதற்போர் புரிதல்; போர்க்களக்காட்சி; இராவணனின் படைக்கலன்களும், தேரும், மணிமுடியும் அழிக்கப்படுதல்; இராவணன் வெட்கமுற்று நின்ற காட்சி; இராமபிரான்அவனுக்குஅறிவுரைகூறி, ''இன்று போய்ப் போர்க்கு நாளை வா' என அருளோடு அனுப்புதல் ஆகிய நிகழ்ச்சிகள் மிக விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றன

1. வானரச்சேனைக்கு இராமபிரான் கட்டளையிடுதல்

''பூசலே; பிறிது இல்லை''; எனப்புறத்து
ஆசை தோறும் முரசம் அறைந்து, என,
பாசறைப் படையின்னிடம் பற்றிய
வாசல் தோறும் முறையின் வகுத்திரால்''. (7100)

Koviloor Digital Library

(பூசல்-போர்; புறத்து-வெளியுலகில்; ஆசை-திசைகள்; பற்றிய-பொருந்திய/பெற்றுள்ள; வகுத்தல்-வகைப்படுத்திச் சொல்லுதல்/அணிவகுத்து நிற்றல்)

இராமபிரான், ''இனிச் செய்ய வேண்டியது போரே அன்றி வேறு சமாதானத்திற்கு இடம் இல்லை; எனவே, நகரின் வெளியே, திசைகளில் எல்லாம் முரசு அறைந்து, இதனைத் தெரிவித்து விடுங்கள்; பாடிவீட்டில் உள்ள சேனைகளிடத்தில் அவர்கள் இப்போது பொருந்த நிற்கின்ற கோட்டையின் நான்கு வாயில்களிலும், விதிமுறைப்படி அணிவகுத்து நிற்குமாறும் பறையறிவித்து விடுங்கள்'' என்று படைத்தலைவர்களுக்குக் கட்டளையிட்டான்.

'பூசலே' என்பதில் ஏகாரம் தேற்றப்பொருளில் வந்தது போர்தான்; அதைத்தவிர வேறு ஒன்றும் இல்லை என்பது பொருள். 'பிறிது' என்பது, போருக்கு மாறான சமாதானத்தைக் குறிக்கும். போர் தொடங்கி விட்டது என்பதைக் குறிக்க 'போர் முரசு' ஒலிப்பது பண்டைய வழக்கம். இதனைப் பறைகொண்டும் அறிவிப்பது உண்டு. அங்கதன் தூது சென்று வந்து, இராவணன் நோக்கத்தை இராமபிரானிடம் தெரிவித்ததன் பின், இராமபிரான் இவ்வாறு கட்டளைகள் பிறப்பிக்கத் தொடங்கினான் என்க. நான்கு வாயில்களிலும் முரசு அறைந்து கூறிவிட்டால், அது இந்த உலகத்தார்க்கே, எல்லாத் திசைகளிலும் சென்று அறிவித்தலுக்குச் சமமாகும் என்பதால் 'ஆசைதோறும் முரசம் அறைந்து என' என்றார் என்க. காரணம் வாயிலில் இருக்கும் ஒற்றர்களால் இச்செய்தி எல்லாத் திசைகளிலும் சென்றுசேரும் என்பது கருத்து. 'வகுத்தல்' என்பது வகைப் படுத்தி அணிவகுத்து நிற்பதைக் குறிக்கும். பறையறிவிப்பது என்பது, சேனைவீரர்களுக்கு மட்டுமல்ல, பொதுமக்களுக்கும், 'போர் தொடங்கி விட்டது, தாயராய் இருங்கள்' என்று எச்சரிப்பதையும் குறிக்கும்.

2. ''மற்றும் நின்ற மலையும் மரங்களும்,
பற்றி, வீரர்! பரவையின் மும்முறை,
கற்ற கைகளினால், கடிமா நகர்,
சுற்றும் நின்ற அகழியைத் தூர்த்திரால்; (7101)

(மற்றும்-மேலும்; பரவை-கடல்; கடி-காவல்; பற்றி-கைக்கொண்டு)

இராமபிரான் ''முன்பு சேது கட்டியபோது நன்கு பழக்கப்பட்ட உங்கள் கைகளினால், இப்போது ஆங்காங்கு நிலைபெற்றுள்ள மலைகளையும், மரங்களையும் பறித்துக்கொண்டு, இந்தக் காவல் மிகுந்த இலங்கை மாநகரைச் சூழ்ந்துள்ள அகழியை, முன்பு கடலைத் தூர்க்கச் செய்தது போல, மூன்று மடங்கு மலைகளையும், மரங்களையும் கொண்டு தூர்த்துத் திடர்போலச் செய்து விடுங்கள்'' என்று வீரர்களைப் பார்த்துக் கட்டளை யிட்டான்.

Koviloor Digital Library

இலங்கை மாநகரைச் சுற்றியுள்ள அகழி, கடலைக்காட்டிலும் மூன்று மடங்கு நீளமானது, ஆழமானது, அகலமானது என்பதைக் குறிக்க, ''பரவையின் மும்முறை'' என்றார் என்க. 'கற்ற கைகள்' என்பது, முன்பு அணைகட்டுவதற்காக மலைகளையும் மரங்களையும் பறித்து வந்து வீசிய குரங்குகளின் நன்கு பழக்கப்பட்ட கைகள் என்று பொருள்படும். 'கடி மாநகர்' என்பது, இலங்கை மாநகரம் மிகுந்த காவலையுடைய நகரம் என்பதைக் குறிக்கும். முன்பே கடலைத் தூர்த்துப் பழகியதனால், இந்தப் பெரிய அகழியைத் தூர்த்தல் எளிதாகும் என்று கூறுகிறான் இராமபிரான் என்க. இலங்கை நகரத்தைச் சுற்றி மூன்று பக்கங்களிலும் கடல் சூழ்ந் துள்ளது என்பது நாம் முன்பு அறிந்ததே. எனவே ஒவ்வொரு அகழியும் ஒவ்வொரு கடலைப் போன்றது, என்பதால் 'பரவையின் மும்முறை' என்றார் என்பதாம்.

3. ''இடுமின் பல்மரம்; எங்கும் இயக்கு அறத்
தடுமின்; 'போர்க்கு வருக!' எனச் சாற்றுமின்;
கடுமின், இப்பொழுதே கதிர்' மீச்செலாக்
கொடிமதில் குடுமித்தலைக் கொள்க!'' என்றான். (7102)

(இயக்கு-போக்குவரவு/சஞ்சரித்தல்/நடமாட்டம்; சாற்றுதல்-சொல்லுதல்/அறைகூவி அழைத்தல்; கடுதல்-களைதல்/அகற்றுதல்; கதிர்-சூரியன்; மீ-மேலே; கொடு-வளைந்த; குடுமித்தலை-உச்சியிடம்; கொள்க-கைப்பற்றுங்கள்)

இராமபிரான், ''அரக்கர்கள் எங்கும் நடமாடமுடியாதபடி, பலவகைப் பட்ட மரங்களையும் கொண்டுவந்து அவர்கள் சஞ்சரிக்க முடியாதபடி அவர்களைத்தடுத்து நிறுத்துங்கள்; அரக்கர்களப் 'போர்செய்ய வருக' எனக் கூவி அழையுங்கள்; சூரியன்கூட மேலே செல்லாத இந்த இலங்கை மாநகரின் வலிய, வளைந்து செல்லும் மதில்களில் உச்சியினிடத்தில் ஏறி, அவர்களை அகற்றி இப்பொழுதே விரைவாக, அதனைக் கைப்பற்றிக் கொள்ளுங்கள்'' என்று கட்டளையிட்டான்.

''இடுமின் பல் மரம்'' என்பதும், ''எங்கும் இயக்கு அறத் தடுமின்'' என்பதும் இன்றைய 'சாலை மறியலை' நினைவூட்டுவதை உணர்க. இதற்கு முதன்முதலில் வித்திட்டவன் இராமபிரான் என்பதையும், அதனைத் தொடர்பவர் அவனுக்குத் தாசர்கள்தான் என்பதையும் கருத்திற் கொள்க. இலங்கை நகரின்மீது கதிரவன் ஒளிபுகாது; சூரியன் ஒதுங்கியே செல்வான் எனக் காப்பியத்தில் பல இடங்களிலும் கூறிப்போவது போல் இங்கேயும் ''கதிர்மீச் செலாக் கொடிமதில்'' என்றார் என்க. இலங்கை நகரத்தின் மதில்களின் உயர்ச்சி பேசப்பட்டது. 'கொடிமதில் குடுமித் தலைக் கொள்ளுதல்' என்பது, அந்த மதிலின் உச்சியில் ஏறி நின்று, அதைக் கைப்பற்றிக் கொண்டால், அந்நகரையோ, நாட்டையோ கைப்பற்றிய தாகப் பொருள். இதனை 'நொச்சித்திணை' என்கிறது புறத்திணை.

Koviloor Digital Library

இதனைக் 'மதிற்குடுமி கொண்ட மண்ணு மங்கலம்' என்கிறது தொல்காப்பியம்.

4. வானரச்சேனை அகழியைத் தூர்க்கத் தொடங்குதல்

தடங்கொள் குன்றும் மரங்களும் தாங்கியே,
மடங்கல் அன்ன அவ்வானர மாப்படை,
இடங்கர் மா இரிய, புனல் ஏறிட,
தொடங்கி, வேலை அகழியைத் தூர்த்ததால். (7103)

(மடங்கல்-சிங்கம்; மா-பெரிய; தடம்-பெருமை; இடங்கர்-முதலை; வேலை-கடல்; இரிய-நிலைகெட்டு ஓட)

சிங்கம் போன்ற அந்தச் சிறந்த வானரச்சேனை, தம் கைகளில் பெரிய மலைக்குன்றுகளையும், மரங்களையும் தாங்கிக்கொண்டு, அவ்வகழி களில் வீசி எறிந்தன. அதனால் அங்கே வசித்துவந்த நீர்வாழ் விலங்காகிய முதலைகளும், முதலையின் குட்டிகளும், நிலைகெட்டு ஓடிப்போயின; மலைகளும் மரங்களும் அகழியில் வீழ்ந்ததால் அவ்வகழியின் நீர் ததும்பி வழிந்து மேலே கரையேறத் தொடங்கியது. இவ்வாறு அவ்வானரப் படை, கடல் போன்ற அந்த அகழியைத் தூர்க்கத் தொடங்கியது.

பிடரி மயிர் மடங்கியிருத்தலால், மடங்கல் என்பது சிங்கத்திற்குக் காரணப்பெயர். முதலை, இடங்கர், கராம், இவைமூன்றும் ஒரே இனத்தைச் சேர்ந்த நீர்வாழ் விலங்குகள் என்பதறிக. பகைவரின் அகழியைத் தூர்த்தல் புறத்திணையில் 'பாசிநிலை' என்று பேசப்படுகிறது.

5. ஏய வெள்ளம் எழுபதும், எண்கடல்
ஆய வெள்ளத்து அகழியைத் தூர்த்தலும்,
தூய வெள்ளம் துணை செய்வதாம் என,
வாயிலூடு புக்கு, ஊரை வளைந்ததே. (7104)

(ஏய-அமைந்த/பொருந்திய; ஊடு-உள்ளே; வெள்ளம்-கடல்நீர்; தூர்த்தல்-நிரப்புதல்)

எழுபது வெள்ளம் என்று கூறப்படுகின்ற வானரச்சேனை முழுவதும், எட்டாவது கடல் போன்று தோற்றமளிக்கும் அந்த இலங்கையரணாகிய அகழியை மரங்களாலும், மலைகளாலும் நிரப்பும்போது, அதனின்றும் வெளியேறிய தூய்மையான, வெண்மையான நீர்ப்பெருக்கு, இராம பிரானுக்குத் துணைபுரிவது போல, இலங்கை நகரின் நான்கு வாயில்களின் உள்ளேயும் புகுந்துகொண்டு, அந்த நகரையே சூழ்ந்து சுற்றிக்கொண்டது.

வானரச்சேனை எழுபது வெள்ளம் அளவினது என்பது இக்காப் பியத்தில் எல்லா இடங்களிலும் கூறப்பட்டு வந்திருப்பதை நினைவிற் கொள்க. அகழியின் நீர்ப்பெருக்கு வெண்மையானதாக இருந்ததாலும்,

Koviloor Digital Library

இது இராமபிரானுக்குத் துணை செய்வதாலும், அதனைத் 'தூய வெள்ளம்' என்றார் என்க. 'வெள்ளம்' என்பது திசைச்சொல். இச்சொல் இன்றும் மலையாளத்தில் நீர் என்ற பொருளிலேயே பயன்படுத்தப்பட்டு வருவதையும் நினைவிற் கொள்க. எழுபது வெள்ளம் சேனையின் பரந்து விரிந்த தோற்றம் எட்டாவது கடலுக்கு ஒப்பு; 'புகார்ப்பிறந்த எழு மாதரோடு இவள் எண் மாதராவாள்' என்பது குலோத்துங்கக் கோவை. உலக அதிசயங்கள் ஏழு என்பது எல்லோரும் அறிந்ததே. எனினும் ஏதாவது ஒரு அரிய அதிசயிக்கத்தக்க நிகழ்வோ, இடமோ இருந்தால் அதை 'எட்டாவது அதிசயம்' என்று இன்றும் நாம் கூறிவருகிறோம் அல்லவா? அதைப்போன்றதே இதுவும் எனக்கொள்க. அதன் சிறப்புக் கருதி அவ்வாறு கூறுதல் ஒரு வழக்கம் என்பதறிக. இராமனது நோக்கம் இலங்கையை அழிக்க வேண்டும் என்பது. அதை அவ்வகழி நீரே செய்துவிட்டதனால், அதைத் ''தூய வெள்ளம் துணை செய்வதாம் என'' என்றார் என்க. கடல் நீர் போன்று உவர்ப்புத் தன்மையில்லாததால், அகழி நீரைத் 'தூயநீர்' என்றார் என்க.

6. விளையும் வென்றி இராவணன் மெய்ப்புகழ்
முளையினோடும் களைந்து முடிப்ப போல்,
தளை அவிழ்ந்த கொழுந் தடந் தாமரை
வளையம், வன்கையில் வாங்கின, வானரம். (7105)

(வென்றி-வெற்றி; முடிப்ப-அழிப்ப; தளை-முருக்கு/கட்டு; கொழும்-செழுமையான; தடம்-பெரிய; வன்-வலிய; வாங்குதல்-பிடுங்குதல்; முளை-அடி/வேர்; வளையம்-தண்டு/கிழங்கு/அடிப்பகுதி)

இதுவரையிலும் இராவணன் பெற்று வந்திருக்கிற உண்மையான புகழையெல்லாம், அடியோடு பிடுங்கி அழிப்பன போல, குரங்குகள், அவ்வகழியில் இருந்த முறுக்கு அவிழ்ந்த செழுமையான பெரிய தாமரை மலர்களின் அடிப்பகுதியான கிழங்குகளைத் தம் வலிய கைகளினால், பிடுங்கி எடுத்தன.

அகழியிலுள்ள தாமரை மலர்களின் அடிப்பாகத்தை வேரோடும் பிடுங்கி எடுக்கும் வானரங்களின் தோற்றம், இராவணன் இதுகாறும் பெற்று வந்த வெற்றிகளையெல்லாம் ஒருசேர, அடியோடு அழிப்பது போலத் தோன்றியது என்கிறான் கவிஞன். இயல்பாக நிகழ்கின்ற ஒரு நிகழ்ச்சிக்குக் கவிஞன் தன்னுடைய குறிப்பை அதன்மேல் ஏற்றிக் கூறுகிறான் என்பதால் இப்பாடல் தற்குறிப்பேற்ற அணியின்பாற்படும். 'மெய்ப்புகழ்' என்பது 'மெய்க்கீர்த்தி' என்றும் வழங்கப்பெறும். தாமரை மலரின் அடிப்பகுதியான கிழங்கு-தண்டு-வளைந்திருப்பதால் அது 'வளையம்' எனப்பட்டது எனக் கொள்க. 'விரித்திடு சுருளின் நாமம் விசியொடு வளையமாகும்' என்பது பிங்கல நிகண்டு. நான்காம் அடியில் உள்ள ஒவ்வொரு சீரின் முதல் எழுத்தும் ஒன்றேபோல் வந்திருப்பதால்

Koviloor Digital Library

இவ்வடி முற்றுமோனை எனப்படும். குரங்குகள் தாமரை மலரின் தண்டுகளைப் பிடுங்கி எடுத்தது தாம் அவற்றை உண்பதற்காக என்க. தாமரை மலர்களின் வளையங்கள் வெண்ணிறமானவை. எனவே அதைப் புகழுக்கு உவமித்தார் என்க. புகழை வெண்ணிறமாகக் கூறுவது கவிமரபு.

7. இகழும் தன்மையன் ஆய இராவணன்
புகழும் மேன்மையும் போயினவாம் என,
நிகழும் கள் நெடு நீலம் உகுத்தலால்,
அகழி தானும் அழுவது போன்றதே. (7106)

(நீலம்-கருங்குவளை மலர்கள்; கள்-தேன்; நிகழும்-பொருந்திய)

அந்த அகழியில் கருங்குவளை மலர்கள் நிறைந்து பூத்திருக்கின்றன. அவை அவ்வகழிக்குக் கண்களாகத் தோற்றமளிக்கின்றன. அம்மலர்கள் சிந்தும் தேன்துளிகள், அக்கண்களிலிருந்து சொரியும் கண்ணீரைப் போன்று இருக்கின்றது. தம் அரசனான இராவணனின் புகழும், பெருமையும், இன்றோடு அழிந்துபோய், அவன் இகழ்ச்சிக்குரியவன் ஆகிவிட்டானே என்று வருந்தி, அதனால் அவ்வகழி அழுதது போலத் தோன்றியது என்கிறான் கவிஞன்.

'போயினவாம்' என இறந்த காலத்தில் கூறியது, துணிவு பற்றி வந்த காலவழுவமைதி என்க. எப்படி இராமன் மிதிலைக்கு வந்தபோது, மதிற் சுவரில் இருந்த கொடிகள் அவனை 'ஒல்லைவா' என்று அழைத்தனவோ, எப்படி கண்ணகி மதுரைக்கு வந்த போது அவளுக்குத் துன்பம் நேரப் போகிறது என்று வைகை நதி கண்ணீர் சொரிந்ததோ, அதுபோல இப்போது இராவணனுக்கு இகழ்ச்சிவரப் போகிறது என்பதை எண்ணி அகழியில் உள்ள கருங்குவளை மலர்கள் தேன் என்னும் கண்ணீரைச் சொரிந்தன என்க. 'புலவர் நாவில் பொருந்திய பூங்கொடி, வையை என்னும் பொய்யாக் குலக்கொடி தையற்கு உறுவது தான் அறிந்தனள் போல், புண்ணிய நறுமலர் ஆடைபோர்த்துக் கண் நிறைநெடுநீர் கரந்தனள் அடக்கி' என்பது சிலப்பதிகாரம், புறஞ்சேரி இறுத்த காதை. ''அகழி சூழ்போகிக் கருநெடுங்குவளையும், ஆம்பலும், கமலமும் தையலும் கணவனும் தனித்து உறு துயரம் ஐயம் இன்றி அறிந்தன போலப் பண்நீர் வண்டு பரிந்து, இளைந்து, ஏங்கிக்கண்நீர் கொண்டு காலுற நடுங்க'' என்பது சிலப்பதிகாரம் ஊர்காண் காதை.

8. தண்டு இருந்த பைந்தாமரை தாள் அற,
பண் திரிந்து சிதைய, படர் சிறை
வண்டு இரிந்தன; வாய்தொறும் முட்டையைக்
கொண்டு இரிந்தன, அன்னக் குழாம் எலாம். (7107)

Koviloor Digital Library

(பைம்-பசிய/பசுமையான; தாள்-அடிப்பகுதி/நாளம்/கிழங்கு; படர்தல்-பறத்தல்; சிறை-சிறகுகள்; திரிதல்-மாறுபடுதல்; சிதைதல்-கெடுதல்; இரிதல்-ஓடுதல்; குழாம்-கூட்டம்; பண்-ரீங்காரம்)

இவ்வாறு குரங்குச் சேனையினால் அகழி தூர்க்கப்படும் போது, அங்கிருந்த பசுமையான தாமரை மலர்களின் அடிப்பகுதிகளெல்லாம் அகழ்ந்து வேரோடு பறிக்கப்பட்டதனால், அதில் அமர்ந்து ரீங்காரம் இசைத்துக் கொண்டிருந்த, பறப்பதற்கு ஏதுவான சிறகுகளை உடைய வண்டுகள், தம் ரீங்காரம் மாறுபட்டுப் போகவே நிலைதடுமாறி ஓடலாயின; அந்தத் தாமரை மலரில் உறங்கிக் கொண்டிருந்த அன்னப் பறவைகளின் கூட்டங்கள் எல்லாம், தங்கள் வாய்களில் முட்டையைக் கவ்விக் கொண்டு நிலைகெட்டு ஓடின.

இன்பக்காலத்தில் பாடும் ரீங்கார ஓசை, தமக்குத் துன்பம் வரும்போது, அது தன் ஓசையிலிருந்து மாறுபட்டு ஒலிப்பது இயல்புதானே? அதுதான் இங்கே 'பண் திரிந்து சிதைய' எனப்பட்டது என்க. என்றாலும் தனக்குத் துன்பம் வந்துற்ற போதும், தன்னுடைய முட்டையைப் பாதுகாப்பாகத் தன்னுடன் கவ்விக் கொண்டு செல்லும் அன்னங்களின் தாய்மையுணர்வை நோக்குக.

9. ஈளி தாரம் இயம்பிய வண்டுகள்,
பாளை தாது உகுநீர் நெடும் பண்ணைய;
தாள தாமரை அன்னங்கள் தாவிட,
வாளை தாவின, வானரம் தாவவே. (7108)

(ஈளி-இனி என்னும் ஒரு வகைப்பண்; தாரம்-மற்றொரு வகைப்பண்; தாது-மகரந்தம்; உகுதல்-சிந்துதல்; பண்ணை-வயல்; தாள-நாளம்/தண்டு; இயம்புதல்-இசைத்தல்)

இளி என்ற மந்த ஓசையுடைய பாடலையும், தாரம் என்னும் எடுத்தலோசை உடைய பண்ணையும் ரீங்காரம் செய்து கொண்டிருந்தன வண்டுகள். அப்போது அவ்வகழியின் அருகில் தென்னை, கமுகு போன்ற மரங்களின் பாளைகளிலிருந்து மகரந்தங்கள் சொட்டிக் கொண்டிருக்கின்ற வளப்பமுடைய நீண்ட வயல்களில் தண்டுடன் கூடிய தாமரை மலர்களில் வாழ்ந்துவரும் அன்னப்பறவைகள் குதித்துத் தாவலாயின.

இளி என்பது ஈளி என எதுகை நோக்கி நீண்டது. ஏழுவகைப் பண்களுள் இளி மந்த ஓசையும், தாரம் எடுத்தலோசையும் கொண்டது. இவ்விரு வகைப்பண்ணையும் வண்டுகள் ரீங்காரம் இட்டன என்பதால், முன் பாடலில் கூறிய ''பண் திரிந்து சிதைய'' என்பது இங்கே விளக்கப் பட்டிருப்பதை உணரலாம். வானரங்கள் அகழியில் தாவியதால் அவற்றிற்கு அஞ்சி வாளை மீன்கள் தாவின; வாளை மீன்கள் குதித்து

Koviloor Digital Library

ஓடியதால், அங்கு தாமரை மலரில் துயின்றிருந்த அன்னப்பறவைகளும் தாவிக்குதித்து ஓடின என்பது திரண்ட கருத்து.

10. தூறு மாமரமும், மலையும் தொடர்
நீறு, நீர் மிசைச்சென்று நெருக்கலான்,
ஏறு பேர் அகழி நின்றும், எனைப்பல
ஆறு சென்றன, ஆர்கலி மீது அரோ! (7109)

(தூறு-புதர்கள்; மா-பெரிய; நீறு-பொடி/புழுதி; மிசை-மேல்; ஆர்கலி-கடல்; எனை-எத்துணையோ; ஏறுதல்-பொங்குதல்/கரைகடத்தல்)

வானரச்சேனைகள் புதரோடு கூடிய பெரிய மரங்களையும், மலைகளையும் தொடர்ந்து அகழியில் வீசிக்கொண்டிருப்பதால், அந்தப் புழுதியும் சேர்ந்து கடல் நீரின் மேல் போய் அடர்ந்திடுவதால் அந்த அகழி நீர், கரையைக் கடந்து வரலாயிற்று. அது இப்போது பெரிய அவ்வகழியினின்றும் பல கால்வாய்களாக - ஆறுகளாகப் பிரிந்து சென்று கடலில் சேர்வதைப்போலத் தோன்றியது.

11. இழுகு மாக்கல் இடும்தொறு இடும்தொறும்;
சுழிகள் தோறும் சுரித்து இடைதோன்று தேன்
ஒழுகு தாமரை ஒத்தன, ஓங்கு நீர்
முழுகி மீது எழு மாதர் முகத்தையே. (7110)

(இழுகுதல்-வீசுதல்; சுரித்து-சுழிந்து/அழுந்தி; இடை-நடுவில்; ஓங்கு-பெருகுகின்ற; மீது-மேல்)

வானரங்கள் அகழியின் மேல் பெரிய கற்களை வீசியெறிகின்ற போதெல்லாம், அகழியில் நீர்ச்சுழிகள் ஏற்படுகின்றன; அந்த நீர்ச்சுழிகள் ஏற்படும் இடங்களில் எல்லாம், தேன் ஒழுகுகின்ற தாமரை மலர்கள் முதலில் நீருக்குள் அழுந்திப் பின் வெளிப்பட்டுத் தோன்றுகின்றன. இது எப்படி இருக்கிறது என்றால், அலைகள் நிறைந்த அகழி நீரில் பெண்கள் முழுகி எழுகின்றபோது நீர் ஒழுகும் அவர்கள் ஒளி வாய்ந்த முகங்களைப் போன்று இருந்தன.

'இழுகுதல்' என்ற புதியசொல் வீசுதல் என்ற பொருளைத்தரும். 'இடும்தொறும் இடும்தொறும்' என்ற அடுக்கு விரைவு பற்றியும், மிகுதி பற்றியும் வந்தது. நீரின் மீது ஒரு கல்லைப் போட்டால் அதில் சுழிகள் எழுவது இயற்கை. கற்களின் கனம் தாங்காமல் தாமரைமலர்கள் நீருக்குள் அழுந்திப்போகின்றன. பின்னர்தன்னிடம்உள்ளதேன்ஒழுகும்வண்ணம், மீண்டும் மேற்கிளம்புகின்றன. இதற்குப் பெருகிய நீரில் மூழ்கி, நீருடன் எழும் பெண்களின் முகத்தை ஒப்பாகக் கூறுகிறான் கவிஞன். தாமரை மலருக்கு மாதர் முகங்களும், அதிலே பெருகுகின்ற தேனுக்கு, மாதரார் முகத்தில் வழியும் நீரும் உவமை. ''இனமீன் இருங்கழி ஓதம் மல்கு

Koviloor Digital Library

தொறும், கயம்மூழ்கும் மகளிர் கண்ணின் மானும்'' என்ற குறுந்தொகைப் பாடலும் இங்கு ஒப்பு நோக்கத்தகும். பெண்களின் முகத்திற்குப் பொதுவாகத்தாமரைமலரினைஒப்புக்கூறுவது வழக்கம். இங்கேகவிஞன் அதனை மாற்றி தாமரை மலரைப் பெண்களின் முகம் எனக் கூறியதால் இதனை எதிர்நிலையணி எனலாம்.

12. தன்மைக்குத் தலையாய தசமுகன்
தொன்மைப் பேர் அகழ், வானரம் தூர்த்ததால்,
இன்மைக்கும், ஒன்று உடைமைக்கும், யாவர்க்கும்
வன்மைக்கும், ஓர் வரம்பு உண்டாம் கொலோ? (7111)

(தலை-தலைமை/தலைவன்; தசமுகன்-பத்துத் தலைகளையுடையவன்/இராவணன்; தொன்மை-பழமை; பேர்-பெரிய; இன்மை-வறுமை; உடைமை-செல்வச்செழிப்பு; வன்மை-வலிமை; வரம்பு-எல்லை/வரையறை)

''வீரத்தன்மையிலும், அதற்கு மாறான ஆணவத் தன்மையிலும் தனக்கு நிகர் தானே எனத் தலைவனாகத் திகழும் பத்து முகங்களையுடைய இராவணனுடைய தலைநகரில் இருக்கும் பழமையான பெரிய அகழியையே அற்பமான வானரச்சேனை தூர்த்து நிரப்பி விட்டன என்றால், எப்படிப்பட்டவருக்கும் ஒன்றுமே இல்லாத வறுமை நிலைக்கும், எல்லாம் உடைய செல்வச்செழிப்பான நிலைமைக்கும், ஒருவரிடமுள்ள வலிமை மிகுந்த ஆற்றலுக்கும், இதுதான் எல்லை என்று வரையறை கட்டமுடியுமோ? முடியாது'' என்கிறான் கவிஞன்.

'தன்மை' என்பது பொதுவாகத் தான் என்ற அகங்காரமாகிய ஆணவத் தன்மையைக் குறிக்கும். இங்கே இராவணனுக்குக் கூறப்பட்டிருப்பதால் வீரத்தன்மையாகிய பேராண்மையைக் குறித்ததாகக் கொள்ளலாம். காரணம் இதுகாறும் இவனிடமிருந்த இந்தப் பேராண்மை, பிறன்மனை நோக்கிய காரணத்தால்தான் இழிவுற்றது. எனவே ஆண்மை அல்லது ஆற்றல், வலிமை என்பது ஒருவரிடத்தில் எப்போதும நிலைத்து நிற்காது, அது மாறுபடும். நம்மை விட்டுச்சற்று நீங்கும் இயல்புடையது. இவ்வளவு பேராண்மை படைத்த இராவணனின் நகரில் இருந்த பேரகழியை, வலிமையற்ற குரங்குகள் அழித்துத் தூர்த்து விட்டதே இதற்குச் சான்று என்கிறான் கவிஞன். ஆண்மை மட்டுமல்ல, வறுமையும், செல்வச் செழிப்பும் நிலையாமை உடையன, ஒருவரிடமே, எப்போதும் இருக்கும் என்று சொல்வதற்கு, அதற்கு ஒரு வரம்பு கூற இயலாது. அது வரும், போகும்; சென்றுகொண்டே இருக்கும். அதனால்தான் அதற்குச் 'செல்வம்' என்ற பெயரும் உண்டு என்றும் கூறுவர். 'இன்மைக்கும், ஒன்று உடைமைக்கும், யாவர்க்கும், வன்மைக்கும் ஓர் வரம்பும் உண்டோ?' என்பது ஓர் அரிய அறிவுரை எனக் கொள்ள வேண்டும். செல்வம் நிலையாமையும், யாக்கை நிலையாமையும் பல்வேறு காப்பியங்களிலும்

Koviloor Digital Library

பலபடப் பேசப்பட்டிருப்பதையும் இங்கு நினைவுகூர்க. 'இங்கு ஆர் எனக்குநிகர்எனப் பிரதாபித்து இராவணகாரமாகி' என்கிறார்தாயுமானவர். ஆணவம் என்ற சொல்லுக்கே 'இராவணாகாரம்' என்ற பொதுப்பெயரைத் தருகிறார் என்பது நோக்கத்தக்கது.

இப்பாடல் ஒரு சிறப்புக் கருத்தைக் கூறிப் பொதுக்கருத்தைப் பெற வைத்திருப்பதால் இது வேற்றுப் பொருள் வைப்பணியின் பாற்படும். இராவணனுக்கு முன்பு இருந்த வலிமை, அகழி தூர்க்கப்பட்டிருப்பதால் இன்று இல்லாது போயிற்று. அவன் அற்பமான குரங்கு என்று கருதிய வானரச்சேனை மிகுந்த வலிமைபெற்று அவன் நகருக்குள் புகுந்து அவனுடைய அரணாகிய அகழியையே அழித்து விட்டது. எனவே எத்தகைய செல்வச்செழிப்பிற்கும் ஒருநாள் வறுமை வந்தேதீரும் என்பதும், எத்தகைய வறுமையாளனும் ஒருநாள் செல்வம் பெற்று நல்வாழ்வு வாழ்வான் என்பதும் கருத்து. 'உடைமையும், வறுமையும் ஒரு வழி நில்லா' என்பது வெற்றிவேற்கை.

13. வானரச்சேனை மதிலைக் கைப்பற்றுதல்

தூர்த்த வானரம், சுள்ளி பறித்து இடை,
சீர்த்த பேர் அணைதன்னையும் சிந்தின;
வார்த்தது அன்ன மதிலின் வரம்பு கொண்டு
ஆர்த்த' ஆர்கலி காரொடும் அஞ்சவே; (7112)

(சுள்ளி-மாமரம்; பறித்து-பிடுங்கி; சீர்த்த-சிறப்புடைய; வரம்பு-உச்சி/விளிம்பு; கொண்டு-கைப்பற்றி; ஆர்கலி-கடல்; கார்-மேகம்; ஆர்த்தல்-ஆரவாரித்தல்; வார்த்தல்-உருக்குதல்)

அவ்வாறு அகழியைத் தூர்த்து மேடாக்கிய வானரச்சேனை, அத்தோடு நிற்காமல், பெரிய மாமரங்களையும் பறித்து, அரக்கர்கள் போக்குவரத்திற்காகப் பயன்படுத்திக்கொண்டிருந்தசிறப்புடையபெரியஅணையாகிய - பாலத்தையும் உடைத்துச் சிதறச் செய்தன. மேலும், செம்பினால் உருக்கி வார்த்தாற் போன்ற பெரிய மதிலின் உச்சிமீது ஏறிநின்று அதைக் கைப்பற்றிக் கொண்டு, கடலின் முழக்கமும், மேகத்தின் இடி முழக்கமும் கூடத் தோற்று அச்சம் கொள்ளும்படி, பெருமுழக்கம் செய்து கொண்டு ஆர்ப்பரித்து நின்றன.

'சுள்ளி' என்ற சொல் பெரிய மரங்களைக் குறித்து நின்றது எனக் கொள்க. இன்று வழங்கப்பெறும் சாதாரணப் பொருளில் வழங்கப்படவில்லை என்பதறிக. 'அணை' என்பது இங்கே அரக்கர்கள் போக்குவரத்திற்காகப் பயன்படுத்திய பாலத்தைக் குறித்து நின்றது என்க. 'வார்த்தது' என்பது 'செம்பிட்டுச் செய்த இஞ்சித் திருநகர்' என்று 'கும்பிட்டு வாழ்கிலா தானாகிய கும்பகர்ணன் வாக்கால் கூறியதை இங்கு நினைவுகூர்க. 'வரம்பு' என்பது உச்சி - சிகரத்தைக் குறிக்கும்.

Koviloor Digital Library

14. வட்ட மேரு இது என, வான் முகடு
எட்ட நீண்ட மதில் மிசை ஏறி, விண்
தொட்ட வானரம், தோன்றின மீத்தொக
விட்ட வெண்கொடி வீங்கின என்னவே. (7113)

(முகடு-உச்சி; மிசை-மீது; மீ-மேலே; தொக-சேர/திரளுமாறு; வீங்குதல்-வளர்தல்/மிகுதல்; நீண்ட-உயர்ந்த; எட்ட-தீண்டும்படி)

மேருமலைதான் வட்டவடிவமாக இருக்கிறதோ என்று காண்பவர் கருதும்படி, வானரச்சேனை, வானத்தின் உச்சி அளவு நீண்டு உயர்ந்திருக்கின்ற இலங்கை மாநகரின் மதிற் சுவற்றின் மீது ஏறி, விண்ணுலகையும் தொட்டுவிட்டது போல் தோன்றின. அங்கே அவைகள் ஒருசேரத் திரண்டு நின்றிருந்த தோற்றம், இலங்கையின் வெண்கொற்றக் கொடிகள் பலவாகத் தொங்கவிடப்பட்டு மிகுந்து விளங்குவன போலத் தோற்றமளித்தது.

வானரங்கள் வெண்மை நிறமுடையன; அவை இலங்கையைச் சுற்றி நின்ற தோற்றம், மேருமலையே வட்டவடிவமாகி நின்றது போலத் தோன்றியது. மேலும் அவை மதிலின் உச்சியில் நின்ற தோற்றம் மிகுதியான வெண்கொற்றக் கொடிகள் நிறைந்து நிற்பனபோலத் தோன்றியது. 'வான்முகடு எட்ட நீண்ட மதில்' என இலங்கையின் மதிற் சிறப்பும், உயர்ச்சியும், பேசப்பட்டது என்க. வானரங்கள் வெள்ளைக் கொடிகளுக்கு நிறத்தால் உவமை; வட்டமேரு, மதிலைச் சுற்றி வளைந்து நின்ற வானரச்சேனைக்கு உவமை. மதில் இலங்கையைச் சுற்றி வட்டமாக அமைந்துள்ளது என்பது தெரிகிறது.

15. இலங்கை மதில் தரையில் அழுந்திப்போதல்

இறுக்க வேண்டுவதில்லை; எண்தீர் மணி
வெறுக்கை ஓங்கிய மேரு விழுக் கலால்
நிறுக்க, நேர்வரும் வீரர் நெருக்கலால்,
பொறுக்கலாது, மதிள் தரை புக்கதால். (7114)

(எண்-எண்ணுதல்/மதித்தல்; வெறுக்கை-செல்வம்; ஓங்கிய-உயர்ந்த; விழு-சிறந்த; கலால்-எடைக்கல்லால்; நேர்-ஒப்பு; புக்கது-அழுந்தியது; இறுத்தல்-உடைத்து எறிதல்; நெருக்கல்-அழுத்துதல்)

விலைமதிப்பற்ற மாணிக்கங்களால் நிறையப்பெற்ற செல்வம் நிறைந்தோங்கிய மேருமலை என்னும் சிறந்த எடைக்கல்லால் நிறுத்தால், அதற்கு நிகராக இருப்பர் வானரவீரர்கள். அவர்கள் மதிலின்மீது ஏறி நெருக்கி அழுத்திக் கொண்டிருப்பதால், அவர்களின் சுமை தாங்க மாட்டாமல், அம்மதில் சுவர்கள் தானே தரையில் அழுந்திப்போயின.

Koviloor Digital Library

அவை தானே நிலத்தில் அழுந்தியதால், வானரர்கள் அம்மதிலை இடித்து அழிக்க வேண்டிய அவசியம் இல்லாது போயிற்று.

'எண் தீர்' என்பது விலை மதிக்கமுடியாத என்ற பொருளைத்தரும். ஒரு தராசில் ஒரு பக்கத்தில் பொன்னும், மணியும் நிறைந்த மேருமலையையும், இன்னொரு தட்டில் இவ்வானரச் சேனையையும் நிறுத்தி எடையை அளந்து பார்த்தால், இரண்டும் ஒன்றுக்கொன்று நிகராகவே இருக்கும். எனினும் ஒவ்வொரு வானரமும் ஒவ்வொரு மேருமலைக்குத் தோற்றத்தால் ஒப்பு எனக்கொள்க. வானரவீரர்களின் தட்டே கீழே தாழ்ந்து நிற்கும். இவ்வானரச்சேனை எல்லாம் மதிலின்மேல் ஏறி நின்று ஆர்ப்பாட்டம் செய்ததனால், இவைகளின் சுமை தாங்காமல் அம்மதிற் சுவர்கள் தானே இடிந்து விழுந்து தரைமட்டமாயின என்பதால், வானரச் சேனையின் மிகுதியும், ஆற்றலும் கூறப்பட்டது என்க. எனவே இராமன் கட்டளைப்படி, மதிற்சுவற்றை வானரங்கள் தனியாக இடித்து உடைக்க வேண்டும் என்பது இல்லாமற்போயிற்று. இப்பாடல் உயர்வுநவிற்சி அணியின்பாற்படும். 'விழுக் கல்' என்பது சிறந்த எடைக்கல் என்ற பொருளைத்தரும்.

16. அரக்கர் சேனை போருக்கு எழுதல்

அறைந்த மாமுரசு; ஆனைப் பதாகையால்
மறைந்தவால் நெடுவானகம்; மாதிரம்
குறைந்த, தூளிகுழுமி; விண்ணூடு புக்கு
உறைந்தது, ஆங்கு அவர் போர்க்கு எழும் ஓதையே. (7115)

(மா-பெரிய; அறைதல்-அடிக்கப்படுதல்; ஆனை-யானை; பதாகை-கொடிகள்; தூளி-புழுதி; குழுமுதல்-நெருங்குதல்; மாதிரம்-திசைகள்; குறைதல்-குறுகித்தோன்றுதல்; ஓதை-ஓசை; உறைதல்-தங்குதல்)

இவ்வாறு அப்பகுதியில் வானரச்சேனை போருக்கு எழுந்தபோது, இங்கே இலங்கையில் பெரிய போர் முரசங்கள் முழங்கப்பட்டன; யானைகள், பெரிய கொடிகளை ஏந்தி நின்றதனால் வானத்தின் இடமே மறைந்ததுபோலக் காணப்பட்டது; திசைகள் எல்லாம் நால்வகைப் படைகளும் எழுந்ததனால் உண்டாகிய நெருங்கிய தூசிகளால் மறைந்துபோனது; அரக்கர்கள் போருக்கு எழுந்தபோது செய்த போர் முழக்கத்தினால், அது ஆகாயத்தில் சென்று அங்கேயே தங்குவதாயிற்று.

முரசறைந்து பறையறிவிப்பவர்கள் வள்ளுவர் எனப்படுவர்; நால்வகைப் படையும் ஏககாலத்தில் நெருங்கிக் குழுமின என்பது பொருள். 'ஆனைப்பதாகையால் மறைந்த நெடு வானகம்' என்பதால், கொடிகளின் உயர்ச்சி சிறப்பிக்கப்பட்டது. யானையின்மீது முரசை வைத்து, நகரமக்களுக்குச் செய்தி தெரிவிப்பதும், அவற்றின் மீது கொடி ஏந்திச் செல்லுதலும் பண்டைக்காலத்து மரபு.

Koviloor Digital Library

17. கோடு அலம்பின; கோதை அலம்பின;
ஆடல் அம்பரித் தாரும் அலம்பின;
மாடு அலம்பின, மாமணித்தேர்; மணி
பாடு அலம்பின, பாய்மத யானையே. (7116)

(அலம்புதல்-ஒலித்தல்; கோடு-ஊதுகொம்புகள்/சங்குகள்; கோதை-முத்தாரங்கள்; அம்-அழகிய; தார்-மாலை/கிண்கிணிமாலை; மணி-இரத்தினம்; மாடு-பக்கம்; பாய்தல்-பெருகுதல்; அலம்புதல்-பிளிறுதல்; பாடு-பெருமிதம்; ஆடல்-வலிமை)

நால்வகைப் படைகளும் போருக்கு எழுந்தபோது, சங்குகளும், ஊது கொம்புகளும் ஒலிக்கப்பட்டன; காலாட்படையினர் தம் கழுத்தில் அணிந்திருந்த முத்தாரங்கள் ஒலி செய்தன; வலிமை பெற்ற, ஆடல் அசைவுகள் கொண்ட அழகிய குதிரைப்படைகள் கழுத்தில் அணிந்திருக்கும் கிண்கிணி மாலையும் ஒலியெழுப்பின; சிறந்த அழகிய மணிகள் பதிக்கப்பெற்ற தேர்களும் பக்கத்தே ஒலி செய்யலாயின; மதம் பெருக்குகின்ற யானைகளும், தமக்குப் போர்செய்ய வாய்ப்புக் கிடைத்ததே என்ற பெருமிதத்தால் பிளிறின.

ஒரேபாடலில் ஒரேசொல்லை ஒரேபொருளில் பலமுறை பயன்படுத்தியிருக்கும் கவிஞனின் கவித்திறம் நோக்குக. எனினும் ஓசைகள் வெவ்வேறானவை என்பதையும் நினைவிற்கொள்க. 'ஆடல் அம்பரி' என்ற சொல்லுக்கு, போர்முரசு, ஊதுகொம்பு ஆகியவை எழுப்பிய ஒலிக்கு ஏற்ப ஆடிச்செல்லும் அழகிய குதிரை எனவும் பொருள் கொள்ளலாம் - கோதையும், தாரும், மாலை என ஒரே பொருளைத் தந்தாலும், இவ்விரண்டிற்கும் சிறு வேறுபாடுகள் உண்டென்பதையும் அறிக. 'கோடு சங்கு, ஊதுகொம்பு, மரக்கொம்பு, விலங்கின் கொம்பு' என்பது நிகண்டு; மணி என்ற ஒரு சொல், ஒளி என்ற பொருளையும், ஒலி என்ற பொருளையும் தருவதை உணர்க.

18. இரண்டு சேனைகளும் போர்செய்யத் தொடங்குதல்

அரக்கர் தொல்குலம் வேர்அற, அல்லவர்
வருக்கம் யாவையும் வாழ்வுஉற, வந்தது ஓர்
கருக்கொள் காலம் விதிகொடு காட்டிட,
தருக்கி உற்று, எதிர் தாக்கின தானையே. (7117)

(தொல்-தொன்மையான/பழமையான; வருக்கம்-வர்க்கம்/இனம்; கருக்கொள்காலம்-சகுனம்/நல்லநேரம்/நிமித்தம்; தருக்கு-செருக்கு; தானை-சேனை; வேர்-அடி/சுவடு)

மிகப்பழமை வாய்ந்த அரக்கர் குலமே வேரோடு அழிந்துபோகுமாறும், அரக்கரல்லாத மற்ற, தேவர்கள், மானிடர்கள் போன்ற

Koviloor Digital Library

உயிரினங்களின் தொகுதிகள் யாவும் நல்வாழ்வு பெறவும், விதியே வந்து, இப்பொழுது ஒரு நல்ல காலத்தைச் சுட்டிக்காட்டியதால், இரு சேனைகளும் தங்களுக்குள் செருக்குக்கொண்டு, ஒன்றையொன்று எதிர்த்துத் தாக்கிக்கொண்டு, போர்செய்யத் தொடங்கின.

இராமாவதாரத்தின் நோக்கம் புலப்படுத்தப்பட்டது. துஷ்ட நிக்ரகம் - அரக்கர் அழிவும், சிஷ்ட பரிபாலனம் - அரக்கரல்லாத மற்ற இனத்தவர் நல்வாழ்வு பெறுதலும். இவ்வாறு நிகழ்வதற்கும் விதியே காரணம் என்று கூறும் கவிஞனின் மனப்பாங்கு உணர்க.

19. போரில் பயன்படுத்திய ஆயுதங்கள்

பல்கொடும், நெடும் பாதவம் பற்றியும்,
கல்கொடும், சென்றது அக்கவியின் கடல்;
வில்கொடும், நெடுவேல் கொடும், வேறு உள
எல்கொடும் படையும் கொண்டது இக்கடல். (7118)

(கவி-குரங்கு/வானரம்; கொடும்-கொண்டும்; பாதவம்-மரங்கள்; எல்-ஒளி; கொடும்-கொடிய; படை-படைக்கலன்கள்/ஆயுதங்கள்)

அந்த வானரச்சேனையாகிய கடல், தங்கள்பால் உள்ள கூரிய பற்களையும், நீண்டு உயர்ந்து, பருத்த மரங்களையும், கல், குன்று, மலைகளைக் கொண்டும் அவ்வரக்கர் சேனையை எதிர்த்துச் சென்றது. ஆனால் அரக்கர்படையோ, தங்கள்பால் விற்படையையும், நீண்ட வேற்படையையும், இவற்றைத்தவிர மற்றுமுள்ள ஒளிபொருந்திய கொடுமையான படைக்கலன்களையும், ஆயுதங்களையும் கொண்டு, வானரச்சேனையை எதிர்க்கச் சென்றது.

குரங்குப் படைக்கு ஆயுதங்கள் அவைகளின் உடல் உறுப்பாகிய பல், கை, கால், வால் முதலியன. மேலும் அருகிலிருக்கும் மரங்களையும், குன்றுகளையும் கொண்டே போர் செய்யலாயின. ஆனால் அரக்கர் படையோ, விற்படை, வேற்படை, மற்றுமுள்ள கொடிய ஆயுதங்களைக் கொண்டும் போர்செய்யச் சென்றன. இங்கே உள்ள ஏற்றத்தாழ்வுகளை நோக்க வேண்டும். ஆயுத பலத்தாலும், எண்ணிக்கையாலும் இரண்டு சேனைகளும் ஒத்தன அல்ல. இருப்பினும் கவிஞன் இரண்டு சேனை களையுமே கடல் என்றே உருவகிக்கிறான் என்பதைக் கருத வேண்டும்.

20. இரண்டு சேனைகளும் போர்புரிதல்

அம்பு கற்களை அள்ளின; அம்பு எலாம்
கொம்புடைப் பணை கூறு உற நூறின;
வம்புடைத் தட மாமரம் மாண்டன,
செம்புகர்ச் சுடர் வேல்கணம் செல்லவே. (7119)

Koviloor Digital Library

(கற்கள்-குன்றுகள்; அள்ளுதல்-அழித்தல்/கைப்பற்றுதல்; கொம்பு-கிளைகள்; பணை-பருத்த; கூறு-துண்டு; நூறுதல்-அழித்தல்; புகர்-புள்ளிகள்; சுடர்-ஒளி; கணம்-கூட்டம்; வம்பு-வாசனை; தட-பெரிய; மா-சிறந்த; மாண்டன-அழிவுற்றன; செல்லுதல்-ஊடுருவிப்பாய்தல்)

அரக்கர்படை செலுத்திய அம்புகள், வானரச்சேனை பற்றியெறிந்த குன்றுகளையெல்லாம் அழித்துத் தூளாக்கின; அந்த அம்புகளை யெல்லாம், வானரப்படையினர் வீசியெறிந்த பருத்த கிளைகளை உடைய பெரிய மரங்கள், இற்றுப் போகும்படி அழித்து ஒழித்தன; சிவந்து நுனியில் இரத்தப் புள்ளிகளை உடைய ஒளிவீசுகின்ற வேற்படையின் கூட்டம் ஊடுருவிச் சென்றதால், நறுமணமுள்ள பெரிய சிறந்த மரங்களெல்லாம் கீழே வீழ்ந்து நொறுங்கிப்போயின.

அம்புகள் குன்றுகளை அழித்தன. அவ்வம்புகளை மரங்கள் பொடியாக்கின; அம்மரங்களை வேற்படை ஊடுருவிச்சென்று அழித்தது என்று ஒன்றோடொன்று தொடர்புபடுத்திப் போர்க்களக் காட்சியைக் கண்முன் கொண்டு வந்து நிறுத்தும் கவிஞனின் கற்பனைத் திறத்தை நோக்குக. 'வம்பு' என்ற சொல் வாசனை, நறுமணம் என்ற பொருளைத் தரும். நமக்கு இது ஒரு புதுச்சொல். 'செம்புகர்' என்பது பகைவரின் இரத்தம் தோய்ந்திருப்பதால், வேற்படையின் நுனியில் இரத்தப் புள்ளிகள் எப்போதும் இருக்கும் என்பதைக் குறிக்கும் என்க. இந்தப் பாடலில் யார் எந்த ஆயுதத்தை உபயோகித்தனர் என்பதைக் கூறாமல், ஆயுதங்களை மட்டும்கூறி யார் என்பதைக் கற்போரே உய்த்துணருமாறு செய்த கவிஞனின் திறன் நோக்குக. வேல்தாக்கி மரங்கள் சிதைந்தன என்பது மற்றொரு நிகழ்ச்சியையும் நினைவுபடுத்துதல் உணரலாம். கந்தபுராணத்தில், முருகப்பெருமான் சூரபன்மனை அழிக்க முற்பட்டான். அப்போது சூரபன்மன் மா மரமாய் எதிரில் நின்றான். முருகப்பெருமான் தன் வேற்படையைச் செலுத்தினான் அது மாமரமாய் நின்ற சூரபன்மனின் நெஞ்சை ஊடுருவிச்சென்று அவனை அழித்தது என்பதையும் நினைவுகூரல் தகும். இங்கே வேற்படை மரங்களை ஊடுருவிச் சென்றது என்னும்போது, நமக்கு, முன்பு இராமபிரானின் விற்படை ஏழுமராமரங் களையும் ஊடுருவிச்சென்றது தானே நினைவிற்கு வருகிறது?

21. மாக்கை வானரவீரர் மலைந்த கல்
தாக்கி, வஞ்சர் தலைகள் தகர்த்தலால்,
நாக்கினூடும், செவியினும், நாகம் வாழ்
மூக்கினூடும், சொரிந்தன, மூளையே. (7120)

(மா-பெரிய; மலைந்த-வீசிய; கல்-குன்றுகள்; தகர்த்தல்-உடைத்தல்/பிளத்தல்; நாக்கு-வாய்; நாகம்-பாம்பு; சொரிதல்-வெளிப்படுதல்; மலைதல்-போர்செய்தல்)

Koviloor Digital Library

நீண்ட, பெரிய கைகளையுடைய வானரச்சேனைகள் போரில் வீசியெறிந்த குன்றுகள் மோதித் தாக்கியதால், வஞ்சர்களாகிய அரக்கரின் தலைகள் உடைந்து இரண்டாகப் பிளந்துபோயின; எனவே அவற்றி லிருந்து வாய்வழியாகவும், காதுவழியாகவும், நாகப்பாம்புகள் வசிக்கின்ற புற்றுப்போலப் பெரிய தொளையுள்ள மூக்கின் வழியாகவும், அவர்களின் மூளைகள் வெளிப்பட்டுச் சிதறின.

வானரவீரர்கள் பெரியமலைகளையும், குன்றுகளையும், பெரிய மரங்களையும் வேரோடு பறித்துத் தூக்கியடிக்கும் வல்லமை பெற்றதால் அவர்களின் கைகள் 'மாக்கை' எனப்பட்டது என்க. உடல் உறுப்புக்களில் தலைப்பாகத்தில் உள்ள மூன்று தொளையுள்ள பகுதியாகிய வாய், காது, மூக்கு, மூன்றின் வழியாகவும் மூளை சிதறியது என்று கூறிய நயம் உணர்க. 'நாக்கு' இங்கு ஆகுபெயராய் வாயைக் குறித்தது என்க.

22. அற்கள் ஓடும் நிறத்த அரக்கர்தம்
விற்கள் ஓடு சரம்பட, வெம் புணீர்
பற்களோடும் சொரிதர, பற்றிய
கற்களோடும் உருண்ட, கவிகளே. (7121)

(அல்-இருள்/இரவு; ஓடுதல்-தோற்றுப்பின்னடைதல்/விரைந்து வருதல்; சரம்-அம்புகள்; வெம்-வெவ்விய/கொதிக்கின்ற; நீர்-இரத்தம்; சொரிதல்-விழுதல்; கவிகள்-வானரங்கள்)

கறுத்த இருள்தொகுதிகூடத் தோற்றோடும்படியான மிகக் கருமையான நிறம் வாய்ந்த அரக்கர்கள். விற்களினின்றும் விரைந்து வெளிப்பட்டு வரும் அம்புகள், குரங்குகளின் மேல் தைக்க, அதனால் ஏற்பட்ட கொதிக்கின்ற புண்களிலிருந்து இரத்தம் பீறிட்டுப் பற்களோடு வெளியே கொட்டவும், தாம் கைக்கொண்டிருக்கின்ற குன்றுகளோடும் குரங்குச் சேனை உருண்டு தரையில் வீழ்ந்தன.

'அல்' என்ற சொல்லுக்கு இரவு என்பது பொருள். இங்கே கரிய இரவான இருளைக் குறித்து நின்றது. 'அற்கள்' என்பது அல்+கள் எனப்பிரிந்து பலதரப்பட்ட, மிக்க இருள் என்று கருமையின் மிகுதியைக் குறித்தது என்க. இரத்தம் சொரியப் பற்கள் வீழக் குரங்குகள் மலைகளோடும் தரையில் விழுந்து உருண்டன என்பதாம். 'துன்இருள் ஒருவழித் தொக்கதாம்' என முன்னர்க் கூறியதையும் நினைவுகூர்க.

23. நின்று மேரு நெடு மதில் நெற்றியின்
வெற்றி வானரவீரர் விசைத்த கல்
சென்று, தீயவர் ஆர்உயிர் சிந்தின,
குன்றின் வீழும் உருமின் குழுவினே. (7122)

Koviloor Digital Library

(நெடு-உயர்ந்த; நெற்றி-உச்சி; வென்றி-வெற்றி; விசைத்த-வீசிய; உருமு-இடி; குழு-கூட்டம்; தீயவர்-அரக்கர்; சிந்துதல்-போக்குதல்; விசை-வேகம்; ஆர்-அருமையான)

வெற்றிபொருந்திய வானரச்சேனை வீரர்கள், மேருமலை போன்று உயர்ந்த மதிலின் உச்சியில் நின்று கொண்டு, வேகமாக வீசியெறிந்த மலைக்குன்றுகள் மலையில் விழும் பேரிடிக்கூட்டம் போலச்சென்று, தீயவர்களாகிய கொடிய அரக்கர்களின் அருமையான உயிரைப் போக்கின. அரக்கர்கள் மாண்டனர்.

'மேரு நெடு மதில்' என்பது இலங்கை மாநகரத்து மதிலின் உயரத்தையும், அகலத்தையும், அசைக்கலாகாத் தன்மையையும் ஒருசேரச் சொல்லியதாம். தீயவர் என்றாலும், அவர்க்கு அது ஆர்உயிர் என்று கூறிய பாங்கு நோக்குக. அரக்கர்களுக்குக் குன்றுகளும், குரங்குச்சேனை எறிந்த குன்றுகளுக்குப் பேரிடியும் உவமை.

24. எதிர்த்த வானரம் மாக் கையோடு இற்றன;
மதில் புறங்கண்டு, மண்ணில் மறைந்தன;
கதிர்க் கொடுங்கண் அரக்கர் கரங்களால்
விதிர்த்து எறிந்த விளங்கு இலை வேலினே. (7123)

(கதிர்-ஒளி/சூரியன்; விதிர்த்து-அசைந்து; விளங்கு-ஒளிபொருந்திய; புறங்கண்டு-வீழ்ந்து; இற்றன-அழிந்தன)

சூரியன் போன்று மிகுந்த ஒளியும், கடுமையும் கொண்ட கண்களையுடைய அரக்கர்கள் தங்கள் கைகளை அசைத்து வீசிய, ஒளிர்கின்ற முத்தலை வேலினால், அவர்களை மதில்மேல் நின்று எதிர்த்துப் போர்செய்த வானரச்சேனையில் சில, தமது பெரிய கைகளும்,உடல்களும் அரியப்பெற்று, மதிலின் புறத்தே தள்ளப்பட்டு, மண்ணில் வீழ்ந்து மறைந்துபோயின.

'மாக்கை' என்பது பெரிய கைகளையுடைய குரங்குகள் எனப் பொருள் தரும். 'மதில்புறம்' என்பது மதிலுக்கு வெளியே என்று பொருள்படும். வேல் இலை வடிவானது என்பதால், 'இலைவேல்' எனப்பட்டது என்க.

25. கடித்த, குத்தின, கையின் கழுத்து அறப்
பிடித்த, வள் உகிரால் பிளவு ஆக்கின,
இடித்த, எற்றின, எண்இல் அரக்கரை
முடித்த, வானரம் வெஞ்சினம் முற்றின. (7124)

(வெஞ்சினம்-கொடிய கோபம்; முற்றுதல்-முதிர்தல்; வள்உகிர்-கூரிய நகங்கள்; எற்றுதல்-மோதுதல்; முடித்தல்-கொல்லுதல்)

Koviloor Digital Library

கடுஞ்சினம் கொண்ட வானரச் சேனை, அரக்கர்களைத் தம் பற்களால் கடித்தும், கைகளால் குத்தியும், கழுத்து அறும்படியாகப் பிடித்து நசுக்கியும், கூரிய நகங்களால் உடலை இரு கூறாக்கியும், முட்டிகளினால் இடித்தும், கால்களால் உதைத்துத் தாக்கியும், கணக்கற்ற அரக்கர்களின் உயிரைப் போக்கின.

குரங்கின் போர்க்களக் காட்சியைக் கண்முன் கொண்டுவந்து நிறுத்தி விடுகிறான் கவிஞன்.

26. எறிந்தும், எய்தும், எழுமுளைத் தண்டு கொண்டு
அறைந்தும், வெவ்அயில் ஆகத்து அழுத்தியும்,
நிறைந்த வெங்கண் அரக்கர் நெருங்கலால்,
குறைந்த, வானர வீரர் குழுக்களே. (7125)

(வெம்-கொடிய; எறிந்து-வீசி; எழு-தூண்; தண்டு-தண்டாயுதம்; அறைதல்-தாக்குதல்; வெவ்-கொடிய; அயில்-வேல்; ஆகம்-மார்பு/ உடம்பு; நெருக்குதல்-வருத்துதல்; குழு-கூட்டம்; முளை-மூங்கில்)

கொடுமை நிறைந்த கண்களையுடைய அரக்கர்கள், எறி ஆயுதங்களைக் கொண்டு வீசியும், அம்புகளைச் செலுத்தியும், இரும்புத்தூண் போன்ற மூங்கில்கோல்கள் கொண்டும், தண்டாயுதத்தைக் கொண்டு தாக்கியும், கொடுமையான வேற்படை கொண்டு அவ்வானர வீரர்களின் மார்பிலும் உடலிலும் அழுந்தப்பாயுமாறு செய்தும், மிக நெருங்கிப் போர் செய்து வருத்தியதால், வானரச்சேனை தன் கூட்டத்தின் அளவில் குறைய ஆரம்பித்தன. பல வானரங்கள் மாண்டுபோயின.

எறிபடை என்பது தோமரம் முதலிய படைக்கலன்கள்; எய்படை என்பது அம்பினைக் குறிக்கும். வேல், வில், இரும்புத்தூண், தண்டாயுதம், கதை முதலிய ஆயுதங்களைக் கொண்டு அரக்கர்கள் போர்புரிந்ததனால், வானரக்கூட்டம் தாக்குப் பிடிக்கமுடியாது மாண்டுபோயின என்பதாம். 'நிறைந்த வெங்கண் அரக்கர்' 'குறைந்த வானரவீரர் குழுக்கள்' என்ற சொற்றொடர்களில் ஒரு நயமான முரண்பாடு உணர்க.

27. போர்க்களக் காட்சி

செப்பின் செம்புனல் தோய்ந்த செம்பொன் மதில்,
துப்பின் செய்தது போன்றது, சூழ்வரை;
குப்புற்று ஈர்பிணக் குன்று சுமந்து கொண்டு,
உப்பின் சென்றது, உதிரத்து ஒழுக்கமே. (7126)

(செப்பு-செம்பு உருக்கு; செம்புனல்-சிவந்த இரத்தம்; துப்பு-பவழம்; சூழ்-வளைந்த; வரை-மலை; ஒழுக்கம்-ஆறு; குன்று-மலை; குப்புற்று-தலைவளைத்து; உப்பு-உப்புக்கடல்)

Koviloor Digital Library

இயற்கையிலேயே செம்பினாலும் சிறந்த சிவந்த பொன்னினாலும் உருக்கப்பட்ட உலோகத்தால் இயற்றப்பட்ட மதில் சுவர்கள், இப்போது இருபடைகளும் போர்புரிவதால், அவற்றினின்றும் பெருகிய இரத்தம் அம்மதில்களில் பட்டுத் தோய்ந்து, சிவந்த நிறம் காட்டியதால் இப்பொழுது அவர்களின் பிணக்குவியல் சிறந்த பவழத்தால் செய்யப் பட்ட வளைந்த மலைபோலத் தோற்றமளித்தது. அவ்வாறு தலைகீழாக விழுந்து கிடந்த பிணமலையைச் சுமந்து கொண்டு, அவர்கள் உடலினின்று வெளிப்பட்ட இரத்தப்பெருக்கே, ஆறுபோல் தோற்ற மளித்து, அது அவைகளை இழுத்துக்கொண்டு, உப்புச்சுவையுடைய நீரையுடைய கடலுக்குள் சென்று சேர்ந்தது.

இலங்கை மாநகரமதில்கள் செம்பொன்னாலும், செப்பினாலும் உருக்கி வார்க்கப்பட்டது என்பது நாம் அறிந்ததே. இப்பொழுது இவ்வரக்கர்களும் வானரங்களும் மிக்க போர் செய்ததால் மடிந்துபோன அவர்களின் பிணக்குவியலிலிருந்து பீறிட்டு வெளிப்பட்ட இரத்தப்பெருக்கு, அந்த மதிலின்மேல் பட்டுத் தோய்ந்திருப்பதால் அம்மதில் சுவர்கள், ஏதோ சிவந்த சிறந்த பவழத்தால் ஆன வளைந்த மலைபோலத் தோற்றம் அளித்தது என்பதாம். அங்கே கிடந்த பிணக்குவியல்களை இழுத்துக் கொண்டு அந்த இரத்த ஆற்று வெள்ளம், உவர்க்கடலைச் சென்று சேர்ந்தது என்பதாம். இங்கே 'உப்பு' என்பது உப்புச்சுவையுடைய நீரையுடைய கடலைக் குறித்து நின்றது. இரத்தப் பெருக்கின் மிகுதி புலப்படுத்தப் பட்டது.

28. வந்து இரைத்த பறவை மயங்கின,
அந்தரத்தில் நெருங்கலின், அங்கு ஒரு
பந்தர் பெற்றது போன்றது, பற்றுதல்
இந்திரற்கும் அரிய இலங்கையே. (7127)

(இரைத்த-சப்தம் செய்த/ஆரவாரித்த; மயங்குதல்-கலத்தல்; அந்தரம்-ஆகாயம்; பந்தர்-பந்தல்)

தேவர்தலைவனான தேவேந்திரனாலேயே கைப்பற்ற முடியாத இவ்விலங்கை மாநகரத்தின்மீது, இப்பொழுது குவிந்து கிடக்கின்ற பிணக்குவியல்களைத் தின்பதற்காகக் கலந்து கூடியிருக்கின்ற பலவகைப் பட்ட பறவைக்கூட்டங்கள் பெருங்கூச்சலிட்டுக் கொண்டு ஆகாயத் தையே மறைக்கும் வண்ணம் இடைவெளியேயின்றி, சரக்கூடம் கட்டியது போன்று பந்தல் வேய்ந்து நின்றன.

தேவேந்திரனால் வாய் திறந்து பேசக்கூட முடியாத இலங்கை மாநகரில் பறவைக்கூட்டங்கள் துணிவுடனே வந்து கூச்சலிட்டுக் கொண்டு நின்றன் என்பது இப்பாடலின் ஒரு சிறப்புப்பொருள். கீழே கிடக்கும் அரக்கர் பிணங்களைப் பார்த்து, தேவர்களின் தலைவனான இந்திரனும்,

Koviloor Digital Library

தேவர்களும் ஏளனம் செய்யக்கூடாதே என்று, இராவணன்பால் இரக்கம் கொண்டு, அவ்வாறு பந்தல் வேய்ந்தது போன்று நின்று அந்தப் பறவைகள் பிணக்குவியல்களை மறைத்துக் கொண்டு நின்றன என்பது மற்றொரு சிறப்புப் பொருள். கழுகு, காக்கை போன்ற பலவகைப்பட்ட பறவைகள் வந்து தம்முள் ஒன்றுகூடிக் கூச்சலிட்டதால் 'இரைத்த பறவை மயங்கின' எனப் பன்மையில் கூறினார் என்க. இவ்வாறு முன்பு விசுவாமித்திரரின் யாகத்தைப் பாதுகாத்து வந்த இராமஇலக்குவர், யாக குண்டத்தைச் சுற்றிச் சரக்கூடம் அமைத்ததையும், பின்னர் போர்க்களத்தில் சுக்கிரீவன் உடலை எடுத்துச்செல்ல முடியாதவாறு இராமன்மேலும் ஒரு சரக்கூடம் அமைக்கப் போவதையும் இங்கு நினைவு கொள்ளல் தகும்.

29. தங்கு வெங்கனல் ஒத்துத் தயங்கிய
பொங்கு வெங்குருதிப் புனல் செக்கர்முன்,
கங்குல் அன்ன கவந்தமும் கையெடுத்து
அங்கும் இங்கும் நின்று ஆடினவாம் அரோ! (7128)

(தயங்கிய-விளங்கிய; செக்கர்-செவ்வானம்; கங்குல்-இருள்/இருட்டு; கவந்தம்-தலையற்ற முண்டம்/உடற்குறை; எடுத்து-உயர்த்தி)

குவிந்து கிடக்கின்ற, நிலைபெற்றிருக்கின்ற கொடிய நெருப்பைப் போல் ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்ற, ஓங்கி எழுந்த வெப்பம் மிக்க இரத்தப்பெருக்கு சிவந்த அந்திவானத்தைப் போன்றது. அதன் முன்னால் தோன்றும் கரிய இருட்டைப்போல, அரக்கர்களின் தலையற்ற முண்டங்களும், தம் கைகளை உயரே தூக்கி, அங்கும் இங்கும் சென்று ஆடலாயின.

பொங்கு வெங்குருதிப் புனலுக்குச் செக்கர்வானம் உவமை. கரிய கங்குலுக்குக் கரிய உடல்கொண்ட அரக்கர்களின் கவந்தம் உவமை; கவந்தம் எப்பொழுது ஆடும் என்பதை முன்னரும் நாம் கண்டிருக்கிறோம். 'பேர் ஒத்த ஆயிரம் பேர் மடிந்தால், பிறக்கும் கவந்தம்; நேர் ஒத்து ஆடும்' என்பது திருவரங்கமாலை 'கவந்தம்' என்ற வடசொல்லுக்கு தலையற்ற உடல் என்பது பொருள். சிவந்த குருதிப்புனல் முன், கரிய கவந்தம் ஆடுதல், செவ்வானத்தின் முன் கங்குல் போன்று தோன்றிற்று என்பதாம்.

30. கொன்நிறக் குருதிக் குடைப் புட்களின்
தொல்நிறச் சிறையில் துளி தூவலால்,
பல்நிறத்துப் பதாகைப் பரப்பெலாம்
செந்நிறத்தனவாய், நிறம் தீர்ந்தவே. (7129)

(கொன்-கொல்லும்/அச்சத்தை விளைவிக்கும்; குடைதல்-மூழ்குதல்; புள்-பறவை; தொல்-பழமையான; சிறை-சிறகுகள்; தூவல்-சிந்துதல்; பதாகை-கொடிகள்; தீர்ந்த-நீங்கின; துளி-திவலை; பரப்பு-கூட்டம்)

Koviloor Digital Library

காண்போர்க்கு அச்சம் விளைவிக்கக் கூடிய சிவந்த நிற இரத்த வெள்ளத்தில் மூழ்கி எழுந்த பறவைகள், வானத்தில் பறக்கும்போது, அவற்றின் பழைய நிறத்தில் படிந்திருக்கின்ற இந்த இரத்தத்துளிகள் சிந்துவதால், அங்கே மேலே பறக்கின்ற இலங்கை மாநகரின் வெற்றிப் பெருங்கொடிகளின் தொகுதி முழுவதும், இந்த இரத்தத்தின் சிவப்பு நிறம் படிந்தது. அதனால், அவை தாம் முன்பு கொண்டிருந்த பலவகையான நிறங்களினின்றும், நீங்கி, ஒரே சிவப்பு நிறக்கொடியாகக் காட்சியளித்தன.

'கொன்' என்ற சொல் அச்சம் என்ற பொருளைத்தரும். 'அச்சம், பயமிலி காலம், பெருமை என்று அப்பால் நான்கே கொன்னைச் சொல்லே' என்பது தொல்காப்பியம்.

31. வானரச்சேனை மதிலினின்றும் கீழ் இறங்குதல்

பொழிந்த சோரிப் புதுப்புனல் பொங்கி மீ
வழிந்த மாமதில் கைவிட்டு, வானரம்,
ஒழிந்த, மேருவின் உம்பர் விட்டு இம்பரின்
இழிந்த மாக்கடல் என்ன, இழிந்ததே. (7130)

(ஒழிதல்-குறைதல்/நீங்குதல்; பொழிந்த-சிந்திய; சோரி-குருதி/இரத்தம்; புனல்-நீர்; மீ-மேலே; மா-பெரிய; உம்பர்-விண்ணுலகு; இம்பர்-நிலஉலகு; இழிதல்-இறங்குதல்)

வானரங்கள் மதில்மீது நின்று போர் செய்கின்றன. அரக்கர் படைதாக்கியதால், உடம்பெல்லாம் புண்ணாகி இரத்தம் புதுப்புனல் போல் வழிகிறது. எனவே வலிமை குறைந்து அம்மதிலை விட்டுக் கீழே இறங்கி வருகின்றன. இதற்கு ஓர் அருமையான உவமை கூறுகிறான் கவிஞன். பிரளய காலத்தில் கடலில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, அது விண்ணுலகுக்கும், மேருமலையின் உச்சிக்கும் செல்லும்; பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக வற்றித் தன் பழைய இடமாகிய கீழேயுள்ள பெரிய கடலை வந்தடையும். அதுபோல இவ்வானரச் சேனையும் மதிலிலிருந்து இறங்கித் தரையிடத்திற்கு வந்து சேர்ந்தன என்கிறான் கவிஞன்.

32. பதனமும், மதிலும், படை நாஞ்சிலும்,
கதன வாயிலும், கட்டும் அட்டாலையும்,
முதல யாவையும் புக்குற்று, முற்றின
விதன வெங்கண் இராக்கதர் வெள்ளமே. (7131)

(விதனம்-விசனம்/துன்பம்; வெம்-கொடிய; பதனம்-மேடை; நாஞ்சில்-ஞாயில்/முடக்குகள்/முழை; கதனம்-கலக்கம்; அட்டாலை-மண்டபம்; முற்றுதல்-நிரம்புதல்; வெள்ளம்-கூட்டம்; கட்டும்- கட்டப் பட்ட)

Koviloor Digital Library

காண்பவர்களுக்கே துன்பத்தை விளைவிக்கக்கூடிய கொடிய கண்களைக் கொண்ட அரக்கர் படைத்தொகுதிகள் எல்லாம், மதிலின்மேல் உள்ள மேடையிலும், மதிலின் மேற்புறத்திலும் ஆயுதங்களை ஏவக்கூடிய ஞாயில் எனப்படும் முழைகளிலும், பகைவர்க்குக் கலக்கத்தை ஏற்படுத்தக் கூடிய கோட்டை வாயிலிலும், மதில்மேல் கட்டப்பட்ட பரண்போன்ற மண்டபங்களிலும், ஆகிய எல்லா இடங்களிலும் நுழைந்து வந்து நிரம்பின.

பதனம், நாஞ்சில், வாயில், அட்டாலை என்பனவெல்லாம் மதில்மேல் அமைந்திருக்கும் சிறுசிறு கட்டடங்கள் எனக்கொள்க. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு போர்த்திறமைக்காகப் பயன்படுத்தப்படும். நாஞ்சில் என்பது மறைந்திருந்து அம்பு செலுத்தப்படும் ஒரு அறைபோன்ற முடுக்குப் போன்ற துளைகள் உள்ள, புழைகள் நிறைந்த அமைப்பு. இதை மூழை என்றும், குருவித்தலை என்றும் அழைப்பர் என்று, முன்பும் நாம் கண்டிருக்கிறோம். கோட்டை வாயிலின் தோற்றமே பகைவர்க்கு அச்சத்தை விளைவிக்கும் என்பதால் 'கதனவாயில்' என்றார் என்க. அட்டாலை' என்பது பரண்போன்ற ஒரு அமைப்பு எனக்கொள்க. 'விதனம்' என்பது விசனம் என்பதன் திரிபு. துன்பம் என்பது பொருள். அட்டாலை என்பது யானையோடு போர்செய்தற்குரிய ஒரு மண்டபம் என்று கூறுகிறது திருவிளையாடற்புராணம்.

33. பாய்ந்த சோரிப் பரவையில் பற்பல
நீந்தி ஏகும், நெருக்கிடைச் செல்வன;
சாய்ந்து சாய்ந்து, சரம்படத் தள்ளலுற்று
ஓய்ந்து வீழ்ந்த, சிலசில ஓடின. (7132)

(சோரி-இரத்தம்; பரவை-கடல்; சரம்-அம்பு; ஓய்ந்து-வலிமை குன்றி/ சோர்ந்து; பட-தைக்க)

அரக்கர்படை மிக நெருக்கி வந்தமையால் வேறிடத்திற்குத் தப்பிச் செல்ல விழைந்த குரங்குகள், போர்க்களத்தில் பெருகிப் பாய்ந்துவந்த இரத்தக் கடலில், அரிதின் முயன்று நீந்திச் செல்ல முற்பட்டன; அதனால் இரத்தக் க்டலில் நெருக்கம் மிகுந்தது. ஆனால் அரக்கர்கள் செலுத்துகின்ற அம்புகள் அவர்கள் உடலில் தைத்தலால், அவை நேராக நீந்திச் செல்ல முடியாமல் சாய்ந்து சாய்ந்தும், ஒன்றை மற்றொன்று தள்ளிக் கொண்டும் விரைந்து சென்றன. சில குரங்குகள் மேற்செல்ல முடியாமல் சோர்ந்து போய் அவ்விரத்தக் கடலுக்குள்ளேயே செயலிழந்து வீழ்ந்து விட்டன. சில குரங்குகள் உயிர்தப்பி ஓடிச்சென்று விட்டன.

'சோரிப்பரவை' என்றது ஒரு அரிய சொல்லாட்சி; இரத்தக்கடல் என்பது நீர்க்கடலுக்கு மாறுபட்டது. பற்பல குரங்குகள் ஏகின; சிற்சில குரங்குகள்ஓடின; சில வீழ்ந்தன; சில ஓய்ந்தன என்று படிப்படியாகக்கூறிய நயம் நோக்குக.

Koviloor Digital Library

34. அரக்கர் சேனையின் ஆரவாரம்

தழிய வானர மாக்கடல் சாய்தலும்,
பொழியும் வெம்படைப் போர்க்கடல் ஆர்த்தவால்,
ஒழியும் காலத்து உலகு ஒரு மூன்றும் ஒத்து
அழியும் மாக்கடல் ஆர்ப்பெடுத்து என்னவே. (7133)

(தழிய-தழுவிய; சாய்தல்-ஒடுங்கி இறத்தல்; ஒத்து-ஒருசேர; காலம்-ஊழியிறுதிக்காலம்)

அவ்வாறு மதிலைத் தழுவியிருந்த வானரச்சேனைக் கடல், வலி குறைந்து மதிலின்றும் கீழிறங்கியதும், கொடிய படைக்கலன்களைப் பொழிந்து கொண்டு போர்புரியும் அரக்கர் சேனைக்கடல், எல்லாம் அழியும், ஊழியிறுதிக்காலத்தில், மேல், நடு, கீழ், என்று கூறப்படும் இம்மூவுலகங்களும் ஒருசேர அழிவதற்குக் காரணமான ஏழுகடல்களும் ஒருசேரப் பெரு முழக்கம் செய்வதைப் போல, பேராரவாரம் செய்தது.

வானரச்சேனை வலிகுறைந்து மதிலை விட்டுக் கீழே இறங்கியது கண்ட இராக்கதர்படை, மகிழ்ச்சி மிகுதியால் இகழ்ந்து செய்த ஆரவாரத்தை, ஊழியிறுதிக்காலத்தில் ஏழு கடல்களும், ஒருசேர எழுப்பும் பேரொலி முழக்கத்திற்கு உவமை கூறினார் என்க. 'தழிய' என்பது தழுவிய என்பதன் விகாரம். வானரச்சேனையை மாக்கடல் என்றதற்கேற்ப, அரக்கர் சேனையைப் போர்க்கடல் என்றார் என்க. நான்காம் அடியில் உள்ள 'மாக்கடல்' ஏழுபெருங்கடலைக் குறிக்கும் என்க. ஊழியிறுதியில் உலகம் கடலால் அழியும் என்பது முன்னோர் துணிபு. 'சாய்தல்' என்பது வலி ஒடுங்கி, மதிலினின்றும் சோர்வுடன் கீழ் இறங்கியதைக் குறிக்கும். 'மாக்கடல் ஆர்ப்பெடுத்தென்னவே, போர்க்கடல் ஆர்த்தவால்' என்ற விடத்துச் சொல் நயம் உணர்க.

35. முரசும், மாமுருடும், முரல் சங்கமும்,
உரைசெய் காளமும், ஆகுளி ஓசையும்,
விரைசும் பல் இயம், வில் அரவத்தொடும்
திரைசெய் வேலைக்கு ஓர் ஆகுலம் செய்தவே. (7134)

(முரைசு-முரசு/முரசம்; மா-பெரிய; முருடு-மத்தளம்; சங்கம்-சங்கு; உரை-புகழ்/சிறப்பு; காளம்-எக்காளம்/ஊதுகொம்பு; ஆகுளி-ஒருசிறு பறைக்கருவி; விரைசுதல்-விரசுதல்/கலத்தல்; இயம்-வாத்தியங்கள்; அரவம்-ஒலி/நாண்ஒலி; திரை-அலை; வேலை-கடல்; ஆகுலம்-துன்பம்/இடையூறு/கலக்கம்; முரல்தல்-ஒலித்தல்)

முரசங்களும், பெரிய மத்தளங்களும், ஒலிக்கின்ற இயல்புடைய சங்குகளும், ஆகுளி எனப்படும் ஒரு சிறு பறையும் ஆகிய இக்கருவிகள் ஒன்று கலந்து எழுப்பும் பலவித ஒலியோடு, வில்லில் அம்பைப்

Koviloor Digital Library

பொருத்திச் செலுத்தும்போது உண்டாகின்ற நாண் ஒலியும் சேர்ந்து, வீசுகின்ற அலைகளைஉடைய கடலுக்கு ஒரு பெரிய துன்பத்தைச் செய்து அக்கடலைக் கலக்கமுறச் செய்தன.

முரசு, மத்தளம், சங்கு, எக்காளம், சிறுபறை, பலவகைப்பட்ட வாத்தியங்கள், இவற்றோடு வில்லின் நாண் ஒலியும் சேர்ந்து பேரொலி எழுப்பின. இந்தப் பேரோசை 'ஆர்கலி' என்று தனக்கு மிஞ்சி ஓசை யெழுப்புவர் எவரும் இலர் என்று இறுமாப்புக் கொண்டிருந்த பெரிய கடலுக்குக்கூட ஒரு சிறிது கலக்கத்தை உண்டு பண்ணித் துன்பம் தந்தது என்பதாம். 'முருடு' என்பது பொதுவாக எல்லாப் பறைக்கருவிகளையும் குறிக்கும் எனக்கொள்க. பொதுவாகத் தமிழ் இலக்கியங்களில் முரசு, முரடு, சங்கு என்ற மூன்று வாத்தியங்களும் ஒருசேரவே பேசப் பட்டிருப்ப தைக் காணலாம். 'முரசியம்பின, முருடு அதிர்ந்தன, முறையெழுந்தன பணிலம்' என்பது சிலப்பதிகாரம். 'முரசும், சங்கும், முருடும் ஒலிப்ப' என்பது பெருங்கதை. இந்த வாத்தியங்களின் ஒலி, கடலின் ஒலியைவிட மிக்கிருந்தது என்பது கருத்து.

36. அரக்கர்படை வெளிப்பட்டு வருதல்

ஆயகாலை, அனைத்து உலகும் தரும்
நாயகன் முகம் நாலும் நடந்து என,
மேய சேனை விரிகடல், விண்குலாம்
வாயிலூடு புறப்பட்டு வந்ததே. (7135)

(ஆயகாலை-அப்பொழுது; தருதல்-படைத்தல்; நாயகன்-தலைவன்/ பிரமதேவன்; மேய-பொருந்திய; விண்குலாம்-வானளாவிய; ஊடு-வழியே; முகம்-வாய்)

அப்பொழுது, எல்லா உலகங்களையும் படைத்தவனான தலைவனான பிரமதேவனின் நான்கு முகங்களிலிருந்தும் வெளிப்பட்டுத் தோன்றியது போல, அங்கே அணிவகுத்து நின்ற நால்வகை அரக்கர்படை எனும் பரந்த கடல், வானளாவ உயர்ந்த நான்கு கோபுர வாயில்களினின்றும் வெளிப் பட்டு வந்தது.

இவ்வுலக உயிரினங்கள் அனைத்தும் நான்முகனின் நான்கு முகங்களி லிருந்தும் தோன்றின என்பது ஒரு புராணக்குறிப்பு; பிரமனின் நான்கு முகத்தையும், இலங்கையின் நான்கு கோபுர வாயிலுக்கும் உவமை கூறினான் என்க.

Koviloor Digital Library

37. யானைப்படை

நெடிய காவதம் எட்டும் நிரம்பிய,
படிய வாயில் பருப்பதம் பாய்ந்தென,
கொடியொடும் கொடி சுற்றக் கொடுத்த தண்டு
ஒடிய ஊன்றின, மும்மத ஓங்கலே. (7136)

(ஓங்கல்-மலை/இங்கே யானை; பருப்பதம்-பர்வதம்/மலைகள்; நிரம்பிய-பரவியுள்ள; ஊன்றுதல்-தள்ளிக்கொண்டு செல்லுதல்; ஒடிதல்-முறிதல்; காவதம்-காதம்)

நீண்ட, எட்டுக்காதம் என்று கூறப்படுகின்ற அளவுக்கு நெருங்கிப் பரவி மூன்று மதங்களைப் பொழியும் மலைகளைப்போன்ற யானைப்படைகள், படிகள் பொருந்திய கோபுரவாயிலினின்றும், மலைகள் பாய்ந்து செல்வதைப்போல வெளிவரும்போது, அவற்றின்மீது பொருந்தியிருந்த கொடிச் சீலைகள் நெருக்கியதால் அவை மற்ற யானைகளின்மீது இருக்கின்ற கொடிச்சீலைகளுடன் சுற்றிக் கொண்டதால், ஒன்றை யொன்று முந்திக்கொண்டு செல்வதால் அக்கொடிகள் பிணைத்துக் கட்டப் பட்டிருக்கும் தண்டுகள் ஒடிந்து போயின. எனவே அத்தண்டுகளையும் ஊன்றிக்கொண்டு ஒன்றையொன்று தள்ளிக்கொண்டு வெளிவந்தன.

காவதம் என்பது பத்துமைல் தொலைவு எனக்கொள்ளலாம். அந்த அளவுக்கு நெருங்கி நின்றன யானைப்படைகள் என்று, யானைப் படையின் மிகுதியைக் கூறினார் என்க. மும்மதம் என்பது, யானை, கண், காது, பீஜம் வழியாக மதத்தைச் சொரியும் என்பது கவிமரபு. 'ஓங்கல்' என்பது மலையெனப் பொருள்தரும் என்றாலும் இங்கே மும்மத ஓங்கல் என்றதனால் யானையைக் குறித்தது எனக்கொள்க. 'ஊன்றுதல்' என்பது தள்ளுதல் என்ற பொருளைத்தரும். 'நூக்கல், ஊன்றல், நோன்றல், தள்ளல்' என்பது திவாகர நிகண்டு. கவிஞன் யானையைக் குறிக்கும்போதெல்லாம், மதமலை, நடைமலை, கைம்மலை' என்றே குறித்துப்போவதைக் காப்பியத்தில் பல இடங்களிலும் காணலாம்.

38. தேர்ப்படை

சூழியானை மதம்படு தொய்யலின்,
ஊழிநாள் நெடுங்கால் என ஓடுவ,
பாழி ஆள் வயிரப்படி பல்முறை
பூழி ஆக்கின, பொன் நெடுந் தேர்களே. (7137)

(சூழி-முகபடாம்/நெற்றிப்பட்டம்; தொய்யல்-சேறு; கால்-காற்று; பாழி-வலிமை; படி-நிலம்/பூமி; பூழி-புழுதி; நெடும்-உயர்ந்த; வயிரம்-வன்மை)

Koviloor Digital Library

பொன்னாலாகிய உயர்ந்த சிறப்பு வாய்ந்த தேர்ப்படை, முகபடாம் அணிந்த, மதம் பெருகுகின்ற யானைகள் சிந்திய மதநீர்ப் பெருக்கினால் உண்டாகிய சேற்றில், ஊழியிறுதிக்காலத்தில் வீசும் பெருங்காற்றுப்போல விரைந்து சிதறி ஓடினவாகி, வலிமைமிக்க உறுதிவாய்ந்த இப்பூமியாகிய தரையில், பலமுறை படிந்து அதனைத் தூள்துளாக்கின.

யானைகள் தன் மதநீரால் பூமியைச் சேறாக்கின, அதன்மீது காற்றின் வேகத்தைப்போல ஓடிய தேர்ப்படைகள் அதனைப் புழுதியாக்கி விட்டன என்பதாம். 'சோறுவாக்கிய கொழுங்கஞ்சி, ஆறுபோலப் பரந்து ஒழுகி, ஏறு பொரச் சேறாகித் தேர் ஓடத்துகள் கெழுமி' என்பது பட்டினப்பாலை. 'தறுகண் குன்றம் தடமத அருவி தாழ்ப்ப ஆறுபாய்க் கலினமா விலாழி வழிந்து ஓர் ஆறாய்ச்சேறுமாகித் தேர்கள் ஓடத் துகளுமாய் ஒன்றோடொன்று மாறுமாறாகி' என்ற மிதிலைக் காட்சிப் பாடலும் இங்கு ஒப்பு நோக்கத்தகும்.

39. குதிரைப்படை

பிடித்த வானரம் பேர்எழில் தோள்களால்,
இடித்த மாமதில் ஆடை இலங்கையாள்,
மடுத்த மாக்கடல் வாவும் திரை எலாம்
குடித்துக் கால்வன போன்ற குதிரையே. (7138)

(எழில்-எழுச்சி; மடுத்த-குடித்த; வாவும்-தாவும்; காலுதல்-வெளிப் படுத்துதல்; பிடித்த-முற்றுகையிட்ட; இடித்த-தகர்க்கப்பட்ட; திரை-அலைகள்)

இலங்கை மாநகரின் மதிலை முற்றுகையிட்ட வானரச்சேனை, தனது பெரிய எழுச்சி மிக்க தோள்களால், தகர்த்தெறியப்பட்ட பெரியமதில் என்னும் ஆடையை, இலங்கை மாநகரம் என்னும் பெண், குதித்துச் செல்லும் இயல்புடைய அலைகள் நிறைந்த, கடலிலுள்ள அலைகளை யெல்லாம் முதலில் குடித்துவிட்டுப் பின்னர் அவற்றை வெளிப் படுத்துவது போலத் தோற்றமளித்தது.

'எழில்' என்ற சொல் அழகு என்ற பொருளைத்தராது. 'எழுச்சிமிக்க' என்ற பொருளைத்தரும். பொதுவாக நாடு, நகரம், நதி போன்றவற்றைப் பெண்ணாகக் கூறுவது கவிமரபு. எனவே இங்கே இலங்கைமாநகரை, 'இலங்கையாள்' என்றார் என்க. நாட்டிற்கோ, நகரத்திற்கோ அதனைச் சூழ்ந்துள்ள கடலை ஆடையாகக் கூறுவதும் கவிமரபு என்பதை உணர்க. கோபுர வாயிலினின்றும் தாவி ஓடிவந்த குதிரைப்படைக்கு, இலங்கை என்னும் பெண் கடல்நீரைக் குடித்துவிட்டு இப்போது அதை வெளியிடுவது போலத் தோற்றம் அளிப்பதை உவமையாகக் கூறுகிறார் என்க. தாவிவரும் அலைகளுக்குத் தாவிவரும் குதிரைகள் உவமை. மதில்கள் இடிபட்டதால் வெள்ளநீர் மதில்களின் வழியே நகருக்குள்

Koviloor Digital Library

புகுந்தது. இப்போது அதை அந்நகரம் கக்குவது போன்றிருந்தது என்பது கருத்து.

40. காலாட்படை

கேள் இல் ஞாலம், கிளத்திய தொல்முறை
நாளும் நாளும் நடந்தன நள்இரா,
நீளம் எய்தி, ஒரு சிறை நின்றன,
மீளும் மாலையும் போன்றனர், வீரரே. (7139)

(கேள்-கேழ்/ஒப்பு; கிளத்திய-எழுப்பிய; தொல்-பழமையான; நடந்தன-கழிந்தன; இரா-இரவு; சிறை-பக்கம்; வீரர்-காலாட்படையினர்; மாலை-தன்மை)

ஒப்புயர்வற்ற இவ்வுலகத்தில் தோற்றுவிக்கப்பட்ட பழமையான நெறிமுறையின்படி, நாள்தோறும் ஒலிமிக்க நள்ளிருள் பொழுது கழிந்து கொண்டுதான் வருகிறது. ஆனால் இப்போது இக்கரிய நிறம் கொண்ட அரக்கர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரு படையாக, ஒரு கோபுரத்தின் வாயிலினின்றும் வெளிவருவது, அந்த நல்ல நள்ளிரவுப் போதெல்லாம் ஒன்று சேர்ந்து இலங்கையின் ஒளிக்கு அஞ்சி ஒரு பக்கத்தில் ஒதுங்கி நீளமாக நின்றது போலவும், இப்போது அவையெல்லாம் ஒன்று திரண்டு திரும்பி வருவது போலவும தோன்றுகிறது என்கிறான் கவிஞன்.

'கேழ்' என்பது 'கேள்' என்று எதுகைநோக்கித் திரிந்தது. 'கேழ்' என்ற சொல்லுக்கு ஒப்பு என்பது பொருள். 'நாளும் நாளும்' என்ற அடுக்கு நாள்தோறும், ஒவ்வொரு நாளும் என்ற பொருளைத்தரும். கரிய நிறம் கொண்ட அரக்கர்சேனை ஒருசேர ஒரு வாயிலில் இருந்து வெளிப்பட்டது. அடர்த்தியான பல இரவுப் பொழுதுகள் ஒன்று சேர்ந்து வெளிப்பட்டது போன்றிருந்தது என்பதாம். உலகம் தோன்றிய நாள்தொட்டு வெகு நாட்களாகக் கழிந்துபோன இராப்பொழுதெல்லாம், ஓரிடத்தில் ஒதுங்கித் தங்கியிருந்தவை, இப்போது ஒன்றுகூடி வெளிப்பட்டது போன்றிருந்தது என்பது கருத்து.

41. பத்தி வன்தலைப் பாம்பின் பரம்கெட,
முத்தி நாட்டின் முகட்டினை முற்றுற,
பித்தி பிற்பட, வன்திசை பேர்வுற,
தொத்தி, மீண்டிலவா.ல், நெடுந் தூளியே. (7140)

(தூளி-துகள்/புழுதி; பத்தி-வரிசை; வன்-வலிய; பாம்பு-ஆதிசேஷன்; பரம்-பாரம்/சுமை; கெட-குறையுமாறு; பித்தி-சுவர்/அண்டத்தின் சுவர்; முத்தி நாடு-வானநாடு; முகம்-இடம்; முற்றுதல்-சூழ்ந்திருத்தல்; தொத்துதல்-ஒட்டிக்கொள்ளுதல்; நெடும்-மிக்க; பேர்வுறுதல்-நிலை பெயர்தல்; முகடு-உச்சி)

Koviloor Digital Library

இவ்வாறு வெளிப்பட்டுப் புறப்பட்டு வந்த நால்வகைச் சேனை எழுப்பிய மிக்க புழுதியால் வலிய ஆயிரம் தலைகளை வரிசையாகக் கொண்ட, ஆதிசேஷன் என்னும் பாம்பின் சுமை சற்றுக் குறையலாயிற்று; அந்தப் புழுதியின் தொகுதி வானநாட்டின் உச்சிவரை சென்று சூழ்ந்து கொண்டது; எனவே அண்டத்தின் சுவர் பிற்பட்டுப்போயிற்று. வலிமையான திசைகள் எல்லாம் இடம் விலகிப்பெயரலாயின; அங்கே சென்ற புழுதித்துகள்கள் அங்கேயே ஒட்டிக்கொண்டு நிலத்திற்கு மீண்டும் திரும்பி வாராதவையாயின.

முத்திநாடு என்பது சுவர்க்கலோகத்தையும், பித்தி என்பது அண்டகோளகையையும் குறித்தது. 'புவியோ அரவினுக்கு ஒருதலைப் பாரம்' என்பது ஔவையார் கூற்று. 'கதிகொண்ட சேனை நடவ, எழுதுகள் ககனம் சுலாவிய நிலகதி உற' என்பது வில்லிபாரதம்.

42. வானரச்சேனை நிலைகுலைதல்

நெருக்கி வந்து நிருதர் நெருங்கலால்,
குரக்கினப் பெருந்தானை குலைந்து போய்,
அருக்கன் மாமகன், ஆர் அமர் ஆசையால்,
செருக்கி நின்றவன், நின்றுழிச் சென்றவால். (7141)

(நிருதர்-அரக்கர்; ஆர்-அரிய/நிறைந்த; அமர்-போர்; அருக்கன்-சூரியன்; உழி-இடம்)

அரக்கர்படை மிக நெருக்கமாகத் தம்மை வந்து நெருங்கியதால், குரக்கினத்துப் பெருஞ்சேனை, நிலைகுலைந்து போய், போர்செய்ய வேண்டும் என்ற நிறைந்த அரிய ஆசை கொண்டு, செருக்குக் கொண்டு சூரியனின் சிறந்த புதல்வனாகிய சுக்கிரீவன் நிற்கின்ற இடத்தினைச் சென்று சேர்ந்தன.

அரக்கர் படையின் நெருக்கத்தைத் தாங்கமுடியாத குரக்குச் சேனைகள், தமது தலைவனான சுக்கிரீவன் பெருமிதத்தோடு நின்றிருந்த இடத்தை வந்து அடைந்தன என்பதாம்.

43. சுக்கிரீவன் மரத்தைக் கைக்கொள்ளுதல்

சாய்ந்த தானைத் தளர்வும், சலத்து எதிர்
பாய்ந்த தானைப் பெருமையும், பார்த்து, உறக்
காய்ந்த நெஞ்சன், கனல்சொரி கண்ணினன்,
ஏய்ந்தது அங்கு ஓர் மராமரம் ஏந்தினான். (7142)

Koviloor Digital Library

(சாய்தல்-வலிகுறைதல்; சலம்-கோபம்; உற-மிகவும்; காய்ந்த-சினந்த; சொரிதல்-கக்குதல்; ஏய்ந்தது-கிடந்தது/பொருந்தியது; மராமரம்-வெண்கடம்ப மரம்)

மிகவும் சோர்ந்து தளர்ச்சியுற்று வந்த தனது குரக்குப் படையையும், மிக்க கோபம் கொண்டு எதிர்த்துத் தாவி வருகின்ற அரக்கர் படையின் பெருமிதத்தையும், நன்கு உணர்ந்த சுக்கிரீவன், சினம் கொண்ட நெஞ்சை உடையவனாகவும், நெருப்புப் பொறி பறக்கின்ற கண்களை உடையவனாகவும், அங்கே கிடந்த ஓர் பெரிய வெண்கடம்ப மரத்தைத் தன் கைகளில் பற்றிக்கொண்டான்.

'சாய்தல்' என்பது வலிமை தளர்வுற்றுச் சோர்தலைக் குறிக்கும். 'சலம்' என்பது தணியாக் கோபத்தைக் குறிக்கும்.

44. நால்வகைப் படையையும் எதிர்த்தல்

வாரணத்து எதிர், வாசியின் நேர், வயத்
தேர் முகத்தினில், சேவகர்மேல், செறுத்து,
ஓர் ஒருத்தர்க்கு ஒருவரின் உற்று, உயர்
தோரணத்து ஒருவன் எனத் தோன்றினான். (7143)

(வாரணம்-யானை; வாசி-குதிரை; வய-வலிய; சேவகர்-காலாள்; செறுத்து-சினந்து; எதிர்-நேர்)

சுக்கிரீவன் யானைப்படை, குதிரைப்படை, வெற்றியும் வலிமையும் கொண்ட தேர்ப்படை, வீரம் மிக்க காலாட்படை ஆகியவற்றின் எதிரில் நின்று, மிகச்சினந்து, ஒவ்வொருவருக்கும் எதிரில் ஒவ்வொரு சுக்கிரீவன் நிற்பதுபோல சாரிகை செய்து அவர்களை நெருங்கி, முன்பு இலங்கை மாநகரினை அடைந்து அசோகவனத்தில் உயர்ந்த கோபுர வாயிலின் தோரணவாயிலில் மேல் நின்று தனித்து நின்று போர்செய்து அழித்த ஒப்பற்றவனான அனுமனைப் போலத் தனித்துத் தோன்றினான்.

எதிர், நேர், முகம், மேல், என்பனவெல்லாம் ஒருபொருள் குறித்த பல சொற்கள் எனக்கொள்க. 'தோரணம்' என்பது கோபுரத்தின் அழகிய வாயிலைக் குறிக்கும். முதன்முதலில் அரக்கர்க்கு அச்சத்தை உண்டாக்கிய அனுமனையே இங்கு சுக்கிரீவனுக்கு உவமை கூறியிருப்பதை எண்ணுக. நால்வகைப் படையினையும் ஒரே நேரத்தில், தனித்து, ஒருவனாகவே எதிர்த்து நின்றான் என்று, சுக்கிரீவன் போர்த்திறமை பேசப்பட்டது.

இவ்வாறு சுக்கிரீவன் ஒவ்வொருவர் எதிரிலும் ஒவ்வொரு சுக்கிரீவன் நிற்பதைப் போலத் தோற்றம் தருவதைப் பின்னால் மூலபலவதைப் படலத்தில் கவிஞன் ஒரு அழகான பாடலால் தெரிவிக்கிறான். பாடல் மிக அருமையானது என்பதால், கற்போர் அதை இங்கேயே தெரிந்து கொள்ள வேண்டும். 'முன்னே உளன்; பின்னே உளன்; முகத்தே உளன்; தன் அகத்தின்

Koviloor Digital Library

தன்னே உளன்; மருங்கே உளன்; தலைமேல் உளன்; மலைமேல் கொன்னே உளன்; நிலத்தே உளன்; விசும்பே உளன்; கொடியோர் என்னே ஒரு கருப்பு என்றிட''' என்பது பாடல்பகுதி. 'தோரணவாயில்' என்பது அலங்காரமாக அமைக்கப்பட்ட கோட்டை அல்லது கோபுர வாயில் அல்லது நகர வாயில் எனக்கொள்க.

45. களிறும், மாவும், நிருதரும், கால்அற,
ஒளிரும் மாமணித் தேரும் உருட்டி, வெங்
குளிறு சோரி ஒழுக, கொதித்து, இடை
வெளிறு இலா மரமே கொண்டு, வீசினான். (7144)

(களிறு-யானை; மா-குதிரை; நிருதர்-அரக்கர்; மணி-இரத்தினம்; வெம்-வெப்பம்; சோரி-இரத்தம்/குருதி; கொதித்து-சினந்து; இடை-நடுவே; வீசுதல்-தாக்குதல்; ஒளிறும்-விளங்குகின்ற; குளிறுதல்-ஒலித்தல்)

யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை முதலானவைகளின் கால்களெல்லாம் முறிந்து விழும்படியும், ஒளி மிக்கு விளங்குகின்ற இரத்தினங்கள்பதிக்கப்பெற்ற தேர்ப்படையையும்தலைகீழாய்க்கவிழ்த்து உருளச்செய்து, கொடிய ஒலியைக் கொண்ட இரத்தம் பீறிட்டு வெளி வருமாறு மிகவும் சினந்து, இடையில் வெற்றிடமேயில்லாத, முழுவதும் வயிரம் பாய்ந்த வலிமையான அந்த மராமரத்தைக் கொண்டே அத்தனை படையையும் மோதித் தாக்கினான் சுக்கிரீவன்.

'வெளிறு' என்ற சொல் வெற்றிடம் என்ற பொருளைத்தரும். வேறு எந்த ஆயுதமும் இல்லாது அந்த ஒரே மராமரத்தைக் கொண்டு, நால்வகைப் படையையும், எதிர்த்துத் தாக்கினான் எனச் சுக்கிரீவன் போராற்றல் பேசப்பட்டது. 'மரமே' என்பதில் ஏகாரம் பிரிநிலை. 'மா' என்பது பொதுவாக விலங்குகளைக் குறிக்கும் பொதுச்சொல் என்றாலும், இங்கே இடம் நோக்கிக் குதிரை எனவே பொருள் கொள்ளப்பட்டது.

46. அன்னகாலை, அரிக்குல வீரரும்
மன்னன் முன்புக, வன்கண் அரக்கரும்
முன் உழந்த முழங்கு பெரும் செருத்
தன்னில் வந்து, தலை மயக்குற்றனர். (7145)

(அரி-குரங்கு; புகுதல்-சேர்தல்; வன்கண்-தறுகண்மை/கொடிய; உழந்த-வருந்திச்செய்த; செரு-போர்; தலைமயங்குதல்-கலந்து கொள்ளுதல்; அன்னகாலை-அப்பொழுது)

அப்பொழுது சோர்ந்துபோன குரக்கினத்து வீரர்களும், தங்கள் மன்னனாகிய சுக்கிரீவன் முன்பு வந்து சேர்ந்தனர். அவர்களைத் தொடர்ந்து

Koviloor Digital Library

கொடிய கண்களையுடைய அரக்க வீரர்களும், முன்பு தாம் வருந்திப் போர் முழக்கம் செய்த போர்க்களத்தில் இப்போது வந்து கலந்து கொண்டனர்.

அரக்கரும், வானரச்சேனையும் இப்பொழுது மீண்டும் போர்க்களத்தில் வந்து சந்தித்துக் கொண்டன என்பதாம்.

47. இருசேனைகளும் குறைதல்

கல் துரந்த களம்பட, வஞ்சகர்
இற்று உலந்து முடிந்தவர் எண்இலர்;
வில் துரந்தன வெங்கணையால், உடல்
அற்று உலந்த குரங்கும் அனந்தமே. (7146)

(கல்-குன்றுகள்; துரந்த-வீசிய; இற்று-அழிந்து; உலத்தல்-இறத்தல்; அற்று-அறுபட்டு; அனந்தம்-அளவற்றன)

போர்க்களத்தில் வானரச்சேனை வீசியெறிந்த குன்றுகளால் வஞ்சகர் களாகிய அரக்கர்கள் ஆயுள் குறைந்து, உயிர் இழந்து, இறந்து பட்டவர் கணக்கற்றவராவர்; அரக்கர்கள் செலுத்திய கொடிய அம்புகளால், உடல் அறுபட்டு, இறந்துபோன வானரங்களும் கணக்கற்றவராவர்.

வானரங்கள் கல், குன்றுகளாலும், அரக்கர்கள் வில், அம்புகளாலும் ஒருவரையொருவர் எதிர்த்துப் போர்க்களத்தில் போர்புரியும்போது, அதனால் இருசேனைகளிலும் இறந்து அழிந்தவர்கள் கணக்கிலடங்கார் என்பதாம். அனந்தம் என்ற வடசொல்லுக்கு எல்லையற்றது, முடிவற்றது என்பது பொருள். 'ஊர் அனந்தம், பெற்றபேர் அனந்தம்; சுற்றும் உறவு அனந்தம்' என்பது தாயுமானவர் வாக்கு. இரு திறத்துச் சேனைகளும் கணக்கற்ற அளவில் மாண்டனர் என்பது கருதத்தக்கது. யார், எதை எய்தினர் என்பது சொல்லப்படவில்லை பாருங்கள். வஞ்சகர் என்ற குறிப்பால் அரக்கர்கள் இறந்தனர் என்று கற்போர் உய்த்துணர வைத்த பாங்கு உணர்க.

48. கற்கள் தந்து, நிமிர்ந்து, கடுஞ்செரு
மற்கடங்கள் வலிந்து மலைந்திட,
தற்கு அடங்கி உலந்தவர் தம் உயிர்
தெற்கு அடங்க நிறைந்து செறிந்தவால். (7147)

(செரு-போர்; மர்க்கடங்கள்-வானரங்கள்/குரங்குகள்; தந்து-வீசி யெறிந்து; வலிந்து-வலிமைகாட்டி; மலைதல்-போர்செய்தல்; தற்கு-தருக்கு/செருக்கு/கர்வம்; உலந்தவர்-இறந்தவர்; அடங்க-முழுவதும்; செறிதல்-நெருங்குதல்; தெற்கு-தென்திசை/இயமன் உலகம்)

குரங்குப் படை நன்கு தலைநிமிர்ந்து நின்று, கடுமையாகப் போர் செய்யும் போது, குன்றுகளை வீசியெறிந்து, தம் முழு வலிமையையும் காட்டிப் போர் செய்தன. அதனால் அரக்கர்கள் தம் செருக்கு அடங்கி, தம்

Koviloor Digital Library

உயிரை இழந்தனர். அவ்வாறு உயிர் இழந்தவர்களின் உடல்கள் எல்லாம், இயமனுக்குரிய தெற்குத் திசை முழுவதும் சென்று நெருங்கி நிறைந்தன.

கற்கள் இங்கு குன்றுகளையும், மலைகளையும் குறிக்கும். மார்க்கடம் என்பது குரங்கினைக் குறிக்கும். தருக்கு என்பது செருக்கினைக் குறிக்கும். இங்கு எதுகை நோக்கி, மார்க்கடம், மற்கடம் ஆனது; தருக்கு, தற்கு ஆனது எனக்கொள்க. தென்திசை இயமனுக்குரிய திசை. தெற்குத் திசைக் காவலன் இயமன். எனவே இறந்துபோன உயிர்கள் அத்திசை சென்று சேர்ந்தன என்பதாம்.

49. போர்க்களத்தின் அவலக் காட்சி

பாடுகின்றன பேய்க்கணம்; பல் விதத்து
ஆடுகின்றன அறுகுறை; ஆழ் கடற்கு
ஓடுகின்ற உதிரம்; புகுந்து, உடல்
நாடுகின்றனர், கற்புடை நங்கைமார். (7148)

(அறுகுறை-தலையற்ற முண்டங்கள்/கவந்தம்; உதிரம்-இரத்தம்/ குருதி; நாடுதல்-தேடுதல்; கணம்-கூட்டம்)

போர்க்களத்தில் இறந்துபட்ட உடல்கள் மிக்கு நிறைந்திருப்பதால், பேய்க்கூட்டங்கள் மகிழ்ச்சியால் பாடத் தொடங்கின; தலையற்ற முண்டங்கள் பலவிதமாக ஆடத்தொடங்கின; இறந்து பட்ட அரக்கர்களின் உடல்களிலிருந்து பெருகிய இரத்த வெள்ளம், ஆழமுள்ள கடலில் சென்று கலப்பதற்காக ஓடத் தொடங்கின; கற்புடைய அரக்கமகளிர், போர்க் களத்தினுள் புகுந்து உயிர்போன்ற தத்தம் கணவன்மார்களின் உடல்களைத் தேடத் தொடங்கினர்.

போர்க்களத்தின் அவலக்காட்சி படம் பிடித்துக் காட்டப் பட்டிருக்கிறது. நங்கையர் ஏன் தத்தம் கணவன்மார்களின் உடல்களைத் தேடினர்? ஈமக்கடன்கள் செய்வதற்காக மட்டுமன்று, அவர்கள் கற்புடைய நங்கையர் அல்லவா? எனவே கணவனில்லாது உயிர்வாழ ஒருப்பட மாட்டார்கள். எனவே தாமும் தம் உயிரை உடன் மாய்த்துக்கொள்ளவே கணவன்மார்களின் உடலைத் தேடத்தொடங்கினர் என்க. 'தன்னுயிர் கொண்டு, அவன் உயிர் தேடினள் போல்' என்பது சிலப்பதிகாரம். போர்க்களத்தில் தலையற்ற முண்டங்கள் ஆடும் என்பதும், இவற்றிற்குக் கவந்தம் என்று மற்றொரு பெயரும் உண்டு என்பதும் அறிக.

50. யானை பட்ட அழி புனல் யாறு எலாம்
பானல் பட்ட; பலகணை மாரியின்
சோனை பட்டது; சொல்ல அரும் வானரச்
சேனை பட்டது; பட்டது செம் புண்ணீர். (7149)

Koviloor Digital Library

(பட்ட-புண்பட்ட/இறந்துபட்ட; அழிதல்-இறத்தல்; புனல்-நீர்/இரத்தநீர்; யாறு-ஆறு; பானல்-கடல்; பட்ட-கலந்தன; கணை-அம்பு; மாரி-மழை/மிகுதி; சோனை-இடைவிடாத மழை; படுதல்-தோல்வியுறுதல்/இறத்தல்; செம்-சிவந்த; புண்நீர்-இரத்தம்)

வானரச்சேனையின் தாக்குதலால் அரக்கர்களின் யானைப் படைகளெல்லாம் புண்பட்டுத் துண்டுதுண்டாகி இறந்துபட்டன. அவற்றினின்றும் பெருகிய மிகுதியான இரத்த வெள்ளமாகிய ஆறுகள் எல்லாம் கடலில் சென்று கலந்தன; அரக்கர் செலுத்திய பலவகைப்பட்ட அம்பு மழையில் இடைவிடாத மழைகூடத் தோற்றுப்போயிற்று; எனவே இவ்வளவு என்று சொல்லுதற்கு இயலாதனவான அளவு வானரச் சேனைகள் இறந்து அழிந்தன; அதனால் சிவந்த புண்களினின்றும் பெருகிய இரத்த வெள்ளம் போர்க்களமெங்கும் காணப்பட்டது.

வானரச்சேனைகள் இறந்துபட்டதாலும், அரக்கர்களின் யானைப் படைகள் இறந்துபட்டதாலும் பெருகிய இரத்தவெள்ளம் வேறுபாடின்றி ஆறுபோலக் கடலில் சென்று சங்கமமாயின என்பதாம். 'புனல் யாறு' என்பது உருவகம் இரத்த வெள்ளம் ஆறாக உருவகிக்கப்பட்டது. 'பானல்' என்ற சொல் கடலைக் குறிக்கும். 'பானலே கடல், குதிரை, வெற்றிலை, பழனம், நெய்தல், கள் என்று அறு பெயர்' என்பது நிகண்டு. 'சோனை' என்பது இடைவிடாத தொடர்ந்த மழையைக் குறிக்கும். சோனையினும் கணைமாரி மிகுந்திருந்ததால், கணைமாரியால் சோனை தோல்வி யுற்றதாகக் கூறினார் என்க. அம்புபட்ட இடங்களிலிருந்து வடிந்த இரத்தம் ஆனதால் 'செம் புண்நீர்' எனப்பட்டது என்க.

51. அரக்கர் சேனை அழிதல்

காய்ந்த வானரவீரர் கரத்தினால்,
தேய்ந்த ஆயுளர் ஆனவர் செம் புண்ணீர்
பாய்ந்த தானைப் படுகளம் பாழ்படச்
சாய்ந்ததால், நிருதக் கடல் தானையே. (7150)

(காய்ந்த-சினந்த; தேய்தல்-குறைதல்; செம்புண்நீர்-இரத்தம்; சாய்தல்-புறமுதுகிட்டு ஓடுதல்/வலி குறைதல்; பாய்தல்-பரவுதல்; நிருதர்-அரக்கர்)

சினந்து வீசியெறிந்த வானர வீரர்களின் கைகளில் அகப்பட்டு, குறைந்த ஆயுளை உடையவரான அரக்கர்படை வீரர்களின் சிவந்த புண்களிலிருந்து பெருகிய இரத்தநீர், போர்க்களம் எங்கும் பரவிப்பெருகியது. சேனைகள் போர்க்களத்தில் இறந்து பாழ்பட்டுப் போனதால், எஞ்சியிருந்த கடல் போன்ற அரக்கர் சேனைவீரர்கள் தம் வலிமை குன்றிப் புறமுதுகிட்டு ஓடினர்.

Koviloor Digital Library

'தேய்ந்த ஆயுளர்' என்பது ஆயுள் தேய்ந்து, குறைந்து அழிந்தமையைக் குறிக்கும். 'செம்புண்நீர்' என்பது சிவந்த புண்களிலிருந்து வெளிப்படும் இரத்த நீரைக் குறிக்கும். வானரர்களின்காய்வு (சினம்) அரக்கர்களின்ஆயுள் தேய்வுக்குக் காரணமாயிற்று என்று கூறிய நயம் காண்க. 'படுகளம்' போர்க்களத்தைக் குறித்தது.

52. வச்சிரமுட்டி வந்து தாக்குதல்

தங்கள் மாப்படை சாய்தலும், தீ எழ,
வெங்கண் வாள் அரக்கன், விரை தேரினை,
கங்க சாலம் தொடரக் கடற் செலூஉம்
வங்கம்ஆம் என வந்து, எதிர் தாக்கினான். (7151)

(மா-பெரிய; சாய்தல்-தோல்வியுறுதல்; வெம்-வெவ்விய; கங்கசாலம் -பருந்துக்கூட்டம்; வங்கம்-கப்பல்/மரக்கலம்; வாள்-கொடிய)

தங்களுடைய பெரிய சிறந்த படையாகிய அரக்கர்படை வலிகுன்றித் தோல்வியுற்றுத் தளர்ந்து பின்வாங்கி ஓடுவதைக் கண்ட வச்சிரமுட்டி என்னும் படைத்தலைவன், தனது கொடுமையான கண்களில் தீப்பொறி பறக்கும்படி, விரைந்து செல்லுகின்ற தனித் தேரினை எடுத்துக்கொண்டு, அதன் பின் பருந்துக்கூட்டங்கள் தொடர்ந்து வரும்படி, கடலிலே கடலலைகளைக் கிழித்துக்கொண்டு செல்லும் கப்பலைப் போலச் செலுத்தி, வானரச் சேனையின் இரத்த வெள்ளம் ஊடே புகுந்து, தாக்கத் தொடங்கினான்.

'வங்கம்' என்ற சொல் கப்பல் அல்லது மரக்கலத்தைக் குறிக்கும். 'வெங்கண் வாள் அரக்கன்' வச்சிர முட்டி என்பது பின்வரும் பாடலால் அறியலாம். 'கங்கசாலம்' என்பது வடமொழிச்சொல். பருந்துக்கூட்டம் என்பது பொருள். பெரும் சேனைத்தலைவர்கள் போர்க்களத்திற்குச் செல்லும்போது, தமக்கு மிகுந்த இரை கிடைக்கும் என்ற காரணத்தால் பருந்துக் கூட்டமும் அவர்கள் பின் தொடர்ந்து செல்லும் என்பது நாம் முன்பு அறிந்ததே. 'கூற்று இனத்து அன்னார் கொடுவில் உடன் ஏந்தி, பாற்றினம் பின்படர, முன் படர்ந்து' என்பது புறப்பொருள் வெண்பா மாலை. பாறு-பருந்து; இரத்தத்தை வெள்ளம் என்று கூறியதால், இந்தத் தேரைக் கப்பல் என்றார் என்க. வானரச்சேனையாகிய கடலை ஊடுருவிச் செல்லும் வச்சிர முட்டியின் தேருக்கு, கடலில் நீரைக் கிழித்துக் கொண்டு செல்லும் கப்பல் உவமை.

53. வந்து தாக்கி, வடிக்கணை மாமழை
சிந்தி, வானரச்சேனை சிதைத்தலும்,
இந்திராதியரும் திகைத்து ஏங்கினார்;
நொந்து, சூரியன் கான்முளை நோக்கினான். (7152)

Koviloor Digital Library

(வடி-கூர்மையான; சிந்தி-செலுத்தி; சிதைத்தல்-அழித்தல்; ஏங்குதல்-வருந்துதல்; கான்முளை-புதல்வன்)

அவ்வாறு தேரில் விரைந்து வந்த அரக்கர் படைத்தலைவனான வச்சிர முட்டி, கூரிய அம்புகளை மழையாகப் பொழிந்து, வானரச் சேனையைத் தாக்கிச் சிதைத்தான். அவ்வாறு வானரப்படை அழிவுற்றதைக் கண்ட இந்திரன் முதலிய தேவர்கள் எல்லோரும் மனம் நிலைகுலைந்து இனி என்ன நேருமோ என்று திகைத்து வருந்தினர். தன் படை சிதைந்து அழிவதைச் சூரியன் புதல்வனான சுக்கிரீவனும் மனம் மிக நொந்து நோக்கினான்.

'வடிக்கணை மாமழை' என்பது அம்பின் மிகுதி குறித்தது என்க. 'கான்முளை' என்ற சொல் புதல்வன் என்ற பொருளில் 'இரவி கான்முளை', 'எல்லவன் கான்முளை', 'பரிதி கான்முளை' என முன்னும் கையாளப்பட்டிருப்பதை நினைவுகூர்க.

54. சுக்கிரீவன் வச்சிர முட்டியைத் தாக்கி அழித்தல்

நோக்கி, வஞ்சன் நொறில் வய மாப்பரி
வீக்கு தேரினின்மீது எழப்பாய்ந்து, தோள்
தூக்க தூணியும் வில்லும் தொலைத்து, அவன்
யாக்கையும் சிதைத்திட்டு, எழுந்து ஏகினான். (7153)

(நொறில்-விரைவு; வயம்-வலிமை/வெற்றி; மா-சிறந்த; பரி-குதிரைகள்; வீக்குதல்-பூட்டுதல்; தூக்குதல்-தொங்கவிடுதல்; யாக்கை-உடம்பு; தூணி-அம்பறாப் புட்டில்; சிதைத்தல்-அழித்தல்)

அவ்வாறு மனம் நொந்து நோக்கிய சுக்கிரீவன், விரைந்து சென்று, வஞ்சகனாகிய அரக்கன் வச்சிரமுட்டியின் வெற்றியும் வலிமையும் பொருந்திய சிறந்த குதிரைகள் பூட்டப்பெற்ற தேரின்மீது எழுந்து பாய்ந்து, அவன் தோளில் கட்டப்பட்டுத் தொங்க விடப்பட்டிருக்கும் அம்பறாத் தூணியையும், வில்லையும் அறுத்து எறிந்துவிட்டு, அவனது உடலையும் அழித்துவிட்டு அங்கிருந்து எழுந்து சென்று தன் இடம் சேர்ந்தான்.

இப்பொழுது வடக்கு வாயிலில் நின்று போர்புரிந்த படைத் தலைவனான வச்சிரமுட்டி, சுக்கிரீவனால் அழிக்கப்பட்டு விட்டான் என்க. இங்கே மாப்பரி என்ற சொல் சிறந்த இலக்கணம் பொருந்திய குதிரைகள் என்று பொருள்படும்.

55. மலை குலைந்தென, வச்சிரமுட்டி தன்
நிலை குலைந்து விழுதலின், நின்றுளார்
குலை குலைந்து கொடிநகர் நோக்கினார்;
அலை கிளர்ந்தென, வானரம் ஆர்த்தவே. (7154)

Koviloor Digital Library

(குலைதல்-தவறுதல்/அழிதல்/நடுங்குதல்; கிளர்த்தல்-கொந்தளித்தல்)

வச்சிரமுட்டி, சுக்கிரீவனின் தாக்குதலால், ஒரு மலை தன் நிலை கலங்கிக் கீழே விழுவதைப் போல நிலைதடுமாறி வீழ்ந்தான்; அதுகண்ட அங்கு நின்றிருந்த அரக்கவீரர்கள் எல்லோரும் நடுங்கி, கொடிகள் கட்டப்பற்ற தம் இலங்கை மாநகரை நோக்கித் திரும்பி ஓடலாயினர். இதனைக் கண்ட வானரச்சேனை, கடலின் அலைகள் கொந்தளித்துப் பொங்கி எழுப்பும் ஓசையைவிட மிக்கப் பேரோசை எழுப்பித் தம் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

மலையின் பண்புகளை நன்னூல் சொல்வதைக் கேளுங்கள். ''அளக்கலாகா அளவும் பொருளும், துளக்கலாகா நிலையும், தோற்றமும், வறப்பினும் வளம் தரும் வண்மையும் மலைக்கே'' என்பது நன்னூல். 'குலை குலைந்து' என்னும் அடுக்கு நடுநடுங்கி என்பதைப்போல, எனக்கொள்க. அலை கடலின் ஆர்ப்பை விஞ்சியது வானரச்சேனையின் ஆர்ப்பு என்பதாம்.

56. கிழக்கு வாசவில் நிகழ்ந்த போர்ச்செய்தி

வீழி வெங்கண் இராக்கதர் வெம்படை,
ஊழி ஆழி கிளர்ந்தென ஓங்கின;
கீழை வாயிலில் கிட்டலும், முட்டினர்
சூழும் வானர வீரர் துவன்றியே. (7155)

(வீழி-வீழிப்பழம்; வெம்-வெவ்விய/கொடிய; ஆழி-கடல்; ஓங்குதல் -பொங்கி எழுதல்; கீழை-கிழக்கு; கிட்டல்-நெருங்குதல்; துவன்றி-நெருங்கி; முட்டுதல்-தாக்குதல்)

வீழிப்பழம் போன்று சிவந்த, வெவ்விய கண்களையுடைய அரக்கர்களின் கொடிய சேனை, ஊழிக்காலத்துப் பொங்கியெழும் கடல்கள்போல மேலே சினந்து கிளர்ந்து எழுந்தன; கிழக்கு வாசலில் அவை நெருங்கி வந்ததும், அங்கு சூழ்ந்து நின்ற வானரவீரர்கள் அவற்றை எதிர்த்து நெருங்கி வந்து தாக்கத் தொடங்கினர்.

வீழி என்பது ஒருவகைப் பழம். அது மிக்க சிவந்த நிறமாயிருக்கும். அதனைக் கோபத்தால் சிவந்த நிறத்தையுடைய கண்களுக்கு உவமை கூறுவது கவிமரபு. என்றாலும் கம்பன் இவ்வுவமையைப் பல இடங்களிலும் பயன்படுத்தியிருப்பதை உணரலாம். கிழக்கு வாசலில் இருக்கும் வானரப்படைக்குத்தலைவன்நீலன்என்பதைநினைவிற்கொள்க. அரக்கர் சேனைக் கடலுக்கு ஊழிக்கால வெள்ளம் உவமை.

Koviloor Digital Library

57. சூலம், வாள், அயில், தோமரம், சக்கரம்,
வாலம், வாளி, மழையின் வழங்கியே,
ஆலம் அன்ன அரக்கர் அடர்த்தலும்,
காலும், வாலும் துமிந்த, கவிக்குலம். (7156)

(ஆலம்-நஞ்சு; அயில்-வேற்படை; தோமரம்-இரும்பு உலக்கை/எறியீட்டி; வாலம்-பிண்டி பாலம்; வாளி-அம்பு; மழையின்-மழைபோல; வழங்குதல்-வீசுதல்/பொழிதல்; அடர்த்தல்-எதிர்த்தல்/தாக்குதல்/நெருக்குதல்; துமிந்த-அறுபட்டன; கவிக்குலம்-குரங்குக்கூட்டம்; சூலம்-முத்தலைவேல்)

நஞ்சு போன்ற கொடிய அரக்கர்கள், வானரப்படையை எதிர்த்து நெருக்கும்போது, முத்தலைச்சூலம், வாட்படை, வேற்படை, தண்டாயுதம், மழுவாயுதம், இருப்பு உலக்கை, எறியீட்டி, சக்கரப்படை, பிண்டிபாலம், அம்பு போன்ற ஆயுதங்களை மழைபோல மிகுதியாகப் பொழிந்தனர். எனவே வானரக் கூட்டங்கள் தங்கள் காலும், வாலும் அறுபட்டுப்போயின.

'வாலம்' என்பது பிண்டி பாலம் என்னும் ஆயுதத்தைக் குறிக்கும். 'ஆலம்' என்பது ஆலகால நஞ்சினைக் குறிக்கும். கரிய கொலைத்தொழில் கொண்ட கொடிய அரக்கர்கள், கரியநிறமும், கொடிய தன்மையும் பொருந்திய ஆலகால விஷத்திற்கு நிறத்தாலும், தொழிலாலும் உவமை என்க. பிண்டிபாலம் என்பது தலையில் பீலி கட்டப்பட்டு எறிவதொரு படை என்பர்.

58. வென்றி வானரவீரர் விசைத்து எறி
குன்றும், மாமரமும், கொடுங் காலனின்
சென்று வீழ, நிருதர்கள் சிந்தினார்;
பொன்றி வீழ்ந்த, புரவியும் பூட்கையும். (7157)

(வென்றி-வெற்றி; விசைத்து-வேகமாக; எறிதல்-வீசுதல்; காலன்-இயமன்; நிருதர்-அரக்கர்கள்; சிந்துதல்-அழிதல்/சிதறிப்போதல்; பொன்றுதல்-இறத்தல்; புரவி-குதிரை; பூட்கை-யானைகள்; மாமரம்-பெரியமரம்)

வெற்றிபொருந்திய வானரச்சேனை, வேகமாக வீசியெறிந்த குன்றுகளும், பெரிய மரங்களும், கொடுமையான இயமனைப் போல விரைந்து சென்று வீழ்ந்ததால், அரக்கர்கள் சிதறுண்டு போயினர்; அவர்கள் ஏறிவந்த குதிரைகளும், யானைகளும், இறந்து வீழ்ந்தன;

அரக்கர்களை எதிர்த்து நிற்பதால் வானரச்சேனை ''வென்றி வானரவீரர்'' எனப்பட்டது. 'பூழை' என்ற சொல் துளை என்ற பொருளையும் தரும்; துளையுடைய கைகளையுடையதால் பூழைக்கை

Koviloor Digital Library

என்பது யானைக்குக் காரணப்பெயர். அது பொதுவாக பூட்கை என மருவிச் செய்யுள்களில் கையாளப்படும் எனக்கொள்க.

59. தண்டு, வாள், அயில், சக்கரம், சாயகம்,
கொண்டு, சீறி, நிருதர் கொதித்து எழ,
புண்திறந்து குருதி பொழிந்து உக,
மண்டி ஓடினர், வானர வீரரே. (7158)

(அயில்-வேற்படை; சாயகம்-அம்பு; நிருதர்-அரக்கர்கள்; எழ-எழுச்சி கொள்ள; உக-சிந்த/சொரிய; மண்டி-நெருங்கி; தண்டு-கதை)

அது கண்ட அரக்கவீரர்கள் கோபத்தால் சினந்து சீறிப் பொங்கி யெழுந்து, தண்டாயுதம், கதை, வாட்படை, வேற்படை, சக்கரப்படை, அம்பு முதலியன கைக்கொண்டு எறிய, அவ்வாயுதங்களால் ஏற்பட்ட புண்களினின்றும் இரத்தம் மிகுதியாகப் பொங்கி வழிய, வானரச்சேனை வீரர்கள் எல்லோரும் ஒருசேர, நெருங்கிப் போர்க்களத்தை விட்டு ஓடலாயினர்;

''சங்கு, சக்கரம், கதை, கட்கம், சார்ங்கம் என்பன திருமாலின் ஐந்து ஆயுதங்கள் என்பதை இங்கு நினைவுகூர்தல் தகும். அரக்கர்கள் அழிந்து பட்டதால் மனக்கொதிப்பும், வானரர்கள் இன்னும் களத்தில் நிற்பதால் கோபமும் ஒருங்கே கொண்டனர் என்பதைச் ''சீறி எழ என்றும்'' ''கொதித்து எழ'' என்றும் கூறினார் என்க. ''மண்டி'' என்பது எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரே இடம் நோக்கி ஓடினர் என்பதைக் குறிக்கும்.

60. நீலன் போர்புரிதல்

எரியின் மைந்தன், இருநிலம் கீழ் உற,
விரிய நின்ற மராமரம் வேரொடும்
திரிய வாங்கி, நிருதர் வெஞ்சேனை போய்,
நெரிய, ஊழி நெருப்பு என வீசினான். (7159)

(எரி-நெருப்பு/அக்னி; இரும்-பெரிய; மராமரம்-வெண்கடம்ப மரம்; திரிதல்-சுழலுதல்; வாங்கி-பறித்து; நிருதர்-அரக்கர்; நெரிதல்-அழிதல்/துகள்படுதல்; விரியா-விரிந்து/பரவி)

நெருப்புக் கடவுளின் புதல்வனான நீலன், இந்தப்பெரிய பூமியின் அடியில் வெகுதூரம் வேரோடு நன்றாகப் பதிந்து, நன்கு பரவி வளர்ந்து நிற்கின்ற ஒரு வெண்கடம்ப மரத்தை, அதன் வேரோடும் அகழ்ந்து, திருகித் தன் கைகளால் பற்றி, அரக்கர்களின் சேனை நெரிந்து தூளாகப் போகும்படியும், ஊழிக்காலத்து எழுகின்ற நெருப்புப் போல அதனை அரக்கர் படையின்மீது வீசி எறிந்தான்.

Koviloor Digital Library

அக்னி தேவனின் மகன் நீலன் என்பதும் அவன் எரியின் கூறு என்பதும் முன்பே கூறப்பட்டதை நினைவுகூர்க. அந்த மராமரத்தைப் பிடுங்குதல் என்பது எளிதன்று என்பதை, ''இருநிலம் கீழ்உற, விரிய நின்ற மராமரம்'' என்றார் என்க. அதனை 'வேரொடும் திரிய வாங்கியதால்', நீலனின் பேராற்றல் கூறப்பட்டது என்க. நெருப்பின் மகன் நீலன் மராமரத்தை ஊழிக்கால நெருப்புப் போல வீசினான் என்பது ஒரு நயம்.

61. தேரும், பாகரும், வாசியும், செம்முகக்
காரும், யாளியும், சீயமும், காண்தகு
பாரின் வீழப் புடைப்ப, பசும் புணின்
நீரும் வாரி அதனை நிறைத்ததே. (7160)

(வாசி-குதிரைகள்; கார்-மேகம்/யானைகள்; பார்-பூமி/தரை/நிலம்; புடைத்தல்-தாக்குதல்; வாரி-கடல்; சீயம்-சிங்கம்)

அரக்கர்கள் செலுத்தி வந்த தேரும், அதனை ஓட்டி வந்த தேர்ச் சாரதிகளும், தேரிற் பூட்டப்பட்டிருந்த குதிரைகளும், சிவந்த புள்ளிகளை உடைய முகத்தைக் கொண்ட, கரிய மேகம் போன்ற யானைகளும், யாளி, என்ற ஒருவகை விலங்குகளும், சிங்கங்களும் காண்பதற்கு தகுந்த அழகிய நிலத்தின் கீழே விழும்படி, அந்த மராமரம் தாக்கியதால், காயம்பட்ட பசுமையான புண்களினின்றும் வெளிப்பட்டுப் பெருகியோடிய இரத்தநீர், கடலை நிறைத்தது.

சிவந்த புள்ளிகளையுடைய முகம் உயர்ந்த வகை யானைக்கு உரிய இலக்கணம் என்க. 'கார்' என்பது கரிய மேகம் போன்ற யானையைக் குறித்து நின்றது. 'யாளி' என்பது யானைபோன்று துதிக்கையும், சிங்கம் போன்று பிடரிமயிரும் உடலமைப்பும் உடைய ஒருவகை விலங்கு. இப்போது இவை காணப்படுவதில்லை; யாளி வேறு; சீயம் வேறு; கருமுகக்காராகிய மேகத்தினின்றும் பொழியும் நீரும், செம்முகக்காராகிய யானையின் புண்களினின்றும் பெருகும் இரத்த மழைநீரும் சென்று கடலை நிறைத்தது என்ற நயம் கருதுக.

62. அரக்கன் கும்பானுவும், கரடி இடும்பனும் புரிந்த போர் [7 பாடல்கள்]

அரக்கர் சேனை அடுகளம் பாழ்பட,
வெருக்கொண்டு ஓடிட, வெம்படைக் காவலர்,
நெருக்க, நேர்ந்து, கும்பானு நெடுஞ்சரம்
துரக்க, வானரச்சேனை துணிந்தவே. (7161)

(அடுகளம்-போர்க்களம்; வெருக்கொண்டு-அச்சம்கொண்டு; வெருவுதல்-அஞ்சுதல்; வெம்-கொடிய; காவலன்-தலைவன்; நேர்ந்து-

Koviloor Digital Library

தாங்கிக்கொண்டு; துரத்தல்-செலுத்துதல்; துணிந்தது-அழிவுற்றது; அடுதல்-கொல்லுதல்)

அப்போது, அரக்கர் சேனைகள் எல்லாம், போர்க்களம் பாழ்படும்படி, அச்சம் கொண்டு, புறமுதுகு இட்டு ஓடின. எனினும் அவர்களைத் தடுத்து, கொடிய அரக்கர் படைத்தலைவனான கும்பானு என்பவன், குரக்குச் சேனைக்கு ஊறுவிளைவிக்கக் கருதி, நீண்ட தூரம் செல்லும் அம்புகளை ஏவவே, வானரச் சேனைகளெல்லாம் அழிந்து பட்டன.

'அடுதல்' என்ற சொல்லுக்குக் கொல்லுதல் என்பது பொருள். பகைவரைக் கொன்று குவிப்பதால் போர்க்களம் 'அடுகளம்' எனப்பட்டது என்க. அரக்கர் சேனை வெகுண்டு ஓடியதால் போர்க்களத்தில் யாருமில்லாததால் 'பாழ்பட' என்றார் என்க.

63. கண்டு நின்ற கரடியின் காவலன்,
எண் திசாமுகம் எண்ணும் இடும்பன், ஓர்
சண்ட மாருதம் என்ன, தடவரை
கொண்டு சீறி, அவ்வன் எதிர் குப்புறா; (7162)

(காவலன்-தலைவன்; சீறி-சீற்றம் கொண்டு; தட-பெரிய; வரை-மலை; குப்புறுதல்-குதித்தல்; எண்ணுதல்-மதித்தல்; சண்டமாருதம்-பெருங் காற்று) (குளகப்பாடல்)

இவ்வாறு வானரப்படைகள் அழிவுறுவதைக் கண்டு நின்ற கரடிப் படையின் தலைவனான வலிமை மிகுந்தவனும், எட்டுத்திசைகளில் உள்ளவர்கள் பெருமிதத்தோடு மதிக்கும் இயல்புள்ளவனுமான இடும்பன் என்றவன், ஒருபெரிய மலையைத் தன் கையில் எடுத்துக்கொண்டு, மிகுந்த சீற்றமுற்று, ஒரு பெருங்காற்று விரைந்து வீசுவதுபோல, அந்தக் கும்பானு என்பவனின் எதிரில் போய் குதித்து - பாடல் தொடர்கிறது.

'திசாமுகம்' என்பது வடசொல். திசைகளில் உள்ளவர்கள் என்ற பொருளைத்தரும். சண்டமாருதம் என்பது சூறாவளிக்காற்று, புயல் காற்று என்பதைப் போல எனக்கொள்க. சண்டம் என்ற சொல்லுக்கு வேகம் என்பது பொருள்.

64. தொடுத்த வாளிகள் வீழும் முன், சூழ்ந்து எதிர்
எடுத்த குன்றை இடும்பன் எறிதலும்,
ஒடித்த வில்லும் இரதமும், ஒல்லெனப்
படுத்த, வாசியும், பதாகையும் பாழ்பட (7163)

(வாளி-அம்பு; தொடுத்த-செலுத்திய/விடுத்த/ஏவிய; இரதம்-தேர்; வாசி-குதிரை; பதாகை-கொடி; ஒல்லென-விரைவில்; படுத்தல்-செய்தல்; பாழ்படுதல்-அழிதல்)

Koviloor Digital Library

அவ்வாறு கும்பானு செலுத்திய அம்புகள் தன்னைச் சூழ்ந்து வந்து விழுவதற்கு முன்பாகவே, இடும்பன் என்னும் கரடித்தலைவன், தான் கையில் எடுத்த அந்த மலையை வீசியெறிந்ததும், அது, கும்பானு செலுத்தி வந்த தேரையும் அதில் பூட்டப்பட்டிருந்த குதிரையையும், வில்லையும், கொடியையும், விரைவாகச் சென்று ஒடித்து அழித்துப் பாழ்படுத்தியது.

'ஒல்' என்பது விரைவுக் குறிப்பு.

65. தேர் அழிந்து, சிலையும் அழிந்து உக,
கார் இழிந்த உரும் எனக் காய்ந்து, எதிர்
பார் கிழிந்து உகப் பாய்ந்தனன், வானவர்
போர் கிழிந்து புறம்தரப் போர் செய்தான். (7164)

(சிலை-வில்; வானவர்-தேவர்கள்; கிழிதல்-வலிமை கெடுதல்/ வலிமை குன்றுதல்; புறந்தருதல்-புறமுதுகு காட்டி ஓடுதல்; காய்ந்து-கோபித்து/சினந்து; கார்-மேகம்; இழிந்த-விழுந்த; உரும்-இடி; பார்-பூமி; உகுதல்-சிந்துதல்/சிதறிப்போதல்)

தேவர்கள் போரில் வலிமைகுன்றிப் புறமுதுகிட்டு ஓடும்படி முன்னர் போர்செய்தவனான அரக்கர்படைத் தலைவன் கும்பானு, இப்போது அவனுடைய தேரும் அழிந்து, அவன் கைக்கொண்டிருந்த வில்லும் சிதைந்து அழிந்து சிதறிப்போனதால், மேகத்திலிருந்து விழுந்த பேரிடி போலச் சீற்றம்கொண்டு, அந்த இடும்பனுக்கு எதிராக, இந்தப் பூமியே கிழிந்து பிளவுபட்டுப் போகும்வண்ணம் பாய்ந்தான்.

'கார் இழிந்த உரும், பார் கிழிந்து உகப்பாய்ந்த கும்பானுவுக்கு உவமை. வானவரை வென்ற கும்பானுவுக்கு, வானரரை வெல்ல முடியாமற் போனதால் சீற்றம் மிகுந்தது என்பதாம்.

66. தத்தி, மார்பின் வயிரத் தடக்கையால்
குத்திநின்ற கும்பானுவை, தான் எதிர்
மொத்தி நின்று, முடித்தலை கீழ்உற,
பத்தி வன் தடந்தோள் உறப் பற்றுவான். (7165)

(தத்தி-பாய்ந்து/தாவி; மொத்தி-குத்தி/தாக்கி; உற-அழுத்தமாக; பத்தி-பற்றி)

அவ்வாறு பாய்ந்து வந்து இடும்பனுடைய மார்பில் தனது வயிரம் பாய்ந்த பெரிய கைகளினால் தாக்கி நின்ற அரக்கர்படைத் தலைவனான கும்பானுவை, இடும்பனும், அவனை எதிர்த்துத் தாக்கி நின்று, அவனுடைய மகுடமணிந்த முடிகளைத் தலைகீழாகப் போகும்படி கவிழ்த்துப் பற்றி, அவனுடைய வலிய, பெரிய தோள்களையும் அழுத்தமாகப் பற்றிக் கொள்வானாயினான்.

Koviloor Digital Library

இடும்பன் கும்பானுவைத் தலைகீழாகப் பிடித்துக்கொண்டு, கொல்ல முயற்சிக்கிறான் என்பது பெறப்படுகிறது. 'பற்றி' என்பது 'பத்தி' என எதுகை நோக்கித் திரிந்தது எனக்கொள்க.

67. கடித்தலத்து இருகால் உற, கைகளால்
பிடித்துத் தோளை, பிறங்கலின் கோடுநேர்
முடித்தலத்தினைக் கவ்வுற, மூளைகள்
வெடித்து வீழ்தர, வீழ்த்தினனாம் அரோ! (7166)

(கடித்தலம்-இடைப்புறம்/மறைவிடம்; உற-பொருந்த/பறித்துக் கொண்ட; பிறங்கல்-மலை; கோடு-சிகரம்; நேர்-நிகர்த்த/ஒத்த; முடித் தலம்-தலை; கவ்வுதல்-வாயால் கடித்தல்; வீழ்த்துதல்-கொல்லுதல்; முடி-மகுடம்)

இடும்பன், கும்பானுவின் இடைப்பகுதியான மறைவிடத்தில் தன் இருகால்களும் பொருந்துமாறு மிதித்துக்கொண்டு, தன் கைகளால் அவனுடைய மலையின் சிகரம் போன்று விளங்குகின்ற உயர்ந்த தோள்களைப் பிடித்துக்கொண்டு, மகுடமணிந்த தலையினைத் தன் வாய்களால் கவ்விக்கொண்டான். அதனால் தலை பிளந்தது. அவன் மூளைகள் வெடித்துச் சிதறிக்கீழே விழும்படித் தாக்கி அவனைக் கொன்றுபோட்டான்.

'கடித்தலம்' என்பது மறைவிடமாகிய இடைப்பகுதியைக் குறிக்கும். கரடிபோர் செய்யும் முறை நன்கு விளக்கப்பட்டிருப்பதைக் காண்க. இருகால்களாலும், இரு கைகளாலும், வாயினாலுமே ஒரு அரக்க வீரனைக் கொன்று வீழ்த்திய திறம் உணர்க. 'பிறக்கம்' என்ற சொல்லுக்கு விளக்கம் என்பது பொருள். சேய்மையிலிருந்தும் விளங்கித் தோன்றுவதால் 'பிறங்கல்' என்பது மலைக்குக்காரணப்பெயர். கைகளால் தோள்களையும், கால்களால் மறைவிடத்தையும், வாயால் தலையையும் பற்றிக்கொண்டு கொன்று தீர்த்தான் என்பதாம்.

68. பிரகஸ்தனும் நீலனும் போர்புரிதல் [12 பாடல்கள்]

தன் படைத்தலைவன் படத் தன் எதிர்
துன்பு அடைத்த மனத்தன், சுமாலி சேய்,
முன் படைத்த முகில் அன்ன காட்சியன்,
வன்பு அடைத்த வரிசிலை வாங்கினான். (7167)

(எதிர்-கண்முன்; துன்பு-துன்பம்; சேய்-மகன்; காட்சி-தோற்றம்; வன்பு-வன்மை; வரி-கட்டமைந்த; சிலை-வில்; வாங்குதல்-வளைத்தல்; பட-இறக்க; அடைத்த-நிறைந்த)

Koviloor Digital Library

தனக்குக் கீழ் நிறுத்தப்பட்டிருந்த படையின் தலைவனான கும்பானு தன்கண் எதிரிலேயே இறந்துபட்டதைக் கண்ட, மேகம் போன்று கரியநிறத் தோற்றத்தை உடைய சுமாலியின் புதல்வனான பிரகத்தன் என்ற சேனைத் தலைவன், மனம் மிகவும் துன்புற்று, தனது வலிமை படைத்த கட்டமைந்த வில்லினை நாணோடு சேர்த்துப் பொருத்தி வளைக்கத் தொடங்கினான்.

இவன் கிழக்கு வாசலில் நின்றவன் என்பதை நினைவிற் கொள்க. கருத்த, பருத்த உருவத்தினன். எனவே 'முகிலன்ன காட்சியன்' எனப் பட்டான் என்க.

69. வாங்கி வார்சிலை, வானர மாப்படை
ஏங்க, நாண் எறிந்திட்டு, இடையீடு இன்றி,
தூங்கு மாரி என, சுடர் வாளிகள்,
வீங்கு தோளினன், விட்டனனாம் அரோ! (7168)

(வார்-நீண்ட; வீங்கு-பூரிக்கின்ற; மா-பெரிய; ஏங்குதல்-வருந்துதல்; தூங்குதல்-சொரிதல்/பொழிதல்; மாரி-மழை; சுடர்-ஒளி; வாளி-அம்புகள்; இடையீடின்றி-இடைவிடாது/தடங்கல் இன்றி; எறிதல்-எழுப்புதல்)

அவ்வாறு, போர் என்று சொன்னாலே, பூரிக்கின்ற தோள்களை உடைய பிரகத்தன், தன்னுடைய கட்டமைந்த வில்லை வளைத்து நாண் ஒலி எழுப்பியதைக் கேட்ட, வானரப் பெரும்படை வருந்தலாயிற்று, அவன் வில்லை வளைத்து எந்தத் தடங்கலுமின்றி, இடைவிடாது, பொழியும் மழையைப் போல, ஒளிமிகுந்த அம்புகளைச் செலுத்திக் கொண்டேயிருந்தான்.

பிரகத்தனின் நாண் ஒலி கேட்டே, வானரப்படை, நடுநடுங்கிற்று என்பதாம். மழைபொழிவதைப்போல, இடைவிடாது, அம்பு மழை பொழிந்தான் என்பது கருத்து.

70. நூறும் ஆயிரம் கணை நொய்தினின்
வேறு வேறு படுதலின், வெம்பியே,
ஈறுஇல் வானர மாப்படை, எங்கணும்
பாற, நீலன் வெகுண்டு, எதிர் பார்ப்புறா. (7169)

(நொய்தினின்-விரைந்து; வெம்பி-வெதும்பி/கொதித்து; பாற-சிதறி ஓட; எதிர்-கண்முன்; ஈறுஇல்-அளவற்ற/முடிவில்லாத; பார்ப்புறா-பார்த்து; எங்கணும்-எல்லாப்பக்கங்களிலும்) (குளகப்பாடல்)

பிரகத்தன் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான, அம்புகளை விரைவாகப் பல பக்கங்களிலும் வேறு வேறாக வீசியதால், அவை வானரப் பெரும்படையின்மேல் பட்டுத் தாக்கியதால், மனம் மிகக் கொதித்து

Koviloor Digital Library

முடிவில்லாத அளவற்ற வானரப்படைகள் எல்லாப் பக்கங்களிலும் கூட்டம் கூட்டமாகச் சிதறி ஓடலாயின. இதனைக் கண்ணுற்ற நீலன் என்னும் படைத்தலைவன் மிக்கக் கோபம் கொண்டு - பாடல் தொடர்கிறது.

பாற- என்பது விற்று வீற்றாகச் சிதறி என்ற பொருளைத் தரும்.

71. குன்றம் நின்றது எடுத்து, எதிர் கூற்று எனச்
சென்று, எறிந்து, அவன் சேனை சிதைத்தலும்,
வென்றி வில்லின் விடுகணை மாரியால்,
ஒன்று நூறு உதிர்வுற்றது, அக்குன்றமே. (7170)

(கூற்று-இயமன்; மாரி-மழை; உதிர்வுற்றது-தூளாகிப் போனது)

அருகிலிருந்த ஒரு மலையைத் தன் கைகளால் பற்றி, தன்னை எதிர்த்து வந்த பிரகத்தனின் முன்பாக, இயமன் போலச் சென்று, அம்மலையை அவன்மீது எறிந்து, அவனுடைய சேனையைச் சிதைத்தான் நீலன். எனினும் வெற்றி பொருந்திய வில்லினைக் கொண்ட பிரகத்தன், அவன் கையிலிருந்த விற்படையால் அம்புகளை மழைபோலப் பொழியச் செய்து, அந்த ஒரு குன்று நூறு குன்றுகளாகிப் பொடிப்பொடியாகி உதிர்ந்து போகும்படி செய்து விட்டான்.

72. மீட்டும், அங்கு மராமரம் வேரொடும்
ஈட்டி, வானத்து இடி என எற்றலும்,
கோட்டும் வில்லும், கொடியும், வயப்பரி
பூட்டும் தேரும், பொடித்துகள் ஆயவே. (7171)

(மீட்டும்-மீண்டும்/திரும்பவும்; மராமரம்-வெண் கடம்ப மரம்; ஈட்டி-பறித்து; எற்றுதல்-எறிதல்/மோதுதல்; கோட்டு-வளைந்த; வயம்-வலிமை/வெற்றி; பரி-குதிரைகள்)

மீண்டும் நீலன், அங்கிருந்த ஒரு மராமரத்தைத் தேடிக் கண்டுபிடித்து அதனை வேரோடும் பறித்து எடுத்து, வானத்தில் எழும் இடி போன்ற பெருமுழக்கம் செய்து கொண்டு, பிரகத்தன் மேல் அம்மரத்தைச் சுழற்றி எறிந்து தாக்கியதும், பிரகத்தனுடைய வளைந்த வில்லும், வலிமை பொருந்திய, வெற்றி மிக்க குதிரைகள் பூட்டப்பெற்ற தேரும், அதில் பறக்க விடப்பட்டிருந்த கொடியும், தூள்தூளாகிப்போயின.

வானத்து இடி ஓசை, நீலனுடைய போர் முழக்கத்திற்கு உவமை.

73. தேர் இழந்து, சிலையும் இழந்திட,
கார் இழிந்த உரும் எனக் காந்துவான்,
பார் இழிந்து, பரு வலித் தண்டொடும்,
ஊர் இழந்த கதிர் என, ஓடினான். (7172)

Koviloor Digital Library

(சிலை-வில்; கார்-மேகம்; இழிந்த-இறங்கிய; உரும்-பேரிடி; காந்துதல்-கோபித்தல்; பார்-பூமி; ஊர்-ஊர்தி/வாகனம்; கதிர்-சூரியன்; தண்டு-தண்டாயுதம்)

பிரகத்தன் தான் செலுத்தி வந்த தேரையும் இழந்தான்; தான் கைக்கொண்டிருந்த வில்லையும் இழந்தான்; பேரிடி தன் ஆதாரமாகிய மேகத்தை விட்டுக் கீழிறங்கி வந்தது போலவும் தனக்கு வாகனமாகிய ஒற்றைச்சக்கரத்தை இழந்த சூரியன்போலவும், சீற்றம் கொண்டு, தரையில் இறங்கி வந்து, தனது பருமையும், வலிமையும் மிக்க, தண்டாயுதத்துடன், நீலனை நோக்கி ஓடினான்.

தான் செலுத்தி வந்த தேரை இழந்த பிரகத்தனுக்கு, ஒற்றைச் சக்கரத் தேரில்லாது தரையில் இறங்கி வந்த சூரியன் உவமை. இது. நிகழாநிகழ்ச்சி. எனவே இல்பொருள் உவமை எனக்கொள்க. அவனது பெருமுழக்கத்திற்கு இடியொலி உவமை. அவனது கரிய உருவத்திற்குக் கார்மேகம் உவமை; ஊர் என்பது இங்கு ஊர்வதற்கு உரிய தேர் என்ற பொருளைத் தந்து நின்றது.

74. வாய் மடித்து, அழல் கண்தொறும் வந்துஉக,
போய் அடித்தலும், நீலன் புகைந்து, எதிர்
தாய் அடுத்து, அவன் தன் கையின் தண்டொடும்
மீ எடுத்து, விசும்பு உற வீசினான். (7173)

(அழல்-நெருப்பு; உக-சிந்த; புகைந்து-வெகுண்டு; தாய்-தாவி; அடுத்து-நெருங்கிய; மீ-மேலே; எடுத்து-தூக்கி; விசும்பு-விண்/ஆகாயம்; உற-பொருந்தும்படி; அடித்தல்-தாக்குதல்)

பிரகத்தன் கோபத்தால் வாய் மடித்து, இரண்டு கண்களிலும் நெருப்புப்பொறி பறக்கும்படி நீலனை நெருங்கி அடித்ததும், நீலன் மிகுந்த கோபமகொண்டு, அவன் எதிரில் தாவிச்சென்று, அவனை நெருங்கி அவன் கையில் பிடித்திருந்த தண்டாயுதத்தோடும் சேர்த்து அவனை மேலே தூக்கி, ஆகாயமளவு சென்று சேருமாறு வீசியெறிந்தான்.

'வாய்மடித்தலும், அழல் கண்தொறும் வந்து உகுதலும்' சினத்தின் மெய் வெளிப்பாடு. 'புகைந்து' என்பது இங்கு சினந்து என்ற பொருள் குறித்து நின்றது.

75. அம்பரத்து எறிந்து ஆர்ப்ப, அரக்கனும்
இம்பர் உற்று, எரியின் திரு மைந்தன்மேல்
செம்புனல் பொழியக் கதை சேர்த்தினான்,
உம்பர் தத்தமது உள்ளம் நடுங்கவே. (7174)

Koviloor Digital Library

(அம்பரம்-ஆகாயம்; ஆர்ப்ப-ஆரவாரிக்க; இம்பர்-இவ்வுலகு/தரை/பூமி; உம்பர்-தேவர்கள்/மேலிடத்தவர்; எரி-நெருப்பு; செம்புனல்-இரத்தம்; சேர்த்தல்-தாக்குதல்; கதை-தண்டாயுதம்)

நீலன் பிரகத்தனை அவ்வாறு ஆகாயத்தில் வீசியெறிந்து பெருமுழக்கம் செய்து கொண்டிருக்கவும், அரக்கனாகிய பிரகத்தன், தரையை அடைந்து, அக்னிதேவனின் புதல்வனாகிய அழகிய நீலன்மேல் இரத்தம் பெருகும் வண்ணம், தன்னுடைய தண்டாயுதத்தைக் கொண்டு தாக்கினான். தமக்காகப் போர்புரியும் நீலனுக்கு ஏதும் தீங்கு நேரிடுமோ என்று கலக்க முற்று, தேவர்கள் ஒவ்வொருவரும் தத்தமது உள்ளம் நடுங்கினர்.

உம்பர் என்பது மேலிடத்தவர் என்ற நேர் பொருளில் தேவர்களைக் குறித்து நின்றது. இம்பர்என்பது நிலவுலகு என்ற நேர்பொருளில்தரையைக் குறித்து நின்றது எனக்கொள்க. 'செம்புனல்' என்பது செந்நீர் என்ற நேர்பொருளில் இரத்தத்தைக் குறித்து நின்றது.

76. அடித்தலோடும் அதற்கு இளையாதவன்,
எடுத்த தண்டைப் பறித்து எறியா, 'இகல்
முடித்தும்' என்று, ஒருகைக்கொடு மோதினான்,
குடித்து உமிழ்ந்தெனக் கக்கக் குருதியே. (7175)

(எறியா-எறிந்து; இகல்-போர்/பகை; இளையாது-சளைக்காது)

அவ்வாறு பிரகத்தன் தண்டு கொண்டு தாக்கியதும், அதற்குச் சற்றும் சலிக்காத நீலன், பிரகத்தன் எடுத்த தண்டாயுதத்தைப் பிடுங்கித் தூரத்தில் எறிந்துவிட்டு, 'இப்போது இப்போரை, முடித்துக் கொள்வோம்' என்று மனத்துள் கருதி, பிரகத்தன் முன்பே குடித்திருந்த இரத்தத்தை இப்பொழுது உமிழ்வதுபோல, இரத்தம் கக்கும் வண்ணம், தன்னுடைய ஒரே கையைக் கொண்டு, பிரகத்தனைத் தாக்கினான்.

77. குருதி வாய்நின்று ஒழுகவும் கூசலன்,
நிருதன்; நீலன் நெடுவரை மார்பினில்
கருதலாதமுன் குத்தலும், கைத்து, அவர்
பொருத பூசல் புகல ஒண்ணாததே. (7176)

(கூசுதல்-பின்வாங்குதல்; வரை-மலை; கருதல்-நினைத்தல்; கைத்து-வெறுத்து/கோபித்து; புகல்தல்-சொல்லுதல்; ஒண்ணாதது-முடியாதது; பூசல்-போர்; பொருத-தாக்கிய)

பிரகத்தனுடைய வாயினின்றும் இரத்தம் பெருகி வழிந்த போதும், அதற்கும் பின்வாங்காதவனாய், அஞ்சாதவனாய் அவ்வரக்கன், நீலனின் நீண்ட மலை போன்ற மார்பினில், அவன் எதிர்பார்ப்பதற்கு முன்னே குத்தினான். அவ்வாறு குத்தியதும், இருவரும் மிகவும் சீற்றம் கொண்டு

Koviloor Digital Library

வெறுப்புடன் செய்த போரின் திறம் சொல்லினால் சொல்லும் தரத்தன்று. மிகக்கடுமையாகப் போர் புரிந்தனர்.

'கருதலாதமுன்' என்பது எண்ணத்திலும் விரைந்தது செயல் என்பதைக் குறிக்கும்.

78. மற்று, நீலன் அரக்கனை, மாடு உறச்
சுற்றி, வால்கொடு, தோளினும், மார்பினும்,
நெற்றி மேலும், நெடுங்கரத்து எற்றலும்,
இற்று, மால்வரை என்ன, விழுந்தனன். (7177)

(மாடு-பக்கம்; எற்றல்-தாக்குதல்; இற்று-உயிரிழந்து; மால்வரை-பெரியமலை)

மேலும், அந்த நீலன் அந்த அரக்கனாகிய பிரகத்தனை, அவன் இருபக்கங்களிலும், தன் வாலால் அழுத்தமாகச் சுற்றிக்கொண்டு, அவனுடைய தோள், மார்பு, நெற்றி முதலிய எல்லா இடங்களிலும் தன்னுடைய நீண்ட கைகளினால் தாக்கத் தொடங்கினான். அவ்வாறு அவன் தாக்கியதும், ஒரு பெரிய மலை வேரோடு பெயர்த்தெடுக்கப்பட்டு விழுவதைப்போலப் பிரகத்தன் தரையில் உயிரழிந்து விழுந்தான்.

நீலன் தன் வாலால் பிரகத்தனை இருபக்கங்களிலும் சுற்றி வளைத்துக் கொண்டதற்குக் காரணம் அவன் தப்பி ஓடிவிட முடியாதபடியும், அவன் மீண்டும் தன்னைத் தாக்காது இருக்கும்படியும் செய்வதற்காக என்க. 'மால்வரை என்ன' என்றதனால் பிரகத்தனுடைய உடல் தோற்றம் விளக்கப்பட்டது என்க. பிரகத்தனுக்குப் பெரிய மலை உவமை.

79. "இறந்து வீழ்ந்தனனே பிரகத்தன்" என்று,
அறிந்து, வானவர் ஆவலம் கொட்டினார்;
வெறிந்த செம்மயிர் வெள் எயிற்று ஆடவர்,
முறிந்து, தம்தம் முதுநகர் நோக்கினார். (7178)

(வெறிந்த-நெருங்கிய/அடர்ந்த; எயிறு-பற்கள்; முது-பழைய; ஆவலம் கொட்டுதல்-ஆர்ப்பரித்தல்; முறிந்து-நிலையழிந்து)

"அரக்கர் படைத்தலைவனான பிரகத்தன் இறந்து வீழ்ந்து விட்டான்" என்பதை நோக்கிய தேவர்கள் எல்லாம் மகிழ்ச்சியால் கைகொட்டி ஆரவாரம் செய்தார்கள். அடர்ந்த செம்பட்டை மயிரும், வெண்மையான பற்களும் கொண்ட அரக்கவீரர்கள் எல்லாம் தோற்று, தம்மனம் முறிந்து, நிலையழிந்து, தொன்மை வாய்ந்த பழைய நகரான இலங்கையில் தத்தம் நகர்ப்பகுதிகளை நோக்கிச் செல்லலாயினர்.

முன்பு நீலனுக்கு என்ன நேருமோ என்று நடுங்கிய தேவர்கள், இப்போது நீலனால் பிரகத்தன் கொல்லப்பட்டான் என்ற செய்தியை

Koviloor Digital Library

அறிந்ததும், மிகவும் மகிழ்ச்சியால் கைகொட்டி ஆரவாரம் செய்தார்கள். இவ்வாறு ஆரவாரம் செய்வதை 'ஆவலம் கொட்டுதல்' என்று பண்டை இலக்கியங்கள் பேசும். இங்கே வீரர்கள் தத்தமது நகருக்குத் திரும்பிச் சென்றார்கள் என்று கூறாது ''ஆடவர்'' திரும்பிச் சென்றனர் என்று கவிஞன் கூறுவதை நோக்குக. புறமுதுகிட்டு ஓடித் தம் நகரை அடைந்த வீரர்களை 'ஆடவர்' என்று கூறியது இகழ்ச்சிக் குறிப்பு எனக்கொள்க. அதுபோலவே, புறமுதுகிட்டு ஓடிச்சென்றனர் என்று கூறாது, தத்தம் நகர் நோக்கினர் என்றதும் உணர்க. இது வஞ்சப் புகழ்ச்சி. 'வெறிதல்' என்ற சொல் செறிதல் என்ற பொருளைத்தரும். 'வெறிதல், ஓதி, செற்று, வெறுப்பு, கஞறல், அடர்தல், நெருங்குதல், சிணுங்குதல், செறிவின்பெயரே' என்பது பிங்கல நிகண்டு. இதுபோலவே, வில்லிபாரதத்திலும், 'திருகினார் முதுகிட்டுப் பறந்தவீரர்' எனக்கூறுவதும் ஒப்புநோக்கத்தகும். பின்னரும், இராவணன், 'பூதலம் என்னும் நங்கைதன்னையே நோக்கிப் புக்கான்' எனக்கூறப் போவதையும் காணலாம்.

80. தெற்கு வாயிலில் அங்கதன் செய்த போர்

தெற்கு வாயிலில் சென்ற நிசாசரர்
மல் குலாவு வயப்புயத்து அங்கதன்
நிற்கவே, எதிர்நின்றிலர், ஓடினார்,
பொன் குலாவு சுபாரிசன் பொன்றவே. (7179)

(நிசாசரர்-அரக்கர்கள்; மல்-மற்போர்; குலாவுதல்-விளக்கமுறுதல்; வய-வலிய; பொன்-அழகு; பொன்றுதல்-இறத்தல்)

தெற்குக் கோபுர வாயிலுக்குப் போர் செய்யச் சென்ற அரக்கர்கள், மற்போரில் சிறந்து விளங்கும் வலிமையுடைய தோள்களையுடைய அங்கதன் அங்கே நின்று கொண்டு இருக்கவே, அழகு விளங்குகின்ற சுபாரிசன் என்னும் அரக்கர் படைத்தலைவன் இறந்து பட்டதனால், அவ்வரக்கர்கள் அங்கதன் முன் நிற்கவே அஞ்சிப் புறமுதுகிட்டு ஓடிச்சென்றனர்.

'நிசாசரர்' என்பது இரவில் சஞ்சரிப்பவர் என்று அரக்கர்களுக்குக் காரணப்பெயர் என்க. அங்கதன் நிற்கவே, அரக்கர் நின்றிலர் என்ற முரண்தொடை நயம் நோக்குக. இந்தத் தெற்கு வாயிலுக்குப் பதினாறு கோடிப் பேருடன் மகோதரனையும், மாபெரும்பக்கனையும் இராவணன் அணிவகுத்து அனுப்பினான் என்பதை இங்கு நினைவுகூர்தல் தகும். முன்பு வடக்கு வாயிலிலும், கிழக்கு வாயிலிலும் நிகழ்ந்த போரினை அத்தனை செய்யுள்களில் விரிவாகச் சொன்ன கவிஞன், தெற்கு வாயிலில் நிகழ்ந்த போர் பற்றி ஒரே செய்யுளில் கூறி முடித்த நயம் நோக்குக. அங்கதன் தோற்றமே அரக்கர்க்கு அச்சத்தை விளைவித்தது; அதனால் ஓடினர் என்பதாம்.

Koviloor Digital Library

81. மேற்கு வாயிலில் அனுமன் செய்த போர்

நூற்று இரண்டு எனும் வெள்ளமும், நோன்கழல்
ஆற்றல் சால் துன்முகனும், அங்கு ஆர்த்து எழ,
மேல் திண் வாயிலில் மேவினர் வீடினார்,
காற்றின் மாமகன் கை எனும் காலனால். (7180)

(மேல்-மேற்குத்திசை; நோன்-வலிய; சால்-மிக்க; காலன்-இயமன்; வீடுதல்-இறத்தல்)

திண்மையான சிறந்த காவல் அமைந்த மேற்குப்புறக் கோபுரவாயிலில், வலிமையான வீரக்கழலணிந்த ஆற்றல் மிக்க துன்முகன் என்னும் படைத்தலைவன் கீழ், மிக்க ஆரவாரம் செய்து கொண்டு அணிவகுத்துச் சென்ற இருநூறு கோடி வெள்ள அரக்கர்சேனையும், காற்றின் சிறந்த மைந்தனான அனுமனுடன் எதிர்த்துப் போர் செய்யக் குவிந்தனர். அவ்வனுமன் தன் கை என்கின்ற இயமனால் அந்தத் துன்முகனையும், அவனுடன் நெருங்கி வந்து போர்செய்த பெரும்பான்மையான அரக்க வீரர்களையும் தாக்கி அழித்தொழித்தான். அவர்கள் மாண்டு போயினர்.

'நூற்று இரண்டு' என்பது இருநூறு வெள்ளத்தைக் குறிக்கும். 'கை எனும் காலனால்' என்னுமிடத்துத் தோன்றும் நயம் உணர்க. இங்கே 'நூற்றிரண்டு வெள்ளமும் நோன்கழல் ஆற்றல் சால் துன்முகனும் மேற்றிண் வாயிலின் மேவினர் வீடினார்' என்ற சொற்றொடர் துன்முகனுடன் வந்த அனைவரும் இறந்தொழிந்தனர் என்ற பொருளைத் தருவதுபோல் தோன்றும். எனினும் இங்கே துன்முகனும், அவனுடன் நெருங்கி வந்து போர்செய்த பெரும்பாலானவர்களும் இறந்தொழிந்தனர் என்றே பொருள் கொள்ளவேண்டும். அனைவரும் இறந்துபட்டனர் எனப்பொருள் கொள்ளுதல் பொருந்தாது. காரணம் பின்னால் 'வச்சிரமுட்டியும் துன்முகக் குன்றமும் அடக்கரும் வலத்து ஐம்பது வெள்ளமும் படக் குறைந்தனர்' எனப் பேசப்பட்டிருப்பதால் இங்கே அனைவரும் அழிந்ததாகப் பொருள் கொள்ளக்கூடாது. மேற்கு வாயிலுக்குத் தலைவனாக இந்திரசித்தன்தான் இராவணனால் பணித்து அனுப்பப்பட்டான். துன்முகன், அவன் கீழ் இருந்த ஒரு அணிக்குத் தலைவனாவான் என்பதை நினைவிற் கொள்க.

82. போர் நிகழ்ச்சி பற்றி ஒற்றர்கள் இராவணனுக்குக் கூறுதல்

அன்ன காலை, அயிந்திர வாய்முதல்
துன்னு போர் கண்ட தூதுவர் ஓடினார்,
'மன்ன! கேள்; என, வந்து, வணங்கினார்;
சென்னி தாழ்க்க, செவியிடைச் செப்பினார். (7181)

Koviloor Digital Library

(அன்னகாலை-அப்பொழுது; துன்னு-நெருங்கி; சென்னி-தலை; செப்புதல்-சொல்லுதல்; தூதுவர்-ஒற்றருமாம்; அயிந்திரவாய்-இந்திரன் திசைவாயில்)

அப்பொழுது, இந்திரனின் கிழக்குத் திசை வாயில் முதலாக ஏனைய மூன்று திசை வாயில்களிலும் நெருங்கி அடர்ந்த போரினை நேரில் கண்ணுற்ற ஒற்றர்கள், விரைந்து ஓடிவந்து, இராவணனை வணங்கி, ''அரசே! கேட்பீராக!'' என்று கூறவும், ஒற்றர்களாதலால், இராவணன் தன் தலையைச் சற்று தாழ்த்திச் சாய்க்கவும், அவர்கள் அவன் காதுகளில் இரகசியமாகக் கீழ்க்கண்டவற்றைக் கூறினார்கள்.

'அயிந்திரன்' என்ற சொல் இந்திரன் என்ற பொருளைத்தரும். அவன் பாதுகாவலாக நிற்கின்ற திசை கிழக்கு. எனவே 'அயிந்திரவாய் முதல்' என்றார் என்க. நான்கு வாயில்களிலும் நிகழும் போரினை நேரில் கண்டவர்கள் இவ்வொற்றர்கள். இங்கே தூதுவர் என்ற சொல்லுக்கு ஒற்றர்கள் என்றே பொருள் கொள்ள வேண்டும். படையின் அணி வகுப்பின் போதே ஒற்றர்களும் அமைக்கப்படுவார்கள் என்பது தெரிய வருகிறது. ஒற்றர்கள் கூறும் செய்திகள் எப்பொழுதும் இரகசியமாகவே கூறப்படும். எனவே அவர்கள் குறிப்பறிந்து இராவணன் தன் தலையைச் சற்று தாழ்த்தினான். அது அவர்கள் அவன் செவியில் இரகசியமாகக் கூறுவதற்கு ஏதுவாயிற்று என்பதாம். இதே போல முன்பு, சீதாதேவி அனுமனிடம் இராமபிரானுக்குக் கூறியனுப்பிய செய்திகளில், 'இந்த இப்பிறவிக்கு' என்னும் பாடலில் 'திருச்செவி சாற்றுவாய்' எனக் கூறியது இங்கு நினைவிற்கொள்ளத் தகும். அகத்திணையாகிய காதலானாலும், புறத்திணையாகிய போர் ஆனாலும் சரி, சில கருத்துக்கள் இரகசியமாகத் தெரிவிக்கப்பட வேண்டும். இங்கே சொன்னவர்கள் ஒற்றர்கள். அங்கே சொன்ன அனுமன் தூதுவன் என்பதறிக. இரகசியம் என்பதை 'மறைமொழி' எனத் தமிழாக்கியிருக்கிறது ஒரு உரைநூல்.

83. "வடக்கு வாய்தனில், வச்சிர முட்டியும்,
குடக்கு வாயிலில், துன்முகக் குன்றமும்,
அடக்க அரும் வலத்து, ஐம்பது வெள்ளமும்,
படச் சிதைந்தது நம் படை" என்றனர். (7182)

(குடக்கு-மேற்குத்திசை; வலத்து-வலிமையுடைய; பட-இறந்துபட)

''வடக்குக் கோட்டை வாயிலில் வச்சிரமுட்டி என்ற படைத் தலைவனும், மேற்கு வாயிலில் மலை போன்ற ஆற்றல் மிக்க துன்முகன் என்ற படைத்தலைவனும், அவனுடன்கூட, பகைவர் யாராலும் வெல்லுதற்கரிய வலிமை படைத்த ஐம்பது வெள்ளம் சேனையும், வானரப்படையினரால் அழித்தொழிக்கப்பட, நம் சேனை சிதர்ந்து பின்னடைந்து போய்விட்டது'' என்று ஒற்றர்கள் இராவணனிடம் கூறினர்.

Koviloor Digital Library

மேற்கு வாயிலில் துன்முகனுடன் இறந்துபட்டவர்கள் ஐம்பது வெள்ளம் மட்டுமே என்பதை இங்கு மீண்டும் நினைவுபடுத்திக் கொள்க. வடக்கு வாயிலில் இருநூறு வெள்ளம் படையுடன் தலைமையேற்று நின்றவன் இராவணன்தான் என்பதையும் இங்கு எண்ண வேண்டும்.

84. "வென்றி வேற் கை நிருதர் வெகுண்டு எழ,
தென்திசைப் பெரு வாயிலில் சேர்ந்துழி,
பொன்றினான் அச் சுபாரிசன்; போயினார்
இன்று போன இடம் அறியோம்" என்றார். (7183)

(வென்றி-வெற்றி; வெகுண்டு-சினந்து; பொன்றுதல்-இறந்துபடுதல்)

"வெற்றி பொருந்திய வேற்படையைக் கையில் கொண்டு, சினந்து எழுந்து சென்ற அரக்கர்கள், தென்திசை வாயிலைச் சென்றடைந்த போதே, அந்தச் சுபாரிசன் என்னும் அரக்கர் படைத்தலைவன் மாண்டுபோயினான்; அவனுடன் சென்றவர்கள் போன இடம் பற்றி நாங்கள் இப்பொழுது வரை அறியக் கூடவில்லை" என்று ஒற்றர்கள் இராவணனிடம் கூறினார்கள்.

"தென் திசை வாயிலில் சேர்ந்துழிப் பொன்றினான் அச்சுபாரிசன்" என்றதனால், அவன் போய்ச்சேர்ந்த உடனேயே இறந்து போனான் என்பது தெரிய வருகிறது. மற்றவர்கள் போன இடம் தெரியவில்லை என்று ஒற்றர்களே கூறுவதனால், அரக்கர்களின் பேரழிவு புலப்படுத்தப்பட்டது. தெற்கு வாயிலில் காப்பாளராகப் பொறுப்பேற்றுப் போனவர்கள். மகோதரனும், மாபெரும்பக்கனும் என்பன த இங்க நினைவிற்கொள்க. சுபாரிசனைக் கொன்றவன் அங்கதன் என்பதையும் நினைக.

85. கீழை வாயில் கிளர் நிருதப்படை,
ஊழி நாளினும் வெற்றிகொண்டு உற்ற நின்
ஆழி அன்ன, அனீகத் தலைமகன்
பூழியான்; உயிர் புக்கது விண்" என்றார். (7184)

(கீழைவாயில்-கிழக்குவாசல்; ஆழி-ஆணைச்சக்கரம்; அனிகம்-சேனை/படை; தலைமகன்-தலைவன்; பூழி-புழுதி)

"கிழக்கு வாசலில், ஊழியிறுதிக்காலத்திலும் வெற்றியே கொண்டு வந்து குவிக்கும் போராற்றல் படைத்தவனும், உன்னுடைய ஆணைச் சக்கரம் போன்றவனுமாகிய பிரகத்தன் என்னும் படைத்தலைவன், கிளர்ந்தெழுந்து அரக்கர்படையுடன் சென்று போரிட்டு மண்ணோடு மண்ஆனான். அவன் உயிர் விண்ணுலகு சென்றடைந்தது" என்று ஒற்றர்கள் இராவணனிடம் கூறினார்கள்.

'ஊழி நாளினும் வெற்றிகொண்டு உற்றவன்' என்றும் 'நின் ஆழி அன்ன' என்றும் 'அனீகத் தலைமகன்' என்றும், பிரகத்தனைச் சிறப்பித்

Koviloor Digital Library

திருப்பதை நோக்குக. எனினும் அத்தகையவனைப் பூழியாளாக்கிய வானரச்சேனையின் போராற்றலே இங்கு பெரிதும் பேசப்பட்டிருக்கிறது என்பதையும் உணர்க. அவன் உடல் மண்புக்கது; உயிர் விண்புக்கது என்று கூறிய நயம் கருதுக.

86. இராவணன் பெரும் சீற்றம் கொள்ளுதல்

என்ற வார்த்தை எரிபுகு நெய் எனச்
சென்று, சிந்தை புகுதலும் சீற்றத் தீ
கன்று, கண்ணின்வழிச் சுடர் கான்றிட,
நின்று நின்று, நெடிது உயிர்த்தான் அரோ! (7185)

(எரி-நெருப்பு; கன்றுதல்-சிவந்திருத்தல்; சுடர்-நெருப்புப்பொறி; கான்றுதல்-உமிழ்தல்/கக்குதல்/வெளிப்படுத்துதல்; உயிர்த்தல்-பெருமூச்சுவிடுதல்; உயிர்ப்பு-பெருமூச்சு)

என்று ஒற்றர்கள் கூறிய செய்தி, நெருப்பில் நெய்யை ஊற்றினாற் போல, இராவணனுடைய மனத்தில் சென்று நுழைந்ததும், அவனுடைய கோபத்தாலாய நெருப்பு, சிவந்த கண்களின் வழியாகப் பொறிப்பொறியாய்ச் சிந்தவும், ஒன்றும் பேசாது, நின்றுகொண்டே, பெருமூச்செறிந்தான்.

'எரிபுகு நெய்' என்பது ஒரு அருமையான சொற்றொடர். வேள்வித்தீ வளர்க்கும் போது அதில் நெய்யைப் பெய்தால் அது கொழுந்து விட்டு எரியும் என்பது நாம் அறிந்ததே. இங்கே வானரச்சேனை இலங்கையின் மீது படையெடுத்து வந்திருக்கிறது என்பதே இராவணனுடைய மனத்தில் எரியும் நெருப்பு. இப்போது ஒற்றர்கள் நான்கு திசைகளிலும் அரக்கர்படைத் தலைவர்களும், அரக்கர்படையும் அழிந்து சிதைந்தது என்று கூறியது அந்நெருப்பில் பெய்த நெய் எனலாகும்; அவனுடைய சீற்றம் எப்படி வெளிப்பட்டது என்பதையும் நல்ல சிறந்த சொற்றொடரால் குறிக்கிறான் கவிஞன். 'சீற்றத் தீ கன்று கண்ணின் வழிச்சுடர் கான்றிட' என்பதால் சீற்றத்தின் உச்சிக்குச் சென்று, அவன் கண்களிலிருந்து நெருப்புப் பொறி வெளிப்பட்டது என்று கூறியது உயர்வு நவிற்சி எனக்கொள்க. 'நின்று நின்று' என்ற அடுக்கு எதுவும் பேசாது, சற்று நேரம் வாளா நின்று கொண்டேயிருந்தான் என்பதைக் குறிக்கும் திகைப்புக் குறிப்பு எனக்கொள்க. 'மண்டும் எரியுள், மரந்தடிந்து இட்டற்றால்' என்பது புறப்பொருள் வெண்பாமாலை. 'சீற்றத் தீ' எனச் சினத்தை நெருப்பாக உருவகித்தார் என்க. 'நெய்பெய் தீயின் எதிர்கொண்டு' என்பது குறுந்தொகை. சினத்தால் நின்றிருந்த இராவணனிடம் இருந்து சொற்கள் ஏதும் வெளிவரவில்லை, பெருமூச்சும், நெருப்புப் பொறியுமே வெளி வந்தன என்றார் என்க. இராவணன் சிந்தை நெருப்பு, ஒற்றர்கள் வார்த்தை அதில் பெய்த நெய் என்பதாம்.

Koviloor Digital Library

87. ஒற்றர்கள் விளக்கமாகக் கூறுதல்

மறித்தும், 'ஆர் அவன் ஆர் உயிர் வவ்வினான்?
இறுத்துக் கூறும்' என்றான்; 'இசை எங்கணும்
நிறுத்தும் நீலன், நெடும் பெரும் சேனையை,
ஒறுத்து, மற்று அவனோடும், வந்து உற்றனன். (7186)

(மறித்தும்-மீண்டும்; ஆர்-அரிய; இசை-புகழ்; ஒறுத்தல்-அழித்தல்; இறுத்தல்-விடைசொல்லுதல்; வவ்வுதல்-கவர்தல்) (குளகப்பாடல்)

இராவணன் மீண்டும் அந்த ஒற்றரைப் பார்த்து, ''நம் படைத்தலைவன் பிரகத்தனுடைய அரிய உயிரைக் கவர்ந்தவன் எவன்? தெளிவாக விடை கூறுங்கள்'' என்றான். அதற்கு ஒற்றர்கள், எல்லாத்திக்குகளிலும் தன் புகழை நிலைநிறுத்தி வரும் நீலன் என்னும் வானர சேனைத்தலைவன் நமது நீண்ட பெரிய படையை அழித்து, பின்னர், பிரகத்தனோடும் போர்புரிவதற்காக அவன் இருக்குமிடம் வந்துசேர்ந்தான். - பாடல் தொடர்கிறது.

பாடல் முடிவதுபோல் தோன்றினாலும், ஒற்றர்கள் கூற்று இன்னும் முடியவில்லை. அடுத்த பாடலிலும் தொடர்கிறது. முதலில் கிழக்கு வாயிலில் நிகழ்ந்தது பற்றிக் கூறத் தொடங்குகின்றனர் ஒற்றர்கள் என்பதாம். எனவே அவன் என்பதற்குப் பிரகத்தன் என்று பொருள் கொள்ளப்பட்டது. 'ஒறுத்தல்' என்ற சொல் குறளில் 'தண்டித்தல்' என்ற பொருளைத்தரும். இங்கே அழித்தல் என்ற பொருளைத்தந்து நின்றது. 'ஒறுத்தானாம் ஒன்னார் புரம் கண் மூன்றும்' என்பது தேவாரம்.

88. "உற்ற போதின், இருவரும், ஒன்று அல,
கற்ற போர்கள் எலாம் செய்த காலையில்,
நெற்றி மேல், மற்று அந்நீலன் நெடுங்கையால்,
எற்ற, வீந்தனன்" என்ன இயம்பினார். (7187)

(அல-அல்ல; எற்ற-தாக்க; வீந்தான்-வீழ்ந்தான்/இறந்தான்; உறுதல்-நெருங்குதல்)

அவ்வாறு இருவரும் ஒருவரோடொருவர் போர் செய்ய நெருங்கிய சமயத்தில், தாம் கற்றறிந்த எல்லாவிதப் போர்முறைகளையும் பயன் படுத்திப்போர்புரிந்தனர். அப்போது, அந்தநீலன்என்னும்வானரப்படைத் தலைவன் தனது நீண்ட கைகளினால் நம் படைத்தலைவன் பிரகத்த னுடைய நெற்றியின் மீது வேகமாகத் தாக்க, அதனால் பிரகத்தன் தரையில் வீழ்ந்து மாண்டுபோனான்'' என்று கூறினார்கள்.

Koviloor Digital Library

'கற்ற போர்கள்' என்பது விற்போர், வேல்போர், வாட்போர், யானைஏற்றம், குதிரை ஏற்றம், தேர்ஏற்றம் முதலியனவற்றைக் குறிக்கும் எனக்கொள்க. இருவரும் சமநிலையில் போர் புரிந்தனர் என்பதாம்.

89. "அன்னவன்னொடும் போன அரக்கரில்
நல் நகருக்கு வந்தோம், ஐய! நாங்களே;"
என்ன என்ன, எயிற்று, இகல் வாய்களைத்
தின்னத்தின்ன, எரிந்தன திக்கு எலாம். (7188)

(என்னஎன்ன-சொல்லச்சொல்ல; எயிறு-பற்கள்; இகல்-வலிய; தின்னத்தின்ன-அதுக்க அதுக்க/கடித்து மெல்லுதல்; ஐயன்-தலைவன்; வாய்-உதடுகள்)

ஒற்றர்கள் இராவணனை நோக்கி, "தலைவனே! அந்தப் பிரகத்தனோடு, போர்முனைக்குச் சென்ற அரக்கவீரர்களில், நமது அழகிய சிறந்த இலங்கை மாநகரத்திற்குத் திரும்பி வந்தவர்கள் நாங்கள் மட்டுமே" என்று பலமுறை கூறினர். அவ்வாறு அவர்கள் சொல்லச்சொல்ல, இராவணன் கோபத்தால் தனது பத்து வாய்களிலும் உள்ள உதடுகளையும், தனது பற்களால் கடித்து மெல்லலானான். அவனது சினத்தின் மிகுதியால் எல்லாத் திக்குகளும் நெருப்புப் பற்றி எரியலாயின.

"திரும்பி வந்தவர் நாங்கள் மட்டுமே" என்று கூறியதால், திரும்பி வராதவர்களெல்லாம் இறந்து போயினர்" என்பதை அருத்தாபத்தியால் பெற வைத்தனர் எனக்கொள்க. அருத்தாபத்தி என்பது அனுமான அளவை; தெரிந்த ஒன்றைக்கூறித் தெரியாத ஒன்றைத் தெரியவைத்தல், இராவணனுக்குப் பத்துத்தலைகள். எனவே 'வாய்கள்' என்று பன்மையில் கூறப்பட்டது என்க. ஒற்றர்களும் மிகச் சமர்த்தர்கள் எனப் புலப்படுத்தப் பட்டது. 'தின்னதின்ன' என்ற அடுக்கும், 'சொல்லச் சொல்ல' என்ற அடுக்கும் பலமுறை இடைவிடாமல் என்ற பொருளைத்தரும்.

90. இராவணன் மீண்டும் வினவுதல்

மாடு நின்ற நிருதரை, வன்கணான்,
ஓட நோக்கி, 'உயர் படையான் மற்று அக்
கோடு கொண்டு பொருத குரங்கினால்,
வீடினான்!" என்று, மீட்டும் விளம்பினான். (7189)

(மாடு-பக்கம்; நிருதர்-அரக்கர்; நோக்குதல்-உறுத்துப்பார்த்தல்; படை-படைக்கலன்கள்/போர்க்கருவிகள்; கோடு-மரக்கிளைகள்; பொருதல்-போர்செய்தல்; வீடுதல்-இறத்தல்; மீட்டும்-மீண்டும்; வன்-கொடுமை/வலிமை; ஓட-நெடிது)

Koviloor Digital Library

இராவணன் தன் அருகில் நின்றிருந்த வீர அரக்கர்களை நோக்கி, தனது கொடுமை நிறைந்த கண்களால் அவர்களை நன்கு நெடிது உற்றுப்பார்த்து, ''உயர்ந்த, சிறந்த படைக்கலன்களையும், போர்க்கருவிகளையும் கொண்டு போர்புரிந்த பிரகத்தனை, அற்பமான, வெறும் மரக்கிளைகளை மட்டுமே கொண்டு போர்புரியும் ஒரு குரங்கு வீழ்த்தியதா?'' என்று மீண்டும் மீண்டும் கேட்டான்.

செய்தியைக் கூறியது ஒற்றர்கள். அருகில் நின்றவர்கள் அரக்கவீரர்கள்; இராவணன் ஏளனமாக வியந்து பேசியது அரக்க வீரர்களை நோக்கி என்பதறிக. 'வன்கணால் ஓட நோக்கி' என்று. தனது கொடிய கண்களின் பார்வையாலேயே அஞ்சி ஓடும்படி நோக்கி, என்று பொருள்கூறுவதும் பொருந்தும். இராவணனுடைய நெஞ்சப்பொருமல் வெளிப்படுத்தப் பட்டது காண்க. 'ஓடநோக்குதல்' என்பது ஆழ்ந்து உற்று நோக்குதலைக் குறிக்கும். 'கோடு, சங்கு, ஊதும் கொம்பு, மரக்கொம்பு, விலங்கின் கொம்பு'' என்பது நிகண்டு.

91. "கட்டது இந்திரன் வாழ்வை, கடைமுறை
பட்டது, இங்கு ஓர் குரங்கு படுக்க" என்று
இட்ட வெஞ்சொல், எரியினில், என்செவி
சுட்டது; என்னுடை நெஞ்சையும் சுட்டதால். (7190)

(கட்டது-வேருடன் அழித்தது; கடைமுறை-கடைசியாக; பட்டது-இறந்தது; படுக்கல்-கொல்லுதல்; இட்ட-கூறிய)

''இந்தப் பிரகத்தன்தான் முன்பு இந்திரனின் வாழ்க்கையை வேரோடும் களைந்து எறிந்தவன்; ஆனால் இப்போது இறுதியாக, இவன் இறந்து போனதோ, ஓர் அற்பக்குரங்கு கொன்றதனால் என்று ஒற்றர்கள் கூறிய கொடுமையான சொற்கள் என் காதுகளை நெருப்பினால் சுட்டது போன்றிருக்கிறது. அதுமட்டுமல்ல; அது என் நெஞ்சையும் சுட்டுப் பொசுக்கியிருக்கிறது'' என்று தனக்குத் தானே பேசிக்கொள்கிறான் இராவணன்.

'கட்டது' என்ற சொல் இதே பொருளில் குறள்550ல் 'களைகட்டதனோடு நேர்' என்று பயன்படுத்தப்பட்டிருப்பதும் காண்க. பிரகத்தனின் விபரீதமான முடிவுக்கு ஏங்கி இரங்குகிறான் இராவணன் என்பதாம். 'புரந்தார் கண்நீர் மல்கச் சாகில் பின் சாக்காடு இரந்து கோள் தக்கது உடைத்து' என்பதும் குறள்780. 'தற்கொள் பெருவிறல் வேந்து உவப்பத் தான் அவற்கு ஒற்கத்து உதவினான் ஆகுமால்' என்பது தொல்காப்பியம். 'நெஞ்சையும்' என்ற இடத்து 'உம்' உயர்வு சிறப்பு உம்மை எனக்கொள்க. உருவப் பொருளாகிய செவியை எரி சுட்டது என்பது சரி; அருவப் பொருளாகிய நெஞ்சையும் சுட்டது என்றதனால் அந்த உம்மை உயர்வு சிறப்பு எனக்கருதுக.

Koviloor Digital Library

92. 'கருப்பை போல் குரங்கு எற்ற, கதிர் சுழல்
பொருப்பை ஒப்பவன்தான் இன்று பொன்றினான்;
அருப்பம் என்று பகையையும், ஆர்அழல்
நெருப்பையும், இகழ்ந்தால் அது நீதியோ?'' (7191)

(கருப்பை-எலி; எற்ற-தாக்க; கதிர்-சூரியன்; சுழல்தல்-வலம்வருதல்; பொருப்பு-மலை/மேருமலை; பொன்றுதல்-இறந்துபடுதல்; அழல்-கொதிக்கின்ற; அருப்பம்-அற்பம்/சிறியது/எளியது; ஆர்-அரிய)

''எலியைப் போன்ற அற்பமான ஒரு குரங்கு தாக்கியதால்தான், சூரியன் வலம் வருகின்ற மேருமலையை ஒத்தவனான பிரகத்தனே இன்று இறந்து பட்டிருக்கிறான். எனவே அற்பம் எளியது என்று பகைவர்களையும், அரிய, கொதிக்கும் தன்மையும், விரிந்து பரவுகின்ற தன்மையயுடைய நெருப்பையும், இழிவாகக் கூறுதல் நீதிநெறியாகாது'' என்கிறான் இராவணன்.

இதைச்சொல்லுபவன் இராவணன் என்பதுதான் வியப்புக்குரியது. காரணம் மானிடரும், விலங்குகளும் அற்பம் என்று கருதிய காரணத்தால் தான், இராவணன் பிரமனிடமிருந்து வரம்பெறும் போது, இவர்களை விலக்கி வரம் கேட்டான். இப்பொழுது அனுபவம் கற்றுத் தந்த பாடம். எனவே 'அற்பம்' என்று பகையையும் நெருப்பையும் இகழக்கூடாது என்று பேசவைத்திருக்கிறது என்பதை உணர்க. 'கருப்பை' என்ற சொல் புதிது; பொருள்புதிது. எலி என்பது பொருள்; பிரகத்தன் என்ற சொல்லுக்கே மலை போன்ற தோற்றமுடையவன் என்பது பொருள். எனவே 'கதிர்சுழல் பொருப்பாகிய' மேருமலையை ஒத்தவன் என்றார் என்க. அற்பம் என்பது 'அருப்பம்' என எதுகை நோக்கித் திரிந்தது. 'வினை, பகை என்ற இரண்டின் எச்சம் நினையுங்கால், தீ எச்சம் போலத்தெறும்' என்பது குறள்-674. ''அளைஉறை பாம்பும், அரசும், நெருப்பும், முழையுறை சீயமும் என்று இவை நான்கும் இனைய, எளிய பயின்றன என்றெண்ணி, இகழின் இழுக்கம் தரும்' என்பது ஆசாரக்கோவை 84. ''எரியும் தீத்திரள் எத்துணைத்து ஆயினும், கரியச்சுட்டிடும், காந்திக் கனலுமேல் தெரியில் தொல்பகை தான் சிறிதாயினும், விரியப்பெற்ற பின் வென்றிடுகிற்குமே!'' என்பது சூளாமணி. சிறப்புக் கருத்தைக்கூறி அதன்மூலம் பொதுப் பொருளைப் பெற வைத்ததால் இப்பாடல் வேற்றுப்பொருள் வைப்பு அணியின் பாற்படும். இப்போதுதான் முதன்முதலில் சிறிய குரங்கு என்று இகழ்ந்து வாளாவிருத்தல் கூடாது என்பதை இராவணன் உணர்ந்திருக் கிறான் என்பதைக் காட்டும் பாடல் இது என்க.

93. நிற்க அன்னது; நீர் நிறை கண்ணினான்,
'வற்கம் ஆயின மாப்படையோடும் சென்று,
ஒற்கம் வந்து உதவாமல் உறுக!'' என,
விற்கொள் வெம்படை வீரரை ஏவியே. (7192)

Koviloor Digital Library

(அன்னது-அந்த நிகழ்ச்சி; நிற்க-ஒருபுறம் இருக்கட்டும்; வற்கம்-வர்க்கம்/கூட்டம்/அணி/இனம்; ஒற்கம்/தளர்ச்சி/பின்வாங்குதல்; மா-சிறந்த; உதவுதல்-அடைதல்; வெம்-கொடிய; ஏவுதல்-கட்டளை யிடுதல்) (குளகப்பாடல்)

நீர் மல்கும் கண்களையுடைய இராவணன், அங்கு நின்றிருந்த, விற்படையைக் கையில் கொண்டுள்ள, கொடிய படை வீரர்களை நோக்கி, ''அது ஒருபுறம் இருக்கட்டும்; இப்போது நமது கூட்டமாகிய பெரிய படையுடன் அணியாகச் சென்று, அங்கு இருக்கின்ற வீரர்கள் தளர்வுற்றுப் பின்னடையா வண்ணம், அவர்கள் இருக்கும் போர்க்களத்திற்குச் சென்று அஞ்சாமல் போர் புரிக!'' என்று கட்டளையிட்டு அனுப்பி - பாடல் தொடர்கிறது.

'அன்னது' என்பது பிரகத்தன் இறந்துபட்ட நிகழ்ச்சியைக் குறிக்கும். 'நிற்க' என்பது, அது ஒரு புறம் இருக்கட்டும் என்ற பொருளைத்தரும். இராவணன் கண்களில் முதன்முதலாகக் கண்ணீர் பெருகும் காட்சியைப் படம்பிடித்துக் காட்டுகிறான் கவிஞன். வருக்கம் என்பது எதுகைநோக்கி வற்கம் என்றாயிற்று. ஒற்கம் என்பது தளர்ச்சி என்ற பொருளைத்தந்து, இங்கு பின்வாங்குதல் என்ற குறிப்பைத் தரும். 'கற்றிலனாயினும் கேட்க; அஃது, ஒருவர்க்கு ஒற்கத்தின் ஊற்றாம் துணை' என்பது குறள்*414*.

94. இராவணன் தானே போருக்குச் செல்லத் தேர் ஏறுதல்

மண்டுகின்ற செருவின் வழக்கு எலாம்
கண்டு நின்று, கயிலை இடந்தவன்
புண்திறந்தன கண்ணினன், பொங்கினான்,
திண்திறல் நெடுந்தேர் தெரிந்து ஏறினான். (7193)

(இடத்தல்-பெயர்த்தெடுத்தல்; செரு-போர்; வழக்கு-முறைமை; தெரிந்து-ஆராய்ந்து; மண்டுதல்-மிகுதல்; பொங்குதல்-வெகுள்தல்; கண்டு-மனத்தால் ஆராய்ந்து; திறத்தல்-பிளத்தல்)

கயிலை மலையையே பெயர்த்தெடுத்த வலிமை படைத்த இராவணன், இப்போது, குரங்குப் படையுடன் மிக்குச் செய்கின்ற போரில் நிகழ்த்தும் முறைகளையெல்லாம் நன்கு மனத்தில் ஆராய்ந்து பார்த்து, சினம் மிக்குக்கொண்டு, பொங்கியெழுந்து, புண்கள் பிளக்கப்பட்டுச் சிவந்து தோன்றுவதுபோலச் சினத்தால் சிவந்த கண்களைக் கொண்டு, திண்ணிய திறமைவாய்ந்த உயர்ந்த சிறந்த தேர் ஒன்றினை நன்கு ஆராய்ந்து தெரிந்தெடுத்து அதில் ஏறி அமர்ந்தான்.

'மண்டுதல்' என்பது மிகுதியாகச் செய்கின்ற என்று பொருள்படும். கயிலை மலையை எளிதாகப் பெயர்த்தெடுத்த இராவணனுக்கு, இந்த அற்பமான குரங்குப் படை மண்டிச்செய்கின்ற போரைச் சமாளிப்பது

Koviloor Digital Library

எளிதாகத் தோன்றவில்லை என்பது மறைபொருள். 'செருவின் வழக்கு' என்பது புறத்திணைச் சுருக்கமாகும். போரில் பகைவர் தாக்குதல், எதிர்தாக்குதல், எயில்கடத்தல், எயில்வளைத்தல், அதிரப்பொருதல் முதலிய போர்முறைகளை நன்கு அறிந்தவன் இராவணன். இப்பொழுது அவற்றையெல்லாம் நன்கு ஆராய்ந்து ஒரு தெளிவான முடிவிற்கு வருகிறான் என்பதாம். அவன் ஏறிய தேருக்கு எத்தனை அடைமொழிகள் பாருங்கள். திண், திறல், நெடும், தேர் அதையும் தெரிந்து ஆராய்ந்து ஏறினான் என்கிறான் கவிஞன். கோபத்தால் சிவந்த கண்கள் இருபதும் புண்கள் வாய் திறந்தாற் போன்ற தோற்றமுடையனவாய் இருந்தன என்பதைப் 'புண்திறந்த கண்ணினான்' என்றார் என்க.

95. ஆயிரம் பரிபூண்டது; அதிர் குரல்
மா இருங்கடல் போன்றது; வானவர்
தேயம் எங்கும் திரிந்தது; திண்திறல்
சாய, இந்திரனே பண்டு தந்தது. (7194)

(பரி-குதிரைகள்; குரல்-ஒலி; தேயம்-தேசம்/விண்ணுலகு; சாய-குறைய; அதிர்தல்-முழங்குதல்; சாய்தல்-ஒடுங்குதல்)

அவ்வாறு இராவணனால் ஆராய்ந்து தேர்ந்தெடுக்கப்பட்ட திண்திறல் நெடுந்தேர், ஆயிரம் குதிரைகள் பூட்டப்பெற்றது; அது முழங்குகின்ற ஒலி சிறந்த பெரிய கடலின் ஒலிக்கு ஒப்பானது; மண்ணில் மட்டுமல்லாது, விண்ணிலும், தேவர்கள் உறைகின்ற தேசங்கள் எல்லாம் சுற்றித் திரிந்தது; இராவணனுடன்போர்புரிந்தபோது, இந்திரனின் வலிமைகுன்றித் தோற்க நேர்ந்தபோது, அவனே மனம் உவந்து இராவணனுக்கு அளித்துச் சென்றது, இந்தத்தேர்.

'ஆயிரம்' என்பது மிகுதி குறித்தது; எப்போதும் ஒலித்துக்கொண்டே இருப்பதால் 'ஆர்கலி' என்பது கடலுக்குக்காரணப்பெயர். அந்த ஒலியைப் போல் இந்தத் தேரும் எப்போதும் ஒலித்துக்கொண்டிருக்கும் தன்மையுடையது. இது இந்திரனுடைய தேர் என்பதால், மண்ணுலகில் மட்டும் அல்லாமல் விண்ணுலகிலும் சுற்றித்திரிந்த பெருமையுடையது. திக்கு விஜயகாலத்தில் இராவணன் இந்திரனைத் தோற்கச் செய்து அவனிடமிருந்து கைப்பற்றியது இந்தத்தேர் என உத்தரகாண்டம் பேசுகிறது. இங்கு இந்திரனே தந்தது எனப்படுகிறது. காரணம் எதுவானாலும் அது இந்திரன் செலுத்திய தேர் என்பது பெறப்படுகிறது.

96. ஏற்றி, எண்ணி இறைஞ்சி, இடக்கையால்
ஆற்றினான், தன் அடு சிலை; அன்னதின்
மாற்றம் என்நெடு நாண்ஒலி வைத்தலும்
கூற்றினாரையும் ஆர்உயிர் கொண்டதே. (7195)

Koviloor Digital Library

(ஏற்றி-ஏத்தி/போற்றி/துதித்து; இறைஞ்சி-வணங்கி; எண்ணி-நினைத்து; அடுதல்-கொல்லுதல்; சிலை-வில்; ஆற்றுதல்-தாங்குதல்; மாற்றம்-சொல்; வைத்தல்-உண்டாக்குதல்; கூற்றினார்-இயமன்)

இராவணன், தான் வழிபடு தெய்வமாகிய உருத்திமூர்த்தியாகிய சிவபெருமானை, மனத்தால் நினைத்து, மொழியால் துதித்து, உடலால் வணங்கி தனது, இடக்கையில் பகைவரைக் கொல்லும் இயல்பும், ஆற்றலும் படைத்த விற்படையை ஏந்திக்கொண்டான். அதன் மொழி என்று கூறப்படும் நீண்ட நாணின் ஒலியை எழுப்பினான். அந்த ஒலி இயமனையும் கூடத் தனது அருமையான உயிரைக் கவர்ந்து கொண்டது போல் ஆயிற்று.

இராவணன் தனது இஷ்ட தெய்வத்தை மனம், வாக்கு, காயம் ஆகியவற்றால் வணங்கினான் என்பது எண்ணி, ஏற்றி, இறைஞ்சி எனப்பட்டது. பின்னர், தான் இடக்கையில் பற்றியிருந்த வில்லின் நாண் ஒலியை எழுப்பினான். அவ்வொலி கேட்ட மாத்திரத்திலேயே தனது அருமையான உயிரையும் இயமன் இழந்தான், என்று அவ்வில்லின் நாண் ஒலி சிறப்பிக்கப்பட்டது என்க. வீரர்கள் தங்கள் வில்லினை இடக்கையில் பற்றி நாண் ஒலி எழுப்புவர் என்பது பெறப்படுகிறது. வில் பேசுவது என்பது அந்த நாண் ஒலி எனப்பட்டது. 'கூற்றினார்' என்பது மரியாதைப் பன்மை எனக்கொள்க. ஏத்தி என்பது எதுகைநோக்கி 'ஏற்றி' எனப்பட்டது. எல்லா உயிர்களையும் கொல்லும் இயல்புடைய இயமனையும் கொல்லும் ஆற்றல் பெற்றது இராவணனது வில் என்று அவனுடைய வில் சிறப்பிக்கப்பட்டது.

97. இராவணன் போர்க்கோலம் பூணுதல்

மற்றும், வான்படை, வானவர் மார்பிடை
இற்றிலாதன, எண்ணும் இலாதன,
பற்றினான்; கவசம் படர் மார்பிடைச்
சுற்றினான்; நெடுந் தும்பையும் சூடினான். (7196)

(இற்றல்-ஒடிதல்; எண்-எண்ணிக்கை; வான்-சிறந்த; படை-படைக் கலன்கள்; பற்றுதல்-கைக்கொள்ளுதல்; படர்-படர்ந்த; சுற்றுதல்-பூணுதல்; தும்பை-தும்பைமாலை; நெடுமை-பெருமை/சிறந்த)

மேலும், தேவர்களின் மார்பில் ஊடுருவிச் சென்றாலும் முறிந்து ஒடிந்து போகாத தன்மையுடைய வலியதும், கணக்கற்றவைகளுமான சிறந்த புதிய படைக்கலன்களைக் கைக்கொண்டான். தனது விரிந்து பரந்த மார்பில் கவசங்களை அணிந்து கொண்டான்; போர்க்குச் செல்லுவதற் குரிய அடையாளமாகப் பெருமைவாய்ந்த தும்பைப்பூ மாலையையும் சூட்டிக் கொண்டான்.

Koviloor Digital Library

அதிரப்பொருவது தும்பைத்திணை. எனவே தும்பை மாலையை அணிந்து போருக்குப் புறப்பட்டான் என்க. ''மைந்து பொருளாக வந்த வேந்தனைச் சென்று தலையவிக்கும் சிறப்பிற்று என்ப'' என்பது தொல்காப்பியத் தும்பைத்திணையின் இலக்கணம். எனவே தும்பை மாலை அணிந்தான் என்பதாம். போருக்குச் செல்பவர் தும்பை மாலை சூடுவது பண்டைத் தமிழர் வழக்கு.

98. பேரும், கற்றைக் கவரிப் பெருங்கடல்
நீரும் நீர் நுரையும் என நின்றவன்,
ஊரும் வெண்மை உவாமதிக் கீழ்உயர்
காரும் ஒத்தனன், முத்தின் கவிகையான். (7197)

(பேர்தல்-புரளுதல்; கற்றை-தொகுதி/திரட்சி; கவரி-வெண்கவரி; கவிகை-குடை; உவாமதி-நிறைமதி/பூரணசந்திரன்; கார்-மேகம்; ஊரும்-பொருந்தும்)

அவனுடைய இரண்டு பக்கங்களிலும், அசைகின்ற கவரிமானின் கற்றையாலான அரசச் சின்னமாகிய வெண்சாமரங்கள் வீசப்பட்டன. அவை பெரிய கடலின் கருமையான நீரும், அதில் தோன்றும் வெண்ணிற மான நுரையும் போன்று இராவணன் நின்றிருந்தான். அதுபோல அவன் தலைக்கு மேலே முத்தினாலான வெண் கொற்றக்குடை பிடிக்கப் பட்டிருந்தது. பூரணசந்திரனின் கீழ் உயர்ந்து விளங்குகின்ற கரிய மேகத்தைப் போன்று இராவணன் நின்றிருந்தான்.

இங்கே அரசச் சின்னங்களாகிய வெண்சாமரமும், வெண்கொற்றக் குடையும் பேசப்படுகின்றன. வெண்சாமரம் வெள்ளிய கடல் நுரைக்கும், இராவணன் கரிய கடலுக்கும் உவமை. அதுபோல வெண்கொற்றக்குடை பூரணசந்திரனுக்கும், இராவணன் கரிய மேகத்திற்கும் உவமை. வெண் சாமரைக்கு அருகில் நிற்கும் இராவணனும், வெண்கொற்றக் குடையின் கீழ் நிற்கும் இராவணனும் பற்றிப் பேசுகிறான் கவிஞன். அவற்றிற்குச் சரியான உவமையைத் தேர்ந்தெடுத்த கவிஞனின் கவித்திறம் நோக்குக. வெண்மை நிறமும், புரளும் தன்மையும் உடையதால் வெள்ளிய கடல்நுரை வெண்சாமரைக் கற்றைக்கு உவமை; வட்டவடிவமும், வெண்மை நிறமும் உடையதால், பூரணசந்திரன் வெண்கொற்றக் குடைக்கு உவமை. இப்பாடல் பண்புவமையின் பாற்படும்.

99. போர்த்த சங்கப் படகம் புடைத்திட,
சீர்த்த சங்கக் கடல் உக, தேவர்கள்
வேர்த்து அசங்கிட, அண்டம் வெடித்திட,
ஆர்த்த சங்கம், அறைந்த முரசமே. (7198)

Koviloor Digital Library

(சீர்த்த-சிறப்பு வாய்ந்த; சங்கம்-சங்குகள்; உகுதல்-சிதறுதல்; அசங்குதல்-நடுங்குதல்; போர்த்த-தோல்மூடிய; சங்கம்-திரள்; படகம்-ஒரு வகைப் போர்க்கருவி; புடைத்தல்-அடித்தல்; ஆர்த்தல்-முழங்குதல்; அறைதல்-அடித்தல்)

தோலால் போர்த்தப்பட்ட தொகுதிகளினால் ஆன படகம் என்னும் ஒருவகைப் போர்ப்பறை அடிக்கப்படவும், சிறப்பு வாய்ந்த சங்குகள் நிறைந்த கடல் சிந்திச் சிதறவும், வானத்துத் தேவர்கள் உடல்வியர்த்து நடுநடுங்கவும், புறத்தே உள்ள அண்டகோளகை கூட வெடித்துச் சிதறும்படியும் சங்குகள் ஒலித்தன, முரசங்கள் அடிக்கப்பட்டன.

'படகம்' என்பது ஒரு தோல்கருவி. தோல் தொகுதியினால் சுற்றப் பட்டது என்க. சங்குகளும் முரசங்களும் பேரொலி எழுப்பியதனாலும், படகம் அடிக்கப் பட்டதனாலும், கடல்கள் சிதறின. தேவர் வியந்து நடுங்கினர், அண்டகோளகை வெடித்துச் சிதறியது என்பது கருத்து. மண்ணில் எழுந்த பேரொலியால், விண்ணில் நிகழ்ந்த மாற்றங்களைக் கவிஞன் படம்பிடித்துக் காட்டுகிறான் என்பதால் இப்பாடலை உயர்வு நவிற்சி அணி எனக்கொள்ளுதல் பொருந்தும். கடலில் சங்குகள் நிறைந் திருப்பதால் கடலையே 'சங்கக்கடல்' என்றார் என்க.

100. தேரும், மாவும், படைஞரும் தெற்றிட,
மூரிவல் நெடுந்தானையில் முற்றினான்;
நீர் ஓர் ஏழும் முடிவில் நெருக்கும் நாள்,
மேரு மால்வரை என்ன, விளங்கினான். (7199)

(மா-யானை/குதிரை; தெற்றுதல்-நெருங்குதல்; மூரி-பெரிய/ பெருமை; முற்றுதல்-சூழப்படுதல்; நீர்-கடல்கள்; ஓர்-ஒப்பற்ற)

தேர்ப்படையும், யானை, குதிரைப்படைகளும், காலாட்படையினரும் நெருங்கி நிற்க, பெருமை வாய்ந்த, வலிய, நீண்ட சேனையால் சூழப்பெற்று நிற்கிறான் இராவணன்; இந்தத் தோற்றம் எப்படி இருக்கிறது என்றால், ஊழிமுடிவுக்காலத்தில் ஒப்பற்ற ஏழு கடல்களும் பொங்கி எழுந்து சூழ்ந்து நெருக்குகின்ற போதும், அதன் நடுவில் அசையாது நிற்கும் மேருமலை போன்று இராவணனும் உறுதியுடன் பொலிவு பெற்று நின்றான்.

'மா' என்ற சொல் பொதுவாக விலங்கு என்ற பொருளைத் தந்தாலும் இங்கே யானையையும், குதிரையையும் ஒருசேரக் குறித்து நின்றது எனக்கொள்க. நால்வகைப் படையும் இராவணனைச் சூழ்ந்து நின்றது. அதற்கு யுக முடிவுக்காலத்தில் ஏழுகடல்களும் சூழ்ந்து நிற்கும் மேருமலை உவமை. இதனால் இராவணனின் அசையாத் தன்மை புலப்படுத்தப் பட்டது என்க. இவ்வாறு அசையாது நிற்கும் மேருமலை 'ஊழி தோறும் ஓங்கும் ஓங்கல்' எனச் சிறப்பிக்கப்பட்டது. நால்வகைச் சேனைக் கடலால்

Koviloor Digital Library

சூழப்பட்ட இராவணனுக்கு ஏழு கடலால் சூழப்பட்ட மேருமலை உவமை.

101. ஏழ் இசைக்கருவி வீற்றிருந்தது என்னினும்,
சூழ் இருந் திசைகளைத் தொடரும் தொல்கொடி,
வாழிய உலகு எலாம் வளைத்து வாய் இடும்
ஊழியின் அந்தகன் நாவின், ஓங்கவே; (7200)

(உலகு-பூமி; வளைத்தல்-சூழ்ந்திருத்தல்; இரும்-பெரிய; தொல்-பழமையான; அந்தகன்-இயமன்; ஓங்குதல்-உயர்ந்து தோன்றுதல்; இடுதல்-விழுங்குதல்) (குளகப்பாடல்)

ஏழு என்று சொல்லப்படுகின்ற இசைச்சுவைகள் எல்லாவற்றையும் ஒருங்கே தர வல்லதான இனிய வீணை என்ற இசைக்கருவி, இராவணனது பழமையான கொடியில் பெருமையுடன் இடம்பெற்றிருந்தது என்றாலும், அது உலகில் உள்ள எல்லாத்திசைகளிலும் வாழ்கின்ற உயிரினங்களை யெல்லாம் ஊழி முடிவுக்காலத்தில் சுழற்றித் தன் வாயில் போட்டு விழுங்கும் இயல்பினையுடைய இயமனின் நாக்குப் போன்று உயர்ந்து சுழன்று விளங்கவும் - பாடல் தொடர்கிறது.

வீணை ஏழிசைகளையும் ஒருங்கே தந்து, மக்களை மகிழ்விக்கும், ஒரு இசைக்கருவி. ஆனால் அவ்வீணையைக் கொடியாகக் கொண்டிருக்கும் இராவணனோ உலகத்து மக்களுக்கெல்லாம் அச்சம் உண்டாக்கித் துன்பத்தைத் தந்து கொண்டிருக்கும் இயல்புடையவன் என்றார் என்க. வீணைக்கொடி அசைவது, இயமனின் நாக்கு அசைவதற்கு ஒப்பு. எப்படி வீணைக்கருவி அவன் கொடியில் இடம் பெற்றது என்பதைத் தேவாரம் மிக அழகாகக் கூறுகிறது கேளுங்கள். 'எடுத்தனன் எழிற்கயிலை இலங்கையர் மன்னன்தன்னை, அடுத்து ஒரு விரலால் ஊன்ற, அலறிப் போய் அவனும் வீழ்ந்து, விடுத்தனன் கை நரம்பால் வேத கீதங்கள் பாடக் கொடுத்தனர் கொற்ற வாழ்நாள் குறுக்கை வீரட்டனாரே' என்பது திருநாவுக்கரசர் தேவாரம். எனவே தனக்கு வரமும் வாழ்நாளும் கிடைக்க உதவிய வீணைக்கருவியைத் தன் கொடியாக வைத்துக் கொண்டான் இராவணன் என்க.

102. 'வேணு உயர் நெடுவரை அரக்கர் வேலைக்கு ஓர்
தோணி பெற்றனர்' எனக் கடக்கும் தொல் செருக்
காணிய வந்தவர், கலக்கம் கைம்மிக,
சேண் உயர் விசும்பிடை அமரர், சிந்தவே. (7201)

(வேணு-மூங்கில்; வேலை-கடல்; தொல்-பழமையான; செரு-போர்; காணிய-காணும் பொருட்டு; கைம்மிகுதல்-அதிகமாதல்/பெருகுதல்/

Koviloor Digital Library

மேலோங்குதல்; சேண்-மிக உயர்ந்த; விசும்பு-ஆகாயம்; சிந்துதல்-சிதறி ஓடுதல்; தோணி-ஓடம்) (குளகப்பாடல்)

மூங்கில் போன்று உயர்ந்த, நீண்ட மலைபோலும், பருத்த உடலை உடைய அரக்கர்களின் சேனையாகிய இந்தக் கடலைக் கடப்பதற்கு உற்ற ஓர் ஒப்பற்ற ஓடமாய் இராமபிரானைப் பெற்றிருக்கிறோம் என்று கருதி மகிழ்ந்து, பழமையான இலங்கைப் போர்க்களத்தைக் காணும் பொருட்டு வந்த தேவர்கள், இராவணனைக் கண்டு, மிக்கக் கலக்கம் மேலோங்க, மிக உயர்ந்த இடமாகிய ஆகாயத்தில் சிதறி ஓடவும் - பாடல் தொடர்கிறது.

'வேணுஉயர் நெடுவரை' தோற்றத்தால் அரக்கர்க்கு உவமை; அரக்கரைக் கடல் என்றதனால், இராமபிரானை அதைக் கடக்க உதவும் தோணியாக உருவகித்தார் என்க. 'கடத்தல்' என்ற ஒரே சொல்லை, அரக்கரை 'வெல்லுதல்' என்ற பொருளிலும், கடலைக் கடத்தல் என்ற வேறொரு பொருளிலும் பயன்படுத்திய கவிஞனின் கவித்திறம் நோக்குக. போர்க்களத்தைக் காண மகிழ்ச்சியுடன் சென்ற தேவர்கள் இராவணனைக் கண்டதும் அஞ்சித் துன்பத்துடன் ஆகாயத்தில் சிதறி ஓடினர் என்பது அழகான நகைச்சுவை மிக்க ஒரு கற்பனை.

103. கண் உறு கரும்புகை கதுவ, கார் நிறத்து
அண்ணல் வாள் அரக்கர்தம் அரத்தப் பங்கிகள்
வெண் நிறம் கோடலின், உருவின் வேற்றுமை,
நண்ணினர் நோக்கவும், அயிர்ப்பு நல்கவே. (7202)

(கதுவுதல்-படிதல்/பற்றுதல்; அண்ணல்-பெருமை யுடையோன்; அரத்தம்-இரத்தம்; பங்கி-குடுமி; கோடல்-கொள்ளுதல்/பெறுதல்; நண்ணினர்-நெருங்கியவர்/உறவினர்; அயிர்ப்பு-ஐயம்/சந்தேகம்; நல்குதல்-தருதல்/உண்டாக்குதல்) (குளகப்பாடல்)

இராவணனின் இருபது கண்களிலிருந்தும், வெளிப்பட்ட கடுஞ்சீற்றத்தினால் உண்டான கொடிய புகையானது அங்கிருந்த கரிய நிறம் பொருந்திய, பெருமைசான்ற, கொடிய அரக்கர்களின் இரத்தம் போன்ற சிவந்த செம்பட்டை முடிக்கற்றைகளில் போய்ப் படிந்ததனால், அந்தக் குடுமிகள் வெள்ளை நிறமாக மாறிப்போயின; எனவே அங்கு வந்த அவர்களது நெருங்கிய உறவினர்கள் கூட, உருவ வேறுபாடு கண்டுபிடிக்க முடியாமல் சந்தேகம் கொண்டு நின்றிருக்கவும் - பாடல் தொடர்கிறது.

'அரத்தம்' என்ற சொல்லுக்கு இரத்தம் போன்ற சிவந்த செம்பட்டை மயிர்க்கற்றை என்று பொருள் கொண்டிருக்கிறோம். 'அரத்தம்' என்ற சொல்லுக்கேசிவப்பு என்ற ஒரு பொருளும் உண்டு என்பதும் அறிக. 'பங்கி' என்பது ஆண்களின் முடிக்கற்றை; கூந்தல், கோதை என்பது பெண்களின் முடிக்கற்றை; கோபப்புகை போய்ப் படிந்ததால் செம்பட்டை மயிர் வெள்ளை நிறமாக, நரைத்த முடிபோலத் தோற்றம் தந்தது. எனவே

Koviloor Digital Library

உறவினர்கள் அவர்களை அடையாளம் கண்டுகொள்ள முடியாது திகைத்தனர் என்பது கருத்து. இராவணனின் சீற்றம் மிகுதி புலப்படுத்தப் பட்டது என்க.

104. கால் நெடுந்தேர் உயர் கதலியும், கரத்து
ஏனையர் ஏந்திய பதாகை ஈட்டமும்,
ஆனையின் கொடிகளும், அளவித் தோய்தலால்,
வான யாறொடு மழை ஒற்றி வற்றவே; (7203)

(கால்-சக்கரம்; கதலி-வாழைமரம்; பதாகை-கொடி; ஈட்டம்-கூட்டம்; ஆனை-யானை; அளவி-கலந்து/ஒன்றுகூடி; வானயாறு-ஆகாயகங்கை; மழை-மேகம்; தோய்தல்-படிதல்; எற்றுதல்-உறிஞ்சுதல்) (குளகப்பாடல்)

சக்கரங்கள் பொருந்திய பெரிய தேர்ப்படைகளில் உயர்த்திக் கட்டப் பட்டிருக்கும் வாழைமரங்களும், மற்ற காலாட்படையினரும், குதிரைப் படையினரும் அவரவர் கைகளில் தாங்கிப் பிடித்துக் கொண்டு வருகின்ற பெரிய கொடிகளின் கூட்டமும், யானைப்படையினர் ஏந்திவருகின்ற கொடிகளும், இவை எல்லாமும் ஒன்றுகூடிக் கலந்து படிவதனால், வானத்திலுள்ள ஆகாய கங்கையும், மேகமும், தங்களிடத்தில் உள்ள நீர் உறிஞ்சப்பட்டு, வற்றிப்போகும்படியும் - பாடல் தொடர்கிறது.

'கால்' என்பது தேருக்குக்காலாகிய சக்கரத்தைக் குறிக்கும் என்க; இங்கே கதலி என்பது தேரில் கட்டப்பட்ட வாழை மரத்தைக் குறித்தாலும், கதலி என்ற சொல்லுக்கே 'கொடி' என்று பொருள் கொள்ளுதலும் பொருந்தும். முன்னர் தேர்ப்படையைக் கூறி, பின்னர் யானைப்படையைக் கூறியதால், இடையில் உள்ள ஏனையர் என்ற சொல், நால்வகைப்படையில் எஞ்சி யுள்ள காலாட்படையையும், குதிரைப்படையையும், குறித்ததாயிற்று; இந்தக் கொடிகள் எல்லாம் படிவதால் ஆகாயகங்கையில் உள்ள நீரும், மேகத்திலுள்ள நீரும் உறிஞ்சப்பட்டு வறண்டு போயிற்று என்று உயர்வு நவிற்சியாகக் கூறினார் என்க.

105. ஆயிரம் கோடிப் பேய், அங்கை ஆயுதம்
தூயன சுமந்து, பின்தொடர, சுற்று ஒளிர்
சேயிரு மணி நெடும் சேமத்தேர் தெரிந்து,
ஏயின ஆயிரத்து இரட்டி எய்தவே. (7204)

(சே-சிவந்த; இரும்-பெரிய; மணி-இரத்தினங்கள்; தெரிந்து-ஆராய்ந்து; ஏயின-கட்டளையிடப்பட்டன; இரட்டி-இருமடங்கு; அங்கை-அகங்கை; ஒளிர்-ஒளிவீசித்திகழ்கின்ற; நெடுமை-பெருமை) (குளகப்பாடல்)

இராவணன் உடன், ஆயிரம் கோடிப்பேய்கள், தம் அழகிய கைகளில் புதிய, தூய்மையான சேமப்படைக்கலன்களைச் சுமந்து கொண்டு வரவும்,

Koviloor Digital Library

அதனைச் சுற்றிலும், ஒளிவீசித் திகழ்கின்ற, ஆராய்ந்து தெரிந்து எடுக்கப் பட்ட, சிவந்த பெரிய இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட, பெருமையுடைய சேமத்தேர்கள், உடன்வரக் கட்டளையிடப்பட்டனவுமான இரண்டாயிரம் தேர்களும் அவன் பின்னே தொடர்ந்து வரவும் - பாடல்தொடர்கிறது.

பொதுவாகத் தேர்களைக் குதிரைகள் இழுத்துச் செல்லும். இங்கே அரக்கர்க்கு அரசனாகிய இராவணன் உடன் வந்த தேர்களை ஆயிரம் கோடிப் பேய்கள் இழுத்து வந்தன என்பதை உணர்க. 'தூயன' என்பது, புதிதான, முன்பு பயன்படுத்தப்படாத படைக்கலன்களைக் குறிக்கும் என்க. பேரரசர்கள் போரிடச் செல்லும்போது, அவர்கள் கையில் கொண்டு செல்லும் படைக்கலன்கள் முற்றும் பயன்படுத்தப்பட்டு விட்டால், மேலும் அவர்களுக்குத் தருவதற்காகப் புதிய படைக்கலன்கள் அவர்கள் உடன் எடுத்துச் செல்லப்படும். அந்தப் படைக்கலன்கள் 'சேமப் படைக் கலன்கள்' என்றும், அவற்றை ஏந்திவரும் தேர்கள் 'சேமத்தேர்கள்' எனவும் வழங்கப்படும். சேமம் என்ற சொல் பாதுகாப்பு என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதறிக. ஆயிரம் கோடிப் பேய்கள் பூட்டப் பெற்ற இரண்டாயிரம் சேமத்தேர்கள் இராவணனைப் பின்தொடர்ந்து சென்றன என்பதாம்.

106. ஊன்றிய பெரும்படை உலைய, உற்று உடன்
ஆன்ற போர் அரக்கர்கள் நெருங்கி ஆர்த்து எழ,
தோன்றினன், உலகு எனத் தொடர்ந்து நின்றன
மூன்றையும் கடந்து, ஒரு வெற்றி முற்றினான். (7205)

(உலைதல்-அஞ்சி வருந்துதல்/நிலைகுலைதல்; ஆன்ற-அமைந்த; கடந்து-வென்று; முற்றுதல்-நிறைதல்; ஊன்றிய-நிலைபெற்று நின்ற; ஒரு-ஒப்பற்ற)

தன் எதிரே போர் புரிதற்பொருட்டு நிலைத்து நிற்கின்ற பெரிய வானரச் சேனை அச்சத்தால் வருந்தி நிலைகுலையவும், தன்னுடன் பொருந்தி அமைந்து வந்த ஆற்றல் மிக்க போர் வீரர்களான அரக்கர்கள் நெருங்கி மகிழ்ச்சியால் ஆரவாரித்துக் கிளர்ந்து எழவும், ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கியமைக்கப்பட்ட மேல், நடு, கீழ் உலகங்கள் என்று சொல்லப் படுகின்ற மூன்று உலகங்களையும் வென்று, ஒப்பற்ற நிறைவான ஒரு வெற்றியை உடையவனான இராவணன் போர்க்களத்தில் காட்சி யளித்தான்.

'ஊன்றிய பெரும்படை' என்பது போர்புரிவதற்காக எதிரே காத்து நிற்கும் வானரப்படையைக் குறித்தது. வானரப்படை அச்சத்தால் நிலை குலைந்த போது, அரக்கர்படை மகிழ்ச்சியால் ஆர்ப்பரித்துக் கிளர்ந்து எழுந்தது என்க. மூன்று உலகங்களையும் எளிதாக வெல்லுவது, தன் வசப் படுத்துவது என்பது சாதாரணமான வெற்றியல்ல; எனவே 'ஒருவெற்றி' -

Koviloor Digital Library

ஒப்பற்ற வெற்றி எனப்பட்டது என்க. 'முற்றுதல்' என்பது நிறைவடைதலைக் குறிக்கும். எதிர்த்து நிற்கும் படையை ஊன்றிய படை என்றார். இதனை ''எதிர் ஊன்றல் காஞ்சி'' எனப்புறப் பொருள் வெண்பாமாலை கூறும். இராவணன் போர்க்களத்தில் தோன்றிய சிறப்பைக் கவிஞன் இந்த ஆறு பாடல்களில் தொகுத்துக் கூறியிருப்பதை உணர்க. வீணைக்கொடி ஓங்க, அமரர் சிந்த, கரும்புகை கதுவ, அயிர்ப்பு நல்க, வானயாறொடு மேகம் ஒற்றி வற்ற, ஆயிரம்கோடிப் பேய் அங்கை ஆயுதம் தூயன சுமந்து பின்தொடர, சேமத்தேர் ஆயிரம் இரட்டி எய்த, ஊன்றிய பெரும்படை உலைய, போர்அரக்கர்கள் ஆர்த்து எழ, ஒரு வெற்றி முற்றினான் தோன்றினான் என முடிவுபெறும்.

107. ஒற்றர்கள் இராவணன் வருகையை இராமபிரானுக்குத் தெரிவித்தல்

'ஓதுறு கருங்கடற்கு ஒத்த தானையான்,
தீதுறு சிறுதொழில் அரக்கன், சீற்றத்தால்,
போதுறு பெருங்களம் புகுந்துளான்' எனத்
தூதுவர், நாயகற்கு அறியச் சொல்லினார். (7206)

(உறு-பொருந்திய; சிறுமை-இழிவு; ஓதுதல்-ஒலித்தல்; கருமை-பெருமை; தானை-சேனை/படை; தூதுவர்-ஒற்றர்; நாயகன்-தலைவன்/இராமபிரான்; அறிய-விளக்கமாக)

''தீய எண்ணங்களையே கொண்டவனும், பிறன்மனை நயத்தலாகிய இழிவான செயலைச் செய்தவனுமாகிய அரக்கர்க்கரசன் இராவணன், பெரும் சினத்தோடு, புகழ்ந்து சொல்லப்படுகின்ற, ஒலிக்கின்ற கரிய, பெரிய கடல்போலும் சேனையை உடன் கொண்டவனாகி, நாம் நிற்கின்ற போர்க்களத்தினுள், போர்செய்வதற்காக, நுழைந்துள்ளான்'' என்று வானர ஒற்றர்கள், தங்கள் தலைவனாகிய இராமபிரானுக்கு நன்கு புரியும் வண்ணம் விளக்கமாகச் சொன்னார்கள்.

'ஓதுதல்' என்பது ஒலித்தல் என்ற பொருளையும், 'புகழ்ந்து கூறப்படுகின்ற' என்ற பொருளையும் தரும். தானை அதன் பெருக்கம் பற்றியும், நிறம் பற்றியும் கருங்கடற்கு உவமையாயிற்று; 'சிறுதொழில்' என்பது அற்பமான, இழிவான பிறன்மனை நயத்தலைக் குறிக்கும். இராவணன் என்று அவன் பெயர்கூறக்கூடக்கூசி, 'அரக்கன்' என்றனர் என்க. அரக்கர்க்கு அரசன் என்று கூடக்கூறாதது கவனிக்கத் தக்கது. 'போதுறு பெருங்களம்' என்பது நாம் நிற்கின்ற போர்க்களம் என்றும், அவன் வந்திருக்கின்ற போர்க்களம் என்றும் இருபொருளையும் தருவதை நோக்குக. 'தூதுவர்' என்ற சொல் ஒற்றறிபவர்களையும் உள்ளடக்கியது எனக்கொள்க.

Koviloor Digital Library

108. இராமபிரான் தோள்கள் பூரித்தல்

ஆங்கு, அவன் அமர்த் தொழிற்கு அணுகினான் என,
'வாங்கினென் சீதையை' என்னும் வன்மையால்,
தீங்குறு பிரிவினால், தேய்ந்த தேய்வு அற,
வீங்கின, இராகவன் வீரத் தோள்களே! (7207)

(அமர்-போர்; வாங்குதல்-பெறுதல்/மீட்டல்/அடைதல்; வன்மை-உறுதி; தேய்ந்த-மெலிந்துபோன; அற-நீங்க; வீங்குதல்-பருத்தல்; தீங்கு-துன்பம்; ஆங்கு-அப்பொழுது)

அப்பொழுது ''இராவணன் போர்க்களத்தில் போர்செய்வதற்குப் புகுந்திருக்கிறான்'' என்று ஒற்றர்கள் தெரிவித்த அளவிலேயே இராம பிரான், ''சீதையை மீட்டு விட்டேன்'' என்னும் உறுதிப்பாட்டோடு, தான் இதுகாறும் கொண்டிருந்த பிரிவுத்துயர் என்னும் துன்பம் நீங்கவும், மெலிந்து போயிருந்த தோள்களின் மெலிவு நீங்கவும் இப்போது இராம பிரானுடைய வீரம் பொருந்திய தோள்கள் மகிழ்ச்சியால் பூரிப்படைந்தன; எனவே பருத்துத் தோன்றின.

'வாங்கினென்' என்பது உறுதி பற்றி வந்த காலவழுவமைதி எனக்கொள்க. வீரற்குத் தோள்கள் வீங்குவது முன்பே நாம் கண்டது. 'போரென்ன வீங்கும் பொருப்பன்ன பொலன் கொள் திண்தோள்' என்பது பாலகாண்டம். இங்கே ஒன்று நோக்கவேண்டும். இராமபிரானது நோக்கம் சீதாதேவியைச் சிறை மீட்க வேண்டும் என்பதுதானேயன்றி, இராவணனைக் கொல்ல வேண்டும் என்பதல்ல. எனினும் இராவணனை வென்றாலல்லது சீதாதேவியை மீட்கமுடியாது என்பதைத் தெளி வுறுத்தவே 'வாங்கினன் சீதையை' என்றான் என்க. தனக்கு உகந்தாரைக் காப்பதற்காகத் தனக்கு உகவாதாரை அழிக்க நேர்கிறது என்பது சிந்திக்கத்தக்க வைணவக் கோட்பாடு என்பதறிக.

109. இராமபிரான் போர்க்கோலம் பூண்டு புறப்படுதல்

தொடையுறு வற்கலை ஆடை சுற்றி, மேல்
புடையுறு வயிரவாள் பொலிய, வீக்கினான்;
இடையுறு கருமத்தின் எல்லை கண்டவர்,
கடையுறு நோக்கினன், காணும் காட்சியான். (7208)

(இடை-தடை; கருமம்-நல்தீவினைகள்; கடை-இறுதி; நோக்கு-ஞானக்கண்; தொடை-தொடுத்தல்; வற்கலை-மரவுரி; புடை-பக்கம்; பொலிதல்-விளக்கம் பெறுதல்; வீக்குதல்-கட்டுதல்; எல்லை-முற்றிய நிலை/வரம்பு)

Koviloor Digital Library

பரம்பொருளைக் காண்பதற்கு நல்வினை, தீவினை ஆகிய இரு வினைகளும், தடையாய் அமைந்திருத்தலால், அவ்விருவினைகளையும் நீக்கியவர்களாகிய ஞானியர்களின் ஞானக் கண்களுக்கே காட்சிதருகின்ற இயல்புடைய பரம்பொருளின் அவதாரமான இராமபிரான், இப்போது, மரப்பட்டைகளால் தொடுத்துக் கட்டப்பெற்ற மரவுரியைத் தம் உடம்பில் சுற்றி உடுத்துக் கொண்டு, அதன்மேல் பக்கத்தில் இடையில் உறுதிவாய்ந்த வாளினையும், பொலிவுபெற்றுத் திகழுமாறு இறுகக் கட்டிக்கொண்டான்.

'தொடை' என்பது தொடுக்கப்பட்ட என்ற பொருளைத்தரும். மரப்பட்டைகளால் தொடுக்கப்பெற்ற ஆடை என்பதால், 'தொடையுறு வற்கலை ஆடை' என்றார் என்க. வாட்படையின் வலிமை குறிக்க 'வயிரவாள்' என்றார். வாட்படை இயல்பிலேயே பொலிவுற்றுத் திகழ்ந்தாலும், இராமபிரானின் இடையில் கட்டிக்கொண்டதால் மேலும் பொலிவுற்று விளங்கிற்று என்பதாம். இராமபிரான் பரம்பொருள் என்பதும் அவன் ஞானியரின் ஞானக் கண்ணுக்குப் பரம்பொருளாகவும் எளியோரின் ஊனக்கண்களுக்கு ஒரு போர்வீரனாகவும் காட்சி தருகிறான் என்பது குறித்து 'இடையுறு கருமத்தின் எல்லை கண்டவர் கடையுறு நோக்கு' என்றார் என்க. 'வாயு நிற்ப மனன் நிற்கும், மனந்தான் நிற்பப் பொறி நின்று, பாய பொறிகள் நிற்ப, இடர்ப்படு புன் புலன்கள் நின்றனவால்; ஆய புலன்கள் நின்றமையால் அகிலம் தோன்றாது, உள்ளத்தே தூயபரமானந்த பரஞ்சோதி தோன்றக் கண்டிருந்தார்' என்பது பிரபுலிங்கலீலை; நல்வினை, தீவினை, அதனால் விளையும் புண்ணியம், பாவம் என்பவைதான் பரம்பொருளை அடைவதற்குத் தடையாக நிற்பவை. அவற்றை நீக்கியவர்கள் ஞானியர்கள்; இவரை 'இடையுறு கருமத்தின் எல்லை கண்டவர்' என்றார். இறைவனை அடைதற்குரிய நெறிகளாக சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு படி நிலைகளைக் கூறுவர். இதில் கடைசியாகக் கூறப்பட்ட ஞானம் பெற்றவர் களால்தான், ஞானக்கண் கொண்டுதான் இறைவனைக் காண முடியும் என்பதைத்தான் 'கடையுறு நோக்கு' என்றார் என்க.

110. ஒத்து இரு சிறு குறட்பாதம் உய்த்த நாள்,
வித்தக அருமறை உலகை மிக்கு, மேல்
பத்து உள விரல் புடை பரந்த பண்பு என,
சித்திரச் சேவடிக் கழலும் சேர்த்தினான். (7209)

(குறள்-குறளன்/வாமனன்; வித்தகம்-ஞானம்; பண்பு-தன்மை; சே-சிவப்பு; பத்து-பற்றுமாம்)

ஒன்றுக்கொன்று ஒப்புமையாகுப்படியான சிறிய இரு பாதங்களினால், இவ்வுலகங்களை அளந்த திரிவிக்கிரம அவதார நாளின்போது ஞானமே வடிவான அரிய வேதங்களுக்கு நாயகனான பிரமன், திருமாலின் திருவடி களின் மேல் தன் பத்து விரல்களும் பதியும்படி, ஆகாய கங்கை நீரால்

Koviloor Digital Library

கழுவிப் பூசித்த தன்மைபோல, இப்பொழுது இராமபிரான் தனது சிவந்த திருவடிகளில் ஓவிய வேலைப்பாடமைந்த வீரக்கழல்களை அணிந்து கொண்டான்.

திருமால் வாமனனாக சிறு குறளன் வடிவில் வந்து, திரிவிக்கிரமனாக உயர்ந்து வளர்ந்து இம்மூவுலகையும் தன் ஈரடியால் அளந்தபோது, உயரே தூக்கிய திருவடிகளை வேதநாயகனாகிய பிரமன் ஆகாய கங்கை நீரால் நீராட்டித் தன் பத்து விரல்களும் திருமாலின் திருவடிகளில் பதியுமாறு பூசித்த தன்மைபோல இப்பொழுது இராமபிரான் தனது சிவந்த திருவடிகளில் வீரகண்டையை அணிந்து கொண்டான் என்பதாம். 'அருமறை வித்தகன்' என்பது வேதபுருஷனாகிய பிரமதேவனைக் குறிக்கும் என்க.

111. பூ உயர் மீன் எலாம் பூத்த வான் நிகர்
மேவரும் கவசம் இட்டு இறுக்கி வீக்கினன்,
தேவியைத் திருமார்பின் தீர்ந்தனன்;
'நோ இலள்' என்பது நோக்கினான் கொலோ? (7210)

(பூ-பூத்தல்/பொலிதல்; மீன்-நாள்மீன்/நட்சத்திரங்கள்; பூத்தல்-தோன்றுதல்; மேவுதல்-ஒப்பாதல்; வீக்குதல்-கட்டுதல்; தீர்தல்-பிரிந்திருத்தல்; நோக்குதல்-நினைத்தல்; தேவி-திருமகள்)

மலர்கள் போலப்பொலிந்து விளங்குகின்ற நட்சத்திரங்கள் எல்லாம் தோன்றிய வானத்தை ஒத்த, மணிகள் பதிக்கப்பெற்ற பூ வேலைப் பாடமைந்த மார்புக்கவசத்தைத் தன் மார்பில் நன்கு இறுக்கமாகக் கட்டிக் கொண்டான். யார்? ஸ்ரீவத்சம் என்னும் திருமகளாகிய இலக்குமியைத் தன் மார்பிலிருந்து தற்போது நீங்கினவனான இராமபிரான்; அவள்தான் இப்போது தன் மார்பில் இல்லையே என்று எண்ணி, அவளுக்கு ஏதும் வலி ஏற்படாது என்று கருதி, அந்த மார்புக் கவசத்தை நன்கு இறுக்கிக் கட்டிக் கொண்டான்.

''பூ உயர் மீன் எலாம் பூத்த வான்'', ''மேவரும் கவசத்திற்கு'' உவமை. வானில் தோன்றும் நட்சத்திரங்கள் போல் பூ வேலைப்பாடமைந்த மார்புக்கவசம் என்பது பொருள். முன்பு வீரக்கழலைக் கட்டினான் என்று மட்டும் கூறிய கவிஞன், இங்கே மார்புக்கவசத்தை இறுகக் கட்டினான் என்று கூறிய நயம் நோக்குக. இவ்வாறு இறுகக் கட்டினாலும் சீதாதேவியாகிய இலக்குமிக்கு எந்த ஊறும் ஏற்படாது, வலிக்காது என்று கருதித்தான் அவ்வாறு இறுக்கிக் கட்டினான். காரணம் அவள் தான் இப்போது அவன் மார்பில் இருக்கவில்லையே? அவனைப் பிரிந்து அசோகவனத்தில் அல்லவா இருக்கிறாள்? என்பது கருத்து. இங்கே வள்ளுவனின் 'நெஞ்சத்தார் காதல் அவராக வெய்து உண்டல் அஞ்சுதும் வேபாக்கறிந்து' என்னும்குறள்.1128ஒப்புநோக்கத்தகும். மணிகள்பதிக்கப் பெற்ற கவசத்திற்கு, மீன்கள் பூத்த வானம் உவமை. அவள் மார்பில்

Koviloor Digital Library

இருந்திருந்தால் இம்மார்புக் கவசத்தை இவ்வாறு இறுக்கிக் கட்டியிருக்க மாட்டான் என்பது குறிப்பு.

112. நல்புறக் கோதை தன் நளினச் செங்கையின்
நிற்புறச் சுற்றிய காட்சி, நேமியான்
கற்பகக் கொம்பினைக் கரிய மாசுணம்
பொற்புறத் தழுவிய தன்மை போன்றதால். (7211)

(நேமி-சக்கரப்படை; கோதை-கையுறை/கைக்கவசம்; நளினம்-தாமரைமலர்; செங்கை-சிவந்தகை; நிற்புற-நிற்குமாறு; கொம்பு-கிளை; மாசுணம்-பெரிய மலைப்பாம்பு; பொற்பு-அழகு)

சக்கரப்படையைக் கையில் ஏந்தியுள்ள திருமாலின் அம்சமான இராமபிரான், இப்போது நல்ல புற வேலைப்பாடமைந்த தோற்றத்தை உடைய கைக்கவசத்தைத் தனது, செந்தாமரை மலர்போன்ற சிவந்த கைகளில் நன்கு நிற்கும்படிச் சுற்றிக் கட்டிக்கொண்ட காட்சி, கற்பக மரத்தின் ஒரு கிளையை ஒரு கரிய நிறமுடைய மலைப்பாம்பு அழகாகத் தழுவிக் கொண்டிருந்தது போன்று விளங்கியது.

'கோதை' என்ற சொல் கோதா என்ற வடசொல்லின் திரிபு. கோதா என்ற வடசொல்லுக்கு உடும்பு என்பது பொருள். உடும்பின் தோலால் ஆன கையுறை எனப்பொருள் விரிவு கொள்ளும். அது வெளிப்புறத்தில் அழகாகத் தோன்றியதால், 'நல்புறக்கோதை' என்றார் என்க. 'நிற்புற' என்பது இடையில் அவிழ்ந்து விடாமல், நன்கு இறுகக் கட்டியதைக் குறிக்கும். இராமபிரான் தோலுறையைக் கையில் அணிந்திருந்தது, கற்பகக் கிளையைக் கரும்பாம்பு தழுவியதற்கு ஒப்பு; கையுறை கரும் பாம்பிற்கு உவமை. கையுறை முன் கையில் அணியும் ஒரு கவசம் என்க. இராமபிரானின் முன்கைக்குக் கற்பகக் கொம்பும் அவன் அணிந்த கையுறைக்குக் கரும்பாம்பும் உவமைகள்.

113. புதை இருட் பொழுதினும் மலரும் பொங்கு ஒளி
சிதைவுஅரு நாள் வரச் சிவந்த தாமரை
இதழ்தொறும் வண்டு வீற்றிருந்ததாம் எனத்
ததைவுறு நிரை விரற் புட்டில் தாங்கினான். (7212)

(புதைத்தல்-மறைத்தல்; பொங்குதல்-பெருகுதல்; சிதைவுஅரு-ஒளி மழுங்காத; நாள்-அன்றலர்ந்த/புதிய; ததைவுறுதல்-நெருங்கியிருத்தல்; நிரை-வரிசை; புட்டில்-கைவிரல் உறை/கவசம்)

உலகத்துப் பொருள்களையெல்லாம் மறைக்கின்ற இயல்புடைய இரவுப் பொழுதினும் கூட, மலர்ந்து பொலிவுற்றுத் தோன்றுவதும், ஒளி மழுங்காத, அன்றலர்ந்த சிவந்த செந்தாமரை மலரின் இதழ்களில் எல்லாம் அமர்ந்திருக்கும் வண்டுகள் என்று கூறும் வண்ணம் தன்னுடைய

Koviloor Digital Library

நெருங்கிய வரிசையாக அமைந்த விரல்களில், அவற்றிற்குரிய கவசத்தை அணிந்து கொண்டான்.

பொதுவாகத் தாமரை இரவில் மலராது. கூம்பித்தான் தோன்றும், எனினும் இங்கே அத்தகைய கரிய இருட்பொழுதினும் தோன்றும் தாமரை என்றது இல்பொருள் உவமை. அவ்வாறு பகலிலும், இரவிலும் எப்போதும் கருணையே பொழியும் கரங்களைக் கொண்டவை இராம பிரானின் கைகள் என்று உயர்வு சிறப்பாய்க் கூறப்பட்டது என்க. புட்டில் என்பது இங்கு கவசம் என்ற பொருளில், விரல் உறையைக் குறிக்கும். விரல்கவசத்தைப் புட்டில் என்று கூறுவது கவிமரபு. 'விரல்தலைப் புட்டில் வீக்கி' என்பது சீவகசிந்தாமணி. அந்தக் கை'புறைக்குக் கருவண்டுகள் உவமை. இராமபிரானது கைவிரல்கள் தாமரை மலர் இதழ்கள் போன்றன; அவ்விரல்களுக்கு அணிந்த கையுறை வண்டுகள் போன்றன. கைவிரல்கள் நெருங்கியிருத்தலும், வரிசையாக அமைந்திருத்தலும், உத்தம இலக் கணம் என்பதும் அறிக. எனவே 'தகைவுறு நிரை விரல்' என்றார் என்க.

114. பல் இயல் உலகுறு பாடை பாடு அமைந்து,
எல்லைஇல் நூற்கடல் ஏற நோக்கிய,
நல்இயல், நவையறு, கவிஞர் நா வரும்
சொல் எனத் தொலைவுஇலாத் தூணி தூக்கினான். (7213)

(பாடை-பாஷை/மொழி; பாடு-சிறப்பு; ஏறுதல்-கரைகாணுதல்; நவை-குற்றம்; தூக்குதல்-தொங்கவிடுதல்; தொலைவு-குறைவு)

உலகில் வழங்குகின்ற பல இயல்புகளை உடைய பலமொழிகளிலும் தனிச்சிறப்புப் பெற்று, அவ்வம்மொழிகளில் உள்ள கணக்கற்ற நூல்களாகிய கடலில் தோய்ந்து கரை கண்டவர்களானவரும், நல்ல பண்புகள் வாய்க்கப்பெற்றவரும், குற்றமற்றவருமான புலவர்களின் நாவிலிருந்து தங்குதடையில்லாது மேலும்மேலும் வெளிப்பட்டு வரும் நல்ல பொருளமைந்த சொற்களைப் போன்று அமைந்த நிறைந்த அம்புகள் நிறைந்த அம்புப்புட்டிலைத் தன் தோள்களில் கட்டித் தொங்கவிட்டுக் கொண்டான்.

உலகில் பல்வேறு நாடுகளில் பல்வேறு மொழிகள் பயின்று வரு கின்றன. அவை எல்லாவற்றிலும் மிகுந்த சிறப்புப்பெற்று, அவற்றிலுள்ள நூல்கள் அனைத்தையும் கசடறக் கற்று அம்மொழி நூல்களில் கரைகண்ட பேரறிஞர்களின் நாவிலிருந்து வெளிவரும் சொற்களுக்கு, எடுக்க எடுக்கக் குறையாது நிறைந்தே இருக்கும் அம்பறாத்தூணி உவமை. ஒவ்வொரு மொழியும் ஒவ்வொரு தனித்தன்மை வாய்ந்தமையால் 'உலகுறு பல்இயல் பாடை' என்றார் என்க. பாடை என்பது பாஷை என்ற வடசொல்லின் திரிபு. மொழி என்ற பொருளைத்தரும். அம்மொழிகளில் ஆழ்ந்த தேர்ச்சி பெற்றவர்கள் என்பதைப் 'பாடு அமைந்து' என்றும், அவற்றில் உள்ள

Koviloor Digital Library

எல்லா நூல்களையும் கசடறக் கற்றவர் என்பதை 'எல்லை இல் நூற்கடல்' என்றும், அவற்றில் கரைகண்டவர் என்பதை 'ஏற நோக்கிய' என்றும், நற்பண்புகள் வாய்க்கப்பெற்றவர் என்பதை 'நல்இயல்' என்றும், குற்றமற்ற, அமங்கலமில்லாத, மங்கலச் சொற்களையே பயன்படுத்துவர் என்பதை 'நவையறு' என்றும் கூறினார் என்க. கவிஞர்களுக்கு எத்தனை அடைமொழி பாருங்கள்.

'நாவரும் சொல்' என்பதும் ஒரு அருமையான சொல்லாட்சி. நாவிலிருந்து, எந்த முயற்சியும் இன்றித் தானே ஓடிவரும், தங்குதடையின்றி வெள்ளமாய்ப் பெருக்கெடுத்து வரும் சொற்கள் என்ற விரிந்த, ஆழ்ந்த பொருளைத்தரும் சொற்றொடர் இது. யுத்த காண்டத்தில் பின்னரும் இராமபிரானின் அம்பின் தன்மைக்குப் புலவர்களின் நாவிலிருந்து வெளிவரும் சொற்களையே உவமையாகக் கம்பன் பல இடங்களிலும் பேசப்போவதைக் காணப்போகிறோம். கவிஞர்களின் சொல்லுக்கு இராமபிரானின் அம்புகளைப் பல இடங்களிலும் உவமை கூறிப் போவதைக் காப்பியத்தில் பரக்கக் காணலாம். 'எல்லைஇல் நூற்கடல்' என்னும் சொற்றொடர், 'அலகுசால் கற்பின் அறிவு நூல் கல்லாது உலக நூல் ஓதுவது' என்னும் நாலடியார் பாடல் 140ஐ நினைவுபடுத்துவதை உணர்க. கற்பின் அறிவுநூலையே கற்கவேண்டும் என்பதும், அதைக் கல்லாது உலகநூல் ஓதுவது பயனற்றது என்பதையும் புலப்படுத்தியமை உணர்க. 'கற்க கசடறக் கற்க, கற்பவை கற்க' என்ற குறள் பொருளும் ஒப்புநோக்கத்தகும். கற்கத் தகுதியுடைய அறிவு நூல்களைக் கற்க வேண்டும்; அவற்றையும், ஐயம், திரிபு அறியாமை அகலக் கற்க வேண்டும்;

முன்பும் சான்றோர் கவியின் இயல்பினைக் கூறும்போது கோதாவரி நதியை உவமை கூறியதையும் இங்கு நினைவுகூர்க. ஒரு மொழியில் உள்ள நூல்கள் எல்லாவற்றையும் கற்றுத் துறை போதல் நற்கவிஞர்களுக்கு இலக்கணம் என்பது பெறப்படுகிறது. 'எல்லைஇல் நூல்' என்று முன்னர்ச் சொல்லிப் பின்னரும் 'நூற்கடல்' என்றது நூல்களின் மிகுதி பற்றிச் சிறப்பிக்க எனக்கொள்க. 'ஏற நோக்குதல்' என்பது கரை காணுதல் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டிருப்பது எண்ணுக. 'கற்றோர் அறியா அறிவினர், கற்றோர்க்குத் தாம் வரம்பாகிய தலைமையர்' என்பது திருமுருகாற்றுப்படை. கவிஞர்களின் நாக்கு அம்பறாத்தூணிக்கும், அந்நாக்கிலிருந்து வெளிவரும் சொற்கள் இராமபிரானின் அம்புக்கும் உவமை.

115. கிளர் மழைக் குழுவிடைக் கிளர்ந்த மின் என
அளவுஅறு செஞ்சுடர்ப் பட்டம் ஆர்த்தனன்;
இளவரிக் கவட்டிலை ஆரொடு ஏர்பெறத்
துளவொடு தும்பையும் சுழியச் சூடினான். (7214)

Koviloor Digital Library

(கிளர்தல்-எழுச்சி பெறுதல்/ஒளிவீசுதல்; மழைக்குழு-மேகக் கூட்டம்; மின்-மின்னல்; பட்டம்-நெற்றிப்பட்டம்; ஆர்த்தல்-அணிந்து கொள்ளுதல்; கவடு-பிளவு; ஆர்-ஆரம்/மாலை/ஆத்தி; ஏர்-அழகு; சுழிய-வளைய/வட்டமாக)

எழுச்சி பெற்று விளங்குகின்ற மேகக்கூட்டத்திற்கு இடையே, ஒளிவீசித் திகழ்கின்ற மின்னல் என்று தோன்றுமாறு கரிய சடைமுடிக் கற்றைக்கிடையே அளவற்ற சிவப்புநிறம் பொருந்திய ஒளிவீசுகின்ற நெற்றிப்பட்டத்தை நெற்றியில் அணிந்து கொண்டான்; முற்றிய நிலையில் இல்லாத, இளமையான, நரம்புகள் வரிகள் - கோடுகள் அமையப்பெற்றதும், இரண்டாகப் பிளவுபட்டதுமான இலைகளை யுடைய ஆத்தி மாலையுடன், மேலும் அழகுபெறும் வண்ணம் துளசி மாலையையும், போர்த்திணைக்குரிய தும்பை மாலையையும் வட்டமாகச் சூட்டிக்கொண்டான்.

கரிய சடைக்கற்றைக்கு நடுவில் ஒளி மிகுந்து விளங்கும் இராம பிரானின் நெற்றிக்கு, ''கிளர் மழைக் குழுவின் கிளர்ந்த மின்னல்'' உவமை. அவனுடைய நெற்றிப்பட்டம், ''அளவறு, செம், சுடர்ப் பட்டம்'' என்ற அடைமொழிகளை நோக்குக. ஆத்திமாலை சோழர் குலத்து அரசர்கள் அணிவதற்கு உரியது. கம்பன் அயோத்தியை சோழநாட்டு நகரமாகக் கருதிப் பாடியமையை முன்பும் கண்டோம். அதுபோல இங்கும் சோழ மன்னர்களுக்குரிய ஆத்தி மாலையையே இராமபிரான் சூட்டிக் கொண்டான் என்று கூறுவதில் இருந்து, கம்பன் சோழநாட்டின்மீதும், சோழ மன்னர்களின் மீதும் கொண்டிருந்த பேரன்பும், நாட்டுப்பற்றும் புலனாவதை உணர்க. இத்தோடு திருமாலின் அவதாரமாகிய இராமபிரான் தனக்குரிய துளவ மாலையையும், போர்க்குப் புறப்படுவதால் தமிழர்களின் போர்த்திணைக்குரிய தும்பை மாலையையும் வட்டமாக அணிந்து கொண்டான் என்பதாம்.

இங்கே ஒன்று கருத வேண்டும், முன்பு இராவணனும் இதே தும்பை மாலையை அணிந்து வந்தான் என்று கூறப்பட்டிருப்பதையும் இங்கே நினைவுகூர்க. ஆத்தி மாலை சிவபெருமானுக்கு உரியது. துளவமாலை திருமாலுக்கு உரியது. தும்பைமாலை தமிழர்களின் போர்முறைக்கு உரியது. எனவே இங்கே சைவ வைணவக் கருத்துக்களும், ஆரியன், சூத்திரன் என்ற கருத்துக்களும் அடிபட்டுப் போவதையும், கம்பன் எல்லாமதமும் சம்மதமே என்ற உயரிய கருத்துக் கொண்டவன் என்பதும் சாதி, இனத்தால் பாகுபாடு கருதாத கவிச்சக்கரவர்த்தி என்பதும் புலனாதல் காண்க. கரிய மேகத்தில் தோன்றும் மின்னல், கரிய முடிக்கற்றை உடைய இராமபிரானின் நெற்றியில் அணிந்திருக்கும் நெற்றிப்பட்டத்திற்கு உவமை. சூரிய, சோழ குலத்திற்குரிய ஆத்தி மாலையும், வழிபடு கடவுளுக்கு உரிய துளவ மாலையும், போர்த்திணைக்கு உரிய தும்பை

Koviloor Digital Library

மாலையும் என, மூன்று மாலைகளையும் வட்டமாக அணிந்து கொண்டான் என்பதாம். இவ்வாறு வட்டமாக அணிவது 'கண்ணி' எனப்படும்.

'போந்தை, வெம்பே, ஆர் என வரூஉம் மாபெரும் தானையர் மலைந்த பூவும்' என்பது தொல்காப்பியம். 'நின்ன கண்ணியும் ஆர் மிடைந்தன்றே' என்பது புறநானூறு. ஆத்தி மரத்தின் இலை பிளவுபட்டதாக இருக்கும். எனவே 'கவட்டு இலை' என்றார் என்க. கவடு-பிளவு.

116. ஓங்கிய உலகமும், உயிரும் உட்புறம்
தாங்கிய பொருள்களும், தானும், தான்என,
நீங்கியது யாவது? நினைக்கிலோம்; அவன்
வாங்கிய வரிசிலை மற்றொன்றே கொலாம்? (7215)

(ஓங்கிய-சிறப்புடைய/உயர்ந்த; வாங்கிய-கைக்கொண்ட; வரிசிலை-கட்டமைந்த வில்)

மிக்க உயர்ந்த சிறப்புடைய இவ்வுலகமும், இவ்வுலகத்திலுள்ள உயிரினங்களும், உலகத்தின் உள்ளே வைத்துக் காக்கப்பட்டுவரும் நிலைத்திணை, இயங்குதிணைப் பொருள்களும், உயர்திணை, அஃறிணைப் பொருள்களும் எல்லாமும் தானாகவே தோற்றுகின்ற பரம்பொருளான இராமபிரான், தான் ஏதோ தனி மனிதன்போல, தன் மெய்யுணர்வைத் துறந்து, இங்கே மானிட வடிவுடன் நிற்பது எப்படி என்பதை நாம் சற்றும் நினைத்துப்பார்க்கும் வல்லமை உடையோம் அல்லோம். அதுபோலவே அவன் கைக்கொண்டுள்ள இந்தக் கட்டமைந்த வில்லும் அவனைவிட வலிமை வாய்ந்த வேறு ஏதோ ஒரு பொருள் என்று எண்ணவே தோன்றுகிறது. சாதாரணமான வில் போன்று காணப்படவில்லை.

இது கவிக்கூற்று. இராமபிரான் எப்படித் தன் பரம்பொருள் உருவை நீங்கி, மனித உரு எடுத்துப் பூமியில் வந்தானோ, அதுபோல அவன் தாங்கியிருக்கும் இந்த வில்லும் முற்றிலும் வேறுபட்டதாகவே தோன்றுகிறது என்பது கருத்து. ''மேல் ஒரு பொருளும் இல்லா மெய்ப்பொருள், வில்லும் ஏந்திக் கால்தரைதோய நின்று, கட்புலக்கு உற்றதம்மா' என்பது வாலியின் கூற்று. 'மாபூதத்தின் வைப்பு எங்கும் ஊனும், உயிரும், உணர்வும் போல் உள்ளும் புறனும் உளன் என்ப' என்பது அயோத்தியா காண்டம் கடவுள் வணக்கப் பாடல். 'தானே தனக்கு உவமன்; தன்னுருவே எவ்வுருவும்' என்பது திருவந்தாதி. 'திடவிசும்பு, எரி, வளி, நீர், நிலம் இவை மிசைப் படர்பொருள் முழுதுமாய், அவை அவை தொறும், உடல்மிசை உயிர்எனக் கரந்து எங்கும் நிறைந்துளன்' என்பது திருவாய்மொழி. 'உலகெலாம் ஆகி, வேறாய், உடனுமாய், ஒளியாய் ஓங்கி' என்பது சிவஞானசித்தி.

Koviloor Digital Library

117. நாற்கடல் உலகமும், விசும்பும், நாள்மலர்
தூர்க்க, வெஞ்சேனையும், தானும் தோன்றினான்;
மால்கடல் வண்ணன், தான் வளரும் மால் இரும்
பாற்கடலோடும் வந்து, எதிரும் பான்மை போல். (7216)

(மால்-கரிய/பெரிய; மால்கடல்-கருங்கடல்; இரும்-பெரிய; பான்மை-தன்மை; விசும்பு-விண்ணுலகு; நாள்-புதிய/அன்றலர்ந்த; தூர்த்தல்-சொரிதல்/நிறைத்தல்/தூவுதல்; வெம்-கொடிய; வளர்தல்-கண்வளர்தல்/அறிதுயில்)

பெரிய கடல் போன்ற கரிய நிறத்தை உடையவனான இராமபிரான், தானும், தான் அறிதுயில் கொள்கின்ற பெரிய பாற்கடல் போன்ற வெண்ணிறமுடைய வானரச்சேனையுடன் வந்து இராவணனை எதிர்த்துப் போரிட வந்தது போல, நான்கு கடல்களால் சூழப்பட்ட இவ்வுலகத்தில் உள்ளவர்களும், வானுலகில் வாழும் தேவர்களும், தங்கள் எண்ணம் ஈடேறப் போவதால் மகிழ்ந்து, அன்றலர்ந்த புதிய மலர்களை மிகுதியாகச் சொரிந்து இப்பூமியை நிறைக்கவும், இராமபிரான் தானும், தன்னுடைய கொடிய வெண்மைநிறமுடைய வானரச்சேனை யோடும், போர்க்களத்தில் தோன்றினான்.

'நாற்கடல் உலகமும், விசும்பும்' என்பது ஆகுபெயராய் அங்கு வாழும் மானிடரையும், தேவர்களையும் குறித்து நின்றது என்க. தேவர்களும் உலகத்தினரும் மலர்தூவி இராமபிரானை வாழ்த்திப் போற்றினர் என்பதாம். வானரச்சேனைக்குப் பாற்கடலை நிறத்தால் உவமை கூறியிருப்பதைக் காப்பியத்தில் பல இடங்களில் காணலாம். 'கார்க்கடல் புறத்ததாகக் கவிக்கடல் வளைந்த காட்சி, பாற்கடல் அமுவத்துள்ளது ஒத்தது' என்று முன்பு கூறியதும் இங்கு நினையத்தகும்.

118. இலக்குவனோடு சேர்ந்து கொள்ளுதல்

ஊழியின் உருத்திரன் உருவு கொண்டு, தான்
ஏழ் உயர் உலகமும் எரிகின்றான் என,
வாழிய வரிசிலைத் தம்பி, மாப்படைக்
கூழையின் நெற்றி நின்றானைக் கூடினான். (7217)

(உருத்திரன்-சிவபெருமான்; மா-பெரிய; கூழை-பின்னணிப்படை; நெற்றி-தலைப்பு; வரிசிலை-கட்டமைந்த வில்)

யுக முடிவுக்காலத்தில் இவ்வுலகையே அழிக்கின்ற சிவபெருமானின் உருவத்தை மேற்கொண்டு இராமபிரான், இந்த உயர்ந்த ஏழுமலை களையும் ஒருசேர எரித்து அழிப்பவன் போல, வாழ்த்துதற்குரிய, கட்டமைந்த வில்லைக் கையில் ஏந்திக்கொண்டு, பெரிய சிறந்த வானரச்

Koviloor Digital Library

சேனையின் பின்னணிப்படையின் தலைப்பில் நின்றிருக்கின்றவனாகிய தன் தம்பி இலக்குவனைச் சென்று சேர்ந்தான்.

திருமாலின்அம்சமானஇராமபிரானே, தனி ஒருவனாகவே பிரமனாகப் படைத்தல் தொழிலையும், திருமாலாகக் காத்தல் தொழிலையும், இறுதியில் சிவபெருமானாக அழித்தல் தொழிலையும் மேற்கொள்ளும் ஆற்றல் படைத்த மூலமுதற் பரம்பொருள் என்ற வைணவக் கோட்பாடு இங்கே பேசப்படுகிறது. இலக்குவனே ஆதிசேஷன் அவதாரம் என்பதால் திருமாலின்அவதாரம்என்பதும்கூடப்பொருந்தும்என்றும்கூறுவதுண்டு. 'முற்றா மதியம் மிலைந்தான் முனிந்தானை' என்றும் முன்பு கூறி யிருத்தலை நினைக. 'உடம்பு உருவில் மூன்றும் ஒன்றாய், மூர்த்தி வேறாய், உலகு உய்ய நின்றானை' என்பதும், 'மூவருமாய் முதலாய மூர்த்தி' என்பதும்பெரியதிருமொழி. 'தானும்சிவனும், பிரமனும்ஆகிப்பணைத்த தனி முதலை' என்பதும் திருவாய்மொழி; இராமபிரான் ஊழியிறுதியில் உருத்திரன் உருவுகொண்டு உலகை எரித்து அழிப்பதுபோல, இப்போது இலக்குவன் போர்க்களத்தில் பகைவர்களை அழித்துக்கொண்டு நின்றான் என்பதாம்.

119. இருதரப்பினரும் போர் புரிதல்

என்புழி, நிருதராம் ஏழு வேலையும்,
மின்பொழி எயிறுடைக் கவியின் வெள்ளமும்,
தென்புலக் கிழவனும் செய்கை கீழ்ப்பட,
புன்புலக் களத்திடைப் பொருத போலுமால்; (7218)

(தென்புலக்கிழவன்-தென்திசைக் காவலன் இயமன்; நிருதர்-அரக்கர்கள்; மின்-மின்னல்; பொழிதல்-வீசுதல்; எயிறு-பற்கள்; கவி-வானரம்/குரங்கு; புன்புலம்-புல்லிய இடம்; பொருத-போர்செய்தன; கீழ்ப்பட-தாழ்ந்தது என்னும்படி)

அரக்கர்க்கரசனான இராவணனும், இராமபிரானும் போர்க்களம் வந்து சேர்ந்தனர் என்ற உடனே, தென்திசைக் காவலனான இயமனும் தனக்குரிய கொலைத்தொழிலில் பின்வாங்கிப் போகும்படி, அரக்க வீரர்களான ஏழு கடல்களும், மின்னலைப்போல் ஒளிவீசும் பற்களையுடைய குரங்குச் சேனையாகிய வெள்ளமும், இகழத்தக்க போர்க்களத்தில் போர் செய்ய முற்படலாயின.

'போலும், ஆல்' என்பன அசைச்சொற்கள். நிருதரின் பெருக்கம் பற்றி அதனைஏழு 'வேலை'என்றும், வானரச்சேனையின்குறைவு பற்றிஅதனை 'வெள்ளம்' என்றும் வேறுபடுத்திக் கூறியதை உணர்க. போர்க்களம் கொலைக்களம் எனவே 'புன்புலம்' என்றார் என்க. இவர்கள் போர் செய்வதால் நிகழும் கொலைத்தொழிலைக் கண்டு இயமனே வெட்கித்

Koviloor Digital Library

தாழ்ந்தான் என்பதாம். ஏழுவேலையும், வெள்ளமும் போரிட்டன என்றது ஒரு நயம்.

120. துமிந்தன தலை; குடர்சொரிந்த; தேர்க்குலம்
அவிந்தன; புரவியும், ஆளும் அற்றன;
குவிந்தன பிணக்குவை; சுமந்து கோள்நிலம்
நிமிர்ந்தது; பரந்தது குருதி நீத்தமே. (7219)

(துமிதல்-துணிதல்/அறுபடுதல்; சொரிதல்-சரிதல்; குலம்-கூட்டம்; அவிதல்-அழிதல்; புரவி-குதிரை; ஆள்-காலாள்படை; அறுதல்-வெட்டப் படுதல்; குவை-குவியல்; கோள்-வலிமை; நிமிர்தல்-மேடாதல்; நீத்தம்-வெள்ளம்)

காலாட்படைகளின் தலைகள் துண்டிக்கப்பட்டன, குடல்கள் வெளிப் போந்து சரிந்தன; தேர்க் கூட்டங்கள் அழிந்து போயின; குதிரைப்படையும், காலாட்படையும் ஒன்றுமேயில்லாது சிதைந்து அற்றுப்போயின; பிணங்கள் குவியல் குவியலாகக் காணப்பட்டன; எனவே அவற்றைத் தாங்கி நிற்கின்ற இந்தப்பூமி உயர்ந்து மேடாகிப் போனது; இரத்த வெள்ளம் எங்கும் பரவிச் செல்லலாயிற்று.

'குடர்' என்பது குடல் என்பதன் ஈற்றுப்போலி.

121. கடுங் குரங்கு இருகையால் எற்ற, கால்வயக்
கொடுங் குரம் துணிந்தன, புரவி; குத்தினால்
ஒடுங்கு உரம் துணிந்தனர் நிருதர்; ஓடின,
நெடுங் குரம்பு என நிறை குருதி நீத்தமே; (7220)

(எற்ற-தாக்க; புரவி-குதிரைகள்; வய-வலிய; கொடும்-வளைந்த; குரம்-குளம்புகள்; துணிதல்-துண்டுபட்டுப்போதல்; நிருதர்-அரக்கர்; உரம்-மார்பு/வலிமை; குரம்பு-நீர்த்தேக்கம்/அணைக்கட்டு; கடும்-கொடிய)

கொடிய குரங்குகள் தங்களது இருகைகளினாலும் அரக்க வீரர்களை ஓங்கித் தாக்க, வலிமை வாய்ந்த கால்களையும், வளைந்த ஒற்றைக் குளம்பையும் உடைய குதிரைகள் துண்டுபட்டுப் போயின; குரங்குகள் குத்திய குத்தினால், அரக்கவீரர்கள்தம் வலிய மார்பு ஒடுங்கிப் போய்க்கீழே விழலாயினர்; அங்கே நிறைந்திருந்த இரத்த வெள்ளம் ஏதோ அணைக் கட்டை- நீர்த் தேக்கத்தைத் திறந்து விட்டாற்போன்று வெள்ளம்போல் வேகமாய்ப் பாய்ந்து ஓடலாயிற்று.

இந்தப் பாடல் திரிபு என்னும் சொல் அணியைச் சார்ந்தது. 'குரம்' என்ற ஒரே சொல் பலவாறாகப் பிரிந்து நான்கு வெவ்வேறு பொருளைத்

Koviloor Digital Library

தந்திருப்பதை நோக்குக. 'குரம்பு' என்ற சொல் நமக்குப் புதிது. அணைக்கட்டு, நீர்த்தேக்கம் என்ற பொருளைத்தரும்.

122. 'தெற்கு இது; வடக்கு இது; என்னத் தேர்கிலார்,
பற்குவை பரந்தன; குரக்குப் பல் பிணம்
பொற்குவை நிகர்த்தன; நிருதர் போர்ச் சவம்,
கற்குவை நிகர்த்தன; மழையும் காட்டின. (7221)

(தேர்தல்-தெரிதல்; குவை-குவியல்; பொற்குவை-வெண் பொன் குவியல்; சவம்-பிணம்; கற்குவை-கடுங்கற்குவியல்)

போர்க்களத்தில் எது தெற்குப் பக்கம், எது வடக்குப் பக்கம் என்றுகூட அறிந்துகொள்ள முடியாதவாறு மிகுதியான பல பிணக்குவியல்கள் போர்க்களமெங்கும் பரவிக்காணப்பட்டன; குரங்குகளின் பிணக்குவியல் வெண்பொன் எனப்படும், வெள்ளியாலாகிய குவியல்போலவும், போரிட்டு மடிந்த அரக்கர்களின் பிணக்குவியல், கருமையான கல் குவியல் போலவும், காணப்பட்டன; இருவகைப் பிணக்குவியலினின்றும் இரத்த வெள்ளம் மழை வெள்ளம்போலப் பாய்ந்து ஓடும் தன்மையையும் கொண்டது.

பிணக்குவியல்களின் மிகுதி கூறுதற்காக, 'தெற்கு இது, வடக்கு இது எனத் தேர்கிலார்' என்றார் என்க. குரங்குகள் பாற்கடல் போல் வெண்மை நிறத்தன. எனவே அவற்றின் பிணக்குவியலை வெள்ளிக் குவியலுக்கும், அரக்கர்கள் கரு நிறத்தவர். எனவே அவர்களின் பிணக்குவியலைக் கரிய கற்குவியலுக்கும் உவமித்தார் என்க. இருதரப்புப் பிணங்களினின்றும் பெருகி ஓடிய சிவந்த இரத்த வெள்ளம் மழை பொழிந்தது போன்றிருந்தது என்பதாம். குவித்து வைக்கப்பட்டிருக்கும் வைக்கோலை வைக்கோல் போர் என்று கூறுவதுபோல, குவிந்து கிடக்கும் பிணங்களின் குவியலைச் 'சவப்போர்' என்றார் என்க. 'வெண்பொன்' என்பது வெள்ளியைக் குறிக்கும். 'கரும்பொன்' என்பது இரும்பினைக் குறிக்கும்.

123. இராவணன் எழுப்பிய நாண் ஒலிகேட்டு வானரச்சேனை நிலைகுலைதல்.

அவ்வழி, இராவணன் அமரர் அஞ்ச, தன்
வெவ்விழி, நெருப்பு உக, வில்லின் நாணினைச்
செவ்வழிக் கோதையின் தெறிக்க, சிந்தின,
எவ்வழி மருங்கினும் இரிந்த, வானரம். (7222)

(அவ்வழி-அப்போது; அமரர்-தேவர்கள்; வெவ்விழி-கொடிய கண்கள்; உக-சிந்த; செவ்வழி-சிறப்பாக/முறையாக; கோதை-தோல்

Koviloor Digital Library

உறை; தெறித்தல்-சுண்டுதல்; சிந்துதல்-சிதறிப்போதல்; மருங்கு-வழி/ பக்கங்கள்; இரிதல்-ஓடுதல்)

அவ்வாறு அரக்கர்கள் சேனை பேரழிவு கொண்டபோது, இராவணன், தேவர்களும் அஞ்சி நடுங்குமாறு, தனது கொடிய கண்களினின்றும் நெருப்புப்பொறி பறக்கும் வண்ணம் சினந்து, தான் கைக்கொண்டிருந்த வில்லின் நாண் கயிற்றை, செம்மையான முறையில், தன் தோல் உறையுடன் உராயும்படி சுண்டி இழுக்க, அவ்வொலிகேட்ட வானரங்கள் புகுந்து செல்ல முடியாத வழிகளில் எல்லாம்கூட, நிலைகெட்டுச் சிதறி ஓடலாயின.

வில்லின் நாண் ஒலியோசையாலேயே பகைவரை அச்சுறுத்தி ஓடச்செய்தலும் ஒருவகைப் போர்முறை என்க. 'கோதை' என்பது வில்வீரர் தம்கையில் அணியும் ஒருவகைத் தோல்உறை; உடும்பின் தோலினால் ஆனது என்பது முன்பும் கண்டதே.

124. உரும் இடித்துழி, உலைந்து ஒளிக்கும் நாகம் ஒத்து,
இரியலுற்றன சில; இறந்தவால் சில;
வெருவலுற்றன சில; விம்மலுற்றன;
பொருகளத்து உயிரொடும் புரண்டு போம் சில. (7223)

(உரும்-இடி; உலைந்து-வருந்தி; இரிதல்-விரைந்து ஓடுதல்; வெருவுதல்-அஞ்சி நடுங்குதல்; விம்முதல்-தேம்பி அழுதல்; பொருகளம்-போர்க்களம்)

இடி இடிக்கின்ற போது எழுகின்ற பேரோசைக்குப் பயந்து வருந்தித் தம்மை ஒளித்துக் கொள்ளும் நாகப்பாம்புகளைப் போல, சில வானரங்கள் அப்பேரொலி கேட்கப் பொறாது நிலைகெட்டு ஓடி ஒளிந்துகொண்டன; இன்னும் சில குரங்குகள் அவ்வொலி கேட்டு இறந்தே போயின; மேலும் சில குரங்குகள் அச்சம் கொண்டு நடுங்கின; வேறுசில குரங்குகள் தேம்பித் தேம்பி அழத்தொடங்கின; போர்க்களத்தில் நடந்து சென்றால் ஏதேனும் தீங்கு நேருமோ என்று சில குரங்குகள் உடலால் புரண்டு கொண்டே விரைந்து செல்லலாயின.

இடியோசைக்குப் பாம்புகள் பயந்து தம்மை ஒளித்துக் கொள்வதும் உண்டு. சில சமயங்களில் இறந்துபடுதலும் உண்டு என்பதறிக. 'உத்தி அரவின் பைந்தலை துமிய' என்பது அகநானூறு. 'விரிகிற நாகம் விடர் உளதேனும், உருமின் கடுஞ்சினம் சேண் நின்றும் உட்கும்' என்பது நாலடியார் 164. நாண்ஒலி கேட்டு அஞ்சிஓடும் குரங்குகளுக்கு இடியொலி கேட்டு அஞ்சி நடுங்கும் பாம்புகள் உவமை.

Koviloor Digital Library

125. பொர கருநிற நெடு விசும்பு போழ்பட,
இரக்கம் இல் இராவணன் தெறித்த நாணினால்,
குரக்கினம் உற்றது என்? கூறின், தன் குலத்து
அரக்கரும் அனையது ஓர் அச்சம் எய்தினார். (7224)

(விசும்பு-ஆகாயம்/அண்டகோளகை; போழ்தல்-பிளத்தல்)

''போர்புரியத் தொடங்கிய 'இரக்கம் என்ற ஒரு பொருள் இலாத நெஞ்சினராகிய' அரக்கர்களின் அரசனான இராவணன் எழுப்பிய நாண் ஒலியினால், கரிய நிறமுடைய நீண்ட ஆகாயமும் அண்டகோளகையுமே பிளவுபட்டுப் போயின. உள்ளபடியே கூறப்போனால், அவன் குலத்தைச் சேர்ந்த அரக்கர்களே விவரிக்க முடியாத ஒரு பேரச்சம் கொண்டனர் என்றால், அற்பமான குரங்குக் கூட்டம் அடைந்த அச்சத்தை எவ்வாறு கூறுவது?'' என்கிறான் கவிஞன்.

இது கவிக்கூற்று.

126. வீடணன் ஒருவனும், இளைய வீரனும்,
கோடு அணை குரங்கினுக்கு அரசும், கொள்கையால்,
நாடினர் நின்றனர்; நாலு திக்கினும்
ஓடினர், அல்லவர், ஒளித்தது உம்பரே. (7225)

(கோடு-மரக்கிளை; நாடுதல்-சார்ந்திருத்தல்; உம்பர்-விண்ணுலகம்/தேவர்கள்; ஒருவன்-ஒப்பற்றவன்)

ஒப்பற்ற வீரனான வீடணனும், இளைய வீரனான இலக்குவனும், மரக்கிளைகளையே தங்கள் வாழ்விடமாகக் கொண்ட குரக்கினத்திற்கு அரசனான சுக்கிரீவனும் மட்டும் வீரர்களுக்கு உரிய கோட்பாட்டோடு அஞ்சி - ஓடாது, இராமபிரானைச் சார்ந்து உறுதியுடன் அவனுடன் நின்றனர். இவர்களல்லாத மற்ற அனைவரும் நாணொலிக்கு அஞ்சி நான்கு திசைகளிலும் ஓடினர். வானுலகத்துத் தேவர்களும் ஓடித் தம்மை ஒளித்துக்கொண்டனர்.

'கொள்கையால்' என்பது இனிச் செய்ய வேண்டுவது என்ன என்பதை இராமபிரானுடன் கலந்து ஆலோசிப்பதற்காக நின்றனர் என்று விரிந்த பொருளைத்தரும். 'விழித்த கண் வேல் கொண்டு எறிய, அழித்து இமைப்பின் ஒட்டன்றோ வன்கண் அவர்க்கு' என்னும் குறள்775 இங்கு ஒப்புநோக்கத் தகும். 'கோடுவாழ் குரங்குக் குட்டி கூறுப' என்பது தொல்காப்பியம்.

Koviloor Digital Library

127. 'எடுக்கின் நானிலத்தை ஏந்தும் இராவணன் எறிந்த நாணால்
நடுக்கினான் உலகை என்பார்; 'நல்கினான்' என்னல் பாற்றோ?
மிடுக்கினால் மிக்க வானோர், மேக்கு உயர் வெள்ளம், மேல்நாள்,
கெடுக்கும் நாள், உருமின் ஆர்ப்புக் கேட்டனர் என்னக் கேட்டார். (7226)

(எடுத்தல்-பெயர்த்தெடுத்தல்; நானிலம்-பூமி; நல்குதல்-அருள் செய்தல்; மிடுக்கு-வலிமை; கெடுத்தல்-அழித்தல்; உரும்-இடி; ஆர்ப்பு-ஓசை/ஒலி; மேக்கு-மேலே; வெள்ளம்-ஊழிப்பிரளயம்; நாண்-நாண் ஒலி)

பெயர்த்தெடுக்க வேண்டும் என்று நினைத்தால், இப்பூமியை அப்படியே பெயர்த்தெடுக்கும் ஆற்றல் பெற்ற இராவணன் தெறித்த நாண் ஒலியினால், இப்பூவுலகத்துள்ள மக்களை மட்டும் தான் நடுங்கச்செய்தான் என்று சிலர் சொல்லுவார்கள். அது உண்மையல்ல; அவர்களுக்கு மட்டும் அருள்செய்து விட்டான் என்று கூறிவிடமுடியுமா? முடியாது. காரணம் மனிதர்களைக் காட்டிலும் மிக்க வலிமை பெற்றவர்கள் தேவர்கள், முற்காலத்தில் மேலே உயர்ந்து எழுகின்ற ஊழிக்காலப் பிரளய வெள்ளம் வந்து இவ்வுலகை அழிக்கும்போது, எழுகின்ற பேரிடியின் ஒலியைக் கேட்டதுபோல, இப்போதும் இந்நாணொலியைக் கேட்டு அச்சத்தால் தேவர்களும், அஞ்சி நடுங்கினர்.

'எடுக்கின் நானிலத்தை ஏந்தும் இராவணன்' என்பது முன்னரும் தவவேடத்து இராவணன் கூற்றாகவே கூறப்பட்டிருப்பதையும் எண்ணுக. முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்ற நான்கு வகைப்பட்ட நிலங்களால் ஆனது இப்பூமி என்பதால் இப்பூமிக்கு நானிலம் என்பது காரணப்பெயர்.

128. இராவணன் – சுக்கிரீவன் போர்

ஏந்திய சிகரம் ஒன்று, அங்கு இந்திரன் குலிசம் என்ன,
காந்திய உருமின் விட்டான், கவிக்குலத்து அரசன், அக்கல்
நீந்த அரு நெருப்புச் சிந்தி நிமிர்தலும், நிருதர்க்கு எல்லாம்,
வேந்தனும், பகழி ஒன்றால், வெறுந்துகள் ஆக்கி, வீழ்த்தான். (7227)

(கவிக்குலம்-குரக்கினம்; குலிசம்-வச்சிரப்படை; காந்துதல்-ஒளி வீசுதல்; சிகரம்-மலை; ஏந்திய-கைக்கொண்ட; உரும்-இடி; கல்-மலை; நீந்துதல்-கடத்தல்; நிருதர்-அரக்கர்; பகழி-அம்பு; வெறுமை-பயனின்மை)

அப்பொழுது குரக்கினத்திற்கு அரசனான சுக்கிரீவன், தான் கைகளில் தாங்கிக் கொண்டிருந்த ஒரு பெரிய மலையை, தேவேந்திரனது வச்சிராயுதம் என்று சொல்லும்படி, ஒளி வீசுகின்ற இடி விழுவது போல

Koviloor Digital Library

இராவணன்மீது வீசி எறிந்தான்; அந்த மலை, கடத்தற்கரிய நெருப்புப் பொறிகளைச் சிந்திக் கொண்டு உயரே விரைந்து எழுந்து சென்றதும், அரக்கர்க்கரசனான இராவணன், அந்த மலையைத் தனது ஒரே அம்பினைச் செலுத்தி, வெறும் பயனில்லாத மண்துகள் போல ஆக்கித் தள்ளி வீழ்த்தி விட்டான். அம்மலை சாம்பலாய்ப் பொடிப்பொடியாய்ப் போனது.

சுக்கிரீவன் வீசியெறிந்த மலையை இராவணன் மிக எளிதாக ஒரே அம்பினால் பொடிப்பொடியாய் ஆக்கி விட்டான் என்பதாம். சுக்கிரீவனுக்கு மலை, இராவணனுக்குச் சாம்பல் என்று இராவணனின் வலிமை மிகுத்துரைக்கப்பட்டது என்க.

129. அண்ணல் வாள் அரக்கன் விட்ட அம்பினால் அழிந்து, சிந்தி,
திண் நெடும் சிகரம், நீறாய்த் திசைதிசை சிந்தலோடும்,
கண் நெடும் கடுந்தீக் கால, கவிக்குலத்து அரசன், கையால்,
மண்மகள் வயிறுகீற, மரம் ஒன்று வாங்கிக் கொண்டான். (7228)

(அண்ணல்-பெருமைக்குரியோன்/சிவபெருமான்; காலுதல்-சிந்துதல்/உமிழ்தல்; கீற-கிழியும்படி/பிளக்கும்படி; வாங்குதல்-பறித்தல் /பெயர்த்தெடுத்தல்; சிகரம்-மலை; நீறு-துகள்/பொடி)

பெருமைக்குரியவனான சிவபெருமான் அளித்த வாளைக் கைக்கொண்டவனும், அரக்கர்களால் பெருமைக்குரியவனாகப் பாராட்டப்படும், அவர்கள் தலைவனுமான கொடிய அரக்கனான இராவணன், செலுத்திய அம்பினால், முன்பு குரக்கினத்தரசன் சுக்கிரீவன், பறித்து எறிந்த வலிய நீண்ட, பெரிய மலை தூள் தூளாகச் சிதறி, எல்லாப்பக்கங்களிலும் போய்வீழ, அதனைக் கண்ட சுக்கிரீவன், இப்பொழுது தன் கண்களில் நீண்ட கொடுமையான நெருப்புப் பொறி பறக்கும்படி, தன் கைகளால் இந்தப் பூமித்தாயின் வயிறே பிளந்து கிழியும்படி, ஒரு பெரிய மரத்தைப் பெயர்த்தெடுத்துக் கொண்டான்.

'அண்ணல்' என்ற சொல்லை இராவணனுக்கு ஆக்கிப் பெருமையுடைய அரக்கன் என்றும், 'அண்ணல் வாள்' என்று சேர்த்து பெருமைக்குரியோனான சிவபெருமான் அளித்த வாளைக் கையிலேந்திய அரக்கன் இராவணன் என்றும் இருபொருள்படும்படி சொற்றொடரைப் பெய்த கவிஞனின் கவித்திறம் நோக்குக. பூமியைப் பெண்ணாகக் கூறுவது கவிமரபு. பூமித்தாய் என்பது மண்மகள் எனப்பட்டது என்க. 'மண்ணக மடந்தை' என்பதும் 'வண்ணச்சீறடி மண்மகள் அறிந்திலள்' என்பதும் சிலப்பதிகாரம். 'மண்மகள் இலம்பகம்' என்பது சீவகசிந்தாமணியில் ஓர் படலப்பகுதியும் ஆகும். மரம் நீண்ட தூரம் வேரோடியிருந்ததனால் இவன் பெயர்த்தெடுத்த போது அது பெரும்பள்ளம் ஆகிப்போனது. அது நிலமகள் வயிறு கீறியது போன்றிருந்தது என்று கவிஞன் தன் குறிப்பை நிலத்தின்

Koviloor Digital Library

மீது ஏற்றிப் பாடியிருப்பதால் இப்பாடல் தன்மைத் தற்குறிப்பேற்ற அணியின் பாற்படும்.

130. கொண்ட மாமரத்தை அம்பின் கூட்டத்தால், காட்டத்தக்க
கண்டம் ஆயிரத்தின் மேலும் உள என, கண்டம் கண்டான்;
விண்ட வாள் அரக்கன் மீது, விசும்பு எரி பறக்க, விட்டான்;
பண்டை மால் வரையின் மிக்கது ஒரு கிரி, பரிதி மைந்தன். (7229)

(காட்ட-செய்ய; கண்டம்-துண்டம்; காணுதல்-செய்தல்; பரிதி-சூரியன்; விண்ட-பிளந்த/துண்டாக்கிய; வாள்-கொடிய; பண்டை-முன்பு; மால்-பெரிய; வரை-மலை; விசும்பு-விண்/ஆகாயம்; கிரி-மலை; மா-பெரிய)

சுக்கிரீவன் அவ்வாறு கையால் பறித்தெடுத்த மரத்தை, கொடிய அரக்கனான இராவணன், தன்னுடைய அம்பின் தொகுதியினால், ஆயிரத்திற்கும்மேற்பட்டதுணுக்குகளாகச்செய்யமுடியும்என்றுஎல்லோருக்கும் காட்டும் வண்ணம், அதைத் துண்டுகளாக்கினான். அவ்வாறு அம்மரத்தைப் பிளந்த அவ்வரக்கன் மீது, சூரியன் புதல்வனான சுக்கிரீவன், தான் முன்பு எறிந்த பெரிய மலையைக் காட்டிலும் இன்னும் பெரியதான ஒரு மலையை, விண்ணில் தீப்பொறி பறக்கும்படி, இராவணன் மீது வீசியெறிந்தான்.

'காட்ட' 'கண்ட' என்னும் சொற்கள், இங்கே செய்ய, செய்த என்ற பொருளில் கையாளப்பட்டிருப்பதை அறிக. சுக்கிரீவன் பறித்தெடுத்த அந்த மரத்தை அரக்கன்மீது வீசி எறிவதற்கு முன்பே, இராவணன் அதை ஆயிரம்துண்டுகளாக்கினான்என்பது இங்கு நோக்கத்தக்கது. இப்பொழுது பறித்த பெரிய மலையை இராவணன் மீது வீசியெறிநததனால் ஏற்பட்ட விசையினால், விண்ணில் தீப்பொறி பறந்தது என்க. தன்னுடைய அம்பினால், ஒரு பெரிய மரத்தையே ஆயிரம் துண்டுகளுக்கும் மேலாகச் சிதைக்க முடியும் என்பதை இராவணன் காட்டினான் என்று பொருள் கொள்ளுதல் இராவணன் ஆற்றலை மேலும் சிறப்பிக்கும்.

131. அக்கிரி தனையும் ஆங்கு ஓர் அம்பினால் அறுத்து மாற்றி,
திக்கு இரிதரப் போர் வென்ற சிலையினை வளைய வாங்கி,
சுக்கிரீவன் தன் மாரபில் புங்கமும் தோன்றா வண்ணம்
உக்கிர வயிரவாளி ஒன்று புக்கு ஒளிக்க, எய்தான். (7230)

(கிரி-மலை; மாற்றுதல்-போக்குதல்; இரிதருதல்-புறமுதுகிட்டு ஓடுதல்; சிலை-வில்; உக்கிரம்-கொடுமை; வயிரம்-உறுதி; வாளி-அம்பு; புங்கம்-அம்பின்அடிப்பகுதி)

அவ்வாறு சுக்கிரீவனால் வீசியெறியப்பட்ட மலையையும், தனது அம்பினால் துகளாகச் செய்து போக்கிவிட்ட பின், இராவணன் முன்பு திக்

Koviloor Digital Library

விஜய காலத்தில் திக்கு பாலகர்கள் எல்லாம் புறமுதுகு இட்டு ஓடும்படி போர்செய்து வெற்றி பெற்றதற்குக் காரணமான வலிய அம்பினை இப்போது தன் கைகளில் எடுத்துக்கொண்டு, அதனைச் சுக்கிரீவன் மார்பில் செலுத்தினான். அவ்வாறு செல்லும்போது கூட அந்தக் கொடுமையான, உறுதியான அம்பின் முனைப்பகுதியோ, அடிப்பகுதியோ அவன் உடம்பில் நுழைவது தெரியாதபடி உள்ளே நுழைந்து மறைந்து கொள்ளும் வண்ணம் மிக நுட்பமாகச் செலுத்தினான்.

தான் அந்த மலையினைப் பொடிப்பொடியாக ஆக்கிய அம்பினால் சுக்கிரீவனது வயிரம் பாய்ந்த மார்பினைப் பிளக்க முடியாது என்பதை நன்றாக உணர்ந்த இராவணன், அந்த அம்பினைத் தவிர்த்து விட்டு, முன்பு திக்கு பாலகர்களைப் புறமுதுகிட்டு ஓடச்செய்த வலிமையான அம்பினைத் தேர்ந்தெடுத்து சுக்கிரீவன் மார்பில் செலுத்தினான் என்பதால் சுக்கிரீவனின் வயிரம் பாய்ந்த மார்பின் சிறப்பும், மலையைப் பிளப்பதற்கு உதவிய வில், சுக்கிரீவன் மார்பைப் பிளப்பதற்கு உதவாது என்று இராவணன் கருதினான் என்பதும் நேக்கத்தக்கது. இராவணனின் போர்த்திறத்தில் பயன்படுத்தப்பட்ட மதிநுட்பமும் இங்கு பேசப்படுவதை உணர்க. இன்னும் ஒன்று - இராவணன் செலுத்திய அம்பின் அடிப் பகுதிகூட அவன் உடலில் வெளிப்பட்டுத் தோன்றா வண்ணம் மிக நுட்பமாகச் செலுத்தினான் என்பதால் இராவணனின் வேற்படைப் பயிற்சியும் சிறப்பிக்கப்பட்டது என்க. அது ஒரு பெரிய போர்த்திறமை என்பதை உணர்க. 'தென்றல் வந்து போனதற்குச் சுவடா உண்டு?' என்பார் கண்ணதாசன். அதுபோல இராவணன் அம்பு, சுக்கிரீவன் மார்பில் பாய்ந்தது என்பதற்கு எந்தச் சுவடும் தெரியா வண்ணம் இராவணன் அம்பைச் செலுத்தினான் என்பதாம்.

132. சுக்கிரீவன் தளர்தலும், அனுமன் வருதலும்

சுடுகணை படுதலோடும், துளங்கினான்; துளங்கா முன்னம்,
குடதிசை வாயில் நின்ற மாருதி, புகுந்த கொள்கை
உடன் உறைந்து அறிந்தான் என்ன, ஓர் இமை ஒடுங்கா முன்னர்,
வடதிசை வாயில் வந்து, மன்னவன் முன்னர் ஆனான். (7231)

(துளங்குதல்-தளர்ந்து போதல்; குடதிசை-மேற்குத்திசை; மாருதி-அனுமன்; புகுந்த கொள்கை-நேர்ந்த தன்மை; ஒடுங்குதல்-முடிதல்; மன்னவன்-சுக்கிரீவன்; சுடுதல்-எரித்தல்; படுதல்-தைத்தல்)

இராவணன் செலுத்திய எரிக்கின்ற அம்பு தன் உடம்பில் தைத்தவுடன், சுக்கிரீவன் சற்று உடல் தளர்வுற்றான். அவன் உடல் தளர்வுறும்பொழுதே, அந்த நிகழ்ச்சியை ஏதோ உடன் இருந்து பார்த்தவன் போல, மேற்குக் கோபுர வாயிலில் நின்றிருந்த மருத்தின் மகனான அனுமன், ஒரு

Koviloor Digital Library

இமைப்பொழுது கழிவதன்முன், வடக்குக் கோபுர வாசலில் இருந்த தன் அரசன் சுக்கிரீவன் முன்னால் விரைவாக வந்து நின்றான்.

இராவணன் செலுத்திய கணை தன் உடலில் பட்டதால் சுக்கிரீவன் தளர்ந்து போனதும் வாயுவின் புதல்வனான அனுமன் அங்கு வந்து சேர்ந்ததும் ஏககாலத்தில் நிகழ்ந்தன என்க. வடக்கு வாயிலில் நிகழ்ந்த நிகழ்ச்சியை, மேற்கு வாயிலில் நின்றிருந்த அனுமன், ஏதோ அருகிலேயே நின்று பார்த்தவன்போல உடனே விரைந்து ஒரு நொடிப்பொழுதிற்குள் சுக்கிரீவனிடம் வந்து சேர்ந்தான் என்பதாம். 'துளங்கா முன்னம்' என்பது, இரு நிகழ்ச்சிகளும் ஒரே சமயத்தில் நிகழ்ந்தன என்பதைக் குறிக்கும். அனுமன் விரைவில் வந்து சேர்ந்தான் என்பதற்காகத்தான் அவனை இங்கே அனுமன் என்று கூறாது, மாருதி என்று, மருத்தின் மைந்தன் - காற்றின் புதல்வன் என்று கூறுகிறான் என்பது கருதத்தக்கது. 'ஓர் இமைஒடுங்கா முன்னர்' என்பது, ஒரு இமைப்பொழுது கழிவதன்முன் என்று விரைவுப் பொருளை உணர்த்தும். 'துளங்குதல்' என்னும் சொல் உள்ளம் கலங்குதலையும், உடல் தளர்தலையும் குறிக்கும் எனக்கொள்க. எங்கோ நிகழ்ந்த நிகழ்ச்சியை இங்கு இருப்பவன் உணர்தல் என்பது அறிவியலில் 'உள்ளுணர்வு' என்று வழங்கப்படும். கோப்பெருஞ்சோழன் துன்புற்று வடக்கிருந்ததை உள்ளுணர்வால் உணர்ந்த பிசிராந்தையார், அவனிடம் விரைந்து வந்து வடக்கிருந்து உயிர் துறந்ததை இங்கே நினைவுகூர்க. 'புணர்ச்சிபழகுதல் வேண்டா; உணர்ச்சிதான் நட்பாம் கிழமை தரும்' என்பதும் 'உடுக்கை இழந்தவன்கைபோல ஆங்கே இடுக்கண்களைவதாம் நட்பு' என்பதும் குறள்-785,788. 'கண்இமை, கைந்நொடி, அவ்வே மாத்திரை' என்பது தொல்காப்பியம்.

133. இராவணன் – அனுமன் போர்

பரிதிசேய் தேறாமுன்னம், 'பருவலி அரக்க! பல்போர்
புரிதியோ என்னோடு?' என்னா, புகைஎழ விழித்துப் பொங்கி,
'வருதியேல், வா, வா!' என்பான்மேல், மலை ஒன்று வாங்கி,
சுருதியே அனைய தோளால் வீசினான், காலின் தோன்றல். (7232)

(கால்-காற்று/வாயுதேவன்; தோன்றல்-மகன்; பொங்கி-கொதித்தெழுந்து; பருவலி-பெரிய வலிமை; பரிதி-சூரியன்; தேறுதல்-தெளிதல்; வாங்கி-பெயர்த்தெடுத்து; சுருதி-வேதம்)

காற்றின் மைந்தனான அனுமன், இராவணனை நோக்கி, 'மிக்க வலிமை படைத்த அரக்கனே! சூரியன் மகனான சுக்கிரீவன் தெளிவடைதற்கு முன்னால், என்னோடு பலவகைப்பட்ட மற்போர் புரிய வருவாயோ?' என்று கூவியழைக்க, அதற்கு இராவணன் தன் கண்களில் தீப்பொறியின் புகை எழ விழித்து, மிக்க சினம் கொண்டு, போர்புரிய வருவாயாகில், 'வா, விரைந்து வா' என்று அழைத்த இராவணன் மேல், அனுமன் ஒரு பெரிய

Koviloor Digital Library

மலையை அடியுடன் பெயர்த்தெடுத்துத் தனது வேதம் போன்று அழியாத தன்மையுடைய தோள்களால் வீசி எறிந்தான்.

வேதம் என்றும் அழியாது. அவ்வாறு அழியாப் பெருவாழ்வு பெற்ற அனுமன் தன்னுடைய தோள்களால் அம்மலையை வீசி எறிந்தான் என்பதாம். தோள் இங்கே கைகளைக் குறிக்கும்.

134. மீ எழு மேகம் எல்லாம் வெந்து, வெங்கரியின் சிந்தித்
தீ எழ, விசும்பினூடு செல்கின்ற செயலை நோக்கி,
காய்கணை ஐந்தும் ஐந்தும் கடுப்புறத் தொடுத்துக் கண்டித்து,
ஆயிரம் கூறு செய்தான், அமரரை அலக்கண் செய்தான். (7233)

(அமரர்-தேவர்கள்; அலக்கண்-துன்பம்; மீ-மேலே; வெம்-வெப்ப முடைய; காய்தல்-கொல்லுதல்; கடுப்பு-விரைவு; கண்டித்தல்-பிளத்தல்/ துண்டாக்குதல்; கூறு-துண்டங்கள்; செயல்-போக்கு; தொடுத்தல்-செலுத்துதல்)

தேவர்களுக்கு இடைவிடாது துன்பம் தந்து வந்த அரக்கனாகிய இராவணன், இப்போது, அனுமன் வீசியெறிந்த மலை, மேலே வானத்தின் வழியே எழுந்து செல்ல அதனால் மேகங்கள் எல்லாம் வெந்து போய், வெப்பமான, கரித்தணலையும், நெருப்பையும், புகையையும், கக்கிக் கொண்டு, தன்னை நோக்கி வருகின்ற போக்கைப் பார்த்து, தன்னிடமுள்ள, பகைவரைக் கொல்லும் தன்மைவாய்ந்த பத்து அம்புகளை ஒருசேரத் தொடுத்து, விரைவாகச் செலுத்தி, அந்த மலையைப் பிளந்து, ஆயிரம் துண்டுகளாக ஆக்கினான்.

இராவணன் தேவர்களையெல்லாம் தன்னுடைய ஏவலாள்ராகக் கொண்டு, அவர்களை எல்லாவிதத்திலும் இடையறாது துன்புறுத்திக் கொண்டு வந்திருக்கிறான் என்பதைக் கவிஞன் காப்பியத்தில் பல இடங்களிலும் கூறிப்போவதையும் நாம் கண்டிருக்கிறோம். அனுமன் வீசியெறிந்த மலை செல்லும் வேகத்தில், வானத்திலிருந்த மேகங்கள் எல்லாம் வெந்து உதிர்ந்து நெருப்பையும், புகையையும், கரித்தணலையும் கக்கிக் கொண்டு இராவணனை நோக்கி வந்தன. இதனைக் கண்ட இராவணன்தன்னைக்காத்துக்கொள்ளும் பொருட்டு, அம்மலையைத்தன் அம்பு கொண்டு ஆயிரம் துண்டங்களாக்கினான் என்பதாம். முற்காலத்தில் மலைகளுக்கு இருந்த சிறகுகளைத் தன் வச்சிராயுதத்தால் அறுத்தவன் இந்திரன். அந்த இந்திரனையும், தேவர்களையுமே தன் ஏவலாளராகக் கொண்டவன் இராவணன். எனவே இம்மலையைத் துண்டமாக்குவது இராவணனுக்கு ஒரு பெரிய காரியமல்ல என்ற கருத்தை 'அமரரை அலக்கன் செய்தான் ஆயிரம் கூறு செய்தான்' என்ற இறுதி அடி உணர்த்துவதைக் கருதுக.

Koviloor Digital Library

135. மீட்டு ஒரு சிகரம் வாங்கி, வீங்கு தோள் விசையின் வீசி,
ஓட்டினான், ஓட்ட, வானத்து உருமினும் கடுகஓடி,
கோட்டு வெஞ்சிலையின் வாளி முன் சென்று, கொற்றப் பொன்தோள்
பூட்டிய வலயத்தோடும், பூழியாய்ப் போயிற்று அன்றே! (7234)

(மீட்டு-மீண்டும்; சிகரம்-மலை; வாங்கி-பெயர்த்தெடுத்து; வீங்கு-பருத்த; விசை-வலிமை/வேகம்; ஓட்டுதல்-செலுத்துதல்; உரும்-இடி; கோட்டு-வளைந்த; கொற்றம்-வெற்றி; பொன்-அழகு; பூட்டிய-அணிந்த; வலயம்-தோள்வளை/வாகுவலயம்/தோள்அணி; பூழி-பொடி/துகள்/புழுதி)

தான் முன்பு வீசியெறிந்த பெரிய மலை, இராவணன் வில்லினால் ஆயிரம் துண்டுகளாகிப் போனதால், இப்போது மீண்டும் ஒரு பெரிய மலையைப் பெயர்த்தெடுத்து, தனது பருத்த தோளின் வலிமையோடு வேகமாக வீசி எறிந்தான்; அவ்வாறு வீசப்பட்ட அம்மலை விண்ணிலிருந்து எழும் இடியினும் மிக்க வேகமாக ஓடிச்சென்று, வளைந்த, கொடிய, வில்லில் பூட்டப்பெற்ற அம்பு இராவணனால் எய்யப் படுவதற்கு முன்பு, அவன் எதிரே நெருங்கிச் சென்று அவனுடைய வெற்றி பொருந்திய அழகிய தோள்களில் அணிந்திருந்த தோள்வளையைத் தாக்கிப் பொடிப்பொடியாக்கி விட்டுத் தானும் பொடிப்பொடியாய் நொறுங்கிப் போனது.

இராவணன் வில்லில் பூட்டிய அம்பு, செலுத்தப்படுவதற்கு முன்பு, அம்மலை அவன் தோள்வளையைத் தாக்கித் தானும் நொறுங்கியது என்பதால் அம்மலை வீசியெறியப்பட்ட வேகம் புலப்படுத்தப்பட்டது என்க. மலை சென்ற விரைவுக்கும், தாக்குதலுக்கும் வானிலிருந்து விழுகின்ற இடி உவமை.

136. மெய் எரிந்து அழன்று பொங்கி, வெங்கணான் விம்மி, மீட்டு ஓர்
மை வரை வாங்குவானை, வரிசிலை வளைய வாங்கி,
கையினும், தோளின் மேலும், மார்பினும் கரக்க, வாளி
ஐ இரண்டு அழுந்த எய்தான்; அவன் அவை ஆற்றி நின்றான். (7235)

(மெய்-உடம்பு; அழல்தல்-எரிதல்/கொதித்தல்/வெகுள்தல்; விம்முதல்-துன்பமுறுதல்/மனம் வெதும்புதல்; மை-கரிய; வரை-மலை; வாங்குதல்-பெயர்த்தெடுத்தல்; கரத்தல்-மறைத்தல்; ஆற்றி-தாங்கி; வரி-கட்டமைந்த)

கொடிய கண்களையுடைய இராவணன், தன் தோள்வளை பொடியாகிப் போனதால் உடலும், உள்ளமும் வெதும்பிச் சீற்றம் கொண்டு மீண்டும் ஒரு மேகம் படிந்த கரிய மலையைப் பெயர்த்தெடுக்க முயலுகின்ற அனுமனை நோக்கி, அவன் அம்மலையைப் பெயர்க்க இயலாதவாறு

Koviloor Digital Library

தன்னுடைய கட்டமைந்த வில் வருந்துமாறு வளைத்துக் கொண்டு, அனுமனுடைய இரு கைகளிலும், இருதோள்களிலும், மார்பிலும் அழுந்திப் படிந்து அவை உடலில் மறைந்து போகும்படி பத்து அம்புகளைச் செலுத்தினான். எனினும் அனுமன் அவ்வம்புகளையெல்லாம் தாங்கிக் கொண்டு வருந்தாமல், நிலைகுலையாது, உறுதியாக நின்றான்.

இராவணன் பட்ட துன்பத்தை, ''மெய்எரிந்து, அழன்று, பொங்கி, வெங்கண் விம்மி, என்று எத்தனை அடைமொழிகளில் கவிஞன் விரித்துரைக்கிறான் பாருங்கள். ஆனால் பத்து அம்புகளையும் தாங்கிக்கொண்டு நிலைகுலையாது நின்ற அனுமனை 'அவன் அவை ஆற்றி நின்றான்' என்று மட்டும் கூறி நிறுத்திவிடுவதையும் நோக்குங்கள்.

137. 'யார் இது செய்யகிற்பார்?' என்று கொண்டு, இமையோர் ஏத்த,
மாருதி பின்னும், அங்கு ஓர் மராமரம் கையின் வாங்கி
வேரொடும் சுழற்றி விட்டான்; விடுதலும் இலங்கை வேந்தன்
சாரதி தலையைத் தள்ளிச் சென்றது, நிருதர் சாய. (7236)

(இமையோர்-தேவர்கள்; ஏத்துதல்-பாராட்டுதல்; மராமரம்-வெண் கடம்பமரம்; சாரதி-தேர்ப்பாகன்; நிருதர்-அரக்கர்கள்; விடுதல்-வீசி யெறிதல்)

அவ்வாறு இராவணன் செலுத்திய பத்து அம்புகளையும் தாங்கிக் கொண்டு நிலைகுலையாது நின்ற அனுமனை நோக்கி, ''இத்தகைய வீரச்செயலை அனுமனையன்றி வேறு யாரால் செய்ய முடியும்?'' என்று வியந்து, தேவர்கள் அனுமனைப் போற்றிப் புகழ்ந்து கொண்டிருக்கும் போதே, அனுமன் அங்கிருந்த வேறு ஓர் வெண்கடம்ப மரத்தை வேரோடும் பறித்து எடுத்துக் கைகளில் கொண்டு, சுழற்றி வீசியெறிந்தான். அவ்வாறு வீசியெறியவும் அம்மரம் இலங்கை அரசனான இராவணனது தேர்ப்பாகனின் தலையைத் துண்டித்துக் கீழே வீழ்த்தி விட்டு, அருகில் சுற்றி நின்றிருந்த சில அரக்கர்களையும் தாக்கிச் சாய்த்துக் கீழே வீழ்த்தியது.

'செய்ய கிற்பார்' என்ற சொல்லில் உள்ள 'கில்' என்பது ஆற்றலை உணர்த்தும் இடைச்சொல் எனக்கொள்க. தேவர்கள் எப்பொழுதும் தங்கள் காரியம் நிறைவேற வேண்டும் என்ற எண்ணத்துடனேயே இருப்பதால் அனுமனின் நிலைகுலையாமை கண்டு வாழ்த்தினர் என்க. இங்கே 'சுழற்றி விட்டான்' என்ற சொற்றொடர் மிகுந்த பொருட்செறிவு கொண்டது என்பதை உணர்க. சாதாரணமாக மரத்தை வீசியெறிந்தான் என்றுதான் இதுவரையிலும் கூறி வந்திருக்கிறான் கவிஞன். ஒரு பொருளைச் சுழற்றி வீசி எறிந்தால், அது குறிப்பிட்ட இலக்கை மட்டும் தாக்காது, அவ்விலக்கைச் சுற்றியிருக்கும் மற்ற பொருள்களையும் தாக்கும் என்பது நாம் அறிந்ததே. அதை விளக்கும் பொருட்டுக் கவிஞன், அவ்வாறு சுழற்றி யெறியப்பட்ட மரம், இராவணனது தேர்ப்பாகனை மட்டும் தாக்காது,

Koviloor Digital Library

அவனைச் சுற்றிநின்ற அரக்கர்களையும் சுழன்று சென்று தாக்கி வீழ்த்தியது என்று கூறியிருப்பது ஒரு நயம்.

138. மாறி ஓர் பாகன் ஏற, மறி திரைப் பரவை பின்னும்,
சீறியது அனையன் ஆன செறிகழல் அரக்கன், தெய்வ
நூறுகோல் நொய்தின் எய்தான்; அவை உடல் நுழைதலோடும்,
ஆறுபோல் சோரி சோர, அனுமனும் அலக்கண் உற்றான்.

(7237)

(மாறி-வேறுபட்ட; மறிதல்-மடங்குதல்; திரை-அலைகள்; பரவை-கடல்; செறி-நெருங்கிய; கோல்-அம்புகள்; நொய்தின்-விரைவாக; சோரி-குருதி; சோர்தல்-பெருகுதல்; அலக்கண்-துன்பம்)

அந்தத் தேர்ப்பாகன் இறந்ததும், வேறு ஓர் தேர்ச்சாரதி ஏறித் தேரைச் செலுத்த, மடங்குகின்ற அலைகளையுடைய கடலில் மீண்டும் சீற்றமுற்றுப் பொங்கி எழுவதைப் போன்றவனான, நெருங்கிய வீரக்கழல் அணிந்த ஒப்பற்ற அரக்கனான இராவணன், தெய்வத்தன்மை பொருந்திய நூறு அம்புகளை மிக விரைவாகவும், எளிதாகவும் அனுமன்மேல் செலுத்தினான்; அவை அனுமன் உடலில் தைத்ததும், அவன் உடலினின்றும் இரத்தம் ஆறுபோல் பெருகிஓட, அவனும் சற்றுத் துன்பம் அடைந்தான்.

'மாறிஓர் பாகன் ஏற' என்றதனால், முன்பு சேமத்தேர் இருந்தது போலவும், சேமப் படைக்கலன்கள் இருந்தது போலவும், சேமப் பாகர்களும் இருந்தனர்' என்பது தெரிய வருகிறது. 'ஏற' என்பது ஏறிச் செலுத்த என்னும் பொருளது. முன்பு எய்தது பத்து அம்புகள், இப்போது செலுத்தப்படுவது வரத்தால் பெற்ற தெய்வத்தன்மை வாய்ந்த அம்புகள். முன்பு அனுமன் சற்றும் தளராது அவற்றைத் தாங்கிக் கொண்டு நின்றான். இப்போது சற்றுத் துன்பம் அடைந்தான் என்ற வேறுபாட்டை மிகத் தெளிவாக எடுத்துரைக்கும் கவிஞனின் கவித்திறம் நோக்குக. கரிய நிறம் கொண்ட இராவணனுக்கு கடல் உவமை.

139. இராவணன் கூறியது

"கல்கொண்டும், மரங்கள் கொண்டும்,
கைக்கொண்டும், களித்து, நும் வாய்ச்
சொல்கொண்டும், மயிரின் புன்தோல்
தோள்கொண்டும் தள்ளி, வெள்ளிப்
பல்கொண்டும், மலைகின்றாரின்
பழிகொண்டு பயந்தது; யான் ஓர்
வில்கொண்டு நின்றபோது, விறல்கொண்டு
மீள்திர் போலாம்!"

(7238)

Koviloor Digital Library

(கல்-மலை; புன்-புல்லிய/அற்பமான; துள்ளி-துளி; வெள்ளி-வெண்மை; மலைதல்-போர்செய்தல்; விறல்-வெற்றி; மீள்தல்-திரும்பிப் போதல்)

இராவணன் அந்தக் குரங்குச் சேனையைப் பார்த்து, 'உங்கள் வாய்க்கு வந்தவாறு ஏதேதோ பிதற்றிக்கொண்டு கல், மரம், உங்கள் கைகள், அற்பமான மயிரினால் போர்த்தப்பட்ட தோலையுடைய தோள்கள், சிறுதுளி போன்ற வெண்மையான பற்கள் இவற்றைக் கொண்டு போர் செய்யும்போது, அதை நான் எதிர்த்துப் போர்செய்தால் எனக்கு நீங்காத பழி வந்து சேருமேயென்று பயந்துதான். இதுவரை நான் எந்தப் படைக்கலமும் தொடுக்காமல், போர் செய்யாது பின்வாங்கினேன். ஆனால் நான் ஒரு வில்லைக்கொண்டு போர்செய்யத் தொடங்குவேனாயின், நீங்களெல்லாம் அதை எதிர்த்து வலிமையோடு போர்செய்து, வெற்றிபெற்றுத் திரும்பிப் போகமுடியுமோ! முடியாது'' என்று வீர உரை பேசுகிறான் இராவணன்.

குரங்குகளின் படைக்கலன்கள் மலைகளும், மரங்களும், அவற்றின் உடலுறுப்புக்களாகிய கை, வால், தோள், பல் முதலியனவும்தாம். இவ்வாறு வேறு எந்தப் படைக்கலன்களும் இல்லாத அற்பக் குரங்கு களுடன் இராவணன் போர்செய்கிறான் என்ற பழிச்சொல்லுக்குப் பயந்துதான் இதுவரை நான் வேகம் கொண்டு போர்செய்யாதிருந்தேன். நான் ஒரு வில்லை எடுத்துப் போர்செய்யத் தொடங்கினால் நீங்கள் என் எதிரில் நின்று போர்செய்து வெற்றிகொண்டு, மீண்டு சென்று விடுவீர்களோ?'' என்று கேட்கிறான் இராவணன் என்பதாம். என்னுடன் போர்செய்யும் சமநிலை அற்றவர்கள் நீங்கள் என்றான் என்பதாம். 'ஒரு கையுடையது எறிவலோ, இருகை சுமந்து வாழ்வேன்' என்பதும் 'சிறப்புடைய அரசியலாவன, மடிந்த உள்ளத்தோனையும், மகப்பெறா தோனையும், படை இழந்தோனையும், ஒத்த படையெடாதோனையும், கொல்லாது விடுதலும் கூறிப் பொருதலும் முதலியனவாம்' என்பது தொல்காப்பிய நச்சினார்க்கினியர் உரை. இராவணன் இதுவரை கடும்போர் செய்யாதிருந்ததற்குக் காரணம் கூறுகிறான் எனக்கொள்க. குரங்குகளின் தோள்களை 'மயிரின்புன் தோல்தோள்' என இழிவுபடுத்திப் பேசியிருப்பதை உணர்க. முன்பு 'சுருதியேயனைய தோள்' என்றும், 'வீங்குதோள்' என்றும் கூறிய கவிஞன் இப்போது இவ்வாறு எதிரியின் கூற்றாக இழிவு தோன்றக் கூறிய பாங்கும் நோக்குக. 'போலாம்' என்பது இங்கு இகழ்ச்சிக் குறிப்பு எனக்கொள்க.

140. என்று உரைத்து, எயிற்று, பேழ்வாய் எரிஉக நகைசெய்து, யாணப்
பொன்தொடர் வடிம்பின் வாளி கடையுகத்து உருமுப் போல
ஒன்றின் ஒன்று அதிகமாக, ஆயிரகோடி உய்த்தான்;
சென்றது குரக்குச்சேனை, கால்எறி கடலின் சிந்தி. (7239)

Koviloor Digital Library

(எயிறு-பற்கள்; பேழ்-பிளவுபட்ட; எரி-நெருப்பு; யாணர்-புதிய; வடிம்பு-கூரியநுனி/விளிம்பு; கடையுகம்-ஊழிஇறுதி; உரும்-இடி; கால்-காற்று/புயல்; சிந்துதல்-சிதறிப்போதல்; உய்த்தல்-செலுத்துதல்; எறிதல்-தாக்கப்பெறுதல்)

என்று கூறி, இராவணன், தனது வளைந்த கோரைப்பற்கள் நிறைந்த பிளந்த வாயினின்றும் நெருப்புச் சிந்துமாறு சிரித்து, புதிய பொன்னாலான கூரிய நுனியையுடையதும், ஊழியிறுதிக்காலத்தில் தோன்றும் இடியைப் போலத்தாக்க வல்லதும், ஒன்றையொன்று தாக்குதலில் விஞ்சுவதுமான ஆயிரம்கோடி அம்புகளை அனுமன்மீதும், வானரச்சேனையின் மீதும் செலுத்தினான். அதனால் அந்தக் குரக்குச் சேனை, புயல்காற்றால் தாக்கப்பட்ட அலைகளையுடைய கடல்போலச் சிதறி ஓடலாயின.

இராவணனுடைய அம்புகளின் சிறப்புக் கூறப்பட்டது. புதிய பொன்னாலானகூரிய நுனியையுடையது; ஊழிக்காலத்துப் பேரிடிபோலத் தாக்க வல்லது; ஒன்றையொன்று முந்திச்செல்லும் விரைவு கொண்டது; ஆயிரம்கோடி என்ற எண்ணிக்கை உடையது என்று கூறிய நயம் நோக்குக. புயலால் தாக்கப்பட்டுச் சிதறும் கடலுக்கு, அம்புகளால் தாக்கப்பட்டுச் சிதறி ஓடும் குரக்குச்சேனை உவமை. இராவணன் அம்பின் பேரோசைக் கும், கொல்லும் தன்மைக்கும் 'கடையுகத்து உருமு' உவமை. அம்பு காற்றுப் போன்றதென்றும், குரக்குச்சேனை கடல் போன்றதென்றும் கூறிய நயம் நோக்குக.

141. இலக்குவன் களத்துள் தோன்றுதல்

கலக்கிய அரக்கன் வில்லின் கல்வியும், கவிகள் உற்ற
அலக்கணும், தலைவர் செய்த தன்மையும், அமையக் கண்டான்;
இலக்குவன், 'என்கை வாளிக்கு இலக்கு இவன்; இவனை இன்று
விலக்குவன்' என்ன வந்தான், வில்லுடை மேரு என்ன. (7240)

(கல்வி-வித்தை/திறமை; கவிகள்-குரங்குகள்; அலக்கண்-துன்பம்; அமைய-பொருந்த; விலக்குதல்-தடுத்தல்; இலக்கு-குறி; கலக்குதல்-குழப்புதல்; இன்று-இப்போதே)

தங்களது வானரச்சேனையைக் கலக்கமுறச் செய்த அரக்கனான இராவணனின் வில்வித்தையின் திறத்தையும், தமது குரங்குகள் பட்ட துன்பத்தினையும், குரக்கினத்தலைவர்களாகிய சுக்கிரீவன், அனுமன், மற்றும் படைத்தலைவர்கள் போர்புரிந்த வீரத்தன்மையையும் நன்கு உற்றுக் கவனித்த இலக்குவன், 'என்னுடைய கையிலிருக்கும் அம்பினுக்கு இவ்விராவணனே இலக்காவான்; இவனை இப்பொழுதே தடுத்து நிறுத்து வேன்' என்று கூறிக்கொண்டு, மேருமலையே தன்கையில் வில்லை ஏந்திக் கொண்டு வருவதைப்போன்று போர்க்களத்தில் வந்து தோன்றினான்.

Koviloor Digital Library

இராவணன் வில்வித்தையினைப் போற்றுகிறான் இலக்குவன் என்க. மேருமலை வில்லை ஏந்திக்கொண்டு வருதல் என்பது நிகழா நிகழ்ச்சி. எனவே இல்பொருள் உவமை என்க. இலக்குவனுக்கு மேருமலை தோற்றத்தாலும், வண்ணத்தாலும் உவமை என்க. இங்கே வான்மீகம் வேறுபடுகிறது. இராமபிரான் தானே புறப்பட்டதாகவும், அவனைத் தடுத்துத் தானே முதலில் செல்லுவதாகவும் இலக்குவன், இராமபிரானின் அனுமதி பெற்றுப் போர்க்களத்திற்கு வந்தான் என்றும் வான்மீகம் கூறுகிறது. 'இலக்கு இவன்' என்று இலக்குவன் கூற்றால் கூறும் கவிஞனின் சொல்நயம் உணர்க.

142. இலக்குவன் நாண் ஒலி செய்தல்

தேயத்தின் தலைவன் மைந்தன், சிலையை நாண் எறிந்தான்; தீய
மாயத்தின் இயற்கை வல்லார் நிலை என்னை?' முடிவின் மாரி
ஆயத்தின் இடி இது' என்றே அஞ்சின உலகம்; யானை
சீயத்தின் முழக்கம் கேட்டல் போன்றனர், செறுநர் எல்லாம். (7241)

(தேயத்தின் தலைவன்-தசரதச் சக்கரவர்த்தி; முடிவு-ஊழியிறுதி; மாரி-மழை; ஆயம்-மேகம்; செறுநர்-பகைவர்கள்; சீயம்-சிங்கம்; முழக்கம்-கர்ஜனை/பேரொலி; மாயம்-வஞ்சம்)

இந்த நாட்டிற்கெல்லாம் அரசனான, தசரதச் சக்கரவர்த்தியின் இளைய மைந்தனான இலக்குவன் தன்னுடைய வில்லினின்று நாண் தெறித்து ஒலி எழுப்பினான். அதனைக் கேட்ட கொடிய வஞ்சத்தையே தனது வாழ்வின் இயல்பாகக் கொண்ட வலிய அரக்கர்களின் நிலையை என்னவென்று சொல்வது? ஊழியிறுதிக்காலத்தில் கொட்டும் மழையோடு, மேகத்தினின்று வெளிப்படும் பேரிடிதானோ இது, என்று உலகத்துமக்களும், அரக்கர்களும் அஞ்சினர். பகைவர்கள் எல்லாம், ஒரு யானை, சிங்கத்தின் கர்ச்சனை முழக்கத்தைக் கேட்டு நடுங்கி நின்றதுபோல் நின்றனர்.

தசரதச் சக்கரவர்த்தியை 'தேயத்தின் தலைவன்' என்று கூறிய கவிஞன், அரக்கர்களை, 'தீய மாயத்தின் இயற்கை வல்லார்' என்று கூறிய நயம் நோக்குக. 'ஆயம்' என்பது மேகத்தைக் குறிக்கும். ''முதிரம், பயோதரம், கதம்பம், மெய்ப்பிரம், அப்பிரம், ஆயமும் அப்பெயர்க்கு உரித்தே' என்பது பிங்கல நிகண்டு. நாண் ஒலிக்குச் சிங்கத்தின் முழக்கம் உவமை.

143. ஆற்றல் சால் அரக்கன் தானும், அயல் நின்ற வயவர் நெஞ்சம்
வீற்று வீற்றாகி உற்ற தன்மையும், வீரன் தம்பி,
கூற்றின் வெம்புருவம் அன்ன, சிலைநெடும் குரலும் கேளா,
ஏற்றினன் மகுடம், 'என்னே! இவன் ஒரு மனிசன்' என்னா. (7242)

Koviloor Digital Library

(சால்-மிக்க; அயல்-அருகில்; வயவர்-வீரர்கள்; வீற்றுவீற்று- வேறு வேறு; வீரன்-இராமபிரான்; கூற்று-இயமன்; மனிசன்-மனிதன்; ஏற்றுதல்-உயர்த்துதல்; ஆற்றல்-வலிமை/வன்மை; கேளா-கேட்டு)

வலிமை மிக்க அரக்கனான இராவணன், தன்னருகே போர்க்களத்தில் நின்ற வீரர்களின் உள்ளம் பலவிதமாக நடுக்கமுற்று உடைந்துபோய் மாறியது கண்டும், வெற்றிவீரனான இராமபிரானது தம்பியாகிய இலக்குவன், இயமனது கொடிய புருவத்தைப் போன்ற தனது வில்லை வளைத்து நீண்ட நாணொலியை எழுப்பிய ஓசையைக் கேட்டும், சரிந்து போயிருந்த தனது மகுடத்தைச் சற்றே உயர்த்திக்கொண்டு, வியப்புடன் 'என்ன இது! இத்தகைய நாணொலியை எழுப்பியவன் ஒரு அற்பமான மனிதகுலத்தைச் சார்ந்தவன்தானா?' என்று வியந்து நின்றான்.

இலக்குவனுடைய வில் வளைவுக்கு, இயமனது புருவ வளைவு உவமை. ஒரு அசாதாரணமான கற்பனை; இயமன் புருவத்தை வளைத்தால் உலகில் பேரழிவு உறுதி என்பது போல், இப்போது இலக்குவன் வில் வளைவதால் போர்க்களத்தில் உயிர் இழப்பு உறுதி என்பதைச் சுட்டி நின்ற ஒரு அற்புதமான உவமை; வியப்பு மேலீட்டால், தலையைச் சற்றே உயர்த்திப் பார்க்க நேரிட்டது. தலையை உயர்த்தியதை மகுடத்தின்மேல் ஏற்றிக் கூறினார் என்க. வில் போன்ற புருவம் என்று கூறாது, புருவம் போன்ற வில் என்று கூறியதை நோக்குக. 'உண்மைக்கு இவனே, வலிக்கு இவனே; உறவுக்கு இவனே; உரைக்கு இவனே' என்பது வில்லிபாரதம். இத்தகைய ஒலியை எழுப்பியவன் தேவர்களினும் மேலான மும்மூர்த்தி களாகத்தான் இருக்க முடியும் என்பதால் இவன் மனிதன்தானோ என்று வியப்புற்றான் இராவணன் என்பதாம்.

144. இராவணன் – இலக்குவன் போர்

கட்டு அமை தேரின் மேலும், களிநெடும் களிற்றின் மேலும்,
விட்டு எழு புரவி மேலும், வெள்ளயிற்று அரக்கர் மேலும்,
முட்டிய மழையின் துள்ளி, முறையின்றி மொய்க்குமா போல்,
பட்டனபகழி; எங்கும் பரந்தது குருதிப் பவ்வம். (7243)

(களி-மதக்களிப்பு; களிறு-யானை; விட்டு எழுதல்-இடம்விட்டுத் தாவிச்செல்லுதல்; புரவி-குதிரை; முட்டுதல்-நெருங்குதல்/மோதுதல்; துள்ளி-துளிகள்; மொய்த்தல்-நெருங்கி விழுதல்; பகழி-அம்புகள்; பவ்வம்-பௌவம்/கடல்; படுதல்-தைத்தல்)

நன்கு உறுதியாகக் கட்டப்பட்டுப் போரில் ஈடுபட்டிருக்கும் தேர்ப் படைகளின் மீதும், மதத்தால் களிப்புற்றுத் திரியும் யானைப் படைகளின் மீதும், தாம் இருந்த இடத்தைவிட்டுத் தாவிச்செல்லும் இயல்புடைய குதிரைப்படைகளின்மீதும், வெள்ளிய கோரப்பற்களை உடைய அரக்கர் களின் காலாட்படையின் மீதும், இலக்குவன் நெருங்கிச் செலுத்திய

Koviloor Digital Library

அம்புகள், நெருங்கிய மழைத்துளி ஒரு வறைமுறையில்லாது எல்லா இடங்களிலும் பரவி விழுவதுபோல, களத்திலுள்ள நால்வகைப் படையின் மேலும் தைத்தன. நால்வகைப் படைகளும் அழிந்ததால் பெருகிய இரத்த வெள்ளம், கடல்போல் போர்க்களம் எங்கும் பரவி நிறைந்தது.

''கட்டு அமை தேர்-களிநெடும் களிறு; விட்டு எழு புரவி; வெள்எயிற்று அரக்கர்'' என்று நால்வகைப் படைக்கும் நல்ல அடைமொழி கொடுத்துக் கூறிய நயம் நோக்குக.

145. நகங்களின் பெரிய வேழ நறை மத அருவி காலும்
முகங்களில் புக்க வாளி அபரத்தை முற்றி, மொய்ம்பர்
அகங்களைக் கழன்று, தேரின் அச்சினை உருவி, அப்பால்,
உகங்களின் கடை சென்றாலும், ஓய்வுஇல; ஓடலுற்ற. (7244)

(நகம்-மலை; வேழம்-யானைகள்; நறை-நறுமணம்; காலுதல்-சொரிதல்; புக்க-புக/நுழைய/பட; வாளி-அம்பு; அபரம்-யானைகளின் பின் பாகங்கள்; மொய்ம்பர்-வீரர்கள்; அகம்-மார்பகங்கள்; கழலுதல்-ஊடுருவிச்சென்று வெளிப்படுதல்; முற்றி-கிழித்து/பிளந்து)

மலைகளைக் காட்டிலும் பெருந்தோற்றமுடைய யானைகளின் நறுமணம் மிக்க மதநீர் ஒழுகுகின்ற முகங்களில் நுழைந்து, அவற்றின் பின்புறமாக வெளிவந்த இலக்குவனின் அம்புகள், வலிமைமிக்க, காலாட் படை வீரர்களின் நெஞ்சுகளில் தைத்து, அதனின்றும் வெளிப்போந்து, தேர்களின் அச்சாணியையும் ஊடுருவிச் சென்று, அதன் பின்னரும் ஊழியிறுதிக் காலம் கழிந்து போனாலும், ஓய்வில்லாத் தன்மையைப் பெற்றன.

யானைகள் உகுக்கின்ற மதநீர் நறுமணம் மிக்கது என்பது 'நறைமத அருவி' எனப்பட்டது. அவ்வம்பு யானைகளின் முன்பக்கமாகிய முகத்தில் நுழைந்து, பின்பக்கமாக வெளிப்போந்தது என்பதும் நோக்கத்தக்கது. இங்கேயும், வேழம், மொய்ம்பர், தேர் என்று உயர வரிசையில் படிப்படியாகக் குறைத்துக்கொண்டே வந்த கவிஞனின் கவித்திறம் நோக்குக. இவையெல்லாவற்றையும் ஊடுருவிச்சென்றும், சலிப்பில்லாமல், யுகமுடிவுக்காலம் வரையிலும் ஓய்வில்லாமல் ஓடிக்கொண்டிருக்கும் என்று கூறும் கவிஞனின் கற்பனைத்திறன் காண்க. இதுபோலப் புறநானூற்றிலும் ஒரு பகழி புகுந்து புறப்பட்டு வந்திருக்கிறது. பாடலைக் கேளுங்கள். 'வேழம் வீழ்த்த, விழுந்தொடைப் பகழி, பேழ்வாய் உழுவையைப் பெரும் பிறிது உறீஇப் புழற்றலைப் புகர்க்கலை உருட்டி, உரற்றலைக் கேழற் பன்றி வீழ வயவவேட்டம், வலம் படுத்திருந்தோன்' என்பது புறநானூறு. இது வல்வில் ஓரியின் பகழிபற்றி வன்பரணர் பாடிய பாடல்; யானை, புலி, மான், பன்றி முதலியவைகளை வீழ்த்திப் பின் புற்றுக்குள் இருந்த உடும்பின்மீதும் தைத்தது என்பது பொருள். முன்பும்

Koviloor Digital Library

இராமபிரானது பகழி பற்றிக் கூறும்போது கம்பன், 'உலை உருவ, கனல் உமிழ்க்கண் தாடகை தன் உரம் உருவி, மலை உருவி, மரம் உருவி, மண் உருவிற்று ஒரு வாளி' என்றதையும் ஒப்புநோக்குக. 'துவசம் பிளந்து, தேர்ஊரும் துரகம் பிளந்து, சுடர்மணிப் பொற்கவசம் பிளந்து, மார்பகமும் பிளந்து, ஊடுருவக் கடோற்கசன் தான் வாளி தொடுத்தான்' என்பது வில்லிபாரதம். 'ஓய்வில ஓடல் உற்ற' என்பது இன்னும் எத்தனை யுகம் சென்றாலும் ஓடிக்கொண்டே இருக்கும் என்ற பொருளைத்தரும். இலக்குவனுடைய அம்பின் வலிமையையும் விரைவினையும் புலப்படுத்துவது காண்க. உயர்ந்த யானையின் முகம், அதனின்றும் சற்றுத் தாழ்ந்த வீரர்களின் மார்பு, பின்பு அதனின்றும் சற்றுத் தாழ்ந்த தேர்களின் அச்சு என்று படிப்படியாகப் புவிஈர்ப்பு விசைக்குத் தக்கவாறு இவ்வம்பு சென்றது என்று கூறும் கவிஞனின் அறிவியல் ஆழ்ந்த புலமையை வியக்காமல் இருக்க முடியுமா?

146. நூக்கிய களிறும், தேரும், புரவியும், நூழில்செய்ய
ஆக்கிய அரக்கர் தானை, ஐஇருகோடி, கையொத்து,
ஊக்கிய படைகள் வீசி, உடற்றிய; உலகம் செய்த
பாக்கியம் அனைய வீரன் தம்பியைச் சுற்றும் பற்றி. (7245)

(நூக்குதல்-கீழே தள்ளுதல்; நூழ்தல்-கொல்லுதல்; பாக்கியம்-புண்ணியம்; பற்றுதல்-சூழ்ந்துகொள்ளுதல்; ஊக்கிய-உயர்த்திய/செலுத்திய; படைகள்-படைக்கலன்கள்; உடற்றுதல்-போர்செய்தல்; கையொத்தல்-அணிவகுத்தல்)

அரக்கர்களின் யானைப்படை, தேர்ப்படை, குதிரைப்படை ஆகியவற்றைக் கீழேதள்ளி, கொன்று குவித்தன இலக்குவனின் அம்புகள்; எனினும் அணிவகுத்து நின்ற அரக்கர்களின் காலாட்படையினர், பத்துக் கோடிப்பேர், தங்கள் கையில் ஏந்தியிருந்த உயர்ந்த படைக்கலன்களை எல்லாம் வீசியெறிந்து, உலகமக்கள் செய்த புண்ணியத்தின் பயனாய் இவ்வுலகில் அவதரித்திருக்கின்ற வீரனான இராமபிரானின் தம்பியாகிய இலக்குவனைச் சுற்றித் தொடர்ந்து சூழ்ந்துகொண்டு போர் புரியலாயினர்.

''உலகம் செய்த பாக்கியம் அனைய வீரன்'' என்பது உலகத்து மக்கள் எல்லாம் செய்த புண்ணியம் எல்லாம் ஒருங்கு திரண்டு ஒரு உருவம் கொண்டு வந்தவனாகிய வீரன் இராமபிரான் என்ற பொருளைத்தரும்.

147. "உறுபகை மனிதன், இன்று எம் இறைவனை உறுகிற்பானேல்,
வெறுவிது நம்தம் வீரம்'' என்று, ஒரு மேன்மை தோன்ற,
எறிபடை அரக்கர் ஏற்றார்; 'ஏற்ற கைம்மாற்றான்' என்னா,
வறியவர், ஒருவன், வண்மை பூண்டவன்மேல் சென்றென்ன. (7246)

Koviloor Digital Library

(உறுதல்-வருதல்; இன்று-இப்பொழுது; இறைவன்-அரசன்; உறுதல்-நெருங்குதல்; வெறுவிது-பயனற்றது; மேன்மை-பெருமிதம்; படை-படைக்கலன்கள்; ஏற்றல்-இரத்தல்/யாசித்தல்; வண்மை-வள்ளல் தன்மை; ஏற்றல்-எதிர்கொள்ளுதலுமாம்; வீரம்-ஆண்மை; வறியவர்-இரவலர்) (குளகப்பாடல்)

''இங்கு புதிதாக வந்திருக்கின்ற பகைவன் இலக்குவன் ஒரு மனிதன், மிகு பகைகொண்டவன்; அவன் நமது அரசனை நெருங்கித் தீங்கிழைப்பான் என்றால் நம் ஆண்மை பயனற்றதாகி விடும்'' என்று கருதியதால், எறிகின்ற படைக்கலன்களைக் கொண்டுள்ள அரக்கர்கள், ஒரு பெருமிதம் கொண்டு எழுச்சியுற்று அவனை எதிர்க்கத் தொடங்கினார்கள். இது எப்படி இருக்கிறது என்றால் வள்ளல் தன்மை படைத்த ஒரு வள்ளல், தாம் எது கேட்டாலும் மறுக்காமல் தருவான் என்ற உறுதியான நம்பிக்கை கொண்ட ஏழை இரவலர்கள் பலர் சேர்ந்து அவனிடம் போய் யாசிப்பது போன்று இருக்கிறது என்கிறான் கவிஞன்.

'உறுகிற்பானேல்' என்பதில் உள்ள 'கில்' என்ற சொல் ஆற்றலை உணர்த்தும் இடைச்சொல். 'ஏற்றார்' என்ற ஒரு சொல் இரப்பவர் என்ற பொருளையும், எதிர்கொண்டனர் என்ற இன்னொரு பொருளையும் தரும். 'ஏற்றகை மாற்றான்' என்பது ஒரு அருமையான சொற்றொடர். ஒரு வள்ளலிடத்துப் பல வறியவர்கள் சென்று நின்றால் அவ்வள்ளல், ஏந்திய தம் கைகளைத் தவிர்க்காது, வாரி வழங்குவான் என்று அவர்கள் கருதுவதுபோல, ஒரு மனிதனாகிய இலக்குவனிடத்தில் பல அரக்கர்கள் பல படைக்கலன்களுடன் சென்று எதிர்த்தனர் என்பதாம். 'வெறுவிது' என்ற சொல் 'வெறுமை' என்ற பண்பின் அடியாகப் பிறந்த உரிச்சொல். 'ஏற்றகை மாற்றாமை என்னானும், தாம் வரையார், ஆற்றாதார்க்கு ஈவதாம் ஆண்கடன்' என்பது நாலடியார். வள்ளல், வறியவர்கள் திருப்தி கொள்ளும் வண்ணம் பொருள் ஈவான் என்பது போல், இலக்குவனும், அரக்கர்கள் சலிப்புறும் வண்ணம் அம்பு மாரி பொழிவான் என்பது மறைபொருள்.

148. அறுத்தனன், அரக்கர் எய்த எறிந்தன; அறுத்து, அறாத
பொறுத்தனன்; பகழி மாரி பொழிந்தனன்; உயிரின் போகம்
வெறுத்தனன் நமனும்; வேலை உதிரத்தின் வெள்ளம் மீள,
மறித்தன; மறிந்த எங்கும், பிணங்கள் மாமலைகள் மான. (7247)

(போகம்-நுகர்ச்சி/துய்த்தல்; மறிந்த-மடங்கிக் கிடக்கின்ற; வேலை-கடல்; மறித்தல்-தடுத்தல்; பொறுத்தல்-தாங்கிக் கொள்ளுதல்; மான-போல)

அரக்கர்கள் எய்த அம்புகளையும், எறிந்த வேல்படை முதலானவைகளையும் இலக்குவன் அம்புகளை மழையெனப் பொழிந்து, ஒன்று விடாது அறுத்து எறிந்தான்; அவ்வாறு அறுத்ததும் அறுபடாத படைக்

Koviloor Digital Library

கலன்களையும், அம்புகளையும் தன் மேனியில் தாங்கிக் கொண்டான்; அளவுக்கதிகமான பிணங்கள் போர்க்களத்தில் படிந்து கிடந்ததால், இயமனும் தான் பிணம் தின்னும் நுகர்ச்சியையே துறந்து வெறுக்கத் தலைப்பட்டான்; பிணங்கள் பெரிய மலைபோலப் போர்க்களத்தில் மடங்கிக் குவிந்து கிடந்ததால் பிணங்களிலிருந்து ஒழுகிய இரத்த வெள்ளம், அருகில் இருந்த கடலில் போய்ச்சேர முடியாமல் போயிற்று. பிணக்குவியல்கள் இரத்த ஆற்றை அணை போலத் தடுத்துக்கொண்டு கிடந்தன.

படைக்கலன்கள் இருவகைப்படும். விடுபடை, எறிபடை எனப்படும். அஸ்திரம் என்றும் சஸ்திரம் என்றும் கூறுவர் வடநூலார். உயிரை உண்ணுதலையே தொழிலாகக் கொண்ட இயமனுக்கும் அது திகட்டி விட்டது என்று நகைச்சுவையாகக் கூறிய பாங்கு நோக்குக. 'எண்ணிழந்த குருதி நதி; இருமருங்கும் கரி, பரி, ஆள் கரைகளாக' என்பது வில்லிபாரதம். பிணம்மலை போலவும், இரத்தம் வெள்ளம் போலவும் போர்க்களத்தில் காட்சியளித்தன என்பதாம்.

149. தலைஎலாம் அற்ற; முற்றும் தாள்எலாம் அற்ற; தோளாம்
மலைஎலாம் அற்ற; பொன்தார் மார்பெலாம் அற்ற; சூலத்து
இலைஎலாம் அற்ற; வீரர் எயிறுஎலாம் அற்ற; கொற்றச்
சிலைஎலாம் அற்ற; கற்ற செருஎலாம் அற்ற, சிந்தி. (7248)

(தாள்-கால்கள்; தார்-மாலை; கொற்றம்-வெற்றி; சிலை-வில்; அற்ற-அழிந்தன; பொன்-அழகு; சிந்துதல்-சிதறிப்போதல்; செரு-போர்த்திறம்)

இலக்குவன் செலுத்திய அம்பின் கூட்டங்களால் அரக்கர்களின் தலையெல்லாம் அற்று வீழ்ந்தன. அவர்கள் கால்கள் எல்லாம் முழுதும் ஒடிந்து வீழ்ந்தன; தோள்கள் என்னும் மலைகள் எல்லாம் பயனற்றுத் தரையில் வீழ்ந்தன; பொன்னாலாகிய அழகிய மாலையணிந்த மார்புகள் எல்லாம் துண்டிக்கப்பட்டு வீழ்ந்தன; அவர்கள் கைகளில் ஏந்தியிருந்த சூலப்படையின் மூன்று பிரிவுகளாகிய இலை நுனிகூட மழுங்கிப்போய் ஒடிந்து கீழே வீழ்ந்தன; அரக்கர்களுடைய கோரப்பற்கள் எல்லாம் உதிர்ந்து விழுந்தன; அவர்களுடைய வெற்றிபொருந்திய விற்படை எல்லாம் முறிந்து வீழ்ந்தன. அவன் அம்பு மழைக்கு அஞ்சிப் புறமுதுகிட்டுச் சிதறி ஓடியதனால், அவர்கள் கற்றறிந்த போர்த்திறனெல்லாம் பயனற்றுப் போயின.

இலக்குவன் செலுத்திய அம்பின் விசையால், அரக்கர்களுடைய தலை, கால், தோள், மார்பு, பற்கள் முதலியன அழிந்து போனதோடு அவர்கள் கைக்கொண்டிருந்த சூலாயுதம், விற்படை முதலியவற்றோடு, அவர்கள் கற்ற கல்வியும் அற்றுப்போனது? என்பதாம். மற்றவையெல்லாம் அற்றுப்போனது சரி. கற்ற கல்வி எவ்வாறு அற்றுப்போனது, 'கற்க கசடறக்

Koviloor Digital Library

கற்க, கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக' என்பது குறள். இவர்கள் போர்க்களத்தில் எதிர்த்து நின்று போரிடாமல், தான் கற்ற கல்விவழி நில்லாது, அஞ்சிப் புறமுதுகிட்டு ஓடிப்போனார்கள் அல்லவா? எனவே அவர்கள் கற்ற போர்க்கல்வியும் பயனற்று அழிந்துபோயிற்று என்பதாம். இப்பாடல் சொற் பொருட்பின் வருநிலையணியின் பாற்படும். வீரர் என்ற சொல்லை எல்லா இடத்திலும் சேர்த்துப் பொருள்கொள்ள வேண்டும்.

150. தேர்எலாம் துமிந்த; மாவின் திறம் எலாம் துமிந்த; செங்கண்
கார்எலாம் துமிந்த; வீரர்கழல் எலாம் துமிந்த; கண்டத்
தார்எலாம் துமிந்த; நின்ற தனுஎலாம் துமிந்த; தம்தம்
போர்எலாம் துமிந்த; கொண்ட புகழ்எலாம் துமிந்து போய. (7249)

(துமிந்த-துண்டமாயின; மா-குதிரை; திறம்-வகை; கார்-மேகம்/ யானை; கண்டம்-கழுத்து; தார்-மாலை; தனு-விற்படை; போர்-போர்த் திறமை)

இலக்குவன் செலுத்திய அம்புக்கூட்டங்களின் விசையால், அரக்கர் களின் தேர்ப்படை, பலவகைப்பட்ட குதிரைகள், சிவந்த கண்களை யுடைய கரிய மேகம் போன்ற யானைப்படை, அரக்கர், காலாட் படை யினரின் வீரக்கழல்கள், கழுத்தில் அணிந்திருந்த மாலைகள், அவர்கள் கைகளில் தாங்கியிருந்த விற்படைகள்; எல்லாம் அழிந்து பட்டன; மேலும் அவர்கள் இதுகாறும் ஈட்டி வைத்திருந்த போர்த் திறமையும், புகழும் அழிந்துபோயின.

அரக்கர்களின் தேர், குதிரை, யானை, காலாட்படை ஆகிய நால்வகைப் படைகளின் அழிவுபற்றிப் பேசப்பட்டது. சென்ற பாடலில் 'அற்ற' என்ற சொல் அடுத்தடுத்துப் பயின்று வந்தது போல இந்தப் பாடலில் துமிந்த என்ற சொல் அடுத்தடுத்துப் பயின்று வந்திருக்கிறது. இப்பாடலும் சொற்பொருட்பின் வருநிலையணியின் பாற்படும். 'கார்' என்பது உவம ஆகு பெயராய், கரிய நிறம் கொண்ட யானையைக் குறித்து நின்றது; 'கழல்' என்பது கருவி ஆகுபெயராய் காலாட்படையினரைக் குறித்து நின்றது. 'தார்' என்பது போர்வீரர்கள் அணியக்கூடிய தும்பை வஞ்சி முதலிய மாலைகளைக் குறித்து நின்றது; தேர், குதிரை, யானை, காலாள், வில் என்ற உருவமுடைய பொருள் அழிந்தன என்று கூறிய கவிஞன், போர்த்திறமை, புகழ்போன்ற அருவப்பொருள்களும் அழிந்துபோயின என்று கூறிய திறம் நோக்குக. 'புகழ்எலாம் துமிந்த' என்றதனால் 'பழி' வந்து சேர்ந்தது என்பது மறைபொருள்.

151. அரவு இயல் தறுகண் வன்தாள் ஆள்விழ, ஆள்மேல் வீழ்ந்த
புரவி மேல் பூட்கை விழ்ந்த; பூட்கைமேல் பொலன் தேர் வீழ்ந்த;
நிரவிய தேரின் மேன்மேல் நெடுந்தலை கிடந்த; நெய்த்தோர்
விரவிய களத்துள் எங்கும் வெள்ளிடை அரிது வீழ. (7250)

Koviloor Digital Library

(அரவு-பாம்பு; தறுகண்-அஞ்சாமை; வன்-வலிய; தாள்-கால்கள்; ஆள்-காலாட்படையினர்; புரவி-குதிரைகள்; பூட்கை-யானைகள்; பொலன்-அழகிய; நிரவிய-வரிசையாக; நெய்த்தோர்-இரத்தம்; விரவுதல்-கலந்திருத்தல்; வெள்ளிடை-வெற்றிடம்)

இலக்குவன் செலுத்திய அம்புகளின் விசையால் பாம்பினைப் போன்று சீற்றமும், அஞ்சாமையும், வலிய கால்களும் கொண்ட காலாட்படையின் அரக்கர்கள் சாய்ந்து கீழே வீழ்ந்தனர். அவர்கள் மேல் குதிரைப்படைகள் வீழ்ந்தன; அந்தக் குதிரைப்படைகளின் மேல் பூண்கள் அணிந்த துதிக்கைகளையுடைய யானைகள் விழுந்தன; யானைகளின் மேல் அழகிய தேர்கள் வீழ்ந்தன; வரிசையாக வீழ்ந்த தேர்களின் மேல், மேலும் மேலும் அரக்கர்களின் நீண்ட தலைகள் கிடக்கலாயின. போர்க்களத்தில் எங்கும், இரத்தம் நிறைந்து கலந்து இனி வேறொன்றும் வீழ்தற்கு இடம் இல்லாது, வெற்றிடமே இல்லாது போயிற்று.

போர்க்களம் எங்கும் காலாட்படை வீரர்களின் தலைகளும், குதிரை, யானை, தேர் முதலியனவும் கலந்து விழுந்து கிடந்ததால், இனி வேறொன்றும் வீழ்வதற்கு வெற்றிடமே இல்லாது போயிற்று என்பதாம். போர்க்களத்தைப் படம்பிடித்துக் காட்டும் கவிஞனின் சொல்லாட்சி நோக்குக. பாம்பை நாம் அடித்தால், அது மேலும் மேலும் சீறிப்பாயும் என்ற செய்தியை, 'அரவு இயல் தறுகண்' என்ற அழகிய சொற்றொடரால் குறித்த நயம் நோக்குக. பூண்கள் அணியப்பெற்ற துதிக்கைகளை உடையதால் யானைக்குப் பூட்கை என்பது காரணப்பெயர். 'நெய்த்தோர்' என்பது இரத்தத்தைக் குறிக்கும் ஒரு புதுச்சொல். 'எறிகோல் அஞ்சா அரவின் அன்ன சிறுவர் மள்ளரும் உளரே' என்பது புறநானூறு. 'நெய்த்தோர் சொரிந்து எங்கும்' என்பதும், 'நெய்த்தோர் பிணமாலை' என்பதும் சீவகசிந்தாமணி. 'வெள்ளிடை' என்பதைப் 'பொய்யிடம்' என்றும் கூறுவதுண்டு.

152. கடுப்பின்கண், அமரரேயும், கார்முகத்து அம்பு கையால்
தொடுக்கின்றான், துரக்கின்றான்' என்று உணர்ந்திலர்; துரந்த வாளி
இடுக்கு ஒன்றும் காணார்; காண்பது, எய்த கோல் நொய்தின் எய்திப்
படுக்கின்ற பிணத்தின் பம்மல் குப்பையின் பரப்பே; பல்கால். (7251)

(கடுப்பு-விரைவு; கண்-இடம்; கார்முகம்-வில்; துரத்தல்-விடுத்தல்; இடுக்குதல்-கவ்வுதல்/பற்றுதல்; கோல்-அம்பு; நொய்தின்-எளிதில்/விரைவில்; படுத்தல்-வீழ்த்துதல்; பம்மல்-நெருக்கம்/அடர்த்தி; குப்பை-குவியல்; பல்கால்-பலமுறை)

இலக்குவன் விரைந்து அம்பு செலுத்தும் தன்மையை இமையா நாட்டமுடைய தேவர்கள்கூட, இவன் வில்லில் அம்பைப் பொருத்துகிறானா? கைகளால் அதைப் பூட்டுகிறானா? அதை எப்படி விடுக்கின்றான்? என்ற அறியக்கூட இயலாதவர்களாகத் திகைப்புற்று நின்றனர்; அவன்

Koviloor Digital Library

செலுத்திய அம்புகள் பகைவரைச் சென்று பற்றியதையும் கூடக் காணதவரானார்கள். அவர்கள் கண்டதெல்லாம், அவன் செலுத்திய அம்பு பலமுறை விரைவாகவும், எளிதாகவும் பகைவரைச் சென்றடைந்து அவர்களை வீழ்த்திய பிறகு அங்கு கிடந்த பிணத்தின் அடர்த்தியாக நெருங்கியுள்ள பிணக்குவியலைத்தான் பார்த்தனர்.

'அமரரேயும்' என்ற இடத்து உம்மை உயர்வு சிறப்பு. காரணம் தேவர்கள் இமைக்காத விழிகளை உடையவர்கள். அவர்களால்கூட அவன் அம்பு செலுத்தும் விரைவினைக் காணமுடியவில்லை என்பதால் என்க. இங்கே முன்பு இராமபிரான் மிதிலையில் நிகழ்த்திய நிகழ்ச்சி நமக்கு நினைவுக்கு வரவேண்டும். 'எடுத்தது கண்டார், இற்றது கேட்டார்' என்பது பாலகாண்டம் கார்முகப்படலம். இதுபோல் பின்னாலும், 'வரிசிலை நாணில் கோத்து வாங்குதல், விடுதல் ஒன்றும் தெரிகிலர் அமரரேயும்' என்று கும்பகருணன் வதைப்படலம் கூறும்.

153. கொற்றவாள், கொலைவேல், சூலம், கொடுஞ்சிலை, முதல ஆய
வெற்றி வெம்படைகள் யாவும், வெந்தொழில் அரக்கர் மேற்கொண்டு
உற்றன; கூற்றும் அஞ்ச ஒளிர்வன; ஒன்று நூறாய்
அற்றன அன்றி, ஒன்றும் அறாதன இல்லை அன்றே! (7252)

(உற்றன-கைக்கொண்டன; கூற்று-இயமன்; ஒளிர்தல்-சிறந்து விளங்குதல்; கொற்றம்-வெற்றி; கொடுமை-வளைவு; படை-படைக் கருவிகள்; அற்றன-துண்டங்கள் ஆதல்)

கொடிய கொலைத்தொழிலையே தனது வாழ்க்கை நெறியாகக் கொண்ட அரக்கர்கள் கைக்கொண்டுள்ளனவும், சிறந்து விளங்குவனவும், இயமனும் அச்சம் கொள்வதற்குரியனவுமான, வெற்றியும் ஒளியும் பொருந்திய வாட்படைகள், கொல்லுதலைச் செய்யும் வேற்படை, சூலாயுதம், வளைந்த விற்படை, இன்னும் மற்ற படைக்கருவிகள் எல்லாம், இலக்குவன் செலுத்திய அம்பின் தொகுதியால் ஒன்று பலவாக இற்று ஒடிந்து விழுந்தனவேயன்றி, அவற்றால் இற்று ஒடியாதன என்று ஒரு படைக்கருவியும் இருக்கவில்லை.

'முதலவாய' என்பது மேலும் அவர்கள் கைக்கொண்டுள்ள படைக் கலன்களைக் குறிக்கும் என்க. 'நூறு' என்பது எண்ணுப்பொருளில் வாராது. பல என்னும் பொருளில் வந்தது.

154. குன்று அன யானை, மானக்குரகதம், கொடித்தேர், கோப
வன்திறல் ஆளி, சீயம், மற்றைய பிறவும், முற்றும்
சென்றன எல்லை இல்லை; திரிந்தில; சிறிது போதும்
நின்றன இல்லை, எல்லாம் கிடந்தன, நெளிந்து, பார்மேல். (7253)

Koviloor Digital Library

(குன்று-மலை; குரகதம்-குதிரை; சீயம்-சிங்கம்; போது.நேரம்; பார்-தரை; மானம்-பெருமிதம்)

மலைபோன்ற உருவத்தாற் பெரிய யானைகளும், உணர்ச்சியால் பெருமிதம் கொண்ட குதிரைகளும், அழகிய கொடிகள் கட்டப்பட்ட தேர்களும், வெகுளியும், வலிமையும், ஆற்றலும் கொண்ட ஆளி, சிங்கம் போன்ற மற்ற விலங்குகள், பிராணிகள் எல்லாமும் அளவற்ற அளவின தாகப் போர்க்களத்திற்குச் சென்றன. அவைகளுக்கு அளவே இல்லை. ஆனால் இவைகள் எல்லாம் அப்போர்க்களத்தில் சிறிது நேரம்கூடத் திரியவோ, நிற்கவோ முடியவில்லை; எல்லாமும் இலக்குவன் அம்புகளுக்கு இலக்காகிப் போர்க்களத்தில் தரையில் மடிந்து வீழ்ந்தன; மடியாதன, புழுவினைப் போல நெளிந்து கொண்டு கிடந்தன.

நெளிதல் என்பது குற்றுயிராய்த் தரையில் கிடந்து புழுவைப் போலத் துடிதுடித்தலைக் குறிக்கும்.

155. சாய்ந்தது நிருதர் தானை; தமர்தலை இடறித் தள்ளுற்று
ஓய்ந்தது; ஒழிந்தது ஓடி உலந்ததுமாக, அன்றே,
வேய்ந்தது வாகை, வீரற்கு இளையவன் வரி வில், வெம்பிக்
காய்ந்தது, அவ்விலங்கை வேந்தன் மனம் எனும் காலச் செந்தீ. (7254)

(சாய்தல்-தோற்றுப் பின்னிடுதல்; தமர்-உறவினர்/சுற்றத்தார்; தள்ளுதல்-இடறிக்கொண்டு செல்லுதல்; உலத்தல்-அழித்தல்; அன்றே-அப்பொழுதே; வேய்தல்-சூடுதல்; வாகை-வெற்றிமாலை; காலம்-ஊழிக்காலம்; காய்தல்-கொதித்தல்)

இலக்குவன் செலுத்திய அம்புகளுக்குத் தாங்க மாட்டாமல், அரக்கர் சேனை தோற்றுப் புறமுதுகு காட்டி ஓடியது. அவ்வாறு ஓடும் பொழுதே, முன்னரே தம் உறவினர்கள் மடிந்து போர்க்களத்தில் கிடக்கும் அவர்கள் தலையை இடறித் தள்ளிக்கொண்டே ஓடினர்; அவ்வாறு ஓடமுடியாத சில அரக்கர்கள் அங்கேயே மடிந்து போயினர்; எனவே வீரனான இராம பிரானின் தம்பியாகிய இலக்குவனின் கட்டமைந்த வில், அப்பொழுதே வெற்றி மாலை சூடிக்கொண்டது. ஆனால் அந்த இலங்கை அரசனாகிய இராவணனது உள்ளம் என்னும் ஊழிக்கால நெருப்பு, வெதும்பிக் கொதித்துக் கொண்டிருக்கிறது.

'காலச் செந்தீ' என்பது வடவைக் கனலைக் குறிக்கும். ஊழிக்காலச் செந்தீ எவ்வாறு உலகை அழிக்குமோ, அதுபோல அவ்விலங்கை வேந்தன் மனம் எனும் காலச்செந்தீ இவ்வுலகை அழிக்கும் என்பது மறைபொருள். 'வென்றது வாகையாம்' என்பது புறப்பொருள் வெண்பாமாலை. அரக்கர்சேனை இலக்குவன் அம்புகளைத் தாங்கமாட்டாது ஓய்ந்தும், உலந்தும், சாய்ந்தும் போயின என்று கூறியதன் நயம் நோக்குக.

Koviloor Digital Library

156. இலக்குவனை நெருங்கி இராவணன் செல்லுதல்

காற்று உறழ் கலினமான் தேர் கடிதினின் கடாவி, கண்ணுற்று,
ஏற்றனன், இலங்கை வேந்தன்; எரிவிழித்து இராமன் தம்பி,
கூற்றுமால் கொண்டதென்ன, கொல்கின்றான், குறுகச் சென்றான்;
சீற்றமும், தானும் நின்றான்; பெயர்ந்திலன் சிறிதும் பாதம். (7255)

(உறழ்-போல; கலினம்-கடிவாளம்; மான்-குதிரைகள்; கடிதினின்-விரைந்து; கடாவுதல்-செலுத்துதல்; ஏற்றல்-எதிர்த்தல்; எரி-நெருப்பு; கூற்று-இயமன்; மால்-பித்து; குறுகுதல்-நெருங்குதல்)

காற்றைப் போன்று விரைவாக ஓடும் கடிவாளம் பொருந்திய குதிரைகள் பூட்டப்பெற்ற தேரினை விரைவாகச் செலுத்தி, இலக்குவனை நேரே நோக்கி, இலங்கையரசனாகிய இராவணன் எதிர்த்து நின்றான். இராமபிரானுடைய தம்பியாகிய இலக்குவன், இயமனுக்குப் பைத்தியம் பிடித்தாற்போன்று அரக்கர் சேனையைக் கொன்றுகுவிப்பதைப் பார்த்து இலக்குவனை நெருங்கிச் சென்றான். எனினும் இலக்குவன் சற்றும் தளராது, ஒரு அடிகூடப் பின்வாங்காது, மிக்க சினமும், தானும் மட்டும் தனியாக நின்றான்.

தேர்ப்படையின் விரைவுக்குக் காற்றின் விரைவுப் போக்கு உவமை. மற்ற மான்களில் இருந்து பிரித்தறியப்பட வேண்டுமென்பதால் 'கலினமான்' என்றார். கடிவாளம் பூட்டியது மானாக இருக்கமுடியாது. எனவே இங்கே குதிரை என்ற பொருளையும் இந்தச் சொல்லால் பெறவைத்தார் என்க. இயல்பாகவே உயிரை உண்ணும் இயமனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டால் எவ்வாறு கொலைத்தொழில் புரிவானோ, அதுபோல இலக்குவன் அரக்கர்படையை அழித்தான் என்பதாம்.

157. "காக்கின்ற என் நெடுங்காவலின் வலி நீக்கிய கள்வா!
போக்கு இன்று உனக்கு அரிதால்;" எனப் புகன்றான்; புகை உயிர்ப்பான்,
கோக்கின்றன, தொடுக்கின்றன, கொலை அம்புகள், தலையோடு
ஈர்க்கின்றன, கனல் ஒப்பன, எய்தான்; இகல் செய்தான். (7256)

(கள்ளம்-வஞ்சம்; போக்கு-போதல்; உயிர்ப்பு-பெருமூச்சு; கோக்குதல்-பூட்டுதல்; ஈர்த்தல்-இழுத்தல்/வெட்டுதல்; கனல்-நெருப்பு; இகல்-போர்)

இலக்குவன் இராவணனை நோக்கி, ''நான் சீதாதேவியைக் காவல் காத்துக் கொண்டு இருக்கும்போது என்னுடைய அந்தப் பெருமைவாய்ந்த காவல் தொழிலுக்கே இழுக்கு ஏற்படும்படி, என்னை ஏமாற்றி, அவளை வஞ்சனையால் கவர்ந்து சென்ற நயவஞ்சகனே! அப்பொழுது தப்பித்துப் போனதுபோல, இப்போது நீ தப்பித்துப் போவது என்பது முடியாத காரியம்'' என்று கூறி சினம் கொண்டு புகையுடன் கூடிய பெருமூச்சு

Koviloor Digital Library

விட்டவனாய், பகைவர்களின் தலையைச் சீவிச் செல்லுகின்ற தன்மை யுடையதும் நெருப்பை நிகர்த்த கொடியனவுமான கொலைத்தொழில் புரியும் அம்புகளைப் பூட்டியும், தொடுத்தும், இராவணனுடன் நேருக்கு நேர் போர்செய்யத் தொடங்கினான்.

முன்பு சீதாதேவியைத் தான் காவல் காத்துக் கொண்டிருந்தபோது, வஞ்சனையால் மானை அனுப்பி, இலக்குவனை அங்கிருந்து அகலுமாறு செய்து, சீதாதேவியைக் கவர்ந்து கொண்டு சென்றதுபோல், இன்று தப்பித்துப் போக முடியாது என்று கூறிக்கொண்டே தன் அம்புகளைப் பூட்டித் தொடுத்துப் போர்செய்தான் என்பதாம். அம்புகளின் தன்மை பேசப்பட்டுள்ளது.

158. ''எய்தான் சரம் எய்தாவகை இற்றீக'' என, இடையே,
வைதாலென ஐதாயின வடிவாளியின் அறுத்தான்;
''ஐது ஆதலின் அறுத்தாய்; இனி அறுப்பாய்!'' என அழிகார்
பெய்தால்எனச் சரமாரிகள் சொரிந்தான், துயில் பிரிந்தான். (7257)

(வைதல்-சபித்தல்; துயில்-உறக்கம்; ஐது-சிறியவை; கார்-மழை மேகம்; சரம்-அம்பு; வைது-கூர்மையுடையது; அழி-அழிக்கின்ற)

அவ்வாறு அம்புகளை எய்து போர்செய்தவனான இலக்குவனது அம்புகள்தன்மீது படாதபடி, இடையிலே யாரோ 'இவன்மீது படாது போ' என்று சாபம் கொடுத்ததுபோல, அவன் மீது படுவதற்கு முன்பே, அவற்றைக் கூர்மையாக வடிக்கப்பெற்ற தன் அம்புகளால் இராவணன் அறுத்து ஒழித்தான். இதனைக்கண்ட, உறக்கத்தைத் துறந்த உறங்கா வில்லியான இலக்குவன், இராவணனை நோக்கி 'நான் முன்பு செலுத்திய அம்புகள் சிறியவை, மெலிதானவை எனவே அறுத்துவிட்டாய்; இப்போது அறுத்துப்பார் பார்க்கலாம்'' என்றுகூறி, ஊழி இறுதிக் காலத்தில் உலகை அழிக்கும் மேகம் பொழியும் மழைபோல அம்புகளைப் பொழிந்தான் இலக்குவன்.

இந்தப் பாடலில் இருந்து கவிஞன் போர்க்குரிய சந்தங்களைப் பயன் படுத்தியிருப்பதைக் காணலாம். அவற்றில் வீரவார்த்தைகளும், வீரச் செயல்களும் சினத்தின் வெளிப்பாடுகளும் குறிக்கப்பட்டிருப்பதையும் கண்டு சுவைக்கலாம். 'எய்தான் சரம் எய்தாவகை' என்பது முரண்தொடை. 'ஐது' என்ற சொல் நமக்குப் புதிது. சிறியவை, மெலிவானவை என்ற பொருளைத்தரும். இலக்குவன் உறங்காவில்லி என்பதைக் கம்பன் காப்பியம் முழுவதும் பேசியிருப்பதுபோல் இங்கும் குறிக்கிறான் என்பதை உணர்க. ''உறக்கம் என்பதனை ஓட முனிந்தான்'' என்றும் ''மனையின் வாழ்வும் உறக்கமும் மாற்றினான்' என்றும் 'இமைப்பிலன் நயனம்' என்று கூறியிருப்பதையும் நோக்குக.

Koviloor Digital Library

159. ஆம் குஞ்சரம் அனையான் விடும் அயில் வாளிகள் அவைதாம்
வீங்கும் சரம் பருவத்து இழிமழை போல்வன விலக்கா,
தூங்கும் சரநெடும் புட்டிலின், சுடர்வேலவற்கு இளையான்,
வாங்கும் சரம் வாங்காவகை அறுத்தான், அறம் மறுத்தான். (7258)

(குஞ்சரம்-யானை; சரற்பருவம்-கூதிர்காலம்; இழிதல்-பொழிதல்; அயில்-கூரிய; விலக்கா-விலக்கி/தடுத்து; சுடர்-ஒளி; இளையான்-இளையவன்/தம்பி; தூங்குதல்-தொங்குதல்; புட்டில்-அம்பறாத்தூணி; வாங்குதல்-எடுத்தல்; ஆம்-வலிமை)

வலிமை பொருந்திய யானை போன்றவனாகிய இலக்குவன் கூர்மை யானதும், நல்ல கூதிர்காலத்தே பொழியும் மழையைப் போல்வனவுமான அம்புகளை இராவணன்மேல் செலுத்தவும், அவற்றை அறச்செயல்கள் செய்வதில் தனக்கு உடன்பாடு இல்லை என்று அவற்றை மறுத்து, மறச்செயல்களையே புரிந்து வருபவனான இராவணன், தடுத்து, மேலும் ஒளிவீசுகின்ற வேற்படையை உடைய இராமபிரானுக்குத் தம்பியாகிய இலக்குவன் முதுகில் தொங்கிக் கொண்டிருக்கும் நீண்ட அம்பறாத் தூணியிலிருந்து அம்புகளை எடுக்க முடியாதபடி, அந்த அம்பறாத் தூணியையே அறுத்து எறிந்துவிட்டான்.

'ஆம்' என்ற சொல் வலிமை என்ற பொருளைத் தந்து நின்றது. 'சரற்பருவம்' என்பது சரம் பருவம் என்றாயிற்று. இது ஐப்பசி, கார்த்திகை யாகிய கூதிர்ப்பருவ மாதங்களைக் குறிக்கும். இராமபிரான்விற்படையைத் தாங்கிக் கொண்டிருப்பதாகத்தான் இதுவரை நாம் அறிந்து வந்திருக் கிறோம். கவிஞன் இந்த ஒரு பாடலில்தான் இராமபிரான் 'சுடர்வேலவன் வேற்படையையும்' கொண்டிருந்தான் எனக்கூறுகிறான். இது வியப்புக்குரிய ஒரு செய்தி. எனினும் தசரதனைக் 'காலவேலான்' என முன்னர்க் கூறியிருப்பதை இங்கு நினைவுக்குக் கொண்டுவருதல் தகும். சரற்காலத்தே இடைவிடாது மழைபொழிவதுபோல, இலக்குவனும் இடைவிடாது அம்புமழை பொழிந்தான் என்பதாம். தன்னை நோக்கி வருகின்ற அம்பின் மழையைத் தடுக்க இயலாத இராவணன், அதன் உற்பத்தி ஸ்தானமாகிய அம்பறாப் புட்டிலையே அறுத்தான் என்றது ஒரு நயம். ''அறம் மறுத்தான்'' என்பது 'அறம்புகாது இந்த அணி மதிற்கிடக்கை' என்ற சுந்தரகாண்ட அடிகளை நினைவுபடுத்துவதை உணர்க.

160. தளர்ச்சி நீங்கி அனுமன் வருதல்

அப்போதையின் அயர்வு ஆறிய அனுமன், அழல் விழியா,
''பொய்ப்போர் சில புரியேல் இனி''; என, வந்து இடை புகுந்தான்;
கைப்போதகம் என, முந்து, அவன் கடுந்தேர் எதிர் நடந்தான்,
'இப்போர் ஒழி; பின்போர் உள; இவைகேள்'' என இசைத்தான்.
(7259)

Koviloor Digital Library

(அயர்வு-இளைப்பு/சோர்வு/தளர்ச்சி; அழல்-நெருப்புப்பொறி; போதகம்-யானை; கடுமை-விரைவுமாம்; இசைத்தல்-சொல்லுதல்; ஆறுதல்-தணிதல்)

முன்பு தளர்ச்சியுற்றுப் போரைத் தவிர்த்திருந்த அனுமன், இப்போது அந்தச் சோர்வு தணிந்து, கண்களில் நெருப்புப்பொறி பறக்கும்படி இராவணனை நோக்கி, 'பொய்யான போர் செய்வதை விட்டு விடு' என்று கூறிக்கொண்டே போர்க்களத்தின் நடுவே புகுந்தான். துதிக்கையை யுடைய யானையைப் போன்று, இராவணன் விரைந்து செல்லும் தேருக்கு எதிரில் வந்து நின்றுகொண்டு, 'இந்தப் போரை இப்போதைக்குத் தவிர்ப்பாயாக, இன்னும் நாம் செய்யவேண்டிய போர் இருக்கிறது; நான் கூறுவதைக் கேட்பாயாக'' என்று வீரவுரை கூறத்தொடங்கினான்.

முன்பு தளர்வால் ஒதுங்கியிருந்த அனுமன், புத்துணர்ச்சி பெற்று இராவணன் எதிரே வந்து இவ்வாறு கூறினான் என்பதாம். முழு ஆற்றலையும் காட்டிச் செய்யாத போர் 'பொய்ப்போர்' எனப்பட்டது. முன்பு 'பொய்த்துயில்' என்று கூறியதையும் இங்கு நினைவுகூர்க. போதகம் என்பது பத்து ஆண்டுகள் நிறைந்த இளம்யானைக் கன்று என்று பிங்கல நிகண்டு குறிப்பிடுகிறது. இங்கே அது புத்துணர்வு ததும்பும் அனுமனுக்கு உவமை. இருவரின் ஆற்றலையும் காட்டிச் செய்யவேண்டிய உண்மைப் போர் பின்னால் நிகழ இருக்கிறது என்பதைக் கற்போர்க்குக் குறிப்பாய்க் காட்டுகிறான் கவிஞன் எனக்கொள்க.

161. ''வென்றாய் உலகு ஒரு மூன்றையும், மெலியா நெடு வலியால்;
தின்றாய் செறிகழல் இந்திரன் இசையை; திசை திரித்தாய்;
என்றாலும் இன்று அழிவு உன்வயின் எய்தும்'' என இசையா,
நின்றான் அவன் எதிரே, உலகு அளந்தான் என நிமிர்ந்தான். (7260)

(மெலியா-இளைக்காத/தளராத; செறி-நெருங்கிய; இசை-புகழ்; தின்னுதல்-அழித்தல்/விழுங்குதல்; திரித்தல்-வேறுபடுத்துதல்; உன்வயின்-உன்னிடத்து; திசை-திசையானைகள்; இசையா-இசைத்து/மொழிந்து; இன்று-இப்போது)

அனுமன் இராவணனை நோக்கி, ''தளராத உன் பேராற்றலால் ஒப்பற்ற மூன்று உலகங்களையும் உன் ஆட்சிக்கு உட்படுத்தி வெற்றி கொண்டாய்; நெருங்கிய வீரக்கழல் அணிந்த இந்திரனின் புகழையும் உன் வெற்றியால் விழுங்கிவிட்டாய்; திக்குகளில் எல்லாம் சென்று திக்கு யானைகளையும் அடக்கி வெற்றிகொண்டு அவற்றை வேறுபடுத்தினாய். இத்தகைய பெருமைகளையெல்லாம் நீ கொண்டிருந்தாலும், இப்போது உன் அழிவு உன்னிடத்து வந்து சேரும்'' என்று கூறிக்கொண்டே, இராவணன் எதிரே, முன்பு திருமால் திரிவிக்கிரம அவதாரம் எடுத்தபோது நிமிர்ந்து உலகளந்ததைப் போலப் பேருருக் கொண்டு நின்றான் அனுமன்.

Koviloor Digital Library

'தின்றாய்' என்பது அழித்தாய் என்ற பொருளைத் தந்தாலும், இங்கே அரக்கர்களுக்கு உரிய பண்பை எடுத்துக்கூற வேண்டி, விழுங்கினாய் என்று பொருள் கொள்ளப்பட்டது. உண்டற்கு அல்லாப் பொருளையும் உண்டது போலக்கூறுதல் மரபு என்பது தொல்காப்பியம். இந்த உலகளந்த வரலாற்று நிகழ்ச்சியும் கம்பனால் எல்லாக் காண்டங்களிலும் பேசப்பட்டிருப்பதையும் காப்பியப்போக்கில் காணலாம். 'திசைதிரித்தாய்' என்பது, திசை யானைகளை அடக்கி, அவற்றின் கொம்புளை ஒடித்து அவற்றை வெற்றி கொண்டதைக் குறிக்கும். நீ மூன்று உலகங்களையும், இந்திரனையும், திக்கு யானைகளையும் முன்பு வென்று வெற்றிப் பெருமிதம் கொண்டாய். பிறர்க்கின்னா முற்பகல் செய்தாய்; உனக்கு இன்னா பிற்பகல் தானே எய்தும் என்றும் அனுமன் எச்சரித்தான் என்பதாம்.

162. எடுத்தான் வலத்தடக் கையினை; இதுபோய், உலகுஎலாம்
அடுத்தான் குறள் அளந்தான் திருவடியின் வரவு அன்னான்,
மடுத்து ஆங்கு உற வளர்ந்தாலென வளர்கின்றவன் உருவம்
கடுத்தான் என, கொடியாற்கு எதிர், 'காண்பாய்' எனக் காட்டா. (7261)

(தட-பெரிய; எடுத்தல்-தூக்குதல்; மடுத்து-கலங்கச்செய்து; கடு-நஞ்சு; காட்டா-காட்டி) (குளகப்பாடல்)

அவ்வாறு பேருருக் கொண்டு நின்ற அனுமன் தனது பெரிய, வலிய, வலக்கையினை எடுத்து உயரே தூக்கினான்; முன்பு திரிவிக்கிரம அவதாரத்தில் திருமாலின் திருவடி பிரமலோகத்தை அடைந்தது போல, இப்போது அனுமனின் திருக்கைகளும் இவ்வுலகங்களிலெல்லாம் சென்று, பிரமலோகத்தை அடைந்தன. அவ்வாறு வளர்ந்த அப் பேருருவை, நஞ்சுதான் என்று சொல்லத்தக்க கொடியவனான அரக்கன் இராவணன், எதிரே நின்று 'இப்பேருருவைக் காண்பாயாக' எனக் காட்டி - பாடல் தொடர்கிறது.

'எடுத்தல்' என்பது உயரத் தூக்குதலைக் குறிக்கும். இந்தப் பாடல் இடைச்செருகல் என்பது பொருந்தும். காரணம் 'கூறியது கூறல்' போலத் தோன்றுகிறது. முன்பாடலில் 'அவன் எதிரே உலகு அளந்தான் என நிமிர்ந்தான்' என இரத்தினச் சுருக்கமாகக் கூறிய பின்னர், அதே கருத்தை இங்கே கூறியிருப்பது பற்றி அறிஞர்கள் கருத்துத் தெரிவிக்க வேண்டும். இங்கேயும் எல்லாப் பதிப்புகளிலும் பாடவேறுபாடு காணக்கிடைக்கிறது. பேருருவைக் காட்டிய பிறகு 'இதைப்பார்' எனச் சொல்லுவது அனுமன் போன்ற பெருவீரனுக்கு உகந்ததா என்பதையும் அறிஞர்கள் ஆய்ந்து கூறவேண்டும். எனினும் அனுமன் பேருருக் கொள்ளும் இடங்களி லெல்லாம் கவிஞன் திருமாலின் உலகளந்த திருவடிகளையே உவமையாகக் கூறுவதையும் கருத வேண்டும். முன்பு இராமபிரான் வினவிய போதும், சீதாதேவி வினவிய போதும், பேருருக் கொண்டான். இங்கு

Koviloor Digital Library

யாரும் கேட்காமலேயே அனுமன் பேருருக் கொள்ள வேண்டிய அவசியம் என்ன என்பதையும் விளக்க வேண்டும்.

163. "வில் ஆயுதம் முதல் ஆகிய வயவெம் படை மிடலோடு
எல்லாம் இடை பயின்றாய்; புயம் நால் ஐந்தினோடு இயைந்தாய்;
வல்லாய்; செரு வலியாய்; திறல் மறவோய்! இதன் எதிரே,
நில்லாய்," என நிகழ்த்தா, நெடு நெருப்பாம் என உயிர்ப்பான். (7262)

(வய-வெற்றி; மிடல்-வலிமை; மறவன்-வீரன்; நில்லாய்-நிற்பாய்; உயிர்ப்பு-பெருமூச்சு; நிகழ்த்தா-நிகழ்த்தி/சொல்லி; இடை-இவ்வுலகு)

''வில், வேல் போன்ற வெற்றியையே தரக்கூடிய கொடிய படைக்கலன் களையெல்லாம் கையாளும் திறமையை மிகவும் வலிமையோடு இவ்வுலகில் பயின்றுள்ளாய்; இருபது தோள்களும் பொருந்தியிருக் கிறாய்; நீ மிகவும் வலிமையுடையவன்; போர் செய்வதில் திறமை மிக்கவன்; போர்த்திறன் மிக்க வீரனே! இப்போது போர்செய்யும் எண்ணத் தோடு இந்தக் கைகளின் எதிரே வந்து நிற்பாயாக!'' என்று கூறிக்கொண்டே நீண்ட நெருப்புப் போன்ற வெப்பப் பெருமூச்சு விட்டுக்கொண்டு நின்றான் அனுமன்.

அனுமன் இராவணனைப் புகழ்ந்து பேசுவதை நோக்குக. ''மிடலோடு பயின்றாய்; புயம் நால் ஐந்தினோடு இயைந்தாய்; வல்லாய்; செருவலியாய்; திறல் மறவோய்!'' என்றெல்லாம் புகழ்ந்த பின்னர், ''என் எதிரில் நில் பார்ப்போம்'' என்று அறை கூவுவதையும் நோக்குக. இந்தப் பாடலிலும் பாடவேறுபாடுகள் காணப்படுகின்றன.

164. "நீள் ஆண்மையுடனே எதிர் நின்றாய்; இஃது ஒன்றோ?
வாள் ஆண்மையும், உலகு ஏழினோடு உடனே உடை வலியும்,
தாளாண்மையும், நிகர்ஆரும்இல் தனி ஆண்மையும், இனிநின்
தோளாண்மையும், இசையோடு உடன் துடைப்பேன், ஒரு புடைப்பால்.
(7263)

(நீள்-பெரிய; ஆண்மை-துணிவு; ஒன்றோ-ஒரு பொருளோ; உடனே-ஒருங்கே; தாளாண்மை-முயற்சி; நிகர்-ஒப்பு; இசை-புகழ்; புடைப்பு-குத்து; துடைத்தல்-ஒழித்தல்)

அனுமன் இராவணனை நோக்கி, ''உன்னுடைய பெரிய வீரத்தால் என் எதிரில் நின்று கொண்டு இருக்கிறாய்; இது ஒரு நிலைத்த செயலாகுமோ? உன்னுடைய வாட்படையின் ஆற்றலையும், இவ்வேழு உலகங்களையும் வெற்றி கொண்ட உன்னுடைய பெரிய வலிமையையும், உன்னுடைய இடைவிடாத முயற்சியையும், உனக்கு நிகர் வேறுயாரும் இல்லை என்கின்ற ஒப்பற்ற வல்லமையையும், உனது தோளாற்றலையும்,

Koviloor Digital Library

உன்னுடைய புகழோடு சேர்த்து, இவையனைத்தையும் இப்போது ஒரே குத்தில் அழித்து ஒழித்து விடுகிறேன் பார்!'' என்கிறான் அனுமன்.

'ஆண்மை' என்ற சொல் வீரம், வலிமை, வல்லமை, முயற்சி, பராக்கிரமம் என்ற பல பொருள்களைத் தரும். அனுமன் எதிரே வேறு ஒருவரும் எதிர் நிற்க முடியாது என்பதை 'நீள் ஆண்மையுடன் எதிர் நின்றாய்' என்கிறான். 'இஃது ஒன்றோ' என்பது இது நிலைத்த வீரம் ஆகாது. இவையெல்லாம் இன்னும் சிறிது நேரத்தில் அழியப்போகிறது என்பதைக் குறிக்கும். நீளாண்மை மனவலிமையையும், வாளாண்மை போர்க்கருவிகளைக் கையாளும் திறமையையும், தாளாண்மை உடலால் செய்யப்படும் இடைவிடாத முயற்சியையும், தனியாண்மை தன்னிகரற்ற வீரத்தையும் தோளாண்மை தோள்வலிமையையும் குறிக்கும் என்க. இராவணனுடைய போராற்றலுக்குப் பெருவிளக்கம் இப்பாடல். இத்தோடு உலகு ஏழினோடு ஏழும் உடைவலியும் இசையாகிய புகழையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். இவையெல்லாவற்றையும் ஒரே குத்தில் அழித்தொழிப்பேன் என்று கூறுவதால் அனுமனின் போராண்மை பற்றியும் உய்த்துணரலாம். 'வாளாண்மை' என்பது சிவபெருமான் இராவணனுக்கு அளித்த சந்திரகாசம் என்னும் வாளின் உதவியால் பெற்ற வலிமையைத் தனித்துக் குறிக்கும்.

165. 'பரக்கப் பல உரைத்து என்? படர் கயிலைப் பெருவரைக்கும்,
அரக்குற்று எரி பொறிக்கண் திசைக்கரிக்கும், சிறிது அனுங்கா,
உரக் குப்பையின் உயர்தோள் பல உடையாய்! உரன் உடையாய்!
குரக்குத் தனிக்கரத்தின் புடைப்பொறை ஆற்றுவை கொலாம்?'' (7264)

(பரக்க-விரிவாக; வரை-மலை; அரக்கு-செவ்வரக்கு/சாதிலிங்கம்; பொறி-தீப்பொறி; கரி-யானை; அனுங்கா-கெடாத/வருந்தாத; உரக் குப்பை-வலிமைத்திரள்; புடைப்பு-குத்து; ஆற்றுதல்-தாங்கிக் கொள்ளுதல்; அனுங்குதல்-பின்னடைதலுமாம்; பொறை-பளு/சுமை)

''இனி இதைப்பற்றி விளக்கமாகப் பேசி என்ன பயன் விளையப் போகிறது? பரந்து கிடக்கும் கயிலைப் பெருமலைக்கும், செவ்வரக்கு, சாதிலிங்கம் போன்றவற்றின் தன்மையான சிவந்த நிறத்தைப் பெற்று, தீப்பொறி பறக்கும்படியான கண்களைக் கொண்ட மதம் கொண்ட திக்கு யானைகளுக்கும் சற்றும் பின்வாங்காது வெற்றிகொண்ட, வலிமைத்திறன் கொண்ட உயர்ந்த இருபது தோள்களை உடையவனே! வலிமை உடையவனே! இந்தக் குரங்கினுடைய ஒப்பற்ற ஒரு கையினால் தாக்கப்போகின்ற ஒரு குத்தினைத் தாங்கும் ஆற்றல் உன்னிடம் உள்ளதோ? நீ அதனைத் தாங்கிக் கொள்ளுவாயோ?'' என்று கேட்கிறான் அனுமன்.

இராவணன் கயிலை மலையை எளிதில் பெயர்த்தெடுத்தான் என்பதும், திக்கு யானைகளை வென்று அவற்றின் தந்தங்களைத் தன் மார்பில்

Koviloor Digital Library

பொருத்திக் கொண்டான் என்பதும் காப்பியத்தில் பலமுறை பேசப் பட்டிருப்பதை எண்ணுக. அப்படிப்பட்ட வலிமையான இருபது தோள்களும், இப்போது அனுமனின் ஒரு குத்தினால் வலிமை குன்றி அழியப்போகிறது என்பது குறிப்பு. 'கொல்' என்பது ஐயப்பொருளில் வந்தது. 'கொல்லே ஐயம், அசைநிலை, கூற்றே' என்பது நன்னூல்;

166. அனுமன் – இராவணன் போர் உடன்படிக்கை

''என்தோள் வலி அதனால் எடுத்து யான் எற்றவும், இறவா
நின்றாய் எனின், நீ பின் எனை, நின் கைத்தல நிரையால்,
குன்றே புரை தோளாய்! மிடல்கொடு குத்துதி; குத்தப்
பொன்றேன் எனின், நின்னோடு எதிர் பொருகின்றிலேன்'' என்றான்.
(7265)

(குன்று-மலை; புரை-ஒத்த; எற்றுதல்-தாக்குதல்/குத்துதல்; நிரை-வரிசை; கைத்தலம்-கைகள்; மிடல்-வலிமை; பொன்றுதல்-இறத்தல்; பொருதல்-போர்செய்தல்; எடுத்து-உயர்த்தி)

''மலைபோலும் தோள்களையுடையவனே! என் தோளாற்றலால், நான் என்னுடைய ஒரே ஒரு கையை உயரத் தூக்கி உன்னை ஓங்கிக் குத்துவேன். அவ்வாறு குத்திய பின்னரும், நீ இறவாது உயிரோடு இருந்தாய் என்றால், பின்பு நீ என்னை உன்னுடைய இருபது கைகளின் வரிசையினால், உன் முழு வலிமையையும் பயன்படுத்திக் குத்துவாயாக! அவ்வாறு நீ குத்திய பின்னும் நான் இறவாமல் உயிருடன் இருந்தேன் என்றால், உன்னோடு எதிர்நின்று இனி ஒருபொழுதும் போர்புரிய மாட்டேன்'' என்று வஞ்சினம் கூறுகிறான் அனுமன்.

தன் தோள் வலியின் மீது அனுமனுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு என்பது தெரியவருகிறது. அனுமனுக்கு இருப்பது இரண்டு கரம், இராவணனுக்கோ இருபது கரம். இரண்டுக்கு மேற்பட்ட இருபது கரங்களை உடைய இராவணனைக் கம்பன் 'கைத்தல நிரை' என்பது எண்ணி இன்புறத்தக்க சொல்லாட்சி. இராவணன் அவ்வாறு இருபது கரங்கள் கொண்டு குத்தினாலும் தான் இறக்கமாட்டேன் என்று அனுமன் கூறியதற்குக் காரணம் அவன் சீதாதேவியிடமிருந்தும், தேவர்களிட மிருந்தும், வாங்கிவந்த வரம். 'ஊழியோர் பகலாய் ஓதும் ஆண்டெலாம், உலகம் ஏழும் ஏழும் வீவுற்ற ஞான்றும் இன்றென இருத்தி' என்பது சீதாதேவி தந்த வரம். ஆனால் இராவணனின் ஆயுட்காலம் 'முக்கோடி வாழ்நாள்' என்று வரையறுக்கப்பட்டது என்பதையும் இங்கு நினைவு கூர்தல் தகும். எனவே இராவணன் இறக்கப்போவதும், அனுமன் சிரஞ்சீவியாய் இருக்கப் போவதும் உறுதி'' என்பது இப்பாடலின் மறைபொருள். இராவணன் தோள்களுக்குக் குன்று உவமை.

Koviloor Digital Library

167. இராவணன் அனுமனை வியந்து கூறுதல்

காரின் கரியவன், மாருதி கழற, கடிது உகவா,
"வீரற்கு உரியது; சொற்றனை விறலோய்! ஒரு தனியேன்
நேர் நிற்பவர் உளரோ, பிறர் நீ அல்லவர்? இனி, நின்
பேருக்கு உலகு அளவே; இனி உளவோ பிற?" என்றான். (7266)

(கார்-மேகம்/கருமுகில்; கழற-கூற; கடிது-மிகவும; உகவா-உகந்து/மகிழ்ந்து; விறல்-வெற்றி; சொற்றனை-சொன்னாய்; பேர்-புகழ்)

கரிய மேகத்தினும் கரிய நிறமுடையவனான இராவணன், அனுமன் அவ்வாறு கூறக் கேட்டதும், மிகவும் மகிழ்ந்து 'வெற்றி வீரனே! வீரற்கே உரியதான சொற்களையே சொன்னாய். ஒப்பற்ற ஒருவனாகிய என் எதிரே, தனித்து நிற்பவர் உன்னையல்லால் பிறர் யார் இருக்கிறார்கள்? எனவே உன் புகழின் எல்லைக்கு இந்தஉலகமே எல்லையாகும். இதைவிட உனக்கு வேறு என்ன சிறப்பு வேண்டும்?'' என்று புகழ்ந்து பாராட்டுகிறான் இராவணன்.

'வீரரை யார் வியவாதார்?' என்ற கவிக்கூற்றையும் இங்கு நினைவுகூர்க. இராவணனின் மிக்க கரிய நிறத்தைக் கவிஞன் 'காரிற் கரியவன்' என்று கூறியதை நோக்குக. இராவணன் என்ற பெயரைக் கேட்டாலேயே ஓடி ஒளிபவரும், அவனைப் பார்த்தாலேயே மயங்கி விழுபவரும் நிறைந்த இப்போர்க்களத்தில், அவன் எதிரே அஞ்சாது தைரியமாகவும், தனியாகவும் எதிர்த்து நின்றதனால் அனுமனை இராவணன் இவ்வாறு புகழ்ந்தான் என்க. அனுமனின் புகழின் எல்லைக்கு உலகின் எல்லையே அளவாகும் என்ற சொற்றொடர் நினைந்து பார்க்கத்தக்கது. நீ என்னை எதிர்த்து நின்றதே உனக்குப் பெரிய வெற்றியாகும் என்ற குறிப்புத் தோன்ற 'விறலோய்' என்றான் என்க. இதைவிட வேறு ஒரு வெற்றி உண்டோ? என்றான் என்பதாம். பூமி சிறுகும்படி வளர்ந்த புகழை உடையவன் ஆனான் என்பது 'மண்தேய்த்த புகழினான்' என்ற சிலப்பதிகார வரிகளை நினைவுபடுத்துதல் காண்க.

168. "ஒன்று ஆயுதம் உடையாய் அலை; ஒரு நீ எனது உறவும்
கொன்றாய்; உயர்தேர் மேல் நிமிர், கொடு வெஞ்சிலை கோலி,
வன் தானையினுடன் வந்த என் எதிர் வந்து, நின் வலியால்
நின்றாயொடு நின்றார் இனி நிகரோ? உரை, நெடியோய்! (7267)

(நெடியோய்-உயர்ந்த வடிவுடையவன்/பெருமையுடையவன்; அலை-அல்லை/இல்லை; நிமிர்-வளைந்த; கோலுதல்-வளைத்தல்; வன்-வலிய; தானை-சேனை; நிகர்-ஒப்பு; உரை-சொல்க)

"பேருருக் கொள்ளும் பெருமை உடையவனே! அனும! நீ உன் கையில் ஒரு படைக்கலனும் கொண்டிருக்கவில்லை என்றாலும் வெறும்

Koviloor Digital Library

கையாலேயே முன்பு எனது உறவினர்கள் பலரையும் கொன்றிருக்கிறாய், உயர்ந்த தேரின் மீது ஏறிக்கொண்டு, உயர்ந்த, வளைந்த, கொடுமையான வில்லை நாணேற்றி வளைத்துக்கொண்டு, வலிய சேனையையும் உடன் அழைத்துக்கொண்டு, வந்து நிற்கின்ற என் எதிரே, உன்னுடைய போராற்றலை மட்டுமே துணையாகக் கொண்டு தனியனாக வந்து நிற்கின்ற உன்னோடு இணையாக வைத்துப் பேசத் தகுதியுடையவர்கள் வேறு யாரேனும் இவ்வுலகில் இருக்கிறார்களோ? சொல்வாயாக!'' என்கிறான் இராவணன்.

இராவணன் தேர்மேல் வந்தான்; நிமிர், கொடு, வெஞ்சிலை கோலி வந்தான்; வன்தானையின் உடன் வந்தான். எனினும் அனுமன் ஒன்று ஆயுதம் இலையானான்; எனினும் அவனைத் தன் வலியால் எதிர் நின்றான். எனவே ''நின்றாயோடு நிகரார் இனி உளரோ'' என்று வியந்தான் இராவணன் என்பதாம்.

169. ''முத்தேவர்கள் முதலாயினா்; முழு மூன்று உலகிடையே,
எத்தேவர்கள், எத் தானவர் எதிர்வார் இகல், என்நோ்,
பித்து ஏறினா் அல்லால்?; இடைபேராது, எதிர் 'மாா்பில்
குத்தே' என நின்றாய்; இது கூறும் தரம் அன்றால்'' (7268)

(பித்து-பித்தம்; தானவர்-அசுரர்கள்; இகல்-போர்)

''முழுமையான இந்த மூன்று உலகங்களில் உள்ளவர்களிடையே மூன்று முதல் தேவர்கள் என்று கூறப்படுகின்ற, அரி, அயன், அரன் முதலானோரில், பித்தம் தலைக்கு ஏறினவர்கள் அன்றி, வேறு எந்தத் தேவர்கள், எந்த அசுரர்கள் போரில் என்னை எதிர்த்து எனக்கு எதிரே நிற்கமுடியும்? ஒருவராலும் முடியாது. அவ்வாறிருக்க, நீ என் எதிரில் துணிவுடன் நிற்பது மட்டுமல்லாமல், இருந்த இடத்தைவிட்டுச் சற்றும் அசையாமல் என் மார்பில் குத்து'' என்று சொல்லிக்கொண்டு நிற்கிறாயே? இந்தத் துணிவும், வீரமும் என்னால் புகழ்ந்து சொல்லும் தரத்ததல்ல?'' என்கிறான் இராவணன்.

''இதுகூறும் தரமன்றால்'' என்பது அனுமனின் வீரம் சொல்லில் அடங்காது; சொல்லி மாளாது, மிகவும் வியப்புக்குரியது என்ற பொருளைத்தரும். இராவணனை எதிர்த்து நிற்பவர் யாரும் உயிர்வாழ முடியாது என்பது முத்தேவர்களுக்கும், தேவர்கள் எல்லோருக்கும், தான்வர் முதலிய பதினென் கணங்களுக்கும் தெரியும். எனவே அவர்கள் எதிர்த்துவர மாட்டார்கள் அவ்வாறு எதிர்த்து வந்தால் அவர்கள் பித்தம் தலைக்கு ஏறியவர்களாய் இருக்க வேண்டும். எனவே அவர்கள் உயிர் போவதைப்பற்றிக்கவலைகொள்ளதவர்களாக இருக்கவேண்டும்என்பது குறிப்பு.

Koviloor Digital Library

170. பொரு கைத்தலம் இருபத்து உள; புகழும் பெரிது உளதால்;
வரு கைத்தல மதவெங்கரி வலி கெட்டென வருவாய்;
இரு கைத்தலம் உடையாய்; எதிர் இவை சொற்றனை; இனிமேல்
தருகைக்கு உரியது ஒரு கொற்றம் என்?, அமர் தக்கதும் அன்றால். (7269)

(பொருதல்-போர்செய்தல்; கைத்தலம்-கைகள்; சொற்றனை-சொன்னாய்; தருகை-தருதல்; கொற்றம்-வெற்றி; அமர்-போர்)

''போர் புரிவதற்கென்று எனக்கு இருபது கைகள் உள்ளன; உலகத்தில் நான்தான் பெரிய வீரன் என்ற பெரும் புகழும் எனக்கு இருக்கிறது. என்னை எதிர்த்து வந்த துதிக்கைகளையுடைய மதம் கொண்ட, கொடிய திசை யானைகளும் தம் வலிமைகெட்டுத் தோற்றோடின; இவையெல்லாம் அறிந்திருந்தும் அவ்யானைகளைப் போல என் எதிரில் நின்று கொண்டிருக்கும் இரண்டு கைகளை உடைய அனுமனே! என் எதிரில் நின்று இத்தகைய வீரம் மிகுந்த சொற்களைச் சொல்லிவிட்டாய். இதுவே நான் உன்னிடம் தோல்வியடைந்ததற்கும், நீ வெற்றிபெற்றதற்கும் சமம். இதற்கு மேல் நான் உனக்குத் தரப்போகும் வெற்றி என்ன இருக்கிறது?

''இருபது கைகளையுடைய நான் இரண்டே கைகளை உடைய உன்னுடன் போர்செய்வது என்பது ஒத்தபடை எடாதவனுடன் போர் செய்வது போலாகும். போர் அறத்திற்கு உகந்தது அன்று; மாறானது'' என்கிறான் இராவணன்.

171. "திசை அத்தனையையும் வென்றது சிதைய, புகழ் தெறும் அவ்
வசை மற்று இனி உளதே? எனது உயிர்போல் வரும் மகனை
அசையத் தரை அரைவித்தனை; அழி செம்புனல் அதுவோ
பசையற்றிலது; ஒரு நீ, எனது எதிர் நின்று, இவை பகர்வாய்" (7270)

(தெறுதல்-அழித்தல்; வசை-பழி; வரும்-எதிர்த்து வந்த; மகன்-அக்ககுமரன்; அசைய-உயிர்நீங்குமாறு/நிலைகலங்குமாறு; அரைவித்தல் -மண்ணில் தேய்த்தல்; அழி-மிகுதி/பெருகிய; பசை-ஈரம்; செம்புனல்-இரத்தம்)

''எல்லாத் திசைகளையும் வென்ற எனது புகழ் சிதைந்து அழியுமாறு, நீ செய்ததைவிட வேறு எனக்குப் பழி ஏற்பட இன்னும் என்ன இருக்கிறது? ஏன்எனில் என்னுடைய உயிர்போன்றவனான, என்னுடைய புதல்வனான அக்ககுமாரன், போர்க்களத்தில் உன்னை எதிர்த்து வந்தபோது, அவனை நிலைகுலையச் செய்து, மண்ணோடு மண்ணாகத் தேய்த்து விட்டாய்; அவ்வாறு நீ தேய்த்ததனால் பெருகி ஓடிய இரத்த வெள்ளத்தின் ஈரப்பசையே இன்னும் இலங்கைத் தெருக்களில் உலரவில்லை. அவ்வாறு இருக்கும்பொழுது எவ்வளவு துணிவும், தைரியமும் இருந்தால் இத்தகைய கொடுமை செய்த நீ, தனி ஒருவனாக என் எதிரே நின்று

Koviloor Digital Library

இத்தகைய வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டிருப்பாய்?'' என்று சற்று சினத்துடன் வினவினான் இராவணன்.

'திசை அத்தனையையும்' என்பது நேர்த்திசை நான்கும் கோணத்திசை நான்கும், மேல், கீழ் என்னும் இரண்டும் சேர்த்து மொத்தம் பத்துத் திசைகளைக் குறிக்கும். திசைகளையெல்லாம் வென்ற அந்தப் புகழைக் காட்டிலும், என் மகன் அக்கன் உன்கையால் மண்ணோடு மண்ணாகத் தேய்த்து அரைக்கப்பட்டது எனக்கு மிக்கபழியைப் பெற்றுத் தந்துவிட்டது என்றான் என்பதாம். இந்த இரத்தக்கறை உலர்வதற்கு முன்னால் என் எதிரே நின்று இத்தகைய வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டு நிற்கின்ற நீ உண்மையான வீரனேதான் என்கிறான் இராவணன் என்பதாம். ''வாய்த்த அக்கனை வரிசிலை மலையொடும் வாங்கித் தேய்த்த அக்குழம்பு உலர்ந்தது இல் இலங்கையின் தெருவில்'' என்றும் ''விண்ணொடு மண்காணத் தேய்த்தான் ஊழியினில் உலகு ஏழும் தேயினும் ஒரு தன்புகழ் இறை தேயாதான்'' என்றும் முன்னர்க்கூறியது இங்கு நினையத்தகும். அனுமனுடைய இந்தச்செயல் இராவணனது வெற்றிகளையும், புகழையும் அழித்ததோடு மட்டும் அல்லாமல் பெரும் பழியையும் விளைவித்து விட்டது என்பது கருத்து.

172. "பூணித்து இவை உரை செய்தனை; அதனால் உரை பொதுவே;
பாணித்தது; பிறிது என்சில பகர்கின்றது? பழியால்
நாணித் தலை இடுகின்றிலென்; நனிவந்து, உலகு எவையும்
காண, கடிது எதிர் குத்துதி" என்றான் வினை கடியான். (7271)

(பூணுதல்-சூள் மேற்கொள்ளுதல்/வஞ்சினம் மேற்கொள்ளுதல்; பாணித்தல்-காலம் தாழ்த்தல்; இடுதல்-குனிதல்; நனி-மிகவிரைந்து; எவையும்-எல்லாமும்; கடிது-கடுமையாக; வினை-தீவினை; கடிதல்-நீங்குதல்; நனி-நன்கு)

தீவினையினின்றும் நீங்காதவனான இராவணன், அனுமனை நோக்கி, என்னோடு சபதம் செய்து இத்தகைய வார்த்தைகளைக் கூறிவிட்டாய்; இதுபோலச் செயலற்று நின்றவர்களை ஏளனம் செய்வது என்பது உலகப்பொது இயல்பே; எனினும் வீரர்களும் அவ்வாறு செய்தல் ஒரு பொதுவான செய்கைதான்; உன்னைப் புகழ்ந்து பேசிக்கொண்டிருந்ததி லேயே காலம் தாழ்ந்து விட்டது. இனியும் இதுபற்றிப் பேசுவதால் என்ன பயன்? அதற்காக இந்தப் பழியினால் நான் வெட்கமடைந்து தலைகுனிந்து நிற்கப் போவதில்லை; உடனே விரைந்து வந்து இந்த உலகத்து மக்கள் எல்லோரும் காணும் வண்ணம், என்னை நன்றாகக் குத்துவாயாக!'' என்கிறான் இராவணன்.

'பூணித்தல்' என்பது சூள் மேற்கொள்ளுதல், சபதம் செய்தல், வஞ்சினம் மேற்கொள்ளுதல் என்ற பொருளைத்தரும். இதனை 'வஞ்சினக்

Koviloor Digital Library

காஞ்சி' என்று புறத்திணைகூறும். வஞ்சினம் கூறுதல் வீரர் இயல்பு. இது பொதுவாக எல்லோரும் செய்கின்ற செயல்தான். அதற்காக வெட்கப் பட்டுக் கொண்டு, நான் தலை குனிந்து கொண்டு நிற்கமாட்டேன். இவ்வுலகம் முழுவதும் காணும்படி என்னை நன்றாகக் குத்துவாயாக என்கிறான்என்பதாம். அதில் நான்பொன்றாது நின்றால், என்புகழ் மேலும் ஓங்கும் என்பது அவன் உள்ளக்கருத்து என்பது மறைபொருள். ஒரு அற்பமான குரங்கோடு போர்செய்வது வெட்கத்திற்குரிய செயல்தான் என்றாலும் அவனே வந்து சூள்உரைத்து, அறைகூவி அழைக்கும்போது எதிர்த்துப் போரிடாமல் வாளா நின்று கொண்டிருந்தால் அது தோற்றுத் தலை குனிவதற்குச் சமமாகும். எனவே 'பழியால் நாணித்தலை குன்றிலேன்' என்றார் என்க.

173. அனுமன் இராவணனைக் குத்துதல்

''வீரத் திறம் இது நன்று! என வியவா, மிக விளியா,
தேரின் கடிது இவரா, முழுவிழியின் பொறி சிதறா,
ஆரத்தொடு, கவசத்து உடல், பொடிபட்டு உக, அவன் மா
மார்பில் கடிது எதிர் குத்தினான், வயிரக்கரம் அதனால். (7272)

(நன்று-சிறப்புடையது; வியவா-வியந்து; விளியா-விளித்து/ஆரவாரித்துக்கொண்டு; கடிது-விரைவாக/கடுமையாக; இவரா-இவர்ந்து /ஏறி; முழு-அகலவிரித்த; சிதறா-சிதறிக்கொண்டு; ஆரம்-மாலை; உகுதல்-சிந்துதல்; வயிரம்-வலிய; மா-பெரிய/விரிந்த)

அவ்வாறு தன்னைப் புகழ்ந்துரைத்த இராவணனை நோக்கி அனுமன், ''இத்தகைய வீரப்பான்மை மிகச் சிறப்பாக இருக்கிறது என்று வியந்து, மிகுந்த ஆரவாரத்துடன், தேரின்மீது ஏறி அமர்ந்துகொண்டு, வந்த இராவணனின் இருபது அகன்ற, விரிந்த, பெரிய விழிகளிலும் நெருப்புப் பொறி சிந்துமாறும், அவன் அணிந்திருக்கின்ற தும்பைமாலையுடனும், மணிமாலையுடனும், கவசம் பொருந்திய உடல் தூள்தூளாகச் சிந்திப் போகும்படியும், அனுமன் இராவணன் எதிரில் நின்று அவன் மார்பில், தனது வயிரம்பாய்ந்த கைகளினால், விரைவாகவும், தன் முழு வலிமையையும், கடுமையாகப் பயன்படுத்திக் குத்தினான்.

இராவணன் அனுமனை வியந்து பாராட்டியதுபோல், அனுமன் இராவணனது பெருந்தன்மையையும், வீரப்பான்மையையும் பாராட் டினான் என்றாலும், தான் முன்பு கூறியதுபோலக் குத்தத் தவறவில்லை என்பதையும் கருதுக. வியவா, விளியா, இவரா, சிதறா என்பன செய்யா என்னும் வாய்பாட்டு உடன்பாட்டு வினையெச்சங்கள். உடன்பாட்டுப் பொருளைத்தரும்.

Koviloor Digital Library

174. அயிர் உக்கன நெடுமால் வரை; அனல் உக்கன விழிகள்;
தயிர் உக்கன முழு மூளைகள்; தலை உக்கன; தரியா
உயிர் உக்கன நிருதக்குலம்; உயர் வானரம் எவையும்,
மயிர் உக்கன, எயிறு உக்கன; மழை உக்கன வானம். (7273)

(வரை-மலை; அயிர்-கரிய நுண்மணல்; உக்குதல்-சிதறுதல்/சிந்துதல்; தரியா-தாங்காமல்; நிருதக்குலம்-அரக்கர்கூட்டம்; எயிறு-பற்கள்; வானம்-மேகம்)

அனுமன் குத்திய குத்தின் வேகத்தால் அதிர்ச்சியுற்று, நீண்ட பெரிய மலைகள் எல்லாம் நுண்ணிய கருமணல் துகள்போலச் சிதறிப் போயின; இராவணனது இருபது விழிகளும் நெருப்பைக் கக்கின; அவனது இருபது தலைகளும் தலைகளில் இருக்கும் மூளைகள் எல்லாமும் தயிர்போலக் குழைந்து சிந்தின; அரக்கர்கள் கூட்டம் எல்லாம் இவ்வதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ள முடியாமல் உயிரை விட்டன; உயர்ந்த குரங்குச் சேனைகளின் மயிர்க்கற்றையுடன் பற்களும் உதிர்ந்து போனது; வானத்து மேகம்கூட மழையைச் சிந்தியது.

உக்கன என்ற சொல், ஒரே பொருளில் பலமுறை தொடுத்து வந்ததால், இப்பாடல் சொற்பொருள் பின்வரு நிலையணியின் பாற்பட்டதாகும். அரக்கர் பக்கமும், வானரர் பக்கமும் அதிர்ச்சி உணரப்பெற்றது அழிவுண்டானது என்பது கருதுக. மூளை நிறத்தால் தயிருக்கு உவமை.

175. வில் சிந்தின நெடுநாண்; நிமிர் கரை சிந்தின விரிநீர்;
கல் சிந்தின குலமால்வரை; கதிர் சிந்தின சுடரும்;
பல் சிந்தின மதயானைகள்; படை சிந்தினர் எவரும்,
எல் சிந்திய எரி சிந்தின, இகலோன் மணி அகலம். (7274)

(நிமிர்-விரிந்த; சுடர்-சூரிய, சந்திரர்; படை-படைக்கருவிகள்; இகல்-வலிமை; அகலம்-மார்பு; எல்-ஒளி; எரி-நெருப்பு; மணி-அழகு; கதிர்-கிரணங்கள்)

அனுமன் இராவணனைக் குத்திய விசையின் அதிர்ச்சியால், நீண்ட நாண்கள் அவற்றில் பொருத்தப்பட்டிருந்த வில்லைச் சிதறின. உயர்ந்த, விரிந்து அகன்ற கடல், கரைகடக்கத் தொடங்கியது; எட்டுக்குல மலைகளும் அதிர்ச்சியால் பிளந்து கற்களை உதிர்க்கலாயின; சூரியன், சந்திரன் என்னும் இரு ஒளிப்பிழம்புகளும் தங்கள் கிரணங்களைச் சிந்தின; திசையானைகள் எல்லாம் தங்கள் தந்தங்கள் ஒடிந்துபோய் நின்றன; அரக்கர் வீரர்கள் அனைவரும் தங்களது போர்க்கருவிகளைக் கீழே போடவேண்டியதாயிற்று; வலிமைமிக்க இராவணன் மார்பில் அணிந்திருந்த அழகிய மணிமாலை, ஒளிவீசி நெருப்பைச் சிந்தியது.

Koviloor Digital Library

'சிந்தின' என்ற ஒரே சொல் அடுத்தடுத்துப் பயன்படுத்தப்பட்டு, ஒரே பொருளைத் தருவதால், இப்பாடல் சொற்பொருட் பின்வருநிலை யணியின் பாற்படும்.

176. கைக்குத்து அது படலும், கழல் நிருதர்க்குஇறை கறை நீர்
மைக் குப்பையின் எழில்கொண்டு ஒளிர்வயிரத் தடமார்பில்
திக்கில் சினமத யானைகள் வயவெம்பணை செருவில்
புக்கு இற்றன, போகாதன, புறம் உக்கன, புகழின். (7275)

(நிருதர்-அரக்கர்; இறை-தலைவன்; கறை-இரத்தம்; மை-கரிய மேகம்; குப்பை-திரள்; வய-வலிய; பணை-கொம்புகள்/தந்தம்; செரு-போர்; இறுதல்-ஒடிதல்; உக்கன-சிந்தியது; புறம்-முதுகு)

அனுமனுடைய அந்தக்குத்து, இராவணன் மேல் பட்டதும், வீரக்கழலணிந்த அரக்கர்க்கு அரசனான இராவணனின் இரத்தக்கறை படிந்ததும், கரிய அஞ்சனம் போன்றதும், கரிய மேகம் போன்றதும் அழகு மிளிருவதும், வயிரம்போல் உறுதி கொண்டதுமான, அகன்ற பெரிய மார்பில், முன்பு திக்கு விஜயகாலத்தின்போது, சினமும் மதமும் கொண்ட திசையானைகளின் வலிய, கொடிய கொம்புகள் போரில் ஒடிந்துபோக, அவை அப்படியே அவன் மார்பில் அகலாது தங்கியிருந்தவை, இப்போது அனுமன் கொடுத்த குத்தினால், அவன் புகழ் அழிந்தது போன்று, முதுகுப் பக்கமாய்க் கழன்று வெளியேறின.

முன்பு திக்கு விஜயகாலத்தில் இராவணன் திசையானைகளுடன் போர்செய்த போது, அந்த யானைகளின் தந்தங்கள் அவன் மார்பில் மோதி, முறிந்துபோயின. அவை அப்படியே அவன் மார்பில் பதிந்திருந்தன. இந்தச் செய்தியை நாம் முன்பே கண்டுவந்திருக்கிறோம். இப்போது அனுமன் விட்ட குத்தில், அந்த வெண்ணிறமான கொம்புகள், மார்பினின்றும் முதுகுப்பக்கமாகச் சென்று கழன்று விழுந்துவிட்டன. இதற்குக்கவிஞன் ஒரு உவமைகூறுகிறான். அனுமன்கொடுத்த குத்தினால் எவ்வாறு இராவணனின் புகழெல்லாம் அழிந்து போனதோ, அதைப்போல அவன் மார்பில் இருந்த யானைக் கொம்புகள் புறமுதுகு வழியாய்ப் போயின என்கிறான் கவிஞன். புகழை வெண்ணிறமாகக் கூறுவது கவிமரபு. எனவே வெண்ணிறமான யானைத் தந்தங்களையே அதற்கு உவமையாகக்கூறினான் என்க. ''பணைக்கை யானைகோடு உழுத நெடுந்தழும்பு'' என்றும் ''திசை எல்லை யானைக் கோடுளதனையும் புக்குக் கொடும் புறத்து அழுந்து புண்'' என்றும், ''அப்பணை அனைத்தும் மார்பினுக்கு அணியெனக்கிடந்த'' என்றும், 'பார்மகளைத் தழுவினையோ திசையானைப் பணை இறுத்த பணைத்த மார்பால்'' என்றும் இதுபற்றிப் பின்னால் கூறப்போவதையும் இங்கு எண்ணிப் பார்த்தல் தகும்.

Koviloor Digital Library

177. அள் ஆடிய கவசத்து அவிர்மணி அற்றன, திசைபோய்
விள்ளா நெடுமுழுமீன் என; விழி வெம்பொறி எழ நின்று,
உள் ஆடிய நெடுங்கால் பொர ஒடுங்கா, உலகு உலைய,
தள்ளாடிய வடமேருவின் சலித்தான், அறம் வலித்தான். (7276)

(அள்ளாடுதல்-அலைவுறுதல்; அவிர்தல்-ஒளிவீசுதல்; விள்ளா-பிளவு படாத; மீன்-விண்மீன்/நட்சத்திரங்கள்; வலித்தல்-துன்புறுத்துதல்; ஒடுங்கா-ஒடுங்கி; உலகு-உயிரினங்கள்; உலைதல்-வருந்துதல்; பொருதல் -மோதுதல்; சலித்தல்-தள்ளாடுதல்; ஆடுதல்-உலாவுதல்; தள்ளாடுதல்-நிலைகுலைதல்)

அனுமன் கொடுத்த குத்தில், தர்மத்தைத் துன்புறுத்துபவனான இராவணனின் அலையும் இயல்புடைய கவசத்திலிருந்து ஒளிவீசிக் கொண்டிருந்த நவரத்தினங்கள், பிளவுபடாத முழுமையான நீண்ட நட்சத்திரங்கள் வானத்திலிருந்து எல்லாத் திசைகளிலும்போய், விழுந்தது போலத் தரையில் விழுந்தன; இப்போது இராவணன் தன் விழிகளில், நெருப்புப்பொறி பறக்கும்படி எழுந்து நின்று, மெதுவாக அசைந்தாடிய காற்று, இப்பொழுது பெருவலி கொண்டு சண்டமாருதம் போலத் தாக்கி இவ்வுலகே நிலைகுலையும்படி வீசியதுபோலவும், தன் வலிகுன்றி நிலைகுலைந்து தள்ளாடும் மேருமலை போலவும் தள்ளாடினான்.

சாதாரணமாக நட்சத்திரங்கள் வானிலிருந்து சிதறிக்கீழே விழுதல் உண்டு. அதை எரி நட்சத்திரம் என்கிறோம். இங்கே 'விள்ளா நெடு முழு மீன்' என்று அந்நட்சத்திரத்தைச்சிறப்பிக்கிறார் என்க. அந்த நட்சத்திரங்கள் கீழே விழுந்தமைக்கு, இராவணனின் கவசத்திலிருந்து உதிர்ந்து விழுந்த நவமணிகள் உவமை. வீசுகின்ற பெருங்காற்றால் வடமேருமலை தள்ளாடி நிலைகுலைவது போல, அனுமன் குத்தினால் இராவணன் தள்ளாடி நிலைகுலைந்தான் என்பதாம். வடமேருமலைக்கு இராவணன் உருவத்தால் உவமை. முன்பு 'அறம் மறுத்தான்' என்றார்; இப்போது 'அறம் வலித்தான்' என்று கூறுவதையும் நினைவிற்கொள்க. கவிஞன், இராவணன் பற்றிக்கூறும் பொழுதெல்லாம் அவனை மேருமலைக்கு உவமையாகக் கூறுவதும், அவன் அறச்செயல்கள் செய்வதை அறவே மறந்தான் என்பதையும் குறிப்பிட்டுக் கூறுவதையும் நோக்குக. பத்துத் தலைகளையுடைய இராவணன் தள்ளாடித் தளர்ந்து நின்றது. ஆயிரம் சிகரங்களையுடைய மேருமலை தள்ளாடி நிலைகுலைந்ததற்கு ஒப்பு.

178. ஆர்த்தார் விசும்பு உறைவோர்; நெடிது அனுமான் மிசை அதிகம்
தூர்த்தார், நறு முழுமென் மலர்; இசை ஆசிகள் சொன்னார்;
வேர்த்தார் நிருதர்கள்; வானரர் வியந்தார்; 'இவன் விசயம்
தீர்த்தான்' என உவந்து, ஆடினர்; முழு மெய்ம்மயிர் சிலிர்த்தார். (7277)

Koviloor Digital Library

(விசும்பு-வானுலகம்; இசை-புகழ்; விசயம்-வெற்றி; தீர்த்தல்-ஒழித்தல்; மெய்-உடம்பு; தூர்த்தல்-நிறைத்தல்/தூவுதலுமாம்; நெடிது-நீண்டநேரம்)

இராவணன் நிலைகுலைந்து தள்ளாடியது கண்டு, வானுலகில் வசிப்பவர்களான தேவர்கள் நீண்டநேரம் ஆரவாரம் செய்தனர்; அனுமன்மீது மிக அதிகமாக, நறுமணம் மிக்க முழுமையான மெல்லிய மலர்களைத் தூவி நிறைத்தார்கள்; அவன் புகழ் ஓங்கும் வண்ணம் ஆசிகள் கூறினார்கள்; இதனைக் கண்ட அரக்கர்களோ, தனது அரசனுக்கு ஏற்பட்ட நிலையைக் கண்டு அஞ்சி உடல் வியர்த்தார்கள்; வானரர்களோ, அனுமனின் திறமைகண்டு வியப்புற்றனர். ''இந்த இராவணனது வெற்றிச் சிறப்பையெல்லாம் நமது அனுமன் ஒரு கணத்தில் ஒழித்து விட்டான்'' என்று கூறிக்கொண்டே, மிக்க மகிழ்ந்து கூத்தாடினர். மகிழ்ச்சியால் முழு உடம்பும் மயிர்க்கூச்செறிந்தார்கள்.

இராவணன் தள்ளாடியது கண்டு, தேவர்களும், அரக்கர்களும், வானரர்களும், எவ்வகையான உணர்ச்சிக்கு ஆட்பட்டார்கள் என்பதைக் கவிஞன்தெளிவாகப் படம்பிடித்துக்காட்டுவதைக்காண்க. கம்பன்இந்தப் பாடல்களில் எல்லாம், ''முழுமூளைகள், முழுமீன், முழு மென்மலர்'' என்றும் கூறிவருவதை நோக்குக. மெய் சிலிர்த்தல் என்பது மகிழ்ச்சி யாலும், வியப்பாலும் உண்டாகும் மெய் வெளிப்பாடாகும். மலரின் இதழ்களைத் தூவி ஆசி கூறுதலே வழக்கம். இங்கு அவ்வாறில்லாமல் முழுமையான மலர், நறுமணமுள்ள மலர், மெல்லிய மலர் தூவி, நீண்டநேரம் தூவி, ஆசி கூறினார்கள் என்று கூறுவதையும் கருதுக.

179. இராவணன் தன் உணர்வு பெறுதல்

கற்று, அங்கியின், நெடுவாயுவின், நிலை கண்டவர், கதியால்
மற்று அங்கு ஒரு வடிவு உற்று, அது மாறாடு உறுகாலை,
பற்று அங்கு அருமையின், அன்னது பயில்கின்றது ஒரு செயலால்,
உற்று அங்கு அது புறம்போய், உடல் புகுந்தால் என உணர்ந்தான்.
(7278)

(கற்று-பயின்று; அங்கி-அக்னி/நெருப்பு; வாயு-பிராணவாயு; கண்டவர்-யோகியர்; மாறாடுதல்-மாறுபடுதல்; கதி-பிறப்பு)

யோக நெறிகளைப் பயின்று, அக்னியின் நிலையினையும், நீண்ட பிராணவாயுவின் நிலையினையும், மற்றொரு உடலில் புகுந்து கொள்ளும் போது, தனக்கு இயல்பாயுள்ள தன்மைகளினின்றும் மாறுபடும்போது, முன்பு கொண்டிருந்த உடலில் ஏற்பட்ட உணர்வுகளையே பயன் படுத்துதல்போல, தன் நிலைகுலைந்த இராவணன் மயக்கத்தினின்றும் நீங்கி, இப்போது தன் உணர்வு வரப்பெற்றான். இது எப்படி இருக்கிறது

Koviloor Digital Library

என்றால், தன் உடம்பிலிருந்து மற்றொரு உடம்பிற்குக் கூடுவிட்டுக் கூடுபாய்ந்து வெளிச்சென்று அக்காரியம் முடிந்ததன்பின், மீண்டும் தன்னுடைய பழைய உடம்பிற்குள்ளேயே வந்து புகுந்து கொண்டதைப் போன்றிருக்கிறது என்கிறான் கவிஞன்.

இராவணன் அனுமனின் குத்தினால் நிலைகுலைந்து போனதையும், சற்றுநேரம் கழித்துத் தன் உணர்வு திரும்பப் பெற்றுத் தன்னுடைய பழைய நிலைக்கு வந்து நின்றதையும் சித்தர்கள் கூடுவிட்டுக் கூடுபாயும் அட்டமாசித்திகளுள் ஒரு சித்திக்குக் கவிஞன் உவமைப்படுத்துகிறான் என்க. 'கூடுவிட்டுக் கூடு பாய்தல்' என்பது 'பரகாயப்பிரவேசம்' எனப் படுகிறது. அருணகிரிநாதர் ஒரு கிளியாகவும், திருமூலர் ஓர் இடையனாக வும் கூடுவிட்டுக் கூடுபாய்ந்தது நாம் அறிந்ததே. ஆதிசங்கரரும் அவ்வாறு கூடுவிட்டுக் கூடு பாய்ந்தவர் என்றும் கூறுவர். அங்கி என்பது மூலாக்னியைக் குறிக்கும். இது குண்டலினியினால் எழுவது; வாயு என்பது இடகலை, பிங்கலை, சுழுமுனை என்னும் மூன்று நாடிகளிலும் சஞ்சரிக்கும் பிராணவாயு - உயிர்க்காற்றைக் குறிக்கும். இந்தப் பொருள் புரியாத பாடலுக்கு மிக எளிய ஒரு எடுத்துக்காட்டு பாருங்கள். 'ஆவின் உடம்பில் இருந்தபோது கன்றுக்கு அன்பு செய்ததோர் உயிர், அவ்வுடம்பு நீங்கிப் புலி உடம்பு எடுத்தபோது, அக்கன்றுக்குத் தீங்கு செய்தல் இயல்பு' எனவே உடம்பு மாறுபடும்போது பழைய உடம்பில் இருந்த பற்று நீங்கிவிடுகின்றது'' என்பது கருத்து.

180. உணரா, நெடிது உயரா, உரைஉதவா, எரி உமிழா,
இணைஆரும்இல் இவன் நேர் வரவு எய்தா, 'வலிசெய்தாய்!
அணையாய்! இனி, எனது ஊழ்' என அடரா, எதிர்படரா
பணைஆர் புயம் உடையானிடை, சில இம்மொழி பகர்வான். (7279)

(பணை-மரக்கிளைகள்; ஆர்-ஒத்த/போன்ற; உணரா-உணர்ந்து; உயிரா-உயிர்த்து/பெருமூச்சு விட்டு; உமிழா-உமிழ்ந்து கொண்டு; உதவா-உதவி/தொடங்கி; இணை-ஒப்பு; வலி-துன்பம்; ஊழ்-முறை; அணைதல்-நெருங்கிவருதல்; படரா-படர்ந்து/வந்து; அடரா-அடர்ந்து/நெருங்கி)

இராவணன் இப்போது தன் உணர்வு பெற்று, நீண்ட பெருமூச்சுவிட்டுப் பேசத்தொடங்கி, கண்களில் நெருப்புப்பொறி பறக்க, போராற்றலில் தன் ஒப்பார் யாருமில்லாத பெரும் போர்வீரனான அனுமன் நேர் சென்று அவனை நோக்கி ''அனும! நான் இதுகாறும் அனுபவித்தறியாத துன்பத்தை எனக்குத் தந்துவிட்டாய்; நமது ஒப்பந்தப்படி, இப்போது எனது முறை. எனவே என் அருகில் நெருங்கி வருவாயாக!'' என்று கூறிக்கொண்டே, அவனை நெருங்கி எதிர்சென்று, மரக்கிளைகள் போன்ற பருத்த பரவிய இருபது தோள்களையுடைய இராவணன் கீழ்வருமாறு சில சொற்களைக் கூறத் தொடங்கினான்.

Koviloor Digital Library

இவ்வாறு முறை வைத்துப் போர்புரிதல் முன்பு வழக்கில் இருந்திருக்கிறது என்பதை மதுரைக் காஞ்சியினாலும், புறநானூற்றாலும் அறிகிறோம். உணரா, உயிரா, உதவா, உமிழா, அடரா, படரா, என்பன எல்லாம் செய்யாஎன்னும் வாய்பாட்டு வினையெச்சங்கள். உடன்பாட்டுப் பொருளைத்தரும். இவற்றை உடன்பாட்டுச் சொற்களில் கூறாது எதிர்மறைச் சொற்களால் கூறுவது, மெய்ப்பாட்டு உணர்ச்சியை மிகுத்துக்காட்டவே என்பதை அறிக. இது கவிஞர்கள் இயல்பு. 'மக்களை முன் காணா, மனம் நடுங்கா, வெய்து உயிரா' என்பது நளவெண்பா. 'நயன நீர்மல்கா, வாழ்த்தா, வாய்குழறா, வணங்கா, மனத்தால் நினைந்து உருகி' என்பது திருவாசகம்.

181. "வலி என்பதும் உளதே?; அது நின் பாலது; மறவோய்!
அலி என்பவர், புறம் நின்றவர்; உலகு ஏழினும் அடைத்தாய்;
'சலி' என்று எதிர் மலரோன், உரை தந்தால், இறை சலியேன்;
மெலிவு என்பதும் உணர்ந்தேன்; எனை வென்றாய், இனி விறலோய்!"
(7280)

(மறம்-வீரம்; அடைத்தல்-நிரப்புதல்; சலித்தல்-தளர்ச்சியடைதல்; உரை-சாபம்; மெலிவு-தளர்ச்சி; விறல்-வெற்றி; இறை-சிறிதும்; வலி-வல்லமை)

"வீரமுடையவனே! அனும! உலகில் வல்லமை என்று ஒன்று இருக்கிறதல்லவா? அது உன்னிடம்தான் முற்ற முழுக்க இருக்கிறது. உலகில் உள்ள மற்றவர்கள் எல்லாம், உன்னைப் பார்க்கும் இடத்து, ஆண்மையற்ற அலி என்றே சொல்லத் தகுந்தவராவர். உன்னுடைய வீரப் பண்பினால் இந்த ஏழு உலகங்களையும், நிறைத்திருக்கிறாய். தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமதேவனே என் எதிரில் வந்து, 'சற்று தளர்ந்து போவாயாக!' என்று சாபம் தந்தாலும், சிறிதும் தளராத தன்மையுடையவன் நான். அப்படிப்பட்ட நானே இப்போது என் வாழ்வில், தளர்ச்சி என்றால் என்ன என்பதை நன்கு உணர்ந்துவிட்டேன். எனவே நீ என்னை வெற்றி கொண்டவன் ஆவாய்!" என்று இராவணன் அனுமனைப் பாராட்டு கிறான்.

இதுவரையிலும் இராவணன் தான் மட்டும்தான் 'வல்லமை' என்ற சொல்லுக்கு முழுமுதற் பொருளாக விளங்கிவந்தான் என்று இறுமாப்புக் கொண்டிருந்தான். பிரமதேவனே அவன் எதிர் வந்து 'சற்று தளர்ச்சி அடை' ஓய்வெடுத்துக் கொள் என்று கூறினாலும்கூடச் சற்றும் தளராதவனான இராவணனே, இப்போது அனுமன் குத்துப்பட்டவுடன், வல்லமை என்பதற்கு வரம்பு நாம் இல்லை. அனுமன் தான் என்று, முதன்முதலாக உணரத் தொடங்கியிருக்கிறான் என்பதைக் கவிஞன் கூறும் நயம் நோக்குக. 'அலி' என்ற சொல் ஆண்மை குறைந்தவர் என்ற பொருளைத் தருமேயன்றி வேறன்று என்பது தெரியவருகிறது. 'உரை' என்பது சாபத்தைக் குறிக்கும்.

Koviloor Digital Library

அது தப்பாது பயன்தரும் என்பதால் என்க. யாருக்கும் இதுவரை தளராத தன்னைத் தளர்வித்ததால், அனுமனை இராவணன் 'விறலோய்' - வெற்றி மிகுந்தவனே' என்றும், என்னை வென்றவனே என்றும் புகழ்ந்தான் என்க.

182. "ஒன்று உண்டு இனி உரை நேர்குவது; உன் மாா்பின் என் ஒரு கை
குன்றின் மிசை கடைநாள் விழும் உரும் ஏறு எனக் குத்த
நின்று, உன்நிலை தருவாய் எனின், நின்நேர் பிறர் உளரோ?
இன்றும் உளை, என்றும் உளை; இலைஓர்பகை" என்றான். (7281)

(நேர்தல்-சொல்லவேண்டியது; உரும்ஏறு-பேரிடி/இடியேறு; உளை-நிலைத்திருப்பாய்; கடைநாள்-ஊழியிறுதிக்காலம்)

''எனினும் இப்போது நான் உனக்குக் கூறவேண்டுவது ஒன்று உண்டு. இப்போது நான் என் கையினால் உன் மார்பில், ஊழிக்கால இறுதியில் மலையின்மேல் விழும் பேரிடி போன்று, ஒரு குத்துக் குத்துவேன்; அதைத் தாங்கிக்கொண்டு, நீ உன் உயிர் நிலைபெற்று இந்நிலையிலேயே இருப்பா யானால், உனக்கு நிகரான போர் வீரர் வேறு யாரும் இருப்பார்களோ? இருக்க மாட்டார்கள். எனவே உனக்கு ஒரு பகைவனும் இருக்கமாட்டார். எனவே நீ இன்று இருப்பதுபோலவே என்றும் அழியாது இருப்பாய்!'' என்று இராவணன் தன்னையறியாமலேயே அனுமனுக்குச் சிரஞ்சிவித் தன்மை தந்துவிடுகிறான்.

தன்னுடைய குத்து எப்படியிருக்கும் என்று தானே அனுமனுக்கு உணர்த்தி விடுகிறான் இராவணன். ''குன்றின் மிசைக் கடைநாள் விழும் உரும் ஏறு'' போல இருக்கும் என்கிறான். அதற்கும் ஈடுகொடுத்து உயிருடன் இருந்தால் நீதான் வீரத்திற்கு வரம்பு. உனை வெற்றி கொள்ள இவ்வேழு உலகத்தில் வேறு எவரும் இல்லை. எனவே நீ இன்றுபோல் என்றும் இருப்பாய்'' என்கிறான் இராவணன். தன் பெருமதிப்பிற்குரிய சீதாதேவி, 'உலகம் ஏழும் ஏழும் வீவுற்ற ஞான்றும் இன்றுபோல் இருத்தி' என்று வாழ்த்திக் கூறியதைப் போலவே, தன் பகைவனான இராவணனையும் வஞ்சினமாக 'இன்றும் உளை, என்றும் உளை' என்று கூறவைத்த கவிஞனின் கவித்திறம் நோக்குக. இராவணனின் எச்சரிக்கை, வாழ்த்தாக அமைந்து போவதை உணர்க. குன்றின் மிசைகடைநாள் விழும் உறும் ஏறுக்கு இராவணனின் குத்து ஒப்பு. அனுமன் குன்று போன்றவன், இராவணன் குத்து பேரிடி போன்றது என்க. வாழ்த்துரை போலவே, வஞ்சின உரையும் அமைதல் காண்க. அனுமனின் சிரஞ்சீவித் தன்மை, நட்பாலும், பகையாலும், ஒருசேர உருப்பெற்றவாறு நினைக.

Koviloor Digital Library

183. இப்போது அனுமன் தன் மார்பைக் காட்டுதல்

என்றான், எதிர் சென்றான், இகல் அடு மாருதி, ''எனை நீ
வென்றாய், அலையோ? உன் உயிர் விடாது, உரைசெய்தாய்;
நன்றாக, நின்நிலை நன்று'' என நல்கா, எதிர் நடவா,
குன்றாகிய திரள் தோளவன், 'கடன்கொள்க' எனக் கொடுத்தான். (7282)

(நடவா-நடந்து/சென்று; இகல்-பகை; அடுதல்-அழித்தல்; மாருதி-அனுமன்; நல்கா-நல்கி/சொல்லி; கொடுத்தல்-காட்டுதல்)

என்று அவ்வாறு கூறிய இராவணன், அனுமன் எதிரே சென்றான். பகைவரைக் கொல்லும் இயல்புடைய அனுமன் இராவணனை நோக்கி, ''நான் ஒரு குத்துக் கொடுத்தும், நீ இன்னும் உயிர் பிழைத்திருக்கிறாய், என்னுடன் உரையாடிக் கொண்டிருக்கிறாய் அல்லவா? எனவே நீயே என்னை வென்றவனாகக் கருதப்படுவாய் என்றும், உன்னுடைய ஆற்றல் மிகச் சிறப்பானது என்றும் புகழ்ந்து கூறிக்கொண்டே, இராவணன் முன்னே சென்று, குன்றுபோல் திரண்டதோள்களை உடையவனான அனுமன், ''இப்பொழுது உன்னுடைய கடமையை நிறைவேற்றிக் கொள்க'' என்று கூறித் தன் மார்பைக் காட்டினான்.

உண்மையான வீரர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் புகழ்ந்து பாராட்டிக் கொண்டதை எண்ணுக. கொடுத்தான் என்பது இங்கே காட்டினான் என்ற பொருளில் வந்தது.

184. இராவணன் அனுமனைக் குத்துதல்

உறுக்கி, தனி எதிர் நின்றவன் உரத்தில், தனது ஒளிர்பல்
இறுக்கி, பலநெடுவாய் மடித்து, எரி கண்தொறும் இழிய
முறுக்கி பொதி நிமிர் பல்விரல் நெரிய, திசை முரியக்
குறுக்கிக் கரம், நெடும் தோள் புறம் நிமிரக் கொடு குத்த. (7283)

(உறுக்குதல்-அதட்டுதல்; உரம்-மார்பு; இறுக்குதல்-கடித்தல்; இழிதல்-சிந்துதல்; பொதி-திரட்சி; கொடு-கொண்டு; முரிதல்-வளைதல்; குறுக்கி-மடக்கி) (குளகப்பாடல்)

இராவணன் அதட்டிக்கொண்டு, தனியாக நின்ற அந்த அனுமனின் மார்பில் தன்னுடைய ஒளிவீசும் பற்களை நன்றாக அழுத்திக்கொண்டு, இருபது வாய்களையும் மடித்துக்கொண்டு, இருபது கண்களினின்றும் நெருப்புப்பொறி பறக்கும்படி, தனது இருபது கைகளில் உள்ள கனமான விரல்கள் இணையுமாறு முறுக்கிக்கொண்டு, நீண்ட தோள்களை வெளியே நிமிர்த்திக் கொண்டு அனுமன் மார்பில் ஓங்கிக் குத்தினான். அவ்வாறு குத்தவும் - பாடல் தொடர்கிறது.

Koviloor Digital Library

ஒரு மற்போர் காட்சியைக் கற்போர் கண்முன் கொண்டு தருகிறான் கவிஞன். இங்கே வான்மீகம் வேறுபடுகிறது. முதலில் இராவணன்தான் குத்தினான் என்றும், பின்னர் அனுமன் குத்த, மீண்டும் இராவணன் குத்தினான் என்றும் கூறுகிறது வான்மீகம். இராவணன் இருமுறை குத்தியதாகக் கூறுகிறது வான்மீகம். உதட்டை மடித்துப் பல்லால் கடித்துக் கொள்ளுதல், தீப்பொறி பறக்க விழித்துப் பார்த்தல்; குத்துவதற்காகக் கைவிரல்களை நெருங்கச்செய்து முஷ்டியாக மடித்துக்கொள்ளுதல்; முன்கையைப் பின்னே செலுத்திக் குறுக்கிக் கொள்ளுதல்; பின்புறத்தே தோளை நிமிர்த்திக்கொள்ளுதல்; இவையெல்லாம் மற்போரின்போது நிகழும் மெய் வெளிப்பாடுகள். அவற்றை இங்கே ஒன்றன்பின் ஒன்றாக நுணுக்கமாகக் கூறியிருக்கும் கவிஞனின் போர் பற்றிய கூரிய கல்வியறிவினை நினைக. இராவணன் தனது மரக்கிளை போன்ற பெரிய கைகளையும் மடக்கியபோது திசைகளே அஞ்சி இடங்கொடுத்து வளைந்து போயின என்பது உவர்வுநவிற்சி எனக்கொள்க.

185. அனுமன் தளர்தல்

பள்ளக்கடல் கொள்ளப் படர் படி பேரினும் பதையா,
வள்ளல், பெரு வெள்ளத்து எறுழ் வலியாரினும் வலியான்,
கள்ளக்கறை உள்ளத்து அதிர்கழல் வெய்யவன் கரத்தால்
தள்ள, தளர் வெள்ளிப்பெருங்கிரியாம் எனச் சலித்தான். (7284)

(பள்ளம்-ஆழம்; படர்-படர்ந்த; படி-பூமி; பேர்தல்-இடம்விட்டுப் பெயர்தல்/நிலைகுலைதல்; பதையா-நடுங்காத; எறுழ்வலி-மிக்க வலிமை; வெய்யவன்-கொடியவன்; சலித்தல்-தளர்தல்; வள்-வளம்; அதிர்-பேரொலி; வெள்ளிப்பெருங்கிரி-கயிலாயமலை; கறை-அழுக்கு; தள்ள-குத்த)

ஆழமான கடலால் சூழப்பட்டுள்ள இந்தப் பரந்த பூமியானது நிலைகுலைந்தாலும், தான் சற்றும் நடுங்காதவனும் கருணையுள்ளம் கொண்டவனும், பெரிய வெள்ளத்தைப் போலும் மிக்கவலிமை கொண்ட எல்லோரினும் மிக்க வலிமையுடையவனுமான அனுமன், வஞ்சகச் செயல்களால் அழுக்கேறிய களங்கமுள்ள மனத்தைக் கொண்டவனும், போரொலி செய்கின்ற வீரக்கழல் அணிந்த கொடியவனுமாகிய இராவணனின் கைகளால் குத்த, முன்பு இராவணன் பெயர்த்தெடுத்ததால் தளர்ந்து போன வெள்ளியங்கிரியாகிய கயிலாயமலை தள்ளாடியது போல, அனுமனும் சற்றுத்தளர்ந்து போனான்.

Koviloor Digital Library

அனுமனை ''பள்ளக்கடல் கொள்ளப் படி பேரினும் பதையாதவன்'' என்றும், ''வள்ளல்'' என்றும், ''பெருவெள்ளத்து எறுழ் வலியாரினும் வலியான்'' என்றும் புகழ்ந்த அதே கவிஞன், இராவணனை ''கள்ளக்கறை உள்ளத்தான்'' என்றும், ''அதிர்கழல் வெய்யவன்'' என்றும் இடித்துரைத்த பாங்கு நோக்குக. கயிலாய மலைக்கு அனுமன் ஒப்பு. எறுழ்வலி என்பது ஒரு பொருட்பன்மொழி. 'வள்' என்ற சொல் வளத்தைக் குறிக்கும் என்பது நமக்குப் புதியசொல். புதியபொருள்.

186. சலித்த காலையின், இமையவர் உலகெலாம் சலித்த;
சலித்ததால் அறம்; சலித்தது மெய்ம்மொழி; தகவும்
சலித்தது; அன்றியும் புகழொடு சுருதியும் சலித்த;
சலித்த நீதியும்; சலித்தன கருணையும் தவமும். (7285)

(சலித்தல்-தளர்வுறுதல்/நடுங்குதல்; இமையவர்-தேவர்கள்; அறம்-தருமம்; மெய்ம்மொழி-வாய்மை; தகவு-மேன்மைக்குணம்/நடுவு நிலைமை; சுருதி-வேதங்கள்)

அவ்வாறு அனுமன் தளர்வுற்ற போது, வானவர் உலகமெல்லாம்கூடத் தளர்வுற்றன. தருமம், வாய்மை, மேன்மைக்குணம், நடுவுநிலைமை, முதலிய எல்லாமும் தளர்வுற்றன. இவைமட்டுமின்றி, புகழோடு கூடிய வேதங்களும், நீதிநெறிகளும், அருளும், நல்தவமும்கூடச் சலித்தன.

தளர்வு அறியாத அனுமன் தளர்வுற்றதால் அவனுடன் தொடர்புடைய அனைத்து நற்பண்புகளும், தேவர்களும், வேதமும்கூடத் தளர்வுற்றன என்பதாம். தேவர்கள் காரியமாகத்தான் அனுமன் இவ்வளவு தாக்குதல் களையும் தாங்கிக் கொள்ளுகிறான் என்பதால் தேவர்கள் மிகவும் வருந்திச் சோர்ந்தார்கள். அனுமனுடைய நற்பண்புகள் அனைத்தும் இங்கே குறிக்கப்பட்டதைக் காண்க. அறம், வாய்மை, நடுவுநிலைமை, புகழ், வேதநல்நெறி, நீதி, கருணை, நற்றவம், இவையனைத்தும் அனுமனின் குணநலன்கள். அவன் சலித்ததால் இவையனைத்தும் வருந்திச் செயலற்றன என்பதாம். 'சலித்த' என்ற சொல் அடுத்தடுத்து வந்து ஒரே பொருளைத் தந்ததால் இப்பாடல் சொற்பொருட்பின்வரு நிலையணியின் பாற்பட்டதாகும். இங்கு முன்னர் உருக்காட்டுப்படலத்தில் அனுமன் சீதாதேவியிடம் இராமபிரானது புருவத்தை வருணித்துக்கூறும் பொழுது, இத்தகைய குணங்களைக் கூறியிருப்பதை நினைத்துப் பார்க்கலாம். ''தனிக்கைச் சிலையும், வானவரும், முனிவர் குழுவும், தனி அறமும், 'இனிக்கட்டு அழிந்தது' என்று 'சுருதி ஈரிரண்டு குனிக்க' என்பது பாடல்பகுதி. இங்கேதளர்வுற்ற அனைத்துப் பண்புகளும் அங்கே மகிழ்ந்து களிக்கூத்தாடின என்று கூறும் நயமும் ஓர்க.

Koviloor Digital Library

187. வானரப்படைத் தலைவர்கள் இராவணனுடன் போர் செய்தல்

அனைய காலையின், அரிக்குலத் தலைவர், அவ்வழியோர்
எனையர் அன்னவர் யாவரும், ஒரு குவடு ஏந்தி,
நினைவின்முன் நெடு விசும்பு ஒரு வெளி இன்றி நெருங்க,
'வினைஇது' என்று அறிந்து, இராவணன் மேல் செலவிட்டார். (7286)

(அனையகாலை-அப்போது; அரி-குரங்கு/வானரம்; வழி-இடம்; வினை-செய்யத்தக்க காரியம்; குவடு-மலை; விடுதல்-வீசுதல்; எனையர்-எத்துணைபேர்; வெளி-வெற்றிடம்)

அப்பொழுது, வானரப்படைத் தலைவர்கள் அந்த இடத்தில் எத்தனை பேர் இருந்தார்களோ, அத்தனைபேரும், ஆளுக்கு ஒரு மலையைப் பெயர்த்தெடுத்துக் கையில் வைத்துக்கொண்டு, ''இப்பொழுது செய்யக் கூடிய செயல் இதுதான்''. என்று நன்கு உணர்ந்து, இராவணன் எதிர் பார்ப்பதற்கு முன்பே இமைப்பின் முன்னம், நீங்கி, பரந்த ஆகாயத்தில் ஒரு சிறிதும் வெற்றிடமே இல்லை என்று சொல்லும் வண்ணம் நெருக்கமாக, இராவணனை நோக்கி வீசியெறிந்தார்கள்.

இராவணனை இப்போது அழிக்க முடியவில்லை என்றால், பின்னால் ஒழிப்பது கடினம் என்று நன்கு உணர்ந்து, எல்லோரும் ஆளுக்கு ஒரு மலையைத் தூக்கி இராவணன்மேல் வீசியெறிந்தார்கள் என்பதாம். இதனால் அவர்கள் அனுமன்மேல் கொண்டிருந்த அன்பும், அரச விசுவாசமும் தெரியவருகிறது என்க. 'நினைவின்முன்' என்பது ஒருவரும் நினைத்துப் பார்க்கும் முன்பே என்று பொருள்தரும். மனோவேகம், வாயுவேகம் என்பதுபோல எனக்கொள்க. செயலின் விரைவு குறித்து நின்றது. 'மான் உருவாக நின்மனம் பூட்டினையோ?' என்ற ஒரு அருமையான அகநானூற்றுச் சொற்றொடர் இங்கு ஒப்பு நோக்கத்தகும்.

188. ஒத்த கையினர், ஊழியின் இறுதியின் உலகை
மெத்தமீது எழு மேகத்தின் விசும்பு எலாம் மிடைய,
பத்து நூறு கோடிக்குமேல் பனி படு சிகரம்
எத்த, மேல்செல எறிந்தனர்; பிறிந்தனர், இமையோர். (7287)

(ஒத்த-ஒருதன்மையராய்; மிடைதல்-நெருங்குதல்; சிகரம்-மலைகள்; எத்துதல்-எற்றுதல்/மோதித்தாக்குதல்; பிறிதல்-பிரிதல்/இடம்விட்டுச் செல்லுதல்; மெத்த-மிக; படு-பொருந்திய/தோய்ந்த)

ஒத்த தோள்வலியை உடைய வானரத்தலைவர்கள், ஊழியிறுதிக் காலத்தில், உலகை அழிக்கும்பொருட்டு, மேகங்கள் அடுக்கடுக்காக அமைந்து மேலே எழுந்து, ஆகாயப்பரப்பு முழுவதும் நெருங்கி மூடியிருப்பதைப்போல, ஆயிரம்கோடிக்கு மேல் எண்ணிக்கையுள்ள

Koviloor Digital Library

பனிபடர்ந்த மலைச்சிகரங்கள் இராவணனைச் சென்று தாக்கும் வண்ணம், அவன் மேலே வீசிஎறிந்தனர். மலைகள் ஆகாயத்தினிடத்தே நெருங்கிய தால் தமக்கு ஏதேனும் தீங்கு நேருமோ என்ற அஞ்சி, அங்கிருந்த தேவர்கள் அவ்விடத்தைவிட்டு அகன்று அப்பால் சென்றனர்.

எல்லாவானரப்படைத்தலைவர்களும் ஒவ்வொரு மலையைக்கையில் கொண்டிருப்பதால் 'ஒத்த கையினர்' என்றார் என்க. தம்கையிலிருந்த மலைகளை அவர்கள் ஒரே நேரத்தில் ஒருசேர வீசினார்கள் என்பது கருத்து. ஊழியிறுதிக்காலத்தில் மேகங்கள் ஒன்றோடொன்று கூடி அடுக்கடுக்காக அமைந்து மழைபொழிந்து பிரளய வெள்ளம் ஏற்படும் என்பது ஒரு நூற்கொள்கை. அது இங்கே ''ஊழியின் இறுதியின் உலகை மெத்தமீது எழுமேகம்'' எனப்பட்டது என்க. பிரிந்தனர் என்பது பிறிந்தனர் என இணை எதுகை நோக்கித் திரிந்தது. 'எற்ற' என்பது 'எத்த' என எதுகை நோக்கித் திரிந்தது.

189. தருக்கி வீசிட, விசும்பு இடம் இன்மையின், தம்மின்
நெருக்குகின்றன, நின்றன, சென்றில, நிறைந்த;
அருக்கனும் மறைந்தான்; இருள் விழுங்கியது அண்டம்;
'சுருக்கம் உற்றனர் அரக்கர்' என்று, இமையவர் சூழ்ந்தார். (7288)

(தருக்கு-செருக்கு; விசும்பு-விண்; அருக்கன்-சூரியன்; சுருக்கம்-அழிவு/தேய்வு; இமையவர்-தேவர்கள்)

இவ்வாறு வானரப்படைத் தலைவர்கள் மலைகளைச் செருக்கோடு வீசி எறியவும், ஆகாயத்தில் போதிய இடம் இல்லாமையால், அவை தமக்குள் ஒன்றோடொன்று நெருக்கிக் கொண்டு நின்றன. மேலே செல்வதற்கு வழியில்லாமையில் அங்கேயே ஆகாயத்திலேயே நிறைந்து நின்றன. அதனால், சூரியனும் தன் ஒளிக்கிரணங்கள் வெளிப்பட்டு வரமுடியாமல் மறைக்கப்பட்டான். எனவே இவ்வண்டகோளகையை இருள் சூழ்ந்து கொண்டது. இதனையறிந்த தேவர்கள், ''அரக்கர் குறைந்து அழிந்து போயினர்'' என்று கருதி முன்பு பிரிந்து போனவர்கள் அங்கு வந்து ஒன்றுகூடிச் சூழ்ந்து நின்றார்கள்.

190. ஒன்றின் ஒன்றுபட்டு உடைவன, இடித்து உரும் அதிரச்
சென்ற வன்பொறி மின்பல செறிந்திட, தெய்வ
வெண்றி வில் என விழுநிழல் விரிந்திட மேன்மேல்
கன்றி ஓடிட, கல்மழை நிகர்த்தன கற்கள். (7289)

(வன்-வலிய; செறிதல்-நெருங்குதல்; கற்கள்-மலைகள்; கன்றுதல்-தாக்குதல்)

அவ்வாறு வீசியெறியப்பட்ட மலைக்கூட்டங்கள் தம்மில் ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்டு, இடி இடிப்பது போலப் பேரொலி செய்து

Koviloor Digital Library

கொண்டு, உடைந்து உதிர்ந்து வீழ்ந்தன. அவ்வாறு விழும்போது வலிய தீப்பொறிகள் மின்னல்களைப் போல நெருங்கித் தோற்றமளித்தன. தெய்வத்தன்மையும், வெற்றியும் பொருந்திய இந்திரவில் ஆகாயத்தில் விரிந்து தோன்றி நிழல் பரப்புவதுபோல, அந்த உதிர்ந்து விழுகின்ற கற்கள் மேன்மேலும் தாக்கிச் செல்ல, ஆகாயத்திலிருந்து கல்மழை பொழிவதுபோல, அந்த மலைகளின் சிறுகற்கள் கீழே விழுந்தன.

விண் சென்ற மலைகள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டன. அதனால் இடிபோன்ற பேரொலி உண்டாகியது. அதனால் எழுந்த நெருப்புப் பொறிகள் வானில் உண்டாகும் மின்னலைப்போலவும், மலைகள் விழுகின்ற தோற்றத்தின் நிழல்கள் ஆகாயத்தில் வானவில் தோன்றுவது போலவும், ஆகாயத்தினின்று விழுகின்ற மலைகள் மேகம் கல்மழை பொழிவது போலவும் இருந்தன என்பதாம்.

191. இரிந்து நீங்கியது இராக்கதப் பெரும்படை, எங்கும்
விரிந்து சிந்தின, வானத்து மீனொடு விமானம்;
சொரிந்த வெம்பொறி பட, கடல் சுவறின; தோற்றம்
கரிந்த கண்டகர் கண்மணி; என்பல கழறி?. (7290)

(இரிதல்-நிலைகுலைந்து ஓடுதல்; சுவறுதல்-வற்றுதல்; கண்டகம்-முள்; கண்டகர்-அரக்கர்; கழறுதல்-சொல்லுதல்)

வானரர்கள் வீசியெறிந்த மலைகளின் விசையால், அரக்கர்பெரும் சேனை அஞ்சி நிலைகெட்டு ஓடலாயிற்று. வானத்திலுள்ள நட்சத்திரங் களோடு விமானங்களும், கீழே விழுந்து சிதறிப்போயின; மலைகள் ஒன்றோடொன்று மோதிக் கொண்டதால் சிந்திய வெப்பமுள்ள நெருப்புப்பொறி பட்டதனால் கடல் நீரெல்லாம் வற்றிப்போயிற்று. முள்போன்று துன்பம் செய்யும் அரக்கர்களின் கண்களின் கருமணி யெல்லாம் கரிந்த தோற்றம் உடையனவாயிற்று. இதைவிட அழிவின் மிகுதியை எப்படிச் சொல்லுவது? என்கிறான் கவிஞன்.

அரக்கர்களின் கண்கள் கரிந்துபோய் கண்ணின் மணிகள், காணும் தோற்றத்தை இழந்துபோயின என்பது கருத்து. 'கண்டகம்' என்ற சொல்லுக்கு முள் என்பது பொருள். முள் போன்று துன்பம் செய்பவர்கள் என்பதால் கண்டகர் என்பது அரக்கர்களுக்குக் காரணப்பெயர் எனக் கொள்க. இராவணனை தேவகண்டகன், ரிஷிகண்டகன் என்றும் கூறுவதுண்டு. குரங்குகள் மலைகளை வீசிப் போர்செய்த நிகழ்ச்சி கலிங்கத்துப்பரணியிலும் காணக்கிடக்கிறது. 'அணிகொண்ட குரங்கினங்கள் அலைகடலுக்கு அப்பாலை, மணல் ஒன்று காணாமல், மலையெடுத்து மயங்கினவே' என்ற கலிங்கத்துப்பரணி வரிகளும் இங்கு ஒப்பு நோக்கத்தகும்.

Koviloor Digital Library

192. இறுத்தது இன்று உலகு என்பது ஓர் திமிலம் வந்து எய்த,
கறுத்த சிந்தையன், இராவணன் அனையது கண்டான்;
ஒறுத்து, வானவர் புகழுண்ட, பாரவில் உளைய
அறுத்து நீக்கினன், ஆயிரகோடி மேல் அம்பால். (7291)

(இறுத்தல்-அழித்தல்; திமிலம்-பெரியஆரவாரம்; கறுத்த-சினம் கொண்ட; ஒறுத்தல்-துன்புறுத்துதல்; பாரம்-பெரிய/பெருமைமிகுந்த; உளைய-வருந்த)

இன்றோடு உலகம் அழிந்து போனது என்பதைப்போல ஒரு பேராரவாரம் தன் செவியில் வந்து சேர்தலும், அதைக்கேட்ட மிக்க சினம் கொண்ட மனத்தையுடையவனான இராவணன் அம்மலைகள் தன்னை நோக்கி வருவதைக் கண்டான். கண்டதும், முன்பு தேவர்களை வருத்தி, தேவர்களின் புகழையெல்லாம் வாரி எடுத்துக்கொண்ட தன் பெருமை சான்ற வில்லினை மிக நன்றாக வளைத்து, ஆயிரம்கோடி அம்புகளுக்கு மேலாகத் தொடுத்து, அம்மலைகள் எல்லாவற்றையும் அறுத்துத் தள்ளினான்.

'திமிலம்' என்ற சொல் நமக்குப் புதிது. பேராரவாரம், பேரொலி என்று பொருள்படும். 'திமில நான்மறை சேர் திருப்பெருந்துறை' என்பது திரு வாசகம். 'கறுப்பும் சிவப்பும் வெகுளிப்பொருளன' என்பது தொல் காப்பியம். முன்பு வானரர் எய்த மலைகளும் 'பத்து நூறு கோடிக்குமேல் பனிபடு சிகரம்' என்று கூறப்பட்டதை இங்கு நினைவுகூர்க. இராவணனும் ஆயிரகோடி மேல் அம்பால் அறுத்து நீக்கினன் என்றார் என்க.

193. காம்பு எலாம் கடுந்துகள் பட, களிறு எலாம் துணிய,
பாம்பு எலாம் பட, யாளியும் உழுவையும் பாற,
கூம்பல் மாமரம் எரிந்துஉக, குறுந்துகள் நுறுங்க,
சாம்பர் ஆயின தடவரை, சுடுகணை தடிய. (7292)

(தடித்தல்-துணித்தல்/அறுத்தல்; காம்பு-மூங்கில்கள்; படுதல்-இறத்தல்; உழுவை-புலி; பாறுதல்-அழிதல்; நுறுங்குதல்-நொறுங்கிப் போதல்; கூம்பல்-குவிந்துதோன்றுதல்; கடும்-சிறுதுண்டுகள்)

இராவணனது சுடுகின்ற கொடிய அம்புகள் தாக்கியதால், அம்மலை களிலிருந்த மூங்கில்கள் எல்லாம் சிறுசிறு துண்டுகளாகிப்போயின; யானைகள் எல்லாம் துண்டங்களாயின; பாம்புகள் எல்லாம் இறந்து போயின; யாளிகளும், புலிகளும் மடிந்து ஒழிந்தன; குவிந்திருந்த பெரிய மரங்கள் எல்லாம் நெருப்புப் பற்றி எரிந்து சிந்திப்போயின; சிறுசிறு துகள்களெல்லாம் நொறுங்கிப் பொடிப்பொடியாய் ஆயின. அந்தப் பெரிய மலைகள் எல்லாம் சாம்பலாகிப்போயின.

Koviloor Digital Library

துகள்பட, துணிய, பட, பாற, எரிந்துஉக, நுறுங்க, சாம்பர் ஆயின என்பதாம். அம்மலைகளிலிருந்த மூங்கில், யானை, பாம்பு, யாளி, உழுவை, மாமரம் இவையெல்லாம் அழிந்ததோடு அம்மலைகளும் சாம்பலாகிப்போயின என்பது கருத்து. 'பாறுதல்' என்ற சொல் அழிதல் என்ற பொருளில் திருவாசகத்திலும் 'பழவினைகள் பாறும் வண்ணம்' எனப்பேசப்பட்டிருப்பதும் இங்கு ஒப்புநோக்கத் தகும்.

194. 'உற்றவாறு' என்றும், 'ஒன்று நூறு ஆயிரம் உருவா
இற்றவாறு' என்றும், 'இடிப்புண்டு பொடிப்பொடி ஆகி
அற்றவாறு' என்றும், 'அரக்கனை, 'அடுசிலை கொடியோன்
கற்றவாறு' என்றும், வானவர் கைத்தலம் குலைந்தார். (7293)

(உற்றது-பட்டது; ஆறு-தன்மை/விதம்; இற்றது-பிளந்தது; இடித்தல்-மோதுதல்/தாக்குதல்; அற்றது-அழிந்தது; அடு-கொல்லுகின்ற; கைத்தலம்-கைகள்; குலைதல்-நடுங்குதல்)

''அந்த இராவணன் எய்த அம்புகள் மேலே பாய்ந்து தாக்கிய விதம் என்னே!'' என்றும், ''அந்த ஒவ்வொரு அம்புகளும் ஊடுருவிச்சென்று மலைகளை நூறாக, ஆயிராமாகப் பலவாகப் பிளந்த விதம்தான் என்னே!'' என்றும், ''அம்மலைகள் ஒன்றோடொன்று தாக்குண்டு பொடிப் பொடியாய்ப் போய் அழிந்த விதம் என்னே!'' என்றும், அவ்வரக்கன் இராவணனைக் குறித்து, பகைவரைக் கொல்லுகின்ற அம்புகளை உடைய இந்தக் கொடியவன், இந்தப் போர்முறைகளைக் கற்றுக்கொண்ட விதம்தான் என்னே!'' என்றும் பலவாறு வியந்து, தேவர்கள் தங்கள் கைகள் நடுக்கமுற்றனர்.

195. 'அடல் துடைத்தும்' என்று, அரிக்குல வீரர் அன்று எறிந்த
திடல் துடைத்தன' தசமுகன் சரம்; அவை திசை சூழ்
கடல் துடைத்தன; களத்தின் நின்று உயர்தரும் பூழி
உடல் துடைத்தன; உதிரமும் துடைத்தது, ஒண் புடவி. (7294)

(அடல்-வலிமை; துடைத்தல்-ஒழித்தல்/அழித்தல்/தூர்த்தல்/நிரப்புதல்; அரிக்குலம்-குரக்கினம்; திடல்-மலைகள்; சரம்-அம்பு; தசமுகன்-பத்து முகங்களுடைய இராவணன்; பூழி-புழுதி; ஒண்புடவி-சிறந்த பூமி; ஒண்-ஒளி; புடவி-பூமி; ஒண்புடவி-ஒளிமிக்க பூமி)

''அரக்கனான இராவணனின் வலிமையை அழித்துவிடுவோம்'' என்று சபதம் மேற்கொண்டு, குரக்கினப் படைத்தலைவர்கள் அன்று வீசியெறிந்த மலைகள் எல்லாவற்றையும் இராவணனுடைய அம்புகள் அழித் தொழித்து விட்டன; அவ்வாறு அறுக்கப்பட்ட மலைகளினின்றும் எல்லாத் திசைகளிலும் கீழே உதிர்ந்து விழுந்த கற்றுகள்கள் கடலைத் தூர்த்துவிட்டன; போர்க்களத்தினின்றும் எழுந்த புழுதியெல்லாம்

Koviloor Digital Library

அவ்வரக்க வீரர்களின் உடல்களையும் நிறைத்துவிட்டன. அவர்கள் உடலினின்றும் வெளிப்போந்த இரத்த வெள்ளமும் ஒளிமிக்க சிறந்த பூமியை நிரப்பிவிட்டது.

'துடைத்தல்' என்ற ஒரே சொல் அடுத்தடுத்து ஒரே பொருளில் கையாளப்பட்டிருப்பதால் இப்பாடல் சொற்பொருட் பின்வரு நிலையணி யின் பாற்படும். அளவற்ற மலைகள் அறுக்கப்பட்டுப் பொடிப்பொடியாகி அவை போர்க்களத்தில் விழுந்ததால், அவை இரத்த வெள்ளத்தில் படிந்து கடலை உலரச்செய்து விட்டது என்பது கருத்து.

196. இராவணன் அம்புமழை பொழிதலும், வானரர் நிலைகுலைதலும்

''கொல்வென் இக்கணமே மற்று இவ்வானரக் குழுவை;
வெல்வென் மானிடர் இருவரை'' எனச் சினம் வீங்க
வல்வன் வார்சிலை பத்து, உடன் இடக்கையின் வாங்கி,
தொல் வன் மாரியின் தொடர்வன, சுடுசரம் துரந்தான். (7295)

(வீங்க-பொங்க; வல்வன்-மிக்க வலிமையுள்ள; வார்சிலை-நீண்டவில்; வாங்கி-வளைத்து; தொல்-பழமையான ஊழியிறுதிக் காலம்; மாரி-மழை; துரத்தல்-செலுத்துதல்)

இராவணன், ''இப்பொழுதே இந்த வானரக்கூட்டத்தை அழிப்பேன்; அழித்துப் பின்னர், அந்த மானிடர் இருவராகிய இராம இலக்குவரையும் போரில் வெற்றிகொள்வேன்;'' என்று, மிக்க சினம் பொங்கச் சூளுரைத்து, மிக்க வலிமையான நீண்ட விற்கள் பத்தினைத் தன் இடக்கைகளில் தாங்கி வளைத்து, பழமையான ஊழியிறுதிக்காலத்தில் பெய்யும் வலிய மழையைப் போலத் தொடர்ந்து இடைவிடாது, கொதிக்கின்ற கணைகளைத் தொடுத்துச் செலுத்தலானான்.

''முதலில் வானரச்சேனையை அழித்துப் பின்னர், மானிடர் இரு வரையும் போர்செய்து வெல்லுவேன்'' என்றதனால், இராம இலக்கு வரைக் கொல்ல வேண்டுவது அவன் நோக்கமல்ல என்பது விளங்குகிறது. 'வல்வன்சிலை' என்பது ஒரு பொருட்பன்மொழி; அவனுக்கு இருபது கைகள் இருப்பதால், ஒரே சமயத்தில் பத்து விற்களைப் பத்து இடக்கைகளில் தாங்கிக்கொண்டு, தொடுத்துச் செலுத்த முடிந்தது என்பது அறிக. அம்பை ஊழிக்கால மழைபோலத் தொடர்ந்து செலுத்தினான் என்பதால் அம்புமழைக்கு ஊழிக்கால மழை உவமை எனக்கொள்க. 'இக்கணமே இக்குழுவைக் கொல்வென்' என்பது எள்ளல் குறிப்பு. வானரப்படை மிகச்சிறியது, இதனைக் கொல்லமிக நீண்டநேரம் தேவையில்லை ஒரு கணம்போதும் என்பதைக் குறிப்பது எனக்கொள்க.

Koviloor Digital Library

197. 'அய் இரண்டு கார் முகத்தினும், ஆயிரம் பகழி,
கய்கள் ஈர்ஐந்தினாலும், வெங்கடுப்பினில் தொடுத்துற்று,
எய்ய, எஞ்சின, வானமும் இருநில வரைப்பும்;
மொய்கொள் வேலையும் திசைகளும், சரங்களாய் முடிந்த. (7296)

(கார்முகம்-வில்; பகழி-அம்பு; கடுப்பு-விரைவு; இரு-பெரிய; நில வரைப்பு-நிலவுலகு; மொய்-வலிமை; வேலை-கடல்; எஞ்சுதல்-மிகுதல்; முடிந்த-காட்சியளித்தன)

இராவணன் அந்தப் பத்து விற்களிலும், ஆயிரம் அம்புகளைப் பத்துக்கைகளினாலும் மிக்க விரைவாகத் தொடுத்துச் செலுத்தவும், அதனால் ஐந்து பூதங்களிலும் மிக்கப் பரவியுள்ளதான ஆகாயமும், பெரிய நிலப்பரப்பும், வலிமைமிக்க கடலும், எட்டுத்திசைகளும் எங்கும் அம்புகளாகவே தோற்றமளித்தன.

ஆகாயம், நிலம், கடல், திசைகள் என்று தனித்தனியாகப் பிரித்துப் பார்க்கமுடியவில்லை. எல்லா இடங்களிலும் அம்புகளே தோற்ற மளித்தன என்பதாம். 'ஐ' என்பது 'அய்' எனவும் 'கை' என்பது 'கய்' எனவும் எதுகை நோக்கி இரு இடங்களிலும் திரிந்தது. 'எஞ்சின' என்பது இங்கே, மற்ற நான்கு பூதங்களையும் கடந்து நின்றது என ஆகாயத்தைக் குறிக்கும். 'கடுப்பு' என்ற சொல் விரைவைக் குறிக்கும். இங்கே 'வெங்கடுப்பு' என்ற சொல் மிக்க விரைவினைக் குறிக்கும்.

198. அந்தி வானகம் ஒத்தது அவ்வமர்க்களம்; உதிரம்
சிந்தி, வேலையும் திசைகளும் நிறைந்தன; சரத்தால்
பந்தி பந்தியாய் மடிந்தது வானரப் பகுதி;
வந்து மேகங்கள் படிந்தன, பிணப்பெரு மலைமேல். (7297)

(அந்திவானகம்-செவ்வானம்/செக்கர்வானம்; பந்தி-வரிசை; பகுதி-சேனை)

இரத்தம் சிந்தப்பட்டதால், அந்தப் போர்க்களம், அந்தியில் தோன்றும் செவ்வானத்தைப் போல் காட்சியளித்தது. கடலும் திசைகளும் அம்பு மழையால் நிறைந்துபோயின; அம்பு மழையினால், வானரச்சேனை வரிசைவரிசையாய் மடிந்து விழலாயின, அந்தப் பிணமாகிய பெரிய மலையின்மேல் மேகங்கள் வந்து படியத் தொடங்கின.

இராவணன் செலுத்திய அம்பு மழையால் வானரச்னேைகள் வரிசைவரிசையாய் மடிந்தன. எனவே அவற்றின் உதிரத்தால் போர்க் களமே செவ்வானம் போலத் தோற்றமளித்தது. அங்கு குவிந்துகிடந்த வானரங்களின் பிணக்குவியல்கள் மலைபோலத் தோற்றமளித்தன. அதை மலைதான் என்று கருதிய மேகங்கள் அவற்றில் வந்து தங்கலாயின. பிணக்குவியலை மேகங்கள் மலை என மயங்கிப் படிந்ததால் இப்பாடல்

Koviloor Digital Library

மயக்க அணியின் பாற்படும். பகலும், இரவும் சந்திக்கும் நேரம் மாலைச் சந்தி என்றும், இரவும் பகலும் சந்திக்கும் நேரம் காலைச் சந்தி என்றும் வழங்கப்படும். 'பந்தி பந்தியாய்' என்ற அடுக்கு சேனையின் மிகுதியைக் குறித்தது. பகுதி என்பது சேனையைக் குறிக்கும். 'சேனை, பகுதி, பாடி, பலம் படை' என்பது பிங்கல நிகண்டு. 'பிணப்பெருமலை' என்பது உருவகம். பிணக்குவியலைப் பெருமலையாக உருவகித்தார் என்க.

199. நீலன் அம்பொடு சென்றிலன்; நின்றிலன் அனிலன்;
காலனார் வயத்து அடைந்திலன், ஏவுண்ட கவயன்;
ஆலம் அன்னதோர் சரத்தொடும் அங்கதன் அயர்ந்தான்;
சூலம் அன்னதோர் வாளியால், சோம்பினன் சாம்பன். (7298)

(ஏ-அம்பு; உண்ட-தாக்கப்பெற்ற; காலனார்-இயமன்; ஆலம்-நஞ்சு; அயர்தல்-சோர்ந்துபோதல்; சோம்புதல்-செயலற்றுப்போதல்; செல்லுதல்-நடத்தல்)

இராவணன் செலுத்திய அம்புக் கூட்டத்தினால், நீலன் நடக்க முடியாதவனாய்ப் போனான்; அனிலன் நிற்க முடியாதவனாய்ப் போனான். அம்பினால் தாக்குண்ட கவயன், இன்னும் இயமன் வசம் ஆகவில்லை, மூர்ச்சித்துக் கிடந்தான். எப்பொழுது போவான் என்பது தெரியவில்லை. நஞ்சு போன்ற கொடிய விஷமுடைய அம்பினால் தாக்கப்பட்டு அங்கதன் சோர்ந்து போய்க்கிடந்தான்; சூலப்படை போன்றதோர் அம்பினால் தாக்கப்பட்ட, கரடிகளின் அரசனான சாம்பவன் சோர்ந்து போய்ச் செயலற்றுக் கிடந்தான்.

இராவணன் அம்பினால், வானரப்படைத் தலைவர்களான, நீலன், அனிலன், கவயன், அங்கதன், சாம்பன் முதலியோர்க்கு ஏற்பட்ட துன்பநிலை விளக்கப்பட்டது.

200. வானரர் மடிவதைக் கண்ட இலக்குவன் சினந்து எழுதல்

மற்றும் வீரர்தம் மருமத்தின் அயில் அம்பு மடுப்ப,
கொற்ற வீரமும் ஆண்தொழில் செய்கையும், குறைந்தார்;
சுற்றும் வானரப் பெருங்கடல் தொலைந்தது, தொலையாது
உற்று நின்றவர் ஓடினர்; இலக்குவன் உருத்தான். (7299)

(மருமம்-மார்பு/உயிர்நிலை; அயில்-கூரிய; மடுத்தல்-பாய்தல்; கொற்றம்-வெற்றி; தொலைதல்-அழிதல்; உருத்தல்-சினம்கொள்ளுதல்; குறைதல்-தேய்தல்)

மற்றுமுள்ள வானர வீரர்களின் மார்பில், இராவணன் செலுத்திய கூரிய அம்புகள் பாய்ந்ததனால், வானரவீரர்களுடைய, வெற்றி பொருந்திய வீரமும், ஆண்மைக்குரிய செயல்களும் தேயத் தொடங்கின. போர்க்

Koviloor Digital Library

களத்தைச் சுற்றி நின்ற பெரிய கடலான வானரச்சேனை முற்றும் அழிந்துபோனது, அழியாது உயிரோடு நின்றிருந்த சில வானர வீரர்கள் அச்சம் கொண்டு, களத்தை விட்டு ஓடலானார்கள். இதனைக் கண்ட இலக்குவன் மிகுந்த சீற்றம் கொண்டான்.

'மருமம்' என்பது மார்பு என்ற பொருளில் முன்னரும் கையாளப் பட்டிருப்பதைக் கருதுக. 'தொழில்செய்கை' என்பது ஒரு பொருட் பன்மொழி. அல்லது மீ மிசைச் சொல் எனக்கொள்க. 'குறைதல்' என்பது தேய்ந்து பின் அழிதலைக் குறிக்கும். வானரப் பெருங்கடல் என்பது உருவகம்.

201. இராவணன் அம்புகளை இலக்குவன் அறுத்தல்

நூறுகோடிய, நூறு நூறாயிர கோடி,
வேறு வேறு எய்த சரம்எலாம், சரங்களால் விலக்கி,
ஏறு சேவகன் தம்பி, அவ்விராவணன் எடுத்த
ஆறு நாலு வெஞ்சிலையையும், கணைகளால் அறுத்தான். (7300)

(ஏறு-உயர்கின்ற; எடுத்த-ஏந்தியிருந்த; ஆறுநாலு-பத்து; கணை-அம்பு; சேவகன்-வீரன்/இராமபிரான்; ஏறு-விடை/ரிஷபம்/எருது; விலக்கி-அகற்றி)

நூறு கோடி என்ற எண்ணிக்கையுள்ளனவும், நூறுலட்சம் கோடி என்ற கணக்குள்ளனவுமான தனித்தனியாக அரக்கர் செலுத்திய அம்புகளை யெல்லாம், மேன்மேலும் வளர்கின்ற, வீரத்தை உடைய வீரனான இராமபிரானுடைய தம்பியாகிய இலக்குவன், தன் அம்புகளால் விலக்கி அகற்றி, மேலும் அந்த இராவணன் தனது பத்துக்கைகளிலும் கொண்டிருந்த பத்துக் கொடிய அம்புகளையும், தனது அம்புகளால் சிதைத்து, அறுத்து எறிந்தான்.

முன்பு 'ஐ இரண்டு' கார்முகம் என்று குறிப்பிட்டதை, இங்கு 'ஆறுநாலு' என்று குறிப்பிட்ட நயம் நோக்குக. 'சேவகன்' என்ற சொல் வீரன் என்ற பொருளிலேயே எல்லா இடத்திலும் கையாளப்பட்டிருப்பதை உணர்க. 'தேவதேவன், மெய்ச் சேவகன், தென் பெருந்துறை நாயகன்' என்பது திருவாசகம். பொதுவாகப் போர் செய்பவர்கள் தொடர்ந்து போர்செய்து கொண்டிருந்தால் அவர்கள் வீரமும், வலிமையும் குறையும் என்பது நாம் முன்பு அறிந்ததே. அதற்கு மாறாக, கவிஞன் இங்கே இராமபிரானும் இலக்குவனும் தொடர்ந்து போர்செய்து கொண்டிருந்ததால் அவர்கள் வலிமையும், ஆற்றலும் மேன்மேலும் மிகும் என்ற பொருள்பட 'ஏறு சேவகன்' என்று தனித்துச் சிறப்பித்தார் என்க.

Koviloor Digital Library

202. ஆர்த்து வானவர் ஆவலம் கொட்டினர்; அரக்கர்
வேர்த்து, நெஞ்சமும் வெதும்பினர்; வினைஅறு முனிவர்
தூர்த்து, நாள்மலர் சொரிந்தனர்; இராவணன், தோளைப்
பார்த்து உவந்தனன்; குனித்தது வானரம் படியில். (7301)

(ஆவலம்-வாய்; அறுத்தல்-நீக்குதல்; நாள்-அன்றலர்ந்த/புதிய; தூர்த்தல்-நிரப்புதல்; குனித்தல்-துடித்தல்/வளைத்தல்; படி-தரை)

இலக்குவன் இவ்வாறு, அரக்கர்களும், இராவணனும் செலுத்திய அம்புகளையெல்லாம் அறுத்தெறிந்ததைக் கண்ட வானவர்கள் மகிழ்ச்சியால், ஆர்ப்பரித்து வாய் கொட்டலானார்கள்; அரக்கர்கள் இதனைக் கண்டு உடல் வியர்த்து, உள்ளம் கொதிக்கலானார்கள். நல்வினை, தீவினை ஆகிய இருவினைகளையும் வென்றவர்களான முனிவர்கள், அன்றலர்ந்த புதிய மலர்களை இலக்குவன்மேல் தூவிப் போர்க்களத்தை நிறைத்தார்கள். பகைவனான இராவணன்கூட, இலக்குவனின் தோள்களைப் பார்த்துப் பூரித்துப் போனான். வானரச்சேனையோ தரையில் குதித்துக் கூத்தாடியது.

பகைவன் என்றாலும் இராவணன் சுத்த வீரன். எனவே இலக்குவன் தோள் ஆற்றல் கண்டு வியப்பும், உவகையும் அடைந்தான் என்றார் என்க. இலக்குவன் வீரச்செயலைக் கண்டு விண்ணும், மண்ணும் மகிழ்ந்தது போலவே, பகைவனான இராவணனும் மகிழ்ந்தான் என்பதாம்.

203. இராவணன் இலக்குவனைப் பாராட்டுதல்

''நன்று போர்வலி; நன்று போர் ஆள்வலி; வீரம்
நன்று, நோக்கமும் நன்று, கைக்கடுமையும் நன்று;
நன்று கல்வியும்; நன்று நின் திண்மையும் நலனும்''
என்று கைம்மறித்து, இராவணன், 'ஒருவன் நீ' என்றான். (7302)

(ஆள்-கையாளும் திறமை; நோக்கம்-வீரப்பார்வை; கடுமை-விரைவு; கல்வி-பயிற்சி; திண்மை-ஆண்மை/மனஉறுதி; நலன்-அழகு; மறித்தல்-அசைத்தல்; ஒருவன்-ஒப்பற்றவன்)

இராவணன் இலக்குவனை நோக்கி, ''நீ செய்கின்ற போரின் ஆற்றல் நன்றாயிருக்கிறது. நீ போரை மேற்கொண்டு ஆள்கின்ற திறமை நன்றாயிருக்கிறது; என்னை எதிர்க்கும் உன்னுடைய வீரப்பாடு நன்றாகவே இருக்கிறது; நீ போர் குறித்துக் கொண்டிருக்கின்ற நோக்கமும், உன் சினப்பார்வையும்கூட நன்றாயிருக்கிறது; நீ வில்லைத் தொடுத்து அம்பை விடுக்கின்ற விரைவும் மிக நன்றாக இருக்கிறது; நீ பயின்ற படைக்கலப் பயிற்சியும் தேர்ச்சியுற்றதாய் நன்றாய் இருக்கிறது; உன்னுடைய மனஉறுதியும், நீ போர்செய்யும் அழகும் என்னைக் கவரும் வண்ணம்

Koviloor Digital Library

நன்றாய் இருக்கிறது'' என்று தனது கைகளை அசைத்து, 'நீ ஒரு ஒப்பற்ற வீரன்' என்று வியந்து, புகழ்ந்து, மனந்திறந்து பாராட்டினான்.

பகைவனுடைய, உடல், உள்ள, கை அசைவுகளையெல்லாம் எவ்வளவு உன்னிப்பாகக் கவனித்திருக்கிறான் இராவணன் என்பது தெரியவருகிறது. இதேபோல் இலக்குவன் தமையனான இராமபிரானை, இராவணன் இளவலான கும்பகருணன் பாராட்டப் போவதையும் நாம் பின்னால் காணப்போகிறோம். வீரரை யார் வியவாதார்?

204. "கானின் அன்று இகல் கரன் படை படுத்த அக்கரியோன்
தானும், இந்திரன் தன்னை ஓர் தனுவலம் தன்னால்
வானில் வென்ற என் மதலையும், வரிசிலை பிடித்த
யானும் அல்லவர், யார் உனக்கு எதிர்?" என்றும் இசைத்தான். (7303)

(கான்-காடு; படுத்தல்-அழித்தல்; கரியோன்-இராமபிரான்; தனு-வில்; மதலை-மகன்/இந்திரசித்து; வரி-கட்டமைந்த; எதிர்-நிகர்; இகல்-மாறுபாடு; பிடித்த-கைக்கொண்டுள்ள)

''முன்பு தண்டக வனத்தில் உங்களோடு மாறுபட்ட பகைகொண்டு போர்செய்த கரனின் படையையெல்லாம் அழித்தொழித்த அந்தக் கரிய நிறத்தவனான இராமனும், இந்திரனைத் தன்னுடைய ஒரே ஒப்பற்ற வில்லின்வலிமையால் விண்ணில் வெற்றிபெற்ற என்னுடைய மகனான இந்திரசித்துவும், கட்டமைந்த விற்படையைக் கையிலேந்திய இராவணனாகிய நானும் அல்லாது, வேறுயார் உன் போர்த் திறமைக்கு நிகராவார்?'' என்றும் இராவணன் இலக்குவனின் போர்த்திறமையைப் பாராட்டுகிறான்.

இராமனும், இந்திரசித்துவும், இராவணனும், இலக்குவனும் ஒத்த போர்த்திறமை படைத்தவர்கள் என்று இராவணன் தானே நிறுவுவதை நோக்குக. அரக்கர்படையினர் பல்வேறு ஆயுதங்களையும், படைக்கலன் களையும் கொண்டிருந்தாலும், இங்கு இந்திரசித்தின் வில்லாற்றலும், இராவணனின் வில்லாற்றலும் மட்டுமே பேசப்படுவதையும் உணர்க.

205. இரா்வணன் வேற்படையை இலக்குவன் மீது செலுத்துதல்

'வில்லினால் இவன் வெலப்படான்' எனச் சினம் வீங்க
'கொல்லும் நாளும் இன்று இது'' எனச் சிந்தையில் கொண்டான்,
பல்லினால் இதழ் அதுக்கினான்; பருவலிக் கரத்தால்
எல்லின் நான்முகன் கொடுத்தது ஓர் வேல் எடுத்து எறிந்தான். (7304)

(வீங்க-மிக/பெருக; சிந்தை-மனம்; இதழ்-உதடு; அதுக்குதல்-கடித்தல்; நான்முகன்-பிரமதேவன்; எல்-ஒளி)

Koviloor Digital Library

இராவணன், இந்த இலக்குவனை விற்படையினால் வெல்ல முடியாது என்ற தீர்மானித்துக் கொண்டு மிக்க சினம் பொங்க ''இன்றே இவனைக் கொன்று விடவேண்டும், அதற்கு ஏற்ற காலமும் சூழ்ச்சியும், கருவியும் இதுதான்'' என்று மனத்தில் நினைத்துக் கொண்டு, தன் பற்களினால் உதடுகளைக் கடித்துக்கொண்டு, பருத்த வலிய கைகளால், ஒளிமிக்க பிரமதேவன் தந்தருளிய ஒப்பற்ற வேற்படையை எடுத்து இலக்குவன் மீது வீசி எறிந்தான்.

வில்லாற்றலில் தன்னைவிட இலக்குவன் மேம்பட்டவன் என்பதை நன்கு உணர்ந்து கொண்டான் இராவணன். எனவேதான் சினம் பொங்கியது, விற்படையைத் தவிர்த்து வேற்படையைச் செலுத்தலே சரியாகும் என்று கருதி நான்முகன் தந்த வேற்படையைச் செலுத்தினான் என்பதாம். 'பல்லினால் இதழ் அதுக்குதல்' என்பது சினத்தின் மெய் வெளிப்பாடு. 'பல்லாலே இதழதுக்கும் கொடும்பாவி' என்று பின்னால் வீடணன் சூர்ப்பணகையைப் பற்றிப் பேசப்போவதும் இங்கு ஒப்புநோக்கத் தகும்.

206. இலக்குவன் அயர்ந்து போதல்

எறிந்த காலவேல், எய்த அம்பு, யாவையும் எரித்துப்
பொறிந்து போய் உக, தீ உக, விசையினின் பொங்கி,
செறிந்த தாரவன் மார்பிடைச் சென்றது; சிந்தை
அறிந்த மைந்தனும், அமர் நெடுங்களத்திடை அயர்ந்தான் (7305)

(காலன்-இயமன்; விசை-விரைவு; செறிந்த-நெருங்கிய; தார்-மாலை; மைந்தன்-இலக்குவன்; அயர்தல்-மறத்தல்/மயக்கமுறுதல்; எரித்து-தீய்த்து)

அவ்வாறு, இயமனைப் போன்று கொல்லும் தன்மைவாய்ந்த வேற்படையை இராவணன் செலுத்தவும், இலக்குவன்மேல் எய்த அம்புகள் எல்லாம் தீய்ந்து பொறிப்பொறியாய்ச் சிந்திப் போனது. நெருப்புச் சிந்துமாறு, விரைவாகச் சென்று, நெருங்கிய மலர்களால் தொடுக்கப்பெற்ற மாலையணிந்த இலக்குவன் மார்பிற் சென்று வேற்படை பாய்ந்தது. அவ்வேலின் தெய்வீகத் தன்மையை நன்கு மனத்தால் உணர்ந்த இலக்குவனும், அப்பெரும் போர்க்களத்திடை தன் நிலைமறந்து செய்வதறியாது செயலற்று மூர்ச்சித்து வீழ்ந்தான்.

காலவேல் என்பது இராவணனுடைய வேற்படையின் வலிமையைக் குறித்தது.

Koviloor Digital Library

207. இரியலுற்றது வானரப் பெரும்படை; இமையோர்
பரியலுற்றனர் உலைந்தனர்; முனிவரும் பதைத்தார்;
விரிதிரைக் கடற்கு இரட்டி கொண்டு ஆர்த்தனர் விரவார்;
திரிகை ஒத்தது மண்தலம்; கதிர்ஒளி தீர்ந்த. (7306)

(இரியலுறுதல்-நிலைகெட்டு ஓடுதல்; இமையோர்-தேவர்கள்; பரியல்-வருந்துதல்; பதைத்தல்-துடித்தல்; விரவார்-பகைவர்; இரட்டி-இருமடங்கு; மண்தலம்-பூமி; கதிர்-சூரியன்; உலைதல்-வருந்துதல்; திரிகை-சக்கரம்)

இலக்குவன் அயர்ந்து வீழ்ந்தது கண்டு, வானரப் பெருஞ்சேனை நிலை கெட்டு ஓடலாயிற்று; தேவர்கள் மிகவும் வருத்தமுற்றனர்; முனிவர்களும் மிகவும் வருந்தித் துடித்தனர்; பகைவர்களாகிய அரக்கர்கள் மகிழ்ச்சியால், விரிந்த அலைகளையுடைய கடலின் ஓசையைப் போல இருமடங்கு ஓசையுடன்ஆரவாரம் செய்யலாயினர்; அந்த அதிர்ச்சியால் பூமியும் சக்கரம் போலச் சுழல்வதாயிற்று; சூரியனும் ஒளி நீங்கப்பெற்றான்.

'திரிகை' என்பது, குயவன் மண்பாண்டம் செய்வதற்கு உதவும் சக்கரம் போன்ற திரிகையைக் குறித்தது. திரிகை சுழல்வதுபோல பூமி சுழன்றது என்பதாம்.

208. இராவணன் இலக்குவனைத் தூக்க முயற்சித்தல்

'அஞ்சினான்அலன்; அயன்தந்த வேலினும் ஆவி
துஞ்சினான்அலன்; துளங்கினான்', என்பது துணியா,
'எஞ்சுஇல் யாக்கையை எடுத்துக்கொண்டு அகல்வென்' என்று எண்ணி,
நஞ்சினால் செய்த நெஞ்சினான், பார்மிசை நடந்தான். (7307)

(அயன்-பிரமன்; துஞ்சுதல்-நீங்குதல்/இறத்தல்; துளங்குதல்- சோர்வுறுதல்; துணியா-துணிந்து; எஞ்சுஇல்-வலிமை குன்றாத; யாக்கை-உடம்பு; பார்-பூமி; எஞ்சுதல்-குறைதல்)

''நான் செலுத்திய பிரமதேவன் வேற்படைக்கும் இந்த இலக்குவன் அஞ்சவில்லை; உயிரும் போகவில்லை; எனினும் சற்றுத் தளர்ந்திருக் கிறான்; அவ்வளவே'' என்று தெளிவாக உணர்ந்து, வலிமைகுறையாத இவனது உடம்பை எடுத்துக் கொண்டு இப்பொழுது இலங்கைக்குள் செல்வேன் என்று மனத்துள் கருதி, கொடிய விஷத்தாலேயே செய்யப் பட்ட நெஞ்சை உடையவனாகிய அரக்கன் இராவணன், பூமிமேல், நடந்து, இலக்குவன் கிடந்த இடத்திற்கு வந்தான்.

இலக்குவன் அயன் படைக்கும் இறவாது சோர்ந்து கிடந்ததை, முன்பு அனுமன் பிரமாஸ்திரத்திற்கு இறவாது அடங்கிக் கிடந்தமையை ஒப்புமையாக நோக்குவது பொருத்தமுடையதாகும். 'நஞ்சினால் செய்த

Koviloor Digital Library

நெஞ்சினான்' என்பது ஒரு பொருள் பொதிந்த அருமையான சொற்றொடர். இராவணன் கொடிய மனத்தன் என்பது புலப்படுத்தப்படுகிறது.

209. உள்ளி, வெம்பிணத்து உதிரநீர் வெள்ளத்தின் ஓடி,
அள்ளி அம்கைகள் இருபதும் பற்றி, பண்டு அரன்மா
வெள்ளிஅம்கிரி எடுத்தது வெள்கினான் என்ன,
எள்இல் பொன்மலை எடுக்கல் உற்றான் என, எடுத்தான். (7308)

(உள்ளி-நினைந்து; வெம்-கொடிய; பண்டு-முன்பு; அரன்-சிவ பெருமான்; மா-பெரிய; வெள்குதல்-வெட்கமடைதல்; எள்இல்-இகழ்ச்சி இல்லாத; உறுதல்-தொடங்குதல்)

அவ்வாறு இலக்குவனை எடுத்துக்கொண்டு போவோம் என்று எண்ணிய இராவணன், கொடிய தோற்றமுடைய பிணங்கள் கிடப்பதால் அவற்றினின்றும் சிந்திய இரத்த வெள்ளத்தின் ஊடே ஓடிச்சென்று, தனது இருபது அகங்கைகளாலும், இலக்குவனைப் பற்றி எடுக்கத் தொடங்கினான், முன்பு சிவபெருமான் வீற்றிருக்கின்ற சிறந்த வெள்ளி மலையைப் பெயர்த்தெடுத்தற்காக இப்பொழுது வெட்கமுற்று, அந்த வெள்ளி மலையினும் உயர்ந்த இந்தப் பொன்மலையாகிய இலக்குவனது உடலை, குற்றமற்ற இகழ்தல் இல்லாத ஒரு பொன் மலையைப் பெயர்த்தெடுப்பது போலத் தூக்க முற்பட்டான்.

இலக்குவன் பொன்நிறத்தவன். அவன் கீழே கிடந்தது ஒரு பொன் மலை-மேருமலை கீழே கிடந்ததுபோல இராவணனுக்குத் தோன்றியது. முன்பு சிவபெருமான் வீற்றிருந்த வெள்ளிமலையைப் பெயர்த்தெடுத்தது மிகவும் இகழ்ச்சிக்குரியது என்று எண்ணி வெட்கமுற்று, அந்த வெட்கம் நீங்க இந்த இலக்குவனாகிய பொன்மலையை இப்போது பெயர்த்தெடுக்க முற்பட்டான் என்பதாம். பொன்னினும் வெள்ளி தாழ்வுற்றதுதானே? பொன்மலையை எடுக்கமுடியாது, ஒரு வெள்ளிமலையை எடுத்ததற்காக நாணினான் என்பதாம். ''புயலைப்பற்றும் அவ்வெங்கரி போக்கி, ஓர் முயலைப்பற்றுவது என்ன முயற்சியோ?'' என்று முன்னர் கூறியதையும் இங்கு நினைக.

210. இராவணன் இலக்குவனை எடுக்க முடியாமல் தவித்தல்

அடுத்த நல் உணர்வு ஒழிந்திலன், அம்பரம் செம்பொன்
உடுத்த நாயகன் தான் என உணர்தலின்; ஒருங்கே,
தொடுத்த எண்வகை மூர்த்தியைத் துளக்கி, வெண்பொருப்பை
எடுத்த தோள்களுக்கு எழுந்திலன், இராமனுக்கு இளையான். (7309)

(நாயகன்-திருமால்; உணர்தல்-நினைத்திருத்தல்; அடுத்த-பொருந்திய; ஒழிதல்-நீங்குதல்; தொடுத்தல்-வரிசைப் படுத்துதல்; துளக்கி-அசைத்து;

Koviloor Digital Library

வெண்பொருப்பு-வெள்ளிமலை/கையிலயங்கிரி; அம்பரம்-ஆடை; எண்வகை மூர்த்தி-சிவபெருமான்)

இராமபிரானுக்கு இளையவனான இலக்குவன், தன்னுள் பொருந்திய நல்உணர்வுகள் நீங்காதவனாய், செம்பொன்னாலாகிய பட்டுப் பீதாம்பரத்தை ஆடையாக அணிந்துள்ள திருமாலே, தான் என்ற முழு உணர்வுடன் செயலற்றுக் கிடந்தான். அப்போது எட்டுவகையான மூர்த்தங்களையும் ஒருசேரத் தன்னுள் வைத்திருப்பவனான சிவபெருமான் அமர்ந்திருந்த வெள்ளியங்கிரியை அசைத்துப் பெயர்த்தெடுத்த இராவணனின் வலிமைமிக்க தோள்களுக்கு, இலக்குவன் எடுக்க முடியாதவன் ஆனான்.

எல்லாம் தானே என்ற அகங்காரம் கொண்டவன் இராவணன். எல்லாம் திருமாலே என்ற நல்லுணர்வு கொண்டவன் இலக்குவன் என்பதையும், அதனால்தான் வெள்ளிப் பொருப்பை எடுத்த தோள்களையுடைய இராவணனுக்குப் பொன் பொருப்பைத் தூக்க இயலவில்லை என்பதையும்கவிஞன்குறிப்பால் உணர்த்துவதை அறிக. அம்பரம்-ஆடை; பீதாம்பரம்-பட்டாடை/பொன்னாடை; திகம்பரம்-திக்குகளையே ஆடையாக உடுத்துகின்ற ஈசன்; திகம்பரர்-ஆடையே அணியாதவர்கள் என்ற வேறுபாட்டை உணர்க. எண்குணத்தான்-எட்டுவடிவத்தான்/ அஷ்டமூர்த்தி சிவபெருமான் - எட்டுவடிவங்களாவன; ஐம்பூதங்கள் சூரிய, சந்திரர்கள் இயமானன் என்னும் யாக கர்த்தா என எட்டு மூர்த்தங்கள் என்க. இந்த எட்டுப் பொருள்களையும் சிவபெருமான் தன் திருமேனியாக உடையவன் என்பது ஒருபொருள். திருமால் பீதாம்பரம் அணிபவன் என்பதை 'பீதக ஆடைப்பிரானார்' என்பதாலும், அது செம்பொன் நிறத்தது என்பதை 'அந்திபோல் நிறத்து ஆடையும்' என்பதாலும் தெளியலாம். 'இருநிலனாய், தீயாகி, நீருமாகி, இயமானனாய், எரியும், காற்றுமாகி, அருநிலைய திங்களாய், ஞாயிறாகி, ஆகாசமாய், அட்ட மூர்த்தியாகி'' என்பது அப்பர்தேவாரம். இலக்குவனும் திருமாலின் ஒரு கூறே என்பது இங்கு புலப்படுத்தப்பட்டது எனக்கொள்க. தியானிக்கப்பட்ட பொருளின் பெருமையால், தியானித்தவரும் பெருமையடைவர். 'பிரிப்பின்றித் தானே உலகாம், தமியேன் உளம் புகுதல், யானே உலகு என்பன் இன்று' என்பது சிவஞானபோதம். 'இருசுடரோடு இயமான், ஐம்பூதம் என்று எட்டுவகையும் உயிரும் யாக்கையுமாய்க் காட்டி நிற்போனும்' என்பது மணிமேகலை.

211. தலைகள் பத்தொடும் தழுவிய தசமுகத் தலைவன்
நிலைகொள் மாக்கடல் ஒத்தனன்; கரம்புடை நிமிரும்
அலைகள் ஒத்தன; அதில் எழும் இரவியை ஒத்தான்,
இலைகொள் தண்துழாய் இலங்குதோள் இராமனுக்கு இளையான். (7310)

Koviloor Digital Library

(புடை-இடம்; தண்-குளிர்ந்த; துழாய்-துளசி; இலங்குதல்-விளங்குதல்; இரவி-சூரியன்)

இலக்குவனைத் தூக்க முயன்ற பத்துத்தலைகளுக்கும், பத்து முகங்களுக்கும் தலைவனான இராவணன், இப்போது, நிலைபெற்ற பெரிய கரிய கடலைப் போன்று தோற்றமளித்தான்; பக்கத்தில் நிமிர்ந்து தோன்றும் அவனுடைய இருபது கைகளும் அந்தக் கடலின் அலைகள் போன்றிருந்தன; இலைகளைக் கொண்ட குளிர்ச்சி பொருந்திய துளசி மாலை விளங்குகின்ற தோள்களையுடைய திருமாலின் அவதாரமான இராமபிரானுக்கு இளவலான இலக்குவன், அக்கடலில் உதிக்கும் சூரியனைப் போன்று தோற்றமளித்தான்.

கரிய நிறமுடைய இராவணனுக்குக் கரிய கடலும், அவனுடைய பரந்து விரிந்த இருபது கைகளுக்குக் கடலில் எழும் அலைகளும், அவன் கையில் தோன்றுகின்ற பொன்நிறமான இலக்குவனுக்கு அக்கடலில் உதிக்கும் சூரியனும் உவமைகள்.

212. இலக்குவனை அனுமன் எளிதில் எடுத்துச் செல்லுதல்

எடுக்கல் உற்று, அவன் மேனியை ஏந்துதற்கு ஏற்ற
மிடுக்கு இலாமையின், இராவணன் வெய்துயிர்ப்பு உற்றான்;
இடுக்கில் நின்ற அம்மாருதி, புகுந்து எடுத்து ஏந்தி,
தடுக்கலாதது ஓர் விசையின் எழுந்து, அயல் சார்ந்தான். (7311)

(மிடுக்கு-வலிமை; வெய்துயிர்ப்பு-வெப்பப் பெருமூச்சு; இடுக்கு-மூலை; விசை-வேகம்; அயல்-வேறுஇடம்; சார்தல்-அடைதல்)

இலக்குவனை எடுக்க முயன்று, அவன் உடலைக் கைகளில் எடுத்துத் தூக்குவதற்குரிய வலிமை இல்லாததனால், இராவணன் வெப்பப் பெருமூச்சு விட்டுத் தயங்கினான். அந்தச் சமயத்தில், எங்கோ ஓர் மூலையில் இளைப்பாறி நின்றிருந்த அனுமன், விரைவாக உள்ளே நுழைந்து, தன் கைகளால் இலக்குவனை எளிதாகத் தூக்கிக் கொண்டு, யாராலும் தடுக்க இயலாத ஒரு வேகத்துடன் எழுந்து, வேறு ஓர் இடம் சென்று சேர்ந்தான்.

கயிலை மலையையே பெயர்த்தெடுத்த இராவணனுக்கு இலக்கு வனைத் தூக்கி எடுக்க முடியாததற்கு அவன் உள்ளே நிறைந்திருந்த ஆணவம் காரணம். அதே இலக்குவனை எளிதில் தூக்கிச் செல்வதற்கு அனுமனால் முடிந்ததற்கு அவன் உள்ளே நிறைந்திருந்த மாசற்ற அன்பு காரணம் என்க. ஆணவத்தால் வலிமை குன்றும் என்பதும், அன்பினால் வலிமை மிகும் என்பதும் பெறப்பட்டன. மிடுக்கு-வலிமை, 'மிடுக்கு இலாதானை வீமனே என்றும், விசயனே வில்லுக்கு இவனென்றும்'

Koviloor Digital Library

என்பதும் தேவாரம். 'இடுக்கு' என்பது மூலை என்னும் பொருளில் இன்றும் வழங்கி வருதல் காண்க.

213. தொக ஒருங்கிய ஞானம் ஒன்று எவரினும் தூயான்,
தகவு கொண்டது ஓர் அன்பு எனும் தனித்துணை அதனால்,
அகவு காதலால், ஆண்தகை ஆயினும், அனுமன்
மகவு கொண்டு, போய் மரம்புகும் மந்தியை நிகர்த்தான். (7312)

(ஒருங்கிய-சேர்ந்த/ஒன்றுபட்டுள்ள; ஒன்றுதல்-பொருந்துதல்; அகவுதல்-அணைத்துக்கொள்ளுதல்/அகப்படுத்துதல்; மந்தி-பெண் குரங்கு; தகவு-தகுதி)

தொகுதியாகச் சேர்ந்துள்ள நிறைந்த ஞானம் பொருந்தியிருக்கின்ற எல்லோருள்ளும் மிக்க தூய்மையான தகுதிபடைத்தவனான ஆண்களிற் சிறந்தவனான அனுமன், அன்பு என்கின்ற ஒரே துணையினாலும், இலக்குவன் மேற்கொண்ட தழைத்த பக்தியினாலும், இலக்குவனை எளிதாகத் தாவி எடுத்துக்கொண்டு, தன் இளைய குட்டியை அணைத்து எடுத்துக் கொண்டுபோய் மரத்தில் புகுந்து கொள்ளும் பேரன்பு கொண்ட ஒரு தாய்க் குரங்கினைப் போலத் தோற்றம் அளித்தான்.

ஆணவம் மிகுந்த இராவணனால் எடுக்க முடியாத பாரம் நிறைந்த இலக்குவனை, பேரன்பும் பக்தியும் மிகுந்த இலக்குவன், கருமுகை மாலை போலவும், ஏடவிழ்மாலை போலவும் எளிதில் எடுத்துச் சென்றான் என்பதாம். அதற்குக் காரணம் அவனிடம் பொருந்தியிருந்த ஞானம், தூய்மை, அன்பு, தழைத்த பக்தி என்று பல காரணங்களைக் கூறும் கவிஞனின் கவித்திறன் நோக்குக. இவற்றில் ஒன்றும் இல்லாது, ஆணவம், பகை என்ற ஒன்றே மிக்குப் பெற்றிருந்த இராவணனால் தூக்க முடியாததற்கு இதுதான் காரணம் என்று குறிப்பால் உணர்த்துவதையும் நோக்குக. 'மகவு கொண்டு போய் மரம் புகுமந்தி' என்பது அருமையான தோர் உவமையாகும். பக்தியும் அன்பும் உடையவர்க்கு இறைவன் எளிமையாய்க் காட்சி தருவான் என்பதை ''பத்துடை அடியவர்க்கு எளியவன்; பிறர்களுக்கு அரிய வித்தகன் மலர்மகள் விரும்பும் நம் அரும்பெறல் அடிகள்' என்ற நம்மாழ்வாரின் திருவாய்மொழிப் பாசுரம் கொண்டு உணரலாம். இங்கே இலக்குவனை அனுமன் எளிதில் எடுத்த நிகழ்ச்சியை 'கருமுகைமாலை போல் எடுத்தனன்' என்று நம்பிள்ளை விளக்கம் அளிக்கிறார். முன்பு திரியம்பக வில்லை இராமபிரான் எளிதில் எடுத்ததை 'ஏடவிழ் மாலை' போல எளிதில் எடுத்தனன் என்று கூறியதையும் இங்கு நினைவுகூர்க. அன்பினால் செய்யப்படும் எந்த ஒரு காரியத்திற்கும் கவிஞர்கள் தாயன்பு என்று பெண்ணின் வாத்சல்யத்தையே குறிப்பதையே காணலாம். அது மக்களுக்காயினும், விலங்குகள், பறவை களுக்கு ஆயினும் சரி, 'தாயினும் சாலப் பரிந்து' என்பது மணிவாசகர் வாக்கு. கடுவன் என்பது ஆண்குரங்கு, மந்தி என்பது பெண்குரங்கு; மகவு

Koviloor Digital Library

என்பது இளமைப்பெயர்; 'கன்றும், பிள்ளையும், மகவும், மறியும், இளமைப்பெயரே' என்பது தொல்காப்பியம். அன்பின் முதிர்ச்சி காதல் எனப்படும். தண்டக வனத்தில், சீதாதேவி இராமஇலக்குவன் ஆகியோரைக் கண்ணும் கருத்துமாகப் பாதுகாத்துக் கொண்டிருந்த சடாயுவை 'பார்ப்பைப் பார்க்கும் பறவையிற் பார்க்கின்றான்' என்று, குஞ்சினைப் பாதுகாக்கும் தாய்ப்பறவையையே உவமை கூறியதையும் எண்ணுக.

214. மையல் கூர் மனத்து இராவணன் படையினால் மயங்கும்
செய்ய வாள் அரிஏறு அனான் சிறிதினில் தேற,
கையும் கால்களும் நயனமும் கமலமே அனைய
பொய் இலாதவன் நின்ற இடத்து, அனுமனும் போனான். (7313)

(மையல்-காமம்/மயக்கம்; கூர்தல்-மிகுதல்; படை-வேற்படை; செய்ய-சிவந்த; வாள்-கொடிய; அரிஏறு-ஆண்சிங்கம்; சிறிதினில்-சிறிது நேரத்தில்; தேறுதல்-தெளிதல்; கமலம்-செந்தாமரைமலர்; நயனம்-கண்கள்; பொய்யிலாதவன்-சத்தியசந்தன்)

காமமயக்கம் மிகுந்த மனத்தையுடையவனான இராவணன் எறிந்த வேற்படையின் தாக்குதலால் மயங்கிச் சோர்ந்து கிடந்த, சிவந்த கொடிய ஆண்சிங்கம் போன்ற இலக்குவன், சிறிது நேரத்தில் மயக்கம் தெளிந்து போக, தன்னுடைய கைகளும், கால்களும், கண்களும் சிவந்த தாமரைமலர் போன்ற அழகுடையவனும், பொய்பேசாத உண்மையே வடிவான இராமபிரான் நின்றிருந்த இடத்தை, அனுமன் சென்று சேர்ந்தான்.

'மையல்கூர் மனத்து இராவணன்' என்று இராவணனையும், செய்யவாள் அரிஏறு அனான்' என்று இலக்குவனையும், 'கையும் கால்களும் நயனமும் கமலமே அனைய பொய் இலாதவன்' என்று இராமபிரானையும் போற்றிய கவிஞனின் உளப்பாங்கு நினைக. இலக்குவன்மார்பில் பாய்ந்த வேலாயுதம் இராவணனிடம் மீண்டு சென்று விட்டதால், இலக்குவன் தேறினான் என்று வான்மீகம் கூறுகிறது. இச்செய்தி சற்று சிந்திக்கத்தக்கது. 'பொய்யிலாதவன்' என்ற சொல் பொய்பேசாதவன் என்ற சாதாரணப் பொருளையும், மெய்ப்பொருளாக விளங்குபவன் என்ற சிறப்புப் பொருளையும் தருவதையும் நினைக. 'கண்ணும் திருவடியும், கையும், திருவாயும், செய்ய கரியவன்' என்பது சிலப்பதிகாரம் ஆய்ச்சியர் குரவை.

215. போனகாலையில், புக்கனன் புங்கவன், போர்வேட்டு
யானைமேல் செலும் கோள்அரி ஏறு இவன் என்ன;
வானுளோர் கணம் ஆர்த்தனர்; தூர்த்தனர் மலர் மேல்;
தூநவின்ற வேல் அரக்கனும், தேரினைத் துரந்தான். (7314)

Koviloor Digital Library

(காலை-பொழுது/சமயம்; கோள்-வலிய; அரிஏறு-ஆண்சிங்கம்; வேட்டு-விரும்பி; கணம்-கூட்டம்; தூர்த்தல்-நிரப்புதல்; தூ-ஊன்; நவின்ற-பொருந்திய; துரத்தல்-செலுத்துதல்; புங்கவன்-இராமபிரான்/தேவன்/சிறந்தவன்/உயர்ந்தோன்)

அவ்வாறு அனுமன் சென்று, இராமபிரானைச் சேர்ந்த சமயத்தில், உயர்ந்தவனான இராமபிரானும், இலக்குவன்மீது இராவணன் செலுத்திய வேற்படையினால் இலக்குவன் மயங்கி வீழ்ந்தான் என்பதைக் கண்டு, சினம்கொண்டு, போர்செய்தலை விரும்பி, யானையின்மீது, போர் செய்யச் செல்லும் ஒரு வலிய ஆண்சிங்கம் போன்று பார்ப்பவர் வியக்கும்படி, இராவணனை எதிர்த்துச் சென்றான்; அப்போது வானத்தில் உள்ள தேவர்கள் கூட்டம், மலர்களை அவன்மேல் மழைபோலப் பொழிந்து நிறைத்து ஆரவாரித்தனர்; ஊன் தோய்ந்த வேற்படையைக் கொண்டிருக்கும் அரக்கனாகிய இராவணனும், தனது தேர்ப்படையை இராமபிரானை நோக்கிச் செலுத்தத் தொடங்கினான்.

'புங்கவன்' என்பது உயர்ந்தவன், சிறந்தவன், தேவன் என்ற பொருள் தந்து இராமபிரானைக் குறிக்கும். 'போர்வேட்டு' என்பது இலக்குவன் அடைந்த நிலையைக் கண்டு சினந்து தானே போரை விரும்பிச் சென்றான் என்பதைக் குறிக்கும் என்க. வேட்கை-விருப்பம். 'தூ நவின்ற வேல்' என்பது இலக்குவன்மேற் பாய்ந்த ஊன் படிந்த வேற்படை என்ற பொருளைத்தரும். யானை இராவணன்; சிங்கம்-இராமபிரான் என்பது உவமை.

216. இராவணன் தேரிலும், இராமபிரான் தரையிலும் நிற்றல்

தேரில் போர் அரக்கன் செல, சேவகன் தனியே
பாரில் செல்கின்ற வறுமையை நோக்கினன், பரிந்தான்;
'சீரில் செல்கின்றது இல்லை இச்செரு' எனும் திறத்தால்,
வாரின் பெய்கழல் மாருதி கதும் என வந்தான். (7315)

(சேவகன்-வீரன்/இராமபிரான்; பார்-தரை; பரிதல்-இரக்கம் கொள்ளுதல்; பெய்தல்-கட்டுதல்; மாருதி-அனுமன்; சீர்-ஒத்தநிலை/சிறப்பு; செரு-போர்; கதுமென-விரைந்து; திறம்-காரணம்/கருத்து; வறுமை-எளிமை; கழல்-காலணி)

போர்செய்வதில் வல்லவனும், போர்செய்வதையே தொழிலாகக் கொண்டவனுமான அரக்கன் இராவணன் தேரில் ஏறிச்செல்லவும், அவனினும் சிறந்த வீரனாகிய இராமபிரான், தனியாகத் தேரில்லாமல், தரையில் நடந்து செல்லும் எளிமையைக் கண்ட அனுமன், இரக்கம் கொண்டு அன்பு மேலீட்டால், 'தேரில் செல்லுகின்ற இராவணனுக்கும், தரையில் செல்லுகின்ற இராமபிரானுக்கும் நடக்க இருக்கும் இந்தப் போர் ஒத்ததாக இருக்காது, சிறப்பாக அமையாது, என்ற காரணத்தை மனத்தில்

Koviloor Digital Library

கருதி, வார்களால் இழுத்துக் கட்டப்பட்ட காலணிகளை அணிந்த அனுமன், இராமபிரானை நோக்கி, விரைவாக வந்து சேர்ந்தான்.

'வறுமை' இங்கே எளிமையைக் குறித்தது. 'கதும்' என்பது விரைவு குறித்த சொல். போர்செய்யும் இரு வீரரும் ஒத்த நிலையில் இருப்பதே முறைமையாகும்.

217. அனுமன் இராமபிரானைத் தன் தோளின்மீது ஏறிக்கொள்ளச் சொல்லுதல்

"நூறுபத்துடை நொறில்பரித் தேரின் மேல் நுன்முன்
மாறு இல் பேர் அரக்கன் பொர, நிலத்து நீ மலைதல்
வேறு காட்டும், ஒரு வெறுமையை; மெல்லிய எனினும்
ஏறு நீ ஐய! என்னுடைத் தோளின் மேல்" என்றான். (7316)

(மாறு-நிகர்/ஒப்பு; நொறில்-விரைவு; நூறுபத்து-ஆயிரம்; பரி-குதிரைகள்; பொர-போர்புரிய; மலைதல்-போர்செய்தல்; வேறு-தனிமை; நுன்-நின்/உன்; வெறுமை-இன்மை/இல்லாமை/எளிமை)

"தலைவனே! உனக்கு முன்னால், உன் எதிரில் விரைவு மிகுந்த ஆயிரம் குதிரைகள் பூட்டப்பெற்ற தேரில் ஏறிக்கொண்டு உனக்கு நிகரில்லாத பெரிய அரக்கன் போர் செய்ய வருகிறான். ஆனால் நீயோ தரையில் நின்று கொண்டு போர்செய்ய நினைத்திருக்கிறாய், இது உன்னுடைய எளிய, வறுமை நிலையை வேறுபடுத்திக் காட்டிவிடும். எனவே என்னுடைய தோள்கள் சற்று மெலிந்தவையாக இருந்தாலும்கூட, அதனைப் பொருட்படுத்தாது அஞ்சாது என் தோள்மேல் ஏறிக்கொள்வாயாக!" என்று வேண்டுகிறான் அனுமன்.

தான் இராமபிரானைத் தோளின்மேல் தாங்கும் சக்தியுள்ளவன்தான் என்றாலும், பணிவு காரணமாக, 'மெல்லிய தோள்' என்றார் என்க. 'நொறில்' என்ற சொல் விரைந்து செல்லும் வல்லமை உடைய என்ற பொருளைத்தரும். 'நுன்' என்பது திசைச்சொல் நின் என்று மாறி உன் என்று பொருள்தரும்.

218. அனுமன் தோள்மேல் இராமபிரான் ஏறிக்கொள்ளுதல்

'நன்று, நன்று' எனா, நாயகன் ஏறினான், நாமக்
குன்றின் மேல் இவர் கோள் அரிஏறு என; கூடி,
அன்று வானவர் ஆசிகள் இயம்பினர்; ஈன்ற
கன்று தாங்கிய தாய் என, மாருதி களித்தான். (7317)

Koviloor Digital Library

(நன்று-நல்லது; நாமம்-புகழ்/பெயர்; இவர்தல்-ஏறுதல்; அரிஏறு-ஆண்சிங்கம்; அன்று-அப்பொழுது; நாயகன்-தலைவன்; கோள்-கொல்லும் தன்மையுள்ள)

''நல்லது, நல்லது' என்று கூறிக்கொண்டே, யாவர்க்கும் தலைவனாகிய இராமபிரான் அனுமனின், வேண்டுகோளுக்கு உடன்பட்டு, அவன்மீது புகழ்பெற்ற ஒரு மலையின்மீது, கொல்லும் தன்மையுள்ள வலிய ஆண்சிங்கம் ஒன்று ஏறுவதைப்போல ஏறிக்கொண்டான். அப்பொழுது இதனைக்கண்ட தேவர்கள் எல்லாம் ஒன்றுகூடி நின்று, இராம பிரானுக்கும், அனுமனுக்கும் வாழ்த்துக் கூறினர். தான் பெற்றெடுத்த சிறு கன்றைத் தாங்கிக் கொண்ட தாய்க்கு ஏற்படுகின்ற மகிழ்ச்சிபோல, அனுமன் மனம் மிக மகிழ்ந்தான்.

'நன்று நன்று' என்ற அடுக்கு உடன்பாட்டுப் பொருளில் வந்தது. ''நாமக்குன்று'' அனுமனுக்கும் ''கோளரிஏறு'' இராமபிரானுக்கும் உவமை. ஈன்ற கன்று இராமபிரானுக்கும், தாங்கிய தாய் அனுமனுக்கும் உவமை. அனுமனின் தாயன்பு புலப்படுத்தப்பட்டது. குழந்தையைத் தாய் தோளில் சுமந்து செல்வதுபோல இராமபிரானை அனுமன் தன் தோளில் சுமந்து சென்றான் என்பதாம். 'தாது அவிழ் செந்தாமரையின் அக இதழ்போல் சீரடிகள் தரையின் மீது போதுவதும், பிறர் ஒருவரும் பொறுப்பதுவும், பொறா அன்பு புரிந்த சிந்தை, மாதவம் செய் தாதையர் வந்தெடுத்துத் தோளின் மேல் வைத்துக் கொள்ள' என்பது பெரியபுராணம்.

219. மாணியாய் உலகு அளந்த நாள், அவனுடை வடிவை
ஆணியாய் உணர் மாருதி, அதிசயம் உற்றான்;
காணி ஆகப் பண்டு உடையனாம் ஒரு தனிக் கலுழன்
நாணினான்; மற்றை அனந்தனும், தலை நடுக்குற்றான். (7318)

(மாணி-பிரமசாரி; வடிவு-திருமேனி; ஆணி-ஆதாரம்; காணி-பேறு; ஒரு-ஒப்பற்ற; கலுழன்-கருடன்; அனந்தன்-ஆதிசேஷன்)

முன்பு மாவலிபால் மூன்றடி மண் வேண்டி வாமன பிரமசாரியாய்ச் சென்று, தன் ஈரடியால் இவ்வண்டம் முழுவதையும் அளந்த நாளில், அத்திருமாலின் பெருவடிவை, சிறப்பான, ஆதாரமாகக் கண்டு மனம் பூரித்த அனுமன், இப்போது அப்பெருந்திருமேனி தன் தோளில் ஆரோகணிக்கும் பேறு அடைந்த பெருமையை உணர்ந்து அனுமன் பெரிதும் வியப்புற்றான். இதனை நேருக்குநேராகப் பார்த்த, முன்பு எப்பொழுதும், திருமாலைத் தாங்கிக் கொண்டிருக்கும் பேறுபெற்ற ஒப்பற்ற அவனுடைய ஊர்தியாகிய கருடன், தனக்கே உரிமையுடைய பணி, அனுமனால் பங்கிடப்பட்டிருப்பது கணடு செருக்கு அடங்கி வெட்கமுற்றான். திருமாலுக்குப் படுக்கையாக அவனைத் தாங்கிக் கொண்டிருக்கும் ஆதிசேஷன், தன்னுடைய பகைவனான வாயு

Koviloor Digital Library

தேவனுடைய மகனான அனுமன் தன் தலைவனைத் தாங்கியிருப்பது கண்டு அச்சத்தால் தன் தலை நடுக்கமுற்றான்.

அன்று உலகம் முழுவதையும் தன் ஓரடிக்குள் அடக்கியவன், இன்று தன்தோளில் அடங்கியிருப்பது கண்டு வியப்புற்றான் அனுமன் என்க. 'கருடன் நாணினான், அனந்தன் நடுக்குற்றான்; அனுமன் அதிசயம் உற்றான் என்று வேறுபடுத்திக் கூறியுள்ள திறம் நோக்குக. எப்போதும் திருமாலைத் தாங்கி நிற்பதால், கருடனைப் பெரிய திருவடி என்றும், இராமாவதாரத்தில் மட்டும் திருமாலைத் தாங்கி நிற்பதால் அனுமனைத் திருவடி என்றும் வழங்குவது வைணவ மரபு. இராமனது வடிவத்தைக் கண்ணால் கண்டபோது அதன் அழகு மட்டுமே கண்ணுக்குப் புலப் பட்டது, இப்போது அவ்வடிவத்தைத் தோளில் தாங்கி நிற்கும்போது, அதன் திண்மையும் புலப்பட்டது. எனவே அதிசயித்தான் என்க. முன்பு கண்டிராத ஒன்றைப் புதிதாகக் காணும்போது எல்லோர்க்கும் ஏற்படும் உணர்ச்சியே இங்கு வியப்பு, அதிசயம் எனப்பட்டது என்க. தெய்வ நிலையில் திருமாலுக்கு வாகனம் கருடன், படுக்கை ஆதிசேஷன், அவதார நிலையில் அவனை வாகனமாகத் தாங்கும் பேறு அனுமனுக்கு மட்டுமே தனித்துக் கிடைத்ததால் கருடன் வெட்கமும், ஆதிசேஷன் அச்சமும் கொண்டனர் என்க.

220. ஓதம் ஒத்தனன் மாருதி; அதன் அகத்து உறையும்
நாதன் ஒத்தனன் என்னினோ, துயில்கிலன் நம்பன்;
வேதம் ஒத்தனன் மாருதி; வேதத்தின் சிரத்தின்
போதம் ஒத்தனன் இராமன்; வேறு இதின் இலைபொருவே. (7319)

(ஓதம்-நீர்/பாற்கடல்; நாதன்-திருமால்; சிரம்-முடிவு; போதம்-ஞானத் தெளிவு; பொரு-உவமை; நம்பன்-விரும்பத்தக்கவன்/இராமபிரான்; வேதசிரம்-வேதஅந்தம்/உபநிடதம்)

அனுமன் வெண்ணிறமுடையவனாதலால் பாற்கடலை ஒத்தவன்; அப்பாற்கடலில் அறிதுயில் கொள்ளும் பரம்பொருளுக்கு கரிய நிறமுடைய, அனுமன் தோளில் ஏறியிருக்கிற இராமபிரானை உவமை கூறலாம் என்றாலோ, பரந்தாமன் பாற்கடலில் அறிதுயில் கொண்டிருக் கிறான். அனுமன் தோளில் வீற்றிருக்கும் இராமபிரானோ துயிலின்றி விழித்திருக்கிறான். எனவே இவ்வுவமை பொருந்தாது, வேறு என்ன உவமை கூறலாம் என்றால், அனுமன் நான்கு வேதங்களையும் போன்றவன்; இராமபிரான் அந்நான்கு வேதங்களின் முடிவு என்று புகழ்ந்து கூறப்படும் வேதாந்தமான தெளிந்த ஞானமாகிய ஞானத்தெளிவைப் போன்றவன் என்றுதான் கூறமுடியும். இதனைத் தவிர வேறு எந்த உவமையும் கூறமுடியாது'' என்கிறான் கவிஞன்.

'நம்பன்' என்ற சொல் நம்பிக்கைக்கு உரியவன் என்ற பொருளில் இராமபிரானைக் குறித்தது என்க. அனுமனுக்கு நான்கு வேதங்களும்,

Koviloor Digital Library

இராமபிரானுக்கு ஞானசொரூபியான பரம்பொருளும் உவமை. அனுமன் வேதம் போன்றவன் என்பது முன்பு 'இல்லாத உலகத்து எங்கும் ஈங்கு இவன் இசைகள் கூறக் கல்லாத கலையும் வேதக்கடலுமே என்னும் காட்சி' என இராமபிரானாலேயே பாராட்டப்பட்டதைக் கொண்டு உணரலாம். இராமபிரான் ஞானசொரூபி என்பதை 'இலங்கையிற் பொருதார் அன்றே மறைகளுக்கு இறுதியாவார்' என்பதனாலும் 'நின்செய்கை கண்டு நினைந்தனவோ நீள்மறைகள், உன்செய்கை அன்னவைதான் சொன்ன ஒழுக்கினவோ?' என்பதனாலும் அறியலாம். 'வேதத்தின் சிரத்தின் போதம்' என்பது ஞானமே வடிவாகிய பரம்பொருளின் அவதாரமான இராமபிரானைக் குறித்து நின்றது.

221. தகுதியாய் நின்ற வெள்றி மாருதி தனிமை சார்ந்த
மிகுதியை வேறு நோக்கின், எவ்வண்ணம் விளம்பும் தன்மை?
புகுதி கூர்ந்துள்ளார் வேதம் பொதுவுறப் புலத்து நோக்கும்
பகுதியை ஒத்தான், வீரன், மேலைத் தன் பதமே ஒத்தான். (7320)

(வென்றி-வெற்றி; சார்ந்த-பொருந்திய; மிகுதி-மேம்பாடு/சிறப்பு; புகுதி-புத்தி/ஞானம்; கூர்தல்-மிகுந்திருத்தல்; புலம்-அறிவு; பகுதி-மூலப் பகுதி/மூலப்பிரகிருதி; பதம்-பரமபதம்; தகுதி-பொருத்தம்)

இராமபிரானுக்குப் பொருத்தமான தகுதியுடைய வாகனமாக நின்ற அனுமனது தனிப்பட்ட வெற்றிச் சிறப்பை என்னவென்று கூறிப் புகழ்வது? அதைச் சாதாரணமான சிறப்பு என்று கூறிவிடமுடியாது. இதை வேறுவகையாகச் சற்று உற்று நோக்கினால், அனுமன், ஞானம் மிக்குள்ள ஞானியர்களும், யோகியர், முனிவர்கள் எல்லோரும் வேதத்தின் கருத்துக்களைத் தம் பொதுவான அறிவினால் ஆராய்ந்து நோக்கும் பகுதியாகிய மூலப்பிரகிருதியை ஒத்திருந்தான். வீரனாகிய இராம பிரானோ, அம்மூலப்பிரகிருதிக்கும் மேலான, தனக்கே உரியதான மேலையுள்ள பரமபதத்தை ஒத்திருந்தான்.

கவிஞன் ஒரு உவமையைக் கூற நினைத்து, அந்த உவமை இவ்விடத்திற்குச் சரிவரப் பொருந்தி வராது என்று தனக்குத் தானே கருதிக் கொண்டு, தான் நினைத்ததினும் மேம்பட்ட சிறப்பான உவமை ஏதேனும் கூறமுடியுமோ என்று நன்கு ஆராய்ந்து இந்த உவமையைக் கூறியிருக் கிறான் என்பதை அவனே இப்பாடல் மூலம் நமக்குத் தெரிவிப்பதுபோல் அமைத்துள்ள நயம் நோக்குக. மூலப்பிரகிருதி அனுமன்; பரமபதம் இராமபிரான். பகுதி என்பது மூலப்பிரகிருதியைக் குறிக்கும். இது 24தத்துவங்களாகத் திருமாலுக்குச் சரீரமாக அமைந்துள்ளது என்பது ஒரு நூற்கொள்கை. இந்த 24 தத்துவங்களாவன: மண், முதலாகிய பூதங்கள்5; அவை தோன்றுதற்குரிய நுண் மூலக்கூறுகள் அல்லது தன் மாத்திரகள் 5; அறிகருவிகளாகிய ஞானேந்திரியங்கள் 5; செயற்கருவிகளாகிய கன்மேந் திரியங்கள் 5; மனம், அகங்காரம், புத்தி, சித்தம் என அந்தக்கரணங்கள் 4;

Koviloor Digital Library

இவற்றை அறிவிலாப் பொருள்கள் - அசித்து - என்று கூறுவர்; 25வது தத்துவம் உயிர்; அல்லது ஆத்மா எனப்படும். மூலப்பிரகிருதியைக் கடந்து அதற்குமேல் பரமபதம் விளங்குவதுபோல, அனுமனுக்கு மேல் இராமபிரான் விளங்கினான் என்பது கருத்து.

222. மேருவின் சிகரம் போன்றது என்னினும், வெளிறு உண்டாமால்;
மூரி நீர் அண்டமெல்லாம் வயிற்றிடை முன்னம் கொண்ட,
ஆரியற்கு, அநேக மார்க்கத்தால், இடம் வலம்அது ஆகச்
சாரிகை திரியல் ஆன மாருதி தாமப் பொன்-தோள். (7321)

(மூரிநீர்-பெரியகடல்; அண்டம்-உலகம்; ஆரியன்-மேலோன்; மார்க்கம்-வழி; தாமம்-மாலை; பொன்-அழகிய; வெளிறு-குற்றம்/ அறியாமை; மூரி-பெருமை/வலிமை)

வலிய, பெருமைவாய்ந்த கடல் சூழ்ந்த இவ்வண்ட கோளகை அனைத்தையும், முன்பு மகாப்பிரளய காலத்தில், தன்வயிற்றினுள்அடக்கி இவ்வுலகை உய்வித்த மேலோனா திருமாலின் அம்சமாகிய இராம பிரானுக்குப் பல வழிகளிலும் போர்க்களத்தில் வாகனமாக இங்கும் அங்கும் இடப்புற, வலப்புறங்களிலெல்லாம் சாரிகை சுற்றித் திரிந்த அனுமனது மாலையணிந்த பொன்போன்ற தோள்களுக்கு, மேருமலை யின் சிகரத்தை ஒப்புக் கூறினால், அது அறியாமையின் பாற்பட்ட குற்றமாகும்.

வெளிறு என்பது வெற்றிடம் என்று பொருள்தந்து அறியாமையாகிய குற்றத்தைக் குறிக்கும். மாருதியின் தோள்களுக்கு மேருமலையின் சிகரத்தை உவமை கூறுவது என்பது அறியாமையின் பாற்பட்டதாகும். அனுமனது தோள்கள் அசையும் தன்மையன; மேருமலை அசையாத் தன்மை கொண்டது, அனுமன் தோள்கள் சுற்றித்திரியும் தன்மையன; மேருமலை ஓரிடத்தில் நிலைத்து நிற்பதாகும். இவ்வண்டம் முழுவதை யும் உண்டவனைத் தாங்கித் திரியும் தோள்களுக்கு, ஓர் அண்டத்தின் ஓர் இடத்தில் இருக்கும் மேருவின் சிகரத்தை உவமை கூறுவது என்பதும் இயலாது என்று, தான் கூறிய உவமையையே எதிர்த்துக் கூறுவதால் இப்பாடல் எதிர்நிலை உவமையணியின் பாற்பட்டதாகும். 'தாமப்பொன் தோள்' என்பது 'காஞ்சனாத்ரி, கமநீய விக்ரகம்' என்ற வடசொல்லின் தமிழாக்கம் என்பதறிக.

223. ஆசிசொல்லினர் அருந்தவர்; அறம் எனும் தெய்வம்
காசுஇல் நல்நெடுங்கரம் எடுத்து ஆடிட, கயிலை
ஈசன், நான்முகன், என்று இவர் முதலிய இமையோர்
பூசல் காணிய வந்தனர், அந்தரம் புகுந்தார். (7322)

Koviloor Digital Library

(ஆசி-வாழ்த்து; காசுஇல்-குற்றமற்ற; ஈசன்-சிவபெருமான்; நான் முகன்-பிரமன்; பூசல்-போர்; காணிய-காணும்பொருட்டு; அந்தரம்-ஆகாயம்)

அனுமன் தோளில் இராமபிரான் ஏறியிருப்பதைக் கண்ட அரிய தவம் இயற்றும் இயல்புடைய முனிவர்கள் வாழ்த்துக்கள் கூறினர்; தரும தேவதை என்னும் அறக்கடவுள் குற்றமற்ற தன் அழகிய நீண்ட கைகளை உயர்த்திக் கூத்தாடிற்று; கயிலை மலையில் வீற்றிருக்கும் சிவபெருமான், பிரமன் என்று கூறக்கூடிய இவர்களை உள்ளிட்ட தேவர்கள் அனைவரும் இவ்விருவரின்போரினைக்காணும்பொருட்டு, போர்க்களத்திற்கு மேலே ஆகாயத்தில் வந்து குழுமி நின்றனர்.

முனிவர்கள் தம்முடைய இடர்ப்பாடு நீங்கும் எனக்கருதி வாழ்த்துத் தெரிவித்தனர். இதுவரை இலங்கைக்குள் புகமுடியாது தவித்த அறக் கடவுள் இனி அங்கே அஞ்சாது செல்லலாம் என்பதால் நற்கரம் எடுத்துக் கூத்தாடியது; சிவபெருமானும், பிரமதேவனும், மற்ற தேவர்களும் தங்கள் அடிமைத்தனம் நீங்கும் என்ற ஆனந்தத்தால் ஆகாயத்தில் வந்து கூடினார்கள் என்பதாம்.

224. இராம – இராவணன் போர்

அண்ணல் அஞ்சன வண்ணனும், அமர் குறித்து அமைந்தான்,
எண்ணஅரும் பெரும் தனி வலிச்சிலையை நாண் எறிந்தான்;
மண்ணும், வானமும், மற்றைய பிறவும், தன் வாய்ப் பெய்து,
உண்ணும் காலத்து, அவ்உருத்திரன் ஆர்ப்பு ஒத்தது ஓதை. (7323)

(அண்ணல்-பெருமைக்குரியவன்; அஞ்சனம்-மை; வண்ணம்-நிறம்; அமர்-போர்; அமைதல்-ஆயத்தமாதல்; சிலை-வில்; ஓதை-ஓசை; காலம்-ஊழியிறுதிக்காலம்/மகாசம்ஹாரகாலம்; உருத்திரன்-சிவபெருமான்; குறித்தல்-கருதுதல்/நினைத்தல்; வாய்ப்பெய்து உண்ணுதல்-அழித்தல்)

பெருமைக்குரியவனும், மை போன்று கரிய நிறம் கொண்டவனுமான இராமபிரான், இராவணனுடன் போர் தொடுப்பது குறித்து எண்ணம் கொண்டு அதற்கு, ஆயத்தமாக, நினைத்தற்கரிய, பெரிய, ஒப்பற்ற, வலிய தனது கோதண்டம் என்னும் வில்லின் நாணினைத் தெறித்தான். அதனின்றும் எழுந்த பேரோசையானது, ஊழிமுடியும் காலத்தில் சிவபெருமான் இவ்வுலகையும், வானுலகையும், மற்ற எல்லா உயிரினங்கள் சர, அசரப்பொருள்கள் எல்லாவற்றையும் தன் வாயில் போட்டு உண்ணும்போது எழுகின்ற பேரோசையை ஒத்திருந்தது.

இந்தச் சமயத்தில் சிவபெருமான் ஆடும் நடனம்தான் 'ருத்திர தாண்டவம்' எனப்படுகிறது என்பதறிக.

Koviloor Digital Library

225. ஆவி சென்றிலர், நின்றிலர், அரக்கரோடு இயக்கர்;
நாஉலர்ந்தனர்; கலங்கினர்; விலங்கினர்; நடுங்கி;
கோவை நின்ற பேர் அண்டமும் குலைந்தன; குலையாத்
தேவதேவனும், விரிஞ்சனும், சிரதலம் குலைந்தார். (7324)

(ஆவி-உயிர்; உலர்தல்-வறண்டுபோதல்; விலங்குதல்-விலகிப் போதல்; கோவை-வரிசை; குலைதல்-நடுங்குதல்; தேவதேவன்-சிவ பெருமான்; விரிஞ்சன்-பிரமன்; சிரதலம்-தலை)

இராமபிரான் எழுப்பிய நாண் ஒலியைக் கேட்ட அரக்கர்களும், இயக்கர்களும், உயிர்போகவில்லையே தவிர, அவர்கள் நின்றிருந்த இடத்தில் நிற்கமுடியாமல் நிலைகுலைந்தனர். நாக்கு வறண்டுபோயிற்று, உடல் நடுக்கமுற்றது, உள்ளம் கலங்கியது. அச்சத்தால் நடுங்கி இருந்த இடத்தை விட்டுச் சற்று அகன்று நிற்க முயன்றனர்; வரிசையாக அடுக்கி அமைக்கப்பட்டுள்ள பெரிய உலக உருண்டைகள் எல்லாம் நிலை குலைந்தன, எதற்கும், யாவர்க்கும் அஞ்சாத இயல்புடைய சிவபெரு மானும், பிரமனும்கூடத் தம் தலை நடுக்கமுற்றனர்.

கொல்லும் தொழிலையுடைய அரக்கர்களும், அவர்களைச் சார்ந்த இயக்கர்கள், மற்றவர்களும் அஞ்சிக் கலங்கினர் என்றதனால் மற்ற உயிரினங்கள் பற்றிக்கூற வேண்டுவதில்லை. அதுபோல எதற்கும் அஞ்சாத சிவபெருமானும் பிரமனுமே தலை நடுக்க முற்றனர் என்றதனால் ஏனைய தேவர்கள் பற்றிக்கூற வேண்டுவதில்லை என்பதாம். அச்சத்தின் மெய்ப்பாடு விரிவாகப் பேசப்பட்டிருக்கிறது. 'தேவதேவன், மெய்ச் சேவகன், தென்பெருந்துறை நாயகன்' என்பது திருவாசகம்.

226. ஊழி வெங்கனல் ஒப்பன, துப்பு அன உருவ,
ஆழி நீரையும் குடிப்பன, திசைகளை அளப்ப,
வீழின், மீச்செலின், மண்ணையும் விண்ணையும் தொளைப்ப,
ஏழு வெஞ்சரம், உடன்தொடுத்து, இராவணன் எய்தான். (7325)

(துப்பு-பவழம்; உருவம்-நிறமுமாம்; ஆழி-கடல்; வெம்-கொடிய; சரம்-அம்புகள்; உடன்-ஒருசேர)

அப்பொழுது இராவணன், ஊழிக்காலத்துத் தோன்றும் கொடிய பெரும் நெருப்பாகிய வடவனல் போன்றதும், பவழம் போன்ற சிவந்த நிறமும் வடிவமும் கொண்டதும், கடல்நீரையும் வற்றக் குடிக்கும் வல்லமையுடையதும், திக்கின் மூலைகள் எல்லாம் சென்று அளக்கக் கூடியனவும், கீழே விழுந்தால் மண்ணுலகையும், பாதாளத்தையும், மேலே பாய்ந்து சென்றால், விண்ணுலகையும் தொளைக்கவல்லதுமான, ஏழு கொடிய அம்புகளை ஒருசேரத் தொடுத்து இராமபிரான்மேல் செலுத்தினான்.

Koviloor Digital Library

இராவணன் அம்பின் ஆற்றல் புலப்படுத்தப்பட்டது. இத்துடன், இராமபிரான் மராமரத்தை நோக்கிச் செலுத்திய அம்பின் ஆற்றலையும் ஒப்பிட்டு நோக்கலாம். அந்த அம்புகளின் வெம்மை, நிறம், வன்மை, விரைவு, கூர்மை, இவையனைத்தும் தனித்தனியாகப் பேசப்பட்டிருப்பது காண்க.

227. எய்த வாளியை, ஏழினால், ஏழினோடு ஏழு
செய்து, வெஞ்சரம் ஐந்து, ஒரு தொடையினில் சேர்த்தி,
வெய்து கால வெங்கனல்களும் வெள்குற, பொறிகள்
பெய்து போம் வகை, இராகவன் சிலை நின்று பெயர்த்தான். (7326)

(வாளி-அம்பு; சேர்த்தி-அமைத்து; வெய்து-வெம்மைமிக்க; காலஊழியிறுதிக்காலம்; வெள்குதல்-நாணுதல்; பெய்தல்-விடுத்தல்/செலுத்துதல்; எய்த-ஏவிய; பெய்த-கக்குதல்/வெளியிடுதல்; பெயர்த்தல்-ஏவுதல்/எய்தல்)

அவ்வாறு இராவணன் ஏவிய ஏழு அம்புகளையும், தன்னுடைய ஏழு அம்புகளால், இராவணனுடைய ஏழு அம்புகளும் நாற்பத்து ஒன்பது துண்டுகளாகும்படி துண்டித்து விட்டு, தன்னுடைய வெம்மை மிக்க ஐந்து அம்புகளை ஒருசேரத் தொடுத்து, வெப்பம் மிக்க ஊழிக்காலத்துக் கொடிய நெருப்புக்கூட வெட்கமுறும்படி, நெருப்புப் பொறிகளை வெளியிட்டுக் கொண்டு செல்லும்படி, இராமபிரான் தனது வில்லினின்றும் அவ்வம்பு களை இராவணன்மேல் செலுத்தினான்.

'ஏழினோடு ஏழு' என்பது நாற்பத்து ஒன்பது ஒன்றும், பதினான்கு என்றும் இருவகையாகவும் பொருள்தரும். ஊழியிறுதியில் தோன்றும் வடவனலின் பொறிகளைக் காட்டிலும் இராமபிரான் தொடுத்த ஐந்து அம்புகளின் கனல் பொறிகள் மிக்கன என்பதாம்.

228. வாளி ஐந்தையும் ஐந்தினால், விசும்பிடை மாற்றி,
ஆளி மொய்ம்பின் அவ்வரக்கனும், ஐஇரண்டு அம்பு,
தோளில் நாண்உற, வாங்கினன், துரந்தனன்; சுருதி
ஆளும் நாயகன் அவற்றையும் அவற்றினால் அறுத்தான். (7327)

(ஆளி-சிங்கம்; மொய்ம்பு-வலிமை; விசும்பு-ஆகாயம்; ஐஇரண்டு-பத்து; சுருதி-வேதங்கள்; ஆளுதல்-சிறப்பித்துப் பேசப்படுதல்; நாயகன்-இராமபிரான்; மாற்றுதல்-அப்புறப்படுத்துதல்)

சிங்கம் போன்ற வலிமையுடையவனான அரக்கன் இராவணன், இராமபிரான் ஏவிய ஐந்து அம்புகளையும் தன்னைத் தாக்காத வண்ணம் தன்னுடைய ஐந்து அம்புகளினால் ஆகாயத்திடத்திலேயே அப்புறப் படுத்தி அழித்து விட்டான்; அவன் தன்னுடைய பத்து அம்புகளையும், அவற்றின் நாணைத் தன் தோள்வரை இழுத்து வளைத்து வேகமாக

Koviloor Digital Library

இராமபிரான்மேல் செலுத்தினான். வேதங்களுக்குத் தலைவனானவனும், வேதங்களால் புகழ்ந்து பேசப்படுகின்ற வேதநாயகனுமான இராம பிரானும், அந்தப் பத்து அம்புகளையும், தன்னுடைய பத்து அம்புகளால் அறுத்துத் தள்ளினான்.

'அவற்றினால்' என்பது அதே அளவுள்ள பத்து அம்புகளால் என்று விரிந்த பொருளைத்தரும். இராமபிரானைச் சுருதி நாயகன் என்று காப்பியத்தில் பல இடங்களிலும் கூறிப்போவதைக் காணலாம்.

229. அறுத்து, மற்று அவன் அயல்நின்ற அளப்பஅரும் அரக்கர்
செறுத்து விட்டன படைஎலாம் கணைகளால் சிந்தி,
இறுத்து வீசிய கிரிகளை எரிஉக நூறி,
ஒறுத்து, மற்று அவர் தலைகளால் சிலமலை உயர்த்தான். (7328)

(அயல்-பக்கம்; அளப்பரும்-அளவிடற்கரிய; செறுத்து-சினந்து/ வெகுண்டு; இறுத்து-பறித்து; கிரிகள்-மலைகள்; எரி-நெருப்புப்பொறி; நூறுதல்-அழித்தல்; உயர்த்துதல்-உண்டாக்குதல்; ஒறுத்தல்-அழித்தல்)

அவ்வாறு இராமபிரான், இராவணனுடைய பத்து அம்புகளையும் அறுத்த பின்னர், இராவணன் அருகில் நின்றிருந்த அளவற்ற அரக்கர்கள் சினந்து செலுத்திய படைக்கலன்கள் அனைத்தையும், அவர்கள் பறித் தெடுத்து வீசிய மலைகளெல்லாம், தீப்பொறி பறக்கச் சிந்தும்படி பொடி செய்து அழித்துவிட்டு சிதறிப்போகும்படி செய்து, தனது அம்புகளால் அவர்கள் தலைளைக் கொய்து அவர்களுடைய அறுபட்ட தலைகளால் போர்க்களத்திலேயே உயர்ந்து விளங்கும்படி சில பிணமலைகளை உண்டாக்கினான்.

போர்க்களத்தில் அறுபட்டுக்கிடந்த அரக்கர் தலைகளின் குவியல் மலைபோலத் தோன்றிற்று என்பதாம்.

230. மீனுடைக் கருங்கடல் புரை இராக்கதர் விட்ட
ஊனுடைப்படை, இராவணன் அம்பொடும் ஓடி,
வானரக்கடல் படாவகை, வாளியால் மாற்றி,
தானுடைச் சரத்தால் அவர் தலைமலை தடிந்தான். (7329)

(புரை-போன்ற; ஊன்-தசை; மாற்றுதல்-அழித்தல்/விலக்குதல்; தடித்தல்-அறுத்து வீழ்த்துதல்; படுதல்-தாக்குதல்)

மீன்கள் நிறைந்து விளங்குகின்ற கரிய கடல்போன்ற அரக்கர் சேனை ஏவிய மாமிசம் பொருந்திய படைக்கலன்கள் எல்லாம், இராவணன் செலுத்துகின்ற அம்புகளோடு ஒன்று சேர்ந்து ஓடி வானரச்சேனையாகிய, கடலில் பட்டுத் தாக்காத வண்ணம், தன்னுடைய அம்புகளால் இடை யிலேயே விலக்கிவிட்டு, தான்கொண்டுள்ளவேறு சிறந்த அம்புகளினால்,

Koviloor Digital Library

அவ்வரக்கர்களுடைய தலைகளாகிய மலைகளை அறுத்து வீழ்த்திக் குவித்தான் இராமபிரான்.

அரக்கர் படைக்குக் கருங்கடல் நிறத்தாலும், பெருக்கத்தாலும் ஒப்பு; 'ஊனுடைப்படை' என்பது பகைவர்களை அழித்ததால் மாமிசத்தைப் பொருந்தியிருக்கும் நுனிகளையுடைய படைக்கலன்கள் என்ற விரிந்த பொருளைத்தரும். வானரக்கடல் என்பதும், தலைமலை என்பதும் உருவகங்கள்.

231. இம்பரான் எனில், விசும்பினின் ஆகும், ஓர் இமைப்பில்;
துமபை சூடிய இராவணன் முகம் தொறும் தோன்றும்;
வெம்பு வஞ்சகர் விழிதொறும் திரியும்; மேல் நின்றான்,
அம்பின் முன்செலும், மனத்திற்கும் முன்செலும் அனுமன். (7330)

(இம்பர்-இவ்வுலகம்; விசும்பு-ஆகாயம்; வெம்புதல்-மனம் வெதும்புதல்)

தன்தோள்கள் மேல் நின்று கொண்டு போர்புரிபவனான இராமபிரான் செலுத்தும் அம்பினைவிட, வேகமாக முன் செல்லுபவனும், மனோ வேகம் என்று கூறுவதுபோல, மனம் நினைப்பதற்கு முன் அதனைவிட வேகமாகவும் முன் செல்லுபவனுமான அனுமன், இவ்வுலகில் தரையில் நின்றுதான் போரிடுகிறான் என்று நினைத்துக் கொண்டிருப்போமானால் ஒரு நொடிப்பொழுதில் ஆகாயத்தின்மேல் இருப்பவன் ஆவான். தும்பைமாலை சூடிப் போர்புரிகின்ற இராவணனின் பத்து முகங்களிலும் தனித்தனியாகத் தென்படுவான்; மனம் வெதும்பி நிற்கின்ற வஞ்சகர்களாகிய அரக்கர்களின் விழிகளில் எல்லாம் தோற்றம் தருவான்.

அனுமன் இடசாரி வலசாரி திரிந்த செய்கை கூறப்பட்டது. அவன் அரக்கர் படைவீரர்கள் அனைவரின் கண்களிலும் ஒரே சமயத்தில் தோன்றி அச்சம் ஏற்படுத்துவான் என்பதாம். 'மேல் நின்றான்' என்ற சொல் யாவர்க்கும் எவற்றிற்கும் மேலானவனாகிய இராமபிரான் என்ற பொருளையும் தரும். அனுமன் ஒருவனே பல இடத்திலும் பலவாறு தோன்றியமை கூறப்பட்டது.

232. போர்க்களம் இருந்த நிலை

ஆடுகின்றன, கவந்தமும்; அவற்றோடும் ஆடிப்
பாடுகின்றன அலகையும்; நீங்கிய பனைக்கைக்
கோடு துன்றிய கரிகளும், பரிகளும் தலைக்கொண்டு
ஓடுகின்றன, உலப்பு இல, உதிர ஆறு உவரி. (7331)

(அலகை-பேய்கள்; கோடு-கொம்புகள்; துன்றிய-நெருங்கிய; உலப்பு இல-அளவிலாத; உவரி-கடல்; கவந்தம்-முண்டம்/தலையற்ற உடல்)

Koviloor Digital Library

போர்க்களத்தில் தலையற்ற முண்டங்களான கவந்தங்கள் கூத்தாடத் தொடங்கின; அவற்றோடு சேர்ந்து பேய்களும் பாடிக்கொண்டு ஆடலாயின; தம்முடைய பனைமரம் போன்ற நீண்ட துதிக்கைகள் துண்டிக்கப்பெற்றதும், கொம்புகள் நெருங்கப் பெற்றதுமான யானை களையும், குதிரைகளையும், தம்மகப்படுத்திக் கொண்டு வற்றுதல் இல்லாத இரத்தஆறு, கடலை நோக்கி ஓடத்தொடங்கியது.

உவர்ப்புச் சுவை கொண்ட நீரையுடையதால் உவரி என்பது கடலுக்குக் காரணப்பெயர். வற்றாத இரத்த ஆற்றில் யானைகளும், குதிரைகளும், மிதந்து கொண்டு கடலை நோக்கிச் செல்லுகின்றன என்று, யானை, குதிரை, காலாட்படையினரின் அழிவு மிகுத்துக் கூறப்பட்டது என்க. கவந்தம் என்பது தலையற்ற முண்டத்தைக் குறித்தது. இந்தக் கவந்தம் எப்பொழுது போர்க்களத்தில் ஆடத்தொடங்கும் என்பதற்கு ஒரு கணக்கு உண்டு. ஒரு கவந்தம் போர்க்களத்தில் ஆட வேண்டுமானால், ஆயிரம் யானைகளும், பதினாயிரம் தேர்களும், ஒருகோடி குதிரைகளும், ஆயிரம் படைத் தலைவர்களும் இறந்துபட்டிருக்க வேண்டும். அப்பொழுதுதான் ஒரு கவந்தம் எழுந்து ஆடும். இங்கு கவந்தங்கள் ஆடின என்பதால், அரக்கர்படையின் அழிவு அளவற்றது என்பது பெறப்படும். 'ஆனை ஆயிரம், தேர்பதினாயிரம், அடர்பரி ஒருகோடி, சேனைகாவலர் ஆயிரம் பேர்படின், செழுமணிக் கவந்தம் ஒன்று ஆடும்' என்று பின்னால் மூலபல வதைப்படலத்தில் பேசப்பட்டிருப்பது இங்கு நினைக்கத்தகும்.

233. அற்ற ஆழிய, அறுப்புண்ட அச்சின, அம்பொடு
இற்ற கொய் உளைப் புரவிய, தேர்க்குலம் எல்லாம்;
ஒற்றை வாளியோடு உருண்டன, கருங்களிற்று ஓங்கல்;
சுற்றும் வாசியும் துமிந்தன, அமர்க்களம் தொடர்ந்த. (7332)

(குலம்-கூட்டம்; ஆழி-சக்கரம்; அச்சு-அச்சாணி; இற்ற-இறந்துபட்ட; உளை-பிடரிமயிர்; புரவி-குதிரை; களிறு-யானை; ஓங்கல்-மலை; சுற்றும்-சுற்றித்திரியும்; துமிதல்-அழிதல் துண்டமாகுதல்; கொய்தல்-கத்தரித்தல்; வாசி-குதிரை)

இராமபிரான் எய்த ஓரம்பினால் இராவணனுடன் தொடர்ந்து வந்த அரக்கர்களுடைய தேர்க்கூட்டமெல்லாம் தம் சக்கரங்கள் துண்டுபட்டுப் போயின; அச்சாணிகள் எல்லாம் முறிந்து கழன்று ஓடத்தொடங்கின; அடர்ந்த, கத்தரிக்கப்பட்ட, அலங்கரிக்கப்பட்ட பிடரிமயிரை உடைய குதிரைப் படைகளும், அவனுடைய ஒரே அம்பினால் தரையில் உருண்டு விழுந்தன; கரிய யானைகள் என்னும் மலைகளும், வேகமாகச் சுற்றித்திரியும் குதிரைகளும் துண்டு துண்டுகளாகிப் போயின.

தேர்ப்படை, யனைப்படை, குதிரைப்படை முதலியன அழிந்த விதம் கூறினார் என்க. 'சுற்றுதல்' என்பது இடசாரி வலசாரியாகச் சாரிகை சுற்றித்

Koviloor Digital Library

திரிதலைக் குறிக்கும். ஒவ்வொருபடையும் ஒவ்வொரு அம்பினாலேயே அழிந்து போயின என்பது சிறப்புப்பொருள்.

234. தேர் இழந்து, வெஞ்சிலைகளும் இழந்து, செந் தறுகண்
கார் இழந்து, வெங்கலின மாக்கால்களும் இழந்து,
சூர் இழந்து, வன்கவசமும் இழந்து, துப்பு இழந்து,
தார் இழந்து, பின் இழந்தனர் நிருதர் தம் தலைகள். (7333)

(செம்-செம்மையான/நேர்மையான; தறுகண்-அஞ்சாமை; கார்-மேகம்/யானை; வெம்-கொடுமை; கலினம்-கடிவாளம்; மா-குதிரைகள்; கால்-ஊர்திகள்; சூர்-சூரத்தன்மை/வீரப்பாடு; வன்-கடிய/வலிய; தார்-மாலைகள்; நிருதர்-அரக்கர்கள்; துப்பு-வலிமை)

அரக்கர்கள் தாம் செலுத்திவந்த தேர்களையும், தாம் கைகளில் கொண்டிருந்த விற்படைகளையும், செம்புள்ளிகளையும் அஞ்சாமையு முடைய கண்களையுடைய, கரிய மேகம் போன்ற யானைப் படை களையும், கொடிய கடிவாளம் பூட்டப்பெற்ற குதிரைகளாகிய ஊர்தி களையும் தங்களது வீரப்பாட்டினையும், வலிமையான கவசத்தையும் தங்கள் வலிமையையும் தாங்கள் அணிந்திருந்த மாலைகளையும் இவையெல்லாவற்றையும் இழந்து பின்னர் தம் தலைகளையும் இழந்து அழிந்தனர்.

அரக்கர்படை தம் படைக்கருவிகளை இழந்ததையும், தம்மையே இழந்ததையும் அழகுபடக் கூறினார். 'இழந்து' என்ற ஒரே சொல், ஒரே பொருளில் அடுக்கி வந்ததனால் இப்பாடல் சொற்பொருட்பின்வரு நிலை அணியின் பாற்படும். தேர், யானை, குதிரை முதலிய படைகளைச் செலுத்திவந்த வீரர்கள், தங்கள் ஊர்திகளையும், தாங்கள் கையில் தாங்கியிருந்த படைக்கலன்களையும், மார்பிலணிந்திருந்த கவசங் களையும், மாலைகளையும், அருவப்பொருளான வீரப்பாட்டையும், வலிமைஙயயும் முறைமுறையே, இழந்து இறுதியில் தங்கள் தலைகளும் அறுபட்டு இறந்தனர் என்பது கருத்து. கால் என்பது வாகனம் என்ற பொருளில் வந்தது.

235. அரவ நுண் இடை அரக்கியர்; கணவர் தம்அற்ற,
சிரமும் அன்னவை ஆதலின், வேற்றுமை தெரியா,
புரவியின் தலை, பூட்கையின் தலை இவை பொருத்தி,
கரவுஇல் இன்னுயிர் துறந்தனர், கவவுறத் தழுவி. (7334)

(அரவு-பாம்பு; நுண்-சிறிய; புரவி-குதிரை; பூட்கை-யானை; கரவுஇல்-மறைவிடம்; கவவுற-இறுக/நன்குபொருந்த; அற்ற-இறந்து பட்ட; தழுவுதல்-அணைத்துக்கொள்ளுதல்)

Koviloor Digital Library

பொதுவாக அரக்கர்கள் தலைகள் யானை, குதிரை முகம்போல இருக்கும். எனவே இங்கே கிடந்த தம் கணவன்மார்களின் தலைகளுக்கும், குதிரை, யானை முதலியவைகளின் தலைகளுக்கும் வேற்றுமை தெரியாமல் பாம்பு போன்று துவளுகின்ற, நுண்ணிய இடையை உடைய அரக்கியர்கள், இராமபிரானது அம்பால் தலைகள் அறுபட்டுப் போர்க் களத்தில் கிடந்த அத்தலைகளை எடுத்துக்கொண்டு, மறைவிடத்திற்குச் சென்று, அத்தலைகளைத் தம் கணவன் உடம்போடும் பொருத்தி, நன்கு இறுக அணைத்துக்கொண்டு, தம் இனிய உயிரைப் போக்கிக் கொள்வராயினர்.

அரக்கியரின் இடையை இங்கே கவிஞன், 'அரவ நுண்இடை' என்று கூறுவது வியப்பிற்குரியது. முன் எங்கும் அவ்வாறு கூறியதாகக் காணப்பட வில்லை. அரக்கர்கள் யானை, குதிரை போன்ற தலைகளையுடையவர் என்பது முன்பே கூறப்பெற்றிருக்கிறது. வான்மீகத்திலும் இவ்வாறே கூறப்பட்டிருக்கிறது. 'கரி, பரி, வேங்கை, மாக்கரடி, யாளி, பேய், அரி, நரி, நாய் என அணிமுகத்தினர்' என்பதும் 'வயிற்றிடை வாயினர், வளைந்த நெற்றியில் குயிற்றிய விழியினர்' என்பதும் சுந்தரகாண்டம். இங்கே ஒரு புதியசெய்தி. கற்புடை மகளிர் போரில் இறந்த தம் கணவன்மார்களின் தலையொடு தம்மைப் பொருத்திக் கொண்டு உயிர்விடுதல் மரபு. 'முலையும், முகனும் சேர்த்திக் கொண்டோன் தலையொடு முடியும் நிலையொடு தொகைஇ' என்பது தொல்காப்பியம். 'மண்டு அமருள் மாறாமைந்தில் கொண்டான் தலையொடு கோல்வளை முடிந்தன்று' என்று புறப்பொருள் வெண்பாமாலை, இந்நிகழ்வினைக் குறிக்கிறது.

236. ஆர்ப்பு அடங்கின வாய்எலாம்; அழற் கொழுந்து ஒழுகும்
பார்ப்பு அடங்கின கண்எலாம்; பலவகைப் படைகள்
தூர்ப்பு அடங்கின கைஎலாம்; தூளியின் படலைப்
போர்ப்பு அடங்கின உலகுஎலாம்; முரசுஎலாம் போன. (7335)

(ஆர்ப்பு-ஆரவாரித்தல்; அழற்கொழுந்து-நெருப்புப்பொறி; ஒழுகுதல் -சிந்துதல்; பார்ப்பு-பார்வை/நோக்குதல்/பார்த்தல்; தூர்ப்பு-துரத்தல்/நிரப்புதல்/செலுத்துதல்; படைகள்-போர்க்கருவிகள்; தூளி-புழுதி; படலை-திரள்; போர்ப்பு-மூடிக்கொள்ளுதல்; போன-ஒலி அடங்கின)

அரக்கர்களின் அழிவு மிகுதியால், அவர்கள் வாய்கள் எல்லாம் பேராரவாரம் செய்வதை ஒழித்தன; நெருப்புப்பொறி பறக்கும் அவர்களது கண்கள் இப்போது அப்பார்வையையே இழந்தன; எப்போதும் பலவகைப் படைக்கலன்களைச் செலுத்திக் கொண்டேயிருக்கும் அவர்களது கைகள், இப்போது அவ்வாறு நிரப்புதலை நிறுத்திக் கொண்டிருந்தன. அவர்கள் போருக்குச் செல்லும்போது எழும் புழுதித்துகள் கூட்டமெல்லாம், இப்போது உலகத்தை மூடி மறைத்தலைச் செய்யாது ஒழிந்தன, போர் முரசங்கள் எல்லாம் அடிக்கப்படாமல் ஒலி அடங்கிப் போயின.

Koviloor Digital Library

'அடங்கின' என்ற ஒரே சொல், ஒரே பொருளில் அடுத்தடுத்துப் பயின்று வந்துள்ளதால், இப்பாடல் சொற்பொருட் பின்வரு நிலையணியின் பாற்படும். ஆர்ப்பு, பார்ப்பு, தூர்ப்பு, போர்ப்பு என்பன தொழிற்பெயர்கள். அரக்கர் படை எவ்விதத் தொழிலும் இன்றிச் செயலற்று நின்றன என்பது கருத்து.

237. இராவணன் தனித்து நின்று போர் செய்தல்

ஒன்று நூற்றினொடு ஆயிரம் கொடுந்தலை உருட்டி,
சென்று தீர்வு இல, எனைப்பல கோடியும் சிந்தி,
நின்ற தேரொடும் இராவணன் ஒருவனும் நிற்க,
கொன்று வீழ்த்தினது, இராகவன் சரம் எனும் கூற்றம். (7336)

(கூற்றம்-இயமன்; ஒன்றுநுற்றினொடு ஆயிரம்-ஒரு லட்சம்; உருட்டி-உருளச்செய்து)

இராமபிரானுடைய அம்பு என்னும் இயமன் போர்க்களத்தில் நின்றிருந்த ஒரு லட்சம் அரக்கர்களின் கொடிய தலைகளை அறுத்து பூமியில் உருளச்செய்து, அதோடு முடிந்துவிடாமல் எத்தனையோ கோடி அரக்கர்களையும் அழித்தொழித்தது. இராவணனுடைய ஒப்பற்ற ஒரே ஒரு தேரும், அவனும் மட்டுமே தனித்து எஞ்சி நின்றனர்.

'நின்றதேர்' என்றது அவன் செலுத்திவந்த ஒரு தேர் மட்டுமே என்ற பொருளைத்தரும். 'சரம் எனும் கூற்றம்' என்பது உருவகம். இராமனது அம்பு ஒரு லட்சம் அரக்கர்களின் தலையைக் கொய்து வீழ்த்தியது. இன்னும் கோடிக்கணக்கான வீரர்களைக் கொன்றது என்பதாம். இராவணனை இப்போது கொல்லக்கூடாது என்பதால் அவனை மட்டும் விலக்கினான் எனக்கொள்க.

238. தேரும், யானையும், புரவியும், அரக்கரும் தெற்றி,
பேரும் ஓர் இடம் இன்று எனத் திசைதொறும் பிறங்கி,
காரும் வானமும் தொடுவன பிணக்குவை கண்டான்,
மூரி வெஞ்சிலை இராவணன், அரா என முனிந்தான். (7337)

(தெற்றுதல்-வீழ்ந்து கிடத்தல்/பின்னுதல்/முட்டுதல்; பேர்தல்-இடம் பெயர்தல்; இன்று-இல்லை; பிறங்கி-விளங்கி; கார்-மேகம்/மேக மண்டலம்; மூரி-பெரிய; வெம்-கொடிய; அரா-பாம்பு; முனிதல்-சீறுதல்)

பெரிய கொடிய விற்படையைக் கையில் ஏந்திய இராவணன், தன்னுடைய தேர்ப்படைகளும், குதிரைப்படைகளும், யானைப் படைகளும், காலாட்படைகளும், ஒன்றோடொன்று முட்டி மோதிக்கொண்டு பின்னிக்கிடப்பதால் இனிமேல் நகர்ந்து செல்லுவதற்கு ஒருசிறிதும் இடம் இல்லை என்று கூறும்படி, திக்குகளின் எல்லை வரையிலும் பரந்து,

Koviloor Digital Library

அதுவும் போதாதென்று மேக மண்டலத்தையும், வானமண்டலத்தையும் தொடுமளவிற்கு உயர்ந்து குவிந்துள்ள பிணக்குவியல்களைக் கண்டு சினந்து பாம்பைப்போல் சீறினான்.

நால்வகைப் படையும் தமக்குள்ளேயே முட்டி மோதிக்கொண்டு திக்கெல்லாம் சென்று அழிந்தன. பிணக்குவியல்கள் மேக, வான மண்டலங்களைத் தொட்டன என்பது உயர்வு நவிற்சி எனக்கொள்க. படைகளின் பேரழிவு புலப்படுத்தப்பட்டது. இராவணனைப் பாம்பு என்றும், அவன் சினத்தைப் பாம்பின் சீற்றத்திற்கு உவமித்தும் முன்பும் கவிஞன் பஞ்சவடியின் நிகழ்ச்சியின்போது கூறியிருப்பதையும் இங்கு நினைவுகூர்க.

239. முரண் தொகும் சிலை இமைப்பினில் முறையுற வாங்கி,
புரண்டு தோள் உறப் பொலன்கொள் நாண் வலம்படப் போக்கி,
திரண்ட வாளிகள் சேவகன் மரகதச் சிகரத்து
இரண்டு தோளினும் இரண்டு புக்கு அழுந்திட, எய்தான். (7338)

(பொலன்-அழகு; முரண்-வலிமை; தொகுதல்-சேர்தல்; வாங்கி. வளைத்து; வலம்பட-வலிமைபொருந்த; போக்குதல்-செலுத்துதல்; சிகரம்-மலை; சேவகன்-வீரன்/இராமபிரான்; புகுதல்-தைத்தல்; அழுந்துதல்-ஊன்றுதல்)

அழகு பொருந்திய நாணைத் தனது தோள்வரை புரளும்படி இழுத்து, வலிமையெல்லாம் ஒன்று திரண்டாற் போன்றிருக்கும் தனது வில்லை ஒரு நொடிப்பொழுதில், முறைப்படி வளைத்து, திரட்சி பொருந்திய இரண்டு அம்புகளை தன் வலிமை முழுவதையும் பயன்படுத்தி, வீரனான இராம பிரானது மரகதமலை போன்ற இரண்டு தோள்களிலும் ஊன்றிப் பதியுமாறு செலுத்தினான் இராவணன்.

'முரண்தொகும்சிலை' என்பது வலிமையெல்லாம் ஒன்று திரண்டவில் எனப்பொருள் விரிவு கொள்ளும். இராமபிரான் இரு தோள்களுக்கும் மரகதமலைச் சிகரங்கள் ஒப்பு.

240. முறுவல் எய்திய முகத்தினன், முளரி அம் கண்ணன்,
மறு இலாதது ஓர் வடிக்கணை தொடுத்து, உற வாங்கி,
இறுதி எய்தும் நாள், கால் பொர, மந்தரம் இடையிட்டு
அறுவதாம் என, இராவணன் சிலையினை அறுத்தான். (7339)

(முளரி-தாமரைமலர்; அம்-அழகிய; முறுவல்-புன்சிரிப்பு; மறு-குற்றம்; வடி-கூரிய; வாங்கிய-விடுத்த; இறுதி-அழிவு; கால்-காற்று; பொருதல்-மோதுதல்; அறுவது-முறிந்துபோவது)

Koviloor Digital Library

செந்தாமரை போலும் அழகிய கண்களையுடைய இராமபிரான், இராவணன் தொடுத்த வில் பற்றிச் சற்றும் கலங்காது புன்முறுவல் பூத்த முகத்தினை உடையவனாய், குற்றம் இல்லாத ஒரு ஒப்பற்ற கூரியவில்லை நன்கு நாணேற்றி வளைத்துத் தொடுத்து, ஊழியிறுதிக்காலத்தில் தோன்றும் பெரும் காற்று மோதும்போது, மந்தரமலை இடையில் புகுந்து இற்று வீழ்ந்தது போலத்தோன்றும்படி, இராவணன் செலுத்திய வில்லினை அறுத்துத் தள்ளினான்.

இராமபிரான் எதற்கும் அஞ்சாதவன். அவன் போர் செய்வதே ஏதோ ஓர் விளையாட்டுப்போல் தோன்றும், இதனைக் கவிஞன், எதிர் நிலைத்தலைவன் இராவணன் கூற்றாகவே பின்னர் மாலியவானிடம் கூறப்போவதையும் இங்கு நிவைுகூர்தல் தகும். 'கூனி கூன் போக உண்டை தெறித்தபோது ஒத்ததன்றிச் சினவுண்மை தெரிந்ததில்லை' என்பது இராவணன் கூற்று. 'அலகிலா விளையாட்டு உடையான்' என்பது கவிஞனின் பாயிரப்பாடல். முன்பு சுந்தரகாண்டத்தில் சீதாதேவியின் கூற்றாக 'பத்துளதலையும் தோளும், பலபல பகழிதூவி, வித்தக வில்லினாற்குத் திருவிளையாடற்கு ஏற்ற சித்திர இலக்கம் ஆகும்' என்று கூறியதையும் நினைவிற் கொண்டு வருக. இரவணனது பெரிய வில்லுக்கு மந்தரமலை ஒப்பு. இராமபிரானது அம்புக்கு ஊழிக்காற்று ஒப்பு.

241. மாற்று வெஞ்சிலை வாங்கினன், வடிம்புடை நெடுநாண்
ஏற்றுறா முனம், இடை அறக் கணைகளால் எய்தான்;
காற்றினும் கடிது ஆவன, கதிர்மணி நெடுந்தேர்
ஆற்று, கொய் உளைப் புரவியின் சிரங்களும் அறுத்தான். (7340)

(மாற்று-வேறு; வாங்கி-வளைத்து; வடிம்பு-விளிம்பு; கடிது-விரைந்து; கதிர்-ஒளி; ஆற்றுதல்-நடத்துதல்; கொய்-கத்தரித்த; உளை-பிடரிமயிர்)

தன்னுடைய வில், இராமபிரானால் அறுக்கப்பட்டதால் இராவணன் மாற்றாக, வேறு ஒரு கொடிய வில்லினை வளைத்து, விளிம்புகளை யுடையதும், தழும்புகளை ஏற்படுத்த வல்லதுவுமான நீண்ட நாணைத் தன் வில்லில் ஏற்றுவதற்கு முன்பே, இராமபிரான் அதனைத் தன் அம்புகளால் நடுவிலேயே இற்று விழும்படி அறுத்தான். பின்னர் காற்றைக் காட்டிலும் மிக விரைந்து செல்லுவனவும், ஒளிமிக்க மாணிக்கங்கள் பதித்ததுமான நீண்ட பெரிய தேரை வழிநடத்திச்செல்லும் கத்தரிக்கப்பட்ட பிடரிமயிரை உடைய குதிரைகளின் தலைகளையும் அறுத்தெறிந்தான்.

242. மற்றும் வெம்படை வாங்கினன் வழங்குறா முன்னம்,
இற்று அவிந்து உக, எரிகணை இடை அற எய்தான்;
கொற்ற வெண்குடை கொடியொடும் துணிபடக் குறைத்தான்;
கற்றை அம் சுடர்க் கவசமும் கட்டு அறக் கழித்தான். (7341)

Koviloor Digital Library

(வழங்குதல்-செலுத்துதல்; கற்றை-திரள்; அம்-அழகிய; சுடர்-ஒளி; கழித்தல்-நீக்குதல்; கொற்றம்-வெற்றி)

இராவணன் விடுவதற்கு முன்பே, அந்த அம்பும் இராமபிரானால் அறுக்கப்பட்டதால், அவன் வேல் போன்ற வேறு போர்க்கருவிகளைக் கைக்கொண்டு, அவற்றைச் செலுத்துவதற்கு முன்பே, அவை இடை யிடையே முழுதும் அறுந்துவிழும் வண்ணம், தன்னுடைய நெருப்புப் பொறி பறக்கும் வில்லினால் நடுவிலேயே துணிந்து போகுமாறு அவற்றை அறுத்தான்; மேலும் இராவணனுடைய வெற்றி பொருந்திய அவன் கொற்றக் குடையையும், அவனது இலச்சிணையாகிய வீணை பதித்த வீணைக் கொடியையும் இரண்டு கூறுபட அழித்தான்; பின்னர் அவன் அணிந்திருந்த திரட்சி மிகுந்த அழகிய ஒளிவீசுகின்ற உயிர்க் கவசத்தையும் அதன் கட்டுத் தளருமாறு வெட்டி வீழ்த்தினான்.

அறுத்தல் என்பது இரு கூறாகச் செய்தல்; குறைத்தல் என்பது சிறிதளவு அழியுமாறு செய்தல்; வெண்கொற்றக்குடையினைக் காட்டிலும், இராவணனுக்குப் பிடித்தமான வீணை எழுதப்பட்ட கொடி சிறப்புடையது. எனவே 'கொடியொடும் துணிபட' என்றார். இந்த 'ஒடு' என்ற சொல் ஒரு சிறப்புப் பொருளைத்தரும் என்கிறது தொல்காப்பியம். 'ஒருவினை ஒடுச்சொல் உயர்பின் வழித்தே' என்பது தொல்காப்பியம்.

243. மாற்றுத்தேர் அவண் வந்தன, வந்தன வாரா,
வீற்று வீற்று உக, வெயில் உமிழ் கடுங்கணை விட்டான்;
சேற்றுச் செம்புனல் படுகளப் பரப்பிடைச் செங்கண்
கூற்றும் கை எடுத்து ஆடிட, இராவணன் கொதித்தான். (7342)

(அவண்-அங்கு; வந்தன வந்தன-வரிசையாக வந்தன; வீற்றுவீற்று-வேறுவேறாக; உக-சிதைந்துவிழ; வெயில்-ஒளி; உமிழ்தல்-வீசுதல்; செம்புனல்-இரத்தநீர்; கூற்று-இயமன்)

அப்பொழுது அங்கு இராவணனுக்கு உதவுவதற்காக 'சேமத்தேர்கள்' பல வரிசையாக வந்தன. ஆனால் அவை அவனிடம் வந்து சேருவதற்கு முன்பே, இராமபிரான் அவை வெவ்வேறாகச் சிதைந்து போகும் வண்ணம், ஒளிவீசுகின்ற தன் கொடிய அம்புகளால் அவற்றை அழித்தான். சிவந்த இரத்தநீர் பெருகிய சேறு போலாகிய போர்க்களத்தில் நடுவில் சிவந்த கண்களையுடைய இயமனும் மிக மிகிழ்ந்து தன் கைகளை உயரே தூக்கிக் கொண்டு கூத்தாடினான். இது கண்ட இராவணன் மனம் கொதித்தான்.

'மாற்றுத்தேர்' என்பது சேமத்தேரினைக் குறித்தது. அவை மிகப்பல வரிசைவரிசையாக வந்தன என்பதை 'வந்தன வந்தன' என்ற அடுக்கால் குறித்தார் என்க. 'வாரா' என்பது வந்து சேருவதற்கு முன்பே, வாராத வண்ணம் தொலைவிலேயே என்ற பொருளைத்தரும்; 'வீற்று வீற்று' என்ற

Koviloor Digital Library

அடுக்கும், அவற்றை வெவ்வேறு துண்டங்களாக ஆக்கினான் என்ற பொருளைத்தரும். ''செங்கண்கூற்றும்கைஎடுத்துஆடிட'' என்பது, தனக்கு அளவிடற்கரிய உணவு கிடைத்தது என்னும் மகிழ்ச்சியால் கூத்தாடியது என்பதாம். 'கூற்றும்' என்பதில் உள்ள உம்மை, இதுவரை அரக்கர்களின் இரத்தத்தையே பார்த்தறியாத இயமனும், இப்பொழுது அவற்றை முதன்முறையாகச்சுவைப்பதற்கு ஏற்பட்ட வாய்ப்பை எண்ணி மகிழ்ந்தது என்பதாம். தனக்கு இதுவரை அஞ்சிக் கட்டுப்பட்டிருந்த இயமன், இப்பொழுது மகிழ்ச்சிக் கூத்தாடுவது கண்ட இராவணன், அது பொறுக்கமாட்டாமல் மனம் கொதித்தான் என்பதாம். 'மின்திகழ், பிறழ்பற் கூற்றம், விலாப்புடை வீங்க உண்ண' என்பது குசேல உபாக்கியானம். இயமன் தனக்கு ஏராளமான உணவு கிடைத்ததால் மகிழ்ந்து ஆடினான் என்பதை விடத் தன்னை இதுவரை கட்டுப்படுத்தி வைத்திருந்த இராவணனுக்கு இந்த இழிநிலை ஏற்பட்டதே என்று மகிழ்ந்து ஆடினான் என்னும் பொருள் இன்னும் சிறப்புச் சேர்க்கும் என்க.

244. மின்னும் பல்மணி மௌலி மேல், ஒருகணை விட்டான்;
அன்ன காய்கதிர் இரவிமேல் பாய்ந்த போர் அனுமன்
என்னல் ஆயது ஓர் விசையினின் சென்று, அவன்தலையில்
பொன்னின் மாமணி மகுடத்தைப் புணரியில் வீழ்த்த. (7343)

(மௌலி-மகுடம்; கதிர்-கிரணங்கள்; இரவி-சூரியன்; என்னலாயது-என்று சொல்லத்தக்கது; விசை-விரைவு/வேகம்; புணரி-கடல்; காய்-வெப்பமான)

மின்னல்போல் ஒளிவீசுகின்ற பல இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற இராவணனின்மகுடத்தின்மீது இராமபிரான்ஓர்அம்பினைஏவினான்; அது வெப்பமுடைய கிரணங்களையுடைய சூரியனின் மேல் பாய்ந்த, போர்செய்யும் ஆற்றலுடைய அனுமன் என்று கூறும் வண்ணம் ஒப்பற்ற வேகத்துடன் சென்று, இராவணன் தலையில் சூடியிருந்த பொன்னினாலும், மாணிக்கங்களாலும் இயன்ற மகுடத்தைக் கடலில் விழும்படி செய்தது.

'காய்கதிர்மேல் பாய்ந்த போர் அனுமன் என்னலாயது' என்பது முன்பு, அனுமன் இளமைப்பருவத்தில், சூரியனைச் சிவந்த கனி என்று கருதி அதனைப் பற்றுவதற்காகச் சூரியன்மீது பாய்ந்த நிகழ்ச்சியைக் குறித்தது என்க. இப்போது இராவணன் செலுத்திய அம்பின் வேகத்திற்குச் சூரியன் மேல் பாய்ந்த அனுமனின் வேகம் உவமை. இராவணனின் மணி மகுடம் சூரியனுக்கும், இராமன் செலுத்திய அம்பு அனுமனுக்கும் உவமை. 'அழுது அரற்றிய பாலகன், அன்னை முன் உரைத்த பழம் நமக்கு இதுவாம் என பரிதிமேற் பாய்ந்தான்' என்பது உத்தரகாண்டம் அனுமப்படலம்.

Koviloor Digital Library

245. செறிந்த பல்மணிப் பெருவனம், திசைபரந்து எரிய,
பொறிந்தவாய், வயக்கடும் சுடர்க்கணை படும் பொழுதின்,
எறிந்த கால்பொர, மேருவின் கொடுமுடி இடிந்து,
மறிந்து வீழ்ந்ததும் ஒத்தது, அவ்வரக்கன் தன் மகுடம். (7344)

(சுடர்-ஒளி; செறிந்த-நெருங்கியிருந்த; வனம்-தொகுதி/திரள்; எறிந்த-வீசிய; கால்-காற்று; பொர-மோத; கொடுமுடி-சிகரம்; மறிதல்-கீழ் மேலாய்ப் புரண்டு வீழ்தல்; வய-வலிய; வாய்-நுனி)

வலிய வெற்றிபொருந்திய கடுமையான ஒளிவீசுகின்ற, இராம பிரானது அம்புகள் இராவணன் மகுடத்திற் படும்பொழுது, அங்கு நெருங்கி நிறைந்திருந்த பலவகைப்பட்ட மாணிக்கக் கற்களின் பெருந்திரள், திக்குகளில் எல்லாம் சிதறி ஒளிவிட்டுப் பிரகாசிக்கலாயின; அப்போது வீசிய காற்று மோதியதனால், மேருமலையின் சிகரங்கள் இடிந்து தலைகீழாக விழுந்ததைப்போல, அவ்வரக்கனாகிய இராவண னின் தலைமேல் இருந்த மகுடங்கள் சிதறிப்போயின.

மகுடத்தில் பதிக்கப்பெற்றிருந்த மணிகளின் சிறப்பு, 'செறிந்த பல்மணிப் பெருவனம்' எனப்பட்டது. அரக்கனின் மகுடம் மேருமலை போன்றது. அதில் பதித்திருந்த நவமணிகள் சிகரத்தைப் போன்றன என்க. 'மறிந்து' என்பது தலைகீழாக விழுந்ததைக் குறிக்கும். இங்கே, முன்பு சொன்ன ஒரு கருத்தும் அடங்கியிருத்தல் காணலாம். முன்பு வாயு தேவனும், ஆதிசேஷனும், மேருமலையைக் காக்க நடத்திய போட்டியில் வாயு மோதியதால் மேருமலையின் உயர்ந்த மூன்று சிகரங்கள் உடைந்து மடங்கிக் கடலில் விழுந்ததைப் போன்று, இப்பொழுது அவ்வரக் கனுடைய மகுடம் சிதறி விழுந்தது என்பதாம். இராவணனின் மகுடம் மறிந்து வீழ்வதற்கு, மேருவின் சிகரம் கடலில் விழுந்ததையே உவமையாகக் கூறினார் என்க. முன்பு இராவணன் விற்படை மந்தர மலையைப் போல அறுந்து வீழ்ந்தது என்று கூறிய கவிஞன், இப்பொழுது அவனுடைய மகுடம் மேருமலையைப் போல் மறிந்து வீழ்ந்தது என்று கூறுவதை நோக்குக. இராவணனுடைய வில் மந்தரமலைக்கும் அவன் மகுடம் மேருமலைக்கும் உவமை. 'வனம்' என்பது திரள் என்ற பொருளில் பயின்று வந்தது.

246. அண்டர் நாயகன் அடுசிலை உதைத்த பேர் அம்பு,
கொண்டு போகப்போய்க் குரை கடல் குளித்த அக்கொள்கை,
மண்டலம் தொடர் வயங்கு வெங்கதிரவன், தன்னை
உண்ட கோளொடும், ஒளிகடல் வீழ்ந்ததும் ஒக்கும். (7345)

(அண்டர்நாயகன்-தேவர்கள்தலைவன்/இராமபிரான்; அடுதல்-கொல்லுதல்; உதைத்த-செலுத்திய; குரை-ஒலிக்கின்ற; குளித்தல்-

Koviloor Digital Library

மூழ்குதல்; கொள்கை-தன்மை; மண்டலம்-வட்டம்; வயங்கு-விளங்குகின்ற; உண்ட-விழுங்கிய; கோள்-கிரகம்/கேது)

தேவர் தலைவனாகிய இராமபிரான் செலுத்திய பகைவரைக் கொல்லும் தன்மையுள்ள பெருமைக்குரிய பெரிய அம்பு, இராவணன் மகுடத்தை ஒலிக்கின்ற கடலில் அடித்துக் கொண்டுபோய் மூழ்கச் செய்த இந்தத் தன்மையானது, வட்ட வடிவமுடையதால் உலகினைச் சுற்றிச் செல்லுகின்ற, விளங்குகின்ற கொடிய வெப்பமான கதிர்களை உடைய சூரியன் தன்னை விழுங்கிய கேது என்னும் கிரகத்தோடு, ஒலிக்கின்ற கடலில்போய் விழுவதை ஒத்திருந்தது.

'குளித்தல்' மூழ்குதல் என்ற பொருளில் பயின்று வந்துள்ளது. கேது 'செம்பாம்பு' என்றும் வழங்கப்பெறும். இராவணனுடைய மகுடத்தைப் பற்றிய இராமபாணத்திற்குச்சூரியனைப் பற்றியகிரகமாகிய கேது என்னும் பாம்பு உவமை. சூரியன், கிரகணம் பற்றிய நிலையிலேயே கடலில் சென்று மறைவதும் உண்டு. அந்தச் செய்கை இங்கே உவமையாகக் கையாளப் பட்டிருக்கிறது என்க.

247. இராவணன் தன் மகுடம் இழந்து வெட்கமுற்று நிற்றல்

சொல்லும் அத்தனை அளவையில், மணிமுடி துறந்தான்;
எல் இமைத்து எழும் மதியமும், ஞாயிறும் இழந்த
அல்லும் ஒத்தனன்; பகலும் ஒத்தனன்; அமர் பொருமேல்,
வெல்லும் அத்தனை அல்லது, தோற்றிலா விறலோன். (7346)

(பொருதல்-போர்செய்தல்; விறல்-வெற்றி; துறத்தல்-இழத்தல்; எல்-ஒளி; இமைத்தல்-விளங்குதல்; மதியம்-சந்திரன்; அல்-இரவு; அமர்-போர்)

போர் செய்வது என்று தீர்மானித்துப் போர்செய்யப் போர்க்களம் புகுவான் என்றால், வெற்றியே அல்லாது யாரிடத்தும் தோல்வி என்ற சொல்லுக்கே இடமில்லாத வீரப்பாடும் வலிமையும் உடைய இராவணன், இப்போது ஒரு சொல்லைச் சொல்லி முடிக்கின்ற இமைப்பொழுதினில் இராமபாணத்தால், தன்னுடைய மணிகள் பதிக்கப்பட்ட மகுடங்களை இழந்துவிட்டான். ஒளி விளங்கித் தோன்றும், சந்திரனும், சூரியனும், இல்லாத இரவையும், பகலையும் போன்றவனானான். சந்திரன் இல்லாத இரவையும், சூரியன் இல்லாத பகலையும் போல ஒளி இழந்து நின்றான்.

'சொல்லும் அத்தனை அளவு' என்பது, நொடிப்பொழுது, இமைப் பொழுது என்று ஒரு சிறுகால அளவைக்குறிக்கும். 'மணிமுடி துறந்தான்' என்ற சொல்லாட்சியை நோக்குக. இனிமேல் மணிமுடி அவனுக்குக் கிடைக்காது என்ற தொனி அங்கே ஒலிப்பதை உணர்க. ஒளிவீசுகின்ற நிலவு இல்லாத இரவையும், ஒளி வீசுகின்ற சூரியன் இல்லாத பகலையும்

Koviloor Digital Library

ஒத்தான் என்று நிரல் நிரையாகப் பொருள் கொள்ளவேண்டும். இதுவரையிலும் தோல்வி என்பதையே கண்டிராத வீரன் என்பது 'வெல்லும் அத்தனை அல்லது தோற்றிலா வீரன்' என்று அவன் வெற்றிச் சீர்மை சிறப்பிக்கப்பட்டது என்க. 'சந்திரனில்லா வானம், தாமரையில்லாப் பொய்கை' என்பது விவேக சூடாமணி. நிலவு இல்லாத இரவு இருப்பது உண்டு; ஆனால் சூரியன் இல்லாத பகல் ஒரு போதும் இருக்காது என்பதை உணர்க. இராவணன் அம்மணிமுடி அணிந்திருந்தால், பகலில் ஒளிவீசும் சூரியனையும், இரவில் ஒளிவீசும் நிலவையும் ஒத்திருப்பான். இப்போது மணிமுடி இழந்த நிலையில் அவன் ஒளி குன்றி கரிய உருவத்துடன் நின்றான் என்பதைக் கவிஞன் அழகுபடக் கூறிய நயம் நோக்குக.

248. மாற்றஅரும் தடமணிமுடி இழந்த வாள் அரக்கன்,
ஏற்றம் எவ்வுலகத்தினும் உயர்ந்துளன் எனினும்
ஆற்றல் நல் நெடுங்கவிஞன் ஓர் அங்கதம் உரைப்ப,
போற்றஅரும் புகழ் இழந்த பேர்ஒருவனும் போன்றான். (7347)

(வாள்-கொடிய; ஏற்றம்-பெருமை/உயர்வு; நெடுமை-பெருமை; அங்கதம்-வசைச்செய்யுள்; பேர்ஒருவன்-பெரியோன்; மாற்றுதல்-நீக்குதல்)

விலக்குதற்கு அரியதானதும், ஒப்பில்லாததுமான பெரிய மணி மகுடத்தை இராமபிரான் அம்பினால் இழந்த கொடிய அரக்கனான இராவணன், பெரும்புகழ் படைத்த ஒருவன், எவ்வளவு பெருமையும், சிறப்பும் பெற்று உயர்ந்திருந்தாலும்கூட, நல்ல சொற்கள்கூறி வாழ்த்தவும், அல்லனவாகிய வசைச்சொற்கள் கூறி இகழவும் வல்லவனான ஒரு பெருங்கவிஞன், ஓர் வசைச்செய்யுளை அவன்மீது பாடி விட்டான் என்றால், அந்தப் போற்றுதற்கு அருமையான புகழை இழந்துவிட்ட பெரியவனைப் போல, இப்போது இராவணன் தோன்றினான்.

இராமபிரான் அம்பினால் மணிமகுடம் இழந்த இராவணனுக்கு, நல்லறிஞன் ஒருவன் அங்கதச் செய்யுளால் பேரும் புகழும் இழந்த ஒரு உயர்ந்த புகழ்வாய்ந்தவன் ஒப்பு. 'மாற்ற அரும் தடமணிமுடி' என்பது, இதுவரை யாராலும் நீக்க இயலாத மணிமகுடம் என்றும், வேறு எதற்கும் ஒப்புக்கூற முடியாத மணிமகுடம் என்றும் இருபொருளையும் தரும். அருளிக்கூறினும், வெகுண்டு கூறினும், அவ்வப்பயன்களை அவ்வப் பொழுதே தரும் ஆற்றல் வாய்ந்த புலவர்கள் பாடும் பாடல் அங்கதம் எனப்படும். 'அங்கதம் தானே அரில் தவத்தெரியின், செம்பொருள் பழி, கரப்பு என இருவகைத்தே' என்பதும், 'செம்பொருளாயின வசையெனப் படுமே' என்பதும், ''மொழி கரந்து சொல்லின் அது பழிகரப்பாகும்' என்பதும் தொல்காப்பியம். 'ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுறிந்து, வேந்தனும் வெந்துகெடும்' என்பது குறள்-899. மணிமகுடம் இழந்த இராவணன், ஒரு புலவனின் அங்கதப்பாடலால் புகழ் இழந்த ஒருவனை

Koviloor Digital Library

ஒத்திருந்தான் என்பதாம். இராமபிரான் அம்புக்கு, ஆற்றல் மிக்க கவிஞனின் அங்கதச் செய்யுள் உவமை. 'இருள்தீர் மணி விளக்கத்து ஏழிலார் கோவே! குருடேயுமன்று நின்குற்றம்; மருள்தீர்ந்த பாட்டும் உரையும் பயிலாதன, இரண்டு ஓட்டைச் செவியும் உள' என்பது ஔவையார் ஒரு வேந்தனைப் பார்த்துப் பாடிய ஓர் அங்கதச்செய்யுள். ஒரு கவிஞனின் சொல்லுக்கு இராமபிரானின் கூரிய அம்பை முன்பும் உவமையாகச் சொன்னதை நினைவுகூர்க. 'சொல்லொக்கும் கடிய வேகச் சுடுசரம்' என்பது தாடகை வதைப்படலம்.

249. இராவணன் நாணிக்குறுகி நிற்றல்

'அறம் கடந்தவர் செயல்இது' என்று உலகெலாம் ஆர்ப்ப,
நிறம் கரிந்திட, நிலம்விரல் கிளைத்திட, நின்றான்,
இறங்கு கண்ணினன், எல் அழி முகத்தினன், தலையன்,
வெறுங்கை நாற்றினன், விழுதுடை ஆல் அன்ன மெய்யன். (7348)

(இறங்குகண்-கீழேபார்க்கும் கண்கள்; எல்-ஒளி; நாற்றுதல்-தொங்கவிடுதல்; மெய்-உடம்பு; கிளைத்தல்-கீறுதல்/கிளறுதல்)

இப்போது, இராவணன், இராமபிரான் செலுத்திய அம்பினால் தம் படைகள், செருக்கு ஆகிய எல்லாவற்றையும் இழந்து நிற்கிறான்; 'தருமநெறி தவறி நடக்கும் பாவிகளின் இறுதிநிலை இவ்வாறாகத்தான் இருக்கும்' என்று உலகத்தவர் அவனைப் பார்த்து உரக்கப் பேசுகிறார்கள்; அதனால் அவனுடைய கரியநிறம் மேலும் ஒளி அழிந்து பொலிவிழந்து கறுத்துப்போகிறது; கால் விரலால் தலை குனிந்து நிலத்தைக் கிளறுகிறான்; இராமபிரானையும், மற்றவர்களையும் நேருக்குநேர் பார்க்க இயலவில்லை. எனவே கண்கள் கீழ்நோக்கி நிலத்தைப் பார்த்த வண்ணம் இருக்கிறது. அவமானத்தால் தலையும் தாழ்ந்து ஒளியிழந்துபோய் நிலம் பார்க்கிறது. கைகளில் ஆயுதம் ஏதும் இல்லாமல் வெறுங்கைகளைத் தொங்கவிட்டுக் கொண்டு நிற்கிறான். பெரும் ஆலமரம் போன்ற உடலை உடைய இராவணன் அந்த ஆலமரத்தின் விழுதுகளைப் போலத் தன்னுடைய இருபது கைகளையும் தொங்கவிட்டுக் கொண்டு நாணிக்குறுகி நின்றான்.

மணிகள் பதிக்கப்பெற்ற மணிமுடி இழந்ததனால், தலையும் ஒளி குன்றிப் போனது என்றது ஒரு நயம். அவன் உடலுக்கு ஆலமரத்தையும், அவன் கைகளுக்கு ஆலம் விழுதுகளையும் உவமித்தது மிகப் பொருத்த மானது. கால் விரலால் நிலத்தைக் கிளறுவது என்பது வெட்கத்தால் நிகழும் மெய்ப்பாடு. தோற்று நாணிநிற்கும் ஒரு பெருவீரனின் தோற்றத்தை மிக அழகாகப் படம்பிடித்துக் காட்டுகிறான் கவிஞன். 'இறங்கு கண்ணினன்' என்பது கீழ்நோக்கும் பார்வையைக் குறிக்கிறது.

Koviloor Digital Library

'களவுடம் படுநரில் கவிழ்ந்து, நிலம் கிளையா நாணி நின்றோன்' என்பது அகநானூறு.

250. இராமபிரான் இராவணனுக்கு அறிவுரை கூறுதல்

நின்றவன் நிலை நோக்கிய நெடுந்தகை, இவனைக்
கொன்றல் உன்னிலன், 'வெறுங்கை நின்றான்' எனக்கொள்ளா;
'இன்று அவிந்தது போலும், உன்தீமை' என்று இசையோடு
ஒன்ற வந்தன வாசகம் இனையன உரைத்தான். (7349)

(நெடுந்தகை-பெருந்தன்மை; அவிந்தது-அடங்கியது; இசை-புகழ்; ஒன்றுதல்-பொருந்துதல்; இனையன-இத்தன்மையான; வாசகம்-சொற்கள்; கொள்ளா-கொண்டு; தீமை-தீயசெயல்கள்; உன்னுதல்-நினைத்தல்/கருதுதல்)

அவ்வாறு இறங்கு கண்ணன், எல் அழி முகத்தினன், தலையன், வெறுங்கை நாற்றினனாகத் தன் எதிரில் நாணிக்குறுகி நின்ற இராவணனது அவல நிலையைக் கண்ணுற்ற பெருந்தன்மை படைத்தவனான இராமபிரான் 'இவன் வெறுங்கையோடு, படைக்கலன் ஏதுமின்றி நிற்கின்றான்' என்று மனத்துட் கொண்டு, அவனைக் கொல்லுதலைக் கருதாதவனாய், அவனை நோக்கி, 'இன்றுடன் உனது தீயசெயல்கள் எல்லாம் அடங்கி விட்டன போலும்!' என்று, புகழோடு பொருந்திய தன்மையுடைய சொற்களைப் பின்வருமாறு கூறத்தொடங்கினான்.

முன்பு தாடகையை வதை செய்யத் தயங்கிய இராமபிரானைப் 'பெருந் தகை' என்று குறிப்பிட்டதையும், இங்கு இராவணனைக் கொல்லத்தயங்கி நிற்கின்றவனை 'நெடுந்தகை' என்று குறிப்பிட் டிருப்பதையும் ஒப்பு நோக்குக. 'கொல்லல்' என்பது எதுகைநோக்கி 'கொன்றல்' என வந்தது. இராவணனிடத்துள்ள பாவச்செயல்கள் காமத்தீயும், ஆணவத்தீயும் என்க. 'இசையோடு ஒன்ற வந்தன வாசகம்' என்பது இருவருக்கும் உலகு உள்ள அளவும் புகழ் தரத்தக்க சொற்கள் என்ற பொருளைத்தரும். நிராயுதனாய் நிற்பவனைக் கொல்லக் கருதுதலே பாவம் என்று மனத்துட் கொண்டு இரங்கினதால் இராமபிரானைக் கவிஞன் 'நெடுந்தகை' என்றான் என்க. இராவணனின் உள்ளத்தில் எரிந்துகொண்டிருப்பவை காமத்தீயும், ஆணவத்தீயும். எனவே 'தீமைகள் அவிந்தன, போலும்' என்ற அழகிய சொல்லைப் பயன்படுத்திய கவிஞனின் கவித்திறம் நோக்குக.

251. "அறத்தினால் அன்றி, அமரர்க்கும் அருஞ்சமம் கடத்தல்
மறத்தினால் அரிது என்பது மனத்திடை வலித்தி;
பறத்தி நின்நெடும் பதிபுகக் கிளையொடும்; பாவி!
இறத்தி; யான் அது நினைக்கிலென், தனிமை கண்டு இரங்கி; (7350)

Koviloor Digital Library

(அறம்-தருமம்; மறம்-வலிமை/வீரம்; சமம்-போர்/சமர்; கடத்தல்-வெற்றிகொள்வது; அமரர்-தேவர்கள்; வலித்தல்-உறுதியாகக் கொள்ளுதல்; கிளை-சுற்றத்தார்; இறத்தி-இறந்திருப்பாய்; நெடுமை-பெருமை; பறத்தி-ஓடுவாயாக; பாவி-பாவச்செயல்கள் புரிந்தவன்)

இராமபிரான் இராவணனை நோக்கி ''தருமநெறியினின்று போர்புரியாது, அதர்ம நெறியில் நின்று, வலிமை வீரம் ஒன்றை மட்டுமே கொண்டு செய்தற்கரிய போர் செய்து அதில் வெற்றி காண்பது என்பது, பெரியோர்களாகிய தேவர்களுக்கும் அரிது, என்பதை நீ உன் மனத்தில் நன்றாக நிறுத்திக் கொள்வாயாக!. இறந்து போனவர்கள் தவிர, எஞ்சி இருக்கின்ற உன் சுற்றத்தார்களோடு, உன்னுடைய பெருமைவாய்ந்த இலங்கை மாநகருக்குள் புகுந்து ஒளிந்து கொள்வாயாக! விரைவாகச் செல்வாயாக! இப்பொழுது நாம் பொருத போரில் நீயும் இறந்து போயிருப்பாய், ஆனால் நீ நிராயுதபாணியாகத் தனியாகப் போர்க்களத்தில் நிற்பதைக் கண்டு நான் இரக்கப்பட்டு, உன்னைக் கொல்லக் கருதவில்லை. அதனால் நீ இப்போது பிழைத்துப் போவாயாக!'' என்கிறான் இராமபிரான்.

மறம் என்பது ஆள்வலி, தோள்வலி, படைவலி, போர்க்கருவிகளின் வலி என்று இவற்றைக் குறிக்கும் என்க. 'பறத்தி' என்பது விரைவாக ஓடு என்ற பொருளைத்தரும்; 'பாவி' என்ற சொல் பாவச்செயல் புரிந்தவனைக் குறிக்கும். இராவணன் பிறன்மனை நயத்தல் என்ற பாவச்செயல் செய்ததனால் அவ்வாறு அழைக்கப்பட்டான் என்க. 'இறத்தி' என்பது 'இறந்திருப்பாய்' என்று இறந்த காலத்தைக் குறித்து நின்ற சொல். தன்னுடைய எண்ணம் இராவணனைத் திருத்திச் சீதையை மீட்டுக் கொண்டு போகவேண்டும் என்பதே அல்லாமல், அவனைக் கொன்று தீர்க்க வேண்டுவது அன்று. எனவேதான் 'இறத்தி, யான் அது நினைக் கிலேன்' என்றார் என்க. நிராயுதபாணியாகத் தனியாக நிற்கும் ஒருவனுடன்போர்செய்வது யுத்ததர்மம் அல்ல என்பது புலப்படுத்தப்பட்டது. இதுதான் பேராண்மை எனப்படும். 'பேராண்மை என்பது தறுகண் ஒன்று உற்றக்கால், ஊராண்மை மற்று அதன் எஃகு' என்பது குறள்-773. இராவணன் எண்ணம் இராமனை வீழ்த்தி வெற்றிகண்டு, சீதையைக் கைப்பிடிக்கவேண்டும் என்பதே. எனவேதான் அவன் விரும்பியே போரை மேற்கொண்டான். எனவே தோற்று, நாணி நிற்க வேண்டியதாயிற்று. 'அமரர்க்கும்' என்பது இங்கு தேவர்களைத் தவிர, முத்தேவர்களாகிய அரன், அரி, அயன் மூவரையும்கூடக் குறிக்கும் எனக்கொள்க. தண்டகவனத்து முனிவர்களுக்கு அளித்த உறுதிமொழியில் இராமபிரான் இவர்களையும் குறிப்பிட்டுக் கூறியதையும் இங்கு நினைக.

252. "உடைப்பெரும் குலத்தினரொடும், உறவொடும், உதவும்
படைக்கலன்களும், மற்றும் நீ தேடிய பலவும்,
அடைத்து வைத்தன, திறந்து கொண்டு ஆற்றுதியாயின்,
கிடைத்தி; அல்லையேல் ஒளித்தியால்; சிறுதொழில் கீழோய்!" (7351)

Koviloor Digital Library

(கீழோய்-கீழ்மகனே; ஆற்றுதல்-வலிமையுடையவனாதல்; குலத்தினர்-இனத்தவர்; கிடைத்தல்-வருதல்/நெருங்குதல்; சிறுதொழில்-இழிந்ததொழில்)

''அற்பமான, இழிதொழிலான, பிறன்மனை நயத்தல் என்ற செய்கையைச் செய்த கீழ்மகனே! உன்னுடைய பெரிய அரக்கர் இனத்தவரொடும், உன்னுடைய உறவாகிய உன் தம்பி, மக்கள் முதலியவர்களோடும், உனக்கு இனி உதவுகின்ற படைக்கலன்களோடும், மேலும் நீ அரிதின் முயன்று சேர்த்து, இப்பொழுது பல இடங்களிலும் அடைத்து வைத்திருக்கின்ற நால்வகைப் படைகளோடும், அவற்றைத் திறந்துகொண்டு அவைகளையும் அழைத்துக்கொண்டு, என்னுடன் மீண்டும் போர்செய்யும் வல்லமை உனக்கு இருக்குமானால் என்னிடம் நெருங்கி வருவாயாக! இல்லையென்றால், நீ அரண்மனைக்குள் புகுந்து ஒளிந்து கொள்வாயாக!'' என்று இராமபிரான் இராவணனை நோக்கிக் கூறுகிறான்.

'குலம்' அவன் அரக்கர் இனத்தையும், 'உறவு' அவன் தம்பி, மக்கள் முதலியோரையும் 'தேடிய பல' என்பது நால்வகைச் சேனைகளையும் குறிக்கும். பொதுவாகப் பேரரசர்கள் தம்முடைய படைகளை யாரும் தெரியாமல் ஓரிடத்தில் அடைத்து வைத்திருப்பார்கள். அங்கிருந்து அதனைத் திறந்து கொண்டு இப்பொழுது அழைத்து வருவாயாக என்பது பொருள். 'சிறுதொழில்' என்பது பிறன்மனை நயத்தலைக் குறிக்கும். 'ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை; இழுக்கத்தின் எய்துவர் எய்தாப்பழி' என்பது குறள்-137. படைக்கலங்கள் என்பது, வில், வேல், வாள் முதலிய போர்க்கருவிகளைக் குறிக்கும். 'எனைத்துணையராயினும் என்னாம்? தினைத்துணையும் தேரான் பிறன் இல்புகல்' என்னும் குறள்-144 இங்கு ஒப்புநோக்கத் தகும்.

253. "சிறையில் வைத்தவள் தன்னைவிட்டு, உலகினில் தேவர்
முறையில் வைத்து, நின்தம்பியை இராக்கதர் முதல்பேர்
இறையில் வைத்து, அவற்கு ஏவல் செய்து இருத்தியேல், இன்னும்
தறையில் வைக்கிலென், நின்தலை வாளியின் தடிந்து" (7352)

(உலகினில் தேவர்-பூதேவர்/அந்தணர்/பூசுரர்; முறை-வரிசை/தகுதி; முதல்-முதல்வன்; பேர்இறை-பேரரசர்பதவி; ஏவல்-பணி; இன்னும்-இனிமேலும்; தடிந்து-அறுத்து; வைக்கிலென்-தள்ளமாட்டேன்; வைத்தல்-தள்ளுதல்; தறை-தரை/நிலம்; விட்டு-விடுதலைசெய்து)

இராமபிரான் இராவணனை நோக்கி, ''நீ சிறையில் அடைத்து வைத்திருக்கும் சீதாதேவியை உடனே விடுதலை செய்து, இவ்வுலகின் தேவர்கள் என்று அழைக்கப்படும் தேவர்களை அவர்கள் தகுதிக்கேற்ப அவரவர்களுக்குரிய பதவிகளில் அமர்த்தி வைத்து, உன்னுடைய தம்பியாகிய வீடணனை, இராக்கதர்களுக்கெல்லாம் முதல்வனாகப்

Koviloor Digital Library

பேரரசர் பதவியில் வைத்து, அவனுக்கு நீ பணிவிடைகளும் புரிந்து கொண்டு இருப்பாயானால், இப்போது மட்டுமல்லாது இனிமேலும், உன்னுடைய தலையை என் அம்பால் அறுத்து இப்பூமியில் வைக்க மாட்டேன். உன்னைக் கொல்லமாட்டேன்'' என்று கூறுகிறான்.

இராவணன் உயிர்பிழைக்க வேண்டுமானால் அவன் இந்த நான்கு செயல்களையும் நிறைவேற்ற வேண்டும் என்பது இராமபிரான் இராவணனுக்கு வைக்கும் கட்டளைகள். ஒன்று சீதாதேவியைச் சிறையி லிருந்து விடுவிக்க வேண்டும், இரண்டு தேவர்களுக்கு அவரவர்களுக்கு உரிய பதவியைத் திருப்பி அளித்து அவரவர் இடத்திற்கு அனுப்பி வைத்துவிட வேண்டும், மூன்று அவன் தம்பி வீடணனை அரக்கர்க் கெல்லாம் முதல்வனாக ஆக்கி அவனை இலங்கையின் பேரரசனாக ஆக்கவேண்டும், நான்கு இராவணன், வீடணனுக்குப் பணிவிடை செய்ய வேண்டும். இவற்றையெல்லாம் செய்வதற்கு ஒத்துக்கொண்டால்தான் அவன் தலையை அறுக்காமல் இருப்பான், என்று கூறுகிறான் என்பதாம். 'தரை' என்பது எதுகைநோக்கித் 'தறை' எனப்பட்டது. 'உலகினில் தேவர்' என்பது இவ்வுலகில் இருக்கும் அந்தணர் போன்று என்ற பொருளைத் தரும். பூதேவர், பூசுரர் என்பது வடசொல். வீடணனை இவ்வாறு குறிக்கிறான் எனவும் கொள்ளலாம். வீடணன் பிறப்பால் அரக்கன் ஆயினும், நல்லொழுக்கத்தால் அந்தணர் வரிசையில் வைத்து எண்ணப் படத்தக்கவன். இது முன்பு அனுமனாலும் கூறப்பட்டதை இங்கு நினைக.

254. "அல்லையாம் எனின், ஆர் அமர் ஏற்று நின்று, ஆற்ற
வல்லையாம் எனின், உனக்கு உள வலிஎலாம் கொண்டு,
'நில்ஐயா!' என, நேர் நின்று பொன்றுதி எனினும்,
நல்லை ஆகுதி, பிழைப்பு இனி உண்டு", என நயவேல். (7353)

(அல்லை-இல்லை; ஆர்-அரிதாகிய; அமர்-போர்; ஆற்ற-செய்ய; பொன்றுதல்-இறத்தல்; நல்லை-நல்லவன்; வல்லை-வல்லமை; நயத்தல்-விரும்புதல்)

''நான்கூறுவதில் உனக்கு உடன்பாடும், விருப்பமும் இல்லை என்றால், அரியதான போர் செய்தலை மேற்கொண்டு, போர்செய்யும் வல்லமை உன்னிடம் இருக்கிறது என்று கருதினால், உன்னிடம் உள்ள போராற்றலைக் கொண்டு, என் எதிரில் நின்று ''போருக்கு வந்து நில்'' என்று கூறிப் பின்னர் அப்போரில் இறந்துபடுவாயாக! அவ்வாறு நீ இறப்பினும் அது உனக்கு நல்லதே பயக்கும். ஆனால் என்னை எதிர்த்துப் போர் புரிந்ததன் பின்னால் நீ பிழைத்திருப்பாய் என்பதை மட்டும் நினைத்து மகிழாதே'' என்று உறுதிபட எச்சரிக்கிறான் இராமபிரான்.

''நில்ஐயா'' என்று கூறுவது, இராவணன் அவ்வாறு தன்னைப் பார்த்துக் கூறவேண்டும் என்று கூறும் இராமபிரான் கூற்று. என்னை எதிர்த்து

Koviloor Digital Library

நின்றால் நீ நிச்சயம் இறந்துபடுவாய் என்று உறுதியாகக் கூறுகிறான் இராமபிரான். அவ்வாறு இராமபிரானுடன் எதிர்த்து நின்று போர்செய்து, அவனுடைய புனித வாளியால் இறந்து போனாலும், அது வீரமரணம் என்று கருதப்பட்டு அவனுக்குத் துறக்கமே கிடைக்கும் என்பதை ''போர் நின்று பொன்றுதி எனினும் நல்லை ஆகுதி'' என்றார் என்க. ''உனக்கு உள வலி'' என்பது அவனுக்கு உள்ள வினைவலி, தன்வலி, வரவலி முதலியவை குறித்தது என்க.

255. ''இன்று போய்ப் போர்க்கு நாளைவா'' எனல்

''ஆள் ஐயா! உனக்கு அமைந்தன மாருதம் அறைந்த
பூளை ஆயின கண்டனை; இன்று போய்ப் போர்க்கு
நாளை வா!'' என நல்கினன், நாகு இளங்கமுகின்
வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல். (7354)

(ஆள்-ஆளுதல்; மாருதம்-பெருங்காற்று; அறைதல்-மோதித் தாக்குதல்; பூளை-ஒருவகை மலர்; நல்குதல்-அருளுதல்; நாகு-இளமை; கமுகம்-பாக்குமரம்)

மிக்க இளமையான கமுக மரத்தின்மீது, வயல்வரப்புகளில் நீரில் இருக்கும் வாளைமீன்கள் குதித்துப்பாயும் நீர்வளமும், நிலவளமும் கொண்ட கோசல நாட்டின் அரசனும், வள்ளன்மை மிக்கவனுமாகிய இராமபிரான், தனித்து நின்ற இராவணனை நோக்கி, ''மூவுலகையும், அரக்கர்களையும் கட்டி ஆள்கின்ற மாட்சிமை பொருந்திய ஐயனே! உன்னுடன் நீ அழைத்துக்கொண்டு வந்த பெரிய படைகள் எல்லாம், பெருங்காற்றினால் மோதித்தாக்கப்பட்டப் பூளைப்பூக்களைப் போலக் கீழே விழுந்து அழிந்து போனதை நீயே உன் கண்களால் நேரில் கண்டிருக்கிறாய். இப்பொழுது உன்னிடம் படைபலமோ, ஆள்பலமோ எதுவும் இல்லை, தனியனாய் நிற்கிறாய், எனவே இன்று இப்படியே உன்னுடைய அரண்மனைக்குத் திரும்பிச் சென்று, சற்று ஓய்வு எடுத்துக்கொண்டு மீண்டும் போர்செய்ய விரும்பினால் நாளை எஞ்சியிருக்கின்ற படைகளுடன் என் எதிரே வந்து நின்று போர்செய்ய வருவாயாக!'' என்று அருள்கொண்டு கூறி இராவணனைப் போகச் செய்தான் இராமபிரான்.

'ஆள்' என்ற வினைச்சொல் ஆட்சிசெய்பவன் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. 'பூளை' என்பது ஒருவகைப் பூச்செடி. பஞ்சு போன்று மென்மையானது; காற்றடித்ததும் பறந்துபோய்விடும் இயல் பினது. இராக்கதர் படை அழிந்து போனமைக்குப் பூளைப்பூ உதிர்ந்தது ஒப்பு. 'நல்குதல்' என்ற சொல்லையும், 'வள்ளல்' என்ற சொல்லையும் கொண்டு, இலங்கை அரசை வீடணனுக்குத் தந்து விட்டதால், கோசல நாட்டு அரசுரிமையை இராவணனுக்குத் தந்துவிடுவது கருதித்தான்

Koviloor Digital Library

இராமபிரானை இவ்வாறு கூறவைத்திருக்கிறான் கவிஞன் என்று பொருள் உரைத்திருக்கின்றனர் என்றாலும் இது வலிந்து கூறப்பட்ட பொருளாகவே தோன்றுவதை உணர்க.

''காற்றிடைப்பூளை கரந்தென, அரந்தையுறக் கடல் அரக்கர் சேனை, கூற்றிடைச் செல்லக் கொடுங்கணை துரந்த கோலவில் இராமன்தன் கோவில்'' என்பது திருமங்கையாழ்வாரின் பெரிய திருமொழி. இதை அடியொற்றித்தான் கம்பன், இராவணன் சேனை அழிந்ததற்குப் பூளைப்பூவை கூறியிருத்தல் கூடும். தன் மனைவியைச் சிறைப் பிடித்த வனையும் மன்னித்து அருளும் பண்பு கொண்டதால் இராமபிரானை 'வள்ளல்' என்றார் என்க. 'மற்று எதனைக் கொடுப்பதினும், ஒருவனுடைய உயிரை அவனுக்குக் கொடுப்பது வள்ளன்மையிலே சிறந்த வள்ளன்மை அல்லவா? இதுவே 'தழிஞ்சி' என்று புறத்திணையில் கூறப்படுகிறது. இராமபிரான் இராவணனை 'இன்றுபோய்ப் போர்க்கு நாளை வா' என்று கூறியது, ஒருவேளை இராவணன் மனம்மாறிச் சீதாதேவியைத் சிறைவிடுத்துத் தன்னிடம் ஒப்படைக்கக்கூடும் என்று கருதியதால்தான் எனக்கருத இடம் இருந்தது. அதைப் பொய்ப்பித்து, மறுநாளும் இராவணன் போருக்கு வருகிறான் என்பதைக் காணப்போகிறோம். 'நாகுஇளம்' என்பது ஒரு பொருட்பன்மொழி; மீமிசைச்சொல்.

முதற் போர்புரி படலம் நிறைவுற்றது

யுத்தகாண்டம் முதல் பகுதி நிறைவுற்றது

Koviloor Digital Library

செய்யுள் முதற்குறிப்பு அகராதி

பாடல்	பாடல் எண்
அ	
அக்கிரிதனையும்	7230
அகன் உறப்பொலிந்த	6856
அங்கதன் அதனை	7084
அச்சொல் கேட்டு	6265
அசுஞ்சலப்படை	6640
அசும்பு பாய்தேனும்	6773
அஞ்சினான் அலன்	7307
அஞ்சினை ஆதலின்	6454
அடல் துடைத்தும்	7294
அடித்தலோடும் அதற்கு	7175
அடித்த விரல்பட்ட	6987
அடியம் அந்நெடு	6886
அடியார் அடியேன்	6375
அடுத்த நல் உணர்வு	7309
அடுத்த நாட்டு அரசியல்	6526
அடுவனே என்ன	7086
அண்டமூலத்து அப்பால்	6732
அண்டர் நாயகன்	7345
அண்ணல் அஞ்வன வண்ணனும்	7323
அண்ணல் கேள் இதற்கு	6976
அண்ணல் வாள் அரக்கன்	7228
அண்ணல் வெங்கணை	6702
அணிபறித்து அழகுசெய்து	7074
அணை நெடுங்கடலில்	6924
அத்தன்மை அறிந்த	6385
அதிரும் வெங்கணை	6701
அதுகொடு என்சில	6880
அந்தம்இல் குணத்தினானை	6596
அந்தர அருக்கன் மகன்	6994
அந்தரத்திடை ஆர்த்து	7098
அந்த வானகம் ஒத்தது	7297
அந்நரர் இன்று நாளை	7083
அப்பதம் அவனுக்கு	6905
அப்புறத்து இராமன்	6471
அப்பொழுது இராமனும்	6502
அப்போதையின் அயர்வு	7259
அம்பரத்து எறிந்து	7174
அம்பினுக்கு இலக்கம்	6909
அம்பு கற்களை	7119
அம்போருகனார்	6382
அய்இரண்டு கார்	7296
அய்யன் வேண்டின்	6783
அயர்த்திலென் முடிவும்	7064
அயிர் உக்கன நெடு	7273
அயிரா இமைப்பினை	6438
அயில் கடந்து எரிய	7070
அரக்கர் கோன்	7059
அரக்கர் தொல்குலம்	7117
அரக்கர் சேனை அடுகளம்	7161
அரக்கரை ஆசுஅற	6513
அரக்கனும் ஆங்கண்	6461
அரங்கில் ஆடுவார்க்கு	6260
அரசன் அன்னவை	6308
அரவ நுண்இடை	7334
அரவ மாக்கடல்	6867
அரவு இயல் தறுகண்	7250
அரன்கொலாம் அரி	7078
அருக்கனில் ஒளிவிடும்	6718
அருங்கடகம் அம்கையில்	6840
அருணச்செம்மணி	6791
அருந்ததி அனைய நங்கை	6919
அருந்துதற்கு இனிய	6476
அல்லையாம் எனின்	7353
அலகு இலா அரக்கன்	7056
அவ்வவர்க்கு அமைந்த	6903
அவ்வழி ஆயிரம்	6158
அவ்வழி இராவணன்	7222
அவ்வழி உணர்வு வந்து	6612
அழிந்தது பிறவி என்னும்	6585

Koviloor Digital Library

பாடல்	பாடல் எண்
அழிவது செய்தாய் ஐய	7008
அழுகின்ற கண்ணராகி	7071
அழைஎன எய்தி	7032
அள் ஆடிய கவசத்து	7276
அள்ளிமீது உலகை வீசும்	6577
அளக்கரைக் கடந்து	6462
அளந்து அறிவு அரியர்	7039
அளவு அரும் அறிஞரோடு	6757
அளவையான் அளப்ப	6333
அளித்தகவு இல்லா	7052
அற்கள் ஓடும் நிறத்த	7121
அற்ற ஆழிய அறுப்புண்ட	7332
அறக்கண் அல்லது	6964
அறத்தினால் அன்றி	7350
அறத்துறை அன்று	7068
அறநிலை வழாமையும்	6490
அறம் கடந்தவர் செயல்	7348
அறம் தரு தவத்தை	7063
அறம்தலை நின்றவர்க்கு	6464
அறம் துறந்து அமரரை	6222
அறிகிலை போலும் ஐய	6915
அறிஞரே ஆயினும்	6517
அறுத்தனன் அரக்கர்	7247
அறுத்து மற்று அவன்	7328
அறைந்த மாமுரசு	7115
அன்றியும் அவன் அகன்	6627
அன்றியும் பதினேழ்	7034
அன்னகாலை அயிந்திர	7181
அன்னகாலை அரிக்குல	7145
அன்னகேட்டு அவன்	6307
அன்னவற்கு இளவல்	6902
அன்னவன் தனிமகன்	6545
அன்னவன் தனக்கு	7062
அன்னவன் பின்னுற	6516
அன்னவன்னொடும்	7188
அன்னானை நோக்கி	6441
அன்னை நீ அத்தன் நீயே	6743
அனந்தனே முதலாகிய	6359
அனலனும் அனிலனும்	6460
அனைய காலையின்	7286
அனையவன் சிறுவர்	6238
ஆ	
ஆக இராகவனை	6961
ஆங்கு அவன் அமர்	7207
ஆசி சொல்லினர்	7322
ஆசுஇல் பரதாரம் அவை	6205
ஆடுகின்றன கவந்தமும்	7331
ஆண்டு சென்று அரிகளோடும்	6897
ஆண்தகையும் அன்பினோடு	6829
ஆதலால் இவன் வரவு	6549
ஆதலால் அபயம்	6564
ஆதி அந்தங்கள்	6324
ஆதி அம்பரமனுக்கு	6468
ஆதிப்பரமாம் எனில்	6381
ஆம் குஞ்சரம் அனையான்	7258
ஆய்ந்து நீளம்	6807
ஆய்வினை உடையராகி	6751
ஆயகாலை அனைத்துலகு	7135
ஆயது ஓர் அளவையின்	6611
ஆயது தெரிந்தோ	6906
ஆயது நெருங்க அடி	6836
ஆயது பயப்பது ஓர்	6469
ஆயப்பெறும் நல்நெறி	6379
ஆயவன் தருமமும்	6499
ஆயவன் தன்னை மாயன்	6424
ஆயவன் தனக்கு அருமகன்	6290
ஆயவன் வளர்த்த தன்தாதை	6450
ஆயிரம் கோடி வெள்ளத்து	6404
ஆயிரம் உற்பாதங்கள்	6908
ஆயிரம் கோடிப்பேய்	7204
ஆயிரம் பரிபூண்டது	7194
ஆயிரம் பெருந்தோள்களும்	6268

Koviloor Digital Library

பாடல்	பாடல் எண்
ஆயிரம் வெள்ளமான	6898
ஆயினும் விளம்புவென்	6505
ஆர்அடா சிரித்தாய்	6400
ஆர்கலி இலங்கையின்	6613
ஆர்த்தன பரவை ஏழும்	6593
ஆர்த்தார் விசும்புறைவோர்	7277
ஆர்த்து வானவர் ஆவலம்	7301
ஆர்ப்பு அடங்கின	7335
ஆர்ப்பு ஒலி முழக்கின	6420
ஆர ஆயிர யோசனை	6802
ஆரியன் தன்மை ஈதாயின்	6196
ஆரைச் சொல்லுவது	6300
ஆவி சென்றிலர் நின்றிலர்	7324
ஆழமும் அகலம்தானும்	6754
ஆழி நீ அனலும் நீயே	6739
ஆழி மால்வரையொடு	6411
ஆழியான் அவனை நோக்கி	6586
ஆழியின் புனல்அற	6723
ஆள் ஐயா உனக்கு	7354
ஆள்வினை நிலைமையும்	6197
ஆற்றல் சால் அரக்கன்	7242
ஆறினாம் அஞ்சல் உன்பால்	6746
ஆன்ற எண்திசை உலகு	6652
அன்று அமைகேள்வியர்	6162
ஆனபேர் அணை	6827
ஆனிறக் கண்ணன்	6768
இ	
இகழும் தன்மையன்	7106
இங்கு இவன் படை	6963
இச்சிரத்தவன் உரைத்து	6181
இச்சை அல்லன உறுதிகள்	6254
இசையும் செல்வமும்	6252
இட்டவனை இட்ட அகழி	6992
இட்டார் கடுவல்விடம்	6386
இடுக்கு இவண் இயம்புவது	6180
இடுக்கு இனி எண்ணுவது	6730
இடுமின் பல்மரம்	7102
இடைந்தவர்க்கு அபயம்யாம்	6555
இணங்கினர் அறிவிலர்	6531
இத்திசையின் வந்த	6985
இத்திறம் எய்தியகாலை	6479
இந்திரன் செம்மல் பண்டு	7080
இந்திரன் தனை இருஞ்சிறை	6266
இந்து அன்ன நுதல் பேதை	6150
இந்நிலை விரைவின்	7015
இந்நெடுங்காலமெல்லாம்	7049
இப்படி மதில் ஒருமூன்று	6624
இம்பரான் எனில்	7330
இம்பரின் இயைந்த	7035
இமைப்பதன் முன் விசும்பு	6485
இயைந்தன இயைந்தன	6486
இரக்கம் வந்து எதிர்த்த	6733
இரணியன் என்பவன்	6449
இரிந்து நீங்கியது	7290
இரியலுற்றது வானர	7306
இருங்கவி கொள்சேனை	6834
இருபதுகரம் தலை ஈரைந்து	6483
இருவரும் பொருந்தப்பற்றி	6419
இருள் நன்கு ஆசு அற	6656
இருளிடை எய்துவது	6470
இலக்குவன் சரம் ஆயினும்	6797
இலங்கை நாட்டன்ன	6641
இலங்கையின் அரண் இது	6630
இழுகு மாக்கல்	7110
இழைத்தனைய வெங்கதிரின்	6838
இளவலும் இறைவனும்	6760
இற்றிது காலம் ஆக	6851
இற்றை நாள் அளவும்	6598
இற்றை நாள்வரை	6318
இறந்தனை என்ற போதும்	7007
இறந்து வீழ்ந்தனனே	7178
இழை எனத்தகைய மின்னின்	6777

Koviloor Digital Library

பாடல்	பாடல் எண்
இறுக்க வேண்டுவதில்லை	7114
இறுத்தது இன்று உலகு	7291
இன்று இவன் தன்மை	7073
இன்று வந்தான் என்று	6553
இன்ன தன்மையர் எத்தனை	6644
இன்னது ஆய கருங்கடலை	6153
இன்னது ஓர் செவ்வித்து ஆக	6595
இன்னது ஓர் தன்மை	7003
இன்னது ஓர் தன்மைத்தாம்	6918
இன்மை ஓர் தன்மையன்	6349
இன்னம் ஒன்று உரை	6251
இன்னவாறு இலங்கை	6942
இன்னன பலவும் பன்னி	7020
இனைய தன்மையர்	6650
ஈ	
ஈங்கு மானிடப் பசுக்களுக்கு	6255
ஈசன் அருள் செய்தனவும்	6212
ஈடுபட்டவர் எண்ணிலர்	6658
ஈது ஆகும் முன் நிகழ்ந்தது	6447
ஈது இவண் நிகழ்ச்சி	7042
ஈதெல்லாம் உணர்ந்தேன்	6910
ஈர்கின்றது அன்றே	7012
ஈளிதாரம் இயம்பிய	7108
ஈனமே கொள் இதம்	6877
உ	
உகம் பல் காலமும்	6631
உச்சிரத்து எரி கதிர்என	6639
உடலினை நோக்கும்	6609
உடைக்குலத்து ஒற்றர்	7091
உடைப்பெருங் குலத்தினரோடும்	7351
உண்டு உரை உணர்த்துவது	6495
உணர்வுஇல் நெஞ்சினர்	6869
உணரா நெடிது உயரா	7279
உதைத்தவன் அடித்துணை	6988
உந்தை என் துணைவன்	7081
உந்தையை உன்முன்	6437

பாடல்	பாடல் எண்
உம்பர்க்கும் உனக்கும் ஒத்து	6396
உய்ஞ்சனேன் அடியனேன்	6588
உய்ய நிற்கு அபயம்	6561
உரம் ஒருங்கியது	6243
உரும் இடித்துழி	7223
உரை உளது உணர்த்துவது	6328
உலகு தந்தானும் பல்வேறு	6391
உவன் காண் குமுதன்	6972
உள்நிறை உடலில்	6478
உள்ளத்தின் உள்ளதை	6535
உள்ளமே தூதுசெல்ல	6917
உள்ள வான் படை	6355
உள்ளில் சாகிலன்	6288
உள்ளி வெம் பிணத்து	7308
உள்ளுற உணர்வு	6346
உளைப்புறும் ஒத்த வேலை	7053
உற்றதால் அணை ஓங்கல்	6822
உற்ற போதின் இருவரும்	7187
உற்றபோது அவன்	7099
உற்றவாறு என்றும்	7293
உற்று ஒரு தனியே	6734
உறுக்கி தனி எதிர்	7283
உறுபகை மனிதன்	7246
உறுபொருள் யாவரும்	6530
உறைவிடம் எய்தினான்	6480
உன் உயிர்க்கும் என்	6317
ஊ	
ஊழி திரியும் காலத்தும்	6143
ஊழி முதல் நாயகன்	6832
ஊழி வெங்கனல் ஒப்பன	7325
ஊழியின் உருத்திரன்	7217
ஊற்றம் மீக்கொண்ட	6678
ஊறுகின்றன கிணறு உதிரம்	6166
ஊறுபடு செம்புனல்	6995
ஊறுபடை ஊறுவதன்	6209
ஊன்றிய பெரும்படை	7205

Koviloor Digital Library

பாடல்	பாடல் எண்
ஊனவில் இறுத்து	6262
ஊனுடை உடம்பின	6463
ஊனொடு உயிர் வேறுபடா	6388
எ	
எங்கும் வெள்ளிடை	6700
எஞ்சும் உலகனைத்தும்	6433
எடுக்கல் உற்று	7311
எடுக்கின் நானிலத்தை	7226
எடுத்தான் வலத்தடக்கையால்	7261
எண்இல் எண்கு இனம்	6801
எண்பொருட்டு ஒன்றி நின்று	6229
எத்தனை உளர் தெரிந்து	6532
எத்துணை போதும் கை	6403
எத்துணை வகையினும்	6459
எதிர்த்த வானரம்	7123
எதிரில் நின்று இவையிவை	6350
எந்தாய் பண்டு ஓர்	6364
எந்தை கேள் எனக்கு	6306
எந்தை நீ யாயும் நீ	6226
எம் குலத்தவர் எண்பதினாயிரர்	6659
எய்த வாளியை	7326
எய்தான் சரம் எய்தாவகை	7257
எய்தி யோசனை ஈண்டு	6828
எரிஉற மடுப்பதும்	6188
எரியின் மைந்தன்	7159
எல்லியில் யான் இவன்	6543
எல்லை நோக்கவும்	6888
எல்லைஇல் இலங்கை	6861
எவ்வுலகத்தும் நின்	6183
எழுசுடர்ப் படலையோடும்	6735
எழுத்து இயல் நாளத்தின்	6341
எழுதலும் இருத்தி என்று	6614
எழுபது வெள்ளத்து உற்ற	7040
எழு மழு தண்டு வேல்வாள்	7041
எள்இல் ஐம்பெரும் பூதமும்	6651
எற்றை நாளினும்	6273
எறிந்தன எய்தன எற்றின	6354
எறிந்த கால வேல்	7305
எறிந்தும் எய்தும்	7125
எறுழ்வலிப் பொருஇல் தோள்	6240
என் அவற்கு உரைப்பது	7067
என் உயிர் நின்னால்	6397
என் கணால் நோக்கி	6392
என் தோள்வலி அதனால்	7265
என்புஉறக் கிழிந்த புண்ணின்	7011
என்புழி நிருதராம்	7218
என்புழி மாலிதன்னை	7045
என்றலும் அவுணர் வேந்தன்	6394
என்றலும் இரங்கி ஐயன்	6748
என்றலும் இளவலும் எழுந்து	6456
என்ற வார்த்தை எரிபுகு	7185
என்றான் எதிர் சென்றான்	7282
என்றானும் இனையதன்மை	7028
என்று அடி இறைஞ்சினன்	6218
என்று அவன் இயம்பலும்	6168
என்று அவன் இயம்பியிடும்	6211
என்று அவன் இரங்கும்	7009
என்று ஆங்கு இயம்பி	6432
என்று இவை இயம்பி வா	7093
என்று உரைத்து எயிற்று	7239
என்று உலப்புறச் சொல்லுகேன்	6657
என்று ஒருவன் இல்உறை	6204
என்று ஓர் அந்தணன்	6292
என்று கூறலும் எழுந்து	6671
என்று தன் உரை இழித்து	6263
என்று தாயைப் பயந்தோன்	6876
என்று வரம் அருளி	6445
என்னச் சாரர் இசைத்தனர்	6885
என்னது ஆக்கிய வலியொடு	6670
என்னா முன்னம்	6365
என்னும் வேலையின்	6978
என்ன உய்வித்தேன்	6296

Koviloor Digital Library

பாடல்	பாடல் எண்
எனக்கும் நான்முகத்து	6304
ஏ	
ஏதம் அஞ்சி நான்	6684
ஏந்திய சிகரம் ஒன்று	7227
ஏந்திழை தன்னை	7090
ஏந்து எழில் இராவணன்	6501
ஏமம் சார எளியவர்	7097
ஏய்ந்த தம் உடம்பு இட்ட	6792
ஏயது பிறிது உணர்ந்து	6232
ஏயவெள்ளம் எழுபதும்	7104
ஏவரே உலகம் தந்தார்	6390
ஏவினார் பிடித்தாரை	7096
ஏழ் இசைக்கருவி	7200
ஏழு நூறு யோசனை	6616
ஏற்றம் என் சொல்லின்	7048
ஏற்றம் என் பிறிது	6177
ஏற்றி எண்ணி இறைஞ்சி	7195
ஏறிய நெடுந்தவம்	6231
ஏனவர்க்கு வேண்டின்	6443
ஏனையர் என்ன வேறு	6729
ஏனையோன் இவன்	6962
ஐ	
ஐயுறவு எல்லாம் தீரும்	6565
ஒ	
ஒட்டிக் கொல்ல	6371
ஒட்டிய கனகமான்	6511
ஒத்த கையினர்	7287
ஒத்து இருசிறு குறட்பாதம்	7209
ஒரு தனிப்பேடை மேல்	6477
ஒருவன் ஆயிரம் யோசனை	6795
ஒருவன் யாவர்க்கும்	6323
ஒருவினை ஒருபயன்	6338
ஒல்வது நினையினும்	6190
ஒள்ளிய உணர்வுகூட	6780
ஒன்றாக நினைய	7006
ஒன்றின் ஒன்றுபட்டு உடைவன	7289
ஒன்றிய உணர்வே ஆய	7004
ஒன்று அல பகழி	6913
ஒன்று ஆயுதம் உடையாய்	7267
ஒன்று உண்டு இனிஉரை	7281
ஒன்று நூற்றினோடு	7336
ஒன்றும் உட்கறுப்பினோடு	6603
ஒன்றும் வேண்டலர் ஆயினும்	6680
ஒன்றுற விழுந்த	6999
ஒன்றே என்னின்	6142
ஓ	
ஓங்கிய உலகமும்	7215
ஓடும் ஓட்டரின்	6820
ஓத நூல்கள் செவியின் வழி	6951
ஓதப் புக்கு அவன்	6293
ஓதம் ஒத்தனன் மாருதி	7319
ஓதிய குறிஞ்சி முதலாய	6835
ஓதுறு கருங்கடற்கு	7206
ஓம் எனும் ஓர் எழுத்து	6347
ஓம் நமோ நாராயணாய	6294
ஓம் நெறி வாணர்	6839
ஓவியம் அமைந்த நகர்	6202
ஓர் ஆவுதி கடைமுறை	6339
க	
கங்குல் வந்து இறுத்த காலை	7027
கங்கையும் பிறையும்	7079
கட்டது இந்திரன்	7190
கட்டு அமை தேரின்	7243
கடகரி புரவி ஆள்	7050
கடித்த குத்தின	7124
கடித்தலத்து இருகால்	7166
கடுங்குரங்கு இருகையால்	7220
கடுப்பின் கண் அமரரேயும்	7251
கண் உறு கடும்புகை	7202
கண்டு நின்ற கரடியின்	7162
கண்ணிய மந்திரக் கருமம்	6187
கண்ணினும் கரந்துளன்	6342

Koviloor Digital Library

பாடல்	பாடல் எண்
கண்ணினை அப்புறம்	6604
கண்மை இந்நகர்	6878
கதம் மிகுந்து இரைத்து	6921
கமை அறு கருங்கடல்	6709
கரங்கள் மீச்சுமந்து	6584
கரத்தொடும் பாழிமாக்கடல்	6608
கரந்து நின்ற நின்	6673
கரன் முதல் வீரரை	6170
கரிய கொண்டலை	6983
கருத்து இலான் கண்ணிலான்	6220
கருத்து உற நோக்கி	6551
கருதி மற்றொன்று	6980
கருப்பை போல் குரங்கு	7191
கரும்புறக் கடல்களோடு	6721
கருமணி கண்டத்தான்	7023
கருமமும் கருமத்தின்	6335
கருவரை காதங்கள்	6761
கல்லுண்டு மரமுண்டு	7072
கல்கிடந்து ஒளிர்	6826
கல்கொண்டும் மரங்கள்	7238
கல்துரந்த களம்பட	7146
கல்லில் அம்கை உலகம்	6953
கல்லினும் வலிய	7013
கல்லென வலித்து நிற்பின்	6755
கல்விக் கண் மிக்கோன்	6857
கலக்கிய அரக்கன்	7240
கலங்கிய கங்குல்	7051
கவடு உகப்பொருத	6943
களளம் திரிவார் அவிர்	6376
கள்ளமாய் உலகம்	6742
கள்ளரே காண்டி	6858
களிறும் மாவும்	7144
கற்கள் தந்து நிமிர்ந்து	7147
கற்புடைத் தேவியை	6500
கற்றவர் கற்றவர்	6727
கற்று அங்கியின்	7278
கற்றுறு மாட்சி	6227
கற்றை வெண்நிலவு	6580
கறங்கெனத் திரியும்	6776
கனகனும் அவனில் வந்த	6414
கன சினத்து உருமின்	6800
கனிதரும் நெடுங்காய் தரும்	6786
கா	
காக்கின்ற என் நெடு	7256
காட்டிய காலகேயர்	7046
காட்டிலே கழுகின் வேந்தன்	7016
காட்டுவாய் உலகம்	6740
காடு பற்றியும்	6302
காந்தும் வாளியின்	6666
காந்து வெஞ்சினவீரர்	6874
காம்பு எலாம் கடுந்துகள்	7292
காமமும் யாவையும் தருவதும்	6313
காமமும் வெகுளியும்	6344
காய்த்த அக்கணத்து	6662
காய்ந்த வானரவீரர்	7150
காரியம் ஆக	6563
காரியம் கடலினை அடைத்து	6759
காரின் கரியவன்	7266
கால நெடுந்தேர்	7203
கால இருள் சிந்து	6984
காலம் அன்று இவன்	6538
காலமும் கருவியும்	6345
காலமே நோக்கினும்	6528
காலவான் கருங்கணை	6726
கால வெங்கனல்	6357
காலவெங்கனல் போலும்	6871
காலன் தன் களிப்பு	7047
காலிடை ஒரு மலை உருட்டி	6763
காலையின் நறுமலர்	6348
காவல் காட்டுதல்	6280
காவலன் கண் எதிர்	6191
காவலன் பயந்த வீர	6939

Koviloor Digital Library

பாடல்	பாடல் எண்	பாடல்	பாடல் எண்
காற்று உறழ் கலின மான்	7255	கூருடை எயிற்றுக்கோள்	6779
கானயாறு பரந்த	6825	கூவி இன்று என்னை	7087
கானலும் கழிகளும்	6472	கூற்றுவன் தன்னோடு	6512
கானிடைப் புகுந்து	6683	**கெ**	
கானிடை வந்தேயும்	6907	கெடுத்து ஒழிந்தனை	6295
கானின் அன்று இகல்	7303	**கே**	
கி		கேட்ட ஆண்தகை	6253
கிழிபடக் கடல் கீண்டதும்	6872	கேட்டனன் இருந்தும்	6448
கிளர்மழைக் குழுவிடை	7214	கேள் இது நீயும்	6417
கிளையொடும் படைஞரொடும்	7089	கேள் இல் ஞாலம்	7139
கீ		கேள்கொள் மேலையான்	6667
கீழ்த்திசை வாயிலின்	6621	**கை**	
கீழை வாயில் கிளர்	7184	கை அவன் தொட	6965
கு		கைக்குத்து அது படலும்	7275
குகனொடும் ஐவரானேம்	6590	கைக்கொடு குடித்தவன்	6990
குணிப்ப அரும் கொடும்	6699	கைத்தரும் கவரி	6947
குமுதன் இட்ட குலவரை	6799	கைப்புகுந்து உறு சரண்	6520
குயிற்றிய அண்டம்	6406	கையில் கால்களில்	6363
குரங்கு பட மேதினி	6214	**கொ**	
குரண்டம் ஆடு நீர்	6654	கொங்கைக் குயிலை	6152
குருதி வாய் நின்று ஒழுகவும்	7176	கொண்ட மாமரத்தை	7229
குலங்களோடும் தம் குலமணி	6653	கொணர்க என் மைந்தனை	6309
குலை கொளக்குறி	6803	கொத்துறு தலையான் வைகும்	6862
குழியில் இந்தனம்	6356	கொல்லுமின் இவனை	6541
குறைவுஇல் குங்குமமும்	6809	கொல்லுமின் பற்றுமின்	6497
குன்றம் நின்றது எடுத்து	7170	கொல்லேம் இனி உன்	6439
குன்றில் வாழ்பவர் கோடி	6635	கொல்வென் இக்கணமே	7295
குன்று அன யானை	7253	கொழுங்கதிர்ப் பகைக்கோள்	6675
குன்று போல் மணி	6352	கொழுந்துடைப் பவளக்கொடி	6811
கூ		கொழுமணி முடிகள் தோறும்	7010
கூசி வானரர்	6879	கொற்றவன் இமையோர்	6916
கூட்டிய விரல் திண்கையால்	6854	கொற்றவாள் கொலைவேல்	7252
கூட்டினார் படை	6668	கொற்றவாள் சிலைக்கை வீர	6937
கூடும் வெம்பொறி	6693	கொன்நிறக் குருதி	7129
கூதிர் நுண் குறும்பனி	6475	**கோ**	
கூய் உரைப்பக் குலமால்	6957	கோசிகப் பேருடைக்குலமுனி	6239

Koviloor Digital Library

பாடல்	பாடல் எண்
கோடு அலம்பின	7116
கோணுதற்கு அமைந்த	6578
கோநகர் முழுவதும்	6228
கோல்நிறக் குனிவில்	6935
கோள் அலாவு அரியேறு	6936
கோள் இரண்டையும்	6647
ச	
சண்டம் கொள் வேகமாக	6863
கண்டவான் கிரண வாளால்	6741
சந்தி வந்தனைத் தொழில்	6600
சம்பரப் பெயருடை	6235
சயக்கவிப் பெரும்படை	6766
சரங்கள் இங்கு இவற்றால்	6893
சரண் எனக்கு யார்கொல்	6560
சலித்த காலையின்	7285
சா	
சாங்கியம் யோகம் என்ற	6331
சாணிலும் உளன்	6395
சாய்ந்த தானைத் தளர்வும்	7142
சாய்ந்தது நிருதர் தானை	7254
சார்த்தூலன் இதனைச் சொல்ல	7036
சாரும் மானத்தில்	6277
சி	
சிங்க ஏறு அனையான்	6569
சிட்டர் செயல் செய்திலை	6206
சித்து என அருமறை	6332
சிந்த மாநகரைச் செரு	6250
சிந்தி ஓடிய குருதி	6697
சிந்து முந்து உலகினுக்கு	6247
சிந்துரத் தடவரை எறிய	6769
சிந்தையின் செய்கையின்	6343
சில்இயல் கோதையை	6602
சில்லி மாப்பெரும் தேர்	6640
சிலைமேற்கொண்ட	6148
சிவனும் நான்முகத்து	6267
சிறப்பு அவன் செய்திட	6625

பாடல்	பாடல் எண்
சிறையில் வைத்தவள்	7352
சினம்கொள் திணதிறல்	6977
சீ	
சீதையைக் குறித்ததேயோ	6562
சு	
சுட்டது இல்லை நின்	6358
சுட்டது குரங்கு	6165
சுட்டவா கண்டும்	6875
சுடுகணை படுதலோடும்	7231
சுடுதியைத் துகிலிடை	6491
சுதையத்து ஓங்கிய	6981
சுருதி ஆதியில் தொடங்குறும்	6311
சுருள்கடல் திரைகளை	6720
சுழற்றிய காலத்து	6422
சூ	
சூடு பெற்று ஐயனே	6725
சூலம் ஏய் தடக்கை	6914
சூலம் வாள் அயில்	7156
சூழப்பற்றின சுற்றும்	6361
சூழி யானை மதம்படு	7137
செ	
செந்தாமரைப் பொகுட்டில்	6435
செப்பின் செம்புனல்	7126
செப்பின் மேலவர் சீறினும்	6704
செம்புக்கும் சிவந்த செங்கண்	7018
செம்பொன் மௌலி	6945
செய்த மாதவம் உடைமையின்	6325
செய்யாதனவே இலை	6378
செய்வன முறையின் எண்ணி	7038
செயிர்ப்பினும் அழகு செய்யும்	6849
செருமலி வீரர் எல்லாம்	6920
செவிகளால் பல கேட்டிலர்	6303
செற்றனர் எதிர் எழும்	6172
செறிகழல் அரக்கர்தம்	6537
செறிந்த பல் மணி	7344
செறிந்து உழல் கறங்கு	7002

Koviloor Digital Library

பாடல்	பாடல் எண்
செறிவுறு செம்மைய	6716
சே	
சேது பந்தனம் செய்தனன்	6890
சேதுவின் பெருமைக்கு	6793
சேயகாலம் பிரிந்து	6145
சேனாதிபதி தன் அயலே	6971
சேனைக்காவலர் ஓர் ஐவர்	6661
சேனை காவலன்	6645
சொ	
சொல்லிடை கழிக்கிலை	6215
சொல்லும் அத்தனை அளவையில்	7346
சொல்லும் மாற்றங்கள்	6257
சொல்வரம் பெரிய	6244
சொலத்தகாத் துன் நிமித்தங்கள்	6248
சொற்ற வார்த்தையை	7095
சொன்ன மாமதில்	6663
த	
தகுதியாய் நின்ற வென்றி	7320
தகையுறும் தம்முனை	6507
தங்கள் மாப்படை	7151
தங்கு வெங்கனல்	7128
தசும்பிடை விரிந்தன	6715
தடங்கொள் குன்றும்	7103
தடமலர்க் கண்ணனை	6503
தண்டம் என்று ஒரு	6171
தண்டு இருந்த பைந்தாமரை	7107
தண்டு வாள் அயில்	7158
தத்தி மார்பின் வயிர	7165
தந்தது தருமமே	6482
தந்திரம் இலங்கை மூதூர்	7054
தந்தை மற்றையவன்	6966
தம்குலக் கிளைஞரை	6524
தம்பி முற்பகல் சந்திரர்	6646
தரவலோம் மலர்	6813
தரளமும் பவளமும்	6473
தடுக்கி வீசிட விசும்பு	7288

பாடல்	பாடல் எண்
தருண மங்கையை	6676
தருமமும் ஞானமும்	6494
தலையெலாம் அற்ற	7248
தலைகள் பத்தொடும்	7310
தலையில் கொண்ட தடக்கை	6373
தழிய வானர மாக்கடல்	7133
தழுவி ஆயிர கோடியர்	6804
தழுவினர் நின்ற காலை	6568
தள்ளத்தக்கு இல்	6370
தன்தனிப் புதல்வன்	7026
தன்படைத்தலைவன்	7167
தன்மைக்குத் தலையாய	7111
தன்னின் முன்னிய பொருள்	6264
தன்னுளே உலகங்கள்	6330
தன்னைக் கொல்லுநர்	6367
தன்னைப் படைத்ததுவும்	6428
தன்னையும் தெறும் தருமம்	6648
தா	
தாதையைக் கொன்றான்	7082
தா நெடுந்தீமைகள்	6714
தாம் உற எளிவரும்	6527
தாமரைத் தடங்கண்ணினான்	6279
தாமே தனி நாயகராய்	6380
தாய் தந்தை எனும் தகை	6384
தாய் தெரிந்து உலகு காத்த	6860
தாயின் மன்னுயிர்க்கு	6353
தாயினும் பழகினார்க்கும்	7031
தார்உலாம் மணிமார்ப	6889
தாரை உண்ட பேர்	6705
தாழ்ச்சி இங்கு இதனின்	6164
தாழ்விலாத் தவத்து	6865
தி	
திக்கயம் வலிஇல	6185
திசா திசை போதும் நாம்	6195
திசை அத்தனையையும்	7270
திசை தொறும் நிறுவினன்	6163

Koviloor Digital Library

பாடல்	பாடல் எண்
திடல் திறந்து உகு	6722
திரித்தவன் உரத்தின்	6991
திருகிய சினத்தொடு	6986
திருந்திய உணர்வுமிக்க	6574
திருதி என்பது ஒன்று அழிதர	6686
திருநகர் முழுவதும்	6157
திருவடி முடியின் சூடி	6592
தீ	
தீச்சிகை சிவணும் சோதி	6929
தீட்டுறு மழுவாள் வீரன்	6864
தீத்தொழில் அரக்கர்தம்	6539
தீதிலா ஆக உலகு	6436
தீயிடைக் குளித்த	6234
தீர்த்தன் நல் அருளைநோக்கி	6587
தீர்வு அரும் இன்னல்	6572
து	
துகைத்தவன் உடற்பொறை	6989
துஞ்சுகின்றிலர்களால்	6245
துப்பு உறக்கடல் தூய	6817
தும்பி ஈட்டமும் இரதமும்	6633
துமிந்தன தலை	7219
துமிலத்தின் செருவின்	6922
துறவியின் உறவு பூண்ட	6573
தூ	
தூதுவன் ஒருவன் தன்னை	7058
தூயவர் துணிதிறன்	6533
தூயவர் முறைமையே	6221
தூர்த்த வானரம்	7112
தூர நெடு வானின்	6996
தூரம் இல்லை மயில்	6149
தூறு மாமரமும்	7109
தெ	
தெய்வ நாயகன் தெரிகணை	6703
தெய்வ வெம்படையும்	7005
தெளிவுறல் அரிது	6540
தெற்கு இது வடக்கு இது	7221
தெற்கு வாயிலில் சென்ற	7179
தென்திசை குடதிசை	6707
தென்திசை வாயிலில்	6620
தே	
தேசியைச் சிறையில் வைத்தான்	7060
தேடுவார் தேட நின்ற சேவடி	6597
தேம் முதல் கனியும் காயும்	6774
தே மன் உரிமை புரிய	6446
தேயத்தின் தலைவன் மைந்தன்	7241
தேர் அழிந்து சிலையும் அழிந்து	7164
தேர் இழந்து சிலையும்	7172
தேர் இழந்து வெஞ்சிலைகளும்	7333
தேரெலாம் துமிந்த	7249
தேர் பதினாயிரம் பதுமம்	6628
தேரில் போர்அரக்கன் செல	7315
தேரும் பாகரும் வாசியும்	7160
தேரும் மாவும் படைஞரும்	7199
தேரும் யானையும்	7337
தேவர் ஆயினார் ஏவரும்	6286
தேவர்க்கும் தானவர்க்கும்	6547
தேவர் செய்கையன்	6312
தேவராந்தகன் நராந்தகன்	6649
தேவரின் பெற்ற வரத்தினது	6258
தேவரும் அடங்கினர்	6176
தேவரும் தக்கமுனிவரும்	6638
தேன் இவர் தடவரை	6771
தொ	
தொக்க பூதம் அவை	6946
தொக்கு அடங்கல ஓடும்	6814
தொகை ஒருங்கிய ஞானம்	7312
தொகை நிலைக் குரங்குடை	6198
தொடக்கும் என்னில்	6672
தொடிமணி இமைக்கும்	7024
தொடுத்த வாளிகள்	7163
தொடைக் கலத்து இராமன்	7044
தொடையுறு வற்கலை	7208

Koviloor Digital Library

பாடல்	பாடல் எண்
தொல் அரும் காலமெல்லாம்	6567
தொல்லை நான்மறை	6299
தொழுத மைந்தனை	6310
தோ	
தோரணத்த மணிவாயில்	6959
தோற்றம் என்னும்	6316
ந	
நகங்களின் பெரிய	7244
நகைசெயா வாயும் கையும்	6418
நசை திறந்து இலங்க	6398
நஞ்சினை மிடற்று வைத்த	6559
நஞ்சு கக்கு எரி	6956
நஞ்சும் அஞ்சும் விழி	6955
நடந்து நின்றவன்	6967
நடு இனிப் பகர்வது என்னே	6591
நடு ஒக்கும் தனி நாயகன்	6372
நண்ணின மனிதர்பால்	6453
நணியர் வந்து மனிதர்	6870
நந்தி சாபத்தின் நமை	6259
நம் திருநகரே ஆதி	6925
நல் அறமும் மெய்ம்மையும்	6444
நல்நகர் அழிந்தது	6203
நல்நெறி அறிஞ	6933
நல்புறக் கோதை	7211
நல்லது சொல்லினீர்	6466
நவையறு உலகிற்கெல்லாம்	6738
நன்கு ஒடித்து நறுங்கிரி	6819
நன்மையின் தொடர்ந்தார்க்கு	6407
நன்று இது புரிதும் நன்றே	6756
நன்று இலங்கையர்	6674
நன்று உரைசெய்தாய்	6210
நன்று என அவனைக் கூவி	7066
நனிமுதல் வேதங்கள்	6504
நன்று நன்று எனா	7317
நன்று போர்வலி	7302

பாடல்	பாடல் எண்
நா	
நாடி நான் தருவென்	6399
நாடுகின்றது என் வேறு	6823
நாமம் நாட்டிய சவம்	6642
நாவினால் உலகை	6241
நாள் மலர்தெரியல் மார்ப	6941
நாற்கடல் உலகமும்	7216
நாறு தன் குலக்கிளை	6979
நி	
நிந்தனை நறவமும்	6544
நிமிர்ந்த செஞ்சரம்	6694
நில்நில் என்று	6184
நிலம் அரங்கிய வேரோடு	6816
நிலனும் நீரும்	6278
நிலையுடை வடவரை குலைய	6615
நிற்க அன்னது நீர்	7192
நின்செய் தோள்வலி	6669
நின்றவன் தன்னை நோக்கி	6416
நின்றவன் தன்னை அன்னான்	7076
நின்றவன் நிலை நோக்கி	7349
நின்று நின்று இவைசில	6194
நின்று நூறாயிரம்	6724
நின்று நெடிது உன்னினன்	6831
நின்று மேரு நெடுமதில்	7122
நின்னின் பிறிதாய்	6383
நின்னுளே என்னை நிருமித்தாய்	6431
நீ	
நீ அயன் முதல்குலம்	6201
நீ எனை நினைந்த தன்மை	6736
நீரிலே பட்ட சூழ்ந்த	7094
நீரின் சாகிலன்	6287
நீரும் நிலனும் நெடிய	6217
நீலகண்டனும் நேமியும்	6261
நீலன் அம்பொடு	7298
நீலன் இட்ட நெடுவரை	6794
நீலன் நின்றவன்	6968

Koviloor Digital Library

பாடல்	பாடல் எண்
நீலனை இனிது நோக்கி	6842
நீள் ஆண்மையுடனே	7263
நீறு மீச்செல	6695
நு	
நுவல யாம் வரவேண்டிய	6887
நூ	
நூபுர மடந்தையர்	6998
நூக்கிய களிறும் தேரும்	7245
நூல்படத் தொடர்ந்த	6932
நூல்வலி காட்டும் சிந்தை	7019
நூலினால் நுணங்கிய	6219
நூற்கடல் புலவராலும்	7055
நூற்று இரண்டு என்னும்	7180
நூற்று இதழ்க் கமலம் தந்த	6848
நூறு கோடிய நூறு	7300
நூறு பத்துடை நொறில்	7316
நூறும் ஆயிரமும் கணை	7159
நெ	
நெடிய காவதம் எட்டும்	7136
நெடுந்தகை விடுத்த	7075
நெடும் பல் மால்வரை	6810
நெருக்கி வந்து நிருதர்	7141
நெற்றியின் அரக்கர்பதி	6833
நென்னல் கண்ட திருமேனி	6147
நே	
நேடி நூல் தெரிந்துளோர்	6750
நொ	
நொதுமல் திண்திறல்	6665
நோ	
நோக்கி வஞ்சன் நொறில்	7153
நோக்கினார் நோக்கினார் முன்	6426
நோக்கினீர் தானை எங்கும்	6866
ப	
பக்கம் நின்றவை	6360
பகலவன் வழிமுதல்	6489
பகுதியின் உட்பயன்	6340
பகைப்புலத்தோர் துணை	6548
பகைவரைத் துணை என	6523
பசையில் தங்கல்இல்	6362
பஞ்செனச் சிவக்கும்	6570
பட்டன படப்பட	6712
படர்மழை சுமந்தகாலை	6579
படிந்தனர் பரந்தனர்	7001
படைத்த மால்வரை	6873
பண்டிதர் பழையவர்	6161
பண்டு வானவர் தானவர்	6282
பண்டை உறையுட்கு	6830
பணி பழுத்து அமைந்த	6610
பத்தி வன்தலை	7140
பதனமும் மதிலும்	7131
பப்பு நீர் ஆயவீரர்	6846
பம்புறு நெடுங்கடல்	6711
பரக்கப் பல உரைத்து	7264
பரவை நுண் மணல்	6321
பரிதி சேய் தேறா	7232
பருத்த மால்வரை	6806
பருந்து உணப்பாட்டி	7088
பருப்பதம் வேவது என்ன	6745
பல்லாயிர கோடி அண்டம்	6429
பல்லியல் உலகுறு	7213
பல்கொடும் நெடு	7118
பல்லொடு பல்லுக்கு எல்லை	6427
பழியினை உணர்ந்து	6455
பழுதற விளங்கும்	6926
பழுமரம் பறிக்க	6812
பள்ளக்கடல் கொள்ள	7284
பள்ளம் போய்ப்புகும்	6982
பள்ளி அரவின் பேருலகம்	6151
பளிக்கு மால்வரை	6789
பற்றி வானரவீரர்	6892
பற்றினம் சிறையிடை	6484

Koviloor Digital Library

பாடல்	பாடல் எண்
பா	
பாடுகின்றன பேய்க்கணம்	7148
பாபமே இயற்றினாரை	6752
பாம்பு இழைப் பள்ளி	6855
பாய் இருள் சீயக்கும்	6744
பாய்ந்த சோரிப் பரவையில்	7132
பார் இயங்குனர்	6954
பார்த்தனில் பொறையின்	6747
பார்மிசை வணங்கி	7069
பாரகம் சுமந்த பாம்பின்	7022
பாரம் நீங்கிய சிலையினன்	6681
பாரினாள் முதுகும்	6790
பால்வரு பனுவலின்	6522
பாழிசால் இரணியன்	6451
பாழிவல் நெடுங்கொடுஞ்சிலை	6691
பாழி வன் தடந்திசை	6274
பி	
பிடித்த வானரம் பேரெழில்	7138
பினை மதர்த்து அனைய	6940
பித்தனாகிய ஈசனும்	6269
பிள்ளைமை விளம்பினை	6225
பிளந்தது தூணும் ஆங்கே	6401
பிறங்கிய நெடுமதில்	6623
பிறந்த நாள் தொடங்கி	6554
பிறந்தவர்க்கு உறுதுயர்	6708
பின்னும் வீடணன்	6271
பு	
புக்கு எரி மடுத்து	7043
புகல் மதித்து	6246
புடைக்கை வன்திரை	6605
புண்ணும் செய்தது முகுது	6655
புத்திரர் குருக்கள்	6458
புதை இருள் பொழுதினும்	7212
புரந்து கோடலும்	6682
புலையின் வாழ்க்கை அரக்கர்	6787

பாடல்	பாடல் எண்
பூ	
பூ உயர் மீன்எலாம்	7210
பூச் செலாதவள் நடை	6710
பூசல் வில் குமர	6931
பூசலே பிறிதில்லை	7100
பூசற்கு முயன்று	6901
பூணித்து இவை உரை	7271
பூத நாயகன் நீர் சூழ்ந்த	7077
பூதம் ஐந்தொடும்	6289
பூவரும் அயனொடும்	6154
பூவில் திருவை	6434
பூழி சென்று தன்	6677
பெ	
பெண்ணில் பேரெழில்	6285
பெரிய மால்வரை ஏழினும்	6689
பெருந்தவம் இயற்றினோர்க்கும்	6583
பெருந்தவம் முயன்று	6841
பெருமையும் சிறுமைதானும்	6853
பெருமையும் வண்ணம் தானும்	7014
பெற்றுடைய பெரு வரமும்	6546
பே	
பேடையைப் பிடித்து	6556
பேதைப் பிள்ளை நீ	6327
பேதை மானிடவரொடு	6912
பேயனேன் என்பல பிதற்றி	6629
பேயை யாளியை யனையை	6634
பேர் அபிமானங்கள்	6525
பேர்த்தன மலை சில	6762
பேர்வுறு கவியின் சேனை	6852
பேருடை அவுணர் தம்மை	6408
பேருடைக் கிரி என	6719
பேரும் கற்றை	7197
பேருமோ ஒருவரால்	6242
பேரை ஒரு பொருட்கே	6430
பொ	
பொங்கிப் பரந்த	6144

Koviloor Digital Library

பாடல்	பாடல் எண்
பொங்கு அமர் விசும்பிடை	6997
பொய் உரைத்து உலகினில்	6237
பொர கருநிற நெடு	7224
பொரு கைத்தலம் இருபது	7269
பொருப்பை மீதிடும் புரவியும்	6632
பொலிந்ததாம் இனிது போர்	6944
பொலிவது பொதுவுற	6186
பொழிந்த சோரி புதுப்புனல்	7130
பொன்றின சிறிய ஆய	6778
பொன்னினும் மணியினும்	6155
பொன்னினும் மணியினானும்	6843
போ	
போதகம் ஒன்று கன்றி	6557
போதல் செய்குநரும்	6808
போய் இனி மனிசரை	6182
போயின குரங்கினை	6174
போர்த்த சங்கம் படகம்	7198
போரின் மத்தனும்	6643
போன்றன இனைய தன்மை	6423
போன காலையில்	7314
ம	
மங்கலம் பொருந்திய	6706
மஞ்சினில் திகழ்தரும்	6765
மடித்த வாயினன்	6960
மண்ணுளாரையும்	6636
மண்டலம் தரு கதிரவன்	6283
மண்டுகின்ற செருவின்	7193
மண்ணின் நின்று மேல்	6314
மண்ணினும் வானினும்	6179
மண்ணுறச் சேற்றுள்	6775
மதி நெறி அறிவு	6900
மந்திரம் மாதவம் என்னும்	6336
மயர்வுஇல் மன் நெடும்	6284
மயிந்த இட்ட நெடுவரை	6796
மயிந்தனும் அவ்வுரை	6493
மரபின் மாபெரும்	6276
மரன்படர் வனத்து	6207
மருக்கொள் தாமரை	6281
மருங்குடை வினையமும்	6617
மருத்தின் மைந்தன்	6798
மருந்து தேவர் அருந்திய	6891
மருமதாரையின் எரியுண்ட	6692
மருளூறு மனத்தினான்	6571
மல்குவடு அனைய	6923
மலைகளின் புரண்டு வீழ	6412
மலை குலைந்தென	7154
மலை சுமந்து வரும்	6805
மழைக்குலம் கதறின	6731
மற்று அவன் பின்னுற	6175
மற்று அவன் பின்னுற	
மற்றையோர்களும்	6199
மற்று இலாதாயினும்	6167
மற்று இனி உரைப்பது என்னோ	6552
மற்று எலாம் நிற்க	6911
மற்று நீலன் அரக்கனை	7177
மற்று நின்ற மலை	7101
மற்றும் யாவையும்	6894
மற்றும் வான்படை	7196
மற்றும் வீர்தம்	7299
மற்றும் வெம்படை	7341
மற்றுள மந்திரக்கிழவர்	6529
மறம்கொள் வெஞ்செரு	6320
மறம்தரு சிந்தையன்	6492
மறித்தும் ஆர் அவன்	7186
மறிப்புண்ட தேவர்காண	7092
மறுமை கண்ட மெஞ்ஞானியர்	6685
மன்நெடும் நகரம் மாடே	6850
மன்றல் அம் துளபமாலை	6402
மன்றல் வாய் மல்லிகை	6607
மன்னவ மருகாந்தாரம்	6749
மன்னுயிர் எல்லாம் தானே	6558
மனக்கொடு அன்றியும்	6256

Koviloor Digital Library

பாடல்	பாடல் எண்
மனைக் கண் வந்து	6883
மா	
மா அணை நீலக்குன்றத்து	7037
மாக்கை வானரவீரர்	7120
மாசு அடை பரந்த	6928
மாட்சியின் அமைந்தது	6465
மாடு நின்ற நிருதரை	7189
மாண்ட இல் இழந்து	6679
மாணியாய் உலகளந்த	7318
மாத்தடந்திசை தோறும்	6601
மாதரைக் கோறலும்	6542
மார்க்கடம் சூழ்ந்த	6576
மாரியின் பெருந்துளியினும்	6688
மாருதி அமுத வார்த்தை	6550
மாருதி இன்னம் செல்லின்	7065
மால் உறு குடகவானின்	6847
மாற்ற அரும் தடமணி முடி	7347
மாற்றம் யாதொன்றும்	6305
மாற்றுத்தேர் அவண்	7342
மாற்று வெஞ்சிலை	7340
மாறி ஓர் பாகன் ஏற	7237
மானத்தான் ஊன்றப்பட்ட	7029
மானுடர் ஏவுவார்	6193
மி	
மிகைப் புலம் தருமமே	6509
மிடல் படைத்து ஒருவனாய்	6236
மின்குலாம் எயிற்றராகி	6859
மின்நகு மணிவிரல் தேய	6474
மின்மினி ஒளியின் மாயும்	6582
மின்னும் பல்மணி	7343
மின்னைத்தொழு வளைத்தது	6442
மீ	
மீ எழு மேகம்	7233
மீட்டு ஒரு சிகரம்	7234
மீட்டும் அங்கு ஓர்	7171
மீனுடைக் கருங்கடல்	7329
மீனுடை நெடுங்கடல்	6230
மீனும் நாகமும்	6690
மு	
முக்கண் தேவனும்	6315
முக்கணான் எண்கணானும்	6425
முக்காலமும் மொய்ம்மதியால்	6970
முடங்கு வார் உளை	6405
முடுக்கினன் தருக என	6764
முத்தேவர்கள் முதலாயினர்	7268
முதிர் நெடுங்கிரி விழ	6818
முந்தினர் முரண் இலர்	6192
முந்தை வானவர் யார்க்கும்	6297
முப்புறத்து உலகத்துள்ளும்	6413
முரசும் மாமுருடும்	7134
முரண்தொகும் சிலை	7338
முரண்புகு தீவினை	6498
முரபன் நகு தோளவன்	6973
முழுக்க நீரில் புகா	6788
முழுப்பெரும் தனிமுதல்	6156
முழைபடிந்த பிறை	6950
முற்பயப் பயன்தரும்	6337
முற்றிய குரிசிலை	6481
முற்றும் முதலாய் உலகம்	6213
முற்றும் மூடிய கஞ்சுகன்	6881
முறுவல் எய்திய முகத்தினன்	7339
முன்பு றெப்பெற்ற பேறோ	6440
முன்புற அனையர்பால்	6452
முன்புறக் கண்டிலென்	6467
முனைவர் வானவர்	6319
முனைவரும் தேவரும்	6160
மூ	
மூசு எறி பிறக்க	6781
மூசு வண்டினம்	6815
மூவகை உலகுமாய்	6334
மூவரை வென்று மூன்றுலகும்	6223
மூன்று அவன் குணங்கள்	6393

Koviloor Digital Library

பாடல்	பாடல் எண்
மூன்று கண் இலன் ஆயினும்	6974
மெ	
மெய் எரிந்து அழன்று	7235
மெய்யிடை நெருங்க	6837
மெய்யின் ஈட்டத்து	6824
மே	
மேருவின் சிகரம்	7321
மேல் உகத் தொகுதியால்	6606
மேல் உயர் கயிலையை	6233
மேல்திசை வாயிலின்	6619
மேல்நனி விளைவது	6521
மை	
மை உறு மலைகளோடும்	6772
மையல் கூர் மனத்து	7313
மொ	
மொய்த்த மீன்குலம்	6696
மொய்தவழ் கிரிகள்	6575
மொழி உனக்கு அபயம்	6753
மொழிந்த சொல் அமிழ்தம்	6511
மோ	
மோதல் அம் கனை கடல்	6717
மோதுற்ற ஆர்திரை	6374
யா	
யார் இது செய்யகிற்பார்	7236
யார் இவன் எய்திய கருமம்	6488
யான் உணாதன இங்கு இவை	6784
யானை இலர் தேர் புரவி	6216
யானை பட்ட அழிபுனல்	7149
யானையும் தேரும் மாவும்	6410
வ	
வகிர்ப்படுத்து உரக்கும்	6409
வஞ்சனை இயற்றிட	6515
வஞ்சனை மனிதரை	6169
வட்ட மேரு இது என	7113
வடக்கு வாய்தனில்	7182
வடதிசை வயங்கு ஒளி	6618

பாடல்	பாடல் எண்
வண்டல் தெண்திரை	6275
வண்டு உளர் அலங்கலாய்	6534
வந்தவர் தானையோடு	6899
வந்தவனை நின்றவன்	7000
வந்தனன் என்ப மன்னோ	6737
வந்தனன் வானரத்தச்சன்	6758
வந்தானை வணங்கி	6389
வந்து அடிவணங்கிய	6599
வந்து இரைத்த பறவை	7127
வந்து தாக்கி வடிக்கணை	7152
வந்து நம் இருக்கையும்	6189
வயிரவாள் உறையின் வாங்கி	6415
வயிற்றினில் உலகு	6322
வரம்பறு சுற்றமும்	6159
வருகின்ற கவியின் வேந்தை	6566
வரு நான்முகனே முதல்	6377
வரைப்பரப்பும் வனப்பரப்பும்	6821
வல்வீரைத் துயில்வானை	6366
வலி என்பதும் உளதே	7280
வவ்விலங்கு வளர்த்தவர்	6785
வழிக்கும் கண்ணீர்	6146
வள்ளலும் விரைவின் எய்தி	7057
வள்ளலை பாவிகாள்	6713
வன்பகை நிற்க	7017
வா	
வாகை வெஞ்சிலைக் கைவீர	6938
வாங்கிய மணிகள்	7021
வாங்கி வார்சிலை	7168
வாங்கி வெஞ்சிலை	6687
வாய்தரத்தக்க சொல்லி	7085
வாய் மடித்து அழல்	7173
வாயில்காவலன் கூற	6882
வாயினும் பல்லினும்	6249
வாயினும் மனத்தினானும்	6845
வார்க்குறு வனைகழல்	6510
வார்குலாம் முலை	6868

Koviloor Digital Library

பாடல்	பாடல் எண்
வாரணத்து எதிர்	7143
வாலி மாமகன் வந்தானை	6904
வாலி விண்பெற	6536
வாழியர் உலகினை வளைத்து	6728
வாழியாய் கேட்டியால்	6457
வாழியாய் நின்னை	7061
வாழியான் அவன் தன்னை	6291
வாளி ஐந்தையும்	7327
வாளொடு தோளும்	6421
வானகத்தினில் உருப்பசி	6948
வி	
விட்டனை மாதை என்ற	6896
விடம் அல விழி எனும்	6626
விண்டு ஒரு நிலை நிற்பர்	6514
விண்ணிடை விழித்தனர்	6622
விண்தலம் தொடுமால்வரை	6782
வித்தின்றி விளைவது	6329
விரிகின்ற கதிரஆகி	6927
வில் ஆயுதம் முதலாகிய	7262
வில் சிந்தின நெடுநாண்	7274
வில்படி திரள்தோள் வீர	6930
வில்லினால் இவன்	7304
வில்லினார்க்கு இருக்கை	6844
விலக்கினர் படைஞரை	6487
விலங்கல் வெந்தவா	6664
விலங்கினர் உயிர்கெட	6173
விழுந்தனர் சுழன்றனர்	6993
விளையும் வெற்றி	7105
விளைவினை அறிந்திலம்	6496
விளைவினை அறியும் மேன்மை	6589
வினைகளை வென்று	6224
வீ	
வீடணன் ஒருவனும்	7225
வீரத்திறம் இது நன்று	7272
வீர நீ பாராய்	6934
வீரன் திண்திறல்	6368
வீரனை நோக்கி	6581

பாடல்	பாடல் எண்
வீரிய விதியின் எய்தி	7033
வீழியின் கனி இதழ்	6949
வீழி வெங்கண்	7155
வெ	
வெங்கரத்தார் அயில் வாளினர்	6952
வெஞ்சினம் தரு போரின்	6270
வெண்கோடு இற்றன	6369
வெதிர்கொள் குன்றெலாம்	6975
வெம்பு இகல் அரக்கரை	6200
வெம்பு மாக்கடல் சேனை	6660
வெம்முனை விளைதலின்	6506
வெய்யார் முடிவில்லார்	6387
வெள்ளவாரி விரிவொடு	6884
வெள்ளி அம்கிரியினை	6178
வெற்றியும் தருகுவர்	6518
வென்றாய் உலகு ஒரு	7260
வென்றி அன்று என்றும்	7025
வென்றிடுவர் மானுடவரேனும்,	6208
வென்றி வானரவீரர்	7157
வென்றி வேற்கை நிருதர்	7183
வே	
வேண்டுழி இனியன	6508
வேணு உயர் நெடுவரை	7201
வேணுவின் நெடுவரை வீச	6770
வேத்திரத்தர் எரிவீசி	6958
வேதத்தானும் நல்	6301
வேத பாரகன் அவ்வுரை	6298
வேதம் கண்ணிய	6272
வேதமும் வேள்வியும்	6519
வேருடை நெடுங்கிரி	6767
வேள்வி ஆகிய புண்ணியம்	6326
வேறாக நின்றான்	6969
வேறும் என்னோடு	6351
வை	
வை எயிற்றானும்	7030
வைதெனக்கொல்லும்	6895
வைய நாயகன் வடிக்கணை	6698

Koviloor Digital Library

KOVILOOR ANDAVAR
A. NO. 14563
LIBRARY, KOVILOOR

Koviloor Digital Library



உரை ஆசிரியர் பழனியப்பன் சிவகங்கை மாவட்டம் பள்ளத்தூரில் பாரம்பரியம் மிக்க ப.அ.ப. குடும்பத்தில் பிறந்தவர். உயர்நிலைக் கல்வியையும், கல்லூரிக் கல்வியையும் மயிலாடுதுறையிலும், திருச்சிராப்பள்ளி, தேசியக் கல்லூரியிலும் முடித்தவர். பேராசிரியர் இரா. இராதாகிருஷ்ணன் அவர்களிடம் தமிழ் பயின்றவர். புலவர் திரு. கீரன் அவர்களுடன் மூன்றாண்டுகள் தொடர்ந்து அவர் சொற்பொழிவுகளைக் கேட்டுக் கம்பராமாயணத்தைத் தன் விருப்ப இலக்கியமாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டவர். கல்லூரிப் படிப்புக்குப் பின்னர் பரோடா வங்கியில் 33 ஆண்டுகள் பல பதவிகளிலும் இருந்து பணி நிறைவு செய்து ஓய்வு பெற்றவர். இப்பெரும் காரியத்தைச் செய்து முடிக்க வேண்டும் என்று பணியினின்றும் ஓய்வு பெறுவதற்கு முன்பே தீர்மானித்துத் திட்டமிட்டு இந்த செயற்கரிய காரியத்தைச் செய்து நிறைவேற்றியிருக்கிறார்.

அள்ளக் குறையா அருந்தமிழ்த் தேன்பிலிற்றும்
பள்ளத்தூர் சார்ந்த பழனியப்பன் - தெள்ளிய சீர்க்
கம்பரின் மாட்சியெலாம் காண நமக்களித்த
பைம்பொற் பதிப்பே பதிப்பு.

முனைவர். ஔவை நடராசன்
மேனாள் துணைவேந்தர். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம்

கம்பன் பாக்களின் நயம் உணர திரு. பழனியப்பனின் உரை பெருந்துணையாய் அமைந்துள்ளது. எல்லாத் தரப்பினருக்கும் ஏற்ற உரையாய் இது விளங்குகிறது. கம்பனை முன்னர்ப் படித்தறியாதோர் எளிதில் படித்து உணர்தற்கேற்றவாறும், படித்திருப்போர் புதுநயம் காணும் வகையிலும், ஆய்ந்திருப்போர் ஆழங்காற்பட்டுத் துய்ப்பதற்கு ஏற்ற முறையிலும் இவ்வுரை தக்க படி நிலைகளைக் கொண்டுள்ளது.

முனைவர். சிலம்பொலி செல்லப்பன்
மேனாள் இயக்குநர், தமிழ் வளர்ச்சித்துறை

ஒரு பாடலின் கருத்தையோ, நிகழ்ச்சியையோ விளக்குமிடத்து, அதனோடு தொடர்புடைய நிகழ்ச்சிகள் காப்பியத்தின் முன்னரோ, பின்னரோ இருந்தால் அவற்றை இணைத்துக் காட்டும் போக்கு இவ்வுரையாசிரியரின் உரைப்போக்கு என்று கூடச் சொல்லலாம்.

கம்பராமாயணத்தின் சில இடங்கள் உத்தரகாண்டக் குறிப்புகளாலேயே விளக்கமுறுகின்றன. இந்நுட்பத்தை உணர்ந்த உரையாசிரியர் தேவையான இடங்களில் உத்தரகாண்டச் செய்திகளைக் குறித்துச் சொல்கிறார். இவ்வாறே வான்மீகத்தோடு அங்கங்கே ஒப்பிட்டுக் காட்டுவதும் பயன்மிக்கதாக உள்ளது.

முனைவர் தெ. ஞானசுந்தரம், கம்பன் இருக்கை
தமிழ் இயல் புலம். புதுச்சேரி பல்கலைக்கழகம், புதுச்சேரி